விசுவாசிகளின்

வேதாகம விளக்கவுரை

புதிய ஏற்பாடு

மூன்றாம் பகுதி

1 தெசலோனிக்கேயர் முதல்
வெளிப்படுத்தின விசேஷம் வரை

விசுவாசிகளின்

வேதாகம விளக்கவுரை

புதிய ஏற்பாடு

மூன்றாம் பகுதி

1 தெசலோனிக்கேயர் முதல்

வெளிப்படுத்தின விசேஷம் வரை

வில்லியம் மெக்டொனால்டு

பதிப்பாசிரியர் ஆர்தர் ஃபார்ஸ்டட்

தமிழாக்கம்

இரா. மாணிக்கவாசகம்

மோரியா

ஊழியங்கள்

நூல் விவரக் குறிப்பு

விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை

புதிய ஏற்பாடு மூன்றாம் பகுதி

1 தெசலோனிக்கேயர் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை

ஆசிரியர் : **வில்லியம் மெக்டொனால்டு**

தமிழாக்கம் : **இரா. மாணிக்கவாசகம்**

பதிப்பு எண் 74

முதல் பதிப்பு 2015

இரண்டாம் பதிப்பு 2020

ISBN 978-93-81016-55-0

விலை ரூபாய் 585

இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூரு வெளியிட்டுள்ள
தமிழ் பவர் மொழிபெயர்ப்பு (Tamil O.V)
இவ்விரிவுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூல் காப்புரிமை பெற்றது. மதிப்புரைக்காகவும் ஆய்வுக்காகவும் மட்டுமே இந்நூலின் பகுதிகளைப் பயன்படுத்தலாம். இந்நூலினை நகல் எடுப்பதும், வேறு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இதன் உள்ளடக்கத்தைச் சேமித்து வைப்பதும், ஊடக மாற்றம் செய்வதும் தடைசெய்யப்படுகிறது.

Believer's Bible Commentary in Tamil N.T. Part 3

1 Thessalonians to Revelation

© **William MacDonald 2015**

Publication No. 74/2015

ISBN 978--93-81016-55-0

Price Rs. 585

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any other means - electronic, mechanical, photocopy, recording or otherwise - without prior permission of the publisher except for brief quotations in critical reviews or articles.

Published by

Moriah Ministries

Post Box No. 7193,

31/33, Water Tank Road,MMDA Colony,

Arumbakkam, Chennai, India - 600 106

Email: moriahministries@gmail.com

Phone: 91-044-2363 4010

Typeset & Cover Design: Moriah Ministries.

பதிப்பகத்தார் உரை

ஆண்டவரும் ஈடேற்றாளருமாகிய இயேசு கிறிஸ்துவின் புகழ்ச்சியை முன்னிட்டு அரும் தொண்டாற்றிய திருவாளர் வில்லியம் மெக்டொனால்டு இயற்றிய "**விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை**" இரண்டு உன்னத நோக்கங்களைக் கொண்டுள்ளது.

முதலாவது, பற்றுடைய கிறிஸ்தவப் பெருமக்கள், தங்களுடைய உள்ளங்களில் திருமறையின்மீது ஆழ்ந்த அன்பும் இடைவிடாத விருப்பமும் கொண்டவர்களாகவும், ஆங்கு புதைந்துள்ள அரிய முத்துக்களைத் தேடி எடுக்கக்கூடிய நாட்டத்தைப் பெற்றவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது, திருமறையின் நாயகராகிய கிறிஸ்துவின் தொண்டர்கள் முறையான சீடத்துவப் பயிற்சியைப் பெற்று, நிறைவான மனிதராக வாழ்வதற்குரிய ஆக்கக்கூறுகளை ஏற்று, தங்களுடைய வாழ்க்கையில் முழுமுதல்வராகிய கிறிஸ்துவை வாழ்ந்துகாட்ட வேண்டும் என்பதாகும். இவ்விரண்டு நோக்கங்களையும் சீர்பொருந்திய வகையில் இவ்விளக்கவுரை தன்னகத்தே கொண்டுள்ளது என்போமாகில், அது மிகையாகாது.

திருமறைக்கான விளக்கவுரையின் தேவையை நாம் மறுக்க முடியாது. பல்வேறு கருத்து வேறுபாடுகளும், கள்ளப்போதனைகளும் மிகுந்துள்ள இக்காலகட்டத்தில் திருமறைக் கோட்பாடுகளை நன்கு அறிவதற்கும், உள்ளங்களில் எழுகிற ஐயங்களை அகற்றுவதற்கும் தவறற்ற தெளிவான விளக்கவுரை இன்றியமையாததாகும். அவ்வகையில் இவ்விளக்கவுரை தமிழ்க் கிறிஸ்தவ மக்களுக்கு அரியதொரு செல்வமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

திருமறையின் முதன்மையைக் குறித்து இவ்விரிவுரை ஆசிரியர் கூறிய கருத்து:

> "திருமறைக்கு எழுதப்பட்டுள்ள அனைத்து விளக்கவுரைகளையும்விட திரு வசனமே முதன்மையான இடத்தைப் பெறுகிறது. அது தூய ஆவியானவரால் நம் உள்ளத்தில் சுடர்விட வேண்டும். அதுவின்றி வாழ்வில்லை, தூய்மை இல்லை, ஆண்டவர் ஏற்கும் ஊழியமுமில்லை. அதனையே நாம் வாசிக்க வேண்டும், படிக்கவும் மனனம் செய்யவும் வேண்டும், ஆழ்ந்து தியானிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். மெய்யான ஆன்மீக வாழ்க்கைக்கும் அறிவுக்கும் கீழ்ப்படிதலே தகும்."

இத்தகைய கருத்துடனேயே ஆசிரியர் திருமறை நூல்கள் அனைத்திற்கும் செறிவுமிக்க வகையில் விளக்க உரையை எழுதி வழங்கியுள்ளார். புதிய ஏற்பாட்டுக்கான விளக்கவுரை மூன்று பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. இந்த மூன்றாம் பகுதியில் திருமறையில் இடம் பெற்றுள்ள மனிதர்களும் இடங்களும் அடங்கிய பெயர்ப் பட்டியலையும், அவற்றிற்கான சுருக்கமான குறிப்புகளையும் சேர்த்துள்ளோம். இம்முயற்சியை எழுத்தின் முதல்வராகிய இறைமைந்தன் ஆசிர்வதிக்க இறைஞ்சுகிறோம்.

குறிப்பு: இவ்விளக்கவுரையில் தடித்த எழுத்துக்களில் காணப்படும் சொற்களும் சொற்றொடர்களும் அந்தந்த வேத வசனங்களின் பகுதிகளாகும்.

இவ்விளக்கவுரைக்கான பதிப்பாசிரியர் உரையை முதல் பாகத்தில் காண்க.

பொருளடக்கம்

பதிப்பகத்தார் உரை v
தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபம் 1
தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிருபம் 45
மேய்ப்பர்களுக்கான அறிவுரை மடல்களின் அறிமுகம் 79
தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம் 85
தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் 139
தீத்துவுக்கு எழுதின நிருபம் 175
பிலேமோனுக்கு எழுதின நிருபம் 201
எபிரெயருக்கு எழுதின நிருபம் 213
யாக்கோபு எழுதின நிருபம் 309
பேதுரு எழுதின முதலாம் நிருபம் 361
பேதுரு எழுதின இரண்டாம் நிருபம் 421
யோவான் எழுதின முதலாம் நிருபம் 455
யோவான் எழுதின இரண்டாம் நிருபம் 487
யோவான் எழுதின மூன்றாம் நிருபம் 493
யூதா எழுதின நிருபம் 499
வெளிப்படுத்தின விசேஷம் 517

ஆய்வுக்கட்டுரைகளின் பட்டியல்

கர்த்தருடைய வருகை 16
கடைசிக் காலத்தைக் குறித்த அடையாளங்கள் 31
பரிசுத்தமாகுதல் 40
சபை எடுத்துக்கொள்ளப்படுதல் 65
உபத்திரவ காலத்திற்கு முந்தி சபை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை ஆதரிக்கும் வாதம் 66
மூப்பர்கள் 180
கிறிஸ்தவரும் இவ்வுலகமும் 193
விசுவாச மறுதலிப்பு 244
இன்றைய நாளுக்கு எபிரெயர் மடல் தரும் செய்தி 305
பத்துக் கட்டளைகள் 328
தெய்வீக குணமடைதல் 353
கிறிஸ்தவனின் ஒப்பனை 393
ஞானஸ்நானம் 402
மரணத்துக்கு ஏதுவான பாவம் 483

பிற்சேர்க்கை

புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்கள் 579
புதிய ஏற்பாட்டு மடல்களின் ஆய்வுப்பொருட்கள் 580
திருமறையில் இடம்பெற்றுள்ள மனிதர்களும் இடங்களும் 583

அப்போஸ்தலனாகிய பவுல்

தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபம்

முன்னுரை

''பவுல் எழுதிய பிற மடல்களைக் காட்டிலும் எளிமை, கனிவு, பாசம் ஆகிய பண்புகளினால் தனிச்சிறப்பு பெற்ற மடல்...இம்மடலில் எவ்விதத் தருக்கமும் இடம் பெறவில்லை''

– W.கிரகாம் ஸ்க்ரோஜி

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

புகழ்பெற்ற எழுத்தாளர் யாராயினும், அன்னாரது முதல் நூல் பொதுவாக அவருடைய சொல் வன்மையையும், கருத்துகளைச் செவ்வனே வெளிப்படுத்தும் திறமையையும் எடுத்துக்காட்டுகிற நூல் என்று வெகுவாகப் புகழப்படும். பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் நிருபமே அவர் ஆவியின் ஏவுதலால் எழுதிய மடல்களில் முதலாவது ஆகும். அப்போஸ்தலன் தெசலோனிக்கே பட்டணத்தில் தங்கியிருந்த குறுகிய காலத்திற்குள் மலைப்பை உண்டாக்கத் தக்கபடி பெருமளவில் கற்பிக்க முடிந்தது என்னும் உண்மை, தெசலோனிக்கேயர் பல கோட்பாடுகளை ஏற்கனவே அறிந்திருந்தார்கள் என்னும் அடிப்படையில் அவர் இம்மடலில் விவாதிப்பதிலிருந்து புலனாகிறது.

சபை எடுத்துக்கொள்ளப்படுதல், கர்த்தருடைய இரண்டாம் வருகை ஆகிய நிகழ்ச்சிகள் பற்றிய உண்மைகளைப் பெருமளவில் நற்செய்தி அறிவிக்கும் கிறிஸ்தவர்கள் இன்றைய நாட்களில் நம்புவதோடு அவற்றை எதிர்நோக்கியும் இருக்கிறார்கள். எல்லாக்காலங்களிலும் இத்தகைய நம்பிக்கை இருந்ததில்லை. பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த தொடக்க காலத்துச் சகோதரர்கள் (1825-1850) முக்கியமாக முதல் தெசலோனிக்கேயர் மடலை ஆதாரமாகக் கொண்டு எழுதிய நூல்களின் மூலமாகவே இந்தக் கோட்பாடுகளைப் பற்றிய ஆர்வம் மறுமலர்ச்சி அடைந்தது. இந்தச் சிறிய மடலை நாம் பெற்றிராவிட்டால், கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய பல விவரங்களை அறியக்கூடாதபடி நமக்குப் பேரிழப்பு உண்டாயிருக்கும்.

2. நூலாசிரியர்

தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதல் மடல், உண்மையாகவே பவுல் எழுதியதுதான் என்பதை எந்தவொரு வேத அறிஞரும் வெளிப்படையாக மறுத்துரைக்கவில்லை. "பவுல் என்பவர் இவ்வுலகில் வாழவேயில்லை என்றோ, அவர் எழுதிய மடல்களில் ஒன்றும் நிலைத்திருக்கவில்லை என்றோ உறுதியாகக் கூற ஒருவரும் ஆயத்தமாயில்லை" என்று திருவாளர் J. E. C. பிரேம் கூறும் அளவிற்கு இந்த உண்மைக்கு ஆதரவு நிறைவாயிருக்கிறது.[1]

பாலிகார்ப், இக்னேஷியஸ், ஜஸ்டின் ஆகியோருடைய நூல்களிலும் மார்சியன் வேதநூல் தொகுப்பிலும் முரடோரியன் வேதநூல் தொகுப்பிலும் இது இடம் பெற்றிருக்கிறது. இந்நூல் பவுல் எழுதியது என்பதற்கான புறச்சான்றாக இது விளங்குகிறது (இவ்விரண்டு பழங்கால வேதநூல் தொகுப்புகளில் ஒன்று தவறான கருத்துகளைக் கொண்டது, மற்றொன்று புராதன நம்பிக்கையுடையது).

பவுல் பயன்படுத்தியுள்ள சொல்லாட்சி, மொழி நடை, மென்னயம் கொண்ட புறத்தோற்றம், ஆவிக்குரிய தகப்பன் என்னும் தன்மை வெளிப்பட்டிருக்கிற விதம் இவையாவும் அகச்சான்றுகளாம். அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலோடு வரலாற்றுக் குறிப்புகள் இசைந்திருக்கின்றன. 1:1; 2:18 - ஆகிய வசனங்களில் ஆசிரியர் தனது பெயரைப் பவுல் என்று குறிப்பிடுகிறார்.

3. எழுதப்பட்ட காலம்

கொரிந்துப் பட்டணத்தில் பவுல் தங்கியிருந்த பதினெட்டு மாதக் காலத்தில், தீமோத்தேயு அவரிடமாய் வந்தபின் சிறிது காலத்திலேயே முதல் தெசலோனிக்கேயர் நூல் இயற்றப்பட்டது

(1 தெச. 3:6; 2:17). கல்லியோன் என்பவன் அகாயா நாட்டின் அதிபதியாக கி. பி. 51 -ஆம் ஆண்டு கோடைகாலத் தொடக்கத்தில் வந்தான் (அப். 18); ஆகவே பவுல் கி. பி. 50 -இன் தொடக்கத்தில் அங்கு சென்றிருக்க வேண்டும். மேலும் அவர் இந்நூலை உடனடியாக எழுதியிருக்க வேண்டும். பெரும்பாலும் எல்லா அறிஞர்களும் இந்நூல் கி. பி. 50 -இல் இயற்றப்பட்டது என்று கருதுகிறார்கள். துல்லியமாகச் சொல்ல வேண்டுமென்றால் கி. பி. 50 அல்லது கி. பி. 51 -இல் இந்நூல் எழுதப்பட்டது என்று சொல்லுவதே பாதுகாப்பானது. நம்முடைய கர்த்தர் விண்ணகம் சென்று 20 ஆண்டுகள் கழித்து இந்நூல் எழுதப்பட்டது.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

பவுல் மேற்கொண்ட இரண்டாவது திருப்பணிப் பயணத்தின்போது தெசலோனிக்கே பட்டணத்தின் இருளுக்குள்ளாக முதன்முதலாக நற்செய்தியின் ஒளி ஊடுருவிச் சென்றது (அப். 17:1-10).

பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலையிலிருந்து பவுலும் சீலாவும் விடுதலை செய்யப்பட்ட பிறகு அம்பிபோலியின் வழியாக தெசலோனிக்கே பட்டணத்தைச் சென்றடைந்தார்கள். அந்தச் சமயத்தில் தெசலோனிக்கே வாணிபத்திலும் அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. தன்னுடைய வழக்கத்தின்படி, பவுல் யூதர்களுடைய ஜெப ஆலயத்திற்குச் சென்று, மேசியா பாடுகள்பட்டு இறந்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருக்க வேண்டியதாக இருந்தது என்று பழைய ஏற்பாட்டு நூலிலிருந்து கற்பித்தார். அதனைத் தொடர்ந்து நாசரேத்தூர் இயேசுவே வாக்குறுதி பண்ணப்பட்ட மேசியா என்று அறிக்கை செய்தார். மூன்று சனிக்கிழமைகள் இந்த நிகழ்ச்சி தொடர்ந்தது. யூதர்களில் சிலர் இக்கருத்தை ஏற்றுக்கொண்டவர்களாக, பவுல் மற்றும் சீலா ஆகியோருடன் கிறிஸ்தவ விசுவாசிகளாகச் சேர்ந்துகொண்டார்கள். மேலும் யூத மார்க்கத்தில் சேர்ந்திருந்த சில கிரேக்கர்களும், பட்டணத்தில் முதலிடம் வகித்த பெண்கள் சிலரும் மனமாற்றம் அடைந்தார்கள். அதன்பிறகு கடுமையான எதிர்ப்பு உண்டாகத் தொடங்கியது. விசுவாசிக்காத யூதர்கள், சில போக்கிரிகளைக் கடைவீதியிலிருந்து அழைத்துவந்து, கலகமுண்டாக்கி, பவுலும் சீலாவும் தங்கியிருந்த யாசோனின் வீட்டை முற்றுகையிட்டார்கள். பிரசங்கம் செய்தவர்கள் வீட்டில் இல்லாததைக் கண்ட கலகக்காரர்கள் யாசோனையும் இன்னும் சில விசுவாசிகளையும் இழுத்துக் கொண்டு வந்து பட்டணத்து அதிகாரிகளுக்கு முன்பு நிறுத்தி, உலகத்தைத் தலைகீழாக மாற்றுபவர்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். அவர்கள் முன்நோக்கமின்றி கூறிய புகழுரையாக அது விளங்கியது! இயேசு என்னும் பெயருடைய வேறொரு அரசரை முன்மொழிந்து இவர்கள் இராயனைக் கவிழ்த்தத் திட்டமிடுகிறார்கள் என்று அவர்கள் குற்றம் சுமத்தினார்கள். பட்டணத்து அதிகாரிகள் கலங்கிப்போனார்கள். யாசோனும் உடன் விசுவாசிகளும் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றும், அவனுடைய இல்லத்திற்கு வந்த விருந்தினர்கள் பட்டணத்தை விட்டு உடனடியாக வெளியேற வேண்டுமென்றும் அவர்கள் கட்டளையிட்டார்கள். அதற்குப்பின் யாசோனும் மற்றவர்களும் விடுவிக்கப்பட்டார்கள்.

பிரசங்கிகள் நகரத்தைவிட்டுச் செல்வதே விவேகமானது என்று தெசலோனிக்கே பட்டணத்து சகோதரர்கள் முடிவுசெய்து, அந்த இரவிலேயே அவர்களை பெரோயாவுக்கு அனுப்பினார்கள்.

இதில் குறிப்பிடத்தக்க சிறப்பு யாதெனில், பவுலும் சீலாவும் அந்தப் பட்டணத்தை விட்டுச் செல்வதற்கு முன்னமே அங்கு விசுவாசிகளின் சபை நிறுவப்பட்டு விட்டது; மேலும் அவர்கள் விசுவாசத்தைக் குறித்த கோட்பாடுகளால் நன்கு அறிவுறுத்தப்பட்டவர்களாகவும், அவர்கள் அடைந்த துன்பங்களினால் அசைக்கப்படாதவர்களாகவும் இருந்தார்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 17:2 -ஆம் வசனத்திலிருந்து, பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும் தெசலோனிக்கே பட்டணத்தில் மூன்று ஓய்வுநாட்கள் மட்டுமே இருந்தார்கள் என்று முடிவு செய்வது எளிது. எனினும் ஜெப ஆலயத்தில் அவர்கள் ஆற்றிய போதனை ஊழியத்தின் காலத்தையே அது குறிக்கிறது. பவுலும் அவரோடிருந்த குழுவும் அந்தப் பட்டணத்தில் மூன்று மாத காலம் இருந்திருப்பார்கள் என்றே தோன்றுகிறது. அப்போஸ்தலன் அவர்களுக்கு எழுதிய மடல்களிலிருந்து அவர்கள் எந்த அளவிற்கு கிறிஸ்தவக் கோட்பாடுகளில் பரந்த அறிவு பெற்றிருந்தார்கள் என்பது புலனாகிறது. மேலும் இந்த அறிவை மூன்று அல்லது நான்கு வாரங்களில் பெறுவது அரிது.

பெரோயா பட்டணத்திலிருந்து பவுல் அத்தேனே பட்டணத்திற்குச் சென்றார் (அப். 17:15). அவர் அங்கிருந்தபோது, தெசலோனிக்கே விசுவாசிகள் கொடுமைக்குள்ளாக்கப்பட்டார்கள் என்பதைக் கேள்விப்பட்டார். அவர் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்று முயற்சி செய்தார், ஆனால்

சாத்தானோ தடைசெய்தான் (1 தெச. 2:17,18). ஆகவே அவர் தீமோத்தேயுவை அவர்களிடத் திற்கு அனுப்பினார் (3:1,2). தீமோத்தேயு திரும்பி வந்தபோது அவர் கொண்டுவந்த செய்தி மொத் தத்தில் உற்சாகமளிப்பதாக இருந்தது (3:6-8). இதுவே இம்மடலை அவர் அவர்களுக்கு எழுது வதற்குக் காரணமாயிற்று. அவர் இம்மடலில் தன்னுடைய ஊழியத்தைப் பற்றி பழிதூற்றிய வர்களுக்கு எதிர்த்துநின்று உண்மைக்காகப் போராடுவதையும், அந்த நாட்டில் நிலவிவந்த ஒழுக்கக் கேடுகளிலிருந்து விசுவாசிகள் பிரிந்து வாழ வேண்டுமென்று அழைப்பு விடுப்பதையும், கிறிஸ்துவுக்குள்ளாக இறந்து போனவர்கள் பற்றி அவர்கள் கொண்டிருந்த தப்பெண்ணத்தைத் திருத்துவதையும், கிறிஸ்து வரப்போகிறார் என்னும் காரணத்தினால் வேலைசெய்வதை விட்டுவிட்ட சகோதரரைக் கடிந்துகொள்கிறதை யும், தங்களுடைய ஆவிக்குரிய வழிகாட்டிகளை அவர்கள் மதிக்க வேண்டுமென்று அறிவுரை வழங்குகிறதையும் காணலாம்.

1 தெசலோனிக்கேயர் நூலின் மிக முக்கிய மான ஆய்வுப்பொருட்களில் கர்த்தராகிய இயேசு மீண்டும் வருகிற நிகழ்ச்சியும் ஒன்று. ஐந்து அதிகாரங்களிலும் குறைந்தது ஒரு முறையாவது இந்தச் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாளர் G. R. ஹார்டிங் வுட் இந்தக் குறிப்புகளையெல் லாம் ஒன்றுதிரட்டி மிக அருமையான பொருட் சுருக்கத்தைத் தந்திருக்கிறார்:

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வரு கையை எதிர்நோக்கியிருக்கும் கிறிஸ்தவன் (1) தன்னுடைய இருதயத்தில் சிலைகளுக்கு இடங் கொடுக்கமாட்டான் (1:9,10); (2) தன்னுடைய ஊழியத்தில் அக்கறையின்றி இருக்கமாட்டான் (2:9,19); (3) ஐக்கியத்தில் பிரிவினைக்கு இடங் கொடுக்கமாட்டான் (3:12,13); (4) தன்னுடைய உள்ளத்தில் மனச்சோர்வடையமாட்டான் (4:13-18); (5) தன் வாழ்க்கையில் பாவத்திற்கு இடங் கொடுக்கமாட்டான் (5:23).[2]

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (1:1)

2. தெசலோனிக்கேயருடன் பவுல் கொண்டிருந்த தனிப்பட்ட உறவு (1:2-3:13)

அ. தெசலோனிக்கேயரைக் குறித்து பவுல் கூறும் புகழுரை (1:2-10)

ஆ. பவுல் ஆற்றிய ஊழியம், தெசலோனிக்கேயாவில் கொடுத்த செய்தி மற்றும் அவரது நடத்தை பற்றிய புனராய்வு (2:1-12)

இ. நற்செய்தி அறிவிப்புக்குத் தெசலோனிக்கேயர் செய்த பதிற்செயலைப் பற்றிய புனராய்வு (2:13-16)

ஈ. தெசலோனிக்கே பட்டணத்திற்குப் பவுல் திரும்பி வராததற்கான காரணத்தை விளக்கிக் கூறுதல் (2:17-20)

உ. தெசலோனிக்கே பட்டணத்துக்குத் தீமோத்தேயு அனுப்பப்படுதல் (3:1-10)

ஊ. பவுல் ஏறெடுத்த குறிப்பிட்ட மன்றாட்டு (3:11-13)

3. நடைமுறை அறிவுரைகள் (4:1-5:22)

அ. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிற பரிசுத்தமாகுதல் (4:1-8)

ஆ. பிறர்மேல் கருத்துடைய அன்பு (4:9,10)

இ. வெளியிலிருக்கிறவர்களிடத்தில் பேசும் வாழ்க்கை (4:11-12)

ஈ. விசுவாசிகளுக்கு ஆறுதல் தரும் நம்பிக்கை (4:13-18)

உ. கர்த்தருடைய நாள் (5:1-11)

ஊ. பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான அறிவுரைகள் (5:12-22)

4. தெசலோனிக்கேயருக்கு வழங்கப்பட்ட இறுதி வாழ்த்துகள் (5:23-28)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	தெசலோனிக்கேயருடன் உறவு			தெசலோனியருக்கு அறிவுரை				
காலம்	கி. பி. 51							
பகுப்பு	புகழுரை	ஆற்றிய ஊழியம்	உறுதி செய்தல்	வளர்ச்சிக்கான வழிமுறை	ஆறுதல் தரும் நம்பிக்கை	கர்த்தருடைய நாள்	தூய வாழ்க்கை	இறுதியுரை
வசனம்	1:1-10	2:1-16	2:17-3:13	4:1-12	4:13-18	5:1-11	5:12-22	5:23-28
இடம்	கொரிந்து பட்டணம்							

விளக்கவுரை

1. வாழ்த்துரை [1:1]

உலகத்தைத் தலைகீழாகத் திருப்பியவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று மனிதர்களுடைய பெயர்களோடு இந்த மடல் தொடங்குகிறது. அந்தக் குற்றச்சாட்டானது அவதூறாகச் சொல்லப்பட்டபோதிலும், அது உண்மையில் ஒரு புகழுரையாகவே விளங்கியது.

இம்மடலின் ஆசிரியர் **பவுல்**. அந்த நேரத்தில் **சில்வானும் தீமோத்தேயுவும்** அவருடன் பயணம் செய்து கொண்டிருந்தார்கள், ஆகவே அவர்களுடைய பெயர்களையும் தன்னுடைய பெயரோடு அவர் சேர்த்திருக்கிறார். இங்கு **சில்வான்** என்று குறிப்பிடப்பட்டிருப்பவர், பவுலோடு சேர்ந்து பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலையில் பாடல் பாடிய சீலா என்பவராகவே இருக்க வேண்டும் (அப். 16:25). பவுல் தெசலோனிக்கேயாவுக்குப் பயணம் மேற்கொள்ளத் தொடங்குகையில் அவரோடு லீஸ்திராவில் சேர்ந்துகொண்ட இளைஞரே **தீமோத்தேயு** என்பவர் (அப். 16:1).

இம்மடல் **பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருந்த தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதப்பட்டது**. நாம் *சபை* என்று மொழிபெயர்க்கிற சொல்லானது, அந்த நாட்களில் எந்தவொரு மக்கள் கூட்டத்தையும் குறிக்கக்கூடிய சொல்லாக இருந்தது. ஆகவேதான் இது ஒரு புறச் சமயத்தைச் சேர்ந்த கூட்டம் அல்லவென்றும், **தேவனைப் பிதாவாகவும், இயேசு கிறிஸ்துவைக் கர்த்தராகவும்** பெற்று மேலான உறவைப் பெற்றிருந்த மக்களின் சபை என்றும் பவுல் தெளிவுபடுத்த விரும்புகிறார்.

விண்ணுலகின் இந்தப் பகுதியில் எந்தவொரு மனிதனும் மகிழ்ந்து அனுபவிக்கக்கூடிய மிகச் சிறந்த ஆசிர்வாதத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள வாழ்த்துரை **கிருபையும் சமாதானமுமே** ஆகும். தகுதியற்றவர்களாக இருக்கும் நம்முடைய வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் தேவனிடத்திலிருந்து பெறுகிற சலுகையே **கிருபை** எனப்படும். விழுந்து நொறுங்கக்கூடியதும், நசுக்கிப் பிழிந்தெடுக்கக் கூடியதுமான வாழ்க்கைச் சூழ்நிலைகளிலெல்லாம் அவற்றை எதிர்த்து நிற்கும்படி கலக்கமுறாத அமைதியைத் தருவதே **சமாதானம்** ஆகும். **கிருபை** விளைவை உண்டுபண்ணும் காரணமாக இருக்கிறது, **சமாதானம்** விளைபயனாக இருக்கிறது. இரண்டு தெய்வீகப் பெயர்களையும் இந்த ஆசிர்வாதங்களின் பிறப்பிடமாக, சமத்துவ நிலையில், மீண்டும் குறிப்பிடும் பவுல், 'உடைய' என்னும் பொருளைச் சுட்டும் தன்மை மறுபெயர்ச்சொல்லாகிய **நம்முடைய** என்னும் சொல்லை **பிதா**[3] என்னும் பெயருக்கு முன் எழுதுகிறார்.

2. தெசலோனிக்கேயருடன் பவுல் கொண்டிருந்த தனிப்பட்ட உறவு [1:2-3:13]

அ. தெசலோனிக்கேயரைக் குறித்து பவுல் கூறும் புகழுரை [1:2-10]

1:2-4 பவுல் தன்னுடைய மன்றாட்டுகளில் தெசலோனிக்கேயரைக் குறிப்பிட்டு ஜெபித்தார். (நம்முடைய கிறிஸ்தவ சகோதர, சகோதரிகளை நினைவுகூருவதில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கிறோமா?) மேலும் அவர் எப்பொழுதும் **ஸ்தோத்திரத்தோடு** அவர்களுக்காக மன்றாடினார். அவர்களுடைய **விசுவாசத்தின் கிரியையையும்** அவர்களுடைய **அன்பின் பிரயாசத்தையும்** அவர்களுடைய **நம்பிக்கையின் பொறுமையையும்** நினைவுகூர்ந்தவராக அவர் அவர்களுக்காக ஸ்தோத்திரித்தார்.

அவர்கள் தேவனிடமாய் மனந்திரும்பிய செயலையே பெரும்பாலும் **விசுவாசத்தின் கிரியை** என்னும் சொற்றொடர் முதன்மைப்படுத்திக் குறிப்பிடுகிறது. **விசுவாசம் ஒரு கிரியையாயிருக்கிறது** என்னும் விளக்கம், சில மனிதர்கள் கர்த்தராகிய இயேசுவிடம், "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்ட நிகழ்ச்சியை நம்முடைய நினைவிற்குக் கொண்டுவருகிறது. "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்று இயேசு கிறிஸ்து விடைபகர்ந்தார் (யோவான் 6:28,29). இந்தப் பொருளில் விசுவாசம் ஒரு கிரியையாக அல்லது செயலாக இருக்கிறது. ஆனால் மனிதன் தகுதியைச் சம்பாதிக்கும்படியோ அல்லது அவன் பெருமைபாராட்டும்படியோ செய்ய வேண்டிய ஒரு கடினமான வேலையல்ல இது. உண்மையில், கிறிஸ்துவின் இரட்சகருக்குரிய புகழ்ச்சியைக் கொள்ளையிடாமலும், உதவியற்ற பாவி என்னும் தன்னுடைய நிலையை மறுத்துரைக்காமலும் ஒரு மனிதன் செய்யக் கூடிய ஒரே செயல் இதுதான். ஒரு படைப்பு தன் படைப்பாளரையும், ஒரு பாவி தன் இரட்சகரையும் ஏற்கும் செயலே விசுவாசமாகும். இந்தச் செயல் பாராட்டைப் பெறும்படியாகச் செய்யப்படுகின்ற செயலல்ல. மனந்திரும்புதலைத் தொடர்ந்து கைக்கொள்ளப்படும் விசுவாச வாழ்க்கையும் **விசுவாசத்தின் கிரியையில்** அடங்கும்.

விசுவாசத்தின் கிரியையோடு பவுல் அவர் களுடைய **அன்பின் பிரயாசத்தையும்** நினைவு கூர்ந்தார். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினிடத்தில் கொண்டிருந்த **அன்பின்**நிமித்தம் தூண்டுதல் பெற்றவர்களாக தேவனுக்குச் செய்த சேவையை இது குறிப்பிடுகிறது. கடமையை நிறைவேற்றும் பொருட்டு பொறுமையோடு சகித் துக்கொள்கிற வாழ்க்கையல்ல கிறிஸ்தவம். மாறாக அது அன்பின்நிமித்தம் ஒருவருக்குச் செய்கின்ற திருப்பணியேயாகும். அவருக்கு அடி மையாயிருப்பது நிறைவான விடுதலையாகும். மேலும் "அவரிடத்தில் கொண்டிருக்கிற அன்பு, அடிமை வேலையை தெய்வீக வேலையாக மாற்றுகிறது." அன்போடு ஒப்பிட்டுப்பார்க்கை யில், ஆதாயம் பெறவேண்டும் என்னும் நோக்கம் தரக்குறைவானதும் வெற்றுப்பகட்டானதுமாகும். பணத்தினால் தூண்டிவிடப்பட முடியாத வேலை யைச் செய்யும்படி கிறிஸ்துவின் மேலுள்ள அன்பு கவர்ந்திழுக்கிறது. இந்த உண்மைக்கு உயி ருள்ள சான்றுகளாகத் தெசலோனிக்கேயர் திகழ்ந்தார்கள்.

இறுதியாக, அவர்களுடைய **நம்பிக்கையின் பொறுமைக்காகப்** பவுல் நன்றிபாராட்டினார். அவர்கள் இயேசுவுக்காக உறுதியோடு காத்தி ருந்த செயலை இது குறிக்கிறது. அவர்கள் கிறிஸ்துவுக்காகத் துணிவுடன் நின்றதன் காரண மாக அவர்கள் இன்னல்களைச் சந்திக்க நேரிட் டது. ஆனாலும் "ஒளிவுமறைவற்ற விடாப்பிடி யான பொறுமை" என்று திருவாளர் பிலிப்பு வினால் சொல்லப்பட்டிருப்பது போல, அவர்களு டைய பொறுமையில் விரிசல் உண்டாகவில்லை.

அந்த நினைவுகூருதலின் இடம் **நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்** என்னும் சொற் றொடரால் விவரிக்கப்பட்டிருக்கிறது. பவுல் ஜெபிக்கும்படியாக தேவனுடைய சமுகத்திற் குள்ளாக நுழைந்தபோது, பரிசுத்தவான்களின் ஆவிக்குரிய பிறப்பு, அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி ஆகியவற்றைத் திரும்பவும் கூறிய வராக, அவர்களுடைய விசுவாசம், அன்பு, நம் பிக்கை ஆகியவற்றிற்காக ஸ்தோத்திரம் செலுத் தினார்.

இந்தப் பரிசுத்தவான்கள் யாவரும் உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்னும் உறுதியை அப்போஸ்தலன் பெற்றிருந்தார். ஆனால் அவர் இதனை எவ்வாறு அறிந்திருந்தார்? அவருக்கு ஏதேனும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நுண்ணறிவு இருந்ததா? இல்லை, அவர்கள் நற்செய்தியை ஏற்றுக்கொண்ட விதத்தைக் கொண்டு, அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள் சிலர் என் பதை அவர் அறிந்திருந்தார்.

தெரிந்தெடுப்பு[4] என்னும் கோட்பாடு, உலகத் தோற்றத்துக்கு முன்னமே கிறிஸ்துவுக்குள் ளாகச் சில குறிப்பிட்ட மனிதர்களை தேவன் தெரிந்துகொண்டார் என்று கற்பிக்கிறது (எபே. 1:4). அவர் சிலரை அழிவுக்கென்று தெரிந்து கொண்டார் என்று அது கற்பிக்கவில்லை. மனிதர் கள் கடைசியில் இழந்துபோனவர்களாகக் காணப் படுவார்கள் என்றால், அது அவர்களுடைய சொந் தப் பாவத்தினாலும் அவிசுவாசத்தினாலும் உண் டான நிலையாகவே இருக்கும்.

தெரிந்தெடுப்பு என்னும் கோட்பாட்டைக் கற் பிக்கிற அதே திருமறையானது, மனிதனுடைய பொறுப்பை அல்லது தன்னிச்சையாகத் தெரிந் தெடுக்கும்படி அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்பைக் குறித்தும் கற்பிக்கிறது. எங்குமுள்ள எல்லா மனிதர்களுக்கும் இரட்சிப்பிற்கான மெய் யான அழைப்பை தேவன் கொடுக்கிறார். எவரொ ருவர் கிறிஸ்துவினிடம் வருகிறாரோ அவர் அன் பான வரவேற்பைப் பெறுகிறார்.

இறைவனின் தெரிந்தெடுப்பு மற்றும் தன்னிச் சையாக மனிதன் தெரிந்தெடுக்கக் கூடிய வாய்ப்பு ஆகிய இரண்டு கோட்பாடுகளும் ஒன்றுக் கொன்று முரண்பாடான, இணக்கமுறாத சச் சரவை மனிதனுடைய உள்ளத்தில் தோற்றுவிக் கின்றன. ஆனால் இவ்விரண்டு கோட்பாடுகளை யும் திருமறை கற்பிக்கிறது. ஆகவே நம்மால் அவ்விரு கோட்பாடுகளையும் இசைவுறச் செய்ய முடியவில்லையென்றாலும், அவற்றை நம்புவதே தகும்.

யாரெல்லாம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார் கள் என்பதை நாம் அறியமாட்டோம். ஆகவே நாம் நற்செய்தியை உலகமெங்கும் எடுத்துச் செல்லவேண்டும். தங்களுடைய நம்பிக்கையற்ற நிலைக்கு இறைவனின் தெரிந்தெடுப்பே காரணம் என்று பாவிகள் சாக்குப்போக்குச் சொல்லக் கூடாது. அவர்கள் மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைப்பார் களேயானால் இறைவன் அவர்களை இரட் சிப்பார்.

1:5 எங்கள் சுவிசேஷம் என்று சொல்லும் போது, இந்தச் செய்தியானது மற்ற அப்போஸ் தலர் கூறிவந்த செய்தியிலிருந்து மாறானது

என்று பவுல் குறிப்பிடுகிறார் என்னும் பொருளைத் தருகிறதில்லை. செய்தி ஒன்றுதான், செய்தி யாளர்கள்தான் வெவ்வேறானவர்கள். வெறு மனே சமயச் சொற்பொழிவு என்று அந்தச் செய்தி யைத் தெசலோனிக்கேயர் கருதவில்லை. உண் மையில் பவுல் அறிவித்த செய்தியை அவர்கள் வசனத்தோடுதான் பெற்றார்கள். ஆனாலும் அதனை **வசனத்தோடு மாத்திரம்** பெறவில்லை.

அது **வல்லமையோடும், பரிசுத்த ஆவி யோடும், முழு நிச்சயத்தோடும்** அவர்களிடம் வந்தது: **(1) வல்லமையோடு** - அந்தச் செய்தி யானது அவர்களுடைய வாழ்க்கையில் இயற் கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலோடு செயல்புரிந் தது, பாவத்தைக் குறித்த குற்றவுணர்வை உண்டுபண்ணியது, மனந்திரும்புதலையும் மனமாற்றத்தையும் உண்டாக்கியது. **(2) பரி சுத்த ஆவியோடும்** - இந்த வல்லமையானது பரிசுத்த ஆவியால் உண்டாக்கப்பட்டது. **(3) முழு நிச்சயத்தோடும்** - பவுல் தாம் அறிவித்த செய்தி யில் பெரிதான நம்பிக்கை கொண்டவராக அதைப் பிரசங்கித்தார். தெசலோனிக்கேயர் அந்தச் செய்தியை **முழு நிச்சயத்தோடு** தேவனு டைய வசனமாக ஏற்றுக்கொண்டார்கள். அதன் விளைவாக அவர்களுடைய வாழ்வில் விசுவாசம் முழு நிச்சயத்தோடு இருந்தது.

பவுல் அவர்களோடு இருந்த வேளைகளில் எப்படி நடந்துகொண்டார் என்பதை அவர்களுக்கு இப்பொழுது நினைவுபடுத்துகிறார். அவர் நற்செய்தியை அறிவித்தது மட்டுமின்றி, அதற்குப் பொருத்தமானபடி வாழ்ந்தும் வந்தார். பரிசுத்த வாழ்க்கையே மிகச்சிறந்த பிரசங்கம்.

1:6 ஆகவே, **நீங்கள் எங்களையும் கர்த்த ரையும் பின்பற்றுகிறவர்களானீர்கள்** என்று பவுலால் கூறமுடிந்தது. "கர்த்தரையும் எங்களை யும்" என்று அவர் சொல்லியிருக்க வேண்டும் என்று ஒருவர் எதிர்பார்க்கக் கூடும், அப்பொழுது கர்த்தருக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கும் என்று கருதலாம். ஆனால் இங்கு அவர் தெச லோனிக்கேயருடைய அனுபவத்தின் கால வரிசையில் குறிப்பிடுகிறார். அவர்கள் கர்த்த ராகிய இயேசுவுக்கு முதன்முதலாக அறிமுகப் படுத்தப்பட்டது அப்போஸ்தலனுடைய வாழ்க்கை யின் மூலமாகத்தான்.

மனிதர்கள் கிறிஸ்துவை நம்மிடத்தில் காண முடியும் என்று சிந்திப்பது தன்னடக்கமுள்ள சிந்த னையே. நாமும் பவுலோடு சேர்ந்து, "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று சொல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும் (1 கொரி. 11:1).

அவர்கள் **மிகுந்த உபத்திரவத்தோடும் சந் தோஷத்தோடும்** வசனத்தை ஏற்றுக்கொண் டார்கள். இவ்வண்ணமே அவர்கள் கர்த்தரையும் அப்போஸ்தலரையும் பின்பற்றினார்கள். வெளிப் புறத்தில் **உபத்திரவம்** இருந்தது, உள்ளான நிலையில் **சந்தோஷம்** இருந்தது. இது வழக்கத் துக்கு மாறான ஒருங்கிணைப்பாக இருக்கிறது! இந்த உலகத்து மனிதர்களால் ஒரே நேரத்தில் உபத்திரவத்தையும் சந்தோஷத்தையும் அனுப விக்க முடியாது. அவர்களைப் பொருத்தமட்டில் சந்தோஷத்திற்கு எதிர்ச்சொல் துக்கமேயாகும். கிறிஸ்தவன் **பரிசுத்தஆவியின் சந்தோஷத் தைப்** பெற்றிருக்கிறான், அது சூழ்நிலைகளைச் சார்ந்ததல்ல. அவனைப் பொருத்தமட்டில் சந்தோஷத்திற்கு எதிர்ச்சொல் பாவம்.

அவர்கள் மனமாற்றம் பெற்றதைத் தொடர்ந்து அடைந்த இன்னல்களோ, **உபத்திரவம்** என்று இங்கு சொல்லப்பட்டுள்ளது.

1:7 தெசலோனிக்கேயர் முன்மாதிரியான கிறிஸ்தவர்களாக மாற்றம் பெற்றனர். முதலா வதாக, அவர்கள் அடைந்த உபத்திரவங்களின் நடுவே சந்தோஷத்தோடு இருந்த நிலைமை **மக்கெதோனியாவிலும் அகாயாவிலும்** இருந்த விசுவாசிகள் யாவருக்கும், அதாவது கிரேக்கு நாட்டில் இருந்த யாவருக்கும் முன்மாதிரியாய் இருந்தது.

1:8 ஆனால் அவர்களுடைய சாட்சி அதோடு முடிவடைந்துவிடவில்லை. அவர்கள் பலுகிப் பெருகுகிற கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். ஒரு குளத்தில் உண்டாகும் சிற்றலைபோல, **கர்த்தரு டைய வசனம்** பெரிதாகிக்கொண்டு செல்லுகிற வட்டமாகப் பரவியது. முதலாவது **மக்கெ தோனியாவிலும் அகாயாவிலும்,** பின்னர் **எங்கும்** அது பரவியது. **தேவனைப் பற்றின** அவர் களுடைய **விசுவாசம்**, பவுல் அதைக் குறித்துப் பேச வேண்டிய அவசியம் இல்லாதபடி எல்லா இடங்களுக்கும் பரவியிருந்தது. அங்கிருந்த மக்கள் அதைக் குறித்து ஏற்கனவே கேள்விப் பட்டிருந்தார்கள்.

நாம் பெற்றிருக்கிற நன்மைகளுக்கு நாமே முடிவிடங்களாக இருக்கக்கூடாது. மாறாக, பிற ருக்கு அந்த நன்மைகள் சென்று அடையும்படி யான வாய்க்கால்களாக நாம் இருக்க வேண்டும்.

நம்மிடத்திலிருந்து ஒளி பிரகாசித்துப் பிறரைச் சென்றடையும்படி தேவன் நம்முடைய இருதயங்களில் பிரகாசித்தார் (2 கொரி. 4:6 JND). உண்மையாகவே இரட்சிப்பு என்னும் பானத்தை நாம் பருகியிருந்தோமானால், நம்மைச் சூழ இருக்கிற மனிதர்களை நோக்கி நம்முடைய உள்ளங்களிலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் (யோவான் 7:37,38).

1:9 அப்போஸ்தலனும் உடன் ஊழியர்களும் தெசலோனிக்கேயாவுக்குச் சென்றபோது, மிக ஆடம்பரமான வரவேற்பு அவர்களுக்கு அளிக்கப்பட்டது என்று பொதுவாகப் பேசப்படுகிறது. மேலும் பலருடைய வாழ்க்கையில் வியத்தகு மாற்றம் சடுதியில் உண்டாயிற்று என்பதும் பொதுவாக நம்பப்படுகிற செய்தியாகும். அவர்கள் புறச்சமயச் **சிலைகளைவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பி** அடிமைகளைப்போல தங்களுடைய சித்தத்தையே தேவனிடமாய் ஒப்புவித்தார்கள்.

அவர்கள் **விக்கிரகங்களைவிட்டு தேவனிடமாய் மனந்திரும்பினார்கள்** என்னும் சொற்றொடரைக் கவனியுங்கள், விக்கிரகங்களிலிருந்து தேவனிடமாய் என்று சொல்லப்படவில்லை. தங்களுடைய விக்கிரகங்களில் சலிப்படைந்தவர்களாக, தேவனுக்கு ஒரு சந்தர்ப்பம் தருவோம் என்று முடிவு செய்தார்கள் என்று இங்கு சொல்லப்படவில்லை. அவர்கள் தேவனிடமாய்த் திரும்பி தங்களுடைய சிலைகளையெல்லாம் விட்டொழிக்கும் அளவிற்கு மனநிறைவு பெற்றார்கள்.

பேதுருவை மனங்கசந்து
அழச்செய்த பார்வை,
ஸ்தேவானும் முகங்கண்டு
தொழுதவனாய் மரித்தான்,
மரியாளின் இழப்பினிலே
சேர்ந்தழுத இதயம்,
அவரல்லோ சிலையினின்று
எனைக்கவர்ந்த நேசர்
– ஓரா ரோவன்

இதில் அடங்கியுள்ள எழுச்சியும் பயபக்தியும் கூடிய உணர்வை நாம் ஒருக்காலும் மறந்துவிடக் கூடாது. இரண்டு மனிதர்கள் கர்த்தருடைய வசனத்தை ஏந்தியவர்களாகப் புறச்சமய நகரம் ஒன்றிற்குச் செல்கிறார்கள். அங்கே அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையில் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறார்கள். மறுபிறப்பு என்னும் அற்புதம் நிகழ்கிறது, ஆண்பெண் இருபாலரும் தங்களுடைய சிலைகளையெல்லாம் விட்டொழித்தவர்களாக இரட்சகரைப் பற்றிக்கொள்ளும்படி பரவசமடைகிறார்கள். அடுத்தது, தேவனைத் தொழுதுகொள்ளுகிறவர்களாகிய விசுவாசிகள் அடங்கிய உள்ளூர் சபை நிறுவப்படுகிறது, அவர்கள் பரிசுத்த வாழ்க்கையை வாழ்கிறார்கள், இடர்ப்பாடுகளைத் துணிவுடன் பொறுத்துக்கொள்கிறார்கள், மற்றவர்களைக் கிறிஸ்துவுக்காக வெற்றிகொள்கிறார்கள். உண்மையாகவே கர்த்தருடைய ஊழியம் ஒருவர் பெறக்கூடிய அழைப்புகளிலேயே வீறார்ந்த அழைப்பு!

1:10 ஜீவனுள்ளவரும் மெய்யானவருமாகிய தேவனை (உயிரற்றதும் போலியானதுமான விக்கிரகங்களுக்கு எதிரானவர்), தெசலோனிக்கேயர் தொழுதுகொண்டது மட்டுமின்றி, கர்த்தராகிய இயேசுவுக்காக ஆவலோடு காத்திருந்தார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பின் விளக்கங்களைக் காணுங்கள்:

1. நபர் - **அவருடைய குமாரன்**

2. இடம் - **பரலோகத்திலிருந்து**

3. அடையாளம் - **அவரே மரித்தோரிலிருந்து தேவனால் எழுப்பப்பட்டவர்**

4. மதிப்புமிக்க பெயர் - **இயேசு**

5. நம்பிக்கை - **இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி விடுவிப்பவர்**

இவ்வாறாக, தெசலோனிக்கேயருடைய அனுபவத்தின் மூன்று கூறுகளை நாம் 9 மற்றும் 10 ஆகிய வசனங்களில் பெற்றிருக்கிறோம்.

1. மனந்திரும்பிய செயல் (விசுவாசத்தின் கிரியையோடு ஒப்பிடுக, வச. 3)
2. ஊழியஞ்செய்தல் (அன்பின் பிரயாசத்தோடு ஒப்பிடுக, வச. 3)
3. எதிர்பார்த்திருத்தல் (நம்பிக்கையின் பொறுமையோடு ஒப்பிடுக, வச. 3).

G. R. ஹார்டிங் வுட்[5] என்பார் இதனை கீழ்க்கண்டவாறு பகுத்துரைக்கிறார்:

பின்பற்றுதல் - தேவனை நோக்கிப்பார்த்தல்

ஊழியஞ்செய்தல் - ஊழியத்தலங்களை நோக்கிப்பார்த்தல்

எதிர்பார்த்திருத்தல் - இயேசுவுக்காக நோக்கிப்பார்த்தல்.

தெசலோனிக்கேயர் பரலோகத்திலிருந்து தேவனுடைய குமாரன் வரக் காத்திருந்தார்கள். அவர்களுடைய வாழ்நாட்காலத்தில், உண்மையில் அவர்களுடைய வாழ்நாட்காலத்தில் எந்தவொரு நொடிப்பொழுதிலும் அவருடைய வருகை நிகழ்வதற்கான வாய்ப்பு இருந்தது என்பதை இது குறிப்பாய் உணர்த்துகிறது. எந்த நேரத்திலும் கர்த்தராகிய இயேசுவின் வருகை நிகழலாம் என்பது கிறிஸ்தவனது நம்பிக்கை ஆகும். புதிய ஏற்பாட்டில் பல பகுதிகளில் இவ்வுண்மையைக் காணமுடியும். அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன:

லூக்கா 12:36 - "தங்கள் எஜமான்... எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனிதருக்கு ஒப்பாக இருங்கள்."

ரோமர் 8:23 - "நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்."

1 கொரிந்தியர் 11:26 - "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்."

2 கொரிந்தியர் 5:2 - "ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்."

கலாத்தியர் 5:5- "நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்."

பிலிப்பியர் 3:20 - "அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்."

பிலிப்பியர் 4:5 - "கர்த்தர் சமீபமாயிருக்கிறார்."

தீத்து 2:13 -"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது."

எபிரெயர் 9:28 - "தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்."

யாக்கோபு 5:7-9 "இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்... கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது... இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்."

1 பேதுரு 4:7 - "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது."

1 யோவான் 3:3 - "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவன் எவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்கிறான்.

யூதா 21 - "... நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்."

வெளிப்படுத்தின விசேஷம் 3:11 - "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்!" 22:7 - "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்!" 22:20 - "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்."

தான் மரணத்தின் வழியாகச் செல்ல வேண்டுமென்பதைக் கிறிஸ்தவன் அறிந்திருக்கிறான், ஆனால் கர்த்தர் எந்தவொரு நொடியிலும் வரக்கூடும் என்பதையும் அவன் அறிந்திருக்கிறான். அவ்வாறு நிகழுமென்றால், அவன் மரணமடையாமலேயே விண்ணகத்தைச் சென்றடைவான்.

கிறிஸ்து தமது மக்களுக்காக வருகிறதற்கு முன்னர் எந்தவொரு தீர்க்கதரிசன வசனமும் நிறைவேற வேண்டியதில்லை. தேவனுடைய திட்டத்தில் ***அடுத்து நிகழவிருக்கிற மிகப் பெரிய*** நிகழ்ச்சி அதுவேயாகும்.

ஏதாவது ஒரு நிகழ்ச்சி இந்த இடைப்பட்ட காலத்தில் நிகழவேண்டுமென்றால் அல்லது ஒரு காலப்பாகுபாடு இடையில் இருக்குமென்றால் கர்த்தருடைய வருகை எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம் என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது. உபத்திரவ காலத்திற்கு முன்னரே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கொள்கை மட்டுமே, இன்றைக்குக் கிறிஸ்துவின் வருகை நிகழும் என்று விசுவாசி எதிர்நோக்கியிருக்க அனுமதிக்கிறது. மற்ற கருத்துகள், அவருடைய வருகை எப்பொழுது வேண்டுமானாலும் நிகழக்கூடும் என்னும் எதிர்பார்ப்பைக் கைவிடும்படி வற்புறுத்துகின்றன.

நாம் எதிர்பார்ப்பவர் இயேசுவே; **இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி** மீட்டுக்கொள்பவரும் அவரே! இரட்சகருடைய வருகையின் விவரத்தை நாம் இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளலாம்:

1. அவர் நம்மை நம்முடைய பாவங்களின் நித்திய தண்டனையிலிருந்து விடுவிக்கிறார். நம்முடைய பாவங்களுக்கு எதிரான தேவனு

டைய கோபாக்கினையை அவர் சிலுவையில் சகித்தார். அவரிடத்தில் வைக்கிற விசுவாசத் தின் மூலமாக, அவருடைய கிரியையின் மதிப்பு நம்முடைய கணக்கில் வரவுவைக்கப் பட்டிருக்கிறது. நாம் கிறிஸ்து இயேவுக்குட் பட்டவர்களாக இருப்பதால் இனி நமக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோமர் 8:1).

2. ஆனால், தேவனுடைய குமாரனை ஏற்க மறுத்த உலகத்தின்மேல் அவருடைய கோபாக் கினையானது ஊற்றப்படுதலாகிய வரும் நாட்களில் நிகழவிருக்கிற நியாயத்தீர்ப்பிலி ருந்தும் அவர் நம்மை விடுவிப்பார். இந்தக் காலமானது உபத்திரவ காலம் என்றும், யாக்கோபின் இக்கட்டுக் காலம் என்றும் அறியப்படும் (தானி. 9:27; மத். 24:4-28; 1 தெச. 5:1-11; 2 தெச. 2:12; வெளி. 6:1-19:10).

ஆ. பவுல் ஆற்றிய ஊழியம், தெசலோனிக் கேயாவில் கொடுத்த செய்தி மற்றும் அவரது நடத்தை பற்றிய புனராய்வு (2:1–12)

2:1 பவுல் தெசலோனிக்கே பட்டணத்தில் இருந்தபோது அவரது தனிப்பட்ட பண்புகளும் நடத்தையும் எவ்வாறு இருந்தன என்பது பற்றி அவர் 1:5 -ஆவது வசனத்தில் ஓரளவு சுருக்க மாகத் தெரிவித்திருந்தார். இப்பொழுது அவர் தான் ஆற்றிய திருப்பணியினைக் குறித்தும், அறிவித்த செய்தியைக் குறித்தும், அவரது வாழ்க்கை முறையைக் குறித்தும் விரிவான வகையில் புனராய்வு செய்கிறார்.

ஒரு கிறிஸ்தவனின் குணநல நடத்தை என்னும் ஊழியமே அவனுடைய ஊழியத்தில் முதன்மையானது என்னும் கருத்து இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. நாம் என்ன சொல்லு கிறோம் என்பதல்ல, நாம் யாராக நடந்துகொள் கிறோம் என்பதே மிகவும் முக்கியமானது. நாம் அறிந்து செய்கிற செயல்களினால் உண்டாகிற விளைபயனைக் காட்டிலும், நாம் அறியாமலேயே உண்டாக்குகிற செல்வாக்கு உரத்த சத்தத் தோடு பேசும். ஜேம்ஸ் டென்னி என்பார் கூறி யிருப்பதாவது:

> ஒரு கிறிஸ்தவன் தனது தொழிலை நடத்துவ தற்குத் தேவையான முழுமையான முதலீடு அவனுடைய குணநலனேயாகும். மற்ற எந்தத் தொழிலிலும், ஒரு மனிதனுடைய நடத்தை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அது பொருட் டன்று, அவனுடைய வங்கிக் கணக்கில் நிதி நிலை சீராக இருந்தால் அதுபோதும். ஆனால் தன்னுடைய குணநலத்தை இழந்துபோன கிறிஸ்தவன், எல்லாவற்றையும் இழந்து போன வனாகவே காணப்படுவான்.[6]

கிறிஸ்தவத் திருப்பணியில் தனது உயிரையே கொடுக்க நேரிட்ட ஜிம் எலியட் தனது நாட்குறிப் பேட்டில் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> ஆவிக்குரிய ஊழியத்தில், வேறு எதுவுமல்ல, ஊழியரின் நடத்தையே அவருடைய ஊழியத் தின் தரத்தை நிர்ணயிக்கும் அளவுகோலாகும். ஷெல்லி, பைரன் என்பார் ஒழுக்க நெறியில் தங்களுடைய மனம்போன போக்கின்படி வாழலாம், ஆயினும் மிக நல்ல பாடல்களை அவர்களால் எழுதமுடியும். வேக்னர் என்பார் ஒரு காமவெறிகொண்ட மனிதனாக இருக் கலாம், எனினும் அருமையான இசையை அவரால் இயற்றமுடியும், ஆனால் இறைப் பணியில் அவ்வாறிருக்க முடியாது. தெசலோ னிக்கேயரிடம் தான் சொன்னவை சரியா னவை என்று மெய்ப்பிக்க, பவுல் தனது சொந்த நடத்தையையும் வாழ்க்கை முறையை யுமே சான்றாகத் தருகிறார். "நீங்கள் அறிந் திருக்கிறீர்கள்" என்னும் சொற்றொடர் இந்த மடலில் ஒன்பது முறை பயன்படுத்தப்பட்டிருக் கிறது. பவுலின் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் அவருடைய வெளியரங்கமான வாழ்க்கை ஆகிய இரண்டையும் தெசலோனிக்கேயர் நேரடியாய்க் கண்டிருந்தார்கள் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்ற பவுல், தான் அறிவித்த செய்தியைக் காட்டிலும், தன்னுடைய வாழ்க் கையின் மூலமாக மேலான முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அது ஓர் எடுத்துக்காட்டிற்கும் மேலாக மனநிறைவு அளிக்கக்கூடிய சான்றாக விளங்கியது. இறை அரசின் பெரும்பான்மை யான நடவடிக்கைகள் இவ்வளவு போலியாக இருப்பது குறித்து வியப்படைய வேண்டிய தில்லை; ஊழியரின் நன்னெறி ஒழுக்கம் எவ்வாறு இருக்கிறதென்று பாருங்கள்.[7]

ஒருவேளை, அவருக்கு எதிராகப் பகைஞரால் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை அப்போஸ்தலன் இந்த வசனங்களில் மறுத்துரைக்கிறார் போலும். அது எதுவானாலும், முதலாவது, தன்னுடைய ஊழியம் வெற்றியடைந்த ஊழியம் என்று பவுல் தெசலோனிக்கேயரிடம் நினைவுபடுத்துகிறார்.

அவருடைய ஊழியம் மிகுந்த பயனுள்ளதாக இருந்தது என்பதற்கு அவர்களே உயிருள்ள சாட்சிகளாக இருந்தார்கள். அவர் அவர்களைச் சந்தித்தது வீண்போகவில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் மனந்திரும்பி, அங்கு ஒரு சாட்சி நிறுவப்பட்டிருந்தது.

2:2 மேலும் அவருடைய ஊழியம் உற்சாகம் நிறைந்ததாக இருந்தது. பிலிப்பி பட்டணத்தில் அவருக்கிருந்த கடுமையான எதிர்ப்புகள், அவரும் சீலாவும் சிறையில் அடைக்கப்பட்டது உட்பட அவருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், இவற்றில் ஏதொன்றும் அவரை அச்சுறுத்தவோ, உற்சாகமிழக்கச் செய்யவோ, அடக்கி வைக்கவோ முடியவில்லை. அங்கு தேவன் ஒருவர் மட்டுமே தரக்கூடிய உற்சாகத்தோடு, வெகுபோராட்டத்திற்கிடையே அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவருடைய அளவிற்கு உள்ளுரம் இல்லாத வேறொரு மனிதர், இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவன் தன்னைத் தன்னுடைய மனதிற்கிசைந்த மக்களிடமாக நடத்துகிறாரா அல்லவா என்று பற்பல இறையியல் சார்ந்த காரணங்களை எண்ணிப்பார்க்கத் தொடங்கியிருப்பார். ஆனால் பவுல் அவ்வாறு செய்யவில்லை! எதிர்ப்புகள் பெரிதாயிருந்த போதிலும், ஆவியானவரின் நிறைவின் நேரடியான பயனாக அவர் அச்சமின்றி நற்செய்தியைத் தொடர்ந்து பிரசங்கித்து வந்தார்.

2:3 நற்செய்தியின் ஆதாரம் மெய்யானது, அதனுடைய நோக்கம் தூய்மையானது, அதனுடைய செயல்பாடு நம்பகமானது என்று உறுதி தரும் வகையில் அப்போஸ்தலனுடைய போதகம் அமைந்திருந்தது. அதனுடைய தோற்றத்தைக் காணும்போது, அது கள்ள உபதேசத்திலிருந்து தோன்றியதல்ல, மாறாக தேவனுடைய சத்தியத்திலிருந்துதான் அது தோன்றியது. அதனுடைய நோக்கத்தைப் பொருத்தமட்டில், அப்போஸ்தலனின் தன்னலம் அங்கில்லை, அந்தரங்கமான நோக்கமோ தூய்மையற்ற விருப்பமோ அதில் இல்லை, தெசலோனிக்கேயரின் நன்மையே அவருடைய ஒரே நோக்கமாயிருந்தது. அதனுடைய செயல்பாட்டைப் பொருத்தமட்டில், அவர்களை வஞ்சிக்கும்படியான தந்திரமான திட்டம் எதுவும் அதில் இல்லை. அவருடைய போதகம் வஞ்சகத்தினாலும், துர்ஆசையினாலும் உண்டானது என்றும், கபடுள்ளதாயிருந்தது என்றும் பொறாமை மிக்க பகைஞரே குற்றஞ்சாட்டினார்கள் என்பது வெளிப்படை.

2:4 அந்த ஊழியம் புனிதமான உக்கிராண ஊழியம் என்றே பவுல் கருதினார். பவுல் **உத்தமமான** உக்கிராண ஊழியர் என்று தேவனாலே ஏற்றுக்கொள்ளப்பட்டவர். மேலும் விலையுயர்ந்த பொக்கிஷமாகிய **சுவிசேஷத்தை** தேவன்தாமே அவரிடம் **ஒப்புவித்தார்**. அந்த நற்செய்தியை, மனிதர்கள் அதற்கு என்ன பதிற்செயல் செய்தாலும், உண்மையோடு அறிவிப்பதன் மூலமாக தேவனை மனமகிழ்ச்சி அடையச் செய்வதே அவருடைய பொறுப்பாயிருந்தது. தேவனையும் மனிதனையும் ஒருசேர மனமகிழ்ச்சி அடையச் செய்ய முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே நம்முடைய **இருதயங்களைச் சோதித்து அறிந்து,** அதற்கேற்றபடி பரிசளிக்கிற **தேவனைப் பிரியப்படுத்துவதையே** அவர் தெரிந்துகொண்டார்.

உக்கிராண ஊழியன் தனக்கு ஊதியம் தருகிறவருக்கு மனமகிழ்ச்சி ஏற்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். தங்களுக்கு நிதியுதவி தருகிறவர்கள் என்ன செய்வார்களோ என்னும் அச்சத்தினால் சிலவேளைகளில் சத்தியம் முழுவதையும் எடுத்துரைக்காமல், சிலவற்றை மறைத்துப் பேசும்படி பிரசங்கிகள் ஏவப்படுகிறார்கள். ஆனால் தேவனே எஜமானர், செய்தியானது எப்பொழுது தீவிரம் குன்றியதாக இருக்கிறது அல்லது சத்தியங்கள் மறைக்கப்படுகின்றன என்பதை அவர் அறிவார்.

2:5 ஐந்து முதல் பன்னிரண்டாம் வசனம் வரையிலும், தெசலோனிக்கே பட்டணத்தில் பவுல் எவ்வாறு நடந்துகொண்டார் என்னும் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நடத்தையில், கிறிஸ்துவின் வேலைக்காரர் அனைவருக்கும் மிகவும் நேர்த்தியான முன்மாதிரியை அவர் வைத்துச் சென்றிருக்கிறார்.

முதலாவதாக, அவர் முகஸ்துதி செய்யும் அளவிற்குத் தாழ்ந்துபோகவுமில்லை, பலனைக் காணவேண்டுமென்று கருதி நேர்மையற்ற முறையில் நடந்துகொள்ளவுமில்லை. அவருடைய பேச்சு நேர்மையானதாகவும் ஒளிவுமறைவு அற்றதாகவும் இருந்தது, அவருடைய நோக்கங்கள் மாய்மாலமற்றவையாக இருந்தன.

இரண்டாவதாக, தன்னுடைய செல்வத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்னும் சுயநல வேட்கையைக் கர்த்தருடைய ஊழியம் என்னும் போர்வைக்குள் அவர் மறைத்து வைக்கவில்லை. **பொருளாசை** என்னும் தவறான நோக்கம் அவருடைய ஊழியத்தில் காணப்படவில்லை.

முகஸ்துதியில் தான் ஈடுபடவில்லை என்பதை மெய்ப்பிக்க, அவர் பரிசுத்தவான்களிடம் முறையிடுகிறார். ஆனால், **பொருளாசை** என்னும் எண்ணம் தன்னிடத்தில் இருந்ததில்லை என்பதை மெய்ப்பிக்க, இருதயத்தை வாசித்து அறியக் கூடிய ஒரே ஒருவராகிய **தேவனிடத்தில்** முறையிடுகிறார்.

2:6 மிகப்பெரிய தேவ மனிதனாகிய பவுலின் குணநல மேன்மையினை, கவர்ச்சிமிக்க வகையில் நுணுகிக்காணும்படியான இன்னுமொரு வாய்ப்பினை நாம் இங்கு பெற்றிருக்கிறோம். அப்போஸ்தலர் என்னும் நிலையில் அவரும் அவருடைய உடன் ஊழியரும் தெசலோனிக்கேயரிடத்திலிருந்து நிதியுதவி பெறுவதற்குத் தகுதி உடையவராவார்கள் (இங்கு **மகிமை** என்னும் பெயரால் அது குறிப்பிடப்பட்டுள்ளது). ஆனால் அவர்கள், அவர்களுக்குப் பாரமாயிருக்கக் கூடாதென்று தீர்மானித்திருந்தார்கள். ஆகவே அவர்கள் தங்களுடைய சொந்தத் தேவைகளைச் சந்திக்கும்படி இரவும் பகலும் வேலை செய்தார்கள். ஆனால் கொரிந்துப் பட்டணத்தில் நடந்த கதை வேறு. அங்கு, அவர் பணத்திற்காகப் பிரசங்கம் செய்கிறார் என்று பகைஞர் குற்றஞ்சாட்டக் கூடாது என்னும் காரணத்திற்காக வேலை செய்தார். ஆனால் தெசலோனிக்கே பட்டணத்தில் பரிசுத்தவான்கள் வறியராகவும் துன்பப்படுத்தப் பட்டவர்களாகவும் இருந்தார்கள், ஆகவே அவர் அவர்கள்மேல் பாரத்தைக் கூட்ட விரும்பவில்லை.

2:7 இறைமக்களை இறுமாப்பாய் ஆளுகிறவராக அவர் நடந்துகொள்ளவில்லை. மாறாக, **பால்கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளிடத்தில்** அக்கறை செலுத்துவதுபோல, அவர் அவர்களிடம் **பட்சமாக** நடந்துகொண்டார். புதிதாக மனந்திரும்பியவர்கள் பாலூட்டி வளர்க்கப்பட வேண்டியது அவசியம் என்பதைப் பவுல் உணர்ந்தவராக, தன்னுடைய ஊழியத்தை உண்மையான **தாயைப்** போல மிகுந்த அக்கறையோடு நிறைவேற்றி வந்தார்.

2:8 அவர்களிடத்தில் அவர் கொண்டிருந்த பாசம் மிகுந்த அக்கறை, அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக அவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கத்தக்க அளவிற்கு, ஆழம் மிகுந்ததாக இருந்தது. **தேவனுடைய சுவிசேஷத்தைக்** கடின மனதுடனோ, அக்கறையற்ற வகையிலோ அவர் அறிவிக்கவில்லை. மாறாக அவர் தமது ஆத்துமாவையே ஊற்றிவிட்டார். அவர் தனது எஜமானரைப்போலவே, ஊழியம் கொள்ளும்படியாக வராமல், ஊழியஞ் செய்யவும் தன்னுடைய உயிரைக் கொடுக்கவுமே வந்தார் (மாற்கு 10:45).

2:9 பவுல் தன்னலமற்றவராக இருந்தார் என்பதற்கான மேலும் ஒரு சான்றினை இங்கு நாம் காண்கிறோம். அவர்களில் ஒருவருக்கும் பாரமாயிராமல் ஊழியம் செய்ய வேண்டும் என்பதற்காக, தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையான வற்றை வாங்கும்படி அவர் கூடாரம்பண்ணும் தொழிலைச் செய்துவந்தார். நற்செய்திப் பணியாளர் மற்ற கிறிஸ்தவர்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றிட உரிமை பெற்றிருந்தபோதிலும், தேவையானால், அவ்வப்போது அந்த உரிமையை துறந்துவிடுவது பாராட்டிற்குரியதாகும். தன்னுடைய பிரசங்கத்திற்கு ஒருவர் நிதியுதவியைப் பெற்றுக்கொண்டாலும், அல்லது அவர் தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையான வற்றைத்தானே உழைத்துச் சம்பாதிக்க நேரிட்டாலும் கிறிஸ்துவின் மெய்யான ஊழியர் தொடர்ந்து ஊழியத்தைச் செய்து வருவார். **பிரயாசமும் வருத்தமும், இரவும் பகலும்** ஆகிய சொற்றொடர்களைக் கவனித்துப் பாருங்கள். நற்செய்தியைப் பெற்றிட, தெசலோனிக்கேயருக்குச் சல்லிக் காசு கூட செலவாகவில்லை, ஆனால் பவுலுக்கோ அது பெரிய செலவாக இருந்தது.

2:10 தெசலோனிக்கே பட்டணத்து விசுவாசிகள் தங்களுக்கு முன்பாகப் பவுல் நடந்து கொண்ட முன்மாதிரியான சீரிய நடத்தையைக் குறித்துச் சான்றுபகரக் கூடியவராயிருந்தார்கள். அவர் தன்னை ஒப்புவித்தவராக (பரிசுத்தம்), நேர்மையானவராக (நீதி), குற்றமற்றவராக நடந்துகொண்டார் என்பதற்கு தேவனும் சாட்சியாகத் திகழ்கிறார். பாவத்திலிருந்து விலகி தேவனுக்கென்று பிரிந்து வாழ்வதே பரிசுத்தம் எனப்படும். நடத்தையிலும் செயலிலும் காணப்படுகிற நேர்மையே நீதி ஆகும். மேலும் அவர் தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாகப் பிழையற்றவராக நடந்துகொண்டார். பரிசுத்த வாழ்க்கையே மிகச்சிறந்த பிரசங்கம் என்போமானால், பவுலே மிகச்சிறந்த பிரசங்கியாக இருந்தார். அவரது நாவன்மையானது அவருடைய நடத்தையைக் காட்டிலும் சிறந்தது என்று கூறப்படும்படியான ஒரு பிரசங்கியாக அவர் வாழவில்லை. “ஒரு பிரசங்கி மேடையில் இருந்தபோது, அவரைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் அவர் அங்கிருந்து இறங்கி வரக்கூடாது என்னும் அளவிற்கு விருப்பம் கொண்டிருந்தார்கள்; ஆனால் அவர்

அதைவிட்டு இறங்கி வந்தபோது, அவர் மீண்டும் அந்த மேடையில் ஏறக்கூடாது என்று நினைத் தார்கள்!"

2:11,12 ஏழாவது வசனத்தில் அவர் தன்னைப் பால்கொடுக்கும் ஒரு தாய்க்கு ஒப்பிட்டுப் பேசி னார்; இப்பொழுதோ அவர் தன்னைப் பற்றுமிக்க ஒரு **தகப்பனுக்கு** ஒப்பிடுகிறார். தாய்மை இரக் கத்தையும் பாசத்தையும் சுட்டிக்காட்டுகிறது. **தகப்பனுடைய** தன்மையானது ஞானத்தையும் ஆலோசனையையும் குறிப்பிடுகிறது. தகப்பன் என்னும் நிலையிலிருந்து அவர் அவர்களைப் பரிசுத்தமாக வாழும்படியாகவும், துன்பங்கள் வந்தபோதும் கர்த்தருக்காக முன்னேறிச் செல் லும்படியாகவும் புத்திபுகட்டி, தேவனுடைய வார்த்தைக்கும் சித்தத்திற்கும் கீழ்ப்படிகிறபோது பெறுகிற ஆசிர்வாதங்களைக் குறித்து சாட்சியும் கூறினார்.

தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் அவர்களை **அழைத்த தேவனுக்குப் பாத்திர ராகப்** பரிசுத்தவான்கள் நடந்துகொள்ள வேண்டு மென்பதே பவுல் ஆற்றிய ஊழியத்தின் நோக்க மாகும்.

நம்முடைய சொந்தத் தகுதியின் அடிப்படை யில் நாம் தேவனிடத்தில் சேரவும் முடியாது, விண்ணகத்தில் ஓர் இடத்தைப் பெறவும் முடியாது; நம்முடைய ஒரே தகுதி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில்தான் இருக்கிறது. ஆனால் தேவனு டைய பிள்ளைகள் என்னும் நிலையில் நாம் பெற்றிருக்கிற பரம அழைப்பிற்குப் **பாத்திரராய் நடக்க வேண்டும்** என்று நம்மிடம் எதிர்பார்க்கப் படுகிறது. நாம் நம்மைப் பரிசுத்த ஆவியான வரின் கட்டுப்பாட்டுக்குள் ஒப்புவித்து, பாவத்தை அறிக்கையிட்டு அதை விட்டு விட்டவர்களாக தொடர்ந்து வாழ்வோமெனில் இதனைச் செய்கிற வர்களாக நாம் காணப்படுவோம்.

இரட்சிக்கப்பட்ட அனைவரும் தேவனுடைய அரசின் குடிமக்களாவார்கள். இப்பொழுதோ அந்த அரசு கண்களுக்குப் புலப்படுவதில்லை, அரசரும் இங்கில்லை. ஆனாலும் அந்த இறை யரசின் ஒழுக்க நெறிகளும் நன்னெறிகளும் இன்றைய நாட்களில் நாம் பின்பற்றும்படியாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆட்சிபுரியும்படி மீண்டும் வரும் போது, அந்த அரசு வெளியரங்கமாகக் காணப் படும். அந்த நாளில் நம்முடைய அரசரின் **மகிமையில்** நாமும் பங்கு பெறுவோம்.

இ. நற்செய்தி அறிவிப்புக்குத் தெசலோனிக் கேயர் செய்த பதிற்செயலைப் பற்றிய புனராய்வு (2:13-16)

2:13 அப்போஸ்தலன் முன்னர் 1:5 -ஆம் வசனத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்ட அதே பொருளை இப்பொழுது மீண்டும் எடுத்துக்கொள் கிறார், அதாவது, நற்செய்தி அறிவிக்கப்பட்ட போது தெசலோனிக்கேயர் அதற்குச் செய்த பதிற்செயல். அவர்கள் செய்தியைக் கேட்டபோது அதனை மனிதருடைய வசனமாக ஏற்றுக்கொள் ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டார் கள். இதனை NKJV மொழிபெயர்ப்பு மிகத் தெளி வாக எடுத்துரைக்கிறது:

ஆகையால் நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்ட போது, அதை மனிதர் வசனமாக ஏற்றுக்கொள் ளாமல் (வரவேற்காமல்), தேவவசனமாகவே வரவேற்றதால் நாங்கள் இடைவிடாமல் ஸ்தோத்திரிக்கிறோம். அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக் குள்ளே அது பெலனும் செய்கிறது.

அந்தச் செய்தியை அவர்கள் வரவேற்று ஏற்றுக்கொண்டதால் பவுல் ஆழ்ந்த நன்றி யுணர்வு உடையவராக இருக்கிறார். அவருடைய தன்னலமற்ற தன்மைக்கு இது மற்றுமொரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. நம்மில் பெரும் பாலோர் நாம் சொல்லுகிறவற்றை, நாம் சொல்லு கிறோம் என்னும் ஒரே காரணத்திற்காகப் பிறர் நம்ப வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால் மனிதனுடைய பேச்சு விசுவாசத்திற்கு உறுதி யற்ற அஸ்திபாரமாகவே திகழும். தேவன் ஒரு வரே முழு நம்பிக்கைக்கு உரியவர். அவருடைய வார்த்தையை விசுவாசிப்பதன் மூலமாகவே இருதயங்களிலும் வாழ்க்கைகளிலும் நற்பயன் உண்டாகும். இதுவே தெசலோனிக்கேயரிடம் உண்டானது -- அவர்கள் விசுவாசித்த காரணத் தால் அவர்களுடைய வாழ்க்கையில் அந்த வார்த்தை **பெலன்** விளைவித்தது. திரு வால்டர் ஸ்காட் எழுதியதாவது:

> அவருடைய வார்த்தையாகிய திருமறை ஆவி யானவரால் ஏவுதல் பெற்றது, அல்லது வேதத் தில் உள்ள அனைத்து நூல்களும் அவற்றின் மூல படிவமாக இறைவனுடைய சுவாசத்தி னால் எழுதப்பட்டவை. அந்தத் திருமறை ஒன்றே நம்முடைய எல்லாச் செயல்களிலும்,

எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லா நேரங்களிலும் நம்மை ஆளுகை செலுத்தி வழிநடத்தக் கூடிய அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. தேவனுடைய வசனத்தைக் கேட்டு நடுங்கக்கூடிய ஒரு தலைமுறை தேவை. அதுவே நம்முடைய வாழ்க்கையின் வரைபடம், நம்முடைய வழி காட்டி, நம்முடைய வெளிச்சம், நம்முடைய ஒழுக்க நெறியின் பாதுகாப்பு. அந்தப் புனித நூலுக்காக நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்.[8]

2:14 அந்த விசுவாசிகளுடைய வாழ்க்கையில் திருமறை என்ன விளைவுகளை உண்டாக்கியிருக்கிறது? அவர்கள் இரட்சிக்கப்பட்டது மட்டுமின்றி, பெரிதான இடர்கள் ஏற்பட்டபோதும் உறுதியாக நிற்கத்தக்க ஆற்றலை அது தந்தது. அவர்கள் இரட்சிக்கப்பட்டதன் உண்மைத் தன்மைக்கு இது நல்லதொரு சான்றாக விளங்குகிறது. அவர்களுடைய உறுதியான பொறுமையினாலே, **யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை** அவர்கள் **பின்பற்றுகிறவர்களானார்கள்.** அவர்களுக்குள்ளாக இருந்த ஒரே வேறுபாடு, தெசலோனிக்கேயர் புறவின மக்களாகிய அவர்களுடைய சொந்த இனத்தாராலே **பாடுபட்டார்கள்,** ஆனால் யூதேயா நாட்டு விசுவாசிகள் **யூதராலே** பாடுகளுக்குட்படுத்தப்பட்டார்கள்.

2:15 யூதர்களைக் குறித்துப் பவுல் குறிப்பிட்ட உடனேயே, அவர்கள் நற்செய்திப் பணிக்கு முதன்மையான எதிரிகளாக இருந்தார்கள் என்னும் குற்றச்சாட்டைக் கூறுகிறார். அவரைக் காட்டிலும் இதனை அதிகமாகத் தெரிந்தவர் யார்? ஒரு காலத்தில் கிறிஸ்தவ விசுவாசத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கலகம் செய்த யூதர்களின் தலைவராக அல்லவா அவர் இருந்தார். பின்னர் அவருடைய மனமாற்றத்திற்குப் பிறகு அந்தக் கலகக்காரரின் கொடுமையின் கூரிய பட்டயத்தை அவரே அனுபவிக்க நேரிட்டது.

யூதர்களுடைய பாவத்தின் உச்சநிலையைக் **கர்த்தராகிய இயேசுவைக்** கொன்ற நிகழ்ச்சியில் காணமுடியும். உண்மையில் சிலுவையில் அறைந்த செயலை நிறைவேற்றியவர் ரோமர்களே ஆவார்கள், ஆனாலும் அவர்களை அவ்வாறு கொடுஞ்செயல்புரியச் செய்ய ஏவிவிட்டவர்கள் யூதர்கள்தான். இஸ்ரவேல் நாட்டிற்கு அனுப்பப்பட்ட தேவனுடைய தீர்க்கதரிசிகள் பலர் பல நூற்றாண்டுக் காலமாகக் கொடுமைப்படுத்தப்பட்டதன் சிகரமாக இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் நிகழ்ந்தது (மத். 21:33-39).

கிறிஸ்தவம் தொடங்கிய சிறிது காலத்திற்குள்ளாக அவர்கள் பவுலையும் மற்ற அப்போஸ்தலரையும் **துன்பப்படுத்தி, தேவனைப்** பிரியப்படுத்தியதாகத் தவறாக நினைத்துக்கொண்டார்கள். அவர்களுடைய செயல்கள் தேவனுக்குப் பிரியமற்றவையாக இருந்தது மட்டுமின்றி, **மனிதர் யாவருக்கும் விரோதமாயிருந்தன.**

2:16 அவர்கள் நற்செய்தியை ஏற்க மறுத்தது மட்டுமின்றி பவுலையும் அவருடைய உடன் ஊழியர்களையும் புறவினத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்கவிடாமல் தடைசெய்ய வேண்டுமென்று மனவுறுதியும் கொண்டிருந்தார்கள். யூதர்களைப் போலவே புறவினத்தாரும் இரட்சிப்படைய முடியும் என்னும் செய்தி அவர்களுக்குக் கடுஞ்சீற்றத்தை உண்டாக்கியது.

அவர்களுடைய மூதாதையர் எதிராகச் செயல் புரிந்ததை எங்கே விட்டார்களோ அதை அவர்கள் தொடர்ந்து செய்துகொண்டு வந்தார்கள். **இவ்விதமாய் எக்காலத்திலும் அவர்கள் தங்களுடைய பாவங்களை நிறைவாக்குகிறார்கள்.** அவர்களுடைய பாவத்தின் பாத்திரம் எப்பொழுதும் நிறைந்திருக்க வேண்டுமென்று அவர்கள் முடிவுசெய்திருந்தார்கள் என்பதுபோல் இது காணப்படுகிறது.

ஆனால் அவர்களுடைய அழிவுக்கான தண்டனை அறிவிக்கப்பட்டுவிட்டது. **அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது. கோபாக்கினை** என்னும் சொல்லின் மூலம் பவுல் எதைக் குறிப்பிடுகிறார் என்று சரிவரத் தெரியவில்லை. அவர்களுடைய பாவத்தின் நிறைவின் காரணமாக அவர்கள்மேல் அண்மையில் நடக்கவிருந்த நியாயத்தீர்ப்பைக் குறிக்கும் பொதுவான அறிக்கையாக இது இருக்கலாம். அடுத்த 20 ஆண்டுக்காலத்திற்குள்ளாக (கி. பி. 70) எருசலேம் நகரம் அழிக்கப்பட்டு, எஞ்சிய யூதர்கள் பூமியெங்கிலும் சிதறடிக்கப்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம்.

இதுபோன்ற பகுதிகளின் மூலமாக, பவுல் யூதர்களுடைய பகைவர் என்றும், புதிய ஏற்பாடு யூதர்களுக்கு எதிரானது என்றும் சிலர் கருதுகிறார்கள். ஆனால் உண்மையில், தன்னுடைய நாட்டாராகிய யூதர்கள் மேல் பவுல் ஆழமான அன்பு கொண்டிருந்தார். மேலும் அவர் கிறிஸ்து வினிடத்திலிருந்து துண்டிக்கப்படுவது அவருடைய இனத்தாருக்கு இரட்சிப்பாக அமையு

மென்றால் அதையும் ஏற்றுக்கொள்ள அவர் ஆயத்தமாயிருந்தார் (ரோமர் 9:1-3). புறவினத்தாருக்கு ஊழியம் செய்வதே அவருடைய முதன்மையான ஊழியமாக இருந்தபோதிலும், யூதர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்னும் பாரத்தை அவர் ஒருக்காலும் இழந்து விடவில்லை. சில நேரங்களில் இந்த பாரமானது அவருடைய முதன்மையான ஊழியத்தை முந்திக் கொண்டதுபோலத் தோன்றுகிறது.

யூதேயா நாட்டுத் தலைவர்களைப் பற்றி இங்கு அப்போஸ்தலன் கூறியிருப்பது வரலாற்று உண்மையேயொழிய, அவர் கூறிய தனிப்பட்ட வசைச் சொல் அல்ல. அவர் எழுதியவற்றை எழுதும்படி ஏவியவர் தேவன் என்பதை நாம் நினைவு கூரவேண்டும். யூத இனத்திற்கு எதிரான பகைமை, கிறிஸ்தவர்களுக்குரிய பண்பல்ல, எந்தச் சூழ்நிலையிலும் அதனை நேர்மையானது என்று நம்மால் ஏற்கமுடியாது. தம்முடைய குமாரனுடைய மரணத்திற்குக் காரணமானவர் யூத மக்கள் என்று தேவன் குற்றஞ்சாட்டுவது, யூத இனத்திற்கு எதிரான பகைமை உணர்ச்சியினால் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு என்று கூற முடியாது (அப். 2:23). புறவினத்தாரும் அவர்களுடைய பங்கிற்குப் பொறுப்பாளிகள் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்கள் (1 கொரி. 2:8).

ஈ. தெசலோனிக்கே பட்டணத்திற்குப் பவுல் திரும்பி வராததற்கான காரணத்தை விளக்கிக் கூறுதல் (2:17-20)

2:17 தெசலோனிக்கே பட்டணத்திற்கு அப்போஸ்தலன் திரும்பி வராததற்கான காரணத்தை அவர் அடுத்த நான்கு வசனங்களில் விவரிக்கிறார். அங்கு அவர் சந்தித்த எதிர்ப்பின் காரணமாக, அவர் மீண்டும் அங்கு செல்வதற்குத் துணிவற்ற கோழையாக இருந்தார் என்று அவருடைய பகைஞர் குறைகூறினார்கள் என்றே தோன்றுகிறது.

அவர்களுக்கிடையே இருந்த பிரிவு வெறுமனே சரீரப்பிரகாரமானது என்று பவுல் முதலில் தெளிவுபடுத்துகிறார். **கொஞ்சக்காலம் உங்களைவிட்டுப் பிரிந்திருந்தபடியினாலே** என்னும் சொற்றொடர், ஆவிக்குரிய தகப்பனாகிய பவுல் அவர்களை அநாதைகளாக விட்டுச் சென்று விட்டார் என்னும் பொருளைத் தருகிறது. ஆனாலும், அவர்களிடத்தில் அவர் கொண்டிருந்த பாசத்தினால் உண்டான அக்கறை ஒருக்காலும் குன்றிப்போகவில்லை. அவருடைய அன்பின் தீவிரத்தை வெளிப்படுத்திக் காட்டும் சொற்களைக் கவனியுங்கள்: **மிகுந்த ஆசையோடு அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணினோம்.**

2:18 இரண்டு முறை தெசலோனிக்கே பட்டணத்திற்குச் செல்ல வேண்டுமென்று அவர் முயற்சி செய்தார். ஆனால் இரண்டு முறையும் **சாத்தான்** அவரைத் **தடை செய்தான்.** சாத்தானின் எதிர்ப்பு எப்படிப்பட்ட இயல்புடையதாக இருக்கும் என்பதை எப்பொழுதும் புரிந்து கொள்ள முடியாது.

பிசாசானவனே பவுலைத் தடை செய்தவன், கர்த்தரல்ல என்பதில் அவர் எவ்வாறு இவ்வளவு உறுதியுடையவராக இருந்தார் என்று நமக்குத் தெரியவில்லை. பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும் ஆசியாவில் நற்செய்தியை அறிவிக்காதபடி பரிசுத்த ஆவியானவரால் தடை செய்யப்பட்டார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகள் 16:6 -இல் நாம் வாசிக்கிறோம். அடுத்த வசனத்தில், அவர்கள் பித்தினியா செல்ல முயற்சி செய்தார்கள் என்றும், பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் போகவிடவில்லை என்றும் நாம் வாசிக்கிறோம். எப்பொழுது பரிசுத்த ஆவியானவர் தடைசெய்கிறார், எப்பொழுது பிசாசு தடை செய்கிறான் என்பதை நாம் எவ்வாறு அறிவோம்? பெரும்பாலும் அதனை அறிவதற்கு இது ஒரு வழியாகும்: நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறபோது, ஏற்படுகிற தடை ஆவியானவரால் உண்டாவதாக இருக்காது, மாறாக அது பிசாசினால் உண்டாவதாகவே இருக்கும். மேலும் தேவன் ஆசிர்வதிக்கும் வேளைகளில் சாத்தான் தடைகளை உண்டுபண்ணுவான் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் தேவன் எப்பொழுதும் சாத்தானுடைய எதிர்ப்பை நீக்கிவிடுகிறார். இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், பவுல் தெசலோனிக்கே பட்டணத்திற்குச் செல்ல இயலாத காரணத்தால், இந்த மடல் எழுதப்பட்டது. இந்த மடல் எழுதப்பட்டதன் விளைவாக, தேவனுக்குப் புகழ்ச்சியும் நமக்கு நன்மையும் உண்டாயின.

2:19 தெசலோனிக்கே விசுவாசிகளினிடத்திற்கு அப்போஸ்தலன் மீண்டும் செல்ல இந்த அளவிற்கு விருப்பமுடையவராக இருந்ததற்கான காரணம் என்ன? ஏனென்றால் அவர்கள் கர்த்தருக்குள்ளாக அவருடைய பிள்ளைகள் ஆவார்கள். அவர்தான் கிறிஸ்துவை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கான பொறுப்பும் அவருடையதே யாகும். வரப்போகிற ஒருநாளில் அவர் அவர்களைக் குறித்த கணக்கை ஒப்புவிக்க வேண்டும்

என்பதை அவர் அறிந்திருந்தார். கிறிஸ்துவின் நியாயாசனத்தில் அவர் பெறப்போகிற பரிசுக் கான **நம்பிக்கையாக** அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்களிடத்தில் அவர் களிகூர்ந்தவராக இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். **கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து வரும்போது** அவரு டைய சந்திதானத்திலே அவர்களல்லவா அவரு டைய **சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமா யிருப்பார்கள்.**

தெசலோனிக்கே பட்டணத்து விசுவாசிகளைப் பரலோகத்தில் பவுல் அடையாளம் காணமுடியும் என்று நம்பிக்கைகொண்டிருந்தார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்பதை இவ்வசனத்தின் மூலமாக அறியலாம். நமக்கு அன்பானவர்களை யும் நாம் விண்ணகத்தில் அறிவோம் என்பதை இதன் மூலமாகத் தெரிந்துகொள்கிறோம்.

விசுவாசத்தில் தன்னுடைய பிள்ளைகளாக இருப்பவர்கள், தன்னுடைய **கிரீடங்களாவார் கள்** என்று பவுல் 19 -ஆவது வசனத்தில் பேசு கிறார். புதிய ஏற்பாட்டில் வேறு சில கிரீடங்களைக் குறித்துப் படிக்கிறோம்: நீதியின் கிரீடம் (2 தீமோ. 4:8); ஜீவ கிரீடம் (யாக். 1:12; வெளி. 2:10); மகிமையின் கிரீடம் (1 பேதுரு 5:4) - இவையாவும் அழிவில்லாதவை (1 கொரி. 9:25).

2:20 பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் **மகிமை யும் சந்தோஷமும்** ஆவார்கள். அவருடைய முதலீடு மனிதர்களே ஆவார்கள். அவர் பெற்ற பரிசு நித்திய காலம் முழுவதும் தேவ ஆட்டுக் குட்டியைத் தொழுதுகொள்ளப் போகிற ஆவிக் குரிய ஆண் பெண் இருபாலரும் ஆவார்கள்.

கர்த்தருடைய வருகை

1 தெசலோனிக்கேயர் நூலில் கர்த்தர் மீண் டும் வருகிற நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில் 19 -ஆவது வசனத்தில்தான் முதன் முதலாக **வருகை** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள் ளது. (தமிழ் வேதத்தில் முதல் அதிகாரத்தில் 10 - ஆவது வசனத்தில் "வருவதை" என்னும் சொல் சேர்க்கப்பட்டுள்ளது.) இந்த மடலின் முக்கிய மான பொருளாக இது இருப்பதால், நாம் இங்கு சற்று நிறுத்தி, இந்தப் பொருள் குறித்து வேதம் என்ன கற்பிக்கிறது என்று நாம் நம்புகிறோமோ, அதனை விளக்கிக் கூறப்போகிறோம்.

கர்த்தர் மீண்டும் வருவதைக் குறிக்கும் வகையில் புதிய ஏற்பாட்டில் முக்கியமான மூன்று கிரேக்கச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன:

Parousia (Pa- roo - SEE - ah): வருகையும் அதைத் தொடர்ந்து இருப்பதும்

apokalupsis (apo - KAL - yoop - sis): திரையை விலக்குதல், வெளிப்படுதல்

epiphaneia (epi - PAHN - ee - ah): வெளிப் படுதல், பிரசன்னமாகுதல்

இவற்றுள் பெரும்பான்மையான இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் *parousia* என்னும் சொல்லே ஆகும். இதனுடைய பொருள் **முன் னிலை அல்லது பக்கத்தில் வருதல்** என்பதா கும். வருகைபுரிதல் மற்றும் முன்னிலையில் தொடர்ந்து இருத்தல் ஆகிய இரண்டுமே இதன் பொருள் என்று திருவாளர் வைன் குறிப்பிடுகிறார். நாம் கர்த்தருடைய வருகையைக் குறித்து நினைக்கும்போது அது ஒரு கணப்பொழுது நடக் கப்போகிற நிகழ்ச்சியாக நினைக்கக் கூடாது. மாறாக அது ஒரு கால அளவிலானது.

தமிழிலும் கூட வருகை என்னும் சொல் இந்தப் பொருளோடு பயன்படுத்தப்படுகிறது. "கலிலேயா வுக்குக் கர்த்தர் வருகைபுரிந்த செயல் மக்க ளுக்கு உடல் நலத்தைக் கொண்டுவந்தது." இந்த எடுத்துக்காட்டில், அவர் கலிலேயாவுக்கு வருகைபுரிந்த நாளை மட்டும் அச்சொல் குறிப் பிடுவதில்லை, மாறாக அந்தப் பகுதியில் அவர் இருந்த நாட்கள் அனைத்தையும் அச்சொல் குறிப்பிடுகிறது. ஆகவே நாம் கிறிஸ்துவின் வருகையைக் குறித்து நினைக்கும்போது, நாம் ஒரு தனி நிகழ்ச்சியை மட்டும் நினைக்காமல், ஒரு கால அளவைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இப்பொழுது, *parousia* என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் எங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டுள் ளதோ அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்வோ மெனில், (1) ஒரு தொடக்கம் (2) ஒரு தொடர் நிகழ்ச்சி (3) ஒரு வெளிப்பாடு மற்றும் (4) ஒரு உச்சகட்டம் ஆகியவற்றோடு தொடர்புடைய ஒரு கால அளவை அது குறிக்கக் கூடியதாக இருக் கிறது என்றே நாம் காண்கிறோம்.

1. கர்த்தருடைய வருகையின் (*parousia*) **தொடக்கம்** விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப் படும் நிகழ்ச்சியாகும். இது கீழ்க்காணும் பகுதி களில் விளக்கப்பட்டிருக்கிறது. (parousia என் னும் சொல் எப்படியெல்லாம் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதோ, அந்தச் சொற்கள் யாவும் சாய்ந்த எழுத்துகளாகத் தரப்பட்டுள்ளன.):

"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் **வருகையில்** அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:22,23).

"அன்றியும் சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய **வருகைமட்டும்** உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக,மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1 தெச. 4:13-18).

"அன்றியும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் **வருகையையும்**, நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால்..." (2 தெச. 2:1).

"இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் **வருமளவும்** நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் **வருகை** சமீபமாயிருக்கிறதே" (யாக்கோபு 5:7,8).

"இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் **வருகையில்** அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்" (1 யோவான் 2:28).

2. கிறிஸ்துவின் **வருகையின்** (*parousia*) ***தொடர் நிகழ்ச்சியில்***, கிறிஸ்தவர்களது உண்மையான சேவைக்குப் பரிசளிக்கப்படும் நிகழ்ச்சியான கிறிஸ்துவின் நியாயாசனமும் அடங்கும்:

"எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **வரும்போது**, அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்" (1 தெச. 2:19).

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முற்றிலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து **வரும்போது** குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1 தெச. 5:23).

அவருடைய வருகையின் தொடர் நிகழ்ச்சியோடு தொடர்புடைய இன்னுமொரு நிகழ்ச்சியைச் சேர்த்துக்கூற வேண்டியது அவசியம். அதுவே ஆட்டுக்குட்டியானவருடைய திருமண விருந்து. வெளிப்படுத்தின விசேஷத்தில் அது குறிப்பிடப்பட்டுள்ள இடத்தைக் காணும்போது, கிறிஸ்துவின் மகிமை நிறைந்த ஆட்சிக்கு முன்னதாகவே அது நிகழும் என்பதை அறிகிறோம். இந்தப் பகுதியில் "வருகை" என்னும் சொல் இடம் பெறவில்லையெனினும் இவ்வசனத்தை நாம் இங்கு சேர்த்துள்ளோம்.

"அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது: அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய

நீதிகளே. பின்னும் அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்" (வெளி. 19:6-9).

3. கிறிஸ்துவின் **வருகையின் வெளிப்பாடு** அவர் அரசருக்கெல்லாம் அரசராகவும் கர்த்தருக்கெல்லாம் கர்த்தராகவும், அரசாட்சி செலுத்தும் படி வல்லமையோடும் புகழ்ச்சியோடும் இவ்வுலகிற்கு அவர் மீண்டும் வருகிற நிகழ்ச்சியேயாகும். விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுகிற நிகழ்ச்சியை இந்த உலகம் காணாது. அது ஒரு நொடிப் பொழுதிற்கும் குறைவான நேரத்தில் நடந்து முடிந்துவிடும். ஆனால் கிறிஸ்து ஆட்சி செலுத்தும்படி வருகிறபோது, ஒவ்வொரு கண்ணும் அவரைக் காணும். ஆகவேதான் இந்நிகழ்ச்சி அவருடைய **வருகையின்** (*parousia*) **வெளிப்பாடு** என்று அழைக்கப்படுகிறது. இது அவருடைய வருகையின் மூன்றாவது கட்டமாகும்.

"பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய **வருகைக்கும்**, உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்" (மத். 24:3).

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய **வருகையும்** இருக்கும்" (மத். 24:27).

"ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷகுமாரன் **வருங்காலத்திலும்** நடக்கும்" (மத். 24:39).

"இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட **வரும்போது**, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" (1 தெச. 3:13).

"நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய **வருகையின்** பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்" (2 தெச. 2:8).

"நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் **வருகையையும்** உங்களுக்கு அறிவித்தோம்" (2 பேதுரு 1:16)

கிறிஸ்துவின் **வருகையின்** வெளிப்பாட்டைக் குறித்து, இங்கே பேதுரு பேசுகிறார். மறுரூப மலையில் நடந்த நிகழ்ச்சி அதனுடைய வரும் முன் காட்சியாக விளங்குகிறது.

4. இறுதியாக அவருடைய **வருகையின் உச்சகட்டத்தைக்** காணலாம். கீழ்க்காணும் வசனத்தில் அது குறிப்பிடப்பட்டுள்ளது:

"அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்" (2 பேதுரு 3:4)

இந்தப் பிந்தின அதிகாரத்தில், கடைசி நாட்களில் ஏளனம் செய்வோர் எழுந்து, கிறிஸ்துவின் வருகை நிகழாது என்று மறுத்துரைக்கும் செயலைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இது அவருடைய **வருகையின்** எந்தப் பகுதியைப் பற்றிப் பேசுகிறது?

இந்தச் சொற்கள் விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சியைக் குறிக்கின்றனவா? இல்லை. பெரும்பாலும் விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சியைப் பற்றி அவர்கள் ஒன்றும் அறிந்திருக்கமாட்டார்கள். ஆட்சி செலுத்தும்படி கிறிஸ்து வரப்போகிற நிகழ்ச்சியை இவை குறிக்கின்றனவா? இல்லை. அந்நிகழ்ச்சி இங்கே குறிப்பிடப்படவில்லை என்பது தெளிவாய்த் தெரிகிறது. தீமை செய்தவர்கள் யாவரும் இறுதியில் கர்த்தரால் தண்டிக்கப்படுவார்கள் என்பதையே அவர்கள் ஏளனம் செய்கிறார்கள் என்னும் விவரத்தையே இந்தப் பகுதி முழுவதும் சுட்டிக்காட்டுகிறது. அவை இறுதியானதும், இவ்வுலகில் நடக்கவிருக்கிற உச்சநிலையிலானதுமான நியாயத்தீர்ப்பையே குறிப்பிடுகின்றன. அல்லது இதனை "உலகத்தின் முடிவு" என்றும் சொல்லலாம். அவர்களுக்கு இதைக் குறித்து எந்தக் கவலையும் இல்லையென்று அவர்கள் கூறுகிறார்கள். இவ்வுலக வரலாற்றில் இறைவன் இதுவரை

தலையிட்டதில்லை, இனிமேல் தலையிடப் போவதுமில்லை என்பதே அவர்களுடைய வாதம். ஆகவே அவர்கள் தங்களுடைய பொல்லாத பேச் சிலும் செயல்களிலும் நிலைத்திருக்கிறார்கள்.

அவர்களுடைய ஏளனப் பேச்சிற்குப் பதிலு ரைக்கும் வண்ணம், பேதுரு பின்னொரு காலத்தை நோக்கிச் சுட்டிக்காட்டுகிறார். அது **கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சிக்காலத் திற்குப்** பிறகு, இப்பொழுது நாம் அறிந்திருக்கக் கூடியதான வானங்களும் பூமியும் முற்றிலுமாக அழிந்துபோகிற நிகழ்ச்சியாகும். கிறிஸ்துவின் **வருகையின்** (*parousia*) **இந்த உச்சகட்ட மானது,** ஆயிரமாண்டு ஆட்சிக்குப் பிறகு, நித் திய நிலையின் தொடக்கத்திற்கு முன் நடை பெறும்.

வருகை (*parousia*) என்னும் சொல்லுடன், புதிய ஏற்பாட்டு மூலமொழியில் கர்த்தருடைய வருகையைக் குறிக்கும்படி வேறு இரண்டு சொற் களான வெளிப்பாடு (*apokalupsis)* மற்றும் பிர சன்னம் (*epiphaneia)* ஆகிய சொற்களும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

வெளிப்பாடு (*apokalupsis*) என்னும் சொல் **திரையை விலக்குதல்** என்று பொருள்படும். **எல்லா இடங்களிலும்** கிறிஸ்துவின் வருகை யின் மூன்றாவது கட்டத்தை மட்டுமே இந்தச் சொல் குறிப்பிடும் என்பது பற்றி வேத மாணாக் கரிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. மூன் றாவது கட்டம் எனப்படுவது வல்லமையோடும், புகழ்ச்சியோடும் அவர் இவ்வுலகிற்கு வரப்போகிற நிகழ்ச்சியாகும். இச்சொல் இந்நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிடுகிறதா அல்லது கிறிஸ்து தம்மை சபைக்கு வெளிப்படுத்துகிற நிகழ்ச்சியாகிய, விசு வாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியை யும் குறிப்பிடுகிறதா என்பதே கேள்வி.

கீழ்க்காணும் வசனங்களில் இச்சொல் விசு வாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி யையோ, அல்லது அவர் இவ்வுலகை ஆளும்படி வருகிற நிகழ்ச்சியையோ குறிப்பிடக் கூடும்:

> "அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்த ராகிய இயேசுகிறிஸ்து **வெளிப்படுவதற்குக்** காத்திருக்கிறீர்கள்" (1 கொரி. 1:7).
>
> "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து **வெளிப்படும்போது** உங்களுக்குப் புகழ்ச் சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப் படும்" (1 பேதுரு 1:7).
>
> "ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தி யுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து **வெளிப்படும்போது** உங்களுக்கு அளிக் கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கை யுள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 1:13).
>
> "கிறிஸ்துவின் மகிமை **வெளிப்படும்போது** நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவரு டைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளான தால் சந்தோஷப்படுங்கள்" (1 பேதுரு 4:13).

வேறொரு பகுதியில், இச்சொல் கிறிஸ்து இவ்வுலகை ஆளுகை செய்யும்படி வருகிற நிகழ்ச்சியையே தெள்ளத் தெளிவாகக் குறிப் பிடுகிறது என்று தோன்றுகிறது:

> "கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜ்வாலித்து எரிகிற அக்கினி யோடும் வானத்திலிருந்து **வெளிப்படும் போது** அப்படியாகும்" (2 தெச. 1:8).

பிரசன்னமாகுதல் (*epiphaneia)* என்னும் சொல் **வெளிப்படுதல்** என்று பொருள்படும். மீண்டுமாக, தம்முடைய பரிசுத்தவான்களுக் காகக் கிறிஸ்து பிரசன்னமாகுதல், தம்முடைய பரிசுத்தவான்களோடு கிறிஸ்து பிரசன்னமாகு தல் ஆகிய இரண்டையுமே இது குறிப்பிடுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். வேறு சிலர் இது பிந்தின நிகழ்ச்சியையே குறிப்பிடுகிறது என்று கருதுகிறார்கள். இச்சொல்லானது கீழ்வரும் பகுதிகளில் காணப்படுகிறது:

> "நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்மு டைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் **பிரசன்னத்தினாலே** நாசம்பண்ணுவார்" (2 தெச. 2:8)
>
> "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **பிரசன்னமாகும்வரைக்கும்,** நீ இந்தக் கற் பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு" (1 தீமோ. 6:13).
>
> "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடி ருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய

பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது" (2 தீமோ. 4:1).

"இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் *பிரசன்னமாகுதலை* விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோ. 4:8).

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் *பிரசன்னமாகுதலுக்கும்* எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" (தீத்து 2:13).

முதலாவது மற்றும் மூன்றாவது வசனங்கள், இந்த உலகத்தில் கிறிஸ்து பிரசன்னமாகுதலைத் தெளிவாக விவரிக்கின்றன. மற்ற வசனங்கள் விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியையும் குறிக்கக்கூடும். விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சி, ஆளுகை செய்யும்படி அவர் வருகிற நிகழ்ச்சி ஆகிய இரண்டையும் ஒரு விசுவாசியானவன் வாஞ்சையோடு எதிர்நோக்கியிருக்கத்தக்கதாக, இந்த உண்மைகள் அவனுக்கு முன் வைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாய்த் தெரிகிறது. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியின்போது, அவன் தன்னுடைய இரட்சகரைக் காண்பான், மேலும் அப்பொழுது அவன் மகிமையடைந்த சரீரத்தைப் பெறுவான். கிறிஸ்து இவ்வுலகிற்குத் திரும்பி வரும்போது, அந்த விசுவாசி அவருடைய மகிமையில் வெளிப்படுவான் (கொலோ. 3:4). இந்த வேளையில்தான் விசுவாசிகளின் பரிசுப்பொருட்கள் வெளியரங்கமாக்கப்படும். இந்தப் பரிசுப்பொருட்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும். ஆனால் கிறிஸ்து ஆளுகை புரியும்படி வருகிறபோதே அவற்றை எல்லோரும் காண்பார்கள். இந்தப் பரிசுப்பொருட்கள் எவை? ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் ஆங்காங்கே உள்ளூர் அரசாட்சியில் விசுவாசிகள் பெறுகிற பங்கையே இது குறிக்கிறது என்னும் குறிப்பை லூக்கா 19:17-19 ஆகிய வசனங்களில் நாம் காண்கிறோம். ஒரு மனிதன் பத்து நகரங்களுக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டான், இன்னொருவன் ஐந்து நகரங்களுக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டான்.

கர்த்தருடைய வருகையைக் குறித்துப் பற்பல வசனங்களில் படித்தறிந்த நாம், அது ஒரு தனி நிகழ்ச்சி அல்லவென்பதையும், ஒரு நீண்ட கால அளவைக் குறிப்பிடுகிறது என்பதையும் அறிந்து கொண்டோம். அந்தக் கால அளவில் வெவ்வெறு கட்டங்கள் இருப்பதையும் அறிந்துகொண்டோம். அதில் ஒரு தொடக்கமும், ஒரு தொடர் நிகழ்ச்சியும், ஒரு வெளிப்பாடும், ஒரு உச்ச கட்டமும் உள்ளன. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுதலில் அவருடைய வருகை தொடங்குகிறது, அந்த வருகையில் கிறிஸ்துவின் நியாயாசனமும் இடம் பெற்றிருக்கிறது, கிறிஸ்து இவ்வுலகிற்கு வருகைபுரிகிறபோது அது வெளியரங்கமான காட்சியாக விளங்கும், இறுதியில் நாம் இப் பொழுது அறிந்திருக்கிற வானங்களும் பூமியும் முற்றிலுமாக அழிந்துபோகும் நிகழ்ச்சியோடு அது முடிவடையும்.

உ. தெசலோனிக்கே பட்டணத்துக்குத் தீமோத்தேயு அனுப்பப்படுதல் (3:1-10)

மூன்றாவது அதிகாரத்தில் உங்கள் விசுவாசம் என்னும் சொற்றொடர் ஐந்து முறை (வச. 2,5,6,7,10) இடம் பெற்றுள்ளது. இச்சொற்றொடர் இந்தப் பகுதியைப் புரிந்துகொள்வதற்கான விளக்கக் குறிப்பாகத் திகழ்கிறது. தெசலோனிக்கேயர் கடுமையான துன்புறுத்தல்களின் ஊடாகச் சென்றுகொண்டிருந்தார்கள். அந்தச் சோதனையை எதிர்த்து நிற்கும்படி அவர்கள் விசுவாசம் உறுதியுடையதாக இருந்ததா என்று அறிய பவுல் மிகுந்த ஆவலோடு இருந்தார். இந்நிலையில் இந்த அதிகாரம் தொடர் ஊழியத்தைக் குறித்த முக்கியமான பாடமாக விளங்குகிறது. பாவிகளை இரட்சகரிடம் வழிநடத்தினால் மட்டும் போதாது; அவர்கள் கர்த்தருடைய கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளர்கிறவர்களாக நடத்தப்பட வேண்டியதும் அவசியம்.

3:1 மூன்றாவது அதிகாரத்தில் தெசலோனிக்கே பட்டணத்தில் இருந்த பரிசுத்தவான்கள் மேல் பவுல் கொண்டிருந்த ஒழிந்துபோகாத அக்கறையைக் குறித்து அவர் விவரிக்கையில், அவருடைய இதயத்துடிப்பை நம்மால் தொடர்ந்து கேட்க முடிகிறது. அவர் **அத்தேனே** பட்டணத்தில் இருந்தபோது, அவர் மூலமாக மனந்திரும்பிய தெசலோனிக்கே விசுவாசிகள் எவ்வாறு இருந்தார்கள் என்பதை அறிய வேண்டும் என்னும் அடக்கவியலா ஆர்வம் அவரைப் பற்றிக்கொண்டது. ஆனால் அவர் அவர்களிடமாய்த் திரும்பிச் சென்று நேரடியாகக் காணமுடியாதபடி சாத்தான்

அவரைத் தடைசெய்தான். அவரால் தொடர்ந்து அமைதியாக இருக்க முடியவில்லை, ஆகவே இறுதியில் அவர் தீமோத்தேயுவை தெசலோனிக்கே பட்டணத்துக்கு அனுப்பினார். அவரோ **அத்தேனே பட்டணத்தில் தனித்திருந்தார்.** (இந்த வசனத்தில் காணப்படும் நாங்கள் என்னும் சொல் சேர்க்கப்பட்ட சொல்லாகும்.) அவர் தனித்துவிடப்பட்டிருந்த நிலை எண்ணிப்பார்ப்பதற்கு ஒருவகை வருத்தத்தையே உண்டாக்குகிறது. அந்தப் பெரிய நகரத்தின் இயற்கைக் காட்சிகள் அவரைக் கவர்ந்திழுக்கவில்லை, சபைகளைக் குறித்த கவலையே அவருக்குப் பெருஞ்சுமையாக இருந்தது.

3:2 தீமோத்தேயுவின் பெயருக்கு முன்னால் கொடுக்கப்பட்டுள்ள "அடைமொழிகளைக்" கவனித்துப் பாருங்கள்: **நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன் வேலையாளுமாகிய தீமோத்தேயு. "ஊழியர்"**[9] என்னும் சொல் இந்த இடத்திலும், புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகளிலும் **வேலையாள்** என்னும் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. குருமார்கள் என்னும் பெயர் ஒரு தனி வகுப்பாரைக் குறிக்கும்படி பயன்படுத்தப்படுகிறது. இக்கருத்து பிற்காலத்தில் தோன்றியதாகும்.

தன்னுடைய பயிற்சிக் காலத்தை இத்தகைய அன்பிற்குப் பாத்திரமான சகோதரர் பவுலினிடத்தில் கழிக்க தீமோத்தேயு பெற்ற நற்பேற்றை என்னவென்று சொல்லுவது! இப்பொழுதோ, அவர் தனது தகுதியை மெய்ப்பித்துக் காட்டிய நிலையில், தெசலோனிக்கே பட்டணத்திற்குத் தனியாக ஒரு குறிப்பிட்ட பணித்திட்டத்தோடு அனுப்பப்பட்டார்.

பரிசுத்தவான்களைத் **திடப்படுத்த** வேண்டும், அவர்களுடைய **விசுவாசத்தைப்பற்றி** அவர்களுக்குப் **புத்திசொல்ல** வேண்டும் என்பதே அவர் அங்கு அனுப்பப்பட்டதன் நோக்கமாகும். அவர்கள் கிறிஸ்துவை அறிக்கை செய்ததன் நிமித்தமாகவே அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். புதிதாக மனந்திரும்பிய மக்களுக்கு அது இக்கட்டான தருணமாகும். அவர்கள் கிறிஸ்தவர்களாக மாற்றமடைந்த செயல் தவறென்று ஒருவேளை சாத்தான் அவர்களிடம் தந்திரமான ஆலோசனைகளைக் கூறிக் கொண்டிருந்திருப்பான்!

எதிர்ப்புகள் வருமென்று எதிர்நோக்கி இருக்கும்படியும், அவற்றைத் துணிவோடு தாங்கிக் கொள்ளவும், அந்நிலையில் மகிழ்ச்சியுடன் இருக்கும்படியும் தீமோத்தேயு அவர்களுக்குக் கற்பித்திருப்பார். அவர் ஆற்றிய பிரசங்கங்களைக் கேட்பது எவ்வளவு இனிமையானதாக இருந்திருக்கும். எதிர்ப்புகள் பெருகிவந்து நெருக்கிய தருணங்களில் அவர்கள் அடிபணிந்து போகாதிருக்க உற்சாகப்படுத்துதல் தேவையாயிருந்தது.

3:3 கடுமையான துன்பத்திற்குள் ஆளாக்கப்பட்ட நிலையில், இவ்விதமாகக் கடுந்துன்பத்தை தாங்கள் அனுபவித்தே ஆக வேண்டும் என்பதை எண்ணிப்பார்த்தபோது அது தெசலோனிக்கேயருக்கு விளங்கிக்கொள்ள இயலாத புதிராகக் காணப்பட்டிருக்கும் என்பது இயற்கையே. மேலும் அவர்களிடத்தில் தேவன் சினங்கொண்டிருக்கக் கூடும் என்று நினைப்பதும் எளிது. ஆனால் அது புரியாத புதிரல்ல என்று தீமோத்தேயு அவர்களுக்கு நினைவூட்டினார்: கிறிஸ்தவர்களுக்கு இது இயல்பாக நிகழக்கூடியதே, ஆகவே அவர்கள் அசைக்கப்படவோ மனச்சோர்வு அடையவோ கூடாது.

3:4 பவுல் தெசலோனிக்கே பட்டணத்தில் இருந்தபோதே, கிறிஸ்தவர்கள் கடுந்துன்பங்கள் அடைவதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அவர் சொல்லி வந்ததை இப்பொழுது நினைவுபடுத்துகிறார். அவர் முன்னுரைத்தது அவர்களுடைய வாழ்க்கையிலேயே உண்மையாயிற்று. இதைக் குறித்து அவர்கள் ஏற்கனவே அறிந்திருந்தது எவ்வளவு நல்லது!

நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான உளப்பயிற்சியாகவே சோதனைகள் விளங்குகின்றன.

1. நம்முடைய விசுவாசத்தின் உண்மையான அனுபவங்களாக அவை விளங்குகின்றன. கிறிஸ்தவர்கள் என்று வெற்றறிக்கை செய்கிற மக்கள் சோதனைகள் மூலமாகக் களைகளைப் போல அகற்றப்படுவார்கள் (1 பேதுரு 1:7).
2. அதே விதமான சோதனைகளைச் சந்திக்கிறவர்களுக்கு ஆறுதல் கூறி உற்சாகப்படுத்த அவை நம்மைத் தகுதிப்படுத்துகின்றன (2 கொரி. 1:4).
3. பொறுமை போன்ற இனிய பண்புகளை நம்மிடத்தில் அவை தோற்றுவிக்கின்றன (ரோமர் 5:3).
4. நற்செய்தியைப் பரப்புவதில் கூடுதல் ஆர்வம் உடையவர்களாக நம்மை அவை மாற்றுகின்றன (அப். 4:30; 5:27-29; 8:3,4).

5. நம்முடைய வாழ்க்கையில் உள்ள கழிவு களை அகற்ற அவை உதவிசெய்கின்றன (யோபு 23:10).

3:5 முதல் இரண்டு வசனங்களில் கூறப்பட் டுள்ள முக்கியமான கருத்தை அப்போஸ்தலன் மீண்டும் கூறுகிறார்: மேலும் தாமதம் செய்வது அவருக்குப் **பொறுத்திருக்கக்** கூடாத செயலாக இருந்த காரணத்தினால், கிறிஸ்தவர்கள் எவ் வாறு எதிர்த்து வந்த புயலைத் தாங்கிக் கொண் டார்கள் என்பதை அறியும்படி அவர் தீமோத் தேயுவை அவர்களிடமாய் **அனுப்பினார்**. துன்பங் களின் காரணமாக, செயலாற்றல் மிக்க கிறிஸ்தவ சாட்சியை விட்டுவிட்டு, அவர்கள் தளர்வுற்ற மனி தர்களாக மாற்றம் அடையும்படி பிசாசு செய்து விடுவானோ என்று அவர் பெரிதும் அஞ்சினார். சொந்த வசதிகளை நாடி கிறிஸ்துவுக்கு உண் மையுள்ளவர்களாக இருக்கும் நிலையை விட்டு விடுவது, கிரீடத்தை நாடி சிலுவையைப் புறக் கணிப்பது ஆகிய சோதனைகள் எந்த நேரத்தி லும் தாக்கக் கூடியவை. "என்னை மன்னியும் கர்த்தாவே, சீடனாக விளங்குவதால் ஏற்படக் கூடிய வேதனை, செய்ய வேண்டிய தியாகம் ஆகியவற்றை எத்தனை முறை நான் தவிர்த் திருக்கிறேன். என்ன விலையானாலும் அது பொருட்டன்று, நான் உம்மோடுகூட இன்று நடக்க என்னைப் பலப்படுத்துவீராக" என்று மன்றாடத் தேவையில்லை என்னும் நிலையில் நம்மில் யாராவது இருக்கிறோமா?

சாத்தானின் தூண்டுதலால் பரிசுத்தவான்கள் தங்களுடைய கொள்கையை மறுத்துரைக்கக் கூடியவர்களாக மாற்றம் அடைவார்களென்றால், தன்னுடைய உழைப்பு முழுவதும் வீணாகிப் போய்விடும் என்று பவுல் எண்ணினார்.

3:6 தெசலோனிக்கே பட்டணத்திலிருந்து **நற்செய்தியோடு தீமோத்தேயு** கொரிந்துப் பட்டணத்துக்குத் திரும்பி வந்தார். முதலாவதாக, அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்தும் அன் பைக் குறித்தும் பவுல் கொண்டிருந்த ஐயத்தைத் தீமோத்தேயு நீக்கினார். கிறிஸ்தவ விசுவாசத் தைப் பற்றி அவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட பாடங் களுக்கு அவர்கள் உண்மையோடு நடந்து கொண்டது மட்டுமின்றி, அவர்கள் அன்பு என்னும் சிறந்த நற்பண்பை வெளிப்படுத்திக் காட்டுகிறவர் களாகவும் இருந்தார்கள். இதுவே எப்பொழுதும் உண்மைத்தன்மைக்கான பரீட்சையாக இருக் கிறது. வெறுமனே புராதன சமயக் கோட்பாடு களை ஒப்புக்கொள்வது மட்டுமின்றி, "அன்பி னாலே கிரியை செய்கிற விசுவாசமாக" அது காணப்படவேண்டும் (கலா. 5:6). உங்களுடைய விசுவாசம் "கர்த்தராகிய இயேசுவின்மேல்" இருப் பது மட்டுமின்றி, "பரிசுத்தவான்களெல்லார் மேலும் அன்பு" செலுத்தப்பட வேண்டும் (எபே. 1:15).

அவர்களுடைய **விசுவாசத்தையும் அன்பை யும்** பற்றி தீமோத்தேயு குறிப்பிட்டுவிட்டு, அவர் களுடைய நம்பிக்கையைக் குறித்து எதுவும் சொல்லாததில் ஏதேனும் உட்பொருள் இருக் குமா? கிறிஸ்து மீண்டும் வருவார் என்னும் உண்மையில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக் கையைச் சாத்தான் அசைத்து விட்டானா? அது சாத்தியமானதே. "அந்தக் கோட்பாட்டைப் பிசாசு வெறுக்கிறான். ஏனெனில் நம்முடைய வாழ்க்கை யில் அதன் மூலமாக உண்டாகிற ஆற்றலை அவன் அறிந்திருக்கிறான்" என்று திருவாளர் வில்லியம் லிங்கன் கூறியிருக்கிறார். அவர்களு டைய நம்பிக்கை தவறானதாக இருக்குமென் றால், இந்த மடலில் அதனைப் பவுல் சீர்படுத்த நிச்சயம் முயற்சி செய்வார்.

அப்போஸ்தலனையும் அவருடைய உடன் ஊழியர்களையும் அன்புடன் நினைவுகூர்ந்தவர் களாகத் தெசலோனிக்கே விசுவாசிகள் இருந் தார்கள். மேலும் பவுலும், சீலாவும், தீமோத்தே யுவும் மீண்டும் ஓரிடத்தில் ஒன்று கூடியதுபோல, அவர்களும் இவர்களோடு ஒன்று கூட ஆவலு டையவர்களாக இருந்தார்கள்.

3:7 இந்தச் செய்தியானது தாகம் மிகுந்த பவுலின் ஆத்துமாவுக்குக் கிடைத்த குளிர்ந்த நீரைப் போல இருந்தது (நீதி. 25:25). அவருக்கு ஏற்பட்ட கடுந்துன்பங்கள் மற்றும் வேதனைகள் ஆகியவற்றின் நடுவிலும் அவர் அவர்களுடைய **விசுவாசத்தின்** மூலமாக மிகுந்த உற்சாக மடைந்தார்.

3:8 "**நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந் தால் நாங்கள் பிழைத்திருப்போம்**" என்று பவுல் வியந்து கூறுகிறார். அவர்கள் எவ்வாறு இருந்தார் கள் என்பதைக் குறித்து அறியாததனால் உண் டாகிற நிச்சயமற்ற நிலை, அவருக்கு ஜீவனோடு கூடிய மரணமாயிருந்தது. எல்லாம் நன்றாக இருக்கிறது என்று கேள்விப்பட்டபோது அவரு டைய உயிர் சடுதியில் மீண்டும் வந்தது. இந்தப் பெரிதான தேவ மனிதனின் தன்னலமில்லா முழு ஈடுபாட்டிற்கு இது நல்லதொரு விளக்கமாக அமைந்திருக்கிறது.

3:9 பவுலின் இருதயத்தில் **தேவனைப்** பற்றி நிறைந்திருந்த நன்றியுணர்வைப் போதுமான

அளவு வெளிப்படுத்திக் காட்ட அவருக்குச் சொற் கள் கிடைக்கவில்லை. ஒவ்வொரு முறையும் அவர் அவர்களைக் குறித்து தேவனுக்கு முன்பாக நினைவுகூர்ந்த வேளைகளிலெல்லாம் அவரு டைய மகிழ்ச்சியின் கிண்ணம் நிறைந்து வழிந்தது.

3:10 பவுலின் ஜெப வாழ்க்கை வழக்கமாகச் செய்யப்பட்டதாக இருந்ததேயொழிய, ஏதோ வலிப்பு நோயைப் போன்று திடீர்த் தாக்குதலால் ஏற்பட்டதன்று: **இரவும் பகலும்**. அது எழுச்சி மிக்கதாகவும் தீவிரமானதாகவும் இருந்தது: **மிக வும் வேண்டிக்கொள்கிறோம்**. அது குறிப்பிட்ட விசயங்களுக்காகச் செய்யப்பட்டது: நாங்கள் **உங்கள் முகத்தைக் கண்டு**. அது பிறர் நலத்தை நோக்கமாகக் கொண்டிருந்தது: **உங்கள் விசு வாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும் பொருட்டு**.

ஊ. பவுல் ஏறெடுத்த குறிப்பிட்ட மன்றாட்டு (3:11-13)

3:11 பவுல் மீண்டும் அவர்களிடமாய்ச் செல்ல வேண்டும், அவர்களுக்குள்ளாக இன்னும் பெரி தான அன்பு வளர்ந்து பெருக வேண்டும் ஆகிய வற்றிற்காக அவர் ஏறெடுத்த மன்றாட்டுடன் இந்த அதிகாரம் முடிவடைகிறது. அந்த விண்ணப்ப மானது **நம்முடைய பிதாவாகிய தேவனிடத் திற்கும் நம்முடைய கர்த்தராகிய இரட்சகரிடத் திற்கும் ஏறெடுக்கப்பட்டது**. ஆனாலும் இந்த வாக்கியத்தில் எழுவாய் பன்மையாக இருந்த போதிலும், வினைச்சொல் ஒருமையில் இருக் கிறது. இவ்வாறான வாக்கிய அமைப்பு கிறிஸ்து வின் தெய்வீகத்தையும், தேவத்துவத்தின் ஒரு மைப்பாட்டையும் விவரித்துக் கூறுகிறது.

3:12 மெய்யான கிறிஸ்தவ அன்பை வெளிப் படுத்திக் காட்டுவதில் தெசலோனிக்கேயர் உண் மையாகவே பாராட்டப்படுவதற்குரியவராக இருந் தார்கள். ஆனாலும் அதில் வளர்ச்சியடைய எப்போதும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அவர் கள் அதிக ஆழமான அளவு பெருக வேண்டு மென்று அவர் மன்றாடுகிறார்: **கர்த்தர் உங் களை அன்பில் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்வாராக**. அவர்களுடைய அன்பானது உடன் விசுவாசிகளையும், எல்லா மனிதர்களையும் அவர்களுடைய பகைஞரையும் தழுவிக்கொள் வதாக இருக்க வேண்டும். அதற்கு முன்மாதிரி யும், கருத்தளவிலானதும் அப்போஸ்தலரின் அன்பேயாகும்: **நாங்கள் உங்களிடத்தில் வைத் திருக்கிற அன்புக்கொப்பாய்** நீங்களும் அன்பு கூர வேண்டும்.

3:13 இந்த வாழ்க்கையில் அன்புபாராட்டுகிற வர்களாக விளங்குவதன் விளைபயன், விண்ணக வாழ்க்கையில் பிழையற்றவர்களாகக் காணப்படு வதேயாகும். நாம் ஒருவரிலொருவர் அன்பு பாராட்டி மனுக்குலம் முழுவதையும் நேசிப்போ மானால், **கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான் கள் அனைவரோடுங்கூட** வரும்போது நாம் பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற வர்களாக இருப்போம். ஏனெனில் அன்புகூருதல் நியாயப்பிரமாணத்தின் நிறைவாயிருக்கிறது (ரோமர் 13:8; யாக். 2:8).

இந்த மன்றாட்டினை ஒருவர் பொழிப்புரை யாகத் தந்திருக்கிறார்: "இக்காலத்தில் உங்களு டைய கிறிஸ்தவ நன்னடத்தையில் நீங்கள் உறுதிப்படும்படியும், உங்களுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் எல்லாவிதமான குற்றச்சாட்டு களையும் தவறென்று மெய்ப்பிக்கும்படியும் கர்த்தர் செய்ய, நீங்கள் உங்களுடைய வாழ்க் கையைப் பிறர்நலம் கருதி அதிகமதிகமாய்ச் செலவிட அவரே உங்களுக்கு ஆற்றலைத் தருவாராக..."

கிறிஸ்துவின் வருகையில் பலகட்டங்கள் அல்லது படிகள் உள்ளன, அதாவது தொடக்கம், தொடர்நிகழ்ச்சி, வெளிப்பாடு, உச்சகட்டம் ஆகியவை உள்ளன என்று இரண்டாவது அதி காரத்தில் கண்டோம். இந்தப் பதின்மூன்றாவது வசனத்தில் மூன்றாவது கட்டம் குறிப்பிடப்பட்டுள் ளது: **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு வருவார்**. கிறிஸ்துவின் நியாயாசன நிகழ்ச்சி ஏற்கனவே விண்ணகத்தில் நடந்து முடிந்திருக்கும். பரிசுப் பொருட்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கும். ஆனாலும் நமது இரட்சகர் அரசருக்கெல்லாம் அரசராகவும், கர்த்தருக்கெல்லாம் கர்த்தராகவும் இப்புவிக்கு வருகைபுரியும்போதே அந்தப் பரிசுப் பொருட்கள் வெளியரங்கமாகக் காண்பிக்கப் படும்.

விசுவாசிகள் நடுவானிற்கு எடுத்துக்கொள் ளப்படுகிற நிகழ்ச்சியின்போது (1 தெச. 4:14), எடுத்துக்கொள்ளப்படுபவர்களே இங்கு **பரிசுத்த வான்கள்** என்று அழைக்கப்படுகிறார்கள் எனத் தோன்றுகிறது. இவர்கள் தேவதூதர்கள் என்று சிலர் கருதுகிறார்கள்; ஆனால் *மகிமையடைந்த தேவனுடைய மக்களாகிய பரிசுத்தவான் களே* இவர்கள் என்று திருவாளர் வின்சன்ட் கூறு கிறார். இந்த மடலில் தேவதூதர்களைப் பற்றிய எந்தக் குறிப்பும் இடம்பெறவில்லை, தெசலோ

னிக்கேயரின் உள்ளத்தில் வருத்தத்திற்குக் காரணமான இந்த மடலின் ஆய்வுப் பொருளோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தவர்கள், மகிமையடைந்த பரிசுத்தவான்களே என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். "கர்த்தர் வரும்போது, தேவதூதர்கள் வரமாட்டார்கள் என்று அவர்களுடைய வருகை புறம்பாக்கப்படவில்லை. ஆனால் கர்த்தருடைய வருகையில் தேவதூதர்களும் இடம் பெறுவார்கள் என்பதைப் பற்றி அப்போஸ்தலன் பேசுகையில், 'கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடு வெளிப்படும்போது' என்று 2 தெசலோனிக்கேயர் 1:8 -ஆம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்" என்று திருவாளர் வின்சன்ட் கூறுகிறார்.[10]

3. நடைமுறை அறிவுரைகள் (4:1-5:22)

அ. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிற பரிசுத்தமாகுதல் (4:1-8)

4:1 அன்றியும் என்னும் சொல் இந்த மடலைப் பவுல் தொடர்ந்து எழுதவிருக்கிறார் என்பதையும், எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளில் மாற்றம் நிகழவிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. கோட்பாடுகளிலிருந்து நடைமுறைகளை நோக்கித் திரும்புகிறபோது இந்தச் சொல் பயன்படுத்தப்படுவது வழக்கம்.

மூன்றாவது அதிகாரத்தின் முடிவில் கவனத்தை ஈர்க்கக்கூடிய மூன்று சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவையாவன: பரிசுத்தம், அன்பு வருகை என்பவையே. இந்தச் சொற்கள் 4 -ஆவது அதிகாரத்தின் முதன்மையான ஆய்வுப் பொருட்களாக இருக்கின்றன: (1) பரிசுத்தம் (வச. 1-8); (2) அன்புபாராட்டுதல் (வச. 9, 10); (3) வருகை (வச. 13-18). மற்றுமொரு முக்கியமான பொருள் கடுமையான உழைப்பு என்பதாகும் (வச. 11,12).

நான்காவது அதிகாரம், பரிசுத்தவான்கள் தூய்மையோடு நடந்து, அதன்மூலமாக தேவனுக்கு மனமகிழ்ச்சி உண்டாக்க வேண்டும் என்னும் வேண்டுதலோடு தொடங்குகிறது; மேலும் அவர்கள் வானிற்கு எடுத்துக்கொள்ளப்படுவது பற்றிய செய்தியோடு முடிவடைகிறது. இதனைப் பவுல் எழுதியபோது, பெரும்பாலும் அவர் ஏனோக்கைக் குறித்துச் சிந்தித்திருப்பார் என்றே தோன்றுகிறது. இவை இரண்டிற்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளைக் கவனியுங்கள்: (1) ஏனோக்கு தேவனோடு நடந்தான் (ஆதி. 5:24); (2) ஏனோக்கு தேவனுக்கு மனமகிழ்ச்சியை உண்டாக்கினான் (எபி. 11:5); (3) ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான் (ஆதி. 5:24; எபி. 11:5). நடைமுறைப் பரிசுத்தத்தோடு விசுவாசிகள் நடக்க வேண்டுமென்று அப்போஸ்தலன் அறிவுரை நல்குகிறார், ஆனால் அதில் புதியதொரு நிலையினை அவர்கள் அடையும்படி முன்னேறிச் செல்ல வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறார். பரிசுத்தமாகுதல் நடைமுறைச் செயல்பாடேயொழிய, அதனை அடைந்தாயிற்று என்று சொல்லுவதற்கியலாது.

4:2 பவுல் அவர்களோடு இருந்தபோது, **கர்த்தராகிய இயேசு** அவருக்குக் கொடுத்த அதிகாரத்தின் அடிப்படையில், அவர்களது வாழ்க்கையில் நடைமுறைப் பரிசுத்தத்தைக் கைக்கொண்டு அவர்கள் தேவனை மனமகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தினார்.

4:3 இறைமக்கள் **பரிசுத்தமுள்ளவர்களாக** இருக்க வேண்டுமென்பதே **தேவனுடைய சித்தமாயிருக்கிறது**. தெய்வீகப் பயன்பாட்டிற்கென்று பிரித்துவைக்கப்படுவதே பரிசுத்தமாகுதல் என்பதன் பொருளாகும். ஒரு பொருளில் கர்த்தருக்காக ஊழியம் செய்யும்படி எல்லா விசுவாசிகளும் உலகத்தினின்று பிரித்துவைக்கப்பட்டிருக்கிறார்கள்; இது தகுநிலைப் பரிசுத்தம் என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது குறைவற்றதும் முழுமையுமாய் இருக்கிறது (1 கொரி. 1:2; எபி. 10:10). ஆயினும் இன்னொரு பொருளில் விசுவாசிகள் தங்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதாவது, அவர்கள் எல்லாவகையான பாவங்களிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். இது நடைமுறைப் பரிசுத்தம் என்றோ வளர்ச்சிப் பரிசுத்தம் என்றோ அழைக்கப்படும். இது ஒரு விசுவாசியின் சாவு வரையிலும் அல்லது கர்த்தரின் வருகை வரையிலும் அவனுடைய வாழ்க்கையில் தொடர்ந்து காணப்பட வேண்டிய செயல்வளர்ச்சியாகும். இந்த இரண்டாவது பொருளிலேயே அச்சொல் 3 -ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (பரிசுத்தமாகுதல் குறித்த ஆய்வுக் கட்டுரையில் 5:23 இதனை விளக்கமாகக் காண்க.)

முறைகேடான பாலுறவு என்னும் குறிப்பிட்ட பாவத்தைக் குறித்தே பவுல் எச்சரிக்கிறார். இந்தப் பகுதியில் இது விபசாரத்தைக் குறிப்பதாகவே இருக்கிறது. புறச்சமய உலகத்தில் இது முதன்மையான பாவங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. சபையின் தொடக்க காலமாகிய முதல் நூற்றாண்டில், **அந்தப்படியே நீங்கள் வேசி**

மார்க்கத்துக்கு விலகியிருங்கள் என்று எச் சரிப்பு விடுக்கப்பட்டது எவ்வளவு அவசியமா யிருந்ததோ அதுபோலவே இன்றைய நாட்களி லும் அது அவசியமாயிருக்கிறது.

4:4,5 அவனவன் தன்தன் சரீர பாண்டத் தைப் பரிசுத்தமாயும் கவனமாயும் ஆண்டு கொள்ள வேண்டியது கிறிஸ்தவச் செயல்திட்ட மாகும். இந்த வசனத்தில் **(சரீர) பாண்டம்** என்னும் சொல் மனைவி என்றோ ஒரு மனிதனின் சொந்த சரீரம் என்றோ பொருள்படக்கூடும். 1 பேதுரு 3:7 -இல் இச்சொல் மனைவியைக் குறிப்பிடுகிறது, 2 கொரிந்தியர் 4:7 -இல் இதே சொல் ஒருவனது சொந்த சரீரத்தைக் குறிப்பிடு கிறது.

RSV மொழிபெயர்ப்பு இதனை மனைவி என்னும் பொருளிலேயே மொழிபெயர்த்திருக் கிறது: "உங்களில் ஒவ்வொருவனும் தனக் கென்று பரிசுத்தத்திலும் கனத்திலும் ஒரு மனைவியைத் தெரிந்தெடுக்க அறிந்திருக்க வேண்டும்."

NEB மொழிபெயர்ப்பு இதனை சரீரம் என்னும் பொருளிலேயே தந்திருக்கிறது: "உங்களில் ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்த சரீரத்தை பரிசுத்தமாயும் கனமுள்ளதாயும் ஆண்டுகொள்ள அறிந்திருக்க வேண்டும்."

இந்த வசனத்தின் பின்னணி இதன் பொரு ளைத் தீர்மானிக்க நாம் அனுமதிப்போமென் றால், **(சரீர) பாண்டம்** என்னும் சொல் மனைவி என்னும் பொருளையே தருகிறது. ஒவ்வொரு வனும் தன்தன் மனைவியை மரியாதையோடும், நாகரீகத்துடனும் நடத்த வேண்டும், திருமண உறவில் எந்தவிதமான உண்மையற்ற செய லிலும் ஈடுபட்டு கீழ்நிலைக்குச் சென்றுவிடக் கூடாது. இதுவே இங்கு கற்பிக்கப்பட்டுள்ள பாடம். ஒருவனுக்கு ஒருத்தி என்பதே தேவன் மனித னுக்கு வகுத்த திட்டம் என்பதை இது மீண்டும் வலியுறுத்துகிறது (1 கொரி. 7:2 -ஆம் வசனத் தையும் காண்க).

திருமணத்தைப் பற்றிய கிறிஸ்தவனின் கருத்து ஒழுக்கக்கேட்டிற்கு முற்றிலும் எதிர் மாறானதாயிருக்கிறது. "இயேசு தமது கைகளை லூக்கா 13:13 -இல் குறிப்பிடப்பட்டுள்ள பெண் ணின்மேல் வைத்தபோது அவள் நிமிர்ந்து நேரா னாள். ஆனால் அஞ்ஞானி ஒருவன் ஒரு பெண் ணைத் தொடுகிறபோது அவள் கூனிக் குறுகிப் போகிறாள்" என்று ஒரு விரிவுரையாளர் கூறி யிருக்கிறார்.

சின்றின்பமானது **மோக இச்சையை** நிறைவு செய்வதற்கான வழிவகை என்று **அஞ்ஞானிகள்** கருதுகிறார்கள். அவர்களைப் பொருத்தமட்டில் கற்புடமை பலமின்மையாகும்; மேலும் பாவத் தைச் சட்டமாக்கும் செயலே திருமணம் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். அவர்களுடைய அரு வருப்பான உரையாடல்களினாலும், பொது இடங் களில் கேவலமான சொற்களை எழுதி வைத் திருப்பதினாலும் அவர்கள் தங்களுடைய அவ மானத்தில் மேன்மைபாராட்டுகிறார்கள்.

4:6 சிற்றின்ப ஒழுக்கக்கேடு இறைவனின் தூய ஆவிக்கு எதிரான பாவமாகும் (1 கொரி. 6:19); அ.·.து ஒரு மனிதனுடைய சொந்த உடலுக்கு எதிரான பாவமாகும் (1 கொரி. 6:18); மேலும் அது மற்றவர்களுக்கு எதிராகச் செய்யப்படுகிற பாவமாகவும் இருக்கிறது. ஆகவேதான் பவுல் இவ்வாறு கூறுகிறார்: **இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சிக்காமலும் இருக்க வேண்டும்.** ஒரு கிறிஸ்தவன் திருமணக் கட்டுகளுக்கு அப்பாற் சென்று, மற்றொரு சகோதரனுடைய மனைவி யின் அன்பைக் களவாடி **தன் சகோதரனை வஞ்சிக்காமலிருக்க வேண்டும்.** இந்நாட்களில் இப்படிப்பட்ட குற்றங்கள் நீதிமன்றங்களில் பொது வாகத் தண்டிக்கப்படுவதில்லை. ஆனாலும் இவற்றில் **கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவரா யிருக்கிறார்.** சிற்றின்ப ஒழுக்கக்கேடுகள் இவ் வுலக வாழ்க்கையில் சரீரத்திலும் மனதிலும் பலவகையான கொடிய நோய்களை விளைவிக் கின்றன. ஆனால் அந்தப் பாவங்கள் அறிக்கை செய்யப்பட்டு மன்னிப்பைப் பெறாவிட்டால் அவற் றின் காரணமாக நித்தியத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளுடன் இவ்வுலகில் உண்டாகிற நோய் கள் ஒப்பிடத்தக்கவையல்ல. இதைக் குறித்துப் பவுல் ஏற்கனவே தெசலோனிக்கேயரை **எச்சரித் திருக்கிறார்.**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டன் நாட்டில் மிகவும் திறமை பெற்றவராக விளங்கிய எழுத்தாளர் ஒருவர் ஒழுக்கக்கேடு என்னும் பாவத்தில் வீழ்ந்து அவமானத்தோடு தனது வாழ்க்கையைச் சிறைச்சாலையில் கழிக்க நேரிட்டது. அவர் எழுதியதாவது:

> "தேவர்கள் எல்லாவற்றையும் எனக்குத் தந் திருக்கிறார்கள். ஆனால் என்னுடைய மதிகேட்டி னாலும் ஒழுக்கங்கெட்ட உணர்ச்சிகளாலும் உந்தப்பட்டவனாய் தவறினேன். காம விகாரத்தி னால் ஏற்பட்ட இன்பத்தில் களைத்துப் போய்

> புதிய இன்பங்களை நாடிக் கீழ்நிலைக்குச் சென்றேன். . . . மற்றவர்களது வாழ்க்கையைக் குறித்துச் சிறிதேனும் கவலையற்றவனாகச் செயல்புரிந்தேன். எனக்கு இன்பமானபடியெல்லாம் செய்து காலத்தைப் போக்கினேன். மனிதர்கள் மறைவிடங்களில் செய்கிற தகாத செயல்களுக்காக ஒரு நாள் வீட்டின் உச்சியில் நின்று கதறி அழ வேண்டியவராய் உள்ளனர் என்பதை மறந்துபோனவனாய்க் குண நலனை இழந்து, தகாதவிதமான பல செயல்களைச் செய்தேன். என்னையே என்னால் கட்டுப்படுத்த இயலாத கயவனாய் மாறிப் போனேன். என் ஆன்மாவிற்கு நான் தலை வனாக இருக்கவில்லை. அதை நான் இது வரை அறியவுமில்லை. இன்பம் என் வாழ்க்கையை ஆளும்படி அதற்கு இடங்கொடுத்தேன். இப்பொழுதோ அவமானச் சின்னமாக இருக்கிறேன்.[11]

அவர் மற்றவர்களது வாழ்க்கையைக் குறித்துச் சிறிதேனும் கவலையற்றவராகச் செயல் புரிந்தார். அல்லது பவுல் சொல்லியிருப்பது போல, **இந்த விஷயத்தில்** அவர் **தன் சகோதரனுக்கு** எதிராகச் செயல்புரிந்தார்.

4:7 ஒழுக்க நெறிக் குறைவை அடிப்படையாகக் கொண்டு **தேவன் நம்மை அழைக்கவில்லை,** மாறாக நம்முடைய வாழ்க்கையில் **பரிசுத்தமும்** தூய்மையும் முழுமையாக இடம்பெற வேண்டும் என்பதற்காகவே அவர் நம்மை அழைத்திருக்கிறார். கழிவுநீர்த் தேக்கத்தின் இழிநிலைக்கு ஒப்பாக இருந்தபோது அவர் நம்மை அழைத்தார். அந்நிலையிலிருந்த நம்மிடத்தில் வாழ்நாள் முழுவதும் செயல்படக்கூடிய ஒரு வளர்ச்சித் திட்டத்தை அவர் தொடங்கியிருக்கிறார். நாம் மென்மேலும் அவருக்கு ஒப்பாக மாறவேண்டும் என்பதே அந்த வளர்ச்சித் திட்டமாகும்.

4:8 இந்த அறிவுரையை வேண்டாமென்று அசட்டைபண்ணுகிறவன், பவுல் போன்ற மனிதருடைய ஆலோசனையை ஏளனமாகக் கருதுபவனாகக் காணப்படுவது மட்டுமின்றி, **தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின**[12] **தேவனையே** எதிர்த்து நிற்கிறவனாக, அவமதிக்கிறவனாக, பழித்துக்கூறுகிறவனாகக் காணப்படுவான். இங்கே பரிசுத்தம் என்னும் சொல் வலியுறுத்திச் சொல்லப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரின் குடியிருப்பாக விளங்கக்கூடிய ஒரு மனிதன் எவ்வாறு சிற்றின்ப ஒழுக்கக்கேடுகளில் ஈடுபடுவான்?

இந்தப் பகுதியில் திரியேக தேவனின் எல்லா அங்கத்தினரும் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதைக் கவனியுங்கள். பிதா (வச. 3), குமாரன் (வச. 2), பரிசுத்த ஆவி (வச. 8). வியத்தகு சிந்தனை! விசுவாசியானவன் பரிசுத்தமடைவதில் தேவ தலைமையில் உள்ள மூன்று நபர்களும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இச்சை என்னும் பொருளிலிருந்து (வச. 1-8), இப்பொழுது அன்பு என்னும் பொருளை நோக்கி இப்பகுதி திரும்புகிறது. மேலும் விலகியிருக்க வேண்டும் என்னும் அறிவுரை, பெருக வேண்டும் என்று மாற்றமடைகிறது.

ஆ. பிறர்மேல் கருத்துடைய அன்பு (4:9,10)

4:9 விசுவாசியானவன் கட்டுப்பாடுடைய சரீரத்தைக் கொண்டிருப்பது மட்டுமின்றி, அவன் கர்த்தருக்குள்ளான சகோதரனிடத்தில் அன்பு பாராட்டும் இருதயத்தையும் கொண்டிருக்க வேண்டும். பாவம் என்னும் சொல் காட்டுமிராண்டித் தனத்தின் முதன்மையான சொல்லாக இருப்பதுபோல, கிறிஸ்தவத்தின் முதன்மையான சொல் **அன்பு** என்னும் சொல்லே ஆகும்.

இந்த நற்பண்பைக் குறித்து தெசலோனிக்கேயருக்கு **எழுத வேண்டுவதில்லை**. தெய்வீக உள்ளுணர்வினாலும் (1 யோவான் 2:20,27) கிறிஸ்தவ ஆசிரியர்களின் மூலமாகக் கொடுக்கப்பட்ட அறிவுரைகளினாலும் அவர்கள் கர்த்தருக்குள்ளான தங்களுடைய சகோதரர்களிடத்தில் அன்பு பாராட்ட வேண்டுமென்று தேவனாலே ஏற்கனவே போதிக்கப்பட்டிருந்தார்கள். தெசலோனிக்கே பட்டணத்து விசுவாசிகள் மக்கெதோனியாவிலிருந்த கிறிஸ்தவர்கள் அனைவர் மேலும் அன்புபாராட்டியவர்கள் என்னும் பேர் பெற்றவர்களாக இருந்தார்கள். இதற்காக அவர்களைப் பாராட்டிய பவுல் அவர்களுக்குள் எப்பொழுதும் நிலைநிற்கும் நினைவுச் சின்னத்தை எழுப்புகிறார்.

4:10 ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, சகோதர அன்புணர்வு ஓர் அருஞ்சாதனை அல்ல, மாறாக அது தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய செயலாகும். ஆகவே இந்த இனிய பண்பில் விசுவாசிகள் **அதிகமாய்ப் பெருகும்படி** பவுல் அறிவுரை தருகிறார்.

சகோதர அன்பு ஏன் இவ்வளவு முக்கியமானது? ஏனெனில், எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே ஒருமைப்பாடு இருக்கும். எங்கே ஒருமைப்

பாடு இருக்கிறதோ அங்கே கர்த்தரின் ஆசிர் வாதம் இருக்கும் (சங். 133:1,3).

இ. வெளியிலிருக்கிறவர்களிடத்தில் பேசும் வாழ்க்கை (4:11,12)

4:11 பரிசுத்தவான்கள் மூன்று செயல்களைச் செய்ய வேண்டுமென்று, பவுல் அவர்களுக்குப் **புத்திசொல்லுகிறார்.** இன்றைய நாள் பேச்சு வழக்கின்படி இந்த வசனத்தில் கொடுக்கப்பட் டுள்ள மூன்று கட்டளைகளும் கீழ்க்கண்டவாறு காணப்படும்:

1. எல்லோராலும் அறியப்பட்டு முன்னிலையில் இருக்க வேண்டுமென்று நாட வேண்டாம். “சிறியவராகவும், அறியப்படாதவராகவும், ஆனால் கிறிஸ்தவர்களால் மட்டும் அன்பு கூரப்பட்டவர்களாகவும், பாராட்டப்பட்டவராக வும்” இருந்தால் போதும் என்னும் மனநிறை வுடன் இருங்கள்.
2. பிறரைப் பற்றிய விஷயங்களில் அனுமதியின் றித் தலையிடாமல், உங்கள் சொந்த அலு வல்களைப் பாருங்கள்.
3. உங்களுடைய தேவைகளை நீங்களே சந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும். மற்ற வர்களை உறிஞ்சிக்குடிக்கும் ஒட்டுண்ணி யாகவோ திருடித் திண்கிறவர்களாகவோ இருக்க வேண்டாம்.

4:12 நாம் கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்து வின் வருகைக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னும் உண்மை, நம்முடைய வாழ்க்கையில் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து நமக்கு விலக்களிப்பதில்லை. இந்த உலகம் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் கொண்டவர்களாக இருக்க வேண் டும். அவிசுவாசிகளிடத்தில் நாம் யோக்கியமாய் நடக்க வேண்டும். மேலும் அவர்களிடத்தில் பண உதவி நாடி அவர்களைச் சார்ந்திருக்கக் கூடாது.

ஈ. விசுவாசிகளுக்கு ஆறுதல் தரும் நம்பிக்கை (4:13-18)

4:13 ஒருவர் மரணமடையும் வேளையில் என்ன நிகழும் என்பதைப் பற்றி, பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் குறைபாடானதும் நிறைவற்றது மான அறிவுடையவர்களாகவே இருந்தார்கள். அவர்களைப் பொருத்தமட்டில் பாதாளம் என்னும் சொல், விசுவாசிகளானாலும் அவிசுவாசிகளா னாலும் மனிதர்கள் உடலை விட்டு நீங்கிய பிறகு, அடையக்கூடிய நிலையைக் குறிப்பிடுவதற் காகப் பயன்படுத்தப்பட்ட பொதுவான சொல்லா கவே விளங்கியது.

எல்லோரும் இறுதியில் மரணமடைய வேண் டும், இந்த உலகத்தின் முடிவில் ஒரே ஒரு பொது வான உயிர்த்தெழுதல் நிகழும், கடைசியில் நியாயத்தீர்ப்பு வழங்கப்படும் என்று அவர்கள் நம்பினார்கள், "உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் (லாசரு) உயிர்த்தெழுந்திருப் பான்" என்று மார்த்தாள் கூறிய சொற்களில் இந் தக் குறைவான கருத்துகளே வெளிப்படுகின்றன (யோவான் 11:24).

ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத் தினாலே கர்த்தராகிய இயேசு வெளிப்படுத்தினார் (2 தீமோ. 1:10). இந்நாட்களில் மரணமடைந்த வுடன் விசுவாசியானவன் கர்த்தரோடு இருக்கும் படியாகச் சென்றுவிடுகிறான் என்பதை நாம் அறிவோம் (2 கொரி. 5:8; பிலி. 1:21,23). அவி சுவாசிகள் பாதாளத்தில் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது (லூக்கா 16:22,23). எல்லா விசுவாசிகளும் மரணமடைய மாட்டார் கள் என்பதையும் நாம் அறிவோம், ஆனாலும் எல்லோரும் மாற்றமடைவோம் (1 கொரி. 15:51). ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்த்தெழுதல்கள் உள் ளன என்பதும் நமக்கு தெரியும். சபை எடுத்துக் கொள்ளப்படும் நாளில் விசுவாசிகள் மட்டுமே உயிர்த்தெழுவார்கள் (1 கொரி. 15:23; 1 தெச. 4:16). கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சிக் காலத் தின் முடிவிற்குப் பிறகே, பாவத்தோடு இறந்தவர் கள் உயிரோடு எழுந்திருப்பார்கள் (வெளி. 20:5).

முதல் முறையாக அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்றிருந்த போது, கிறிஸ்து ஆட்சி செலுத்தும்படி இவ்வுல கிற்கு வரப்போகிற நிகழ்ச்சி மற்றும் அதைத் தொடர்ந்து நிகழப்போகிறவை ஆகியவற்றைக் குறித்துக் கற்பித்திருந்தார். ஆனால் அதற்கிடை யில், இறந்துபோன விசுவாசிகளைக் குறித்து வினாக்கள் எழுந்தன. கடைசி நாள் வரையிலும் அவர்களுடைய உடல்கள் கல்லறையிலேயே இருக்குமா? கிறிஸ்துவின் வருகையிலும் அவரு டைய மகிமை நிறைந்த ஆட்சியிலும் அவர்களுக் குப் பங்கு இல்லையா? அவர்களுடைய வினாக் களுக்கு விடைதரும் பொருட்டும், அவர்களு டைய ஐயங்களை அகற்றும் பொருட்டும், தம்மு டைய மக்களுக்காகக் கிறிஸ்து வருகிறபோது நடக்கப்போகிற நிகழ்ச்சிகளை அப்போஸ்தலன் இப்பொழுது வரிசைப்படுத்தித் தரப்போகிறார்.

"சகோதரரே, நீங்கள் அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை" என்னும் சொற்கள் சொல்லப்படவிருக்கிற அறிவிப்பின் முக்கியத்துவத்தைக் கேட்போர் உணருவதற்கான எச்சரிப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே **நித்திரையடைந்தவர்களைப்** பற்றிய செய்தியே இங்கு அறிவிப்பாகக் கொடுக்கப்படுகிறது, அதாவது, ஏற்கனவே இறந்துபோன விசுவாசிகளைப் பற்றிய செய்தி. நித்திரை என்னும் சொல் இறந்து போன கிறிஸ்தவர்களின் *உடல்களைக்* குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளதேயொழிய அவர்களுடைய ஆத்துமாக்களையோ ஆவிகளையோ குறிப்பிட எங்கும் பயன்படுத்தப்படவில்லை. நித்திரை மரணத்தைக் குறிக்கும் பொருத்தமான உருவகமாக விளங்குகிறது, ஏனெனில் மரணத்தில் ஒரு மனிதன் உறங்குவதாகவே தோன்றுகிறது. மேலும் *cemetery* என்னும் சொல் *koimeterion* என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது. அச்சொல் "உறங்கும் இடம்" என்று பொருள்படும். மேலும் நித்திரை மரணத்தை விளக்கிக் கூறும் நன்கு அறிந்த உருவகமாக விளங்குகிறது. ஏனெனில் ஒவ்வொரு இரவிலும் மரணத்திற்கு அடையாளமான உறக்கத்தில் அதை வெளிப்படுத்துகிறோம், மேலும் ஒவ்வொரு நாள் காலையும் உயிர்த்தெழுதலைப் போல இருக்கிறது.

மரணத்தின்போது ஆத்துமா உறங்குகிறதாக வேதம் கற்பிக்கிறதில்லை. செல்வந்தனும் லாசருவும் மரணமடைந்த பிறகும் உணர்வு நிலையில்தான் இருந்தார்கள் (லூக்கா 16:19-31). விசுவாசி இறந்துபோகிறபோது "கர்த்தரிடத்தில் குடியிருக்கும்படி" செல்லுகிறான் (2 கொரி. 5:8). "கிறிஸ்துவுடனே கூட இருப்பதே" மரணம் என்று கூறும் பவுல், இதனை "ஆதாயம்" என்றும் "அதிக நன்மையானது" என்றும் விவரிக்கிறார் (பிலி. 1:21,23). மரணம் அடைந்த பிறகு ஆத்துமா உறங்குமென்றால் மேற்கூறப்பட்டுள்ளது உண்மையாக இருக்க முடியாதே!

மரணமடைகிறபோது பூண்டோடு நிர்மூலமாகுதலை வேதம் கற்பிக்கிறதில்லை. மரணத்தில் உளவாம் தன்மை முடிவடைந்து போகிறதில்லை. விசுவாசி நித்திய வாழ்வைப் பெற்று அனுபவிக்கிறவனாயிருக்கிறான் (மாற்கு 10:30). அவிசுவாசியோ நித்திய ஆக்கினையைப் பெறுகிறான் (மாற்கு 9:48; வெளி. 14:11).

இறந்துபோன பரிசுத்தவான்களைக் குறித்து நம்பிக்கையற்ற துக்கம் தேவையற்றது என்று அப்போஸ்தலன் கூறுகிறார். துக்கமே இருக்காது என்று அவர் கூறவில்லை. இன்னும் சில மணித்துளிகளில் லாசரு உயிரோடு எழுந்திருக்கப் போகிறான் என்பதை அறிந்திருந்தும் இயேசு அவனுடைய கல்லறையில் அழுதார் (யோவான் 11:35-44). ஆனால் விண்ணகத்தைக் குறித்தோ, திரும்பவும் ஒன்று சேருவோம் என்றோ எந்த நம்பிக்கையும் இல்லாமல் ஆக்கினைத் தீர்ப்பை அடையப்போகிற மக்களைப் போல துக்கப்படலாகாது என்று அவர் அவ்வெண்ணத்தை அகற்றுகிறார்.

நம்பிக்கையற்றவர்களான மற்றவர்கள் என்னும் சொற்றொடர் நான் கலந்துகொண்ட ஒரு அடக்க நிகழ்ச்சியை எனக்கு நினைவிற்குக் கொண்டு வருகிறது. அப்பொழுது இரட்சிக்கப்படாத ஒருவருடைய சவப்பெட்டியை துயரத்தால் அலைக்கழிக்கப்பட்ட உறவினர்கள் சுற்றி நின்று கொண்டு, "ஓ, மேரி, என் தேவனே, என் தேவனே, மேரி" என்று ஆற்ற இயலாதபடி கதறியழுத காட்சி நம்பிக்கையற்ற நிலையின் மறக்கவியலா காட்சியாக இருந்தது.

4:14 கிறிஸ்து உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி விசுவாசியின் நம்பிக்கைக்கு ஆதாரமாகத் திகழ்கிறது. கிறிஸ்துவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று நாம் எவ்வாறு உறுதியாக விசுவாசிக்கிறோமோ, அது போலவே இயேவுக்குள்ளாக மரணம் அடைந்தவர்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்றும் அவருடைய வருகையில் பங்கு பெறுவார்கள் என்றும் நாம் நம்புகிறோம். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:22). அவருடைய உயிர்த்தெழுதல் நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு வாக்குறுதியாகவும் சான்றாகவும் விளங்குகிறது.

இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள் அல்லது "இயேசுவின் மூலமாக நித்திரையடைந்தவர்கள்" என்னும் சொற்றொடரைக் கவனியுங்கள். நம்முடைய ஆத்துமாக்களின் நேசர்தாமே, தமக்குப் பிரியமானவர்களுடைய சரீரங்களுக்கு, மரணத்தின் திகிலை நீக்கி உறக்கத்தைத் தருகிறார் என்பதை அறிந்திருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள்ளாக மரணம் அடைந்தவர்களை **தேவன் அவரோடுகூடக் கொண்டுவருவார்** என்பது நம்முடைய உறுதியான நம்பிக்கையாக இருக்கிறது. இதனை நாம் இரண்டு வழிகளில் அறிந்துகொள்ளலாம்:

1. சபை எடுத்துக்கொள்ளப்படும்போது, விசுவாசிகளின் சரீரங்களை தேவன் உயிரோடு எழுப்பி, கர்த்தராகிய இயேசுவோடு விண்ணகத்திற்கு மீண்டும் அழைத்து வருவார் என்பது இதனுடைய பொருளாக இருக்கலாம்.
2. அல்லது கிறிஸ்து இவ்வுலகிற்கு ஆட்சிபுரியும்படி வருகிறபோது, விசுவாசத்தோடு இறந்து போனவர்கள் அனைவரையும் தேவன் கிறிஸ்துவோடு கூட அழைத்துக்கொண்டு வருவார் என்பதும், இதன் பொருளாக இருக்கலாம். "இறந்து போனவர்கள் எவரும் நிறுவப்படவிருக்கிற அரசில் பெறப்போகிற புகழ்ச்சியை இழந்துபோவார்கள் என்று கவலைப்படவேண்டாம். இயேசு வல்லமையோடும் பெரிதான மகிமையோடும் மீண்டும் வருகிறபோது தேவன்தாமே அவர்களை அழைத்துக் கொண்டுவருவார்" என்று அப்போஸ்தலன் கூறுவதாக வேறு சொற்களிலும் கூறலாம். (இந்த விளக்கமே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.)

ஆனால் இது எவ்வாறு நிகழும்? அவர்களுடைய சரீரங்கள் யாவும் கல்லறையில் புதைந்து கிடக்கின்றனவே. அவை எவ்வாறு இயேசுவோடு மீண்டும் வரும்? அதற்கான விடை 15-17 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து தமது ஆட்சியை நிறுவுவதற்குமுன், அவர் தமது மக்களைத் தம்மோடுகூட விண்ணகத்தில் இருக்கும்படியாக அழைத்துச் செல்ல முதலில் வருவார். அதற்குப் பிறகு பின்னொரு நாளில் அவர் அவர்களோடு இந்தப் பூமிக்கு வருவார்.

4:15 இதனைப் பவுல் எவ்வாறு அறிவார்? **கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறோம்** என்பதே இதற்கான விடையாகும். இதனை அவர் ***கர்த்தரிடத்திலிருந்து நேரடியான வெளிப்பாடாகப் பெற்றிருந்தார்.*** எவ்வாறு அவர் இதனைப் பெற்றார் என்று நமக்குச் சொல்லப்படவில்லை. இதனை அவர் தரிசனத்திலோ, தெளிவாகக் கேட்ட சொற்களிலோ, பரிசுத்த ஆவியானவர் உள்ளத்தில் உணர்த்துவித்ததன் மூலமாகவோ எவ்வாறோ அவர் பெற்றிருக்க வேண்டும். ஆனால் மனிதர்களுக்கு அந்நேரம்வரை வெளிப்படுத்தப்படாத உண்மையே இது என்பது நிச்சயம்.

கிறிஸ்து திரும்பி வருகிறபோது, உயிரோடு இருக்கிற பரிசுத்தவான்கள் நித்திரையடைந்த பரிசுத்தவான்களுக்கு எந்த வகையிலும் முந்திக் கொள்வதுமில்லை, அநுகூலமான நிலையைப் பெற்றிருப்பதுமில்லை என்று அவர் தொடர்ந்து விவரிக்கிறார்.

கிறிஸ்துவின் **வருகையின்**போது **உயிரோடு இருக்கிற** ஒருவராகவே பவுல் தன்னைக் குறித்து இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார் (1 கொரி. 15:51, 52 -ஆகிய வசனங்களையும் காண்க). ஆயினும் 2 கொரிந்தியர் 4:14 மற்றும் 5:1 -ஆகிய வசனங்களில், உயிரோடு எழுப்பப்படுகிறவர்களில் ஒருவராகத் தான் இருக்கக்கூடும் என்று குறிப்பிடுகிறார். கர்த்தருடைய வருகை எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம் என்று எதிர்பார்த்தவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதே நாம் எடுக்கக்கூடிய உறுதியான முடிவாகும்; ஆனாலும் நாம் மரணத்தின் வழியாக விண்ணகத்திற்கு அழைக்கப்படக்கூடும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

4:16 கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வருகிறபோது நடக்கவிருக்கிற நிகழ்ச்சிகளின் வரிசைமுறை இப்பொழுது தரப்படுகிறது. **கர்த்தர்தாமே வானத்திலிருந்து இறங்கிவருவார்.** அவர் ஒரு தேவதூதனை அனுப்பப்போவதில்லை, அவர்தாமே வருவார்!

அவருடைய வருகை **ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும்** நடைபெறும். இந்தக் கம்பீரமான சத்தங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி பல வகையான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை என்னவென்று திட்டவட்டமாகச் சொல்லுவது முடியாத செயல் என்பதே உண்மை.

1. ஆரவாரம் என்பது கர்த்தராகிய இயேசுவின் சத்தம் என்றும், அதுவே இறந்தோரை எழுப்பக்கூடியது என்றும் சிலர் கருதுகிறார்கள் (யோவான் 5:25; 11:43,44). மேலும் அது உயிரோடு இருப்பவர்களை மறுரூபப்படுத்தும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். திருவாளர்கள் ஹாக், வைன் போன்ற வேறு சிலர் அது பிரதான தூதன் எழுப்புகிற சத்தம் என்று கருதுகிறார்கள்.
2. மிகாவேல் என்னும் பிரதான தூதனுடைய சத்தம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களைக் கூட்டிச் சேர்ப்பதற்கான கட்டளை என்று பொதுவாக நம்பப்படுகிறது; ஏனெனில் அவரே இஸ்ரவேல் நாட்டோடு அவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார் (தானி. 12:1, யூதா 9; வெளி. 12:4-7). இஸ்ர

வேல் நாட்டை ஒரு தேசமாகப் புத்தூக்கம் பெறச் செய்வதே அதனுடைய நோக்கம் என்று பிறர் கருதுகிறார்கள். ஆனாலும், எதிரியின் எல்லையின் வழியாகக் கர்த்தரையும் அவருடைய பரிசுத்தவான்களையும் மீண்டும் விண்ணுலகிற்கு வழிநடத்திச் செல்லும் காவலர்களாகச் செயல்பட தேவ தூதர்களுக்கு விடுவிக்கப்படும் அழைப்பே பிரதான தூதனுடைய சத்தம் என்று வேறுசிலர் கருதுகிறார்கள் (லூக். 16:22 -ஆம் வசனத்துடன் ஒப்பிடுக).

3. தேவ எக்காளம் எனப்படுவது, 1 கொரிந்தியர் 15:52 -இல் சொல்லப்பட்டுள்ள கடைசி எக்காளமேயாகும். விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் தருணத்தில் நிகழும் விசுவாசிகளின் உயிர்த்தெழுதலோடு தொடர்புடையதே தேவ எக்காளம். பரிசுத்தவான்கள் நித்திய ஆசிர்வாதத்தைப் பெறும்படி அச்சத்தம் அழைப்பு விடுக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 11:15-18 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழாவது எக்காள சத்தமும் இதுவும் ஒன்றென நினைத்து நாம் குழப்பமடையக்கூடாது. அந்தச் சத்தமானது உபத்திரவ காலத்தில் உலகத்தை நியாயந்தீர்க்கும்படி கொட்டப்படும் ஆக்கினையைத் தொடங்கச் செய்யும் சாடைக் குறிப்பேயாகும். இங்கு சொல்லப்பட்டுள்ள கடைசி எக்காளம் சபைக்காக எழுப்பப்படும் சத்தமாகும். வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழாவது எக்காளம் விசுவாசிக்காத உலகத்திற்காக எழுப்பப்படும் சத்தமாகும். (அது "கடைசி எக்காளம்" என்று குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றாலும் அதுவே கடைசி எக்காளமாகும்.)

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் சரீரங்கள் முதலாவது எழுந்திருக்கும். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் இதில் இடம் பெறுவார்களா என்பது சர்ச்சைக்குரிய பொருளாகும். இந்த நேரத்தில் பிரதான தூதனுடைய சத்தம் கேட்கும், மேலும் அவர் இஸ்ரவேல் நாட்டின் இறுதி நிலையோடு மிக நெருங்கிய தொடர்புடையவர் என்று இந்தக் கருத்துடையோர் குறிப்பிடுகின்றனர் (தானி. 12:1). சபை எடுத்துக்கொள்ளப்படும் வேளையில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் உயிர்த்தெழமாட்டார்கள் என்று கருதுகிறவர்கள், **கிறிஸ்துவுக்குள்** என்னும் சொல் **(கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்)** சபைக் காலப்பாகுபாட்டிற்கு முன் வாழ்ந்த மக்களுக்குப் பொருந்தாது என்று நினைவுபடுத்துகிறார்கள். பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் உபத்திரவ காலம் முடிவடையும்போதே உயிர்த்தெழுவார்கள் என்றே தோன்றுகிறது (தானி. 12:2). அது எதுவாக இருந்தாலும், இது பொதுவான உயிர்த்தெழுதல் அல்ல என்பது நிச்சயம். மரணம் அடைந்தவர்கள் யாவரும் அத்தருணத்தில் உயிர்த்தெழப்போவதில்லை, **கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்** மட்டுமே அப்பொழுது உயிர்த்தெழுவார்கள்.

4:17 பிறகு உயிரோடு இருப்பவர்கள் **கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.** Rapture என்னும் சொல் கர்த்தருடைய வருகையின் முதலாவது கட்டத்தை விளக்கிக் கூறப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். இச்சொல் லத்தீன் மொழி வேதத்தில் "எடுத்துக்கொள்ளப்படுதல்"[13] என்னும் பொருளைத் தரும்படி பயன்படுத்தப்பட்டுள்ள வினைச் சொல்லிலிருந்து தோன்றிய சொல்லாகும். Rapture என்னும் சொல் "பறித்துக்கொள்ளுதல்" அல்லது "எடுத்துக்கொள்ளுதல்" என்று பொருள்படும். அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் 8:39 -இல் பிலிப்புவைக் குறிப்பிடவும், 2 கொரிந்தியர் நூலில் 12:2,4 - ஆகிய வசனங்களில் பவுலைக் குறிப்பிடவும், வெளிப்படுத்தின விசேஷம் 12:5 - இல் ஆண் பிள்ளையைக் குறிப்பிடவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆகாயம் சாத்தானின் ஆளுகைக்கு உட்பட்ட இடம் (எபே. 2:2). ஆகவே சாத்தானின் கோட்டையிலேயே அவனை வெளியரங்கமாக எதிர்த்து நின்று வெற்றி விழாக் கொண்டாடும் பெருங்கூட்டமாக இந்த நிகழ்ச்சி விளங்குகிறது.

இந்த வசனங்களில் இடம்பெற்றுள்ள எல்லாவற்றையும் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள்! பூமியும் கடலும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எல்லோருடைய சரீரங்களின் புழுதிகள் யாவற்றையும் ஒப்புவிக்கும். பின்னர் அந்தத் தூசியும் துகளுமான அனைத்தும் மகிமையடைந்த சரீரங்களாக மாற்றமடையும் அற்புதம் நிகழும். அந்தச் சரீரங்களில் நோயோ வேதனையோ மரணமோ ஒருக்காலும் அணுகாது. பின்னர் அந்தச் சரீரங்கள் யாவும் வானத்தை நோக்கிப் பறந்துசெல்லும். இவையாவும் ஒரு கண் இமைப் பொழுதிலே நடந்து முடிந்துவிடும் (1 கொரி. 15:51).

ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள படைப்பின் விவரங்களை நம்புவது இவ்வுலக மனிதர்களுக்குக் கடினமான செயலாக இருக்கிறது. படைப்பை நம்புவது அவர்களுக்குக் கடினமென்றால் விசுவாசிகள் எடுத்துக்கொள்தைக் குறித்து என்ன சொல்லுவார்கள் - அடக்கம் செய்யப்பட்டவர்கள், சிதறடிக்கப்பட்ட சடலங்கள், நொறுங்கிப் போனவை மற்றும் இவ்வுலகின் கடற்கரைகள் அனைத்திலும் அடித்துக்கொண்டு வரப்பட்ட சடலங்கள் ஆகியவற்றின் புழுதியிலிருந்து கோடிக்கணக்கான மக்களை தேவன் மீண்டும் உருவாக்குவதைக் குறித்து அவர்கள் என்ன சொல்லுவார்கள்?

இவ்வுலக மனிதர்கள் வானத்தில் பயணம் செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். விண்வெளிக்குப் பயணம் மேற்கொண்டு விண்கலன்களிலிருந்து வெளியே சற்று குதித்துச் செல்லும் மனிதர்கள் சுவாசிப்பதற்குத் தேவையான வாயுவைத் தங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும். ஆனால் ஒரு நொடிப்பொழுதில் இத்தகைய சாதனங்கள் எதையும் எடுத்துக்கொள்ளாமல் வானத்திற்குச் செல்லும் வியத்தகு நிகழ்ச்சியோடு, மனிதர்களின் மிகப்பெரிய சாகசச் செயலையும் ஒப்பிட முடியாது.

கிறிஸ்துவின் வருகையில் கேட்பதற்கு ஒரு சத்தம், காண்பதற்கு ஒரு காட்சி, உணர்வதற்கு ஓர் அற்புதம், களிகூர ஒரு சந்திப்பு, அனுபவிக்க ஒரு மனநிறைவு ஆகியவை காணப்படும்.

கர்த்தர் என்னும் சொல் இந்தப் பகுதியில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனிப்பது நல்லது: கர்த்தருடைய ***வார்த்தை*** (வச. 15), கர்த்தருடைய ***வருகை***(வச.15), கர்த்தர் ***தாமே*** (வச.16), **கர்த்தருக்கு எதிர்கொண்டு போக** (வச. 17), **எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்** (வச. 17).

எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்! இந்தச் சொற்களில் அடங்கியுள்ள எல்லா மகிழ்ச்சியையும் ஆசிர்வாதத்தையும் யாரால் சொல்ல முடியும்?

4:18 ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். கர்த்தருடைய வருகையைக் குறித்த நினைவுகள் விசுவாசிக்கு அச்சத்தை விளைவிப்பதில்லை. கிளர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும், இன்பத்தையும் உண்டாக்கக்கூடிய நம்பிக்கையையே அது தருகிறது.

கடைசிக் காலத்தைக் குறித்த அடையாளங்கள்

விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி மிக அருகில் இருக்கிறது என்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. அந்த அறிகுறிகளைப் பற்றிய விவரங்களைக் குறித்துக் கீழ்க் காணும் பகுதியில் சிந்திப்போம்:

1. 1948 -இல் இஸ்ரவேல் நாடு தோன்றியது (லூக்கா 21:29). அத்திமரம் (இஸ்ரவேல்) தளிர்க்கிறது, அதாவது இலைகள் துளிர்க்கின்றன (லூக்கா 21:29-31). பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக யூதர்கள் தங்களுடைய சொந்த மண்ணில் தங்களுக்கொன்று ஒரு நாட்டைப் பெற்றிருக்கிறார்கள். இறைவனுடைய அரசு மிக அருகில் இருக்கிறது என்பதே இதன் பொருளாகும்.

2. அத்திமரம் மட்டுமின்றி இன்னும் பல மரங்கள் தளிர்க்கும் என்று இயேசு கிறிஸ்து முன்னுரைத்தார், அதாவது வேறு பல நாடுகள் தோன்றும் (லூக்கா 21:29). குடியேற்ற நாடுகள் என்னும் முறை ஒழிந்து, புதிய நாடுகள் பல தோன்றியுள்ளதை நாம் சிறிது காலத்திற்கு முன்னர் கண்டோம். இது புது நாடுகள் தோன்றும் காலமாக இருக்கிறது.

3. இஸ்ரவேல் நம்பிக்கையற்ற நிலையிலேயே தன் சொந்த நாட்டிற்குத் திரும்பும் (எசே. 36:24,25). அவர்கள் தங்களுடைய சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்த பிறகே தங்களுடைய பாவங்களிலிருந்து கழுவப்படுவார்கள் என்று எசேக்கியேல் முன்னுரைத்தான். பெரும்பாலும் இஸ்ரவேலர் இக்காலத்தில் கடவுள் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கிறார்கள். மிகக் குறைவான மக்களே (ஆனாலும் உரத்த சத்தத்துடனே தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கிறவர்கள்) புராதன நம்பிக்கையுடைய யூதர்கள்.

4. உலகிலுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் ஒன்றிணைய வேண்டும் என்னும் கருத்தைக் கொண்ட இயக்கம் (வெளி. 17,18). தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு இறைப்பற்று அற்றவர்களாக இருக்கும் சமய, அரசியல், சமுதாய அமைப்புகளின் ஒருங்கிணைப்பே பாபிலோன் மகாநகரம் என்று நாம் கருதுகிறோம். பெரும்பாலும் அது கடவுள் நம்பிக்கையற்ற கத்தோலிக்கரும்,

கடவுள் நம்பிக்கையற்ற சீர்திருத்தக் கிறிஸ்தவர்களும் ஒன்றிணைந்த அமைப்பாக இருக்கக்கூடும். கிறிஸ்தவ உலகம் அவிசுவாசத்தில் பெருகுகிறது (1 தீமோ. 4:1; 2 தெச. 2:3). மேலும் அது வல்லரசு போன்ற பெரிதான சபையாக மாறவேண்டும் என்னும் திசையை நோக்கிச் செல்கிறது.

5. இவ்வுலகமெங்கிலும் ஆவியுலகக் கோட்பாடு வளர்ந்து பெருகுகிறது (1 தீமோ. 4:1-3). இந்த நாட்களில் உலகின் பல பகுதிகளில் இக் கொள்கை விரைந்து பரவுகிறது.

6. ஒழுக்க நெறியின் தரம் வேகமாகக் குறைந்து கொண்டு போகிறது (2 தீமோ. 3:1-5). செய்தித் தாட்களில் வரும் செய்திகள் இதற்கு மிகுதியான சான்றுகளைத் தருகின்றன.

7. வன்முறை மற்றும் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமை (2 தெச. 2:7,8). வீடுகளிலும், சமுதாய வாழ்க்கையிலும் கட்டுப்பாடற்ற நிலை பெருகிக் காணப்படுகிறது.

8. தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்கள் அதனுடைய வல்லமையை மறுத்துரைக்கிறார்கள் (2 தீமோ. 3;5).

9. கிறிஸ்தவர்களுக்கு எதிரான மனநிலை வளர்ந்து வருகிறது (1 யோவான் 2:18). பல வகையான தவறான உபதேசங்களைக் கொண்ட கள்ளக் குழுக்களின் பெருக்கத்தினால் இவ்வுண்மை வெளிப்படையாகக் காணப்படுகிறது. அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் குறித்துச் சொல்லிக் கொண்டாலும், கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அவர்கள் மறுத்துரைக்கிறார்கள். அவர்கள் போலியாக நடிப்பதன் மூலம் வஞ்சிக்கிறவர்களாக இருக்கிறார்கள் (2 தீமோ. 3:8).

10. கடைசிக் காலத்தில் எப்படி நாடுகள் அணி சேர்ந்து இருக்கும் என்பதற்கு ஏற்றபிரகாரமாக, நாடுகள் கூட்டமைப்புகளை உருவாக்கும் எண்ணம் வளர்ந்து பெருகியிருக்கிறது. ஐரோப்பா பெருநிலப்பகுதியின் பொதுச் சந்தை ரோமாபுரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தோன்றியிருக்கிறது. இது மீண்டும் ரோமப் பேரரசு உருவாகும் என்பதற்கு முன்னோடியாக விளங்குகிறது - அதனுடைய கால் விரல்கள் பத்தும் இரும்பினாலும் களிமண்ணினாலும் ஆனவை (தானி. 2:32-35).

11. இந்த உலகத்தின் விவகாரங்களில், நியாயத்தீர்ப்பைச் செலுத்துவதன் மூலம் தேவன் குறுக்கிடும் நிகழ்ச்சி வெகு விரைவில் நிகழும் என்னும் உண்மையை மறுத்துரைப்போர் பெருகி வருகிறார்கள் (2 பேதுரு 3:3,4).

பல நாடுகளில் அவ்வப்போது நிகழும் பூமி அதிர்ச்சிகள், உலகமெங்கும் பஞ்சம் உண்டாகும் என்னும் அச்சம், நாடுகளுக்கிடையே பகைமையுணர்ச்சி பெருகுதல் இவையாவும் இது கடைசிக் காலம் என்பதற்கான அறிகுறிகளாக இருக்கின்றன (மத். 24:6,7). சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்ட முடியாத அரசாங்கங்கள், மற்றும் கட்டுப்படுத்த முடியாத தீவிரவாதம் ஆகியவை உலகம் முழுவதற்கும் ஒரே சர்வாதிகாரி தேவை என்னும் நிலைக்கு முன்னோடிகளாக இருக்கின்றன. “அதனோடு (மிருகம்) யுத்தம் பண்ணத்தக்கவர்கள் யார்?” என்னும் கேள்வி எழுவதற்கு அணு ஆயுதங்கள் ஏவுகணைகள் ஆகியவற்றின் பெருக்கம் காரணமாயிருக்கிறது (வெளி. 13:4). உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இக்கோளில் உள்ள யாவரும் ஒரே நேரத்தில் காண்பார்கள் என்றுரைக்கும் வேத வசனங்கள் உண்மையாகவே நிறைவேறும் என்பதற்குத் தொலைக்காட்சியில் காணப்படும் முன்னேற்றம் சான்றாக விளங்குகிறது.

கர்த்தராகிய கிறிஸ்து இவ்வுலகிற்கு ஆட்சி புரியும்படி வருவதற்குமுன் இங்கு சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பல நடைபெறும் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளன. சபை எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சிக்கு முன்னர் இவையாவும் நிகழும் என்று வேதத்தில் சொல்லப்படவில்லை. மாறாக அவர் மகிமையோடு வருவதற்கு முன்னரே இவை நடக்கும் என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்குங்கால், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்கனவே நடைபெறத் தொடங்கிவிட்ட நிலையில், சபை எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சி மிக அண்மையில் நிகழப்போவது நிச்சயம் என்பது ஐயத்திற்கு இடமற்ற முடிவாகும்.

உ. கர்த்தருடைய நாள் (5:1–11)

5:1 அதிகாரங்களின் பகுப்பு ஆய்வுப் பொருள் தடையின்றி சொல்லப்படுவதற்கு ஏற்றதாக இல்லை என்று திருமறை ஆசிரியர்கள் அவ்வப்போது வருத்தப்படுவதுண்டு. ஆனால் இங்கு புதியதொரு அதிகாரம் தொடங்கியிருப்பது மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. பவுல் புதிய தொரு பொருளைப் பற்றிப் பேசத் தொடங்கு

கிறார். விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியை விடுத்தவராக, அவர் இப்பொழுது கர்த்தருடைய நாளைக் குறித்துப் பேசத் திரும்பு கிறார். **ஆனால் இவற்றைக் குறித்து** என்னும் சொற்கள் 1 கொரிந்தியர் மடலில் காணப்படுவது போல புதிய கருத்தைச் சுட்டிக்காட்டுகின்றன (கிரேக்கு-Peri de, தமிழில் அவ்வளவு தெளிவாக இந்தச் சொற்கள் இடம் பெறவில்லை).

சபை மக்கள் வானத்திற்கு எடுத்துக்கொள் ளப்படும் நிகழ்ச்சி மெய்யான விசுவாசிகளுக்கு ஆறுதல் அளிக்கும் நம்பிக்கையாக விளங்கு கிறது; ஆனால் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக் கிறவர்களுக்கு அது என்ன செய்தியைக் கூறு கிறது? இங்கு **காலங்கள் சமயங்கள்** என்று குறிப்பிடப்பட்டுள்ள ஒரு காலத்தின் தொடக்கத் தையே இது அவர்களுக்குத் தெரிவிக்கும். இந் தக் காலமானது முதன்மையாக யூதர்களுக்குரிய தாக இருக்கிறது. இந்த நாட்களில் இஸ்ரவேல் நாட்டோடு தேவன் மீண்டும் ஈடுபடத் தொடங்கு வார். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் நடை பெறும் என்று குறிப்பிட்டுள்ள கடைசிக் கால நிகழ்ச்சிகள் யாவும் நிகழும். கர்த்தராகிய இயேசு விடம் அவருடைய அப்போஸ்தலர் எப்பொழுது அவர் தமது ஆட்சியை நிறுவுவார் என்று வினவிய போது, காலங்களையும் வேளைகளையும் அறி கிறது அவர்களுக்கு அடுத்ததல்ல என்று பதிலு ரைத்தார் (அப். 1:7). **காலங்களும் சமயங்களும்** என்னும் காலம் இறையரசு நிறுவப்படுவதற்கு முந்தின காலத்தையும், அந்த அரசாட்சியின் காலத்தையும் ஒருங்கே கொண்டது என்றே தோன்றுகிறது.

காலங்களையும் சமயங்களையும் குறித் துத் தெசலோனிக்கேயருக்கு **எழுத வேண்டிய தேவையில்லை** என்று பவுல் எண்ணினார். இவற் றினால் பரிசுத்தவான்கள் பாதிக்கப்படப் போவ தில்லை என்பது இதற்கான காரணங்களில் ஒன்று; ஏனெனில் இந்தப் புதிய காலப்பாகுபாடு தொடங்குவதற்கு முன்னமே அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

மேலும், **காலங்களும் சமயங்களும்** மற்றும் கர்த்தருடைய நாள் ஆகிய பொருட்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுதல் என்னும் நிகழ்ச்சி, அப் போஸ்தலருடைய காலத்திற்கு முன் வெளிப்படுத் தப்படாத இரகசியமாயிருந்தது (1 கொரி. 15:51).

5:2 கர்த்தருடைய நாளைக் குறித்துப் பரி சுத்தவான்கள் ஏற்கனவே அறிந்திருந்தார்கள். அது நிகழும் சரியான நேரம் அவர்களுக்குத் தெரியாது, ஆனால் அது எதிர்பாராத நேரத்தில் வரும். **கர்த்தருடைய நாள்** என்பதன் பொருள் என்னவென்று பவுல் கூறுகிறார்? அது இருபத்து நான்கு மணிகள் கொண்ட ஒரு நாள் அல்லவென் பது நிச்சயம். ஆனால் அது சில தனிப்பண்பு களைக் கொண்ட ஒரு கால அளவாகும்.

பழைய ஏற்பாட்டில் நியாயத்தீர்ப்பு, பாழாக்கப் படுதல், இருள் ஆகியவற்றைக் கொண்ட எந்த ஒரு நேரத்தையும் குறிப்பிட இச்சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசாயா. 2:12; 13:9-16; யோவேல் 2:1,2). இஸ்ரவேலின் எதிரிகளுக்கு எதிராகச் சென்று தேவன் அவர்களைத் தீர்மான மாகத் தண்டித்த காலத்தையும் குறிப்பிட இது பயன்படுத்தப்பட்டுள்ளது (செப். 3:8-12; யோவேல் 3:14-16; ஒப. 15-17; சக. 12:8,9). தம்முடைய சொந்த மக்கள் சிலைவணக்கத்தில் ஈடுபட்டு பின்மாற்றம் அடைந்த தருணங்களில் தேவன் அவர்களைத் தண்டித்த ஏதொரு காலத்தையும் இது குறிக்கும் (யோவேல் 1:15-20; ஆமோஸ் 5:18; செப். 1:7-18). பாவத்தின்மீது செலுத்தப்படுகிற தீர்ப்பு, கர்த்தரு டைய நோக்கங்களில் வெற்றி ஆகியவை பற்றியே பொதுவாக இது பேசுகிறது (யோவேல் 2:31,32). மேலும் இது அவருடைய உண்மை யுள்ள மக்கள் பெறும் சொல்லிமுடியாத ஆசிர் வாதங்களையும் குறிக்கிறது.

வரப்போகிற நாட்களில் கர்த்தருடைய நாள் என்னும் கால அளவும், காலங்களும் சமயங் களும் என்னும் கால அளவும் ஏறத்தாழ ஒன்றா யிருக்கும். சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு இந்தக் கால அளவு தொடங்கி, கீழ்க்கண்ட நிகழ்வுகளையும் உட்கொண்டதாயிருக்கும்:

1. உபத்திரவ காலம், அதாவது, யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் (தானி. 9:27; எரே. 30:7; மத். 24:4-28; 2 தெச. 2:2; வெளி. 6:1-19:16).
2. கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு வருகிற நிகழ்ச்சி (மல். 4:1-3; 2 தெச. 1:7-9).
3. இப்புவியில் கிறிஸ்து ஆயிரமாண்டு ஆட்சி புரிதல் [யோவேல் 3:18; (14 -ஆவது வசனத் தோடு ஒப்பிடுக); சக. 14:8,9 ((முதல் வசனத் தோடு ஒப்பிடுக)].
4. இறுதியில் அக்கினியால் வானமும் பூமியும் அழிக்கப்படுதல் (2 பேதுரு 3:7,10).

மனுமக்களின் விவகாரத்தில் வெளியரங்க மாக தேவன் ஈடுபடுகிற காலமே **கர்த்தருடைய நாள்** எனப்படும். இஸ்ரவேலின் பகைஞர்கள்

நியாயத்தீர்ப்பு அடைதல், கடவுள் பற்றற்ற இஸ்ரவேல் நாட்டினர் நியாயந்தீர்க்கப்படுதல், தம்முடைய மக்களைக் கிறிஸ்து விடுவித்தல், அமைதியும் வளமும் புகழ்ச்சியும் நிறைந்த கிறிஸ்துவின் அரசு நிறுவப்படுதல் ஆகிய நிகழ்ச்சிகளின் மூலமாக இந்தக் காலம் தனிப்பண்பு உடையதாக விளங்கும்.

இரவிலே திருடன் வருகிறவிதமாய் கர்த்தருடைய நாள் வரும் என்று அப்போஸ்தலன் தனது வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறார். நிகழ விருப்பதைக் குறித்து மனிதர்கள் விழிப்பின்றி இருக்கும்போது, முற்றிலும் எதிர்பாராத வகையில் இது வரும். இந்த உலகம் முழுவதும் ஆயத்த மற்ற நிலையில் இருக்கும் தருணத்திலேயே இந்நிகழ்ச்சி தொடங்கும்.

5:3 இந்த நாள் ஏமாற்றம் உண்டாக்கும் வகையில் எதிர்பாராதவிதமாகவும், அழிவை உண்டாக்கும் வகையிலும், தவிர்க்க முடியாத வகையிலும், தப்பிக்க இயலாத வகையிலும் வரும்.

இந்த உலகத்தில் ஒருவிதமான நிச்சயமற்ற நம்பிக்கையும் பாதுகாப்பும் காணப்படும். அப்பொழுது சடிதியில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு மிகப்பெரிய அளவில் **அழிவு** உண்டாக்கும் ஆற்றலுடன் இறங்கிவரும். அழிவு என்பது உளவாம் தன்மை இல்லாமல் போகும் என்றோ, நிர்மூலமாகுதல் என்றோ பொருள்படாது. மாறாக, இது ஒருவர் தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையான செல்வச் செழிப்பை இழந்துபோகுதல் என்றோ, பாழடைந்த நிலையை அடைவது என்றோதான் பொருள்படும். கர்ப்பவதியானவளுக்கு வருகிற வேதனை தவிர்க்க முடியாததாகவும் தப்பிக்க முடியாததாகவும் இருப்பதுபோல இந்த நாளும் வரும். இந்தத் தண்டனையிலிருந்து அவிசுவாசிகள் தப்பிக்க முடியாது.

5:4 முந்தின வசனத்தில் காணப்படும் "அவர்கள்" என்னும் பிரதிப் பெயர்ச்சொல் இந்த வசனத்தில் "நீங்கள்" என்றும் "நாம்" என்றும் மாற்றம் அடைந்திருப்பதைக் கவனிப்பது மிக இன்றியமையாததாகும். இரட்சிக்கப்படாத உலகத்தின்மேல் பொழியப்படுகிற கோபாக்கினையின் வேளையே கர்த்தருடைய நாளாகும். ஆனால் அது நமக்கு என்ன அர்த்தமுடையதாக இருக்கும்? அது நமக்கு ஆபத்தானதல்ல, ஏனெனில் நாம் **அந்தகாரத்தில் இருக்கிறவர்களல்ல**.

அந்த நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும் (வச. 2). எவரொருவரையும் அது ஒரு திருடனைப்போல மட்டுமே **பிடித்துக்கொள்ளும்**. மேலும் அது இரவுக்குள் இருக்கிற, அதாவது, மனமாற்றம் அடையாத மக்களை மட்டுமே **பிடித்துக்கொள்ளும்**. அது விசுவாசிகளைப் பிடித்துக் கொள்ளாது, ஏனெனில் அவர்கள் **அந்தகாரத்தில் இருக்கிறவர்களல்ல**.

இந்த வசனத்தை முதன்முறையாகப் படிக்கும் போது, கர்த்தருடைய நாள் விசுவாசிகளையும் பிடித்துக்கொள்ளும், ஆனால் அது அவர்களைத் *திருடனைப் போலப் பிடித்துக்கொள்ளாது* என்று சொல்லுவதுபோலத் தோன்றுகிறது. ஆனால் இந்த நாளால் விசுவாசிகளைப் *பிடித்துக்கொள்ளவே முடியாது*. ஏனெனில் இந்த உலகத்தின் இரவுக்குள்ளாகத் திருடன் வருகிறபோது, பரிசுத்தவான்கள் ஏற்கனவே நித்திய வெளிச்சத்தில் குடியிருப்பார்கள்.

5:5 கிறிஸ்தவர்கள் யாவரும் **வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும்**, **பகலின் பிள்ளைகளாகவும்** இருக்கிறார்கள். அவர்கள் **இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்கள்** அல்லவே. தம்முடைய குமாரனை ஏற்க மறுத்த உலகத்தின்மீது தேவன் ஆக்கினையை ஊற்றும்போது விசுவாசிகள் அதிலிருந்து தப்பிக்க இந்த உண்மையே உதவி செய்கிறது. ஒழுக்க நெறியில் இருளுக்குள்ளாகவும் ஆவிக்குரிய நிலையில் இரவிலும் இருக்கிற மக்களும், தேவனுக்கு அந்நியராக இருக்கும் மக்களுமே கர்த்தருடைய நாளின் தண்டனைக்கு இலக்காவார்கள்.

கிறிஸ்தவர்கள் **பகலின் பிள்ளைகள்** என்று சொல்லும்போது, அது கர்த்தருடைய நாளைக் குறிப்பதில்லை. நன்னெறி நேர்மையைக் கொள்கையாகக்கொண்ட அரசின் மக்கள் என்பதே அதன் பொருளாகும். நன்னெறி சார்ந்தவற்றில் இருளுக்குள் இருக்கும் மக்கள் தண்டனையைப் பெறுகிற வேளையே கர்த்தருடைய நாளாகும்.

5:6 தாங்கள் அடைந்த மேன்மையான தகுநிலைக்கு ஏற்ப விசுவாசிகள் வாழவேண்டும் என்று அடுத்த மூன்று வசனங்களும் அழைப்பு விடுக்கின்றன. அவர்கள் **விழிப்புள்ளவர்களாகவும்** தெளிவோடும் இருக்கவேண்டும் என்பதே இதன் பொருளாகும். சோதனை, சோம்பல், அக்கறையின்மை, கவனமின்மை ஆகியவற்றிற்கு எதிராக நாம் விழிப்போடு இருக்க வேண்டும். நம்முடைய இரட்சகர் திரும்பி வருவதை எதிர்நோக்கி **விழிப்புள்ளவர்களாக** நாம் இருக்க வேண்டும் என்பதே இதன் நேரடியான பொருள்.

தெளிந்த அறிவுள்ள நிலை என்பது நம்முடைய உரையாடல்களிலும், பொதுவான நடத்

தையிலும் நாம் **தெளிவோடு** இருக்கவேண்டும் என்பதை மட்டும் குறிப்பதில்லை. மாறாக உணவு மற்றும் பானம் ஆகியவற்றில் மிதமான நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் இது குறிப்பிடுகிறது.

5:7 இயல்பான நிலையில், **இரவோடு** தொடர்புடையதே **தூக்கம்**. அதுபோலவே ஆவிக்குரிய செயற்களத்திலும் அக்கறையற்றபடி அலட்சியப்போக்குடன் நடந்துகொள்வது இருளின் பிள்ளைகளுடைய பண்பையே அதாவது மனந்திரும்பாத நிலையையே வெளிப்படுத்துகிறது. மனிதருடைய கிரியைகள் பொல்லாதவையாக இருப்பதால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை அதிகமாக விரும்புகிறார்கள் (யோவான் 3:19). "இரவுக் கேளிக்கை விடுதி" என்னும் பெயர், குடித்துக் கும்மாளமிடுதல் போன்ற இரவின் இருளுக்குள் செய்யப்படுகிற செயல்களோடு தொடர்புடையதாயிருக்கிறது.

5:8 அவர் வெளிச்சத்தில் இருப்பதுபோல **பகலுக்குரியவர்களும்** வெளிச்சத்தில் நடக்கவேண்டும் (1 யோவான் 1:7). பாவத்தை நியாயந்தீர்த்து அதனை விட்டுவிடுவது என்பதும், எல்லாவற்றிலும் மிதமற்றதன்மையைத் தவிர்ப்பது என்பதும் இதன் பொருளாகும். கிறிஸ்தவப் படைக்கலனை அணிந்துகொண்டவர்களாக அதில் நிலைத்திருப்பது என்பதும் இதன் பொருளாகும். அந்தப் போர் ஆயுதங்களில் **விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசம், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீரா** ஆகியவை அடங்கும். அதாவது கிறிஸ்தவக் குணநலத்தையின் முதன்மையான பண்புகூறுகளாகிய **விசுவாசம், அன்பு, நம்பிக்கை** ஆகியவையே போர் ஆயுதங்களாகும். **மார்க்கவசம் தலைச்சீரா** ஆகியவற்றின் விவரங்களை நாம் வலியுறுத்திக் கூறத் தேவையில்லை. கொள்கை மாறாமல் தெய்வீக சுபாவத்துடன் வாழ்வதற்கு இந்தப் பாதுகாப்புக் கவசங்களை வெளிச்சத்தின் பிள்ளைகள் அணிந்திருக்க வேண்டும் என்றே இங்கு அப்போஸ்தலன் கூறுகிறார். இச்சையின் மூலமாக இந்த உலகம் சீர்கெட்டுப்போயிருக்கிறது. இதிலிருந்து எது நம்மைப் பேணிப் பாதுகாக்கிறது? **விசுவாசம்**, அல்லது தேவனைச் சார்ந்திருக்கும் தன்மை. கர்த்தரிடத்தில் ஒருவரிலொருவர் பாராட்டுகிற அன்பு. கிறிஸ்து மீண்டும் வருவார் என்னும் நம்பிக்கை.

5:9 சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று **இரட்சிப்பு**, மற்றது **கோபாக்கினை**. விசுவாசியைப் பொருத்தமட்டில் அந்நிகழ்ச்சி அவன் பெற்றிருக்கிற **இரட்சிப்பின்** நிறைவாக விண்ணகத்தில் முடிவுறும். அவிசுவாசிக்கோ அது பூமியில் அவன் அடையப்போகிற **கோபக்கினையின்** நுழைவாயிலாக இருக்கும்.

நாம் பகலின் பிள்ளைகளாக இருப்பதால், உபத்திரவ காலத்தில் **தேவன்** பொழியவிருக்கிற **கோபாக்கினைக்கென்று நம்மை நியமிக்காமல்**, **இரட்சிப்பின்** முழுமையான நிலைக்கு நம்மை நியமித்திருக்கிறார். அதாவது, பாவத்தின் சமுகத்திலிருந்து அது என்றென்றைக்குமாக விடுதலையைத் தரும்.

ஐந்தாவது அதிகாரத்தில் காணப்படும் முக்கியமான வேறுபாடுகள்	
அவிசுவாசிகள்	**விசுவாசிகள்**
("அவர்கள்")	("நீங்கள்")
தூங்குகிறார்கள்	தூங்குவதில்லை
குடித்திருக்கிறார்கள்	குடிப்பதில்லை
இருளில் இருக்கிறார்கள்	இருளில் இல்லை
இரவுக்கும் இருளுக்கும் உரியவர்கள்	வெளிச்சத்தின்பிள்ளைகள், பகலின் பிள்ளைகள்
இரவிலே திருடனைப்போல எதிர்பாராதபடி கர்த்தருடைய நாள் வந்து பிடித்துக் கொள்ளும்	இரவிலே திருடனைப்போல எதிர்பாராத விதமாக கர்த்தருடைய நாள் வந்துபிடித்துக்கொள்ளாது
கர்ப்பவதியானவளின் வேதனையைப் போன்று சடுதியில் தப்பிக்க இயலாதபடி வரக்கூடிய அழிவு	கோபாக்கினைக்கென்று நியமிக்கப்படாமல் இரட்சிப்பைப் பெறுவதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்

அவிசுவாசிகள் நரகத்தில் அடையப்போகிற தண்டனையையே **கோபாக்கினை** என்னும் சொல் குறிக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள். தேவன் அதற்கென்று நியமிக்கவில்லை என்பது உண்மைதான், ஆனாலும் அந்தச் சிந்தனையை இங்கு அறிமுகப்படுத்துவது, வலிந்து கூறப்படுகிற பொருளாகும். பவுல் இங்கு நரகத்தைக் குறித்துப் பேசவில்லை, மாறாக, இப்புவியில் பிற்காலத்தில் நடக்கவிருக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றியே பேசுகிறார். இதன் பின்னணி கர்த்தருடைய நாள் என்னும் காலமேயாகும். இவ்வுலகில் மனித வரலாற்றில் மிகப்பெரிய கோபாக்கினையின் காலமாக அது இருக்கும் (மத். 24:21). அந்தக் கோபாக்கினையை நிறைவேற்றுபவரோடல்ல, நம்முடைய இரட்சகரோடேயே நாம் இருப்போம்.

உபத்திரவ காலம் என்பது சாத்தான் தனது கோபாக்கினையைச் செலுத்தும் வேளை என்று சிலர் கருதுகிறார்கள் (வெளி. 12:12). அது தேவனுடைய கோபாக்கினை அல்லவென்றும் அவர்கள் கருதுகிறார்கள். சாத்தானின் கோபாக்கினையைச் சபை அனுபவிக்கும் என்றும், விசுவாசிகளோ கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேவனுடைய கோபாக்கினையிலிருந்து மீட்கப்படுவார்கள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். எனினும், தேவனுடைய கோபாக்கினையைக் குறித்தும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபாக்கினையைக் குறித்தும், உபத்திரவ காலத்தின் சுற்றுச்சூழலைக் குறித்தும் கீழ்க்கண்ட வசனங்கள் பேசுகின்றன என்பதைக் கவனிக்கவும்: வெளிப்படுத்தின விசேஷம் 6:16,17; 14:9,10,19; 15:1,7; 16:1,19.

5:10 அந்தக் கோபாக்கினையிலிருந்து நாம் மீட்கப்படுவதற்கென்றும், நம்முடைய இரட்சிப்பைக் காப்புறுதி செய்வதற்கென்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செலுத்திய மிகப்பெரிதான விலையை இந்த வசனம் வலியுறுத்திக் கூறுகிறது. **நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும்** அவருடனேகூட **நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தார்**.

நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும் என்னும் சொற்றொடரை இரண்டு வழிகளில் நாம் புரிந்து கொள்ளலாம். விசுவாசிகள் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சியின்போது "உயிரோடு இருப்பவர்களையும் இறந்துபோனவர்களையும்" இது குறிக்கிறது என்று சில வேத அறிஞர்கள் கருதுகிறார்கள். இரண்டு வகையான விசுவாசிகள் அப்பொழுது இருப்பார்கள் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள் - கிறிஸ்துவுக்குள் இறந்து போனவர்கள், உயிரோடு இருப்பவர்கள். ஆகவே கிறிஸ்துவின் வருகையின்போது, நாம் உயிரோடு இருப்பவர்களின் கூட்டத்தில் இருந்தாலும், இறந்து போனவர்களின் கூட்டத்தில் இருந்தாலும் நாம் அவருடனேகூட **ஏகமாய்ப் பிழைத்திருப்போம்**. இறந்துபோன கிறிஸ்தவர்கள் ஒன்றையும் இழந்து போவதில்லை. நம்முடைய கர்த்தர் இதனை மார்த்தாளிடம் விளக்கிக் கூறினார்: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (அதாவது, சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன் இறந்துபோன கிறிஸ்தவன் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பான்). உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் (சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியின்போது உயிரோடு இருக்கிற கிறிஸ்தவன்) என்றென்றைக்கும் மரிக்காமலும் இருப்பான்" (யோவான் 11:25,26).

விழித்திருப்பது அல்லது நித்திரையாயிருப்பது என்னும் சொற்றொடர் எச்சரிக்கையாக வாழ்க்கை நடத்துவது அல்லது உலகீய வழியில் வாழ்வது என்று பொருள்படும் என்பது வேத அறிஞர்களின் வேறொரு கருத்தாகும். ஆவிக்குரிய நிலையில் நாம் விழிப்புள்ளவர்களாக இருந்தாலும் அல்லது ஆவிக்குரிய காரியங்களில் ஏனோதானோவென்று மாம்சீக வாழ்க்கை வாழ்ந்தாலும் கர்த்தரைச் சந்திக்கும்படி நாம் எடுத்துக் கொள்ளப்படுவோம் என்று பவுல் கூறுவதாகவும் இதனை வேறு சொற்களில் கூறலாம். இந்த உலக வாழ்வின் கடைசித் தருணத்தில் நாம் ஆவிக்குரிய காரியங்களில் முனைப்பாகச் செயல்படுவதை நம்முடைய நித்திய இரட்சிப்புச் சார்ந்திருப்பதில்லை. நாம் மெய்யாகவே இரட்சிக்கப்பட்டிருப்போமானால் அவருடைய வருகையின்போது, நாம் மிகுந்த எச்சரிப்போடு எதிர்பார்த்துக் காத்திருந்தாலும் அல்லது உறக்கத்தில் நெடுஞ்சாண்கிடையாகப் படுத்திருந்தாலும் நாம் அவருடனே கூட **ஏகமாய்ப் பிழைத்திருப்போம்**. நம்முடைய ஆவிக்குரிய நிலை நாம் பெறவிருக்கிற பரிசுப் பொருளை நிர்ணயம் செய்யும். நம்முடைய இரட்சிப்போ கிறிஸ்துவின்மீது நாம் கொண்டிருக்கிற விசுவாசத்தை மட்டுமே சார்ந்தது.

இரண்டாவது கருத்தினை வலியுறுத்திக் கூறுகிறவர்கள், இந்த வசனத்திலும் 6 -ஆவது வசனத்திலும் ஒரே மூலச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறார்கள். "தெய்வீகக் காரியங்களில் உணர்ச்சியில்லா மலும், உலகத்திற்கு ஒத்த வேடம் தரித்தவர் களாகவும்" (வைன்) இருக்கிற நிலையே **தூங்கு கிறவர்** என்பதன் பொருளாகும். ஆனால் மரணம் என்னும் பொருளையுடைய 4:13,14,15 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லும் இதுவும் ஒன்றல்ல.[14]

5:11 இத்தனை பெரிதான இரட்சிப்பைக் கருத் தில் கொண்டவர்களாகவும், இவ்வளவு பெரிதான இரட்சகரின் அன்பைப் பெற்றவர்களாகவும், அவர் மிக விரைவாக வரப்போகிறார் என்பதை அறிந்த வர்களுமாகிய நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி, கற்பித்து, உற்சாகப்படுத்தி, முன்மாதிரி களாகத் திகழவேண்டும். மேலும் தேவனுடைய வார்த்தைகளினாலே நாம் ஒருவரையொருவர் ஊன்றக்கட்டி அன்புடன் அக்கறை செலுத்துகிற வர்களாக விளங்கவேண்டும். நாம் அப்பொழுது ஏகமாய் அவருடன் சேர்ந்து வாழப்போகிறோம் என்னும் காரணத்தினால், இப்பொழுது ஒருவரோ டொருவர் ஒருமைப்பாட்டுடன் சேர்ந்து வாழ வேண்டும்.

ஊ. பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான அறிவுரைகள் (5:12-22)

5:12 தாங்கள் செய்த அலுவல்களை விட்டு விட்டு பிறரை "உறிஞ்சி வாழ்ந்து கொண்டிருந்த" விசுவாசிகளைத் தெசலோனிக்கே சபை மூப்பர்கள் ஒருவேளை கடிந்துகொண்டார்கள் என்றே தோன்றுகிறது. பிறருடைய உழைப்பில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதர்கள் அந்தக் கடிந்துரையைப் பொருட்படுத்தவில்லை போலும்! வழிநடத்தின வர்களுக்கும் வழிநடத்தப்பட்டவர்களுக்கும் கொடுக்கப்பட்ட அறிவுரைக்கு அதுவே காரணமா யிற்று.

அவர்களுக்குள்ளே **பிரயாசப்படுகிறவர் களை** அவர்கள் **மதிக்க** வேண்டும் என்றும், அவ் வாறு ஆவிக்குரிய காரியங்களில் வழிநடத்துகிற வர்களுக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என் றும் பவுல் வற்புறுத்திக் கூறுகிறார். "**கர்த்தருக் குள் விசாரணை செய்கிறவர்களாயிருந்து உங்களுக்குப் புத்தி சொல்கிறவர்கள்**" என் னும் சொற்களாலே இது மிகத் தெளிவாகத் தெரி கிறது. தேவனுடைய மந்தைக்குத் துணை மேய்ப் பர்களாக மூப்பர்கள் இருக்கிறார்கள். கற்பித்தல், ஆளுகை செய்தல், எச்சரித்தல் ஆகியவையே அவர்களுடைய பொறுப்புகளாகும்.

அப்போஸ்தலர் காலச் சபைகளில் தனி மனி தன் ஆளுகை இருந்ததில்லை என்பதை வெளிப் படுத்தும் பல புதிய ஏற்பாட்டு வசனங்களில் இது வும் ஒன்று. ஒவ்வொரு உள்ளூர் சபையிலும் ஒன் றுக்கும் மேற்பட்ட மூப்பர்கள் இருந்தார்கள். அவர் களே அந்தந்த சபையின் மந்தையை மேய்த்து வழிநடத்தினார்கள்.

இதனைத் திருவாளர் டென்னி விளக்குகிறார்:

> தெசலோனிக்கே சபையில் சமயகுரு என்று நாம் நினைக்கிற வண்ணம் தனக்கே உரிய சில சிறப்பான பொறுப்புகளை வகிக்கக்கூடிய ஓர் ஆளுநர் இருந்ததில்லை. அந்தச் சபை யின் ஆளுகை ஒன்றுக்கும் மேற்பட்ட சில நபர் களிடம் இருந்தது.[15]

ஆனாலும், ஒரு *தனி மனிதனின்* ஆளுகை இல்லை என்பதால், *ஒவ்வொரு மனிதனும்* ஆளுகை செய்யலாம் என்பது நியாயப்படுத்தப் படவில்லை. சபையானது குடியரசு அல்ல, மாறாக அதற்கென்று *சிறந்த தகுதிபெற்ற மனிதர் களின் கூட்டாட்சியாகவே* விளங்குகிறது.

5:13 மூப்பர்கள் கர்த்தருடைய பிரதிநிதிகளா கச் செயல்படுகிறார்கள். அவர்களுடைய அலுவல் தேவனுடைய அலுவலாகும். அதன் காரணமாக அவர்கள்உயர்வாக மதிக்கப்பட்டு **அன்போடு**[16] நடத்தப்படவேண்டும். **உங்களுக்குள்ளே சமா தானமாயிருங்கள்** என்னும் அறிவுரை தற்செய லாகச் சேர்க்கப்பட்டதன்று. ஒருவரோடொருவர் சமாதானமாக இருக்கமுடியாத நிலையே கிறிஸ்த வர்களுக்குள்ளே காணப்படுகிற முதலாவது பிரச்சினையாகும். ஒவ்வொரு விசுவாசியும் பிரி வினையை உண்டாக்கி எந்தவொரு உள்ளூர் சபையையும் உடைத்துப் போடக்கூடிய அள விற்கு மாம்சத்தை தன்னகத்தே உடையவனா யிருக்கிறான். அன்பு, நொறுங்குண்ட தன்மை, நீடிய பொறுமை, இரக்கம் பாராட்டுதல், மன்னிக் கும் இயல்பு, மென்மையான உள்ளம் கொண்டி ருத்தல் ஆகியவை **சமாதானத்தைப்** பெற்றிருக் கத் தேவையான பண்புகளாகும். இவற்றை நாம் வளர்த்துக்கொண்டு ஆவியானவரால் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். தலைவர்களைச் சுற்றி லும் குழுக்களாகச் செயல்படுவது, சமாதானத் திற்கு எதிராகக் கேடுவிளைவிக்கும் அச்சுறுத்த லாக இருக்கிறது என்று பவுல் இங்கு எச்சரிக் கிறார்.

5:14 இந்த வசனமானது சபையில் ஆவிக்குரிய வழிகாட்டிகளாக இருப்பவர்களை நோக்கிச் சொல்லப்பட்டதாகவே தோன்றுகிறது. பிரச்சினைகளை உண்டுபண்ணுகிற சகோதரர்களிடம் எவ்வாறு நடந்துகொள்வது என்பதை இந்த வசனம் எடுத்துரைக்கிறது:

1. **ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள்** - மற்றவர்களுடன் உடன்பாடு கொள்ளாமல், தங்களுடைய பொறுப்பில்லாத நடத்தையினால் சபையில் சமாதானமற்ற நிலையை உருவாக்கும்படி தொடர்ந்து தொல்லை கொடுப்பது. இங்கு ஒழுங்கில்லாதவர்கள் என்னும் சொல் வேலை செய்ய மறுப்பவர்கள் என்று பொருள்படும். 2 தெசலோனிக்கேயர் 3:6-12 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கற்று நடக்கிறவர்கள், வேலைசெய்ய மனதற்றவர்கள், வீண் அலுவல்காரர்கள் ஆகியோரே இங்கு ஒழுங்கில்லாதவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.
2. **திடனற்றவர்களைத் தேற்றுங்கள்** - கோழைத்தனமாக இருப்பவர்கள் தங்களுக்கு உண்டாகக் கூடிய இடர்களுக்கு மேலாக எழுந்து, கர்த்தருக்கென்று உறுதியோடு முன்னேறிச் செல்வதற்குத் தொடர்ந்து அறிவுரை கொடுக்கப்பட வேண்டும்.

KJV மொழிபெயர்ப்பின்படி இச்சொல் *மனவுறுதி அற்றவர்கள்* என்னும் பொருளைத் தருமானால், அதைக் குறித்து ஒக்கங்கா என்பவர் விளக்கமளிக்கிறார்: "இச்சொல் மனவுறுதி அற்றவர்கள் என்று பொருள்படுமானால், நாம் அவர்களைத் தொடர்ந்து உற்சாகப்படுத்த வேண்டும். சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது அவர்கள் வளர்கிறவர்களாகக் காணப்படுவார்கள்." சுவிசேஷத்திற்கும் கிறிஸ்தவ சபைக்கும் அளிக்கப்படும் புகழுரையாக இது விளங்குகிறதல்லவா? அவர்கள் இரக்கத்தையும், அன்பையும் அக்கறை செலுத்தப்படுதலையும் பெறக்கூடிய ஓரிடமாவது இருக்கிறதல்லவா?

3. **பலவீனரைத் தாங்குங்கள்** - அதாவது, ஆவிக்குரிய நிலையிலும், நன்னெறி சார்ந்தவற்றிலும் அல்லது சரீரத்திலும் பலவீனமாக இருப்பவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். ஆவிக்குரியதும் நன்னெறி சார்ந்ததுமான ஆதரவை பலவீனமானவர்களுக்கு அளிப்பதே இங்கு முதன்மையான கருத்தாக விளங்குகிறது. எனினும் நிதி உதவியும் செய்யப்பட வேண்டும். அதனை நாம் தவிர்க்கக் கூடாது.
4. **எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்** - நம்மை எரிச்சல் அடையும்படி அல்லது சினமடையும்படி செய்யப் பிறர் முயற்சி செய்வார்கள் எனில் அப்பொழுது நீடிய பொறுமை என்னும் இனிய பண்பினை வெளிப்படுத்திக் காட்டவேண்டும்.

5:15 இப்பொழுது கிறிஸ்தவர்களிடம் பவுல் பொதுப்படையாகப் பேசுகிறார். பழிவாங்கும் இயல்பு முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். திருப்பி அடித்தல், பதிலடி கொடுத்தல் ஆகியவை இயல்பான செயல்களாகும். ஆனால் கிறிஸ்தவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் பதிற்செயல்புரியும்படி கர்த்தராகிய இயேசுவோடு ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். மற்ற விசுவாசிகளிடமும் இரட்சிக்கப்படாத மக்களிடமும் இயல்பாக முனைந்து இரக்கத்தையும் அன்பையும் வெளிப்படுத்திக் காட்டவேண்டும்.

5:16 மிகவும் பாதகமான சூழ்நிலையிலும்கூட கிறிஸ்தவன் மாற்றமில்லாதபடி மகிழ்ச்சியை அனுபவிக்கிறவனாக இருக்க வேண்டும். ஏனென்றால் கிறிஸ்துவே அவனுடைய மகிழ்ச்சிக்கு ஆதாரமும் கருப்பொருளுமாகத் திகழ்கிறார், மேலும் எல்லாச் சூழ்நிலைகளையும் கிறிஸ்து தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். கிரேக்க மொழிப் புதிய ஏற்பாட்டில் "**எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்**" என்னும் வசனமே மிகச் சிறிய வசனமாகும், ஆங்கிலத்தில் "இயேசு கண்ணீர் விட்டார்" என்னும் வசனமே மிகச்சிறிய வசனமாகும், இச்செய்தி பெரிதான முக்கியத்துவம் வாய்ந்ததல்ல.

5:17 கிறிஸ்தவனின் மனநிலை எப்பொழுதும் ஜெபமாகவே இருக்க வேண்டும் - அவன் தன்னுடைய வழக்கமான வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு, முற்றிலுமாக ஜெபத்தில் தன்னை ஒப்புவிக்க வேண்டும் என்பதல்ல இதன் பொருள். குறிப்பிட்ட சில நேரங்களில் அவன் வழக்கமாக ஜெபிக்கிறான்; தேவை ஏற்படும்போது அவன் முன் ஆயத்தமின்றி ஜெபம் செய்கிறான்; மேலும் அவன் கர்த்தரோடு ஜெபத்தின்மூலமாகத் தொடர்புகொள்வதில் களிகூருகிறான்.

5:18 தேவனுக்கு **ஸ்தோத்திரம்** செலுத்துதல் கிறிஸ்தவனின் உடன்பிறந்த மனவெழுச்சியாக இருக்க வேண்டும். ரோமர் 8:28 -ஆம் வசனம் உண்மையானால், எல்லா நேரங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லாவற்றிற்காகவும் நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறவர்களாக இருப்போம். அவ்வாறு செய்கிறவர்களாக

நாம் இருக்கும்வரை பாவத்தைப் பொறுத்துக் கொள்ள மாட்டோம்.

சபை கடைப்பிடிக்கவேண்டுமென்று கொடுக் கப்பட்ட இந்த மூன்று நல்ல பழக்கங்களும் நிரந் தரமான ஆணைகளாகும். இவையே **கிறிஸ்து இயேசுவுக்குள்** நம்மைக் குறித்த **தேவனுடைய சித்தமாயிருக்கின்றன. கிறிஸ்து இயேசுவுக் குள்** என்னும் சொற்றொடர், அவர் இவ்வுலகில் திருப்பணி ஆற்றிய பொழுது அவர் நமக்கு இப் பாடங்களைக் கற்பித்தார் என்பதையும், அவர் தாம் கற்பித்தவற்றிற்குத் திருவுருவாக வாழ்ந் தார் என்பதையும் நினைவூட்டுகிறது. அவர் கற்பித்ததோடு அதன்படி வாழ்ந்து காட்டியதன் மூலம் சந்தோஷமாயிருத்தல், ஜெபம் பண்ணு தல், ஸ்தோத்திரம் செலுத்துதல் ஆகியவை பற்றி தேவனுடைய சித்தம் என்னவென்பதை நமக்கு வெளிப்படுத்திக் காட்டினார்.

5:19 அடுத்த நான்கு வசனங்கள் சபையில் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றி கற்பிப்ப தாகத் தோன்றுகிறது.

நம் நடுவில் ஆவியானவருடைய செயல்பாட் டினை அடக்கிவைத்தல், கட்டுப்படுத்துதல், தடை செய்தல் ஆகியவையே **ஆவியை அவித் துப் போடுதல்** என்பதன் பொருளாகும். பாவம் ஆவியை அவித்துப் போடுகிறது. பரம்பரை வழக்கங்கள் ஆவியானவரை அவித்துப் போடு கின்றன. மனிதன் வகுத்த விதிகளும் கட்டளை களும் வெளியரங்கமான ஆராதனை வேளை களில் அவரை அவித்துப் போடுகின்றன. ஒற் றுமையின்மை அவரை அவித்துப் போடுகிறது. "வெறுப்பைத் தெரிவிக்கும் பார்வை, ஏளனம் செய் யும் சொற்கள், மௌனமாயிருத்தல், வேண்டு மென்றே புறக்கணித்தல் இவையாவும் தொடர்ந்து சென்று அவரை அவித்துப்போடும். இரக்கமற்ற வகையில் குற்றஞ்சாட்டுதலும் இவ்விதமாகவே அவரை அவித்துப்போடும்" என்று ஒருவர் கூறி யிருக்கிறார். ஒருவரிடத்தில் அல்லது சபையில் ஆவியானவரின் செயல்பாடு கட்டுப்படுத்தப்படும் வேளையில் அவர் அவித்துப் போடப்படுகிறார் என்று திருவாளர் ரைரி கூறுகிறார்.

5:20 இந்த வசனத்தை இதற்கு முந்தின வசனத்தோடு சேர்த்துக் காண்போமானால், தீர்க்கதரிசனத்தை நாம் **அற்பமாக எண்ணும் போது** ஆவியை அவித்துப்போடுகிறவர்களாக இருப்போம். எடுத்துக்காட்டாக ஓர் இளம் விசு வாசி வெளியரங்கமாகப் பிரசங்கம் செய்யும் போது, நயமற்ற வகையில் ஓர் அறிக்கையைச் செய்யக்கூடும். அதற்காக அந்தச் சகோதரனைக் குற்றப்படுத்துவது, கிறிஸ்துவுக்காக அவன் சாட்சி கூறுவது அவமதிப்பாக அமைந்து ஆவியை அவித்துப் போடுவதாகக் காணப்படும்.

புதிய ஏற்பாட்டின்படி தீர்க்கதரிசனம் கூறுதல் என்பதன் முதன்மையான பொருள் தேவனுடைய வார்த்தையைப் பேசுதல் என்பதாகும். ஆவியின் ஏவுதலால் தீர்க்கதரிசிகள் பேசிய வார்த்தைகள் நமக்காக வேதத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டி ருக்கின்றன. சற்று குறைவான பொருளில், தீர்க்க தரிசனம் உரைத்தல் எனப்படுவது திருமறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி தேவனுடைய மனதை அறிவித்தல் என்று பொருள்படும்.

5:21 நாம் கேட்கிறவற்றை மதிப்பிட்டு **நல மானதையும்**, நேர்மையானதையும், உண்மை யையும் **பிடித்துக்கொள்ள வேண்டும்**. எல்லாப் பிரசங்கங்களையும் போதகங்களையும் சோதித் துப் பார்ப்பதற்கான அளவுகோல் தேவனுடைய வார்த்தையேயாகும். வெவ்வேறு சகோதரர்கள் மூலமாக ஆவியானவர் பேசுவதற்கு எங்கெல் லாம் விடுதலை இருக்கிறதோ அங்கு சில தவறு கள் ஏற்படக் கூடும். ஆனால் இந்தத் தவறு களைக் களைவதற்கு ஆவியை அவித்துப்போடு தல் சரியான முறையாகாது.

முனைவர் டென்னி இவ்வாறு எழுதியுள்ளார்:

> கட்டுப்பாடுகள் இல்லாத கூட்டம், தீர்க்கதரி சனம் உரைப்பதற்கான விடுதலை, ஆவியான வர் அருளுகிறபடி யார் வேண்டுமானாலும் சபைக் கூட்டத்தில் பேசக் கூடிய நிலை, இதுவே நவீன காலச்சபையின் உடனடித் தேவை யாகும்.[17]

5:22 பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லா வற்றையும்விட்டு விலகுங்கள் என்னும் சொற் றொடர் தவறான பாஷைகள், தவறான தீர்க்க தரிசனங்கள், தவறான உபதேசங்கள் ஆகிய வற்றை விட்டு விலக வேண்டும் என்றோ, பொது வான முறையில் பாவத்தை விட்டுவிலக வேண் டும் என்றோ பொருள்படும்.

கிறிஸ்தவன் தனிவேறுபட்ட ஏழுவகையான மனநிலையைக் கொண்டிருக்கிறான் என்று திருவாளர் A. T. பியர்சன் பதினாறு முதல் இருபத் திரண்டாம் வரையிலான வசனங்களை ஆதார மாகக் கொண்டு குறிப்பிடுகிறார்:

1. புகழ்ச்சியால் நிறைந்த மனநிலை (16). தேவ னுடைய செயல்பாடுகள் யாவும் எல்லைக்

குட்படா வகையில் மேன்மையானவை என்று கண்டுணருதல்.

2. ஜெபம் நிறைந்த மனநிலை(17). ஜெபம் பொருத்தமற்றது அல்லது முறையற்றது என்று ஒருக்காலும் எண்ணாத மனநிலை.

3. ஸ்தோத்திரம் நிறைந்த மனநிலை (18). சரீரத்திற்கு உகந்ததாயிராத சூழ்நிலைகளிலும் இவ்வித மனநிலையில் இருத்தல்.

4. ஆவிக்குரிய மனநிலை (19). நம்மிலும் நம் மூலமாகவும் செயல்பட ஆவியானவர் முழு விடுதலையைப் பெற்றிருக்கும் நிலை.

5. கற்பிப்பதற்கு உகந்த மனநிலை (20). தேவன் தெரிந்துகொள்ளும் ஏதொரு வழியையும் பயன்படுத்தக் கூடிய மனநிலை.

6. நுண்ணாய்வு செய்யும் மனநிலை (21). 1 யோவான் 4:1 -ஆம் வசனத்துடன் ஒப்பிடுக. தேவனுடைய வார்த்தையினால் எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும் மனநிலை.

7. தூய்மையான மனநிலை (22). பொல்லாங்கு உங்களுடைய மனதில் உருவாகத் தொடங்குமென்றால், அந்தப் பொல்லாங்கை உடனடியாகத் தவிர்த்தல்.[18]

4. தெசலோனிக்கேயருக்கு வழங்கப்பட்ட இறுதி வாழ்த்துகள் [5:23-28]

5:23 கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக்கப்பட வேண்டுமென்று இப்பொழுது பவுல் மன்றாடுகிறார். அதற்கு ஆதாரமாய் விளங்குபவர் **சமாதானத்தின் தேவனே** ஆவார். அதனுடைய இலக்கு முற்றிலும் என்னும் சொல்லில் காணப்படுகிறது, அதாவது, "நம்முடைய ஒவ்வொரு அங்கமும்" அதில் இடம்பெறும்.

இந்த வசனத்தை அடிப்படையாகக் கொண்டு "அதிதூய நிலை" என்றழைக்கப்படும் முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுதல் என்னும் கோட்பாடு வலியுறுத்தப்படுகிறது. அதாவது, ஒரு விசுவாசியானவன் ***பாவமற்ற பரிபூரணத்தை*** இவ்வுலக வாழ்க்கையிலேயே அடைய முடியும் என்பதே அந்தக் கோட்பாடு. ஆயினும் **சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக** என்று பவுல் மன்றாடும் வேளையில் அந்தப் பொருளை அவர் தனது மனதில் கொண்டிருக்கவில்லை என்பது புலனாகிறது. பாவ இயல்பு அகற்றப்பட வேண்டும் என்று அவர் மன்றாடவில்லை. மாறாக, பரிசுத்தமாகுதல் அவர்களுடைய ஒவ்வொரு அங்கத்திற்கும் விரிவாக்கம் அடைய வேண்டும் என்பதுதான் அவருடைய விண்ணப்பமாயிருந்தது, அதாவது அவர்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய கூறுகளுக்குள்ளாகப் பரிசுத்தமாகுதல் விரிவாக்கம் அடைய வேண்டும்.

பரிசுத்தமாகுதல்

புதிய ஏற்பாட்டில் பரிசுத்தமாகுதல் நான்கு கட்டங்களை உடையதாயிருக்கிறது. அவையாவன: **மனந்திரும்புதலுக்கு முன்னான பரிசுத்தம்**, தகுநிலைப் பரிசுத்தம், நடைமுறை அல்லது வளர்ச்சிப் பரிசுத்தம், நிறைவான பரிசுத்தம்.

1. ஒரு மனிதன் இரட்சிப்படைவதற்கு முன்னமே, வெளிப்புறத்திலிருந்து சில சலுகைகளைப் பெறும்படியான நிலையில் பிரித்துவைக்கப்படுகிறான். இதனை 1 கொரிந்தியர் 7:14 -ஆம் வசனத்தில் படிக்கிறோம். ஒரு அவிசுவாசியான கணவன் விசுவாசியான மனைவியின் மூலமாகப் பரிசுத்தமாக்கப்படுகிறான். இதுவே மனந்திரும்புதலுக்கு முன்னான பரிசுத்தம் எனப்படும்.

2. ஒரு மனிதன் மறுபடியும் பிறக்கும் தருணத்தில், அவன் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில், அவன் **தகுநிலைப் பரிசுத்தத்தை** அடைகிறான். அவன் இவ்வுலகினின்று தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படுகிறான் என்பதே இதன் பொருளாகும். அப்போஸ்தலர் 26:18; 1 கொரிந்தியர் 1:2; 6:11; 2 தெசலோனிக்கேயர் 2:13; எபிரெயர் 10:10,14 போன்ற பகுதிகளில் இது சொல்லப்பட்டுள்ளது.

3. மேலும் **வளர்ச்சிப் பரிசுத்தம்** என்னும் ஒரு வகைப் பரிசுத்தமும் இருக்கிறது. உலகம், பாவம், சுயம் ஆகியவற்றினின்று விசுவாசியானவன் தேவனுக்கென்று தற்காலத்தில் தன்னைப் பிரித்து வைத்துக்கொள்ளுதலே இவ்வகைப் பரிசுத்தமாகும். இந்தப் பயிற்சியின் மூலமாகவே அவன் கிறிஸ்துவைப் போல மென்மேலும் மாற்றம் அடைகிறான். தெசலோனிக்கேயர் இத்தகைய பரிசுத்தத்தை அடைய வேண்டுமென்றே அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வேத பகுதியில் மன்றாடுகிறார். 1 தெசலோனிக்கேயர் 4:3,4; 2 தீமோத்தேயு 2:21 -ஆகிய பகுதிகளில் இதே பொருள் காணப்படுகிறது. நாம் தேவனுடைய திருமறைக்குக் கீழ்ப்படிகிறபோது இந்நிலையைப் பரிசுத்த ஆவியானவர் நம்மிடத்தில்

உருவாக்குவார் (யோவான் 17:17; 2 கொரி. 3:18). விசுவாசியானவன் இவ்வுலகத்தில் வாழும் நாள் வரையிலும் இந்த நடைமுறைப் பரிசுத்தத்தில் தொடர்ந்து வளருகிறவனாகக் காணப்பட வேண்டும். அவன் இவ்வுலகத்தில் வாழும் நாட்களில் பாவமற்ற நிலையை அல்லது நிறைவை அடைய முடியாது. ஆனாலும் அவன் அந்த இலக்கை நோக்கித் தொடருகிறவனாக இருக்க வேண்டும்.

4. விசுவாசி விண்ணகத்தில் அடையவிருக்கிற இறுதி நிலையே *நிறைவான பரிசுத்தம்* ஆகும். அவன் கர்த்தரோடு இருக்கும்படியாகச் செல்லுகையில், அவன் ஒழுக்கநெறியில் கர்த்தரைப் போல, முழுமையாக, இறுதியாக பாவத்திலிருந்து விலக்கப்பட்டவனாகக் காணப்படுவான் (1 யோவான் 3:1-3).

தெசலோனிக்கேயர் காக்கப்பட வேண்டுமென்றும் அப்போஸ்தலன் மன்றாடுகிறார். இவ்வாறு காக்கப்படுதல் முழு மனிதனையும் உட்கொண்டதாக இருக்க வேண்டும் - **ஆவி, ஆத்துமா, சரீரம்**. இதன் வரிசை முறையைக் கவனியுங்கள். சரீரம், ஆத்துமா, ஆவி என்றே மனிதன் எப்பொழுதும் கூறுகிறான். தேவனோ எப்போதும் **ஆவி, ஆத்துமா, சரீரம்** என்றே கூறுகிறார். படைப்பின் தொடக்கத்தில் ஆவியே முதன்மையான முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது, சரீரம் கடைசியில் இருந்தது. பாவம் இதனைத் தலை கீழாக மாற்றிவிட்டது; மனிதன் சரீரத்திற்காக வாழ்ந்து ஆவியைப் பொருட்படுத்துகிறதில்லை. நாம் ஒருவருக்காக ஒருவர் மன்றாடுகிற வேளையில், வேதம் வகுத்துள்ள வரிசை முறையைப் பின்பற்ற வேண்டும்; சரீரப்பிர காரமான தேவைகளைக் காட்டிலும் ஆவிக்குரிய நலனுக்காக நாம் கூடுதலாக மன்றாட வேண்டும்.

இந்த வசனத்திலிருந்தும், இன்னும் பல வசனங்களிலிருந்தும், நாம் முக்கூறு உடையவராக இருக்கிறோம் என்பது தெளிவாகத் தெரிகிறது. நம்முடைய **ஆவி** என்னும் கூறே, நாம் தேவனோடு தொடர்புகொள்வதற்குத் தேவையான ஆற்றலைத் தருகிறது. நம்முடைய உள்ளக் கிளர்ச்சிகள், விருப்பங்கள், பாசம், இயல்பான பண்புகள் யாவும் நம்முடைய **ஆத்துமாவோடு** தொடர்புடையவை (யோவான் 12:27). நம்முடைய ஆள் என்பவன் குடியிருக்கிற வீடே நமது **சரீரமாகும்** (2 கொரி. 5:1).

நம்முடைய கூறுகள் அனைத்தும் முழுவதுமாகக் காக்கப்படவேண்டியது அவசியம், அதாவது அவை முழு நிறைவாகவும் நலத்தோடும் காக்கப்படவேண்டும். இவ்வாறு காக்கப்படுவதன் தேவையை ஒரு விளக்கவுரையாளர் கீழ்க் கண்டவாறு வகுத்துத் தந்திருக்கிறார்:

1. (அ) ஆவியைத் தீட்டுப்படுத்தக்கூடிய எந்தவொரு செயலிலிருந்தும் (2 கொரி. 7:1); (ஆ) தேவனோடு பரிசுத்தவான் கொண்டிருக்கிற உறவைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவர் கூறுகிற சாட்சியைத் தடைசெய்கிற எந்தவொரு காரியத்திலிருந்தும் (ரோமர் 8:16); (இ) அவர் விரும்புகிற ஆராதனையைத் தடைசெய்கிற எல்லாவற்றிலிருந்தும் (யோவான் 4:23;பிலி. 3:3) கிறிஸ்தவனின் ஆவியானது காக்கப்பட வேண்டும்.
2. (அ) பொல்லாத எண்ணங்கள் (மத். 15:18,19; எபே. 2:3); (ஆ) போர் செய்கிற மாம்ச இச்சைகள் (1 பேதுரு 2:11); (இ) எல்லாவிதமான கசப்புகளும் கலகங்களும் (எபி. 12:15) ஆகியவற்றிலிருந்து ஆத்துமா காக்கப்பட வேண்டும்.
3. (அ) தீட்டிலிருந்தும் (1 தெச. 4:3-8); (ஆ) அசுத்தத்திலிருந்தும் அக்கிரமத்திலிருந்தும் (ரோமர் 6:19) சரீரம் காக்கப்பட வேண்டும்.

இரட்சிக்கப்படாதவர்களுக்கு ஆவியில்லையென்று சிலர் மறுத்துரைக்கிறார்கள். ஆவிக்குரிய நிலையில் அவர்கள் இறந்தவர்களாக இருப்பதன் அடிப்படையில் இவ்வாறு கூறுகிறார்கள் போலும் (எபே. 2:1). ஆனாலும், இரட்சிக்கப்படாதவர்கள் ஆவிக்குரிய நிலையில் இறந்து போனவர்களாக இருந்தபோதிலும், அவர்களுக்கு ஆவி இல்லை என்பது அதன் பொருளன்று. அவர்கள் தேவனோடு உள்ள ஐக்கியத்தைப் பொருத்தமட்டில் இறந்துபோனவர்கள் என்பதே இதன் பொருளாகும். அவர்களுடைய ஆவிகள் உயிருள்ளவையாகவே இருக்கின்றன. எடுத்துக் காட்டாக, *ஆவியுலகத்தோடுள்ள தொடர்பில்* அவை உயிருள்ளவையாக இருக்கின்றன, ஆனால் *தேவனோடுள்ள தொடர்பில்* அவை உயிரற்றவையாக இருக்கின்றன.

திருவாளர் லென்ஸ்கி எச்சரிக்கிறார்:

> பலர் அரைகுறையான கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள், அவர்களுடைய வாழ்க்கையின் சில பகுதிகள் இன்னும் உலகப்பிரகாரமானவையாக இருக்கின்றன. நம்முடைய இயல்பின் எந்தவொரு பாகமும் பரிசுத்தமாகுதலுக்குத் தப்பிக்காதபடி அப்போஸ்தலருடைய அறிவுரைகள் அவ்வியல்பின் ஒவ்வொரு

> மூலைமுடுக்கிலும் தாற்றுக்கோலைப் போலச் சென்று குத்துகின்றன.[19]

விசுவாசிகள் **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றவர்களாக** இருக்கும்படி, அவர்களுடைய ஆளுமையின் ஒவ்வொரு பாகத்திற்கும் தேவனுடைய பரிசுத்தமாக்குதலும் காக்கப்படுதலும் விரிவாக்கம் அடைய வேண்டுமென்று அப்போஸ்தலனுடைய மன்றாட்டு விரும்புகிறது. விசுவாசிகள் வானிற்கு எடுத்துக்கொள்ளப்படுதலைத் தொடர்ந்து நடக்க விருக்கிற கிறிஸ்துவின் நியாயாசனத்தை இது சுட்டிக்காட்டுவதுபோலத் தோன்றுகிறது. அந்த நேரத்தில் கிறிஸ்தவனின் வாழ்க்கை, ஊழியம், சாட்சியாவும் புனராய்வு செய்யப்பட்டு, அவன் பரிசைப் பெறவோ இழந்துபோகவோ நேரிடும்.

5:24 நாம் 4:3 -ஆம் வசனத்தில் கற்றதுபோல, நாம் பரிசுத்தமாக்கப்படுதல் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இறுதியில் நாம் அவருக்கு முன் குற்றமற்றவர்களாக நிற்கும்படி, நம்மை அவர் அழைத்திருக்கிறார். இந்தச் செயலை நம்மிடத்தில் தொடங்கினவர், அதனை முற்றுமுடிய நிறைவேற்றுவார் (பிலி. 1:5) **நம்மை அழைக்கிறவர்** அவருடைய வாக்குறுதிக்கு **உண்மையுள்ளவராயிருக்கிறார்**.

5:25 தனது கடிதத்தை முடிக்கும் தறுவாயில் அப்போஸ்தலன் பரிசுத்தவான்களின் மன்றாட்டை வேண்டிக் கேட்கிறார். ஜெபம் தேவையில்லை என்னும் அளவிற்கு அவர் ஒருக்காலும் வளர்ந்துவிடவில்லை, நாமும் அவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது. உடன் விசுவாசிகளுக்காக ஜெபம் பண்ணாமலிருப்பது பாவமாகும்.

5:26 அடுத்து **சகோதரரெல்லாரும் பரிசுத்த முத்தத்தோடு** வாழ்த்தப்பட வேண்டுமென்று அவர் வேண்டுகிறார். அந்த நாட்களில் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்த்தும் முறையாக இருந்தது. சில நாடுகளில் இந்த நாட்களிலும்கூட ஆண்கள் ஆண்களை முத்தம் செய்யும் வழக்கமும், பெண்கள் பெண்களை முத்தம் செய்யும் வழக்கமும் இருக்கிறது. மேலும் சில நாடுகளில் ஆண்கள் பெண்களையும், பெண்கள் ஆண்களையும் முத்தம் செய்யும் வழக்கமும் இருந்து வருகிறது. ஆனால் இந்த வழக்கம் தவறான செயல்களுக்கு வழியாக இருப்பதால் இது தடை செய்யப்பட வேண்டியதாயிற்று.

முத்தத்தினால் வாழ்த்து தெரிவிப்பதைக் கர்த்தர் நிறுவவில்லை. அது கட்டாயம் செய்யப்பட வேண்டுமென்று அப்போஸ்தலர் கற்பிக்கவுமில்லை. முத்தமிடுவதால் பாலுறவில் கட்டுப்பாடு இல்லாமல் போகக்கூடிய நிலை ஏற்படக்கூடும் என்பதால் வேறுபல வாழ்த்துக் கூறும் முறையினை வேதம் ஞானமாய் அனுமதித்திருக்கிறது. **முத்தமானது** எப்பொழுதும் **பரிசுத்தமாகவே** இருக்கும் என்று வலியுறுத்துகிற தவறுகளிலிருந்து காக்கப்படுவதற்கு தேவனுடைய ஆவியானவர் முனைந்து செயல்படுகிறார்.[20]

5:27 இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்பட வேண்டுமென்று அப்போஸ்தலன் உள்ளார்வத்துடன் கட்டளையிடுகிறார். இரண்டு குறிப்புகளை நாம் இங்கு கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்:

1. இந்த மடலானது தேவனுடைய வார்த்தை என்று இதற்குப் பவுல் அதிகாரம் வழங்குகிறார். பழைய ஏற்பாடு ஜெப ஆலயங்களில் வெளியரங்கமாகப் படிக்கப்பட்டது. இப்பொழுது **இந்த நிருபம்** சபைகளில் சத்தமாக **வாசிக்கப்பட வேண்டும்**.
2. இது திருமறைக் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் உரியது. இது ஏதோ குறிப்பிட்ட சில ருக்கோ, சலுகை பெற்ற சிலருக்கோ மட்டும் உரியதன்று. இதில் சொல்லப்பட்டுள்ள சத்தியங்கள் யாவும் பரிசுத்தவான்கள் அனைவருக்கும் உரியவையாகும்.

திருவாளர் டென்னி விவேகத்துடன் இவ்வுண்மையை வற்புறுத்திக் கூறுகிறார்:

> சுவிசேஷத்தினால் எந்த மனிதனும் அடையக் கூடாதபடி தடைசெய்யப்பட ஏதொரு மேன்மையையும் விவேகத்தினாலோ நற்குணத்தினாலோ அடைய முடியாது. ஒரு சபையின் அங்கத்தினர்களை மாணாக்கர் என்னும் நிலையில் வளர்ச்சியற்றவர்களாக நிரந்தரமாக வைத்திருப்பதும், பரிசுத்த வேதத்தைத் தாராளமாகப் பயன்படுத்தவிடாமல் உற்சாகம் குன்றச் செய்வதும், திருமறையில் உள்ள அனைத்தையும் சகோதரர் அனைவருக்கும் படித்துக் காட்டாமல் கவனத்தோடு இருப்பதும் போன்று, உண்மையற்ற தன்மைக்கும் நம்பிக்கை துரோகத்திற்கும் நிச்சயமான சான்று வேறு எதுவுமில்லை.[21]

25 முதல் 27 வரையிலான வசனங்களில் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கான மூன்று குறிப்புகளை நாம் பெற்றிருக்கிறோம்: (1) ஜெபம் (வச. 25); (2) ஒருமைப்பாட்டைக் குறித்துப் பேசு

கிற ஒருவரிலொருவர் செலுத்தும் அன்பு(வச. 26); (3) திருமறையைப் படித்தலும் கற்றலும் (வச. 27).

5:28 இறுதியில் தன்னுடைய தனித்தன்மை வாய்ந்த சொற்களோடு பவுல் இந்த மடலை எழுதி முடிக்கிறார். தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் மடலைக் கிருபையைப் பற்றிய பொருளோடு அவர் தொடங்கினார், அதே கருத்தோடு முடிக்கவும் செய்கிறார். அப்போஸ்தலனுக்கு, தொடக்கம் முதல் முடிவு வரை **கிருபை** என்பதே கிறிஸ்தவம் ஆகும். **ஆமென்**.

அடிக்குறிப்புகள்

1 (Intro) James Everett Frame, *A critical and Exegetical Commentary on the Epistles of St. Paul to the Thessalonians*, (ICC), p. 37.

2 (Intro) George Robert Harding Wood, *St. Paul's First Letter*, pp. 13,14.

3 (1:1) "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்" என்னும் சொற்கள் நடுநிலைப் பிரதியில் இடம் பெறவில்லை. ஆனால் பெரும்பான்மைப் பிரதிகளில் இச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. இதே வசனத்தில் இதற்கு ஒப்பான சொற்கள் இடம் பெற்றிருக்கிற காரணத்தால் பிரதியெடுக்கும் போது இச்சொற்கள் விடுபடுவது இயற்கையே.

4 (1:4) தெய்வீகத் தெரிந்தெடுப்பைக் குறித்த கட்டுரையை எபேசியர் முதல் அதிகாரத்தில் காண்க.

5 (1:10) Wood, *First letter,* p. 17.

6 (2:1) James Denney, *The Second Epistle to the Corinthians,* p. 100.

7 (2:1) Elliot, Elisabeth, ed., *The Journals of Jim Elliot*, p. 100.

8 (2:13) Walter Scott, further documentation unavailable.

9 (3:2) ஊழியர் என்னும் சொல் இலத்தீன் மொழியில் வேலையாள் என்று பொருள்படும்.

10 (3:13) Marvin vincent, Word Studies in the New Testament, IV:34.

11 (4:6) தன்னுடைய அருமை மனைவியை விட்டுவிட்டு ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட ஆஸ்கர் வில்டி.

12 (4:8) "நமக்குத் தந்தருளுகிற" என்னும் சொற்களே நடுநிலைப் பிரதியில் (NU) உள்ளன.

13 (4:17) *rapere* என்னும் இலத்தீன் மொழி வினைச்சொல்லின் இறந்தகால வினையெச்சம் raptus என்பதாகும். வல்கேட் வேதத்தில் ஜெரோம் பயன்படுத்தியுள்ள சொற்கள் "*rapiemur cumillis*" என்பதாகும் (அவர்களோடு நாமும் எடுத்துக் கொள்ளப்படுவோம்).

14 (5:10) மூலமொழியில் கீழ்க்கண்டவாறு சொற்கள் காணப்படுகின்றன:

உறங்காமல் விழித்திருத்தல் **5:10**; எச்சரிப்புடன் விழித்திருத்தல் **5:6** இவையிரண்டின் மூலமொழிச் சொல் *gregoreo* என்பதாகும் (மூலமொழியில் "*Gregory*" என்பது ஆண்பால் பெயர்ச்சொல். அதன் பொருள் விழிப்புடன் இருத்தல் என்பதாகும்). தூங்குதல் என்னும் சொல் **5:6,7** ஆகிய வசனங்களில் *katheudo* என்னும் மூலச்சொல்லின் மொழிபெயர்ப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சொல் எழுத்தின்படி உறங்கும் நிலையையோ, ஆவிக்குரிய சோம்பலோடு ஏனோதானோ என்று வாழ்வதையோ குறிக்கக்கூடும் (Arndt and Gingrich). **4:13–15** இல் koimao என்னும் சொல் நித்திரை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

15 (5:12) James Denny, *The Epistles to Thessalonians*, p. 205.

16 (5:13) மூப்பர்களைக் குறித்த விரிவான விளக்கத்திற்கு **1** தீமோத்தேயு **3:1–7** மற்றும் தீத்து **1:5–9** ஆகிய பகுதிகளுக்கான விளக்க வுரையைக் காண்க.

17 (5:21) Denney, *Thessalonians*, p. 244.

18 (5:22) Arthur T. Pierson, further documentation unavailable.

19 (5:23) R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistles to the Colossians, to the Thessalonians, to Timothy, To Titus, and Philemon,* p.364.

20 (5:27) The Critical text omits "*holy*."

21 (5:27) Denney, *Thessalonians,* pp. 263, 264.

நூல் விவரப் பட்டியல்

Buckland, A. R. *St. Paul First Epistle to the Thessalonians*. Philadelphia: The Union Press, 1908.

___*St. Paul's Second Epistles the Thessalonians*. Philadelphia: The Union Press, 1909.

Denny, James. *The Epistles to the Thessalonians*. New York: George H.Doran Company, n.d.

Eadie, John. *A Commentary on the Greek Text of the Epistle of Paul to the Thessalonians*. London: MacMillan, 1877.

James E. *A Critical and Exegetical Commentary on Epistles of Paul to the Thessalonians,* ICC. New York: Chas. Scribner's Sons, 1912.

Hogg, C. F. and W. E. Vine, *The Epistles of Paul the Apostle to the Thessalonians*. London: C. A. Hammond, 1953.

Kelly, William. *The Epistles of Paul the Apostle to the Thessalonians*. London: C. A. Hammond, 1953.

___Elements of Prophecy. London: G. Morrish, 1976.

Morris, Leon. *The Epistles of Paul the Apostle to the Thessalonians,* TBC. Grand Rapids: Wm B. Eerdmans Publishing Company, 1957.

___*The First and Second Epistle to the Thessalonians,* NIC. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1959.

Wood, George Robert Harding. St. Paul's First Letter. London: Henry E. Walter Ltd., 1952.

அப்போஸ்தலனாகிய பவுல்

தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிருபம்

முன்னுரை

"முதல் மடலில் காணப்படுவது போலவே, தவறை முதலில் குறிப்பிட்டு, உடனடியாகப் போராடி அதனைப் போக்கவேண்டுமென்று அப்போஸ்தலன் முயற்சி செய்யவில்லை. மாறாக, பரிசுத்தவான்களின் இருதயங்களை எல்லாப் பக்கங்களிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக ஆயத்தப்படுத்தி, தவறு உணர்த்தப்பட்டவுடனே அவர்கள் அதனை விட்டு விலகி உண்மையைப் பற்றிக்கொள்ளும்படி செய்வதையே தனது செயல்முறையாக அவர் கொண்டிருந்தார். தெய்வீகக் கிருபை, ஞானம் ஆகியவற்றின் வழியும் இதுவே யாகும். வெறுமனே தவறு என்னவென்றும் பாவம் என்னவென்றும் விவரிப்பதல்ல, முதலாவது இருதயத்தை நேர்வழிப்படுத்துவதே தெய்வீக வழிமுறையாகும்."

– வில்லியம் கெல்லி

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

இம்மடலில் காணப்படும் முக்கியமான உண்மைகள் கோட்பாடுகள் சார்ந்தவையும் மற்றும் நடைமுறை சார்ந்தவையுமாகும். கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்தும், பாவ மனிதனின் வெளிப்பாடு குறித்தும் தெசலோனிக்கேயருக்குப் பவுல் மேலும் விளக்கிக் கூறி அவர்களுடைய தவறான கருத்துகளைத் திருத்துகிறார். தாங்கள் வேலை செய்யாமல் இருப்பதற்குக் கர்த்தரின் வருகையைக் காரணமாகக் கூறியவர்களுக்கு ஆழ்ந்த அறிவுரைகளை அப்போஸ்தலன் வழங்குகிறார் - அவர்கள் சாப்பிடவும் கூடாது!

2. நூலாசிரியர்

எல்லாக் கூறுகளிலும், 2 தெசலோனிக்கேயரின் ***புறச்சான்று*** 1 தெசலோனிக்கேயரின் புறச்சான்றினைக் காட்டிலும் வலிமையுடையதாய் விளங்குகிறது. இவ்வுண்மை பாலிகார்ப், இக்னேஷியஸ், ஜஸ்டின் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (மார்சியன் தொகுப்பின் முன்னுரையிலும், முரடோரியன் வேதநூல் தொகுப்பிலும் இது காணப்படுகிறது.) ஆனால் ஐரினியஸ் 2 தெசலோனிக்கேயர் என்று பெயர் சொல்லியே இந்நூலைக் குறிப்பிடுகிறார்.

இந்த மடல் மிகச் சிறியதாக இருப்பதால், 1 தெசலோனிக்கேயர் மடலில் காணப்படுவதுபோல அதிகமான அகச்சான்றுகள் இல்லை. எனினும் அந்த மடலைப் பூர்த்தி செய்வதாகவும், அதனோடு ஒத்துப்போவதாகவும் இம்மடல் விளங்குவதால், இதனைப் பவுலே எழுதினார் என்பதை ஒப்புக் கொள்வதற்கு வேத அறிஞர்கள் தயங்கவில்லை.

3. எழுதப்பட்ட காலம்

1 தெசலோனிக்கேயர் மடலில் சில பகுதிகளைத் தவறாகப் புரிந்து கொண்டதாலும், மேலும் சில பிரச்சினைகள் எழுந்த காரணத்தினாலும் இந்த இரண்டாம் மடல் எழுதப்பட்டது. இந்த இரண்டு மடல்களும் எழுதப்படுவதற்கு ஒரு சில மாதங்கள் அல்லது ஒரு சில வாரங்கள் இடை வெளியே தேவைப்பட்டது. பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகிய மூவரும் இன்னும் ஒன்று சேர்ந்தே இருந்தார்கள் (1: 1). கொரிந்துப் பட்டணத்தில் மட்டுமே அவர்கள் மூவரும் ஒன்றாயிருந்தார்கள் என்று நாம் படிக்கிறோம் (அப். 18: 1, 5). ஆகவே இம்மடல் கி. பி. 50 அல்லது கி. பி. 51 - இல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

3. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

முதல் மடல் எழுதிய பிறகு, சிறிது காலத்திற்குள்ளாகவே இன்னுமொரு மடல் எழுதப்படுவதற்கு மூன்று முக்கியமான காரணங்கள் இருந்தன. பரிசுத்தவான்கள் கொடுமைப்படுத்தப்பட்டதன் காரணமாக, அவர்கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது (அதி. 1). கர்த்தருடைய நாளைக் குறித்து அவர்கள் தவறான கருத்தைக் கொண்டிருந்த காரணத்தினால், அவர்கள் ஐயங்களற தெளிவுபடுத்தப்பட வேண்டியவராயிருந்தார்கள் (அதி. 2). கர்த்தர் மீண்டும் வருகிறார் என்னும் காரணத்தினால் சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாயிருந்தார்கள். அவர்கள் நேர்வழிப்படுத்தப்பட வேண்டியவராயிருந்தார்கள் (அதி. 3).

கர்த்தருடைய நாள் ஏற்கனவே வந்துவிட்டதாக வும், அவர்கள் அதற்குள் இருந்ததாகவும் நினைத்து விசுவாசிகள் அச்சமுற்றிருந்தார்கள். கர்த்தருடைய நாள் வந்து விட்டதாகப் பவுலே போதித்ததாகத் தவறான வதந்திகள் பரவியதன் காரணமாக அவர்களுடைய அச்சம் வலுப்பெற் றது. ஆகவே இங்கு அப்போஸ்தலன் தவறுகளைச் சரிசெய்து உண்மையை உறுதிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய வருகை என்றழைக்கப்படும் சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியும், கர்த்தருடைய நாளும் ஒன்றல்ல என்பதை விசு வாசிகள் தெளிவாய் அறிந்திருக்க வேண்டும். கர்த்தர் வந்துவிட்டார் என்று பரிசுத்தவான்கள் அச்சம்கொள்ளவில்லை. கர்த்தருடைய நாளின் முதல் கட்டமாகிய உபத்திரவ காலத்திற்குள் இருந்ததாக நினைத்தே அவர்கள் பயந்தார்கள்.

சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னர் ஏதொரு நிகழ்ச்சியும் நிறைவேற வேண்டும் என்று பவுல் கற்பிக்க வில்லை. *கர்த்தருடைய நாள் தொடங்குகிற போது,* பெரிய அளவில் விசுவாசமற்ற நிலை காணப்படும், தடை செய்கிறவர் நீக்கப்படுவார், பாவமனிதன் வெளிப்படுத்தப்படுவான்.

இந்த மடலைச் சரிவரப் புரிந்துகொள்வதற்கு, சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி, கர்த்தரு டைய நாள், ஆட்சிபுரியும்படி கிறிஸ்து இவ்வுல கிற்கு வருகை தருவது ஆகியவற்றிற்கு இடை யிலான வேறுபாடுகளை நன்கு அறிந்துகொள் வதைத் தவிர வேறு எதுவும் முக்கியமானதல்ல. 1 தெசலோனிக்கேயர் 5 : 2 - ஆம் வசனத்திற்கான குறிப்பில் கர்த்தருடைய நாளின் வரையறை விவரிக்கப்பட்டுள்ளது. 2 தெசலோனிக்கேயர் 1 : 7 - இல் காணப்படும் கட்டுரையில் சபை எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சிக்கும் கிறிஸ்துவெளிப் படும் நிகழ்ச்சிக்கும் உள்ள வேறுபாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (1:1,2)

2. பவுலும் தெசலோனிக்கேயரும் (1:3-12)

அ. பவுலின் நன்றிக்கடன் (1:3-5)

ஆ. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு (1:6-10)

இ. பரிசுத்தவான்களுக்காகப் பவுல் ஏறெடுத்த மன்றாட்டு (1:11,12)

3. கர்த்தருடைய நாளைக் குறித்த செய்தி (2:1-12)

அ. நிலைத்திருக்கும்படி வேண்டுதல் செய்தல் (2:1,2)

ஆ. பாவமனிதன் (2:3-12)

4. நன்றி செலுத்துதலும் மன்றாடுதலும் (2:13-17)

அ. பரிசுத்தவான்கள் நியாயத்தீர்ப்புக்குத் தப்புவார்கள் என்பதன் காரணமாகப் பவுல் நன்றி செலுத்துதல் (2:13,14)

ஆ. பரிசுத்தவான்கள் ஆறுதல்பெற்று நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று பவுல் மன்றாடுதல் (2:15-17)

5. நடைமுறை அறிவுரைகள் (3:1-15)

அ. ஒருவருக்காக ஒருவர் மன்றாடுவதற்கான அறிவுரை (3:1-5)

ஆ. கீழ்ப்படியாதவர்களோடு நடந்துகொள்வது எப்படி என்பதற்கான அறிவுரை (3:6-15)

6. ஆசிர்வாதமும் வாழ்த்தும் (3:16-18)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	பவுலும் தெசலோனிக்கேயரும்			தெசலோனிக்கேயரின் கலக்கம்		தெசலோனிக்கேயருக்கு அறிவுரை	
காலம்	கி. பி. 51						
தலைப்பு	நன்றிக்கடன்			கலக்கமுற்ற விசுவாசிகள்		கீழ்ப்படியாத விசுவாசிகள்	
பகுப்பு	நன்றி கூறுதல்	தேவனின் நீதியான நியாத்தீர்ப்பு	பவுலின் மன்றாட்டு	கர்த்தருடைய நாளைக் குறித்த செய்தி	நன்றியும் மன்றாட்டும்	நடைமுறை அறிவுரைகள்	ஆசிர்வாதமும் வாழ்த்தும்
வசனம்	1:1-5	1:6-10	1:11-12	2:1-12	2:13-17	3:1-15	3:16-18
இடம்	கொரிந்துப் பட்டணம்						

விளக்கவுரை

1. வாழ்த்துரை (1:1,2)

1:1 கொரிந்துப் பட்டணத்திலிருந்து **பவுல்** இந்த மடலை எழுதியபோது **சில்வானும் தீமோத்தேயு**வும் உடனிருந்தார்கள். இந்த மடலானது **தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதப்பட்டது;** அந்தச் சபையின் அங்கத்தினர்கள் யார் என்பதையும் எந்த இடத்தில் அது செயல்பட்டது என்பதையும் இது வெளிப்படுத்திக் காட்டுகிறது. **நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்** என்னும் சொற்றொடர் இந்தச் சபையானது புறச்சமயத்தைச் சார்ந்த தல்லவென்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும், **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்** என்னும் சொற்றொடர் இது ஒரு கிறிஸ்தவக் கூட்டம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.[1]

1:2 பரிசுத்தவான்கள் புகழையோ, பெருஞ் செல்வத்தையோ, மனமகிழ்வையோ பெறவேண்டுமென்று அப்போஸ்தலன் வாழ்த்தவில்லை. மாறாக அவர்கள் **கிருபையையும் சமாதனத்தையும்** பெற வேண்டுமென்றே அவர் வாழ்த்துகிறார். தேவனுடைய சித்தத்திற்குள்ளான எல்லாவற்றையும் பெறுவதற்குத் தேவையான ஆற்றலைக் **கிருபை** தந்தருளுகிறது. **சமாதானமோ** எல்லா விதமான சூழ்நிலையிலும் அமைதியைத் தருகிறது. தனக்கும் பிறருக்கும் இன்னும் வேறு எது தேவையென்று ஒரு மனிதன் விரும்புவான்?

நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்தும் கிருபையும் சமாதானமும் உண்டாகின்றன. சமாதனத்திற்கு முந்தி வருவது **கிருபை;** தேவனுடைய **சமாதானத்தை** நாம் அனுபவிப்பதற்கு முன் அவருடைய **கிருபையை** அறிந்திருக்க வேண்டும். **நம்முடைய பிதாவாகிய தேவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும்** இந்த ஆசிர்வாதங்களின் ஆதாரமாக இருக்கிறார்கள் என்று பவுல் குறிப்பிட்டிருப்பது, பிதாவும் குமாரனும் சமமானவர்கள் என்பதைக் குறிப்பாய்த் தெரிவிக்கிறது.

2. பவுலும் தெசலோனிக்கேயரும் (1:3-12)

அ. பவுலின் நன்றிக்கடன் (1:3–5)

1:3 பரிசுத்தவான்களுக்காக நன்றிசெலுத்தும் செயலோடு இம்மடல் தொடங்குகிறது. தனக்கு அன்பான ஆவிக்குரிய பிள்ளைகளின் நிமித்தம் அவர் அடைகிற மகிழ்ச்சியின் காரணமாக கிறிஸ்துவின் மெய்யான ஊழியரிடத்தில் உண்டாகிற இதயத்துடிப்பை இப்பகுதியைப் படிக்கும் போது நாம் கேட்கிறோம். ஸ்தோத்திரம் செலுத்துவதை அவர் **தேவனுக்குத்** தொடர்ந்து செய்கிற கடமையாகவே கருதினார், கிறிஸ்தவர்களுடைய **விசுவாசத்தையும் அன்பையும்** கருத்தில் கொள்ளும்போது அது பொருத்தமான கடமையாகவே விளங்கியது. அவர்களுடைய விசுவாசம் வியத்தகு முறையில் முன்னேற்றம் அடைந்தது. மேலும் அவர்கள் யாவரும், ஒருவர் விடாமல், பிறரிடம் மிகுதியான அன்பை வெளிப்படுத்திக் காட்டினார்கள். இது அப்போஸ்தலனின் மன்றாட்டின் காரணமாக ஏற்பட்ட விளைவாகும் (1 தெச. 3 : 10, 12).

இங்குள்ள வரிசை முறையைக் கவனியுங்கள்: முதலாவது **விசுவாசம்,** அதன் பிறகு அன்பு. "விசுவாசமானது தேவனுடைய அன்பின் நித்திய ஊற்றோடு நம்மைத் தொடர்புகொள்ளச் செய்கிறது. அதன் விளைவாக நம்முடைய இருதயங்கள் அவருக்குச் சொந்தமானவர்கள் மேல் அன்பு பாராட்டும்படி ஈர்க்கப்படுவது தவிர்க்கஇயலாதது" என்று C.H. மெக்கின்டோஷ் எழுதுகிறார்.

1:4 அவர்கள் பெற்ற ஆவிக்குரிய வளர்ச்சியின் காரணமாக, பவுலும் அவருடன் இருந்தவர்களும் அவர்களைக் குறித்து, வேறு இடங்களிலிருந்த **தேவனுடைய சபைகளில் மேன்மைபாராட்டினார்கள்.** அவர்கள் பலவிதமான **துன்பங்களைச்** சகித்த போதிலும் உறுதியோடும் முழுவிசுவாசத்தோடும் இருந்தார்கள். இங்கு **பொறுமை** என்று சொல்லப்பட்டிருப்பது, உறுதியுடைமை என்றோ விடாப்பிடியுடன் இருத்தல் என்றோ பொருள்படும்.

1:5 உண்மையில் அவர்கள் உபத்திரவங்களையும் துன்பங்களையும் இவ்வாறு துணிவுடன் எதிர்த்து நின்றது **தேவனுடைய நியாயமான** செயல்பாட்டிற்கு அடையாளமாயிருந்தது. அவர் தாமே அவர்களை ஆதரிக்கிறார், பலப்படுத்துகிறார், உற்சாகப்படுத்துகிறார். அவருடைய தெய்வீக ஆற்றலை அவர்கள் பெற்றிராவிட்டால், கிறிஸ்துவுக்காகப் பாடு அனுபவிக்கிற வேளையில் இவ்விதமான பொறுமையையும் விசுவாசத்தையும் ஒருக்காலும் வெளிப்படுத்திக் காட்டியிருக்க முடியாது.

அவர்களுடைய வீறார்ந்த உளவலிமை அவர்கள் **தேவனுடைய ராஜ்யத்திற்குப் பாத்திரர்** என்பதை மெய்ப்பித்துக் காட்டியது. அவர்களுடைய தனிப்பட்ட மேன்மை ஏதேனும் அவர்கள் இறையரசுக்குள் நுழைவதற்கான தகுதியைத் தரக் கூடும் என்பதற்கான கருத்திற்கு இங்கு இடமில்லை. கிறிஸ்துவின் தகுதிகளினால் மட்டுமே அவர்களால் அங்கு செல்ல முடியும். ஆனால் அவ்வரசின் நிமித்தம் இவ்வுலகத்தில் பாடுபடுகிற

வர்கள், வரப்போகிற நாளில் அவரோடு ஆட்சிபுரி கிறவர்களாக இருப்பார்கள் என்பதை வெளிப்படுத் திக் காட்டுகிறார்கள். (ரோமர் 8 : 17; 2 தீமோ. 2:12).

அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரர் என் றெண்ணப்படும்படிக்கு என்னும் சொற்றொட ருக்கு விளக்கமளிக்கும் E. W. ரோஜர்ஸ் இவ் வாறு கூறுகிறார்:

> இது மனிதனுடைய பொறுப்போடு தொடர்புடை யது. தெய்வீக இறையாண்மையின் அடிப் படையில், ஒளியிலுள்ள பரிசுத்தவான்களு டைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நாம் தகுதிப்படுத்தப்பட்டிருக்கிறோம். மேலும் இந்தத் தகுதியானது கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் நாம் கொண்டிருக்கிற ஐக்கியத்தினால் மட்டுமே நமக்குக் கிடைத்தது. நாம் அன்பானவருக்குள் சிறப்பைப் பெற்றி ருக்கிறோம். நம்மிடத்தில் காணப்படும் எந்தத் தகுதியினாலும், அது நாம் இரட்சிக்கப்படு வதற்கு முந்தி இருந்ததோ, இரட்சிக்கப்பட்ட பின் பெற்றதோ, எதுவாயிருந்தாலும் அதனை நாமாகவே பெறவில்லை. ஆனால் நாம் நன் னெறி சார்ந்தவற்றில் மேதகைமை பெற்று இறை யரசின் "தகுதியுள்ள குடிமக்களாக" மாற்றம் பெறும் பொருட்டு தேவன் நம்மை உபத்திரவங் களின் வழியாகவும் துன்பங்களின் ஊடாகவும் செல்லும்படி அனுமதிக்கிறார்.
>
> இயேசுவின் திருப்பெயருக்காகப் பாடு அனுப விக்கத் தகுதியுள்ளவர்களாகக் கருதப்பட்டதன் பொருட்டு அப்போஸ்தலரில் சிலர் களிகூர்ந் தார்கள். தெசலோனிக்கேயர் தாங்கள் பெற்ற அழைப்புக்குத் தகுதியானவர்களாக தேவனால் கணக்கிடப்படவேண்டும் என்று பவுல் ஜெபம் பண்ணிய போது, கிறிஸ்துவின் செயலோடு எதையும் அவர்கள் சேர்க்கவேண்டும் என்று அவர் நிச்சயமாகக் கூறவில்லை. விசுவாசியை இறையரசிற்குத் தகுதியானவனாக ஆக்குவது கிறிஸ்துவின் சிலுவையேயாகும். ஆனால் உபத்திரவம் அடையும் வேளையில் அவர்கள் காண்பிக்கிற பொறுமையும் விசுவாசமும் அவர்கள் முறைப்படி அதற்குத் தகுதியான வர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. பூமிக் குரிய வேறு எந்தச் சமுதாயத்திலும் அங்கத் தினர்களாக இருப்பவர்களில் சிலர் அவ மானத்தை ஏற்படுத்துகிறவர்களாக இருப்பார் கள். ஆனால் இந்தப் பரிசுத்தவான்களுக்குள் ளாக அப்படிப்பட்ட நிலை காணப்படலாகாது என்று பவுல் மன்றாடுகிறார்.[2]

ஆ. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு (1:6–10)

1:6 தேவனுடைய நீதியான நடவடிக்கையை இரண்டு வழிகளில் காணமுடியும். ஒன்று துன்புறுத்து கிறவர்களுக்கு தண்டனை, மற்றது துன்பப்படுத் தப்படுகிறவர்களுக்கு இளைப்பாறுதல்.

வில்லியம்ஸ் என்பார் கூறுகிறார்:

> தம்முடைய மக்கள் துன்பப்படுவதற்கு தேவன் அனுமதிக்கிறார், மேலும் துன்புறுத்துகிறவர் கள் தொடர்ந்து வாழவும் அவர் அனுமதிக் கிறார், தேவனுடைய இந்தச் செயல் இருவித நோக்கமுடையது – முதலாவது, தம்முடைய மக்கள் இறையரசிற்குத் தகுதியுள்ளவர்களா என்பதைச் சோதித்துப் பார்ப்பது (வச. 5) இரண் டாவது, அவர்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் தண்டனை அடைவதற்குத் தகுதியானவர்கள் என்பதை மெய்ப்பிப்பது.[3]

தம்முடைய மக்களின் பகைஞருக்கு தேவன் எவ்வாறு தண்டனையைக் கொடுக்கப்போகிறாரோ, அதுபோலவே அவருக்காகப் பாடுபடுகிறவர் களுக்கு அவர் **இளைப்பாறுதலைத்** தருவார்.

இந்த வசனத்திலிருந்து, ஜ்வாலித்து எரிகிற அக்கினியோடு கிறிஸ்து வரும்வரை பாடுகள் அனுபவிக்கிற பரிசுத்தவான்கள் சோதனையிலி ருந்து விடுதலை பெறமாட்டார்கள் என்பதுதான் பொருளென்று நாம் முடிவு செய்துவிடக் கூடாது. ஒரு விசுவாசி சாகும்போது, அவன் இளைப்பாறு தலைப் பெறுகிறான். உயிருடன் வாழ்ந்து கொண்டி ருக்கிற பரிசுத்தவான்கள் எல்லாவிதமான நெருக் கடியான சூழ்நிலைகளிலிருந்தும் விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் தருணத்தில் இளைப் பாறுதலைப் பெறுவார்கள். கர்த்தராகிய இயேசு தம்முடைய பகைஞர் மீது நியாயத்தீர்ப்பை ஊற் றும்போது, பரிசுத்தவான்கள் இளைப்பாறுதலைப் பெற்றிருப்பதை இவ்வுலகம் காணும் என்றே இந்த வசனம் கூறுகிறது.

1:7,8 தேவனுடைய நீதியான பழிவாங்கும் நடவடிக்கையின் காலம், **கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடு வானத்திலி ருந்து வெளிப்படும்** காலமேயாகும். அவருடைய வருகையில், அக்கிரமக்காரருக்கு உரிய தண்ட னையும், விசுவாசிகளுக்கு **இளைப்பாறுதலும்** காணப்படும். கிறிஸ்துவின் வருகையின் எந்தக்

கட்டம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது? தம்முடைய பரிசுத்தவான்களோடு இவ்வுலகிற்கு வந்து தம்மை வெளிப்படுத்துகின்ற மூன்றாவது கட்டத்தையே இந்தப் பகுதி குறிப்பிடுகின்றது என்பது தெளிவு.

விசுவாசிகள் வானிற்கு எடுத்துக்கொள்ளப்படுதலும் கிறிஸ்து வெளிப்படுதலும்

"விசுவாசிகள் வானிற்கு எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியும் கிறிஸ்து வெளிப்படும் நிகழ்ச்சியும் வெவ்வேறானவை என்பது உங்களுக்கு எவ்வாறு தெரியும்?" என்று ஒருவர் வினவலாம். அவை யிரண்டும் வெவ்வேறானவை என்று திருமறை கீழ்க்காணும் வண்ணம் வேறுபடுத்திக் காட்டுகிறது:

விசுவாசிகள் வானிற்கு எடுத்துக் கொள்ளப்படுதல்	கிறிஸ்து வெளிப்படுதல்
1. கிறிஸ்து ஆகாயத்தில் இறங்கிவருகிறார் (1 தெச. 4:17).	1. அவர் பூமிக்கு வருகிறார் (சக. 14:14).
2. அவர் தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வருகிறார் (1 தெச. 4:16,17).	2. அவர் தம்முடைய பரிசுத்தவான்களோடு வருகிறார் (1 தெச. 3:13; யூதா 14).
3. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி ஓர் இரகசியம். அதாவது, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அது அறியப்படவில்லை (1 கொரி. 15:51).	3. கிறிஸ்து வெளிப்படுதல் இரகசியமல்ல, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது (சங். 72; ஏசாயா 11; சக. 14).
4. கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வரும் நிகழ்ச்சி, வானத்தில் சில அறிகுறிகள் ஏற்பட்ட பின்னரே நிகழும் என்று சொல்லப்படவில்லை.	4. கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுடன் வரும் நிகழ்ச்சி, வானத்தில் உண்டாகும் சில அறிகுறிகளால் முன்னறிவிக்கப்படும் (மத். 24:29,30).
5. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி கிறிஸ்துவின் நாளோடு இணைத்துச் சொல்லப்படுகிறது (1 கொரி. 1:8; 2 கொரி. 1:4; பிலி. 1:6,10).	5. கிறிஸ்து வெளிப்படுதல் கர்த்தருடைய நாளுடன் இணைத்துப் பேசப்படுகிறது (2 தெச. 2:1-12 - நடுநிலைப்பிரதி).
6. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி ஆசிர்வாத வேளையாக விளங்கும் (1 தெச. 4:18).	6. கிறிஸ்து வெளிப்படுதலில் முக்கியமாக ஆக்கினை வலியுறுத்தப்படுகிறது (2 தெச. 2:8-12).
7. ஒரு கண் இமைக்கும் பொழுதில் விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (1 கொரி. 15:51). உலகம் இதனைக் காணாது என்பதை இது உறுதிப்படுத்துகிறது.	7. கிறிஸ்து வெளிப்படும் நிகழ்ச்சியை இவ்வுலகம் முழுவதும் காணும் (மத். 24:27; வெளி. 1:7).
8. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி முதன்மையாக சபையோடு தொடர்புடையது (யோவான் 14:1-4; 1 கொரி.15:51-58; 1 தெச. 4:13-18).	8. கிறிஸ்துவின் வெளிப்பாடு முதன்மையாக இஸ்ரவேலுடன் தொடர்புடையது; பின்னரே புறவின நாடுகளுடனும் தொடர்புடையதாக விளங்கும் (மத். 24:1-25:46).
9. கிறிஸ்து பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாக வெளிப்படுவார் (வெளி. 22:16).	9. கிறிஸ்து வெளிப்படும்போது, தமது செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தைக் கொண்டிருப்பவராக, நீதியின் சூரியனாக உதிப்பார் (மல். 4:2).
10. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி, ஒத்த பொருளுடைய நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் யோவான் நற்செய்தி நூலில் அதைப் பற்றிய பல குறிப்புகள் உள்ளன.	10. ஒத்த பொருளுடைய நற்செய்தி நூல்களில் கிறிஸ்து வெளிப்படுதல் குறிப்பிடத்தக்க அளவு காணப்படுகிறது. ஆனால் அது யோவான் நற்செய்தி நூலில் குறிப்பிடப்படவேயில்லை.

11. எடுத்துக்கொள்ளப்படுபவர்கள் ஆசிர்வாதத்திற்கென்று எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1 தெச. 4:13-18). விடுபடுபவர்கள் நியாயத்தீர்ப்புக்கென்று விடப்படுவார்கள் (1 தெச. 5:1-3).	11. எடுத்துக்கொள்ளப்படுபவர்கள் நியாயத்தீர்ப்புக்கென்று எடுத்துக்கொள்ளப்படுவார்கள். விடப்படுபவர்கள் ஆசிர்வாதத்திற்கென்று விடப்படுவார்கள் (மத். 24:37-41).
12. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சிக்கு முன்னர் நடைபெறுபவை பற்றிய குறிப்புகள் என்று எதுவும் திருமறையில் சொல்லப்படவில்லை.	12. கிறிஸ்து வெளிப்படுவதைக் குறித்து விரிவான நாட்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 1260 நாட்கள், 42 மாதங்கள், 31/2 ஆண்டுகள் போன்ற குறிப்புகளைக் காணலாம் (தானி. 7:25; 12:7, 11, 12; வெளி. 11:2; 12:14 13:5 -ஆகிய வசனங்களைக் காண்க).
13. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறும் வேத பகுதிகளில், "மனித குமாரன்" என்னும் பெயர் சொல்லப்படவேயில்லை.	13. கிறிஸ்துவின் வெளிப்பாடு மனித குமாரனின் வருகை என்று சொல்லப்பட்டுள்ளது (மத். 16:28; 24:27,30,39; 26:64; மாற்கு 13:26; லூக்கா 21:27).

இவ்விரு நிகழ்ச்சிகளும் வெவ்வேறானவை என்பது உண்மையே என ஒப்புக்கொள்வோம். ஆனாலும் இவையிரண்டும் ஏறத்தாழ ஒரே நேரத்தில் நடைபெறாவென்பதை நாம் எவ்வாறு அறிவோம்? இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடையே ஓர் இடைவெளி இருக்கும் என்பதை நாம் எவ்வாறு அறிவோம்? மூன்று வழிகளில் இதற்கான சான்றினை நாம் குறிப்பிடலாம்:

1. முதலாவது சான்று எழுபது வாரங்களைக் குறித்து தானியேல் உரைத்த தீர்க்கதரிசனம் (தானி. 9:25-27). நாம் இப்பொழுது 69 -ஆவது வாரத்திற்கும் 70 -ஆவது வாரத்திற்கும் இடைப்பட்ட காலமாகிய சபையின் காலக்கட்டத்தில் வாழ்கிறோம். எழுபதாவது வாரம் எனப்படுவது ஏழு ஆண்டுகள் கொண்ட உபத்திரவ காலமாகும். உபத்திரவ காலத்திற்கு முன்பே சபையானது தனது வீடாகிய விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் (ரோமர் 5:9; 1 தெச. 1:10; 1 தெச. 5:9; வெளி. 3:10). கிறிஸ்து ஆட்சிபுரிவதற்காக வரும் நிகழ்ச்சி எழுபதாவது வாரத்திற்குப் பிந்தி நிகழும் (தானி. 9:24; மத். 24).
2. விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சிக்கும், கிறிஸ்து வெளிப்படும் நிகழ்ச்சிக்கும் இடையே ஒரு கால இடைவெளி இருக்கும் என்பதற்கான இரண்டாவது சான்றாக வெளிப்படுத்தின விசேஷத்தின் அமைப்பு விளங்குகிறது. முதல் மூன்று அதிகாரங்களில் சபையானது இவ்வுலகத்தில் காணப்படுகிறது. 4- ஆவது அதிகாரம் தொடங்கி 19:10 -வரை உபத்திரவ காலம் விவரிக்கப்பட்டிருக்கிறது; அந்தச் சமயத்தில்தான் தேவனுடைய கோபாக்கினை அவருடைய குமாரனை ஏற்கமறுத்த உலகத்தின்மீது பொழியப்படும். அந்தக் காலத்தில் சபை பூமியில் இருக்கும் என்பதாக எந்தக் குறிப்பும் அங்கு சொல்லப்படவில்லை. மூன்றாவது அதிகாரத்தின் முடிவில் சபை வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பது தெளிவாய்த் தெரிகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 19:11 -இல் கிறிஸ்து எதிரிகளை வென்று கீழ்ப்படுத்தி, தமதரசை நிறுவுவதற்காக பூமிக்கு இறங்கி வருவார் என்னும் செய்தி கூறப்பட்டிருக்கிறது. இந்நிகழ்ச்சி உபத்திரவ காலத்தின் முடிவில் நிகழும்.
3. கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வருகிற நிகழ்ச்சிக்கும், பரிசுத்தவான்களோடு வருகிற நிகழ்ச்சிக்கும் இடையில் ஒரு கால இடைவெளி இருக்கும் என்பதைக் கருத்திற்கொள்ளச் செய்யும் மூன்றாவது சான்றினைக் காணலாம். விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியின்போது, விசுவாசிகள் யாவரும் உலகினின்று எடுக்கப்பட்டு, அவர்களுக்கு மகிமையின் சரீரங்கள் கொடுக்கப்படும். எனினும் கிறிஸ்து ஆட்சிபுரியும்படி இவ்வுலகிற்குத் திரும்பி வருகிறபோது, அதாவது ஆயிரமாண்டு ஆட்சியில் இன்னும் மகிமையின் சரீரத்தைப் பெறாமல், திருமணம் செய்து பிள்ளைகளைப் பெறக்கூடிய விசுவாசிகள் இருப்பார்கள் (ஏசா. 11:6,8). இந்த விசுவாசிகள் எங்கிருந்து வருகிறார்கள்? சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கும், கிறிஸ்து வெளிப்படுவதற்கும் இடையில் மனந்திரும்பும் மனிதர்களே இவர்கள்.

இப்பொழுது 8 -ஆவது வசனத்தை நோக்கித் திரும்புவோம். **கர்த்தராகிய இயேசு** வல்லமை

யோடும் பெரிதான மகிமையோடும் வருகிறதை அங்கு நாம் காண்கிறோம். **தூதர்கள்** அவருடனிருப்பார்கள், அவர்கள் மூலமாக அவருடைய வல்லமை தீவிரமாய்ச் செயல்படுத்தப்படும்.

ஜ்வாலித்து எரிகிற அக்கினி செக்கினா மகிமையைக் குறிக்கக்கூடும், தேவனுடைய சமுகத்திற்கு அடையாளமான மகிமையின் மேகமே அந்த செக்கினா மகிமையாகும் (யாத். 16:10). அல்லது வெகு விரைவில் கட்டவிழ்த்துவிடப்படும் கடுமையான நியாயத்தீர்ப்பிற்கு ஒரு சித்திரமாக அது இருக்கலாம் (சங். 50:3; ஏசா. 66:15). பெரும்பாலும் அது இரண்டாவதாகச் சொல்லப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது.

தேவன் ஆக்கினையைச் செலுத்தும்போது, அது கெடு நோக்குடையதாக இருக்காது, மாறாக அது நீதியுள்ள பிற்செயலாக விளங்கும். "பழிவாங்குதல்" என்னும் எண்ணத்திற்கு அங்கே இடமில்லை, மாறாக அது அவருடைய பரிசுத்தம், நீதி ஆகிய பண்புகளின் காரணமாக அளிக்கப்படும் தண்டனையாகவே இருக்கும். துன்மார்க்கரின் சாவை அவர் விரும்புகிறதில்லை (எசே. 18:32).

தவறு செய்தமைக்குத் தண்டனையைப் பெறக்கூடிய மக்களை இரண்டு வகுப்புகளாகப் பிரித்து விவரிக்கிறார் பவுல்:

1. **தேவனை அறியாதவர்கள்** - படைப்பு மற்றும் மனசாட்சி ஆகியவற்றின் மூலமாக, வெளிப்படுத்தப்பட்டுள்ள மெய்யான தேவனைக் குறித்த அறிவை ஏற்க மறுத்தவர்கள் (ரோமர் 1,2). அவர்கள் ஒருக்காலும் சுவிசேஷத்தைக் கேட்டிருக்க மாட்டார்கள்.

2. **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்** - இவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு அதனை ஏற்க மறுத்தவர்கள். விசுவாசிக்கப்பட வேண்டிய உண்மைகளை வெறுமனே தொகுத்துத் தருகின்ற அறிக்கையே சுவிசேஷம் என்று எண்ணலாகாது. அதற்கு ஒவ்வொரு மனிதனும் கீழ்ப்படிய வேண்டும். புதிய ஏற்பாட்டில் விசுவாசித்தல் என்னும் சொல் கீழ்ப்படிதல் என்னும் பொருளையும் உட்கொண்டதாக இருக்கிறது.

1:9,10 அவர்கள் தண்டனையை அடைவார்கள். பாவத்தைத் தண்டிக்காத ஒரு கடவுள் கடவுளே அல்ல. தேவன் அன்புடையவர், ஆகவே அவர் பாவத்தைத் தண்டிக்க மாட்டார் என்னும் கருத்து, தேவன் பரிசுத்தர் எனவே அவர் நீதியைச் செய்ய வேண்டும் என்னும் உண்மையைக் காணத் தவறிவிடுகிறது.

தரப்படவிருக்கிற தண்டனையின் இயல்பு எப்படிப்பட்டது என்பதை **நித்திய அழிவாகிய தண்டனை** என்னும் சொற்றொடர் விவரிக்கிறது. ஆதிகாலமுதல் (*aionios*) என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் எழுபது தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது. மூன்று இடங்களில் அச்சொல் "ஒரு குறிப்பிட்ட கால அளவைக்" குறிப்பிடும்படியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 16:25; 2 தீமோ. 1:9; தீத்து 1:3). மற்ற இடங்களில் அச்சொல் நித்தியம் அல்லது முடிவில்லாத காலம் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரோமர் 16:25 -இல் தேவன் முடிவில்லாமல் நிலைத்திருக்கிறவர் என்று விவரிக்கும்படி அச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அழிவு என்னும் சொல் ஒன்றுமில்லாமல் நிர்மூலமாகும் என்னும் பொருளைத் தருகிறதில்லை. தொடர்ந்து நிலைத்திருப்பதன் நோக்கத்தைப் பொருத்தமட்டில் நல்வாழ்வு செல்வச் செழிப்பு ஆகியவற்றை இழந்துவிடுதல் அல்லது பாழடைந்துபோவது என்னும் பொருளையே அச்சொல் கொண்டிருக்கிறது. லூக்கா 5:37 -இல் கர்த்தராகிய இயேசு குறிப்பிட்டுள்ள துருத்திகள் "கெட்டுப் போயின" (அதே சொல் இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது). அந்தத் துருத்திகள் இல்லாமல் போகவில்லை, தொடர்ந்து பயன்படுத்தக் கூடாதபடி அவை கெட்டுப்போயின என்னும் பொருளிலேயே அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உபத்திரவ காலத்திற்குப் பின்னரே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று கருதுபவர்கள் தங்களுடைய கருத்தை வலியுறுத்தும் பொருட்டு இந்த வசனத்தை அவ்வப்போது பயன்படுத்துகிறார்கள். கிறிஸ்து தமது ஆட்சியை இவ்வுலகில் நிறுவுவதற்காக வருவதற்கு முன்னர் விசுவாசிகள் இளைப்பாறுதலைப் பெறமாட்டார்கள் மற்றும் உபத்திரவப்படுத்துபவர்கள் தண்டனை அடையமாட்டார்கள் என்று இந்தப் பகுதி கூறுவதாக அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இது ஐயத்திற்கு இடமற்றபடி உபத்திரவ காலத்தின் இறுதியில் நடை பெறப்போகிற நிகழ்ச்சியாகும்; ஆகவே உபத்திரவ காலத்திற்குப் பின்னரே சபை எடுத்துக் கொள்ளப்படும், அதுவே விசுவாசிகளின் நம்பிக்கை என்று அவர்கள் முடிவுசெய்கிறார்கள்.

இந்த மடல் தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்டது, அவர்கள் யாவரும் இறந்து போய்விட்டார்

கள், மேலும் அவர்கள் ஏற்கனவே விண்ணகத்தில் கர்த்தருடைய இளைப்பாறுதலை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் மேற் கூறிய கருத்துடையோர் கவனிக்கத் தவறிவிடு கிறார்கள். அதுபோலவே அவர்களைக் கொடு மைப்படுத்தியவர்கள் எல்லோரும் இறந்துபோய் விட்டார்கள், மேலும் அவர்கள் பாதாளத்தில் ஏற் கனவே பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக் கிறார்கள்.

இவ்வாறிருக்க, வல்லமையோடும் பெரிதான மகிமையோடும் கிறிஸ்து இவ்வுலகிற்குத் திரும் பவும் வருகிறதற்கு முன்னர் இந்தச் சூழ்நிலைகள் உண்டாகா என்று பவுல் கூறுவதன் காரண மென்ன? இந்தச் சூழ்நிலைகள் யாவும் *உலகத் தில் வெளியரங்கமாக* அந்தக் காலத்தில்தான் வெளிப்படும் என்பதே அதன் காரணமாகும். அப் பொழுது தெசலோனிக்கேயர் நேர்மையாய்ச் செய்தார்கள் என்பதையும், அவர்களைக் கொடு மைக்குள்ளாக்கியவர் தவறிழைத்தவர்கள் என்ப தையும் இந்த உலகம் காணும். கிறிஸ்து மகிமை யில் வெளிப்படும்போது, பரிசுத்தவான்கள் யாவ ரும் இளைப்பாறுதலை அனுபவித்தவர்களாக அவருடன் வருவார்கள் என்பது வெளியரங்கமாகக் காணப்படும். உபத்திரவ காலத்தின் முடிவில் கர்த்தரின் பகைவர் அழிக்கப்படும் நிகழ்ச்சி, எல்லாக் காலங்களிலும் தேவனுடைய மக்க ளைக் கொடுமைப்படுத்திய அனைவரும் அழிந்து போவார்கள் என்பதற்கு வெளியரங்கமான காட்சி யாக விளங்கும்.

கிறிஸ்து ஆளுகை செய்யும்படி வரும் நிகழ்ச்சி யானது ஒரு *வெளிப்பாடாக* இருக்கும் என்பதை நாம் நினைவுகூருவதற்கு இது உதவி செய்யும். எல்லாக் காலத்திலும் உண்மையாய் இருந்ததை இந்த உலகம் காணும்படி, அதன் திரை விலக் கப்படும். சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி யைப் பொருத்தமட்டில் இங்கு சொல்லப்பட்டுள்ள வற்றில் எதுவும் நிகழாது.

கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையி லிருந்தும் துரத்தப்படுதல் துன்மார்க்கர் அடைய விருக்கிற தண்டனையின் ஒரு பங்காக இருக்கும். அவரில்லாமல் அழிந்துபோவதென்பது, என்றென் றும் அவரில்லாத நிலையையே குறிக்கும்.

அவருடைய வருகை கர்த்தருக்கு மகிமை யின் நேரமாகவும், அந்நிகழ்ச்சியைக் காண் போருக்கு திகைப்பாகவும் விளங்கும்.

அவர் **தம்முடைய பரிசுத்தவான்களில்** மகி மைப்படுவார், அதாவது அவர்களிடத்திலும் அவர் கள் மூலமாகவும் அவர் செய்த செயல்களின் காரணமாக அவர் புகழப்படுவார். அவர்களுடைய இரட்சிப்பு, அவர்கள் பரிசுத்தவான்களாக மாற்றம் அடைந்தது, அவர்கள் மகிமைப்படுத்தப்பட்டது யாவும் அவருடைய ஒப்பற்ற கிருபைக்கும் வல்ல மைக்கும் கிடைத்த புகழுரையாகக் காணப்படும்.

விசுவாசிக்கிறவர்கள்[4] **எல்லோரிடத்திலும்** அவர் **ஆச்சரியப்படத்தக்கவராக** விளங்குவார். வெற்றிவாய்ப்பு எதுவுமில்லாதவர்களாக இருந்த மனிதர்களிடத்தில் அவர் எவ்வளவு திறம்பட செயல்புரிந்திருக்கிறார் என்பதைக் காண்போர் திகைப்பில் மூழ்கிப்போனவர்களாக மூச்சுத்திண றிப் போவார்கள்.

அப்போஸ்தலனின் **சாட்சியைச்** தெசலோனிக் கேயர் ஏற்றுக்கொண்டு விசுவாசித்ததன் காரண மாக, அவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கு வகிப் பார்கள். அவர்கள் **அந்நாளின்,** அதாவது, இயேசு கிறிஸ்து வெளிப்படும் நாளின் மகிமை யிலும் வெற்றியிலும் பங்குபெறுவார்கள்.

மேற்கூறியவற்றை நாம் ஆய்வு செய்யும் வகையில் 5 முதல் 10 வரையிலான வசனங் களைப் பொழிப்புரையாகத் தருகிறோம்: "துன்பங் களின் நடுவில் நீங்கள் குறிப்பிடத்தக்க வகை யில் பொறுமையைக் கைக்கொண்டீர்கள். இவை எல்லாவற்றிலும் தேவன் தம்முடைய நீதியான நோக்கங்களை நிறைவேற்றுகிறவராக இருக் கிறார். உங்களுக்கு ஏற்பட்ட சகல துன்பங்களை யும் நீங்கள் நீடிய பொறுமையுடன் சகித்துக் கொண்டதன் காரணமாக, கிறிஸ்து ஆட்சி செலுத்தும்படி வரும்போது, அந்த வருகையின் மகிமையில் பங்குபெறும் மக்கள்கூட்டத்தில் நீங்களும் இடம்பெறுவீர்கள். ஒருபுறம் உங்க ளுக்குத் தொல்லை தருபவர்கள்மேல் தேவன் தம்முடைய ஆக்கினையைப் பொழிவார். மறு புறம், இப்பொழுது தொல்லை அனுபவிப்பவர் களாகிய நீங்கள் எங்களுடன் - அதாவது பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகியோருடன் அவர் தருகிற இளைப்பாறுதலைப் பெறுவீர்கள். கர்த்தர் தம்முடைய வல்லமையாகிய எரிகிற அக்கினி ஜ்வாலையினாலே நியாயத்தீர்ப்பைச் செலுத்து கிற தேவதூதர்களுடன் வானத்திலிருந்து இறங்கி வந்து உங்களுடைய பகைஞரைத் தண்டிப்பார். இவர்கள் முடிவுறா அழிவை அடைவார்கள், அது கர்த்தருடைய முகத்தைவிட்டும், அவருடைய வல்லமையின் பிரசன்னத்தைவிட்டும் துரத்துவ

தாகவும் இருக்கும். அதே நேரத்தில், நாங்கள் பிரசங்கித்த நற்செய்தியை விசுவாசித்த நீங்கள் உட்பட எல்லா விசுவாசிகளினிடத்திலும் அவர் மகிமைப்படுவார்."

இ. பரிசுத்தவான்களுக்காகப் பவுல் ஏறெடுத்த மன்றாட்டு (1:11,12)

1:11,12 இதற்கு முந்தின வசனங்களில் பரிசுத்தவான்கள் பெற்ற மகிமை நிறைந்த அழைப்பைக் குறித்து அப்போஸ்தலன் விவரித்துக் கொண்டிருந்தார். இறையரசில் ஆளுகை செய்வதற்குத் தகுதியானவர்களாக அவர்களை மாற்றக்கூடிய துன்பங்களை அனுபவிக்கும்படி அவர்கள் அழைக்கப்பட்டார்கள். இப்பொழுது, அவர்கள் பெற்ற பரம **அழைப்புக்குப் பாத்திரராக** அவர்களுடைய வாழ்க்கை கணக்கிடப்பட வேண்டுமென்றும், தங்களுடைய ஒவ்வொரு செயல் ஊக்கத்திலும் நன்மை செய்யும்படியாக அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும், அவர்கள் பொறுப்பெடுத்துக்கொண்ட ஒவ்வொரு கடமையையும் விசுவாசத்தில் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்றும் அவர் மன்றாடுகிறார்.

இதனுடைய விளைவு இரண்டு வகையானது. முதலாவது, அவர்களிடத்தில் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட வேண்டும்** என்பதாகும். இந்த உலகத்தில் அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் பிழையற்ற பிரதிநிதிகளாக விளங்கி அவருக்குப் புகழ்ச்சியைக் கொண்டுவர வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இரண்டாவதாக, அவர்களுங்கூட **அவரிடத்தில் மகிமைப்பட** வேண்டும். அவருடன் அதாவது அவர்களுடைய சிரசுடன் அவர்கள் கொண்டிருக்கிற ஐக்கியம், அந்தச் சரீரத்தின் அவயவங்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்னும் மேன்மையைக் கொண்டுவரும்.

நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின் மூலமாக மட்டுமே, மன்றாட்டுக்கு விடை அளிக்கப்படும் என்னும் நினைவுறுத்தலோடு முதல் அதிகாரம் முடிவடைகிறது. விசுவாசிகளின் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய துன்பங்கள் எவ்வித அர்த்தமுடையவை, அவற்றால் உண்டாகும் விளைவுகள் எவை என்னும் வியத்தகு விளக்கத்தோடு அவர் இதனை முடிக்கிறார். அவர்களுடைய ஐயத்தையும் அச்சத்தையும் போக்கக்கூடிய செய்தியைக் கொண்ட மடலைப் படித்த தெசலோனிக்கேயர் எவ்வளவாக உற்சாகமடைந்திருப்பார்கள் என்பதைக் கற்பனை செய்துபாருங்கள்!

3. கர்த்தருடைய நாளைக் குறித்த செய்தி (2:1-12)

அ. நிலைத்திருக்கும்படி வேண்டுதல் செய்தல் (2:1,2)

2:1 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும், கர்த்தருடைய நாளைக் குறித்தும் பரிசுத்தவான்களின் உள்ளங்களில் உண்டாயிருந்த தவறான கருத்துக்களை நீக்கிச் சரிசெய்யும் வேலையை இப்பொழுது பவுல் மேற்கொள்கிறார். தாங்கள் ஏற்கனவே கர்த்தருடைய நாளின் முதல் கட்டத்திற்குள், அதாவது உபத்திரவ காலத்திற்குள் இருப்பதாக நினைக்கச் செய்யும் அளவிற்கு அந்தப் பரிசுத்தவான்கள் கடுமையான உபத்திரவங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அப்போஸ்தலனே கர்த்தருடைய நாள் வந்துவிட்டதாக நம்பினார் என்றும், அவ்வாறு கற்பித்தார் என்றும் எங்கும் வதந்தி பரவியிருந்தது. ஆகவே, எது சரியானது என்று கூறி இவற்றைக் குறித்த செய்தியை உறுதி செய்ய வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது.

முதல் வசனத்தில் பவுல் பயன்படுத்தியிருக்கிற "**குறித்து**" (Gk. *huper*) என்னும் சிறிய சொல்லைப் பற்றிய ஓர் இக்கட்டான கேள்வி எழுகிறது. நம்முடைய **கர்த்தருடைய வருகையைப் *பற்றியா*** அல்லது **கர்த்தருடைய *வருகையினாலா*** இவ்வாறு அவர் பரிசுத்தவான்களை வேண்டிக் கொள்கிறார் என்பதே அந்தக் கேள்வி. முதலில் சொல்லப்பட்டிருப்பதே இதனுடைய சரியான பொருள் எனக்கொள்வோம் எனில், விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சியும் கர்த்தருடைய நாளும் ஒரே நிகழ்ச்சிதான் என்றாகிவிடும்; ஏனெனில் இதனைத் தொடர்ந்து வருகின்ற வசனங்கள் கர்த்தருடைய நாளைக் குறித்தே பேசுகின்றன என்பது தெளிவாய்க் காணப்படுகிறது. இரண்டாவதாக சொல்லப்பட்டிருப்பதே இதனுடைய பொருள் எனக்கொள்வோமெனில், சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி முதலிலேயே நடந்து முடிந்து விடும் என்னும் காரணத்தினால், அவர்கள் கர்த்தருடைய நாளுக்குள் இருப்பதாகத் தவறாக நினைக்கக் கூடாது என்பதே இங்கு கூறப்படும் செய்தியாகும். இந்தக் கேள்வி சர்ச்சைக்குரியது திருவாளர் வில்லியம் கெல்லி இரண்டாவது பொருளே சரியானது எனக்கூறுகிறார். அதனையே நாமும் சரியென்று ஒப்புக்கொள்கிறோம்.

> கர்த்தருடைய நாள் வந்துவிட்டது என்னும் தவறான கருத்து ஏற்படுத்திய விசனத்தை எதிர்த்துச் செயல்படுவதற்கான வழிவகையாகவும் நோக்கமாகவும் நம்முடைய கர்த்தரின் வருகை

யைப் பற்றிய செய்தி ஆறுதலின் செய்தியாக விளங்குகிறது.[5]

"சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நான் உங்களிடத்தில் முறையிடுகிறது என்னவெனில், நீங்கள் கர்த்தருடைய நாளைக் குறித்து அச்சமடையத் தேவையில்லை. சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி முதலில் நடைபெறவேண்டும். அந்த நேரத்தில் நீங்கள் விண்வீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவீர்கள். ஆகவே கர்த்தருடைய நாளின் திகிலூட்டும் நிகழ்ச்சிகளைக் குறித்து நீங்கள் அச்சமடையத்தேவையில்லை" என்று பவுல் இப்பகுதியில் கூறுவதாகவே நாம் புரிந்துகொள்கிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் **அவரிடத்தில் சேர்க்கப்படுவதையும்** குறித்து என்னும் சொற்றொடர் ஐயத்திற்கு இடமற்றபடி சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியையே குறிக்கிறது. அப்பொழுது அவரைச் சந்திக்கும்படி நாம் வானில் அவரோடு சேர்க்கப்படுவோம்.

2:2 சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியும் கர்த்தருடைய நாளும் ஒன்றல்ல. கர்த்தர் வந்துவிட்டார் என்று எண்ணி தெசலோனிக்கேயர் கவலைப்படவில்லை; அவர் வரவில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால் கர்த்தருடைய நாள் தொடங்கி விட்டது என்றே அவர்கள் கவலைப்பட்டார்கள். அவர்கள் அடைந்த கடுமையான துன்பம் கர்த்தருடைய நாளின் முதலாவது கட்டத்திற்குள் தாங்கள் இருப்பதாக அவர்களை எண்ணச் செய்தது.

கர்த்தருடைய நாள் வந்துவிட்டதாகப் பவுல் சொன்னதாக ஒரு வதந்தி அவர்களுக்குள்ளாகப் பரவியிருந்தது. பெரும்பாலான வதந்திகளைப் போன்றே இதுவும் திரித்துக் கூறப்பட்டதாக இருந்தது. பவுல் இந்தச் செய்தியை **ஆவியின்** மூலமாகப் பெற்றுக்கொண்டார் என ஒரு சாரார் கூறிவந்தனர், அதாவது அவர் ஒரு சிறப்பான வெளிப்பாட்டின் மூலமாக இதைப் பெற்றுக் கொண்டார் என்று அவர்கள் கூறினார்கள். வேறு சிலர் இச்செய்தியானது **வார்த்தையின்** மூலமாக வந்தது என்று கூறினார்கள். அதாவது, உபத்திரவ காலம் தொடங்கிவிட்டது என்று அப்போஸ்தலன் கற்பித்ததாக அவர்கள் கூறினார்கள். **எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது** என்னும் சொற்றொடர், கர்த்தருடைய நாள் வந்துவிட்டது என்று பவுல் எழுதியதாக எண்ணப்பட்ட ஒரு போலியான மடலைக் குறிக்கிறது என்ற பொதுவான ஒரு கருத்து நிலவுகிறது. எங்களிடத்திலிருந்து வந்ததாகத் தோன்றுகிற என்னும் சொற்றொடர் ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, நிருபத்தினாலாவது என்னும் மூன்றோடும் தொடர்புடையதாகும். ஆனால் இந்த ஆதாரங்களில் எதுவும் நம்புதற்குரியதல்ல.

கிறிஸ்துவினுடைய நாள் வந்துவிட்டது (தமிழில் சமீபமாயிருக்கிறது என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது) என்றே KJV, NKJV ஆகியவை இந்தச் சொற்றொடரை மொழிபெயர்த்திருக்கின்றன. (பெரும்பான்மைப் பிரதியைப் பின்பற்றி இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழிலும் **கிறிஸ்துவினுடைய நாள்** என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) கிறிஸ்துவின் நாள் மற்றும் இதுபோன்ற சொற்றொடர்கள் பொதுவாக, சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியையும், கிறிஸ்துவின் நியாயாசனத்தையுமே சுட்டிக்காட்டக் கூடியவை (1 கொரி. 1:8; 5:5; 2 கொரி. 1:14; பிலி. 1:5,11; 2:15,16).

ஆனால் கிறிஸ்துவின் நாள் சமீபமாயிருக்கிறது என்று தெசலோனிக்கேயர் அச்சமடையவில்லை. அவர்களுடைய பாடுகளிலிருந்து அந்நிகழ்ச்சி அவர்களுக்கு விடுதலையைத் தரும் என்பதல்லவா அதனுடைய பொருள். உபத்திரவ காலத்திற்கு முந்தி சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று கருதுவோரில் பெரும்பாலோர் "கர்த்தருடைய நாள் வந்துவிட்டது என்று சொல்லப்பட்டால்" என்னும் வாசகத்தையே (RV மொழி பெயர்ப்பு) மேம்பட்டதெனக் கூறுகிறார்கள்.[6] உண்மையில் தேவனுடைய **கோபாக்கினையின் நாள்** தொடங்கிவிட்டது என்று எண்ணியவர்களாகப் பவுலின் வாசகர்கள் அச்சமுற்றிருந்தார்கள்.

ஆ. பாவமனிதன் (2:3-12)

2:3 அவர்கள் **அந்த நாளுக்குள்ளாக** இருக்க முடியாது என்பதற்கான காரணத்தை அப்போஸ்தலன் இப்பொழுது விளக்கிக் கூறுகிறார். அதற்கு முந்தி சில நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும். மேலும் சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகே இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும்.

முதலாவதாக, **விசுவாச துரோகம்** நடைபெற வேண்டும்.[7] இதன் பொருள் என்ன? கிறிஸ்தவம் முற்றிலுமாகக் கைவிடப்படுதல் என்பதே இதன் பொருள் என நாம் நினைக்கக் கூடும், அதாவது கிறிஸ்தவ விசுவாசம் திட்டவட்டமாக நிராகரிக்

கப்படுதல் என்பதே இதன் பொருள் என நாம் நினைக்கக் கூடும்.

அதன் பிறகு உலகப்புகழ்பெற்ற ஒரு தலைவன் தோன்றுவான். அவனுடைய நடத்தையைப் பொருத்தமட்டில் அவன் பாவமனிதனாக அல்லது அக்கிரமக்காரனாக[8] இருப்பான், அதாவது, பாவத்தின் மற்றும் கலகத்தின் உருவமாகத் திகழ்வான். அவனுடைய முடிவைப் பொருத்தமட்டில், அவன் கேட்டின் மகனாக இருக்கிறான், அதாவது, நித்திய அழிவுக்கென்று அவன் நியமிக்கப்பட்டிருக்கிறான்.

உபத்திரவ காலத்தில் எழக்கூடிய பல முக்கியமான மனிதர்களைப் பற்றிய பல விவரங்கள் திருமறையில் காணப்படுகின்றன. ஒரே மனிதனுக்குப் பல பெயர்கள் பொருத்தமுடையவையாகக் காணப்படுகின்ற காரணத்தினால் இவன் யார் என்று அறிவது கடினம். யூத குலத்தைச் சேர்ந்த அந்திக்கிறிஸ்துவே பாவமனிதன் என்று சில விரிவுரையாளர்கள் கருதுகிறார்கள். ரோமப் பேரரசு மறுமலர்ச்சியடையும் என்றும் அதனுடைய தலைவனாகிய புறவினத்தவனே இவன் என்று வேறு சிலர் கருதுகிறார்கள். கடைசிக் காலத்தில் மிகப்பெரிய அரசர்களாக இருக்கும் சிலருடைய பெயர்கள் இங்கே தரப்பட்டுள்ளன:

- கேட்டின் மகனாகிய பாவமனிதன் (2 தெச. 2:3)
- அந்திக் கிறிஸ்து (1 யோவான் 2:18)
- சின்னக் கொம்பு (தானி. 7:8, 24-26)
- மூர்க்க குணமுடைய ராஜா (தானி. 8:23-25)
- வரப்போகிற பிரபு (தானி. 9:26)
- இஷ்டமானபடி செய்கிற ராஜா (தானி. 11:36)
- மந்தையைக் கைவிடுகிற மேய்ப்பன் (சக. 11:17)
- சமுத்திரத்திலிருந்து எழுந்துவருகிற மிருகம் (வெளி. 13:1-10)
- பூமியிலிருந்து எழுந்து வருகிற மிருகம் (வெளி. 13:11-17)
- ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் உடைய இரத்தாம்பரமான மிருகம் (வெளி. 17:4,8-14)
- வடதிசை ராஜா (தானி. 11:6)
- தென்றிசை ராஜா (தானி. 11:40)
- கள்ளத் தீர்க்கதரிசி (வெளி. 19:20; 20:10)
- மாகோகு தேசத்தானாகிய கோகு (எசே. 38:2-39:11) (ஆயிரமாண்டு ஆட்சிக்குப் பிறகு எழுகிற கோகுவோடு இவனை ஒன்றென நினைத்து நாம் குழப்பமடையக் கூடாது.)
- தன் சுய நாமத்தினாலே வருகிறவன் (யோவான் 5:43)

வெவ்வேறு காலங்களில், நம்முடைய ஆவலைக் கவருகிற வகையில், இவ்வுலகில் வாழ்ந்த பல்வேறுபட்ட மனிதர்களையும் அமைப்புகளையும் **பாவமனிதனோடு** சேர்த்து அவன்தான் இவன் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். அந்த மனிதர்கள் அல்லது அமைப்புகளின் பெயர் வருமாறு: ரோமன் கர்த்தோலிக்க சபை, போப், ரோமப் பேரரசு, விசுவாசத்தை நிராகரித்த கிறிஸ்தவ சமயத்தின் இறுதிநிலை, மறுபடியும் மனுவுருவில் வரும் யூதாஸ், மறுபடியும் மனுவுருவில் வரும் நீரோ மன்னன், லுத்தர், நெப்போலியன், முசோலினி, யூத நாடு, முகம்மது, ஓர் உருவத்தில் வரும் சாத்தான்.

2:4 தெய்வீக வழிபாட்டு முறைகள் அனைத்தையும் வன்மையாக எதிர்த்துநின்று, எருசலேமில் **தேவனுடைய ஆலயத்தில்** அவன் தன்னையே தேவனென்று முடிசூட்டிக் கொள்வான். இந்த விவரங்கள் அவன் அந்திக்கிறிஸ்து என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. அந்திக் கிறிஸ்து என்பவன் கிறிஸ்துவை *எதிர்த்துநின்று*, தன்னைக் கிறிஸ்துவின் ஸ்தானத்தில் *உயர்த்துபவன்*.[9]

உபத்திரவ காலத்தின் பாதி நாட்கள் சென்ற பின் அந்திக் கிறிஸ்துவின் இந்த தேவ நிந்தனைக் குரிய செயல் நடைபெறும் என்று தானியேல் 9:27 மற்றும் மத்தேயு 24:15 -ஆகிய வசனங்கள் கூறுகின்றன. அவனைத் தொழுதுகொள்ள மறுக்கிறவர்கள் துன்பப்படுத்தப்படுவார்கள், பலர் இரத்த சாட்சிகளாகக் கொல்லப்படுவார்கள்.

2:5 பவுல் தெசலோனிக்கேயருடன் **இருந்த போது** இவற்றைக் குறித்துச் சொல்லுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆயினும், மாறுபாடான உபதேசங்கள் கற்பிக்கப்பட்டபோது, மேலும் அப்பொழுது அவர்கள் அனுபவித்த கடுமையான உபத்திரவங்கள் அதற்கு ஒப்பாகத் தோன்றிய காரணத்தினால், அப்போஸ்தலன் கூறியவற்றை அவர்கள் மறந்து போனார்கள். நாமும்கூட மிக எளிதாக விசுவாசத்தைக் குறித்த மிகப்பெரிய உண்மைகளை மறந்து போகிறோம், அவற்றை மீண்டும் மீண்டும் நமக்கு நினைவூட்ட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

2:6 அந்தப் பாவமனிதன் முழுவதும் வெளிய ரங்கமாய் வெளிப்படக் கூடாதபடி **தடைசெய் கிறது இன்னதென்று** அவர்கள் அறிந்திருந்தார் கள். குறித்த காலம் வரைக்கும் அது அவனைத் தடை செய்து கொண்டிருக்கும் என்பதும் அவர் களுக்குத் தெரியும்.

இந்த அதிகாரத்தில் பதில் தரப்படாத மூன்றா வது மிகப்பெரிய கேள்வியை இது நம்மிடத்தில் எழுப்புகிறது. முதலாவது கேள்வி, "விசுவாச துரோகம் என்றால் என்ன?" இரண்டாவது கேள்வி, "பாவ மனிதன் யார்?" மூன்றாவது கேள்வி," எது தடைசெய்கிறது அல்லது யார் தடைசெய்கிறார்?"

ஆறாவது வசனத்தில் தடைசெய்வது அ.ற்றி ணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. **தடை செய் கிறது இன்னதென்று.** ஆனால் ஏழாவது வசனத் தில் அவர் ஒரு நபராகக் குறிப்பிடப்பட்டுள்ளார் "தடைசெய்கிறவர்"[10] E. W. ரோஜர்ஸ் இதைத் தெளிவுபடுத்துகிறார்:

> பாவ மனிதனாகிய அக்கிரமக்காரன் அவனுக் குத் தகுதியான நேரத்தில் தன்னை வெளிப் படுத்தக் கூடாதபடி வேண்டுமென்றே, உள்நோக் கத்துடன் முன்னமே திட்டமிட்டபடி ஒருவர் அல் லது ஒன்று தடைசெய்கிறது.[11]

தடைசெய்பவர் யார் என்பதில் ஏழுவிதமான கருத்துகள் பொதுவாக வழங்கி வருகின்றன. அவையாவன: (1) ரோமப்பேரரசு, (2) யூத நாடு,(3) சாத்தான், (4) மனிதர்களுடைய ஆளுகையில் காணப்படும் சட்டமும் ஒழுங்கும், (5) தேவன், (6) பரிசுத்த ஆவியானவர், (7) பரிசுத்த ஆவியானவர் தங்கும் மெய்யான சபை.

சபையிலும், தனி விசுவாசியினிடத்திலும் தங்கியிருக்கிற பரிசுத்த ஆவியானவரே, மற்ற எல்லாவற்றைக் காட்டிலும், தடைசெய்கிறவருக் குரிய எல்லா விவரங்களுக்கும் முழுவதுமாகவும் துல்லியமாகவும் பொருத்தமுடையவராக இருக் கிறார். இந்த அதிகாரத்தில் தடைசெய்கிறவர் ஒருவர் என்றும், ஒன்று என்றும் குறிப்பிடப்பட்டி ருப்பதுபோல, பரிசுத்த ஆவியானவர் யோவான் நற்செய்தி நூலில் பால் வேறுபாடு அற்ற பெயர்ச் சொல்லிலும் (பரிசுத்த ஆவி) ஆண்பாலிலும் (அவர்)[12] குறிப்பிடப்பட்டுள்ளார் (யோவான் 14:26, 15:26, 16:8,13, 14). தொடக்ககால நூலாகிய ஆதி யாகமத்திலேயே (6:3), பரிசுத்த ஆவியானவர் பாவத்தைத் தடைசெய்கிறவராகக் குறிப்பிடப்பட் டுள்ளார். இதே அலுவலைச் செய்கிறவராக அவர் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளார் (ஏசாயா 59:19, யோவான் 16:7-11, 1 யோவான் 4:4).

உள்ளுறையும் ஆவியானவரின் காரண மாகவே விசுவாசிகள் உலகத்திற்கு உப்பாயிருக் கிறார்கள் (மத். 5:13), மேலும் உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறார்கள் (மத். 5:14). உப்பு பதனப்படுத்தும் பொருளாகும். ஆனால் அது ஒரு பொருள் அழுகிப்போவதைத் தடைசெய்யவும் பயன்படுகிறது. மனிதன் தனது பாவச் செயல் களை விருப்பத்துடன் நிறைவேற்றுவதற்குச் செயற்களமாக விளங்குகிற இருளை வெளிச்சம் அகற்றுகிறது (யோவான் 3:19). சபையிலும் (1 கொரி. 3:16), தனிப்பட்ட விசுவாசியினிடத்திலும் (1 கொரி. 6:19) நிரந்தரமாகக் குடியிருப்பவராகிய பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தைவிட்டுப் போகும்போது, அக்கிரமக்காரன் வெளிப்படு வதைத் தடைசெய்வது நீங்கி விடுகிறது.

2:7 அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது என்று பவுல் அப்பொழுதே எழுதினார். தேவனுக்குக் கீழ்ப்படியாத பயங்கர மான மனநிலை அப்பொழுதே மறைவாகச் செயல் படத் தொடங்கிவிட்டது. அது இரகசியமான நிலையில் செயல்பட்டுக்கொண்டிருந்தது. அது புதிராயிருந்தது என்பது இதன் பொருளன்று, மாறாக அது முழுவதுமாக வெளித் தோன்ற வில்லை. அது இன்னமும் கருவுருவில் தான் இருந்தது.

இந்த மனநிலை முழுவதுமாக வெளிப்படு வதை எது தடைசெய்துகொண்டிருந்தது? சபை யிலும் ஒவ்வொரு விசுவாசியினிடத்திலும் பரி சுத்த ஆவியானவர் குடியிருக்கின்ற நிலையே தடை செய்கிற ஆற்றலாக விளங்குகிறது. அவர் நடுவிலிருந்து நீக்கப்படும்வரை, அதாவது சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை, இந்த அலுவலைத் தொடர்ந்து செய்துகொண்டிருப்பார்.

ஆனால் இங்கே ஒரு எதிர்ப்பு எழுகிறது. இந்த உலகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் எவ் வாறு நீக்கப்படுவார்? தேவ தலைமைத்துவத்தில் ஒருவராக இருக்கும் அவர் சர்வ வியாபியாக, அதாவது, ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறார் அல்லவா? அவ்வாறிருக்க அவர் இந்த உலகத்தை விட்டுச் செல்வது எப்படி சாத்தியமாகும்?

பரிசுத்த ஆவியானவர் சர்வ வியாபியாக இருக் கிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒரே நேரத்தில் அவர் எல்லா இடங்களிலும் எப்பொழு

தும் இருக்கிறார். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட பொருளில் அவர் பெந்தெகொஸ்தே நாளில் இவ்வுலகிற்கு ***வந்தார்***. இயேசு கிறிஸ்துவும் பிதாவும் ஆவியானவரை இவ்வுலகிற்கு அனுப்பப்போவதாக, கர்த்தர் மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளித்தார் (யோவான் 14:16, 26; 15:26; 16:7). அப்படியானால் ஆவியானவர் எவ்வாறு உலகிற்கு வந்தார்? சபையிலும் ஒவ்வொரு விசுவாசியினிடத்திலும் நிரந்தரமாகக் குடியிருக்கும்படி அவர் வந்தார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னர் ஒவ்வொரு விசுவாசியோடும் அவர் இருந்தார் என்பது உண்மைதான், ஆனால் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் குடியிருக்கிறார் (யோவான் 14:17). பெந்தெகொஸ்தே நாள்வரை ஆவியானவர் விசுவாசிகளை விட்டுவிட்டுச் செல்லக்கூடியவராக இருந்தார்-ஆகவேதான் தாவீது, "உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமல் இரும்" என்று ஜெபம் செய்தான் (சங். 51:11). பெந்தெகொஸ்தே நாளிலிருந்து சபையின் காலத்திலுள்ள விசுவாசிகளுக்குள் ஆவியானவர் எப்பொழுதும் குடியிருக்கிறார் (யோவான் 14:16).

எந்தப் பொருளில் பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் இந்த உலகிற்கு ***வந்தாரோ***, அதே பொருளில் அவர் இங்கிருந்து ***செல்வார்*** என்று நாம் நம்புகிறோம், அதாவது சபையிலும் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் உள்ளுறையும் நபராக இருக்கின்ற நிலையிலிருந்து சென்றுவிடுவார். அதற்குப் பிறகும் அவர் இவ்வுலகத்தில் இருந்து மனிதர்களுடைய பாவத்தைக் கண்டித்துணர்த்தி, கிறிஸ்துவினிடத்தில் வைக்கும் விசுவாசத்தினாலே இரட்சிப்பை அடையும்படியான நிலைக்கு அவர்களை வழிநடத்துவார். சபை எடுத்துக்கொள்ளப்படும்போது, அவர் இவ்வுலகினின்று நீக்கப்படுவார் என்று கூறுமிடத்து, உபத்திரவ காலத்தில் ஒருவரும் இரட்சிப்படைய மாட்டார்கள் என்பது பொருளன்று. மனிதர்கள் இரட்சிக்கப்படுவது நிச்சயம். ஆனால் அவ்வாறு இரட்சிக்கப்படுகிறவர்கள் சபையின் அங்கங்களாக இருக்க மாட்டார்கள், மாறாக அவர்கள் கிறிஸ்துவின் மகிமை நிறைந்த அரசின் குடிமக்களாக இருப்பார்கள்.

2:8 சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, அந்த **அக்கிரமக்காரன்** உலகத்தில் **வெளிப்படுவான்**. இந்த வசனத்தில் அந்திக்கிறிஸ்து என்ன செய்வான் என்பதை விவரிக்காமல், அவன் முடிவில் அடையப்போகிற அழிவைக் குறித்தே பவுல் பேசுகிறார். அவன் வெளிப்பட்டவுடன் அழிக்கப்பட்டு விடுவான் என்று கூறுவதுபோல் இந்த வசனம் காணப்படுகிறது. ஆனால் அவ்வாறு நடக்கப் போவது இல்லை. கிறிஸ்து ஆட்சி புரியும்படி இவ்வுலகிற்கு வருவதற்கு முன், அவன் 9-12 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருப்பதுபோல தனது பயங்கரவாத ஆட்சியை நடத்தும்படி அனுமதிக்கப்படுவான். பின்னர் அவருடைய வருகையின் போது அவன் கீழ்ப்படுத்தப்படுவான்.

சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு பாவமனிதன் வெளிப்படுவான் என்றும், கிறிஸ்து வெளிப்படும்வரை அவன் தொடர்ந்து தனது ஆட்சியை நடத்துவான் என்றும் நாம் நம்புவது சரியாக இருக்குமென்றால், அவனுடைய வெறித்தனமான ஆட்சி உபத்திரவ காலமாகிய ஏழாண்டுக் காலம் நீடிக்கும்.

அவனைக் கர்த்தராகிய இயேசு தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்துப்போடுவார் (ஏசாயா 11:4; வெளி. 19:15 - ஆகிய வசனங்களுடன் ஒப்பிடுக). மேலும் அவர் தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே அவனை ஒன்றுமற்ற நிலைக்குத் தள்ளிவிடுவார். கிறிஸ்துவினிடத்திலிருந்து வருகிற ஒரு சொல், அவருடைய வருகையின் (*parousia*) பிரகாசம் (Gk, *epiphania*) ஆகியவை அந்த வஞ்சகனின் வெறித்தனமான ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரப் போதுமானவை.

கிறிஸ்து வெளிப்படுவது குறித்த விவரங்கள் ஏற்கனவே விவரிக்கப்பட்டிருக்கின்றன. அந்நிகழ்ச்சியே அவர் இவ்வுலகில் தமது ஆயிரமாண்டு ஆட்சியை நிறுவும்படியாக வருகைபுரிகிற நிகழ்ச்சியாகும்.

2:9 அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானின் செயலுக்கு இசைவுடையதாக இருக்கும். அவனுடைய செயல்கள் சாத்தானுடைய செய்கைகளைப் போலவே இருக்கும், ஏனெனில் அவன் சாத்தான் மூலமாக வலிமை பெறுவான். அவன் எல்லாவிதமான அதிசயங்களையும் **அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும்** செய்வான்.

எல்லா அற்புதங்களும் தேவனால் உண்டாகிறவை அல்ல என்பதை இங்கு நாம் கவனிப்பது முக்கியமானதாகும். பிசாசும் அவனுடைய பிரதிநிதிகளும்கூட அற்புதங்களைச் செய்யக் கூடியவர்கள். அக்கிரமக்காரனும் அவற்றைச் செய்வான் (வெளி. 13:13-15).

அற்புதம் என்பது *இயற்கைக்கு அப்பாற்பட்ட* ஆற்றலைக் குறிக்கிறது, ஆனால் அது தெய்வீக ஆற்றலையே குறிக்கிறது என்று சொல்வதற்கில்லை. கர்த்தர் செய்த அற்புதச்செயல்கள் அவரே வாக்குரைக்கப்பட்ட மேசியா என்பதை மெய்ப்பித்தன. அவை வெறுமனே இயற்கைக்கு அப்பாற்பட்டவையாக இருந்ததால் அல்ல, மாறாக அவை முன்னுரைக்கப்பட்டவையின் நிறைவேறுதல்களாக அமைந்திருந்ததோடு, ஒழுக்கநெறியில் மேலானவையாக இருந்த காரணத்தினாலேயே அவற்றைச் செய்தவர் மேசியா என்று மெய்ப்பிக்கப்பட்டது. தன்னுடைய சொந்த நோக்கத்திற்கு ஊறு விளைவிக்காமல் சாத்தானால் அத்தகைய அற்புதங்களைச் செய்திருக்க முடியாது.

2:10 கிருபையின் காலத்தில் நற்செய்தியைக் கேட்டும், **சத்தியத்தின்மேல்** அன்பில்லாதவர்களாக இருந்து அழிந்துபோகிற மக்களை அந்திக்கிறிஸ்து பழிபாவத்திற்கு அஞ்சாமல் ஏமாற்றும்படி வஞ்சகச் செயல்களையும் பயன்படுத்துவான். அவர்கள் நற்செய்தியை விசுவாசித்திருப்பார்களேயானால் **இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்**. ஆனால் இப்பொழுதோ அந்திக்கிறிஸ்து செய்கிற அற்புதங்களினாலே அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

2:11,12 தேவன், உண்மையில் அவர்கள் **பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக** அவர்களுக்கிடையே கிரியை செய்யக்கூடிய தவறான கருத்தை **அனுப்புவார்**. தானே கடவுள் என்று அந்திக்கிறிஸ்து உரிமை பாராட்டுவதே அந்தப் பொய். இந்த மனிதர்கள் மாம்சத்தில் வெளிப்பட்ட கர்த்தராகிய இயேசுவை தேவனென்று ஏற்க மறுத்தவர்கள். அவர் இந்தப் பூமியில் இருந்த போது, "நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்" என்று எச்சரித்தார். ஆகவே இப்பொழுது அவர்கள் தன்னுடைய சொந்த நாமத்தினாலே வந்திருக்கிறவனும், தன்னை தேவனாகத் தொழுது கொள்ள வேண்டுமென்று அதிகாரம் செலுத்துகிறவனுமான பாவமனிதனை ஏற்றுக்கொள்கிறார்கள். "நிராகரிக்கப்பட்ட ஒளி மறுக்கப்பட்ட ஒளியாகும்." ஒருவன் தன்னுடைய இருதயத்தில் ஒரு சிலையை நிலைநாட்டுவானானால், அவனுடைய சிலைக்குத் தக்கதாக தேவன் விடைதருவார் (எசே. 14:4).

அந்திக் கிறிஸ்து பெரும்பாலும் யூத குலத்தைச் சார்ந்தவனாகவே இருப்பான் (எசே. 28:9,10; தானி. 11:37,38). தான் மேசியா என்று உரிமை பாராட்டுகிறவன் யூதா கோத்திரத்தைச் சார்ந்திராதவனும், தாவீதின் வழிமரபில் தோன்றாத வனுமாயிருந்தால் யூதமக்களை அவனால் வஞ்சிக்க முடியாது.

இந்தக் கிருபையின் காலத்தில் நற்செய்தியைக் கேட்டும், கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களுக்கு, சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு இன்னுமொரு சந்தர்ப்பம் தரப்படமாட்டாது என்றே இந்தப் பகுதி கூறுவதாகக் தோன்றுகிறது. இப் பொழுது கர்த்தராகிய இயேசுவை மனிதர்கள் நம்பவில்லையென்றால், பின்னர் அவர்கள் அந்திக்கிறிஸ்துவை விசுவாசிப்பார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தின் காரணமாகவும், அவர்கள் தீமையை விரும்புகிற காரணத்தினாலும் அவர்கள் **யாவரையும்** அவர் நியாயந்தீர்ப்பார் என்று இந்தப் பகுதி கூறுகிறது. லூக்கா 14:24-ஆம் வசனத்தை இந்தப் பகுதி நமக்கு நினைவூட்டுகிறது. "அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

உபத்திரவ காலத்தில் பலர் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை நாம் அறிவோம். எடுத்துக்காட்டாக 144000 யூதர்கள் இரட்சிக்கப்பட்டு, இறையரசின் நற்செய்தியை இவ்வுலகம் முழுவதும் அறிவிக்கும் தேவனுடைய தூதுவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய திருப்பணியின் மூலமாக இன்னும் பலர் இரட்சிக்கப்படுவார்கள். ஆனாலும், அவ்வாறு இரட்சிக்கப்படுபவர்கள், இந்தக் காலக்கட்டத்தில் ஒருபோதும் தெளிவான முறையில் நற்செய்தியைக் கேட்டிருக்கமாட்டார்கள், மேலும் அவர்கள் ஒருபோதும் வேண்டுமென்றே இரட்சகரை நிராகரித்திருக்கமாட்டார்கள்.

4. நன்றி செலுத்துதலும் மன்றாடுதலும் (2:13-17)

அ. பரிசுத்தவான்கள் நியாயத்தீர்ப்புக்குத் தப்புவார்கள் என்பதன் காரணமாகப் பவுல் நன்றி செலுத்துதல் (2:13,14)

2:13 முதல் பன்னிரண்டு வசனங்களில், அந்திக்கிறிஸ்து மற்றும் அவனைப் பின்பற்றுவோர் ஆகியோரின் அழிவைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் விவரித்துக் கூறினார். இப் பொழுதோ அவர் தெசலோனிக்கே கிறிஸ்தவர்களை நோக்கித் திரும்புகிறார்: அவர்கள் பெற்ற

அழைப்பும், அவர்கள் அடையப்போகிற முடிவும் அதற்கு மாறுபட்டதென எண்ணிப்பார்க்கிறார். அவ்வாறு எண்ணும் வேளையில், **கர்த்தருக்குப் பிரியமான சகோதரர்களாக** அவர்கள் இருந்த காரணத்தினால் அவர் தேவனுக்கு நன்றி செலுத்துகிறார். தொடர்ந்து அவர்களது இரட்சிப்பைக் குறித்த கருத்துச் சுருக்கத்தைத் தரமுற்படுகிறார்; இரட்சிப்பின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றைப்பற்றி அவர் கூறுகிறார்.

தேவன் உங்களைத் தெரிந்துகொண்டார். தேவன் மனிதர்களை இரட்சிப்புக்கென்று தெரிந்துகொண்டதாக வேதம் தெளிவாகக் கற்பிக்கிறது, ஆனால் அவர் எவரையும் அழிவுக்கென்று தெரிந்துகொள்ளவில்லை. மனிதர்கள் நெஞ்சறிந்து தங்களுடைய சொந்தத் தெரிந்தெடுப்பின் காரணமாகவே அழிவை நோக்கிச் செல்கிறார்கள். தேவனுடைய குறுக்கீடு இல்லையென்றால் எல்லா மனிதர்களுமே அழிந்து போவார்கள். இரட்சிக்கும் படியாகச் சிலரைமட்டும் தெரிந்துகொள்ளுவதற்கு தேவனுக்கு உரிமை இருக்கிறதா? எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே அவருடைய அடிப்படை நோக்கம் (1 தீமோ. 2:4; 2 பேதுரு 3:9). ஆனாலும், "மனித இனம் முழுமைக்கும் மீட்பு", அதாவது எல்லோரும் இறுதியில் இரட்சிப்பை அடைவார்கள் என்னும் கொள்கையை வேதம் கற்பிக்கிறதில்லை.

ஆதிமுதல். இதனை இரண்டு வகையாக மொழிபெயர்த்துப் பொருள் கூறலாம். முதலாவது, உலகத் தோற்றத்துக்கு முன்னரே தேவனுடைய தெரிந்தெடுப்பு நடந்துவிட்டது (எபே. 1:4) என்று இதற்குப் பொருள் கூறலாம். இரண்டாவதாக, தெசலோனிக்கேயரைக் குறிக்கும் வகையில், இந்தச் சொல்லை "முதற்பலன்களைப் போல" என்று மொழிபெயர்க்கலாம். அதாவது தேவனுடைய இரட்சிப்பினாலே மீட்பைப் பெறும் ஆத்துமாக்களாகிய மிகப்பெரிய அறுவடையில், இவர்கள் கிறிஸ்தவக் காலப்பாகுபாட்டின் முதற்பலன்களைப் போல இருக்கிறார்கள்.

இரட்சிப்படையும்படிக்கு. முந்தின வசனங்களிலிருந்து இதனை முற்றிலும் வேறுபடுத்திக் காட்ட வேண்டும். அவிசுவாசிகள் தங்களுடைய அவிசுவாசத்தினாலே நித்திய அழிவிலே அழிந்து போகிறார்கள். ஆனால் விசுவாசிகளோ **இரட்சிப்படையும்படிக்குத்** தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும். இங்கே இரட்சிக்கப்படுவதற்கு முந்தி பரிசுத்தஆவியானவர் செய்கிற செயலை நாம் காண்கிறோம். அவர் தனிப்பட்ட மனிதர்களை இவ்வுலகத்தினின்று வேறுபிரித்து, அவர்களுடைய பாவத்தைக் குறித்துக் கண்டித்துணர்த்தி, அவர்களுக்குக் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிறார். "கிறிஸ்துவின் செயல் இல்லையென்றால் விருந்து இல்லை, பரிசுத்த ஆவியானவரின் செயல் இல்லையென்றால் விருந்தினர்களே இல்லை" என்று ஒருவர் அழகாய்ச் சொல்லியிருக்கிறார்.

சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும். முதலாவது, இரட்சிப்பில் தேவனுடைய பங்கு என்ன வென்பதைக் கண்டோம், இப்பொழுது மனிதனுடைய பங்கு என்னவென்பதைக் காண்போம். இரண்டுமே தேவையானதுதான். சிலர் தேவனுடைய தெரிந்தெடுப்பை மட்டும் காண்கிறார்கள், அதைக் குறித்து மனிதன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். வேறு சிலர் மனிதனுடைய பங்கைக் கூடுதலாக வலியுறுத்தி, தேவனுடைய இறைமைத் தெரிந்தெடுப்பைப் புறக்கணித்துவிடுகிறார்கள். ஒன்றொடொன்று இசைவற்று தூரமாய் இருக்கக்கூடிய இவ்விரண்டு கருத்துகளிலும் உண்மை இருக்கிறது. தெரிந்தெடுப்பு மற்றும் மனிதனுடைய பொறுப்பு ஆகிய **இரண்டுமே** வேதம் கற்பிக்கிற கோட்பாடுகளாகும். இவ்விரண்டு கோட்பாடுகளும் எவ்வாறு உண்மையாக இருக்க முடியும் என்பதை நம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லையென்றாலும், இரண்டு கோட்பாடுகளையும் விசுவாசித்து, கற்பிப்பதே சிறந்தது.

2:14 எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார். தேவன் நம்மை இரட்சிப்புக்கென்று நித்தியத்தில் தெரிந்துகொண்டார். குறித்த காலத்தில் அவர் நம்மை அதனிடமாய் **அழைத்தார்**. ஒரு மனிதன் சத்தியத்தை விசுவாசிக்கும் தருணமே அழைப்பு என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. **எங்கள் சுவிசேஷம்** என்று சொல்லப்பட்டிருப்பதாலே வேறு சில மெய்யான சுவிசேஷங்களும் உள்ளன என்பது பொருளல்ல. ஒரே ஒரு சுவிசேஷம் மட்டுமே உள்ளது, ஆனால் அதனை அறிவிப்பவர்கள் பலர், மேலும் அதைக் கேட்பவர்களும் பல்வேறு வகைப்பட்டவர்கள். இங்கே பவுல் தான் பிரசங்கித்த தேவனுடைய **சுவிசேஷத்தையே** குறிப்பிடுகிறார்.

நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக. இங்கே அப்போஸ்தலன் எதிர்காலத்தை

உற்றுநோக்கியவராக, இரட்சிப்பின் முடிவான விளைவைக் காண்கிறார். அது கிறிஸ்துவோடு என்றென்றும் இருப்பதும் அவருக்கு ஒப்பாக இருப்பதுமாகும். J. N. டார்பி அவர்கள் இதனைத் தனது கவிதையில் அழகுறப் படம்பிடித்துக் காட்டுகிறார்:

மைந்தனுக்கு ஒப்பாக
நான்மாற வேண்டுமென
எந்தனுக்காய் வென்றிட்டார்
நிறைகிருபை திருத்தந்தை
சிந்தனையைக் கடந்தவராய்ச்
சிந்தித்தார் மகிமையிலே,
தந்திடுவார் அடிமைக்கும்
அன்புமகன் சிறப்பினையே!

"இறையியல் அமைப்பின் சிற்றுரு மறுபடிவத்தினை" நாம் 13 மற்றும் 14 ஆகிய வசனங்களில் பெற்றிருக்கிறோம். தேவனுடைய மக்களாகிய விசுவாசிகளைக் குறித்த அவருடைய நோக்கங்களின் எல்லையை வியத்தகு வகையில் இரத்தினச் சுருக்கமாய்ப் பெற்றிருக்கிறோம். "தெய்வீகத் தெரிந்தெடுப்பில் இரட்சிப்பு தொடங்குகிறது, தெய்வீக வல்லமையில் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது, தெய்வீக செய்தியின் மூலமாக அது பயன்விளைவிக்கக் கூடியதாக ஆக்கப்பட்டிருக்கிறது, தெய்வீக மகிமையில் அது முழுநிறைவாக்கப்படும்" என்று அவர் நமக்கு விவரித்துக் காட்டியிருக்கிறார்.

ஆ. பரிசுத்தவான்கள் ஆறுதல்பெற்று நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று பவுல் மன்றாடுதல் (2:15-17)

2:15 பரிசுத்தவான்கள் பெற்ற தலைசிறந்த அழைப்பின் காரணமாக அவர்கள் **நிலைகொண்டு,** அப்போஸ்தலர்களாலோ, அவர்கள் எழுதிய மடல்கள் மூலமாகவோ அவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட முறைமைகளைக் கைக்கொள்ளும்படி இங்கே அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆவியானவர் மூலமாக ஏவப்பட்டு அப்போஸ்தலர் உரைத்தவை மட்டுமே நம்புதற்குரியதும், அதிகார பூர்வமானதுமான **முறைமைகள்** ஆகும் என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய உண்மையாகும். சதுசேயரும் பரிசேயரும் தங்களுடைய *பாரம்பரியத்தினாலே* தேவனுடைய கற்பனைகளைச் செல்லாததாக ஆக்கினார்கள் என்று இயேசு கிறிஸ்து அவர்கள் மேல் குற்றஞ்சாட்டினார் (மத். 15:6). மேலும், *மனிதர்களின் பாரம்பரியத்தைக்* கைக்கொள்ளக் கூடாதென்று பவுல் கொலோசெயரை எச்சரித்தார் (கொலோ. 2:8). பரிசுத்த வேதத்தில் நமக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பெரிதான சத்தியங்களே நாம் கடைப்பிடிக்க வேண்டிய **முறைமைகள்** ஆகும்.

சபைகளில் கடைப்பிடிக்கப்படும் பாரம்பரியங்கள் அல்லது சமயத்தலைவர்கள் பின்பற்றுகிற சில பாரம்பரியங்கள் ஆகியவற்றை நியாயப்படுத்த இந்த வசனமானது சிலவேளைகளில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தேவனுடைய திருமறைக்கு முரண்பாடான எந்தப் பாரம்பரியமும் பயனற்றதும் ஆபத்தானதுமாகும். மனிதர்களுடைய பாரம்பரியங்களை வேதத்திற்கு ஒப்பாக ஏற்றுக்கொள்வோமென்றால் எந்த முறைமைகள் சரியானவை, எவை தவறானவை என்று யார் முடிவு செய்வது?

2:16 இவ்விதமாகத் தன்னுடைய செய்தியைக் கூறியபின், அப்போஸ்தலன் அதில் கூறப்பட்டுள்ளவற்றிற்காக மன்றாடுகிறார். அவர் உபதேசத்தைத் தொடர்ந்து ஜெபம் பண்ணுவதைத் தனது பொதுவான வழக்கமாகக் கொண்டிருந்தார் (1 தெச. 5:23,24; 2 தெச. 3:16). **இந்த மன்றாட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை** நோக்கியும், **பிதாவாகிய தேவனை** நோக்கியும் ஏறெடுக்கப்பட்டது. இரண்டு தெய்வீக நபர்களையும் அப்போஸ்தலனாகிய பவுல் ஒரே மூச்சில் சொல்லுவது, நமக்குப் பழக்கமானதே, ஆனாலும் குமாரனை முதலில் குறிப்பிடுவது அவருடைய வழக்கத்திற்கு மாறானது. அவர்களுக்குள்ளாக இருக்கும் இன்றியமையாத ஒருமைப்பாடு மற்றும் முழுநிறைவான சமத்துவம் ஆகியவற்றை அவர் இங்கு வலியுறுத்துகிறார் என்பதில் ஐயமில்லை. கிரேக்க மொழியில் எழுவாய் பன்மையாயிருக்க (கிறிஸ்து மற்றும் தேவன்), அதனைத் தொடர்ந்து ஒருமையில் நான்கு வினைச்சொற்கள் வருகின்றன (அன்பு கூர்ந்து, கொடுத்து, ஆறுதலளித்து, ஸ்திரப்படுத்துவார்). தேவ தலைமையில் குமாரனும் பிதாவும் கொண்டிருக்கிற ஒருமைப்பாட்டின் இயல்பிற்கு மேலும் ஒரு குறிப்பாக விளங்குகிறதைத் தவிர இது வேறென்ன?

தேவனுடைய முந்தைய ஏற்பாடு அவரை நம்புவதற்கும், மேலும் துணிவு பெறுவதற்கும், வலிமையடைவதற்கும் அறிமுகப்படுத்தப்படுகிறது. **அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையும்**

கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிறார். ஐயத்திற்கிடமற்றபடி இது தேவனுடைய அன்பின் மிகப் பெரிய காட்சிப் பொருளைப் பின்னோக்கிப் பார்க்கச் செய்கிறது - நமக்காக அவர் ஈவாகத் தந்த அவருடைய குமாரனே அந்தக் காட்சிப் பொருள். ஏனெனில் அவர் பாவத்தின் பிரச்சினையைக் கல்வாரியில் தீர்த்துவிட்டார். இப்பொழுது நித்திய ஆறுதலைப் பெற்றிருக்கிறோம், மகிமை நிறைந்த எதிர்கால **நம்பிக்கையும்** நமக்குண்டு. இவையாவற்றையும் அவருடைய வியத்தகு **கிருபையினாலே** பெற்றிருக்கிறோம்.

2:17 அவர்களுடைய **இருதயம் தேற்றப்பட்டு, எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும்** அவர்கள் **ஸ்திரப்படுத்தப்பட** வேண்டும் என்பதே ஜெபமாகும். கடுந்துன்பத்தின் நடுவில் வெறுமனே தேறுதல் மட்டுமின்றி, போர்முகத்தில் முன்னேறிச் செல்வதற்கான வலிமைக்கான மன்றாட்டாகவும் அது விளங்கியது. அப்போஸ்தலனுடைய சொற்களஞ்சியத்தில் 'பின்வாங்குதல்' என்ற சொல்லுக்கே இடமில்லை. நம்முடைய சொற்களஞ்சியத்திலும் அச்சொல்லுக்கு இட மிருக்கக் கூடாது.

எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும் என்னும் சொற்றொடரை நாம் தவறவிடக்கூடாது. சத்தியம் நம்முடைய உதடுகளில் மட்டும் இருந்தால் போதாது. நம்முடைய வாழ்க்கையில் அதனை நிறைவேற்றி முடிக்க வேண்டும். ஆகவே, கற்பித்தல், செயலாற்றுதல், கோட்பாடு, கடமை, பிரசங்கித்தல் நடைமுறைப்படுத்துதல் என்பதே நம்முடைய வாழ்க்கையில் காணப்பட வேண்டிய ஒழுங்கு முறையாகும்.

5. நடைமுறை அறிவுரைகள் (3:1-15)

அ. ஒருவருக்காக ஒருவர் மன்றாடுவதற்கான அறிவுரை (3:1-5)

3:1 பரிசுத்தவான்களின் மன்றாட்டுகள் தேவை என்பதைப் பவுல் உணர்ந்தார். அவர் மூன்று காரணங்களை முன்னிட்டு அவர்களது மன்றாட்டுகளை நாடுகிறார்: (1) அறிவிக்கப்படும் செய்தியானது எங்கும் பரவவேண்டும்; (2) அந்தச் செய்தி வெற்றி பெற வேண்டும்; (3) செய்தியளிப்பவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

கர்த்தருடைய வசனம் எங்கும் பரவ வேண்டும் என்று அவர் விரும்புகிறார். தடைகள் ஏற்பட்டபோதிலும் நற்செய்தியானது ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு விரைந்து ஓடுகிற காட்சியின் வரைபடத்தை நாம் இங்கு காண்கிறோம் (சங். 147:15 -ஐக் காண்க).

கர்த்தருடையவசனம் எவ்வாறு தெசலோனிக்கே பட்டணத்தாரிடம் வியத்தகு வகையில் ஆவிக் குரியவற்றிலும், நன்னெறி சார்ந்தவற்றிலும் புரட்சியை ஏற்படுத்தியதோ அதுபோலவே மற்ற இடங்களிலும் புரட்சியை ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

3:2 அப்போஸ்தலனும் அவருடைய உடன் ஊழியர்களும் **துர்க்குணராகிய பொல்லாத மனிதர் கையினின்று விடுவிக்கப்பட** வேண்டுமென்பது அவருடைய மூன்றாவது வேண்டுகோளாகும். அவர் சில குறிப்பிட்ட எதிர்ப்புகளைப் பற்றியே குறிப்பிடுகின்றார் என்றே தோன்றுகிறது, பெரும்பாலும் அது கொரிந்துப் பட்டணத்தில் இருந்த யூதர்களால் உண்டான எதிர்ப்பாக இருக்கலாம் (அப். 18:1-18). பகுத்தறிவற்றார்கள் (துர்க்குணர்) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது மிகப்பொருத்தமானது. நற்செய்திக்கும் அதனை அறிவிப்போருக்கும் எதிராக மக்கள் காட்டும் பகைமையைக் காட்டிலும் பெரிய பகுத்தறிவற்ற செயல் வேறு எதுவும் இல்லை. இதற்கு விளக்க மளிப்பதென்பது நம்மைக் குழப்பமடையச் செய்கிற செயலாகும். அரசியலைக் குறித்தும், அறிவியலைக் குறித்தும் இன்னும் பற்பல பொருட்களைக் குறித்தும் அவர்கள் திறம்படப் பேசுவார்கள். ஆனால் நற்செய்தியைக் குறித்துப் பேசும் போது அவர்கள் பகுத்தறியும் ஆற்றல் அனைத்தையும் இழந்துபோகிறார்கள்.

3:3 இரண்டாவது வசனத்திற்கும் மூன்றாவது வசனத்திற்கும் இடையேயுள்ள எதிர்மறையின் அழகினைத் தவறவிட வேண்டாம். 2 -ஆவது வசனம்: "விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே." 3 -ஆவது வசனம்: **கர்த்தரோ உண்மையுள்ளவர்.** உண்மையற்ற மனிதர்களை நோக்கிப்பார்ப்பதை விடுத்து, ஒருக்காலும் கைவிடாதவராகிய நம்முடைய தேவனை நோக்கிப் பார்க்கும்படி இந்த வசனம் நமக்குக் கற்பிக்கிறது. முடிவுபரியந்தம் நம்மை ஸ்திரப்படுத்துவதற்கு அவர் **உண்மையுள்ளவராக** இருக்கிறார் (1 கொரி. 1:8). சோதனையிலிருந்து விடுவிக்க அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார் (1 கொரி. 10:13). நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் **உண்மையும்** நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9). மேலும் இங்கே அவர் **நம்மை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்வதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.** அதாவது, சாத்தானிடத்திலிருந்து அவர் நம்மைக் காத்துக்கொள்கிறார்.

3:4 விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே. கர்த்தரோ உண்மையுள்ளவர்... **உங்களைக் குறித்து நாங்கள் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம்** (விசுவாசத்தோடு இருக்கிறோம்). "பலவீனர்கள், உறுதியற்றவர்கள், பிடிவாதமானவர்கள், முட்டாள்தனமானவர்கள் யாராயிருந்தாலும் அவர்களிடத்தில் நீங்கள் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கலாம்" என்று திருவாளர் டென்னி கூறியதுபோல இது இருக்கிறது. பரிசுத்தவான்கள் என்ன **செய்ய வேண்டுமென்று** பவுல் கட்டளையிட்டு, அவர்களுடைய பொறுப்புகளை இப்பொழுது நினைவூட்டுகிறார். இங்கு மீண்டுமாக, வியக்கத்தக்க வகையிலும், மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணக்கூடிய வகையிலும் தெய்வீகச் செயலும் மனிதனுடைய பொறுப்பும் ஒன்றிணைந்து காணப்படுகின்றன. தேவன் உங்களைப் பாதுகாப்பார்; இப்பொழுது நீங்கள் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள். இதே சிந்தனை 1 பேதுரு 1:5 - இலும் காணப்படுகிறது: "தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறீர்கள்" (அவருடைய பங்கு), "விசுவாசத்தைக் கொண்டு" (நம்முடைய பங்கு). இதனை நாம் பிலிப்பியர் மடலிலும் காண்கிறோம்.2:12,13 "உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (நம்முடைய பங்கு), "தேவனே...உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (அவருடைய பங்கு).

3:5 கொடுமைகள் இழைக்கப்படுகிறபோது பிறர்மேல் கசப்பான எண்ணங்களும், கடுந்துன் பங்களும் நீண்டகாலம் தொடரும்போதும், அவற்றின் வலிமை பெருகும்போதும் நம்பிக்கை இழக்கக்கூடிய மனப்பான்மையும் எழுவது எளிது. இதன் காரணமாகவே **தேவன் அன்புகூருகிறது போல** தெசலோனிக்கேயர் அன்புகூர வேண்டுமென்றும், **கிறிஸ்து பொறுமையாயிருந்தது போல** அவர்களும் பொறுமையாயிருக்க வேண்டுமென்றும் அப்போஸ்தலன் ஜெபிக்கிறார்.

KJV மொழிபெயர்ப்பில் கிறிஸ்துவுக்காகப் பொறுமையோடு காத்திருத்தல் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர், NKJV யில் **கிறிஸ்துவின் பொறுமை** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (தமிழிலும் கிறிஸ்துவின் பொறுமை என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) 1611-ஆம் ஆண்டு மொழிபெயர்ப்பின்படி, கிறிஸ்துவின் வருகைக்காகப் பொறுமையோடு காத்திருத்தல் என்பது இவ்வசனத்தின் பொருளாகும். கிறிஸ்து மனிதராக பூமியில் இருந்தபோதும், பரலோகத்தில் இப்பொழுது மனிதராக இருக்கும் போதும் அவர் கொண்டிருக்கிற அதே **பொறுமையையும்** சகிப்புத் தன்மையையும் நாமும் கொண்டிருத்தல் என்பதே NKJV மொழிபெயர்ப்பில் நாம் பெறும் அறிவுரை.[13]

இந்த வசனத்தில் காணப்படும் **கர்த்தர்** என்னும் சொல் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கக்கூடும். அவ்வாறாயின் திரியேக தேவனின் மூன்று நபர்களும் 2:13,14 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பது போல இந்த வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

ஆ. கீழ்ப்படியாதவர்களோடு நடந்துகொள்வது எப்படி என்பதற்கான அறிவுரை (3:6-15)

3:6 கர்த்தருடைய வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியவர்களாக, தெசலோனிக்கேயரில் சிலர் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் சம்பாதிக்கும்படி வேலைக்குச் செல்லாமல் சோம்பேறிகளாக மாறிவிட்டார்கள் என்று தோன்றுகிறது. இது ஆவிக்குரிய மன நிலை என்று பவுல் கருதவில்லை. இப்படிப்பட்ட சகோதரர்களோடு எவ்வாறு நடந்து கொள்வது என்பதுபற்றி திட்டவட்டமான அறிவுரையைப் பவுல் கூறுகிறார்.

அவர் கூறும் அறிவுரை இங்கு ஒரு கட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளது, **ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டும்**. அதாவது, மற்றவர்களோடு இணைந்து நடவாமல், வேலை செய்வதை மறுத்து, பிறரை உறிஞ்சி வாழ்கிறவர்கள் (வச. 10,11 - காணவும்). அப்படிப்பட்ட **சகோதரருடன்** சமுதாய உறவு கொள்வதைத் தவிர்ப்பதன் மூலம் அவர்களுடைய நடத்தையை நிராகரிக்க வேண்டும். ஆனால், அவர்களைச் சபையினின்று புறம்பாக்கத்தக்க அளவிற்கு இது ஆபத்தான தல்ல.

பவுலினிடத்திலிருந்து தெசலோனிக்கேயர் பெற்ற **முறைமை**, கடுமையான உழைப்பு, விடாமுயற்சி, தனக்குத் தேவையானவற்றை தானே சம்பாதிப்பது என்பவையே.

3:7 கர்த்தராகிய இயேசு மீண்டும் வரப்போகிறார் என்று அறிந்திருந்த காரணத்தினால் பவுல் கூடாரம்பண்ணும் தொழிலை விட்டுவிடவில்லை. எந்த ஒரு வேளையிலும் கிறிஸ்து வரக்கூடும் என்று அவர் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் என்பது உண்மையே. ஆனாலும் தன்னுடைய வாழ்நாளின்போது கர்த்தர் வராமலும்

இருக்கலாம் என்னும் உணர்வோடு அவர் திருப் பணி ஆற்றினார், வேலையும் செய்தார்.

3:8 வேறொருவருடைய வீட்டில் நிரந்தரமாகக் குடியிருக்கிறார் என்றோ, வேறொருவர் உழைத் துச் சம்பாதித்த பணத்திலிருந்து இவர் உணவு உட்கொண்டார் என்றோ ஒருவராலும் இவரைக் குற்றப்படுத்த முடியாது. அவருடைய வாழ்க்கைக் குத் தேவையானவற்றை அவரே வேலை செய்து சம்பாதித்தார், மேலும் அவர் நற்செய்தியைப் பிரசங்கித்தார். பகலில் நீண்டநேரம் வேலை செய்தார், இரவு நேரங்களில் களைப்படைந்து போனார் என்பதே இதன் பொருளாகும். ஆனால் அவர்களில் **ஒருவனுக்கும்** அவர் **பாரமாயிருக் கக் கூடாது** என்று தீர்மானித்திருந்தார்.

3:9 அவருடைய ஊழியத்தினால் மனந்திரும் பியவர்களுடைய ஆதரவில் அப்போஸ்தலன் தன்னுடைய வாழ்க்கையை நடத்த, நற்செய்தி யைப் பிரசங்கித்தவர் என்னும் நிலையில் உரிமை பெற்றிருந்தார் (1 கொரி. 9:6-14; 1 தீமோ. 5:18). ஆனால், அவர் தன்னையே சார்ந்திருப் பதில் மெச்சத்தக்க நிலையிலும், விடாமுயற்சி யில் சோர்வற்ற நிலையிலும் விளங்கி அவர் களுக்கு முன்மாதிரியாயிருக்க வேண்டுமென்று தன்னுடைய உரிமையை விட்டுக்கொடுப்பதைத் தெரிந்துகொண்டார்.

3:10 பொறுப்பில்லாமல் திரிபவர்களை ஆதரிக்க வேண்டாமென்று தெசலோனிக்கேயர் ஏற்கனவே கட்டளை பெற்றிருந்தார்கள். **உடற் கட்டுள்ள ஒரு கிறிஸ்தவன் வேலைசெய்ய மனதற்று இருப்பானானால்,** அவன் சாப்பிடவும் கூடாது. விசுவாசிகள் எப்பொழுதும் இரக்கம் பாராட்ட வேண்டும் என்னும் கட்டளைக்கு இது முரண்பாடாக இருக்கிறதா? இல்லை, இல்லவே இல்லை! சோம்பேறித்தனத்தை ஊக்குவிப்பது இரக்கம் பாராட்டுதல் ஆகாது. "தவறு செய்கிற வர்களை, அவர்களுடைய தவறுகளில் தோழமை கொள்ளுதல் அவர்களிடத்தில் அன்புபாராட்டு வதாகாது, இயேசு கிறிஸ்துவுக்கு எல்லாவற் றிலும் உண்மையாயிருத்தலே உண்மையாக அன்புசெலுத்துதலாகும்" என்று திருவாளர் ஸ்பர்ஜன் கூறுகிறார்.

3:11 இப்பொழுது அப்போஸ்தலன் ஒரு வசீக ரமான சொல்விளையாட்டைப் பயன்படுத்து கிறார்.[14] அதன் மூலமாக இந்த ஒழுங்கற்ற சகோ தரர்களுடைய முன்னுக்குப்பின் முரணானதும் பொய்யானதுமான ஆவிக்குரிய நிலையை அவர் அம்பலப்படுத்துகிறார். அவருடைய சொற்கள் கீழ்க்காணும் வகையில் வெவ்வேறானபடி பொழிப்புரையாகத் தரப்பட்டுள்ளன:

1. "சிலர் எந்த வேலையும் செய்யாமல் வீண் அலுவல்காரராய்த் திரிகிறார்கள்."
2. "சிலர் எந்த வேலையும் இல்லாதிருந்தும் வீண் அலுவல்காரராய்த் திரிகிறார்கள்."
3. "சிலர் தங்களுடைய சொந்த வேலையில் சுறு சுறுப்பற்றவர்களாக இருந்தும், பிறருடைய வேலையில் அதிக சுறுசுறுப்பாக இருக்கிறார் கள்."
4. "தங்களுடைய காரியங்களில் எந்த ஈடுபாடு மின்றி, எல்லோருடைய காரியங்களிலும் அவசியமின்றித் தலையிடுகிறவர்கள்."

3:12 அப்படிப்பட்டவர்கள் யாவரும் எவ்வித ஆரவாரமுமின்றி தங்களுடைய **சொந்த** வாழ்க் கைக்குத் தேவையானவற்றைச் சம்பாதித்து வாழ வேண்டுமென்று **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினாலே** கட்டளையிடப்படுகிறார்கள்.

3:13 உண்மையோடு உழைப்பவர்கள் தொடர்ந்து தங்களுடைய உழைப்பில் முன்னேற வேண்டுமென்று ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஓட்டப்பந்தயத்தில் தொடக்கம் அல்ல, முடிவே கணக்கிடப்படும். ஆகவே அவர்கள் நேர்மை யானதைச் **செய்வதிலே சோர்ந்துபோகா திருக்க** வேண்டும்.

3:14 ஆனால் அப்போஸ்தலனின் அறிவுரைக் குக் **கீழ்ப்படியாதவனை** என்ன செய்வது? மற்ற கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்டவர்களோடு சமு தாய உறவுகொள்ளாமல் ஒழுங்குபடுத்த வேண் டும். அவர்கள் தங்களுடைய நடத்தையைக் குறித்து வெட்கப்பட வேண்டும், வழிகளைச் சீர்ப் படுத்திக் கொள்ள வேண்டும். இவையே அந்த ஒழுங்கு நடவடிக்கையின் நோக்கங்களாக இருக்க வேண்டும்.

3:15 ஆயினும், இந்த ஒழுங்கு நடவடிக்கை சபையினின்று புறம்பாக்குதல் போன்று கடுமை யானதாக இருக்கக் கூடாது. இங்கே குற்றமிழைத் தவன் இன்னும் **சகோதரனாகவே** கருதப்படு கிறான். சபையினின்று புறம்பாக்குகையில், அவன் "அஞ்ஞானியைப் போலவும் ஆயக்கார னைப் போலவும்" கருதப்படுவான் (மத். 18:17).

விசுவாசியின்மீது எடுக்கப்படும் ஒழுங்கு நட வடிக்கை, அவன் கர்த்தரிடத்திலும் இறைமக்களி டத்திலும் சீர்பொருந்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அதனைக் கசப்பான

அல்லது பகைமை உள்ளத்தோடு செயல்படுத்தக் கூடாது. மாறாக, அதனைக் கிறிஸ்தவ அன்போடும் உறுதியோடும் செய்ய வேண்டும். அவன் **சத்துருவாக** நடத்தப்படாமல், **சகோதரனாகவே** நடத்தப்பட வேண்டும்.

கர்த்தருடைய வருகைக்காகத் தெசலோனிக்கே கிறிஸ்தவர்கள் தங்களுடைய அனுதின வேலையை விட்டுவிடக் கூடிய அளவு ஆர்வத்துடன் இருந்தார்கள் என்பது இன்றைய நாட்களில் நமக்கு விநோதமாகத் தோன்றுகிறது. இன்றைய நாட்களில் சபைக்கு இது ஆபத்தாகவே தோன்றுவதில்லை! நாம் இப்பொழுது மற்றொரு முனைக்குச் சென்றுவிட்டோம். நம்முடைய தொழிலிலும், பணத்தைச் சேகரிப்பதிலும் முழு ஈடுபாடு கொண்டவர்களாக, எத்தருணத்திலும் நிகழக்கூடிய கர்த்தருடைய வருகையைக் குறித்த நம்பிக்கையில் காணப்படும் புதுமையையும் எழுச்சியையும் நாம் மறந்துபோனோம்.

6. ஆசிர்வாதமும் வாழ்த்தும் [3:16-18]

3:16 "கடும்புயல் போன்ற மடலின் அமைதியான முடிவு" என்று இந்த வசனம் அழைக்கப்படுகிறது. தெசலோனிக்கே பட்டணத்தில் பாடுகள் அனுபவித்துக் கொண்டிருந்த பரிசுத்தவான்கள் எல்லா நேரங்களிலும் சகலவிதத்திலும் **சமாதானத்தின் கர்த்தர்** தருகிற **சமாதானத்தைப்** பெற வேண்டுமென்று பவுல் மன்றாடுகிறார்.

களங்கமில்லாத அமைதியை அடைய ஒரு கிறிஸ்தவன் இந்த உலகத்திலுள்ள எதையும் சார்ந்திருப்பதில்லை. அது முற்றிலுமாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமையையும் அவருடைய கிரியையுமே சார்ந்திருக்கிறது. இவ்வுலகத்தினால் அதைத் தரவும் முடியாது, நீக்கவும் முடியாது. ஆனால் அதனை நாம் எல்லாச் சூழ்நிலையிலும் நமக்குரியதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். "சமாதானம் என்பது துன்புறுத்தப்படுதல் நீங்கிப் போவதல்ல; மாறாக, சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில், தேவனிடத்திலிருந்து வருகிற அமைதியே சமாதானமாகும்."

3:17,18 இத்தருணத்தில், பவுல் சொல்ல இம்மடலை எழுதிய செயலாளரிடத்திலிருந்து எழுதுகோலை வாங்கி அவரே முடிவு **வாழ்த்தினை** எழுதினார். அவர் எழுதுகிற எல்லா மடல்களிலும் அவருடைய வாழ்த்தே **அடையாளமாக** விளங்குகிறது என்று அவர் குறிப்பிடுகிறார். பவுல் தனது சொந்தக் கையெழுத்தால் ஒவ்வொரு மடலிலும் எழுதியிருப்பது, அந்த மடல்கள் உண்மையாகவே அவரால் எழுதப்பட்டவை என்பதை மெய்ப்பிக்கிறது என்று சிலர் கருதுகிறார்கள். **அடையாளம்** எனப்படுவது பவுலின் தனித்தன்மை வாய்ந்த வாழ்த்துரையேயாகும் என்று வேறுசிலர் கருதுகிறார்கள்: நம்முடைய **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக** (ரோமர் 16:24; 1 கொரி. 16:23; 2 கொரி. 13:14; கலா. 6:18; எபே. 6:24; பிலி. 4:23; கொலோ. 4:18; 1 தெச. 5:28; 1 தீமோ. 6:21; 2 தீமோ. 4:22; தீத்து 3:15; பிலே. 25; மேலும் எபிரெயர் மடலைப் பவுல் எழுதியிருப்பாரானால், எபி. 13:25). இந்தக் குறிப்புகளிலிருந்து, அவருடைய மடல்கள் யாவும் **கிருபையைப்** பற்றிய குறிப்போடு முடிவடைகிறதை நாம் காண்கிறோம்.

சபை எடுத்துக்கொள்ளப்படுதல்

கர்த்தர் மீண்டும் வருவது குறித்த உண்மை தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதல் மடலின் ஒவ்வொரு அதிகாரத்திலும், இரண்டாவது மடலின் முதல் இரண்டு அதிகாரங்களிலும் இடம் பெற்றிருக்கிறது. இதுவே இந்த மடல்களின் எல்லாப் பகுதிகளையும் ஒருங்கிணைக்கும் சீரிய கருத்தாக விளங்குகிறது.

ஆனால் தீர்க்கதரிசனமானது நம்முடைய ஆய்வுணரும் திறத்தைக் கவர்ந்திழுக்கச் செய்வதையோ, நம்முடைய பேராவலுக்கு அறைகூவலாக விளங்க வேண்டும் என்பதையோ நோக்கமாகக் கொண்டு திட்டமிடப்பட்டதன்று. இதனை நாம் எப்பொழுதும் நினைவிற்கொண்டிருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை மறுதோற்றம் அடைவதை இலக்காகக் கொண்டு நாம் தீவிரமாகச் செயல்புரிய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

கிறிஸ்து மீண்டும் வருகிற நிகழ்ச்சியைக் குறித்த நம்பிக்கையானது, பெருமளவில் விசுவாசிகளுடைய வாழ்க்கைக் கூறுகளோடு இன்றியமையாத வகையில் தொடர்புடையதாயிருக்கிறது.

1. நம்முடைய வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தும் விளைவை இது உண்டுபண்ண வேண்டும் (1 தெச. 2:23; 1 யோவான் 3:3).
2. இழந்துபோனவர்கள் இரட்சிப்படைய வேண்டும் என்று நாம் ஜெபிப்பதற்கும் உழைப்பதற்கும் இது உள்ளத்தில் சுமையை ஏற்படுத்த வேண்டும் (ஆதி. 19:14; எசே. 33:6; யூதா 21-23).

3. உபத்திரவங்களும் சோதனைகளும் ஏற்படு கின்ற வேளைகளிலும்கூட, இது நம்மை விடாமுயற்சியுடைவர்களாக இருக்கும்படி உற்சாகப்படுத்த வேண்டும் (ரோமர் 8:18; 2 கொரி. 4:17; 1 தெச. 4:13-18).
4. அவருடைய வருகை நெருங்கியிருப்பதால் நமது பொருட்செல்வத்தின் மதிப்பு குறைந்து போகிறது என்பதை உணர்ந்தவர்களாக, நமது உடைமைகளைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அது தூண்டிவிட வேண்டும் (லேவி. 25:8-10; 14-16 ஆகிய வசனங்களைக் காண்க).
5. எவர்களுக்கு எதிராக நாம் தவறிழைத்திருக் கிறோமோ, அவர்களிடம் நாம் மன்னிப்பு கேட் கும்படியும், எங்கெல்லாம் இழப்பீடு செய்ய முடியுமோ அங்கெல்லாம் அதைச் செய்யும் படியும் அது நம்மை நெருக்கி ஏவிவிட வேண் டும் (மத். 5:24; யாக். 5:16).
6. ஒருவரும் வேலைசெய்யக்கூடாதபடி இராக் காலம் வருகிறதை உணர்ந்தவர்களாக நாம் கடுமையாக உழைக்கும்படி அது நமக்கு ஊக்கமளிக்க வேண்டும் (யோவான் 9:4; 1 தெச. 1:9,10).
7. அவருடைய வருகையை எதிர்நோக்கிய மன நிலையோடும் (லூக்கா 12:36), அவருடைய வருகையின்போது வெட்கமடையாதபடியும் நாம் அவருக்குள்ளாக நிலைத்திருக்கும் படியும் (1 யோவான் 2:28) இருக்க அது செயல்படுத்த வேண்டும்.
8. நாம் கிறிஸ்துவை அறிக்கைபண்ணும்படி அது நம்மைத் துணிவுள்ளவர்களாக மாற்ற வேண்டும் (மாற்கு 8:38; லூக்கா 9:26).
9. நமக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய நம்பிக்கை யாக அது விளங்க வேண்டும் (யோவான் 14:1-3,28; 1 தெச. 4:18; 2 தெச. 1:7; 2 தீமோ. 2:12).
10. நடக்கையில் நிதானம் உடையவர்களாக வும், மென்னயம் கொண்டவர்களாகவும் இனிமையும் விவேகமும் உடையவர்களாக வும் நாம் விளங்க அது நம்மை உற்சாகப் படுத்த வேண்டும் (பிலி. 4:5).
11. ஒருமைப்பாட்டிற்கும் அன்பிற்கும் அது தூண்டு கோலாக விளங்க வேண்டும் (1 தெச. 3:12, 13).
12. நாம் வேற்றுலக மக்கள் என்னும் மனநிலை யோடு வாழ அது நம்மை உற்சாகப்படுத்த வேண்டும் (கொலோ. 3:1-4).
13. வரப்போகிற புனராய்வு மற்றும் பரிசுப்பொருள் ஆகியவற்றின் நினைவூட்டுதலாக அது காணப்படவேண்டும் (ரோமர் 14:10-12; 1 கொரி. 3:11-15; 2 கொரி. 5:10).
14. நமது நற்செய்திப் பிரசங்கங்களில், வலிமை மிக்க அறைகூவலாக அது பயன்படுத்தப்பட வேண்டும் (அப். 3:19-21; வெளி. 3:3).

கிறிஸ்துவின் வருகையானது, அவிசுவாசிகள் தங்களுடைய பாவங்களுக்காக மனம்வருந்தி, கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொண்டவர்களாகத் தங்களுடைய வாழ்க்கையை முழுவதுமாக அவரிடமாய் ஒப்புவிக்கும்படி செய் வதற்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும். சபை எடுத்துக்கொள்ளப்படும் தருணத்தில், கிறிஸ்து வுக்குள்ளாக இருப்பவர்கள் மட்டுமே, அவரோடு செல்ல முடியும். பிறரோ நியாயத்தீர்ப்புக்கென்று இந்த உலகத்திலேயே விடப்படுவார்கள்.

இன்றைக்கு அந்நிகழ்ச்சி நிகழுமாயின் அதன் விளைவு என்ன?

தெசலோனிக்கேயருக்கும் கிறிஸ்தவர்களுக் கும் இவ்வுண்மை எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்னும் உணர்வோடு அதனைக் குறித்த கருத்துத் தொகுப்புகளை வழங்குகிறோம்.

உபத்திரவ காலத்திற்கு முந்தி சபை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை ஆதரிக்கும் வாதம்

1. இந்நிகழ்ச்சி எத்தருணத்தில் வேண்டுமானா லும் நிகழலாம் என்பதை அடிப்படையாகக் கொண்டது முதல் வாதம். கர்த்தருடைய வருகை எந்த நேரத்தில் நிகழும் என்பது தெரியாத கார ணத்தினால், அது எப்பொழுது வேண்டுமானாலும் நிகழக்கூடும் என்னும் நினைவோடு அந்நிகழ்ச் சிக்காக விழிப்போடும் எச்சரிப்போடும் கிறிஸ்த வர்கள் காத்திருக்க வேண்டுமென்று பல வசனங் கள் சுட்டிக்காட்டுகின்றன. சபையானது உபத் திரவ காலத்திற்குள் செல்ல வேண்டுமானால் அவருடைய வருகை எப்பொழுது வேண்டுமானா லும் நிகழலாம் என்று நம்மால் எதிர்நோக்கி யிருக்க முடியாது. அது உண்மையானால், குறைந்தது இன்னும் ஏழு ஆண்டுகள் அவர் வரமாட்டார், ஏனெனில் இப்பொழுது நாம் உபத் திரவ காலத்திற்குள் இல்லை; மேலும் அது வரும்போது, அது ஏழு ஆண்டுகளுக்கு நிலைத் திருக்கும். உபத்திரவ காலத்திற்கு முன் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கொள்கை மட் டுமே, எப்பொழுது வேண்டுமானாலும் கிறிஸ்து

வின் வருகை நிகழக்கூடும் என்னும் கருத்தை நீங்கள் உறுதியாய்ப் பிடித்துக் கொள்வதற்கும் நம்புவதற்கும் ஏதுவாக இருக்கிறது.

கிறிஸ்துவின் வருகை எப்பொழுது நிகழும் என்பதை நாம் அறிந்திராத காரணத்தினால், அவருடைய வருகைக்காக நாம் எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாகக் காத்திருக்க வேண்டும் என்று கற்பிக்கிற சில வசனங்களைக் கீழே தருகிறோம்:

"அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" (ரோமர் 8:23).

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரி. 11:26 - கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இந்தச் சொற்கள், அவர்களுடைய வாழ் நாளின்போதே கர்த்தர் வரக்கூடும் என்று கூறுவதாக இருக்கின்றன).

"ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்" (2 கொரி. 5:2 - சபை எடுத்துக்கொள்ளப்படும் தருணத்தில் விசுவாசிகள் மகிமையின் சரீரங்களால் அணிவிக்கப்படுவார்கள்).

"நாங்களோ நீதிகிடைக்குமென்று ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே கார்த்திருக்கிறோம்" (கலா. 5:5 - நீதிகிடைக்குமென்ற நம்பிக்கை கர்த்தரின் வருகையைக் குறிக்கிறது, மேலும் அத்தருணத்தில் நாம் பெறப்போகிற மகிமையின் சரீரத்தையும் குறிக்கும்).

"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்" (பிலி. 3:20,21).

"உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக, கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (பிலி. 4:5).

"ஏனெனில், அவர்கள்தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும் அறிவிக்கிறார்களே" (1 தெச. 1:9,10).

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" (தீத்து 2:13).

"கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபி. 9:28).

"வருகிறவர் இன்னுங் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்" (எபி. 10:37).

"இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்" (யாக். 5:7-9).

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 4:7).

"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது

அவர் இருக்கிறவண்ணாகவே நாம் அவரைத் தரிசிப்பதால், அவருக்கு ஒப்பாயிருப்போ மென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:2).

"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத் துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங் கள்." (யூதா 21 - இங்கு இரக்கம் என்னும் சொல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மு டைய இரத்தத்தினால் விலைக்கு வாங்கிய மக்களை விண்ணுலகுக்கு அழைத்துச் செல் லும்படி மீண்டும் வருவதையே குறிக்கிறது.)

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" (வெளி. 3:11).

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங் களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்" (வெளி. 22:7).

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனு டைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" (வெளி. 22:12).

"இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும் (வெளி. 22:20).

இன்னும் சில வேதபகுதிகள் சபை எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சியை நேரடியாகக் குறிப் பிடுவதில்லையெனினும், கிறிஸ்துவின் வருகை எந்தத் தருணத்திலும் நிகழலாம் என்னும் பொது வான கருத்தைக் கொண்டுள்ளன. விசுவாசிக்கும் சபையானது, தன்னுடைய வரலாற்றுக் கால மெல்லாம் கிறிஸ்துவின் வருகையின் நேரம் மறைவாயிருக்கிறது என்றும், ஆகவே அது எந்தத் தருணத்திலும் நிகழலாம் என்றும் கருதி வந்திருக்கிறது.

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடி யினால் விழித்திருங்கள். திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர் கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங் களும் ஆயத்தமாயிருங்கள் (மத். 24:42-44).

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார் கள், குமாரனும் அறியார். அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையா யிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங் கள். ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத் தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும் போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங் கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலை யையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல்காக்கிறவனுக்குக் கற்பிப்பான். அப் படியே நீங்களும் விழித்திருங்கள்; ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத் திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடிக்காதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்கு சொல்லு கிறதை எல்லோருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் என்றார்" (மாற்கு 13:27-32).

"தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத் திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங் கள்" (லூக்கா 12:36).

"அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்கு காத்திருக்கிறீர்கள்" (1 கொரி. 1:7).

"உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர் களையும் சடிதியில் நியாயந்தீர்க்கப்போகிற கிறிஸ்து இயேசு" (2 தீமோத்தேயு 4:1 - JND மொழிபெயர்ப்பு).

"பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக் கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அத னாலே இது கடைசிக்காலமென்று அறி கிறோம்" (1 யோவான் 2:18).

"நீ விழித்திராவிட்டால், திருடனைப் போல் உன்மேல் வருவேன். நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" (வெளி. 3:3).

"இதோ, திருடனைப் போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்கிறவன் பாக்கியவான்" (வெளி:16:15).

2. வரப்போகிற ஆக்கினையிலிருந்து சபை விடுவிக்கப்படும் என்னும் வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்டதே இரண்டாவது வாதம். ரோமர் 5:9 -இல், "கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" என்று பவுல் கூறுகிறார். இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவர் என்று கர்த்தராகிய இயேசு 1 தெசலோனிக்கேயர் 1:10 -இல் விவரிக்கப்பட்டுள்ளார். தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இரட்சிப்புக்கென்று நியமித்தார் என்று அதே மடலில் 5:9 -ஆம் வசனத்திலிருந்து கற்கிறோம். இங்கு கோபாக்கினை என்று குறிப்பிடப்பட்டுள்ள சொல் உபத்திரவகால ஆக்கினையையோ அவிசுவாசிகள்மீது செலுத்தப்படவிருக்கிற தேவனுடைய நித்திய ஆக்கினையையோ குறிக்கக்கூடும். தெசலோனிக்கேயர் மடல்களின் பின்னணி, உபத்திரவகால ஆக்கினையையே இச்சொல் குறிப்பிடுகிறது என்னும் கருத்திற்கு ஆதரவளிக்கிறது (1 தெச. 5:2,3; 2 தெச. 1:6-10; 2:10-21 ஆகிய வசனங்களைக் காண்க).

3. வெளிப்படுத்தின விசேஷம் 3:10 -இல், கிறிஸ்து தம்முடைய மக்களை, பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகச் பூச்சக்கரமேலெங்கும் வரப்போகிற சோதனைக் காலத்திற்கு (கிரேக்கம் ek, "அதற்கு வெளியே" என்று பொருள்படும்) தப்புவிப்பதாக வாக்களித்துள்ளார்.

4. வெளிப்படுத்தின விசேஷ நூலின் அமைப்பு, உபத்திரவ காலத்திற்கு முன்பே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கருத்திற்குச் சான்றாக விளங்குகிறது. 2 மற்றும் 3 -ஆகிய அதிகாரங்களில் சபை இவ்வுலகில் காணப்படுகிறது. ஆனால் 3 -ஆவது அதிகாரத்திற்குப் பிறகு அது உலகில் இருப்பதாக மீண்டும் சொல்லப்படவேயில்லை. 4 மற்றும் 5 -ஆகிய அதிகாரங்களில் பரிசுத்தவான்கள் வெற்றியின் கிரீடங்களை அணிந்திருப்பவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து 6 முதல் 19-ஆவது அதிகாரம் வரையிலும் உலகத்தில் உபத்திரவம் நிகழ்வதைக் காணமுடியும். சபையின் காலத்துப் பரிசுத்தவான்கள் ஏற்கனவே விண்ணகத்தில் இருக்கிறார்கள்.

5. பாவமனிதன் வெளிப்படும் முன்னே உபத்திரவ காலம் தொடங்காது (2 தெச. 2:3). ஆனால் தடைசெய்கிறவர் நீக்கப்படுவதற்கு முன் பாவமனிதன் வெளிப்பட மாட்டான் (2 தெச. 2:7,8). தடைசெய்கிறவர் என்னும் பெயருக்குப் பரிசுத்த ஆவியானவரே மிகப் பொருத்தமானவர். இவ்வுலகில் சபை இருக்கும் காலமட்டும் தீமை இவ்வுலகில் முழுவளர்ச்சி அடையாதபடி அவர் தடை செய்கிறார். இவ்வுலகினின்று சபை எடுத்துக் கொள்ளப்படும் தருணத்தின்போதே அவர் சபையில் வாசம்பண்ணுகிறவர் என்னும் நிலையிலிருந்து நீக்கப்படுவார்.

ஒரு பொருளில், பரிசுத்த ஆவி எப்பொழுதும் இந்த உலகத்தில் இருந்திருக்கிறார், எப்பொழுதும் இருப்பார். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட சிறப்பான பொருளில் அவர் பெந்தெகொஸ்தே நாளில் இவ்வுலகிற்கு வந்தார். அதாவது, சபையிலும் விசுவாசிகளுக்குள்ளும் நிரந்தரமாகக் குடியிருப்பவராக வந்தார். அந்தப் பொருளில் இவ்வுலகினின்று சபை எடுத்துக்கொள்ளப்படும் நாளில் அவரும் இவ்வுலகினின்று நீக்கப்படுவார். தேவனுடைய ஆவியானவர் இவ்வுலகில் உபத்திரவ காலத்தில் தம்முடைய ஊழியத்தைத் தொடர மாட்டார் என்பது இதன் பொருளன்று. அவர் தொடர்ந்து பாவிகளைக் கண்டித்துணர்த்தி மனந்திரும்பச் செய்வார். ஆனால் அவர்களுக்குள்ளாக அவர் நிரந்தரமாகக் குடியிருக்கமாட்டார், அவர்களைச் சபையாக ஒன்றிணைக்க மாட்டார். அவருடைய ஊழியமானது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எவ்வாறு இருந்ததோ அதனோடு ஒரளவு ஒப்பிடப்படக்கூடியதாக இருக்கும்.

6. சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியானது ஆறுதலின் நம்பிக்கையாக 1 தெசலோனிக்கேயர் 4:18 -இல் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தருடைய நாளோ இரவில் திருடன் வருகிறவிதமாய் வருமேயொழிய ஆறுதலாக வரப்போவது இல்லை (1 தெச. 5:2). அது சடிதியில் அழிவை உண்டாக்குகிற நேரமாகவும் (வச. 3), கோபாக்கினை நேரமாகவும் (வச. 9), தப்பிப்போக முடியாத நேரமாகவும் (வச. 3) விளங்கும். இதற்கு எதிர்மாறாக, சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி எப்பொழுதும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய நிகழ்ச்சியாக விளங்குமேயொழிய, ஒருபோதும் அச்சமேற்படுத்துகிற நிகழ்ச்சியாக இருக்காது.

7. கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வருகிற நிகழ்ச்சிக்கும், அவர் தம்முடைய பரிசுத்தவான்களோடு வருகிற நிகழ்ச்சிக்கும் கால இடைவெளி கட்டாயமாக இருக்கும். கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வருகிற நிகழ்ச்சியின்போது, எல்லா விசுவாசிகளும் இவ்வுலகினின்று எடுத்துக்கொள்ளப்படுவதோடு, மகிமையின் சரீரங்களையும் பெறுவார்கள் (1 கொரி. 15:51). இருந்தபோதிலும் கிறிஸ்து இவ்வுலகை ஆளுகைபுரியும்படியாக வரும்போது, இரட்சிக்கப்பட்ட மனிதர்கள் தங்களுடைய இயல்பான சரீரங்களோடு இருப்பார்கள். மேலும் இவ்வுண்மை, அவர்கள் பிள்ளைகளைப் பெற்றெடுக்கக்கூடியவர்களாக இருப்பார்கள் என்பதிலிருந்து புலப்படுகிறது (ஏசாயா 65:20-25; சக. 8:5). சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியும், கர்த்தர் வெளிப்படும் நிகழ்ச்சியும் ஒரே நேரத்தில் நிகழுமென்றால் (உபத்திரவ காலத்திற்குப் பிறகு சபை எடுத்துக்கொள்ளப்படும் என்போரின் கருத்து), இங்கு இரட்சிக்கப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எங்கிருந்து வருவார்கள்?

சபை எடுத்துக்கொள்ளப்படுதல், கிறிஸ்துவின் ஆட்சி ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடையில் ஒரு கால இடைவெளி இருக்கும் என்பதற்கு இன்னுமொரு காரணம் உள்ளது. கிறிஸ்துவின் நியாயாசனம், சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து விண்ணகத்தில் நடைபெறவேண்டும். அப்பொழுது தம்முடைய பரிசுத்தவான்களின் பற்றுறுதியைக் கர்த்தர் விசாரித்து, தக்க பரிசுப்பொருட்களை அவர்களுக்கு வழங்குவார் (2 கொரி. 5:10). அப்பொழுது அவர்களுக்கு வழங்கப்படும் பரிசு, ஆயிரமாண்டு ஆட்சியில் அவர்கள் பெறும் ஆளும் உரிமையின் அளவை நிர்ணயிக்கும் (லூக்கா 19:17,19). சபை எடுத்துக்கொள்ளப்படுதலும், அரசாட்சி புரியும்படி கர்த்தர் வருகிற நிகழ்ச்சியும் ஒரே நேரத்தில் நடக்குமென்றால், கிறிஸ்துவின் நியாயாசனம் நடைபெறுவதற்கான காலம் இல்லாமல் போகும்.

8. எந்த மனிதனையும் பின்தொடர்ந்து பிடிக்கும்படியாக வருகிற கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாகவே இருக்கும் (1 தெச. 5:2). ஆனாலும் அந்த நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாக வந்து விசுவாசிகளைப் பிடித்துக் கொள்ளாது என்று பவுல் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் (1 தெச. 5:4). ஆகவே அது விசுவாசிகளைப் பின்தொடர்ந்து பிடிக்கப்போவதேயில்லை. ஏன் என்பதற்கான காரணங்களாவன: (1) விசுவாசிகள் பகலுக்குரியவர்கள், இரவுக்குரியவர்களல்ல (1 தெச. 5:4,5). (2) தேவன் விசுவாசிகளைக் கோபாக்கினைக்கென்று நியமிக்கவில்லை (1 தெச. 5:9).

9. சபை எடுத்துக்கொள்ளப்படும் வேளையில் விசுவாசிகள் திருத்தந்தையின் இல்லத்திற்குச் செல்லுவார்கள் (யோவான் 14:3). உபத்திரவ காலத்திற்குப் பின்னரே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கொள்கை கூறுவதுபோல அவர்கள் நேரடியாக மீண்டும் உலகத்திற்குக் கொண்டுவரப்படமாட்டார்கள்.

10. உபத்திரவ காலம் தனிவேறுபட்ட நிலையில் யூதப் பண்டையது. அது யாக்கோபின் இக்கட்டுக் காலம் என்று அழைக்கப்படுகிறது (எரே. 30:7). மத்தேயு 24 -இல் காணப்படும் யூதக் குறிப்புகளைக் கவனியுங்கள்: யூதேயா (வச. 16), ஓய்வுநாள் (வச. 20), பரிசுத்த ஸ்தலம் (வச. 15). இந்தச் சொற்களுக்கும் சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

11. பல பழைய ஏற்பாட்டு மாதிரிகள், உபத்திரவ காலத்திற்கு முன்னரே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. மாதிரிகளைக் கொண்டு நாம் கோட்பாடுகளைக் கட்ட முயற்சி செய்யவில்லை. ஆனால் இந்த மாதிரிகள் உபத்திரவ காலத்திற்கு முன்னரே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கொள்கைக்குப் பொருத்தமுடையதாயிருக்கின்றன.

> சபைக்கு மாதிரியாக இருந்த ஏனோக்கு தேவனுடைய கோபாக்கினையாகிய பெருவெள்ளம் வருவதற்கு முன்னரே எடுத்துக் கொள்ளப்பட்டான். ஆனால் விசுவாசிக்கிற மீதியான யூதர்களுக்கு மாதிரியாக விளங்கிய நோவாவும் அவன் குடும்பமும் பெருவெள்ளத்தில் பாதுகாக்கப்பட்டார்கள்.
>
> சோதோம் அக்கினியில் அழிக்கப்படும் முன்னே லோத்து அதிலிருந்து காக்கப்பட்டான்.
>
> கல்வாரியில் தேவன் தமது மைந்தரைப் பலியாகச் செலுத்தியதற்கு முன்மாதிரியாக ஆபிரகாம் தனது மகனைப் பலியாக ஒப்புவித்தான். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, தன்னுடைய மணவாட்டியைச் சந்திக்கும்படி ஈசாக்கு சென்று அவளைத் தனது இல்லத்திற்கு அழைத்து வந்தபோதே, முதன்முறையாக அவனுடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, கிறிஸ்து விண்வீட்டிற்குச் சென்ற பிறகு, அவர் தம்முடைய மணவாட்டியைத்

தமது இல்லத்திற்கு அழைத்துச் செல்லும்படி வருவதே கிறிஸ்துவின் முதல் வருகையாக இருக்கும்.

கொடுமைக்காரியாகிய யேசபேல் ஆக்கினைக்கு உட்படுத்தப்படுவதற்கு முன் எலியா விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்.

12. தானியேலின் தீர்க்கதரிசனத்தின் (9:24-27) அறுபத்தொன்பது வாரங்கள், அர்தசஸ்டாவின் ஆணை (கி. மு. 445) பிறப்பிக்கப்பட்ட நாள் தொடங்கி கிறிஸ்து சிலுவையில் அடிக்கப்பட்ட நாள்வரை தொடர்ந்தன. அவற்றிற்கும் சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவ்வாறிருக்க எழுபதாவது வாரமாகிய உபத்திரவ காலத்தின் ஊடாக ஏன் சபை கடந்து செல்லவேண்டும்? (உண்மையில், அறுபத்தொன்பதாவது வாரத்திற்கும் எழுபதாவது வாரத்திற்கும் இடையே, குறிப்பிட்ட கால அளவு சொல்லப்படாமல், சபையின் காலகட்டம் இடைப்பிறவரல் என்னும் நிலையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.)

உபத்திரவ காலத்திற்கு முந்தி சபை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை எதிர்த்தும், உபத்திரவ காலத்தின் முடிவில் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை ஆதரித்தும் கூறப்படும் வாதம்

1. வெளிப்படுத்தின விசேஷம் 3:10 -இல், பரிசுத்தவான்கள் உபத்திரவ காலத்திற்குள் உட்புகாமல் காக்கப்படுவார்கள் என்று வாக்குறுதி தரப்படவில்லை, மாறாக உபத்திரவ காலத்தில் காக்கப்படுவார்கள் என்றே சொல்லப்பட்டிருக்கிறது (யோவான் 17:15 -ஆம் வசனத்தோடு ஒப்பிடுக).

விடை: "சோதனைக் காலத்திற்குத் தப்பும்படி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர் எழுத்தின்படி "சோதனைக் காலத்திலிருந்து தப்பும்படி" என்றே பொருள்படும். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கமொழி முன் இடைச்சொல் (ek) "அதிலிருந்து" என்று பொருள்படும். ஆகவே உபத்திரவ காலத்தில் அல்லது உபத்திரவ காலத்தின் ஊடாக சபை காக்கப்படும் என்னும் சிந்தனை இங்கு இல்லை, மாறாக அது முழுவதுமாக உபத்திரவ காலத்திலிருந்து காக்கப் படும்.

இதே சொற்கள் இயேசு கிறிஸ்துவின் மன்றாட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன: "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல் நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்" (யோவான் 17:15). திருவாளர் பிளம்மர் விளக்குகிறார்: "கிறிஸ்துவின் சீடர்கள் எவ்வாறு அவருக்குள் நிலைத்திருக்கவும் நடக்கவும் செய்கிறார்களோ, அதுபோலவே அவர்கள் தீமையினின்று (ek- அதிலிருந்து) காக்கப்படவேண்டும் என்று கர்த்தர் இங்கு விண்ணப்பிக்கிறார்." இந்த மன்றாட்டுக்கு விடை தரப்பட்டது; சாத்தானின் ஆளுகையிலிருந்து விசுவாசிகள் காக்கப்பட்டு, தேவனுடைய அன்பின் குமாரனுடைய அரசிற்குள் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

2. "உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது" - கிரேக்க மொழியின்படி இங்கு உபத்திரவம் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறிக்கும்படி அந்த உபத்திரவம் என்றே காணப்படுகிறது (ரோமர் 5:3).

விடை: உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது என்று பவுல் ஒரே ஒரு குறிப்பிட்ட உபத்திரவ காலத்தை மட்டும் குறிப்பிடவில்லை. இவ்வுலக வாழ்க்கையில் விசுவாசிகள் அனுபவிக்கிற உபத்திரவம் பொறுமையை உண்டாக்கும் என்பதே பவுல் கூறும் வாதம் என்பது தெளிவாகத் தெரிகிறது. கிரேக்கம், பிரெஞ்சு, ஸ்பானிய மொழிகளில் ஒரு குறிப்பிட்ட இடம், பொருள், காலத்தைக் குறிப்பிடாத பெயர்ச்சொற்களுக்கு முன்பாகவும் அந்த, இந்த என்னும் சொற்கள் சேர்க்கப்படுவது வழக்கம். ஆகவே இது "அந்த உபத்திரவம்" என்று மொழிபெயர்க்கப்படாமல் "உபத்திரவம்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பது சரியானதே.

3. கிறிஸ்தவர்கள் உபத்திரவத்தை அடைவார்கள் என்று எப்பொழுதும் வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது (யோவான் 16:33). நாம் ஏன் உபத்திரவ காலத்திற்குள் செல்ல மாட்டோம் என்பதற்கான காரணம் எதுவும் இல்லை.

விடை: "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்பதை ஒருவரும் மறுத்துரைக்க வில்லை (அப். 14:22). ஆனால் ஒவ்வொரு விசுவாசியின் பங்காகிய உபத்திரவத்திற்கும், கிறிஸ்துவை ஏற்கமறுத்த உலகம் அடையப் போகிற உபத்திரவ காலத்திற்கும் பெரிதான அளவில் வேறுபாடு உள்ளது.

4. உபத்திரவ காலத்தின் முடிவிலே கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திற்கு வரும்வரை

பரிசுத்தவான்கள் இளைப்பாறுதலைப் பெற மாட்டார்கள் என்று 2 தெசலோனிக்யோ் 1:8 -இல் சொல்லப்பட்டுள்ளது.

விடை: இந்த மடலின் வாசகர்களாகிய தெசலோனிக்கேயர் ஏற்கனவே விண்ணகத்தில் இளைப்பாறுதலைப் பெற்றுவிட்டார்கள். ஆனால் அவர்களை உபத்திரவப்படுத்தியவர்களின் அழிவும் பரிசுத்தவான்களின் நியாயமும் கர்த்தராகிய இயேசு வல்லமையோடும் பெரிதான புகழ்ச்சியோடும் இவ்வுலகிற்குத் திரும்பி வருகிற போது வெளிப்படையாகக் காணப்படும்.

5. அப்போஸ்தலர் நடபடிகள் 3:21 -இன்படி, எல்லாம் சீர்பொருந்தும் வரைக்கும் அதாவது, ஆயிரமாண்டு ஆட்சி நிறுவப்படும் வரைக்கும், விண்ணகம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தன்னகத்தே வைத்துக்கொள்ள வேண்டும்.

விடை: இந்தச் சொற்கள் இஸ்ரவேல் மனிதர்களிடமாய்க் கூறப்பட்டன (வச. 4). இஸ்ரவேல் நாட்டினைப் பொருத்தமட்டில், இவ்வறிக்கை மெய்யானதே. "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இது முதல் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்று நம்முடைய இரட்சகர் மத்தேயு 23:39 -இல் கூறியிருப்பதற்கு இது ஒத்திருக்கிறது. இந்நிகழ்ச்சி உபத்திரவ காலத்தின் முடிவில் நடைபெறும். ஆனால் இதற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பே சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும்.

6. தேவன் தம்முடைய பகைஞர் யாவரையும் அழித்துபோடும் வரையிலும் கிறிஸ்து அவருடைய வலதுபுறத்தில் அமருவார் என்று சங்கீதம் 110:1 கூறுகிறது. இது உபத்திரவ காலத்தின் முடிவில்தான் நடைபெறும்.

விடை: வெளிப்படுத்தின விசேஷம் 20:8,9 ஆகிய வசனங்களில், ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தின் இறுதி நாட்களில் கிறிஸ்துவுக்குச் சில பகைஞர் இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆயிரமாண்டு அரசாட்சி உபத்திரவ காலத்திற்குப் பின்னரே நிறுவப்படும். தேவனுடைய வலது புறம் கனத்தையும் அதிகாரத்தையும் குறிக்கக் கூடிய நிலையேயாகும். மேலும் அது எந்த இடம் என்பதையும் குறிப்பிடுகிறது.

7. தீத்து 2:13 -இல், நாம் நம்பியிருக்கிற ஆனந்தபாக்கியம் என்பதும் மகிமையோடு கர்த்தர் வெளிப்படுவதும் ஒன்றுதான். ஆகவே சபை எடுத்துக்கொள்ளப்படுதலும், கர்த்தர் வெளிப்படுதலும் ஒரே நேரத்தில்தான் நிகழும். எனவே, நாம் உபத்திரவகாலத்திற்கு முந்தி சபை எடுத்துக்கொள்ளப்படுவதை எதிர்நோக்கியவர்களாக இராமல், அவர் அரசை நிறுவும்படி வருவதற்காகவே காத்திருக்கிறோம்.

விடை: கிரேக்க மொழி வாக்கிய அமைப்பு குறித்த விதியை அடிப்படையாகக் கொண்டது இந்த வாதம். இது கிரான்வைல் சார்ப் விதி என்றழைக்கப்படுகிறது. இதன்படி ஒரு வாக்கியத்தில் இரண்டு பெயர்ச்சொற்கள் "மற்றும்" (கிரேக்கம் kai) என்னும் சொல்லால் இணைக்கப்பட்டிருக்கும்போது, முதல் பெயர்ச்சொல்லுக்கு முந்தி குறிப்பிட்ட நபரை அல்லது பொருளைக் குறிக்கும்படி சுட்டிடைச் சொல் இடம் பெற்று, இரண்டாவது பெயர்ச்சொல் அந்தச் சுட்டிடைச் சொல்லைத் தனக்கு முன் பெற்றிராவிட்டாலும், அந்த இரண்டாவது பெயர்ச்சொல்லும் முதல் சொல் குறிப்பிடும் அதே நபரை அல்லது பொருளையே குறிப்பிடும். அது கூடுதலான விவரத்தைத் தருவதாகக் கருதப்படும். இதற்கோர் எடுத்துக்காட்டு: தீத்து 2:13 "மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமை." இங்கு தேவன் என்னும் சொல்லும் "இரட்சகர்" என்னும் சொல்லும் "மற்றும்" என்னும் சொல்லால் இணைக்கப்பட்டுள்ளன. (தமிழில் "உம்" என்னும் விகுதியால் இணைக்கப்பட்டுள்ளன.) இவை யிரண்டும் ஒரே சொற்றொடர் அல்லது வாக்கிய அமைப்பில் இடம்பெற்றுள்ளன. மேலும் இவை யிரண்டும் "உடைய" என்னும் இடைச்சொல்லின் செயப்படுபொருட்களாக இருக்கின்றன. மேலும் "நமது" என்னும் குறிப்பிட்ட சுட்டிடைச் சொல் "தேவன்" என்னும் சொல்லுக்கு முந்தி இருக்கிறதேயொழிய, இரட்சகர் என்னும் சொல்லுக்கு முந்தி இடம்பெறவில்லை. (தமிழில் "இரட்சகர்" என்னும் இரண்டாவது பெயர்ச் சொல்லுக்கு முந்தியே "நமது" என்னும் சொல் காணப்படுகிறது.) ஆகவே கிரான்வைல் சார்ப் விதியின்படி "இரட்சகர்" என்னும் சொல் "தேவன்" என்னும் சொல் யாரைக் குறிக்கிறதோ அவரையே குறிக்கிறது. மேலும் அச்சொல் அவரைப் பற்றிய கூடுதலான விவரத்தைக் கொடுக்கிறது. நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, தேவன் என்பதை இது ஐயத்திற்கிடமற்றபடி மெய்ப்பிக்கிறது.

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும்" என்று கிரேக்க மொழி வேதம் அதே வசனத்தில் கூறுகிறது. ஆகவே கிரான்வைல் சார்ப் விதியின்படி நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியமும்,

மகிமையின் பிரசன்னமாகுதலும் ஒன்றுதான். மேலும் மகிமையின் பிரசன்னமாகுதல் பொதுவாகக் கிறிஸ்து ஆளுகைபுரியும்படி வருகிறதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொற்றொடராக இருப்பதால், விசுவாசிகளின் நம்பிக்கையானது உபத்திரவ காலத்திற்கு முந்தி சபை எடுத்துக் கொள்ளப்படுவதாயிராமல், கிறிஸ்து இவ்வுலகிற்கு வரும் நிகழ்ச்சியேயாகும். இதுவே அவர்களது வாதம்.

இதற்கு இரண்டு வழிகளில் விடை கூறலாம். முதலாவதாக, கிரான்வைல் சார்ப் விதிக்கு சில விலக்குகள் உள்ளன. ஓர் எடுத்துக்காட்டினைக் காணலாம். கிரேக்க மொழியில் லூக்கா 14:23 -ஆம் வசனம், "நீ அந்தப் பெருவழிகளிலும் மற்றும் வேலிகளருகிலும் போ" என்று கூறுகிறது. அந்த விதியை இங்கு பயன்படுத்துவோமானால் பெருவழிகளும் வேலிகளும் ஒன்று என்றாகிவிடும். வேறு ஒரு விதிவிலக்கையும் காணலாம். எபேசியர் 2:20, "அந்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரம்." ஆனால் எந்தவொரு கவனமுள்ள வேதமாணாக்கனும் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அதே நபர்கள்தான் என்று ஒப்புக்கொள்ள மாட்டான்.

நாம் நம்பியிருக்கிற ஆனந்தபாக்கியமும், மகிமையின் பிரசன்னமாகுதலும் ஒன்றெனக் கொண்டாலும், சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியை, சபைக்காகக் கிறிஸ்து இவ்வுலகிற்கு மகிமையின் பிரசன்னமாகும் நிகழ்ச்சி என்று பொருள்படுத்தி அதனை எதிர்பார்ப்பதில் என்ன தவறு? வெளிப்பாடு (*apokalipsis*), பிரசன்னமாகுதல் (*epiphaneia*) என்னும் சொற்கள் சபை எடுத்துக்கொள்ளப்படுதல் மற்றும் ஆட்சிசெலுத்தும்படி இவ்வுலகிற்கு வருகைபுரிதல் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளையும் குறிக்கக்கூடும்.

8. கிறிஸ்து இவ்வுலகை ஆளும்படி வருகிற நிகழ்ச்சி விசுவாசிகளின் நம்பிக்கையாக இருக்கிறது என்று கூறுகிற வேறு வசனங்கள் 1 கொரிந்தியர் 1:7; 1 தீமோத்தேயு 6:14,15; 2 தீமோ. 4:8; 1 பேதுரு 1:7,13; 4:13

விடை: "வெளிப்படுதல்" மற்றும் "பிரசன்னமாகுதல்" என்னும் சொற்கள் கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வரும் நிகழ்ச்சியையும், அவர் தம்முடைய பரிசுத்தவான்களோடு வரும் நிகழ்ச்சியையும் குறிக்கும்படியாக இந்தப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலில் அவர் சபைக்கும், பின்னர் உலகத்திற்கும் தம்மை வெளிப்படுத்திப் பிரசன்னமாவார்.

இந்த வசனங்கள் யாவும் கிறிஸ்து இவ்வுலகினை ஆளும்படி வருகிற நிகழ்ச்சியைக் குறிப்பிடுவதாக நாம் எடுத்துக்கொண்டாலும், முன்னுரைக்கப்பட்ட எல்லா ஆசிர்வாதங்களையும் உள்ளடக்கிய விசுவாசிகளின் நம்பிக்கையாகவே அது இருக்கிறது. நாம் சபை எடுத்துக்கொள்ளப்படுதலையும், கிறிஸ்து ஆளுகைபுரியும்படி வருகிறதையும், ஆயிரமாண்டு ஆட்சியையும், நித்திய நிலையையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

9. உபத்திரவ காலத்திற்கு முந்தி சபை எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கருத்து திருவாளர் J. N. டார்பி அவர்களுடைய போதனையின்படி ஏறத்தாழ 180 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதேயொழிய, வழிவழியாக சபை கொண்டிருக்கும் கருத்து அல்ல.

விடை: புதிய ஏற்பாட்டுச் சபை தேவனுடைய குமாரன் வானத்திலிருந்து வருவதற்காகக் காத்துக்கொண்டிருந்தது. அவர் எப்பொழுது வருவார் என்பது பரிசுத்தவான்களுக்குத் தெரியாததால், அவர் எப்பொழுது வேண்டுமானாலும் வரக்கூடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மனிதன் என்ன கற்பித்தான், என்ன கற்பிக்கவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்ட வாதம், ஒரு பிரச்சினையைப் பொருத்த மட்டில் பயனற்றது. "வேதம் என்ன கற்பிக்கிறது?" என்பதே கேள்வி. "ஒரு மனிதன் என்ன செய்கிறான், என்ன கற்பிக்கிறான்?" என்பது முக்கிய மானதல்ல.

10. 1 கொரிந்தியர் 15:52 -இல் காணப்படும் கடைசி எக்காளமும், தேவனுடைய எக்காளமும் (1 தெச. 4:16) சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியோடு தொடர்புடையவை; இங்கு சொல்லப்பட்டிருக்கும் எக்காளமும் வெளிப்படுத்தின விசேஷம் 11:15 -இல் காணப்படும் எக்காளமும் ஒன்றுதான். ஏழாவது எக்காளம் உபத்திரவ காலத்தின் முடிவில் ஊதப்படும். அப்பொழுது, "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின." ஆகவே அவருடைய வருகை உபத்திரவ காலத்திற்குப் பிறகே நடைபெறும்.

விடை: இந்த எக்காளங்கள் யாவும் ஒன்றல்ல. "கடைசி எக்காளமும்," "தேவனுடைய எக்காளமும்" ஒன்றுதான். இது சபை எடுத்துக்கொள்ளப்படுவதை அறிவிக்கிறது. மேலும் விசுவாசிகளின் உயிர்த்தெழுதலுக்கும் அவர்கள் யாவரும் திருத்

தந்தையின் இல்லத்திற்குக் கொண்டுபோகப்படுவதற்கும் இது கட்டளையிடுகிறது. இது சபையின் "கடைசி எக்காளமாகும்." வெளிப்படுத்தின விசேஷம் 11:15 இல் சொல்லப்பட்டுள்ள கடைசி எக்காளம், உபத்திரவ காலத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத் தொனிக்கும் எக்காளங்களில் கடைசி எக்காளமாகும். விசுவாசிக்காத இஸ்ரவேலுக்கும், விசுவாசிக்காத புறவினத்தாருக்கும் ஒலிக்கப்படும் கடைசி எக்காளமே இது. 1 கொரிந்தியர் 15:52 -இல் "கடைசி எக்காளம்" என்று அழைக்கப்பட்டுள்ள எக்காளமும் "தேவனுடைய எக்காளமும்"(1 தெச. 4:16) உபத்திரவ காலத்திற்கு முந்தி தொனிக்கும் எக்காளமே ஆகும். ஆனால் ஏழாவது எக்காளமோ உத்திரவ காலத்தின் முடிவில் தொனிக்கும்.

11. வெளிப்படுத்தின விசேஷம் 20:4,5 சொல்லப்பட்டுள்ள முதலாவது உயிர்த்தெழுதல் உபத்திரவ காலத்தின் முடிவில் நிகழும். மாறாக அது உபத்திரவ காலத்திற்கு முந்தி நடைபெறாது.

விடை: முதலாம் உயிர்த்தெழுதல் ஒருமுறை நடந்து முடிவடைந்து விடுவதில்லை, அது பல கட்டங்களில் நிகழும். அது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தொடங்கியது (1 கொரி. 15:23). அதனுடைய இரண்டாவது கட்டம் சபை எடுத்துக்கொள்ளப்படும்போது விசுவாசிகள் உயிர்த்தெழும் நிகழ்ச்சியாகும். அதனுடைய மூன்றாவது கட்டம் கிறிஸ்து இவ்வுலகை ஆளும் படி உபத்திரவகாலத்தின் முடிவில் வரும்போது பரிசுத்தவான்கள் உயிர்த்தெழும் நிகழ்ச்சியாகும் (வெளி. 20:4,5). அதாவது, முதலாம் உயிர்த்தெழுதல் எனப்படுவது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் மற்றும் எல்லா விசுவாசிகளின் உயிர்த்தெழுதலையும் உட்கொண்டதாகும். அது எந்தெந்த வேளைகளில் நடைபெறுகிறது என்பது பொருட்டன்று. அவிசுவாசிகள் யாவரும் ஆயிரமாண்டு ஆட்சியின் முடிவில் பெரிய வெள்ளை சிங்காசனத்திற்குமுன் நிற்கும்படி உயிர்த்தெழுவார்கள் (வெளி. 20:11-15).

12. மத்தேயு 13:24-30 இல் இவ்வுலகத்தின் முடிவுவரை, அதாவது, உபத்திரவ காலத்தின் முடிவுவரை கோதுமையும் களையும் ஒன்றாக வளரும் என்று சொல்லப்பட்டுள்ளது.

விடை: உண்மையே, ஆனால் இந்த உவமை பரலோக ராஜ்யத்தைக் குறித்துப் பேசுகிறதேயொழிய, சபையைக் குறித்துப் பேசுவதில்லை. இராஜ்யத்தில் உண்மையான மக்களும் போலியான மக்களும் இருப்பார்கள். அது உபத்திரவ காலத்தின் முடிவுவரை இருக்கும்.

13. சபை எடுத்துக்கொள்ளப்படுதல் இரகசியமாக நடைபெறாது. ஏனெனில் அந்தச் சமயத்தில் ஆரவாரமும், பிரதான தூதனுடைய சத்தமும், தேவ எக்காளமும் தொனிக்கும் (1 தெச. 4:16).

விடை: சபை எடுத்துக்கொள்ளும் நிகழ்ச்சி, கண் இமைப் பொழுதிலே நடைபெற்று முடிந்து விடும் என்பதை அடிப்படையாகக் கொண்டே அது இரகசியமாக நடைபெறும் என்று சொல்லப்படுகிறது (1 கொரி. 15:52). என்ன நடந்தது என்பதை இந்த உலகம் முழுவதும் காண்பதற்கோ அறிவதற்கோ சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை.

14. ஜார்ஜ் முல்லர், சாமுவேல் ட்ரெகல்ஸ், ஆஸ்வால்ட் ஸ்மித் போன்ற குறிப்பிடத்தக்க மனிதர்கள் சபை உபத்திரவ காலத்திற்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கருத்தையே கொண்டிருந்தார்கள்.

விடை: இந்த வாதம் எதையும் மெய்ப்பிக்கிறதில்லை. மிகப் பெரிய மனிதர்கள் இரண்டு பக்கங்களிலும் இருந்திருக்கிறார்கள்.

15. புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய வருகையைக் குறிக்கும் வசனங்கள் அவர் ஆளுகை செய்யும்படி வருவதையே குறிக்கின்றன.

விடை: இது சபை எடுத்துக்கொள்ளப்படும் என்னும் உண்மையை மறுத்துரைப்பதில்லை. நரகத்தைக் காட்டிலும் பரலோகத்தைக் குறித்தே கூடுதலான குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. எனவே நரகம் இல்லை என்பது இதன் பொருளாகாது.

16. உபத்திரவ காலத்தில் சபை தேவனுடைய கோபாக்கினையை அனுபவிக்கப்போவதில்லை. மாறாக அது அந்திக் கிறிஸ்து அல்லது சாத்தானின் கோபத்தைத்தான் அனுபவிக்கப் போகிறது.

விடை: வெளிப்படுத்தின விசேஷத்தில் உபத்திரவ கால கோபாக்கினை ஆறு முறை தேவனுடைய கோபம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

> "அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதன் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்

கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்" (வெளி. 14:9,10).

"அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின்மேலே நீட்டி, பூமியின் திராட்சைப் பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான்" (வெளி. 14:19).

"பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது" (வெளி. 15:1).

"அப்பொழுது அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குங் கொடுத்தது" (வெளி. 15:7).

"அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே: நீங்கள் போய் தேவனுடைய கோப கலசங்களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக் கேட்டேன்" (வெளி. 16:1).

"அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைவூட்டப்பட்டது" (வெளி. 16:19).

17. "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்"(வெளி. 22:7,12,20) என்று இயேசு கூறுகிறபோது, அது எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம் என்னும் பொருளைத் தருகிறதில்லை. அது சடிதியில் நிகழும் என்பதே இதன் பொருளாகும்.

விடை: இது சர்ச்சைக்குரிய விஷயம். "சடிதியில் நிகழும்" என்று நாம் பொருள் கொண்டாலும், எபிரெயர் 10:37 போன்ற வேறு சில வசனங்களும் உள்ளன, "வருகிறவர் இன்னும் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம் பண்ணார்."

18. 2 தெசலோனிக்கேயர் 2:6-8 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தடை செய்கிறவர் பரிசுத்த ஆவியானவர் அல்ல; தடைசெய்கிறது ரோமப் பேரரசோ தேவ வல்லமையோதான்.

விடை: அந்தப் பகுதியின் விளக்கத்தில் இது குறித்த விவரம் கொடுக்கப்பட்டுள்ளது.

19. அப்போஸ்தலருடைய நாட்களில் கிறிஸ்துவின் வருகை எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படவில்லை. ஏனெனில் பேதுருவும் பவுலும் தாங்கள் மரணமடையப் போவதை அறிந்திருந்தார்கள் (யோவான் 21:18,19; 2 பேதுரு 1:14,15; 2 தீமோ. 4:6).

விடை: கர்த்தருடைய வருகையின்போது தான் உயிரோடு இருக்கப்போவதாகப் பவுல் சில நேரங்களில் பேசியிருக்கிறார் (1 தெச. 4:15). சில இடங்களில் மரணமடைந்து, பின்னர் உயிருடன் எழப்போகிற விசுவாசிகளில் தானும் இருக்கப் போவதாகவும் பேசியிருக்கிறார் (பிலி. 3:10,11). அதுவே நம் எல்லோருடைய சரியான மனப்பான்மையும் ஆகும். கர்த்தர் நம்முடைய வாழ்நாளின் போதே வருவார் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனாலும் நாம் சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன் இறந்து போவோம் என்றும் எண்ணுகிறோம்.

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருப்பதாகப் பேதுரு நம்பினார் (1 பேதுரு 4:7). மேலும், "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே" என்று கர்த்தருடைய வருகையை மறுத்துரைத்து ஏளனம் செய்தோரை அவர் குற்றஞ்சாட்டுகிறார் (2 பேதுரு 3:4).

20. கர்த்தருடைய வருகை எத்தருணத்திலும் நிகழலாம் என்னும் கருத்து சரியல்ல. ஏனெனில் அவருடைய வருகைக்கு முன் நற்செய்தி உலகம் முழுவதையும் சென்றடைய வேண்டும் (மத். 24:14).

விடை: இது ராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் குறிக்கிறது (வச. 14). அந்த நற்செய்தி உபத்திரவ காலத்தில் உலகமெங்கும் செல்லும். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள், அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்." இதுவே அந்த நற்செய்தியின் வரையறையாகும். நாம் பிரசங்கிக்கிற இரட்சிப்பின் வழியே அப்பொழுதும் பிரசங்கிக்கப்படும். ஆனால் நாமோ சபை எடுத்துக்கொள்ளப்படுதலை எதிர்நோக்கியிருக்கிறோம். அதாவது, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். மேலும் இயேசு வரும்போது நீங்கள் அவருடன் பிதாவின் வீட்டிற்குச்

செல்லுவீர்கள்" என்று நாம் கூறுகிறதாகவும் இதைக் குறிப்பிடலாம்.

21. மத்தேயு 28:19,20 மற்றும் அப்போஸ்தலர் 1:8 போன்ற பகுதிகள் அனைத்து நாடுகளுக்கும் நற்செய்தி போவதைக் குறித்துப் பேசுகின்றன. "சகல ஜாதிகள்" "பூமியின் கடைசிபரியந்தம்" என்னும் சொற்றொடர்கள் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறிருக்க, அப்போஸ்தலருடைய வாழ்நாட்களின்போது கர்த்தர் வருவதற்கான சாத்தியம் இல்லாதிருந்தது என்பதே இவற்றின் பொருளாகும்.

விடை: "உலகமெங்கும்" "வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும்" நற்செய்தி பிரசங்கிக்கப்பட்டு விட்டது என்று பவுல் கொலோசெயர் 1:6,23 ஆகிய வசனங்களில் கூறுகிறார். ரோமர் 10:18 -இல் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் நற்செய்தி சென்றிருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த நாட்களில் அறியப்பட்டிருந்த உலகமெங்கும் அதாவது மத்திய தரைக் கடலின் அருகே இருந்த நாடுகள் எங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்றே இந்தப் பகுதிகள் கூறுகின்றன. இவ்விதமாக நாம் இப்பகுதிகளைப் புரிந்துகொள்கிறோம் என்பதே உண்மை.

22. அப்போஸ்தலர் 18:21; 23:11; ரோமர் 15:22-25,30,31 ஆகிய பகுதிகளில் நீண்ட கால நற்செய்தித் திட்டங்களைப் பவுல் வகுக்கிறார். மிக விரைவில் கர்த்தர் வருவார் என்று எதிர்பார்க்கப்படவில்லை என்பதையே இவை காட்டுகின்றன.

விடை: தேவனுடைய சித்தத்திற்கு உகந்த வண்ணமே பவுலுடைய திட்டங்கள் தீட்டப்பட்டன (அப். 18:21; ரோமர் 1:10; 1 கொரி. 4:19). தன்னுடைய வாழ்நாளின் போதே கர்த்தர் வரமாட்டார் என்பதுபோல அவர் ஊழியம் செய்தார், ஆனால் அவர் எப்பொழுது வேண்டுமானாலும் வருவார் என்னும் எண்ணத்துடனே பவுல் விழிப்புடனே காத்திருந்தார்.

23. கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று பவுல் பேசினார் (1 தீமோ. 4:1-3; 2 தீமோ. 3:1-5). ஒரு குறிப்பிட்ட கால இடை வெளிக்குப் பின்னரே கர்த்தர் வருவார் என்னும் கருத்தை முன்னிட்டே இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

விடை: "அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது" என்றும் பவுல் கூறினார் (2 தெச. 2:7). "இது கடைசி காலமாயிருக்கிறது"என்று யோவான் தான் வாழ்ந்த நாளைக் குறிப்பிட்டார் (1 யோவான் 2:18). கர்த்தருடைய வருகை எப்பொழுது வேண்டுமானாலும் நிகழும் என்பது நடைபெறக்கூடாத நிகழ்ச்சி என்று இவர்கள் கருதவில்லை என்பதை இந்தப் பகுதிகள் தெளிவுபடுத்துகின்றன.

24. மத்தேயு 25:14-30 மற்றும் லூக்கா 19:11-27 ஆகிய பகுதிகளில் காணப்படும் உவமைகள், கர்த்தருடைய வருகைக்கு முன் நீண்டதொரு கால இடைவெளி இருக்கிறது என்னும் கருத்தை ஊகமாகக் கொண்டிருக்கின்றன. ஆகவே தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய வருகை எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம் என்னும் நம்பிக்கையுடன் இருந்திருக்க மாட்டார்கள்.

விடை: தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் உவமைகளை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய கோட்பாடுகளை வகுக்கவில்லை என்பது வெளிப்படை. மாறாக அவர்கள் சபை எடுத்துக்கொள்ளப்படுவதையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் (1 தெச. 1:10). ஆனால் அதற்கு முற்றிலும் அப்பாற்பட்டு, மத்தேயுவில் காணப்படும் வெகுகாலம் (25:19), அவருடைய வருகை எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம் என்பதைப் பொருத்தமற்றது என்று சொல்லும் அளவிற்கு வரையறையற்றதல்ல. லூக்கா 19:11 -இல் கூறப்பட்டுள்ள உவமை, ராஜ்யம் உடனடியாகத் தோன்றாது என்று கற்பிக்கிறது, ஆனாலும் சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சி எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம் என்பதை இதனால் தவிர்க்க முடியாது.

அடிக்குறிப்புகள்

1 (1:1) இப்பொழுதும் (அல்லது மீண்டும்) புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களின் சபை ஒன்று தெசலோனிக்கேயில் இயங்கி வருகிறது (இப் பொழுது அந்தப் பட்டணம் சலோனிகி என்று அழைக்கப்படுகிறது).

2 (1:5) E. W. Rogers, *Concerning the Future*, p. 80.

3 (1:6) George Williams, *The Student's Commentary on the Holy Scripures*, p. 948.

4 (1:9,10) பழைமைப் பிரதியும் (NU) பெரும் பான்மைப் பிரதியும் (M) ''விசுவாசித்தவர்கள்'' என்றே குறிப்பிட்டுள்ளன. ஆகவே அதுவே ஐயத் திற்கிடமற்றபடி சரியான வாசகம் ஆகும்.

5 (2:1) William Kelly, *Elements of Prophecy*, p. 253.

6 (2:2) நடுநிலைப் பிரதியில் ''கர்த்தர்'' *(Kurios)* என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. KJV மற்றும் NKJV மொழிபெயர்ப்புகளில் காணப்படும் ''கிறிஸ்து'' என்னும் சொல் பாரம் பரிய பிரதியைத் தழுவியது, இது சில வேளை களில் மனநிறைவற்ற வகையிலான ஆதரவைப் பெறுவதில்லை, இங்கு இது பெரும்பான்மைப் பிரதியாகவும் விளங்குகிறது. ''கிறிஸ்துவினு டைய நாள்'' என்பது உபத்திரவத்தின் இறுதிக் கட்டத்தைக் குறிப்பதாகவும் அந்த நேரம் பாவ மனிதன் வெளிப்படுத்தப்பட்ட பிறகே தொடங்கு வதாகவும் சில அறிஞர்கள் கருதுகிறார்கள். தெச லோனிக்கேயரில் சிலர் இந்த நேரத்தை சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு நடக்கும் நிகழ்ச்சி என்று தவறாகக் கருதினார்கள். இந்தக் காலத்தை, சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு நடைபெறவிருக்கிற நிகழ்ச்சியோடு தொடர்பு படுத்தியவராக, பவுல் அவர்களுடைய தவறான எண்ணத்தைத் திறமையுடன் முறியடிக்கிறார்.

7 (2:3) விசுவாச துரோகம் என்னும் சொல் ''புறப்பாடு'' என்று J. டிவைட் பெண்டிகாஸ்ட் போன்ற சில இறையியல் அறிஞர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் இச் சொல் சபை எடுத்துக்கொள்ளப்படுதலையே குறிக்கும். இது சரியான பொருளாக இருக்கு மென்றால், உபத்திரவ காலத்திற்கு முந்தி சபை எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கருத்து ஐயத் திற்கு இடமற்றபடி உறுதியாகிறது.

8 (2:3) ''பாவ மனிதன்'' என்னும் சொல் பாரம்பரிய (TR) மற்றும் பெரும்பான்மைப் பிரதி களில் இடம் பெற்றுள்ளது. ''அக்கிரமக்காரன்'' என்னும் சொல் நடுநிலைப் பிரதியில் பயன்படுத் தப்பட்டுள்ளது.

9 (2:4) தேவன் போல் உட்கார்ந்து என்னும் சொற்றொடரில் கிரேக்க மொழி வேதத்தில் *anti* என்னும் முன்னிடைச் சொல் ''எதிர்த்து நிற் கிறவன்'' என்னும் பொருளோடோ ''அவருடைய இடத்தில்'' என்னும் பொருளோடோ இடம்பெற் றுள்ளது. இரண்டு அர்த்தங்களும் அந்திக் கிறிஸ்துவுக்குப் பொருந்துகின்றன.

10 (2:6) கிரேக்க மொழி வேதத்தில் ஆறா வது வசனத்தில் ஆண் பெண் பாகுபாடற்றபடி சுட்டிடைச் சொல்லும், எச்ச வினையும் பயன்படுத் தப்பட்டுள்ளன. ஏழாவது வசனத்தில் ஆண்பால் சுட்டிடைச் சொல்லும், எச்ச வினையும் பயன்படுத் தப்பட்டுள்ளன.

11 (2:6) Rogers, *Future*, p. 65

12 (2:6) பரிசுத்தஆவி என்னும் சொல் ஆண் பெண் பாகுபாடற்றபடி அஃறிணையில் இலக் கணத்திற்கு ஏற்றபடி குறிப்பிடப்பட்டுள்ளது (*Pneuma*-அஃறிணை). அவருடைய ஆளுமை விளங்கும்படி ஆண்பால் பின்னர் பயன்படுத்தப் பட்டுள்ளது.

13 (3:5) இரண்டு மொழிபெயர்ப்புகளும் சரியானவையே. KJV மொழிபெயர்ப்பின்படி புறப்பொருள் சார்ந்த பொருளை இச்சொல் கொண்டி ருக்கிறது. NKJV மொழிபெயர்ப்பின்படி கிறிஸ்து வெளிப்படுத்திய பொறுமை என்னும் உள்ளுணர் வுப் பொருளை இச்சொல் கொண்டிருக்கிறது.

14 (3:11) கிரேக்க மொழிச் சொற்கள் "யாதொரு வேலையும் செய்யாமல் (*not at all ergazomenous*) வீண் அலுவல்காரராய் (*periergazomenous*)" என்பன ஆகும். இவற்றின் வேர்ச்சொல்லாகிய "erg" (அலுவல் அல்லது வேலை) என்னும் சொல்லைக் கவனிக் கவும்.

நூல் விவரப் பட்டியல்

முதல் தெசலோனிக்கேயர் மடலில் உள்ள பட்டியலைக் கவனிக்கவும்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின

மேய்ப்பர்களுக்கான அறிவுரை மடல்களின் அறிமுகம்

கிறிஸ்தவத் திருச்சபை வரலாற்றில் மேய்ப்பர்கள் திருமடல்கள் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. மேலும் அவை புதிய ஏற்பாட்டு வேதநூல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளதை வெகுவாய் நியாயப்படுத்துகின்றன. இம்மடல்களில் காணப்படும் ஆரோக்கியமான நடைமுறை அறிவுரைகளும், இறையியல் அறிக்கைகளும் இரண்டறக் கலந்து கிறிஸ்தவர்களுக்குத் தனிப்பட்ட வகையிலும் கூட்டாகவும் அளவற்ற நன்மை பயப்பவையாக விளங்குகின்றன. – டொனால்டு குத்ரி

1. "மேய்ப்பர்கள் திருமடல்கள்" என்பதன் பொருள்

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து 1 மற்றும் 2 தீமோத்தேயு, தீத்து ஆகிய மடல்கள் "மேய்ப்பர்கள் திருமடல்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இந்த வருணனை ஒருவருக்குத் தவறான எண்ணத்தை ஏற்படுத்தக் கூடும் அல்லது அவருக்குப் பயனளிக்கக்கூடியதாக விளங்கும்; ஆனால் அவர் எவ்வாறு இந்த வருணனையைப் புரிந்துகொள்கிறாரோ அதைப் பொருத்தே அது அமையும்.

கர்த்தருடைய மந்தையை எவ்வாறு கவனித்துக்கொள்வது என்பதற்கான நடைமுறை அறிவுரைகளை இம்மடல்கள் கொண்டிருக்கின்றன என்னும் கருத்தை இந்தத் தலைப்பு உருவாக்குமென்றால், அது தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றி விட்டது என்று கூறலாம்.

ஆனால், தீமோத்தேயு எபேசு சபைக்கும், தீத்து கிரேத்தா சபைக்கும் குருமார்களாக இருந்தார்கள் என்பது மாற்றத்திற்கு இடமற்ற உண்மை (தற்காலத்தில் போதகர்கள் என்று அழைக்கப்படுகிற பதவி) என்னும் எண்ணத்தை இந்தத் தலைப்பு உங்களிடத்தில் உருவாக்குமென்றால், நீங்கள் இதனைத் தவறாகப் புரிந்துகொண்டீர்கள் என்பது பொருளாகும்.

KJV மொழிபெயர்ப்பின் பழம் பதிப்புகளில், ஆவியின் ஏவுதல் இல்லாமல் இம்மடல்களின் இறுதியில் சில வாசகங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. இந்த வரலாற்றுப்பூர்வமான தவறுக்கு வித்திட்டவை அந்த வாசகங்களே ஆகும். எடுத்துக்காட்டாக, 2 தீமோத்தேயு மடலின் இறுதியில் ஆவியின் ஏவுதலற்ற கீழ்க்காணும் வாசகம் சேர்க்கப்பட்டிருந்தது:

> பவுல் நீரோவின் முன்னிலையில் இரண்டாம் முறை கொண்டுவரப்பட்டபோது, அவர் ரோமா புரியிலிருந்து எபேசு சபைக்கு முதலாவது பிஷப்பாக நியமிக்கப்பட்ட தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபம்.

தீத்து நிருபத்தின் இறுதியில் கீழ்க்காணும் வாசகம் சேர்க்கப்பட்டிருந்தது:

> மக்கெதோனியாவிலுள்ள நிக்கொப்போலியிலிருந்து கிரேத்தியருடைய சபைக்கு முதலாவது பிஷப்பாக நியமிக்கப்பட்ட தீத்துவுக்கு எழுதப்பட்ட நிருபம்.

மதகுருவாகப் பணியாற்றிய ஆல்பர்ட் பர்னஸ் என்பார் எழுதியுள்ள விளக்கக் குறிப்பு ஒருசார்பு உடையது என்று சொல்லுவதற்கான காரணம் சிறிதும் இல்லை:

> அங்கிருந்த சபையின் முதல் பேராயராகத் தீத்து பணியாற்றினார் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை. திருமறையில் கண்காணி என்னும் சொல் எந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ அதற்குச் சரியான முறையில் பொருத்தமுடைய முதல் நபர் இவர் தான் என்று சொல்வதற்கும் ஆதாரமில்லை. உண்மையில், அவர் முதல் நபர் அல்ல என்பதற்கான ஆதாரமே காணப்படுகிறது. ஏனெனில் பவுல் அவருடன் அங்கு இருந்தார். மேலும் பவுல் தான் தொடங்கிய பணியை முடிக்கும்படி தீத்துவை அங்கு விட்டுச் சென்றார்.
>
> தீத்து அங்கு பிஷப்பாக இருந்ததற்கான, அதாவது அச்சொல்லின் செயல்முறை சார்ந்த பொருளிலும்கூட, ஆதாரம் எதுவும் இல்லை.

மேலும் அவர் அங்கு நிரந்தரமான போதகராக இருந்ததற்கும் எவ்வித ஆதாரமுமில்லை.

இவ்வாறு இறுதியில் இணைக்கப்பட்ட வாசகங்கள் முற்றிலும் ஆதாரமற்றவை, தப்பிதங்கள் நிறைந்தவை, இனியும் தாமதப்படுத்தக் கூடாது என்னும் நேரம் வந்தபோது அவை திருமறைப் பதிப்புகளிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. அவை பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்ட பகுதிகள் அல்ல. மாறாக, ''குறிப்புகளும் விளக்க வுரையும்'' என்னும் இயல்புடையவை. அவை ஏதோ ஒன்றைத் தொடர்ந்து செய்து கொண்டி ருந்தன, அதாவது தவறை நிலைநிறுத்திக் கொண்டிருந்தன. தீமோத்தேயு எபேசுப் பட்ட ணத்திலும், தீத்து கிரேத்தா தீவிலும் ''கிறிஸ்தவ மதகுருக்களாக'' இருந்தார்கள் என்னும் கருத்து இந்த வாசகங்களைச் சார்ந்ததே ஒழிய, திரு மறையில் அக்கருத்திற்கான சான்று ஒன்று மில்லை. உண்மையில் அந்த மடல்களில் இதற் கான சான்று எதுவுமில்லை, இந்த வாசகங்கள் அங்கிருந்து நீக்கப்பட்டநிலையில், அவர்கள் அந் தப் பதவியை வகித்தார்கள் என்று புதிய ஏற்பாட்டி லிருந்து எந்த மனிதனும் எண்ணியும் பார்க்க மாட்டான்.[1]

இறுதியாக, புதிய ஏற்பாட்டின் தற்காலப் பதிப்பு களில் அந்த வாசகங்கள் நீக்கப்பட்டமை நற்பேறு என்றே சொல்ல வேண்டும், ஆனாலும் அவை பறைசாற்றி வந்த தவறு இன்னும் நீங்கவில்லை.

தீமோத்தேயுவும் தீத்துவும் சபை விசுவாசி களுக்கு அறிவுரை நல்கும்படியும், கள்ளப்போத கர்களைக் குறித்து எச்சரிக்கும்படியும் அப்போஸ் தலனாகிய பவுலினால் குறுகியகாலப் பணிக் கென சபைகளுக்கு அனுப்பட்டார்கள்.

இந்த மூன்று மடல்களும் *ஒரே காலத்தவை, ஒருவரால் எழுதப்பட்டவை* என்று ஏறத்தாழ எல்லா வேத அறிஞர்களும் ஒப்புக்கொள்கிற காரணத்தால் இவற்றின் ஆசிரியர், நம்பகத் தன்மை ஆகியவை பற்றிய குறிப்புகளை ஒருங்கே காண விழைவோம்.

2. இம்மடல்களின் ஆசிரியர்

ஸ்மிட் என்பார் 1804 -இல் பவுலே இந்நூலின் ஆசிரியர் என்னும் உண்மையை மறுத்துரைத் தார். அதுவரை திருச்சபை முழுவதும், அவிசுவாசி களும்கூட இம்மடல்கள் மேதகு அப்போஸ்தல னால் எழுதப்பட்டவை என்பதை ஏற்றுக்கொண்டி ருந்தார்கள்.

அந்நாள் முதல் இந்நூல்கள் "போலியானவை" ஆனாலும் "சமயப்பற்றுள்ளவை" என்னும் கருத்து பெருமளவில் குறிப்பிடப்பட்டு வருகிறது (சமயப் பற்றோடு மோசடி இணைந்து செல்லும் என்பது போலப் பேசப்பட்டு வருகிறது!). தாராளக் கொள் கையைப் பின்பற்றுவோர், இம்மடல்கள் பவுலினால் எழுதப்பட்டவை அல்லது முழுமையும் பவுலினால் எழுதப்பட்டவை என்பதை நம்புவதற்கு இயலாத பிரச்சினைக்கு உட்பட்டிருக்கிறார்கள். சபையை எவ்வாறு நடத்துவது என்பதற்கான அறிவுரை, கள்ளப் போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை மற்றும் கடைசிக் காலத்தில் உண்டாகக் கூடிய அவிசுவாசம் போன்ற கோட்பாடுகள் பற்றிய முக் கியமான போதனைகள் யாவும் இம்மடல்களில் இடம் பெற்றுள்ள காரணத்தால் இம்மடல்கள் நம்பகத் தன்மை கொண்டவை என்பதற்கான ஆதாரங்களை மிக விரிவாகக் கொடுக்க வேண்டி யது அவசியம், இதுபோலவே மற்ற மடல்களைக் காட்டிலும் பேதுருவின் இரண்டாம் மடலுக்கும் விரிவான ஆதாரங்களை அளிக்க வேண்டியது அவசியம்.

3. புறச் சான்றுகள்

மேய்ப்பர்கள் மடல்களுக்கான புறச்சான்று மிக வலிமையானது. உண்மையில் ஏற்றுக்கொள் வதற்கும் மறுத்துரைப்பதற்கும் இது ஒன்றே அடிப் படை ஆதாரம் என்று கருதுவோமானால், இம் மடல்கள் நம்பகத்தன்மை உடையவை என்பதை எந்தக் கேள்விக்கும் இடமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த மடல்களிலிருந்து நேரடியாக மேற் கோள்களைப் பயன்படுத்திய ஆசிரியர்களில் அறியப்பட்ட முதல் ஆசிரியர் ஐரேனியஸ் ஆவார். தெர்தூலியன், அலெக்சாந்திரியா கிளமண்ட் ஆகியோர் முரடோரியன் வேதநூல் தொகுப்பு கருதுவது போலவே இம்மடல்கள் பவுல் எழுதி யவை என்று கூறியிருக்கிறார்கள். பலிகார்ப், ரோமாபுரிக் கிளமண்ட் போன்ற தொடக்க கால சபைப் பிதாக்களும் இந்த மடல்களை அறிந்திருந் தார்கள் என்றே தோன்றுகிறது.

மார்சியன் தனது "தொகுப்பில்" இந்த மூன்று நூல்களையும் சேர்க்கவில்லை என்று தெர்தூலியன் கூறியிருக்கிறார். பெரும்பாலும் இந்த நூல்களின் நம்பகத்தன்மைக்கு எதிராக அல்ல, அவற்றில்

அடங்கியுள்ள உட்பொருளுக்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்கு இது என்றே தோன்றுகிறது. ஞானமார்க்கம் முழுவளர்ச்சியடையாத நிலையில் இருந்தபோது, அதற்கு எதிராகப் பவுல் கடுமையாகத் தாக்கி எழுதியவை இந்த மேய்ப்பர்களுக்கான மடல்களில் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தினால் எரிச்சலடைந்த ஒரு கள்ளப் போதகராகவே மார்சியன் இருந்தார் (கொலோசெயர் மடலின் முன்னுரையைக் காண்க). யூதர்களுக்கு எதிராக இருந்த மாற்றுக் கருத்துடையோராகிய இவர், குறிப்பாக 1 தீமோத்தேயு 1:8; 4:3; 6:20 மற்றும் 2 தீமோத்தேயு 3:16,17 ஆகிய வசனங்களில் வெறுப்புடையவராயிருந்தார்.

4. அகச் சான்றுகள்

மேய்ப்பர்களுக்கான மடல்கள் பவுலால் எழுதப்பட்டவை அல்ல என்னும் கருத்திற்கான வாதங்களில் பெரும்பாலானவை, இந்த மடல்களில் காணப்படும் ஆதாரங்கள் என்று கருதப்படும் வாசகங்களே ஆகும். ஆனால் அவை உண்மையில் பவுலே இந்த மடல்களை எழுதினார் என்பதற்கான ஆதாரங்களாக விளங்குகின்றன.

ஆதாரம் என்று சொல்லப்படுபவை முக்கியமாக மூன்று வகைகளைச் சார்ந்தவை: வரலாறு சார்ந்தவை, கிறிஸ்தவ நிறுவனம் சார்ந்தவை, மொழியியல் சார்ந்தவை. இந்த மூன்று பிரச்சினைகளையும் நாம் சுருக்கமாக ஆராய்ந்து விளக்க முற்படுவோம்.

வரலாறு சார்ந்த பிரச்சினை: இந்த நூல்களில் காணப்படும் பல நிகழ்ச்சிகள் மற்றும் பெயர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகளோடும், மற்ற மடல்களில் இடம்பெற்றுள்ள பவுலின் ஊழியத்தோடும் தொடர்பற்றுக் காணப்படுகின்றன. மிலேத்து தீவில் நோயுற்ற நிலையில் துரோபீமுவைப் பவுல் விட்டு வந்த நிகழ்ச்சி, துரோவாவில் அவர் தனது மேலாடையையும், தோற்சுருள்களையும் வைத்து விட்டு வந்த நிகழ்ச்சி ஆகியவை நாமறிந்த அவருடைய ஊழியப் பயணங்களோடு தொடர்பற்றுக் காணப்படுகின்றன.

இந்த வாதத்தைத் தவறென்று மெய்ப்பிப்பது எளிது. ஆம், அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலுடன் இந்த நிகழ்ச்சிகள் பொருந்துவதில்லை என்பது உண்மை. அவ்வாறு இவை பொருத்த முடையனவாக இருக்க வேண்டிய தேவையில்லை. பவுல் விடுதலை அடையப் போவதை எதிர்நோக்கிக் கொண்டிருந்ததாக பிலிப்பியர் 1:5 கூறுகிறது. அவர் விடுதலை செய்யப்பட்டதாகவும், மீண்டும் கைதுசெய்யப்பட்டு தலை துண்டிக்கப்படுவதற்கு முன்னர் சில ஆண்டுகள் ஊழியம் செய்ததாகவும் கிறிஸ்தவப் பாரம்பரியம் கூறுகிறது. ஆகவே மேய்ப்பர்கள் மடலில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள், நண்பர்கள் மற்றும் பகைஞர் ஆகியோரின் பெயர்கள் யாவும் இரண்டு சிறையிருப்புகளுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையே ஆகும்.

கிறிஸ்தவ சமய நிறுவனம் சார்ந்தவை: கிறிஸ்தவ சமய நிறுவனம் பவுல் காலத்திற்குப் பிந்தியது என்பது ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. உண்மையில் அது இரண்டாம் நூற்றாண்டில்தான் தோன்றியது. பிஷப், மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்பவர்கள் பற்றிய விவரங்கள் மேய்ப்பர்கள் மடல்களில் விவரிக்கப்பட்டுள்ளது உண்மையெனினும், அவர்கள் இரண்டாம் அல்லது அதற்குப் பிந்தைய நூற்றாண்டுகளில் "முடியாட்சி மன்னர்களைப் போல" செயலாற்றிய பிஷப்புகளைப் போன்றவர்கள் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை. உண்மையில் இவற்றிற்கு முந்தைய மடலாகிய பிலிப்பியரில், ஒரே சபையில் கண்காணிகள் பலர் இருந்தார்கள் என்று பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அங்கு ஒரு சபைக்கு அதிகாரியாக ஒரு பிஷப் இருந்தார் என்றோ, அல்லது பல சபைகளுக்கு அதிகாரியாக ஒரு பிஷப் என்னும் அமைப்பு இருந்ததாகவோ குறிப்பிடப்படவில்லை. மேலும், தீமோத்தேயு, தீத்து ஆகிய மடல்களில் மூப்பர், பிஷப் (கண்காணி) என்னும் சொற்கள் ஒன்றுக்கொன்று மாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன, ஆனால், இரண்டாம் நூற்றாண்டு முதல், இக்னேஷியசின் இடைவிடாத தூண்டுதலால், மற்ற மூப்பர்களுக்கு (prebyters) மேலாக ஒரு "பிஷப்" என்னும் நிலை உருவானது.

சபைத் தலைவர்களைப் பற்றிய அடிப்படை போதனைகளே இந்த மடல் அப்போஸ்தலரது காலத்தவை என்பதையும், இரண்டாம் நூற்றாண்டுக்கு உரியவையல்ல என்பதையும் மெய்ப்பிக்கின்றன.

மொழியியல் வாதம்: இந்த மூன்று மடல்களில் கையாளப்பட்டுள்ள மொழிநடைக்கும் மற்றும் சொல்லாட்சிக்கும், பவுல் எழுதியவை என்று நாம் ஒப்புக்கொண்டுள்ள பிற பத்து மடல்களில் கையாளப்பட்டுள்ள மொழிநடைக்கும் மற்றும் சொல்லாட்சிக்கும் இடையே காணப்படும் வேறுபாடு கடுமையான தாக்குதலுக்கு அடிப்படைக் காரணமாக விளங்குகிறது. பவுல்

அதிகமாக விரும்பிய சில சொற்களையும் சொற் றொடர்களையும் நாம் இம்மடல்களில் காண்கிற தில்லை. அதுபோல இம்மடல்களில் காணப்படும் பெரும்பாலான சொற்களை (36% புதிய சொற் கள்) நாம் பிற மடல்களில் காணமுடியாது. இந்தப் புள்ளிவிவரக் கணக்குகள் இந்த மடல்கள் பவுலால் எழுதப்பட்டவை "அல்ல" என்பதை "மெய்ப்பிக்கப்" பயன்படுத்தப்படுகின்றன. (ஷேக்ஸ் பியர் எழுதிய பல பாடல்கள் அவரால் எழுதப்பட் டவை அல்ல என்று வாதம் செய்ய இதே முறை பயன்படுத்தப்பட்டு எதிர்மாறான விளைவையே ஏற்படுத்தியது.)

இங்கு சில *உண்மையான பிரச்சினைகள்* உள்ளன என்பதை ஒப்புக்கொள்வது நல்லது. மனதிற்கு மகிழ்ச்சி தராத திருமறைக் கோட்பாடு களுக்கு எதிராகக் கூறப்படும் தவறான அபிப்பிரா யத்தை, இந்தக் கருத்துகள் முழுமையாகச் சார்ந்தவை என்று சொல்ல முடியாது. (ஆயினும், பவுல் இம்மடல்களை எழுதவில்லை என்று கூறு கிற சில வேத அறிஞர்களுடைய கருத்துக்கு ஒப்பாக, இம்மடல்களில் கடுமையாகத் தாக்கப்பட் டுள்ள பிற்காலத்து விசுவாசத் துரோகிகள் பேசுவது அதிர்ச்சியளிக்கிறது.)

முதலாவதாக, இந்த மடல்கள் யாவும் மர ணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த வயது முதிர்ந்த மனிதர் எழுதியவை, மேலும் அவர் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு பல்வேறு இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டு புதிய நண்பர்கள் பலரைப் பெற்றார் என்பன வற்றை நாம் நினைவுகூர வேண்டும் (2 தீமோத் தேயு மடல் அவருடைய இரண்டாவது சிறையிருப் பின் போது எழுதப்பட்டது). பெரும்பாலானோர் வயது செல்லச் செல்ல, மிகுதியாகப் படிப்பதா லும், பயணம் செய்வதாலும், பல புதிய நண்பர் களோடு பழகுவதாலும் புதிய சொற்களை அறிந்து தமது சொல்லாட்சியைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

இரண்டாவதாக, இம்மடல்களில் சபை அலுவலர்கள், நன்னெறிகள், விசுவாச துரோகம் போன்ற ஆய்வுப் பொருள்கள் இடம்பெற்றுள்ள காரணத்தால் புதிய சொற்கள் தானாக இடம் பெறுவது இயற்கையே.

புள்ளிவிவரக் கணக்கு முறையைச் சரியான படி பயன்படுத்தும் அளவிற்கு இந்த மடல்கள் பெரியவை அல்ல. புதிய ஏற்பாட்டில் இம்மூன்று நூல்களில் மட்டும் காணப்படும் 80 % சொற்கள் கிரேக்க மொழி பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பது மிகவும் குறிப்பிடத்தக்க உண்மையாகும் என்று திருவாளர் குத்ரி தனது முன்னுரையில் கூறியிருக்கிறார். பவுல் கிரேக்க மொழியில் ஊழியம் செய்ததாலும், அவர் பழைய ஏற்பாட்டைக் கிரேக்க மொழியிலும் எபிரெய மொழி யிலும் நன்கு அறிந்திருந்ததாலும் அச்சொற் களைப் பயன்படுத்தினார் என்றும், "ஏற்றுக்கொள் ளப்பட்ட சொற்களையே" அவர் தனது நூல்களில் கையாண்டார் என்றும் கூறலாம். தொடக்க கால சபையின் பிதாக்கள் தங்களுடைய அனுதின வாழ்க்கையில் கிரேக்க மொழியையே பயன் படுத்தினார்கள். அவர்களுக்கு இந்தக் கிரேக்கச் சொற்கள், இந்நூல்களின் ஆசிரியர் பவுல் என்று ஒப்புக்கொள்வதற்கு எந்தத் தடையையும் உண்டு பண்ணவில்லை. (எபிரெய மொழியைக் குறித்தும் சிலர் இவ்வாறு கூறியிருப்பதால், அவர்கள் எழுத் தாளரின் மொழிநடையால் எளிதில் தாக்கம் அடையக்கூடியவர்கள் என்பதை இவ்வாதம் வெளிப்படுத்துகிறது.)

எல்லா பதில்களையும் ஒன்று கூட்டி வாதத்தை எடுத்துரைக்கும்போது, மேலும் பழங்காலத்தில் உலகமெங்கிலுமுள்ள புராதன நம்பிக்கையுள்ள விசுவாசிகள் யாவரும் இம்மடல்கள் பவுலால் எழுதப்பட்டவை என்று ஒப்புக்கொண்டுள்ள உண்மையையும் சேர்த்துப் பார்க்கும்போது, நாமும் இவ்வுண்மையை நல்மனசாட்சியுடன் ஒப்புக்கொள்வோம். உண்மையில் இந்த மடல் களில் உள்ள நன்னெறிச் செய்திகள், "இவை போலியானவை ஆனால் பற்று மிக்கவை" என் னும் கூற்றை மறுத்துரைக்கின்றன. இவை தேவ ஆவியின் ஏவுதலால் (2 தீமோ. 3:16,17) அப்போஸ் தலனாகிய பவுலின் மூலமாக எழுதப்பட்டவை.

5. மேய்ப்பர்கள் மடல்களின் பின்னணியும் கருப்பொருளும்

வெளிப்படையாகச் சொல்லுவோமெனில், இம்மடல்களின் பின்னணியில் பவுலின் வாழ்க்கை பற்றிய பெரும்பாலான குறிப்புகளை நாம் தொடர்ச்சியாகக் காணமுடியாது. இந்த மடல் களில் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ள சிறுசிறு குறிப்புகளை ஒன்று சேர்த்துப் பார்ப்பதே நாம் செய்யக்கூடிய சிறந்த செயல், ஆயினும் இவை யாவற்றையும் சேர்த்துப் பார்த்தாலும் தெளிவற்றதாகவே அது காணப்படும்.

இந்த மடல்களில் பல சொற்களும் கருத்து களும் திரும்பத் திரும்ப இடம் பெற்றுள்ளன. பவுலின் திருப்பணி முடிவுக்கு வரும் தறுவாயில் அவருடைய உள்ளம் என்னென்ன பொருட் களால் ஆட்கொள்ளப்பட்டிருந்தது என்பதைத் பற்றிய தெளிவான அறிவை இவை நமக்குத் தருகின்றன.

தனிச்சிறந்த வகையில் **விசுவாசம்** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. விசுவாச துரோகம் என்னும் ஆபத்து பெருகி வந்த கார ணத்தால், பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட கிறிஸ்தவக் கோட்பாட்டின் பெரும் சத்தியங் களைப் பவுல் வலியுறுத்திக் கூற விரும்பினார். விசுவாசத்தைக் குறித்து மனிதர்கள் பற்பல மனப் பான்மை கொண்டிருந்தார்கள் அல்லது கொண்டி ருப்பார்கள் என்பதை அவர் விவரித்துள்ளார்.

1. சிலர் விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தி னார்கள் (1 தீமோ. 1:19).
2. சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார் கள் (1 தீமோ. 4:1).
3. சிலர் விசுவாசத்தை மறுதலிப்பார்கள் (1 தீமோ. 5:8).
4. சிலர் முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விட்டுவிடுவார்கள் (1 தீமோ. 5:12).
5. சிலர் விசுவாசத்தை விட்டு வழுவிப்போவார் கள் (1 தீமோ. 6:10).
6. சிலர் விசுவாசத்தின் இலக்கை விட்டு வழுவிப் போவார்கள் (1 தீமோ. 6:21).

ஆரோக்கியமான உபதேசம் என்னும் சொற் றொடரும் தெளிவாக இம்மடல்களில் எடுத்து ரைக்கப்பட்டுள்ளது. "ஆரோக்கியமான" என்னும் சொல் இங்கு "சரியான" அல்லது "மரபொழுங்கிற் கேற்ப" என்பதைக் காட்டிலும் கூடுதலான பொரு ளைத் தருகிறது. இச்சொல்லிலிருந்தே சுகாதாரம் என்னும் சொல்லும் பிறந்திருக்கிறது. இங்கு சொல் லப்பட்டிருப்பது ஆவிக்குரிய சுகாதாரம் என்பதில் ஐயமில்லை. கீழ்வருவனவற்றைக் கவனியுங்கள்:

ஆரோக்கியமான உபதேசம் (1 தீமோ. 1:11; 2 தீமோ. 4:3, தீத்து 1:9; 2:1).

ஆரோக்கியமான வசனங்கள் (1 தீமோ. 6:3; 2 தீமோ. 1:13).

விசுவாசத்திற்குரிய ஆரோக்கியமுள்ளவர் கள் (தீத்து 1:14; 2:2).

ஆரோக்கியமான வசனத்தைப் பேசுதல் (தீத்து 2:8).

மனச்சாட்சி என்னும் சொல் ஆறுமுறை பயன் படுத்தப்பட்டுள்ளது. கீழ்வரும் வசனங்களைக் காண்க:

1 தீமோத்தேயு 1:5, 19; 3:9; 4:1

2 தீமோத்தேயு 1:4

தீத்து 1:15

ஒருவருடைய உபதேசம் ஆரோக்கியமான தாக இருக்கிறது என்பதன் நிரூபணமாக தேவ பக்தி வலியுறுத்தப்பட்டுள்ளது - 1 தீமோத்தேயு 2:2,10; 3:16; 4:7,8; 5:4; 6:3,5,6,11; 2 தீமோத்தேயு 3:5 (தேவபக்தியின் வேஷம்); 3:12; தீத்து 1:3; 2:12.

அப்போஸ்தலன் தனது இளம் உடன் ஊழி யர்கள் **தெளிந்த புத்தியோடு** இருத்தல் என் னும் பண்பை பேணிவளர்க்க வேண்டும் என்று உணர்ந்தார் - 1 தீமோத்தேயு 2:10,15; 5:6,8; 2 தீமோத்தேயு 3:2,11; தீத்து 1:8; 2:2,5,8,12.

அப்போஸ்தலன் பல "**நல்ல**" காரியங்களைக் குறிப்பிட்டிருப்பதையும் நம்மால் கவனிக்க முடியும்.

நல் மனச்சாட்சி (1 தீமோ. 1:5,19).

நியாயப்பிரமாணம் நல்லது (1 தீமோ. 1:8).

நல்ல போராட்டம் (1 தீமோ. 1:18).

ஜெபம் நன்மையானது (1 தீமோ. 2:3).

நற்கிரியைகள் (1 தீமோ. 2:10; 3:1; 5:10, 25; 6:18; 2 தீமோ. 2:21; 3:16; தீத்து 1:16; 2:7,14; 3:1,8,14).

நல்நடத்தை (1 தீமோ. 3:2).

நல்ல சாட்சி (1 தீமோ. 3:7).

நல்ல நிலை (1 தீமோ. 3:13).

தேவன் படைத்ததெல்லாம் நல்லது (1 தீமோ. 4:4).

நல்ல ஊழியக்காரன் (1 தீமோ. 4:6).

நற்போதகம் (1 தீமோ. 4:6).

தேவபக்தி நன்மையானது (1 தீமோ. 5:4).

விசுவாசத்தின் நல்ல போராட்டம் (1 தீமோ. 6:12; 2 தீமோ. 4:7).

நல்ல அறிக்கை (1 தீமோ. 6:14).

நல்ல ஆதாரம் (1 தீமோ. 6:19).

நற்பொருள் (2 தீமோ. 1:14; தீத்து 2:3; 3:8).

நல்ல போர்ச்சேவகன் (2 தீமோ. 2:3).

நல்லோர் (2 தீமோ. 3:3; தீத்து 1:8; 2:5).

நல்லுண்மை (2 தீமோ. 2:11).

இறுதியாக, நம்மைக் கவரக்கூடிய சொற்கள் இம்மடல்களில் காணப்படும் மருத்துவச் சொற் களாகும். மருத்துவராகிய லூக்கா அப்போஸ் தலனோடு மிக நெருங்கிய நட்போடு அக்காலத் தில் இருந்ததன் பிரதிபலிப்பே இது என்று சிலர் கருதுகிறார்கள்.

"ஆரோக்கியமான" என்னும் சொல் நலம் தரக் கூடிய என்னும் பொருளோடு உபதேசம், வசனங் கள், பேச்சு, விசுவாசம் ஆகியவற்றை விளக்கிக் கூறும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

1 தீமோத்தேயு 4:1 -இல் மனச்சாட்சியில் சூடுண்ட நிலையைப் பற்றி பவுல் பேசியிருக் கிறார். "சூடுண்ட" என்னும் சொல் சூட்டுக் கோலால் சூடு போடுவதைக் குறிக்கும்.

"வாக்குவாதங்களைப் பற்றி நோய்கொண் டவன்" என்னும் சொற்றொடர் மன நோயைக் குறிக்கிறது (1 தீமோ. 6:4).

2 தீமோத்தேயு 2:17 -இல் "அரிபிளவை" என் னும் சொல் "தசை அழுகிக்கெடுதல்" என்று புதிய மொழிபெயர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது (இதனு டைய கிரேக்கச் சொல் தசை அழுகிக்கெடுதல் என்னும் சொல்லின் மூலச்சொல்லாகும்).

"செவித்தினவுள்ளவர்" (2 தீமோ. 4:3) என்னும் சொல்லைப் பவுல் கடைசிக் கால நோய் பற்றி விவ ரிக்க இறுதியில் பயன்படுத்தியுள்ளார்.

இந்தப் பின்னணியோடு ஒவ்வொரு வசனத் திலும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் கற்கும்படி 1 தீமோத்தேயு மடலை நோக்கிச் செல்வோம்.

அடிக்குறிப்புகள்

மேய்ப்பர்களுக்கான அறிவுரை மடல்களின் அறிமுகம்

1. Albert Barnes, *Notes on the New Testament: Thessalonians, Timothy, Titus, Philemon,* p.289.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம்

முன்னுரை

தீமோத்தேயு அப்போஸ்தலனாகிய பவுலின் பிரதிநிதியாகச் செயல்படுவதற்கு உரிமை பெற்றவர் என்பதை மெய்ப்பிக்க, இம்மடல் அவருக்கு வழங்கப்பட்ட ஆவணமாகத் திகழ்கிறது. இவ்வுண்மைக்கேற்ப, இம்மடலின் பெரும்பகுதி தீமோத்தேயுவின் சொந்த வாழ்க்கையைக் குறித்ததும், அவருடைய நடவடிக்கைகளைக் குறித்ததுமான விவரங்களால் நிறைந்துள்ளது.

– D. எட்மண்ட் ஹீபர்ட்

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

மேய்ப்பரின் திருமடல்கள் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியவை என்னும் கருத்து நம்புதற்குரியது என்பதை மறுத்து, அவற்றைச் சபைகளிடத்திலிருந்து பறிக்க முயல்வோர் விசுவாசத்திற்கு எதிராகப் பெரும்பாதகத்தை விளைவிப்போராவர். இம்மடலில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் பல பவுலின் சொற்களஞ்சியத்தைச் சார்ந்தவையல்ல என்று அவர்கள் பிரச்சினையாகக் கருதுவது உண்மையில் பிரச்சினையே அல்ல என்றே நாம் எண்ணுகிறோம். ஏனெனில் அந்தச் சொற்கள் யாவற்றையும் ஒன்றுகூட்டி அவர் வழங்கியிருக்கிற தன்மையே பவுலின் பாங்கு என உறுதியாகக் கூறலாம். இந்த மனிதர்களில் சிலருடைய செயல்களையும் போதனைகளையும் அந்தச் சொற்கள் தொடக்கத்திலேயே கண்டித்துள்ளன என்பதே அவர்களது பிரச்சினை.

முன்கூட்டிய கருத்து எதுவுமற்ற வகையில் 1 தீமோத்தேயு மடலின் வசனங்களைத் தியானிப்பவர்களிடமாய் அதன் சத்தியமும், அழகும், ஆவிக்குரிய செயல்திறமும் வருகின்றன. உண்மையில், இம்மடலைப் பவுல் எழுதவில்லை என்று மறுத்துரைப்போருங் கூட இதனைப் படிக்கும் வேளையில், பெயர் மாற்றம் செய்து இம்மடலை எழுதியவர், தனது எழுத்துகளோடு பவுலின் மடல்களிலிருந்து சில மெய்யான பகுதிகளை மிக நேர்த்தியான முறையில் பின்னி நெய்து தந்துள்ளார் என்று சொல்லுமளவிற்கு வலிமையான உணர்வுகளைப் பெறுகிறார்கள். எடுத்துக்காட்டாக முந்தின நூற்றாண்டில் வாழ்ந்த இறைப்பற்றற்ற பிரஞ்சு எழுத்தாளர் ஏர்னஸ்ட் ரேனன் என்பார் எழுதியதாவது: "இம்மடலைப் பெயர் மாற்றி இயற்றியவர், உண்மையாகவே பவுல் எழுதிய குறிப்புகளைப் பயன்படுத்தியிருக்க மாட்டாரா என்று கேள்வி எழுப்பத்தக்க வண்ணம், இந்த ஐயத்திற்கு இடமான கலப்பட நூலில் சில பகுதிகள் மிக அழகாய் இணைக்கப்பட்டிருக்கின்றன"[1]

இதனைக் காட்டிலும், தொடக்க நாட்களிலிருந்து சபைகளில் போதிக்கப்படும்படி கொடுக்கப்பட்டதும், ஏறத்தாழ எல்லா விவரங்களையும் கொண்டதுமான இந்நூலின் பகுதிகள் முழுவதையும் - இவற்றின் முழு நிறைவான நிலையில் - "பவுலின் உண்மையான குறிப்புகள்" என்று ஏற்றுக்கொள்வது எவ்வளவு எளிது!

சபையின் நடைமுறை ஒழுங்கு, பெண்களின் ஊழியம், சபை அலுவலர் ஆகியவை பற்றிய மிக முக்கிய வெளிப்பாட்டை இந்நூலில் காணவியலும். தேவனுடைய மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கான கருத்துச் சுருக்கத்தை, அதற்கு முன் மாதிரியாக மிகச் சிறந்த முறையில் வாழ்ந்த பவுல் அப்போஸ்தலனே வரைந்து தந்துள்ளார்.

2. நூலாசிரியர்

1 தீமோத்தேயு மடலின் ஆசிரியர் யார் என்பதற்கான ஆய்வுரையை மேய்ப்பர் திருமடல்களுக்கான முன்னுரையில் காண்க.

3. எழுதப்பட்ட காலம்

ஏறத்தாழ பழைமைப் பற்றாளர் யாவரும் மேய்ப்பர் திருமடல்களில் முதலாவது இயற்றப்பட்டது 1 தீமோத்தேயு என்றும், அதனைத் தொடர்ந்து உடனடியாக தீத்துவும், பவுலின் மரணத்திற்குச் சற்று முன்னர் 2 தீமோத்தேயுவும் எழுதப்பட்டவை என்றும் ஒப்புக்கொள்கிறார்கள். வீட்டுக் காவலிலிருந்து பவுல் கி. பி. 61 -ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார் என்று கருதுவோமானால், அவர் மேற்கொண்ட பயணங்களுக்குக் கால இடை

வெளி கொடுத்துக் கணக்கிடும்போது, இம்மடல் கி.பி. 64, கி.பி. 66 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே எழுதப்பட்டது என்று சொல்லலாம். பெரும்பாலும் இம்மடல் கிரேக்க நாட்டிலிருந்தே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

இந்நூலின் கருப்பொருள் இன்னதென்பது 3:14,15 ஆகிய வசனங்களில் மிகத்தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

> நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவே னென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனு டைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

தேவனுடைய சபையின் நடத்தை எவ்வாறு இருக்க வேண்டுமென்று தரம் நிர்ணயிக்கப்பட்டி ருக்கிறது என்று பவுல் இங்கு தெளிவாகக் குறிப்பிட்டு, அதனைத் தீமோத்தேயு அறிந்து கொள்வதற்காகவே இம்மடலை எழுதுவதாகத் தெரிவிக்கிறார்.

நன்னடத்தை என்பது என்னவென்று அறியா மல் தவறாக நடந்துகொள்கிற ஒரு குழந்தை யிடம், "சரியாக நடந்துகொள்!" என்று சொன் னால் மட்டும் போதாது. அந்தக் குழந்தைக்கு நன்னடத்தையைப் பற்றிய விளக்கம் முதலில் சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும். தேவனு டைய சபையோடுள்ள தொடர்பில் இறைமக்களின் நன்னடத்தைக்கான விளக்கத்தை 1 தீமோத்தேயு தந்தருளுகிறது.

இம்மடலின் எல்லா அதிகாரங்களையும் மேற் போக்காய் விரைந்து காணும்போதே, முன்னர் கூறப்பட்டுள்ள கருத்தினை, அவை ஆதரிக்கின் றன என்பதை அறியவியலும். பொது இடங்களில் செய்யப்படுகிற ஜெபம், வெளியரங்கமாய் பெண் கள் செய்கிற ஊழியம் ஆகியவற்றைக் குறித்த ஒழுகலாறு இரண்டாவது அதிகாரத்தில் எடுத் துரைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது அதிகாரம் சபையில் பொறுப்புகளையும், வழிநடத்தும் வேலை யையும் செய்யக்கூடியவர்கள் என்னென்ன தகுதிகளை உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதை விவரிக்கிறது. ஐந்தாவது அதிகாரம் விதவைகளைக் குறித்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பினை வலியுறுத்துகிறது.

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (1:1,2)

2. தீமோத்தேயுவுக்குப் பவுல் கட்டளையிடுதல் (1:3-20)

அ. கள்ளப் போதகர்கள் பேசுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான கட்டளை (1:3-11)

ஆ. தேவனுடைய மெய்யான கிருபைக்காக ஸ்தோத்திரம் செலுத்துதல் (1:12-17)

இ. தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை மீண்டும் உரைக்கப்படுதல் (1:18-20)

3. சபை வாழ்க்கையைக் குறித்த அறிவுரைகள் (2:1-3:16)

அ. மன்றாட்டைக் குறித்த அறிவுரை (2:1-7)

ஆ. ஆண் பெண் இருபாலருக்குமான அறிவுரை (2:8-15)

இ. மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் பற்றிய அறிவுரை (3:1-13)

ஈ. சபையில் காணப்படவேண்டிய நடத்தையைப் பற்றிய அறிவுரை (3:14-16)

4. சபையில் காணப்படும் விசுவாச மறுதலிப்பு (4:1-16)

அ. அண்மையில் நிகழவிருக்கிற விசுவாச மறுதலிப்புக்கு எதிரான எச்சரிக்கை (4:1-5)

ஆ. அண்மையில் வரவிருக்கிற விசுவாசத்தை மறுதலிக்கும் காலத்தைக் கருத்திற்கொண்டு கொடுக்கப்பட்ட ஒளிவுமறைவற்ற அறிவுரை (4:6-16)

5. பல்வேறு வகையான விசுவாசிகளைக் குறித்த தெளிவான அறிவுரைகள் (5:1-6:2)

அ. வெவ்வேறு வயதினர் (5:1,2)

ஆ. விதவைகள் (5:3-16)

இ. மூப்பர்கள் (5:17-25)

ஈ. அடிமைகளும் எஜமானரும் (6;1,2)

6. கள்ளப் போதகர்களும் பண ஆசையும் (6:3-10)

7. தீமோத்தேயுவுக்கு அளிக்கப்பட்ட இறுதி அறிவுரைகள் (6:11-21)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	போதனை	பொது வழிபாடு	கள்ளப்போதகர்	சபை ஐக்கியம்	பொதுவான அறிவுகள்
காலம்	கி. பி. 64-66				
தலைப்பு	எச்சரிப்பு	தொழுகை	ஞானம்	பல்வேறு பிரிவினர்	செல்வம்
பகுப்பு	தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் அறிவுரை	சபை வாழ்க்கையைக் குறித்த அறிவுரை	சபையில் போதனையைக் காத்தல்	சபை விசுவாசிகளைக் குறித்த அறிவுரை	பண ஆசையின் கேடுகள்
	கள்ள உபதேசத்தின் அபாயங்கள்	ஆராதனை/ விண்ணப்பம் பற்றிய போதனை	கள்ளப் போதனையை எதிர்த்தல்	பிறரைப் பற்றிய பொறுப்புகள்	செல்வத்தைக் குறித்த எச்சரிப்பு
வசனம்	1:1-20	2:1-3:16	4:1-16	5:1-6:2	6:3-6:21
இடம்	மக்கெதோனியா				

விளக்கவுரை

1. வாழ்த்துரை (1:1,2)

1:1 இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் என்று முதலாவதாகப் பவுல் தன்னை அறிமுகப் படுத்துகிறார். **அப்போஸ்தலன்** என்னும் சொல் "அனுப்பப்பட்டவர்" என்று பொருள்படும். இவ் வாறு கூறியிருப்பதன் மூலம், திருப்பணி ஊழியம் செய்வதற்கென்று தான் தெய்வீக நியமனத்தைப் பெற்றவர் என்பதை அவர் அறிவிக்கிறார். **நம் முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்மு டைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே** பவுல் இந்த அதிகாரத்தைப் பெற்றார். அவர் இத் திருப்பணியைத் தனது பிழைப்புக்கென்று தானே தெரிந்தெடுக்கவுமில்லை, மனிதர்களுடைய நியமனத்தால் பெறவுமில்லை என்பதை இவ் வசனத்தின் மூலம் வலியுறுத்துகிறார். அவர் பிரசங்கிக்கவும், கற்பிக்கவும், பாடுபடவும் தேவ னிடத்திலிருந்து திட்டவட்டமான அழைப்பைப் பெற்றார். இந்த வசனத்தில் **தேவனாகிய** திருத் தந்தை நம்முடைய **இரட்சகர்** என்று அழைக்கப் பட்டிருக்கிறார். பொதுவாக, புதிய ஏற்பாட்டில், கர்த்தராகிய இயேசுவே **இரட்சகர்** என்று குறிப் பிடப்பட்டுள்ளார். எனினும் இங்கு எவ்விதமான முரண்பாடும் இல்லை. மனிதர்களுடைய இரட் சிப்பை தேவன் விரும்புகிறார், மீட்பின் செயலை நிறைவேற்றும்படி அவர் தமது மைந்தனை அனுப்பினார், யாரெல்லாம் விசுவாசத்தின் மூலம் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொள்கிறார் களோ அவர்களுக்கெல்லாம் அவர் நித்தியவாழ் வைத் தந்தருளுகிறார், இந்த அர்த்தங்களில் தேவன் இரட்சகராயிருக்கிறார். அக்கிரமக்காரர் களாகிய பாவிகளை, நீதியாக தேவன் இரட்சிக் கும்பொருட்டு அதற்குத் தேவையான மீட்பின் செயலை நிறைவேற்ற கிறிஸ்து மெய்யாகச் சிலு வைக்குச் சென்றார் என்னும் பொருளில் கிறிஸ்து இரட்சகராக விளங்குகிறார்.

இங்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **நம்மு டைய நம்பிக்கையாக** இருக்கிறார் என்று சொல் லப்பட்டுள்ளது. "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்" என்னும் வசனத்தை இது நமது நினைவிற்குக் கொண்டுவருகிறது (கொலோ. 1:27). கர்த்தராகிய இயேசு என்னும் நபரிலும், அவருடைய செய லிலும் மட்டுமே விண்ணகம் செல்வதற்கான நம் பிக்கை நமக்கு உண்டாயிருக்கிறது. உண்மை யில், வேதத்தில் காணப்படும் பிரகாசமுள்ள எதிர்கால வாய்ப்பு வளங்கள் அனைத்தும், நாம் கிறிஸ்து இயேசுவோடு கொண்டிருக்கும் தொடர் பின் அடிப்படையிலேயே நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், எபேசியர் 2:14 -இல் கிறிஸ்து நம் முடைய சமாதான காரணர் என்றும், கொலோ செயர் 3:4 -இல் அவர் நம்முடைய ஜீவன் என்றும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். நம்மு டைய முந்தின பாவங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும்படி செயல்பட்டதாலே கிறிஸ்து நம்மு டைய சமாதானகாரணராகத் திகழ்கிறார்; நிகழ் காலத்தில் பாவங்களின் அதிகாரத்தினால் ஏற் படுகிற பிரச்சினைகளைத் தீர்க்கும்படி செயல் படுவதாலே கிறிஸ்து நம்முடைய ஜீவனாக இருக் கிறார்; எதிர்காலத்தில் நாம் விடுவிக்கப்படு வதற்கு எதிரான பிரச்சினைகளை அவர் தீர்க்கப் போவதாலே கிறிஸ்து நம்முடைய நம்பிக்கை யாக இருக்கிறார்.

1:2 இம்மடல் **தீமோத்தேயுவுக்கு** எழுதப்பட் டது. அவர் **விசுவாசத்தில்** (**விசுவாசத்தின்** ஆட்சி எல்லையில்) **உத்தம குமாரனாகிய தீமோத் தேயு** என்று குறிப்பிடப்பட்டுள்ளார். அப்போஸ் தலனின் மூலமாகவே அவர் இரட்சிக்கப்பட்டார் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது எனலாம்; பெரும்பாலும் பவுல் முதல் தடவை லீஸ்திரா வுக்குச் சென்றபோது தீமோத்தேயு இரட்சிக்கப் பட்டிருக்கக் கூடும் (அப். 14:6-20).

ஆனால் பவுல் தீமோத்தேயுவை முதன் முதலாகச் சந்தித்தபோது, அவர் ஏற்கனவே கிறிஸ்துவின் சீடராக இருந்தார் என்பது அப் போஸ்தலருடைய நடபடிகள் நூலின் பொதுவான கருத்தாக விளங்குகிறது (அப். 16:1,2). அது உண்மையாக இருக்குமென்றால், பவுல் கொண் டிருந்த ஆவிக்குரியதும், நன்னெறி சார்ந்தது மான பண்புகளை தீமோத்தேயுவும் கொண்டிருந் தார் என்பதே, **விசுவாசத்தில் உத்தம குமாரன்** என்னும் சொற்றொடரின் கருத்தாகும். அவர் அப்போஸ்தலனின் குணநலன்களை வெளிப் படுத்திக் காட்டிய காரணத்தினால், அவர் அப் போஸ்தலனின் **உத்தம** வழித்தோன்றலாகத் திகழ்ந்தார்.

"இத்தகைய ஆன்மீகத் தலைவரைப் பெற்றி ருக்கும் இளம் கிறிஸ்தவ ஊழியர் மனமகிழ்ச்சிக் குரியவர். தனது அம்பறாத்தூணி இத்தகைய உத்தமமான பிள்ளைகளால் நிரப்பப்பட்டிருக்கும் கிறிஸ்தவத் தலைவரும் மனமகிழ்ச்சிக்குரியவர்" என்று ஸ்டாக் என்பார் கூறுகிறார்.

புதிய ஏற்பாட்டு மடல்களில் "கிருபையும் சமாதானமுமே" வழக்கமான வாழ்த்துரையாக காணப்படுகிறது. 1 மற்றும் 2 தீமோத்தேயு, தீத்து, 2 யோவான் ஆகிய மடல்களில் இந்த வாழ்த்து, **கிருபையும் இரக்கமும் சமாதானமும்** என்று விரிவாக்கம் அடைந்திருக்கிறது. பிற்காலத்தில் எழுதப்பட்ட இந்த மடல்கள் யாவும் சபைகளுக்கு எழுதப்பட்டவையல்ல, மாறாக தனிநபர்களுக்கு எழுதப்பட்டவை என்னும் உண்மை, **இரக்கம்** சேர்க்கப்பட்டிருப்பதற்கான காரணத்தை விளக்குகிறது.

கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் தேவையான அனைத்து தெய்வீக ஆதாரங்களுமே **கிருபை** என்பதன் பொருளாகும். வீழ்ச்சியடையக் கூடியவனாகவும் தேவையுள்ளவனாகவும் இருக்கிற ஒரு மனிதன்மேல் செலுத்தப்படும் தேவனுடைய பரிவான அக்கறையும் **பாதுகாப்புமே** இரக்கம் ஆகும். கர்த்தர்மீது சார்ந்து கொள்வதால் உண்டாகிற உள்ளான அமைதியே **சமாதானம்** ஆகும். இம்மூன்று ஆசீர்வாதங்களும் நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும், **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்தும்** வருகின்றன. பிதாவுக்குச் சமமாகக் கிறிஸ்து இந்த வசனத்தில் பேசப்பட்டிருக்கிற நிலையில், அவருடைய தெய்வீகம் இங்கே குறிப்பாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து** என்னும் சொற்றொடர் கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை வற்புறுத்திக் கூறுகிறது. "இரட்சகர்" என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் இருபத்திநான்கு முறை இடம் பெற்றுள்ளது. ஆனால் கர்த்தர் என்னும் சொல்லோ 522 முறை இடம்பெற்றுள்ளது. இத்தகைய முக்கியமான புள்ளிவிவரங்கள் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நடைமுறை சார்ந்த நல் விளைவுகளை உண்டாக்க வேண்டும்.

2. தீமோத்தேயுவுக்குப் பவுல் கட்டளையிடுதல் (1:3-20)

அ. கள்ளப்போதகர்கள் பேசுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான கட்டளை (1:3-11)

1:3,4 பவுல் ரோமாபுரியில் சிறைக்கைதியாக முதல் தடவை வைக்கப்பட்டிருந்ததற்குப் பிறகு, அவர் எபேசுப் பட்டணத்திற்குத் தீமோத்தேயுவோடு சென்றிருந்திருக்கக் கூடும் என்றே தோன்றுகிறது. அவர் அங்கிருந்து மக்கெதோனியாவுக்குச் சென்றபோது, அங்குள்ள விசுவாசிகளுக்கு தேவ வசனத்தைத் கற்பிக்கும்படியும், அவர்கள் கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்றும் தீமோத்தேயுவை அங்கு விட்டுச் சென்றார். பவுல் அங்கிருந்து தெற்கே பயணம் செய்து கொரிந்துப் பட்டணத்தை அடைந்திருக்கக் கூடும். அந்தப் பட்டணத்திலிருந்தே அவர் இந்த முதலாவது மடலைத் தீமோத்தேயுவுக்கு எழுதினார் என்று தோன்றுகிறது. **"நான் மக்கெதோனியாவுக்குப் போகும்போது உன்னை எபேசுப் பட்டணத்தில்** தங்கியிருக்கும்படி முன்னமே கட்டளையிட்டேன். அதே அறிவுரைகளை இப்பொழுது நான் மீண்டும் உன்னிடத்தில் கூறுகிறேன்" என்னும் பொருளில் பவுல் இந்த 4 -ஆவது வசனத்தில் கூறுகிறார். தீமோத்தேயு எபேசுப் பட்டணத்தில் போதகராக நியமிக்கப்பட்டார் என்பது இந்த வசனத்தின் பொருள் என்று நாம் புரிந்துகொள்ளக் கூடாது. இந்தப் பகுதியில் அப்படிப்பட்ட எண்ணமே இல்லை. மாறாக, அவர் அங்கே தற்காலிகத் திருப்பணியை நிறைவேற்றும் பொருட்டுத் தங்கியிருந்தார். கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முரண்பாடான கோட்பாடுகளைப் போதிக்கவும் கூடாது, மெய்யான கோட்பாடுகளோடு எதையும் சேர்க்கவும் கூடாது என்று அவர் அங்கிருந்த சில மனிதர்களுக்குக் கட்டளையிடும் பொருட்டே தங்கினார். நியாயப்பிரமாணத்திற்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்னும் கொள்கை மற்றும் ஞானமார்க்கம் ஆகியவையே முதன்மையான கள்ளப்போதகங்களாக இருந்தன. ஒரு வேளை இந்தப் பிரச்சினைகளுக்குத் தப்பி ஓடிவிடலாம் என்று தீமோத்தேயு நினைப்பாரானால், அவர் அங்கு தொடர்ந்து தங்கியிருக்க வேண்டும் என்று பவுல் வற்புறுத்துகிறார்.

அந்த மனிதர்கள் **தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்ச வரலாறுகளையும் கவனிக்காமல்** இருக்கும்படி அவர்களுக்குத் தீமோத்தேயு கட்டளையிட வேண்டுமென்றும் இங்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறார். இந்தக் **கட்டுக்கதைகளும் வம்ச வரலாறுகளும்** என்னவென்று திட்டவட்டமாக அறிந்துகொள்வதென்பது முடியாத செயலாகும். யூத போதகங்களுக்குள்ளாக எழுந்த புராணக் கதைகளோடு இதனை இணைத்துச் சொல்லுகிறவர்கள் சிலர். ஞானமார்க்கத்தாரின் கற்பனைக் கதைகளும் அவர்களால் தோற்றவிக்கப்பட்ட புராணங்களுமே இவை என்று வேறு சிலர் கருதுகிறார்கள். இன்றைய நாட்களில் காணப்படும் கள்ளக்குழுவினர் இது போன்ற நடத்தை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பது கவனிக்கப்

படத்தக்கது. கள்ள சமயங்களை நிறுவியர் களைக் குறித்து இத்தகைய கவர்ச்சிகரமான கதைகள் பல எழுந்துள்ளன. மேலும் வம்சவர லாறு மோர்மோன் சமயத்தாரிடையே மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கிறது.

இத்தகைய பயனற்ற விஷயங்கள் மக்களு டைய மனதில் கேள்வியையும் ஐயத்தையும் எழுப்பக்கூடியவையாக மட்டுமே செயல்படும். அவை **விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்தியை** உண்டாக்குவதில்லை. தர்க்கங்களை யும் ஐயங்களையும் எழுப்பிவிட வேண்டுமென் பது அல்ல, மாறாக மனிதர்களுடைய உள்ளங் களிலே **விசுவாசத்தை** உண்டுபண்ண வேண்டு மென்பதே தேவனுடைய மீட்பின் திட்டம் தீட்டப் பட்டதன் முழு நோக்கமாகும். எபேசுப் பட்டணத்து சபையில் இருந்த அந்த மனிதர்கள் தங்களு டைய கவனத்தை எதற்கும் பயனற்ற கட்டுக்கதை களிலும் வம்சவரலாறுகளிலும் செலுத்தாமல், கிறிஸ்தவ விசுவாசத்தின் பெரிதான சத்தியங் களில் செலுத்த வேண்டும். அது மனிதர்களுக்கு ஐயத்தையல்ல, **விசுவாசத்தைக்** கொடுத்து நன்மை உண்டாக்கும்.

1:5 இங்கு கற்பனை என்று குறிப்பிடப்பட்டுள் ளது மோசேயின் நியாயப்பிரமாணமோ, பத்துக்கட்டளைகளோ அல்லவென்றும், 3 மற்றும் 4 --ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளே என்றும் அறிந்துகொள்வதே இந்த வசனத்தில் மிக முக்கியமானதாகும். NKJV மொழிபெயர்ப்பில் இது தெளிவாகக் காணப்படு கிறது: இந்தக் கட்டளையின் நோக்கம் அன்பே ஆகும். சற்றுமுன் பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த கட்டளையின் இலக்கு அல்லது குறிக் கோள், வெறுமனே அதனைப் புராதன நம்பிக்கை என்று கருதிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதல்ல; மாறாக, **சுத்தமான இருதயத்திலும், நல்மனச் சாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலும் அன்பு** பிறக்க வேண்டும் என்பதே அவ்விலக் காகும். தேவனுடைய கிருபையின் நற்செய்தி பிர சங்கிக்கப்படுகிற போதெல்லாம் இந்தக் காரி யங்கள் பின்தொடருகின்றன.

அன்பு என்று சொல்லுமிடத்து தேவனிடத்தில் செலுத்தப்படும் அன்பும், உடன் விசுவாசிகளிடம் காண்பிக்கப்படும் அன்பும், பொதுவாக இவ்வுலக மக்களிடத்தில் காண்பிக்கப்படும் அன்பும் உட் படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அது **சுத்த மான இருதயத்திலிருந்து** பொங்கி எழ வேண்டும். ஒருவரது உள்ளான வாழ்க்கை தூய்மையற்ற தாக இருக்குமென்றால், அங்கிருந்து கிறிஸ்தவ அன்பு ஊற்றெடுப்பது இயலாத செயலாகும். மேலும் இந்த அன்பு **நல்மனச்சாட்சியின்** துணைவிளை வாகத் திகழவேண்டும்; அதாவது, தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராக எந்தக் குற்றவுணர்வும் இல்லாத **மனச்சாட்சியை** உடையதாயிருக்க வேண்டும். கடைசியாக, இந்த அன்பு மாயமற்ற விசுவாசத்தின் விளைவாக இருக்க வேண்டும். அதாவது முகமூடி அணியாத விசுவாசம் (மாய மற்ற என்னும் சொல் எழுத்தின்படி "வெளிவேடம்" அற்ற என்னும் பொருளை உடையது).

இங்கே பவுல் பட்டியலிட்டுள்ள பண்புகளைக் கள்ளப்போதகத்தால் ஒருக்காலும் உருவாக்க முடியாது. நிச்சயமாக, கட்டுக்கதைகளாலும் வம்சவரலாறுகளாலும் இவற்றை உருவாக்க முடியாது! தேவனுடைய கிருபையின் போதகத் தினால் மட்டுமே **சுத்தமான இருதயத்தையும், நல்மனச்சாட்சியையும், மாயமற்ற விசுவாசத் தையும்** உருவாக்க முடியும், மேலும் அதனு டைய விளைவாக அன்பு பிறக்கும்.

மெய்யான போதகங்களின் பரீட்சையை 5 - ஆவது வசனம் தருகிறது, அதாவது, அந்த போத கம் இந்த விளைவுகளை உண்டுபண்ணுகிறதா என்னும் கேள்வியை அது எழுப்புகிறது.

1:6 இவற்றை விட்டுச் சிலர் **விலகிப்போனார் கள்**; அதாவது சுத்தமான இருதயம், நல்மனச் சாட்சி, மாயமற்ற விசுவாசம் ஆகியவற்றை விட்டு விலகிப்போனார்கள். **நோக்காமல் இடங் கொடுத்து** என்னும் சொற்றொடர் பொருத்தமற்ற இலக்கைக் கொண்டிருந்தார்கள் என்றோ, இலக்கைத் தவறவிட்டுவிட்டார்கள் என்றோ பொருள்படும். பொருத்தமற்ற இலக்கு என்பதே இங்கு இச்சொற்றொடரின் பொருள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மேற்சொல்லப்பட்டுள்ள பண்புகளை இந்த மனிதர்கள் அடைய முயற்சி செய்தார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை, அவற்றை அவர்கள் தங்களுடைய இலக்காகக் கொண்டிருக்கவேயில்லை. அதன் விளைவாக அவர்கள் **இவற்றை நோக்காமல் வீண்பேச் சுக்கு இடங்கொடுத்தார்கள்**. அவர்களுடைய போதகம் குறிக்கோள் அற்றது, கேட்போரை அது முன்னேற்றமடையச் செய்யவில்லை; அது மனிதர்களைப் பரிசுத்தமாக்கத் தவறிவிட்டது.

இந்த மடலில் பவுல் சிலர் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துகிறார். 1 தீமோத்தேயு மடலை அவர் எழுதியபோது, சபையில் கள்ளப் போதகர்கள் சிறுபான்மையராகவே இருந்தார்

கள். 2 தீமோத்தேயு மடலில் “சிலர்” என்னும் சொல் தொடர்ந்து முதன்மைப்படுத்திச் சொல்லப் படவில்லை. பிற்காலத்தில் சபையின் சமநிலை வலிமை மாறிவிட்டது. விலகிச் செல்லுதல் சர்வ சாதாரணமாக மாறிவிட்டது. சிறுபான்மையர் பெரும்பான்மையராக மாறிவிட்டார்கள் என்பது வெளிப்படை.

1:7 கள்ளப் போதகர்கள் என்று முந்தின வசனத் தில் குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் யூதமார்க்கக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்று கற்பித்த கிறிஸ்தவர்களே ஆவார்கள். அவர்கள் யூதமார்க்கத்தையும் கிறிஸ்தவத்தையும் ஒன்றி ணைக்க முயற்சி செய்தார்கள்; அதாவது நியா யப்பிரமாணத்தையும் கிருபையையும் ஒன்றி ணைக்க முயற்சி செய்தார்கள். இரட்சிப்படை வதற்குக் கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசம் போதாது என்று அவர்கள் உறுதியாய்க் கூறி வந்தார்கள். ஒரு மனிதன் இரட்சிப்பைப் பெற விருத்தசேதனம் அவசியம், அதாவது அவன் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர்கள் வற் புறுத்தினார்கள். விசுவாசியினுடைய வாழ்க்கைக் கான விதி நியாயப்பிரமாணம்தான் என்று அவர் கள் கற்பித்தார்கள்.

சபை வரலாற்றில் இவ்விதத் தவறான போதனை ஒவ்வொரு நூற்றாண்டிலும் இருந்து வருகிறது. இந்நாளிலும்கூட கிறிஸ்தவ உலகைக் களங்கப் படுத்துவதில் பெரிய அளவில் வெற்றி பெறக்கூடிய கொள்ளை நோயாக அது விளங்குகிறது. நவீன காலத்து அமைப்பின்படி, கிறிஸ்துவின்மேல் வைக்கப்படும் விசுவாசம் இரட்சிப்படைவதற்கு இன்றியமையாதது என்று அது ஒப்புக்கொண்ட போதிலும், ஒரு மனிதன் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் அல்லது நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் அல்லது ஒரு குறிப்பிட்ட சபையில் சேர வேண்டும், அல்லது தன்னுடைய பாவத்திற்கான கழுவாயைச் செய்து நிறைவேற்ற வேண்டும், அல்லது பத்தில் ஒரு பங்கைச் செலுத்த வேண்டும், அல்லது சில “நற்கிரியைகளைச்” செய்ய வேண்டும் என்றெல்லாம் அது கூறுகிறது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின்றி, கிறிஸ்து வின்மேல் வைக்கப்படும் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு உண்டாகிறது என்பதை இரட் சிப்பிற்காக நியாயப்பிரமாணத்தையும் கைக் கொள்ள வேண்டும் என்று இன்றைய நாட்களில் போதிக்கிறவர்கள் உணர்வதில்லை. நற்கிரியை கள் இரட்சிப்பின் விளைபயனாக இருக்கின் றனவேயொழிய இரட்சிப்படைவதற்கான காரண மாக இருப்பதில்லை. இந்த நற்கிரியைகளைச் செய்கிறதினாலே ஒரு மனிதன் கிறிஸ்தவனாகிற தில்லை, மாறாக அவன் கிறிஸ்தவனாக இருப்ப தாலேயே அவற்றைச் செய்கிறான். ஒரு விசுவாசி யினுடைய வாழ்க்கையின் அடிப்படைக் கோட்பாடு கிறிஸ்துவே தவிர நியாயப்பிரமாணம் அல்லவென் பதை அவர்கள் காண்பதில்லை. சாபத்திற்குட் படாமல் ஒரு மனிதன் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் இருக்க முடியாது என்பதை உணர அவர்கள் தவறுகிறார்கள். நியாயப்பிரமாணத்தின் புனித மான கற்பனைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் யாவரையும் அது மரணத்திற்குள்ளாகத் தீர்க் கிறது. எந்தவொரு மனிதனும் நியாயப்பிர மாணத்தை நிறைவானபடி கைக்கொள்ள முடியா தென்பதால் எல்லோரும் மரணத்திற்கென்று தீர்க் கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்து நமக் காகச் சாபமாக்கப்பட்டதாலே, அவர் நம்மை நியா யப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டுக் கொண்டார்.

இவ்வாறு தங்களைத் தாங்களே **நியாயப்பிர மாணத்தின் போதகர்கள்** என்று சொல்லிக் கொள்கிற மனிதர்கள், **தாங்கள் சொல்லுகிறது இன்னதென்று** அறியாதவர்களாகவும், தாங்கள் மனப்பூர்வமான உறுதியோடு செய்கிற செயல்கள் **இன்னதென்று அறியாதவர்களாகவும்** இருக் கிறார்கள். நியாயப்பிரமாணம் என்ன நோக்கத் தோடு கொடுக்கப்பட்டது என்பதையும், நியாயப் பிரமாணத்திற்கும் விசுவாசிகளுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதையும் அவர்கள் அறியாமலிருக்கிற காரணத்தால், அவர்களால் அதிலிருந்து புரியும்படியாகச் பேசவும் முடிய வில்லை.

1:8 நியாயப்பிரமாணத்தின் உட்பொருளைப் பவுல் மிகத்தெளிவாக விளக்கித் தருகிறார். “ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ள துதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது” (ரோமர் 7:12). ஆனால் அந்த நியாயப்பிரமாணம் **நியாயப்படி** பயன்படுத்தப்பட வேண்டும். அது இரட்சிப்பிற் குரிய வழியாக ஒருபோதும் கொடுக்கப்பட வில்லை (அப். 13:39; ரோமர் 3:20; கலா. 2:16, 21; 3:11). **நியாயப்பிரமாணம்** பிரசங்கிக்கப்படு வதாலும், கற்பிக்கப்படுவதாலும் பாவம் கண் டித்து உணர்த்தப்படுவது அதனுடைய **நியாய**

மான பயன்பாடு ஆகும். இரட்சிப்பிற்கான வழி என்றோ, நடைமுறை வாழ்க்கைக்கான கோட் பாடு என்றோ அதனை அறிமுகப்படுத்தக் கூடாது.

நியாயப்பிரமாணம் போதிக்கும் மூன்று பாடங் களைத் திருவாளர் கை கிங் சுட்டிக்காட்டுகிறார்: "நாம் செய்யக் கடமைப்பட்டது. நாம் செய்யாதது. நாம் செய்ய முடியாதது." நியாயப்பிரமாணம் அதனுடைய வேலையை ஒரு பாவியினிடத்தில் செய்து முடிக்கும்போது, அவன் "கர்த்தாவே, நீர் என்னை உம்முடைய கிருபையினாலே இரட் சியும்" என்று கதற ஆயத்தமாகிவிடுகிறான்.[2] இரட்சிப்படைவதற்கு அல்லது பரிசுத்தமாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் அவசியம் தேவை யென்று சொல்லுகிறவர்கள் அதில் கொள்கை மாறாமல் இருப்பதில்லை. ஒரு கிறிஸ்தவன் நியா யப்பிரமாணத்தை மீறினால் அவன் சாவுக்குட் படுத்தப்பட வேண்டியதில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். இது நியாயப்பிரமாணத்தின் அதி காரத்தை நிலைநிறுத்துகிறதில்லை. தண்டனை யில்லாத நியாயப்பிரமாணம் நல்லதொரு ஆலோசனையே தவிர வேறொன்றுமில்லை.

1:9 நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக் கப்படவில்லை. ஒரு மனிதன் நீதிமானாக இருப்பா னென்றால், அவனுக்கு நியாயப்பிரமாணம் தேவையில்லை. ஒரு கிறிஸ்தவனைப் பொருத்த மட்டில் இது உண்மையாக இருக்கிறது. அவன் தேவனுடைய கிருபையினால் இரட்சிப்பை அடை யும்போது, அவன் தூய வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதற்காகப் பத்துக் கட்டளைகளுக் குக் கீழாகக் கொண்டுவரப்பட வேண்டியதில்லை. தண்டனை கிடைக்குமே என்னும் அச்சம் ஒரு கிறிஸ்தவனைத் தூய்மையாக வாழச் செய்வ தில்லை, கல்வாரியில் மரணமடைந்த இரட்சகர் பால் கொண்டுள்ள அன்பே அவனைப் பரிசுத்த மாய் வாழச் செய்கிறது.

எப்படிப்பட்ட மனிதர்களுக்கு நியாயப்பிர மாணம் கொடுக்கப்பட்டது என்பதை அப்போஸ் தலன் தொடர்ந்து விளக்குகிறார். இங்கு கொடுக் கப்பட்ட விளக்கத்திற்கும் பத்துக் கட்டளைகளுக் கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று வேத விரிவுரையாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளார் கள். பத்துக் கட்டளைகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன: முதல் நான்கு கட்டளை களும் தேவனுக்கென்று மனிதன் செய்ய வேண் டிய கடமை (தெய்வப்பற்று), மற்ற ஆறு கட்டளை களும் அவன் தன்னுடைய அயலகத்தானுக்குச் செய்ய வேண்டிய கடமை (நீதி). **அக்கிரமக்கார ருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில் லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்த ருக்கும், சீர்கெட்டவர்களுக்கும் ..."** என்ற சொற்கள் பத்துக் கட்டளையின் முதற்பகுதி யோடு பொருந்தியிருக்கின்றன: **கொலைபாத கர்** என்னும் சொல் "*கொலை செய்யாதிருப் பாயாக*" என்னும் ஆறாவது கட்டளையோடு தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. இங்கு கொலை பாதகர் என்னும் சொல், தற்செயலாக ஒருவனைக் கொன்றுவிடுகிற மனிதனை மட்டும் குறிக்காமல், கொலையாளிகளையும் குறிக்கிறது.

1:10 வேசிக்கள்ளர், ஆண்புணர்ச்சிக்காரர் என்னும் சொற்கள் முறையே பலரோடு பாலுறவு கொள்கிறவர்களையும், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகிறவர்களையும் குறிப்பிடுகின்றன. இந்தச் சொற்கள் இங்கு ஏழாவது கட்டளையோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன: "விபசாரம் செய்யா திருப்பாயாக." **மனிதரைத் திருடுகிறவர்கள்** என்னும் சொற்றொடர் எட்டாவது கட்டளையோடு தொடர்புடையது என்பதில் ஐயமில்லை: "களவு செய்யாதிருப்பாயாக." பொய்யர் பொய்யாணை இடுகிறவர்கள் என்பவர்கள் ஒன்பதாவது கட்ட ளையோடு தொடர்புடையவர்கள்: "பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப் பாயாக."

1:11 இறுதியாகச் சொல்லப்பட்டிருக்கிற **ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடை யாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது** என்னும் சொற்கள் பத்துக் கட்டளையோடு நேரடியாகத் தொடர்புடையவையல்ல. மாறாக எல்லாக் கட்டளை களையும் விரைவாகத் திரும்பிப் பார்த்து அவற் றின் செய்திச் சுருக்கமாகவே இச்சொற்றொடர் விளங்குகிறது.

இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற செய்தியை முந்தின வசனங்களோடு இணைத் துப் பொருள்காண்பது சற்று கடினம். **ஆரோக்கிய மான உபதேசம் சுவிசேஷத்திற்கு** ஏற்றபடி தரப்படுகிற உபதேசம் என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். அல்லது 8-10 ஆகிய வசனங் களில் பவுல் விளக்கிக் கூறியுள்ள நியாயப்பிர மாணத்தைப் பற்றிய விவரங்கள், அவர் பிரசங் கித்த **சுவிசேஷத்தோடு** மிகநேர்த்தியான முறையில் பொருத்தமுடையவை என்று அவர் கூறுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். அல்லது 3 -10 ஆகிய வசனங்களில் கள்ளப் போதகர்களைக் குறித்து அவர் கூறியிருக்கிற விவரங்கள் யாவும்

சுவிசேஷத்தின் கண்ணோட்டத்தில் சொல்லப் பட்டவை என்றும் எடுத்துக்கொள்ளலாம். சுவி சேஷம் **மகிமையானது** என்பது உண்மையெனி னும், அது தேவனுடைய மகிமையை அற்புதமான முறையில் எடுத்துரைக்கிறது. பரிசுத்தமும் நீதியும் நேர்மையும் உடையவராகிய தேவன், அதே நேரத்தில் கிருபையும், இரக்கமும், அன்பும் உடைய தேவனாக இருப்பது எப்படி என்பதை அது கூறுகிறது. அவருடைய பரிசுத்தம் எதை உரிமைகோரியதோ அதை அவருடைய அன்பு தந்தது; இப்பொழுது கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் யாவருக்கும் நித்திய வாழ்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுவிசேஷம் அப்போஸ்தலனுக்கு ஒப்பு விக்கப்பட்டது. அது மகிமையடைந்த கர்த்தரா கிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியதேயாகும். மேலும் அது, அவர் இரட்சகராக இருப்பது மட்டு மின்றி, கர்த்தராகவும் இருக்கிறார் என்று கற்பிக் கிறது.

ஆ. தேவனுடைய மெய்யான கிருபைக்காக ஸ்தோத்திரம் செலுத்துதல் (1:12–17)

1:12 இதற்கு முந்தின பகுதியில், எபேசுப் பட்டணத்து விசுவாசிகள் மீது நியாயப்பிரமாணத் தைத் திணிக்க முயன்ற கள்ளப் போதகர்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கிக் கூறினார். இப்பொழுது அவர் அடைந்த மனமாற் றம் நினைவுக்கு வந்துவிட்டது. அவர் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டதால் இரட்சிக்கப் படவில்லை. மாறாக, தேவனுடைய கிருபையி னாலே இரட்சிக்கப்பட்டார். அப்போஸ்தலன் நீதிமானாக இருக்கவில்லை, மாறாக பிரதான பாவியாகவே இருந்தார். நியாயப்பிரமாணமானது எவ்வாறு நியாயமான முறையில் பயன் விளை வித்தது என்பதைப் பவுல் தனது சொந்த அனுபவத் திலிருந்து 12-17 ஆகிய வசனங்களில் விளக்கு கிறார் என்றே தோன்றுகிறது. அவருடைய வாழ்க் கையில் நியாயப்பிரமாணம் இரட்சிப்படைவதற் கான வழியாகச் செயல்படவில்லை, மாறாக பாவம் கண்டித்துணர்த்தப்படுவதற்குக் காரண மாகவே செயல்பட்டது.

முதலாவதாக, அவரைத் தகுதிப்படுத்தின **கிறிஸ்து இயேசுவின்** கிருபைக்காக நன்றி செலுத்தும்படி கிளர்ச்சிமிக்க வகையில் ஸ்தோத் திரிக்கிறார். தர்சுப் பட்டணத்தைச் சேர்ந்த சவுல் கர்த்தருக்காக என்ன செய்தார் என்பது இங்கு முக்கியப்படுத்தப்படவில்லை, மாறாகக் கர்த்தர் அவருக்கு என்ன செய்தார் என்பதே முக்கியப் படுத்தப்பட்டுள்ளது. கர்த்தர் அவரை இரட்சித்தது மட்டுமின்றி, அவரை **உண்மையுள்ளவரென் றெண்ணி** அவருடைய பணிக்கென்று நியமித்தார் என்னும் வியத்தகு நினைவு அப்போஸ்தலனு டைய உள்ளத்திலிருந்து அகலவில்லை. இத்த கைய கிருபையை நியாயப்பிரமாணத்தினால் காண்பித்திருக்கவே முடியாது. மாறாக, நியாயப் பிரமாணத்தின் விட்டுக்கொடுக்காத கொள்கை பாவியாகிய சவுலை மரணத்திற்குள்ளாகத் தீர்த் திருக்கும்.

1:13 பவுல் தன்னுடைய மனமாற்றத்திற்கு முன் பத்துக் கட்டளைகளை மீறினார் என்பதற்கு மிகத்தெளிவான நிரூபணமாக இந்த வசனம் விளங்குகிறது. அவர் தன்னைக் குறித்து **முன்னே தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமைசெய்கிறவனுமாக** இருந்ததாகக் கூறுகிறார். அவர் கிறிஸ்தவர்களைக் குறித்தும் அவர்களுடைய தலைவராகிய இயேசுவைக் குறித்தும் அவதூறாகப் பேசினார் என்பதை **தூஷிக்கிறவர்** என்னும் சொல் வெளிப்படுத்து கிறது. **துன்பப்படுத்தியவர்** என்னும் நிலையில், இந்தப் புதிய மார்க்கம் யூதமார்க்கத்துக்குப் பெரும் ஆபத்தை உண்டாக்கிவிடும் என்று எண்ணியவராக அவர் கிறிஸ்தவர்களைக் கொலை செய்யும்படியான முயற்சியில் ஈடுபட் டார். அவர் தனது பொல்லாப்பு நிறைந்த திட் டத்தை நிறைவேற்றும் பொருட்டு தன்னுடைய வன்முறைச் செயல்களால் விசுவாசிகளுக்கு எதிராகக் **கொடுமைசெய்கிறவராகவும்** அட்டூழி யங்கள் புரிகிறவராகவும் இருந்தார். இந்தச் சொற்களில், அவர் புரிந்த கொடுமைகளின் தன்மை ஏறுமுகமாக இருப்பதைக் காணமுடியும்: **தூஷணம், துன்புறுத்துதல்,** கொடுமை செய் தல். முதலில் குறிப்பிடப்பட்டுள்ள பாவச்செயல் வெறும் சொற்களில் செய்யப்படுபவை, இரண்டா வது பிறர் கொண்டிருக்கும் சமய நம்பிக்கையின் காரணாக அவர்கள்மீது சுமத்தப்படும் கடுந்துன் பங்கள். மூன்றாவது மனிதத் தன்மையற்ற கொடுமைகளும் கட்டுமீறியபடி பழிதூற்றலும் என்னும் கருத்தை உடையது.

அப்படியிருந்தும் பவுல் **இரக்கம் பெற்றார்**. அவர் பெறவேண்டிய தக்க தண்டனையை அவர் பெறவில்லை; அவர் **அறியாமல் அவிசுவாசத்தி னால் அப்படிச் செய்தபடியால்** அவருக்குத் தண்டனை வழங்கப்படவில்லை. அவர் கிறிஸ்த வர்களைத் துன்புறுத்திய செயல்களின்மூலமாக தேவனுக்கு ஊழியம் செய்ததாக நினைத்துக்

கொண்டார். அவருடைய பெற்றோரின் மதம் மெய்யான தேவனை மட்டும் தொழுதுகொள்ள வேண்டும் என்று கற்பித்திருந்ததாலே, கிறிஸ்தவ விசுவாசம் பழைய ஏற்பாட்டு யெகோவாவிற்கு எதிரானது என்று அவர் முடிவு செய்துவிட்டார். அவர் கொண்டிருந்த வைராக்கியம் மற்றும் ஆற்றல் ஆகியவற்றின் மூலமாக, அவர் கிறிஸ்த வர்களைக் கொலைசெய்து தேவனுடைய கனத்தை நிலைநிறுத்த முயன்றார்.

வைராக்கியம், உள்ளார்வம் மற்றும் கபடற்ற தன்மை ஆகியவை தேவனுடைய காரியங்களில் மிக முக்கியமானவை என்று பலர் வற்புறுத்திக் கூறுகிறார்கள். ஆனால் வைராக்கியம் மட்டும் போதாது என்று அப்போஸ்தலனின் அனுபவம் காட்டுகிறது. ஒரு மனிதன் தவறானவனாக இருந்தால், அவனுடைய வைராக்கியம் அவனுடைய தவறைத் தீவிரமடையச் செய்துவிடும். அவன் எந்த அளவிற்கு மிகுதியாக வைராக்கியம் உடையவனாக இருக்கிறானோ, அந்த அளவிற்கு மிகுதியாகப் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறான்!

1:14 தனக்கு வரவேண்டிய தண்டனையிலிருந்து பவுல் தப்பித்துக்கொண்டது மட்டுமின்றி (இரக்கம்), அவர் தனக்குத் தகுதியில்லாத வகையில் **பரிபூரணமான** தயவையும் பெற்றுக்கொண்டார் (**கிருபை**). எங்கே அவருடைய பாவம் பெருகிற்றோ, அங்கே தேவனுடைய கிருபையும் அதிகமாகப் பெருகிற்று (ரோமர் 5:20).

கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னும் சொற்களால், பவுலின்மீது காண்பிக்கப்பட்ட கர்த்தருடைய கிருபை வீணாய்ப்போய்விடவில்லை என்னும் உண்மை சுட்டிக்காட்டப்படுகிறது. பவுலிடம் காண்பிக்கப்பட்ட கிருபையோடு, **கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசமும் அன்பும்** இணைந்து வந்தன. கர்த்தரிடத்திலிருந்து எவ்வாறு கிருபை வந்ததோ, அதுபோலவே அவரே விசுவாசமும் அன்பும் தோன்றுவதற்கு மூலகாரணராக இருந்தார் என்பதே இதன் பொருளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. பவுல் தேவனுடைய கிருபையை வேண்டாமென்று மறுத்துரைக்கவில்லை, மாறாக அவர் முன்னே தான் வெறுத்துத் தள்ளிய, ஆசிர்வதிக்கப்பட்டவரும் கர்த்தருமாகிய இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டதை நாம் புரிந்துகொள்வதால் இதனுடைய பொருள் மிகவும் தெளிவாகப் புலப்படும்.

1:15 இந்த "வார்த்தை உண்மையுள்ளது" என்னும் சொற்றொடர் மேய்ப்பர் திருமடல்களில் ஐந்து இடங்களில் காணப்படுகிறது. அவற்றில் இது முதலாவது. பொய்யுரைக்கவோ தவறாகக் கருதப்படவோ கூடாதவராகிய தேவனுடைய வார்த்தையாக இது இருப்பதால், **இந்த வார்த்தை உண்மையுள்ளது**. மனிதன் இந்த வார்த்தையை முழுமனதோடு நம்புவதற்கு இது ஏற்றதாயிருக்கிறது. உண்மையில் இதனை நம்பாமல் இருப்பதே பகுத்தறிவற்றதும் விவேகமற்றதுமான செயலாகும். இது **எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது**, ஏனென்றால் இது எல்லோருக்கும் உரியது, எல்லோருக்காகவும் தேவன் என்ன செய்தார் என்பதை இது கூறுகிறது, மேலும் இது இரட்சிப்பை எல்லோருக்கும் விரிவாக்கம் செய்கிறது.

முதலாவது **கிறிஸ்து இயேசு** என்னும் சொற்றொடர் கர்த்தருடைய தெய்வீகத்தை வலியுறுத்துகிறது. வானத்திலிருந்து இறங்கி இவ்வுலகிற்கு வந்தவர் *தேவன்* (**கிறிஸ்து**), பின்னர் அவர் *மனிதர்* (**இயேசு**). **உலகத்தில் வந்தார்** என்னும் சொற்கள் இரட்சகர் ஏற்கனவே இருக்கிறவர் என்னும் உண்மையைக் குறிப்பாய்த் தெரிவிக்கின்றன. அவருடைய உளவாம் நிலைக்கு பெத்லகேம் தொடக்கமன்று. நித்திய காலமாக அவர் பிதாவாகிய தேவனோடு இருந்தவர். ஆனால் அவர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு இவ்வுலகிற்குப் பயணம் மேற்கொண்டவராக வந்தார். நாள்காட்டியானது அவர் வந்தார் என்னும் உண்மைக்கு நிரூபணமாக விளங்குகிறது. இதனை நாம் கி. பி. 2000 - அல்லது கர்த்தருடைய ஆண்டு 2000 என்று கூறுகிறோம். அவர் ஏன் வந்தார்? **பாவிகளை இரட்சிக்கவே** அவர் வந்தார். நல்ல மனிதர்களை இரட்சிக்கும்படி அவர் வரவில்லை (நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. நியாயப்பிரமாணத்தைப் பரிபூரமாணமாகக் கைக்கொண்டவர்களை இரட்சிக்கும்படியும் அவர் வரவில்லை. அவ்வாறு நியாயப்பிரமாணத்தை ஒருவரும் நிறைவேற்றவில்லை).

மெய்யான கிறிஸ்தவத்திற்கும் பிற போதனைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளின் மையக்கருத்திடமாய் நாம் இப்பொழுது வந்திருக்கிறோம். மனிதன் தேவனுடைய தயவைப் பெறும்படி ஏதோ ஒரு செயலைச் செய்யலாம் அல்லது அந்நிலையில் இருக்கலாம் என்று தவறான சமயங்கள் போதிக்கின்றன. ஆனால் சுவிசேஷமோ மனிதன் பாவி என்றும், அவன் இழந்து போனவன் என்றும், அவன் தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள முடியாது என்றும், கர்த்தராகிய இயேசு

பதிலாள் என்னும் நிலையில் சிலுவையில் நிறை வேற்றிய செயலின்மூலம் அவன் பரலோகத்தைச் சென்றடைய முடியும் என்றும் கற்பிக்கிறது. இந்த அதிகாரத்தில் முன்பகுதியில் பவுல் விளக்கிக் கூறியுள்ள நியாயப்பிரமாணத்தின் மாதிரி களாலான போதனைகளில், மாம்சத்திற்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் எதைக் கேட்க விரும்புகிறானோ அதையே மிகச் சரியாக நியா யப்பிரமாணம் கூறுகிறது, அதாவது, தன்னுடைய சொந்த இரட்சிப்புக்கு அவனால் எப்படியாவது தனது பங்கைச் செலுத்தமுடியும் என்று அது கூறுகிறது. ஆனால் நற்செய்தியோ, இரட்சிப்பின் செயலுக்குரிய மகிமை முழுவதும் கிறிஸ்துவை மட்டுமே சென்றடைய வேண்டும் என்று கூறு கிறது. அதாவது, மனிதன் பாவம் செய்கிறதைத் தவிர வேறு ஒன்றும் செய்கிறதில்லை என்றும், கர்த்தராகிய இயேசு இரட்சிப்பிற்கான எல்லாவற் றையும் செய்கிறார் என்றும் அது கூறுகிறது.

தான் **பிரதான பாவி** என்று பவுல் அறிந்து கொள்ளக்கூடிய ஒரு நிலைக்கு அவர் தேவ ஆவி யால் கொண்டுவரப்பட்டார். "பாவிகளுக்குள் ளாக முதன்மையானவர்" என்று ஒருவர் இதனை மொழிபெயர்த்துள்ளார். பாவிகளில் அவர் பிரதான பாவி இல்லையென்றால், நிச்சயமாக அவர் அதில் முதல் வரிசையைச் சேர்ந்தவர்தான். "பிர தான பாவி" என்னும் பெயர் சிலைவணக்கம் செய்தவருக்கோ ஒழுக்கங்கெட்டவருக்கோ கொடுக் கப்படாமல், சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட ஒருவருக்கு, புராதன சமயச் சார்புடைய யூதக் குடும்பத்தில் வளர்க்கப்பட்ட ஒருவருக்குக் கொடுக் கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்! அவருடைய பாவம் உபதேசத்தோடு தொடர்புடையது; கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமை மற்றும் அவருடைய செயல் ஆகியவற்றைக் குறித்துத் திருமறை கூறியவற்றை அவர் ஏற்றுக்கொள்ள வில்லை. இறைமைந்தனை ஏற்க மறுப்பது பாவங்களில் மிகப்பெரியது.

அவர்களில் பிரதான பாவி நான் என்று அவர் கூறுகிறதைக் கவனியுங்கள். அவர் "பிரதான பாவி யாக இருந்தேன்" என்று கூறாமல், இங்கே நிகழ்காலத்தில் சொல்லியிருக்கிறார். மிகவும் அதிகமாக பயபக்தியோடு இருக்கக்கூடிய பரி சுத்தவான்கள், தங்களுடைய பாவத்தன்மையை அவ்வப்போது நினைவுகூருகிறவர்களாக இருப் பார்கள்.

1 கொரிந்தியர் 15:9 -இல் (ஏறத்தாழ கி. பி. 57 -இல் எழுதப்பட்டது) பவுல் தன்னை "அப்போஸ் தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்" என்று குறிப்பிடுகிறார். பின்னர் எபேசியர் 3:8 -இல் (ஏறத்தாழ கி. பி. 60 -இல் எழுதப்பட்டது) அவர் தன்னைப் "பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறிய வன்" என்று அழைக்கிறார். சில ஆண்டுகள் கழிந்த பின்னர் இப்பொழுது 1 தீமோத்தேயு 1:15 - .இல் அவர் தன்னைப் பாவிகளில் **பிரதான பாவி** என்று அழைக்கிறார். கிறிஸ்தவர்களுக்குரிய தாழ்மை என்னும் பண்பில் பவுல் முன்னேற்றம் அடைந்துள்ளார் என்பதற்கான குறிப்பினை இப்பகுதிகளில் காண்கிறோம்.

அவர்களில் பிரதான பாவி நான்என்னும் சொற் றொடர் திருவாளர் டார்பியின் மொழி பெயர்ப்பில் "அவர்களில் முதலாவது நான்" என்பதாகக் காணப்படுகிறது. இவ்வுலகில் வாழ்ந்தவர்களில் மிகவும் மோசமான பாவி என்னும் கருத்து அவ் வளவாக இங்கு இல்லை, மாறாக இஸ்ரவேல் நாட்டைப் பொருத்தமட்டில் அவர் முதலானவராக இருந்தார். எதிர்காலத்தில் இஸ்ரவேல் நாடு மனந் திரும்பப் போகிறது என்பதற்கு முன்னடையாள மாக, அவருடைய மனமாற்றம் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்தது என்றும் இதனை வேறு சொற்களில் கூறலாம். அவருடைய பிறப்பு "அகா லப் பிறவி போன்றது"(1 கொரி. 15:8); அதாவது அவருடைய இனத்தாராகிய இஸ்ரவேலர் மீண்டும் பிறப்பதற்கு முன் அவர் மீண்டும் பிறந்து விட்டார். வானத்தில் தோன்றிய நேரடியான வெளிப்பாட்டின் மூலமாக அவர் இரட்சிக்கப்பட் டார்; அந்நிகழ்ச்சியில் வேறு மனிதனுடைய துணைச்செயல் இடம்பெறவில்லை. அது போலவே வரப்போகிற உபத்திரவ காலத்தில் மீதி யான யூதர்கள் நேரடியான வெளிப்பாட்டின் மூலம் இரட்சிப்படைவார்கள் என்றே தோன்றுகிறது. 16 - ஆவது வசனத்தில் "பிரதான" (முதலாவது) திருஷ்டாந்தம் ஆகிய சொற்கள் இடம் பெற்றிருப் பதே இவ்வாறு விளக்கம் கொடுக்கப்படுவதற் கான காரணம் எனத் தெரிகிறது.

1:16 பவுல் ஏன் இரக்கம் பெற்றார் என்பதற் கான காரணத்தை இந்த வசனம் விளக்கிக் கூறு கிறது. **இயேசு கிறிஸ்துவின் நீடிய பொறுமைக்கு** அடையாளமாக விளங்கும்படி அவ்வாறு ஆயிற்று. பாவிகளில் பிரதானமானவராக அவர் இருந்தது போல, கர்த்தருடைய சோர்வுறா கிருபையைக் காண்பிக்கும் பொருட்டு, அவர் அதனுடைய பிர தான காட்சிப்பொருளானார். அவர் "முதலாவது சான்றாக" (நீதிமன்றத்தில் வைக்கப்படும் சான்று களில் முதலாவது சான்று), உயிருள்ள மாதிரி

யாக விளங்குவார். “தீவிரமாகச் செயல்பட்ட பகைமையிலிருந்து தெய்வீக அன்பு எழுகிறது; பல்வேறு வகையானதும், விடாப்பிடியானதுமான விரோதம் தெய்வீக பொறுமையினால் வலு விழந்து போகிறது” என்று திருவாளர் வில்லியம் கெல்லி கூறினார்.[3]

பவுலின் மனமாற்றம் **திருஷ்டாந்தமாக** இருக்க வேண்டும். அச்சுத் தொழிலில் மாதிரி (திருஷ்டாந்தம்) என்பது முதலாவது அச்சிடப் பட்ட படியாகும். அது எடுத்துக்காட்டு அல்லது மாதிரி என்னும் பொருளையே தருகிறது. சீயோனிலிருந்து மீட்கிறவர் வருகிறபோது இஸ்ரவேல் நாட்டிற்கு என்ன நிகழும் என்பதற்கு (ரோமர் 11:26) பவுலின் மனமாற்றம் மாதிரியாகத் திகழ வேண்டும்.

ஒரு மனிதர் எவ்வளவு கேடு நிறைந்தவராக இருந்தாலும், அவர் நம்பிக்கை இழந்து போக வேண்டியதில்லை என்பதே இந்த வசனம் வெளிப் படுத்துகிற பொதுவான கருத்து. பாவிகளில் பிரதான பாவியைக் கர்த்தர் ஏற்கனவே இரட்சித் திருக்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட மனிதர் கள், தங்களுடைய பாவத்திற்காக மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் வரும்போது கிருபையையும் இரக் கத்தையும் கண்டடைய முடியும் என்று தங்களுக் குத் தாங்களே ஆறுதல் சொல்லிக்கொள்ள முடியும். அவரிடத்தில் வைக்கும் விசுவாசத்தி னாலே, அவர்களாலும் **நித்திய ஜீவனைப்** பெறமுடியும்.

1:17 இறைவன் தமது கிருபையினாலே வியத்தகு வகையில் தன்னோடு ஈடுபட்டதைப் பவுல் நினைவிற்கொண்டவராக, இனிமைமிக்க துதிப்பாடலுன் பொங்கியெழுகிறார். இந்தத் துதி பாடல் திருத்தந்தையாகிய தேவனை நோக்கி ஏறெடுக்கப்பட்டதா அல்லது கர்த்தராகிய இயேசுவை நோக்கி ஏறெடுக்கப்பட்டதா என்பதை உறுதியாகச் சொல்லுவது கடினம். **நித்திய ராஜன்** என்னும் சொற்கள் கர்த்தராகிய இயேசு வைக் குறிப்பதாகவே தோன்றுகின்றன. ஏனென் றால் அவர், “ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா” என்று அழைக்கப்பட்டிருக்கிறார் (வெளி. 19:16). ஆனாலும், **அதரிசனமானவர்** என்னும் சொல் திருத்தந்தையைக் குறிக்கிறது. ஏனெனில் கர்த்த ராகிய இயேசு மனிதர்களுடைய கண்களுக்குப் புலப்பட்டார் என்பதில் ஐயமில்லை. தேவ தலை மையில் எந்த நபரை இச்சொற்கள் குறிக்கின்றன என்று வேறுபடுத்தி அறிய முடியாதிருக்கும் நிலை, அவர்கள் முழுமையாகச் சமநிலையில் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் அடை யாளமாகத் திகழ்கிறது.

நித்திய ராஜன் முதலாவதாக **அழிவில்லாமை** உடையவர் என்று கூறப்பட்டிருக்கிறார். அழிவுக்கு உட்படுத்தப்படக்கூடாதவர் அல்லது அழிவில்லாதவர் என்பது இதன் பொருளாகும். தேவனுடைய தனித்தன்மையின்படி, அவர் **அதரி சனமானவர்**. தேவனுடைய காட்சிகளைப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதர்கள் கண்டிருக் கிறார்கள், கர்த்தராகிய இயேசு கண்களுக்குப் புலப்படும் நிலையில் தேவனை முழுவதுமாக நமக்கு வெளிப்படுத்திக் காட்டினார். ஆயினும், தேவன்தாமே மனிதர்களுடைய கண்கள் காணக் கூடாதபடி அதரிசனமானவராக இருக்கிறார் என் னும் உண்மை நிலைத்திருக்கிறது. தொடர்ந்து அவர் **தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமா யிருக்கிறவர்** என்று அழைக்கப்படுகிறார், இறுதி யான முடிவு, சம்பூரண ஞானம் தேவனிடத்திலி ருந்தே வருகிறது (யாக். 1:5).

இ. தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை மீண்டும் உரைக்கப்படுதல் (1:18-20)

1:18 கள்ளப்போதகர்களைக் கடிந்துகொள் ளும்படி தீமோத்தேயுவுக்குப் பவுல் 3 மற்றம் 5 ஆகிய வசனங்களில் கொடுத்த அதே கட்டளை மீண்டும் இங்கு உரைக்கப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. இந்த முக்கியமான கட்டளையைத் தீமோத்தேயு நிறைவேற்றுவதற்காக அவரை உற்சாகப்படுத்தும் வண்ணம், கிறிஸ்தவ ஊழி யம் செய்யும்படி அவர் பெற்ற அழைப்பை நோக்கி வழிநடத்தின சூழ்நிலைகளை அப்போஸ்தலன் அவருக்கு நினைவூட்டுகிறார்.

உன்னைக் குறித்து முன் உண்டான தீர்க்க தரிசனங்களின்படியே என்னும் சொற்கள், தீமோத்தேயுவைப் பவுல் சந்திப்பதற்கு முன்னர், சபையில் ஒரு தீர்க்கதரிசி எழுந்து, தீமோத்தே யுவைக் கர்த்தர் தமது திருப்பணிக்கென்று பயன் படுத்துவார் என்று அறிவித்தார் என்னும் பொரு ளைத் தருகின்றன என்றே தோன்றுகிறது. சில குறிப்பிட்ட நடவடிக்கையைக் குறித்து தேவனு டைய சித்தம் இன்னதென்பதை தேவனிடத்தி லிருந்து பெற்று சபைக்கு அறிவிக்கிற தேவ பிரதிநிதியே தீர்க்கதரிசி எனப்படுபவர். இளை ஞனாயிருந்த தீமோத்தேயு தீர்க்கதரிசன சொற் களால் தனியே பிரித்து வைக்கப்பட்டு, பிற்காலத் தில் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகச் செயல்படுவார் என்பது அறிவிக்கப்பட்டது. கர்த்த ருக்காகப் பணிபுரிவதில் அவர் உள்ளம் சோர்

வடையவோ உற்சாகமிழக்கவோ கூடியபடி சோதனைகள் எழும்போது, அவர் இந்தத் தீர்க்கதரிசனங்களை நினைவுகூர வேண்டும்; இவ்வாறு ஏவுதல் பெற்றவராக அவர் **நல்ல போராட்டம் பண்ணும்படி** கிளர்ந்து எழவேண்டும்.

1:19 இந்தப் போராட்டத்தில் அவர் **விசுவாசமும் நல்மனச்சாட்சியும்** உடையவராய் இருக்க வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்த கோட்பாடுகளில் பிழையின்றி இருந்தால் மட்டும் போதாது. ஒருவர் புராதன நம்பிக்கையில் மிகவும் உறுதியுடையவராய் இருக்கலாம், ஆனாலும் அவர் **நல்மனச்சாட்சி** அற்றவராக இருக்கக் கூடும்.

ஹாமில்டன் ஸ்மித் என்பார் எழுதுகிறார்:

> வரம் பெற்ற மனிதர்கள், பொதுமக்கள் கண்களுக்கு முன்பாகச் சிறப்புமிக்கவர்களாகத் தோற்றமளிப்பவர்கள், தங்களுடைய இடைவிடாத ஊழியங்களுக்கு மத்தியில், இடைவிடாத பிரசங்கங்களுக்கு இடையில், மனிதர்களுக்கு முன்பாகப் பொது ஊழியங்களில் ஈடுபாடு கொண்டிருக்கக் கூடிய நேரங்களில், தேவனுக்கு முன்பாகச் செலவிடக்கூடிய இரகசியமான தெய்வசுபாமுள்ள வாழ்க்கையை மறந்துபோகக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். நாவன்மை மிக்க வகையில் மனிதர் மொழிகளையும், தூதர் மொழிகளையும் பேசினாலும் ஒன்றுமில்லை என்று சொல்லத்தக்க வகையில் ஒருவர் இருக்கக் கூடும் என்று திருமறை நம்மை எச்சரிக்கிறது இல்லையா? தீவ்விய சுபாவமுள்ள வாழ்க்கையே தேவனுக்கென்று கனிகளைத் தரக் கூடியதாகவும், வரப்போகிற நாளில் ஒளி பொருந்திய பரிசுப் பொருளை ஈட்ட வல்லதாகவும் இருக்கிறது. அங்கிருந்தே மெய்யான திருப்பணி ஊற்றெனப் பெருகி ஓடவேண்டும்.[4]

பவுல் இருந்த நாட்களில் வாழ்ந்த மக்களில் சிலர் தங்களுடைய நல்மனச்சாட்சியைத் தள்ளிவிட்ட காரணத்தால் **விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்**. தன்னுடைய திசைகாட்டும் கருவியைக் கப்பலிலிருந்து கடலுக்குள் தூக்கி எறியக்கூடிய மூடனாகிய மாலுமியைப் போல அவர்கள் இருக்கிறார்கள்.

விசுவாசமாகிய கப்பலில் சேதத்தை உண்டு பண்ணியவர்கள் **மெய்யான விசுவாசிகளே** ஆவார்கள். ஆனால் அவர்கள் மென்மையான மனச்சாட்சியை விடாமல் காத்துக்கொள்ள வில்லை என்பதே உண்மை. கம்பீரமான கப்பல் கடலுக்குள் விடப்பட்டு தன்னுடைய ஓட்டத்தைத் தொடங்குவதுபோல இவர்களும் தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடங்கினார்கள். ஆனால் அந்தக் கப்பல் அசைந்தாடும் கொடியோடு சரக்குகள் நிறைந்தவண்ணம் துறைமுகத்துக்குத் திரும்பாமல், கடல்நீர் உட்புகுந்து பாறையில் மோதி உடைந்து நொறுங்கிப் போனால் எப்படி இருக்குமோ அதுபோல, இந்தச் சகோதரர்கள் தங்களுக்கும் தங்களுடைய காட்சிக்கும் அவமானத்தைத் தேடிக்கொண்டார்கள்.

1:20 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள **இமெனேயும் அலெக்சந்தரும்** 2 தீமோத்தேயு 2:17 மற்றும் 4:14 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களும் அதே நபர்கள்தானா என்பது தெரியவில்லை. அவர்கள் என்ன தூஷணம் செய்தார்கள் என்பதும் நமக்குத் தெரியவில்லை. அவர்கள் தங்களுடைய மனச்சாட்சியைத் தள்ளி விட்டார்கள் என்றும் தூஷித்தார்கள் என்றும் மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம். புதிய ஏற்பாட்டில் **தூஷணம்**[5] என்னும் சொல், தேவனுக்கு எதிராகப் பேசப்படுகிற பொல்லாத பேச்சையே குறிக்கும்படியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உடன் விசுவாசிகளைப் பழிதூற்றுவதையும் அவமரியாதையாகப் பேசுவதையும் குறிப்பிடவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த மனிதர்களுடைய வாழ்க்கையைப் பற்றியும் அவர்களுடைய உதடுகளிலிருந்து பிறக்கிற சொற்களைப் பற்றியும் விளக்கிக் கூற இது பயன்படுத்தப்பட வேண்டும். அவர்கள் விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியதுமல்லாமல், பிறரது மெய்ம்மையின் வழியைக் குறித்து அவதூறாகப் பேசுவதற்குக் காரணமாகிவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்வாறாக இவர்களுடைய வாழ்க்கை உயிருள்ள தூஷணமாக மாறிவிட்டது.

ஒரு காலத்தில் இந்த மனிதர்கள் ஒளிபொருந்திய வகையிலும் ஆக்கபூர்வமாகவும் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், இப்பொழுது இவர்கள் தங்களுடைய மனச்சாட்சியைத் தவறான வழிக்குள் திசைதிருப்பி அழித்துப்போட்டுவிட்டார்கள்.

இந்த மனிதர்களைச் **சாத்தானிடத்தில் ஒப்புக் கொடுத்தாக** அப்போஸ்தலன் கூறுகிறார். சபைக்குப் புறம்பாக்குதல் என்னும் செயலைக் குறிக்கும்படியே இந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று சிலர் இதற்கு விளக்கமளிக்கிறார்கள். உள்ளூர் சபையிலிருந்து இந்த

மனிதர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்றும், இச்செயலானது அவர்கள் மீண்டும் கர்த்தரோடும் அவருடைய மக்களோடும் முன்னிருந்த ஐக்கியத் திற்குள் கொண்டுவரப்படவேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்டது என்றும் இதனை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். சபைக்குப் புறம்பாக்குதல் உள்ளூர் சபையின் செயல்பாடாக இருக்கிறதே யொழிய அப்போஸ்தலனுடைய வேலையல்ல என்பதே இவ்விளக்கத்திற்கு இடையூறாக இருக் கிறது. 1 கொரிந்தியர் 5 -ஆம் அதிகாரத்தில், தடைசெய்யப்பட்ட கலவியில் ஈடுபட்ட மனிதனை அப்போஸ்தலன் சபைக்குப் புறம்பாக்கியதாக நாம் காண்கிறதில்லை. மாறாக கொரிந்தியரே அதைச் செய்ய வேண்டுமென்று அவர் ஆலோ சனை தந்தார்.

இப்பகுதிக்கு மற்றுமொரு விளக்கம் தரப்படு கிறது. ஒரு மனிதனைச் **சாத்தானுக்கு** ஒப்புக் கொடுக்கக்கூடிய அதிகாரம் அப்போஸ்தலருக் குக் கொடுக்கப்பட்ட அதிகாரமாகும். இந்நாட் களில் அப்போஸ்தலர் இல்லாத காரணத்தினால் இந்த அதிகாரம் இப்பொழுது இல்லை என்பதே இந்த விளக்கம். இக்கருத்தின்படி, பாவம் செய்த ஒரு மனிதனைச் சரீரப்பிரகாரமான பாடுகளுக்கு உட்படும்படி அல்லது கடுமையான சூழ்நிலை களில் மரணத்தை அடையும்படி சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க (அனனியா, சப்பீராள் வாழ்க்கை யில் நடைபெற்ற நிகழ்ச்சி. அப். 5:1-11), அப்போஸ் தலருக்கு அதிகாரம் இருந்தது. இந்த ஒழுங்கு நடவடிக்கையானது சரிசெய்யப்படும் பொருட்டே எடுக்கப்பட்டது - அவர்கள் தூஷியாதபடி சிட்சிக் கப்பட. நித்திய ஆக்கினை என்னும் கேள்விக்கே இங்கு இடமில்லை, சிட்சிக்கப்படுவதே சொல்லப் பட்டுள்ளது.

3. சபை வாழ்க்கையைக் குறித்த அறிவுரைகள் (2:1-3:16)

அ. மன்றாட்டைக் குறித்த அறிவுரை (2:1–7)

கள்ளப்போதகர்களைக் குறித்த தனது முத லாவது கட்டளையைப் பவுல் தீமோத்தேயுவிடம் கூறிமுடித்துவிட்டார். இப்பொழுது மன்றாட்டு என்னும் தலைப்பு குறித்துப் பேசத் திரும்புகிறார். பலர் ஒன்று கூடி பொதுவான முறையில் ஏறெடுக் கிற மன்றாட்டைக் குறித்தே இப்பகுதி பேசுகிறது என்று பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் இங்கு சொல்லப்பட்டுள்ள குறிப்புகள் ஒருவருடைய தனிப்பட்ட விசுவாச வாழ்க்கைக் கும் பொருத்தமானவையேயாகும். அவ்வாறு இல்லையென்று சொல்லத்தக்க ஏதொரு குறிப் பையும் இப்பகுதியில் காணவியலாது.

2:1 எல்லா மனிதருக்காகவும் ஏறெடுக்கிற மன்றாட்டு நம்முடைய சிறப்புரிமையாகவும் கடமையாகவும் இருக்கிறது. நம்முடைய உடன் மக்களுக்காக தேவனுடைய சமுகத்தில் சேரு கின்ற வாய்ப்பு குறைவற்ற சிறப்புரிமையாகும். மேலும் இது நம்முடைய பொறுப்புமிக்க கடமை யாகவும் விளங்குகிறது. ஏனெனில் இரட்சிப்பின் நற்செய்தியின் காரணமாக நாம் யாவருக்கும் நன்றிக்கடன் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மன்றாட்டின் நான்கு கூறுகளை அப்போஸ் தலர் இங்கு வரிசைப்படுத்திக் கூறுகிறார். அவை யாவன: **விண்ணப்பங்கள், ஜெபங்கள், வேண்டு தல்கள், ஸ்தோத்திரங்கள்**. முதல் மூன்று செயல் களை வேறுபடுத்திக் காண்பது மிகவும் கடினம். தற்கால சொல்லாட்சியின்படி **விண்ணப்பங்கள்** என்னும் சொல் எழுச்சிமிக்க வகையிலும் ஊக்க மாகவும் ஏறெடுக்கப்படுகிற மன்றாட்டைக் குறிக் கும். ஆனால் இங்கு இந்தச் சொல் குறிப்பிட்ட தேவைகளுக்காக ஏறெடுக்கப்படும் மன்றாட் டையே சுட்டிக் கட்டுகிறது. **ஜெபங்கள்** என்னும் சொல் மிகவும் பொதுவான நிலையில் பயன் படுத்தப்படுகிற சொல்லாகும். தேவனுடைய சமுகத்தை எல்லாவிதமான மரியாதையோடும் அணுகுகிற செயலை இது குறிக்கிறது. பிறர்நலம் நாடி நாம் நம்முடைய தேவனை மேல் அதிகாரி என்னும் நிலையில் அணுகி முறையிடுகிற செயலையே **வேண்டுதல்கள்** என்னும் சொல் குறிக்கிறது. நம்முடைய மன்றாட்டு நேரங்களில் கர்த்தருடைய கிருபையையும் தயவையும் மீண்டும் மீண்டும் விவரித்து, நன்றிக்கடனின் காரணமாக நம்முடைய இருதயங்களை ஊற்றும் செயலே **ஸ்தோத்திரம் பண்ணுதல்** என்பதாகும்.

இந்த வசனத்தை நாம் சுருக்கமாகக் கூறுவோ மெனில், **எல்லா மனிதருக்காகவும்** மன்றாட்டின் வேளைகளில் நாம் தாழ்மையோடும், தொழுது கொள்ளும் மனப்பான்மையோடும், நம்பிக்கை யோடும் நன்றிசெலுத்தும் உள்ளத்தோடும் இருக்க வேண்டும் என்னும் கருத்தையே இது தருகிறது.

2:2 இராஜாக்கள் மற்றும் **அதிகாரமுள்ளவர் கள்** யாவரும் இங்கு தனிப்பட்ட வகையில் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். நம்முடைய ஜெபங் களில் இவர்களைப் பற்றிய மன்றாட்டு முக்கிய மாக இடம்பெறவேண்டும். அதிகாரங்கள் யாவும்

தேவனால் நியமிக்கப்பட்டிருக்கின்றன என்றும் (ரோமர் 13:1), அவர்கள் நமக்கு நன்மை உண்டாகும் பொருட்டு தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் (ரோமர் 13:4) பவுல் நினைவுபடுத்தியிருக்கிறார்.

நீரோ மன்னனின் காலத்தில் இந்த வசனம் எழுதப்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்கையில் இது தனிச்சிறப்பை உடையதாக விளங்குகிறது. அந்தப் பொல்லாத அரசன் கிறிஸ்தவர்களுக்குக் கடுந்துன்பங்களை விளைவித்தபோதிலும், அவர்கள் அரசுத் தலைவர்களுக்காக மன்றாட வேண்டும் என்னும் உண்மையை அவை தடைசெய்யவில்லை. தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடாது என்னும் கட்டளை தவிர, வேறு எல்லாவற்றிலும் கிறிஸ்தவர்கள் தாங்கள் குடியிருக்கிற அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடாது என்று ஓர் அரசாங்கம் கூறுமென்றால், நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டிய பொறுப்பு உடையவராயிருக்கிறோம். அரசாங்கத்திற்கு எதிரான புரட்சியிலோ வன்முறையிலோ ஒரு கிறிஸ்தவன் ஈடுபடக் கூடாது. தேவனுடைய வார்த்தைக்கு எதிரான எந்தவொரு கட்டளையையும் அவன் மறுத்துரைத்து, அதன் விளைவாகத் தரப்படுகிற தண்டனையை அமைதியோடும் கீழ்ப்படிதலோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆளுகைபுரிவோருக்காக மன்றாட்டுகளை ஏறெடுக்க வேண்டும் என்பதற்கான காரணத்தை, **நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு** என்னும் சொற்களால் பவுல் விளக்கிக் கூறுகிறார். அரசு நிலையாக இருப்பதும், புரட்சி, உள்நாட்டுப் போர், கலகங்கள், அராஜகம் ஆகியவற்றிலிருந்து நாடு பாதுகாக்கப்படுவதும் நமக்கு நன்மையே பயக்கும்.

2:3 அரசர்கள் அதிகாரிகள் உட்பட நாம் யாவருக்காகவும் ஜெபிப்பது, **நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.** அது தன்னில்தானே நல்லதாயிருக்கிறது. மேலும் நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாகப் பிரியமாயிருக்கிறது. இங்கு பவுல் தேவனுக்கு அளித்திருக்கிற பட்டம் குறிப்பிடத்தக்கது. எல்லா மனிதர்களும் இரட்சிப்படைய வேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாகும். ஆகவே எல்லா மனிதர்களுக்காகவும் ஜெபிக்கும்போது, இவ்விதமாக தேவனுடைய சித்தம் முன்னேற நாம் துணைபுரிகிறோம்.

2:4 நாம் ஏற்கனவே 3 -ஆவது வசனத்தில் குறிப்பிட்டுள்ளதை இந்த வசனம் மேலும் விவரித்துக் கூறுகிறது. **எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட** வேண்டுமென்று தேவன் **சித்தமுள்ளவராயிருக்கிறார்** (எசே. 33:11; யோவான் 3:16; 2 பேதுரு 3:9). ஆகையால், நாம் எங்குமுள்ள **எல்லா மனிதருக்காகவும்** ஜெபிக்க வேண்டும்.

இரட்சிப்பில் தேவனுடைய பாகத்தையும் மனிதனுடைய பாகத்தையும் மிகத்தெளிவாக இந்த வசனம் எடுத்துரைக்கிறது. இந்த வசனத்தின் முந்தினபகுதி மனிதன் **இரட்சிக்கப்பட** வேண்டும் என்று கூறுகிறது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வினைச்சொல் செயப்பாட்டு வினையாகும்; மனிதன் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள முடியாது, மாறாக அவன் தேவனால் இரட்சிக்கப்பட வேண்டும். இது இரட்சிப்பில் தேவனுடைய பாகமாயிருக்கிறது.

மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு, **சத்தியத்தை அறிகிற அறிவை** அடைய வேண்டும். மனிதர்களுடைய விருப்பத்திற்கு மாறாக தேவன் மனிதர்களை இரட்சிப்பதில்லை. கலகக்கார மக்களால் அவர் விண்ணகத்தை நிரப்ப மாட்டார். "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று சொன்னவரிடத்திற்கு அவன் வரவேண்டும். இதுவே மனிதனுடைய பாகமாகும்.

இவ்வுலகத்து மனிதர்கள் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று இந்த வசனம் போதிக்கிறதில்லை என்பதை இதன் மூலம் தெளிவாக அறிகிறோம். **எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட** வேண்டும் என்று தேவன் **சித்தமுள்ளவராக** இருந்தபோதிலும், எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட மாட்டார்கள். இஸ்ரவேல் மக்கள் பாலைவனத்தில் முப்பத்தெட்டு ஆண்டுகள் அலைந்து திரிய வேண்டுமென்பது தொடக்கத்தில் தேவனுடைய சித்தமாயிருக்கவில்லை. ஆயினும் அவ்வாறுதான் அவர்கள் அலைந்து திரிந்தார்கள். அவர் அதனை அனுமதித்தார், அவர்களுக்காக அவர் திட்டமிட்ட ஆசிர்வாதத்தின் பாதை அதுவன்று.

2:5 இதற்கு முந்தின பகுதியோடு இந்த வசனம் எவ்வாறு தொடர்புடையது என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும், இதுவே கருத்தாக இருக்குமென்று தோன்றுகிறது: **தேவன் ஒருவரே;** ஆகவே, அவரே எல்லா மனிதர்களுக்கும் தேவன், எல்லா மனிதர்களுக்காகவும் அவரிடத்தில் ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். ஒரே

தேவன் என்னும் நிலையில் அவர் எல்லா மனிதர் களும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்பு கிறார். பல தேவர்களில் அவர் ஒருவராயிருந்தால் தம்மைத் தொழுதுகொள்கிற மக்களிடத்தில் மட் டுமே அவர் அக்கறை கொண்டிருப்பார்.

இரண்டாவதாக, **தேவனுக்கும் மனிதருக் கும் மத்தியஸ்தரும் ஒருவரே**. இது இவ்வாறு இருக்கையில், எவனொருவனும் வேறு வழியாக தேவனிடத்திற்கு வரமுடியாது. மத்தியஸ்தர் என்பவர், இருவருக்கு இடையே நின்று இரு வரோடும் தொடர்புகொள்கிற தரகர் அல்லது இடையீட்டாளர் ஆவார். பாவங்களுக்கான மன் னிப்புடன் தேவன் கிறிஸ்துவாகிய மனிதர் மூல மாக, மனிதர்களிடம் வருவதற்கு ஏதுவாயிற்று. அதன் விளைவாக எளிய பாவி எவனும் அவரை அணுக முடியும், எக்காரணம் கொண்டும் அவன் நிராகரிக்கப்பட மாட்டான்.

2:6 மனிதராகிய கிறிஸ்து இயேசுவே மத்தி யஸ்தர் என்று பவுல் இங்கு சுட்டிக்காட்டுகிறார். அவருடைய இறைமையை இது மறுத்துரைக்கிற தில்லை. **தேவனுக்கும் மனிதருக்கும் மத்தி யஸ்தராக** இருக்கும் பொருட்டு, அவர் தேவனாக வும் மனிதராகவும் இருக்க வேண்டும். கர்த்தரா கிய இயேசு நித்திய காலமாக தேவனாக இருக் கிறார். ஆனால் அவர் பெத்லகேம் தொழுவத்தின் முன்னணையில் மனிதராக மாறினார். அவர் மனுக்குலம் அனைத்திற்கும் பிரதிநிதியாகத் திகழ்கிறார். அவன் தேவனாகவும் மனிதராகவும் இருக்கிறார் என்னும் உண்மை **கிறிஸ்து இயேசு** என்னும் பெயரினால் அறியப்படுகிறது. அவர் தேவ னுடைய அபிஷேகம் பெற்றவர் என்பதைக் **கிறிஸ்து** என்னும் பெயர் விவரித்துக் கூறுகிறது. அதாவது அவர் மேசியா ஆவார். அவர் மனுவுரு எடுத்தபோது அவருக்கு **இயேசு** என்னும் பெயர் சூட்டப்பட்டது.

கன்னி மரியாள் அல்லது தேவதூதர்கள் அல்லது பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படும் சிலர் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத் தியஸ்தராகச் செயல்பட முடியும் என்ற பொது வான கருத்திற்கு எதிராக இந்த வசனம் திறம்பட பதிலுரைக்கிறது. மத்தியஸ்தர் ஒருவரே, அவரு டைய பெயர் **கிறிஸ்து இயேசு**.

5 மற்றும் 6 -ஆகிய வசனங்கள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் செய்திகளை ஒட்டுமொத்தக் கருத்துச் சுருக்கத்தைத் தருகின்றன. இஸ்ர வேலுக்கு அளிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டில் காணப்படும் செய்தியின்படி **தேவன் ஒருவரே**. சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டின் செய்தியின்படி **மத்தியஸ்தரும் ஒருவரே**. சிலை களை வணங்கியதன் அடிப்படையில், இஸ்ரவேல் தனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பிலிருந்து தவறி விட்டது, அதுபோலவே சபை என்று தன்னைக் குறித்துச் சொல்லிக்கொள்கிற பெயரளவிலான சபையானது, மரியாள், பரிசுத்தவான்கள், மத குருக்கள் ஆகியோரைப் பல்வேறு மத்தியஸ்தர் களாக அறிமுகப்படுத்தியதன் மூலம் தன்னுடைய பொறுப்பிலிருந்து தவறிவிட்டது.

எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண் டும் என்று தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார் என்னும் உண்மையே இங்கு முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது. அவ்வுண்மை இங்கு **எல்லாரையும் மீட்கும் பொருளாகத்** தம்மைக் கிறிஸ்து இயேசு **ஒப்புக்**கொடுத்தார் என்னும் சொற்களால் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒருவரை விடுதலை செய்யும் பொருட்டு செலுத்தப்படுகிற விலையே **மீட்கும் பொருள்** எனப்படும். இந்த **மீட்கும் பொருள்** எல்லோருக்காகவும் என்று சொல்லப் பட்டிருப்பதைக் கவனியுங்கள். கர்த்தராகிய இயேசு கல்வாரி சிலுவையில் செய்து முடித்த செயல் பாவிகள் **எல்லாரையும்** மீட்கப் போதுமானது என்பதே இதன் பொருளாகும். மனிதர்களுடைய சித்தமும் இதில் இடம் பெற்றிருப்பதால், எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படுவார்கள் என்பது இதன் பொருளன்று.

கிறிஸ்துவின் மரணம் பதிலாள் நிலையில் நடைபெற்ற நிகழ்ச்சி என்று கற்பிக்கும் வசனங் களில் இதுவும் ஒன்று. எல்லோருக்கும் பதிலா ளாக அவர் மரணமடைந்தார். எல்லோரும் அதனை ஏற்றுக்கொள்வார்களா என்பது வேறொரு கேள்வி. ஆனால் கிறிஸ்து நிறைவேற்றிய மீட் பின் செயல், **எல்லாரையும்** மீட்கப்போதுமான விலைமதிப்பு உடையது என்பது மாற்ற முடியாத பேருண்மையாகும்.

இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது. கிறிஸ்து பதிலாளாகச் செய்துமுடித்த செயலைப்பற்றிய சாட்சி அதனு டைய காலத்தில் எடுத்துச் சொல்லப்பட வேண்டி யது என்பதே இதன் பொருளாகும். எல்லா மனிதர் களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று சித்தம் கொண்டிருப்பவரும், எல்லா மனிதரும் இரட்சிக் கப்படுவதற்கான வழியை உண்டுபண்ணினவரு மாகிய தேவனே, நாம் வாழ்கிற இந்தக் காலத்

தில் இரட்சிப்பின் நற்செய்தி எங்கும் செல்ல வேண்டும் என்றும் கட்டளையிட்டிருக்கிறார். மனுக்குலத்தை நன்மையினால் நிரப்ப வேண்டுமென்னும் மிகுந்த வாஞ்சையுடன் தேவன் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்திக்காட்டும்படி இவையாவும் திட்டமிடப்பட்டுள்ளன.

2:7 எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் கொண்டிருக்கும் சித்தத்தை இறுதியாக வெளிப்படுத்திக் காட்டும் வண்ணம், தான் **பிரசங்கியாகவும் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாகவும்** நியமிக்கப்பட்டதாகப் பவுல் கூறுகிறார். இப்பொழுது இருப்பது போலவே, அப்பொழுதும் புறவினமக்களே உலகத்தின் பெரும்பான்மை மக்களாக இருந்தார்கள். யூத இனத்தாரைப் போன்ற ஏதோ ஒரு சிறுபான்மை மக்களுக்காக அப்போஸ்தலன் அனுப்பப்படவில்லை, மாறாக அவர் புறவினத்தாரிடமே அனுப்பப்பட்டார்.

அவர் தன்னைப்பற்றி **பிரசங்கி** என்றும், **அப்போஸ்தலன்** என்றும், **போதகன்** என்றும் கூறுகிறார். நற்செய்தியை அறிவிக்கிறவர் அதாவது அதனைப் பிரகடனம் செய்யும் தூதரே **பிரசங்கி** ஆவார். **அப்போஸ்தலனுடைய** கடமைகள் சற்று விரிவானவை. அவர் வெறுமனே நற்செய்தியைப் பிரசங்கிக்கிறவராக மட்டும் இராமல், சபைகளை நிறுவுகிறார், நடைமுறை ஒழுங்கு நடவடிக்கை ஆகியவை பற்றி உள்ளூர் சபைகளை வழிநடத்துகிறார், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அனுப்பிய ஒருவராக அவர் அதிகாரத்துடன் பேசுகிறார். மக்கள் புரிந்துகொள்ளும்படி தேவனுடைய வார்த்தையை விளக்கித் தருகிறவரே **போதகர்**.

தான் கூறுகிறதைச் சற்று கூடுதலாக வலியுறுத்திக் கூறி, **புறவினத்தாருக்குத்** தான் **போதகராக** நியமிக்கப்பட்டதை உறுதிசெய்யும்படி, அவர், **"நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்"** என்று மேலும் கூறுகிறார். **விசுவாசம்** மற்றும் **சத்தியம்** என்னும் சொற்கள், அப்போஸ்தலன் தான் செய்துவந்த போதக ஊழியத்தை உண்மையோடும் நேர்மையோடும் செய்ததை விவரிக்கிறது எனக் கூறலாம், ஆனாலும் அதனினும் மேலாக அவை அவர் போதித்துவந்த செய்தியையே குறிக்கிறது எனக் கருத இடமுண்டு. விசுவாசத்தையும் சத்தியத்தையும் குறித்த காரியங்களை அவர் புறவினத்தாருக்குக் கற்பித்தார் என்றும் இதனை வேறு சொற்களில் கூறலாம்.

ஆ. ஆண் பெண் இருபாலருக்குமான அறிவுரை (2:8-15)

2:8 பொது இடங்களில் ஏறெடுக்கப்படும் மன்றாட்டைக் குறித்த பொருள்பற்றி இங்கு மீண்டும் பேசப்படுகிறது. இறைமக்களை ஜெபத்தில் நடத்துகிறவர்களை நோக்கி நமது கவனம் இப்பொழுது திசைதிருப்பப்படுகிறது. நான் **விரும்புகிறேன்** என்று பவுல் இங்கு கூறுகையில்,அவர் இந்த விஷயம் குறித்துச் செயல்திறமையும் ஆவிக்குரிய ஏவுதலும் கொண்ட விருப்பம் கொண்டிருந்தார் என்பது புலனாகிறது.

புதிய ஏற்பாட்டில் மூல மொழியிலிருந்து இரண்டு சொற்கள் **புருஷர்கள்** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று பொதுவாக மனிதவர்க்கத்தைக் குறிக்கக்கூடிய சொல்லாகும். மற்றொரு சொல் பெண்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் ஆண்கள் என்னும் பொருளுடைய **புருஷர்கள்** என்னும் சொல்லாகும். இந்த இரண்டாவது சொல்லே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. பொது இடங்களில் ஏறெடுக்கப்படுகிற ஜெபத்தைப் **புருஷர்கள்** முன்னின்று நடத்த வேண்டுமேயொழிய பெண்களல்ல என்று அப்போஸ்தலன் அறிவுறுத்துகிறார். மேலும் இது மூப்பர்களை மட்டும் குறிக்காமல் எல்லா ஆண்களையும் குறிக்கிறது.

எல்லா இடங்களிலேயும் என்னும் சொற்றொடர், எந்தவொரு நேரத்திலும் ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவன் ஜெபம்பண்ணலாம் என்று பொருள்படும். அது எந்த இடம் என்பதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. இங்கு பொது இடங்களில் ஏறெடுக்கப்படுகிற ஜெபத்தைக் குறித்தே பேசப்படுகின்றது, ஆகவே கிறிஸ்தவ ஆண் பெண் இருபாலரும் ஜெபத்திற்காக ஒருமித்துக் கூடியிருக்கும் இடங்களில் பெண்களல்ல ஆண்களே அந்தக் கூட்டத்தை ஜெபத்தில் வழிநடத்த வேண்டும்.

வெளிப்படையாக ஜெபம்பண்ணுகிறவர்கள் பெற்றிருக்க வேண்டிய மூன்று தகுதிகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவது, அவர்கள் தங்களுடைய **பரிசுத்தமான கைகளை** உயர்த்த வேண்டும். ஜெபம் பண்ணுகிற ஒருவருடைய உள்ளார்ந்த வாழ்க்கை முறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற முக்கியத்துவம், அவருடைய சரீரப் பிரகாரமான தோரணைக்கு இங்கு கொடுக்கப்படவில்லை. அவருடைய கைகள் பரிசுத்தமான கைகளாக இருக்க வேண்டும். இங்கு **கைகள்** அந்த மனிதனுடைய முழு வாழ்க்கை முறைக்கும் அடை

யாளங்களாக இருக்கின்றன. இரண்டாவதாக, அவர் **கோபம்** இல்லாதவராக இருக்க வேண்டும். தன்னுடைய மனநிலையை வெளிப்படுத்திக் காட்டும் அளவிற்கு நிலையில்லாமல் இருக்கிறவர், கூடியிருப்பவர்களுடைய பிரதிநிதியாக தேவனோடு பேசுவதற்குத் தகுதியற்றவர் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இறுதியாக அவர் **தர்க்கமற்றவராக** இருக்க வேண்டும். அதாவது, ஏறெடுக்கப்படுகிற மன்றாட்டைக் கேட்கவும் அதற்குப் பதில் தரவும் தேவன் ஆற்றலும் விருப்பமும் உடையவராக இருக்கிறார் என்று அந்த மனிதர் விசுவாசிக்கிறவராக இருக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இங்கு சொல்லப்பட்டிருக்கிற தகுதிகளைச் சுருங்கக் கூறுவோமெனில், அந்த ஆண்மகன் **தன்னில்** பரிசுத்தமும் தூய்மையும் உடையவராகவும், **பிற மனிதர்களிடம்** அன்பும் சமாதானமும் உடையவராகவும் **தேவனிடத்தில்** ஐயத்திற்கு இடமற்றபடி விசுவாசம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

2:9,10 ஆண் பெண் இருபாலரும் கலந்து கொள்கிற ஜெபக்கூட்டங்களை முன்னின்று நடத்துகிற ஆண்கள் பெற்றிருக்க வேண்டிய இன்றியமையாத தனிப்பட்ட தகுதிகளைக் குறித்து விவரித்த அப்போஸ்தலன் இப்பொழுது அத்தகைய கூட்டங்களில் கலந்துகொள்கிற ஸ்திரீகள் எப்படிப்பட்ட பண்புடையவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லத் தொடங்குகிறார். முதலாவதாக, அவர்கள் தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தங்களை அலங்கரித்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகிறார். தகுதியான வஸ்திரம் என்னும் சொற்றொடருக்கு ஜான் கிறிஸ்ஸோஸ்தம் என்பார் கூறியுள்ள விளக்கத்தை இன்னும் கூடுதலாக மேம்பாடு பெறச் செய்வது இயலாத செயல்:

> தகுதியான வஸ்திரம் என்றால் என்ன? தங்களை முழுவதுமாகவும் மரியாதைக்குரிய வகையிலும் மூடிக்கொள்கிறது போல என்று இதனைக் கூறலாம், அது மிதமிஞ்சிய வகையில் அணிகலன்களை அணிந்து கொள்வதல்ல; ஏனென்றால் முதலில் கூறப்பட்டிருப்பது மரியாதைக்குரியது, பிந்தியதோ அப்படிப்பட்டதல்ல. இது என்ன? உங்களுடைய தலை முடியைப் பின்னிச் சிங்காரித்து, பொன் ஆபரணங்களை அணிந்தவர்களாக நீங்கள் தேவனிடத்தில் ஜெபம் பண்ணும்படியாகச் செல்வீர்களா? நீங்கள் நடன அரங்கிற்கு வந்திருக்கிறீர்களா? அல்லது திருமண விழாவிற்கு வந்திருக்கிறீர்களா? அல்லது திருவிழாக் கொண்டாட வந்திருக்கிறீர்களா? அங்கெல்லாம் விலையுயர்ந்த பொருட்கள் அணிவது பொருத்தமானதாக இருக்கும். இங்கு அவற்றில் ஒன்றும் தேவையில்லை. நீங்கள் ஜெபம் பண்ணும்படி வந்திருக்கிறீர்கள். உங்களுடைய பாவங்களுக்காகவும், உங்களுடைய குற்றங்களுக்காகவும் கர்த்தரிடத்தில் மன்னிப்புக் கேட்கும்படியும், அவரிடத்தில் விண்ணப்பண்ணும்படியும், மன்றாடும்படியும் வந்திருக்கிறீர்கள்... உங்கள் மாய்மாலத்தை விட்டொழியுங்கள்![6]

நாணத்தினாலும் (சீரான நடத்தை) என்னும் சொல் அவமானத்தை உண்டாக்கக்கூடிய ஏதொன்றையும் விட்டுவிடுதல் என்று பொருள்படும். தன்னடக்கம், எச்சரிக்கையோடிருத்தல் ஆகிய குணங்களையும் இது உட்கொண்டதாகும். **தெளிந்த புத்தி** (நிதானத்துடன் நடந்து கொள்ளுதல்) என்பது பெண் அணிகிற உடை அளவுக்கு மிஞ்சியதாக இருக்கக் கூடாது என்னும் பொருளைத் தருகிறது. பெண்கள் ஒருபுறம் விலையுயர்ந்ததும் கவர்ச்சிமிக்கதுமான எடுப்பான உடைகளை அணிந்து பிறருடைய கவனத்தை ஈர்க்கக் கூடாது. அவ்வாறான உடைகளை அணிவது, தேவனைத் தொழுதுகொள்ளும்படி வந்திருப்பவர்களுடைய கவனத்தை ஈர்த்து ஆர்வம் மேலிடச் செய்யும். மறுபுறம், ஒரு பெண் அணிகிற ஆடை மங்கிப்போனதும் பழங்காலத்து பாணியாகவும் இருக்குமென்றால், அதுவும் பிறருடைய கவனத்தை ஈர்க்கக் கூடியதாகக் காணப்படும். அதுவும் கூடாது. இரண்டிற்கும் இடைப்பட்ட அளவான முறையில் ஆடையை அணிய வேண்டும் என்பதே திருமறை கற்பிக்கும் பாடமாகும்.

தவிர்க்க வேண்டிய மிதமிஞ்சிய அணிகலன்கள், **முடியைப் பின்னி** அலங்கரித்தல், **பொன், முத்து** ஆகியவற்றாலான ஆபரணங்கள் மற்றும் **விலையேறப்பெற்ற வஸ்திரங்கள்** ஆகியவையே. முடியைப் பின்னுதல் என்று சொல்லும்போது, எளிய முறையில் முடியைப் பின்னுதலைத் தவிர்க்க வேண்டும் என்று பொருள்படாது. அவ்வாறு பின்னுவது தகுதியாயிருக்கும். விலையுயர்ந்ததும் பகட்டானதுமான சிகை அலங்காரமே தவிர்க்கப்பட வேண்டும். நகை அணிதல் மற்றும் விலையுயர்ந்த ஆடைகள் தன்னையே காட்சிப்பொருளாக ஆக்குவதாகக் காணப்படும்.

ஜெபம் பண்ணும் வேளையில் அது பொருத்த மற்றதாக விளங்கும்.

எப்படிப்பட்ட அலங்கரிப்பைப் பெண்கள் கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றி இந்தப் பகுதி விவரிக்கிறது. **தேவபக்தியுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற** பெண்களுக்கு ஏற்ற அலங்காரம் அவர்கள் செய்கிற நற்கிரியை களிலே காணப்படும். அத்தகைய "ஆடைகள்" தேவனோடு ஆன்மீக உறவு கொள்ளுகிறவர் களுடைய கவனத்தைத் திசை திருப்புவதில்லை. மாறாக அவ்வாறு[4] ஆன்மீக உறவுகொள்ளு வதற்கு அது தூண்டுகோலாக விளங்கும். மேலும் அது தவறான வகையில் எரிச்சல் உண்டாக் கவோ, பொறாமை கொள்ளவோ செய்யாது. மாறாக, மற்றவர்களும் அதே வகையில் ஆடை அணியும்படி அவர்களுக்கு அது முன்மாதிரி யாகத் திகழும். மேய்ப்பர்களுக்கான மடல்களில் **நற்கிரியை** செய்தல் மிக முக்கியமான கருத்தாக விளங்குகிறது. மேலும், இந்த மடல்களில் காணப் படும் உறுதியான கோட்பாடுகளுக்கு ஈடுசெய்யும் செயலாக இது அமைந்திருக்கிறது.

2:11 ஆண் பெண் இருபாலரும் கலந்து கொள் கிற பொதுவான சபைக்கூட்டங்களில் பெண்ணா னவள் **எல்லாவற்றிலும் அடக்கமுடையவளா யிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக் கடவள்**. இந்தப் பொருள் குறித்துத் திருமறை கற் பிக்கிற ஏனைய பகுதிகளோடு இக்கருத்து இசைவுடையதாயிருக்கிறது (1 கொரி. 11:3-15; 14:34,35).

2:12 உபதேசம்பண்ண ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை என்று பவுல் கூறுகிறபோது, அவர் தேவனால் ஏவப் பட்டவராகவே பேசுகிறார். சிலர் கூறுகிறபடி, இது பவுலின் தனிப்பட்ட தவறான கருத்தைக் குறிக்கிற தில்லை. சபையில் எல்லோருக்கும் பொதுவான முறையில் உபதேசம்பண்ணுகிற ஊழியம் பெண் களுக்குத் தரப்படவில்லையென்று தேவனே ஆணையிட்டிருக்கிறார். இந்தக் கட்டளைக்கு விதிவிலக்காக, சிறு பிள்ளைகளுக்கும் (2 தீமோ. 3:15), இளம் பெண்களுக்கும் (தீத்து 2:4) கற்பிக் கும்படி அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் கள். பெண்ணானவள் **புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும்** கூடாது. அதாவது அவள் ஓர் ஆண்மகன் மேல் ஆட்சி செலுத்தவும் கூடாது, **அவள் அமைதலாயிருக்க வேண்டும்**, அல்லது பேசாமலிருக்க வேண்டும். இந்த விதியை உள்ளூர் சபைக்கு மட்டுமே பொருத்தமானது என்று நாம் ஓர் எல்லைக்குள் உட்படுத்தக்கூடாது என்பதை இந்த வசனத்தின் இறுதிப்பகுதி தெரிவிக்கிறது என்பதையும் நாம் குறிப்பிட்டே ஆக வேண்டும். ஆண்மகனுக்குத் தலைமைப் பொறுப்பும், பெண் ணுக்குக் கீழ்ப்படிதலுக்குரிய இடமும் கொடுக்கப் பட்டிருப்பது மனுக்குலத்தோடு தேவன் கொண்டி ருக்கிற ஈடுபாட்டின்படியான அடிப்படைக் கோட் பாடாகும். அவள் தாழ்ந்தவள் என்பது இதன் பொருளன்று; நிச்சயமாக அதுவல்ல உண்மை. ஆனால் அவள் ஆண் மகன்மீது அதிகாரஞ் செலுத்துவதோ, அவனை ஆளுகை செய்வதோ தேவனுடைய சித்தத்திற்கு முரண்பட்டது என் பதே இதன் பொருளாகும்.

2:13 இந்தக் கருத்தை மெய்ப்பிக்கும்படி, **ஆதாம்** மற்றும் **ஏவாள்** படைக்கப்பட்ட நிகழ்ச் சியை நோக்கிப் பவுல் முதலாவது செல்லுகிறார். **முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்**. படைப்பின் வரிசை முறையே மிகவும் குறிப்பிடத்தக்கதா யிருந்தது. ஆண் மகனை **முதலாவது** உரு வாக்கியதன் மூலம், அவனே தலைமைப் பொறுப் பைப் பெறவேண்டும் என்றும், அவனே வழிநடத்த வேண்டும் என்றும், அவனே அதிகாரம் செலுத்த வேண்டும் என்றும் தேவன் திட்டமிட்டிருந்தார் என்பது புலனாகிறது. பெண் இரண்டாவது உரு வாக்கப்பட்டாள் என்னும் உண்மை, அவள் தன்னுடைய கணவனுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்னும் பொருளைத் தருகிறது. படைப்பின் வரிசைமுறையைத் தனது வாதத் திற்கு அடிப்படையாகப் பவுல் எடுத்துக்கொண் டதிலிருந்து, இது ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் வழங்கிவரும் பண்பாட்டைச் சார்ந்தது என்னும் எண்ணத்தை அடியோடு அகற்றுகிறார்.

2:14 மனித இனத்திற்குள்ளாகப் பாவம் புகுந்த விதத்தை அவர் தனது வாதத்திற்கு இரண்டாவது நிரூபணமாக எடுத்துக்கொள்கிறார். சர்ப்பமானது நேரடியாக **ஆதாமை** அணுகுவதற்குப் பதிலாக, அது தன்னுடைய வயப்படுத்தும் முயற்சிகளோ டும் பொய்களோடும் ஏவாளிடத்திற்கே முதலில் சென்றது. ஏவாள் தன்னிச்சையாகச் செயல்பட்டி ருக்கக் கூடாது என்பதே தேவனுடைய திட்ட மாகும். அவள் ஆதாமிடம் சென்று எல்லாவற்றை யும் விவரமாகச் சொல்லியிருக்க வேண்டும். அதற் குப் பதிலாக அவள் சாத்தானால் **வஞ்சிக்கப்படு வதற்கு** இடம்கொடுத்து **மீறுதலுக்கு உட் பட்டாள்**.

இதனோடுள்ள தொடர்பில், இன்றைய நாட்களில் கள்ளப்போதகர்கள் பெரும்பாலும் வீட்டில் பெண்கள் தனியாக இருக்கும் நேரம் எது என்று அறிந்து, கணவர்கள் வேலைக்குச் சென்றிருக்கும் தருணங்களிலேயே அவர்களைச் சந்திக்கிறார்கள் என்பது கவனிக்கத் தக்கது.

ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. தன்னுடைய கண்கள் திறந்த நிலையிலேயே அவன் பாவம் செய்தான் என்றே தோன்றுகிறது. தன்னுடைய மனைவி ஏற்கனவே பாவம் செய்துவிட்டதைக் கண்ட ஆதாம், அவளோடு தான் கொண்டுள்ள ஒருமைப்பாட்டைத் தொடர்ந்து காத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அவனும் பாவத்திற்குள் விழுந்தான் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் திருமறை அவ்வாறு கூறுகிறதில்லை. **ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டாள்** என்று மட்டுமே அது கூறுகிறது.

2:15 மேய்ப்பர்களுக்குரிய மடல்களிலேயே மிகவும் கடினமான வசனங்களில் இதுவும் ஒன்று, இதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. **பிள்ளைப்பேறு** என்னும் சரீரப்பிரகாரமான நிகழ்ச்சியில் ஒரு கிறிஸ்தவத் தாய் மரணமடையாமல் **இரட்சிக்கப்படுவாள்** என்று இந்த வசனம் வாக்குரைப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். ஆனால் இது எப்பொழுதும் உண்மையாய் இருந்ததில்லை, ஏனெனில் பக்தி நிறைந்த கிறிஸ்தவப் பெண்டிர் சிலர், இந்த உலகிற்கு உயிருள்ள பிள்ளைகளைப் பெற்றுத் தருகின்ற வேளைகளில் மாண்டு போயிருக்கிறார்கள். **பிள்ளைப்பேறு** (எழுத்தின்படி "அந்தப் பிள்ளைப்பேறு" என்று பொருள்படும்) என்னும் சொல் மேசியாவின் பிறப்பைக் குறிக்கும், ஆகவே, ஸ்திரீயினிடத்திற் பிறந்த ஒருவராலே பெண்கள் இரட்சிக்கப்படுகிறார்கள் என்பதே இதன் பொருள் என்று வேறு சிலர் கருதுகிறார்கள். எனினும் இந்தப் பகுதிக்கு இவ்வாறு பொருள் கூறுவது மனநிறைவு அளிப்பதாக இல்லை, ஏனெனில் ஆண்களும் அவ்வாறுதானே இரட்சிக்கப்படுகிறார்கள். பிள்ளைகளைப் பெற்றெடுப்பதாலே தாய்மை அடைகிற பெண் அதன் காரணமாக நித்திய இரட்சிப்பைப் பெறுவாள் என்பதே இவ்வசனத்தின் பொருள் என்று ஒருவர் கருதுவாரானால் அது அறிவுக்குகந்ததாக இருக்காது. அவ்வாறெனில், கிரியையினால் இரட்சிப்படைய முடியும் என்றாகிவிடும், அதுவும் இரட்சிப்படைவதற்கு இது விநோதமான கிரியையாகக் காணப்படும்.

இந்தப் பகுதிக்கு மிகவும் பொருத்தமான விளக்கமாகக் கீழ்க்காணும் கருத்தை ஆலோசனையாக முன்மொழிகிறோம். முதலாவதாக, இந்தப் பகுதியின் பின்னணியைக் காணும்போது, இங்கு இரட்சிப்பு என்று சொல்லப்பட்டிருப்பது ஆத்தும இரட்சிப்பு அல்ல, மாறாக அது அவள் சபையில் பெற்றிருக்கிற இடத்தையே குறிக்கிறது. இது காறும் பவுல் கூறிய செய்திகளிலிருந்து தேவனுடைய நோக்கங்களிலும் ஆலோசனைகளிலும் பெண்களுக்கு எந்த இடமும் இல்லை என்னும் எண்ணம் சிலருடைய உள்ளங்களில் உண்டாயிருக்கக் கூடும். அவள் எவ்வித மதிப்பும் அற்றவள் என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பாள்; ஆனால் இந்த எண்ணத்தைப் பவுல் இங்கு மறுத்துரைக்கிறார். அவளுக்குச் சபையில் பொதுவான ஊழியம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையாயினும், அவளுக்கு மிகவும் முக்கியமான ஊழியம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. பெண்ணுக்கு வீட்டில் ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தேவன் ஆணை பிறப்பித்துள்ளார். அதிலும் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், அந்த ஊழியமானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கனமும் மகிமையும் உண்டாகும்படியாகத் தங்களுடைய பிள்ளைகளை வளர்ப்பதேயாகும். இன்றைய நாட்களில் கிறிஸ்தவ சபையில் தலைவர்களாகத் திகழ்பவர்களுடைய தாய்மார்களைக் குறித்து எண்ணிப் பாருங்கள்! இந்தப் பெண்கள் நற்செய்தியைப் பிரசங்கம் செய்யும் பொருட்டுப் பொது மேடைகளில் ஒருபோதும் ஏறியதில்லை. ஆனால் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளை தேவனுக்காக வளர்த்ததன் மூலம், அவர்கள் உண்மையாகவே தாங்கள் பெற்ற ஸ்தானத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டவர்களாவார்கள், மேலும் அவர்கள் தேவனைப் பொருத்தமட்டில் கனி நிறைந்தவர்களாவார்கள்.

லில்லே என்பார் எழுதுகிறார்:

> ஒரு பெண்மணி தனக்கே உரித்தான மனைவி மற்றும் தாய் என்னும் நிலையை ஏற்றுக்கொள்வதன் பயனாக, மேலும் அவள் அவ்வாறு தன்னை ஒப்புவித்த செயல் பரிசுத்தமாக்கப்பட்ட கிறிஸ்தவ குணநலனைக் கனியாகக் கொண்டுவருமென்றால், பாவத்தினால் உண்டான விளைவுகளிலிருந்து அவள் இரட்சிக்கப்படுவதோடு, சபையில் செயல்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தகுதியான நிலையைத்

தொடர்ந்து பெற்றிருப்பவளாகவும் விளங்கு வாள்.[7]

இந்த நேரத்தில், "திருமணம் செய்துகொள் ளாத பெண்மணியின் நிலை என்ன?" என்னும் கேள்வி எழக்கூடும். இந்தப் பகுதியில் தேவன் பெண்களைப் பற்றிய பொதுவான விவரங்களைத் தந்திருக்கிறார் என்பதே அக்கேள்விக்கான விடை. கிறிஸ்தவப் பெண்களில் பெரும்பாலோர் திருமணம் செய்து, பிள்ளைகளைப் பெற்றெடுக் கிறார்கள். அதற்கு விதிவிலக்காய் இருப்பவர் களுக்கு, பற்பல பயனுள்ள ஊழியங்கள் ஒப்புவிக் கப்பட்டுள்ளன. ஆயினும் அவர்களுக்குப் பொது இடங்களில் உபதேசம் பண்ணும் ஊழியமோ, ஆண்கள்மேல் ஆட்சி செலுத்தும் அதிகாரமோ கொடுக்கப்படவிலலை.

இந்த வசனத்தில் ஒரு நிபந்தனை கொடுக்கப் பட்டுள்ளதைக் கவனியுங்கள்: **தெளிந்த புத்தி யோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத் திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.** இங்கு கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதி நிச்சயமான முறையில் எவ்வித நிபந்தனையும் அற்றதல்ல. கணவனும் மனைவியும் நிலைமாறாமல் கிறிஸ் தவ சாட்சியைக் காத்து வருவார்கள் என்றால், வீட்டில் கர்த்தரைக் கனப்படுத்தி, கர்த்தருக்குப் பயப்படுகின்ற பயத்திலும் ஆலோசனைகளிலும் பிள்ளைகளை வளர்ப்பார்களெனில் அந்தப் பெண்மணியின் நிலை **இரட்சிக்கப்பட்டிருக்கும்** (காக்கப்பட்டிருக்கும்) என்பதே இங்கு சொல்லப் பட்டிருக்கிற கருத்து. மாறாக, பெற்றோர்கள் எவ்விதக் கவனமுமின்றி உலகப் பிரகாரமான நிலையில் வாழ்ந்து, பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டிய பயிற்சியைப் புறக்கணிப்பார்கள் என்றால், அவர்களுடைய பிள்ளைகள் கர்த்த ருக்கும் சபைக்கும் இழந்துபோனவர்களாகக் காணப்படுவார்கள். அப்படிப்பட்ட நிலையில், தேவன் பெண்களுக்கு நியமித்த உண்மையான மேன்மையை அந்தப் பெண் அடையாமல் போய் விடுவாள்.

பெண்களுடைய ஊழியம் அந்தரங்கமானது, அது வீட்டில் செய்யப்படக் கூடியது என்னும் கார ணத்தினால், வெளியரங்கமாகச் செய்யப்படு கின்ற ஊழியத்தைக் காட்டிலும் அது மிகவும் தாழ் வானது அல்லது முக்கியமற்றது என்று ஒருவரும் எண்ணக்கூடாது. "தொட்டிலை ஆட்டும் கைகளே இந்த உலகத்தை ஆளுகின்றன" என்று உண்மை யாகச் சொல்லப்பட்டுள்ளது. எதிர் காலத்தில், கிறிஸ்துவின் நியாயாசனத்தில், உண்மைத்தன் மையே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இத்தன்மையானது வீட்டிலும், பிரசங்க மேடை யிலும் வெளிப்படுத்திக் காட்டக்கூடிய நிலை யாகும்.

இ. மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் பற்றிய அறிவுரை (3:1–13)

3:1 தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதல் மடலில், உள்ளூர் சபையில் **கண்காணிகள்** செய்கிற வேலையைக் குறித்துச் சொல்லப்பட் டுள்ளவை **உண்மையுள்ள வார்த்தை** என்று அழைக்கப்படும் இரண்டாவது பகுதியாகும். முதிர்ந்த அனுபவமும் உய்த்துணரும் ஆற்றலும் உடைய கிறிஸ்தவ மனிதரே மூப்பர் ஆவர். மேலும் அவர் ஓர் உள்ளூர் சபையில் உள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்து எடுக்கப்படும் தெய்வீக அக்கறையில் உதவிபுரிபவராகவும் விளங்குகிறார். தேவனு டைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவராக இராமல் அவர் ஆவிக்குரிய மாதிரியாக விளங்கி மந்தையை வழிநடத்துகிறார்.

இந்நாட்களில், பல உள்ளூர் சபைகளின்மேல் அதிகாரம் செலுத்துகிற சபை அதிகாரியே "கண் காணி" (பிஷப்) என்று அழைக்கப்படுகிறார். ஆனால் புதிய ஏற்பாட்டில் மாற்றத்திற்கு இடமற்ற படி, ஒரு சபையில் பல கண்காணிகள் இருந்தார் கள் எனக் காணலாம் (அப். 14:23; 20:17; பிலி. 1:1; யாக். 5:14).

பிஷப் என்பவரும் **கண்காணி** என்பவரும் ஒருவரே. இந்த வசனத்தில் **பிஷப்** என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொல் "கண்காணி" என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:28 -இல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (Bishop மற்றும் Overseer என்னும் இரண்டு சொற்களும் தமிழில் கண்காணி என்றே மொழிபெயர்க்கப்பட்டுள் ளன.) பிஷப் அல்லது கண்காணி என்று குறிப்பிடப் பட்டுள்ளவரே மூப்பர் எனப்படுபவரும் ஆவார். அப்போஸ்தலர் 20:17 -இல் மூப்பர்கள் என்று அழைக்கப்பட்டுள்ள அதே மனிதர்கள், அதே அதி காரத்தில் 28 -ஆம் வசனத்தில் கண்காணிகள் என்று அழைக்கப்படுகிறார்கள் (தீத்து 1:5; 1:7 - ஆகிய வசனங்களையும் காண்க). பிரஸ்பைடர்ஸ் (Presbyters) என்பவர்களும் மூப்பர்களே ஆவார் கள். ஆனார் பிரஸ்பைடர்ஸ் என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் இடம் பெறவில்லை. கிரேக்கச் சொல்லாகிய Presbuteros, "மூப்பர்" என்று

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே "பிஷப்", "கண்காணி", "மூப்பர்", "பிரஸ்பைடர்" என்னும் சொற்கள் யாவும் ஒரே மனிதரைக் குறிப் பிடுபவையாகும்.

உண்மையில், "மூப்பர்" (Presbuteros) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் சிலவேளை களில், சபையை வழிநடத்துகிறவர்களில் ஒரு வராக இராத வயது முதிர்ந்த ஒருவரைக் குறிப் பிடவும் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 தீமோ. 5:1 - கிரேக்கு). (தமிழில் முதிர்வயதுள்ளவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.) ஆனால் பெரும்பாலான இடங்களில் "மூப்பர்" என்னும் சொல், ஓர் உள்ளூர் சபையில் இறைமக்களிடையே மேய்ப் பனுக்குரிய அக்கறை செலுத்துகிற ஒரு மனித ரைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உள்ளூர் சபையிலும் கண்காணி கள் அல்லது மூப்பர்கள் இருப்பதாகவே புதிய ஏற்பாடு கருதுகிறது (பிலி. 1:1). ஆயினும், கண் காணிகள் இன்றி ஒரு சபை இயங்காது என்று கூறுவது மிகச்சரியான கூற்றாகாது. கிரேத்தா தீவிலே அண்மையில் உருவான சபைகள் இருந்தன என்பதும், அங்கு அதுவரை மூப்பர்கள் கண்டறியப்படவில்லை என்பதும் தீத்து 1:5 -ஆம் வசனத்திலிருந்து தெளிவாகின்றன.

தூய ஆவியானவர் ஒருவரால் மட்டுமே ஒரு மனிதரை மூப்பராக ஆக்கமுடியும். அப்போஸ் தலர் 20:28 -ஆம் வசனத்தின் வாயிலாக இது தெளிவாகிறது. ஒரு மனிதனின் உள்ளத்தில் இந்த முக்கியமான வேலையை ஏற்றுக்கொள் ளும்படியான பாரத்தைப் பரிசுத்த ஆவியானவர் வைக்கிறார், மேலும் அதைச் செய்வதற்கான ஆற்றலையும் அவரே தருகிறார். ஒரு மனிதரை வாக்கெடுப்பின் மூலமாகவோ, தீட்சை செய்து நியமனம் செய்வதன் மூலமாகவோ அந்த வேலையில் அமர்த்துவது என்பது இயலாத செயல். பரிசுத்த ஆவியாகிய தேவனாலே தங்க ளுக்குள்ளாக யாரெல்லாம் மூப்பர்களாக ஆக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டுணர்வது உள்ளூர் சபையின் பொறுப்பாகும் (1 தெச. 5:12,13). மூப்பர்கள் நியமிக்கப்பட்டதைக் குறித்து தீத்துவுக்கு எழுதப்பட்ட நூலில் நாம் காணவிய லும் என்பது உண்மைதான். ஆனால் மூப்பர் களுக்குரிய தகுதிகளை யாரெல்லாம் பெற்றிருந் தார்கள் என்று கண்டுணர்ந்து அவர்களைத் தனியே பிரித்தெடுப்பது மட்டுமே தீத்துவினுடைய வேலையாயிருந்தது. அந்த நாட்களில், கிறிஸ்த வர்கள் புதிய ஏற்பாட்டு நூலை நாம் இப்பொழுது பெற்றிருப்பதுபோல அச்சிடப்பட்ட நிலையில் பெற்றிருக்கவில்லை. ஆகவே மூப்பர்கள் மிகச் சரியான முறையில் என்னென்ன தகுதிகளை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆகவே, யாரெல் லாம் மூப்பர்களுடைய வேலைகளைச் செய்வ தற்கு தேவ ஆவியானவராலே எழுப்பப்பட்டிருந் தார்கள் என்று கண்டுணருவதற்குத் தேவையான ஆலோசனைகளைத் தீத்துவின் மூலமாகச் சொல்லியனுப்பி, அவர்களைத் தனியே பிரித் தெடுக்கும்படி தீத்துவுக்குக் கட்டளையிட்டார்.

ஓர் உள்ளூர் சபை மூப்பர்களைக் கண்டுணரு வது முற்றிலும் சடங்குகளற்ற செயலாக இருக்க வேண்டும். 1 தீமோத்தேயு 3 மற்றும் தீத்து 1 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ள மூப்பர் களுக்குரிய தகுதிகளைப் பற்றி கிறிஸ்தவர்கள் நன்கு அறிந்துகொண்டிருப்பதால், தங்களுடைய மூப்பர்கள் இன்னார் என்பதை அவர்கள் உள் ளார்ந்த வகையில் உணர்ந்துகொள்வது சபை யில் அவ்வப்போது நடக்கக்கூடிய இயல்பான செயலேயாகும். மறுபுறம், மூப்பர்களைக் கண் டுணர்வது ஒழுங்கு முறைப்படியான நிகழ்ச்சி யாகவும் அமையக்கூடும். யாரெல்லாம் மூப்பர் கள் என்பதை வெளியரங்கமாக அறிந்துகொள் ளும்படி ஓர் உள்ளூர் சபை மக்கள் ஒன்றுகூடிச் செயல்படுவதும் உண்டு. அந்த நேரங்களில், இந் தப் பொருள்பற்றிக் கூறும் திருமறைப் பகுதி களை அவர்கள் விளங்கிக் கொள்ளும்படியாகப் படித்துக் காட்டப்படும். பின்னர் அவ்வூர் சபை விசு வாசிகள் அந்தக் குறிப்பிட்ட நபர்களை மூப்பர்கள் என்று அறிவிப்பார்கள். அதன் பின்னர் சபை முழு வதற்கும் இதைக் குறித்த அறிவிப்புச் செய்யப் படும். இதுவே வழக்கமாக நடைபெறுகிற முறைமை. ஒரு சபையில் தகுதியுள்ள மூப்பர்கள் இல்லை யென்றால், வரும் நாட்களில் அத்தகைய தகுதி வாய்ந்த மனிதர்களைக் கர்த்தர் எழுப்ப வேண் டும் என்று மன்றாடுவதே செய்யத்தகுந்த செய லாகும்.

ஓர் உள்ளூர் சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருக்கவேண்டும் என்று எப்பொழுதும் வேதம் கூறியபோதிலும், எத்தனைபேர் என்று எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை. இந்தப் பொருள்பற்றி பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு இடங்கொடுத்து எத்தனை பேர் பதிற்செயல்புரிகிறார்களோ அதைப் பொருத்தே மூப்பர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும்.

கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். இது பெருமைக்கு உகந்தது என்றும், திருச்சபையில் ஒரு பதவி என்றும், இதில் தவிர்க்கவியலாத பொறுப்புகள் எதுவும் இல்லை என்றும் சிந்திக்கக்கூடிய மனப் பான்மை உண்டாகக் கூடும். உண்மையில் கண் காணி எனப்படுவது இறை மக்களின் மத்தியில் செய்யப்படும் எளிமையான சேவையே ஆகும்; இது ஒரு **வேலை.**

3:2 கண்காணியின் தகுதிகள் எவையென்று 2 முதல் 7 வரையிலான வசனங்களில் சொல்லப் பட்டுள்ளன. இந்த வசனங்களில் முக்கியமான நான்கு முன்தகுதிகள் வலியுறுத்திக் கூறப்பட் டுள்ளன: தனிப்பட்ட குணநலன்கள், வீடுகளில் காணப்படும் சாட்சி, கற்பிக்கும் மனப்பான்மை, ஓரளவு அனுபவம். ஓர் உள்ளூர் சபையில் ஆவிக் குரிய தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துபவர் கள் எத்தகைய தகுதி பெற்றிருக்க வேண்டு மென்று தேவன் நிர்ணயித்தவை இவையே. ஒரு வர் இத்தகைய தகுதிகள் அனைத்தையும் பெற்றிருக்க முடியாது என்று சிலர் இந்நாட்களில் வாதாடுகிறார்கள். ஆயினும் இது உண்மை யன்று. இப்படிப்பட்ட வாதங்கள் புனிதமான திரு மறை வசனங்களின் அதிகாரத்தைக் கொள்ளை யிடுகின்றன. மேலும் இவை தூய ஆவியான வரால் ஒருபோதும் தகுதிப்படுத்தப்படாத மனிதர் கள் கண்காணிகளின் இடத்தை எடுத்துக் கொள்ள அனுமதித்துவிடுகின்றன.

ஆகையால் கண்காணியானவன் குற்றஞ் சாட்டப்படாதவனாக இருக்க வேண்டும். புறக் கணிக்கவியலாத தவறிழைத்ததாக அவருக்கு எதிராகச் குற்றச்சாட்டு எதுவும் நிலைநாட்டப்பட்டி ருக்கக் கூடாது என்பது இதன் பொருளாகும். அவர் பாவமற்ற மனிதர் என்பது இதன் பொரு ளன்று, மாறாக அவர் ஏதாவது ஒரு தவறைச் செய்துவிடுவாரென்றால், அவர் தேவனோடும் யாருக்கு எதிராகக் குற்றமிழைக்கப்பட்டதோ அவ ரோடும் அதனைச் சரிசெய்கிறார். அவரிடத்தில் குறை காண இயலாதவாறு அவர் விளங்க வேண்டும். அவர் களங்கமற்ற நன் மதிப்பைப் பெற்றிருப்பது மட்டுமின்றி அதற்குத் தகுதி வாய்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, அவர் **ஒரே மனைவியை உடைய புருஷனாக இருக்க வேண்டும்.** இந்த நிபந்தனை பல்வேறு வகையாகப் புரிந்துகொள் ளப்படுகிறது. கண்காணி திருமணம் செய்த வனாக இருக்க வேண்டும் என்று சிலர் கருது கிறார்கள். குடும்பங்களில் ஏற்படக்கூடிய பிரச் சினைகளைத் தீர்ப்பதற்குரிய சரியான அனுபவம் திருமணம் செய்துகொள்ளாதவர்களுக்கு இருக் காது என்பதே அவர்களுடைய வாதம். இந்தச் சொற்றொடரின்படி கண்காணியாக இருப்பவர் திருமணம் செய்தவராக இருக்க வேண்டுமென் றால், 4 -ஆவது வசனத்தின்படி, ஒரு மூப்பர் பிள்ளைகளையும் பெற்றெடுத்திருக்க வேண்டும் என்றாகிவிடும்.

கண்காணி ஒரே மனைவியை உடைய புருஷ னாக இருக்க வேண்டும் என்னும் சொற்றொடர், ஒருவேளை கண்காணியின் முதல் மனைவி இறந்து போய்விட்டால் அவர் மீண்டும் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று பொருள்படும் என்று வேறுசிலர் கருதுகிறார்கள். திருமண உறவின் பரிசுத்தத்தின் பிரதிபலிப்பாக வெளிப் படும் மிகக் கண்டிப்பான பொருள்விளக்கமாக இது விளங்குகிறது.[8]

கண்காணி விவாகரத்து செய்தவராக இருக் கக் கூடாது என்பதே இதன் பொருள் என்பது மூன் றாவது விளக்கமாகும். இது முழுமையான விளக்கமாக அமையவில்லை என்ற போதிலும், குறிப்பிடத்தக்க அளவிற்குச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது.

தன்னுடைய திருமண உறவில் கண்காணி உண்மையற்றவர் அல்லது முறைகேடானவர் என் னும் குற்றச்சாட்டிற்கு ஆளாகாதவராயிருக்க வேண்டும் என்பதே இதன் பொருள் என்பது வேறொரு கருத்து. அவருடைய வாழ்வில் ஒழுக் கம் கேள்விக்குறி அற்றதாயிருக்க வேண்டும். இப் பகுதியின் பொருள் எதுவாயிருந்தாலும், இங்கு சொல் லப்பட்டுள்ளது நிச்சயமான உண்மையாகும்.

கண்காணி பல மனைவிகளை உடையவரா யிருக்கக் கூடாது என்பதே இப்பகுதிக்குக் கொடுக் கப்படும் கடைசி விளக்கம். இந்த விளக்கம் நமக்கு விநோதமாகத் தோன்றினாலும், இதில் குறிப்பிடத்தக்க அளவிற்கு சிறப்பு இருக்கிறது. இன்றைய நாட்களில், நற்செய்தி அறிவிப்புச் செய் யப்படும் இடங்களில் பல மனைவிகளையுடைய மனிதன் இரட்சிக்கப்படுவதைக் குறித்து அவ் வப்போது கேள்விப்படுகிறோம். ஒருவேளை ஒரு மனிதன் இரட்சிக்கப்படும்போது நான்கு மனைவி களை உடையவனாக இருக்கலாம். பின்னர் அவன் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றும், உள்ளூர் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டு மென்றும் வேண்டுகிறான். அந்த ஊழியர் செய்ய வேண்டியது என்ன? அந்த மனிதன் மூன்று

மனைவிகளைத் தள்ளிவிட வேண்டும் என்று ஒருவர் கூறுகிறார். ஆனால் இந்த நடவடிக்கை மிகப்பெரிய இடையூறை உண்டுபண்ணிவிடும். எந்த மூன்றுபேரை அவன் தள்ளிவிட வேண்டும் என்பதில் சிக்கல் உண்டாகிறது. அவன் எல்லோரிடத்திலும் அன்புகூர்ந்து, அனைவருக்கும் வீடுவாசல் ஏற்படுத்தியிருக்கிறான். அவன் மூன்று பேரைத் தள்ளிவிட வேண்டுமெனில், அவர்களுடைய வாழ்க்கையை நடத்த வேறு வழியற்றவர்களாகப் போய்விடுவார்கள். ஒருவேளை தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெறும்படி விபசாரத்தில் அவர்கள் ஈடுபடக்கூடும். ஒரு பாவத்தினால் உண்டான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவன் உண்டாக்குகிற வழி, அதைவிட மோசமான பல பாவங்கள் செய்யும்படியான சூழ்நிலையை உண்டாக்குவதாக இருக்காது. கிறிஸ்தவ நற்பணியாளர்கள் பல இடங்களில் இப்படிப்பட்ட மனிதர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து உள்ளூர் சபைகளில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மனிதன் பல மனைவிகளைக் கொண்டிருந்த காலம் வரை சபையில் மூப்பராக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதுவே கிறிஸ்தவ ஊழியர்கள் அந்தப் பிரச்சினைகளுக்குக் கண்ட தீர்வு.

ஜாக்கிரதையுள்ளவன் என்னும் சொல் உண்ணும் உணவையும் பருகும் பானத்தையும் மட்டும் குறித்தது அன்று, மாறாக ஆவிக்குரிய வற்றில் அளவுகடந்த ஏதொரு செயலையும் தவிர்ப்பதும் ஆகும்.

தெளிந்த புத்தியுள்ளவன் என்னும் சொற்றொடர் அற்பத்தனமாகவோ விளையாட்டுத்தனமாகவோ அந்த மனிதர் நடந்துகொள்ள மாட்டார் என்று பொருள்படும். அவர் மிகவும் அக்கறையுடையவராகவும், ஆர்வமுடையவராகவும், உய்த்துணரக்கூடியவராகவும், எச்சரிக்கையோடு செயல்படுகிறவராகவும் இருப்பார். “செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப்போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்” என்பதை அவர் நன்கு உணர்ந்தவராகச் செயல்புரிவார் (பிர. 10:1).

கண்காணி **யோக்கியதையுள்ளவராக** இருக்க வேண்டும். அதாவது அவருடைய பழக்க வழக்கங்களில் ஒழுங்கானவராக அவர் விளங்க வேண்டும்.

அந்நியரை உபசரிக்கிறவர் என்னும் சொற்றொடர், அறிமுகமாகாதவர்களிடத்தில் அவர் அன்புகூருகிறவர் என்று பொருள்படும். இரட்சிக்கப்பட்டவர்கள், இரட்சிக்கப்படாதவர்கள் ஆகிய இரு சாராருக்கும் அவருடைய வீடு திறந்திருக்கும். தன் வீட்டின் கூரையின் கீழ் வருகிற அனைவருக்கும் ஆசிர்வாதமாக விளங்க அவர் நாட்டம் கொண்டிருப்பார்.

கண்காணி **போதக சமர்த்தராய் இருக்க வேண்டும்**. ஆவிக்குரிய பிரச்சினைகள் உள்ள மனிதர்களை இவர் சந்திக்கும்போது, அப்படிப்பட்ட காரியங்களில் தேவனுடைய சித்தம் இன்னதென்று திருமறைப் பகுதிகளிலிருந்து எடுத்து ரைக்கக்கூடிய ஆற்றல் உடையவராயிருக்க வேண்டும். தேவனுடைய மந்தைக்குத் தேவையான உணவை அளிக்கும் திறமை உடையவராகவும் அவர் இருக்க வேண்டும் (1 பேதுரு 5:2). கள்ள உபதேசங்களைக் கொண்டுவருகிறவர்களை எதிர்த்து நின்று அவர்கள் கூறுகிறவை தவறென்று வேதத்தின் அடிப்படையில் மெய்ப்பிக்கக் கூடியவராயிருக்க வேண்டும் (அப். 20:29-31). கண்காணி கற்பிக்கும் திறமை பெற்றிருக்க வேண்டும் என்று இப்பகுதி பொருள்படுவதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. மாறாக, வீடுகள் சந்திப்பு ஊழியத்திலும், சபையிலும் அவர் விசுவாசத்தைக் குறித்த கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துகிறவராகவும், சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவராகவும் இருக்க வேண்டும். மேலும் அவர் அதைச் செய்ய ஆயத்தமுடையவராகவும் ஆர்வமுடையவராகவும் இருக்க வேண்டும்.

3:3 மதுபானப்பிரியன் என்னும் சொற்றொடர் குடிபோதைக்கு அடிமைப்பட்டவர் என்று பொருள்படும். கண்காணி இதுபோன்ற பழக்கத்தில் அதிகமாக ஈடுபட்டு, சச்சரவு பண்ணுகிறவராக இருக்கக் கூடாது, அதாவது கட்டுமீறியபடி கூச்சலிடுகிறவராக இருக்கக் கூடாது.

அடிக்கிறவராக இருக்கக் கூடாது. சரீரப்பிரகாரமாக பிறர்மீது வன்முறையில் ஈடுபடக்கூடாது என்பதே இதன் பொருளாகும். எடுத்துக்காட்டாக அவர் முதலாளியாக இருப்பாரென்றால், தன்னுடைய வேலைக்காரரை ஒருபோதும் அடிக்கக் கூடாது.

இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவருமாயிராமல் என்னும் சொற்கள் சில பழைமைப் பிரதிகளில் இடம்பெறவில்லை. ஆனாலும் இவை பெரும்பான்மைப் பிரதிகளில்[9] இடம்பெற்றுள்ளன. பண ஆசை சபையிலும் உலகிலும் தீய விளைவுகளை உண்டுபண்ணும்.

மூப்பராகச் செயல்படுபவர் **பொறுமையோடு** நடந்துகொள்ள வேண்டும். சபையில் அவர் ஆற்று கிற வேலையில் நீடிய பொறுமையோடு செயல் படவேண்டும். மேலும் அவர் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை உடையவராக இருக்க வேண் டும்.

அவர் சண்டைபண்ணுகிறவராகவோ, சச்சரவு பண்ணுகிறவராகவோ, சிறு விஷயங்களைக் குறித்து வாதிடுபவராகவோ இருக்கக் கூடாது. அவர் தனது சொந்த உரிமைகளை விடாப்பிடி யாக வற்புறுத்துகிறவராக இராமல், நடுநிலை மனப்பாங்கோடும், இசைவிணக்கத்தோடும் நடந்துகொள்ள வேண்டும்.

கண்காணி **பண ஆசை** இல்லாதவராக இருக்க வேண்டும். இங்கு "ஆசைப்படுபவர்" என்னும் சொல்லில் அதிக அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது. அவர் இறைமக்களுடைய ஆவிக் குரிய வாழ்க்கையில் கருத்துள்ளவராகவும், பொருட்செல்வத்தின்மேல் விருப்பங்கொண்டு அவருடைய கவனம் திசைதிருப்பப்படாதவராக வும் இருக்கவேண்டும்.

3:4 ஒருவர் கண்காணி என்று கண்டுணரு வதற்குத் தக்கபடி, அவர் **தன் சொந்தக் குடும் பத்தை நன்றாய் ஆளுகை செய்கிறவரும், தன் பிள்ளைகளை நல்லொழுக்கமுள்ளவர்களா கத் தனக்குக் கீழ்ப்படியப்பண்ணுகிறவருமா யிருக்க வேண்டும்.** அந்த மனிதரின் பிள்ளை கள் அவருடைய வீட்டில் வசிக்கும்வரையே இந்த விதி பொருத்தமுடையதாக விளங்கும். அவர்கள் வீட்டைவிட்டு வெளியே சென்று, தத்தம் சொந்தக் குடும்பங்களை நடத்தத் தொடங்கிய பிறகு, அவர்கள் கீழ்ப்படியும்பொருட்டு அதிகாரத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்பு இவருக்கு இருக் காது. ஒருவர் **தன் சொந்தக் குடும்பத்தை நன் றாய் நடத்துகிறவராக** இருப்பாரென்றால், தேவை யற்ற முறையில் கண்டிப்பாகவோ, நீதியற்ற முறையில் தாட்சண்யம் காட்டுகிறவராகவோ இருக்கமாட்டார்.

3:5 இங்கு காணப்படும் வாதம் மிகத்தெளி வாக இருக்கிறது. **ஒருவர் தன் சொந்தக் குடும் பத்தை நன்றாய் நடத்தத்** தகுதியுடையவர் என்பதைக் காட்டமுடியவில்லையென்றால், எவ்வாறு அவரால் **தேவனுடைய சபையை விசா ரிக்க முடியும்** என்று எதிர்பார்க்கலாம்? அவரு டைய சொந்தக் குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும். அவர்கள் யாவரும் அவருடைய உறவினர்கள். மேலும் அவர்களில் பெரும்பாலோர் அவரைக் காட்டிலும் வயதில் சிறியவர்களாகவே இருப்பார் கள். இதற்கு மாறாக சபையில் அங்கங்களாக இருப்போரின் எண்ணிக்கை கூடுதலாகத்தான் இருக்கும், இவ்வாறு எண்ணிக்கை அதிகரிக்கும் போது அவர்களுடைய மனநிலைகளும் அதற் கேற்றபடி பல்வேறுபட்டதாகத்தான் இருக்கும். ஒரு சிறிய எல்லைக்குள் தன்னுடைய ஆளுகை யைத் தகுதியான முறையில் செலுத்தத் தவறு கிற மனிதர், பெரிய கூட்டத்தை நடத்தத் தகுதி யற்றவராகத்தான் இருப்பார் என்பது நிச்சயம்.

ஐந்தாவது வசனம் மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது மூப்பர்களுடைய வேலை என்ன வென்பதை வரையறுத்துக் கூறுகிறது. **தேவனு டைய சபையை விசாரிப்பதே** அந்த வேலை. இங்கு தேவனுடைய சபையை "ஆளுகை செய் வது" என்று குறிப்பிடப்படவில்லை. மூப்பர் கொடுங்கோல் புரிகிற மன்னர் அல்லர், அவர் இரக்கம்பாராட்டுகிற அரசரும் அல்லர். மாறாக, அவர் மந்தையை வழிநடத்துகிற மேய்ப்பனைப் போல இறைமக்களை வழிநடத்துகிறவராக இருக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டில் "விசாரித்துக்கொள்" என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு பகுதி நல்ல சமாரியன் கதையேயாகும் (லூக்கா 10:34). கள்வரிடத்தில் அகப்பட்ட மனிதனுக்கு நல்ல சமாரியன் எவ்வித இரக்கமும் பரிவும் காட்டி னாரோ, அதே விதமாக இறைமக்களிடம் அக்கறை செலுத்துகிறவராக மூப்பர் விளங்க வேண்டும்.

3:6 அவர் **நூதன சீடனாயிருக்கக் கூடாது.** கிறிஸ்தவத்தை அண்மையில் தழுவிய மனிதர் அல்லது விசுவாசத்தில் இளைஞனாக இருக்கக் கூடிய ஒருவர் கண்காணியாகச் செயல்படத் தகுதியற்றவராவார். விசுவாசத்தில் அனுபவமும் உய்த்துணரும் ஆற்றலும் உள்ள மனிதர்களே இந்த வேலைக்குத் தேவை. நூதன சீடன் **இறுமாப்பு அடைந்து**, அதன் காரணமாகப் **பிசாசு அடைந்த ஆக்கினையிலே** விழக்கூடிய ஆபத்து ஏற்படலாம். **பிசாசு அடைந்த ஆக்கினை** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, மனிதன்மீது பிசாசு கொண்டுவருகிற தீர்ப்பு அல்ல; மாறாக தனது பெருமையினால் பிசாசு அடைந்த தீர்ப்பையே இது குறிக்கிறது. தன்னுடைய தகுதிக்கு அப்பாற் பட்ட உயர்ந்த பதவியை அடைய அவன் முயன் றான், அதன் விளைவாக அவன் கீழே தள்ளப் பட்டான்.

3:7 கண்காணி தான் வசிக்கின்ற சமுதாயத் தில் **நற்சாட்சி பெற்றவராக** இருக்க வேண்டும்.

புறம்பானவர்கள் என்னும் சொல் இரட்சிக்கப் படாத அயலகத்தாரைக் குறிக்கிறது. இத்தகைய **நற்சாட்சி** பெற்றிராத மனிதன், மனிதர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டு, **பிசாசின் கண்ணி யில்** விழக்கூடும். விசுவாசிகள் மற்றும் அவி சுவாசிகள் ஆகிய இரு சாராரிடத்திலிருந்தும் குற் றச்சாட்டு ஒரேவிதமாய் எழக்கூடும். தாங்கள் அறிக்கைசெய்கிற விசுவாசத்திற்கு ஏற்றவிதமாக வாழ்க்கை நடத்தாத மனிதர்களுக்குப் பிசாசு விரிக்கும் வலையே இங்கு **பிசாசின் கண்ணி** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுடைய வலை யில் மனிதர்கள் சிக்கிக் கொள்வார்களானால், அவன் அவர்களை ஏளனம் செய்து, இகழ்ந்து, அவமதித்து, விடாமல் பிடித்துக்கொள்வான்.

3:8 கண்காணிகளைப் பற்றிப் பேசிக்கொண்டி ருந்த அப்போஸ்தலன், இப்பொழுது **உதவிக் காரரைக்** குறித்துப் பேசத்தொடங்குகிறார். புதிய ஏற்பாட்டில், உதவிக்காரர் என்னும் சொல் பணி புரிகிறவர் என்னும் பொருளையே தருகிறது. ஓர் உள்ளூர் சபையின் உலகியல் சார்ந்த தேவை களில் அக்கறை செலுத்துபவரே உதவிக்காரர் என்று பொதுவாக எண்ணப்படுகிறது. ஆனால் கண்காணிகளோ அதனுடைய ஆவிக்குரிய தேவைகளைக் குறித்து அக்கறை செலுத்துபவர் கள் ஆவார்கள். உதவிக்காரரின் இத்தகைய அலுவல் குறித்த எண்ணம் பெரும்பாலும் அப் போஸ்தலர் 6:1-5 ஆகிய வசனங்களை அடிப் படையாகக் கொண்டே அமைந்துள்ளது. அங்கே சபையில் இருந்த விதவைகளுக்கு ஒவ்வொரு நாளும் பகிர்ந்து கொடுக்கப்பட்டவற்றைக் குறித்து அக்கறை செலுத்தும்படி சிலர் நியமிக்கப்பட்டார் கள். உண்மையில், "உதவிக்காரர்" என்னும் பெயர்ச்சொல் அப்பகுதியில் பயன்படுத்தப்பட வில்லை. ஆனால் அதனுடைய வினைச்சொல் அங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது: "நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணைசெய் வது (எழுத்தின்படி உதவிக்காரர் வேலையைச் செய்வது) தகுதியல்ல" (வசனம் 2).

உதவிக்காரரின் தகுதிகள், கண்காணி களின் தகுதிகளுக்கு இணையாகவே இருக்கின் றன. ஆயினும் அந்த அளவிற்குக் கண்டிப்பு இங் கில்லை. உதவிக்காரர் போதக சமர்த்தனாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படவில்லை. இது குறிப்பிடத் தக்க வேறுபாடாக இருக்கிறது.

உதவிக்காரர் நல்லொழுக்கமுள்ளவர் களாக இருக்கவேண்டும். அதாவது, அவர்கள் மரியாதைக்குரியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் **இருநாக்குள்ளவர்களாக** இருக்கக் கூடாது. அதாவது, அவர்கள் வெவ்வேறு நேரங் களில், வெவ்வேறு நபர்களிடம் முரண்பாடான விவரங்களை அளிக்கக் கூடாது. அவர்கள் எப் பொழுதும் ஒரே நிலையில் இருக்க வேண்டும்.

அவர்கள் **மதுபானப்பிரியராய்** இருக்கக் கூடாது. மருத்துவத் தேவையை முன்னிட்டுத் திராட்சைப் பிழிவை அருந்துவதைப் புதிய ஏற் பாடு தடைசெய்யவில்லை. சில வேளைகளில் நீர் மாசுபட்டதாக இருக்கும். அங்கெல்லாம் சில வகை மதுபானங்கள் நீருக்கு மாற்றாகப் பயன் படுத்தப்படுகின்றன. மதுபானம் மிதமான அளவு பயன்படுத்தப்படுவது அனுமதிக்கப்பட்டிருந் தாலும், இதன் காரணமாகக் கிறிஸ்தவச் சாட்சி யில் ஏற்படக் கூடிய பாதிப்பைக் குறித்து விசுவாசி கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சில நாடுகளில் மதுபானம் அருந்துவதனால் கிறிஸ்தவர்களது சாட்சி எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை யென்றாலும், பிறநாடுகளில் அவிசுவாசி அதைக் கண்டு இடறிவிழ ஏதுவாகும். இவ்வாறாக, மது பானத்தைப் பயன்படுத்துவது சட்டப்படி சரியான தாக இருந்தபோதிலும், அச்செயல் நன்மை பயக்கிற செயலன்று.

உதவிக்காரர்கள் **இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாக இருக்கக்கூடாது.** ஏற் கனவே கூறியதுபோல, உள்ளூர் சபையின் நிதி பரிபாலனம் உதவிக்காரருடைய அலுவல்களில் ஒன்று. எனவே உதவிக்காரர் பண ஆசை உள்ள வராக இருந்தால் இந்த அலுவல் அவருக்குப் பிரத்தியேகமான முறையில் சோதனையை ஏற் படுத்தக் கூடும். அவர் தனக்குச் சாதகமாகச் செயல்படும்படி சோதிக்கப்படக் கூடும். வெறும் பணத்திற்காகக் கர்த்தரைக் காட்டிக்கொடுத்த பொருளாளர்களில் யூதாஸ் கடைசி மனிதனல்ல!

3:9 உதவிக்காரர்கள், **விசுவாசத்தின் இரக சியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.** அவர்கள் கோட்பாடுகளிலும் சொந்த வாழ்க்கை யிலும் வழுவற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதே இதன் பொருள். அவர்கள் சத்தியத்தை அறிந்தவர்களாக இருப்பது மட்டுமின்றி அதன்படி வாழ்ந்துகாட்டுகிறவர்களாகவும் இருக்கவேண் டும். **விசுவாசத்தின் இரகசியம்** என்பது கிறிஸ் தவ **விசுவாசத்தின்** வருணனையாகும். கிறிஸ்த வத்தின் பல்வேறு கோட்பாடுகள் பழைய ஏற்பாட் டுக் காலத்தில் இரகசியமாகவே இருந்தன. அவையாவும் புதிய ஏற்பாட்டுக் கால அப்போஸ்

தலர்களாலும் தீர்க்கதரிசிகளாலும் வெளிப்படுத் தப்பட்டன.

3:10 உதவிக்காரர்கள், மூப்பர்களைப் போலவே **முன்னதாகச் சோதிக்கப்பட வேண் டும்**. அவர்கள் சிறிது காலம் கவனிக்கப்பட வேண் டும், மேலும் சில சிறிய பொறுப்புகளை உள்ளூர் சபை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். அவ்வாறு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை அவர்கள் செவ்வனே செயல் படுத்தி, நம்பிக்கைக்கு உரியவர்கள் என்றும் உண்மையோடு நடந்துகொள்கிறார்கள் என்றும் மெய்ப்பிப்பார்கள் எனில், அவர்களுக்குக் கூடுத லான பொறுப்புகளை அளிக்கலாம். பின்னர் அவர் கள் **உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம்,** அல்லது "அவர்கள் பணிவிடை செய்யலாம்." கண்காணிகளைப் போலவே இவர்களும் கர்த்த ருக்கும் அவருடைய மக்களுக்கும் பணிவிடை செய்கிற வேலையே இங்கு வலியுறுத்தப்படு கிறது. மாறாக, இது சமயப் பதவியாகக் குறிப் பிடப்படவில்லை.

ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் **குற்றஞ்சாட்டப்படாத வராகக்** காணப்படுவாரானால், அவர் உதவிக் காரராகச் செயல்பட அனுமதிக்கப்படலாம். மேலே சொல்லப்பட்டுள்ள தகுதிகளில் **குற்றஞ் சாட்டப்படாதவர்** என்பதையே சிறப்பாக இச் சொல் குறிப்பிடுகிறது.

சில குறிப்பிட்ட நபர்கள் ஒரு சபையில் உதவிக் காரராக அறியப்பட்டிருப்பார்கள் என்பதை இத் தருணத்தில் குறிப்பிடுவது நல்லது. அவர்களில் ஒருவர் நிச்சயமாகப் பொருளாளராகவும், ஒருவர் கடிதத் தொடர்பு செய்கிற செயலாளராகவும், ஒரு வர் ஞாயிறு வேதபாடசாலைத் தலைவராகவும், சபையின் வாயில் வரவேற்பாளராகவும் இருக்க வேண்டும்.

3:11 இந்த வசனம் உதவிக்காரர்களின் மனைவிகளைக் குறிக்கிறது என்பது தெளிவு. அல்லது மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் ஆகியோருடைய மனைவிகளை இது குறிப்பிடக் கூடும். ஒரு சபையில் எவர்களுக்கெல்லாம் பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ, அவர்களுடைய மனைவிகள் தங்களுடைய கணவர்கள் செய்கிற முக்கியமான அலுவல் களில் உதவிசெய்வதில் கிறிஸ்தவ நன்னடத்தை யையும் நேர்மையையும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

இங்கு "மனைவிகள்" என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ள சொல் ஸ்திரீகள் என்றும் மொழி பெயர்க்கப்படக் கூடும் (தமிழில் ஸ்திரீகள் என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இம்மொழி பெயர்ப்பு பெண் உதவிக்காரிகள் ஒரு சபையில் இருக்க லாம் என்னும் கூடுதலான விளக்கத்தை அனு மதிக்கிறது. தொடக்க காலச் சபையில் அப்படிப் பட்ட பெண்கள் இருந்தார்கள் (எ.கா. ரோமர் 16:1, அங்கு பெபேயாள் கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரி என்று அழைக்கப்பட்டுள்ளாள்).[10] எப்படிப்பட்ட பணிவிடைகளைப் பெண்கள் சபை களில் செய்தார்கள் என்பதைப் பற்றிய குறிப்பை ரோமர் 16:2 -இல் காணவியலும்; அங்கு பவுல் பெபேயாளைக் குறித்து, "அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தாள்" என்று கூறு கிறார்.

ஒருவர் எந்த விளக்கம் சரியானது என்று ஒப் புக்கொண்டாலும், இந்தப் பெண்கள் **நல்லொ ழுக்கம் உள்ளவர்களாகவும்,** மரியாதையுடன் நடந்துகொள்கிறவர்களாகவும், தெளிந்த புத்தி உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். அவர் கள் அவதூறு பண்ணாதவர்களாக இருக்க வேண்டும். அதாவது, அவர்கள் பிறரைப் பற்றி புறம்பேசுகிறவர்களாகவோ, அவர்களுடைய மரி யாதையைப் பாதிக்கக்கூடிய தவறானதும் கெட்ட நோக்கத்துடன் கூடிய செய்தியைக் கூறுகிறவர் களாகவோ இருக்கக்கூடாது. அவர்கள் **தெளிந்த புத்தியுள்ளவர்களாக** அதாவது, தங்களைக் கட்டுப்படுத்தி, உணர்ச்சிகளை அடக்கிக்கொள் ளக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இறுதியாக, அவர்கள் **எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களாக** இருக்க வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்தில் உண்மையோடு இருப் பது என்பது மட்டும் இதன் பொருளன்று; நம்பக மானவர்களாகவும் கடமை தவறாதவர்களாக வும், அந்தரங்கமான செய்திகளைக் காத்துக் கொள்கிறவர்களாகவும் அவர்கள் இருக்க வேண் டும். மற்றவர்களுடைய தனிப்பட்ட விசயங்களை யும், குடும்ப இரகசியங்களையும் அவர்கள் காத்துக்கொள்ள வேண்டும்.

3:12 மீண்டும் **உதவிக்காரர்களைக்** குறித்து அப்போஸ்தலன் பேசத்தொடங்குகிறார். முதலா வதாக அவர்கள் **ஒரே மனைவியையுடைய புருஷராக** இருக்கவேண்டுமென்று அவர் குறிப் பிடுகிறார். இந்த அதிகாரத்தின் 2 -ஆவது வசனத் திற்குரிய விளக்கத்தில் இதே சொற்றொடருக் குரிய பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்

ளன. தங்களுடைய இல்லற வாழ்க்கையில் உதவிக்காரர்களும், மூப்பர்களைப் போலவே, இடித்துரைக்கப்படுவதற்கு அப்பாற்பட்டவர்கள் என்று சொல்லப்படக் கூடியவர்களாக இருந்தால் அதுவே போதுமானது.

இவர்களும் **தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்து கிறவர்களாக இருக்க வேண்டும்**. இதைச் செய்யத் தவறுகிறவர்கள் தங்களுடைய கிறிஸ்தவ நடத்தையில் தோற்றுப்போனவர்கள் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. மனிதர்கள் தங்களுடைய விருப்பம்போல் ஆளுகிறவர்களாகவோ இறுமாப்புடையவர்களாகவோ இருக்க வேண்டும் என்பது இதன் பொருளன்று. மாறாக இவர்களுடைய பிள்ளைகள் கீழ்ப்படியக் கூடியவர்களாகவும், சத்தியத்திற்கு உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

3:13 உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள் என்னும் வசனத்தை ஸ்தேவான் மற்றும் பிலிப்பு ஆகியோர் தங்களுடைய எடுத்துக்காட்டுகளின் வாயிலாக நன்கு தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அப்போஸ்தலர் 6:5 -இல் உதவிக்காரர்களாக நியமிக்கப்பட்ட எழுவரில் இவ்விருவரது பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சபையில் இருந்த விதவைகளுக்குத் தேவையான பணத்தைப் பகிர்ந்துகொடுக்கும் பணியைச் செய்யும்படி அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பணியில் இவ்விருவரும் உண்மையுள்ளவர்களாக நடந்து கொண்ட காரணத்தினால், தேவ ஆவியானவர் இவர்களைப் பெரிதான ஊழியங்களைச் செய்யும்படி உயர்த்தினார். அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலைத் தொடர்ந்து படிக்கும்போது, பிலிப்பு சுவிசேஷகனாகவும் ஸ்தேவான் போதகராகவும் திருப்பணியாற்றியதைக் காணமுடியும். **உதவிக்காரருடைய ஊழியத்தை இவர்கள் நன்றாய்ச் செய்ததால்,** இவர்கள் உள்ளூர் சபையின் பார்வையில் நல்ல நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள். ஒருவர் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையை, அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும், திறம்பட செய்துமுடிப்பாரென்றால், அவர் நம்பத் தகுந்தவர் என்றும், உண்மையாக நடந்துகொள்பவர் என்றும் மிகவிரைவில் நன்மதிப்பைப் பெறுவார்.

மேலும், பிலிப்புவும் ஸ்தேவானும் **கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தைப்** பெற்றார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சி கூறுவதிலும், போதிப்பலும் ஜெபிப்பதிலும் மிகப்பெரிய அளவில் உரிமை பெற்றார்கள். இரத்த சாட்சியாகக் கொலை செய்யப்படுவதற்குமுன் குறிப்பிடத்தக்க வகையில் ஸ்தேவான் ஆற்றிய உரையில் இவ்வுண்மை நிச்சயமாய் விளங்கியது.

ஈ. சபையில் காணப்படவேண்டிய நடத்தையைப் பற்றிய அறிவுரை (3:14–16)

3:14,15 மிக விரைவாகத் தீமோத்தேயுவைச் சந்திக்கும் நம்பிக்கையோடு அப்போஸ்தலன் மேலே கூறப்பட்டுள்ள வசனங்களை எழுதினார். **இவைகளை** என்னும் சொல் மேலே எழுதப்பட்டுள்ள வசனங்களை மட்டுமின்றி பின்வரும் வசனங்களையும் சேர்த்தே குறிப்பிடுகிறது.

தாமதம் ஏற்படக்கூடும் என்று பவுல் உணர்ந்தார், அல்லது அவரால் எபேசு பட்டணத்திற்குச் செல்ல முடியாமலும் போகலாம். உண்மையில், அவர் எபேசுவுக்குச் சென்று தீமோத்தேயுவுடன் ஒன்றுசேர முடிந்ததா என்பது தெரியவில்லை. ஆகவே அவர் அங்கு செல்லுவதற்கு வெகு காலம் ஆகுமென்றால், **தேவனுடைய வீட்டிலே** விசுவாசிகள் **நடக்க வேண்டிய வகையைத்** தீமோத்தேயு அறியவேண்டுமென்று விரும்பினார்.

இதற்கு முந்தைய பகுதியில், கண்காணிகள், உதவிக்காரர்கள் மற்றும் அவர்களுடைய மனைவிகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று அவர் விவரித்துக் கூறியிருக்கிறார். இப்பொழுதோ, **தேவனுடைய வீட்டில்** பொதுவாகக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு நடக்க வேண்டுமென்று விவரிக்கிறார்.

தேவனுடைய வீடு, இங்கு **ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது** என்று வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் ஆசரிப்புக் கூடாரத்திலும் ஆலயத்திலும் வாசமாயிருந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அவர் சபையில் குடியிருக்கிறார். அது **ஜீவனுள்ள தேவனுடைய சபை** என்று சொல்லப்பட்டுள்ளது. உயிரற்ற சிலைக்கு இருக்கக்கூடிய கோவில்களுக்கு இது எதிர்மாறாக இருக்கிறது.

மேலும் சபையானது **சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது** என்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. தூண் ஒரு கட்டடத்தைத் தாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது மட்டுமின்றி, வணிகப் பெருவீதிகளில் நிறுவப்பட்டு அறிவிப்புகள் அங்கு தொங்கவிடப்பட்டன. இவ்வாறாக அது பொது அறிவிப்பு இடமாக விளங்கியது. தேவன் தம்முடைய **சத்தியத்தை** அறிவித்து, காட்சிப்பொருளாக வெளிப்படுத்துவதற்கென அவர் இவ்வுலகில் தெரிந்துகொண்ட அமைப்பு சபையேயாகும். மேலும் அது **சத்தியத்துக்கு ஆதாரமுமாயிருக்கிறது.** இங்கே **ஆதாரம்** என்னும் சொல் ஒரு கட்டடத்தின் அடித்தளம் அல்லது தாங்கும் கட்டமைப்பு என்று பொருள்படும். தேவனுடைய சத்தியத்தை ஆதரித்துப் பேசுவதும், ஆதரவு கொடுப்பதுமான பணி சபைக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்பதை இது படவுருவில் காட்டுகிறது.

3:16 இந்த வசனம் மிகவும் கடினமானது. முன்னர் கூறப்பட்டுள்ள செய்தியோடு இது எவ்வகையில் தொடர்புடையதாயிருக்கிறது என்பதை அறிவது முதலாவது இடர்ப்பாடு ஆகும். இங்கு நாம் சத்தியத்தின் பொருட்சுருக்கத்தைப் பெற்றிருக்கிறோம், அதனுடைய தூணும் ஆதாரமுமாக சபை விளங்குகிறது என்று அதற்கொரு விளக்கம் அளிக்கப்படுகிறது (வச. 15). தேவ பக்தியின் எடுத்துக்காட்டையும் அதற்குரிய ஆற்றலையும் இவ்வசனம் விளக்கிக் கூறுகிறது என்றும், அதுவே தேவனுடைய வீட்டில் உத்தமமாக நடப்பதற்குரிய முக்கிய அங்கமாக விளங்குகிறது என்று பவுல் இங்கு வலியறுத்திக் கூறுகிறார் என்றும் இதற்கு வேறொரு விளக்கமும் அளிக்கப்படுகிறது. திருவாளர் J. N. டார்பி கூறியதாவது:

> இப்பகுதியானது தேவ தலைமையின் இரகசியம் என்றோ, கிறிஸ்துவின் ஆளுமையைப் பற்றிய இரகசியம் என்றோ அவ்வப்போது மேற்கோள் காட்டப்படுகிறது. ஆனால் இது தேவ பக்தியின் இரகசியமாகும். அல்லது மெய்யான தேவபக்தி எவ்வாறு உருவாகிறது என்பதன் இரகசியமாக இது விளங்குகிறது – மனிதனுக்குள்ளாக இருக்கும் பக்தி என்று அழைக்கப்படுகிற எல்லாவற்றினாலும் தெய்வீக நீரூற்று உருவாகிறது... கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மானிடப் பிறப்பு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை பற்றிய அறிவிலிருந்தே தேவபக்தி நீரூற்றெனப் பெருக்கெடுக்கிறது... இவ்விதமாகவே தேவன் அறியப்படுகிறார்; இதில் நிலைத்திருப்பதால் தேவபக்தி பெருக்கெடுத்து ஓடுகிறது.[11]

தேவபக்திக்குரிய இரகசியமானது மகா மேன்மையானது என்று பவுல் கூறுகிறபோது, அது புரியாத புதிர் என்னும் பொருளில் கூறவில்லை. கர்த்தராகிய இயேசுவின் ஆளுமையும் அவரது செயலும் மிகவும் அற்புதமானதும் வியக்கத்தக்கதுமான சத்தியம் என்பது முன்னர் அறியப்படாதிருந்ததே இதன் பொருளாகும்.

தேவன்[12] **மாம்சத்திலே வெளிப்பட்டார்** என்னும் சொற்றொடர் கர்த்தராகிய இயேசுவைக் குறிப்பிடுகிறது, அதிலும் குறிப்பாக அவருடைய மானிடப்பிறப்பையே சுட்டிக்காட்டுகிறது. பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தின் முன்னணையிலே இரட்சகர் ஒரு குழந்தையாகப் பிறந்தபோதே மெய்யான தேவபக்தி முதன்முறையாக மாம்சத்திலே வெளிப்பட்டது.

ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார் என்பது "அவர் தமது மனித ஆவியிலே நீதிமானாக்கப்பட்டார்" என்னும் பொருளிலா சொல்லப்பட்டுள்ளது? அல்லது "அவர் பரிசுத்த ஆவியினாலே நீதிமானாக்கப்பட்டார் என்பதா இதன் பொருள்? இரண்டாவது சொல்லப்பட்டிருப்பதே இதன் பொருள் என்று நாம் அறிகிறோம். ஞானஸ்நானத்தின்போது (மத். 3:15-17), மறுரூப மடைந்த போது (மத். 17:5), உயிர்த்தெழுந்த போது (ரோமர் 1:3,4) மற்றும் விண்ணகம் ஏகிய போது (யோவான் 16:10) தேவனுடைய பரிசுத்த ஆவியானவராலே அவர் மெய்ப்பிக்கப்பட்டார்.

கர்த்தராகிய இயேசுவின் பிறப்பின்போது, அவர் சோதிக்கப்பட்டபோது, அவர் கெத்செமனேயில் துயருற்ற போது, உயிர்த்தெழுந்தபோது மற்றும் விண்ணகம் ஏகியபோது **தேவதூதர்களால் காணப்பட்டார்.**

பெந்தகொஸ்தே நாள் முதல் அவர் **புறவினத்தாரிடையே பிரசங்கிக்கப்பட்டார்.** அவரைப் பற்றிய அறிவிப்பு யூத மக்களிடத்தில் மட்டுமின்றி, பூமியின் தொலைதூர மூலைமுடுக்குகளையெல்லாம் சென்றடைந்தது.

பெரும்பாலும் ஒவ்வொரு இனத்திலிருந்தும், ஒவ்வொரு நாட்டிலிருந்தும் சிலர் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்தார்கள் என்னும் உண்மையே **உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்** என்று விவரிக்கப்பட்டுள்ளது. "உலகத்தால் அவர் விசுவாசிக்கப்பட்டார்" என்று இங்கு சொல்

லப்படவில்லை. உலகமெங்கும் நற்செய்தி அறிவிப்பு கொடுக்கப்பட்ட போதிலும், சிறிய அளவிலேயே அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவர் தமது மீட்பின் செயலை நிறைவேற்றி முடித்த பிறகு விண்ணகத்திற்கு அவர் சென்ற நிகழ்ச்சியையும், இப்பொழுது அவர் பெற்றிருக்கிற மேன்மையான நிலையையுமே **மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்** என்னும் சொற்றொடர் குறிப்பிடுகிறது என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. "மகிமையிலே (மகிமைக்குள்ளாக அல்ல) ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்" என்பதைத் திருவாளர் வின்சென்ட் குறிப்பிடுகிறார். அவ்வாறு காணும்போது, "பணிவிடைத் தூதர்கள் படைசூழ ஆரவாரத்தோடு, அதாவது படைத்தளபதி போரில் வெற்றிபெற்று வாகை சூடி வருகிறார் என்று நாம் சொல்லுவது போல" என்று இப்பகுதி பொருள்படும்.

இந்த நிகழ்ச்சிகளைச் சிலர் காலவரிசைப் பட்டியல் என்று கூறுகிறார்கள். எடுத்துக்காட்டாக, **மாம்சத்திலே வெளிப்பட்டார்** என்பது மானிடப் பிறப்பையும், **ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்** என்பது கிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்த்தெழுந்த நிகழ்ச்சியையும் குறிக்கின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள். **தேவ தூதர்களால் காணப்பட்டார்** என்பது அவர் விண்ணகம் சென்றதை விளக்குகிறது என்றும், **புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்** என்பதும் **உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்** என்பதும் அவர் விண்ணகம் சென்றதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்றும், **மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்** என்பது எதிர்காலத்தில் வரப்போகிற ஒருநாளில் அவராலே மீட்கப்பட்ட அனைவரும் ஒன்றுகூடி, மரித்தோர் உயிரோடு எழுப்பப்பட்டு, மகிமையில் அவரோடு எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியைக் குறிக்கிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இவை யாவற்றிற்கும் பிறகுதான் தேவ பக்திக்குரிய இரகசியம் நிறைவுபெறும். இந்தக் கருத்துடையோர் இப்பகுதிக்கு இவ்வாறுதான் விளக்கம் தருகிறார்கள்.

ஆயினும், இங்கு சொல்லப்பட்டுள்ளவை கால வரிசையில் நடந்த நிகழ்ச்சிகள் என்று கூறுவதற்கு எந்தக் காரணத்தையும் நாம் காண்கிறதில்லை. தொடக்க காலக் கிறிஸ்தவக் கீர்த்தனையின் ஒரு பகுதியே இந்த வசனம் என்று சிலர் கருதுகிறார்கள். அவ்வாறாயின், நம்முடைய நற்செய்திப் பாடல் "ஒரு நாளில்" என்பதற்கு, இது இணையாக இருக்கிறது:

வாழ்வினால் அன்புவைத்து
சாவினால் மீட்டிட்டார்,
புதைகுழியில் கொடும்பாவம்
சுமந்துசென்று அகற்றினாரே!
உயிருடனே எழுந்தவேளை
விலையின்றி நீதிதந்தார்,
ஒருநாளில் வந்திடுவார்,
மகிமைநிறை நாளதுவே!
- சார்லஸ் H. மார்ஷ்

4. சபையில் காணப்படும் விசுவாச மறுதலிப்பு (4:1-16)

அ. அண்மையில் நிகழவிருக்கிற விசுவாச மறுதலிப்புக்கு எதிரான எச்சரிக்கை (4:1-5)

4:1 ஆவியானவர் இரண்டு வழிகளில் **வெளிப்படையாகப்** பேசுவதாக எண்ணப்படுகிறது. முதலாவது, பவுல் சொல்லவிருக்கிற செய்தி, அவருக்கு நிச்சயமாய் தெய்வீக வெளிப்பாட்டினால் கொடுக்கப்பட்டது என்பதாகும். ஆயினும் திருமறை முழுவதிலும், குறிப்பாகப் புதிய ஏற்பாட்டில், **"பிற்காலங்கள்"** என்னும் காலமானது விசுவாசத்தை விட்டு விலகிப்போன நிலையைத் தனது இயல்பாகக் கொண்டிருக்கும் என்று **வெளிப்படையாகக்** கற்பிக்கப்பட்டுள்ளது என்றும் இது பொருள்படும்.

"பிற்காலங்கள்" என்னும் காலம், அப்போஸ்தலன் இம்மடலை எழுதிய காலத்திற்குப் பிற்பட்ட காலம் என்று பொருள்படும்.

சிலர் விசுவாசத்தைவிட்டு விலகிப் போவார்கள். சிலர் என்னும் சொல் 1 தீமோத்தேயு நூலின் தனிச்சிறப்பாக விளங்குகிறது. இங்கு சிலர் என்று குறிப்பிடப்பட்டுள்ள சிறுபான்மையினர், 2 தீமோத்தேயு நூலின் காலத்தில் பெரும்பான்மையினராக மாறிவிட்டார்கள். இந்த மனிதர்கள் **விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்** அல்லது **விசுவாசத்தை விட்டு** வீழ்ந்து போவார்கள் என்று எழுதப்பட்டிருப்பதால் முன்னர் இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்பது பொருளன்று. மாறாக, இவர்கள் வெறுமனே தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை செய்தவர்கள் ஆவார்கள். இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிந்தவர்கள். மேலும் அவர் ஒருவரே இரட்சகர் என்பதும் இவர்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது. கிறிஸ்துவைப் பின்பற்றுவதாக இவர்கள் சிறிதுகாலம் கூறிவிட்டு, பின்னர் அவரை மறுத

லித்து விசுவாசத்தைவிட்டு விலகிச் சென்றவர் கள் ஆவார்கள்.

நம்முடைய நாட்களிலும் கள்ளக் குழுக்கள் பெருகிவருவதைக் குறித்துச் சிந்திக்காமல், இந் தப் பகுதியை ஒருவர் அரைகுறையாய்ப் படிக்கக் கூடும். கள்ள அமைப்புகள் எவ்விதமாகப் பரவிப் பெருகுகின்றன என்பதை இப்பகுதி மிகச் சரியாக விவரித்துக் கூறுகிறது. பெயரளவில் கிறிஸ்தவ சபைகள் என்று அழைக்கப்படுகிற நிறுவனங் களில் முன்னர் இருந்தவர்களே, இந்த அமைப்பு களில் பெரும்பாலான அங்கத்தினர்களாக இருக் கிறார்கள். இந்தச் சபைகள் ஒரு காலத்தில் விசு வாசத்தில் உறுதியுடையவையாகச் செயல்பட்டி ருக்கும். பின்னர் அந்நிலையிலிருந்து சமுதாய நற்செய்தியை நோக்கி அவை வழிவிலகிச் சென்றிருக்கும். ஆற்றல் மிக்க வகையில் அள வுக்கு மீறிய நம்பிக்கையளிக்கத்தக்க செய்தி களைக் கொண்டதாகக் கள்ளப்போதகர்களு டைய பிரசங்கங்கள் அமைந்திருக்கும். அவற் றைக் கேட்கும்போது, தங்களைக் கிறிஸ்தவர் கள் என்று வெற்றறிக்கை செய்பவர்கள் பொறி யில் அகப்படுவது போல அகப்பட்டுக்கொள் கிறார்கள்.

இந்த மனிதர்கள் **வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுக்க** விருப்பமுடையவராக இருப்பார்கள். தீய ஆவிகளின் குடியிருப்பாக விளங்கும் கள்ள போதகர்களை விவரித்துக் கூறும்படி **வஞ்சிக்கிற ஆவிகள்** என்னும் சொற்றொடர் உருவக மொழி யாக இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் எச்சரிக்கை அற்ற மனிதர்களை வஞ்சிக்கிறார் கள். **பிசாசுகளின் உபதேசங்கள்** என்னும் சொற் றொடர் **பிசாசுகளைப் பற்றிய உபதேசங் களல்ல.** மாறாக, பிசாசுகளின் ஏவுதலால் கற்பிக் கப்படுகிற **உபதேசங்களே** அவை. அல்லது அவை பிசாசுகளின் உலகத்தை ஆதாரமாகக் கொண்ட உபதேசங்களாகும்.

மாயம் என்னும் சொல் "மாறுவேட முகமூடி அணிந்திருக்கும்" நிலையைக் குறிக்கிறது. கள்ளக் குழுக்களுக்கு இந்த வருணனை எத் தனை பொருத்தமாயிருக்கிறது! அவர்களுடைய உண்மையான தோற்றத்தை அவர்கள் மூடி மறைத்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். தாங்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை மக்கள் அறியக்கூடாது என்பதில் அவர்கள் கவனமாயிருப்பார்கள். திருமறையில் காணப்படும் சொற்றொடர்களைப் பயன்படுத்து வதாலும் கிறிஸ்தவ கீதங்களைப் பயன்படுத்து வதாலும் அவர்கள் தங்களுடைய உண்மை யான தோற்றத்தை மறைத்துக்கொள்வார்கள். அவர்கள் மாய்மாலக்காரர்கள் மட்டுமன்றி, பொய் யர்களுமாவார்கள். அவர்களுடைய போதனை தேவனுடைய வார்த்தையின் உண்மைத்தன் மைக்கு ஏற்றதாயிருப்பதில்லை; அவர்கள் இதை அறிந்திருந்தும் வேண்டுமென்றே மக்களை வஞ்சிக்கிறார்கள்.

அவர்கள் **மனச்சாட்சியில் சூடுண்டவர்களாக** இருப்பார்கள். ஒருவேளை அவர்களுடைய இளம் பருவத்தில் அவர்களுடைய மனச்சாட்சி மென்ன யம் கொண்டதாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் அதனை அவ்வப்போது அடக்கி வைத்து, இப்பொழுதோ அவர்களுடைய மனச் சாட்சி உணர்ச்சியற்றதாகவும் கடினப்பட்டதாக வும் போகும் அளவிற்கு அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒளிக்கு எதிராகப் பாவம் செய் திருப்பார்கள். அதன்பிறகு தேவனுடைய வார்த் தைக்கு முரண்பட்ட நிலையில் பேசுவதற்கும், தாங்கள் கற்பிப்பது பொய்யென்று அறிந்தும் அதைக் கற்பிப்பதற்கு அவர்கள் சிறிதளவும் தயங்குவது இல்லை.

4:2,3 பிசாசுகளின் இரண்டு கோட்பாடுகள் இப்பொழுது சொல்லப்படுகின்றன. முதலாவது **விவாகம் பண்ணுவது** தவறு என்னும் கோட்பாடு ஆகும். இது தேவனுடைய வார்த்தைக்கு முற்றி லும் முரண்பட்டது. தேவன்தாமே திருமணத்தை நிறுவியவர். மேலும் இதனை அவர் பாவம் இவ்வுலகிற்குள் நுழைவதற்கு முன்பே செய்தார். திருமணத்தில் ஏதொரு பரிசுத்தமற்ற தன்மையும் இல்லை. திருமணம் செய்வதைத் தடைசெய்யும் கள்ளப்போதகர்கள் தேவன் நிறுவியதற்கு எதி ரான தாக்குதலை நடத்துகிறார்கள்.

சில பாதிரிகளும் கன்னிமடத்துப் பெண்களும் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று விதிக்கப்பட்டுள்ள தடை இந்த போதனைக்கு எதி ரான நிலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஆயினும், இதனைக் காட்டிலும் இந்த வசன மானது ஆவியுலகக் கோட்பாளர்களுடன் நேரடி யான தொடர்புடையதாக இருக்கிறது. அவர்கள் திருமணத்திற்கு மாறாக ஆவிக்குரிய கவர்ச்சி என்னும் தத்துவத்தைக் கூறுகிறார்கள். இத னைத் திருவாளர் A. J. போலக் விவரிக்கிறார்:

> "அவர்களிடையே திருமணக்கட்டு ஏளனப் படுத்தப்படுகிறது: இவ்வித எண்ணத்தினால் அவர்கள் தங்களுடைய சட்டப்படியான கணவன் அல்லது மனைவியினிடமிருந்து பிரிந்து ஆவிக்குரிய வகையில் கவருகிற தன்னுடைய கூட்டாளி என்று வேறொருவரைக் கண்டு அவரோடு தகாதவகையில் உடலுறவு கொள்ளுவதே அவர்களுடைய நடைமுறை வழக்கமாக இருக்கிறது."

கிறிஸ்தவ அறிவியல் என்று அழைக்கப்படும் வேறொரு கூட்டத்தார் திருமணத்தைக் குறித்து என்ன கருத்துடையவர்கள் என்பதையும் நாம் கூறியே ஆகவேண்டும். அந்தக் கூட்டத்தை நிறுவியவர் திருமதி எட்டி. மூன்று முறை திருமணம் செய்த அவர் எழுதியதாவது:

> எல்லோருக்கும் தந்தை தேவன் என்று கற்றுக் கொள்ளும் வரை திருமணம் தொடரும்... நமக்குள்ளாக மணவாழ்க்கை நிலையானதாக ஒரு காலத்தில் இருந்து வந்தது. அது தன்னுடைய தற்போதைய நடைமுறை வழக்கத்தின் கட்டிலிருந்து விடுபடவேண்டும்.[13]

பிசாசுகளின் இரண்டாவது உபதேசம் சில குறிப்பிட்ட உணவுகளை **விலக்க வேண்டும்** என்பதாகும். இப்படிப்பட்ட உபதேசம் ஆவியுலகக் கோட்பாளர்களிடையே காணப்படுகிறது. விலங்குகளின் மாமிசத்தை உண்பதால் ஆவிகளோடு தொடர்புகொள்வதில் தடை ஏற்படும் என்று அவர்கள் கருதுகிறார்கள். பிரம்ம ஞான சங்கத்தாரும் இந்து சமயத்தினரும் இறந்துபோன மனிதனின் ஆத்துமா திரும்பிவந்து ஒரு விலங்கினிடத்திலோ வேறொரு உயிரினிடத்திலோ குடியிருக்கும் என்று நம்புவதால் எந்தவொரு உயிரையும் பலியிடுவது பயங்கரமான செயல் என்று கருதுகிறார்கள்.

விவாகமும் போஜனபதார்த்தங்களும் தேவனால் உண்டாக்கப்பட்டவை. இவற்றை நாம் **ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்க** வேண்டும். மறுபடியும் பிறக்காதவர்களுக்கென்று தேவன் இவற்றை உண்டாக்கவில்லை. மாறாக **விசுவாசிகளுக்கும் சத்தியத்தை அறிந்தவர்களுக்குமாகவே** தேவன் இவற்றை உண்டுபண்ணினார்.

4:4 தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. திருமணமும் உணவு வகைகளும் தேவனால் உண்டாக்கப்பட்டவை. அவை **ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல.** மனித வாழ்வின் இனப்பெருக்கத்திற்காக தேவன் திருமணத்தை நிறுவினார் (ஆதி. 1:28 -ஆம் வசனத்தைக் காண்க). உயிர் தொடர்ந்து நிலைநிற்பதற்கு உணவு தேவை (ஆதி. 9:3).

4:5 மனிதனுடைய பயன்பாட்டிற்கென உணவையும் திருமணத்தையும் **தேவ வசனம்** பிரித்து வைத்திருக்கிறது. இவ்வாறாக உணவு ஆதியாகமம் 9:3 -இல் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது (மாற்கு 7:19; அப். 10:14,15; 1 கொரி. 10:25,26). 1 கொரிந்தியர் 7 -இலும் எபிரெயர் 13:4 -இலும் திருமணம் பரிசுத்தப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவை **ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளன**. நாம் உணவை உண்ணும் முன்பு, நம்முடைய தலைகளைத் தாழ்த்தி உணவிற்காக நன்றி செலுத்த வேண்டும் (மத். 14:19; அப். 27:35 ஆகிய வசனங்களைக் காண்க). இதன் வாயிலாக, நம்முடைய சரீரங்கள் வலிமையடையவும், மிகச் சரியான முறையில் கர்த்தருக்காகச் சேவைபுரியும்படியும் அவர் உணவைப் பரிசுத்தமாக்கும்படி அவரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறோம். திருமண உடன்பாட்டிற்குள்ளாகச் செல்லும் முன்னர், அந்தத் திருமண இணைப்பை தேவனுடைய மகிமைக்கெனவும் பிறருடைய நன்மைக்காகவும், மணமகன் மற்றும் மணமகளுடைய நன்மைக்காகவும் தேவன் ஆசிர்வதிக்கும்படி நாம் ஜெபிக்க வேண்டும்.

இரட்சிக்கப்படாத மக்களுடைய முன்னிலையில் உணவிற்காகக் கிறிஸ்தவர்கள் நன்றி பாராட்டுவது நல்லதொரு சாட்சியாக விளங்கும். அவ்வாறு ஸ்தோத்திரம் செலுத்துவது பகட்டான முறையிலோ நீண்ட ஜெபமாகவோ இருக்கக் கூடாது. மாறாக, நம்முடைய உணவிற்காக நாம் நன்றி செலுத்துவது மறைமுகமாகச் செய்யப்படுவதாகவும் இருக்கக் கூடாது.

ஆ. அண்மையில் வரவிருக்கிற விசுவாசத்தை மறுதலிக்கும் காலத்தைக் கருத்திற்கொண்டு கொடுக்கப்பட்ட ஒளிவுமறைவற்ற அறிவுரை (4:6-16)

4:6 முதல் ஐந்து வசனங்களில் சொல்லப்பட்டுள்ள அறிவுரைகளைச் சகோதரருக்குப் போதிப்பதன் மூலம், தீமோத்தேயு **இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரராக இருப்பார்.** முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, **ஊழியக்காரர்** என்னும் சொல் "பணிவிடை செய்பவர்" என்னும் பொருளையே கொண்டிருக்கிறது. அவர் **விசு**

வாசத்திற்குரிய வார்த்தைகளிலும், இதுகாறும் **அநுசரித்த நற்போதகத்திலும் தேறின** பணி விடைக்காரராக விளங்குவார்.

4:7 இந்தப் பகுதியில், கிறிஸ்தவத் திருப்பணி யானது ஒருவகை உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிக்கு ஒப்பாக விளங்குகிறது என்று பவுல் சிந்தித்துப் பார்க்கிறார். ஆறாவது வசனத்தில் கிறிஸ்துவுக்கென்று உழைக்கிற ஒருவருக்கு ஏற்ற உணவு எதுவென்று விவரித்தார். அவர் விசு வாசத்திற்குரிய வார்த்தைகளிலும் நல்ல உப தேசத்திலும் ஊட்டி வளர்க்கப்பட்டிருக்க வேண் டும். ஏழாவது வசனத்தில், **தேவபக்திக்கு** ஏது வான **முயற்சியைக்** குறித்து அவர் பேசுகிறார்.

சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்குத் தீமோத்தேயு விலக வேண்டுமென்று அப்போஸ்தலன் அறிவுறுத்து கிறார். அவர் அவற்றோடு போரிட வேண்டிய தில்லை அல்லது அவற்றில் மிகுதியான நேரத்தை அவர் செலவிடக் கூடாது. மாறாக அவர் அவற் றைத் தகுதியற்றவை என்றும், வெறுக்கத் தக்கவை என்றும் ஒதுக்கித் தள்ள வேண்டும். கிழவிகள் பேச்சாகிய கட்டுக்கதைகள் என்னும் சொற்றொடர் கிறிஸ்தவ அறிவியல் என்னும் இயக் கத்தை நம்முடைய நினைவிற்குக் கொண்டுவரு கிறது. அவ்வியக்கம் ஒரு பெண்ணால் நிறுவப்பட் டது, குறிப்பாக முதிர்வயதுப் பெண்களைக் கவர்ந்து இழுக்கக் கூடிய தன்மையுடையது. மேலும் அது சத்தியத்திற்குப் பதிலாகக் கதை களைப் போதிக்கிறது.

புராணக் கதைகளிலும் **கட்டுக்கதைகளிலும்** நேரத்தை வீணாக்குவதற்குப் பதிலாக, அவர் **தேவபக்தியை** அடையும்படி தானே **முயற்சிபண்ண** வேண்டும். அந்த **முயற்சியில்** திருமறையை வாசித்தலும், படித்தலும், ஜெபம் பண்ணுதலும், தியானம் செய்தலும், பிறரிடம் சாட்சி கூறுதலும் அடங்கும். "தேவபக்திக்குள் ஒருவரை அடித்துச் செல்வது போன்ற ஏதொரு செயலும் நிகழ்வது இல்லை. 'நீரோட்டத்தின் போக்கு' நமக்கு எதி ராக இருக்கிறது" என்று திருவாளர் ஸ்டாக் கூறு கிறார். இதற்கு **முயற்சியும்** பயிற்சியும் தேவை.

4:8 இங்கு இரண்டு விதமான முயற்சிகள் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. **சரீரமுயற்சி யால்** உடலுக்குச் சில பயன்கள் உண்டாகின் றன. ஆனால் இந்தப் பயன்கள் ஓர் எல்லைக்கு உட்பட்டதும் குறுகிய காலத்திற்கும் உரியவை. ஆனால் **தேவ பக்தியானது** மனிதனுடைய ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் நல்லது. மேலும் அது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமின்றி நித்திய காலமெல்லாம் பயன்தர வல்லது. இந்த **ஜீவனைப்** பொருத்தமட்டில் தேவபக்தி மிகப்பெரிய மகிழ்ச்சியை உண்டாக்கு கிறது. மேலும் **பின்வரவிருக்கும் ஜீவனைப்** பொருத்தமட்டில் பிரகாசமான வெகுமதியை வாக்குரைப்பதோடு, அந்த மகிமையான காட் சியை அனுபவிக்கக்கூடிய நிலையையும் வாக்கு ரைக்கிறது.

4:9 இந்த வசனம் மீண்டும் தேவபக்தியைக் குறித்துப் பேசுவதாகவே பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. தேவபக்தியின் பயன் எங்கும் பரவியிருப்பதோடு நித்திய காலத்திற்கும் உரியது என்னும் செய்தியைப் பற்றிய **இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத் திரமாயிருக்கிறது.** இந்த மடலில் காணப்படும் மூன்றாவது உண்மையுள்ள வார்த்தை இந்த வசனமாகும்.

4:10 இதனிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம்.[14] இதனிமித்தம் என்னும் சொல் தேவபக்தியுள்ள வாழ்க்கையைக் குறிப்பிடுகிறது. இதுவே தன்னுடைய மிகப்பெரிய இலக்கு என்று கூறுகிற பவுல், அதனை அடை யும்படி தன்னுடைய நுட்பம் மிகுந்த ஆற்றல் களின் மூலமாகத் தீவிர முயற்சி செய்கிறார். அவிசுவாசிகளுக்கு இது தகுதியற்ற முயற்சி யாகவே தோன்றும். ஆனால் கிறிஸ்தவனோ கடந்து செல்லுகிற இவ்வுலகக் காரியங்களுக்கு அப்பால் கண்டவனாக, தன்னுடைய நம்பிக் கையை **ஜீவனுள்ள தேவன்மேல்** வைக்கிறான். இந்த நம்பிக்கை ஒருக்காலும் நிறைவேறாமல் போகாது என்பதற்கான காரணம் யாதெனில், **எல்லா மனிதருக்கும் விசேஷமாக விசுவாசி களுக்கும் இரட்சகராகிய** அவர் **ஜீவனுள்ள தேவன்** ஆவார். தேவன் எல்லா மனிதருக்கும் அனுதின வாழ்க்கைத் தேவைகளை அருளி அவர்களைப் பாதுகாத்து வருகிறார் என்னும் பொருளில் அவர் **எல்லா மனிதருக்கும் இரட்சக ராக** இருக்கிறார். ஆனால், முன்னர் நாம் கூறி யிருப்பது போல அவர் வேறொரு பொருளிலும் **எல்லா மனிதருக்கும் இரட்சகராக** இருக்கிறார் - **எல்லா மனிதரும்** இரட்சிக்கப்படுவதற்குப் போதுமான முன்னேற்பாட்டினை அவர் செய் திருக்கிறார். **விசுவாசிகளாகிய** அனைவருக்கும் அவர் ஒரு சிறப்பான வகையில் இரட்சகரா யிருக்கிறார். ஏனெனில் அவர் ஏற்கனவே செய்து முடித்த ஏற்பாட்டைத் தங்களுக்கென்று அவர்கள்

ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எல்லா மனிதரையும் இரட்சிப்பதற்கு அவர் ஆற்றல் மிகுந்த இரட்சகர், எனினும் விசுவாசிக்கிற அனைவருக்கும் அவர் உண்மையான இரட்சகர் என்று நாம் இதனைக் கூறவியலும்.

4:11 ஆறாவது வசனம் முதல் பத்தாவது வசனம் வரை பவுல் கூறியவற்றை **இவை** என்று அவர் குறிப்பிடுகிறார் என்றே தோன்றுகிறது. இந்தக் கட்டளைகளைத் தீமோத்தேயு இறை மக்களிடம் இடைவிடாமல் தொடர்ந்து **கட்டளையிட்டுப் போதித்து** வரவேண்டும்.

4:12 இம்மடல் எழுதப்பட்டபோது தீமோத்தேயு பெரும்பாலும் முப்பதுக்கும் முப்பந்தைந்துக்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருந்திருப்பார். எபேசு சபை மூப்பர்கள் சிலரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அவர் இளைஞராகவே இருந்திருக்க வேண்டும். ஆகவேதான் பவுல், **"உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு"** இருக்க வேண்டுமென்று இங்கு கூறுகிறார். தீமோத்தேயு தன்னை ஒரு பீடத்தின் மீது நிறுத்திக்கொண்டு மற்றவர்களுடைய குற்றச்சாட்டிற்கு விலக்கு பெற்றவர் என்று கருதவேண்டும் என்பது இதன் பொருளன்று. மாறாக, அவர் மீது பிறர் குற்றம் சுமத்துவதற்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதே இதன் பொருளாகும். **விசுவாசிகளுக்கு மாதிரியாக** இருப்பதன் மூலம் அவர் நியாயமான குற்றச்சாட்டுகள் தன்மீது சுமத்தக் கூடாதபடி நடந்துகொள்ள வேண்டும்.

வார்த்தையில் என்னும் சொல் தீமோத்தேயுவின் உரையாடலைக் குறிக்கிறது. அவருடைய பேச்சு எப்பொழுதும் அவர் தேவனுடைய பிள்ளை என்னும் பண்பை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். தடைசெய்யப்பட்டவை என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவற்றை மட்டுமின்றி, அவரைக் கேட்போருக்குப் பக்திவிருத்தி உண்டுபண்ணாத எல்லாவற்றையுங்கூட அவர் தவிர்க்க வேண்டும்.

ஒருவருடைய அனைத்து நடத்தையையுமே **நடக்கை** என்னும் சொல் குறிக்கிறது. அவருடைய ஒழுகலாறு கிறிஸ்துவின் திருப்பெயருக்கு எவ்விதத்திலும் நிந்தையைக் கொண்டுவரக் கூடாது.

அன்பானது அவருடைய நடத்தைக்கான தூண்டுகோலாக விளங்க வேண்டும் என்பதையும், அதுபோலவே அவருடைய நடத்தையின் செயல்முறைக்கும், குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கான கடுமுயற்சிக்கும் அன்பே உள் ஆற்றலாக விளங்க வேண்டும் என்பதையும் **அன்பில்** என்னும் சொல் குறிக்கிறது.

நடுநிலைப் பிரதியைப் பின்பற்றி எழுதப்பட்ட பெரும்பாலான மொழிபெயர்ப்புகளிலும் விளக்க வுரைகளிலும் ஆவியில் என்னும் சொல் இடம் பெறவில்லை. ஆனால் இந்தச் சொல் பெரும் பான்மைப் பிரதியிலும், மரபுவழிப் பிரதியிலும் இடம் பெற்றுள்ளது. திருவாளர் கை கிங் இச் சொல்லின் பொருள் மட்டற்றபேரார்வம் என்று தனது நுண்ணறிவுத் திறமையினால் புரிந்து கொண்டிருக்கிறார். ஆயினும் அப்பேரார்வம் பல கிறிஸ்தவரிடம் காணப்படாதபடியால் பழித்து ரைக்கிறார்:

> பல கிறிஸ்தவர்கள் ஒப்பனையாகத் தங்களை வெளிப்படுத்திக் காட்டுகிற நிலையிலும் இதன் தரம் குறைவுபட்டதாயிருப்பது நமக்குப் புதிராயிருக்கிறது. கால்பந்து விளையாட்டு மற்றும் தேர்தல் பிரசாரம் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள், ஆனால் தேவனுக்காக ஆற்றப்படுகிற பணிகளில் எவ்வித ஆர்வமும் இல்லை. கிறிஸ்தவ அறிவியல் என்னும் இயக்கத்தைச் சார்ந்தவர்கள், யெகோவா சாட்சிகள், பொதுவுடைமைக் கட்சியினர் ஆகியோருடைய பெரிதான ஆர்வம் நம்மை வெட்கமடையச் செய்கிறது. ஒரு காலத்தில் சபை அறிந்திருந்த கொழுந்து விட்டு எரியக்கூடிய வைராக்கியம் மீண்டும் காணப்படுமா. தன்னுடைய சுற்றுச் சார்பு நிலையைப் பலப்படுத்தி அதில் முன்னேற்றம் அடைய தீமோத்தேயு நாடுகிறபோது, இந்த இனிய ஆவி பெரிதான உதவியை அவருக்குச் செய்யும்.[15]

விசுவாசத்தில் என்னும் சொல் பெரும்பாலும் "உண்மையுள்ள தன்மையில்" என்று பொருள்படும் என்றே தோன்றுகிறது. மேலும் நம்பத் தகுந்த தன்மை, உறுதியுடைமை ஆகிய குணங்களையும் இச்சொல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

அவருடைய செயல்களில் மட்டுமின்றி, நோக்கங்களிலும் **கற்பு** என்னும் பண்பு துலங்கவேண்டும்.

4:13 இந்த வசனம் தீமோத்தேயுவின் தனிப்பட்ட வாழ்க்கையைக் குறிப்பதில்லை, மாறாக இது முதன்மையாக உள்ளூர் சபையைக் குறித்ததாகவே இருக்கிறது. சபையின் பொதுக்கூட்டங்களில் வேதவசனத்தை **வாசிக்கிறதிலும், புத்தி**

சொல்லுகிறதிலும், உபதேசத்திலும் அல்லது கற்பிப்பதிலும் அவர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இங்கு வரையறுத்துக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக, தேவனுடைய வசனம் வெளிப்படையாக வாசிக்கிறதைப் பற்றி பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். அந்த நாட்களில் இது இன்றியமையாத தேவையாயிருந்தது. ஏனெனில் திருமறையின் விநியோகம் வெகு குறைவாகவே இருந்தது. பெரும்பாலோரிடம் திருமறை நூல் இல்லை. திருமறைப் பகுதி வாசிக்கப்பட்டபின், வாசித்த பகுதியிலிருந்து தீமோத்தேயு விசுவாசிகளுக்கு புத்திபுகட்ட வேண்டும். அதன் பிறகு வேத எழுத்துகளின் சத்தியம் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. இந்த வசனம் நமக்கு நெகேமியா 8 -ஆவது அதிகாரத்தை, குறிப்பாக 8 -ஆவது வசனத்தை நினைவூட்டுகிறது: "அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புத்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ் சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப் பண்ணினார்கள்."

ஆயினும், இந்த வசனத்திலிருந்து தனிப்பட்ட தியானத்தைக் குறித்த சிந்தனையை நாம் விட்டுவிடக் கூடாது. திருமறை நூலின் சத்தியங்களை முதலாவது தீமோத்தேயு தன்னுடைய சொந்த வாழ்க்கையில் உண்மையாக்கிக் கொள்ள வேண்டும். அதன் பிறகே அவரால் அதிலிருந்து பிறருக்குப் புத்தி சொல்லவும் கற்பிக்கவும் முடியும்.

4:14 சுவிசேஷகன், மூப்பர் அல்லது போதகர் இவற்றில் எந்த **வரம்** தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்டது என்பது நமக்குச் சரிவரத் தெரியவில்லை. இந்த மடலின் பொதுவான உட்கருத்து, அவர் ஒரு மூப்பரும் போதகருமாக இருந்தார் என்றே நம்மைச் சிந்திக்கச் செய்கிறது. ஆனாலும், அந்த **வரம் மூப்பராகிய சங்கத்தார்** அவர்மேல் **கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால்** அவருக்கு அளிக்கப்பட்டது என்பதை நாமறிவோம். முதலாவதாக, அது அவருக்குத் தீர்க்கதரிசனத்தோடு அல்லது **தீர்க்கதரிசனத்தால் அளிக்கப்பட்டது**. உள்ளூர் சபையில் ஒரு சமயம் தீர்க்கதரிசி ஒருவர் எழுந்து நின்று, தேவ ஆவியானவர் தீமோத்தேயுவுக்கு ஒரு குறிப்பிட்ட **வரத்தைப்** பகிர்ந்தளித்தார் என்று அறிவித்தார் என்பதே இதன் பொருளாகும். தீர்க்கதரிசி இந்த வரத்தை அவருக்கு அளிக்கவில்லை, அவர் இதனை அறிவிக்க மட்டுமே செய்தார். அதனுடன் **மூப்பராகிய சங்கத்தார்** அவர் மேல் **கைகளை வைத்த செயலும்** நடந்தது. மூப்பர்கள் தீமோத்தேயுவுக்கு வரத்தைத் தரும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை என்பதை மீண்டும் நாம் வலியுறுத்திச் சொல்லியே ஆகவேண்டும். பரிசுத்த ஆவியானவர் ஏற்கனவே என்ன நிறைவேற்றினாரோ, அதனை மூப்பர்கள் தங்களுடைய கரங்களை அவர்மேல் வைத்ததன் மூலம் வெளியரங்கமாக அங்கிகரித்தார்கள் என்பதையே இந்நிகழ்ச்சி எடுத்துரைக்கிறது.

அப்போஸ்தலர் 13 -ஆவது அதிகாரத்தில் இதன் செயல்முறை காணப்படுகிறது. இரண்டாவது வசனத்தில், ஒரு குறிப்பிட்ட பணிக்காக பர்னபாவையும் சவுலையும் பரிசுத்த ஆவியானவர் பிரித்தெடுத்தார். பெரும்பாலும் அது ஒரு தீர்க்கதரிசியின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கும். அதன் பிறகு உள்ளூர் விசுவாசிகள் உபவாசித்து, ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களை அனுப்பினார்கள் (வச. 3).

பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயத்தில் உள்ளூர் சபைகளில் இன்றைய நாட்களிலும் இதே செயல்முறைக் கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது. ஒரு விசுவாசிக்குக் குறிப்பிட்ட வரம் தேவ ஆவியானவராலே வழங்கப்பட்டிருக்கிறது என்பது மூப்பர்களுக்கு வெளிப்படும்போது அவர்கள் அந்த மனிதரைக் கர்த்தருடைய பணிக்கென ஒப்புவிக்கிறார்கள். அச்செயல் அவர்மீது மூப்பர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பதையும், பரிசுத்த ஆவியானவர் அவருடைய வாழ்க்கையில் கிரியையை நடப்பித்திருக்கிறார் என்று அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறது. அவர்கள் அந்த மனிதரை ஒப்புவித்த செயலின் மூலமாக அவருக்கு எந்த வரமும் கொடுக்கப்படுகிறதில்லை. மாறாக அவர் ஏற்கனவே பரிசுத்த ஆவியினாலே வரத்தைப் பெற்றிருக்கிறார் என்பதை மட்டுமே அவர்களுடைய செயல் உணர்த்துகிறது.

தீமோத்தேயுவின் மேல் மூப்பர்கள் கைளை வைத்தபோது நடந்த நிகழ்ச்சிக்கும், பவுல் அவர் மேல் கைகளை வைத்தபோது (2 தீமோத்தேயு 1:6) நடந்த நிகழ்ச்சிக்கும் வேறுபாடு உள்ளது. முதலாவது நிகழ்ச்சி எந்த ஒரு நிலையிலும் அதிகாரப் பூர்வமானது அல்ல, தீமோத்தேயு பெற்ற வரத்திற்கு அது எவ்வகையிலும் காரணமும் ஆகாது. அவருடைய திருப்பணியில் அவர்கள் கொண்டிருந்த ஐக்கியத்தை மட்டுமே அது காட்டுகிறது. இரண்டாவதாகச் சொல்லப்பட்

டுள்ள நிகழ்ச்சியில் அப்போஸ்தலன் என்னும் நிலையில் பவுல் ஒரு செல்தடமாக அமைந்து, தீமோத்தேயுவுக்கு வரம் அளிக்கப்பட்டது.

4:15 இவற்றையே சிந்தித்துக்கொண்டிரு என்னும் சொற்கள் "பேணிவளர்" என்றோ "இவற்றுடன் வேதனையை ஏற்றுக்கொள்" என்றோ பொருள்படும். இதுவே இங்கு சொல்லப்பட்டிருப்பதன் பொருளாகும். ஏனெனில் இச்சொற்றொடர்களைத் தொடர்ந்து, இவற்றில் நிலைத்திரு என்னும் சொற்கள் இடம் பெற்றுள்ளன. தீமோத்தேயு கர்த்தருடைய பணிக்குத் தன்னை முழுமையாகவும், கவனத்தைத் திருப்பாமலும் ஒப்புவிக்க வேண்டுமென்று பவுல் அவரை உற்சாகப்படுத்துகிறார். அவர் தன்னுடைய முயற்சியில் வலிமை முழுவதையும் பயன்படுத்திச் செயல்பட வேண்டும். இந்நிலையில் அவர் **தேறுகிறது யாவருக்கும் விளங்கும்**. தன்னுடைய கிறிஸ்தவத் திருப்பணியில் தீமோத்தேயு முதலில் ஒரு பீடபூமியில் மோதி விட்டுப் பிறகு வசதியான வாழ்க்கை முறையில் நிலைத்திருக்க வேண்டுமென்று பவுல் விரும்பவில்லை. மாறாக, அவர் கர்த்தருக்குரியவற்றில் தொடர்ந்து முன்னேற வேண்டுமென்றே பவுல் விரும்பினார்.

4:16 இங்கு கூறப்பட்டுள்ள வரிசை முறையைக் கவனியுங்கள். முதலாவது தீமோத்தேயு தன்னைக் குறித்து **எச்சரிக்கையாக இருக்க** வேண்டும், அதன்பிறகு தன்னுடைய **உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க** வேண்டும். கிறிஸ்தவ ஊழியர் யாராயினும், அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் முக்கியத்துவம் இங்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அவர் எவ்வளவுதான் தன்னுடைய உபதேசத்தில் மரபொழுங்கைச் சார்ந்திருந்தாலும், அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை சரியற்று இருக்குமென்றால், அதில் எவ்விதப் பயனும் இல்லை. "ஒருவருடைய ஆராதனை முறையையும், ஆவிக்குரிய வாழ்க்கை பேணிவளர்க்கப்படுகின்ற செயலையும் அவருடைய ஊழியம் நெருக்கி வெளியேற்றிவிடுமென்றால் அவருடைய ஊழியமே அவருக்குக் கண்ணியும் தீமையுமாக மாறிவிடும்" என்று அழகுற மொழிந்துள்ளார் திருவாளர் A. W. பிங்க்.

பவுல் கூறியுள்ள அறிவுரைகளில் அதாவது வாசித்தல், புத்திசொல்லுதல், மற்றும் உபதேசித்தல் ஆகியவற்றில் தொடர்ந்து செயல்படுவாரெனில், தீமோத்தேயு தன்னையும் தன்னைக் **கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவார்.** இங்கு **இரட்சிப்பு** என்று குறிப்பிடப்பட்டுள்ள சொல்லுக்கும், ஆத்துமாவின் இரட்சிப்புக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இந்த அதிகாரமானது இறைமக்கள் நடுவில் பெருங்குழப்பத்தை உண்டுபண்ணின கள்ளப்போதகர்களைக் குறித்த எச்சரிப்போடு தொடங்கியது. தேவபக்தியோடும், தேவனுடைய வார்த்தைக்கு உகந்த நிலையிலும் உண்மையோடு தீமோத்தேயு தன்னுடைய வாழ்க்கையை நடத்துவாரெனில், அவர் தன்னையும், தான் கூறுவதைக் கேட்பவர்களையும் கள்ளப் போதகர்களின் உபதேசங்களிலிருந்து **இரட்சித்துக்கொள்ளுவார்.**

5. பல்வேறு வகையான விசுவாசிகளைக் குறித்த தெளிவான அறிவுரைகள் [5:1-6:2]

அ. வெவ்வேறு வயதினர் [5:1,2]

5:1 தீமோத்தேயு எந்தெந்தக் கிறிஸ்தவக் குடும்பத்தாரிடையே ஊழியம் செய்து வந்தாரோ அவர்களிடம் அவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய அறிவுரைக்கு இவ்வசனம் அறிமுகமாக விளங்குகிறது. தீமோத்தேயு இளைஞராக இருந்த காரணத்தினாலும், தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்னும் விருப்பத்தாலும், அவர் ஒருவேளை முதிர்வயதுள்ளவர்களிடம் பொறுமையில்லாமலும், சீற்றத்துடனும் நடந்து கொள்ளும்படியான சோதனை ஏற்படக் கூடும்; ஆகவே அவர் **முதிர்வயதுள்ளவரைக் கடிந்துகொள்ளாமல், அவரைத் தகப்பனைப் போலப் பாவித்து புத்திசொல்ல வேண்டும்** என்று அறிவுரை வழங்கப்படுகிறது. இவர் இளைஞராக இருந்த காரணத்தினால் வயது முதிர்ந்த வரைக் கடினமான வார்த்தைகளால் தாக்குவது பொருத்தமான செயலாக இருக்காது.

மேலும் இளம் கிறிஸ்தவ ஊழியர் தீமோத்தேயு **பாலிய புருஷரைக்** கட்டாயப்படுத்தி அடக்கி ஆளுகிற மனப்பான்மையை வெளிப்படுத்தக் கூடிய ஆபத்தில் இருக்கிறார். ஆகவே அவர் இளம் வயதினரை சகோதரரைப் போலப் பாவித்து நடந்துகொள்ள வேண்டும் என்றும், அவர்கள் மேல் ஆணவத்துடன் அதிகாரம் செலுத்தாமல் அவர்களில் ஒருவரைப் போல நடந்துகொள்ள வேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

5:2 முதிர்வயதுள்ள பெண்கள் தாய்களைப் போலக் கருதப்பட்டு, மரியாதையுடனும், அன்போடும், அவர்களுக்குரிய கௌரவத்தோடும் நடத்தப்படவேண்டும்.

பாலிய ஸ்திரீகளுடன் அவர் நடந்துகொள்கிற எல்லாச் செயல்களும் கற்பு என்னும் பண்பு

டையவையாக இருக்க வேண்டும். நிச்சயமாகப் பாவம் காணப்படுகிற செயல்களை அவர் தவிர்ப் பது மட்டுமின்றி, விவேகமற்ற செயல்களையும் பாவமென்று தோன்றுகிற செயல்களையும் அவர் முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

ஆ. விதவைகள் (5:3-16)

5:3 மூன்றாவது வசனம் முதல் 16 -ஆவது வசனம் வரையிலும் உள்ளூர் சபையில் விதவை களின் நிலை பற்றியும், அவர்கள் எவ்வாறு நடத் தப்பட வேண்டும் என்பது பற்றியும் பவுல் அறி வுரை வழங்குகிறார்.

முதலாவது, உத்தம விதவைகளைக் கனம் பண்ண வேண்டும். இங்கு கனம் பண்ணுதல் என்னும் சொற்றொடர் அவர்களுக்குக் கொடுக் கக் கூடிய மதிப்பை மட்டுமின்றி, நிதி உதவி குறித்த சிந்தனையையும் உட்கொண்டதாக இருக்கிறது. உண்மையான விதவை எனப்படுபவள் வேறு எந்த ஆதரவும் அற்றவளாக இருப்பதோடு அவள் தன்னுடைய வாழ்க்கைப் பராமரிக்கப்பட கர்த்த ரையே சார்ந்தவளாகவும் இருப்பவள் ஆவாள். அவளிடம் அக்கறை கொண்டு அவளைப் பரா மரிக்கக்கூடிய உறவினர் ஒருவரும் இல்லை.

5:4,5 இரண்டாவது வகையான விதவைகள் பற்றிய விளக்கம் இந்த வசனத்தில் கொடுக்கப்பட் டுள்ளது. இவர்களுக்குப் பிள்ளைகளோ பேரன் பேத்திகளோ இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ் நிலையில் விதவையின் பிள்ளைகள் தங்களுக் குத் தாய் (அல்லது பாட்டி) செய்த எல்லா நன்மை களுக்கும் பதில் நன்மைகளைச் செய்து, நடை முறையில் தேவபக்தியைக் காண்பிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். தேவபக்தி குடும்பத்தில் தொடங்குகிறது என்று இந்த வசனம் கற்பிக் கிறது. ஒருவர் தனது விசுவாசத்தைக் குறித்துச் சத்தமாகப் பேசிவிட்டு, இயற்கையின் கட்டு களால் தனக்கு மிகவும் நெருக்கமானவர்களைப் புறக்கணிப்பாரென்றால் அவரது கிறிஸ்தவ விசு வாசத்தின் சாட்சி குன்றிப் போய்க் காணப்படும்!

வேறு ஆதரவற்ற பிரியமான மக்களைக் கவனித்துக் கிறிஸ்தவர்கள் அக்கறை செலுத்து வது **தேவனுடைய** பார்வையில் **பிரியமாயிருக் கிறது.**[16] "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்த முள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 6:2 -இல் மிகத்தெளிவாகக் கற்பித்திருக்கிறார். ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருப்பது போல, எவ்வித வருமான மும் இல்லாமல், தன்னுடைய அனுதின ஆகாரத் திற்கு எப்போதும் **தேவனை** நோக்கிப் பார்க்கிற வளே உண்மையான **விதவை** ஆவாள்.

5;6,7 ஐந்தாவது வசனத்தில் காணப்படும் தெய்வீக சுபாவமுள்ள விதவைகளுக்கு எதிர் மாறாக, இங்கு **சுகபோகமாய் வாழ்கிற** விதவை யைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெண் உண்மையான விசு வாசியா அல்லது பெயரளவில் அறிக்கை செய் கிறவளா என்பது பற்றி வேறுபட்ட கருத்து நிலவு கிறது. இவள் உண்மையான கிறிஸ்தவள் என்றே நாம் நம்புகிறோம். ஆனால் இவள் பின்வாங்கி யவள். தேவனோடுள்ள தொடர்பிலும், அவருக் குப் பயனுள்ளவளாக விளங்குவதிலும் இவள் **செத்தவள்**. இப்படிப்பட்ட விதவைகள் **சுகபோக மாய் வாழ்கிறது** குறித்து தீமோத்தேயு எச்சரிக்க வேண்டும். மேலும் இவர்களுடைய கிறிஸ்தவ உறவினர்கள் இவர்களைக் கவனித்துப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர் அறிவுரை நல்க வேண்டும்.

5:8 ஒருவர் தனது சொந்த உறவினர்களு டைய தேவைகளை நிவர்த்திசெய்யாமலிருப் பதும், விசேஷமாக தனக்கு மிகவும் நெருங்கிய வீட்டாரை விசாரிக்காமல் போவது பற்றிய முக்கி யத்துவமும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளன. இது விசுவாசத்தை மறுதலிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்துகிறது. மெய்யான **விசுவாசிகள்** ஒரு வரையொருவர் தாங்க வேண்டுமென்று கிறிஸ்தவ விசுவாசம் மாறாத உறுதியுடன் தொடர்ந்து வற் புறுத்துகிறது. ஒரு கிறிஸ்தவன் இதனைச் செய் யத் தவறுகிறபோது, அவன் தனது செயல்களி னால் கிறிஸ்தவம் போதிக்கிற சத்தியங்களையே மறுத்துரைக்கிறான். அப்படிப்பட்ட மனிதன் **அவி சுவாசியிலும் கெட்டவனாக இருப்பான்.** ஏனெனில் அவிசுவாசிகளில் பலர் தங்களுடைய சொந்த உறவினர்களிடம் அன்புடன் கூடிய அக்கறை செலுத்துகிறார்கள். அவிசுவாசியும் செய்யக் கூடாததைச் செய்து அந்தக் கிறிஸ்தவன் கர்த்த ருடைய திருப்பெயருக்கு நிந்தையைக் கொண்டு வருகிறவனாகக் காணப்படுவான்.

5:9 ஒவ்வொரு உள்ளூர் சபையிலும், அந்தந் தச் சபையால் பராமரிக்கப்பட்டுவந்த விதவைகள் அடங்கிய பெயர்ப்பட்டியல் இருந்தது என்பதை இவ்வசனத்திலிருந்து அறியமுடியும். அந்தப் பட்டியலில் **அறுபது வயதுக்குக் குறைந்த விதவையின்** பெயர் சேர்க்கப்படக் கூடாது என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார்.

ஒரே புருஷனுக்கு மனைவியாய் இருந்த வள் என்னும் சொற்றொடருக்கு ஒப்பான சொற் றொடரை கண்காணிகள் மற்றும் உதவிக்காரர் கள் ஆகியோரைக் குறித்த பகுதிகளிலும் காண முடியும். அங்கு இச்சொற்றொடர் என்ன சிக்கலை உண்டுபண்ணியதோ, அதே சிக்கலை இங்கும் நாம் சந்திக்கிறோம். அங்கு என்ன விளக்கங்கள் கொடுக்கப்பட்டனவோ, அதே விளக்கங்கள் இங்கும் கொடுக்கப்படுகின்றன. அவளுடைய திருமண வாழ்க்கை இடித்துரைக்கப்படக் கூடாத தாகவும் ஒழுக்கநெறியில் தவறியவள் என்ற சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

5:10 விதவைகளுக்குரிய பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு, ஆவிக்குரிய விசுவாசி என் பதை வெளிப்படுத்தக்கூடிய **நற்கிரியைகளைச்** செய்து அவள் நன்மதிப்பு பெற்றவளாக இருக்க வேண்டும்.

அவள் **பிள்ளைகளை வளர்த்திருக்க** வேண் டும் என்னும் சொற்கள், ஐயத்திற்கு இடமற்றபடி, அவளுக்கும் அவளுடைய கிறிஸ்தவ இல்லத்திற் கும் நற்பெயர் ஏற்படுத்தும் வகையில் அவள் அவர்களை வளர்த்திருக்க வேண்டும் என்னும் பொருளையே தருகின்றன. வெறுமனே பிள்ளை களை வளர்ப்பதில் எந்த நன்மையும் இல்லை, அவர்களை நல்ல முறையில் வளர்ப்பதே மேன்மையானது.

அவள் தேவபக்தியுள்ள விதவை என்பதற்கு இன்னொரு அடையாளம், அவள் **அந்நியரை உபசரித்து** வந்தவளாக இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் விருந்தோம்பல் செய்வது என் னும் குணநலம் மீண்டும் மீண்டும் குறிப்பிடப் பட்டு, பாராட்டப்பட்டுள்ளது.

விருந்தினர்களுடைய கால்களைக் கழுவுதல் அடிமையின் வேலையாகும். தன் உடன் கிறிஸ்த வர்களுக்காக மிகவும் அற்பமான பணிகளையும் செய்திருக்க வேண்டும் என்னும் சிந்தனையே இங்கு உள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆயினும் பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவுதல் என்னும் சொற்கள், வேத வசனமாகிய தண்ணீரினாலே கழுவுதல் என்னும் ஆவிக்குரிய பொருளையும் உட்கொண்டவை என்பது உறுதி. ஆண் பெண் இருபாலரும் உள்ள இடங்களில் பிரசங்கம் செய்வது என்பதல்ல இதன் பொருள். மாறாக, வீடுகளைச் சந்தித்து, அவர்களுடைய அனுதின நடக்கையால் அடைந்த தீட்டுகளிலி ருந்தும் கெட்ட பழக்கங்களிலிருந்தும் தேவ வார்த்தையின் மூலமாக அவர்களைத் தூய்மைப் படுத்துதல் என்பதேயாகும்.

நோய்வாய்ப்பட்டவர்கள், இன்னலுற்றவர்கள் இன்னும் பல வகைகளில் துயரடைந்தவர்கள் ஆகியோரிடையே பரிவுடன் ஆற்றிய செயல்களே **உபத்திரப்படுகிறவர்களுக்கு உதவி செய்தல்** என்பதன் பொருள்.

சுருங்கக் கூறின், உள்ளூர் சபையின் விதவை களின் பெயர்ப்பட்டியலில் இடம் பெற, அவள் சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்திருக்க வேண்டும்.

5:11 இது மிகவும் கடினமான வசனம், ஆனால் இதனுடைய பொருள் கீழ்க்காணும் வண்ணம் இருக்கும் என்றே தோன்றுகிறது: பொதுவாக, **இளம் விதவைகளைச்** சபை பொறுப்பெடுத்துக் கொள்வது தவறாகும். அவர்கள் இளவயதின ராக இருப்பதால் மீண்டும் மணம்புரிய விரும்பக் கூடும். அவ்வாறு திருமணம் புரிவதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால் இளம் விதவைகள் அவிசுவாசியைத் திருமணம் செய்துகொள்ளக் கூடிய அளவிற்கு சில வேளைகளில் அந்த விருப் பம் வலிமை படைத்தாக இருக்கும். இதனையே அப்போஸ்தலன் **கிறிஸ்துவுக்கு விரோதமாய்க் காமவிகாரம் கொள்ளும்போது** என்று குறிப்பிடு கிறார். புறச்சமயத்தைச் சேர்ந்தவனைத் திரு மணம் செய்துகொள்வது அல்லது கிறிஸ்துவின் மீது கொண்டிருக்கிற அன்பின் காரணமாகவும் அவருடைய சொற்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதற்காகவும் திருமணம் செய்து கொள்ளாமலே இருப்பது ஆகிய இரண்டில் எதைத் தெரிந்துகொள்வது என்னும் சூழ்நிலை ஏற்படுகிறபோது இளம் விதவை திருமணம் செய் வதையே விரும்புகிறாள். அந்த விதவையை ஆத ரித்து வந்த உள்ளூர் சபைக்கு இது அவப்பெய ரைக் கொண்டுவரும்.

5:12 இங்கு **ஆக்கினைக்குட்படுவார்கள்** அல்லது தண்டனைக்குள்ளாவார்கள் என்னும் சொல் நித்திய ஆக்கினையைக் குறிப்பதில்லை. மாறாக, அவள் **முதலில் கொண்டிருந்த** தனது **விசுவாசத்தை விடுவதினாலே** இந்த நியாயத் தீர்ப்பை அல்லது தண்டனையைப் பெறுவாள் என்பதே இதன் பொருளாகும். ஒரு காலத்தில் அவள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் மிகப்பெரிதான விசுவாசத்தையும் பற்றுதலையும் அறிக்கை செய்தவளாயிருந்தாள், ஆனால் இப் பொழுதோ கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராத

ஒருவனைத் திருமணம் செய்ய வாய்ப்பு கிடைக்கும் வேளையில், தன்னுடைய முந்தின உறுதிமொழிகளையும் வாக்குறுதிகளையும் மறந்த வளாக, அவிசுவாசியுடன் சென்று விண்ணக மண வாளனுக்கு உண்மையற்றவளாக மாறிவிடுகிறாள்.

இளம் விதவைகள் மறுமணம் செய்துகொள்வதைப் பவுல் குற்றப்படுத்தவில்லை. உண்மையில், அவர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்றே அவர் வற்புறுத்துகிறார் (வச. 14). அவர்களுடைய ஆவிக்குரிய நிலை தரங்கெட்டுப் போவதையும், ஓர் ஆண் மகனைப் பெறும்பொருட்டு தெய்வீகக் கோட்பாடுகளைக் காற்றில் பறக்கவிடும் செயலையுமே அவர் குற்றப்படுத்துகிறார்.

5:13 மேலும் உள்ளூர் சபை இளம் விதவைகளுடைய நிதித் தேவையின் முழுப் பொறுப்பையும் எடுத்துக்கொள்ளுமென்றால், அவர்கள் சோம்பலுள்ளவர்களாய் மாறவும், அதனோடு தொடர்புடைய தீமைகளில் ஈடுபடவும் வழிவகுக்கும். அவர்கள் தங்களுடைய சொந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதை விட்டுவிட்டு அவர்கள் **அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரிகளாகவும்** மாறி, தங்களுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத காரியங்களில் ஈடுபடுவார்கள். உள்ளூர் சபை செய்யக்கூடிய எந்தச் செயலும் இத்தகைய நடத்தையை ஊக்குவிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. ஏனெனில், நாம் ஏற்கனவே கூறியது போல, அது கிறிஸ்தவச் சாட்சிக்கு எதிரானதாக விளங்கும்.

5:14 ஆகையால் இளம் வயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணுவதும் பிள்ளைகளைப் பெறுவதும், அவப்பெயர் வராதபடி கிறிஸ்தவ இல்லத்தை நடத்துவதும் பெரிதும் விரும்பத்தக்கவை என்று பவுல் பொதுவான கோட்பாட்டைக் கூறுகிறார். இளம் விதவைகள் எல்லோரும் மறுமணம் செய்துகொள்வதென்பது இயலாத செயல் என்பதைப் பவுல் அறிந்திருந்தார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவ்வாறு திருமணம் நடைபெற வேண்டுமெனில், முதலாவது ஆண் மகனே அதற்குரிய முயற்சியைக் தொடங்க வேண்டும். எப்பொழுது அதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கிறதோ, அப்பொழுது என்ன பொதுவான முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை மட்டுமே பவுல் இங்கு முன்வைக்கிறார்.

கிறிஸ்தவ சாட்சிக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்த எப்பொழுதும் **விரோதியானவன்**, அதாவது சாத்தான் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருக்கிறான். ஆகவே **நிந்திக்கும்படி** பேசுவதற்கு நியாயமான காரணங்கள் ஏற்படாதவண்ணம் அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புகிறார்.

5:15 பவுல் இங்கு இளம்விதவைகளைப் பற்றிக் கூறியிருப்பது எவ்விதச் சான்றுகளுமில்லாத கருத்தோ ஊகமோ அல்ல. அவ்வாறு ஏற்கனவே நடந்திருக்கிறது. **சிலர் சாத்தானைப் பின் பற்றி** விலகிப்போய்விட்டார்கள். அதாவது அவர்கள் **சாத்தானுடைய** சத்தத்திற்குச் செவி சாய்த்து, கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் அவிசுவாசிகளாகிய மனிதர்களைத் தங்களுடைய வாழ்க்கைத் துணைவர்களாகத் தெரிந்து கொண்டார்கள்.

5:16 விசுவாசிகள் தங்களுடைய உறவினர்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்புடையவர்கள் என்னும் பொருளை நோக்கித் திரும்புகிறார் பவுல். விசுவாசியாகிய ஒருவனிடத்திலாவது[17] ஒருத்தியிடத்திலாவது அதாவது அவர்களுடைய குடும்பத்தில் ஒரு விதவை பராமரிக்கப்பட வேண்டியவளாக இருந்தால், அந்த விசுவாசி அந்தப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும். அப்பொழுது, உண்மையாகவே கதியற்றவர்களும் நெருங்கிய உறவினர்கள் இல்லாதவர்களுமாகிய விதவைகளைப் பராமரிக்கும் பொறுப்பை சபை எளிதில் ஏற்று நடத்தும்.

3 -ஆம் வசனம்முதல் 16 -ஆம் வசனம் வரையிலுள்ள முழுப்பகுதியும், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சபை என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறது. பொதுவான சூழ்நிலைகளில் அதனால் செய்ய இயன்றதைச் செய்யலாம் என்று கூறாமல், அது என்ன செய்ய வேண்டும் என்றே இந்தப் பகுதி கூறுகிறது. இப்பொருள் பற்றிய திருமறைப் பகுதியின் நீளத்தைக் காணுங்கால், பரிசுத்த ஆவியின் உள்ளத்தில் இது முக்கிய மான இடத்தை வகிக்கிறது என்பது புலனாகிறது. ஆயினும் இன்றைய நாட்களில் பெரும்பாலான சபை வட்டாரங்களில் இது பெரிதான அளவில் புறக்கணிக்கப்படுகிறது.

இ. மூப்பர்கள் (5:17–25)

5:17 இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதி மூப்பர்களைப் பற்றிப் பேசுகிறது. முதலாவதாக, **நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்கள், இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணப்பட வேண்டும்** என்னும் விதியைப் பவுல் முன்மொழிகிறார். **விசாரணை செய்கிற** என்னும்

சொற்றொடர் "முன்னின்று வழிநடத்துகிற" என்று சிறப்பான முறையில் மொழிபெயர்க்கப்படக் கூடியது (டார்பி). அடக்கியாள்வது என்னும் பேச் சிற்கே அங்கு இடமில்லை, மாறாக முன்மாதிரி என்பதே அதன் பொருளாகும். அப்படிப்பட்ட மூப்பர்கள் **இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரர்** ஆவார்கள். **கனம்** என்னும் சொல் மரியாதை என்று பொருள்படும், ஆனாலும் அவர்களுடைய செலவுகளை ஈடுசெய்தல் என்னும் பொருளும் இதில் அடங்கும் (மத். 15:5). இரட்டிப்பான கனம் என்னும் சொற்றொடரில் இவ்விரண்டு கருத்து களும் உள்ளடங்கியுள்ளன. முதலாவதாக, அவர் செய்கிற வேலையின் காரணமாக இறை மக்களின் மரியாதைக்கு அவர் பாத்திரராக விளங்குகிறார், மேலும் அவர் மூப்பரின் பணி யைச் செய்ய, தனது நேரம் முழுவதையும் செல விடுவாரானால், அவர் பண உதவி பெறுவதற்கும் **பாத்திரராக** இருக்கிறார். திருவசனத்திலும் உப தேசத்திலும் பிரயாசப்படுகிறவர்கள் என்போர் தங் களுடைய மிகுதியான நேரத்தைப் பிரசங்கம் செய்வதிலும், கற்பிப்பதிலும் செலவிடுவதால், ஊதியம் பெறும்படியான அலுவல்களில் நிரந் தரமாகப் பணியாற்ற இயலாதவர்கள் ஆவார்கள்.

5:18 இழப்பீட்டைப் பெறுவதற்கு மூப்பர்கள் தகுதியுடையவர்கள் என்னும் கருத்தை மெய்ப் பிக்கும்படி இரண்டு திருமறைப்பகுதிகள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது உபா கமம் 25:4, இரண்டாவது லூக்கா 10:7. திருமறை தேவ ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட் டவை என்பதன் தொடர்பில் இந்த வசனம் சிறப் பான முறையில் கவனத்தைக் கவருவதாயிருக் கிறது. பழைய ஏற்பாட்டிலிருந்தும் புதிய ஏற்பாட்டி லிருந்தும் ஒவ்வொரு வசனத்தை எடுத்தவராக, இரண்டையும் **வேதவாக்கியம்** என்றுரைத்துப் பவுல் சமநிலையில் குறிப்பிடுகிறார். புதிய ஏற் பாட்டு வசனங்கள் பழைய ஏற்பாட்டு வசனங்களுக் குரிய அதே அதிகாரத்தை உடையவை என்று பவுல் கருதினார் என்பது இவ்வசனத்தின் வாயி லாகத் தெளிவாகப் புலனாகிறது.

அறுவடைத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிற **மாட்டிற்கு** விளைச்சலில் ஒரு பங்கு மறுத்துரைக் கப்படாமல் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த வசனங்கள் கற்பிக்கின்றன. மேலும் **வேலை யாள்** தன்னுடைய வேலையின் பலனைப் பெறப் பாத்திரனாக இருக்கிறான். அது போலவே **மூப்பர் களும்** இருக்கிறார்கள். அவர்களுடைய பணி உடலுழைப்பாக இல்லாதிருந்த போதிலும், இறை மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு அவர்கள் தகுதியானவர்களே ஆவார்கள்.

5:19 சபைகளில் பொறுப்புகள் மிகுந்த இடத்தை மூப்பர்கள் வகிப்பதால், அவர்கள் சாத் தானின் தாக்குதலுக்குத் தனிப்பட்ட வகையில் இலக்காக இருக்கிறார்கள். இதன் காரணமாக, அவர்கள் தவறான குற்றச்சாட்டுகளிலிருந்து காக் கப்படுவதற்கான ஏற்பாடுகளை தேவ ஆவியான வர் எடுக்கிறார். **இரண்டு மூன்று சாட்சிகளின்** சான்றுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லா மலிருந்தால் மட்டுமே **மூப்பருக்கு** எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டு ஒழுங்கு நடவடிக்கை களுக்கென எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று, இதற்கான கொள்கை வகுத்துரைக்கப்பட் டுள்ளது. உண்மையில், சபையின் எந்தவொரு உறுப்பினருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த விதி பொருந்தும், ஆனாலும் மூப்பர்கள் நியாயமில்லாமல் குற்றஞ்சாட்டப்படக் கூடிய பிரத்யேகமான ஆபத்து இருப்பதால் இக் கொள்கை இங்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

5:20 சபையின் சாட்சி குன்றும்படியாகப் **பாவஞ் செய்தவர்** என்று ஒரு மூப்பர் கண்டறியப்படுவா ரென்றால், அந்த மனிதர் எல்லோருக்கும் முன் பாகக் கண்டிக்கப்பட வேண்டும். கிறிஸ்தவ ஊழி யத்தில் பாவம் எவ்வாறு கண்டிக்கப்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை எல்லா விசுவாசி களும் உணர்வதற்கு இத்தகைய நிகழ்ச்சி வழி வகுக்கும். மேலும் இது பிறருடைய வாழ்க்கை யில் வலிமைமிக்க எச்சரிக்கையாக விளங்கும்.

இருபதாவது வசனம் மூப்பர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று சில விரிவுரையாளர்கள் ஒப்புக்கொள்ளாமல், எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும் என்று கருதுகிறார்கள். நிச்சய மாகவே இந்த விதி அனைத்து விசுவாசிகளுக் கும் பொருத்தமுடையது. ஆயினும் இந்த வசனத் தின் பின்னணி இதனை மூப்பர்களோடு நேரடியாக இணைக்கிறது.

5:21 ஓரிடத்தில் இயங்கும் சபையின் ஒழுங்கு நடவடிக்கைகளைக் குறித்த விசயத்தில், தவிர்க் கப்பட வேண்டிய ஆபத்துகள் இரண்டு உள்ளன. முதலாவது பட்சபாதம் மற்றது விசாரிக்குமுன் நிருணயம் பண்ணுதல். ஒரு மனிதனுக்கு எதிரா கப் பட்சபாதம் கொண்டு, அதன் காரணமாக அந்த வழக்கில் சாதகமற்ற முடிவை எடுப்பது எளிது. மேலும் ஒரு மனிதனுடைய ஆளுமையை யும், செல்வத்தையும் அவன் சமுதாயத்தில் வகிக்கும் பதவியையும் கருத்திற்கொண்டு **விசா**

ரிக்குமுன் சாதகமாக **நிருணயம்** பண்ணுவதும் மிக எளிது. ஆகவே **தேவனுடைய** பார்வையிலும், **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** பார்வையிலும், **தெரிந்துகொள்ளப்பட்ட தூதர்களுடைய** பார்வையிலும் தீமோத்தேயு, ஒரு வழக்கின் எல்லா உண்மைகளையும் அறிவதற்கு முன் தீர்ப்புச்செய்யாமலும், தனது நண்பன் அல்லது நன்கு அறியப்பட்டவன் என்னும் காரணத்தினால் சாதகமாகத் தீர்ப்புச் செய்யாமலும் இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று பவுல் கண்டிப்பாக உத்தரவிடுகிறார். ஒவ்வொரு வழக்கும் **தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுவுக்கும்** முன்பாகவும், **தூதர்களுக்கு முன்பாகவும்** நியாயந்தீர்க்கப்பட வேண்டும். நாம் வாழ்கிற இவ்வுலகில் நடப்பன யாவற்றையும் கவனிப்பவர்கள் தூதர்கள். சபைகளில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் நிறைவான நீதியை அவர்கள் காணவேண்டும். தெரிந்து கொள்ளப்பட்ட தூதர் என்போர், பாவத்தில் ஈடுபாடு கொள்ளாமல், அல்லது தேவனுக்கு எதிராகக் கலகம் செய்யாமல் தங்களுடைய முதலாவது இயல்பைத் தொடர்ந்து காத்துக்கொண்டவர்கள் என்பவராவர்.

5:22 புகழ்பெற்ற மனிதர்கள் உள்ளூர் சபைகளில் தங்களை இணைத்துக்கொள்ளும்போது, சில வேளைகளில் அவர்களுக்குப் பொறுப்புகளை உடனடியாக வழங்கக் கூடிய மனப்பான்மை ஏற்படக்கூடும். புதிய நபர்களை அங்கிகரிப்பதில் தீவிரமாகச் செயல்படுவதற்கு எதிராகத் தீமோத்தேயு இங்கு எச்சரிக்கப்படுகிறார். குறிப்பிட்ட நபர்களின் குணநலன்கள் தெரியாத நிலையில் அவர்களோடு தீமோத்தேயு தன்னை இணைத்துக்கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்வதால் அவர்களுடைய **பாவங்களுக்கு உடன்பட** நேரிடுமாதலால் அவர் எச்சரிப்போடு நடந்துகொள்ள வேண்டும். அவர் தன்னுடைய ஒழுக்க நெறியில் தூய்மையைக் **காத்துக்கொள்வது** மட்டுமின்றி, பிறருடைய பாவங்களுக்கு உடன்படாமல், அவற்றோடு எவ்விதத்திலும் தொடர்புகொள்ளாமல் **சுத்தவானாக** விலகியிருக்க வேண்டும்.

5:23 முந்தின வசனத்துடன் இது எவ்வாறு தொடர்புடையது என்பது தெளிவாக இல்லை. ஒரு வேளை தீமோத்தேயு சபையின் பிரச்சினைகளையும் தொல்லைகளையும் சந்திப்பதால், அவருடைய வயிற்றில் தொல்லைகள் ஏற்படக்கூடும் என்று அப்போஸ்தலன் ஞானமாய் எதிர்நோக்கினார் என்று தோன்றுகிறது. அவ்வாறாயின் இவ்விதத் தொல்லைகளினால் இன்னல் அடையக் கூடியவர்களில் தீமோத்தேயு முதலாவது மனிதரோ கடைசி மனிதரோ அல்லர்! பெரும்பாலும் மாசுபடுத்தப்பட்ட நீரின் காரணமாகத் தீமோத்தேயு அவ்வப்போது பாதிக்கப்பட்டிருக்கக் கூடும். இன்றைய நாட்களிலும்கூட உலகத்தின் பல பாகங்களில் தூய்மையான நீர் கிடைப்பதில்லை. சிறிதளவும் **திராட்சைரசத்தைக்** குடிக்காமல் தீமோத்தேயு **தண்ணீரைமட்டும் குடிக்கக்கூடாது** என்பது அப்போஸ்தலனின் அறிவுரை. மேலும் தீமோத்தேயு தனக்கு அடிக்கடி **நேரிடுகிற பலவீனங்களுக்காகவும்** அவருடைய **வயிற்றிற்காகவும் கொஞ்சம் திராட்சைரசமும்** குடிக்க வேண்டும் என்பதே பவுல் கூறிய அறிவுரை. திராட்சைரசம் மருந்தாகப் பயன்படுத்தப்படுவது பற்றியே இந்த வசனம் பேசுகிறது. அதனை அதிக அளவு பயன்படுத்துவதை நியாயப்படுத்துவதற்கு இந்த வசனத்தை ஆதாரமாகக் கொள்ளக் கூடாது. (மதுபானம் - wine என்ற சொல்லே திராட்சைரசம் என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது).

இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையாகவே மதுபானம்தான், வெறுமனே திராட்சை ரசம் அல்ல. அந்த நாட்களில் திராட்சை ரசம் இருந்ததா என்பது ஐயத்திற்குரியது, ஏனெனில் திராட்சை ரசம் நோய்க்கிருமிகள் சாகும்படி வெப்பப்படுத்தப்பட்டு பின்னர் பதப்படுத்தப்பட்டு உண்டாக்கப்படுகிறது. இந்தச் செயல்முறை அக்காலத்தில் வழக்கில் இல்லை. இது உண்மையாகவே மதுபானம்தான் என்பதைக் கொஞ்சம் திராட்சைரசம் என்னும் சொற்றொடர் வெளிப்படுத்துகிறது. இது உண்மையான மதுபானமாக இல்லையென்றால் கொஞ்சம் திராட்சைரசம் கூட்டிக்கொள் என்னும் கட்டளை அர்த்தமற்றதாகக் காணப்படுமே.

இந்த வசனம் தெய்வீக சுகமளிப்பைக் குறித்த பொருளுக்கு விளக்கத்தைத் தருகிறது. பவுல், அப்போஸ்தலன் என்னும் நிலையில் எல்லா விதமான நோய்களையும் குணப்படுத்தும் ஆற்றல் உடையவராயிருந்தார். எனினும் அவ்வாற்றலை எப்பொழுதும் அவர் பயன்படுத்தவில்லை. வயிற்றில் உண்டான நோய்க்கு மருந்து உண்பதை அவர் இங்கு நியாயப்படுத்துகிறார்.

5:24 இருபத்திரண்டாம் வசனத்தில் அப்போஸ்தலன் விவரித்துக்கொண்டிருந்த அதே கருத்தை நோக்கி இந்த வசனத்தில் அவர் மீண்டும் செல்லுகிறார். மிக விரைவாக ஒருவர் மீது கைகளை

வைக்கக் கூடாது என்று தீமோத்தேயு அங்கு எச்சரிக்கப்பட்டார். 24 மற்றும் 25 ஆகிய வசனங்கள் அப்பொருளை மேலும் விவரிக்கின்றன. **சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருக்கின்றன.** அவை எக்காளம் தொனிக்கிற ஒரு மனிதனுக்கு ஒப்பிடப்படக்கூடும் என்பதில் ஐயமில்லை. அந்தப் பாவங்கள் அந்த மனிதனுக்கு முன்பாக எக்காளம் போன்று ஒலியை எழுப்பி அவரைப் பாவி என்று கூறிக்கொண்டே இருக்கும். மேலும் அவை அவருடைய **நியாயத்தீர்ப்பு** வரை அவருடன் செல்லும். ஆனால் இது எல்லா மனிதர்களுக்கும் பொருந்தாது. **சிலருடைய** பாவங்கள் குறிப்பிட்ட காலம்வரை வெளிப்படுத்தப்படுவதில்லை.

முதல் வகையான மனிதர்களைக் குறித்து எண்ணிப்பார்க்கும்போது, ஒரு குடிகாரன் நமது நினைவுக்கு வருகிறான். அவன் அத்தகையவன் என்பது அந்தச் சமுதாயம் அனைத்தும் அறிந்த உண்மையாக விளங்கும். இதற்கு மாறான ஓர் எடுத்துக்காட்டில், ஒரு கணவன் வேறொரு பெண்ணோடு கள்ளத்தனமாக உறவு கொண்டிருக்கிறான். அந்தச் சமயத்தில் அவன் வாழும் குடியிருப்புப் பகுதியில் ஒருவரும் இதனை அறியாதிருப்பார்கள். ஆனால் பின்னொரு சமயம் இந்த வெட்கக்கேடான நிகழ்ச்சி யாவருக்கும் வெளிப்படும்.

5:25 நல்ல மனிதர்களைப் பொருத்தும், இதுவே உண்மையாக இருக்கிறது. சிலர் கண்ட உடனேயே நல்லவர்களாகத் தோற்றமளிக்கிறார்கள். வேறு சிலர் ஒதுங்கி வாழ்கிறவர்களாகவும், தன்னடக்கமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். காலம் செல்லச்செல்லவே அவர்களுடைய உண்மையான நற்குணம் தெரியவரும். அவர்களது நற்குணத்தை நம்மால் காணவியலாது. அவை காலம் கடந்த பின்னரே வெளிச்சத்திற்கு வரும். முதல் முறையாக ஒரு மனிதரைச் சந்தித்த உடனே அவரைக் குறித்து நாம் ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது என்னும் பாடத்தை நாம் இங்கு கற்கிறோம். ஆகவே உண்மையான குணநலன் வெளிப்படுவதற்கு, சிறிது காலம் நாம் பொறுத்திருக்க வேண்டும்.

6. அடிமைகளும் எஜமானரும் (6:1,2)

6:1 அடிமைகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய பொருள் இப்பொழுது நமக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. அவர்கள் **அடிமைத்தன நுகத்திற்குட்பட்டிருக்கிற வேலைக்காரர்** என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள். முதலாவதாக, இரட்சிக்கப்படாத முதலாளிகளைக் கொண்ட அடிமைகளிடத்தில் அப்போஸ்தலன் பேசுகிறார். அந்நிலையில் அடிமைகள் தங்களுடைய எஜமானரிடத்தில் மரியாதையில்லாமல் நடந்து கொள்ளலாமா? அவர்கள் கிளர்ச்சி செய்யலாமா அல்லது அங்கிருந்து ஓடிவிடலாமா? எவ்வளவு குறைவாக வேலைசெய்ய முடியுமோ அவ்வளவு குறைவாக அவர்கள் வேலை செய்யலாமா? இவையெல்லாவற்றிற்கும் மாறாக அவர்கள் **தங்கள் எஜமான்களை எல்லாக் கனத்திற்கும் பாத்திரரென்று** எண்ண வேண்டும். அவர்கள் தங்கள் முதலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்க வேண்டும், கீழ்ப்படிதலோடும் உண்மையோடும் வேலை செய்ய வேண்டும். பொதுவாக அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமேயொழிய தடையாக இருக்கக் கூடாது. அவ்வாறு அவர்கள் கடினமாக உழைப்பதற்குத் தூண்டுகோலாயிருப்பது யாதெனில், அச்செயலில் கிறிஸ்துவின் சாட்சி சம்பந்தப்பட்டுள்ளது என்பதேயாகும். ஒரு கிறிஸ்தவ அடிமை முரட்டுத்தனமாகவோ கிளர்ச்சி செய்கிறவராகவோ நடந்துகொள்வாரெனில், அந்த முதலாளி **தேவனுடைய நாமத்தையும்** கிறிஸ்தவ விசுவாசத்தையும் தூஷிக்கக்கூடும். விசுவாசிகள் யாவரும் கீழ்த்தரமான மனிதர்கள் என்னும் முடிவுக்கும் அவர் வந்துவிடுவார்.

அடிமைகளுக்குள் பொதுவாக அவிசுவாசிகளைக் காட்டிலும் கிறிஸ்தவ விசுவாசிகள் அடிமைச் சந்தையில் நல்ல விலைக்கு விற்கப்பட்டார்கள் என்பது தொடக்க காலக் கிறிஸ்தவ வரலாறு வெளிப்படுத்தும் உண்மையாகும். ஏலம் விடப்படும் அடிமைகளில் ஒருவர் விசுவாசி என்று அறியப்பட்டிருந்தால், அவரை ஏலம் எடுக்கிற முதலாளி பொதுவாக அந்த அடிமைக்கு நல்ல விலை கொடுக்க முன்வருவார். ஏனெனில் அந்த அடிமை விசுவாசி தனக்கு உண்மையோடும் நன்கும் வேலை செய்வார் என்பதை அவர் அறிந்திருப்பார். கிறிஸ்தவ விசுவாசத்திற்கு நல்ல தொரு புகழுரையாக இது விளங்குகிறது.

சமுதாயத்தின் அளவுகோலில், ஒருவர் ஆற்றும் பணி எவ்வளவு தாழ்ந்ததாக இருந்தாலும், அவர் கிறிஸ்துவுக்கென்று சான்று பகர எல்லா விதமான சந்தர்ப்பங்களையும் பெற்றிருக்கிறார், மேலும் அதன் வாயிலாக அவருடைய திருப்பெயருக்குப் புகழ்ச்சியைக் கொண்டுவர முடியும் என்பதை இந்த வசனம் நமக்கு நினைவூட்டுகிறது.

புதிய ஏற்பாட்டில் அடிமைத்தனம் வெளிப் படையாகக் கண்டனம் செய்யப்படவில்லை என்று அவ்வப்போது சுட்டிக்காட்டப்படுகிறது. ஆயினும் கிறிஸ்தவத்தின் பாடங்கள் எங்கும் பரவி விரி வாக்கம் அடைந்தபோது, அடிமைத்தனத்தின் கட்டுமீறிய செயல் ஒழிக்கப்பட்டுவிட்டது.

மெய்யான விசுவாசி ஒவ்வொருவரும், தான் கிறிஸ்து இயேசுவின் அடிமை என்பதை உணர வேண்டும். அவர் ஒரு விலைகொடுத்து வாங்கப் பட்டவர், அந்த விசுவாசி இனிமேல் தனக்கே சொந்தமானவரல்லர். இயேசு கிறிஸ்துவே அவரு டைய உரிமையாளர். அவருடைய ஆவி, ஆத்துமா, சரீரம் யாவும், மேலும் அவரிடத்தில் மிகவும் சிறந் தது எதுவோ அதுவும் கிறிஸ்துவுக்கே சொந்தம்.

6:2 விசுவாசிகளாகிய எஜமான்களை உடைய அடிமைகளைக் குறித்து இந்த வசனம் பேசுகிறது. அந்த அடிமைகள் தங்களுடைய எஜ மான்களை அசட்டைபண்ணக் கூடிய மிகப் பெரி தான சோதனை அவர்களுக்கு எழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கர்த்தருடைய நாளின் மாலைப் பொழுதில் (அப். 20:7) உள்ளூர் சபை விசுவாசிகள் யாவரும் அப்பம்பிட்கும்படி கூடிவந் திருக்கும்போது கிறிஸ்தவ எஜமான்களும் கிறிஸ்தவ அடிமைகளும் மேஜையைச் சுற்றிலும் அமர்ந்திருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட் டிருக்கும் - அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் **சகோதரர் களாக** அமர்ந்திருப்பார்கள். இதன் காரணமாக, வாழ்க்கையில் காணப்படக் கூடிய சமுதாய இடை வெளி நீங்கிப்போய்விட்டது என்று எண்ணங் கொண்டிருக்கக் கூடாது. முதலாளி ஒரு கிறிஸ்த வராக இருந்த காரணத்தால், அடிமை அவருக்கு மரியாதை செலுத்த வேண்டியதில்லை, ஊழியம் செய்ய வேண்டியதில்லை என்னும் பொருள் அங்கு ஏற்படவில்லை. முதலாளி விசுவாசியாக வும் பிரியருமாக இருந்த காரணத்தினால் அடிமை யான விசுவாசி அவருக்கு உண்மையாக வேலை செய்யும்படியாகவே ஏவப்பட்டிருக்க வேண்டும்.

கிறிஸ்தவ எஜமான்கள் இங்கு உண்மையுள்ள வர்களும் **(விசுவாசிகளும்), பிரியருமாயிருக் கிறது** மட்டுமின்றி, **நல்வேலையின் பலனைப் பெற் றுக்கொள்கிறவர்களுமாய்** இருக்கிறார்கள். அவர்கள் இரட்சிப்பின் நன்மைக்குப் பங்காளி களாக இருக்கிறார்கள் என்று பொதுவாக இச் சொற்றொடருக்குப் பொருள் கூறப்படுகிறது. ஆயினும், அடிமைகளும் எஜமான்களும் நன்மை செய்வதில் விருப்பத்துடன் இருக்கின்ற காரணத் தால், அவர்கள் இருசாராரும் இணைந்து பணி புரிய வேண்டும், மேலும் ஒருவருக்கொருவர் உதவிபுரிய முயலவேண்டும் என்றும் இந்தச் சொற்றொடர் புரிந்துகொள்ளப்படுகிறது.

இந்தப்படியே போதித்துப் புத்திசொல்லு என்னும் சொற்கள் கிறிஸ்தவ அடிமைகளுக்குச் சொல்லப்பட்டுள்ள மேற்காணும் அறிவுரைகள் என்பதில் ஐயமில்லை. இன்றைய நாட்களில், இந்த அறிவுரைகள் வேலையில் அமர்த்துபவருக் கும் வேலை செய்பவருக்கும் இடையே உள்ள உறவுக்குப் பொருந்தும்.

6. கள்ளப் போதகர்களும் பண ஆசையும் (6:3-10)

6:3 புதியதும் அந்நியமுமான கோட்பாடு களைக் கற்பிக்க முயலுகிற மனிதர்களை நோக்கி அப்போஸ்தலன் இப்பொழுது திரும்பு கிறார். இந்த மனிதர்கள் **ஆரோக்கியமான வசனங்களை ஒப்புக்கொள்கிறதில்லை. ஆரோக்கியமான** என்னும் சொல் நலன் தருகிற சொற்கள் என்று இங்கு பொருள்படும். அப்படிப் பட்ட **வசனங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து** இப்புவியில் இருந்தபோது பேசியவையும், நற் செய்தி நூல்களில் காணப்படுபவையுமாகும். புதிய ஏற்பாட்டில் காணப்படும் முழு போதகங் களும் அந்த வசனங்களேயாம். **தேவ பக்திக் கேற்ற உபதேசங்களாக** இவை உள்ளன என்று கூறுமிடத்து, இவை தெய்வீக நடத்தையை உற் சாகப்படுத்துபவையாகவும், முன்னேற்றமடையச் செய்பவையாகவும் உள்ளன என்பதே பொரு ளாகும்.

6:4 அப்படிப்பட்ட மனிதர்கள் **இறுமாப்புள்ள வர்கள்**. அவர்கள் மிக மேம்பட்ட அறிவுடையவர் கள் என்று தம்பட்டம் அடித்துக்கொள்கிறார்கள், ஆனால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. பவுல் முன்னர் கூறியதுபோல, தாங்கள் பேசுகிறது இன்னதென்று அறியாதவர்கள் அவர்கள்.

அவர்கள் **தர்க்கங்களிலும் வாக்குவாதங் களிலும்** மட்டுமீறிய அளவில் பற்றுக்கொண்டி ருக்கிறார்கள். இந்த நிலை அவர்களை முற்றுகை போட்டிருக்கிறது, அதாவது இதில் அவர்கள் **நோய்கொண்டிருக்கிறார்கள்.** ஆவிக்குரிய நிலையில் இந்த மனிதர்கள் ஆரோக்கியமான வர்கள் அல்லர். மேலும் அவர்கள் முந்தின வச னத்தில் கூறியிருப்பதுபோல ஆரோக்கியமான வசனங்களைக் கற்பிக்காமல் நோய்வாய்ப்பட்ட பரிசுத்தவான்களை உருவாக்கக்கூடிய சொற் களையே போதித்தார்கள். ஆவிக்குரிய வகை யில் புத்திபுகட்ட ஏதுவாயிராத பல கேள்விகளை

அவர்கள் எழுப்பி, வார்த்தைகளைக் கொண்டு தர்க்கங்கள் செய்கிறார்கள்.

அவர்கள் பேசுகிறவை இறைக் கோட்பாடு களோடு தொடர்பற்றவையாக இருக்கின்ற கார ணத்தால் அவற்றைக் குறித்துத் தீர்மானமாக முடிவு செய்வது என்பது முடியாத செயல். இதன் விளைவாக, அவர்களுடைய போதனைகள் பொறாமைகளையும், சண்டைகளையும், தூஷ ணங்களையும், பொல்லாத சந்தேகங்களையுமே உண்டாக்குகின்றன. இது குறித்துத் திருவாளர் லென்ஸ்கி கூறுகிறார்:

> அவர்களுடைய கேள்விகளிலும், சொற்போரி னால் ஏற்படும் சண்டைகளிலும் மற்றவர்கள் தங்களுடைய திறமையில் அடைந்திருக்கிற முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுகிறார் கள். அவர்களுக்குள்ளாகக் காணப்படும் முரண்பாடுகளின் அடிப்படையில் போட்டியிட்டுச் சண்டை போடுகிறார்கள். அதன் விளைவாகத் தூஷணம் செய்கிறார்கள், அதாவது, அவர் களுடைய பழிச்சொற்கள் புனிதமான வார்த்தை யில் மறைந்திருக்கின்றன.[18]

6:5 கெட்ட சிந்தையுள்ளவர்கள் மூலமாக **மாறுபாடான தர்க்கங்கள்** பிறக்கின்றன. அதா வது, நோய்கொண்ட **சிந்தையுள்ளவர்கள்** மூல மாகவே தர்க்கங்கள் பிறக்கின்றன. லென்ஸ்கி கடுமையான சொற்களால் சாடுகிறார்:

> நோய்கொண்ட நிலையிலுள்ள சிந்தையில் கேடுபாடும் சிதைவுமே அடங்கியுள்ளன. ஒழுக்க நெறிகளிலும் ஆவிக்குரிய செயற் களத்திலும் அத்தகையோரின் மனதின் செயற் கூறுகள் இயல்பானபடி செயல்படுவதில்லை. அவர்கள் சத்தியத்தை எதிர்கொள்ளும்போது இயல்பான முறையில் செயல்புரிவதில்லை. ஒழுக்க நெறியாளர்களிடமும் ஆவிக்குரியவர் களிடமும் உண்மைக் கோட்பாடுகளின் அனைத் துச் சத்தியமும் அதன் அறிமுகமும் ஏற்றுக் கொள்ளப்படுதல் என்னும் விளைவையே ஏற்படுத்த வேண்டும். சிறப்பான முறையில், இரட்சிப்பை உண்டாக்கும் தெய்வீக நற்செய்திச் சத்தியங்கள் இத்தகைய விளைவையே ஏற் படுத்த வேண்டும். இதற்கு மாறாக எல்லாப் பொய்களும் மோசடிகளும் நெறிபிறழ்வு களும் மறுத்துரைக்கப்படவேண்டும். ... கெட்ட சிந்தையோ ''சத்தியத்தைச்'' சந்திக்கும்போது எதிர்ப்பையே காணவும் நாடவும் செய்கிறது; சத்தியத்திற்கு வேறுபாடானதை அது சந்திக்கிற போது, அந்த வேறுபாட்டை ஏற்றுக்கொள்வதற் கான காரணங்களையே அது காணவும் நாட வும் முற்படுகிறது.[19]

மேலும் இந்த மனிதர்கள் **சத்தியமில்லாத வர்கள்.** ஒரு காலத்தில் அவர்கள் சத்தியத்தோடு தொடர்பு கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் கள் வெளிச்சத்தை வேண்டாமென்று மறுத் துரைத்ததாலே, அவர்கள் பெற்றிருந்த **சத்தியம்** அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது.

இந்த மனிதர்கள் **தேவபக்தியை ஆதாயத் தொழிலென்று எண்ணுகிறார்கள்**. அவர்கள் சமயக் குருக்கள் என்னும் நிலையைத் தங்களு டைய தொழிலாகத் தெரிந்துகொண்டு, கொஞ்ச மாக உழைத்து நிறைய வருமானத்தைப் பெறு கிறார்கள். "அவர்கள் அதிதூய தெய்வீகத் தொண் டிற்கான அழைப்பைப் பணம் ஈட்டும் கலையாக மாற்றுகிறார்கள்."

கிறிஸ்தவத் திருப்பணி ஆற்றுபவர்கள் என்று தங்களைக் காட்டிக்கொண்டு சத்தியத்தின்மீது சற்றேனும் பற்று இல்லாதவர்களாக, கூலிக்கு வேலைசெய்யும் போலி மேய்ப்பர்களையே இது நம்முடைய நினைவிற்குக் கொண்டுவருகிறது. மேலும், இந்நிலை இன்றைய நாட்களில் கிறிஸ் தவ உலகில் அனைத்தும் வணிக மனப்பான்மை யாக மாறிவிட்டன என்பதையும் நினைவுபடுத்து கிறது - பாவ மன்னிப்புச் சீட்டுகள், பரிசுக் குலுக் கல்கள், சபை வளாகங்களில் பல்வகை பொருட் கள் விற்பனை செய்யப்படுதல். இப்படிப்பட்டவர் களை விட்டுவிலகு.[20] இத்தகைய பாவம் நிறைந்த மனிதர்களை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டு மென்று நாம் கட்டளை பெற்றிருக்கிறோம்.

6:6 ஆதாயம் என்னும் சொல்லின் தவறான பொருள் என்னவென்பதை முந்தின வசனம் எடுத்துரைப்பது போலவே, இந்த வசனம் அதனு டைய சரியான பொருளைத் தருகிறது. **போது மென்ற மனதும் தேவபக்தியும்** ஒன்றிணைந்த நிலையே ஆதாயம் ஆகும். போதுமென்ற மனதில் லாத தேவபக்தி சாட்சியின் ஒரு பக்கத்தை மட் டுமே தரக்கூடியதாக இருக்கிறது. தேவபக்தியில் லாத போதுமென்ற மனது தனிச்சிறப்பு வாய்ந்த கிறிஸ்தவ குணநலமென்று கூறுவதற்குச் சற்றே னும் இடமில்லை. ஆனால், உண்மையான தேவ பக்தியையும், அதே நேரத்தில் ஒரு தனிப்பட்ட சூழ் நிலையில் மனநிறைவையும் கொண்டிருப்பது பணத்தால் பெறுவதைக் காட்டிலும் மேலானது.

6:7 இந்த அதிகாரம், கர்த்தராகிய இயேசு மலைப்பிரசங்கத்தில் கற்பித்துள்ளவற்றை ஒத்திருக்கிறது. நம்முடைய தேவைகளுக்கு நாம் நம்முடைய விண்ணகத் தந்தையையே நம்பியிருக்க வேண்டும் என்று அவர் கற்பித்ததை இந்த ஏழாவது வசனம் நினைவுபடுத்துகிறது.

நம்முடைய வாழ்க்கையில் நாம் மூன்றுமுறை வெறுங்கையோடு இருக்கிறோம்: பிறப்பின்போது, இயேசு கிறிஸ்துவினிடம் வரும்போது, மரணம் அடையும் போது. இந்த வசனம் முதலாவது நேரத்தையும் கடைசிநேரத்தையும் நினைவூட்டுகிறது. **உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்.**

மகா அலெக்ஸாண்டர் மரணம் அடைவதற்கு முன்னர் அவர் கூறியதாவது: "நான் இறந்தவுடன், என்னுடைய கைகள் துணியால் சுற்றப்பட்ட வண்ணம், வெளியே தொங்கவிடப்பட்டபடி சவப்பெட்டியில் என்னைக் கிடத்திக் கொண்டு செல்லுங்கள். அவை வெறுமையாக இருப்பதை எல்லோரும் காண்பார்கள்." பேட்ஸ் என்பார் இதைக் குறித்துத் தனது கருத்தை வெளியிடுகிறார்:

> "ஆம், ஒரு காலத்தில் இவ்வுலகில் அந்தக் கரங்கள் செங்கோல் ஏந்தி அரசாட்சி செய்து வந்தன; ஒரு காலத்தில் அவை மிகுந்த வெற்றிகளைத் தேடித் தந்த பட்டயத்தை ஏந்தியிருந்தன; ஒரு காலத்தில் அவற்றிற்கு உயிரைக் காப்பாற்றவும் அதனை அழிக்கவும் ஆற்றல் இருந்தன. இப்பொழுதோ அவை வெறுமையாய் இருக்கின்றன." [21]

6:8 வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்படும்போது போதுமென்ற மனது மனநிறைவு அடைகிறது. நமக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் தேவை என்பதை நம்முடைய விண்ணகத் தந்தை அறிந்திருக்கிறார். அவிசுவாசியினுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி உணவையும் உடையையுமே சுற்றி வருகிறது. கிறிஸ்தவன் முதலாவது இறையரசையும் அதனுடைய நீதியையும் நாடவேண்டும். அப்பொழுது அவனுடைய வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகள் குறைவுபடாதபடி தேவன் பார்த்துக் கொள்வார்.

உடுக்கவும் என்று இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் நாம் அணிகிற ஆடையைக் குறிப்பதாக இருந்த போதிலும், நாம் வசிக்கிற இடத்தையும் உட்கொண்டதாகவே இருக்கிறது. நாம் **உண்ண** உணவும், **உடுக்க** ஆடையும், வசிப்பதற்கு இடமும் பெற்றிருப்போமெனில், அதில் மனநிறைவு கொண்டு **போதுமென்றிருக்க** வேண்டும்.

6:9 ஒன்பது முதல் பதினாறாம் வசனம் வரை, மனநிறைவே அடையாமல் பெரும் செல்வந்தராக வேண்டும் என்று **விரும்புகிறவர்களைப்** பற்றிப் பேசுகின்றன. செல்வந்தர்களாக இருப்பதில் எவ்விதப் பாவமும் இல்லை. அவ்வாறு ஆகவேண்டும் என்று இச்சைகொள்வதே பாவம். ஐசுவரிய வான்களாக விரும்புகிறவர்கள் உணவும், உடையும், தங்க இடமும் போதுமென்ற மனநிறைவு அற்றவர்களாகத் தங்களுக்கு இன்னும் மிகுதியாக வேண்டும் என்று எண்ணுகிறவர்கள்.

செல்வந்தனாக வேண்டும் என்னும் விருப்பம் ஒரு மனிதனை, **சோதனையை** நோக்கி நடத்துகிறது. அவன் தனது இலக்கை அடையும்படியாக, நேர்மையற்றதும் வன்முறையுமான வழியைப் பயன்படுத்தும்படி கவரப்படுகிறான். அவையாவன: சூதாட்டம், இலாபத்தைக் கருதித் துணிவுடன் செய்யப்படும் வணிகம், ஏமாற்றி மோசடி செய்தல், வாக்குத் தவறுதல், களவு, கொலை. அப்படிப்பட்ட மனிதன் **கண்ணியில்** அல்லது சூழ்ச்சியில் சிக்கிக்கொள்கிறான். அவன் தன்னை அதிலிருந்து விடுவிக்கக் கூடாதபடி, அவனுடைய விருப்பம் தீவிரம் வாய்ந்ததாக இருக்கிறது. தன்னுடைய வங்கிக்கணக்கின் இருப்புத்தொகை ஒரு குறிப்பிட்ட அளவை எட்டியவுடன் தன்னுடைய தவறான வழியை நிறுத்தப்போவதாகத் தனக்குத் தானே அவன் வாக்குறுதி கொடுக்கக் கூடும். அவன் அந்த இலக்கை அடைகிறபோது அவனுக்கு இன்னும் மிகுதியாகப் பணம் சேர்க்க வேண்டும் என்னும் ஆவல் பெருகுகின்ற காரணத்தால் அவனால் அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியவில்லை. பண ஆசை அவனுடைய ஆத்துமாவை அலைக்கழிக்கக் கூடிய கவலைகளையும் பயத்தையும் கொண்டு வருகிறது. செல்வந்தராக வேண்டுமென்று எண்ணுகிற மனிதர்கள் **மதிகேடு** நிறைந்த **பலவித இச்சைகளுக்குள்ளாக** வீழ்ந்துபோகிறார்கள். "அயலகத்தாருக்கு ஒப்பாக வாழ வேண்டும்" என்னும் விருப்பம் அங்கு தோன்றுகிறது. தான் வசிக்கும் குடியிருப்புப் பகுதியில் சமுதாயச் செல்வாக்குடன் தொடர்ந்து இருக்க வேண்டும் என்னும் எண்ணம், வாழ்க்கையின் சிறந்த குறிக்கோள்களை இழக்கக்கூடிய நிலைக்கு அவர்களை அவ்வப்போது தள்ளிவிடுகிறது.

மேலும் அவர்கள் **சேதம்** விளைவிக்கக் கூடிய **இச்சைகளிலும்** விழுகிறார்கள். செல்வத்தின் மீதுள்ள ஆசை மனிதர்களுடைய உடல் நலத்திற்கு இடருண்டாக்குவதோடு, அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு ஆபத்தையும் விளைவிக்கிறது. உண்மையிலேயே, அந்த முடிவை நோக்கித்தான் அவர்கள் விலகிச் செல்கிறார்கள். அவர்களுடைய செயல்பாடுகளெல்லாம் உலக ஆதாயத்தை நாடியவையாக இருக்கின்ற காரணத்தால், அவர்கள் **கேட்டிலும் அழிவிலும்** அமிழ்ந்து போகிறார்கள். அவர்கள் பொன்னை நாடி முடிவில்லாமல் தேடி அலைந்து, ஒருக்காலும் அழியாத ஆத்துமாக்களைப் புறக்கணித்து விடுகிறார்கள். திருவாளர் பார்னஸ் எச்சரிக்கிறார்:

> அழிவு நிறைவாய் இருக்கிறது. மகிழ்ச்சி, நற்குணம், மதிப்பு ஆகியவை முழுவதும் பாழடைந்து இருக்கின்றன. ஆத்துமாக்களும் அவ்வித நிலையில்தான் இருக்கின்றன. செல்வந்தராக வேண்டுமென்னும் விருப்பம் இங்குள்ள எல்லா மேன்மைகளையும் மற்றும் இனிவரும் எல்லா மேன்மைகளையும் அழிக்கத்தக்க வழியில் இழுத்துச் செல்கிறது. எத்தனை குடும்பங்கள் இவ்வாறு அழிந்து போயின![22]

6:10 பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாத் தீமைகளும் **பண ஆசையிலிருந்து** உற்பத்தியாகிறதில்லை. ஆனால் பல வகையான தீமைகள் உருவாக இது மிகப்பெரிய ஆதாரமாயிருக்கிறது என்பது நிச்சயம். எடுத்துக்காட்டாக இது பொறாமை, சண்டை, களவு, நேர்மையற்ற தன்மை, குடிப்பழக்கம், தேவனை மறந்த நிலை, தன்னலம், மோசடி செய்தல், இன்னபிற தீமைகளுக்கு வழிகோலாக இது விளங்குகிறது.

இங்கு பணத்தைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. மாறாக **பண ஆசையைப்** பற்றியே பேசப்பட்டுள்ளது. கர்த்தருடைய பணியில் பணம் பலவிதமான வழிகளில் பயன்படுத்தப்படுகிறது, அவையாவும் நன்மை விளைவிக்கும். ஆனால் மிதமிஞ்சிய பண ஆசை பாவத்தினிடமும் அவமானத்தினிடமும் மனிதனை வழிநடத்துகிறது.

பண ஆசையினால் உண்டாகிற ஒரு குறிப்பிட்ட தீமை இப்பொழுது குறிப்பிடப்பட்டுள்ளது, அதாவது கிறிஸ்தவ **விசுவாசத்தைவிட்டு** விலகிப்போகிற தீமை. பொன்னை விரும்பி கடுமுயற்சியில் ஈடுபடுகிற மதியீனமான செயலின் காரணமாக, அந்த மனிதர்கள் தங்களுக்கு ஆவிக்குரிய செயல்பாடுகளைப் புறக்கணித்து, அவர்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டவர்கள்தானா என்ற கூறுவதற்கு அரிதானவர்களாக மாறிவிடுகிறார்கள்.

ஆவிக்குரிய குறிக்கோள்களின்மேல் கொண்ட பற்றை விட்டுவிடுவது மட்டுமின்றி, அவர்கள் **அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்.** செல்வத்தின் மீது கொண்ட பேராசையோடு இணைந்துள்ள வேதனைகளைக் குறித்து எண்ணிப்பாருங்கள்! அங்கே வீணாகிப்போன வாழ்க்கையைக் குறித்த சோகம் உண்டாயிருக்கும். அவர்களுடைய பிள்ளைகள் உலகத்திற்குள்ளாக இழந்துபோன வர்களாகப் போய்விட்ட வேதனை காணப்படும். ஒருவருடைய செல்வம் முழுவதும் ஒரே இரவில் மறைந்துபோகிற துக்கம் காணப்படும். இரட்சிக்கப்படாத நிலையில் அல்லது வெறுங்கையோடு தேவனைச் சந்திக்கக் கூடிய அச்சம் அங்கே உண்டாயிருக்கும்.

பிஷப் J. C. ரைல் என்பார் இதனுடைய கருத்துச் சுருக்கத்தை வரைந்து தருகிறார்:

> உண்மையில், போதுமென்ற மனநிறைவைச் சற்றேனும் தராதவற்றில் பணமும் ஒன்று. சில கவலைகளை இது நம்மை விட்டு அகற்றுவது உண்மைதான்; ஆனால் இது நம்மைவிட்டு அகற்றுகிற கவலைகளைப்போல பலவிதமான கவலைகளைக் கொண்டு வருகிறது. பணத்தைப் பெறுவதில் தொல்லைகள் உள்ளன. அதனைத் தொடர்ந்து வைத்திருப்பதில் மனக் கவலை உண்டாகிறது. அதனை பயன்படுத்துவதில் சோதனைகள் எழுகின்றன. அதனைத் தவறாகப் பயன்படுத்தும்போது குற்ற வுணர்வு ஏற்படுகிறது. அதை இழக்கும்போது வருத்தம் உண்டாகிறது. அதனைப் பகிர்ந்து கொடுக்கும் போது குழப்பம் ஏற்படுகிறது. உலகில் உண்டாகிற சண்டைகள், பூசல்கள், நீதிமன்ற வழக்குகள் ஆகியவற்றில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான் – அதுதான் பணம்![23]

ஒரு சமயத்தில் உலகிலேயே பெருஞ் செல்வந்தராக இருந்த மனிதர் எண்ணெய்க் கிணறுகள், எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள், எண்ணெய்க் கப்பல்கள், எண்ணெய்க் குழாய்கள், மற்றும் தங்கும் விடுதிகள், காப்புறுதி நிறுவனம்,

நிதிநிறுவனம், விமானப் போக்குவரத்து நிறுவனம் ஆகியவற்றைச் சொந்தமாக வைத்திருந்தார். ஆனால் அவர் தனது 700 ஏக்கர் பரப்பில் அமைந்திருந்த பண்ணையைச் சுற்றிலும் பாதுகாவலர்களையும், மூர்க்கத்தனமான நபர்களையும், இரும்பு வேலிகளையும், பலதிசைகளில் ஒளிவீசும் விளக்குகளையும், மணிகளையும், அபாய அறிவிப்புச் சங்குகளையும் நிறுவியிருந்தார். அவர் விமானங்களையும், கப்பல்களையும், கிறுக்கர்களையும் பற்றி அச்சம் கொண்டிருந்தது மட்டுமின்றி நோய்கள், வயது முதிர்ச்சி, உதவியற்ற நிலை, மரணம் ஆகியவற்றைக் குறித்தும் அச்சம்கொண்டிருந்தார். அவர் தனிமையிலும் மகிழ்ச்சியற்ற நிலையிலும் இருந்ததோடு, மகிழ்ச்சியைப் பணத்தால் வாங்க முடியாது என்றும் ஒப்புக்கொண்டார்.[24]

7. தீமோத்தேயுவுக்கு அளிக்கப்பட்ட இறுதி அறிவுரைகள் (6:11-21)

6:11 இங்கு தீமோத்தேயு **தேவனுடைய மனிதன்** என்று அழைக்கப்படுகிறார். பழைய ஏற்பாட்டில் இந்தப் பட்டம் பெரும்பாலும் தீர்க்கதரிசிகளுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், நடத்தையில் தேவனைப் போன்ற மனிதர் என்றும் அத்தகையோர் விவரிக்கப்பட்டிருந்தார்கள். தீமோத்தேயுவுக்கு தீர்க்கதரிசன வரம் அளிக்கப்பட்டிருந்தது என்பதை இச்சொற்றொடர் குறிக்கக் கூடும். தேவனுடைய மனிதன் என்பதற்கு எதிர்மறை "பாவமனிதன்", இதனை நாம் 2 தெசலோனிக்கேயரில் 2 -ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். அவனைப் பற்றிய அனைத்தும், மனிதர்கள் பாவத்தைக் குறித்து நினைக்கும்படியே செய்யும். தீமோத்தேயு தேவனுடைய மனிதனாக இருக்க வேண்டும். மனிதர்கள் தேவனை நினைக்கும்படி செய்வதும் மகிமைப்படுத்தச் செய்வதுமே தீமோத்தேயு செய்யவேண்டிய செயல்.

கிறிஸ்துவுக்கு அவர் ஆற்றும் பணியில், தீமோத்தேயு தற்செருக்கையும் (வச. 4), பரிசுத்த மற்றதையும் (வச. 5), மனநிறைவற்ற தன்மையையும் (வச. 6-8), மதியீனமானதும் இடர் விளைவிக்கக் கூடியதுமான இச்சைகளையும் (வச. 9), பண ஆசையையும் (வச. 10) **விட்டு ஓட**வேண்டும். அவர் கிறிஸ்தவ குணநலனைத் தன்னகத்தே வளர்க்க வேண்டும். அது ஒன்றையே அவர் தன்னோடு விண்ணகத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். கிறிஸ்தவ நன்னடத்தையின் மூலக்கூறுகளாக இங்கு **நீதி, தேவபக்தி, விசுவாசம், அன்பு, பொறாமை, சாந்தகுணம்** ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

நீதி என்பது பிறரிடம் ஈடுபடுகிற செயல்களில் நாம் நியாயத்தோடும் நேர்மையோடும் நடக்க வேண்டும் என்று கூறுகிறது. **தேவபக்தி** என்பது தேவசாயலில் நடப்பதாகும். **விசுவாசம்** உண்மையுள்ள தன்மை அல்லது நம்பத்தகுந்த தன்மையைக் குறிக்கும். நாம் தேவனிடத்திலும் உடன் மனிதர்களிடத்திலும் காட்டுகிற பாசமே **அன்பு.** சோதனையின் காலத்தில் காட்டுகிற சகிப்புத்தன்மை அல்லது மனஉறுதியே **பொறுமை** ஆகும். தயவு, தாழ்மை ஆகிய நற்குணங்களே **சாந்தகுணம்** ஆகும்.

6:12 *விட்டோடுதல், பின்பற்றுதல்* என்பவை மட்டும் தீமோத்தேயு செய்ய வேண்டியவை என்று சொல்லப்படாமல், அவர் **போராட** வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இங்கு போராடுதல் என்னும் சொல் சண்டைபோடுதல் என்னும் பொருளைத் தருகிறதில்லை. மாறாக, கடும் முயற்சி செய்தல் என்பதே அதன் பொருள். அந்தச் சொல் போர்க்களத்திலிருந்து எடுக்கப்படவில்லை, மாறாக விளையாட்டுப் போட்டியிலிருந்து எடுக்கப்பட்டது. கிறிஸ்தவ விசுவாசமும் அதனோடு சேர்ந்த ஓட்டப்பந்தயமும் **நல்ல போராட்டம்** என்று இங்கு கூறப்பட்டுள்ளது. அந்த ஓட்டத்தில் தீமோத்தேயு நன்கு ஓடவேண்டும். அவர் **நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ள** வேண்டும். அவர் தனது இரட்சிப்புக்காகக் கடும் முயற்சி செய்ய வேண்டுமென்பது இதன் பொருளன்று. அது ஏற்கனவே அவருடைய உடைமைப் பொருளாக இருந்தது. தனக்கு ஏற்கனவே சொந்தமாயிருந்த **நித்திய ஜீவனை** அவர் தனது ஒவ்வொரு நாள் வாழ்விலும் வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதே இங்கு கூறப்பட்டுள்ள கருத்து.

தீமோத்தேயு மனந்திரும்பிய நேரத்திலே, **நித்திய ஜீவனுக்கான** அழைப்பைப் பெற்றார். மேலும் அவர் **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவருமாக** இருந்தார். அவர் மனந்திரும்பியதற்குப் பிறகு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்காக வாழ்ந்த சாட்சியுள்ள வாழ்க்கை முழுவதையும் இது குறிப்பதாக இருந்தாலும், அவருடைய திருமுழுக்கைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டக் கூடியதாக இருக்கிறது.

613,14 இப்பொழுது அப்போஸ்தலன் தீமோத்தேயுவிடம் முக்கியத்துவம் வாய்ந்த கட்டளையை ஒப்படைக்கிறார். அவ்வாறு அவர் அதனைச் செய்

யும்போது மிகப்பெரிதான சாட்சிகளுக்கு முன் பாகச் செய்கிறார். முதலாவதாக, **எல்லாவற்றை யும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலே** அவர் அந்தக் கட்டளையைக் கொடுக்கிறார். பவுல் இதனைத் தீமோத்தேயு வுக்கு எழுதுகையில், அவர் கர்த்தருக்காகச் செய் கிற அறிக்கையின் காரணமாக ஒருநாள் தனது உயிரைக் கொடுக்க நேரிடும் என்பதைப் பெரும் பாலும் உணர்ந்திருப்பார் என்றே தோன்றுகிறது. அவ்வாறாயின், இவ்விளம் போர்வீரர் **எல்லா வற்றையும் உயிரோடிருக்கச் செய்கிறவர்** தேவன் தாம் என்பதை நினைவிற்கொள்வது நல்லது. ஒரு வேளை தீமோத்தேயுவைக் கொலை செய்வதில் மனிதர்கள் வெற்றி பெற்றாலும்கூட இறந்தோரை உயிரோடு எழுப்புகிற ஒருவர்மீது அவர் நம் பிக்கை கொண்டிருப்பார்.

இரண்டாவதாக, **கிறிஸ்து இயேசுவுக்கு** முன் பாக அந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது. **நல்ல அறிக்கைக்கு** அவரே மிகப்பெரிய எடுத்துக் காட்டு. **பொந்தியு பிலாத்துவுக்கு முன்னின்று** அவர் **நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங் கப் பண்ணினார்.** ரோம ஆளுநருக்கு முன்பாக இரட்சகர் கூறிய சொற்களையும் செய்த செயல் களையும் இது மொத்தமாகக் குறிப்பிடக்கூடு மென்றாலும், பெரும்பாலும் யோவான் 18:37 -இல் காணப்படும் அவருடைய அறிக்கையையே சிறப்பாகக் குறிப்பிடுகிறது எனலாம்: "சத்தியத் தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்." சற்றேனும் துணிவிழக்காத வகையில் சொல்லப் பட்ட அறிக்கை, தீமோத்தேயுவிடம் எடுத்துக் காட்டாகச் சுட்டிக்காட்டப்பட்டு, சத்தியத்திற்குச் சாட்சிபகர அவர் இதனைப் பின்பற்ற வேண்டும் என்று கற்பிக்கப்படுகிறார்.

இந்தக் கற்பனையைத் தீமோத்தேயு **கைக் கொள்ள** வேண்டுமென்ற கட்டளையைப் பெறு கிறார். அவர் நல்ல போராட்டம் போராட வேண் டும் என்று சொல்லப்பட்டுள்ள கட்டளையை இது குறிப்பிடுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். இந்த மடலில் தீமோத்தேயுவுக்குக் கொடுக் கப்பட்டுள்ள அனைத்துக் கட்டளைகளையும் இது குறிப்பிடுகிறது என்று வேறு சிலர் நினைக்கிறார் கள். கற்பனை என்று இங்கு சொல்லப்பட்டுள்ளது சுவிசேஷச் செய்தி என்றும், திருமறையில் கொடுக் கப்பட்டுள்ளபடி தேவனுடைய வெளிப்பாடு என் றும், இன்னும் சிலர் கருதுகிறார்கள். கிறிஸ்தவ விசுவாசத்தின் சத்தியத்தைத் தொடர்ந்து கைக் கொள்ள வேண்டும் என்னும் கட்டளையையே இது குறிக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

மாசில்லாமலும் குற்றமில்லாமலும் என்னும் சொற்றொடர்கள் தீமோத்தேயுவுக்கு உரியதாய்க் கருதவேண்டுமேயொழிய அந்தக் கற்பனை யோடு தொடர்புடையதல்ல. அந்தக் கற்பனை யைக் கைக்கொள்வதில் தீமோத்தேயு தனது சாட்சியை **மாசில்லாமலும்** கண்டிக்கப்படாத வண்ணமும் காத்துக்கொள்ள வேண்டும்.

புதிய ஏற்பாட்டு நூலில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னமாகுதல் தொடர்ந்து விசுவாசிக்கு முன்பாகக் கொண்டுவரப்படுகிறது. கிறிஸ்துவுக்கு உண்மையாயிருத்தல், கிறிஸ்து வின் நியாயாசனத்தில் பரிசுப்பொருளைப் பெறும். கர்த்தராகிய இயேசு இப்புவியில் தமது அரசை நிறுவும்படி மீண்டும் வருகிறபோது அந்தப் பரிசுப் பொருட்கள் வெளியரங்கமாக்கப்படும். அதன் பிறகே உண்மையாயிருந்ததன் அல்லது உண் மையில்லாமல் இருந்ததனுடைய பயன் மிகத் தெளிவாக வெளியரங்கமாகும்.

6:15 இந்த வசனத்திலும் இதற்கு அடுத்த வசனத்திலும் காணப்படும் பிரதிப்பெயர்ச் சொற் கள் திருத்தந்தையாகிய இறைவனைப் பற்றிய வையா, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி யவையா என்பதில் வேதஅறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. 15 -ஆவது வசனத்தை மட்டும் எடுத்துக்கொள்வோமெனில், அவரே என்னும் சொல் கர்த்தராகிய இயேசுவைக் குறிப்பதாகவே தோன்றுகிறது. ஏனெனில் வெளிப் படுத்தின விசேஷத்தில் 17:14 -ஆம் வசனத்தில், அவரே **ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர்** என்று வெகுநிச்சயமாய் அழைக்கப்படுகிறார். இதற்கு மாறாக 16 -ஆவது வசனம் பிதாவாகிய தேவ னைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறது.

அது எதுவாயினும், 15 -ஆவது வசனத்தின் பொருள் என்னவென்று காண்போம்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆட்சிபுரியும்படி இவ்வுலகிற்கு மீண்டும் வருகிறபோது, அவரே **நித்தியானந்த முள்ள ஏகசக்கராதிபதி** என்பதை மனிதர்கள் அறிவார்கள். மெய்யான **ராஜா** யார் என்பதை அவருடைய பிரசன்னமாகுதல் வெளிப்படுத்தும். தீமோத்தேயுவுக்கு இம்மடலைப் பவுல் எழுதிய போது, கர்த்தராகிய இயேசு நிராகரிக்கப்பட்ட வராக இருந்தார், அவர் இன்னமும் அந்நிலையி லேயே இருக்கிறார். ஆனால் ஒரு நாள் வரப் போகிறது, அந்நாளில் அரசாட்சி செய்கிற எல்லோ

ருக்கும் ராஜாவாக அவர் விளங்குவார். கர்த்தாக்களாக ஆளுகிற அனைவரையும் ஆளுகிற கர்த்தராக அவர் திகழ்வார்.

நித்தியானந்தமுள்ளவர் என்னும் சொல் போற்றுதற்குத் தகுதியுள்ளவர் என்னும் பொருளை மட்டுமின்றி, தமக்குள்ளாகவே எல்லா ஆசிர்வாதங்களையும் கொண்டிருக்கிறவர் என்னும் பொருளையும் தருகிறது.

6:16 கர்த்தராகிய இயேசுவின் வருகையின் போது தேவன் **ஒருவரே சாவாமையுள்ளவர்** அல்லது மரணமற்ற தன்மை உடையவர் என்பதை மனிதர்கள் அறிந்துகொள்வார்கள். அவர் ஒருவரே இத்தன்மையை இயல்பான நிலையில் தமக்குரியதாய்க் கொண்டிருப்பவர் என்பதே இதன் பொருளாகும். தேவதூதர்களுக்குச் சாவாமை வழங்கப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுதல் நிகழும்போது விசுவாசிகளுக்குச் சாவாமை வழங்கப்படும் (1 கொரி. 15:53,54). ஆனால் தேவனோ தமக்குள்ளாகச் **சாவாமை** உள்ளவராயிருக்கிறார்.

அடுத்ததாக, தேவன் **சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர்** என்று குறிப்பிடப்பட்டுள்ளார். தேவனுடைய அரியணையைச் சூழ இருக்கும் பிரகாசமுள்ள பளிச்சிடும் மகிமையை இது குறிக்கிறது. இந்தச் சுடரொளியில், மனிதனுடைய இயல்பான நிலையில் ஆவியைப்போல கரைந்துபோவான். பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும் கிறிஸ்துவுக்குள் நிறைவானவர்களுமாகிய மனிதர்கள் மட்டுமே அழிவைக் காணாமல் தேவனை அணுகமுடியும்.

தேவனுடைய இன்றியமையா அடிப்படைக் கூறுகளின்படி, அவர் **மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறார்.** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய தரிசனத்தை மனிதர்கள் கண்டார்கள். அவை கடவுட் காட்சிகள் என்று அழைக்கப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில்,தேவனுடைய நேச குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமையில், தேவன் தம்மையே நிறைவாக வெளிப்படுத்தியிருக்கிறார். இருந்தபோதிலும், தேவன் மாளும் மனிதர்களால் காணக்கூடாதவர் என்பது உண்மையாயிருக்கிறது.

அவர் ஒருவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உரியவை. பவுல் தீமோத்தேயுவுக்கு வழங்கிய கட்டளையை தேவனுக்குச் செலுத்தத்தக்க புகழுரையோடு முடிக்கிறார்.

6:17 செல்வந்தராக வேண்டும் என்று விரும்புகின்ற மனிதர்களைக் குறித்துப் பவுல் முன்னமே விரிவாய்ப் பேசினார். இங்கு அவர் ஏற்கனவே செல்வந்தர்களாக இருக்கிறவர்களைப் பற்றி விவரிக்கிறார். அவர்கள் **இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாக** இருக்கக்கூடாது என்று தீமோத்தேயு கட்டடைளயிட வேண்டும். இந்நிலை செல்வந்தர்களுக்கு ஏற்படக்கூடிய சோதனையாக இருக்கிறது. இவர்கள் திரளான செல்வம் இல்லாதவர்களை அருவருப்பானவர்கள், அநாகரிகமானவர்கள், புத்தியில்லாதவர்கள் என்று ஏளனமாக நினைக்கக்கூடும். உண்மையில் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்பது கட்டாயமல்ல. பழைய ஏற்பாட்டில் காணப்படுவது போல, திரளான செல்வம் தேவனுடைய ஆசிர்வாதத்தின் அடையாளமாகப் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை. நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக, திரளான செல்வம் தெய்வீக அருட்கொடையின் அடையாளமாகக் கருதப்பட்டது. ஆனால் புதிய காலப்பாகுபாட்டில் துன்பம் அனுபவிப்பதே பெரிதான ஆசிர்வாதமாகும்.

நிலையற்ற தன்மையுடைய ஐசுவரியத்தின் மீது செல்வந்தர் **நம்பிக்கை** வைக்கக்கூடாது. இறக்கை முளைத்து பறந்து சென்றுவிடக்கூடிய தன்மையுடையது பணம். திரளான செல்வம் நமக்குப் பாதுகாப்பைத் தருவதாகத் தோன்றினாலும், இவ்வுலகில் இறைவனின் திருமறை ஒன்றே நிலையானது என்பதே உண்மை.

ஆகவே, **நாம் அனுபவிக்கிறதற்குச் சகல விதநன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல்** செல்வந்தர் நம்பிக்கைவைக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். செல்வத்தின் மீது நம்பிக்கை கொள்ளாமல் அதனை வைத்திருப்பது என்பது, அதனுடைய மிகப்பெரிய கண்ணிகளில் ஒன்றாக இருக்கிறது. மேலும் இது சிலை வணக்கத்தின் ஒருவகையான முறைமையாக விளங்குகிறது. **நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும்** கொடுக்கிறவர் தேவனே என்னும் உண்மையை மறுத்துரைப்பதாகவும் இது இருக்கிறது. சுகபோக ஆடம்பர வாழ்க்கை இந்த வசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதக்கூடாது. மாறாக உண்மையான மகிழ்ச்சிக்கு தேவனே ஆதாரமாகத் திகழ்கிறார். பொருட்செல்வத்தினால் இந்த மகிழ்ச்சியான அனுபவத்தை உருவாக்க முடியாது.

6:18 ஒரு கிறிஸ்தவன் வைத்திருக்கிற பணம் அவனுக்குச் சொந்தமானதல்ல என்று இங்கு நினைவுபடுத்தப்படுகிறான். அது அவனிடம் உக்கிராணக்காரன் என்னும் நிலையில் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை அவன் தேவனுடைய மகிமைக்கென்று பயன்படுத்த வேண்டும். மேலும் அவன் அதனைத் தனது உடன் மனிதர்களுடைய நலன் கருதிச் செலவிடவேண்டும். அவன் அதனை நற்கிரியைகளை நிறைவேற்றுவதற்கென்றும், தேவையுள்ளோருக்குப் பகிர்ந்து கொடுக்கிற திலும் செலவிட வேண்டும்.

"உங்களால் செய்யமுடிந்த எல்லா நற்செயல்களையும் செய்யுங்கள், அவற்றை எந்த வழிகளில் எல்லாம் செய்ய முடியுமோ அந்த வழிகள் எல்லாவற்றின் மூலமாகவும் செய்யுங்கள், அவற்றை எங்கெல்லாம் செய்ய முடியுமோ அங்கெல்லாம் செய்யுங்கள், எந்நேரங்களில் அவற்றை செய்ய முடியுமோ அந்த நேரங்களிலெல்லாம் செய்யுங்கள், எவ்வளவு காலம் அவற்றைச் செய்ய முடியுமோ அவ்வளவு காலம் செய்யுங்கள்." இதுவே திருவாளர் ஜான் வெஸ்லியின் வாழ்க்கைக் கோட்பாடு.

தாராளமாய்க் கொடுப்பது என்னும் சொற்றொடர், கர்த்தர் எங்கெல்லாம் சுட்டிக் காட்டுகிறாரோ அங்கெல்லாம் அதனைப் பயன்படுத்த ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறது.

6:19 நித்தியத்தில் நம்முடைய பொருட்செல்வத்திற்குரிய பங்குவீதத்தை அடையும்படி இவ்வுலக வாழ்க்கையின்போதே அதைச் செலவிட முடியும் என்னும் உண்மையை இவ்வசனம் வலியுறுத்துகிறது. தற்காலத்தில் நம்முடைய செல்வத்தைக் கர்த்தருடைய வேலைக்காகப் பயன்படுத்துவதன் வாயிலாக நாம் **வருங்காலத்திற்காக நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாகச்** சேர்த்து வைக்கிறவர்களாக இருக்கிறோம். இவ்விதமாக, உண்மையான வாழ்வாகிய **ஜீவனைப் பற்றிக்கொள்கிறவர்களாக** இருக்கிறோம்.

6:20 தீமோத்தேயுவுக்குப் பவுல் வழங்கிய கடைசி அறிவுரையினிடமாய் நாம் இப்பொழுது வந்திருக்கிறோம். அவரிடம் **ஒப்புவிக்கப்பட்டதை** அவர் **காத்துக்கொள்ள** வேண்டுமென்று உற்சாகப்படுத்தப்படுகிறார். கிறிஸ்தவ விசுவாசத்தின் மெய்யான கோட்பாடுகளை இது பெரும்பாலும் குறிப்பிடக்கூடும். தீமோத்தேயுவின் ஆத்துமாவைக் குறித்தோ, அவருடைய இரட்சிப்பைக் குறித்தோ இங்கு ஒன்றும் சொல்லப்படவில்லை. மாறாக தேவனுடைய கிருபையின் நற்செய்தியாகிய சத்திய சுவிசேஷத்தைக் குறித்தே சொல்லப்பட்டுள்ளது. வங்கியில் வைப்பு நிதியாகச் செலுத்தப்பட்ட பணத்தைப் போன்ற, தீமோத்தேயுவினிடம் ஒப்புவிக்கப்பட்ட சத்தியமானது "முழுமையாகவும் நிறைவாகவும், தீங்கிழைக்கப்படாமலும்" காக்கப்பட வேண்டும்.

அவர் **சீர்கேடான வீண்பேச்சையும், ஞான மென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களையும்** தவிர்த்து விலகியிருக்க வேண்டும். எவ்விதப் பயனுமற்ற விஷயங்களைக் குறித்துப் பேசப்படுகிற வெற்று ரைகளே வீண்பேச்சுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

மெய்யான ஞானம் என்று தோற்றமளிக்கும் பலவிதமான போதகங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை தீமோத்தேயுவுக்கு ஏற்படும் என்று பவுல் உணர்ந்தார். உண்மையில் அவை கிறிஸ்தவ வெளிப்பாட்டிற்கு முரணானவை. இது குறித்து பிஷப் மொளல் எழுதுகிறார்:

> பவுல் காலத்து ஞானமார்க்கத்தார் தங்களுடைய சீடர்களை, வெறுமனே விசுவாசிகள் என்னும் நிலையிலிருக்கும் சாதாரண திரள்கூட்டத்திலிருந்து பெரிதான இரகசியங்களை அறிந்திருக்கக்கூடிய மேன்மையானதும் வரம் பெற்றதுமான கூட்டத்தினராக வழிநடத்தியதாகக் கூறிக் கொண்டார்கள். அத்தகைய ஞானத்தை அவர்கள் பெற்றிருந்ததன் காரணமாக, ஜடப்பொருட்களின் அடிமைத்தனத்திலிருந்து கட்டறுத்து விடுதலை பெற்ற வாழ்க்கை வாழவும் ஆவிகளின் உலகத்தில் கட்டுப் பாடின்றி சுற்றித்திரியவும் அவர்களுக்கு ஏதுவாயிற்று என்றும் கூறினார்கள்.[25]

இவை எல்லாவற்றிலிருந்தும் தீமோத்தேயு விலகியிருக்க வேண்டும். முதலாவதாக, கிறிஸ்தவ ஞானம் (Christian Science) என்று அழைக்கப்படும் கள்ளக்குழுவினரை இது இன்றைய நாட்களில் குறிக்கக்கூடும். கிறிஸ்தவ இயல்பைத் தாங்கள் பெற்றிருப்பதாகவும், மெய்யான ஞானத்தை அடைந்திருப்பதாகவும் அவர்கள் கூறிக்கொண்டாலும், பொய்யாகவே அந்தப் பெயரைப் பெற்றிருக்கிறார்கள். அது கிறிஸ்தவமுமல்ல, ஞானமுமல்ல!

இன்றைய நாட்களில் பள்ளிகளில் கற்பிக்கப் படும் இயற்கை பற்றிய அறிவியலின்[26] பல பிரிவுகளுக்கும் இது பொருந்தும். உண்மையில், அறிவியலின் மெய்யான கண்டுபிடிப்பு எதுவும் திருமறைக்கு மாறானது அல்ல. ஏனெனில் திரு மறையை எழுதியவராலேயே அறிவியலின் இரக சியங்கள் இப்பிரபஞ்சத்தில் மறைத்து வைக்கப் பட்டிருக்கின்றன. அவர்தாமே தேவன். ஆனால் அறிவியலில் உண்மைகள் என்று சொல்லப்படு கிற கண்டுபிடிப்புகள் பல மெய்ப்பிக்கப்படாத தத்துவங்களேயாகும். திருமறைக்கு முரணான கற்பிதக் கோட்பாடுகள் எதனையும் நாம் ஏற்கக் கூடாது.

6:21 தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று வெற்ற றிக்கை செய்தவர்கள் சிலர் இந்தக் கள்ளப் போத னைகளாலே ஈர்க்கப்பட்டவர்களாக, **விசுவாசத்தை விட்டு விலகிப்போனார்கள்** என்பதைப் பவுல் உணர்ந்தார். ஆய்வறிவுக் கோட்பாடு, பகுத் தறிவுக் கோட்பாடு, புதுமைப்பாங்கு, சீர்திருத்தக் கோட்பாடு என்று அழைக்கப்படுபவை, மற்றும் பல கோட்பாடுகள் எதுவாயினும் கிறிஸ்துவை அசட்டை பண்ணுமாயின் அல்லது அவருடைய மேன்மையைக் குறைவுபடுத்துமாயின் அதனால் உண்டாகும் பேராபத்தை இந்தக் கடைசி வசனங் கள் நம்முன் கொண்டுவருகின்றன.

கிருபையானது உன்னோடேகூட இருப்ப தாக. இந்த வாழ்த்துரை பவுல் அப்போஸ்தலனின் "உரிமைச் சின்னமாக" விளங்குகிறது. ஏனெனில் தேவனுடைய **கிருபையே** இறைமக்களை "இடுக் கமும் குறுகலுமான" பாதையில் பாதுகாக்கிறது. **ஆமென்.**

அடிக்குறிப்புகள்

1(1 தீமோத்தேயுவுக்கான முன்னுரை) Quoted from *L'Eglise chretienne, p.95, by George Salmon in A Historical Introduction to the study of the Books of the New Testament,* p. 413.

2(1:8) Guy King, A Leader Led, p. 25.

3(1:16) William Kelly, An Exposition of the *Two Epistles to Timothy,* p. 22.

4(1:19) Hamilton Smith, further documentation unavailable.

5(1:20) *Blasphemo* என்னும் கிரேக்கச் சொல் (அவதூறு, தூஷணம்) தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இச் சொல்லிலிருந்து பிறந்த ஆங்கிலச் சொல் தேவனுக் கும் புனிதமான பொருட்களுக்கும் எதிராக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

6(2:9) John Chrysostom, quoted by Alfred Plummer in the *Pastoral Epistles,* p. 101.

7 (2:15) J. P. Lilley, *"The Pastoral Epistles,"* p. 94.

8(3:2) இந்தக் கருத்தைக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள், இந்த வசனத்தின் கிரேக்க மொழி அமைப்பு, ஒரு பெண்ணிடம் மூப்பர் உண்மையுள்ள வராயிருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதாகக் கூறுகிறார்கள்; "ஒரே – ஒரு பெண் – என்னும் பண் புடைய ஆண்."

9(3:3) உதவிக்காரரே பண ஆசை இல்லாதவரா யிருக்க வேண்டும் (3:8) என்பதால், அவர்களைக் காட்டிலும் அதிகப் பொறுப்புடைய மூப்பர்களுக்கு இந் தத் தகுதி தேவையில்லை என்று பவுல் விட்டிருப்பார் என்பது ஒப்புக்கொள்ள முடியாததாகும்.

10(3:10) இந்தத் தொடக்க நாட்களில் சபையில் இது பெண்களுக்கான அலுவல் என்னும் நிலையை அடைந்திருக்காது என்று தோன்றுகிறது. ரைரி ஆய்வு வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப் பைக் காணவும் NKJV, p. 1850.

11(3:16) J. N. Darby, *"Notes of a Lecture on Titus 2:11-14," The Collected Writings of J. N. Darby,* VII:333.

12(3:16) பழங்காலத்துப் பிரதிகளில் தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவி போன்ற புனிதமான பெயர் கள் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன. தேவன் என்னும் சொல்லின் கிரேக்க மொழிச் சுருக்கம் "யார்" என் னும் சொல்லோடு ஒரு கிடைக்கோடு சேர்த்தாற்போல இருக்கும். இன்னுமொரு கிடைக்கோட்டைச் சேர்த் தால் அது பெயர்ச் சுருக்கமாகும். வெவ்வேறு பிரதி களில் வெவ்வேறு சொற்கள் இடம் பெற்றுள்ளன: (TR மற்றும் பெரும்பான்மைப் பிரதிகளில்) தேவன் என்றும், (நடுநிலைப் பிரதியில் "யார்" என்றும், "எதுவோ அந்த" என்றும் அச்சொல் பல நிலைகளில் எழுதப்பட்டுள்ளது. நாம் பாரம்பரியப் பிரதியான பெரும்பான்மைப் பிரதியில் இடம் பெற்றுள்ள சொல் லையே ஏற்றுக்கொண்டுள்ளோம். KJV NKJV ஆகிய மொழிபெயர்ப்புகளில் இதுவே பயன்படுத்தப் பட்டுள்ளது.

13(4:3) Mary Baker Eddy, *Science and Health with Key to the Scriptures,* pp.64, 65.

14(4:10) The critical (NU) text reads "we labor and strive."

15(4:12) King, Leader, p. 79.

16(5:4) பழைமைப் பிரதியிலும் பெரும்பான்மைப் பிரதியிலும் "நன்மையும்" என்ற சொல் இடம்பெற வில்லை. அதுவே சரியானது என்பதில் ஐயமில்லை.

17(5:16) நடுநிலைப் பிரதியில் "ஒருவனிடத் திலாவது" என்னும் சொல் இடம் பெறாதது தற்செய லாக நடந்திருக்கும். விசுவாசிக்கும் பெண்கள் மட்டுமே விதவைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று நிச்சயமாகப் பவுல் எழுதியிருக்க மாட்டார்.

18(6:4) R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistles to the Thessalonians, to Timothy, to Titus and to Philemon,* p. 700.

19(6:5) Ibid, pp. 701, 702.

20(6:5) The NU text omits this sentence.

21(6:7) Edward Herbert Bates, *Spiritual Thoughts from the Scriptures of Truth,* p. 160.

22(6:9)Albert Barnes, *Notes on the New Testament: Thessalonians, Timothy, Titus, Philemon,* p.199.

23(6:10) J. C. Ryle, *Practical Religion*, p. 215.

24(6:10) From news reports about the late Howard Hughes.

25(6:20) H. C. G. Moule, *Studies in II Timothy,* p. 91.

26(6:20) *Scientia* என்னும் லத்தீன் சொல் ஞானம் என்றே பொருள்படும். அதிலிருந்து பிறந்த Science என்னும் ஆங்கிலச்சொல் (KJV) தற்காலத்தில் குறுகிய பொருளுடையதாயிருப்பதால் NKJV –யில் knowledge என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நூல்விவரப் பட்டியல்

(மேய்ப்பர்களுக்கான அறிவுரை மடல்கள்)

Bates, Edward Herbert. *Spiritual Thoughts from the Scriptures of Truth*. London: Pickering & Inglis, n.d.

Bernard, J. H. *The Pastoral Epistles.* Cambridge: University Press, 1899.

Erdman, Charles R. *The Pastoral Epistles of Paul*. Philadelphia: Westminster Press, 1923.

Fairbairn, Patrick. *Commentary on the Pastoral Epistles.* Edinburgh: T. & T. Clark, 1874.

Guthrie, Donald. *The Pastoral Epistles, (TBC)* . Grand Rapids: Wm. B. Eermans Publishing Co., 1957.

Hiebert, D. Edmond. *First Timothy.* Chicago: Moody Press, 1957.

___. *Second Timothy.* Chicago: Moody Press, 1958.

___. *Titus and Philemon.* Chicago: Moody Press, 1957.

Ironside, H. A. *Addresses, Lectures, Expositions on Timothy, Titus, and Philemon.* New York: Loizeaux Bros., 1947.

Kelly, William. *An Exposition of the Epistle of Paul to Titus*. London: Weston, 1901.

___. *An Exposition of the Two Epistles to Timothy,* 3d Ed. Oak Park,IL: Bible Truth Publishers, n.d.

Kent, Homer A. *The Pastoral Epistles.* Chicago: Moody Press, 1958.

King, Guy H. *A Leader Led: A Devotional Study of I Timothy,* Fort Washington, Pa.: Christian Literature Crusade, 1944.

_____. *To My Son: An Expositional Study of II Timothy,* Fort Washington, Pa.: Christian Literature Crusade, 1944.

Lilley, J. P. *"the Pastoral Epistles."* Hand books for Bible Classes. Edinburgh: T. & T. Clark, 1901.

Lock, Walter. *A Critical and Exegetical Commentary on the Pastoral Epistles* (ICC). Edinburgh: T. & T. Clark, 1924.

Moule, H. C. G. *Studies in II Timothy.* Grand Rapids: Kregel Publications, 1977.

Plummer, Alfred. *The Pastoral Epistles.* New York: George H. Doran Company, n. d.

Smith, Hamilton. *The Second Epistle to Timothy*. Wooler, Northumberland, England: Central Bible Hammond Trust Ltd., n.d.

Stock, Eugene. *Plain Talks on the Pastoral Epistles.* London: R. Scott, 1914.

Van Oosterzee, J. J. *"The Pastoral Letters." Lange's Commentary on the Holy Scriptures.* Vol. 23. Grand Rapids: Zondervan Publishing House, n.d.

Vine, *W.E. Exposition of the Epistles to Timothy.* London: Pickering & Inglis, 1925.

Wuest, Kenneth S. *The Pastoral Epistles in the Greek New Testament.* Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1953.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம்

முன்னுரை

இவ்வுலகில் பாலஸ்தீன நாட்டிற்கு வெளியே, தேவனுக்குக் கீழாக, தேவனுடைய சபையை நிறுவி, அதனைக் கட்டிய பவுலின் இதயத்தின் வெளிப்பாடே தீமோத்தேயுவுக்கு அவர் எழுதிய இரண்டாம் மடலாகும். திருச்சபை எந்தக் கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்டதோ, அதனின்று விலகிச் செல்லுகிற தோல்வியின் காட்சி தோன்றிய வேளையில் இம்மடல் எழுதப்பட்டது. – J. N. டார்பி

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

பொதுவாக, புகழ்பெற்ற மனிதர்களின் இறுதிச் சொற்கள், அவர்களிடத்தில் பற்றுடைய மக்களால் விரும்பிப் போற்றப்படும். உண்மையில் 2 தீமோத்தேயு பவுலின் இறுதிச் சொற்கள் அடங்கிய மடல் அன்று; கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதி அறியப்பட்ட மடல்களில் இதுவே இறுதியானது. அவருக்குப் பிரியமான இளம் துணை ஊழியர் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டதே இந்நூல்.

ஆவிக்குரியவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும், உருக்கம் நிறைந்த இதயம் கொண்டவராகவும் இருந்த அப்போஸ்தலன் இப்பொழுது இறைவனுக்கு நீண்டதொரு கடினமான ஓட்டத்தை ஓடிமுடித்து, வயது முதிர்ந்தவராகவும் களைப்புற்றவராகவும் இருந்த நிலையில், வெளிச்சம் உட்புக மேற்தளத்தில் ஒரு சிறு துவாரம் மட்டுமே இருந்ததும், ஈரம் கசிந்து கொண்டிருந்ததுமான இருட்டறையில் அமர்ந்து, தான் தீமோத்தேயுவுக்கு ஏற்கனவே கற்பித்த வாழ்க்கை முறையையும் சத்தியத்தையும் அவர் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டுமென்று எழுதிய இறுதி வேண்டுகோளே இந்நூல்.

பல "இரண்டாம்" மடல்களைப் போலவே, 2 தீமோத்தேயுவும் கள்ளப்போதகர்களையும் இறைப்பற்றை மறுதலிப்பவர்களையும் பற்றிப் பேசுகிறது. 2 தீமோத்தேயுவின் நம்பகத் தன்மை கடுமையாகத் தாக்கப்படுவதை ஒருவரால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது (2 பேதுரு நூலும் அவ்வாறே தாக்கப்படுகிறது). பவுல் கடுமையாக எச்சரிக்கின்ற தவறுகளை, மதமென்னும் போர்வைக்குள்ளிருந்து செய்கிற இறைப் பற்றற்ற மதத்தலைவர்கள், அந்த எச்சரிப்பினால் குற்றஞ் சுமத்தப்பட்ட நிலையில் மேற்கூறிய எதிர்க் கருத்துகளை எழுதுகிறார்கள் (3:1-9).

சிலர் என்ன கூறினும், 2 தீமோத்தேயு மிகவும் இன்றியமையாத நூல், அதன் நம்பகத்தன்மை மறுத்துரைக்கப்பட முடியாதது.

2. நூலாசிரியர்

2 தீமோத்தேயுவின் நூலாசிரியர் பற்றிய ஆய்வை மேய்ப்பர்கள் திருமடல்களுக்கான முன்னுரையில் காண்க.

3. எழுதப்பட்ட காலம்

சிறைச்சாலையிலிருந்து இரண்டாம் தீமோத்தேயு எழுதப்பட்டது (இன்றைக்கும் சுற்றுலாப் பயணிகளுக்குக் காண்பிக்கப்படும் ரோமாபுரியிலுள்ள மாமர்டைம் என்னும் சிறைச்சாலையே அந்த இடம் என்று பாரம்பரியமாகக் கருதப்பட்டு வருகிறது). ரோமக் குடிமகன் என்னும் நிலையில் பவுலை சிங்கங்களுக்கு இரையாகப் போடவோ சிலுவையில் அறையவோ முடியாது, ஆனால் கத்தியினால் தலை துண்டிக்கப்படுகிற "மதிக்கத் தக்க" தண்டனையை அவருக்கு வழங்கலாம். ஜூன் திங்கள் 8 -ஆம் நாள் கி. பி. 68 -இல் நீரோ மன்னன் மரணமடைந்தான். அவனுடைய ஆட்சியின் கீழ் பவுல் கொலை செய்யப்பட்டார். ஆகவே 2 தீமோத்தேயு கி. பி. 67 -இன் இலையுதிர் காலத்திற்குப் பின்னர் கி. பி. 68 -இன் வசந்த காலத்திற்கு முன்னர் எழுதப்பட்டது என வரையறுக்கக் கூடும்.

4. கருப்பொருள்

இம்மடலின் கருப்பொருள் 2:15 -ஆம் வசனத்தில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளது: "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக

நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." கூட்டாகவும், சபையாகவும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று 1 தீமோத்தேயு மடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது; அதற்கு மாறாக இங்கு தனிப்பட்ட வகையில் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பு, நடத்தை ஆகியவை முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. "கூட்டாகத் தோல்வியுற்ற வேளையில் தனிப்பட்டோரின் பொறுப்பு" என்று இக்கருப்பொருளுக்குப் பெயரிட்டு அழைக்கலாம்.

விசுவாச அறிக்கை செய்யும் சபையில் கூட்டாகத் தோல்விகள் பல ஏற்பட்டுள்ளதை இம்மடலில் காணவியலும். விசுவாசத்தினின்றும் சத்தியத்தினின்றும் பெருமளவில் சபை விலகிச் சென்றுவிட்டது. இது எங்ஙனம் தனிப்பட்ட விசுவாசியினிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது? அவன் சத்தியத்தைப் பின்பற்றுவதிலிருந்தும், தெய்வீக சுபாவத்துடன் வாழ்கின்ற வாழ்க்கையிலிருந்தும் விலகிச் செல்வதற்கு இதனைக் காரணமாகக் கூறலாமா? 2 தீமோத்தேயு இதற்குத் தரும்விடை "கூடாது" என்பதுதான். "உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்து...".

இளம் தானியேல் பாபிலோன் அரண்மனையில் எதிர்கொண்ட சூழ்நிலையை இது எடுத்துரைக்கிறது. நீண்ட காலமாக இஸ்ரவேல் ஒழுக்கக்கேடான நிலையில் இருந்த காரணத்தால், தானியேலும் மேலும் பலரும் நேபுகாத்நேச்சாரால் பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப்பட்டுப் போயினர். வெளியரங்கமான யூத முறைமைகள் அவர்களுக்கு மறுத்துரைக்கப்பட்டன - பலிகள், ஆசாரிய ஊழியம், தேவாலய ஆராதனை, இன்னும் பல. உண்மையில் இவையாவும் முற்றிலுமாக நிறுத்தப்பட்டு போகும், ஆகவே, 'நான் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனம் ஆகியவற்றை மறந்து, பாபிலோனின் முறைமைகள், ஒழுங்குகள், நீதிநெறிகள் ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டுமா?" என்று அவர் தனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டாரா? சூழ்நிலைகள் பாதகமாகத் தோன்றிய போதிலும், அங்கே பளிச்சிட்டுப் பிரகாசிக்கும் மிகச்சிறப்பான விசுவாச வாழ்க்கை அவரிடத்தில் விளங்கியது என்பதை வரலாறு பறைசாற்றுகிறது.

அதுபோலவே, 2 தீமோத்தேயுவின் செய்தி, புதிய ஏற்பாட்டு எளிமை, பரிசுத்தம் ஆகியவற்றிலிருந்து சபையின் பொதுவான சாட்சி விலகிப் போயிருக்கிற நிலையைக் காணும் தனிப்பட்ட விசுவாசியோடு பேசுகிறது. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க" அவன் இன்னமும் கடமைப்பட்டவனாயிருக்கிறான் (3:12).

பொருட்சுருக்கம்

1. தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட அறிமுக வாழ்த்துரை (1:1-5)

2. தீமோத்தேயுவுக்கு ஊக்கமளிக்கும் அறிவுரைகள் (1:6-2:13)

அ. கடமை தவறா தன்மையைப் பற்றிய அறிவுரை (1:6-18)

ஆ. பொறுமையோடு நீடித்து உழைப்பதற்கான அறிவுரை (2:1-13)

3. பற்றுறுதியும் அதற்கு எதிரான விசுவாச மறுதலிப்பும் (2:14-4:8)

அ. மெய்யான கிறிஸ்தவத்தின்மேல் பற்றுறுதி கொள்ளுதல் (2:14-26)

ஆ. வரவிருக்கிற மறுதலிப்பு (3:1-13)

இ. விசுவாச மறுதலிப்பு சூழ்ந்திருக்கும் நிலையில் தேவ மனிதனின் ஆதாரம் (3:14-4:8)

4. தனிப்பட்ட வேண்டுதல்களும் குறிப்புகளும் (4:9-22)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	சாட்சியைக் காத்தல்			சோதனைகளைச் சகித்தல்		
காலம்	கி. பி. 67-68					
தலைப்பு	சுவிசேஷத்தின் வல்லமை		ஊழியனின் பொறுப்புகள்	விசுவாசத்தைக் காத்தல்		விளைவுகள்
பகுப்பு	தீமோத்தேயுவின் விசுவாசத்திற்காக நன்றி கூறுதல்	தீமோத்தேயு வின் கடமையை உணர்த்துதல்	தீமோத்தேயுவின் பொறுமையான உழைப்பை உணர்த்துதல்	விசுவாச துரோகம் முன்னறிவிக் கப்படல்	விசுவாச துரோகச் சூழலில் வசனத்தைப் போதித்தல்	அப்போஸ்தல னின் எதிர்பார்ப்புகள்
வசனம்	1:1-5	1:6-18	2:1-26	3:1-17	4:1-8	4:9-22
இடம்	ரோமச் சிறைச்சாலை					

விளக்கவுரை

1. தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட அறிமுக வாழ்த்துரை (1:1-5)

1:1 மடலின் தொடக்கத்திலேயே **பவுல்** தன்னை **இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன்** என்று அறிமுகப்படுத்துகிறார். இந்தச் சிறப்பான ஊழியத்திற்கு அவர் மகிமையடைந்த கர்த்தரால் நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் மனிதர்களாலோ மனிதர்கள் மூலமாகவோ கொடுக்கப்படாமல், **தேவனுடைய சித்தத்தினாலே** நேரடியாகக் கொடுக்கப்பட்டது. மேலும், தனக்கு அளிக்கப்பட்ட அப்போஸ்தல ஊழியம் **கிறிஸ்து இயேசுவினால் உண்டாயிருக்கிற ஜீவனைப் பற்றிய வாக்குத்தத்தத்தின்படி** ஆனது என்று பவுல் கூறுகிறார். கிறிஸ்து இயேசுவில் விசுவாசம் கொள்கிற அனைவரும் நித்திய **ஜீவனைப்** பெறுவார்கள் என்னும் **வாக்குத்தத்தத்தை** தேவன் தந்திருக்கிறார். **அப்போஸ்தலனாயிருக்கும்படி** பவுல் பெற்ற அழைப்பு இந்த வாக்குறுதியோடு ஒத்திசைவாயிருக்கிறது. உண்மையில், அத்தகையதோர் அழைப்பு இல்லையெனில், பவுலைப் போன்ற அப்போஸ்தலன் தேவையில்லை.

"நித்தியமான கடந்த காலத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த ஜீவன் நமக்கு அளிக்கப்பட வேண்டுமென்பது தெய்வீக நோக்கத்தின்படியான செயலாகும். பவுல் அப்போஸ்தலனாக ஆகவேண்டுமென்பது இந்த நோக்கத்தோடு ஒத்திசைவான நிகழ்ச்சியாகும்" என்று திருவாளர் வைன் கூறுகிறார்.[1]

இம்மடலில் ஜீவனைப் பற்றிய ஐந்து குறிப்புகளைத் திருவாளர் ஏ. பால் ∴பிலின்ட் இவ்வாறு விவரிக்கிறார்: ஜீவனைப் பற்றிய வாக்குத்தத்தம் (1:1); ஜீவன் வெளியரங்கமாக்கப்படுதல் (1:10); ஜீவனில் பங்கடைதல் (2:11); ஜீவனின் முன்மாதிரி (3:12) ஜீவனின் நோக்கம் (4:1).

1:2 தீமோத்தேயு பிரியமுள்ள குமாரன் என்று இங்கு அழைக்கப்படுகிறார். பவுல் அப்போஸ்தலனின் ஊழியத்தின் மூலமாகவே உண்மையில் தீமோத்தேயு மனமாற்றம் பெற்றார் என்று நம்மால் நிச்சயமாய்க் கூறமுடியாது. அவர்களது சந்திப்பைப் பற்றிய முதலாவது குறிப்பு அப்போஸ்தலர் 16:1 -இல் இடம் பெற்றுள்ளது. பவுல் லீஸ்திராவுக்கு வருவதற்கு முன்னமே தீமோத்தேயு சீடராயிருந்தார் என்று அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அது எதுவாயினும், கிறிஸ்தவ விசுவாசத்தில் அப்போஸ்தலன் அவரை ஒரு **பிரியமுள்ள குமாரனாகவே** காண்கிறார்.

1 தீமோத்தேயு மடலில் காணப்படுவது போலவே, இங்கும் பவுல் கூறியுள்ள வாழ்த்துரையில் **கிருபை, இரக்கம், சமாதானம்** ஆகியவை இடம் பெற்றுள்ளன. பவுல் சபைகளுக்கு எழுதிய மடல்களில், அவர்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாக வேண்டுமென்று அவர் தனிச் சிறப்பு வாய்ந்த முறையில் வாழ்த்தியிருப்பதை 1 தீமோத்தேயுவின் விளக்கவுரையில் சுட்டிக் காட்டியிருந்தோம். தீமோத்தேயுவுக்கு எழுதுகையில் அவர் **இரக்கம்** என்னும் சொல்லையும் சேர்த்து எழுதுகிறார். ஒவ்வொரு ஊழியத்திற்கும் கிருபை தேவை, ஒவ்வொரு தோல்வியிலும் இரக்கம் தேவை, ஒவ்வொரு சூழ்நிலையிலும் சமாதானம் தேவை என்று திருவாளர் கை கிங் தனது கருத்தை எழுதியுள்ளார். "தகுதியற்றோருக்குக் கிருபை, உதவியற்றோருக்கு இரக்கம், அமைதியற்றோருக்குச் சமாதானம்" என்று வேறொருவர் சொல்லியிருக்கிறார். "பரிதபிக்கத்தக்க நிலையில் இருப்போருக்கும், கடுந்தளர்வு உற்றோருக்கும் பரிவுணர்வுடனும், மென்மையான அன்புணர்வுடனும் தேவன் தமது காருண்யத்தினால் தாமாகவே ஏவப்பட்டவராகவும் தமது இயல்பான முறையிலும் செயல்படுவதே இரக்கம்" என்று திருவாளர் ஹீபர்ட் வரையறுத்துக் கூறுகிறார்.[2]

இந்த ஆசிர்வாதங்கள் யாவும் **பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினிடத்திலிருந்தும்** பாய்ந்து வருகின்றன. பிதாவைக் கனம் பண்ணுவது போல குமாரனையும் பவுல் கனம் பண்ணுகிற செயலுக்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

1:3,4 அடுத்ததாக, பவுல் தனக்கே உரிய தன்மையின்படி ஸ்தோத்திரம் செய்யும் செயலுக்குள்ளாக உட்புகுகிறார். நாம் இதனை வாசிக்கும் போது, ரோமாபுரியிலிருந்த ஓர் இருட்டறையிலிருந்து அவர் இதனை எழுதினார் என்பதை நினைவுகூர வேண்டும். நற்செய்தியைப் பிரசங்கித்ததன் காரணமாக அவர் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இப்பொழுதோ அவர் ஒரு கீழ்த்தரமான குற்றவாளியைப் போல நடத்தப்பட்டார். கிறிஸ்தவ விசுவாசமானது ரோம அரசாங்கத்தால் கண்டிப்பான முறையில் அடக்கியாளப்பட்டது. ஏற்கனவே விசுவாசிகள் பலர் இதன் காரணமாகக் கொலைசெய்யப்பட்டு விட்டார்கள். இத்தகைய எதிரான சூழ்நிலைகள் பல இருந்த போதிலும் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய இந்த மடலை "தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்" என்னும் சொற்களோடு தொடங்குகிறார்!

அப்போஸ்தலன் தனது யூத **முன்னோர்கள்** செய்துவந்தது போல, தேவனை இப்பொழுது **சுத்த மனச்சாட்சியோடே** ஆராதித்து வந்தார். அவருடைய முன்னோர்கள் கிறிஸ்தவர்களாக இல்லாதிருந்தும், ஜீவனுள்ள தேவனில் விசுவாசி களாகவே இருந்தார்கள். அவர்கள் தேவனை ஆராதித்து வந்ததோடு, அவருக்குப் பணிவிடை செய்யவும் முற்பட்டார்கள். அப்போஸ்தலர் 23:6 - இல் பவுல் குறிப்பிட்டிருப்பது போல அவர்கள் "மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கை" கொண்டிருந்தார்கள். அதன் காரண மாக, "தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அரு ளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கைக்காகவே நான் இப்பொழுது நியாயத் தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன். இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்து வருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக் கிறார்கள்" என்று அவரால் அப்போஸ்தலர் 26:6,7 - ஆகிய வசனங்களில் சொல்ல முடிந்தது.

தன்னுடைய முன்னோர்களின் முன்மாதிரி யின்படியே தானும் கர்த்தருக்கு ஊழியம் செய்து வந்ததாகப் பவுல் தனது ஊழியத்தைக் குறித்து இவ்வாறு பேச முடிந்தது. இங்கு **ஆராதனை**[3] என்று அவர் பயன்படுத்தியுள்ள சொல் அவரு டைய கடமை தவறா நிலையையும் பற்றுறுதியை யும் குறிக்கிறது. அவர் மெய்யான தேவனை அறிக்கையிட்டு ஒப்புக்கொள்கிறார்.

அடுத்ததாக, பவுல் தன்னுடைய **ஜெபத்தில் இரவும் பகலும்** இடைவிடாமல் தீமோத்தேயுவை நினைவுகூருவதைப் பற்றிக் கூறுகிறார். எப்பொழு தெல்லாம் மேதகு அப்போஸ்தலன் ஜெபத்தில் கர்த்தரோடு உரையாடினாரோ, அப்பொழுதெல் லாம் அவர் தனக்குப் பிரியமான இளம் உடன் பணியாளரைப் பற்றிய நினைவைப் பெற்றவராக, கிருபாசனத்திற்கு முன்பாக அவருடைய பெயரைக் கொண்டு வருவார். தன்னுடைய திருப்பணிக்கான காலம் வெகுவிரைவாக முடிவுக்கு வரப்போகிறது என்பதைப் பவுல் அறிந்திருந்தார். மனித வழக் கின்படி கூறுவோமானால், கிறிஸ்துவுக்கென்று சான்றுபகரும் ஊழியத்தைத் தொடர்ந்து செய் யும்படி தீமோத்தேயு தனித்து விடப்படுவார் என்ப தையும் அவர் அறிந்திருந்தார். அவர் சந்திக்கப் போகிற இடர்ப்பாடுகளைக் குறித்த விவரங்களை யும் அவர் அறிந்திருந்தார். ஆகவே பவுல் விசு வாசத்தின் இளம் போர்வீரருக்காக இடைவிடா மல் ஜெபித்தார்.

இந்தச் சொற்களைத் தீமோத்தேயு படிக்கை யில் அவருடைய உள்ளத்தை இவை எப்படித் தொட்டிருக்கும்! "வீட்டைக் குறித்த ஏக்கம்" என்று மௌல் என்பார் குறிப்பிட்டிருப்பதுபோல தீமோத் தேயுவைக் **காண** பவுல் **வாஞ்சையாயிருந்தார்.** பிரத்யேகமான முறையில் அவரிடத்தில் கொண்டி ருந்த அன்பு, மதிப்பு ஆகியவற்றின் அடை யாளமே இது. மேலும் இது பவுலின் கிருபையை வெளிப்படுத்தும் பண்பு, இன்கனிவு, தாழ்மை ஆகியவற்றைத் திறம்பட கூறுகிறது.

ஒருவரைவிட்டு ஒருவர் முன்னர் கடைசியாகப் பிரிந்த சமயத்தில், ஒருவேளை தீமோத்தேயு நிலைகுலைவு அடைந்திருப்பார் என்றே தோன்று கிறது. அவர் விடுத்த **கண்ணீர்** முதிர்ச்சியடைந்த உடன் ஊழியரின் உள்ளத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும். அந்த நிகழ்ச்சியின்போது ரோம அரசுக் காவல்துறையைச் சேர்ந்த ஒரு வனோ போர்வீரனோ தீமோத்தேயுவினிடத்தி லிருந்து பவுலைக் "கிழித்துக் கொண்டுபோய் விட்டதாக" ஹீபர்ட் வருணிக்கிறார்.[4] அந்நிகழ்ச் சியை மறக்கமுடியாத பவுல் மீண்டும் தீமோத் தேயுவோடு சேர்ந்து இருக்க வேண்டுமென்றும், அதன்மூலமாக அவருடைய **சந்தோஷம் நிறை வடைய** வேண்டுமென்றும் விரும்புகிறார். அந்தக் **கண்ணீருக்காகப்** பவுல் தீமோத்தேயுவைக் கடிந்துகொள்ளவில்லை. கண்ணீர் சிந்துதல் ஆடவனுக்கு அழகல்ல என்றோ, கிறிஸ்தவத்தில் உணர்ச்சிகளுக்கு இடமில்லை என்றோ பவுல் கூறவில்லை. "கண்ணீரற்ற இதயங்கள் சிலுவைப் பாடுகளின் தூதர்களாகச் செயல்பட முடியாது. நம்முடைய பரிவு மனவேதனையை இழந்து போகுமென்றால் நாம் சிலுவைப் பாடுகளின் வேலையாட்களாகத் தொடர முடியாது" என்று திருவாளர் J.H.ஜோவெட் வழக்கமாகச் சொல்லு வாரே.

ஏதோ ஒரு வழியில் தீமோத்தேயுவின் **மாய மற்ற விசுவாசம்** பவுலுக்கு நினைவூட்டப்பட்டது. அவருடைய **விசுவாசம்** கபடற்றதாக, உண்மை யானதாக, முகமூடியற்றதாக இருந்தது.[5]

1:5 ஆனால் அவருடைய இல்லத்தில் முதலா வது இரட்சிக்கப்பட்டவர் அவரல்ல. யூதமார்க்கத் தைச் சேர்ந்த அவருடைய பாட்டி லோவிசாள் இரட்சிப்பின் நற்செய்தியைக் கேட்டு கர்த்தராகிய இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டார் என்று தோன்றுகிறது. யூதமார்க்கத்தைச் சேர்ந்த வளாகிய அவருடைய தாய் ஐனிக்கேயாளும் (அப். 16:1), கிறிஸ்தவளாக மாறினாள்.

இவ்விதமாக, கிறிஸ்தவ விசுவாசத்தின் மேலான சத்தியங்களைத் தீமோத்தேயு கற்றுக்கொண்டார். அந்தக் குடும்பத்தில் இரட்சகரை விசுவாசித்த மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர் தீமோத்தேயு. அவருடைய தந்தை மனமாற்றம் பெற்ற வரா என்பது பற்றி திருமறையில் குறிப்பு எதுவும் இல்லை.

விசுவாசிகள் பெற்றோராக இருப்பதால், அவர் களிடத்திலிருந்து இரட்சிப்பை வாரிசு உரிமை யாய்ப் பெறமுடியாதெனினும், திருமறையில் வீட்டாரைக் குறித்த கோட்பாடு ஒன்று உண்டு. முழுக்குடும்பத்தையும் தேவன் இரட்சிக்க விரும்பு கிறார் என்றே தோன்றுகிறது; ஒரு அங்கத்தினர் இரட்சிக்கப்படாமல் விட்டுவிடப்படுவது அவரு டைய சித்தமல்ல.

லோவிசாளுக்குள்ளும் ஐனிக்கேயாளுக் குள்ளும் விசுவாசம் நிலைத்திருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். அது எப்பொழுதாவது வருகிற விருந்தாளி போல அல்ல, மாறாக அவர்களிடம் அது நிலையாகக் குடி யிருந்தது. தீமோத்தேயுவினிடமும் அது நிலைத் திருந்தது என்று பவுல் **நிச்சயித்திருந்தார்.** அந்த விசுவாசத்தோடு சம்பந்தப்பட்டு அவர் பலவிதமான சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தபோதிலும், அவருடைய விசுவாசம் மாயமற்றதாயிருந்தது.

2. தீமோத்தேயுவுக்கு ஊக்கமளிக்கும் அறிவுரைகள் (1:6-2:13)

அ. கடமை தவறா தன்மையைப் பற்றிய அறிவுரை (1:6-18)

1:6 தீமோத்தேயுவின் தெய்வப்பற்று மிக்கக் குடும்பப் பின்னணியின் காரணமாகவும் அவரு டைய சொந்த விசுவாசத்தின் காரணமாகவும், அவரிடத்தில் **உண்டான தேவவரத்தை** அவர் **அனல்மூட்டி எழுப்பிவிட** வேண்டும் என்று பவுல் வற்புறுத்துகிறார். அந்த தேவவரம் என்னவென்று சொல்லப்படவில்லை. சிலர் இச்சொல் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது என்று கருதுகிறார் கள். கிறிஸ்தவத் திருப்பணி ஆற்றும்படி அவருக் குக் கர்த்தர் கொடுத்த பிரத்யேகமான திறமை என்று வேறு சிலர் நினைக்கிறார்கள். எடுத்துக் காட்டாக சுவிசேஷகர், மேய்ப்பர் அல்லது போதகர் போன்றதொரு வரமாக இருக்கலாம் என்பது அவர் கள் கருத்து. கிறிஸ்தவ ஊழியத்தில் ஏதோவொரு சிறப்பான பங்கை நிறைவேற்றுவதற்காக அவர் அழைக்கப்பட்டார் என்பது தெளிவாய்த் தெரி கிறது. இங்கே அவர் அந்த வரத்தை உயிருள்ள அனலாக மாறும்படி கிண்டிவிட வேண்டும் என்று உற்சாகப்படுத்தப்படுகிறார். தன்னைச் சுற்றிலும் பொதுவாகத் தோல்வி ஏற்படுவதைக் கண்டு அவர் உற்சாகமிழந்துவிடக் கூடாது. கர்த்தருக் காக அவர் ஆற்றும் பணியில் ஒரு தொழில் வல்லு நர் போலச் செயல்பட்டு, அதனை வழக்கமான செயல்போல மாற்றிவிடக் கூடாது. மாறாக நாட் கள் இருண்டுபோன நிலையை அடையும்போது, அவர் தனக்களிக்கப்பட்ட வரத்தை அதிகம் அதிக மாகப் பயன்படுத்த வேண்டும்.

அப்போஸ்தலன் தீமோத்தேயுவின் மேல் தனது **கைகளை வைத்ததால்** அந்த வரம் அவ ருக்கு அளிக்கப்பட்டது. இன்றைய நாட்களில் கிறிஸ்தவச் சமயக் குருமார்களை நியமனம் செய்வதற்காகச் செய்யப்படும் சடங்கோடு இதனை ஒப்பிட்டு நாம் குழப்பமடையக் கூடாது. இங்கு என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதுவே இதன் பொருள். பவுல் தீமோத்தேயுவின் மேல் **கைகளை** வைத்த அந்தத் தருணத்திலேயே அவருக்கு உண்மையில் அந்த வரம் அளிக்கப்பட்டது. அந்த **வரம்** தீமோத்தேயுவுக்கு அளிக்கப்படுவதற்கு அப்போஸ்தலன் செல்வழியாகச் செயல்பட்டார்.

"இன்றைய நாட்களில் இவ்விதமாக நடை பெறுமா?" என்னும் கேள்வி உடனடியாக எழுவது இயற்கையே. இவ்வாறு நடைபெறாது என்பதே இதற்கான பதில். இயேசு கிறிஸ்துவின் அப்போஸ் தலன் என்னும் நிலையில் பவுல் தனது கைகளை வைத்தபோது வரமளிக்கக்கூடிய வல்லமையைப் பெற்றிருந்தார். அப்போஸ்தலர் அந்த நாட்களில் இருந்ததுபோல அதே பொருளில், இன்றைய நாட் களில் இல்லாததாலே அப்போஸ்தல அற்புதங் களைச் செய்யும் வல்லமை நம்மிடையே இல்லை.

இந்த வசனத்தை 1 தீமோத்தேயு 1:18; 4:14 ஆகிய வசனங்களோடு சேர்த்துப் படிக்க வேண் டும். இந்த வசனங்களையெல்லாம் ஒன்று கூட்டிப் பார்க்கும்போது திருவாளர் வைன் கூறியதுபோல கீழ்க்கண்ட வரிசை முறையில் நிகழ்ச்சிகள் நடை பெற்றிருக்கும்: சிறப்பான ஊழியத்தைச் செய்யும் படி தீமோத்தேயு எழுப்பப்பட்டுள்ளார் என்னும் உண்மையைத் தீர்க்கதரிசனப் பேச்சினால் அறிந்த பவுல் தீமோத்தேயுவிடம் வழிநடத்தப்படுதல். அப் போஸ்தலனின் முறையான செயலினால் கர்த்தர் தீமோத்தேயுவுக்கு வரத்தை அளித்தல். கர்த்தர் தீமோத்தேயுவுக்கு என்ன செய்தார் என்பதை அறிந்த மூப்பர்கள் அவர்மீது கைகளை வைத்து அங்கிகரித்தல். இங்கே மூப்பர்களுடைய செய லின் மூலமாக வரம் அளிக்கப்படவுமில்லை,

தீமோத்தேயு பிரத்யேகமான ஊழியத்தில் அமர்த்தப்படவுமில்லை. அது இன்றைய நாட்களில் கிறிஸ்தவ உலகினில் நியமனம் செய்வது போன்ற நிகழ்ச்சியுமல்ல.[6]

"வரம் அப்போஸ்தலனுடைய கரங்களின் "வழியாக", ஆனால் மூப்பர்களின் "கைகளுடன்" வந்தது" என்று திருவாளர் ஸ்டாக் சுருங்கக் கூறியது போலவும் சொல்லலாம்.

1:7 இரத்த சாட்சியாக மரணம் அடையப் போவதை எதிர்நோக்கியிருந்த பவுல், **தேவன் நமக்கு** கோழைத்தனமான **பயமுள்ள ஆவியைக்** கொடுக்கவில்லை என்று தீமோத்தேயுவுக்கு நினைவூட்டுகிறார். பயப்படுவதற்கோ கோழைத்தனமாக இருப்பதற்கோ நேரமில்லை.

ஆனால், தேவன் நமக்கு **பலமுள்ள** ஆவியைக் கொடுத்திருக்கிறார். அளவற்ற பலம் நம்முடைய பயன்பாட்டிற்கென நமக்குத் தரப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவி தரும் ஆற்றலினால் விசுவாசி துணிவோடும், சகிப்புத் தன்மையோடும் கூடிய பொறுமையோடும் உழைக்கவும், வெற்றிக்களிப்போடு துன்பம் அனுபவிக்கவும் தேவை ஏற்பட்டால் மகிமையோடு மரணம் அடையவும் செய்கிறார்.

தேவன் நமக்கு **அன்பின்** ஆவியையும் தந்திருக்கிறார். தேவனிடத்தில் நாம் கொண்டிருக்கிற அன்பு பயத்தை நீக்கி, நம்மையே கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்க நமக்கு விருப்பத்தைத் தருகிறது. அதற்காக என்ன விலை கொடுக்கவும் நாம் ஆயத்தப்படுகிறோம். நம் உடன்வாழ் மனிதர்களின் மேலுள்ள அன்பே எல்லாவிதமான உபத்திரவங்களைச் சகிக்கவும், அவர்களிடம் இரக்கத்தை வெளிப்படுத்தவும் நம்மை ஆயத்தப்படுத்துகிறது.

இறுதியாக, தேவன் நமக்குத் **தெளிந்த புத்தியுள்ள** ஆவியைக் கொடுத்திருக்கிறார். அதாவது அவர் நமக்குத் தன்னடக்கத்தின் ஆவியைத் தந்திருக்கிறார். **தெளிந்த புத்தி** என்னும் சொற்கள் முழு அர்த்தத்தையும் வெளிப்படுத்துகிறதில்லை. ஒரு கிறிஸ்தவன் எல்லா நேரங்களிலும், உணர்ச்சிபூர்வமாக நிலைகுலைவு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதோ, மனநோய்கள் எதுவும் உண்டாகாமல் நலத்துடன் இருக்க வேண்டும் என்பதோ இதன் பொருளல்ல. கர்த்தரோடு நெருங்கி வாழ்கிற கிறிஸ்தவனுக்கு மனநோய் ஏற்படவே ஏற்படாது என்று கற்பிக்க இந்த வசனம் பயன்படுத்தப்படுகிறது. வேதம் அவ்வாறு போதிக்கவில்லை. மனநோய்கள் பல பரம்பரையாக வரக்கூடியவை. இன்னும் பலருக்கு இந்நோய், அவர்களுடைய உடல்கூறுகளின் காரணமாக வருகிறதேயொழிய, அவர்களுடைய ஆவிக்குரிய நிலைக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

தேவன் நமக்குத் தன்னடக்கம் என்னும் ஆவியைத் தந்திருக்கிறார். அதாவது ஒவ்வொரு வரும் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்கிற பண்பை அவரிடத்திலிருந்து பெறுகிறோம். நாம் விளைவுகளை ஆராயாமல் துடுக்காகவோ, பதற்றத்தோடோ, மதியீனமாகவோ செயல்படாமல் பகுத்தறிவுடன் மதிநுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். நாம் எப்படிப்பட்ட பாதகமான சூழ் நிலையில் இருந்தாலும், நாம் நிதானமாய்ப் பகுத்தறிந்து தன்னடக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

1:8 வெட்கப்படக் கூடாது என்று இங்கு தீமோத்தேயு அறிவுறுத்தப்பட்டிருக்கிறார். பன்னிரண்டாம் வசனத்தில் தான் வெட்கப்படுவதில்லை என்றும், இறுதியில் பதினாறாம் வசனத்தில் ஒநேசிப்போரு வெட்கப்படவில்லை என்றும் பவுல் கூறுகிறார்.

நற்செய்தியை அறிவிப்பது சட்டப்படி குற்றம் என்று கருதப்பட்ட நாள் அது. தங்களுடைய கர்த்தரும் இரட்சகருமாகிய கிறிஸ்துவுக்கு வெளிப்படையான சாட்சிகளாக விளங்க வேண்டும் என்று விரும்பியவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். நற்செய்தியை அறிவிப்பது ஒருவேளை உபத்திரவத்தைக் கொண்டுவரக் கூடுமெனினும் தீமோத்தேயு அதைக்குறித்து **வெட்கப்பட வேண்டியதில்லை.** அப்போஸ்தலனாகிய பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதும் அவரை **வெட்கப்படுத்தக் கூடாது.** ஏற்கனவே சில விசுவாசிகள் இதன் காரணமாக அவரை விட்டுச் சென்று விட்டார்கள். அவரோடு தங்களை இணைத்துக் கொள்வதன் காரணமாக அவர்களும் துன்புறுத்தப்படக் கூடும், அது மரணத்தையும் வருவிக்கும் என்று அவர்கள் அச்சமுற்றார்கள் என்பதில் ஐயமில்லை.

சுவிசேஷத்தோடு வரக்கூடிய **தீங்கை** ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அதனை **தேவ வல்லமைக்கு ஏற்றபடி** அனுபவிக்க வேண்டுமென்றும் தீமோத்தேயு அறிவுறுத்தப்படுகிறார். அதனோடு தொடர்புடைய எந்த அவமானத்தையும் அவர் தவிர்க்க முயற்சி செய்யக்கூடாது. மாறாக அவர் அப்படிப்பட்ட அவமானத்தைச் சகிப்பதில் பவுலோடு சேர்ந்துகொள்ள வேண்டும்.

1:9 தீமோத்தேயு வைராக்கியத்தோடு இருக்க வேண்டுமென்றும் (வச. 6,7) உற்சாகத்தோடு

செயல்பட வேண்டுமென்றும் (வச. 8) அப் போஸ்தலன் அறிவுறுத்திக்கொண்டிருக்கிறார். இதுவே நாம் கொண்டிருக்க வேண்டிய தகுதி யான மனப்பான்மை என்பதற்கான காரணத்தைப் பவுல் இப்பொழுது விவரிக்கிறார்; தேவன் நம் மிடத்தில் தம்முடைய கிருபையினால் வியத்தகு முறையில் ஈடுபடுகிறதில் இது காணப்படுகிறது. முதலாவதாக அவர் **நம்மை இரட்சித்தார்.** பாவத் திற்கான தண்டனையிலிருந்து அவர் நம்மை விடுவித்தார் என்பதே இதன் பொருளாகும். பாவத்தின் அதிகாரத்திலிருந்து அவர் நம்மை இடைவிடாமல் விடுவித்துக் கொண்டே இருக் கிறார். வரப்போகிற ஒரு நாளில் அவர் பாவத்தின் முன்னிலையிலிருந்தே விடுவிக்கப் போகிறார். மேலும் அவர் நம்மை இந்த உலகத்தினின்றும் சாத்தானிடத்திலிருந்தும் விடுவித்திருக்கிறார்.

மேலும், தேவன் **நம்மைப் பரிசுத்த அழைப் பினால் அழைத்தார்.** அவர் நம்மைத் தீமையி னின்று விடுவித்தது மட்டுமின்றி, கிறிஸ்து இயேசு வுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசிர்வாதத்தினாலும் நம்மை ஆசிர்வதித்திருக் கிறார். எபேசியர் நிருபம் முதல் அதிகாரத்தில் முதல் பதின்மூன்று வசனங்களில் கிறிஸ்தவப் பரிசுத்த அழைப்பு பற்றிய விவரங்கள் ஒரளவு கொடுக்கப்பட்டுள்ளன. நாம் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறோம், முன் குறிக்கப்பட்டிருக்கிறோம், புத்திரர்களாக சுவிகரிக்கப்பட்டிருக்கிறோம், பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறோம், அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டி ருக்கிறோம், மன்னிக்கப்பட்டிருக்கிறோம், பரிசுத்த ஆவியினால் முத்திரிக்கப்பட்டிருக்கிறோம், நம்மு டைய சுதந்தரத்தைப் பெறுவதற்கான அச்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் அங்கு நாம் கற்கிறோம். (இந்தப் பரிசுத்த அழைப்போடு, நாம் உயர்ந்த அழைப்பையும் பிலி. 3:14 பரம அழைப்பையும் எபி. 3:1 பெற்றிருக்கிறோம். - தமிழில் இரண்டு இடங்களிலும் பரம அழைப்பு என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

நாம் பெற்றிருக்கிற இரட்சிப்பும் அழைப்பும் நம்முடைய கிரியைகளின்படியானவை அல்ல. மாறாக அவை நமக்கு தேவ கிருபையினால் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பெற நாம் தகுதியற்றவர்கள் என்பதே இதன் பொருள். உண்மையில் நாம் அவற்றிற்கு எதிர்மாறான தைப் பெறவே தகுதியானவர்கள். அவற்றை நம்மால் சம்பாதிக்க முடியாது. ஆனால் தேவன் அவை யாவற்றையும் எவ்வித நிபந்தனையோ விலையோ இன்றி இலவசமாக நமக்குத் தந்தரு ளியிருக்கிறார்.

இவ்வுண்மை, **தம்முடைய தீர்மானத்தின்படி யும் கிருபையின்படியும்** என்னும் சொற்களால் மேலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. துன்மார்க்க ரான பாவிகளிடத்தில் தேவன் இவ்வளவாக அன்புகூர்ந்து, அவர்களுக்காக மரணமடையும்படி தம்முடைய ஒரே குமாரனை அனுப்பியதன் கார ணம் என்ன? தேவன் **தம்முடைய தீர்மானத்தின் படியும் கிருபையின்படியும்** செய்தார் என்பதே இதற்கு நாம் தரக்கூடிய ஒரேவிடை. அவருடைய செயலுக்கான காரணம் நம்மிடத்தில் இல்லை. மாறாக, அது அவருடைய மிகப்பெரிதான அன்பு கூரும் இருதயத்தில்தான் இருக்கிறது. அவர் நம் மிடத்தில் அன்புகூருவதால் அன்புகூருகிறார்!

அவருடைய தயவு இவ்விதமாக, **ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் அருளப்பட்டி ருக்கிறது.** நித்தியத்தின் கடந்த காலத்தில் தேவன் இரட்சிப்பின் வியத்தகு திட்டத்தை வகுத்துவிட்டார் என்பதே இதன் பொருளாகும். தம்முடைய பிரியமான குமாரன் பதிலாளாகச் செய்கிற செயலின் மூலமாகக் குற்றமுள்ள பாவி கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே அவரு டைய தீர்மானமாகும். எத்தனை பேர் இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்கிறார்களோ, அத்தனை பேர்களும் நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். நமது இரட்சிப்பின் வழி முறை என்னவென்பது நம்முடைய பிறப்பிற்கு முன் மட்டுமின்றி **ஆதிகால முதலே** திட்டமிடப் பட்டுவிட்டது.

1:10 நித்தியத்திலே திட்டமிடப்பட்ட அதே சுவிசேஷம் குறித்த காலத்திலே **வெளிப்படுத்தப் பட்டது.** அது **நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதாலே வெளிப்படுத்தப் பட்டது.** அவர் மாம்சத்திலே வாழ்ந்தபோது அவர் வெளியரங்கமாக இரட்சிப்பின் செய்தியை அறி வித்தார். துன்மார்க்கரான பாவிகளை தேவன் நீதியாக இரட்சிப்பதற்கு ஏதுவாகத் தாம் மரணம டைய வேண்டும், அடக்கம் பண்ணப்பட வேண் டும், இறந்தோரிலிருந்து உயிரோடு எழவேண்டும் என்று அவர் மனிதர்களுக்குக் கற்பித்தார்.

அவர் **மரணத்தைப் பரிகரித்தார்**. இவ்வுல கில் மரணம் இன்னும் எல்லோருக்கும் பொது வாக இருக்கிறபோது, இது எவ்வாறு உண்மை யாக இருக்க முடியும்? இங்கு சொல்லப்பட்டிருக்

கிற சிந்தனை, அவர் மரணத்தை நடைமுறை வழக்கிலிருந்து நீக்கிவிட்டார் அல்லது அதனுடைய பணியை நீக்கி விட்டார் என்பதே ஆகும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன் மரணம் ஒரு கொடுங்கோல் மன்னனைப்போல ஆட்சி செய்தது. அது அச்சுறுத்துகிற எதிரியாக விளங்கிற்று. மரணத்தைக் குறித்த அச்சம் மனிதனை அடிமைப்படுத்தி வைத்திருந்தது. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் மீண்டும் மரணமடையாதபடி உயிர்த்தெழுவதற்கு அச்சாரமாக விளங்குகிறது. இந்தப் பொருளிலேயே அவர் மரணத்தை அதனுடைய நடைமுறை வழக்கிலிருந்து நீக்கிவிட்டார். அவர் அதனுடைய கூரை ஒடித்துவிட்டார். விசுவாசியின் ஆத்துமாவை விண்ணகத்திற்கு அழைத்துச் செல்லும் தேவதூதனாக இப்பொழுது மரணம் செயல்படுகிறது. நம்முடைய எஜமானனாக விளங்குவதற்கு மாறாக அது வேலையாளாக இருக்கிறது.

கர்த்தராகிய இயேசு **மரணத்தைப்** பரிகரித்தது மட்டுமின்றி, **ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்.** பழைய ஏற்பாட்டுக் காலத்தில், மரணத்திற்குப் பிறகு உள்ள வாழ்க்கையைப் பற்றி பெரும்பாலான மனிதர்கள் தெளிவற்றதும் மங்கலானதுமான கருத்துகளையே கொண்டிருந்தார்கள். இறந்துபோனவர்கள் பாதாளத்தில் இருப்பதாகவே அவர்கள் பேசிக்கொண்டார்கள் அதாவது பிரிந்து சென்ற ஆவிகளின் காணக்கூடாத நிலை என்பதே அதன் பொருள். விண்ணக நம்பிக்கை அவர்களுக்கு உரைக்கப்பட்டிருந்த போதிலும், அதனுடைய பெரும்பகுதி அவர்களுக்குப் புலப்படாமலே இருந்தது.

கிறிஸ்துவின் வருகைக்குப் பிறகு இப்பொருள் பற்றிய வெளிச்சத்தை நாம் கூடுதலாகப் பெற்றிருக்கிறோம். எடுத்துக்காட்டாக, ஒரு விசுவாசி இறக்கும்போது, அவருடைய ஆவி கிறிஸ்துவோடு இருக்கும்படியாகச் செல்லுகிறது. அது அதிக நன்மையாயிருக்கும். அவர் தேகத்தை விட்டுப் பிரிந்து, கர்த்தரோடு குடியிருப்பார். அவர் நித்திய வாழ்விற்குள் அதன் நிறைவோடு நுழைகிறார்.

கிறிஸ்து **ஜீவனை** மட்டுமின்றி **அழியாமையையும் வெளியரங்கமாக்கினார். அழியாமை** சரீரத்தின் உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. "அழிவுள்ளதாகிய இது அழியாமையைத் தரித்துக்கொள்ள வேண்டும்" என்று 1 கொரிந்தியர் 15:53 -இல் நாம் படிக்கிறபோது, இந்தச் சரீரமானது கல்லறையில் வைக்கப்பட்டு மண்ணுக்குத் திரும்பினாலும், கிறிஸ்துவின் வருகையின் போது அதே சரீரம் கல்லறையினின்று உயிரோடு எழுப்பப்பட்டு மகிமையின் சரீரமாக மாற்றப்படும் என்றும் அது கர்த்தராகிய இயேவுக்கு ஒப்பானதாக இருக்கும் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு இந்த அறிவு கிடையாது. இவ்வறிவு **இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே** நமக்கு **வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.**

1:11 இந்த மகிமை நிறைந்த நற்செய்தியைப் பிரகடனப்படுத்தும்படி பவுல் **பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும் புறஜாதியாருக்கு போதகனாகவும் நியமிக்கப்பட்டார்.** பிரசங்கி என்பவர் செய்தியை அறிவிப்பவர் ஆவார், வெளியரங்கமாகச் செய்தியை அறிவிப்பதே அவருடைய அலுவல். தெய்வீகக் கட்டளையோடு, தெய்வீக முறையில் தகுதி பெற்றவராக, தெய்வீக அதிகாரத்தோடு அனுப்பப்பட்டவரே **அப்போஸ்தலன்** ஆவார். பிறருக்குக் கிறிஸ்தவக் கோட்பாடுகளை அறிவித்து அவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்பவரே **போதகர்** ஆவார். பிறர் புரிந்துகொள்ளும்படியாகச் சத்தியத்தை விவரித்துக் கூறி, அதனை அவர்கள் விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டவர்களாக, அதற்குக் கீழ்ப்படியச் செய்வதே அவர்களுடைய வேலை. புறஜாதியாருக்கு[7] என்னும் சொல், சிறப்பான முறையில் யூதரல்லாத நாடுகளில் அவர் ஆற்றிய திருப்பணியை விவரித்துக் கூறுகிறது.

1:12 பவுல் கடமை தவறாதவராகத் தனது பணியை செய்துவந்த காரணத்தால் சிறையில் அடைக்கப்பட்டு தனிமையை அனுபவிக்க நேரிட்டது. அவர் தேவனுடைய சத்தியத்தை அறிவிக்கத் தயங்கவில்லை. தன்னுடைய பாதுகாப்பைக் குறித்த அச்சம் அவருடைய உதடுகளுக்குப் பூட்டுப் போடவில்லை. அவர் இப்பொழுது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதிலும், அதன் காரணமாக அவருக்குச் சற்றேனும் வருத்தம் ஏற்படவில்லை. அவர் வெட்கப்படவில்லை, தீமோத்தேயுவும் அதன் காரணமாக வெட்கமடைய வேண்டியதில்லை. தற்பாதுகாப்பு குறித்த நம்பிக்கை இல்லாதிருந்த போதிலும், அவர் தான் **விசுவாசிக்கிறவரிடம்** முழு நம்பிக்கை கொண்டிருந்தார். அப்போஸ்தலனைக் கொலை செய்து ரோமாபுரி வெற்றி

பெறலாம், ஆனால் மனிதர்களால் அவருடைய கர்த்தரைத் தொட முடியாது. அவர் யாரை விசுவாசித்தாரோ அவர் **வல்லவர்** என்பதை அறிந்திருந்தார். எதனைச் செய்ய அவர் வல்லவர்? **நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார்.** பவுல் இங்கு குறிப்பிடுகிறது குறித்து விரிவுரையாளர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. இதனைச் சிலர் அவருடைய ஆத்துமாவின் இரட்சிப்பு என்று கருதுகிறார்கள். வேறு சிலர் இது சுவிசேஷத்தைக் குறிக்கிறது என்று நினைக்கிறார்கள். அதாவது, அப்போஸ்தலன் கொல்லப்பட்டாலும், சுவிசேஷத்தைத் தடைசெய்ய முடியாது. எவ்வளவு அதிகமான மனிதர்கள் அதனை எதிர்க்கிறார்களோ, அவ்வளவு அதிகமாக அது வளர்ச்சியடையும்.

இதனை விரிவான பொருளில் எடுத்துக்கொள்வதே மிகச் சிறந்ததாகத் தோன்றுகிறது. பவுலின் முழு வழக்கும் மிகவும் சிறந்த கரங்களில் ஒப்புவிக்கப்பட்டுள்ளன என்று அவர் நிச்சயித்திருந்தார். அவர் மரணத்தை எதிர்நோக்கியிருந்த போதிலும் அவருக்கு நம்பிக்கையின்மை சற்றேனும் ஏற்படவில்லை. இயேசு கிறிஸ்து அவருடைய சர்வ வல்லமையுள்ள கர்த்தர், அவரிடம் இழப்போ தோல்வியோ இல்லை. அதைக் குறித்து எந்தக் கவலையும் தேவையில்லை. பவுல் பெற்ற இரட்சிப்பு உறுதியானது. அதுபோலவே அவர் கிறிஸ்துவுக்காக இவ்வுலகில் ஆற்றிய பணியின் இறுதி வெற்றியும் நிச்சயம்.

அந்நாள் என்னும் சொல் பவுலுக்கு விருப்பமானது. அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறிப்பிடுகிறது. சிறப்பாக அது கிறிஸ்துவின் நியாயாசனத்தையும் குறிக்கிறது என்றே சொல்ல வேண்டும். அத்தருணத்தில் அவருக்காகச் செய்யப்படுகிற பணி புனராய்வு செய்யப்பட்டு, தேவனுடைய தயவு மனிதரின் விசுவாசத்திற்குப் பரிசு தரும்.

1:13 இந்த வசனத்தை இரண்டு வகையாகப் புரிந்துகொள்ளலாம். முதலாவதாக, தீமோத்தேயு **ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தை** உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதாகும். தேவனுடைய சத்தியத்திற்கு அவர் உண்மையுள்ளவராக இருப்பதுமன்றி, இந்தச் சத்தியமானது எந்தச் சொற்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதோ அவற்றை அவர் அப்படியே பற்றிக்கொள்ள வேண்டும். இதனை ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாக விளக்கிக் கூறுவது பெரும்பாலும் நன்மை பயக்கும். இன்றைய நாட்களில், பழம்பாணியான சொற்றொடர்களாகிய "மறுபடியும் பிறப்பது" "இயேசுவின் இரத்தம்" ஆகிய வற்றை நாம் முற்றிலும் புறக்கணிக்கவேண்டும் என்று சிலவேளைகளில் அறிவுறுத்தப்படுகிறோம். மக்கள் போலியான நாகரிகமிக்க சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் அங்கே தந்திரமான அபாயம் இருக்கிறது. ஆவிக்குரிய சொற்றொடர்களைத் தவிர்ப்பது, பெரும்பாலான நேரங்களில் அந்தச் சொற்றொடர்கள் வெளிப்படுத்தும் சத்தியங்களையே தவிர்ப்பதாக அமைந்துவிடும். ஆகவே, தீமோத்தேயு **ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தை** உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்.

ஆனாலும், பவுல் கூறும் சொற்கள் தீமோத்தேயுவுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்னும் பொருளையும் இந்த வசனம் தருகிறது. அதற்குப் பிறகு தீமோத்தேயு கற்பிக்கிறவையாவும் அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட சட்டத்திற்கு இசைவுடையதாக இருக்க வேண்டும். தீமோத்தேயு தனது ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுகிறபோது, அவர் அதனைக் **கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும்** செய்யவேண்டும். **விசுவாசம்** என்பது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல, சார்ந்திருக்கும் தன்மையுமாகும். **அன்பு** என்பது தேவனிடத்தில் கொண்டிருக்கும் அன்பை மட்டும் குறிப்பிடாமல், நமது உடன் விசுவாசிகளிடமும், நம்மைச் சுற்றிலும் இருக்கும் அழிந்துபோகிற உலகத்தாரிடமும் நாம் காட்டுகிற அன்பையும் குறிப்பிடுகிறது.

1:14 அந்த நற்பொருள் நற்செய்தியைக் குறிக்கிறது. அழிவினின்று மீட்கும் அன்பைக் குறித்த நற்செய்தி தீமோத்தேயுவிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது எந்தவொரு வகையிலும் அவர் அதனோடு எதையாவது கூட்டலாம் என்றோ, அதனைச் சற்று செவ்வைப்படுத்தலாம் என்றோ சொல்லப்படவில்லை. **நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே** காத்துக்கொள்ள வேண்டியது ஒன்றே அவருடைய பொறுப்பாகும். பவுல் இம்மடலை எழுதுகையில் விசுவாசத்தைவிட்டுப் பெருமளவு விலகிப் போகும் நிலை சபையை அச்சுறுத்திக் கொண்டிருந்தது என்பதைப் பவுல் உணர்ந்திருந்தார். பற்பல திசைகளிலிருந்து கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிரான தாக்குதல் நடக்கப்போகிறது. தேவனுடைய வார்த்தைக்கு உண்மையுள்ளவராகத் தீமோத்தேயு உறுதியோடு நிற்க வேண்டுமென்று

அறிவுறுத்தப்பட்டார். இதனை அவரால் தனது சொந்த வலிமையால் செய்ய முடியாது. உள்ளுறையும் **பரிசுத்த ஆவி** இந்த வேலையை அவர் செய்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் தந்தருளுவார்.

1:15 சபையைச் சுற்றிலும் கருமேகம் போன்ற துன்பம் பெருகுகிறதை நினைத்துப் பார்த்த அப்போஸ்தலன், ஆசியாவில் அவரைவிட்டுக் கிறிஸ்தவர்கள் **விலகினார்கள்** என்பதை நினைவுகூர்ந்தார். இம்மடலை அப்போஸ்தலன் எழுதுகையில் தீமோத்தேயு பெரும்பாலும் எபேசுப் பட்டணத்தில் இருந்திருப்பார். ஆகவே பவுல் என்ன சொல்லுகிறார் என்பதைத் தீமோத்தேயு மிகச் சரியாகப் புரிந்துகொண்டார்.

பவுல் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார் என்பதை அறிந்தபோது ஆசியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் பவுலோடு கொண்டிருந்த தொடர்பைத் துண்டித்துக்கொண்டார்கள். அவர்களுடைய தொடர்பு அவருக்கு மிகவும் தேவையாக இருந்த சமயத்தில், அவர்கள் அவரைக் கைவிட்டார்கள். பெரும்பாலும் அவர்கள் தங்கள் சொந்த பாதுகாப்பைக் குறித்து அச்சமடைந்திருந்ததே இதற்குக் காரணம். கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்ப முயன்றவர்களை ரோம அரசு தேடிவந்தது. கிறிஸ்தவத்திற்கு நன்கு அறியப்பட்ட பிரதிநிதியாக அப்போஸ்தலனாகிய பவுல் விளங்கினார். வெளிப்படையாக அவரைச் சந்திக்கத் துணிவு கொண்டவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்புவதை ஆதரித்தவர்கள் என்று குறித்துக் கொள்ளப்பட்டார்கள்.

இந்தக் கிறிஸ்தவர்கள் கர்த்தரையோ சபையையோ புறக்கணித்தார்களா இல்லையா என்பது பற்றி இங்கு சொல்லப்படவில்லை. ஆயினும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவர்கள் செய்த செயல் கோழைத்தனமானதும் நம்பிக்கைத் துரோகமும் ஆகும்.

பிகெல்லு, எர்மொகெனே ஆகியோர் பவுலோடு கொண்டிருந்த தொடர்பைத் துண்டித்துக்கொண்டவர்களின் கூட்டத்திற்குத் தலைவர்களாக இருந்தார்கள் போலும். அது எதுவாயினும், அவர்கள் கிறிஸ்துவின் ஊழியரிடம் ஐக்கியம் காட்டுவதால் வரக்கூடிய நிந்தையைச் சுமக்கத் தவறியதன் மூலம் தங்கள்மீது அழியாத அவமானத்தையும் பழியையும் வருவித்துக் கொண்டார்கள். "அவர்கள் தங்களுடைய அருவருப்பான பெயர்களுக்கு எவ்விதப் புகழ்ச்சியையும் கொண்டுவர முடியவில்லை, ஆனால் அவர்களுடைய அருவருப்பான நடத்தையின் மூலம் அவமதிப்பைக் கொண்டுவர முடிந்தது" என்று இது குறித்துக் கூறுகிறார் திருவாளர் கை கிங்.

1:16 ஒநேசிப்போருவைக் குறித்து இரண்டு விதமான கருத்துகள் நிலவுகின்றன. அவரும் பவுலை விட்டு விலகிச்சென்றுவிட்டார் என்றும், அதன் காரணமாகவே அப்போஸ்தலன் அவருடைய வீட்டாருக்குக் **கர்த்தர் இரக்கம் காட்ட** வேண்டுமென்று ஜெபிக்கிறார் என்றும் சிலர் கருதுகிறார்கள். சற்று முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள மனிதர்களினின்று இவர் மகிழ்ச்சியுண்டாக்கக் கூடிய வகையில் வேறுபட்டவர் என்று வேறு சிலர் கருதுகிறார்கள். பிந்தைய கருத்து சரியானது என்று நாம் நம்புகிறோம்.

ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக என்று பவுல் விண்ணப்பிக்கிறார். இரக்கமுள்ளவர்களுக்கு வெகுமதியாக இரக்கம் காண்பிக்கப்படும் என்பது மத்தேயு 5:7 -இல் காணப்படும் வாக்குறுதி. ஒநேசிப்போரு எவ்வாறு பவுலுக்கு **இளைப்பாறுதலைக்** கொண்டுவந்தார் என்று சொல்லப்படவில்லை. ஒருவேளை அவர் பனியும் இருளும் சூழ்ந்த சிறைக் கிடங்கில் இருந்த பவுலுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் கொண்டு வந்திருக்கக் கூடும். அது எதுவாயினும், அவர் சிறையிலிருந்த பவுலைச் சந்திக்கச் செல்வதற்கு **வெட்கப்படவில்லை**. நண்பருடைய தேவையறிந்து உதவி செய்வதில் அவர் தனது சொந்தப் பாதுகாப்பை ஒரு பொருட்டென்று கருதவில்லை.

இதனை நயம்பட விளக்குகிறார் திருவாளர் ஜோவெட்:

> "என் விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவில்லை." இது அப்போஸ்தலனாகிய பவுலின் சொற்களில் ஒநேசிப்போருவின் நடத்தைக்கு வழங்கப்பட்ட சிறப்புமிக்க நற்சான்றிதழ். ஒரு மனிதன் விலங்கிடப்படும்போது அவனுடைய நண்பர்களின் எண்ணிக்கை குறைந்து போகிறது. வறுமை என்னும் விலங்கு மனிதர்கள் பலரையும் விலகிச் செல்ல வைக்கிறது. அதுபோலவே புகழ் மங்கிப்போகும் போதும் நிகழ்கிறது. ஒரு மனிதன் புகழுச்சிக்குச் செல்லும்போது அவனுக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள். அந்த மனிதன் விலங்கைச் சுமக்கும்போது, அவனுடைய நண்பர்கள் அவனைவிட்டு ஓடிப்போகிறார்கள். ஆனால் அதிகாலைத் தென்றலின் அன்பிற்குத் தொண்டு

செய்வோர் இருளின் நிழலில் பவனி வருகிறார் கள். ஆத்துமாவில் பெருஞ்சுமை சுமப்போரி டையேயும் மனச்சோர்வுற்றோரிடையேயும் பணிபுரிய அவர்கள் பேருவகை கொள்கிறார் கள். "என் விலங்கைக் குறித்து அவன் வெட்கப் படவில்லை." அந்த விலங்கு அவருக்கு ஒரு கவர்ச்சியூட்டும் பொருளாகவே காணப்பட்டது. அது ஒநேசிப்போருவின் கால்களுக்கு வேகத் தையும், அவருடைய ஊழியத்திற்கு விரைவை யும் கொடுத்தது.[8]

இறந்துபோனவர்களுக்காக ஜெபம் செய் வதை ஆதரிக்கும்படி இந்த வசனம் சில வேளை களில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த மடலை அப்போஸ்தலன் எழுதியதற்கு முன்னரே ஒநேசிப்போரு இறந்துவிட்டதாகவும், அவருக்கு தேவன் இரக்கம் காட்ட வேண்டும் என்று பவுல் விண்ணப்பித்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள். ஒநேசிப்போரு ஏற்கனவே இறந்துபோனார் என்ப தற்கான ஒரு சிறு குறிப்பும் இங்கில்லை. இந்தக் கருத்தைப் புனைந்து கூறுபவர்கள், திருமறைக்கு முரண்பாடான வழக்கத்தை நிலைநிறுத்த முயற்சி செய்யும் வீண்பேச்சு வீரர்களே ஆவார்கள். அவர் கள் சிறு துரும்பைப் பிடித்துக்கொண்டு பெருங் கடலைக் கடக்க நினைப்பவர்கள்.

1:17 ஒநேசிப்போரு ரோமாபுரிக்கு வந்தபோது, அவருக்குக் குறைந்தது மூன்று வாய்ப்புகள் இருந்தன. முதலாவது, கிறிஸ்தவர்களோடு தொடர்புகொள்வதைத் தவிர்த்திருக்கலாம். இரண் டாவது, மறைமுகமாக அவர் விசுவாசிகளைச் சந்தித்திருக்கலாம். இறுதியாக, சிறைச்சாலை யில் இருந்த பவுலைச் சந்திப்பதன் மூலம் ஆபத்தை எதிர்கொள்ளத் துணிவுடன் தன்னை வெளிப்படுத் திக் காண்பித்திருக்கலாம். இந்தச் செயல் அவரை ரோம அதிகாரிகளோடு நேரடியான தொடர்பை ஏற்படுத்தியிருக்கும். நித்தியமான நன்மதிப்பைப் பெறும்படி அவர் மூன்றாவது வழியைத் தெரிந் தெடுத்தார். **அவர் ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய்ப்** பவுலைத் **தேடிக் கண்டுபிடித்தார்.**

1:18 இந்த உண்மையுள்ள நண்பன் வரும் நாளிலே கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்ட டையும்படி அப்போஸ்தலன் மன்றாடுகிறார். இங்கு **இரக்கம்** என்னும் சொல், பரிசு என்னும் பொருளி லேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. **அந்நாளில்** என்னும் சொல் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, பரிசுகள் தரப்படவிருக்கிற நேரத்தை, அதாவது கிறிஸ்துவின் நியாயாசனத்தைக் குறிக் கிறது.

இந்தப் பகுதியை முடிக்கையில், ஒநேசிப் போரு எபேசுப் பட்டணத்தில் இருக்கையில் வெவ் வேறு வகைகளில் தனக்கு ஊழியம் செய்ததை அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு நினைவூட்டுகிறார்.

ஆ. பொறுமையோடு நீடித்து உழைப்பதற்கான அறிவுரை (2:1-13)

2:1 கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படுதல் என்னும் சொற்றொடர் அவருடைய கிருபை தந்தருளும் வல்லமையில் பலப்பட்டு, சொந்தத் தகுதியில்லாத நிலையில் அவரோடு ஒன்றிணைந்ததன் மூலமாக வருகிற ஆற்றலி னாலே கர்த்தருக்காக உண்மையோடு முன்னே றிச் செல்லுதல் எனப் பொருள்படும்.

2:2 தீமோத்தேயு தான் கிருபையில் பலப் படுவதோடு, **மற்றவர்களுடைய** ஆவிக்குரிய பலப்படுதலுக்காகவும் செயல்படவேண்டும். ஆவிக் குரிய ஏவுதலினாலே அப்போஸ்தலன் கற்பித்த போதகங்களை மற்றவர்களுக்குச் சொல்லித்தர வேண்டிய பொறுப்பு அவரைச் சார்ந்ததாகும். வெகு விரைவில் அப்போஸ்தலன் உலகினின்று மறையப் போகிறார். **அநேக சாட்சிகளுக்கு** முன்பாக அவர் தீமோத்தேயுவுக்கு உண்மை யோடு கற்பித்து வந்தார். தீமோத்தேயுவின் ஊழிய நாட்களும் கூடிய விரைவில் முடிவுக்கு வரும். அவர் செய்துவந்த போதக ஊழியத்தை மற்றவர்கள் தொடர்ந்து செய்வதற்கு ஏதுவாக அவர்களை ஆயத்தப்படுத்தும்படி தனது ஊழியத் தைச் சீராக நிறைவேற்ற வேண்டும்.

அப்போஸ்தலர் வழிவழியாகப் பதவியில் நியமிக்கப்படுகிறார்கள் என்னும் கருத்தை இந்த வசனம் ஆதரிக்கிறதில்லை. போதகர்கள் நியமிக்கப்படுதல் என்று இன்றைய நாட்களில் செய்யப்படுகிற நியமன முறையையும் இது குறிப் பதில்லை. மாறாக, திறமையுள்ள போதகர்கள் காலம் காலமாக தொடர்ந்து செயல்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்று கர்த்தர் சபைக் குக் கொடுத்த அறிவுரையே இது.

இந்த வசனத்தில் நான்கு தலைமுறையினர் குறிப்பிடப்பட்டிருப்பதாக அவ்வப்போது சுட்டிக் காட்டப்படுவதுண்டு. அவர்கள்:

1. அப்போஸ்தலனாகிய பவுல்,

2. தீமோத்தேயு மற்றும் அநேக சாட்சிகள்,

3. உண்மையுள்ள மனிதர்கள்,

4. மற்றவர்கள்.

ஒவ்வொரு அங்கத்தினரும் நற்செய்திப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதைத் திருமறை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய பங்கை உண்மையாக நிறைவேற்று வாரெனில், ஒரு தலைமுறையில் இந்த உலகம் முழுவதற்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டுவிடும். ஆயினும் மனிதனுடைய சித்தம் முறைகேடான தாக இருப்பதாலும், பிற மதங்களும் கள்ளக் குழுக்களும் அவர்களுடைய கொள்கைப் பிர சாரத்தில் ஈடுபட்டிருப்பதாலும், இன்ன பிற தடை கள் இருப்பதாலும் மேற்கூறிய கருத்து கற்பனை யான கருத்தாகவே விளங்குகிறது. ஆனால் ஒரு செய்தி உறுதியானது: இது காறும் நிறைவேற்றப் பட்டுள்ள ஊழியத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது கிறிஸ்தவர்களால் இதனினும் பெருமளவு ஊழியம் நிறைவேற்றப்பட்டிருக்க முடியும் என்பது புலனாகிறது.

தீமோத்தேயு சத்தியத்தை உண்மையுள்ள மனிதர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். அதாவது அவர்கள் விசுவாசிகளாக இருக்க வேண்டும், மேலும் அவர்கள் நம்பத்தக்கவர்களாக இருக்க வேண்டும். இந்த மனிதர்கள் **மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க** திறம்படைத்தவர்களாக இருக்க வேண்டும். போதிக்கும் ஊழியத்திற்குத் திறமை முன் நிபந்தனையாக விளங்குகிறது என்பதை இந்தச் சொற்கள் உறுதிசெய்கின்றன.

2:3 இந்த அதிகாரத்தில் தீமோத்தேயுவைப் பற்றி விவரிப்பதற்கு ஏராளமான உவமைகளைப் பவுல் பயன்படுத்தியிருக்கிறார் என்று அடிக்கடி சுட்டிக்காட்டப்படுதுண்டு: (1) குமாரன் (வச. 1); (2) போர்ச்சேவகன் (வச. 3,4); (3) மல்யுத்த வீரன் (வச. 5); (4) பயிரிடுகிறவன் (வச. 6); (5) ஊழியக் காரன் (வச. 15); (6) பாத்திரம் (வச. 21); (7) வேலையாள் (வச. 24).

இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவ கனாய்த் தீமோத்தேயு பாடுகளையும், தீங்கு களையும்[9] அனுபவிக்க வேண்டும். (பவுல் அனு பவித்த பல்வேறு வகையான தீங்குகளின் பட்டி யலை 2 கொரிந்தியர் 11:23-29 ஆகிய வசனங் களில் காணவும்.)

2:4 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள போர்ச்சேவ கன் தன்னுடைய வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்கிறவனாவான். அவ்வாறு செயல்படுவது மட்டுமின்றி, அவன் போர் கடுமையாக நடந்து கொண்டிருக்கும் இடத்திலும் இருக்கிறான். அப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலையில் இருக் கிற எவனும், **பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்.**

கர்த்தருடைய ஊழியத்தில் பங்கு பெறுகிறவர் கள் உலகியல் சார்ந்த வேலையில் பணிபுரியக் கூடாது என்பதுதான் இதன் பொருளா? நிச்சய மாக இல்லை. பவுல் நற்செய்தியைப் பிரசங்கித்து சபைகளை நிறுவி வந்தபோது கூடாரம் பண்ணு கிறவராக வேலை செய்து வந்தார். அவருடைய தேவைகளுக்காக அவருடைய சொந்தக் கரங் களே ஊழியம் செய்தன என்று அவர் சாட்சி கூறியிருக்கிறார்.

சிக்கிக்கொள்ளுதல் என்னும் சொல்லுக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. வாழ்க் கையின் சாதாரண விஷயங்களுக்கு ஒரு போர்ச் சேவகன் முக்கியத்துவம் கொடுத்து, அவையே அவனுடைய வாழ்வின் நோக்கம் என்று சொல் லும்படி நடந்துகொள்ளக்கூடாது. எடுத்துக்காட் டாக, உணவையும் உடையையும் ஈட்டுவதையே அவன் தன்னுடைய நோக்கமாகக் கொண்டிருக் கக் கூடாது. இதற்கு மாறாக, கிறிஸ்துவுக்குப் பணி புரிவது எப்பொழுதும் முதன்மையான இடத்தை வகிக்க வேண்டும், இவ்வுலக வாழ்க்கைக்குரிய காரியங்கள் பின்னுக்குத் தள்ளப்பட வேண்டும். "உலகினின்று பிரிந்து வாழ்கிற நிலையை விட்டு விட்டு, அதனுடைய வெளியரங்கமான செயல் களில் ஒரு நம்பகமான கூட்டாளி போல செயல்படு வது என்பதே, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளுதல் என்னும் சொற்றொடரின் பொருளாகும்" [10] என்கிறார் திருவாளர் கெல்லி.

போர்ச்சேவகன் தலைமையிடத்திலிருந்து வருகிற கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய தன்னை எப்பொழுதும் ஆயத்தமாக வைத்திருக்கிறான். அவன் தன்னைச் **சேவகமெழுதிக்கொண்ட வனுக்கு** ஏற்றவனாயிருப்பதையே விரும்பு கிறான். விசுவாசி கர்த்தராலே வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறான் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. அவரிடத்தில் நாம் கொண்டிருக்கும் அன்பு இவ்வுலகத்திற்குரியவற்றில் நாம் இலே சான பிடிப்பு மட்டுமே உடையவர்கள் என்னும் நிலையில் நம்மைத் தொடர்ந்து இருக்கச் செய்ய வேண்டும்.

2:5 விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரனை நோக்கி உருவகம் திரும்புகிறது. அவன் பரிசுப்பொருளை

வெல்லும்பொருட்டு, அந்த விளையாட்டின் விதி முறைகளுக்கு அவன் கீழ்ப்படிய வேண்டும். அது போலவே கிறிஸ்தவ ஊழியத்திலும் நடைபெற வேண்டும். எல்லைக்கோட்டை அடையுமுன்னர் எத்தனைபேர் தேவனுடைய திருமறைக்கு முற்றி லும் உண்மையோடு கீழ்ப்படியாத காரணத்தால் தகுதியற்றவர்களாகி வீழ்ந்துபோகிறார்கள்.

கிறிஸ்தவ ஊழியத்தில் கைக்கொள்ள வேண் டிய விதிமுறைகள் எவை? (1) கிறிஸ்தவன் தற்கட்டுப்பாடு உடையவனாக நடந்துகொள்ள வேண்டும் (1 கொரி. 9:27). (2) அவன் மாம்சத்திற் கேற்றபடி போராயுதங்களைப் பயன்படுத்தாமல், ஆவிக்குரிய ஆயுதங்களைக்கொண்டு போரிட வேண்டும் (2 கொரி. 10:4). (3) அவன் தன்னைத் தூய்மையுடையவனாகக் காத்துக்கொள்ள வேண் டும். (4) அவன் எதிர்த்துப் போரிடாமல், பொறுமையோடு இருக்க வேண்டும்.

"ஓய்வுநேரக் கிறிஸ்தவன் நிபந்தனைகளுக்கு முரண்பட்டவனாயிருக்கிறான். வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒவ்வொரு கண நேரத் திலும் தன்னுடைய கிறிஸ்தவத்தை வாழ்ந்து முடிக்க அவனுடைய முழுவாழ்க்கையும் விறு விறுப்போடு கூடிய பெருமுயற்சியாக விளங்க வேண்டும்" என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

2:6 பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடைய வேண்டும். பயிரை வளர்த்து அதனை விளையச் செய்வதற்காகப் பெரு முயற்சி செய்கிறவன் அந்த விளைச்சலில் முந்திப் பங்குபெற உரிமை பெற்றிருக்கிறான். இது நீதியின் அனைத்து விதிகளுக்கும் ஏற்றதா யிருக்கிறது.

மேற்கூறிய விளக்கத்தைத் திருவாளர் டார்பி ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று ஒப்புக்கொண்ட போதிலும், விளைச்சலில் பங்குபெறும் பொருட்டு உழவன் உழைக்க வேண்டும் என்பதே இப்பகுதி யின் முக்கிய கருத்து என்று கூறுகிறார். ஆகவே அவர் இப்பகுதியைக் கீழ்க்கண்டவாறு மொழி பெயர்க்கிறார்: "பயிரிடுகிறவன் பலனில் பங்கடை வதற்கு முந்திப் பிரயாசப்பட வேண்டும்." தவிர்க்க இயலாதது என்னும் சிந்தனையை இந்தக் கருத்து பேணிப் பாதுகாக்கிறது: போர்ச்சேவகன் தீங்கநுப விக்க வேண்டும்; விளையாட்டு வீரன் விதி களுக்கு உட்பட்டு விளையாட வேண்டும்; பயிரிடு கிறவன் கடுமையாக உழைக்க வேண்டும்.

2:7 ஆனாலும் கிறிஸ்தவ ஊழியத்தைப் பற்றிய இந்த மூன்று உவமைகளிலும் மேலோட்ட மாகக் காணப்படுகிற கருத்துகளுக்கும் மேலாக ஆழமான கருத்துகள் இடம் பெற்றுள்ளன. தீமோத்தேயு அவற்றைக் குறித்துச் சிந்தித்து, அவற்றைத் தியானம் பண்ண வேண்டும். அவ் வாறு அவர் செய்கிறபோது, **கர்த்தர்** அவருக்கு **எல்லாக் காரியங்களிலும் புத்தியைத் தருவார்** என்று பவுல் மன்றாடுகிறார்.[11] கிறிஸ்தவத் திருப் பணி போர்க்களமாகவும், விளையாட்டுகளா கவும், பயிர்த்தொழிலாகவும் தோற்றமளிக்கிறது என்பதை அவர் அறிந்துகொள்வார். இந்தத் தொழில்களில் ஒவ்வொன்றும் அதற்குரிய பொறுப்புகளைக் கொண்டிருப்பதோடு, அதற்குரிய பரிசுப்பொருளைப் பெற்றுத் தருவதாகவும் விளங்குகிறது.

2:8 இத்தருணத்தில் இளைஞனாகிய தீமோத் தேயுவுக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கும் செய லில் பவுல் உச்சநிலையை அடைகிறார். கர்த்தரா கிய இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியினிடமாய் அவர் வருகிறார், இதனினும் உயர்ந்த இடத்திற்கு அவரால் செல்ல முடியாது. அவருடைய எடுத் துக்காட்டில் முதலாவது பாடுகள், அதனைத் தொடர்ந்து மகிமையடைதல். **தாவீதின் சந்ததி யில் பிறந்த இயேசு கிறிஸ்து என் சுவிசேஷத் தின்படியே, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட வரென்று நினைத்துக்கொள்.** கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய சில விஷயங்களைத் தீமோத்தேயு நினைவிற்கொள்ள வேண்டுமென்ப தல்ல இங்கு கூறப்பட்டுள்ள சிந்தனை. மாறாக, அவர் **மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்த** இயேசு கிறிஸ்துவையே நினைத்துக்கொண் டிருக்க வேண்டும்.

ஒரு பொருளில், பவுல் பிரசங்கித்த நற்செய்தி யின் கருத்துச் சுருக்கமாக இந்த வசனம் விளங்கு கிறது என்று கூறலாம். அந்த நற்செய்தி அறிவிப் பில் மிகமுக்கியமான குறிப்பாக விளங்குவது இரட்சகரின் உயிர்த்தெழுதலேயாகும். "சிலுவை யில் அறையப்பட்ட கிறிஸ்துவின் சாட்சியல்ல, உயிரோடு எழுந்த கிறிஸ்துவின் காட்சியே தீமோத் தேயுவுக்கு முன்பாக உயர்த்திக் காண்பிக்கப்படு கிறது" என்று திருவாளர் ஹீபர்ட் எழுதுகிறார்.[12]

தாவீதின் சந்ததி என்னும் சொற்றொடர் இயேசுவே கிறிஸ்து என்னும் உண்மையை எடுத்துரைக்கும் எளிய அறிக்கையாகும். தாவீதின் வழியில் பிறந்தவரிடத்தில் மேசியாவைப் பற்றிய அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேறியுள்ளன.

யாரெல்லாம் இரட்சகருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்கள் எல்லோரும் இடைவிடாமல் அவருடைய ஆளுமையையும் செயல்பாட்டையும் நினைவுகொள்ள வேண்டியது அவசியம். குறிப்பாக, பாடுகள் அனுபவிக்கிறவர்களும் மற்றும் மரணத்தைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலையில் இருப்பவர்களும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே சிலுவை, கல்லறை ஆகியவற்றின் வழியாகவே மகிமையை அடைந்தார் என்னும் செய்தியின் வாயிலாக மிகுதியான உற்சாகமடைகிறார்கள்.

2:9 எட்டாவது வசனத்தில் பொதுவான கோட்பாடுகளோடு சுருக்கமாக வரைந்து தரப்பட்டுள்ள நற்செய்தியைப் பிரசங்கித்த காரணத்தால் பவுல் இப்பொழுது ரோமச் சிறைச்சாலையில் சங்கிலியில் பிணைக்கப்பட்டிருக்கிறார். அவர் **பாதகன் போலவும்,** இழிவான குற்றவாளி போலவும் நோக்கிப் பார்க்கப்பட்டார். அவருடைய உற்சாகம் குன்றிப் போவதற்குப் பல காரணங்கள் இருந்தன. அவரைக் கொன்றுபோட வேண்டுமென்று ரோமப் பேரரசு தீர்மானித்தது மட்டுமின்றி, அவருடைய உடன் கிறிஸ்தவ நண்பர்கள் பலர் அவரைவிட்டு விலகிச் சென்று விட்டார்கள்.

இவ்வளவு கசப்பான சூழ்நிலைகள் இருந்த போதிலும், மகிழ்ச்சி நிறைந்த பவுலின் ஆத்துமா, இருட்டறையின் சுவர்களைக் கடந்து மேல்நோக்கிப் பறக்கிறது. **தேவவசனம் கட்டப்படவில்லை** என்னும் உண்மையை அவர் நினைவுகூர்ந்த வேளையில் அவருடைய இருள்சூழ்ந்த எதிர் காலத்தை முற்றிலும் மறந்து போனார். "அப்போஸ்தலனின் உயிரூட்டமுள்ள பேச்சு அவருடைய சொந்த இரத்தத்தில் அணைந்துபோகக் கூடும், ஆனால் அவர் மூலமாகக் கர்த்தர் பேசுகிறவை இந்தப் பரந்த உலகில் இன்னமும் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றன" என்று அழகுற மொழிந்துள்ளார் திருவாளர் லென்ஸ்கி. தேவனுடைய திருமறை முன்னேறிச் செல்வதை இவ்வுலகின் படைகள் அனைத்தும் ஒன்றுகூடி வந்தாலும் தடைசெய்ய இயலாது. மழை பொழிவதையும் பனி பெய்கிறதையும் தடைசெய்வதற்கு ஒப்பாகவே அது காணப்படும் (ஏசா. 55:10,11). திருவாளர் ஹார்வி கூறுகிறார்:

> நற்செய்தியை ஆதரித்துப் பறைசாற்றுவோர் சிறையில் அடைக்கப்படக்கூடும், சாவையும் சந்திக்க நேரிடும்; ஆயினும் அந்த நற்செய்திப் பணி தடைசெய்ய இயலாதபடி தெய்வீக வல்லமையோடு வெற்றிவாகை சூடி பீடுநடையோடு முன்னேறிச் செல்லும். மனிதர்கள் மரணமடைவார்கள், ஆனால் கிறிஸ்துவோ அவருடைய நற்செய்தியோடு காலம் காலமாக உயிரூட்டத்தோடு வெற்றி நடைபோட்டு முன்னேறுகின்றார்.[13]

2:10 தடைசெய்ய இயலா இயல்புடையதாக நற்செய்தி விளங்குகின்ற காரணத்தால் பவுல் **தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நிமித்தமாகச் சகலத்தையும் சகிக்க** விருப்பங்கொண்டிருந்தார். நித்திய இரட்சிப்புக்காக தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களே இங்கு **தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்** என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இரட்சிக்கப்படுவதற்கென மக்களை தேவன் தெரிந்துகொள்கிறார் என்று வேதம் கற்பித்த போதிலும், அழிவிற்கென்று அவர் சிலரைத் தெரிந்துகொள்கிறார் என்று அது எங்கும் கூறவில்லை. இரட்சிக்கப்படுகிறவர்கள் தேவனுடைய இறைமைக் காருண்யத்தால் இரட்சிக்கப்படுகிறார்கள். இழந்துபோகிறவர்கள் இழந்து போவதைத் தாங்களாகவே வேண்டுமென்றே தெரிந்து கொள்கிறார்கள்.

தேவனுடைய தெரிந்தெடுப்பு என்னும் கொள்கைக்கு எதிராக ஒருவரும் தேவனோடு சண்டை போடக் கூடாது. அந்தக் கொள்கையானது தேவனை தேவனாகச் செயல்படும்படியும், இப்பிரபஞ்சத்தின் சர்வ அதிகாரத்தையும் தம்மகத்தே கொண்டவராக விளங்கும்படியும், கிருபையோடும், நீதியோடும், நேர்மையோடும், அன்போடும் செயல்படும்படியும் அனுமதிக்கிறது. நேர்மையற்ற முறையிலோ இரக்கமற்ற வகையிலோ அவர் ஒருபோதும் செயல்படுகிறதில்லை. முற்றிலும் தகுதியற்றவர்களிடம் அவர் அவ்வப்போது தமது தயவை வெளிப்படுத்துகிறார்.

நற்செய்தியின் நிமித்தம் தான் அடைகிற பாடுகளின் வாயிலாக ஆத்துமாக்கள் இரட்சிப்பு அடைகிறார்கள் என்றும், அதே ஆத்துமாக்கள் ஒரு நாளில் கிறிஸ்து இயேசுவோடு நித்திய மகிமையில் பங்கு பெறுவார்கள் என்றும் அப்போஸ்தலன் உணர்ந்தார். குற்றமிழைத்த பாவிகள் தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப் பட்டு, கிறிஸ்து இயேசுவோடு மகிமை பெறுகிற காட்சி ஒன்றே பவுல் எல்லாப்பாடுகளையும் சகிக்கப் போதுமானதாக விளங்கிற்று. இறைப்பற்று மிகுந்த திருவாளர் ருத்தர்.'.போர்ட் இயற்றிய கவிதை இவ்வுண்மையை நம்முடைய நினைவிற்குக் கொண்டுவருகிறது:[14]

எரிநரகின் அழிவைநோக்கிச்
செல்லுகின்ற ஒருநபரை
இறைவனது வலப்புறத்தில்
நான்காண நேரிட்டால்
பொறிவாயில் தமையவித்த
இறைமைந்தர் நானிலத்தில்
குறைவுபடா என்னுவகை
இரட்டிப்பாய் மலர்ந்திடுமே!

2:11 பதினொன்று முதல் பதின்மூன்று வசனம் வரையில் சொல்லப்பட்டுள்ளவை தொடக்க காலத்தில் வழக்கில் இருந்த கிறிஸ்தவப் பாடலின் பகுதி என்று எண்ணப்படுகிறது. அது அவ்வாறு இருந்தாலும் இல்லாமற்போனாலும், இந்த வரிகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு மனிதனுக்கு உள்ள மாற்றவியலாத உறவின் கொள்கைகளை நிச்சயமாக வெளிப்படுத்துகின்றன. திருவாளர் ஹீபர்ட் எழுகிறார்: இந்தப் பொருட் செறிவுமிக்க வரிகளின் முக்கியமான கருப்பொருள் யாதெனில், அவிசுவாசமானது ஒரு மனிதனை எவ்வளவு நிச்சயமாய்க் கிறிஸ்துவினிடத்திலிருந்து பிரித்து வைத்திருக்கிறதோ, அதுபோலவே ஒரு விசுவாசியானவன் கிறிஸ்துவோடு எல்லாவற்றிலும் இணைக்கப்பட்டிருக்கிறான்."[15] பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய மடல்களில் காணப்படும் நான்காவது உண்மையுள்ள வார்த்தை இதுவே.

நாம் கிறிஸ்துவோடு **மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்** என்பது முதலாவது கோட்பாடு ஆகும். இ.˙.து ஒவ்வொரு விசுவாசியினிடத்திலும் உண்மையாக விளங்குகிறது. ஆவிக்குரிய பொருளில், நாம் அவரை நமது இரட்சகராக விசுவாசித்த தருணத்தில் **அவரோடேகூட மரித்தோம்**. அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். மேலும் இறந்தோரிலிருந்து நாம் அவரோடேகூட உயிருடன் எழுப்பப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து நம்முடைய பிரதிநிதியாகவும் பதிலாளாகவும் மரணமடைந்தார். நம்முடைய பாவங்களுக்காக நாம் மரணம் அடைந்திருக்க வேண்டும், ஆனால் கிறிஸ்து நம்முடைய இடத்தில் மரணமடைந்தார். நாம் **அவரோடே கூட மரித்ததாக** தேவன் கணக்கிடுகிறார். அதாவது, நாமும்கூட **அவரோடேகூடப்** பரலோகத்தில் **பிழைத்துமிருப்போம்** என்பதே இதன் பொருளாகும்.

இரத்த சாட்சிகளாக மரணம் அடையும் கிறிஸ்தவர்களை இது குறிப்பதாகவும் பொருள்கொள்ளலாம். மரணத்தில் அவரைப் பின்தொடருகிறவர்கள், அதுபோலவே உயிர்த்தெழுதலிலும் அவரைப் பின்தொடருவார்கள்.

2:12 ஒரு பொருளில், **பாடுகளைச் சகிக்கிற** எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் இது பொருந்தும், அவர்கள் யாவரும் கிறிஸ்துவோடு **ஆளுகையும் செய்வார்கள்.** மெய்யான விசுவாசம் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய தன்மையுடையது, மேலும் இந்தப் பொருளில் எல்லா விசுவாசிகளும் **பாடுகளைச் சகிக்கிறார்கள்.**

ஆயினும், எல்லோரும் கிறிஸ்துவோடு ஒரே அளவிற்கு ஆளுகை செய்யமாட்டார்கள் என்பதை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஆளுகை செய்யும்படி மீண்டும் இப்புவிக்கு வருகிறபோது, அவருடைய பரிசுத்தவான்களும் அவருடன் வந்து அந்த ஆட்சியில் பங்கு பெறுவார்கள். ஆனால் ஒருவரது ஆட்சியின் பரப்பெல்லை இப்புவி வாழ்க்கையின்போது அவர் எந்த அளவிற்கு உண்மையுள்ளவராக விளங்கினார் என்பதைப் பொருத்து அமையும்.

கிறிஸ்துவை **மறுதலிக்கிறவர்கள்** அவராலே மறுதலிக்கப்படுவார்கள். பேதுரு கிறிஸ்துவை மறுதலித்ததுபோல, இன்னல்களின் காரணமாகச் சிறிதுகாலம் மறுத்துரைக்கிற செயலை இது குறிக்கிறதில்லை. மாறாக, நிரந்தரமாக அவரை மறுத்துரைப்பதையே வழக்கமாகக் கொண்டிருப்பவர்களையே இது குறிப்பிடுகிறது. இந்தச் சொற்கள், ஒருபோதும் கர்த்தராகிய இயேசுவை விசுவாசத்தினாலே ஏற்றுக்கொள்ளாத அவிசுவாசியையே விளக்கிக் கூறுகிறது. அப்படிப்பட்ட அனைவரும், அவர்களுடைய சமய நம்பிக்கை எவ்வளவு ஆழமானதாக இருந்தாலும், வரப்போகிற ஒரு நாளில் கர்த்தராலே மறுத்துரைக்கப்படுவார்கள்.

2:13 இந்த வசனமும் அவிசுவாசிகளையே குறிப்பிடுகிறது. டின்ஸ்டேல் யெங் என்பார் விளக்கிக் கூறுகிறார்: "தேவன் தம்மில்தாமே முன்னுக்குப் பின் முரணானவராகச் செயல்புரியமாட்டார். உண்மையுள்ள தன்மையுடையோரையும், உண்மையில்லாதவரையும் அவர் ஒரே விதமாக நடத்துவார் என்பது அவருடைய பண்பிற்கு ஒத்திசைவற்றதாகக் காணப்படும். நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், அவர் எல்லா நேரத்திலும் அவருடைய நீதிக்கு உண்மையுள்ளவராக விளங்குகிறார்."[16]

நம்பிக்கையில்லாத மனிதர்களைத் தாங்குவதன் மூலமாக தேவனுடைய உண்மையுள்ள

தன்மை வெளிப்படுத்தப்படுகிறது என்று கற்பிக்க இந்தச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது. அதுவன்று உண்மை. மனிதர்கள் நம்பிக்கை யற்றவர்களாக இருப்பார்களென்றால், அவர் தம்முடைய நற்பெயருக்கு ஏற்றவிதமாக உண்மை யுள்ளவராக விளங்குவதோடு, அதற்கேற்ற படியே அவர்களை நடத்துவார். "அவர் தமது வாக்குறுதிகளில் உண்மையுள்ளவராக இருப்பது போலவே, தம்முடைய அச்சுறுத்தல்களிலும் உண்மையுள்ளவராக இருக்கிறார்" என்று வான் ஊஸ்டர்ஜி என்பார் கூறியதுபோல இது விளங்குகிறது.[17]

3. பற்றுறுதியும் அதற்கு எதிரான விசுவாச மறுதலிப்பும் (2:14-4:8)

அ. மெய்யான கிறிஸ்தவத்தின்மேல் பற்றுறுதி கொள்ளுதல் (2:14-26)

2:14 தீமோத்தேயு **இவற்றை அவர்களுக்கு நினைவூட்ட** வேண்டும், அதாவது, 11 முதல் 13 வரையில் சொல்லப்பட்டுள்ள செய்திகளை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். **அவர்கள்** என்று பவுல் யாரைக் குறிப்பிடுகிறார்? தீமோத்தேயு கூறுகிற செய்திகளைக் கேட்கிற அனைவரையும் இது பொதுவாகக் குறிப்பிட்டாலும், பெரும்பாலும் அந்நிய உபதேசங்களை அறிமுகப்படுத்திவந்த மனிதர்களையே இது குறிப்பிட்டுச் சொல்லுகிறது. இந்த வசனத்தின் எஞ்சிய பகுதி அதைத் தெளிவுபடுத்துகிறது. அங்கே போதகர்களும் பிரசங்கிகளுமாகச் செயல்புரிகிறவர்கள் வார்த்தைகளைக் கொண்டு **வாக்குவாதம் செய்யக் கூடாதென்று** எச்சரிக்கப்படுகிறார்கள். சில குறிப்பிட்ட கலைச் சொற்களுக்குரிய அர்த்தங்களைக் குறித்து மிகப்பெரிய அளவில் வாதம் செய்தவர்கள் எபேசுப் பட்டணத்தில் இருந்தார்கள் என்பது வெளிப்படை. தேவனுடைய திருமறைச் சத்தியத்தைப் பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையில் கூட்டி வளர்ப்பதற்கு மாறாக, அவர்கள் தங்களைக் கேட்கிற சிலருடைய விசுவாசம் வலு விழந்து போகும்படி செய்கிறார்கள்.

திருவாளர் டின்ஸ்டேல் யெங் எச்சரிக்கிறார்:

> இறையியல் சொற்புரட்டு வீரர்களாக மாறுவது மிக எளிது. எவ்வித முக்கியத்துவமும் இல்லாத கேள்விகளை எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும்படி கேட்க ஆயத்தமாய் இருக்கிறோம். குணநல வளர்ச்சியை உண்டாக்க இயலாத செயல்களில் ஈடுபட்டு மூளையையும் இருதயத்தையும் வீணடிக்கக் கூடிய அளவிற்கு வாழ்க்கை நீண்டதுமல்ல, சுறுசுறுப்பற்றதுமல்ல.
>
> இவ்வுலகெங்கிலும் நற்செய்தி பரப்பப்பட வேண்டியதாயிருக்க, எப்பொழுதும் கோட் பாட்டு விளக்கங்களில் வழிதவறிச் சுற்றிச் சோம்பித் திரிகிறவர்களாகவோ, அதில் நம்முடைய நேரத்தையெல்லாம் செலவழித்து விரைந்து திரிகிறவர்களாகவோ மாற்றம் பெற்றிருப்பது நமது அவலநிலையை எடுத்துரைக்கிறது. மிகப்பெரிதான சத்தியங்களுக்கு உண்மையாயிருங்கள். இன்றியமையாத வற்றை வலியுறுத்துங்கள், முக்கியமில்லாத வற்றைக் குறித்துப் பேசவேண்டியதில்லை. சம்காரின் நாட்களிலும், யாகேலின் நாட்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் அச்சத்தினால் பெரும் பாதைகளில் நடக்காமல் அவற்றைப் பாழாக்கி, பக்கவழியாய் நடந்ததுபோல செயல்படாதிருங்கள்.[18]

2:15 தேவனுக்கு முன்பாகத் தன்னை **உத்தமனாக நிறுத்த** தீமோத்தேயு **ஜாக்கிரதையாக** இருக்க வேண்டும். **வெட்கப்படாத ஊழியக்காரனாக** மாறும்படி அவர் தன்னுடைய முயற்சிகள் எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்த வேண்டும். இதனை அவர் **சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறதனால்** மட்டுமே நிறைவேற்ற முடியும். சரியான முறையில் திருமறை வசனத்தைக் கைக்கொள்வது என்பதே இதன் பொருளாகும். "ஒரு வரியைத் தோண்டியெடுத்தல்" அல்லது திருவாளர் ஆல்.'.போர்ட் கூறியது போல, "சரியான முறையில் கைக்கொள்ளுதல் என்பது எவ்விதத்திலும் உண்மையைத் திரித்துக் கூறாதிருத்தல்" என்பதே இதன் பொருளாகும்.[19]

2:16 சீர்கேடான வீண்பேச்சுகள் என்பவை மரியாதையற்றதும், தீயதும், பயனற்றதுமான போதகங்களே ஆகும். இறைமக்களுக்கு இவற்றில் யாதொரு பயனுமில்லை, இவை விட்டொழிக்கப்பட வேண்டும். இவ்வித போதகங்களை எதிர்த்துப் போரிடவேண்டுமென்று தீமோத்தேயு அறிவுறுத்தப்படாமல், இவற்றைத் தகுதியற்றது என்று கருதி, தன்னுடைய கவனத்திற்கு உகந்தது என்று கூடக் கருதக்கூடாது.

வீணாகப் பேசுகிறவர்கள் பற்றிய உண்மை யாதெனில் அவர்கள் ஒருபோதும் நிலையாயிருக்க மாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் **அவபக்தியில்** வளர்கிறவர்களாக இருப்பார்கள். இது

எல்லாவிதமான தவறுகளுக்கும் பொருந்தும். தவறானவற்றைப் போதிக்கிறவர்கள் தொடர்ந்து அவற்றோடு எதையாவது சேர்த்துக்கொண்டே இருப்பார்கள். கள்ளச் சமய அமைப்புகள் இடைவிடாமல் புதிய கொள்கைகளையும் அறிவிப்புகளையும் வெளியிட்டுக்கொண்டே இருப்பதை இது விவரிக்கிறது. தவறான கோட்பாடுகள் பெருகப் பெருக **அதிக அவபக்தி** உண்டாகும்.

2:17 தீமை விளைவிக்கும் போதகங்கள் **பரவுவது புற்றுநோய்க்கு** ஒப்பிடப்பட்டிருக்கிறது. அச்சமூட்டும் இந்நோய் மனித உடலில் விரைவாகப் பரவக்கூடியது, மேலும் அது செல்லுமிடமெங்கிலும் திசுக்களை அழிக்கக்கூடியது என்பதை நம்மில் பலர் நன்கு அறிந்திருக்கிறோம்.

புற்றுநோய் என்னும் சொல்லிற்குப் பதிலாக இதனை அரிபிளவை என்றும் மொழிபெயர்க்கலாம்.[20] அரிபிளவை என்னும் சொல், உடலின் ஒரு பகுதிக்கு இரத்தமும் சத்துநீரும் போகாமல் தடுக்கப்பட்டு அது அழுகிப் போய்த் துண்டிக்கப்படுதல் என்னும் பொருளைத் தருகிறது.

புதிய ஏற்பாட்டின் வேறுபகுதிகளில், தீமை விளைவிக்கும் கோட்பாடுகள் புளித்தமாவுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன. அது பரவுவதற்கு இடங்கொடுக்கப்படுமென்றால் கொஞ்சம் புளித்தமாவு பிசைந்த மாவு முழுவதையும் புளிப்பாக்கி விடும்.

அந்த இடத்தில் கூடிவந்த சபையைக் களங்கப்படுத்தின இருவருடைய பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இமெநேயும் பிலேத்துமே அவர்கள். சத்திய வசனங்களைச் சரியான முறையில் கற்பிக்க அவர்கள் தவறியதால், தேவனுக்கு அவமானச் சின்னமாக விளங்கியவர்களின் பட்டியலில் அவர்களும் இடம்பெற்றார்கள்.

2:18 அவர்களுடைய தவறான கொள்கை என்னவென்று இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. **உயிர்த்தெழுதல்** ஏற்கனவே **நடந்தாயிற்றென்று** அவர்கள் மக்களிடம் கூறினார்கள். ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டவுடன் அவன் புதிதான ஜீவனுக்குள்ளாகக் கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுகிறான், இது ஒன்றே அவன் எதிர்பார்க்கக் கூடிய உயிர்த்தெழுதல் என்று அவர்கள் கருதினார்கள் போலும். உயிர்த்தெழுதல் என்னும் சொல்லுக்கு ஆவிக்குரிய பொருளைக் கூறிவிட்டு, கல்லறையிலிருந்து சரீரம் உயிரோடு எழுகிற எழுத்தின்படியான உயிர்த்தெழுதலை ஏளனம் செய்தார்கள் என்றும் இதனைக் கூறலாம். கிறிஸ்தவத்தின் உண்மைக்கு எதிரான கடுமையான ஆபத்து இது என்று பவுல் உணர்ந்தார்.

ஹாமில்டன் ஸ்மித் கூறுகிறார்:

> உயிர்த்தெழுதல் ஏற்கனவே நடந்தாயிற்று என்றால், பரிசுத்தவான்கள் தங்களுடைய இறுதி நிலையை இவ்வுலகத்தில் இருக்கும் போதே அடைந்துவிட்டார்கள் என்றும், அதன் விளைவாக சபையானது கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டிய தில்லை என்றும், அது பரலோகத்திற்குச் செல்ல வேண்டும் என்னும் உண்மை ஒவ்வாதது என்றும் ஆகிவிடும். மேலும் அது அந்நியமும் பரதேசியுமாக இருக்கக்கூடிய தன்மையையும் இழந்துவிடும். சபை தனது விண்ணகக் குண நலனை இழந்து, உலகின் சீர்திருத்தம், அரசாட்சி போன்ற அமைப்புகளில் இரண்டறக் கலந்து, பூமியிலேயே நிலைநின்றுவிடும்.[21]

அவர்கள் **சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போட்டதால்** தேவனுடைய நித்திய புத்தகத்தில் விரும்பத்தகாத இடத்தைப் பெற்றார்கள்.

2:19 இமெநே மற்றும் பிலேத்து ஆகியோருடைய கள்ளப்போதகத்தைச் சிந்தித்துப் பார்த்த பவுல், சபையின் மீது புதிதாக வரப்போகிற இருண்ட நாட்களை நினைத்துப் பார்க்கிறார். அவிசுவாசிகள் உள்ளூர் சபைகளில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். ஆவிக்குரிய வகையில் மிகத் தாழ்ந்த நிலை ஏற்படுகின்ற காரணத்தால் யார் மெய்யான கிறிஸ்தவர், யார் வெற்றறிக்கை செய்கிறவர் என்று அறிவது அரிதாகிப் போய்விடும். கிறிஸ்தவ உலகம் ஒரு கலப்பட கூட்டமாகக் காணப்பட்டு, ஏற்படுகின்ற குழப்பம் பேரழிவை உண்டாக்கக் கூடியதாயிருக்கும்.

இத்தகைய சூழ்நிலையில், **தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது** என்னும் உறுதிப்பாட்டில் பவுல் ஆறுதல் பெறுகிறார். அறிக்கை செய்கிற சபை கீழ்நிலையை அடைந்தாலும் தேவன் நிறுவியது நிலைநிற்கும்.

தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது என்னும் சொற்றொடருக்குப் பலவித விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. மெய்யான சபையே இது என்று சிலர் கருதுகிறார்கள். கிறிஸ்தவ விசுவாசம் அல்லது தெரிந்தெடுப்பு என்னும் உபதேசத்திற்கு தேவன் அளிக்கிற வாக்குறுதியே இது என்று வேறு சிலர் கூறு

கிறார்கள். கர்த்தர் செய்கின்ற ஏதொன்றும் **தேவனுடைய அஸ்திபாரம்** என்பது தெளிவாகத் தெரிகிற உண்மையல்லவா? அவர் தமது வார்த்தையை அனுப்புவார் என்றால் அதை யாரால் தடைசெய்ய முடியும்? ஹேமில்டன் ஸ்மித் கூறுகிறார்: "தேவன் போட்ட அஸ்திபாரத்தை மனிதனுடைய எந்தத் தவறாலும் தள்ளிவிட முடியாது. அல்லது தேவன் தொடங்கியதை முடிக்கவிடாமல் தடுக்க எதனாலும் முடியாது... கர்த்தருக்குரியவர்கள் பெருங் கூட்டத்துக்குள் மறைந்திருந்தாலும், அவர்கள் இறுதியில் இழந்துபோகமாட்டார்கள்."[22]

தேவனுடைய அஸ்திபாரம் இரட்டத்தனையான **முத்திரையைக்** கொண்டிருக்கிறது. அதற்கு தெய்வீகப் பண்பும் மனிதப் பண்பும் உள்ளன. தெய்வீகப் பண்பின்படி **கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.** அவர்களை அடையாளம் கண்டுகொள்வார் என்னும் பொருளில் மட்டுமின்றி, அவர்களை ஏற்றுக்கொண்டவராக அறிந்து போற்றவும் செய்கிறார் என்னும் பொருளிலும் அவர் அவர்களை **அறிந்திருக்கிறார்.** "அவர் அவர்களை தமக்குரியவர்களாக்கிக்கொண்டவராக அதனோடு ஆக்கபூர்வமான அன்பையும் செலுத்துகிறார்" என்னும் நிலையில் அவர்களை அவர் அறிந்திருக்கிறார் என்று லென்ஸ்கி கூறுகிறார்.[23] கிறிஸ்துவின்[24] நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவன் என்பது முத்திரையின் மனிதப் பண்பாகும். அதாவது, தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை செய்கிறவர்கள், தங்களுடைய பரிசுத்த வாழ்க்கையினாலும் கடவுட்பற்றினாலும் தங்களது அறிக்கையின் மெய்ம்மையை நிரூபிக்க முடியும். மெய்க்கிறிஸ்தவனுக்கு அநீதியுடன் எவ்விதத் தொடர்பும் இல்லை.

முத்திரை உரிமையைக் குறிக்கும் சின்னமாக விளங்குவதோடு, உறுதிமொழி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அடையாளமாகவும் விளங்குகிறது. இவ்வாறாக தேவனுடைய அஸ்திபாரத்தின் முத்திரை, மெய் விசுவாசிகள் அவருடைய உரிமைப்பொருட்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிடுவதோடு, மனந்திரும்பியவர்கள் அதனுடைய உண்மைத்தன்மையை அநீதியிலிருந்து நீங்கி புதிதான ஜீவனுள்ளவர்களாக வாழ்வதன் மூலம் மெய்ப்பிப்பார்கள் என்ற உறுதியையும் தருகிறது.

2:20 இந்த உவமையில், **பெரிய வீடு** என்பது பொதுவாக கிறிஸ்தவ உலகைக் குறிக்கிறது என்று நாம் கருதுகிறோம். அதனுடைய விரிவான பொருளில் கிறிஸ்தவ உலகு என்பது விசுவாசிகளையும் வெற்றறிக்கை செய்கிறவர்களையும் உட்கொண்டது; அதாவது மெய்யாக மறுபடியும் பிறந்தவர்கள் ஒரு சாரார், வெறும் பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் மற்றொரு சாரார்.

பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்கள் மெய்யான கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. **மரமும் மண்ணுமான பாத்திரங்கள்** பொதுவாக அவிசுவாசிகளைக் குறிக்காமல் இமெநே மற்றும் பிலேத்து போன்று தீமைக்கென்று ஊழியம் செய்தவர்களையும் கள்ளப் போதகர்களையுமே குறிக்கிறது (வச. 17).

பாத்திரங்களைப் பற்றிய சில விசயங்களை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். முதலாவதாக, அந்தப் பாத்திரங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடு உள்ளது. இரண்டாவதாக, அந்தப் பாத்திரங்களின் பயன்பாட்டிலும் வேறுபாடு உள்ளது. கடைசியாக, அவை சென்று சேரும் இடத்திலும் வேறுபாடு உள்ளது. மரத்தினாலும் மண்ணினாலும் செய்யப்பட்ட பாத்திரங்கள் சிறிது காலம் கழித்து பயனற்றவை என்று கருதி தூக்கி எறியப்படும். ஆனால் பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்டவை மதிப்புடையவையாகப் பாதுகாக்கப்படும்.

சில கனத்திற்கும் சில கனவீனத்திற்கு மானவை என்னும் சொற்றொடருக்குப் பலவகைகளில் பொருள் கூறப்பட்டுள்ளன. **கனவீனம்** என்னும் சொல் சற்றுக் குறைவான கனத்தைக் குறிக்கிறது என்று சிலர் கருதுகிறார்கள். அவ்வாறு பொருள்கொள்வோமானால், எல்லாப் பாத்திரங்களும் மெய்யான கிறிஸ்தவர்களையே குறிக்கின்றன என்று பொருள்கூற வேண்டும், ஆனால் சில பாத்திரங்கள் மிகவுயர்ந்த பணிக்கெனவும், வேறு சில பாத்திரங்கள் மிகத்தாழ்ந்த பணிக்கெனவும் பயன்படுத்தப்படுகின்றன. கனத்திற்குரிய பாத்திரங்கள் என்னும் சொற்றொடர் பவுல் தீமோத்தேயு போன்ற மனிதர்களையும், கனவீனத்திற்குரிய பாத்திரங்கள் என்னும் சொற்றொடர் இமெநே மற்றும் பிலேத்து போன்ற மனிதர்களையும் குறிப்பிடுகின்றன என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள்.

2:21 "ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால்" என்னும் சொற்றொடரில் உள்ள **இவைகளை விட்டு** என்னும் சொல்லின் பொருளை ஒருவர்

எவ்வாறு புரிந்துகொள்கிறாரோ அதைப் பொருத்தே இந்த வேத பகுதிக்குப் பொருள் கூறமுடியும்.

இவைகள் என்னும் சொல் மரமும் மண்ணுமான பாத்திரங்களைக் குறிக்கிறதா? இந்த அதிகாரத்தில் முந்தைய பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளப்போதகங்களை இது குறிக்கிறதா? அல்லது பொதுவாகப் பொல்லாங்கான மனிதர்களை இச்சொல் குறிக்கிறதா?

இயல்பான முறையில் காணுங்கால், **இவைகள்** என்னும் சொல் கனவீனத்திற்குரிய பாத்திரங்களைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. பொல்லாங்கான மனிதர்களை விட்டு, குறிப்பாக இமெநே மற்றும் பிலேத்து போன்ற கள்ளப்போதகர்களை விட்டு தீமோத்தேயு பிரிந்திருக்க வேண்டுமென்று இங்கு அறிவுறுத்தப்படுகிறார்.

சபையைவிட்டு வெளியேற வேண்டுமென்று தீமோத்தேயு அறிவுறுத்தப்படவில்லை. கிறிஸ்தவ உலகைவிட்டு வெளியேற வேண்டுமென்று அவர் அறிவுறுத்தப்படவில்லை. தனது கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டுவிடாமல் அவரால் இதைச் செய்ய முடியாது. ஏனெனில் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை செய்கிறவர்கள் யாவரும் கிறிஸ்தவ உலகில் இடம் பெற்றிருக்கிறார்கள். தீமை செய்கிறவர்களை விட்டுப் பிரிய வேண்டும், பொல்லாங்கான உபதேசத்தின் மூலமாக ஏற்படுகிற களங்கத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ள அறிவுரை.

தீமையுண்டாக்கும் தோழமையை ஒரு மனிதர் விட்டுவிலகித் தன்னைக் காத்துக்கொள்வாரானால், அவர் **கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பார்.** தூய்மையான பாத்திரங்களையே தேவன் பரிசுத்த வேலைக்காகப் பயன்படுத்துவார். "கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே உங்களைச் சுத்திகரியுங்கள்" (ஏசா. 52:11). அவர் **பரிசுத்தமாக்கப்பட்டவராக** இருப்பார், அதாவது தீமையிலிருந்து அவர் பிரிந்து தேவனுடைய திருப்பணிக்காகப் பிரித்து வைக்கப்படுவார். அவர் **எஜமானுக்கு உபயோகமானவராக** இருப்பார். கர்த்தரிடத்தில் அன்புகூருகிற அனைவரும் விரும்புகிற பண்பாக இது விளங்குகிறது. இறுதியாக அவர் **எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டவராகவும்** இருப்பார். அவருடைய எஜமான் கட்டளையிடுகிறபடி பயன்பட அவர் எல்லா நேரங்களிலும் ஆயத்தத்தோடு இருப்பார்.

2:22 நேர்மையற்ற மனிதர்களை விட்டுப் பிரிந்து வாழ்வது மட்டுமின்றி, தீமோத்தேயு மாம்சத்தின் **இச்சைகளுக்கும்** விலகியிருக்க வேண்டும். **பாலியத்துக்குரிய** இச்சை என்பது சரீரப்பிரகாரமான வேட்கைகளை மட்டுமின்றி, பணம், புகழ்ச்சி, இன்பம் ஆகியவற்றின் மேல் கொள்கிற வேட்கைகளையும் குறிக்கிறது. சுயசித்தம், பொறுமையின்மை, பெருமை, சிறுமைத்தனம் ஆகியவையும் இதில் அடங்கும். நாம் முன்னர் கூறியதுபோல இத்தருணத்தில் தீமோத்தேயு ஏறத்தாழ முப்பந்தைந்து வயதுடையவராக இருந்திருப்பார். ஆகவே பாலியத்துக்குரிய இச்சை என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, நிச்சயமாக இருபது வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞனுக்கு ஏற்படக்கூடிய சரீர இச்சைகளை மட்டுமே குறிக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. மாறாக, பரிசுத்தத்திலிருந்தும் நேர்மையிலிருந்தும் ஓர் இளம் ஊழியரை வழிவிலகச் செய்யக்கூடிய தூய்மையற்ற அனைத்து விருப்பங்களையும் இது குறிக்கிறது என்றே நாம் கருதவேண்டும்.

தீமோத்தேயு இங்கு விட்டு ஓடவேண்டும் என்று மட்டும் சொல்லப்படாமல், நாடவேண்டும் என்ற கட்டளையையும் பெற்றிருக்கிறார். இங்கு விலகவேண்டியது என்னவென்று சொல்லப்பட்டிருப்பதுபோல, பின்பற்ற வேண்டியதும் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர் **நீதியை அடையும்படி நாட** வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள், இரட்சிக்கப்படாதவர்கள் அனைவரோடும் அவர் நடந்துகொள்கிற முறையில் நேர்மை, நீதி, நியாயம் ஆகிய பண்புகள் காணப்பட வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

விசுவாசம் என்று இங்கு சொல்லப்பட்டுள்ளது உண்மையுள்ள தன்மையைக் குறிக்கும், அதாவது முழுமையான நேர்மை என்பது இதன் பொருளாகும். இன்னொரு பொருளில், கர்த்தரை எப்பொழுதும் சார்ந்திருக்கும் நிலையை இது குறிக்கிறது. "தேவனிடத்தில் கபடில்லாமல் ஆற்றல்மிக்க வகையில் கொண்டிருக்கும் நம்பிக்கை" என்று ஹீபர்ட் என்பார் விளக்கமளிக்கிறார்.[25]

தேவன் மீது வைத்திருக்கும் அன்பை மட்டும், **அன்பு** என்னும் சொல் குறிக்கிறது என்று அதனை நாம் ஓர் எல்லைக்குட்படுத்தக் கூடாது; மாறாக உடன் சகோதரர்களிடத்திலும், இழந்துபோன பாவிகளிடத்திலும் நாம் வைக்க வேண்டிய அன்பையும் இச்சொல் குறிக்கிறது. அன்பு எப்பொழுதும் பிறர் நன்மையைக் கருத்தில் கொண்டதாக இருக்கிறது; மேலும் அது தன்னலமற்றது என்பது நிச்சயம்.

சமாதானம் என்னும் சொல் இணக்கத்தை யும் இசைவுடைய தன்மையையும் குறிக்கிறது.

இந்தப் பண்புகளைச் **சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே** சேர்ந்து பின்பற்ற வேண்டும். 21 - ஆவது வசனத் தில் பொல்லாத மனிதர்களிடத்திலிருந்து தீமோத் தேயு விலகியிருக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருப்பதுபோல, கர்த்தருக்கு முன்பாகத் தூய் மையாக வாழ்கிற கிறிஸ்தவர்களோடு அவர் தோழமை கொண்டிருக்க வேண்டுமென்று கற்பிக் கப்படுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கையின் பண்பு களை அவர் தன்னந்தனியாகப் பின்பற்ற வேண்டு மென்று சொல்லப்படவில்லை. மாறாக அவர் சபையாகிய சரீரத்தில் ஓர் அங்கமாகத் தனது இடத்தை எடுத்துக்கொண்டவராக, தனது உடன் அங்கங்களோடு சரீரத்தின் நன்மைக்காகப் பணிபுரிய வேண்டும்.

2:23 தீமோத்தேயு தன்னுடைய கிறிஸ்தவ ஊழியப்பாதையில் அற்பமானதும் மதியீனமுமான கேள்விகளை அடிக்கடி எதிர்கொள்ள நேரிட்டி ருக்கும். கல்வியறிவில்லாததும் அறியாமையுள் ளதுமான மனதிலிருந்தே இத்தகைய கேள்விகள் எழுகின்றன. இவற்றில் எவ்விதப் பயனுமில்லை. இப்படிப்பட்ட **தர்க்கங்கள் சண்டைகளைத்** தூண்டி விடும் என்பதால் இவற்றை வேண்டாமென்று மறுத்துரைக்க வேண்டும். இந்தக் கேள்விகள் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைச் சத்தியங் களோடு தொடர்பு அற்றவை என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. மாறாக இவை நேரத்தை வீணாக்கக்கூடியதும், குழப்பத்தையும் வாக்குவாதத்தையும் உண்டுபண்ணக் கூடியது மான அற்பமான பிரச்சினைகளேயாம்.

2:24 கர்த்தருடைய ஊழியக்காரன் என்ப வன் எழுத்தின்படி கர்த்தரின் கொத்தடிமையே ஆவான். பெருந்தன்மை மற்றும் பொறுமை ஆகிய பண்புகள் ஊக்குவிக்கப்பட்டுள்ள இந்த இடத்தில் இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

சத்தியத்திற்காகக் கர்த்தருடைய ஊழியக் காரன் போராட வேண்டியவனாக இருந்தபோதி லும், அவன் சச்சரவு செய்கிறவனாகவோ வாதா டுகிறவனாகவோ இருக்கக்கூடாது. மாறாக, அவன் **எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனாக** நடந்துகொள்ள வேண்டும். மேலும், அவன் வாதத்தில் வெற்றிபெற வேண்டுமென்னும் நோக் கத்துடனல்ல, அவர்களுக்கு போதிக்க வேண்டு மென்னும் நோக்கத்தோடு செயல்படவேண்டும். எளிதில் புரிந்துகொள்ள இயலாதவர்களிடத் திலும், தேவனுடைய வார்த்தையை ஏற்க மன தற்றவர்களாகத் தோன்றுகிறவர்களிடத்திலும் கூட அவன் சகிப்புத் தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும்.

2:25,26 கர்த்தருடைய கொத்தடிமை **எதிர்த் துப் பேசுகிறவர்களிடத்தில் சாந்தத்தையும்** மனத்தாழ்மையையும் பயன்படுத்தவேண்டும். தேவனுடைய வார்த்தைக்குப் பணிய மறுக்கிற வன் தன்னுடைய சொந்த ஆத்துமாவுக்குத் தீமை விளைவிக்கிறவனாயிருக்கிறான். அப்படிப்பட்ட வர்கள் திருத்தப்பட வேண்டியது அவசியம். இல்லையெனில், அவர்கள் தங்களுடைய கருத்து திருமறைக்கு ஏற்புடையதாயிருக்கிறது என்னும் எண்ணத்தோடு அறியாமையுள்ளவர்களாக தொடர்ந்து செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும்.

அவர்கள் **சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலைத்** தரக்கூடும். முதலாவது, இப்படிப்பட்ட மனிதர்களுக்கு தேவன் மனந்திரும்புதலைத் தந்தருளக்கூடிய விருப்ப முடையவராக இருக்கிறார் என்ற கருத்திற்கு இவ்வசனம் இடம்கொடுக்கிறது என்னும் கேள்வி எழுகிறது. ஆனால், அதுவல்ல இங்கு சொல்லப் பட்டுள்ள செய்தி. அவர்கள் மனம்வருந்தி குணப் படும்படி தேவனிடம் அறிக்கை செய்ய முன்வரு வார்களானால், அவர்களை மன்னிக்க அவர் காத்திருக்கிறார் என்பதே உண்மை. தேவன் எவரிடத்திலிருந்தும் மனந்திரும்புதலைத் தடுத்து நிறுத்துவதில்லை. ஆனால் மனிதர்களே தங்களு டைய தப்பிதங்களை ஒப்புக்கொள்ள மனமற்றவர் களாயிருக்கிறார்கள்.

பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிறவர்கள் அதிலிருந்து மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத் தக்கதாக கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவ் வாறு தவறு செய்கிறவர்களிடம் செயல்படவேண் டும். அவர்கள் அவனுடைய **இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிறார்கள்.** அதன் படி அவர்கள் அவனால் மயக்கத்திற்குள் ஆட் படுத்தப்பட்டிருக்கிறார்கள் அல்லது வெறியூட்டப் பட்டிருக்கிறார்கள்.

ஆ. வரவிருக்கிற மறுதலிப்பு (3:1–13)

3:1 கர்த்தருடைய வருகைக்கு முன் இவ்வுல கில் எத்தகைய சூழ்நிலை இருக்குமென்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவினிடம் விவரிக்கிறார். இந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டி

ருக்கிற பட்டியலில் காணப்படும் பாவங்கள், இறைப்பற்று இல்லாத மனிதர்களைக் குறித்து ரோமர் முதல் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக் கிற விவரங்களுக்கு ஒப்பாயிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. இதில் குறிப்பிடத்தக்க விசயம் என்னவென்றால், இறைப்பற்று இல்லாத அந்த மனிதர்கள் தங்களுடைய பண்பாடற்ற காட்டு மிராண்டித்தனத்தில் கொண்டிருந்த அதே இயல்பு களைக் **கடைசி நாட்களில்** வெற்றறிக்கை செய்கிற கிறிஸ்தவர்களும் கொண்டிருப்பார்கள் என்பதுதான். இது எவ்வளவு துக்கத்திற்குரியது?

இங்கு **கடைசி நாட்கள்** என்று குறிப்பிடப்பட்டி ருப்பது அப்போஸ்தலர்களுடைய காலத்திற்கும், கிறிஸ்து தமது அரசை நிறுவும்படி வரப்போகிற காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிக் கிறது.

3:2 பிரியர் என்னும் சொல் மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருப்பதன் தாக்கத்தை உணராமல் ஒருவரால் இந்தப் பகுதியைப் படிக்க முடியாது. இரண்டாவது வசனத்தில் **தற்பிரியர், பணப்பிரி யர்** என்னும் சொற்களையும், மூன்றாவது வசனத் தில் **சுபாவ அன்பில்லாதவர்கள்** (நல்லதில் பிரியம் இல்லாதவர்கள்) என்னும் சொல்லையும், நான்காவது வசனத்தில் தேவபிரியராயிராமல் சுகபோகப் பிரியராய் இருப்பவர்கள் என்னும் சொற் றொடரையும் காண்கிறோம்.

கடைசி நாட்களில் வாழும் மனிதர்களிடத்தில் காணப்படும் பத்தொன்பது வகையான இயல்பு கள் 2 முதல் 5 வரையிலான வசனங்களில் சொல் லப்பட்டுள்ளன. அவற்றைச் சற்று விளக்கிப் பொருள் தரும்படியான இணைச் சொற்களோடு தருகிறோம்.

தற்பிரியர் - தன்னலம் கருதுதல், தற் செருக்கு, தற்பெருமை.

பணப்பிரியர் - பணத்தின்மேல் பேராசை கொள்ளுதல், செல்வந்திரட்டுவதில் பேரவா.

வீம்புக்காரர் - வீறாப்பாய்ப் பேசுகிறவர், பெருமிதப் பேச்சு.

அகந்தையுள்ளவர் - இறுமாப்பு, அகந்தை, ஆணவப்போக்கு.

தூஷிக்கிறவர் - தீயவை பேசுபவர், தெய்வ நிந்தனை, பழிதூற்றுதல், தகாதவை பேசுபவர், ஏளனமாய்ப் பேசுபவர், அவமானப்படுத்துபவர்.

தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர் - எதிர்த்துப் பேசுதல், கடமை தவறுதல், கட்டுப்படா தவர்.

நன்றியறியாதவர் - செய்நன்றியறியாதவர், பாராட்டத் தெரியாதவர்.

பரிசுத்தமில்லாதவர் - புனிதமற்றவர், தெய்வ நிந்தனை செய்பவர், பணிவிணக்கமின்மை, மரியாதையில்லாதவர்.

3:3 சுபாவ அன்பில்லாதவர் - கல்நெஞ்சு படைத்தவர், இரக்கமற்றவர், பரிவிரக்க உணர் வில்லாதவர்.

இணங்காதவர் - விட்டுக்கொடுக்காதவர், சமாதானத்தை மறுக்கிறவர், இணங்குவதற்கு மனமற்றவர்.

அவதூறு செய்கிறவர் - தவறானதும், கெட்ட நோக்கமுடையதுமான செய்தியைப் பரப்புவர்.

இச்சையடக்கமில்லாதவர் - கட்டுக்கடங் காத வெறிகொண்டவர், ஒழுக்கங்கெட்டவர், நெறிபிறழ்ந்தவர்.

கொடுமையுள்ளவர் - காட்டுமிராண்டித்தன மானவர், ஒழுங்கில்லாதவர்.

நல்லோரைப் பகைக்கிறவர் - நல்லவரையும் நன்மையானதையும் பகைக்கிறவர், நன்மை எந்த வடிவில் வந்தாலும் அதனை எதிர்க்கிறவர்.

3:4 துரோகி - நயவஞ்சகம், காட்டிக்கொடுப் பவர்.

துணிகரமுள்ளவர் - முரட்டுத்தனமானவர், பிடிவாதமுள்ளவர், மூர்க்ககுணமுள்ளவர்.

இறுமாப்புள்ளவர் - தற்செருக்குடையவர், வெற்றுப்பேச்சுவீரர்.

தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியரா யிருப்பவர் - தேவனிடத்தில் மகிழ்ச்சி கொள்ளா மல் புலனுணர்வுகளில் இன்பமடைகிறவர்.

3:5 இந்த மனிதர்கள் வெளித்தோற்றத்தில் தெய்வப்பற்று மிக்கவராகக் காணப்படுவார்கள். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள் ளும் இந்த மனிதர்கள், முரண்பட்ட செயல் களைச் செய்பவர்களாகக் காணப்படுவார்கள். தங்கள் பேச்சைக் காட்டிலும் தீவிரமாகச் செயல் படுகிற இந்த மனிதர்கள், தங்களுடைய துன் மார்க்க நடத்தையால், பொய்யான வாழ்க்கையை வாழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையைக் காணவியலாது. சீர்திருத்தம் ஒருவேளை காணப்பட்டாலும், அங்கே மறுபிறப்பைக் காணமுடியாது. "தேவபக்தி உள்ள வர்கள் போலப் போலியாக நடித்தாலும் அதனு டைய வல்லமையில்லாதவர்கள்" என்று வே மௌத் இந்த வசனத்தை மொழிபெயர்த்திருக்

கிறார். "இறைப்பற்றை வெளியரங்கமாகக் காண் பிக்கிற இந்த மனிதர்கள் அதனுடைய ஆற்ற லோடு எவ்வித தொடர்புமில்லாதவர்கள்" என்று மோ.ர்.பட் மொழிபெயர்த்திருக்கிறார். "சமயத் தைத் தங்களுடைய வெளித்தோற்றமாகக் கொண்டிருப்பவர்களாகிய இவர்கள், தங்களு டைய நடத்தையில் அதனுடைய வழுவற்ற தன் மையை மறுத்துரைக்கிறவர்கள்" என்று கூறு கிறார் பிலிப்பு. அவர்கள் இறைப்பற்று கொண்டி ருக்க வேண்டுமென்று விரும்பியபோதிலும், தங்க ளுடைய பாவங்களில் தொடர்ந்து வாழ்கிறவர் களாக இருக்கிறார்கள் (வெளி. 3:14-22 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுக). "கிறிஸ்தவ விசு வாசத்தை மறுதலிக்கும் கிறிஸ்தவ உலகின் அச்சமூட்டும் தோற்றம், கிறிஸ்தவம் என்னும் முக மூடிக்குள் ஒரு புதிய புறச்சமயம்" என்று இதனை ஹீபர்ட் வருணிக்கிறார்.[26]

இத்தகைய மனிதர்கள் யாவரையும் **விட்டு** தீமோத்தேயு **விலக** வேண்டுமென்று அறிவுறுத் தப்படுகிறார். முந்தைய அதிகாரத்தில் இவற்றி லிருந்து தன்னைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்ட பாத்திரங்கள் இவையே.

3:6,7 கடைசி நாட்களில் காணப்படும் தீய மனி தர்களின் கூட்டத்திலிருந்து, தலைவர்களாகவும் போதகர்களாகவும் ஒரு குறிப்பிட்ட பிரிவினரை இப்பொழுது பவுல் பிரித்துக் கூறுகிறார். நம்மு டைய நாட்களில் இருக்கின்ற கள்ளக் குழுவினர் இங்கு விவரிக்கப்பட்டுள்ளபடி நடக்கிறவர் களாகவும், வழிமுறைகளைப் பின்பற்றுகிறவர் களாகவும் இருக்கிறார்கள்.

முதலாவதாக, அவர்கள் **வீடுகளுக்குள்** இரகசியமாய் **நுழைகிறார்கள்**. ஒரு பாம்பின் அசைவை இந்தச் சொற்கள் நமக்கு நினைவு படுத்துவது தற்செயலான நிகழ்வு அல்ல. அவர் கள் தங்களுடைய உண்மையான இயல்பை வெளிப்படுத்துவார்களேயானால் பெரும்பாலான வீடுகளுக்குள் நுழைவதற்கான அனுமதி கிடைத் திருக்காது. ஆனால் அவர்கள் தேவனைப் பற்றி யும் திருமறையைக் குறித்தும் இயேசுவைக் குறித்தும் பேசவிருப்பதாகக் கூறிக்கொண்டு வருவார்கள். (திருமறை கூறும் சத்தியங்களை நம்பாதிருந்தும் இவ்வாறு தந்திரமான முறை களை அவர்கள் பின்பற்றுவார்கள்.)

அவர்கள் **உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய** வீடுகளுக்குள் நுழைந்து அவர்களை **வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்**. இதுவே அவர்களது தனித்தன்மை. கணவன் வேலைக்குச் சென்றிருக்கும் நேரம் அல்லது வெளியில் செல்லக்கூடிய நேரம் எது என்று அறிந்து அந்தத் தருணத்தில் வீடுகளைச் சந்திக்க அவர்கள் முற்படுவார்கள். வரலாறு திரும்புகிறது. ஏதேன் தோட்டத்தில் ஏவாள் தனித் திருக்கையில் சாத்தான் அவளிடம் வந்து அவளை ஏமாற்றினான். தன்னுடைய கணவனுடைய அதி காரத்தை அவள் எடுத்துக்கொண்டாள். முடி வெடுக்க வேண்டிய தலைமைப் பொறுப்பை அவ னிடத்திலிருந்து அவள் பறித்துக்கொண்டாள். பிசாசின் தந்திரங்களில் எந்த மாற்றமும் இல்லை. இன்னமும் அவன் தனது கள்ள உபதேசங்க ளோடு பெண்களிடம் சென்று அவர்களை வசப் படுத்திக்கொள்கிறான். இந்தப் **பெண்பிள்ளை கள்** துணிவில்லாதவர்களும் உறுதியற்றவர்களு மாக இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள் ளார்கள். உறுதியற்ற இயல்பை அவர்கள் கொண்டி ருப்பது போல அறிவில் குறைந்தவர்கள் என்ப தல்ல இதன் பொருள்.

அந்தப் பெண்பிள்ளைகள் **பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு** இருக்கிறார்கள் என்று இங்கு விவரிக்கப்பட்டுள் ளது. முதலாவதாக, அவர்கள் பாவத்தைக் குறித்த சிந்தனையின் பாரத்தால் அழுத்தப்பட்டி ருக்கிறார்கள் என்றும், தங்களுடைய வாழ்க்கை யில் ஒரு தேவை இருக்கிறது என்பதை உணர்ந் திருக்கிறார்கள் என்றும் இது குறிப்பாய் உணர்த்து கிறது. இப்படிப்பட்ட மிக நெருக்கடியான தருணத் தில் கள்ளப்போதகர்கள் அவர்களை அணுகு கிறார்கள். இறைவனின் மறைநூலின் உண்மை களை நன்கு அறிந்த மக்கள், இவ்வித ஆவலுடன் இருக்கும் ஆத்துமாக்களைச் சென்றடைய ஊக்க மற்றவர்களாக இருப்பது எவ்வளவு வருந்தத்தக்க நிலை. இரண்டாவதாக, அவர்கள் **பற்பல இச்சை களால் இழுப்புண்டவர்களாக** இருக்கிறார்கள். "எவ்விதக் காரணமும் இல்லாமல் அடிக்கடி மனம் மாறுகிற இயல்பால் நடத்தப்படுதல்" என்று இதற் குத் திருவாளர் வே மௌத் பொருள் கூறுகிறார். இவர்களை "உணர்ச்சிகளால் உந்தப்பட்டு ஏறு மாறாக நடக்கிற உயிரினங்கள்" என்று மோ.ர்.பட் வருணிக்கிறார். தங்களுடைய பாவச் சுமையை உணர்ந்த இவர்கள், அதிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்னும் எண்ணத்துடன் தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலை களைப்போல அடிபட்டு, நூதன சமயக்கருத்து களைக் கைக்கொள்ள நினைக்கும் பெண்கள் என்பதே இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கருத்து.

எப்போதும் கற்றாலும் என்னும் சொற் றொடர், அவர்கள் கர்த்தராகிய இயேசுவைப் பற்றியும் திருமறையையும் அதிகமாக அறிந்து கொள்ள வேண்டுமென்று இடைவிடாமல் கற் கிறார்கள் என்று பொருள்படுவதில்லை. மாறாக, அவர்கள் தொடர்ந்து ஒரு கள்ளக்கூட்டத்தி லிருந்து வேறொரு கள்ளக்கூட்டத்திடமாய்ச் சென்று ஆராய்ந்து பார்க்கிறார்கள் என்பதே இதன் பொருளாகும். ஆனாலும் அவர்கள் **ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர் களாயிருக்கிறார்கள்.** கர்த்தராகிய இயேசு தாமே சத்தியம். சில வேளைகளில் இந்தப் பெண் கள் அவரிடமாய் மிக நெருங்கி வருவதுபோலத் தோன்றும், ஆனால் அவர்களுடைய ஆத்துமாக் களின் பகைஞனால் சிறைப்பிடிக்கப்படுகிறார் கள். மேலும் அவர்கள் இரட்சகரிடம் அடையக் கூடிய இளைப்பாறுதலை ஒருபோதும் கண்டடை வதில்லை.

"நான் கற்றுக்கொண்டிருக்கும்..." என்று ஒரேவிதமாகப் பல கள்ளக்குழுவினர் குறிப்பிடுவ தோடு, தங்களுடைய அமைப்பின் பெயரையும் சேர்த்துக் குறிப்பிடுவார்கள் என்பதை இத்தருணத் தில் நாம் சொல்லியே ஆகவேண்டும். கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பைப் பெற்றுக்கொண்ட நிச்சயத்தோடு அவர்கள் பேசு வதேயில்லை.

மனித முயற்சியின் செயற்களத்தின் ஒவ்வொரு பிரிவிலும் இன்றைய நாட்களில் மிகப்பெரிய அளவில் அறிவு பெருத்திருக்கிறதைக் குறித்து இந்த வசனம் நம்மை நினைக்கச் செய்கிறது. மேலும் இந்த நாகரிக உலகில் கல்விக்கு மிக முக்கியமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆயினும் அது மனிதர்களைச் சத்தியத்தைக் குறித்த அறிவை அடையும்படி செய்யாமல், தடங் காணாத படுகுழி போன்ற தோல்வியையே சந்திக் கச் செய்யும்.

3:8 இந்த நிருபத்தில் மூன்று ஜோடிப் பெயர் கள் குறிப்பிடப்பட்டுள்ளன: பிகெல்லு, எர்மொ கெனே (1:15) - சத்தியத்தைக் குறித்து வெட்கப்பட் டார்கள். இமெநே, பிலேத்து (2:18) - விசுவாசத் தைக் கவிழ்த்துப் போட்டார்கள். **யந்நே, யம்பிரே** (3:8) - சத்தியத்தை எதிர்த்து நின்றார்கள்.

இந்த எட்டாவது வசனத்தில், பவுல் மீண்டும் கள்ளக்குழுக்களின் தலைவர்களையும் போத கர்களையும் நோக்கித் திரும்புகிறார். அவர் அவர் களை **மோசேக்கு எதிர்த்து நின்ற யந்நேயுட னும் யம்பிரேயுடனும்** ஒப்பிடுகிறார். இந்த மனிதர்கள் யார்? உண்மையில் இவர்களது பெயர்கள் பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தில் சொல் லப்படவில்லை. ஆனால், மோசே அற்புதங் களைச் செய்தபோது அதேவிதமாக அற்புதங் களைச் செய்யும்படி பார்வோனால் அழைக்கப் பட்ட எகிப்திய மந்திரவாதிகளில் முதன்மையான இருவர் என்று பொதுவாக நம்பப்படுகிறது.

பவுலுக்கு இவர்களுடைய பெயர் எவ்வாறு தெரிந்தது என்னும் கேள்வி எழுகிறது. இது நமக்கு எவ்விதப் பிரச்சினையையும் உண்டு பண்ணக் கூடாது. ஒருவேளை யூத பாரம் பரியத்தின் மூலமாக அறிந்திருக்கக்கூடும். இல்லையெனில் தெய்வீக வெளிப்பாட்டினால் அவர் இந்த அறிவைப் பெற்றிருக்கக் கூடும். இக் கருத்து பகுத்தறிவுக்கு ஒவ்வாததல்ல.

மோசே செய்த அற்புதச் செயல்களைப் போலவே போலியான முறையில் அவர்கள் அற் புதங்களைச் செய்து, **மோசேக்கு எதிர்த்து நின்றார்கள்** என்பதே இதில் காணப்படும் முக்கி யமான கருத்தாகும். கள்ளப் போதகர்கள் இம்மி யும் பிசகாமல் இதையே செய்கிறார்கள். இவர் களும் தங்களுடைய போலி நாடகத்தின் மூலம் தேவனுடைய ஊழியத்திற்குத் தடையாக நிற் கிறார்கள். இவர்கள் தங்களுக்கென்று வேறு வகையான வேதத்தை வைத்திருக்கிறார்கள், தங்களுக்கென்று இரட்சிப்பின் வழியைக் கொண் டிருக்கிறார்கள். சுருங்கக்கூறின், கிறிஸ்தவத் தின் எல்லா அம்சங்களுக்கும் மாற்று வழியை வைத்திருக்கிறார்கள். தேவனுடைய சத்தியத் திற்கு எதிராகச் செயல்படுகிற இவர்கள் மிகவும் அற்பமான மாறாட்ட வேலையைச் செய்கிறார் கள். சில தருணங்களில் இவர்கள் மாய தந்திரக் கலையைப் பயன்படுத்தவும் தயங்கமாட்டார்கள்.

இந்த **மனிதர்கள் துர்ப்புத்தியுள்ளவர்கள்.** இதனை, "அவர்களுடைய உள்ளம் முழுவதும் அழுகிப்போயிருக்கிறது" என்று ஆர்தர் வே என்பார் மொழிபெயர்க்கிறார். அவர்களுடைய உள்ளம் சிதைந்துபோய், தரங்கெட்டு, சீரழிந்து போய்விட்டது.

கிறிஸ்தவ **விசுவாசம்** என்னும் பரீட்சையில் இவர்கள் **மறுக்கப்பட்டவர்களாகவும்** போலி யானவர்களாகவும் காணப்படுகிறார்கள். மிக எளிமையான கேள்வியே அவர்களுடைய உண்மை நிலையை அறிவதற்கான மிகப் பெரிய பரீட்சையாக விளங்கும்: "இயேசு கிறிஸ்து தேவனா?" என்னும் கேள்விக்கு அவர்களில் பெரும்பாலோர் "இயேசு தேவனுடைய குமாரன்"

என்று கூறி தங்களுடைய தவறான கோட்பாட்டை மறைக்க முற்படுவார்கள்; ஆனால் மற்றவர்கள் எவ்வாறு தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்களோ, அதே போல இயேசு கிறிஸ்துவும் தேவனுடைய ஒரு குமாரன் என்னும் பொருளிலேயே அந்தப் பதிலைக் கூறுவார்கள். "இயேசு கிறிஸ்து தேவனா?" என்னும் கேள்வியை வலியுறுத்திக் கேட்போமானால் அவர்களுடைய உண்மையான நிலை வெளிப்படும். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுத்துரைப்பது மட்டுமின்றி, அதை நாம் வலியுறுத்திக் கேட்கும்போது கோபமும் அடைவார்கள். கிறிஸ்தவ ஞானம், ஆவியுலகக் கோட்பாட்டாளர்கள், கிறிஸ்டாடெல்பியன்ஸ், யெகோவா சாட்சிகள், இதுவே வழி (The Way) என்னும் கூட்டத்தார்கள் யாவரும் இதே கருத்தை உடையவர்கள்.

3:9 இந்தக் கள்ளப் போதகர்கள் **அதிகமாய்ப் பலப்பட** மாட்டார்கள் என்று பவுல் தீமோத்தேயுவிடம் உறுதிகூறுகிறார். ஒவ்வொரு காலத்திலும் எல்லா நிலைகளிலும் அவர்கள் வளர்ச்சியடைவதாகவே தோன்றுகிறது. இவ்வுலகில் அவர்களுடைய முன்னேற்றத்தை எதுவும் தடைசெய்வதாகக் காணமுடியவில்லை. எனவே இது நமக்குப் புதிராகத் தோன்றுகிறது!

தவறான ஒவ்வொரு அமைப்பும் இறுதியில் வெளியரங்கமாகும் என்பதே இதன் பொருளாகத் தோன்றுகிறது. ஒன்றன் பின் ஒன்றாக இந்தத் தவறான அமைப்புகள் வருவதும் போவதுமாய் இருக்கும். அவை வல்லமையாய் பலப்படுவது போலத் தோன்றும், சில அமைப்புகள் நீண்ட காலமாக வலிமையோடு காணப்படும். ஆனாலும் அவற்றின் தவறுகள் ஒருகாலத்தில் வெளிச்சத்திற்கு வந்துவிடும். ஒரு குறிப்பிட்ட அளவுவரை மனிதர்களை அவர்கள் வழிநடத்துவார்கள், ஒருவேளை அந்த மனிதர்களில் சீர்த்திருத்தத்தையும்கூட அவர்களால் கொண்டுவர முடியும். ஆனால் அவர்களால் மறுபிறப்பைக் கொண்டுவர முடியாது, அந்த விசயத்தில் அவர்களுக்குத் தோல்வியே ஏற்படும். பாவத்தின் தண்டனையிலிருந்தும், பாவத்தின் அதிகாரத்திலிருந்தும் அவர்களால் மனிதருக்கு விடுதலை தரமுடியாது. அவர்களால் ஜீவனைத் தரமுடியாது.

தங்களுடைய மாய தந்திரத்தினாலே யந்நேயும் யம்பிரேயும் ஓரளவு வரை மோசேக்கு ஒப்பாக அற்புதங்களைச் செய்தார்கள். இருந்தபோதிலும், சாவிலிருந்து உயிரை உண்டாக்குகிற விசயத்தில் அவர்களுக்குக் கொஞ்சம்கூட ஆற்றல் இல்லை. இந்த ஒரு விசயத்தில் கள்ளக்குழுக்கள் தோல்வியையே தழுவுகின்றன.

3:10 இந்தக் கள்ளப் போதகர்களுக்கு நேர் மாறானபடி, பவுலின் வாழ்க்கையும் ஊழியமும் இருந்தன. கர்த்தருடைய ஊழியரின் முக்கியமான ஒன்பது குணநலன்களைத் தீமோத்தேயு நன்கு அறிந்திருந்தார். கிறிஸ்துவுக்கும் அவருடைய வார்த்தைக்கும் உண்மையுள்ளவராக ஒருவர் இருந்தார் என்று பவுலைப் பற்றி சான்று கூறும்படி தீமோத்தேயு அவரை மிக நெருங்கிய வகையில் பின்தொடர்ந்தார்.

அப்போஸ்தலருடைய **போதகம்** அல்லது **உபதேசம்** தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமைக்கு விசுவாசமாயும் இருந்தது. அவருடைய **நடத்தை**, அதாவது வாழ்க்கை அவர் பிரசங்கித்து வந்த செய்திக்கு இசைவுடையதாயிருந்தது. ஒழுக்கத்திலும் கோட்பாட்டிலும் காணப்படுகிற தீமைகளுக்கு அவர் முற்றிலும் விலகியிருப்பதையே அவர் தனது வாழ்வின் **நோக்கமாகக்** கொண்டிருந்தார். **விசுவாசம்** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது கர்த்தரிடத்தில் பவுல் கொண்டிருந்த நம்பிக்கையையோ, அவருடைய சொந்த கடமைதவறா நிலையையோ குறிக்கக்கூடும். அவர் முற்றிலுமாகக் கர்த்தரையே சார்ந்திருந்தார் என்பதையும், அதே சமயத்தில் நேர்மை நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருத்தல் ஆகிய குணங்களில் அவர் சிறந்திருந்தார் என்பதையும் தீமோத்தேயு அறிந்திருந்தார். அப்போஸ்தலன் அவரைத் துன்பப்படுத்தினவர்களைக் குறித்தும், அவர்மீது குற்றஞ்சுமத்தியவர்களைக் குறித்தும், மேலும் அவர் சரீரத்தில் அனுபவித்த வேதனைகளைக் குறித்தும் எவ்வித மனப்பான்மை உடையவராயிருந்தார் என்பதை **நீடிய சாந்தம்** என்னும் சொல் குறிக்கிறது. அவர் தன்னலமற்ற வகையில் கர்த்தருக்கும், தனது உடன் விசுவாசிகளுக்கும் தன்னை ஒப்புவித்திருந்த நிலையில் அவருடைய **அன்பு** வெளிப்பட்டது. அவர் எவ்வளவு குறைவாக மற்றவர்களால் அன்புகூரப்பட்டாரோ, அவ்வளவு அதிகமாக அவர்களிடம் அன்புகூர அவர் உள்ளங்கொண்டிருந்தார். இங்கு **பொறுமை** என்று குறிப்பிடப்பட்டிருப்பது எழுத்தின்படி "பொறுமையோடு பாரத்தை ஏற்றுக்கொள்ளுதல்" அல்லது இடுக்கண் உற்ற காலத்தில் கொள்ளும் துணிவு அல்லது பொறையுடைமை என்றோ பொருள்படும்.

3:11 பவுல் அனுபவித்த சில **துன்பங்களும், பாடுகளும்,** இன்னல்களும் 2 கொரிந்தியர் 11:23-28 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆயினும் பவுல் அடைந்த இன்னல்களில் சில வற்றை தீமோத்தேயு நேரடியாகக் கண்டிருந்தார், அவற்றையே பவுல் இங்கு நினைவுகூருகிறார். தீமோத்தேயு **லீஸ்திரா** ஊரைச் சேர்ந்தவராக இருந்த காரணத்தால், அங்கும் அருகிலிருந்த **அந்தியோகியாவிலும், இக்கோனியாவிலும்** பவுல் அடைந்த உபத்திரவங்களை அவர் அறிந் திருக்கக் கூடும். அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் இந்த உபத்திரவங்களைப் பற்றிய விவரங்கள் ஆவியானவருடைய ஏவுதலினால் குறித்து வைக்கப்பட்டுள்ளன - அந்தியோகியா, அப். 13:45,50; இக்கோனியா, அப். 14:3-6; லீஸ்திரா, அப். 14:19,21.

இந்த எல்லா **இக்கட்டுகளிலிருந்தும் கர்த்தர்** தன்னை **நீங்கலாக்கிவிட்டதால்** பவுல் வெற்றிப் பெருமிதம் அடைகிறார். கர்த்தர் பவுலின் இன்னல் களை நீக்கி அவரை விடுவிக்கவில்லை, மாறாக அவரது இன்னல்களிலிருந்து விடுவித்தார். பிரச்சினைகள் இரா என்று நமக்கு வாக்குறுதி தரப்படவில்லை; மாறாக, கர்த்தர் நம்மோடுகூட இருப்பார். நாம் அவற்றின் ஊடாகச் செல்ல அவர் துணைபுரிவார் என்றே நாம் இங்கு நினைவுபடுத் தப்பட்டிருக்கிறோம்.

3:12 பக்தி நிறைந்த கிறிஸ்தவ வாழ்க்கையில் **துன்பப்படுதல்** முக்கியமான அங்கமாக விளங்கு கிறது. இவ்வுண்மையை ஒவ்வொரு இளம் தீமோத்தேயுவுக்கும் நினைவுபடுத்துவது நல்லது. இல்லையெனில், இன்னல் மிகுந்த சூழ்நிலைக் குள்ளாக ஒருவர் செல்லும்படியான நிலை ஏற்படு கிறபோது, கர்த்தருக்கு எதிராக ஒன்றைத் தான் செய்துவிட்டதாகவோ, ஏதோ ஒரு காரணத்தால் கர்த்தர் தன்னிடத்தில் பிரியமாயில்லை என்று நினைக்கும்படியோ அவர் சோதனையில் உட் படக்கூடும். அன்றியும் **தேவபக்தியோடு நடக்க மனதாயிருக்கிற** யாவரும் **துன்பப்படுவதைத்** தவிர்க்க முடியாது.

இவ்வாறு **துன்பப்படுவதற்குக்** காரணம் என்னவென்று அறிவது எளிது. **தேவபக்தியுள்ள** வாழ்க்கை பிறருடைய ஒழுக்கக்கேட்டை வெளிப் படுத்தும். இவ்வாறு தங்களுடைய ஒழுக்கக் கேடு வெளியரங்கமாவதை அவர்கள் விரும்புவதில்லை. தங்களுடைய துன்மார்க்கத்தின் காரணமாக மனம்வருந்தி கிறிஸ்துவண்டை வருவதற்குப் பதிலாக, அவர்கள் உண்மையாக எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை வெளிப் படுத்துகிற மனிதர்களை அழித்துவிட வேண்டும் என்றே விரும்புகிறார்கள். இது முழுவதும் பகுத் தறிவற்ற நடத்தையாக இருக்கிறது. ஆயினும் இதுவே வீழ்ந்துபோன ஒரு மனிதனுடைய இயல் பாகும்.

3:13 எல்லா மனிதர்களும் இரட்சிப்படையும் வரை, இவ்வுலகமானது கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றமடைந்து சீர்பெற்றுவிடும் என்று பவுல் தவறாகக் கருதவில்லை. மாறாக, இதற்கு முற்றிலும் மாறான நிலையே உண்டாகும் என்ற தெய்வீக வெளிப்பாட்டினாலே அறிந்திருந்தார். **பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களுமாயிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.** அவர்கள் செயல் களில் சூழ்ச்சிமிக்கவர்களாகவும், தாக்குவதில் துணிவு மிக்கவர்களாகவும் மாறுவார்கள். அவர் கள் தங்களுடைய கள்ளப்போதகத்தினால் பிற ரைக் கண்ணிக்குள் சிக்கவைக்க முயலுகிற போது, பிறரை மோசம் போக்குவது மட்டுமின்றி, தங்களையே மோசம் போக்கிக்கொள்வார்கள். தங்களுடைய பொய்களை வீதிவீதியாகச் சென்று பேசித்திரிந்த பிறகு, அந்தப் பொய்களை அவர்களே நம்பத் தொடங்கிவிடுவார்கள்.

இ. விசுவாச மறுதலிப்பு சூழ்ந்திருக்கும் நிலையில் தேவ மனிதனின் ஆதாரம் (3:14–4:8)

3:14 தேவனுடைய திருமறை கற்பிக்கும் சத்தி யங்களில் உறுதியோடு **நிலைத்திருக்கும்படி** தீமோத்தேயு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தப் படுகிறார். எல்லாப் பக்கங்களிலும் தவறான கொள்கைகள் பெருகிவருகிறபோது இதுவே அவ ருக்குக் கிடைக்கக்கூடிய பெரிதான ஆதார மாகும். அவர் திருமறையை அறிந்து அதற்குக் கீழ்ப்படிந்திருப்பார் என்றால், இத்தகைய சூழ்ச்சி மிக்க தவறுகளால் வழிநடத்தப்பட மாட்டார்.

விசுவாசத்தின் மேன்மையான சத்தியங் களைத் தீமோத்தேயு **கற்றுக்கொண்டது** மட்டு மின்றி, அவற்றால் அவர் நிலைத்திருக்கும்படி **நிச்சயத்தையும்** பெற்றிருந்தார். அவர் கற்றவை பழம்பாணியானவை என்றும், போதுமான அளவு கலாசாரத்துக்கு உகந்தவையோ புத்திகூர்மை யானவையோ அல்லவென்று அவருக்குச் சொல் லப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனா லும் அவர் மனிதனுடைய புனைகருத்துகளுக் காகவும் அவனுடைய ஊகங்களுக்காகவும் சத்தியத்தை விட்டுவிடக்கூடாது.

அந்தச் சத்தியங்களை அவர் **இன்னாரிட மிருந்து கற்றார்** என்பதை நினைவுகூரும்படி அப் போஸ்தலன் மேலும் ஆலோசனை தருகிறார். **இன்னார்** என்னும் சொல் பவுலைக் குறிக்கிறதா அல்லது தீமோத்தேயுவின் தாயையும் பாட்டியை யும் குறிக்கிறதா அல்லது பொதுவாக அப்போஸ் தலரைக் குறிக்கிறதா என்பது பற்றி கருத்து வேறுபாடு நிலவுகிறது. அது எதுவாயிருந்தாலும், தங்களுடைய விசுவாசத்தின் உண்மைக்குச் சாட்சிகளாக வாழ்ந்தவர்கள் புனிதமான திரு மறையைக் கற்றுத் தந்தார்கள் என்பதே இங்கு வெளிப்படும் கருத்து. அவர்கள் தேவபக்தியுள்ள மனிதர்கள், மேலும் தேவனுடைய மகிமை ஒன் றையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள்.

3:15 இவ்வசனம் உள்ளத்தை மிகுதியாகக் கிளர்ச்சியடையச் செய்வதாயிருக்கிறது. தீமோத் தேயு தனது **சிறுவயது** முதல் புனிதமான திரு மறை வசனங்களையும், எழுத்துகளையும் கூட கற்றிருந்தார் என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்து. அவருடைய தாய் அ, ஆ... போன்ற எழுத்துகளை அவருக்குக் கற்றுத் தந்தபோதே பழைய ஏற்பாட்டு வேத பகுதிகளைக் கற்றுத் தந்தார் என்பதே இங்கு காணப்படும் சிந்தனை யாகும். அவர் சிறு குழந்தையாக இருந்த நேரத்திலிருந்தே, தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வேதத்தின் ஆளுகைக்குள் இருந்து வந்தார். மேலும் அவருடைய வாழ்க்கையை தேவனுக்கென்றும் நன்னடத்தைக்கென்றும் உருவாக்கிய திருமறையை எந்தச் சூழ்நிலை யிலும் அவர் மறக்கக் கூடாது.

பரிசுத்த வேத எழுத்துகள் மனிதர்களை **இரட் சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக** மாற்று வதில் இடைவிடாமல் செயல்புரிவதாக இங்கு சொல்லப்பட்டுள்ளது. முதலாவதாக, **இரட்சிப் பைக்** குறித்து மனிதர்கள் வேதத்தின் மூல மாகவே கற்கிறார்கள் என்பது இதன் பொருளா கும். மேலும், இரட்சிப்பின் உறுதி வேத எழுத்து களின் வாயிலாகவே உண்டாகிறது என்னும் கருத்தையும் இது கொண்டிருக்கிறது.

கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே இரட்சிப்பு உண்டாகிறது. இதனை நாம் கவன மாகக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். நற்கிரியையினாலோ, ஞானஸ்நானத்தினாலோ, சபை அங்கத்தினராக இருப்பதாலோ, சபையில் தீட்சை பெறுவதினாலோ, பத்துக்கட்டளைகளுக் குக் கீழ்ப்படிவதினாலோ அல்லது வேறு எந்த மனித முயற்சியினாலோ தகுதியினாலோ இது உண்டாவதில்லை.

3:16,17 வேத வாக்கியங்களெல்லாம் என்று பவுல் கூறும்போது, அவர் பழைய ஏற்பாடு முழு வதையும் குறிப்பிடுவதோடு, அத்தருணத்தில் ஏற்கனவே எழுதி முடிக்கப்பட்டிருந்த புதிய ஏற் பாட்டுப் பகுதிகளையும் குறிப்பிடுகிறார். 1 தீமோத் தேயு 5:18 -இல் லூக்காவின் நற்செய்தி நூலை (10:7) வேதம் என்று அவர் குறிப்பிடுகிறார் (2 பேதுரு 3:16). திருமறை முழுவதையும் வேத வாக்கியங் கள் என்று நாம் இன்று கூறுவோமானால் அது சரியானதே.

தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு வேதம் எழுதப்பட்டது என்னும் பொருளைப் பற்றிய மிக முக்கியமான வசனங்களில் இது ஒன்றாகத் திகழ்கிறது. தேவ உயிரூட்டத்தினால்[23] வெளிப் பட்டதே வேதம் என்று இவ்வசனம் கற்பிக்கிறது. தேவன் தமது வார்த்தையை வியத்தகு முறை யில் மனிதர்களுக்குத் தெரியப்படுத்தி, அதனை அவர்கள் எழுதி நிரந்தரமாகப் பாதுகாக்கும்படி செய்தார். அவர்கள் எழுதியவை யாவும் தேவ னுடைய வார்த்தையேயாகும். அவை ஆவியின் உயிரூட்டத்தால் எழுதப்பட்டவையும் தவறற்ற வையுமாகும். எழுத்தாளர் ஒவ்வொருவருடைய இலக்கிய நடையும் அழிக்கப்படாமல் பாதுகாக் கப்பட்ட போதிலும், அவர் பயன்படுத்திய சொற் கள் யாவும் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட் டவை என்பதும் உண்மையே. "அவைகளை நாங் கள் மனித ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தை களாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக் குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக் கிறோம்" என்று 1 கொரிந்தியர் 2:13 -ஆம் வசனம் கூறுகிறது. தேவ ஆவியினால் ஏவப்பட்டவர் களாக எழுதியவர்கள் யாவரும் பரிசுத்த ஆவி யானவர் போதித்த **வார்த்தைகளையே** எழுதி னார்கள் என்றே இந்த வசனம் கூறுகிறது. இதுவே ஆவியின் உயிரூட்டத்தால் பேசப்பட்டவை என்பதன் பொருளாகும்.

வேதத்தை எழுதியவர்கள் தங்களுடைய சொந்தப் பொருளை எழுதாமல், தேவன் அவர் களுக்குக் கொடுத்த செய்தியையே எழுதினார் கள். "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும், சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது, தீர்க்கதரிசன மானது ஒரு காலத்திலும் மனிதருடைய சித்தத்

தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப் பட்டுப் பேசினார்கள் (2 பேதுரு 1:20,21).

ஒவ்வொரு எழுத்தாளருக்கும் தேவன் எண் ணங்களை மட்டுமே கொடுத்தார் என்றும், அந்த எண்ணங்களை அவரவருடைய சொந்தச் சொற் களில் எழுத அனுமதித்தார் என்றும் கூறுவது தவறு. திருமறையில் வலியுறுத்திக் கூறப்பட் டுள்ள உண்மை யாதெனில், தேவனாலே முதலா வது கொடுக்கப்பட்ட வார்த்தை தேவ ஆவி யினாலே உயிரூட்டம் பெற்றவை என்பதேயாகும்.

வேத வாக்கியங்கள் தேவனுடைய வார்த்தை யாக இருப்பதாலே அவை **பிரயோஜனமுள் ளவை.** திருமறையின் ஒவ்வொரு பகுதியும் **பிரயோஜனமுள்ளது.** வம்ச வரலாறு, தெளிவற்ற பகுதிகள் போன்ற யாவற்றையும் குறித்து மனிதர் கள் வியப்புற்ற போதிலும், ஆவியினாலே போதிக் கப்பட்ட உள்ளம் ஒவ்வொரு சொல்லிலும் ஆவிக் குரிய ஊட்டம் இருப்பதை உணர்ந்து, அது ஒவ் வொன்றும் தேவனுடைய வாயிலிருந்து பிறந்தது என்பதையும் அறிந்திருக்கிறது.

திருமறை **உபதேசத்திற்குப் பிரயோஜன முள்ளது,** அதாவது கற்பிப்பதற்குப் பயனுள்ளது. திரியேக தேவன், தேவ தூதர்கள், மனிதன், பாவம், இரட்சிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல், திருச் சபை, எதிர்கால நிகழ்ச்சிகள் போன்ற கருத்து களைப் பற்றி தேவன் என்ன கூறுகிறார் என்ப தைத் திருமறை தெளிவுபடுத்துகிறது.

மேலும், அது **கடிந்துகொள்ளுதலுக்குப் பிர யோஜனமுள்ளது.** நாம் திருமறையைப் படிக்கும் போது, நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமற்ற நிலைகளை அது சுட்டிக்காட்டிப் பேசு கிறது. மேலும் அது தவறுகளைக் கடிந்துரைக் கிறது, தீய செயல்களைச் செய்யத் தூண்டுபவ ருக்குத் தக்க பதிலுரைக்கிறது.

மேலும், திருமறை **சீர்திருத்தலுக்குப் பய னுள்ளது.** தவறு எது என்று அது சுட்டிக்காட்டு வதோடு, அதனை எவ்வாறு சரிசெய்வது என்பதற்கான வழியையும் அது தெளிவுபடுத்திக் கூறுகிறது. எடுத்துக்காட்டாக, "திருடுகிறவன் இனித் திருடாமல் இருக்கக்கடவன்" என்று திரு மறை கூறுவது மட்டுமின்றி, "குறைச்சலுள்ள வனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண் டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன்" என்றும் அது கூறுகிறது. இந்த வசனத்தின் முதற்பகுதி **கடிந்துகொள்ளுதல்** என்று கருதப்படக் கூடிய தாக இருக்கையில், இதன் இரண்டாம் பகுதி **சீர்திருத்தலாக** விளங்குகிறது.

இறுதியாக, திருமறை **நீதியைப் படிப்பிக்கு தலுக்குப்** பயனுள்ளதாக இருக்கிறது. தேவனு டைய கிருபை நாம் தெய்வீக சுபாவமுள்ளவர் களாக வாழும்படி கற்பிக்கிறது. ஆனால் தேவனு டைய திருமறையோ தெய்வீக சுபாவமுள்ளவர் களாக வாழ்வதற்குத் தேவையான அனைத்து விவரங்களையும் கண்டுபிடித்துத் தருகிறது.

திருமறையின் மூலமாக, **தேவனுடைய மனிதன் தேறினவனாக,** அதாவது முழுவளர்ச்சி பெற்றவனாக மாறுகிறான். எல்லா **நற்கிரியை களையும் செய்வதற்குத்** தேவையான தகுதிகள் அனைத்தையும் பெற்று அவன் தனது இரட்சிப்பின் இலக்கை அடையும்படி அது செயல்படுகிறது (எபே. 2:8-10). நவீன காலத்தில் பல்கலைக் கழ கங்களில் பயின்று பற்பல பட்டங்களைப் பெறு வதாலே இவ்விலக்கை அடையலாம் என்று கருது கின்ற எண்ணத்திற்கு இது முற்றிலும் மாறு பாடானதாகத் திகழ்கிறது.

திருவாளர் லென்ஸ்கி எழுதுகிறார்:

> திருமறை ஒப்பற்றதாகத் திகழ்கிறது. வேறு எந்த நூலும், நூலகமும் இவ்வுலகிலுள்ள வேறு எதுவும் இழந்துபோன பாவியை இரட்சிப்புக்கு ஏதுவான ஞானமுள்ளவனாக மாற்றுவதில்லை; மறைநூல் என்று கருதப்படுகிற வேறு எந்த நூலும், தேவ னுடைய ஆவியின் ஏவுதலினாலே எழுதப்படாத தாக இருப்பதாலே இத்தகைய பயன்களை உண் டாக்குவதில்லை. இரட்சிப்புக்கு ஏதுவான மெய் யான செய்திகளைக் கற்பிப்பது திருமறையே, அதா வது இவ்வித உண்மைகளை மறுத்துரைக்கும் ஏமாற்றுகிற செயல்களையும் பொய்களையும் இது கடிந்துகொள்ளுகிறது; பாவிகளைச் சீர்திருத்து கிறது, அல்லது வீழ்ந்துபோன கிறிஸ்தவர்களை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது; ஒவ்வொருவரையும் மெய்யான நீதியினாலே கற்பித்து, பயிற்றுவித்து ஒழுங்குபடுத்துகிறது.[28]

4:1 தீமோத்தேயுவுக்கு இப்பொழுது பவுல் மிகவும் இன்றியமையாத இறுதி அறிவுரையை வழங்கத் தொடங்குகிறார். அவர் அதனை **தேவ னுக்கு முன்பாகவும் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும்** வழங்குகிறார். அனைத்தையும் காணும் தேவனுடைய கண்கள் நம்மைக் காண் கின்றன என்னும் உணர்வோடு எல்லா ஊழியங் களும் செய்யப்பட வேண்டும்.

இந்த வசனத்தில், **உயிரோடு இருக்கிறவர் களையும், மரித்தவர்களையும் அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத் தையும் சாட்சியாக வைத்து நியாயந்தீர்க்கப் போகிறவர்** இயேசு கிறிஸ்து என்று உரைக்கப் பட்டுள்ளது. ஆங்கில வேதாகமத்தில் சாட்சியாக வைத்து என்பதற்குப் பதிலாக போது என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.தமது அரசை நிறுவும்படி இரட்சகர் பிரசன்னமாகிற போது பொதுவான உயிர்த்தெழுதலும் பொதுவான நியாயத்தீர்ப்பும் நிகழும் என்னும் பொருளை *போது* என்னும் சொல் தந்து விடுகிறது. ஆனால் மூல மொழியாகிய கிரேக்கத்தில் தமிழில் உள் ளது போலவே **"சாட்சியாக வைத்து"** என்னும் சொற்றொடர் இடம் பெற்றுள்ளது. இதுவே எழுத் தின்படியான மொழிபெயர்ப்பாகும்.[29]

உயிரோடு இருக்கிறவர்களையும் மரித்த வர்களையும் நியாயந்தீர்க்கப் போகிறவர் இயேசு கிறிஸ்துவே ஆவார். அது எப்பொழுது என்று இங்கு சொல்லப்படவில்லை. அவருடைய பிரசன்னமும் அவருடைய அரசும் உண்மை யுள்ள ஊழியத்திற்குச் செயலூக்கங்களாக இங்கு பவுல் அப்போஸ்தலனால் குறிப்பிடப்பட் டுள்ளன.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலத் தில் அவர் உயிரோடு இருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற தில்லை என்பதை நாம் மற்ற வேத பகுதிகளின் மூலமாகக் கற்று அறிந்திருக்கிறோம். கிறிஸ்து வின் ஆயிரமாண்டு ஆட்சி முடியும்வரை *மரண மடைந்த பாவிகள்* நியாயந்தீர்க்கப்படமாட்டார் கள். இதனை வெளிப்படுத்தின விசேஷம் 20:5 - இல் காண்கிறோம்.

கிறிஸ்துவின் நியாயாசனத்தின் போது *விசு வாசிகளின்* ஊழியத்திற்குரிய பரிசுப்பொருட்கள் வழங்கப்படும். ஆனால் இந்தப் பரிசுகள் கிறிஸ்து வின் பிரசன்னமாகுதலின்போது, அவருடைய ஆட்சி நிறுவப்படும் போது வெளியரங்கமாக்கப் படும். ஆயிரமாண்டு ஆட்சியோடு தொடர்புடைய ஆளுகை, நிருவாகம் ஆகியவையே பரிசுப் பொருட்கள் எனத் தோன்றுகிறது. எடுத்துக்காட் டாக, உண்மையுள்ளவனாக இருந்தவன் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாவான் (லூக்கா 19:17).

4:2 தமது ஊழியர்கள் தற்பொழுது என்ன செய்கிறார்கள் என்று கண்டு தேவன் அதற்கேற்ற வெகுமதிகளை எதிர்காலத்தில் தரவிருக்கின்ற காரணத்தால், தீமோத்தேயு **திருவசனத்தை** அறிவிக்க வேண்டும். உடனடியாகச் செயல்பட வேண்டும் என்னும் உணர்வுடனும், ஒவ்வொரு வாய்ப்பையும் நழுவவிடாமலும் அவர் அதனைச் செய்ய வேண்டும். எல்லாச் சமயத்திற்கும் இச்செய்தி பொருத்தமுடையதாயிருக்கும். ஒரு சில நேரங்களில் இது பொருந்தாது என்று சிலர் நினைக்கக் கூடும். கிறிஸ்துவின் ஊழியர் என் னும் அடிப்படையில், தீமோத்தேயு **ஜாக்கிரதை யாய்ப்** பிரசங்கம் பண்ண வேண்டும். அதாவது, அவர் எதிர்வாதங்களை மறுத்துரைத்து உண் மையை நிலைநிறுத்த வேண்டும். தவறுகளை அவர் கடிந்துகொள்ள வேண்டும். பாவிகள் விசுவாசிக்கும்படியாகவும் பரிசுத்தவான்கள் கர்த் தருக்காக முன்னேறிச் செல்ல வேண்டுமென்றும் அவர் **புத்திசொல்லி** உற்சாகப்படுத்த வேண்டும். இவையெல்லாவற்றிலும் அவர் எல்லா நீடிய சாந் தத்தோடு அதாவது தவறாத பொறுமையோடு, ஆரோக்கியமான உபதேசத்தை உண்மையோடு கற்பிக்க வேண்டும்.

4:3 இப்பொழுது கொடுக்கப்பட்ட கட்டளைக் கான, வலிமைமிக்க இரண்டு காரணங்களை அப்போஸ்தலன் 3-6 வசனங்களில் தருகிறார். முதலாவதாக, நிறைவான **உபதேசத்தை** மக்கள் பொதுவாக விட்டுவிலகக் கூடிய தன்மை காணப் படக்கூடும். இரண்டாவதாக, பவுல் இவ்வுலகை விட்டுச் செல்ல வேண்டிய தருணம் வெகுவிரை வில் வரப்போகிறது.

ஆரோக்கியத்தைத் தரும் படிப்பினைகளின் மேல் பிற்காலத்தில் மக்கள் ஐயத்திற்கு இடமற்ற வகையில் விருப்பமற்றவர்களாக இருப்பார்கள் என்பதை அப்போஸ்தலன் முன்காண்கிறார். மறைநூலின் உண்மைகளைக் கற்பிக்கிறவர் களை விட்டு அவர்கள் வேண்டுமென்றே விலகிச் செல்கிறவர்களாக இருப்பார்கள். தங்களுக்கு இன்பம் அளிக்கக்கூடியதும், இடர்ப்பாடு அற்றது மாயிருக்கிற கொள்கைகளைக் கேட்க அவர் களுடைய **செவிகள்** பேராவல் கொண்டிருக்கும். நூதனமானதும், மனநிறைவு அளித்து இன்ப முறச் செய்கிறதுமான கொள்கைகள் மேல் அவர் கள் கொண்டிருக்கிற இச்சையை நிறைவு செய் யும்படி, அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அதனைப் பேசுகிற போதகர்களைத் தங்களுக் கென்று ஒரு கூட்டமாகச் சேர்த்துக்கொள்வார்கள்.

4:4 உள்ளத்தைப் புண்படுத்தாதபடி செய்யப் படுகின்ற பிரசங்கத்தின் மேல் மக்கள் கொள்கிற இச்சை அவர்களுடைய **செவியைச் சத்தியத்

துக்கு விலக்கி, கட்டுக்கதைகளை நோக்கித் திரும்பச் செய்கிறது. இது இழப்பை ஏற்படுத்தக் கூடிய பண்டமாற்று ஆகும் - **கட்டுக்கதைகளுக்காகச்** சத்தியத்தை இழந்து போகுதல். ஆரோக்கியமான உபதேசத்தை வேண்டாமென்று மறுத்துரைக்கிறவர்களுக்குத் தரப்படும் இழிந்த பரிசு இதுவே.

4:5 எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவராக இருக்கும்படியான அறிவுரை இங்கு வழங்கப்பட்டுள்ளது. தீமோத்தேயு தன்னுடைய அலுவலில் மிகவும் கருத்தூன்றியபடியும், நிதானத்துடனும், ஏற்றத்தாழ்வு இன்றியும் செயல்பட வேண்டும் என்பதே இதன் பொருளாகும். கிறிஸ்துவுக்காக அவர் செய்கிற ஊழியங்களில் இடுக்கண்கள் உண்டாகிறபோது, அவர் தீங்கநுபவிப்பதைத் தவிர்த்து ஒதுங்காமல், மனவிருப்பத்தோடு அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சுவிசேஷகனுடைய வேலையைச் செய் என்னும் சொற்றொடர் பற்றி கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. தீமோத்தேயு சுவிசேஷகனாகத் தான் இருந்தார், அவருடைய வேலையைத் தொடர்ந்துசெய்யும்படி பவுல் இங்கு கூறுவதாகச் சிலர் கருதுகிறார்கள். சுவிசேஷ வரம் தீமோத்தேயுவுக்கு இல்லை, பெரும்பாலும் அவர் மேய்ப்பராகவோ போதகராகவோ செயல்பட்டிருக்க வேண்டும், இருந்தபோதிலும் வாய்ப்புகள் உண்டாகிறபோது அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்வதை அது தடைசெய்யக்கூடாது என்று பவுல் கூறுவதாக வேறு சிலர் கருதுகிறார்கள். உண்மையில் தீமோத்தேயு **சுவிசேஷகராக** இருந்தார் என்றே தோன்றுகிறது. எல்லா நிலையிலும் அவர் சுவிசேஷகராகச் செயல்பட வேண்டும் என்று பவுல் இங்கு உற்சாகப்படுத்தவே செய்கிறார்.

எல்லா நிலைகளிலும் அவர் தனது ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும். அவர் தன்னுடைய ஊழியத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற எல்லாவற்றிலும் நுட்பமானமுறையில் தனது திறமையை ஒப்புவித்துச் செயல்பட வேண்டும்.

4:6 மிகவும் இன்றியமையாத கட்டளையைப் பவுல் தீமோத்தேயுவுக்கு வழங்குவதற்கான இரண்டாவது காரணம், அவர் வெகுவிரைவில் மரணத்தைச் சந்திக்கப் போவதே ஆகும். அவர் இப்பொழுது **பானபலியாக வார்க்கப்பட்டுப்** போக விருந்தார். ஒரு பலியின் மீது ஊற்றப்படுகின்ற பானபலிக்கு, தான் இரத்தம் சிந்தி மரணம் அடையப்போவதை அவர் இங்கு ஒப்பிடுகின்றார் (யாத். 29:40; எண். 15:1-10 ஆகிய வசனங்களைக் காண்க). பிலிப்பியர் 2:17 - இல் பவுல் தனது சாவை ஏற்கனவே பானபலிக்கு ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார். "அவர் தனது முழு வாழ்க்கையையும் ஜீவ பலியாக தேவனுக்கு ஒப்புவித்துவிட்டார்; பலி செலுத்தப்படுதல் என்னும் சடங்கின் கடைசிச் செயலாகத் திராட்சைப் பிழிவு பலியின்மேல் ஊற்றப்படும், அந்தச் செயலோடு பலி செலுத்துதல் என்னும் நிகழ்ச்சி நிறைவு பெறும். இந்த பானபலியோடு அவர் தனது மரணத்தை ஒப்பிடுகிறார்" என்று திருவாளர் ஹீபர்ட் கூறுகிறார்.[30]

நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. தேகத்தை விட்டுப் பிரியும் நிகழ்ச்சியைக் குறிக்கும்படி அப்போஸ்தலன் இங்கு *analusis* என்னும் கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார் (இச்சொல்லின் எழுத்தின்படியான பொருள் "விடுவித்தல்" என்பதாகும். இதிலிருந்தே *"analysis"* என்னும் ஆங்கிலச் சொல் பிறந்தது). இந்தச் சொல் பொருள் பொதிந்ததாக இருக்கிறது. குறைந்தது வெவ்வேறு வகையான நான்கு பொருட்களை இது வரைந்தளிக்கிறது: (1) நங்கூரத்திலிருந்து கப்பல் "அவிழ்த்துவிடப்படுகிற" செயலைக் குறிக்கக்கூடிய சொல்லாக மாலுமிகள் இதனைப் பயன்படுத்துகிறார்கள். (2) நாள் முழுவதும் கடுமையாக உழைத்த பிறகு களைத்துப்போன மாடுகளை நுகத்திலிருந்து "அவிழ்த்து விடுகிற" செயலுக்கு இச்சொல்லை உழவன் பயன்படுத்துகிறான். (3) இது ஒரு பயணியின் சொல்லாகப் பயன்படுகிறது. கூடாரத்தைப் "பிரித்து எடுத்து" தொடர்ந்து பயணம் செய்வதற்கு ஆயத்தப்படுகிற செயலை இது குறிக்கிறது. (4) இது தத்துவஞானி பயன்படுத்துகிற சொல்லாகவும் இருக்கிறது. ஒரு சிக்கலை ஆய்வு செய்து அதற்குத் "தீர்வு காணும்" செயலையும் இச்சொல் குறிக்கிறது. இங்கு நாம் மேதகு அப்போஸ்தலனின் கற்பனை வளத்தை மீண்டும் காண்கிறோம்.

4:7 இவ்வசனத்தை முதலில் மேலோட்டமாகக் காண்கிறபோது, பவுல் பெருமை பாராட்டுகிறதாகத் தோன்றுகிறது. ஆனால், அதுவல்ல உண்மை. அவர் நல்லதொரு போராட்டத்தைப் **போராடி முடித்து**விட்டார் என்னும் சிந்தனையை நாம் இங்கு காணமுடியாது. மாறாக இன்னும் **நல்ல போராட்டத்தைப்** போராடிக் கொண்டிருக்கிறார். நல்ல போராட்டத்தில் அவர் தனது ஆற்றல் முழுவதையும் செலவழித்துவிட்டார். இங்கு போராட்டம் என்னும் சொல் போர்புரிதல் என்னும்

பொருளைத் தரவேண்டும் என்னும் அவசிய மில்லை. மாறாக, விளையாட்டுப் போட்டியைக் குறிக்கும் சொல்லாகவே விளங்குகிறது.

இவ்வாறு அவர் இதனை எழுதியபோது, பெருமுயற்சியுடன் கூடிய ஓட்டத்தை முடிக்கும் நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்தார். அவர் தனது **ஓட்டத்தை** ஓடி முடிக்கிற தறுவாயில் இலக்கு அவருடைய கண்களுக்குத் தெரியத் தொடங்கிவிட்டது.

மேலும், அவர் விசுவாசத்தையும் காத்துக்கொண் டார். கிறிஸ்தவ **விசுவாசத்தின்** மேன்மையான கோட்பாடுகளை அவர் தொடர்ந்து விசுவாசித்துக் கீழ்ப்படிந்தார் என்பது மட்டுமின்றி, தன்னிடம் ஒப்பு விக்கப்பட்ட கோட்பாட்டினை ஓர் உக்கிராணக் காரராக விளங்கி, அதனுடைய மூல ஆதாரத் தூய் மையுடன் பிறரிடம் ஒப்புவித்தார் என்னும் பொரு ளையும் இச்சொற்றொடர் கொண்டிருக்கிறது.

4:8 அப்போஸ்தலன் தனது ஊழியத்தில் வெளிப்படுத்திக் காண்பித்த நீதி, நீதியுள்ள கர்த்தராலே கிறிஸ்துவின் நியாயாசனத்தின் போது பாராட்டப்பட்டுப் பரிசைப் பெறும் என்று இங்கு நம்பிக்கை தெரிவிக்கிறார்.

கர்த்தர் இங்கு **நீதியுள்ள நியாயாதிபதி யாகக்** குறிப்பிடப்படுகிறார். ஆனால் குற்றவியல் நீதிமன்றத்திலுள்ள நீதிபதியை இது குறிக் காமல், விளையாட்டுப் போட்டி நடத்தும் நீதிபதி யையே குறிக்கிறது. இவ்வுலகிலுள்ள நீதிபதி களைப் போல இல்லாமல், இவர் முழுமையும் நிறைவுமுடைய அறிவை உடையவராக இருந்து, மனிதர்களைக் குறித்த முகத்தாட்சண்யம் இன்றி, அவர்களுடைய நோக்கங்களையும் செயல் களையும் மதிப்பீடு செய்து, தமது நியாயத் தீர்ப்பை மிகத்துல்லியமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் வழங்குவார்.

நீதியின் கிரீடம் என்று இங்கு சொல்லப்பட்டி ருப்பது பரிசுப்பொருளே ஆகும் (மணிமுடியோ, மகுடமோ அல்ல). தங்களுடைய ஊழியத்தில் **நீதியை** வெளிப்படுத்திக் காண்பித்து பிரசன்ன மாகுதலை விரும்பும் **யாவருக்கும்** இது வழங்கப் படும். கிறிஸ்துவின் வருகையில் மிகுந்த விருப் பத்தோடு வாஞ்சையாயிருந்து, அந்த நிகழ்ச்சி தரும் வெளிச்சத்தில் ஒரு மனிதன் வாழ்வானா னால், அவனுடைய வாழ்க்கை நீதியுள்ளதாக விளங்கும், மேலும் அவன் அதற்குரிய பரிசுப் பொருளைப் பெறுவான். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மெய்யான விசுவாசம் வைத்து அதன் மேல் விருப்பம்கொண்டால், அது ஒருவருடைய வாழ்க்கையைப் பரிசுத்தமாக்கும் விளைவை ஏற்படுத்தும்.

4. தனிப்பட்ட வேண்டுதல்களும் குறிப்புகளும் [4:9-22]

4:9 கர்த்தருக்குள் இளைய சகோதரனாகிய தீமோத்தேயுவின் ஐக்கியத்தைப் பெற்றிருக்க முதிர்வயதினராயிருந்த பவுல் மிகுந்த வாஞ்சை யாயிருந்தார். ஆகவே அவர் கூடிய விரைவில் ரோமாபுரிக்கு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டு மென்று அப்போஸ்தலன் ஊக்கத்துடன் வேண்டு கிறார். ரோமாபுரிச் சிறையிருப்பின் தனிமையின் கடுமையை அவர் மிகுதியாக உணர்ந்தார்.

4:10 தன் உடன் ஊழியர்களாயிருந்த மனிதர் களால் கைவிடப்பட்ட நிலையே கிறிஸ்தவ ஊழி யத்தில் ஒருவர் சந்திக்கக்கூடிய மிகக் கசப்பான அனுபவமாகும். பவுலின் நண்பராகவும், உடன் விசுவாசியாகவும், உடன் ஊழியராகவும் இருந் தவர் **தேமா**. ஆனால் பவுல் இப்பொழுது சிறைச் சாலையில் இருக்கிறார், கிறிஸ்தவர்கள் இன்னல் களுக்குள் உட்படுத்தப்பட்டார்கள், அரசியல் சூழ் நிலை கிறிஸ்தவர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு எதிரானதாக இருந்தது. கர்த்தருடைய வருகையைத் தேமா ஆவலுடன் விரும்பாமல், **இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து,** அதன் காரணமாகப் பவுலை **விட்டுப் பிரிந்து தெசலோ னிக்கே பட்டணத்துக்குச்** சென்றுவிட்டார். தேமா தனது கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டுவிட்டு கிறிஸ்துவை மறுத்துரைப்பவராக மாறிப்போனார் என்பது இதன் பொருளாயிருக்கும் என்று கூறமுடி யாது. அவர் மெய்யான விசுவாசி அல்ல என்பதும் இதன் பொருளாகாது. தற்காப்பைக் குறித்த அச்சமே பெரும்பாலும் அவர் பின்மாற்றம் அடைந்த நிலைக்குக் காரணமாகும்.

கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் சென்றுவிட்டதாக அப் போஸ்தலன் தொடர்ந்து கூறுகிறார். இந்தச் சொற் களில் குற்றஞ்சாட்டுவதற்கான குறிப்பு எதுவும் இல்லை; கிறிஸ்தவ ஊழியத்தின் நிமித்தம் அவர்கள் அந்த இடங்களுக்குச் சென்றுவிட்ட தாகவே தோன்றுகிறது. திருமறையில் **கிரெஸ்கே** என்னும் பெயர் இங்கு மட்டுமே குறிப்பிடப்பட்டுள் ளது. அவரைக் குறித்த செய்தி வேறு எதுவும் நமக்குத் தெரியாது. விசுவாசிகள் அனைவருக் கும் இது மிகுந்த ஊக்கமளிக்கக் கூடிய உண்மை யாகும். அவர்களுடைய வாழ்க்கை நிலை எவ்

வளவு தாழ்வானதாக இருந்தாலும், கர்த்தருக்காக அவர்கள் செய்கிற சேவை, சிறு தொலைவுக்குத் தூது கொண்டு செல்லுகிற செயலாக இருந்தாலும், அது கவனிக்கப்படாமலோ, அதற்குரிய பரிசுப்பொருள் வழங்கப்படாமலோ போகாது.

4:11 பிரியமான மருத்துவர் லூக்கா ஒருவர் மட்டுமே ரோமாபுரியில் பவுலுடன் இடைவிடாமல் தொடர்பு கொண்டிருந்தார். மேன்மைதங்கிய தேவ மனிதராகிய இவருடைய ஆவிக்குரிய ஊக்கமளிப்பும், தொழில்துறை செயல்திறமும் அப்போஸ்தலனுக்கு எவ்வளவாக மனதிற்கு இன்பம் அளித்திருக்கும்.

இந்தப் பதினோராம் வசனத்தின் பின்பகுதிக்கு நாம் எவ்வளவு நன்றியுணர்வு உடையவராய் இருக்க வேண்டும்! கர்த்தருடைய திருப்பணியில் தோல்வியுற்ற நம்மில் பலருக்கும் இது மிகுதியான ஆற்றல் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. ஏனெனில் நாம் அவருடைய பணியில் முன்னேறிச் செல்ல அவர் நமக்கு இன்னுமொரு வாய்ப்பை நல்குகிறார். பவுல், பர்னபா ஆகியோர் திருப்பணியின் பொருட்டு முதலாவது பயணத்தை மேற்கொண்டபோது மாற்குவும் அவர்களுடன் சென்றார். ஆனால் அவர் பெர்கே பட்டணத்திலிருந்து தனது வீட்டிற்குத் திரும்பிச் சென்றுவிட்டார். இரண்டாவது திருப்பணிப் பயணம் மேற்கொள்வதற்கான தருணம் வந்தபோது, அவ்விளைஞன் முந்தைய தருணத்தில் ஊழியத்திலிருந்து பின்வாங்கிய காரணத்தால் அவரைத் தங்களுடன் அழைத்துச் செல்ல பவுல் விரும்பவில்லை. மாற்குவைத் தங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று பர்னபா வற்புறுத்தினார். அதன் காரணமாகப் பவுலும் சீலாவும் சீரியா, சிலிசியா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்கள்; பர்னபா மாற்குவைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு சீப்புரு தீவுக்குச் சென்றார். இவ்வாறு அந்தப் பிரச்சினை முடிந்தது. அதன் பின்னர் பவுலும் மாற்குவும் ஒப்புரவு பெற்றார்கள். இங்கு பவுல் மாற்குவைக் குறித்து, ஊழியத்தில் தனக்குப் பிரயோஜனமுள்ளவர் என்று குறிப்பிட்டுச் சொல்லி அழைத்து வரும்படி கூறுகிறார்.

4:12 பவுல் இம்மடலை எழுதியபோது தீமோத்தேயு எபேசுப் பட்டணத்தில் இருந்ததாகக் கருதுகிறவர்கள், கூடியவிரைவில் தீமோத்தேயு அங்கிருந்து செல்லவிருந்த காரணத்தால், அவருக்குப் பதிலாக அப்போஸ்தலன் **தீகிக்குவை எபேசுப் பட்டணத்துக்கு** அனுப்பியதாகக் கருதுகிறார்கள். "**தீகிக்குவை நான் எபேசுப் பட்டணத்துக்கு** ஊழியப் பொறுப்புடன் அனுப்புகிறேன்" என்பதே பவுலின் சொற்களின் பொருள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

4:13 இங்கு **மேலங்கி** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மேலாடையையோ, நூல்களை எடுத்துச் செல்வதற்கான பையையோ குறிப்பிடக் கூடும். ஆனால் பொதுவாக அது மேலங்கியைக் குறிப்பதாகவே கருதப்படுகிறது.

புஸ்தகங்கள் மற்றும் தோற்சுருள்கள்[31] ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடு என்ன வென்பதில் ஒருமித்த கருத்து இல்லை. அவை திருமறையின் பகுதிகளா? பவுல் எழுதிய சில மடல்களா?அவர் விசாரணை செய்யப்படும்போது பயன்படக்கூடிய சான்றுகளா? அல்லது எழுதுவதற்குத் தேவையான தோற்சுருள்களா? இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவை எவை என்று உறுதியாகத் தீர்மானிக்க முடியவில்லை. தன்னுடைய சிறையிருப்புக் காலத்திலும்கூட அப்போஸ்தலன் எழுதுவதிலும் படிப்பதிலும் சுறுசுறுப்பாக இருந்தார் என்பதை மட்டும் நம்மால் உறுதியாகச் சொல்ல முடியும்.

முக்கியமற்றதாகத் தோற்றமளிக்கும் இந்த வேதவசனத்தோடு தொடர்புடைய ஆவலைத் தூண்டிவிடக்கூடிய ஓர் உண்மைக் கதை சொல்லப்படுவதுண்டு. கத்தோலிக்க சமய உயர்குருவாக இருந்த நியூமேன் என்பாரின் தம்பி F. W. நியூமேன் இந்த வசனம் வேதத்தில் இடம்பெறாதிருந்தால் நமக்கு என்ன இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று திருவாளர் J. N. டார்பியிடம் வினவினார். "இது குறுகிய காலத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்தது அல்லவா? பவுல் இதனை எழுதாதிருந்தால் இழப்பு ஏதாவது ஏற்பட்டிருக்குமா?" "நிச்சயமாக நான் ஒன்றை இழந்து போயிருப்பேன்; என்னுடைய நூலகத்தை விற்காதபடி என்னைக் காப்பாற்றியது இந்த வசனந்தான். ஒவ்வொரு சொல்லும் ஆவியானவரிடத்திலிருந்து பிறந்தது, அது நித்திய பயனளிக்கக் கூடியது. அதைச் சார்ந்துகொள்ள வேண்டும்" என்று உடனடியாக விடைபகர்ந்தார் டார்பி.[32]

4:14 விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினவன் என்று பவுல் 1 தீமோத்தேயு 1:19,20 - இல் குறிப்பிட்டுள்ளவன் கன்னானாகிய அலெக்சந்தர் என்று தோன்றுகிறது. அவன் யாராக இருந்தாலும் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அவன் பெரிதான **தீமையை** உண்டுபண்ணியவனாவான். அது என்ன வகையான தீமை என்பதை நம்மால் ஊகிக்க மட்டுமே முடியும். இவ்வசனத்தோடு

அடுத்த வசனத்தையும் சேர்த்து பார்க்கிறபோது, அலெக்சந்தர் அப்போஸ்தலனுக்கு எதிராகத் தவறான குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. கோனிபியர் மற்றும் ஹௌசன் ஆகியோர் இந்த வசனத்தை, "கன்னானாகிய அலெக்சந்தர் வெகு தீமையினாலே என்மீது குற்றஞ்சுமத்தினான்" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். **அவனுடைய செயலுக்குத் தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பார்** என்னும் உறுதியோடு அப்போஸ்தலன் இருக்கிறார்.

4:15 தீமோத்தேயு ரோமாபுரிக்கு வருகைபுரிவதை இந்த வசனம் எதிர்நோக்கியிருக்கிறது. அவரும் அலெக்சந்தரைக் குறித்து **எச்சரிக்கையாயிருக்க** வேண்டும். இல்லையெனில் அவரும் இந்தப் பொல்லாத மனிதனாலே தீங்கு அனுபவிக்க நேரிடும். பவுல் கூறிய வார்த்தைகளுக்கு **மிகவும் எதிர்த்துநின்று**, அவர் விசாரிக்கப்பட்டபோது அவருக்கு எதிராக அலெக்சந்தர் சாட்சி கூறியிருப்பான் என்றே தோன்றுகிறது.

4:16 முந்தின சில நாட்கள் நடந்த நிகழ்ச்சிகளைப் பவுல் இன்னமும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்றே தோன்றுகிறது. அவருடைய கடைசி விசாரணையின் போது அவர் தனக்காக வாதாட வழங்கப்பட்ட முதலாவது வாய்ப்பையே அவர் இங்கு முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில் என்று குறிப்பிடுகிறார்.[33] இந்தத் துணிவுமிக்க அப்போஸ்தலனுடைய நூல்களால் பல நூற்றாண்டுகள் வளம் பெற்று வருகின்றன. ஆனால் அவருக்குச் சாதகமாகப் பேச **ஒருவரும்** அவருடன் **இருக்கவில்லை** என்பது உண்மையில் வருத்தத்திற்குரியதாகவே தோன்றுகிறது. அவருடைய வழக்கை எடுத்து நடத்த ஒருவரும் இல்லை, ஆனால் இதற்காக அவருடைய உள்ளத்தில் எவ்விதக் கசப்பான எண்ணமும் ஏற்படவில்லை. மாறாக, முன்னர் இரட்சகர் செய்ததுபோலவே, **அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக** என்றே மன்றாடினார்.

4:17 அவர் மனிதர்களால் கைவிடப்பட்டிருக்கலாம். ஆனால் **கர்த்தரோ** அவருக்குத் **துணையாக நின்றார்**. அது மட்டுமின்றி, அவரது வழக்கு விசாரிக்கப்பட்டபோது நற்செய்தியை அறிவிக்கும்படி அவர் தெய்வீக வல்லமையையும் பெற்றார். நற்செய்தி எவ்விதத் தடையுமின்றி அறிவிக்கப்பட்டு, புறவின நீதிமன்றம் இரட்சிப்பின் செய்தியைக் கேட்டது. திருவாளர் ஸ்டாக் வியப்படைகிறார்:

> புறவினத்தாரெல்லாரும் – இந்த எளிமையான சொற்றொடரில் மேன்மைவாய்ந்த ரோமர்களின் எத்தனை பெரிய கூட்டம் இடம் பெற்றுள்ளது! மனுக்குலத்திற்கு இறைவன் வழங்கிய செய்தியை அன்றைய தினம் அவர்கள் கேட்டார்கள். சிலுவையில் அறையப்பட்டு உயர்த்தப்பட்ட இயேசு அங்கே ஒரே இரட்சகராக முன்மொழியப்பட்டார். இது மனதை மூழ்கடிக்கக்கூடிய சிந்தனையாக விளங்குகிறது. இத்தனை மகத்தான காட்சியை உணர்வதற்கு நம்முடைய கற்பனையும் தவறிவிடுகிறது. வரலாற்றின் முக்கியமான தருணமாக அது விளங்கியது. இதனுடைய விளைவை நித்தியம் தான் நமக்கு விளக்கித் தரும்![34]

இங்கு **பலப்படுத்தினார்** என்று குறிப்பிடப்பட்டுள்ள சொல் பொதுவான வழக்கச் சொல் அல்ல. புதிய ஏற்பாட்டில் இச்சொல் எட்டு முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுலின் வெளியரங்கமான ஊழியத்தின் தொடக்கத்தில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (அப். 9:22). "சவுல் அதிகமாகத் திடன்கொண்டு". இங்கு அச்சொல் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது; இது அவருடைய வெளியரங்கமான ஊழியத்தின் முடிவாகும். அவருடைய ஊழிய வாழ்க்கை நெடுகிலும் கர்த்தர் தாமே அவரை நிலைகுலையாமல் தாங்கி வழிநடத்தினார் என்னும் உளங்கனியச் செய்கிற உண்மையை இது நினைவுபடுத்துகிறது.

சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் என்னும் சொற்றொடர் பவுல் அடைய வேண்டிய தீர்ப்பு தற்காலிகமாகச் சற்று தாமதம் செய்யப்பட்டது என்பதை விளக்கும்படி சொல்லப்பட்டதே ஆகும். வழக்கு விசாரணை தொடர்ந்து நடந்தது. ஆபத்து தற்காலிகமாகத் தவிர்க்கப்பட்டது. சிங்கம் என்னும் சொல் நீரோ மன்னனையோ பிசாசையோ, எழுத்தின்படி காட்டுவிலங்கையோ குறிப்பதாயிருக்கும் என்று மெய்ப்பிக்க முயற்சிகள் நடந்துள்ளன. அது பொதுவாக ஆபத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் என்று கூறுவோமானால் அது புரிந்துகொள்வதற்கு எளிமையாக இருக்கும்.

4:18 கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சிப்பார் என்று அப்போஸ்தலன் கூறியபோது, அவர் கொலை செய்யப்படாமல் நிரந்தரமாக விடுவிக்கப்படுவார் என்னும் பொரு

ளில் கூறவில்லை. அவருடைய சாவு மிக விரைவில் நிகழப் போகிறது என்பதை அவர் அறிந்திருந்தார் (வச. 6). அவ்வாறாயின் அவர் கூறியதன் பொருள் என்ன? அவருடைய சாட்சியின் முடிவு நாட்களில் எவ்விதக் களங்கமான செய்கையையும் அவர் செய்யாதபடி கர்த்தர் அவரைக் காத்துக்கொள்வார் என்பதே இச்சொற்றொடரின் பொருள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவர் தனது கொள்கையைக் கைவிடாதபடியும், கர்த்தரின் திருப்பெயரை மறுத்துரைக்காதபடியும், கோழைத்தனமாக நடந்துகொள்ளாதபடியும், நன்னெறி தவறாதபடியும் கர்த்தர் காத்துக் கொள்வார் என்பதே இதன் பொருளாகும்.

அது மட்டுமல்லாமல் கர்த்தர் **தம்முடைய பரம ராஜ்யத்துக்காக** அவரைக் **காப்பாற்றுவார்** என்பதையும் அவர் அறிந்திருந்தார். பரம ராஜ்யம் எனப்படுவது கிறிஸ்து இப்புவியில் நிறுவும் ஆயிர மாண்டு ஆட்சியன்று. இது பரலோகத்தையே குறிப்பிடுகிறது. அங்கு கர்த்தருடைய ஆளுகை முழுநிறைவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இங்கே, தேவனுக்குச் **சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக** என்று பவுல் திடுமென ஆரவாரப் புகழுரையை வழங்குகிறார். சதா காலங்களிலும் என்னும் சொல் எழுத்தின்படி யுக யுகமாக என்று பொருள்படும். இது கிரேக்க மொழியில் நித்தியத்தைக் குறிக்கும்படியான வலிமைமிக்க சொல்லாகும். உண்மையில் நித்தியத்தில் யுகங்கள் என்ற பகுப்பு இல்லை. மனிதனுடைய மனதினில் காலங்கள் இல்லாத ஒரு நிலையை உணர்வது கூடாத செயலாக இருப்பதால் காலங்கள் என்னும் சொல் இங்கு பயன்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

4:19 நற்செய்திப் பணியில் அவ்வப்போது பவுலுடன் ஒன்றிணைந்து உழைத்த தம்பதியினருக்கு அப்போஸ்தலன் இப்பொழுது வாழ்த்துரையைத் தெரிவிக்கிறார். **பிரிஸ்காள்** (அல்லது பிரிஸ்கில்லாள்) மற்றும் **ஆக்கில்லா** ஆகியோர் பவுலை முதல் முறையாகக் கொரிந்துப்பட்டணத்தில் சந்தித்தார்கள். அதன்பிறகு அவர்கள் பவுலுடன் எபேசுப் பட்டணத்திற்குச் சென்றார்கள். அவர்கள் சிறிது காலம் ரோமாபுரியில் வசித்து வந்தார்கள் (ரோமர் 16:3). மேலும் அவர்களும் பவுலைப் போலவே கூடாரம் பண்ணும் தொழிலைச் செய்தார்கள்.

ஒநேசிப்போருவைக் குறித்து 1:16 -ஆம் வசனத்தில், பவுலை அநேகந்தரம் இளைப்பாறப் பண்ணினவர் என்றும், அவருடைய விலங்கைக் குறித்து வெட்கப்படாதவர் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

4:20 கொரிந்துப் பட்டணத்தில் உக்கிராணக் காரராக இருந்த அதே மனிதராகத்தான் இந்த **ஏரஸ்து** இருக்கக் கூடும் (ரோமர் 16:23).

துரோப்பீமுவைக் குறித்து ஏற்கனவே அப். 20:4; 21:29 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எபேசுப் பட்டணத்தில் மனந்திரும்பிய துரோப்பீமு பவுலுடன் எருசலேமுக்குச் சென்றார். பவுல் அவரை தேவாலயத்திற்குள் அழைத்துச் சென்றதாக அங்கிருந்த யூதர்கள் நினைத்துக் கொண்டார்கள். அவரைப் பவுல் **மிலேத்துவில் விட்டு வந்ததாகக்** கூறப்பட்டுள்ளது. நோயினின்று குணமாக்கக் கூடிய அற்புத வல்லமை அப்போஸ்தலனுக்கு இருந்தபோதிலும், அவர் எப்பொழுதும் அந்த ஆற்றலைப் பயன்படுத்த வில்லை என்பதை அறிவிக்கக் கூடிய முக்கியமான வசனமாக இது விளங்குகிறது. தனிப்பட்ட நலம் கருதி நோய் நீக்கும் அற்புத வரம் ஒரு போதும் பயன்படுத்தப்படவில்லை, மாறாக நற் செய்தியின் சத்தியத்திற்கு ஆதாரமாக விசுவாசிகள் அல்லாத யூதர்களுக்கான சாட்சியாகவே அது பயன்படுத்தப்பட்டது.

4:21 மாரிகாலத்துக்குமுன் தீமோத்தேயு **வந்துசேரும்படி ஜாக்கிரதைப்பட** வேண்டும், ஏனெனில் மழைக்காலம் பயணத்திற்குத் தடை ஏற்படுத்தக் கூடும், அல்லது பயணம் மிகவும் கடினமாயிருக்கும். சிறைச்சாலையில் இருந்த அவருடைய நண்பருக்கு அவரது ஐக்கியம் தேவையாயிருந்தது. அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். மீண்டும் மீண்டும் தீமோத்தேயு வரவேண்டும் என்று விடுக்கப்பட்டுள்ள அழைப்பு உருக்கமுடைய விண்ணப்பமாயிருக்கிறது (1:3,4; 4:9 - ஆகிய வசனங்களைக் காண்க).

அடுத்ததாக, **ஐபூலுவும், புதேஞ்சும், லீனுவும், கலவுதியாளும், மற்றெல்லாச் சகோதரரும்** தீமோத்தேயுவுக்கு செலுத்துகிற வாழ்த்து குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பெயர்கள் அதிக முக்கியத்துவம் அற்றவையாகத் தோன்றுகின்றன. ஆனால் இவ்வாறு கூறப்பட்டுள்ள தன்மை, "கிறிஸ்தவத் திருப்பணியில் நட்பு மலர்வதும் அது வளர்ச்சியுறுவதும் சிறப்பான களிகூருதலாகவும் நட்பேறாகவும் விளங்குகிறது" என்று திருவாளர் ரோட்ஜர் கூறினாற்போல இருக்கிறது.

4:22 இப்பொழுது பவுல் தனது இறுதி மடலை முடிவுக்குக் கொண்டு வருகிறார். "**கர்த்தராகிய இயேசு கிறிஸ்து**[35] **உன் ஆவியுடனேகூட இருப்பாராக**" என்று தீமோத்தேயுவினிடத்தில் குறிப்பிட்டுப் பேசுகிறார். பின்னர் தீமோத்தேயு இம்மடலைப் பெறும்போது அவருடன் இருப்பவர்களையும் சேர்த்து "**கிருபை உங்களோடு இருப்பதாக, ஆமென்**" என்று அப்போஸ்தலன் கூறுகிறார்.

இங்கு அவர் தனது எழுதுகோலைக் கீழே வைக்கிறார். மடல் எழுதி முடிக்கப்பட்டுவிட்டது. அவருடைய திருப்பணி முடிவடைந்துவிட்டது. ஆனால் அவரது வாழ்வின் நறுமணமும் சான்றும் நம்முடன் இன்றும் நிலைத்திருக்கின்றன. நாம் ஒருநாள் அவரைக் காண்போம்; நற்செய்தி மற்றும் திருச்சபை ஆகியவற்றின் மேதகு கருத்துகளைக் குறித்து அவருடன் பேசுவோம்.

அடிக்குறிப்புகள்

1(1:1) W. E. Vine, *Exposition of the Epistles to Timothy,* pp. 60,61.

2(1:2) D. Edmond Hiebert, *Second Timothy,* p. 26.

3 (1:4) "ஆராதித்து வரும்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் *latreuo* என்பதாகும் (அது *latreia*, "ஆராதனை" என்னும் சொல்லுடன் தொடர்புடைய "mario latry" என்னும் ஆங்கிலச் சொல் மரியாள் வழிபாட்டைக் குறிக்கும் சொல்லாகும்).

4 (1:4) Hiebert, *Second Timothy,* p. 31.

5 (1:4) "genuine" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் "மாயமற்ற" என்னும் தமிழ்ச்சொல்லுக்கு ஒப்பானது. இதிலிருந்து தோன்றிய மாய்மாலக்காரன் என்னும் சொல், முகமூடிக்குள்ளாக இருந்து பேசும் நாடக நடிகனைக் குறிக்கப் பயன்படுகிறது.

6 (1:6) Vine, Exposition, under the verses listed.

7 (1:11) நடுநிலைப் பிரதியில் "புறஜாதியார்" என்னும் சொல் இடம்பெறவில்லை.

8 (1:16) J. H. Jowett, *Things that matter Most,* p. 161.

9 (2:3) NU text reads "*share*".

10 (2:4) William kelley, *An Exposition of the Two Epistles to Timothy,* p. 213.

11 (2:7) நடுநிலைப் பிரதி "கர்த்தர் உனக்குத் தந்தருளுவார்" என்று தமிழில் உள்ளது போலவே எதிர்கால வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது. அங்கு இவ்வசனம் ஜெபமாகக் காணப்படுவதில்லை.

12 (2:8) Hiebert, *Second Timothy,* p. 59.

13 (2:9) Quoted by D. Edmond Hiebert in *Second Timothy,* p. 60.

14 (2:10) The beloved hymn "Immanuel's Land" was written by Anne Rose Cousin, but it is said, using phraseology from Samuel Rutherford's writings.

15 (2:11) Hiebert, *Second Timothy,* p. 62.

16 (2:13) Dinsdale T. Young, Unfamiliar texts, p. 253.

17 (2:13) J. J. Van Oosterzee, "The Pastoral Letters," *Lange's Commentary on the Holy Scriptures,* XI:95.

18 (2:14) Dinsdale T. Young, *The Enthusiasm of God,* p. 154.

19 (2:15) Henry Alford, *The Greek Testament,* III:384.

20 (2:17) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல் "*gangraina*" என்பதாகும். ஆனால் அச்சொல்லிருந்து பிறந்த ஆங்கிலச் சொல் "*gangrene*" (உடலில் ஒரு பகுதி அழுகிப்

போகுதல்) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது சிறந்த மொழிபெயர்ப்பாகாது.

21 (2:18) Hamilton Smith, *The Second Epistle to Timothy,* p. 26.

22 (2:19) Smith, ibid.

23 (2:19) R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistles to the Colossians, to the Thessalonians, to Timothy, to Titus and to Philemon*, p. 804.

24 (2:19) நடுநிலைப் பிரதியிலும் பழைமைப் பிரதியிலும் "கிறிஸ்து" என்னும் சொல்லுக்குப் பதிலாக "கர்த்தர்" என்னும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. (தமிழிலும் கர்த்தர் என்னும் சொல்லே இடம் பெற்றள்ளது.) இது எண்ணாகமம் 16:5 – உடன் நெருக்கமுடையதாயிருக்கிறது.

25 (2:22) Hiebert, *Second Timothy,* p. 76.

26 (3:5) Hiebert, ibid, p. 86.

27 (3:16) The Greek word is *theopneustos*.

28 (3:17) Lenski, Epistles, p. 841.

29 (4:1) The critial text reads *kai* ("and") for kata.

30 (4:6) Hiebert, *Second Timothy*, pp. 109, 110.

31 (4:13) தோற்சுருள்கள் (*membranas* – கிரேக்க மொழி) அதிக விலையுள்ளவை. பெரும் பாலும் வேத நூல்களையோ, விளக்கவுரை களையோ குறிக்கக் கூடும்.

32 (4:13) Quoted by H. A. Ironside, *Timothy, Titus and Philemon,* p. 255.

33 (4:16) முதல் முறை பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருக்கையில் வழக்கு விசாரணை யின் இறுதிக் கட்டத்தைப் பற்றியது என்பதே பொருளாகும்.

34 (4:17) Eugene Stock, *Plain Talks on the Pastoral Epistles,* pagination unavailable.

35 (4:22) NU text omits *Jesus Christ*.

நூல் விவரப் பட்டியல்

1 தீமோத்தேயு நூலின் இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ள நூல் விவரத் தொகுப்பினைக் காண்க.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீத்துவுக்கு எழுதின நிருபம்

முன்னுரை

"இம்மடல் மிகச் சிறியதாயிருந்தாலும், கிறிஸ்தவத்தின் முக்கியமான கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டதாகவும், கிறிஸ்தவ அறிவுக்கும் வாழ்வுக்கும் தேவையான எல்லாவற் றையும் உடையதாகவும் இருக்கக் கூடிய அளவிற்கு நுண்திறம் வாய்ந்ததாக உருவாக்கப் பட்டுள்ளது."

– மார்டின் லுத்தர்

1. வேதநூல் வரிசையில் தனிச் சிறப்புமிக்க இடம்

பேர்புகழ் அற்ற ஒரு தீவில் திருப்பணியாற்றி வந்த நன்கு அறிமுகமற்ற ஊழியர் ஒருவருக்கு வயது முதிர்ந்த ஊழியர் இருபது நூற்றாண்டு களுக்கு முன்னர் எழுதிய மூன்று சிறு அதிகாரங் களைக் கொண்ட இம்மடல் - "மிகுதியாக அறிவு புகட்டப்பட்ட" இருபத்தோராம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு என்ன பயனைத் தரப் போகிறது? இம்மடல் வெறுமனே பவுலின் சொற் களாக இருக்குமென்றால் (பெரும்பாலான தாரா ளக் கொள்கையாளர்கள் இதனையும்கூட ஒப்புக் கொள்வதில்லை!), திருச்சபை வரலாற்று ஆர்வலர் மற்றும் தொடக்க காலக் கிறிஸ்தவ நம்பிக்கை யைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு கல்வி கற் போர் ஆகியோரது ஆவலுக்கு விருந்தளிக்கும் நூலாக மட்டுமே இருந்திருக்கும்.

ஆனால் இம்மடல், "பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தையாக" இருக்கிறது. ஆகவே வேறு எந்த நூலாலும் நிரப்பக்கூடாத இடத்தை நிரப்பும் மடலாக இது விளங்குகிறது. மூப்பர்கள் பற்றிய பொருள் இம்மடலில் கையாளப்பட்டிருக்கிறவிதம், 1 தீமோத்தேயு மடலில் இதற்கு இணையான பகுதியிலுள்ள கொள்கை விளக்கங்களுக்கு வலிமை கொடுத்து, பக்கபலமாக விளங்குகிறது. இந்தப் பொருள் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டுள் ளது தேவையற்றதன்று. மாறாக இதுபோன்று ஒரே பொருள் பல வேதபகுதிகளில், குறிப்பாக பழைய ஏற்பாட்டு நூல்களில் இடம் பெற்றுள்ளது. எனவே சில குறிப்பிட்ட கொள்கைகளைத் தமது மக்கள் பற்றிக்கொள்ள வேண்டும் என்று தேவன் எவ்வள வாக விரும்புகிறார் என்பதை இது வலியுறுத்திக் கூறுகிறது.

தீத்து மடலில் மிகவும் போற்றுதற்குரிய பகுதி யாக விளங்குவது பெரும்பாலும் 2:11-14 ஆகிய வசனங்களே ஆகும். இது சமநிலைப்படுத்தும் பாணியில், மிக அழகிய வண்ணம், கிருபையைக் குறித்த கோட்பாட்டை உயர்த்திப் போற்றும் வகை யில் எழுதப்பட்டுள்ளது.

2. நூலாசிரியர்

தீத்து மடலின் நூலாசிரியர் பற்றிய விவரங் களை அறிய, தயைகூர்ந்து மேய்ப்பர்கள் திருமடல் களுக்கான முன்னுரையைக் காண்க.

3. எழுதப்பட்ட காலம்

கருத்துகள், சொல்லாட்சி ஆகியவற்றின் ஒப்புமையை முன்னிட்டு, பழைமைப் பற்றாளர்கள் 1 தீமோத்தேயு எழுதப்பட்ட அதே காலத்தின் போதோ, சற்று பின்னரோ தீத்து மடலும் எழுதப் பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அது எதுவாயிருந்தாலும், இம்மடல் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டு மடல்களுக்கு இடையே எழு தப்பட்டிருக்க வேண்டுமேயொழிய, 2 தீமோத்தேயு வுக்குப் பிந்தியதல்ல. இந்நூல் என்று எழுதப்பட் டது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாவிட் டாலும், கி. பி. 64 -க்கும் கி. பி. 66 -க்கும் இடைப் பட்டதாகவே இருக்க வேண்டும். மக்கெதோனியா விலிருந்தே இம்மடல் பிறந்திருக்க வேண்டும்.

4. கருப்பொருள்

மேய்ப்பர்களின் திருமடல்களிலுள்ள மற்ற இரண்டு மடல்களிலும் காணப்படும் பொதுவான கருத்துகளைப் பகிர்ந்துகொள்வதோடு (மேய்ப் பர்கள் திருமடல்களுக்கான முன்னுரையைக் காண்க), தேவபக்தி, நற்கிரியைகள் ஆகியவற் றால் அலங்கரிக்கப்பட்டு ஒரு விசுவாசி எவ்வித மாகத் தன்னை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்கான அழகிய கருத்துச் சுருக்கத்தை இம்மடல் தந்தருளுகிறது. கிருபையைப் பற்றிய கோட்பாட்டில் மனமகிழ்ச்சியடைகிற பலர் இன் றைய நாட்களில் நற்கிரியையை, ஏன் தேவபக்தி யையும்கூட வெளிப்படுத்திக் காட்டுவதில் சற்றேனும் விருப்பம் கொள்வதில்லை. அப்படிப்

பட்ட மனப்பான்மை தவறானது. மேலும் அது மெய்யான கிருபையைக் குறித்துத் தப்பெண்ணம் கொள்ளச் செய்கிறது.

இக்கருத்தினைப் பவுல் மிகச்சிறந்த முறையில் தொகுத்து வழங்குகிறார். "இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமான வர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக் குறித்துத் திட்டமாய்ப் போதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்" (3:8).

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (1:1-4)
2. சபையில் மூப்பர்கள் (1:5-9)
3. சபையில் காணப்படும் தவறுகள் (1:10-16)
4. சபையில் கொடுக்க வேண்டிய பயிற்சி (2:1-15)
5. சபையில் கொடுக்க வேண்டிய அறிவுரைகள் (3:1-11)
6. முடிவுரை (3:12-15)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	சபை மூப்பர்கள்		சபைப் பயிற்சி	
காலம்	கி. பி. 64-66			
தலைப்பு	திருச்சபை	இடையூறுகள்	நடத்தை	கீழ்ப்படிதல்
பகுப்பு	தகுதியான மூப்பர்கள்	பொய்யான போதகர்கள்	ஆரோக்கிய உபதேசம்	நற்செய்தியை நிலைநிறுத்துதல்
வசனம்	1:1-9	1:10-16	2:1-15	3:1-15
இடம்	மக்கெதோனியா			

1. வாழ்த்துரை [1:1-4]

1:1-4 பவுல் தேவனுடைய ஊழியக்காரராக வும், இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ் தலராகவும் இருந்தார். முதல் வருணனை ஒப்புயர் வற்ற எஜமானருடைய அடிமையாகவும், இரண்டாம் வருணனை இறையாண்மை உடைய கர்த்தருடைய பிரதிநிதியாகவும் அவரைச் சித்தி ரித்துக் காட்டுகின்றன. முதலாவது கீழ்ப்படிதலை யும், இரண்டாவது அதிகாரத்தையும் குறித்துப் பேசுகின்றன. தன்னைத் தானே ஒப்புவித்ததன் மூலம் அவர் **ஊழியக்காரராக** மாறினார், தெய் வீக நியமனத்தின் மூலம் அவர் **அப்போஸ்தல ராக** விளங்கினார்.

சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகிப் பெருகவேண்டும் என்பதே அவரு டைய ஊழியத்தின் இலக்காக இருந்தது. அவர் களுக்கு விசுவாசம் உண்டாகிப் பெருக வேண் டும் என்பது அவர்களை விசுவாசத்திற்குள் கொண்டு வரவேண்டும், அதாவது அவர்கள் முதல் கட்டமாக இரட்சிப்பைப் பெறவேண்டும் என்றோ, இரட்சிக்கப்பட்ட பிறகு அந்த விசுவாசத் தில் வழிநடத்தப்பட வேண்டும் என்றோ பொருள் படும். சத்தியத்தை அறிகிற அறிவு உண்டாக வேண்டும் என்னும் சொற்றொடர் இரண்டாவது பொருளை இந்த வசனம் கொண்டிருக்கிறது என்று தோற்றுவிக்கிறது. ஆனால் அப்போஸ் தலன் கொண்டிருந்த இரண்டு அடிப்படை நோக் கங்களை இந்த வசனம் தன்னகத்தே கொண்டி ருப்பதாகவே நாம் கருதுகிறோம். (1) நற்செய்தி அறிவித்தல் - **தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்கு விசுவாசம் உண்டாகிப்** பெருக வேண்டும் (2) கற்பித்தல் - **சத்தியத்தை அறிகிற அறிவில்** வளர்ச்சியடையச் செய்தல். மத்தேயு 28:20 - இன் எதிரொலியாக இது திகழ்கிறது - அனைத்து நாடுகளுக்கும் நற்செய்தியை அறி வித்து, கிறிஸ்து கற்பித்த அனைத்துக் கட்டளை களையும் அவர்கள் கைக்கொள்ளும்படி செய் தல். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு விசுவாசத்தை உண்டாக்கி வளர்ச்சியடையச் செய்வதற்காக அவர் அழைக்கப்பட்டார் என்று எவ்விதத் தயக்கத்திற்கும் இடமின்றிக் குறிப் பிடுகையில், தெரிந்துகொள்ளப்படுதல் என்னும் கோட்பாட்டை முன்னிறுத்தி அப்போஸ்தலன் நம் மோடு எதிர்த்து நிற்கிறார். திருமறையில் உள்ள கோட்பாடுகளில் இதைக் காட்டிலும் எதுவும் கூடுதலாக வாதத்தை ஏற்படுத்தவில்லை, தவறாகப் புரிந்துகொள்ளப்படவும் இல்லை. அறி வாற்றல் பெற்றவர்களிடத்தில் மன உலைவை யும் ஏற்படுத்தியதில்லை. சுருங்கக் கூறின், இறுதி யில் தமக்கு முன்பாகப் பரிசுத்தமுள்ளவர்களாக வும் குற்றமில்லாதவர்களாகவும் இருக்க வேண்டு மென்னும் நோக்கத்தோடு உலகத் தோற்றத்துக்கு முன்னே தேவன் சிலரைக் கிறிஸ்துவுக்குள் ளாகத் தெரிந்துகொண்டார் (எபே. 1:4) என்று இந்தக் கோட் பாடு கற்பிக்கிறது.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் களுக்கு விசுவாசம் உண்டாகுதல் மற்றும் அவர் கள் **சத்தியத்தை அறிகிற அறிவை** ஒப்புக் கொள்ளுதல் ஆகியவற்றில் ஈடுபடும்படியாக தனது அப்போஸ்தல ஊழியம் அமைந்திருக் கிறது என்று கூறியபின், **தேவபக்திக்கேதுவான சத்தியம்** என்று ஒரு விசயத்தை அவர் சேர்த்துக் கூறுகிறார். கிறிஸ்தவ விசுவாசம் மெய்யான பரி சுத்தத்தோடு இசைவுடையதாக இருக்க வேண் டும் என்பதும், நடைமுறை **தேவபக்திக்கேது வாக** மனிதர்களை நடத்தும்படி திறம் படைத்ததாக இருக்க வேண்டும் என்பதும் இதன் பொருளாகும். விசுவாசம் பழுதற்றதாக இருக்க வேண்டுமானால் அதற்குத் தூய்மையுள்ள வாழ்க்கை தேவை. "ஒருவர் பிரசங்க மேடையில் நிற்கும் போது அங்கிருந்து அவர் இறங்கி வரவே கூடாது என்றும், அவர் பிரசங்க மேடையில் இல் லாதபோது அவர் அந்த மேடைக்குச் செல்லவே கூடாது என்றும் மக்கள் எண்ணுகிற நிலையில்" ஒரு பிரசங்கி இருப்பதாகச் சொல்லப்படுமென் றால், அதனினும் முரண்பாடான நிலை வேறு எதுவும் இல்லை என்று சொல்லலாம்.

நற்செய்தியைப் பொருத்தமட்டில் பவுல் பெற்றி ருந்த அதிகாரத்தில் மிக முக்கியமான மூன்றா வது விசயமும் இருந்தது. (1) நற்செய்தி அறிவித் தல் - தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் களுக்கு விசுவாசம் உண்டாகிப் பெருகச் செய் தல் (இறந்த காலம்); (2) கற்பித்தல் - சத்தியத்தை அறிகிற அறிவை அடையச் செய்தல் (நிகழ் காலம்); இவை மட்டுமின்றி மூன்றாவதாக (3) எதிர் பார்த்தல் - நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கை (எதிர்காலம்).

நித்திய ஜீவன் தற்போதைய உடைமையாக வும், எதிர்கால நம்பிக்கையாகவும் விளங்கு கிறது என்று புதிய ஏற்பாடு பேசுகிறது. நம்பிக்கை என்னும் சொல் நிச்சயமற்ற தன்மையைக் குறிப் பாய்த் தெரிவிப்பதாக நாம் கருதவேண்டிய தில்லை. நாம் கிறிஸ்துவை நமது இரட்சகராக

நம்பி ஏற்றுக்கொண்ட அத்தருணத்திலேயே நித்திய ஜீவன் நமது தற்போதைய உடைமைப் பொருளாக மாறிவிடுகிறது (யோவான் 5:24). மேலும் அவருடைய மீட்பின் செயலினால் உண்டான நன்மைகள் யாவற்றிற்கும் நாம் வாரிசுகளாக மாறிவிடுகிறோம். ஆனாலும் நாம் நம்முடைய நித்திய வீட்டைச் சென்றடையும்வரை அவை எல்லாவற்றையும் நடைமுறையில் அனுபவித்து மகிழ்கிறவர்களாக இருப்பதில்லை. நாம் நம்முடைய மகிமையின் சரீரங்களைப் பெற்றவர்களாக, பாவம், நோய், வருத்தம், பாடுகள், மரணம் ஆகிய எல்லாவற்றிலிருந்தும் நிரந்தரமாக விடுதலை பெற்றவர்களாக, இறுதி சாயலை அடைவதாகிய நித்திய ஜீவனை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதே நமது நம்பிக்கை என்பதன் பொருளாகும் (பிலி. 3:20,21; தீத்து 3:7).

நம்பிக்கை நிச்சயமானது, ஏனெனில் அது தேவனாலே வாக்குறுதி பண்ணப்பட்டது, **பொய்யுரையாத தேவனுடைய** வார்த்தையைப் போல உறுதிபடைத்தது வேறு எதுவுமில்லை. அவரை ஏமாற்ற முடியாது, அவர் ஏமாற்றவும் மாட்டார். அவர் சொல்லுவதை நம்புவதில் எந்த இழப்பும் ஏற்படாது. படைப்பு, படைப்பாளரை நம்புவதைப் பார்க்கிலும் அதிகமாகப் பகுத்தறிவுக்குப் பொருத்தமானது வேறு எதுவும் இல்லை.

தேவன் **ஆதிகாலமுதல்** நித்திய ஜீவனைக் குறித்து வாக்குறுதி தந்திருக்கிறார். இதனை நாம் இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளலாம். முதலாவதாக, கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் யாவருக்கும் நித்திய ஜீவனைத் தந்தருளும்படியான தீர்மானத்தை தேவன் நித்தியத்தின் கடந்த காலத்தில் எடுத்திருந்தார். அவர் என்ன தீர்மானித்திருந்தாரோ அதுவே அவருடைய வாக்குறுதியாகவும் இருந்தது. அல்லது, இரட்சிப்பினால் ஏற்படக்கூடிய நன்மைகள் யாவும் ஆதியாகமம் 3:15 -இல் மேசியாவின் வாக்குறுதியாக, ஒரு கருவைப் போன்ற வடிவத்தில் அடங்கியிருந்தன. இது ஆதிகாலத்திற்கு முற்பட்ட காலத்தில் அல்லது காலப்பாகுபாடு வெளிப்படும் முன்னரே இருந்தது.

ஆதிகாலத்தில் தேவன் முடிவு செய்த நித்திய ஜீவனைக் குறித்த மகிமைநிறை திட்டத்தை அவர் **ஏற்றகாலங்களிலே** விளங்கப் பண்ணினார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலே அவர் இதனை முற்றிலுமாக வெளிப்படுத்தவில்லை. மரணத்திற்குப் பிறகு உள்ள வாழ்வைக் குறித்த அறிவு அந்த நாட்களில் வாழ்ந்த விசுவாசிகளிடையே தெளிவற்ற நிலையிலேயே காணப்பட்டது. ஆனால் இரட்சகர் வந்தபோது அந்தத் தெளிவற்ற நிலை மறைந்துபோயிற்று. அவர் "ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" (2 தீமோ. 1:10). **நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின்படி,** அதாவது, மாபெரும் ஆணைக்குக் (மத். 28:19,20) கீழ்ப்படிந்தவர்களாக பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் நற்செய்தியை எங்கும் அறிவித்துப் பரவச் செய்தார்கள்.

இந்த மடல் **தீத்துவுக்கு** எழுதப்பட்டது, அவர் **பொதுவான விசுவாசத்தின்படி** பவுலின் **உத்தம குமாரன்.** தீத்து என்பவர் யார்?

பவுல் எழுதிய மடல்களில் மூன்றில் ஆங்காங்கே காணப்படும் ஒருசில குறிப்புகளை ஒன்று கூட்டி அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் காணலாம். பிறப்பின்படி அவர் கிரேக்க இனத்தைச் சேர்ந்தவர் (கலா. 2:3), கர்த்தராகிய இயேசுவில் வைத்த விசுவாசத்தினாலே அவர் மீண்டும் பிறந்தார், பெரும்பாலும் அது பவுல் ஆற்றிய ஊழியத்தின் மூலமாகவே நடந்திருக்க வேண்டும் (தீத்து 1:1). அதன் பிறகு மெய்யான சுவிசேஷம் என்றால் என்னவென்பது பற்றி ஒரு கடுமையான சண்டை மூண்டது. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு உண்டாகிறது, அதனுடன் எதையும் சேர்க்க வேண்டியதில்லை என்று பவுல் போன்ற ஒரு சாரார் கற்பித்தார்கள். மற்றொரு சாரார், தேவனுடைய அரசில் முதல் தரக் குடிமகனாக மாறவேண்டுமானால் விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டும் (அதன்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்) என்று வலியுறுத்திய யூதக்கொள்கை ஆதரவாளர்கள். இந்த வாத எதிர்வாதத்தில் தீத்து சர்ச்சைக்கு உரிய நபராக விளங்கினார். அப்போஸ்தலர்களோடும் மூப்பர்களோடும் கலந்து ஆலோசிக்கும்படியாகப் பவுலும் பர்னபாவும் எருசலேம் சென்றபோது, அவர்கள் தீத்துவையும் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள் (கலா. 2:1). தீத்துவைப் போன்ற புறவினத்தவர்கள் இரட்சிப்படைவதற்கென்று யூத முறைமைகளுக்கும் சடங்குகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டியதில்லை என்று அந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது (அப். 15:11). புறவினத்தவர் யூதர்களாக மாற்றம் பெற்றிருக்க வேண்டியதில்லை. யூதர்களும் புறவினத்தவர்களாக மாற்றம் பெற்றிருக்க வேண்டியதில்லை. மாறாக, யூதர்களும் புறவினத்தாரும் கர்த்தராகிய இயேசுவினிடத்தில்

விசுவாசம் வைத்தபோது புதிய சிருஷ்டிகளாக மாற்றம் பெற்றுவிட்டார்கள்.

அதன் பிறகு தீத்து பவுலின் மிக பயனுள்ள உதவியாளர்களில் ஒருவராக மாறிவிட்டார். கொரிந்து சபையிலும் கிரேத்தா தீவிலிருந்த சபைகளிலும் இருந்த குறைவுகளை நிவர்த்தி செய்பவராக அவர் செயல்பட்டார். முதலாவதாக, பவுல் அவரைக் கொரிந்து சபையில் காணப்பட்ட கொள்கை வேறுபாடுகளையும் நடத்தைக் குறை பாடுகளையும் நீக்கும் பொருட்டு எபேசுவி லிருந்து கொரிந்துப் பட்டணத்துக்கு அனுப்பினார். பின்னர் தீத்துவைப் பவுல் மக்கெதோனியாவில் சந்தித்தபோது, அப்போஸ்தலன் என்னும் நிலை யில் அவர் வழங்கிய கண்டிப்பான எச்சரிப்பு களைக் கொரிந்துப் பட்டணத்தார் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள் என்பதைக் கேள்விப்பட் டுப் பெருமகிழ்ச்சி அடைந்தார் (2 கொரி. 2:12,13; 7:5-7, 13-16). பின்னர் மக்கெதோனியாவிலிருந்து அவர், எருசலேம் நகரில் இருந்த ஏழை விசுவாசி களுக்கென்று நிதி திரட்டுவதைத் துரிதப்படுத்தும் படி தீத்துவைக் கொரிந்து பட்டணத்துக்கு மீண்டும் அனுப்பினார் (2 கொரி. 8:6,16,17; 12:18). அவரைப் பற்றி பவுல், "அவர் எனக்குக் கூட்டாளி யும், உங்களுக்காக என் உடன் வேலையாளு மாயிருக்கிறார்" என்று விவரித்தார் (2 கொரி. 8:23). பவுல் எப்பொழுது தீத்துவுடன் கிரேத்தா தீவில் இருந்தார் என்று நமக்குத் திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால் பவுல் முதல் தடவை ரோமாபுரிச் சிறையில் கைதியாயிருந்து விடுவிக் கப்பட்ட பிறகே கிரேத்தா தீவில் தீத்துவுடன் இருந்தார் என்று பொதுவாக நம்பப்படுகிறது.

தீத்துவைப் பற்றிய கடைசிக் குறிப்பை 2 தீமோத்தேயு 4:10 -இல் காண முடியும். பவுல் இரண் டாவது தடவை சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது தீத்துவும் அவருடன் இருந்தார். ஆனால் அவர் அங்கிருந்து தல்மாத்தியாவுக்குச் சென்றுவிட்டதாகப் பவுல் குறிப்பிடுகிறார். இன் றைய நாட்களில் அது யுகோஸ்லாவியா என்று அழைக்கப்படுகிறது. தனிமையில் தவித்தவராக, கைவிடப்பட்டவராகப் பவுல் இருந்தமை அவரு டைய சொற்களின் தொனியாக இருந்த போதி லும், அவர்தான் தீத்துவை அங்கு அனுப்பி யிருக்க வேண்டும்.

ஒரு **பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகத்** தீத்து இருந்ததாக அவரைப் பற்றிப் பேசுகிறார் பவுல். தீத்து மனமாற்றம் பெற்றதற்குக் காரணமாக இருந்தவர் பவுல் என்பது இதன் பொருளாக இருக்கக் கூடும், ஆனால் நிச்சயமாக அதுதான் உண்மையாக இருக்க வேண்டுமென்ப தில்லை. தீமோத்தேயுவையும் பவுல் விசுவாசத் தில் உத்தம குமாரன் என்று அழைத்திருக்கிறார் (1 தீமோ. 1:2), இருந்தபோதிலும் பவுல் முதல் முறையாக அவரைச் சந்தித்த போது அவர் ஏற் கனவே ஒரு சீஷராக இருந்தார் என்றே தோன்று கிறது (அப். 16:1). ஆகவே, இவ்விளைஞர்கள் பவு லைப் போன்ற ஆவிக்குரிய குணநலன்களை வெளிப்படுத்திக் காண்பித்தார்கள் என்பதே இச்சொற்றொடரின் பொருளாக இருக்கக்கூடும். மேலும் இதன் காரணமாக, கிறிஸ்தவ ஊழி யத்தில் அவர்களுக்கிடையே தந்தை மக்கள் உறவு இருந்தது.

பவுல் தனது இளம் உதவியாளருக்குக் **கிருபை யும் இரக்கமும் சமாதானமும்** அருளப்பட வேண்டு மென்று வாழ்த்துகிறார். இந்தப் பின்னணியில் **கிருபை** எனப்படுவது வாழ்வுக்கும் ஊழியத்துக் கும் தேவையான தெய்வீக வல்லமை என்று பொருள்படும். மனிதனுடைய மிகவும் ஆழ்ந்த தேவையைக் குறித்த பரிவே இரக்கம் என்று அறியப்படுகிறது. பாதகமான சூழ்நிலைகளிலும் மனக்கவலை, பீதி, குழப்பம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கிற விடுதலையே **சமாதானம்** எனப்படும். இவையாவும் ஒன்றிணைந்து **பிதாவாகிய தேவ னிடத்திலிருந்தும், நம்முடைய இரட்சகரா யிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவி னிடத்திலிருந்தும்** வருகின்றன. கிருபை இரக்கம் சமாதானம் ஆகியவற்றின் மூல ஆதாரமாகப் பிதாவும் குமாரனும் விளங்குகிறார்கள் என்பதை அவர்கள் இங்கு இணைக்கப்பட்டிருப்பதன் மூலமாக தேவ ஆவியானவர் குறிப்பாய்த் தெரி வித்து, அவர்களுடைய நிறைவான சமத்து வத்தை வெளிப்படுத்துகிறார்.

2. சபையில் மூப்பர்கள் (1:5-9)

1:5 பவுல் கிரேத்தா தீவை விட்டுச் சென்றபோது அங்கு **குறைவாயிருந்த** சிலவற்றை **ஒழுங்கு படுத்த** வேண்டிய நிலை இருந்தது: கள்ளப்போத கர்களின் வாய் அடைக்கப்பட வேண்டியதாயிருந் தது, சபைகளில் வழிகாட்டிகளாக ஆவிக்குரிய சிலரை அங்கிகரிக்க வேண்டிய அவசரத் தேவை யும் இருந்தது. இந்தக் காரியங்களைத் தீத்து கவனித்து ஒழுங்குபடுத்தவேண்டுமென்னும் நோக்கத்துடன் பவுல் அவரை அங்கு விட்டுச் சென்றார்.

கிரேத்தா தீவுக்கு முதல் முறையாகக் கிறிஸ் தவ விசுவாசம் எப்பொழுது வந்தது என்பது தெரிய

வில்லை. பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் இருந்த கிரேத்தா தீவினர் (அப். 2:11) நற்செய்தி யோடு தங்களுடைய நாட்டிற்குத் திரும்பினார் கள், பின்னர் உள்ளூர் சபைகள் அங்கே நிறுவப் பட்டன என்று கருதுவது மிகப் பொருத்தமான ஊகமாகும்.

பவுல் எப்பொழுது தீத்துவோடு கிரேத்தா தீவில் இருந்தார் என்பதும் தெரியவில்லை. அவர் ஒரு கைதியாக ரோமாபுரிக்குப் பயணம் மேற் கொண்டபோது கிரேத்தா தீவைத் தொட்டுச் சென் றதை நாம் அறிவோம் (அப். 27:12), ஆனால் அந்த நாட்களில் முழு மூச்சோடு அங்கிருந்த சபை களில் ஊழியம் செய்திருக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்திருக்காது. அவர் கிரேத்தா தீவில் இருந் ததாக வேறு எந்தக் குறிப்பையும் நாம் அப்போஸ் தலருடைய நடபடிகளில் காண்கிறதில்லை; ஆகவே முதலாம் ரோமாபுரிச் சிறையிருப்புக்குப் பின்னரே அவர் அங்கு சென்றிருக்க வேண்டும் என்று பொதுவாக நம்பப்படுகிறது. திருமறை யைத் துப்பறியும் செயலைச் சற்று நாடுவோமா னால், பவுல் எழுதியவற்றிலிருந்து அவர் எங்கெல் லாம் பயணம் மேற்கொண்டாரோ அவற்றின் காலவரிசையைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் காணலாம்.

முதலாவது, இத்தாலியாவிலிருந்து பவுல் ஆசியாவுக்குச் கடற்வழிப் பயணம் செய்தபோது வழியில் கிரேத்தா தீவுக்குச் சென்றார். ஆசியா என்பது இன்றைய நாட்களில் துருக்கி என்றழைக் கப்படும் நாட்டின் மேற்குப் பகுதியாகும். கிரேத்தா தீவில் தீத்துவை விட்டுவிட்டு (தீத்து 1:5), அவர் ஆசியாவின் தலைநகராகிய எபேசுப் பட்டணத் திற்குச் சென்றார். எபேசுப் பட்டணத்தில் பக்க வழி யாய்ப் பதுங்கி வந்த கோட்பாட்டுத் தவறுகளைக் களைந்து சீர்ப்படுத்த, அவர் தீமோத்தேயுவுக்கு அதிகாரமளித்தார் (1 தீமோ. 1:3,4). அவர் சிறை யில் இருந்தபோதே, தனது விடுதலைக்குப் பிறகு பிலிப்பு பட்டணத்துக்குச் செல்ல வேண்டுமென்று விரும்பினார். அதன்படி அவர் அவ்வூருக்கு ஏஜியன் கடல்வழியாகப் பயணம் செய்தார் (பிலி. 1:25, 26). கடைசியாக, மாரிகாலத்தில் தங்கி யிருக்கும்படி தென்மேற்கில் பயணம் மேற் கொண்டு கிரேக்க நாட்டில் இருந்த நிக்கொப் போலி என்னும் ஊருக்குச் சென்றார். அங்கு அவ ருடன் இருக்கும்படி தீத்து வருவார் என்று எதிர் பார்த்தார் (தீத்து 3:12).

ஹோமெர் என்பவரின் கணக்கின்படி கிரேத்தா தீவில் அவருடைய காலத்தில் தொண்ணூறு அல்லது நூறு பட்டணங்கள் இருந்தன. அவற்றில் பல இடங்களில் சபைகள் இருந்ததாகத் தோன்று கிறது. ஒவ்வொரு சபையிலும் பொறுப்பு வாய்ந்த **மூப்பர்கள்** நியமிக்கப்பட வேண்டிய தேவை இருந்தது.

மூப்பர்கள்

புதிய ஏற்பாட்டின்படி ஓரிடத்தில் கூடுகிற சபை யில் ஆவிக்குரிய தலைமைப் பொறுப்பை நடத் தக்கூடிய அப்பழுக்கற்ற குணநலமுடைய முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவ மனிதர்களே மூப்பர்கள் எனப் படுவார்கள். மூப்பர் என்னும் பெயர், அத்தகைய மனிதரின் ஆவிக்குரிய முதிர்ச்சியைக் குறிக்கும் சொல்லாகும். அச்சொல் *Presbuteros* என்னும் கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும் (அதுவே "presbyter" என்னும் ஆங்கிலச் சொல்லாக மாறிற்று). *Episkopos* என்னும் கிரேக்கச் சொல் பிஷப், கண்காணி அல்லது பாதுகாவலர் என்னும் பொருளில் மூப்பரைக் குறிக்கும்படி பயன்படுத்தப் பட்டுள்ளது. இச்சொல் தேவனுடைய மந்தையைக் கண்காணிக்கும் வேலையைக் குறிக்கிறது.

"மூப்பர்கள்" மற்றும் "கண்காணிகள்" என் னும் சொற்கள் பொதுவாக அதே மனிதர்களைக் குறிப்பதாகவே கருதப்படுகிறது. அப்போஸ்தலர் 20:17 -இல், எபேசுப் பட்டணத்திலிருந்து பவுல் மூப் பர்களை அழைப்பித்தார்(*Presbuteroi*); அவர் களை 28 -ஆவது வசனத்தில் கண்காணிகள் (*episkopoi*) என்று அவர் குறிப்பிட்டுள்ளார். 1 பேதுரு 5:1,3 ஆகிய வசனங்களில் இரண்டு சொற்களும் ஒன்றுக்கு பதிலாக மற்றொன்று பயன்படுத்தப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. 1 தீமோத்தேயு 3 -இல் கண்காணிகளுக்கான (*episkopoi*) தகுதி களும், தீத்து 1 -இல் மூப்பர்களுக்கான (*pres buteroi*) தகுதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன, ஏறத் தாழ அவை ஒன்றாயிருக்கின்றன. இவையாவும் இச்சொற்கள் ஒரே நபரைக் குறிப்பதைத் தெரியப் படுத்துகின்றன.

இக்காலத்தில், ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் உள்ள பல சபைகளைக் கண்காணிக்கும் அலு வலைச் செய்கிற மனிதரைக் குறிப்பதற்கே "பிஷப்" என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இத்தகைய பொருளைக் குறிக்கும்படி யாக இச்சொல் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப் படவேயில்லை. ஒரு சபையில் பல கண்காணிகள் (பிஷப்) இருந்ததாகவே திருமறை கூறுகிறது. மாறாக, பல சபைகளுக்கு ஒரு கண்காணி இருப்பது திருமறைக்குப் புறம்பானது.

மேலும் மூப்பர் என்பவரும் இந்த நாட்களில் போதகர் (Pastor) எனப்படுபவரும் ஒருவரே என்று நாம் குழப்பமடையக் கூடாது. தற்கால போதகர் பிரசங்கம் ஆற்றுவது, வேதத்தைக் கற்பிப்பது, கர்த்தருடைய பந்தியை நடைமுறைப்படுத்துவது போன்ற வேலைகளைச் செய்கிறார். தொடக்க காலச் சபையில் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்கிற ஒரு நபரைக் காண முடியாது என்றே பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. தொடக்க காலச் சபைகளில் பரிசுத்தவான்கள், கண்காணிகள், உதவிக்காரர்கள் ஆகியோர் மட்டுமே இடம் பெற்றிருந்தார்கள் (பிலி. 1:1). இரண்டாம் நூற்றாண்டுக் காலம் வரையில் குருமார்கள் என்னும் தனிப்பிரிவினரைக் கொண்ட அமைப்பு உண்டாகவில்லை.

புதிய ஏற்பாட்டின் பொருளில், சிறப்பான ஊழிய வரங்களில் ஒன்றாகவே போதகர் இருக்கிறார். சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகப் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு அவர்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காக, உயிர்த்தெழுந்த கிறிஸ்து இவ்வரத்தை அருளியிருக்கிறார் (எபே. 4:12,13). பல நிலைகளில் போதகர், மேய்ப்பர் ஆகியோருடைய வேலை ஒன்று போலவே காணப்படுகிறது. இருசாராரும் மந்தையை மேய்த்து உணவளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இரு வேலைகளும் சரிசமமாகக் கருதப்படவில்லை. கருத்தூன்றிப் பார்க்கையில், போதகர் பல இடங்களுக்குப் பயணம் செய்து ஊழியம் செய்கிறவராகவும், மூப்பர் ஓரிடத்தில் இயங்கும் சபையில் ஒன்றிணைந்து உழைக்கிறவராகவும் இருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

மூப்பருடைய அலுவல்கள் எவை என்பது பற்றிய விளக்கம் குறிப்பிடத்தக்க அளவில் விவரமாக அளிக்கப்பட்டிருக்கிறது:

1. அவர்கள் கர்த்தருடைய சபையை மேய்த்து, அதன்மீது அக்கறை செலுத்துகிறார்கள் (அப். 20:28; 1 தீமோ. 3:5; 1 பேதுரு 5:2).

2. உள்ளேயிருந்தும் வெளியிலிருந்தும் வரக் கூடிய தாக்குதல்களிலிருந்து சபையைக் காக்கும்படி அவர்கள் எச்சரிக்கையாயிருக்கிறார்கள் (அப். 20:29-31).

3. அவர்கள் மந்தையை இறுமாப்பாக அல்ல, தலைமையேற்று வழிநடத்தி ஆளுகை செய்கிறார்கள் (1 தெச. 5:12; 1 தீமோ. 5:17; எபி. 13:7 17; 1 பேதுரு 5:3).

4. அவர்கள் திருமறையைப் பிரசங்கித்து, ஆரோக்கியமான உபதேசங்களைக் கற்பித்து, முரண்பாடாகச் செயல்படுகிறவர்களை எதிர்த்து அவர்களுடைய தவறுகளை உணர்த்துகிறார்கள் (1 தீமோ. 5:17; தீத்து 1:9-11).

5. கோட்பாடுகள், நன்னெறி சார்ந்தவை ஆகிய வற்றில் உண்டாகும் சர்ச்சைகளைத் தணித்து, சரியானது எது என்று அவர்கள் தீர்ப்பு வழங்குகிறார்கள் (அப். 15:5,6; 16:4).

6. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் மூலம் மந்தைக்கு முன்மாதிரிகளாக இருக்கிறார்கள் (எபி. 13:7; 1 பேதுரு 5:3).

7. ஏதாவது ஒரு குற்றத்தில் அகப்பட்ட விசுவாசிகளைச் சீர்பொருந்தச் செய்யும்படி அவர்கள் நாடுகிறார்கள் (கலா. 6:1).

8. ஓரிடத்தில் கூடும் சபையிலுள்ள விசுவாசிகளின் ஆத்துமாக்களுக்காகக் கணக்கு ஒப்புவிக்கும்படி அவர்கள் விழிப்புடன் இருக்கிறார்கள் (எபி. 13:17).

9. அவர்கள் ஜெபம் பண்ணுவதில், குறிப்பாக நோய்வாய்ப்பட்டவர்களுக்காக ஜெபம் பண்ணுவதில் உறுதியோடு இருக்கிறார்கள் (யாக். 5:14,15).

10. வறுமையில் வாடும் பரிசுத்தவான்களுடைய நன்மையைக் குறித்து அவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள் (அப். 11:30).

11. தேவன் ஊழியத்திற்கென்று அழைப்பித்த வரம்பெற்ற மனிதர்களைக் கண்டுணர்ந்து, அவர்களை அவ்வூழியத்தில் ஒப்புவிப்பதில் அவர்களும் தங்களுடைய பங்கை நிறைவேற்றுகிறார்கள் (1 தீமோ. 4:14).

தொடக்க காலச் சபையில் அப்போஸ்தலரும் அவர்களுடைய பிரதிநிதிகளும் மூப்பரை நியமித்தார்கள் (அப். 14:23; தீத்து 1:5). ஆயினும், அப்போஸ்தலருக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் ஒரு மனிதரை மூப்பராக்கும் ஆற்றல் இருந்தது என்பது இதன் பொருளன்று. ஒரு கண்காணியாக ஆவதற்கு ஆற்றலுண்டாக்கும் தெய்வீகப் பங்கும், மனித விருப்பமும் தேவை. பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே ஒருவரைக் கண்காணியாக மாற்றக்கூடும் (அப். 20:28), ஆனாலும் அந்த வேலையைச் செய்வதற்கு அந்த மனிதருக்கு ஆர்வம் இருக்க வேண்டும் (1 தீமோ. 3:1). இவ்விதமாக தெய்வீகப் பங்கும் மனிதப் பங்கும் இதில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

அப்போஸ்தலருடைய காலத்தில் முதலாவதாகச் சபைகள் நிறுவப்பட்ட போதிலும் அங்கு மூப்பர்கள் இல்லை. எல்லா விசுவாசிகளும் தொடக்க நிலை விசுவாசிகளாக இருந்தார்கள். ஆனால் காலம் செல்லச் செல்ல இந்த முக்கியமான ஊழியத்தைச் செய்வதற்கென சிலரைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தினார். அத்தருணத்தில் இன்னும் புதிய ஏற்பாடு எழுதிக்கொடுக்கப்பட்ட நிலை இல்லாத காரணத்தால், மூப்பர்களுடைய தகுதிகளையும் பண்புகளையும் பற்றிய அறிவு பொதுவாக விசுவாசிகளுக்கு இல்லை. அப்போஸ்தலரும் அவர்களது உதவியாளர்களும் மட்டுமே அவற்றை அறிந்திருந்தார்கள். இந்த அறிவின் அடிப்படையில், அவர்கள் தெய்வீகத் தகுதியை யாரெல்லாம் கொண்டிருந்தார்கள் என்று கண்டு, அவர்களை வெளியரங்கமாக மூப்பர்கள் என்று பெயரிட்டு அழைத்தார்கள்.

இந்நாட்களில் நம்மிடத்தில் முழுமையான புதிய ஏற்பாடு இருக்கிறது. மூப்பர் என்பவர் யாரென்பது பற்றியும் அவர் என்ன செய்ய வேண்டுமென்பது பற்றியும் இப்பொழுது நாம் அறிந்திருக்கிறோம். தகுதியுள்ள மனிதர்கள் சுறுசுறுப்புடன் கண்காணிகளாகச் செயல்படுவதை நாம் காண்கையில், அவர்களை மூப்பர்கள் என்று ஏற்றுக் கொள்கிறோம் (1 தெச. 5:12), அவர்களுக்குக் கீழ்ப்படிகிறோம் (எபி. 13:17). அவர்களை நாம் மூப்பர்களாகத் தெரிந்தெடுக்கிறோம் என்று சொல்லப் படவில்லை, மாறாக, அந்த வேலைக்கென்று சிலரை தேவன் எழுப்பும்போது அவர்களை நாம் மூப்பர்களாக அங்கீகரிக்கிறோம் என்பதே உண்மை.

1 தீமோத்தேயு 3:1-7 மற்றும் தீத்து மடலின் இந்தப் பகுதியிலும் மூப்பர்களுடைய தகுதிகள் எவையென்று சொல்லப்பட்டிருக்கின்றன. இவைதான் தகுதிகள் என்றால் இந்நாட்களில் கண்காணிகள் என்று சொல்லுவதற்குத் தகுதியானவர் ஒருவருமில்லை என்று சில வேளைகளில் பேசப்படுவதுண்டு. தாங்கள் பேசும் சொற்களின் பொருள் எழுத்தின்படியானதல்ல என்று அவர்கள் உணர்ந்திருந்தாலும், இந்தக் கருத்து வேதத்தின் அதிகாரத்தை இழிவுபடுத்துவதாக இருக்கிறது. வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள அளவுகோல் பகுத்தறிவுக்கு ஒவ்வாததோ, அடைய முடியாததோ அன்று. திருமறையானது அதிகப்படியான கருத்தளவிலானது என்று நாம் கூறும்போது, உண்மையில் நாம் நம்முடைய ஆவிக்குரிய தாழ் நிலையை வெளிப்படுத்துகிறோம்.

1:6 மூப்பர்கள் குற்றஞ்சாட்டப்படாத மனிதர்களாயிருக்க வேண்டும், அதாவது அவர்களுடைய நேர்மை கேள்விக்குறியாக இருக்கக் கூடாது. தவறான கோட்பாடு உடையவர் என்றோ, தாறுமாறான நடத்தை உடையவர் என்றோ அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் எதுவும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கக் கூடாது. அவர்கள் பாவ மற்றவர்கள் என்பதல்ல இதன் பொருள். அவர்கள் ஏதோ சிறிய தவறுகளைச் செய்துவிட்டாலும், தேவனிடத்தில் அதை அறிக்கை செய்வதிலும், எவருக்கு எதிராகத் தவறிழைத்தார்களோ அவர்களிடம் மன்னிப்பு கேட்பதிலும் உடனடியாகச் செயல்படுவார்கள், இழப்பீடு செய்ய வேண்டுமென்றால் அவர்கள் அதனையும் உடனடியாகச் செய்வார்கள்.

இரண்டாவது தகுதி, அவர் **ஒரே மனைவியையுடைய புருஷனாக** இருக்க வேண்டும். இதனை வெவ்வேறான ஏழு முறைகளில் புரிந்து கொள்ளலாம்: (1) அவர் திருமணம் செய்தவராக இருக்க வேண்டும்; (2) அவர் விவாகரத்து செய்தவராக இருக்கக் கூடாது; (3) விவாகரத்து செய்த பிறகு மீண்டும் திருமணம் செய்தவராக இருக்கக் கூடாது; (4) முதல் மனைவி இறந்தபிறகு அவர் மீண்டும் திருமணம் செய்திருக்கக் கூடாது; (5) அவர் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்திருக்கக் கூடாது; (6) அவர் மறுமனையாட்டிகளை உடையவராக இருக்கக் கூடாது; (7) பொதுவாக, அவர் தன் மனைவிக்கு உண்மையான கணவராகவும், ஒழுக்க நெறியில் வழுவாத முன்மாதிரியாகவும் இருக்க வேண்டும்.

ஒரே மனைவியையுடைய புருஷன் என்னும் சொற்றொடர், அவர் திருமணம் செய்தவராக இருக்க வேண்டும் என்று பொருள் தருவதாகக் கொள்வோமெனில், அதே காரணத்தின் அடிப்படையில் அவர் பிள்ளைகளை உடையவராகவும் இருக்க வேண்டும். ஏனெனில் இதே வசனத்தில் அவருடைய **பிள்ளைகள்** விசுவாசிகளாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிச்சயமாக மூப்பர் ஒரு குடும்பத்தை உடையவராக இருப்பது விரும்பத்தக்கது, அவ்வாறான நிலையில் சபைகளிலுள்ள குடும்பப் பிரச்சினைகளை அதிக ஞானத்தோடு அவரால் தீர்த்து வைக்க முடியும். ஆனாலும், திருமணமாகாதவர் மூப்பராக இருக்கக் கூடாது என்று இந்த வசனம் தடை செய்கிறது என்று கூறுவது கேள்விக்குரியதாகும்.

எந்தச் சூழ்நிலையிலும் அவர் விவாகரத்து செய்திருக்கக் கூடாது என்று இந்த வசனம்பொருள்

படுவதில்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் விவாகரத்து அனுமதிக்கப்பட்டிருப்பதாக இரட்சகரே கற்பித்திருக்கிறார் (மத். 5:32; 19:9).[2]

எந்தச் சூழ்நிலையில் விவாகரத்து செய்திருந்தாலும், அவர் மீண்டும் திருமணம் செய்தவராக இருக்கக் கூடாது என்று இந்த வசனம் முழுமையான தடையை விதித்திருக்கிறது என்று சொல்லவும் முடியாது. எடுத்துக்காட்டாக, அவிசுவாசியான மனைவி விவாகரத்து செய்த நிலையில் எந்தக் குற்றமும் செய்யாத ஒரு விசுவாசியான கணவன் பின்னர் மறுமணம் செய்துகொள்கிறான். அந்நிலைக்கு அந்தக் கிறிஸ்தவன் எந்த விதத்திலும் பொறுப்பாளியல்ல. முதல் திருமணம் விவாகரத்தினால் முரிவடைந்து போயிற்று, அவிசுவாசியான மனைவியும் மீண்டும் திருமணம் செய்துகொண்டுவிட்டாள்; இந்நிலையில் அவன் மீண்டும் திருமணம் செய்துகொள்ள விடுதலை பெற்றிருக்கிறான்.

தன்னுடைய முதல் மனைவி இறந்துபோன பிறகு மறுமணம் செய்துகொண்ட ஒருவர், மூப்பராகச் செயல்படுவதற்குரிய தகுதியை இழந்துவிட்டார் என்னும் கருத்து ஒப்புக்கொள்ள முடியாதது, ஏனெனில் 1 கொரிந்தியர் 7:39 -இல் காணப்படும் விதி அதற்கு முரண்பாடாயிருக்கிறது: "மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்."

ஒரே மனைவியையுடைய புருஷன் என்னும் சொற்றொடர், மூப்பராக இருக்கிறவர் பல மனைவிகளை உடையவராகவோ மறுமனையாட்டிகளை அல்லது காமக் கிழத்திகளை உடையவராகவோ இருக்கக்கூடாது என்பது நிச்சயம். மொத்தத்தில் அவருடைய இல்லற வாழ்க்கை மந்தைக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும்.

மேலும் அவர் **துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை** உடையவராயிருக்க வேண்டும். நம்மில் பலர் அக்கறையற்றவர்களாக இருந்தபோதிலும், பிள்ளைகள் எவ்வாறான நிலையை அடைகிறார்களோ அதற்கான பொறுப்பு பெற்றோரைச் சார்ந்ததே என்று திருமறை உறுதியாகக் கூறுகிறது (நீதி 22:6). ஓரில்லம் நன்கு நடத்தப்பட்டு, இறைவனின் திருமறையில் ஊன்ற பயிற்றுவிக்கப்படுமானால், பொதுவாக **பிள்ளைகள்** பெற்றோரின் தெய்வீக முன்மாதிரியை பின்பற்றிச் செல்லுவார்கள். ஒரு தகப்பன் தனது பிள்ளைகளுடைய இரட்சிப்பைக் குறித்துத் தீர்மானிக்க முடியாதவராக இருந்த போதிலும், திருமறை கூறும் அறிவுரைகளின் வாயிலாகவும், அன்புடன் கூடிய ஒழுங்கு நடவடிக்கையினாலும், தன்னுடைய சொந்த வாழ்க்கையில் முரண்பாடு அற்றவராக வாழ்வதாலும் கர்த்தருக்காக வழியை அவரால் ஆயத்தப்படுத்த முடியும்.

பிள்ளைகள் வீண்செலவு செய்கிறவர்களாகவும், பெற்றோரின் அதிகாரத்திற்கு எதிர்த்து நின்று கலகம் செய்கிறவர்களாகவும் இருப்பார்களென்றால், திருமறை அதற்கான காரணம் அவர்களது தகப்பன் என்றே கூறுகிறது. அவர் செல்லம் கொடுத்து, தாராளமாகச் செலவிட அனுமதிப்பாராகில் அவரையே குற்றம் சாரும். அவர் தன்னுடைய சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை நடத்துவற்குரிய தகுதிபடைத்த மூப்பராக இருக்கமாட்டார். ஏனெனில் இரண்டிற்கும் அதே விதிகள் பொருந்தும் (1 தீமோ. 3:5).

விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவராயிருக்க வேண்டும் என்னும் நிபந்தனை, பெற்றோருடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாக வீட்டில் இருக்கும் பிள்ளைகளுக்கு மட்டும் பொருந்துமா அல்லது வீட்டை விட்டு வெளியே சென்று வசிக்கும் பிள்ளைகளையும் உட்கொண்டதா என்னும் கேள்வி எழுகிறது. முதலாவது கருத்தையே நாம் ஆதரிக்கிறோம். ஆனாலும், வீட்டின் வளர்ப்பு முறை, அவர்களுடைய பிற்கால குணநலத்தை முடிவு செய்வதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

1:7 கண்காணி தேவனுடைய உக்கிராணக்காரராய் இருக்கிறார். அவர் தன்னுடைய சொந்த சபையைக் கண்காணித்து வழிநடத்துகிறதில்லை. மாறாக, தேவனுடைய சபையில் தேவனுடைய காரியங்களை நடத்தும்படியாக அவர் மாற்றாளாய் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் **குற்றஞ்சாட்டப்படாதவராக** இருக்க வேண்டுமென்று இரண்டாம் முறை சொல்லப்பட்டுள்ளது. இது வலியுறுத்திக் கூறப்படவேண்டும் என்னும் நோக்கத்துடன் மீண்டும் சொல்லப்பட்டிருக்கிறது என்பது நிச்சயம். அவர் கோட்பாட்டின் அடிப்படையிலும், ஒழுக்க நெறிகளின் அடிப்படையிலும் குற்றஞ்சாட்டப்படக் கூடாதபடி நேர்மையான மனிதராக இருக்க வேண்டும் என்பதில்

யாதொரு ஐயமுமில்லை. அவர் **தன் இஷ்டப்படி செய்யாதவராக** இருக்க வேண்டும். ஒரு மனிதர் முரட்டுப் பிடிவாத குணமுடையவராக இருப்பாரென்றால், கருத்து வேறுபாடு உடையவர்கள் எவ்வளவுதான் சரியான கருத்தை எடுத்துரைத்தாலும், அவர் விட்டுக்கொடுக்காதவராகவும் பொறுமையற்றவராகவும் செயல்படுவார். அப்படிப்பட்டவர் கண்காணியாகச் செயல்பட தகுதியற்றவராயிருக்கிறார். மூப்பனானவர் நடுநிலை வகிக்கிறவராக இருக்க வேண்டும், மாறாக கொள்கையில் பிடிவாதமாகவும் இறுமாப்போடும் இருக்கக் கூடாது.

அவர் **முற்கோபமில்லாதவராக** இருக்க வேண்டும். அவர் எளிதில் மாறும் இயல்புடையவராக இருப்பாரென்றால், அவர் அதற்குக் கடிவாளமிடக்கூடிய தன்மையைக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். அவர் எளிதில் கோபமடையக் கூடியவராக இருப்பாரென்றால், அதனை ஒருபோதும் வெளிப்படுத்தக் கூடாது.

அவர் **மதுபானப்பிரியராய்** இருக்கக் கூடாது. நம்முடைய பண்பாட்டின்படி இது சொல்லத் தேவையற்ற மிகவும் சாதாரண விஷயமாக இருக்கிறது. ஆனால் திருமறை அனைத்துக் கலாச்சாரத்தினருக்கும் எழுதப்பட்டது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. சில நாடுகளில் மதுபானம் பொதுவான பானமாகக் கருதப்படுகிறது. அதனை அதிகமாகப் பருகி ஒழுங்கற்று நடக்கக்கூடிய ஆபத்து ஏற்படக்கூடும். அவ்வாறு தற்கட்டுப்பாடற்ற தன்மையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுபானத்தின் பயன்பாட்டையும், அது தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் குறித்த வேறு பாட்டினைத் திருமறை தெளிவாகக் கூறுகிறது. கானாவூர் திருமணத்தின் போது இயேசு கிறிஸ்து தண்ணீரைத் திராட்சை ரசமாக (மதுபானம்) மாற்றியபோது, பருகும் பானமாக ஓரளவு பயன்படுத்த அது அனுமதிக்கப்பட்டிருந்தது என்பது புலனாகிறது (யோவான் 2:1-11). அதனை மருந்தாகப் பயன்படுத்த அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுரை நல்கியிருக்கிறார் (1 தீமோ. 5:23; நீதி. 31:6 -ஆம் வசனத்தையும் காண்க). போதை உண்டாக்கும் மதுபானங்களைத் தவறாகப் பயன்படுத்துவது நீதிமொழிகள் 20:1; 23:29-35 ஆகிய வசனங்களில் கடிந்துரைக்கப்பட்டுள்ளது. திருமறையில் மதுபானம் முற்றிலுமாகத் தடைசெய்யப்பட்டதாகக் காணப்படவில்லையெனினும், ஒரு பலவீனமான சகோதரன் அதனிமித்தம் இடறல் அடையவோ தவறுவதற்கோ காரணமாயிருந்தால் அது தவிர்க்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது (ரோமர் 14:21). மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வாதங்களுக்கும் மேலாக இங்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவுரையின் காரணமாக நமது நாட்டில் (வட அமெரிக்காவிலும்கூட) விசுவாசிகள் யாவரும் முற்றிலுமாக மதுபானத்தை விலக்கிவைத்துள்ளார்கள்.

மூப்பரைக் குறித்த அறிவுரையில், மதுபானம் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படாமல், அவர் மதுபானப் பிரியராய் இருக்கக்கூடாது அதாவது அதிகமாகக் குடித்துச் கூச்சலிடுகிறவராக இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது.

அவர் **அடிக்கிறவராக** அதாவது, மூர்க்க குணமுடையவராக இருக்கக் கூடாது. அவர் மற்றவர்களை அடிக்கக்கூடாது. அதிகாரத் தோரணைமிக்க மத குருக்கள் தங்களுடைய வட்டாரத்திலுள்ள பிடிவாதமான அங்கத்தினர்களை எப்பொழுதாவது அடிக்கிறதைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறோம். இவ்வாறு ஆணவப் போக்குடன் அடக்கி ஆளுகிற தன்மை மூப்பரிடம் காணப்படக் கூடாது என்று முழுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

மேலும் அவர் **இழிவான ஆதாயத்தை இச்சிக்கக்** கூடாது. மனநிறைவு அடையாமல் செல்வத்தைப் பெருக்கிக்கொண்டே போக வேண்டும் என்று அவர் எண்ணக் கூடாது. மாறாக, பயன்படுத்துகிற பணத்தைக் குறித்து கவலையற்றவராகவும் இருக்கக் கூடாது. “தரங்கெட்ட மனிதனின் கடைசி இழிநிலை, அவன் உணர்வில்லாமலும் இரங்காமலும் பொன்னின் மீது கொண்டுள்ள இச்சையேயாகும்” என்று திருவாளர் சாமுவேல் ஜான்சன் கூறினாற்போல இது உண்மையாயிருக்கிறது. ஓர் உண்மையான மூப்பர் பவுலோடு சேர்ந்து, ‘ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை” என்று கூறக் கூடியவராக விளங்குவார் (அப். 20:33).

1:8 ஒரு கண்காணி செய்ய வேண்டியவை என்று பார்க்கிறபோது, அவர் **அந்நியரை உபசரிக்கிறவராக** இருக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் பிரச்சினைகளுக்குட்பட்டவர்களையும், சோர்வுற்றவர்களையும், ஒடுக்கப்பட்டவர்களையும் அவர் உபசரிக்க வேண்டும். அவருடைய இல்லம் மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்தவ ஐக்கியமாகக் காணப்பட வேண்டும். அங்கு வரு

கின்ற ஒவ்வொரு விருந்தினரும் கர்த்தர் எவ்வாறு உபசரிக்கப்படுவாரோ அது போலவே உபசரிக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக, அவர் **நல்லோர்மேல் பிரிய முள்ளவராக** இருக்க வேண்டும், அதாவது நல்ல மனிதர்கள் மற்றும் நல்ல செயல்கள். அவருடைய பேச்சு, அவருடைய செயல்கள், அவருடைய தோழமையாவும், கீழ்த்தரமானவை ஐயுறவுக் குரியவை தவறானவை ஆகிய எல்லாவற்றி லிருந்தும் அவர் விலகினவர் என்பதை வெளிப் படுத்துபவையாகத் திகழ வேண்டும்.

அவர் **தெளிந்த புத்தியுள்ளவராக** இருக்க வேண்டும். அதாவது அவர் மதிநுட்பமுள்ளவராக வும், விழிப்புள்ளவராகவும், தலைமை வகித்து நடத்துகிறவராகவும் இருக்க வேண்டும். இதே சொல் தீத்து 2:2, 5, 6, 12 -ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடங்களில் இச் சொல் கவனமுள்ள, தற்கட்டுப்பாடுள்ள, அமை வடக்கமுள்ள என்னும் பொருள்களைக் கொண் டிருக்கிறது.

அவர் பிறருடன் நடந்துகொள்ளுகிற முறை களில் **நீதிமானாக** விளங்க வேண்டும். தேவ னோடுள்ள தொடர்பில் மூப்பர் **பரிசுத்தவானாக** விளங்க வேண்டும். இதனையே பவுல் கலாத் தியர் 5:22,23 -ஆகிய வசனங்களில், "ஆவியின் கனியோ... இச்சையடக்கம்" என்று கூறுகிறார். அதாவது அந்த மனிதர் தன்னுடைய ஒவ்வொரு ஆர்வத்திலும் வேட்கையிலும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியக்கூடிய கட்டுப்பாடு உடையவராக விளங்க வேண்டும். இவற்றிற்கான வல்லமையை விசுவாசி பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ளக்கூடியவராக இருக் கிறார், எனினும் இவற்றிற்கான ஒழுங்கும் ஒத்து ழைப்பும் அவரிடத்திலிருந்தே வரவேண்டும்.

1:9 கண்காணி விசுவாசத்தில் உறுதியுடைய வராக இருக்க வேண்டும். கர்த்தராகிய இயேசு வினாலும் அப்போஸ்தலராலும் கற்பிக்கப்பட் டதும் புதிய ஏற்பாட்டில் நமக்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதுமான ஆவிக்குரிய ஆரோக் கியமான கோட்பாடுகளை அவர் இறுகப் பற்றிக் கொண்டவராயிருக்க வேண்டும். அவ்வாறு இருந் தால் மட்டுமே அவரால் பரிசுத்தவான்களுக்கு ஆரோக்கியமான உபதேசமாகிய உணவை வழங் கவும், சத்தியத்திற்கு எதிராகப் பேசுபவர்களு டைய வாயை அடக்கவும் முடியும்.

ஒரு ஸ்தல சபையில் ஆவிக்குரிய வழிகாட்டி களாக விளங்குபவர்களுடைய தகுதிகள் இவையே. அவர்களுடைய உடற்கூறுகளின் அருந்திறன், கல்வி மேனிலை, சமுதாய மேனிலை அல்லது தொழில் திறமை பற்றி ஏதொன்றும் கூறப்பட வில்லை என்பதைக் கண்டுணர வேண்டும். கூனல் விழுந்த துப்புரவுத் தொழிலாளியோ, படிப் பறிவற்ற எளிய மனிதரோ தன்னுடைய ஆவிக் குரிய மேனிலையின் காரணமாக மூப்பராகச் செயல்புரியத் தகுதிபெற்றவராக இருக்கக் கூடும். தொழில் துறையில் வெற்றியை ஒரு மனிதருக் குத் தரக்கூடிய அதே பண்புகள், அவர் சபையில் தலைமைபொறுப்பேற்று நடத்தத் தகுதியுள்ள வராக்கும் என்று சில வேளைகளில் கருதப்படு வதுண்டு, ஆயினும் அது சரியன்று.

மேலும் ஒரு குறிப்பைச் சொல்லியே ஆகவேண் டும். ஒரு ஆவிக்குரிய மூப்பர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்கும் போது, அவர் சபையில் பேச்சாளர்களை ஏற்பாடு செய்வது, பணத்தைப் பகிர்ந்தளிப்பது, கட்டடத் திலுள்ள பழுதுகளைச் சரிசெய்வதற்கான ஒப்பந் தங்களை ஏற்பாடு செய்வது, அவ்வளவுதான் என்று நினைப்பதற்கு இடமேயில்லை. ஒரு மெய் யான மூப்பர், அந்தச் சபையின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கென, தனது கட்டளைகள், அறி வுரைகள், உற்சாகமூட்டுதல், கண்டித்துணர்த் துதல், சீர்ப்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக மனமார்ந்தபடியும் உயிர்த்துடிப்போடும் ஈடுபடு கிறவராக இருப்பார்.

3. சபையில் காணப்படும் தவறுகள் [1:10-16]

1:10 தொடக்க காலச் சபையில் "ஆவியின் விடுதலை" இருந்து வந்தது, அதாவது, சபைக் கூட்டங்களில் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டபடி மனிதர்கள் பங்குகொள்ள விடுதலை பெற்றிருந் தார்கள். "எல்லாரும் கலந்துகொள்ளக்கூடிய" கூட்டத்தைப்பற்றி 1 கொரிந்தியர் 14:26 -இல் பவுல் விளக்கிக் கூறுகிறார்: "நீங்கள் கூடிவந்திருக்கும் போது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந் நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசி யத்தை வெளிப்படுத்துகிறான், சகோதரரே இது என்ன? சகலமும் பக்தி விருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது." சபையிலுள்ள அங்கத்தினர் பலர் மூலமாக தேவ ஆவியானவர் பேசுவதற்கு விடுதலை கொடுக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை யில், கள்ளப் போதகங்களையும், புத்திபுகட்டாத செய்திகளையும், முடிவில்லாத கட்டுக்கதை களையும் ஆவியானவரின் வழிநடத்துதல் சற்றே னும் இல்லாத வகையில் பேசுவதற்கு மனிதர்கள்

முண்டியடித்துக்கொண்டு வருவார்கள், இதுவே மனிதனின் இயல்பு என்பதை நீங்கள் காண் பீர்கள்.

கிரேத்தா தீவில் கூடிவந்த சபைகளில் இது போலவே நிகழ்ச்சிகள் நடந்தன. இவ்வாறான தவறுகள் நிகழக்கூடாது, மற்றும் ஆவியான வரின் சுதந்தரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ப தற்காக பலமுள்ள ஆவிக்குரிய மூப்பர்கள் நிய மிக்கப்பட வேண்டியது அவசியம், அதற்காகப் பெரிதான கவனம் தேவை என்பதையும் அவர் உணர்ந்தார். ஆகவே அவர் இங்கே, சபையில் மூப்பர்கள் நியமிக்கப்படுவதற்கான செயலூக்கத் தைத் தருகின்ற நிபந்தனைகளை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக்கொள்கிறார்.

அப்போஸ்தலரது அதிகாரத்தை எதிர்த்து நிற்கவும், அவர்களுடைய போதகங்களை மறுத் துரைக்கவும் கூடிய **அடங்காத** மனிதர்கள் பலர் எழுந்தார்கள். அவர்கள் **வீண்பேச்சுக்காரரும் மனதை மயக்குகிறவர்களுமாக** இருந்தார்கள். அவர்களுடைய பேச்சு எந்தப் பயனையும் உண் டாக்கவில்லை. மாறாக, அவர்களது பேச்சு மக்க ளிடத்திலிருந்து சத்தியத்தைக் கொள்ளை யடித்து, அவர்களைத் தவறான வழிக்குள் கொண்டு சென்றது.

இவ்வாறு வழக்கமாய்த் தொல்லை தந்து வந்த மனிதர்கள் முக்கியமாக **விருத்தசேதனத்தை** ஆதரித்து வந்தவர்கள். அதாவது, கிறிஸ்தவ போதகர்கள் என்று தங்களைக் குறித்துச் சொல் லிக்கொண்ட இந்த மனிதர்கள், கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் செய்து, நியாயப்பிரமாணச் சடங்குகளை நிறைவேற்ற வேண்டுமென்று வலி யுறுத்தினார்கள். கிறிஸ்துவின் செயல் எல்லா விதத்திலும் போதுமானதாக இருக்கிறது என் பதை நடைமுறையில் எதிர்ப்பதாக இது இருந்தது.

1:11 இப்படிப்பட்ட மனிதர்களின் வாய் மூடப்பட வேண்டும். சபை மக்களாட்சி அல்ல, அங்கு பேச் சுச் சுதந்தரத்திற்கு ஓர் எல்லையுண்டு. அவர்கள் **முழுக்குடும்பங்களையும்** கவிழ்த்துப் போடுகிற வர்களாக இருந்தார்கள். பெருங்கேடு உண்டாக் கக்கூடிய கள்ள போதகங்களை வெளிப்படை யாகச் சொல்லாமல், வீடுகளுக்குச் சென்று மறை முகமாக அவற்றை அவர்கள் பரப்பினார்கள் என் பதுதான் இதன் பொருளா? கள்ளப் போதகர்கள் விரும்பிப் பின்பற்றுகிற முறைக்கு இது ஒப்பா யிருக்கிறது (2 தீமோ. 3:5,6). அவர்களுடைய நோக்கங்களும் ஐயத்திற்குரியவையாக இருந் தன. அவர்கள் பணத்தை நாடி அலைந்து திரிந் தார்கள், ஊழியத்தை ஆதாயத் தொழிலாகச் செய்தார்கள். ஒரு மனிதனுடைய வாழ்க்கை சீர ழிந்து கறைப்பட்டிருந்தாலும் அவன் மத சடங்கு களின் முறைமைகளைப் பின்பற்றுவானானால் தேவதயவைப் பெறமுடியும் என்று அவர்களு டைய செய்தி கூறியது. இவ்வாறாக அந்தச் செய்தி யில் நியாயப்பிரமாணத்தின் கருத்துகள் வண் ணக் கோடுகளாகப் பின்னிக் கிடந்தன. அவர்கள் கற்பிக்கக் கூடாதவற்றைக் கற்பித்து அதன் மூல மாக இழிவான ஆதாயத்தைப் பெற்றார்கள்.

1:12 எப்படிப்பட்ட மனிதர்களோடு தீத்து ஈடுபடு கிறார் என்பதைப் பற்றி இங்கு பவுல் விவரிக் கிறார். வெளிப்படையாகப் பேசப்பட்டதும் வெறுக் கத்தக்கதுமான இந்த வருணனை குறிப்பாகக் கள்ளப்போதகர்களைப் பற்றியதானாலும், **கிரேத்தா தீவாரைப்** பற்றிப் பொதுவானதாக விளங்குகிறது. கி. மு. 600 -இல் வாழ்ந்த அந்நாட் டுக் கவிஞன் எபிமெனிடெஸ் தனது சொந்த மக்களைப் பற்றி கூறிய சொற்களை அவர் எடுத் தாளுகிறார். அவர்கள் ஓயாப்பொய்யர், துஷ்ட மிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அப்பாடகன் கூறினான். ஒவ்வொரு நாட்டு மனித ரும் சில குறிப்பிட்ட குணநலன்களைக் கொண்டி ருக்கிறார்கள், ஆனால் கிரேத்தா தீவாரின் இழி நிலையை எவராலும் மிஞ்ச முடியாது என்றே தோன்றுகிறது. அவர்கள் பொய் சொல்லுவதை வழக்கமாகவும், கட்டாயமாய்ச் செய்பவர்களாக வும் இருந்தார்கள். அவர்கள் காட்டு விலங்கு களைப் போல இருந்து கேடானதும், நாகரிக மற்றதுமான வெறிச் செயல்களைச் செய்து தங்க ளுடைய வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டார் கள். வேலை செய்ய மனதற்று, பெருந்தீனியின்னு வதில் விருப்பங்கொண்டு வாழ்ந்த அம்மக்கள் சமையல் அறை வாழ்க்கையையே வாழ்ந்தார் கள், சபை வாழ்க்கை அவர்களிடத்தில் இல்லை!

1:13,14 அம்மக்களின் நடத்தையைப் பற்றிய வருணனையின் பிழையின்மையை அப்போஸ் தலன் உறுதிசெய்கிறார். வரும் காலத்தில் எந்தப் பயனும் விளையாது என்று தோற்றம்கொண்ட மூலப் பொருட்களின் மத்தியில் தீத்து உழைக்க வேண்டும் - இந்நிலை எந்த ஊழியரையும் உற் சாகமிழக்கச் செய்வதற்குப் போதுமானதாகும்! ஆனால் பவுல் அந்த மனிதர்களைக் கைகழுவி விடவில்லை, அல்லது தீத்து அவர்களைப் புறக்க ணிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறவு மில்லை. மனிதர்களிலேயே மிகவும் மோசமான வர்களுக்கும் நற்செய்தியின் மூலமாக நம்

பிக்கை உண்டு. ஆகவே, அவர்கள் கிறிஸ்தவ **விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள்ள** வேண்டுமென்று பவுல் தனது உடன் ஊழியருக்கு ஆலோசனை நல்குகிறார். ஒருநாள் இந்த மனிதர்கள் உள்ளூர் சபைகளில் முன்மாதிரியான விசுவாசிகளாக மட்டுமின்றி, தேவபக்தியுள்ள மூப்பர்களாகவும் மாறுவார்கள். உலகத்தில் மிகவும் கடினமான இடங்களில் உழைக்கும் கிறிஸ்தவ ஊழியர்களுக்கு இந்தப் பகுதி ஊக்கமளிப்பதில் நிறைவாய் விளங்குகிறது. (எந்த ஊழியத்தலம் கடினமாய் இருப்பதில்லை?) கீழ்த்தரமாகவும், உட்புகவியலாதபடி இறுக்கமாகவும், இடங்கொடுக்காதவர்களாகவும் இருக்கும் நிலையிலிருந்து மக்கள் கிருபையுள்ளவர்களாகவும், தூய்மையானவர்களாகவும், கனிதரும் பரிசுத்தவான்களாகவும் மாறக்கூடிய தரிசனம் எப்பொழுதும் உள்ளது.

கள்ளப்போதகர்களைக் கடுமையாகக் கடிந்து கொள்ளும் போது, விசுவாசிகள் **யூதருடைய கட்டுக் கதைகளுக்கும் சத்தியத்தை விட்டு விலகுகிற மனிதருடைய கற்பனைகளுக்கும் செவி கொடுக்காதிருக்கும்படி** தீத்து எச்சரிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார். சமயச் சார்புடைய கற்பனைகளிலும், தூய்மையான உணவு தூய்மையற்ற உணவு, நாட்களை அனுசரித்தல், சடங்குகளின் அடிப்படையிலான தீட்டுகள் ஆகியவை பற்றிய விதிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு யூதமார்க்க ஆதரவாளர்கள் வாழ்ந்து வந்தார்கள். இதைக் குறித்தே பவுல் கொலோசெயர் 2:23 - இல் இவ்வாறு எழுதினார்: "இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும் மாயமான தாழ்மையையும், சரீர ஒழுக்கத்தையும்பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும் இவை மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது."

1:15 அப்போஸ்தலன் தொடர்ந்து கூறியிருக்கும் சொற்களுக்குத் தவறான பொருள் கூறப்படுகின்ற காரணத்தால், இதற்கு விரிவான விளக்கம் தரப்பட வேண்டியது அவசியம். அவர் எழுதுகிறார்: **"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும், அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்."**

சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும் என்னும் சொற்களை இந்தப் பகுதியின் பின்னணியிலிருந்து விலக்கி, வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் இது நிறைவான உண்மையாக விளங்குகிறது என்னும் அறிவிப்பாக எடுத்துக்கொள்வோமெனில் நாம் பிரச்சினைக்குள்ளாவது திண்ணம். எவர்களுடைய மனது தூய்மையாயிருக்கிறதோ அவர்களுக்கும் கூட எல்லாம் தூய்மையாயிருப்பதில்லை. ஆனாலும் கீழ்த்தரமான பத்திரிக்கைகள், உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிற திரைப்படங்கள், ஒழுக்கக் கேடான செயல்கள் ஆகியவை சரியானவை என்று கூற மக்கள் இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். "தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக" வேத வசனங்களின் உண்மையைத் திரித்துக் கூறுகிறார்கள் என்று பேதுரு இதனையே தனது மடலில் குறிப்பிடுகிறார் (2 பேதுரு 3:16).

தம்மில்தாமே பாவமுள்ளதாகவும், திருமறையில் கண்டித்துரைக்கப்பட்டதாகவும் இருக்கிற எந்தவொரு செயலையும் இது சிறிதளவும் குறிப்பிடுவதில்லை என்பதை நன்கு உணரவேண்டும். நீதிமொழியாக உரைக்கப்பட்டுள்ள இந்தச் சொற்றொடரை இதனுடைய பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டும். இயல்பாக நல்லது அல்லது கெட்டது என்று பகுத்தறியக் கூடியவற்றினைக் குறித்த ஒழுக்கநெறியைப் பவுல் இங்கு வரையறுத்துக் கூறவில்லை. நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக வாழும் ஒரு யூதன் தீட்டு என்று கருதுகிற சடங்காச்சார தீட்டுகள், கிருபைக்குக் கீழாக வாழும் கிறிஸ்தவனுக்கு முறையாகத் தோன்றும். இது போன்று சரியா தவறா என்று முறைப்படுத்திக் கூற முடியாதவற்றைக் குறித்தே அப்போஸ்தலன் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிறார். எளிதில் புரிந்துகொள்ளும்படி இதற்கோர் எடுத்துக்காட்டைக் கூறவிழைவோமெனில், பன்றி இறைச்சி உண்ணும் செயலைக் கூறலாம். இறைமக்கள் உண்ணலாகாது என இது பழைய ஏற்பாட்டில் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால், ஒரு மனிதனுக்குள் உட்புகும் ஏதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தாது என்று கர்த்தராகிய இயேசு கூறுமிடத்து எல்லா உணவுப்பொருட்களும் தூய்மையானவை என்று அவர் கூறினார் (மாற்கு 7:19). "போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; என்னத்தினாலெனில், புசிப்பதனால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதனால் நமக்கு ஒரு குறைவுமில்லை" என்று பவுல் இதனை எதிரொலித்தார் (1 கொரி. 8:8). **"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கிறது"** என்று அவர் கூறுகிறபோது, மறுபடியும் பிறந்த விசுவாசிகளுக்கு அனைத்தும்

தூய்மையாயிருக்கிறது என்றும், **அசுத்தமுள்ள வர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது** என்றும் கூறுகிறார். மனிதன் உண்கிறதல்ல அவனுடைய இருதயத்தி லிருந்து புறப்படுகிறதே அவனைத் தீட்டுப்படுத் தும் (மாற்கு 7:20-23). ஒரு மனிதனுடைய உள் ளான வாழ்வு தூய்மையற்று இருக்குமெனில், அவன் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் விசு வாசம் வைத்திராவிடில் அவனுக்கு எதுவும் தூய் மையாயிராது. உணவைப் பற்றிய விதியை அவன் கைக்கொள்வதால் அவனுக்கு எவ்விதப் பயனுமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அவன் முதலாவது மனந்திரும்ப வேண்டும். சடங்குகள், பிரமாணங்களைக் கைக்கொள்ளுதல் ஆகியவற் றினால் இரட்சிப்பை அடைய முடியும் என்று முயற்சி செய்வதற்குப் பதிலாக மனந்திரும்புதல் மூலமாக இலவசமான இரட்சிப்பை ஏற்க வேண் டும். தீட்டுப்பட்ட மனிதர்களின் மனதும் மனச் சாட்சியும் சீர்கெட்டுள்ளன. அவர்களுடைய நினைவுகளும் ஒழுக்கநெறியின் ஆற்றல்களும் தீட்டுப்பட்டுள்ளன. வெளியரங்கமான சடங்காச் சார தீட்டுகள் அல்ல, உள்ளான சீர்கேடும் இழி நிலையுமே கேள்விக்குரியவை.

1:16 கள்ளப்போதகர்களைக் குறித்து, அதா வது யூதமார்க்கச் சார்புடையோரைக் குறித்துப் பேசும்போதே பவுல், தேவனை அறிந்திருப்பதாக அவர்கள் அறிக்கை பண்ணுகிறார்கள், ஆனால் தங்களுடைய கிரியைகளினாலோ அவரை மறுத லிக்கிறார்கள் என்று கூறுகிறார் என்பதில் ஐய மில்லை. கிறிஸ்தவ விசுவாசிகளாகத் தங்க ளைக் குறித்துப் பெருமையாகப் பேசினாலும், அவர்களது செயல்கள் அதற்கு ஏற்றவையாக இல்லை. அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர் களும், கீழ்ப்படியாதவர்களும் எந்த நற்கிரியை யுஞ் செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள் என்று அப்போஸ்தலன் அவர்களைப் பழித்துரைத் திருப்பது, அவரது கூரிய கடிந்துரையின் விரிவாக்க மாகும். அவர்களது தனிப்பட்ட நடத்தை அருவருக் கத்தக்கது. தேவனுடைய பார்வையில், அவர்கள் கீழ்ப்படியாதவர்கள் என்று பதிவுசெய்யப்பட்டுள் ளது. தேவனுக்கும் மனிதனுக்கும் செய்த நற் செயல்களின் அடிப்படையில் அவர்கள் மதிக்கத் தக்கவரல்லர். இவ்வாறு கடுமையான சொற் களில் பிறரைப் பற்றி பவுல் பேசுவது கிறிஸ்தவ அன்பின் எல்லைக்குள் சரியானதாக இருக்குமா? "ஆம்" என்பதே அழுத்தந்திருத்தமான விடை! அன்பானது ஒருபோதும் பாவத்தை மழுப்பிப்பேசி மறைக்காது. இவர்கள் நற்செய்தியைத் திரித்துப் பேசுகிறார்கள், கர்த்தராகிய இயேசுவின் ஆளு மையையும் செயலையும் அவமதிக்கிறார்கள், மனித ஆத்துமாக்களை ஏமாற்றுகிறார்கள். அத்த கைய ஏமாற்றுக்காரருக்குப் பணிவது பாவம்.

4. சபையில் கொடுக்க வேண்டிய பயிற்சி (2:1-15)

2:1 கள்ளப்போதகர்களின் வாழ்க்கை வேதா கமாகத் திகழவில்லை. மாறாக இழுக்கு உண் டாக்கும் பழிதூற்றுதலாகவே இருந்தது. அவர் கள் தங்களுடைய நடத்தையின் மூலமாக விசு வாசத்தின் மிகப்பெரிய சத்தியங்களை மறுத்து ரைத்தார்கள். புனிதத் தன்மையோடு வாழ்வதாக வெற்றறிக்கை செய்துவிட்டுப் பொய்யாக வாழ்ந்து கிறிஸ்தவச் சாட்சிக்கு அவர்கள் உண்டாக்கிய அவப்பெயரை யாரால் அளக்க முடியும்? **ஆரோக் கியமான உபதேசத்திற்கு ஏற்றவற்றைக்** கற் பிக்க வேண்டும் என்னும் பொறுப்பு தீத்துவுக்கு ஒப்படைக்கப்பட்டது (கர்த்தருடைய மெய்யான ஊழியக்காரர் யாவருக்கும் அப்பொறுப்பு அளிக் கப்பட்டுள்ளது). இறைமக்களுடைய உதடுகளுக் கும் அவர்களது வாழ்க்கைக்கும் இடையேயுள்ள பயங்கரமான பிளவினை அவர் மூட வேண்டும். உண்மையில் இதுவே இம்மடலின் முக்கியமான கருத்தாகும் - ஆரோக்கியமான உபதேசத்தை நற்செயல்களின் மூலமாக நடைமுறை வாழ்க் கையில் வாழ்ந்துகாட்டுதல். இங்கு நற்செயல்கள் என்று சொல்லப்பட்டுள்ளவை எவ்வாறு இருக்க வேண்டுமென்று நடைமுறை எடுத்துக்காட்டுகள் கீழ்வரும் வசனங்களில் உரைக்கப்பட்டுள்ளன.

2:2 முதலாவதாக **முதிர்வயதுள்ள** ஆண் களைப் பற்றி நாம் காண்கிறோம் - இங்கு சபை யின் மூப்பர்கள் குறிப்பிடப்படவில்லை, மாறாக வயதில் முதிர்ந்தவர்கள் என்னும் முதிர்ச்சி பெற்ற வர்கள் பற்றியே சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் **ஜாக்கிரதையுள்ளவர்களாக** இருக்க வேண்டும். மதுபானம் அருந்துவது கூடாது என்பதைப் பற்றி இங்கு முதன்மையாகச் சொல்லப்பட்டிருந்தாலும், அனைத்து நடத்தைகளிலும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்பதே இங்கு சொல்லப்பட்டி ருக்கிற உண்மையாகும். அவர்கள் நல்லொழுக்க முள்ளவர்களாகவும் மரியாதையோடு நடந்து கொள்கிறவர்களாகவும் இருக்க வேண்டும், ஆம், ஆனால் தயவுசெய்து மகிழ்ச்சியற்றவர்களைப் போல இருக்கக்கூடாது! அவரவருக்கு அவரவரு டைய பிரச்சினைகள் போதுமான அளவு உள்ளன. முதிர்வயது ஆண்கள் **தெளிந்த புத்தியுள்ள வராக** இருக்க வேண்டும், அதாவது, அவர்கள்

சமநிலைப்படுத்துகிறவர்களாகவும், கூர்மதியுள்ளவர்களாகவும் நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் **விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாக** இருக்க வேண்டும். வயது முதிர்ச்சி சிலரை இரக்கமற்றவர்களாக, கசப்பு நிறைந்தவர்களாக, எடுத்ததற்கெல்லாம் குறைகூறுகிறவர்களாக மாற்றிவிடுகிறது. விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்கள் நன்றியுணர்வு உள்ளவர்களாகவும், சிறந்தவை நிகழும் என்று எதிர்பார்க்கிறவர்களாகவும், தோழமை பாராட்டுகிறவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் **அன்பில் ஆரோக்கியமுள்ளவர்களாக** இருக்க வேண்டும். அன்பு தன்னலமற்றது. அது பிறரைக் குறித்து நினைவு கொள்வதிலும், கொடுப்பதிலும் தன்னை வெளிப்படுத்துகிறது. அவர்கள் **பொறுமையில்** தீவிரமானவர்களாக இருக்க வேண்டும். முதிர் வயது பலவீனங்களையும், இயலாத நிலையையும் உண்டுபண்ணி எதையும் எளிதில் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்திவிடும். பொறுமையில் ஆரோக்கியமுள்ளவர்கள் சோதனைகளின் மத்தியிலும் எல்லாவற்றையும் கிருபையோடும் துணிவோடும் எதிர்கொள்ளுவார்கள்.

2:3 முதிர்வயதுள்ள பெண்களும் பரிசுத்தத்திற்கு ஏற்றவிதமாக நடக்கிறவர்களாக இருக்க வேண்டும். அற்பமான விஷயங்களையே சிந்தித்துக்கொண்டிருக்கும் மதிமயங்கிய பெண்களிடமிருந்து எங்களை விடுவிப்பீராக! அவர்கள் **அவதூறு பண்ணாதவர்களாக** இருக்க வேண்டும். இங்கு பவுல் பயன்படுத்துகிற கிரேக்க மொழிச் சொல் பிசாசைக் குறிக்கும் சொல்லாகும் (dia bolos). இது மிகப்பொருத்தமான சொல்லாகும், ஏனெனில் பிறரைப் பற்றிய கெடுநோக்குடன் புறம்பேசுதல் பிசாசையே ஆதாரமாகவும் குணப்பண்பாகவும் கொண்டுள்ளது. அவர்கள் மது அருந்துவதில் அடிமைப்பட்டவர்களாக இருக்கக் கூடாது. உண்மையில் அவர்கள் எந்தவொரு உணவிற்கும், பானத்திற்கும், மருந்திற்கும் அடிமைப்பட்டுவிடக் கூடாது. வெளியரங்கமாகச் சபையில் போதிக்கும் ஊழியம் அவர்களுக்கு அளிக்கப்படவில்லையெனினும், முதிர்வயதான பெண்கள் ஏனைய பெண்டிருக்கு வீடுகளில் போதிக்கும் ஊழியத்தைப் பெற்றிருக்கிறார்கள். அத்தகைய ஊழியத்தின் செயல்திறத்தை யாரால் அளக்கமுடியும்!

2:4 முதிர்வயதுள்ள ஒரு பெண்மணி இள வயதுள்ள பெண்ணிற்குப் பிரத்தியேகமாய்ப் **புத்திசொல்ல** வேண்டும். தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்குகிற பெண்களுக்கு பல ஆண்டுகளாகத் திருமறையைக் கற்றறிந்து நடைமுறை அனுபவத்தைப் பெற்றிருக்கும் முதிர் வயதுப் பெண்கள் ஆலோசனை கூற வேண்டும். இல்லையெனில் ஒவ்வொரு புதிய தலைமுறையினரும், முன்னோர் செய்த தவறுகளை மீண்டும் செய்து, கடினமான வழியில் கற்றிட நேரிடும். இவ்வாறு ஆலோசனைகளை வழங்க வேண்டிய பொறுப்பு முதிர்வயதுப் பெண்களைச் சார்ந்ததாயிருந்தாலும், எந்தவொரு ஞானமுள்ள இளம் பெண்ணும் தேவபக்தி மிகுந்த முதிர்வயதுப் பெண்மணியிடம் நட்புபாராட்டப் பழகி, சீர்திருந்துவதற்கான அறிவுரையை அவர்களிடம் கேட்கக் கற்றுக்கொள்வாள்.

இளம்பெண் தன் கணவனிடத்தில் அன்பு செலுத்த வேண்டுமென்று கற்பிக்கப்பட வேண்டும். அவன் வேலைக்குச் செல்லும்போது அவனை முத்தமிட்டு வழியனுப்புவது என்பது மட்டுமல்ல இது. அவனுக்கு உண்மையாக மரியாதை செலுத்துவதற்குக் கணக்கில் அடங்காத வழிமுறைகள் உள்ளன. அவனே வீட்டிற்குத் தலைவன் என்பதை ஒப்புக்கொண்ட நிலையில் அவள் செயல்படுவதே உண்மையாக மரியாதை செலுத்துவதாகும். அவனின்றி எந்தவொரு பெரிய தீர்மானத்தையும் எடுக்காதிருப்பது, வீட்டை ஒழுங்காக வைத்துக்கொள்வது, தன்னுடைய தோற்றத்திற்கு அக்கறை செலுத்துவது, தங்களுடைய வரவுக்குத் தக்கதாக வாழ்க்கையை நடத்துவது, உடனுக்குடன் தவறுக்காக வருத்தம் தெரிவிப்பது, கிருபையோடு மன்னிப்பது, கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதற்கு எப்பொழுதும் ஆயத்தமாய் இருப்பது, பிறருக்கு முன்பாகத் தனது கணவனைப் பற்றி குறை கூறாமலும் மாற்றுக் கருத்தைத் தெரிவிக்காமலும் இருப்பது, காரியங்கள் தவறுகின்றபோது ஆதரவு தருவது போன்றவற்றில் அது வெளிப்பட வேண்டும்.

அவர்கள் தங்களுடைய **பிள்ளைகளிடத்தில்** அன்புகூரவேண்டுமென்றும் கற்பிக்கப்பட வேண்டும் - அவர்களோடு சேர்ந்து படிப்பது, ஜெபிப்பது, அவர்கள் பள்ளியிலிருந்தோ விளையாடிவிட்டோ வரும்போது வீட்டில் இருப்பது, கண்டிப்பாகவும் நியாயமாகவும் தண்டிப்பது, உலகத்திற்கும் நரகத்திற்கும் ஊழியம் செய்பவர்களாக அல்ல, கர்த்தருடைய ஊழியத்திற்காக அவர்களை உருவாக்குவது.

2:5 அவர்கள் **தெளிந்த புத்தியுள்ளவர்களாக** இருக்கும்படி கற்பிக்கப்படவேண்டும். கிறிஸ்தவர்களாகிய தங்களுக்கு எது பொருத்தமாயிருக்கும் என்னும் தெளிவான அறிவு உடையவர்களாக நடந்துகொள்ள வேண்டும், அளவு கடந்த நிலையைத் தவிர்க்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். அவர்கள் **கற்புள்ளவர்களாக** இருக்க வேண்டும். சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் தூய்மையற்ற நிலையைத் தவிர்த்து, தன் கணவனுக்கு உண்மையுள்ளவளாக நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் நல்ல இல்லத்தை உருவாக்கும் பெண்களாக விளங்க வேண்டும். இது தெய்வீக ஊழியம், இதனை தேவனுடைய புகழ்ச்சிக்காகச் செய்ய முடியும் என்பதை அவர்கள் உணர வேண்டும். ஒரு பெரிய தொழிற்சாலையிலோ வணிகக்குழுமத்திலோ பணியாற்றிக் கொண்டு, வீட்டையும் குடும்பத்தையும் புறக்கணிப்பதைக் காட்டிலும், சொந்த இல்லத்தில் நல்லதொரு மனைவியாக, தாயாகச் செயல்படுவது கர்த்தருக்காக உழைப்பதாகவும் புகழ்ச்சிக்குரிய ஊழியமாகவும் கருதப்படும் என்னும் எண்ணத்தை இளம் பெண்களிடம் முதிர்வயதுப் பெண்கள் வளர்க்க வேண்டும். எப்படி **நல்லவர்களாக** வாழ்வது, விருந்தோம்பல் புரிவது, கிருபையோடும் தாராள மனப்பான்மையோடு நடந்து கொள்வது, தன்னல சிந்தையோடும் தனக்கே எல்லாம் உரியது என்ற எண்ணத்தோடும் செயல்படாதிருப்பது; இவற்றையே இது குறிக்கிறது. அவர்கள் **தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களாக** இருக்க வேண்டும்; அவர்களே வீட்டின் தலைவர்கள் என்பதைப் பெண்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு பெண் தன் கணவனைக் காட்டிலும் அதிகத் திறமை வாய்ந்தவளாகவும், தகுதிபெற்றவளாகவும் இருப்பாளென்றால் வீட்டில் ஆதிக்கம் செலுத்தாமல் தன் கணவன் வீட்டுத் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துவதற்கும், உள்ளூர் சபையில் உழைப்பதற்கும் அவனை உற்சாகப்படுத்தி உதவிசெய்ய வேண்டும். ஓயாமல் குறைகூறும்படி சோதனை ஏற்படுமென்றால், அந்த நினைவை எதிர்த்து நின்று அதற்குப் பதிலாக அவனை அவள் பாராட்ட வேண்டும். தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்குக் காக்கப்படுவதற்காக அல்லது அது அவமதிக்கப்படாதிருக்க அவள் இவற்றைச் செய்ய வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் முன்னுக்குப்பின் முரணான வாழ்க்கை வாழ்வதினாலே கர்த்தருடைய நோக்கத்திற்கு அவதூறு உண்டாகிறது என்பதைப் பவுல் மனதில் கொண்டிருந்தார் என்பதை இம்மடல் நெடுகிலும் காணவியலும்.

2:6 இளம் பெண்களுக்குப் புத்திசொல்லும்படி பவுல் தீத்துவிடம் கூறவில்லை. எச்சரிப்பின் காரணமாக இந்த ஊழியமானது முதிர்வயதுப் பெண்களிடம் விடப்பட்டது. ஆனால் இளம் ஆண்களுக்கு **புத்திசொல்லும்படி** தீத்து அறிவுறுத்தப்படுகிறார். அங்கு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ள புத்திமதி யாதெனில், அவர்கள் **தெளிந்த புத்தியுள்ளவர்களாக** இருக்க வேண்டும் என்பதே ஆகும். அவர்கள் தற்கட்டுப்பாடு உடையவர்களாக இருக்க வேண்டும். ஆர்வம் நிரம்பி வழிகிற நிலை, இடைநிறுத்தம் இல்லாத ஆற்றல், கொழுந்துவிட்டு எரிகிற ஊக்கம் இவையாவும் இளமையின் இயல்புகள். வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அவர்கள் தற்கட்டுப்பாடு உடையவராயும் ஏற்றத்தாழ்வின்றி செயல்படுபவராயும் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

2:7,8 தீத்துவுக்கும் பவுல் சிறப்பான அறிவுரைகளை நல்கியிருக்கிறார். சபைகளில் வெளியரங்கமான ஊழியத்தைச் செய்யும்படியாகக் கட்டளை பெற்றிருக்கும் ஒருவர் என்னும் நிலையில் தீத்து, எல்லாவற்றிலும் தன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பிக்கத் தொடர்ந்து செயல்பட வேண்டும். அவருடைய **உபதேசத்திற்கும்** நடத்தைக்கும் இடையே ஒரு நெருக்கமான ஒற்றுமை காணப்பட வேண்டும். அவருடைய போதகம் **விகற்பம் அற்றதாகவும் நல்லொழுக்கமானதாகவும்** மாசற்றதாகவும் விளங்க வேண்டும். பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்கு ஏற்புடைய போதகம் என்பதே **விகற்பம் அற்ற** என்னும் சொற்களின் பொருளாகும். **நல்லொழுக்கம்** என்ற சொல்லின் மூலம் அவருடைய போதகம் மதிப்பு வாய்ந்ததாகவும் கவனமுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்று பவுல் வலியுறுத்துகிறார். பல புதிய மொழிபெயர்ப்புகளில்[3] மாசற்ற என்னும் பண்புச் சொல் நீக்கப்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது. ஓர் உண்மையான ஆசிரியரைச் சத்தியத்தின் வழியினின்று விலக்கி, களங்கப்படுத்த முடியாது என்பதை இச்சொல் குறிக்கிறது. (தமிழிலும் இச்சொல் இடம்பெறவில்லை).

குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனம் என்பது, இது பொருத்தமற்றது, ஆகவே இதனை ஏற்க முடியாது என்ற சொல்லக்கூடாத படி அவருடைய பேச்சு விளங்க வேண்டும் என்

னும் பொருளைத் தருகிறது. அவருடைய பேச்சில் முக்கியமில்லாத அற்ப விஷயங்கள், நூதன போதகங்கள், போலி விளக்கங்கள், பண்பற்றவை போன்ற எதுவும் இடம்பெறக் கூடாது. அத்தகைய உண்மையுள்ள ஊழியத்தை எதிர்த்து நிற்க முடியாது. ஆரோக்கியமான போதகத்தை எதிர்ப்பவர்கள் வெட்கத்திற்குள்ளாவார்கள். ஏனென்றால் விசுவாசியின் சர்வாயுத வர்க்கத்தில் அவர்கள் ஏதொரு பிளவையும் காணமுடியாது. தூய வாழ்க்கையைக் காட்டிலும் ஆற்றல் மிக்க வாதம் வேறெதுவுமில்லை!

2:9,10 அடிமைகளுக்கான தனிப்பட்ட அறிவுரைகள் இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ளன. சில மரபுகள் திருமறையினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனினும், அவை வழக்கில் உள்ளன என்பதை அது ஒப்புக்கொண்டுள்ளது என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, முற்பிதாக்களில் பலர் பல பெண்களைத் திருமணம் செய்து வாழ்ந்ததைப் பழைய ஏற்பாடு குறித்து வைத்திருக்கிறது; ஆயினும் தம் மக்கள் பலரைத் திருமணம் செய்துகொள்ளும் முறை ஒருபோதும் தேவனுடைய சித்தமாயிருக்கவில்லை. அடிமை வழக்கத்தின் அநீதியையும் கொடுமைகளையும் தேவன் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. வரப்போகிற நாளில் அதற்கான குற்றத்தை முதலாளிகளின்மேல் அவர் சுமத்துவார். அதே வேளையில் புதிய ஏற்பாடு வன்முறைப் புரட்சியினால் அடிமை வழக்கத்தைத் தூக்கி எறிய வேண்டுமென்று பரிந்துரைக்கவில்லை. மாறாக, அது நற்செய்தியின் வல்லமையால் அடிமை வழக்கத்தைக் கண்டித்துத் தவறான பயன்பாட்டை நீக்குகிறது. எங்கெல்லாம் இறைவனின் திருமறை பரவலாகப் பிரசங்கிக்கப்பட்டதோ, அங்கெல்லாம் அடிமை வழக்கத்தின் தீமைகள் மறைந்துபோயின என்பதை வரலாறு கூறுகிறது.

ஆனாலும் அதே வேளையில், எங்கு அடிமை முறை இன்னும் வழக்கத்தில் இருந்தாலும், அங்கெல்லாம் கிறிஸ்தவத்தின் மிகச்சிறப்பான நிலைக்கு அடிமை விலக்கானவன் அல்லன். கிறிஸ்துவின் மறுரூபப்படுத்தும் ஆற்றலுக்கு அவன் ஒரு சாட்சியாக விளங்கமுடியும். தேவனாகிய நமது இரட்சகரின் கொள்கையை அவனால் அலங்கரிக்க முடியும். நாட்டின் அரசர்களைக் காட்டிலும் அடிமைகளுக்குத் திருமறையில் மிகுதியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒப்பிட்டுப் பார்க்கையில் அடிமைகள் இறையரசில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதன் மறைமுக விளக்கக் குறிப்பாக இது அமைந்துள்ளது. கர்த்தருக்குக் கீழ்ப்படியாத நிலை என்று கருதப்படக்கூடிய செயலைத் தவிர, மற்ற எல்லாவற்றிலும் கிறிஸ்தவ **வேலைக்காரர்** தங்களுடைய எஜமான்களுக்குக் **கீழ்ப்படிய வேண்டும்.** கர்த்தருக்குக் கீழ்ப்படியாத செயலைச் செய்யும்படி ஏவப்படும்போது அதை மறுத்துரைத்து, அதனால் உண்டாகும் விளைவுகளைக் கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில் பொறுமையோடு சகிக்க வேண்டும். எல்லாவற்றிலும் அவர்கள் மன நிறைவை உண்டாக்கும்படி நடந்துகொள்ள வேண்டும். அதாவது, தரத்திலும் அளவிலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குச் செய்கிறது போலச் செய்ய வேண்டும், அப்பொழுது அதற்கான பரிசுப் பொருளை அவரிடத்திலிருந்து பெறுவார்கள். அவர்கள் **எதிர்த்துப் பேசவோ** துடுக்காகப் பேசவோ கூடாது. கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்தில் பல அடிமைகள் தங்களுடைய எஜமான்களைக் கர்த்தராகிய இயேசுவினிடத்திற்கு வழிநடத்தக்கூடிய நற்பேற்றைப் பெற்றார்கள். ஏனெனில் புறவின அடிமைகளுக்கும் கிறிஸ்தவ அடிமைகளுக்கும் பெருமளவில் பளிச்சிடக்கூடிய வண்ணம் வேறுபாடுகள் காணப்பட்டன.

திருடுதல் என்னும் பாவத்தில் மற்ற அடிமைகள் அவ்வப்போது ஈடுபட்டார்கள், ஆனால் கிறிஸ்தவ அடிமைகளோ இந்தப் பாவத்தைச் செய்யவில்லை, இது மிகத் தெளிவாகத் தெரிந்த வேறுபாடாகும். கிறிஸ்தவ நன்னெறி அவர்களை நேர்மை என்னும் கட்டுக்குள் வழுவாதபடி கட்டி வைத்திருந்தது. கிறிஸ்தவ அடிமைகள் வெளியரங்கமாக ஏலம் விடப்பட்ட வேளைகளில் அவர்களுக்கு நல்ல விலை கிடைத்ததில் எவ்விதமான ஆச்சரியமும் இல்லை. பொதுவாக அவர்கள் மெய்யான முழு நல்லுண்மையைக் காண்பிக்கும்படி கற்பிக்கப்பட்டிருந்தார்கள். மேலும் அவர்கள் தங்களுடைய வாழ்க்கை மற்றும் வேலை ஆகியவற்றின் ஒவ்வொரு அம்சத்திலும் முழு நம்பிக்கைக்குப் பாத்திரராக விளங்கி, **இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை அலங்கரிக்கிறவர்களாக** நடந்துகொண்டார்கள். கிறிஸ்தவ அடிமைகளைப் பொருத்தமட்டில் எது உண்மையாக இருந்ததோ, அது இன்றைய நாட்களில் அலுவல்புரியும் கிறிஸ்தவர்கள் அனைவரிடத்திலும் உண்மையாக விளங்க வேண்டும்.

2:11 அடுத்துவரும் நான்கு வசனங்களும் நமது இரட்சிப்பின் அழகிய சொல்லோவியமாக

விளங்குகிறது. இதனுடைய இலக்கிய நயத்தினை வியந்துபோற்றும் நாம் இதனுடைய பின்னணிச் சூழலிலிருந்து விலகிச் சென்றுவிடக் கூடாது. தேவனுடைய குடும்பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் கொள்கைமாறாத நடத்தையுள்ளவராக விளங்க வேண்டுமென்று பவுல் வலியுறுத்தி வந்திருக்கிறார். இப்பொழுது, நம்முடைய இரட்சிப்பின் மிகப்பெரிய நோக்கங்களில் ஒன்று, கலப்படமில்லா தூய்மையுடைய வாழ்க்கையை நம்மிடத்தில் உருவாக்க வேண்டும் என்பதே என்று அவர் காண்பிக்கிறார்.

ஏனெனில் எல்லா மனிதருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாயிருக்கிறது. தேவகிருபை என்னும் சொல் இங்கு இறைமைந்தன் என்னும் பொருளையே தருகிறது. கர்த்தராகிய இயேசு நம்முடைய கோளுக்கு வருகைபுரிந்தபோது, குறிப்பாக அவர் நம்முடைய பாவங்களுக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தபோது **தேவகிருபை பிரசன்னமாயிற்று. எல்லா மனிதரும்** இரட்சிப்பைப் பெற வேண்டும் என்பதற்காக அவர் பிரசன்னமானார். பதிலாளாக அவர் செய்த செயல் எல்லோரையும் மீட்கப் போதுமானதாகும். பாவங்கள் மன்னிக்கப்பட்டு பொறுத்தருளப்படும் என்னும் மெய்யான அழைப்பு எல்லோருக்கும் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையாகவே அவரைக் கர்த்தரும் இரட்சகருமாக எவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுகிறார்கள். இறுதியில் எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள் என்னும் கருத்திற்கு இங்கும், திருமறையின் வேறு எந்தப் பகுதியிலும் இடமில்லை. உலகத்தினர் அனைவரும் இரட்சிப்பை அடைவார்கள் என்பது பிசாசு கூறும் பொய்யாகும்.

2:12 நம்மை இரட்சித்த அதே கிருபை பரிசுத்தம் என்னும் பள்ளியில் நமக்குப் பயிற்சி அளிக்கிறது. நாம் மறுத்துரைக்கக் கற்றுக்கொள்ள வேண்டிய "கூடாது கூடாது" என்பவை அந்தப் பள்ளியில் சொல்லித் தரப்படும். முதலாவது, அவபக்தி, அதாவது கடவுட்பற்றின்மை என்பது அதன் பொருளாகும். இரண்டாவது, லௌகீக இச்சை. இது ஒழுக்கக்கேட்டை மட்டும் குறிக்காமல், செல்வம், அதிகாரம், இன்பம், புகழ்ச்சி, மற்றும் எல்லாவிதமான உலகீய நாட்டங்களையும் இச்சை என்றே கூறுகிறது.

இதற்கு மாறாக நாம் பின்பற்ற வேண்டியது **தெளிந்த புத்தி,** பிறரிடம் காட்ட வேண்டிய **நீதி,** அவருடைய பிரசன்னத்தின் வெளிச்சத்தில் காணப்படும் **தேவ பக்தி** ஆகியவை கொண்ட வாழ்க்கை முறையேயாகும். இவ்வுலகினில் நமது நற்பண்புகள் என்று சொல்லப்படத்தக்க வகையில் இவை காணப்பட வேண்டும், நம்மைக் குறித்த அனைத்தும் இங்கு மறைந்து போகும். இது நம்முடைய பயண வாழ்க்கையேயொழிய கடைசி வீடல்ல.

2:13 உலகத்தில் அந்நியராக வாழ்கிற நாம் உன்னதமான நம்பிக்கையினாலே கிளர்ச்சி பெற்றிருக்கிறோம் - **மகா தேவனும் நமது இரட்சகருமாகிய** இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையான பிரசன்னமே அந்த நம்பிக்கையாகும். கர்த்தராகிய இயேசு சபைக்காக மகிமையோடு வருகைபுரிந்து, அதனைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லுகிற நிகழ்ச்சியையே இது குறிக்கிறது என்று நாம் புரிந்துகொள்ள வேண்டுமா (1 தெச. 4:13-18)? அல்லது அவர் மகிமையோடு இவ்வுலகிற்கு வருகைபுரிந்து தம்முடைய எதிரிகளை மடங்கடித்து, தமதரசை நிறுவி ஆளுகை செய்யவிருக்கிற நிகழ்ச்சியை இது குறிக்கிறதா (வெளி. 19:11-16)? கிறிஸ்து தமது மணவாட்டியாகிய சபைக்காக வருகிற நிகழ்ச்சியையே இது குறிக்கிறது என்று நாம் கருதுகிறோம். அவர் மணவாளனாக வரப்போகிறதை இது குறித்தாலும், அல்லது அரசராக வரப்போகிறதைக் குறித்தாலும் விசுவாசியானவன் ஆயத்தமாயிருந்து அவருடைய மகிமையான வருகைக் காகக் காத்திருக்க வேண்டும்.

2:14 அவர் மீண்டும் வரவிருப்பதை எதிர்நோக்கியிருக்கும் நாம், அவர் முதல் முறை வந்த தன் நோக்கத்தையும், அவர் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்ததையும் மறந்துவிடக்கூடாது. அவர் நம்மைப் பாவத்தின் குற்றவுணர்விலிருந்தும் தண்டனையிலிருந்தும் இரட்சிப்பதற்காக மட்டுமின்றி, **சகல அக்கிரமங்களினின்று மீட்கும்படியாகவும் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.** பாவத்தின் தண்டனையிலிருந்து நம்மை விடுவித்து விட்டு, நமது வாழ்க்கையில் அப்பாவம் செலுத்தும் ஆளுகையை வெற்றிகொள்ளாமல் அப்படியே விட்டுவிடுவது அரைகுறை இரட்சிப்பாக இருக்கும்.

அவர் நம்மைத் **தமக்குரிய சொந்த ஜனங்களாக்கும்** பொருட்டும், **சுத்திகரிக்கும்படியாகவும்** தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். 1611 ஜேம்ஸ் அரசர் மொழிபெயர்ப்பு இதனைப் "புதுமை மனிதர்கள்" என்று விநோதமாகக்[4] கூறுகிறது. பலவேளைகளில் நாம் புதுமையான மனிதர்

களாக இருக்கிறோம். ஆனால் அது அவர் எதிர் பார்த்தபடி இல்லை! நம்மை விசித்திரமான அல்லது விநோதமான மனிதர்களாக ஆக்க வேண்டும் என்பதற்காக அவர் மரணமடைய வில்லை, மாறாக ஒரு சிறப்பான வகையில் அவருக்குச் **சொந்த ஜனங்களாக** மாற்ற வேண்டு மென்பதே அவரது நோக்கம். நாம் **நற்கிரியை களைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர் களாக** மாற்றமடைய வேண்டுமென்பதற்காக அவர் **தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.** அவருடைய திருப்பெயரில் அவருடைய மகிமைக் காக இரக்கம் மிகுந்த செயல்களைச் செய்ய நாம் உற்சாகமுடையவர்களாக இருக்க வேண்டும். விளையாட்டு, அரசியல், தொழில்துறை ஆகிய வற்றில் மனிதர்கள் பேரார்வம் கொண்டிருப் பதைக் காணும் நாம் நற்கிரியை செய்யப் பற்றார் வமும் ஊக்கமும் உடையவராக இருக்க வேண் டும்.

2:15 இவை எல்லாவற்றையும் கற்பிக்க வேண்டும் என்று தீத்துவுக்குப் பொறுப்பு அளிக் கப்பட்டது. முந்தின வசனங்களில் விவாதிக்கப் பட்டவை மற்றும் இரட்சகர் அடைந்த பாடுகளின் நோக்கம் இவையே. பரிசுத்தவான்கள் வாழ்க்கை நடைமுறையில் தேவபக்தி உள்ளவர்களாக விளங்க அவர் அவர்களுக்குப் **போதிக்கவும்** உற்சாகப்படுத்தவும் வேண்டும். மேலும் அப் போஸ்தலருடைய போதகங்களுக்குத் தங்களு டைய பேச்சினாலும் வாழ்க்கையினாலும் எதிர்த் துச் செயல்படுகிற எவரையும் அவர் **கடிந்து கொள்ள** வேண்டும். அவர் கண்டிப்பான முறை யில் ஊழியத்தை நடத்துவதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. அவர் அவ்வூழியத்தைப் பரி சுத்த ஆவியானவரின் துணிவோடும் **சகல அதி காரத்தோடும்** செய்ய வேண்டும். **ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடுக்கா திருப்பாயாக.** தீத்து தனது இளமையைக் குறித் தும், புறவினப் பின்னணியைக் குறித்தும், ஏதா வது இயல்பான குறைபாட்டைக் குறித்தும் மனச் சாட்சியில் பதற்றமடைய வேண்டியதில்லை. அவர் இறைவனின் சொற்களையே பேசிக்கொண் டிருந்தார். இது எல்லாச் சிறப்பையும் உண்டுபண் ணப் போதுமானது.

5. சபையில் கொடுக்கவேண்டிய அறிவுரைகள் (3:1-11)

3:1 கிரேத்தா தீவைச் சேர்ந்த சபைகளிலி ருந்த விசுவாசிகள் தங்களுடைய நாட்டின் அர சாங்கத்தைக் குறித்து பொறுப்புடையவர்களாக விளங்கும்படி தீத்து அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். அரசாங்கங்கள் யாவும் தேவனால் நியமிக்கப்பட்டவை என்பதே கிறிஸ்தவரது மனப் பான்மையாக இருக்க வேண்டும் (ரோமர் 13:1). ஓர் அரசு தொல்லைகள் கொடுக்கக் கூடியதாகவோ, கிறிஸ்தவர்களுக்கு எதிரானதாகவோ இருந் தாலும், அது சட்டமும் ஒழுங்கும் இல்லாத அர சாங்கமற்ற நிலையைக் காட்டிலும் சிறந்த தாகவே இருக்கும். அத்தகைய அரசாங்கமற்ற நிலைக்குக் கீழாக மக்கள் நீண்ட காலம் வாழ முடியாது. ஆட்சிபுரிபவர் ஒருவேளை தனிப்பட்ட முறையில் தேவனை அறியாதவராயிருப்பினும், அவர் "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்னும் நிலையிலேயே தனது பொறுப்பை வகிக்கிறார். அவ்விதமாகவே அவர் மதிக்கப்பட வேண்டும். **துரைத்தனங்களுக்கும் அதிகாரங் களுக்கும்** கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். ஆனால் ஓர் அரசாங்கம் தேவன் நிய மித்த கோட்பாடுகளுக்குப் புறம்பாகச் செயல் பட்டு, தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடாது என்று கட்டளையிடுமானால், அப்பொழுது அப்போஸ் தலர் 5:29 -ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள கொள்கையின்படி அதனை விசுவாசி மறுத்து ரைக்க வேண்டும்: "மனிதருக்குக் கீழ்ப்படிகிற தைக் காட்டிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது." அதற்காக அந்த விசு வாசி தண்டிக்கப்படுவாரானால், அந்த தண்ட னையை அவர் கர்த்தருக்கென்று ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்திற்கு எதிராக கலகக் காரரோடு அவர் ஒருபோதும் சேரக்கூடாது. அல் லது புரட்சியின் மூலமாக ஆட்சியைக் கவிழ்க்கும் செயலிலும் அவர் ஈடுபடக் கூடாது.

கிறிஸ்தவரும் இவ்வுலகமும்

விசுவாசிகள் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; போக்குவரத்து விதிகளும் அவற்றுள் அடங்கும். மேலும் அவர்கள் வரிகளையும் மற்ற தீர்வைகளையும் முறையாகச் செலுத்த வேண் டும். பொதுவாக, அவர்கள் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாகவும், மரியாதையுடன் நடந்து கொள்கிறவர்களாகவும், கீழ்ப்படிதலுள்ள குடி மக்களாகவும் விளங்க வேண்டும். ஆயினும் விசுவாசிகளுக்குரிய பொறுப்புகளில் மூன்று அம்சங்களில் பெரிய அளவில் கருத்து வேறு பாடுகள் நிலவுகின்றன. அவையாவன: தேர்தலில் வாக்களித்தல், தேர்தலில் நின்று வெற்றிபெறு வதால் பெறக்கூடிய பதவிகளை நாடுதல், படை வீரர்களோடு சேர்ந்து போருக்குச் செல்லுதல்.

முதல் இரண்டு விசயங்களைக் குறித்து, நம்மை அறிவுறுத்தக்கூடிய வழிமுறைகள் திருமறையில் கொடுக்கப்பட்டுள்ளன:

1. கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தாலும், அவர்கள் இவ்வுலகத்தாரல்லர். (யோவான் 17:14,16).
2. இவ்வுலகத்தின் அமைப்பு பொல்லாங்கனின் கைகளில் உள்ளது. தேவன் அதனை நியாயத்தீர்ப்புக்கென ஒப்புவித்திருக்கிறார் (1 யோவான் 5:19; 2:17; யோவான் 12:31).
3. இவ்வுலகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்வது கிறிஸ்தவத் திருப்பணி அன்று, அதனின்று மனிதனை இரட்சிப்பதே அவ்வூழியமாகும்.
4. இவ்வுலக நாடுகளில் ஒன்றின் குடிமகனாக ஒரு விசுவாசி இருப்பதைத் தவிர்க்க இயலாது; எனினும் அவன் விண்ணுலகத்தின் குடிமகனாக விளங்குவது அவனுடைய முதன்மையான நிலையாகும். அதன் காரணமாக அவன் இவ்வுலகில் வாழும்போதே, தன்னை ஒரு நெடுந்தொலைவுப் பயணியாகவும், வேற்று நாட்டவனாகவும் கருதுகிறான் (பிலி. 3:20; 1 பேதுரு 2:11).
5. தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு மனவருத்தம் உண்டாக்காதபடி, பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான் (2 தீமோ. 2:4).
6. "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவா. 18:36). அவருடைய தூதர்களாக நாம் இவ்வுண்மையை இவ்வுலகிற்குத் தெரிவிக்க வேண்டும்.
7. அரசியல் தனது இயல்பின்படி தீமையினிடமாய் வழிநடத்தக் கூடியதாய் இருக்கிறது. கிறிஸ்தவர்கள் அக்கிரமச் செயல்களுக்கு விலகி வாழவேண்டும் (2 கொரி. 6:17,18).
8. தேர்தலில் வாக்களிப்பதில், பொதுவாக ஒரு கிறிஸ்தவன் நேர்மையும் உண்மையும் உள்ளவனாகத் தோன்றுகிற ஒருவனுக்கே வாக்களிக்க வேண்டும். ஆனால், சில வேளைகளில் மனிதர்களுக்குள் மிகவும் தாழ்ந்தவனை தேவன் தமது சித்தத்தின்படி உயர்த்துவார் (தானி. 4:17). இப்படிப்பட்ட காரியங்களில் நாம் எவ்வாறு தேவனுடைய சித்தத்தை அறிந்து செயல்படுவது?

போருக்குச் செல்லவேண்டுமென்று ஒரு நாடு கட்டளையிடும்போது அந்நாட்டின் குடிமகனாக இருக்கும் விசுவாசி போருக்குச் செல்ல வேண்டுமா என்பது மற்றொரு கேள்வி. இரு சார்புடைய வாதங்களும் வலிமையோடு உள்ளன. ஆனாலும் போரில் கலந்துகொள்ளக் கூடாது என்பதற்கான வாதம் அதிக வலிமை உடையதாக விளங்குகிறது என்றே நான் கருதுகிறேன். மேலே சொல்லப்பட்டுள்ள விதிகள் இந்தப் பிரச்சினைக்கும் பொருந்தக் கூடியவையே. மேலும் சில விதிகளும் இதற்குப் பொருந்தும்: (1) "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே" என்று நம்முடைய கர்த்தர் கூறினார் (யோவான் 18:36). (2) "பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்" என்றும் அவர் கூறினார் (மத். 26:52). (3) "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்" என்று கூறிய அவரது கற்பனை மனிதனுடைய உயிரைச் சாகடிப்பதை எதிர்க்கிறது (மத். 5:44).

ஆயுதங்களைப் பயன்படுத்துவதை எதிர்ப்போர், தாங்கள் மனச்சாட்சியின் நிமித்தம் அதனை எதிர்ப்பவர்கள் அல்லது போர்புரிய மனதற்றவர்கள் என்று கூறிப் போரில் கலந்துகொள்ளாதிருக்க அனுமதிக்கப்படுவார்களாயின் அவர்கள் வாழும் நாட்டிற்கு நன்றியுடையவர்களாக இருக்க முடியும்.

இதற்கு மாறாக, பல கிறிஸ்தவர்கள் நாட்டிற்காகப் போர்புரிவதை மிக மேன்மையாகக் கருதி, போரில் கலந்துகொண்டிருக்கிறார்கள். புதிய ஏற்பாடு நூற்றுக்கு அதிபதிகளை மிகவும் சிறப்புக்குரியவர்களாக அறிமுகப்படுத்துகிறது என்பதை அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (எ. கா. கொர்நேலியு, யூலியு). மேலும் கிறிஸ்தவப் போராட்டத்தை விளக்கிக் கூற போர்வீரர்களின் வாழ்க்கை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (எ. கா. எபே. 6:10-17). போர்புரிதல் இயல்பாகவே தவறுடையதாக இருக்குமென்றால், "நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி" என்று பவுல் கூறியிருப்பதற்கு உடன்படுவது கடினம். ஒருவர் எந்தக் கருத்தை உடையவராக இருந்தாலும், மாற்றுக் கருத்துக் கொண்டிருப்பவரைக் குற்றப்படுத்தவோ குறைகூறவோ கூடாது. வெவ்வேறு கருத்தைக் கொண்டிருப்பதற்கு இங்கு இடமுண்டு.

ஒரு கிறிஸ்தவ சீடன் **சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும்** கடமைப்பட்டிருக்கிறான். எல்லா அலுவல்களும்

கனத்திற்குரியவையல்ல - நவீனகால விளம்பரங்கள் பொய்களை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன. மனிதனுடைய ஆவிக்குரிய நலம், மனநலம் மற்றும் உடல்நலம் ஆகியவற்றிற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய பொருட்களைச் சில வணிகக் குழுமங்கள் விற்பனை செய்கின்றன. எல்லாவித நல்மனச்சாட்சியோடும் இந்த வேலைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

3:2 ஒரு கிறிஸ்தவன் **ஒருவனையும் தூஷிக்கக்** கூடாது. ஆளுகை செய்பவரைத் தூஷிக்கக் கூடாது என்று திருமறையில் வேறொரு பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது (யாத். 22:28; அப். 23:5). அரசியல் பிரசாரம் கடுமையாக இருக்கும் சூழ் நிலையிலும், ஒடுக்கப்படுகிற போதும், துன்பப் படுத்தப்படும்போதும் எல்லாக் கிறிஸ்தவர்களும் இக்கட்டளையை நினைவுகூர வேண்டியவராய் இருக்கிறார்கள். ஆனால் இங்கு சொல்லப்பட்டிருக்கிற தடையுத்தரவு ஏளனம், அவதூறு, இகழ்ச்சி, திட்டுதல் ஆகியவற்றிலிருந்து எல்லோரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் நோக்குடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. **ஒருவனையும் தூஷியாமல்** இருக்க வேண்டும் என்னும் எளிய கட்டளைக்கு அனைத்துக் கிறிஸ்தவர்களும் கீழ்ப்படிவார்களாயின் கடல் போன்ற வேதனைகளும் தொல்லைகளும் தவிர்க்கப்படும்!

நாம் **சண்டைபண்ணாமல்** சமாதானமாயிருக்க வேண்டும். ஒரு சர்ச்சை ஏற்பட வேண்டுமானால் அதற்கு இருவர் தேவை. முனைவர் அயன்சைடு தனது பிரசங்கத்தில் கூறிய ஒரு சிறிய கருத்தை அடிப்படையாகக் கொண்டு யாராவது ஒருவர் அவரோடு சர்ச்சை செய்ய முயற்சி செய்தால், "நல்லது சகோதரரே, நாம் விண்ணகம் சென்ற பிறகு நம்மில் ஒருவர் தவறு என்பது புலப்படும். பெரும்பாலும் அது நானாகத் தான் இருப்பேன்" என்று கூறுவார். அப்பொழுது சர்ச்சை அனைத்திற்கும் அவருடைய மனப் பாங்கு முடிவை ஏற்படுத்திவிடும்.

நாம் **பொறுமையுள்ளவர்களாய்** இருக்க வேண்டும். கர்த்தராகிய இயேசுவைக் குறித்துச் சிந்திக்காமல் இந்தக் குணநலத்தைக் குறித்துச் சிந்திப்பது இயலாத செயல். கனிவோடும் தயவோடும், சமாதானத்தோடும், **சாந்தகுணத்தை** அதாவது மரியாதைப் பண்பைக் காண்பிக்க வேண்டும். கிறிஸ்தவர்களுடைய நற்பண்புகளில் ஒன்றாக மரியாதை செலுத்தும் பண்பைப் பயிற்றுவிப்பது மிகச்சரியானதாகவே தோன்றுகிறது. தாழ்மையுள்ள மனதுடன் மற்றவர்களை உயர்வாய்ச் சிந்திப்பது, பிறருக்கு முதலிடம் கொடுப்பது, கிருபை நிறைந்த சொற்களைப் பேசுவதும் அதன்படி செய்வதும் இதனுடைய பொருள் என்பது நிச்சயம். தனக்கு முன்பாக மற்றவர்களுக்குப் பரிமாறுவது, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உதவிசெய்ய முந்திக்கொள்வது, இரக்கம் பாராட்டப்படுகிறபோது உடனடியாக நன்றியுணர்வை வெளிப்படுத்துவது யாவும் மரியாதை செலுத்துவதாகும். அது ஒருபோதும் கரடுமுரடானதாகவோ, கொச்சையானதாகவோ, நாகரிகமற்றதாகவோ இருக்காது.

3:3 நன்னெறிகளை எடுத்தியம்பும் பகுதியில் அப்போஸ்தலன் மீண்டும் கோட்பாட்டு விளக்கத்தை எடுத்துரைக்கிறார். இது நம்முடைய இரட்சிப்பைப் பற்றியதாயினும், இரட்சிப்பின் நோக்கம் நற்செயல்களைச் செய்யும் வாழ்க்கையே என்று கூறும் பகுதியாகவும் இது விளங்குகிறது. இங்கு கூறப்பட்டுள்ள சிந்தையின் ஓட்டம் பின் வருமாறு அமைந்திருக்கிறது: (1) இரட்சிப்பிற்கு முன்னர் நமது நிலை (வச. 3); (2) நம்முடைய இரட்சிப்பின் இயல்பு (வச. 4-7); (3) இரட்சிப்பினால் உண்டான நடைமுறைப் பயன்கள் (வச. 8). நாம் மனமாற்றம் அடைவதற்கு முந்தி எப்படிப்பட்டவர்களாக இருந்தோம் என்பதை தேவன் சித்திரிக்கும்போது முகஸ்துதி செய்யவில்லை. எல்லா பதில்களையும் அறிந்திருக்கிறோம் என்று நாம் கூறிய போதிலும் உண்மையில் **புத்தியீனர்களாகவே** இருந்தோம்; ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ள இயலாதவர்களாக இருந்தோம்; நாம் தெரிந்தெடுத்தவை மற்றும் நடத்தைகள் யாவும் ஞானமற்றவையாக இருந்தன. மேலும் நாம் தேவனுக்குக் **கீழ்ப்படியாதவர்களாக** இருந்தோம்; பெற்றோர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் கூட நாம் கீழ்ப்படியாதவர்களாக இருந்தோம். பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு **வழிதப்பி நடந்தோம்**. நம்முடைய முறைதவறிய தீர்மானங்கள் எப்பொழுதும் நம்மைச் சரியான பாதையில் நடத்தாமல், முட்டு சந்துகளுக்குள் நடத்தின. **பலவிதமான** அசுத்தமான நடத்தைகளுக்கு நாம் **அடிமைப்பட்டுக்** கிடந்தோம். பொல்லாங்கான தீய சிந்தனை வாழ்க்கையில் அடிமைப்பட்டிருந்த நம்மை எல்லா வகையான பாவங்களும் சூழ்ந்து கொண்டன. நம்முடைய வாழ்க்கையானது பிறரைப் பற்றிய துர்க்குண எண்ணத்தாலும் பொறாமையினாலும் கசப்பு நிறைந்திருந்தது. நாம் அன்பு செலுத்தப்படத் தகுதியற்றவர்களும் தன்னல விரும்பிகளுமாக இருந்த காரணத்தினால் நாம் துயருற்றவர்களாக இருந்ததோடு

பிறரையும் துயருறச் செய்தோம். **பகைக்கப்படத் தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாக இருந்தோம்**: அண்டை வீட்டுக் காரர்கள் சண்டையிடுவதும், உடன் அலுவலர் கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக்கொண்டு சச்சரவு செய்வதும், தொழில்துறையில் கொடூர மான முறையில் போட்டியிடுவதும், குடும்பங் களுக்குள்ளாகச் சண்டையிடுவதும் வாழ்வின் சோகக் கதைகள்.

3:4 மனிதனுடைய சீர்கெட்ட வாழ்க்கையைப் பற்றிய சித்திரம் இங்கு "ஆனால்" என்னும் சொல்லால் தடைசெய்யப்படுகிறது. இச்சொல் திருமறையில் பல இடங்களில் மிகப் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் இதுவும் ஒன்று. சரியான தருணத்தில் இப்படிப்பட்ட இடைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறித்து நாம் எவ்வளவாக தேவனுக்கு நன்றிக் கடன் உடையோராய் விளங்க வேண்டும். மனி தன் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறதி லிருந்து காப்பாற்றப்படும்படி தேவன் தடைசெய் கிறதை இச்சொற்கள் குறிப்பாய் அறிவிக்கின் றன! மனிதன் நரகத்திற்குச் செல்லும் பாதையில் தேவன் ஏற்படுத்திய வேகத் தடைகளாக இவை விளங்குகின்றன என்று ஒருவர் கூறியிருக்கிறார். (தமிழ் வேதத்தில் ஆனால் என்னும் சொல் இந்த வசனத்தில் பயன்படுத்தப்படவில்லை.)

(ஆனால்) நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனிதர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது... இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் தோன்றியபோது இந்நிகழ்ச்சி நடந்தது. இன் னொரு பொருளில், தேவனுடைய தயவும் கிருபை யும் நாம் இரட்சிப்படைந்தபோது **பிரசன்னமாயின**. பாவிகளாகிய கலக்காரர்கள் இருக்கக் கூடிய இவ்வுலகிற்காக தேவன் தம்முடைய பிரிய மான குமாரனை அனுப்பியபோது மேற்கூறிய குணப்பண்புகள் வெளிப்பட்டன. **மனிதர் மேலுள்ள அன்பு** என்னும் கருத்தைக் கூறுவதற்குப் பயன் படுத்தப்பட்டுள்ள கிரேக்க மொழிச் சொல்லி லிருந்தே *philanthrophy* என்னும் ஆங்கிலச் சொல் பிறந்தது; அன்பு, அருட்பண்பு, இரக்கம் ஆகிய மூன்று கருத்துகளின் ஒருங்கிணைப்பே இச்சொல்லின் பொருளாகும். **நம்முடைய இரட்சகராகிய தேவன்** என்னும் சொற்றொடர் பிதா வாகிய தேவனையே குறிக்கிறது. அவர் தம்மு டைய திருமைந்தனை நம்முடைய பாவத்திற் கான பலியாக இவ்வுலகத்திற்கு அனுப்பினார் என்னும் பொருளில் அவர் **நம்முடைய இரட்சகராக** இருக்கிறார். கர்த்தராகிய இயேசுவும் **தேவனும் நமது இரட்சகரும்** என்று 2:13-ஆம் வசனத்தில் அழைக்கப்பட்டிருக்கிறார். நம்மு டைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு பொறுத்தருளப் படும்படி அதற்கான தண்டனையை அவர் செலுத் தியதால் அவ்வாறு அழைக்கப்பட்டிருக்கிறார்.

3:5 நம்முடைய எல்லாப் பாவங்களுக்கான குற்றவுணர்விலிருந்தும் தண்டனையிலிருந்தும் அவர் **நம்மை இரட்சித்தார்**. நம்முடைய கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்காலப் பாவங்கள் யாவும் அவற்றுள் அடங்கும். நம்முடைய இரட் சகர் மரணம் அடைந்தபோது அவையாவும் எதிர்காலத்திற்குரியவையாக இருந்தன. அவரது மரணம் நம்முடைய பாவங்கள் அனைத்தையும் மூடிவிட்டது. ஆனால் நற்செய்தியின் இந்த எளிமையும் தெளிவும் கொண்ட உண்மை, மனிதர்கள் ஏற்றுக்கொள்வதற்கு மிகக் கடினமாக இருக்கிறது. இரட்சிப்பானது நல்ல **கிரியைகளினிமித்தம்** உண்டாவதல்ல, ஒருவர் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதனால் கிறிஸ்தவராக வாழ்கிறதில்லை. ஒரு மனிதன் இரட்சிப்பைச் சம்பாதிக்கவோ தன்னுடைய தகுதியினால் அடையவோ முடியாது என்பது வேதத்தில் மாற் றத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது (எபே. 2:9; ரோமர் 3:20; 4:4,5; 9:16; 11:6; கலா. 2:16; 3:11). நற்கிரியைகளினால் ஒரு மனிதன் தன் னைத்தானே இரட்சித்துக்கொள்ள முடியாது. அவனுடைய நீதிகள் யாவும் தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தையைப் போல உள்ளன (ஏசா. 64:6). அவன் கிறிஸ்தவனாக வாழ்வதன் மூலம் அவனால் கிறிஸ்தவனாக மாற முடியாது என்பதற்கான எளிய காரணம் யாதெ னில், கிறிஸ்தவனாக வாழ்வதற்கான ஆற்றல் அவனிடத்தில் இல்லை என்பதேயாகும். நல்ல வர்கள் விண்ணகத்திற்குச் செல்வதில்லை; மாறாக தேவனுடைய கிருபையினாலே இரட்சிக் கப்பட்டவர்களே விண்ணகம் செல்கிறார்கள்!

நற்செயல்கள் இரட்சிப்பை ஈட்டித் தருவ தில்லை; மாறாக அவை இரட்சிப்பால் உண்டா கிற விளைவாகும். எங்கெல்லாம் மெய்யான இரட்சிப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் நற் செயல்களும் காணப்படும். ஆகவேதான் **நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம்** தேவன் நம்மை இரட்சிக்காமல், **அவருடைய கிருபை யினாலே இரட்சித்தார்** என்று படிக்கிறோம். இரட் சிப்பு கிருபையினால் உண்டான செயலாக இருக் கிறது. கிரியையினால் நீதி உண்டாவதில்லை.

தகுதியான தண்டனை வழங்கப்பட வேண்டு மென்று நீதி கோருகிறது. மாறாக **கிருபை யானது** நீதியான வழியில் வழங்கப்பட வேண்டிய தண்டனையைத் தவிர்க்கிறது.

தேவன் நம்மை **மறுஜென்ம முழுக்கினால்** இரட்சித்தார். மனமாற்றம் உண்மையிலேயே ஒரு புதிய படைப்பாகும் (2 கொரி. 5:17). இங்கு புதிய படைப்பானது ஒரு குளியல் (முழுக்கு) என்னும் உவமையினால் விவரிக்கப்பட்டிருக்கிறது. மறுபிறப்பிற்கு ஒரே ஒரு முழுகுதல்தான் தேவை என்று கர்த்தராகிய இயேசு தமது சீடர்களுக்கு இதே உவமையிலே கற்பித்தார். ஆனால் தீட்டைக் கழுவுவதற்குப் பல கழுவுதல்கள் தேவை என்றும் அவர் கூறினார் (யோவான் 13:10). மறு பிறப்பிற்கான முழுகுதலுக்கும் ஞானஸ்நானத் திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. நீரினால் உடல் கழுவப்படுகிறதல்ல மறுபிறப்பு. மாறாக இறைவனின் திருமறையினால் உண்டாகிற ஒழுக்க நெறிக் கழுவுதலே மறுபிறப்பாகும் (யோவான் 15:3). ஞானஸ்நானம் இந்த முழுக்குக் கான ஒரு சின்னமாகவும்கூட விளங்குவதில்லை. அது உண்மையில் கிறிஸ்துவோடு மரணத்தில் அடக்கம் பண்ணப்படுகிறதையே சித்திரிக்கிறது (ரோமர் 6:4).

நம்முடைய புதிய பிறப்பு **பரிசுத்த ஆவியினு டைய புதிதாக்குதல்** என்றும் சொல்லப்பட்டிருக் கிறது. தேவனுடைய ஆவியானவர் வியத்தகு மறு உருவத் தோற்றத்தை உண்டுபண்ணியிருக் கிறார். முந்தின மனிதனுக்கு புதிய ஆடைகளை உடுத்துவித்து மறுஉருவம் உண்டுபண்ணப் படவில்லை, மாறாக ஆடைகளுக்குள்ளாகப் புதிய மனிதனை வைக்கும் செயலையே அவர் செய்திருக்கிறார்! பரிசுத்த ஆவியானவர் மறுபிறப் பின் செயலாளராகத் திகழ்கிறார், மேலும் திருமறை கருவியாகத் திகழ்கிறது.

3:6,7 தேவன்தாமே பரிசுத்த ஆவியானவரை **நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்**. ஒவ்வொரு விசுவாசியும் மறுபடியும் பிறந்தது முதற்கொண்டு பரிசுத்த ஆவியானவர் குடியிருக் கும் இடமாகத் திகழ்கிறார். இங்கு குறிப்பிடப்பட் டுள்ள மகிமை நிறைந்த புதிதாக்குதல் என்னும் செயலை உண்டுபண்ண அந்தப் பரிசுத்த ஆவி யானவரே போதுமானவர் ஆவார். அந்த ஆவி யானவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் கொடுக்கப்படுகிறார். பார்வோனின் நீதி மன்றத்தின் சம்பூரணம் எவ்வாறு யோசேப்பின் மூலமாக யாக்கோபின் மக்களுக்கு தந்தருளப் பட்டதோ, அதுபோலவே தேவனுடைய நன்மை கள், அவருடைய ஆவியானவரின் சொல்லிமுடி யாத ஈவுகள் உட்பட, கர்த்தராகிய இயேசுவின் மூலமாக நமக்கு அளிக்கப்பட்டுள்ளன. இயேசு நமது "யோசேப்பு."

போற்றுதலுக்குரிய மூவொரு கடவுளின் மூன்று நபர்களும் நம்முடைய இரட்சிப்பின் செய லில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார்கள்: பிதா வாகிய தேவன் (வச. 4); பரிசுத்த ஆவியானவர் (வச. 5); குமாரனாகிய தேவன் (வச. 7).

அவருடைய கிருபையினாலே நாம் நீதி மான்களாக்கப்பட்டு, நித்தியஜீவன் உண்டா கும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராக நாம் மாற்றம் பெற்றிருப்பதே நம்முடைய மறு பிறப்பின் உடனடி விளைவாகும். கிறிஸ்துவுக் குள்ளான மீட்பின் மூலமாக, தேவன் வியத்தகு கிருபையின் செயலால் நம்மை நீதிமான்களாகக் கணக்கிட்டார். தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்கென்று அவர் ஆயத்தம் பண்ணின எல்லா வற்றிற்கும் நாம் சுதந்தரராக மாற்றம் பெற்றோம். நித்திய காலமெல்லாம் கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பதும், அவரைப்போல இருப்பதுமான நிலை யில் எல்லாம் அடங்கியிருக்கும், இதுவே நமது நம்பிக்கையாக இருக்கிறது.

3:8 இந்த வார்த்தை உண்மையுள்ளது என்று பவுல் கூறுகிறபோது, அவர் இதற்கு முந்தின பகுதியைக் குறிப்பிடுகிறாரா அல்லது இனிவரும் பகுதியைக் குறிப்பிடுகிறாரா, இதனை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்? இவ் வளவு பெரிதான இக்கட்டிலிருந்து மகத்தான இரட்சிப்பினாலே நாம் காப்பாற்றப்பட்டிருக் கிறோம் என்பதே அவருடைய வாதத்தில் வற் புறுத்திக் கூறப்பட்டுள்ள செய்தியாகத் தோன்று கிறது. ஆகவே நாம் பெற்றிருக்கிற பரம அழைப் புக்கு ஏற்புடைய வாழ்க்கையை வாழ வேண்டிய வர்களாக இருக்கிறோம்.

கிரேத்தா தீவில் உள்ள விசுவாசிகள் இந்த விஷயங்களை (முதல் ஏழு வசனங்களில் உரைக்கப்பட்டுள்ள விஷயங்கள்) அதாவது **நற் கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக் கும்படி** தீத்து தனது உரையில் வலியுறுத்திக் கூற வேண்டும். இங்கு நற்கிரியைகள் என்று சொல்லப் பட்டிருக்கிற விஷயம் பெருமதிப்பிற்குரிய திருப் பணிகளைக் குறித்த போதிலும், அதனுடைய விரிவான பொருளில் நற்கிரியைகள் என்பதே அதனுடைய சரியான பொருளாகும். ஒருவர் தான் செய்கிற கிறிஸ்தவ அறிக்கைக்கு ஏற்ப நடந்து

கொள்ளும்படி வற்புறுத்துகிற படிப்பினை மிகச் சிறந்ததும் பிரயோஜனமானதும் ஆகும். எல்லா போதகங்களும் தனிப்பட்ட வகையிலும் நடை முறைக்கு ஏற்ற வகையிலும் பொருத்தமுடைய வையாக விளங்கவேண்டும்.

3:9 கிறிஸ்தவ ஊழியத்தில் தவிர்க்க வேண் டிய கண்ணிகள் எப்பொழுதும் உள்ளன என்பதில் ஐயத்திற்கிடமில்லை. பவுல் வாழ்ந்த காலத்தில் உணவுகளில் தூய்மையானவை தூய்மையற் றவை, ஓய்வுநாள் நிபந்தனைகள், பரிசுத்த நாட் கள் கைக்கொள்ளப்படுதல் போன்ற மதிநுட்ப மற்ற **தர்க்கங்கள்** நடைமுறையில் இருந்து வந்தன. தேவதூதர்கள் மற்றும் மனிதர்களுடைய **வம்சவரலாறுகள்** குறித்த வாக்குவாதங்களும் நடைபெற்றன. நியாயப்பிரமாணத்தில் சிக்கல் கள் நிறைந்த நிபந்தனைகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிவைக்கப்பட்டன, அதன் காரண மாகச் சண்டைகள் எழுந்தன. இவை யாவற்றை யும் பவுல் **அப்பிரயோஜனமும் வீணுமானவை** என்று வெறுத்துத் தள்ளுகிறார்.

இக்காலத்தில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வோர் கீழ்வரும் மாறுபாடான செயல்களைத் தவிர்க்கும்படி பவுல் கூறிய அறிவுரைகளை மிகுந்த கவனத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்:

> ஆவிக்குரிய உண்மை நிலையைப் பற்றிக் கொள்வதற்குப் பதிலாக, சில சமய ஒழுங்கு முறைகளைச் சார்ந்து அவற்றைப் பின்பற்று தல். எடுத்துக்காட்டாக, புளிக்கவைக்கப்பட்ட மதுபானத்தைப் பயன்படுத்துவதா அல்லது திராட்சை பிழிவைப் பயன்படுத்துவதா, புளிப் பான அப்பத்தைப் பயன்படுத்துவதா அல்லது புளிப்பில்லா அப்பத்தைப் பயன்படுத்துவதா, எல்லோருக்குமாக ஒரு பாத்திரத்தைப் பயன் படுத்துவதா அல்லது ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சிறிய கிண்ணங்களைப் பயன் படுத்துவதா - திருமறையில் இவைதான் மிக வும் முக்கியமானவை என்பது போலப் பழைமை வாதத்தில் ஈடுபடுவது!
>
> சொற்களைக் கொண்டு இரட்டுற மொழிதல்.
>
> ஒரே ஒரு சத்தியத்தை அல்லது சத்தியத்தின் ஒரு பகுதியை அளவுக்கதிகமாய் முக் கியப்படுத்தி, மற்றசத்தியங்களைவிட்டுவிடுதல்.
>
> திருமறை வசனங்களைப் பொருத்தமற்ற தாகக் காணப்படும் அளவுக்கு உருவகப்படுத் திப் பேசுதல்.
>
> ஒருவருக்கும் பக்திவிருத்தி உண்டாக்காத மிகச் சிறிய விசயங்களை இறையியல் கொள்கைகளாகப் பெரிதுபடுத்துதல்
>
> திருவசனத்திலிருந்து விலகி அரசியல் அமைப்பு களையும், கிறிஸ்தவ அறப்போர் என்னும் பெயரில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங் களையும் சார்ந்து எல்லாவற்றையும் எதிர்த் துச் செயல்புரிதல்.

இவ்வுலகம் அழிந்து கொண்டிருக்கும் இத்தரு ணத்தில் அருமையான நேரத்தை வீணாகச் செல விடுவது எத்தனை கவலைக்குரிய நிலையாகும்!

3:10 மிகச்சிறிய விசயங்களைப் பெரிதுபடுத்து கிற மனிதன் பிரிவினை உண்டுபண்ணக்கூடிய வேதப்புரட்டனாயிருக்கிறான்.[5] அவன் தன் இசைக் கருவியில் ஒரே ஒரு ஸ்வரத்தைத் தனது மரணம் வரை பாடுகிற ஒருவனுக்கு ஒப்பாயிருக்கிறான். கொஞ்ச காலத்தில் அவன் தன்னைச் சுற்றிலும் சிலரைச் சேர்த்துக்கொண்டு எதிரான மனப்பான் மையோடு செயல்பட்டு மற்றவர்களைத் துரத்தி அடிக்கிறவனாக இருக்கிறான். அவன் அடிக்கடி பேசுகிற பயனற்ற விசயத்தை விட்டுவிடுவதற்குப் பதிலாக, அவன் சபையைப் பிரிக்க முற்படு கிறான். அப்படிப்பட்ட மதியற்றவனோடு சபை மக் கள் எவரும் சேர்ந்து செயல்புரியக் கூடாது. ஓரிரு முறை அவனை எச்சரித்த பிறகு, அவன் தன்னு டைய பாதையை விட்டு விலகவில்லையென் றால், உள்ளூர் சபையின் ஐக்கியத்திலிருந்து அவனை விலக்கிவைக்க வேண்டும். கிறிஸ்த வர்கள் அவனுடன் எவ்விதச் சமுதாயத் தொடர் பும் வைத்துக்கொள்ளக் கூடாது. இவ்விதச் சமு தாயப் புறக்கணிப்பு அவனுடைய மனவருத்தத் திற்கு வழிவகுப்பதோடு, தேவனுடைய வார்த்தை யைச் சரியானபடி கைக்கொள்ள உதவிபுரியும்.

3:11 அத்தகைய மனிதன் சபைக்கு கடும் அச் சுறுத்தலாக விளங்கமாட்டான் என்று ஒருவரும் நினைக்க வேண்டாம். அவன் தன்னில் தானே **ஆக்கினைத் தீர்ப்புடையவனாய் பாவஞ்செய் கிறவனென்று** அப்போஸ்தலன் அவனைக் கடிந்துகொள்கிறார். அவனுடைய நடத்தை கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு உகந்ததாய் இரா மல், நிலைதவறியதாக இருக்கிறது. அவன் பிரி வினையை உண்டாக்கி, தனக்கென்று தனிக்கட் சியை உருவாக்கிக்கொள்வதால் **பாவஞ்செய் கிறான்**. அவன் பொறுப்புள்ள சகோதரர்களால் எச்சரிக்கப்பட்ட பிறகும் தனது பொல்லாங்கை இறுகப்பற்றிக்கொள்வதால் **தன்னில்தானே ஆக் கினைத் தீர்ப்புடையவனாய்** இருக்கிறான்.

6. முடிவுரை [3:12-15]

3:12 இம்மடல் தீத்துவுக்கு வழங்கப்பட்ட சிறு கட்டளைகளோடு முடிவடைகிறது. **அர்த்தெமாவையாவது தீகிக்குவையாவது,** கிரேத்தா தீவிலிருந்து தீத்துவை விடுவிக்கும்படி அனுப்ப வேண்டுமென்று பவுல் திட்டமிட்டிருந்தார். நாம் ஏற்கனவே **தீகிக்குவைக்** குறித்துக் கேள்விப் பட்டிருக்கிறோம் (அப். 20:14; எபே. 6:21; கொலோ. 4:7). ஆனால் **அர்த்தெமாவைப்** பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. **தீகிக்கு** எபேசுப் பட்டணத்துக்கு அனுப்பப்பட்டதாக 2 தீமோத்தேயு 4:12 - இலிருந்து நாம் அறிகிறோம். ஆகவே பெரும் பாலும் கிரேத்தா தீவுக்கு மாற்றுப் பணியாளராக **அர்த்தெமாவே** அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அவர் அங்கு வந்துசேர்ந்தவுடனே, தீத்து **நிக்கொப்போலிக்குச்** செல்ல வேண்டும். அந்த நகரத்தில்தான் பவுல் **மாரிகாலத்தைச்** செலவிட தீர்மானித்திருந்தார். அந்த நாட்களில் குறைந்தது ஏழு நகரங்கள் நிக்கொப்போலி என்ற பெயரில் இருந்தன. ஆனால் தீத்து கிரேக்க நாட்டின் மேற்குப் பகுதியில் எபிரஸ் என்னும் இடத்திற்கு அருகாமையில் இருந்த நிக்கொப்போலியையே தெரிந்துகொண்டார் என்று பெரும்பாலான விரிவுரையாளர்கள் கருதுகிறார்கள்.

3:13 தீத்துவிடம் சில விருந்தினர்கள் வரப் போகிறார்கள் - **நியாயசாஸ்திரியாகிய சேனா மற்றும் அப்பொல்லோ**. அவர்கள்தான் பவுலிடத்திலிருந்து இம்மடலைத் தீத்துவுக்குக் கொண்டு சென்றிருக்க வேண்டும். அந்த நாட்களில் இரண்டு வகையான நியாயசாஸ்திரிகள் இருந்தார்கள் - வேதபாரகர், அவர்கள் சமயச் சட்டத்துக்கு பொருள் விளக்கம் அளித்தவர்கள்; வழக்கறிஞர்கள், அவர்கள் சமுதாய வழக்குகளை நடத்தியவர்கள். சேனா எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு நம்மிடம் விடப்பட்டுள்ளது. அவர் முந்தின வகுப்பைச் சார்ந்தவராக இருந்தார் என்றே நான் கருதுகிறேன். மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறித்து எழுந்த முடிவுறாத தர்க்கங்களை (வச. 9) அடக்கும் பணியில் தீத்துவுக்கு உதவிசெய்யும் பொருட்டே இவர் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் சமுதாய வழக்குகளை நடத்துகிறவராக இருந்திருப்பார் எனில், அவர் நேர்மையான வராகவே இருந்திருக்க வேண்டும்! அப்போஸ்தலருடைய நடபடிகள் 18:24-28 மற்றும் 1 கொரிந்தியர் ஆகிய வேதபகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள **அப்பொல்லோ** என்பவர் மட்டுமே நியாயசாஸ்திரி என்று சொல்லப்பட்டுள்ள மற்றொரு நபர். இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவரும் அவராகத்தான் இருக்க வேண்டும். இவ்விருவரையும் விரைவாக **வழிவிட்டனுப்ப** வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ள அறிவுரையில், அவர்கள் கிரேத்தா தீவில் இருக்கும் போது விருந்தோம்பல் நல்ல முறையில் செய்யப்பட வேண்டும் என்பதும், அவர்களுடைய வழிக்குத் தேவையான யாவற்றையும் செய்து அனுப்ப வேண்டும் என்பதும் அடங்கும்.

3:14 மற்ற சகோதரர்களும் விருந்தோம்பல் புரிய வேண்டும், நோயுற்றோரையும், வேதனைப் படுபவரையும் கவனிக்க வேண்டும். தேவையுள்ளோர் தேவையறிந்து அவர்களுக்குத் தாராளமாக உதவிபுரிய வேண்டும் என்று தீத்து அவர்களுக்கும் (**நம்முடையவர்கள்**) போதிக்க வேண்டும். வெறுமனே அவர்கள் தங்களுடைய தேவைகளையும், விருப்பங்களையும் மட்டும் நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக, அதிக வாய்ப்புகள் அற்ற மக்களுக்குப் பகிர்ந்தளிக்கத் தக்க வகையில் கிறிஸ்தவத் தரிசனத்தோடு பொருளீட்ட வேண்டும் (எபே. 4:28 -ஆம் வசனத்தைக் காண்க). இ.ீ.து அவர்களை தன்னலம் பேணுதல் என்னும் இழிநிலையிலிருந்தும், வீணான கனியற்ற வாழ்க்கை என்னும் அவலத்திலிருந்தும் பாதுகாக்கும்.

3:15 கடைசி வாழ்த்துரை வழக்கமாகச் சொல்லப்படுவதுதான் என்றோ, முக்கியமானதன்று என்றோ எண்ணுவதற்கு இடமில்லை. ஏளனப் படுத்தப்பட்டவர்களாக, துன்புறுத்தப்பட்டவர்களாக மிகச் சிறுபான்மையினராகக் கிறிஸ்தவர்கள் இருக்கும் நாடுகளில், இத்தகைய கனிவு மிக்க சொற்கள் அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் அன்பையும் உற்சாகத்தையும் கொண்டு வரும். அப்போஸ்தலனுடன் இருந்த யாவரும் தீத்துவுக்குத் தங்களுடைய வாழ்த்துதலை அறிவித்தார்கள். மேலும் பவுலையும் அவருடனிருந்த உடன் ஊழியரையும் தங்களுடைய விசுவாசத்தின் மூலமாக அன்புகூர்ந்த யாவருக்கும் தீத்து அப்போஸ்தலனின் வாழ்த்துதலைத் தெரிவிக்க வேண்டும். தன்னுடைய வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்திய கருத்துடன் பவுல் இம்மடலை முடிக்கிறார் - கர்த்தருடைய **கிருபை. கிருபையானது உங்கள் அனைவரோடும் இருப்பதாக**!

அடிக்குறிப்புகள்

1 (1:1) தெரிந்துகொள்ளுதல் பற்றிய முழு விவரங்களையும் அறிய எபேசியர் 1 மற்றும் ரோமர் 9 ஆகிய அதிகாரங்களைக் காண்க.

2 (1:6) சில சூழ்நிலைகளில் விவாகரத்து சரியானது என்று பலர் கருதினாலும், சபையில் பொறுப்பு வகிப்பவர் விவாகரத்து செய்தவராக இருக்கக் கூடாது.

3 (2:7) ஆங்காங்கே சில சொற்கள் விடப்பட்டுள்ளமை (NKJV அடிக்குறிப்பைக் காண்க), பெரும்பாலும் எகிப்திலிருந்து கிடைக்கப்பெற்ற மிகப்பழைமை வாய்ந்த பிரதிகளைச் சார்ந்து எழுதப்பட்ட நடுநிலைப் பிரதிகளின் ஆதரவைப் பெற்றுள்ளது. KJV மற்றும் NKJV மொழிபெயர்ப்புகள் பாரம்பரிய பிரதியையே (TR) ஆதரிக்கின்றன. பாரம்பரியப் பிரதியானது பொதுவாக, பெரும்பான்மைப் பிரதிகளை (Majority text) ஆதரித்தபோதிலும், அவற்றையே முழுமையாகச் சார்ந்தது என்று சொல்லுவதற்கில்லை.

4 (2:14) இன்றைய நாட்களில் இது விநோதமாகத் தோன்றுகிறது. ஏனெனில் *"Peculiar"* என்ற சொல்லின் பொருள் இப்பொழுது மாற்றமடைந்துவிட்டது. KJV மொழிபெயர்ப்பானது மிகச் சரியான மொழிபெயர்ப்பாகும். அதில் "*தவறுகள்*" என்று சொல்லப்படுபவை (இங்கு காணப்படுவது போல) ஏறத்தாழ நாலு நூற்றாண்டுகள் கால இடைவெளியில் ஆங்கில மொழியில் ஏற்பட்ட மாற்றங்களினால் உண்டானவையாகும்.

5 (3:10) *வேதப்புரட்டு* (KJV - heretic) என்னும் சொல், பிளவு அல்லது *பிரிவினை உண்டாக்கக்கூடிய* (NKJV - divisive) என்னும் பொருளுடைய கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது. சபைகளில் பிரிவினை உண்டாக்கக் கூடியவன் பொதுவாக, தவறான கொள்கைகளை அதாவது வேதப்புரட்டுகளைப் போதிக்கக் கூடியவனாயிருப்பான். ஆனால் இச்சொல் *hairetikos* என்னும் சொல்லின் பிற்கால வளர்ச்சியேயாகும்.

நூல் விவரப் பட்டியல்

1 தீமோத்தேயு நூலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நூல் விவரத் தொகுப்பினைக் காண்க.

அப்போஸ்தலனாகிய பவுல்

பிலேமோனுக்கு எழுதின நிருபம்

முன்னுரை

''மடல் எழுதும் கலையில் இது உண்மையான மிகச்சிறிய தலைசிறந்த வேலைப்பாடு'' – ஏர்னஸ்ட் ரேனன்

''நாம் யாவரும் (கர்த்தருடைய) ஒநேசிமுகள் ஆவோம்'' – மார்டின் லுத்தர்

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

பவுல் எழுதிய இந்தச் சிறிய நூல் இல்லாமலேயே நாம் எல்லாவற்றையும் நன்றாகச் செய்ய முடியும் என்று சிலர் அறிவுரை கூறலாம். ஆனால் அது முற்றிலும் தவறான கருத்தேயாகும். முதலாவதாக, இம்மடல் அப்போஸ்தலனுடைய இருதயத்திலிருந்து நேரடியாக எழுந்த நம்பிக்கைக்குகந்த தனிப்பட்ட மடல் என்பது உலகம் முழுவதும் ஒப்புக்கொண்ட ஒரு பேருண்மையாகும். இவ்வாறாக, இம்மடல் முதல் நிலையில் தலைசிறந்த படைப்பாகத் திகழ்கிறது. இம்மடல் அவ்வப்போது ஓடிச்சென்ற ஓர் அடிமையைப் பற்றிய உலகீய ரோம எழுத்தாளர் இளவல் பிலின்னி என்பார் தனது நண்பருக்கு எழுதிய மடலோடு ஒப்பிடப்படுகிறது. சுவைநயம் மிக்க சொல்லாட்சித் திறனைத் தவிர்த்துக் காண்போமானால், பவுலின் இம்மடல் தலைசிறந்ததாக விளங்குகிறது.

இச்சிறிய மடல் மரியாதையோடு கூடியதாகவும், பாய்ந்து வரும் நகைச்சுவைக் காட்சியுடன் கூடிய சாதுரியம் நிறைந்ததாகவும் பவுலின் அன்பு நிறைந்த இருதயத்திலிருந்து வெளிப்பட்டிருக்கிறது. இது நேரடியாகத் திருமறைக் கோட்பாடுகளைக் கற்பிக்கவில்லையெனினும் "பொறுப்பைச் சுமத்துதல்" என்னும் கோட்பாட்டுக்கு நிறைவான எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஏனெனில் பவுல் "அதை என் கணக்கிலே வைத்துக் கொள்ளும்" என்று இதில் கட்டளையிட்டிருக்கிறார். எவ்வாறு ஒநேசிமுவின் தவறுகள் பவுலின் "கணக்கில்" சுமத்தப்பட்டனவோ, மேலும் ஒநேசிமுவின் உதவியற்ற நிலையில், அவர் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த பவுல் ஆற்றல் உடையவராக இருந்தாரோ அதுபோல, ஒரு கிறிஸ்தவனுடைய பாவங்கள் கர்த்தருடைய கணக்கில் வைக்கப்படுகின்றன அல்லது சுமத்தப்படுகின்றன. மேலும் நமது கர்த்தருடைய இரட்சிக்கும் தகுதிகள் அவனுடைய கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. மிகப்பெரிய சீர்திருத்தவாதியான மார்டின் லுத்தர் இவ்வாறு எழுதியிருப்பது குறித்து வியப்படைய வேண்டியதில்லை:

> புனித பவுல் எவ்வாறு தன்னையே வறிய ஒநேசிமுக்காகச் செலவு செய்ய முன்வந்தார் என்பதை நாம் இங்கு காண்கிறோம். தனக்குரிய எல்லாவற்றையும்கொண்டு அவர் ஒநேசிமுவின் எஜமானாகிய பிலேமோனிடம், தானே ஒநேசிமு என்னும் நிலையில், அதாவது, தானே அவருக்குத் தீங்கிழைத்தது போல வேண்டிக்கொள்கிறார். கிறிஸ்து நமக்காகத் திருத்தந்தையாகிய தேவனிடம் வேண்டிக் கொண்டதுபோல, பவுலும் பிலேமோனிடம் ஒநேசிமுவுக்காக வேண்டுகிறார்... நாம் யாவரும் எனது எண்ணத்தின்படி, அவருடைய ஒநேசிமுகளாக இருக்கிறோம்.[1]

2. நூலாசிரியர்

பிலேமோன் மடல் பவுலால் எழுதப்பட்டது என்பதைப் பெரும்பாலான மாற்றுக் கருத்துடைய எதிர்ப்பாளர்கள் தவிர, மற்ற யாவரும் ஒப்புக் கொள்கிறார்கள். உண்மையில், இம்மடலுடன் நெருங்கிய தொடர்புடைய கொலோசெயர் மடலின் நம்பகத் தன்மையைத் திருவாளர் ரேனன் மறுத்து உரைத்த தனது செயலைத் தானே கேள்விகேட்கும் வகையில் அவர் இம்மடலின் எழுத்தாளரைக் குறித்து நம்பிக்கை உடையவராக இருந்தார்.

பிலேமோன் மடல் மிகச் சுருக்கமானது மற்றும் தனிப்பட்ட ஒருவருக்கு எழுதப்பட்டது என்ற காரணங்களால் தொடக்க காலத்தில் எழுத்தாளர்கள் இம்மடலிலிருந்து பெருமளவு மேற்கோள்களைப் பயன்படுத்தவில்லை.

புறச்சான்றுகள்

இக்னேஷியஸ், தெர்தூலியன், ஓரிஜன் ஆகியோர் எழுதியவற்றில் பிலேமோன் மடலின் பகுதிகள் அல்லது மறைமுகக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. எல்லாக் கிறிஸ்தவர்களும் ஏற்றுக்கொண்ட நூலாக இம்மடல் திகழ்கிறது என்று யூசிபியஸ் கூறுகிறார். மார்சியன் தனது "வேதத் தொகுப்பில்" இதனைச் சேர்த்துள்ளார். முரடோரியன் வேதத் தொகுப்பிலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அகச்சான்றுகள்

இச்சிறு மடலிலும் பவுல் தனது பெயரை மும்முறை குறிப்பிட்டுள்ளார் (வச. 1, 8, 19). 2, 23, 24 ஆகிய வசனங்கள் கொலோசெயர் 4:10-17 பகுதியோடு மிக நெருங்கிய தொடர்புடையவை. ஆகவே இவ்விரு மடல்களும், ஒன்று மற்றொன்றின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய உதவுகின்றன. இவ்வாறாக, இம்மடலின் அகச்சான்று புறச்சான்றுடன் இசைவுடையதாக விளங்குகிறது.

3. எழுதப்பட்ட காலம்

கொலோசெயர் மடல் அனுப்பப்பட்ட அதே நேரத்தில் இந்த மடலும் அனுப்பப்பட்டது (ஏறத்தாழ கி. பி. 60), அதாவது நம்முடைய கர்த்தர் விண்ணகம் ஏகிய காலத்திற்கு ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் கழித்து இம்மடல் எழுதப்பட்டது.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

இந்த மடலின் பகுதிகளிலிருந்தும், பவுல் கொலோசெயருக்கு எழுதிய மடலிலிருந்தும் குறிப்புகளை ஒன்று சேர்த்து இம்மடலின் பின்னணியின் கதையைக் காணலாம். பிலேமோன் கொலோசே பட்டணத்தைச் சேர்ந்தவர் என்றும் (கொலோ. 4:17 மற்றும் பிலே. 2 ஆகிய வசனங்களை ஒப்பிடுக), அவர் அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாக மனந்திரும்பினார் என்றும் (வச. 19) தோன்றுகிறது. அவருடைய அடிமைகளில் ஒருவராகிய ஒநேசிமு அவரைவிட்டு ஓடிச்சென்று விட்டார் (வச. 15,16). மேலும் ஒநேசிமு தன்னுடைய எஜமானின் உடைமைகளில் சிலவற்றைத் திருடிச் சென்று விட்டார் என்ற குறிப்பையும் காண்கிறோம் (வச. 18).

பவுல் ரோமாபுரிச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, தப்பியோடிய மனிதர் அங்கு சென்றார் (வச. 9). அப்போஸ்தலன் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தருணமா அல்லது அவர் தனது வாடகை வீட்டில் சுதந்தரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டிருந்த தருணமா (அப். 28:30) அது என்பதை நம்மால் உறுதியாகக் கூறமுடியவில்லை. இந்நிகழ்ச்சிகள் சங்கிலிபோல நமது ஆர்வத்தைத் தூண்டிவிடக் கூடியவையாக உள்ளன. இந்நிலையில் பரபரப்பு மிகுந்த மாபெரும் நகரமாகிய ரோமாபுரியில் ஒநேசிமு பவுலைச் சந்திக்க நேரிட்டது. மேலும் அவர் பவுலின் ஊழியத்தால் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்டார் (வச. 10). அடுத்த சில நாட்களில் அப்போஸ்தலனுக்குக் குறிப்பிடத்தக்க அளவிற்கு உதவிபுரியக் கூடிய மனிதராக அவர் விளங்கினார் (வச. 13). ஆனால் ஒநேசிமு பிலேமோனிடம் திரும்பிச் செல்ல வேண்டும். முன்னர் இழைத்த தவறுகளைச் சரிசெய்ய வேண்டும். இதுவே முறையானது என்று இருவரும் ஒப்புக்கொண்டார்கள். ஆகவே பவுல் இந்த மடலைப் பிலேமோனுக்கு எழுதினார். அவர் ஒநேசிமுக்காகப் பரிந்து பேசுவதையும், பிலேமோனின் தயவைப் பெற்று முன்னிருந்த நிலைக்கு ஒநேசிமு ஏன் கிருபையோடு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான வலிமைமிக்க காரணங்களை எடுத்துரைப்பதையும் நாம் இம்மடலில் காணமுடியும் (வச. 17). அதே நேரத்தில் பவுல் கொலோசெயருக்குத் தனது மடலை எழுதியிருந்தார். அவர் தீகிக்குவை இம்மடல்களை எடுத்துச் செல்லும் அஞ்சல்காரராகப் பயன்படுத்தி, அவருடன் ஒநேசிமுவைக் கொலோசே பட்டணத்துக்குத் திரும்பிச் செல்லும்படி அனுப்பினார் (கொலோ. 4:7-9).

பவுல் எழுதிய கடிதங்களிலேயே இதுதான் மிகவும் தனிப்பட்ட நிலையிலானது. தீமோத்தேயு மற்றும் தீத்து போன்ற தனிநபர்களுக்கும் அவர் மடல்களை எழுதினார். ஆனாலும் அம்மடல்களில் சபையில் நடைமுறைச் செயல்பாடுகள் பற்றிய செய்திகள், தனிநபர் சார்ந்த செய்திகளைக் காட்டிலும் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (வச. 1-3).

2. பிலேமோனுக்காகப் பவுல் ஸ்தோத்திரம் செலுத்துதலும் மன்றாட்டை ஏறெடுத்தலும் (வச. 4-7).

3. ஒநேசிமுவுக்காகப் பவுல் வேண்டுதல் (வச.8-20).

4. முடிவுரை (வச. 21-25).

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	துதித்தல்		மன்றாடுதல்		முடிவுரை	
காலம்	கி. பி. 60					
தலைப்பு	பிலமோனின் பண்புகள்		பவுலின் மன்றாட்டு		பவுலின் எதிர்பார்ப்பும் வாழ்த்தும்	
பகுப்பு	பாராட்டு	துதி	மன்றாட்டு	பிணையம்	எதிர்பார்ப்பு	வாழ்த்து
வசனம்	1-3	4-7	8-16	17-20	21-22	23-25
இடம்	ரோமச் சிறைச்சாலை					

விளக்கவுரை

1. வாழ்த்துரை (வச. 1-3)

வச. 1 பவுல் தன்னைஅப்போஸ்தலன் என்று அறிமுகப்படுத்தாமல் கட்டப்பட்டவர் என்றே அறிமுகப்படுத்துகிறார். அவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கலாம், ஆனால் அவர் தன்னைச் சாதகமற்ற தாழ்நிலையில் இருத்தி, வேண்டுதல் செய்வதையே தெரிந்துகொண்டார். இருந்த போதிலும் அந்தத் தாழ்நிலையிலும் அப்போஸ்தலன் விண்ணக மகிமையினால் பொலிவுடன் காணப்படுகிறார். அவர் எப்பொழுதும் தன்னைக் கிறிஸ்து இயேசுவின் கைதியாகவே எண்ணினார். தான் ஓர் இழிவான ரோமநாட்டுக் கைதி என்று அவரால் ஒரு மணித்துளி கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை! அவர் ரோமப் பேரரசனுக்கு அப்பாற்சென்று அரசருக்கெல்லாம் அரசராகிய இயேசு கிறிஸ்துவைக் காண்கிறார். அவர் இம்மடலை எழுதியபோது தீமோத்தேயு அவருடன் இருந்தார். ஆகவே அவர் தன்னோடிருந்த விசுவாசமுள்ள சீடரோடு இம்மடலைத் தொடர்புபடுத்துகிறார். ஆயினும் இம்மடல் பவுலால் எழுதப்பட்டது என்னும் உண்மை ஐயத்திற்கு இடமற்றது.

இம்மடல் முதன்மையாக பிலேமோனுக்கு எழுதப்பட்டது. அவருடைய பெயரின் பொருள் "பாசமுள்ளவர்" என்பதாகும். அவரைக் குறித்து, **எங்களுக்குப் பிரியமுள்ளவர்** என்றும் **உடன் வேலையாள்** என்றும் பவுல் கூறியிருப்பதால், அவர் தனது பெயருக்கு உண்மையுள்ளவராயிருந்தார் என்பது தெளிவு.

வச. 2 அப்பியாள் என்னும் பெயர் பெண்பாற் பெயர் என்பதால் பெரும்பாலான அறிஞர்கள், அப்பெண்மணி பிலேமோனின் மனைவி என்றே கருதுகிறார்கள். இந்த மடலின் ஒரு பகுதி அப்பெண்மணிக்கு எழுதப்பட்டிருக்கிறது என்னும் உண்மை, கிறிஸ்தவம் எவ்வளவாகப் பெண்ணினத்தை உயர்த்திப் பேசுகிறது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.[2] பின்னர் அது எவ்வாறு அடிமைகளை உயர்த்திப் பேசுகிறது என்பதையும் காணவிருக்கிறோம். பரிசுத்தமான கற்பனை அர்க்கிப்புவைப் பிலேமோனின் மகன் என்றே முடிவுசெய்கிறது. பெரும்பாலோரின் கணிப்பு இதுவே. இதனை நம்மால் உறுதியாகக் கூறமுடியாதெனினும், அவ்விளைஞர் கிறிஸ்தவப் போராட்டத்தில் செயலூக்கம் நிறைந்த வகையில் ஈடுபட்டார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பவுல் அவரை **உடன் போர்ச்சேவகன்** என்று வருணித்துக் கனப்படுத்துகிறார். பரிசுத்த வேட்கையில் அனலாகத் திகழ்ந்து, கர்த்தராகிய இயேசுவுக்குத் தன்னை ஒப்புவித்த சீடராக அவரை நாம் உருவகப்படுத்திக் காண்கிறோம். சிறப்பான கவனத்துக்கு உரியவர் என்று அவரைக் குறித்துக் கருதிய பவுல் கொலோ செயர் மடலில் தனிப்பட்ட வகையில் குறிப்பிட்டிருப்பதாவது: "அர்க்கிப்பைக் கண்டு, 'நீர் கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாக' என்று சொல்லுங்கள்" (கொலோ. 4:17).

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவ இல்லத்தின் படவுருவை, பிலேமோன், அப்பியாள் மற்றும் அர்க்கிப்பு ஆகியோர் நம்முன் நிறுத்துகிறார்களெனில், **உம்முடைய வீட்டிலே கூடிவருகிற சபை** என்னும் சொற்றொடர் புதிய ஏற்பாட்டுச் சபையை நினைவுபடுத்துகிறது. பிலேமோனின் **வீடு** விசுவாசிகள் கூடிவருகிற சபையாக விளங்கியது என்னும் உண்மை இவ்வசனத்திலிருந்து நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆராதனைக்கும், ஜெபத்துக்கும், திருமறையைக் கற்பதற்கும் அவர்கள் அங்குதான் கூடிவந்தார்கள். அவர்கள் பிரகடனப்படுத்திய செய்தியை ஒருபோதும் வரவேற்காத உலகத்தினிடமாய், கிறிஸ்துவின் சாட்சியை அறிவிக்கும்படி அங்கிருந்துதான் சென்றார்கள். கேட்டவர்கள் மறுத்துரைத்தாலும் அவர்களால் அந்தச் செய்தியை ஒருபோதும் மறக்க முடியாது. பிலேமோனின் இல்லத்தில் இவ்வாறு கூடிவந்த மக்கள் கிறிஸ்து இயேவுக்குள் ஒன்றாயிருந்தார்கள். செல்வந்தர் ஏழை, ஆண் பெண், முதலாளி அடிமை யாவரும் தேவகுடும்பத்தின் முழு வளர்ச்சி அடைந்த அங்கங்களாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் தங்களுடைய தொழில் உலகிற்குத் திரும்பியபோது, சமுதாய வேறுபாடுகள் மீண்டும் தோற்றமளித்தன. ஆனால் கர்த்தருடைய பந்தியில், எடுத்துக்காட்டாக, அவர்கள் யாவரும் பரிசுத்த ஆசாரியர்கள் என்னும் பொதுவான நிலையில் காணப்பட்டார்கள். அங்கே பிலேமோனுக்கு ஒநேசிமுவைக் காட்டிலும் முந்தின இடம் இல்லை.

வச. 3 தான் நேசித்த மக்களுக்குப் பவுல் கூறிய பண்புகள் கொண்ட வாழ்த்துரை, அவர் சிந்தனையில் தோன்றிய சொல்லோவியங்களிலேயே மிகச் சிறந்ததாகக் காணப்படுகிறது. தேவன் தம் மக்கள் மீது பொழியக்கூடிய தகுதிக்கு அப்பாற்பட்ட தயவு **கிருபையில்** அடங்கியிருக்கிறது. அவருடைய கிருபையினால் கற்பிக்கப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை உறுதிப்படுத்திய ஆவிக்குரிய சாந்தமும் அமைதியுமே இங்கு சமாதானம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விரண்டு நற்பேறுகளும் **நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்தும்** வருகின்றன. இது முக்கியத்துவம் நிறைந்ததாயிருக்கிறது. **கிருபையையும் சமாதானத்தையும்** நல்குவதில் கர்த்தராகிய இயேசு **பிதாவாகிய தேவனுக்குச்** சமமானவராக இருக்கிறார் என்பது இதன் பொருளாகும். கிறிஸ்து உண்மையான முழுக் கடவுளாக இல்லாதிருப்பார் எனில், இத்தகைய கனத்தை அவருக்குக் கொடுப்பது தேவ தூஷணமாகும்.

2. பிலேமோனுக்காகப் பவுல் ஸ்தோத்திரம் செலுத்துதலும் மன்றாட்டை ஏறெடுத்தலும் [வச. 4-7].

வச. 4,5 பிலேமோனுக்காகப் பவுல் மன்றாடிய போதெல்லாம், இந்த உயர்குணமுடைய சகோதரனுக்காக அவர் ஸ்தோத்திரம் செலுத்தினார். தேவதயவின் ஒரு நனிசிறந்த பரிசுப்பொருளாக இவர் திகழ்கிறார். இவரை ஒரு நண்பராகவும் சகோதரனாகவும் நாம் பெற வேண்டும் என்று எண்ணுமளவிற்கு இவர் நற்குணம் வாய்ந்தவர். தனது மடலின் தொடக்கத்தில் பவுல் சாதுரியமாகச் சொற்களைப் பயன்படுத்தினார் என்றும், ஒநேசிமுவைத் தன்னிடமாய்த் திரும்பவும் சேர்த்துக்கொள்வதற்குப் பிலேமோனின் இருதயத்தை இளகச் செய்யவேண்டும் என்பதற்காக இவ்வாறு எழுதுகிறார் என்றும் சில வேத விரிவுரையாளர்கள் கருதுகிறார்கள். இது அப்போஸ்தலன் தவறான நோக்கம் கொண்டிருந்தார் என்று கூறுவது போலவும், தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட சொற்களைக் களங்கப்படுத்துவதாகவும் காணப்படுகிறது. உண்மையாகவே அவர் இவ்வாறு கருதியிராவிடில் இந்தச் சொற்களை எழுதியிருக்கமாட்டார்.

பிலேமோனின் இரண்டு பண்புகள் பவுலுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தன. **கர்த்தராகிய இயேசுவினிடத்திலும் எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலும்** அவர் கொண்டிருந்த **அன்பும் விசுவாசமுமே** அவை. கிறிஸ்துவினிடத்தில் அவர் கொண்டிருந்த விசுவாசம், தெய்வீக வாழ்வின் வேரைப் பெற்றிருந்தார் என்பதையும், எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலும் அவர் கொண்டிருந்த அன்பு, அதன் கனியையும் அவர் பெற்றிருந்தார் என்பதையும் காட்டுகின்றன. அவருடைய விசுவாசம் விளைபயன் உடையதாயிருந்தது.

இதற்கு இணையான நன்றியுரையை அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 1:15,16 - ஆகிய வசனங்களிலும், கொலோசெயர் 1:3,4 - ஆகிய வசனங்களிலும் அங்கிருந்த பரிசுத்தவான்களுக்காக ஏறெடுத்திருப்பதைக் காணவியலும். ஆயினும் அந்த இடங்களில் அவர் விசுவாசத்தை அன்பிற்குமுன் வைத்திருக்கிறார். இந்த வேறுபாட்டிற்கான காரணம் என்ன? மாக்லேரன் விடை கூறுகிறார்: "இங்கு கையாளப்பட்டிருக்கும் வரிசைமுறை, வெளிப்பாட்டிலிருந்து அதற்கான காரணத்தை தோண்டித் துருவி ஆராய்ந்து பார்க்கும் முறையாகும். இதற்கு இணையான பகுதிகளில் கையாளப்பட்டிருக்கும் வரிசைமுறை வேரிலிருந்து மலர் எவ்வாறு தோன்றுகிறது என்னும் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் முறையாகும்."

பவுல் வரிசைப்படுத்தியிருக்கும் முறையில் இன்னுமொரு கூறு ஆர்வம் மிக்க வகையில் விளங்குகிறது. "எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள அன்பு" என்னும் சொற்றொடரை அவர் இரண்டாகப் பிரித்து, **கர்த்தராகிய இயேசுவினிடத்தில் உள்ள விசுவாசம்** என்னும் சொற்றொடரை இடையில் புகுத்துகிறார். இதனை நாம் இவ்வாறுதான் எழுதவேண்டும், **"எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள (கர்த்தராகிய இயேசுவினிடத்திலுள்ள விசுவாசம்) அன்பு."** அவருடைய **விசுவாசத்தின்** இலக்கு **கர்த்தராகிய இயேசு.** அவருடைய **அன்பின்** இலக்கு **பரிசுத்தவான்கள்.** ஆனால் பவுல் விசுவாசத்தைக் குறித்த சொற்றொடரை, அன்பைக் குறித்த சொற்றொடரால் உறையிட்டு மூடுகிறார். பிலேமோன் அடிமையாகிய ஒநேசிமுவினிடத்தில் தனது அன்பைக் காட்டி, தன்னுடைய விசுவாசத்தின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்த ஓர் அருமையான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளப்போகிறார் என்னும் முன்னெச்சரிக்கையாக இது அமைந்திருக்கிறது. இவ்வாறாக, **எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலும்** என்னும் சொற்றொடரிலுள்ள *எல்லா* என்னும் சொல் சிறப்பான முறையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

வச. 6 முன்னிரண்டு வசனங்களில் பவுல் பிலேமோனுக்காக நன்றி ஏறெடுத்துள்ளார். இந்த வசனத்தில் அவருக்காகப் பவுல் ஏறெடுக்கிற மன்றாட்டின் இயல்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. **உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம்** என்னும் சொற்றொடர், பிலேமோன் பிறரிடம் காட்டிய செயல்முறை தயவைக் குறிக்கிறது. கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறதால் மட்டுமின்றி, பசியுற்றோருக்கு உணவளித்து, திக்கற்றோருக்கு உடைகொடுத்து, இறப்பால் இழப்புக்கு

ஆளானோரைத் தேற்றி, கடுந்துன்பம் அடைந்த வருக்கு இடுக்கண் களைந்து, - ஆம், ஓடிப்போன அடிமையை மன்னிக்கவும் செய்து நாம் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும்.

அடுத்ததாக, பிலேமோனுடைய நற்செயல்கள் யாவும் கிறிஸ்து இயேசுவினிடத்திலிருந்து வந்தன என்பதை பலரும் ஒப்புக்கொள்ளும்படியாக, அவருடைய ஈகைக்குணம் நிறைந்த வாழ்க்கை வழிநடத்த வேண்டும் என்று பவுல் வேண்டுகிறார். தேவனுடைய அன்பு ஒருவருடைய வாழ்க்கையில் வெளிப்படும்போது, அங்கிருந்து பெருமளவில் வல்லமையும் தூண்டுதலும் வெளிப்படும். ஒரு நூலில் அன்பைக் குறித்து வாசிப்பது நல்லதுதான், ஆனால் அந்தச் சொல் ஒருவருடைய வாழ்க்கையில் மாம்சமாக மாறி வெளிப்படுவது எந்த அளவிற்குப் பிறரை நிர்பந்திக்கும் செய்தியாக விளங்கும்!

வச. 7 பிலேமோனின் பெருந்தன்மை வெள்ளமெனப் பெருக்கெடுத்து ஓடுகிறது, அவருடைய அன்பு தன்னையே தியாகமாக அர்ப்பணிக்கச் செய்துள்ளது என்னும் செய்தி கொலோசெ பட்டணத்திலிருந்து ரோமாபுரிக்கு பயணம் செய்த கிறிஸ்துவின் கைதிக்கு மிகுந்த சந்தோஷத்தைக் (அல்லது ஸ்தோத்திரத்தை, NKJV அடிக்குறிப்பு)[3] கொண்டுவந்தது. பிலேமோனைக் கர்த்தரிடமாய் வழிநடத்திய செயல் பவுல் பெற்ற மிகப்பெரிதான சிறப்புரிமையாக இருந்தது, ஆனால் விசுவாசத்தில் அவருடைய பிள்ளையாகிய பிலேமோன், இப்பொழுது கர்த்தருக்காக நன்கு செயல்புரிகிறார் என்று கேள்விப்பட்டபோது, அது அவருக்கு எத்தகைய பரிசாகக் காணப்பட்டிருக்கும். இவ்வினிய **சகோதரன்** மூலமாகப் **பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள்** மிகப்பெரிய அளவில் **இளைப்பாறுதல்** அடைந்தன, அதுவும் சிறப்பாக அவருடைய **அன்பினாலே** இளைப்பாறுதல் அடைந்தன என்று கேள்விப்பட்டபோது, அது எவ்வளவாக உறுதியளித்திருக்கும். ஒருவரும் தனக்காக வாழ்கிறதில்லை, ஒருவரும் தனக்காக மரணம் அடைகிறதுமில்லை. நம்முடைய செல்வாக்கு எந்த எல்லைவரை செல்லும் என்பதை நம்மால் அளக்க முடியாது. நம்முடைய செயல் மற்றவர்களிடம் தாக்கத்தை உண்டு பண்ணுகிறது. நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ நாம் எல்லையற்ற அளவிற்குச் செயல்திறம் மிக்கவர்களாக இருக்கிறோம்.

3. ஒநேசிமுவுக்காகப் பவுல் வேண்டுதல் செய்தல் (வச. 8-20)

வச. 8,9 இப்பொழுது பவுல் மடலின் முக்கிய பகுதிக்கு வருகிறார். ஒநேசிமுவுக்காக அவர் வேண்டுதல் செய்யப் போகிறார். ஆனால் அவர் அந்தப் பொருளை எவ்வாறு அணுகப் போகிறார்? அவர் ஓர் அப்போஸ்தலன் என்னும் நிலையில், "இப்பொழுதும் என் சகோதரனே, நீர் ஒரு விசுவாசி என்னும் நிலையில், ஓடிப்போன அடிமையை மன்னித்து, முன்னிருந்த நிலைக்கு ஏற்றுக் கொள்ள வேண்டும், இது உம்முடைய கடமை, இதை நீர் செய்யவேண்டுமென்று கூறுகிறேன்" என்று பிலேமோனிடம் கூறியிருக்கலாம், அது நியாயமான செயலாகவே இருந்திருக்கும். பவுல் இவ்விதமாகக் கட்டளையிட, பிலேமோன் அதற்குக் கீழ்ப்படிந்திருப்பார் என்பதில் ஐயமேதுமில்லை. ஆனால் அது இந்தச் சூழ்நிலையில் போலியான வெற்றியாக இருந்திருக்கும்.

பிலேமோனின் இருதயத்தை அப்போஸ்தலன் வென்றிருக்கவில்லையென்றால் ஒநேசிமு கசப்பான வரவேற்பையே பெற்றிருப்பார். அன்பின் தூண்டுதலால் உண்டான கீழ்ப்படிதல் மட்டுமே, அந்த வீட்டில் அடிமையின் நிலையைச் சுமுகமானதாக விளங்கச் செய்யும். பவுல் இதனை எழுதும்போது ஒருவேளை, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்னும் கர்த்தரின் கூற்றை நினைத்துப் பார்த்திருப்பார் என்றே தோன்றுகிறது (யோவான் 14:15). ஆகவே அவர் கட்டளையிடுவதற்குப் பதிலாக **அன்பினிமித்தம் மன்றாடுவதையே** சிறந்ததெனத் தெரிந்துகொண்டார். கர்த்தராகிய இயேசுவுக்காகக் கட்டுண்டிருந்த கிறிஸ்துவின் தூதுவராகிய[4] **முதிர்வயதினரிடம்** பிலேமோனின் அன்பு, கடல் கடந்து சென்று சேருமா? பவுல் **முதிர்வயதுள்ளவராக இருந்தார்,** இயேசு கிறிஸ்துவினிமித்தம் கட்டப்பட்டிருந்தார் - இந்த இரண்டு காரணங்களின் நிமித்தம் அவர் உள்ளம் இரங்குமா? அந்த நேரத்தில் அப்போஸ்தலன் எத்தனை வயது நிரம்பியவராயிருந்தார் என்பது தெரியவில்லை. ஐம்பத்து மூன்றிலிருந்து அறுபத்து மூன்றுக்குள் இருந்திருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. இந்நாட்களில் அது முதிர்வயது என்று கருதப்படுவதில்லை. ஆனாலும் கிறிஸ்துவின் திருப்பணியில் அவர் தன்னையே சுட்டு அழித்துக்கொண்டதன் காரணமாக

உரிய காலத்திற்கு முன்னமே வயது முதிர்ந்த வராகக் காணப்பட்டார் போலும். மேலும் அவர் இப்பொழுது **கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட் டப்பட்டிருந்தார்.** இதனைக் கூறும்போது, அவர் அனுதாபத்தை எதிர்பார்க்கவில்லை. மாறாக, பிலேமோன் தனது தீர்மானத்தை எடுப்பதற்கு முன் இவ்வுண்மைகளை நினைத்துப்பார்ப்பார் என்றே அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

வச. 10 இந்த வசனத்தின் மூல மொழியில் ஒநேசிமு என்னும் பெயர் இறுதியில் வருகிறது. **"என்னவென்றால், கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனைக்** கருத்திற்கொண்டு **உம்மி டத்தில் மன்றாடுகிறேன், அதாவது - ஒநேசிமு வுக்காக."** கடமை தவறிய அடிமை ஒநேசிமுவின் பெயரைப் பிலேமோன் நெருங்கி வருகையில், அவர் முழுவதுமாக நிராயுதபாணியாக மாறிவிட் டார். அந்தப் "போக்கிரி" இப்பொழுது மனம் மாறி விட்டார் என்பதை அவர் அறிகையில் அது அவ ருக்கு எவ்வளவு வியப்பைத் தந்திருக்கும் என்ப தைக் கற்பனை செய்துபாருங்கள். அதுவுமல்லா மல் கட்டப்பட்டிருந்த பவுலின் மூலமாக அவர் கிறிஸ்துவினிடமாய் வழிநடத்தப்பட்டார் என்பது அதை விட ஆச்சரியமாயிருந்திருக்கும்!

ஒருவருடைய வாழ்க்கையில் காரியங்கள் யாவும் நன்மைக்கென ஒன்றுகூடி வருகின்றன; அவை யாவற்றின் பின்னணியிலும் தேவனே ஈடுபட்டு நிறைவேற்றி வந்திருப்பார். அவ்வுண் மையை அவர் அந்த மனிதனுக்கு வெளிப்படுத் தும் தன்மையானது, கிறிஸ்தவ வாழ்க்கையில் மகிழ்ச்சி தரும் இரகசியங்களில் ஒன்றாகக் காணப் படும். இதனைத் தற்செயலாக நடந்த நிகழ்ச்சி என்றோ, சம்பந்தமற்ற வகையில் நிகழ்வுகள் ஒன்றுகூடின என்றோ விளக்கிச் சொல்ல முடி யாது. முதலாவதாக, பவுல் பிலேமோனைக் கர்த்தரிடமாய் வழிநடத்தினார். பின்னர் அப் போஸ்தலன் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யும்படி ரோமாபுரிக்குக் கொண்டுசெல்லப் பட்டார். பிலேமோனின் அடிமை வீட்டைவிட்டு ஓடி ரோமாபுரிக்குச் சென்றார். எவ்வாறோ அவர் பவுலைச் சந்திக்க நேரிட்டது, அப்பொழுது அவர் மனந்திரும்பினார். எஜமானும் அடிமையும் ஒரே பிரசங்கியின் மூலமாக வழிநடத்தப்பட்டு மறுபடி யும் பிறந்தார்கள். ஆனால் தொலைதூரமுள்ள வெவ்வேறு இடங்களில் முற்றிலும் வெவ்வேறு சூழ்நிலைகளில் அவர்களுடைய இரட்சிப்பு நிகழ்ந் தது. இவையாவும் தற்செயலாக நிகழ்ந்தனவா?

வச. 11 ஒநேசிமு என்னும் பெயருக்குப் **பிர யோஜனமுள்ளவன்** என்பது பொருளாகும். ஆனால் அவர் வீட்டைவிட்டு ஓடினபோது, அவ ரைத் தகுதியற்ற கயவன் என்று அழைக்கும்படி பிலேமோன் தூண்டப்பட்டிருப்பார். "ஆம், உம் மைப் பொருத்தமட்டில் அவர் பிரயோஜனமில் லாதவர்தான், ஆனால் அவர் இப்பொழுது **உமக் கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவர்**" என்னும் பொருளில் பவுல் எழுதுகிறார். ஓடிப்போன அடிமையைக் காட்டிலும் பிலேமோனிடமாய்த் திரும்பிவந்த அடிமை சீர்திருந்தியவர். புதிய ஏற் பாட்டுக் காலத்தில் அடிமைச் சந்தையில் கிறிஸ்தவ அடிமைகளுக்கு மற்ற அடிமைகளை விடக் கூடுத லான விலை கிடைத்தது என்று கூறப்பட்டிருக் கிறது. இந்நாட்களில் கிறிஸ்தவ வேலையாட்கள் அவிசுவாசிகளைக் காட்டிலும் அதிகமாக மதிப் பிடத்தக்கவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மையாயிருக்க வேண்டும்.

வச. 12 அடிமைத்தனத்தைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் மனப்பான்மையை இந்தக் கடிதம் ஒருமுகப்படுத்தி நம்முன் கொண்டு வருகிறது. அடிமைத்தனத்தைக் குற்றப்படுத்தியோ, அது தடைசெய்யப்பட வேண்டும் என்றோ பவுல் பேச வில்லை என்றே நாம் கருதுகிறோம். உண்மை யில் அவர் ஒநேசிமுவைப் பிலேமோனிடம் திரும் பச் செல்லும்படியே அனுப்புகிறார். ஆனால் அடி மைத்தனத்தோடு தொடர்புடைய அவதூறான செயல்கள் புதிய ஏற்பாடு முழுவதும் குற்றப்படுத் தப்பட்டு, தடைசெய்யப்பட்டுள்ளதைக் காணமுடி யும். திருவாளர் மேக்லேரன் எழுதுகிறார்:

> அரசியல் அமைப்புகளுடனோ, சமுதாய அமைப்புகளுடனோ புதிய ஏற்பாடு நேரடியா கத் தலையிடுவதில்லை. ஆனால் அது கோட் பாடுகளை வரையறுத்துக் கூறி, அவற்றின் மூலமாக மிகவும் ஆழமான முறையில் தாக் கத்தை ஏற்படுத்தி, அவை பொதுப்படையான உள்ளத்தில் ஊடுருவிச் சென்று நிலைநிற்கும் படி ஏற்படுத்தியிருக்கிறது.[5]

சமுதாயத் தீமைகளை வலுக்கட்டாயமான புரட்சியின் மூலமாகச் சரிசெய்ய வேண்டுமென் பது திருமறையின் நோக்கல்ல. காட்டுமிராண்டித் தனமுடைய மனித நேயமற்ற நிலை வீழ்ந்து போன மனிதனின் இயல்பேயாகும். நற்செய்தி அடிப்படைக் காரணத்தைத் தாக்குகிறது, மேலும் அது கிறிஸ்து இயேசுவின் மூலமாகப் புதிய படைப்பை உருவாக்குகிறது.

ஓர் அடிமை பிறர் ஆதரவைச் சார்ந்திராமல் இருப்பதைக் காட்டிலும் தயவுமிக்க எஜமானிடத்தில் இருப்பது சிறந்த நிலை என்பதைப் புரிந்து கொள்வது எளிது. இது ஒரு பேருண்மையாக விளங்குகிறது. எடுத்துக்கட்டாக, விசுவாசிகள் கர்த்தராகிய இயேசுவின் கொத்தடிமைகளாக விளங்குகிறார்கள். அவருடைய அடிமைகளாயிருப்பவர்கள் மிகவும் உண்மையான பொருளில் விடுதலையை அனுபவிக்கிறார்கள். ஒநேசிமுவை மீண்டும் பிலேமோனிடம் **அனுப்புவதினாலே,** பவுல் அந்த அடிமைக்கு எவ்விதத் தீங்கையும் இழைக்கவில்லை. எஜமான் அடிமை ஆகிய இருவரும் விசுவாசிகள். பிலேமோன் ஒநேசிமுவிடம் கிறிஸ்தவத் தயவைக் காட்டவேண்டிய கட்டாயத்திற்குள் இருந்தார். ஒநேசிமுவும் கிறிஸ்தவப் பண்பாகிய உண்மையுள்ள தன்மையோடு வேலைசெய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. **என் உள்ளம் போலிருக்கிறவரை அனுப்புகிறேன்** என்னும் சொற்கள், அப்போஸ்தலன் எவ்வளவு ஆழமாக ஒநேசிமுவிடம் அன்பு பாராட்டி வந்தார் என்பதை வெளிப்படுத்துகின்றன. பவுல் தனது ஓர் உடலுறுப்பை இழந்தாற்போல உணர்ந்தார்.

இழப்பீடு செய்தல் என்னும் முக்கியமான கொள்கை இங்கு விளக்கிக் கூறப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். இப்பொழுதோ ஒநேசிமு இரட்சிக்கப்பட்டுவிட்டார். அவர் தன்னுடைய முந்தின எஜமானிடம் திரும்பிச் செல்ல வேண்டியது அவசியமா? "ஆம்" என்பதே இதற்குச் சரியான விடை. இரட்சிப்பு பாவத்தின் தண்டனையிலிருந்தும் அதன் ஆதிக்கத்திலிருந்தும் விடுதலையைத் தருகிறது, ஆனால் அது கடனைத் தீர்க்கிறதில்லை. புதிய விசுவாசி தன்னுடைய மனித சக்தியால் இயன்ற மட்டும் பழைய கடன்களையெல்லாம் திரும்பச் செலுத்த வேண்டும், தவறுகளைச் சரிசெய்ய வேண்டும். தன்னுடைய எஜமானுக்குப் பணிபுரியும்படி அவரிடம் செல்லக் கடமைப்பட்டிருந்தார், அவரிடம் திருடிய பணத்தையும் திரும்பச் செலுத்த வேண்டும்.

வச. 13 ஒநேசிமுவை ரோமாபுரியில் தன்னோடு **வைத்துக்கொள்ள** முடியுமானால் பவுலுக்கு அதுவே தனிப்பட்ட முறையில் சாதகமானது. நற்செய்தியின் நிமித்தம் அவர் சிறைக் கைதியாக இருந்த நிலையில், அந்த அடிமை அவருக்குப் பல உதவிகளைச் செய்திருக்க முடியும். ஓர் உதவியாளரைத் தந்து, பிலேமோனும் அப்போஸ்தலனுக்கு **ஊழியம்** செய்வதற்கான நல்ல வாய்ப்பாக அது அமைந்திருக்கும். ஆயினும் அவ்வாறு செய்திருந்தால், பிலேமோனுக்குத் தெரியாமல் அல்லது அவருடைய அனுமதியின்றி செய்த ஒரு குறைவுடைய செயலாகவே அது காணப்பட்டிருக்கும்.

வச.14 ஒநேசிமுவை ரோமாபுரியில் தன்னோடு வைத்துக்கொள்ளும் செயலின் மூலமாக, அடிமையின் எஜமானிடத்திலிருந்து தயவைக் கட்டாயமாகப் பெற்றுக்கொள்ளும் செயலைச் செய்ய பவுல் விரும்பவில்லை. பிலேமோனின் **சம்மதமின்றி** ஒநேசிமுவைக் குறித்து **ஒன்றும்செய்ய** அவருக்கு விருப்பமில்லை. மனப்பூர்வமாகத் தானாகச் செய்யக்கூடிய நன்மையைக் **கட்டாயத்தால்** பெறும்போது அதனுடைய அழகு களவுண்டுபோகும்.

வச. 15,16 ஒரு குறிப்பிட்ட தருணத்தில் ஏற்படக்கூடிய பாதகமான சூழ்நிலைகளைக் கடந்து, தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடைபெறும் என்பதை எதிர்நோக்கியிருப்பது ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு அடையாளமாக இருக்கிறது (ரோமர் 8:28). ஒநேசிமு ஓடிப்போன போது, பெரும்பாலும் பிலேமோன் உள்ளத்தில் கசப்பான எண்ணமும், பொருளாதார இழப்பை அடைந்துவிட்டோமே என்னும் நினைவும் நிறைந்து காணப்பட்டிருக்கும். அந்த அடிமையை எப்போதாவது மீண்டும் காணமுடியுமா? கொலோசெ பட்டணத்தில் இருந்த அந்தக் குடும்பம் சிறிது காலம் ஒநேசிமுவை இழந்து போயிற்று, ஆனால் அவரை **என்றென்றைக்குமாகத்** தங்களோடு இருக்கும்படியாக அவர்கள் திரும்பப் பெறப்போகிறார்கள். விசுவாசிக்கிற உறவினர்களையும் நண்பர்களையும் மரணத்தில் இழந்துபோகிற கிறிஸ்தவர்களுக்கு இவ்வசனம் ஆறுதல் தருகிறதாயிருக்கிறது. பிரிவு கொஞ்சக் காலத்திற்கே உரியது; மீண்டும் இணைவது நிலையானது.

பிலேமோன் ஒநேசிமுவை மீண்டும் பெறப்போகிறார், அது மட்டுமல்ல, அவரை அவர் முன்னிருந்த நிலையைக் காட்டிலும் மேலான நிலையில் பெறப்போகிறார். இனிமேல் அது வழக்கமான எஜமான் - அடிமை என்னும் உறவோடு கூடியதல்ல. இப்பொழுது ஒநேசிமு **அடிமையானவனுக்கும் மேலானவராக, கர்த்தருக்குள் பிரியமுள்ள சகோதரனாக** இருப்பார். இது முதல் அந்த உறவிற்கான காரணம் பயமாயிருக்காது, அன்பின் ஏவுதலால் உண்டானதாயிருக்கும். **பிரியமுள்ள சகோதரன்** என்னும் ஐக்கியத்தைப் பவுல் ஏற்கனவே அனுபவித்துவிட்டார்.

ஆனால் அவரை இனிமேல் அவர் தன்னோடு ரோமாபுரியில் வைத்துக்கொள்ளப்போவதில்லை. அப்போஸ்தலனுக்கு ஏற்படும் இழப்பு பிலேமோனின் ஆதாயமாக விளங்கும். பிலேமோன் இப்போது ஒநேசிமுவை சரீரத்தின்படியேயும், கர்த்தருக்குள்ளும் பிரியமான சகோதரனாகப் பெற்றிருக்கப் போகிறார். முந்தி அடிமையாக இருந்த மனிதன், உண்மையாக உழைப்பதன் மூலமாக **சரீரத்தின்படியேயும்,** ஒரு விசுவாசி என்னும் நிலையில் தனது ஐக்கியத்தின் மூலமாக கர்த்தருக்குள்ளும் செயல்பட்டு பவுலின் நம்பிக்கையை நிறைவேற்றுவார்.

வச. 17 அப்போஸ்தலனின் வேண்டுதல் அதனுடைய துணிவினாலும், கனிவினாலும் திகைப்புக்குள்ளாக்குகிறது. அப்போஸ்தலன் தன்னை எவ்வாறு பிலேமோன் ஏற்றுக்கொள்வாரோ அது போலவே ஒநேசிமுவை **ஏற்றுக்கொள்ள** வேண்டும் என்று வேண்டுகிறார். அவர் கூறுகிறார்: **"நீர் என்னை உம்மோடே ஐக்கியமானவரென்று எண்ணினால், என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவரையும் ஏற்றுக்கொள்ளும்."** அவருடைய சொற்கள் இரட்சகருடைய சொற்களை நினைவுக்குகொண்டு வருகின்றன: "உங்களை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்" (மத். 10:40). மேலும், "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" (மத். 25:40). மேலும் இந்தச் சொற்கள், கிறிஸ்து எவ்வாறு தேவனுக்கு நெருக்கமாகவும், பிரியமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறாரோ, அது போலவே அவருடைய குமாரனாகிய நபருக்குள் நாமும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதையும் நினைவுபடுத்துகின்றன.

பிலேமோன் பவுலைத் தன்னுடைய கூட்டாளி என்று கருதுவாரானால், அதாவது தன்னோடு ஐக்கியமானவரென்று கருதினால், ஒநேசிமுவை அதன் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளும்படி அப்போஸ்தலன் வேண்டுகிறார். ஆனாலும் அந்தக் குடும்பத்தில் எந்த வேலையும் செய்யக் கடமையற்ற ஒரு நிரந்தர விருந்தாளியாக ஒநேசிமு இருக்கப்போவதில்லை. அவர் இன்னமும் அந்த வீட்டில் ஒரு வேலையாளாகவே பணிபுரிய வேண்டும், ஆனாலும் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவராக, அதன் காரணமாக விசுவாசத்தில் சகோதரனாக விளங்குவார்.

வச.18 ஒநேசிமு எதையாவது பிலேமோனிடத்திலிருந்து திருடியதாக அப்போஸ்தலன் கூறவில்லை; ஆனால் அவ்வாறு நடந்திருக்கக் கூடும் என்று இந்த வசனம் கூறுகிறது. அடிமைகள் செய்யக்கூடிய முதன்மையான குற்றங்களில் ஒன்று திருடுவது என்பதில் சந்தேகமில்லை. பிலேமோனுக்கு ஒநேசிமுவினால் உண்டான இழப்பிற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள பவுல் முன்வருகிறார். இழப்பீடு நிச்சயமாய்ச் செய்யப்பட வேண்டும் என்று அவர் ஒப்புக்கொள்கிறார். ஒநேசிமு பெற்ற இரட்சிப்பு அவர் மனிதனுக்கு பட்ட கடனைத் தீர்க்காது. ஆகவே பவுல் அக்கடனைத் தனது **கணக்கில் வைக்கும்படி** கூறுகிறார்.

நாம் பாவிகள் என்னும் நிலையில் பெருமளவு கடன்பட்டிருந்தோம் என்பதையும், அவையாவும் கல்வாரியில் கர்த்தராகிய இயேசுவின் கணக்கில் வைக்கப்பட்டன என்பதையும் நினைவுகூராமல் இதனை நம்மால் படிக்க முடியாது. அந்தக் கடன் முழுவதையும் நம்முடைய பதிலாளாக அவர் மரணம் அடைந்தபோது செலுத்தித் தீர்த்துவிட்டார். கிறிஸ்துவின் பரிந்துபேசும் ஊழியத்தைக் குறித்தும் நாம் இங்கு நினைவுபடுத்தப்படுகிறோம். சகோதரர் மேல் குற்றஞ்சுமத்துகிறவனாகிய சாத்தான், நாம் செய்த குற்றங்களின் காரணமாக நம் மீது குற்றச்சாட்டுகளைக் கொண்டு வருகையில், ஆசிர்வதிக்கப்பட்ட கர்த்தர் பதில் கூறுகிறார். ஒப்புரவாகுதல் என்னும் கோட்பாடு இங்கு எடுத்துக் காட்டின் மூலமாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. ஒநேசிமு தவறு செய்ததன் காரணமாக அவர் பிலேமோனுடன் கொண்டிருந்த உறவில் முரிவு ஏற்பட்டுவிட்டது. பவுலின் ஊழியத்தின் மூலமாக அவர்களுக்கு இடையிலிருந்த தொலைவும் பகைமையும் நீங்கிவிட்டன. (பவுலின் ஊழியத்தால் இது நடைபெற்றது என்பதற்கான அனைத்துக் காரணங்களும் நம்பத் தகுந்தவையாக உள்ளன.) அந்த அடிமை தனது எஜமானுடன் ஒப்புரவு ஆனார். அதுபோலவே நாமும் நம்முடைய பாவத்தின் காரணமாக தேவனோடு மனவேறுபாடு கொண்டிருந்தோம். ஆனால் கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலமாகப் பகைமையின் காரணம் நீக்கப்பட்டு விசுவாசிகள் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளார்கள்.

வச. 19 பொதுவாக, பவுல் தனது மடலை மற்றொருவர் கேட்டு அதற்கு ஒப்ப எழுதும்படி அவர் உரக்கக் கூறுவார். பின்னர் அம்மடலின் கடைசி வரிகளை மட்டும் தனது **சொந்தக்கை**

யாலே எழுதுவார். இந்த மடல் முழுவதையும் அவர் தனது சொந்தக் கையெழுத்தாய் எழுதினாரா என்பதை நம்மால் உறுதியாய்ச் சொல்ல முடியாது. ஆனால் இத்தருணத்தில் அவர் எழுதுகோலை எடுத்து, தான் வழக்கமாக எழுதுகிற விகாரமான எழுத்துகளால், ஒநேசிமு செலுத்த வேண்டிய கடனைத் தானே செலுத்துவதாக உறுதியளித்தார் எனக் கூறமுடியும். பிலேமோன் அவருக்குப் பெருங்கடனைச் செலுத்த வேண்டியவராக இருந்தபோதிலும் அவர் இதனைச் செய்யப் போவதாக கூறுகிறார். பிலேமோன் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கான கடனை, அந்நிலைக்கு அவர் வருவதற்கு மனித கருவியாகப் பவுல் விளங்கினார் என்னும் அடிப்படையில் அவருக்குச் செலுத்த வேண்டியவராக இருந்தார். ஆனால் அந்தக் கடனைச் செலுத்தும்படி பவுல் வற்புறுத்தப் போவதில்லை.

வச. 20 பிலேமோனைச் சகோதரனே என்று அழைத்து, முதிர்வயதான பவுல் கர்த்தருக்குள்ளாகச் சில நன்மைகளை, கிறிஸ்துவுக்குள் சில இளைப்பாறுதல்களை மட்டுமே வேண்டுகிறார். ஒநேசிமு கிருபையோடு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், மன்னிக்கப்பட்டு, முன்னிருந்த அதே நிலையில் வீட்டு வேலை செய்யும்படி அமர்த்தப்பட வேண்டும் - அடிமையாக அல்ல, தேவகுடும்பத்தில் ஒரு சகோதரனாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே அவரது வேண்டுகோள்.

4. முடிவுரை [வச. 21-25]

வச. 21 தன்னுடைய வேண்டுகோளுக்கும் மேலாகப் பிலேமோன் செய்வாரென்று பவுல் **நிச்சயித்திருந்தார்**. கிறிஸ்துவினால் அவர் தானே இலவசமாய் மன்னிக்கப்பட்டிருந்தார். ஒநேசிமுவுக்கு அவர் ஒன்றும் குறைவாகச் செய்யப் போவதில்லை என்பது நிச்சயம். எபேசியர் 4:32 -இல் நாம் மிகத் தெளிவான எடுத்துக்காட்டைப் பெற்றிருக்கிறோம்: "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."

வச. 22 ஆனால், ஒநேசிமுவைப் பிலேமோன் எவ்வாறு நடத்தினார் என்பதைப் பவுல் எவ்வாறு அறிவார்? அவர் கொலோசே பட்டணத்துக்கு வருகைபுரிந்து சில நாட்கள் பிலேமோனின் வீட்டில் விருந்தாளியாக இருக்கப் போகிறார். கிறிஸ்தவர்களது **விண்ணப்பங்களின்** காரணமாக அவர் அரசு அதிகாரிகளால் விடுதலை செய்யப்படுவார் என்று எதிர்பார்த்தார். ஆகவே அவருக்காக **ஓரிடத்தை ஆயத்தப்படுத்தும்படி** அவர் பிலேமோனை வேண்டிக்கொள்கிறார். ஒருவேளை ஒநேசிமுவுக்குக் கொடுக்கப்பட்ட முதலாவது பொறுப்பு அதுவாகத்தான் இருந்திருக்கும்: "நம்முடைய பிரியமான சகோதரனாகிய பவுலுக்காக ஒரு விருந்தினர் அறையை ஆயத்தப்படுத்தும்." கொலோசெ பட்டணத்துக்குப் பவுல் பின்னர் சென்றாரா என்பது நமக்குத் தெரியாது. ஆனால், அந்த வீட்டின் அங்கத்தினர்கள் யாவரும், தங்களுடைய இருதயங்கள் யாவும் அன்பினாலே ஒன்றாகப் பிணைக்கப்பட்ட நிலையில் பவுலின் வருகைக்காக, விருந்தினர் அறையை ஆயத்தம் செய்துவிட்டுக் காத்துக்கொண்டிருந்தார்கள் என்பது நிச்சயம்.

வச. 23 கொலோசே பட்டணத்தில் சபையை நிறுவியவர் **எப்பாப்பிராவாகவே** இருக்க வேண்டும் (கொலோ.1:7,8; 4:12,13). இப்பொழுதோ அவர் ரோமாபுரியில் பவுலோடுகூடக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் பிலேமோனுக்கு வாழ்த்துரை வழங்குவதில் சேர்ந்துகொள்கிறார்.

வச. 24 அந்தச் சமயத்தில் பவுலோடு **மாற்கு, அரிஸ்தர்க்கு, தேமா, லூக்கா** ஆகியோர் இருந்தனர். இந்தப் பெயர்கள் கொலோசெயர் 4:10,14 - ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. யுஸ்து என்னப்பட்ட இயேசு என்ற பெயரும் கொலோசெயர் 4 -ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. ஆனாலும் அந்தப் பெயர் ஏதோ ஒரு காரணத்தால் இங்கே விடப்பட்டுள்ளது. இரண்டாவது நற்செய்தி நூலை இயற்றியவர் **மாற்கு**. தொடக்கத்தில் அவர் தோல்வியடைந்தவராக இருந்த போதிலும், தான் உண்மையுள்ள ஊழியர் என்பதைப் பின்னர் மெய்ப்பித்துவிட்டார் (2 தீமோ. 4:11; அப். 13:13; 15:36-39 ஆகிய வசனங்களைக் காண்க). **அரிஸ்தர்க்கு** தெசலோனிக்கே பட்டணத்தைச் சேர்ந்த விசுவாசி. அவர் பல பயணங்களில் பவுலோடு உடன் சென்றவர், ரோமாபுரிக்கும் அவர் பவுலோடு சென்றார். கொலோசெயர் 4:10 -இல் அவரை உடன் கட்டுண்டவர் என்று பவுல் குறிப்பிட்டுள்ளார். **தேமா** இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்து, பவுலை விட்டுப் பின்னர் பிரிந்து போய்விட்டார் (2 தீமோ. 4:10). இனிய மருத்துவராகிய லூக்கா இறுதிவரை உண்மையுள்ள கூட்டாளியாகவும், உதவி புரிகிறவராகவும் இருந்தார் (2 தீமோ. 4:11).

வச. 25 பவுலின் தனிப்பட்ட பண்புடன் கூடிய வாழ்த்துரையுடன் இம்மடல் முடிவு பெறுகிறது. **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை**

பிலேமோனின் **ஆவியுடனேகூட இருப்பதாக** என்று அவர் வாழ்த்துகிறார். ஒவ்வொரு கணப் பொழுதும் ஒருவர் தன்னுடைய தகுதிக்கு அப்பாற் பட்ட வகையில் இரட்சகரிடத்திலிருந்து பெறுகிற தயவுக்கும் மேலாக எந்தவொரு நன்மையும் அவருடைய வாழ்வில் உண்டாவதில்லை. கர்த்த ருடைய ஆளுமையையும், அவருடைய செயல் பாட்டையும் இடைவிடாமல் உணர்ந்த வண்ணம் மகிழ்ச்சியுடன் நடப்பதையே இருதயம் விரும்பு கிறது.

பவுல் எழுதுகோலைக் கீழே வைத்துவிட்டு, மடலைப் பிலேமோனிடம் கொடுக்கும்படி தீகிக்கு விடம் தந்தார். இம்மடல் பல நூற்றாண்டுகள் சென்ற பிறகும் கிறிஸ்தவரது நடத்தையின்மேல் எவ்வளவாகச் செல்வாக்கு கொண்டிருக்கும் என் பதை அவர் சற்றேனும் சிந்தித்திருக்க மாட்டார். அன்பிற்கும் மரியாதைக்கும் இம்மடல் அது எழுதப்பட்டபோது எவ்விதமாக இருந்ததோ அது போலவே முதல்தரமான எடுத்துக்காட்டாக, இன் றைய நாட்களிலும் விளங்குகிறது. **ஆமென்.**

அடிக்குறிப்புகள்

1 (முன்னுரை) Martin Luther, quoted by J. B. Lightfoot, *Saint Paul's Epistles to the Colossians and to Philemon,* pp. 317, 318 (translation updated by the present editor).

2 (வச. 2) ஒரு கிறிஸ்தவப் பெண்ணை மற் றொரு சமயப் பெண்ணோடு அல்லது இசுலாமியப் பெண்ணோடு ஒப்பிட்டுப் பார்த்தால், "பெண் களை மெய்யாகவே விடுதலை செய்பவர்" கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவே என்று ஒப்புக்கொள்வர்.

3 (வச. 7) பெரும்பான்மைப் பிரதியில் சந் தோஷம் என்ற சொல்லுக்குப் பதிலாக ஸ்தோத் திரம் செலுத்துகிறேன் என்ற சொல் இடம் பெற் றுள்ளது.

4 (வச. 8) முதிர்வயதுள்ளவர் *(Presbutes)* மற்றும் தூதுவர் *(Presbeutes)* ஆகிய சொற் களின் கிரேக்கச்சொற்கள் ஒன்றுபோல இருக் கின்றன. ஆகவே பவுல் தூதுவர் என்று எழுதி யிருப்பதாகவே திருவாளர் பென்ட்லே கருது கிறார். இந்த ஆதாரமற்ற கருத்து, வசனத்தின் பின்னணிக்கு மிகப் பொருத்தமாக இருந்த போதிலும் பெரும்பான்மைப் பிரதி இக்கருத்திற்கு முற்றிலும் எதிரானதாக இருக்கிறது.

5 (வச. 12) Alexander Macleran, *"Colossians and Philemon," The Expositor's Bible,* p. 461.

நூல் விவரப் பட்டியல்

கொலோசெயர் மடலுக்கான நூல் விவரத் தொகுப்பினைக் காண்க.

எபிரெயருக்கு எழுதின நிருபம்

முன்னுரை

''இம்மடலின் ஆசிரியர் யார் என்பது பற்றி எழுந்த விவாதத்திற்கு இணையாக, திருமறையின் வேறு எந்தப் பகுதியின் ஆசிரியர் பற்றியும் விவாதம் எழுந்ததில்லை; இந்நூல் தேவ ஆவியின் ஏவுதலாலேயே எழுதப்பட்டது என்பது எதிர்த்து விவாதிக்கக் கூடாதபடி எவ்வளவாக உறுதியுடையதாக இருக்கிறதோ, அதைக் காட்டிலும் கூடுதலான உறுதி வேறு எந்தத் திருமறைப் பகுதிக்கும் இல்லை.''

– கோனியிபர் மற்றும் ஹௌஸன்

1. வேதநூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

புதிய ஏற்பாட்டு நூல்களிலேயே எபிரெயருக்கு எழுதப்பட்ட மடல்தான் பல கணிப்புகளில் தனிப் பண்பு வாய்ந்ததாகத் திகழ்கிறது. இது ஒரு கடிதம் போன்று தொடங்கப்படவில்லை, எனினும் இது இத்தாலி நாட்டிலிருந்தோ அல்லது அந்த நாட்டிற்கோ, ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாருக்கு, பெரும் பாலும் எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப் பட்டது என்னும் நிலையில் ஒரு கடிதமாகவே முடிவடைகிறது (13:24). இம்மடலைப் பற்றிய தொடக்கம், சேருமிடம் ஆகியவற்றைக் குறித்த உண்மைகளைப் பாரம்பரியமாகப் பாதுகாத்து வைக்கக்கூடிய பெரிதும் புகழ்வாய்ந்ததுமான ஏதொரு சபையோடும் தொடர்பற்ற சிறியதொரு சபைக்கே இம்மடல் முதலில் எழுதப்பட்டது என்று கருதப்படுகிறது. புதிய ஏற்பாட்டு நூல்களிலேயே மிகவும் இலக்கியப் புலமை வாய்ந்த மொழி நடையை இது கொண்டிருக்கிறது. இந்நூல் கவிதை நயம் வாய்ந்ததும், எழுபதின்மரின் கிரேக்கமொழிப் பழைய ஏற்பாட்டிலிருந்து பல வேறு மேற்கோள்களைக் கொண்டதுமாக இருக்கிறது. மிகுதியான சொற்களைக் கொண்டுள்ள இந்நூலில், கிரேக்க வினைச் சொற்களும் மற்ற விவரங்களும் மிகத் துல்லியமாகக் கையாளப்பட்டுள்ளன.

ஒரு பொருளில் இந்நூல் யூதச் சார்புடையதாக இருந்தபோதிலும் (இது லேவியராகமத்தோடு ஒப்பிடப்படுகிறது), கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய சத்தியத்திலிருந்து விலகி வெறுமனே சமயச் சடங்குகளைச் சார்ந்துகொள்வது என்னும் கொள்கைக்கு எதிராக இந்நூலில் காணப்படும் எச்சரிக்கை கிறிஸ்தவ உலகிற்கு எப்பொழுதும் தேவை. இதுவே இந்நூலின் மிகப்பெரிய முக்கியத்துவம்.

2. நூலாசிரியர்

தொடக்க நாட்களில் KJV பதிப்புகள் சிலவற்றில் எபிரெயர் மடலின் தலைப்பில் பவுலின் பெயர் இடம்பெற்றிருந்தபோதிலும், இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை. தொடக்க காலக் கிழக்கத்திய சபை (அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த டையோனிசியஸ் மற்றும் கிளமந்து ஆகிய இருவரும்) இந்நூலின் ஆசிரியர் பவுல் என்று தனது கருத்தைத் தெரிவித்துள்ளது. மிகுந்த ஐயத்திற்குப் பிறகு இந்தக் கருத்து அத்தானேசியஸ் முதற்கொண்டு ஆதிக்கம் செலுத்தலாயிற்று. இறுதியில் இக்கருத்தை மேற்கத்திய சபையும் ஒப்புக்கொண்டது. ஆயினும் இன்றைய நாட்களில் இந்நூலின் ஆசிரியர் பவுல் என்று ஒருசிலர் கூட உறுதியாகக் கூறுவதில்லை. இந்நூலில் உள்ள கருப்பொருள் பவுலைச் சார்ந்தது என்றும், சில பகுதிகளில் பவுலின் தாக்கம் இருக்கிறது என்றும், ஆனாலும் இதனுடைய மூலமொழியின் நடை பவுலின் நடையிலிருந்து மிகவும் வேறுபட்டதாக இருக்கிறது என்றும் ஓரிஜன் கூறியிருக்கிறார். (ஆயினும் இவை பவுல் இந்நூலை எழுதவில்லை என்பதற்கான உரிய காரணங்களாகா, ஏனெனில் ஓர் இலக்கிய மேதையால் தனது மொழிநடையை எளிதில் மாற்றிக் கொள்ள முடியும்.)

இந்நூலின் ஆசிரியர் இன்னாராக இருக்கக் கூடும் என்று பல காலங்களில் பலருடைய பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன: லூக்கா, இவருடைய மொழிநடை இதற்கு இணையாக உள்ளது,

மேலும் இவர் பவுல் பிரசங்கம் செய்ததை நன்கு அறிந்திருந்தார்; பர்னபாஸ், சீலா, பிலிப்பு, ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் பெயர்களும்கூட சொல்லப்பட்டுள்ளன.

அப்பொல்லோவே இந்நூலின் ஆசிரியர் என்று லுத்தர் கருதினார். இந்நூலின் மொழி நடையும் கருப்பொருளும் இந்த மனிதனின் திறமைக்குப் பொருத்தமாயிருக்கின்றன: "சாதுரிய வானும் பழைய ஏற்பாட்டு வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ" (அலெக்சந்திரியா பட்டணம் மொழியியல் திறமைக்குப் பெயர் பெற்றது). இக்கருத்திற்கு எதிரான வாதம் என்னவெனில், அப்பொல்லோ இந்நூலை எழுதியிருந்தால் அலெக்சந்திரியா வரலாற்றில் அது இடம்பெற்றிருக்கும், ஆனால் அவ்வாறான குறிப்பு எதுவுமில்லை.

இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியாமலிருக்கும்படி செய்ய கர்த்தருக்கு ஏதோ ஒரு காரணம் பொருத்தமானதாக இருந்திருக்கும். இந்நூலைப் பவுலே எழுதினார் என்றும், அவர் யூதர்களுக்கு எதிரானவர் என்றும் கருதப்பட்டதால் அவருடைய பெயர் மறைக்கப்பட்டு விட்டது என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இது ஒருவேளை உண்மையாக இருக்கக்கூடும். ஆனாலும் தொடக்ககால வேத அறிஞர் ஓரிஜன் என்பாரின் சொற்களைக் காட்டிலும் யாரால் சிறப்பாகச் சொல்ல முடியும்: "ஆனால் இந்த மடலை எழுதியவர் யார் என்பதை தேவன் ஒருவர் மட்டுமே உறுதியாக அறிந்திருக்கிறார்."

3. எழுதப்பட்ட காலம்

இந்நூலை எழுதியவர் யார் என்பது தெரியாதெனினும், இது எப்பொழுது எழுதப்பட்டது என்பதை ஓரளவு மிகச் சரியாகக் கணிக்க முடியும்.

ரோமாபுரிக் கிளமந்து இந்நூலைப் பயன்படுத்தியிருக்கிறார் (கி. பி. 95), இப்புறச்சான்று, இந்நூல் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று வலியுறுத்துகிறது. பாலிகார்பும் ஜஸ்டின் மார்டியரும் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டிய போதிலும் இதன் ஆசிரியர் யார் என்று குறிப்பிடவில்லை. பவுலால் எழுதப்பட்டது என்றுரைத்து இந்நூலிலிருந்து சில பகுதிகளை மேற்கோளாக அலெக்சந்திரியாவைச் சேர்ந்த டையோனிசியஸ் எடுத்தாண்டுள்ளார். அலெக்சந்திரியாவைச் சேர்ந்த கிளமந்த் இம்மடலைப் பவுல் எபிரெய மொழியில் எழுதினார் என்றும், லூக்கா அதனை மொழிபெயர்த்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஆனால் இந்த நூல் மொழிபெயர்ப்பாகத் தோன்றவில்லை.) பவுல் இந்நூலை இயற்றியிருப்பார் என்று ஐரேனியசும் ஹிப்பாலிடசும் நினைக்கவில்லை. இதனைப் பர்னபாஸ் எழுதினார் என்று தெர்தூலியன் எண்ணினார்.

இந்நூலின் அகச்சான்றைக் காணும்போது, இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களில் ஒருவரால் இந்நூல் எழுதப்பட்டிருக்கும் என்று தோன்றுகிறது (2:3; 13:7), ஆகவே யாக்கோபு, 1 தெசலோனிக்கேயர் மடல்களைப் போல இது தொடக்கத்தில் எழுதப்பட்டதன்று (10:32 - ஆம் வசனத்தை ஒப்பிடுக). யூதப் போர்களைப் பற்றிய குறிப்பு எதுவும் இந்நூலில் இடம்பெறவில்லை (கி. பி. 66 -இல் தொடங்கியது), தேவாலய பலிமுறைகள் இந்நூல் எழுதப்பட்டபோது நடைபெற்றுக் கொண்டிருந்தன என்பது தெளிவாய்த் தெரிகிறது (8:4; 9:6; 12:27; 13:10). ஆகவே இந்நூல் கி. பி. 66 -க்கு முந்தையதாக இருக்கக்கூடும். நிச்சயமாக எருசலேம் நகரம் அழிக்கப்படுவதற்கு முன்னர் (கி. பி. 70) இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம். உபத்திரவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன, ஆனாலும் விசுவாசிகள் "இரத்தஞ்சிந்தப் படத் தக்கதாக எதிர்த்துநிற்கவில்லை." இம்மடல் இத்தாலி நாட்டிற்கு எழுதப்பட்டது என்று கருதுவோமானால், இரத்தஞ்சிந்தும்படியான உபத்திரவம் அங்கு நீரோவின் ஆட்சியில் நடந்தது (கி. பி. 64). அவ்வாறெனில் இம்மடல் கி. பி. 64 -க்கு முந்தி எழுதப்பட்டிருக்க வேண்டும். பெரும்பாலும் கி. பி. 63 - கி. பி. 65 -இல் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

ஒரு சமய அமைப்பிலிருந்து இன்னொரு சமய அமைப்பிற்கு செல்லுகையில் உண்டாகிற மிகப் பெரிய அளவிலான போராட்டங்களைப் பற்றி எபிரெயர் மடல் பொதுவான முறையில் எடுத்துரைக்கிறது. முந்தைய தொடர்புகளைப் பலவந்தமாய் முரித்துக்கொள்ளுதல், உறவு மற்றும் நட்பு முரிவினால் உண்டாகக் கூடிய நெருக்குதல் மற்றும் உளஅலைவுகள், முந்தைய சமய அமைப்பை நோக்கித் திரும்பும்படி ஏற்படக்கூடிய மிகக்கடினமான வற்புறுத்தல்கள் ஆகிய போராட்டங்களைக் குறித்து இந்நூல் விவரிக்கிறது.

ஆனால், முந்தைய சமய அமைப்பும் புதிய அமைப்பும் சரிநிகரானவை அல்ல. ஆகவே இந்நூலின் பிரச்சினை வெறுமனே அதுமட்டுமன்று. மாறாக, யூதமார்க்கத்தைக் கிறிஸ்துவுக்காக விட்டுவிடுதலே இங்கு முக்கியமான விஷயமாகும். இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளபடி,

நிழல்களை விடுத்து மெய்யான பொருளைப் பற்றிக்கொள்ளுதல், சடங்குகளை விடுத்து சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுதல், தொடக்கத்திற்குப் பதிலாக முடிவானதைப் பற்றிக்கொள்ளுதல், தற்காலிகமானதற்கு மாறாக நிலையானதை ஏற்றுக்கொள்ளுதல், மொத்தத்தில் நல்லதை விடுத்து மிகச் சிறந்ததை ஏற்றுக்கொள்ளுதல், இதுவே இந்நூலில் எழுப்பப்பட்டுள்ள கேள்வி.

பிரபலமானதை விட்டுவிட்டு பிரபலமற்றதை ஏற்றுக்கொள்ளுதல், பெரும்பான்மைக்குப் பதிலாக சிறுபான்மையைச் சார்ந்துகொள்ளுதல், ஒடுக்குதலை விடுத்து ஒடுக்கப்படுதலைத் தெரிந்துகொள்ளுதல் ஆகியவையும் இந்தப் பிரச்சினையில் இடம்பெற்றுள்ளன. இவை பல கடுமையான பிரச்சினைகளைத் தீவிரமாக்கிவிட்டன.

யூதப் பின்னணியைச் சேர்ந்த மக்களுக்கு இம்மடல் எழுதப்பட்டது. சபையின் தொடக்க காலத்தில் அப்போஸ்தலரும் பிறரும் நற்செய்தியைப் பிரசங்கித்தபோது இந்த எபிரெய மக்கள் அதைக் கேட்டார்கள், மேலும் அந்தச் செய்தியை உறுதிப்படுத்திய பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மிக்க அற்புதச் செயல்களையும் அவர்கள் கண்டார்கள். கீழ்க்காணும் மூன்றுவகையான செயல்களில் ஒன்றின் மூலமாக அவர்கள் கேட்ட நற்செய்திக்குப் பதிற்செய்தார்கள்.

சிலர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து மெய்யாக மனந்திரும்பினார்கள்.

சிலர் கிறிஸ்தவர்களாக மாற்றம் பெற்றதாக அறிக்கை செய்து, ஞானஸ்நானம் பெற்று ஸ்தல சபைகளில் பங்கு வகித்தார்கள். ஆயினும் அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பு அடையவேயில்லை.

மற்றவர்கள் இரட்சிப்பின் செய்தியை மன உறுதியோடு மறுத்துரைத்தார்கள்.

நமது மடல் முதல் இரண்டு வகுப்பாரோடு ஈடுபடுகிறது - ஒரு வகுப்பார் உண்மையாக இரட்சிக்கப்பட்டவர்கள். மற்றொரு வகுப்பார் கிறிஸ்தவத்தில் பற்றுதல் கொண்டிருப்பதுபோல வெளியரங்கமாகப் பாசாங்கு செய்தார்களேயொழிய அவர்களிடத்தில் நம்பிக்கையில்லை.

தங்களுடைய மூதாதையரின் விசுவாசத்தை விட்டு ஒரு யூதன் வெளியே வந்தபோது, அவர் துரோகி அல்லது கொள்கையைக் கைவிட்டவர் என்று கருதப்பட்டு, கீழ்க்காண்பனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தண்டனையை அந்தச் சமுதாயத்தார் தந்தார்கள்.

- குடும்பத்தாரின் வாரிசு உரிமையை இழந்துபோகுதல்
- இஸ்ரவேலின் சபைகூடுதலிலிருந்து வெளியேற்றப்படுதல்
- வேலையை இழந்துபோகுதல்
- சொத்துகள் பறிமுதல் செய்யப்படுதல்
- மனஉலைவோடு, சரீரத்திலும் கொடுமைப்படுத்தப்படுதல்
- பொது இடங்களில் ஏளனப்படுத்தப்படுதல்
- கைது செய்யப்படுதல்
- கொலை செய்யப்படுதல்

ஆனாலும் தப்பித்துக்கொள்வதற்கு வழியுண்டு. அவர் கிறிஸ்துவை மறுத்துரைத்து யூத மார்க்கத்திற்குத் திரும்பி வருவாரென்றால், அவர் தொடர்ந்து துன்புறுத்தப்படமாட்டார். நாம் இந்த மடலில் மறைந்திருக்கும் கருத்துகளை ஆராய்ந்து கண்டறிவோமானால், அந்த மனிதன் மீண்டும் யூதமார்க்கத்திற்குத் திரும்பி வரும்படி வற்புறுத்திய பல வாதங்கள் பயன்படுத்தப்பட்டு வந்ததை உணரமுடியும்.

- தீர்க்கதரிசிகளின் வளமிக்க பாரம்பரியம்.
- தேவனுடைய முற்கால மக்களின் வரலாற்றில் தேவதூதர்கள் ஆற்றிய முக்கியமான ஊழியம்.
- நியாயப்பிரமாணத்தைத் தந்த புகழ்வாய்ந்த மோசேயுடன் ஆற்றிய முக்கியமான ஊழியம்.
- அறிவுகூர்மை மிக்க ராணுவத்தளபதியோசுவாவுடன் இஸ்ரவேல் நாடு கொண்டிருந்த இணக்கம்.
- ஆரோனின் ஆசாரியத்துவத்தின் மகிமை.
- தேவன் தம்முடைய மக்களின் நடுவே வாசம் செய்வதற்காகத் தெரிந்துகொண்ட பரிசுத்த ஸ்தலம்.
- மோசேயின் மூலமாக தேவன் தந்த நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை.
- பரிசுத்த ஆலயத்தில் தேவனால் நிறுவப்பட்ட பணிமுட்டுகள் மற்றும் கம்பீரமான திரை.
- தேவாலயத்தில் கைக்கொள்ளப்பட்ட ஆராதனை முறைமைகள், சிறப்பாக பாவ நிவாரண நாளில் செய்யப்பட்ட சடங்குகள் (யூதர்களுடைய நாள்காட்டியில் மிக முக்கியமான நாளாகக் கருதப்பட்ட நாள் யோம் கிப்பூர் என்பதாகும்).

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யூதர்கள், அவர்களுடைய பழம்புகழையும், சடங்குகள் சார்ந்த சமயத்தைப் பற்றியும் எடுத்துரைத்தவர்களாக, இகழ்ச்சியோடு கேள்வியை எழுப்பியிருப்பார்கள் என்று நம்மால் உறுதியோடு சொல்ல முடியும்: "கிறிஸ்தவர்களாகிய உங்களிடத்தில் என்ன இருக்கிறது? எங்களிடத்தில் இவையாவும் உள்ளன. உங்களிடத்தில் என்ன இருக்கிறது? எளிமையான மேலறை, ஒரு மேஜை, அந்த மேஜையில் அப்பமும் திராட்சை ரசமும், அவ்வவுதான்! இவையெல்லாவற்றையும் அதற்காக விட்டு விட்டோம் என்று சொல்லுகிறீர்களா?"

"உங்களிடத்தில் என்ன இருக்கிறது?" என்னும் கேள்விக்கு இந்த மடல் மெய்யான விடையாக இருக்கிறது. ஒரு சொல்லில் கூறுவோமானால் அந்த விடை கிறிஸ்து.

அவரிடத்தில் நாம் பெற்றவை:

- தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் பெரியவர்.
- தேவதூதர்களைக் காட்டிலும் பெரியவர்.
- மோசேயைவிடப் பெரியவர்.
- யோசுவாவைவிடப் பெரியவர்.
- ஆரோனின் ஆசாரியத்துவத்தைவிட மேலான ஆசாரியத்துவத்தை உடையவர்.
- மேலான ஆலயத்தில் பணிபுரிபவர்.
- மேலான உடன்படிக்கையை அறிமுகப்படுத்தியவர்.
- பணிமுட்டுகள், திரை ஆகிய மாதிரிகளுக்கு நிஜமானவர்.
- இளங்காளை, வெள்ளாட்டுக்கடா ஆகிய விலங்குகளைப் பலியாக மீண்டும் மீண்டும் செலுத்தி வந்த முறையைக் காட்டிலும் மேலான பலியாகத் தம்மையே எல்லாப் பாவங்களுக்காகவும் ஒரே தரம் செலுத்தியவர்.

கதிரவனின் பெரிதான பிரகாசத்தில் எவ்வாறு விண்மீன்கள் மறைந்து போகின்றனவோ அது போல யூதமார்க்கத்தின் மாதிரிகளும் நிழல்களும் கர்த்தராகிய இயேசுவின் மிகப்பெரிதான மகிமையுடைய ஆளுமைக்கும் அவர் ஆற்றிய செயலுக்கும் முன்பாக மங்கிப்போய் முக்கியமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு போயின.

ஆயினும் அங்கே தொடர்ந்து கொடுமைகள் இழைக்கப்பட்டு வந்தன. கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் என்று அறிக்கை செய்தவர்கள் கடுமையான சமய வெறித்தாக்குதல்களைச் சந்திக்க நேர்ந்தது. மெய்யான விசுவாசிகளுக்கு இது சோர்வு, மனத்தளர்வு என்னும் ஆபத்தை நோக்கி நடத்தியது. ஆகவே அவர்கள் தேவனுடைய வாக்குறுதிகளில் நம்பிக்கை வைக்கும்படியாக உற்சாகப்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. வரப்போகிற பரிசுப்பொருட்களைக் கருத்திற்கொண்டு அவர்கள் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டும்.

பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருந்தவர்கள், மறுதலிக்கக்கூடிய ஆபத்திற்குள்ளாக இருந்தார்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதாக அறிக்கை செய்துவிட்டு, பின்னர் அவரை முற்றிலுமாகக் கைவிட்டவர்களாக மீண்டும் சடங்குகள் நிறைந்த சமயத்தை நோக்கிச் செல்லக்கூடிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. இச்செயல் இறைமைந்தனைக் காலின் கீழ் மிதிப்பதற்கும் அவருடைய இரத்தத்தை நிந்திப்பதற்கும், பரிசுத்த ஆவியை அவமானப்படுத்துவதற்கும் நிகரானது. இவ்விதமாக வேண்டுமென்றே பிடிவாதமான முறையில் செய்கிற பாவத்திற்கு மனந்திரும்புதலும் இல்லை பாவமன்னிப்பும் இல்லை. இத்தகைய பாவத்திற்கு எதிராக எபிரெயர் மடலில் மீண்டும் மீண்டும் எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 2:1 -ஆம் வசனத்தில் இது கிறிஸ்துவின் செய்தியை விட்டுவிலகுதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாவமானது 3:7-19 ஆகிய வசனங்களில் கலகம் கிளர்ச்சி செய்தல் அல்லது இருதயத்தைக் கடினப்படுத்துதல் என்று சொல்லப்பட்டுள்ளது. இது 6:6 -இல் மறுதலித்துப் போகுதல் அல்லது நம்பிக்கை துரோகம் செய்தல் என்று விவரிக்கப்பட்டுள்ளது. 10:25 -இல் இந்தப் பாவம் சபை கூடுதலை விட்டு விடுதல் என்றும் 10:26 -இல் வேண்டுமென்றே செய்கிற பாவம் அல்லது மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்தல் என்றும் விவரிக்கப்பட்டுள்ளது. இது 12:16 -இல் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போடுதல் என்றும், இறுதியாக 12:25 -இல் விண்ணகத்திலிருந்து பேசுகிறவருடைய சத்தத்திற்குச் செவிகொடாதிருத்தல் என்றும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த எச்சரிப்புகள் அனைத்தும் நம்பிக்கையை விட்டு விடுதல் அல்லது மறுதலித்துப் போகுதல் என்னும் ஒரே பாவத்தின் பல அம்சங்களுக்கு எதிராகக் கூறப்பட்டுள்ளன.

எபிரெயர் மடலின் செய்தி சபையின் முதல் நூற்றாண்டில் எவ்வளவு பொருத்தமாக இருந்

ததோ அதுபோலவே இன்றைய நாட்களிலும் பொருத்தமுடையதாக இருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளாக நித்திய நன்மைகளும் ஆசிர்வாதங்களும் நமக்கு உரியவை என்பதை அவ்வப்போது நினைவுகொள்ள வேண்டியது அவசியம். எதிர்ப்புகளும் இடர்ப்பாடுகளும் இருந்தபோதிலும் அவற்றைப் பொறுத்துக்கொள்ள நாம் உற்சாகப்படுத்தப்பட வேண்டியது அவசியம். மேலும் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை செய்கிற அனைத்து விசுவாசிகளும் கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்த பிறகு சடங்குகள் நிறைந்த சமயத்தை நோக்கித் திரும்பக் கூடாது என்று, எச்சரிக்கப்பட வேண்டியது அவசியம்.

பொருட்சுருக்கம்

1. கிறிஸ்து தமது ஆளுமையில் பெரியவர் (1:1 - 4:13)

அ. தீர்க்கதரிசிகளைவிட கிறிஸ்து பெரியவர் (1:1-3)

ஆ. தேவதூதர்களைவிட கிறிஸ்து பெரியவர் (1:4-2:18)

இ. மோசே மற்றும் யோசுவா ஆகியோரைவிட கிறிஸ்து மேலானவர் (3:1-4:13)

2. கிறிஸ்து தமது ஆசாரியத்துவத்தில் மேன்மையுள்ளவர் (4:14-10:18)

அ. கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் ஆரோனின் பிரதான ஆசாரியத்துவத்திலும் பெரியது (4:14-7:28).

ஆ. ஆரோனின் ஊழியத்தைக் காட்டிலும் கிறிஸ்துவின் ஊழியம் பெரியது. (அதி. 8)

இ. பழைய ஏற்பாட்டுப் பலிகளைக் காட்டிலும் கிறிஸ்துவின் பலி மேலானது (9:1-10:18)

3. எச்சரிப்பும் அறிவுரைகளும் (10:19-13:17)

அ. கிறிஸ்துவை ஏளனப்படுத்தக் கூடாதென்னும் எச்சரிப்பு (10:19-39)

ஆ. பழைய ஏற்பாட்டு எடுத்துக் காட்டுகளின் மூலம் விசுவாசிப்பதற்கான அறிவுரை (அதி. 11)

இ. கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்க வேண்டிய நம்பிக்கை பற்றிய அறிவுரை (அதி. 12)

ஈ. பல்வேறு கிறிஸ்தவ நற்பண்புகளை அடைவதற்கான அறிவுரை (13:1-17)

4. இறுதி வாழ்த்து (13:18-25)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	கிறிஸ்து			ஊழியம்			விசுவாசம்			இறுதியுரை
காலம்	கி. பி. 64-65									
தலைப்பு	கிறிஸ்துவின் மேன்மை			கிறிஸ்துவின் ஊழியம்			கிறிஸ்துவின் ஊழியர்கள்			
பகுப்பு	தீர்க்கதரிசிகளை விடப் பெரியவர்	தூதர்களை விடப் பெரியவர்	மோசே, ஆசாரியரை விடப் பெரியவர்	மேலான ஆசாரியத்துவம்	மேலான உடன்படிக்கை	மேலான ஒரேபலி	விசுவாசத்தின் உறுதி	விசுவாச வீரர்கள்	விசுவாசத்தைப் பற்றிய அறிவுரை	இறுதி வாழ்த்துகள்
வசனம்	1:1-3	1:4-2:18	3:1-4:13	4:14-7:27	8:1-10	9:1-10:18	10:19-11:40	12:1-29	13:1-17	13:18-25
இடம்	எழுதிய இடம் தெரியவில்லை									

விளக்கவுரை

1. கிறிஸ்து தமது ஆளுமையில் பெரியவர் (1:1 - 4:13)

அ. தீர்க்கதரிசிகளைவிட கிறிஸ்து பெரியவர் (1:1–3)

1:1 புதிய ஏற்பாட்டு மடல்கள் எல்லாவற்றிலும் இது போன்று வேறு எந்த மடலும் இவ்வளவு விரைவாக நூலின் ஆய்வுப்பொருளினிடமாய் வந்ததில்லை. வாழ்த்துரை அல்லது அறிமுகம் போன்ற எதுவுமின்றி இந்நூலாசிரியர் நேரடியாகத் தனது ஆய்வுப் பொருளுக்குள்ளாக நுழைகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மிகவுயர்ந்த மகிமைகளை விவரித்து உரைக்கும்படியான பொறுமையற்ற தூய ஏவுதலால் அவர் நெருக்கப்பட்டிருந்தது போலத் தோன்றுகிறது.

முதலாவதாக, தேவன் **தீர்க்கதரிசிகளின்** மூலமாய்த் திருவுளம் பற்றியதற்கும், தமது மைந்தரின் மூலமாய்த் திருவுளம் பற்றியதற்கும் உள்ள வேறுபாட்டை அவர் கூறுகிறார். தெய்வீக ஏவுதலால் தேவனுடைய சார்பில் பேசியவர்களே **தீர்க்கதரிசிகள்** ஆவார்கள். அவர்கள் யெகோவாவின் கனத்திற்குரிய ஊழியர்கள். அவர்களுடைய திருப்பணியின் ஆவிக்குரிய செல்வம் பழைய ஏற்பாட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும் அன்னாரது திருப்பணி முழுமையற்றதாயும், முடிவுறாத பாகமாயும் இருந்தது. ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் ஒவ்வொரு வெளிப்பாடும் முழுமையானதன்று.

மெய்ப்பொருள் அவர்களுக்குப் பங்கு பங்காக வெளிப்படுத்தப்பட்டதுமட்டுமின்றி, அதனை அவர்கள் மக்களுக்குப் பல **வகையான** முறைகளில் தெரியப்படுத்தினார்கள். அது நியாயப் பிரமாணமாகவும், வரலாறாகவும், பாடல்களாகவும், தீர்க்கதரிசனங்களாகவும் வெளிப்படுத்தப் பட்டது. சில வேளைகளில் வாய்மொழியாகவும் சில வேளைகளில் எழுத்துமூலமாகவும் அது அறிவிக்கப்பட்டது. சில வேளைகளில் அது காட்சிகளாகவும் கனவுகளாகவும், அடையாளங்களாகவும், சைகைகளாகவும் புலப்படுத்தப்பட்டது. ஆயினும் யூதமக்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட முந்தைய வெளிப்பாடு எந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டதாயிருந்தாலும், அது தொடக்கநிலைக் குரியதாகவும், படிப்படியாய் வளர்ச்சியடைகிறதாகவும் இருந்தது. மேலும் அது **வகைவகையான** முறைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

1:2 ஒரு குறிப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்ததும், முழுமையற்றதும் வெவ்வேறு பண்புடையதுமான பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள், இப்பொழுது தேவனுடைய **குமாரனில்** வெளிப்படுத்தப்பட்ட ஒப்புயர்வற்ற இறுதியான வெளிப்பாட்டில் மறைந்து இருளுக்குள் சென்றுவிட்டன. தெய்வீக வார்த்தையைத் தெரியப்படுத்தும்படி தீர்க்கதரிசிகள் செல்தடமாக மட்டுமே செயல்பட்டார்கள். மனிதனுக்கு தேவன் திருவுளம் பற்றிய இறுதி வெளிப்பாடு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார். இது யோவான், "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்ற கூறியபடி இருக்கிறது (யோவான் 1:18). "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று கர்த்தராகிய இயேசுவே தம்மைக் குறித்துக் கூறினார் (யோவான் 14:9). கிறிஸ்து தேவனுக்காகப் பேசியது மட்டுமின்றி தேவனாகவும் பேசினார்.

தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் தேவனுடைய குமாரன் அளவிற்கடங்கா மேன்மையுடையவராக இருக்கிறார் என்பதை வலியுறுத்தும் பொருட்டு, நூலாசிரியர் முதலாவது அவரைச் **சர்வத்துக்கும் சுதந்தரவாளி** என்ற அறிமுகப் படுத்துகிறார். தெய்வீக நியமனத்தால் இப்பிரபஞ்சம் அவருக்குச் சொந்தமானது என்பதும், கூடிய விரைவில் அவர் இதனை ஆளுகை செய்வார் என்பதும் இதன் பொருளாகும்.

இவரைக்கொண்டு தேவன் **உலகங்களை** உண்டாக்கினார். படைப்பில் இயேசு கிறிஸ்து செயல்திறம் மிக்க பிரதிநிதியாகச் செயல்பட்டார். அவர் விண்மீன்கள் நிறைந்த வானத்தையும், வளிமண்டலத்தையும், பூமியையும் , மனித இனத்தையும், காலங்களைக் குறித்த தேவதிட்டத்தையும் உளவாயிருக்கும்படி உண்டுபண்ணினார். படைக்கப்பட்ட ஒவ்வொன்றும், அது ஆவிக்குரிய தாயினும் சரீரப்பிரகாரமானதாயினும் அவராலேயே படைக்கப்பட்டது.

1:3 அவர் தேவனுடைய **மகிமையின்** ஒளியை வீசுகிறவராக இருக்கிறார், அதாவது, பிதாவாகிய தேவனிடத்தில் காணப்படுகிற முழுநிறைவுகள் யாவும் அவரிடத்திலும் காணப்படுகின்றன. அவர் அவருடைய மகிமையின் சுடரொளியாக அல்லது ஒளிக்கதிராகத் திகழ்கிறார். தேவனுடைய நன்னெறி மற்றும் ஆவிக்குரிய மகிமைகள் அனைத்தும் அவரிடத்தில் காணப்பட்டன.

மேலும், கர்த்தராகிய இயேசு தேவனுடைய இன்றியமையாத கூறுகளின் உளதாந்தன்மையின் மிக துல்லியமான **சொரூபமாயிருக்கிறார்**. இது சரீரப் பிரகாரமான ஒற்றுமை என்னும் பொருளைத் தருகிறதில்லை என்பது நிச்சயம். ஏனெனில் தேவன் ஓர் ஆவியாக, உள்பொருளாக இருக்கிறார். நம்மால் புரிந்துகொள்ளக்கூடிய எல்லா வழிகளிலும், கிறிஸ்து திருத்தந்தையை மிகச்சரியாகப் பிரதிபலித்துக் காட்டுபவராக இருக்கிறார் என்பதே இதன் பொருளாகும். இதைக் காட்டிலும் மிக நெருக்கமான ஒற்றுமையை வேறு எங்கும் காணவியலாது. தேவன் எவ்வாறு இருக்கிறார் என்பதைக் குமாரன், தேவனாயிருப்பதால், தமது பேச்சின் மூலமாகவும் வழிகளின் மூலமாகவும் மிகத்துல்லியமாக வெளிப்படுத்துகிறார்.

மேலும் அவர் **சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்** இருக்கிறார். அவர் தொடக்கத்தில் உலகங்கள் உண்டாகும்படி பேசினார் (எபி. 11:3). அவர் இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறார். அவருடைய வல்லமையுள்ள **வசனம்** ஜீவனைத் தாங்குகிறது, பருப்பொருள் யாவற்றையும் ஒன்று கூட்டி உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கிறது, இப்பிரபஞ்சத்தை ஒழுங்கும் கிரமமுமாய்ச் செயல்படுத்தி நடத்துகிறது. சகலமும் அவருக்குள் நிலை நிற்கிறது (கொலோ. 1:17). மிக ஆழமான அறிவியல் பிரச்சினைக்கு எளிமையான விடை இங்கு தரப்பட்டிருக்கிறது. அணுக்களின் மூலக்கூறுகளை ஒன்றுகூட்டி நிலைநிற்கச் செய்வது எது என்பதைக் கண்டுபிடிக்க அறிவியல் அறிஞர்கள் போராடுகிறார்கள். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே சகலத்தையும் தாங்குகிறவர் என்பதை நாம் இங்கு கற்றுக்கொள்கிறோம், அவர் அதனைத் தம்முடைய வலிமை மிக்க **வசனத்தினாலே** செய்கிறார்.

ஆனால், அடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ள நமது இரட்சகரின் மகிமை எல்லாவற்றிலும் அதிகமாகத் திகைப்படையச் செய்வதாகும் - **தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணினார்**. படைப்பாளரும் தாங்குகிறவரும் பாவத்தைச் சுமப்பவராக மாறினார். இப்பிரபஞ்சத்தை படைக்கும்படி அவர் பேச வேண்டியதாக மட்டுமே இருந்தது. இந்தப் பிரபஞ்சத்தைச் செயலாற்றி நடத்துவதற்கும் அவர் பேச வேண்டியதாகவே இருந்தது, ஏனெனில் அங்கு நன்னெறி சார்ந்த எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் நம்முடைய பாவத்தை என்றென்றைக்குமாக நீக்கும்படி, அவர் கல்வாரி சிலுவையில் மரணம் அடைய வேண்டியதாயிற்று. ஒப்புயர்வற்றவராகிய கர்த்தர் பலியாட்டுக் குட்டியாக இறங்கி வந்தார் என்பதை எண்ணிப் பார்க்கையில் நாம் தடுமாற்றம் அடைகிறோம் "அன்பு அத்தனை வியப்பிற்குரியது, தெய்வீகமானது, அது எனது ஆத்துமாவையும் எனது வாழ்வையும் எனதுடைமை எல்லாவற்றையும் உரிமைகொண்டாடுகிறது" என்று ஐசக் வாட்ஸ் தனது பாடலில் கூறினாற்போல் இது இருக்கிறது.

இறுதியாக, அவர் முடிசூட்டப்பட்ட கர்த்தர் என்னும் புகழ்ச்சியை நாம் காண்கிறோம்: **உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே** அவர் **உட்கார்ந்தார்**, இளைப்பாறுதலின் தோரணை. கடின உழைப்பினால் உண்டான களைப்பின் இளைப்பாறுதல் அல்ல இது. மாறாக, வேலை முடிந்ததால் உண்டான மன நிறைவின் இளைப்பாறுதலாகும். மீட்பின் வேலை முடிந்துவிட்டது என்பதை இந்தத் தோரணை சுட்டிக்காட்டுகிறது.

மகத்துவமானவருடைய வலதுபாரிசம் கனத்திற்கும் சிலாக்கியத்திற்கும் உரிய இடமாகும் (எபி. 1:13). அவருடைய மகிமை நிறைந்த வெற்றியின் காரணமாக தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார். வலதுபாரிசம் அதிகாரத்திற்குரிய இடமாகவும் இருக்கிறது (மத். 26:64). அது மகிழ்ச்சிக்குரிய இடமாகவும் இருக்கிறது (சங். 16:11). இப்பிரபஞ்சத்தின் ஆளுகையின் செங்கோலை, ஆணியின் தழும்பை உடைய இரட்சகரின் கரம் ஏந்தி நிற்கும் (1 பேதுரு 3:22).

படைப்பு முதல் கல்வாரி வரையிலும், பின்னர் மகிமை அடைந்த நிகழ்ச்சி வரையிலும் கர்த்தருடைய பாதையைப் பின்தொடர்ந்து செல்லுகையில், தீர்க்கதரிசிகளின் காட்சியை முழுவதுமாக நாம் இழந்துபோனோம் என்றே தோன்றுகிறது. அவை புகழ்வாய்ந்தவையாக இருந்த போதிலும், அவை பின்னோக்கி இருளுக்குள் சென்றுவிடுகின்றன. அவை வரவிருந்த மேசியாவுக்குச் சாட்சி கொடுத்தன (அப். 10:43). இப்பொழுதோ அவர் வந்துவிட்ட நிலையில், காட்சியிலிருந்து மகிழ்ச்சியோடு பின்வாங்கிச் சென்றுவிட்டன.

ஆ. தேவதூதர்களைவிட கிறிஸ்து பெரியவர் [1:4–2:18]

1:4 இந்த மடலின் வாதத்தின் அடுத்த கட்டம், கிறிஸ்து **தேவதூதர்களைவிடப்** பெரியவர்

என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறது. தேவதூதர் களின் ஊழியத்தைக் குறித்து யூத மக்கள் மிக வுயர்ந்த மதிப்பைக் கொண்டிருந்ததால் இந்த வாதம் அவசியமானது. நியாயப்பிரமாணமும்கூட தேவதூதர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டது. (அப். 7:53; கலா. 3:19). மேலும், பண்டைய தேவ மக்களின் வரலாற்றின் எல்லாப் பகுதிகளிலும் அவ்வப்போது தேவதூதர்கள் காட்சி தந்தார்கள். கிறிஸ்துவுக்காக ஒருவன் யூதமார்க்கத்தை விட் டுச் சென்றால், அவன் இந்த தேசிய மற்றும் சமய பாரம்பரியம் என்னும் சிறப்பிலிருந்து தன்னையே துண்டித்துக் கொண்டது போல இருக்கும் என்று ஒருவேளை அவர்கள் கருதினார்கள் போலும். உண்மை யாதெனில், கிறிஸ்துவை அடைகிற வன், தேவதூதர்களைவிடப் பெரியவரை இரண் டத்தனையான வகையில் அடைகிறான் என்பதே பொருளாகும் - முதலாவது தேவகுமாரனாக (1:4-14), அடுத்ததாக மனித குமாரனாக (2:5-18) அவரை அவன் அடைகிறான்.

கிறிஸ்து **தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வ ளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர் களிலும் மேன்மையுள்ளவரானார்**. முதலாவது அவர் ஈட்டிய மேன்மையையும், பின்னர் மரபுரிமை யாய்ப் பெற்ற மேன்மையையும் குறித்து இது பேசுகிறது.

அவருடைய உயிர்த்தெழுதல், விண்ணகம் ஏகுதல் மற்றும் கர்த்தரும் கிறிஸ்துவும் என்னும் நிலையில் மகிமையடைதல் ஆகிய நிகழ்ச்சி களால் அடைந்த மேன்மையே ஈட்டிய மேன்மை யாகும். அவர் மனுவுரு எடுத்தபோது, பாடு நிறைந்த மரணத்தை அடையும்படி தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டார் (2:9). ஆனால் தேவனோ அவரை உயர்த்தி, மிகவுயர்ந்த மகிமையினாலே முடிசூட்டினார்.

தேவனுடைய குமாரன் என்னும் உறவு நிலை யில் அவர் கொண்டிருந்த மேன்மையே மரபுரிமை மேன்மையாகும். விசேஷித்த நாமம் என்பது குமாரன் என்னும் பெயரைக் குறிக்கிறது.

1:5 பழைய ஏற்பாட்டிலிருந்து, மேசியாவே தேவனுடைய குமாரன் என்று உறுதிப்படுத்தக் கூடிய இரண்டு வசனங்களை ஆசிரியர் மேற் கோள் காட்டுகிறார். முதலாவது, சங்கீதம் 2:7 - இல் தேவன் அவரைக் குமாரன் என்று அழைக் கிறார். **"நீர் தேவனுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்."** ஒரு பொரு ளில் கிறிஸ்து நித்தியபேறான குமாரன் ஆவார். இன்னொரு பொருளில் அவர் மனுவுரு எடுத்த போது அவர் குமாரனாகப் பெறப்பட்டார். மூன்றா வது பொருளில் அவர் உயிர்த்தெழுதலில் குமார னாகப் பெறப்பட்டார் - மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ. 1:18). பிசிதியா நாட்டிலிருந்த அந்தியோகியா ஜெப ஆலயத்தில் பவுல் இந்த வசனத்தை எடுத்துரைத்து, கிறிஸ்து வின் முதல் வருகையோடு பொருத்திக் காட்டி னார் (அப். 13:32,33).

ஆனால் இங்கு முக்கியமான கருத்து என்ன வெனில், தேவன் ஒருமுறை கூட தேவதூதரைத் தமது **குமாரன்** என்று கூப்பிட்டதில்லை. தேவ தூதர்கள் மொத்தமாக தேவபுத்திரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள் (யோபு 1:6; சங். 89:6 (ASV), ஆயினும் படைக்கப்பட்டவை என்பதிலும் கூடுதலாக எந்தப் பொருளையும் அச்சொல் தருகிறதில்லை. கர்த்தராகிய இயேசு தேவ குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில், அவர் தேவனுக்குச் சமமானவர் என்றே குறிப்பிட் டுச் சொல்லப்பட்டுள்ளது.

இரண்டாவது வசனம் 2 சாமுவேல் 7:14 -இல் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது: **"நான் அவருக் குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமா ரனாயிருப்பார்."** இங்கு காணப்படும் சொற்கள் சாலொமோனைக் குறிப்பதாக இருந்தாலும், பரி சுத்த ஆவியானவர் இவற்றை தாவீதின் உன்னத குமாரனைக் குறிப்பதாகப் பொருத்திக் காட்டு கிறார். தேவதூதரை இவ்விதமாக தேவன் குறிப் பிட்டதில்லை என்பதே இங்கும் சொல்லப்பட்டிருக் கிற கருத்து.

1:6 கிறிஸ்து தேவதூதர்களைக் காட்டிலும் பெரியவர் என்பதை எடுத்துரைக்கும்படி சொல் லப்பட்டுள்ள மூன்றாவது கருத்து யாதெனில், அவர் அவர்களுடைய ஆராதனைக்குரியவராக இருக்கிறார், ஆனால் அவர்களோ அவருடைய தூதுவர்களாகவும் பணிவிடைக்காரர்களாகவும் இருக்கிறார்கள். தனது கருத்தை மெய்ப்பிக்கும் படி நூலாசிரியர் உபாகமம் 32:43 (எழுபதின்மர் மொழிபெயர்ப்பு), சங்கீதம் 97:7 (NKJV அடிக் குறிப்பைக் காண்க) ஆகிய வசனங்களை எடுத் தாள்கிறார்.

அவர் **தமது முதற்பேறானவரை உலகத் தில் பிரவேசிக்கச் செய்தபோது** என்னும் உபா கம வசனம் வரப்போகிற நிகழ்ச்சியை எதிர்நோக் கியதாக இருக்கிறது. அதாவது, இந்த நிகழ்ச்சி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்ப தாகும். அந்தச் சமயத்தில், அவர் தேவதூதர்

களால் வெளியரங்கமாகத் தொழுது கொள்ளப் படுவார். அவர் தேவன் என்பதே இதன் பொருளாகும். மெய்யான தேவனைத் தவிர வேறு எவரையும் தொழுதுகொள்வது சிலைவணக்கமாகும். இருந்தபோதிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **தேவதூதர்களால்** தொழுதுகொள்ளப்பட வேண்டும் என்று தேவன் இங்கு கட்டளையிடுகிறார்.

முதற்பேறானவர் என்னும் சொல் காலத்தில் முந்தினவர் (லூக்கா 2:7) என்றோ, படிநிலையில் அல்லது புகழ்ச்சியில் முதல்வர் என்றோ (சங். 89:27) பொருள்படும். இங்கும், ரோமர் 8:29 மற்றும் கொலோசெயர் 1:15,18 ஆகிய வசனங்களிலும் இரண்டாவது பொருளிலேயே இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1:7 தம்முடைய குமாரன் ஒப்புயர்வற்றவராக இருக்கிறார் என்னும் உண்மையை வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு தேவன் **தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும் தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜ்வாலைகளாகவும் செய்கிறார்**. அவர் **தேவதூதர்களின்** படைப்பாளராகவும், அவர்களை இயக்குகிறவராகவும் இருக்கிறார். அவர்கள் அவருடைய சித்தத்திற்குக் காற்றின் வேகத்தோடும் அக்கினியின் தீவிரத்தோடும் கீழ்ப்படிகிறார்கள்.

1:8 ஒப்பிடக்கூடாதபடி விண்மீன்களின் கூட்டம்போல மகிமைகள் நிறைந்தவராய் குமாரன் காணப்படுவதை நாம் தொடர்ந்து பார்க்கிறோம். முதலாவது அவர் தேவனால் **தேவன்** என்று அழைக்கப்படுகிறார். பிதாவாகிய தேவன், **"தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது"** என்று சங்கீதம் 45:6 -இல் மேசியாவைப் போற்றுகிறார். மீண்டும் இங்கு கிறிஸ்துவின் தெய்வத் தன்மை தவறற்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வாதம் எபிரெய வழக்குச் சொல்லிலிருந்து வருகிறது. (எபிரெயர் மடலில் ஒவ்வொரு அதிகாரத்திலும், பழைய ஏற்பாட்டு மேற்கோள் குறைந்தது ஒன்றாவது இடம் பெற்றுள்ளது.)

அவர் நித்திய இறைவனுமாக இருக்கிறார்; அவருடைய **சிங்காசனம் என்றென்றைக்கும்** நிலைநிற்கும். அவருடைய அரசு "ஒரு கரையிலிருந்து மறுகரை மட்டும் விரிந்து, சந்திரன்கள் மெழுகுபோலாகி இனி தேய்வுறுதல் நடைபெறாது என்னும் காலம் மட்டும்" உண்மையாய் நிலைநிற்கும்.

அவர் நீதியுள்ள அரசர். அவர் நீதியுள்ள செங்கோலைப் பயன்படுத்துவதாக சங்கீத ஆசிரியன் பேசுகிறான். இந்த அரசர் நிறைவான நீதியோடும் நேர்மையோடும் அரசாளுகிறார் என்பதைக் கவிதை நடையில் கூறுவதாக இது காணப்படுகிறது.

1:9 அவர் மாற்றமின்றி நிலையாக **நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறவராக** இருக்கிறார் என்னும் உண்மை அவருடைய தனிப்பட்ட நேர்மைக்குச் சான்றாகும். அவருடைய முப்பத்து மூன்று ஆண்டுக்கால புவிவாழ்க்கையை இது குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. அக்காலத்தில் அவருடைய குணவியல்பில் எவ்விதமான களங்கத்தையும், அவருடைய நடத்தையில் யாதொரு குறைவையும் தேவனுடைய கண்களால் காணமுடியவில்லை. அவர் ஆளுகை புரிவதற்குத் தகுதியுடையவர் என்பதை மெய்ப்பித்தார்.

இத்தகைய தனிப்பட்ட மேம்பாட்டின் காரணமாக **தேவன்** அவருடைய **தோழரைப் பார்க்கிலும்** அவரை **ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்**. மற்ற எல்லாவற்றையும் விட அவர் கிறிஸ்துவுக்கு ஒப்புயர்வற்ற இடத்தைக் கொடுத்தார் என்பதே இதன் பொருளாகும். இங்கு தைலம் என்று சொல்லப்பட்டிருப்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடக் கூடும். மற்ற எல்லோரிலும் அதிகமாகக் கிறிஸ்துவுக்கு தேவன் தமது ஆவியைக் கொடுத்தார் (யோவான் 3:34). அவருடைய தோழர்கள் எனப்படுபவர், அவர் யாரோடெல்லாம் உறவாடினாரோ அவர்களெல்லாரையும் குறிக்கிறது. ஆனால் அவர்களெல்லாம் அவருக்குச் சமமானவர்கள் என்பது இதன் பொருளாகாது. தேவதூதர்களும் இதில் இடம் பெறக்கூடும், ஆனால் இது பெரும்பாலும் அவருடைய யூத சகோதரர்களையே குறிப்பிடுகிறது எனலாம்.

1:10 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே வானத்தையும் பூமியையும் உண்டாக்கியவர். இவ்வுண்மை சங்கீதம் 102:25-27 ஆகிய வசனங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அந்தச் சங்கீதத்தில், "என் தேவனே.. என்னை எடுத்துக் கொள்ளாதேயும்" என்று மேசியா வேண்டினார். கெத்செமனே தோட்டத்திலும், கல்வாரியிலும் பிதாவாகிய தேவன் இந்த ஜெபத்திற்கு பதில் கூறினார், "நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது."

பத்தாவது வசனத்தில் தேவன் தமது குமாரனைக் **கர்த்தாவே** என்று அழைக்கிறார். அதாவது யெகோவா என்று அழைப்பதை நாம் கவனிக்க வேண்டும். இதனுடைய முடிவு தவிர்க்க முடியாதது: புதிய ஏற்பாட்டு இயேசு பழைய ஏற்பாட்டு யெகோவாவே ஆவார்.

1:11,12 படைப்பு நிலையற்றது, படைப்பாளரோ நிலையாக என்றென்றும் இருக்கிறவர் என்னும் வேறுபாடு இவ்விரண்டு வசனங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. அவருடைய கிரியைகள் **அழிந்து போம்**, அவரோ **நிலைத்திருப்பார்**. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மலைகள், பெருங்கடல்கள், ஆறுகள் நிரந்தரமானவை போலத் தோற்றமளிக்கின்றன. ஆனால் அவை தம்மகத்தே பயனற்றுப்போகுதல் என்னும் பண்பைக் கொண்டிருக்கின்றன. சங்கீதப் பாடலாசிரியன் அவற்றை **வஸ்திரத்திற்கு** ஒப்பிடுகிறார் முதலாவது அது பழைமையாய்ப்போம்; மேலும் அது பயனற்றபடி சுருட்டிவைக்கப்படும்; அதன்பிறகு அது சிறப்பான ஒன்றாக மாற்றப்படும்.

பனிமூடிய மலைத்தொடர்களைக் கவனித்துப் பாருங்கள், மகிமை நிறைந்த சூரிய அஸ்தமனத்தைப் பாருங்கள், விண்மீன்கள் நிறைந்த வானத்தைப் பாருங்கள். பின்னர் இந்த வீறார்ந்த தொனியைக் கேளுங்கள்: **ஒரு சால்வையைப் போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப் போம்; நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது.**

1:13 மேலும் ஒரு மேற்கோள் (சங். 110:1) குமாரனின் சிறப்பை மெய்ப்பிக்கிறது. அந்தச் சங்கீதத்தில் தேவன் மேசியாவை, **"நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்"** என்று அழைக்கிறார். ஒரு கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது, "தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் இப்படிச் சொன்னதுண்டா?" ஒருவரும் இல்லை என்பது இதனுடைய விடை என்பதில் ஐயமில்லை.

தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்வது மிகவுயர்ந்த கனத்திற்கும் அளவற்ற அதிகாரத்திற்கும் அடையாளமாகும். ஒருவருடைய பகைஞர் யாவரும் அவருடைய பாதபடியாக்கப்படுவது என்பது, பிரபஞ்சம் முழுவதும் வென்றடக்கப்படுவது என்றும் பிரபஞ்சம் முழுவதும் ஆளுகைக்கு உட்படுத்தப்படுவது என்றும் பொருள்படும்.

1:14 தேவதூதர்களுக்கு அளிக்கப்பட்ட பணித்திட்டம் ஆளுகைசெய்வதல்ல, மாறாக பணிவிடை புரிவதே ஆகும். அவர்கள் தேவனால் படைக்கப்பட்ட உயிரினங்கள் ஆவார்கள். அவர்கள் **இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்.** இதனை இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளலாம்: முதலாவது, அவர்கள் இன்னமும் மனம்திரும்பாத மக்களுக்குப் பணிவிடை செய்கிறார்கள்; அல்லது இரண்டாவதாக, பாவத்தின் தண்டனையிலிருந்தும் அதன் அதிகாரத்திலிருந்தும் காக்கப்பட்டவர்கள், ஆனால் பாவத்தின் முன்னிலையிலிருந்து இன்னமும் இரட்சிக்கப்படாதவர் யாரோ அவர்களுக்கெல்லாம் அதாவது இன்னமும் பூமியில் உயிர்வாழ்கிற விசுவாசிகளுக்கெல்லாம் அவர்கள் பணிவிடை செய்கிறார்கள்.

அவர்கள் "பாதுகாக்கும் தேவதூதர்கள்" என்பது இதன் பொருளாகும். இத்தகைய சத்தியத்தைக்கேட்கும் நாம் ஏன் வியப்படைய வேண்டும்? தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுக்கு எதிராக ஓயாமல் சண்டைபோடுகிற தீய ஆவிகளும் உள்ளன என்பது நிச்சயம் (எபே. 6:12). **இரட்சிப்புக்கென்று** அழைக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கும்படி கவனிக்கிற பரிசுத்த தேவதூதர்களும் உள்ளனர் என்பது வியந்து பாராட்டக் கூடியதாக இருக்கிறதல்லவா?

ஆனால் நாம் இந்தப் பகுதியில் முக்கிய கருத்தை நோக்கி திரும்பச் செல்ல வேண்டும் - பாதுகாக்கும் தேவதூதர்களைப் பற்றியதல்ல, மாறாக இவ்வுலகம் முழுவதையும் ஆளுகிற அரசனுடைய பணிவிடைக்காரர்கள் அந்த அரசனுக்கு எவ்வாறு தாழ்ந்தவர்களாக இருக்கிறார்களோ அதுபோலவே தேவதூதர்கள் தேவகுமாரனுக்குத் தாழ்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

2:1 கிறிஸ்து தேவகுமாரனாக இருக்கின்ற காரணத்தால், அவர் தேவதூதர்களைப் பார்க்கிலும் மிகவுயர்ந்த வகையில் சிறந்தவராக இருக்கிறார் என்று இந்நூலாசிரியர் தனது வாதத்தை இப்பொழுது கூறி முடித்திருக்கிறார். அவர் மனிதகுமாரன் என்னும் நிலையிலும் ஒப்புயர்வற்றவராக இருக்கிறார் என்பதை விளக்கிக் கூறும் முன்னர், இம்மடலின் ஆசிரியர் இதிலுள்ள மிகவும் முக்கியமான எச்சரிப்புகளில் முதலாவதை எடுத்துரைக்கச் சிறிது நேரம் எடுத்துக்கொள்கிறார்.

இது சுவிசேஷம் என்னும் நற்செய்தியை விட்டு விலகிச் செல்லுதலுக்கு எதிரான எச்சரிப்பு ஆகும்.

தந்தருளுபவருடைய மேன்மை,அவர் தருகிற ஈவின் மேன்மை ஆகியவற்றின் காரணமாக, நற்செய்தியைக் கேட்கிற மக்கள் அதற்கு மிகுந்த கவனிப்பைக் கொடுக்க வேண்டும். மெய்ப்பொருளாகிய கிறிஸ்துவை விட்டுவிலகி படவுருவாகிய சமயத்தை நோக்கிச் செல்லக்கூடிய ஆபத்து எப்பொழுதும் இருக்கிறது. இது விசுவாசத்தை மறுதலிப்பது என்று பொருள்படும் - இந்தப் பாவத்திலிருந்து மனந்திரும்புதல் இல்லை.

2:2 தேவதூதர்கள் இஸ்ரவேல் வரலாற்றில் ஆற்றிய பணிகளுக்கு யூதர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அவற்றில் முதன்மையானது, நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட போது பதினாயிரங்களான தேவதூதர்கள் வருகை புரிந்திருந்தார்கள் என்னும் நிகழ்ச்சியாக இருக்கக்கூடும் (உபா. 33:2; சங். 68:17). நியாயப்பிரமாணமானது **தேவதூதர்மூலமாய்ச் சொல்லப்பட்டது** என்பது உண்மையே. அது ஆதாரத்துடன் கூடிய உண்மையுமாகும். ஒவ்வொரு மீறுதலும் அதற்குத் தக்கபடி தண்டிக்கப்பட்டது. இவையாவும் தாராளமாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தன.

2:3,4 ஆனால் இப்பொழுது வாதமானது சிறியதிலிருந்து பெரியதை நோக்கிச் செல்லுகிறது. நியாயப்பிரமாணத்தை மீறியவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் எனில், நற்செய்தியைக் குறித்து எவ்வித கவலையும் இல்லாமலிருப்பவர்களுடைய முடிவு என்னவாகும்? மனிதர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நியாயப்பிரமாணம் கூறுகிறது; தேவன் என்ன செய்தார் என்பதை நற்செய்தி எடுத்துரைக்கிறது. நியாயப்பிரமாணத்தின் மூலமாகவே பாவத்தைப் பற்றிய அறிவு உண்டாகிறது; **இரட்சிப்பைக்** குறித்த அறிவோ நற்செய்தியின் மூலமாக உண்டாகிறது.

இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்றிருக்கக் கூடிய நிலை நியாயப்பிரமாணத்தை மீறுகிற செயலைக் காட்டிலும் பேரிடர் விளைவிக்கக் கூடியது. நியாயப்பிரமாணம் தேவதூதர் மூலமாக தேவனால் மோசேக்குக் கொடுக்கப்பட்டு, பின்னர் மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் நற்செய்தியோ கர்த்தராகிய இயேசுவால் நேரடியாகச் சொல்லப்பட்டது. அது மட்டுமின்றி, அது அப்போஸ்தலரால் தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு **உறுதியாக்கப்பட்டது.** மேலும் இரட்சகர் கூறியவற்றைக் **கேட்டவர்களும்** அதனை உறுதிசெய்தார்கள்.

தேவன்தாமே அந்தச் செய்தியை **அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் உறுதிசெய்தார்.** கர்த்தரும் அப்போஸ்தலர்களும் ஆவிக்குரிய உண்மைகளை வெளிப்படுத்திக்காட்டும்படி செய்த அதிசயச் செயல்களே **அடையாளங்கள்** ஆகும். எடுத்துக்காட்டாக, ஐயாயிரம்பேருக்கு உணவளித்த நிகழ்ச்சி (யோவான் 6:1-14), ஜீவ அப்பத்தைக் குறித்துத் தொடர்ந்து ஆற்றப்பட்ட உரைக்கு அடித்தளமாயிற்று (யோவான் 6:25-29). காண்பவர்களுக்குத் திகைப்பு உண்டாக வேண்டும் என்னும் நோக்கத்துடன் செய்யப்பட்ட அதிசயச் செயல்களே **அற்புதங்கள்** ஆகும். லாசரு உயிரோடு எழுப்பப்பட்ட நிகழ்ச்சி இதனை விளக்குகிறது (யோவான் 11:1-44) தெய்வீக வல்லமையால் இயற்கையின் விதிகளுக்கு மாறாகச் செய்யப்படுகிற எந்தச் செயலும் **பலத்த செய்கை** என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதர்கள் தங்களுடைய இயல்புக்கு முற்றிலும் அப்பாற்பட்ட வகையில் பேசும்படியும் செயல்புரியும்படியும், அவர்களுக்குச் சிறப்பாக அருளப்படுகின்ற ஆற்றல்களே **பரிசுத்த ஆவியின் வரங்கள்** ஆகும்.

எந்த ஒரு செய்தியையும் நம்புவதற்கு முன் யூதர்கள் தங்களுடைய பாரம்பரிய வழக்கத்தின்படி ஏதாவது அடையாளத்தைக் கேட்கிறவர்களாக இருந்த காரணத்தால், சிறப்பாக அவர்களுக்கென்று நற்செய்தியின் உண்மைத் தன்மையை உறுதிசெய்யும் நோக்கத்தோடு இந்த அதிசயச் செயல்கள் யாவும் செய்யப்பட்டன. புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்பட்டு நமக்கு அளிக்கப்பட்டிருக்கிற நிலையில் நற்செய்தியை உறுதி செய்யக்கூடிய அற்புதங்கள் தேவையற்றவை என்பதற்கான சில சான்றுகள் உள்ளன. ஆயினும் வேறு காலங்களில் பரிசுத்த ஆவியானவர் இந்த அற்புதச் செயல்களை மீண்டும் செயல்படுத்த மாட்டார் என்று திட்டவட்டமாக மெய்ப்பிப்பது கூடாத செயல்.

இந்த அதிசயச் செயல்களுக்கான ஆற்றல்களைப் பரிசுத்த ஆவியானவர் தாம் தெரிந்து கொண்டபடி தந்தருளினார் என்பதையே **தம்முடைய சித்தத்தின்படி** என்னும் சொற்கள் சுட்டிக் காட்டுகின்றன. இவை தேவனால் அவருடைய

இறையாண்மையில் வழங்கப்பட்ட வரங்கள். இவற்றை மனிதர்கள் உரிமைகோரவோ, தங்களுடைய ஜெபத்தினால் பெற்றுக்கொள்ளவோ முடியாது. ஏனெனில் இவற்றைத் தருவதாக தேவன் ஒருபோதும் வாக்குறுதி தரவில்லை.

2:5 தேவ குமாரன் என்னும் நிலையில் கிறிஸ்து தேவதூதரைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார் என்பதை நாம் முதல் அதிகாரத்தில் கண்டோம். இப்பொழுது அவர் மனிதகுமாரன் என்னும் நிலையிலும் மேலானவராக இருக்கிறார் என்பது காண்பிக்கப்படுகிறது. கிறிஸ்து மனுவுரு எடுத்த செயல் நம்புதற்கரியது, அவர் இழிவுபடுத்தப்பட்ட செயல் அவமானத்திற்குரியது என்பதே யூதர்களுடைய எண்ணம். அதனை நாம் நினைவுகூருவோமானால் இங்கு காணப்படும் சிந்தனை ஓட்டத்தை நாம் புரிந்துகொள்வதற்கு அது உதவி செய்யும். யூதர்களைப் பொருத்தமட்டில் இயேசு வெறும் மனிதர்தான், ஆகவே அவர் தரத்தில் தேவதூதரிலும் தாழ்ந்தவர் என்பதே அவர்களது கருத்து. இயேசு மனிதர் என்னும் நிலையிலும் தேவதூதரைப் பார்க்கிலும் மேலானவர் என்பதைத் தொடர்ந்துவரும் வசனங்கள் காட்டுகின்றன.

முதலாவது, மனிதர்கள் குடியிருக்கத் தக்கதாக் காணப்படும் **இனிவரும் உலகத்தை** தேவன் **தேவதூதருக்குக்** கீழ்ப்பட்டிருக்கும்படி ஆணையிடவில்லை. **இனிவரும் உலகம்** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, தீர்க்கதரிசிகளால் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ள சமாதானமும் வளமும் மிக்க பொற்காலமே ஆகும். அதனையே நாம் ஆயிரமாண்டு ஆட்சிக் காலம் என்று சொல்லுகிறோம்.

2:6 இறுதியில் இவ்வுலகத்தின் ஆளுகை தேவதூதருக்கல்ல, மனிதருக்கே அளிக்கப்படும் என்பதைக் காட்டும்படி சங்கீதம் 8:4-6 ஆகிய வசனங்கள் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. ஒரு பொருளில் மனிதன் குறிப்பிடதக்கவனல்லன். ஆயினும் தேவன் அவனை **நினைக்கிறார்.** ஒரு பொருளில் மனிதன் முக்கியமற்றவன், ஆயினும் தேவன் அவனை **விசாரிக்கிறார்**.

2:7 படைப்பின் அளவுகோலில், மனிதனுக்கு **தேவதூதரிலும்** தாழ்வான இடமே கொடுக்கப்பட்டுள்ளது. அவனுடைய அறிவு, நடமாட்டம், ஆற்றல் ஆகியவற்றிற்கு ஓர் எல்லையுண்டு. அவன் மரணத்திற்கு உட்பட்டவன். ஆனாலும் தேவனுடைய நோக்கத்தின்படி மகிமையினாலும் கனத்தினாலும் அவன் முடிசூட்டப்படும்படி அவர் முன்தீர்மானம் செய்துவிட்டார். அவனுடைய சரீரத்திலும் மனதிலும் காணப்படும் கட்டுப்பாடு பெருமளவு நீக்கப்பட்டு இவ்வுலகில் அவன் உயர்த்தப்படுவான்.

2:8 வரப்போகிற நாளில், தேவதூதரின் சேனை, விலங்குகளின் உலகம், பறவைகள், கடல்வாழ் மீனினங்கள், வான்கோள்களின் அமைப்பு, உண்மையில் படைக்கப்பட்ட இப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பாகமும் மனிதனுடைய அதிகாரத்திற்குக் **கீழ்ப்படுத்தப்படும்.**

இதுவே மனிதனைக் குறித்து தேவன் கொண்டிருந்த பூர்வாங்கமான விருப்பம். எடுத்துக்காட்டாக, "... பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்" என்று அவர் அவனிடத்தில் கூறினார் (ஆதி. 1:28).

அவ்வாறிருக்க, அவனுக்குச் **சகலமும் கீழ்ப்பட்டிருப்பதாக** நாம் ஏன் காண்கிறதில்லை? தனது பாவத்தின் காரணமாகவே மனிதன் தனது ஆளும் உரிமையை இழந்து போனான் என்பதே இதனுடைய விடையாகும். ஆதாமின் பாவமே படைப்பின் மீது சாபத்தைக் கொண்டுவந்தது. அடங்கிக் கீழ்ப்படக்கூடிய விலங்குகள் மூர்க்க குணமுடையவையாக மாறிவிட்டன. பூமியானது முள்ளையும் குருக்கையும் முளைப்பிக்கத் தொடங்கிவிட்டது. இயற்கையின்மீது மனிதன் கொண்டிருந்த ஆதிக்கம் எதிர்க்கப்பட்டு ஓர் எல்லைக்கு உட்படுத்தப்பட்டுவிட்டது.

2:9 ஆனாலும், மனிதகுமாரன் இவ்வுலகிற்குத் திரும்பி வரும்போது, மனிதனின் ஆளுகை புரியும் ஆற்றல் அவனுக்குத் திரும்பவும் அளிக்கப்படும். இயேசு மனிதர் என்னும் நிலையில் ஆதாம் இழந்தவற்றையும் அதற்கு அதிகமாகவும் திரும்பப் பெற்றுத் தந்தார். ஆகவே மனிதனுடைய கட்டுப்பாட்டுக்குள் சகலமும் இருப்பதாக நாம் காண இயலாவிடினும், நாம் **இயேசுவையும்**, அவருக்குள்ளாக மனிதன் இறுதியில் இவ்வுலக ஆளுகையைப் பெறப்போகிறதையும் **காண்கிறோம்**.

சிறிது காலம், அவர் **தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்தார்,** குறிப்பாக, அவருடைய முப்பத்து மூன்று ஆண்டுக்கால புவி ஊழியத்தின்போது அவர் சிறியவராக்கப்பட்டிருந்தார். அவர் விண்ணகத்திலிருந்து பெத்லகேமுக்கும், கெத்செமனேவுக்கும், கபத்தாவுக்கும், கொல்கொதாவுக்கும், கல்லறைக்கும் இறங்கி வந்தார். அவர் தாழ்த்தப்பட்டதன் படிகளைக் கவனித்துப்

பாருங்கள். ஆனால் இப்பொழுதோ அவர் **மகிமை யினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டிருக் கிறார்**. அவர் பாடுகள்பட்டு மரணத்தை அடைந்த தன் விளைவே, அவர் அடைந்த மேன்மையாகும். சிலுவையானது மகுடத்தை நோக்கி வழிநடத்தியது.

கிறிஸ்து **ஒவ்வொருவருக்காகவும் மர ணத்தை ருசிபார்த்தது** தேவனுடைய கிருபை யுள்ள நோக்கமேயாகும். இரட்சகர் நம்முடைய பிரதிநிதியாகவும் நமக்குப் பதிலாளாகவும் மரண மடைந்தார், அதாவது, அவர் மனிதராக மரண மடைந்தார், மேலும் மனிதருக்காக மரணமடைந் தார். அவரிடத்தில் விசுவாசம் வைத்தவர்கள் இனி ஒருபோதும் தங்களுடைய பாவத்திற்காக நியாயத்தீர்ப்பு அடையாதபடி, அவர் தமது சரீரத் தில் சிலுவையின்மேல், பாவத்திற்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பு முழுவதையும் ஏற் றுக்கொண்டார்.

2:10 இரட்சகர் தாழ்மையடைந்ததன் மூலமாக மனிதன் தனது ஆளுகையைத் திரும்பப் பெறுவ தென்பது தேவனுடைய நீதியுள்ள பண்பை முற்றி லுமாகச் சார்ந்ததாக விளங்குகிறது. தேவனு டைய ஒழுங்கு முறையானது பெருமளவு குழப்பத் திற்குள்ளாவதற்கு முன்னர், பாவமானது நீதி யாக அடக்கி ஒடுக்கப்பட வேண்டும். ஆகவே பாவத்தை நீக்கும்பொருட்டு கிறிஸ்து பாடுபட வேண்டும், இரத்தம் சிந்த வேண்டும், மரண மடைய வேண்டும் என்பது தேவனுடைய பரிசுத்த குணப் பண்பிற்கு ஏற்புடையது.

ஞானத்தோடு திட்டமிட்டவர், **தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினார்** என்று குறிப்பிடப்பட்டுள்ளார். முதலாவது அவரே அனைத்துப் படைப்புக்கும் குறிக்கோளாக அல் லது இலக்காக இருக்கிறார். அவருடைய புகழ்ச் சிக்காகவும் மகிழ்ச்சிக்காகவுமே அனைத்தும் உண்டாக்கப்பட்டன. ஆனாலும் அவரே எல்லாப் படைப்புக்கும் மூல ஆதாரமாகவும் அல்லது தொடக்கமாகவும் இருக்கிறார். அவரின்றி ஒன் றும் உண்டாக்கப்படவில்லை.

அவருடைய பெரிதான நோக்கம் **அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்ப்பதாகும்.** நம்முடைய தகுதியற்ற தன் மையை எண்ணிப்பார்க்கையில் நமக்காக அவர் இன்னலை ஏற்றுக்கொண்டார் என்பதும், எல்லாக் கிருபைக்கும் அவரே தேவனாக இருக்கின்ற காரணத்தால் அவர் தமது நித்திய மகிமைக்கு நம்மை அழைத்திருக்கிறார் என்பதும் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன.

நாம் மகிமையடைவதற்கான விலை என்ன? நம்முடைய **இரட்சிப்பின் அதிபதி உபத்திவரங் களினாலே பூரணப்படுத்தப்பட** வேண்டியதா யிற்று. கர்த்தராகிய இயேசுவின் நன்னெறி குண நலத்தை எண்ணிப்பார்க்கையில் அவர் எப் பொழுதும் பாவமற்ற பரிசுத்தராயிருந்தார். இந்தப் பொருளில் அவர் ஒருக்காலும் மேலும் பூரணராக் கப்பட இயலாதவராவார். ஆனால் அவர் நம்மு டைய இரட்சகர் என்னும் நிலையில் பூரணராக்கப் பட வேண்டியவராக இருந்தார். நமக்கு நித்திய மீட்பை விலைகொடுத்து வாங்கும் பொருட்டு, நம்முடைய பாவங்களுக்குரிய தண்டனை எல்லா வற்றையும் அவர் அடைய வேண்டியதாயிற்று. அவருடைய மாசற்ற வாழ்க்கையினால் நாம் இரட் சிக்கப்பட்டிருக்க முடியாது. நமக்குப் பதிலாளாக அவர் மரணமடைய வேண்டியது மிக முக்கிய மான தேவையாகும்.

தேவனுக்குத் தகுதியான முறையில் நாம் இரட்சிப்படைய அவர் ஒரு வழியைக் கண்டுபிடித் தார். நம்முடைய இடத்தில் தம்முடைய ஒரே பேறான குமாரன் மரணமடையும்படி அவரை தேவன் அனுப்பினார்.

2:11 அடுத்த மூன்று வசனங்களும் இயேசு வின் மனிதத் தன்மையின் நிறைவை வலியுறுத்து கின்றன. ஆதாம் இழந்துபோன ஆளுகையை அவர் மீண்டும் பெறப்போகிறார். அதன்மூலம் அவர் மெய்யான மனிதர் என்பது மெய்ப்பித்துக் காட்டப்படும்.

முதலாவது உண்மை கூறப்பட்டுள்ளது: **எப்படி யெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒரு வராலே உண்டாயிருக்கிறார்கள்.** அதாவது, அவர்கள் யாவரும் மனித நிலையை உடைய வராயிருக்கிறார்கள் அல்லது "அவர்கள் யாவ ரும் ஒரே தொடக்கத்தைக் கொண்டிருக்கிறார் கள்" (RSV). தங்களுடைய மனித நிலையில், அவர் கள் யாவரும் ஒரே தேவனையும் பிதாவையும் உடையவர்கள்.

கிறிஸ்துவே **பரிசுத்தஞ் செய்கிறவர்,** அதாவது அவர் மனிதர்களை உலகத்திலிருந்து தேவனுக் கென்று பிரித்துவைக்கிறார். இவ்விதமாகப் பிரித்துவைக்கப்பட்டவர்கள் யாவரும் ஆசிர் வதிக்கப்பட்டவர்கள்!

பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு நபர் (அல்லது ஒரு பொருள்) சாதாரணப் பயன்பாட்டிலிருந்து பிரித் தெடுக்கப்பட்டு, தேவனுடைய சொந்த உடை மைப் பொருளாகவும், அவருடைய பயன்பாட்

டிற்கும் அவருடைய மனமகிழ்ச்சிக்கும் உரிய வராக விளங்குவார். பரிசுத்தமாக்கப்படுதலுக்கு எதிர்மறை தெய்வநிந்தனையாகும்.

திருமறையில் நான்கு வகையான பரிசுத்த மாக்கப்படுதல் சொல்லப்பட்டுள்ளன: மனந் திரும்புதலுக்கு முன்னான பரிசுத்தம், தகுநிலைப் பரிசுத்தம், நடைமுறைப் பரிசுத்தம், பரிபூரண பரிசுத்தம். 1 தெசலோனிக்கேயர் 5:23 -இல் காணப்படும் ஆய்வுக் கட்டுரையில் பரிசுத்தமாக் கப்படுதலின் எல்லா வகைகளும் விளக்கிக் கூறப் பட்டுள்ளன. அதனைக் கவனமாகப் படிக்கவும்.

அவர் மெய்யான மனிதராக மாறிய காரணத் தால், அவர் தம்மைப் பின்பற்றியவர்களைச் **சகோ தரர்** என்று அழைக்க **வெட்கப்படவில்லை**. இப் பிரபஞ்சத்தின் நித்திய அரசர் மனிதராக மாறி, தம்முடைய படைப்போடு மிக நெருக்கமாக ஒன்றி ணைந்தவராக அவர்களைச் சகோதரர் என்று அழைப்பது நிகழக்கூடிய செயலா?

2:12 இதற்கான விடையை சங்கீதம் 22:22 - இல் அவர் கூற நம்மால் கேட்க முடியும்: **"உம்மு டைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவிப் பேன்."** பொதுவான ஆராதனையில் அவர் தம்மு டைய மக்களோடு ஒன்றிணைந்திருப்பதை பட வுருகில் காட்டுவதாகவும் அந்த வசனம் அமைந் திருக்கிறது: **"சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்."** அவர் தமது மரண வேதனையில், தம்மாலே மீட்கப்பட்ட கூட்டத்தாரோடு பிதாவா கிய தேவனைத் **துதித்துப் பாடுகிற** நாளை அவர் எதிர்நோக்குகிறார்.

2:13 கிறிஸ்துவின் மனிதத் தன்மையை மெய்ப்பிக்கக்கூடிய யூதர்களுடைய வேதத்திலி ருந்து மேலும் இரண்டு வசனங்கள் எடுத்துரைக் கப்பட்டுள்ளன. ஏசாயா 8:17 -இல் (LXX), அவர் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்ததைக் குறித் துப் பேசுகிறார். யெகோவாவின் மேல் கொண் டுள்ள முழுமனதான நம்பிக்கை மெய்யான மனித நிலைக்கு மிகப்பெரிய அடையாளமாக விளங்கு கிறது. அடுத்ததாக, ஏசாயா 8:18 -இல், "இதோ, நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளை களும்!" என்று கர்த்தர் கூறியிருப்பதாக இங்கு மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் யாவ ரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், எல்லோ ருக்கும் பொதுவான ஒரே தந்தை இருக்கிறார் என்பதே இங்கு காணப்படும் சிந்தையாகும்.

2:14 மனித குமாரன் தாழ்த்தப்பட்டதை அவ மானமாக எண்ணியவர்கள், இப்பொழுது அவர் சிலுவையில் அடைந்த துன்பங்களால் பாய்ந்து வரும் நான்கு முக்கியமான ஆசிர்வாதங்களை நினைத்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

முதலாவது சாத்தான் அழிக்கப்பட்ட செயல். இது எவ்வாறு நிகழ்ந்தது? தேவன் தமது பிள்ளை களைப் பரிசுத்தப்படுத்தும்படியும், இரட்சிக்கும் படியும், அவர்களது அடிமைத்தளையை அகற்றி விடும்படியும் கிறிஸ்துவினிடத்தில் கொடுத்தார் என்னும் சிறப்பான அர்த்தத்தை அங்கு காண முடி யும். இந்தப் பிள்ளைகள் மனித இயல்பைக் கொண்டிருந்ததால், கர்த்தராகிய இயேசுவும் மாம்ச சரீரத்தையும் இரத்தத்தையும் உடைய வரானார். அவர் தமது தெய்வீகத்தின் வெளியரங் கமான காட்சியைத் தள்ளிவைத்தார். மேலும் அவர் தமது தேவத்துவத்தை "களிமண்ணாகிய ஆடையால்" மறைத்துக்கொண்டார்.

ஆனால் அவர் பெத்லகேமோடு நின்றுவிட வில்லை. "எனக்காக அவர் கல்வாரி வரையிலும் சென்றார்; ஏனெனில் அவர் அவ்வளவாக என் மேல் அன்புகூர்ந்தார்."

அவர் **மரணத்துக்கு அதிகாரியாகிய பிசா சானவனைத்** தமது **மரணத்தாலே** அழித்தார். இங்கு மரணம் என்று சொல்லப்பட்டிருப்பது, நல்ல நிலையை இழந்து போவது என்னும் பொருளைத் தருகிறதே ஒழிய, உயிரை இழந்துபோவது என்று பொருள்படாது. பயனற்றதாக்குதல் அல்லது எதுவு மற்ற நிலைக்குக் கொண்டுவருதல் என்பதே இதன் பொருளாகும். இவ்வுலகத்தில் பிசாசான வன் இன்னமும் தேவனுடைய நோக்கத்திற்கு எதி ராகச் சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக் கிறான். ஆனால் அவன் மரணக் காயத்தைச் சிலுவையில் அடைந்தான். அவனுடைய நேரம் குறுகியது, அவனுடைய அழிவு நிச்சயம். அவன் தோற்கடிக்கப்பட்ட பகைவன்.

எந்தப் பொருளில் பிசாசு **மரணத்தின் அதிகா ரத்தை** உடையவனாயிருக்கிறான்? இதன் முதன் மையான பொருளில், மரணத்தைக் கோருகின்ற அதிகாரம் அவனுக்கு இருக்கிறது என்பதாகும். பிசாசின் மூலமாகவே இவ்வுலகத்திற்குள் பாவம் நுழைந்தது. பாவம் செய்தவர்கள் யாவரும் மரண மடைய வேண்டுமென்பது தேவனுடைய பரிசுத் தத்தின் ஆணையாகும். ஆகவே எதிரி என்னும் நிலையில் மனிதர்களுக்கு மரண தண்டனை வழங்கவேண்டும் என்று அவனால் கோரமுடியும்.

புறச்சமய நாடுகளில் அவனுடைய பிரதிநிதி களின் ஆற்றலில் அவனுடைய அதிகாரம் காணப் படுகிறது. எந்தவிதமான இயல்பான காரணமு

மின்றி ஒரு மனிதன் சாகும்படி மந்திரவாதிகளால் அவன் மீது சாபம் உரைக்கப்படுகிறது.

தேவனுடைய அனுமதியின்றி ஒரு விசுவாசியின்மேல் பிசாசு மரணத்தை வருவிக்கக் கூடும் என்பதற்கான எந்த ஆதாரமும் திருமறையில் இல்லை (யோபு 2:6). ஆகவே விசுவாசியின் மரணம் எப்பொழுது நடைபெறவேண்டும் என்று அவனால் நிர்ணயிக்க முடியாது. தீய மனிதர்களின் மூலமாக விசுவாசியைச் சில சமயங்களில் கொல்லும்படி அவனுக்கு அனுமதி தரப்படுகிறது. சரீரத்தை மாத்திரம் கொல்லக் கூடியவர்களுக்கு பயப்படவேண்டாம், மாறாக ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவராகிய தேவனுக்கு மட்டுமே பயப்பட வேண்டும் என்று இயேசு தமது சீடர்களை எச்சரித்தார் (மத். 10:28).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஏனோக்கும் எலியாவும் மரணத்தைக் காணாமல் விண்ணகத்திற்குச் சென்றார்கள். அவர்கள் விசுவாசிகள் என்னும் நிலையில், இன்னும் பிற்காலத்தில் நடைபெறவிருந்த கிறிஸ்துவின் மரணத்தில் அவர்களும் இறந்ததாகக் கணக்கிடப்பட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

வானிற்கு விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப் படும் நிகழ்ச்சியின்போது, உயிரோடு இருக்கும் அனைத்து விசுவாசிகளும் மரணமடையாமலே பரலோகத்திற்குச் செல்லுவார்கள். ஆனால், கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவனுடைய பரிசுத்தம் மனநிறைவு பெற்றிருப்பதால், அவர்களும் மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்வார்கள். "மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை" இப்பொழுது கிறிஸ்து வைத்திருக்கிறார் (வெளி. 1:18), அதாவது அவற்றின்மேல் அவருக்கு முழு அதிகாரமும் இருக்கிறது.

2:15 கிறிஸ்து தாழ்த்தப்பட்டதன் இரண்டாவது ஆசிர்வாதம் பயத்தின் அடிமைத்தளையிலிருந்து மனிதர்கள் பெறுகிற விடுதலையாகும். சிலுவைக்கு முந்தின காலத்தில் மரணபயம் மனிதர்களை வாழ்நாளெல்லாம் அடிமைத்தளைக்குள் கட்டி வைத்திருந்தது. சாவிற்குப் பிறகு வாழ்வு உண்டு என்பது பற்றிய ஒளி பழைய ஏற்பாட்டில் எப்போதாவது பளிச்சிட்டது என்றாலும், நிச்சய மற்றதும், பேரச்சம் நிறைந்ததும், இருள் சூழ்ந்ததுமான கருத்தே பொதுவாக நிலவிவந்தது. அக்காலத்தில் தெளிவற்று பனியடர்ந்து காணப்பட்டது போல இருந்த நிலை, நற்செய்தியின் மூலமாக, கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து விட்டதால் இப்பொழுது தெளிவாகக் காணப்படுகிறது (2 தீமோ. 1:10).

2:16 பெரிய அளவிலான மூன்றாவது ஆசிர்வாதம், பாவத்திற்கான பரிகாரமாகும். கர்த்தர் இவ்வுலகிற்கு வந்ததன் மூலமாக, **அவர் தேவ தூதருக்கு உதவியாகக் கைகொடாமல் ஆபிரகாமின் சந்ததிக்குக் கைகொடுத்தார்.** Epilambano என்னும் சொல்லின் மொழிபெயர்ப்பே "கைக்கொள்", அதாவது "ஏற்றுக்கொள்" என்பதாகும் (ஆகவே தேவதூதரின் இயல்பை அவர் ஏற்றுக் கொள்ளாமல், தம்மேல் ஆபிரகாமின் சந்ததியை ஏற்றுக்கொண்டார் என்னும் பொருளில் KJV மொழிபெயர்ப்பு அமைந்திருக்கிறது.) இந்த வினைச்சொல் பலவந்தமாய்ப் பறித்துக் கொள்ளுதல் என்னும் பொருளில் பயன்படுத்தப் பட்டிருப்பினும், இங்கு அந்தப் பொருளை அது தருகிறதில்லை. எனினும் இங்கு உதவிபுரிதல், ஆபத்தினின்று மீட்குதல் போன்ற கருத்துகளை அது கொண்டிருக்கிறது.

ஆபிரகாமின் சந்ததி என்னும் சொற்றொடர், ஆபிரகாமின் சரீரப்பிரகாரமான சந்ததி அதாவது யூதர்களைக் குறிக்கக்கூடும்; அல்லது ஒவ்வொரு காலத்திலும் இருக்கக்கூடிய விசுவாசிகளாகிய ஆவிக்குரிய சந்ததியைக் குறிக்கக் கூடும். அவர்கள் மனித இனத்தினர், தேவதூதர் அல்லர் என்பதே இங்கு முக்கியமாகச் சொல்லப் பட்டுள்ள கருத்தாகும்.

2:17 இது இவ்வாறிருக்க, அவர் எல்லா வகையிலும் **தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது.** அவர் மெய்யான மற்றும் நிறைவான மனிதத்தன்மையை ஏற்றுக் கொண்டார். அவர் மனித விருப்பங்கள், எண்ணங்கள், உணர்ச்சிகள், மனவெழுச்சிகள், பாசங்கள் போன்ற எல்லா உணர்வுகளுக்கும் உட்பட்டிருந்தார்; ஆயினும் மிகமுக்கியமான விதிவிலக்கு: அவரிடத்தில் பாவமில்லை. அவருடைய மனித நிலை கருத்தளவிலானபடி குறைவற்றதாயிருந்தது. ஆனால் நம்முடைய மனித நிலையோ அவருடன் தொடர்பற்ற மூலப்பொருளாகிய பாவத்தினால் தாக்கப்பட்டுவிட்டது.

அவருடைய முழுநிறைவான மனிதநிலை, **ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படி** அவரைத் தகுதியுள்ளவராக்கிற்று. அவரால் மனிதரிடத்தில் இரக்கமுள்ளவராகவும் தேவனுக்கு உண்மையுள்ளராகவும் இருக்க

முடியும். பிரதான ஆசாரியர் என்னும் நிலையில் அவருடைய முதன்மையான செயல்பாடு **ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி** (இழப்பீடு) செய்வதாகும். இதனை நிறைவேற்றும்படி வேறு எந்தப் பிரதான ஆசாரியரும் ஒருபோதும் செய்யாத, செய்யமுடியாத செயலை அவர் செய்தார் - அவர் தம்மைத்தாமே பாவமற்ற பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் மனவிருப்பத்தோடு நம்முடைய இடத்தை எடுத்துக்கொண்டவராக மரணமடைந்தார்.

2:18 சோதிக்கப்பட்டவர்களுக்கு உதவிபுரிவதே நான்காவது ஆசிர்வாதமாகும். ஏனெனில் **அவர் தாமே பாடுபட்டு, சோதிக்கப்பட்டதாலே,** அவர் சோதனைகளின் ஊடாகச் செல்லுகிறவர்களுக்கு **உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.** அவர் அவ்வாறு சோதனையின் ஊடாகச் சென்ற காரணத்தால், அதுபோல சோதனையின் ஊடாகச் செல்லுகிறவர்களுக்கு உதவிசெய்யக் கூடியவராயிருக்கிறார்.

இங்கும்கூட நாம் இன்றியமையாத ஒருண்மையைச் சொல்ல வேண்டியவராக இருக்கிறோம். கர்த்தராகிய இயேசு வெளியிலிருந்து சோதிக்கப்பட்டார், அவருக்குள்ளான நிலையிலிருந்து அவர் ஒருபோதும் சோதிக்கப்படவில்லை. வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்பட்டபோது, அவர் வெளியிலிருந்து **சோதிக்கப்பட்டார்** என்பது புலனாகிறது. பிசாசு அவருக்கு முன்பாக வந்து, புறம்பான தூண்டுதலால் தூண்டிவிட முயற்சி செய்தான். ஆனால் இச்சையினாலும், உள்ளான விருப்பத்தினாலும் இரட்சகரை ஒருபோதும் சோதிக்க முடியாது. ஏனெனில் அவரிடத்தில் பாவமில்லை, பாவத்திற்கு இடங்கொடுக்க அவரிடத்தில் ஒன்றுமில்லை. அவர் **சோதிக்கப்பட்டு பாடுபட்டார்**. ஆனால் நாம் பாவத்தை எதிர்த்து நிற்பதற்குக் கடுமுயற்சி செய்ய வேண்டியதாயிருக்கிறது, அவருக்கோ அது மனவேதனையளித்தது.

இ. மோசே மற்றும் யோசுவா ஆகியோரைவிட கிறிஸ்து மேலானவர் (3:1–4:13)

3:1 இஸ்ரவேல் நாட்டின் மிகப்பெரிய தலைவர்களில் ஒருவர் மோசே. ஆகவே நூலாசிரியர் தன்னுடைய திட்டத்தின் மூன்றாவது முக்கிய கட்டமாக, மோசேயைக் காட்டிலும் இயேசு அளவிற்கடங்கா வகையில் மேலானவர் என்பதை இங்கு மெய்ப்பிக்க விழைகிறார்.

இந்தச் செய்தியானது **பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரருக்குக்** கொடுக்கப்பட்டிருக்கிறது. மெய்யான விசுவாசிகள் அனைவரும் அவர்களுடைய தகுநிலையின் அடிப்படையில் **பரிசுத்தராய்** இருக்கிறார்கள்; அவர்களுடைய இருப்பு நிலையிலும் அவர்கள் பரிசுத்தராய் விளங்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் அவர்கள் பரிசுத்தர்; தங்களுக்குள்ளாக அவர்கள் பரிசுத்தராயிருக்க வேண்டும்.

இஸ்ரவேலர் பெற்ற புவி அழைப்பிற்கு மாறுபட்டது அவர்களுடைய **பரம அழைப்பு**. வாக்குறுதி பண்ணப்பட்ட நாட்டில் பொருட்செல்வவளத்தைப் பெறும்படி பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் அழைக்கப்பட்டார்கள். (அவர்களுக்கு விண்ணக நம்பிக்கையும் கொடுக்கப்பட்டிருந்தது). திருச்சபையின் காலக்கட்டத்தில் விசுவாசிகள் யாவரும் தற்போது உன்னதங்களிலுள்ள ஆவிக்குரிய சகல ஆசிர்வாதங்களைப் பெறும்படியாகவும், எதிர்காலத்தில் விண்ணக வாரிசுரிமைகளை அடையும்படியாகவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இயேசுவைக் கவனித்துப்பாருங்கள். நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாக அவரைக் கவனித்துப் பார்ப்பதற்கு அவர் மாண்புமிக்க வகையில் தகுதியுடையவராக இருக்கிறார். அவரை நாம் அப்போஸ்தலர் என்று அறிக்கை பண்ணுகிறபோது, அவர் நம் முன் தேவனுடைய பிரதிநிதியாக இருக்கிறார் என்னும் பொருளிலேயே அவ்வாறு கூறுகிறோம். அவரை நாம் பிரதான ஆசாரியர் என்று அறிக்கைபண்ணுகிறபோது, அவர் தேவனுக்கு முன்பாக நம்முடைய பிரதிநிதியாக இருக்கிறார் என்பதே பொருளாகும்.

3:2 ஒரு பண்புக்கூறின் அடிப்படையில், அவர் மோசேக்கு ஒத்த நிலையில் இருக்கிறார் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். **மோசே தேவனுடைய வீட்டில் உண்மையுள்ளவனாயிருந்தது போல**, இவரும் தேவனுக்கு **உண்மையுள்ளவராயிருந்தார்**. இங்கு **வீடு** என்று சொல்லப்பட்டிருப்பது, ஆசரிப்புக் கூடாரத்தை மட்டும் குறிப்பிடாமல் தேவனுடைய நோக்கங்கள் எவற்றிலெல்லாம் மோசே அவருடைய பிரதிநிதியாக விளங்கினானோ அவற்றையெல்லாம் குறிப்பிடுகிறது. அது இஸ்ரவேல் **வீடு**, தேவனுடைய பண்டைய பூமிக்குரிய மக்கள்.

3:3 ஆனால், இத்துடன் ஒற்றுமை முடிவடைந்து போகிறது. மற்ற எல்லாப் பண்புக்கூறுகளிலும் கர்த்தர் மறுக்கவியலா வண்ணம் மேலானவராயிருக்கிறார். முதலாவதாக, கர்த்தராகிய

இயேசு **மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்**. ஏனெனில் வீட்டைக்கட்டியவன் அந்த **வீட்டைப்பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவனாயிருக்கிறான்**. தேவனுடைய வீட்டைக் கட்டியவர் கர்த்தராகிய இயேசு; மோசே அந்த வீட்டின் ஒரு பங்கே ஆவான்.

3:4 இரண்டாவதாக, இயேசு தேவனானபடியால் அவர் பெரியவர். ஒவ்வொரு வீட்டையும் ஒருவர் கட்டியிருப்பார், **எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன். யோவான் 1:3, கொலோசெயர் 1:16, எபிரெயர் 1:2, 10** ஆகிய வசனங்களிலிருந்து படைப்பில் திறமையோடு செயலாற்றியவர் கர்த்தராகிய இயேசு என அறியலாம். இதன் முடிவைத் தவிர்க்கவியலாது - இயேசு கிறிஸ்து தேவனே ஆவார்.

3:5 கிறிஸ்து குமாரன் என்னும் நிலையில் மேலானவர் என்பது மூன்றாவது குறிப்பு. **மோசே** தேவனுடைய **வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் (எண். 12:7)** அதன் மூலமாக, வரவிருந்த மேசியாவை மனிதர்கள் எதிர்நோக்கியிருக்குபடி அவரைச் சுட்டிக்காட்டினான். **சொல்லப்படவிருந்த** காரியங்களுக்கு, அதாவது கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பின் நற்செய்திக்கு அவன் சாட்சியாக இருந்தான். ஆகவேதான் ஒருமுறை இயேசு, "நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே" என்று கூறினார் (**யோவான் 5:46**). எம்மாவுக்குச் சென்ற நெடுஞ்சாலையில் சீடர்களோடு ஆற்றிய உரையாடலில், மோசேயைப் பற்றிப் பேசத்தொடங்கிய இயேசு சகல தீர்க்கதரிசிகளையும் பற்றி எடுத்துரைத்து, அவர்கள் எழுதின "வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்" (**லூக்கா 24:27**).

3:6 ஆனால் **கிறிஸ்து குமாரனாக** தேவனுடைய வீட்டிற்கு மேற்பட்ட நிலையில் உண்மையுள்ளவராயிருந்தார். அங்கு அவர் பணிவிடைக்காரராய் இருக்கவில்லை. அவரைப் பொருத்தமட்டில், குமாரத்துவம் என்பது தேவனுக்குச் சமமான நிலை. தேவனுடைய வீடு **அவருடைய** சொந்த **வீடே** ஆகும்.

இன்றைய நாளில், தேவனுடைய **வீடு** என்று சொல்லப்படுவதன் பொருள் என்னவென்று இங்கு நூலாசிரியர் விளக்கிக் கூறுகிறார். கர்த்தராகிய இயேசுவினிடத்தில் மெய்யாக விசுவாசம் வைத்தவர்கள் எல்லோரும் உட்பட்டதே தேவனுடைய வீடு; **நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்.**[1] மேலோட்டமாகப் பார்க்கிறபோது, நாம் கொண்டிருக்கிற உறுதியையே நம்முடைய இரட்சிப்பு சார்ந்திருக்கிறது என்று இது கூறுவது போலத் தோன்றுகிறது. நாம் உறுதியாகப் பற்றிக்கொண்டிருப்பதாலே தேவனுடைய வீடாயிருக்கிறோம் என்று மெய்ப்பிக்கிறோம் என்பதே இதன் பொருளாகும். உறுதியாயிருத்தல் உண்மை நிலைக்கு நிரூபணமாக விளங்குகிறது. கிறிஸ்துவின் மீதும் அவருடைய வாக்குறுதிகள் மேலும் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழந்து, சடங்குகள் மற்றும் பண்டிகைகளினிடமாய்த் திரும்புகிறவர்கள் ஒருபோதும் மறுபிறப்பை அடையவில்லை என்பதை வெளிப்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட விசுவாச மறுதலிப்புக்கு எதிராகவே தொடர்ந்து வருகிற எச்சரிப்பு உரைக்கப்பட்டுள்ளது.

3:7 இத்தருணத்தில் நூலாசிரியர் இம்மடலின் இரண்டாவது எச்சரிப்பை உரைக்கிறார். இது இருதயத்தைக் கடினப்படுத்துவதற்கு எதிரான எச்சரிப்பு. அவ்வாறு வனாந்தரத்தில் இஸ்ரவேலரிடத்தில் நிகழ்ந்தது, அது மீண்டும் நடைபெறக்கூடும். ஆகவே, பரிசுத்த ஆவியானவர் சங்கீதம் 95:7-11 ஆகிய வசனங்களின் மூலமாக, "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்" என்று அவர் முதல்முறை உரைத்தது போலேவே இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறார்.

3:8 தேவன் பேசுகிற போதெல்லாம், அதைக் கேட்பதற்கு மிகவிரைவாகச் செவி கொடுக்க வேண்டும். அவருடைய பேச்சைக் குறித்துச் சந்தேகப்படுவது அவரைப் பொய்யர் என்று அழைப்பதற்கு ஒப்பாகும், மேலும் அது அவருடைய கோபத்தை வருவிக்கும்.

ஆகிலும் அதுவே **வனாந்தரத்திலே** இஸ்ரவேலின் வரலாறாக இருந்தது. அவர்களுடைய முறையீடு, இச்சை, சிலைவணக்கம், அவிசுவாசம், கலகம் என்பவையே அந்த வரலாற்றின் செய்திகள். எடுத்துக்காட்டாக, ரெவிதீமிலே தண்ணீர் இல்லாதபோது அவர்கள் முறையிட்டது மட்டுமின்றி, அவர்கள் மத்தியில் தேவன் இருந்தார் என்பதையே சந்தேகித்தார்கள் (யாத். 17:1-17). பாரான் வனாந்தரத்தில், சோர்வையும் சந்தேகத்தையும் உண்டுபண்ணக் கூடிய தீய செய்தியோடு விசுவாசமற்ற உளவாளிகள் திரும்பி வந்த

போது (எண். 13:25-29), இஸ்ரவேல் மக்கள் தாங்கள் அடிமைகளாக வாழ்ந்த எகிப்திற்குத் திரும்பிப் போக முடிவு செய்தார்கள் (எண். 14:4).

3:9 மக்கள் நாற்பது ஆண்டுகள் வனாந்தரத் தில் அலைந்துதிரிய வேண்டும் என்று ஆணை யிடும் அளவிற்கு தேவன் கடுஞ்சினமடைந்தார் (எண். 14:33-34). எகிப்திலிருந்து வந்த போர்வீரர் களில், அதாவது, இருபது வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களில் காலேப், யோசுவா ஆகிய இருவர் மட்டுமே கானான் நாட்டிற்குள் நுழைந் தார் கள் (எண். 14:28-30).

இஸ்ரவேலர் நாற்பது ஆண்டுகளைப் பாலை வனத்தில் செலவிட்டதற்கு ஒப்பாக, கிறிஸ்துவின் மரணத்திற்குப்பிறகு, ஏறத்தாழ நாற்பது ஆண்டு கள் இஸ்ரவேல் நாட்டோடு தேவ ஆவியானவர் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ஆனால் அந்த நாடோ கிறிஸ்துவின் நற்செய்திக்கு எதிராகத் தனது இருதயத்தைக் கடினப்படுத்தியது. கி.பி. 70 -இல் எருசலேம் அழிக்கப்பட்டு, இஸ்ரவேலர் புறவின நாடுகளுக்குள் சிதறடிக்கப்பட்டார்கள்.

3:10 இஸ்ரவேலர் மீது தேவன் கொண்ட கடுஞ் சினத்தின் காரணமாக, அவர் தமது கண்டனத் தைக் கடுமையான முறையில் வெளிப்படுத்தி னார். அம்மக்கள் நிரந்தரமாக அவரை விட்டு விலகி அலைந்து திரிகிற மனப்பான்மை உடைய வர் என்றும், அவருடைய **வழிகளை** வேண்டு மென்றே அறியாதிருக்கும் குணமுடையவர்கள் என்றும் தேவன் அவர்கள்மேல் பழிசுமத்தினார்.

3:11 அவருடைய **இளைப்பாறுதலில்**, அதா வது கானான் நாட்டிற்குள் அவர்கள் **பிரவேசிப் பதில்லையென்று** அவர் தமது **கோபத்தில் ஆணையிட்டார்**.

3:12 இஸ்ரவேலரின் அனுபவத்திலிருந்து சில உண்மைகளை எடுத்து அவற்றைப் பரிசுத்த ஆவியானவர் **12-15** ஆகிய வசனங்களில் பொருத்திக் காட்டுகிறார். எபிரெயர் மடலில் வேறு பல இடங்களில் காணப்படுவது போலவே, இங் கும் வாசகர்கள், **சகோதரரே** என்று அழைக்கப் படுகிறார்கள். அவர்கள் யாவரும் மெய்யான கிறிஸ்தவர்கள் என்பது இதன் பொருளன்று. ஆகவே விசுவாசிகள் என்று தங்களைக் குறித்து அறிக்கை செய்கிறவர்கள், **ஜீவனுள்ள தேவனை விட்டு** வீழ்ந்து போகும்படிச் செய்யக்கூடிய பெருங் கேடுபயக்கும் **அவிசுவாசமுள்ள இருதயத்திலி ருந்து** இடைவிடாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அவிசுவாச இருதயம் தொடர்ந்து கேடு பயக்கக் கூடியதாகும்.

3:13 ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி உற்சாகப்படுத்தக் கூடிய மாற்று மருந்து ஒன்று இருக்கிறது. குறிப்பாக, இடையூறுகளும் இன்னல் களும் மிகுந்த நாட்களில் பாவத்தைச் செயல் திறம் மிக்க வகையில் தடைசெய்ய இயலாத மதத்தை நாடி, கிறிஸ்துவைப் புறக்கணிக்கக் கூடாதென்று இறைமக்கள் **நாடோறும்** மற்றவர் களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

இந்த அறிவுரையானது பிரசங்கங்கள் ஆற்று கிற மக்களுக்கு மட்டும் கொடுக்கப்படாமல் அனைத்து சகோதரர்களுக்கும் கொடுக்கப்பட்டி ருப்பதைக் கவனியுங்கள். **"இன்று"** என்று சொல் லப்படும் நாள் வரைக்கும் இந்த அறிவுரை தொட வேண்டும், அதாவது, கிருபையினாலே விசு வாசத்தின் மூலமாக தேவன் அருளுகிற இரட்சிப்பு இருக்கும் வரை இது தொட வேண்டும். இதோ, "இன்றே" அநுக்கிரகக்காலம், இப்பொழுதே இரட் சணிய நாள்.

விசுவாச மறுதலிப்பென்பது, **பாவத்தின் வஞ் சனையினாலே கடினப்படுவதாகும்**. எதிர்பார்ப் பில் அவ்வப்போது பாவம் மிக அழகாகத் தோற்ற மளிக்கிறது. கிறிஸ்துவின் நிந்தனையிலிருந்தும், தரம் குறைந்த பரிசுத்தத்திலிருந்தும், கலை யுணர்வில் மனநிறைவளிக்கும் சடங்குகளிலிருந் தும் உலக ஆதாயத்தின் வாக்குறுதியிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்கான வழியைத் தருவதாக அது இங்கு கூறுகிறது. ஆனால் கடந்தகால நிகழ்ச்சிகளை எண்ணிப்பார்க்கையில், அது அரு வருக்கதக்கதாகக் காணப்படும். பாவங்களி லிருந்து மன்னிப்பையும், கல்லறைக்குப் பிறகு நம்பிக்கையையும், மனந்திரும்புதலுக்கான வாய்ப்பையும் அது தருகிறதில்லை.

3:14 முதன்முதலில் கொண்டிருந்த நம்பிக் கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொள்வதாலே கிறிஸ்துவின் கூட்டாளிகளாக நாம் இருக்கிறோம் என்று மீண்டும் இங்கு நாம் நினைவுறுத்தப்பட்டிருக்கிறோம். இரட்சிக்கப்பட்ட மனிதன் பின்னர் தனது இரட்சிப்பை இழந்து போகக் கூடும் என்று கற்பிப்பதற்கு இது போன்ற வசனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும், தேவனுடைய கிருபையாலே இரட்சிப்பானது இல வசமாக அருளப்படுகிறது, அது கிறிஸ்துவின் செங்குருதியாலே விலைக்கு வாங்கப்பட்டிருக் கிறது, மனிதனுடைய விசுவாசத்தினாலே பெறப் பட்டிருக்கிறது, அவனுடைய நற்செய்கைகளி னாலே மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்னும் உண்மைகள் தவிர்க்க இயலாத திருமறைச்

சான்றுகள் கொண்டவை; ஆகவே மேற்கூறிய விளக்கம் பொருத்தமானதன்று. மெய்யான விசுவாசம் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடிய பண்புடையது. நாம் நம்முடைய இரட்சிப்பைத் தக்கவைத்துக்கொள்ள அதனை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டியதில்லை, மாறாக நாம் மெய்யாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதன் நிரூபணமாகவே உறுதியான பற்று இருக்க வேண்டும். விசுவாசம் இரட்சிப்பின் வேராகத் திகழ்கிறது, அதில் நிலைத்திருப்பது அதனுடைய விளைபயனாகும். கிறிஸ்துவின் தோழர்கள் யார்? "விசுவாசத்தில் உறுதியாய் இருப்பதாலே, யாரெல்லாம் கிறிஸ்துவுக்கு உண்மையாகவே சொந்தமானவர்கள் என்று மெய்ப்பிக்கிறார்களோ அவர்களே அவருடைய தோழர்கள்" என்பதே அதற்குரிய விடையாகும்.

3:15 இஸ்ரவேலின் வருத்தத்திற்குரிய அனுபவத்தைச் **சங்கீதம் 95:7,8** ஆகிய வசனங்களை மீண்டும் எடுத்துரைப்பதாலே தனிப்பட்டமுறையில் பொருத்தமுடையதாக்கிக் காட்டும் செயலை நூலாசிரியர் இப்பொழுது முடிவுக்குக் கொண்டு வருகிறார்: **"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்தது போல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்."** இந்தக் கசப்பான வேண்டுகோள் ஒருகாலத்தில் இஸ்ரவேலரிடம் முறையிடப்பட்டது, இப்பொழுதோ நற்செய்தியைப் புறக்கணித்து விட்டு நியாயப்பிரமாணத்திடமாய்த் திரும்பும்படியான சோதனைக்குட்படுபவரிடமாக அது திருப்பப்படுகிறது.

3:16 இஸ்ரவேலின் விசுவாச மறுதலிப்பைப் பற்றிய வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட விளக்கத்துடன் இந்த அதிகாரம் முடிவடைகிறது. இஸ்ரவேலின் கோபமூட்டிய செயல், அரோசித்த செயல், மற்றும் அங்கு செய்த தவறுக்கு வழங்கப்பட்டதண்டனை ஆகியவற்றை நூலாசிரியர் மூன்று கேள்விகள் விடைகள் ஆகியவற்றின் மூலமாக வெளிக்கொணருகிறார். அதன்பிறகு அவர் தனது முடிவுரையைக் கூறுகிறார்.

கோபமூட்டியவர்கள். மோசேயினால் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படிச் செய்தார்கள் என்று கூறி கோபமூட்டியவர்களை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். காலேபும் யோசுவாவும் இதற்கு விதிவிலக்காயிருந்தார்கள்.

3:17 அரோசித்தல். இவ்வாறு கோபமூட்டியவர்களே வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகளாக யெகோவாவை அரோசித்தார்கள். அவர்கள் ஏறத்தாழ 600000 மனிதர்கள். அந்த நாற்பது ஆண்டுகள் முடிவடைந்த போது அந்த வனாந்தரத்தில் 600000 கல்லறைகள் தோன்றிவிட்டன.

3:18 தவறுக்கு ஏற்ற தண்டனை. அவர்களுடைய கீழ்படியாமையின் காரணமாகவே அந்த மக்கள் கானான் நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.

பெரும்பான்மை மக்கள் சமயச்சார்புடையவராக இருந்த போதிலும் தேவபக்தியை மறுத்துரைக்கிறார்கள். அதன் காரணமாக ஏளனப்படுத்தப்பட்ட மெய்யான கிறிஸ்தவராகிய சிறுபான்மையினரை விட்டு விலகும்படியான சோதனைக்குட்படும் மக்கள் இந்தக் கேள்விகளையும் விடைகளையும் மனப்பாடம் செய்து திரும்பத் திரும்ப ஒப்புவிப்பார்களானால் அது அவர்களிடத்தில் மிக ஆழமான செல்வாக்கை ஏற்படுத்தும். எப்பொழுதும் பெரும்பான்மை சரியாக இருக்குமா? இஸ்ரவேலின் வரலாற்றில் இருவர் மட்டுமே சரியாக இருந்தார்கள், ஆறு லட்சம் மக்கள் தவறி ழைத்தார்கள் என்று இந்த அதிகாரம் கூறுகிறது.

இஸ்ரவேலின் பாவத்தின் கடுமையைத் திருவாளர் A.T. பியர்சன் வலியுறுத்துகிறார்.

அவர்களுடைய அவிசுவாசம் நான்கு வகைகளில் சினமூட்டக் கூடியதாயிருந்தது:

1. இறைவனின் சத்தியத்தின் மீது அது தாக்குதல் நடத்தி அவரைப் பொய்யராக்கியது.
2. அவர் வலிமையற்றவர், அவரால் குறிப்பிட்ட நாட்டிற்கு அவர்களைக் கொண்டுவர முடியவில்லை என்று கணக்கிட்டு அந்த அவிசுவாசம் அவருடைய ஆற்றலின்மீது தாக்குதலை நடத்தியது.
3. அது அவருடைய மாற்றமில்லா தன்மையின் மேல் நடந்த தாக்குதலாகக் காணப்பட்டது; அவர்கள் அவ்வாறு சொல்லவில்லையென்றாலும் அவர்களுடைய நடத்தை தேவன் மாறக்கூடியவர் என்றும், முற்காலத்தில் அவர் செய்த அற்புதங்களை இப்பொழுது அவரால் செய்ய முடியாது என்றும் சொல்லுவது போலக் காணப்பட்டது.
4. தகப்பனைப் போன்று அவர் பாசமுடையவராக இருக்கிறார் என்னும் உண்மைக்கு எதிராக நடந்த தாக்குதலாகவும் அது அமைந்திருந்தது. தாம் நிறைவேற்றுவதற்கு விருப்பமற்ற ஒன்றை, அவர்கள் எதிர்பார்க்கும்படி அவர்களை தேவன் தூண்டிவிட்டார் என்று அது சொல்லுவது போலக் காணப்பட்டது.[2]

இதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தை முற்றிலும் உண்மையானது, அவருடைய ஆற்றல் முடிவில்லாதது, அவருடைய மனப்பான்மை மாற்றமில்லா கிருபை நிறைந்தது, தாம் நிறைவேற்றப் போவதில்லை என்று முடிவு செய்த ஒன்றின்மேல் மக்களுக்கு எவ்வித நம்பிக்கையையும் ஏற்படுத்தமாட்டார் என்று சொல்லுமளவிற்கு அவர் உண்மையுள்ளவர் என்று கருதியவர்களாகக் காலேபும் யோசுவாவும் தேவனைக் கனம் பண்ணினார்கள்.

3:19 முடிவுரை. அந்தக் கலகக்காரர்களின் அவிசுவாசமே அவர்களை வாக்குறுதிபண்ணப்பட்ட நாட்டிற்குள் நுழையவிடாமற் செய்தது. ஒவ்வொரு காலப்பாகுபாட்டிலும் அவிசுவாசமே மனிதனை இறைவனின் வாரிசுரிமையைப் பெறவிடாமல் செய்துவிடுகிறது. இதன் நன்னெறி மிகத்தெளிவாக இருக்கிறது. **அவிசுவாசமுள்ள** பொல்லாத இருதயத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

தொடர்ந்து வருகின்ற வசனங்கள் இந்த மடல் முழுவதிலும் மிகவும் கடினமான பகுதிகளில் ஒன்றாகும். இந்தப் பகுதியின் எல்லாம் உள்ளிட்ட போதனை தெளிவாக இருந்த போதிலும், இங்கு உரைக்கப்படும் வாதத்தின் ஓட்டத்தில் சரியானது எது என்பது பற்றி விரிவுரையாளர்களிடம் பெருமளவு கருத்து வேறுபாடு நிலவுகிறது.

4:1-13 ஆகிய வசனங்களின் கருத்து தேவனுடைய இளைப்பாறுதலும் அதனை அடைவதற்கான விடாமுயற்சியும் ஆகும். திருமறையில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு வகையான இளைப்பாறுதல்களைக் குறித்துத் தொடக்கத்திலேயே நாம் கவனிப்பது நமக்கு உதவியாயிருக்கும்:

1. ஆறாம் நாள் படைப்பிற்குப் பிறகு தேவன் ஓய்ந்திருந்தார் (ஆதி. 2:2). கடின உழைப்பின் காரணமாக ஏற்பட்ட களைப்பை இந்த ஓய்வு குறிப்பதில்லை, மாறாக தாம் நிறைவேற்றி முடித்த வேலையில் அவர் பெற்ற மனநிறைவையே அது குறிக்கிறது. இது அகமகிழ்வினால் உண்டான ஓய்வு (ஆதி. 1:31). உலகில் பாவம் நுழைந்த காரணத்தால் தேவனுடைய இளைப்பாறுதலில் இடையூறு ஏற்பட்டது. அதுமுதல் அவர் இடையறாது வேலை செய்து கொண்டிருக்கிறார். "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன்" என்று இயேசு சொன்னது போல இது இருக்கிறது (யோவான் 5:17).

2. இஸ்ரவேல் மக்களுக்குக் கானான் ஓர் இளைப்பாறுதலின் நாடாக விளங்க வேண்டும் என்று கருதப்பட்டது. அவர்களில் பெரும் பாலோர் அந்நாட்டிற்குள் புகவில்லை, அங்கு சென்றவர்களுங்கூட தேவன் தரவிரும்பிய இளைப்பாறுதலைப் பெறத் தவறிவிட்டார்கள். தேவனுடைய இறுதியானதும் நிலையானதுமான இளைப்பாறுதலுக்குக் கானான் இங்கு நிழலாக அல்லது படவுருவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கானான் நாட்டைச் சென்றடையாதவர்கள் (கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோர் எடுத்துக்காட்டுகளாக இருக்கிறார்கள்), இன்றைய நாளில் விசுவாசத்தை மறுதலித்து வாழ்ந்து, தங்களுடைய அவிசுவாசத்தின் காரணமாக தேவனுடைய இளைப்பாறுதலை அடையத் தவறுகிறவர்களுக்குப் படவுருவமாக இருந்தார்கள்.

3. இன்றைய நாட்களில் விசுவாசிகள் தங்களுடைய பாவங்களுக்குரிய தண்டனை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிறைவேற்றி முடிக்கப்பட்ட செயலின் மூலமாக நீங்கிவிட்டது என்று அறிந்தவர்களாக, மனச்சான்றில் இளைப்பாறுதலை அனுபவிக்கிறவர்களாக இருக்கிறார்கள். இந்த இளைப்பாறுதலையே இரட்சகர் வாக்குறுதி பண்ணினார்: "நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11:28).

4. கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் விசுவாசிகள் இளைப்பாறுதலைப் பெறுகிறார்கள். முன்னர் கூறப்பட்டிருப்பது இரட்சிப்பின் இளைப்பாறுதலாக இருக்க, இங்கு காணப்படுவது ஊழியத்தின் இளைப்பாறுதலாகும். "என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத். 11:29).

5. இறுதியாக, விண்ணகத்தில் திருத்தந்தையின் இல்லத்தில் விசுவாசிகளுக்கு நித்திய இளைப்பாறுதல் காத்துக் கொண்டிருக்கிறது. எதிர் காலத்தில் கிடைக்கப்போகிற இளைப்பாறுதல் ஓய்வுநாள் இளைப்பாறுதல் என்று அழைக்கப்படுகிறது (எபி. 4:9). இந்த இறுதியான இளைப்பாறுதலுக்கு மற்ற இளைப்பாறுதல்கள் நிழல்களாகவோ, முன்அனுபவங்களாகவோ விளங்குகின்றன. எபிரெயர் 4:1-13 பகுதியின் முதன்மையான கருப்பொருள் இந்த இளைப்பாறுதலே ஆகும்.

4:1 இளைப்பாறுதலைக் குறித்த வாக்குறுதி ஆதாரமற்றது, இனி நிகழப் போவதில்லை என்று ஒருவரும் சிந்திக்கக் கூடாது. இதுகாறும், முழுமையானதும் இறுதியானதுமான நிறைவேறுதலை அது அடையவில்லை; **ஆனபடியினாலே** இந்த வாக்குறுதி இன்னமும் நிகழவேண்டிய ஒன்றாகவே இருக்கிறது.

ஆனால், தாங்கள் விசுவாசிகள் என்று அறிக்கை செய்கிற யாவரும் அந்த இலக்கை **அடையாமல்** போகிறவர்களைப் போலப் போய் விடாதிருக்க உறுதிசெய்துகொள்ள வேண்டும். அவர்களுடைய அறிக்கை வெறுமையாயிருந்தால், கிறிஸ்துவைவிட்டு விலகி, இரட்சிப்பதற்கு ஆற்றலற்ற சமய அமைப்பைத் தழுவிக்கொள்ளக் கூடிய ஆபத்து எப்பொழுதும் இருக்கும்.

4:2 நமக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது - கிறிஸ்துவின்மேல் வைக்கப்படும் விசுவாசத்தின் மூலமாகப் பெறப்படும் நித்திய வாழ்வைக் குறித்த நற்செய்தி. இஸ்ரவேலருக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது - கானான் நாட்டில் பெறப்படும் இளைப்பாறுதலைக் குறித்த நற்செய்தி. ஆனாலும் இளைப்பாறுதலைக் குறித்த நற்செய்தியின் பயனை அவர்கள் அடையவில்லை.

இந்த வசனத்திற்கு எந்தப் பிரதியை நாம் பயன்படுத்துகிறோமே அதற்கு ஏற்றபடி பொருள் கூறும்போது, இரண்டு வகையான விளக்கங்களைக் கூறலாம். NKJV மொழியெர்ப்பின்படி, அந்தச் செய்தியைக் கேட்டவர்களுக்கு அந்தச் செய்தியில் விசுவாசம் இல்லாததே அவர்களுடைய தோல்விக்குக் காரணமாயிற்று. அதாவது, அவர்கள் அதை விசுவாசிக்கவில்லை அல்லது அந்தச் செய்தியைத் தங்களுக்குரியதாக்கிச் செயல்படவில்லை.

மற்றொரு பிரதியின்படி (NKJV அடிக்குறிப்பு), "அந்தச் செய்திக்குச் செவிசாய்த்தவர்களோடு அவர்கள் விசுவாசத்தினால் ஒன்றிணையவில்லை." இஸ்ரவேலில் பெரும்பான்மையோர், தேவனுடைய வாக்குறுதியை விசுவாசித்த அந்த இரண்டு ஒற்றர்களாகிய காலேபுடனும் யோசுவாவுடனும் விசுவாசத்தினாலே ஒன்று சேரவில்லை என்பதே இதன் பொருளாகும்.

எந்த விளக்கம் சரியாயினும், வாக்குறுதி செய்யப்பட்ட நாட்டில் தேவன் ஆயத்தம் பண்ணின இளைப்பாறுதலிலிருந்து அவர்களுடைய அவிசுவாசம் அவர்களை விலக்கிவிட்டது என்பதே இங்கு காணப்படும் முதன்மையான கருத்தாகும்.

4:3 சிந்தனையின் தொடர்ச்சி இங்கு சற்று கடினமாக இருக்கிறது. ஒன்றோடு ஒன்று இணைந்திராததும், தொடர்பற்றதுமான மூன்று சொற்றொடர்கள் இருப்பதுபோலத் தோன்றியபோதிலும், ஒவ்வொரு சொற்றொடரிலும் பொதுவான இழை இருப்பதைக் காண முடியும் - தேவனுடைய இளைப்பாறுதலைக் குறித்த கருத்து.

முதலாவது, **விசுவாசித்தவர்களாகிய நாமே தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறவர்கள்** ஆவோம். அதனுடைய கதவைத் திறப்பது விசுவாசம் என்னும் திறவுகோலாகும். ஏற்கனவே குறிப்பிட்டிருப்பதுபோல, விசுவாசிகள் தங்களுடைய பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்பட கொண்டுவரப்படமாட்டார்கள் என்னும் அறிவை உடையவர்களாக இருப்பதால் அவர்கள் மனச்சாட்சியில் இளைப்பாறுதலை அனுபவிக்கிறார்கள் (யோவான் 5:24). ஆனால் விசுவாசிக்கிறவர்கள் மட்டுமே தேவனுடைய இறுதியான மகிமையின் இளைப்பாறுதலில் பிரவேசிக்க முடியும் என்பதும் உண்மையே. எதிர்காலத்தில் வரவிருக்கிற இளைப்பாறுதலே இங்கு முதன்மையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இரண்டாவது சொற்றொடர் எதிர்மறையாகக் கூறி அதே கருத்தை வலுப்படுத்துகிறது. **இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்** (சங்கீதம் 95:11 -ஆம் வசனத்திலிருந்த மேற்கோள் காட்டப்பட்டுள்ளது). விசுவாசம் ஏற்றுக்கொள்வது போல, அவிசுவாசம் உள்ளே நுழைவதைத் தடைசெய்கிறது. கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டவர்களாகிய நாம் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள்ளாக நுழைவது திண்ணம்; அவிசுவாசிகளாயிருந்த இஸ்ரவேலரோ தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காத காரணத்தால் இந்த உறுதியைப் பெற்றிருக்கவில்லை.

மூன்றாவது சொற்றொடர் மிகவும் கடினமாகக் காணப்படுகிறது. அது கூறுவதாவது: **அவருடைய கிரியைகள் உலகத்தோற்ற முதல் முடிந்திருந்தும்**. இந்தச் சொற்றொடரைப் பின்வரும் சொற்றொடரோடு தொடர்புபடுத்திக் காண்போமாயின் இதனுடைய எளிமையான விளக்கம் புலப்படும். அங்கு தேவன் தமது இளைப்பாறுதலைக் குறித்துப் பேசும் போது எதிர்காலவினையைப் பயன்படுத்தியிருக்கிறார்: **இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை**. சிலர் தங்களுடைய கீழ்ப்படியாமையின் மூலம் அந்த இளைப்

பாறுதலின் உரிமையை இழந்துபோன போதிலும், எதிர்கால வினை இது இனிமேல் விரும்பித் தேர்ந் தெடுக்கக்கூடிய மெய்யான நிலையாக இருக் கிறது என்பதைக் குறிப்பாய்த் தெரிவிக்கிறது. தேவனுடைய **கிரியைகள் உலகத் தோற்ற முதல் முடிந்திருந்தும்** இந்த இளைப்பாறுதல் இன்னமும் கிடைக்கக் கூடியதாகவே இருக்கிறது.

4:4 படைப்பின் கிரியை முடிவடைந்த பிறகு தேவன் ஓய்ந்திருந்தார் என்பதைத் திருமறை வசனத்தின் மூலமாக மெய்ப்பிப்பதை இந்த வச னம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த வசனம் எங்கிருக்கிறது என்பதை நூலாசிரியர் குறிப்பிடா ததன் காரணம், அவர் அதனை அறிந்திருக்க வில்லை என்பதல்ல பொருள். அந்த நாட்களில் அதிகாரங்களாகவும் வசனங்களாகவும் பிரித்து எழுதப்படாத நிலையில், ஒரு நூலிலிருந்து ஒரு வசனத்தை மேற்கோளாக எடுத்துச் சொல்லுவது இலக்கியத் திறமையாகும். இந்த வசனம் ஆதி யாகமம் 2:2 -ஆம் வசனத்துடன் ஒத்திருக்கிறது: "தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக் கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்."

இங்கு இறந்தகாலம் பயன்படுத்தப்பட்டிருக் கிறது, ஆகவே தேவனுடைய இளைப்பாறுதல் ஒரு வரலாறேயொழிய தீர்க்கதரிசனம் அல்ல என்று சிலருக்குத் தோன்றுகிறது. மேலும் இன்று அதற்கும் நமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை யென்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அதுவல்ல உண்மை.

4:5 தேவன் தமது படைப்பின் செயலை நிறைவேற்றி முடித்த பிறகு ஓய்ந்திருந்தார் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால், அது முடிந்துபோன ஒன்று என்று பொருளாகாது என்னும் கருத்தை வலுப்படுத்தும்பொருட்டு நூலாசிரியர் சங்கீதம் 95:11 -ஆம் வசனத்தைச் சற்று மாற்றி மேற் கோளாக எடுத்துரைக்கிறார்: **அவர்கள் என்னு டைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்ல.** "தேவனுடைய இளைப்பாறுதலைக் குறித்துச் சிந்திக்கும் நீங்கள் ஆதியாகமம் 2:2 -இல் என்ன நடந்ததோ அத்துடன் அது முடிவடைந்துவிட்டது என்று ஓர் எல்லைக்குள் உட்படுத்திவிட வேண் டாம்; தம்முடைய இளைப்பாறுதல் இனிமேல் வரப் போகிற ஒன்றாக இருக்கிறது என்பதை நினைவு படுத்திக்கொள்ளுங்கள் என்று பின்னர் தேவன் பேசினார்" என்னும் பொருளிலேயே நூலாசிரியர் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

4:6 தேவன் மனித இனத்திற்கு இளைப்பாறு தலைத் தருவதாகக் கூறியிருப்பதை வாதத்தில் இத்தருணம் வரை அவருடைய படைப்பின் கிரி யையைப் பற்றிய குறிப்பிலிருந்து கண்டு வந் தோம். அதன் நுழைவு வாசல் திறந்துவைக்கப் பட்டிருக்கிறது.

வனாந்தரத்தில் இருந்த இஸ்ரவேலர் தங்க ளுடைய **கீழ்ப்படியாமையினாலே**, இளைப் பாறுதலில் **பிரவேசிக்கத்** தவறிவிட்டார்கள். ஆனால் தேவனளித்த வாக்குறுதி இனிமேல் செல்லாது என்பது இதன் பொருளல்ல.

4:7 அடுத்த கட்டமாக, கானான் நாட்டிற்குள் புகமுடியாமல் இஸ்ரவேலர் தடை செய்யப்பட்டு **500** ஆண்டுகள் கழித்து, தேவன் "இன்று" என்று கூறி இளைப்பாறுதலை அடைவதற்கான வாய்ப்பு இன்னமும் கிடைக்கக்கூடியதாக இருப்பதைத் தெரிவித்ததாக தாவீதின் காலத்தை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். சங்கீதம் 95:7,8 -ஆகிய வசனங்களை நூலாசிரியர் எபிரெயர் 3:7,8,15 - ஆகிய இடங்களில் மேற்கோளிட்டுக் காட்டியிருக் கிறார். பாலைவனத்தில் இஸ்ரவேலர் புறக்கணிக் கப்பட்டதோடு இளைப்பாறுதலைக் குறித்த தேவ னுடைய வாக்குறுதி முடிவடைந்துவிடவில்லை என்று மெய்ப்பிக்கும்படி நூலாசிரியர் மீண்டும் அந்த வசனத்தை எடுத்துரைக்கிறார். தாவீதின் காலத்தில், மக்கள் தம்மிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டுமென்றும், தங்களுடைய இரு தயங்களைக் கடினப்படுத்தக் கூடாதென்றும் தேவன் இன்னமும் வேண்டிக்கொண்டிருந்தார்.

4:8 யோசுவாவுடன் இஸ்ரவேலர் சிலர் கானான் நாட்டிற்குள் பிரவேசித்தது உண்மையே. ஆனா லும், தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிற மக்க ளுக்கென்று ஆயத்தம் பண்ணின இறுதியான **இளைப்பாறுதலை** அவர்களும் கூட அனுபவிக்க வில்ல. கானான் நாட்டில் போராட்டங்களும், பாவம், நோய், வருத்தம், பாடு, மரணம் போன்ற வையும் இருந்துகொண்டுதான் இருந்தன. இளைப்பாறுதலைக் குறித்த தேவனுடைய வாக் குறுதியை அவர்கள் முற்றிலுமாக அனுபவித்துத் தீர்த்துவிட்டார்கள் என்றால், தேவனால் மீண்டும் அதனைத் தாவீதின் காலத்தில் தரப்போவதாகச் சொல்லியிருக்கமுடியாது.

4:9 முந்தின வசனங்கள் யாவும் இந்த முடி வுக்கு வழிநடத்துகின்றன: **ஆகையால் தேவனு டைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது.** நூலாசிரியர் இந்த இடத்தில் இளைப்பாறுதல் என்பதற்கு வேறு ஒரு

கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார் (*sabbatismos*). இச்சொல் *sabbath* என்னும் சொல்லுடன் தொடர்புடையது. கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தால் மீட்கப்பட்ட அனைவரும் அனுபவிக்கப்போகிற நித்திய இளைப்பாறுதலை இது குறிக்கிறது. இது முடிவுறாத "ஓய்வு நாள்" ஆகும்.

4:10 தேவனுடைய **இளைப்பாறுதலில்** உட்புகுகிற எவரொருவரும் உழைப்பிலிருந்து ஓய்வைப் பெறுகிறார்கள். **தேவன்** ஏழாம் நாளில் **ஓய்ந்திருந்ததுபோல** அது இருக்கிறது.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்னர், நம்முடைய இரட்சிப்புக்காக நாம் முயற்சிசெய்து வந்தோம். கிறிஸ்து கல்வாரியில் அந்த வேலையைச் செய்து முடித்துவிட்டார் என்று நாம் உணர்ந்தபோது, நம்முடைய பயனற்ற முயற்சிகளை நிறுத்திவிட்டு மீட்பரிடத்தில் விசுவாசம் வைத்தோம்.

நாம் இரட்சிக்கப்பட்ட பிறகு, நம்மிடத்தில் அன்புகூர்ந்து நமக்காகத் தம்மையே ஒப்புவித்த நேசருக்காக அன்பின் கடின உழைப்பால் நம்மையே செலவிடத் தொடங்கிவிட்டோம். நமக்குள்ளாகக் குடியிருக்கும் பரிசுத்த ஆவியின் கனியாகவே நம்முடைய நற்செயல்கள் விளங்குகின்றன. அவருக்காக உழைக்கும் உழைப்பில் நாம் களைப்படைகிறோம்; ஆனால் அதன் காரணமாகச் சோர்வடைவதில்லை.

தேவனுடைய நித்திய இளைப்பாறுதலில் நுழையும்போது, இவ்வுலகில் செய்யும் கடின உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவோம். விண்ணகத்தில் செயலற்றவர்களாக இருப்போம் என்பது இதன் பொருளன்று. நாம் தொடர்ந்து அவரை ஆராதிக்கிறவர்களாகவும், அவருக்குப் பணிவிடை செய்கிறவர்களாகவும் இருப்போம். ஆயினும் அங்கு சோர்வோ, மனவேதனையோ, உபத்திரவமோ, கடுந்துன்பமோ இருக்காது.

4:11 தேவனுடைய இளைப்பாறுதல் இனிமேல் வரவிருக்கிற நிலை என்பதை முந்தின வசனம் வெளிப்படுத்திக் காட்டியது. இந்த வசனமோ, இந்த **இளைப்பாறுதலில் பிரவேசிக்க** மிகுந்த கவனம் தேவை என்று கூறுகிறது. கர்த்தராகிய கிறிஸ்துவே நம்முடைய ஒரே நம்பிக்கையாக இருக்கிறார் என்பதில் நாம் **ஜாக்கிரதையாயிருக்க** வேண்டும். வெறுமனே நாம் அவரிடத்தில் விசுவாசம் உள்ளவர்கள் என்று அறிக்கை செய்துவிட்டு, பாடுகளும் இன்னல்களும் பெருகும் போது அவரை வேண்டாமென்று மறுத்துரைப்பவர்களாக மாறக்கூடிய சோதனை உண்டாகுமானால் அதை எதிர்த்து நிற்க மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டும்.

இஸ்ரவேலரோ கவனமற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் தேவனுடைய வாக்குறுதிகளை அற்பமாகக் கருதிச் செயல்புரிந்தார்கள். தாங்கள் அடிமைகளாக இருந்த எகிப்து நாட்டின் மேல் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தார்கள். தேவனுடைய வாக்குறுதிகளை விசுவாசத்தினாலே தங்களுக்குரியதாக்கிக்கொள்ள அவர்கள் கவனமுடையவர்களாகச் செயல்படவில்லை. இதன் விளைவாக அவர்கள் கானான் நாட்டிற்குள் உட்புகவே முடியவில்லை. அவர்களுடைய மாதிரி நமக்கு எச்சரிப்பாக விளங்க வேண்டும்.

4:12 அவிசுவாசமானது கண்டுபிடிக்கப்படாமல் போகாது என்னும் கடுமையான எச்சரிப்பு அடுத்த இரண்டு வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது. முதலில் அது **தேவனுடைய வார்த்தையினால்** கண்டுபிடிக்கப்பட்டது. (வார்த்தை என்னும் சொல் மூல மொழியில் *logos* என்னும் சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது. நன்கு அறிமுகமான இந்தச் சொல் யோவான் நற்செய்தி நூலின் முன்னுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் ஜீவவார்த்தையாகிய இயேசுவை இந்த வசனம் குறிப்பிடவில்லை, மாறாக எழுதப்பட்ட வார்த்தையாகிய திருமறையையே இச்சொல் இங்கு குறிப்பிடுகிறது.) **தேவனுடைய வார்த்தையாகிய** இது:

ஜீவனுள்ளது: இடைவிடாமல் சுறுசுறுப்பாக இயங்குகிறது.

வல்லமையுள்ளது: ஊக்கமளிக்கக் கூடியது.

பிரிக்கத்தக்கது: பார்வைக்குப் புலப்படாத, ஜடப்பொருளால் உண்டாக்கப்படாத மனிதனுடைய அங்கங்களாகிய **ஆத்துமாவையும் ஆவியையும்** உருவக்குத்திப் பிரிக்கக்கூடியது. **கணுக்களையும் ஊனையும்** உருவக்குத்திப் பிரிக்கக் கூடியது; வெளிப்படையான அசைவுகளை அனுமதிப்பது **கணுக்களின்** வேலை. ஆனால் **ஊனோ** மறைந்திருந்த போதிலும் எலும்புகளின் உயிரூட்டத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

பகுத்தறியக் கூடியது: **இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும்** (விருப்பங்களையும்) வேறுபிரித்து அவற்றை நியாயந்தீர்க்கக் கூடியதாயிருக்கிறது. அந்த வார்த்தையே நம்மை நியாயந்தீர்க்கிறது, நாம் அந்த வார்த்தையை நியாயந்தீர்க்கிறதில்லை.

4:13 இரண்டாவதாக, அவிசுவாசம் ஜீவனுள்ள கர்த்தரால் கண்டுபிடிக்கப்படுகிறது, இங்கு பிரதிப் பெயர்ச்சொல் ஆளைக் குறிக்காத நிலையி லிருந்து ஆளைக் குறிக்கும் சொல்லாக மாற்றம் பெறுகிறது: **அவருடைய பார்வைக்கு மறை வான** சிருஷ்டி **ஒன்றுமில்லை**. அவருடைய பார் வைக்குத் தப்பிக்கக்கூடியது ஒன்றுமில்லை. அவர் முற்றிலும் அறிந்த சர்வஞானியாக இருக் கிறார். எங்கே மெய்யான விசுவாசம் இருக்கிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார், எங்கே ஞானத் தின் அடிப்படையில் உண்மைகளுக்கு ஒப்புதல் கூறப்படுகிறது என்பதையும் அவர் அறிந்திருக் கிறார். இதுவே இந்தப் பகுதியின் முக்கியமான கருத்து என்பதில் ஐயமில்லை.

2. கிறிஸ்து தமது ஆசாரியத்துவத்தில் மேன்மையுள்ளவர் [4:14-10:18]

அ. கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் ஆரோனின் பிரதான ஆசாரியத்துவத்திலும் பெரியது [4:14–7:28].

4:14 கிறிஸ்து தம்முடைய மக்களின் மகா பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்று 3:1 -ஆம் வசனத்தில் நூலாசிரியர் அறிமுகப்படுத்திய சிந்த னையின் வலிமைமிக்க ஓட்டத்தை இந்த வசனங் கள் மீண்டும் எடுத்துக்கொள்கின்றன. தேவை மிகுந்த அவருடைய மக்களுக்கு அவர் மிகப் பெரிய ஆதாரமாகத் திகழ்கிறார், அவர்கள் தவறி விழுவதிலிருந்து பாதுகாக்க வல்லவராக இருக் கிறார் என்று இந்த வசனங்கள் அவரை அறிமுகப் படுத்துகின்றன. "வார்த்தை கூர்ந்து ஆய்வு செய் யக்கூடியது என்னும் கருத்திலிருந்து கர்த்தர் பரிதபிக்கக் கூடியவர் என்னும் கருத்தை" வலியு றுத்திக் கூற அவை தொடங்கிவிட்டன. வார்த்தை நம்மைக் குறித்த எல்லாவற்றையும் வெளிப்படுத் திக் காண்பிக்கும் போது (வச. 12, 13), நாம் அவருடைய இரக்கத்தையும் கிருபையையும் நாடிச் செல்ல வேண்டும்.

நமது வியத்தகு கர்த்தரின் மேதகைமை களைக் கவனியுங்கள்:

1. அவர் மகா பிரதான ஆசாரியர். மோசேயின் பிரமாணத்தின்படி பல பிரதான ஆசாரியர்கள் இருந்தார்கள். ஆயினும் அவர்களில் ஒரு வரும் மகா பிரதானமானவர் என்று அழைக் கப்படவில்லை.
2. அவர் வளிமண்டலம், விண்மீன்களின் மண்ட லம் ஆகியவற்றின் வழியாக மூன்றாவது வானத்திற்குச் சென்றார். அதுவே தேவனு டைய இருப்பிடம். இது அவர் விண்ணகம் ஏகிய செயல், திருத்தந்தையின் வலது புறத் தில் மகிமையடைந்த நிகழ்ச்சி ஆகியவற் றைக் குறித்துப் பேசுகிறது என்பதில் ஐய மில்லை.
3. அவர் மானிடராக இருக்கிறார். அவரது பிறப் பின் போது அவருக்கு இயேசு என்னும் பெயர் சூட்டப்பட்டது. இந்தப் பெயரே குறிப்பாக அவரை மனிதநிலையோடு இணைக்கிறது.
4. அவர் தெய்வீகத்தைத் தம்மகத்தே கொண் டவர். கிறிஸ்துவைக் குறித்துப் பேசுகையில், தேவனுடைய குமாரன் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. அது தேவனாகிய திருத்தந்தைக்கு அவர் முற்றிலும் இணை யானவர் என்பதை வெளிப்படுத்துகிறது. நம் முடைய பார்வையில், அவருடைய மனித நிலை அவரைத் தகுதியுள்ளவராக ஆக் கிற்று; தேவனுடைய பார்வையில், அவரு டைய தெய்வீகம் அவரைத் தகுதியுள்ள வராக ஆக்கிற்று. அவர் மகாபிரதான ஆசா ரியர் என்று அழைக்கப்படுவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

4:15 மேலும் நாம் அவருடைய அனுபவத்தை யும் கணக்கிற்கொள்ள வேண்டும். ஒருவர் ஒரு சோதனையின் ஊடாகச் செல்லுகிறபோது, அதே போன்ற அனுபவத்தைப் பெற்றவராலேயன்றி வேறொருவரால் மெய்யாகப் **பரிதபிக்க** முடி யாது. மனிதர் என்னும் நிலையில் நம்முடைய கர்த்தர் நமது அனுபவங்களில் பங்கு பெற்றவராத லால் நாம் அனுபவிக்கிற சோதனைகளை அவரால் புரிந்துகொள்ளமுடியும். (நமது தவறான செயல்களைக் குறித்து அவரால் பரிதபிக்க முடி யாது. ஏனெனில் தவறான அனுபவத்தின் ஊடாக அவர் சென்றதில்லை.)

> இதயத்தைப் பிளக்கும் ஒவ்வொரு அடியிலும் துயருற்ற மனிதர் பெற்றுளார் பங்கு.

அவர் **நம்மைப் போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார்**, ஆயினும் அவர் **பாவமில்லா தவராக** இருந்தார். கர்த்தராகிய இயேசுவின் பாவமற்ற நிறைவைத் திருமறை மிகுந்த விழிப் போடு பேணிப்பாதுகாக்கிறது. நாமும் அதுபோல அவ்வுண்மையில் விழிப்புள்ள அக்கறை கொள்ள வேண்டும். அவர் பாவம் அறியாதவர் (2 கொரி. 5:21), அவர் பாவஞ்செய்யவில்லை (1 பேதுரு 2:22), அவரிடத்தில் பாவமில்லை (1 யோவான் 3:5).

தேவன் என்னும் நிலையிலும் மனிதர் என்னும் நிலையிலும் அவரால் பாவம் செய்திருக்க முடியாது. பரிபூரணமனிதர் என்னும் நிலையில், அவரால் தாமாக எதையும் செய்ய முடியாது; அவர் தம்முடைய திருத்தந்தைக்கு முழுவதும் கீழ்ப்படிந்தவராக இருந்தார் (யோவான் 5:19). மேலும் திருத்தந்தை அவரைப் பாவத்தின் வழியில் நடத்தியிருக்கமாட்டார் என்பது நிச்சயம்.

அவர் பாவம் செய்ய இயலாதவர் என்னும் காரணத்தால், அவருக்கு ஏற்பட்ட சோதனை பொருளற்றது என்னும் வாதம் தவறானது. அவரால் பாவம் செய்ய முடியாது என்பதை உறுதியாக வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்பது சோதனையின் ஒரு நோக்கமாகும்.[3]

பொன் மிகுந்த தூய்மையுடையதாக இருக்கிறது என்னும் காரணத்தால், அந்தப் பொன்னைச் சோதனை செய்வது பயனற்ற சோதனையாகி விடாது. அங்கு தூய்மையற்ற தன்மை இருக்குமென்றால், அந்தச் சோதனை அதனை வெளிப்படுத்திவிடும். அது போலவே, அவரால் பாவம் செய்ய முடியாது என்றால் அவர் முழுமையான மனிதர் அல்ல என்னும் வாதமும் தவறானதே ஆகும். **மனித இயல்பில் பாவம் ஓர் அடிப்படைக் கூறு அல்ல**; மாறாக அது வெளியிலிருந்து இடையில் புகுந்த ஒன்றே ஆகும். நம்முடைய மனிதஇனம் பாவத்தின் காரணமாகப் பாழ்படுத்தப்பட்டுவிட்டது; அவருடைய மனித நிலை முழுநிறைவானது.

மனிதர் என்னும் நிலையில் இயேசு பூமியில் பாவம் செய்திருப்பார் என்றால், ஒரு மனிதராகப் பரலோகத்திலும் அவர் பாவம் செய்வதை எது தடை செய்யும்? அவர் தமது திருத்தந்தையின் வலப்புறத்திற்கு ஏறிச்சென்றபோது தமது மனித நிலையை இவ்வுலகில் விட்டுச்சென்றுவிடவில்லை. அவர் இவ்வுலகில் மாசற்ற தன்மை உடையவராயிருந்தார்; அவர் பரலோகத்திலும் மாசற்றவராயிருக்கிறார்.

4:16 இப்பொழுது கிருபைநிறை அழைப்பு விடுக்கப்படுகிறது: நம்பிக்கையோடு **கிருபாசனத்தின்** அருகில் வாருங்கள். அவர் நம்மை இரட்சிக்கும்படி மரணமடைந்தார், நம்மைப் பாதுகாக்கும்படி அவர் வாழ்கிறார் என்னும் அறிவை அடிப்படையாகக் கொண்டதே நமது நம்பிக்கை. வாருங்கள் என்று அவர் நம்மை அழைத்திருப்பதால் இதயபூர்வமான வரவேற்பு கிடைக்கும் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதர்கள் அவரிடத்தில் நெருங்கிச் செல்ல முடியாது. பிரதான ஆசாரியனால் மட்டும் அவரிடத்தில் செல்ல முடிந்தது, அதுவும் ஆண்டிற்கு ஒருமுறை தான். பகலிலோ இரவிலோ எப்பொழுது வேண்டுமானாலும் நாம் அவரிடத்திற்குச் செல்ல முடியும். **நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும்** அவரிடம் நம்மால் செல்லமுடியும். நாம் செய்திருக்கக் கூடாத செயல்களை அவருடைய **இரக்கம்** மூடிமறைக்கும். மேலும் நாம் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு ஆற்றல் அற்றவர்களாக இருக்கும் போது அதைச் செய்வதற்குத் தேவையான ஆற்றலை அவருடைய **கிருபை** தந்தருளும்.

திருவாளர் மோர்கன் பயனளிக்கும் வகையில் எழுதுகிறார்:

> இங்கு கிரேக்கச் சொற்றொடர் "தேவை ஏற்படும் போது" என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது பேச்சு நடையாகும். அதனுடைய சரியான மொழிபெயர்ப்பு "சரியான தறுவாயில்" என்பதே ஆகும் (தமிழில் ஏற்ற சமயத்தில்) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வுண்மையைச் சுட்டிக்காட்டுவதற்கு நான் சோர்வடையமாட்டேன். "நாம் இரக்கத்தைப் பெறவும் சரியான தறுவாயில் சகாயம் செய்யுங்கிருபையை அடையவும்" – எங்கே எப்பொழுது கிருபை எனக்குத் தேவையோ அந்தத் தறுவாயில். நீங்கள் சோதனையால் தாக்கப் படுகிறீர்கள். தாக்கப்படும் வேளையில் நீங்கள் அவரை நோக்கிப் பார்க்கிறீர்கள். அந்தச் சரியான தறுவாயில் உங்களுக்கு உதவி செய்ய அங்கு கிருபை இருக்கிறது. மாலை ஜெப வேளை வரை உங்களுடைய விண்ணப்பத்தை அவர் தள்ளிப்போடுவதில்லை. நகரத்தின் வீதிகளில் கொழுந்து விட்டு எரியும் சோதனை உங்களை நோக்கி வருகிறபோது, உதவி வேண்டிக் கதறியவர்களாகக் கிறிஸ்து வினண்டை திரும்புங்கள். அந்தச் சரியான தறுவாயில் கிருபை உங்களுக்கு அருளப்படுகிறது.[4]

இதுகாறும், தீர்க்கதரிசிகள், தேவதூதர்கள் மற்றும் மோசே ஆகியோரைக் காட்டிலும் இயேசு மேலானவர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளதைக் கண்டோம். ஆரோனின் பிரதான ஆசாரியத்து

வத்தைக் காட்டிலும் கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் மேலானது என்னும் முக்கிய மான கருத்தை நோக்கி இப்பொழுது திரும்பு வோம்.

சீனாய் மலையில் தேவன் மோசேயினிடத் தில் நியாயப்பிரமாணத்தை ஒப்புவித்தபோது, தம்முடைய மக்கள் தம்மிடத்தில் வருவதற்கு ஏது வாக மனிதர்களாலான ஆசாரியத்துவத்தை நிறுவினார். லேவி கோத்திரத்திலிருந்தும் ஆரோனின் குடும்பத்திலிருந்தும் வாரிசுகளாகப் பிறப்பவர்களே ஆசாரியராக நியமிக்கப்பட வேண் டும் என்னும் கட்டளையையும் அவர் இட்டார். இந்த முறைமை லேவியர் ஆசாரிய முறைமை அல்லது ஆரோனின் ஆசாரிய முறைமை என்று அழைக்கப்படுகிறது.

தேவனால் நிறுவப்பட்ட வேறொரு ஆசாரிய முறைமையும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட் டுள்ளது. அது முற்பிதாவாகிய மெல்கிசேதேக் கின் ஆசாரிய முறைமையாகும். இந்த மனிதன் ஆபிரகாமின் காலத்தில் வாழ்ந்தவன், நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு வெகு காலத் திற்கு முந்தினவன். அவன் அரசனாகவும் ஆசா ரியனாகவும் இருந்தான். மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமையின்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆசாரியராக இருக்கிறார் என்றும், இந்த முறைமை ஆரோனின் ஆசாரிய முறைமையைக் காட்டிலும் மேம்பட்டது என்றும் நூலாசிரியர் நமக்கு முன்பாக இருக்கிற திருமறைப்பகுதியில் விளக்கிக்காட்டவிருக்கிறார்.

முதல் நான்கு வசனங்களில் ஆரோனின் ஆசாரிய முறைமை பற்றிய விவரம் கொடுக்கப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 5-10 ஆகிய வசனங்களில், கிறிஸ்து ஆசாரியராக விளங்கத் தகுதியுடையவர் என்ற விவரம் அளிக்கப்பட்டுள் ளது. இப்பகுதியில் பெரும்பாலும் இரண்டு முறை களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் சொல் லப்பட்டுள்ளன.

5:1 ஆரோனின் **ஆசாரிய** முறைமையின் முதற்தகுதி என்னவெனில், அவன் **மனிதரில் தெரிந்துகொள்ளப்பட்டவனாக** இருக்க வேண் டும். அதாவது, அவன் ஒரு மனிதனாக இருக்க வேண்டும்.

அவன் **மனிதருக்காக தேவனிடத்தில்** ஈடு படும்படி நியமிக்கப்பட்டான். அவன் மனிதர்களுக் கும் தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தனாகச் செயல்படும்படியான ஒரு சிறப்பான வகுப்பைச் சார்ந்தவன். அவனுடைய பணிகளில் முக்கிய மானது **பாவங்களுக்காகக் காணிக்கைகளை யும் பலிகளையும் செலுத்துவதாகும்**. இங்கு **காணிக்கைகள்** என்று சொல்லப்பட்டிருப்பவை, தேவனுக்குச் செலுத்தப்படும் எல்லாவற்றையும் குறிக்கும். பாவங்களுக்குப் பரிகாரமாக இரத்தத் தைச் சிந்தி, சிறப்பாகச் செலுத்தப்படுபவை **பலி கள்** எனப்படும்.

5:2 குறைபாடுகளுடைய மனிதர்களிடத்தில் அவன் **இரங்கத்தக்கவனாக** இருப்பதோடு, அறி யாதவர்களிடத்திலும் நெறிதப்பிப்போனவர்களி டத்திலும் அவன் கடுமையற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும். குறைகளுள்ள அவனுடைய சரீரமே, மக்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினை களைப் புரிந்துசெயல்பட அவனைத் தகுதியாக்கும்.

இந்த வசனத்தில் அறியாதவர்கள், மனம் போன போக்கில் போகிறவர்கள் என்று குறிப்பிடப் பட்டிருப்பது, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செலுத் தப்பட்ட பலிகள் அறிந்து செய்த பாவங்களுக்கல்ல என்பதை நினைவுபடுத்துகிறது. துணிகரமான பாவத்திற்கு நியாயப்பிரமாணத்தில் எவ்விதப் பரிகாரமும் சொல்லப்படவில்லை.

5:3 அந்த ஆசாரியனுடைய மனித நிலை அவன் தன்னுடைய மக்களோடு ஒன்றிணைந்த வனாகக் காண்பதற்கு உதவிபுரிந்த போதிலும், பாவ இயல்புடைய அந்த மனித நிலையே பாதக மாகவும் அமைந்திருந்தது. ஆகவே அவன் **தனக் காகவும்** அதே நேரத்தில் **ஜனங்களுடைய பாவங் களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருந்தது.**

5:4 ஆசாரிய அலுவலானது, ஏதோ மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தொழிலாகத் தாங் களே தெரிந்துகொள்ளக்கூடிய வேலையல்ல. மாறாக **ஆரோன் தேவனால் அழைக்கப்பட்டது போல** அவர்களும் தேவனால் அழைக்கப்பட்டி ருக்க வேண்டும். ஆரோனுக்கும் அவனுடைய குடிவழியில் பிறந்தவர்களுக்கும் மட்டுமே அந்த அழைப்பு கொடுக்கப்பட்டது. அந்தக் குடும்பத்திற் குப் புறம்பேயிருந்து ஒருவரும் ஆசரிப்புக் கூடாரத் திலோ தேவாலயத்திலோ வேலைசெய்ய அனு மதிக்கப்படவில்லை.

5:5 நூலாசிரியர் இப்பொழுது கிறிஸ்துவின் பக்கமாகத் திரும்பி, அவருடைய தெய்வீக நிய மனம், வெளிப்படுத்தப்பட்ட அவருடைய மனித நிலை மற்றும் அவர் தேடிப் பெற்றுக்கொண்ட தகுதி கள் ஆகியவற்றின் காரணமாக அவர் எவ்வாறு ஆசாரியராகச் செயல்படப் பொருத்தமானவராக இருக்கிறார் என்பதை விவரிக்கிறார்.

அவருடைய நியமனத்தைக் குறித்துப் பார்க்கும்போது, அதனுடைய மூல ஆதாரம் தேவனே ஆவார். அது இறை அழைப்பு, மனிதக் குடிவழி உரிமைக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த உலகீய ஆசாரியர்கள் ஒரு போதும் பெற்றிராத சிறப்பான உறவு இதில் இடம் பெற்றிருந்தது. நமது **ஆசாரியர்** தன்னிகரற்ற **தேவகுமாரன்**, நித்தியமாக ஜெநிப்பிக்கப்பட்டவர், மனுவுருவெடுத்தபோதும் உயிரோடு எழுப்பப்பட்ட போதும் ஜெநிப்பிக்கப்பட்டவர்.

5:6 மேலும் கிறிஸ்துவின் ஆசாரிய முறைமை, **சங்கீதம் 110:4** -இல் "**நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்**" என்று தேவன் அறிக்கை செய்த காரணத்தால் மேலான ஆசாரிய முறைமையாகும். இந்த மேதகைமை **7** -ஆம் அதிகாரத்தில் இன்னும் முழுமையாக விவரிக்கப்படும். ஆரோனின் ஆசாரிய முறைமையைப் போலல்லாமல், இந்த ஆசாரிய முறைமை **என்றென்றைக்கும்** இருக்கக்கூடிய ஆசாரிய முறைமை என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ள முதன்மையான கருத்தாகும்.

5:7 கிறிஸ்து பாவமற்ற தேவகுமாரன் மட்டுமின்றி, மெய்யான மனிதராகவும் இருக்கிறார். இவ்வுண்மையை மெய்ப்பிக்கும்படி, கிறிஸ்து **மாம்சத்தில் இருந்த நாட்களில்** வெவ்வேறு வகையான மனித அனுபவங்களின் வழியாகச் சென்றார் என்பதை இம்மடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவருடைய வாழ்க்கையைப் பற்றி விவரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களைக் கவனியுங்கள். குறிப்பாக, கெத்செமனே தோட்டத்தில் அவருடைய அனுபவத்தைக் கவனியுங்கள்: **பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார்**. அவர் எப்பொழுதும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரைச் சார்ந்து வாழக் கூடிய மனிதராக இருந்தார் என்பதையும், பாவத்தோடு தொடர்பற்ற எல்லா மனித உணர்வுகளிலும் அவர் பங்கு கொண்டார் என்பதையும் இந்த அனுபவங்கள் விளக்கிக் கூறுகின்றன.

கிறிஸ்து தாம் சாவிலிருந்து காக்கப்பட வேண்டும் என்னும் மன்றாட்டை ஏறெடுக்கவில்லை; பாவிகளுக்காக மரணமடைய வேண்டும் என்பதே அவருடைய இவ்வுலக வருகைக்கான ஒரே காரணமாயிருந்தது (யோவான் 12:27). அவர் மரணத்திலிருந்து காக்கப்பட வேண்டுமென்பதே அவருடைய மன்றாட்டாயிருந்தது (JND), அதாவது அவருடைய ஆத்துமா பாதாளத்தில் கைவிடப்படக் கூடாது. மரணமடைந்தவர்களிலிருந்து அவர் உயிரோடு எழுப்பப்பட்ட வேளையில் இந்த மன்றாட்டு கேட்கப்பட்டது. அவருடைய தேவ **பயபக்தியினிமித்தம்** அந்த மன்றாட்டு **கேட்கப்பட்டது**.

5:8 மனிதர்களுக்காக மரணம் அடையும்படி தேவன் எவ்வாறு மனிதராக மாறமுடியும் என்னும் மிகுந்த ஆழமான இரகசியத்தை, அதாவது, தேவன் மனுவுருவெடுத்த நிகழ்ச்சியை இப்பொழுது மீண்டுமாக நாம் நேருக்கு நேர் சந்திக்கிறோம்.

அவர் குமாரனாயிருந்தும் (பல குமாரர்களில் அவர் ஒருவர் அல்ல), அதாவது, அவர்தாமே ஒரேபேறான தேவகுமாரன். இந்த உண்மை மாபெரும் சத்தியமாக இருந்த போதிலும், அவர் தாம் **பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்**. அவர் பரலோகத்திலேயே என்றென்றைக்கும் இருந்திருப்பார் என்றால், அவர் இவ்வுலகத்திற்கு வருகைபுரிந்தபோது அடைந்த அனுபவங்களைக் குறித்து ஒன்றும் அறியாதவராகவே இருந்திருப்பார். அந்தந்த நாளுக்குத் தேவையான அறிவுரைகளைத் தமது திருத்தந்தையினிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்படி ஒவ்வொருநாள் காலையிலும் அவருடைய செவிகள் திறந்திருந்தன (ஏசாயா 50:4). அவர் தமது திருத்தந்தையின் சித்தத்திற்கு எப்பொழுதும் கீழ்ப்படிகிற குமாரனாக அனுபவபூர்வமாகக் **கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்**.

5:9 தாம் பூரணரான பின்பு. இது அவருடைய தனிப்பட்ட பண்பைக் குறிப்பதில்லை. ஏனெனில் கர்த்தராகிய இயேசு முழுநிறைவானவர். அவருடைய சொற்கள், அவருடைய செயல்கள் மற்றும் அவருடைய வழிகள் முழுவதும் குறைபாடற்றபடி நிறைவானவை. அவ்வாறாயின் அவர் என்ன பொருளில் **பூரணராக்கப்பட்டார்**? அவர் நம்முடைய இரட்சகர் என்னும் அவருடைய வேலையில் பூரணராக்கப்பட்டார் என்பதே இதன் விடையாகும். அவர் பரலோகத்திலே இருந்திருப்பார் எனில், அவர் நம்முடைய நிறைவான இரட்சகராக மாறியிருக்க முடியாது. ஆனால் அவர் மனுவுருவெடுத்த செயல், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், விண்ணகம் சென்ற நிகழ்ச்சி ஆகிய வற்றின் மூலமாக நம்முடைய பாவங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்குத் தேவையான வேலையைச் செய்து முடித்தார். மேலும், இவ்வுலகின் முழுநிறைவான இரட்சகர் என்னும் புகழ்ச்சியை இப்பொழுது அவர் அடைந்திருக்கிறார்.

விண்ணகத்திற்கு மீண்டும்சென்ற நிலையில், அவர் **தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்**. எல் லோருடைய இரட்சிப்பிற்கும் அவரே மூல ஆதார மாகத் திகழ்கிறார், ஆயினும் அவருக்குக் **கீழ்ப் படிகிறவர்கள்** மட்டுமே இரட்சிக்கப்படுகிறார்கள்.

இங்கு இரட்சிப்பானது அவருக்குக் கீழ்ப்படி தலை நிபந்தனையாகக் கொண்டிருக்கிறது, வேறு பல இடங்களில் இரட்சிப்பு விசுவாசத்தை நிபந்தனையாகக் கொண்டிருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இவ்விதமாக முரண்பாடாகத் தோற்றமளிக்கும் விஷயத்தை எவ்வாறு ஒன்றோ டொன்று பொருந்தச் செய்வது? முதலாவதாக, இது விசுவாசத்திற்குக் கீழ்ப்படிதலாகும் (ரோமர் 1:7; 16:25-27). "தேவன் எதிர்பார்க்கிற கீழ்ப்படிதல் யாதெனில், அவருடைய வார்த்தையை விசு வாசிப்பதேயாகும்." ஆனால், இரட்சிப்புக்கேது வான விசுவாசம் கீழ்ப்படிதலை உண்டாக்கும் என்பதும் உண்மையே. புதிய ஏற்பாட்டின் உண் மையான பொருளில், கீழ்ப்படிதல் இல்லாமல் விசுவாசிப்பது இயலாத செயல் ஆகும்.

5:10 ஆசாரிய முறைமையின் இன்றியமை யாத அடிப்படை வேலைகளை மகிமைநிறைந்த வகையில் செய்து முடித்த நிலையில், கர்த்தரா கிய இயேசு **"மெல்கிசேதேக்கின் முறைமை யின்படியான பிரதான ஆசாரியர்" என்று தேவ னாலே** அழைக்கப்பட்டார்.

கிறிஸ்துவின் ஆசாரிய முறைமை மெல்கி சேதேக்கின் முறைமையின்படி இருந்தபோதிலும், அவருடைய ஆசாரிய ஊழியங்கள் ஆரோனின் முறைமையின்படி வந்த ஆசாரியர்களின் ஊழி யங்களைப் போன்றே இருந்தன என்பதை நாம் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். உண்மை யில், கிறிஸ்து நிறைவேற்றவிருந்த ஊழியத்தின் நிழலாக அல்லது படவுருவாகவே யூத ஆசாரியர் களின் ஊழியம் இருந்தது.

5:11 இத்தருணத்தில் நூலாசிரியர் வேறொரு செய்தியைக் கூற விலகிச் சென்றே ஆக வேண்டும். மெல்கிசேதேக்கின் முறைமையிலான கிறிஸ்து வின் ஆசாரியத்துவத்தை அவர் தொடர்ந்து கூற விரும்பினாலும் அவரால் அதைக்கூற முடியாது. தனது வாசகர்கள் வளர்ச்சியடையாத நிலையில் இருப்பதைக் குறித்துக் கடிந்துகொள்ளவும், அதே நேரத்தில் விசுவாசத்தை மறுதலித்துப் போகக் கூடிய ஆபத்திற்கு எதிராக அவர்களைக் கண்டிப்பாக எச்சரிக்கவும் அவர் தெய்வீக நெருக்குதலைப் பெற்றிருந்தார்.

நம்முடைய ஆவிக்குரிய நிலையின் காரண மாக, தெய்வீக சத்தியங்களைப் புரிந்துகொள் வதில் நாம் வரம்புக்குட்பட்டிருக்கிறோம் என்பது வருத்தத்திற்குரிய உண்மையாகும். **மந்தமான** செவிகள் ஆழமான சத்தியங்களை அறிந்து கொள்வதில்லை! சீடர்களைப் போன்று, நம்மைப் பொருத்தும் இது எவ்வளவு உண்மையாயிருக் கிறது. பற்பல செய்திகளைக் கர்த்தர் நம்மிடத் தில் கூறவேண்டிய நிலையில், நாம் அதைத் தாங்க முடியாதவர்களாயிருக்கிறோம் (யோவான் 16:12).

5:12 எபிரெயர் பிறருக்கு போதிக்கத்தக்க வளர்ச்சியடைவதற்குரிய அறிவுரைகளை நீண்ட காலமாகப் பெற்று வந்திருந்தனர் என்பதை ஆசிரியர் நினைவுபடுத்துகிறார். ஆனாலும், **தேவனுடைய** வார்த்தையின் தொடக்கப் பாடங் களை மறுபடியும் வேறொருவர் **உபதேசிக்க வேண்டிய** தேவை ஏற்பட்டிருப்பது சோகக் கதை யாகும்.

நீங்கள் **போதகராயிருக்க வேண்டும்**. ஒவ் வொரு விசுவாசியும் மற்றவர்களுக்குப் போதிக் கக்கூடிய அளவிற்கு வளர்ச்சியடைய வேண்டும் என்பதே தேவனுடைய ஒழுங்கு முறையாகும். ஒவ்வொருவரும் வேறொருவருக்கு போதித்தல்! சிலர் போதிக்கக் கூடிய சிறப்பான வரத்தைப் பெற்றிருப்பது உண்மையேயாயினும், ஒவ்வொரு விசுவாசியும் போதிக்கும் ஊழியத்தில் ஓரளவா வது பங்குபெறவேண்டும். ஒரு சிலருக்கு மட்டுமே இந்த ஊழியம் என்று இதனை வரம்பிற்குட்படுத் துவது தேவனுடைய நோக்கமல்ல.

நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். சரீர வளர்ச்சி யைக் குறித்துப்பார்க்கும்போது, பாலுணவிலிருந்து பலமான ஆகாரத்தை உண்ணும் அளவிற்கு ஒரு குழந்தை வளர்ச்சியடையவில்லையென்றால், அது வளர்ச்சியற்ற குழந்தை எனப்படும். ஆவிக் குரிய நிலையிலும் வளர்ச்சி குன்றிய நிலை என்னும் நிலை இருக்கிறது (1 கொரி. 3:2).

5:13 தாங்கள் விசுவாசிகள் என்று அறிக்கை செய்கிறவர்கள், தொடர்ந்து பாலுணவை உண் கிறவர்களாக இருப்பார்கள் என்றால், **நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவராயிருக்கிறார் கள்** என்பதே அதன் பொருளாகும். அவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாக இருக்கிறார்களே யொழிய அதன்படி செய்கிறதில்லை. அவர்கள் பயன்படுத்தாததை இழந்து போகிறார்கள், என் றென்றும் குழந்தைகளாகவே இருக்கிறார்கள்.

ஆவிக்குரியவற்றில் அவர்கள் போதுமான பகுத்தறியக்கூடிய ஆற்றல் அற்றவர்களாக அதாவது, "மனிதருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாக" இருக்கிறார்கள் (எபே. 4:14).

5:14 பலமான ஆவிக்குரிய **ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய** பூரண வளர்ச்சியடைந்தவர்களுக்கே தகும். தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர்கள் பெறுகிற வெளிச்சத்திற்குக் கீழ்ப்படிவதாலே, இந்த மனிதர்கள் ஆவிக்குரியவகையில் பகுத்தறியவும், ஒழுக்கநெறி மற்றும் கோட்பாடு ஆகியவற்றில் உண்டாகக்கூடிய தவறுகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ளவும் கூடிய திறமையுடையவராய் இருக்கிறார்கள்.

இந்த வேதபகுதியின் பின்னணியில் காணும்போது, **நன்மை தீமையின்னதென்று** பகுத்து அறிவது என்பது கிறிஸ்தவத்திற்கும் யூதமார்க்கத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அறிவது என்பதே ஆகும். யூதமார்க்கம் தன்னில் தானே தீமையானது என்பது இதன் பொருளன்று; லேவிய முறைமை தேவனாலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் கிறிஸ்துவைச் சுட்டிக் காட்டுவதே அதன் நோக்கமாகும். நிழல்கள் மற்றும் பண்டிகைகளாகிய மாதிரிகள் எல்லாவற்றுக்கும் நிறைவு அவரே. இப்பொழுது கிறிஸ்து வந்துவிட்ட நிலையில், படவுருவை நோக்கித் திரும்புவது பாவம். மனிதர்களுடைய பற்றுதலையும் பாசத்தையும் கிறிஸ்துவினின்று எது தன்னை நோக்கித் திருப்புகிறதோ அதுவே தீமை எனப்படும். ஆரோனின் ஆசாரிய முறைமையின் தாழ்விற்கும் கிறிஸ்துவின் ஆசாரிய முறைமையின் மேன்மைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை ஆவிக்குரிய வகையில் முதிர்ச்சிபெற்றவர்கள் பகுத்தறிவார்கள்.

6:1 ஐந்தாம் அதிகாரத்தில் **11** -ஆம் வசனத்தில் தொடங்கிய எச்சரிப்பு இந்த அதிகாரம் முழுவதும் தொடர்கிறது, புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்தப் பகுதியானது, மாறுபட்ட கருத்துகளுக்கு இடமான பகுதிகளில் ஒன்றாக இருக்கிறது. பயபக்தியுள்ள கிறிஸ்தவர்கள் பலர் இப்பகுதியின் விளக்கத்தைக் குறித்து வெவ்வேறான கருத்துடையவர்களாக இருப்பதால் நாம் கொள்கைப் பிடிவாதத்தோடு பேசக்கூடாது. இந்த வேதபகுதியோடும், புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகளோடும் உடன்பட்டவகையில் விளக்கமளிப்போம்.

முதலாவதாக, **கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள மூல உபதேச வசனங்களை** விட்டுவிட வேண்டுமென்று வாசகர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள், எழுத்தின்படி, "கிறிஸ்துவைப் பற்றிய தொடக்க வசனங்கள்" (FWG), அல்லது "கிறிஸ்துவின் தொடக்க வசனங்கள்" (KSW) என்பதே இதன் மொழிபெயர்ப்பாகும். இஸ்ரவேல் மக்களை மேசியாவின் வருகைக்காக ஆயத்தப்படுத்தும்படி பழைய ஏற்பாட்டில் கற்பிக்கப்பட்ட சமயத்தோடு தொடர்புடைய அடிப்படைக் கோட்பாடுகளே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன என்று நாம் கருதுகிறோம். இந்தக் கோட்பாடுகள் எவையென்று இந்த வசனத்தின் பிற் பகுதியிலும் இரண்டாம் வசனத்திலும் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இவற்றை விளக்கிக்காட்ட முற்படுகையில், அவை கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் அல்லவென்றும், மாறாக, பின்னர் கட்டவிருந்த கட்டடத்திற்கு அடித்தளமாக அமைந்திருந்த தொடக்கநிலை உபதேசங்களேயாகும் என்றும் அறிந்துகொள்வோம். அவற்றில் உயிர்தெழுந்து மகிமையடைந்தவராகிய கிறிஸ்துவைக் காணவியலாது. இந்தத் தொடக்க நிலைப் பாடங்களை விட்டுவிடவேண்டும் என்னும் அறிவுரை, அவை பயனற்றவை என்று கூறி அவற்றை அடியோடு கைவிட வேண்டுமென்பதாகாது. மாறாக, அந்தத் தொடக்க நிலையிலிருந்து நிறைவான நிலையை நோக்கிச் செல்லவேண்டுமென்பதே இதன் பொருளாகும். யூதமார்க்கத்தின் காலம் ஆவிக்குரிய வகையில் குழந்தைப் பருவம் என்பதே இதன் பொருளாகும். கிறிஸ்தவமோ முழுவளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாய் இருக்கிறது.

அடித்தளம் இட்ட பிறகு அடுத்த கட்டம் அதன் மேல் கட்டடம் எழுப்புவதாகும். கொள்கைக்கான அஸ்திபாரம் பழைய ஏற்பாட்டில் இடப்பட்டுள்ளது; அதில் இடம்பெற்றிருந்த ஆறு அடிப்படை போதனைகள் இப்பொழுது இங்கு பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவை தொடங்குமிடத்தைச் சுட்டிக் காட்டுபவை. கிறிஸ்துவையும் அவருடைய ஆளுமையையும், அவருடைய செயலையும் குறித்த புதிய ஏற்பாட்டிலுள்ள பெரிதான சத்தியங்கள் முழுநிறைவான ஊழியத்திற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

பழைய ஏற்பாட்டுக் கோட்பாடு **செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதலாகும்**. இது தீர்க்கதரிசிகளாலும் மேசியாவின் முன்

னோடியினாலும் இடைவிடாமல் பிரசங்கிக்கப் பட்டது. **செத்த** நிலையிலிருந்த **கிரியைகளிலி ருந்து** திரும்ப வேண்டுமென்று, அதாவது ஒரு சிறிதும் விசுவாசமே இல்லாத நிலையிலிருந்து திரும்ப வேண்டுமென்று அவர்கள் யாவரும் மக் களை அழைத்தார்கள்.

முற்காலத்தில் சரியாக இருந்த கிரியைகளே **செத்த கிரியைகள்** என்று குறிப்பிடப்பட்டுள்ளன, கிறிஸ்து வந்துவிட்டதால் அவை இப்பொழுது செத்துப்போய்விட்டன. எடுத்துக்காட்டாக, தேவா லய ஆராதனையோடு சம்பந்தப்பட்ட பணிகள் யாவும் கிறிஸ்துவின் நிறைவேற்றப்பட்ட கிரியை யால் வழக்கற்றுப் போயின.

இரண்டாவதாக, **தேவன் பேரில் வைக்கும் விசுவாசத்தை** நூலாசிரியர் குறிப்பிடுகிறார். மீண்டுமாக, பழைய ஏற்பாட்டின் முதன்மையான விஷயம் இங்கு கூறப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட் டில் மாற்றத்திற்கு இடமற்றபடி விசுவாசத்தின் இலக்காகக் கிறிஸ்து அறிமுகப்படுத்தப்பட்டிருக் கிறார். தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தை இது நீக்கிவிடுவதில்லை; மாறாக, கிறிஸ்து விட்டு விடப்பட்ட நிலையில் தேவனிடத்தில் வைக்கும் விசுவாசம் இப்பொழுது போதுமானதன்று.

6:2 ஸ்நானங்களைக் குறித்த அறிவுரை கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைக் குறிப்பதில்லை,[5] மாறாக ஆசாரியர்கள் மற்றும் இஸ்ரவேல் மக்கள் ஆகியோருடைய சமய வாழ்க்கையில் முதன்மை யான வகையில் இடம் பெற்றுவந்த சடங்குகளா கிய கழுவுதல்களையே இச்சொல் குறிக்கிறது (**9:10** -ஆம் வசனத்தையும் காண்க).

லேவியராகமம் 1:4; 3:2; 16:21 ஆகிய வசனங் களில் **கைகளை வைக்குதல்** என்னும் சமயச் சடங்கு விளக்கப்பட்டிருக்கிறது. பலிசெலுத்து பவர் அல்லது ஆசாரியன் பலியாகச் செலுத்தப் படும் விலங்கின் தலையின் மேல் தனது கையை "தானே அது" என்று சொல்லக்கூடியபடி வைக்க வேண்டும். யாரெல்லாம் அந்த விலங்கோடு தங்களை ஒன்றிணைத்துக்கொள்கிறார்களோ அவர்களெல்லாருடைய பாவங்களையும் அந்த விலங்கு சுமந்து செல்லுகிறது என்பதே இங்கு உருவகமாக விளக்கப்படும் உண்மை. இந்தச் சடங்கானது பதிலாளாகப் பாவப்பரிகாரம் செய் வதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அப்போஸ் தலராலும் மற்றவர்களாலும் தொடக்க கால சபை யில் பின்பற்றப்பட்டு வந்த கைகளை வைக்கும் வழக்கத்தை இது சற்றும் குறிப்பதில்லை என்றே நாம் நம்புகிறோம் (**அப். 8:17; 13:3; 19:6**).

மரித்தோரின் உயிர்த்தெழுதல் யோபு 19:25-27, சங்கீதம் 17:15 ஆகிய வசனங்களில் கற்பிக் கப்பட்டிருக்கிறது. மேலும் ஏசாயா 53:10-12 ஆகிய வசனங்களில் அது குறிப்பாய்ச் சொல்லப்பட்டுள் ளது. பழைய ஏற்பாட்டில் மங்கலான நிலையில் காணப்படும் உண்மை, புதிய ஏற்பாட்டில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது (2 தீமோ. 1:10).

பழைய ஏற்பாட்டில் காணப்படும் கடைசித் தொடக்க நிலைச் சத்தியம் **நித்திய நியாயத் தீர்ப்பு** ஆகும் (சங். 9:17; ஏசாயா 66: 24).

இந்தத் தொடக்கநிலைக் கொள்கைகள் யூத மார்க்கத்திற்கு எடுத்துக்காட்டுகளாக இருந்தன. மேலும் அவை கிறிஸ்துவின் வருகைக்கென ஆயத்தப்படுத்துபவையாக இருந்தன. கிறிஸ்த வர்கள் இவற்றில் தொடர்ந்து மன நிறைவு பெற்ற வர்களாக இருந்துவிடக் கூடாது, மாறாகக் கிறிஸ்து வில் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள முழு மையான சத்தியத்தை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும். "நிழலிலிருந்து உண்மைப் பொருளை நோக்கி, மாதிரியிலிருந்து நிஜத் திற்கு, உமியிலிருந்து தானியத்தின் மணியை நோக்கி, முன்னோர்கள் கடைப்பிடித்துவந்த சம யத்தின் செத்த கிரியைகளிலிருந்து கிறிஸ்துவின் ஜீவனுள்ள சத்தயத்தினிடமாய்" வாசகர்கள் வர வேண்டுமென்று இங்கு வற்புறுத்தப்படுகிறார்கள்.

6:3 தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்ய[6] நூலாசிரியர் அவர்களுக்கு உதவிபுரிய விருப்பம் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறார். ஆயினும் அதனைக் கட்டுப்படுத்துவது அவர் களைச் சார்ந்ததேயொழிய தேவனைச் சார்ந்த தல்ல. ஆவிக்குரிய முழுமையை அவர்கள் அடை வதற்கான ஆற்றலை தேவன் தந்தருளுவார், ஆனால் அவர்கள் அதற்காக வேத வசனத்திற்கு உடன்பட்ட மனப்பான்மையையும் மெய்யான விசுவாசத்தையும் கொண்டவர்களாக உறுதி யுடன் செயல்படவேண்டும்.

6:4 விசுவாச மறுதலிப்புக்கு எதிரான எச்சரிக் கையின் முக்கிய பகுதியினிடமாய் நாம் இப் பொழுது வந்திருக்கிறோம். மீண்டும் மனந்திரும்பு தலுக்குரிய நிலைக்குக் கொண்டுவரப்படக் கூடாத மக்கள் கூட்டத்தாருக்கு இது பொருந்தும். ஒருமுறை இவர்கள் மனம் வருந்தியவர்கள் என் பது வெளிப்படை (கிறிஸ்துவின் மேல் அவர்கள் விசுவாசம் வைத்தவர்கள் என்பதற்கான குறிப்பு இங்கு இல்லை). இப்பொழுது மனந்திரும்பு

தலைப் புதிப்பிப்பது கூடாதசெயல் என்று இங்கு தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

யார் இந்த மனிதர்கள்? இதற்கான விடை **4** மற்றும் **5** ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனுபவித்த மிகப்பெரிய நன்மைகளை ஆராய்ந்து பார்ப்போமென்றால், இரட்சிக்கப்படாதவர்களைப் பொருத்தமட்டில் இவையாவும் உண்மையாகவே இருக்கின்றன என்பதைக் கவனிக்க முடியும். அவர்கள் மறுபடியும் பிறந்தவர்கள் என்று தெளிவாக ஒருபோதும் சொல்லப்படவில்லை. மேலும் இரட்சிப்பு அடைவதற்கு இன்றியமையாத விசுவாசம், அவருடைய இரத்தத்தால் உண்டாகிற மீட்பு மற்றும் நித்திய வாழ்வு ஆகியவை பற்றிய குறிப்பு எதையும் கூட அவர்களிடத்தில் காணமுடியாது.

அவர்கள் **ஒருதரம் பிரகாசிக்கப்பட்டவர்கள்**. தேவனுடைய கிருபையின் நற்செய்தியை அவர்கள் கேட்டிருந்தார்கள். இரட்சிப்பின் வழியைக் குறித்த அறிவை அறியாதபடி அவர்கள் இருளுக்குள் இருந்தவர்களல்ல. யூதாஸ்காரியோத்து பிரகாசிக்கப்பட்டவன், ஆனாலும் அவன் ஒளியை நிராகரித்துவிட்டான்.

அவர்கள் **பரம ஈவை ருசிபார்த்தவர்கள்**. கர்த்தராகிய இயேசு பரம ஈவு ஆவார். அவர்கள் அவரை ருசிபார்த்திருந்தார்கள், ஆனாலும் அவர்கள் ஐயத்திற்கு இடமற்றபடி விசுவாசித்தல் என்னும் செயலைச் செய்து அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. உண்ணாமலும் பருகாமலும் ருசிபார்க்க முடியும். காடி கலந்த ரசப் பிழிவை மனிதர்கள் சிலுவையில் தொங்கிய இயேசுவினிடம் கொடுத்தபோது, அவர் அதை ருசிபார்த்தார், ஆனால் பருகவில்லை (மத். 27:34). கிறிஸ்துவை ருசிபார்ப்பது மட்டும் போதாது; "நாம் மனிதகுமாரனுடைய மாம்சத்தைப் புசிக்காமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால், அதாவது, மெய்யாகவே அவரைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் நம்மிடத்தில் ஜீவனில்லை" (யோவான் 6:53).

அவர்கள் **பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள்** (பங்குபெற்றவர்கள்). நிச்சயமாக இது மனந்திரும்பிய நிலையைத்தான் குறிக்கிறது என்னும் அவசர முடிவுக்குள் நாம் வருவதற்கு முன், மனிதர்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்புக்கு முன்னரே சில செயல்களைச் செய்யும் ஊழியத்தைப் பரிசுத்த ஆவியானவர் செய்கிறவராக இருக்கிறார் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும் (1 கொரி. 7:14); அதன் மூலமாக அவர் புறம்பான சிலாக்கிய நிலைக்குள் அவர்களை வைக்கிறார். அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் அவிசுவாசிகளிடத்தில் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8). அவர் அவர்களை மனந்திரும்புதலுக்கு ஏதுவாக வழிநடத்தி, கிறிஸ்து ஒருவரே அவர்களுக்கு நம்பிக்கையாக இருக்கிறார் என்று சுட்டிக்காட்டுவார். இவ்வாறான மனிதர்கள் பரிசுத்த ஆவியானவரைத் தங்களிடத்தில் குடியிருக்கிறவராகப் பெறாமல், அவரது நன்மைகளை மட்டுமே பெற்றவர்களாக இருப்பார்கள்.

6:5 அவர்கள் **தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்தவர்கள்**. பிரசங்கிக்கப்பட்ட நற்செய்தியை அவர்கள் கேட்டபோது, விநோதமான வகையில் அதனிடத்தில் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். அவர்கள் கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவர்களைப் போன்றவர்கள்; அவர்கள் வசனத்தைக் கேட்டு உடனடியாக அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்கள், ஆனாலும் அவர்களுக்குள்ளாக வேரில்லை. கொஞ்சக் காலம் நிலைத்திருந்து, வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே வீழ்ந்து போய் விட்டார்கள் (மத். 13: 20,21).

அவர்கள் **இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தவர்கள்**. இங்கு பெலன்கள் என்று சொல்லப்பட்டிருப்பது "அற்புதங்கள்" என்று பொருள்படும். இப்புவியைக் கிறிஸ்து சமாதானத்தோடும் வளத்தோடும் ஆயிரமாண்டுகள் அரசாளப் போகிறார். அந்த எதிர்காலமே **இனிவரும் உலகம்** எனச் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் அரசில் நிகழவிருக்கிற அற்புதங்களுக்கும் அடையாளங்களுக்கும் முன்கூட்டிய அனுபவமாக, சபையின் தொடக்க நாட்களில் நற்செய்திப் பிரசங்கத்தோடு இணைந்து நிறைவேற்றப்பட்ட அற்புதங்கள் அமைந்திருந்தன (எபி. 2:4). இந்த மனிதர்கள் முதல் நூற்றாண்டில் நடைபெற்ற அற்புதங்களைக் கண்கூடாகக் கண்டார்கள், உண்மையில், அவர்கள் அந்த அற்புதங்களில் பங்கும் பெற்றிருந்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அப்பங்களும் மீன்களுமாகிய அற்புதங்களில் அவர்கள் பங்குபெற்றிருந்திருக்க வேண்டும். ஐயாயிரம் பேருக்கு இயேசு உணவளித்த பிறகு அந்த மக்கள் கடலின் மறுபுறமும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். ஓர் அதிசயச் செயலை ருசிபார்த்த பிறகும் உண்மையாக அவர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைக்கவில்லை என்பதை இரட்சகர் உணர்ந்தார். அப்பொழுது அவர்,

“நீங்கள் அற்புதங்களைக் கண்டதால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று அவர்களிடத்தில் கூறினார் (யோவான் 6:26).

6:6 மேலே பட்டியலிட்டுக் கூறப்பட்டுள்ள நன்மைகளை அனுபவித்த பிறகு அவர்கள் **மறுதலித்துப் போனார்கள்**[7] என்றால், **அவர்களை மனந்திரும்புதற்கேதுவாய் மறுபடியும் புதிப்பிக்கிறது கூடாதகாரியம்**. அவர்கள் விசுவாச மறுதலிப்பு என்னும் பாவத்தைச் செய்துவிட்டார்கள். நரகத்திற்குச் செல்லும் வழியில் விளக்குகள் அணைந்துபோகும் இடம் மட்டும் அவர்கள் சென்றுவிட்டார்கள்.

தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால் என்னும் சொற்கள் விசுவாச மறுதலிப்பின் பெருமளவு குற்றத்தைச் சுட்டிக் காட்டுகின்றன (வச. 6). இது ஏதோ கருத்தற்றபடி கிறிஸ்துவை அலட்சியம் செய்வதல்ல; மாறாக, துணிகரமான வகையில் அவரை வெறுத்துப் புறக்கணித்துத் தள்ளுவதாகும். மேலும் கிறிஸ்துவுக்கு எதிரான கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டு, கிறிஸ்துவின் ஆளுமையையும் அவருடைய கிரியையையும் இகழ்ந்து அவருக்கு எதிராகத் துணிகரமாக நம்பிக்கைத் துரோகம் இழைப்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

விசுவாச மறுதலிப்பு

விசுவாச மறுதலிப்பு செய்த மனிதர்கள் யாரெனில், நற்செய்தியைக் கேட்டு, கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கை செய்து, ஒரு கிறிஸ்தவ சபையோடு ஒன்றிணைந்து, பின்னர் தங்களுடைய விசுவாச அறிக்கையைக் கைவிட்டவர்களாக, தீர்மானத்தோடு கிறிஸ்துவை மறுத்துரைத்து, கிறிஸ்தவ ஐக்கியத்தை விட்டு விலகி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பகைஞரோடு தங்களை ஒன்றிணைத்துக் கொள்கிறவர்களே ஆவார்கள். அவிசுவாசிகளால் மட்டுமே விசுவாச மறுதலிப்பு என்னும் பாவத்தைச் செய்ய முடியும்; வஞ்சிக்கப்பட்டவர்களாக அல்ல, தாங்களே மனமறிந்து, துணிகரமாகக் கர்த்தருக்குப் பகைஞராக மாறி அவரை வெறுத்துத் தள்ளுவதே விசுவாச மறுதலிப்பு ஆகும்.

நற்செய்தியைக் கேட்டு, அதன் பிறகு அதைக் குறித்து ஒன்றும்செய்யாத சராசரி அவிசுவாசியின் பாவம் இதுவே என்று நாம் குழப்பமடையக் கூடாது. எடுத்துக்காட்டாக, பரிசுத்த ஆவியின் அழைப்பை மீண்டும் மீண்டும் பெற்ற பிறகும் அதற்கு உகந்த பதிற்செயலை ஒருவன் செய்யாமலிருக்கக் கூடும். அவன் விசுவாச மறுதலிப்புச் செய்தவன் அல்ல. அவன் தன்னை இரட்சகருக்கு ஒப்புவிப்பானானால், அவனால் இரட்சிப்பைப் பெற முடியும். அவிசுவாசத்தோடு அவன் மரணமடைவான் எனில், நித்தியமாக அவன் இழந்துபோனவனாகிவிடுவான் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் அவன் உயிரோடிருக்கும் நாட்களில், அதாவது கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கக் கூடிய தகுதி அவனுக்கு இருக்கும் வரை அவனை வெற்றி வாய்ப்பற்ற மனிதன் என்று சொல்ல முடியாது.

விசுவாச மறுதலிப்பைப் பின்வாங்கிய (பின்மாற்றம்) நிலையென்று நினைத்துக் குழப்பமடையக் கூடாது. மெய்யான விசுவாசி ஒருவன் கிறிஸ்து வைவிட்டு வெகுதொலைவு அலைந்து செல்லக் கூடும். பாவத்தின் காரணமாக அவன் தேவனோடு கொண்ட ஐக்கியம் சிதறுண்டு போகிறது. அவன் கிறிஸ்தவன் அல்லன் என்று மற்றவர்கள் கருதுகிற நிலைக்கும் கூட அவன் சென்றிருக்கக் கூடும். ஆனால் அவன் தன் பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டுவிட்டவுடனே, முன்னிருந்த நிலைக்கு அவனை முழு ஐக்கியத்திற்குள் கொண்டுவர முடியும் (1 யோவான் 1:9).

நற்செய்தி நூல்களில் மன்னிக்கப்படாத பாவம் என்று சொல்லப்பட்டிருக்கிற பாவமும், விசுவாச மறுதலிப்பும் ஒன்றல்ல. கர்த்தராகிய இயேசு செய்த அற்புதங்களை, பிசாசுகளின் தலைவனாலே அவர் செய்தார் என்று காரணம் கற்பித்த பாவமே அது. உண்மையில் அவர் தமது அற்புதங்களைப் பரிசுத்த ஆவியின் வல்லமையாலே செய்தார். அந்த அற்புதங்கள் பிசாசின் வல்லமையால் செய்யப்பட்டவை என்று கற்பித்துக் கூறுவது பரிசுத்த ஆவியானவரை தூஷணம் செய்வதற்கு ஒப்பாகும். பரிசுத்த ஆவியைப் பிசாசு என்று சொல்லுவதாக அது பொருள்படும். அப்படிப்பட்ட பாவம் ஒருக்காலும், அந்தக் காலத்திலும் இனிவரும் காலத்திலும் மன்னிக்கப்படாது என்று இயேசு கூறினார் (மாற்கு 3:22-30). விசுவாச மறுதலிப்பு பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகத் தூஷணம் சொல்லுவதற்கு இணையாக, அதாவது நித்தியமான பாவம் என்னும் பொருளில் அதற்கு இணையாக உள்ளது. ஆனால் அந்த ஒற்றுமை அத்துடன் முடிவடைந்துவிடுகிறது.

1 யோவான் 5:16 -இல் குறிப்பிடப்பட்டுள்ள மரணத்துக்கு ஏதுவான பாவமும் விசுவாச

மறுதலிப்பும் ஒன்று என நான் நம்புகிறேன். தாங்கள் விசுவாசிகள் என்று அறிக்கை செய்து உள்ளூர் சபைகளின் நடவடிக்கைகளில் பங்கு வகித்தவர்களைப் பற்றி யோவான் எழுதினார். அதன் பிறகு அவர்கள் ஞானமார்க்கத்தாரின் தவறான கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டவர் களாக, பகைமை உணர்ச்சியோடு கிறிஸ்தவ ஐக்கியத்தைவிட்டு வெளியேறினார்கள். அவர் கள் உண்மையாக மறுபடியும் பிறந்தவர்கள் அல்ல ரென்பதை, அவர்கள் வேண்டுமென்றே வெளியே றிய செயல் சுட்டிக்காட்டியது (1 யோவான் 2:19). இயேசுவைக் கிறிஸ்து அல்லவென்று வெளிய ரங்கமாக மறுதலித்து (1 யோவான் 2:22), அவர் கள் மரணத்துக்கு ஏதுவான பாவத்தைச் செய்தார் கள். அதனால் அவர்கள் திரும்பவும் குணமடைய வேண்டுமென்று மன்றாடுவது பயனற்றசெயல் (1 யோவான் 5:16).

எபிரெயர் 6 -ஆவது அதிகாரம் மற்றும் இது போன்ற திருமறைப் பகுதிகளை மெய்யார்வம் உடைய கிறிஸ்தவர்கள் படிக்கும்போது குழப்ப மடைகிறார்கள். உடல்கூறாகவும், மனநிலை யிலும், உணர்ச்சிபூர்வமாகவும் தொல்லைகளுக் குட்பட்டு இருக்கிற விசுவாசிகளை, நிலை குலையச் செய்வதற்குப் பிசாசானவன் இந்த வசனங்களைப் பயன்படுத்துகிறான். கிறிஸ்துவை விட்டு அவர்கள் வீழ்ந்து போனதாகவும், மீண்டும் முன்னிருந்த நிலைக்குப் புதுப்பிக்கப்பட எவ்வித வாய்ப்பும் இல்லையென்றும் அவர்கள் பயப்படு கிறார்கள். அவர்கள் மீட்படையக் கூடிய எல்லை யைத் தாண்டிவிட்டதாகவும் கவலைப்படுகிறார் கள். இதனைக் குறித்து அவர்கள் மிகுந்த கவ லைப்படுகிற செயலே அவர்கள் விசுவாசத்தை மறுதலித்தவர்கள் அல்லரென்பதற்கு முடிவான சான்றாக இருக்கிறது! விசுவாசத்தை மறுதலித் தவன் இத்தகைய அச்சம் அடைவதே இல்லை. அப்படிப்பட்டவன் துணிவுடன் கிறிஸ்துவை மறுத் துரைப்பான்.

விசுவாச மறுதலிப்பு என்னும் பாவம் கிறிஸ்த வர்களுக்குப் பொருந்தாது என்றால், நமது நாட்களில் இது யாருக்குப் பொருந்தும்? ஓர் இளைஞன் கிறிஸ்துவை அறிக்கை செய்கிறான், பின்னர் சிறிது காலம் மகிழ்ச்சியோடு முன்னேறிச் செல்வதாகத் தோன்றும், ஆனால் அதன் பிறகு ஏதோ ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஒருவேளை அவன் கடுந்துன்பம் அனுபவிக்க நேரிடலாம். ஒரு வேளை அவன் பயங்கரமான ஒழுக்கக் கேட்டிற் குள் வீழ்ந்துபோய்விடுவான். அல்லது ஒருவேளை அவன் கல்லூரிக்குச் செல்கிறான். அங்கு கிறிஸ்த வத்திற்கு எதிரான வாதத்தை நாத்திகரான ஓர் ஆசிரியர் பேசக் கேட்கிறான், அதனால் அவன் அசைக்கப்படுகிறான். விசுவாசத்தைக் குறித்த பூரண அறிவைக் கொண்டிருந்தபோதிலும் அவன் அதனைத் துணிவோடு மறுத்துரைக்கிறான். மேலும் அவன் கிறிஸ்துவை முழுவதுமாகத் தனக் குரியவரல்ல என்று மறுத்துக்கூறி, கிறிஸ்தவ விசு வாசத்தின் புனிதமான அடிப்படைக் கோட்பாடு கள் அனைத்தையும் காலின்கீழ் போட்டு மிதிக் கிறான். அப்படிப்பட்ட ஒருவனை மனந்திரும்பு வதற்கேதுவாய் மறுபடியும் புதிப்பிப்பது கூடாத காரியம் என்று திருமறை கூறுகிறது. மேலும் அனுபவமானது திருமறைக் கூற்றுக்கு ஆதர வளித்து உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்துவை மறுதலித்துப்போன பலரை நாம் அறிந்திருக் கிறோம், ஆனாலும் அவர்களில் ஒருவராவது கிறிஸ்துவினண்டை திரும்பிவந்ததாகக் கண்ட தில்லை.

நாம் இந்தக் காலக்கட்டத்தின் இறுதியை நெருங்கி வருகிற வேளையில், விசுவாச மறுத லிப்பு பெருகிக்கொண்டு போவதை எதிர்பார்க்க முடியும் (2 தெச. 2:3; 1 தீமோ. 4:1). ஆகவே விசு வாசத்தை விட்டு விலகிச் செல்லுகிறவர்களுக்கு எதிராகச் சொல்லப்பட்டிருக்கிற எச்சரிப்பு, ஒவ் வொரு நாளாகக் கடந்து போகிற இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது.

6:7 இப்பொழுது நூலாசிரியர் மெய்யான விசுவாசிக்குச் சரிநேர் படிவமாக இருக்கக்கூடிய ஒன்றைக் கண்டுபிடிக்கும்படி இயற்கை உலகை நோக்கித் திரும்புகிறார் (வச. 7). அது போல விசுவாசத்தை மறுதலிப்பவனுக்கும் அங்கு அவர் ஓர் எடுத்துக்காட்டைக் காணவிழைகிறார் (வச. 8). இவ்விரண்டிலும் அந்த மனிதன் நிலத்திற்கு ஒப்பாயிருக்கிறான். 4 மற்றும் 5 -ஆவது வசனங் களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள நன்மைகள் ஊக்கமளிக்கக் கூடிய மழைக்கு ஒப்பிடப்பட்டுள் ளன. அவ்வித நன்மைகளைப் பெற்ற மனிதன் அவற்றிற்கு எவ்விதமான பதிற்செயலை முடிவா கச்செய்கிறானோ அதைப் பற்றியே வளருகின்ற பயிர் பேசுகிறது. அதனைப் பொருத்தே அந்த நிலம் ஆசிர்வாதமானதா சாபமானதா என்பது முடிவு செய்யப்படும்.

மெய்யான விசுவாசி தன்மேல் பெய்கிற மழை யைக் குடித்துப் பயனுள்ள பயிர்களை முளைப் பிக்கிற நிலத்திற்கு ஒப்பானவனாவான். அவன் தேவனாலே ஆசிர்வதிக்கப்பட்டவனாயிருக்கிறான்.

6:8 விசுவாசத்தை மறுதலித்தவனும் நன்கு தண்ணீர் பாய்ச்சப்பட்ட நிலத்திற்கு ஒப்பாக இருக்கிறான். ஆனாலும் அது **முள்செடிகளையும் முள்பூண்டுகளையும்** தவிர வேறொன்றையும் முளைப்பிக்கிறதில்லை. அவை பாவத்தின் கனிகளாகும். அது பெற்றுக் கொண்டே இருந்த போதிலும், பயனுள்ள பயிரை விளைவிப்பதில்லை. அத்தகைய நிலம் பயனற்றது. அது ஏற்கனவே சபிக்கப்பட்டு விட்டது. அதனுடைய முடிவு **சுட்டெரிக்கப்படுவதே** ஆகும்.

6:9 மேலே உள்ள வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள விசுவாசத்தை மறுதலிக்கும் மனிதர்கள் அவிசுவாசிகளே ஆவார்கள் என்பதை மெய்ப்பிக்க இரண்டு வலிமையான சான்றுகள் 9,10 - ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாவது, பிரதிப்பெயர்ச்சொற்கள் எதிர்பாராத வகையில் இங்கு மாற்றப்பட்டுள்ளன. விசுவாசத்தை மறுதலிக்கும் மனிதர்களைக் குறித்து விவரிக்கும் போது, நூலாசிரியர் அவர்களை "அவர்கள்" என்று குறிப்பிடுகிறார். மெய்யான விசுவாசிகளை அவர் அழைக்கையில் உங்கள், உங்களுடைய என்னும் பிரதிப் பெயர்ச்சொற்களைப் பயன்படுத்துகிறார்.

இரண்டாவது குறிப்பு அதிகத் தெளிவுள்ளதாக இருக்கிறது. விசுவாசிகளிடத்தில் அவர் பேசுகையில், "பிரியமானவர்களே, நாங்கள் இப்படிச் சொன்னாலும், நம்மையானவைகளும் இரட்சிப்புக்குரிய வைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம்" என்று கூறுகிறார். **4** முதல் **6** வரையிலான வசனங்கள் மற்றும் **8** -ஆம் வசனம் ஆகியவற்றில் அவர் விளக்கிக் கூறிய நிகழ்வுகள் இரட்சிப்போடு சேர்ந்து வருவதில்லை என்பதே ஊகித்து அறியக் கூடிய உண்மையாகும்.

6:10 இரட்சிப்போடு சேர்ந்து வருகிற இரண்டு விஷயங்கள் பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையில் வெளிப்பட்டன. அவையாவன, அவர்களுடைய **கிரியை** மற்றும் அவர்களுடைய **அன்பின் பிரயாசம்**. அவர்களுடைய விசுவாசமானது நற்கிரியைகள் நிறைந்த வாழ்க்கையின் மூலமாக வெளிப்பட்டது. மேலும் அவர்கள் மெய்யான கிறிஸ்தவத்தின் தரக்குறியீட்டைக் கொண்டிருந்தார்கள்: விசுவாசக் குடும்பத்தார் மீது அவர்கள் கொண்டிருந்த செயலூக்கம் நிறைந்த **அன்பு**. கர்த்தருடைய பிள்ளைகளுக்காக அவர் நிமித்தம் அவர்கள் இடையறாது பணிவிடை செய்தார்கள்.

6:11,12 அடுத்த இரண்டு வசனங்களும் வேறொரு வகுப்பாருக்கு எழுதப்பட்டவை. அவர்கள் யாரெனில், அவர்களைக் குறித்து நூலாசிரியர் ஐயம் உடையவராயிருந்தார். மீண்டும் யூதமார்க்கத்தை நோக்கிச் செல்லக்கூடிய ஆபத்திற்குள்ளிருந்தவர்கள் அவர்கள்.

முதலாவது, **நம்பிக்கையின் பூரண நிச்சயத்தைத்** தாங்கள் பெற்றவர்கள் என்பதை மெய்யான விசுவாசிகள் எவ்வாறு **முடிவுபரியந்தம்** வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்களோ அது போலவே இவர்களும் முழு ஆர்வத்துடன் **ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று** நூலாசிரியர் விரும்புகிறார். கிறிஸ்தவரது கடைசி நம்பிக்கையைப் பரலோகத்தில் அடையும்வரை அவர்கள் கிறிஸ்துவுக்காக உறுதியோடு முன்னேறிச் செல்ல வேண்டுமென்று அவர் விரும்புகிறார். இது மெய்ம்மைக்கான ஒரு நிரூபணம்.

அவர்களுடைய கால்கள் தயக்கம் காட்டும் படியும், அவர்களுடைய ஆவி பின்னடைவு அடையும்படியும் அவர்கள் **அசதியாயிருக்கக்கூடாது**. அவர்கள் **வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிற** மெய்யான விசுவாசிகளைப் பின்பற்றி, தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும்.

6:13 நம்பிக்கையோடும் பொறுமையோடும் தொடர்ந்து முன்னேறிச்செல்ல வேண்டும் என்னும் அறிவுரை **11** -ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதனோடு இந்த அதிகாரத்தின் கடைசிப் பகுதி தொடர்புடையதாயிருக்கிறது. ஆபிரகாமின் எடுத்துக்காட்டு ஒரு தூண்டுகோலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் விசுவாசியின் நம்பிக்கையின் நிச்சயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு பொருளில், கிறிஸ்தவன் அனுகூலமற்ற நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது. அவன் எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்கென்று விட்டுவிட்டான்; தான் பெற்ற நன்மையை வெளிப்படுத்திக் காட்ட எந்தவொரு பொருளும் அவனிடத்தில் இல்லை. எல்லாம் எதிர்காலத்துக்கு உரியவை. அவ்வாறிருக்க அவனுடைய நம்பிக்கை பயனற்றதல்ல என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது?

அதற்குரிய விடை **தேவன் ஆபிரகாமுக்கு பண்ணின வாக்குத்தத்தத்தில்** காணப்படுகிறது. அந்த வாக்குறுதியோ கருவுருவில் இருந்தது, மேலும் அது பிற்காலத்தில் கிறிஸ்துவாகிய மனிதரில் தேவனால் அருளப்படும். தேவன் வாக்

குறுதியைத் தந்தபோது, **ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாததாலே தமது பேரிலேதானே ஆணையிட்டார்.**

6:14 அந்த வாக்குறுதி ஆதியாகமம் 22:17,18 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. "நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை . . . பெருகவே பெருகப்பண்ணுவேன் என்று . . . என்பேரில் ஆணையிட்டேன் என்றார். . . " தேவன் வாக்குறுதியைத் தமது பேரிலேயே ஆணையிட்டார், ஆகவே அதனுடைய நிறை வேறுதல் நிச்சயம்.

6:15 ஆபிரகாம் தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருந்தான்; அவன் **பொறுமையாய்க் காத்திருந்தான்**, அதனுடைய நிறைவேறுதலை அவன் பெற்றான். தேவனை விசுவாசிப்பதன் மூலம் அந்த வாக்குறுதி நிறைவேறினால் நிறை வேறட்டும் என்னும் எண்ணத்துடன் அவன் அவரை விசுவாசிக்கவில்லை. இழப்பு நேரிடுமோ என்னும் அச்சம் எதுவுமில்லை. இப்பிரபஞ்சத்தில் தேவனுடைய வார்த்தையே மிகவும் உறுதிவாய்ந்தது. தேவனுடைய எந்தவொரு **வாக்குத்தத்தமும்**, ஏற்கனவே நடந்து முடிந்ததுபோல, நிச்சயமாய் நிறைவேறக்கூடியதாய் இருக்கிறது.

6:16 மனிதர்களுடைய வழக்கத்தின்படி, அவர்கள் தங்களைக் காட்டிலும் **பெரியவராய்** இருக்கக்கூடிய ஒருவர் பேரில் **ஆணையிடுவார்கள்**. எடுத்துக்காட்டாக நீதிமன்றச் சட்டத்தின்படி உண்மையைச் சொல்லும்படி கட்டளையிடுவதோடு, கடவுள் பேரில் ஆணையிடும்படி கூறுவார்கள். அதாவது அவர்கள் சொல்லப்போவது உண்மை, அதைக் கடவுள் உறுதிப்படுத்த வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

மனிதர்கள் வாக்குறுதி தருகிறபோது, அதை உறுதிசெய்யும்படி **ஆணையிடவும்** செய்தால் அத்துடன் பொதுவாகச் சகல **விவாதங்களுக்கும்** முடிவு உண்டாகும். அதனுடைய பொருள் யாதெனில் கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதாகும்.

6:17 தாம் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் நிச்சயமாக நிறைவேறும் என்று விசுவாச மக்கள் யாவரும் முழுஉறுதியோடு இருக்க வேண்டுமென்று **தேவன்** விரும்புகிறார். உண்மையில் அவர் உரைக்கிற வெறும் வாக்குறுதியே போதுமானது, ஆனால் அவர் வாக்குறுதியோடு நிறுத்தி விடாமல், அதனைக்காட்டிலும் பெரிதான அளவில் நிச்சயத்தைக் **காண்பிக்க** வேண்டுமென்று விரும்பினார். ஆகவே அவர் தமது வாக்குறுதியோடு **ஓர் ஆணையையும்** சேர்த்துக்கொண்டார்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்கள் யாவரும் விசுவாசத்தில் ஆபிரகாமின் பிள்ளைகள் ஆவார்கள். அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவர்கள் யாவருக்கும் அவர் தந்திருக்கிற நித்திய இரட்சிப்பைப் பற்றிய வாக்குறுதியே இங்கு **வாக்குத்தத்தம்** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆபிரகாமுக்கு தேவன் ஒரு சந்ததியைத் தருவதாக வாக்குத்தத்தம் பண்ணினபோது, அந்த வாக்குறுதி முழுமையும் இறுதியுமான நிறைவேறுதலைக் கிறிஸ்துவில் கண்டடைந்தது. மேலும் கிறிஸ்துவோடு ஒன்றிணைவதாலே வருகிற எல்லா ஆசீர்வாதங்களும் அந்த வாக்குறுதியில் இடம் பெற்றுள்ளன.

6:18 விசுவாசியானவன் சார்ந்திருக்கும்படி இப்பொழுது **இரண்டு மாறாத விசேஷங்கள்** இருக்கின்றன. அவையாவன: அவருடைய வார்த்தையும் அவருடைய ஆணையுமே ஆகும். இவற்றைக் காட்டிலும் உறுதிப்படுத்தக்கூடியது அல்லது பாதுகாப்பு அளிக்கக் கூடியது வேறு எதுவும் இல்லை.[8] கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைக்கிறவர்கள் யாவரையும் இரட்சிப்பதாக தேவன் வாக்குறுதி தந்திருக்கிறார்; மேலும் அதனை அவர் ஓர் ஆணையினாலே உறுதிப்படுத்தியிருக்கிறார். முடிவு தவிர்க்கமுடியாதது: விசுவாசி நித்திய பாதுகாப்பைப் பெற்றிருக்கிறான்.

இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதியில், கிறிஸ்தவ நம்பிக்கையின் முழுமையான நம்பகத்தன்மையை வலியுறுத்திக் கூறும்படி நூலாசிரியர் நான்கு உவமைகளைப் பயன்படுத்துகிறார்: (1) அடைக்கலப் பட்டணம், (2) நங்கூரம், (3) முன்னோடினவர், (4) பிரதான ஆசாரியர்.

முதலாவது, மெய்யான விசுவாசிகள் யாவரும் அழிவுக்கு விதிக்கப்பட்ட இவ்வுலகிலிருந்து விண்ணக **அடைக்கலப்**பட்டணத்தை நோக்கி ஓடுகிறவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு ஓடுகிற அவர்களை உற்சாகப்படுத்தும்படி தேவன் தம்முடைய வார்த்தையாலும் ஆணையாலும் மாறாத **நம்பிக்கையைத்** தந்துள்ளார்.

6:19 வாழ்க்கையில் உண்டாகக்கூடிய சோதனைகளிலும் கடும்புயல்களிலும் இந்த **நம்பிக்கையானது ஆத்தும நங்கூரமாக** விளங்குகிறது. நாம் மகிமையடையப் போகிற நிகழ்ச்சி,

ஏற்கனவே நடந்த முடிந்தது போல நிச்சயமுடை யதாய் இருக்கிறது என்னும் அறிவு, சந்தேகம் மனத்தளர்ச்சி போன்ற கடும் அலைகளினால் விலகிச்செல்வதிலிருந்து நம்மைப் பாதுகாக் கிறது.

இடம்பெயர்ந்து போகும் இயல்புடைய மணலுக் குள்ளாக இந்த நங்கூரம் பாய்ச்சப்படவில்லை, மாறாக பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாக இது பாய்ச்சப்பட்டிருக்கிறது. நம்முடைய நம்பிக் கையே நங்கூரமாக இருப்பதால், தேவனுடைய பிரசன்னமாகிய **திரைக்குள்** நம்முடைய நம் பிக்கை பாதுகாப்பாக இருக்கிறது. நங்கூரம் அங்கு எவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறதோ அது போல நாமும் அங்கு பாதுகாப்பாக இருப் போம்.

6:20 நம்முடைய **முன்னோடியாக இயேசு** அந்த உட்புறப் புனித ஸ்தலத்திற்குள்ளாகச் சென்றிருக்கிறார். அவருக்குச் சொந்தமான யாவரும் இறுதியில் அந்த இடத்திற்குள் நுழை வோம் என்று அவருடைய பிரசன்னம் நமக்கு உறுதியளிக்கிறது. ஏற்கனவே பரலோகத்திற்குச் சென்றுள்ள பரிசுத்தவான்கள் அங்கு இருப்பது போல, இவ்வுலகில் வாழும் மிகவும் எளிமையான விசுவாசியும் கூட அந்த இடத்தைச் சென்றடை வான் என்று கூறுவோமானால் அது மிகை யாகாது.

D. ஆண்டர்சன் - பெர்ரி என்பார் எழுதுகிறார்:

> முன்னோடி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் காணப் படவில்லை. லேவியர் நடைமுறைக் காலத்தில், பிரதான ஆசாரியன் மகாபரிசுத்த ஸ்தலத்திற் குள் ஒரு பிரதிநிதியாகவே பிரவேசித்தான்; ஆகவே அந்தக் காலக்கட்டத்தில் முன்னோடி என்னும் கருத்திற்குச் சற்றேனும் இடமில்லை. அவன் பிரவேசித்த இடத்திற்குள் வேறொரு வராலும் பின்தொடர்ந்து செல்ல முடியாது. ஆனால் நம்முடைய முன்னோடியோ வாக்குத் தத்தமாக விளங்கி, அவர் எங்கிருக்கிறாரோ அங்கே நாமும் இருக்கும்படி செய்வார். அவர் நம்முடைய முன்னோடியாக இருந்து (1) எதிர் காலத்தில் நாம் அங்கு வரப்போகிறதை அறி வித்திருக்கிறார், (2) நம் பொருட்டு விண்ணுலக மகிமைகளை அவர் தமது உடைமையாகப் பெற்றிருக்கிறார், (3) அவருடைய மக்கள் அங்கு வருகைபுரிகிறபோது அவர்களுக்கு வரவேற்பு அளித்து, பரலோக மேதகு திருத்தந்தைக்கு முன்பாக அவர்களைச் சமர்ப்பிக்கும்படி அங்கே முன்னதாகச் சென்றிருக்கிறார்.[9]

நான்காவது உவமை **பிரதான ஆசாரியரைப்** பற்றியதாகும். நம்முடைய கர்த்தர் **மெல்கிசே தேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய்** ஆனார். அவருடைய நித்திய ஆசா ரிய முறைமை நம்முடைய நித்திய பாதுகாப்பை உறுதி செய்கிறது. அவருடைய மரணத்தாலே நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டது எவ்வளவு நிச்சயமோ அது போலவே அவர் தேவனுடைய வலப்புறத்தில் நம்முடைய ஆசாரியராக வாழ் கின்ற வாழ்க்கையாலே நாம் இரட்சிக்கப்படு வதும் நிச்சயம் (ரோமர் 5:10).

மெல்கிசேதேக்கின் முறைமையின்படி இயேசு பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்று குறிப் பிடப்பட்டிருப்பது, 5:10 -ஆம் வசனத்தில் நின்று போன ஆய்வுப் பொருளை நம்முடைய நினைவிற் குக் கொண்டுவருகிறது. விசுவாச மறுதலிப்பைக் குறித்த எச்சரிக்கை என்னும் பொருள் பற்றிக் கூற நூலாசிரியர் அங்கு ஆசாரியத்துவத்தைக் குறித்த செய்தியிலிருந்து விலகிச் சென்றார். இப்பொழுது ஆரோனின் ஆசாரிய முறைமையைக்காட்டிலும் கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய முறைமை பெரியது என்னும் கருத்தை மீண்டும் விவரித்துக் கூற ஆயத்தமாகிவிட்டார். ஆசிரியர் இப்பொழுது திறமை மிக்கவகையில் தான் எடுத்துக்கொண்ட முதன்மையான ஆய்வுப்பொருளினிடமாய்த் திரும்பி வந்துவிட்டார்.

7:1 மனித வரலாற்றில் ஒரு குறுகிய காலம் மட்டுமே தோன்றி மறைந்த புரியாத புதிரான மனிதன்தான் **மெல்கிசேதேக்** (ஆதி. 14:18-20). நூற்றாண்டுகள் பல சென்ற பின் அவனுடைய பெயரைத் தாவீது குறிப்பிட்டான் (சங். 110:4). அதன் பிறகு இன்னும் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவனுடைய பெயர் மீண்டும் எபிரெயர் மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று தெளி வாய்த் தெரிகிறது: கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வுக்கு மிகச் சிறந்த மாதிரியாக விளங்கும்படி, அவனுடைய வாழ்க்கையைக் குறித்த விவரங் களை, தேவன் ஒழுங்காக வரிசைப்படுத்திக் கூறி யிருக்கிறார்.

இந்த அதிகாரத்தின் முதல் மூன்று வசனங் களில், அவனைக் குறித்த சில வரலாற்று உண் மைகள் தரப்பட்டுள்ளன. அவன் தன்னுடைய வாழ்க்கையில் அரசன், ஆசாரியன் என்னும்

இரண்டு அலுவல்களையும் ஒருங்கே கொண்ட மனிதனாக இருந்தான். அவன் **சாலேமின் ராஜாவும்** (பின்னர் இது எருசலேம் என்று அழைக்கப் பட்டது), **உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்**. அவன் தன்னுடைய மக்களின் அரசியல் தலைவனாகவும் ஆவிக்குரிய தலைவனாகவும் இருந்தான். அதாவது, உலகப்பிரகாரமானது மற்றும் புனிதமானது என்று வேறுபடுத்திக் காணக்கூடாது என்னும் தேவனுடைய கருத்தளவிலான நிலையில் இருந்தான் என்பதில் ஐயமில்லை. பாவ இயல்புள்ள ஒரு மனிதன் அரசாட்சி செய்வானென்றால், சபையையும் நாட்டையும் வேறுபடுத்த வேண்டியது அவசியம். கிறிஸ்து நீதியோடு ஆளுகை செய்யும் போது மட்டுமே இவ் விரண்டையும் ஒன்றாக்குவது சாத்தியமாகும் (ஏசா. 32: 1, 17).

போர்க்களத்திலிருந்து வெற்றிவாகையோடு திரும்பிவந்த **ஆபிரகாமை** எதிர்கொண்ட **மெல்கிசேதேக், அவனை ஆசீர்வதித்தான்**. இந் நிகழ்ச்சியின் முக்கியத்துவம் 7 -ஆம் வசனத்திற் கென்று பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டு நூலை மட்டுமே நாம் பெற்றிருந் தால், சம்பந்தமில்லாத விஷயங்களாகத் தோன்று கிற இந்த விவரங்களின் ஆழமான முக்கியத் துவத்தை அறியாமலேயே இருந்திருப்போம்.

7:2 இந்த விசித்திரமான அரச ஆசாரியனுக்கு **ஆபிரகாம்** போரில் கைப்பற்றிய பொருள்கள் **எல் லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்**. ஆபிர காம் கொடுத்த தசமபாகத்தில் பொதிந்துள்ள அர்த்தத்தை அறிவதற்கு நாம் 4, 6, 8-10 வசனங் கள் வரும் வரை பொறுத்திருக்க வேண்டும்.

திருமறை வசனங்களில் ஒரு மனிதனுடைய பெயர், அவன் யார் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. நாம் மெல்கிசேதேக்கின் பெயரை யும் அவனுடைய பட்டப்பெயரையும் குறித்து இங்கு கற்கிறோம்: அவனுடைய பெயரின் பொருள், "**நீதியின்ராஜா**" என்பதாகும், அவனு டைய பட்டப்பெயரின் (**சாலேமின்ராஜா**) பொருள் "**சமாதானத்தின் ராஜா**" என்பதாகும்.

சமாதானத்திற்கு முந்தி **நீதி** சொல்லப்பட்டி ருக்கிற வரிசை முறை பொருளற்றது அல்ல. முத லாவது நீதி இல்லையென்றால் அங்கு சமா தானம் இருக்க முடியாது.

இதனை நாம் கிறிஸ்துவின் செயலில் தெளி வாகக் காண்கிறோம். சிலுவையில், "கிருபையும் சத்தியமும் சந்தித்தன; நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்தன" (சங். 85:10). நம்முடைய பாவத்தின் பொருட்டு தேவன் நீதி யாக எதிர் பார்த்த எல்லாவற்றையும் இரட்சகர் நிறைவேற்றிய காரணத்தால் நாம் இப்பொழுது தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறோம்.

7:3 மெல்கிசேதேக்கிற்குத் தகப்பனும் இல்லை தாயும் இல்லை வம்சவரலாறும் இல்லை, மேலும் அவனுக்குப் பிறப்பும் இல்லை மரணமும் இல்லை என்பதைப் படிக்கும் போது அவனைக் குறித்த புதிர் ஆழம் மிகுந்ததாக மாறுகிறது. இந்தப் பகுதி யின் பின்னணியிலிருந்து நாம் மேற்காணும் அறி விப்புகளைத் தனிப்படுத்திக் காண்போமென் றால், இந்த மனிதன் பரலோகத்திலிருந்து அல் லது வேறொரு கோளிலிருந்து வந்த பார்வை யாளர் என்றோ தேவனுடைய விநோதமான படைப்பு என்றோ நாம் முடிவு செய்ய நேரிடும்.

ஆனால் இந்த மனிதனைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு மேற்காணும் அறிவிப்புகளை அவற்றின் பின்னணியில் பொருள் காணவேண்டி யது அவசியம். மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமைக்கும் ஆரோனின் ஆசாரிய முறை மைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நூலாசி ரியர் விளக்கிக்காட்டுகிறார். ஒரு மனிதன் ஆரோ னின் ஆசாரிய முறைமையின்படி ஆசாரியனாக வேண்டுமென்றால் அவன் லேவி கோத்திரத்தில் ஆரோனின் குடிவழியில் பிறக்க வேண்டும். குடி வழி எல்லாவற்றிலும் முக்கியமானது. மேலும் அவனுடைய தகுதி அவனுடைய பிறப்பில் தொடங்கி, இறப்பில் முடிவடையும்.

மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை முற் றிலும் வேறுபட்டது. ஆசாரிய குடும்பத்தில் பிறந்த காரணத்தால் அவன் ஆசாரியத்துவத்தைப் பெற வில்லை. மாறாக அவன் தேவனால் வேறு முகாந் தரமின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசாரியனாக நிய மிக்கப்பட்டான். அவனுடைய ஆசாரிய முறைமை யைப் பொருத்த மட்டில், அவனுடைய தகப்பனைக் குறித்தோ தாயைக் குறித்தோ வம்ச வரலாற்றைக் குறித்தோ எந்தக் குறிப்பும் இல்லை. அவனைக் குறித்துப் பார்க்கும் போது, இது முக்கியமானதல்ல, அவனுடைய வரலாற்றுக் குறிப்போடு சம்பந்தப் பட்டு அவனுடைய பிறப்போ இறப்போ எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே அவனுடைய ஆசாரிய முறைமை தொடர்கிறதாயிருக்கிறது.

மெல்கிசேதேக்கிற்குப் பெற்றோர்கள் இல்லை யென்றோ, அவன் உலகில் பிறக்கவேயில்லை சாகவேயில்லை என்றோ நாம் முடிவு செய்து விடக் கூடாது. இங்கு அதுவல்ல முக்கியம். அவ னுடைய ஆசாரிய முறைமையோடு சம்பந்தப்

பட்டு இவை இன்றியமையாத குறிப்புகள் அல்ல, ஏனெனில் அவனுடைய ஊழியம் அந்தக் குறிப்பு களைச் சார்ந்ததல்ல என்பதே இங்கு சொல்லப் பட்டுள்ள கருத்து.

அவன் தேவகுமாரன் அல்லன்; அவ்வாறு சிலர் தவறாகக் கருதுகிறார்கள். ஆனால், எந்தத் தடை யுமின்றி அவனுடைய ஆசாரிய முறைமை தொடர்கிறது என்னும் பொருளில் அவன் **தேவ குமாரனுக்கு ஒப்பாயிருக்கிறான்**.

மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை ஆரோனின் ஆசாரிய முறைமையைக் காட்டிலும் மேலானது என்று இப்பொழுது நூலாசிரியர் மெய்ப்பித்துக் காட்டப்போகிறார். இந்த நிரூபணத் தில் மூன்று வாதங்கள் உள்ளன: தசம பாகத்தை யும் ஆசிர்வாதத்தையும் குறித்த வாதம்; ஆரோனின் ஆசாரிய முறைமை நீக்கப்பட்டு மாற்றம் கொண்டு வரப்பட்டதைக் குறித்தவாதம்; மெல்கிசேதேக் கின் ஆசாரிய முறைமை என்றென்றும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியது என்பது பற்றிய வாதம்.

7:4 நான்காவது வசனம் முதல் பத்தாவது வசனம் வரை முதலாவது வாதம் உரைக்கப்பட்டி ருக்கிறது. அது மெல்கிசேதேக்கின் மேன்மையை எண்ணிப்பார்க்கும்படி ஓர் அழைப்பை விடுத்து அசாதாரண வியப்புரையோடு தொடங்குகிறது. **கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாமும்** கூட போரில் **கொள்ளையிடப்பட்ட பொருள்களில்** அவனுக்குத் **தசமபாகம் கொடுத்தான்**. எபிரெ யரின் ஆகாய விரிவில் ஆபிரகாம் மிகப்பெரிய நட்சத்திரமாக விளங்கிய காரணத்தால், மெல்கி சேதேக் என்னும் நட்சத்திரம் அவனைக் காட்டி லும் பெரியதாக இருக்க வேண்டும் என்பதை இந்த வசனம் காட்டுகிறது.

7:5 லேவிய ஆசாரியர்களைப் பொருத்த மட்டில், அவர்கள் தங்களுடைய உடன் எபிரெயரி டம் **தசமபாகம்** வாங்குவதற்கு **நியாயப்பிர மாணத்தின்படி** அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். அந்த ஆசாரியர்களும் மக்களும் விசுவாசமுள்ள வர்களுக்குத் தகப்பனாகிய ஆபிரகாமின் குடிவழி யில் பிறந்தவர்கள் என்பதை வம்சாவளி அட்ட வணையில் பின்னோக்கிச் சென்று அறிந்திருந் தார்கள்.

7:6 ஆகிலும், ஆபிரகாமின் கையில் மெல்கி சேதேக் தசமபாகம் வாங்கிய நிகழ்ச்சி வழக்கத் திற்கு மாறானதும், விதிகளுக்குப் புறம்பானது மாகும். மேசியா தோன்றுவார் என்று தெரிந் தெடுக்கப்பட்ட தேசத்தின் தகப்பன் என்று அழைக் கப்பட்ட ஆபிரகாம், தெரிந்தெடுக்கப்பட்ட மக்க ளோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற ஒருவனுக்கு மரியாதை செலுத்தினான். மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை இனத் தடைகளைத் தாண் டிச் செல்கிறது.

மெல்கிசேதேக் ஆபிரகாமை **ஆசிர்வதித் தான்** என்னும் உண்மை இன்னுமொரு முக்கிய மான குறிப்பாகும். "வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசிர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக" என்று அவன் கூறினான் (ஆதி. 14:19).

7:7 ஒரு மனிதன் வேறொரு மனிதனை ஆசிர் வதிக்கையில், பெரியவன் சிறியவனை ஆசிர் வதிப்பதாகவே கருதப்படும். இங்கு சிறியவன் என்று சொல்லப்பட்டிருப்பது, ஒழுக்கநெறியிலோ தனிப்பட்ட நிலையிலோ தரத்தில் குறைந்தவன் என்னும் பொருளைத் தருவதில்லை. இதில் எவ் வித ஐயத்திற்கும் இடமில்லை. ஆயினும் பதவி யில் சிறியவன் என்பதே இதன் பொருளாகும்.

இந்த வாதங்களை பழைய ஏற்பாட்டின் அடிப் படையில் படிக்கும் போது, எபிரெய வாசகர்களின் மனநிலையை நாம் படவுருவில் காணமுயற்சி செய்ய வேண்டும். அவர்களுடைய நாட்டின் பெருந்தலைவர்களில் ஆபிரகாமும் ஒருவன் என்று அவர்கள் எப்பொழுதும் மதித்துப் போற்றி வந்தார்கள். அது சரியானதும் ஆகும். ஆனால் இப்பொழுதோ "யூதனல்லாத" ஓர் ஆசாரியனை ஆபிரகாம் தன்னிலும் பெரியவனாக மதித்தான் என்பதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். இதைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள்! இவ் வுண்மை அவர்களுடைய திருமறையில் என்றும் இருந்து வந்திருக்கிறது, ஆனாலும் அவர்கள் இதனைக் கவனிக்கவில்லை.

7:8 ஆரோனின் ஆசாரிய முறைமையில் தசம பாகத்தைப் பெற்றவர்கள் சாவைச் சந்திக்கக் கூடியவர்களாயிருந்த மனிதர்கள். அங்கு ஒருவர் பின் ஒருவராகத் தத்தம் தலைமுறையில் ஆசா ரியராகப் பணியாற்றினார்கள், பின்னர் மறைந்து போனார்கள். மெல்கிசேதேக் இறந்துபோன தாகச் சொல்லப்படவில்லை. ஆகவே அவன் என் றென்றும் நிலைத்திருக்கக் கூடிய தனிச்சிறப்பு வாய்ந்த ஆசாரிய முறைமைக்குப் பிரதிநிதியாக விளங்க முடிகிறது.

7:9 ஆபிரகாமினிடத்திலிருந்து மெல்கி சேதேக் தசமபாகத்தைப் பெற்றுக் கொண்டதன் மூலம், மெய்யாகவே அவன் லேவியினிடத்தி லிருந்து தசமபாகத்தைப் பெற்றுக் கொண்டவனா யிருக்கிறான். ஆசாரியக் கோத்திரத்தின் தலை

வனாக லேவி இருந்த காரணத்தால், ஆரோனின் ஆசாரிய முறைமையே மெல்கிசேதேக்கிற்குத் தசமபாகம் செலுத்தியது என்று சொல்வதற்கு இது நிகராகும். இதன் மூலமாக ஆரோனின் ஆசாரிய முறைமையைக் காட்டிலும் மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை மேலானது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது.

7:10 லேவி மெல்கிசேதேக்கிற்குத் தசமபாகம் செலுத்தியதாக எதைவைத்து நாம் கணக்கிட முடியும்? முதலாவது, உண்மையில் ஆபிரகாமே தசமபாகம் செலுத்தியவன். அவன் லேவியின் முப்பாட்டன் ஆவான். லேவி இன்னும் பிறக்காத நிலையில், அவன் ஆபிரகாமின் அரையில் இருந்தான். அதாவது, அவன் அந்த முற்பிதாவின் குடிவழியில் பிறப்பான் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மெல்கிசேதேக்கிற்கு ஆபிரகாம் தசமபாகம் செலுத்தியபோது அவன் தன்னுடைய அனைத்துக் குடிவழிப் பிறப்புகளுக்கும் பிரதிநிதியாக விளங்கினான். ஆகவே லேவியும் அவனுடைய குடிவழியில் தோன்றிய ஆசாரிய முறைமையும் மெல்கிசேதேக்கிற்கும் அவனுடைய ஆசாரிய முறைமைக்கும் அடுத்த இரண்டாவது இடத்தையே எடுத்துக்கொண்டது.

7:11 மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை ஆரோனின் ஆசாரிய முறைமைக்கு மேலானது என்பதை எடுத்துக்காட்டும் இரண்டாவது வாதத்தைப் பதினோராம் வசனம் முதல் இருபதாவது வசனம் வரையிலுள்ள பகுதியில் காணவியலும். அந்த ஆசாரிய முறைமையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது என்பதே வாதத்தின் கருத்து. கிறிஸ்துவின் ஆசாரிய முறைமை லேவியரின் ஆசாரிய முறைமையை ஒதுக்கித் தள்ளிவைத்துவிட்டது. லேவியரின் ஆசாரிய முறைமை தனது நோக்கத்தை முழுமையாகவும் இறுதிவரைக்கும் நிறைவேற்றி முடித்திருந்தால் இந்த மாற்றம் தேவைப்பட்டிருக்காது.

லேவி கோத்திரத்து ஆசாரிய முறைமையில் பூரணப்படுதலை அடைய முடியாது என்பதே உண்மை. பாவங்கள் புறம்பே தள்ளப்படவில்லை, ஆராதனை செய்பவர்கள் மனச்சாட்சியில் இளைப்பாறுதலை ஒருபோதும் அடையவில்லை. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலமாக நிறுவப்பட்ட லேவிகோத்திரத்து ஆசாரிய முறைமை இறுதியானதல்ல.

இப்பொழுது வேறொரு வகையான ஆசாரிய முறைமை நடைமுறைக்கு வந்துவிட்டது. பரிபூரண ஆசாரியர் இப்பொழுது வந்துவிட்டார், அவருடைய ஆசாரிய முறைமை **ஆரோனுடைய முறைமையின்படியானது** என்று கருதப்படவில்லை, மாறாக **மெல்கிசேதேக்கின் முறைமையின்படியானது** என்றே கணக்கிடப்பட்டது.

7:12 ஆசாரியத்துவம் மாற்றப்பட்டது என்னும் உண்மை, எந்தச் சட்ட அமைப்பின் அடிப்படையில் அது நிறுவப்பட்டதோ அந்த அமைப்பே மாற்றப்பட்டுவிட்டது என்னும் முடிவை வலியுறுத்துகிறது. இது மிகவும் புரட்சிகரமான அறிவிப்பாகும். இது அறிவிப்பு மணியைப் போல பழைய முறையைக் களைந்து போடுகிறதற்கும், புதியதை அறிவிப்பதற்குமான ஓசையை எழுப்புகிறது. நாம் இனிமேல் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல.

7:13 நியாயப்பிரமாணச் சட்டத்தில் ஒரு மாற்றம் உண்டாயிருக்கிறது என்பது, கர்த்தராகிய இயேசு லேவி கோத்திர முறைமையின்படி ஆசாரிய ஊழியம் செய்வதற்குத் தடை செய்யப்பட்ட **கோத்திரத்துக்குள்ளானவர்** என்னும் உண்மையினாலே அறியப்படுகிறது.

7:14 நம்முடைய கர்த்தர் யூதா கோத்திரத்தில் பிறந்தார். அந்தக் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் ஊழியம் செய்வதை மோசேயின் சட்டம் ஒருபோதும் அனுமதித்தது இல்லை. ஆயினும் இயேசு ஓர் ஆசாரியராயிருந்தார். அது எவ்வாறு இருக்க முடியும்? ஏனெனில் நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டுவிட்டது.

7:15 ஆசாரிய முறைமையைப் பற்றிய நியாயப்பிரமாணத்தில் பெருமளவு மாற்றம் உண்டாயிருக்கிறது என்பதற்கு நூலாசிரியர் மேலும் ஒரு சான்றை உரைக்கிறார். **மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு** வகையான **ஆசாரியர்** வந்துவிட்டார். அவர் ஆசாரியராவதற்கான தகுதி ஆரோனின் பிள்ளைகள் பெற்றிருந்த தகுதியிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.

7:16 சரீரப் பிரகாரமான நிபந்தனைகளை நிறைவுசெய்தவர்கள் மட்டுமே லேவி கோத்திரத்து ஆசாரிய முறைமையின்படி ஆசாரியராவதற்குத் தகுதியானவர்கள். அவர்கள் லேவி கோத்திரத்தில் ஆரோனின் குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும்.

7:17 ஆனால், கர்த்தர் அழியாத ஜீவனோடு இருந்ததால் மெல்கிசேதேக்குக்கு ஒப்பான ஆசாரியராக ஆவதற்குரிய தகுதியைப் பெற்றிருக்கிறார். அவர் எந்த மரபு வழியில் தோன்றியவர் என்பதாலல்ல, அவருடைய ஆளுமை, இயல்பாய் பெற்றிருந்த அதிகாரம் ஆகியவையே அவரது

ஆசாரியத்துவத்திற்கான காரணங்கள். அவர் என்றென்றும் வாழ்கிறார்.

இது சங்கீதம் 110:4 -ஆம் வசனத்தின் சொற் களாலே உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அங்கு மேசியாவின் ஆசாரிய முறைமையை "நீர் மெல்கி சேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக் கும் ஆசாரியராயிருக்கிறீர்" என்று தாவீது முன் கூட்டியே சுட்டிக்காட்டியிருக்கிறான். இங்கு **என் றென்றைக்கும்** என்னும் சொல்லில் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய வாழ் விற்கு முடிவு இல்லாத காரணத்தால் அவருடைய ஊழியம் முடிவடையாது.

7:18 ஆரோனின் ஆசாரிய முறைமையை நிறுவிய நியாயப்பிரமாணம் **பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம்** நீக்கப்பட்டு விட்டது. கிறிஸ்துவின் வருகையால் அது நீக்கப் பட்டுவிட்டது.

எந்தப் பொருளில் நியாயப்பிரமாணம் பெல வீனமாயும் பயனற்றதுமாயிருந்தது? அது தேவனால் தரப்படவில்லையா? முக்கியமற்றதும் பயனற்றதுமான ஒன்றை தேவன் தந்திருப்பாரா? ஆசாரிய முறைமையைப் பற்றிய இறுதியான சட்டமாக நியாயப்பிரமாணம் விளங்க வேண்டும் என்று தேவன் ஒருக்காலும் முடிவு செய்ய வில்லை என்பதே இதற்கான விடையாகும். தேவ னுடைய மிகச்சிறந்த ஆசாரிய முறைமை வருவ தற்கு அது ஆயத்தப்படுத்தும் முறைமையாகவே விளங்கியது. நிறைவானதும் இறுதியானதுமான ஆசாரிய முறைமைக்கு அது படவுருவாய் விளங் கியபோதிலும் குறைவானதும் தற்காலிகமானது மாகவே இருந்தது.

7:19 அது **ஒன்றையும் பூரணப்படுத்த வில்லை** என்னும் பொருளில் பெலவீனமானதும் பயனற்றதுமாயிருந்தது. தேவ சமுகமாகிய மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் மனிதர்களால் ஒருக் காலும் செல்ல முடியவில்லை. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே கட்டாயமாக அமல்படுத் தப்பட்டிருந்த இடைவெளி, பாவத்திற்கான பரிகாரம் என்றென்றைக்குமாக நிறைவேற்றி முடிக்கப்படவில்லை என்பதற்கான இடைவிடாத நினைவூட்டுக் கடிதமாக விளங்கிற்று.

ஆனால் இப்பொழுதோ **தேவனிடத்தில் நெருங்கிச் சேர்வதற்கு** வழிவகுக்கும் **அதிக நன்மையான நம்பிக்கை** அறிமுகப்படுத்தப்பட்டி ருக்கிறது. அந்த **அதிக நன்மையான நம்பிக்கை** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார். தங்களுடைய ஒரே நம்பிக்கையாக அவ ரைப் பெற்றிருக்கிற யாவரும் எந்த நேரத்திலும் தேவனிடத்தில் நிறைவாக அணுகிச் சேர்வதற் கான தகுதியைப் பெற்றிருக்கிறார்கள்.

7:20,21 ஆசாரிய முறைமையில் மாற்றம் உண்டாயிருக்கிறது, ஆசாரிய முறைமையைப் பற்றிய நியாயப்பிரமாணத்தில் மாற்றம் உண்டா யிருக்கிறது, இவையல்லாமல், நாம் இப்பொழுது பார்க்கப் போகிற வண்ணம், அது அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிற முறையிலும் மாற்றம் உண்டா யிருக்கிறது. கிறிஸ்துவின் ஆசாரிய முறைமை யோடு சம்பந்தப்பட்டு, தேவனுடைய ஆணை பயன்படுத்தப்பட்டுள்ளதைச் சுற்றியே இங்கு விவாதம் பண்ணப்படுகிறது. மாற்றுவதற்கு இய லாதது, நித்தியமானது என்பவை இந்த முறை மையில் புகுத்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த ஆணையானது சுட்டிக்காட்டுகிறது. "நம்முடைய மேதகு கர்த்தரின் ஆசாரிய முறைமையின் செயல்திறம் மற்றும் நித்திய தன்மை மகா வல்லமை யுள்ள தேவனுடைய ஆணையினாலே உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது". என்று ரெய்ன்ஸ்பரி கூறு கிறார்.[10]

ஆரோனின் ஆசாரிய முறைமையில் நியமிக் கப்பட்ட ஆசாரியர்கள் **ஆணையில்லாமல்** ஆசா ரியராக்கப்பட்டார்கள். ஆகவே அவர்களுடைய ஆசாரியத்துவம் தற்காலிகமாக, நிலையற்றதாக இருக்க வேண்டுமென்றே நிறுவப்பட்டது.

ஆனால் தேவனோ கிறிஸ்துவை ஓர் ஆணை யினால் ஆசாரியராக நியமிக்கும்படி அழைத்தார். அந்த ஆணையின் படிவம் சங்கீதம் 110:4 -ல் காணப்படுகிறது: **நீர் என்றென்றைக்கும் ஆசாரிய ராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார். மனம் மாறாமலும் இருப்பார் என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரிய ரானர்.** ஹெண்டர்சன் என்பார் கூறுகிறார்:

> கிறிஸ்துவின் ஆசாரிய நியமனத்தின் பின்ன ணியில் தேவனுடைய அரியணையின் நித்திய உண்மை நிலைகளையும் அவருடைய இயல் பின் மாற்றமில்லா பண்புகளையும் தேவன் வைத்திருக்கிறார். அவை மாறக் கூடுமானால், புதிய ஆசாரிய முறைமையும் மாறக்கூடும். இல்லையெனில் அது மாற்றமடையாது.[11]

7:22 இயேசுவானவர் விசேஷித்த உடன் படிக்கைக்குப் பிணையாளியாக இருக்கிறார் என்பதே இதிலிருந்து அறியப்படுகிற உண்மை யாகும். ஆரோனின் ஆசாரிய முறைமை பழைய

உடன்படிக்கையின் ஒரு பாகமாகும். கிறிஸ்து வின் ஆசாரிய முறைமை புதிய **உடன்படிக்கை யோடு** தொடர்புடையது. உடன்படிக்கையும் ஆசாரிய முறைமையும் சேர்ந்து நிற்கும் அல்லது சேர்ந்து வீழ்ந்துபோகும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது அரசை இப்புவியில் நிறுவுகையில், இஸ்ரவேல் வீட்டா ரோடும் யூதா வீட்டாரோடும் தேவன் செய்கிற நிபந்தனையற்ற கிருபையின் உடன்படிக்கையே புதிய உடன்படிக்கையாகும் (எரே. 31:33,34). புதிய உடன்படிக்கையின் சில நன்மைகளை இன்றையநாளில் விசுவாசிகள் அனுபவிக்கிறார் கள், ஆனால் அதனுடைய முழுமையான நிறை வேறுதல் இஸ்ரவேல் ஒரு தேசம் என்னும் நிலை யில் முன்னிருந்த நிலைக்கு மீட்கப்படும் வரை உண்டாகாது.

இயேசுவானவர் புதிய **உடன்படிக்கைக்குப் பிணையாளியாக** இருக்கிறார், அதாவது, அவர் தாமே உத்திரவாதம் அளிப்பவர். அவர் தமது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற் றின் மூலமாக நீதியான அடித்தளத்தை இட்டி ருக்கிறார், அதன்மேல் தேவனால் உடன்படிக்கை யின் நிபந்தனைகளை நிறைவேற்ற முடியும். அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் தவறு வதற்கு இடமில்லாத வகையில் நிறைவேறுவது அவருடைய முடிவில்லாத ஆசாரிய முறைமை யோடு இன்றியமையாதபடி தொடர்புபடுத்தப்பட் டுள்ளது.

7:23 மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை மேன்மையானது என்பதை மெய்ப்பிக்கும் இறுதி வாதத்தினிடமாய் நாம் இப்பொழுது வந்திருக் கிறோம்.

இஸ்ரவேலில் ஆசாரியர்கள் பலர் இருந்தார் கள். அந்த நாட்டின் வரலாற்றின்படி இஸ்ரவேலின் எண்பத்து நான்கு பிரதான **ஆசாரியர்கள்** இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர் கள் தவிர எண்ணிக்கையில் அடங்கா ஆசாரியர் கள் இருந்தார்கள் என்பதில் எவ்வித ஐயமு மில்லை. பிரதான ஆசாரியராகப் பணிபுரிந்தவர் கள் **மரணம்** அடைந்த காரணத்தினால் ஒருவர் பின் ஒருவராகப் பதவி மாற்றம் பெற்றார்கள். இந்தத் தவிர்க்க முடியாத தடைகளினாலே அந்த ஊழியமானது பாதிக்கப்பட்டது.

7:24 கிறிஸ்து என்றென்றும் வாழ்வதாலே அவரது ஆசாரிய முறைமையில் அப்படிப்பட்ட தோல்விகள் ஏற்படவில்லை. அவருடைய **ஆசாரி யத்துவம்** ஒருக்காலும் வேறொருவருக்குச் செல்வதில்லை, அதனுடைய விளைபயன் தடை படுவதுமில்லை. அது **மாற்றமற்றது**, வேறொரு வருக்குத் தரப்படுவதுமில்லை.

7:25 அவர் என்றைக்கும் **உயிரோடிருக்கிற வர்** ஆகையால், அவர் மூலமாக **தேவனிடத்தில் சேருகிறவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்**. பாவத்தின் தண்டனை யிலிருந்து பாவிகளை இரட்சிக்கும்படி அவர் செய்த கிரியையையே இது குறிக்கிறது என்று நாம் பொதுவாகக் கருதுகிறோம். ஆனால் பாவத்தின் அதிகாரத்திலிருந்து பரிசுத்தவான் களை இரட்சிப்பதில் கிறிஸ்து ஆற்றுகிற கிரியை யையே இது உண்மையில் குறிக்கிறது. பிரதான ஆசாரியராக அவர் ஆற்றுகிற பணியைக் குறித் துப் பேசுகிறதுபோல, இந்த வசனம் அவருடைய் இரட்பின் ஊழியத்தைக் குறித்துப் பேசுகிற தில்லை. எந்தவொரு விசுவாசியும் இழந்து போகக் கூடிய ஆபத்து ஏற்படுவதில்லை. அவர்களுடைய நித்திய பாதுகாப்பு அவர்களுக்காக அவர் ஏறெ டுக்கிற நிரந்தரமான **வேண்டுதலையே** சார்ந் திருக்கிறது. அவர்களுக்காக அவர் தேவனுடைய வலதுபக்கத்தில் வீற்றிருந்து செய்கிற தற் போதைய ஊழியம் மரணத்தினாலே ஒருக்காலும் தடைபடாத நிலையில், அவர் என்றென்றுமாக அவர்களை **இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்**.

7:26 கிறிஸ்துவின் தனிப்பட்ட சிறப்பினாலே கிறிஸ்துவின் ஆசாரிய முறைமை ஆரோனின் ஆசாரிய முறைமையைக் காட்டிலும் மேலான தாக விளங்குகிறது. தேவனுடைய முன்னிலை யில் அவருடைய தகுநிலையில் அவர் **பரிசுத்த முள்ளவராயிருக்கிறார்**. அவர் மனிதரோடு ஈடு படுகிற காரியங்களில் **குற்றமற்றவராக** அல்லது கபடற்றவராக இருக்கிறார். அவர் தமது தனிப்பட்ட நடத்தையில் **மாசில்லாதவராக** இருக்கிறார். அவர் தேவனுடைய வலதுபுறம் வீற்றிருக்கிற வாழ்வில் **பாவிகளுக்கு விலகினவராக** இருக் கிறார். அவர் தமது தற்போதைய மகிமை நிறைந்த ஒளியிலும், நித்திய மகிமையிலும் **வானங்களிலும் உயர்ந்தவராக** இருக்கிறார். அத்தகைய பிரதான ஆசாரியரை நாம் பெற்றிருப் பது **நமக்கு ஏற்றதாயிருக்கிறது**.

7:27 லேவி கோத்திரத்து ஆசாரியர்களைப் போல, நம்முடைய பிரதான ஆசாரியர் **நாடோ றும்** பலிகளைச் செலுத்தவேண்டிய தேவை யில்லை. அவர் இதனை **ஒரேதரம் செய்து முடித்து** விட்டார். அவர் முற்றிலும் பாவமற்ற வராக இருக்கின்ற காரணத்தால், அவர் தமது

சொந்தப் பாவங்களுக்காகப் பலி செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர் மனிதர்களுடைய பாவங்களுக்காகத் **தம்மைத் தாமே பலியிட்ட** செயல் முந்தைய ஆசாரியர்களிலிருந்து அவர் வியத்தகு நிலையில் வேறுபட்டவராக இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. இது மூன்றாவது வேறுபாடு. இந்த ஆசாரியர் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார். என்னே, இயேசு கிறிஸ்துவின் வியத்தகு ஒப்பற்ற கிருபை!

7:28 தனிப்பட்ட நிலையில் பரிபூரணமற்ற **ஆசாரியர்களை நியாயப்பிரமாணம்** நியமனம் செய்கிறது. அவர்கள் பெலவீனமுள்ளவர்கள் தவறக்கூடியவர்கள் என்னும் குணவியல்புகளை உடையவர்கள். அவர்கள் சடங்குகளின் அடிப்படையில் மட்டுமே பரிசுத்தராவார்கள்.

நியாயப்பிரமாணத்திற்குப் பிறகு கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆணை, **என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஆசாரியராக ஏற்படுத்துகிறது**. இந்த அதிகாரத்தில் 21 -ஆவது வசனத்தில் அந்த ஆணை சொல்லப்பட்டுள்ளது, அது சங்கீதம் 110:4 -ஆம் வசனத்திலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

இதுகாறும் நாம் கண்ட திருமறைப்பகுதியில் பெரும் விளைவுகளை உண்டாக்கவல்ல உண்மைகள் அடங்கியிருக்கின்றன. மனிதர்களால் ஆன ஆசாரிய முறைமை தெய்வீகமும் நித்தியமும் உடைய ஆசாரிய முறைமையினால் அகற்றி ஒதுக்கிவைக்கப்பட்டுவிட்டது. ஆகவே பழைய ஏற்பாட்டின் மாதிரியின்படி மனிதர்கள் ஆசாரிய முறைமையை நிறுவி, அதன் மூலமாக நம்முடைய மகா பிரதான ஆசாரியரின் செயல்களில் தலையிடுவது எத்தனை மதியீனம்!

ஆ. ஆரோனின் ஊழியத்தைக் காட்டிலும் கிறிஸ்துவின் ஊழியம் பெரியது. [அதி. 8]

8:1,2 தொடர்ந்து வருகிற வசனங்களில், ஆரோனின் ஊழியத்தைக் காட்டிலும் கிறிஸ்துவின் ஊழியம் மேலானது என்பது விவரித்துக் காட்டப்பட்டுள்ளது. ஏனெனில் கிறிஸ்து மேலான புனித ஸ்தலத்தில் (வச. 1-5), மேலான உடன்படிக்கையோடுள்ள தொடர்பில் (வச. 7-13) தமது பணியைச் செயல்படுத்துகிறார்.

இப்பொழுது நூலாசிரியர் தனது வாதத்தின் **முக்கியமான பொருளினிடமாய்** வந்துவிட்டார். ஏற்கனவே தான் சொன்ன செய்திகளை ஒன்று கூட்டி அவர் சுருக்கமாகச் சொல்லாமல், இம்மடலை எந்தக் கருத்தினிடமாய் இதுகாறும் வழி நடத்திவந்தாரோ அந்த முக்கியமான ஆய்வுப் பொருளை இங்கு கூறத் தொடங்குகிறார்.

பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். நமக்கு என்னும் சொல்லில் ஒரு வெற்றி முழக்கம் காணப்படுகிறது. எங்களுக்கு ஆசரிப்புக் கூடாரம் இருக்கிறது; எங்களுக்குப் ஆசாரிய முறைமை இருக்கிறது; எங்களுக்கு பண்டிகைகள் உள்ளன; எங்களுக்குப் பலிகள் உள்ளன; எங்களுக்கு தேவாலயம் இருக்கிறது; எங்களுக்கு அழகிய ஆசாரிய உடை இருக்கிறது என்னும் சொற்களால் தொடக்க காலக் கிறிஸ்தவர்களை யூத மக்கள் வசை பாடி வந்தார்கள். "ஆம், உங்களிடம் நிழல்கள் இருக்கின்றன, ஆனால் எங்களிடமோ அவற்றின் நிறைவேறுதல் இருக்கிறது. உங்களிடம் பண்டிகைகள் இருக்கின்றன, எங்களிடமோ கிறிஸ்து இருக்கிறார். உங்களிடம் படங்கள் இருக்கின்றன. எங்களிடம் ஆளே இருக்கிறார். மேலும் எங்களுடைய பிரதான ஆசாரியர் **பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்**. வேலை முடிவு பெற்றுவிட்டது என்பதை உறுதி செய்யும்படி வேறு எந்த ஆசாரியனும் அமர்ந்ததில்லை. வேறு ஒரு வரும் இத்தகைய மேன்மையான இடத்தையோ அதிகாரத்தையோ பெற்றதில்லை" என்பதே விசுவாசிகள் கூறும் உறுதியான பதில்.

அவர் உன்னதத்திலுள்ள **பரிசுத்த ஸ்தலத்தில்** மக்களுக்குப் பணியாற்றுகிறார். அதுவே **மெய்யான கூடாரம்**, பூமியில் இருந்த கூடாரம் அதனுடைய நகல் மட்டுமே ஆகும் அல்லது அதனுடைய பிரதிபலிப்பு எனக் கூறலாம். **மெய்யான கூடாரம் கர்த்தரால்** நிறுவப்பட்டதே யொழிய **மனிதரால் அல்ல**. பூமியில் இருந்த கூடாரம் மனிதனால் நிறுவப்பட்டது.

8:3 ஒரு **பிரதான ஆசாரியனின்** முதன்மையான அலுவல்களில் ஒன்று **காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்** வேலையாகும். நம்முடைய பிரதான ஆசாரியரும் இதனைச் செய்திருக்க வேண்டும்.

தேவனுக்குச் செலுத்தப்படும் எல்லாவகையான காணிக்கைகளும் **காணிக்கை** என்னும் ஒரு பொதுவான சொல்லால் குறிப்பிடப்படுகின்றன. **பலிகளில்** ஏதாவது ஒரு குறிப்பிட்ட மிருகம் அடிக்கப்பட்டு அது காணிக்கையாகச் செலுத்தப்படும். கிறிஸ்து எதனைச் செலுத்துகிறார்? இந்தக் கேள்விக்கான விடை 9 -ஆவது அதிகாரம் வரை நேரடியாகச் சொல்லப்படவில்லை.

8:4 கிறிஸ்து என்ன செலுத்துகிறார் என்னும் கேள்வியைவிட்டுத் தாவியபடி இந்த வசனம், அவ ரால் இந்த பூமியிலிருந்த ஆசாரிப்புக் கூடாரத் திலோ தேவாலயத்திலோ ஆசாரியராக இருந்து காணிக்கைகளைச் செலுத்த இயலாது என்பதை மட்டுமே கூறுகிறது. நம்முடைய கர்த்தர் ஆரோ னின் குடும்பத்திலோ லேவி கோத்திரத்திலோ பிறக்காமல், யூதா கோத்திரத்தில் பிறந்தார். இதன் காரணமாக அவர் பூமியில் ஆசாரிய ஊழி யம் செய்வதற்குத் தகுதிபடைத்தவர் அல்லர். நற் செய்தி நூல்களில் இயேசு தேவாலயத்துக்குச் சென்றார் என்று நாம் வாசிக்கையில் (லூக்கா 19:45 -ஆம் வசனத்தைக் காண்க), அதைச் சுற்றியிருந்த பிரகாரத்துக்கு மட்டுமே அவர் சென் றார் என்றும், பரிசுத்த ஸ்தலத்திற்கோ மகா பரிசுத்த ஸ்தலத்திற்கோ அவர் செல்லவில்லை என்றும் புரிந்துகொள்ள வேண்டும்.

கிறிஸ்து இவ்வுலகில் இருந்த போது பிரதான ஆசாரியருக்குரிய ஊழியம் எதனையேனும் செய் தாரா அல்லது விண்ணகம் சென்ற பிறகே அவர் இந்த ஊழியத்தைச் செய்யத் தொடங்கினாரா என்னும் கேள்வியை இந்த வசனம் எழுப்புவது திண்ணம்? இப்பூமியில் எருசலேமிலிருந்த தேவா லயத்தில் அவர் லேவி கோத்திரத்து ஆசாரிய ஊழியத்தைச் செய்யத் தகுதி பெற்றவராக இருக்க வில்லை என்பதே இந்த வசனத்தில் சொல்லப்பட் டுள்ள செய்தி. ஆனால் மெல்கிசேதேக்கின் முறை மையின்படியான ஆசாரிய ஊழியத்தை அவரால் செய்திருக்க முடியாது என்பதல்ல இதன் பொருள். சொல்லப்போனால், யோவான் 17 -ஆவது அதிகாரம் அவருடைய பிரதான ஆசாரிய ஊழி யத்திற்குரிய எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. மேலும் அவர் தம்மையே நிறைவான பலியாக கல்வாரியில் செலுத்திய செயல் நிச்சயமாக ஆசாரிய ஊழியமாகும் (2:17 -ஆம் வசனத்தைக் காண்க).

8:5 பூமியில் இருந்த ஆசரிப்புக் கூடாரம் **பர லோகப்** பரிசுத்த ஸ்தலத்திற்கு சரியான பிரதி யாகக் காணப்பட்டது. தேவனுடைய உடன்படிக் கையின் மக்கள் தொழுதுகொள்ளும்படி அவரி டம் நெருங்கிச் சேர்வதற்கான வழியை ஆசாரிப் புக் கூடாரத்தின் அமைப்பு சித்திரித்துக் காட்டு கிறது. முதலாவது வெளிப்பிரகாரத்தின் வாசல் இருந்தது. அதனையடுத்து தகனபலிசெலுத்து வதற்கான வெண்கல பலிபீடம் இருந்தது. அதனை யடுத்து தண்ணீர்த் தொட்டி இருந்தது. அதற்குப் பிறகு இருந்த பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஆசாரியர் கள் சென்றார்கள். அதனைத் தொடர்ந்து தேவன் தம்மை வெளிப்படுத்தும் இடமாகிய மகா பரிசுத்த ஸ்தலம் இருந்தது, அங்கு பிரதான ஆசாரியன் மட்டுமே சென்றான்.

இந்தக் **கூடாரம்** இறுதியான பரிசுத்த ஸ்தல மாக விளங்க வேண்டுமென்பது ஒருபோதும் நோக்கமாக இருந்ததில்லை. அது வெறுமனே ஒரு **சாயலாகவும், நிழலாகவும்** இருந்தது. தேவன் மோசேயைச் சீனாய் மலைக்கு அழைத்து, கட்ட வேண்டிய கூடாரத்தின் திட்டவட்டமான மாதிரிப் படத்தைக் கொடுத்தார். இந்த **மாதிரியானது** மேலானதும், **பரலோகத்திலுள்ளதும்**, ஆவிக் குரியதுமான உண்மைப் பொருளுக்கு நிழலா யிருந்தது.

இதனை நூலாசிரியர் வலியுறுத்துவதற்கான காரணம் என்ன? மனிதர்கள் நிழலிலிருந்து உண்மைப்பொருளை நோக்கிச் செல்ல வேண்டி யதாயிருக்க, ஒருசிலர் உண்மைப் பொருளிலி ருந்து நிழலை நோக்கி, அதாவது, யூதமார்க் கத்தை நோக்கித் திரும்பிச் செல்லும்படியான சோதனைக்குட்பட்டிருந்தார்கள். அவர்களுடைய மனதில் பதியும்படியாக இவ்வுண்மைகள் வலி யுறுத்திச் சொல்லப்பட்டுள்ளன.

ஐந்தாவது வசனம், பழைய ஏற்பாட்டில் நிறுவப்பட்டவை அனைத்தும் பரலோகத்தில் உள்ள உண்மைப் பொருட்களுக்கு மாதிரிகள் தான் என்பதை மிகத் தெளிவாகக் கற்பிக்கிறது. ஆகவே திருமறைக்கு ஒத்திசைவான நிலையில், மிகுந்த கற்பனைகளை விடுத்து, மாதிரிகளைக் கொண்டு கற்பிக்கும் முறை சரியானதே என்று இது நியாயப்படுத்துகிறது.

8:6 மேலான பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்த பொருளிலிருந்து, விசேஷித்த உடன்படிக்கை என்னும் பொருள்பற்றி விவாதம் மாற்றம் அடை வதற்கு இந்த வசனம் ஓர் ஊடகமாக விளங்கு கிறது.

முதலாவது, ஓர் ஒப்புமை சொல்லப்பட்டிருக் கிறது. கிறிஸ்துவின் ஆசாரிய முறைமை ஆரோ னின் ஆசாரிய முறைமையைக் காட்டிலும் எவ் வளவு சிறந்ததோ அதுபோலவே அவர் இடை நின்று மத்தியஸ்தம் செய்கிற **உடன்படிக்கை** முந்தின உடன்படிக்கையைக் காட்டிலும் சிறந்த தாக இருக்கிறது.

இரண்டாவதாக, ஒரு காரணம் சொல்லப்பட்டி ருக்கிறது. இந்த **உடன்படிக்கை விசேஷித்த வாக்குத்தத்தங்களின்** அடிப்படையில் நிறுவப்

பட்டிருக்கின்ற காரணத்தால் **விசேஷித்ததாக** இருக்கிறது.

கிறிஸ்துவின் **ஊழியம்** எல்லைக்குள் அடங்கா வண்ணம் சிறந்ததாக இருக்கிறது. அவர் தம்மையே செலுத்தினாரேயல்லாமல், ஒரு விலங்கைச் செலுத்தவில்லை. அவர் தம்முடைய சொந்த இரத்தத்தின் மதிப்பைச் செலுத்தினாரே யொழிய, காளை, ஆட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தத்தைச் செலுத்தவில்லை. அவர் பாவங் களை வெறுமனே மூடாமல் அகற்றினார். மனிதர் களுக்கு அவர் ஆண்டுக்கொருமுறை அவர்களு டைய பாவங்களை நினைவூட்டாமல், அவர்களு டைய மனச்சாட்சியில் நிறைவான நிலையை வழங்கினார். தேவன் இருக்கும் இடத்திற்கு வெளியே வெகுதொலைவில் நாம் நிற்கும்படி செய்யாமல், அவர் இருக்கும் இடத்திற்குச் செல் லும் வழியை அவர் நமக்கு திறந்திருக்கிறார்.

அவர் விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தி யஸ்தராகவும் இருக்கிறார். அவர் **மத்தியஸ்தர்** என்னும் நிலையில், தேவனுக்கும் மனிதனுக்கும் இடைநின்று முரிவுற்ற உறவின் இடைவெளியை நீக்கும் பாலமாக விளங்குகிறார். திருவாளர் கிரி.ச்.பத் தாமஸ் இரத்தினச் சுருக்கமாக இரண்டு உடன்படிக்கைகளையும் ஒப்பிட்டு வழங்குகிறார்:

> இந்த உடன்படிக்கை விசேஷித்ததாயிருக் கிறது. ஏனெனில் இது முழுமையானது, நிபந் தனைகள் எதுவும் இல்லை; ஆவிக்குரியது, உலக இன்பத்திற்குரியதல்ல; அகில உலகத் திற்கும் ஏற்புடையது, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மட்டுமே உரியதல்ல; நித்தியமானது, தற்காலிக மானதல்ல; ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறை யில் ஏற்றுக்கொள்ள வேண்டியது, ஒரு நாடு முழுவதற்கும் என்று தரப்படவில்லை; உளப் பூர்வமானது, வெளியரங்கமானதல்ல.[12]

இது **விசேஷித்த வாக்குத்தத்தங்களின்** மேல் நிறுவப்பட்டதாகையால், இது **விசேஷித்த உடன்படிக்கையாக** இருக்கிறது. நியாயப்பிர மாணத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட உடன் படிக்கையின்படி கீழ்ப்படிதலுக்கு ஆசிர்வாதங் கள் வாக்குறுதிபண்ணப்பட்டிருந்தன. ஆனால் கீழ்ப்படியாமைக்கு மரணமே உரைக்கப்பட்டிருந் தது. அது நீதியை கோரிற்று, ஆனால் நீதியை மனிதனிடத்தில் உண்டுபண்ணுவதற்கான ஆற் றலை அது தரவில்லை.

புதிய உடன்படிக்கை நிபந்தனையற்ற கிரு பையினாலான உடன்படிக்கையாகும். நீதியில் லாத இடத்தில் நீதியை வரவுவைக்கிறது. மனிதர் கள் நீதியாக வாழும்படி கற்பிக்கிறது, அவ்வாறு செய்வதற்கான ஆற்றலைத் தருகிறது, அவ்வாறு அவர்கள் செய்யும்போது அதற்கான பரிசுப் பொருளை வழங்குகிறது.

8:7 முதலாம் உடன்படிக்கை முழுநிறை வானதல்ல, அதாவது, தேவனுக்கும் மனிதனுக் கும் இடையே மிகச்சிறந்த உறவை ஏற்படுத்து வதில் அது வெற்றிபெறவில்லை. அது முடிவான உடன்படிக்கையாக விளங்கவேண்டுமென்ற எண்ணம் ஒருபோதும் இருக்கவில்லை. மாறாக, கிறிஸ்துவின் வருகைக்கான ஆயத்தமாக அது விளங்கிற்று. **இரண்டாம் உடன்படிக்கை** என்று குறிப்பிடப்பட்டிருக்கிற உண்மையே **முதலாவது** உடன்படிக்கை மிகச்சிறந்தது அல்லவென்பதை வெளிப்படுத்துகிறது.

8:8 உண்மையில் பிரச்சினை அந்த முதலாம் உடன்படிக்கையில் இல்லை: "நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்த மாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது." (ரோமர் 7:12). எந்த மனிதர்களுக்கு அது கொடுக் கப்பட்டதோ அவர்களிடத்திலேயே பிரச்சினை இருந்தது; வறிய மூலப்பொருட்களாகிய அந்த மனிதர்களோடு நியாயப்பிரமாணம் செயல்புரிய வேண்டியதாயிருந்தது. இவ்வுண்மை இங்கு சொல்லப்பட்டுள்ளது: **அவர்களைக் குற்றப் படுத்தி அவர்களை நோக்கி. . . அவர் சொல்லு கிறார்**. அவர் உடன்படிக்கையில் குற்றங்காணவி ல்லை. மாறாக உடன்படிக்கையின் மக்களிடத் திலேயே குற்றங்கண்டுபிடித்தார். முதலாம் உடன் படிக்கையானது கீழ்ப்படிவதாக மக்கள் அளித்த வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்டது (யாத். 19:8; 24:7). ஆகவே, அது நீடித்தகாலம் நிலைத்திருக்கும்படி அமையவில்லை. புதிய உடன்படிக்கையோ தொடக்கம் முதல் முடிவு வரை தேவன் நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டு ஒப்புவித்த செய்திகளேயாகும். அதுவே அதனுடைய வலிமை.

தேவன் புதிய உடன்படிக்கையை யூதர்களு டைய திருமறையில் வாக்குறுதி செய்திருந்த தைக் காட்டும்படி நூலாசிரியர் எரேமியா 31:31-34 ஆகிய வசனங்களை மேற்கோளாக எடுத்து ரைக்கிறார். **புதிய** என்னும் சொல்லைச் சுற்றியே முழு வாதமும் சுழல்கிறது. முதலாம் உடன் படிக்கை போதுமானதாக, மனநிறைவு அளிக்கக் கூடியதாக இருக்குமென்றால் புதியதை ஏன் அறிமுகப்படுத்த வேண்டும்?

ஆனாலும், **இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கையை** ஏற்படுத்தப் போவதாக தேவன் மிகக் குறிப்பிடத் தக்க வகையில் சொல்லியிருக்கிறார். முன்னமே குறிப்பிட்டது போல **புது உடன்படிக்கை,** முதன்மையாக, இஸ்ரவேல் நாட்டோடு தொடர்புடைய தேயொழிய சபையோடு தொடர்புடையதல்ல. மனம் திரும்பிய மீட்கப்பட்ட நாட்டை ஆளுகை செய்யும்படி கிறிஸ்து மீண்டும் உலகிற்கு வரும் போதே அதனுடைய முழுநிறைவைக் காணமுடியும். இதற்கிடையே, அந்த உடன்படிக்கையில் சில நன்மைகளை எல்லா விசுவாசிகளும் மகிழ்ச்சியோடு அனுபவிக்கிறார்கள். ஆகவே இரட்சகர் திராட்சைப் பிழிவு இருந்த பாத்திரத்தைத் தமது சீடர்களிடத்தில் கொடுத்தபோது, "இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது: நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறினார். (1 கொரி. 11:25).

திரு. ஹெண்டர்சன் என்பார் கீழ்க்காணும் பகுதியை மேற்கோள் காட்டுகிறார்:

> ஆகவே, முதன்மையாக இது இஸ்ரவேலுக்குரியது என்று உரைத்து, இரண்டாவதாக ஆவிக்குரிய நிலையில் சபைக்குப் பொருந்துவதாக இருக்கிறது என்று விவரித்துக் கூறுகிறோம். புதிய உடன்படிக்கையின் நன்மைகளை இப்பொழுது பரிசுத்த ஆவியின் வல்லமையால் நாம் அனுபவிக்கிறோம். இருந்த போதிலும், இனிமேலும் எதிர்காலத்தில் தேவன் வாக்குரைத்தபடி இஸ்ரவேலுக்கு, இது வெளிப்படும்.[13]

8:9 தேவன் அவர்களை **எகிப்து தேசத்திலிருந்து** வெளியே கொண்டுவரும்படிக்கு **அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல** புதிய உடன்படிக்கை இருக்காது என்று திட்டவட்டமாக வாக்குறுதி செய்தார். இது எந்த வகையில் வித்தியாசமானது? அதனை அவர் கூறவில்லை. ஆனாலும் அதனுடைய விடை இந்த வசனத்தின் எஞ்சிய பகுதியில் மறைந்திருக்கிறது: **அந்த உடன்படிக்கையிலே** அவர்கள் நிற்கவில்லையே, நானும் **அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்**. நியாயப் பிரமாணத்தினாலான உடன்படிக்கை நிபந்தனையோடு கூடியதாக இருந்ததால் தோல்வியுற்றது. அது மக்களிடத்தில் கீழ்ப்படிதலைக் கோரியது, ஆனால் அவர்களால் அதைச் செய்யமுடியவில்லை. புது உடன்படிக்கையை நிபந்தனையற்ற கிருபையின் அடிப்படையிலான உடன்படிக்கையாகச் செய்ததன் நிமித்தம் தோல்வியடையக் கூடிய எந்தச் சூழ்நிலையும் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொண்டார். ஏனெனில் அது நிறைவேறுவது அவரையே சார்ந்திருந்தது, மேலும் அவர் தவறமாட்டார்.

எரேமியாவிலிருந்து எடுத்தாளப்பட்ட மேற்கோள் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டிருக்கிறது. எபிரெய மொழியில் எரேமியா 31:32 - ஆம் வசனத்தின் சொற்கள், "ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும்" என்று காணப்படுகின்றன. எரேமியாவின் சொற்கள் புராதன மொழிபெயர்ப்பின்படி "ஆகவே நான் அவர்களைப் புறக்கணித்தேன் (அல்லது அவர்களை விட்டு விலகினேன்)" என்று இருக்கின்றன. எரேமியாவின் சொற்களை ஏவுதலுக்குட்படுத்தியவர் பரிசுத்த ஆவியானவர் ஆவார். அவரே திருமறை பாதுகாத்து வைக்கப்பட்டிருப்பதற்குக் கண்காணியுமாக இருப்பவர். இந்த மாற்று வாசகத்தை எபிரெய நூலின் ஆசிரியர் பயன்படுத்தும்படி செய்தவரும் அவரே ஆவார்.

8:10 அவற்றை எழுதுவேன், அவர்கள் தேவனாயிருப்பேன் என்று அவர் உறுதிபடக் கூறியிருப்பதைக் கவனியுங்கள். முதலாம் உடன்படிக்கை மனிதன் என்ன செய்ய வேண்டுமென்று கூறியது, புதிய உடன்படிக்கையோ தேவன் என்ன செய்வார் என்று கூறுகிறது. இஸ்ரவேலின் கீழ்ப்படியாமையின் நாட்கள் கடந்துபோன பிறகு அவர் தம்முடைய **பிரமாணங்களை** அவர்களுடைய **மனதிலே வைப்பார்**, அதன் காரணமாக அவர்கள் அவரை அறிவார்கள். மேலும் அவர்களுடைய **இருதயங்களில் அவற்றை எழுதுவார்**, அதன் காரணமாக அவர்கள் அவரிடத்தில் அன்பு கூருவார்கள். தண்டனை தருவாரோ என்னும் அச்சத்தின் நிமித்தமல்ல, அன்பின் காரணமாக அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிய விரும்புவார்கள். பிரமாணங்கள் இனிமேல் கல்லின்மேல் எழுதப்படப் போவதில்லை, மாறாக தசையான இருதயத்திலே அவை எழுதப்படும்.

நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். இது நெருக்கத்தைக் குறித்துப் பேசுகிறது. பழைய ஏற்பாடு மனிதன் தொலைவில் இருக்க வேண்டும் என்று கூறியது, கிருபையோ அவனை அருகில் வரும்படி

கூறுகிறது. இது முரிக்கவியலா உறவையும், நிபந்தனையற்ற பாதுகாப்பையும் குறித்தும்கூட பேசுகிறது. இரத்தத்தினால் விலைக்கு வாங்கப் பட்ட ஒன்றிணைக்கப்பட்ட நிலையை ஏதொன்றா லும் எச்சமயத்திலும் தடை செய்ய முடியாது.

8:11 புதிய உடன்படிக்கையில், அகில உலக மும் கர்த்தரை அறிகிற அறிவைப் பெற்றிருக்கும். கிறிஸ்துவின் மகிமை நிறைந்த ஆட்சியில், **கர்த் தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அய லானுக்கு** அல்லது **தன் சகோதரனுக்கு** போதிக்க வேண்டிய தேவை ஏற்படாது. அவரைக் குறித்த உள்ளான உணர்வு உடையவர்களாகவே **சிறிய வன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும்**, எல்லோரும் இருப்பார்கள். "பூமி கர்த்தரை அறி கிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசா. 11:9).

8:12 எல்லாவற்றிலும் சிறந்ததாக, நீதியற்ற மனிதர்களுக்கு இரக்கத்தையும் **அவர்களுடைய பாவங்களுக்கு** நித்திய மன்னிப்பையும் புதிய உடன்படிக்கை வாக்காகத் தந்திருக்கிறது. நியா யப்பிரமாணம் வளைந்துகொடுக்கவில்லை, விட் டுக்கொடுக்கவுமில்லை: "விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனையை அது கொடுத்தது" (எபி. 2:2).

இதற்கு மேலும், நியாயப்பிரமாணம் பாவங் களோடு செயல்திறம் மிக்க வகையில் ஈடுபடுகிற தில்லை. பாவங்களுக்கான பரிகாரத்தை அது செய்தபோதிலும், அவற்றை நீக்குவதற்கான ஏதொன்றையும் அதனால் செய்ய முடியவில்லை. (பாவப்பரிகாரம் என்னும் சொல் எபிரெய மொழி யில் மூடுதல் என்னும் பொருளைத் தரக்கூடிய வினைச் சொல்லிலிருந்து பிறந்தது.) நியாயப் பிரமாணத்தில் சொல்லப்பட்ட பலிகள் ஒரு மனித னைச் சடங்குகளின்படி தூய்மையுள்ளவனாக் கின. அதாவது, அந்நாட்டின் சமய வாழ்க்கையில் அவன் பங்குபெறுவதற்கு அது அவனைத் தகுதி யுள்ளவனாக்கிற்று. இவ்வித சடங்காச்சார கழுவு தல் வெளிப்புறமானதாக இருந்தது. அந்த மனிதனு டைய உள்ளான வாழ்வை அது தொடவில்லை. நன்னெறி சார்ந்த தூய்மையை அல்லது தூய மனச்சாட்சியை அது கொடுக்க வில்லை.

8:13 தேவன் **புது உடன்படிக்கையை** அறி முகப்படுத்துகிறார் எனில், முந்தினது **உருவழிந்து** போயிற்று என்பதே அதன் பொருளாகும். இது இவ்வாறு இருக்கின்ற காரணத்தால், நியாயப்பிர மாணத்தை நோக்கித் திரும்பிச் செல்ல வேண் டும் என்கிற எண்ணம் உண்டாகக் கூடாது. ஆனா லும் விசுவாசிகள் என்று தங்களைக் குறித்துச் சொல்லிக்கொண்டவர்கள் அவ்வாறு செய்யும்படி யான சோதனைக்குட்பட்டார்கள். இந்தப் பிர மாணத்தின்படியான உடன்படிக்கை உருவழிந்து போன ஒன்று என்று நூலாசிரியர் எச்சரிக்கிறார்; விசேஷித்த உடன்படிக்கை அறிமுகப்படுத்தப் பட்டுவிட்டது. அவர்கள் தேவனோடு **ஒத்து அடி யெடுத்து வைக்கிறவர்களாக** மாறவேண்டும்.

இ. பழைய ஏற்பாட்டுப் பலிகளைக் காட்டிலும் கிறிஸ்துவின் பலி மேலானது (9:1–10:18)

9:1 ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் ஏதோ ஒரு காணிக்கையைச் செலுத்தும்படி, அதனைத் தன்னிடத்தில் வைத்திருக்க வேண்டும் என்னும் மேலோட்டமான குறிப்பை 8:3 -ஆம் வசனத்தில் நூலாசிரியர் குறிப்பிட்டிருந்தார். பழைய ஏற்பாட் டுக் காணிக்கைகளிலிருந்து நம்முடைய மகா பிரதான ஆசாரியர் செலுத்திய காணிக்கை வேறு பட்டது என்பதைப் பற்றி விளக்கிக் கூற அவர் இப்பொழுது ஆயத்தமாகிவிட்டார். தான் எடுத்துக் கொண்ட ஆய்வுப்பொருளை அறிமுகப்படுத்தும் படி, ஆசாரிப்புக் கூடாரத்தின் அமைப்பைப் பற்றி யும் ஆராதனை செய்வதற்கான விதி முறைக ளைப் பற்றியும் மிகத்துரிதமான புனராய்வை அவர் செய்கிறார்.

9:2 இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலையில் பாளையமிறங்கினது முதல், தேவாலயம் கட்டப் பட்டது வரை அந்த மக்களோடு தேவன் வாசம் பண்ணின கூடாரம் போன்ற அமைப்பே **ஆசாரிப்புக் கூடாரம்** ஆகும். ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றி லுமிருந்த இடம் வெளிப்பிராகாரம் என்று அழைக் கப்பட்டது. அதைச் சுற்றிலும் வெண்கலத் தூண்கள் நிறுத்தப்பட்டு, திரித்த மெல்லிய பஞ்சு நூலால் நெய்யப்பட்ட திரைகள் அவற்றிற் கிடையே கட்டப்பட்டிருந்தன. இந்தப் பிராகாரத்திற் குள் நுழைவதற்கென கிழக்குப் பக்கத்தில் வாசல் இருந்தது. அதற்குள்ளாக நுழைந்தவுடன் இஸ்ர வேலன் வெண்கல தகனபலிபீடத்தண்டை வந் தான். அங்குதான் பலிமிருகம் அடிக்கப்பட்டு தகனிக்கப்பட்டது. அதன் பிறகு வெண்கலத் தொட்டியிருந்தது. அதில் நிரப்பப்பட்டிருந்த நீரில் ஆசாரியர்கள் தங்களுடைய கைகளையும் கால் களையும் கழுவினார்கள்.

ஆசாரிப்புக் கூடாரம் ஏறத்தாழ 45 அடிநீள மும், 15 அடி அகலமும், 15 அடி உயரமுமாய் இருந்தது. அது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. முதலாவது பரிசுத்த ஸ்தலம், 30 அடி நீளமுடையதாகவும்; இரண்டாவது மகா பரிசுத்த ஸ்தலம் 15 அடிநீளமுடையதாகவும் இருந்தன.

அந்தக் கூடாரம் மரவேலையினால் செய்யப் பட்டு, ஆட்டுமுடியினாலான திரையினால் மூடப் பட்டு, வானிலை மாற்றத்தினால் பாதிக்கப்படா மலிருக்க விலங்கின் தோலினால் மூடப்பட்டிருந் தது. இந்த மூடுதிரைகள் கூடாரத்தின் மேல் பகுதியையும், பின்பக்கத்தையும் மேலும் இரு பக்கங்களையும் மூடின. கூடாரத்தின் முன்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட திரையினால் மூடப் பட்டிருந்தது.

பரிசுத்த ஸ்தலத்தில் மூன்று பொருட்கள் இருந்தன;

1. தேவ சமுகத்தப்பங்கள் வைக்கப்படும் மேஜை. அதன் மேல் பன்னிரண்டு அப்பங்கள் வைக் கப்பட்டிருந்தன. அவை இஸ்ரவேலின் பன்னி ரண்டு கோத்திரங்களை எடுத்துக்காட்டின. இந்த அப்பங்கள் "சமுகத்தப்பங்கள்" என்று அழைக்கப்பட்டன. ஏனெனில் அவை தேவனு டைய சமுகத்தில் அவருக்கு முன்பாக வைக் கப்பட்டிருந்தன.
2. பொன் குத்துவிளக்கு. இதன் ஏழு கிளை களும் மேல் நோக்கியவையாக இருந்தன. ஒவ்வொன்றின் மேல்புறமும் ஒவ்வொரு எண் ணெய் விளக்கு இருந்தது.
3. பொன்னாலான தூபகலசம். அதன் மேல் காலையிலும் மாலையிலும் பரிசுத்த தூப வர்க்கம் தகனிக்கப்பட்டது.

9:3 இரண்டாம் திரைக்குள்ளே மகாபரிசுத்த ஸ்தலம் இருந்தது. இதனை எல்லாப் பரிசுத்த ஸ்தலங்களுக்குள்ளும் மேலான பரிசுத்த ஸ்தலம் என்றும் அழைக்கப்பட்டது. இங்கு தேவன் தம்மை ஒளிச்சுடர் வீசும் பிரகாசமான மேகத்தில் வெளிப் படுத்தினார். பூமியில் பாவநிவர்த்திக்கான இரத் தத்தோடு அவரைச் சந்திக்கக்கூடிய ஓரிடமாக இது இருந்தது.

9:4 தொடக்கத்தில் இருந்த ஆசரிப்புக் கூடா ரத்தின் இந்த இரண்டாம் பகுதியில், மரத்தினால் செய்யப்பட்டு எல்லாப் பக்கங்களிலும் **பொற் தகட்டினால் மூடப்பட்டிருந்த உடன்படிக்கைப் பெட்டி** என்று அழைக்கப்பட்ட ஒரு பெட்டகம் இருந் தது. அந்தப் பெட்டகத்தின் உட்புறம் **மன்னா வைக் கப்பட்டிருந்த பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும்**, நியாயப்பிரமாணம் எழுதப் பட்டிருந்த இரண்டு **கற்பலகைகளும்** இருந்தன. (தேவாலயம் எழுப்பப்பட்ட பிறகு, அந்த உடன் படிக்கைப் பெட்டியில் கற்பலகைகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை - 1 இராஜாக்கள் 8:9 -ஆம் வசனத்தைக் காண்க).

பொன்னாற் செய்த தூபகலசமும் மகா பரி சுத்த ஸ்தலத்திற்குள் இருந்ததாக 4 -ஆவது வச னம் கூறுகிறது. **தூபகலசம்**[14] என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க மொழிச் சொல் தூப பீடத்தையோ (பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது யாத். 30:6), பிரதான ஆசா ரியன் தூபவர்க்கத்தோடு எடுத்துச் சென்ற **தூப கலசத்தையோ** குறிப்பிடக் கூடும். இரண்டாவ தாகச் சொல்லப்பட்டுள்ள விளக்கமே சிறந்ததாக இருக்கிறது. தூப பீடத்திலிருந்து பிரதான ஆசா ரியன் **தூப கலசத்தை** மகாபரிசுத்தஸ்தலத் துக்குள் பாவநிவாரண நாளில் எடுத்துச் சென்ற தால், அந்தப் பொருளை மகாபரிசுத்த ஸ்தலத் துக்குரியது என்றே நூலாசிரியர் கருதினார்.

9:5 உடன்படிக்கைப் பெட்டியின் பொன்னா லான மூடி **கிருபாசனம்** என்று அழைக்கப்பட்டது. அந்த மூடியின் மேல் **கேருபீன்கள்** என்று அழைக்கப்பட்ட இரண்டு உருவங்கள் இருந்தன. அவை ஒன்றையொன்று பார்த்துக்கொண்டி ருந்தன, அவற்றின் இறக்கைகள் விரிந்தும் தலை கள் தாழ்ந்தும் உடன்படிக்கைப் பெட்டியின் மூடி யின்மேலே இருந்தன.

இந்தச் சுருக்கமான விளக்கத்தோடு நூலாசிரி யர் நிறுத்துகிறார். இவற்றைக் குறித்து **விவர மாய் பேசுவது** அவருடைய நோக்கமன்று. மாறாக ஆசரிப்புக் கூடாரத்திற்குள் இருந்த பொருட்களைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைத்து, தேவனை நெருங்கிச் சேர்வது எவ்வாறு என்பதை விவரிப் பதே அவருடைய நோக்கமாகும்.

9:6 யூதமார்க்கத்தின் பலிகளுக்கும் கிறிஸ்து வின் பலிக்குமுள்ள வேறுபாட்டை நூலாசிரியர் விவரிக்கப் போவதால், முதலாவது நியாயப்பிர மாணம் எவற்றையெல்லாம் எதிர்ப்பார்க்கிறது என்பதை நூலாசிரியர் விவரித்துக் கூற வேண் டும். அவர் எடுத்துக்காட்டாகச் சொல்ல பல பலி கள் இருந்தன. ஆனால், நியாயப்பிரமாண அமைப்பின்படி மிக முக்கியமானதாகக் கருதப் பட்ட மகா பாவபரிகார நாளில் செலுத்தப்பட்ட பலியையே அவர் எடுத்துக்கொள்கிறார் (லேவி. 16). இஸ்ரவேலின் சமய நாளேட்டின்படி மிக முக்கியமான நாளாகக் கருதப்பட்ட அந்த நாளில் பிரதான ஆசாரியன் செலுத்திய பலியிலும், கிறிஸ்து செலுத்திய பலி சிறந்தது என்று நூலா சிரியர் மெய்ப்பிப்பார் எனில் அவர் தனது வாதத் தில் வெற்றிபெற்றுவிட்டார் என்று கூறமுடியும்.

ஆசாரியர்கள் முதலாம் திரைக்குள் அதாவது பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லலாம். அவர்கள்

தங்களுக்கு ஒதுக்கப்பட்ட சடங்காசார கடமை களைச் செய்யும்படி அதற்குள் தொடர்ந்து சென்று வந்தார்கள். அந்த அறைக்குள் பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் வெளியில் தான் இருக்க வேண்டும்.

9:7 உலகத்திலேயே இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனாகிய ஒரே ஒரு மனிதன்தான் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல முடியும். அந்த ஒரே மனிதனும், ஒரே இனத்தைச் சேர்ந்தவனாக, ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவனாக, ஒரே குடும் பத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும்; அவ னும் ஆண்டிற்கு ஒரு முறை மட்டுமே - பாவ நிவா ரண நாளில் மட்டுமே அந்த இடத்திற்குள் செல்ல முடியும். அவன் அவ்விதமாகச் சென்ற போது, **இரத்தத்தை** ஒரு பாத்திரத்தில் எடுத்துச் சென்றான். அவன் **அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும்** செலுத்தினான்.

9:8 இந்த நிகழ்ச்சியோடு சம்பந்தப்பட்டு, ஆழமான ஆவிக்குரிய சத்தியங்கள் இருந்தன. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே பாவ மானது பெரிய இடைவெளியை உண்டுபண்ணி விட்டது என்றும், ஒரு மத்தியஸ்தன் மூலமாகவே மனிதன் தேவனை அணுக முடியும் என்றும், அந்த மத்தியஸ்தனும் ஒரு பலி மிருகத்தின் இரத்தத் தோடு மட்டுமே அவரை அணுக முடியும் என்றும், பரிசுத்த ஆவியானவர் கற்பித்து வந்திருந்தார். தேவனுடைய சமுகத்திற்குப் **போகிற மார்க்கம்** ஆராதனை செலுத்திவந்தவர்களுக்கு **இன்ன மும்** திறக்கப்படாதிருந்தது என்பதைப் படவுரு வில் கற்பிக்கும் பாடமாக இது இருந்தது.

பரிபூரணமற்ற இந்த அணுகுமுறை **முதலாங் கூடாரம் நிற்குமளவும்** தொடர்ந்தது. இந்தப் பகுதி டார்பியின் மொழிபெயர்ப்பில் பெரிதும் விரும்பத்தக்க வண்ணம் காணப்படுகிறது: "முதலாம் கூடாரத்தின் தகுதி நிற்கும் நாள் மட்டும்." சலொமோனின் ஆட்சிக் காலத்தில் தேவாலயம் ஆசரிப்புக் கூடாரத்திற்குப் பதிலாக இடம் பெற் றது. ஆனால் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவை நிகழும் காலமட்டும் அதனுடைய தகுநிலை நின்று வந்தது. தேவனை நெருங்கிச் சேர்வதற்கான விதிகளை அந்த ஆசரிப்புக்கூடாரம் அறிவித்து வந்தது. அந்தக் கொள்கைகளின் மதிப்பு தேவாலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை கிழிக்கப்படும்வரை நிலை நின்று வந்தது.

9:9 அந்த ஆசரிப்புக் கூடாரத்தின் திட்ட முறைமை **இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனை யாயிருக்கிறது.** கிறிஸ்து நிறைவேற்றவிருந்த நிறைவான செயல் விசேஷித்த தன்மை வாய்ந் தது, அதற்கு ஆசாரிப்புக் கூடார முறைமை நிறை வில்லாத அடையாளமாக இருந்தது.

காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்தவர்களுடைய **மனச்சாட்சியைப் பூரணப் படுத்தக் கூடாதவை.** பாவங்களுக்கான மன்னிப்பு நிறைவாகப் பெறப்படுமென்றால், பலி செலுத்திய வருடைய மனச்சாட்சி பாவத்தின் குற்றவுணர் விலிருந்து விடுதலை பெறும். ஆனால் இது நடை பெறவேயில்லை.

9:10 உண்மையில், லேவிய முறைமையில் செலுத்தப்பட்ட பலிகள், சடங்குகளோடு தொடர் புடைய தீட்டுகளை மட்டுமே தீர்த்தன. அவை இவ் வாறாக தூய்மையான மற்றும் தூய்மையற்ற **போஜன பானங்களோடும்,** சடங்குகள் சம்பந்தப் பட்ட **ஸ்நானங்களோடும்** தொடர்புடையவை யாக இருந்து சடங்குகளின் அடிப்படையிலான தூய்மையற்ற நிலையிலிருந்து விடுவித்தன. நன்னெறி சார்ந்த தூய்மையற்ற நிலையிலிருந்து அவை விடுதலையைப் பெற்றுத்தரவில்லை.

தேவனோடு உடன்படிக்கையின் மூலமாக உறவுகொண்டிருந்த மக்களைக் குறித்தவை யாகவே இந்தக் காணிக்கைகள் இருந்தன. அவர் கள் தேவனை ஆராதிக்கத் தகுதியுடையவர் களாக மற்றும் சமயத் தூய்மையைப் பெற்றிருக்கும் படி மாற்றம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு, அவை திட்டமிடப்பட்டிருந்தன. இரட்சிக்கப்படுவ தோடோ, பாவத்திலிருந்து சுத்திகரிப்பதோடோ இவற்றிற்கு எந்தத் தொடர்பும் இல்லை. இனிமேல் நடக்கவிருந்த கிறிஸ்துவின் செயலின் அடிப்படை யில், கர்த்தரிடத்தில் வைத்த விசுவாசத்தினாலே மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

இறுதியாக, பலிகள் தற்காலிகமானவை. அவை **சீர்திருத்தல் உண்டாகும் நாள்வரை** கட்டளையிடப்பட்டிருந்தன. அவை கிறிஸ்துவின் வருகையையும், அவருடைய நிறைவான காணிக் கையையும் எதிர் நோக்கியவையாக இருந்தன. கிறிஸ்தவ காலப்பிரிவு இங்கு **சீர்திருத்தல் உண் டாகும்** காலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

9:11 கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மை களுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டி ருக்கிறார்,[15] அதாவது, அவரை ஏற்றுக் கொண்ட

வர்களுக்கு அவர் மிகப்பெரிதான ஆசிர்வாதங் களைத் தந்தருளுகிறார்.

அவருடைய பரிசுத்தஸ்தலம் **பெரிதும் உத்த முமான** கூடாரமாகும். **இது கையினால் செய்யப் பட்ட கூடாரமல்ல**, அதாவது இந்த உலகத்தில் கட்டுமானப் பணியில் பயன்படுத்தப்படுகிற பொருட்களால் இது உண்டாக்கப்பட்டதல்ல. இது தேவன் குடியிருக்கும் இடமாகிய உன்னதமான பரிசுத்தஸ்தலமாகும்.

மானிடன் கரங்கொண்டு
உருவான கோவில்களில்
அவர்தம் திருப்பணியைச் செய்திடாரே!
வானிடை நிலைநிற்கும்
அதிதூய இடந்தன்னில்
வானவர் இடைநின்று உழைத்திடவே,
நிழல்போலும் கற்பனைகள்
அவர்பணியில் நிறைவடைய
பயனில்லை எனக்கருதி நீங்கினவே!
– தாமஸ் கெல்லி.

9:12 நம்முடைய கர்த்தர் **ஒரேதரம் மகா பரி சுத்த ஸ்தலத்திலே பிரவேசித்தார்**. அவர் விண் ணகம் ஏகியபோது, கல்வாரியில் **மீட்பின்** திட் டத்தை நிறைவேற்றியவராக தேவனுடைய சமு கத்திற்குச் சென்றார். **ஒரேதரம்** என்னும் சொற் களால் உண்டாகிற மகிழ்ச்சியை நாம் ஒரு போதும் விட்டுவிடக்கூடாது. மீட்பின் செயல் முடிவடைந்துவிட்டது. கர்த்தருக்குப் புகழ்ச்சி உண்டாவதாக!

அவர் வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவற் றின் இரத்தத்தையல்ல, தம்முடைய சொந்த இரத் தத்தையே கொடுத்தார். பாவங்களைக் கழுவ விலங்குகளின் இரத்தத்திற்கு ஆற்றலில்லை. சமயச் சடங்குகளுக்கு எதிரான குற்றங்களை நீக்க வல்ல ஆற்றல் மட்டுமே அதற்கு இருந்தது. ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தின் மதிப்பு எல்லைக்குட்படாதது; இதுவரை இவ்வுலகில் வாழ்ந்த மனிதர்கள், இப்பொழுது வாழ்கிற மனிதர்கள், இனிமேல் வாழப்போகிற மனிதர்கள் அனைவருடைய அனைத்துப் பாவங்களையும் நீக்கித் தூய்மைப்படுத்த அது போதுமானதா யிருக்கிறது. அவரிடத்திற்கு விசுவாசத்தோடு வருகிறவர்களுக்கு மட்டுமே இதன் ஆற்றல் பயன்தரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அதனு டைய சுத்திகரிக்கும் ஆற்றலின் அளவு எல் லைக்கு அப்பாற்பட்டது.

அவர் தம்முடைய பலியாலே **நித்திய மீட்பை உண்டுபண்ணினார்**. முந்தைய ஆசாரியர்கள் ஆண்டுக்கொரு முறை பாவநிவாரணத்தைப் பெற்றுத்தந்தார்கள். இவ்விரண்டிற்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது.

9:13 கிறிஸ்து செலுத்திய பலிக்கும் நியாயப் பிரமாணத்தின் சமயச் சடங்குகளுக்கும் இடையே யுள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டின் மூலம் விளக்கிக் கூறும்படி, இப்பொழுது நூலாசிரியர் செந்நிற **கடாரியைக்** கொண்டு செய்யப்பட்ட சடங்கை நோக்கித் திரும்புகிறார். ஓர் இஸ்ர வேலன் இறந்துபோன உடலைத் தொட்டுவிட் டால் நியாயப்பிரமாணச் சட்டப்படி அவன் ஏழு நாட்கள் சமயச்சடங்கின்படி தீட்டுள்ளவனாகக் கருதப்பட்டான். **கடாரியின் சாம்பலையும்** தூய் மையான நீரூற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீரையும் கலந்து தீட்டுப்பட்ட மனிதன் மேல் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தெளிக்க அவனுடைய தீட்டு நீங்கி தூய்மையடைவான். இதுவே பரிகார மாகும்.

மெண்டில் என்பார் கூறுகிறார்:

> பாவநிவாரண பலியின் இன்றியமையாத குணங்கள் அனைத்தையும் ஒருங்கே கொண்ட கூட்டுப்பொருளாகச் சாம்பல் கருதப்பட்டது; மேலும் எல்லா நேரங்களிலும், ஒப்பிட்டுப் பார்க் கையில் அதிகத் தொல்லைகளின்றி, அதிக நேரத்தைச் செலவிடாமல் அதனைப் பயன் படுத்த இயலும். ஒரு சிவப்புக் கிடாரி பல நூற் றாண்டுகளுக்குப் போதுமானது. யூத மக்க ளின் வரலாறு முழுவதையும் காணும் போது வெறும் ஆறு கிடாரிகளே இதற்கெனப் பயன் படுத்தப்பட்டன என்று சொல்லப்படுகிறது; ஏனெனில் மிகக் குறைவான அளவு சாம்பல் தூய்மையான நீரூற்றுத் தண்ணீரைத் தூய் மைப்படுத்தும் குணமுடையதாக மாற்றிவிடும் (எண் 19:17). [16]

9:14 மிகவும் கடுமையான புறத்தோற்றத் தீட்டுகளில் ஒன்றைக் கடாரியின் சாம்பல் நீக்கிக் தூய்மைப்படுத்தக் கூடிய ஆற்றல் உடையதாக இருக்குமென்றால், உள்ளான பாவங்களினால் உண்டான ஆழமாகப் படிந்த சாயத்தைப் போக் கிச் **சுத்திகரிக்க எவ்வளவு** ஆற்றல் மிக்கதாகக் **கிறிஸ்துவின் இரத்தம்** இருக்க வேண்டும்.

அவருடைய பலியானது **நித்திய ஆவியி னாலே** உண்டானது. நித்திய ஆவியினாலே என்னும் சொற்றொடரின் பொருள் என்னவென்

பது குறித்துக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. "ஒரு நித்திய ஆவியின் மூலமாக" என்பதே இதன் பொருள் என்று சிலர் கருதுகிறார்கள்; அதாவது, மிருகங்கள் பலியிடப்பட்டபோது அவை மன முவந்து தங்களை ஒப்புவிக்கவில்லை, ஆனால் கர்த்தரோ அதற்கு மாறாகத் தம்மையே மன முவந்து பலியாக ஒப்புக் கொடுத்தார். வேறொரு சாரார், "தமது நித்திய ஆவியின் மூலமாக" என்று இதற்குப் பொருள்விளக்கம் அளிக்கிறார்கள். **பரிசுத்த ஆவியானவர்** இங்கு குறிப்பிடப்பட்டி ருக்கிறார் என்றே நாம் கருதுகிறோம்; அவர் தமது பலியைப் பரிசுத்த ஆவியின் ஆற்றலினாலே செலுத்தினார்.

இந்த பலியானது **தேவனுக்குச்** செலுத்தப் பட்டது. குற்றமில்லாத மாசற்ற தேவ ஆட்டுக் குட்டியாக அவர் இருந்தார். அவருடைய நன் னெறி நிறைவு அவரை நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கிறதற்குத் தகுதியுடையவராக்கிற்று. பலி விலங்குகள் உடல் கூறாகக் குறைவின்றி இருக்க வேண்டும். அவரோ தமது ஒழுக்கநெறி யில் குற்றமற்றவர்.

அவருடைய **இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறத்** தூய்மைப்படுத்துகிறது. அது வெறுமனே சரீரப் பிரகாரமான அல்லது சமயச்சடங்குகளோடு தொடர்புடைய தூய்மைப் படுத்துதல் அல்ல, மாறாக அது மனச்சாட்சியைத் தூய்மைப்படுத்தும் நன்னெறி சார்ந்த புத்துயிர் தரும் செயலாகும். தங்களுக்கென்று அவிசுவாசி கள் சுத்திகரிப்பைச் சம்பாதிக்கும்படி செய்கிற முயற்சிகளாகிய செத்த கிரியைகளற இது தூய் மைப்படுத்துகிறது. ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு மனிதர்களை இவ்வித மான உயிரற்ற செயல்களிலிருந்து இது விடு தலை செய்கிறது.

9:15 இதற்கு முந்தின வசனங்கள் பழைய உடன்படிக்கையின் இரத்தத்தைக் காட்டிலும் புதிய உடன்படிக்கையின் இரத்தமானது சிறந்த தாயிருக்கிறது என்பதை வலியுறுத்தின. இது 15 - ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற முடிவை நோக்கி வழிநடத்துகிறது, அதாவது கிறிஸ்து **புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக் கிறார்**. வுயஸ்ட் என்பார் விளக்குகிறார்:

> "மத்தியஸ்தர்" என்னும் சொல் *Mesites* என் னும் சொல்லின் மொழிபெயர்ப்பு ஆகும். இரு வருக்கிடையே தலையிட்டு, சமாதானத்தையும் நட்பையும் உண்டாக்குகிறவர் அல்லது முன்னி ருந்த நிலைக்குக் கொண்டுவருகிறவர் என்னும் பொருளை இச்சொல் கொண்டிருக்கிறது. அவர் களுக்கிடையே பொருத்தமான நெருக்கத்தை உண்டுபண்ணுகிறவர் அல்லது உடன்படிக் கையை உறுதிப்படுத்தும் செயலைச் செய்கிற வர் என்னும் பொருளையும் இச்சொல் கொண் டிருக்கிறது. பரிசுத்த தேவனுக்கும் பாவியான மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக அல் லது இடையாளாக மேசியா செயல்படுகிறார். தாம் சிலுவையில் அடைந்த மரணத்தின் மூலமாக தேவனுக்கும் மனிதனுக்கும் இடை யில் காணப்படும் பகைமைக்குக் காரணமான தடையை (பாவம்) அவர் நீக்குகிறார். மேசியா வின் பலியால் உண்டாகக் கூடிய நன்மைகளை ஒரு பாவி ஏற்றுக்கொள்கிறபோது, அவனு டைய பாவத்தின் குற்றவுணர்வும் தண்டனை யும் இனிமேல் இருப்பதில்லை, அவனுடைய வாழ்வில் பாவத்தின் அதிகாரம் நொறுக்கப்படு கிறது. அவன் தெய்வீக இயல்பைப் பெற்றுக் கொண்டவனாக மாறுகிறான். மேலும் அவனுக் கும் தேவனுக்கும் இடையே உள்ள சட்டப்படி யான மற்றும் தனிப்பட்ட பகைமை மறைந்து போகிறது.[17]

இப்பொழுது அழைக்கப்பட்டவர்கள் வாக் குறுதிபண்ணப்பட்ட **நித்திய சுதந்தரத்தை** அடைய முடியும். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுக் காலப் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் கிரியை யால் நித்திய **இரட்சிப்பையும்** நித்திய **மீட்பை யும்** அனுபவிக்கிறார்கள்.

கிறிஸ்தவம் தொடங்குவதற்கு முந்தி வாழ்ந்த விசுவாசிகள் சுதந்தரத்தை அடைவதற்குத் தகுதி பெற்றதும் நடந்து முடிந்த **மரணத்தின்** விளைவே யாகும். அதாவது கிறிஸ்துவின் மரணமே அதைச் செய்தது. அவருடைய மரணம் நியாயப்பிர மாணத்தின்படி **அக்கிரமங்கள்** என்று அறியப் படுபவற்றினின்று அவர்களை மீட்கிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் மனிதர் களைக் கடன் கணக்கில் இரட்சித்தார் என்னும் பொருளை இங்கு காணமுடிகிறது. அவர்கள் நம் மைப் போலவே விசுவாசத்தால் நீதிமான்களாக் கப் பட்டார்கள். ஆனால் கிறிஸ்து இன்னும் மரண மடையாத காலமாக அது இருந்தது. அவ்வாறி ருக்கையில் அவர்களை தேவன் எவ்வாறு இரட் சித்திருக்க முடியும்? கிறிஸ்து எதை நிறைவேற் றப் போகிறார் என்பதை அவர் அறிந்திருந்ததன்

அடிப்படையில் அவர்களை இரட்சித்தார் என்பதே இதற்கான விடையாகும். கிறிஸ்து சிலுவையில் செய்யவிருந்ததை அவர்கள் சிறிதளவும் அறிந் திருக்கவில்லை. ஆனால் தேவனோ அதை அறிந் திருந்திருந்தார். மேலும் அவர் அவர்களுக்குத் தம்மைக் குறித்து என்னவெல்லாம் வெளிப்படுத் தினாரோ அவற்றை அவர்கள் விசுவாசித்தபோது, கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றவிருந்த செய லின் விலைமதிப்பை அவர்களுடைய கணக்கில் வரவுவைத்தார்.

ஒரு பொருளில் பழைய உடன்படிக்கையின் கீழாக அக்கிரமங்களுக்கான கடன் மிகப்பெரிய அளவில் சேர்ந்திருந்தது. தம்முடைய மரணத் தின் மூலம், முந்தின காலப்பாகுபாட்டு விசுவாசி களைக் கிறிஸ்து அவர்களுடைய **அக்கிரமங் களிலிருந்து** மீட்டுக்கொண்டார்.

கிறிஸ்து இன்னும் பிற்காலத்தில் செய்ய விருந்த செயலின் அடிப்படையில் தேவன் அவர் களை இரட்சித்த செயல் கடந்து செல்லுதல் என் னும் வகையைச் சேர்ந்தது. ரோமர் மடலில் 3:25,26 -ஆகிய வசனங்களில் இது விவரிக்கப் பட்டிருக்கிறது.

9:16 கடைசியாக எழுதப்பட்ட **மரணசாசனம்** உறுதிசெய்யப்படுவதற்கு முன்னர், அந்தச் சாசனத்தை **எழுதியவர்** மரணமடைந்துவிட்டார் என்பதற்கான சான்று சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பதை, நூலாசிரியர் வாரிசு உரிமையைக் குறித்து முந்தின வசனத்தில் குறிப்பிடுகையில் நினைவூட்டினார். பொதுவாக மரணச் சான்றிதழ் அதற்குப் போதுமான சான்றாகும்.

9:17 சாசனத்தை எழுதியவர் அதனைப் பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி அதனைத் தன்னுடைய பெட்டகத்தில் பாதுகாப்பாக வைத் திருப்பார். ஆனால் அவர் மரணமடையும் வரை அது செல்லுபடியாகாது, அவர் உயிரோடிருக்கும் வரை சாசனத்தில் பெயர் குறிப்பிடப்பட்டவர் களுக்குச் சொத்தைப் பகிர்ந்துகொடுக்க முடி யாது.

9:18 இப்பொழுது ஒரு மனிதன் எழுதிய கடைசி சாசனத்திலிருந்து, ஆய்வுப் பொருள் மோசேயின் மூலமாக தேவன் கொடுத்த பழைய **உடன்படிக் கையை** நோக்கிச் செல்லுகிறது. (கிரேக்க மொழிச்சொல் *diatheke* ஆங்கிலத்தில் "*coven-ant*" (உடன்படிக்கை) என்றும் "*testament*" (சாசனம்) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) இங்கும் கூட ஒரு மரணம் நிகழவேண்டியதா யிருந்தது. அது **இரத்தம்** சிந்தப்பட்டபோது உறுதிசெய்யப்பட்டது.

ஆதி நாட்களில் ஒவ்வொரு உடன்படிக்கை யும் விலங்கு பலியாகக் கொல்லப்படுவதன் மூல மாக உறுதிசெய்யப்பட்டது. உடன்படிக்கை யிலுள்ள நிபந்தனைகள் யாவும் நிறைவேற்றப் படும் என்பதற்கு அச்சாரமாக இரத்தம் விளங் கியது.

9:19 இஸ்ரவேலருக்கு **மோசே** நியாயப்பிர மாணத்தை ஒப்புவித்த பிறகு, **இளங்காளை வெள்ளாட்டுக் கடா இவைகளின் இரத்தத் தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயி ரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து** நியாயப்பிர மாண **புஸ்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்தான்**. இவ்வாறாக, சமயச் சடங் கைக் கைக்கொண்டு மோசே உடன்படிக்கையை ஆழ்ந்த கருத்துடைய முத்திரையாலே உறுதி செய்தான்.

யாத்திராகமம் 24:1-11 ஆகிய வசனங்களில், பலிபீடத்தின் மேலும் ஜனங்கள் மேலும் மோசே இரத்தத்தைத் தெளித்ததாக நாம் வாசிக்கிறோம். **தண்ணீர், சிவப்பான ஆட்டு மயிர், ஈசோப்பு** ஆகியவற்றைக் குறித்தோ **புத்தகத்தின் மீது தெளிக்கப்பட்டதைக்** குறித்தோ அங்கு நாம் வாசிக்கிறதில்லை. இவ்விரண்டு பகுதிகளும் ஒன் றுக்கொன்று துணைபுரிகின்றன என்று பொருள் கொள்ளுவதே சிறந்தது.

பலிபீடம் தேவனுக்குப் பிரதிநிதியாக விளங்க, அவரும் **ஜனங்களும்** உடன்படிக்கையின் இரண்டு கட்சிக்காரர்களாக இருந்தார்கள். **புஸ்த கம்** உடன்படிக்கையாக இருந்தது. உடன் படிக்கையின் நிபந்தனைகள் அனைத்தையும் இரண்டு கட்சிக்காரர்களும் நிறைவேற்றக் கட மைப்பட்டவர்கள். மக்கள் கீழ்ப்படிவதாக வாக் குறுதி பண்ணினார்கள். மக்கள் கீழ்ப்படிந்தால் அவர்களை ஆசிர்வதிப்பதாகக் கர்த்தர் வாக் குறுதி தந்தார்.

9:20 மோசே இரத்தத்தைத் தெளித்த போது, "**தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன் படிக்கையின் இரத்தம் இதுவே**" என்று கூறி னான். அந்த மக்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தவறினால், அவர்களுடைய ஜீவன் அதற்கீடாகப் பிணையப்பொருளாக்கப் படும்.

9:21 இதே போல மோசே ஆராதனையின் போதும் **கூடாரத்தின் மேலும் சகல பணிமுட்டு**

களின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். இந்தச் சடங்கு பழைய ஏற்பாட்டில் காணப்பட வில்லை. ஆசரிப்புக்கூடாரம் பரிசுத்தப்படுத்தப் பட்ட போது, அங்கு இரத்தத்தைப் பற்றிய ஒரு குறிப்பையும் நாம் காண்கிறதில்லை (யாத். 40). ஆயினும் இங்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற செய்தி மிகத்தெளிவாக இருக்கிறது. பாவியான மனிதனோடு தொடர்புகொள்ளக் கூடிய எந்த வொருபொருளும் தீட்டுப்படுகின்ற காரணத்தால் சுத்திகரிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

9:22 நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்ட எது வானலும் **கொஞ்சங்குறைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படும்**. ஆனால் இதற்கு விதி விலக்குகள் இருந்தன. எடுத்துக்காட்டாக, இஸ்ர வேல் மக்களின் கணக்கெடுப்பு செய்யப்படும் போது, ஒரு மனிதனை இலக்கம் பார்க்கையில் அவன் தன்னுடைய ஆத்துமாவுக்கான "மீட்கும் பொருளாக"அரை சேக்கல் வெள்ளியைக் கொண்டுவரவேண்டும். இது இரத்தத்தினாலான பலிக்குப் பதிலாகச் செலுத்தப்பட்டது (யாத். 30:11-16). அந்த மனிதன் தேவனுடைய மக்களில் ஒருவனாக எண்ணப்படும்படி அவனுடைய ஆத்து மாவுக்கான மீட்கும் பொருளின் அடையாளமாக அந்தக் காசு இருந்தது. வேறொரு விதிவிலக்கு லேவியராகமம் 5:11 -இல் காண்கிறோம். அங்கு சமயச்சடங்குகளின்படி தீட்டுகள் என்று கருதப் பட்ட சில தூய்மையற்ற நிலைகளைச் சரிசெய்ய மெல்லிய மாவு காணிக்கையாகச் செலுத்தப் பட்டது.

இந்த விதிவிலக்குகள் பாவ நிவாரணமாக அல்லது பாவத்தை மூடுவதற்காகச் செலுத்தப் பட்ட காணிக்கைகளைப் பற்றியவை. ஆயினும் பொதுவாகக் காணுமிடத்து பாவ நிவாரணத் துக்கு இரத்தத்தினாலான பலி செலுத்தப்பட வேண்டிய தேவையுண்டு. ஆனால் பாவமன்னிப் பைப் பொருத்த மட்டில் விதிவிலக்கு எதுவு மில்லை. இரத்தம் சிந்தப்பட வேண்டும்.

9:23 இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதி இரண்டு உடன்படிக்கைகளையும் ஒப்பிட்டு அவற் றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளை எடுத் துரைக்கிறது.

முதலாவதாக, பூமிக்குரிய ஆசாரிப்புக் கூடாரம் காளை, வெள்ளாட்டுக்கடா ஆகியவற் றின் இரத்தத்தால் **சுத்திகரிக்கப்பட வேண்டிய தாயிருந்தது**. முன்னர் குறிப்பிடப்பட்டது போல இது சமயச்சடங்காகிய சுத்திகரிப்பு. இந்த ஆல யம் சாயலே ஆகும். அது பரிசுத்தப்படுத்தப்பட்ட விதமும் சாயலே ஆகும்.

பரலோகத்திலுள்ள பரிசுத்த ஸ்தலம் மெய் யானது; பூமிக்குரிய கூடாரமோ அதனுடைய நக லாகும். அந்த மெய்யான பரிசுத்த ஸ்தலத்திற் குரியவை இவைகளிலும் **விசேஷித்த பலிகளி னாலே** அதாவது கிறிஸ்துவின் பலிகளினாலே **சுத்திகரிக்கப்படவேண்டும்**. கிறிஸ்துவின் ஒரே பலியானது இங்கு பன்மையில் குறிப்பிடப்பட்டி ருப்பது ஓர் உவமை மொழியாகும். இது இறைமை யின் பன்மைப் பேச்சு வகையைச் சேர்ந்தது.

பரலோக ஸ்தலங்கள் **சுத்திகரிக்கப்பட வேண்டியது** அவசியம் என்பது நமக்கு வியப் பைத் தருகிறது. "வானங்களும் அவர் பார்வைக் குச் சுத்தமானவை அல்ல" என்னும் வசனத்தில் யோபு 15:15, இதற்கான விளக்கக் குறிப்பைக் காணமுடியும். முதலாவது பாவச் செயலைப் பிசா சானவன் பரலோகத்தில் செய்ததன் காரணமாக இவ்வாறு ஆயிற்று என்பதில் ஐயமில்லை (ஏசா. 14:12-14). மேலும் அவன் சகோதரரைக் குற்றஞ் சாட்டுகிறவனாக இன்னமும் தேவனுடைய முன் னிலைக்குச் செல்லக் கூடியவனாக இருக்கிறான் என்பதாலும் அந்த ஸ்தலங்கள் அவ்வாறு கருதப் படுகின்றன (வெளி. 12:10).

9:24 கிறிஸ்து மனிதர்கள் செய்த பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையவில்லை. அது **மெய் யான** பரிசுத்த ஸ்தலத்திற்குச் சாயலாக அல்லது படவுருவாக மட்டுமே இருந்தது. ஆனால் அவர் **பரலோகத்திலேதான் பிரவேசித்தார்**. அங்கே அவர் **தேவனுடைய சமுகத்தில் நமக்காகப் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்**.

மெய்ம்மையை விடுத்து மீண்டும் நகலை நோக்கிச்செல்ல ஏன் ஒருவர் விரும்பவேண்டும், பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய் கிற மகாபிரதான ஆசாரியரை விட்டு விட்டு, அதற் குச் சாயலான கூடாரத்தில் பணிவிடை செய்து வந்த இஸ்ரவேலின் ஆசாரியர்களிடமாய் திரும் பிச் செல்ல ஏன் ஒருவர் விரும்பவேண்டும் என்ப தைப் புரிந்துகொள்வது கடினம்.

9:25 ஆரோனின் ஆசாரிய முறைமையின்படி யான பிரதான ஆசாரியனைப் போல கர்த்தராகிய இயேசு மீண்டும் மீண்டும் பலிகளைச் செலுத்த வில்லை. முந்தின ஆசாரியர்கள் ஆண்டிற்கு ஒரு முறை, அதாவது பாவ நிவாரண நாளில் **மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்** பிரவேசித்தார்கள். மேலும் அந்த ஆசாரியர்கள் தங்களுடைய

சொந்த இரத்தத்தையல்ல, பலி விலங்குகளின் **இரத்தத்தையே** செலுத்தினார்கள்.

9:26 கிறிஸ்து மீண்டும் மீண்டும் பலிகளைச் செலுத்தினார் என்றால், அவர் தமது சொந்த ஜீவனையே பலியாகச் செலுத்தியதால், அவர் மீண்டும் மீண்டும் பாடுபட்டார் என்று பொருளாகி விடும். உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அவ்வப்போது கல்வாரி வேதனைகளை அனுப விக்க வேண்டும் என்பதை எண்ணியும் பார்க்க முடியாது. மேலும் அது தேவையற்றதுமாகும்!

புதிய உடன்படிக்கையின் படி:

1. மறுக்க இயலாத முடிவான நிலை: அவர் எல் லோருக்காகவும் ஒரேதரம் வெளிப்பட்டார். அந்தச் செயலானது மீண்டும் நிறைவேற்றப் பட வேண்டியதில்லை.
2. பொருத்தமான நேரம்: இந்தக் கடைசி காலத் திலே, அதாவது, முந்தின உடன்படிக்கை மனித னுடைய தோல்வியையும் ஆற்றலின்மையை யும் முழுவதுமாக வெளிப்படுத்திய பிறகு அவர் வெளிப்பட்டார்.
3. முழு நிறைவான செயல்: பாவங்களை நீக்கும் பொருட்டாக அவர் வெளிப்பட்டார். நீக்கும் பொருட்டு என்னும் சொற்கள் வலியுறுத்திச் சொல்லப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நிவாரணம் செய்யப்பட வேண்டிய தேவை இனிமேல் இல்லை. இப்பொழுது, இது நித்திய பாவ மன்னிப்பு ஆகும்.
4. தம்மையே பலிசெலுத்திய செயல்: அவர் தம்மைத்தாமே பலியாகச் செலுத்திப் பாவத்தை நீக்கினார். நம்முடைய பாவங்களுக்குரிய தண்டனைகளை அவர் தமது சொந்த சரீரத் தில் ஏற்றுக்கொண்டார்

நின்றார் என் நிலையிலே
நிந்தை நியாயத்தீர்ப்பிலே
முடித்தார் மீட்பை இரத்தத்தால்
அல்லேலூயா நல்ல மீட்பர்!

– பிலிப்பு P. பிலிஸ்

9:27 முந்தின உடன்படிக்கைக்கும் புதிய உடன் படிக்கைக்கும் இடையேயுள்ள மற்றுமொரு வேறு பாட்டை 27 மற்றும் 28 ஆகிய வசனங்கள் விளக் கித் தருகின்றன. பாவிகள் **ஒரே தரம் மரித்து பின்பு நியாயத்தீர்ப்பு** அடைய வேண்டும் என்று நியாயப்பிரமாணம் அவர்களைக் குற்றந்தீர்த் தது. ஏற்கனவே பாவிகளாக இருந்த மனிதர் களுக்கே நியாயப்பிரமாணமானது கொடுக்கப்பட் டது. அவர்களால் அதனைச் செவ்வனே கைக் கொள்ள முடியவில்லை. ஆகவே அதற்குக் கீழாக இருந்த மக்களைக் குற்றந்தீர்க்கும் கருவி யாகவே அது மாறிவிட்டது.

9:28 புதிய உடன்படிக்கையானது அளவற்ற வகையில் பயனளிக்கும் கிறிஸ்துவின் பலியை அறிமுகப்படுத்துகிறது; அவர் **அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி பலியிடப்பட் டார்**. அவர் எப்பொழுது வேண்டுமானாலும் திரும்பி வருவார் என்னும் அருமையான நம்பிக் கையை இது அறிமுகப்படுத்துகிறது; **தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்காக இரண் டாந்தரம் தரிசனமாவார்**. ஆனால் அவ்வாறு அவர் வருகிறபோது பாவமென்னும் பிரச்சினைக் காகச் செயல்புரியப் போவதில்லை. அவர் அந்த வேலையைச் சிலுவையில் செய்து முடித்து விட்டார். அவர் தம்முடைய மக்களைப் பரமவீட் டிற்கு அழைத்துச் செல்வதற்காக வருவார். அது அவர்களுடைய இரட்சிப்பின் முடிவான நிலை யாகும். பாவம் அணுகக் கூடாதநிலையில் என் றென்றும் இருக்கும்படி மகிமையின் சரீரங்களை அவர்கள் பெறுவார்கள்.

அவருக்காக ஆவலோடு **காத்துக்கொண்டி ருக்கிறவர்கள்** என்னும் சொற்றொடர் மெய்யான விசுவாசிகளைக் குறிக்கிறது. அவருடைய வரு கையின் போது அடுத்தடுத்து என்ன நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பதில் கருத்து வேறுபாடு நிலவி னாலும் கர்த்தருடைய மக்கள் யாவரும் அவரு டைய வருகைக்காகக் காத்துக்கொண்டிருக் கிறார்கள்.

ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் மட்டுமே அவர் வருகையின் போது எடுத்துக்கொள்ளப்படுவார் கள் என்று வேதம் போதிக்கிறதில்லை. அவரு டைய வருகையின் போது எடுத்துக்கொள்ளப் படுபவர்கள் யாரென்று வேதம் விளக்கிக் கூறு கிறது: "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்" மற்றும் "உயிரோடிருப்பவர்கள்" (1 தெச. 4:16) அதாவது, இறந்தாலும் உயிரோடு இருந்தாலும் மெய்யான கிறிஸ்தவர்கள் யாவரும் என்பதே இதன் பொரு ளாகும். "கிறிஸ்துவுக்கு உரியவர்கள்" என்று 1 கொரிந்தியர் 15:23-28 வசனங்கள் அவர்களைப் பற்றி விவரிக்கிறது.

24 முதல் 28 வரையிலான வசனங்களில் கிறிஸ்துவின் மூன்று தரிசனங்கள் காணப்படு வதாக அவ்வப்போது குறிப்பிடப்படுவதுண்டு. அவற்றை நாம் இவ்விதமாக சுருக்கிக் கூறலாம்:

வசனம் 26: அவர் **வெளிப்பட்டார்**. பாவத்தின் தண்டனையிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி அவர் பூமிக்கு வந்த அவருடைய முதலாம் வருகையை இது குறிக்கிறது (இரட்சிப்பின் இறந்த காலம்).

வசனம் 24: **இப்பொழுது** அவர் **பிரவேசித்திருக்கிறார்**. பாவத்தின் அதிகாரத்திலிருந்து நம்மை இரட்சிக்கும்படி அவர் தேவனுடைய முன்னிலையில் தற்போது செய்கிற ஊழியத்தை இது குறிக்கிறது (இரட்சிப்பின் நிகழ்காலம்)

வசனம் 28: அவர் **தரிசனமாவார்**. எப்பொழுது வேண்டுமானாலும் அவருடைய வருகை நிகழ விருக்கிறது, அப்பொழுது நாம் பாவத்தின் முன்னிலையிலிருந்து இரட்சிக்கப்படுவோம் (இரட்சிப்பின் எதிர்காலம்).

10:1 நியாயப்பிரமாணமானது வரவிருந்த **நன்மைகளின் பொருளாயிராமல்** அவற்றின் **நிழலாய் மாத்திரம்** இருந்தது. கிறிஸ்துவின் ஆளுமை மற்றும் அவருடைய செயல் ஆகிய வற்றை அது முன் கூட்டியே சுட்டிக்காட்டியது, ஆனால் அது மெய்ம்மைக்கு வறியதோர் எடுத்துக் காட்டாகவே விளங்கியது. கிறிஸ்துவுக்குப் பதிலாக நியாயப்பிரமாணத்தைத் தெரிந்து கொள்வது, ஒரு மனிதனுக்குப் பதிலாக அந்த மனிதனுடைய நிழற்படத்தைத் தெரிந்துகொள்வதற்கு ஒப்பாயிருக்கிறது. அவருடைய மேதகைமைக்கு இதுவோர் இழுக்காகும்!

நியாயப்பிரமாண முறைமையின்படியான பலிகள் தொடர்ந்து மீண்டும் மீண்டும் செலுத்தப்பட வேண்டியவையாக இருந்தன என்னும் உண்மை அது வலிமையற்றது என்பதை வெளிப்படுத்துகிறது. பரிசுத்த தேவனுடைய எதிர்பார்ப்புகளை அது முற்றிலும் நிவர்த்தி செய்யவில்லை என்பதை மீண்டும் மீண்டும் பலிகள் செலுத்தப்பட வேண்டும் என்னும் உண்மை மெய்ப்பித்தது. மீண்டும் மீண்டும் நடைபெறவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தும் சொற்களைக் காணுங்கள்: **ஒரே விதமான பலிகள்; இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிறவை; வருஷந்தோறும்.**

அந்தப் பலிகளால் ஆராதனை செய்தவர்களை முற்றிலும் நிறைவானவர்களாக மாற்ற முடியவில்லை. அதாவது, பாவத்தோடு சம்பந்தப்பட்டு, அவர்களுக்குப் **பூரணப்படுத்தப்பட்ட** மனச்சாட்சியை அவை தரவில்லை. பாவத்தின் குற்ற வுணர்விலிருந்து விடுதலை பெற்ற மனநிலையை இஸ்ரவேலர் ஒருக்காலும் பெறவில்லை. மனச்சாட்சியில் அவர்கள் நிறைவான இளைப்பாறு தலை ஒருக்காலும் பெறவில்லை.

10:2 அவர்கள் செலுத்திய பலிகள் அவர்களைப் பாவத்திலிருந்து முழுமையாகவும் முடிவாகவும் விடுதலையைக் கொடுத்து குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு வழங்கியிருந்தால், **அந்தப் பலிகளைச் செலுத்துவது நிறுத்தப்பட்டிருக்கும்**, அதன் காரணமாக அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆசாரிப்புக் கூடாரத்திற்கோ தேவாலயத்திற்கோ செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது அல்லவா? முறையான இடைவெளியில் அவர்கள் பலிகளைச் செலுத்தினார்கள் என்னும் உண்மை அந்தப் பலிகள் ஆற்றலற்றவை என்று குற்றஞ் சுமத்துகிறது. உயிரோடு இருக்கும் பொருட்டு ஒருவர் ஒரு மணிக்கு ஒரு தடவை மருந்து உண்ண வேண்டுமெனில், அவர் குணமடைந்துவிட்டார் என்று சொல்ல முடியாது.

10:3 மனச்சாட்சியில் சமாதானத்தை உண்டு பண்ணுவதற்குப் பதிலாக, லேவிய முறைமை அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் விழிப்படையும்படி செய்து அவர்களைத் தட்டி எழுப்பியது. பாவநிவாரண நாளின் அழகிய சமயச் சடங்கின் பின்னணியில், பாவங்கள் மூடப்பட்டனவேயொழிய நீக்கப்படவில்லை என்னும் உண்மையில் ஆண்டுக்கொரு முறை நினைவூட்டும் மறைபொருள் பதுங்கியிருந்தது.

10:4 காளை, வெள்ளாட்டுக்கடா இவற்றின் இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யக்கூடிய ஆற்றல் அற்றதாயிருந்தது. ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, இந்தப் பலிகள் சமயச்சடங்கின்படியான தவறுகளை நீக்கவே பயன்பட்டன. அவை சமயச் சடங்கின்படியான சுத்திகரிப்பையே தந்தன. மனிதனுடைய கேடுற்ற இயல்பிற்கோ, அவனுடைய பொல்லாங்கான செயல்களால் உண்டான குற்ற உணர்விற்கோ விடுதலை கொடுத்து நிறைவான மனநிலையைக் கொடுக்கும் விசயத்தில் அவை முழுத்தோல்வி அடைந்தன.

10:5 லேவிய முறைமையின்படியான பலிகள் ஆற்றலற்றவை, அதற்கு மாறாக, மிகவுயர்ந்த கிறிஸ்துவின் பலியின் பலத்தினிடமாய் நாம் இப்பொழுது வந்திருக்கிறோம். ஓர் அறிமுகமாக, இரட்சகர் மனுவுருவெடுத்த சமயத்தில் தமக்குத் தாமே பேசிக் கொண்ட பேச்சைக் கேட்பதற்கு நாம் அனுமதி பெற்றிருக்கிறோம். 40 -ஆவது சங்கீதத்திலிருந்து எடுத்துரைக்கப்பட்ட பகுதியில், பழைய உடன்படிக்கையின்படியான பலிகளிலும்

காணிக்கைகளிலும் தேவன் மனநிறைவு அடைய வில்லை என்பதைக் கர்த்தர் குறிப்பிடுகிறார். தேவன் தாமே இந்தப் பலிகளை நிறுவினார், ஆயினும் அவருடைய இறுதியான நோக்கமாக அவை இருந்ததில்லை. பாவங்களை நீக்கும் பொருட்டு அவை ஒருபோதும் திட்டமிடப்பட வில்லை. மாறாக அவை உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கவிருந்த தேவ ஆட்டுக்குட்டியைச் சுட்டிக் காட்டின. ஆறுபோல ஓடுகிற விலங்குகளின் இரத்தத்திலோ, அவற்றின் செத்த உடல்களிலோ தேவன் மனவிருப்பம் அடைவாரா?

தேவன் மனநிறைவு அடையாததற்கு மற்று மொரு காரணமும் இருந்தது. அது என்னவெனில், தாங்கள் கைக்கொள்ளும் சமயச் சடங்குகளில் தேவன் மனநிறைவு அடைவார் என்று எண்ணிய மனிதர்கள் தங்களுடைய உள்ளான வாழ்க்கையில் பாவத்தோடும் கேடுற்ற நிலையிலும் இருந்தார்கள். அவர்களில் பலர் இந்த மந்தமான பலிமுறைமையைக் கைக்கொண்டபோதிலும் தங்களுடைய பாவத்தைக் குறித்து மனவருத்தமோ உணர்வோ அடையவில்லை. அவர்களுடைய மிருக பலிகளில் தேவனுடைய கோபம் தணிந்துபோகும் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் அவரோ அவர்களுடைய நொறுங்குண்ட இருதயமாகிய பலியையே எதிர்பார்த்தார். தேவன் சமயச் சடங்குகளில் மனநிறைவு அடைகிறவர் அல்லர் என்பதை அவர்கள் உணரவில்லை.

முந்தின பலிகளில் மனநிறைவு பெறாத தேவன், மனித ஜீவனும் இயல்பும் ஒருங்கே இணைந்த **சரீரத்தைத்** தம்முடைய குமாரனுக்கு **ஆயத்தப்படுத்தினார்.** கர்த்தர் மனுவுருவெடுத்த நிகழ்ச்சி புரிந்துகொள்வதற்குக் கடினமான வியத்தகு செயலாகும், அவ்வரிய நிகழ்ச்சியில் நித்திய வார்த்தை மாம்சமாக அதாவது, மனிதராக, மனிதர்களுக்காக மரணமடையக் கூடிய வராக மாறினார். இதனையே இவ்வசனம் குறிப்பிடுகிறது என்பதில் ஐயமில்லை.

ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர் என்னும் சொற்றொடர் சங்கீதம் 40:6 -ஆம் வசனத்தைத் தழுவி எழுதப்பட்டது. இதற்கு இருவேறு பொருட்கள் உள்ளன என்னும் உண்மை நமது ஆவலைத் தூண்டிவிடக் கூடியதாயிருக்கிறது. அந்தச் சங்கீதத்தில் இச்சொற்றொடர், "என் செவிகளைத் திறந்தீர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுடைய அடிக்குறிப்பில், "செவிகளை எனக்காகக் குடைந்தெடுத்தீர்" என்று இவ்வசனம் குறிப்பிடப்பட்டுள்ளது. திறந்த செவிகள் தேவனிடத்தில் தமது கட்டளைகளைப் பெற்று அவற்றிற்கு உடனடியாகக் கீழ்ப்படிய மேசியா எப்பொழுதும் ஆயத்தமாயிருந்தார் என்பதைக் குறிக்கின்றன என்பதில் ஐயம் இல்லை. குடையப்பட்ட செவி எபிரெய அடிமையின் கதையைக் குறிப்பாகத் தெரிவிக்கிறது எனலாம் (யாத். 21:1-6). அங்கே அந்த அடிமையின் செவி கதவில் வைத்துக் குத்தப்படும். அந்த அடிமை மனமுவந்து தன்னுடைய எஜமானுக்கு என்றென்றும் கட்டுப்பட்டவனாக இருப்பான் என்பதற்கு அடையாளமாக அச்செயல் விளங்கிற்று. நமது இரட்சகர் தாம் மனுவுருவெடுத்த நிலையில், "என் எஜமானை நேசிக்கிறேன், நான் விடுதலை பெற்றுப்போக மனதில்லை" என்னும் பொருளில் பேசினார்.

10:6 நாற்பதாவது சங்கீதத்திலிருந்து தொடர்ந்து பேசும் மேசியா **சர்வாங்க தகனபலிகளிலும் பாவ நிவாரண பலிகளிலும்** தேவன் பிரியமாயிருக்கவில்லை என்று மீண்டும் கூறினார். விலங்குகள் தங்களைப் பலிகளாக மனமுவந்து ஒப்புக்கொடுக்கவில்லை, அவை சுத்திகரிப்பதற்கு ஆற்றல் அற்றவை. மேலும் அவை தேவனுடைய இறுதியான விருப்பத்தை ஒருபோதும் வெளிப்படுத்தவில்லை. கிறிஸ்துவின் பலியை எதிர்நோக்கிய மாதிரிகளாகவும் நிழல்களாகவும் மட்டுமே அவை விளங்கின. அவை முடிவுக்கு வரக்கூடிய நிலையில் இருந்த காரணத்தால், மதிப்பில்லாத நிலையிலேயே இருந்தன.

10:7 தேவனுடைய சித்தத்தை என்ன விலை கொடுத்தாகிலும் நிறைவேற்ற வேண்டும் என்று மேசியா விருப்பம் கொண்டிருந்ததே தேவனுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது. பலிபீடத்தில் அவர் தம்மையே ஒப்புக்கொடுத்ததன் மூலம் அவர் தாம் கீழ்ப்படியவேண்டும் என்று விரும்பியதை மெய்ப்பித்தார். நம்முடைய கர்த்தர் அந்தச் சொற்களை உரைத்தபோது, பழைய ஏற்பாட்டின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க அவர் முழுஇருதயத்தோடு மனமகிழ்ச்சி கொண்டிருந்தார் என்னும் செய்தியே எழுதப்பட்டிருக்கிறது என்பதை நினைவுகூர்ந்தார்.

10:8 எட்டு முதல் பத்து வரையிலான வசனங்களில் கர்த்தர் தமக்குத்தாமே பேசிக்கொள்கிற சொற்களின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை நூலாசிரியர் விவரிக்கிறார். முந்தின பலி முறைகள் நீக்கப்பட்டு, நிறைவானதும் முடிவானதும் இறுதியானதுமான இயேசு கிறிஸ்துவின் பலிமுறை

தொடங்குகிறது என்பதற்கான குறிப்பை அந்தப் பேச்சு கொண்டிருக்கிறது என்பதை ஆசிரியர் காண்கிறார்.

நாற்பதாவது சங்கீதத்திலிருந்து மேற்கோளை அவர் இங்கு சுருக்கித் தருகிறார். **நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்ட** பலிகளில் தேவன் பிரியப்படவில்லை என்பதை வலியுறுத்திக் கூறும்படி அவர் இவ்வாறு திரும்பவும் அதைக் குறிப்பிடுகிறார்.

10:9 முந்தின பலிமுறைகளில் தேவன் மன நிறைவு அடையவில்லை என்பதைச் சொல்லி முடித்தவுடனே, தம்முடைய திருத்தந்தையின் இருதயத்தைப் பிரியப்படுத்தக் கூடிய செயலைச் செய்யும்படி மேசியா முன்வந்தார் என்னும் உண்மையில் நூலாசிரியர் முக்கியத்துவத்தைக் காண்கிறார்.

முடிவுரை: **இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்**. அதாவது, நியாயப்பிரமாணம் கட்டளையிட்ட முந்தின பலிமுறைகளை அவர் நீக்கியதோடு, பாவத்திற்கான தம்முடைய பெரிதான சொந்த பலியை அறிமுகப்படுத்தினார். சட்டப்படியான உடன்படிக்கை அரங்கின் பக்கவாட்டில் அமைந்துள்ள மறைவிடங்களை நோக்கிச் செல்ல, புதிய உடன்படிக்கை அரங்கின் மையப்பகுதியை நோக்கி வருகிறது.

10:10 தேவ சித்தத்தினாலே, அந்தச் சித்தத்திற்கு **இயேசு கிறிஸ்து** கீழ்ப்படிந்ததாலே அவருடைய **சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டு நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்**. ஜார்ஜ்லேண்டிஸ் என்பார் விளக்குகிறார்:

> எபிரெயர் மடலின் எல்லாப் பகுதிகளிலும் (12:14 தவிர) தகுநிலைப் பரிசுத்தம் கூறப்பட்டுள்ளது. இது உண்மையான எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் பொருந்தும் (1 கொரி. 6:11). இது ஏதோ "முன்னேற்றம் அடைந்த" சில பரிசுத்தவான்களுக்கு மட்டும் உரியதன்று. இது தேவனுடைய சித்தத்தினாலே, கிறிஸ்துவின் பலியினாலே நிறைவேற்றப்பட்டது. நாம் தேவனாலே, தேவனிடத்திற்கு, தேவனுக்காகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறோம். விசுவாசியினிடத்தில் தேவ வார்த்தையின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிற வளரும் பரிசுத்தமும் இதுவும் ஒன்றென நினைத்து நாம் குழப்பமடையக் கூடாது (யோவான் 17:17-19; 1 தெச. 5:23).[18]

10:11 ஆரோனின் முறைமையின்படியான ஒவ்வொரு **ஆசாரியனும்** செய்த ஊழியத்திற்கும் கிறிஸ்து நிறைவேற்றிய ஊழியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை ஆசிரியர் இப்பொழுது மிக நுணுக்கமாக வெளிப்படுத்திக் காட்டுகிறார். முதலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசாரியர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்யும்படி நாடோறும் நின்று செயல்புரிந்தார்கள். ஆசரிப்புக் கூடாரத்திலும் தேவாலயத்திலும் அமருவதற்கான இருக்கை இல்லை. அவர்களுடைய பணி ஒருக்காலும் நிறைவடையாத காரணத்தால் அங்கு ஓய்வு இல்லை. அவர்கள் **ஒரேவித பலிகளை அநேகந்தரம்** செலுத்தினார்கள். அவை பாவங்களை நீக்கவுமில்லை, மனச்சாட்சியை குற்றமறச் செய்யவுமில்லை, மேலும் அவை முடிவுறாத தொடர்கதையாகத் தொடர்ந்து கொண்டேயிருந்தன.

இந்தப் **பலிகளால் பாவங்களை ஒருக்காலும் நிவர்த்திசெய்ய** முடியவில்லை. "லேவிய முறைமையில் ஆரோன் இன்றியமையாத புகழ் பெற்ற மனிதனாக இருந்த போதிலும், சமயச் சடங்குகளுக்கடுத்த குற்றேவல் புரிகிறவனாகவே இருந்தான். அவன் செய்துவந்த இடைவிடாத சடங்குகளில் எவ்வித மெய்யான மதிப்பும் இல்லை" என்று திருவாளர் A.B. ப்ரூஸ் எழுதுகிறார்.[19]

10:12 நம்முடைய மேதகு கர்த்தர் **பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தினார்**. வேறு எந்தப் பலியும் ஒருபோதும் தேவையில்லை!

> குருதியும் இல்லை பலிபீடமும் இல்லை
> பலிகள் அனைத்தும் முடிவுற்றுப் போயின
> தழலும் இல்லை புகையெழவும் இல்லை
> இனியோர் ஆட்டினை அடிப்பதும் இல்லை.
>
> குறையிலா மன்னர் பலியாகத் தமைக்கொடுக்க
> நிறைவான செங்குருதி நாளத்தில் வழிந்தோட
> ஆத்தும வருத்தங்கள் அறவே ஒழிந்திட
> செந்நிறக் கறையாவும் வெண்மையாய்
> மாறினவே!
>
> – ஹொரேசியஸ் போனார்

மீட்பின் செயலை நிறைவேற்றிய பிறகு அவர் "தேவனுடைய வலப்புறத்தில் நிரந்தரமாக அமர்ந்தார்" (JND). "இவரோ, பாவங்களுக்காக என்றென்றைக்குமாக ஒரே பலியைச் செலுத்தி, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்" என்றோ, "இவரோ பாவங்களுக்காக ஒரே பலி

யைச் செலுத்தி, என்றென்றைக்குமாக தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்" என்றோ இரண்டு விதமாகவும் சரியாக இந்த வசனத்தை நிறுத்தற்குறிகளினால் மாற்றி எழுதமுடியும். இரண்டும் உண்மையே. எனினும் இரண்டாவதாகச் சொல்லப்பட்டுள்ள வாசகமே சரியானது என்று நம்பும்படியான எண்ணங்கொள்கிறோம். பாவத்தின் பயங்கரமான கோரிக்கைகள் என்றென்றைக்குமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அவர் எவ்விதத் தடையுமின்றி அமர்ந்திருக்கிறார். அவர் **தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்** என்பது, கனத்திற்கும் அதிகாரத்திற்கும் பாசத்திற்கும் உரிய இடத்தைக் குறிக்கிறது.

அவர் என்றென்றைக்குமாக அங்கு அமர்ந்திருக்க முடியாது, ஏனென்றால் அவர் ஒருநாள் நியாயத்தீர்ப்பு வழங்கும்படி எழுந்திருக்க வேண்டும் என்று ஒருவர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். இருந்த போதிலும் இவற்றிற்கிடையே ஏதொரு முரண்பாடும் இல்லை. பாவத்திற்குப் பலி செலுத்த வேண்டும் என்பதோடுள்ள தொடர்பில், அவர் என்றென்றைக்குமாக நிரந்தரமாக அமர்ந்திருக்கிறார். நியாயத்தீர்ப்போடுள்ள தொடர்பில் அவர் நிரந்தரமாக அமர்ந்திருப்பதில்லை.

10:13 அவருடைய **சத்துருக்களை** அவரது **பாதபடியாக்கிப் போடும்வரைக்கும்** அவர் காத்திருக்கிறார். அதாவது, திருத்தந்தையாகிய தேவனுடைய திருப்பெயரின் புகழ்ச்சிக்காக ஒவ்வொரு முழங்காலும் முடங்கும் நாள் வரைக்கும் ஒவ்வொரு நாவும் அவரே கர்த்தர் என்று அறிக்கை பண்ணும் நாள் வரைக்கும் அவர் காத்திருக்கிறார் (பிலி. 2:10, 11). இவ்வுலகில் அவரது நியாயம் வெளியரங்கமாக நிறுவப்படும் நாளே அந்தநாள்.

10:14 அவர் செலுத்திய **பலியின்** மேம்பட்ட மதிப்பு, **பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை அவர் என்றென்றைக்கும்** (அல்லது நிலைத்திருக்கும்படி) **பூரணப்படுத்தியிருக்கிற** செயலில் காணப்படுகிறது. உலகத்திலிருந்து தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள், அதாவது, மெய்யான விசுவாசிகளே இங்கு **பரிசுத்தமாக்கப்படுகிறவர்கள்** என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அவர்கள் இரண்டு வகையான பொருளில் **பூரணப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்**. முதலாவது, தேவனுடைய முன்னிலையில் அவர்கள் நிறைவான தகுநிலையைப் பெற்றிருக்கிறார்கள்; திருத்தந்தையின் முன்னிலையில் அவருடைய பிரியமான குமாரன் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தன்மையின் அடிப்படையில் அவர்கள் நிற்கிறார்கள். இரண்டாவது, பாவத்தின் குற்றவுணர்வையும் தண்டனையையும் எண்ணுமிடத்து, அவர்கள் நிறைவான மனச்சாட்சி பெற்றிருக்கிறார்கள். அதற்கான விலை முழுவதுமாகக் கொடுத்துத் தீர்க்கப்பட்டுவிட்டது என்றும், தேவன் இன்னொரு முறை அதற்கான விலையைக் கேட்கமாட்டார் என்றும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

10:15 புதிய உடன்படிக்கையின்படி, பாவங்கள் என்றென்றைக்குமாகத் திறம்பட முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டன என்னும் உண்மைக்குப் **பரிசுத்த ஆவியானவரும் சாட்சி சொல்லுகிறார்**. அவர் பழைய ஏற்பாட்டு வேதத்தின் மூலமாகச் **சாட்சி சொல்லுகிறார்**.

10:16 எரேமியா 31:31 -ஆம் வசனத்தில், கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட இவ்வுலகிற்குரிய மக்களோடு புதிய **உடன்படிக்கை** பண்ணப்போவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

10:17 அதே பகுதியில், "**அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை**" என்பதையும் சொல்லியிருக்கிறார். பாவங்கள் முழுமையாகவும் இறுதியாகவும் மன்னிக்கப்படும் என்னும் வாக்குறுதி எரேமியா 31:34 -இல் கொடுக்கப்பட்டிருப்பது நமது கவனத்தை ஈர்க்கிறது. ஆயினும் இந்த வாக்குறுதியானது நிறைவேறத் தொடங்குகிற நாளில் வாழ்கிற மக்களில் சிலர் யூதமார்க்கத்தின் முடிவுறா பலிமுறைகளை நோக்கித் திரும்பும்படி அனுப்பப்பட்டிருப்பார்கள்.

10:18 புதிய உடன்படிக்கையின்படி பாவம் மன்னிக்கப்படும் என்னும் வாக்குறுதியின் பொருள், **இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லை** என்பதேயாகும். **இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே** என்னும் சொற்களுடன் இம்மடலின் கோட்பாட்டுப் பகுதியை நூலாசிரியர் முடிவுக்குக் கொண்டுவருகிறார். நம்முடைய வாழ்க்கையில் செய்ய வேண்டிய நடைமுறைக் கடமைகளைக் குறித்து அவர் இப்பொழுது வலியுறுத்துகிற வேளையில், இந்தச் சொற்கள் நமது இருதயங்களிலும் மனதிலும் ஒலித்துக்கொண்டே இருக்க வேண்டுமென்றும் அவர் விரும்புகிறார்.

3. எச்சரிப்பும் அறிவுரைகளும் (10:19-13:17)

அ. கிறிஸ்துவை ஏளனப்படுத்தக் கூடாதென்னும் எச்சரிப்பு (10:19-39)

10:19,20 பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்கள் தொலைதூரத்தில் வைக்கப்பட்டிருந்தார்கள். இப்பொழுதோ நாம் கிறிஸ்துவுக்குள் அவருடைய சிலுவையின் **இரத்தத்தின்** மூலமாக அவருக்கருகில் கொண்டுவரப்பட்டிருக்கிறோம். ஆகவே நாம் அவருக்கருகில் வரும்படி உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

விசுவாசிகள் யாவரும் இப்பொழுது ஆசாரியர்களாக இருப்பதால், நாம் **பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு தைரியம் உண்டாயிருக்கிறது** என்பதை இந்த அறிவுரை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. யூத முறைமை நடைமுறையில் இருந்த காலத்தில் பொதுமக்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும் செல்லத் தடைபண்ணப்பட்டிருந்தார்கள்; ஆசாரியர்கள் மட்டுமே முதல் அறைக்குள் செல்ல முடியும், இரண்டாவது அறைக்குள் மகாபிரதான ஆசாரியன் மட்டுமே செல்ல முடியும். இப்பொழுது அவையாவும் மாறிப்போய்விட்டன. ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மட்டும் தம்மை வந்து சந்திக்கும்படி தேவனுக்கு ஒரு குறிப்பிட்ட இடம் இல்லை. மாறாக, எல்லா விசுவாசிகளும் எந்த நேரத்திலும், உலகத்தின் எந்த இடத்திலிருந்தும் அவருடைய சமுகத்திற்குச் செல்ல முடியும்.

திரைக்குள் வாவென
    திருத்தந்தை அழைக்கின்றார்
பாதையோ புதியது
    உயிரூட்ட முடையது.
ஆவலும் மேலிட
    நடுக்கமும் நீங்கிட
துணிவுடன் இணங்கி
    திரையினுள் புகுந்தேன்
இறைமகன் யேசுவுடன்
    அடியேனும் தந்தையைக்
கிருபைநிறை ஆசனத்தில்
    வீற்றிருக்கக் கண்டேன்!

திருமுன்னர் சென்றிட
    என்தகுதி ஒன்றுதான்
குறுக்கையில் சிந்திய
    விலையற்ற செங்குருதி
தொழுதிடும் வேளையில்
    அதனையே அர்ப்பணித்தேன்
தந்தைக்கு முதற்கனியாய்
    கிறிஸ்துவும் நின்றிடவே
மகிழ்வுடன் தந்தையும்
    அவரையே நோக்கிட
என்தகுதி அவரென்று
    அன்புடன் மொழிந்தாரே!

நாம் அணுகும் வழியோ **புதிதும் ஜீவனுமான மார்க்கமே** ஆகும். **புதிது** என்னும் சொல் "புதிதாக அடிக்கப்பட்ட" அல்லது "புதிதாக உண்டாக்கப்பட்ட" என்னும் பொருளைத் தரக்கூடும். **ஜீவன்** என்னும் சொல் "உயிர்த்தெழுதலில் இயேசுவைக்" குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது, ஆகவே ஜீவனுள்ள இரட்சகரையே அது குறிப்படுகிறது. இந்த வழியானது அவருடைய **மாம்சமாகிய திரையின் வழியாகத்** திறக்கப்பட்டது. ஆசரிப்புக் கூடாரத்தின் இரண்டு பகுதிகளுக்கும் இடையில் இருந்த **திரை** நம்முடைய கர்த்தரின் சரீரத்திற்கு நிழலாயிருந்தது என்பதை இது தெளிவாகக் கற்பிக்கிறது. நாம் தேவனுடைய முன்னிலையை அணுக வேண்டுமானால் அந்தத் திரை கிழிக்கப்பட வேண்டும், அதாவது, அவருடைய சரீரம் மரணத்தில் நொறுக்கப்பட வேண்டும். கிறிஸ்துவின் பாவமற்ற வாழ்க்கையின் மூலமாக அல்ல, அவர் நமக்குப் பதிலாளாக மரணம் அடைந்ததன் மூலமாகவே அவரண்டை நாம் செல்ல முடியும் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. ஆட்டுக்குட்டியானவருடைய சாவுக்கேதுவான காயங்களின் மூலமாகவே நம்மால் உள்ளே செல்லமுடியும். ஜெபத்திலும் ஆராதனையிலும் நாம் தேவனுடைய சமுகத்திற்குள் செல்லும் ஒவ்வொரு தடவையும் மிகப்பெரிதான விலையைச் செலுத்தி இந்தச் சிலாக்கியம் நமக்கு வாங்கித்தரப்பட்டிருக்கிறது என்பதை நினைவுகூருவோமாக.

10:21 நாம் தேவனுடைய சமுகத்திற்குள் நுழையும் போது நாம் மிகப்பெரிதான நம்பிக்கையைப் பெற்றிருப்பது மட்டுமின்றி, **தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா** பிரதான **ஆசாரியரையும்** பெற்றிருக்கிறோம். நாம் ஆசாரியர்களாக இருந்தபோதிலும் (1 பேதுரு 2:9; வெளி. 1:6), நமக்கு ஒரு ஆசாரியர் தேவை. கிறிஸ்து நம்முடைய **பிரதான ஆசாரியராக** இருக்கிறார். அவருடைய தற்போதைய ஊழியம் நாம் தேவனுக்கு முன்பாக எப்பொழுதும் வரவேற்

கப்படுகிறோம் என்பதைக் குறித்த உறுதியை நமக்குத் தருகிறது.

10:22 நாம் **சேரக்கடவோம்**, இது இரத்தத்தால் வாங்கப்பட்ட விசுவாசிகளினுடைய நற்பேறாக இருக்கிறது. இந்த உலகத்தில் புகழ்பெற்ற மனிதர்களையல்ல, அண்ட சராசரத்தின் மாவரசரைச் சந்திக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் என்ற செய்தி, சொற்களால் விவரிப்பதற்கு அப்பாற்பட்ட வியத்தகு மேன்மையாகத் திகழ்கிறது! இந்த அழைப்பினை எவ்வளவாக நாம் மதித்துப் போற்றுகிறோம் என்பதை, நாம் இதற்குச் செய்கிற பதிற் செயலின் தன்மை வெளிப்படுத்தக் கூடியதாயிருக்கிறது.

அவ்வரியணையின் மாடத்திற்குள்ளாக நுழையும்படி நாம் எத்தகைய ஆவிக்குரிய நிலையை அடையும்படி ஆயத்தப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான நான்கு வகையான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. உண்மையுள்ள இருதயத்தோடு. இஸ்ரவேல் மக்கள் தங்கள் வாயினால் தேவனிடத்தில் சேர்ந்து, அவர்களுடைய உதடுகளினால் அவரைக் கனம்பண்ணினார்கள். அவர்களுடைய இருதயமோ அவருக்குத் தூரமாய் விலகியிருந்தது (மத். 15:8). நம்முடைய அணுகுதல் முற்றிலும் நேர்மையாக இருக்க வேண்டும்.

2. பூரண நிச்சயத்தோடும். தேவனுடைய வாக்குறுதியில் முழு நம்பிக்கையோடும், அவருடைய சமுகத்தில் கிருபை நிறைந்த வரவேற்பைப் பெறுவோம் என்னும் உறுதியான முடிவோடும் அவருடைய முன்னிலையில் சேருவோம்.

3. துர்மனச்சாட்சி நீங்கத்தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாகவும். இது புதிய பிறப்பினால் மட்டுமே பெறக்கூடியதாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை வைக்கிறபோது அவருடைய இரத்தத்தின் விலை மதிப்பை நமக்குரியதாக்கிக்கொள்கிறோம். அதனை உருவகமாகக் கூறும்போது, நம்முடைய இருதயங்களின்மேல் அவருடைய இரத்தத்தைத் தெளிக்கிறோம். இஸ்ரவேலர் தங்களுடைய வீடுகளின் நிலைக்கால்களில் பஸ்கா ஆட்டின் இரத்தத்தைத் தெளித்தாற் போல இது இருக்கிறது. இது நம்மைத் துர்மனச்சாட்சியிலிருந்து விடுவிக்கிறது. நம்முடைய சாட்சி; "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையுயர்ந்த இரத்தத்தால் என்றென்றைக்குமாக ஒரே தரம் கழுவப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டு, இறைவனுடைய பார்வையில் தூய்மையடைந்தவர்களாக நாம் இருப்பதால் நம்முடைய மனச்சாட்சி இனி ஒருக்காலும் நம்மைக் குற்றப்படுத்துவதில்லை. இதுவே நம்முடைய சாட்சி" - பிரான்சஸ் பெவன்.

4. சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், மீண்டுமாக இது உருவக மொழியில் சொல்லப்பட்ட சொற்களாக உள்ளன. சுத்த ஜலம் என்னும் சொற்றொடர் வார்த்தையையோ (எபே. 5:25,26), பரிசுத்த ஆவியையோ (யோவான் 7:37-39) குறிக்கக்கூடும், அல்லது நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஏற்படக்கூடிய தீட்டுகளிலிருந்து நம்மைக் கழுவித் தூய்மைப்படுத்தும்படி தூய ஆவியானவர் பயன்படுத்துகிற வார்த்தையை இது குறிக்கக் கூடும். நம்முடைய பாவத்தின் குற்றவுணர்விலிருந்து நாம் என்றென்றைக்குமாகக் கிறிஸ்துவின் மரணத்தினாலே ஒரே தரம் தூய்மைப்படுத்தப்பட்டிருக்கிறோம், ஆனால் தூய ஆவியானவராலே வார்த்தையின் மூலமாகத் தீட்டுகளிலிருந்து நாம் அவ்வப்போது கழுவப்படுகிறோம் (யோவான் 13:10 -ஆம் வசனத்தைக் காண்க).

நேர்மை, உறுதி, இரட்சிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல் ஆகியவை தேவனுடைய முன்னிலையில் செல்வதற்கான நான்கு நிபந்தனைகள் என்று இதனை நாம் சுருங்கக் கூறலாம்.

10:23 நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம் என்பது இரண்டாவது அறிவுரையாகும். நம்முடைய நம்பிக்கை கிறிஸ்து ஒருவரே என்று உறுதியோடு அறிக்கையிடுவதிலிருந்து அசைக்கப்படும்படி நாம் எதற்கும் இடங்கொடுக்கக் கூடாது.

யூதமார்க்கத்தின் தற்போதைய, காணக்கூடிய ஆசிர்வாதங்களைக் கருத்திற்கொண்டு, கிறிஸ்தவத்தின் எதிர்காலத்திற்குரிய காணக்கூடாத ஆசிர்வாதங்களை விட்டுவிடும்படியான சோதனைக்குட்படுகிற மக்களுக்கு, **வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்** என்னும் நினைவூட்டும் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவருடைய வாக்குறுதிகள் நிறைவேறாமல் போகா; அவரிடத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் ஒருக்காலும் ஏமாற்றமடைவதில்லை. இரட்சகர் **வாக்குத்தத்தம்** பண்ணியதுபோல வருவார், மேலும் அவருடைய மக்கள் அவரோடுகூட அவரைப் போல என்றென்றும் இருப்பார்கள்.

10:24 நம்முடைய உடன்விசுவாசிகள் **அன்பை** வெளிப்படுத்தும்படியும், **நற்கிரியைகளைச்** செய்யும்படியும், அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு நாம் புதிய வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டின்படி, **அன்பு** என்பது வெறுமனே உணர்ச்சியல்ல, மாறாக சித்தத்தினால் செய்யப்படுகின்ற செயலாகும். நாம் **அன்பு** பாராட்டும்படி கட்டளை பெற்றிருக்கிறோம், ஆகவே அதனை நாம் செய்ய இயலும், அதனை நாம் செய்ய வேண்டும், **அன்பு** வேராக இருக்கிறது; **நற்கிரியைகள்** அதனுடைய கனியாகும். நம்முடைய எடுத்துக்காட்டின் மூலமாகவும் போதகத்தின் மூலமாகவும் இத்தகைய வாழ்க்கை வாழும்படி விசுவாசிகளை நாம் **ஏவிவிட** வேண்டும்.

அன்பு பாராட்டும் இதயங்கள் தோட்டங்கள்
அன்பு பாராட்டும் எண்ணங்கள் வேர்கள்
அன்பு பாராட்டும் சொற்கள் பூக்கள்
அதனது கனிகள் நற்செயல்களே!

10:25 சிலர் செய்கிறது போல, நாம் உள்ளூர் சபை ஐக்கியத்திலிருந்து போய்விடாமல், தொடர்ந்து **கூடிவருகிறவர்களாக** இருக்கவேண்டும், சபைக் கூட்டங்களுக்கு வருகை புரிவதில் விசுவாசிகள் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்னும் பொதுவான அறிவுரையாகவே இதனை நாம் கருதக் கூடும். நாம் ஒன்று கூடி ஆராதிக்கும் வேளைகளிலும் பிற கூட்டங்களிலும் ஆற்றல், ஆறுதல், ஊட்டம், மகிழ்ச்சி ஆகியவற்றைக் கண்டடைகிறோம்.

கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்படும் காலங்களில் இவ்வாறு கூடிவருதல் சிறப்பான உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கும் என்னும் பொருளோடும் இவ்வசனத்தைக் காணலாம். கைது செய்யப்படுதல், நித்திக்கப்படுதல், பாடுபடுத்தப்படுதல் ஆகியவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படி ஒருவர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளும்படியான சோதனைக்குட்படலாம், அவ்வாறு செய்வதால் ஓர் இரகசிய விசுவாசியாக இருந்து விடலாம் என்ற எண்ணமும் அவருக்குத் தோன்றக்கூடும்.

ஆனால் இந்த வசனம் விசுவாச மறுதலிப்புக்கு எதிரான எச்சரிப்பாகவே விளங்குகிறது. உள்ளூர் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்வதை விட்டு விடுதல் என்பது கிறிஸ்தவத்திற்கு முதுகைக் காட்டி, யூதமார்க்கத்திற்குத் திரும்பிச் செல்வதே யாகும். இந்த மடல் எழுதப்பட்டபோது சிலர் அவ்வாறு செய்தார்கள், கிறிஸ்துவின் வருகை மிக விரைவாக நிகழப்போகிறது என்னும் உண்மையின் பின்னணியில், ஒருவருக்கொருவர் அறிவுரை வழங்குவது அவசியமானதாயிருக்கிறது. அவருடைய வருகையின் போது, விசுவாசத்தின் நிமித்தம் துன்பப்படுத்தப்பட்டவர்கள், சமுதாயத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டவர்கள், இழிவுபடுத்தப்பட்டவர்கள் வெற்றியின் பக்கமாய் இருப்பார்கள். அதுவரை உறுதியுடைமை தேவை.

10:26 இப்பொழுது நூலாசிரியர் தனது கடுமையான நான்காவது எச்சரிப்பைக் கூறுகிறார். முன்சொல்லப்பட்ட எச்சரிப்புகளில் காணப்படுவது போலவே, இதுவும் விசுவாச மறுதலிப்புக்கு எதிரான எச்சரிப்பே ஆகும். இங்கு அது மனப்பூர்வமாய்ச் செய்த பாவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுபோல, இந்தப் பாவத்தின் உண்மையான இயல்பு பற்றி கிறிஸ்தவர்களுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவு கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அவற்றைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் பிரச்சினையானது:

1. மெய்யான கிறிஸ்தவர்கள், பிற்பாடு கிறிஸ்துவை விட்டு விலகி இழந்து போனவர்கள்.
2. மெய்யான கிறிஸ்தவர்கள், பின்வாங்கிப் போனவர்கள், ஆனால் இன்னமும் இரட்சிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறவர்கள்.
3. சிறிது காலம் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை செய்தவர்கள், ஓர் உள்ளூர் சபையோடு தங்களை இணைத்துக்கொண்டவர்கள், ஆனால் பின்னர் மனப்பூர்வமாய்க் கிறிஸ்துவைவிட்டு விலகிப் போனவர்கள். உண்மையில் அவர்கள் ஒருபோதும் மறுபடியும் பிறக்கவில்லை. இப்பொழுதோ, அவர்கள் இரட்சிக்கப்படவே மாட்டார்கள் என்னும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

எந்தவொரு கருத்தை நாம் கொண்டிருந்தாலும், இப்பகுதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட சில பிரச்சினைகள் உள்ளன. மூன்றாவது கருத்தே சரியானது என்று நாம் கருதுகிறோம். ஏனெனில் எபிரெய நூலிலும், புதிய ஏற்பாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அதுவே முரண்பாடற்ற ஒரேமாதிரியான போதகமாக இருக்கிறது.

இந்த 26 -ஆம் வசனத்தில் விசுவாச மறுதலிப்பு, **சத்தியத்தை அறியும் அறிவைப்** பெற்ற **பிறகு** மனப்பூர்வமாய்ச் செய்கிற பாவம் என்று வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. யூதாசைப் போல அந்த மனிதன் நற்செய்தியைக் கேட்டிருக்கிறான். அவன் இரட்சிப்பின் வழியை அறிந்திருக்

கிறான்; மேலும் அவன் அதனை அடைந்தவன் போல பாவனை செய்துமிருக்கிறான்; அதன் பிறகு அவன் அதனை மனப்பூர்வமாய் மறுத்து ரைக்கிறான்.

அப்படிப்பட்ட மனிதனுக்கு, **பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி** இனியில்லை, என்றென்றைக்குமாகக் கிறிஸ்து செலுத்திய ஒரே பலியை அவன் தீர்மானமாகவும் மனஉறுதியோடும் வேண்டாமென்று நிராகரித்து விட்டான். ஆகவே அவன் இரட்சிக்கப்படுவதற்கு தேவனிடத்தில் வேறொரு வழியில்லை.

ஒருவகையில் எல்லாப் பாவங்களும் மனப்பூர்வமாய்ச் செய்யப்பட்டவையே, ஆனால் விசுவாச மறுதலிப்பு அசாதாரணமான வகையில் பேரிடர் விளைவிக்கக் கூடியதாயிருக்கிறது என்று நூலாசிரியர் இங்கு விவரிக்கிறார்.

நாம் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதால், நூலாசிரியர் தன்னையும் உட்படுத்திப் பேசுகிறார் என்று பொருள்கொள்ளத் தேவையில்லை. 39 - ஆவது வசனத்தில் அவர் திட்டவட்டமாகத் தன்னையும் உடன் விசுவாசிகளையும் அழிவுக்குள்ளாகச் செல்லக் கூடியவர்களிடத்திலிருந்து பிரித்துப் பேசுகிறதைக் காணலாம்.

10:27 நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடு எதிர்பார்த்திருத்தலைத் தவிர வேறு எதுவுமில்லை, தப்புவதற்கு வழி எதுவுமில்லை. விசுவாசத்தை மறுதலித்த மனிதர்கள் மனந்திரும்பும்படி புதுப்பிப்பது கூடாத காரியம் (6:4). அப்படிப்பட்ட மனிதன் கிறிஸ்துவுக்குள்ளான தேவகிருபையிலிருந்து சுய அறிவோடு மனமுவந்து தன்னைத் துண்டித்துக்கொண்டிருக்கிறான். **விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையே** அவனுடைய விதி. இது மெய்யான தீயா அல்லது வேறெதுவுமா என்று வாதாடுவதில் எந்தப் பயனுமில்லை. வரப்போகிற தண்டனை மிகக் கடுமையானதாக இருக்கும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லும்படி சொற்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

விசுவாசத்தை மறுதலித்தவர்களை தேவன் **விரோதிகள்** என்று குறிப்பிட்டுள்ளதைக் கவனியுங்கள். இது நடுநிலைக் கருத்துடைய ஒரு மனிதனைக் குறிப்பிடாமல், ஐயத்திற்கிடமற்ற வகையில் கிறிஸ்துவுக்கு எதிர்த்து நிற்கிற ஒரு நிலையையே குறிக்கிறது என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

10:28 பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியாயப்பிரமாணத்தை மீறியவர்கள் எவ்வாறு அழிவுக்குட்பட்டனர் என்னும் பொருள்பற்றி எடுத்துரைத்து, அதனினும் பெரிதான அழிவை விசுவாசத்தை மறுதலித்தவர்கள் அடைவார்கள் என்று இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விவரிக்கும் படியான ஒரு காட்சியை ஆசிரியர் நம்முன் கொண்டு வருகிறார். சிலைவணக்கம் செய்த மனிதன் மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறினவனாகக் காணப்பட்டு, அப்பாவம் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே மெய்ப்பிக்கப்பட்டு இரக்கத்தைப் பெறாமல் செத்தான் (உபா. 17:2-6).

10:29 விசுவாசத்தை மறுதலித்தவன் கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான், ஏனெனில் அவன் அதிகமான சலுகைகளைப் பெற்றவனாயிருக்கிறான், அவனுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளைக் காணும்போது அவனுடைய பாவத்தின் கொடுமை எவ்வளவு பெரிதென்று தெரிகிறது.

1. அவன் தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்தான். இயேசுவைப் பின்பற்றிச் செல்லுகிறவன் என்று தன்னைக் குறித்து அறிக்கை செய்து விட்டு, அவன் இப்பொழுது ஆணவத்தோடு அவர் இனி எனக்குத் தேவையில்லையென்று கூறுகிறான். இரட்சகர் என்னும் நிலையில் கிறிஸ்து எனக்குத் தேவையில்லை என்று அவரை மறுத்துரைப்பதோடு, அவரைக் கர்த்தர் என்று தான் கருதவில்லையென்று மனப்பூர்வமாய் நிராகரிக்கிறான்.

   ஜப்பான் நாட்டில் கொடுமை இழைக்கப்பட்ட காலத்தில் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட வண்ணம் இருக்கக்கூடிய ஒரு படவுருவத்தை அந்நாட்டு அரசாங்கம் பயன்படுத்தி வந்தது. அதை அவர்கள் தரையில் வைத்து ஒவ்வொருவரும் அதன்மேல் நடந்து, அதில் சிலுவையில் அறையப்பட்டவருடைய முகத்தை மிதித்துச் செல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். அவருடைய முகத்தை மிதித்துச் செல்வதற்குக் கிறிஸ்தவர்கள் அல்லாதோர் தயங்கவில்லை. மெய்யான கிறிஸ்தவர்களோ மறுத்துரைத்து அதனிமித்தம் கொல்லப்பட்டார்கள். இயேசுவின் முகம் கிழிக்கப்பட்டு, படத்தின் மேல் நடந்தவர்கள் மிதித்ததால் அது உருக்குலைந்து போயிற்று என்று அந்தக் கதை கூறுகிறது.

2. அவன் தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணினான். புதிய உடன்படிக்கையை உறுதிசெய்த கிறிஸ்துவின் இரத்தத்தைப்

பயனற்றது என்றும், தூய்மையற்றது என்றும் அவன் கருதினான். இந்த இரத்தத்தினாலேயே அவன் வெளியரங்கமாகத் தனிச் சலுகையைப் பெறக்கூடிய இடத்தில் பிரித்துவைக்கப்பட்டான். அவிசுவாசியான கணவன் விசுவாசியான மனைவியால் பரிசுத்தமாக்கப்படுவதுபோல, கிறிஸ்தவ மக்களோடு அந்த மனிதன் கொண்டிருந்த ஐக்கியத்தின் காரணமாக அவனும் பரிசுத்தமாக்கப்பட்டான் (1கொரி. 7:14). ஆனால் அவன் இரட்சிக்கப்பட்டிருந்தான் என்பது இதன் பொருளன்று.

3. அவன் கிருபையின் ஆவியை நிந்தித்தான். நல்ல செய்தியைக் குறித்த வெளிச்சத்தால் தேவன் அவனை ஒளிபெறச் செய்திருந்தார், அவனுடைய பாவத்தைக் கண்டித்துணர்த்தியிருந்தார், ஆத்துமாவுக்கு ஒரே அடைக்கலமாகிய கிறிஸ்துவை அவனுக்குச் சுட்டிக் காட்டியிருந்தார். ஆனால் அவனோ கிருபையுள்ள ஆவியையும் அவர் அருளும் இரட்சிப்பையும் முற்றிலுமாக ஏளனப்படுத்தி நிந்தித்து விட்டான்.

10:30 தேவனுடைய பிரியமான குமாரனை மனப்பூர்வமாய் மறுத்துரைப்பது அளவு கடந்த மிகப்பெரிய பாவமாகும். இத்தகைய பாவமிழைத்தவர்கள் அனைவர் மேலும் தீர்ப்பு வழங்க தேவன் தமது அரியணையில் வீற்றிருப்பார், "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்று அவர் சொல்லியிருக்கிறார் (உபா. 32:35 -ஆம் வசனத்தைக் காண்க). இந்த வகையில் **பழிவாங்குதல்** என்று குறிப்பிடப்பட்டிருப்பது முழுமையான நியாயம் எனப் பொருள்படும், தேவனைக் குறித்து இவ்வாறு கூறும்போது, அங்கே "பழிக்குப்பழிவாங்குதல்" என்னும் எண்ணத்திற்கு இடமில்லை, கெடுநோக்குடன் தேவன் செயல்படுவார் என்றும் எண்ணலாகாது. ஒரு மனிதன் எதனைப் பெறுவதற்குத் தகுதியாயிருக்கிறானோ, அவனுக்கு அது கொடுக்கப்படும் என்பதே இதன் பொருளாகும். தேவனுடைய குணத்தை அறிந்தவர்களாக, விசுவாசத்தை மறுதலித்தவன், அவர் ஏற்கனவே கூறியிருப்பது போல, நியாயமான அளவிற்குத் தண்டிக்கப்படுவான் என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார். மெய்யாகவே தம்முடைய மக்களாக இருக்கக்கூடியவர்களுக்காக தேவன் பழிவாங்குபவராக, அவர்களைப் பழியினின்று விடுவித்து வெற்றி சிறப்பவராகச் செயல்புரிவார். இங்கு தீய மக்களை அவர் நியாயந்தீர்ப்பார் என்பதே பொருளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

விசுவாசத்தை மறுதலித்தவர்கள் இங்கு "**தம்முடைய ஜனங்கள்**" என்று குறிப்பிடப்பட்டிருப்பது, நமது சிந்தனைக்குத் தொல்லையைக் கொடுக்குமென்றால், அவர்கள் அவரால் படைக்கப்பட்டதாலும் சிறிது காலம் அவரை அறிக்கை செய்தவர்களாக இருந்ததாலும், அவர்கள் அவருடைய மக்களே ஆவார்கள். அவர் அவர்களுடைய படைப்பாளர், அவர்களுடைய மீட்பர் அல்லர்; அவருடைய மக்கள் என்று அவர்கள் தங்களைக் குறித்து ஒருமுறை அறிக்கைசெய்திருந்தார்கள், ஆயினும் அவர்கள் தனிப்பட்ட முறையில் அவரை அறிந்திருக்கவில்லை.

10:31 நம் எல்லோருக்கும் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டிய பாடம் இதுவே: நியாயந்தீர்க்கப்படும்படி **தேவனுடைய கைகளில்** விழக்கூடிய மக்களின் நடுவில் நாம் இருக்கக் கூடாது, ஏனெனில் அது **பயங்கரமாயிருக்கும்.**

மெய்யாகவே கிறிஸ்துவுக்குச் சொந்தமான வர்களுடைய உள்ளங்களைத் தொல்லைக்குட்படுத்தி நிலைகுலையச் செய்வது இந்த வேதப் பகுதியின் நோக்கமல்ல, அத்தகைய குறிப்பு எதுவும் இங்கில்லை. கிறிஸ்துவை அறிக்கை செய்கிற எல்லோரும், அவரை விட்டு விலகிச் செல்வதால் உண்டாகக்கூடிய பயங்கரமான விளைவுகளைக் குறித்து எச்சரிக் கப்படவேண்டும் என்னும் நோக்கத்துடன் இந்தப் பகுதி கடுமையாகவும், ஆராய்ந்து பார்க்கும்படி யாகவும், அறைகூவல் விடுக்கும் மொழியிலும் எழுதப்பட்டுள்ளது.

10:32 இந்த அதிகாரத்தின் எஞ்சிய வசனங்களில், யூதக் கிறிஸ்தவர்கள் ஏன் தொடர்ந்து மிக உறுதியோடு கிறிஸ்துவினிடத்தில் பற்றுடன் இருக்க வேண்டும் என்பதற்கான வலிமையான மூன்று காரணங்களை நூலாசிரியர் தருகிறார்.

1. அவர்களுடைய முந்தின அனுபவங்கள் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

2. பரிசுப்பொருள் மிகவிரைவில் கிடைக்கப் போவதால், அது அவர்களை பலப்படுத்த வேண்டும்.

3. தேவன் சினங்கொள்வார் என்னும் அச்சம் அவர்கள் திரும்பிச் செல்லாதபடி அவர்களைத் தடை செய்ய வேண்டும்.

முதலாவதாக, அவர்களுடைய முந்தின அனுபவங்கள் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்கள் கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசத்தைக் குறித்து அறிக்கை செய்த பிறகு, அவர்கள் கடுமையான உபத்திரவத்திற்கு இலக்கானார்கள்: அவர்களுடைய குடும்பத்தினர் அவர்களைச் சொந்தக்காரர்கள் அல்லவென்று புறக்கணித்தார்கள், அவர்களுடைய நண்பர்கள் அவர்களைக் கைவிட்டுவிட்டார்கள், அவர்களுடைய எதிரிகளோ அவர்களைத் தொடர்ந்து சென்று வேட்டையாடினார்கள். ஆனால் இந்த உபத்திரவங்கள் அவர்களிடத்தில் கோழைத்தனத்தையும் அச்சத்தையும் உண்டாக்குவதற்குப் பதிலாக, அவர்களுடைய விசுவாசத்தில் அவர்களை உறுதிப்படுத்தின. அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டார்கள் என்னும் நினைவு அவர்களை உற்சாகப்படுத்தியது என்பது திண்ணம் (அப். 5:41).

10:33 சிலவேளைகளில் அவர்கள் அடைந்த துன்பம் தனிப்பட்டதாயிருந்தது; அவர்கள் தனியாகக் கொண்டுசெல்லப்பட்டு வெளியரங்கமாகப் பழிச்சொல்லுக்கும் பாடுகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். வேறு சமயங்களில், அவர்கள் மற்ற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து பாடு அனுபவித்தார்கள்.

10:34 கிறிஸ்துவுக்காகச் சிறையில் அடைக்கப்பட்டவர்களோடு தொடர்பு கொள்வதால் குற்றவாளிகளென்று தீர்க்கப்படக்கூடிய ஆபத்து இருந்தபோதிலும் அவர்களைச் சந்திக்கக் கிறிஸ்தவர்கள் அச்சமடையவில்லை.

அதிகாரிகளால் அவர்களுடைய உடைமைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டபோது, அவர்கள் அதை **சந்தோஷமாய்** ஏற்றுக்கொண்டார்கள். தங்களுடைய உடைமைப்பொருட்களைப் பாதுகாக்கவேண்டும் என்னும் எண்ணத்திலும், இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையாக இருக்கவேண்டும் என்பதையே அவர்கள் தெரிந்துகொண்டார்கள். தங்களுக்கு அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரம் உண்டென்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள் (1 பேதுரு 1:4). இவ்வுலகிற்குரிய சொத்துகளை இவ்வளவு குறைவாக மதிக்கும்படியான எண்ணத்தை அவர்கள் பெற்றிருக்கச் செய்தது உண்மையாகவே தேவ கிருபையின் அற்புதச் செயலேயாகும்.

10:35 இரண்டாவது மிகப் பெரிய காரணம் இதுவே: பரிசுப்பொருள் மிக விரைவில் கிடைக்கப்போகிறது என்னும் எண்ணம் அவர்களைப் பலப்படுத்த வேண்டும். கடந்த நாட்களில் இவ்வளவாகப் பாடு அனுபவித்த பிறகு, அவர்கள் இப்பொழுது பகைஞனுக்குக் கீழ்ப்படிந்துவிடக் கூடாது. "கண்ணீரின் அறுவடையைத் தவற விடாதீர்கள்" என்னும் பொருளோடு ஆசிரியர் பேசுகிறார் (F.B. மேயர்). இதுவரை இல்லாத அளவிற்கு இப்பொழுது இறைவனின் வாக்குறுதியைப் பெற மிக அருகில் இருக்கிறார்கள். பின்னிட்டுத் திரும்ப இதுவல்ல சமயம்.

"உங்களுடைய நம்பிக்கையை நீங்கள் தூக்கி எறிந்து விடாதீர்கள். வரப் போகிற உலகத்தில் கிடைக்கவிருக்கும் மிகப்பெரிய பரிசுப் பொருளை அது சுமந்துகொண்டிருக்கிறது" (JBP).

10:36 அவர்களுடைய தேவையெல்லாம் **பொறுமையோடு** காத்திருப்பதேயாகும். அதாவது கிறிஸ்துவை மறுத்துரைத்துத் துன்பங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதல்ல, துன்பங்களைச் சகித்தவர்களாக அதில் நீடித்திருப்பதைத் தங்களுடைய தீர்மானமாகக் கொண்டிருப்பதே அவர்கள் செய்ய வேண்டியது. தேவனுடைய சித்தத்தின்படி செய்த அவர்கள் அதன் பிறகு வாக்குரைக்கப்பட்ட பரிசைப் பெறுவார்கள்.

10:37 கர்த்தராகிய இயேசு மீண்டும் வருகிற நிகழ்ச்சியும், பரிசுப்பொருள் வழங்கும் நிகழ்ச்சியும் ஒரே காலத்தில் நடைபெறப் போகின்றன; எனவே தான் "வருகிறவர் இன்னுங் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம் பண்ணார்" என்னும் மேற்கோள் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது (ஆபகூக் 2:3). ஆபகூக் நூலில் அவ்வசனம், "குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" என்று காணப்படுகிறது.

இந்த வசனம் இவ்வாறு மாற்றி எழுதப்பட்டிருப்பதைக் குறித்து வின்சன்ட் என்பார் கூறுவதாவது:

> எபிரெய மொழிப் பழைய ஏற்பாட்டின்படி மேற்காணும் பகுதியின் கருப்பொருள், கல்தேயர் அடியோடு அழிக்கப்படுதலாகிய தண்டனையைக் குறித்த தரிசனமாகும்... ஆனால் எழுபதின்மரின் பழைய ஏற்பாட்டில் இப்பகுதியின் கருப்பொருளாயிருப்பவர் யெகோவா அல்லது மேசியாவாக இருக்க வேண்டும். பிற்காலத்து

யூத இறையியல் வல்லுநர்கள் இந்தப் பகுதி மேசியாவையே குறிக்கிறது என்று சொல்லி யிருப்பதால் நமது நூலாசிரியரும் அவ்வா றான பொருளிலேயே அந்த வசனத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்.[20]

A.J. போலக் என்பார் இவ்வாறு விவரிக்கிறார்:

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இந் தப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் ஒன்று போலவே தேவ ஆவியின் ஏவுதலைப் பெற்றவை, மேலும் அவை வேதம் என்னும் நிலையில் சமமானவை. ஆபகூக்கில் அது என் னும் சொல் தரிசனத்தை, அதாவது, கிறிஸ்து அரசாட்சி செய்யும்படி வரவிருப்பதைக் குறிக் கிறது. ''அது'' என்னும் சொல் ''அவர்'' என்று எபிரெய மடலில் மாற்றம் பெற்று விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியைக் குறிக் கிறது.

பின்னர் அவர் பொதுவானதொரு கருத்தை வழங்குகிறார்:

தேவ ஆவியின் ஏவுதலைப்பெற்ற புதிய ஏற் பாட்டு நூலாசிரியர் ஒருவர் பழைய ஏற்பாட்டு வசனத்தை மேற்கோளாகப் பயன்படுத்துகிற போது, அதற்கு முரண்பட்டு ஒன்றையும் ஒருக் காலும் எழுதாமல், தெய்வீக நோக்கத்திற்குத் தகுந்தாற்போல பழைய ஏற்பாட்டில் இருக்கிறது போலவே பெரும்பாலும் அதனைப் பயன் படுத்துகிறார். எனினும் பழைய ஏற்பாட்டில் அப்பகுதி என்ன பொருளைத் தருகிறதோ, அதே பொருளைக் கொண்டிராமல், புதிய ஏற்பாட்டில் தூய ஆவியானவர் எதைத் தெரிவிக்க வேண் டும் என்று விரும்புகிறாரோ அந்தப் பொருளை முழுமையாக வெளிப்படுத்தும்படி அவ்வப் போது சற்று மாற்றி எழுதுகிறார். ... இப் பொழுது, தேவனைத் தவிர வேறு எவரும் இவ் வாறு வேதவசனங்களை மாற்றிக் கையாளக் கூடாது. உண்மையில் அது அவ்வாறு செய் யப்பட்டுள்ளது, பெருமளவில் செய்யப்பட்டுள் ளது, தேவ ஆவியின் ஏவுதலால் செய்யப்பட் டுள்ளது என்பதற்கான மேலும் ஓர் உரிமை கோரலாக அது இருக்கிறது. தேவனே திரு மறையின் ஆசிரியர். அவர் தமது சொந்தச் சொற்களை மேற்கோளாகப் பயன்படுத்தலாம், அவர் தமது நோக்கத்திற்குத் தகுந்தாற்போல அவற்றை மாற்றவோ அவற்றுடன் சேர்க்கவோ செய்யலாம். ஆனால் நாம் வேதவசனத்தை மேற்கோளாகப் பயன்படுத்தும்போது மிக நுட்ப மானபடி கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். அதில் ஒரு சிறு எழுத்தையோ ஒரு எழுத்தின் உறுப்பையோ மாற்றுவதற்கு நமக்கு அதிகார மில்லை. ஆனால் திருமறையின் ஆசிரிய ருக்கு அந்த அதிகாரம் உண்டு. அவர் எந்த எழுது கோலைப் பயன்படுத்துகிறார் என்பது ஒரு பொருட்டன்று, அது மோசேயாக அல்லது ஏசா யாவாக இருக்கலாம், பேதுருவாக அல்லது பவுலாக இருக்கலாம், மத்தேயுவாக அல்லது யோவானாக இருக்கலாம்; அவையாவும் அவ ரால் எழுதப்பட்டவை.[21]

10:38 அவர்கள் உறுதியோடு நிலைத்திருக்க வேண்டும் என்பதற்கான கடைசிச் செயலூக்கம் தேவன் சினங்கொள்வார் என்னும் அச்சமே யாகும். ஆபகூக் நூலிலிருந்து மேற்கோளைத் தொடர்கிற நூலாசிரியர், தேவனைப் பிரியப் படுத்துகிற வாழ்க்கை விசுவாச வாழ்க்கையே என்று சுட்டிக்காட்டுகிறார்; **விசுவாசத்தினாலே நீதிமான்**[22] **பிழைப்பான்**. இது தேவனுடைய வாக் குறுதிகளை மதிக்கிற வாழ்க்கை; காணாதவற் றைக் காண்பது போலவும், இறுதிவரை பாதுகாக் கும் வாழ்க்கையாகவும் இது விளங்கும்.

இதற்கு மாறாக, மேசியாவை வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, வழக்கற்றுப்போன தேவா லய பலிமுறைகளிடமாய்த் திரும்பிச் செல்லுகிற வாழ்க்கை தேவனைச் சினங்கொள்ளச் செய்யும் வாழ்க்கையாகும்: **பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது**.

10:39 கெட்டுப்போகும்படி பின்வாங்குகிற வர்களிடத்திலிருந்து இந்நூலாசிரியரும் அவரு டைய உடன்விசுவாசிகளும் விரைவாகத் தொடர் பைத் துண்டித்துக்கொள்கிறார்கள். இச்செயல் மெய்யான விசுவாசிகளிடத்திலிருந்து விசு வாசத்தை மறுதலிக்கிறவர்களைப் பிரித்து வேறு படுத்திக் காண்பிக்கிறது. விசுவாசத்தை மறு தலிக்கிறவர்கள் **பின்வாங்கி** இழந்து போகிறார் கள். மெய்யான விசுவாசிகளோ கொள்கை களைக் கைவிட்டுவிட்டு முன்னிருந்த நிலைக்குத் திரும்பிப் போனவர்கள் அடையப் போகிற அழிவி லிருந்து **விசுவாசத்தினாலே** தங்களுடைய ஆத்துமாக்களைக் காத்துக் கொள்கிறார்கள்.

விசுவாசம் இவ்விதமாகக் குறிப்பிடப்பட்டு ("நம்பிக்கை" மற்றும் "விசுவாசம்" ஆகிய இரண்டு சொற்களுக்கும் கிரேக்க மொழியில் வேர்ச் சொல் ஒன்றுதான்.) தேவனைப் பிரியப்படுத்தக் கூடிய வாழ்க்கையைக் குறித்து முழுவிவரத் துடன் விளக்கிக் கூறுவதற்கான அடித்தளம் இடப் படுகிறது. இத்தருணத்தில் சிறப்பு வாய்ந்த பதி னோராவது **அதிகாரம் தொடர்வது** முழுவதும் இயல்பானதே.

ஆ. பழைய ஏற்பாட்டு எடுத்துக் காட்டுகளின் மூலம் விசுவாசிப்பதற்கான அறிவுரை [அதி. 11]

11:1 விசுவாசத்தின் பார்வை மற்றும் அதனு டைய உளவலிமை ஆகியவை குறித்து இந்த அதிகாரம் விவரிக்கிறது. விசுவாசத்தினிமித்தம் உண்டாகக்கூடிய அவமானத்தையும் துன்பங் களையும் தவிர்க்கும் பொருட்டுத் தங்களுடைய விசுவாசத்தைப் புறக்கணித்துத் தள்ளிவிடாமல் அவற்றைச் சகிக்கும் உளவலிமையோடும், பரி பூரண ஆவிக்குரிய பார்வையோடும் வாழ்ந்த பழைய ஏற்பாட்டு ஆடவரையும் பெண்டிரையும் இது நமக்கு அறிமுகப்படுத்துகிறது.

முதல் வசனம் மெய்யாகவே **விசுவாசத்தின்** முறையான வரையறையல்ல; மாறாக விசுவாசம் நமக்கு என்ன செய்கிறது என்பதைப் பற்றிய விளக்கமாகவே அது இருக்கிறது. **நம்பப்படுகிற வைகளை** நாம் ஏற்கனவே அடைந்தாற்போல மெய்யானவையாக அது மாற்றிவிடுகிறது, மேலும் அது காணப்படாதவை அதாவது, கிறிஸ்தவத் தின் ஆவிக்குரிய நன்மைகள் முழுவதும் நிச்சய மானவை, மெய்யானவை என்பதற்கான அசைக்க முடியாத **உறுதியைத்** தருகிறது. இதனைச் சுருங் கக் கூறுவோமெனில், அது எதிர்காலத்தை நிகழ் காலத்திற்குள்ளாகக் கொண்டுவருகிறது, காணப் படாதவற்றைக் காணச் செய்கிறது.

தேவனுடைய நம்பகத் தன்மையின்மேல் கொண்டிருக்கக் கூடிய நிச்சயமே **விசுவாசம்** ஆகும். தேவன் என்ன உரைக்கிறாரோ அது உண்மை என்றும் அவர் தருகிற வாக்குறுதி நிறை வேறும் என்றும் உறுதியாக நம்புவதே விசுவாசம்.

தேவனிடத்திலிருந்து சில வெளிப்பாடுகளை யும், சில வாக்குறுதிகளையும் விசுவாசம் அடித் தளமாகக் கொண்டிருக்க வேண்டும். இருளுக் குள்ளாகத் தாவிக் குதிப்பதல்ல விசுவாசம். இப் பிரபஞ்சத்தில் அது மிக நிச்சயமான சான்றை எதிர் பார்க்கிறது, அதனை தேவனுடைய திருமறை யில் அது கண்டடைகிறது. நடக்கக் கூடியவை என்னும் எல்லைக்குள் அது கட்டுப்படுத்தி வைக் கப்படவில்லை, மாறாக நடக்க முடியாதவை என் னும் எல்லைக்குள்ளாக நுழைந்து அது தாக்கு கிறது. "நடக்கக் கூடியவை முடிவுற்றபிறகே விசு வாசம் தொடங்குகிறது. ஒன்று நடைபெறக் கூடி யது என்றால் அதில் தேவனுக்குப் புகழ்ச்சி யில்லை" என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

> இறைவன் கொடுத்த வாக்குறுதி
> நம்பிக்கை அதனைக் காண்கிறது,
> இறைவனை மட்டுமே காண்கிறது
> அதுவே வல்ல நம்பிக்கை!
>
> நிறைவேறா என்னும் சொற்களைக்
> கேட்கும் போது சிரிக்கிறது,
> "நிறைவேறும்" என்னும் சொற்களைச்
> சத்தமாய் ஒலிக்கச் செய்கிறது!

விசுவாச வாழ்க்கையில் பல இன்னல்களும் இடர்ப்பாடுகளும் உள்ளன. நம்முடைய விசு வாசம் மெய்யானதா என்பதை தேவன் உலைக் களத்தில் சோதித்துப் பார்க்கிறார் (1 பேதுரு 1:7). "விசுவாசம் ஊட்டம் பெறுவதற்கான உணவுப் பிரச்சினையேயாகும்" என்று திருவாளர் ஜார்ஜ் முல்லர் கூறினார்.

11:2 தரிசித்து நடக்காமல் விசுவாசித்து நடந்த தால், பழைய ஏற்பாட்டுப் பெருந்தகையோர் தெய் வீகப் பாராட்டைப் பெற்றார்கள். இந்த அதிகாரத் தின் எஞ்சிய பகுதி, தேவன் எவ்வாறு அவர்களுக் குச் சான்று வழங்கினார் என்பதற்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறது.

11: 3 படைப்பைப் பற்றிய உண்மையான விவ ரங்களை **விசுவாசம்** தருகிறது. தேவன் ஒருவர் மட்டுமே அங்கு இருந்தார்; அது எவ்வாறு நிறை வேறியது என்பதை தேவன் நம்மிடம் கூறுகிறார். நாம் அவருடைய சொற்களை விசுவாசிக்கிறோம், அவ்வாறாக அந்த விவரங்களை நாம் அறிந் திருக்கிறோம். "பருப்பொருட்களுக்கு முன்ன தாகவே தேவன் இருந்து வருகிறார், அவருடைய எதேச்சதிகார ஆணையினாலே அவை உண்டா யின என்னும் கருத்து, காரண காரியங்களை ஆராய்ந்து பார்ப்பது அல்லது நடைமுறைப்படுத் திக் காண்பிப்பது போன்ற அறிவுத் துறைக்கு அப்பாற்பட்ட உண்மை. அது விசுவாசம் என்னும் செயலாலே எளிய முறையில் ஏற்றுக்கொள்ளப் படுகிறது" என்று மேக் க்யூ என்பார் கூறுகிறார்.

விசுவாசத்தினாலே நாம் அறிந்திருக்கி றோம். "காண்பதே நம்பிக்கை" என்று இந்த

உலகம் கூறுகிறது. "நம்பிக்கையே காண்பது" என்று தேவன் கூறுகிறார். "நீ விசுவாசித்தால் . . . . காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில் லையா" என்று இயேசு மார்த்தாளிடம் கூறினார் (யோவான் 11:40). "நீங்கள் அறியும்படிக்கு . . . விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதினேன்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் எழுதினார் (1 யோவான் 5:13). ஆவிக்கு ரிய விஷயங்களில் விசுவாசம் அறிவுத்திறத் திற்கு முந்தியது.

உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டன. தேவன் பேசினார், பருப் பொருள் உண்டாயிற்று. பருப்பொருள் உண்மை யில் ஆற்றல் கொண்டதாய் இருக்கிறது என்னும் மனிதனுடைய கண்டுபிடிப்போடு இது முழுவதும் இசைவுடையதாய் இருக்கிறது. தேவன் பேசிய போது, ஒலி அலைகளாக ஆற்றல் வெளிப்பட்டது. அவை பருப்பொருளாக மாற்றமடைந்தன, அப் பொழுது உலகங்கள் உண்டாகத் தொடங்கின.

காணப்படுகிறவை தோன்றப்படுகிறவை களால் உண்டாகவில்லை. ஆற்றலைக் காண முடியாது; அது போலவே அணுக்கள் பரமாணுக் கள் மற்றும் வாயு ஆகியவற்றை வெறுங்கண் ணால் காணமுடியாது. ஆனாலும் அவை ஒன்று கூட்டப்பட்ட நிலையில் காணக்கூடியவையாக மாற்றமடைகின்றன. இந்த வசனத்தில் படைப் பைப் பற்றிய விவரங்கள் தெளிவாய்ச் சொல்லப் பட்டுள்ளன. இது மறுத்துரைக்கப்படுவதற்கு அப் பாற்பட்டது. இந்த உண்மைகளை இதனினும் மேலான வகையில் கூறவும் இயலாது.

11:4 கனத்திற்குரிய விசுவாச மக்களுடைய பட்டியலில் ஆதாம், ஏவாள் ஆகிய பெயர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. உண்மை பேசுவது தேவனா பிசாசா என்று முடிவெடுக்க வேண்டிய தருணம் ஏவாளுக்கு ஏற்பட்டபோது, சாத்தான் என்று அவள் முடிவு செய்தாள். ஆயினும், அதன் பிறகு அவர்கள் விசுவாசத்தினாலே இரட்சிக்கப் பட்டார்கள் என்பது மறுத்துரைக்கப்படவில்லை. அவர்களுடைய இரட்சிப்பு தோலினால் ஆன ஆடையில் படவுருவாக விவரிக்கப்பட்டுள்ளது.

பாவமுள்ள மனிதன் இரத்தம் சிந்தப்படுவதன் அடிப்படையில் மட்டுமே தேவனை அணுகமுடி யும் என்பதைக் குறித்த வெளிப்பாட்டை ஆபேல் எவ்வாறோ பெற்றிருந்தான். ஒருவேளை இதனை அவன் தன்னுடைய பெற்றோரிடத்திலிருந்து பெற் றிருக்கக் கூடும். அவர்கள் மிருகங்களுடைய தோலினால் செய்யப்பட்ட ஆடை அணிவிக்கப் பட்டு தேவனோடு முன்னிருந்த ஐக்கியத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள் (ஆதி. 3:21). அவன் எவ்வாறு அந்த வெளிப்பாட்டைப் பெற்றிருந் தாலும், அவன் தேவனை நெருங்கிய போது ஒரு **பலியின்** இரத்தத்தோடு சென்று தன்னுடைய **விசுவாசத்தை** வெளிப்படுத்தினான்.

காயீன் செலுத்திய பலி காய்களிலிருந்தோ பழங்களிலிருந்தோ எடுக்கப்பட்டவை, ஆகவே அந்தப் பலியில் இரத்தம் இல்லை. கிருபை யினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிப்பு உண்டாகிறது என்னும் உண்மையை ஆபேல் உருவகப்படுத்திக் காட்டினான். நற்கிரியை களால் ஒருவன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியும் என்னும் பயனற்ற மனித முயற் சிக்குக் காயீன் படவுருவாய் இருந்தான்.

"ஆபேலின் தனிப்பட்ட மேம்பாட்டைக் கருத் திற்கொண்டு அவனை நீதிமான் என்று தேவன் கருதவில்லை; மாறாக அவன் கொண்டு வந்த பலியையும் அதன் மூலம் அவன் காட்டிய விசு வாசத்தையும் கருத்திற்கொண்டே அவன் நீதி மான் என்று கணக்கிடப்பட்டான்" என்று ஜார்ஜ் கட்டிங் என்பார் சுட்டிக்காட்டுகிறார். நம்மைக் குறித்தும் அதுவே உண்மையாயிருக்கிறது: நம்முடைய நடத்தையினாலோ நற்கிரியை யினாலோ நாம் நீதிமான்களாக்கப்படவில்லை. மாறாக, கிறிஸ்துவின் பலியின் மேதகைமையின் காரணத்தினாலேயே நாம் நீதிமான்களாக்கப்பட் டிருக்கிறோம், அவருக்குள்ளாக ஏற்றுக்கொள் ளப்பட்டும் இருக்கிறோம்.

நியாயப் பிரமாணம் கிருபையை வெறுப்பதால் காயீன் ஆபேலைக் கொலைசெய்தான். ஒரு வனால் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள முடியாது, அவன் இரட்சிப்பைப் பெறுவதற்கு தேவ னுடைய அன்பு, இரக்கம் ஆகியவற்றினிடமாய் தன்னை முழுமையாக ஒப்புவிக்க வேண்டும் என்னும் உண்மையை, தான் நீதிமான் என்று கருதுகிறவன் வெறுக்கிறான்.

ஆனால் ஆபேலின் சாட்சி நிலைபேறு உடை யதாக நிறுவப்பட்டிருக்கிறது: அவனுடைய **விசு வாசத்தினாலே** அவன் **இன்னும் பேசுகிறான்.** ஒருவனுடைய உடல் கல்லறையில் கிடத்தப்பட்டு வெகுகாலத்திற்குப் பிறகும் அவனுடைய குரல் வளையின் அதிர்வு நாளங்கள் தொடர்ந்து செயல்புரியும்படியான ஆற்றலை அவனுக்கு அவனுடைய விசுவாசமே தருகிறது.

11:5 ஏனோக்கு சாவைச் சந்திக்காமலேயே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவான் என்

னும் வாக்குறுதியை அவன் இப்புவியில் வாழ்ந்த போது ஏதோ ஒரு சமயத்தில் தேவனிடத்தி லிருந்து பெற்றான். அந்நாள் வரையிலும் ஒவ் வொரு மனிதனும் ஏதோ ஒரு நாளில் இறந்து கொண்டுதான் இருந்தான். எவனொருவனும் சாவைச் சந்திக்காமல் **எடுத்துக்கொள்ளப்பட்ட தாக** ஏதொரு குறிப்பும் இல்லை. ஆனால் தேவன் வாக்குறுதி தந்தார், ஏனோக்கு விசுவாசித்தான். அதுவே ஏனோக்கு செய்யத்தக்க மிகவும் விவேக முள்ள, நியாயமான செயலாயிருந்தது. படைப்பு படைப்பாளரை நம்புவதைப் பார்க்கிலும் பகுத் தறிவுக்கு ஏற்ற செயல் வேறு எதுவுமில்லை.

அது அவ்வாறே நிகழ்ந்தது! காணக்கூடாத தேவனோடு ஏனோக்கு முந்நூறு ஆண்டுகள் நடந்தான் (ஆதி. 5:21-24). அதன் பிறகு அவன் நித்தியத்திற்குள் புகுந்தான். **அவன் தேவனுக் குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற் றான்.** விசுவாச வாழ்க்கை எப்பொழுதும் தேவனைப் பிரியப்படுத்துகிறது; தேவன் தாம் நம்பப்படுவதில் பிரியம்கொள்கிறார்.

11:6 விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். எந்த அள விற்கு நற்செயல்கள் செய்தாலும், அது விசு வாசம் இல்லாமையை ஈடுசெய்யாது. இவ்வளவு கூறிய பிறகும், ஒரு மனிதன் தேவனை விசு வாசிக்கவில்லை என்றால், அவன் அவரைப் பொய்யர் என்று அழைக்கிறவனாக இருக்கிறான். "தேவனை விசுவாசியாதவனோ . . . அவரைப் பொய்யராக்குகிறான்" (1 யோவான் 5:10). தேவனைப் பொய்யர் என்று அழைக்கிற மனிதர்களிடத்தில் அவர் எவ்வாறு பிரியமாயிருக்க முடியும்?

விசுவாசம் ஒன்று மட்டுமே தேவனுக்குரிய இடத்தை அவருக்குக் கொடுக்கிறது, மேலும் அது மனிதனுக்குரிய இடத்தில் அவனை வைக்கிறது. "இது தேவனுக்கு மிக அதிகமான அளவிற்குப் புகழ்ச்சியைத் தருகிறது, ஏனெனில் நம்முடைய சொந்தப் பார்வையைக் காட்டிலும், தேவனுடைய பார்வையில் நாம் அதிக நம்பிக்கை கொண்டிருக் கிறோம் என்று இது மெய்ப்பிக்கிறது" என்று திருவாளர் C.H. மெக்கின்டோஷ் எழுதுகிறார்.

தேவன் இருக்கிறார் என்று மட்டுமின்றி, **அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக் கிறவர்** என்றும் விசுவாசம் நம்புகிறது. மனிதன் விசுவாசிக்கக் கூடாதபடி தேவனைப் பற்றிய செய்தி ஒன்றுமில்லை. மனிதனுடைய எண்ணத் தில்தான் பிரச்சினை இருக்கிறது.

11:7 பூமியில் இருந்த அனைத்தையும் பெரு வெள்ளத்தினால் அழிக்கப்போவதாக தேவன் கொடுத்த எச்சரிப்பை அடிப்படையாகக் கொண்டு **நோவாவின் விசுவாசம்** இருந்தது (ஆதி. 6:17). மனித வரலாற்றில் அதுவரை வெள்ளம் ஏற்பட்ட தில்லை, உண்மையில், அதுவரை மழையே பெய்ததில்லை என்று நம்புவதற்கே காரணம் இருக்கிறது (ஆதி. 2:5,6). நோவா தேவனை விசுவாசித்தான், அவன் கப்பல் ஓட்டுவதற்கு ஏற்ற நீர்நிலையைவிட்டு வெகு தொலைவில் இருந்த போதிலும் ஒரு பேழையை உண்டுபண்ணினான். அவன் பலருடைய கேலிக்குரிய பொருளாக இருந்திருப்பான் என்பதில் ஐயமில்லை. ஆனால் நோவாவின் விசுவாசத்திற்குரிய பலன் கிடைத் தது: அவனுடைய **குடும்பம்** இரட்சிக்கப்பட்டது. அவனுடைய வாழ்க்கையினாலும் சாட்சியினா லும் **உலகம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டது.** மேலும் அவன் **விசுவாசத்தின் அடிப் படையில் உண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளி யானான்.**

தொடக்க நாட்களில் யூதக் கிறிஸ்தவர்கள் தாங்கள் சரியான கோட்பாட்டைப் பின்பற்றுகிற வர்களாக இருந்தார்கள் எனில், ஏன் அவர்களு டைய தொகை இவ்வளவு குறைவாக இருந்தது என்று ஆச்சரியப்பட்டிருப்பார்கள், அத்தகைய மக்களுக்கே இம்மடல் எழுதப்பட்டது. பழைய ஏற்பாட்டு நூலிலிருந்து நோவா வெளியே வந்து அவனுடைய நாட்களில் எட்டுப்பேர் மட்டுமே சரி யானவர்களாக இருந்தார்கள் என்றும் எஞ்சிய மக்கள் அனைவரும் அழிந்து போனார்கள் என்றும் அவர்களுக்கு நினைவுறுத்தினான்.

11:8 ஆபிரகாமுக்குத் தேவன் தரிசனமாகி, அவன் வசித்துவந்த கல்தேயருடைய நாட்டிலி ருந்த ஊர் என்னும் ஊரிலிருந்து அவனைப் புறப்பட்டுச் செல்லும்படியாகக் கூறியபோது, அவன் சிலை வணக்கம் செய்கிறவனாகவே இருந்திருப் பான் என்றே தோன்றுகிறது. **விசுவாசத்தின்** கீழ்ப்படிதலினாலே, அவன் அந்த நாட்டைவிட்டு எந்த இடத்திற்குச் செல்கிறோம் என்பதை **அறி யாமல் புறப்பட்டுப் போனான்.** அவனுடைய மதியீனத்தைக் கண்டு அவனுடைய நண்பர்கள் அவனை ஏளனஞ் செய்திருப்பார்கள், ஆனாலும் அவனுடைய மனோபாவம் இவ்வாறு இருந்தது:

செல்லும் இடத்தை அறியேனே
தெரிந்தால் அங்கு செல்வேனோ?
தனிமையில் ஒளியில் நடப்பதிலும்,

துணிவுடன் அவருடன் நடந்திடுவேன்!
தரிசித்துத் தனிமையில் நடப்பதிலும்,
பரிசுத்தர் வழியினில் நடந்திடுவேன்!

– ஹெலன் ஆனிஸ் கேஸ்டர் லைன்

விசுவாச வாழ்க்கை அவ்வப்போது பிறருக்கு விவேகமற்ற செயல் என்றும், எண்ணாமல் துணிந்து செய்கிற செயல் என்றும் தோன்றும். ஆனால் தேவனை அறிந்த மனிதன் கண்மூடப்பட்டவனாக, **தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல்** போவதில் மனநிறைவு அடைகிறான்.

11:9 கானான் நாட்டைத் தருவதாக தேவன் ஆபிரகாமுக்கு வாக்குறுதி தந்தார். உண்மையான பொருளில் அந்த நாடு அவனுக்குச் சொந்தமாயிற்று. ஆனாலும் அந்த நாட்டில் அவன் தனக்குச் சொந்தமாக வாங்கிய இடம் தன்னுடைய மனைவியின் உடலை அடக்கம் பண்ணுவதற்கான ஒரு கல்லறைப் பூமியே ஆகும். அவன் அங்கு பரதேசியாய் அலைந்தான் என்பதற்கு அடையாளமாகக் கூடாரங்களிலே வசித்தான், நிரந்தரமான குடியிருப்பு அவனுக்கு இல்லை. தற்போதைக்கு அவன் **கானான்** நாட்டை அந்நிய நாடு என்றே கருதினான்.

பரதேசியாய் அலைந்த இந்த மனிதனோடு சென்றவர்கள் அவனுடைய மகனும் பேரனுமே ஆவார்கள். கானான் நாடானது அவர்களுக்குச் சொந்தமானது என்னும் **வாக்குத்தத்தத்திற்கு** அவர்கள் **உடன் சுதந்தரராக** இருந்த போதிலும், அவர்களிடத்திலும் ஆபிரகாமின் தேவபக்தியின் அடையாளம் காணப்பட்டது.

11:10 நிலவுடைமைகளில் ஆபிரகாம் பற்றற்றவனாக இருந்ததற்குக் காரணம் என்ன? **ஏனெனில் தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள** அந்த **நகரத்திற்காக அவன் காத்திருந்தான்**. அவன் தன்னுடைய இருதயத்தைத் தற்போதைக்குரிய உடைமைப் பொருள்களினிடத்தில் வைக்காமல், நித்தியமானவற்றிலேயே வைத்தான். **நகரம்** மற்றும் **அஸ்திபாரம்** ஆகிய இரண்டு சொற்களுக்கு முன்பாகவும் அவை இன்ன இடத்தைக் குறிக்கின்றன என்று குறிக்கக் கூடிய உரிச்சொல் மூல மொழியிலே பயன்படுத்தப்பட்டுள்ளது - அந்த **நகரம்**, அந்த **அஸ்திபாரம்**. விசுவாசத்தின் கணக்கின்படி ஒரே ஒரு **நகரம்** தான் அந்தப் பெயருக்குத் தகுதியுடைய தாய் இருக்கிறது. அதுவே நிச்சயமான **அஸ்திபாரம்** உடையதாக இருக்கிறது.

இந்தப் பரலோக நகரத்தின் வடிவமைப்பாளர் தேவனே ஆவார். அவரே அதனைக் **கட்டினவரும்** ஆவார். அதுவே மாதிரி நகரம் ஆகும். அங்கு அழுக்கடைந்த சேரிகள் இல்லை, காற்றில் மாசு படியவில்லை, நீரிலும் மாசு இல்லை. பெரிய நகரங்களில் காணப்படும் எந்தப் பிரச்சினையும் அங்கு இல்லை.

11:11 விசுவாசத்தினாலே சாராள், ஏறத்தாழ தொண்ணூறு வயதான போது, வியத்தகு வகையில் **கர்ப்பந்தரிக்க** ஆற்றல் பெற்றாள். பிள்ளை பெறுவதற்குரிய வயது சென்றவளாகச் சரீரஞ் செத்த நிலையில் அவள் இருந்தாள் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் அவளுக்கு ஒரு குழந்தையைத் தருவதாக தேவன் வாக்களித்திருந்தார் என்பதையும், அவர் தமது வார்த்தையை நிறைவேற்றாமல் விடார் என்பதையும் அவள் அறிந்திருந்தாள். அவர் என்ன **வாக்குத்தத்தம் பண்ணினாரோ** அதனை நிறைவேற்றுவார் என்னும் சிதறடிக்கக்கூடாத விசுவாசம் அவளுக்கு இருந்தது.

11:12 ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயது நிறைந்தவனாயிருந்தான். மனித எண்ணத்தின்படி பேசுவோமென்றால், அவன் தகப்பனாவதற்குரிய வாய்ப்பு சற்றேனும் இருந்திருக்காது என்றே சொல்லவேண்டும். ஆனாலும் அவனுக்குப் பெருமளவில் வழித்தோன்றல்கள் உண்டாவார்கள் என்று தேவன் வாக்குறுதி கொடுத்தார், ஆகவே அது அவ்வாறே நடக்க வேண்டும்.

ஈசாக்கின் மூலமாக இப்புவிவாழ் குடிமக்களாகிய **மிகுந்த ஜனத்திற்கு** ஆபிரகாம் தகப்பனானான், அவர்களே எபிரெய நாட்டினர். கிறிஸ்துவின் மூலமாக ஆவிக்குரிய குடிமக்களாகிய **மிகுந்த ஜனத்திற்கு** அவன் தகப்பனானான், அவர்களே பின்னர் தோன்றிய காலப்பாகுபாட்டின் மெய்யான விசுவாசிகள் ஆவார்கள். **கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணல்** பெரும்பாலும் இப்பூமிக்குரிய வழித்தோன்றலையும், **வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்கள்** வானத்திற்குரிய மக்களையும் படவுருவாய்க் காட்டுகின்றன எனலாம்.

11:13 கோத்திரத் தலைவர்கள் யாவரும் இறந்து போனார்கள். தெய்வீக வாக்குறுதிகள் நிறைவேறியதைக் காணும்படியாக அவர்கள் உயிரோடிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, எண்ணிக்கையில் பெரிய அளவிலான வழித்

தோன்றல்களை ஆபிரகாம் காணவில்லை. எபி ரெயருக்கு வாக்குறுதி பண்ணப்பட்ட நாடு முழு வதையும் அவர்கள் கைப்பற்றவில்லை. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் மேசியாவைக் குறித்த வாக்குறுதி நிறைவேறியதைக் காண வில்லை. ஆனால் அவர்களுடைய தொலை நோக்குப் பார்வையின் மூலமாக **வாக்குத்தத் தங்கள்** அருகாமையில் இருப்பதாக கண்டார் கள், அவற்றை எதிர்பார்த்து மகிழ்ச்சியோடு கையசைக்கும் தூரத்தில் இருப்பதாக அவர்கள் கண்டார்கள்.

இந்த உலகம் அவர்களுடைய இறுதியான வீடு அல்லவென்பதை அவர்கள் அறிந்திருந்தார் கள். அவர்கள் அந்நியரும் பரதேசிகளுமாக இருந்ததில் மனநிறைவு கொண்டிருந்தனர். அவர்கள் தங்களுக்கென்று வசதியைப் பெருக் கிக்கொள்ள வேண்டுமென்னும் விருப்பத்தை அறவே மறுத்துரைத்தார்கள். இவ்வுலகில் வாழ்ந்த போது அதிலிருந்து எந்தவொரு குணத் தையும் தங்களுடையதாக்கிக் கொள்ளாமல், இதனை விட்டுச் செல்ல வேண்டுமென்னும் விருப் பத்தோடு அவர்கள் இருந்தார்கள். அவர்களு டைய இருதயங்களில் பரதேசியாய் வாழ வேண் டும் என்னும் எண்ணத்தைக் கொண்டிருந்தார் கள் (சங். 84:5, நாக்ஸ்).

11:14 அவர்களுடைய வாழ்க்கையானது அவர்கள் தங்களுடைய **சுயதேசத்தை நாடிச்** சென்றார்கள் என்று தெரியப்படுத்தியது. அவர் களிடத்தில் வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்னும் உள்ளுணர்வை விசுவாசம் பதியவைத்தது. அதன் காரணமாக அவர்கள் கானான் வசீகரத் தினால் ஒருபோதும் மனநிறைவு அடைய வில்லை. சிறப்பான தேசத்தைக் குறித்த பேரா வல் அவர்களிடத்தில் எப்பொழுதும் குடிகொண்டி ருந்தது, அதன் காரணமாக அவர்கள் அந்த தேசத்தைத் தங்களுடைய வீடு என்று அழைக்க ஏதுவாயிற்று.

11:15 அவர்கள் தங்களுடைய சுயதேசத்தை நாடினார்கள் என்று கூறும் போது, அது அவர்கள் பிறந்த நாட்டைக் குறிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்த நூலாசிரியர் விரும்புகிறார். ஆபிர காம் மெசொப்பொத்தாமியாவுக்குத் திரும்பிப் போக வேண்டுமென்று எண்ணியிருந்தால், அவன் அங்கு சென்றிருக்க முடியும், ஆனால் அவன் அங்கிருந்து வெளியேறிய பிறகு அது அவனு டைய வீடாகக் கருதப்படவில்லை.

11:16 அதனுடைய உண்மையான பொருள் என்னவெனில், அவர்கள் பரம தேசத்தையே தங்க ளுடைய சுயதேசமாக நாடினார்கள் என்பதே யாகும். இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட வாக் குறுதிகளில் பல இவ்வுலகிற்குரிய செல்வத்தைக் குறித்த ஆசிர்வாதங்களாகவே இருந்தன என் பதை எண்ணிப்பார்க்கையில், இது மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாக இருக்கிறது. ஆனால் அவர்களுக்குப் பரலோகத்திற்குரிய நம்பிக்கையும் இருந்தது. அந்த நம்பிக்கை யானது அவர்கள் இவ்வுலகத்தை அந்நிய தேசம் என்று கருதும்படி செய்தது.

இவ்வுலகத்தில் வெறும் பயணிகளாகவே இருக்கிறோம் என்று அவர்கள் எண்ணிய செயல் மிகச்சிறப்பானமுறையில் தேவனுக்கு மனமகிழ்ச் சியைக் கொடுத்தது. "எவருடைய இருதயமும் பங்கும் பரலோகத்தில் இருக்கிறதோ அவரு டைய தேவன் என்று தம்மைக் குறித்துச் சொல்ல அவர் வெட்கப்படுவதில்லை" என்று திருவாளர் டார்பி எழுதுகிறார். **அவர்களுக்கு அவர் ஒரு நக ரத்தை ஆயத்தம் பண்ணினாரே**. அங்கு அவர் கள் இளைப்பாறுதலையும், மனநிறைவையும், முழுமையான சமாதானத்தையும் கண்டடை வார்கள்.

11:17 ஆபிரகாமின் விசுவாசத்தைக் குறித்த மிகப்பெரிய சோதனையினிடமாய் இப்பொழுது நாம் வந்திருக்கிறோம். தேவன் அவனுடைய ஒரே குமாரனாகிய ஈசாக்கைப் பலிபீடத்தில் பலியிடும் படி அவனிடம் கூறினார். தயக்கமற்ற கீழ்ப்படித லோடு, ஆபிரகாம் தன்னுடைய இருதயத்திற்கு மிகவும் மகிழ்ச்சிதரக்கூடிய செல்ல மகனைப் பலியாகச் செலுத்தும்படி தேவனுடைய முன்னி லையில் கிடத்தினான். அவனுக்கு ஏற்பட்ட இக் கட்டான நிலையை மறந்து போனானா? எண்ணி லடங்கா வழித்தோன்றல்களைத் தருவதாக தேவன் வாக்குறுதி தந்திருந்தார். ஈசாக்கு அவனு டைய ஒரேபேறான குமாரன். ஆபிரகாமுக்கு இப் பொழுது வயது 117, சாரளுக்கோ 108!

11:18 ஈசாக்கினிடத்தில் அவனுக்கு எண்ணிக் கையில் அடங்கா ஒரு பெரும் சந்ததி உண்டாகும் என்னும் வாக்குறுதி நிறைவேற வேண்டும். அவ னுக்குஏற்பட்ட இக்கட்டு: ஆபிரகாம் ஈசாக்கைக் கொன்று போடுவானானால், அந்த வாக்குறுதி எவ்வாறு நிறைவேறும்? அப்பொழுது ஈசாக்குக்கு வயது பதினேழு, அவனுக்கு இன்னும் திருமண மாகவில்லை.

11:19 தேவன் கொடுத்த வாக்குறுதி என்ன வென்று ஆபிரகாம் அறிந்திருந்தான்; அது ஒன்று தான் முக்கியத்துவம் வாய்ந்தது. தன்னுடைய மகனைக் கொல்ல வேண்டுமென்று தேவன் எதிர் பார்க்கிறார் என்றால், **தேவன்** அவனை **எழுப்பு வார், மரித்தோரிலிருந்தும்** அவனை அவர் **எழுப்பு வார்**, அதன் வாயிலாக அவருடைய வாக்குறு தியை நிறைவேற்றுவார் என்று அவன் முடிவு செய் தான்.

மரித்தோரிலிருந்து எவரும் உயிரோடு எழுப் பப்பட்டதாக அதுவரை எந்த வரலாற்றுக் குறிப்பும் இல்லை. மனிதனுடைய அனுபவம் அப்படிப்பட்ட புள்ளிவிவரம் எதையும் தரவும் முடியாது. உண் மையான பொருளில் காண்போமானால், உயிர்த் தெழுதல் என்னும் கருத்தை ஆபிரகாம் கண்டு பிடித்தான். தேவன் அளித்த வாக்குறுதியில் அவன் கொண்டிருந்த நம்பிக்கை, தேவன் ஈசாக்கை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்ப வேண்டும் என்னும் முடிவுக்கு அவனைக் கொண்டுவந்தது.

மரித்தோரிலிருந்து ஈசாக்கை அவன் **பாவனை யாகத் திரும்பப் பெற்றுக்கொண்டான்**. ஈசாக்கு கொல்லப்பட வேண்டும் என்னும் உண்மைக்கு அவன் தன்னை ஒப்புவித்துவிட்டான். அந்தச் செய்கையை தேவன் அவனுடைய கணக்கில் பதிவுசெய்துவிட்டார். ஆனால், தேவனோ, "ஆபிர காமின் இருதய வேதனையை அகற்றியவர் தம்மு டைய இருதயத்தின் வேதனையை நீக்குவதற்கு ஒன்றும் செய்யவில்லை" என்று திருவாளர் க்ராண்ட் மனவேதனையூட்டும் வகையில் இதனை எடுத் துரைக்கிறார். ஈசாக்கின் இடத்தை எடுத்துக் கொள்ளும்படி அவர் ஆட்டுக்கடா ஒன்றைத் தந் தார். ஒரேபேறான குமாரன் அவன் தகப்பனுடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியைத் தரும்படி வீட்டிற் குத் திருப்பி அனுப்பப்பட்டான்.

விசுவாசத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட் டாகத் திகழும் இந்த நிகழ்ச்சியை விட்டு நாம் செல்வதற்கு முன் இரண்டு விஷயங்களை குறிப் பிட வேண்டியவராய் இருக்கிறோம். முதலாவது, ஆபிரகாம் தன் மகனைக் கொல்ல வேண்டு மென்பது தேவனுடைய உண்மையான விருப்பம் இல்லை. தமது மக்கள் நரபலி செலுத்த வேண் டும் என்று தேவன் ஒருக்காலும் சித்தம்கொள்ள வில்லை. அவர் ஆபிரகாமின் விசுவாசத்தைச் சோதித்து, அது உண்மையானது என்று கண்ட றிந்தார்; பின்னர் அவர் தமது கட்டளையைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

இரண்டாவதாக, எண்ணிலடங்கா வழித்தோன் றல்களைக் குறித்த வாக்குறுதியில் ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசம் நூறு ஆண்டுகளுக்கு மேலாகச் சோதிக்கப்பட்டது. முதல் முறையாகக் கோத்திரத் தந்தைக்கு குமாரன் தரப்படுவதாக வாக்குறுதி தரப்பட்டபோது அவனுக்கு வயது எழுபத்தைந்து ஆயிற்று. ஈசாக்கு பிறப்பதற்கு அவன் இருபத்தைந்து ஆண்டுகள் காத்திருந் தான். மோரியா மலையில் ஈசாக்கைப் பலியிடும் படி அழைத்துச் சென்றபோது அவனுடைய வயது பதினேழு. ஈசாக்குக்குத் திருமணமானபோது அவ னுடைய வயது நாற்பது. திருமணத்திற்குப் பிறகு இருபது ஆண்டுகள் கழித்து அவனுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தார்கள். ஆபிரகாம் மரணம டைந்த போது அவனுடைய வயது 175. அந்தச் சம யத்தில் அவனுக்கு ஒரு மகனும் (எழுபத்தைந்து வயது நிரம்பியவன்), இரண்டு பேரர்களும் (பதி னைந்து வயதினர்) இருந்தார்கள். ஆனாலும், "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" (ரோமர் 4:20,21).

11:20 ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யோசேப்பு ஆகியோருடைய விசுவாசத்தைக் குறித்து அடுத்த மூன்று வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக் கிற செய்திகள் எந்த வகையில் வழக்கத்திற்கு மாறாக இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள் வதில் மேற்கத்திய நாட்டினருடைய மனதிற்குச் சிரமம்தான். எடுத்துக்காட்டாக எதிர்காலத்திற் குரிய ஆசிர்வாதங்களை யாக்கோபும் ஏசாவும் பெறவேண்டும் என்று வேண்டிக்கொண்ட செய லின் மூலமாக **ஈசாக்கு** விசுவாச வீரர்களின் பட்டி யலில் இடம் பெற்றான் என்று கூறப்பட்டுள்ளது. இதைக் குறித்து என்ன சிறப்பு இருக்கிறது?

பிள்ளைகள் பிறப்பதற்கு முன்னரே, அந்த ஆண்மக்கள் இருவரும் இரண்டு நாடுகளுக்கு மூல காரணமாக இருப்பார்கள் என்றும், மூத்த வன் (ஏசா) இளையவனுக்கு (யாக்கோபு) ஊழியஞ் செய்வான் என்றும் கர்த்தர் ரெபெக்காளிடம் அறி வித்திருந்தார். மூத்த குமாரன் என்னும் நிலை யில் ஏசா, ஈசாக்கின் தனி அன்புக்குரியவனாய் இருந்தான், மேலும் சாதாரணமான சூழ்நிலை யில் தகப்பனிடத்திலிருந்து சிறப்பான பாகத்தை அவன்தான் பெற்றிருக்க வேண்டும். ஆனால் ரெபெக்காளும் யாக்கோபும் ஈசாக்கை ஏமாற்றி

விட்டார்கள், அப்பொழுது அவனுடைய கண்பார்வை மங்கலாயிருந்தது, அதன் காரணமாக அவன் சிறப்பான ஆசிர்வாதத்தை யாக்கோபுக்குக் கொடுத்துவிட்டான். அவர்களுடைய சதித்திட்டம் வெளிப்பட்டபோது ஈசாக்கு பிரமித்து நடுங்கினான். ஆனால் மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று தேவன் உரைத்த வார்த்தையை எண்ணிப்பார்த்தான். ஏசாவின் மீது அவன் பட்சமாக இருந்தபோதிலும் அவனுடைய பலவீனம் ஒதுக்கித் தள்ளிவிடப்பட்டு தேவனுடைய மேலதிகாரம் நிலைநிறுத்தப்படும் என்பதை உணர்ந்தான்.

11:21 யாக்கோபின் வாழ்க்கையில் இழிவான அத்தியாயங்கள் பல இருந்தன, ஆனாலும் அவன் விசுவாச வீரர்களில் ஒருவனாகக் கனப்படுத்தப்பட்டிருக்கிறான். வயது செல்லச் செல்ல அவனுடைய குணவியல்பு முன்னேற்றம் அடைந்தது. அவனுடைய புகழ்ச்சி மேலோங்கிய நிலையில் அவன் மரணமடைந்தான். அவன் யோசேப்பின் குமாரர்களாகிய எப்பிராயீமையும் மனாசேயையும் ஆசிர்வதித்த போது, இளையவன் மேல் மூத்தகுமாரனுக்குரிய ஆசிர்வாதம் கிடைக்கும் படி தன்னுடைய கரங்களை அவர்களுடைய தலைகளில் மாற்றிவைத்தான். அதனை யோசேப்பு எதிர்த்த போதிலும், அந்த வரிசை முறையைத் தான் கர்த்தர் கூறியிருக்கிறார் என்று வலியுறுத்தி, தான் கூறிய ஆசிர்வாதத்தை நிலைநிறுத்தினான். அவனுடைய சரீரக் கண்கள் மங்கலாகிப் போன போதிலும், அவனுடைய ஆவிக்குரிய கண்கள் நுண்ணுணர்வுடன் இருந்தன. யாக்கோபுடைய வாழ்க்கையின் இறுதிக் காட்சியில் அவன் தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுது கொண்டிருந்தவனாகக் காணப்பட்டான். C.H. மெக்கின்டோஷ் தன்னுடைய இயல்பான அழகிய நடையில் இதனைச் சுருக்கி வழங்குகிறார்:

> தன்னுடைய வாழ்நாட்காலத்தின் முந்தைய பகுதியில் பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள் நிறைந்தவனாகக் காணப்பட்ட யாக்கோபின் இறுதி நாட்கள் அவற்றிற்கு மாறுபட்ட வகையில் மகிழ்ச்சியூட்டும் காட்சிகளைக் கொண்டிருந்தது. கடுங்கொந்தளிப்பு மிக்க பகலுக்குப் பிறகு வரக்கூடிய மிக அமைதியான மாலை வேளையை அது நம்முடைய நினைவுக்குக் கொண்டுவருகிறது; பகல் முழுவதும் மேகமூட்டத்தினாலும் மூடு பனியினாலும் இருள் சூழ்ந்து கதிரவன் மறைந்திருந்தது. மாலையில் கம்பீரமான தோற்றத்துடனும் மிகுந்த பிரகாசத்துடனும் அது வெளிப்படுகிறது, மேற்கு திசையிலிருந்த அதனுடைய ஒளிக்கதிர்கள் பாய்ந்து வீசிக்கொண்டிருக்கின்றன, நாளைய தினம் மிகுந்த பிரகாசமாயிருக்கும் என்பதை அவை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இதைப் போலவே முதிர் வயது யாக்கோபின் வாழ்க்கையிலும் நடைபெற்றது. நேர்மையற்ற வகையில் பிறர் பொருளை அபகரிக்கிறவனாக, பேரம் பேசுகிறவனாக, வஞ்சகம் நிறைந்தவனாக, அடக்கியாளுகிறவனாக, சூழ்ச்சியினால் மாற்று வேலை செய்கிறவனாக, தந்திரம் மிகுந்தவனாக, விசுவாசமற்ற தன்னல விரும்பியாக இருந்தவன். இவை யாவும் அவனுடைய வாழ்க்கையில் மேகங்கள் சூழ்ந்திருந்த காலத்தின் இயல்பாயிருந்தன, உலகத்திற்குரியவையாகக் காணப்பட்டன. இவை யாவும் அவனை விட்டு அகன்று போய்விட்டன. இப்பொழுதோ அவன் விசுவாசத்தின் உயர்வு நிலையின் அமைதியால் சூழப்பட்டவனாக வருகிறான். ஆசிர்வாதத்தை வழங்க வருகிறான், மேன்மைகளைப் பகிர்ந்தளிக்கிறான். தேவனோடு கொண்டுள்ள ஐக்கியத்தால் மட்டுமே பரிசுத்தத்தோடு திறமையை வெளிப்படுத்தும் தன்மையால் மேற்கூறியவற்றைப் பிறருக்குப் பகிர்ந்தளிக்க முடியும்.[23]

11:22 யோசேப்பின் **விசுவாசமும்** அவனுடைய மரணத்தின் போது வலிமை மிக்கதாயிருந்தது. **இஸ்ரவேல்** மக்களை தேவன் எகிப்துதேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து அவருடைய வாக்குறுதியின்படியே விடுவிப்பார் என்று அவன் விசுவாசித்தான். அவர்கள் பயணம் மேற்கொள்ள விருப்பதை அவன் ஏற்கனவே படவுருவில் காண அவனுடைய விசுவாசம் ஏதுவாக்கிற்று. அவனுடைய **எலும்புகளை** அவனுடைய குமாரர்கள் கானான் தேசத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்று அவன் கட்டளையிடும் அளவிற்கு உறுதியோடிருந்தான். "எகிப்து நாட்டின் ஆடம்பரமும் புகழ்ச்சியும் அவனைச் சூழ்ந்துகொண்டிருந்த வேளையில் அவனுடைய இருதயம் சற்றேனும் அங்கில்லை. மாறாக, அது அவனுடைய மக்களோடு அவர்கள் பெறப்போகும் புகழ்ச்சியோடும் நன்மைகளோடும் இருந்தது" என்று வில்லியம் லிங்கன் என்பார் எழுதுகிறார்.[24]

11:23 மோசேயின் விசுவாசம் மட்டுமின்றி அவனுடைய பெற்றோர்களின் விசுவாசமும் இங்கு கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களுடைய குழந்தையை அவர்கள் பார்த்தபோது **அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டார்கள்** - ஆனால் அந்த அழகு வெறுமனே சரீர அழகு மட்டுமில்லை. அவன் தேவனாலே ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டவன் என்றும், அவனுடைய வாழ்க்கை முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒன்று என்றும் அவர்கள் கண்டார்கள். தேவனுடைய நோக்கங்கள் நிச்சயமாக நிறைவேறும் என்று அவர்கள் கொண்டிருந்த விசுவாசம், **இராஜாவின் கட்டளையை** அவர்கள் புறக்கணிக்கும்படியும், அந்தக் குழந்தையை **மூன்றுமாதம்** ஒளித்துவைக்கும்படியும் அவர்களுக்கு உற்சாகமளித்தது.

11:24 விசுவாசத்தினாலே மோசே பெருந்தன்மையான பல தியாகங்களைச் செய்ய முடிந்தது. அவன் எகிப்து தேசத்து அரண்மனையின் சுக போகத்தில் வளர்க்கப்பட்டிருந்தும், மனிதர்கள் எவற்றையெல்லாம் பெறவேண்டுமென்று கடுமுயற்சி செய்கிறார்களோ அவையாவும் கிடைக்கும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தும், "பொருட் செல்வத்தை உடைமையாகப் பெற்றிருத்தல் அல்ல, அவற்றைத் துறந்து விடுதலே இளைப் பாறுதலைக் கொண்டுவரும் "என்று கற்றுக் கொண்டான் (J. கிரேகோரி மென்டில்).

முதலாவதாக, அவன் எகிப்து தேசத்தின் **புகழ்ச்சியை** நிராகரித்தான். அவன் **பார்வோனுடைய குமாரத்தியின் மகனாகத்** தத்து எடுக்கப்பட்டிருந்தான், ஆகவே சமுதாயத்தில் நன்மதிப்பையும், ஒருவேளை பார்வோனின் அரசுரிமையைப் பெறக்கூடிய வாய்ப்பையும் பெற்றிருந்தான். ஆனால் அவன் அதனினும் சிறந்த இரத்தப் பிறப்பாயிருந்தான். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இவ்வுலக மக்கள் கூட்டத்தில் அங்கமாயிருந்தான் - அத்தகைய மேன்மையான நிலையிலிருந்து எகிப்தின் அரச பதவிக்கு அவனால் இறங்கிவர முடியவில்லை. அவன் தன்னுடைய இளமையின் நாட்களில் தான் எதைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்பதை முடிவு செய்துவிட்டான்; அவன் எந்த நாட்டின் குடிமகன் என்னும் உண்மையைச் சில ஆண்டுக் கால இவ்வுலகப் புகழ்ச்சிக்காக மறைக்க முன்வரவில்லை. அதன் விளைவு என்ன? மங்கி இருளடைந்து போன கல்லறையின் மேற்புறத்தில் ஓரிரண்டு வரிகள் விளங்காத எழுத்துகளால் வருணிக்கப்பட்டிருப்பான், ஆனால் அதற்குப் பதிலாக தேவனுடைய நித்திய நூலில் அவனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. நறுமணமூட்டிப் பாதுகாக்கப்பட்ட பிணமாக எகிப்திய பொருட்காட்சிச் சாலையில் அவன் வைக்கப்படுவதற்குப் பதிலாக, அவன் தேவ மனிதன் என்னும் புகழ்பெற்ற பெயரைப் பெற்றான்.

11:25 இரண்டாவதாக, அவன் எகிப்தின் **பாவ சந்தோஷங்களை** வேண்டாமென்று மறுத்துரைத்தான். தன்னுடைய வேட்கைகளை நிறைவு செய்யக் கூடிய நிலையற்ற செயல்களைக் காட்டிலும், பாடுகள் அனுபவிக்கக் கூடிய **தேவனுடைய மக்களோடு** எளிய வகையில் உறவு கொண்டிருப்பதையே அவன் தெரிந்துகொண்டான். பார்வோனின் நீதிமன்றத்தில் ஒழுக்கங் கெட்ட வகையில் பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும், தன்னுடைய சொந்த மக்களோடு கொடுமைகளை அனுபவிப்பதே அவனுக்கு மிகுந்த மனமகிழ்ச்சியைத் தந்தது.

11:26 மூன்றாவதாக, அவன் எகிப்திலுள்ள **பொக்கிஷங்களை** நாடாமல் அவற்றிற்கு முதுகைக் காட்டினான். நித்தியத்தின் வெளிச்சத்தோடு எகிப்து நாட்டின் மிகுதியான பொக்கிஷ சாலைகளை ஒப்பிட்டு இவை எதற்கும் தகுதியற்றவை என்று காண அவனுடைய விசுவாசம் அவனுக்கு உதவிபுரிந்தது. ஆகவே, பிற்காலத்தில் மேசியா எத்தகைய நிந்தைகளை அனுபவிப்பாரோ அது போன்ற நிந்தைகளை அனுபவிப்பதை அவன் தெரிந்து கொண்டான். பார்வோனின் எல்லாச் சொத்துகளைக் காட்டிலும், தேவனுக்கு விசுவாசமாயிருப்பதையும் தம்முடைய மக்களிடத்தில் அன்பு பாராட்டுவதையும் அவன் அதிக மதிப்புள்ளதாகக் கருதினான். அவன் மரண மடைந்து, ஒரு நொடிப்பொழுதுக்குப் பிறகு இப்படிப்பட்டவையே கணக்கில் எடுத்துக்கொள்ளப் படும் என்பதை அவன் அறிந்திருந்தான்.

11:27 அடுத்தது, அவன் எகிப்தின் **அரசனையும்** புறக்கணித்தான். **விசுவாசத்தினாலே** துணிவு பெற்றவனாக, **ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல்** அடிமைத்தன நாட்டிலிருந்து வெளியேறினான். அவன் இவ்வுலக அரசியலிலிருந்து விலகினான் என்பது மிகத்தெளிவாயிருக்கிறது. அவன் அவ்வளவு அதிகமாக தேவனுக்குப் பயந்ததால், பார்வோனுக்கு பயப்படவேயில்லை. "அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும்,

சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர். அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1 தீமோ. 6:15,16).

11:28 இறுதியாக, அவன் எகிப்தின் **சமயத்தை** நிராகரித்தான். அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் நிறுவியதன் மூலமாக, உறுதியான மனதோடு எகிப்தின் சிலைவணக்க முறையிலிருந்து பிரிந்து சென்றான். நிலைநாட்டப்பட்டிருந்த சமய அமைப்புக்கு எதிராக அறைகூவல் விடுத்து அதிலிருந்து தன்னை முற்றிலுமாக விலக்கிக்கொண்டான். அவனைப் பொருத்தமட்டில் இரட்சிப்பு ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலம் உண்டாயிற்றேயொழிய, நைல் நதியின் தண்ணீரினால் அல்ல, அதன் விளைவாக, சங்காரக்காரனின் மூலமாக எகிப்து தேசத்தின் முதற்பேறானவை அழிக்கப்பட்டன, இஸ்ரவேலின் முதற்பேறானவை யாவும் பாதுகாக்கப்பட்டன.

11:29 முதலில் சிவந்தசமுத்திரம் எபிரெய அகதிகளுக்கு அழிவைப் பறைசாற்றுவது போலத் தோன்றியது. பகைஞர் வேகமாக அவர்களைக் கொல்லும்படி பின்தொடர்ந்து வந்தார்கள், ஆகவே அவர்கள் கண்ணியில் சிக்கிக்கொண்டதுபோலக் காணப்பட்டது. ஆனால் அவர்கள் தேவனுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து முன்னேறிச் சென்ற போது, தண்ணீர் பிளவுண்டது; "அப்பொழுது கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்க்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டு போகப் பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று" (யாத். 14:21). **எகிப்தியர்** அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல முயற்சி செய்தார்கள். அவர்களுடைய இரதங்களின் சக்கரங்கள் சிக்கிக் கொண்டன. தண்ணீரானது முன்னிருந்த இடத்திற்குத் திரும்பியது. பார்வோனின் படை கடலுக்குள் **அமிழ்ந்துபோயிற்று** . இவ்வாறாக, சிவந்த சமுத்திரம் இஸ்ரவேலருக்கு விடுதலையின் நடைபாதையாக இருந்தது, ஆனால் அது எகிப்தியருக்கோ அழிவிற்குரிய முட்டு சந்தாக விளங்கிற்று.

11:30 கானானை வெற்றிகொள்ளும்படி சென்ற போது மதில் சூழ்ந்த எரிகோ நகரமே முதலாவது இராணுவ இலக்காயிருந்தது. கைப்பற்ற இயலாத அளவுக்கு அந்தக் கோட்டை வலிமையுடையதாக இருந்தது, மிகவும் வலிமைபடைத்த படையினால் மட்டுமே அது வெல்லப்படக்கூடியதாயிருந்தது என்னும் எண்ணமே ஓங்கியிருந்தது. ஆனால் விசுவாசத்தின் செயல்முறை வேறு வகையாயிருந்தது. தமது நோக்கங்கள் நிறைவேறும்படியாக மனிதர்களுக்கு முட்டாள்தனமாகத் தோன்றக்கூடிய போர்த்திட்டங்களை தேவன் பயன்படுத்துகிறார். அந்த நகரத்தை **ஏழுநாட்கள்** சுற்றிவரும்படி அவர் தம்முடைய மக்களிடம் கூறினார். ஏழாம் நாளில் அவர்கள் கோட்டையை ஏழுமுறை சுற்றி நடக்கவேண்டும். ஆசாரியர் தங்களுடைய எக்காளங்களில் பலத்த தொனியை எழுப்ப வேண்டும், மக்கள் சத்தமிட வேண்டும், **மதில்கள்** இடிந்துவிழும். இராணுவ வல்லுநர்கள் இந்த முறையை நகைப்புக்கு இடமானது என்று சொல்லித் தள்ளிவிடுவார்கள். ஆனால் அது அவ்வாறே நிகழ்ந்தது! ஆவிக்குரிய போரின் போராயுதங்கள் மாம்சத்திற்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கின்றன (2 கொரி. 10:4).

11:31 ராகாப் என்னும் வேசி எப்பொழுது யெகோவாவைத் தொழுதுகொள்ளுகிறவளாக மாறினாள் என்பதை நாம் அறியோம், ஆனால் அவள் அவ்வாறு செய்துவந்தாள் என்பது தெளிவாகத்தெரிகிறது. அவள் கானான் நாட்டின் தவறான சமயத்தைக் கைவிட்டு, யூத மார்க்கத்தைச் சார்ந்தவளாக மாறிவிட்டாள். ஒற்றர்கள் அவளுடைய வீட்டிற்கு வந்தபோது அவளுடைய விசுவாசத்திற்குக் கடுஞ்சோதனை ஏற்பட்டது. அவள் தன்னுடைய நாட்டிற்கும் உடன் குடிமக்களுக்கும் உண்மையோடு நடந்துகொள்ள வேண்டுமா? அல்லது கர்த்தருக்கு உண்மையோடு நடந்து கொள்ள வேண்டுமா? அவள் கர்த்தரின் பக்கமாய் நிற்கத் தீர்மானித்தாள், அது அவளுடைய நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயலாகவே இருந்தது. அவள் வேவுகாரரை நட்புடன் வரவேற்றாள். அதன் காரணமாக அவளுடைய குடும்பமும் அவளும் பாதுகாக்கப்பட்டார்கள். ஆனால் கீழ்ப்படியாத அயலகத்தார் அழிந்துபோனார்கள்.

11:32 இத்தருணத்தில் ஆசிரியர் சொல்திறம் மிக்கதொரு கேள்வியைக் கேட்கிறார்: **பின்னும் நான் என்ன சொல்லுவேன்**? பழைய ஏற்பாட்டுக் காலத்தில் விசுவாசத்தையும் நீடியபொறுமையையும் தங்களுடைய வாழ்க்கையில் வெளிப்படுத்திக் காட்டிய மாட்சிமை பொருந்திய ஆடவர், பெண்டிர் பலருடைய பெயர்களடங்கிய பட்டியலை அவர் தந்திருக்கிறார். அவர் தமது கருத்தை வலியுறுத்த இன்னும் எத்தனை பேர்களைக் குறிப்பிடவேண்டும்?

அவர் தொடர்ந்து கூறவேண்டுமானால் எடுத்துக்காட்டுகளுக்குக் குறைவில்லை, சொல்லுவதற்கோ நேரம் இல்லை. விவரங்களை எடுத்துரைக்க வேண்டுமானால் அது மிக நீண்டதாக இருக்கும், ஆகவே சில பெயர்களையும், விசுவாசத்தின் வெற்றிகளையும் சோதனைகளையும் விளக்கித்தரக்கூடிய சில நிகழ்ச்சிகளையும் மட்டும் பட்டியலிட்டுத்தருவதில் அவர் மனநிறைவு அடைகிறார்.

கிதியோனின் படைவீரர்களின் எண்ணிக்கை 32000 -த்திலிருந்து 300 -ஆகக் குறைக்கப்பட்டது. முதலில் துணிவில்லாதவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள், அதன் பிறகு தங்களுடைய சொந்த வசதியைப் பெரிதாகக் கருதியவர்கள் அனுப்பப்பட்டார்கள். உறுதியான உள்ளம்கொண்ட மெய்யான சீடர்களுடன் சென்று கிதியோன் மீதியானியரை மடங்கடித்தான்.

அதன் பிறகு **பாராக்** குறிப்பிடப்பட்டுள்ளான். கானானியருக்கு எதிராகப் போர் தொடுக்க இஸ்ரவேலைத் தலைமை தாங்கி நடத்தும்படி அழைக்கப்பட்டபோது தன்னுடன் தெபொராளும் வர வேண்டும் என்னும் நிபந்தனையின் அடிப்படையில் அதற்கு ஒப்புக்கொண்டான். இவ்விதமாகக் கோழைத்தனம் உடையவனாக அவன் ஒருபுறம் இருந்தபோதிலும், தேவன் அவனிடத்தில் மெய்யான விசுவாசத்தைக் கண்டு விசுவாச வீரர்களின் பட்டியலில் அவனுடைய பெயரையும் சேர்த்திருக்கிறார்.

வெளிப்படையாகக் காணக்கூடிய பலவீனத்தைக் கொண்டிருந்த இன்னொரு மனிதன் **சிம்சோன்**. இருந்த போதிலும், அவனுடைய விசுவாசத்தின் மூலமாக அவன் இளம் சிங்கம் ஒன்றைத் தன்னுடைய கைகளால் கொன்றதையும், அஸ்கலோனில் முப்பது பெலிஸ்தியரைக் கொன்றதையும், கழுதையின் தாடையெலும்பைக் கொண்டு ஆயிரம் பெலிஸ்தியரைக் கொன்றதையும், காசா ஊரின் வாசற்கதவுகளை தூக்கிச் சென்றதையும், இறுதியாக தாகோனின் கோயிலைச் சாய்த்து தான் உயிரோடு இருந்த காலத்தில் கொன்ற பெலிஸ்தியரின் எண்ணிக்கையிலும், மரணமடையும் தறுவாயில் அதிகமான பேரைக் கொன்றதையும் தேவன் கண்டார்.

யெப்தா முறைகேடான உறவில் பிறந்தவனாக இருந்த போதிலும் அம்மோனியரிடத்திலிருந்து தனது இனத்தாரை விடுவிக்கக்கூடிய நிலைக்கு உயர்ந்தான். தன்னுடைய பிறப்பையும் சூழ்நிலைகளையும் தாண்டி ஒரு மனிதன் விசுவாசத்தின் மூலமாக தேவனுக்கு வரலாறு படைக்கமுடியும் என்னும் உண்மைக்கு அவன் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறான்.

கோலியாத்தை வெற்றிகொண்ட செயலிலும், சவுலினிடத்தில் பெருந்தன்மையோடு நடந்து கொண்ட விதத்திலும், சீயோனைக் கைப்பற்றிய செயலிலும், இன்னும் எண்ணற்ற நிகழ்ச்சிகளிலும் **தாவீது** தனிச்சிறப்புடையவனாகப் பிரகாசிக்கிறான். அவனுடைய சங்கீதங்களில் அவன் தனது பாவத்திற்காக வருத்தமுற்ற செயல், ஏறெடுத்த ஸ்தோத்திரங்கள், உரைத்த தீர்க்கதரிசனங்கள் ஆகியவற்றின் மூலமாக விசுவாசத்தின் உறுதியை வெளிப்படுத்தியிருப்பதை நாம் காண்கிறோம்.

சாமுவேல் இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதியாகவும், முதல் தீர்க்கதரிசியாவும் விளங்கினான். ஆசாரிய முறைமையில் ஆவிக்குரிய தன்மை நொடித்துப் போயிருந்த காலத்தில், இவனே அந்நாட்டிற்கு தேவனுடைய மனிதனாக விளங்கினான். மேலும் அவன் இஸ்ரவேலின் வரலாற்றில் மிகப்பெரிய தலைவர்களில் ஒருவனாகத் திகழ்ந்தான்.

இந்தப் பட்டியலோடு **தீர்க்கதரிசிகளும்** சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாக விளங்கிய மாண்புமிக்க மக்கள், மனச்சாட்சிக்கு உருவம் கொடுத்தவர்கள், பொய் சொல்லுவதிலும் மரணமடைவதை மேலாக நினைத்தவர்கள், கெடுநோக்குடன் இப்புவியில் வாழ்வதைக்காட்டிலும் நல்மனச்சாட்சியுடன் விண்ணகம் செல்வதைத் தெரிந்துகொண்டவர்கள் ஆவார்கள்.

11:33 இப்பொழுது ஆசிரியர் மனிதர்களுடைய பெயர்களைச் சொல்லுவதிலிருந்து அவர்கள் செய்த அருஞ்சாதனைகளைக் கூறத் திரும்புகிறார்.

அவர்கள் **ராஜ்யங்களை ஜெயித்தார்கள்**. இங்கு நம்முடைய சிந்தனை யோசுவாவினிடத்திற்கும், நியாயாதிபதிகளினிடத்திற்கும் (அவர்கள் உண்மையாகவே படைத் தலைவர்களாக இருந்தவர்கள்), தாவீதினிடத்திற்கும் இன்னும் பலரிடத்திற்குமாய்த் திரும்புகிறது.

அவர்கள் **நீதியை நடப்பித்தார்கள்**. சாலொமோன், ஆசா, யோசபாத், யோவாஸ், எசேக்கியா மற்றும் யோசியா என்னும் மன்னர்களின் ஆளுகை முழுநிறைவானதாக இல்லையெனினும் நீதியைப் பண்பாகக் கொண்டிருந்தது.

அவர்கள் **வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள்**. ஆபிரகாம், மோசே, தாவீது, சாலொமோன் ஆகியோருடன் தேவன் உடன்படிக்கை செய்து கொண்டதை இது நமது நினைவுக்குக் கொண்டு வருகிறது. அல்லது அவர்கள் தேவனுடைய வார்த்தையைச் செயல் முறையில் நிறைவேற்றி, தேவன் அளித்த வாக்குறுதிகள் தங்களிடத்தில் நிறைவேறியதைக் கண்டார்கள்.

அவர்கள் **சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்**. இங்கு தானியேல் மிகச்சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறான் (தானி. 6:22). ஆனால் நாம் சிம்சோன் (நியா. 14:5,6), தாவீது (1 சாமு. 17:34,35) ஆகியோரையும் நினைவுகூர வேண்டும்.

11:34 அவர்கள் **அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள்**. எபிரெய இளைஞர் மூவருடைய விலங்குகள் எரிந்து அவர்கள் அதனிமித்தம் விடுதலை அடையும்படி செய்வதற்கு மட்டுமே எரிந்துகொண்டிருந்த சூளைக்கு ஆற்றல் இருந்தது (தானி. 3:25). இவ்வாறாக அது மாற்றுருவத்தில் வந்த ஆசிர்வாதமாகக் காணப்பட்டது.

அவர்கள் **பட்டயக் கருக்குக்குத் தப்பினார்கள்**. சவுலின் கெடுநோக்குள்ள தாக்குதலுக்கு தாவீது தப்பினான் (1 சாமு. 19:9,10), யெசபேலின் கொலைகார வெறுப்புக்கு எலியாவும் (1 இராஜா. 19:1-3), சீரியா மன்னனின் தாக்குதலுக்கு எலிசாவும் (2 இராஜா. 6:15-19) தப்பினார்கள்.

அவர்கள் **பலவீனத்தில் பலம்கொண்டார்கள்.** விசுவாசத்தைப் பற்றிய வரலாற்றுப் பதிவேட்டில் பலவீனத்தைக் குறித்த பல அடையாளங்களைக் காணமுடியும். ஏகூத் இடதுகைப் பழக்கமுள்ளவனாயிருந்தான்; ஆனாலும் அவன் மோவாபின் மன்னனைக்கொன்று போட்டான் (நியா. 3:12-22). யாகேல் "பலவீன பாண்டமாயிருந்த" போதிலும் ஒரு கூடார ஆணியைக் கொண்டு சிசெராவைக் கொன்று போட்டாள் (நியா. 4:21). உடைந்துபோன பானைகளைக் கொண்டு கிதியோன் மீதியானியரைத் தோற்கடித்தான் (நியா. 7:20). ஓராயிரம் பெலிஸ்தியரை முறியடிக்க சிம்சோன் கழுதையின் தாடையெலும்பைப் பயன்படுத்தினான் (நியா. 15:15). பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார் என்பதற்கு இவர்கள் யாவரும் எடுத்துக் காட்டுகளாகத் திகழ்ந்தார்கள் (1 கொரி. 1:27).

அவர்கள் **யுத்தத்தில் வல்லவர்களானார்கள்**. இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் விசுவாசம் மனிதர்களுக்கு பலத்தைக் கொடுத்துத் திறமையைப் பெருக்கியது. மேலும் அது வெல்வதற்கரிய பல சூழ்நிலைகளில் வெற்றிகொள்ளும்படியான ஆற்றலைத் தந்தது.

அவர்கள் **அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்**. போதுமான போராயுதங்கள் இல்லாதிருந்தபோதும், எண்ணிக்கையில் எதிரிகளைக் காட்டிலும் குறைவாக இருந்தபோதும் இஸ்ரவேல் படை எதிரிகளின் குழப்பத்திற்கிடையில் மற்றவர்களுக்குத் திகைப்புண்டாக்கும்படி வெற்றிவாகை சூடியது.

11:35 ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடு எழுந்திருக்கப் பெற்றார்கள். சாறிபாத் விதவையும் (1 இராஜா. 17:22), சூனேம் ஊர்ப் பெண்மணியும் (2 இராஜா. 4:34) இங்கு குறிப்பிடப்பட்டுள்ளார்கள் எனலாம்.

ஆனால் விசுவாசத்திற்கு இன்னொரு பக்கமும் இருக்கிறது. திகைப்பூட்டும் அருஞ்செயல்களை செய்தவர்களோடு, கடுந்துன்பங்களைப் பொறுமையோடு சகித்தவர்களும் இருந்தார்கள். முந்தினவர்களை எவ்வளவு உயர்வாக தேவன் மதித்தாரோ, அது போலவே பிந்தினவர்களையும் மதித்தார்.

கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டிருந்ததன் நிமித்தம் சிலர் கொடுமையான துன்புறுத்தல்களுக்கு ஆளானார்கள். அவர்கள் யெகோவாவை மறுத்துரைத்திருந்தால், விடுதலை பண்ணப்பட்டிருப்பார்கள், ஆனால் அவர்களோ உயிரோடிருந்து தேவனுடைய துரோகி என்று பெயர் எடுப்பதைக் காட்டிலும் மரணமடைந்து பின்னர் விண்ணக மகிமையோடு உயிர்த்தெழுதலையே சிறந்தது என்று கருதினார்கள். மெக்கபேயரின் காலத்தில் ஒரு தாயும் அவளுடைய ஏழு குமாரர்களும் அந்தியோகஸ் எபிபெனஸ் என்பவனால் ஒருவர் பின் ஒருவராக அவர்களுடைய கண்களுக்கு முன்பாகக் கொல்லப்பட்டார்கள். அவர்கள் **மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு,** விடுதலை செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது இவ்வுலகில் வெறுமனே தொடர்ந்து உயிர்வாழ்வதைக் காட்டிலும் மரணமடைவதை மேலென்று கருதினார்கள். மோரிசன் என்பார் விவரிக்கிறார்:

> ஆகவே இதுவும் விசுவாசத்தின் விளைவுதான், இது ஒரு மனிதனுக்கு விடுதலையைக் கொடுக்கிறது. மற்றொருவனுக்கு அது விடுதலையைக் கொண்டுவருகிறதில்லை, மாறாக சில வேளை

களில், விடுதலை கொடுக்கப்படும்போது, விசுவாசமானது அதனை வேண்டாமென்று மறுத்துரைப்பதற்குரிய சீரிய துணிவைத் தருகிறது. ஒன்றை எடுத்துக்கொள்ளும்படி விசுவாசம் காட்டக்கூடிய காலங்களும் உள்ளன. அதனை மறுத்துரைக்கும்படி அது கூறக்கூடிய காலங்களும் உள்ளன. விசுவாசம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும்படியான விடுதலையும் உண்டு. விசுவாசம் மறுத்துரைக்கக் கூடிய விடுதலையும் உண்டு. அவர்கள் விடுதலையை வேண்டாமென்று கூறி உபத்திரவத்தை ஏற்றுக்கொண்டார்கள் – அதுவே அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்பதற்கான அடையாளமும் முத்திரையுமாகும். விசாலமான அறை வேண்டாமென்று உடனடியாக மறுத்துரைக்கும் செயல் சில வேளைகளில் விசுவாசத்தின் வலிமை மிக்க சான்றாகக் காணப்படும்.[25]

11:36 வேறு சிலர் ஏளனப்படுத்தப்பட்டார்கள், கசையடி பெற்றார்கள், சிறைச்சாலையில் கட்டுண்டவர்களாக அடைக்கப்பட்டார்கள். தேவனுக்கு உண்மையுள்ளவனாக நடந்துகொண்ட காரணத்தால், இங்கு கூறப்பட்டுள்ள எல்லா வகையான தண்டனைகளையும் எரேமியா அனுபவிக்க நேரிட்டது (எரே. 20:1-6; 37:15). பாவஞ்செய்வதை விட பாடு அனுபவிப்பதே மேல் என்று நினைத்தால் யோசேப்பும் சிறையில் அடைக்கப்பட்டான் (ஆதி. 39:20).

11:37 அவர்கள் **கல்லெறியுண்டார்கள்**. தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே சகரியாவை வேதபாரகர் மற்றும் பரிசேயரின் முன்னோர்கள் இவ்விதமாகக் கொலை செய்ததாக இயேசு அவர்களுக்கு நினைவூட்டினார் (மத். 23:35).

வாளால் அறுப்புண்டார்கள். இந்த முறையில் தான் ஏசாயாவை மனாசே கொன்றான் என்று பாரம்பரியம் கூறுகிறது.

அவர்கள் **பரீட்சை பார்க்கப்பட்டார்கள்.**[26] தங்களுடைய கொள்கைகளுக்கு இணங்க வேண்டும், விசுவாசத்தை மறுத்துரைக்க வேண்டும், சில பாவச் செயல்களைச் செய்ய வேண்டும் அல்லது ஏதோ ஒரு வகையில் கர்த்தரை மறுத்துரைக்க வேண்டும் என்று விசுவாசிகள் மிகப் பெரிய அளவில் வற்புறுத்தப்பட்ட நிகழ்ச்சிகளையே இந்தச் சொற்றொடர் பெரும்பாலும் குறிப்பிடுகிறது எனலாம்.

அவர்கள் **பட்டயத்தால் வெட்டப்பட்டு மரித்தார்கள்**. தேவனுடைய செய்தியை உள்ளபடியே யோயாக்கீம் அரசனிடம் தீர்க்கதரிசியாகிய உரியா உரைத்ததன் காரணமாக இந்த விலையையே கொடுக்க நேரிட்டது (எரே. 26:23); ஆனால் மெக்கபேயரின் காலத்தில் பெருமளவில் மனிதர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சியையே இது குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது.

செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். மூர்ஹெட் என்பார் விளக்கமளிக்கிறார்:

தேவனை மறுத்துரைத்து இவ்வுலகத்தின் பொய்யை விசுவாசித்திருந்தால், அவர்கள் பட்டு மற்றும் வெல்வட் துணிகளின் சலசலப்பில் இளவரசர்களின் அரண்மனை வசதிகளோடு இருந்திருப்பார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்தார்கள். வெள்ளாடுகளைக் காட்டிலும் அல்லது செம்மறியாடுகளைக் காட்டிலும் அவர்கள் மேலானவர்களாகக் கருதப்படவில்லை, அவர்கள் அந்த விலங்குகளைப் போல அடிக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் என்றே கருதப்பட்டார்கள்.[27]

அவர்கள் வறுமையையும், கடுந்துன்பத்தையும், உபத்திரவத்தையுமே அனுபவித்தார்கள்.

11:38 அவர்கள் வாழ்வதற்குத் தகுதியானவர்கள் என்றுகூட இந்த உலகம் அவர்களை நடத்தவில்லை. ஆனால் இங்கு தேவனுடைய ஆவியானவர் இடைமறித்து உணர்ச்சிமிக்க வகையில், அது அவ்வாறல்ல, உண்மையில் அது முற்றிலும் மாறுபாடானது என்று கூறுகிறார் - **உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை.**

அவர்கள் வனாந்தரங்களிலேயும், மலைகளிலேயும், குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். வீடுகள் அபகரிக்கப்பட்டவர்களாக, குடும்பங்களைவிட்டுப் பிரிக்கப்பட்டவர்களாக, விலங்குகளைப்போலத் துரத்துண்டவர்களாக, சமுதாயத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களாக அவர்கள் வெயிலையும் குளிரையும் சகித்தார்கள், கடுந்துன்பத்தையும் அவமானத்தையும் அனுபவித்தார்கள், ஆனாலும் கர்த்தரை மறுத்துரைக்கவில்லை.

11:39 இந்தப் பழைய ஏற்பாட்டு வீரர்களுடைய விசுவாசத்திற்கு தேவனே சான்று பகர்கிறார். ஆயினும் அவர்கள் **வாக்குத்தத்தம் பண்ணப் பட்டதை** அடைவதற்கு முன்னமே இறந்து போனார்கள். வெகுகாலம் மேசியாவின் வருகைக் காகக் காத்திருந்த போதிலும் அந்த நிகழ்ச்சி யைக் காணும்படி அவர்கள் உயிர்வாழவில்லை: அல்லது அவருடைய திருப்பணியால் உண்டான நன்மைகளை அனுபவிக்காமல் இறந்து போனார்கள்.

11:40 சில **விசேஷித்த நன்மைகளை தேவன் நமக்கென்று** பாதுகாத்து வைத்திருக்கிறார். **அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாத படிக்கு** நிகழ்ச்சிகளை அவர் முறைப்படுத்தி வைத் திருக்கிறார். பாவத்தைக் குறித்துக் காண்கை யில் அவர்களுக்குப் பரிபூரணமான மனச்சாட்சி இல்லாதிருந்தது. நாம் நம்முடைய கர்த்தரை நடுவானத்தில் சந்திக்கும் வரை, அவர்கள் பரலோகத்தில் மகிமையடைந்த சரீரங்களைப் பெறமாட்டார்கள், முழு நிறைவான நிலையை அடையவுமாட்டார்கள் (1 தெச. 4:13-18). பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடைய ஆவிகள் ஏற்கனவே கர்த்தருடைய சமுகத்தில் பரிபூரண நிலையை அடைந்திருக்கின்றன (எபி. 12:23). ஆனால் அவர்களுடைய சரீரங்கள், கர்த்தர் தம்முடைய மக்களுக்காகத் திரும்பி வரும்வரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழப் போவ தில்லை. அதன் பிறகு அவர்கள் உயிர்த்தெழு தலின் மகிமையை நிறைவாக அனுபவிப்பார்கள்.

இதனை நாம் இன்னொரு வகையாகக் கூறு வோமெனில், நம்மைப்போல பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் சிலாக்கியம் பெற்றவர்கள் அல்ல. இருந்த போதிலும் அவர்கள் சிலிர்க்கச் செய்யும் வெற்றிகளையும் பயங்கரமான சோதனைகளை யும் சந்தித்தார்கள் என்பதை எண்ணிப்பாருங் கள்! அவர்களுடைய வீரசாகசச் செயல்களை யும், சகிப்புத்தன்மையையும் நினைத்துப் பாருங் கள்! அவர்கள் சிலுவையின் மறுபக்கத்தில் வாழ்ந்தார்கள்; நாமோ சிலுவையின் முழுமை யான மகிமையில் வாழ்கிறோம். ஆனாலும் அவர் களுடைய வாழ்க்கையோடு நம்முடைய வாழ்க் கையை ஒப்பிட்டுப் பார்க்கையில் அது எவ்வாறு இருக்கிறது? எபிரெயர் 11 -ஆவது அதிகாரத்தில் நமக்கு விடுக்கப்பட்ட வலிமை வாய்ந்த அறை கூவலாக இது விளங்குகிறது.

இ. கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்க வேண் டிய நம்பிக்கை பற்றிய அறிவுரை (அதி. 12)

12:1 கடுந்துன்பத்திற்கு ஆளாக்கப்பட்ட மக்க ளுக்கே எபிரெய மடல் எழுதப்பட்டது என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக் காக அவர்கள் யூதமார்க்கத்தை விட்டுவிட்டு வந் தார்கள், ஆகவே அவர்கள் கடுமையான எதிர்ப் பைச் சந்திக்க நேரிட்டது. அவர்கள் அனுபவித்த கடுந்துன்பங்கள் தேவன் அவர்களிடத்தில் பிரிய மாயிருக்கவில்லை என்பதற்கு அடையாளமா யிருக்கிறது என்று அவர்கள் தவறாக நினைக்கக் கூடிய ஆபத்து இருந்தது. அவர்கள் சோர்வுற்று தங்களுடைய பற்றை விட்டுவிடக்கூடிய நிலை ஏற்படலாம். எல்லாவற்றிலும் மிகவும் மோச மானது என்னவெனில், அவர்கள் தேவாலயத்திற் கும் அதன் சமயச் சடங்குகளுக்கும் செல்லக் கூடிய நிலையும் ஏற்படலாம் என்பதேயாகும்.

அவர்களுக்கு ஏற்பட்ட கடுந்துன்பம் வேறு எவருக்கும் ஏற்பட்டதில்லை என்று அவர்கள் நினைக்கக்கூடாது. பதினோராவது அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் யாவரும் கர்த்தரி டத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருந்ததன் விளைவாகக் கடுமையாகப் பாடுபட்டார்கள், ஆனாலும் அவர்கள் அவற்றைப் பொறுமை யோடு சகித்தார்கள். குறைந்த சிலாக்கியங்கள் மட்டுமே பெற்றிருந்த அவர்கள் விடாமுயற்சி யுடன் கூடிய உறுதியுடன் இருந்தார்கள் என்றால், கிறிஸ்தவத்தின் சிறந்த நன்மைகளைப் பெற்ற நாம் எவ்வளவு அதிகமான உறுதியுடன் இருக்க வேண்டும்.

அவர்கள் நம்மைச் சுற்றிலும் **மேகம் போன்ற திரளான சாட்சிகளாக** இருக்கிறார்கள். இவ்வுல கத்தில் என்ன நிகழ்கிறது என்பதை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது இதன் பொருளன்று. மாறாக அவர்களுடைய விசுவாசம் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவை நிறைந்த நமக்கு முன்பாக மிகவுயர்ந்த சாட்சிகளாக விளங்குவதோடு அவ்வுயர்ந்த தரத்தை நாமும் அடைய வேண்டுமென்று கூறுகிறார்கள்.

"விண்ணகத்தில் இருக்கிற பரிசுத்தவான் களுக்கு நம்முடைய உலக வாழ்க்கையைக் காண முடியுமா அல்லது இங்கு நடக்கிற நிகழ்ச்சி கள் யாவும் தெரியுமா?" என்னும் கேள்வியை இந்த வசனம் அவ்வப்போது எழுப்புவதுண்டு. ஒன்றை மட்டும் நாம் உறுதியாகச் சொல்ல முடி யும், என்னவென்றால் ஒரு பாவி மனந்திரும்பும் போது அவர்கள் அதை அறிவார்கள்: "அதுபோல,

மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற் றொன்பது நீதிமான்களைக் குறித்து சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் சந்தோ ஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 15:7).

கிறிஸ்தவ வாழ்க்கை ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பாயிருக்கிறது. அதற்குத் தற்கட்டுப்பாட்டு ஒழுங்கும், துன்பத்தைத் தாங்கும் ஆற்றலும் தேவை. நம்மைத் தடைசெய்கிற எல்லாவற் றையும் நாம் அகற்றிவிட வேண்டும். சுமைகளில் எவ்விதக் கேடுவிளைவிக்கக்கூடிய தன்மையும் இல்லாமலிருக்கலாம், ஆனால் அவை முன்னேற் றத்தைத் தடைசெய்யும்; பொருட்செல்வம், குடும்ப உறவுகள், வசதிகள்மேல் நாட்டம், இடம்பெயரு தலுக்கு இயலாமை போன்றவை அவற்றுள் அடங்கும். ஒலிம்பிக் ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவர் உணவையும் பானங்களையும் கொண்டு செல்லத் தடையேதும் இல்லை, ஆனால் அவ்வித மாகக் கொண்டுசெல்லும் ஒருவரும் வெற்றிபெற முடியாது.

நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தை யும் தள்ளிவிட்டு நாம் செல்ல வேண்டியது அவசி யம். இது எந்த வகையான பாவத்தையும் குறிப்ப தாகப் பொருள்கொள்ளலாம், ஆனால் குறிப்பாக இது அவநம்பிக்கையைச் சுட்டிக்காட்டுகிறது. தேவனுடைய வாக்குறுதிகளில் நாம் முழு நிச்சய மான நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்; மேலும், விசுவாச வாழ்க்கை நிச்சயமாக வெற்றி யைத் தரும் என்னும் முழு நம்பிக்கையையும் நாம் கொண்டிருக்க வேண்டும்.

அந்த **ஓட்டம்** எளிதானது, அதாவது கிறிஸ் தவ வாழ்க்கையில் எல்லாம் இன்பமானதாக இருக்கும் என்னும் தவறான கருத்திலிருந்து நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும். சோத னைகள் ஊடாகவும் வேதனைகள் ஊடாகவும் நாம் செல்லுகின்ற வேளைகளில் தொடர்ந்து முன்னேறிச் செல்ல நாம் விடாமுயற்சியோடு செயல்பட வேண்டும்.

12:2 அந்த ஓட்டம் முழுவதும், வேறு எந்தப் பொருளையும் நோக்காமல் எல்லோருக்கும் முதல்வராக ஓடியவராகிய இயேசுவின்மீது நம் கண்களைப் பதித்துக்கொள்ள வேண்டும். A. B. புரூஸ் விளக்கமளிக்கிறார்:

> பிறர் யாவருக்கும் மேலாக ஒருவர் தனிப்பட்ட வகையில் கவனத்தை ஈர்க்கக்கூடியவராக இருக்கிறார்... விசுவாசத்தின் மூலமாக மட்டுமே வாழ்க்கையை நடத்துவது என்னும் கருத்தை முதல் முதலாக முழுமையாக உண்மை யானது என்று மெய்ப்பித்த மனிதர் . . . சிலுவை யின் கொடூரமான பாடுகளை அஞ்சாவுறுதி யுடன் சகித்தவர், அதனுடைய அவமானத்தை அற்பமாய் எண்ணியவர், தற்கால வேதனை யையும் அவமானத்தையும் குறித்த எண்ணங் களைத் துடைத்தழிக்கக் கூடியதும் வரவிருக் கிற மகிழ்ச்சியையும் மகிமையையும் மிகத் தெளிவான முறையில் உணர்த்துகிறதுமான விசுவாசத்தால் விடாஉறுதியுடன் வாழ்ந்தவர்.[28]

அவரே நம்முடைய **விசுவாசத்தைத் துவக்கு கிறவர்** அல்லது முன்னோடி. அதாவது விசுவாச வாழ்க்கை என்றால் என்னவென்பதற்கு மிக நேர்த்தியான ஒரேவொரு எடுத்துக்காட்டாக நமக்கு முன் வாழ்ந்து காட்டியவர் அவரே.

அவர் நம்முடைய **விசுவாசத்தை முடிக்கிற வருமாயிருக்கிறவர்**. அவர் ஓட்டத்தைத் தொடங் கியவர் மட்டுமல்ல, அதனை வெற்றியோடு முடித் தவரும் அவரே. அவருடைய ஓட்டத்தின் பாதை எவ்வளவாய் விரிந்திருக்கிறது; பரலோகத்தி லிருந்து பெத்லகேம், பின்னர் அங்கிருந்து கெத்செமனேக்கும் கல்வாரிக்கும் சென்றார், அதன் பிறகு கல்லறையிலிருந்து வெளியேறி மீண்டும் பரலோகத்திற்குச் சென்றார். அவர் ஒரு தடவைகூட இடறிவிழவுமில்லை, திரும்பிப் பார்க் கவும் இல்லை. மீட்கப்பட்ட அனைவரும் அவ ரோடு நித்தியமாய் ஒன்றுகூட்டப்பட்டவர்களாக இருக்கும் அந்த வரப்போகிற மகிமையின்மேல் தமது கண்களைப் பதித்தவராக இருந்தார். அவர் **அவமானத்தைக்** குறித்துச் சிந்திக்காமல், துன் பத்தையும் மரணத்தையும் பொறுமையோடு சகிக்கக் கூடிய ஆற்றலை இதுவே அவருக்குக் கொடுத்தது. இன்று அவர் **தேவனுடைய சிங்கா சனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.**

12:3 இப்பொழுது காட்சியானது ஓட்டத்தி லிருந்து பாவத்திற்கு எதிரான போரை நோக்கிச் செல்கிறது. நம்முடைய அஞ்சாநெஞ்சமுடைய தலைவர் கர்த்தராகிய இயேசு, **தமக்கு விரோத மாகப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்க ளைச் சகித்த அவரைப்போல வேறு ஒருவரும்** ஒருக்காலும் சகித்ததில்லை. எப்பொழுதெல்லாம் நாம் **இளைப்புள்ளவர்களாய், சோர்ந்துபோகக் கூடிய** மனப்பான்மை கொள்கிறோமோ, அப் பொழுதெல்லாம் அவர் எத்தகைய விபரீதங்

களைச் சகித்தார் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் அடைகிற வேதனைகள் அற்பமாய்க் காணப்படும்.

12:4 பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிற செயலில் நாம் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆனாலும் இன்னும் நாம் **இரத்தஞ்சிந்தத்தக்க** அளவிற்கு அதை **எதிர்த்து நிற்கவில்லை**. அதாவது, மரணம் அடையக் கூடிய அளவிற்கு நாம் எதிர்த்துநிற்கவில்லை. அவரே அவ்விதமாய்ப் போராடினார்!

12:5 பாடுகளைக் குறித்த கிறிஸ்தவக் கருத்து என்னவென்பது இப்பொழுது அறிமுகப்படுத்தப் படுகிறது. இன்னல்கள், சோதனைகள், வேதனைகள், நோய்கள், உடல்நோவு, வருத்தம், இன்னும் பல தொல்லைகள் விசுவாசியின் வாழ்க்கையில் ஏன் ஏற்படுகின்றன? தேவன் கோபமாயிருக்கிறார் அல்லது அவர் நம்மிடத்தில் பிரியமாயில்லை என்பதற்கு இவையாவும் அடையாளங்களா? அவை தற்செயலாக நிகழ்கின்றனவா? அவற்றிற்கு நாம் எவ்வாறு பதிற்செயல் செய்ய வேண்டும்?

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டும் முறைமையின் பாகமாக விளங்கும் இந்தச் செய்திகளை தொடர்ந்து வரும் வசனங்கள் விளக்கித் தருகின்றன. இவையாவும் தேவனிடத்திலிருந்து வராவிட்டாலும், இவற்றை தேவன் அனுமதிக்கிறார். பின்னர் அவருடைய புகழ்ச்சிக்காகவும், நம்முடைய நன்மைக்காகவும், பிறருடைய ஆசிர்வாதத்திற்காகவும் அவற்றை வேறு வகையாக மாற்றுகிறார்.

கிறிஸ்தவர்களுக்கு எதுவும் தற்செயலாக நடப்பதில்லை. சோக நிகழ்ச்சிகள் யாவும் மாறுவேடத்தில் வரும் ஆசிர்வாதங்கள், ஏமாற்றங்கள் யாவும் அவர் அருளும் புதிய வாய்ப்புகள். நம்முடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பாதகமான சூழ்நிலைகளில் தேவன் நம்மை நடத்தி கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றுவார்.

ஆகவே, தொடக்ககால எபிரெய விசுவாசிகள், தேவன் தம்முடைய மக்களை "மகனே" என்று அழைக்கிற நீதிமொழிகள் 3:11,12 ஆகிய வசனங்களை நினைவுகூரும்படி அறிவுறுத்தப்பட்டார்கள். அங்கு அவருடைய சிட்சையை ஏளனமாய்க் கருதுபவர்களை அல்லது அவருடைய கடிந்துகொள்ளுதலினால் சோர்ந்துபோகிறவர்களை அவர் எச்சரிக்கிறார். ஒருவேளை அவர்கள் அவருக்கு எதிர்த்து நின்றாலோ, தங்களுடைய கொள்கைப் பற்றுதலை விட்டுவிட்டாலோ அவருடைய நடத்துதலால் உண்டாகக்கூடிய நன்மைகளை இழந்துபோவதோடு, அவருடைய பாடங்களைக் கற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தையும் இழந்துபோவார்கள்.

12:6 நாம் *சிட்சை, சிட்சித்தல்* ஆகிய சொற்களை வாசிக்கும்போது, அவை சாட்டையால் அடிப்பதைக் குறிக்கின்றன என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அந்தச் சொல் இங்கு சிறுபிள்ளைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சி அல்லது கல்வி புகட்டும் செயல் என்று பொருள்படும். அறிவுறுத்துதல், ஒழுங்குநடவடிக்கை, திருத்துதல், எச்சரிப்பு யாவும் இவற்றுள் அடங்கும். கிறிஸ்தவக் குணநலன்களைப் பயிற்றுவிக்கவும், தீமையைப் புறம்பே தள்ளவும் இவை யாவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில், சிட்சையானது தவறு செய்தலுக்குக் கொடுக்கப்படும் தண்டனையல்ல, மாறாக உபத்திரவங்களின் மூலமாக அளிக்கப்படும் பயிற்சியேயாகும் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

நீதிமொழிகளில் உள்ள இந்தப் பகுதி, தேவனுடைய சிட்சையானது அவருடைய அன்பின் நிரூபணமாக இருக்கிறது என்றும், அவருடைய **புத்திரன்** எவனொருவனும் அவரளிக்கும் சிட்சைக்குத் தப்ப முடியாது என்றும் திட்டவட்டமாகக் கூறுகிறது.

12:7 தேவன் அளிக்கும் சிட்சைக்குத் தொடர்ந்து அடங்கியிருப்பதால், நாம் அவருடைய ஒழுங்கு முறைப்பயிற்சியை அனுமதித்து அவருடைய சாயலின் அச்சுக்குள் வார்க்கப்பட்டவர்களாக மாறுவோம். இதற்கு மாறாக நாம் அவருடைய பயிற்சிக்கு இடங்கொடுக்காமல் குறுக்கு வழியில் செல்வோமானால், அவர் நம்மை நீண்டகாலம், பற்பல அறிவூட்டும் போதனைகளாலே பயிற்றுவிக்க வேண்டிய நிலை ஏற்படும், அதன் விளைவாகத் தொல்லைகள் மிகுந்த பயிற்சிகளை மேற்கொள்ள நேரிடும். தேவனுடைய பள்ளியில் பல வகுப்புகள் உள்ளன. ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்குச் செல்லவேண்டுமானால், நாம் நம்முடைய பாடங்களைக் கற்றிருக்க வேண்டும்.

ஆகவே சோதனைகள் நம்மிடத்தில் வரும்போது, தேவன் நம்மைப் புத்திரர்களாக நடத்துகிறார் என்பதை உணர வேண்டும். பொதுவாக தகப்பனுக்கும் மகனுக்கும் இடையேயுள்ள உறவில், தகப்பன் தன்னுடைய **மகனிடத்தில்** அன்புபாராட்டி, அவனுக்குச் சிறப்பானது கிடைக்க வேண்டும் என்னும் எண்ணத்தில், அவ

னுக்குத் தேவையான பயிற்சிகளை அளிக்கிறான். இயல்பான முறையில் கற்று வளர்ச்சிய டைந்துகொள்ளட்டும் என்று நம்மை நம் போக்கில் விட்டுவிடுமளவிற்கு தேவன் நம்மிடத்தில் அன்புகூராமல் இருப்பதில்லை.

12:8 ஆவிக்குரிய நிலைப்பாட்டில், தேவனுடைய சிட்சையை அனுபவிக்காதவர்கள் அவருடைய உண்மையான **புத்திரர்** அல்லர், அவர்கள் **வேசிப்பிள்ளைகளே** ஆவார்கள். ஒரு தோட்டக்காரன் முட்செடிகளை வெட்டிச் சுத்தப்படுத்துவதில்லை, அவன் திராட்சைக் கொடிகளையே வெட்டிச் சுத்தப்படுத்துகிறான். இயற்கை உலகில் எது முறையானதோ, அதுபோலவே ஆவிக்குரிய உலகிலும் முறையாயிருக்கிறது.

12:9 நம்முடைய **சரீரத்தின் தகப்பன்மார்களிடத்திலிருந்து** நம்மில் பெரும்பாலோர் சிட்சையை அனுபவித்திருக்கிறோம். அவர்கள் நம்மை வெறுத்தார்கள் என்பதற்கான அடையாளமாக நாம் அதைக் கருதியதில்லை. நம்முடைய நன்மைகளில் அவர்கள் ஆவலுடையவர்களாக இருந்தார்கள் என்று உணர்ந்தவர்களாக, நாம் **அவர்களுக்கு அஞ்சி நடந்தோம்,** அதாவது அவர்களுக்கு மதிப்பளித்தோம்.

அவ்வாறிருக்க, நாம் **பிழைக்கத்தக்கதாக** நமக்குப் பயிற்சியளிக்கும் **ஆவிகளின் பிதாவுக்கு** வெகு அதிகமாய் மதிப்பளித்து **அடங்கி நடக்க வேண்டும்** அல்லவா? ஆவியாய் இருக்கிற அனைத்திற்கும் அல்லது ஆவியைப் பெற்றிருக்கிற அனைத்திற்கும் தேவனே **பிதாவாக** (மூலகாரணராக) இருக்கிறார். மனித சரீரத்தில் குடியிருக்கிற ஆவியே மனிதனாவான். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருப்பதால் நம்முடைய வாழ்க்கையை அதனுடைய உண்மையான பொருளில் மகிழ்வுடன் அனுபவிக்கிறோம்.

12:10 இவ்வுலகில் பெற்றோர்கள் அளிக்கின்ற சிட்சை முழுநிறைவானதல்ல. அது ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் செயல்முறையில் இருக்கிறது. அதாவது, குழந்தைப் பருவத்திலும் இளம் பருவத்திலும் மட்டுமே அதனைச் செயல்படுத்த முடியும். அக்காலத்தில் அது வெற்றிபெறவில்லையென்றால், அதற்கும் மேலாக ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றுகிறபடி செய்கிறார்கள்; அதாவது அவர்களுக்குச் சரியென்று தோன்றுகிறபடி செய்கிறார்கள், ஆனால் சில வேளைகளில் அது சரியாயிருப்பதில்லை.

ஆனால் தேவனுடைய ஒழுங்குமுறைப் பயிற்சியோ எப்பொழுதும் நிறைவானதாக இருக்கும். அவருடைய அன்பிற்கு எல்லையில்லை, அவருடைய ஞானமோ தவறற்றது. அவரளிக்கும் சிட்சை ஒருக்காலும் மனம்போனபடி இருக்காது, மாறாக அது எப்பொழுதும் நமது நன்மையைக் கருதியதாகவே இருக்கும். நம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாவதே அவருடைய நோக்கமாயிருக்கிறது. தேவனுடைய பள்ளிக்கு அப்பாற்பட்ட நிலையில் தேவபக்தியை ஒருவரிடத்தில் உருவாக்க முடியாது. திருவாளர் ஜோவட் இதனை விளக்குகிறார்:

> தண்டனை கொடுக்க வேண்டுமென்பதல்ல, ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே தேவன் கொடுக்கும் சிட்சையின் நோக்கமாகும். "அவருடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு" அவர் நம்மைச் சிட்சிக்கிறார். "நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு" என்னும் சொற்றொடரில் ஓர் இலக்கு இருக்கிறது. அந்த இலக்கு தூய்மையும் அழகும் நிறைந்த ஒரு வாழ்க்கையைச் சுட்டிக் காட்டுகிறது. கட்டுப்பாடற்ற வகையில் எதையும் பொருட்படுத்தாமல் கொழுந்துவிட்டு எரிந்து, விலையுயர்ந்த பொருட்களைச் சாம்பலாக்கி விடுகிற காட்டுத்தீயல்ல அது. மாறாக அது உலோகங்களைத் தூய்மைப்படுத்தக்கூடிய புடமிடும் தீயைப் போன்றது. சுத்திகரிப்பவர் அந்தத் தீயின் அருகே அமர்ந்து விழிப்பற்ற நிலையிலிருந்து தூய்மையையும், பலவீனத்திலிருந்து உறுதியையும் கொண்டுவரும்படி அந்தத் தீயைக் கிளறிவிட்டு, பொறுமையோடும் கனிவோடும் தமது வேலையைச் செய்கிறார். கிருபையின் மங்கலான பகுதியின் மூலமாக தேவன் கிரியை செய்யும்போதுகூட அதனை அவரால் உருவாக்க முடியும். அவர் அப்பொழுது ஆவியின் பூக்களையும் கனிகளையும் உருவாக்குகிறார். அவருடைய அன்பு எப்பொழுதும் இனிமையானவற்றில் நாட்டம் உடையதாயிருக்கிறது.[29]

12:11 சிட்சிக்கப்படுகின்ற தருணங்களில் எல்லாச் சிட்சைகளும் வேதனை அளிப்பதாகவே தோன்றும். ஆனால் **பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய பலனைத் தரும்.** ஆகவேதான் லெஸ்லி வெதர்ஹெட் என் பாரின் கீழே தரப்பட்டுள்ள சாட்சியைப் போன்ற

பல சாட்சிகளைக் கேட்கிறோம்:

> எல்லா மனிதர்களையும் போலவே நலமும், மகிழ்ச்சியும், வெற்றியும் சூழ்ந்த வளமிக்க வாழ்க்கையைப் பெரிதும் விரும்பியவனாக இருந்தேன், ஆனால் அந்த வளமிக்க நாட்களைக் காட்டிலும் அச்சமும் தோல்வியும் மிகுந்த இருளார்ந்த நேரங்களிலே தேவனைக் குறித்து அதிகமாகக் கற்றுக்கொண்டேன். இருளின் பொக்கிஷங்கள் என்று சொல்லப்படும் விஷயங்கள் சில இருக்கின்றன. அந்த இருளானது கடந்து போகக்கூடியதாக இருக்கிறது, அதற்காக தேவனுக்கு நன்றிசெலுத்தக் கடவோம். ஆனால் ஒருவர் இருளில் எதனைக் கற்றறிந்திருக்கிறாரோ, அதனை அவர் என்றென்றும் தன்னகத்தே கொண்டிருக்கிறார். ''தேவனுக்கும் உங்களுக்கும் இடையே வந்துவிட்டதாக நீங்கள் கற்பனை செய்துகொள்கிற சோதனைகள் தாழ்மையோடு ஏற்றுக்கொள்ளப்படுகிறபோது, அவரோடு ஒன்றிணைவதற்கு வழிவகை செய்யக்கூடியவை என்று மெய்ப்பிக்கப்படும். நம்மை மூழ்கடித்து, நம்முடைய பெருமையை நிலைகுலையச் செய்யக்கூடிய சோதனைகள் யாவும், கிளர்ச்சியூட்டி, உற்சாகமளிக்கக்கூடிய எல்லாவற்றையும்விட அதிக நன்மை செய்யும்'' என்று பிஷப் பெனலன் கூறுகிறார்.[30]

அல்லது C. H. ஸ்பர்ஜன் அவர்களின் சாட்சியைக் கருத்தூன்றி படியுங்கள்:

> மகிழ்ச்சி நிறைந்ததும், வசதி மிகுந்ததும், நலம் வாய்ந்ததுமான காலங்களில் நான் பெற்ற எல்லாக் கிருபையும் ஒரு சல்லிக் காசுக்கு மட்டுமே சமமாயிருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் என்னுடைய வருத்தங்களிலும், வேதனைகளிலும், இன்னல்களிலும் நான் பெற்ற கிருபையானது எண்ணிலடங்கா அளவு மிகப்பெரியது. சுத்தியலுக்கும் பட்டறைக் கல்லுக்கும், அக்கினிக்கும் அரத்திற்கும் கடன்படாதிருக்கக்கூடிய விஷயம் இருக்கக்கூடுமா? என்னுடைய வீட்டிலுள்ள பொருட்களிலேயே மிகச் சிறந்தது இடுக்கண் என்னும் பொருள்தான்.[31]

12:12 விசுவாசிகள் தங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் பாதகமான சூழ்நிலைகளில் பணிந்து போகக்கூடாது. அவர்களிடத்தில் உண்டாகக் கூடிய விசுவாசக் குறைவு மற்றவர்களிடத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்திவிடும். ஜீவனுள்ள கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யும்படி சோர்வுற்று நெகிழ்ந்துபோன **கரங்கள்** புத்துணர்ச்சி பெற வேண்டும். **தளர்ந்த முழங்கால்கள்** ஜெபத்தில் நிலைத்திருக்கத்தக்கதாக வலிமை பெற வேண்டும்.

12:13 தடுமாறுகிற பாதங்களின் வழிகள் கிறிஸ்தவ சீடர்களுக்குரிய செவ்வையான பாதைகளில் வழிநடத்தப்பட வேண்டும். இது குறித்து வில்லியம்ஸ் எழுதுகிறார்:

> கர்த்தரை முழுவதுமாகப் பின்பற்றிச் செல்லுகிற யாவரும் வலிமையற்ற சகோதரருக்கு விசுவாசப் பாதையின் கரடுமுரடுகளை அகற்றிச் செவ்வைப்படுத்தித் தருகிறார்கள். அவரை முழுவதுமாகப் பின்பற்றிச் செல்லாதவர்கள் பிறருடைய கால்கள் நடந்து செல்லுகிற பாதையைக் கரடுமுரடாக்கி ஆவிக்குரிய முடவர்களாக மாற்றிவிடுகிறார்கள்.[32]

G. H. லேங் என்பார் மிகச்சிறந்த கதை ஒன்றை எடுத்துரைக்கிறார்:

> சூறாவளிக் காற்றில் அகப்பட்டு கடுமையான தாக்குதலுக்குள்ளாகி சாலைப் பயணத்தில் களைப்படைந்த ஒரு பயணி மனச்சோர்வுற்று துவண்டு போய்விட்டார். அவருடைய தோள்கள் குறுகிப்போயின, கைகள் தளர்ந்து போயின, கால்கள் மடங்கி நடுங்கிய நிலையில் இருந்தன. அவர் இப்பொழுது தனது பயணத்தைத் தொடர முடியாமல் தரையில் விழுவதற்கு ஆயத்தமாகிவிட்டார். நம்முடைய நூலாசிரியர் படவுருவில் காட்டுகிற தேவனுடைய பயணி அந்த நிலையில்தான் காணப்படுகிறார்.
>
> ஆனால் அந்தப் பயணியிடத்திற்கு நம்பிக்கையுள்ள முகத்தோற்றத்துடனும் தயவுள்ள புன்னகையுடனும் உறுதியான குரலுடனும் ஒருவர் வருகிறார். அவர், ''உற்சாகத்துடன் எழுந்து நிமிர்ந்து நில், உன் கைகால்களை உறுதியாக்கிக்கொள், கிருபையினாலே திடன்கொள். நீ ஏற்கனவே தொலை தூரம் வந்திருக்கிறாய்; நீ ஏற்கனவே செய்துமுடித்த கடின உழைப்பை வீணாக்கிவிட வேண்டாம். பயணத்தின் முடிவில் சிறப்பு மிக்க வீடு இருக்கிறது. அதோ, கண்ணுக்கெட்டிய தொலைவில் அதை

நோக்கிச் செல்வதற்கான நேரான சாலை அமைந்திருக்கிறது. உன்னுடைய முடமான நிலையைச் சரிசெய்துகொள்ள மேலான மருத்துவரை அணுகு... உன்னுடைய முன்னோடி இதே கடினமான பாதையின் வழியாக தேவனிடத்திற்குச் சென்றிருக்கிறார்; இன்னும் பலர் இந்த வழியாகச் சென்று வெற்றி பெற்றிருக்கிறார்கள், மேலும் மனிதர்கள் இந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள், நீ தனியாக இல்லை. தொடர்ந்து முன்னேறிச் செல்! நீயும் நிச்சயமாக இலக்கை அடைந்து பரிசைப் பெறுவாய்'' என்று கூறுகிறார்.

இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல அறிந்தவன் பாக்கியவான் (ஏசா. 50:4). புத்திமதிகளை ஏற்றுக்கொள்கிறவனும் பாக்கியவான் (எபி. 13:22). கர்த்தருடைய சிட்சை கடினமாக இருக்கும்போது எவனொருவன் இடறிவிழாமல், எளிமையும் உறுதியுமுடைய விசுவாசத்துடன் இருக்கிறானோ அவன் மூன்று மடங்கு பாக்கியவான்.[33]

12:14 எல்லா நேரங்களிலும் **யாவரோடும்** சமாதானத்தோடு உறவுகொண்டிருக்கும் கடும் முயற்சி செய்கிறவனாகக் கிறிஸ்தவன் இருக்க வேண்டும். ஆனால் இந்த அறிவுரை குறிப்பாக உபத்திரவம் நடப்பில் இருக்கையில், சிலர் விசுவாசத்தை விட்டு விலகிச் செல்கையில், மனத்தளர்வு ஏற்படும்போது தேவையாயிருக்கிறது. அத்தகைய நேரங்களில் ஒருவர் தனக்கு மிகவும் நெருங்கியவர்களாகவும் அன்பானவர்களாகவும் இருக்கிறவர்களிடம் தனது ஏமாற்றத்தையும் அச்சத்தையும் சினமாக வெளிப்படுத்தக்கூடிய நிலை எற்படும்.

நாம் பரிசுத்தமாக இருப்பதற்குக் கடுமுயற்சி செய்ய வேண்டும், **பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.** இங்கு **பரிசுத்தம்** என்று குறிப்பிடப்பட்டிருப்பது என்ன? இந்தக் கேள்விக்கான விடையை அறிந்துகொள்ள, புதிய ஏற்பாட்டில் விசுவாசிகளின் தொடர்பில் பரிசுத்தம் வெவ்வேறான மூன்று பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவதாக, விசுவாசியானவன் தன்னுடைய மனமாற்றத்தின்போதே *தகுநிலையின்* அடிப்படையில் பரிசுத்தமுள்ளவனாகிறான். அவன் உலகத்திலிருந்து தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படுகிறான் (1 கொரி. 1:2; 6:11). அவன் கிறிஸ்துவோடு ஒன்றிணைக்கப்பட்டிருக்கிற காரணத்தால் என்றென்றைக்குமாகக் கிறிஸ்துவோடு பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறான். "என்னுடைய பரிசுத்தம் பரலோகத்தில் இருக்கிறது" என்று மார்ட்டின் லூத்தர் இப்பொருளிலேயே கூறியிருக்கிறார். தேவனுடைய முன்னிலையில் நமது தகுநிலையின்படி காணுமிடத்து கிறிஸ்துவே நமது பரிசுத்தமாக இருக்கிறார்.

அடுத்ததாக, *நடைமுறைப்* பரிசுத்தம் சொல்லப்பட்டிருக்கிறது (1 தெச. 4:3; 5:23). நாம் ஒவ்வொரு நாளும் எப்படிப்பட்டவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை இது கூறுகிறது. தீமையின் எல்லாவிதமான நிலைகளிலுமிருந்தும் நாம் நம்மை வேறுபிரித்துக்கொள்ள வேண்டும். இந்தப் பரிசுத்தமே வளர்ச்சியடைய வேண்டும். அதாவது, நாம் கர்த்தரின் சாயலுக்கு ஒப்பாக மென்மேலும் எப்போதும் வளர்ச்சியடைய வேண்டும்.

இறுதியாக, *முழுநிறைவான* பரிசுத்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு விசுவாசி பரலோகத்திற்குச் செல்லும்போது இது நடைபெறுகிறது. அதன் பிறகு அவன் என்றென்றைக்குமாகப் பாவத்திலிருந்து விடுதலைபெற்றவனாக இருப்பான். அவனுடைய முந்தின இயல்பு அவனைவிட்டு நீங்கி விடுகிறது. அப்பொழுது அவனுடைய இருப்பு நிலையானது தகுநிலைக்கு மிகச்சரியாக விளங்கும்.

இப்பொழுது நாம் எந்தப் பரிசுத்தத்தை அடையும்படி நாட வேண்டும்? நடைமுறைப் பரிசுத்தத்தையே நாம் நாட வேண்டும் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தகுநிலைப் பரிசுத்தத்தை அடைவதற்கு நாம் எவ்வித முயற்சியும் செய்ய வேண்டிய அவசியமுமில்லை. நாம் மறுபடியும் பிறந்த தருணத்தில் அது தானாகவே நம்முடையதாகிறது. மேலும் முழுநிறைவான பரிசுத்தத்தை அடைவதற்கும் நாம் எவ்வித முயற்சியையும் செய்ய வேண்டியதில்லை, நாம் அவருடைய முகத்தைக் காணும்போது அது நம்முடையதாகும். ஆனால் நடைமுறைப் பரிசுத்தம் அல்லது வளர்ச்சிப் பரிசுத்தம் என்னும் நிலைக்கு நம்முடைய கீழ்ப்படிதலும் ஒத்துழைப்பும் அவசியம். இந்தப் பரிசுத்தத்தை நாம் எப்பொழுதும் இடைவிடாமல் பயிற்றுவிக்க வேண்டும். இதனை நாம் தொடர்ந்து பின்பற்றிச் செல்ல வேண்டும் என்னும் உண்மையே, நாம் இவ்வுலக வாழ்க்கையில் முழு நிறைவான பரிசுத்தத்தை அடைய முடியாது

என்பதற்கு நிரூபணமாக இருக்கிறது. (பரிசுத்த மாகுதலின் பல்வேறு அம்சங்களைக் குறித்த விரிவான விளக்கங்களுக்கு 2:11 -ஆம் வசனத் திற்கான விளக்கத்தைக் காணவும்.)

வுயஸ்ட் என்பார் இது குறித்து எழுதுவதாவது:

> தேவாலயத்தைவிட்டு வெளியேறி பரிசுத்த மான வாழ்க்கையை மிகுந்த உறுதியுடன் வாழ்ந்து, தாங்கள் கண்டடைந்த புதிய விசு வாசத்தில் விடாப்பிடியான பற்றுடையவர்களாக இருந்தவர்களான மறுபடியும் பிறந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கான அறிவுரை என்ன வெனில், அவர்கள் தேவாலயத்தைவிட்டு வெளியேறி வெளியரங்கமான வகையில் புதிய ஏற்பாட்டுச் சத்தியங்களைத் தழுவியபோதிலும் இரட்சிக்கப்படாமல் வாழ்ந்துவந்த யூதர்கள், வழக்கழிந்துபோன லேவிய முறைமையின்படி யான பலிகளை நோக்கித் திரும்பிப்போகாதபடி யும் மேசியாவைப் பிரதான ஆசாரியராக ஏற்றுக்கொள்ளும்படியும், உற்சாகப்படுத்த வேண்டும் என்பதேயாகும். மெய்யாக மறுபடி யும் பிறந்த யூதர்கள் தட்டுத்தடுமாறிய கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வார்களானால், இரட்சிக்கப் படாத யூதர்கள் வழிவிலகிப்போய்விடுவார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள்.[34]

ஆனால் இன்னமும் பிரச்சினை இருக்கிறது! நடைமுறைப் பரிசுத்தமில்லாமல் கர்த்தரைத் தரி சிக்க முடியாது என்பது உண்மைதானா? ஆம், ஒருபொருளில் இது உண்மையாக இருக்கிறது; ஆனால் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதன் மூலமாக தேவனைத் தரிசிப்பதற்கான உரிமை கிடைக்கும் என்பது இதனுடைய பொருள் அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து ஒருவரே நாம் விண்ணகம் செல்வதற் கான உரிமைப்பத்திரமாக இருக்கிறார். புதிதான வாழ்வு நமக்குள்ளாக இருக்கிறது என்பதற்கு நிரூபணமாக நடைமுறைப்பரிசுத்தம் விளங்க வேண்டும் என்பதே இந்த வசனத்தின் பொருளா கும். ஒருமனிதன் பரிசுத்தத்தில் வளரவில்லை யென்றால் அவன் இரட்சிக்கப்படவில்லை என் பதே பொருள். ஒரு மனிதனுக்குள்ளாக தூய ஆவியானவர் குடியிருக்கையில், அவர் தன்னிடத் தில் இருப்பதை அவன் தன்னுடைய வேறுபட்ட வாழ்க்கையின் மூலமாக வெளிப்படுத்துவான். இது காரணமும் விளைவுமாக இருக்கிறது; கிறிஸ்துவை ஒருவன் பெற்றிருக்கும்போது, அவனிடத்திலிருந்து ஜீவ ஊற்று பாய்ந்துவரும்.

12:15 அடுத்து வருகிற இரண்டு வசனங்கள் தவிர்க்க வேண்டிய நான்கு பாவங்களை அறி முகப்படுத்துவதாகத் தோன்றுகிறது. ஆனால் இந்த வேத பகுதியின் பின்னணியில் காணும் போது விசுவாச மறுதலிப்பு என்னும் ஒரே பாவத் திற்கு எதிரான எச்சரிப்பாக இப்பகுதி விளங்கு கிறது என்றும், இந்த நான்கு பாவங்களும் அத னோடு தொடர்புடையவை என்றும் உறுதியாகக் கருத இடமுண்டு.

முதலாவதாக, விசுவாச மறுதலிப்பு **தேவனு டைய கிருபையைப்** பெறத் தவறுவதாகும். ஒரு வன் கிறிஸ்தவனைப் போலத் தோற்றமளிக் கிறான். கிறிஸ்தவனைப் போலப் பேசுகிறான், கிறிஸ்தவன் என்று அறிக்கை செய்கிறான், ஆனாலும் அவன் மறுபடியும் பிறக்கவே இல்லை. அவன் இரட்சகரின் அருகில் வந்திருக்கிறான், ஆனாலும் அவரைப் பெறவில்லை. மிக அருகில் இருந்தும் மிகத்தொலைவில் இருக்கிறான்.

விசுவாச மறுதலிப்பு ஒரு **கசப்பான வேராக** இருக்கிறது. அந்த மனிதன் கர்த்தருக்கு எதிராக எரிச்சலடைகிறான்; மேலும் கிறிஸ்தவ விசு வாசத்தை மறுத்துரைக்கிறான். அவன் கொள் கையைக் கைவிட்டு விலகிச் செல்லுகிற செயல் தொற்றும் தன்மையுடையது. அவன் குறைகூறு வதாலும், அவனுடைய சந்தேகங்களாலும், மறுப்புரைகளாலும் மற்றவர்கள் **தீட்டுப்படு கிறார்கள்**.

12:16 விசுவாச மறுதலிப்பு ஒழுக்கக்கேட்டுடன் மிக நெருக்கமான தொடர்புடையது. கிறிஸ்தவன் என்று தன்னைக் குறித்து வெறுமனே அறிக்கை செய்கிறவன் மிகப்பெரிய ஒழுக்கக்கேடான பாவத்திற்குள் விழக்கூடும். அவன் தன்னுடைய பாவத்தை ஒப்புக்கொண்டு அறிக்கை செய்வதற் குப் பதிலாக, கர்த்தருக்கு எதிராகப் பழிச்சொல் கூறி அவரைவிட்டு விலகிச் செல்கிறான். விசுவாச மறுதலிப்பும் ஒழுக்கக்கேடு என்னும் பாவமும் தொடர்புடையவை என்று 2 பேதுரு 2:10,14,18 மற்றும் யூதா 8,16,18 ஆகிய வசனங்கள் கூறுகின் றன.

இறுதியாக, ஏசாவின் எடுத்துக்காட்டின் மூல மாகச் சொல்லப்பட்டுள்ளபடி விசுவாச மறுதலிப்பு ஒருவகைச் சமயப் பற்றின்மையாக இருக்கிறது. அவன் தன்னுடைய பிறப்புரிமையில் உண்மை யான பற்றுடையவனாக இருக்கவில்லை. அப் போதைய பசியைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அவன் தனது பிறப்புரிமையை மனமுவந்து விற்றுப்போட்டான்.

12:17 முதல் மகனுக்குரிய இரட்டிப்பான பங்கை இழந்துபோனதற்காக ஏசா பின்னர் கவலையடைந்தபோதிலும், அது காலம் தாழ்த்தியதாக இருந்தது. அவனுடைய தகப்பனால் ஆசிர்வாதத்தை மாற்றி உரைக்க முடியவில்லை.

அதுபோலவே விசுவாச மறுதலிப்பும் இருக்கிறது. அவ்வாறு மறுதலித்தவனுக்கு ஆவிக்குரியவற்றின் மேன்மையின்மேல் உண்மையான பற்று இல்லை. நிந்தை, பாடுகள் அல்லது இரத்த சாட்சியாக மரணம் அடைதல் போன்றவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக அவன் கிறிஸ்துவை மனப்பூர்வமாக மறுத்துரைக்கிறான். அவன் கவலைப்படக்கூடும், ஆனால் தேவபக்தியுடன் கூடிய மனந்திரும்புதல் இல்லை.

12:18 நியாயப்பிரமாணத்தினிடமாய்த் திரும்பிச் செல்ல வேண்டுமென்னும் சோதனைக்குட்படுகிற மனிதர்கள், அந்த நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நேரத்தில் நடந்த அச்சுறுத்தக்கூடிய நிகழ்வுகளை நினைவுகூர்ந்து, அவற்றிலிருந்து ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தக் காட்சி சீனாய் **மலையில்** நடந்தது, உண்மையாகவே, அது தொட்டு உணரத்தக்க மலையாயிருந்தது. அந்த மலை முழுவதும் **பற்றியெரிந்தது**. அது இருளால் சூழப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு எல்லாம் தெளிவற்று, மங்கலாகக் குழப்பமடைந்த நிலையில் இருந்தது. வலிமைமிக்க பெருங்காற்று அதனைச் சுற்றிலும் வீசிக்கொண்டிருந்தது.

12:19 இவ்விதமாக இயற்கைச் சூழ்நிலையில் பெரும் மாற்றம் நிகழ்ந்த அதே நேரத்தில், இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் சில நிகழ்ச்சிகளும் நடந்தன. **எக்காளம்** பெருந்தொனியாய் ஒலித்தது, மேலும் மக்கள் நின்றுபோக வேண்டும் என்று கேட்கும் அளவிற்கு ஒரு **சத்தம்** அச்சுறுத்தும் வகையில் முழங்கியது.

12:20 "ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால் அது கல்லெறியுண்டு கொல்லப்பட வேண்டும்"[35] என்னும் தேவ கட்டளையின் நிமித்தம் அவர்கள் முற்றிலுமாகத் துணிவிழந்துபோனார்கள். வாய்பேசாத, எதையும் புரிந்துகொள்வதற்கு இயலாத ஒரு மிருகம் சாக வேண்டுமென்றால், அந்த எச்சரிப்பைப் புரிந்துகொண்டவர்களுக்கு எவ்வளவு நிச்சயமாய்ச் சாவு ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

12:21 மோசேயும்கூட **நடுங்கத்தக்க** அளவிற்கு அந்த முழுக்காட்சியும் **பயங்கரமானதாகவும்** அச்சுறுத்துகிறதாகவும் இருந்தது. இவையனைத்தும் நியாயப்பிரமாணத்தின் இயல்பையும் ஊழியத்தையும் குறித்துச் சொல்வன்மை மிக்க வகையில் பேசுகிறது. தேவனுடைய நீதியான எதிர்பார்ப்பு மற்றும் பாவத்திற்கு எதிரான அவருடைய கோபாக்கினை ஆகியவற்றின் வெளிப்பாடாக இது இருக்கிறது. இரட்சிப்பைக் குறித்த அறிவை வெளிப்படுத்துவது நியாயப்பிரமாணத்தின் நோக்கமன்று, மாறாக பாவத்தைக் குறித்த அறிவை வெளிப்படுத்துவதே அதன் நோக்கமாயிருந்தது. பாவத்தின் காரணமாக தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள பெரும் இடைவெளியைக் குறித்து இது பேசுகிறது. இது குற்றந்தீர்ப்பதும், இருள் சூழ்ந்ததும், துக்கம் உண்டுபண்ணுவதுமான ஊழியமாயிருந்தது.

12:22 விசுவாசிகள் சீனாய் மலையின் ஆபத்தான அச்சுறுத்தலினிடமாய் வரவில்லை, மாறாக கிருபையின் வரவேற்பினிடமாய் வந்திருக்கிறார்கள்.

இறைமைந்தன் அரியணையில்
வெற்றியுடன் வீற்றிருக்க
திரையிட்ட காரிருளும்
பற்றியெரியும் பர்வதமும்
குறைகூறும் சட்டங்களும்
அலைக்கழிக்கும் பயமுமகல
நிறைவான உளவமைதி
அடியேனை நிரப்பியதே!

இப்பொழுது, செங்குருதியால் விலைக்கு வாங்கப்பட்ட இறைமக்கள் யாவரும் கீழ்க்கண்டவாறு கூற முடியும்: "நியாயப்பிரமாணத்தையும் தேவனையும் குறித்த பேரச்சங்கள் என்னிடத்தில் ஏதொன்றையும் உண்டாக்குவதில்லை, ஏனெனில் எனது இரட்சகரின் கீழ்ப்படிதலும் அவர் சிந்திய செங்குருதியும் என்னுடைய அக்கிரமங்கள் அனைத்தையும் அவருடைய பார்வையிலிருந்து மறைத்துவிட்டன" A. M. டாப்லேடி.

> "நாம் என்றென்றும் இருக்கப்போகிறோம் என்னும் முழுமையான மெய்நிலைக்கு, கொள்கையளவில் ஏற்கனவே வந்துவிட்டோம். நம்முடைய எதிர்காலம் ஏற்கனவே நம்முடைய நிகழ்காலமாயிற்று. இன்றைய நாளில் நாம் நாளைய தினத்தைப் பெற்றிருக்கிறோம். இவ்வுலகில் நாம் விண்ணகத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறோம்" (தெரிந்தெடுக்கப்பட்டது).

நாம் இப்புவியிலுள்ள தொட்டு உணரத்தக்க மலையினிடத்திற்கு வரவில்லை. விண்ணகத்திலுள்ள புனிதமான இடத்திற்குள் நுழைவது நாம் பெற்ற நற்பேறு. அறிக்கை செய்தல், தொழுதேத்துதல், மன்றாட்டு ஆகிய செயல்களில் விசுவாசத்தின் மூலமாக நாம் தேவனுடைய இருப்பிடத்தை அணுகுகிறோம். ஆண்டிற்கு ஒருமுறை என்று நாம் எல்லைக்குட்படுத்தப்படவில்லை. ஆனால் எல்லா நேரத்திலும் வரவேற்கப்படுவோம் என்னும் அறிவோடு நாம் எப்பொழுது வேண்டுமானாலும் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் நம்மால் செல்ல முடியும். "தொலைதூரத்தில் நில்" என்று தேவன் இனிமேல் சொல்லமாட்டார்; "நம்பிக்கையோடு வருகில் வா" என்றே அவர் கூறுகிறார்.

நியாயப்பிரமாணம் சீனாய் மலையைக் கொண்டிருக்கிறது, ஆனால் விசுவாசம் **சீயோன் மலையை** உடையதாயிருக்கிறது. கிருபையின் அனைத்து நன்மைகளையும் ஒருங்கே கொண்ட இடத்திற்குப் பரலோக மலை அடையாளமாக விளங்குகிறது - கிறிஸ்து இயேசுவின் மீட்பின் செயலின் மூலமாக அந்த நன்மைகள் யாவும் நமக்குரியதாக விளங்குகின்றன.

நியாயப்பிரமாணம் பூமிக்குரிய எருசலேமைக் கொண்டிருக்கிறது, ஆனால் விசுவாசமோ விண்ணகத்தின் தலைநகரை உன்னதத்தில் உடையதாயிருக்கிறது. அது **ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேம்** ஆகும். அது தேவன்தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரமாகும்.

நாம் தேவனுடைய முன்னிலையில் செல்கிறபோது, நம்மை மாட்சிமை பொருந்திய கூட்டம் சூழ்ந்துகொள்ளும். முதலாவதாக, பாவத்தினால் கறைபடாதவர்களாயிருந்தும், "நம்முடைய இரட்சிப்பு எத்தகைய மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது" என்பதை அறியாத காரணத்தால் நம்மோடு சேர்ந்து பாட இயலாத **ஆயிரம் பதினாயிரமான தேவ தூதர்கள்** அங்கு இருக்கிறார்கள்.

12:23 அடுத்ததாக, **பரலோகத்தில்** ஒருமுறை **பேரெழுதப்பட்ட முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையோடு** நாம் இருப்போம். இவர்கள் திருச்சபையின் அங்கங்கள் ஆவார்கள். இந்தச் சபையே கிறிஸ்துவின் சரீரமாகவும் மணவாட்டியாகவும் இருக்கிறது. பெந்தெகொஸ்தே நாள் முதல் மரணமடைந்த விசுவாசிகளாகிய இவர்கள், கர்த்தருடைய சமுகத்தை முழுஉணர்வு நிலையோடு அனுபவிக்கிறவர்களாக இப்பொழுது இருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய உடல்கள் மகிமையின் சரீரங்களைப் பெற்ற நிலையில் உயிர்த்தெழுந்து அவரவருடைய ஆவியோடு இணைக்கப்படும் நாளுக்கென்று அவர்கள் காத்திருக்கிறார்கள்.

நாம் விசுவாசத்தால் **யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனைக்** காண்கிறோம். இனிமேல் அவரை எவ்வித இருளும் மந்தாரமும் மறைக்காது. மனித அனுபவத்தில் கண்டறியக்கூடாத அவருடைய மகிமை விசுவாசத்தால் காணப்படுகிறது.

பழைய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய **பூரண ராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளும்** அங்கிருக்கிறார்கள். விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்ட அவர்கள், கிறிஸ்துவின் மீட்பின் செயலின் மதிப்பு அவர்களுடைய கணக்கில் வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக அப்பழுக்கற்றவர்களாக அங்கு நிற்கிறார்கள். அவர்களும் எப்பொழுது பூர்வ காலத்தில் ஒப்படைக்கப்பட்ட வற்றை கல்லறைகள் தரும் என்றும், அப்பொழுது மகிமையின் சரீரங்களைப் பெறுவோம் என்றும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

12:24 **புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவும்** அங்கிருக்கிறார். பழைய உடன்படிக்கையின் மத்தியஸ்தனாகிய மோசே, **புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு ஆகிய இருவருக்கும் இடையே** ஒரு வேறுபாடு உள்ளது. தேவனிடத்திலிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்று, அதை இஸ்ரவேல் மக்களுக்கு அளித்த செயலின் மூலமாக மோசே தனது மத்தியஸ்த ஊழியத்தைச் செய்தான். அவன் இடையாளாக அல்லது மக்களின் பிரதிநிதியாக விளங்கி, உடன்படிக்கையை அதிகாரப்பூர்வமாக்கக் கூடிய பலிகளைச் செலுத்தினான்.

கிறிஸ்து மிக மேன்மையான பொருளில் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார். இந்த உடன்படிக்கையை தேவன் நீதியுடையதாக உண்டாக்கும் முன்பு கர்த்தராகிய இயேசு மரணம் அடைய வேண்டியிருந்தது. அவர் எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மையே ஒப்புக்கொடுத்து, தம்முடைய சொந்த இரத்தத்தாலே இந்த உடன்படிக்கைக்கு முத்திரை இடவேண்டியதாயிற்று (1 தீமோ. 2:6).

அவர் தமது மரணத்தாலே புது உடன்படிக்கையின் ஆசிர்வாதங்கள் அனைத்தையும் தம்முடைய மக்களுக்கென்று உறுதிப்படுத்தினார். அவர் தம்முடைய முடிவில்லாத வாழ்வினாலே இந்த

ஆசிர்வாதங்கள் அனைத்தையும் பாதுகாத்து வைத்திருக்கிறார். அவர் தற்போது தேவனுடைய வலப்புறத்தில் இருந்தவராக ஆற்றும் திருப்பணி மூலமாக இவ்வெதிர்ப்பு நிறைந்த உலகத்தில் ஆசிர்வாதங்கள் அனைத்தையும் மகிழ்வுடன் அனுபவிக்கத்தக்கபடி அவருடைய மக்கள் யாவரை யும் பாதுகாத்து வருகிறார். இவையாவும் அவரு டைய மத்தியஸ்த ஊழியத்தில் அடங்கியிருக் கின்றன.

கல்வாரியின் தழும்புகளை ஏற்றவராக, தேவ னுடைய வலப்புறத்திற்குக் கர்த்தராகிய இயேசு பிரபுவாகவும் இரட்சகராகவும் உயர்த்தப்பட்டிருக் கிறார்.

தம்மக்கள் நலன்கருதித் தம்முயிரை
மரணத்தில் ஒப்புவித்த இறைமறியை
திருத்தந்தை அரியணையின் வலப்புறத்தில்
வீற்றிருக்கக் கண்டுநான் மகிழ்ந்திடுவேன்.

தூய்மையை அணிந்தவர்கள் மன்னவரின்
மகிமைகளை விரைவாகப் பெற்றிடுவர்
திருச்சபையின் தலையாக, மீட்படைந்தோர்
அரசராகப் புகழ்ச்சியுடன் ஆண்டிடுவார்!

-ஜேம்ஸ் G. டெக்

இறுதியாக, ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் **நன்மையானவற்றைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தமும்** அங்கு இருக்கிறது. கிறிஸ்து விண்ணகம் ஏகியபோது, அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தின் விலை மதிப்பு முழுவதையும் தேவனிடத்தில் சமர்ப்பித் தார். அவர் உண்மையிலேயே தமது திருரத் தத்தை விண்ணகத்திற்கு எடுத்துச்சென்றார் என்பதல்ல இங்கு காணப்படும் சிந்தனை. மாறாக, அவருடைய இரத்தத்தின் தகுதிகள் யாவும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தெரியப்படுத்தப்பட்டன. மீண்டுமாக ஜேம்ஸ் G.டெக் இவ்வுண்மையைப் பாடலாக வரைந்து தருகிறார்:

அரியணையின் முன்புறமும்
அதனுடைய மேற்புறமும்
இறைமைந்தர் தெளித்தனரே
விலையில்லா செங்குருதி,
இரட்சிப்பின் செயல்முற்றும்
நிறைவேறி முடிந்ததென
அவரடைந்த காயங்கள்
விண்ணகத்தில் சாற்றினகாண்!

அவருடைய விலையேறப்பட்ட **இரத்தம், ஆபேலுடைய** இரத்தத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. ஆபேல் செலுத்திய பலியின் இரத்தத்தை இது குறிக்கிறதா அல்லது காயீன் சிந்திய ஆபேலின் இரத்தத்தை இது குறிக்கிறதா, எதுவாயிருந்தாலும் கிறிஸ்துவின் இரத்தம் அதைக் காட்டிலும் அதிக கிருபையோடு பேசுகிறது. ஆபேல் செலுத்திய பலியின் இரத்தம், "தற்காலிகமாக மூடிவிட்டது" என்று கூறியது; கிறிஸ்துவின் இரத் தம், "என்றென்றைக்குமாக மன்னித்துவிட்டது" என்று கூறுகிறது. ஆபேலின் சொந்த இரத்தம் "பழிக்குப்பழி" என்று சத்தமிட்டது; கிறிஸ்துவின் இரத்தமோ, "இரக்கம், மன்னிப்பு, சமாதானம்" என்று சத்தமிடுகிறது.

12:25 பன்னிரண்டாம் அதிகாரத்தின் இறுதி வசனங்கள், சீனாய் மலையில் தேவன் வெளிப் படுத்திய வெளிப்பாட்டிற்கும் கிறிஸ்துவின் வெளிப் பாட்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக் கித் தருகின்றன. கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒப்பிட் டுக் கூறவியலா நற்பேறுகளையும் மகிமைகளை யும் நாம் அற்பமாக எண்ணக்கூடாது. தேவன் பேசு கிறார், அழைக்கிறார், தயவாகக் கூப்பிடுகிறார். அவருக்குச் செவிகொடுக்க முடியாது என்பவர் களுக்கு அழிவு நிச்சயம்.

நியாயப்பிரமாணத்தின் மூலமாக வெளிப்பட்ட தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்காத வர்கள் அதன்படி தண்டிக்கப்பட்டார்கள். சலுகை அதிகரிக்கும்போது, பொறுப்பும் அதிகரிக்கிறது. கிறிஸ்துவுக்குள் தேவன் தமது சிறப்பான இறுதி வெளிப்பாட்டைக் கொடுத்திருக்கிறார். நற்செய்தி யின் மூலமாக அவருடைய சத்தம் இப்பொழுது **பரலோகத்திலிருந்து பேசுகிறது**. அதனை மறுத் துரைப்பவர்கள், நியாயப்பிரமாணத்தை மீறியவர் களைக் காட்டிலும் அதிக பொறுப்புடையவர் களாக இருக்கிறார்கள். **தப்பிப்போவது** இயலாத செயல்.

12:26 சீனாய் மலையில் தேவனுடைய சத்தம் பூமியதிர்ச்சிக்குக் காரணமாயிற்று. ஆனால் எதிர் காலத்தில் அவர் பேசும்போது அவருடைய தொனி வானத்தில் அதிர்ச்சியை உண்டுபண்ணும். இதனை ஆகாய் தீர்க்கதரிசி தனது உரையின் பொருளாக முன்மொழிந்திருக்கிறான்: "கொஞ்சக் காலத்துக் குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரை யையும் அசையப்பண்ணுவேன்" (ஆகாய் 2:6).

இவ்வாறு அசையப்பண்ணுதல் விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் நாள் முதல் கிறிஸ்து

வின் அரசாட்சி முடியும்வரை இருக்கும். ஆட்சி புரியும்படி கிறிஸ்து இவ்வுலகிற்கு வருவதற்கு முன்னர் பூமியிலும் வானத்திலும் இயற்கையின் சீற்றங்களும் கடுமையான அதிர்ச்சியும் நிகழும். கோள்கள் தங்களுடைய பாதையிலிருந்து விலகி பேரிரைச்சல் மிகுந்த அலைகளைக் கடல்களில் ஏற்படுத்தும். பின்னர் கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சியின் பிறகு பூமியும், விண்மீண்கள் நிறைந்த மண்டலமும், வளிமண்டலமும் அக்கினியால் அழிக்கப்படும் (2 பேதுரு 3:10-12).

12:27 "இன்னும் ஒருதரம்" என்று தேவன் கூறியபோது, வானங்களும் பூமியும் முழுமையாக நீக்கப்படும் என்பதை அவர் எதிர்நோக்கியவராகக் கூறினார். கண்டு, தொட்டு, பயன்படுத்துபவை உண்மையானவை என்றும், காணக்கூடாதவை உண்மையற்றவை என்றும் நாம் செய்துகொண்டிருக்கும் கற்பனையை இந்த நிகழ்ச்சி சிதறடித்து விடும். தேவன் புடைத்து அதிரச்செய்யும் செயலைச் செய்து முடிக்கும்போது, உண்மையானது எதுவோ அதுவே நிலைத்திருக்கும்.

12:28 கைகளால் தொட்டு, கண்களால் கண்டு செய்யப்படுகிற யூதமார்க்கத்துச் சடங்குகளைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள், அசைக்கப்பட்டு உருவழிந்து போகிறவற்றையே சார்ந்து கொண்டிருக்கிறார்கள். மெய்யான விசுவாசிகளுக்கு **அசைவில்லாத ராஜ்யம்** இருக்கிறது. இ.·.து ஊக்கமான ஆராதனையையும் புகழ்ந்துபோற்றுவதையும் நம் உள்ளங்களில் ஏற்படுத்த வேண்டும். நாம் **பயத்தோடும் பக்தியோடும்** அவரை இடைவிடாமல் தொழுதுகொள்வோமாக.

12:29 தேவனுடைய சத்தத்தைக் கேட்க மறுக்கிறவர்கள் யாவருக்கும் அவர் **பட்சிக்கிற அக்கினியாக இருக்கிறார்.** ஆனால் அவருக்குச் சொந்தமானவர்களிடத்திலும்கூட, அவரைத் தடங்காணா அளவிற்கு உள்ளார்வத்துடன் புகழ்ந்து போற்றவும் மேன்மைப்படுத்தவும் செய்யவேண்டும் என்னும் அளவிற்கு, அவருடைய பரிசுத்தமும் நீதியும் மிகப்பெரிதாயிருக்கின்றன.

ஈ. பல்வேறு கிறிஸ்தவ நற்பண்புகளை அடைவதற்கான அறிவுரை (13:1–17)

13:1 வளர்ச்சி பெறவேண்டிய நற்பண்புகளைக் குறித்த ஆறு அறிவுரைகளுடன் எபிரெயர் மடலின் நடைமுறைப் பகுதி தொடர்கிறது. முதலாவது, சகோதரரிடத்தில் கொண்டிருக்க வேண்டிய **சினேகம்.** மெய்யான கிறிஸ்தவர்கள் அனைவரிடத்திலும் ஒரு குடும்ப உறவின் உணர்வு காணப்பட வேண்டும். மேலும் அன்புடன் கூடிய சொற்களாலும் செயல்களாலும் குருதித்தொடர்புடைய உறவினர்கள் என்னும் நினைவுகொண்டவர்களாகவும் நாம் இருக்கவேண்டும் (1 யோவான் 3:18).

13:2 அந்நியருக்கு விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்று இம்மடலைப் படிப்போர் வற்புறுத்தப்படுகிறார்கள். முதன்மையாக, துன்புறுத்தலின் காரணமாக வீட்டைவிட்டு வெளியேறுகிற விசுவாசிகளிடத்திலும், உண்ண உணவும் இருக்க இடமும் இல்லாத விசுவாசிகளிடத்திலும் விருந்தோம்பல் காண்பிக்கப்பட வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். அவ்வாறு விருந்தோம்பல் செய்வதன் மூலமாக, அடைக்கலம் தந்தவர்கள் ஆபத்தை வருவித்துக்கொண்டார்கள். தேவையுள்ள எந்த விசுவாசிக்கும் விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்று இந்த வசனம் பொதுவான அறிவுரை வழங்குவதாகப் பொருள்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு செய்வதன் மூலம் நாம் **அறியாமல் தேவதூதரை** உபசரிக்கக் கூடிய வியத்தகு அனுபவத்தைப் பெறக்கூடும்! உண்மையில் தேவ தூதர்களாக (ஆதி. 18:1-15)[36] இருந்த மூவரோடு ஆபிரகாம் பெற்ற அனுபவத்தை இது நாம் திரும்பிப் பார்க்கும்படி செய்கிறது. உண்மையான தேவதூதர் நம்முடைய இல்லங்களுக்கு வருகை புரியவில்லையெனினும், சிலருடைய வருகை நமக்குப் பெரிய ஆசிர்வாதத்தைத் தரக்கூடிய தாயிருக்கிறது. மேலும் அவர்கள் நம்முடைய வீடுகளில் தங்குவதால், அவர்களுடைய தேவ பக்தி நிறைந்த செயல்திறம் நமது வீட்டாரிடத்தில் பெரும் பயனை உண்டாக்கி, அது நித்தியம் வரை தொடரச் செய்கிறது.

13:3 சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட விசுவாசிகளிடத்தில் காண்பிக்கவேண்டிய மூன்றாவது அறிவுரையாக இது வழங்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்ததன் காரணமாகச் சிறையில் அடைக்கப்பட்டவர்களைக் குறித்தே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது என்பது நிச்சயம். அவர்களுக்கு உணவும், குளிர்கால ஆடைகளும், படிப்பதற்கான நூல்களும், ஆறுதல் கூறுவதும் தேவைப்பட்டிருக்கும். ஆனால் **கட்டப்பட்டவர்களுடன்** தொடர்பு கொள்வதால் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படக்கூடிய நிலை ஏற்படும் என்று கருதி, தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவ்வாறு செய்யாதிருக்கும்படி

யான சோதனை பிறருக்கு ஏற்படக்கூடும். கட்டப் பட்டவர்களைச் சந்திப்பது, கிறிஸ்துவைச் சந்திப் பதற்கு ஈடாகும் என்பதை அவர்கள் நினைவுகூர வேண்டும்.

தீங்கநுபவிக்கிறவர்களிடத்தில் நாம் பரிவு டையவர்களாகச் செயல்பட வேண்டும்; மீண்டு மாக இங்கு துன்பத்திற்குள்ளான விசுவாசிகளே குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் என்பதில் ஐய மில்லை. அவ்வாறு பரிவிரக்கம் காட்டுவதாலே ஏற்படக்கூடிய ஆபத்திலிருந்து தங்களைக் காத் துக்கொள்ள வேண்டும் என்னும் மனப்பான் மையை இம்மடலின் வாசகர்கள் எதிர்த்து நிற்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். பாடுகள் அனுபவிக்கிற எல்லா விசுவாசிகளிடத் திலும் பரிவுகாட்டவேண்டும் என்று இந்த வசனத் தின் பொருளை விரிவாக்கி நாம் இவ்வறிவுரை யைக் கைக்கொள்ள வேண்டும். நாம் **சரீரத்தின்** அங்கங்களாக இருக்கிறோம் என்பதை நினைவு கூர்ந்து, இத்தகைய பாடுகளை அனுபவிக்க நேரி டும் என்பதை எண்ணிப்பார்க்கக்கடவோம்.

13:4 விவாகம் எல்லோராலும் மரியாதைக் குரியதாக கருதப்படவேண்டும். பாவம் இவ்வுல கிற்குள் நுழையும் முன்னர் தேவனாலே இது நிறுவப்பட்டதென்று நாம் நினைவுகூர வேண்டும். அதுவே மனுக்குலத்திற்கான தேவனுடைய பரிசுத்த சித்தம். உலக இன்பங்களைத் துறந்து வாழவேண்டும் என்னும் கொள்கையாளர்கள் இதனை அசுத்தம் என்று எண்ணுவதுபோல நினைப்பதும், சில கிறிஸ்தவர்கள் செய்வது போல இதனைக் கேலி செய்வதும் அல்லது இத னைக் குறித்துச் சிலேடையாகப் பேசுவதும் வேதத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது.

திருமணமானவர்கள் தாங்கள் கொடுத்த ஆணைக்கு உண்மையுள்ளவர்களாக இருந்து திருமணத்தை **அசுசிப்படுத்தாமல்** இருக்க வேண்டும். தற்கால மனிதன் இந்தக் காரியத்தில் கண்டிப்பற்றவனாக இருந்த போதிலும் திருமணத் திற்கு அப்பாற்பட்ட பாலுறவுகள் அனைத்தும் பாவமேயாகும். விபசாரம் ஒரு நோயல்ல, அது பாவம். இந்தப் பாவத்தை **தேவன்** நிச்சயமாக **நியாயந்தீர்ப்பார்**. எல்லாவகை ஒழுக்கக்கேடு களும் தப்பிக்க இயலாதவை. ஆனால் இந்தப் பாவத்தை உடல்கூறு சம்பந்தப்பட்ட நோய்களா லும், மணமுரிவு என்னும் பிரிவினைகளாலும், மனநோய் மற்றும் நரம்புத்தளர்ச்சி போன்றவற்றா லும், ஆளுமையில் ஏற்படுகின்ற பாதிப்புகளாலும் தேவன் இவ்வுலக வாழ்விலேயே நியாயந்தீர்க் கிறார். கிறிஸ்துவின் இரத்தத்தினால் இப்பாவம் மன்னிக்கப்படவில்லையென்றால், தேவன் இதனை நித்திய அக்கினியில் நியாயந்தீர்ப்பார்.

சீர்திருத்தக்கொள்கையாளர் பிஷப் லேடிமர் என்பார், ஒழுக்கக்கேட்டில் வாழ்ந்த மன்னன் எட்டாம் ஹென்றியைக் குற்றவாளி என்று தீர்க் கும் அளவிற்கு மிகத்துணிவோடு கண்டித்துணர்த் தினார். அவர் மிக நேர்த்தியாக உரையிடப்பட்ட ஒரு வேத நூலை மன்னனுக்கு பரிசாகக் கொடுத் தார். அந்த உரையில், "வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" என்று எழுதப்பட்டிருந்தது.

13:5 போதுமென்ற மனது ஒருவரிடத்தில் பேணி வளர்க்கப்பட வேண்டிய ஆறாவது நற்பண்பு ஆகும். யூத மார்க்கத்தைச் சார்ந்தவர்கள், "எங்க ளுக்கு ஆசரிப்புக்கூடாரம் இருக்கிறது. எங்க ளுக்கு ஆசாரிய முறைமை இருக்கிறது. எங்க ளுக்குக் காணிக்கைகள் இருக்கின்றன. எங்க ளுக்கு மிக அழகான சடங்கு முறைகள் உள்ளன. உங்களிடம் என்ன இருக்கிறது" என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார்கள். இங்கே இந் நூலாசிரியர் கிறிஸ்தவர்களிடம் அமைதியோடு கூறுகிறார்: **நீங்கள் பண ஆசையில்லாதவர் களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவை போதுமென்று எண்ணுங்கள்**. இவ்வாறு நான் சொல்ல வேண்டும்! ஒரு கிறிஸ்தவன் பெற்றிருப் பது, யூத மார்க்கத்தின் மிகச் சிறந்ததைக் காட்டி லும் எல்லையிலடங்கா அளவிற்குப் பெரியது. அவன் ஏன் **போதுமென்று** எண்ணக்கூடாது? அவன் கிறிஸ்துவை உடையவனாயிருக்கிறான். அதுபோதும்.

வெள்ளியின்மேல் கொண்டிருக்கிற பற்று ஒரு கிறிஸ்தவனுக்கு மிகப்பெரிய தடையாயிருக் கிறது. கண்ணுக்கு முன்பாக ஒரு சிறு வெள்ளி நாணயம் தூக்கிப்பிடிக்கப்படுமென்றால் அது சூரியனையே மறைத்துவிடுகிறது. அதுபோலவே **பண ஆசை** தேவனோடு கொண்டுள்ள இணக் கத்தை உடைத்துப்போடுகிறது, மேலும் ஆவிக் குரிய முன்னேற்றத்தைத் தடைசெய்கிறது.

"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று வாக் குறுதி கொடுத்தவரை ஒரு மனிதன் பெற்றிருப் பானானால், அதுவே அவன் பெறக்கூடிய மிகப் பெரிய செல்வம். கிரேக்க மொழியில் இரண்டு எதிர்மறைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு எதிர் மறைப் பொருள் வலிமையூட்டப்பட்டிருக்கிறது. (ஆங்கில மொழியில் இரண்டு எதிர்மறைச் சொற்

கள் உடன்பாட்டுப் பொருளைத் தரும். அதற்கு கிரேக்க மொழி வாக்கிய அமைப்பு மாறுபட்டதாயிருக்கிறது.) இந்த வசனத்தில் வாக்கிய அமைப்பு சொல்வன்மை உடையதாயிருக்கிறது: கிறிஸ்து தம்முடையவர்களைக் கைவிடும் செயல் நடைபெற இயலாத ஒன்று என்று குறிக்கும் வகையில் ஐந்து எதிர்மறைச் சொற்கள் இவ்வசனத்தில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன!

13:6 "கர்த்தர் என் சகாயர், நான் பயப்படேன், மனிதன் எனக்கு என்ன செய்வான்?" என்னும் சொற்கள் கிறிஸ்துவை உடைய ஒரு மனிதனின் நம்பிக்கை மிக்க அறிக்கையாகும் (சங். 118:6). கிறிஸ்துவில் நிறைவான பாதுகாப்பு, நிறைவான ஆதரவு, நிறைவான சமாதானம் நமக்கு இருக்கிறது என்பதே உண்மை.

13:7 இந்த மடலின் வாசகர்களுக்கு **தேவ வசனத்தைக்** கற்பித்த கிறிஸ்தவ போதகர்களாகிய தலைவர்களை, அவர்கள் நினைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நடக்கையின் முடிவு என்னவாக இருந்தது? அவர்கள் லேவிய முறைக்குத் திரும்பிச் செல்லாமல் இறுதிவரை தாங்கள் பண்ணின அறிக்கையை உறுதியோடு கைக் கொண்டுவந்தார்கள். ஒருவேளை அவர்களில் சிலர் கிறிஸ்துவின் பொருட்டு தியாக மரணமும் அடைந்திருப்பார்கள் எனத் தோன்றுகிறது. இதுவே பின்பற்றத்தக்க **விசுவாசம்,** கிறிஸ்துவையும் கிறிஸ்தவக் கோட்பாடுகளையும் பற்றிக் கொண்டிருக்கக்கூடிய விசுவாசம், அது வாழ்க்கையின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தேவனைக் கொண்டுவருகிறது. நாம் எல்லோரும் ஒரே விதமான ஊழியத்திற்கென்று அழைக்கப்படவில்லை. ஆனால் விசுவாச வாழ்க்கைக்கென்று நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

13:8 முந்தின வசனத்தோடு இந்த வசனத்திற் குள்ள தொடர்பு தெளிவாக இல்லை. பெரும் பாலும் அந்தத் தலைவர்களின் போதகம், இலக்கு, விசுவாசம் ஆகியவற்றின் சுருக்கமாக இந்த வசனம் விளங்குகிறது என்று புரிந்துகொள்வதே சரியானது. **இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.** அவர்களுடைய வாழ்க்கையின் இலக்கு இயேசு கிறிஸ்து - நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர்களுடைய விசுவாசத்தின் அடித்தளம் **இயேசுவே கிறிஸ்து** (மேசியா) என்னும் உண்மையாகும், அவர் **நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.**

13:9 அடுத்து, பிரமாணங்களைக் கைக் கொள்ள வேண்டும் என்னும் தவறான போதனைக்கு எதிரான எச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, யூதமார்க்கச் சார்புடையோர், பரிசுத்தமானது வெளியரங்கமான சடங்காச்சார ஆராதனையோடும், தூய்மையான உணவோடும் தொடர்புடையது என்று உறுதியாகக் கூறிவந்தார்கள். ஆனால் உண்மையில் கிருபையினாலே பரிசுத்தம் உண்டாகிறது. அது நியாயப்பிரமாணத்தால் உண்டாவதில்லை. தூய்மையான உணவு தூய்மையற்ற உணவு ஆகியவற்றைக் குறித்த பிரமாணம் சடங்குகள் சார்ந்த பரிசுத்தத்தை உண்டுபண்ணும். சடங்குகள் சார்ந்த தூய்மையை ஒருவன் பெற்றிருந்தாலும் அவன் பகைமையினாலும் மாய்மாலத்தினாலும் நிறைந்திருக்கக்கூடும். தேவனுடைய கிருபையே விசுவாசிகள் பரிசுத்த வாழ்க்கை வாழும்படி, அவர்களுக்கு ஊக்கமளித்து அதற்குத் தேவையான ஆற்றலையும் தந்தருளுகிறது.

13:10 "நமக்கு ஒரு பலிபீடம் உண்டு" என்னும் வெற்றி முழக்கச் சொற்களை நாம் காணத் தவறிவிடக்கூடாது. யூத மார்க்கத்தார் மீண்டும் மீண்டும் ஏளனச் சொற்களால் தாக்கும்போது கிறிஸ்தவனுடைய நம்பிக்கையான பதிற்சொற்களாக இவை இருக்கின்றன. நம்முடைய **பலிபீடம்** கிறிஸ்து. ஆகவே அவருக்குள்ளாக கண்டடையக்கூடிய எல்லா ஆசிர்வாதங்களும் அதில் அடங்கியிருக்கின்றன. லேவிய முறைமையோடு தொடர்புகொண்டவர் எவரும் கிறிஸ்தவத்தின் சிறப்பான நன்மைகளில் பங்குகொள்ள அதிகாரமில்லை, முதலாவது அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனம்வருந்தி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஒரே கர்த்தரும் இரட்சகருமாக நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

13:11 பலிமுறைகளின்படி, குறிப்பிட்ட **மிருகங்கள்** அடிக்கப்பட்டு அவற்றின் இரத்தமானது **பாவத்திற்குரிய** பலியாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் **பிரதான ஆசாரியனால் கொண்டுவரப்படும்.** அந்த மிருகங்களின் சடலங்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் சுற்றுப்புறத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்டு எரிக்கப்படும். **பாளையத்திற்கு புறம்பே** என்பது ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிப் பிராகாரத்தின் தொங்குதிரைக்கு வெளியே என்று பொருள்படும்.

13:12 பாளையத்திற்குப் புறம்பே எரிக்கப்பட்ட மிருகங்கள் நிழலாக உள்ளன; கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மெய்ப்பொருளாக இருக்கிறார்.

எருசலேம் நகரத்தின் மதிற்சுவர்களுக்கு வெளியே அவர் சிலுவையில் அடிக்கப்பட்டார். அவர் **தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப்** பரிசுத்தமாக்கிய செயல் யூதமார்க்கத்தின் ஒழுங்கு முறைக்குப் புறம்பானதாயிருந்தது.

13:13 தொடக்கத்தில் இந்த மடலைப் படித்த வாசகர்களுக்கு இது எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் காணலாம். அவர்கள் யூதமார்க்கத்தோடு கொண்டிருந்த தொடர்பை முழுவதுமாக முரித்துக்கொள்ள வேண்டும். தேவாலய பலிகளுக்கு என்றென்றைக்குமாக தங்களுடைய முதுகைக் காட்டியவர்களாக, கிறிஸ்துவின் நிறைவேற்றி முடிக்கப்பட்ட பலியைப் போதுமான தென்று தங்களுக்குரியதாக்கிக்கொள்ள வேண்டும்.

அதுபோலவே இந்த வசனம் நமக்கும் ஏற்ற தாயிருக்கிறது: பாளையம் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது சமய அமைப்பு முழுவதையும் குறிக்கிறது. அதன்படி நன்னடத்தை, சமயச் சடங்கு அல்லது பிரமாணங்கள் இவற்றின் மூலமாக இரட்சிப்பு உண்டாகிறது என்று அது போதிக்கிறது. தற்காலக் கிறிஸ்தவ சமய அமைப்பும், அதில் மனித அதிகாரத்தால் ஆசாரிய ஊழியத்தைச் செய்யும்படி நியமிக்கப்பட்டுள்ள குருமார்களும், ஆராதனையைச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும், சமயச் சடங்குகளாகிய தந்திரமான செயல்முறைகள் யாவும் இதில் அடங்கியிருக்கின்றன. அது நேர்மையற்ற கிறிஸ்தவ உலகம், கிறிஸ்து இல்லாத சபை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே சபைக்கு வெளியே இருக்கிறார். **நாம் அவருடைய நிந்தையைச் சுமந்தவர்களாக அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்.**

13:14 தேவாலயத்தில் பணிபுரிந்தவர்களுடைய இருதயங்களுக்கு எருசலேம் மிகவும் பிரியமான இடமாகும். அவர்களுடைய "பாளையத்தின்" புவியியல் அமைப்பின்படி அந்நகரமே அவர்களுடைய நகரமாகும். கிறிஸ்தவனுக்கு இவ்வுலகில் அத்தகைய இடம் ஒன்றும் இல்லை. அவனுடைய இருதயம் விண்ணக நகரமாகிய புதிய எருசலேமில் நோக்கமாயிருக்கிறது. அங்கே ஆட்டுக்குட்டியானவரே எல்லாப் புகழ்ச்சிக்கும் உரியவராயிருக்கிறார்.

13:15 புதிய ஏற்பாட்டுக் காலத்தில் விசுவாசிகள் யாவரும் ஆசாரியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஆராதிக்கச் செல்லும் பரிசுத்த ஆலயக் கூட்டமாக இருக்கிறார்கள் (1 பேதுரு 2:5); அவர்கள் நற்செய்தியை வழங்கும்படி உலகத்தை நோக்கி வெளியே செல்லும் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாக இருக்கிறார்கள் (1 பேதுரு 2:9). விசுவாசியாகிய ஆசாரியன் செலுத்தக்கூடிய பலிகள் குறைந்தது மூன்று இருக்கின்றன. முதலாவது, அவன் தன்னையே பலியாக ஒப்புவிக்க வேண்டியவனாக இருக்கிறான் (ரோமர் 12:1). அடுத்ததாக, இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ள **உதடுகளின் கனிகளாகிய ஸ்தோத்திர பலி**. இது தேவனுக்குக் கர்த்தராகிய இயேசுவின் மூலம் செலுத்தப்படுகிறது. நம்முடைய எல்லாப் புகழ்ச்சியும் மன்றாட்டும் பிதாவாகிய தேவனிடத்திற்குச் செல்லும் முன்னர், அவர் மூலமாகவே செல்லுகின்றன. நம்முடைய மகாபிரதான ஆசாரியர் அவற்றில் இருக்கக்கூடிய அனைத்து அசுத்தங்களையும் குறைபாடுகளையும் நீக்கி, தமது சொந்த நற்பண்பைச் சேர்க்கிறார்.

உள்ளத்தின் ஆழத்தில்
ஊற்றெடுத்த தொழுகை
இதயத்தின் மன்றாட்டு
வேண்டுதலாய் மலர்ந்திட
இவற்றுடன் கிறிஸ்து
சேர்க்கிறார் நறுமணம்;

மன்னவரின் கலசத்தில்
அன்பெனும் தூபமும்,
அவற்றுடன் சேர்ந்து
உன்னதம் ஏகிட,
திருத்தந்தை முகர்கிறார்
மனநிறைவுடனே!

அவருடைய **நாமத்தை** ஏற்றுக்கொண்டவர்களின் **உதடுகளின் கனிகளே ஸ்தோத்திர பலியாகும்**. தேவன் ஏற்றுக்கொள்கிற ஒரே ஆராதனை மீட்கப்பட்டவர்களின் உதடுகளிலிருந்து பிறக்கும் ஸ்தோத்திரங்களேயாகும்.

13:16 மூன்றாவது பலி நம்முடைய பொருட் செல்வத்தைக் காணிக்கையாகச் செலுத்துவதாகும். நன்மை செய்யும்பொருட்டு நமது உடைமைப் பொருட்களை நாம் பயன்படுத்த வேண்டும். மேலும் தேவையுள்ளவர்களோடு அவற்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். **இப்படிப்பட்ட** தியாக வாழ்க்கையில் தேவன் பிரியமாயிருக்கிறார். தனக்கென்று சேர்த்து வைப்பதற்கு இது எதிர்மாறானது.

அபிடேகம் பெற்றவர்கள் ஓட்டமெல்லாம்
ஒருநாளும் நின்றதில்லை
திருமுகத்தின் முன்னின்று இரவுபகல்
பாராமல் உழைத்திடுவர்
உலகஞானம் எதிர்த்தாலும் ஐயங்கள்
எழுந்தாலும் முடிவுவரை
தெரிந்தெடுக்கப் பட்டவர்கள் என்றென்றும்
அயராமல் பணிபுரிவர்.

இறைமக்கள் குற்றங்கள் புனிதமான
தீப்பிழம்பில் வெந்துபோகும்
குறைதீர்ந்த இதயங்கள் இறைவனோடு
ஒன்றிணைந்து உயரவெழும்
பற்றுடையோர் புகழுரைகள் அதிதூய
இடமெங்கும் நிறைந்திடுமே
கிருபைநிறை புதுப்பாடல் விண்ணகத்தில்
உவகையுடன் ஒலித்திடுமே!

13:17 ஏழு, எட்டு ஆகிய வசனங்களில் வாசகர்கள் தங்களுடைய முந்தின தலைவர்களை நினைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார்கள். இப்பொழுது அவர்கள் தங்களுடைய தற்போதைய தலைவர்களுக்குக் கீழ்ப்படியும்படி கற்பிக்கப்படுகிறார்கள். இது பெரும்பாலும் உள்ளூர் சபையிலுள்ள மூப்பர்களையே முதன்மையாகக் குறிப்பிடுகிறது எனலாம். அவர்களே சபையில் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகள் அவர்களுடைய அதிகாரத்திற்குக் **கீழ்ப்படிந்திருக்க** வேண்டும். பிரதான மேய்ப்பரின் துணை மேய்ப்பர்களான மூப்பர்கள் தங்களுடைய மந்தையின் **ஆத்துமாக்களுக்காக விழிப்புடன்** இருக்க வேண்டும். வரப்போகிற நாளில் அவர்கள் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். அவர்கள் அதனை மகிழ்ச்சியுடனோ வருத்தத்துடனோ செய்யவேண்டும், அது அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டவர்களின் ஆவிக்குரிய முன்னேற்றத்தைப் பொருத்ததாயிருக்கிறது. அதனை அவர்கள் வருத்தத்துடன் செய்வார்களெனில், அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் பரிசுப் பொருளை இழந்துபோவார்கள் என்பது அதன் பொருளாகும். ஆகவே தேவன் நியமித்த அதிகாரத்தின் வரிசையின்படி மரியாதை செலுத்துதல் எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

4. இறுதி வாழ்த்து [13:18-25]

13:18 மடலின் இறுதிப் பகுதிக்கு வந்திருக்கிற ஆசிரியர், தனிப்பட்ட ஜெப வேண்டுதலை இங்கு சேர்த்திருக்கிறார். குறைகூறுவோரின் தாக்கு தலுக்கு ஆசிரியர் ஆளாயிருந்திருக்கக் கூடும் என்று எஞ்சியிருக்கிற வசனங்கள் கூறுகின்றன என்றே தோன்றுகிறது. அவ்வாறு குறைகூறியவர்கள் யார் என்பதை நம்மால் ஊகித்துப் பார்க்க முடியும் - முந்தின உடன்படிக்கையின்படியான ஆராதனையை நோக்கி மக்கள் திரும்பிச் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தித் தூண்டியவர்களே அவர்கள். எத்தகைய குற்றச்சாட்டு அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டாலும், அவருடைய **மனச்சாட்சி** தெளிவாகவும், விருப்பம் தூய்மையாகவும் இருக்கின்றன என்று கூறி அவர் அவர்களை எதிர்த்துநிற்கிறார்.

13:19 அவருடைய வேண்டுதலுக்கான மற்றுமொரு காரணம் என்னவெனில், அவர் **அதிசீக்கிரமாய் அவர்களிடத்திற்குக்** கொண்டுவரப்பட வேண்டும் என்பதாகும். இது பெரும்பாலும் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெறுவதைக் குறிக்கக்கூடும். இந்த வசனத்தைக்கொண்டு இதற்கும் மேலாக நாம் ஊகம் செய்ய முடியாது.

13:20 திருமறையில் காணப்படும் மிக அழகிய வாழ்த்துரையை நூலாசிரியர் இப்பொழுது எடுத்தெழுதுகிறார். இது எண்ணாகமம் 6:24-26; 2 கொரிந்தியர் 13:14; யூதா 24,25 ஆகிய இடங்களிலும் இடம் பெற்றிருக்கிறது. இது சமாதானத்தின் தேவனை நோக்கி முறையிடப்பட்டிருக்கிறது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு நிறைவான உளவமைதி இல்லை. ஆனால் புதிய உடன்படிக்கைக்குக் கீழாக நாம் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1). நாம் தேவசமாதானத்தையும் பெற்றிருக்கிறோம் (பிலி. 4:7). இந்தச் சமாதானம் கிறிஸ்துவின் நிறைவேற்றப்பட்ட செயலின் கனியாக இருக்கிறது என்பதை இந்த வசனம் விளக்கிக் கூறுகிறது. பாவத்தைக் குறித்த சர்ச்சையை என்றென்றைக்குமாக **கர்த்தராகிய இயேசு** சிலுவையில் செய்து முடித்த செயல் தீர்த்துவிட்டது என்பதற்கு அடையாளமாக அவர் **மரித்தோரிலிருந்து** உயிருடன் எழுப்பப்பட்டார்.

கிறிஸ்து, நல்ல மேய்ப்பராக ஆடுகளுக்காகத் தமது ஜீவனைக் கொடுத்தார் (யோவான் 10:11). **பெரிய மேய்ப்பராக** அவர் மீட்பின் வேலையைச் செய்து முடித்து மரித்தோரிலிருந்து உயிருடன்

எழுந்தார் (எபி. 13:20). பிரதான மேய்ப்பராக அவர் தமது ஊழியக்காரருக்குப் பரிசுப்பொருட்களை வழங்கும்படி மீண்டும் வரப்போகிறார் (1 பேதுரு 5:4). அவரை நாம் சங்கீதம் 22 -இல் நல்ல மேய்ப்பராகவும், சங்கீதம் 23 -இல் பெரிய மேய்ப்பராகவும், சங்கீதம் 24 -இல் பிரதான மேய்ப்பராகவும் காண்கிறோம்.

அவர் **மரித்தோரிலிருந்து** திரும்பக் கொண்டு வரப்பட்ட செயல் நித்திய உடன்படிக்கையின்படி செய்யப்பட்ட செயலாகும். வுயஸ்ட் என்பார் இந்தச் சொற்றொடரை விவரித்துக் கூறுகிறார்:

> நிலையற்ற இயல்புடைய முந்தின ஏற்பாட்டுக்கு எதிர்மாறானது புதிய ஏற்பாடு, இது நித்திய மானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேசியா பாவியான மனிதனுக்காக மரணமடைந்து மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்ட செயல் அந்த நித்திய உடன்படிக்கையின் செயலெல்லைக்கு உட்பட்டது. அவர் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்படவில்லை என்றால் மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான ஆசாரியராக இருக்க முடியாது. பாவியான மனிதனுக்கு உயிருள்ள ஆசாரியர் தேவை, உயிருள்ள ஆசாரியரே விசுவாசிக்கிற பாவிக்கு வாழ்வைத் தரமுடியும்; உயிரற்ற ஆசாரியன் வெறுமனே அந்தப் பாவிக்காக பலியை மட்டுமே செலுத்த முடியும். இவ்வாறாக, தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த ஆசாரியர் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட வேண்டும் என்பது புதிய ஏற்பாட்டுக்குள் முன்னேற்பாடு செய்யப்பட்டுள்ளது.[37]

13:21 பரிசுத்தவான்கள் தேவனுடைய **சித்தத்தைச்** செய்யும்படி **சகலவித நற்கிரியைகளினாலும்** ஆயத்தப்படுத்தப்பட வேண்டும் என்னும் மன்றாட்டு, இருபதாவது வசனத்தில் தொடங்கிய ஜெபத்தின் பொருளாகும். தெய்வீக சித்தமும் மனிதனுடைய சித்தமும் இங்கு விநோதமான முறையில் கலந்திருக்கின்றன. எல்லா நன்மையினாலும் தேவன் நம்மை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய பார்வைக்குப் **பிரியமானதை**, நம்மிடத்தில் செய்கிறார். அவர் அதனைக் கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவைக் கொண்டு** செய்கிறார். அதன் பிறகு நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறோம். அவர் விருப்பத்தை நம்மிடத்தில் உண்டாக்குகிறார்; அதனைச் செய்வதற்கான ஆற்றலையும் அவர் நமக்குத் தருகிறார்; அதன் பிறகு நாம் அதைச் செய்கிறோம்; மேலும் அவர் அதற்கான பரிசைத் தருகிறார்.

இயேசு கிறிஸ்து **என்றென்றைக்கும் மகிமை** பெறத் தகுதியுடையவராயிருக்கிறார் என்னும் அறிக்கையோடு இந்த மன்றாட்டு முடிவடைகிறது.

> பாத்திரர் நீரே! பாத்திரர் நீரே!
> இயேசுவே நீரேதான் பாத்திரரே!
> ஆசிர்வாதம் பெற்றானந்திக்கும் நாங்கள்
> பாத்திரர் நீரென்று போற்றுகிறோம்.

13:22 தன்னுடைய மடலில் உள்ள **புத்திமதிகளுக்கு** வாசகர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று நூலாசியர் இப்பொழுது வற்புறுத்திக் கூறுகிறார். அதாவது சடங்குள் நிறைந்த சமயத்தை விட்டு விட்டு, உண்மையான நோக்கத்தோடு கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்.

இந்த மடலானது மிகச் சுருக்கமானது என்று அவர் கூறுகிறார். லேவிய முறைமையைப் பற்றிய விவரங்களை அதிகமாகச் சொல்லி, அவையாவும் எவ்வாறு கிறிஸ்துவில் நிறைவாயின என்பதையெல்லாம் அவர் கூறியிருப்பாரென்றால் அது மிகப்பெரிதாக இருந்திருக்கும். அதனோடு ஒப்பிடுகையில் இம்மடல் சிறியதுதான்.

13:23 சகோதரனாகிய தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, இம்மடலைப் பவுல் எழுதினார் என்று கருதுபவர்களுடைய கருத்தை உறுதிசெய்கிறது. தீமோத்தேயுவுடன் இவர் பயணம் செய்யத் திட்டமிட்டார் என்னும் உண்மை இந்நூலாசிரியர் பவுல் என்பதை வலியுறுத்தும் மேலுமொரு குறிப்பாக இருக்கிறது. ஆனாலும் நாம் இதனை உறுதியாகச் சொல்ல முடியாது. ஆகவே அந்தக் கேள்வியை அத்துடன் விட்டுவிடுவது நல்லது.

13:24 கிறிஸ்தவத் தலைவர்கள் அனைவருக்கும் மற்றும் **பரிசுத்தவான்கள் யாவருக்கும்** வாழ்த்து கூறப்பட்டுள்ளது. நாம் இம்மடலில் காண்கிற பல்வேறு கிறிஸ்தவ நற்பண்புகளை காணாததுபோல விட்டுவிடாமல், இந்நாட்களில் பின்பற்றி நடக்க வேண்டும்.

இத்தாலியா நாட்டைச் சேர்ந்த சில விசுவாசிகள் அப்பொழுது இந்நூலாசிரியரோடு இருந்தார்கள், அவர்கள் தங்களுடைய வாழ்த்தைத் தெரிவிக்க விரும்பினார்கள். இம்மடல் இத்தாலியாவிலிருந்து அல்லது இத்தாலியாவுக்கு எழுதப்பட்டது என்பதை இது குறிப்பாய்த் தெரிவிக்கிறது.

13:25 புதிய உடன்படிக்கையைக் குறித்த இம்மடல் கிருபையைப் பற்றிய குறிப்புடன் முடிவு பெறுவது மிகப் பொருத்தமானது ஆகும். **கிருபை யானது உங்களனைவரோடுங்கூட இருப்ப தாக.** புது உடன்படிக்கை நிபந்தனையற்ற இல வச கிருபை ஆகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் தியாகச் செயலின் மூலமாகத் தகுதியற்ற பாவிகளிடத்தில் கட்டுக்கடங்காத அளவிற்குக் காண்பிக்கப்பட்ட தேவ தயவைக் குறித்து இது பேசுகிறது. **ஆமென்.**

இன்றைய நாளுக்கு எபிரெயர் மடல் தரும் செய்தி

இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் நமக்கு எபிரெயர் மடல் ஏதாவது செய்தியைத் தருகிறதா?

சபையின் தொடக்க நாட்களில் இருந்ததுபோல யூதமார்க்கம் இப்பொழுது அதிக ஆதிக்கம் உடைய சமயமாக இல்லாதிருந்தாலும், சடங்கு கள் சார்ந்த வழக்கங்கள் கிறிஸ்தவ உலகத்திற் குள் ஊடுருவி இருக்கின்றன. சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து அறிதல் என்னும் புகழ்பெற்ற நூலில் திருவாளர் C. I. ஸ்கோ.ீபீல்டு இவ்வாறு எழுதுகிறார்:

> கிறிஸ்தவத் திருச்சபை யூதமார்க்கச் சார்புடைய தாக்கப்பட்டதன் விளைவு அதன் முன்னேற்றம் அதிகமாகத் தடைப்பட்டது, அதன் குறிக்கோள் தடம்புரண்டு போயிற்று, அதன் ஆவிக்குரிய நிலை அழிந்துபோயிற்று, இன்னபிற கேடு களும் உண்டாயின. மேலும் சபையானது உலகினின்று பிரிந்து வாழ வேண்டும் என்னும் நியமிக்கப்பட்ட பாதையைப் பின்தொடர்வதை விடுத்து, அழைக்கப்பட்ட பரம அழைப்பின்படி கர்த்தரைப் பின்பற்றாமல், இவ்வுலக நாகரிகத் திற்கு ஏற்றாற்போல் தனது நோக்கத்தைக் குறைவுபடுத்தும் பொருட்டு, செல்வத்தைப் பெருக்கி, சடங்குகளைத் திணித்து, மாபெரும் கட்டடங்களை ஆலயங்களாக எழுப்பி... சகோ தரர்களிடையே எவ்விதப் பாகுபாடும் இல்லை யென்பதை மறுத்து, ''குருமார்கள்'' என்றும் ''சாதாரண விசுவாசிகள்'' என்றும் வேறுபடுத்தி விட்டது.[38]

எல்லாச் சமய அமைப்புகளிலிருந்தும் நாம் பிரிந்துவாழ வேண்டும் என்று இம்மடல் வலி யுறுத்துகிறது. அந்த அமைப்புகளில் கிறிஸ்து மட்டுமே ஒரே கர்த்தரும், இரட்சகருமாக இருக் கிறார் என்னும் உண்மை மதிக்கப்படுவதில்லை. மேலும் அவருடைய மீட்பின் செயல் பாவத்திற் காக என்றென்றைக்குமாக ஒரே தரம் செலுத்தப் பட்ட பலி என்பதையும் அவை ஏற்றுக்கொள் வதில்லை.

பழைய ஏற்பாட்டுச் சமய அமைப்பில் காணப் படும் மாதிரிகளும் நிழல்களும் நம்முடைய கர்த் தரில் நிறைவேறியிருக்கின்றன என்பதை எபிரெ யர் மடல் கற்பிக்கிறது. அவர் நம்முடைய மகாபிர தான ஆசாரியர். அவரே நம்முடைய பலியாகவும் இருக்கிறார். அவரே நம்முடைய பலிபீடமாகவும் இருக்கிறார். அவருடைய ஊழியம் விண்ணகப் பரிசுத்த ஸ்தலத்தில் நடைபெறுகிறது, அதற்கு முடிவில்லை.

எல்லா விசுவாசிகளும் ஆசாரியர்களாக இருக்கிறார்கள் என்பதை இந்நூல் கற்பிக்கிறது. எந்த நேரத்திலும் விசுவாசத்தின் மூலமாக தேவ னுடைய முன்னிலைக்கு அவர்களால் உடனடியா கச் செல்ல முடியும் என்றும் அது கற்பிக்கிறது. அவர்கள் தங்களுடைய ஆளுமையையும், தங்க ளுடைய ஸ்தோத்திரங்களையும், தங்களுடைய உடைமைப்பொருட்களையும் பலிகளாகச் செலுத்துகிறார்கள்.

டேவிட் பேரன் என்பார் எழுதுகிறார்:

> லேவிய ஆசாரிய முறைமையைக் கிறிஸ்தவத் திருச்சபையில் ஏற்றுக்கொள்ளும் செயல், ஒப்பு யர்வற்ற உன்னதமான தேவன் தாமே கிழித்துப் போட்ட திரையை மீண்டும் ஒன்று சேர்க்கும்படி தூய்மையற்ற கரங்கள்கொண்டு தைக்க முயலுகிற செயலே தவிர வேறொன்றுமில்லை. சமயச் சடங்குகள் சார்புடைய கொள்கையும் இதனையே செய்ய வேண்டுமென்று வற் புறுத்துகிறது. மேலும் இது, கிறிஸ்துவின் இரத்தத்தால் சமீபமானவர்களைத் ''தொலை வில் நில்லுங்கள், தேவனுக்கு அருகில் வரா திருக்கக்கடவீர்கள்'' என்று சொல்வதற்கு ஒப்பா யிருக்கிறது.[39]

நமக்கு விசேஷித்த உடன்படிக்கையும், விசேஷித்த மத்தியஸ்தரும், விசேஷித்த நம்பிக் கையும், விசேஷித்த வாக்குத்தத்தங்களும், விசேஷித்த தேசமும், விசேஷித்த ஆசாரிய முறைமையும், விசேஷித்த உடைமையும் இருப் பதாக எபிரெயர் நூல் கற்பிக்கிறது. யூதமார்க்கம் தரக்கூடிய மிகச்சிறப்பான ஏதொன்றையும்விட இவை சிறந்தவை. நமக்கு நித்திய மீட்பு, நித்திய

இரட்சிப்பு, நித்திய உடன்படிக்கை, நித்திய சுதந்தரம் உண்டென்றும் இது உறுதிசெய்கிறது.

விசுவாச மறுதலிப்பு என்னும் பாவத்தை இது கடுமையாகக் கண்டிக்கிறது. ஒரு மனிதன் தான் ஒரு விசுவாசி என்று அறிக்கை செய்து, ஒரு கிறிஸ்தவ சபையோடு ஐக்கியம் கொண்டவனாக சில காலம் இருந்த பிறகு கிறிஸ்துவைவிட்டு விலகி, கர்த்தருடைய பகைஞரோடு சேர்ந்து கொள்வானானால், அப்படிப்பட்டவனை மீண்டும் மனந்திரும்புதலுக்கு ஏதுவாகப் புதிப்பிப்பது கூடாத காரியம்.

மெய்யான விசுவாசி தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டுமென்று இம்மடல் கற்பிக்கிறது. ஏனென்றால் அப்படிப்பட்ட வாழ்க்கையே கிறிஸ்துவுக்கு இன்பம் அளிக்கக்கூடியது. மேலும் உபத்திரவங்கள், சோதனைகள் பாடுகள் ஆகியவை ஏற்படுகிறபோது, வாக்குறுதி பண்ணப்பட்ட பரிசுகளைப் பெறும்பொருட்டு நாம் அவற்றைச் சகித்தவர்களாக உறுதியுடன் இருக்க வேண்டுமென்று இந்நூல் உற்சாகப்படுத்துகிறது.

கிறிஸ்தவர்கள் பல்வேறு நற்பேறுகளைப் பெற்றிருப்பதன் காரணமாக அவர்களுக்கு மிகச் சிறப்பான பொறுப்பும் இருக்கிறது என்று எபிரெயர் மடல் கற்பிக்கிறது. கிறிஸ்துவின் மேன்மைகள் அவர்களை இவ்வுலகிலேயே மிகுந்த சலுகை பெற்ற மக்களாக மாற்றியிருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்புச் சலுகைகளை அவர்கள் புறக்கணிப்பார்களெனில், அதற்கேற்றபடி கிறிஸ்துவின் நியாயாசனத்தில் பரிசுப்பொருளை இழந்து போவார்கள். நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக வாழ்ந்தவர்களைக் காட்டிலும் இவர்களிடத்தில் அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது; வரப்போகிற நாளில் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கப்படும்.

“ஆகவே நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்” (13:13).

அடிக்குறிப்புகள்

1 (3:6) நடுநிலைப் பிரதியில் "முடிவுபரியந்தம்" என்னும் சொல் இடம்பெறவில்லை

2 (3:18) Arthur T. Pierson, further documentation unavailable.

3 (4:15) கிறிஸ்துவால் பாவம் செய்திருக்க முடியுமா முடியாதா என்பதைக் குறித்த கோட் பாட்டை இரண்டு சொற்றொடர்களில் இலத்தீன் மொழியில் இறையியல் அறிஞர்கள் சுருக்கமாகத் தந்துள்ளார்கள்: ஒன்று அவர் பாவம் செய்ய இயலாதவர் என்னும் சொற்றொடர், மற்றொன்று அவரால் பாவம் செய்யாதிருக்க முடியும் என்னும் சொற்றொடர். உண்மையான போதகம் அவர் பாவம் செய்ய இயலாதவர் என்பதேயாகும்.

4 (4:16) G. Campbell Morgan, *"Choice Gleanings Calender."*

5 (6:2) மூலமொழியில் இந்தச் சொற்கள் இரண்டும் ஒன்றல்ல: "ஞானஸ்நானத்தைக்" குறிக்கும் வழக்கமான சொல் *baptisma* என்பதாகும்; இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள சொல் *baptismoi*, இதன் பொருள் "சடங்குகளுக்குரிய கழுவுதல்" என்பதாகும் (தமிழில் ஸ்நானங்கள் என்று இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது).

6 (6:3) பெரும்பான்மைப் பிரதியில் "இதனைச் செய்யக்கடவோம்" என்னும் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

7 (6:6) NKJV அடிக்குறிப்பில் காணப்படும் மொழிபெயர்ப்பு சிறப்பானது (ஏனெனில் அதன் அமைப்பும் பின்னணியும் முந்தின சொற்றொடரைப் போன்றே இருக்கின்றன): "மறுதலித்துப் போனவர்கள்." (தமிழிலும் இச்சொற்றொடர் சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, மறுதலித்துப் போவார்களானால் என்று குறிப்பிடப்படவில்லை.)

8 (6:18) பெரும்பான்மைப் பிரதியில் "நிறைந்த ஆறுதல் உண்டாகிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (நிகழ்கிற செய்தியைத் தெரிவிக்கிற) "நிறைந்த ஆறுதல் உண்டாகும் படிக்கு" என்று NKJV –யில் குறிப்பிடப்பட்டுள்ளது (தமிழிலும் அவ்வாறே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது – நிகழக்கூடும் என்று கூறுவது). முந்தைய சொல் அமைப்பு மிகுந்த உறுதியுடையதாயிருக்கிறது.

9 (6:20) D. Anderson-Berry, *Pictures in the Acts,* p. 36ff

10 (7:20) A. W. Rainsbury, *"Able to save to the Uttermost,"* The Keswick Week, 1958, p.78.

11 (7:21) George Henderson, *Studies in the Epistles to the Hebrews,* p.86.

12 (8:6) W. H. Griffith Thomas, *Hebrews: A Devotional Commentary,* p. 103.

13 (8:8) Henderson, *Hebrews,* p. 92.

14 (9:4) The word *thumiaterion* is a thing or place for burning incense

15 (9:11) The NU text reads *"that have come."*

16 (9:13) J. Gregory Mantle, *Better Things,* p. 109.

17 (9:15) Kenneth S. Wuest, *Hebrews in the Greek New Testament,* p. 162, 163.

18 (10:10) George M. Landis, *Epistle to the Hebrews: On the Maturity*, p. 116.

19 (10:11) Alexander Balmain Bruce, *The Epistle to the Hebrews: The First Apology for Christianity,* p.34.

20 (10:37) Marvin Vincent, *Word studies in the New testament,* II:1150.

21 (10:37) A. J. Pollock, *Modernism versus the Bible,* p. 19.

22 (10:38) நடுநிலைப் பிரதியில் "என்னுடைய நீதிமான் ஒருவன்" என்னும் சொற்றொடர் இடம்பெற்றுள்ளது.

23 (11:21) C. H. Mackintosh, *Genesis to Deuteronomy: Notes on the Pentateuch*, p.133.

24 (11:22) William Lincoln, *Lectures on the Epistles to the Hebrews*, p. 106.

25 (11:35) G. H. Morrison, *"Morrison on Luke,"* The Glasgow Pulpit Series, I:42

26 (11:37) "பரீட்சை பார்க்கப்பட்டார்கள்" என்னும் சொற்கள் நடுநிலைப் பிரதியில் இடம் பெறவில்லை.

27 (11:37) William G. Moorehead, *Outline studies in the New Testament, Philippians to Hebrews,* p. 248.

28 (12:2) A. B. Bruce, *Hebrews,* pp. 415, 416.

29 (12:10) J. H. Jowett, *Life in the Heights,* pp. 247, 248.

30 (12:11) Leslie Weatherhead, *Prescription for Anxiety,* p. 32.

31 (12:11) C.H. Spurgeon, *"Choice Gleanings Calender."*

32 (12:13) George Williams, *The Student's Commentary on the Holy Scriptures,* p.989.

33 (12:13) G. H. Lang, *The Epistle to the Hebrews,* pp. 240,241.

34 (12:14) Wuest, *Hebrew,* p. 222.

35 (12:20) "அல்லது அம்பினால் எய்யுண்டு" என்னும் சொற்கள் பெரும்பான்மைப் பிரதியில் (மிகப்பழமையான பிரதிகளிலும் கூட) இடம்பெற வில்லை. இச்சொற்றொடர் பின்னர் சேர்க்கப்பட்டி ருக்கும் என்றே தோன்றுகிறது.

36 (13:2) இம்மூவரில் ஒருவர் கர்த்தருடைய தூதனானவர்; மனுவுருவெடுப்பதற்குமுன் தரி சனமான கிறிஸ்து.

37 (13:20) Wuest, *Hebrew*, p. 242.

38 (Excursus) C. I. Scofield, *Rightly Dividing the Word of Truth,* p. 17.

39 (Excursus) David Baron, *The New Order of Priesthood,* pp. 39,40.

நூல் விவரப் பட்டியல்

Bruce, Alexander Balmain. The *Epistle to the Hebrew: The First Apology for Christianity. Edinburgh: T. & T. Clark, 1908.*

Govett, Robert. C*hrist Superior to Angel, Moses and Aaron.* London J. Nisbet, 1884.

Henderson, G. D. Studies *in the Epistle ot the Hebrews. Barkingside,* England: G. F. Vallance, n. d.

Hewitt, Thomas, *The Epistle in the Hebrews, TBC. Grand* Rapids: Eerdmans, 1960.

Ironside, H. A. *Hebrews and Titus.* Neptune, N. J.: Loizeaux Brothers, 1932.

Kelly, William, *Introductory Lectures to the Epistle to the Hebrews and the Epistle to Philemon.* Oak Park IL: Bible Truth Publishers, n. d.

Landis G. M. Epistle to the Hebrews: *On to Maturity.* Oak Park: Emmaus Bible School, 1964.

Lang G. H. *The Epistle to the Hebrews,* London: Paternoster Press, 1951.

Lincoln, William. *Lectures on the Epistle to the Hebrews.* Boston: Believers' BookRoom, n. d.

Mantle, J. Gregory. *"Better Things": A Series of Bible Readings on the Epistle to the Hebrews.* New York: Christian Alliance Publishing Co., 1921.

Meyer, F. B. *The Way into the Holiest.* Grand Rapids: Zondervan Publishing House, 1950.

Moffatt, James. *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews,* IFF. Edinburgh: T. & T. Clark, 1924.

Moule, H. C. G. *Studies in the Hebrews.* Grand Rapids: Kregel Publications, 1977.

Newell, W. R. *Hebrews verse by Verse.* Chicago: Moody Press, 1947.

Pfeiffer, Charles F. *The Epistle to the Hebrews.* Chicago: Moody Press, 191962.

Rainsbury, A. W. *"Able to Save to the Uttermost",* The Keswick Week. London: Marshall, Morgan and Scott Ltd., 1958.

Thomas, W. H. Griffith. *Hebrews: A Devotional Commentary.* Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1961.

Vine, W. E. *The Epistle to the Hebrews.*: London Oliphants Ltd., 1952.

Westcott, B. F. *The Epistle to the Hebrews.* London: MacMilan, 1889.

அப்போஸ்தலனாகிய

யாக்கோபு எழுதின பொதுவான நிருபம்

முன்னுரை

யாக்கோபு ஒரு தீர்க்கதரிசியைப் போலப் பேசுகிற பிரசங்கி ஆவார்.... ஆற்றல் மிக்க மொழி நடையில் எழுதப்பட்ட தொடக்ககாலக் கிறிஸ்தவ இலக்கியங்களில், இயேசு கிறிஸ்துவின் பிரசங்கங்களைத் தவிர, வேறு எதுவும் யாக்கோபு மடலுக்கு இணையானது இல்லை.

– தியோடர் ஜாஹ்ன்

1 வேத நூல் தொகுப்பில் தனிச்சிறப்புமிக்க இடம்

யாக்கோபின் மடலை "எத்தகைய பயனுமற்ற மடல்" என்று மிகத்தாழ்வாகத் திருவாளர் மார்டின் லுத்தர் மதிப்பிட்டது பெருந்தவறு. விசுவாசத் தோடு கிரியையும் இணைந்தால் மட்டுமே இரட் சிப்பு கிடைக்கும் என்று கற்பித்துவந்த கூட்டத் தாரோடு சீர்திருத்தவாதியாகிய லுத்தர் கடுமை யாகப் போராடிய தருணத்தில், நற்கிரியைகளைப் பற்றிய போதனைகளைக் கண்டவர் இவ்விதத் தவறான முடிவுக்கு வந்துவிட்டார். கிறிஸ்தவ மடல்களில் முதன்முதலாக எழுதப்பட்ட இதனைத் தவறாகப் புரிந்துகொண்டவர் பலர். இம்மடலில் ஒன்றிணைந்த போக்கு இல்லை, மாறாக நன்கு விவரங்களுடன் கூடிய பல பகுதிகள் அதில் வெறு மனே ஒட்டவைக்கப்பட்டுள்ளன என்னும் பொரு ளில் சிலர் இதனை "முத்துகள் கோத்த மெல்லிய இழை" என்று அழைத்தார்கள்!

உண்மையில், இச்சிறு நூல் நீதிகள் நிறைந்த தலைசிறந்த படைப்பு. இந்நூலில் யூதத் தனி இயல்பு வலிமையான நிலையில் காணப்படு கிறது, கிறிஸ்தவ சபையானது "ஆலயம்" (2:2) என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து இது தெளி வாகத் தெரிகிறது. பின்னர் இச்சொல்லே இந்நாள் வரையிலும், யூதர்கள் கூடிவரும் இடமாகிய ஜெபாலயத்தைக் குறிக்கும்படியாயிற்று.

ஐந்து சிறு அதிகாரங்களில் ஆவிக்குரிய உண்மைகளை எடுத்துரைக்கும்படி யாக்கோபு இயற்கைக் காட்சிகளை முப்பது இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். இங்கு, நமது கர்த்தர் கற்பித்த முறை ஒவ்வொருவருடைய நினைவிற் கும் கொண்டுவரப்படுகிறது.

இந்த மடலானது நடைமுறை சார்ந்தது. பொது வாக விரும்பப்படாத பொருட்களை இந்நூல் ஆய்வு செய்கிறது; நாவைக்கட்டுப்படுத்துதல், செல்வந்தர்களை அடிபணிந்து போற்றுவதன் ஆபத்து, நம்முடைய வாழ்க்கையின் மூலம் நமது விசுவாசம் உண்மையானது என்று மெய்ப்பித்தல் போன்ற ஆய்வுப் பொருட்கள் அவற்றில் அடங் கும்.

2. நூலாசிரியர்

எபிரெய மொழியிலிருந்து கிரேக்கம், லத்தீன், பிரஞ்சு ஆகிய மொழிகளின் வழியாக ஆங்கில மொழியைச் சென்றடைவதற்குள்ளாக வேதத் தில் பல பெயர்கள் மாற்றமடைந்துள்ளன. எந்த வொரு பெயரும் இவ்வளவு பெரிய மாற்றத்தை அடைந்ததில்லை எனச் சொல்லலாம். (தமிழிலில் அவ்வித மாற்றம் இல்லை என்பதைக் காண்க.)

எபிரெய மொழியில் "யாக்கோவ்" என்னும் பெயர், கிரேக்க மொழியில் "இயாகோபோஸ்" என்றும், ஆங்கிலத்தில் "ஜேம்ஸ்" என்றும் மூல மொழியின் அமைப்பில் பெரும் மாற்றம் உண்டா யிருக்கிறது. யாக்கோபு (ஜேம்ஸ்) என்னும் பெயர் யூதர்களிடையே மிகவும் புகழ்பெற்றதாயிருந் தது. புதிய ஏற்பாட்டில் இந்தப் பெயர் கொண்டவர் களாக நால்வர் இருந்தார்கள். இம்மடலின் ஆசிரியர் இவர்தான் என்று இந்த நால்வரைப் பற்றியும் கருத்துரைக்கப்பட்ட போதிலும், ஒவ் வொருவருக்கும் திருமறைக் குறிப்புகள் தரும் ஆதரவின் அளவில் வேறுபாடு காணப்படுகிறது.

1. யோவானின் சகோதரனும் செபதேயுவின் குமாரனும் அப்போஸ்தலனுமாகிய யாக் கோபு (மத். 4:21). அப்போஸ்தலனாகிய யாக்கோபு இம்மடலின் ஆசிரியராக இருந் தால், இந்த மடலை ஏற்றுக்கொள்வதில் இவ்வளவு அதிகமான காலம் தயக்கம் ஏற்பட்டிருக்காது. மேலும் அவர் கி. பி. 44 - இல் இரத்தசாட்சியாக மரணம் அடைந்தார்.

இந்த மடல் எழுதப்பட்டதற்கு முன்னரே பெரும்பாலும் அவர் மரணமடைந்திருப்பார் என்பதை இது தெரிவிக்கிறது.

2. *அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு* (மத். 10:3). அப்போஸ்தலர்களுடைய பட்டியலில் இவர் இடம் பெற்றிருந்தார் என்பதைத் தவிர இவரைப் பற்றிய வேறு செய்தி எதுவும் தெரியவில்லை. இந்நூலின் ஆசிரியரோ தான் யாக்கோபு என்று மட்டுமே சொல்லி, தன்னை வேறுபடுத்திக் காட்டும் எந்தப் பதவிப் பெயரையும் கூறாதது, அவர் அந்த நேரத்தில் *நன்கு அறியப்பட்டிருந்தார்* என்பதைக் காட்டுகிறது.

3. யூதாவின் (ஸ்காரியோத்து அல்ல, லூக்கா 6:16) தகப்பனாகிய யாக்கோபு. இந்த மனிதனைக் குறித்து ஒன்றுமே தெரியாது, ஆகவே இவர் இந்நூலின் ஆசிரியர் அல்ல என்று எளிதாக முடிவுசெய்யலாம் (தமிழில் யாக்கோபு என்பவன் யூதாவின் சகோதரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான்).

4. *நம்முடைய கர்த்தருடைய ஒன்றுவிட்ட சகோதரனாகிய* யாக்கோபு (மத். 13:55); கலா. 1:19). இவரே பெரும்பாலும் இம்மடலின் ஆசிரியர் என்பது நிச்சயம். இவர் நன்கு அறியப்பட்டவர், ஆயினும் தன்னடக்கமானவர், ஏனெனில் கிறிஸ்துவோடு சரீரப்பிரகாரமான தனக்குரிய உறவைக் குறிப்பிடவில்லை (யூதா மடலின் முன்னுரையையும் காண்க). இந்த மனிதனே எருசலேம் ஆலோசனை சங்கத்தைத் தலைமையேற்று நடத்தியவர், மேலும் அந்த நகரத்தில் தான் மரணமடையும்வரை வசித்தவர். குறிப்பிடத்தக்க அளவிற்கு இவர் **யூதக்** கிறிஸ்தவர் என்னும் பெயர்பெற்று, தனது வாழ்க்கை நடைமுறையில் மிகக் கண்டிப்பான முறையில் வாழ்ந்தவர். சுருங்கக் கூறின், இத்தகைய நீதிகள் நிறைந்த நூலை எழுதும்படி, கிறிஸ்தவ நீதியின்படி வாழ்ந்தவர் என்று வரலாறும் (ஜோஸபஸ்) சபைப் பாரம்பரியமும் இவரைக் குறித்து நினைவு கூருகின்றன.

புறச்சான்றுகள்

மிக பலவீனமான புறச்சான்றுகள் கொண்ட நூல்களில் யாக்கோபு மடலும் ஒன்று. தொடக்க கால சபை முற்பிதாக்களால் இந்நூல் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, இதிலிருந்து மேற்கோள் எதுவும் எடுத்தாளப்படவில்லை. முரடோரியன் வேத நூட்களின் தொகுப்பிலும் இது இடம் பெறவில்லை. பெரும்பாலும் இதற்குக் காரணம் என்னவெனில், இந்நூல் எருசலேம் நகரிலிருந்து கிழக்கத்திய யூதர்களுக்கு எழுதப்பட்டது, மேலும் விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல் என்னும் பவுலின் கோட்பாட்டிற்கு இது முரணாக இருக்கிறது என்று பலருக்குத் *தோன்றியது.*

இருந்தபோதிலும், யாக்கோபு மடல் எருசலேம் சிரில், நசியான்சஸ் கிரெகோரி, அதனாசியஸ் மற்றும் ஜெரோம் ஆகியோரால் எடுத்தாளப்பட்டுள்ளது. சில கிறிஸ்தவர்கள் எதிராகப் பேசிவந்த நூல்களில் யாக்கோபு மடலும் ஒன்று என்று கூறுகிற யூசிபியஸ், தன்னுடைய நூலிலேயே இதனைப் பரிசுத்த வேதம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அகச்சான்றுகள்

யாக்கோபு இம்மடலை எழுதியவர் என்பதற்குரிய அகச்சான்றுகள் மிகவும் வலிமையுடையவை. அப்போஸ்தலருடைய நடபடிகள், கலாத்தியர் ஆகிய நூல்களின் மூலமாகவும், யூதர்கள் சிதறடிக்கப்பட்ட வரலாறு அடங்கிய பிற ஆதாரங்களின் மூலமாகவும் யாக்கோபு எத்தகையவர் என்று அறியப்பட்டிருக்கிறாரோ அதற்கு இந்நூல் இசைவாயிருக்கிறது. இத்தகைய நூலைக் கள்ளத்தனமானது என்று சொல்லுவதற்கு எந்தக் காரணமும் இல்லை; இதில் பெரிதான கோட்பாடு எதுவும் சேர்க்கப்படவில்லை (இரண்டாம் நூண்றாண்டுக் கள்ளப்போதகர்கள் எழுதிய போலியான செய்திகளில் தவறான கோட்பாடுகளைச் சேர்த்துள்ளார்கள்). நியாயப்பிரமாணத்தில் மிகுந்த பற்றுறுதி கொண்டிருந்த காரணத்தால் யாக்கோபு யூதர்கள் மத்தியில் பெருமதிப்பு பெற்றிருந்தார். ஆனால் அவர் தன்னுடைய மேசியாவுக்கு சாட்சி கூறக்கூடாது என்ற தடையையும் மீறி, சாட்சி கூறியதால் உயிர்த்தியாகம் செய்ய நேரிட்டது என்கிறார் ஜோஸபஸ். அனனியா என்னும் பிரதான ஆசாரியனின் கட்டளையின்பேரில் யாக்கோபு கல்லெறிந்து கொல்லப்பட்டார் என்று இந்த யூத வரலாற்று ஆசிரியர் மேலும் கூறுகிறார். யாக்கோபு தேவாலயத்தின் கோபுர முகட்டிலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டு, தடியால் அடித்துக் கொல்லப்பட்டார் என்று யூசிபியஸ் கூறுகிறார். ஹெகேசிப்பஸ் இவ்விரண்டு பாரம்பரியக் கருத்துகளையும் ஒன்றிணைத்துக் கூறுகிறார்.

யாக்கோபு மடலின் கிரேக்க மொழிநடை ஒரு பாலஸ்தீன யூதன் எழுதியது போலன்றி "மிகச்

சிறப்பாய்" இருக்கிறது என்னும் வாதம், தெரிந்தெடுக் கப்பட்ட மக்கள் வியத்தகு வகையில் நுணுக்க மான அறிவுத்திறம் கொண்டிருந்தார்கள் என் பதை அறியாதவர்கள் கூறும் வறட்டு வாதமாகும்.

3. எழுதப்பட்ட காலம்

கி. பி. 62 -இல் யாக்கோபு கொலைசெய்யப் பட்டதாக ஜோஸபஸ் கூறுகிறார். ஆகவே இந்த மடல் அதற்கு முந்தி எழுதப்பட்டிருக்க வேண்டும். யாக்கோபு தலைமை தாங்கி நடத்திய எருசலேம் ஆலோசனைச் சங்கத்தில் (கி. பி. 48 அல்லது 49) எடுக்கப்பட்ட முடிவுகளைக் குறித்து இந்த மடல் ஒன்றும் கூறவில்லை என்பதால், கி. பி. 45 -இல் இருந்து கி. பி. 48 -ற்கு முன்னர் இது எழுதப்பட்டி ருக்கும் என்று பரவலாக நம்பப்படுகிறது.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

புதிய ஏற்பாட்டு நூல்களில் இதுவே முதலா வது எழுதப்பட்டிருக்கக்கூடும், மேலும் யூத மணம் இந்நூலில் அதிகமாக வீசுகிறது, எனவே இந்நூல் முந்தைய காலத்திற்கு உரியது என்று தள்ளிவிட முடியாது. இது இன்றைய நாளில் நமக்கு உரிய தாக இருப்பதோடு அவசியமானதாகவும் உள்ளது.

தனது நோக்கத்தை அடையும் பொருட்டு, கர்த்தராகிய இயேசு மலைப்பிரசங்கத்தில் கற் பித்தவற்றிலிருந்து யாக்கோபு பெருமளவில் எடுத் துப் பயன்படுத்தியிருக்கிறார். கீழ்க்கண்ட ஒப்பிடு தல்களின் வாயிலாக இவ்வுண்மையைக் கண்டறி யலாம்.

பொருள்	யாக்கோபு மடல்	மத்தேயு நற்செய்தி நூலில் இணையான பகுதி
இன்னல்	1:2, 12; 5:10	5:10-12
ஜெபம்	1:5; 4:3; 5:13-18	6:6-13; 7:7-12
ஒருமனம்	1:8; 4:8	6:22,23
ஐசுவரியம்	1:10,11; 2:6,7	6:19-21, 24-26
கோபம்	1:19,20; 4:1	5:22
நியாயப்பிரமாணம்	1:25; 2:9-13	5:17-44
வெற்றறிக்கை	1:26,27	6:1-18
ராஜரிகப்பிரமாணம்	2:8	7:12
இரக்கம்	2:13	5:7
விசுவாசமும் கிரியையும்	2:14-26	7:15-27
வேரும் கனியும்	3:11,12	7:16-20
மெய்யான ஞானம்	3:13	7:24
சமாதானம் பண்ணுகிறவர்	3:17,18	5:9
பிறரை நியாயந்தீர்த்தல்	4:11,12	7:1-5
துருப்பிடித்த பொக்கிஷம்	5:2	6:19
ஆணைகள்	5:12	5:33-37

இந்த மடலில் நியாயப்பிரமாணத்தைக் குறித்து அடுத்தடுத்து குறிப்புகள் உள்ளன. "பூரணப் பிர மாணம்" என்றும் (1:25), "ராஜரிகப் பிரமாணம்" என்றும் (2:8), "சுயாதீனப்பிரமாணம்" என்றும் (2:12) அது அழைக்கப்பட்டிருக்கிறது. இரட்சிப்பை அடைவதற்கு அல்லது வாழ்க்கையின் விதியாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு, அதற்குக் கீழாகத் தனது வாசகர்கள் இருப்பதாக யாக்கோபு கற்பிக்கவில்லை. மாறாக, கிருபைக்குக் கீழாக இருக்கும் மக்களுக்கு நீதியின் அறிவுரைகளாக நியாயப்பிரமாணத்தின் பகுதிகள் குறிப்பிடப்பட்டி ருக்கின்றன.

யாக்கோபு மடலில் நீதிமொழிகள் நூலின் பிரதிபலிப்பைப் பல இடங்களில் காணமுடியும். நீதிமொழிகள் நூலைப் போலவே யாக்கோபின் நடையும் கரடுமுரடானது, உயிர்த்துடிப்புடை யது, வருணனையுடன் கூடியது, எல்லைகளுக் குட்படுத்திக்கூறவியலாதது. *ஞானம்* என்னும் சொல் மீண்டும் மீண்டும் இடம்பெற்றுள்ளது.

யாக்கோபு மடலின் மற்றொரு முக்கியமான சொல் *சகோதரர்* என்பதாகும். இச்சொல் பதி னைந்து தடவை இடம்பெற்றுள்ளது. சில இடங் களில் மனமாற்றம் பெறாதவர்களுக்கு எழுதப்பட் டது போல் தோன்றினாலும், சகோதரர் என்னும் சொல் இம்மடல் விசுவாசிகளுக்கு எழுதப்பட்டது என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறது.

சில நிலைகளில், யாக்கோபு மடலானது புதிய ஏற்பாட்டிலேயே அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வலியுறுத்துகிற நூலாகவே விளங்குகிறது. அதாவது மற்ற நூலாசிரியர் களைக் காட்டிலும், யாக்கோபு தங்குதடையின்றி ஏராளமான அறிவுரைகளை வழங்குகிறார். 108 வசனங்கள் அடங்கிய இச்சிறு நூலில் ஐம்பத்து நான்கு கட்டளைகள் (ஏவல் வினைகள்) கொடுக் கப்பட்டுள்ளன.

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (1:1)
2. பரீட்சைகளும் சோதனைகளும் (1:2-17)
3. தேவனுடைய வார்த்தை (1:18-27)
4. கண்டனத்திற்குரிய பாரபட்சம் (2:1-13)
5. விசுவாசமும் கிரியைகளும் (2:14-26)
6. நாவு: அதன் நற்பயனும் தவறான பயனும் (3:1-12)
7. ஞானம்: மெய்யான ஞானமும் தவறான ஞானமும் (3:13-18)
8. பொருளாசை: அதன் காரணமும், அது களையப்படுதலும் (அதி. 4)
9. செல்வந்தரும் அவர்களுக்கு வரவிருக்கிற மனஉலைவும் (5:1-6)
10. பொறுமையாயிருப்பதற்கான அறிவுரை (5:7-12)
11. ஜெபமும் நோயுற்றோர் குணமடைதலும் (5:13-20)

பொருட்சுருக்க அட்டவணை

<table>
<tr><td>கருத்து</td><td colspan="2">விசுவாசத்தின் சோதனை</td><td colspan="2">விசுவாசத்தின் மெய்யான பண்புகள்</td><td colspan="3">விசுவாசத்தின் வெற்றி</td></tr>
<tr><td>காலம்</td><td colspan="6">கி. பி. 45-48</td></tr>
<tr><td>தலைப்பு</td><td colspan="2">விசுவாசத்தின் வளர்ச்சி</td><td colspan="2">விசுவாசமும் கிரியையும்</td><td colspan="3">விசுவாசத்தின் வல்லமை</td></tr>
<tr><td rowspan="2">பகுப்பு</td><td colspan="2">சோதனைக்கான பதிற்செயல்</td><td colspan="2">விசுவாசம் வெளிப்படும் விதங்கள்</td><td colspan="3">விசுவாசத்தின் உறுதி</td></tr>
<tr><td>விசுவாசத்தின் பரீட்சை</td><td>சோதனையின் ஊற்று</td><td>பாரபட்சம், விசுவாசக் கிரியை, நாவு, ஞானம், பொருளாசை, செல்வம்</td><td>பொறுமை</td><td>ஜெபம்</td><td>பாவத்தை எதிர்த்தல்</td></tr>
<tr><td>வசனம்</td><td>1:1-13</td><td>1:14-18</td><td>1:19-5:6</td><td>5:7-13</td><td>5:14-18</td><td>5:19-20</td></tr>
<tr><td>இடம்</td><td colspan="6">எருசலேம் என நம்பப்படுகிறது</td></tr>
</table>

1. வாழ்த்துரை [1:1]

ஆசிரியர் தன்னை **தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு** என்று அறிமுகப்படுத்துகிறார். நாம் நம்புகிறபடி, இந்நூலாசிரியர் கர்த்தருடைய ஒன்றுவிட்ட சகோதரராக இருப்பாரென்றால், அவருடைய வாழ்க்கையில் வியத்தகு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் அவர் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கவில்லை (யோவா. 7:5). இயேசு மதிமயங்கியவராக இருந்தார் என்னும் கருத்தை இவரும் கொண்டிருந்தார் என்றே தோன்றுகிறது (மாற்கு 3:21). ஆனால் நம்முடைய கர்த்தர் பொறுமையோடு வசனமாகிய விதையை விதைத்தார். அறிந்து போற்றப்படவில்லையெனினும், அவர் இறையரசின் பெரிதான கோட்பாடுகளைக் கற்பித்தார். அதன்பிறகு அந்த விதையானது யாக்கோபின் வாழ்க்கையில் வேர்விடத் தொடங்கியது. வல்லமைமிக்க உருமாற்றம் ஏற்பட்டது. நம்பிக்கையற்ற மனிதராக இருந்தவர் ஊழியராக மாறிவிட்டார். அவ்வாறு தன்னை அறிமுகப்படுத்துவதில் அவர் வெட்கப்படவில்லை.

தன்னை **தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும்** ஊழியக்காரர் என்று அழைப்பதன்மூலம், யாக்கோபு **தேவனையும் கர்த்தராகிய இயேசுவையும்** மிகச்சரியான நிலையில் சமத்துவமானவர்களாக நிறுத்திக் காட்டுகிறார். அவர் பிதாவைக் கனம் பண்ணுவதுபோல குமாரனையும் கனம்பண்ணினார் (யோவான் 5:23). "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது" என்பதை யாக்கோபு அறிந்திருந்தார் (மத். 6:24). ஆயினும் அவர் தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுவுக்கும் ஊழியக்காரர் என்று தன்னைக் குறித்துக் கூறியிருக்கிறார். இங்கு எவ்வித முரண்பாடும் இல்லை, ஏனெனில் பிதாவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள்.

இம்மடல் **சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும்** எழுதப்பட்டதாகும், உண்மையில் அவர்கள் சிதறடிக்கப்பட்டவர்கள் (கிரேக்கம் - Diaspora). இவர்கள் பிறப்பின்படி யூதர்கள், **பன்னிரண்டு கோத்திரங்களைச்** சேர்ந்தவர்கள். இஸ்ரவேலின் பாவத்தின் காரணமாக, அவர்களுடைய சொந்த நாட்டிலிருந்து மக்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள், இப்பொழுதோ அவர்கள் மத்திய தரைக் கடலைச் சுற்றிலும் இருந்த நாடுகளில் பரவியிருந்தார்கள். அவர்கள் அசீரியரால் சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டுபோகப்பட்டதே (கி. மு. 721) முதலாவது சிதறடிக்கப்பட்ட நிகழ்ச்சி. அவர்களில் சிலர் அதாவது மீதியானவர் மட்டும் எஸ்றா மற்றும் நெகேமியா ஆகியோருடைய நாட்களில் தங்களுடைய நாட்டிற்குத் திரும்பி வந்தார்கள். பெந்தெகோஸ்தே நாளில், பக்திநிறைந்த யூதர்கள், அந்நாட்களில் அறியப்பட்டிருந்த உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் எருசலேமுக்கு வருகை புரிந்திருந்தார்கள் (அப். 2:4). முறையாக அழைக்கப்பட வேண்டுமாயின் இவர்களே சிதறடிக்கப்பட்ட யூதர்கள். ஆனால் பிற்காலத்தில் கிறிஸ்தவர்களாயிருந்த யூதர்கள் சிதறடிக்கப்பட்ட நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அப்போஸ்தலர் நடபடிகள் 8:1 -இல், தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் (பெரும்பாலும் யூதக் குடிவழியில் வந்தவர்கள்), சவுலின் உபத்திரவத்தின் காரணமாக யூதேயா சமாரியா ஆகிய நாடுகளெங்கிலும் சிதறடிக்கப்பட்டார்கள் எனப் படிக்கிறோம். விசுவாசிகள் பெனிக்கே, சீப்புரு மற்றும் அந்தியோகியா ஆகிய இடங்களுக்கு விரட்டியடிக்கப்பட்டார்கள் என்று இந்த நிகழ்ச்சியே மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவ்விரு இக்கட்டான சூழ் நிலைகளில் சிதறடிக்கப்பட்ட யூதர்களில் யாருக்கேனும் யாக்கோபு இம்மடலை எழுதியிருக்க வேண்டும்.

மெய்யான விசுவாசிகள் யாவரும் இவ்வுலகில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறார்கள் (பிலி. 3:20; 1 பேதுரு 2:11) என்பதால், இந்த மடல் நேரடியாக நமக்கு எழுதப்பட்டதில்லையெனினும், நமக்குரியதாக்கிக் கொள்ளப்படத்தக்கதே.

யாக்கோபு கிறிஸ்தவரல்லாத யூதருக்கா அல்லது கிறிஸ்துவினிடம் மனம்திரும்பிய யூதருக்கா அல்லது விசுவாசித்த, விசுவாசிக்காத யூதர்களாகிய இருவகுப்பாருக்குமா, யாருக்கு இம்மடலை எழுதினார் என்பது கடினமான கேள்வி. மீண்டும் பிறந்த மெய்யான விசுவாசிகளுக்கே ஆசிரியர் இம்மடலை முதன்மையாக எழுதியிருக்கிறார் என்றே தோன்றுகிறது (1:18). ஆனாலும், வெறுமனே கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை பண்ணுகிறவர்களுக்கும், மனந்திரும்பாத மக்களுக்கும்கூட இம்மடல் எழுதப்பட்டிருப்பது போலச் சில இடங்களில் தோன்றுகிறது. எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கும் அவிசுவாசிகளாயிருந்த யூதர்களுக்கும் இடையேயிருந்த சச்சரவு முடிந்துபோன ஒன்றாகக் காணப்படவில்லை, இம்மடல் கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்தில் எழுதப்பட்டது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக விளங்குகிறது.

2. பரீட்சைகளும் சோதனைகளும் (1:2-17)

1:2 இந்தப் பகுதியில் சோதனை என்னும் பொருள்பற்றி யாக்கோபு விவரிக்கிறார். அவர் இந்தச் சொல்லை வெவ்வேறான இரண்டு பொருள் களில் பயன்படுத்துகிறார். இரண்டு முதல் பன்னி ரண்டாம் வசனம் வரையிலும், நாம் ***பரிசுத்த* சோத னைகள்** என்று குறிப்பிடக்கூடிய சோதனை களைக் காணமுடியும், இவை தேவனால் அனுப் பப்பட்ட பிரச்சினைகள் ஆகும். இவை நம்முடைய விசுவாசத்தைப் பரிசோதித்து, கிறிஸ்துவின் சாயலை உருவாக்கும். இதற்கு மாறாக 13 முதல் 17 வரையிலான வசனங்களில், மனிதனுக்குள் ளாக எழக்கூடியதும் பாவத்திற்குள் அவனை வழிநடத்தக்கூடியதுமான தூய்மையற்ற சோத னைகள் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ வாழ்க்கையானது பிரச்சினைகளால் நிறைந்திருக்கிறது. அழைக்கப்படாமலும் எதிர் பாராமலும் அவை வருகின்றன. அவற்றைத் தவிர்க்க முடியாது. "**நீங்கள் பலவிதமான சோத னைகளில்** அகப்படுவீர்களானால்" என்று யாக் கோபு கூறவில்லை. மாறாக, அகப்படும் போது என்றே கூறியிருக்கிறார். அவற்றிலிருந்து நம் மால் தப்பிக்க முடியாது. "நாம் அதைக் குறித்து என்ன செய்யப் போகிறோம்?" என்பதே கேள்வி.

இத்தகைய பரீட்சைகளும் **சோதனைகளும்** நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகிறபோது, அவற்றை எதிர்கொள்ளும்படி பலவித நடவடிக் கைகள் உள்ளன. நம்முடைய சொந்த ஆற்ற லினால் போராடி வெற்றிகொள்ள முடியுமென் னும் மனப்பான்மையுடன் நம்மால் அவற்றை எதிர்த்துநிற்க முடியும் (எபி. 12:5).

இதற்கு மாறாக, நம்முடைய நம்பிக்கையை இழந்துபோகக்கூடும் அல்லது நெருக்கப்படும் வேளையில் முடியாது என்று விட்டுவிடக்கூடும் (எபி. 12:5). இது ஊழ்வினைக் கோட்பாடே யொழிய வேறொன்றும் இல்லை. கர்த்தர் நம்மீது அக்கறை கொண்டவராக இருக்கிறார் என்னும் உண்மைக்கு எதிராகக் கேள்வி எழுப்பும்படி செய்யும். மேலும் நாம் நமக்கு ஏற்படும் தொல்லைகளைக் குறித்து முணுமுணுக்கவோ முறையிடவோ செய்யலாம். இதற்கு எதிராகவே அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 10:10 - இல் நம்மை எச்சரிக்கிறார். நாம் வேறொரு முறை யிலும் நடந்துகொள்ள முடியும் - வேறு எவரையும் குறித்துச் சிந்திக்காமல், நம்மைக் குறித்து மட் டுமே சிந்தித்துக்கொண்டு சுயபரிவு கொள்ளுதல், மேலும் பிறர் நம்மீது இரக்கம்கொள்ள வேண்டு மென்று எதிர்பார்த்திருத்தல் அல்லது நாம் நமக்கு ஏற்படும் தொல்லைகளிலும், சிக்கல் களிலும் பழகி வாழலாம், இது சிறந்தது. "இந்தச் சோதனையை தேவனே என்னிடத்தில் அனுமதித் திருக்கிறார். அந்த நோக்கம் என்னவென்று எனக் குத் தெரியவில்லை. அவருடைய நோக்கம் என் வாழ்க்கையில் நிறைவேறவேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்னும் பொருளில் நாம் பேச லாம். **"என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்"** என்று யாக்கோபு அறிவுரை வழங்குகிறார். அதை எதிர்த் துக் கிளர்ச்சி செய்யவேண்டாம்! துணிவிழந்து போகவேண்டாம்! சந்தோஷமாயிருங்கள்! இந்தப் பிரச்சினைகள் நம்மை அழித்துப்போட வேண்டு மென்று உறுதியுடன் செயல்படுகிற நமது எதிரி கள் அல்ல. மாறாக, கிறிஸ்தவ நற்பண்புகளை நம்மிடத்தில் வளர்க்கும்படி நம்மிடத்திற்கு வருகை புரிகின்ற நண்பர்களே அவை.

தேவன் தமது ஒவ்வொரு பிள்ளையினிடத் திலும் கிறிஸ்துவின் சாயலை உருவாக்க வேண்டு மென்று முயற்சி செய்கிறார். இந்தச் செயல்பாட் டில் துன்பங்கள், ஏமாற்றங்கள், குழப்பங்கள் எல்லாம் நிச்சயமாக இடம்பெற்றிருக்கும். எல் லாம் மகிழ்ச்சி தரக்கூடியவையாக இருக்குமென் றால் அங்கே ஆவியின் கனி உருவாகாது. அங்கே மப்பும் மந்தாரமும் போல இடர்ப்பாடுகள் நிகழவேண்டும். சோதனைகள் ஒருக்காலும் இன்ப மானவையாகக் காணப்படுவதில்லை; அவை தொல்லைகள் மிகுந்ததாயும் மனத்திற்கொவ் வாததாயுமே காணப்படும். ஆனால் பிற்காலத் தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் (எபி. 12:11). மிகப் பெரிய இக்கட்டைச் சந்தித்த கிறிஸ்தவன், "அதைச் சந்திப்பது அவ்வளவு எளிதல்ல, ஆனால் அந்த அனுபவத்தை நான் எதற்காகவும் விட்டுக் கொடுக்கமாட்டேன்" என்று சொல்லு வதை நாம் அவ்வப்போது கேட்கிறோம்.

1:3 உங்கள் விசுவாசத்தின் பரீட்சையைக் குறித்து யாக்கோபு பேசுகிறார். விசுவாசத்தை ஒரு விலைமதிப்பு மிக்க உலோகத்திற்கு அவர் ஒப்பிடுகிறார். அந்த உலோகம் கலப்படமற்றதா என்பதை அறிய சோதனைக்காரர் (தேவன்) சோதித்துப் பார்க்கிறார். அந்த உலோகமானது உபத்திரவம், நோய், பாடு அல்லது வருத்தம் ஆகியவற்றின் மூலமாக அக்கினிப் பரீட்சை செய்யப்படுகிறது. பிரச்சினைகளின்றி நம் சகிப் புத் தன்மையை வளர்த்துக்கொள்ள முடியாது.

பிரச்சினைகள் நற்பண்பை வலுவூட்டி வளர்க்கின்றன என்பதை இவ்வுலக மனிதர்கள் கூட அறிந்திருக்கிறார்கள். முன்னேற்றத்திற்குச் செலுத்தப்படும் விலை பிரச்சினைகளே. "பிரச்சினைகளைத் தவிர வேறொன்றையும் என்னிடம் கொண்டுவராதீர்கள். நல்ல செய்திகள் என்னை வலுவிலக்கச் செய்கின்றன" என்று புகழ்பெற்ற தொழிலதிபர் சார்லஸ் கெட்டரிங் என்பார் ஒரு முறை கூறினார்.

1:4 "பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" என்கிறார் யாக்கோபு. பிரச்சினைகள் எழுகின்ற சில வேளைகளில் நாம் நம்பிக்கை இழந்தவர்களாகிவிடுகிறோம், மேலும் அந்தச் சோதனைகளைத் தடுத்து நிறுத்த வெறிகொண்ட வகையில் முயற்சி செய்கிறோம். எடுத்துக்காட்டாக, அந்தச் சோதனையைத் தடுத்து நிறுத்தும்படி நாம் மருத்துவரை நோக்கி ஓடிச்செல்லுகிறோம், பெருமளவு மருந்தை விழுங்குகிறோம், அதைக் குறித்து தேவனுடைய நோக்கம் என்னவென்று அறிய அவரிடம் ஆலோசனை கேட்பதில்லை. இவ்வாறு செய்வதன் மூலம், நாம் உண்மையில் நம்முடைய வாழ்க்கையைக் குறித்த தேவனுடைய திட்டத்தைத் தடுத்து நிறுத்துகிறோம். அதன் காரணமாக நமது வாழ்க்கைக்கான அவருடைய குறிப்பிட்ட நோக்கம் என்னவென்று அறியும்படி எதிர்காலத்தில் நீண்டகாலம் சோதனையைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். நம்முடைய வாழ்க்கையில் சகிப்புத் தன்மையை வளர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளுக்கு எதிராக நாம் குறுக்கே நிற்க முடியாது. நாம் தேவனோடு சேர்ந்து ஒத்துழைப்பதன் மூலமாக சீரான வளர்ச்சி பெற்றவர்களாக விளங்குவோம், ஆவிக்குரிய நற்பண்புகள் ஏதொன்றிலும் குறைவுள்ளவர்களாக இருக்க மாட்டோம்.

நாம் சோதனைகளின் வழியாகச் செல்லுகையில், ஒருக்காலும் மனந்தளர்ந்து போவதுமில்லை, உற்சாகம் குன்றிப்போவதுமில்லை. நம்முடைய திருத்தந்தைக்கு எந்தவொரு பிரச்சினையும் நீக்கவியலாதபடி பெரிதானதல்ல. வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் சில நீக்கப்படுவதேயில்லை. நாம் அவற்றை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பதைக் கற்று அதன் மூலமாக அவருடைய கிருபை போதுமென்று மெய்ப்பிக்க வேண்டும். தனது சரீரத்தில் உண்டாயிருந்த பல வீனம் நீங்க வேண்டுமென்று பவுல் கர்த்தரிடம் வேண்டினார். கர்த்தர் அதை நீக்கவில்லை, மாறாக, அதைத் தாங்கிக்கொள்வதற்கான கிருபையை அவர் பவுலுக்குத் தந்தருளினார் (2 கொரி. 12:8-10).

நாம் பிரச்சினைகளை எதிர்கொள்கிறபோது, அவற்றை நம்முடைய வாழ்க்கையிலிருந்து கர்த்தர் நீக்கப்போவதில்லை என்று ஐயமற்றவகையில் உணர்கிறபோது அவருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். கண்பார்வையை இழந்த ∴பேன்னி கிராஸ்பி வரம்பெற்ற கவிஞர். அவர் எட்டு வயதுச் சிறுமியாக இருந்தபோது எழுதிய பாடல்:

கண்பார்வை இலையெனினும்
களிகூரும் பிள்ளைநான்
மண்ணுலகு வாழ்வுதனில்
போதுமென்று வாழ்ந்திடுவேன்!
மற்றபலர் அறிந்திராத
நற்பேறனைத்தும் பெற்றேன்
அழுகையில்லை புலம்பலில்லை,
அவனியோரே அறிந்திடுவீர்!

தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் மனவமைதி கிடைக்கிறது.

நம்முடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், அவற்றின் மூலமாக நமது பாடங்களைக் கற்றுக்கொண்ட பிறகு நீங்கிவிடுகின்றன. தூய்மைப்படுத்துகிறவர் தமது பிரதிபலிப்பை உருக்கி வார்க்கப்பட்ட உலோகத்தில் காணும் தருணத்தில் சூடுபண்ணுவதை நிறுத்தி விடுகிறார். நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகிற பிரச்சினைகளை தேவனுடைய நிலையில் நின்று காண நம்மில் பலருக்கு விவேகமில்லை.

நம்மில் பெரும்பாலோர் குறுகிய பார்வையுடையவர்களாக, உடனடியாக ஏற்படக்கூடிய வசதிக் குறைவுகளையே நினைத்துக்கொண்டிருக்கிறோம். தேவன் நிதானமாய்ச் செயல்படுத்தும்படி கொண்டிருக்கிற நோக்கம், நெருக்கத்தின் மூலமாக விசாலமாக நம்மை மாற்றுவது தான் என்பதை நாம் மறந்துபோகிறோம். (JND - சங். 4:1).

1:5 நமது வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நம்முடைய சொந்த ஞானத்தால் எதிர்கொள்ளத் தேவையில்லை. சோதனையின் காலத்தில் நமக்கு ஆவிக்குரிய தெளிவான அறிவு இல்லையென்றால், தேவனிடம் சென்று நம்முடைய குழப்பத்தையும் அறியாமையையும் பற்றி எடுத்துரைக்க வேண்டும். இவ்விதமாக

தேவனுடைய நோக்கங்களை அறியும்படி பயின்ற மக்களுக்குச் **சம்பூரணமாய்க்** கொடுக்கப்படும். தேவன் கடிந்துகொள்வார் என்று நாம் கவலைப் பட வேண்டியதில்லை. நாம் கற்றுக்கொள்கிறவர் களாக, எளிதில் பயிற்றுவிக்கப்படுகிறவர்களாக இருப்பது அவருக்கு அதிக மனமகிழ்ச்சியைத் தரும். நம் எல்லோருக்கும் **ஞானத்தில்** குறை வுண்டு. வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எண்ணிக்கை யிலடங்கா பிரச்சினைகளுக்குத் திருமறை **குறிப் பிட்டு** பதிலைத் தருகிறதில்லை. பல சொற் களின் மூலமாக அது பிரச்சினைகளைத் தீர்ப்பது மில்லை. ஆனால் தேவனுடைய திருமறையோ பொதுவான கோட்பாடுகளை எடுத்தியம்புகிறது. ஒவ்வொரு நாளும் பிரச்சினைகள் எழுகின்ற போது நாம் இந்தக் கோட்பாடுகளைப் பயன் படுத்த வேண்டும். அதற்காக நமக்கு ஞானம் தேவை. ஒவ்வொரு நாள் வாழ்க்கைச் சூழலிலும் கர்த்தர் கற்பித்த பாடங்களை நடைமுறைப் படுத்துவதே ஆவிக்குரிய ஞானமாகும்.

1:6-8 நாம் **எவ்வளவாகிலும் சந்தேகப்படா மல் விசுவாசத்தோடே** தேவனை அணுக வேண்டும். அவர் அன்புகூருகிறவர், அக்கறை கொள்கிறவர். அவரால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை என்று நாம் நம்பவேண்டும். அவரு டைய அன்புடைமை, அவருடைய வல்லமை ஆகியவற்றில் நமக்குச் சந்தேகம் உண்டாகு மானால் இடர்ப்பாடுகள் ஏற்படுகிற வேளைகளில் நாம் உறுதியற்றவர்களாக இருப்போம். ஒரு மணித்துளி அவருடைய வாக்குறுதிகளில் அமைதியோடு இளைப்பாறுவோம், அடுத்த நொடியில் தேவன் நம்மிடத்தில் தயவு பாராட்டு வதற்கு மறந்துபோய்விட்டார் என்று எண்ணு வோம். நாம் எழுந்து வருகிற கடலின் அலை களுக்கு ஒப்பாக இருப்போம், மிக உயர்ந்த அள விற்கு எழுந்துவரும் அலைகள் மீண்டும் சரிந்து கடலுக்குள் சென்றுவிடுவதுபோலக் காணப்படு வோம், தொல்லைகளால் **அடிபட்டு** அலைக் கழிக்கப்படுவோம். நல்லவையே நடைபெறும் என்னும் மனப்பான்மை, எல்லாமே கெட்டது என்னும் மனப்பான்மை ஆகியவை மாறிமாறி வருமென்றால் அத்தகைய விசுவாசத்தில் தேவன் கனப்படுவதில்லை. உறுதியற்ற, நிலையற்ற மனிதனுக்கு தேவன் தெய்வீக நுண்ணறிவைத் தருவதில்லை (வச. 7,8). 5 முதல் 8 வரையிலான வசனங்களில் ஞானத்தின் பிறப்பிடம் தேவன்; அதனை மன்றாட்டால் பெறமுடியும்; அது எல் லோருக்கும் கிடைக்கக் கூடியது; அது எவ்வித மான கடிந்துகொள்ளுதலுமின்றி சம்பூரணமாகக் கொடுக்கப்படும்;மிக முக்கியமான நிபந்தனை **விசுவாசத்தோடும் சந்தேகப்படாமலும் கேட்க வேண்டும்** என்னும் உண்மைகள் எடுத்துரைக் கப்பட்டுள்ளன.

1:9 ஒன்பது முதல் பதினோராம் வசனம் வரைக்கும் மேலோட்டமாகப் படிக்கையில், ஒரு புதிய ஆய்வுப் பொருள் அறிமுகப்படுத்தப்பட்டிருப் பது போலத் தோன்றும். அல்லது ஒருவேளை இந்தப் பகுதி இடைப்பிறவரலாகத் தோன்றும். ஆனால் சில குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளைக் கூறி, பரிசுத்தமான சோதனைகள் என்னும் பொருள்பற்றியே யாக்கோபு தொடர்கிறார். ஒரு மனிதன் செல்வந்தனாகவோ ஏழையாகவோ இருக்கலாம், ஆனாலும் அவன் தன்னுடைய வாழ்க்கையில் உண்டாகிற கடுந்துன்பங்கள் மற்றும் இக்கட்டான சூழ்நிலைகள் ஆகியவற்றின் மூலமாக நிலையான ஆவிக்குரிய நன்மைகளைப் பெறுகிறான். எடுத்துக்காட்டாக, மனநிறைவற்ற வனாக, நம்பிக்கை இழந்தவனாக இருக்கக்கூடிய ஒரு **தாழ்ந்த சகோதரன்**, தான் தேவனுடைய சுதந்தரனும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரனு மாக இருப்பது குறித்து எவ்வேளையிலும் மன மகிழ்ச்சி பெறமுடியும். எல்லாம் அவனுடையதா யிருக்கிறது, அவன் கிறிஸ்துவுக்கும் கிறிஸ்து தேவனுக்கும் சொந்தமானவர் என்னும் உண்மை யின் அடிப்படையில் அவன் ஆறுதலைக் கண்ட டைய முடியும். இங்கு தாழ்ந்த சகோதரன் என்று குறிப்பிடப்பட்டிருப்பவன், தன்னுடைய தாழ்வான சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த இயலாதவனா வான். அவன் சோம்பேறி அல்லது கவனக்குறை வுடையவன் என்று சொல்லுவதற்கு ஒரு காரண முமில்லை. ஆனால் அவன் குறைவான ஊதியம் பெறும்படியான இடத்தில் இருப்பதை தேவன் தகுதியாகவே காண்கிறார், மேலும் அவன் அவ்வாறான நிலையில் தொடர்ந்து இருந்து வருகிறான். ஒருவேளை அவன் செல்வந்தனாக இருந்திருப்பான் எனில், கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் போயிருப்பான். இப்பொழுதோ அவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், அவன் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசிர் வாதத்தினாலும் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறான். அவன் என்ன செய்யவேண்டும்? அவனுடைய வாழ்வின் தரம் ஒரே நிலையில் இருப்பதன் காரண மாக அவன் கிளர்ச்சி செய்ய வேண்டுமா? அவன் வெறுப்பும் பொறாமையும் கொண்டிருக்க வேண் டுமா? கூடாது, அவன் தன்னால் கட்டுப்படுத்த இயலாத சூழ்நிலைகள் தேவன் தந்தவை என்று கருதி ஏற்றுக்கொண்டு, தன்னுடைய ஆவிக்குரிய

ஆசிர்வாதங்களிலே மனமகிழ்ச்சி அடைய வேண்டும்.

கிறிஸ்தவர்களில் பலர் தங்களுடைய பால் வேறுபாடு குறித்தோ, வயது உயரம் போன்றவை குறித்தோ, எதிராகச் சிந்திக்கிறார்கள். சிலர் தங்களுடைய வாழ்க்கைக்கு எதிராகச் செயல்படு கிறார்கள். தளப்பந்து விளையாடும் திறமை கொண்ட இளம் பெண்டிர் ஏன் தாங்கள் ஆண் களாகப் பிறக்கவில்லை என்று எண்ணுகிறார் கள். இளைஞர் வயதாகவில்லையே என்றும் முதி யோர் இளமையோடு இருக்க வேண்டும் என்றும் நினைக்கிறார்கள். வளர்ந்த மனிதர்களைப் பார்த் துக் குள்ளமாக இருப்பவர்கள் பொறாமை கொள் கிறார்கள். வளர்ந்த உருவம் கொண்டவர்களோ, கவனத்தை ஈர்க்கும் உருவம் தங்களுக்கு இருக் கிறதே என்று எண்ணி வருந்துகிறார்கள். சிலர், "நான் இறந்துபோனால் நலமாயிருக்கும்!" என் றும் கூட கூறுகிறார்கள். இவையாவும் பொருளற்ற சிந்தனைகள்! நம்மால் மாற்ற முடியாத நிலை களை தேவனிடத்திலிருந்து மகிழ்ச்சியோடு ஏற் றுக்கொள்ளக்கூடிய மனப்பான்மை கொண்டிருப் பதே கிறிஸ்தவனுக்கு அழகு. இவை யாவும் தேவன் நமக்கென்று முன்தீர்மானித்தவை, பெரும்பாலும் இவற்றை நாம் தேவனுடைய மகிமைக்காகவும் பிறருடைய நன்மைக்காகவும் ஆக்கிக்கொள்ள வேண்டும். "ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்" என்று நாம் அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து சொல்லுகிறவர்களாக இருக்க வேண்டும் (1 கொரி. 15:10). நம்முடைய இயலாமையை மறந்தவர்களாக, பிறருக்குச் சேவைபுரிவதில் நாம் நம்மை ஒப்புவிக்க வேண்டும். நாம் அத்த கைய மனிதர்களாக இருப்பதன் காரணமாகவே ஆவிக்குரிய மக்கள் நம்மீது அன்புபாராட்டு கிறார்கள், நம்முடைய தோற்றத்தினால் அல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

1:10,11 அடுத்ததாக யாக்கோபு **ஐசுவரிய வானை** நோக்கித் திரும்புகிறார். "ஐசுவரியவான் தனது செல்வத்தில் மகிழ்வடையட்டும்" என்று அவர் கூறாதது வியப்பளிக்கிறது. மாறாக, அவர் ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக் குறித்து மேன்மைபாராட்டக்கடவன் என்றே கூறுகிறார். அவர் எரேமியா 9:23,24 ஆகிய வசனங்களோடு ஒருமித்த கருத்துடையவராயிருக்கிறார்:

> ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம்; பராக்கிரமன் தன் பராமக்கிர மத்தைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக் கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லு கிறார்.

செல்வந்தன் ஒருவனுடைய பொருளுடைமை அவனை விட்டுப் பறிக்கப்பட்டால், அவன் மன மகிழ்ச்சி அடைவதற்கான உண்மையான காரணத் தைக் கண்டறியக் கூடும். ஒருவேளை தொழிலில் அடைந்த வீழ்ச்சியே அவனைக் கர்த்தரிடம் கொண்டுவந்திருக்கும். அவன் ஒருவேளை ஏற்கனவே கிறிஸ்தவனாக இருப்பானென்றால், தன்னுடைய சொத்துகள் யாவும் அழிந்துபோனா லும், அவற்றைக் காட்டிலும் சிறந்ததும் நிலைத் திருக்கக் கூடியதுமான உடைமை விண்ணகத் தில் இருக்கிறது என்று அறிந்து களிகூரக்கடவன் (எபி. 10:34). இவ்வுலகத்தின் செல்வங்கள் யாவும **புல்லின் பூவைப்போல்** அழிந்து போகக்கூடியவை (ஏசா. 40:6,7). ஒரு மனிதனுக்கு இவ்வுலகச் செல் வங்களைத் தவிர வேறொன்றுமில்லையென் றால், அவனுடைய திட்டங்கள் யாவும் கல்லறை யில் முடிவடைந்து போகும். ஒரு செல்வந்தனு டைய வாழ்க்கை வேகமாக மறைந்துபோகும், அவனுடைய செல்வத்தின் மதிப்பும் ஓர் எல்லைக் குட்பட்டது. இதனை எடுத்துரைக்கும் ஓர் உவமை யாக யாக்கோபு விரைவில் அழிந்துபோகும் **புல்லை** நம்முன் நிறுத்தி விவரிக்கிறார். அவன் **தன் வழிகளின்** நடுவே **வாடிப்**போவான். சூரியனோ, கடும் வெப்பக் காற்றோ ஆவிக்குரிய வகையில் மதிக்கத்தக்க ஏதொன்றையும் பாதிக் காது என்பதே இங்கு சொல்லப்படும் செய்தி என்பதில் ஐயமில்லை. அழிந்துபோகிற பொருட் களின்மேல் நாம் கொண்டுள்ள பற்றை அகற்றி, மேலானவற்றில் நாம் நாட்டம் கொள்ளும்படி செய்யக்கூடிய சோதனை மாறுவேடத்தில் வந்த ஆசிர்வாதமேயாகும். இவ்வாறாக, தாழ்ந்த சகோ தரனை உயர்த்துகிற அதே கிருபை செல்வந் தனை தாழ்த்துகிறது. இரண்டுமே மகிழ்ச்சி அடை வதற்கான காரணங்களாகும்.

1:12 பரிசுத்த சோதனைகளைக் குறித்த தனது விளக்கத்தை முடிக்கையில், துன்பங்களைச் சந்திக்கும்போது அவற்றை உறுதியுடன் தாங்கி நிற்கிற மனிதனுக்கு யாக்கோபு வாழ்த்துரை

வழங்குகிறார். அவ்வாறு பரீட்சையை எதிர் கொண்டவனாக உறுதியுடன் நிற்கிற மனிதன் **உத்தமனென்று விளங்குவான்**, மேலும் அவன் **ஜீவ கிரீடத்தைப் பெறுவான்**. இங்கு கிரீடம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, அரசனின் மகுடம் அல்ல, கிறிஸ்துவின் நியாயாசனத்தில் வெற்றி வீரனுக்கு அணிவிக்கப்படும் பரிசுப்பொருளே ஆகும். பரீட்சைகளைத் தாங்கிக்கொள்வதால் நித்திய ஜீவன் பரிசாக வழங்கப்படுகிறது என்ற சிந்தனைக்கு இங்கு சற்றேனும் இடமில்லை. மாறாக, இடுக்கண் உற்ற காலத்தில் கொள்ளும் துணிவு, அப்படிப்பட்ட வாழ்க்கையின் காரண மாகப் பாராட்டப்படும். மேலும் அவன் விண்ணகத் தில் நித்திய வாழ்வை ஆழ்ந்த உள்ளுணர்வோடு அனுபவிக்கிறவனாகவும் இருப்பான்.

விண்ணகத்தில் ஒவ்வொருவருடைய பாத்தி ரமும் நிறைந்திருக்கும். ஆயினும் மக்கள் பல் வேறு அளவுப்பாத்திரங்களை பெற்றிருப்பார்கள். அதாவது பரலோகத்தை அனுபவிப்பதில் வெவ் வேறு அறிவுத்திறன் பெற்றிருப்பார்கள். **ஜீவகிரீ டம்** என்னும் சொல்லின் கருத்து இதுவாகவே இருக்கக்கூடும்; விண்ணகத்தின் மகிமைகளை முழு அளவில் அனுபவிக்கும் திறனை இது குறிக் கிறது.

இப்பொழுது பரிசுத்த சோதனைகள் என்னும் பொருள்பற்றிய இப்பகுதியை நம்முடைய சொந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது எவ்வா றென்று காணலாம். நம்முடைய வாழ்க்கையில் வெவ்வேறு வகையான பரீட்சைகள் வரும்போது அவற்றை நாம் எவ்வாறு எதிர்கொள்ள வேண் டும்? இவ்வகையில் உண்டாகக்கூடிய அவப்பேறு களைக் குறித்து வெறுப்புடன் குறைகூற வேண் டுமா? அல்லது அவற்றிற்காக நாம் கர்த்தருக்கு நன்றிகூறி மகிழ்வடைய வேண்டுமா? நம்முடைய சோதனைகளை விளம்பரப்படுத்த வேண்டுமா? அல்லது அவற்றை அமைதியோடு தாங்கிக் கொள்ள வேண்டுமா? நாம் நம்முடைய எதிர் காலத்தில் வாழ்ந்து, நமது சூழ்நிலைகளில் நன்மையான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று காத்திருக்க வேண்டுமா அல்லது நாம் தற்காலத் தில் வாழ்ந்து, நம்மிடத்தில் வருகின்ற எல்லாவற் றிலும் தேவனுடைய கரத்தை நாடவேண்டுமா? நம்மீது நாமே பரிவுகொண்டு, மற்றவர்களுடைய அனுதாபத்தை நாடி வாழவேண்டுமா அல்லது பிறருக்குச் சேவைபுரிவதில் நம்மையே மூழ்கடித் துக் கொள்ள வேண்டுமா?

1:13 இப்பொழுது ஆய்வுப்பொருள் பாவ சோத னைகளை நோக்கித் திரும்புகிறது (வச. 13-17). நம்மிடத்திலிருந்து மிகவும் சிறப்பானதை வெளிப் படுத்தும்படி தூய சோதனைகள் வடிவமைக்கப் பட்டிருக்கின்றன, அதுபோலவே பாவ சோதனை கள் நம்மிடத்திலிருந்து மிகவும் கேடானதை வெளிப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு விஷயத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் பாவம் செய்யும்படி **சோதிக்கப் பட்டால்**, அந்தச் சோதனையானது **தேவனிடத்தி லிருந்து** வந்ததல்ல. ஒரு மனிதனுடைய விசு வாசத்தை தேவன் சோதிக்கவோ, பரீட்சை பார்க்கவோ கூடும். ஆனால் பாவ சோதனையின் மூலமாக எந்தவொரு மனிதனையும் ஒருபோதும் சோதிக்கமாட்டார். **தேவனுக்கும் பொல்லாங்கிற் கும்** எவ்விதத் தொடர்பும் இல்லை. அவன் பாவம் செய்யும்படி அவர் தூண்டிவிடவும் மாட்டார்.

1:14 மனிதன் தன்னுடைய பாவங்களுக்காகப் பொறுப்பேற்றுக்கொள்ளாமல் திசைதிருப்ப எப் பொழுதும் ஆயத்தத்தோடு இருக்கிறான். அவ னால் தேவனைக் குற்றப்படுத்த முடியவில்லை யென்றால், நவீனகாலத்து உளநூல் தத்துவத் தின்படி பாவம் ஒரு நோய் என்று கூற முற்படு கிறான். இவ்விதமாக அவன் நியாயத்தீர்ப்பிலி ருந்து தப்பிக்கலாம் என்று நம்புகிறான். ஆனால் பாவம் ஒரு நோயல்ல; அது ஒழுக்கந் தவறுதலா கும்; அதற்கு அவன் கணக்கு ஒப்புவிக்க வேண்டி யவனாயிருக்கிறான். பாவத்திற்காக உயிரற்ற பொருட்கள் மீது குற்றம் சுமத்துகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் ஜடப்பொருட்கள் தம் மில்தாமே பாவமுடையவையல்ல. அங்கே பாவம் தொடக்கம் பெறுவதில்லை. சிங்கத்தின் தடம் பார்த்து அது இருக்கும் குகையைக் கண்டுபிடிப் பது போல யாக்கோபு கூறுகிறார்: **அவனவன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.** நமக்குள்ளிருந்து பாவம் வருகிறது; நமது பொல்லாங்கான, வீழ்ந்துபோன, மறுபடியும் பிறக்காத இயல்புடைய முந்தின மனிதனிடத்திலிருந்து அது வருகிறது. "எப்படி யெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந் தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங் களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச் சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும் என்று இயேசு கூறினார் (மத். 15:19).

இச்சை[1] என்னும் சொல்லுக்கு யாக்கோபு பயன்படுத்தியிருக்கிற மூல மொழிச் சொல் நல்ல விருப்பத்தையும் பொல்லாங்கான இச்சையையும்

குறிக்கும் பொதுவான சொல் ஆகும். அது ஒழுக்க ரீதியின் அடிப்படையில் பொதுவான சொல். ஆனால் புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான இடங் களில், அதாவது சில இடங்கள் தவிர, அச்சொல் பொல்லாங்கான இச்சையைக் குறிக்கும்படியே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலும் அச்சொல் அதே பொருளைக் குறிக்கிறது. தன்னு டைய கவர்ச்சியான தோற்றத்தை விளம்பரப் படுத்தி, அதற்கு இலக்கானவர்களைப் பாவம் செய்யத் தூண்டிவிடும் ஒழுக்கங்கெட்ட பெண் ணுக்கு இச்சை ஒப்பிடப்பட்டிருக்கிறது. நம்மில் ஒவ்வொருவரும் சோதிக்கப்படுகிறோம். இழி வான இச்சைகளும், தூய்மையற்ற வேட்கை களும் நம்மைப் பாவம் செய்யும்படி தூண்டிவிடு கின்றன. அப்படியென்றால், நாம் நம்முடைய **சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறபோது** உதவிசெய்வார் ஒரு வருமின்றி அந்த இச்சைக்குப் பலியாக வேண் டுமா? வேண்டியதில்லை, பாவ சிந்தனைகளை நம்முடைய உள்ளத்திலிருந்து அறவே அகற்றி, தூய்மையும் பரிசுத்தமும் உடைய சிந்தனை களால் நம்முடைய உள்ளங்களை ஒருமுகப் படுத்த வேண்டும் (பிலி. 4:7). மேலும், கடுமை யான சோதனை ஏற்படும் தருணத்தில், "கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" (நீதி. 18:10) என்னும் உண் மையை நினைவுகூர்ந்தவர்களாக நாம் அவரை அழைக்க வேண்டும்.

1:15 அது அவ்வாறிருக்க, நாம் ஏன் பாவம் செய்ய வேண்டும்? அதற்கான விடை இங்கு தரப் பட்டிருக்கிறது: **பின்பு இச்சையானது கர்ப்பந் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும்.** பொல்லாங்கான இழிந்த சிந்தனைகளை நாம் விரட்டியடிக்காமல், அவற்றை வரவேற்று, பேணி வளர்த்து, அவற்றில் இன்புற்றிருக்க முடியும். இவ்வாறு, தடைசெய்யா மல் அவ்வித எண்ணங்களுக்கு உடன்படுகிற செயல் உடலுறவு கொள்வதற்குச் சமமாகும். இச்சை கர்ப்பந்தரித்து பாவம் என்னும் பெயர் கொண்ட அருவருக்கத்தக்க குழந்தை பிறக் கிறது. தடைசெய்யப்பட்ட செயலைக் குறித்து வெகுகாலம் தொடர்ந்து நாம் சிந்தித்துக் கொண்டிருப்போமானால், இறுதியில் நாம் அந்தப் பாவத்தைச் செய்துவிடுவோம் என்றும் இதனை வேறுவகையாகக் கூறலாம். தாவீது, பத்சேபாள் ஆகியோருடைய வாழ்க்கை யில் நடந்த நிகழ்ச்சி யானது, இச்சை கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப் பிக்கும் என்னும் சொற்களுக்குத் தெளிவான எடுத்துக்காட்டாக இருக்கிறது.

பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும் என்கிறார் யாக்கோபு. பாவம் மலட் டுத் தன்மையுடையதோ, கருத்தடை செய்யப்பட் டதோ அல்ல; அது தன்னைப் போன்ற இயல் புடைய பாவங்களை இனப்பெருக்கம் செய்கிறது. **பாவம்** மரணத்தைப் பிறப்பிக்கும் என்னும் சொற்றொடர் பல்வேறு வகையில் புரிந்துகொள் ளப்படுகிறது. முதலாவதாக, ஆதாமின் பாவம் அவனுக்கும் அவனுடைய வழித்தோன்றல்களுக் கும் மரணத்தைக் கொண்டுவந்தது (ஆதி. 2:17). ஆனால் பாவமானது உண்மையில் நித்திய, ஆவிக்குரிய மரணத்தை நோக்கி வழிநடத்து கிறது. அந்த மனிதன் இறுதியில் தேவனிடத்திலி ருந்தும் ஆசிர்வாதத்திலிருந்தும் பிரிக்கப்படு கிறான் (ரோமர் 6:23). பாவம் மரணத்தை வரு விக்கும் என்னும் சொற்களில் விசுவாசிக்கும்கூட ஒரு வகையான எச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, சுகபோகமாக வாழ்கிற ஒரு விசுவாசியான விதவை உயிரோடே செத்தவள் என்று 1 தீமோத்தேயு 5:6 -ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். அவள் தன்னுடைய வாழ்க் கையை வீணடித்து, தேவன் எதற்காக அவளை இரட்சித்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்றா மல் முழுவதும் தவறிவிடுகிறாள். ஒரு கிறிஸ்த வன் தேவனோடு ஐக்கியமின்றி இருப்பானென் றால் அது ஒருவகை செத்த வாழ்க்கையாகும்.

1:16,17 பாவத்தில் விழுந்துபோன மக்கள் தங்களைக் குற்றப்படுத்துவதற்குப் பதிலாக, தேவனைக் குறைகூறுவது வழக்கமான செயல் தானே. அவர்கள் தங்களுடைய படைப்பாளரைப் பார்த்து, "என்னை ஏன் இவ்வாறு படைத்தீர்?" என்னும் பொருளில் பேசுகிறார்கள். ஆனால் இது ஒருவகையில் தன்னைத்தான் ஏமாற்றுகிற செயல். நன்மையான ஈவு மட்டுமே தேவனிடத்தி லிருந்து வருகிறது. உண்மையில், நன்மையான எந்த ஈவிற்கும் பூரணமான எந்த வரத்திற்கும் தேவனே மூலகாரணராய் இருக்கிறார்.

தேவனை **சோதிகளின் பிதா** என்று யாக் கோபு வருணிக்கிறார். திருமறையில் பிதா என் னும் சொல் சில இடங்களில் படைப்பாளர் அல் லது மூலகாரணர் என்னும் பொருளில் பயன்படுத் தப்பட்டுள்ளது (யோபு 38:28 -ஆம் வசனத்தைக் காண்க). ஆகவே தேவன் **சோதிகளைப்** படைத்தவராக அதாவது மூலகாரணராக இருக் கிறார். ஆனால் **சோதிகள்** என்று இங்கு சொல் லப்பட்டிருப்பது என்ன? நிச்சயமாக, விண்கோள் கள் யாவும் இதில் அடங்கும் - சூரியன், சந்திரன்,

நட்சத்திரங்கள் (ஆதி. 1:14-18; சங். 136:7). ஆனால் ஆவிக்குரிய எல்லா வெளிச்சத்திற்கும் தேவனே மூலகாரணராக இருக்கிறார். ஆகவே இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லா வகையான சோதிகளுக்கும் அவரே மூலகாரணராக இருக்கிறார் என்று அவரைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். **அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை**. தாம் படைத்த விண்கோள்களைப் போன்றவரல்லர் தேவன். அவை இடைவிடாமல் மாற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அவர் ஒரு போதும் மாறுவதில்லை. சூரியன் மற்றும் நட்சத்திரங்கள் ஆகியவற்றின் சுடரொளிப்பிரகாசம் குறைந்துகொண்டே போகிறது என்பதை யாக்கோபு எண்ணிப்பார்ப்பதோடு, நம்முடைய பூமி தன்னைத்தான் சுற்றுகிற காரணத்தால் அதற்கும் பிற விண்கோள்களுக்கும் இடையுள்ள உறவிலும் மாற்றம் ஏற்படுகிறது என்று எண்ணிப்பார்க்கிறார் என்றே தோன்றுகிறது. சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் மாறும் இயல்புடையவை. **வேற்றுமையின் நிழல்** என்னும் சொற்றொடர், சுற்றுவதால் ஏற்படும் நிழல் என்று பொருள்படக் கூடும். சூரியனை பூமி சுற்றிவருவதால் பூமியின் மேல் விழக்கூடிய நிழலையே இது குறிக்கிறது எனலாம். அல்லது இது கிரகணங்களைக் குறிக்கக் கூடும். சந்திரனின் நிழல் பூமியின்மேல் விழுகிறபோது சூரிய கிரகணம் ஏற்படுகிறது. ஆனால் தேவனைக் குறித்துச் சிந்திக்கையில் அது முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. அவரிடத்தில் வேற்றுமை இல்லவே இல்லை, அல்லது வேற்றுமையின் நிழலுமில்லை. அவரளிக்கும் வரங்களும் அவரைப் போலவே பூரணமாயிருக்கின்றன. ஆகவே பாவம் செய்யும்படி அவர் மனிதனைத் தூண்டிவிடுவார் என்று சிந்தித்துப் பார்ப்பது கூடாத காரியம். மனிதனுடைய பொல்லாங்கான இயல்பிலிருந்தே பாவம் தோன்றுகிறது.

பாவ சோதனைகளைக் குறித்து ஆய்வு செய்கிற நாம் அதன் அடிப்படையில் நம்முடைய விசுவாசத்தைச் சோதித்துப் பார்ப்போம். நம்முடைய உள்ளங்களில் பொல்லாங்கான சிந்தனைகள் நீடித்து இருக்கும்படி அனுமதிக்கிறோமா? அல்லது அவற்றை உடனடியாக விரட்டியடிக்கிறோமா? நாம் பாவம் செய்கிறபோது, இதனைத் தவிர்க்க முடியவில்லை என்று சொல்லுகிறோமா? நாம் பாவம் செய்யும்படி தூண்டிவிடப்படும்போது தேவன் மீது குற்றஞ்சுமத்துகிறோமா?

3. தேவனுடைய வார்த்தை (1:18-27)

சோதிகளின் பிதா என்று யாக்கோபு தேவனைக் குறிப்பிடுகிறார். அவர் தம்முடைய பிதாவும் ஆவார் என்று ஆசிரியர் இப்பொழுது நமக்கு நினைவூட்டுகிறார். மேலும் அவர் தமது மிகப் பெரிய படைப்பில் தனிச்சிறப்பு பெற்ற பங்கை நமக்கு அளித்திருக்கிறார். நாம் சத்திய வசனத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாகவே, அந்தப் பங்கை நம்மால் நிறைவேற்ற முடியும் (வச. 19-27).

1:18 மறுபிறப்பில் தேவனுடைய வார்த்தை என்ன பங்கு வகிக்கிறது என்பதை இந்தப் பகுதி சுருக்கமாய் எடுத்துரைக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இவ்விதமாகவே அதனை நம்மிடத்தில் செயல்படுத்தியிருக்கிறார். **"அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்"** என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. **அவர்** சொந்த **சித்தங்கொண்டு** - நம்மை இரட்சிக்கும்படி எது அவரை இயங்கச் செய்தது என்பதை இது கூறுகிறது. நம்மிடத்தில் ஏதோ தகுதி இருந்தது என்பதற்காக அவர் இதைச்செய்யும்படி தூண்டிவிடப்படவில்லை. அவர் இதனைத் **தமது** சொந்த **சித்தத்தினாலே** செய்தார். நம்மீது அவர் கொண்ட அன்பு தகுதியின் அடிப்படையினால் ஆனதன்று, அது நாம் விலை கொடுத்து வாங்கியதன்று, நாம் கேட்டுப் பெற்றதுமன்று. இது முழுவதும் அவர் தாமாக மனமுவந்து செய்த செயலாகும். இவ்வுண்மை, நாம் அவரைத் தொழுதுகொள்வதற்குக் காரணமாக விளங்க வேண்டும்! அவர் **நம்மை ஜெநிப்பித்தார்** - இது புதிய பிறப்பின் உண்மையை விவரித்துக் கூறுகிறது. இந்த ஆவிக்குரிய பிறப்பினாலே நாம் அவருடைய பிள்ளைகளானோம் - ஒரு பிறப்பானது எவ்வாறு மாற்றமுடியாததாக இருக்கிறதோ, அதுபோல இந்த உறவு மாற்றுவதற்கு இயலாததாகும். **சத்திய வசனத்தினாலே** - புதிய பிறப்பிற்கு செயல்கருவியாக இருப்பது திருமறை. ஒவ்வொரு மெய்யான மனமாற்றத்திலும் திருமறை வசனங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. ஒருவேளை வாய்மொழியாகவோ, அச்சடிக்கப்பட்ட நிலையிலோ அவை தமது பங்கை நிறைவேற்றுகின்றன. திருமறை வசனங்களின்றி இரட்சிப்பின் வழியை நாம் அறியோம். உண்மையில், இரட்சிப்பு கிடைக்கக் கூடிய ஒன்று என்பதையே நாம் அறிந்திருக்க மாட்டோம்!

தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு - முதற்பலன்கள் என்னும் சொல்லோடு தொடர்புடைய மூன்று முக்கியமான கருத்துகள் உள்ளன. முதலாவது, அறுவடையின் **முதற்பலன்** என்பது முதலில் முற்றிய கதிர்க் கொத்தை இது குறிக்கும். கிறிஸ்தவக் காலப் பாகுபாட்டில் யாக்கோபு மடலின் வாசகர்கள் முதல் விசுவாசிகள் ஆவார்கள். எல்லா விசுவாசிகளும் அவருடைய சிருஷ்டிகளில் **முதற்பலன்களாக** இருக்கிறார்கள். ஆனால் யாக்கோபு மடலின் வாசகர்களாகிய யூதக்கிறிஸ்தவர்கள் முதன்மையான நிலையில் முதற்பலன்களாக இருக்கிறார்கள் என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவதாக, தேவன் கொடைவள்ளலாக இருக்கிறார் என்பதற்கான நன்றிபாராட்டும் வகையிலும், எல்லாம் அவரிடத்திலிருந்தே வருகின்றன, எல்லாம் அவருக்கே உரியவை என்னும் அடிப்படையிலும் தேவனுக்கு முதற்பலன்கள் செலுத்தப்பட்டு வந்தன. அதுபோலவே, எல்லா விசுவாசிகளும் தம்மை ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 12:1,2). மூன்றாவதாக, நிறைவான அறுவடை நிகழப்போகிறது என்பதற்கு அச்சாரமாக **முதற்பலன்கள்** இருக்கின்றன. கிறிஸ்துவின் அறுவடையில் முதற் கதிர்க்கட்டாகத் தம்முடைய வாசகர்கள் இருப்பதாக யாக்கோபு குறிப்பிடுகிறார். அவர்களைத் தொடர்ந்து அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் பலர் விசுவாசிகளானார்கள். ஆனால் யூதக் கிறிஸ்தவர்கள் புது சிருஷ்டிப்புக்கு மாதிரிகளாக விளங்கும்படி வைக்கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆவார்கள். இறுதியில், இவ்வுலகம் முழுவதும் அவர்களைப் போன்ற மக்களால் நிரம்பும் (ரோமர் 8:19-23). நம்முடைய கர்த்தராகிய இயேசு தமது ஆட்சியை நிறுவ வரும்போது முழு அறுவடையும் காணப்படும். அதற்கிடையே, அவர்கள் கிறிஸ்துவுக்கு அதேவிதமான கீழ்ப்படிதலை வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும், ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்தில் இவ்வுலகம் முழுவதிலும் அதே விதமான கீழ்ப்படிதல் வெளிப்படும். இந்த வேத பகுதியானது முதன்மையாக முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைக் குறிப்பிட்டாலும், கிறிஸ்துவின் திருப்பெயரைக் கனப்படுத்துபவர்கள் ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும்.

1:19,20 இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதி, அவருடைய சிருஷ்டிகளில் நாம் எவ்விதமாக முதற்பலன்களாக விளங்க முடியும் என்பதற்குரிய நடைமுறை அறிவுரைகளைத் தருகிறது. சத்திய வசனத்தின் மூலம் மீண்டும் பிறந்தவர்கள் தங்களுடைய குணநலமாகப் பெறவேண்டிய நடைமுறை நீதியைக் குறித்த போதனைகளை இப்பகுதி வரைந்து தருகிறது. தேவனுடைய சத்தியத்தை வெளிப்படுத்தும்படி, நாம் அந்த வார்த்தையினாலே ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம், **ஆகையால்**[2] நம்முடைய பொறுப்புகளை நாம் நிறைவேற்றுவோம்.

நாம் **யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயிருக்க** வேண்டும். இது வழக்கத்திற்கு மாறான கட்டளையாகும், இதில் பெரும்பாலும் நகைச்சுவையின் சுவடு சற்றுக் காணப்படுகிறது. "விரைவாய்ச் செயல்படு, கேள்!" என்று சொல்வதற்கு இது ஒப்பாகும். தேவனுடைய வார்த்தையையும், தெய்வீக ஆலோசனையையும் கடிந்து கொள்ளுதலையும் கேட்பதற்கு நாம் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். பரிசுத்த ஆவியால் கற்பிக்கப்படுவதற்கு நாம் இடங்கொடுக்க வேண்டும். நாம் **பேசுகிறதற்குப் பொறுமையாய்** இருக்க வேண்டும். நம்முடைய பேச்சைக் குறித்து யாக்கோபு எவ்வளவு அதிகமாய்க் கூறுகிறார் என்பது நமக்கு வியப்பைத் தருகிறது! நம்முடைய உரையாடலில் நாம் எவ்வளவு எச்சரிப்போடு இருக்க வேண்டும் என்பதைக் குறித்து அவர் அறிவுறுத்துகிறார், இயற்கையும்கூட இதனை நமக்குக் கற்பிக்கிறது. "இயற்கையானது மனிதனுக்கு ஒரு நாவைத்தான் தந்திருக்கிறது, ஆனால் நாம் பேசுவதைப் போன்று இரண்டு மடங்கு கேட்க வேண்டும் என்பதற்காக அது இரண்டு காதுகளைத் தந்திருக்கிறது" என்று வெகு காலத்திற்கு முன்னமே எபிக்டெடஸ் என்பார் கூறியிருக்கிறார். சாலொமோன் யாக்கோபு கூறியிருப்பதை நிச்சயமாக முழுமனதோடு ஒப்புக்கொள்வான். அவன், "தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்" என்று ஒரு முறை கூறினான் (நீதி. 13:3). "சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்" என்றும் அவன் கூறினான் (நீதி. 10:19). அதிகார தோரணையோடு பேசுகிறவர்கள் இறுதியில் எல்லைமீறி தவறிழைத்துவிடுவார்கள்.

நாம் **கோபிப்பதற்குத் தாமதமாய்** இருக்க வேண்டும், எளிதில் கோபமடையக் கூடிய மனிதன், தேவன் தம்முடைய பிள்ளைகளிடத்தில் எதிர்பார்க்கிற **நீதியை நடப்பிக்க** முடியாதவனாக இருக்கிறான். தங்களுடைய கட்டுப்பாட்டை

இழந்து சினமடைகிறவர்கள் கிறிஸ்தவத்தைப் பற்றிய தவறான கருத்தை மக்களிடையே பறை சாற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். "பல வானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க் கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" என்பது இன்னும் உண்மையாகவே இருக்கிறது (நீதி. 16:32).

1:21 அவருடைய சிருஷ்டிகளின் முதற்பலன் களாக நாம் நம்மை வெளிப்படுத்துவதற்கான வேறொரு வழி, **எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்து**விடுவ தாகும். இந்த ஒழுக்கக்கேடுகள் என்றென்றைக்கு மாக ஒதுக்கித் தள்ள வேண்டிய கறைபடிந்த ஆடைகளைப் போன்றவை. அழுக்கு என்று குறிப் பிடப்பட்டிருப்பது எல்லாவிதமான அசுத்தத்தை யும் குறிக்கும்; அது ஆவிக்குரியதோ, மனம் சம் பந்தமானதோ, உடல் சம்பந்தமானதோ எதுவாக வும் இருக்கலாம். "கொடிய துர்க்குணம்" என்பது, நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்னர் செய்துவந்த தீயசெயல்கள் அதற்குப் பிறகும் தொடர்வதைக் குறிக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் பொங்கி வழிந்து பிறருடைய வாழ்க்கையைத் தொடக் கூடிய பாவங்களை இது குறிக்கக் கூடும். அல்லது இது வளர்ந்து பெருகுகிற பாவத்தைக் குறிக்கக் கூடும், அவ்வாறாயின் பாவத்தின் அளவின் பெருக்கத்தை யாக்கோபு இங்கு விவரிக்க வில்லை, மாறாக பாவம் தீவிரமாகக் கேடு விளை விக்கும் தன்மையுடையது என்பதையே அவர் குறிப்பிடுவதாகப் பொருள்கொள்ள வேண்டும். இச்சொற்றொடரின் ஒட்டுமொத்தப் பொருள் தெளிவாக இருக்கிறது. தேவ வசனத்தின் சத்தி யத்தைப் பெறவேண்டுமானால், நாம் ஒழுக்க ரீதியாக தூய்மையோடு இருக்க வேண்டும்.

தெய்வீக சத்தியத்தைப் பெறுவதற்கான மற்று மொரு நிபந்தனை சாந்தம். வேத வசனங்கள் நம்முடன் பேசுவதற்கு இடங்கொடாதபடி அவற்றை வாசிக்க முடியும். திருமறையில் புலமை பெறும் படி நாம் அதனைக் கல்லூரியில் சேர்ந்து படிக்க லாம், ஆனால் அது எவ்வகையிலும் நம்மைத் தாக்கிச் சீர்பொருந்தச் செய்யாதபடி நம்மால் தொடர்ந்து வாழமுடியும். நம்முடைய பெருமை, கடின உள்ளம் மற்றும் பாவம் ஆகியவை, அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளாதிருக்கவும் உகந்த பதிற்செயல் புரியாதிருக்கவும் செய்து விடுகின்றன. கீழ்ப்படிதலும் தாழ்மையும் உள்ள ஆவியை உடையவர்களே வேதத்திலிருந்து அதிக நன்மைகளைப் பெறக் கூடியவர்களாக இருக்கிறார்கள். "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர் களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங். 25:9). "ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிற வனையே நோக்கிப் பார்ப்பேன்" (ஏசாயா. 66:2).

உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்ல மையுள்ளதாயுமிருக்கிற வசனம் என்று யாக்கோபு திருமறையை விவரிக்கிறார். ஒருவன் கிறிஸ்தவனாக மீண்டும் பிறக்கிறபோது, வசன மானது அவனுடைய வாழ்க்கையில் புனித சேமிப் பாக மாறுகிறது என்னும் சிந்தனையை இங்கு காண்கிறோம். RG மொழிபெயர்ப்பின் அடிக்குறிப் பில் இச்சொல் "உடன் பிறந்த வசனம்" என்று குறிப் பிடப்பட்டுள்ளது. இந்த **வசனமானது உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள் ளது.** புதிய பிறப்பில் தேவன் பயன்படுத்துகிற உப கரணமாக வேதம் திகழ்கிறது. ஆத்துமாவைப் பாவத்தின் தண்டனையிலிருந்து மட்டுமின்றி, அதனுடைய அதிகாரத்திலிருந்தும் வேதம் இரட்சிக்கும்படி அவர் அதனைப் பயன்படுத்து கிறார். நித்திய அழிவிலிருந்து நம்மைக் காப் பாற்றுவதற்காக மட்டுமின்றி ***இவ்வாழ்க்கை யில்*** உண்டாகக்கூடிய சேதத்திலிருந்து காப்பாற் றவும் அவர் அதனைப் பயன்படுத்துகிறார்.[3] இரட் சிப்பின் தற்போதைய, தொடர்ந்து செயல்படுகிற பண்பைக் குறித்து 21 -ஆவது வசனத்தில் யாக்கோபு பேசுகிறார் என்பதில் ஐயமில்லை.

1:22 நாட்டப்பட்ட வார்த்தையை பெற்றுக் கொள்வது மட்டும் போதாது. நாம் அதற்குக் கீழ்ப் படிய வேண்டும். திருமறை நூல் ஒருவனிடத்தில் இருப்பதோ அதனை ஓர் இலக்கிய நூலாகக் கருதி அதனை வாசிப்பதோ அவனுடைய நற் குணமாகாது. நம்முடன் தேவன் உரையாடு வதைக் கேட்பதற்கு ஆழ்ந்த விருப்பம் இருக்க வேண்டும், மேலும் எவ்விதக் கேள்வியுமின்றி அவர் கூறுவதைச் செய்யக்கூடிய ஆவலும் இருக்க வேண்டும். நாம் திருமறையைச் செயல் முறையாக மாற்ற வேண்டும். வார்த்தையானது நம்முடைய வாழ்க்கையில் மாம்சமாக மாற வேண்டும். தேவனுடைய வசனம் நம்முடைய வாழ்க்கையை மேலும் சிறப்புடையதாக மாற்று வதற்கு இடங்கொடுக்காமல் அதனிடம் செல்லு வது கூடாத செயல். வேத வசனத்தில் பெருகுகிற அறிவு கர்த்தராகிய இயேசுவின் சாயலைக் கூடு

தலாக ஒருவரிடத்தில் உருவாக்கவில்லை என் றால், தேவனுடைய வசனத்தில் பெரிதான அன்புடையவராக இருப்பதாகவோ தான் ஒரு வேத மாணாக்கன் என்றோ சொல்லுவது தன் னைத்தானே ஏமாற்றிக்கொள்வதேயாகும். ஆய்வுணர்வுத் திறம் மிக்க அறிவை வேதத்தில் பெருக்கிக்கொண்டேயிருந்தும், அதற்குக் கீழ்ப் படியாதிருப்பது ஒரு கண்ணியாக அமையுமே யொழிய ஆசிர்வாதமாகாது. நாம் என்ன செய்ய வேண்டுமென்று இடைவிடாமல் கற்றுக்கொண்டே இருந்தும், அதனைச் செய்யாதிருப்போமென் றால் நாம் ஊக்கங்குன்றியவராக, சோர்வுற்ற வராக, சுரணையற்றவர்களாக மாறிப்போவோம். "ஒரு பொருளைக் குறித்த ஆழ்ந்த அறிவுடைய வராக இருந்தும் அதைச் செயல்வாயிலாக நிறை வேற்றவில்லையென்றால் அது மனவீழ்ச்சியைக் கொண்டுவரும்." மேலும் அந்த அறிவின் நிமித் தம் தேவனுக்கு அதிக பொறுப்புடையவர்களாகி விடுவோம். ஆகவே கருத்தளவிலான ஒருங் கிணைப்பு யாதெனில் வசனத்தைப் படிப்பதும், அதன்படி முழுமனதோடு கீழ்ப்படிவதும் ஆகும்.

1:23,24 திருவசனத்தைக் கேட்கிற **ஒருவன்**, அவ்வாறு கேட்டும் தன்னுடைய நடத்தையை மாற்றிக்கொள்ளவில்லை என்றால், அவன் ஒவ்வொரு நாள் காலையிலும் மிக வேகமாகக் கண்ணாடியிலே பார்த்துவிட்டு பின்னர் தான் கண்டதை முற்றிலுமாக மறந்துவிடுகிற மனித னுக்கு ஒப்பாக இருக்கிறான். அவன் கண்ணாடி யைப் பார்க்கிறதாலே அல்லது அதை உற்றுப் பார்க்கிறதாலே எந்த நன்மையையும் பெறுவ தில்லை. நம்முடைய முகத்தோற்றத்தில் சில வற்றை மாற்றிக்கொள்ள இயலாது என்பது உண் மைதான். குறைந்தது நம்மை நாமே அந்தக் காட்சியின் மூலமாகத் தாழ்த்திக் கொள்ளலாம்! கண்ணாடியானது "முகத்தைக் கழுவு" அல்லது "சவரம்பண்ணிக்கொள்" அல்லது "முடியை வாரிக்கொள்" அல்லது "வாயைத் துலக்கித் தூய்மைப்படுத்திக்கொள்" என்று கூறும்போது, அதனை நாம் செய்ய வேண்டியது அவசியம். அவ்வாறில்லையென்றால் அந்தக் கண்ணாடி யால் நமக்கு எவ்விதப் பயனுமில்லை.

திருமறையை மேலோட்டமாகப் படிப்பது எளிது அல்லது அது ஒரு கடமை என்று நினைத்து, நாம் என்ன படிக்கிறோமோ அதனால் எந்தத் தாக்கத்தையும் அடையாமல் அதைப் படிக்கலாம். நாம் எப்படிப்பட்டவர்களாக நடந்து கொள்ள வேண்டுமென்று அதில் பார்க்கிறோம், ஆனாலும் நாம் முழுநிறைவானவர்களாக இருப் பதாக எண்ணிக்கொண்டு முன்னர் நடந்தது போலவே நடக்கிறோம். இவ்வித சுய மனநிறைவு ஆவிக்குரிய முன்னேற்றத்தைத் தடைசெய் கிறது.

1:25 தேவனுடைய வசனத்தை **உற்றுப் பார்த்து**, அதனை நடைமுறைப்படுத்துகிற மனி தன் இதற்கு முற்றிலும் மாறுபட்டவனாக இருக் கிறான். மிகுந்த ஆர்வத்துடன் தியாக சிந்தனை யோடு அதை உற்றுப் பார்த்து, தன் வாழ்க்கை யில் அதில் சொல்லப்பட்டுள்ளவற்றை நடை முறைப்படுத்துகிறவனாக அவன் விளங்கு கிறான். அவனுக்கு திருமறையே **சுயாதீனப் பிரமாணமாக** விளங்குகிறது. அதில் சொல்லப் பட்டுள்ள கற்பனைகள் பாரமானவையல்ல. அவனுடைய புதிய இயல்பு எதைச் செய்ய வேண்டு மென்று விரும்புகிறதோ அதையே செய்யும்படி யாக அந்தப் பிரமாணங்கள் வலியுறுத்துகின்றன. அவன் அதற்குக் கீழ்ப்படிகிறபோது, மனிதனு டைய வழக்கங்களிலிருந்தும், உலகீய வாதங் களிலிருந்தும் மெய்யான விடுதலையைக் கண்ட டைகிறான். சத்தியமானது அவனை விடுதலை செய்கிறது. வேதத்திலிருந்து நன்மைகளை அடைகிறவன் இவன்தான். தான் படித்தவற்றை அவன் மறந்துபோவதில்லை. மாறாக அவன் தன்னுடைய அனுதினவாழ்க்கையில் அவற்றின் படி வாழ்ந்து காட்டவேண்டுமென்று முயற்சி செய்கிறான். ஒரு குழந்தையைப்போல அவன் கீழ்ப்படிகிற செயல், அளவிற்கடங்கா நன்மை களை அவனுடைய ஆத்துமா கண்டடைவதற்கு வழிவகுக்கிறது. இவ்வாறு நடக்கிறவன், **தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்**.

1:26,27 வீணான பக்திக்கும் மாசில்லாத சுத்தமான பக்திக்கும் உள்ள வேறுபாடு இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு பக்தி என்று சொல்லப்பட்டிருப்பது, சமயச்சார்புடைய நம்பிக் கையோடு தொடர்புடைய வெளியரங்கமான நடத்தைகளேயாகும். இது வெளியரங்கமான முறைமையே தவிர, உள்ளான ஆவியைக் குறிப் பதில்லை. ஆராதனை, ஊழியம் ஆகியவற்றில் கொண்டிருக்கும் நம்பிக்கையின் வெளிப்படை யான செயல்கள் என்பதே இதன் பொருளாகும்; மாறாக விசுவாசிக்கிற கோட்பாடுகளை இது குறிப்பதில்லை.

ஒருவன் தன்னை **பக்தியுள்ளவன் என்று எண்ணியும்**, அவன் தனது **நாவை அடக்க** முடிய வில்லையென்றால் **அவனுடைய தேவபக்தி**

வீணாயிருக்கும். சமயச் சடங்குகள் அனைத்தையும் அவன் செய்கிறான், அவன் மிகுந்த பக்தியுள்ளவன் என்பதுபோல அவை காண்பிக்கும். ஆனால் அவன் தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்கிறான். தேவன் அவன் செய்யும் சடங்குகளில் மனநிறைவு அடைவதில்லை; தன் வாழ்க்கையின் எல்லாச் செயல்களிலும் தேவபக்தி உள்ளவனாக அவன் வாழ வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார்.

கடிவாளம் இல்லாத **நாவு** வீணான பக்திக்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ஒவ்வாத நடத்தை தகுதியற்றது. மளிகைக் கடை வைத்திருந்த ஒரு வணிகன் பக்திமான் போல நடந்தான், ஆனாலும் அவன் ஏமாற்றுகிறவனாயிருந்தான், அவனைப் பற்றிய கதை: அவன் தன்னுடைய கடைக்கு மேலே இருந்த குடியிருப்புப் பகுதியில் வசித்து வந்தான். ஒவ்வொரு நாள் காலையிலும் அவன் தன்னுடைய வீட்டிலிருந்து கடைப்பையனிடம் இவ்வாறு பேசுவான், "ஜான்!"

"ஐயா, சொல்லுங்க."

"பாலில் தண்ணீர் கலந்துவிட்டாயா?"

"ஐயா, ஊற்றிவிட்டேன்."

"வெண்ணையில் நிறம் கலந்துவிட்டாயா?"

''செய்துவிட்டேன் ஐயா."

"கா.ர்.பியில் சிக்கரி கலந்துவிட்டாயா?"

"ஆம், ஐயா."

"நல்லது, வேத தியானம் பண்ணவேண்டும், மேலே வா!"

இத்தகைய **பக்தி வீணானது** என்கிறார் யாக்கோபு.

பிறரிடத்தில் பரிவுடன் கூடிய அக்கறை, தன்னுடைய சொந்த வாழ்க்கையைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல், இப்படிப்பட்ட செயல்முறை பக்தியையே தேவன் எதிர்பார்க்கிறார். **மாசில்லாத சுத்தமான பக்திக்கு** எடுத்துக்காட்டாகத் திக்கற்ற பிள்ளைகளையும் **விதவைகளையும் சந்தித்து, உலகத்தால் கறைபடாத படிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிற** மனிதனை யாக்கோபு பாராட்டுகிறார்.

"கிருபை நிறைந்த செயல்கள் மற்றும் உலகினின்று வேறுபட்ட வாழ்க்கை" ஆகியவற்றில் புதிய பிறப்பின் நடைமுறைப் புறச்செயல்கள் காணப்படுகின்றன என்றும் இதனை வேறு வகையாகக் கூறலாம். "அன்பின் செயல்முறைப் பயிற்சி மற்றும் பரிசுத்தத்தின் செயல்முறைப் பயிற்சி" என்று இதனை விவரிக்கிறார் திருவாளர் கை கிங்.

நம்முடைய சொந்த விசுவாசத்தை நாம் கீழ்க் கண்ட கேள்விகளால் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்: தேவன் என்னைக் கண்டித்துணர்த்த வேண்டும், கற்பிக்க வேண்டும், என்னை மாற்ற வேண்டும் என்னும் தாழ்மையான விருப்பத்துடன் நான் திருமறையைப் படிக்கிறேனா? என்னுடைய நாவிற்குக் கடிவாளம் போடவேண்டும் என்னும் ஆவலுடையவனாக இருக்கிறேனா? நான் கோபப்படுவது நியாயமானதே என்று வாதாடுகிறேனா அல்லது அதனை வெற்றிபெற விரும்புகிறேனா? தரங்குறைந்த நகைச்சுவையை ஒருவர் சொல்லத் தொடங்கும்போது நான் என்ன பதிற்செயல் செய்கிறேன்? திருப்பித் தரமுடியாத மக்களுக்குத் தயவுபாராட்டும் செயல்களைச் செய்வதன் மூலம் நான் என்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிறேனா?

4. கண்டனத்திற்குரிய பாரபட்சம் [2:1-13]

இரண்டாம் அதிகாரத்தின் முதற்பாதி மனிதர்களிடம் பாரபட்சத்தோடு நடந்துகொள்வதைப் பழித்துரைக்கிறது. ஒருதலைச் சார்புடைமை கர்த்தருடைய முன்மாதிரிக்கு முற்றிலும் புறம்பான தன்மையாகும். அது புதிய ஏற்பாட்டின் போதகத்திற்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. கிறிஸ்தவத்தில் வெளித்தோற்றத்தைக்கொண்டு பிறரை மதிப்பிடுதல், வெவ்வேறு அளவுகோலால் மனிதர்களை வேறுபடுத்திக் காணுதல் ஆகியவற்றிற்கு இடமில்லை.

2:1 முதலாவதாக, இவ்வாறு நடந்துகொள்ளுதல் மிகத் தெளிவாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தக் கடிந்துரை விசுவாசிகளிடம் சொல்லப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். **"என் சகோதரரே"** என்னும் வாழ்த்துரையின் மூலமாக இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறிக்கிறது. இது அவருடைய நம்பிக்கையையோ அவரைச் சார்ந்திருத்தலையோ குறிக்காமல், அவர் நமக்குத் தந்தருளின சத்தியத்தின் இன்றியமையாத கூறுகளையே குறிக்கிறது. இந்தச் சிந்தனைகள் யாவற்றையும் ஒன்று கூட்டிக் காணும்போது, **"என் சகோதரரே**, உங்களுடைய கிறிஸ்தவ **விசுவாசத்தின்** நடைமுறைச் செயல்களில் பட்சபாதம் காட்டாதீர்கள்" என்று யாக்கோபு கூறுவதாக அறிகிறோம். மெய்யான கிறிஸ்தவத்திற்கும் உயர்வு தாழ்வு வேறுபாடுகள், சாதி இன வேறுபாடுகள் ஆகியவற்றிற்கும்

சிறிதளவும் பொருத்தமில்லை. மகிமையின் கர்த்தருடைய முன்னிலையில், பெரிய மனிதர் களுக்கு அடிமையாக இருத்தல் என்னும் கொள் கைக்கு இடமில்லை. உயர்குடிப் பிறப்பு, இனம், பால்வேறுபாடு, அல்லது வறுமை ஆகியவற்றின் காரணமாகப் பிறரிடத்தில் வெறுப்புணர்ச்சி காட்டு வது நடைமுறையில் விசுவாசத்தை மறுத்துரைப் பதற்கு நிகராகும். அரசர்களுக்கும், எஜமானர் களுக்கும், மூப்பர்களுக்கும், பெற்றோர்களுக் கும் உரிய மரியாதை கொடுக்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டின் வேறு பகுதிகள் கற்பிக்கின்றன. அதற்கும் இந்தக் கட்டளைக்கும் எவ்வித முரண் பாடும் இல்லை. தேவனால் நிறுவப்பட்ட உறவு முறைகள் உள்ளன, அவை மதித்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை (ரோமர் 13:7). விலை யுயர்ந்த ஆடை அணிந்தவர்கள் அல்லது போலி யாக மேன்மை பாராட்டுகிறவர்கள் ஆகியோ ருக்கு அளவுக்கதிகமாக மரியாதை கொடுத்து, பசப்பு வார்த்தைகளால் பணிகிற செயலை இந்தப் பகுதி நமக்கு விவரிக்கிறது.

2:2-4 இரண்டு முதல் நான்கு வரையிலான வசனங்களில் மேலே சொல்லப்பட்டுள்ள கருத்தை ஓர் எடுத்துக்காட்டின் மூலமாகத் தெளிவாக விளக்குகிறார் யாக்கோபு. "கிட்டப்பார்வையுள்ள வரவேற்பாளர்" என்று இப்பகுதிக்கு அறிவுக் கூர்மையுடன் பெயர் சூட்டியிருக்கிறார் திருவாளர் கை கிங். இந்தக் காட்சி ஓர் உள்ளூர் சபையில்[4] நடக்கின்ற நிகழ்ச்சியாகும். பகட்டான தோற்றத் துடன் நாகரிக உடை அணிந்து, விரல்களில் விலையுயர்ந்த **பொன் மோதிரங்களை** அணிந்து கொண்டு புதிதாக ஒருவர் வருகிறார். சபையின் வாசலில் நின்றுகொண்டிருந்த வரவேற்பாளர் தலைகுனிந்து, நன்கு அறிமுகம் செய்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன் விசாரித்து, அவரை உள்ளே அழைத்துச் சென்று முன் வரிசையில் முதன்மையான இடத்தில் அமரச் செய்கிறார். வரவேற்பாளர் திரும்பவும் வாசலுக் குச் செல்கிறார், இப்பொழுது இன்னொரு புதியவர் வருகிறார். இவரோ ஏழை மனிதர், எளிமையான உடை அணிந்திருந்தார். (**கந்தையான வஸ் திரம்** என்னும் சொற்றொடர் இவரது ஆடைகள் அழுக்காயிருந்தன என்னும் பொருளைத் தரு வதில்லை. அவரது வாழ்க்கைச் சூழ்நிலை தாழ் வடைந்திருக்க வேண்டும், அதற்கேற்றபடி அவரது ஆடையும் கந்தையாய் இருந்தது.) இந் தத் தடவை வரவேற்பாளரின் சாதுரியம் புதிதாக வந்தவருக்கு ஓர் இருக்கையைத் தரவில்லை. அறையின் பின்புறம் மனிதர்கள் நின்று கொண்டி ருப்பதற்காக விடப்பட்டஇடத்தில் நிற்கும்படியோ தனது இருக்கையின் முன்புறமாய்த் தரையில் அமரும்படியோ கூறுகிறார். இதன் மூலம் சபை மக்கள் அருவருப்படைய மாட்டார்கள் என்று அவர் கருதுகிறார். யாராவது இப்படி நடந்துகொள் வார்களா என்பதை எண்ணிப்பார்க்கையில், நாம் நம்புவதற்கு இது அரிதாயிருக்கிறது. இது மிகைப் படுத்திச் சொல்லப்பட்டது என்றே நாம் நினைக் கிறோம். ஆனால் நாம் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கையில், இவ்வித போலியான வேறுபாடுகளை நமக்குள்ளே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை உணரமுடியும். இவ்வாறாக நாம் **தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாக** இருக்கிறோம்.

மற்ற இனத்தைச் சேர்ந்தவர்களையும், வேற்று நிறமுடையவர்களையும் வேறுபடுத்திக் காண் கிற தன்மை, இதற்குப் பளிச்சென்று தெரியக் கூடிய எடுத்துக்காட்டாக இன்றைய நாட்களில் சபைகளில் காணப்படுகிறது. பல நேரங்களில் கருமை நிறமுடைய விசுவாசிகள் புறக்கணிக்கப் பட்டதை எடுத்துக்காட்டாகச் சொல்ல முடியும், அல்லது அவர்கள் வரவேற்கப்பட வில்லை என்று நினைக்கும்படி மற்ற விசுவாசிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள். மனமாற்றம் பெற்ற யூதர் கள் எப்பொழுதும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள் ளப்படுவதில்லை. கிழக்கத்திய நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்கள் இவ்விதமாக, பலநிலைகளில் சமுதாய வேறுபாட்டை உணர்ந்திருக்கிறார்கள். இனவேறுபாடுள்ள நாடுகளில் விசுவாசிகளுக் கிடையே சமுதாயப் புறக்கணிப்பு பெருமளவில் காணப்படுகிறது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக் கிறது. ஆனால் கிறிஸ்தவர்கள் தெய்வீகக் கொள் கைகளுக்கு உண்மையுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும். எல்லா விசுவாசிகளும் கிறிஸ்து இயேசுவுக்குள் சமமாய் இருக்கிறார்கள் என்னும் சத்தியத்தை நடைமுறையில் வெளிப் படுத்த வேண்டியது கிறிஸ்தவனின் கடமையா யிருக்கிறது.

2:5,6 பாரபட்சம் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாயிருக்கிறது. 5-13 வரை யிலான வசனங்களில் யாக்கோபு இதற்குச் செயல்முறை விளக்கமளிக்கிறார். செல்வந்தர் களுக்குச் சலுகைகாட்டி, ஏழ்மையானவர்களை தாழ்த்துவது ஒரு விசுவாசியைப் பொருத்தமட்டில் அறிவற்ற செயல் என்பதற்கான நான்கு வலிமை யான காரணங்களை அவர் தருகிறார்.

முதலாவதாக, **தேவன்** உயர்வாய் மதிக்கிற வரை நாம் தாழ்வாய்க் கருதுகிறோம் என்பது இதன் பொருளாகும். **தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும்** தெரிந்து கொண்டிருக்கிறார். வறியவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தேவனால் சிறப்பானவர்கள் என்று கருதப்படுகிறவர்கள், தேவனுடைய சுதந்தரர்கள், தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள். செல்வந்தர்கள் அல்ல வறியவர்களே கிறிஸ்துவின் கொள்கைளை ஏந்தி அணிவகுத்துச் சென்றார்கள் என்பதைத் திருமறையில் நாம் மீண்டும் மீண்டும் காண்கிறோம். "தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது" என்று நம்முடைய கர்த்தர் தாமே கூறியிருக்கிறார் (மத். 11:5). செல்வந்தர்களோ உயர்குடி மக்களோ அவர் பிரசங்கம் செய்வதைக் கேட்கவில்லை, சாதாரண மக்களே மகிழ்ச்சியோடு அவர் பிரசங்கம் செய்வதைக் கேட்டார்கள் (மாற்கு 12:37). பிரபுக்கள் பலர் அழைக்கப்படவில்லை; பலவீனர்களும், பைத்தியக்காரர்களும், அற்பமானவர்களும், இழிவானவர்களும், ஒன்றுமில்லாதவர்களும் அழைக்கப்பட்டார்கள் (1 கொரி. 1:26-29). செல்வந்தர்கள் பெரும்பாலும் விசுவாசத்தில் வறியவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் கர்த்தரை நம்புவதற்குப் பதிலாக தங்களுடைய செல்வத்தின்மேல் நம்பிக்கைகொண்டிருக்கிறார்கள். இதற்கு மாறாக, தரித்திரர் **விசுவாசத்தில் ஐசுவரியவான்களாக** இருக்கும்படி தேவன் அவர்களைத் **தெரிந்துகொண்டிருக்கிறார்**. அவருடைய அரசின் மக்களில் வறியவர்கள் எத்தனை பேர் என்று கணக்கிட்டுப் பார்த்தால், இறைமக்களில் பெரும்பாலோர் வறியவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பது புலப்படும். இறையரசில் அவர்கள் செல்வமும் புகழ்ச்சியும் மிக்க பதவியை வகிப்பார்கள். நம்முடைய கர்த்தரும் இரட்சகருமானவருடைய இறையரசில் ஒருநாள் மேன்மையடையப் போகிறவர்களிடத்தில் வெறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்வது எவ்வளவு மதியீனமானது, ஆபத்து நிறைந்தது என்பதை அறியக்கடவோம்.

ஐசுவரியவான்களுக்குத் தனிச்சிறப்பு அளிப்பது எவ்வளவு மதியீனமான செயல் என்பதற்கான இரண்டாவது காரணம் என்னவெனில், தேவனுடைய மக்களைத் தனிப்பட்ட வகையில் ஒடுக்கியவர்கள் அவர்கள் அல்லவா. இங்கு உரைக்கப்பட்டுள்ள வாதம் சற்று நம்மை குழப்பமடையச் செய்கிறது. மேலே சொல்லப்பட்டுள்ள பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள செல்வந்தன் ஒரு விசுவாசியாய் இருக்கிறான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆறாவது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற செல்வந்தர்களும் விசுவாசிகளாக இருக்க வேண்டும் என்னும் அவசியமில்லை. "செல்வந்தர்களாக இருக்கிற மக்களுக்கு, அவர்கள் செல்வந்தர்கள் என்னும் ஒரே காரணத்திற்காக ஏன் சலுகை காட்டுகிறீர்கள்? நீங்கள் அவ்வாறு செய்வீர்களானால், உங்களை முதலாவது அச்சுறுத்தி, தமது விருப்பத்தின்படி நடக்கச்செய்து, பிறகு உங்களை நீதிமன்றங்களுக்கு இழுத்துச் செல்கிறவர்கள் அவர்கள் என்பதும், அவர்களையே நீங்கள் உயர்வாய் மதிக்கிறீர்கள் என்பதுமே உண்மை" இதுவே யாக்கோபு கூறுகிற எளிய உண்மை. "உங்களைத் தூக்கில் இடுகிறவர்களை ஏன் உயர்வாக மதிக்கிறீர்கள்?" என்று சுருங்கச் சொல்லித் திருவாளர் கால்வின் தனது வாதத்தைத் திறமையோடு எடுத்துரைக்கிறார்.

2:7 செல்வந்தர்களிடத்தில் பாரபட்சத்தோடு நடந்துகொள்வது மதியீனம் என்பதற்கான மூன்றாவது காரணம் என்னவெனில், அவர்கள் கிறிஸ்துவின் திருப்பெயரைக் கொண்டு வழக்கமாக, தீய சொற்களையும் கடினமான பேச்சையும் பேசக்கூடியவர்கள் என்பதாகும். விசுவாசிகள் இந்த **நல்ல நாமத்தினால்** அழைக்கப்பட்டிருக்கிறார்கள் - கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்துவைப் பின்தொடர்கிறவர்கள். கர்த்தரை இழித்துப் பேசும் பாவத்தைச் செல்வந்தர்கள் தங்களுக்கே உரியதாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது, ஆயினும் ஏழ்மையான விசுவாசிகளைத் துன்புறுத்தும் செல்வந்தர்கள் இரட்சகருக்கு எதிராகக் கீழ்த்தரமான சொற்களைக் கூறுகிற பாவத்தை அதனோடு சேர்த்துச் செய்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே விசுவாசிகள் செல்வந்தர்களுக்கு, அவர்கள் செல்வந்தர்கள் என்னும் ஒரே காரணத்துக்காகத் தனிச்சலுகை காட்டுவது ஏன்? செல்வத்தோடு சேர்ந்துவருகிற குணங்கள் பெரும்பாலும் கர்த்தராகிய இயேசுவுக்கு உயர்வான மதிப்பைத் தருவதில்லை. **உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமம்** என்னும் சொற்றொடர், "இந்த நல்ல நாமத்தினால் நீங்கள் அழைக்கப்பட்டீர்கள்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ ஞானஸ்நானத்தை இது குறிப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். விசுவாசிகள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார்

கள். இந்த **நாமத்தையே** செல்வந்தர்கள் வழக்க மாகத் **தூஷிக்கிறார்கள்**.

2:8 செல்வந்தர்களுக்குக் காட்டுகிற தனிச் சலுகை, "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்னும் பிரமாணத்தை மீறுகிற செயல் என்பது யாக்கோபு கூறும் நான்காவது வாதம். இது **ராஜரிக பிரமாணம்** என்று அழைக்கப்பட்டிருக் கிறது, ஏனெனில் இது ராஜாவுக்குச் சொந்த மானது, மேலும் எல்லாப் பிரமாணங்களுக்கும் இதுவே ராஜாவாக இருக்கிறது. ஒருவேளை அந்த வரவேற்பாளர், தன்னைப்போலவே பிறரி டத்திலும் அன்புகூர வேண்டும் என்னும் பிர மாணத்தைக் கடைப்பிடிக்கும் பொருட்டே செல் வந்தனிடம் அவ்வாறு நடந்துகொண்டதாக நியா யப்படுத்தலாம். ஆனால் வறியவனிடம் அவர் நடந்துகொண்ட விதத்திற்கு அது தகுந்த கார ணம் அல்லவே. உண்மையாகவே நாம் நம்மு டைய அயலகத்தாரிடம் அன்புகூருவோமென் றால், நாம் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறோமோ அது போலவே அவர்களை எப்பொழுதும் நடத்துவோம். நாம் ஏழைகளாக இருக்கின்ற காரணத்தால் நாம் இழிவுபடுத்தப் படுவதை நிச்சயமாக விரும்பமாட்டோம். அவ்வா றிருக்க இந்தக் காரணத்திற்காக நாம் பிறரிடம் வெறுப்பைக் காட்டி இழிவுபடுத்தக் கூடாது.

உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக - திருமறை யில் காணப்படும் எல்லா அறிவுரைகளிலும் இது மிகவும் புரட்சிகரமானது என்பது நிச்சயம். இதன் பொருள் என்னவென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். நம்மீது அக்கறை செலுத்துவது போல நாம் பிறரிடத்திலும் அக்கறை கொண்டி ருக்க வேண்டும். நம்மைப் போலச் சிலாக்கியம் பெற்றிராத மக்களோடு நம்முடைய பொருட்செல் வத்தைப் பகிர்ந்துகொள்ள விருப்பங்கொண்டி ருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் நம்முடைய புகழ்ச்சிமிக்க இரட்சகரை அறிந்துகொள்வதற்கு ஏற்ற வாய்ப்பை உண்டு பண்ணும்படி நம்முடைய முழு ஆற்றலோடு எல்லாவற்றையும் செய்ய வேண்டும். நம்முடைய செயல்கள் நம்மை எவ்வாறு பாதிக்கிறதோ அதைப் பொருத்தே நம்முடைய தீர்மானங்கள் பெரும்பாலும் அமைகின்றன. நாம் சுயநலம் மிக்கவர்களாகவே இருக்கிறோம். சமுதாய அடிப் படையில் அல்லது பொருளாதார அடிப்படையில் நாம் பலன்பெறுவோம் என்னும் நம்பிக்கை யினால் செல்வந்தர்களுடைய தேவைகளைச் சந்திக்கிறோம். வறியவர்கள் இவ்விதமாக நமக்கு நன்மை செய்யச் சற்றேனும் வாய்ப்பில்லை என் னும் காரணத்தால் அவர்களை நாம் புறக்கணிக் கிறோம். இவ்விதமாக நம்முடைய சொந்த ஆதா யத்துக்காகப் பிறரை பயன்படுத்திக்கொள்ளும் சுயநல நடத்தைகள் **ராஜரிக பிரமாணத்தில்** தடைசெய்யப்பட்டுள்ளன. இந்தப் பிரமாண மானது நம்மைப் போலவே பிறரிடத்திலும் அன்பு கூர வேண்டுமென்று கற்பிக்கிறது. "எனக்குப் பிறன் யார்?" என்று நாம் கேட்டு, நல்ல சமாரியன் கதையிலிருந்து அதற்குரிய விடையைக் கற்றுக் கொள்ள வேண்டும் (லூக்கா 10:29-37). நாம் உதவிசெய்து ஒருவனுடைய தேவையைச் சந்திக்கக் கூடுமானால், அவனே நமக்குப் பிறன் ஆவான்.

2:9 பட்சபாதமுள்ளவர்களாக இருப்பது ராஜ ரிக பிரமாணத்தை மீறுவதாகும். இது **பாவமாக வும்** மீறுதலாகவும் இருக்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு உடன்பாடற்ற நிலையில் இருப்பது எதுவும் பாவமாகும், அதாவது தேவன் நிர்ண யித்த தரத்தை எட்டாதிருப்பது பாவம். அறிந்த பிரமாணத்தை மீறிச் செயல்படுவதே மீறுதல் எனப்படும், சில செயல்கள் அவற்றின் அடிப் படைத் தன்மையின்படியும் உள்ளார்ந்த நிலை யிலும் தவறாகவே இருக்கின்றன. ஆனால் அவற்றைக் குறிப்பிட்ட பிரமாணம் தடைசெய் திருக்குமென்றால், அவை மீறுதல்களாகக் கரு தப்படும். **பட்சபாதம்** பாவமாயிருக்கிறது, ஏனெ னில் அது தன்னியல்பில் தவறானதாகும். அது மீறுதலாகவும் இருக்கிறது, ஏனெனில் அதற்கு எதிராக ஒரு பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2:10 நியாயப்பிரமாணத்தில் ஒரு பகுதியை மீறுவது, எல்லாவற்றிலும் தவறிக் குற்றமிழைப்ப தற்குச் சமமாகும். ஒரு சங்கிலியில் பத்து வளை யங்கள் இணைக்கப்பட்டிருப்பதுபோல நியாயப் பிரமாணம் இருக்கிறது. ஒரு வளையம் துண்டிக் கப்பட்டால் அந்தச் சங்கிலியே அறுந்துபோகும். நமக்குப் பிடித்த பிரமாணங்களை நாம் கடைப் பிடிக்கும் நிலையில் மற்ற பிரமாணங்களை மீறு வதை தேவன் அனுமதிப்பதில்லை.

2:11 விபசாரம் செய்வதைத் தடைசெய்கிற தேவன் **கொலைசெய்வதையும்** தடை செய் திருக்கிறார். ஒரு மனிதன் **விபசாரம்** செய்திருக்க மாட்டான், ஆனாலும் அவன் கொலை செய்து விடக்கூடும். அவன் **நியாயப்பிரமாணத்தை மீறினவன் ஆவானா?** நிச்சயமாக அவன் நியா

யப்பிரமாணத்தை மீறினவன்தான்! அந்தப் பிரமாணத்தின் முக்கியமான கருத்து யாதெனில், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. விபசாரம் எந்த அளவிற்கு மீறுதலாக இருக்கிறதோ, அது போலவே கொலையும் மீறுதலாக இருக்கிறது. மேலும் வெளித்தோற்றத்தைக் கொண்டு பிறரை மதிப்பிடுதல், பாரபட்சம்காட்டுதல் ஆகியவையும் மீறுதல்களாகவே இருக்கின்றன. இவற்றில் ஏதாவது ஒரு பாவத்தை நாம் செய்வோமானால், நியாயப்பிரமாணம் கட்டளையிடுவதைச் செய்யத் தவறினவர்களாகவே கருதப்படுவோம்.

பத்துக் கட்டளைகள்

இந்தத் தருணத்தில் யாக்கோபின் வாதத்தில் எழுகின்ற ஓர் அடிப்படைப் பிரச்சினை குறித்துச் சிந்திக்கும்படி நம்முடைய ஆய்வுரையைச் சற்று நிறுத்தி வைக்க வேண்டும். "கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்களா இல்லையா?" என்பதே அந்தப் பிரச்சினை. கிறிஸ்தவர்கள்மேல் பத்துக்கட்டளைகளை யாக்கோபு சுமத்துவதாக இங்கு தோன்றுவது உறுதி. இங்கு அவர் குறிப்பிட்டு ஆறு மற்றும் ஏழு ஆகிய கட்டளைகளைச் சொல்லுகிறார். அவற்றில்தான் கொலை செய்தல் மற்றும் விபசாரம் செய்தல் ஆகியவையும் தடைசெய்யப்பட்டுள்ளன. மேலும் அவர் கடைசி ஐந்து கட்டளைகளையும் ஒன்று கூட்டி, "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்று சுருக்கமாகச் சொல்லுகிறார். ஆனால், விசுவாசிகள் தங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையாக நியாயப்பிரமாணத்தைச் சுமத்துவது, புதிய ஏற்பாட்டின் பிறபகுதிகளுக்கு முரண்பட்டதாக இருக்கிறது. அவை, ரோமர் 6:14 - "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறீர்கள்"; ரோமர் 7:6 - "நாம் நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்"; ரோமர் 7:4 - "நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" (கலா. 2:19; 3:13, 24,25; 1 தீமோ. 1:8,9; எபி. 7:19 ஆகிய வசனங்களையும் காண்க). 2 கொரிந்தியர் 3:7-11 ஆகிய வசனங்களில், கிறிஸ்தவர்கள் பத்துக் கட்டளைகளுக்குக் கீழானவர்கள் அல்ல என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கிருபையின் காலத்தில் விசுவாசிகள் மீது நியாயப்பிரமாணத்தின் கருத்துகளை யாக்கோபு திணிப்பதன் காரணம் என்ன? முதலாவதாக, கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தைத் தங்களுடைய வாழ்க்கையின் விதியாகக் கொண்டு அதற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல. நியாயப்பிரமாணமல்ல, கிறிஸ்துவே விசுவாசிகளின் மாதிரியாக இருக்கிறார். எங்கே நியாயப்பிரமாணம் இருக்கிறதோ அங்கே தண்டனையும் இருக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தை மீறுவதற்குரிய தண்டனை மரணமாகும். மீறப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கான தண்டனையைச் செலுத்தும்படி கிறிஸ்து மரணமடைந்தார். ஆகவே கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிறவர்கள் நியாயப்பிரமாணத்தினின்றும் அதனுடைய தண்டனையினின்றும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நியாயப்பிரமாணத்தின் சில கொள்கைகள் நிரந்தரமான வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அந்தக் கற்பனைகள் எல்லாக் காலத்திலும் எல்லா மக்களுக்கும் பொருத்தமானவை. சிலைவணக்கம், விபசாரம், கொலை மற்றும் திருட்டு ஆகியவை அடிப்படையாகவும் உள்ளார்ந்த நிலையிலும் தவறானவை. அவை விசுவாசிகளுக்கு எப்படித் தவறானவையோ அதுபோலவே அவிசுவாசிகளுக்கும் தவறானவை. மேலும் பத்துக் கற்பனைகளில் ஒன்பது நிருபங்களில் மீண்டும் சொல்லப்பட்டுள்ளன. ஓய்வுநாள் மட்டுமே மீண்டும் கட்டளையாகச் சொல்லப்படவில்லை. ஓய்வுநாளை அல்லது வாரத்தின் ஏழாம் நாளைக் கைக்கொள்ள வேண்டுமென்று கிறிஸ்தவர்களுக்கு எங்கும் கட்டளை கொடுக்கப்படவில்லை. ஏனெனில் அந்தக் கட்டளையானது சடங்குகளைச் சார்ந்ததே யொழிய ஒழுக்க நெறியைச் சார்ந்ததல்ல. ஏழாம் நாளில் ஒரு யூதன் வேலைசெய்வானானால், உண்மையில் வேலைசெய்வதில் எந்தத் தவறும் இல்லை. தேவன் அந்த நாளைப் பிரித்து வைத்த காரணத்தால் மட்டுமே அச்செயல் தவறானதாக இருக்கிறது.

இறுதியாக, நிருபங்களில் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது கட்டளைகளும் நியாயப்பிரமாணமாகக் கொடுக்கப்படவில்லை, மாறாக தேவனுடைய மக்கள் நீதியைச் செய்யும்படி அவை அறிவுரைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. "நீங்கள் திருடினால் கொலைசெய்யப்படவேண்டும்" என்று தேவன் கிறிஸ்தவர்களிடம் கூறவில்லை என்றும் இதனைச் சொல்லலாம். அல்லது, "நீங்கள் ஒழுக்கக்கேட்டில் வீழ்ந்துபோவீர்கள் என்றால் உங்களுடைய இரட்சிப்பை இழந்து போவீர்கள்" என்றும் அவர் கூறவில்லை. மாறாக

அவர் கூறுவது என்னவெனில்: "என்னுடைய கிருபையால் உன்னை இரட்சித்தேன். இப்பொழுது என்மேல் கொண்ட அன்பின் காரணமாக நீ பரிசுத்தமாய் வாழவேண்டும் என்று நான் விரும்புகிறேன். உன்னிடத்தில் நான் என்ன எதிர்பார்க்கிறேன் என்று நீ அறிய விரும்பினால் புதிய ஏற்பாடு நெடுகிலும் அந்த அறிவுரைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கு பத்துக் கட்டளைகளில் ஒன்பது மீண்டும் சொல்லப்பட்டுள்ளதைக் காண்பாய். ஆனால் அதற்கும் மேலாக, *நியாயப்பிரமாணம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மேலான நடத்தை உடையவனாக நீ வாழும்படி, கர்த்தராகிய இயேசுவின் போதகங்கள்* அங்கு கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்பாய்." ஆகவே, விசுவாசிகளை நியாயப்பிரமாணத்திற்கும் அதனுடைய சாபத்திற்கும் யாக்கோபு உண்மையில் உட்படுத்தவில்லை என்பதை அறியக் கடவோம். "நீங்கள் மனிதர்களிடத்தில் பட்சபாதம் காட்டுவீர்கள் என்றால், மரணத்திற்குத் தீர்க்கப்படுவீர்கள்" என்று யாக்கோபு சொல்லவில்லை.

2:12 விசுவாசிகள் என்னும் நிலையில் நீங்கள் அடிமைப்படுத்தும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்கள் அல்ல, மாறாக நீங்கள் சுயாதீனப் பிரமாணத்துக்குக் கீழானவர்களாக இருக்கிறீர்கள் - எது சரியோ அதைச் செய்வதற்கு நீங்கள் சுயாதீனம் பெற்றிருக்கிறீர்கள். மோசேயின் நியாயப்பிரமாணம் நீங்கள் உங்களுடைய அயலகத்தாரிடம் அன்புபாராட்ட வேண்டும் என்று கற்பிக்கிறது, ஆனால் அதற்குரிய ஆற்றலை அது தருகிறதில்லை, மேலும் அதை நீங்கள் செய்யத் தவறுகிறபோது அது உங்களைக் குற்றப்படுத்தும். கிருபைக்குக் கீழாக, நீங்கள் உங்களுடைய அயலகத்தாரிடம் அன்புபாராட்டுவதற்குரிய ஆற்றல் உங்களுக்குத் தரப்படுவதோடு, அதை நீங்கள் செய்யும்போது அதற்குரிய பரிசும் உங்களுக்குத் தரப்படும். நீங்கள் இரட்சிக்கப்படும்படி அதைச் செய்கிறதில்லை, மாறாக நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதால் அதைச் செய்கிறீர்கள். தண்டனை கிடைக்குமோ என்னும் அச்சத்தினால் நீங்கள் அதைச் செய்கிறதில்லை. மாறாக, உங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்தவரிடம் நீங்கள் கொண்டுள்ள அன்பின் காரணமாக அதைச் செய்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறபோது உங்களுடைய வாழ்க்கையின் தரம் எவ்வாறு இருந்ததோ அதற்குத் தகுந்தாற்போல் பரிசுப் பொருளை பெறுவீர்கள் அல்லது பரிசுப் பொருளை இழந்துபோவீர்கள். இரட்சிப்பு கிடைக்குமா கிடைக்காதா என்பதல்ல கேள்வி. பரிசுப் பொருளைக் குறித்ததாகவே இக்கேள்வி அமைந்துள்ளது. **அதற்கேற்றபடி பேசி அதற்கேற்றபடி செய்யுங்கள்** என்னும் சொற்றொடர், சொற்களையும் செயல்களையும் குறிக்கிறது. அறிக்கையும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று இசைந்திருக்க வேண்டும். பேச்சிலும் செயலிலும் பாரபட்சம் காட்டுவதை விசுவாசிகள் தவிர்க்கவேண்டும். இவ்வாறு சுயாதீனப்பிரமாணம் மீறப்படுவது கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நியாயந்தீர்க்கப்படும்.

2:13 இந்தப் பகுதியின் பின்னணியின் அடிப்படையில் 13 -ஆம் வசனத்தின் பொருளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். யாக்கோபு விசுவாசிகளிடம் பேசுகிறார். இங்கு நித்திய தண்டனையைக் குறித்த கேள்விக்கே இடமில்லை; அந்த தண்டனையானது என்றென்றைக்குமாக ஒரே தரம் கல்வாரி சிலுவையில் செலுத்தப்பட்டு விட்டது. இங்கு தேவன் தம்முடைய பிள்ளைகள் என்னும் நிலையில் நம்மோடு இந்த உலகத்தில் எவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதே ஆய்வுப் பொருளாகும். நாம் பிறரிடத்தில் **இரக்கம்** காட்டவில்லையென்றால் தேவனோடு ஐக்கியம் கொண்டவர்களாக நாம் வாழாமல் பின்வாங்கிய நிலையில் வாழ்பவர்களாகக் காணப்பட்டு, அதற்கான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதே பொருளாகும்.

நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும் என்னும் சொற்றொடர், தேவன் நம்மைச் சிட்சிப்பதற்குப் பதிலாக நம்மிடத்தில் இரக்கம் பாராட்டுவார் என்று பொருள்படக்கூடும் (மீகா 7:18); அவருடைய நியாயத்தீர்ப்பு "விநோதமான வேலை." நாம் பிறரிடத்தில் இரக்கம் பாராட்டுகிறவர்களாக இருந்திருப்போம் என்றால், அவர் நியாயத்தீர்ப்பு வழங்கும்போது அதை மகிழ்ச்சியோடு அனுபவிக்கிறவர்களாக இருப்போம். ஆனால் நாம் பிறரிடத்தில் இரக்கம் பாராட்டாமல் அவர்களை நீதியாய் நியாயந்தீர்த்திருந்தால், நமக்கும் இரக்கம் பாராட்டப்படமாட்டாது. அல்லது இரக்கம் எப்பொழுதுமே நியாயத்தீர்ப்பைக் காட்டிலும் மேலானது என்பது அச்சொற்றொடரின் பொருளாக இருக்கலாம். நாம் பிறரிடத்தில் இரக்கம் பாராட்டினால், நம்மீது விழவேண்டிய நியாயத்தீர்ப்பு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இரக்கம் காட்டப்படும் என்பதே இப்பகுதியின் பொதுவான பொருளாகும்.

பட்சபாதம் என்னும் முக்கியமான ஆய்வுப் பொருளில் நம்மை நாமே சோதித்துப் பார்க்கக் கடவோம். பிற இனத்தாரைக் காட்டிலும் நம்முடைய இனத்தாரிடத்தில் அதிக தயவு பாராட்டுகிறவர்களாக இருக்கிறோமா? முதியவர்களைக் காட்டிலும் இளைஞரிடம் அதிக நட்புடையவர்களாக இருக்கிறோமா? அழகிய தோற்றமுடையவர்களிடம் நாமே வலிந்துசென்று பேசி, எளிமையான தோற்றமுடையவர்களை அவ்வாறு நடத்துவது இல்லையா? முக்கியமான மனிதர்களிடத்தில் நட்புபாராட்ட வேண்டும் என்னும் ஆவல் கொண்டவர்களாகவும், அறியப்படாதவர்களிடம் அவ்வித ஆவல் அற்றவர்களாகவும் இருக்கிறோமா? உடலில் குறைவுடையவர்களைத் தவிர்த்து, நல்ல பலமும் நலமும் உடையவர்களோடு உடனிருக்க விரும்புகிறோமா? வறியவர்களைக் காட்டிலும் செல்வந்தர்களுக்குக் கூடுதலாகச் சலுகை காட்டுகிறோமா? நமது மொழியை அந்நிய மொழியைப் போன்று அசையழுத்தம் கொடுத்துப் பேசுகிற "அயல்நாட்டினரை" நாம் புறக்கணிக்கிறோமா?

இந்தக் கேள்விகளுக்குப் பதிலுரைக்கையில் நாம், அன்புகூருவதற்குத் தகுதியில்லாதச் சிறியவர்களை நாம் எவ்வாறு நடத்துகிறோமோ, அது தான் நாம் கர்த்தரிடம் நடந்துகொள்கிற முறை என்பதை நினைவுகூருவோமாக (மத். 25:40).

5. விசுவாசமும் கிரியைகளும் [2:14-26]

யாக்கோபின் மடலிலேயே இந்த வசனங்கள் தான் பெரும்பாலும், அதிக கருத்து வேறுபாடுகளுக்கு உரியவையாகக் காணப்படுகின்றன. கிரியைகளினால் நீதிமானாக்கப்படுதல் என்னும் யாக்கோபின் போதகத்திற்கும், விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல் என்று பவுல் வலியுறுத்திக் கூறியுள்ள போதகத்திற்கும் இடையே உடன்பாடு கொள்ள இயலாத முரண்பாடு இருப்பதாகத் திருச்சபையில் மிகவுயர்வான தகுதியுடைவராக இருந்த லுத்தரும் கருதினார். நாம் விசுவாசத்தினாலும் கிரியைகளினாலும் இரட்சிக்கப்படுகிறோம் என்னும் தவறான கொள்கையை ஆதரிக்கும்படி இந்த வசனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விதமாக விசுவாசமும் அதனோடு கிரியைகளும் இரட்சிப்புக்குத் தேவையானவை என்னும் கொள்கை "ஒருங்கிணைப்புக் கொள்கை" (synergism) என்று அழைக்கப்படுகிறது. நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக நம்ப வேண்டும், ஆனாலும் அதுமட்டும் போதாது என்று சொல்லுவதுபோல இது இருக்கிறது. அவருடைய மீட்பின் செயலோடு, அறக் கொடை, பக்தி போன்ற நம்முடைய செயல்களையும் சேர்க்க வேண்டும் என்பதே இக்கொள்கை.

இந்தப் பகுதியானது "கிரியைகளினால் நீதிமானாக்கப்படுதல்" என்னும் தலைப்பையே பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் நாம் கிரியைகளினால் நீதிமானாக்கப்படுகிறோம் என்பது போன்ற ஒரு பொருள் இங்கு காணப்படுகிறது. உண்மையில் நீதிமானாக்கப்படுதல் பற்றிய முழுச் சத்தியத்தையும் புரிந்துகொள்ள வேண்டுமானால், நீதிமானாக்கப்படுதலில் ஆறு கூறுகள் உள்ளன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். நாம் *கிருபையினால்* நீதிமானாக்கப்படுகிறோம் (ரோமர் 3:24). நாம் நீதிமானாக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் அல்ல, உண்மையில் அதற்கு மாறானதைப் பெறவே தகுதியுடையவர் ஆவோம் என்பதே இதன் பொருளாகும். நாம் *விசுவாசத்தால்* நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 5:1). தேவனுடைய கிருபைக்கு நாம் புரிகிற பதிற்செயல் விசுவாசமாகும். விசுவாசத்தால் நாம் இலவசமான ஈவை ஏற்றுக்கொள்கிறோம். நமக்காக தேவன் செய்ததை விசுவாசம் தனக்குரியதாக்கிக்கொள்கிறது. நாம் *இரத்தத்தால்* நீதிமானாக்கப்படுகிறோம் (ரோமர் 5:9). நாம் நீதிமானாக்கப்படுவதற்காகச் செலுத்தப்பட்ட விலையே அவருடைய இரத்தம் என்று இங்கு காண்கிறோம். பாவத்தினால் உண்டான கடனைக் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தமானது தீர்த்தது. இப்பொழுது நீதியுள்ள தேவன், பாவிகளான அக்கிரமக்காரர்களை, நீதியாகச் செலுத்தப்பட்டுள்ள விலையின் அடிப்படையில் நீதிமான்களாக ஆக்க முடியும். நாம் *தேவனால்* நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 8:33). தேவனே நீதிமானாக்குகிறவர் என்பதே இங்கு உரைக்கப்பட்டுள்ள சத்தியம். நாம் *வல்லமையால்* நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோமர் 4:25). நம்முடைய நீதி, மரித்தோரிலிருந்து கிறிஸ்துவை எழுப்பிய வல்லமையோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அவருடைய உயிர்த்தெழுதல் தேவன் மனநிறைவு அடைந்துவிட்டார் என்பதை மெய்ப்பிக்கிறது. மேலும் நாம் *கிரியைகளால்* நீதிமான்களாக்கப் படுகிறோம் (யாக். 2:24). நமது விசுவாசத்தின் மெய்ம்மையின் வெளியரங்கமான நிரூபணமாக கிரியைகள் விளங்குகின்றன. மற்றபடி காணப்படாததாயிருக்கிறதை காணத்தக்கதாக வெளிப்படுத்துகிறவையே கிரியைகள். மேற்கூறியவற்றிலிருந்து, ஒரு மனிதன் கிருபையினாலும், விசுவாசத்தாலும், இரத்தத்தினாலும்,

வல்லமையாலும், கிரியைகளினாலும் நீதிமானாக்கப்படு கிறதாகக் காண்கிறோம். ஆயினும் இவற்றில் எந்த முரண்பாடும் இல்லை. ஒரே சத்தியத்தின் பல்வேறு தோற்றங்களாக இவை இருக்கின்றன. தேவன் ஒரு மனிதனைக் கிருபை என்னும் அடிப்படைக் கோட்பாட்டின்படி நீதிமானாக்குகிறார்; அதை அவன் பெற்றுக்கொள்வதற்கான வாய்க்காலாக விசுவாசம் விளங்குகிறது; அதற்காக நமது இரட்சகர் செலுத்த வேண்டியதாயிருந்த விலை அவரது இரத்தம்; நீதிமானாக்கப்படுதல் என்னும் செயலைச் செய்கிறவராக தேவன் இருக்கிறார்; வல்லமை அதனுடைய நிரூபணமாக இருக்கிறது; கிரியைகள் அதன் விளைவாக இருக்கின்றன.

2:14 நற்கிரியைகளை விளைவிக்காத விசுவாசத்தினால் இரட்சிக்க இயலாது என்று யாக்கோபு வலியுறுத்துகிறார். இந்த வசனத்தைச் சரியாகப் புரிந்துகொள்வதற்குப் பெரிதான அளவில் உதவி செய்கிற இரண்டு திறவுகோல்கள் உள்ளன. முதலாவதாக, "ஒருவனுக்கு விசுவாசம் இருந்தும்... பிரயோஜனமென்ன..." என்று யாக்கோபு சொல்லவில்லை. மாறாக, **"ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும்... அவனுக்குப் பிரயோஜனமென்ன"** என்றே அவர் கூறுகிறார். ஒரு மனிதன் மெய்யான விசுவாசம் உடையவனாயிருந்தும் இரட்சிக்கப்படவில்லை என்பதல்ல இங்கு சொல்லப்பட்டுள்ள உண்மை என்றும் இதைக் கூறலாம். தன்னிடத்தில் விசுவாசம் உண்டென்று வெற்றறிக்கை செய்வதைத் தவிர வேறொன்றும் இல்லாத ஒருவனைப் பற்றியே இங்கு யாக்கோபு விவரிக்கிறார். தன்னிடத்தில் விசுவாசம் உண்டென்று அவன் கூறுகிறான். ஆனால் அதை வெளிப்படுத்திக் காட்டக்கூடிய எவ்விதச் சான்றும் அவனுடைய வாழ்க்கையில் இல்லை. இரண்டாவது திறவுகோல் NASB மொழிபெயர்ப்பில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த மொழிபெயர்ப்பில், "அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?[5]" என்னும் கேள்வியுடன் இந்த வசனம் முடிவடைகிறது. "அப்படிப்பட்ட விசுவாசம் இரட்சிக்குமா?" என்றும் இதனை வேறு விதமாகக் கூறலாம். எப்படிப்பட்ட விசுவாசத்தை யாக்கோபு குறிப்பிடுகிறார் என்னும் கேள்விக்கு, இந்த வசனத்தின் முந்தின பகுதி விடையளிக்கிறது. அவர் *அவ்வாறு சொல்லுகிற விசுவாசத்தைக்* குறித்தே பேசுகிறார். அந்த விசுவாசம் நற்கிரியைகளினால் பின்தொடர்வதில்லை. அப்படிப்பட்ட விசுவாசம் வீணானது. அது வெறுமனே வார்த்தைகள்தான், வேறொன்றும் இல்லை.

2:15,16 கிரியைகள் இல்லாத வெறும் வார்த்தைகளின் பயனற்ற தன்மை இங்கு எடுத்துக்காட்டின் மூலம் விவரிக்கப்பட்டுள்ளது. இரண்டு மனிதர்கள் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். அவர்களில் ஒரு மனிதனிடம் **அநுதின ஆகாரமுமில்லை**, உடையும் இல்லை. மற்ற மனிதனிடம் இரண்டும் இருக்கின்றன, ஆனால் அவற்றை மற்றவனோடு பகிர்ந்துகொள்ள அவனுக்கு மனதில்லை. தன்னுடைய தாராள மனப்பான்மையை வெளிப்படுத்தும் வண்ணம் அவன் மற்றவனிடம், "நன்றாக ஆடை அணிந்து, நன்றாகச் சாப்பிடு" என்று கூறுகிறான். ஆனாலும் அது நடைபெறும் பொருட்டு ஏதொன்றையும் அவன் செய்யவில்லை. இந்தச் சொற்களால் என்ன பயன்? நிச்சயமாக அவற்றில் எவ்விதப் பயனுமில்லை! அவை பசியைப் போக்குவதுமில்லை, சரீரத்திற்குத் தேவையான அனலையும் கொடுப்பதில்லை.

2:17 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில்தானே செத்ததாயிருக்கும். **கிரியைகள்** இல்லாத **விசுவாசம்** உண்மையான விசுவாசமே இல்லை. இது வெறுமனே வார்த்தைகள்தான். நம்முடைய விசுவாசத்தோடு கிரியைகளும் சேர்ந்ததால்தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று பொருள்படும் என்று யாக்கோபு கூறவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருப்பது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிறைவேற்றி முடிக்கப்பட்ட மீட்பின் செயலைக் கனவீனப்படுத்துவதாக அமையும். விசுவாசமும் கிரியைகளும் இணைந்ததால் நாம் இரட்சிக்கப்பட்டிருப்போமென்றால், அங்கே இரண்டு இரட்சகர்கள் இருக்கிறார்கள் - இயேசு மற்றும் நாம். ஆனால் கிறிஸ்து ஒருவர் மட்டுமே இரட்சகர் என்று புதிய ஏற்பாடு மிகத்தெளிவாக எடுத்துரைக்கிறது. வெறுமனே சில வார்த்தைகளிலான விசுவாசத்தினாலே நாம் இரட்சிக்கப்படவில்லை, மாறாக நற்கிரியைகள் நிறைந்த வாழ்க்கையை விளைவாகக் கொண்ட விசுவாசத்தினால்தான் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று யாக்கோபு வலியுறுத்திக் கூறுகிறார். கிரியைகள் இரட்சிப்பின் வேர் அல்ல, மாறாக அவை இரட்சிப்பின் கனிகளாக இருக்கின்றன என்றும் இதனை வேறு சொற்களால் கூறலாம்; அவை செயற்காரணமல்ல, விளைவாகவே இருக்கின்றன. "விசுவாசத்தினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், ஆனால் அந்த விசுவாசம் தனிமையாய் இருப்பதில்லை" என்று திருவாளர் கால்வின் பொருட்செறிவுமிக்க வகையில் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்.

2:18 மெய்யான விசுவாசமும் நற்கிரியை களும் பிரிக்க முடியாதவை. இரண்டு மனிதர் களுக்கிடையே நடைபெற்ற உரையாடலின் ஒரு சிறிய பகுதியின் மூலம் யாக்கோபு இதனை விவ ரிக்கிறார். முதலாவது மனிதன், அவர் மெய்யாக இரட்சிக்கப்பட்டவர். அவரே இந்தப் பகுதியின் பேச்சாளராக இருக்கிறார். இரண்டாவது மனிதன் விசுவாசம் உண்டென்று அறிக்கை செய்கிறான். ஆனால் அவன் நற்கிரியைகள் செய்து தனது விசுவாசத்தை வெளிப்படுத்துகிறதில்லை. முதல் மனிதர், பதில்கூற இயலாத ஓர் அறைகூவல் விடுப்பதைக் கேட்கிறோம். அந்த உரையாடலை நாம் பொழிப்புரையாகத் தரவேண்டும்: முதல் மனிதர் சரியாகவும் நியாயப்படுத்தியும் கூறுவதா வது, "**உனக்கு விசுவாசம் உண்டு** என்று சொல் லுகிறாய், ஆனால் அதை வெளிப்படுத்தும்படி உன்னிடத்தில் கிரியைகள் இல்லை. விசுவாச மானது நற்கிரியைகளால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று நான் கூறுகிறேன். நல்ல **கிரியைகள்** இல்லாத வாழ்க்கையின் மூலமாக நீ உன் **விசுவாசத்தை** மெய்ப்பித்துக் காண்பி. அதனை உன்னால் செய்ய முடியாது. விசுவாசத் தைக் காணமுடியாது. உனக்கு விசுவாசம் உண்டென்று பிறர்அறிய வேண்டுமானால், அதை வெளிப்படுத்திக் காட்டும்படியான வாழ்க்கையே அதற்கான ஒரே வழி, **நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே காண்பிப்பேன்**." **காண்பி** என்னும் சொல் இந்த வசனத்தின் முக்கிய மான சொல்லாகும்: கிரியைகள் இல்லாமல் விசுவாசத்தைக் **காண்பிப்பது** இயலாத செயல்.

2:19,20 அவர்களுடைய வாதம் தொடர்கிறது. முதல் மனிதரே இன்னும் பேசிக்கொண்டிருக் கிறார். ஒரு மனிதனுடைய விசுவாசத்தைப் பற்றிய வெற்றறிக்கை, நன்கு அறியப்பட்ட உண்மைக்கு மனதில் ஒப்புதல் அளிப்பதைத் தவிர வேறொன் றும் இல்லை. இவ்விதமாக அறிவுக்கூர்மை யினால் ஒப்புதல் அளிப்பது, அந்த மனிதனிடத்தி லிருந்து எவ்வித வாக்குறுதியையும் பெறு வதில்லை, மேலும் அது மறுதோற்ற வாழ்வையும் உண்டுபண்ணுவதுமில்லை. தேவனுடைய உளதாந் தன்மையை நம்புவது போதாது. இது மிகவும் இன்றியமையாதது என்பது உண்மையே, ஆனால் இது மட்டும் போதாது. தேவன் இருக் கிறார் என்பதைப் **பிசாசுகளும் விசுவாசிக்கின் றன**. இறுதியில் அவர் மூலமாகப் பெறப்போகிற தண்டனையை எண்ணிப்பார்த்து அவை அஞ்சி நடுங்கவும் செய்கின்றன. இந்த உண்மையைப் **பிசாசுகள் விசுவாசித்த** போதிலும் அவரிடம் தங்களை அவை ஒப்புவிப்பதில்லை. இந்த விசுவாசம் இரட்சிப்பதில்லை. கர்த்தரிடத்தில் மெய் யாக விசுவாசம் வைக்கும் ஒரு மனிதன், அவ் வாறு செய்கையில் தனது ஆவியையும், ஆத்து மாவையும், சரீரத்தையும் அவரிடத்தில் ஒப்புவிக் கிறான். இவ்வித ஒப்புவித்தல், மாற்றம் நிறைந்த வாழ்க்கையை அவனிடத்தில் உண்டுபண்ணு கிறது. **கிரியைகள்** இல்லாத **விசுவாசம்** மூளை யில் ஏற்படும் நம்பிக்கை, ஆகவே அது **செத்த**[ஞ] நம்பிக்கை.

2:21 கிரியைகளைச் செயல்படுத்துகிற விசு வாசத்திற்கு இப்பொழுது இரண்டு எடுத்துக்காட்டு கள் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துரைக்கப்பட் டுள்ளன. அவை யூதனாகிய **ஆபிரகாமையும்** புறவினத்தாளாகிய ராகாபையும் பற்றியவை. **ஆபிரகாம்** தனது **குமாரனாகிய ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல்** காணிக்கையாகச் செலுத் திய **கிரியையினால் நீதிமானாக்கப்பட்டான்**. இந்த உண்மையை நாம் கவனமான முறையில் அறிந்து, புரிந்துகொள்வதற்கு ஆதியாகமம் 15:6 - ஆவது வசனத்தைப் பார்க்கவேண்டும். ஆபிர காம் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். இங்கு ஆபிர காம் விசுவாசித்ததன் மூலமாக நீதிமானாக்கப் பட்டான் என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது, அவன் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட் டான் என்று சொல்லப்பட்டுள்ளது. 22 -ஆம் அதி காரம் வரும் வரையிலும், அவன் தன்னுடைய மகனைப் பலியாகச் செலுத்தியதைக் குறித்து எதையும் நாம் காண்பதில்லை. அதற்குப் பிறகே அவன் கிரியையினால் நீதிமானாக்கப்பட்டான். ஆபிரகாம் கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்ட உடனேயே தேவனுடைய பார்வையில் அவன் நீதிமானாக்கப்பட்டு விட்டான். ஆனால் ஏழு அதி காரங்களுக்குப் பிறகு, தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தைச் சோதனைக்கு உட்படுத்தினார். ஈசாக்கைப் பலியாகச் செலுத்த ஆபிரகாம் இணங் கியதை வெளிப்படுத்தியதன் மூலம், அவன் தன்னுடைய விசுவாசம் மெய்யானது என்பதைச் செயல்படுத்திக் காட்டினான். அவனுடைய கீழ்ப் படிதல், அவனுடைய விசுவாசம் வெறுமனே அறி வைச் சார்ந்ததல்ல என்றும், அதில் இருதயத்தின் ஒப்புவித்தலும் இருந்தது என்றும் வெளிப்படுத் தியது.

அவன் ஈசாக்கைப் பலியாகச் செலுத்தியபோது அங்கு வேறு எவரும் இல்லையென்றும், அவன் தன்னுடைய விசுவாசத்தின் உண்மைத்

தன்மையை மெய்ப்பித்துக் காட்டும்படி ஒருவரும் இல்லையே என்றும் அவ்வப்போது எதிர்த்துச் சொல்லப்படுகிறது. ஆனால் ஆபிரகாமுடன் சென்ற இளைஞர் வெகுதொலைவில் இல்லை. அவர்கள் ஆபிரகாமும் ஈசாக்கும் மலையிலிருந்து திரும்பி வருவதற்காகக் காத்திருந்தார்கள். மேலும் அங்கே ஈசாக்கும் இருந்தான். மேலும், தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியும்பொருட்டு அவன் தனது மகனைக் கொன்று பலிசெலுத்த இணக்க முடையவனாக இருந்தான் என்பது திருமறையில் பதிவுசெய்து வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக அவனுடைய விசுவாசத்தின் உண்மைத்தன்மை எல்லாத் தலைமுறையினருக்கும் வெளிப்படுத்திக் காண்பிக்கப்படுகிறது.

2:22,23 ஆகவே ஆபிரகாமின் விசுவாசம் அவனைக் கிரியை செய்யும்படி தூண்டிவிட்டது. மேலும், அவனுடைய **கிரியையானது** அவனுடைய **விசுவாசத்தைப்** பூரணப்படுத்தியது. மெய்யான விசுவாசமும் கிரியைகளும் பிரிக்க இயலாதவை. முதலாவது இரண்டாவதை உண்டுபண்ணுகிறது; இரண்டாவதோ முதலாவதை ஐயமற வெளிப்படுத்திக் காட்டுகிறது. ஈசாக்கு பலியாகச் செலுத்தப்படவிருந்த நிகழ்ச்சியில், ஆபிரகாமின் விசுவாசத்தின் செயல்முறை விளக்கத்தைக் காண்கிறோம். ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்ததால் நீதிமானாக்கப்பட்டான் என்று **வேதவாக்கியம்** கூறியிருப்பதன் செயல் முறை நிரூபணமாக அந்த நிகழ்ச்சி விளங்கியது. அவனுடைய நற்கிரியை, அவன் தேவனுடைய சிநேகிதனாக இருந்தான் என்பதை உறுதிப்படுத்துகிறது.

2:24 இதிலிருந்து, **மனிதன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான்** என்று நாம் முடிவு செய்கிறோம். மீண்டுமாக, மனிதன் விசுவாசத்துடன் கிரியைகளையும் கொண்டு நீதிமானாக்கப்படுகிறான் என்பது இதன் பொருளன்று என்று அறிய வேண்டும். அவன் தனது விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டான் - அது தேவனை நோக்கியது, மேலும் அவன் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டான் - அது மனிதனுடைய பார்வையில். "உன் விசுவாசத்தின் உண்மைத்தன்மையை என்னிடம் காண்பி" என்று மனிதன் கூறுகிறான். அதைக் காண்பிப்பதற்கான ஒரே வழி நற்கிரியைகளேயாம்.

2:25 பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டில் இரண்டாவது ராகாப் என்னும் வேசியைப் பற்றியது. அவள் நற்பண்பினால் இரட்சிக்கப்படவில்லை என்பது நிச்சயம் (அவள் ஒரு வேசியாக இருந்தாள்!) ஆனால் அவள் **தூதர்களை** (ஒற்றர்களை) **ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்ட** காரணத்தால், அதாவது அவள் **கிரியைகளினால் நீதியுள்ளவளாக்கப்பட்டாள்**. கானான் தேசத்தைச் சேர்ந்தவள், எரிகோ பட்டணத்தில் வசித்துவந்தாள். அந்த நகரத்தை நோக்கி வெற்றிவாகை சூடியவர்களாக ஒரு பெரும்படை வந்துகொண்டிருந்தது என்னும் செய்தியையும், எந்தப் படையும் அவர்களை எதிர்த்து நிற்க முடியவில்லை என்பதையும் அவள் கேள்விப்பட்டாள். எபிரெயரின் தேவனே மெய்யான தேவன் என்றும் அந்த தேவனோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவள் முடிவு செய்தாள். அதற்காக என்ன விலை கொடுக்கவும் அவள் ஆயத்தமாயிருந்தாள். அந்த ஒற்றர்கள் நகரத்திற்குள் நுழைந்தபோது, அவள் அவர்களை ஆதரித்தாள். அவ்வாறு செய்ததன் மூலம், மெய்யான ஜீவனுள்ள தேவனிடம் தான் கொண்டிருந்த விசுவாசத்தின் உண்மைத் தன்மையை மெய்ப்பித்தாள். அந்த ஒற்றர்களுக்குப் பாதுகாப்பு அளித்ததன் மூலம் அவள் இரட்சிக்கப்படவில்லை. ஆனால் அவளுடைய விருந்தோம்பல், அவள் மெய்யான விசுவாசி என்பதை மெய்ப்பித்தது.

இரட்சிப்பானது ஒரு பங்கு நற்கிரியைகளினால் உண்டாகிறது என்று கற்பிக்க இந்தப் பகுதியைச் சிலர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் தானதர்மம் செய்தல், கடன்களைச் சரியாகச் செலுத்துதல், உண்மையே பேசுதல், சபைக்குச் செல்லுதல் போன்றவை நற்கிரியை என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆபிரகாம் மற்றும் ராகாப் செய்த நற்கிரியைகள் இவைதானா? நிச்சயமாக இல்லை! ஆபிரகாமோடு தொடர்புடைய நிகழ்ச்சியில், அவன் தன் மகனைக் கொல்லச் சம்மதித்தான்! ராகாப் செய்ததோ தேசத் துரோகம்! இந்தக் கிரியைகளிலிருந்து விசுவாசத்தை நீங்கள் நீக்கிவிட்டுக் காண்பீர்களானால், அவை நல்லவை என்று சொல்ல முடியாது. பொல்லாத வையாகவே கருதப்படும். "விசுவாசத்தை அவர்களுடைய கிரியைகளிலிருந்து நீக்கிவிடுங்கள், அவை ஒழுக்கக்கேடானதும் இரக்கமற்றதும் அன்றி பாவச்செயல்களாகவும் இருந்தன. இந்தப் பகுதியானது கிரியைகள் நிறைந்த வாழ்க்கையைக் குறிக்கிறதேயொழிய, நியாயப்பிரமாணத்தைச் சார்ந்த கிரியைகளையல்ல" என்று நன்றாய்ச் சொல்கிறார் மெக்கின்டோஷ் என்பார்.

நற்கிரியைகளினால் இரட்சிப்பு உண்டாகிறது என்று கற்பிக்கும்படி இந்தப் பகுதியைப் பயன் படுத்துவது பயனற்ற செயல். கொலைசெய்வதா லும் தேசத்துரோகம் செய்வதாலும் இரட்சிப்பு உண்டாகிறது என்று கற்பிக்கிறார் என்று ஏற்றுக் கொள்வதற்கு இயலாத நிலைக்கு அவ்வாறு வாதாடுபவர் தள்ளப்படுவார்.

2:26 "அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்த தாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசு வாசமும் செத்ததாயிருக்கிறது" என்னும் அறிக் கையோடு இந்தப் பகுதியை யாக்கோபு முடிக் கிறார். இங்கே ஆய்வுப்பொருள் மிக அழகாகத் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளது. **விசுவாசத்தை** மனித **சரீரத்தோடு** இங்கு யாக்கோபு ஒப்பிடு கிறார். மேலும் அவர் **கிரியைகளை ஆவிக்கு** ஒப்பிட்டுச் சொல்லுகிறார். **ஆவியில்லாத சரீரம்** உயிரற்றது, பயனற்றது, மதிப்பற்றது. அதுபோல **கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததா யிருக்கிறது.** அது ஆற்றலற்றது, தகுதியற்றது. அது இரட்சிப்பளிக்கும் மெய்யான விசுவாசம் அல்ல, வெறுமனே போலியானது என்பதில் ஐய மில்லை.

இதனைத் தொகுத்துக் கூறுவோமாயின், கீழ்க்காணும் கேள்விகளை எழுப்பி, அவற்றிற்கு என்ன விடை கூறுகிறோம் என்று கேட்டு யாக் கோபு நம்முடைய விசுவாசத்தைச் சோதித்துப் பார்க்கிறார். ஆபிரகாமைப் போல வாழ்க்கையில் எனக்கு மிகவும் பிரியமாயிருக்கிற பொருளை தேவனுக்குச் செலுத்த நான் விருப்பமுடைய வனாக இருக்கிறேனா? நான் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவனாக இருக்கும் பொருட்டு இந்த உலகத்திற்குத் துரோகியாக மாறி ராகா பைப் போல் இருக்க நான் விரும்புகிறேனா?

6. நாவு: அதன் நற்பயனும் தவறான பயனும் 3:1-12

மூன்றாவது அதிகாரத்தின் முதல் பன்னிரண்டு வசனங்கள் நாவைக் குறித்துப் பேசுகின்றன (1:19,26; 2:12; 4:11; 5:12 ஆகிய வசனங்களிலும் நாவு பற்றிய குறிப்புகள் உள்ளன). பழம்பாணி யான மருத்துவர் நோயாளிக்கு என்ன நோய் என்று கண்டறிய நோயாளியின் நாக்கைச் சோதித் துப் பார்ப்பார். அதுபோலவே ஒரு மனிதனின் ஆவிக் குரிய நலத்தைக் கண்டறிய அவனது உரையாட லைச் சோதிக்க வேண்டும். பேச்சினால் செய்யப் படுகிற பாவங்களைக் கண்டறிவது தற்பரிசோத னையில் தொடங்குகிறது. "உங்களுடைய நாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங் கள்; அது நீரில் நனைந்திருக்கிறது, அங்கே வழுக்கிவிழுவது எளிது" என்னும் நவீன காலத்து நகைச்சுவை யின் கருத்துடன் யாக்கோபு உடன்படுகிறார்.

3:1 தேவனுடைய வார்த்தையில் போதகர் களாக ஆகவேண்டும் என்று, எண்ணாமல் துணிகிற விருப்பத்திற்கு எதிரான எச்சரிப்புடன் இந்த ஆய்வுப்பொருள் அறிமுகப்படுத்தப்படு கிறது. இந்த வசனத்தில் நாவு என்னும் சொல் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லையென்றாலும், திருமறையைக் கற்பிக்கும்போது ஒருவர் தனது நாவைப் பயன்படுத்துகிறார். ஆகவே அவ்வாறு போதகராயிருப்பவர் தேவனுடைய முன்னிலை யிலும் மனிதனுடைய முன்னிலையிலும் கூடுத லான பொறுப்பு உடையவராவார் என்னும் சிந் தனை இங்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. "உங்களில் அநேகர் போதகர்களாகாதிருப்பீர் களாக" என்னும் சொற்களைப் பொழிப்புரையாக ஆக்கித் தருவோம்: "போதகராக ஆக வேண்டு மென்று மட்டுமீறியபடி பேராவல் உள்ளவர்களாக மாற வேண்டாம்." ஒருவன் உண்மையாகவே தேவனால் போதக ஊழியத்திற்கு அழைக்கப் பட்டிருந்தால், அவன் தன்னுடைய வரத்தைப் பயன் படுத்துவதற்கு எதிராக இந்தத் தடை கொடுக்கப் பட்டிருக்கிறது என்று தவறாக இதற்கு விளக்க மளிக்கக் கூடாது. இந்த ஊழியத்தைக் கவன மற்ற முறையில் ஏனோதானோ என்று செய்யக் கூடாது என்பதே இங்கு உரைக்கப்பட்டுள்ள எளி மையான எச்சரிக்கை. சத்திய வார்த்தையைக் கற்பிக்கிறவர்கள், தாங்கள் கற்பிக்கிறதை வாழ்க்கையில் கைக்கொள்ளவில்லையென் றால் அதிக ஆக்கினையை அடைவார்கள்.

திருமறையைக் கற்பிப்பது மேன்மையான பொறுப்பு. போதகர் வசனத்தில் என்ன காண் கிறாரோ அதற்குக் கீழ்ப்படிய ஆயத்தமுடைய வராக இருக்க வேண்டும். அவர் எந்த அளவிற்கு வசனத்தை நடைமுறையில் கடைப்பிடிக்கிறாரோ அதற்கும் மேலாக மற்றவர்களை அதில் வழி நடத்த முடியும் என்று அவர் நம்பிக்கைகொள்ளக் கூடாது. அவர் எந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறாரோ அதைப் பொருத்தே, மற்றவர்கள்மேல் அவர் கொண்டிருக்கும் செல் வாக்கின் அளவும் தீர்மானிக்கப்படும். போதகர் தன்னுடைய சொந்த சாயலில் மற்றவர்களைப் பெற்றெடுக்கிறார்; பிறரையும் அவர் தம்மைப் போலவே மாற்றுகிறார். வேத வசனத்தின் எந்த வொரு பகுதியின் பொருளையும் வீரியம் குன்றச் செய்தால் அல்லது தெளிவான பொருளை மாற்

றிக் கூறினால், தன்னுடைய மாணாக்கருடைய வளர்ச்சியைத் தடைசெய்கிறவராகவே அவர் காணப்படுவார். அவர் எந்தவொரு பாவத்தையும் பொருட்படுத்தாமல் இருப்பாரென்றால், அவர் பரிசுத்தமற்ற வாழ்க்கையை ஊட்டி வளர்க்கிறவராகக் கருதப்படுவார். புதிய ஏற்பாட்டைத் தவிர வேறு எந்த நூலும், அதைப் படிப்பவர்களிடத்திலிருந்து இதுபோன்று பதிற்செயலை எதிர்பார்ப்பதில்லை. இயேசு கிறிஸ்துவுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்த வாழ்க்கையை அது எதிர்பார்க்கிறது. விசுவாசியின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அவர் கர்த்தராக விளங்கவேண்டுமென்று அவர் வலியுறுத்துகிறார். அத்தகைய நூலிலிருந்து கற்பிப்பது மிகவும் கருத்தூன்றிய செயலாகும்!

3:2 கற்பித்தல் என்னும் குறிப்பிட்ட ஊழியத்திலிருந்து யாக்கோபு இப்பொழுது பொதுவான உரையாடலை நோக்கித் திரும்புகிறார். **நாம் எல்லோரும் அநேக விஷயங்களில்** தவறுவதற்கு ஏதுவானவர்களாக இருக்கிறோம். ஆனால் ஒரு மனிதன் பேச்சினால் செய்யக்கூடிய பல்வேறு வகையான பாவங்களைச் செய்யாமல் இருக்கும்படி தனது நாவை கட்டுப்படுத்துவானானால் அந்த மனிதன் உண்மையாகவே முழுவளர்ச்சியடைந்தவனாக, நல்ல ஒழுங்குடையவனாகக் காணப்படுவான். ஒருவன் தன்னுடைய பேச்சைக் கட்டுப்படுத்துகிறவனாக இருந்தால், தன்னுடைய வாழ்க்கையின் பிற கூறுகளிலும் தற்கட்டுப்பாட்டுடன் நடக்க அவனுக்குக் கடினமாயிருக்காது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே இந்த விஷயத்தில் முழுநிறைவுடையவராக இருந்தார், ஆனால் நாம் ஒவ்வொருவரும் **பூரணராக** மாறக்கூடும் என்னும் பொருள் இதில் காணப்படுகிறது, அதாவது, வளர்ச்சியடைந்தவர்களாக, முழுமை பெற்றவர்களாக, முழுவதும் ஒழுங்கானவர்களாக விளங்க முடியும்.

3:3 இப்பகுதியில் நாவைக்குறித்த ஐந்து உவமைகள் அல்லது படவுருவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாவது, அது ஒரு கடிவாளத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது. **கடிவாளம்** எனப்படுவது குதிரைக்குப் பூட்டப்படும் சேணம், அது **குதிரையின் வாயில்** போடப்பட்டிருக்கும். அதனுடன் ஒரு வாரும் இணைக்கப்பட்டிருக்கும். கடிவாளத்தின் சிறு துண்டு இரும்பினால் செய்யப்பட்டிருக்கும், குதிரையை நடத்துகிறவன் வாரை இழுத்து அந்தச் சிறு இரும்புத் துண்டின் மூலமாக குதிரையை அடக்குகிறான். அதுபோல நாவானது ஒருவனுடைய வாழ்க்கையை வழி நடத்துகிறது - அது நன்மைக்கானாலும் சரி, தீமைக்கானாலும் சரி நாவினால் நடத்தப்படுகிறது.

3:4 இரண்டாவது சித்திரம் **சுக்கான்.** கப்பலோடு அதை ஒப்பிட்டுப் பார்க்கையில் **சுக்கான் மிகவும் சிறியது.** கப்பலின் எடையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சுக்கானின் எடை அற்பமானதாகக் காணப்படும். எடுத்துக்காட்டாக எலிசபெத் ராணி என்னும் கப்பலின் எடை 83673 டன், ஆனால் சுக்கானின் எடையோ 140 டன்- ஏறத்தாழ கப்பலின் எடை சுக்கானைப்போல 600 மடங்கு அதிகம். ஆனாலும் அந்தச் சுக்கான் **திருப்பப்படும்** போது, கப்பலின் திசை மாறுகிறது. கப்பலும் அதன் மூலமாகக் கட்டுப்படுத்தப்படுகிறது. இவ்வளவு சிறிய உபகரணத்தின் மூலம் அவ்வளவு பெரிய கப்பல் கட்டுப்படுத்தப்படுவது நம்புவதற்கு அரிதாயிருக்கிறது; ஆனாலும் அது அவ்வாறுதான் நிகழ்கிறது. ஆகவே நாம் நாவின் அளவைப் பார்த்து அதனுடைய ஆற்றலின் அளவைத் தவறாக மதிப்பிடக்கூடாது. சரீரத்தின் மிகச்சிறிய உறுப்பாக இருந்தபோதிலும், மேலும் அது மறைவான இடத்தில் இருந்த போதிலும், அது மிகப்பெரிய அளவில் சாதனைபுரிவதாக வீண்பெருமை பாராட்டும் - அது நல்லதாகவோ தீயதாகவோ இருக்கலாம்.

3:5,6 நாவைக் குறித்த மூன்றாவது உவமை நெருப்பு. ஒரு குச்சியைப் பொருத்தி, கவனமில்லாமல் எறிந்தால், அது தூரிகை போன்ற தீயை உண்டுபண்ணிவிடும். அதை அப்படியே விட்டுவிட்டால் **பெரிய காட்டைக் கொளுத்திப்** பெரும் சேதத்தை ஏற்படுத்திவிடும். ஒரு சிறிய நெருப்புக் குச்சி எவ்வளவு கேடு விளைவிக்கக் கூடிய அல்லது பேரழிவை உண்டுபண்ணக்கூடிய ஆற்றல் கொண்டிருக்கிறது! சிகாகோ பெருநகரத்தில் மிகப்பெரிய பேரழிவு 1871 -ஆம் ஆண்டில் ஏற்பட்டது, அது உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க பேரழிவு நிகழ்ச்சியாகும். ஓலியாரி என்ற பெண்மணியின் மாடு எரிந்துகொண்டிருந்த விளக்கை உதைத்துத் தள்ளியதால் ஏற்பட்ட விபத்து என்று பாரம்பரியக் கருத்து நிலவுகிறது. அது உண்மையோ பொய்யோ எதுவாயிருந்தாலும், மூன்று நாட்கள் தீ எரிந்தது, நகரத்தில் மூன்றரை சதுர மைல் அளவு எரிந்து சாம்பலாயிற்று. 250 பேர் கொல்லப்பட்டார்கள், 100000 பேர் வீடுகளை இழந்தார்கள். ஆயிரம் கோடி மதிப்புள்ள சொத்துகள் அழிந்துபோயின. நாவானது எரிகிற ஒரு சிறிய நெருப்புக்குச்சிக்கு அல்லது சாய்ந்து

விழுந்த விளக்கிற்குச் சமம். தீமை விளைவிக்கக் கூடிய அதனுடைய ஆற்றலுக்கு எல்லையே யில்லை. **அது அநீதி நிறைந்த உலகம், நம்முடைய அவயவங்களில் ஒன்று என்று யாக்கோபு** நாவைக் குறித்துப் பேசுகிறார். இங்கு உலகம் என்னும் சொல் அதனுடைய விரிந்த பரப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சில வேளைகளில் நாமும் இந்தச் சொல்லை இதே பொருளில் பயன்படுத்துகிறோம். எடுத்துக்காட்டாக, தொல்லைகள் நிறைந்த உலகம். மிக அதிகமான அளவு தொல்லைகள் என்பதே இதன் பொருளாகும். நாவு மிகச் சிறியதாக இருந்தபோதிலும், கொடுமையான செயல்களைச் செய்வதற்கான ஆற்றல் அதற்கு மிக அதிகம்.

கேடு உண்டாக்கவல்ல பேச்சுத் தழல் எவ்வளவு விரைவாகப் பரவக்கூடியது என்பதை, இரு பெண்களுக்கு இடையே நடைபெற்ற உரையாடல் விளக்கிக் கூறக் கூடியதாய் இருக்கிறது. "நான் லில்லியிடம் கூறவேண்டாம் என்று சொன்ன இரகசியத்தை நீ அவளிடம் சொன்னதாக அவள் என்னிடம் கூறினாள்" என்றாள் ஒருத்தி. "அவள் தனது சிறுமையைக் காட்டிவிட்டாள். நான் சொன்னதை உன்னிடம் சொல்ல வேண்டாமென்று சொல்லியிருந்தேனே" என்று பதிலுரைத்தாள் மற்றவள். "பரவாயில்லை, இதைக் குறித்து உன்னிடம் கேட்க மாட்டேன் என்று நான் லில்லியிடம் சொல்லிவிட்டேன். ஆகவே அவளிடம் ஒன்றும் கேட்டுவிடாதே" என்று முதற்பெண் கூறினாள்.

அந்த **நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்திவிடும்**. பழிதூற்றுதல், நிந்தித்தல், பொய்கூறுதல், தூஷித்தல், சபித்தல் ஆகியவற்றைப் பேசும்படி ஒருவன் தனது நாவைப் பயன்படுத்துவதால் அவன் தனது ஆளுமையை முற்றிலுமாகக் கெடுத்துக் கொள்கிறான்.

திருவாளர் சேப்பல் எழுதுகிறார்:

> குறைகண்டுபிடிப்பவர் தனக்கே தீங்கிழைத்துக் கொள்கிறார்... சேற்றை வாரி எறிகிறவர், அந்தச் சேற்றில் சிறிதளவு தன்னுடைய கரங்களிலும் இருதயத்தின்மேலும் எறியாமல் தனக்குப் பிடித்தமான அந்த வேலையைச் செய்ய முடியாது. எத்தனை முறை நம்மை நாமே கறைபடுத்திக்கொண்டோம் என்னும் எண்ணத்துடன் அந்த அனுபவங்களின் வழியாக கடந்து சென்றிருக்கிறோம்! ஆனாலும் அது நம்முடைய உள்நோக்கமாக இருந்ததே இல்லை. பிறர் மீது சேற்றை வாரி வீசுவதால், யாரோ ஒருவரின் மதிப்பீட்டில் நாம் தூய்மையானவர்கள் என்று கருதப்படுவோம் என்னும் வீணான நம்பிக்கை கொண்டோம். மற்றவர்களுடைய ஆளுமையைக் குறைவுபடுத்திச் சிதைப்பதால் நம்மை உயர்வான நிலைக்குக் கொண்டு போய்விடலாம் என்னும் முட்டாள்தனமான எண்ணங்கொண்டிருந்தோம். வெடிமருந்துக் குச்சியைப் பக்கத்து வீட்டுக்கடியில் வைப்பதால் நம்முடைய வீட்டின் அடித்தளத்தை வலுவாக்கலாம் என்று நினைத்துக் கொண்டோம். ஆனால் அவ்விதமாக ஒருபோதும் நடப்பதில்லை. மற்றவர்களுக்கு ஊறு விளைக்கும் எண்ணத்தில் நாம் வெற்றி பெறலாம், ஆனால் அதன் மூலம் நாம் நமக்கே ஆழமான காயத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம்.[7]

நாவானது **ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடும்**. பிறப்பின்போது தொடங்கி வைக்கப்பட்ட இயக்கமே இந்தச் "சக்கரம்." மனிதனுடைய செயல்பாட்டின் முழுச் சுற்றையும் இது விளக்கிக் காட்டுகிறது. ஒரு மனிதனுடைய நாவு அவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமின்றி, அவனுடைய செயல்கள் அனைத்தையும் மாசுபடுத்திவிடுகிறது. "ஒரு மனிதன் முழுமையாக, அவனுடைய பொல்லாங்கு முழுமையாக, அவனுடைய வாழ்க்கை முழுமையாக" இந்த நாவினால் பாதிப்படைகிறது. பொல்லாங்கான நாவு **நரக அக்கினியால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது.** கெட்ட பேச்சுகள் அனைத்திற்கும் தொடக்கம் அங்கே இருக்கிறது. நாவு நரகத் தன்மையைத் தனது குணமாகக் கொண்டிருக்கிறது. **நரகம்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் *Gehenna* என்பதாகும். இந்த இடம் தவிர இந்தச் சொல்லைப் புதிய ஏற்பாட்டில் கர்த்தராகிய இயேசு மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார்.

3:7 பழக்கப்படுத்த முடியாத காட்டு விலங்கிற்கு நாவு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இது நான் காவது உவமையாகும். எல்லாவகையான விலங்குகளும், பறவைகளும், கடல்வாழ் பிராணிகளும், பாம்புகளும் பயிற்றுவிக்கக் கூடியவையே. யானைகள், சிங்கங்கள், புலிகள், பிற உயிரினங்களைக் கொன்று தின்னும் பறவைகள், பாம்புகள், கடற்பன்றிகள், ஏன் மீன்களும்கூட பயிற்றுவிக்கப்படுகின்றன. பிலைனி என்பார் தன்னுடைய காலத்தில் மனிதர்களால் அடக்கிப் பயிற்றுவிக்கப்பட்ட விலங்குகளின் பட்டியலைத் தருகிறார்: யானை

கள், சிங்கங்கள், புலிகள் ஆகியவை விலங்கினத்தைச் சேர்ந்தவை; பருந்து, பறவையினம்; கட்டுவிரியன் மற்றும் பல பாம்பு வகைகள், முதலைகள் மற்றும் பலவகை மீன் இனங்கள்; இவையாவும் நீரில் வாழ்பவை. உண்மையில் எல்லாவகையான உயிரினங்களையும் மனிதன் அடக்கிப் பயிற்றுவிக்கவில்லை என்று வாதாடுவது, யாக்கோபு எடுத்துரைக்கும் வாதத்தின் கருத்தைத் தவறவிடுவதாக அமைந்துவிடும்; விடாமுயற்சியினாலும், போதுமான காலத்தை எடுத்துக்கொள்வதாலும் மனிதனால் அடக்கமுடியாத எந்த உயிரினமும் இல்லை என்று நம்பாதிருக்க ஒரு காரணமும் இல்லை.

இராபர்ட் G.. லீ என்பவர் இதனை சொல்வளத்துடன் எழுதுகிறார்:

> பேருருவம் கொண்ட யானைகளை மனிதன் என்ன செய்திருக்கிறான்? யானைகள் வாழும் காட்டுக்குள் சென்று, நூற்றுக்கணக்கான யானைகளைச் சிக்கவைத்து, அவற்றுக்குப் பயிற்சி அளித்திருக்கிறான். அவை மர உருளைகளை இழுத்துச் செல்கின்றன, பாரம் நிறைந்த வண்டிகளைத் தள்ளுகின்றன; எல்லாவகையான பளுவான வேலைகளையும் செய்யும்படி அவை பயிற்றுவிக்கப்பட்டுள்ளன. நீலநிறக் கண்கள் உடைய வங்காளப் புலிகளை அவன் என்ன செய்திருக்கிறான்? அவற்றைப் பிடித்து, பயிற்சியளித்து, தன்னுடைய விளையாட்டுத் தோழனாக மாற்றியிருக்கிறான். மிகவும் மூர்க்கமான, எளிதில் சீற்றம் அடையக்கூடிய, வலிமை மிகுந்த ஆப்பிரிக்கச் சிங்கங்கள் என்னவாயின? மிகுதியான எண்ணிக்கையில் அவற்றைப் பிடித்து பயிற்சி கொடுத்து, தீ வளையங்களில் தாவிச்செல்லும்படியும், குதிரை மேல் சவாரி செய்யும்படியும், உயர்ந்த இருக்கைகளில் ஏறி அமரும்படியும் செய்கிறான். அவை பசியாயிருக்கும்போது பாதங்களுக்கு இடையில் கறித்துண்டை வைத்துக்கொண்டு எழுந்து நிற்கவும், உட்காரவும், ஓடவும், கர்ச்சிக்கவும் செய்ய வைக்கிறான். அவனுடைய பேச்சுக்கும் சாட்டையடிக்கும் அவை கீழ்ப்படிகின்றன. ஏன், பல ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரிய அரங்கில் ஒரு சிங்கம் தனது வாயைத் திறந்தது, அது குகை போன்ற வடிவமுடையதாயிருந்தது, பெருந் தீனியை விழுங்கத்தக்க அளவு பெரிதாயிருந்தது. அப்பொழுது அதற்குப் பயிற்சி அளித்த மனிதன் தன்னுடைய தலையை அதனுடைய வாய்க்குள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உள்ளே திணித்தான், அப்படியே ஒரு நிமிடம் சென்றது.
>
> வளைத்து நெருக்கிக்கொல்லும் பெரிய மலைப்பாம்புகளை மனிதன் என்ன செய்தான்? வேடிக்கை அரங்குகளுக்குச் சென்று பாருங்கள், பூவைப் போன்ற மென்மையான சிறு பெண்கள் இந்தப் பாம்புகளைக் கொண்டு தங்களுடைய உடலைச் சுற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் எந்தப் பாதிப்பும் அடைகிறதில்லை. மிருகக்காட் சிச் சாலையில் புள்ளிகள் கொண்ட சிறுத்தைகள், இரத்தப் பிடாரியான சிறுத்தைப் புலிகள் யாவும் மனிதனுக்கு முன்பாக வாயடைத்து எந்த ஆபத்தும் விளைவிக்காமல் நிற்கின்றன. நரிகள் பசியோடு ஆட்டுக்குட்டிகளோடு படுத்துக்கொள்கின்றன. புறாக்களும் கழுகுகளும் சேர்ந்து கூடுகட்டுகின்றன. ஓநாயும் முயலும் சேர்ந்து விளையாடுகின்றன.[8]

3:8 விலங்குகளை அடக்கியாளுவதில் மனிதன் வெற்றிபெற்ற போதிலும், அவனுடைய சொந்த நாவை அடக்கும்படி அவன் வெற்றிபெறவில்லை. நாம் உண்மையுள்ளவர்களானால், நம்முடைய சொந்த வாழ்க்கையிலும் இதுவே உண்மையாயிருக்கிறது என்று ஒப்புக்கொள்வோம். மனிதனுடைய வீழ்ச்சியின் காரணமாக, இந்தச் சிறிய உறுப்பின்மேல் நம்மால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இந்தச் சிறிய உறுப்பைக் கட்டுப்படுத்த மனித இயல்பிற்கு ஆற்றலுமில்லை வலிமையுமில்லை. தேவன் ஒருவராலேயே இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

அடுத்ததாக, இந்த நாவை **அடங்காத பொல்லாங்கு** என்று யாக்கோபு வருணிக்கிறார். சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாய் இருக்கிறது என்னும் சொற்களை அதனோடு யாக்கோபு சேர்த்து எழுதும்போது, கொடிய விஷம் நிறைந்த சீறியெழுகிற பாம்பைத் தனது மனதில் நினைத்துக்கொண்டிருந்தார் என்றே தோன்றுகிறது. ஓரிரு சொட்டு விஷம் பாய்ந்தால்போதும், மரணம்தான். அதே விதமாக நாவும் உள்ளங்களில் விஷத்தைச் செலுத்தி மனிதர்களின் நற்பெயரைக் கெடுத்துவிடுகிறது. பிறரைக் குறித்துப் புறங்

கூறுதல் எவ்வளவு எளிது என்பதை நாம் அனை வரும் அறிவோம். போதிய ஆதாரமின்றி புனையப் பட்ட தவறுகளைக் கூறி, பிறர்மீது சேற்றை வீசி யெறியக்கூடிய வேலையை நாம் எத்தனை தடவை செய்திருக்கிறோம். பலவேளைகளில் எந்தக் காரணமும் இல்லாமல் பிறரை இழித்துப் பேசியிருக்கிறோம், அவர்களுக்கு எதிராகக் குறை கூறியிருக்கிறோம், தாழ்வாக நடத்தியிருக்கிறோம். அவ்வாறு இழைத்த தீங்குகளையும், சிந்திய கண்ணீரையும், நொறுங்கிய இதயங்களையும், நற்பெயர்களுக்கு உண்டாக்கின கெடுதல்களை யும் யாரால் அளக்க முடியும்? நம்முடைய சொந்த வாழ்க்கையிலும், நம்முடைய குடும்பங்களிலும் இதன் மூலமாக ஏற்பட்ட கடும் மனவேதனை களை யாரால் அளக்கமுடியும்? உள்ளத்தில் எழுந்த கசப்பான அனுபவங்கள், மன்னிப்பு கேட் கும்போது ஏற்படுகிற அவமானம், நம்முடைய சரீரங்களில் ஏற்பட்ட உடல்நலக் குறைவுகள். தங்களுடைய பிள்ளைகளுக்கு முன்பாகப் பெற்றோர்கள் உடன் விசுவாசிகளைக் குறித்து வெளியரங்கமாகக் குறைகூறுவதைக் காணும் பிள்ளைகள், அதே போன்ற குணமுடையவர் களாக நடந்து, கிறிஸ்தவ ஐக்கியத்தை விட்டு விலகிச் சென்று விடுகிறார்கள். நம்முடைய நாவு களைக் கட்டுப்பாடில்லாதபடி பயன்படுத்துவதால் நாம் கொடுக்கவேண்டிய விலை மிக அதிகம்.

இதற்கு என்ன பரிகாரம்? புறங்கூறுதல், குறை கண்டுபிடித்தல், வேதனையளிக்கத் தக்கவகை யில் பேசுதல் ஆகியவற்றிலிருந்து விலக்கிக் காக்கப்பட வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் கர்த்தரிடம் வேண்டுதல் செய்யவேண்டும். யாரை யும் பாதிக்கக்கூடியபடி பேசவேண்டாம்; அன்பு திரளான பாவங்களை மூடும் (1 பேதுரு 4:8). ஒரு வருக்கு எதிராக ஏதாவது இருந்தால், அவரிடம் நேரடியாகச் சென்று சொல்ல வேண்டும்; அன் புடன் அவரிடம்அதைக்குறித்து உரையாடுங்கள், சேர்ந்து ஜெபம் செய்யுங்கள் (மத். 18:15; லூக்கா 17:3). நம்முடைய சகோதரர்களிடம் கிறிஸ்து வைக் காண முயற்சி செய்வோம், அவர்களு டைய சிறிய தோல்விகளைப் பெரிதுபடுத்த வேண் டாம். வேதனையளிக்கக்கூடிய அல்லது பயனற்ற செய்தியைப் பேசத்தொடங்குவோமானால், அந்த வாக்கியத்தை முடிக்கும் முன் அதை நிறுத்தி விடுவோம். மேலும் அந்தச் செய்தி ஒருவருக்கும் பயனளிக்காது என்று சொல்லி, நீங்கள் இடை யில் நிறுத்தியதற்கான விளக்கத்தைச் சொல்லி விடுங்கள். சில விஷயங்களைச் சொல்லாம லிருப்பது நல்லது.

3:9,10 நன்மையானவற்றையும் தீமையான வற்றையும் நோக்கமாகக் கொண்டு பேசுவதற்கு நாவைப் பயன்படுத்துவது முன்னுக்குப் பின் முரணான செயலாகும். அது முற்றிலும் இயற் கைக்கு மாறுபட்டதாயிருக்கிறது; இயற்கையில் அதுபோன்ற எதுவும் இல்லை. ஒரு மணித்துளி அவன் **தேவனைப்** புகழ்ந்துபேசுகிறான், அடுத்த மணித்துளியில், அவன் தன் நாவினால் **தேவனு டைய சாயலில் உண்டாக்கப்பட்ட** மனிதர்களைச் சபிக்கிறான். ஒரு பொதுவான மூலப்பொருள் இவ் வாறு ஒன்றுக்கொன்று எதிரான விளைவை உண்டு பண்ணுமானால் அது ஒவ்வாத செயல் என்றே சொல்லப்படும்! அத்தகைய நிலை இருக்கக் கூடாது. தேவனைப் புகழ்ந்து பேசுகிற நாவு, மற்ற வர்களுக்கு ஊறு விளைவிப்பதற்குப் பதிலாக உதவிபுரிய வேண்டும். நாம் பேசுகிற அனைத்தும் மூன்றத்தனையான பரீட்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை: அது உண்மையானதா? அது கனி வானதா? அது சொல்லுவதற்கு அவசியமானதா? நம்முடைய உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்படி நாம் கர்த்தரை இடைவிடாமல் வேண்டிக்கொள்ள வேண்டும் (சங். 141:3). நம்மு டைய கன்மலையும் மீட்பருமாகிய கர்த்தருடைய சமுகத்தில், நம்முடைய வார்த்தைகளும் இருத யத்தின் தியானமும் பிரீதியாயிருக்க வேண்டு மென்று நாம் ஜெபம்பண்ண வேண்டும் (சங். 19:14). ரோமர் 12:1 -இல் சொல்லப்பட்டிருக்கிற நம் முடைய அவயவங்களில் நமது நாவும் ஒன்று என்பதை நாம் நினைவுகூரவேண்டும்.

3:11 எந்தவொரு **ஊற்றும்** ஒரே நேரத்தில் **தித்திப்பும் கசப்புமான** தண்ணீரைத் தருவ தில்லை. நாவும் அதுபோலச் செய்யக்கூடாது. அதிலிருந்து வெளிவருகிறவை ஒரேவிதமாக நன்மையானவையாக இருக்க வேண்டும்.

3:12 ஊற்றுக்கண்ணிலிருந்து வெளிவருகிற தண்ணீர் புத்துணர்ச்சியைக் குறித்துப் பேசுவதைப் போல, அத்திமரத்திலிருந்து கிடைக்கப் பெறுகிற பழம் ஊட்டத்தைக் குறித்துப் பேசுகிறது. **அத்தி மரம் ஒலிவப்பழங்களைக்** கொடுக்காது, அது போலத் **திராட்சைச்செடி அத்திப்பழங்களைத்** தருவதில்லை. இயற்கையைக் காணுமிடத்து, ஒரு மரம் ஒரே ஒரு பழத்தை மட்டுமே உற்பத்தி செய்கிறது. அவ்வாறிருக்க ஒரே நாவு எவ்வாறு நல்லதும் கெட்டதுமான இரண்டு வகைக் கனி களை உருவாக்க முடியும்?

இந்தப் பகுதியை, இதற்கு ஒப்பான மத்தேயு 7:16-20 ஆகிய வசனங்களோடு ஒப்பிட்டு நாம்

குழப்பம் அடையக்கூடாது. அங்கே, கெட்ட மரங்களிலிருந்து நல்ல கனிகளை நாம் எதிர்பார்ப்பதற்கு எதிரான எச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கெட்ட மனிதர்கள் பொல்லாங்கான கிரியைகளையே செய்ய முடியும். இங்கே, நாவைப் பயன்படுத்தி ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு வகைக் கனிகளை உருவாக்குவதற்கு எதிரான எச்சரிப்பைக் காண்கிறோம்.

எந்த **ஊற்றும் உவர்ப்பான** நீரையும் **தித்திப்பான** நீரையும் ஒரே நேரத்தில் கொடுப்பதில்லை. ஏதாவது ஒன்றை மட்டுமே அதனால் தரமுடியும். நம்முடைய பேச்சு எப்பொழுதும் நன்மை பயக்க வல்லதாக இருக்க வேண்டும் என்பதை நமக்கு நினைவுபடுத்தும்படி இந்தப் பாடங்கள் நமக்கு இயற்கையின் நியதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

நம்முடைய பேச்சு எவ்விதமாக இருக்க வேண்டுமென்று யாக்கோபு இவ்வாறு நம்மைப் பரீட்சைக்குட்படுத்தியிருக்கிறார். நாம் இந்தப் பகுதியிலிருந்து அடுத்த பகுதிக்குச் செல்லும் முன் தொடர்ந்து வருகிற கேள்விகளைக் கேட்போம். நான் கீழ்ப்படியாத காரியங்களைக் குறித்துப் பிறருக்குக் கற்பிக்கிறேனா? பிறரைக் குறித்து அவர்களுக்குத் தெரியாமல் நான் குறைகூறுகிறேனா? என்னுடைய பேச்சு எப்பொழுதும் தூய்மையாக, புத்திபுகட்டுகிறதாக, தயவுள்ளதாக இருக்கிறதா? வார்த்தைகளை விழுங்கி ஆணையிடுகிற வழக்கம் என்னிடத்தில் காணப்படுகிறதா? தெய்வீக உணர்வுடன் கூடிய கூட்டம் நடைபெற்று முடிந்த பிறகு, சிறுமைத் தனமான பேச்சில் ஈடுபடுகிறேனா, அல்லது கால்பந்தைக் குறித்துப் பேசுகிறேனா? வேத வசனங்களை நான் சிலேடைப்படுத்திப் பேசுகிறேனா? ஒரு கதையைத் திரும்பச் சொல்லுகிறபோது, கேட்கிறவர்கள் மனத்தில் ஆழமாகப் பதியவைக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் மிகைப்படுத்திச் சொல்லுகிறேனா? நற்பெயரை இழக்க நேரிட்டாலும், நண்பர்களையும் பொருட்செல்வத்தையும் இழந்து போகக்கூடிய நிலை ஏற்பட்டாலும் நான் உண்மையே பேசுகிறேனா?

7. ஞானம்: மெய்யான ஞானமும் தவறான ஞானமும் [3:13-18]

மெய்யான ஞானத்திற்கும் தவறான ஞானத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் குறித்து யாக்கோபு இப்பொழுது விவரிக்கிறார். அவர் ஞானத்தைக் குறித்துப் பேசும்போது, ஒரு மனிதன் எவ்வளவு *அறிவுடையவனாக* இருக்கிறான் என்பதைக் குறித்துச் சிந்திக்கவில்லை, மாறாக அவனுடைய அனுதின *வாழ்க்கை* எப்படிப்பட்டதாக இருக்கிறது என்றே சிந்திக்கிறார். ஒருவன் அறிவைப் பெற்றிருப்பதல்ல, அதனை அவன் பயன்படுத்துகிறதே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இங்கு உண்மையாகவே ஞானமுடைய ஒரு மனிதனின் உருவப்படம் வரைந்து தரப்பட்டுள்ளது. அடிப்படைக் கூறுகளின்படி காணும்போது இந்த மனிதர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார். அவரே ஞானத்தின் மனுவுருவானவர் (மத். 11:19; 1 கொரி. 1:30). ஆனால் கிறிஸ்துவின் வாழ்க்கையை வெளிப்படுத்திக் காட்டுகிறவனே ஞானமுடையவன், அவனிடத்தில் ஆவியின் கனி வெளிப்படும் (கலா. 5:22,23).

உலக ஞானத்தைப் பெற்றிருக்கும் மனிதனுடைய உருவப்படத்தையும் நாம் இங்கு பெற்றிருக்கிறோம். அவன் இவ்வுலகத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப நடக்கிறான். மனிதர்கள் புகழ்ச்சியாகக் கருதுகிற எல்லாப் பண்புகளையும் அவன் தன்னகத்தே கொண்டிருக்கிறான். அவனுடைய நடத்தையோ அவனுக்குள்ளாக தெய்வீக வாழ்வு உண்டென்பதற்கான எந்தச் சான்றையும் தருகிறதில்லை.

3:13 ஒருவன் **ஞானமும் விவேகமும்** உடையவான இருப்பானென்றால், அவன் தன்னுடைய **நல்ல நடக்கையினாலும், ஞானத்தினால்** வெளிப்படுத்தப்படுகிற சாந்தத்தினாலும் அவற்றை வெளிப்படுத்திக் காட்டுவான். மெய்யான ஞானத்தின் மனுவுருவான கர்த்தராகிய இயேசு பெருமைப்படவுமில்லை, திமிரோடு நடக்கவுமில்லை; அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருந்தார் (மத். 11:29). ஆகவே, மெய்யான ஞானத்தை உடையவர்கள் உண்மையான தாழ்மையின் முத்திரையைப் பெற்றிருப்பார்கள்.

3:14 உலகீய ஞானமுடைய மனிதன் தன்னுடைய **இருதயத்தில்** சுயநல நோக்கமுடையவனாகவும், **கசப்பான வைராக்கியம்** கொண்டவனாகவும் இருக்கிறான். தன்னுடைய சொந்த நன்மையைக் கருதி எல்லாவற்றையும் செய்கிற பெருவிருப்பத்தோடு இருப்பதே அவனுடைய பண்பு. தன்னுடன் போட்டிபோடுகிறவர்களிடத்தில் பொறாமையோடும், அவர்களோடு ஈடுபடுகிறபோது இரக்கமற்ற முறையிலும் நடந்துகொள்கிறான். ஆனால் இதுவல்ல ஞானம் என்கிறார் யாக்கோபு. இவ்வித மேன்மைபாராட்டல் வெறுமையைக் காட்டுகிறது. மெய்யான ஞானமுடைய மனிதன்

உண்மையாகவே தாழ்மையுடன் இருப்பான் என்னும் பேருண்மையை அவன் செயல்முறையில் நிராகரிக்கிறான்.

3:15 கிறிஸ்தவ ஊழியத்திலும்கூட ஒருவர், பிற ஊழியர்களிடம் கசப்பான முறையில் பொறாமை கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும், மேலும் அவர் தனக்கு முதலிடம் வேண்டும் என்னும் நாட்டமுடையவராகவும் இருக்கிறார். உலகீய ஞானம் கொண்ட மனிதனுக்கு, சபையில் தலைமைப் பொறுப்பு அளிக்கப்படக்கூடிய ஆபத்து எப்பொழுதும் இருந்து வருகிறது. ஆவிக்குரிய காரியங்களில் உலகீய கொள்கைகள் வழி நடத்துவதற்கு இடங்கொடாதபடி நாம் எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாக நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பொய்யான ஞானத்தை லௌகீக **சம்பந்தமானது, ஜென்ம சுபாவத்துக்குரியது, பேய்த்தனமானது** என்று யாக்கோபு பெயரிட்டு அழைக்கிறார். இந்த மூன்று பெயருரிச் சொற்களிலும் கீழ்நோக்கிய வளர்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. லௌகீக சம்பந்தமானது என்னும் சொற்றொடர் இந்த ஞானம் விண்ணகத்திலிருந்து வரவில்லை என்றும், மாறாக பூமியிலிருந்து தோன்றியது என்றும் பொருள்படும். **ஜென்ம சுபாவத்துக்குரியது** என்பது, இது பரிசுத்த ஆவியின் கனி அல்ல என்பதையும், மனிதனுடைய தாழ்ந்த இயல்பேயாகும் என்பதையும் குறிக்கிறது. **பேய்த்தனமானது** என்னும் சொல், மனிதர்களுடைய நடத்தைக்கு மாறாக, செயல்கள் யாவும் பேய்களுடைய நடத்தையைப் பிரதிபலிக்கின்றன என்று பொருள்படும்.

3:16 வைராக்கியத்தையும் விரோதத்தையும் (தன்னலம் நாடுதல்) நீங்கள் காண்கிற போதெல்லாம், அங்கு கலகம், இணக்கமின்மை, இன்ன பிற துர்ச்செய்கைகள் யாவும் காணப்படும். இது எத்தனை உண்மையாயிருக்கிறது! இன்றைய நாட்களில் உலகத்தில் அமைதியின்மையும் போராட்டமும் நிலவுகிறதை எண்ணிப்பாருங்கள். மெய்யான ஞானத்தை மனிதன் நிராகரித்து, புத்திசாலித்தனம் என்று தான் கருதுகிறபடி அவன் தன்னுடைய சொந்த வழியில் செல்வதற்கு இதுவே காரணம்!

3:17 தேவனிடத்திலிருந்து வருகிற **ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயிருக்கிறது.** எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் அது தாழ்மையுடையதாயிருக்கிறது. உபதேசத்திலும் நடைமுறையிலும், விசுவாசத்திலும் நன்னெறியிலும் அது அப்பழுக்கற்றதாயிருக்கிறது. அது **சமாதானமானதாகவும்** இருக்கிறது. ஞானமுள்ள மனிதன் சமாதானத்தை விரும்புகிறான், மேலும் தூய்மையைத் தியாகம் பண்ணாமல் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கானவற்றைச் செய்கிறான் என்பதே இதன் எளிமையான பொருள். ஒரு குறுகலான பாலம், கீழே வெள்ளம் பெருக்கெடுத்தோடும் ஆறு, பாலத்தில் எதிரெதிராகச் செல்லும் இரண்டு வெள்ளாடுகள், திருவாளர் லுத்தர் உரைத்த கதை இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு. அவை திரும்பிச் செல்ல முடியாது, சண்டைபோடவும் துணிவில்லை. "சிறிது நேரப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, அவற்றில் ஒன்று கீழே அமர்ந்தது, மற்றதோ முதல் ஆட்டின் மேல் ஏறிச்சென்றது, இரண்டிற்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இதிலிருந்து நாம் அறிகிற நன்னெறி, மிக எளிது: உங்களுடைய ஆளுமை சமாதானத்தின் பொருட்டு ஏறி மிதிக்கப்பட்டால் மனவமைதி அடையுங்கள்; உங்களுடைய ஆளுமை, நான் கூறுகிறேன், உங்களுடைய மனசாட்சி அல்ல" என்கிறார் லுத்தர். மெய்யான ஞானம் **சாந்தமும்** நீடிய பொறுமையுமுள்ளது. மற்றவர்களை அடக்கி ஆர்ப்பரிக்கிறதில்லை; மரியாதையுடன் நடந்துகொள்கிறது, பண்பற்றதல்ல. ஞானமுள்ள மனிதன் நற்பண்புள்ளவன், பிறருடைய உணர்வுகளை மதிக்கிறவன். "முரட்டுத்தனம், ஏளனமாய் நடத்தல், கடுமையாகப் பதிலுரைத்தல், வேதனை தரும்படியான பேச்சு இவை எதுவும் ஆறுதலளிப்பவராகிய கர்த்தரின் கனிவான போதகங்களில் கூறப்படும் பொதுவான பண்புகளில் இல்லை."

அடுத்த நற்பண்பு **இணக்கமுள்ளதாயிருத்தல்**. சமரசத்திற்கு இணங்குபவர், அணுகத்தக்கவர், காரண காரியங்களுக்குச் செவிமடுப்பவர், சத்தியம் அவ்வாறு கூறுமானால் விட்டுக்கொடுக்க ஆயத்தமானவர் என்பதே இதன் பொருளாகும். எதற்கும் பணியாத, பிடிவாதமான என்பவை இதன் எதிர்மறையாகும். பரத்திலிருந்து வருகிற ஞானம் **இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாக** இருக்கிறது. தவறான நிலையில் இருப்பவர்களுக்கு உதவிபுரிந்து அவர்களை நல் வழிப்படுத்துவற்கு அது **இரக்கத்தால் நிறைந்திருக்கிறது.** அது பரிவும் தயவும் உடையது. அதில் பழிவாங்கும் எண்ணம் இல்லை, மரியாதை இல்லாமல் நடந்துகொள்ளும்போது அது மனிதாபிமானத்துடன் நடந்துகொள்கிறது. அது **பட்சபாதமில்லாதது,** அதாவது, யாருக்கும் அது தனிச்சலுகை காட்டுகிறதில்லை. பிறரிடம் நடந்து

கொள்ளும் முறையில் எந்தப் பாகுபாடும் இல்லை. இறுதியாக, மெய்யான ஞானம் **மாயமற்றதாயு மிருக்கிறது.** அது கபடற்றதும் உண்மைத் தன்மையும் உடையது. அது உண்மையில் எந்த நிலையில் இருக்கிறதோ அதை விடுத்து, மேலான நிலையில் இருப்பதுபோல நடிப்பு மெய் யான ஞானத்தில் இல்லை.

நாம் இப்பொழுது இங்கு சொல்லப்பட்டுள்ள பண்புகளை ஒன்றுகூட்டி இரண்டு மனிதர்களை உருவகப்படுத்திக் காணலாம் - முதலாவது மெய் யான ஞானமுள்ளவன், மற்றவன் தவறான ஞான முடையவன். மெய்யான ஞானவான் உண்மை யாகவே தாழ்மையோடு இருக்கிறான். தன்னைக் காட்டிலும் அவன் பிறரை மேன்மையாகக் கருது கிறான். அவன் தற்புகழ் பாடி செருக்குடன் நடந்து கொள்வதில்லை, பிறருடைய இக்கட்டான சூழ் நிலையில் அவர்களது மனஇறுக்கத்தைத் தளர்த்த உடனடியாகச் செயல்படுகிறான். தன்னைச் சுற்றி லும் இருக்கும் உலகத்தைப்போல அவனுடைய நடத்தை இருப்பதில்லை, அது வேற்று உலகத் தைச் சார்ந்ததாயிருக்கிறது. அவன் தன்னுடைய சரீரத்திற்காக வாழாமல், ஆவிக்காக வாழ்கிறான். அவன் தன்னுடைய சொற்களாலும் செயல்களா லும் கர்த்தராகிய இயேசுவைப் பிறர் நினைக்கும் படி செய்கிறான். அவனுடைய வாழ்க்கை தூய்மை யோடு இருக்கிறது. நன்னெறியிலும் ஆவிக்குரிய நிலையிலும் அவன் தூய்மையோடு இருக் கிறான். மேலும் அவன் சமாதானப் பிரியனாய் இருக்கிறான். அவமானத்தையும் தவறான குற்றச் சாட்டையும் அவன் சகித்துக்கொள்கிறான், எதிர்த்துச் சண்டை போடுவதில்லை, அவன் தன்னை நியாயப்படுத்துவதற்காக எந்த முயற்சி யும் செய்வதில்லை. அவன் நற்பண்புள்ளவன், மென்மையான நடத்தையுள்ளவன், இளகிய மனதுடையவன். காரணங்களை எடுத்துரைக்கும் போது எளிதில் ஏற்றுக்கொள்கிறவன், பிறருடைய கருத்து என்னவென்று அறிவதற்கு விரும்புகிறான். அவனுக்குப் பழிவாங்கும் எண்ணம் உண்டாவ தில்லை, தனக்கு எதிராகத் தவறிழைத்தவர்களை மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறான். அதுமட்டு மின்றி அவன் வழக்கமாகப் பிறரிடம் அதிலும் குறிப்பாகத் தகுதியற்றவர்களிடம் அதிக தய வோடு நடந்துகொள்கிறான். மேலும் எல்லோ ரிடத்திலும் ஒரேவிதமாக நடந்துகொள்கிறான், யாருக்கும் தனிச்சலுகை காட்டுகிறதில்லை. செல்வந்தரும் வறியவரும் ஒரே விதமாக நடத்தப் படுகிறார்கள், உயர்குடி மக்களுக்கு சாதாரண மக்களைக் காட்டிலும் முன்னுரிமை கொடுக்கப் படுவதில்லை. இறுதியாக, அவன் மாய்மாலக் காரன் அல்ல. அவன் பேசும்போது வேறு அர்த் தம்கொள்ளும்படி சிலேடையாகப் பேசுவதில்லை. அவன் முகஸ்துதி செய்கிறதை உங்களால் கேட் கவே முடியாது. அவன் எப்பொழுதும் உண் மையே பேசுகிறான், ஒருபோதும் முகமூடி அணி வதில்லை.

உலக ஞானம் உள்ள மனிதன் இவ்வாறு நடந்துகொள்வதில்லை. அவனுடைய இருதயம் பகையினாலும் போட்டி மனப்பான்மையினாலும் நிறைந்திருக்கிறது. அவன் தன்னைத்தானே வளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்னும் எண் ணத்தினால் போட்டி உண்டாகும்போது அவனால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவனுடைய நடத்தையில் மேன்மைபாராட்டக் கூடியது எதுவுமில்லை; அது இந்த உலகத்தைக் காட்டிலும் மேலே எழுந்து செல்வதில்லை. அவன் தனது சுபாவ இச்சைகளை நிறைவு செய்வதற் காக வாழ்கிறான். அது விலங்குகள் செய்வது போலவே இருக்கிறது. அவனுடைய நடவடிக்கை கள் கொடூரமானதாகவும், நயவஞ்சகமானதாக வும், பேய்த்தனமானதாகவும் இருக்கின்றன. அவ னுடைய அலங்கார ஆடைக்குள்ளே தூய்மை யற்ற வாழ்க்கை குடிகொண்டிருக்கிறது. அவனு டைய சிந்தனை வாழ்க்கை மாசுபடிந்தது, ஒழுக் கம் சீர்கெட்டது, பேச்சு தூய்மையற்றது. அவ னுடன் உடன்படாதவர்களுடன் அல்லது எதிர்த் துப் பேசுகிறவர்களுடன் சண்டைபோடுகிறான். வீட்டிலும், அலுவலகத்திலும், சமுதாயத்திலும் அவன் இடைவிடாமல் சச்சரவு செய்கிறான். அவன் கடுமையாகவும், ஆணவப்போக்குடன் நாகரிக மில்லாமலும், பண்பற்ற நிலையிலும் செயல்படு கிறான். அவனிடத்திற்கு மக்கள் எளிதில் செல்ல முடியாது, பிறரிடம் அவன் நெருங்கிப் பழகுவ தில்லை. அவனிடத்தில் காரணங்களை எடுத் துரைப்பது என்பது முடியாத செயல். அவன் ஏற் கனவே தன்னுடைய மனதில் தீர்மானம் செய் திருப்பான், அவனுடைய கருத்துகளில் மாற்றத் திற்கு இடமில்லை, அவன் மன்னிப்பதில்லை, பழிவாங்கும் இயல்புடையவன். ஒருவன் தவறி ழைத்ததைக் கண்டுபிடிப்பானானால், சற்றேனும் இரக்கம் காட்டமாட்டான். அதற்கு மாறாகப் பழிச் சொற்களை வாரியிறைத்து, மரியாதையைக் கெடுத்து, சிறுமைத்தனமாக நடந்துகொள்வான். மற்றவர்களால் தனக்கு எந்த அளவிற்குப் பயன் உண்டு என்பதற்கு ஏற்ப அவன் அவர்களை மதிப்பிடுவான். அவர்களால் எந்தப் பயனும்

இல்லை என்று அறிந்தவுடன், அவர்களைக் குறித்த அக்கறையில்லாதவனாகச் செயல்படுவான். இறுதியாக, அவன் இருமுகமுள்ளவனாகவும் நேர்மையற்றவனாகவும் இருக்கிறான். அவனுடைய சொற்களையும் செயல்களையும் குறித்து உங்களால் உறுதியுடன் இருக்கமுடியாது.

3:18 "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" என்னும் சொற்களுடன் யாக்கோபு இந்த அதிகாரத்தை முடிக்கிறார். இதுகாறும் நாம் எதைக்குறித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்துவந்தோமோ அதற்கும் இனிவரப் போகிற பகுதிக்கும் இடையேயுள்ள தொடர்பை இவ்வசனம் கூறுகிறது. மெய்யான ஞானம் சமாதானத்தின்மேல் பிரியமாயிருக்கிறது என்று நாம் கற்றோம். அடுத்த அதிகாரத்தில் தேவனுடைய மக்களுக்கிடையேயுள்ள கருத்து வேறுபாட்டை நாம் காணவிருக்கிறோம். வாழ்க்கையானது உழவுத்தொழிலுக்கு ஒப்பாயிருக்கிறது என்று இங்கு நாம் நினைவுபடுத்தப்படுகிறோம். உழவன் (சமாதானம் பண்ணுகிற ஞானவான்), தட்ப வெப்ப நிலை (சமாதானம்), அறுவடை (நீதி) யாவும் இங்கு சொல்லப்பட்டுள்ளன. உழவன் நீதியின் கனியை அறுவடை செய்ய விரும்புகிறான். சண்டையும் சச்சரவும் உள்ள சூழ்நிலையில் அது நடக்குமா? இல்லை, அமைதியான சூழ்நிலையில் விதை விதைக்கப்பட வேண்டும். அமைதியான மனநிலை உள்ளவர்களாலேதான் இது செய்யப்பட வேண்டும். நீதியின் கனியானது அவர்களுடைய சொந்த வாழ்க்கையிலும், அவர்கள் யாரிடத்தில் திருப்பணி ஆற்றுகிறார்களோ அவர்களுடைய வாழ்க்கையிலும் அறுவடை செய்யப்படும்.

மீண்டுமாக யாக்கோபு நம்முடைய விசுவாசத்தைப் பரீட்சைக்கு உட்படுத்துகிறார். நம்முடைய அனுதின வாழ்க்கையில் நாம் எத்தகைய ஞானத்தை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கிறோம் என்பதே அவர் இப்பொழுது எழுப்பும் கேள்வி. நாம் நம்மைக் கேட்க வேண்டியவை - "கர்த்தராகிய இயேசுவுக்குள் இருக்கிற எளிய விசுவாசிகளைக் காட்டிலும், பெருமை பாராட்டுகிற இவ்வுலக மனிதர்களை, நான் அதிகமாக மதிக்கிறேனா?" "யாருக்கு நற்பெயர் கிடைக்கிறது என்பதைக் குறித்து அக்கறைகொள்ளாமல் நான் கர்த்தருக்குச் சேவைபுரிகிறேனா?" "நல்ல பயன் கிடைக்க வேண்டும் என்னும் காரணத்திற்காக கேள்விக்கிடமான வழிமுறைகளை நான் பயன்படுத்துகிறேனா?" "மக்களிடத்தில் செல்வாக்குப் பெறவேண்டும் என்னும் காரணத்திற்காக நான் முகஸ்துதி செய்கிறேனா?" "என்னுடைய இருதயத்தில் பொறாமையும் மனக்கசப்பும் கொண்டிருக்கிறேனா?" "ஏளனமாகவும், வேதனையளிக்கக் கூடிய வகையிலும் நான் கருத்துத் தெரிவிக்கிறேனா?" "என்னுடைய எண்ணத்திலும், பேச்சிலும், செயலிலும் தூய்மையுடையவனாய் இருக்கிறேனா?"

8. பொருளாசை: அதன் காரணமும், அது களையப்படுதலும் [அதி. 4]

ஞானவான் சமாதானப் பிரியனாய் இருக்கிறான் என்று யாக்கோபு சுட்டிக்காட்டினார். இப்பொழுதோ, இறைமக்களுக்கிடையே அவ்வப்போது எழுகிற வருத்தத்திற்குரிய சச்சரவுகளைக் குறித்து அவர் நினைவுகொள்கிறார். இவையாவற்றிற்கும் காரணம் என்ன? மகிழ்ச்சியற்ற குடும்பங்கள் எத்தனையெத்தனை? பிரிவினையால் அல்லலுற்ற சபைகள் எத்தனை? ஒரே நாட்டில் திருப்பணியாற்றும் கிறிஸ்தவ ஊழியர்களுக்கிடையே இத்தகைய கசப்பான பகைமை நிலவுவதற்கான காரணம் என்ன? வெளிநாட்டிற்குச் சென்று ஊழியம் செய்பவர்களுக்கு இடையிலும் அவ்வித நிலைமை காணப்படுவது ஏன்? நாம் சுகபோகமாகவும் செல்வச்செழிப்போடும் வாழ வேண்டும், மற்றவர்களைக் காட்டிலும் மேலான நிலையை அடைய வேண்டும் என்னும் ஆவலை நிறைவு செய்யும் பொருட்டு இடைவிடாமல் முயற்சி செய்கிறோம் என்பதே இதற்கான காரணமாகும்.

4:1-3 கிறிஸ்தவர்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் நடைபெறுகின்றன என்பது வருந்தத்தக்க உண்மையாகும். இந்தப் பத்தியானது விசுவாசிகளுக்குப் பொருந்தாது என்று கூறுவோமானால் இந்தப் பகுதியின் மதிப்பை நாம் இழந்துவிடுகிறவர்களாகக் காணப்படுவோம். இவ்வாறு சண்டைகள் உண்டாவதற்கான காரணம் என்ன? நமக்குள்ளாக எழுகிற தீவிரமான இச்சைகளை நிறைவுசெய்ய வேண்டுமென்று இடைவிடாமல் நாம் போராடுகிறவர்களாக இருக்கிறோம். பொருட்செல்வத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்கிற ஆசை பெரிதாயிருக்கிறது. பேரும்புகழும் பெருக வேண்டுமென்கிற எண்ணமும் இருக்கிறது. சரீரத்தில் சுகபோகத்தை அனுபவிக்க வேண்டுமென்கிற விருப்பம் அளவு கடந்ததாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஆற்றல்மிக்க விருப்பங்கள் எப்பொழுதும் நமக்குள்ளாகச் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நாம் ஒருபோதும் மனநிறைவடை

கிறதில்லை. இன்னும் வேண்டும் என்னும் எண்ணம் மேலோங்கி நிற்கிறது. ஆனாலும் நாம் விரும்பியவை நமக்குக் கிடைக்கவில்லையே என்னும் நினைவினால் தொடர்ந்து மனச்சோர்வடைந்திருக்கிறோம். இன்னும் நிறைவேறவில்லையே என்னும் வாஞ்சையானது, நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதாகத் தோன்றுபவர்களைக் காலின் கீழே போட்டு மிதிக்கும் அளவிற்கு ஆற்றல் உடையதாயிருக்கிறது. **"நீங்கள் கொலைசெய்கிறீர்கள்"** என்கிறார் யாக்கோபு. இந்தச் சொல்லை அவர் பெருமளவு ஓர் உருவகமாகவே பயன்படுத்துகிறார். உண்மையில் நாம் கொலை செய்கிறதில்லை. ஆனால் நம்மில் உண்டாகிற கோபம், பொறாமை, கொடூரமான மனப்பான்மை இவையாவும் கொலையின் முட்டைக்கருவாய் இருக்கிறது.

நாம் **இச்சித்தும்** நமக்குக் **கிடைக்கவில்லை**. மற்றவர்களைக் காட்டிலும் நமக்கு மிகுதியாக வேண்டும், சிறப்பானது வேண்டும் என்று விரும்புகிறோம். அந்த முயற்சியில் நாம் ஒருவரோடொருவர் சண்டையிடுகிறவர்களாகவும் மற்றவர்களை அழித்துப்போடுகிறவர்களாகவும் செயல்படுகிறோம்.

ஜானும் ஜேனும் இப்பொழுதுதான் திருமணம் செய்துகொண்டார்கள். ஜான் ஓரளவு நல்ல வேலையில் இருந்தான், சுமாரான வருமானம். அவர்கள் பங்குபெற்ற சபையில் இருந்த மற்ற இளம் தம்பதிகளின் வீட்டைப் போல நல்ல வீடு வேண்டும் என்று ஜேன் நினைத்தாள். ஜானோ புதிய தரமான கார் ஒன்றை வாங்க வேண்டும் என்று நினைத்தான். வீட்டை நன்கு அலங்கரிக்க வேண்டும், வீட்டுச் சாமான்கள் வேண்டும் என்று ஜேன் விரும்பினாள். இவற்றில் சில பொருட்களைத் தவணை முறையில் வாங்க வேண்டும் என்பதே அவர்களது திட்டம். ஜானின் வருமானமோ இவையெல்லாவற்றிற்கும் போதுமானதாக இல்லை. ஒரு குழந்தையும் பிறந்துவிட்டது. இப்பொழுது செலவு அதிகரித்துவிட்டது, வரவு செலவு முறையற்றுக் காணப்பட்டது. ஜேனின் தேவைகள் கூடிக்கொண்டே சென்றன, ஜான் எரிச்சல் அடைகிறவனாகவும் சீறிவிழுகிறவனாகவும் மாறிவிட்டான். ஜேன் கண்ணீரோடும் புலம்பலோடும் எதிர்த்து நின்றாள். கூடிய விரைவில் அந்த வீடு போர்க்களமாக மாறிவிட்டது. பொருட்கள் மேலுள்ள ஆசை அந்தக் குடும்பத்தை அழித்துக்கொண்டிருந்தது.

வேறு விதமாகவும் இருக்கலாம். ஜேன் பொறாமைப்படக் கூடியவளாக இருக்கிறாள். தன்னையும் ஜானையும் விட வேறொரு தம்பதிகள் சபையில் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதாக அவள் நினைக்கிறாள். கூடிய விரைவில் அந்தப் பெண்ணிடம் மறைமுகமாக இடித்துரைக்கத் தொடங்கிவிடுகிறாள் ஜேன். அவர்களுக்கிடையே இருந்த சண்டை அதிகரித்தபோது, கணவர்களுக்கிடையேயும் சண்டை தொடங்கிவிடுகிறது. அதன் பிறகு உடன் கிறிஸ்தவர்களில் சிலர் ஒரு குடும்பத்தையும் வேறு சிலர் மற்றொரு குடும்பத்தையும் ஆதரிக்கத் தொடங்கினார்கள், சபை பிரிவினையடைந்தது. எல்லாவற்றிற்கும் காரணம் ஒரு பெண் முக்கியத்துவம் பெறவேண்டும் என்னும் இச்சையேயாகும்.

விசுவாசிகளுக்கிடையே சண்டையும் சச்சரவும் ஏற்படுவதற்கான காரணம் என்ன? இன்னும் அதிகமாக வேண்டும், மற்றவர்கள் மீது ஏற்படுகிற பொறாமை ஆகியவற்றிலிருந்து அது வருகிறது. பேராசை, இச்சை, பொறாமை என்று இதற்கு மிகச் சரியாகப் பேரிட்டு அழைக்கலாம். தங்களுடைய இச்சைகளை நிறைவேற்ற வேண்டுமென்னும் விருப்பத்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்னும் நிலைக்கு மக்கள் சென்றுவிடுகிறார்கள். இந்த வழியில் மெய்யான இன்பம் கிடைப்பதில்லை என்பதை அவர்கள் மெதுவாகவே கற்றுக்கொள்கிறார்கள். ஆனால் உணவும் உடையும் போதுமென்கிற மனதே மெய்யான இன்பத்தைத் தரும் (1 தீமோ. 6:8).

இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்குச் சரியான அணுகுமுறை ஜெபமே ஆகும். "வாக்குவாதம் செய்யாதீர்கள், சண்டைபோடாதீர்கள். ஜெபம் பண்ணுங்கள்." "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" என்கிறார் யாக்கோபு. இவற்றை ஜெபத்தில் கர்த்தரிடத்திற்குக் கொண்டுவருவதற்குப் பதிலாக, நம்முடைய சொந்த முயற்சியால் நாம் விரும்புகிறவற்றைப் பெற நினைக்கிறோம். நம்மிடத்தில் இல்லாததை நாம் பெற விரும்பினால் தேவனிடத்தில் கேட்க வேண்டும். நாம் கேட்டும், அந்த ஜெபம் நிறைவேறவில்லை என்றால் அதன் பொருள் என்ன? நம்முடைய நோக்கங்கள் தூய்மையானவை அல்ல என்பதே அதன் பொருள். இந்தப் பொருட்களை நாம் தேவனுடைய மகிமைக்கென்றோ, உடன் மக்களுக்கோ பயன்படுத்த விரும்பவில்லை. தன்னலத்துடன் அனுபவிக்க வேண்டுமென்றே நாம் விரும்பி

னோம். நம்முடைய இயல்பான வேட்கைகளை நிறைவுசெய்ய வேண்டுமென்றே நாம் விரும்பினோம். இப்படிப்பட்ட ஜெபங்களுக்கு விடைதருவதாக தேவன் வாக்குறுதி தரவில்லை.

இந்த மூன்று வசனங்களில் எத்தனை ஆழமான உளவியல் பாடம் நமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது! தேவன் மனிதர்களுக்கு அளித்தவற்றில் அவர்கள் மனநிறைவுடன் இருப்பார்கள் எனில், அதிர்ச்சி தரக்கூடிய சண்டைகளும் குழப்பங்களும் தவிர்க்கப்படும்! நம்முடைய அயலகத்தாரை நாம் நம்மைப்போல நேசிப்போமானால், இன்னும் பொருட்களை ஈட்ட வேண்டும் என்பதைக் காட்டிலும் பகிர்ந்துகொள்வதில் அதிக விருப்பம் கொள்வோமானால், அவற்றால் உண்டாகும் சமாதானம் எவ்வளவு பெரிதாயிருக்கும்! சேர்க்காதீர்கள், துறந்துவிடுங்கள்; பூமியிலல்ல பரலோகத்தில் செல்வத்தைச் சேர்த்து வையுங்கள் என்னும் இரட்சகரின் கட்டளைகளைப் பின்பற்றுவோமானால், எந்த அளவிற்குச் சண்டைகள் நீங்கிப்போகும்!

4:4 உலகப் பொருட்கள் மீது அளவுக்கு மிஞ்சிய ஆசைவைப்பது ஆவிக்குரிய விபசாரம்' என்று யாக்கோபு குற்றஞ்சாட்டுகிறார். தம்மை முதலாவது நேசிக்க வேண்டும், எல்லாவற்றுக்கும் முதலாவதாக அவரிடத்தில் அன்புகூர வேண்டும் என்றே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அழிந்து போகிற இவ்வுலகப் பொருட்கள் மீது நாம் ஆசை வைப்பது, நாம் அவருக்கு உண்மையற்றவர்களாக இருப்பதாகக் காணப்படும்.

பிறர் பொருள்மேல் இச்சைகொள்வது ஒரு வகையான சிலைவணக்கமாகும். நாம் பெறவேண்டும் என்று தேவன் விரும்பாதவற்றில் நாம் தீராத ஆவல் கொண்டிருக்கிறோம் என்பதே அதன் பொருளாகும். நம்முடைய இருதயங்களில் நாம் சிலைகளை நிறுவியிருக்கிறோம் என்பது அதன் பொருள். தேவனுடைய சித்தத்திற்கும் மேலாக நாம் உலகபொருட்களை மதிக்கிறோம். ஆகவே பொருளாசை சிலைவணக்கமாகும், சிலைவணக்கம் கர்த்தரிடத்தில் ஆவிக்குரிய நிலையில் உண்மையற்றவர்களாக இருப்பதை வெளிப்படுத்துகிறது.

உலகப்பிரகாரமான வாழ்க்கை **தேவனுக்கு விரோதமான பகை**. இங்கு உலகம் என்று சொல்லப்பட்டிருப்பது நாம் வாழ்கிற பூமி என்னும் கோள் அல்ல, அல்லது நம்மோடு தொடர்புடைய உலக இயற்கையும் அல்ல. மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றை நிறைவுசெய்யும் முயற்சியில் மனிதன் தனக்கென்று நிறுவிய அமைப்பே இங்கு உலகம் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் தேவனுக்கோ அவருடைய குமாரனுக்கோ இடமில்லை. இது உலகத்தின் கலையையோ, பண்பாட்டையோ, கல்வியையோ, அறிவியலையோ, மதங்களையோ குறிப்பதில்லை. இந்த அமைப்பில் கிறிஸ்துவின் திருப்பெயர் வரவேற்கப்படுவதில்லை அல்லது தடையும்கூடச் செய்யப்பட்டுள்ளது. ஏதோ ஒரு சம்பிரதாயத்திற்காக மக்கள் அவருடைய பெயரை நினைப்பதுண்டு. சுருங்கக் கூறின் அது மெய்யான திருச்சபைக்குப் புறம்பேயிருக்கிற மனிதர்களுடைய அமைப்பாகும். இந்த அமைப்பின்மீது வைக்கிற **சினேகம் தேவனுக்கு விரோதமான பகையாகும்.** இந்த உலகமே ஜீவனுக்கும் மகிமைக்கும் கர்த்தராயிருக்கிறவரைச் சிலுவையில் அறைந்தது. அவரை மரணத்திற்குட்படுத்திய செயலில் முக்கிய பங்கு வகித்தது சமய உலகமேயாகும். தங்களுடைய இரட்சகரைக் கொலை செய்த உலகத்தோடு தோளோடு தோள் கொடுத்து நடக்கும்படி விசுவாசிகள் விருப்பம் கொள்வது எண்ணிப்பார்ப்பதற்கும் ஒவ்வாதது!

4:5 இந்த மடலிலேயே 5 -ஆம் வசனம் மிகவும் கடினமானது: **"நம்மிடத்தில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று" வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?**

முதலாவது பிரச்சினை யாதெனில், யாக்கோபு பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டியிருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இந்தச் சொற்கள் பழைய ஏற்பாட்டில் எங்கும் காணப்படவில்லை. தள்ளுபடி ஆகமத்திலும் கூட இச்சொற்கள் இடம்பெறவில்லை. இதற்கு இரண்டு விளக்கங்களை அளிக்கலாம். முதலாவது விளக்கம், இங்கு காணப்படும் சொற்கள் அதேவிதமாகப் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லையென்றாலும், அதுவே திருமறை போதிக்கும் பொதுவான பாடம் என்று யாக்கோபு எடுத்துரைப்பதாகக் கூறலாம். இரண்டாவது தீர்வு RV மொழிபெயர்ப்பில் காணப்படுகிறது. அங்கு இந்த வசனம் இரண்டு கேள்விகளாகப் பிரித்துத் தரப்பட்டுள்ளது: "வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா? நம்மிடத்தில் வாசமாயிருக்கும்படி அவர் தந்த ஆவி எரிச்சலடைய வாஞ்சையாயிருக்குமா?" போட்டி மனப்பான்மையோடும் உலகீய எண்ணத்தோடும் இருக்கிற

மனித ஆவியைக் குற்றப்படுத்துவதற்குத் திரு மறைச் சொற்களை வீணாக்குகிறதில்லை என்ற சிந்தனை இந்த வசனத்தில் அடங்கியிருக்கிறது.

இந்த வசனத்தில் காணப்படும் இரண்டாவது பிரச்சினை, இதன் முதற்பகுதியின் பொருள் என்ன என்பதேயாகும். இங்கு ஆவி என்று குறிப் பிடப்பட்டிருப்பது, (NKJV மொழிபெயர்ப்பில் காணப் படுவது போல[10]) பரிசுத்த ஆவியானவரைக் குறிக் கிறதா அல்லது வெறித்தனமான இச்சையின் ஆவியைக் குறிக்கிறதா என்பதே பிரச்சினை. அது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்குமென்றால், நமக்குள்ளாகக் குடியிருக்கும்படி தரப்பட்டுள்ள ஆவியானவர் இச்சையையும், உள்ளத்தில் பூசலை உண்டாக்கக்கூடிய பொறாமையையும் ஆரம் பித்து வைக்க மாட்டார், மாறாக கிறிஸ்துவினிடம் நாம் முழு பக்தியோடு வைராக்கியம் உள்ளவர் களாக இருக்க வேண்டும் என்னும் சிந்தையையே அவர் வாஞ்சிக்கிறார் எனப்பொருள் கொள்ள வேண்டும். இரண்டாவது பொருளே சரியானது என்றால், அதாவது அது இச்சையையும், பொறா மையையும் உண்டுபண்ணக்கூடிய நமக்குள் ளாகக் குடியிருக்கும் ஆவி என்றால், அதுவே நாம் உண்மையற்றவர்களாக இருப்பது அனைத்திற் கும் காரணமாகும்.

4:6 அவர் அதிகமான கிருபையை அளிக் கிறாரே. விசுவாசியின் முந்தின இயல்பு எவ் வளவு பொல்லாததாக இருக்க முடியும் என்பதை நாம் முதல் ஐந்து வசனங்களில் கண்டோம். மாம்சத்தின் இச்சையோடு நம்முடைய சொந்த பலத் தினால் போரிடும்படியாக நாம் விட்டுவிடப்பட வில்லை என்பதை நாம் இப்பொழுது கற்கிறோம். அவர் அதிகமான கிருபையை அளிக்கிறார் அல் லது தேவையான சமயங்களில் பலத்தைத் தரு கிறார் (எபி. 4:16). உன் நாட்களுக்குத் தக்கதாய் உன் பெலனும் இருக்கும் (உபா. 33:25).

சோர்வுகள் பெருகிய வேளைகளில்
கிருபையைக் கூட்டியே வழங்கினார்,
வேதனை பெருகிய வேளைகளில்
வலிமையைக் கூட்டியே வழங்கினார்,
இன்னல்கள் பெருகிய வேளைகளில்
இரக்கத்தைக் கூட்டியே வழங்கினார்,
சோதனை பெருகிய வேளைகளில்
உளவமைதியைக் கூட்டியே வழங்கினார்.
– ஆனி ஜான்சன் ஃபிலின்ட்

ஏற்ற நேரத்தில் தேவன் கிருபையை வழங்கு கிறார் என்பதை மெய்ப்பிக்க நீதிமொழிகள் 3:34 - ஆம் வசனத்தை மேற்கோள் காட்டுகிறார் யாக் கோபு. ஆனால் இங்கு அது **தாழ்மையுள்ளவர் களுக்கு** வழங்கப்படுகிறது, பெருமையுள்ளவர் களுக்கு அந்த வாக்குறுதி இல்லை என்னும் சிந் தனை சேர்க்கப்பட்டிருக்கிறது. தேவன் பெருமை யுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், ஆனால் நொறுங்கிய ஆவியை அவரால் எதிர்த்து நிற்க முடியாது.

4:7 ஏழு முதல் பத்து வரையிலான வசனங் களில், உண்மையான மனந்திரும்புதலைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டிய ஆறு படிகள் கொடுக்கப்பட்டுள்ளன. பரிசுத்தவான்களுக்கு எதிராக யாக்கோபு கூக்குரலிடுகிறார். குற்றச் சாட்டுகள் என்னும் அம்புகள் நம்முடைய இருத யங்களைப் பிளக்கின்றன. தேவனுடைய அரிய ணையிலிருந்து அவை இடியுடன்கூடிய இன்னல் களாக விழுகின்றன. தேவன் நம்மோடுகூட பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் உணரு கிறோம். அவருடைய வசனங்களுடைய ஆளு கைக்குக் கீழாக நமது இருதயங்கள் பணிந்து கொள்கின்றன. "நாம் என்ன செய்யவேண்டும்?" என்னும் கேள்வியே இப்பொழுது எழுகிறது.

முதலாவது செய்ய வேண்டிய செயல் நாம் **தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க** வேண்டும். அவருக்குக் கீழடங்கினவர்களாக, அவருக்குச் செவிமடுக்க ஆயத்தமானவர்களாக, அவர் சொற் படி நடப்பவர்களாக இருப்பது என்பதே இதன் பொருளாகும். நாம் மென்மையானவர்களாகவும் தவறுக்கு வருந்துகிறவர்களாகவும் இருக்க வேண்டுமேயொழிய, பெருமையுடனும் வணங் காக் கழுத்துடனும் நடக்கலாகாது. அடுத்ததாக நாம் **பிசாசுக்கு எதிர்த்து** நிற்க வேண்டும். அவ னுடைய ஆலோசனைகளுக்கும் சோதனை களுக்கும் நாம் நம்முடைய செவிகளையும் இரு தயங்களையும் அடைத்துக்கொள்வதால் இதைச் செய்கிறோம். மேலும் வேதவசனங்களை ஆவி யின் பட்டயமாகப் பயன்படுத்துவதன் மூலமாக வும் நாம் இதைச் செய்கிறோம். நாம் அவனை எதிர்த்து நிற்போமானால் அவன் நம்மைவிட்டு **ஓடிப்போவான்.**

4:8 அடுத்தபடியாக நாம் தேவனை நெருங்கிச் **சேரவேண்டும்**. இதனை நாம் ஜெபத்தின் மூல மாகச் செய்கிறோம். அவரிடத்திற்கு நாம் துணி வுடனும், நம்பிக்கையுடைய ஜெபத்துடனும்,

நம்முடைய இருதயத்தில் இருக்கிற அனைத்தையும் அறிக்கை செய்கிறவர்களாக வரவேண்டும். இவ்வாறு நாம் அவரிடம் வருகிறபோது, அவர் நம்மிடத்தில் நெருங்கிச் **சேருவார்.** நம்முடைய ஜென்ம சுபாவத்தாலும் உலகீய நிலையினாலும் அவர் நம்மைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறார் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் நாம் அவரை நெருங்கிச் சேருகிறபோது, அவர் நம்மை மன்னித்து முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வருகிறார். நான்காவது படி: **பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். கைகள்** நமது செயல்களையும், இருதயங்கள் நம்முடைய நோக்கங்களையும் விருப்பங்களையும் தெரிவிக்கின்றன. உள்ளான மற்றும் வெளியரங்கமான பாவங்களை அறிக்கை செய்வதாலும் அவற்றை விட்டுவிடுவதாலும் நாம் நம்முடைய **கைகளைச் சுத்திகரிக்கிறோம்** மற்றும் **இருதயங்களைப் பரிசுத்தமாக்குகிறோம். பாவிகள்** என்னும் நிலையில் நாம் நமது தீய செயல்களை அறிக்கை செய்ய வேண்டும்; **இருமனமுள்ளவர்கள்** என்னும் நிலையில் நம்முடைய ஒன்றுக்கொன்று முரணான நோக்கங்களை அறிக்கை செய்ய வேண்டும்.

4:9 அறிக்கை செய்வதோடு, பாவத்திற்கான ஆழ்ந்த வருத்தம் உண்டாக வேண்டும். **நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும் உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது.** நம்முடைய பாவத்தைக் குற்றப்படுத்தும் வகையில் தேவன் நம்மைச் சந்திக்கும்போது, அது அலட்சியமாக இருக்கக்கூடிய நேரமல்ல. மாறாக, அதுவே நாம் நெடுஞ்சாண்கிடையாக அவருக்கு முன்பாக விழுந்து நம்முடைய பாவ சுபாவத்தையும், ஆற்றல் அற்ற நிலையையும், உணர்ச்சியற்ற நிலையையும், கனியற்ற நிலையையும் அறிக்கை செய்து அவற்றிற்காக **துக்கித்து அழவேண்டிய நேரம்.** நாம் நம்மையே தாழ்த்தி, பொருளாசை, உலக நாட்டம், பாரம்பரிய பழக்கவழக்கம் ஆகிய வற்றிற்காகக் கதறி அழவேண்டிய நேரமாகும். நாம் உள்ளான நிலையிலும் வெளியரங்கமான நிலையிலும் தெய்வீக மனந்திரும்புதலின் கனியை வெளிப்படுத்தவேண்டும்.

4:10 இறுதியாக, நாம் **கர்த்தருக்கு முன்பாக** நம்மைத் **தாழ்மைப்படுத்த** வேண்டும். நாம் அவருடைய திருவடி முன்னிலையில் நமக்குத் தகுதியான மண்ணை நமது இடமாக எடுத்துக் கொள்வோமென்றால், அவர் ஏற்ற காலத்தில் நம்மை **உயர்த்துவார்.**

கர்த்தர் நம்முடைய நிலையை நமக்கு வெளிப் படுத்திக் காட்டும்போது, செய்யவேண்டிய பதிற் செயல் இதுதான். ஆயினும் பெரும்பாலான நேரங்களில் அவ்வாறு நடப்பதில்லை. சில வேளைகளில், எடுத்துக்காட்டாக, நாம் சபைக் கூட்டங்களில் அமர்ந்திருக்கும்போது தேவன் நம்முடைய இருதயங்களோடு சத்தமாகப் பேசுகிறார். அந்தத் தருணத்தில் நாம் ஏவப்பட்டவர்களாக, நல்ல தீர்மானத்தால் நிறையப்படுகிறோம். ஆனால் கூட்டம் முடிவடைந்த பிறகு, எல்லோரும் கவலையற்றபடி சாதாரண விஷயங்களைக் குறித்து உற்சாகமாகப் பேசத்தொடங்குகிறோம். தேவ சமுகத்தில் கூட்டம் நடைபெற்றது என்ற எண்ணம் கலைந்து செல்கிறது, அதனுடைய ஆற்றலும் குன்றிப்போகிறது, தேவனுடைய ஆவி அவிக்கப்படுகிறது.

4:11,12 அடுத்தபடியாக, ஒரு சகோதரனுக்கு எதிராக விரோதமாய்ப் பேசுகிற செயலைக் குறித்து, அதாவது குறைகூறுகிற பாவத்தைக் குறித்து யாக்கோபு விவரிக்கிறார். மற்றவர்களை நாம் குறைகூறுவதற்கு முன், நாம் மூன்று கேள்விகளுக்கு விடை கூறவேண்டும் என்று ஒருவர் ஆலோசனை தந்திருக்கிறார். உங்களுடைய சகோதரருக்கு அது என்ன நன்மையை உண்டாக்கும்? அதன் மூலம் உங்களுக்கு என்ன நன்மை உண்டாகும்? அதில் தேவன் என்ன மகிமை அடைவார்?

அன்பைக் குறித்த ராஜரிகப் பிரமாணம், நாம் நம்முடைய அயலகத்தாரை நம்மைப்போல நேசிக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆகவே ஒரு சகோதரனுக்கு **விரோதமாகப் பேசுவது** அல்லது அவருடைய நோக்கத்தைக் குற்றப்படுத்துவது அந்தப் பிரமாணத்துக்கு எதிராகப் பேசுவதாகவும், அந்தப் பிரமாணம் பயனற்றது என்று கூறுவதாகவும் கருதப்படும். ஒரு பிரமாணத்தை அறிந்து மனப்பூர்வமாக மீறுவது அதனை அவமதிப்பதாகவும் வெறுப்பதாகவும் காணப்படும். அந்தப் பிரமாணம் நல்லதல்ல, அதற்குக் கீழ்ப்படிவதில் எந்தப் பயனுமில்லை என்று சொல்லுவதற்கு அது ஒப்பாகும். “அதற்குக் கீழ்ப்படியாத ஒருவர், ஏறக்குறைய அது பிரமாணமாக இருக்கக்கூடாது என்று சொல்லுகிறார்.” ஒரு சகோதரனுக்கு விரோதமாகப் பேசுகிறவர், தான் நியாயந்தீர்க்கப்பட வேண்டியவர் என்றல்ல, தான் ஒரு **நியாயாதிபதி** என்ற விநோதமான பதவியை எடுத்துக்

கொள்கிறார். அவர் பிரமாணத்துக்குக் கீழ் அல்ல, அதைக் காட்டிலும் மேலானவர் என்னும் நிலை யைத் தனக்கு ஏற்படுத்திக் கொள்கிறார். ஆனால் தேவன் ஒருவரே பிரமாணத்தைக் காட்டிலும் மேலானவர். அவரே அதைத் தந்தவர், அதன்படி நியாயந்தீர்ப்பவரும் அவரே. தேவனுடைய **நியா யாதிபதி**[11] என்னும் பதவியை அபகரித்துக் கொள்கிற அகந்தையுள்ள மனிதனாக யார் இருக்க முடியும்?

4:13 யாக்கோபு அடுத்ததாக, தன்னம்பிக்கை, தேவனின்றி சுயேச்சையாக தற்பெருமையோடு திட்டமிடுதல் என்னும் பாவத்தைக் குறித்து விவ ரிக்கிறார் (வச. 13 -16). தன்னுடைய எதிர் காலத் தைக் குறித்து முழுமையானபடி திட்டமிடுகிற ஒருவனை அவர் உருவகப்படுத்திக் காட்டுகிறார். கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் காண்க. அவன் நேரத்தைக் குறித்தும் (இன்றைக்கு அல் லது நாளைக்கு); ஆட்கள் (நாங்கள்); இடம் (இன்ன பட்டணத்திற்குப் போய்); காலம் (ஒரு வருஷம் தங்கி); செயல் (வியாபாரம்); விளைவு (சம்பாத்தியம் பண்ணுவோம்) ஆகியவற்றைக் குறித்தும் சிந்திக்கிறான். இந்தப் படவுருவில் எது காணப்படவில்லை. அவன் ஒருமுறை கூட தன்னு டைய தொழிலில் தேவனைச் சேர்த்துக்கொள்ள வில்லை. வாழ்க்கையில் எதிர்காலத்தைக் குறித் துச் சில திட்டங்கள் தீட்டவேண்டியது அவசியமே. ஆனால் அவற்றைச் சுய சித்தத்தில் செய்வது பாவமாகும். "நாங்கள் செய்வோம்" அல்லது "நான் செய்வேன்" என்பது பாவத்தின் சாரமாகும். எடுத்துக் காட்டாக, ஏசாயா 14:13,14 -இல் லூசிபர் கூறிய "நான் செய்வேன்" என்னும் சொற்களைக் காணுங்கள்: "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களி லுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னத மானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருத யத்தில் சொன்னாயே."

4:14 நாளை நிச்சயமானதென்று திட்டமிடு வது தவறு. "நாளைக்கு.. என்று சொல்லாதே" (நீதி. 3:28). நாளைக்கு என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியாது. நம்முடைய ஜீவன் கொஞ் சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போன்றது, அதைக் குறித்து நாம் எதையும் வரும் முன் சொல்ல முடியாது" (JBP).

4:15 நம்முடைய திட்டங்கள் எல்லாவற்றிலும் நாம் தேவனைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். மேலும் அவை யாவற்றையும் அவருடைய சித்தத்தின்படியே செய்ய வேண்டும். நம்முடைய எதிர்காலம் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக் கிறது என்பதை உணர்ந்தவர்களாகவே நாம் வாழவும் பேசவும் வேண்டும். **"ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம்"** என்றே நாம் கூறவேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு கூறு வதைக் காண்கிறோம், "தேவனுக்குச் சித்தமா னால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேன்" (18:21). மேலும் அவர் 1 கொரிந்தியர் 4:19 -இல், "கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வருவேன்" என்று கூறினார். சில வேளைகளில் கிறிஸ்தவர்கள் தேவனைச் சார்ந்தவர்களாகத் தாங்கள் இருப்பதைத் தெரி விக்கும் பொருட்டு "D.V" என்னும் எழுத்துகளைப் பயன்படுத்துகிறார்கள். *தேவனுக்குச் சித்த மானால்* என்று பொருள்படும் லத்தீன் மொழிச் சொற்களாகிய *"Deo Volente"* என்னும் சொற் களின் முதல் எழுத்துகளே அவை.

4:16 "இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்" என்று எழுதுகிறார் யாக்கோபு. தங்களுடைய எதிர்காலத்தைத் தற் பெருமையோடுகூடிய திட்டங்களால் கிறிஸ்தவர் கள் தாங்களே தீர்மானிக்கிறார்கள். அவர்கள் சுய நம்பிக்கையில் கர்வம் கொண்டவர்களாக, காலத்திட்டத்தில் இடையூறு எதுவும் நிகழாது என்று நினைக்கிறார்கள். தங்களுடைய எதிர் காலத்தைப் பொருத்தமட்டில் தாங்களே எஜ மானர் என்று எண்ணியவர்களாக அவர்கள் செயல்படுகிறார்கள். **இப்படிப்பட்ட மேன்மை பாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது,** ஏனெனில் அது தேவனை வெளியே விட்டு வந்திருக்கிறது.

4:17 ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும். இந்தப் பகுதியின் பின்னணியில் காணும்போது, **நன்மை செய்தல்** என்பது நம்முடைய வாழ்க்கை யின் ஒவ்வொரு அம்சத்திலும் தேவனை நம்மோடு சேர்த்துக்கொள்ளுதல் என்றும், அவரையே சார்ந்து நமது வாழ்க்கையின் ஒவ்வொரு கணப் பொழுதையும் கழிப்பது என்றும் பொருள்படும். இவ்வாறு செய்ய வேண்டும் என்று அறிந்தும்

அவ்வாறு செய்யத் தவறுதல், நாம் பாவம் செய்வதாகும். அது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இந்தக் கொள்கையானது விரிவான செயல் இலக்கைக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையின் எந்தவொரு பகுதியிலும் நாம் **நன்மை** செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் அதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். எது சரியானது என்று நாம் அறிந்திருப்போமானால், அந்த வெளிச்சத்திற்கு ஏற்றபடி வாழவேண்டியது நமது கடமை. அவ்வாறு செய்யத் தவறுவது தேவனுக்கு எதிரான பாவமாகும். நம்முடைய அயலகத்தாருக்கு எதிரான பாவமாகும், நமக்கே எதிரான பாவமுமாகும்.

நான்காவது அதிகாரத்தில் யாக்கோபு, இச்சை, சண்டை மற்றும் பிறருக்கு விரோதமாகப் பேசுதல் மற்றும் கர்த்தரிடம் ஆலோசனை கேட்காமல் திட்டமிடுவது போன்றவற்றில் நம்மை நாமே சோதித்துப் பார்க்கும்படி செய்கிறார். ஆகவே நாம் கீழ்க்கண்ட கேள்விகளைக் கொண்டு நம்மைச் சோதித்தறிவோம் - இன்னும் அதிகமாக வேண்டும் என்று தொடர்ந்து பேராசை கொண்டவனாக நான் இருக்கிறேனா அல்லது என்னிடத்தில் இருப்பது போதும் என்றிருக்கிறேனா? நம்மைக் காட்டிலும் அதிகமாகச் செல்வம் உடையவர்களைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேனா? நான் ஒரு பொருளை வாங்குவதற்கு முன் ஜெபம் பண்ணுகிறேனா? தேவன் என்னோடு பேசுகிறபோது அவருக்கு என்னை ஒப்புக்கொடுக்கிறேனா அல்லது எதிர்த்து நிற்கிறேனா? என்னுடைய சகோதரருக்கு எதிராக நான் பேசுகிறேனா? கர்த்தரிடம் ஆலோசனை செய்யாமல் நான் திட்டமிடுகிறேனா?

9. செல்வந்தரும் அவர்களுக்கு வரவிருக்கிற மனஉலைவும் (5:1-6)

இந்த மடலில் மிகக் கடுமையானதும் உள்ளத்தை ஊடுருவிச் செல்லக்கூடியதுமான பகுதிகளில் இதுவும் ஒன்று. இங்கு யாக்கோபு செல்வத்தோடு தொடர்புடைய பாவங்களைப் பழித்துரைக்கத் தொடங்குகிறார். இந்தச் சொற்கள் சுத்தியலால் அடிக்கப்பட்ட அடிகளைப் போல விழுகின்றன. இதில் ஒளிவு மறைவில்லை, கடுமையான முறையிலும் இப்பகுதி உரைக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்த வசனங்கள் அடிக்கடிப் பிரசங்கம் பண்ணப்படுவதில்லை, அந்த அளவிற்கு இப்குதியில் காணப்படும் குற்றச்சாட்டுகள் மிகக் கடுமையானவையாக இருக்கின்றன.

சமுதாய நீதியின் பிரதிநிதியாக யாக்கோபு செயல்படுகிறவராக இங்கு காணப்படுகிறார். மனுக்குலத்தின் தேவையறிந்து அவற்றை நிவர்த்திசெய்து துயர்தணிப்பதற்குச் செல்வந்தர்கள் தங்களுடைய செல்வத்தைப் பயன்படுத்தத் தவறுகிறார்கள், அதற்கு எதிராக யாக்கோபு கூக்குரலிடுகிறார். தங்களுடைய வேலையாட்களைத் தன்னல நோக்கத்துடன் சாதகமாய்ப் பயன்படுத்துகிறவர்களை அவர் குற்றப்படுத்துகிறார். அவர்கள் தங்களுடைய சுகபோக வாழ்க்கைக்காகவும், சுய வேட்கைகளை நிறைவு செய்வதற்காகவும் செல்வத்தைச் செலவு செய்வதைக் கண்டனம் செய்கிறார். இறுதியாக, நீதிமான்களை ஒடுக்கி, செருக்குமிக்க வகையில் செல்வந்தர்கள் வாழ்கிறார்கள் என்பதை யாக்கோபு படவுருவில் வரைந்து காட்டுகிறார்.

5:1 ஐசுவரியவான்கள் கூடிய விரைவில் அனுபவிக்கப் போகிற **நிர்ப்பந்தங்களின்** காரணமாக **அலறி அழ** வேண்டும் என்று யாக்கோபு அவர்களை முதலாவது அழைக்கிறார். வெகு விரைவாக அவர்கள் தேவனைச் சந்திக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் அவமானத்தாலும் மன உலைவினாலும் நிறைந்திருப்பார்கள். அவர்கள் உண்மையற்ற உக்கிராணக்காரராகச் செயல்பட்டார்கள் என்பதை அப்பொழுது அறிந்து கொள்வார்கள். அவர்கள் இழந்துபோன வாய்ப்புகளை எண்ணி அழுவார்கள். அவர்கள் தங்களுடைய பொருளாசையைக் குறித்தும் சுயநலத்தைக் குறித்தும் வருத்தமடைவார்கள். நேர்மையற்ற தொழில் முறைகளைக் கைக்கொண்டதைக் குறித்து அவர்கள் குற்றவுணர்வு அடைவார்கள். கர்த்தரிடத்தில் பாதுகாப்பை நாடாமல் பொருட்செல்வத்தில் பாதுகாப்பை நாடிய செயல் பாவம் என்பதை அவர்கள் கண்டுகொள்வார்கள். தங்களுடைய நிறைவுக்காக அவர்கள் செய்த எல்லாத் தவறுகளையும் எண்ணி அவர்கள் வெந்நீரைக் கண்ணீராக வடிப்பார்கள். ஐசுவரியவான்கள் செய்யக்கூடிய முதன்மையான நான்கு பாவங்களை யாக்கோபு குறிப்பிடுகிறார்கள். முதலாவது பாவம் அவர்கள் செல்வத்தைக் குவிப்பது ஆகும்.

5:2 “உங்களுடைய விலைமிகுந்த பொருட்கள் அழிந்துபோகின்றன. நீங்கள் சேர்த்து வைத்திருக்கிற ஆடைகள் பொட்டரித்துப் போகின்றன. உங்களுடைய பொன்னும் வெள்ளியும் ஒளிமங்கிப் போகின்றன. அவ்வாறு அவை ஒளிமங்கிப் போவதே, உங்களுடைய சொத்துக் குவிப்பு பொல்லாதது என்பதற்குச் சான்றாக விளங்குகிறது. அவை அக்கினியால் சிவந்த உலோகத்தைப் போன்று இருக்குமானால், நீங்கள் எப்படிச் சுருங்கிப் போவீர்களோ அவ்வாறு

சுருங்கிப்போவீர்கள் என்ற யாக்கோபு கூறுகிறார் (JBP)

செல்வந்தராயிருப்பது பாவம் என்று திருமறை ஒருபோதும் சொல்லவில்லை. எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் பெரிய சொத்தை வாரிசு உரிமை யாக ஒரே நாளில் பெறக் கூடும், அவ்வாறு அவன் செல்வந்தனான செயலில் ஏதொரு பாவத்தையும் செய்யவில்லை. ஆனால் செல்வத்தைக் குவித்து வைப்பது பாவம் என்று வேதம் கற்பிக்கிறது. இவ் வாறு சொத்துக் குவிப்பு செய்வதைக் கர்த்த ராகிய இயேசு வெளிப்படையாகத் தடை செய்தி ருக்கிறார். "பூமியிலே உங்களுக்குப் பொக்கி ஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங் களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சி யாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங் கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" என்று அவர் கூறினார் (மத். 6:19-21).

ஐசுவரியத்தை யாக்கோபு நான்கு வகை களாகக் கூறுகிறார்: **ஐசுவரியம், வஸ்திரங்கள்,** பொன், வெள்ளி. வேதாகமக் காலத்தில் செல் வமானது தானியங்கள், எண்ணெய் மற்றும் பல உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களால் மதிப்பிடப் பட்டது. அவையாவன வஸ்திரங்கள், பொன், வெள்ளி. **"உங்களுடைய ஐசுவரியம் அழிந்து போயிற்று"** என்று யாக்கோபு கூறுகிறபோது தானியங்கள் புழுவைத்துவிட்டன, எண்ணெய் நாற்றமெடுத்துவிட்டது என்னும் பொருளிலேயே பேசினார். அவை கெட்டுப்போகும் காலம் வரையிலும் சேர்த்து வைக்கப்பட்டன என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்து. பசியுற் றோருக்கு அந்தத் தானியங்களை முன்னமே உணவாகக் கொடுத்துப் பயன்படுத்தியிருக் கலாம். இப்பொழுதோ அவற்றிற்கு எந்த மதிப்பும் இல்லை. **"உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித் துப் போயின"** என்று அவர் கூறுகிறார். தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தால் ஆடைகளுக்கு இந் நிலை ஏற்படாது, ஆடைகள் வைக்கும் அலமாரி யில் இடம் போதாதபடி அவை அடுக்கி வைக்கப் பட்டிருப்பதால் அவற்றை அவ்வப்போது பயன் படுத்த இயலாமல் போய்விடும். அப்பொழுது அவை பொட்டரித்துக் கெட்டுப்போகக்கூடிய நிலை ஏற்படும். இவ்வுலகில் தேவையுள்ள மனிதர்கள் எத்தனையோ பேர் இருக்கும் கால கட்டத்தில் உடைகளை இவ்வாறு சேர்த்துவைப் பது நீதியின் அடிப்படையில் தவறான செயல் என்று யாக்கோபு குறிப்பிடுகிறார்.

5:3 உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப் பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினி யைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் என்று அவர் தொடர்கிறார். பொன்னும் வெள்ளி யும் துருப்பிடிப்பதில்லை, ஆனால் அவற்றின் ஒளியும் நிறமும் மங்கிப்போகும். மேலும் அவற்றை வைக்கக்கூடிய இடம் ஏற்றதாக இல்லாதிருந் தால், நாம் எண்ணிப்பார்க்கும்போது அவை துருப்பிடித்தது போலவே தோன்றும். பசியுற்றோ ருக்கு உணவளித்து, திக்கற்றோருக்கு ஆடை கள் வழங்கி, நோயுற்றோருக்கு மருத்துவ உதவி செய்து, நற்செய்தியைப் பரப்பி அந்தப் பணத் தைச் செலவு செய்வதற்குப் பதிலாகச் செல்வந் தர்கள் தங்களுடைய பிற்கால வாழ்க்கைக்காகச் சேமித்துவைக்கிறார்கள். அது ஒருவருக்கும் பயன்படுவதில்லை, அது அழுகிக்கெட்டுப் போகிறது.

துருப்பிடித்தல் பயனற்று மக்கிப்போவதைக் குறிக்கிறது. செல்வந்தர்களுக்கு எதிராக ஆக்கி னைக்குரிய சாட்சியாக அது காணப்படுகிறது. இந்தச் சாட்சி யாக்கோபின் காலத்தில் வாழ்ந்த செல்வந்தர்களைக் குறித்து உண்மையானால், நம்முடைய நாட்களில் உள்ள விசுவாசிகளைக் காணும்போது இது எவ்வளவு பெரிய உண்மை யாக விளங்கும்? நற்செய்தியைப் பரப்புவதற் கான பணவளம் நம்மிடத்தில் இருந்தும் அதை நாம் பயன்படுத்தத் தவறினால் நமக்கு வரக்கூடிய ஆக்கினை எப்படிப்பட்டதாக இருக்கும்? ஆத்து மாக்கள் இரட்சிக்கப்படுவதற்காகப் பயன்பட வேண்டிய பொருட்செல்வத்தைச் சேர்த்துவைப் பதால் என்ன பயன்? அவை **துருப்பிடித்து... அக்கினியைப் போல உங்கள் மாம்சத்தைத் தின்னும்** என்னும் சொற்றொடரின் பொருள் என்னவெனில், பிறருடைய நலம் கருதி அவர்கள் தங்கள் செல்வத்தைப் பயன்படுத்தவில்லை யென்றால் அது அவர்களுக்குக் கடுமையான பாடுகளையும் மனஉலைவையும் உண்டாக்கும் என்பதே. (விலைமிக்க நகைகள், ஆடம்பரமான உடைகள், வசதிகள் மிகுந்த வீடுகள், சொகுசுக் கார்கள்) இவை போன்றவற்றின்மேல் மோகங் கொண்டு சுயநலத்துடன் வாழ்கிற கொடுமை யைக் காண அவர்களுடைய கண்கள் இறுதியில்

திறக்கப்படும்போது அது வெந்த புண்ணின் அனுபவமாகவும் சுட்டெரிக்கும் அனுபவமாகவும் இருக்கும்.

5:4 இரண்டாவதாக, முறையான ஊதியம் தராமல் செல்வத்தைச் சேமித்து வைக்கும் பாவத்தை யாக்கோபு இப்பொழுது தாக்குகிறார். **வயல்களை அறுத்த வேலைக்காரர்களுக்கு** உரிய சம்பளம் மறுக்கப்பட்டது. வேலையாட்கள் எதிர்த்துச் செயல்பட்டிருப்பார்கள், ஆயினும் அவர்களுடைய குறை தீர்க்கப்படாமல் உதவியற்றவர்களாகவே இருந்திருப்பார்கள். அவர்களுக்காக முறையிட்டு வெற்றி பெற்றுத்தரக்கூடியவர்கள் இந்த உலகத்தில் ஒருவரும் இருந்ததில்லை. ஆனாலும், அவர்களுடைய **கூக்குரல் சேனைகளின் கர்த்தரால்** கேட்கப்பட்டது. விண்ணக சேனைகளை ஆண்டு நடத்துகிறவர், இவ்வுலகில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வல்லமையோடு செயல்படுகிறார். சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்து அவர்களுக்காகப் பழிவாங்குவார். இவ்வாறாக, பொருட் செல்வத்தைக் குறித்து வைப்பதை மட்டுமின்றி, நேர்மையற்ற வழிகளில் செல்வத்தைப் பெருக்கிக்கொள்வதையும் திருமறை குற்றமாகத் தீர்க்கிறது. போதுமான அளவு கூலி கொடுக்காதிருக்கும் பாவத்தோடு, தவறாக வருமானவரி அறிக்கை சமர்ப்பித்தல், எடைகளிலும் அளவுகளிலும் ஏமாற்றுதல், உள்ளூர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தல், தவறான விளம்பரம், செலவினங்களை அதிகப்படுத்திக் காட்டுதல் போன்ற பாவங்களையும் யாக்கோபினால் சுட்டிக் காட்டியிருக்க முடியும்.

5:5 அடுத்ததாக, செல்வந்தர்கள் சுகபோகமான வாழ்க்கை நடத்தியது குறித்துப் பழிசுமத்துகிறார். விலைமிக்க நகைகள், ஆடம்பரமான உடைகள், பெருந்தீனி, மாளிகை போன்ற வீடுகள் - எத்தனையோ மக்கள் மிகுதியான தேவையோடு வாழ்ந்து வந்தபோது அவர்கள் தங்களுக்காகவே தங்களுடைய செல்வத்தை ஊதாரித்தனமாக எவ்வாறு செலவு செய்யலாம்? அல்லது இதனை நம்முடைய நாட்களில் நிகழ்கிற செயல்களோடு இணைத்துப் பார்ப்போமானால், கிறிஸ்தவ சபைகளும், கிறிஸ்தவ மக்களும் தங்களுடைய செல்வச் செழிப்பினால் ஊதாரித்தனமாகச் செலவு செய்வதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும் என்னும் கேள்வி எழுகிறது. ஒவ்வொரு நாளும் பட்டினியால் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்துபோகிற காலத்தில் வாழ்கிறோம். இவ்வுலக மக்கள் தொகையில் பாதிப்பேர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டதே இல்லை. இப்படிப்பட்ட உலகில் வாழ்கிற நாம் பந்தயக் கார், சுகபோக வசதிகள் கொண்ட கார், உல்லாசப் படகுகள் இவற்றையெல்லாம் எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? கர்த்தருடைய பணத்தைச் செலவுமிக்க விடுதிகளிலும், உயர்தர உணவகங்களிலும், சொந்த இன்பத் தோய்வுகளிலும் நாம் செலவு செய்யலாமா? திருமறை கற்பிக்கும் தெளிவான போதனைகள், இந்த உலகத்தின் பெருமளவு தேவைகள், இரட்சகரின் எடுத்துக்காட்டு, இரக்கத்தை ஊக்குவிக்கும் எளிமையான உள்ளுணர்வு இவையாவும் நற்செய்தியை இதுவரை கேட்டிராத ஓர் ஆத்துமா இன்னும் உலகத்தில் இருக்கிறது என்னும் காலம் மட்டும் வசதியோடும் சுகபோகமாகவும், எந்தக் கவலையுமின்றி நாம் வாழ்வதைத் தவறு என்று நமக்கு போதிக்கின்றன.

சம்பிரமமாயும் எவ்விதக் கட்டுப்பாடுமற்ற சுகபோகத்திலும் வாழ்கிற மக்கள், கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல, தங்கள் இருதயங்களுக்கு உணவூட்டி வளர்க்கிறவர்களுக்கு ஒப்பாவார்கள். விலங்குகள் அடிக்கப்படுவதற்கு முன் கொழுக்க வைக்கப்படும், பிறர் அழிந்துகொண்டிருக்கும்போது படைவீரர்கள் தாங்கள் அடித்த கொள்ளைப்பொருளை அனுபவிக்கிறார்கள். இவற்றிற்கு ஒப்பாக இந்த மனிதர்கள் நடந்துகொள்கிறார்கள்.

5:6 அவர்கள் **நீதிமானை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தார்கள்,** ஆனாலும் அந்த நீதிமான் அவர்களோடே **எதிர்த்து நிற்கவில்லை** என்பதே செல்வந்தர்களுக்கு எதிரான கடைசிக் குற்றச்சாட்டு ஆகும். இங்கு சொல்லப்பட்டுள்ள நேர்மையும் நீதியும் உடையவர் கர்த்தராகிய இயேசுவே என்று சிலர் கருதுகிறார்கள். ஆயினும் அவரை மரணத்திற்குட் படுத்தியது மதத் தலைவர்களேயொழிய செல்வந்தர்களல்ல. பொதுவாக கபடற்ற எளிய மக்களையே **நீதிமான்** என்னும் சொல் குறிக்கிறது என்று நினைப்பதே பெரும்பாலும் சரியானதாயிருக்கும். செல்வந்தர்கள் தங்களுக்குக் கீழிருக்கும் மக்களிடத்தில் கடுமையாகவும் ஆணவத்துடனும் நடந்துவந்ததையே யாக்கோபு நினைவுகொள்கிறார். அவர்கள் கபடற்ற எளிய மக்களைத் தவறாகக் குற்றஞ்சாட்டி, கடுமையாகப் பேசி, அச்சுறுத்தி **ஆக்கினைக்குள் தீர்த்தார்கள்**. அவர்கள் அவர்களைக் கொலை செய்

தார்கள், நேரடியாக அல்ல, அதிகமாக வேலை வாங்கி குறைவாகச் சம்பளம் கொடுத்துக் கொலை செய்தார்கள். அந்த எளிய மக்களோ எவ்வித எதிர்ப்பும் செய்யவில்லை. அவர்கள் எதிர்த்துச் செயல்பட்டிருந்தால் மேலும் கொடூரமாக நடத்தி, வேலையைவிட்டுத் துரத்தியிருப்பார்கள்.

10. பொறுமையாயிருப்பதற்கான அறிவுரை (5:7-12)

5:7 இப்பொழுது யாக்கோபு ஒடுக்கப்பட்டு வந்த விசுவாசிகளை நோக்கித் திரும்பியவராக, அவர்கள் **நீடியபொறுமையாய்** இருக்க வேண்டுமென்று உற்சாகப்படுத்துகிறார். **கர்த்தர் வருகிறார்** என்னும் உண்மையே நீடியபொறுமைக்கான செயலூக்கமாக இருக்கிறது. இது விசுவாசிகளைத் தம்மோடு அழைத்துச் செல்லும்படி கர்த்தர் வானில் தோன்றுகிற காட்சியையோ, ஆளுகைபுரியும்படி கிறிஸ்து வருகைபுரியும் நிகழ்ச்சியையோ குறிக்கக் கூடும். இரண்டு நிகழ்ச்சிகளுமே பொறுமையோடு சகித்துக்கொள்வதற்கான செயலூக்கங்களாகப் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பயிரிடுகிறவன் பொறுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறான். அவன் விதைக்கின்ற அதே நாளில் அறுவடை செய்கிறதில்லை. மாறாக நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டும். முதலில் **முன்மாரி** வரவேண்டும், அதன் மூலமாகவே விதை வளரத் தொடங்குகிறது. அதன் பிறகு பருவகாலம் முடிவடைகிறபோது **பின்மாரி** வர வேண்டும். பயிர் விளைந்து முயற்சி பலன்தர அது தேவையாயிருக்கிறது. கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்தில் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதம் பொழிந்தது போல கர்த்தரின் வருகைக்கு முன்னர் மீண்டும் நிகழும் என்பதையே **முன்மாரியும் பின்மாரியும்** என்னும் சொற்றொடர் குறிக்கிறது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனாலும், புதிய ஏற்பாட்டு வசனங்களின் பொதுவான போக்கு அத்தகைய எதிர்பார்ப்பை ஆதரிக்கிறதில்லை. ஆயினும் திடப்பற்றுள்ள மீதியான விசுவாசிகள் தேவனுக்காக, உலகம் முழுவதும் நற்செய்தி பரவவேண்டும் என்னும் நோக்கத்துடன் முழு முயற்சியோடு செயல்படுவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பதை எதுவும் தடை செய்யாது. மீண்டும் வருகிற இரட்சகரை வரவேற்பதில் இதைக் காட்டிலும் சிறந்த வழி உண்டா?

5:8 இந்த பூமியின் தவறுகள் யாவும் கர்த்தர் திரும்பி வரும்போது சரியாக்கப்படும். ஆகவே அவருடைய மக்கள் பயிரிடுகிறவனைப் போல **நீடிய பொறுமையோடு** இருக்க வேண்டும். அவருடைய வருகையைக் குறித்த நிச்சயத்தால் அவர்களுடைய **இருதயங்கள்** உறுதிப்பட வேண்டும்.

5:9 உபத்திரவமும் கடுந்துன்பமும் பெருகியிருக்கிற காலத்தில் அவற்றிற்கு இலக்காகிற மக்கள் ஒருவருக்கொருவர் எதிராக மாறுவது வழக்கத்துக்கு மாறானதல்ல. இடர்ப்பாடுகள் அதிகரிக்கும் வேளைகளில், நாம் யாரிடத்தில் அதிகமாக அன்புபாராட்டுகிறோமோ அவர்களுக்கு எதிராகச் சீற்றம் கொள்வது மனித இயல்பில் ஏற்படக்கூடிய விநோதமான திடீர்த்திருப்பமாக இருக்கிறது. ஆகவேதான், **சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்**[12] என்னும் எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கடுஞ்சோதனைக்கு உட்படுகிற சூழ்நிலைகளில் ஒருமித்து உழைக்கும் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு ஓர் அறிவுரையை இந்த வசனம் கொண்டிருக்கிறது. சீற்றம் அதிகரிப்பதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. **நியாயாதிபதி** ஏற்கனவே **வாசற்படியில் நிற்கிறார்**! நாம் என்ன நினைக்கிறோம் என்பதை அவர் அறிவார். நாம் நமது கணக்கை ஒப்புவிக்கும்படி கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு கூடிய விரைவில் நாம் நிற்கப்போகிறோம். நாம் குற்றந்தீர்க்கப்படாதபடிக்குப் பிறரைக் குற்றந்தீர்க்கக் கூடாது.

5:10 துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக பழைய ஏற்பாட்டுத் **தீர்க்கதரிசிகள்** நம்முன் கொண்டுவரப்படுகிறார்கள். நீடிய பொறுமைக்கு முன்னர் துன்பப்படுதல் வருகிறதைக் கவனியுங்கள். 'உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது" (ரோமர் 5:3). நாம் முன்னர் விளக்கிக் கூறியது போல, புதிய ஏற்பாட்டில் பொறுமை என்னும் சொல் உள வலிமை அல்லது உறுதியுடைமை என்று பொருள்படும். கர்த்தருடைய வார்த்தையை அறிவிப்பதில் தீர்க்கதரிசிகள் உண்மையுள்ளவர்களாக இருந்த காரணத்தால் இரக்கமற்ற முறையில் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். ஆயினும் "அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தான்" என்றாற்போல அவர்கள் இருந்தார்கள் (எபி. 11:27).

5:11 ஏசாயா, எரேமியா மற்றும் தானியேல் போன்ற தீர்க்கதரிசிகளை நாம் பெரும் அளவு

மதிக்கத்தக்கவர்களாகத் திரும்பிப் பார்க்கிறோம். அவர்களுடைய பேரார்வமும் பற்றுறுதியும் கொண்ட வாழ்க்கைக்காக நாம் அவர்களைக் கனப்படுத்துகிறோம். இந்த அர்த்தத்தில் நாம் அவர்களைப் **பாக்கியவான்கள்** என்று அழைக் கிறோம். அவர்கள் முறையாக நடந்துகொண்டார் கள் என்றும், உலகமோ தவறிழைத்தது என்றும் நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆயினும் அவர்கள் மிகப்பெரிய அளவில் சோதனைகளையும் பாடு களையும் எதிர்கொண்டு, அவற்றை நீடிய பொறு மையோடு சகித்தார்கள் என்பதை நாம் நினைவு கூர வேண்டும். நாம் ஆசிர்வதிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், அவர்களைப் போலச் செயல்படுவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் என முடிவு செய்வது பொருத்தமானதாகும்.

யோபு பொறுமைக்கு அல்லது உளவலி மைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக இருக் கிறார். உலக வரலாற்றைக் காணும்போது குறு கிய காலத்தில் யோபுவைப் போல பேரிழப்பைச் சந்தித்த மனிதர்கள் வேறு எவரும் இல்லை. ஆயினும் **யோபு** தேவனைச் சபிக்கவுமில்லை அவரை விட்டு விலகவும் இல்லை. இறுதியில் அவருடைய பொறுமைக்குரிய வெகுமதி அளிக் கப்பட்டது. தேவன் எப்பொழுதும்போல, தம்மை **மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராக** வெளிப்படுத்தினார்.

கர்த்தருடைய செய்கையின் முடிவு என்று யாக்கோபு குறிப்பிடுவதை நாம் அறியவில்லை யென்றால் (கர்த்தர் இறுதியில் நிகழச்செய்கிற செயல் அல்லது விளைபயன்) நாம் தீயவர் களைக் கண்டு பொறாமைகொள்ளும்படி சோதிக் கப்படுவோம். பொல்லாதவர்களின் வளத்தைக் கண்டு ஆசாப் பொறாமைப்பட்டான் (சங். 73:3-17). அவன் எந்த அளவிற்கு அதை நினைத்துக் கொண்டிருந்தானோ, அந்த அளவிற்கு அதிக மாகக் கவலைப்பட்டான். பின்னர் அவன் தேவனு டைய ஆலயத்துக்குச் சென்று, அவர்களுடைய பின் நிலையை அறிந்துகொண்டான். அது அவனு டைய பொறாமை அனைத்தையும் நீக்கியது. தாவீதுக்கும் இதுபோன்ற அனுபவம் இருந்தது. சங்கீதம் 17:15 -இல் இனி வரப்போகிற வாழ்வில் விசுவாசி அடையவிருக்கிற பங்கைக் குறித்து அவன் விளக்குகிறான். இதன் காரணமாக விசுவாசி உறுதியுடன் இருக்க உற்சாகப்படுகிறான். யோபு வின் வாழ்க்கையில் முதலில் இருந்ததைப் போல எல்லாவற்றிலும் இரட்டத்தனையாக தேவன் அவனுக்குக் கொடுத்தார். இதுவே அவனுடைய வாழ்க்கையில் **கர்த்தருடைய செய்கையின் முடிவாக** இருந்தது (யோபு 42:10-15).

5:12 சோதனைக் காலத்தில் ஆணையிடு வதன் மூலம் பொறுமையற்ற தன்மை வெளிப்படு கிறது. இங்கு தெய்வ நிந்தனையோ சபித்தலோ குறிப்பிடப்படவில்லை. அல்லது நீதிமன்றத்தில் சட்டப்படி எடுக்க வேண்டிய ஆணையும் சொல்லப் படவில்லை. ஒருவர் தான் கூறுகிற செய்தியின் உண்மைத்தன்மையை உறுதிசெய்யும்படி எவ் வித முன்யோசனையுமின்றி கர்த்தருடைய திருப் பெயரில் அல்லது வேறொரு பெயரில் சத்தியம் பண்ணும் வழக்கமே தடைசெய்யப்பட்டுள்ளது. கிறிஸ்தவன் எவர் ஒருவர் பேரிலும் அல்லது எதன் பேரிலும் **சத்தியம்** பண்ண வேண்டிய தேவை யில்லை; **வானத்தின் பேரிலும் பூமியின் பேரிலும்** கூட அவன் சத்தியம் பண்ணக்கூடாது. அவன் "ஆம்" என்று கூறினால் அது உண்மையாகவும், அவன் "இல்லை" என்று கூறினால் அது இல்லாத தாகவும் இருக்கும் என்று அவனை அறிந்தவர்கள் அவனிடத்தில் நம்பிக்கை கொள்ளத்தக்க வகை யில் அவனது பேச்சு இருக்க வேண்டும்.

"வானத்தின் நிமித்தம்," "இதில் தேவன் என்னை நியாயந்தீர்க்கட்டும்" என்ற வீணான சொற்களை நாம் கூறக்கூடாது என்னும் தடை யையும் இந்தப் பகுதி எடுத்துரைக்கிறது.

நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படாதபடிக்கு (அல்லது NKJV அடிக்குறிப்பில் உள்ளதுபோல மாய்மாலம் பண்ணாதபடிக்கு[13]) என்று யாக்கோபு மூன்றாவது கற்பனையை நினைவுகூர்ந்தவராகக் கூறுகிறார் போலும்: "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்மு டைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்" (யாத். 20:7).

11. ஜெபமும் நோயுற்றோர் குணமடைதலும் (5:13-20)

இந்த மடலின் இறுதி வசனங்களின் கருத்து ஜெபத்தைப் பற்றியதாகும். அந்தச் சொல், பெயர்ச் சொல்லாகவோ, வினைச்சொல்லா கவோ இந்தப் பகுதியில் ஏழுமுறை பயன்படுத்தப் பட்டுள்ளது.

5:13 நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் கர்த்தரிடத்தில் ஜெபத் தோடு செல்ல வேண்டும். நாம் தொல்லைகளுக் குட்பட்ட காலத்தில் ஊக்கமாக விண்ணப்பம்

செய்தவர்களாக அவரை அணுகவேண்டும். நாம் மகிழ்ச்சியுடன் இருக்கும் வேளைகளில், நாம் நம்முடைய இருதயங்களை அவரிடத்திற்குப் புகழ்ச்சியோடு உயர்த்த வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய மனதின் துயரமான நேரங்களை அவரிடத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

நம்முடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எல்லா நிகழ்வுகளுக்கும் முதலாவது பெருங்காரணராக தேவனை நாம் காணவேண்டும். "இரண்டாவது காரணங்களாகிய சக்கரங்களின் குழப்பமுற்ற சுழற்சி" என்று திருவாளர் ருத்தர்போர்டு அழைத்த காரணங்களை நாம் பார்க்கக் கூடாது. சூழ்நிலைகளுக்கு இலக்காகும்படி நாம் நம்மை அனுமதிப்போமானால் அல்லது சூழ்நிலைகள் மாறும்படி நாம் காத்திருப்போமானால் அது தோல்வியாக மாறிவிடும். அவரேயன்றி வேறு எந்தக் கரத்தையும் நாம் பார்க்கக்கூடாது.

இந்த மடலில், பெரும்பாலும் புதிய ஏற்பாடு முழுவதிலும் மிகவும் அதிகமான அளவு சர்ச்சைக்குள்ளான பகுதிகளில் இதுவும் ஒன்று. இன்றைய நாட்களில் விசுவாசியின் வாழ்க்கையில் நோயினின்று குணப்படுத்தப்படுதல் என்னும் ஆய்வுப் பொருளினிடமாய் நாம் நேருக்கு நேராகக் கொண்டுவரப்பட்டிருக்கிறோம்.

இப்பகுதியில் ஒவ்வொரு வசனத்தையும் விளக்கமாகக் காண்பதற்கு முன்னர், நோய் மற்றும் குணப்படுத்துதல் ஆகியவற்றைக் குறித்துத் திருமறை என்ன கற்பிக்கிறது என்று புனராய்வு செய்வது நன்மைபயக்கும்.

தெய்வீக குணமடைதல்

1. எல்லா நோய்களும், பொதுவாக உலகத்தின் பாவத்தினால் உண்டானவை என்று கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். பாவம் இவ்வுலகத்திற்குள் நுழையாமல் இருந்திருக்குமென்றால், நோய் என்ற நிலையே உண்டாயிருக்காது.

2. சில வேளைகளில் ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையில் பாவத்தின் காரணமாக நோய் உண்டாகிறது. கொரிந்தியரில் சிலர் தங்களுடைய வாழ்க்கையில் செய்த பாவத்தை அவர்களே நியாயந்தீர்க்காமல் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்றதால் நோயுற்றார்கள் என்று 1 கொரிந்தியர் 11:30 -ஆம் வசனத்தில் படிக்கிறோம். அதாவது, அவர்கள் தங்கள் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிடவில்லை.

3. எல்லா நோய்களும் தனிமனிதனுடைய பாவத்தின் விளைவல்ல. மனிதருக்குள் மிகச் சிறந்த நீதிமானாக வாழ்ந்த ஒருவன் யோபு, ஆனாலும் அவன் நோயுற்றான் (யோபு 1:8). தான் செய்த பாவத்தின் காரணமாகப் பிறவிக் குருடன் அந்தத் துயரமான நிலையை அடையவில்லை (யோவான் 9:2,3). கர்த்தருடைய ஊழியத்தில் ஓய்வின்றிச் செயல்பட்டதால் எப்பாப்பிரோதீத்து நோய்வாய்ப்பட்டான் (பிலி. 2:30). காயு ஆவிக்குரிய நிலையில் நலத்துடன் இருந்தான், ஆனால் உடல் நலமின்றி இருந்தான் என்பது தெளிவு (3 யோவான். 2).

4. சில வேளைகளில் பிசாசின் செயல்விளைவாக நோய் உண்டாகிறது. யோபுவின் உடல் முழுவதும் பருக்கள் உண்டாவதற்குச் சாத்தானே காரணமாயிருந்தான் (யோபு 2:7). லூக்கா 13:10-17 -இல் சாத்தான் ஒரு பெண்ணை நிமிரக்கூடாத கூனியாக ஆக்கியிருந்த செயல் குறிப்பிடப்பட்டுள்ளது. "பதினெட்டு ஆண்டுகளாக அந்தப் பெண் சாத்தானால் கட்டப்பட்டிருந்தாள்" (13:16). இதைச் சற்று எண்ணிப்பாருங்கள். பவுலின் சரீரத்தில் பலக்குறைவு உண்டாயிருந்ததற்கு சாத்தானே காரணம் ஆவான். "என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது . . . அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது" என்று அவர் அதைக் குறிப்பிட்டார் (2 கொரி. 12:7).

5. தேவனால் குணப்படுத்த முடியும், குணப்படுத்தவும் செய்கிறார். மிகவும் உண்மையான பொருளில், குணமடைவது அனைத்தும் தெய்வீகச் செயலாகவே இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயர்களில் ஒன்று யெகோவா ரொபீகா - "நான் உன் பரிகாரியாகிய கர்த்தர்" (யாத். 15:26). ஒவ்வொரு தடவை நாம் குணமடையும் போதும் அது தேவனாலே உண்டாயிற்று என்று அறிக்கை செய்ய வேண்டும்.

   குணப்படுத்துவதில் தேவன் வெவ்வேறான முறைகளைப் பயன்படுத்துகிறார் என்பது திருமறையின் மூலமாகத் தெளிவாகத் தெரிகிறது. சரீரத்தின் இயல்பான செயல்பாட்டின் மூலமாக அவர் சில வேளைகளில் குணமாக்குகிறார். நோய்க்குப் பின்னர் வலிமை பெறுவதற்கான ஆற்றலைப் பெருமளவில் அவர் மனிதனுடைய உடலுக்குள்ளாக வைத்திருக்கிறார். பெரும்பாலான நோய்கள் காலை

யில் சரியாகிவிடும் என்பதை மருத்துவர்கள் அறிந்திருக்கிறார்கள். சில வேளைகளில் அவர் மருந்துகள் மூலமாகக் குணப்படுத்து கிறார். "உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சை ரசமும் கூட்டிக்கொள்" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுரை வழங்கினார் (1 தீமோ. 5:23). நோய்களை உண்டாக்கக்கூடிய அச்சம், வன்மம், சுயசார் புடைமை மற்றும் குற்றவுணர்வுகள் எல்லா வற்றிலிருந்தும் விடுவிப்பதன் மூலமாக அவர் சில வேளைகளில் குணப்படுத்துகிறார். நோயுற்றோருக்கு மருத்துவர் தேவையென்று இயேசு கிறிஸ்து வெளிப்படையாகத் தெரிவித் திருக்கிறார் (மத். 9:12). பவுல் லூக்காவைக் குறித்து, "பிரியமான வைத்தியன்" என்று பேசினார் (கொலோ. 4:14). கிறிஸ்தவர் களுக்கு மருத்துவர்கள் தேவை என்பதை இந்தச் சொற்கள் நிச்சயமாக ஒப்புக்கொள் கின்றன. குணமாக்கும் ஊழியத்தில் தேவன் மருத்துவர்களைப் பயன்படுத்துகிறார். "அறு வைச் சிகிச்சை நிபுணன் காயத்தைக் கட்டு கிறான், தேவன் குணமாக்குகிறார்" என்று புகழ் பெற்ற பிரெஞ்சு நாட்டு அறுவைச் சிகிச்சை நிபுணர் பாரே கூறியிருக்கிறார்.

6. ஆனாலும், தேவன் அதிசயமான முறையிலும் குணமாக்குகிறார். நற்செய்தி நூல்கள் இதற் கான பல எடுத்துக்காட்டுகளைக் கொண்டி ருக்கின்றன. தேவன் பொதுவாக இந்த முறை யில்தான் குணமாக்குகிறார் என்று கூறுவது தவறு. இவ்வாறு அவர் குணப்படுத்துவதே இல்லை என்று சொல்ல முடியாது. இன்றைய நாட்களிலும் தேவன் அதிசயமான முறையில் குணமாக்க முடியும் என்பதை நம்பாதிருக் கும்படி செய்ய திருமறையில் எந்தக் குறிப்பும் இல்லை.

7. ஆயினும், எல்லா நேரங்களிலும் குணமாக்கு வது தேவனுடைய சித்தமல்ல என்பதிலும் நாம் தெளிவுள்ளவர்களாக இருக்க வேண் டும். பவுல் துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவராக விட்டுவந்தார் (2 தீமோ. 4:20). பவுலின் மாம்சத்தில் இருந்த முள்ளைக் கர்த்தர் குணமாக்கவில்லை (2 கொரி. 12:7-10). எல்லா நேரங்களிலும் குணமாக்குவது தேவனுடைய சித்தமாயிருந்தால், சிலர் வயது முதிர்ச்சியடையமாட்டார்கள், மரணமடைய வும் மாட்டார்கள்!

8. எல்லா நேரங்களிலும் குணமாக்குவதாக தேவன் வாக்குறுதி கொடுக்கவில்லை. ஆகவே, குணப்படுத்த வேண்டும் என்று நாம் அவரிடம் கோரிக்கை வைக்க முடியாது. குண மடைதல் இரக்கத்தினால் உண்டாகிறது என்று பிலிப்பியர் 2:27 -இல் விவரிக்கப்பட்டி ருக்கிறது, ஆகவே அவ்வாறு நிகழ வேண்டும் என்று நாம் உரிமைபாராட்ட முடியாது.

9. பொதுவான பொருளில் குணமடைதலும் "பரி காரத்தில்" அடங்கியிருக்கிறது என்பது உண்மையாயினும், பரிகாரத்தில் உள்ள ஆசிர்வாதங்கள் அனைத்தும் இன்னும் நமக் குக் கொடுக்கப்படவில்லை. எடுத்துக்காட் டாக, நமக்காகக் கிறிஸ்து செய்த கிரியையில் சரீர மீட்பும் அடங்கியிருக்கிறது. ஆனாலும் கிறிஸ்து தம்முடைய மக்களுக்காக வரும் வரை அதை நாம் பெற்றுக்கொள்ளப்போவ தில்லை (ரோமர் 8:23). அந்தச் சமயத்தில் நாம் முற்றுமுடிய முழுமையாக நம்முடைய எல்லா நோய்களிலிருந்தும் குணமடை வோம்.

10. விசுவாசக் குறைவினால் குணமடைகிற தில்லை என்பதும் உண்மையல்ல. அது உண்மையானால், சிலர் முடிவில்லாமல் வாழ்ந்துகொண்டேயிருக்க வேண்டும். ஆனால் ஒருவரும் அவ்வாறு வாழவில்லை. பவுல், துரோப்பீமு, காயு குணமடையவில்லை. ஆயினும் அவர்களுடைய விசுவாசம் இயல் பிலும் செயலிலும் திறம்மிக்கதாயிருந்தது.

5:14,15 யாக்கோபு 5 -ஆம் அதிகாரத்திற்குத் திரும்பிவருகிற நாம், குணமடைதலைக் குறித்து திருமறையின் மற்ற பகுதிகள் என்ன கற்பிக்கின் றனவோ அதனோடு அது எவ்வாறு பொருந்து கிறது எனக் காணலாம்:

> உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவ னுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாச முள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த் தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ் செய்த வனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

திருமறையில் இந்த வசனங்கள் மட்டுமே குணமடைதலைக் குறித்துப் பேசுபவையாக இருக்குமென்றால், ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எல்லா நோய்களி

லிருந்தும், இங்கு சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் நிறைவேற்றி உடல்நலம் அடையமுடியும் என்ற நம்பிக்கை கொள்ளலாம். ஆயினும், திருமறையின் வேறு பகுதியிலிருந்து, எல்லா நேரங்களிலும் நோயாளிகளைக் குணப்படுத்துவது தேவனுடைய சித்தமல்ல என்று கண்டோம். ஆகவே, எல்லா வகையான நோய்களையும் குறித்து யாக்கோபு குறிப்பிடவில்லை, மாறாக ஏதோவொரு குறிப்பிட்ட வகையான நோயை மட்டுமே குறிப்பிடுகிறார், அதாவது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் உண்டாகக்கூடிய நோயையே குறிப்பிடுகிறார் என்று முடிவுசெய்ய நாம் கட்டாயப்படுத்தப்படுகிறோம். இந்தப் பகுதியின் பொருளை நாம் அறிய வேண்டுமானால் அதற்குரிய குறிப்பை "அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" என்னும் சொற்களில் காணமுடியும். இந்தப் பகுதியில் குணமடைதல் பாவங்களின் மன்னிப்போடு தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மனிதன் ஏதோவொரு பாவத்தைச் செய்திருக்கிறான். பெரும்பாலும் அதில் உள்ளூர் சபையின் சாட்சி சம்பந்தப்பட்டிருக்கும். அதற்குப் பிறகு அவன் சிறிது காலத்திற்குள் நோய்வாய்ப்படுகிறான். அவ்வாறு நோய்வாய்ப்பட்டது தான் செய்த பாவத்தின் நேரடியான விளைவு என்று அவன் உணருகிறான். அவன் மீண்டும் ஐக்கியத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டுமென்று தேவன் அவனைச் சிட்சிக்கிறார். அவன் தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தி அதைத் தேவனிடத்தில் அறிக்கை செய்கிறான். ஆனால் அந்தப் பாவம் சபையின் சாட்சியோடு தொடர்புடையதாக இருக்கின்ற காரணத்தால், அவன் சபை **மூப்பர்களை** அழைத்து அவர்களிடமும் முழுமையாக அறிக்கை செய்கிறான். **அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபம் பண்ணுகிறார்கள்.** இந்த **விசுவாசமுள்ள ஜெபம்** நோய்வாய்ப்பட்டவனை இரட்சிக்கிறது, **கர்த்தர் அவனை எழுப்புகிறார்.** நோய்வாய்ப்பட்டது பாவத்தின் நேரடியான விளைவாக இருக்குமென்றால், மேலே சொல்லப்பட்டுள்ள முறையில் அந்தப் பாவம் அறிக்கை செய்யப்பட்டு விட்டுவிடப்படுமானால், கர்த்தர் அவனைக் குணமாக்குவார் என்று இங்கு ஐயத்திற்கு இடமற்ற வகையில் வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது.

"அந்த மனிதன் பாவங்களைச் செய்தான் என்றும், மனம்வருந்தி அறிக்கை செய்யக்கூடிய நிலைக்கு அவன் கொண்டுவரப்பட்டான் என்றும் எவ்வாறு உங்களுக்குத் தெரியும்" என்று ஒருவர் வினவலாம். அவனுடைய **பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன** என்று 15 -ஆம் வசனத்தின் பிற்பகுதி கூறுகிறது. இது அதற்குரிய விடையாகும். அறிக்கை செய்வதாலேயே பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பதை நாம் அறிவோம் (1 யோவான் 1:9).

"அவன் பாவம் செய்தான் என்று சொல்லப்படவில்லை. அவன் பாவம் செய்தவனானால் என்றே இந்த வசனம் கூறுகிறது" என்று வேறொருவர் இதை மறுத்துரைக்கலாம். இது உண்மைதான், ஆனாலும் இந்தப் பகுதியின் பின்னணி முழுவதும் பாவங்களை அறிக்கை செய்வதைப் பற்றியும், பின்மாற்றம் அடைந்த மனிதன் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்படுவதைப் பற்றியும் பேசுகிறது. கீழ்வருபவை கவனிக்கப்பட வேண்டியவை: "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." 17,18 -ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வறட்சி இஸ்ரவேலின் பாவத்தின் காரணமாக தேவன் செலுத்திய தீர்ப்பே ஆகும். அவர்கள் கர்த்தரிடமாய்த் திரும்பி, அவரே மெய்யான தேவன் என்று அறிக்கை செய்ததன் விளைவாக அந்த வறட்சி நீக்கப்பட்டது (1 இராஜா. 18:39). 19,20 -ஆகிய வசனங்கள் பின்மாற்றம் அடைந்த மனிதன் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்படுவதைத் தெளிவாக விவரிக்கிறது என்பதை நாம் காணவிருக்கிறோம்.

யாக்கோபு 5:13-20 ஆகிய வசனங்களின் கருத்து, பாவத்தின் நேரடியான விளைவாக நோய்வாய்ப்பட்ட மனிதன் **மூப்பர்களிடம்** தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்வதால் அவனுக்குக் குணமடைதல் வாக்குறுதி பண்ணப்பட்டிருக்கிறது என்னும் விவரத்தைப் பின்னணியாகக் கொண்டிருக்கிறது. **அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணுவது மூப்பர்களின்** பொறுப்பாகும். யாக்கோபு இந்த மடலை எழுதிய காலத்தில் எண்ணெய் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டது, ஆகவே **எண்ணெய்** என்னும் சொல் *மருந்துகளைப் பயன்படுத்தி* என்று பொருள்படும் என்று சிலர் நினைக்கிறார்கள் (லூக்கா 10:34). எண்ணெய் பூசுதல் என்பது சடங்கு முறையைச் சார்ந்தது என்று சிலர் பொருள்கொள்

கிறார்கள். இந்தக் கருத்தானது **கர்த்தருடைய நாமத்தினாலே** என்னும் சொற்களாலே வலுப் பெற்றிருக்கிறது. அவருடைய அதிகாரத்தினாலே அவருடைய சொற்களுக்குக் கீழ்ப்படிந்து எண் ணெய் பூச வேண்டும் என்றும் இதனைச் சொல்ல லாம். சில தருணங்களில் அதிசயமான முறை யில் குணப்படுத்துவதற்கு அப்போஸ்தலர்கள் எண்ணெய் பூசியதாகக் காண்கிறோம் (மாற்கு 6:13). குணப்படுத்தும் ஆற்றல் எண்ணெய்க்கு இல்லை, ஆனால் குணமாக்கும் ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவரின் பங்கையே இது சுட்டிக் காட்டுகிறது (1 கொரி. 12:9).

சடங்கு முறையிலான எண்ணெய் பூசுதல், சடங்குகளும் பண்டிகைகளும் வலுவிழந்து போன நிலையில் இந்தக் கிருபையின் காலத் திற்குப் பொருத்தமற்றது என ஒருவர் எதிர்க்க லாம். இருந்தபோதிலும், அப்பத்தையும் ரசத்தை யும் கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் அடையாளமாக நாம் பயன்படுத்துகிறோம். மேலும் நாம் தண்ணீரை ஞானஸ்நானத்தில் பயன்படுத்து கிறோம். அது மட்டுமின்றி ஆணுக்குக் கீழ்ப் படிந்த நிலைக்கு அடையாளமாகப் பெண்கள் சபைகளில் தங்களுடைய தலையை மூடிக்கொள் கிறார்கள். அவ்வாறிருக்க சடங்கு முறையாக எண்ணெய் பயன்படுத்தப்படுவதை நாம் ஏன் எதிர்த்து நிற்க வேண்டும்?

விசுவாசமுள்ள ஜெபத்திற்குப் பிரதிபலனாக தேவன் அவனைக் குணமாக்குகிறார். தேவனு டைய வார்த்தையில் கொடுக்கப்பட்டுள்ள வாக் குறுதியை அடிப்படையாகக் கொண்டதே இந்த **விசுவாசமுள்ள ஜெபம்.** அந்த மூப்பர்களுக்கு எந்த அளவு விசுவாசம் இருக்கிறது அல்லது நோய்வாய்ப்பட்டவர்களுக்கு எந்த அளவு விசு வாசம் இருக்கிறது என்பதல்ல கேள்வி. சொல்லப் பட்டுள்ள நிபந்தனைகள் முழுவதுமாக நிறை வேற்றப்பட்டுள்ள நிலையில் தேவன் அந்த மனிதனை எழுப்புவதாக வாக்குறுதி செய்திருப்ப தால் மூப்பர்களால் முழு நம்பிக்கையோடு ஜெபம் பண்ண முடியும்.

இவையெல்லாவற்றையும் தொகுத்துக் காணும் போது, 14,15 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட் டுள்ள மனிதன், அவனுடைய பாவத்தின் நேரடி யான விளைவினாலே நோய்வாய்ப்பட்டான் என்று நாம் நம்புகிறோம். அவன் அதனை உணர்ந்து மனம்வருந்துகிறபோது, சபையின் **மூப்பர்களை வரவழைத்து** அவர்களிடம் முழுவது மான அறிக்கை செய்ய வேண்டும். அதன் பிறகு **அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவ னுக்கு எண்ணெய் பூசி அவனுக்கு ஜெபம் பண் ணக்கடவர்கள்.** தேவன் அவனுக்கு சுகமளிப்ப தாக இங்கு வாக்குறுதி கொடுத்திருப்பதால், அவன் நலமடைவான் என்னும் விசுவாசத்தோடு அவர்களால் ஜெபிக்க முடியும்.

5:16 நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, [4]**ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்.** இதனை மேலோட்டமாக நாம் படிக்கும்போது, நாம் நம்முடைய அனைத்து இரக சியப் பாவங்களையும் மற்றவர்களிடம் அறிக்கை செய்யவேண்டும் என்று கூறுவதாக ஒரு சிந்தனை ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் இங்கு அப்படிப்பட்ட சிந்தனைக்கே இடமில்லை. நாம் ஒருவருக்கு எதிராகப் பாவம் செய்வோமானால், யாருக்கு எதி ராக நாம் பாவம் செய்தோமோ அவரிடம் சென்று அறிக்கை செய்ய ஏவப்பட வேண்டும் என்பதே முதன்மையாக யாக்கோபு கூறும் செய்தி.

மேலும் நாம் ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணவேண்டும். காழ்ப்புணர்ச்சி கொண்டவர் களாக, அவருக்கு எதிராகச் சீற்றம் பெருகுவ தற்கு இடம் கொடாமல், நாம் பிறரிடம் அறிக்கை செய்வதாலும் ஜெபத்தினாலும் அவர்களோ டுள்ள ஐக்கியத்தில் நிலைநிற்க வேண்டும்.

உடல்நலம் பெறுதல், ஆவிக்குரிய வகையில் முன்னிருந்த நிலைக்குச் சீர்படுதல் இரண்டும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. அறிக்கை செய்தல், ஜெபம் பண்ணுதல், உடல் நலம் அடைதல் ஆகிய வற்றை யாக்கோபு எவ்வாறு தொடர்புபடுத்து கிறார் என்பதைக் கவனியுங்கள். ஆவிக்குரியதற் கும் சரீரத்திற்குரியதற்கும் முக்கியமான தொடர்பு இருக்கிறது என்று இங்கு தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என் னும் முக்கூறுகளை உடையவன் (1 தெச. 5:23). அவனுடைய ஒரு பகுதியைத் தாக்குவது, மற்ற பகுதிகளையும் தாக்குகிறது. பழைய ஏற்பாட்டில் ஆசாரியனே மருத்துவனாகவும் செயல்புரிந்தான். எடுத்துக்காட்டாக, தொழுநோயா அல்லவா என் பதை அவனே கண்டுபித்தான்; அவனே நோயாளி குணமடைந்துவிட்டான் என்றும் அறிவித்தான். ஒரே மனிதன் ஆசாரியன், மருத்துவன் என்னும் இரண்டு வேலைகளையும் ஒன்றாகச் செய்யக் கூடிய நிலையில் இருந்ததன் மூலமாக, ஆவிக் கும் சரீரத்திற்கும் இடையேயுள்ள நெருக்கமான ஒருங்கிணைப்பைக் கர்த்தர் சுட்டிக்காட்டுகிறார்.

உள்ளமும் உடலும் சார்ந்த மருத்துவத் துறையினர், இந்த ஒருங்கிணைப்பை அறிந்திருப்பதோடு, ஒருவருடைய தனிப்பட்ட குறைபாடுகள் அவருடைய உடலில் எவ்வாறு பிரச்சினைகளை உண்டுபண்ணுகின்றன என்பதைக் குறித்து ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆனால் நவீன காலத்து மருந்துகளில் பாவத்திற்கான பரிகாரம் இல்லை. பாவத்தினால் உண்டாகக்கூடிய குற்றவுணர்வு, தூய்மைக்கேடு, அதனுடைய ஆதிக்கம், அதன் காரணமாக வரக்கூடிய தண்டனை இவையாவற்றிலிருந்தும் விடுதலை கிறிஸ்துவின் இரத்தத்தின் அடிப்படையில் மட்டுமே பெறக்கூடியது, மேலும் தேவனை நோக்கிய அறிக்கையினாலும் மனிதனை நோக்கிய அறிக்கையினாலும் அதனைப் பெற முடியும். நாம் ஒப்புக்கொள்ள விரும்புவதற்கும் அதிகமாக, பாவத்தினாலேயே நோய்கள் உண்டாகின்றன. பேராசை, கவலை, கோபம், மன்னிக்க மறுக்கிற ஆவி, மட்டுமீறிய குடிப்பழக்கம், பொறாமை, சுயநலம், பெருமை ஆகியவை இத்தகைய பாவங்களாகும். வாழ்க்கையில் காணப்படும் பாவம் நோயையும், சில வேளைகளில் மரணத்தையும் கொண்டுவரும் (1 கொரி. 11:30). நாம் நம்முடைய பாவத்தை, அது நம்முடைய வாழ்க்கைக்குள்ளாகப் புகுந்துவிட்டது என்பதை அறிந்தவுடனே அதை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். எல்லாப் பாவங்களையும் நாம் தேவனிடத்தில் அறிக்கை செய்ய வேண்டும். மேலும், பிறருக்கு எதிராகச் செய்த பாவங்களை அவர்களிடத்திலும் அறிக்கை செய்ய வேண்டும். அதுவே நம்முடைய ஆவிக்குரிய நலத்தையும் சரீர நலத்தையும் பெறுவதற்கான முக்கியமான செயல்.

> **5:16-18** நல்ல மனிதனின் ஊக்கமாக ஜெபத்தின் மூலமாகப் பெருமளவில் ஆற்றல் உண்டாகிறது. உங்களுக்கு எலியாவை நினைவிருக்கிறதா? அவன் நம்மைப் போன்ற மனிதன் தான். ஆனால் மழைபெய்யக் கூடாதென்று அவன் ஊக்கமாக ஜெபித்தான். உண்மையில், அந்த நாட்டில் மூன்று ஆண்டுகளும் ஆறு மாதங்களும் ஒரு சொட்டு மழை கூடப் பெய்யவில்லை. அதன் பிறகு அவன் மறுபடியும் ஜெபம் பண்ணினான். வானங்கள் மழையைத் தந்தன, பூமியும் வழக்கம் போல் பயிர்களை முளைப்பித்தது (JBP).

இந்த நிகழ்ச்சியனாது 1 இராஜாக்கள் 17:1-19:10 -இல் குறித்துவைக்கப்பட்டுள்ளது. அந்தத் தருணத்தில் ஆகாப் இஸ்ரவேலின் அரசனாயிருந்தான். அவனுடைய மனைவி யெசபேலின் மூலமாக அவன் பாகாலைத் தொழுகிறவனாக மாறிவிட்டான். மேலும் அத்தகைய சிலை வணக்க முறைமைக்குள்ளாக அவன் மக்களை வழிநடத்தினான். "ஆகாப் ஒரு விக்கிரகத் தோப்பையும் வைத்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும்படிக்கு, தனக்கு முன்னிருந்த ராஜாக்களெல்லாம் செய்ததைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செய்துவந்தான்" (1 இராஜா. 16:33). இஸ்ரவேல் நாட்டில் உண்டான மூன்றரை ஆண்டுக்கால வறட்சி பாவத்தின் நேரடியான விளைவேயாகும்.

கர்மேல் மலையின்மேல் பாகாலின் ஆசாரியர்களோடு எலியா புகழ்பெற்ற போட்டியை நடத்தினான். கர்த்தருடைய அக்கினியானது இறங்கி வந்து தகனபலியையும், பலிபீடத்தையும், தண்ணீரையும் பட்சித்தபோது மக்கள் நம்பிக்கை கொண்டார்கள். மேலும் அவர்கள் கர்த்தரிடம் திரும்பினார்கள். எலியா **மறுபடியும் ஜெபித்தான்.** வறட்சி நீங்கியது. பாவம் செய்து தேவனுடைய ஐக்கியத்தை விட்டு அலைந்து திரிகிற மக்களுக்காக ஜெபிக்கும்படி உற்சாகம் பெறுவதற்கு **எலியா** எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறான். **நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது** அல்லது இதனை வேறொருவர் பொழிப்புரையாகத் தந்திருக்கிறார்: "தேவனோடு இசைந்த இருதயமுள்ள மனிதனின் ஜெபம் அற்புதங்களைச் செய்யும்." எலியா நம்மைக்காட்டிலும் உயர்வாகப் படைக்கப்பட்ட மனிதன் என்று நாம் நினைக்கும்படி சோதனைக்குட்படக்கூடாது என்பதற்காக, **எலியா நம்மைப்போல** எளிதில் தவறுகிற குறைபாடுள்ள மனிதன்தான் என்று யாக்கோபு நினைவுபடுத்துகிறார். அவனும் மற்ற மனிதர்களைப் போல அதே விதமான பலவீனமும் குறைபாடுகளும் ஏற்படத்தக்க மனிதனாகவே இருந்தான்.

5:19,20 பாவம் செய்கிற ஒரு பரிசுத்தவான் முன்னிருந்த நிலைக்குச் சீர்பெற சபையின் மூப்பர்கள் பயன்படுத்தப்பட்டதை முந்தின வசனங்களில் கண்டோம். பின்மாற்றம் அடைந்த நிலையிலிருந்த நாடு சீர்பெற (அந்நாடு குறுகிய காலம் மட்டும், மேலும் அதில் ஒரு பங்கு மட்டுமே மாற்றம் அடைந்தது) எலியா பயன்படுத்தப்பட்டான். இப்பொழுது இத்தகைய பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஊழியத்தைச் செய்யும்படி நாம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்.

19 -ஆவது வசனம் **சத்தியத்தைவிட்டு** விலகிச் சென்ற கிறிஸ்தவ சகோதரனைப் பற்றி விவ

ரிக்கிறது. அவன் கோட்பாட்டிலோ நடைமுறை யிலோ விலகிச் சென்றவனாக இருக்கலாம். இன் னொரு சகோதரன் தன்னுடைய ஊக்கமான விசு வாசமுள்ள ஜெபத்திற்கு இதைப் பொருளாக எடுத்துக்கொண்டவனாக, அந்தச் சகோதரனை அன்போடு தேவனோடும் இறை மக்களோடும் ஐக்கியம் கொள்ளும்படியாகத் **திருப்புகிறான்.** இந்த ஊழியத்தின் முக்கியத்துவம் மிகப்பெரியது! முதலாவதாக, தேவனுடைய சிட்சிக்கும் கரங்க ளுக்குக் கீழாகத் தவறிழைத்த சகோதரன் தன்னு டைய காலத்திற்கு முந்தி மரணமடைவதிலிருந்து உதவிசெய்கிறவன் இரட்சிக்கிறான். இரண்டாவ தாக, அவன் **திரளான பாவங்களை மூடுகிறான்.** அவை தேவனால் மன்னிக்கப்பட்டு மறக்கப்படு கின்றன. மேலும் அவை உடன் சகோதரர்களால் மன்னிக்கப்பட்டு, வெளியுலகத்தின் பார்வைக்கு மறைக்கப்படுகிறது. இன்றைய நாட்களில் இவ் வூழியம் தேவை. இழந்துபோனவர்களுக்கு நற் செய்தியை அறிவிக்க வேண்டுமென்னும் பேரா வலின் காரணமாக, தொழுவத்திலிருந்து விலகிச் சென்று அலைந்து திரிகிற ஆடுகளிடம் போது மான அக்கறை செலுத்தாமல் விட்டு விடுகிறோம்.

கிறிஸ்தவ வாழ்வின் பல கூறுகளைக் குறித்து நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதை அறி யும்படியாக யாக்கோபு மறுபடியும் நமது மன சாட்சியைத் தாற்றுக்கோலால் குத்துகிறார். எடுத் துக்காட்டாக அவர் நம்மிடம் கேட்கிற கேள்வி கள்: நீங்கள் இந்தப் பூமியில் செல்வத்தைச் சேர்த்துவைக்கிறீர்களா? உங்களுடைய தொழில் முறைமைகள் நேர்மையானவையாக இருக்கின் றனவா? எடுத்துக்காட்டாக, உங்களுடைய வரு மானவரி அறிக்கைகள் எவ்வாறு உள்ளன? நீங் கள் சுகபோகமான வாழ்க்கை வாழ்கிறீர்களா? அல்லது இரட்சகரைப் பலர் அறிய வேண்டும் என்பதற்காகத் தியாக மனப்பான்மையோடு வாழ்க்கையை நடத்துகிறீர்களா? நீங்கள் வேறு ஒருவருக்கு எதிராகப் பாவம் செய்யும்போது, அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்க விரும்பு கிறீர்களா? நீங்கள் நோய்வாய்ப்படும்போது, முதலாவது நீங்கள் யாரைச் சந்திக்கிறீர்கள் - மருத்துவரையா அல்லது கர்த்தரையா? ஒரு சகோதரன் பாவத்திற்குள்ளாக விழுகையில் நீங்கள் அவரைப் பற்றி விமர்சிக்கிறீர்களா அல் லது அவரை முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறீர்களா?

நாம் இப்பொழுது நடைமுறை அறிவுரைகள் கொண்ட சுருக்கமான மடலின் முடிவுக்கு வந் திருக்கிறோம். இந்த மடலில் விசுவாசம் சோதிக் கப்படுகிறதைக் கண்டோம். வாழ்க்கையில் உண் டாகக் கூடிய பிரச்சினைகளாலும், சோதனை களாலும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படி கிறதினாலும் விசுவாசம் பரீட்சைக்கு உட்படுத் தப்படுகிறதைக் கண்டோம். தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லுகிறவன், தனது விசுவாசத் தைப் பாரபட்சமில்லாமலும் வெளித்தோற்றத் தைக் கொண்டு பிறரை மதிப்பிடாமலும், தன்னு டைய நற்கிரியையுள்ள வாழ்க்கையினாலே மெய்ப்பிக்க வேண்டுமென்று அறைகூவல் விடுக்கப்படுகிறது. ஒரு மனிதனுடைய பேச்சிலே அவனுடைய விசுவாசத்தின் உண்மைத்தன்மை காணப்படும்; விசுவாசி தனது நாவைக் கிறிஸ்து வின் கர்த்தத்துவத்திற்கு ஒப்புவிக்கப் பழகுகி றான். மெய்யான விசுவாசம் மெய்யான ஞானத் தோடு இணைந்து செல்லுகிறது. பொறாமை சண்டை ஆகியவை கொண்ட வாழ்க்கை நீங்கி, அதற்குப் பதிலாக நடைமுறை தேவ பக்தியோடு கூடிய வாழ்க்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பொருளாசையினாலும் உலகீய விருப்பங் களாலும் உண்டாகக் கூடிய பகைமைகள், சச்ச ரவுகள், பொறாமைகள் ஆகியவற்றை விசுவாசம் தவிர்க்கிறது. மேலும் கடுமையான மற்றும் குறை கூறுகிற ஆவியையும் அது தவிர்க்கிறது. வாழ்க் கையின் திட்டங்களில் தேவனை விட்டு விட்டு சுய நம்பிக்கையோடு செயல்படுவதை விசுவாசம் தவிர்க்கிறது. பணத்தைச் சம்பாதிப்பதிலும் அதனைச் செலவு செய்வதிலும் விசுவாசம் பரீட் சைக்கு நிற்கிறது. ஒடுக்கப்பட்டபோதிலும் கர்த்தர் மீண்டும் வரப்போகிறார் என்னும் உண் மையின் அடிப்படையில் விவாசம் உளவலிமை யோடும் சகிப்புத் தன்மையோடும் செயல்படு கிறது. அதனுடைய பேச்சு எப்போதும் நேர்மை யோடு இருக்கிறது, அதனை உறுதிசெய்வதற்கு ஆணை எதுவும் செய்ய வேண்டியது இல்லை. வாழ்க்கையின் போக்கில் ஏற்படுகிற மாற்றங்கள் அனைத்தையும் அது தேவனிடத்திற்கு எடுத்துச் செல்கிறது. நோய்வாய்ப்படும் வேளையில், அது முதலாவது ஆவிக்குரிய காரணங்களை ஆராய் கிறது. தேவனிடத்திலும் தவறிழைக்கப்பட்டவர் களிடத்திலும் அறிக்கை செய்வதன் மூலம் நோயின் காரணங்களை விசுவாசம் நீக்குகிறது. இறுதி யாக, விசுவாசம் பின்மாற்றமடைந்தவர்களிடம் அன்போடும் இரக்கத்தோடும் செல்லுகிறது.

உங்களுடைய விசுவாசமும் என்னுடைய விசுவாசமும் ஒவ்வொரு நாளும் பரீட்சைக்கு உட் படுகிறதா? நியாயாதிபதியின் தீர்ப்பு என்ன?

அடிக்குறிப்புகள்

1 (1:14) *Epithumia* என்னும் கிரேக்கச் சொல் "விருப்பம்" என்னும் சொல்லின் வலிமை யாக்கப்பட்ட நிலையையே குறிக்கிறது. *Lust* என்னும் ஆங்கிலச் சொல்லும் (KJV 1611 –ஐ ஒப்பிடுக) தொடக்கத்தில் "ஆழ்ந்த விருப்பத் தைக்" குறிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் பின்னர் பாலியல் சார்ந்த விருப்பத்தைக் குறிப் பாய் உணர்த்தக் கூடியதாக மாற்றம் பெற்றது. (தமிழ் மொழியிலும் இச்சை என்னும் சொல்லில் பாலியல் சார்ந்த விருப்பம் குறிப்பாய் உணர்த்தப் படுகிறது.)

2 (1:19) "ஆகையால்" என்னும் சொல்லுக் குப் பதிலாக (கிரேக்கம் *Loste*), "அறிவீர்கள்" (*iste*) என்னும் சொல் சில பிரதிகளிலும், பெரும் பாலான தற்கால மொழிபெயர்ப்புகளிலும் பயன் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த அலெக்சாந் திரியா (NU) வாசகத்தைக் காட்டிலும் பாரம்பரி யப் பிரதி இப்பகுதியின் பின்னணிக்குப் பொருத்த மாக இருக்கிறது. 1–18 ஆகிய வசனங்களின் வெளிச்சத்தின்படி நாம் செய்ய வேண்டுமென்று இந்த வசனம் தொகுத்துரைக்கிறது.

3 (1:21) "ஜீவன்" மற்றும் "ஆத்துமா" ஆகிய இரண்டு பொருள்களையும் *psuche* என் னும் கிரேக்கச் சொல் கொண்டிருக்கிறது. ஆகவே இவற்றில் எது சரியானது என்று எப்பொழுதும் நம்மால் கணிக்க முடியாது. மேலும் "இரட்சிப்பு" என்னும் சொல் (கிரேக்க மொழியிலும் ஆங்கில மொழியிலும்) நித்திய இரட்சிப்பையே குறிக்க வேண்டும் என்னும் கட்டாயமில்லை. அது உடல் நலமடைதல், விடுதலை, ஆபத்திலிருந்து பாது காக்கப்படுதல் இன்ன பிற செயல்களையும் அது குறிப்பிடக் கூடும். ஆகவே "உங்கள் ஆத்துமாக் களை இரட்சிக்க வல்லமையுள்ளது" என்னும் சொற்றொடர் சில பகுதிகளில் "உங்களுடைய வாழ்வில் (கிறிஸ்துவுக்காக) வெற்றியைப் பெறு வதற்கான" என்று பொருள்படும்.

4 (2:2-4) இந்தப் பகுதியில் "ஆலயம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் "*Sunagoge*" என்பதாகும். பிற்காலத் தில் இந்தச் சொல் யூதர்களுடைய ஜெபாலயத் தைக் குறிக்கும்படியாகப் பயன்படுத்தப்பட்டது. எனவே யாக்கோபு மடல் மிக முன்னதாக எழுதப் பட்டது என்பதற்கு இது அடையாளமாக விளங்கு கிறது எனலாம். "*Congregation" (Tyndale), "Church" (KJV), assembly* (JND) ஆகிய ஆங் கிலச் சொற்கள் யாவும *ekklesia* (அழைக்கப் பட்ட சபை) என்னும் சொல்லின் மொழிபெயர்ப்பே ஆகும். தொடக்கத்தில் இது அரசியல் சொல்லா கப் பயன்பட்டு வந்தது (ஒப்பிடுக ஐக்கிய நாடு களின் சபை).

5 (2:14) இருந்தபோதிலும், நேர்மையோடு சொல்லுவோமெனில், கிரேக்க மொழியில் "அந்த" (that) என்ற சொல்லுக்கு இணையான சொல் இடம்பெறவில்லை. ஆனால் அந்த (*the*) என்று பொருள்படக்கூடிய சுட்டிடைச் சொல் இடம் பெற் றுள்ளது. இந்தச் சுட்டிடைச் சொல் சில இடங் களில் குறிப்பிட்டுக் காட்டுகிற செயல்திறம் உடை யதாகக் காணப்படும். சில இடங்களில் பண்புப் பெயர்ச்சொற்களின் முன்பாக இந்தச் சுட்டிடைச் சொல் எவ்விதப் பொருளுமின்றி இடம் பெற்றி ருக்கும். ஆகவே இவ்வாறான பயன்பாடு விளக் கம் அளிக்கக்கூடிய வகையில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே NKJV முதல் பதிப்பில் "*that faith*" என்று மொழிபெயர்க்கப்பட்ட இந்தச் சொல், அடுத்த பதிப்புகளில் "*the faith*" என்று மாற்றப்பட்டு விட்டது (KJV) (தமிழில் "அந்த" என்ற சொல் *that, the* ஆகிய இரண்டு பொருளிலும் பயன் படுத்தப்படுகிறது).

6 (2:20) நடுநிலைப் பிரதியில் (NU) "செத் தது" என்னும் சொல்லுக்குப் பதிலாக "பயனற் றது" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

7 (3:5,6) Clovis G. Chappel, *Sermons from the Psalms,* p. 132.

8 (3:7) Robert G. Lee, *Lord I Believe,* pp.166-168.

9 (4:4) பெரும்பான்மைப் பிரதியில் "விப சாரரே, விபசாரிகளே" என்னும் சொற்றொடர் இடம் பெற்றுள்ளது. ஒருவேளை சபையில் உண் மையாகவே ஒழுக்கக்கேடு இருந்தது என்னும் பொருளை இது தருகிறது. நடுநிலைப் பிரதியில் (NU) "விபசாரிகளே" என்னும் பெண்பாற் சொல் மட்டும் இடம் பெற்றுள்ளது. இது பெரும்பாலும் ஆவிக்குரிய விபசாரத்தை மட்டும் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம். KJV மற்றும் NKJV மொழிபெயர்ப்புகளில் சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய விபசாரத்தைக் குறிக்கும்படி யான சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது.

10 (4:5) மிகப் பழமையான பிரதிகளின் காலத்தில் கொட்டை எழுத்துகள், சிறிய எழுத்து கள் என்று வேறுபடுத்திக் காட்டக்கூடிய வளர்ச்சி ஏற்படவில்லை. புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளில், Spirit என்னும் சொல் Spirit என்று எழுதப்பட வேண்டுமா spirit என்று எழுதப்படவேண்டுமா என்பது தெளிவற்று இருக்கும் இடங்களில் "S" என்ற எழுத்து மேல்கோட்டிற்கும் கீழ்க்கோட்டிற் கும் இடையில் எழுதப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட இடங்களில் அந்த வேதபகுதியின் பின்னணிக் கேற்ப பதிப்பாசிரியர்கள், மற்றும் மொழிபெயர்ப் பாளர்கள் முடிவெடுக்கவேண்டும். இங்கும் இன் னும் சில இடங்களிலும் திருமறை அறிஞர்கள் வெவ் வேறான கருத்து உடையவராயிருக்கின்றார்கள்.

11 (4:11,12) நடுநிலைப் பிரதியில் (NU) பிறன் என்னும் சொல் இடம் பெற்றுள்ளது.

12 (5:9) நடுநிலைப் பிரதியிலும் பெரும்பான் மைப் பிரதியிலும் "*Judged*" (நியாயந்தீர்க்கப் படாதபடிக்கு) என்ற சொல் இடம் பெற்றுள்ளது. ஆனால் இந்த வேதபகுதியின் பின்னணி "*Condemned*" என்ற சொல்லுக்குப் பொருத்த மாயிருக்கிறது (குற்றவாளி என்று தீர்க்கப்படாத படிக்கு)

13 (5:12) பெரும்பான்மைப் பிரதியில் இந்தச் சொல் மாற்றுவடிவத்தின் காரணமாக வெவ் வேறான பொருளில் எழுதப்பட்டுள்ளது. ஆக் கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு என்று KJV –யில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் *hupo krisin* என்பதாகும். (NU பிரதியிலும் இவ் வாறே இருக்கிறது.) ஆனால் பெரும்பான்மைப் பிரதியில் *eis hupokrisin* என்று இச்சொல் "மாய் மாலம்" என்னும் பொருளைத் தருகிறது. இரண்டு பொருட்களும் இங்கு பொருத்தமுடை வையாக இருந்தபோதிலும் மத மாய்மாலத்துக்கு எதிரான எச்சரிப்பாக இதை எடுத்துக்கொள் வதே சிறந்தது.

14 (5:16) NU பிரதியில் "உங்கள் பாவங் களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு" என்று இச்சொற்றொடர் காணப்படுகிறது.

நூல் விவரப் பட்டியல்

Adamson, James. *The Epistle of James* (NIC). Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1976.

Brown, Charles. *The General Epistle of James: A Devotional Commentary.* Philadelphia: The Union Press, 1907.

Gaebelein, Frank. *The Practical Epistle of James.* Great Neck, N.Y.: Doniger & Raughley, Inc., 1955.

Johnstone, Robert. *Lectures Exgetical and Practical on the Epistle of James.* Minneapolis: Klock & Klock Christian Publishers (Reprint of 1871 ed.).

Kelly, William. *The Epistle of James.* London: F.E. Race, 1913.

King, Guy H. A. *Belief that Behaves.* London: Marshal, Morgan & Scott, Ltd., 1954.

Zodhiates, Spiros. *The Behavior of Belief* Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1959.

அப்போஸ்தலனாகிய

பேதுரு எழுதின முதலாம் நிருபம்

முன்னுரை

“இம்மடலை எழுதியவர் யார் என்பதை நாம் அறியாமல் இருந்திருப்போமானால் இவ்விதமாகக் கூறும்படி ஏவப்பட்டிருப்போம்: கற்பாறையிலான அடித்தளத்தின்மேல் நிலைநிறுத்தப்பட்ட பாறையைப் போன்ற இந்த நூலாசிரியர் தனது வலிமை மிக்க சாட்சியை அடிப்படையாகக்கொண்டு, பிறருடைய ஆத்துமாக்களை, புயல் போன்று சீறிவரும் பாடுகளின் தாக்கத்திலிருந்து விடுவித்து மெய்யான கற்பாறையென்னும் அடித்தளத்தின் மேல் நிலைநிறுத்தி அரண் அமைத்து வலுப்படுத்தும் பெருமுயற்சியோடு இதனை எழுதுகிறார்.”

– வைசிங்கர்

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

இசுலாமிய மற்றும் மார்க்ஸிச நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்கள் அடக்குமுறை, பகைமை, வெளிப்படையாகத் துன்புறுத்தப்படுதல் ஆகிய வற்றை எதிர்நோக்கியவர்களாக இருக்கும் அள விற்கு அவற்றில் பழகிப்போய்விட்டார்கள். உபத் திரவங்கள் கர்த்தரால் அனுமதிக்கப்பட்டவை என்றும், அவை விடாமுயற்சி போன்ற விரும்பத் தக்க சில நற்குணங்களை உருவாக்கும்படியான நன்மை பயப்பவை என்றும் கருதி அத்தகையோர் அவற்றை ஏற்றுக்கொள்வதற்கான நடைமுறை ஆலோசனைகளை இம்மடல் பெருமளவு நல்கி உதவி செய்கிறது.

மேலைநாடுகளில் உள்ள கிறிஸ்தவர்கள், குறிப்பாக வேதத்தைப் பாரம்பரியமாகப் பெற் றிருக்கும் ஆங்கிலம் பேசும் விசுவாசிகள், அவர் களுடைய விசுவாசம் பொதுமக்களால் எதிர்க்கப் படுவதை இதுவரை எதிர்கொண்டதில்லை. சிறிது காலத்திற்கு முன்னர்வரை அந்நாட்டு அரசாங் கங்கள் நல்ல சமுதாயத்திற்கு அடிப்படைக்கார ணம் ஒற்றுமையான குடும்பங்கள் என்றும், மக்கள் தங்களுக்கு விருப்பமான சபைகளுக்குச் செல்லலாம் என்றும் கிறிஸ்தவர்களை ஆதரித்து வந்தன. இப்பொழுதோ அந்நிலை இல்லை. அரசாங்கங்கள் நீதிபதிகளையும் கல்வி நிறு வனங்களையும் ஊடகங்களையும் ஏவிவிட்டு, திருமறையை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் தவறான செய்திகளைப் பரப்பி, ஏளனஞ் செய்து நற்பெயரைக் கெடுக்கிறார்கள். வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், செய்தித்தாள் கள், சஞ்சிகைகள் மற்றும் அதிகாரபூர்வமான அறிக்கைகள் யாவும் ஒழுக்கக்கேடு, மதுப்பழக் கம், ஏமாற்றுதல், தெய்வ நிந்தனை போன்றவற்றை ஆதரித்து ஊக்குவிக்கின்றன. கிறிஸ்தவம் இப் பொழுது “பண்பாட்டிற்கு எதிரானதாகக்” கருதப் படுகிறது. ஆகவே அப்போஸ்தலனாகிய பேதுரு தனது முதல் மடலில் கற்பிக்கும் பாடங்களை விசு வாசிகள் விரைவாகக் கற்றுக்கொள்வார்கள். இந்த இருபத்தோராம் நூற்றாண்டில், கர்த்தருடைய வருகை தாமதிக்குமானால் விசுவாசிகள் மிகுந்த ஆயத்தமுடையவர்களாக விளங்குவார்கள்.

2. நூலாசிரியர்

புறச்சான்றுகள்

பேதுரு இம்மடலை எழுதினதற்கான புறச் சான்று தொடக்க காலத்தைச் சேர்ந்ததாகவும் ஏறத்தாழ எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது மாயிருக்கிறது. எல்லா விசுவாசிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட நூல்களில் ஒன்றாகவே பேதுரு வின் முதல் மடலை யூசுபியஸ் கணக்கிடுகிறார். பாலிகார்ப் மற்றும் அலெக்சாந்திரியா கிளமந்த் ஆகி யோரும் இந்நூலை ஏற்றுக்கொண்டிருக்கிறார் கள். மார்சியன் வேதநூல் தொகுப்பில் இந்நூல் இடம் பெறாதது வியப்பை ஏற்படுத்துகிறதில்லை. ஏனெனில் அத்தொகுப்பு பவுல் எழுதிய மடல்களை மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளது. முரடோரியன் வேதநூல் தொகுப்பிலும் இந்நூல் இடம் பெற வில்லை. அத்தொகுப்பு முடிவுறாத தன்மையுடை யது என்பதால் இம்மடலையும் விட்டுவிட்டது என லாம்.

2 பேதுரு 3:1 ஆம் வசனமே 1 பேதுரு நூலுக்கு முதற்சான்று என்று கூறுவோமானால் அது சரியா னதே. 2 பேதுரு மடலைப் பேதுரு எழுதவில்லை என்று மறுத்துரைத்தவர்களும்கூட (2 பேதுரு மடலுக்கான முன்னுரையைக் காண்க), 2 பேதுரு 3:1 -ஆம் வசனம் பேதுருவின் முதல் மடலைக்

குறிப்பதாக இருக்குமென்றால் அதுவே 1 பேதுரு நூலுக்கு முதலாவது வழுவற்ற சான்றாக ஒப்புக் கொள்ள போதுமானது என்று கருதுகிறார்கள்.

அகச்சான்றுகள்

பேதுரு இம்மடலை எழுதியிருக்கமாட்டார் என்று சிலர் ஐயம்கொள்வதற்குக் காரணமாக இருக்கக்கூடிய அகச்சான்று இம்மடலில் பயன் படுத்தப்பட்டிருக்கிற மிகச் சிறப்பான கிரேக்க மொழியேயாகும். கலிலேய மீனவர் ஒருவர் இவ் வளவு சிறப்பாக எழுத முடியுமா? "முடியாது" என் கிறார்கள் பலர். இருந்தபோதிலும், நம்முடைய சொந்த நாட்டுநிலையே இதற்குச் சிறந்த எடுத் துக்காட்டுகளைத் தரும்; இயல்பாகவே சொற் திறம் கொண்டவர்களும் பொது இடங்களில் பேசும் ஆற்றல் உள்ளவர்களும் கல்லூரிக்கோ வேத பள்ளிக்கோ செல்லாமலேயே நல்ல முறை யில் தரமான மொழியைப் பயன்படுத்துகிறவர் களாக மாறிவிடுகிறார்கள். பேதுருவுக்கு முப்பது ஆண்டுகள் பிரசங்க அனுபவம் இருந்தது, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலைக் குறித்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை, மேலும் இம்மடலைத் தொகுத்து உருவாக்க சில்வான் உதவிசெய் திருக்கக் கூடும். அப்போஸ்தலர் 4:13 -ஆம் வசனம் பேதுருவையும் யோவானையும் படிப்பறியாதவர் கள் என்று குறிப்பிடுகிறது, ஆனால் யூத போதகர் களுக்குரிய முறையான பயிற்சியை அவர்கள் பெறவில்லை என்பதே அதன் பொருளாகும்.

பேதுருவின் வாழ்க்கை மற்றும் ஊழியம் ஆகிய வற்றைப் பற்றி பேதுருவின் முதல் மடலில் ஏராள மான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. கீழ்க்காணும் பகுதிகள் அதனை மெய்ப்பித்துக்காட்டும்.

இந்நூலாசிரியர் தன்னுடைய வாசகர்களைப் போலன்றி இயேசுவைத் தனிப்பட்ட வகையில் கண்டிருந்ததாக 1:8 -ஆம் வசனத்தில் குறிப்பாய்த் தெரிவிக்கிறார். "அவரை நீங்கள் காணாமலிருந் தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்" என்று கூறு கிறாரேயொழிய, ". . . நாம் காணாமலிருந்தும்" என்று சொல்லவில்லை. தான் கர்த்தரோடு உடன் சென்றதைக் குறித்து ஆசிரியர் குறிப்பிடும் மற்ற பகுதிகளைக் காணலாம்.

2 -ஆம் அதிகாரத்தின் முதல் பத்து வசனங் கள் கிறிஸ்துவை மூலைக்கல்லாக அறிமுகப் படுத்துகின்றன. அதன் மூலமாக நம்மை, பிலிப்பு செசரியாவில் நடந்த நிகழ்ச்சியை நோக்கி அந்த வசனங்கள் அழைத்துச் செல்கின்றன (மத். 16:13-20). இயேசுவைக் கிறிஸ்து என்றும் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்றும் பேதுரு அறிக்கை செய்த போது, கர்த்தராகிய இயேசு தம்முடைய சபையானது அந்த அஸ்திபாரத்தின்மேல், அதா வது, கிறிஸ்துவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்னும் சத்தியத்தின்மேல் கட்டப்படும் என்று அறிவித்தார். அவரே சபைக்கு மூலைக் கல்லாகவும் அஸ்திபாரமாகவும் இருக்கிறார்.

2:5 -ஆம் வசனத்தில் ஜீவனுள்ள கல்லைப் பற்றிய குறிப்பு, யோவான் 1:42 -இல் சீமோனின் பெயர் கேபா (அராமியச் சொல்) அல்லது பேதுரு (கிரேக்கச் சொல்) என்று மாற்றப்பட்ட நிகழ்ச்சியை நினைவிற்குக் கொண்டுவருகிறது. இவ்விரண்டு சொற்களும் கல் என்னும் அர்த்தமுடையவை. கிறிஸ்துவின்மேல் கொண்ட விசுவாசத்தால் பேதுரு ஜீவகல்லாக மாறினார். இரண்டாவது அதி காரத்தில் கற்களைப் பற்றி இவ்வளவு அதிகமாக அவர் கூறியிருப்பது வியப்பை ஏற்படுத்தவில்லை. 2:7 -ஆம் வசனத்தில் ஆசிரியர் சங்கீதம் 118:22 -ஆம் வசனத்தை எடுத்தாளுகிறார். "வீடு கட்டுகிற வர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக் குத் தலைக்கல்லாயிற்று." எருசலேம் நகரில் அதி காரிகளுக்கும், மூப்பர்களுக்கும், வேதபாரகருக் கும் முன்பாக விசாரிக்கப்படும்படி பேதுரு அழைத்து வரப்பட்ட போதும் பேதுரு இதே வசனத்தை எடுத் துரைத்தார் (அப். 4:11).

அரசு அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டு மென்று அப்போஸ்தலன் அறிவுரை தருகிறதை நாம் கேட்கும்போது (2:13-17), பேதுரு அவ்வாறு கீழ்ப்படியாத நிகழ்ச்சியை நாம் திரும்பிப் பார்க் கும்படி செய்கிறது, அந்த நேரத்தில் அவர் பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுடைய காதை வெட்டினார் (யோவான் 18:10). ஆகவே அவரு டைய அறிவுரையானது, தேவ ஆவியானவரின் ஏவுதலைப் பெற்றிருப்பதோடு, வாழ்க்கையின் அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்டது!

இரண்டாம் அதிகாரம் 21 முதல் 24 வரை யிலான வசனங்கள், கர்த்தராகிய இயேசுவின் விசாரணை மற்றும் மரணம் ஆகியவை பற்றிய நேரடியான அனுபவத்தை ஆசிரியர் பெற்றிருந் தார் என்பதைக் காட்டுகின்றன. இரட்சகர் தாழ்மை யோடு பொறுத்துக்கொண்டதையும் அமைதி யோடு பாடநுபவித்ததையும் பேதுருவால் மறக்க முடியவில்லை. 2:24 -ஆம் வசனத்தில் இரட்சகர் மரணமடைந்த விதம் சொல்லப்பட்டிருக்கிறது - "சிலுவையின்மேல் சுமந்தார்". அப்போஸ்தலரு டைய நடபடிகள் நூலிலும் (5:30; 10:39) பேதுரு வின் சொற்கள் இந்த வருணனையை எதிரொலிக் கின்றன.

இம்மடலின் வாசகர்கள் தங்களுடைய ஆத்து மாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத் திற்குத் திரும்பிச் செல்லுவதைக் குறித்துப் பேசிய போது (2:25) அவர் கர்த்தரை மறுதலித்த பிறகு மீண்டும் முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வரப் பட்டதை நினைத்துப் பார்த்திருக்க வேண்டும் (யோவான் 21:15-19).

"அன்பு திரளான பாவங்களை மூடும்" (4:8) என்னும் சொற்கள் பேதுருவின் கேள்விகளை நினைவுக்குக்கொண்டு வருவது நிச்சயம், "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோத மாய்க் குற்றஞ்செய்துவந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரம் மட்டுமோ?" அப்பொழுது இயேசு, "ஏழுதரம் மாத்திரம் அல்ல, ஏழெழுபது தரம் மட்டும் என்று உனக்குச் சொல்லு கிறேன்" என்று பதிலுரைத்தார் (மத். 18:21,22). வேறொரு வகையில் கூறினால், எண்ணிக்கையில் அடங்கா அளவிற்கு என்பதே இதன் பொருளாகும்.

ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதன் நிமித்தம் பாடுபட்டால் அவன் வெட்கப்படவேண்டிய தில்லை, ஆனால் அந்தப் பெயரில் தேவன் மகி மைப்படவேண்டும் என்று 4:16 -ஆம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனை அப்போஸ்தலர் 5:40-42 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுகையில், பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் சாட்டை யடி பெற்றபிறகு "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய்" ஆலோசனைச் சங்கத்தைவிட்டு வெளியேறினார் கள் என்பது நினைவிற்கு வருகிறது.

இம்மடலின் ஆசிரியர் கிறிஸ்துவின் பாடுகளுக் குச் சாட்சி என்று தன்னைப் பற்றிக் கூறுகிறார் (5:1). "இனி வெளிப்படும் மகிமைகளுக்குப் பங் காளியுமாயிருக்கிற நான்" என்னும் சொற்றொடர் மறுரூப நிகழ்ச்சிக்குச் சான்றாக இருக்கிறது. இரண்டு நிகழ்ச்சிகளின் போதும் பேதுரு உடன் இருந்தார் என்பதில் ஐயமில்லை.

"உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந் தையை நீங்கள் மேய்த்து" (5:2) என்று ஆசிரியர் மென்மையான மேய்ப்பருக்கான ஆலோசனை யைக் கூறியிருப்பது இரட்சகர்தாமே, "என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக... என் ஆடுகளை மேய்ப் பாயாக" என்று பேதுருவிடம் கூறிய சொற்களை நமக்கு நினைவூட்டுகிறது.

"மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்" (5:5) என்னும் சொற்களின் வேகம், யோவான் 13 -ஆம் அதிகாரத்தில் நடந்த நிகழ்ச்சியை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வருகிறது. அப்பொழுது இயேசுநாதர் அடிமையைப் போல ஒரு துணியை மேலே போர்த்துக்கொண்டு தமது சீடர்களுடைய கால்களைக் கழுவினார். உண்மையில், பெருமை மற்றும் தாழ்மை ஆகியவற்றைப் பற்றி உரைக் கும் பகுதி, பேதுரு கர்த்தரை ஒருக்காலும் மறுத் துரைக்கப் போவதில்லையென்று பெருமையோடு சொன்ன சொற்களையும் (மாற்கு 14:29-31), அதன் பிறகு அவர் இரட்சகரை மும்முறை மறுதலித் ததையும் (மாற்கு 14:67-72) நினைவுகூருவோ மானால் பொருள் பொதிந்ததாகக் காணப்படும்.

பேதுருவின் அனுபவத்தோடு தொடர்புடைய கடைசிக்குறிப்பை 5:8 -இல் காணமுடியும், "உங் கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்." பேதுரு இதை எழுதியபோது, "சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்..." என்று கர்த்தராகிய இயேசு அவரிடம் கூறியதை எண்ணிப் பார்த்திருப்பாரா? (லூக்கா 22:31).

3. எழுதப்பட்ட காலம்

பொதுவாக நேர்மையாகச் செயல்பட விரும்பு கிறவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யக்கூடிய தாக இருக்கிறது என்று பேதுரு கற்பித்திருப்பது (1 பேதுரு 2:13-17), கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கடும் உபத்திரவங்களைக் கட்டவிழ்த்து விட்ட, நீரோ மன்னனின் ஆட்சியின் தொடக்கத்திலேயே (கி. பி. 64), இத்தகைய இணக்கமுள்ள மனப் பான்மையோடு எழுதப்பட்டிருக்குமா என்னும் சந் தேகத்தை பலருடைய உள்ளத்தில் எழுப்புகிறது. அது எதுவாயினும், அந்த நிகழ்ச்சிக்கு வெகு காலம் கழித்து இது எழுதப்பட்டிருக்க வாய்ப் பில்லை. பெரும்பாலும் கி.பி. 63 அல்லது 65 -இல் இம்மடல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

4. நூலின் கருப்பொருளும் பின்னணியும்

ஏற்கனவே நாம் குறிப்பிட்டதுபோல, கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பாடுகளைக் குறித்தே முக்கியமாகப் பேதுரு எழுதுகிறார். இதுவரை யிலும், அவருடைய வாசகர்கள் கிறிஸ்துவின் நிமித்தம் பழித்துரைக்கப்படுதலையும், ஏளனம் செய்யப்படுதலையும் சந்தித்து வந்தார்கள் (4:14,15). சிறைவாசம், சொத்து அபகரிப்பு, வன் முறைக் கொலைகள் ஆகியவையே அவர்களு டைய எதிர்பார்ப்பாக இருந்தன. இந்த மேன்மை

யான மடலின் கருப்பொருள் பாடுகள் பற்றியது மட்டுமல்ல, நற்செய்தியை ஏற்றுக்கொள்வதன் மூலம் பெறுகிற ஆசிர்வாதங்கள், உலகத்தோடு விசுவாசிகள் கொண்டிருக்க வேண்டிய முறையான உறவுகள், அரசாங்கம், குடும்பம், சபை, மூப்பர் களுக்கான அறிவுரைகள் மற்றும் ஒழுக்கப்பயிற்சி இவையாவும் இம்மடலில் காணப்படுகின்றன.

ஐபிராத்து நதியின் கரையில் இருந்த பாபி லோன் நகரத்திலிருந்து இம்மடல் எழுதப்பட்டிருக் கலாம், அங்கே யூதமக்களின் குடியிருப்புப் பகுதி யும் அமைந்திருந்தது. அல்லது ஆவிக்குரிய பாபிலோனாகிய ரோமாபுரியிலிருந்து (திபேரியா நதிக்கரையில் அமைந்திருக்கும் நகரம்) இம் மடல் எழுதப்பட்டிருக்கலாம். இம்மடலை அப் போஸ்தலன் துருக்கி என்று இந்நாட்களில் அழைக்கப்படுகிற இடத்தில் இருந்த கிழக்கத்திய நாடுகளுக்கு எழுதியனுப்பினார்.

பொருட்சுருக்கம்

1. விசுவாசிகளுடைய சிறப்பு உரிமைகளும் கடமைகளும் (1:1 - 2:10)

அ. வாழ்த்துரை (1:1,2)

ஆ. விசுவாசி என்னும் நிலையில் ஒருவனுடைய தகுநிலை (1:3-12)

இ. விசுவாசியின் தகுநிலையைக் குறித்த வெளிச்சத்தின் அடிப்படையில் அவனுடைய நடத்தை (1:13-2:3).

ஈ. விசுவாசி புதிய வீட்டிலும் தன்னுடைய ஆசாரிய முறைமையிலும் பெற்றிருக்கிற தனிஉரிமைகள் (2:4-10)

2. விசுவாசியின் உறவுகள் (2:11-4:6)

அ. பரதேசி என்னும் நிலையில் உலகத்தோடுள்ள உறவு (2:11-12)

ஆ. குடிமகன் என்னும் நிலையில் அரசாங்கத்தோடுள்ள உறவு (2:13 -17)

இ. வேலைக்காரன் என்னும் நிலையில் எஜமானரோடுள்ள உறவு (2:18-25)

ஈ. மனைவி என்னும் நிலையில் தனது கணவனோடுள்ள உறவு (3:1-6)

உ. கணவன் என்னும் நிலையில் தனது மனைவியோடுள்ள உறவு (3:7)

ஊ. சகோதரன் என்னும் நிலையில் சபை ஐக்கியத்தோடுள்ள உறவு (3:8)

எ. பாடு அனுபவிக்கிறவர் என்னும் நிலையில் துன்பப்படுத்துகிறவர்களோடுள்ள உறவு (3:9-4:6)

3. விசுவாசிகளின் ஊழியமும் பாடுகளும் (4:7-5:14)

அ. இறுதிநாட்களுக்குரிய இன்றியமையா உடனடித் தேவைகள் (4:7-11)

ஆ. பாடுகளைக் குறித்த புத்திமதிகளும் விளக்கங்களும் (4:12-19)

இ. அறிவுரையும் வாழ்த்துரையும் (5:1-14)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	விசுவாசிகளின் உரிமைகளும் கடமைகளும்			விசுவாசிகளின் உறவுகள்				ஊழியமும் பாடுகளும்
காலம்	கி. பி. 63-65							
தலைப்பு	அழைப்பு			உறவு				பணிவு
பகுப்பு	விசுவாசியின் தகுதி	விசுவாசியின் நடத்தை	விசுவாசியின் ஆசாரிய உரிமை	உலகத்தோடும் அரசாங்கத்தோடும் உறவு	வேலைக்காரன்-எஜமான் உறவு	கணவன் மனைவி உறவு	துன்பப்படுவதுடன் உறவு	விசுவாசியின் ஊழியமும் பாடுகளும்
வசனம்	1:1-12	1:13-2:3	2:4-10	2:11-17	2:18-25	3:1-7	3:8-4:6	4:7-5:14
இடம்	பாபிலோனாகிய ரோமாபுரி							

1. விசுவாசிகளுடைய சிறப்பு உரிமைகளும் கடமைகளும் [1:1 - 2:10]

அ. வாழ்த்துரை [1:1,2]

1:1 மனதிற்கினிய மீனவர் தன்னை **இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு** என்று அறிமுகப்படுத்துகிறார். மகிமை நிறைந்த தும் மாற்றம் பெறச் செய்கிறதுமான செய்தியை அறிவிக்கும்படி கர்த்தராகிய இயேசுவினால் முத லாவது நியமிக்கப்பட்ட பன்னிருவரில் இவரும் ஒருவர். தெய்வீகத் தொடுதலை உணர்ந்த பேதுரு அவ்வழைப்பிற்கு இசைந்தபோது மனிதர்களைப் பிடிக்கிறவராக மாறினார்.

கிறிஸ்துவின் விருப்பங்களை இவ்வுலகில் நிறைவேற்றும் பிரதிநிதிகளாகவே எல்லா விசுவாசிகளும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். நாம் யாவரும் நம்முடைய நாட்டிலோ வெளிநாட் டிலோ திருப்பணி ஆற்றுவதற்கென்று அழைக்கப் பட்டவர்களாகவே கருதப்பட்டிருக்கிறோம். இயேசு வின் பற்றாளர்கள் என்னும் நிலையில் நம்மு டைய வாழ்க்கையின் முக்கிய நோக்கம் இதுவே ஆகும். மற்ற நோக்கங்கள் யாவும் இதற்குக் கீழா னவையே.

இந்த மடலானது **பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா** ஆகிய நாடுகளில் எங்கும் சிதறிச் சென்றிருந்த பரதேசி களுக்கு அல்லது அந்நியருக்கு எழுதப்பட்டது. இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்கள் யார்?

சிதறியிருப்பவர்கள் என்னும் சொல்லைப் பேதுரு பயன்படுத்தியிருப்பது, அவர்கள் யூத விசுவாசிகள் என்று நாம் முன்கூட்டியே நினைக் கும்படி செய்துவிடுகிறது. ஏனெனில் இஸ்ர வேலின் பன்னிரண்டு கோத்திரத்திலிருந்து விசு வாசிகளான மக்களைக் குறிப்பிட யாக்கோபும் இதே சொல்லைப் பயன்படுத்துகிறார் (யாக். 1:1). மேலும் இச்சொல் யோவான் 7:35 -இல் புறவினத் தாரிடையே சிதறியிருந்த யூதர்களைக் குறிக் கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், உபத்திரவங்கள் பெருகியபோது புற வின விசுவாசிகள் அண்டை நாடுகளுக்குள்ளா கச் சிதறடிக்கப்பட்டார்கள், அவர்களுக்குப் பேதுரு எழுதினார் என்பதே பெரும்பாலும் உண்மையாக இருக்கக்கூடும். அவ்வாறு அவர் எழுதுகிறபோது, முந்தின காலத்தில் இப்பூமிக்குரிய இறைமக்க ளுக்குக் கொடுக்கப்பட்ட பல பெயர்களை இறை வனின் புதிய கூட்டத்திற்கு, அதாவது சபை மக்க ளுக்குச் சூட்டுகிறார். அவர்களை அவர் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (1:2), தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக் கூட்டம், பரிசுத்த ஜாதி, அவருக்குச் சொந்தமான ஜனம் (2:9) என்றெல்லாம் அழைக்கிறார். அவர் புறவின விசுவாசிகளுக்கே இம்மடலை எழுதினார் என்பதற்கு அடையாளமாக மேலும் மூன்று குறிப்பு களைத் தருகிறார். அவர்களுடைய முன்னோர் களிடத்திலிருந்து வீணான நடத்தையையே அவர் கள் பெற்றிருந்தார்கள் என்பதை அவர் குறிப்பிடு கிறார் (1:14,18). முந்தின காலத்தில் அவர்கள் தேவனுடைய மக்களாக இருக்கவில்லை என்று அவர் விவரிக்கிறார் (2:10). இறுதியாக 4:3 -ஆம் வசனத்தில், அவர்கள் புறவினத்தாரின் விருப்பத் தின்படி வாழ்ந்து வந்தார்கள் என்று விவரிக் கிறார். ஆகவே பேதுரு இங்கு குறிப்பிடும் சிதறடிக் கப்பட்ட நிகழ்ச்சி கிறிஸ்தவ சபையில் ஏற்பட்டது, தங்களுடைய மனமாற்றத்திற்கு முன் புறவினத் தைச் சேர்ந்தவர்களாக இருந்த மக்கள் பெருமள வில் இதில் பாதிக்கப்பட்டார்கள் என்பதற்கான வலிமையான ஆதாரம் இங்கு காணப்படுகிறது. முதன்மையாக, பேதுரு யூதர்களுக்கே அப் போஸ்தலனாக விளங்கினார் என்று யாரேனும் இதனை மறுத்துரைத்தால், அவர் புறவினத் தாருக்கு ஊழியம் செய்வதற்கு அதன் காரண மாக ஏதொரு தடையும் உண்டாயிருக்கவில்லை என அறிவோம். புறவினத்தாருக்கு அப்போஸ் தலனாக இருந்த பவுலும் யூதர்களிடையே ஊழி யம் செய்வதில் நேரத்தைச் செலவிட்டார் என்பது நிச்சயம்.

1:2 மேலும் இம்மடலின் வாசகர்கள் தங்களு டைய இரட்சிப்பில், மூவொருவராகிய மூன்று நபர்களுடைய ஈடுபாட்டினால் நான்கு வகையான முன்னேற்றத்தை அடைந்தவர்கள் என்று பெயரி டப்பட்டிருக்கிறார்கள்.

முதலாவதாக, அவர்கள் **பிதாவாகிய தேவ னுடைய முன்னறிவின்படியே தெரிந்துகொள் ளப்பட்டவர்கள்.** நித்தியத்தின் கடந்த காலத் தில், தேவன் அவர்களைத் தம்முடைய மக்களா கத் தெரிந்துகொண்டார் என்பது இதன் பொருளா கும். தெய்வீகத் தெரிந்தெடுப்பு என்னும் கோட் பாடு எப்பொழுதும் ஆதரிக்கப்படுவதில்லை. ஆனால் இது தேவனை தேவனாக இருக்கும்படி அனுமதிக்கிறது - என்னும் நற்பண்பைக் கொண்டி ருக்கிறது. மனிதனின் மனதிற்கினியதாக இதனை உருவாக்கித் தரவேண்டும் என்று செய்கிற முயற்சிகள் யாவும், தேவனுடைய இறையாண் மையினின்று திசை திருப்புவதாகவே முடி

வடைந்துவிடுகிறது. தேவனுடைய தெரிந்தெடுப்பையும், மனிதனுடைய பொறுப்பையும் இணக்கம் அடையச் செய்வதில் ஏற்படக்கூடிய எந்த நெருடலும் தேவனுடைய மனதில் அல்ல, மனிதனுடைய மனதிலேயே இருக்கிறது. திருமறை இவ்விரண்டு கோட்பாடுகளையும் கற்பிக்கிறது. ஆகவே நாம் இரண்டு கோட்பாடுகளையும் விசுவாசிக்கவேண்டும். இவ்விரு கருத்துகளும் தீவிரமான நிலையில் உண்மையாய் இருக்கின்றன. இரண்டிற்கும் இடையே ஏதோ ஓரிடத்தில் உண்மை இருக்கிறது என்பது சரியன்று.

தேவனுடைய தெரிந்தெடுப்பு அவருடைய **முன்னறிவின்படியானது** என்று சொல்லப்பட்டிருக்கிறது. யாரெல்லாம் இரட்சகரிடத்தில் விசுவாசம் வைப்பார்கள் என்று தேவன் முன்னறிந்து அவர்களைத் தெரிந்துகொண்டார் என்பதே இதன் பொருள் என்று சிலர் கூறுகிறார்கள். மனிதனுடைய சொந்த விருப்பத்திற்கு விட்டுவிட்டால் எந்தவொரு பாவியும் இரட்சகரை விசுவாசிக்க மாட்டான் என்பதை தேவன் நன்கு அறிந்திருந்தார், ஆகவே அவர் தம்முடைய முன்னறிவின்படி சிலரைத் தமது கிருபையைப் பெறுவதற்கான வெற்றிச் சின்னங்களாகக் குறித்துக் கொண்டார் என்று வேறு சிலர் கூறுகிறார்கள். தேவனுடைய தெரிந்தெடுப்பில் விவரித்துக் கூற இயலாத இரகசியம் அடங்கியிருக்கிறது. அதில் ஏதொரு நேர்மையற்ற தன்மையும் இல்லை என்பதில் நாம் உறுதியாய் இருக்க முடியும்.

இரட்சிப்பின் இரண்டாவது கட்டம் **ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல்** ஆகும். பரிசுத்தமாகுதலின் இந்தப் பகுதி இரட்சிப்புக்கு முன் நிகழ்கிறது.[1] இது பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாக இருக்கிறது. இதன் வாயிலாக தேவனுக்குச் சொந்தமாகும்படி அவர் மக்களைப் பிரித்துவைக்கிறார் (2 தெச. 2:13 -ஆம் வசனத்தையும் காண்க). பிதாவாகிய தேவனுடைய தெரிந்தெடுப்பைத் தருக்காீதியில் காணும்போது, தொடர் நிகழ்ச்சியாக இது விளங்குகிறதை அறியலாம். *நித்தியத்தில்* தேவன் மனிதர்களை முன்னறிந்து தெரிந்துகொண்டார். *குறித்த காலத்தில்* அந்தக் குறிப்பிட்ட தனிமனிதர்களுடைய வாழ்க்கையில் தெரிந்தெடுப்பை உண்மையானதாக மாற்றுவதற்குரிய செயலைப் பரிசுத்த ஆவியானவர் நடத்துகிறார்.

அந்த ஆத்துமாவின் இரட்சிப்பில் நடைபெறுகிற மூன்றாவது கட்டம், பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்குப் பாவியான மனிதன் செய்கிற பதிற் செயலாகும். அது **இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் தன்னுடைய பாவங்களுக்காக மனம்வருந்தி, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதன் மூலம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் என்பதே இதன் பொருளாகும். சுவிசேஷம் என்பது கீழ்ப்படிவதற்கான ஒன்று என்னும் கருத்து, புதிய ஏற்பாட்டில் பொதுவான செய்தியாக இருக்கிறது (ரோமர் 2:8; 2 தெச. 1:7 -ஆகிய வசனங்களைக் காண்க).

இறுதியாக, அவருடைய **இரத்தம் தெளிக்கப்படும்** செயல். இதனை நாம் முழுமையாக எழுத்தின்படியானது என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. மேலும் ஒரு மனிதன் இரட்சிப்படையும் போது அவன் உண்மையாகவே இயேசுவின் இரத்தத்தினால் தெளிக்கப்படுகிறான் என்று அழுத்தமாய்க் கூறக் கூடாது. இது ஓர் உருவகப் பேச்சாகும். ஒரு மனிதன் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த உடனேயே, கல்வாரியில் கிறிஸ்து சிந்திய இரத்தத்திலிருந்து பாய்ந்து வருகிற எல்லா நன்மைகளையும் அவன் பெற்றுக் கொள்கிறான் என்பதே இது கூறும் செய்தி. இரட்சகருடைய குருதியானது ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் சிந்தப்பட்டது. ஆனால் நாமோ அவரிடத்தில் விசுவாசம் வைத்த உடனே, செந்நிற வெள்ளத்திலிருந்து பாய்ந்து வருகிற பாவ மன்னிப்பு, மீட்பு, இன்னபிற எண்ணிக்கையில் அடங்கா நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறோம்.

ஆவிக்குரிய பிறப்பின் நான்கு கட்டங்களும் தன்னுடைய மடலின் வாசகர்களுடைய வாழ்க்கையில் நடந்தவிதத்தை விவரித்துக் காண்பித்த பேதுரு, **கிருபையும் சமாதானமும்** அவர்களிடத்தில் **பெருகவேண்டும்** என்று இப்பொழுது வாழ்த்துகிறார். அவர்கள் ஏற்கனவே தேவனுடைய கிருபையை இரட்சிப்பில் அனுபவித்திருக்கிறார்கள், ஆனால் ஒவ்வொரு நாளும் அவர்களுக்குக் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான **கிருபை** அல்லது வலிமை வேண்டும், மேலும் கொந்தளிப்பான சமுதாயத்தின் நடுவே **சமாதானமும்** வேண்டும். அதைத்தான் முழு நிறைவான அளவில் அவர்கள் பெறவேண்டுமென்று இங்கு அப்போஸ்தலன் வேண்டுகிறார். "நற்செய்தியின் முதல் சொல்லும் கடைசிச் சொல்லும் கிருபை என்பதே; கிருபையினால் நிறைவேற்றப்பட்ட வேலையே சமாதானம் - நிறைவான ஆவிக்குரிய ஆரோக்கியம்" என்று திருவாளர் ஜேம்ஸ் டென்னி கூறியிருக்கிறார்.

ஆ. விசுவாசி என்னும் நிலையில் ஒருவனுடைய தகுநிலை [1:3–12]

1:3 மூன்று முதல் பன்னிரண்டு வரையிலான வசனங்களில், நாம் பெற்றிருக்கிற இரட்சிப்பின் தனிச்சிறப்பு வாய்ந்த மகிமைகளைப் பேதுரு எடுத்து முன்வைக்கிறார். **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவும்** இரட்சிப்பின் காரணருமாகிய **தேவனுக்குப்** புகழ்ச்சியைச் செலுத்தும்படியான அழைப்போடு அவர் தொடங்குகிறார். இந்தப் பதவிப் பெயரானது கர்த்தராகிய இயேசுவுடன் தேவன் கொண்டிருக்கும் இரண்டு வகையான உறவுகளை வெளிப்படுத்துகிறது. **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவன்** என்னும் சொற்றொடர் இரட்சகரின் மனிதநிலையைக் குறிக்கிறது. **பிதா** என்னும் பெயர் தேவகுமாரனுடைய தெய்வநிலையை முக்கியப்படுத்திப் பேசுகிறது. குமாரனின் முழுப் பெயரும் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் - இருதயங்களிலும் வாழ்க்கையிலும் ஆளுகைபுரிவதற்கான உரிமையைத் தனிப்பட்ட வகையில் பெற்ற ஒருவர்.

இயேசு - தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர்.

கிறிஸ்து - விண்ணகத்தின் மிக மேலான இடத்திற்கு உயர்த்தப்பட்டவராகிய இவர் தேவனுடைய அபிஷேகம் பெற்றவர்.

1:4 தேவன் **தமது மிகுந்த** இரக்கத்தினாலே, **இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததன்** மூலமாக, நாம் **ஜீவனுள்ள நம்பிக்கை** பெறும்படி புதிதாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறோம். தேவனே இந்த இரட்சிப்பிற்கு மூல காரணராக இருக்கிறார். அவருடைய பெரிதான இரக்கம் அதற்கு ஏதுவாக இருக்கிறது. புதிய பிறப்பு அதனுடைய இயல்பாக இருக்கிறது. ஜீவனுள்ள நம்பிக்கை அதனுடைய தற்போதையப் பரிசுப்பொருளாகும். **இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்** நம்முடைய இரட்சிப்பின் நீதியான அடிப்படையாக விளங்குகிறது, மேலும் அது நம்முடைய **ஜீவனுள்ள நம்பிக்கைக்கு** அடித்தளமாகவும் விளங்குகிறது.

பாவிகள் என்னும் நிலையில், கல்லறைக்கு அப்பால் நமக்கு எந்த நம்பிக்கையும் இல்லாதிருந்தது. ஆக்கினைத் தீர்ப்பும் தீப்பிழம்புகள் கூடிய நேர்மையான சீற்றமும் நிகழுவது உறுதி என்பதைத் தவிர வேறு ஒன்றும் அதற்குப் பிறகு இல்லை. முதலாம் படைப்பின் அங்கங்களாக இருந்த நிலையில் மரண தண்டனைக்கு உட்பட்டவர்களாக இருந்தோம். ஆனால் கிறிஸ்துவின் மீட்பின் கிரியையில், துன்மார்க்கரான பாவிகளை இரட்சிக்கவும் அதன் பிறகும் தாம் நீதியுடைய வராய் விளங்கவும் தேவன் நீதியான வழியைக் கண்டுபிடித்தார். நம்முடைய பாவங்களுக்கான தண்டனையைக் கிறிஸ்து செலுத்தித் தீர்த்தார். முழுமையான கடன்தீர்த்தல் செய்யப்பட்டுவிட்டது. நீதியின் உரிமைகோரல்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டன, இப்பொழுது நற்செய்திக்குக் கீழ்ப்படிபவர்களிடமாய் இரக்கமானது பாய்ந்து செல்ல முடியும். தேவன் தமது குமாரனுடைய தியாகச் செயலில் முழு மனநிறைவு அடைந்திருக்கிறார் என்பதைக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் சுட்டிக்காட்டியிருக்கிறார். "முடிந்தது!" என்று கர்த்தர் கதறியதற்குப் பிதா கூறிய "ஆமென்" கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே ஆகும். மேலும், கிறிஸ்துவுக்குள் மரணமடைபவர்கள் யாவரும் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுவார்கள் என்பதற்கு அந்த உயிர்த்தெழுதல் அச்சாரமாக விளங்குகிறது. இதுவே நம்முடைய **ஜீவனுள்ள நம்பிக்கை** - கிறிஸ்துவோடு என்றென்றும் அவரைப் போல இருக்கும்படியாக விண்ணக வீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவோம் என்னும் எதிர்பார்ப்பு. "நம்முடைய நிகழ்காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் இடையேயுள்ள தொடர்பே ஜீவனுள்ள நம்பிக்கை" என்கிறார் திருவாளர் F. B. மேயர்.

இந்த வசனத்திலும் அடுத்த வசனத்திலும் இரட்சிப்பின் எதிர்காலப் பண்புக்கூறு விவரிக்கப்பட்டிருக்கிறது. நாம் மறுபடியும் பிறந்தபோது, விண்ணகத்தில் நமக்கு ஒரு **சுதந்தரம்** கிடைக்கப் போகிறது என்னும் நம்பிக்கை உண்டாயிற்று. **சுதந்தரம்** என்று சொல்லப்பட்டிருப்பது யாதெனில், நித்திய காலம் முழுவதும் விண்ணகத்தில் விசுவாசி அனுபவிக்கப் போகிற அனைத்தும், கிறிஸ்துவின் மூலமாக அவனுக்குக் கிடைக்க போகிற அனைத்துமே யாகும் (சங். 16:5). அந்தச் சுதந்தரமானது **அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகும்:** (1) ஒருபோதும் துருப்பிடிக்காது, உடைந்துபோகாது அல்லது அழுகிக் கெட்டுப் போகாது என்பதே **அழியாதது** ஆகும். அது சாவதில்லை என்னும்உத்திரவாதத்தைப் பெற்றிருக்கிறது. (2) மாசற்றது என்பதன் பொருள் என்னவெனில், அந்தச் சுதந்தரமே நிறைவான நிலையில் இருக்கிறது என்பதாகும். எவ்விதமான கறையும் அழுக்கும் அதனுடைய தூய்மையை மங்கச் செய்வதில்லை. அதில் பாவம் இருக்காது என்னும் உத்திரவாதத்தைப் பெற்றிருக்கிறது. (3) அது **வாடாதது**. அதனுடைய மதிப்பிலும்,

மகிமையிலும், அழகிலும் எந்த மாற்றமும் உண்டாகாது. காலத்தினால் மாற்றம் அடையாது என்னும் உத்திரவாதத்தைப் பெற்றிருக்கிறது.

இப்பூமிக்குரிய சுதந்தரங்கள் அவற்றின் சிறந்த நிலையிலும்கூட நிச்சயமற்று இருக்கின்றன. சில வேளைகளில் ஒரு சொத்தின் மதிப்பு பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக, மிகவும் குறைந்து விடுகிறது. சில வேளைகளில் சாசனத்தில் பெயர் எழுதப்படாதவர்களும் கூட எதிர்த்து வாதிட்டு, சொத்தைத் தங்களுக்குரியதாக்கிக் கொள்கிறார்கள். சில வேளைகளில் சட்ட நுணுக்கங்களின் காரணமாக வாரிசுரிமையை மக்கள் இழக்க நேரிடுகிறது. ஆனால் தெய்வீக சுதந்தரமோ காலத்தினால் மாறக்கூடியது அல்ல. விசுவாசி அதனை அடையக்கூடாதபடி ஏதொன்றாலும் தடைசெய்ய முடியாது. தேவனுடைய பிள்ளையாயிருக்கிறவன் பெறும்படி அது விண்ணகத்தில் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1:5 சுதந்தரமானது கிறிஸ்தவர்கள் அடையும்படி பாதுகாக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, அவர்களும் அதை அடையும்படி **காக்கப்பட்டிருக்கிறார்கள்**. இவ்வுலக வாழ்வில், சொத்து பிரிக்கப்படுவதற்கு முன்னரே ஒரு வாரிசு இறந்துபோக நேரிடும். விண்ணக சுதந்தரத்தைப் பாதுகாத்து வரும் அதே கிருபை, அதனை அனுபவிக்கும்படி நம்மையும் காத்து வருகிறது. தேவன் தமது மக்களைத் தெரிந்தெடுத்த செயல் ஒருக்காலும் ஏமாற்றத்தில் முடியாது. நித்தியத்தின் கடந்த காலத்தில் தெரிந்துகொள்ளப்பட்டு, தற்போது குறிப்பிட்ட காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள், நித்திய எதிர்காலத்திற்கென்று காக்கப்பட்டு வருகிறார்கள். கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசி நித்திய பாதுகாப்பு உடையவனாயிருக்கிறான்.

ஆனால் நித்திய பாதுகாப்பில் தெய்வீகப் பங்கும் மனிதனுடைய பங்கும் உள்ளன. நாம் **தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டு** வருகிறோம் - இதுவே தெய்வீகப் பங்கு. ஆனால் இது **விசுவாசத்தைக் கொண்டு** உண்டாகிறது - இதுவே மனிதனுடைய பங்கு. ஒரு மனிதன் விசுவாசத்தோடு இருக்கும் வரையில் மட்டுமே இரட்சிக்கப்பட்டிருப்பான் என்பது இதன் பொருளன்று. எங்கே மெய்யான **விசுவாசம்** இருக்கிறதோ, அங்கே அது தொடர்ந்து இருக்கும். இரட்சிப்பிற்கான விசுவாசம் எப்பொழுதும் நிலைநிற்கும் பண்பைக் கொண்டிருக்கிறது.

தேவனுடைய பிள்ளையாக இருப்பவன், **கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவான தேவனுடைய பலத்தினாலே** காக்கப்படுகிறான். இங்கு இரட்சிப்பானது, அதனுடைய எதிர்காலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இரட்சிப்புக்கு மூன்று காலங்கள் இருக்கின்றன என்று அவ்வப்போது சொல்லப்படுவதுண்டு: (1) ஒரு கிறிஸ்தவன் முதலாவது இரட்சகரை விசுவாசித்த அதே தருணத்தில் அவனுடைய பாவத்தின் தண்டனையிலிருந்து *இரட்சிக்கப்பட்டுவிட்டான்* (எபே. 2:8). (2) ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய வாழ்க்கையில் இரட்சகரை வாழும்படி அனுமதிக்கும்போது, அவன் அனுதினமும் பாவத்தின் அதிகாரத்திலிருந்து *இரட்சிக்கப்படுகிறான்* (ரோமர் 5:10). (3) விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படும் வேளையில் அவன் பாவத்தின் முன்னிலையிலிருந்து *இரட்சிக்கப்படுவான்* (எபி. 9:28). அவனுடைய சரீரம் மறுரூபமடைந்து மகிமையடையும். அது எப்பொழுதும் பாவத்திலிருந்தும், நோயிலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலை பெற்றிருக்கும். இரட்சிப்பின் இந்த எதிர்கால நிலைமை, பரிசுத்தவான்கள் கிறிஸ்துவோடு இவ்வுலகிற்குத் திரும்பி வருகிற நிகழ்ச்சியையும் உட்கொண்டதாகும். அப்பொழுது அவர்கள் தேவனுடைய மக்கள் என்பது தெளிவாக வெளிப்படுத்தப்படும் (1 யோவான் 3:2).

1:6 இவ்விதமாகச் சரீரம் மீட்கப்படும், மகிமை நிறைந்த சுதந்தரம் வைக்கப்பட்டிருக்கிறது என்னும் நம்பிக்கை இருப்பதால், விசுவாசிகள் **சோதனைகளின்** மத்தியிலும் **மிகவும் சந்தோஷப்பட** முடியும். பேதுரு யாருக்கு இந்த மடலை எழுதினாரோ, அவர்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ்ந்ததன் காரணமாகவே, வெகுவாகத் துன்பங்களை அடைந்தார்கள். கிறிஸ்தவத்தில் மிகவும் களிப்பூட்டக்கூடியதும் அதே நேரத்தில், முரண்பாடு உள்ளதுபோல் தோற்றமளிப்பதுமான உண்மையைப் பேதுரு அவர்களுக்கு நினைவூட்டுகிறார். துன்பத்தின் நடுவே மகிழ்ச்சி. ஒரு புறம், பாதுகாப்புடைய மக்களுக்கென்று பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிற சுதந்தரத்தைப் பெற விருக்கிற நம்பிக்கையால் அவர்கள் **சந்தோஷப்பட** முடியும். மறுபுறம், பலவிதமான சோதனைகள் ஒரு குறுகிய காலத்திற்கே உரியவை, ஆனால் மகிமையோ என்றென்றும் நிலைத்திருக்கும் என்னும் அறிவு அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் (2 கொரி. 4:17 -ஐக் காண்க). எண்ணிடலங்கா சோதனைகளால் ஏற்படும் துன்பங்களின் நடுவே உண்டாகக் கூடிய மகிழ்ச்சியைக் குறித்து விவரிக்கும் திருவாளர் J. H. ஜோவெட்

எழுதியது: "வாய்ப்பு வளமற்ற வறண்ட நிலத்தில் இத்தகையதொரு நீரூற்றைக் கண்டடைவேன் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவே யில்லை."

1:7 தாங்கள் அனுபவிக்கிற துன்பங்கள் நோக்கமற்றவையல்ல, பலனற்றவையுமல்ல என் பதை அவ்வாறு துன்பப்படுகிற பரிசுத்தவான்கள் அறிவது மேலும் ஓர் ஆறுதலாக விளங்குகிறது. அக்கிரமக்காரர்கள் அனுபவிக்கிற துன்பங்கள், அவர்கள் நித்தியத்தில் அனுபவிக்கப்போகிற நரக வேதனைகளுக்கு முன்னனுபவமாக இருக் கின்றன. கிறிஸ்தவர்களைப் பொருத்தமட்டில் அதுவல்ல உண்மை. தேவனுடைய பிள்ளை ஒருவருடைய வாழ்க்கையில் சந்திக்கிற துன்பங் களால் ஏற்படக்கூடிய நன்மையான பல நோக்கங் களில் ஒன்று அவருடைய **விசுவாசத்தின்** மெய்ம்மை சோதிக்கப்படுதலே ஆகும். பேதுரு நம்முடைய விசுவாசத்தைப் பொன்னிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறார். மனிதனுக்குத் தெரிந்த பொருட்களில், அழிந்துபோகக் கூடாத படி தோன்றுகிறவற்றில் பொன்னும் ஒன்று. அது தீவிரமான வெப்பத்திற்குள் உட்படுத்தப்பட்டும் அழிந்துபோகிறதாகக் காணப்படுவதில்லை. ஆனால் பொன்னானது பயன்படுத்தப்படுவதா லும், அதிக அழுத்தத்திலும், தீயிலும் **அழிந்து போகக்** கூடியது என்பதே உண்மை.

மெய்யான **விசுவாசம்** அழிக்கப்பட முடியா தது. விசுவாசி கடுமையான சோதனைகள் துன் பங்கள் ஆகியவற்றின் ஊடாகச் செல்ல வேண் டிய சூழ்நிலை உண்டாகலாம், ஆனால் அவை அவனுடைய விசுவாசத்தை அழிப்பதில்லை, மாறாக அவனுடைய விசுவாசத்தை ஊட்டி வளர்க்கும் உணவாகவே அவை செயல்படும். இந்த உலகத்தின் வரலாற்றில் எந்த மனிதனும் அடைந்திராத பேரிழப்பை யோபு ஒரே நாளில் அடைந்த போதிலும், "அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாய் இருப் பேன்" (யோபு 13:15) என்று அவரால் சொல்ல முடிந்தது. பாபிலோனிய அக்கினிச் சூளையில் மூன்று மனிதர்கள் உண்மையாகவே **அக்கினி யால் சோதிக்கப்பட்டார்கள்**. அந்த அக்கினி யானது அவர்களுடைய விசுவாசம் உண்மையா னது என்று மெய்ப்பித்தது. மேலும் அவர்களைக் கட்டிவைத்திருந்த கயிறு எரிந்து போயிற்று, அவர்கள் அதன் மூலம் விடுவிக்கப்பட்டார்கள் (தானி. 3:12-30). மேலும் அந்த அக்கினி சோதனை யின்போது அவர்களுடைய கூட்டாளியாக இருந் தவர் "தேவனுடைய குமாரனைப் போல" (தேவ புத்திரனுடைய சாயல் என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது) காணப்பட்டார். **விசுவாசத் தின்** உண்மைத்தன்மையை **அக்கினியால்** மட்டுமே சோதிக்க முடியும். சூழ்நிலைகள் சாத கமாக இருக்கும்போது கிறிஸ்தவனாக வாழ்வது எளிது. ஆனால் வெளியரங்கமாகக் கிறிஸ்து வுக்குச் சாட்சி கூறுவதால் உபத்திரவமும் பாடு களும் உண்டாகுமானால், மேலோட்டமாகப் பின்பற்றுகிறவர்கள் விலகிச்சென்று, கூட்டத்திற் குள் மறைந்துபோவார்கள். விலையில்லாத மார்க்கத்தில் எவ்விதப் பயனுமில்லை. உரிய விலையைச் செலுத்த மறுக்கிற விசுவாசம் போலியானது. இதனை ஏனோதானோ விசுவாசம் என்று பெயரிட்டு யாக்கோபு தனது மடலில் குறை கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது மெய் யான **விசுவாசத்தின்** பயனாகப் **புகழ்ச்சியும் கன மும் மகிமையும்** உண்டாகும். விசுவாசம் சோத னையைத் தாங்கி நிற்கிற ஒவ்வொரு நிகழ்ச்சிக் கும் தக்கதாக தேவன் பரிசை வழங்குவார் என் பதே இதனுடைய தெளிவான பொருள். பிரச்சி னைகள் சூழ்ந்திருந்தாலும் மகிழ்ச்சியுடன் இருப்பவர்களை அவர் **புகழுவார்.** விசுவாசிகள் தங்களுக்கு ஏற்படுகிற உபத்திரவங்களை அவரி டம் கொண்டிருக்கிற நம்பிக்கைக்கு அளிக்கப் பட்ட ஒப்புதல் என்று ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள் அடைந்த சோதனைகளுக்கும் பாடு களுக்கும் அவர் **கனத்தையும் மகிமையையும்** பரிசாக வழங்குவார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் அரசாளும்படி வருகிறபோது, இந்த உலகம் வேண்டாம் என்று நிராகரித்த மக்கள் தேவனு டைய புத்திரர்கள் என்று தெளிவாக வெளிப்படுத் திக் காட்டப்படுவார்கள். தேவ வசனங்களை ஒப்பிட்டுக் காணும்போது, விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, விண்ணகத்தில், கிறிஸ்து வின் நியாயாசனத்தில் பரிசுகள் அறிவிக்கப்படும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை அறியமுடி யும். ஆனால் இந்தப் பரிசுப்பொருட்கள் வெளி யரங்கமாக வழங்கப்படும் நிகழ்ச்சி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நிகழும்.

1:8 நம்முடைய இரட்சிப்பின் அனுபவம் தற் காலம் எவ்வாறு நிகழ்கிறது என்பதை இப்பொழுது பேதுரு விவரிக்கிறார் - கிறிஸ்துவை விசுவாசத் தினாலே ஏற்றுக்கொள்ளுதல். நம்முடைய கண்

களாலே நாம் அவரை ஒருபோதும் கண்ட தில்லை, ஆயினும் **அவரிடத்தில் அன்புகூரு கிறோம்**[2] இந்தக் காலத்தில் அவரை நாம் **காணா மலிருந்தும்** அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக் கிறோம். அவர் தோமாவினிடத்தில் குறிப்பிட்ட ஆசிர்வாதத்திற்குள்ளாக இவ்வாறுதான் நாம் நுழைகிறோம், "காணாதிருந்தும் விசுவாசிக்கிற வர்கள் பாக்கியவான்கள்" (யோவான் 20:29).

திருவாளர் வில்லியம் லிங்கன் எழுதுகிறார்:

> மக்கள் அன்பைக் குறித்து பெருமளவில் பேசு கிறார்கள். ஆனால், "தேவனுடைய தயவை யும் புன்னகையையும் நான் இழந்துபோக மாட்டேன். அதற்காக அவரை வருத்தமடையச் செய்கிறதைக் காட்டிலும் பாடு அனுபவிப்பதே மேல்" என்று எந்த அன்பு சோதனையின் போது பேசுகிறதோ அந்த அன்பே தேவனிடத் திலும் கிறிஸ்துவினிடத்திலும் செலுத்தப்படுகிற மெய்யான அன்பு. அன்பானது ஒரு ரொட்டித் துண்டிலும் தேவனுடைய புன்னகையிலும் மனநிறைவு அடைகிறது. மாறாக, தேவனு டைய புன்னகையின்றி கிடைக்கக்கூடிய பெரிய பதவியிலும் உலகத்தின் புகழ்ச்சியிலும் அது மனநிறைவடைவதில்லை. தேவனுடைய மெய் யான பிள்ளைகள் யாவருக்கும் இத்தகைய சோதனைகள் ஏற்பட வேண்டும்; அவர்கள் கோதுமையிலிருந்து உமியைக் களைந்து எறிகிறார்கள். அக்கினியால் சோதிக்கப்பட்டு பொன் வெளிப்படுகிறது, அதனுடைய கழிவிலி ருந்து தூய்மையடைகிறது.[3]

அவரிடத்தில் விசுவாசம் கொண்டவர்களாக, **சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்தது மாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்** நாம் **களிகூருகிறோம்.** தூய்மையான சந்தோஷத் தின் ஊற்றுடன் தடையில்லாமல் நித்தியமாகத் தொடர்புகொள்ளுவதே அவருடன் விசுவாசத் தின் மூலமாக ஒன்றிணைக்கப்படுதலாகும். கிறிஸ்தவனுடைய மனமகிழ்ச்சி இவ்வுலகச் சூழ் நிலைகளைச் சார்ந்ததல்ல. மாறாக அது உயிர்த் தெழுந்து தேவனுடைய வலப்புறத்திற்கு உயர்த் தப்பட்ட கிறிஸ்துவையே சார்ந்தது. கிறிஸ்துவின் புகழ்ச்சிக்குரிய இடத்திலிருந்து அகற்றுவது எவ் வாறு முடியாத செயலோ, அதுபோலவே கிறிஸ்த வனின் மனமகிழ்ச்சியைக் கொள்ளையடிப்பதும் முடியாத செயலாகும். அவையிரண்டும் ஒன்றாக இணைந்து நிற்கின்றன.

1:9 அடுத்ததாக, விசுவாசத்தின் தற்போதைய பயனைக் குறித்து பேதுரு விவரிக்கிறார் - **ஆத்தும ரட்சிப்பு.** சரீரத்தின் இரட்சிப்பு எதிர்காலத்தில் நடைபெறப் போகிற நிகழ்ச்சியாகும். கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வருகிற போது அது நிகழும். ஆனால் விசுவாசத்தின் மூல மாக நாம் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்கிற அதே தருணத்தில், நாம் நம்முடைய ஆத்துமாக் களின் இரட்சிப்பைப் பெற்றுவிடுகிறோம். இந்த ஆத்துமாவே மரணத்தின்போது சரீரத்திலிருந்து பிரிக்கப்படுகிறது. இந்த வேதபகுதியில் ஆத்துமா என்று சொல்லப்பட்டிருப்பது ஆவியும் சேர்ந்த ஒன்றாகும், அதன் மூலமாகவே நாம் தேவனை உணர்கிறவர்களாக இருக்கிறோம். ஆத்துமா புதிய பிறப்பின் போது இரட்சிக்கப்படுகிறது.

1:10 இந்த இரட்சிப்பு பழைய ஏற்பாட்டுத் **தீர்க்கதரிசிகள்** பலருடைய ஆய்வுப்பொருளாக இருந்தது. நம்முடைய உரிமையாயிராத பல சலுகைகளை நாம் பெறுவோம் என்று பண்டைய காலத்து தேவபிரதிநிதிகள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். ஆனாலும் என்ன எழுதினார்கள் என்பதை முழுவதும் புரிந்துகொள்ளவில்லை (தானி. 12:8 -ஆம் வசனத்தைக் காண்க).

1:11 அவர்கள் தெளிவாக அறியாதவை: (1) வரப் போகிற மேசியாவின் தனிப்பட்ட அடையாளம். (2) அவருடைய வருகையின் **காலம்**. மேசியாவின் **பாடுகளையும் அவற்றிற்குப் பின்வரும் மகிமை களையும்** முன்னறிவிப்பதற்கான ஏவுதலை தேவ னுடைய ஆவியினிடத்திலிருந்து பெற்றார்கள். ஆனாலும், இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடையே குறைந்தது 2000 ஆண்டுகள் இடை வெளி இருக்கும் என்பதை அவர்கள் அறியா திருந்தார்கள். அவ்வப்போது படவுருவில் சித்தி ரிக்கப்படுவதுபோல அவர்கள் இரண்டு மலைச் சிகரங்களைக் கண்டார்கள் (அ) கல்வாரி, அங்கு தான் இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவித்தார், (ஆ) ஒலிவமலை, அவர் மகிமையோடு வரப் போகிற இடம். ஆனால் அவற்றிற்கு இடையே யிருந்த பள்ளத்தாக்கை அவர்கள் காணவில்லை. அதாவது, தற்கால கிருபையின் காலம், அங்கி ருந்து நாம் இரண்டு நிகழ்ச்சிகளையும் காணக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறோம், ஒன்று முந் தைய நிகழ்ச்சி, மற்றொன்று எதிர்காலத்தில் நிகழவிருப்பது. அவர்களைக் காட்டிலும் நாம் மிகத்தெளிவாகக் காட்சிகளைக் காண்கிறவர் களாக இருக்கிறோம்.

1:12 இன்னும் பிறவாத பல தலைமுறையினருக்கு ஊழியம் செய்தார்கள் என்பதை விசித்திரமான முறையில் தேவ ஆவியானவர் **அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.** அந்தத் தீர்க்கதரிசிகளின் சொற்கள் அன்றைய தலைமுறையினருக்குப் பொருள் செறிந்ததாய் இருந்தபோதிலும், அவர்களுடைய நாளில் நடந்த நிகழ்ச்சிகளில் அந்தச் சொற்களின் முழுப்பொருளும் நிறைவேறித் தீரவில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

இது சில கேள்விகளை எழுப்புவது நிச்சயம். விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல் என்னும் சத்தியத்தைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் நன்கு அறிந்திருக்கவில்லையா? நம்முடைய இரட்சிப்பில் அவர்கள் அறிந்திராத உண்மை எது? **தங்கள் நிமித்தமல்ல மாறாக, நமது நிமித்தமே** அவர்கள் ஊழியம் செய்தார்கள் என்று எந்தப் பொருளில் சொல்லப்பட்டிருக்கிறது?

திருவாளர் வில்லியம் லிங்கன் கூறுகிறார்:

> கிறிஸ்து வருவதற்கு முன்னர் தேவனுடைய கிருபையானது முழுமையான அளவில் வெளிப்படுவதற்கான வாய்ப்பு இல்லாதிருந்தது. தேவன் ஏனோக்கிற்கு செய்ததுபோல, பாவிகளை இரட்சித்து விண்ணகத்திற்கு அழைத்துச் செல்வதற்கான ஆற்றல் கொண்டிருந்தார், அவ்வாறு செயல்படவும் செய்தார். ஆனால் கிறிஸ்துவோடு ஒன்றிணைக்கப்படுதல், அந்த ஒன்றிணைப்பு தெரிவிக்கிற விசயங்கள் ஆகிய வற்றைக் கிறிஸ்து மரணமடைந்து உயிர்த்தெழுந்த காலம் வரையிலும் ஒருவராலும் அனுபவிக்க இயலவில்லை. தமது குமாரரை மிகப்பெரிய அளவில் கனப்படுத்துவதில் தேவன் எவ்வளவாக மனமகிழ்ச்சி கொள்கிறார்![4]

தீர்க்கதரிசிகளுக்கு மறைக்கப்பட்டிருந்தாவும் இப்பொழுது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. பரிசுத்த ஆவியானவர் பெந்தகொஸ்தே நாளில் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தார். நாசரேத்து ஊராராகிய இயேசுவே முன்னுரைக்கப்பட்ட மேசியா. அவரே மனிதர்களுடைய பாவங்களுக்காக மரணமடைந்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாவது நாளில் உயிரோடு எழுப்பப்பட்டார் என்னும் நற்செய்தியைப் பிரசங்கம்பண்ணும்படியான ஆற்றலை அவர் அப்போஸ்தலர்களுக்குத் தந்தருளினார். அவர்களும் கிறிஸ்துவின் மேல்வைக்கும் விசுவாசத்தினாலே இரட்சிப்பு இலவசமாகத் தரப்படும் என்று அறிவித்தார்கள். எல்லா நாடுகளிலிருந்தும் ஒரு மக்கள் கூட்டத்தைத் தம்முடைய திருப்பெயருக்கென்று ஒன்றுசேர்க்க வேண்டுமென்பதே இந்தக் காலத்தில் தேவனுடைய நோக்கமாக இருக்கிறது என்று அவர்கள் அறிவித்தார்கள். மேலும் ஒருநாளில் இவ்வுலகம் முழுவதும் தமது அரசாட்சியை நிறுவும்படி பூமிக்குக் கர்த்தராகிய இயேசு வரப்போகிறார் என்றும் அவர்கள் அறிவித்தார்கள்.

தீர்க்கதரிசிகளுக்கு மறைக்கப்பட்டிருந்த செய்திகளை இக்காலத்து விசுவாசிகள் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதில் மட்டும் அவர்கள் பெற்றிருக்கிற மிகுதியான தனி உரிமைகள் காணப்படுவதில்லை. இரட்சிப்பின் சத்தியங்களை **உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருந்தார்கள்** என்னும் உண்மையிலும் அவை வெளிப்படுகின்றன. தேவதூதர்கள் புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறார்கள். கிறிஸ்துவின் பிறப்பு, அவர் எதிர்கொண்ட சோதனை, கெத்செமனே தோட்டத்தில் அடைந்த வியாகுலம், அவருடைய உயிர்த்தெழுதல் ஆகிய நிகழ்ச்சிகளில் தேவதூதர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். ஆனால் நமக்குத் தெரிந்தவரை வீழ்ந்து போன தூதர்களுக்கு மீட்பு இல்லை. தேவ தூதருக்கு உதவியாகக் கைகொடுக்கும்படி கிறிஸ்து வரவில்லை, மாறாக ஆபிரகாமின் வழித்தோன்றல்களுக்கு உதவிபுரியும்படியே வந்தார்(எபி. 2:16). சபையானது தேவதூதருக்கு ஒரு காட்சிவிளக்கப் பாடமாகத் திகழ்கிறது. தேவனுடைய அநந்த ஞானமானது இப்பொழுது அதன் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டு வருகிறது (எபே. 3:10). ஆனால் நம்முடைய இரட்சிப்பு கொண்டுவரும் மனமகிழ்ச்சியைக் குறித்து அறியும் அறிவு அவர்களுக்கு இல்லை.

இ. விசுவாசியின் தகுநிலையைக் குறித்த வெளிச்சத்தின் அடிப்படையில் அவனுடைய நடத்தை (1:13-2:3).

1:13 இந்த இடத்திலிருந்து, வலியுறுத்திக் கூறப்படும் செய்தியில் மாற்றம் ஏற்படுகிறது. நம்முடைய இரட்சிப்பின் மகிமைகளைக் குறித்து இது காறும் பேதுரு விவரித்துக்கொண்டிருந்தார். இத்தருணத்தில், இதுவரை கூறிவந்த உண்மையின் அடிப்படையில் அவர் வரிசையாகச் சில அறிவுரைகளை வழங்கத் தொடங்குகிறார். "தற்போதைய வேண்டுகோள் முன்னுரையில் கொடுக்கப்பட்டுள்ள கோட்பாட்டின் அடிப்படையிலானது...

பேருண்மைகளின் உந்துவிசை ஏற்படுத்திய ஆவிக்குரிய இயக்கம். நற்செய்தியின் முக்கிய பகுதியில் பிறந்ததே கடமையாற்றுவதற்கான விசை இயக்கம்"[5] என்கிறார் திருவாளர் ஜோவெட்.

முதலாவதாக, பரிசுத்தவான்கள் "இறுக்கிக் கட்டப்பட்ட" மனதோடு இருக்க வேண்டும் என்று பேதுரு வற்புறுத்துகிறார். மனதின் அரையைக் கட்டுவது ஆவலைத் தூண்டுகிற உருவகமாக இருக்கிறது. கிழக்கத்திய நாடுகளில் மக்கள் நீள மான தொங்குகிற ஆடைகளை அணிவார்கள். அவர்கள் வேகமாக நடக்கவோ தடையின்றி நடக் கவோ விரும்பும்போது இடுப்பிலே ஒரு கச்சை யைக் கட்டிக்கொள்வார்கள் (யாத். 12:11 -ஆம் வசனத்தைக் காண்க). இவ்விதமாக அவர்கள் தங்கள் அரையைக் கட்டிக்கொண்டார்கள். ஆனால் பேதுரு என்ன பொருளில் **நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொள்ளுங் கள்** என்று கூறுகிறார்? பகையுள்ளம் கொண்ட இவ்வுலகத்திற்குள் செல்லும்போது, விசுவாசி களுக்கு மனக்கிளர்ச்சி அடையக்கூடிய மனப் பான்மை எழுவது எப்பொழுதும் நிகழக்கூடியதே. மனதின் அரைகட்டப்பட்டிருக்கும்போது அது வலிமைபெற்றதாக, மனவமைதியோடு பரபரப் பின்றி, செயல்புரிய ஆயத்தமுடையதாக இருக் கும். மேலும் மனித அச்சத்தாலும், துன்பங்களா லும் உண்டாகக்கூடிய தடுமாற்றங்களுக்கு அது இடங்கொடுப்பதில்லை.

இத்தகைய உறுதியான மனநிலை **தெளிந்த புத்தியுள்ளவர்களாக** இருங்கள் என்னும் சொற் களால் மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. தற்கட்டுப் பாடு உள்ளத்தளர்ச்சியினால் ஏற்படும் நடுக்கத் திற்கு எதிர்மாறானது. தெளிந்தபுத்தி அமைவடக் கத்தையும் உறுதிப்பாட்டையும் உண்டுபண்ணும்.

அடுத்ததாக, பரிசுத்தவான்கள் சிறந்ததை எதிர் பார்க்கிற, முன்னோக்கிய மனதைக்கொண்டி ருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறார்கள்: **இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்க ளுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.** கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார் என்னும் உறுதியான நம் பிக்கை, வாழ்க்கையில் ஏற்படக்கூடிய அலைக் கழிப்புகளுக்கும் துன்பங்களுக்கும் நடுவில் நீடிய பொறுமையோடு இருக்கும்படியான பலவந்தப் படுத்துகிற நோக்கத்தைத் தருகிறது. இயேசு கிறிஸ்து வெளிப்படுதல் என்னும் சொற்றொடர் பொதுவாக அவர் மகிமையோடு இவ்வுலகிற்கு வருகிற நிகழ்ச்சியையே குறிப்பிடும். ஆயினும், அவர் தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வானில் வருகிற நிகழ்ச்சியையும் அது குறிப்பிடக் கூடும்.

1:14 பதினான்கு முதல் பதினாறு வரையிலான வசனங்களில், கீழ்ப்படிதலுள்ள உள்ளம் என் பதே ஆய்வுப்பொருளாகும். **கீழ்ப்படிகிற பிள் ளைகள்**, தங்களுடைய முந்தைய வாழ்க்கை யின் நடத்தையாக விளங்கிய பாவங்களில் ஈடு படக்கூடாது. இப்பொழுது அவர்கள் கிறிஸ்தவர் களாக இருக்கின்ற காரணத்தால், அவர்கள் பெற்றிருக்கிற பெயருக்கு ஏற்ப, அவருடைய மாதிரி யைப் பின்பற்றக்கடவர்கள். தேவபக்தியற்ற அக்கிரம உலகத்திற்கு ஒத்தவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்றால், அவர்களுடைய விண் ணகக் குணநலனை மறுத்துரைப்பவர்களாகக் காணப்படுவார்கள். இப்பொழுது அவர்கள் பரி சுத்த ஆவியால் பிரகாசிக்கப்பட்டிருப்பதால், தங்க ளுடைய **அறியாமையின்** காலத்தில் செய்த செயல்களை விட்டொழிக்க வேண்டும். முன்னே கொண்டிருந்த இச்சைகள் என்னும் சொற்றொடர் அவர்கள் தேவனை அறியாமல் இருந்த காலத் தில் நடப்பித்த பாவங்கள் என்று பொருள்படும்.

1:15 தேவபக்தியற்ற உலகத்தை அதனுடைய ஆரவாரத்தோடும் நடப்பு வழக்கோடும் பின்பற்று வதற்குப் பதிலாக, நம்முடைய வாழ்க்கை நம்மை அழைத்தவருடைய **பரிசுத்த** நடத்தையைப் பின்பற்றியதாகக் காணப்படவேண்டும். தேவபக்தி யுடன் இருப்பது என்பது தேவனைப் போல இருப் பது என்று பொருள்படும். தேவன் தமது வழிகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராய் இருக்கிறார். நாம் அவரைப்போல இருக்கவேண்டுமென்றால், நாம் செய்கிறவை, பேசுகிறவை எல்லாவற்றிலும் பரி சுத்தராக விளங்க வேண்டும். அவர் பரிசுத்தராய் இருக்கிறதுபோல இவ்வாழ்வில் நாம் பரிசுத்தராக மாற முடியாது, ஆனால் அவர் பரிசுத்தராய் *இருப் பதால்* நாமும் பரிசுத்தராய் இருக்க வேண்டும்.

1:16 தம்முடைய மக்கள் தம்மைப்போல இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை மெய்ப்பிக்க பேதுரு பழைய ஏற்பாட்டை நோக்கிச் செல்லுகிறார்: லேவியராகமம் 11:44 - இல் **"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்"** என்று கர்த்தர் கூறினார். உள்ளுறையும் பரிசுத்த ஆவியானவர் மூல மாகக் கிறிஸ்தவர்கள் பரிசுத்தராக வாழ்வதற் கான ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கோ இத்தகைய உதவி யும் ஆசிர்வாதமும் இருந்ததில்லை. ஆனால்

அதிக உரிமை பெற்றவர்களாக நாம் இருப்பதால், நமக்கு அதிக பொறுப்பும் உள்ளது. லேவியராக மத்திலிருந்து பேதுரு எடுத்தாண்டிருக்கும் வசனம் புதிய ஏற்பாட்டில் அதிக ஆழமான அர்த்த முடையதாக இருக்கிறது. முறையானது என்பதற்கும் முக்கியமானது என்பதற்கும் இடையேயுள்ள வேறுபாடாக இது இருக்கிறது. பரிசுத்தம் என்பது பழைய ஏற்பாட்டில் கருத்தளவில் ஆனதாக இருந்தது. தூய ஆவியானவர் வருகை புரிந்த காரணத்தால் அது காட்சிப்பொருளாகவும், அனுதினமும் வெளிப்படுத்தப்பட வேண்டிய சீரிய பண்பாகவும் முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

1:17 நாம் பரிசுத்தராக வாழவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதோடு, பயபக்தியுள்ள மனதோடு இருக்க வேண்டும் என்றும் சொல்லப் பட்டிருக்கிறோம். மரியாதையுடன் கூடிய **பயம்** என்பதே இதன் பொருள், தேவன் யார் என்பதைக் குறித்த ஆழமான மேன்மை பாராட்டலாக இது இருக்கிறது. நாம் யாரைப் **பிதா** என்று அழைக்கிறோமோ, அவர்தாமே தம்முடைய பிள்ளைகளுக்கு அவர்களுடைய செயல்களுக்குத் தக்கதாகப் பாரபட்சமின்றி **நியாயந்தீர்க்கிறவருமாக** இருக்கிறார் என்ற அறிவைப் பெறுவதையே இது சிறப்பாகக் குறிக்கிறது. அவருடைய அறிவின் பரந்த அளவையும், அவருடைய நியாயத்தீர்ப்பின் பிழையின்மையையும் உணருகிறவர்களாகிய நாம், அவருக்குப் பிரியமற்றபடி நடந்து கொள்ளக் கூடாது என்னும் நற்பயன் விளைவிக்கும் அச்சத்துடன் வாழவேண்டும். **பிதா** தம்முடையவர்களை இவ்வுலக வாழ்க்கையின்போது **நியாயந்தீர்க்கிறார்**, பாவிகளை நியாயந்தீர்க்கும் அதிகாரத்தைக் கர்த்தராகிய இயேசுவிடம் அவர் ஒப்புவித்திருக்கிறார் (யோவான் 5:22).

லிங்கன் என்பார் எழுதுகிறார்: "அவர் கவனித்துக் கொண்டிருக்கிறார், எல்லோரையும் கவனமாகப் பார்க்கிறார், அங்கே நேர்மையான நோக்கம் இருக்கிறதா, நுண்ணறிவுடைய மனது இருக்கிறதா, அவரை மனமகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்னும் இருதய விருப்பம் இருக்கிறதா என்று அவர் கவனிக்கிறார்." [6]

நாம் இவ்வுலக வாழ்நாட்களை பயத்தோடு செலவிட வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் அந்நிய நாட்டில் வாழ்கிறோம், இவ்வுலகத்திற்குரியவர்கள் அல்லர், விண்ணகத்திலிருந்து நாடு கடந்து வந்திருக்கிறோம். இதுவே நம்முடைய நிலையான குடியிருப்பு என்று தீர்மானித்துவிடக் கூடாது. இவ்வுலகிற்குரிய மனிதர்களுடைய நடத்தையை நாம் பின் பற்றவும் கூடாது. விண்ணகமே நம்முடைய சொந்த நாடு, அதுவே நாம் சேருமிடம் என்று எப்பொழுதும் நினைவுகூர்ந்தவர்களாக, பரலோகக் குடிமக்களுக்குரிய நடத்தையை மேற்கொண்டவர்களாக வாழ வேண்டும்.

1:18 விசுவாசிகள் தங்களுடைய மனமாற்றத்திற்கு முன்னர், இவ்வுலக மக்களிலிருந்து வேறுபட்டவர்களாக இருக்கவில்லை. அவர்களுடைய பேச்சும் நடத்தையும், அவர்களைச் சூழ இருந்த மனிதர்களைப் போலவே வெறுமையானதும் அற்பமானதுமாக இருந்தன. அவர்களுடைய மனம் மாறாத முந்தைய வாழ்க்கையானது **முன்னோர்கள் பாரம்பரியமாய் அநுசரித்துவந்த நடத்தை** என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அத்தகைய வீணான நிலையிலிருந்து மிகப்பெரிதான செயலால் மீட்கப்பட்டார்கள். உலகத்திற்கு ஒத்தவர்களாக இருந்த அடிமைத்தனத்திலிருந்து குறிப்பிட்ட மீட்பின் பணம் செலுத்தப் பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். இவ்வாறு கடத்தப்பட்ட மக்கள் விடுதலை பெற்றது வெள்ளியினாலும் பொன்னினாலுமா? (யாத்திராகமம் 30:15- ஆம் வசனத்தைக் காண்க).

1:19 அதுவல்ல, கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தமே மீட்பின் பணமாகும் - அது நிறைவான மாசற்ற ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைப் போன்றது. கிறிஸ்து குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியானவர், அதாவது அவர் உள்ளார்ந்த வகையிலும் வெளியரங்கமாகவும் முழு நிறைவானவர். இவ்வுலக இன்பங்களிலும் களியாட்டங்களிலும் ஈடுபட வேண்டும், இவ்வுலகிற்குரிய முறைகளையும் மாதிரிகளையும் பின்பற்ற வேண்டும், தவறான வழிகளில் சென்று உலகத்தைப் போல மாறவேண்டும் என்று ஒரு விசுவாசி சோதிக்கப் படுவானென்றால் அப்படிப்பட்ட வாழ்க்கையிலிருந்து தன்னை மீட்கும்படியே கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தினார் என்பதை நினைவுகூரக் கடவன். உலகை நோக்கித் திரும்பிச் செல்லுதல், பெரும் பிளவைத் தாண்டுவதற்கு திகைக்கச் செய்யும் விலைகொடுத்து அமைக்கப்பட்ட பாலத்தின் வழியாகத் திரும்பி முன்னிருந்த பகுதிக்குச் செல்லுவதற்கு ஒப்பாகும். அதற்கும் மேலாக அது இரட்சகருக்கு விசுவாசமற்ற முறையில் நடந்து கொள்ளுவதாகும்.

"மேன்மையான பலியிலிருந்து கொடூரமான பாவத்தை நோக்கித் திரும்பிச் செல்லுவதைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். அதன் பிறகு தேவனுடைய குமாரன் தமது ஜீவனையே விலை

யாகக் கொடுத்தது என்றென்றைக்கும் எனக்குத் தேவையில்லை என்று முடிவு செய்யுங்கள்."

1:20 நமக்காகக் கிறிஸ்து நிறைவேற்றிய செயல் தேவனுடைய திட்டத்தில் பின்னர் ஏற்பட்ட எண்ணமல்ல. மீட்பர் நமக்காக மரணம் அடைய வேண்டுமென்பது இந்த உலகம் படைக்கப்படுவதற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் **இந்தக் கடைசிக் காலங்களில்**, அதாவது நியாயப்பிரமாணக் காலப்பாகுபாட்டின் முடிவிலே, நம்மை நம்முடைய முந்தின வழியிலிருந்து விடுவிக்கும் பொருட்டு அவர் விண்ணகத்திலிருந்து பிரசன்னமானார். "கிறிஸ்துவின் சிலுவையில் இவ்வுலகத்தின் நன்னெறி வரலாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. அது தன்னை முழுவதுமாக வெளிப்படுத்தி தேவனுக்கு முன்பாக அதனுடைய முடிவைப் பெற்றுவிட்டது" என்று விளக்கமளிக்கிறார் திருவாளர் லிங்கன்.[7]

கிறிஸ்து மரணமடைந்து எந்த உலக அமைப்பிலிருந்து நம்மை விடுவித்தாரோ, அந்த அமைப்பிலிருந்து தெளிவான வகையில் பிரிந்து வாழ்வதன் முக்கியத்துவத்தை இன்னும் ஆழமாக நாம் உணரவேண்டும் என்பதற்காக இந்தக் கருத்துகளைப் பேதுரு சேர்த்துக் கூறுகிறார். நாம் இந்த உலகத்தில்இருக்கிறோம், ஆனாலும் நாம் இவ்வுலகத்திற்குரியவர்கள் அல்லர். மறுபடியும் பிறவாத மனிதர்களிடத்திலிருந்து நாம் நம்மைத் தனிமைப்படுத்திக்கொள்ளக் கூடாது, மாறாக நாம் அவர்களிடத்திற்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும். இருந்தபோதிலும் நாம் அவர்களோடு ஈடுபடுகிற செயல்களிலும், உறவுகளிலும் அவர்களுடைய பாவங்களில் ஒருபோதும் பங்குகொள்ளவோ அவற்றைப் பொறுத்துக் கொள்ளவோ கூடாது. நாம் நம்முடைய வாழ்க்கையின் மூலம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். நாம் இந்த உலகத்தாரைப் போல எப்பொழுது மாறுகிறோமோ அத்தருணத்திலேயே நம்முடைய சாட்சி வலுவிழந்து போகும். உலக வாழ்க்கையில் பற்றுள்ளவர்கள், நம்முடைய வாழ்க்கையில் நல்ல மாறுதலுக்கேதுவான பண்பு நலன்களைக் காணவில்லையென்றால் மனமாற்றம் பெறுவதில் என்ன பயன் என்று கருதுவார்கள்.

1:21 கர்த்தராகிய இயேசுவின் மூலமாகவே நாம் தேவனை விசுவாசிக்கும் நிலையை அடைந்திருக்கிறோம் என்னும் உண்மை அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை மேலும் வற்புறுத்துகிறது. அவர் தாமே பிதாவின் இருதயத்தை நமக்கு வெளிப்படுத்தியவர். "படைப்பின் மூலமாகவோ, அவருடைய தயாள குணத்தினாலோ, நியாயப்பிரமாணத்தாலோ அல்ல, கிறிஸ்துவின் மூலமாகவே தேவனை மனிதன் அறிகிறான்" என்று திருவாளர் W. T. P. வால்ட்சன் கூறுகிறார்.[8] கிறிஸ்துவை **மரித்தோரிலிருந்து** உயிரோடு **எழுப்பி** விண்ணகத்தில் மிக உன்னத இடத்தைக் கொடுத்து மகிமைப்படுத்தியதால் அவருடைய மீட்பின் செயலில் பிதா முழு மனநிறைவு அடைந்திருக்கிறார் என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவையெல்லாவற்றின் விளைவு நம்முடைய **விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி** செய்தது. இந்தக் கேடுபாடான உலக அமைப்பில் அல்ல, அவருக்குள்ளாகவே நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்.

1:22 இப்பொழுது பேதுரு தமது வாசகர்கள் அன்புடன்கூடிய மனதோடு இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார் (1:22-23). முதலாவதாக, புதிய பிறப்பைப் பற்றி அவர் விவரிக்கிறார், மேலும் அதனால் உண்டாகிற மாற்றங்களில் ஒன்றான நம்முடைய சகோதரர்களிடத்தில் காண்பிக்கிற அன்பைச் சுட்டிக்காட்டுகிறார் (1:22). அடுத்ததாக, அன்புசெலுத்த வேண்டிய தன் கடமைப் பொறுப்பை அவர் வற்புறுத்திக் கூறுகிறார் (1:22). மீண்டுமாக அவர் புதிய பிறப்பினிடமாய்த் திரும்புகிறார், குறிப்பாக தேவனுடைய வார்த்தையாகிய புதிய பிறப்பு தோன்றுவதற்குரிய வித்தைக் குறித்துப் பேசுகிறார் (1:23-25). மீண்டும், அந்த வார்த்தையைப் பெற்றவர்கள் ஆற்றவேண்டிய கடமையை வலியுறுத்துகிறார் (2:1-3).

இந்த வசனத்தின் முதற்பகுதியில் அவர் புதிய பிறப்பைப் பற்றி விவரிக்கிறார்: நீங்கள் **உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால்**.... நாம் இரட்சிக்கப்படுகிறபோது தேவன் நம்முடைய ஆத்துமாக்களைச் சுத்தமாக்குகிறார் என்பதில் ஐயமில்லை; கண்டிப்பான பொருளில் கூறுவோமானால் நமது தூய்மைக்கான ஆற்றல் நம்மிடத்தில் இல்லை. ஆனால், சுத்தமாக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்ற நாம், அவரை விசுவாசித்த அந்தத் தருணத்தில்தான் அதனை அடைந்தோம் என்று இந்த உருவக அணி எடுத்துரைக்கிறது.

இவ்வாறு சுத்தமாக்கப்பட்ட நிகழ்ச்சியில் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறை **சத்தியத்திற்குக் கீழ்ப்படிதலே** ஆகும். இரண்டாவது முறையாகப் பேதுரு இந்தப் பகுதியில், இரட்சிக்கும் விசுவாசம்

கீழ்ப்படிகிற செயல் என்று கூறுகிறார் (1:2 -ஆம் வசனத்தைக் காண்க). ரோமர் மடலில் "சத்தியத் திற்குக் கீழ்ப்படிதல்" என்னும் சொற்றொடரைப் பவுல் இரண்டுமுறை பயன்படுத்துகிறார். நம்முடைய சிந்தனையில் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் வெவ்வேறாகப் பிரிக்க நாம் முயற்சி செய்யக்கூடாது. மெய்யான விசுவாசம் கீழ்ப்படிகிற விசுவாசமேயாகும். அதனை நம் **ஆவியினால்** மட்டுமே செய்யமுடியும்.[9]

புதிய பிறப்பின் நோக்கங்களில் ஒன்று **மாயமற்ற சகோதர சிநேகமாகும்.** உண்மையான பொருளில் காணுமிடத்து, நாம் நம்முடைய உடன் கிறிஸ்தவர்களிடத்தில் அன்புகூரவேண்டும் என்பதற்காகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். இந்த அன்பின் மூலமாகவே நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் (1 யோவான் 3:14). மேலும் இதன் மூலமாகவே நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் என்பதை இந்த உலகம் அறியும் (யோவான் 13:35).

ஆகவே, மிகவும் இயல்பான முறையில் அறிவுரை தொடர்கிறது - **சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்.** அறிக்கையாகச் சொல்லப்பட்டுள்ள கூற்று, பின்னர் கட்டளையாகக் கூறப்படுவதற்கான அடித்தளமாக அமைந்திருக்கும் புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளில் இதுவும் ஒன்று. இதுவே இங்கு சொல்லப்பட்டுள்ள அறிக்கை: **உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாக இருக்கிறீர்கள்**. அதன் பிறகு கொடுக்கப்பட்டுள்ள கட்டளை: **சுத்த இருதயத்தோடே ஒருவரில் ஒருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்.** தகுநிலை நடைமுறைப் பயிற்சிக்கு அடித்தளமாக விளங்குகிறது. நம்முடைய அன்பு இதமானதாக, முழு இருதயத்துடன் கூடியதாக, நம்முடைய முழுபலத்தோடு செயல்படுத்தப்படுவதாக, ஊக்கமுடையதாக,இடையறாததாக, **சுத்தமானதாக** இருக்க வேண்டும்.

ஒருவரிலொருவர் அன்புகூருங்கள் என்னும் அறிவுரை துன்பங்களின் வழியாகச் செல்கிறவர்களுக்கு அத்தருணத்திற்கு ஏற்றதாயிருக்கும். ஏனெனில், "கடுந்துன்பம் உண்டாயிருக்கிற சூழ் நிலைகளில், அற்பமான கருத்துவேறுபாடுகள் அரக்கனைப் போன்று பேருருவம் எடுத்துவிடுகின்றன" என்பது எல்லோரும்அறிந்ததே.

1:23 மீண்டுமாக பேதுரு தனது வாசகர்களைப் புதிய பிறப்பினிடமாய் அழைத்துச் செல்கிறார், இந்த முறை **தேவவசனமாகிய** அந்தப் புதிய பிறப்பிற்கான வித்திடம் அழைத்துச் செல்கிறார். 2:1-3 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் இதனை அடிப்படையாகக் கொண்டவை.

புதிய பிறப்பானது **அழிவுள்ள வித்தினாலே** உண்டாவதல்ல, அதாவது சரீரப் பிறப்பு எவ்வாறு நிகழ்கிறதோ அதுபோல இது உண்டாவதில்லை. நலிவடைந்து போகிறதும் மரணமடைகிறதுமான சரீரத்தின் விதிகளுக்கு உட்பட்ட வித்தினாலே மனித வாழ்வு உயிர்பெறுகிறது. எந்த வித்திலிருந்து மனித வாழ்வு உயிர்பெற்றதோ, அந்த வித்தின் குணநலன்களையே சரீரமும் பெற்றிருக்கும்; அதுவும் குறுகிய கால வாழ்விற்கான குணங்களையே கொண்டிருக்கும்.

புதிய பிறப்பானது **தேவ வசனத்தினாலே** உண்டாகிறது. மனிதர்கள் திருமறையைக் கேட்பதாலோ படிப்பதாலோ தங்களுடைய பாவங்களைக் குறித்த குற்றவுணர்வை அடைகிறார்கள். மேலும் கிறிஸ்து ஒருவரே நிறைவான இரட்சகர் என்னும் உண்மையை உறுதியாக நம்பியவர்களாக மனமாற்றம் பெற்று தேவனிடமாய்த் திரும்புகிறார்கள். தேவவசனமாகிய அழியாத வித்தின் ஏதோவொரு செயலாண்மையினாலேயன்றி ஒருவரும் ஒருபோதும் இரட்சிப்படைந்ததில்லை.

எண்ணியல் திருமறை என்னும் நூலில் திருவாளர் சாமுவேல் ரிடவுட் குறிப்பிடுகிறார்:

> இந்த முதல் அதிகாரத்தில் அழியாத மூன்று பொருட்களை நாம் பெற்றிருக்கிறோம் – அழியாத சுதந்தரம் (வச. 4), அழியாத மீட்பு (வச. 18,19), நாம் மறுபடியும் பிறப்பதற்குக் காரணமான அழியாத வித்தாகிய தேவவசனம் (வச. 23). இவ்வாறாக நாம் கறைபடாத இயல்பைப் பெற்றிருக்கிறோம், அதன்மூலமாக நாம் கறைபடாத சுதந்தரத்தை அனுபவிக்கக்கூடிய தகுதியைப் பெற்றிருக்கிறோம், இது தன்னுடைய மதிப்பை ஒருபோதும் இழந்துபோகாத மீட்பின் அடிப்படையில் உண்டானது. ஒவ்வொருவர் மேலும் நித்திய நிறைவின் முத்திரை எங்ஙனம் பதிக்கப்பட்டிருக்கிறது, இவை யாவற்றிற்கும் கூட்டாளியாக அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி விளங்குவது எத்தனை தகுதியானது (3;4).[10]

தேவவசனம் என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமாக இருக்கிறது." வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் அது ஒருக்காலும் ஒழியாது. அது என்றென்றைக்குமாக விண்ணகத்தில் நிலைத்திருக்கிறது. அது பிறப்பிக்கிற வாழ்வும் நித்தியமானது. தேவவசனத்தால் புதிதாய்ப் பிறந்தவர்கள், என்றென்றைக்கும் நிலைத்திருக்கக்கூடிய அதன் குணநலனைத் தாங்களும் பெற்றிருக்கிறார்கள்.

மனிதப்பிறப்பில், ஒரு குழந்தை உருவாவதற்குரிய வித்தில், கருவுருவில், அந்தக் குழந்தையின் எல்லாத் தனிப்பண்புகளையும் கொண்டிருக்கிறது. அந்தக் குழந்தை முடிவில் எந்த நிலையில் பிறக்கும் என்பதை வித்தே தீர்மானிக்கிறது. தற்போதைக்கு, அந்த வித்து எவ்வாறு அழிவுக்கு உட்பட்டதோ அது போலவே, அதனால் உண்டாகும் மனித வாழ்வும் அழிவுக்கு உட்பட்டது என்பதை அறிவோமானால் போதும்.

1:24 குறுகிய காலத்திற்குள் மாறிப்போகிற மனித இயல்பை வலியுறுத்திக் கூறும்படி ஏசாயா 40:6,7 - ஆகிய வசனங்களிலிருந்து ஒரு மேற்கோள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மனித வாழ்வு **புல்லைப்** போன்று நிலையற்றது. வயல்வெளிகளில் மலரும் பூக்களைப் போன்று உடலின் அழகும் குறுகிய காலத்தில் குன்றிப்போகும். **புல் உலர்ந்து** போகிறது, பூவும் வாடிவதங்கி, செத்துப்போகிறது.

1:25 இதற்கு மாறாக, **கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்** (ஏசாயா 40:8). ஆகவே, ஒரு விசுவாசியின் புது வாழ்வும் அழிவற்றது. இந்த அழிவில்லாத வார்த்தையே பேதுருவின் வாசகர்களுக்கு **அறிவிக்கப்பட்ட** நற்செய்தியும், அவர்கள் மறுபடியும் பிறப்பதற்குக் காரணமான ஆதாரமும் ஆகும். அவர்களுடைய நித்திய வாழ்விற்கு அதுவே மூல காரணம்.

2:1-3 அவர்கள் தெய்வீக வாழ்விற்குப் பங்குள்ளவர்களானதால் கிறிஸ்தவர்கள் என்றென்றைக்குமாக, கீழ்க்காணும் விரும்பத்தகாத செயல்களை விட்டொழிக்க வேண்டும்.

துர்க்குணம் - வேறொருவருக்கு எதிராகக் கெட்ட எண்ணங்களை மனத்திற்கொண்டிருக்கக் கூடாது. துர்க்குணம் வெறுப்பை ஊட்டி வளர்க்கிறது, பொறாமை படிப்படியாக வளர்க்கப்படுகிறது, பழிவாங்கும் எண்ணமும் தீங்கு விளைவிக்க வேண்டுமென்னும் எண்ணமும் மறைமுகமாக வளர்க்கப்படுகின்றன. அல்லது பிறர் துன்பம் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை அது வளரச்செய்கிறது. ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் என்பவர் கறுப்பர் என்னும் ஒரே காரணத்திற்காக பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்படவில்லை. பல ஆண்டுகள் கழித்து அந்தப் பல்கலைக் கழகத்தின் பெயர் என்னவென்று கேட்டபோது, "அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை, இப்பொழுது அதுவல்ல முக்கியம்" என்று அவர் விடைபகர்ந்தார். அவர் தன்னுடைய இருதயத்தில் துர்க்குணத்தை மறைத்து வைக்கவில்லை.

கபடம் - எல்லாவிதமான நேர்மையற்ற தன்மையும் தந்திரமும் கபடமாகும் (இது எத்தனை வகையாக உருவெடுக்கிறது!). தவறான வருமானவரி அறிக்கைகள், தேர்வுகளில் ஏமாற்றுவது, வயதை மாற்றிப் பொய்கூறுவது, அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பது, ஐயத்திற்குரிய தொழில்முறைகளைக் கைக்கொள்வது இவையாவும் கபடமேயாகும்.

வஞ்சகம் - உண்மையற்ற தன்மை, பாசாங்கு செய்தல், மோசடிசெய்தல். மாய்மாலக்காரன் ஒரு நாடக நடிகன், தன்னிடத்தில் இல்லாத குணத்தை இருப்பது போலக் காட்டிக்கொள்ளுதல். அவனுடைய வீடு ஒரு போர்க்களமாக இருந்த போதிலும், இல்லற வாழ்க்கை இனிமையாக இருப்பது போலப் பாசாங்கு செய்தல். ஞாயிற்றுக் கிழமைகளில் ஆவிக்குரிய மனிதனைப் போல நடித்துக் கொண்டு மற்ற நாட்களில் வெள்ளாடு போன்று ஜென்ம சுபாவத்தோடு வாழுதல். மற்றவர்களிடம் பரிவுடன் நடந்துகொள்வதுபோல நடிக்கிறவன், உண்மையில் அவனுடைய நோக்கங்களெல்லாம் சுயநலமே.

பொறாமை - வெட்கமற்றபடி பொறாமைகொள்ளுதல். பிறர் முன்னேற்றம் அடைகிறார்கள் செல்வ வளம் பெறுகிறார்கள் என்று காண்பதாலும் கேட்பதாலும் வெறுப்புணர்ச்சி கொள்ளுதலே பொறாமை என்று திருவாளர் வைன் வரையறுத்துக் கூறுகிறார். பிரதான ஆசாரியர்கள் இவ்விதப் **பொறாமையின்** காரணமாகவே, மரணத்திற்கென்று இயேசுவைப் பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள் (மத். 27:17). **பொறாமை** மேலும் கொலை காரனாகவே செயல்படுகிறது. சிறந்த வீடுகளில் குடியிருக்கிறார்கள், நல்ல தோட்டங்கள் இருக்கின்றன, அவர்கள் தரமான ஆடை அணிகிறார்கள், சுவையாகச் சமைக்கிறார்கள் என்று பெண்கள் கோபத்துடன் உற்றுப்பார்க்கிறார்கள். ஒருவன் வேறொருவனுடைய புதிய இன்ப ஊர்தியைக் கண்டு புகழ்கிறான். ஆனால் உள்ளத்தில்,

“நான் யாரென்று காட்டுகிறேன், இதைக் காட்டிலும் சிறந்த வண்டியை வாங்குவேன்” என்று நினைக்கிறான்.

புறங்கூறுதல் - இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசுதல், கெட்ட எண்ணத்துடன் புறம்பேசுதல், எதிர்க்குற்றம் சாட்டுதல் இவையாவும் புறங் கூறுதலாகும். மற்றவர் மீது சேற்றை வாரி எறிதல், தன்னைத் தூய்மையானவன் என்று காண்பிக்கும் படி செய்யும் அவதூறான செயலாகும். “ஆம், அவள் நல்லபெண்மணி, ஆனால் அவளிடம் ஒரு குறைபாடு இருக்கிறது...” என்னும் தந்திரமான வழியில் அது வெளிப்படும். அதன் பிறகு மிக நேர்த்தியாக அவளுடைய முதுகில் கத்தி பாய்ச்சப்பட்டுவிடும். அல்லது அது சமயப்பாங்குள்ள தோற்றத்தைக் கொண்டிருக்கும். “நீங்கள் ஜெபம் செய்வீர்கள் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன், உங்களுக்கு அவனைப் பற்றித் தெரியுமா....” அதன்பிறகு அந்த மனிதனுடைய சாட்சி கொலை செய்யப்படும்.

இந்தப் பாவங்கள் அனைத்தும், நம்மைப் போலவே பிறரிடத்தில் அன்புகூரவேண்டும் என்னும் இன்றியமையாத கட்டளையை மீறுகிற செயல்களாக இருக்கின்றன. தீர்மானமான முறையில் இவை எல்லாவற்றையும் நம்மை விட்டு ஒழிக்க வேண்டும் என்று பேதுரு நம்மிடம் கூறுவதில் என்ன வியப்பு இருக்கிறது.

நம்முடைய புதிய பிறப்பினால் உண்டாகக் கூடிய இரண்டாவது கடமையுணர்ச்சி, **திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல்** இடையறா வாஞ்சையாகும். அடுத்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாவங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடைசெய்துவிடும். தேவனுடைய நல்வசனமோ அதனை ஊட்டிவளர்க்கும்.

புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல என்னும் சொற்றொடர், பேதுருவின் வாசகர்கள் புதிய விசுவாசிகள் என்று கூறுவதாக நாம் கருத வேண்டியதில்லை; அவர்கள் இரட்சிக்கப்பட்டு பல ஆண்டுகள் கழிந்திருக்கும். ஆனால் அவர்கள் விசுவாசத்தில் இளைஞரோ முதியவரோ யாராயிருந்தாலும், குழந்தைகள் **பாலுக்காக** எவ்வாறு அழுகின்றனவோ அதுபோல தேவ வசனத்திற்காகத் தாகங்கொண்டிருக்க வேண்டும். ஆரோக்கியமான குழந்தைகள் காத்திருக்க இயலாதபடி, மிகுந்த ஆர்வத்தோடு, தீர்மானமாகப் பாலை உறிஞ்சிக் குடிக்கின்றன. இதிலிருந்து குழந்தைகள் பாலின்மேல் எவ்வளவு வாஞ்சையாயிருக்கின்றன என்பதை ஓரளவு நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மூலமாக விசுவாசி ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெறுகிறான்.[12] இவ்வுலக வாழ்வின் ஆவிக்குரிய வளர்ச்சியின் முடிவான இலக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறுவதேயாகும்.

இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்தது உண்டானால். களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருப்பதற்கான தூண்டுகோல் எத்தனை பெரிதாயிருக்கிறது! இங்கு ஆனால் என்னும் சொல் எவ்வித ஐயத்தையும் வெளிப்படுத்துவதில்லை. கர்த்தர் நல்லவர் என்பதை நாம் ருசிபார்த்திருக்கிறோம் (சங். 34:8). அவர் நமக்காகத் தம்மையே பலியாகச் செலுத்திய செயல் அவருடைய சொல்லி முடியாத தயவும் நன்மையுமாக இருக்கிறது (தீத்து 3:4). ஏற்கனவே நாம் அவருடைய தயவை ருசித்துப் பார்த்திருக்கிறோம்; அது அவரை மென்மேலும் உண்ணும்படியான பசியைத் தூண்டிவிடும் பொருளாக இருக்க வேண்டும். அவரண்டை நெருங்கியிருப்பதன் இனிமையான சுவை, நாம் அங்குமிங்கும் அலைந்து திரிவதற்கான எண்ணத்தை அறவே ஒழிப்பதற்கு நமக்கு உதவி செய்ய வேண்டும்.

ஈ. விசுவாசி புதிய வீட்டிலும் தன்னுடைய ஆசாரிய முறைமையிலும் பெற்றிருக்கிற தனிஉரிமைகள் (2:4-10)

2:4 பேதுரு தன்னுடைய வாசகர்களுக்குப் புத்திமதி கூறுவதிலிருந்து அவர்கள் புதிய வீட்டில் (சபை) மற்றும் அவர்களுடைய ஆசாரிய முறைமையில் பெற்றிருக்கிற சிறப்பான உரிமைகளைச் சிந்தனைக்குக் கொண்டு வருகிறார்.

புதிய முறைமையில், கிறிஸ்துவே முதன்மையானவர், ஆகவே நாம் அவரிடத்திற்குச் செல்கிறோம். கட்டடம் கட்டுதல், கட்டடம் கட்டுவதற்கான பொருட்கள் ஆகியவற்றைப் பற்றி பேதுரு சிந்தித்துக்கொண்டிருப்பதால், அவர் கர்த்தரை ஒரு **கல்லுக்கு** ஒப்பிட்டு உருவக மொழியில் பேசுவதைக் குறித்து நாம் வியப்படைவதில்லை. முதலாவது, அவரே அந்த **ஜீவனுள்ள கல்** - உயிரற்ற அல்லது செத்துப்போன கல்லல்ல அவர். மாறாக முடிவில்லாத வாழ்வின் வல்லமையினாலே வாழ்கிறவராக அவர் திகழ்கிறார் (எபி. 7:16,17).

நம்புவதற்கரியதாக தோன்றிய போதிலும், அவர் **மனிதரால் தள்ளப்பட்டவராயிருந்தார்**. அவர்களுடைய வாழ்க்கையின் வரைபடமானது மதிகேடானதும் சுயநலம் கொண்டதும், கலைத் திறனற்றதுமாயிருந்தது. இவ்வித அற்பமான தொலை நோக்கற்ற மனிதர்களால் அவர்களுடைய படைப்பாளரும் மீட்பருமாகிய கர்த்தருக்கு ஒரு தகுதியான இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சத்திரத்தில் அவருக்கு இடமில்லாமல் இருந்தது போலவே, அவர்களுடைய வாழ்க்கைக்கான திட்டத்திலும் அவருக்கு இடமில்லை!

ஆனால் மனிதர்களுடைய கருத்து, கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. தேவனுடைய பார்வையிலோ கர்த்தராகிய இயேசு **தெரிந்து கொள்ளப்பட்டவரும் விலையேறப்பெற்றவருமாயிருக்கிறார்**. அவர் பொருத்தமான கல்லாக மட்டுமின்றி, தவிர்க்க முடியாதவரும் ஆவார் என்னும் நிலையில் **தெரிந்து கொள்ளப்பட்டவர்**. மேலும் அவர் தேவனுக்கு விலைமதிக்க முடியாத அளவிற்குப் பெரியவர். அவர் கணக்கிடுவதற்கு இயலாத அளவிற்கு **விலையேறப்பெற்றவர்**.

தேவனுடைய கட்டடம் கட்டும் திட்டத்தில் நாம் பயன்படுத்தப்பட வேண்டுமென்றால், நாம் கிறிஸ்துவினிடத்திற்கு வரவேண்டும். நாம் அவரோடு ஒன்றிணைக்கப்படுவதால் மட்டுமே, கட்டடம் கட்டுவதற்கான பொருளுக்குரிய தகுதியை நாம் பெற்றிடமுடியும். நாம் அவருக்குப் புகழ்ச்சியைக் கொண்டுவருவதில் பங்குடையவர்களாய் இருந்தால் மட்டுமே இன்றியமையாதவர்களாகக் காணப்படுவோம்.

2:5 ஆவிக்கேற்ற மாளிகை கிறிஸ்துவுக்குள்ளான எல்லா விசுவாசிகளையும் கொண்டு கட்டப்பட்டிருப்பதால், இதுவும் சபையும் ஒன்றே. பழைய ஏற்பாட்டு தேவாலயத்திற்கும் சபைக்கும் உள்ள பொதுவான உண்மை யாதெனில், இப் பூமியில் தேவன் குடியிருக்கும் இடமாக இது விளங்குகிறது என்பதுதான் (1 இராஜா. 6:11-13; எபே. 2:22). ஆனால் தேவாலயமோ பருப் பொருளால் ஆனது, தொட்டு உணரக்கூடிய அழகிய கட்டடம், ஆனால் உயிரற்றது, அழிந்துபோகக் கூடிய பொருள்களால் கட்டப்பட்டது. சபையோ ஜீவனுள்ள கற்களால் கட்டப்பட்ட மாளிகை.

இப்பொழுது உருவகம் ஆவிக்கேற்ற மாளிகையிலிருந்து, அந்த வீட்டில் நிகழ்கின்ற பணிகளோடு தொடர்புடைய பரிசுத்த ஆசாரியக் கூட்டத்தினிடமாய்த் திரும்புகிறது. அந்த வீட்டில் கட்டப்பட்டுள்ள ஜீவகற்களாக மட்டுமின்றி, விசுவாசிகள் பரிசுத்த ஆசாரியர்களாகவும் இருக்கிறார்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, லேவி கோத்திரத்தோடும் ஆரோன் குடும்பத்தோடும் ஆசாரிய முறைமை எல்லைக்குட்படுத்தப்பட்டிருந்தது. ஆசாரியர்களாக இருந்தவர்களும்கூட தேவனுடைய சமுகத்திற்குச் செல்ல தடைபண்ணப்பட்டிருந்தார்கள். பிரதான ஆசாரியன் மட்டும் ஆண்டிற்கு ஒருமுறை (யாம் கிப்புர், பாவநிவாரண நாள்), அந்த நிகழ்ச்சிக்கென்று கர்த்தர் நியமித்த சடங்குகளைச் செய்தவனாக அங்கு செல்ல முடியும்.

புதிய நிருவாகத்தில், எல்லா விசுவாசிகளும் அண்டசராசரத்தின் அரியணை இருக்கும் அறைக்குள்ளாக இரவும் பகலும் எப்பொழுது வேண்டுமானாலும் உட்புக அனுமதி பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய அலுவல் **ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்துவது** ஆகும் (மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி விலங்கோ, பறவையோ, போஜனமோ பலியாகச் செலுத்தப்பட்டது). புதிய ஏற்பாட்டில் ஆசாரியன் செலுத்துகிற ஆவிக்குரிய பலிகள்:

1. சரீரத்தைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பது. இது செய்யத்தக்க ஆவிக்குரிய ஆராதனை (ரோமர் 12:1).
2. “அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலி.” இது ஸ்தோத்திரபலி (எபி. 13:15).
3. நற்கிரியைகளாகிய பலி. “நன்மை செய்ய... மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்” (எபி. 13:16).
4. பொருளுடைமை அல்லது பணப்பையை பலியாகச் செலுத்துதல். “தானதர்மம் செய்ய மறவாதிருங்கள்.” இந்த பலியும் தேவனுக்குப் பிரியமானது (எபி. 13:16).
5. ஊழியம் என்னும் பலி. புறவினத்தாரிடம் தான் திருப்பணி ஆற்றுவதைப் பவுல் ஆசாரிய முறையின்படியான பலி என்கிறார் (ரோமர் 15:15).

இந்த பலிகள் யாவும் **இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான** பலிகளாகச் செலுத்தப்படுபவை. இயேசு கிறிஸ்து மூலமாய், அதாவது, நம்முடைய மத்தியஸ்தர் மூலமாய் மட்டுமே நாம் தேவனை அணுக முடியும். அவர் ஒருவரே நம்முடைய பலிகளை தேவன் ஏற்கும்படி

செய்ய முடியும். நாம் செய்கிறவை அனைத்தும் - நம்முடைய ஆராதனை, நம்முடைய ஊழியம் - யாவும் நிறைவானவை அல்ல, பாவத்தால் களங்கப்பட்டவை. ஆனால் நாம் செலுத்துகிற ஏதொன்றும் பிதாவைச் சென்று சேரும் முன்னர் கர்த்தராகிய இயேசுவின் மூலமாகவே செல்லுகிறது. அவர் எல்லாப் பாவத்தையும் அதிலிருந்து நீக்கிவிடுகிறார், அது பிதாவாகிய தேவனைச் சென்று சேருகிறபோது முழு நிறைவாக ஏற்றுக் கொள்ளத் தக்கதாயிருக்கிறது.

பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியன் தன்னுடைய தலைப்பாகையில், **"கர்த்தருக்குப் பரிசுத்தம்"** என்று பொறிக்கப்பட்ட பொற்தகட்டை அணிந்திருந்தான் (யாத். 28:36). மக்கள் செலுத்திய பலிகளில் ஏதாவது பாவம் இருக்குமென்று கருதி அதற்காக அந்தப் பொற்தகடு கட்டப்பட்டிருந்தது. அதுபோல நம்முடைய பிரதான ஆசாரியரும் நமக்காக ஒரு பாகையை அணிந்திருக்கிறார், நம்முடைய பலிகளில் ஏதேனும் தவறுகள் இருக்குமாயின் அதற்கென அணியப்பட்டதே அந்தப் பாகை.

எல்லா விசுவாசிகளும் ஆசாரியர்களாக இருக்கிறார்கள் என்னும் உண்மை புரிந்துகொள்ள வேண்டியதும், விசுவாசிக்க வேண்டியதும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் மகிழ்ச்சியுடன் கடைப்பிடிக்க வேண்டியதுமான உண்மை. அதே நேரத்தில் அதனை நாம் அவமதிக்க கூடாது. எல்லா விசுவாசிகளும் ஆசாரியர்களாக இருந்தபோதிலும், ஒவ்வொரு ஆசாரியனும் சபையில் போதிக்கவும் கற்பிக்கவும் உரிமை பெறவில்லை. சில கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

1. உபதேசம் பண்ணவும் ஆண்கள்மேல் அதிகாரம் செலுத்தவும் கூடாதென்று பெண்கள் தடைபண்ணப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அமைதியாயிருக்க வேண்டும் (1 தீமோ. 2:12).
2. போதிக்கிற ஆண்கள் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்க வேண்டும்(1 பேதுரு 4:11). குறிப்பிட்ட தருணத்தில் அவர்கள் பேச வேண்டும் என்று தேவன் விரும்புகிற வார்த்தைகளைத் தான் பேசுகிறோம் என்ற உறுதியை அவர்கள் பெற்றிருக்கவேண்டும் என்பதே இதன் பொருளாகும்.
3. மனித உடலின் ஒவ்வொரு உறுப்பிற்கும் ஏதோவொரு அலுவல் இருப்பது போல, எல்லா விசுவாசிகளுக்கும் ஏதாவது வரம் கொடுக்கப்பட்டிருக்கும் (ரோமர் 12:6; 1 கொரி. 12:7). ஆனால் எல்லா வரங்களும் எல்லோருக்கும் முன்பாகப் பிரசங்கம் ஆற்றுவதல்ல. சுவிசேஷகன், மேய்ப்பர், போதகர் போன்று சிறப்பான அலுவல்களாகிய வரங்கள் எல்லோருக்கும் இல்லை (எபே. 4:13).
4. இளைஞன் தனக்கு உண்டான தேவவரத்தை அனல்மூட்டி எழுப்பிவிட வேண்டும் (2 தீமோ. 1:6). அது போதிக்கிற, உபதேசிக்கிற அல்லது ஏதோவொரு வகையில் எல்லோருக்கும் முன்பாகப் பேசுகிற வரமாக இருக்கக் கூடும்; அவ்வாறிருக்குமாயின் அவ்விளைஞன் சபையில் அதனைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
5. 1 கொரிந்தியர் 14:26 -ஆம் வசனத்தில் விசுவாசிகள் தங்களுடைய ஆசாரியத்துவத்தைப் பயன்படுத்தும் முறை காணப்படுகிறது: "நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான், சகோதரரே இது என்ன? சகலமும் பக்தி விருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது."

அதே அதிகாரத்தில், எல்லோருக்கும் முன்பாக சபையில் வரங்களைப் பயன்படுத்துகிறபோது என்னென்ன கட்டுப்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது; அவை சபையில் ஒழுங்கை உறுதிசெய்து, பக்தி விருத்தியை ஏற்படுத்துவதற்கானவை. உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் ஆசாரியத்துவம் பொதுவானது என்பதால் இதனை, ஓர் உள்ளூர் சபையில் தவறாகப் பயன்படுத்தக் கூடாது.

2:6 கட்டடத்தைக் குறித்து இன்னமும் சிந்தித்துக் கொண்டிருக்கிறவராக, பேதுரு கிறிஸ்துவாகிய கல்லிடம், குறிப்பாக, கிறிஸ்துவே **மூலைக்கல்லாக** இருக்கிறார் என்னும் உண்மையினிடமாய்த் திரும்புகிறார். ஏசாயா 28:16 -ஆம் வசனத்தை மேற்கோளிட்டுக் காட்டும் பேதுரு, வேதவாக்கியங்களில் கிறிஸ்துவின் மூலைக்கல் என்னும் பணி முன்னுரைக்கப்பட்டுள்ளது என்று வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து இந்தத் தனிச் சிறந்த தகுதியைப் பெறுவார் என்று தேவன் ஏற்கனவே தீர்மானித்திருக்கிறார் என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். அந்தத் தகுதி, அவரே

தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்ற துமான கல், மேலும் அவர் முற்றிலும் நம்பக மானவர். அவரிடத்தில் நம்பிக்கை வைத்தவர்கள் ஒருபோதும் கைவிடப்பட்டதில்லை.

இந்தப் பகுதியில் **மூலைக்கல்**[13] என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொல், குறைந்தது மூன்று பொருள்களில் புரிந்துகொள்ளக் கூடிய சொல் லாகும். அந்த மூன்று பொருள்களும் சம அள வில் ஆதாரத்தோடும் ஆற்றலோடும் கர்த்தரா கிய இயேசுவைச் சுட்டிக்காட்டுகின்றன:

1. நவீனகாலக் கட்டடக் கலையில் ஒரு மூலைக் கல் அடித்தளத்தின் ஒரு மூலையில் வைக்கப் படும்; அங்கே அந்தக் கல் இரண்டு சுவர்களை யும் ஒன்றாக இணைத்து, அஸ்திபாரமானது முழுக் கட்டடத்தையும் தாங்கி நிற்பதற்கான அடையாளமாக விளங்கும். கிறிஸ்துவே **மூலைக்கல்**, அவர் ஒருவரே மெய்யான அஸ்திபாரம் (1 கொரி. 3:10,11). விசுவாசிக்கிற யூதர்களையும் புறவினத்தாரையும் ஒன்றாக இணைக்கிறவர் (ஒரு கட்டடத்தின் இரண்டு சுவர்களையும் இணைப்பது போல). அவர் களை இணைத்து ஒரே புதிய மனிதனாக மாற்றியவர் (எபே. 2:13,14).
2. மேல் வளைவின் முக்கியமான கல்லே இந்தக் கல் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். இந்தக் கல்லே மேல் வளைவை நிறைவு செய்து, மீதியான கட்டடம் முழுவதையும் ஒன்றி ணைத்து தாங்கிநிற்கும் கல்லாகும். நம்மு டைய கர்த்தர் இந்த விளக்கத்தை நிறைவு செய்கிறவராக இருக்கிறார் என்பது நிச்சயம். மேல் வளைவின் மிக உயரமான இடத்தை வகிக்கிறவர் அவரே ஆவார். அவரின்றி வலிமை இல்லை, அல்லது கட்டடத்தில் ஒத்திசைவான நிலை இருக்காது.
3. மூன்றாவது கருத்து, கூம்பு வடிவமான கோபு ரத்தின் தலைக்கல்லாகிய அந்தக் கல் கட்ட டத்தின் மிகவுயர்ந்த இடத்தை வகிக்கிறது. அந்த இடத்தில் பொருத்தமாக இருப்பதற் கான பிரத்யேகமான வடிவத்தை அந்தக் கல் மட்டுமே கொண்டிருக்கும். அதனுடைய வடி வமைப்பு கூம்பு வடிவமான கோபுரத்தின் வடி வமைப்பைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக் கும். அதுவே அந்தக் கட்டடத்தில் கடைசி யாக வைக்கப்படும் கல். இவ்வாறாகவே கிறிஸ்து சபையின் தலைக்கல்லாகக் காணப் பட்டு, தனிச்சிறப்பு வாய்ந்த கல்லாக விளங்கு கிறார். திருச்சபை தனது குணப்பண்பை அவரி டத்திலிருந்தே பெறுகிறது. அவர் மீண்டும் வருகிற போது மாளிகை நிறைவு பெறும்.

அவர் **தெரிந்துகொள்ளப்பட்டதும் விலை யேறப்பெற்றதுமான** கல்லாக விளங்குகிறார். மேலான கனத்திற்குரிய இடத்தை வகிக்கும்படி தேவன்தாமே அவரைத் தெரிந்தெடுத்திருக் கிறார் என்னும் பொருளில் அவர் தெரிந்து கொள் ளப்பட்டவராயிருக்கிறார். அவர் விலையேறப் பெற்றவர், ஏனெனில் அவரைப் போன்றவர் வேறு எவருமில்லை.

எவனொருவன் **அவர்மேல் விசுவாசமா யிருக்கிறானோ** அவன் **வெட்கப்படுவதில்லை**. ஏசாயா தீர்க்கதரிசன நூலிலிருந்து இந்த மேற் கோள் எடுக்கப்பட்டுள்ளது, அந்த இடத்தில் "விசு வாசிக்கிறவன் பதறான்" என்று எழுதப்பட்டிருக் கிறது. இவ்விரண்டையும் ஒன்று சேர்த்துப் பார்க் கும்போது, யாரெல்லாம் கிறிஸ்துவைத் தங்களு டைய **மூலைக்கல்லாகக்** கொண்டிருக்கிறார் களோ அவர்கள் ஏமாற்றமடையச் செய்யும் அவ மானத்திலிருந்தும், கட்டுக்கடங்காத பதற்றத் திலிருந்தும் இரட்சிக்கப்படுகிறார்கள்.

2:7 இதற்கு முந்தின வசனங்களில் கர்த்த ராகிய இயேசு *ஜீவனுள்ள* கல்லாகவும், *தள ளப்பட்ட* கல்லாகவும், *விலையேறப் பெற்ற* கல்லாகவும் மூலைக்கல்லாகவும் அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறார். இப்பொழுது, பேதுரு அவரை உரைகல்லாக உருவகப்படுத்துவதாகத் தோன்று கிறது. ஆயினும் அவர் அந்தச் சொல்லைப் பயன் படுத்தவில்லை. சில உலோகங்களை அந்தக் கல்லின்மேல் உரசிப்பார்க்கிறபோது, அந்த உலோ கங்கள் உண்மையானவையா போலியான வையா என்பது தெரியவரும். எடுத்துக் காட்டாக, ஒரு தங்கக்கட்டி உண்மையானதா போலி யானதா என்பதை அது வெளிப்படுத்திவிடும்.

மக்கள் இரட்சகரோடு தொடர்புகொள்ளும் போது, அவர்கள் எதற்காக இருக்கிறார்கள் என்ற உண்மை புலப்படுத்தப்படும். அவரைக் குறித்து அவர்கள் என்ன மனப்பான்மை கொண்டிருக் கிறார்களோ அதனடிப்படையில் அவர்களையே அவர்கள் வெளிப்படுத்துவார்கள். மெய்யான விசுவாசிகளுக்கு அவர் **விலையேறப் பெற்றவர்**. அவிசுவாசிகளோ அவரை ஏற்றுக்கொள்வ தில்லை. விசுவாசி அவரில்லாத வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்ப்பதன் மூலம் அவர் எவ்வளவு விலை யேறப்பெற்றவர் என்பதைச் சற்று உணர முடியும். உலக இன்பங்கள் யாவும், "கிறிஸ்துவினால்

நிறையப் பெற்ற வாழ்க்கையின் ஒரு கணப் பொழுது வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தகுதியற்றவையாகக் காணப்படும்." அவர் "பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்," "முற்றிலும் அழகானவர்" (உன். 5:10,16).

ஆனால் **கீழ்ப்படியாமல் போனவர்கள்** அல்லது அவிசுவாசிகளைப் பற்றி என்ன சொல்லுவது?[14] வீடுகட்டுகிறவர்களால் ஆகாதென்று விலையேறப்பெற்ற கல் தள்ளப்படும் என்று சங்கீத ஆசிரியன் 118 -ஆம் சங்கீதத்தில் முன்மொழிந்திருக்கிறான். ஆனால் அந்தக் கல் பின்னர் மூலைக்குத் தலைக்கல்லாக விளங்கும்.

சாலொமோன் கட்டிய தேவாலயத்தோடு தொடர்புடையதும் திரும்பத்திரும்பச் சொல்லப்படுகிறதுமான ஒரு கதை மிகத் தெளிவாக இந்தத் தீர்க்கதரிசனத்தை எடுத்துரைக்கிறது. தேவாலயத்திற்கான கற்கள் அருகிலிருந்த கல் வெட்டப்படும் சுரங்கத்தில் முன்னேற்பாடாக ஆயத்தப்படுத்தப்பட்டன. தேவைப்படும்போது அந்தக் கற்களைக் கட்டடம் கட்டும் இடத்திற்குக் கொண்டு சென்றார்கள். ஒருநாள் கற்சுரங்கத் தொழிலாளிகள் தனிப்பட்ட அமைப்புடன் வேறு அளவிலான கல் ஒன்றை அனுப்பினார்கள். கட்டடம் கட்டிய சிற்பிகளோ அந்தக் கட்டடத்தில் அதற்குத் தகுந்த இடமில்லை என்று கருதி அதனைக் கவனமின்றி மலைப்புறத்தில் தள்ளிவிட்டார்கள். நாட்கள் செல்லச்செல்ல அந்தக்கல் பாசியால் மூடப்பட்டு அதன் ஓரங்களில் புற்பூண்டுகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. தேவாலயம் நிறைவுபெறும் தறுவாயில், கட்டடச் சிற்பிகள் ஒரு குறிப்பிட்ட அளவிலான கல் வேண்டும் என்று கூறினார்கள். "அந்த அளவுக் கல்லை உங்களுக்கு எப்பொழுதோ அனுப்பிவிட்டோம்" என்று சுரங்கத் தொழிலாளிகள் பதில் கூறினார்கள். அதன் பிறகு அந்தக் கல்லைச் சிரத்தையோடு தேடிக் கண்டுபிடித்து தேவாலயத்தில் அதற்குரிய இடத்தில் வைத்துக் கட்டடத்தை அவர்கள் நிறைவு செய்தார்கள்.

இதிலிருந்து வெளிப்படுகிற உண்மை மிகத் தெளிவாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசு தம்மை இஸ்ரவேல் நாட்டிற்குத் தமது முதல் வருகையின்போது அறிமுகப்படுத்தினார். மக்கள், குறிப்பாக ஆட்சிபுரிந்தவர்கள் தீட்டிய திட்டத்தில் அவருக்கு இடமில்லாதிருந்தது. தள்ளப்பட்டவர் இரண்டாம் தடவை பூமிக்குத் திரும்பி வருகிறபோது, இராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் வருவார். அதன் பிறகு அவர் வெளியரங்கமாகப் **பிரதான மூலைக்கல்லாக** வெளிப்படுத்தப்படுவார்.

இப்பொழுது உவமையானது உரைகல், மூலைக்குத் தலைக்கல் என்னும் நிலையிலிருந்து இடறுதற்கேதுவான கல் என்னும் நிலைக்கு மாறுகிறது. விசுவாசிக்காதவர்களுக்கு அவர் **இடறுவதற்கேதுவான கல்லாகவும்,** அவர்கள் கீழே விழும்படியான **கன்மலையாகவும்** இருக்கிறார் என்று ஏசாயா முன்னுரைத்தான் (ஏசாயா 8:14,15).

இது எழுத்தின்படியாக இஸ்ரவேல் நாட்டின் வரலாற்றில் நிகழ்ந்தது. அவர்களுடைய மேசியா வந்தபோது, அவருடைய பிறப்பைக் குறித்தும் அவருடைய எளிய வாழ்க்கை முறையைப் பற்றியும் இடறல் அடைந்தார்கள். அவர்கள் அரசியல் கிளர்ச்சியாளரும் இராணுவ மாவீரருமாகிய பெருந் தலைவரை எதிர்பார்த்தார்கள். மனநிறைவு அளிக்கக்கூடிய சான்றுகள் இருந்தபோதிலும், அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்று அவர்கள் ஏற்க மறுத்தார்கள்.

ஆனால் இது இஸ்ரவேல் நாட்டிற்கு மட்டுமே பொருத்தமுடையது என்று சொல்ல முடியாது. எவனொருவன் இயேசுவை விசுவாசிக்க மறுக்கிறானோ, அவனுக்கு அவர் **இடறுவதற்கேதுவான கல்லாகவும்**, அவன் கீழே விழும்படி செய்கிற **கன்மலையாகவும்** இருக்கிறார். மனிதர்கள் மனந்திரும்பி இரட்சிப்புக்கென்று அவரை விசுவாசிக்க வேண்டும் அல்லது அவர்மேல் இடறி விழுந்து நரகத்திற்குச் செல்ல வேண்டும். "எது அவர்களுக்கு இரட்சிப்பாக அமைய வேண்டுமோ அதுவே அவர்கள் பெரிதான ஆக்கினையை அடைவதற்குக் காரணமாயிற்று." இரண்டிற்கும் இடைப்பட்ட நடுநிலை எதுவுமில்லை; அவர் இரட்சகராக விளங்கவேண்டும், இல்லையேல் நியாயாதிபதியாக விளங்குவார்.

2:8 அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள். அவர்கள் ஏன் **இடறுகிறார்கள்**? நேர்மையான அறிவாற்றல் சார்ந்த தடைகளினால் அவர்கள் இடறுவதில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த ஏதோ ஒரு விஷயம் அவர் மேல் விசுவாசம் வைக்கவிடாமல் தடைசெய்கிறது என்பதல்ல காரணம். அவர்கள் வேண்டுமென்றே பிடிவாதமாய் திருவசனத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பதால் இடறுகிறார்கள். மனிதனுடைய சித்தத்

தில்தான் பிரச்சினை இருக்கிறது. மனிதர்கள் இரட்சிக்கப்பட மனதற்றவர்களாக இருப்பதால் தான் இரட்சிக்கப்படுவதில்லை (யோவான் 5:40).

எட்டாவது வசனத்தின் பிந்தைய பகுதி, அவர்கள் **அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்** என்னும் சொற்றொடர், திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதிருக்கும்படி முன்கூட்டியே தீர்மானம் செய்யப்பட்டுவிட்டது என்று கூறுவது போலத் தோன்றுகிறது. இதுதான் அதனுடைய பொருளா? இல்லை, யாரெல்லாம் பிடிவாதமாகத் **திருவசனத்திற்குக்** கீழ்ப்படிய மனதற்றவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் **இடறுவதற்கென்று** தீர்மானிக்கப்பட்டவர்கள் என்பதே இதன் பொருளாகும். **அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்** என்னும் சொற்கள் இவற்றிற்கு முந்தின சொற்றொடராகிய, **அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதிருந்து இடறுகிறார்கள்** என்னும் பகுதியைச் சார்ந்து பொருள்படுத்தவேண்டியவை. கர்த்தராகிய இயேசுவுக்குத் தலைவணங்க மறுக்கும் அனைவரும் **இடறுவார்கள்** என்று தேவன் தீர்ப்பளித்திருக்கிறார். ஒரு மனிதன் நம்பிக்கை அற்றவனாகவே இருக்கவேண்டும் என்று பிடிவாதமாக இருப்பானென்றால் அவன் இடறுவதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறான். 'கீழ்ப்படிய விருப்பமற்று இருத்தல் இடறுதலை முன்னமே தீர்மானித்துவிடுகிறது" (JBP).

2:9 விசுவாசிகள் பெற்றிருக்கும் சிறப்பான உரிமைகளைக் குறித்துச் சொல்ல, பேதுரு திரும்புகிறார். அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் நாட்டினர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், இந்தத் தனிஉரிமைகளை அவர்களுக்குத் தருவதாக அவர் வாக்குறுதி கொடுத்திருந்தார்:

> "இப்பொழுது நீங்கள் என்வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத். 19:5,6).

இஸ்ரவேல் அவநம்பிக்கையின் காரணமாக தேவனுடைய வாக்குறுதியை அடையாமற் போயிற்று, மேலும் அந்த நாடு தேவனுடைய சொந்த மக்கள் என்னும் நற்பேற்றை இழந்து போயிற்று. இஸ்ரவேல் தனது கீழ்ப்படியாமையால் இழந்துபோன சலுகை பெற்ற இடத்தை சபை தற்போது பெற்றிருக்கிறது.

விசுவாசிகள் இப்பொழுது **தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயிருக்கிறார்கள்**. அவர்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாக இருக்கும்படி தேவன் அவர்களை உலகத் தோற்றத்திற்கு முன்னரே தெரிந்துகொண்டார் (எபே. 1:4). கிறிஸ்தவர்கள் பூமிக்குரிய ஒரே இனத்தைச் சார்ந்தவர்களோ, ஒரே பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களோ, ஒரு தனிப்பட்ட சரீரப் பண்புகளை உடையவர்களோ அல்லர். மாறாக, அவர்கள் தெய்வீகப் பிறப்பையும் ஆவிக்குரிய பிரதிபலிப்பையும் கொண்டிருக்கிறார்கள்.

விசுவாசிகள் **ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும்** இருக்கிறார்கள். இந்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது ஆசாரியக் கூட்டமாக இது இருக்கிறது. ஐந்தாவது வசனத்தில் விசுவாசிகள் ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் பரிசுத்த ஆசாரியக் கூட்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் தேவனுடைய புண்ணியங்களை அறிவிக்கும் ராஜரீகமான ஆசாரியக்கூட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள். பரிசுத்த ஆசாரியக் கூட்டம் என்னும் நிலையில் அவர்கள் விண்ணகத் திருத்தலத்திற்குள்ளாக ஆராதிக்கும்படி விசுவாசத்துடன் நுழைகிறார்கள். அவர்களே **ராஜரீக** ஆசாரியர்களாக உலகத்திற்குள் சான்றுபகரும்படி செல்லுகிறார்கள். ஆசாரிய முறைமையில் காணப்படும் இந்த வேறுபாடு, பிலிப்பி நகரத்தில் பவுலும் சீலாவும் சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்ச்சியில் விளக்கிக் கூறப்படக்கூடும். பரிசுத்த ஆசாரியர்களாக அவர்கள் நடுஇரவில் தேவனுக்குப் புகழ்ச்சியாகப் பாடல்களைப் பாடினார்கள். **ராஜரீக** ஆசாரியர்கள் என்னும் அடிப்படையில் அவர்கள் நற்செய்தியைச் சிறைச்சாலைக்காரனிடத்தில் அறிவித்தார்கள் (அப். 16:25,31).

விசுவாசிகள் **பரிசுத்த ஜாதியாகவும்** இருக்கிறார்கள். பரிசுத்தத்தினால் இஸ்ரவேலர் வேறுபடுத்திக் கண்டறியத்தக்க ஒரு நாடாக விளங்க வேண்டுமென்பது தேவனுடைய நோக்கமாயிருந்தது. ஆனால் இஸ்ரவேலரோ தங்களுடைய பாவத்தின் மூலம் அயலகத்தாரின் நடத்தைக்கு ஒப்பான கீழ்நிலைக்குச் சென்றுவிட்டார்கள். ஆகவே, இப்பொழுது இஸ்ரவேல் தற்காலிக

மாகத் தள்ளிவைக்கப்பட்டுவிட்டது, சபையோ தேவனுடைய **பரிசுத்த ஜாதியாக** விளங்குகிறது.

கடைசியாக, கிறிஸ்தவர்கள் தேவனுக்குச் சொந்தமான மக்களாக இருக்கிறார்கள். அவர் கள் ஒரு தனிப்பட்ட வகையில் அவருக்கு விசேஷ மான மதிப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

தேவனுடைய புதிய இனத்தாராக, **ஆசாரியக் கூட்டமாக, ஜாதியாக,** மக்களாக விளங்குபவர் கள் பெற்றிருக்கிற பொறுப்பை இந்த வசனத்தின் முதற்பகுதி தெரிவிக்கிறது. நம்மை **அந்தகாரத் தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினி டத்திற்கு வரவழைத்தவருடைய** மேதகைமை களை நாம் **அறிவிக்க** வேண்டும். ஒரு காலத்தில் நாம் பாவத்தின் இருளுக்குள்ளாகவும் அவ மானத்திற்குள்ளாகவும் தடுமாறித் திரிந்தவர் களாக இருந்தோம். ஆனால் வியத்தகு மீட்பின் செயலின் மூலமாக, நாம் அவருடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டி ருக்கிறோம். அந்த ஒளியானது இருள் மறைந் தொழிந்து போகும்படி தெளிவாகவும் பிரகாசமாக வும் இருக்கிறது. இந்த நன்மைகள் யாவற்றையும் நமக்குச் செய்த அவருக்குப் புகழ்ச்சியை எவ்வள வாகச் செலுத்தவேண்டியவர்களாக இருக் கிறோம்!

2:10 ஓசியா தீர்க்கதரிசன நூலைக் குறிப்பிட்ட வராக, பேதுரு இந்தப் பகுதியை நிறைவு செய் கிறார். அந்தத் தீர்க்கதரிசியின் சோகமான குடும்ப வாழ்க்கையைக் காட்சி விளக்கப் பட மாகக் கொண்டு, இஸ்ரவேல் நாட்டின்மீது தேவன் தமது தீர்ப்பை வழங்கினார். அவரிடத்தில் அவர் கள் உண்மையற்றவர்களாக இருந்த காரணத் தால், அவர் இனிமேல் அவர்களுக்கு இரக்கம் செய்யப்போவதில்லை. இனி அவர்கள் அவருடைய ஜனங்களும் அல்ல (ஓசியா 1:6,9). ஆனால் இஸ்ர வேல் புறம்பே தள்ளப்பட்ட செயல் இறுதியான தல்ல, ஏனெனில் வரப்போகிற ஒருநாளில் அந்நாடு முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்படும்:

> ... இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி ''நீ என் ஜனம் என்று சொல்லுவேன்; அவர்கள் ''என் தேவன்'' என்பார்கள் (ஓசியா 2:23).

பேதுருவின் வாசகர்கள் சிலர் இஸ்ரவேல் நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தவர்கள். இப் பொழுதோ அவர்கள் சபையின் அங்கங்களாக மாறிவிட்டார்கள். கிறிஸ்துவின்மேல் வைத்த விசு வாசத்தின் மூலமாக அவர்கள் தேவனுடைய மக்களாக மாறிவிட்டார்கள்; அதே நேரத்தில் விசுவாசமற்ற யூதர்களோ இன்னும் புறம்பே தள்ளப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆகவே மனந்திரும்பிய யூதர்களுடைய வாழ்க் கைச் சூழலைக் கண்ணுற்ற பேதுரு, தன்னுடைய காலத்திலேயே ஓசியா 2:23 -ஆவது வசனத்தின் தீர்க்கதரிசனம் பகுதி நிறைவடைவதை உணர்ந் தார். கிறிஸ்துவுக்குள்ளாக அவர்கள் தேவனு டைய புதிய மக்களாக மாறிவிட்டார்கள்; கிறிஸ்து வுக்குள் அவர்கள் **இரக்கம் பெற்றிருக்கிறார் கள்**. ஓசியா உரைத்த தீர்க்கதரிசனத்தில் வாக் குரைக்கப்பட்ட ஆசிர்வாதங்களை இஸ்ரவேல் நாடு அனுபவிக்கும் வெகுகாலத்திற்கு முன்னரே, அவர்களில் ஒரு சிறு எண்ணிக்கையிலான இரட் சிக்கப்பட்ட யூதர்கள் அனுபவித்து விட்டார்கள்.

திருச்சபையே தற்காலத்தில் தேவனுடைய மக்களாக விளங்குகிறது என்னும் காரணத்தால் இஸ்ரவேல் ஒரு தேசம் என்னும் நிலையிலிருந்து என்றென்றைக்குமாகத் தள்ளப்பட்டுவிட்டது என்று பேதுரு மடலின் இந்தப் பகுதியிலிருந்து ஒருவரும் முடிவுக்கு வந்துவிடக்கூடாது. தற் பொழுது திருச்சபையே தேவனுடைய இஸ்ரவேல் என்றும்கூட ஒருவரும் முடிவுசெய்துவிடக் கூடாது, அல்லது இஸ்ரவேலுக்கு வாக்குறுதி பண்ணப்பட்டவை யாவும் சபைக்குப் பொருந்தும் என்றும்கூட நினைத்துவிடக்கூடாது. இஸ்ர வேலும் சபையும் வெவ்வேறானவை, ஒன்றிலி ருந்து மற்றொன்று தனித்தன்மை வாய்ந்தது. இந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்ளுதல் தீர்க்க தரிசன வார்த்தையை விளக்கிக் கூறுவதற்கு மிகவும் முக்கியமான குறிப்பாக விளங்குகிறது.

ஆபிரகாம் அழைக்கப்பட்டதிலிருந்து மேசியா வின் வருகை வரையிலும் இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக இருந்தார்கள். அந்த தேசத்தின் கீழ்ப்படியாமை யும் உண்மையற்ற தன்மையும் கிறிஸ்து சிலுவை யில் அறையப்பட்ட தருணத்தில் மிகப் பயங்கர மான உச்ச நிலையை அடைந்தது. இந்த முகடு போன்ற கொடூரமான பாவத்தின் காரணமாக, தேவன் இஸ்ரவேலைத் தம்முடைய தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்னும் நிலையிலிருந்து தற்காலிகமாகத் தள்ளிவைத்துவிட்டார். அவர் கள் தேவனுடைய பண்டைய காலத்து பூமிக் குரிய மக்கள் என்று இன்று பெயர்பெற்றிருக் கிறார்களேயொழிய அவர்கள் தேவனாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அல்லர்.

தற்போதைய காலப்பாகுபாட்டில் திருச்சபை என்று புதியதொரு மக்கள் கூட்டத்தை தேவன் கொண்டிருக்கிறார். இஸ்ரவேலோடு தேவன் கொண்டிருக்கிற உறவில் திருச்சபைக் காலகட்டம் ஓர் இடைப்பிறவரலாகும். இந்த இடைப்பிற வரல் முடிவுபெறுகிறபோது, அதாவது சபை யானது விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்ட பிறகு, தேவன் இஸ்ரவேல் மக்களோடு கொண்டுள்ள தமது ஈடுபாட்டை மீண்டும் தொடங் குவார். பின்னர் அந்த தேசத்தின் விசுவாச மக்கள் தேவனுடைய மக்களாக மீண்டும் மாறுவார்கள்.

ஓசியா தீர்க்கதரிசனத்தின் இறுதியான நிறைவு இனிமேல்தான் நடக்கப் போகிறது. அது அவரு டைய இரண்டாம் வருகையின்போது நிகழும். மேசியாவை வேண்டாமென்று நிராகரித்த இஸ்ர வேல் நாட்டினர், "தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக் காக புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக் கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார் கள்" (சக. 12:10). பிறகு மனந்திரும்பி விசுவாசிக் கும் இஸ்ரவேலர் இரக்கத்தைப் பெற்று மீண்டும் ஒருமுறை தேவனுடைய மக்களாக மாறுவார்கள்.

இங்கு பேதுரு குறிப்பிடுகிற கருத்து என்ன வெனில், ஓசியா தீர்க்கதரிசனத்தின் ஒரு பங்கு நிறைவேறுதலை விசுவாசிக்கிற யூதர்கள் இன் றைய நாட்களிலேயே அனுபவிக்கிறார்கள் என்பதே. அதே நேரத்தில் விசுவாசமற்ற யூதர்கள் இன்னமும் தேவனைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறார்கள். முழுமையானதும் முடிவானது மான நிறைவேறுதல், "மீட்கிறவர் சீயோனிலி ருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார்" என்று குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி யின்போது நடைபெறும் (ரோமர் 11:26).

2. விசுவாசியின் உறவுகள் (2:11-4:6).

அ. பரதேசி என்னும் நிலையில் உலகத் தோடுள்ள உறவு (2:11-12)

2:11 வாழ்க்கையில் ஏற்படக்கூடிய உறவு களில் கிறிஸ்தவன் தனது நடத்தையை வெளிப் படுத்த வேண்டும் என்பதைக் குறித்த உண்மை களே பேதுரு முதல் மடலின் எஞ்சிய பகுதியில் பெரும்பாலானவை. இவ்வுலகில் விசுவாசிகள் **அந்நியரும் பரதேசிகளுமாக** இருக்கிறார்கள் என்று பேதுரு நினைவூட்டுகிறார். மேலும் இந்த உண்மையை அவர்கள் தங்களுடைய எல்லா விதமான நடத்தைகளிலும் முத்திரையாகக் கொண்டிருக்க வேண்டும். அந்நிய நாட்டில் குடி யிருக்கும் மக்களுக்கு அந்நாட்டுக் குடியுரிமை கிடையாது. இந்தப் பொருளிலேயே **அந்நியர்** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர் களுடைய நிரந்தரமான வீடு எங்கு இல்லையோ அங்கு அவர்களால் கொஞ்சக்காலமே குடி யிருக்க முடியும் என்னும் பொருளில் அவர்கள் பரதேசிகளாக இருக்கிறார்கள்.

பழம்பாடல்கள் நாம் வெறும் பயணிகள் என் னும் பொருளை நினைவூட்டுகின்றன. எடுத்துக் காட்டாக:

இயேசுவின் சாட்சிகள் நாம் பரதேசிகள்
சிலுவைப் பாதையில்
தோத்திரம் பாடிநாம் மோட்சபுரிநாடி
யாத்திரை செய்கிறோம்.
தரிசித்து நடவாமல் விசுவாசத்தாலே
நாம் பரிசுத்த பாதையில்
போகிறோம் மோட்ச யாத்திரிகர்
நாம் பாரினில் அந்நியராய்.

இப்படிப்பட்ட மனோபாவம் நம்முடைய புதிய பாடல்களில் பெரும்பாலும் காணப்படுவதில்லை. சபை இவ்வுலகில் நிரந்தரமாகத் தங்கும் எண் ணத்தைக் கொண்டிருக்குமானால் நம்முடைய அனுபவத்திற்கு அதிகமாகப் பாடும்போது அது சற்று மாய்மாலமாகத் தோன்றும்.

ஆத்துமாவுக்கு விரோதமாகப் போர்செய் கிற மாம்ச இச்சைகளை விட்டுவிலகுங்கள் என்னும் அறிவுரையை நாம் படிக்கும்போது, உடனடியாக பாலுறவுப் பாவங்களையே நினைக் கிறோம். ஆனால் அதனுடைய பயன்பாடு அதைக் காட்டிலும் அதிகமானது. அது தேவனுடைய சித்தத்திற்குப் பொருத்தமற்ற எல்லா வகையான பெருந்தீனி, நீண்டநேர உறக்கம் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்னும் தீர்மானம், உலகத் தின் இன்பக் கேளிக்கைகளில் நாட்டம் இவை யாவும் இதனுள் அடங்கும். நம்முடைய ஆவிக் குரிய செழிப்புக்கு எதிராக இவையாவும் போர் செய்கின்றன. இவை தேவனோடு கொண்டுள்ள தொடர்பைத் தடை செய்கின்றன. ஆவிக்குரிய வளர்ச்சியை இவை தடுக்கின்றன.

2:12 மாம்சீக விருப்பங்களில் ஒழுங்கை நாம் கடைப்பிடிப்பது மட்டுமின்றி, நாம் புறவினத்தா ருக்கு முன்பாக **நல்நடக்கையுள்ளவர்களாக**[15] **நடந்துகொள்ள** வேண்டும், அதாவது, தேவ நம் பிக்கையற்ற உலகத்தில் நம்முடைய நடத்தை

மேதகைமையுடையதாய் இருக்கவேண்டும். நம்முடைய வாழ்நாட்காலத்தில் நம்முடைய நடத்தை உலகத்திற்கு ஒத்ததாக இருக்கக் கூடாது. நம்முடைய நடை வேறொரு முரசடிப்ப வருடைய தாளத்திற்கு ஏற்றபடி நடை பயில்வதாகக் காணப்பட வேண்டும்.

நாம் குற்றஞ்சுமத்தப்படுவதைத் தவிர்க்க இயலாது. இந்த மடலைப் பேதுரு எழுதியபோது கிறிஸ்தவர்கள் இருந்த நிலையை எர்ட்மேன் வருணிக்கிறார்:

> பிற கடவுள்களைக் கிறிஸ்தவர்கள் தொழுது கொள்ளாத காரணத்தால் அவர்கள் சமயப் பற்று இல்லாதவர்கள் என்று தூற்றப்பட்டார்கள்; அவர்கள் பரவலாக நடைமுறையில் இருந்த ஒழுக்கக் கேடுகளில் ஈடுபடாத காரணத்தால், அவர்கள் வயதுக்கேற்ற அறிவற்றவர்கள் என்றும் சந்நியாசி என்றும் இழிவாகப் பேசப்பட்டார்கள். விண்ணக வேந்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்த காரணத்தால் அவர்கள் தேசத் துரோகிகள் என்று சொல்லப் பட்டார்கள்.[16]

இப்படிப்பட்ட குறைகாணலைத் தவிர்க்கமுடியாது. ஆனால் அவ்வாறு நிந்திக்கப்படுவதற்கான நியாயமான காரணம் எதையும் விசுவாசிகள் எந்தச் சூழ்நிலையிலும் உலகத்தாருக்குக் கொடுத்து விடக்கூடாது. பழிதூற்றுதல் அனைத்தும் நம்முடைய நற்செயல்களைக் குறித்த சிதைவுறாத பதிவேட்டுக் குறிப்பினால் தவறென்று மறுத்துரைக்கப்பட வேண்டும். அதன் காரணமாகப் பழிசாற்றுவோர் **சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படியான** கட்டாயத்திற்குள்ளாவார்கள்.

கர்த்தரின் வருகை நெருங்கியிருக்கும் காலத்தில், அது கிருபையின் காலத்திலோ நியாயத்தீர்ப்பின் காலத்திலோ எப்பொழுது வேண்டுமானாலும் **சந்திப்பின் நாள்** இருக்கும். இந்தச் சொற்றொடர் லூக்கா 19:41-44 பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எருசலேம் தனது சந்திப்பின் நாளை அறிந்திராத காரணத்தால், அதாவது, அன்புடனும் இரக்கத்துடனும் மேசியா வந்திருக்கிறார் என்பதை எருசலேம் உணராத காரணத்தால் இயேசு அந்நகரத்திற்காக அழுதார். இங்கு இதனுடைய பொருள்: (1) குறைகூறுபவர்களை தேவனுடைய கிருபை சந்தித்து, அவர்கள் இரட்சிக்கப்படுகிற நாள், அல்லது (2) இரட்சிக்கப்படாதவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கப் போகிற நியாயத்தீர்ப்பின் நாள், இவற்றில் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

தர்சுப் பட்டணத்து சவுல் முதலாவது சொல்லப்பட்டுள்ள பொருளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். அவர் ஸ்தேவான் மீது குற்றஞ்சாட்டுவதில் பங்குவகித்தார். ஆனால் ஸ்தேவானுடைய நற்செயல்கள் எல்லா எதிர்ப்புகளின் மேலும் வெற்றி பெற்றது. தேவன் தமது இரக்கத்தில், தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் சவுலைச் சந்தித்த போது, மனந்திரும்பிய பரிசேயன் தேவனை மகிமைப்படுத்தியவராக, ஸ்தேவானைப் போல, கிறிஸ்துவினால் நிறையப் பெற்ற வாழ்க்கையில் வெளிப்படுகிற பிரகாசத்தினால் மற்றவர்களிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்படியான நிலையைப் பெற்றார். இது குறித்துத் திருவாளர் ஜோவெட் எழுதுகிறார்:

> விசுவாசிகளின் மனதிற்கினிய வாழ்க்கை மகிமை நிறைந்த தேவனுக்குப் புகழுரை செலுத்தும்படியாக மனிதர்களுடைய சிந்தனையை எழுப்பிவிட வேண்டும். அவர்கள் தெய்வீகத்தை மனிதர்களிடத்தில் காண்பதன் மூலம், அவர்களும் பரலோக ஐக்கியத்தைப் பெற்றுக்கொள்ளும்படியான நிலைக்குக் கவர்ந்திழுக்கப்பட வேண்டும். நம்முடைய சொல்வன்மையினால் அல்ல, நம்முடைய நடத்தையின் பிரகாசத்தினால் அவர்கள் கவர்ந்திழுக்கப்படவேண்டும். நம்முடைய கவர்ச்சிமிக்க கிருபையின் மேதகைமை நிறைந்த வாழ்க்கையின் மூலமாக, "மதியீனர்களின் அறியாமையை வாயடைக்க வேண்டும்." அவர்கள் தூய்மையடைவதற்கான வாழ்க்கையை வாழவிரும்புவதன் முதற்படியே அவர்கள் பேசாதிருக்கும் நிலைமை.[17]

இரண்டாவது விளக்கத்தின்படி, ஆக்கினைத் தீர்ப்பின் நாளில் இரட்சிக்கப்படாத மக்கள் தேவனை மகிமைப்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படுவார்கள். அவர்களுக்குப் போக்குச் சொல்ல இடமிருக்காது, ஏனெனில் அவர்கள் நற்செய்தியைக் கேட்டது மட்டுமின்றி, அதனைத் தங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலகத்தார் ஆகியோருடைய வாழ்க்கையில் காணவும் செய்தார்கள். அப்பொழுது, தேவனுடைய பிள்ளைகளுடைய குற்றமற்ற நடத்தையின் மூலமாக அவரது நீதி நிலைநிறுத்தப்படும்.

ஆ. குடிமகன் என்னும் நிலையில் அரசாங்கத் தோடுள்ள உறவு (2:13 -17)

2:13 அடுத்த ஐந்து வசனங்கள் அரசாங்கத் தோடு கிறிஸ்தவன் கொண்டுள்ள உறவைப் பற்றி விவரித்துக் கூறுகின்றன. இப்பகுதியில் முக்கிய மான சொல் **கீழ்ப்படிதல்** என்பதாகும். உண்மை யில், கீழ்ப்படிய வேண்டும் என்னும் ஆணை இம் மடலில் நான்கு முறை சொல்லப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்குக் குடிமக்கள் **கீழ்ப்படிய** வேண்டும் (2:13).

தங்களுடைய எஜமானருக்கு அடிமைகள் கீழ்ப்படிய வேண்டும் (2:18).

தங்களுடைய கணவர்களுக்குப் பெண்கள் கீழ்ப்படிய வேண்டும் (3:1).

இளம் விசுவாசிகள் மூப்பர்களுக்குக் கீழ்ப் படிய வேண்டும் (5:5).

லையால் என்பார் கூறுகிறார்:

> துன்புறுத்தல்களுக்கும், பழிதூற்றுவோருக்கும் குறைகூறுவோருக்கும் கிறிஸ்தவனுடைய இறுதியான விடை குற்றமற்ற வாழ்க்கையும், நிந்திக்கப்படுவதற்கு அப்பாற்பட்ட நடத்தையும், நல்ல குடிமகனாக விளங்குதலும் ஆகும். குறிப் பாக, கீழ்ப்படிதல் என்னும் பண்பு கிறிஸ்துவுக்கு ஒப்பான முதன்மையான நற்குணமாகும். [18]

மனிதர்களை ஆட்சியாளர்களாகக் கொண்ட அரசாங்கங்கள் தேவனால் நிறுவப்பட்டவை (ரோமர் 13:1). அரசு அதிகாரிகள் தேவனுடைய வேலைக்காரராக இருக்கிறார்கள் (ரோமர் 13:4). அவர்கள் அவிசுவாசிகளாக இருந்தாலும், அவர் கள் தேவனுடைய அதிகாரபூர்வமான ஆட்சி யாளர்களே ஆவார்கள். அவர்கள் ஒருவேளை சர்வாதிகாரிகளாக, கொடுங்கோலராக இருப் பினும், அவர்களது ஆட்சி அரசாங்கமே இல்லை என்னும் நிலையிலும் மேலானதாக இருக்கும். ஆட்சியே இல்லை என்னும் நிலை அராஜக மாகும். ஆகவே எந்தவொரு அரசும், ஆட்சியே இல்லை என்னும் நிலையிலும் மேலானதாகும். ஒழுங்கற்ற நிலையைக் காட்டிலும் ஒழுங்குமுறை மேன்மையானது. விசுவாசிகள் **கர்த்தர் நிமித் தம்** மனித நிறுவனங்களுக்குக் **கீழ்ப்படிய** வேண் டும். அவ்வாறு செய்வதன் வாயிலாக, அவருடைய சித்தத்தை நிறைவேற்றி, அவருக்கு மனமகிழ்ச்சி யுண்டாக்கக்கூடிய செயல்களைச் செய்கிறவர் களாகக் காணப்படுவார்கள். பேரரசர் அல்லது ஆட்சி செலுத்துபவர் யாராயிருந்தாலும் இந்த அறிவுரைகள் பொருந்தும். ஒருவேளை நீரோ மன்னன் அரசு மாளிகையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும், அவனுக்குக் கீழ்ப்படிவதே பொதுவான அறிவுரை.

2:14 கீழ்ப்படியுங்கள் என்னும் ஆணை, மேலான அதிகாரியால் **அனுப்பப்பட்ட அதிகாரி களுக்கும்** செலுத்த வேண்டிய கீழ்ப்படிதலே ஆகும். அவர்கள் குற்றவாளிகளைத் தண்டிப்ப தற்கும், சட்டங்களுக்குக் கீழ்ப்படிபவர்களுக்குப் **புகழ்ச்சியைச்** செலுத்தவும் தேவனாலே அதி காரம் பெற்றவர்கள். உண்மையில் அரசு அதி காரிகள் இரண்டாவதாகச் சொல்லப்பட்டுள்ள செயலைச் செய்கிறதற்கு நேரமோ, விருப்பமோ இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர் கள் கீழ்ப்படிய வேண்டும் என்னும் பொறுப்பை அது எந்தவிதத்திலும் மாற்றுகிறதில்லை. "மனு மக்களின் இயல்பில் முதலாவது பாவம் ஒரு மூலக்கூறாக இருக்கும் வரையிலும், இராயன் எப்பொழுதும் அதிகமான செயல்களைச் செய்ய வேண்டியவனாக இருப்பான்" என்று வரலாற்று ஆசிரியர் அர்னால்டு டோனிபீ கருத்துரை வழங்குகிறார்.

இதற்கு விதிவிலக்குகள் உண்டென்பதில் ஐயமில்லை. கீழ்ப்படிதல் கூடாது என்னும் ஒரு நேரமும் உண்டு. வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவ னுடைய சித்தத்திற்கு எதிராகச் செயல்புரியும்படி ஆட்சியாளர்கள் ஆணையிடுவார்கள் எனில், அதற்கு விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டிய தில்லை. அச்சூழ்நிலையில் விசுவாசி மேலான பொறுப்புடையவனாய் இருக்கிறான்; மனிதருக் குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியம் (அப். 5:29). அவன் கீழ்ப் படியவில்லை என்னும் காரணத்தால் தண்டனை கொடுக்கப்படுமென்றால், அதனை அவன் உற் சாகத்துடன் சகிக்க வேண்டும். எந்தவொரு சூழ் நிலையிலும் அவன் கிளர்ச்சி செய்யவோ அரசைக் கவிழ்க்கவோ சதி செய்யக் கூடாது.

தடைசெய்யப்பட்டுள்ள நாடுகளுக்குள்ளாக வேதாகமங்களைக் கள்ளத்தனமாகக் கடத்திக் கொண்டுபோவது மரபின்படி சட்டத்தை மீறும் செயலாகும். ஆனால் மனிதர்களுடைய சட்டங் களுக்கு மேலான ஒரு சட்டத்திற்கு அவர்கள் கீழ்ப்படிகிறார்கள்; நற்செய்தியை ஏந்தியவர் களாக உலகமெங்கும் செல்லுங்கள் என்னும் கட்டளையே அது. ஆகவே அவர்களை ஆவிக் குரிய அடிப்படையில் குற்றவாளிகள் என்று தீர்க்க முடியாது.

கிறிஸ்தவன் படையில் சேர வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிட்டால், அவன் அதற்குக் கீழ்ப்படிந்து ஆயுதங்களை ஏந்த வேண்டுமா? தேவனுடைய வார்த்தைக்கு இது கீழ்ப்படியாத செயல், நேரடியாக மீறுகின்ற செயல் என்று கருதுவானென்றால், போர் புரியவேண்டிய அவசியம் இல்லாத அலுவலில் அமர்வதற்கான வாய்ப்பையோ, மனச்சாட்சிக்கு எதிராகச் செயல்புரியாதிருக்கும் நிலையையோ பெற முயற்சி செய்ய வேண்டும். இவையாவும் தோல்வி அடையும் என்றால், படையில் சேருவதை மறுத்து அதனுடைய விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பல கிறிஸ்தவர்கள், இராணுவ வீரர்களாகப் பணிபுரிவதில் மனச்சாட்சியில் ஐயம் கொள்வதில்லை. அவனவன் தன்னுடைய மனதில் இதைக் குறித்து முழுநிச்சயம் உடையவனாக இருக்கக் கடவன், அவனுடைய கருத்தைப் பிறர் ஒப்புக்கொள்ளாதிருக்கவும் அவன் இடங் கொடுக்க வேண்டும்.

கிறிஸ்தவன் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமா அல்லது அரசியலில் ஈடுபட வேண்டுமா என்பதெல்லாம் வேறு வகையானவை. அரசாங்கம் இவற்றில் எதையும் கட்டாயப்படுத்துவதில்லை, ஆகவே இவற்றில் கீழ்ப்படிதல், கீழ்ப்படியாமை என்ற கேள்விக்கே இடமில்லை. நடத்தையைக் குறித்த கொள்கைகள், குடிமக்களுக்கு உரிய கோட்பாடுகள் ஆகியவற்றைத் திருமறையின் வெளிச்சத்தில் கண்டு ஒவ்வொருவரும் அதற்கேற்றபடி நடக்க வேண்டும். இதிலும் கூட வெவ்வேறான கருத்துகளுக்கு இடம் கொடுக்க வேண்டும். பிறர் நம்முடைய கருத்தின்படியே நடக்க வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது.

2:15 தேவனுடைய மக்கள் நேர்மையோடும் குற்றமற்றவர்களாகவும் வாழவேண்டும், அதாவது மனந்திரும்பாத மக்கள் அவர்கள் மீது குற்றஞ் சாட்டுவதற்கு ஏதொரு நியாயமான காரணமும் இல்லாதபடி அவர்கள் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாய் இருக்கிறது. முன்மாதிரியான நடத்தையுடன் கூடிய வாழ்க்கையின் மூலமாக, கிறிஸ்தவத்திற்கு எதிராகப் **புத்தியீன மனிதர்கள்** தங்களுடைய **அறியாமையின்** காரணமாகக் கூறும் குற்றச்சாட்டுகளை ஆதாரமற்றவை என்று மெய்ப்பிக்க முடியம், மெய்ப்பிக்கவும் வேண்டும்.

புத்தியீன மனிதர்கள் தங்களுடைய அறியாமையின் நிமித்தம் கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவ விசுவாசத்தையும் இடைவிடாமல் தீவிரமாய்த் தாக்குகிறார்கள். அது ஒருவேளை பல்கலைக் கழக வகுப்பறையிலோ, அறிவியல் பயிற்சிக் கூடத்திலோ, சமய உரை மேடைகளிலோ நடைபெறக் கூடும். அத்தகைய தீவிரமான தாக்கு தலுக்கு மிகச் சிறந்த ஒரே விடை பரிசுத்தமான வாழ்க்கையாகும்.

2:16 சுயாதீனமுள்ளவர்களாக நாம் நடந்து கொள்ள வேண்டும். நாம் அரசு அதிகாரிகளுக்கு அடிமைப்பட்டவர்களோ கட்டுண்டவர்களோ அல்லர். நாம் அடிமைத்தனமாகவோ பயத்துடனோ வாழவேண்டிய அவசியம் இல்லை. நாம் தேவனுடைய சுதந்தரமான மனிதர்கள். ஆனால் நாம் பாவத்துடன் வாழலாம் என்பது அதன் பொருளன்று. சுயாதீனம் என்பது எல்லாம் செய்ய உரிமைபெற்றவர்கள் என்னும் பொருளைத் தருகிறதில்லை. விடுதலை என்று கூறும்போது கட்டுப்பாடு அற்ற தன்மை என்று பொருளாகாது. ஆகவே நாம் பெற்றிருக்கிற சுதந்தரம் தீயவை புரிவதற்கான காரணமாக அமையக்கூடாது. பாவத்துடன் கூடிய கீழ்ப்படியாமையைப் பொய்யான வகையில் ஆவிக்குரிய காரணங்களைக் காட்டி நியாயப்படுத்தக் கூடாது. சமயப் போர்வை அணிந்தவர்கள் பொல்லாப்பை முகமூடியால் மறைத்து கிறிஸ்துவின் நோக்கத்தை முன்னேற்றமடையச் செய்யமுடியாது.

நாம் தேவனுக்கு அடிமைகளாக வாழ்வோமெனில், அரசு அதிகாரிகளோடு நமக்குள்ள உறவு சரியான நிலையில் காணப்படும். அவருடைய பிரசன்னத்தின் வெளிச்சத்தில் நாம் நடக்க வேண்டும், எல்லாவற்றிலும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும், எல்லாவற்றையும் அவருடைய மகிமைக்காகவே செய்ய வேண்டும். கர்த்தருடைய அடிமையாக வாழ்கிற ஒரு விசுவாசியே அந்த நாட்டின் மிகச்சிறந்த குடிமகன். திருமறையை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்து வாழ்கிற கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு கடன்பட்ட நிலையில் இருக்க வேண்டும் என்பதைப் பல அரசாங்கங்கள் உணராமல் இருப்பது வருந்தத் தக்க நிலையாகும்.

தேவனுக்கு அடிமைகளாயிருங்கள் என்னும் சொற்றொடரை ஆழ்ந்து சிந்திந்துப் பாருங்கள். "நமக்கு உண்டாகக்கூடிய பேரச்சம் அனைத்தையும் விண்ணகம் ஏற்றுக்கொள்கிறது. பின்னர் அவற்றைத் தனது சொந்த வெளிச்சத்தில் சுடர்விடச் செய்கிறது. அவ்வாறு பேரச்சம் போலத் தோன்றுகிற யாவும் நம்முடைய மேதகு நோக்கங்களாக மாறுவதற்கான இலக்காக மாறும்

வரை அச்சுடரொளி தொடர்கிறது" என்று எழுது கிறார் திருவாளர் F.B. மேயர்.[19]

2:17 வாழ்க்கையின் எந்தவொரு உறவும் கிறிஸ்தவப் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாயிருப்ப தில்லை. ஆகவே இங்கு பேதுரு தெளிவான கட்டளைக் குறிப்புகளை வழங்குகிறார்.

எல்லாரையும் கனம்பண்ணுங்கள். எல்லோ ருடைய வார்த்தைகளையும், அவர்களுடைய நடத்தையையும் நாம் எப்பொழுதும் **கனம் பண்ண** முடியாது. ஆனாலும் ஒவ்வொரு மனித வாழ்வும் உலகத்தைக் காட்டிலும் அதிக மதிப்பு டையதாக இருக்கிறது என்பதை நாம் நினைவு கூர வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தேவனு டைய சாயலில் அவரைப் போல உருவாக்கப் பட்டிருக்கிறான். எவ்வளவுதான் தகுதியற்றவர் களாக இருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவருக் காகவும் கர்த்தராகிய இயேசு இரத்தம் சிந்தி மரணமடைந்தார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

சகோதரரிடத்தில் அன்புகூருங்கள். நாம் எல்லோரிடத்திலும் **அன்புகூர**வேண்டும் ஆனால் நம்முடைய ஆவிக்குரிய குடும்பத்தாரிடத்தில் அன்புகூரச் சிறப்பான முறையில் நாம் கடமைப் பட்டிருக்கிறோம். இது தேவன் நம்மிடத்தில் கொண்டிருக்கும் அன்பைப் போன்றது. முழுவதும் தகுதியற்றவர்களிடம், அன்பில்லாதவர்களிடம், எந்தவொரு பலனையும் எதிர்பாராமல் அது செல்லுகிறது. மேலும் அது மரணத்தைக் காட்டி லும் அதிக வலிமையுடையது.

தேவனுக்குப் பயந்திருங்கள். அவரே எல் லோருக்கும் மேலான கர்த்தர் என்று அவருக்கு மரியாதை செலுத்துவதே அவருக்குப் பயப்படு தல் ஆகும். அப்பொழுது அவரை மகிமைப் படுத்துவது நம்முடைய முதலாவது முன்னுரிமை யாக விளங்கும். அவருக்கு மனமகிழ்ச்சி அளிக் காத ஏதொன்றைச் செய்வதற்கும் நாம் பயப்படு வோம். மேலும் மனிதர்களுக்கு முன்பாக அவரை நாம் தவறாக எடுத்துக்காட்டுவதற்கும் பயப்படு வோம்.

ராஜாவைக் கனம் பண்ணுங்கள். மனிதர் களை ஆட்சியாளர்களாகக் கொண்ட அரசாங் கத்தைக் குறித்து நினைவூட்டும்படி பேதுரு அந் தப் பொருளினிடமாய்த் திரும்புகிறார். சமுதாயம் முறையாகச் செயல்படவேண்டும் என்பதற்காக தேவன்தாமே அந்த மனிதர்களை அதிகாரி களாக நியமித்திருக்கிறார் என்னும் எண்ணத் துடன் அவர்களுக்கு மரியாதை செலுத்த வேண் டும். "எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டி யதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு தீர்வையையும் செலுத்துங்கள்" (ரோமர் 13:7) என்பதே இதன் பொருள். பொதுவாகச் சொல்லு வோமெனில் கிறிஸ்தவன் எந்த வகையான அர சாங்கமாயினும் அதற்குக் கீழாக வாழமுடியும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையா யிருத்தல் அல்லது கீழ்ப்படிதல் என்னும் நிலையை விட்டுக்கொடுக்க வேண்டும் என்னும் கட்டளைக்கு மட்டும் அவன் கீழ்ப்படியக்கூடாது.

இ. வேலைக்காரன் என்னும் நிலையில் எஜமானரோடுள்ள உறவு (2:18-25)

2:18 புதிய ஏற்பாடு அரசர்களைக் காட்டிலும் வேலைக்காரர்களுக்கு அதிகமாக அறிவுரை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. தொடக்க காலத்தில் பெரும்பாலான விசுவாசிகள் வேலைக் காரர்களாகத்தான் இருந்தார்கள். மேலும் பெரும் பாலான கிறிஸ்தவர்கள் சமுதாயத்தின் நடுத்தர அல்லது தாழ்ந்த படிநிலையிலிருந்து வந்தவர் கள் என்பதைத் திருமறை எடுத்துக்காட்டுகிறது (மத். 11:5; மாற்கு 12:37; 1 கொரி. 1:26-29).

வீடுகளில் பணிபுரியும் வேலைக்காரர்களுக்கு இந்தப் பகுதி எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு சொல்லப்பட்டுள்ள விதிகள் எல்லாவகை யான அலுவல்புரிவோருக்கும் பொருந்தும். எஜ மானருக்கு முழு மரியாதையைச் செலுத்த வேண் டும் என்பதே அடிப்படை அறிவுரையாகும். எந்தச் சமுதாயமாயினும் அல்லது அமைப்பாயினும் ஒருபுறம் அதிகாரம், மறுபுறம் அந்த அதிகாரத் திற்குக் கீழ்ப்படிதல் இருக்க வேண்டும். இதுவே வாழ்க்கையின் நிலைநாட்டப்பட்ட விதியாக இருக்கிறது. எந்தவொரு வேலைக்காரனுடைய நன்மைக்கும் அவன் தன்னுடைய எஜமானுக்குக் கீழ்ப்படிதல் அவசியமாயிருக்கிறது, இல்லை யேல் அவனுக்கு வேலை கிடைக்காது. ஆனால் கிறிஸ்தவனின் கீழ்ப்படிதல் இதனினும் முக்கிய மானது. அவனுக்குக் கிடைக்கும் சம்பளத்தைக் காட்டிலும், அது அவனுடைய சாட்சியோடு சம்பந் தப்பட்டதாகும்.

முதலாளியின் சுபாவத்திற்கு ஏற்றபடி கீழ்ப்படி தல் வேறுபடக்கூடாது. **நல்லவர்களும் சாந்த குணமுள்ளவர்களுமாயிருக்கிற** எஜமானர் களுக்கு யார் வேண்டுமானாலும் கீழ்ப்படிய முடியும். முரட்டுக் குணமுள்ளவர்களும் ஒடுக்கும் இயல்புள்ளவர்களுமாகிய முதலாளிகளுக்கும்

கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று விசுவாசிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இது கிறிஸ்தவக் குணநலனாகத் தனிச்சிறந்து விளங்குகிறது.

2:19 நாம் நேர்மையற்ற முறையில் பாடுகளுக்கு உட்படுத்தப்படும்போது, தேவனுடைய அங்கிகாரத்தைப் பெறுகிறோம். நாம் தேவனோடுள்ள உறவில் நெஞ்சறிந்து நடக்கிறோம் என்பதைக் காண்கிறபோது அவர் மனமகிழ்வு கொள்கிறார். அதன் காரணமாகவே நாம் நம்முடைய உரிமையை நிலைநாட்ட முயற்சி செய்கிறதுமில்லை, எதிர்த்துச் சண்டையிடுகிறதுமில்லை, தவறான முறையில் நமக்கு அளிக்கப்படுகிற வேதனைகளைப் பொறுமையோடு சகித்துக் கொள்கிறோம். நேர்மையற்ற வகையில் நாம் நடத்தப்படும்போது, நாம் அதனைத் தாழ்மையோடு ஏற்றுக்கொள்வோமானால் நாம் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறவராயிருப்போம். இவ்வாறு இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் வாழ்கிற வாழ்க்கை "நன்றாய்ச் செய்தாய்" என்னும் தேவனுடைய பாராட்டைப் பெறுகிறது.

2:20 நம்முடைய சொந்தத் தவறுகளின் காரணமாகப் பாடுகளைப் பொறுமையோடு சகிப்போமானால் அதில் எவ்வித மேன்மையும் இல்லை. அதில் தேவனுக்குப் புகழ்ச்சியில்லை என்பது நிச்சயம். அப்படிப்பட்ட பாடுகள் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று சுட்டிக்காட்டுவதில்லை, அல்லது மற்றவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகவேண்டும் என்னும் விருப்பத்தையும் தருவதில்லை. ஆனால் நன்மைசெய்து பாடுபடும்போது **பொறுமையோடு சகிப்பதே** கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அது இயற்கைக்கு அப்பாற்பட்டது, வேற்றுலக வாழ்க்கையாக வியந்து காணப்படும். அதன் வாயிலாக பாவத்தைக் குறித்த குற்ற உணர்வையும் இரட்சிப்பிற்கான தூண்டுதலையும் அவர்களைக் காண்போர் பெறுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

2:21 நீதியின் நிமித்தம் விசுவாசிகள் பாடுபடுகிறார்கள் என்னும் சிந்தனை, இந்த மேன்மையான திருமறைப் பகுதியில் நம்முடைய மகத்தான **மாதிரியான** கர்த்தராகிய இயேசுவைக் குறித்துப் பேசும்படியாக வழிநடத்துவதைத் தவிர்க்க முடியாது. அவரைப் போல வேறு எவரும் ஒருக்காலும் நேர்மையற்ற முறையில் நடத்தப்பட்டதில்லை, அவரைப் போல பொறுமையாகச் சகித்ததும் இல்லை.

பிறருடைய தவறுகளுக்காக அவர் பாடுபட்டது போல, நாமும் பாடுபடவேண்டும் என்று நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள **மாதிரி** என்னும் சொல், தவறில்லாதபடி கையெழுத்து ஆற்றலை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பார்த்து எழுதும் ஏட்டை நினைவுபடுத்துகிறது. ஏட்டில் உள்ளதுபோலவே மாணவன் பார்த்து எழுதவேண்டும். மாதிரியாகக் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்புக்குச் சரிநிகராக அவன் எழுதுகிறபோது அவனுடைய கையெழுத்து மிகச்சிறப்பாக இருக்கும். ஆனால் அதை விட்டு அதிகமாக விலகிச் செல்லுகிறபோது, படியெடுத்த பிரதிகள் அழகற்றுக் காணப்படும். மூலத்தை விட்டு விலகாமல் நெருங்கியிருப்பதன் வாயிலாகவே நாம் பாதுகாப்பைப் பெறுகிறாம்.

2:22 நம்முடைய கர்த்தர் தமது சொந்தப் பாவங்களுக்காகப் பாடுபடவில்லை. ஏனெனில் அவரிடம் பாவம் ஏதும் இல்லை. "அவர் பாவம் அறியாதவர்" (2 கொரி. 5:21). **அவர் பாவஞ் செய்யவில்லை** (இந்த வசனம்); "அவரிடத்தில் பாவமில்லை" (1 யோவான் 3:5).

அவருடைய பேச்சு ஒருபோதும் வஞ்சனையால் கறைபடவில்லை. அவர் ஒருபோதும் பொய் யுரைக்கவில்லை, உண்மையை மறைக்கவுமில்லை. அதைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள்! இந்த உலகத்தில் ஒருகாலத்தில் வாழ்ந்த ஒருவர் முற்றிலும் நேர்மையானவர், சூழ்ச்சியோ வஞ்சனையோ அவரிடத்தில் சிறிதளவும் இல்லை.

2:23 அவர் துன்புறுத்தப்பட்டபோது அவர் பொறுமையோடிருந்தார். **அவர் வையப்பட்ட போது** அதே போல பதிலுக்குப் பேசவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட போது எதிர்த்துப் பதில் பேசவில்லை. பழிசாற்றியபோது தம்மைப் பழியற்றவர் என்று மெய்ப்பிக்க அவர் ஒன்றும் செய்யவில்லை. தாம் நேர்மையானவர் என்பதை மெய்ப்பிக்க வேண்டும் என்னும் விருப்பம் அவரிடத்தில் இல்லாமல் இருந்தது மிகவும் வியப்பிற்குரிய நிலையாகும்.

அறிமுகமற்ற ஓர் எழுத்தாளர் எழுதியிருப்பதாவது:

> எவ்விதக் காரணமுமின்றி நாம் குற்றப்படுத்தப்படும் வேளைகள் மிகவும் ஆழமும் உண்மையுமான தாழ்மையை வெளிப்படுத்துபவை. அச்சூழ்நிலைகளில் அமைதியோடிருப்பது அதற்கு அடையாளமாகும். அவமானப்படுத்தப்படும் போதும் நமக்கு எதிராகத் தவறி

ழைக்கப்படும் போதும் அமைதியோடிருப்பது நமது கர்த்தரை மிகச் சிறப்பாகப் பின்பற்று வதாகக் காணப்படும். அவர் எத்தனை வகை யான பாடுகள் அனுபவித்திருக்கிறார் என்பதை எண்ணிப்பார்க்கிறபோது, மேலும் அவர் அவ்வாறு நடத்தப்படுகிறதற்குக் காரணம் எதுவு மில்லை என்று நினைவுகூருகிறபோது, நாம் தவறு செய்யவில்லையென்று நிலைநாட்ட வேண்டும் அல்லது ஏதாவது சாக்குப்போக்குச் சொல்ல வேண்டும் என்று கருதுவோமெனில் நமது அறிவு எங்கே போகிறது?

அவர் **பாடுபடும்போது பயமுறுத்தவில்லை.** "பெருந்தன்மையற்றதும் அச்சுறுத்துகிறதுமான சொல் அவருடைய அமைதியான நாவிலிருந்து பிறக்கவில்லை." அவர் அமைதியாயிருந்ததால் அவருடைய பகைஞர் அவர் பலவீனமானவர் என்று தவறாக எண்ணினார்கள். அவர்கள் அதனை ஆராய்ந்து பார்த்திருந்தால் அது பல வீனமல்ல இயற்கைக்கு அப்பாற்பட்ட வலிமை என்பதைக் கண்டறிந்திருப்பார்கள்!

எந்தத் தவறும் செய்யாமலிருந்தும் அவர் பழித்துரைக்கப்பட்டபோது அதைச் சகித்துக் கொண்டார். அதற்காக அவரிடத்தில் மறை வாயிருந்த ஆற்றல் எது? நியாயமாய்த் தீர்ப்பு செய்கிற தேவனிடத்தில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். நாம் அதுபோலவே செயல் புரிய அழைக்கப்பட்டிருக்கிறோம்:

> "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக் குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங் கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதால் அக்கி னித்தழலை அவன் தலையின்மேல் குவிப் பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோமர் 12:19-21).

2:24 இரட்சகருடைய பாடுகள் முன்மாதிரி யானவை மட்டுமின்றி, பிராயச் சித்தம் பண்ணுப வையும் ஆகும். அந்தப் பொருளில் நாம் அவரு டைய பாடுகளைப் பின்பற்ற முடியாது, பேதுருவும் நாம் அவ்வாறு பின்பற்ற வேண்டும் என்று சொல்ல வில்லை. மாறாக, கீழ்க்கண்டவாறு சிந்தனை செல்கிறது என்றே தோன்றுகிறது: நம்முடைய இரட்சகர் தமது பாவங்களின் காரணமாக வேத னையடையவில்லை, ஏனென்றால் அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை. **நம்முடைய பாவங்களுக் காகவே** அவர் சிலுவையில் அடிக்கப்பட்டார். நம் முடைய பாவங்களுக்காக அவர் என்றென்றைக்கு மாக ஒரேதரம் அடிக்கப்பட்ட காரணத்தால், நாமும் அவற்றிற்கான பாடுகளை அனுபவிக்க வேண்டிய நிலைக்குச் சென்றுவிடக் கூடாது. அவர் அந்தப் பாவங்களுக்காக மரணமடைந்தார் என்னும் உண்மை, நாம் பாவங்களுக்குச் செத்த வர்களாக விளங்கச் செய்வதற்குக் காரணமாக அமைய வேண்டும். இருந்தபோதிலும், இது வெறுமனே செயலற்ற நல்ல இயல்பாக இருந் தால் மட்டும் போதாது; நாம் பாவத்திற்கு மரிப்பது மட்டுமின்றி நீதிக்குப் பிழைத்திருக்கிறவர்களாக வும் காணப்பட வேண்டும்.

அவருடைய தழும்புகளால் குணமானீர் கள். தழும்புகள் என்னும் சொல் மூல மொழியில் ஒருமையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வேளை அவருடைய சரீரம் முழுவதும் ஒரு பெரிய சவுக்கடி வரித்தழும்பாகக் காணப்பட்டது போலும். இவ்வளவு பெரிய விலையை நமது இரட்சகர் நாம் குணமாகும் பொருட்டுச் செலுத்தினார் என்றால், பாவத்தைக் குறித்து நமது மனப்பான்மை எவ் வாறு இருக்க வேண்டும்? "குணமாக்குவதற் கென்று அவர் பயன்படுத்திய முறை புதியதும் விநோதமானதுமாகும். மருத்துவர் செலவு செய்தார், நோயாளி குணமடைந்தான்" என்று திருவாளர் தியோடோரெட் இதற்கு விளக்கமளிக் கிறார்.

2:25 மனமாற்றம் அடைவதற்கு முன்னர், நாம் **சிதறுண்ட ஆடுகளைப்** போலிருந்தோம் - இழந்துபோனவர்களாக, சிதைக்கப்பட்டவர் களாக, நொறுக்கப்பட்டவர்களாக, இரத்தம் சிந் திய நிலையில் இருந்தோம். ஏசாயா 53 -ஆம் அதிகாரத்திலிருந்து ஆறு குறிப்புகளைப் பேதுரு இப்பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளார். இது ஆறாவது குறிப்பாகும்:

வச. 21 கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டார் (ஏசாயா 53:4,5).

வச. 22 அவர் பாவஞ்செய்யவில்லை, அவ ருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (ஏசாயா 53:9 -ஆம் வசனத்துடன் ஒப்பிடுக).

வச. 23 அவர் வையப்படும்போது பதில் வையா மலும் (ஏசாயா 53:7)

வச. 24 நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் (ஏசா. 53:4,11).

வச. 24 அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (ஏசாயா 53:5)

வச. 25 சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள் (ஏசாயா 53:6).

நாம் இரட்சிக்கப்படுகிற போது, நாம் நம்முடைய மேய்ப்பரிடமாய்த் திரும்புகிறோம் - நல் மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான் (யோவான் 10:11); பெரிய மேய்ப்பரோ எந்த மந்தைக்காக இரத்தம் சிந்தினாரோ அதை அன்போடு பசுமையான மேய்ச்சலிடமாய் - விண்ணகத்திற்கு, அங்கிருந்து அவை ஒரு போதும் சிதறிப்போவதில்லை - வழிநடத்தும்படி வெகு விரைவில் தோன்றுவார்.

மனந்திரும்புதலின் மூலமாக நம்முடைய ஆத்துமாக்களின் பாதுகாவலரிடம்[20] திரும்புகிறோம். படைப்பின் மூலாக நாம் அவருடையவர்கள், ஆனால் பாவத்தினால் வீழ்ந்து போனோம். இப்பொழுது அவருடைய அரவணைப்புக்குள்ளாகத் திரும்புகிறோம். அங்கு நாம் எப்பொழுதும் பாதுகாப்போடும் ஆபத்தின்றியும் நிலைத்திருப்போம்.

ஈ. மனைவி என்னும் நிலையில் தனது கணவனோடுள்ள உறவு (3:1-6)

3:1 மனித அரசாங்கத்திற்கும் உலகத்திற்குரிய எஜமானர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டிய கடமை கிறிஸ்தவர்களுக்கு உண்டு என்பதைப் பேதுரு வற்புறுத்திக் கூறினார். இப்பொழுது அவர் மனைவிகள் தங்களுடைய கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்னும் பொருள் பற்றி விவரிக்கிறார்.

ஒவ்வொரு மனைவியும் தன்னுடைய கணவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டியது அவசியம், அவன் விசுவாசியானாலும் அவிசுவாசியானாலும் அவள் கீழ்ப்படிய வேண்டும். ஆணுக்குத் தலைமைப் பதவியை தேவன் கொடுத்திருக்கிறார். ஆணின் அதிகாரத்தைப் பெண் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள உறவு கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையேயுள்ள உறவிற்குப் படவுருவாகக் காட்சி தருகிறது. திருச்சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டியது போலவே மனைவி தன் கணவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இது வழக்கற்றுப் போன நிலை என்றே நம்முடைய சமுதாயம் கருதுகிறது. பெண்கள் ஆண்கள் மேல் அதிகாரம் செலுத்தும் நிலைக்கு உயர்ந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் நம்முடைய சமுதாயம் குடும்பத் தலைவிகள் அதிகமாக உள்ள சமுதாயமாக மாறிக்கொண்டு போகிறது. பல சபைகளில் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் செயல்திறம் மிக்கவர்களாகவும் வரம் பெற்றவர்களாகவும் தோன்றுகிறார்கள். ஆனாலும் தேவனுடைய வார்த்தை மாறாதிருக்கிறது. ஆண் தலைமைப் பொறுப்பை வகிப்பது தேவனுடைய கட்டளை. என்னதான் சொல்லப்படுகின்ற வாதங்கள் பொருத்தமுடையவையாகத் தோன்றினாலும், ஆண்களுடைய அதிகாரத்தைப் பெண்கள் பறித்துக்கொள்ளுவது இறுதியில் பிரச்சினையையும் குழப்பத்தையுமே விளைவிக்கும்.

ஒரு பெண்ணின் கணவன் அவிசுவாசியாக இருந்தாலும், அவள் தன் கணவனைத் தன்னுடைய தலைவனாகவே மதிக்க வேண்டும். அந்நிலை அவள் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவளாக இருப்பதன் சாட்சியை அவனுக்கு வெளிப்படுத்தும். கீழ்ப்படிதல், அன்புகூருதல், பயபக்தியோடு இருத்தல் ஆகிய குணநலன்களோடு நடக்கிற பெண் அவனை இரட்சகருக்கென்று வெற்றி கொள்வாள்.

மேலும் அவள் போதனை எதுவுமின்றி அவனை வெற்றிகொள்வாள். மனைவி தன் கணவனுக்குத் தொடர்ந்து பிரசங்கம் செய்ய வேண்டியதில்லை என்பதே இதன் பொருளாகும். நற்செய்தியைக் குறித்துத் தங்களுடைய கணவர்களுக்கு இடைவிடாமல் கூறி நச்சரிக்கும் பெண்கள் அதிக இடர்ப்பாட்டையே வருவித்துக்கொள்கிறார்கள். அது அவர்களுடைய தொண்டைக்குள் நிரப்பித் திணிப்பது போலக் காணப்படும். அனுதினமும் கிறிஸ்துவை அவனுக்கு முன்பாக வாழ்ந்து காட்டுவதன் மூலமாகவே ஒரு மனைவி தன்னுடைய கணவனை வெற்றிகொள்ள வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்பட்டுள்ள செய்தி.

ஆனால் மனைவியினுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் கணவன் குறுக்கிடுவானானால் என்ன செய்வது? திருமறையில் சொல்லப்பட்டுள்ள தெளிவான கட்டளைக்குக் கீழ்ப்படியக் கூடாது என்று அவன் கூறுவானெனில், அவள் தன் கணவனுக்குக் கீழ்ப்படியாமல் கர்த்தருக்கு உண்மையுள்ளவளாயிருக்க வேண்டும். அது கிறிஸ்தவள் செய்ய வேண்டிய கடமையாக இல்லாமல் வெறுமனே கிறிஸ்தவச் சிறப்புரிமையாக மட்டும் இருந்

தால், அந்த உரிமையை அவள் வேண்டாமென்று கூறி, தன் கணவனுக்கு அடங்கியிருக்கக் கடவள்.

ஒரு கிறிஸ்தவப் பெண்மணியின் கணவன் அவிசுவாசியாக இருக்கிற நிலையைக் குறித்துப் பேதுரு பேசுகிறார்; ஒரு விசுவாசி அவிசுவாசியைத் திருமணம் செய்துகொள்வதை தேவன் பொறுத்துக்கொள்கிறார் என்பது இதன் பொருளன்று. இது ஒருபோதும் தேவனுடைய சித்தமல்ல. திருமணத்திற்குப் பிறகு இரட்சிக்கப்படுகிற பெண்களைப் பற்றியே முதன்மையாக அப்போஸ்தலன் பேசுகிறார். கணவன் அவிசுவாசியாக இருக்கின்ற போதிலும் அவள் தன் கணவனுக்குக் **கீழ்ப்படிந்திருப்பது** அவசியம்.

3:2 இரட்சிக்கப்படாத கணவன் தன் மனைவியின் பணிவும் கற்பும் மிக்க நடக்கையைக் கண்டு நல்லெண்ணம் கொள்கிறான். அவனுடைய பாவ நிலையை உணர்த்துவதற்கு தேவனுடைய ஆவியானவர் இதனைப் பயன்படுத்தக் கூடும், மேலும் அவன் கிறிஸ்துவிடம் பற்றுடையவனாக மாறக் கூடும்.

பயபக்தியுள்ள விசுவாசியான மனைவியையுடைய செல்வந்தனாகிய ஜெர்மானியன் ஒருவனைப் பற்றிய கதையை ஜார்ஜ் முல்லர் கூறினார். அவன் பெரிய குடிகாரன், இரவில் நெடுநேரம் மதுபானக் கடையிலே கழித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அவள் வேலைக்காரர்களையெல்லாம் படுக்கும்படி அனுப்பிவிடுவாள். ஆனால் அவளோ அவன் வரும்வரை காத்திருந்து, அன்போடு வரவேற்பாள்; அவனை ஒருமுறைகூடத் திட்டியதும் இல்லை, குறை கூறியதுமில்லை. சில வேளைகளில் அவனுடைய ஆடைகளைக் கழற்றிவிட்டு, படுக்கையில் படுக்க வைப்பாள்.

ஓரிரவு அவன் மதுபானக்கடையில் தனது நெருங்கிய நண்பர்களிடம், "நாம் எல்லோரும் என்னுடைய வீட்டிற்குச் செல்வோமென்றால், என் மனைவி எனக்காகக் காத்துக்கொண்டிருப்பாள். வாயிற் கதவுவரை வந்து, அரச வரவேற்பளித்து நான் கேட்டால் நமக்கு இரவு உணவையும் ஆயத்தப்படுத்துவாள் என்று பந்தயம் கட்டுகிறேன்" என்று கூறினான்.

முதலில் அவர்கள் அதை நம்பவில்லை, ஆனாலும் அவனோடு சென்று காண வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அவன் சொன்னவண்ணமே அவள் வாயிற் கதவுவரை வந்து அவர்களை மரியாதையுடன் வரவேற்றாள், எவ்விதத் தயக்கமும் இன்றி அவர்களுக்கு உணவு ஆயத்தம் செய்ய ஒப்புக்கொண்டாள். அவர்களுக்கு உணவைப் பரிமாறிய பிறகு அவள் தன்னுடைய அறைக்குச் சென்றாள். அவள் அங்கிருந்து சென்றவுடனே, உடன்வந்த மனிதர்களில் ஒருவன் அவளுடைய கணவனைப் பழித்துரைத்தான்: "இவ்வளவு நல்ல பெண்மணியை நீ இந்த அளவிற்கு இழிவாக நடத்துகிறாயே, நீ எப்படிப்பட்ட மனிதன்?" அவ்வாறு குற்றப்படுத்திய மனிதன் தன் உணவருந்தாமலேயே வீட்டைவிட்டுச் சென்றுவிட்டான். அடுத்த மனிதனும் அவ்வாறே செய்தான். இவ்வாறு அவனுடைய நண்பர்கள் ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் உணவருந்தாமலேயே சென்றுவிட்டார்கள்.

அரைமணி நேரத்திற்குள்ளாக அந்த மனிதன், தன்னுடைய பொல்லாங்கான நிலை குறித்து, குறிப்பாகத் தனது மனைவியை இதயமற்றபடி நடத்தின விதம் குறித்து, ஆழ்ந்த துக்கமடைந்து மனம் வருந்தினான். அவன் மனைவியின் அறைக்குச் சென்று, தனக்காக ஜெபம் பண்ணும்படி கேட்டுக்கொண்டான். மேலும் தன்னுடைய பாவங்களுக்காக மனம்வருந்தி கிறிஸ்துவினண்டைத் தன்னை ஒப்புவித்தான். அந்நேரம் முதல் அவன் கர்த்தராகிய இயேசுவின் பயபக்திக்குரிய சீடனாக மாறினான். போதனை வெற்றிகொண்டது!

ஜார்ஜ் முல்லர் அறிவுரை நல்குகிறார்:

> மனந்திரும்பாத உறவினர்கள் மூலமாக நீங்கள் பாடுபட வேண்டியதாக இருந்தால் அதற்காகச் சோர்ந்து போகாதீர்கள். ஒருவேளை அவர்களைக் குறித்து நீங்கள் ஏறெடுத்த மன்றாட்டுகளுக்கு, உங்களுடைய இருதயத்தின் வாஞ்சைக்குக் கர்த்தர் வெகுவிரைவாகப் பதிலளிக்கப்போகிறார் போலும். ஆனால் அதற்கிடையே, அவர்கள் உங்களிடம் நடந்துகொள்ளும் நடத்தையின் நிமித்தம் நீங்கள் அவர்களை நிந்திக்காமல் சத்தியத்திற்கு ஏற்றபடி நடந்துகொள்ளுங்கள். அதற்கும் மேலாக கர்த்தராகிய இயேசுவின் தாழ்மையையும், சாந்தத்தையும், தயவையும் வெளிப்படுத்திக் காட்டுங்கள்.[21]

3:3 இங்கு ஆய்வுப்பொருள் பெண்களின் ஆடைகளை நோக்கித் திரும்புகிறதாகத் தோன்றுகிறது, ஆனால் உண்மையில் ஒரு மனைவி எவ்வாறு தன்னுடைய கணவனுக்குப் பிரியமாக நடப்பது மற்றும் சேவைபுரிவது ஆகியவை பற்றியே அப்போஸ்தலன் முதன்மையாக விவரித்

துக்கொண்டிருக்கிறார். அவளுடைய வெளி யரங்கமான தோற்றமல்ல, உள்ளான பரிசுத்த மும் கீழ்ப்படிதலுமே அவனிடத்தில் விளைவை உண்டுபண்ணும் திறன்களாயிருக்கும்.

தவிர்க்கப்பட வேண்டிய பலவகையான புறம் பான **அலங்கரிப்புகள்**:

1. **முடியைப் பின்னுதல்.** பகட்டான அலங்கார மற்றபடி முடியைப் பின்னுதலும் கூட செய்யப் படலாகாது என்று சிலர் நினைக்கிறார்கள். மிக உயரமான கொண்டைகள், அடுக்கடுக் கான மேடைபோன்ற முடியலங்காரங்கள் ஆகியவை பண்டைக் கால ரோமாபுரியில் பிரசித்தி பெற்ற வையாயிருந்தன. அவற்றிற்கு எதிராகவே பேதுரு பேசுவதாகத் தோன்று கிறது.
2. **பொன்னாபரணங்கள் அணிதல்.** பொன்னால் ஆன எந்தவொரு நகையையும் அணியக் கூடாது என்று முழுத்தடை விதிக்கப்பட்டிருப்ப தாகச் சிலர் கருதுகிறார்கள். கண்ணைக் கவர்ந்து இழுக்கிறபடி வரம்பு மீறிய அள விற்கு நகைகள் அணிவதையே இது குறிக் கிறது என்று பிறர் கருதுகிறார்கள்.
3. **உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள் ளுதல்.** ஆடைகள் அணிவதையல்ல, ஆரவார மான ஆடைகள் அணிவதையே இது தடை செய்கிறது என்பதில் ஐயமில்லை. ஏசாயா 3:16-25 ஆகிய வசனங்களைப் படியுங்கள். வரம்பு மீறிய அலங்கரிப்புகளைக் குறித்து தேவன் என்ன நினைக்கிறார் என்பதை அப் பகுதியில் காணலாம்.

கிறிஸ்தவனின் ஒப்பனை

ஆடைஅணிதல் மற்றும் நகை அணிதல் ஆகியவை பற்றிய சில வழிகாட்டும் நெறிகள் உள்ளன. அவை ஆண்களாயினும் பெண்களா யினும் எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும். முதலாவது கோட்பாடு செலவினத்தைப் பற்றிய தாகும். ஆடைகளுக்காக நாம் எவ்வளவு செலவு செய்யலாம்? அது தேவையா? அதைக் காட்டி லும் சிறப்பான முறையில் அந்தப் பணத்தைச் செலவிட முடியுமா?

1 தீமோத்தேயு 2:9 விலையுயர்ந்த ஆடைகள் அணிவதைத் தடை செய்கிறது. "விலையேறப் பெற்ற வஸ்திரத்தினால்... அலங்கரியாமல்." நம்மால் அந்த அளவிற்குச் செலவு செய்ய முடி யுமா முடியாதா என்பதல்ல கேள்வி. விலை அதிக மான ஆடைகளில் பணத்தைச் செலவழிப்பது ஒரு கிறிஸ்தவனுக்குப் பாவமாயிருக்கும், ஏனெனில் தேவனுடைய வசனம் அதைத் தடை செய்கிறது. இரக்க குணமும் அதைத் தடைசெய்கிறது. பிற நாடுகளில் மக்கள் இறை நம்பிக்கை அற்றவர் களாக இருக்கும் நிலைமை, அவர்களுடைய மிகப்பெரிய ஆவிக்குரிய தேவைகள், ஏழை மக்க ளுடைய சரீரத் தேவைகள் இவையாவும், நாம் நமது செல்வத்தை அவற்றிற்காகச் செலவிடாமல் தேவையற்றபடி ஆடைகளுக்காக விரயம் செய் வது நம்முடைய இரக்கமற்ற தன்மை என்று சுட் டிக் காட்டுகின்றன.

நாம் வாங்குகிற ஆடைகளின் தரத்திற்கு மட்டுமின்றி, அவற்றின் எண்ணிக்கைக்கும் இது பொருந்தும். கிறிஸ்தவர்கள் சிலருடைய அல மாரிகள் துணிக்கடைகளின் கிளைகள் போன்று காணப்படுகின்றன. விடுமுறை நாட்களில் அவர் கள் பயணம் செய்யும் போது, பின் இருக்கைக்கு மேலாகப் பொருத்தப்பட்ட கம்பிகளில் தொங்க விடப்பட்டிருக்கும் ஆடைகளும், சட்டைகளும் மேலாடைகளும், துணிமணிகள் விற்கும் வணி கனுக்குப் போட்டியாகக் காட்சியளிக்கும்.

இவ்வாறு நாம் செய்வது ஏன்? இது நமது பெருமையைச் சுட்டிக்காட்டுகிறது அல்லவா? நம்முடைய அழகுணர்வை இது நிவர்த்தி செய் கிறதாகக் காணப்படுகிறது. ஆடைகளை வாங்கு வதற்காகச் செய்கிற செலவு ஒன்று மட்டுமே, நாம் எதை வாங்குவது என்பதைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டும் நெறியாக அமையவேண்டும்.

மற்றொன்று தன்னடக்கம். "தகுதியானதும் தன்னடக்கம் உடையதும் (நாணம்)" என்கிறார் பவுல். தகுதி என்னும் சொல் "மரியாதைக்குரிய" என்னும் பொருளையும் கொண்டிருக்கிறது. மனிதனுடைய நிர்வாணத்தை மறைப்பது ஆடை யின் வேலைகளில் ஒன்று. அவ்வாறுதான் தொடக்கத்தில் இருந்தது. ஆனால் தற்காலத்தில் உடல் உறுப்புகளின் அமைப்பைப் பெரும்பாலும் வெளிப்படுத்தும் வகையில் ஆடைகள் வடிவமைக் கப்படுகின்றன. இவ்வாறாக மனிதன் தன்னுடைய வெட்கக்கேட்டில் பெருமைப்படுகிறான். துன் மார்க்கன் இவ்வாறு செய்வதில் ஆச்சரியப்படு வதற்கு ஒன்றுமில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் இதைப் பின்பற்றுவது நமக்கு அதிர்ச்சியளிக் கிறது.

ஆனால், தகுதியானது என்னும் சொல் அழ கானது என்னும் பொருளையும் கொண்டிருக் கிறது. கிறிஸ்தவன் தூய்மையாக ஆடை அணிய வேண்டும் என்பதே இது கூறும் அறிவுரை. கசங்

கிக் கிழிந்து போனதும் அழுக்கானதுமான உடை களை அணிவது நல்லொழுக்கமாகாது. சோம் பேறித்தனம் பரிசுத்த ஆவியானவரை அவமானப் படுத்துவதாகும் என்று ஆஸ்வால்டு சேம்பர்ஸ் கூறினார். விசுவாசிகளின் உடைகள் தூய்மை யாகவும், தேய்க்கப்பட்டதாகவும், நன்கு தைக்கப் பட்டதாகவும் இருக்க வேண்டும்.

பொதுவாக, பிறர் கவனத்தை ஈர்க்கக் கூடிய அளவிற்கு வடிவமைக்கப்பட்ட ஆடைகளைக் கிறிஸ்தவன் தவிர்க்க வேண்டும். அவனுடைய வாழ்க்கையின் முக்கிய அலுவல் இதுவன்று. இவ்வுலகில் அவன் ஓர் ஒப்பனைப் பொருள் அல்ல, மாறாக, அவன் திராட்சைச் செடியில் கனிதரும் கொடியாக இருக்கிறான். நாம் பல வகைகளில் பிறரைக் கவர்ந்திழுக்க முடியும். பழம்பாணியான ஆடைகளை அணிவதாலும் பிறர் கவனத்தை ஈர்க்க முடியும். கிறிஸ்தவன் மிகச் சாதாரணமான ஆடைகளையோ, பகட்டான ஆடைகளையோ விசித்திரமான ஆடைகளையோ அணிவதைத் தவிர்க்க வேண்டும்.

இறுதியாக, கிறிஸ்தவன் - இது குறிப்பாக இளம் விசுவாசிக்குப் பிரச்சினையை ஏற்படுத்து கிறது - சிந்தனையைக் கிளறுகிற அல்லது தூண்டி விடுகிற ஆடைகளைத் தவிர்க்க வேண்டும். நாம் உடலுறுப்புகளை வெளிப்படுத்திக் காண்பிக்கிற ஆடைகளைக் குறித்து ஏற்கனவே சுட்டிக்காட்டி னோம். ஆனால் சிலர் அணிகிற ஆடைகள் உடல் முழுவதையும் மூடினாலும் பிறருடைய உள்ளத் தில் இச்சையுண்டாக்கக் கூடியவையாக இருக்கக்கூடும். நவீன ஆடைகள் ஆவிக்குரிய நிலையை உற்சாகப்படுத்துபவையாக காணப் படுகிறதில்லை. மாறாக, தற்காலத்தில் அவை காமவெறியைத் தூண்டிவிடுகின்றன. பிறருடைய ஆசையிச்சைகளைத் தூண்டிவிடும்படியோ, மற்றவர்கள் கிறிஸ்தவ ஒழுங்குடன் வாழ்வதைக் கடினமாக்குவதாகவோ கிறிஸ்தவர்கள் ஒரு போதும் ஆடையணியக்கூடாது.

மிகப்பெரிய பிரச்சினை என்னவெனில், சமு தாயத்திற்கு ஒத்துவாழ வேண்டும் என்னும் அளவு கடந்த தாக்கமேயாகும். இது எப்பொழு தும் உண்மையாயிருக்கிறது, தொடர்ந்தும் அப்படியே இருக்கும். விசித்திரமான ஆடை களைத் தவிர்ப்பதற்கும், பொதுமக்களின் கருத் திற்கு எதிர்நீச்சல் புரிவதற்கும், சுவிசேஷத்திற்கு ஏற் புடைய ஆடைகள் அணிவதற்கும் கிறிஸ்தவர் களுக்கு மிக அதிகமான துணிவு தேவை.

நம்முடைய அலமாரிக்குக் கிறிஸ்து கர்த்த ராக விளங்குவாரெனில் எல்லாம் நன்றாய் இருக் கும்.

3:4 இருதயத்தில் மறைந்திருக்கிற குணத்தின் அழகே ஒரு விசுவாசி அணியக்கூடிய மெய்யான கவர்ச்சிகரமான ஆடையாகும். நவநாகரிகமான மேலாடைகள், விலையேறப்பெற்ற நகைகள், ஆடம்பரமான ஆடைகள் யாவும் அழிந்து போகக் கூடியவை. இந்தத் தெளிவான முரண்பாட்டை நம்முன் கொண்டுவரும் பேதுரு எதைத் தெரிந் தெடுக்க வேண்டும் என்று அறைகூவல் விடுக் கிறார். "தங்களுடைய சரீரங்களை விலையு யர்ந்த ஆடைகளால் மூடிக்கொள்வோர் பலர், ஆனால் அவர்கள் தங்களுடைய உள்ளத்தைக் கந்தையால் மூடியிருக்கிறார்கள். அதே நேரத் தில் எவர்களுடைய ஆடைகள் கந்தலாகி நைந்து போயிற்றோ அவர்கள் தங்கள் உள்ளத்தில் மகி மையால் நிறையப்பெற்றிருக்கிறார்கள்" என்று திருவாளர் F. B. மேயர் குறிப்பிட்டிருக்கிறார்.[22]

பொன்னாபரணங்கள் விலையேறப் பெற்றவை என்று மனிதர்கள் நினைக்கிறார்கள்; **சாந்தமும் அமைதியுமுள்ள ஆவியே விலையேறப்பெற்ற** ஆபரணம் என்று தேவன் கருதுகிறார்.

3:5 பழைய ஏற்பாட்டில் காணப்படும் பயபக்தி யுள்ள பெண்கள் தங்களுடைய உள்ளான வாழ்க் கையில் ஒழுக்கத்தையும் ஆவிக்குரிய அழகை யும் அணிந்திருக்கக் கூடிய பயிற்சியை மேற் கொண்டவர்களாகத் தங்களை அலங்கரித்துக் கொண்டார்கள். இந்த அலங்கரிப்பில் காணப் பட்ட ஓர் அம்சம் அவர்கள் **தங்களுடைய புருஷர் களுக்குக் கீழ்ப்படிந்ததே** ஆகும். அந்தப் **பரி சுத்த ஸ்திரீகள் தேவனிடத்தில் நம்பிக்கை யாயிருந்தார்கள்**. தேவனை மையமாகக் கொண்ட வாழ்க்கையையே அவர்கள் வாழ்ந்தார் கள். எல்லாவற்றிலும் அவரை மனமகிழ்ச்சி யாக்க வேண்டும் என்னும் விருப்பத்தில், வீட்டில் என்ன ஒழுங்கை அவர் நிறுவியிருக்கிறார் என் பதை ஒப்புக்கொண்டவர்களாக அவர்கள் **தங்க ளுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்தார்கள்**.

3:6 சாராள் ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப் பட்டுள்ளாள். அவள் **ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந் தாள்**. இது நம்மை ஆதியாகமம் 18:12 -ஆம் வசனத்திடம் அழைத்துச் செல்கிறது. அங்கே அவள் இச்சொற்களைத் "தன் உள்ளத்தில்" சொல்லிக்கொண்டதாக வாசிக்கிறோம். அவள்

அங்குமிங்கும் அலைந்து சென்று வெளியரங்க மாக ஆபிரகாமை **ஆண்டவனே** என்று அழைத்து, தன்னுடைய கீழ்ப்படிதலைச் சத்தமாக அறிவிக்க வில்லை. மாறாக, அவளுடைய உள்ளான வாழ்க் கையில், அவன் தன்னுடைய தலையாயிருக் கிறான் என்பதை அறிந்திருந்தாள். மேலும் அந்த அறிவு அவளுடைய செயல்களில் வெளிப்பட்டது.

அவளுடைய எடுத்துக்காட்டைப் பின்பற்றிய பெண்கள் அவளுடைய பிள்ளைகளாவர். அவர் களுடைய இயல்பான பிறப்பின் அடிப்படையில் யூதப் பெண்கள் சாராளின் வழித்தோன்றல்கள். ஆனால் சிறப்பான பொருளில் அவளுடைய **பிள்ளைகள்** ஆவதற்கு, அவளுடைய தனிப்பட்ட குணநலனைப் பின்பற்ற வேண்டும். பிள்ளைகள் தங்களுடைய குடும்ப சாயலைக் கொண்டிருக்க வேண்டும்.

அவர்கள் நன்மை செய்து, ஏதொன்றும் அவர் களை அச்சுறுத்தாதபடி காத்துக்கொள்ள வேண் டும். ஒரு கிறிஸ்தவப் பெண் மனைவி என்னும் நிலையில், தேவன் நியமித்த ஏற்ற துணை என்னும் பணியிடத்தை நிரப்ப வேண்டும். மேலும் அவளுடைய கணவன் அவிசுவாசியாயிருந்து, அவனுடைய நடத்தை விபரீதமானதாக இருந் தாலும் அதைப் பொறுத்துக்கொண்டவளாக இருக்க வேண்டுமேயொழிய அச்சமடையத் தேவையில்லை. அவனுடைய நடத்தை கொடூர மாகத் தாக்குவதாகவோ, உயிருக்கு ஆபத்து விளைவிப்பதாகவோ இருக்குமாயின் அது விதி விலக்காகக் கருதப்படும்.

உ. கணவன் என்னும் நிலையில் தனது மனைவியோடுள்ள உறவு (3:7)

3:7 அப்போஸ்தலன் இப்பொழுது **புருஷர்களி டமாய்த்** திரும்பி, மனைவிகளுடைய கடமை களுக்கு இசைவாக அவர்கள் நிறைவேற்ற வேண் டிய பொறுப்புகளைப் பற்றி எடுத்துரைக்கிறார். அவர்கள் தங்கள் மனைவிகளின் நலம் பேணு கிறவர்களாக அதாவது அவர்களிடம் அன்பு பாராட்டி, மரியாதை செலுத்தி **விவேகத்துடன்** வாழ வேண்டும். மேலும் அவர்கள் தங்களுடைய மனைவிகள் **பெலவீன பாண்டமாயிருக்கிற** காரணத்தால் அதற்கு ஏற்றபடி அவர்களை இன்முகத்துடன் மதிக்க வேண்டும்.

பெண்களின் விடுதலை இயக்கம் தீவிரமாகி வருகிற இந்தக் காலத்தில், திருமறையின்படி பெண்கள் **பெலவீன பாண்டம்** என்று பேசுகிற நிலை வழக்கற்றுப் போன ஒன்றாகக் கருதப்படு கிறது. ஆனால் இது எல்லோரும் அறிந்திருக்கிற எளிய உண்மையாக இருக்கிறது, என்னவெனில் சராசரி பெண் ஆணைக் காட்டிலும் **பெலவீன மாகவே** இருக்கிறாள், மேலும் பொதுவாகக் காணுமிடத்து, அவள் தன்னுடைய உணர்ச்சி களைக் கட்டுப்படுத்தப் போதுமான ஆற்றல் அற்ற வளாக இருக்கிறாள். மேலும் அவள் பகுத்தறி வுக்கு ஏற்றபடியோ தருக்க ரீதியான அடிப்படை யிலோ பதிற்செயல் புரியாமல் உணர்ச்சிப் பெருக் கினாலேயே அவ்வப்போது நடத்தப்படுகிறாள். ஆழமான இறையியல் பிரச்சினைகளைக் குறித்து வாதிடுவது போன்றவை அவளுடைய தனிப்பட்ட திறமையல்ல. பொதுவாக, அவள் ஆண்களைக் காட்டிலும் அதிகமாகச் சார்ந்து வாழ்பவளாக இருக்கிறாள்.

ஆனால், பெண்ணானவள் சில நிலைகளில் பெலவீனமாக இருக்கிறாள் என்பதால், அவள் ஆண்களைக் காட்டிலும் தாழ்ந்தவள் என்பதல்ல பொருள். வேதம் இவ்வாறு ஒருபோதும் எண்ணு கிறதில்லை. அவள் உண்மையிலேயே சில விஷ யங்களில் அதிக வலிமை உடையவளாக இருக் கிறாள் அல்லது திறமைசாலியாக விளங்கு கிறாள் என்பதையும் மறுக்க முடியாது. உண்மை யைச் சொல்லப்போனால், பெண்களே ஆண் களைக் காட்டிலும் கிறிஸ்துவிடம் அதிக பயபக்தி யோடிருக்கிறார்கள். மேலும் அவர்கள் நீண்ட காலமாக வேதனையையும் இன்னல்களையும் தாங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றல் பெற்றிருக் கிறார்கள்.

மனைவி தன்னுடனேகூட நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவளாக இருக்கிறாள் என்னும் உண்மையை ஒப்புக் கொள்ளுகிற மனோபாவத்தைக் கணவன் கொண்டிருக்க வேண்டும். இது இருவரும் விசு வாசிகளாக இருக்கக்கூடிய ஒரு திருமணத்தைக் குறிக்கிறது. சில நிலைகளில் ஆண்களைக் காட்டிலும் அவள் பெலவீனமாக இருந்தபோதி லும்,தேவனுக்கு முன்பாக அவளுடைய தகு நிலை ஆணுக்குச் சமமாகவே இருக்கிறது. மேலும் அவள் நித்திய ஜீவன் என்னும் ஈவைச் சமமாகப் பகிர்ந்துகொள்கிறாள். இதனினும் மேலாக, இவ்வுலகினில் புதிய ஆத்துமாக்களைச் சரீரப் பிரகாரமாகக் கொண்டுவருவதில் கண வனைக் காட்டிலும் கூடுதலான பங்கு வகிக் கிறாள்.

அங்கு பூசல் உண்டாகிறபோது, ஜெபம் தடைபடுகிறது. “ஊறுபடுத்தப்பட்ட மனைவியின்

பெருமூச்சுகள் கணவனுடைய ஜெபத்திற்கும் தேவனுடைய செவிமடுத்தலுக்கும் இடையே குறுக்கிடுகின்றன" என்று பிக் என்பார் கூறுகிறார்.[23] தம்பதிகளுக்கிடையிலான ஐக்கியத்தில் ஏதோ ஒன்று குறுக்கிட்டுத் தொல்லை தருகிற போது, அவர்கள் ஒன்றாக ஜெபம் செய்வது அதிக கடினமான செயலாயிருக்கும். ஒரு குடும்பத்தில் சமாதானமும் வாழ்க்கை நலனும் காணப்பட வேண்டுமானால் சில அடிப்படை விதிகளைக் கணவனும் மனைவியும் கைக்கொள்ள வேண்டும்.

1. ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடன் இருப்பதற்கு ஆதாரம் விளங்கும்படி முழுமையான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

2. ஒருவரோடு ஒருவர் பேசுவதற்குத் திறந்த மனதுடன் இருக்கவேண்டும். வெளிப்படையாகப் பேசுவதற்கு எப்பொழுதும் ஆயத்தமான நிலை காணப்பட வேண்டும். நொதி கலத்தில் ஆவி அதிகரித்துக்கொண்டே போனால், வெடித்துச் சிதறுவதைத் தவிர்க்க முடியாது. அவர்கள் பேசுகிறபோது, ஒருவருக்கொருவர் "நான் வருந்துகிறேன்" என்று சொல்லுவதும், ஒருவேளை நிரந்தரமாக மன்னிப்பதும் அதில் அடங்கியிருக்க வேண்டும்.

3. சில தவறுகளைக் கண்டுகொள்ளக் கூடாது. ஒருவருடைய தனிப்பட்ட மனநிலையையும் பொருட்படுத்தக்கூடாது. அன்பு திரளான பாவங்களை மூடும். உங்களில் முழு நிறைவை உங்களால் உண்டுபண்ண முடியாத நிலையில் மற்றவரிடத்தில் முழு நிறைவை எதிர்பார்க்காதீர்கள்.

4. பண விவகாரங்களில் ஒற்றுமைக்காக முயற்சி செய்ய வேண்டும். வீண் செலவுகள், தவணை முறையில் பொருட்களை வாங்குதல், பிறருக்கு ஒப்பாக வாழவேண்டும் என்னும் இச்சை ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

5. அன்பு பாராட்டுதல் என்பது கட்டளை என்பதை நினைவுகூர வேண்டும். அது கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சிப் பெருக்கு அல்ல. 1 கொரிந்தியர் 13 -ஆவது அதிகாரத்தில் சொல்லப் பட்டிருப்பதெல்லாம் ஒன்று சேர்ந்ததே அன்பு என்பதன் பொருளாகும். அன்பு மரியாதை செலுத்துதலாகும். உங்களுடைய வாழ்க்கைத் துணைவியை அல்லது துணைவரைப் பிறர் முன்பாகக் குறை சொல்லுவதையும், முரண்பாடாகப் பேசுவதையும் அது தவிர்க்கும். உங்களுடைய பிள்ளைகளுக்கு முன்பாக நீங்கள் சண்டையிடாமல் இருக்கும்படி அன்பு உங்களைக் காத்துக்கொள்ளும். அவ்வாறு நீங்கள் சண்டையிடுவீர்களானால் அவர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை யென்று எண்ணும்படி செய்துவிடும். இந்த வழிகளிலும், இன்னும் நூற்றுக்கணக்கான வழிகளிலும் அன்பு மகிழ்ச்சிமிக்க சூழ் நிலையை வீடுகளில் உண்டாக்கும். அவை சச்சரவுகளையும் பிரிவினைகளையும் உண்டாகாதபடி தடைசெய்யும்.

ஊ. சகோதரன் என்னும் நிலையில் சபை ஐக்கியத்தோடுள்ள உறவு (3:8)

3:8 ஒருமைப்பாட்டைக் குறித்தும் சகோதர அன்பைக் குறித்தும் இந்த வசனம் அறிவுரை நல்குவதால், இது கிறிஸ்தவனுக்கும் அவன் பங்குகொள்கிற சபைக்கும் இடையேயுள்ள ஐக்கியத்தைக் குறித்தே பேசுகிறது என்பது தெளிவாய்த் தெரிகிறது. மற்ற மூன்று அறிவுரைகளும் விரிவான பயன்பாட்டைக் கொண்டிருக்கின்றன.

இறுதியாக என்னும் சொல் (தமிழில் மேலும் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது) பேதுரு தன்னுடைய மடலை முடிக்கப் போகிறார் என்னும் பொருளைத் தருகிறதில்லை. வேலைக்காரர்கள், மனைவிகள், புருஷர்கள் ஆகிய பலவகையான தனிநபர்களிடம் அவர் பேசிக்கொண்டிருந்தார். இப்பொழுதோ, இறுதியாக, நீங்கள் எல்லோரும் என்று எல்லோருக்கும் ஒரு வார்த்தை சொல்ல விருக்கிறார்.

நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களாயிருங்கள். எல்லாவற்றிலும் கிறிஸ்தவர்கள் முற்றிலும் உடன்பாடு கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை. அது ஒரே மாதிரியாயிருத்தல் எனப்படுமேயொழிய ஒருமைப்பாடாகாது. நன்கு தெரிந்த சொற்றொடரில் மிகச்சிறந்த விதிமுறை காணப்படுகிறது: அடிப்படைக் கோட்பாடுகளில் ஒற்றுமை; முக்கியமற்றவற்றில் சுதந்தரம்; எல்லாவற்றிலும் அன்பு. நாம் ஒருவரிலொருவர் **இரக்கமுள்ளவர்களாக** இருக்க வேண்டும். மற்றவர்களோடு சேர்ந்து துன்பத்தை அனுபவித்தல் என்பதே இதன் உண்மையான பொருளாகும். உபத்திரவங்களின் வழியாகச் செல்லுகிறபோது இந்த அறிவுரை பொருத்தமானதாக விளங்கும். துன்பம் இல்லாத காலம் என்று ஒன்று இல்லாத காரணத்தால் இந்த அறிவுரை எல்லாக் காலத்துக்கும் பொருந்தும்.

சகோதர சிநேகமுள்ளவர்களாக இருங்கள். அறியப்படாத எழுத்தாளர் ஒருவர் இது குறித்து

எழுதுகிறார்:

> நம்முடைய சகோதரர்கள் யாராக இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் என் பதை இறையருள் நம்மிடம் கேட்பதில்லை. அது ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டுவிட்டது; ஆனால் நம்முடைய சொந்த விருப்பு வெறுப்பு களுக்கு அப்பாற்பட்டு, நாம் அவர்களிடத்தில் அன்புகூர வேண்டுமென்று கட்டளையிடப்பட்டி ருக்கிறோம். "இது நிச்சயமாக முடியாது" என்று சொல்லுவீர்கள்! ஆனால் உண்மையான அன்பு உணர்ச்சிகளில் உண்டாவதில்லை, அது சித்தத்தினால் உண்டாகிறது; அதனை உணர்வுகளில் காணமுடியாது, செயல்களில் தான் காணப்படும்; மனோபாவத்திலல்ல, செய்கையினாலேயே வெளிப்படுத்த முடியும்; மென்மையான பேச்சிலல்ல, மேன்மையான தன்னலமற்ற செயல்களில்தான் அது காணப் படும்.

மனஉருக்கமுள்ளவர்கள் என்னும் சொல், மற்றவர்களுடைய தேவைகளுக்கும் உணர்வு களுக்கும் ஏற்றபடி மாறுகிற இயல்புடைய இருத யத்தைக் கொண்டிருத்தல் என்று பொருள்படும். பழிசாற்றப்படும் நேரங்களிலும் கூட அது கடினப் படுவதையும், உணர்வற்றுப் போவதையும், எரிந்துவிழுவதையும் எதிர்த்து நிற்கிறது.

இணக்கமுள்ளவர்களாயிருங்கள்.[24] மரி யாதை செலுத்துதல் ஒரு கிறிஸ்தவ நற்பண் பாகக் கற்பிக்கப்பட வேண்டியது மிகச்சரியான செயலாகவே தோன்றுகிறது.

எ. பாடு அனுபவிக்கிறவர் என்னும் நிலையில் துன்பப்படுத்துகிறவர்களோடுள்ள உறவு (3:9–4:6)

3:9 இந்த மடல் முழுவதும் உபத்திரவம், பாடு கள் என்னும் பின்னணிக்கு எதிராகவே எழுதப் பட்டது. இந்த வசனம் முதற்கொண்டு 4:6 -ஆம் வசனம் வரையிலும் துன்பப்படுத்துகிறவர்களோடு கிறிஸ்தவன் கொண்டுள்ள உறவு பற்றியே விவ ரிக்கப்பட்டுள்ளது. நீதியின் நிமித்தம் பழிவாங் கும் செயலில் ஈடுபடாமல் விசுவாசிகள் துன்பங் களைச் சகித்துக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் மீண்டும் இங்கு வலியுறுத்தப்படுகிறார் கள். **நாம் தீமைக்குத் தீமையையும் உதா சனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டக்** கூடாது. அதற்கு மாறாக நம்மை இழிவாக நடத்து பவர்களை ஆசிர்வதிக்க வேண்டும், அவமானப் படுத்துபவர்களிடத்தில் தயவு பாராட்ட வேண்டும். கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில் நாம் பிற ருக்கு ஊறு விளைவிக்கக் கூடாது, மாறாக நன்மையே செய்ய வேண்டும். சபிக்கக் கூடாது வாழ்த்தவே வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டி ருக்கிறோம். அப்பொழுது, இத்தகைய நடத்தைக் காக தேவன் ஆசிர்வாதத்தினாலே நற்பேறு நல்குவார்.

3:10 பத்துமுதல் பன்னிரண்டு வரையிலான வசனங்களில் தீயசெயல்களையும் தீய பேச்சை யும் பேசாமல் நீதியை நடப்பிக்கிறவர்களிடத்தில் தேவனுடைய ஆசிர்வாதம் தங்கியிருக்கும் என் பதை உறுதிப்படுத்தும் வகையில் சங்கீதம் 34:12-16 ஆகிய வசனங்களைப் பேதுரு மேற்கோள் காட்டுகிறார்.

முதல் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள உட் கருத்து இதுதான்: வாழ்க்கையை முழுவதுமாக அனுபவிக்க வேண்டும், **நல்ல நாட்களைக்** காண வேண்டும் என்று விரும்புகிறவர் **பொல் லாப்பையும் கபடத்தையும்** பேசக்கூடாது. அவர் அவமானத்திற்குப் பதிற்செய்யாமல் இரக்கம் பாராட்ட வேண்டும்.

ஜீவனை விரும்புதல் யோவான் 12:25 -இல் குற்றப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அங்கு இச் சொற்றொடர் தனக்காக வாழ்வதையும், வாழ் வின் மெய்யான நோக்கத்தைப் பொருட்படுத் தாமல் வாழ்வதையும் குறிக்கிறது. இங்கு தேவன் எதிர்பார்க்கிற வண்ணம் வாழும் வாழ்க்கை என் பதே இதன் பொருள்.

3:11 தீய பேச்சு மட்டுமின்றி, பொல்லாப்பான செயல்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. எதிர்ச் செயல் சண்டையை வலுவடையச் செய்துவிடும். அது இவ்வுலகிற்குரிய ஆயுதங்களைப் பயன் படுத்தும் கீழ்நிலையாகும். விசுவாசி **பொல்லாப் பிற்குப் பதிலாக நன்மை** செய்ய வேண்டும், மேலும் தவறுகளைச் சாந்தத்தோடு பொறுத்துக் கொள்ள வேண்டும். தீ தீயோடு சண்டையிடாது.

> பொல்லாப்பை வெல்வதற்கான ஒரே வழி, அத னைத் தன்னுடைய பாதையில் ஓடும்படியாக விட்டு விடுவதேயாகும், அப்பொழுது அது எதிர் பார்க்கிற எதிர்ப்பைக் காணமுடியாது. எதிர்ப்பு இன்னும் அதிகமான பொல்லாப்பையே உரு வாக்கும், மேலும் அது எரிகிற தழலுக்கு எண் ணெய் வார்ப்பது போலாகிவிடும். ஆனால் பொல்லாப்பு எந்த எதிர்ப்பையும் சந்திக்காமல் அல்லது எந்தத் தடையையும் எதிர்கொள்ளா

மல், பொறுமையாக சகிப்பதை மட்டுமே சந்திக் கிறபோது அதனுடைய வேதனை வரவேற்கப் பட்டு இறுதியில் தன்னைக் காட்டிலும் மேலான எதிரியைச் சந்திக்கிறது. எப்பொழுது கடைசிச் சொட்டு எதிர்ப்பும் பழிவாங்கும் எண்ணமும் முற்றிலும் கைவிடப்படுகின்றனவோ அப் பொழுதுதான் இது நடக்கும். அதன் பிறகு பொல்லாப்பு அதனுடைய இலக்கைக் கண்ட டையாது, இனிமேலும் அதிகமான பொல் லாப்பை அது உருவாக்காது, அது பலனற்றுப் போய்விடும் (தெரிந்தெடுக்கப்பட்டது).

3:12 நீதியை நடப்பிக்கிறவர்களிடத்தில் **கர்த்தர்** கண்ணோக்கமாயிருந்து தமது பாராட் டைத் தெரிவிக்கிறார். **அவர்களுடைய வேண்டு தல்களுக்குச்** செவிசாய்க்க அவர் கவனமா யிருக்கிறார். கர்த்தர் தமது பிள்ளைகள் எல்லோ ருடைய வேண்டுதல்களுக்கும் செவிசாய்க்கிறார் என்பதில் ஐயமில்லை. ஆனால் தீமைக்குத் தீமை செய்யாமல், கிறிஸ்துவின் நிமித்தம் பாடு படுகிறவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்ற அவர் சிறப்பான முறையில் செயல்படுகிறார்.

தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. இது முதன்மை யாக அவருடைய மக்களுக்குக் கொடுமையிழைக் கிறவர்களைக் குறிக்கிறது. ஆனால் தன்னுடைய எதிரிகளுக்கு வன்முறைச் செயல்களாலும் அடக்கமின்றி மட்டுமீறிய சொற்களாலும் பதிலடி கொடுக்கிற விசுவாசிகளையும் உட்கொண்டதே யாகும். **தீமை** தீமைதான். எங்கே தேவன் அதைக் காண்கிறாரோ, அங்கே அவர் அதை எதிர்க்கிறார். அது இரட்சிக்கப்பட்டவரிடத்தி லிருந்தாலும் அல்லது இழந்துபோனவரிடத்திலி ருந்தாலும் தேவன் அதை எதிர்க்கிறார்.

சங்கீதம் 34:16-ஆம் வசனத்தை மேற்கோள் காட்டிய பேதுரு, "...அவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப் பண்ணுவார்" என்னும் பகுதியை விட்டுவிட்டார். இது ஏதோ கவனக்குறைவினால் விடப்பட்டதல்ல. நாம் இப்பொழுது தேவ கிருபையின் ஆட்சிக்காலத் தில் வாழ்கிறோம். இது கர்த்தருடைய அநுக்கிரக வருஷம். தேவனுடைய கோபாக்கினையின் நாள் இன்னும் வரவில்லை. கர்த்தராகிய இயேசு இராஜாதி இராஜராகவும், கர்த்தாதி கர்த்தராக வும் வருகிறபோது, அவர் தீமைசெய்கிறவர் களைத் தண்டித்து அவர்களுடைய பெயர் பூமியில் இராமல் அற்றுப்போகும்படி செய்வார்.

3:13 பேதுரு தனது வாதத்தை ஒரு கேள்வி யோடு தொடர்கிறார்: "நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால் உங்களுக்குத் தீமை செய்கிறவன் யார்?" "ஒருவரும் இல்லை" என்னும் விடை அங்கு தொக்கி நிற்கிறது. இருந்த போதிலும் நற்செய்தியின் எதிரிகள் மெய்யான சீடர்களுக்குக் கொடுமையிழைத்திருக்கிறார் கள் என்பது வீரமரணம் அடைந்தோரின் வரலாறு மெய்ப்பிக்கும் உண்மையாயிருக்கிறது.

இந்த முரண்பாட்டிற்குக் குறைந்தது இரண்டு விளக்கங்கள் கொடுக்கலாம்:

1. பொதுப்படையாகக் கூறுவோமானால், நீதி யின் பாதையில் நடக்கிறவர்களுக்கு எதிராக ஊறுவிளைவிக்கப்படுவதில்லை. எதிர்த்துச் செயல் புரியக்கூடாது என்னும் கொள்கை பகைவரின் ஆயுதங்களைக் களைந்துபோடு கிறது. அதற்கு விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால் அதனை ஒரு விதியாகக் கொள் வோமானால், நீதியைச் செய்ய வேண்டும் என்னும் ஆர்வத்தோடு இருப்பவர்கள், அவர் களுடைய நற்குணத்தின் காரணத்தாலேயே கொடுமைகளுக்கு ஆளாவதில்லை.

2. பகைஞன் விளைவிக்கக் கூடிய ஏதொரு கொடுஞ்செயலும் கிறிஸ்தவனுக்கு நித்திய தீங்காகாது. பகைவன் அவனுடைய உட லுக்கு ஊறு விளைவிக்கலாம், ஆனால் அவ னுடைய ஆத்துமாவுக்குத் தீங்கு விளைவிக்க முடியாது.

இரண்டாம் உலகப்போரின்போது ஐரோப்பா வில் பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஓர் இயக்கத் தில் சேர மறுத்தான். "உன்னைக் கொலை செய் வதற்கு எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என் பது தெரியாதா?" என்று அவர்கள் கூறினார்கள். அவன் அமைதியோடு, "நான் கிறிஸ்துவுக்காக மரணம் அடைய எனக்கு அதிகாரம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றான். அவனுக்கு ஒருவராலும் தீங்கு விளைவிக்க முடியாது என்னும் உறுதி அவனுக்கிருந்தது.

3:14 ஆனால் ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய இரட்சகர்பால் கொண்டிருக்கும் விசுவாசத்தின் காரணமாகப் பாடுபட வேண்டியதாக இருந்தால் அதன் பொருள் என்ன? அங்கு மூன்று விளைவு கள் தொடர்கின்றன:

1. தமது சொந்த மகிமைக்காக தேவன் பாடு களை அகற்றுகிறார்.

2. அந்தப் பாடுகளின் மூலமாகப் பிறர் நன்மை பெறும்படி அவற்றைப் பயன்படுத்துகிறார்.
3. தமது திருப்பெயரின் நிமித்தம் பாடுபடுகிற வரை அவர் ஆசிர்வதிக்கிறார்.

மனிதர்களைக் கண்டு அஞ்சாதீர்கள், அல்லது அவர்களுடைய பயமுறுத்தலைக் கண்டு திகிலடைய வேண்டாம். எந்த அளவிற்கு இந்தக் கொள்கையை இரத்த சாட்சிகள் வாழ்ந்து காட்டினார்கள்! கிறிஸ்துவை நிந்தித்தால் விடுதலை தரப்படும் என்று பாலிகார்ப் என்பாரிடம் வாக்குறுதி தரப்பட்டபோது, "எண்பத்தாறு ஆண்டுகள் நான் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தேன். அவர் எனக்கு ஒரு தீமையும் செய்யவில்லை. என்னுடைய அரசரும் இரட்சகருமாகிய கர்த்தரை எவ்வாறு நிந்திப்பேன்" என்று கூறினார். காட்டு மிருகங்களுக்கு இரையாக்கப்போவதாக அவரை விசாரித்த ஆளுநர் பயமுறுத்திய போது, "துன்பம் நிறைந்த இந்த வாழ்க்கையிலிருந்து விரைவாக நான் விடுவிக்கப்படுவது எனக்கு நல்லது" என்று விடைபகர்ந்தார். இறுதியில் அவரை உயிரோடு எரிக்கப் போவதாக ஆளுநர் அச்சுறுத்தினான். "ஒரு கணப்பொழுது எரிகிற தீயைக் கண்டு நான் அஞ்ச மாட்டேன். ஆனால் என்றென்றும் நித்திய மாக எரிகிற தீயைக் குறித்து நீர் அறியமாட்டீர்" என்று அவர் கூறினார்.

3:15 பதினான்காம் வசனத்தின் பின்பகுதியும் இந்த வசனமும் ஏசாயா தீர்க்கதரிசன நூலிலிருந்து பேதுருவினால் எடுத்தாளப்பட்டவை. ஏசாயா 8:12,13 ஆகிய வசனங்கள் கூறுவதாவது: "அவர்கள் பயப்படுத்துகிறதைக் குறித்து நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும், சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள்; அவரே உங்கள்பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக." (தமிழில் ஏசாயா நூலில் "அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) "நாம் மனிதர்களுக்கு அதிகமாக அஞ்சுகிற காரணத்தால் தேவனுக்குக் கொஞ்சமாகப் பயப்படுகிறோம்" என்று ஒருவர் கூறினார்.

ஏசாயா நூலில் இந்தப் பகுதி, சேனைகளின் கர்த்தர் ஒருவருக்கே பயப்படவேண்டும் என்று கூறுகிறது. இதனை மேற்கோளாக எடுத்துரைக்கும் பேதுரு ஆவியானவரின் ஏவுதலால், **"கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்"** [25] என்று கூறுகிறார்.

கர்த்தரை உயர்வாகப் போற்றுதல் (பரிசுத்தம் பண்ணுதல்) என்பது அவரை நம்முடைய வாழ்க்கையின் அரசராக ஆக்குவது என்று பொருள்படும். நாம் செய்கிறவை மற்றும் பேசுகிறவை யாவும் அவருடைய சித்தமாகவும், அவருக்கு மனமகிழ்ச்சி அளிக்கக் கூடியவையாகவும் மகிமையானவையாகவும் இருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் - நம்முடைய உடைமைகள், நம்முடைய அலுவல், நம்முடைய நூலகம், நம்முடைய திருமணம், நம்முடைய ஓய்வுநேரம், ஒன்றுவிடாமல் கிறிஸ்துவின் ஆளுகை காணப்படவேண்டும்.

உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். முதன்மையாக இது கிறிஸ்தவர்கள் தங்களுடைய விசுவாசத்தின் பொருட்டு துன்பப்படுத்தப்படுகின்ற வேளைகளுக்குப் பொருந்தும். கர்த்தராகிய இயேசுவின் முன்னிலையில் இருக்கிறோம் என்னும் உணர்வு பரிசுத்த துணிவைக் கொடுத்து நல்ல அறிக்கையுடன் சாட்சிபகர ஒவ்வொரு விசுவாசிக்கும் ஏவுதலைத் தரும்.

அனுதின வாழ்க்கைக்கும் இந்த வசனம் பொருத்தமுடையதாயிருக்கிறது. கர்த்தரைக் குறித்துத் தங்களிடம் பேசுவதற்குத் தங்களுடைய இல்லங்களின் கதவுகளைத் திறப்பவர்கள் பொதுவாகக் கேள்விகளை எழுப்புவதுண்டு. கர்த்தர் நமக்குச் செய்த பெரிதான செயல்களைப் பற்றி அவர்களிடம் சொல்லுவதற்கு நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். இவ்வாறு சாட்சிகூறுவது எப்பொழுதும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் கூடியதாயிருக்க வேண்டும். நம்முடைய இரட்சகரைக் குறித்துப் பேசும்போது அங்கே கண்டிப்பு, கசப்பு, துடுக்குத்தனம் ஆகியவை சிறிதளவும் இருக்கக் கூடாது.

3:16 விசுவாசி **நல்மனச்சாட்சியோடு** இருக்க வேண்டும். தான் ஒரு குற்றத்தை செய்யவில்லை என்று அவன் அறிந்திருந்தால், ஒரு சிங்கத்தின் துணிவோடு துன்பங்களை எதிர்கொள்ள முடியும். ஆனால் அந்த விஷயத்தில் அவன் நல்மனச்சாட்சி அற்றவனாக இருந்தால், அவன் குற்றவுணர்வினால் பீடிக்கப்பட்டவனாக எதிரிக்கு முன்பாக நிற்கத் திடனற்று இருப்பான். ஒரு விசுவாசியின் வாழ்க்கை குற்றமற்று இருப்பினும், சுவிசேஷத்தின் எதிரிகள் அவனிடத்தில் சில தவறுகளைக் கண்டுபிடித்து, அவனுக்கு எதிராகத் தவறான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவார்கள். ஆனால் வழக்கு விசாரணைக்கு வரும்போது

அவன் குற்றமற்றவன் என்று மெய்ப்பிக்கப்படும், அப்பொழுது பகைவர் **வெட்கமடைவார்கள்**.

3:17 ஒரு விசுவாசி பாடுபட்டே ஆக வேண்டுமானால், ஒருவேளை அது அவனைக் குறித்த தேவனுடைய சித்தமாயிருக்கக் கூடும், அவன் நன்மை செய்தே பாடநுபவிக்க வேண்டும். மாறாக அவன் தன்னுடைய குற்றங்களின்நிமித்தம் பாடுகளைத் தன்மீது வருவித்துக் கொள்வானானால், அதில் எவ்வித மேன்மையும் இல்லை.

3:18 மூன்றாவது அதிகாரத்தின் எஞ்சிய பகுதி, நீதியின் நிமித்தம் பாடுபட்ட உன்னத மாதிரியாக கிறிஸ்துவை அறிமுகப்படுத்துகிறது. மேலும் அவர் மகிமையடைவதற்கான வழியாகப் பாடுகள் அமைந்திருந்தன என்பதை இப்பகுதி நமக்கு நினைவூட்டுகிறது.

அவருடைய பாடுகளின் ஆறு கூறுகளைக் கவனியுங்கள்: (1)அவை பாவங்களுக்கான பிராயச்சித்தமாய்ச் செயல்பட்டன. அதாவது, விசுவாசித்த பாவிகளை அவர்களுடைய **பாவங்களுக்கான** தண்டனையிலிருந்து அவை விடுவித்தன. (2) அவை நித்தியகாலமெல்லாம் போதுமானவை. அவர் ஒரே தரம் மரணமடைந்து என்றென்றைக்குமாகப் **பாவத்தின்** கேள்வியைத் தீர்த்தார். மீட்பின் வேலை முழுவதுமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டது. (3) அவை பிறருக்குப் பதிலாள் நிலையில் செயல்பட்டவை. **அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவர்** மரணமடைந்தார். "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53:6). (4) அவை ஒப்புரவு செய்பவை. அவருடைய மரணத்தின் மூலமாக நாம் **தேவனிடத்திற்குக்** கொண்டுவரப்பட்டோம். பாவத்தினால் ஏற்பட்ட மனமுறிவு நீக்கப்பட்டுவிட்டது. (6) இறுதியாக, அவை உயிர்த்தெழுந்த நிகழ்ச்சியின் மூலமாக உச்சகட்டத்தை எட்டின. அவர் மரித்தோரிலிருந்து மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பப்பட்டார். **ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்** என்னும் சொற்றொடர், அவருடைய உயிர்த்தெழுதல் ஆவியின் வல்லமையால் நிகழ்ந்தது என்று பொருள்படும்.

3:19 பத்தொன்பது மற்றும் இருபது ஆகிய வசனங்கள் புதிய ஏற்பாட்டிலேயே மிகவும் குழப்பத்தை உண்டாக்கக் கூடிய மற்றும் ஆவலைத் தூண்டிவிடுகிற பகுதிகளில் ஒன்று. ஆத்துமாக்கள் விண்ணுலகைச் சேர்வதற்கு முன்னர் தூய்மை அடைவதற்கான கடுந்துன்பம் அனுபவிக்கும் இடம், அகில உலக மக்கள் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள் போன்ற திருமறைக்கு அப்பாற்பட்ட கோட்பாடுகள் தோன்றுவதற்கு இந்த வசனங்களைப் போலி ஆதாரங்களாகச் சிலர் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆயினும், நற்செய்தி அறிவிக்கும் கிறிஸ்தவர்கள் பொதுவாக ஒப்புக்கொள்ளக்கூடிய இரண்டு வகையான விளக்கங்கள் உள்ளன.

முதல் விளக்கத்தின்படி, கிறிஸ்து தமது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையே பாதாளத்திற்குச் சென்றார். சிலுவையில் அவர் ஆற்றிய வீறார்ந்த செயலின் வெற்றியைப் பிரகடனம் செய்தார். இந்த விளக்கத்தை முன்மொழிந்த மக்களுக்குள் காவலிலுள்ள ஆவிகள் என்னும் சொற்றொடர் விசுவாசிகளையா, அவிசுவாசிகளையா அல்லது இரண்டு கூட்டத்தாரையும் குறிக்கிறதா என்பது பற்றிய முரண்பாடு உள்ளது. ஆனாலும் அங்கு சென்ற கர்த்தராகிய இயேசு அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லையென்று பொதுவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு அவர் நற்செய்தியைப் பிரசங்கித்தார் என்று கூறுவோமானால் அது இரண்டாவது வாய்ப்பு அளிக்கப்படும் என்னும் கோட்பாடாகிவிடும், ஆனால் அப்படிப்பட்ட கோட்பாடு திருமறையில் எங்கும் கற்பிக்கப்படவில்லை. இந்த விளக்கத்தை ஆதரிப்போர் இந்தப் பகுதியை எபேசியர் 4:9 -ஆம் வசனத்தோடு தொடர்புபடுத்திப் பேசுகிறார்கள். அங்கு கர்த்தர் "பூமியின் தாழ்விடங்களுக்குச்" சென்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் உடல் நீங்கிய நிலையில் பாதாளத்திற்குச் சென்று தம்முடைய கல்வாரி வெற்றியைப் பிரகடனம் செய்தார் என்பதற்கு இது மேலும் ஒரு நிரூபணம் என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மேலும் அவர்கள் அப்போஸ்தலர் சமயக் கோட்பாட்டில் காணப்படும் "நரகத்திற்கு இறங்கினார்" என்னும் சொற்களையும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இரண்டாவது விளக்கத்தின்படி, நோவாவின் காலத்தில் என்ன நடந்தது என்பதைப் பேதுரு இப்பகுதியில் விவரிக்கிறார். ஜலப்பிரளயத்திற்கு முன்னர் வாழ்ந்த விசுவாசமில்லாத தலைமுறையினரிடம் நோவாவின் மூலமாக கிறிஸ்து ஆவியில் பிரசங்கித்தார். *அந்த நாட்களில்* அவர்கள் உடலற்ற ஆவிகளாக அல்ல, உயிரோடு வாழ்ந்த மனிதர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் நோவாவின் எச்சரிப்பை நிராகரித்ததால் பெருவெள்ளத்தால் அழிந்துபோனார்கள். ஆகவே

இப்பொழுது அவர்கள் பாதாளத்தின் **காவலிலுள்ள ஆவிகளாக** இருக்கிறார்கள்.

இரண்டாவது கருத்து இப்பகுதியின் பின்னணிக்கு மிகச்சிறந்த வகையில் பொருத்தமாயிருக்கிறது. மேலும் அதனோடு தொடர்புடைய சிக்கல்கள் மிகக்குறைவானவையே. இப்பகுதியை ஒவ்வொரு சொற்றொடராகச் சோதித்துப் பார்ப்போம்.

அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவியிலே என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது முந்தின வசனத்தின் முடிவில் சொல்லப்பட்ட *ஆவியையே* குறிப்பிடுகிறது என்பது நிச்சயம். ஆகவே அச்சொல் பரிசுத்த ஆவியானவரையே குறிப்பிடுகிறது என்று நாம் புரிந்துகொள்கிறோம். இம்மடலில் 1:11 -ஆம் வசனத்தில் "கிறிஸ்துவின் ஆவி" அதாவது, பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசிகளின் மூலமாகப் பேசியதாக விவரிக்கப்பட்டுள்ளார். மேலும் ஆதியாகமம் 6:3 -இல், தேவன் தம்முடைய ஆவியைக் குறித்துப் பேசுகிறார், அதாவது, பரிசுத்த ஆவியானவரைப் பற்றிப் பேசுகிறார். பெருவெள்ளத்திற்கு முந்தின காலத்தில் வாழ்ந்த மக்களிடத்தில் பொறுமையோடிருப்பதன் எல்லையை நெருங்கிவிட்டதாக அவர் கூறுகிறார்.

அவர் போய்ப் பிரசங்கித்தார். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல கிறிஸ்துவே பிரசங்கித்தவர், ஆனால் அவர் நோவாவின் மூலமாகப் பிரசங்கித்தார். 2 பேதுரு 2:5 -ஆம் வசனத்தில் "நீதியைப் பிரசங்கித்தவன்" என்று நோவா குறிப்பிடப்பட்டுள்ளான். கிறிஸ்துவின் பிரசங்கத்தைக் குறித்து இந்தப்பகுதியில் எந்த வேர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அதே சொல்தான் அங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இப்பொழுது காவலிலுள்ள ஆவிகள். நோவாவின் பிரசங்கத்தைக் கேட்ட மனிதர்களே இவர்கள். அப்பொழுது இவர்கள் உயிரோடு வாழ்ந்தார்கள். சடியில் வரவிருந்த பெருவெள்ளத்தையும், பேழையின் மூலமாக வாக்குறுதி பண்ணப்பட்ட இரட்சிப்பையும் குறித்து அவர்கள் கேட்டார்கள். அவர்கள் கொடுக்கப்பட்ட செய்தியை மறுத்துரைத்துப் பெருவெள்ளத்தில் மூழ்கிப்போனார்கள். இப்பொழுதோ அவர்கள் உடலற்ற **ஆவிகளாகக் காவலில்** இருக்கிறார்கள்.

ஆகவே இந்த வசனத்தைக் கீழ்க்கண்டவாறு விவரித்துக் கூறலாம்: **அந்த ஆவியிலே** (பரிசுத்த ஆவியானவர்) **அவர்** (கிறிஸ்து) **போய் இப்பொழுது காவலிலுள்ள** (பாதாளத்திலுள்ள) ஆவிகளுக்குப் (நோவாவின் மூலமாக) பிரசங்கித்தார்.

ஆனால் காவலிலுள்ள ஆவிகள் என்னும் சொற்றொடர் நோவாவின் நாட்களில் வாழ்ந்த மனிதர்கள் என்று நாம் கருதுவதற்கு நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அதற்குரிய விடையைக் கீழ்க்கண்ட வசனத்தில் காணமுடியும்.

3:20 காவலிலுள்ள ஆவிகள் யார் என்பது எவ்விதத் தவறுக்கும் இடமற்றபடி இங்கு அடையாளம் காணப்படுகிறது. அவர்கள் யார்? அவர்கள் **பூர்வத்திலே கீழ்ப்படியாமற் போனவை** என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அவர்கள் எப்பொழுது கீழ்ப்படியாமல் போனார்கள்? அவர்கள் **நோவா பேழையை ஆயத்தம்பண்ணிய நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடு காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்** போனார்கள். அதனுடைய முடிவு என்ன? **சிலராகிய எட்டுப் பேர் மாத்திரம் ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.**

இந்தத் தருணத்தில் சற்று நிதானித்து, இம்மடல் உபத்திரவத்தைப் பின்னணியைக் கொண்டு எழுதப்பட்டது என்னும் பொதுவான சிந்தனை ஓட்டத்தை நினைவுகூருவது நல்லது. பேதுருவின் வாசகர்களாகிய கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காகவும் சாட்சிக்காகவும் பாடுகளை அனுபவித்து வந்தார்கள். கிறிஸ்தவ விசுவாசமே சரியானது என்றால், அவர்கள் ஆட்சிபுரிய வேண்டுமேயொழிய பாடுகளை ஏன் அனுபவிக்க வேண்டும் என்று ஆச்சரியப்பட்டார்கள் என்றே தோன்றுகிறது. கிறிஸ்தவம் மெய்யான விசுவாசமெனில், கிறிஸ்தவர்கள் ஏன் கொஞ்சப்பேர்களாக இருக்கிறார்கள்?

முதல் கேள்விக்குப் பதில் அளிக்க, பேதுரு கர்த்தராகிய இயேசுவைச் சுட்டிக்காட்டுகிறார். மரணத்திற்குட்படுத்தப்படும் அளவிற்குக் கிறிஸ்து நீதியின் நிமித்தம் பாடுபட்டார். ஆனால் தேவனோ அவரை உயிருடன் எழுப்பி விண்ணகத்தில் மகிமைப்படுத்தினார் (22 -ஆம் வசனத்தைக் காண்க). மகிமையடைவதற்கான வழி பாடுகளின் பள்ளத்தாக்கின் ஊடாகச் செல்கிறது.

அடுத்தபடியாக பேதுரு **நோவாவைக்** குறிப் பிடுகிறார். தேவன் தண்ணீரைக் கொண்டு உலகத்தை அழிக்கப்போவதாக உண்மையுள்ள பிரசங்கியாகிய நோவா 120 ஆண்டுகள் எச்சரித் தான். அவனுடைய செய்தி எள்ளி நகையாடப் பட்டு மறுத்துரைக்கப்பட்டது. ஆனால் தேவனோ அவனையும் அவன் குடும்பத்தையும் வெள்ளத் தின் ஊடாக இரட்சித்து அவனது விசுவாசத்தை வெற்றிபெறச் செய்தார்.

இன்னும் ஒரு பிரச்சினை இருக்கிறது, "நாம் சரியானவர்கள் என்றால், நாம் ஏன் கொஞ்சப் பேர்களாக இருக்கிறோம்?" "ஒரு காலத்தில் இவ்வுலகம் முழுவதிலும் எட்டுப்பேர் மட்டுமே உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். மற்ற வர் யாவரும் தவறானவர்களாக இருந்தார்கள்!" என்று பேதுரு விடைகூறுகிறார். இவ்வுலக வரலாற்றைக் காணும்போது, பெரும்பாலானோர் சரியாய் இருந்ததில்லை என்பதே உண்மை. மெய்யான விசுவாசிகள் பொதுவாகச் சிறுபான் மையினரே. ஆகவே இரட்சிக்கப்பட்டவர் சிறுபான் மையினர் என்பதால் ஒருவர் தனது விசுவாசத் தைத் தவறு என்று நினைக்கக் கூடாது. நோவாவின் நாட்களில் எட்டுப்பேர் மாத்திரமே விசுவாசித்தார்கள். இன்றோ ஆயிரமாயிரம் மக்கள் இருக்கிறார்கள்.

இருபதாவது வசனத்தின் முடிவில், **சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் ஜலத்தினாலே காக்கப் பட்டார்கள்** என்று வாசிக்கிறோம். அவர்கள் ஜலத் தின் மூலமாகக் காக்கப்படவில்லை, மாறாக ஜலத்தின் ஊடாகக் காக்கப்பட்டார்கள். (தமிழில் ஜலத்தினாலே என்று மொழி பெயர்க்கப்பட்டுள் ளது.) ஜலம் இரட்சகர் அல்ல. ஆனால் நியாயத் தீர்ப்பின் வழியாக அவர்களை தேவன் பாதுகாத் துக் கொண்டுவந்தார்.

இங்கு சொல்லப்பட்டுள்ள கூற்றையும், அடுத்து வருகிற வசனத்தையும் சரியாகப் புரிந்துகொள்ள பேழை மற்றும் ஜலம் என்னும் சொற்களின் உவ மைப் பொருளைக் காணவேண்டும். பேழை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் படவுருவாக இருக்கிறது. பெருவெள்ளமாகிய ஜலம் தேவனு டைய நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. பேழை ஒன்று மாத்திரமே இரட்சிப்படைய வழியாக இருந் தது. பெருவெள்ளம் வந்தபோது அந்தப் பேழைக் குள் இருந்தவர்கள் மட்டுமே காப்பாற்றப்பட்டார் கள், வெளியிலிருந்த அனைவரும் அழிந்து போனார்கள். அதுபோலவே கிறிஸ்து ஒருவர் மட்டுமே இரட்சகராயிருக்கிறார். தேவன் அவர் களை எந்த நிலைமைக்கு மாற்றக்கூடுமோ அது போலவே, கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் மாற்ற மடைந்து இரட்சிக்கப்படுவார்கள். வெளியிலே இருப்பவர்கள் அழிந்துபோவதைத் தவிர வேறு வழியில்லை.

இரட்சிப்படைவதற்கான *வழியாக* ஜலம் செயல்படவில்லை, ஏனென்றால் தண்ணீருக்குள் இருந்தவர்கள் யாவரும் அழிந்து போனார்கள். பேழையானது அடைக்கலத்திற்கான இடமா யிருந்தது. பேழை நியாயத்தீர்ப்பு என்னும் வெள் ளத்தின் ஊடாகக் சென்றது. கடும்புயலின் தாக்கம் முழுவதையும் அது ஏற்றுக்கொண்டது. வெள்ளத்தில் ஒரு சொட்டும் பேழைக்குள்ளே செல்லவில்லை. அதுபோலவே நம்முடைய பாவங் களுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பின் சீற்றம் முழுவதையும் கிறிஸ்து ஏற்றுக்கொண் டார். அவருக்குள்ளாக இருக்கிறவர்களுக்கு ஆக் கினைத்தீர்ப்பு இல்லை (யோவான் 5:24).

பேழைக்குக் கீழே தண்ணீர் இருந்தது, தண் ணீர் அதன் மேற்புறத்தில் ஊற்றப்பட்டது, அதைச் சுற்றிலும் தண்ணீர் இருந்தது. ஆனால் அது அதற் குள்ளாக இருந்த விசுவாச மக்களை **ஜலத்தின் *ஊடாகப்*** புதிய படைப்பு என்னும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றது. இவ்வாறாக இரட்சகரை விசுவாசிப்பவர்கள் யாவரும் மரணம் பாழ்நிலை ஆகியவற்றின் காட்சியின் ஊடாகச் சென்று உயிர்த்தெழுதல் என்னும் செயல்களத்தி னிடத்திற்கும், புதிய வாழ்வு என்னும் நிலையினி டத்திற்கும் வழிநடத்தப்படுகிறார்கள்.

3:21 அதற்கு ஒப்பனையான ஞானஸ்நான மானது இப்பொழுது **நம்மையும் இரட்சிக்கிறது**. மீண்டுமாக நாம் கடினமான, முரண்பாட்டிற்கு ஏதுவான ஒரு பகுதிக்குள் வந்திருக்கிறோம்! இந்த வசனம், ஞானஸ்நானத்தின் மூலமாக மறு பிறப்பு உண்டாகிறது என்று கற்பிக்கிறவர்களுக் கும், நம்மை இரட்சிப்பதற்கான ஆற்றல் எதுவும் ஞானஸ்நானத்திற்கு இல்லை என்று மறுத்துரைப் போருக்கும் ஒரு போர்க்களமாக இருக்கிறது.

ஞானஸ்நானம்

முதலில் ஞானஸ்நானம் என்பதன் பொருள் என்ன என்பதையும், அடுத்ததாக அது என்ன பொரு ளைத் தருகிறதில்லை என்பதையும் காணலாம்.

உண்மையில், *நம்மை இரட்சிக்கக் கூடிய ஒரு ஞானஸ்நானம்* உண்டு - நாம் தண்ணீரில் பெற்ற ஞானஸ்நானமல்ல அது, மாறாகக் கிட்டத் தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பு கல்வாரியில்

நிகழ்ந்த ஒரு ஞானஸ்நானம். கிறிஸ்துவின் மரணமே அந்த ஞானஸ்நானம். அவர் தண்ணீர் என்னும் நியாயத்தீர்ப்பில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். “ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஞானஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்” என்று அவர் இதையே குறிப்பிட்டார் (லூக்கா 12:50). சங்கீதப் பாடகனும், “உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது; உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டு போகிறது” என்று இந்த ஞானஸ்நானத்தைத் தனது சொற்களால் விவரிக்கிறான் (சங். 42:7). கிறிஸ்து தமது மரணத்தில் தேவனுடைய கோபாக்கினையின் பேரலைகளில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். இந்த ஞானஸ்நானமே நாம் இரட்சிப்படைவதற்கான அடிப்படை ஆதாரமாகும்.

ஆனால் அவருடைய மரணத்தை நமக்குரியதாக்கி ஏற்றுக்கொள்ள வேண்டும். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் காப்பாற்றப்படும்படி எவ்வாறு பேழைக்குள் செல்ல வேண்டியதாயிருந்ததோ, அது போலவே நாமும் கர்த்தர் ஒருவரே இரட்சகர் என்று சொல்லி நம்மையே அவரிடம் ஒப்புவிக்கவேண்டும். நாம் அவ்வாறு செய்யும்போது, நாம் அவரோடு அவருடைய மரணத்திலும், அடக்கத்திலும், உயிர்த்தெழுதலிலும் ஒன்றாய் இணைக்கப்படுகிறோம். உண்மையான பொருளில் நாம் அவருடன்சிலுவையில் அறையுண்டிருக்கிறோம் (கலா. 2:20), அவரோடு அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:4), மேலும் நாம் மரணத்திலிருந்து அவரோடுகூட எழுப்பப்பட்டிருக்கிறோம் (ரோமர் 6:4).

இவையாவும் விசுவாசியின் ஞானஸ்நானத்தில் படவுருவாய்க் காட்சியளிக்கின்றன. ஆவிக்குரிய வகையில் ஏற்கனவே நடந்த ஒன்றுக்கு இந்தச் சடங்கு வெளிப்படையான அடையாளமாயிருக்கிறது; நாம் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம். நாம் தண்ணீருக்குள்ளாகச் செல்லும்போது, நாம் அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறோம் என்று அறிக்கைசெய்கிறோம். நாம் தண்ணீரிலிருந்து வெளியே வருகிறபோது, நாம் அவரோடு உயிருடன் எழுப்பப்பட்டிருக்கிறோம் என்பதைக் காட்டுகிறோம், மேலும் புதிதான ஜீவனுள்ள வராக நடக்க விரும்புகிறோம் என்பதையும் காட்டுகிறோம்.

ஒப்பனையானது இப்பொழுது நம்மை இரட்சிக்கிறது - கிறிஸ்து சிலுவையில் அடைந்த மரணத்தையே இந்த ஞானஸ்நானம் குறிக்கிறது. மேலும் இது நாம் அதில் அவருடன் இணைக்கப்பட்டிருப் பதைக் குறிக்கிறது. இதனைத் தண்ணீரில் நாம் பெறும் ஞானஸ்நானம் பிரதிபலிக்கிறது.

நாம் தண்ணீரில் பெறும் சடங்காச்சார ஞானஸ் நானத்தின் மூலமாக இரட்சிக்கப்படுவதாக இந்த வசனம் பொருள்படாது. அதற்கான காரணங்கள்:

1. அவ்வாறு பொருள்கொள்வோமெனில், கர்த்தராகிய இயேசுவுக்குப் பதிலாக, தண்ணீர் இரட்சகராகக் கருதப்படும். ஆனால் அவர், “நானே வழி” என்று கூறியிருக்கிறார் (யோவான் 14:6).
2. கிறிஸ்து மரணமடைந்தது வீண் என்று சொல்லுவதாகிவிடும். தண்ணீரினால் மனிதர்கள் இரட்சிக்கப்படக் கூடுமானால், கர்த்தராகிய இயேசு மரணமடைந்தது ஏன்?
3. இது நிச்சயமாக நடைபெறாது. ஞானஸ்நானம் பெற்ற பலர், அவர்களுடைய பிற்கால வாழ்க்கையின் மூலமாக அவர்கள் ஒருபோதும் உண்மையாக மறுபடியும் பிறக்கவில்லை என்பதை மெய்ப்பித்திருக்கிறார்கள்.

நாம் விசுவாசத்தோடு ஞானஸ்நானத்தையும் பெறுவதால் மட்டுமே இரட்சிக்கப்படுகிறோம் என்றும் இந்த வசனம் கற்பிக்கிறதில்லை.

1. அவ்வாறு கூறுவோமானால், இரட்சகர் சிலுவையில் செய்து முடித்த செயல் போதுமான தல்ல என்று கூறுவதாகிவிடும். மேலும் இந்தக் கருத்தின்படி “முடிந்தது!” என்று அவர் சத்தமிட்டுக் கூறியது உண்மையல்ல, ஏனெனில் அவர் செய்து முடித்த இரட்சிப்பின் கிரியையோடு ஞானஸ்நானத்தையும் சேர்க்க வேண்டும்.
2. இரட்சிப்படைவதற்கு ஞானஸ்நானம் தேவையென்றால், கர்த்தர் தாமே ஒருவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்காதது விநோதமாயிருக்கிறது. இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை, அவருடைய சீடர்கள் கொடுத்தார்கள் என்றே யோவான் 4:3 -ஆம் வசனம் கூறுகிறது.
3. கொரிந்துப் பட்டணத்தாரில் ஒரு சிலருக்கு மட்டும் ஞானஸ்நானம் கொடுத்ததற்காக அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுக்கு நன்றி செலுத்தினார் (1 கொரி. 1:14-16). இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் தேவையென்றால், இவ்வாறு ஒரு சுவிசேஷகன் நன்றி செலுத்தியது விநோதமாக இருக்கிறது! பவுல் சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்த செயல்,

அவர் விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைக் குறித்துக் கற்பித்தார் என்பதைக் காட்டுகிறது. ஆனால் அவர் ஒரு சிலருக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுத்தார் என்னும் உண்மை, அதனை அவர் இரட்சிக்கப்படுவதற்கு அவசியமான செயல் என்று கருதவில்லை என்பதைக் காட்டுகிறது.

4. தன் பாவங்களுக்காக மனம் வருந்திய கள்ளன் சிலுவையில் தொங்கினான், அவன் ஞானஸ்நானம் பெறவில்லை, ஆனாலும் அவனும் கிறிஸ்துவோடு பரதீசில் இருக்கப் போவதற்கான வாக்குறுதி தரப்பட்டது (லூக்கா 23:43).

5. செசரியா பட்டணத்தில் இருந்த புறவினத்தார் விசுவாசித்தபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள் (அப். 10:44). இது அவர்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்பதைக் காட்டுகிறது (ரோமர் 8:9). பரிசுத்த ஆவியைப் பெற்ற பிறகு, அதாவது, இரட்சிப் படைந்த பிறகு அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் அப். 10: 47,48). ஆகவே அவர்களுடைய இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் தேவையற்றதாயிருந்தது. அவர்கள் முதலில் இரட்சிக்கப்பட்டார்கள், அதன் பிறகே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

6. புதிய ஏற்பாட்டில், ஞானஸ்நானம் எப்பொழுதும் மரணத்தோடு தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது, ஆவிக்குரிய பிறப்போடு அது தொடர்புபடுத்தப்படவில்லை.

7. விசுவாசத்தின் மூலமாக மட்டுமே இரட்சிப்பு உண்டாகிறது என்பது புதிய ஏற்பாட்டில் ஏறத்தாழ 150 பகுதிகளில் சொல்லப்பட்டுள்ளது. இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்பது போலத் தோன்றுகிற இரண்டு அல்லது மூன்று வசனங்களினாலே அந்த உண்மையை மறுத்துரைக்க முடியாது.

ஆகவே, 21 -ஆவது வசனத்தில், **ஞானஸ்நானமானது இப்பொழுதும் நம்மையும் இரட்சிக்கிறது** என்று வாசிக்கிறபோது, உண்மையான நீரில் நாம் பெறுகிற ஞானஸ்நானம் அல்ல, கிறிஸ்து அடைந்த மரணமாகிய ஞானஸ்நானமும் அதில் நம்மை நாம் ஒன்றிணைத்துக்கொள்கிற செயலுமே நம்மை இரட்சிக்கின்றன என்று அறியக்கடவோம்.

மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல். பழைய ஏற்பாட்டுச் சமயச் சடங்குகளுடன் கூடிய ஆராதனை முறையில், பேதுருவின் வாசகர்களாகிய யூதக் கிறிஸ்தவர்கள் நன்கு அறிமுகமானவர்கள். அந்த முறையில் ஒருவகை வெளியரங்கமான கழுவுதல் கிடைத்தது. ஆனால் அதன் மூலமாக ஆசாரியர்களுக்கோ மக்களுக்கோ பாவத்தைக் குறித்த சுத்தமான மனச்சாட்சியைக் கொடுக்க முடியவில்லை. பேதுரு குறிப்பிடுகிற **ஞானஸ்நானம்** சரீரப்பிரகாரமான சுத்திகரிப்பையோ, சடங்குகளினால் தீட்டுகளிலிருந்து கிடைக்கக்கூடிய சுத்திகரிப்பையோ தருவதில்லை. தண்ணீரானது சரீரத்திலிருந்து அழுக்கை நீக்கக் கூடிய ஆற்றல் உடையது. ஆனால் அதனால் தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியைத் தரவியலாது. கிறிஸ்துவின் மரணத்திலும், அடக்கத்திலும், உயிர்த்தெழுதலிலும் தனிப்பட்ட முறையில் ஒன்றிணைவதால் மட்டுமே நல்மனச்சாட்சியைப் பெறமுடியும்.

தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து. "நான் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? அவருக்கு முன்பாக எப்படி நான் நல்மனச்சாட்சி உடையவனாய் இருப்பேன்?" என்னும் கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியாது. அதற்கான விடையை நாம் பேதுரு கூறும் ஞானஸ்நானத்தில் காண்கிறோம். கிறிஸ்து கல்வாரியில் அடைந்த மரணமாகிய ஞானஸ்நானத்திலும், அந்தச் செயலை ஒரு தனி மனிதன் விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்வதாலும் அவை கிடைக்கின்றன. கிறிஸ்துவின் மரணத்தால் பாவத்தைக் குறித்த கேள்வி என்றென்றைக்குமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது.

இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால். தேவன் மனநிறைவு அடைந்துவிட்டார் என்பதை நான் எவ்வாறு அறிந்துகொள்வேன்? அவர் **கிறிஸ்துவை** உயிரோடு எழுப்பியதால் அதை நான் அறிவேன். நல்மனச்சாட்சி பிரிக்க முடியாதபடி இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அவையிரண்டும் ஒன்றாக நிற்கின்றன அல்லது விழுகின்றன. தேவன் தம்முடைய குமாரனுடைய மீட்பின் செயலில் முழுவதுமாக மனநிறைவு அடைந்திருக்கிறார் என்பதை அவருடைய உயிர்த்தெழுதல் என்னிடம் கூறுகிறது. கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால், நம்முடைய பாவங்கள் முற்றிலுமாக மன்னிக்கப்பட்டுவிட்டன என்பதில் நாம் உறுதியோடு இருக்க முடியாது. அவர் வேறு எல்லோரையும் போலவே மரணமடைந்திருப்பார். ஆனால் நம்முடைய பாவங்களுக்கு எதிரான எல்லா எதிர்பார்ப்புகளும் முழுவதுமாகச் செலுத்

தித் தீர்க்கப்பட்டுவிட்டன என்னும் உறுதியை கிறிஸ்துவின் உயிர்தெழுந்த நிகழ்ச்சி நமக்குத் தருகிறது.

ஜேம்ஸ் G. டெக் என்னும் கவிஞர் தனது பாடலில் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

உன்னதத்தில் வீற்றிருக்கும்
இறைமறியாம் அன்பர்யேசு,
என்றென்றும் நீங்கிடாத
உளவமைதி தந்திட்டார்.

இவ்வாறாக **ஞானஸ்நானமானது தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.** கர்த்தராகிய இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் அடிப்படை மட்டுமே நல்மனச்சாட்சியை உரிமை கோர முடியும். அதனுடைய வரிசை முறை கீழ்க் கண்டவாறு இருக்கிறது:

1. கல்வாரியில் கிறிஸ்து எனக்காக மரணத்தில் ஞானஸ்நானம் பெற்றார்.
2. அவரை நான் என்னுடைய கர்த்தரும் இரட்சகருமாக விசுவாசித்த போது நான் ஆவிக்குரிய நிலையில் அவருடைய மரணத்திலும், அடக்கத்திலும், உயிர்த்தெழுதலிலும் அவரோடு கூட ஒன்றிணைந்தேன்.
3. அவர் உயிரோடு எழுந்தார் என்னும் அறிவின் மூலமாக, நல்மனச்சாட்சி வேண்டுமென்று நான் ஏறெடுத்த விண்ணப்பத்திற்கு விடை தரப்பட்டது.
4. நான் ஆவிக்குரிய மீட்பை ஏற்கனவே அனுபவித்திருக்கிறேன் என்னும் உண்மைக்குத் தண்ணீர் ஞானஸ்நானத்தில் வெளியரங்கமான சாட்சி கொடுக்கிறேன்.

3:22 அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தது மட்டுமின்றி, அவர் எங்கிருந்து முதலாவது வந்தாரோ அந்தப் **பரலோகத்திற்கு** ஏறிச்சென்றார். இன்று அவர் அங்கே இருக்கிறார், கண்களால் காணக்கூடாதவராகவோ தொட்டு உணரக்கூடாத ஆவியாகவோ அல்ல, மாறாக ஜீவனுள்ள மனிதராக மாம்சமும் எலும்புகளுமுள்ள மகிமையடைந்த சரீரத்தோடு இருக்கிறார். அந்தச் சரீரத்தில், அவர் கல்வாரியில் பெற்ற காயங்களை நித்தியமாகச் சுமந்து கொண்டிருக்கிறார் - நம்மீது அவர் கொண்ட அன்பின் அடையாளமாக நாவன்மை மிக்கதும் நித்தியமானதுமான காயங்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்.

நம்முடைய கர்த்தர் **தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்**. அந்தஇடம்:

வல்லமை: பொதுவாக வலதுகை இடதுகையைக் காட்டிலும் வலிமைமிக்கது. ஆகவே இது வல்லமையோடு தொடர்புடையதாயிருக்கிறது (மத். 26:64).

கனம்: கிறிஸ்து "தேவனுடைய வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்" (அப். 2:33; 5:31).

இளைப்பாறுதல்: கிறிஸ்து தாம் நிறைவேற்றி முடித்த செயலின் நற்பயனாக "உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்" (எபி. 1:3 8:1; 10:12 - ஆகிய வசனங்களையும் காண்க). மனநிறைவு, அகமகிழ்வு ஆகியவற்றால் உண்டான *இளைப்பாறுதலே* இது, வெற்றி பெற்றவரின் களைப்பினால் ஏற்பட்டதல்ல இந்த *இளைப்பாறுதல்*.

பரிந்துபேசுதல்: தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறவராக, கிறிஸ்து நமக்காகப் *பரிந்துபேசுவதாகப்* பவுல் பேசுகிறார் (ரோமர் 8:34).

எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்ந்திருத்தல்: "எல்லாத் துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் *எல்லா நாமத்துக்கும் மேலாய்* அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்தார்." (எபே. 1:20,21).

மேலாட்சி: "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட் காரும்" என்று பிதாவாகிய தேவன் தமது குமாரனிடத்தில் கூறினார் (எபி. 1:13). அவருடைய மேலதிகாரம் 1 பேதுரு 3:22 -ஆம் வசனத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது: "... **தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்**

கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக் கிறது.”

தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்ல மைகளும் என்னும் சொற்றொடர் விண்ணுலகத் திலுள்ள உயிரினத்தினர் எல்லாப் பிரிவினரை யும் சேர்த்துச் சொல்லும் நோக்கமுடையது என்ப தில் ஐயமில்லை. உயிர்த்தெழுந்த, மகிமைப் படுத்தப்பட்ட கிறிஸ்துவின் பணிவிடைக்காரர் களே அவர்கள்.

நன்மை செய்வதில் நம்முடைய கர்த்தர் அனுப வித்த பாடுகளை இப்பகுதி எடுத்துரைக்கிறது. அவர் மனுவுரு எடுப்பதற்கு முன் நோவாவின் மூல மாகப் பகர்ந்த சாட்சி மற்றும் மனித குமாரன் என்னும் நிலையில் முதலாம் வருகையில் வாழ்ந்த சாட்சி இரண்டையுமே மனிதர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். அவர் கல்வாரியின் இருள் நிறைந்த மரணத் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார். ஆனால் தேவன் அவரை மரித்தோரி லிருந்து உயிரோடு எழுப்பினார்: மேலும் அவர் அவரை விண்ணகத்தில் தம்முடைய வலதுபாரி சத்திற்கு உயர்த்தி மகிமைப்படுத்தினார். தேவனு டைய நித்திய தீர்மானங்களின்படி மகிமையடை வதற்கு முந்திப் பாடுகள்பட வேண்டும்.

பேதுரு மடலில் முதல் நூற்றாண்டு வாசகர் களுக்கும் நமக்கும் இந்தப் பாடம் புகட்டப்பட்டி ருக்கிறது. நன்மை செய்வதில் எதிர்ப்பைச் சந்தித் தாலோ துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந் தாலோ நாம் மனந்தரளக் கூடாது, ஏனென்றால் நம்முடைய இரட்சகர் பூமியில் இருந்தபோது நடத்தப்பட்ட விதத்தைக் காட்டிலும் மேலாக நாம் நடத்தப்பட மாட்டோம். கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட் டால் அப்படியாகும் என்னும் வாக்குறுதியால் நம்மை நாமே தேற்றிக்கொள்ள வேண்டும் (ரோமர் 8:17). மேலும் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவை அல்ல (ரோமர் 8:18). மேலும் அதிசீக் கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத் திரவம் ஒப்பிடக்கூடாத அளவிற்கு நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது (2 கொரி. 4:17).

4:1 இந்தப் பகுதிக்கும் இதற்கு முந்தைய பகுதிக்கும் மிகநெருங்கிய தொடர்பு இருக்கிறது (3:18 -ஆம் வசனத்தோடு ஒப்பிடுக). நேர்மையற்ற முறையில் பாடுகளுக்குட்படுத்தப்பட்ட ஒருவர் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் **கிறிஸ்து** விளங் கியதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந் தோம். அவர் நீதியின் நிமித்தம் அக்கிரமம் நிறைந்த மனிதர்களுடைய கரங்களில் பாடுகள் அனுபவித்தார். இவ்வாறு இருக்கிறபடியால், அவரைப் பின்பற்றுவோர் **அப்படிப்பட்ட சிந் தையை ஆயுதமாக** அணிந்துகொள்ள வேண் டும். அவருடைய திருப்பெயருக்காகப் பாடுபட வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் கிறிஸ்தவர்கள் என்னும் காரணத்தால் துன்பங்களைச் சகிக்க ஆயத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

4:2 யாரெல்லாம் **மாம்சத்தில் பாடுபடுகிறார் களோ**, அதாவது, சரீரத்தில் பாடுபடுகிறார்களோ அவர்கள் யாவரும் **பாவங்களைவிட்டு ஓய்ந் திருப்பார்கள்**. இரண்டு சாத்தியக்கூறுகளை விசுவாசி எதிர்கொள்கிறான் - ஒன்று பாவம் மற் றொன்று பாடுபடுதல். ஒருபுறம் அவன் தன்னைச் சுற்றிலும் வாழ்கிற இரட்சிக்கப்படாத மக்களைப் போல வாழ்வதைத் தெரிந்துகொள்ளலாம். அதாவது, அவர்களுடைய பாவ இன்பங்களில் பங்குகொண்டு பாடுபடுவதைத் தவிர்க்கலாம். அல்லது அவன் துய்மையோடும் பயபக்தியோடும் கிறிஸ்துவின் நிந்தையைச் சுமந்தவனாக வாழ்ந்து, துன்மார்க்கருடைய கரங்களில் பாடுபடு வதைத் தெரிந்துகொண்டவனாக வாழலாம்.

வீரமரணம் அடைந்த ஜேம்ஸ் குத்ரீ தான் தூக்கிலிடப்படுவதற்குச் சற்று முன்னர் கூறியதா வது: “அருமையான நண்பர்களே, நீங்கள் பாவம் செய்வதற்கு முன், நான் செய்ததுபோல பாடு களின் பாத்திரத்தை அருந்துங்கள். ஏனெனில் பாவமும் பாடுகளும் எனக்கு முன்பாக வைக்கப் பட்டன, நான் பாடுகளைத் தெரிந்துகொண்டேன்.”

பாவ வாழ்க்கையைத் தொடருவதற்குப் பதி லாக, கிறிஸ்தவன் என்னும் நிலையில் ஒரு விசு வாசி பாடுகள் அனுபவிப்பதை மனமாரத் தெரிந்து கொள்வானெனில் அவன் **பாவங்களை விட்டு ஓய்ந்திருப்பான்**. இனிமேல் அவன் பாவச்செய லைச் செய்யவே மாட்டான் என்பது இதன் பொரு ளன்று. மாறாக அவனுடைய வாழ்க்கையில் பாவத்தின் அதிகாரம் முரிக்கப்பட்டு விட்டது. பாவம் செய்வதற்குப் பதிலாக ஒருவன் பாவம் செய்வதை மறுத்துரைத்தால் அவன் மாம்சத்தின் விருப்பத்தின்படி இனி நடப்பவனல்ல.

ஒரு விசுவாசியின் எஞ்சிய உலக வாழ்க்கை ஆசை இச்சைகளினால் அல்ல, தேவனுடைய சித்தத்தினாலே கட்டுப்பட்டிருக்கும். அவன் அவி சுவாசிகளைப் போலப் பாவம் செய்வதற்குப்

பதிலாக, ஒரு கிறிஸ்தவனாகப் பாடுபடுவதை மேலானதாகத் தெரிந்துகொள்கிறான். கர்த்தரை மறுத்துரைப்பதைக் காட்டிலும் அவன் மரண மடைவதையே தெரிந்துகொள்கிறான். இனி மாம்சத்திலிருக்கும் காலம் என்னும் சொற்றொடர் ஒரு மனிதன் இவ்வுலகில் வாழப்போகிற எஞ்சிய காலம் என்று பொருள்படும். விசுவாசியானவன் இந்தக் காலத்தில் தன்னுடைய இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதையல்ல, தேவனுடைய புகழ்ச் சிக்காக வாழ்வதையே தெரிந்துகொள்கிறான்.

4:3 சிலர் தங்களுடைய மனமாற்றத்திற்கு முந்தைய நாட்களில், எல்லாவகையான ஒழுக்கக் கேட்டுடனும் புறவின மக்களைப் போல வாழ்ந்து வந்தார்கள். பேதுரு அவர்களுக்கு அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தது போதுமென்று கூறுகிறார். கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில், அவர்கள் புது சிருஷ்டிகளாக இருக்கிறார்கள், அவர்கள் முந்தின பாவங்களை விட்டொழிய வேண்டும். அவர்களுடைய எஞ்சிய உலக வாழ்க்கை தேவனுக்கே உரியது, அதனை அவருக்கே கொடுக்க வேண்டும்.

இங்கு பட்டியலிடப்பட்டுள்ள பாவங்கள் கிறிஸ்தவரல்லாத புறவின மக்களை வருணித்துக் காட்டுபவையாக இருக்கின்றன - சிற்றின்பம், மது பருகுதல், தவறான சமயச் சார்புகள் ஆகிய பாவங்கள்.

காம விகாரம் - கட்டுப்பாடற்ற வகையில் இன்பத்தோய்வில் ஈடுபடுதல், முதன்மையாக சிற்றின்ப ஒழுக்கக் கேட்டையே இச்சொல் குறிக்கிறது.

துர்இச்சை - முறைகேடான எல்லா வகையான வேட்கைகளிலும் மனநிறைவு அடைதல்; ஆனாலும் சிற்றின்பப் பாவங்களையே இது குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது.

மதுபானம் பண்ணுதல் - மதிமயக்கம் உண்டுபண்ணும் பானங்களைப் பருகி தன்னையே அதனுடைய கட்டுப்பாட்டுக்குள் விட்டுவிடுதல், அதன் காரணமாகச் சோதனைகளை எதிர்த்து நிற்பதற்கான மனோதிடம் அற்றுப் போகுதல். மதுபானத்திற்கு அடிமைப்படுதலுக்கும் ஒழுக்கக் கேட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

களியாட்டுச் செய்தல் - கட்டுக்கடங்காத முறைகேடான விருந்துகளும், இரவுகளில் நீண்ட நேரம் களியாட்டத்தில் ஈடுபடுதலும்.

வெறிகொள்ளுதல் - குடிவெறியாட்டத்தில் ஈடுபட்டு அதன் காரணமாக ஒழுக்கக் கேடான செயல்களிலும் கூச்சலிலும் குழப்பத்திலும் ஈடுபடுதல்

அருவருப்பான விக்கிரகாராதனை - சிலைகளை வணங்குதலும், அதனோடு தொடர்புடைய அனைத்து வகையான ஒழுக்கக்கேடுகளும்.

மனிதர்கள் எதைத் தொழுதுகொள்கிறார்களோ, அதைப் போலவே மாறுகிறார்கள். அவர்கள் மெய்யான தேவனைப் புறக்கணிக்கும்போது அவர்களுடைய ஒழுக்கநிலை தானாகவே கீழ் நிலையை அடைந்துவிடுகிறது. இவ்வாறு அவர்களுடைய ஒழுக்கம் கீழ்நிலைக்குப் போய்விடுவதால், அவர்கள் தங்களுடைய இச்சைகளினால் எல்லாவிதமான பாவச்செயல்களிலும் ஈடுபடுகிறார்கள். இதன் காரணமாகவே சிலைவணக்கத்தைக் கொள்கையாகக் கொண்ட சமயங்கள் பாவத்திற்கும் சீர்கேட்டிற்கும் காரணமாயிருக்கின்றன.

4:4 வெளியரங்கமான இழிநிலையுடன் கூடிய வாழ்க்கையிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களின் பொதுவான அனுபவத்தை இந்த வசனம் விவரிக்கிறது. அவர்கள் மதிமயங்கிப் போய்விட்டார்கள் என்று அவர்களுடைய முந்தைய நெருங்கிய நண்பர்கள் எண்ணுவதோடு, சமய வெறியர்கள் என்று குறைகூறவும் செய்கிறார்கள். நடனங்களிலும், உலகீய விருந்துகளிலும், காமவெறிக் கூத்துகளிலும் கிறிஸ்தவர்கள் இனிமேல் கலந்துகொள்ள மாட்டார்கள் என்பதைக் காணும் நண்பர்கள் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைக்கிறார்கள். ஒரு விசுவாசி தூய்மையோடும் ஒழுக்கநெறி தவறாமலும் வாழ்கிற வாழ்க்கை பாவியைக் குற்றப்படுத்துகிறது; ஆகவே விசுவாசியின் வாழ்க்கையில் ஏற்படுகிற மாற்றம் அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்குவதில் ஆச்சரியமில்லை!

4:5 தேவபக்தி அற்றவர்கள் இவ்வுலக வாழ்வின்போது கிறிஸ்தவர்களை நிந்தித்தாலும், **அவர்கள்** பெரியவெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் **கணக்கு ஒப்புவிக்க** வேண்டும். கர்த்தர் தாமே **உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்பு** வழங்க ஆயத்தமாயிருக்கிறார். அவிசுவாசிகளை நினைத்தவராகவே பேதுரு இங்கு பேசுகிறார் என்பது மிகத் தெளிவாயிருக்கிறது. உயிருடன் இருக்கும் அவிசுவாசிகள் நியாயத்தீர்ப்பு அடைகிற நிகழ்ச்சி ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்திற்கு முந்தி நடை

பெறும். துன்மார்க்கராயிருந்து இறந்துபோனவர்கள் இவ்வுலகில் கர்த்தர் தமது ஆட்சியை நிறைவேற்றி முடிக்கும் தறுவாயில் நியாயத்தீர்ப்பு அடைவார்கள். அவர்கள் குற்றவாளிகள் என்று அடையப்போகிற தீர்ப்பு, தேவனுடைய பிள்ளைகள் நீதிக்கு நிரூபணமாக இருக்கிறார்கள் என்பதை விளங்கச் செய்யும்.

4:6 இதற்காகவே - தேவனுடைய பிள்ளைகளே நியாயமானவர்கள் என்று மெய்ப்பிக்கப்படுவதற்காக - **மரித்தோர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.** இங்கு மீண்டுமாக நாம் கடினமான பகுதிக்குள் வந்திருக்கிறோம். இதன் பொருள் மனிதர்கள் இறந்துபோன பிறகு அவர்களுக்கு நற்செய்தி பிரசங்கிக்கப்பட்டது என்பதா, அல்லது அவர்கள் உயிரோடு இருந்தபோது பிரசங்கிக்கப்பட்டது என்பதா, எது சரியானது? இந்த மனிதர்கள் யார்?

இந்த மனிதர்கள் இவ்வுலகில் உயிரோடு இருந்த காலத்தில், அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்பதே இதன் பொருள் என்று நாம் கருதுகிறோம். அப்பொழுது இவர்கள் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். இவர்கள் சத்தியத்துக்காகத் துணிவுடன் நின்ற காரணத்தால், துன்மார்க்கருடைய கரங்களில் பாடுகளை அனுபவிக்க நேரிட்டது, சிலர் தியாக மரணமும் அடைய நேரிட்டது. இந்த விசுவாசிகள் மாம்சத்தில் இருந்த மனிதர் முன்பாக ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தாலும் அல்லது குற்றவாளிகள் என்று தீர்க்கப்பட்டிருந்தாலும், நியாயமானவர்கள் என்று தேவனாலே மெய்ப்பிக்கப்பட்டார்கள். இப்பொழுதோ இவர்கள் அவரோடுகூட நித்திய வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு நற்செய்தி பிரசங்கிக்கப்பட்ட போது, அவர்கள் இறந்துபோகவில்லை. ஆனால் இப்பொழுதோ அவர்கள் தங்களுடைய சரீரத்தில் இறந்துபோய்விட்டார்கள். இவ்வுலக மனிதர்கள் அவர்களைப் பைத்தியக்காரர்கள் என்று நினைத்த போதிலும், **தேவன்** கனப்படுத்தினார். அவர்களுடைய ஆவிகள் இப்பொழுது விண்ணகத்தில் இருக்கின்றன.

நற்செய்திப் பிரசங்கம் இருவகையான விளைவை ஏற்படுத்துகிறது - ஒன்று மனிதர்களுடைய குற்றச்சாட்டு, இரண்டாவது தேவனுடைய அங்கிகாரம். திருவாளர் பார்னஸ் விளக்கிக் கூறுகிறார்:

> அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட போது, வழக்கமானபடி அவர்கள் மனிதர்களால் நியாயந்தீர்க்கப்பட்டு, கொலை செய்யப்பட்டாலும், அவர்களுடைய உயர்வான மேதகு இயல்பைப் பொருத்தமட்டில், அதாவது அவர்களுடைய ஆவியானது, தேவனுக்கென்று வாழும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.[26]

3. விசுவாசிகளின் ஊழியமும் பாடுகளும் (4:7-5:14)

அ. இறுதிநாட்களுக்குரிய இன்றியமையா உடனடித் தேவைகள்

4:7 "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது" என்னும் அறிக்கையின் தொடர்ச்சியாகப் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பொருள் (1) எருசலேம் அழிக்கப்படுதல், (2) விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுதல், (3) கிறிஸ்து ஆட்சி செலுத்தும்படி இவ்வுலகிற்கு மீண்டும் வருகைபுரிதல் அல்லது (4) ஆயிர மாண்டு ஆட்சி முடிவின்போது வானங்களும் பூமியும் அழிக்கப்படுதல் இவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்கக்கூடும். இங்கு சொல்லப்பட்டுள்ள வற்றில் கடைசி நிகழ்ச்சியையே இது குறிக்கிறது என்று நாம் கருதுகிறோம்.

முதலாவது அறிவுரை, **தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுங்கள்**. துன்பங்கள் நிறைந்த காலத்தில் இது எழுதப்பட்டது, ஆகவே விசுவாசியின் ஜெப வாழ்க்கை பீதியினாலோ, உணர்ச்சிகளால் உண்டாகும் தடுமாற்றத்தினாலோ சிதறடிக்கப்படாமல் உறுதியோடு இருக்க வேண்டும். தேவனோடு அவன் கொண்டுள்ள ஐக்கியம் உடன்பாடற்ற சூழ் நிலைகளால் குழப்பமடையக் கூடாது.

4:8 அவன் தன்னுடைய உடன் விசுவாசிகளோடுள்ள ஐக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டும் (வச. 8,9), மேலும் விசுவாசக் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரிடத்திலும் ஊக்கமான அன்பு பாரட்ட வேண்டும். அத்தகைய அன்பு மற்ற விசுவாசிகளின் தவறுகளையும் தோல்விகளையும் விளம்பரப்படுத்தாது. மாறாக அது ஒருவருக்கும் தெரியாதபடி காத்துக் கொள்ளும். "வெறுப்பு எல்லாவற்றிலும் பாதகமான நிலையை வெளிப்படுத்தும். அன்போ அவற்றை வெளியே காட்சியளிக்காதபடி புதைத்துப் போடும் தகுதிபெற்றிருக்கிறது" என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

"அன்பு திரளான பாவங்களை மூடும்" என்னும் வாசகம் (நீதி. 10:12), எவ்வாறு பாவங்கள்

புறம்பே தள்ளி வைக்கப்பட வேண்டும் என்பதற் கான கோட்பாட்டு விளக்கம் அல்ல. குற்றவுணர் வும், பாவங்களுக்கான தண்டனையும் கிறிஸ்து வின் இரத்தத்தினால் மட்டுமே நீக்கப்பட முடியும். பாவத்தைப் பொறுத்துக்கொள்வதற்கோ, குற்ற மிழைத்தவர்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை சபை தட்டிக்கழிப்பதற்கோ இந்த வசனத்தைப் பயன்படுத்தக் கூடாது. மற்ற விசுவாசிகளிடம் காணப்படும் சிறு தவறுகளையும் தோல்விகளையும் பொருட்படுத்தாமல் இருப்பதற் கான ஆற்றலை அன்பு தரும் என்பதே இதன் பொருளாகும்.

4:9 எவ்விதத் தயக்கமுமின்றி விருந்தோம்பல் புரிவது, சகோதரரிடத்தில் அன்பு பாராட்டுவதற் கான ஒரு வழிமுறையாகும். உபத்திரவ காலத்தில் உணவுப் பொருட்கள் சரிவரக் கிடைப்பதில்லை, கிறிஸ்தவர்களுக்குப் புகலிடம் கொடுத்துப் பரா மரிப்பது கைது செய்யப்படுவதற்கும் சிறையில் அடைக்கப்படுவதற்கும் காரணமாகி விடும், ஒரு வேளை மரணதண்டனை வழங்கப்படாதிருக் கலாம்; அப்படிப்பட்ட காலங்களில் இந்த அறி வுரை நிச்சயமான தேவையாக இருக்கிறது.

விருந்தோம்பல் மிகச் சிறந்த உரிமையாகும். அதைக் கடைப்பிடித்ததால், சிலர் அறியாமல் தேவதூதர்களையும் உபசரித்ததுண்டு (எபி. 13:2). தேவனுடைய பிள்ளை ஒருவருக்குப் பாராட் டுகிற தயவு, கர்த்தருக்கே செய்ததாகக் கருதப் படும் (மத். 25:40). பாராட்டிய தயவு எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அதற்காக அளிக்கப் படும் பலன் மிகப்பெரியதாய் இருக்கும். கர்த்தரு டைய நாமத்தின் நிமித்தம் ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் (மத். 10:42). தீர்க்கதரிசி என்னும் நாமத்தின் நிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான் (மத். 10:41). இது யூதர்களின் கணக்கின்படி மிகவுயர்ந்தது. கர்த்தருடைய ஊழியக்காரருக்குச் செய்த விருந்தோம்பலின் மூலமாகத் தங்களுடைய இல்லங்களும், பிள்ளை களும் பெற்ற ஆசிர்வாதங்களைக் குறித்துப் பல கிறிஸ்தவர்கள் சான்று கூறியிருக்கிறார்கள்.

திரும்பச் செலுத்த இயலாதவர்களுக்கே நாம் விருந்தோம்பல் செய்ய வேண்டுமென்று இயேசு கற்பித்தார் (லூக்கா 14:12). நம்முடைய உறவினர் களுக்கும், நண்பர்களுக்கும் அல்லது அயலகத் தாருக்கும் விருந்தோம்பல் புரியக்கூடாது என்பது இதன் பொருளன்று. ஆனால் நம்முடைய மனோ பாவம், அவர்கள் திரும்பச் செலுத்துவார்கள் என்னும் எண்ணத்தோடின்றி, கர்த்தராகிய இயேசு வின் திருப்பெயரில் செய்யப்படுகிற தயவாகவே இருக்க வேண்டும். இந்த உலகத்தில் பெரும் பகுதி இன்னும் சுவிசேஷத்தைக் கேள்விப்படா திருக்கும்போது விசுவாசிகள் தங்களுடைய சொந்தக் கூட்டத்தாருக்கு மாறிமாறி விருந்து பண்ண வேண்டியது அவசியமா என்னும் கேள்வி எழுவது இயற்கையே.

4:10 ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தரிடத்திலி ருந்து, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கம் என்னும் நிலையில் ஏதோ சில சிறப்பான வேலையைச் செய்யும்படி, வரத்தைப் பெற்றிருக்கிறான் (1 கொரி. 12:4-11, 29-31; ரோமர் 12:6-8). இந்த வரங்கள் தேவனிடத்திலிருந்து பெறப்பட்ட உக்கிராண ஊழியமாகும். அவற்றைச் சொந்த ஆதாயத்துக் காகப் பயன்படுத்தக் கூடாது, ஆனால் அவரு டைய மகிமைக்காகவும் பிறருடைய நலனுக்காக வுமே பயன்படுத்த வேண்டும். நாம் பெற்ற வரங் களின் நன்மைகளுக்கு, நாமே முடிவிடமாக இருக்க வேண்டும் என்று இவை அருளப்பட வில்லை. அவருடைய கிருபையானது நம்மை வந்து சேருகிறது, ஆனால் அது நம்முடன் முடி வடைந்துவிடக் கூடாது. நம் மூலமாக ஆசிர் வாதம் பிறரைச் சென்று சேரும்படி நாம் வழி துறையாக இருக்கவேண்டுமென்றே எதிர்பார்க் கப்படுகிறோம்.

நாம் **தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் உக்கிராணக் காரராக** விளங்க வேண்டும். இங்கு தேவனு டைய கிருபை என்று சொல்லப்பட்டிருப்பது, தகுதி யில்லாத மனிதர்களுக்கு அவர் தருகிற தய வையே குறிக்கிறது. **பற்பல** என்னும் சொல் பலவருணம் என்றோ பல வண்ணங்களால் குறிக் கப்பட்டது என்றோ பொருள்படும். இச்சொல்லை "உன்னதமான வகைகள்" என்று திருவாளர் பிலிப்பு மொழிபெயர்த்திருக்கிறார்.

4:11 ஒரு மனிதன் பிரசங்கம் செய்வதற்கோ, கற்பிப்பதற்கோ வரம் பெற்றவனாயிருந்தாலும், அவன் பேசுகிற சொற்கள், அந்தக் குறிப்பிட்ட தருணத்தில் அவன் பேசவேண்டும் என்று **தேவன்** அவனுக்குக் கொடுத்த வார்த்தைகளாகவே இருக்க வேண்டும். **தேவனுடைய வாக்கியங் கள்** என்பதன் பொருள் இதுவே. ஒரு மனிதன் திருமறையிலிருந்து மட்டும் பேசினால் போதாது. அந்தத் தருணத்தில் கேட்பவர்களுக்கு என்ன குறிப்பிட்ட செய்தியைக் கூறவேண்டுமென்று

தேவன் விரும்புகிறாரோ அதையே தான் பேசுகிற தாக அவன் உறுதிகொண்டிருக்க வேண்டும்.

ஒருவன் ஏதாவது ஒரு வேலையைச் செய்கிற போது, அதைச் செய்வதற்கான ஆற்றலை **தேவனே** கொடுத்திருக்கிறார் என்னும் தாழ்மையான உணர்வோடு அந்த ஊழியத்தைச் செய்ய வேண் டும். அப்பொழுது மகிமை தேவனிடமே சென்ற டையும் - அது அவருக்கே சொந்தமானது.

கிறிஸ்தவ நற்பணியில் ஒரு மனிதன் எவ் வளவுதான் உயர்வாக வரம் பெற்றிருந்தாலும் அவன் பெருமை பாராட்டலாகாது. வரமானது அவனுடைய சொந்த முயற்சியால் தோன்றியது அல்ல, மாறாக உன்னதத்திலிருந்தே அது கொடுக் கப்பட்டது. உண்மையில், அவன் பெற்றுக்கொள் ளாதது எதுவும் அவனிடத்தில் இல்லை. எல்லா ஊழியங்களும் அவற்றிற்கான புகழ்ச்சியை தேவன் பெறும்படி செய்யப்பட வேண்டும்.

பேதுரு கூறுவதுபோல, இந்தப் புகழ்ச்சி யானது மத்தியஸ்தராகிய **இயேசு கிறிஸ்துவின் மூலமாகப்** பிதாவுக்குச் செலுத்தப்படவேண்டும். மேலும் அவர் மூலமாகவே தேவன் நமக்கு எல்லா வற்றையும் செய்தார் என்னும் காரணத்தினாலே யும் இவ்வாறு நாம் செய்ய வேண்டும். இந்தப் புகழ்ச்சிக்குரிய இரட்சகருக்கே புகழ்ச்சியும் வல்ல மையும் **சதாகாலங்களிலும்** உண்டாயிருக் கின்றன. **ஆமென்**.

ஆ. பாடுகளைக் குறித்த புத்திமதிகளும் விளக்கங்களும் (4:12-19)

4:12 கிறிஸ்துவின் திருப்பெயரின் நிமித்தம் அடைகிற பாடுகளைக் குறித்த புத்திமதிகளும் விளக்கங்களுமே இந்த 4 -ஆவது அதிகாரத்தின் எஞ்சிய பகுதியில் காணப்படுகின்றன. "பாடுகள்" என்னும் சொல்லும் அதிலிருந்து பிறந்த வேறு சொற்களும் இந்த மடலில் இருபத்தோரு தடவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு கிறிஸ்தவன் துன்பப்படுவதைப் புதுமை யென்றும் வழக்கத்திற்கு மாறானது என்றுமே காண்கிறான், இதுவே அவனுடைய இயல்பான மனோபாவமாக இருக்கிறது. நாம் பாடுகள் அனுப விக்கிறபோது ஆச்சரியப்படுகிறோம். ஆனால் இதுவே கிறிஸ்தவனின் இயல்பான அனுபவம் என்று கருத வேண்டும் என்று பேதுரு கூறுகிறார். நம்முடைய இரட்சகரை இந்த உலகம் எவ்வாறு நடத்தியதோ அதைக் காட்டிலும் சிறப்பாக அது நம்மை நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியோடு வாழ வேண்டும் என்று விரும்புகிற எல்லோரும் துன்பப் படுவார்கள் (2 தீமோ. 3:12). கிறிஸ்துவுக்காக வழு வாமல் நேரான பாதையில் செல்ல வேண்டு மென்று உறுதியோடு இருப்பவர்கள் கொடூரமான முறையில் தாக்குதலுக்கு இலக்காவார்கள் என் பது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய உண்மையா கும். பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்பவர் களுக்கு எதிராகப் பிசாசு தனது ஆயுதங்களைப் பயன்படுத்தி வீணாக்க மாட்டான். பாதாளத்தின் கதவுகளை முற்றுகையிட்டுத் தாக்குகிறவர் களுக்கு எதிராகவே அவன் தனது ஆயுதங் களைத் திருப்புகிறான்.

4:13 கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்கு பெறுகிறோம் என்னும் உரிமை நமக்குப் பெரி தான மகிழ்ச்சியைத் தரவேண்டும். பாவ மன்னிப் புக்காக அவர் அடைந்த **பாடுகளில்** நமக்குப் பங் கில்லை என்பது நிச்சயம். அவர் ஒருவரே பாவத் தைச் சுமந்தவர். ஆனால் மனிதர் என்னும் நிலை யில் அவர் அடைந்த பாடுகளைப் போன்ற பாடு களில் நாமும் பங்கு பெற முடியும். அவர் அடைந்த காயங்களையும் தழும்புகளையும் போன்று நம் மீது ஏற்படுத்த அவிசுவாசிகள் செயல்படலாம். அவற்றை நாம் நம்முடைய சரீரங்களில் ஏற்றுக் கொள்ளலாம்.

பாடுகளின் மத்தியில் தேவனுடைய பிள்ளையா யிருக்கிறவன் களிகூருவான் என்றால், **கிறிஸ்து வின் மகிமை வெளிப்படும்போது** அவன் எவ்வள வாகக் களிகூர்ந்து மகிழ்ச்சியடைவான். யூதா கோத்திரத்துச் சிங்கமாக இரட்சகர் இந்த பூமிக் குத் திரும்பிவருகிறபோது, அவர் தேவனுடைய சர்வ வல்லமையுள்ள குமாரனாக வெளிப்படு வார். அவர்நிமித்தம் இப்பொழுது பாடனுபவிப்ப வர்கள் அவரோடுகூட கனப்படுத்தப்படுவார்கள்.

4:14 கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் அவ மானத்தைச் சகிக்கத் தாங்கள் பாத்திரராக எண் ணப்பட்டதைக் குறித்து தொடக்க காலக் கிறிஸ்த வர்கள் களிகூர்ந்தார்கள் (அப். 5:41). அது போலவே கிறிஸ்துவுக்காக வையப்படுவதைச் சிலாக்கியமாகக் கருதி ஒவ்வொரு கிறிஸ்த வனும் களிகூரவேண்டும். அத்தகைய பாடுகளை அனுபவிப்பது, **தேவனுடைய ஆவியானவர்** நம்மீது **தங்கியிருக்கிறார்** என்பதற்கு மெய்யான அடையாளமாயிருக்கிறது. **பரிசுத்த ஆவியான வர்** துன்பங்களை அனுபவிக்கிற கிறிஸ்தவர்கள் மேல் **தங்குகிறவராயிருக்கிறார்**. பழைய ஏற் பாட்டுக் காலத்தில் தேவனுடைய சமுகம் பிர சன்னமாயிருந்ததற்கு அடையாளமாக மேகம்

ஆசரிப்புக் கூடாரத்தின் மேல் மகிமையாக தங்கி யிருந்ததுபோல இதுவுமாயிற்று.

தேவனுடைய மெய்யான பிள்ளையினிடத் தில் **ஆவியானவர்** குடியிருக்கிறார் என்பதை நாம் அறிவோம், ஆனால் கிறிஸ்துவுக்காகத் தங்களை முழுவதுமாக ஒப்புவித்தவர்கள்மேல் அவர் சிறப்பான முறையில் தங்கியிருக்கிறார். அவர்கள் தேவ ஆவியானவருடைய பிரசன்னத் தையும் வல்லமையையும் அறிவார்கள், மற்றவர் களோ அதை அறிவதில்லை. உபத்திரவப்படுத்து கிறவர்களால் **தூஷிக்கப்படுகிற** கர்த்தராகிய இயேசு, பாடுகள் அனுபவிக்கிற பரிசுத்தவான் களின் மூலம் **மகிமைப்படுகிறார்**.[27]

4:15 தவறு செய்வதன் மூலமாகக் கிறிஸ்த வன் தன்மீது உபத்திரவங்களை வருவித்துக் கொள்ளக் கூடாது. கொலை, திருட்டு மற்றும் பொதுவான நிலையில் எந்தப் பாவத்தையும் அவன் செய்த குற்றத்திற்கு உள்ளாகக் கூடாது அல்லது அவன் பிறருடைய **காரியங்களில் தலையிடவும்** கூடாது. இதில் தேவனுக்கு மகிமை உண்டாவதில்லை, கிறிஸ்துவின் சாட் சிக்குக் களங்கமே உண்டாகும்.

4:16 ஆனால் **ஒருவன் கிறிஸ்தவனாயிருப் பதனால் பாடுபட்டால்** அதில் எவ்வித அவமான மும் இல்லை. தொழிலில் இழப்பு, புகழையும் வீட்டையும் இழக்கக் கூடிய நிலை, பெற்றோரும் பிள்ளைகளும் நண்பர்களும் விட்டுச் செல்லக் கூடிய நிலை, தவறான குற்றச்சாட்டுக்கும் வெறுப் புக்கும் ஒருவேளை மரணத்துக்கும் ஆளாகக் கூடிய நிலை இதன் காரணமாக உண்டாகுமென் றால் அதில் அவமானம் ஏதும் இல்லை என்று F. B. மேயர் கூறுகிறார்.[28] இந்தச் சோதனைகள் எல்லா வற்றிலும் கிறிஸ்தவன் என்னும் பெயரில் தேவனை மகிமைப்படுத்துவது சாத்தியமானதே. G. கேம்ப் பெல் மோர்கன் கீழ்க்கண்டவாறு கடிந்துரைக் கிறார்:

> அந்தப் பெயரில் மேன்மைபாராட்டுவதிலும் இது மேலானது. தகுதி வாய்ந்த வண்ணம் வாழ்கிற வாழ்க்கையே தேவனுக்குப் புகழ்ச்சி யைச் செலுத்துவதற்கான ஒரே வழியாகும். ஒருவன் கிறிஸ்தவன் என்று அறியப்பட்டிருந் தும், கிறிஸ்தவனாக வாழவில்லையென்றால், அவன் தேவனைக் கனவீனப்படுத்துகிறவனாக இருப்பான். திருப்பெயரை எடுத்துக்கொள்வது என்றால் ஒரு பொறுப்பை எடுத்துக்கொள்வது என்று பொருள்படும். அது மிகப்பெரியதும் மகிமை வாய்ந்ததுமாகும், அதனினும் மேலாக மிகவுன்னதமானதுமாகும்.[29]

4:17 இறைமக்கள் இவ்வுலக வாழ்க்கையில் அடைகிற பாடுகளுக்கும், துன்மார்க்கர் நித்தியத் தில் அடையவிருக்கிற பாடுகளுக்கும் இடையே யுள்ள வேறுபாட்டைப் பேதுரு விவரிக்கிறார். **நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக் குங்காலமாயிருக்கிறது.** காலம் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது சபையின் காலப்பாகுபாட் டைக் குறிக்கும், அது பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கி சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரை தொடரும். தேவனுடைய வீடு சபையைக் குறிக்கிறது. இந்தக் காலத்தில் சபையானது விசுவாசமற்ற உலகத்தால் நியாயந்தீர்க்கப்படு கிறது. இயேசு கிறிஸ்து இவ்வுலகில் இருந்த போது பாடுகளை அனுபவித்ததுபோல, இப் பொழுது விசுவாசிகளும் தங்களுடைய பாடு களை அனுபவிக்கிறார்கள்.

அவ்வாறு இருக்குமானால், **தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?** கிறிஸ்தவர்கள் நன்மை செய்து இக்காலத்தில் பாடுபடுவார்களா னால், இரட்சிக்கப்படாத மக்கள் தங்களுடைய அக்கிரமச் செயல்கள் அனைத்திற்கும் நித்தியத் தில் எவ்வளவாகப் பாடுபடுவார்கள்?

4:18 மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதே வாதம் இந்த வசனத்திலும் தொடர்கிறது. இந்த வசனம் நீதிமொழிகள் 11:31 -இல் இருந்து எடுத்தாளப்பட் டுள்ளது: "**நீதிமானுக்கு பூமியில்** சரிகட்டப்படுமே; **துன்மார்க்கனுக்கும் பாவிக்கும்** எத்தனை அதிகம்."

நீதிமானாக இருக்கிற மனிதன் **இரட்சிக் கப்படுவது அரிது** அல்லது அவன் கடினமான வழியில் **இரட்சிக்கப்படுகிறான்**. தெய்வீக நோக் கின்படி அவனுடைய இரட்சிப்பானது மிகப்பெரிய விலைகொடுத்து வாங்கப்பட்டது. மனிதர்களு டைய நோக்கின்படி, "இடுக்கமான வாசல்வழி யாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லப்படுகிறது (லூக்கா 13:24). "நாம் அநேக உபத்திரவங்களின் வழி யாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்று விசுவாசிகள் கற்பிக்கப்படு கிறார்கள் (அப். 14:22). ஒரு கிறிஸ்தவனைச் சூழ்ந்து நிற்கும் எல்லாவிதமான ஆபத்துகளிலும் சோதனைகளிலும் பரலோக ராஜ்யத்திற்கென்று அவன் காக்கப்படுவது தெய்வீகக் கிருபை யினால் உண்டான அற்புதமே ஆகும்.

அவ்வாறு இருக்க, மனந்திரும்பாமல் இரட்சிக்கப்படாமல் தங்களுடைய பாவங்களில் இறந்து போகிறவர்களுடைய அழிவு எப்படிப்பட்டதாயிருக்கும்? திருவாளர் F. B. மேயர் எழுதிய கதையில் இவ்வுண்மை மிகத்தெளிவான முறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது:

> ஒரு பரிசுத்தமான மனிதர் அவருடைய இரட்சிக்கப்படாத குமாரர்கள் நற்செய்தியின் தெளிவான வல்லமையின் மூலமாகப் பள்ளத்தாக்கின் இருண்ட பாதையில் பாதுகாப்பையும் களிகூருதலையும் அடையும்படி அவருடைய மரணமானது பெருஞ்சாதனை புரிய வேண்டுமென்னும் உள்ளார்வம் மிக்க விருப்பம் கொண்டிருந்தார். ஆனால் அதற்கு மாறாக, அவர் அதிக மனவருத்தத்தில் ஆழ்ந்துபோகும்படி, அவருடைய ஆவி இருள் சூழ்ந்த நிலையில் இருந்தது; அவர் அச்சத்தினாலும் அவநம்பிக்கையினாலும் துன்புற்றவராயிருந்தார்; மேலும் எல்லை கடந்த அளவிற்கு அவரைச் சோதனைக்குட்படுத்த எதிரியானவன் அனுமதிக்கப்பட்டிருந்தான். ஆனால் இந்த உண்மைகளே அவருடைய பிள்ளைகளுடைய மனத்தில் மிக ஆழமான விளைவுகளை ஏற்படுத்திவிட்டன. அவருடைய மூத்த மகன், ''எங்களுடைய தகப்பனார் எவ்வளவு நல்ல மனிதர் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்; ஆனாலும் அவர் அனுபவித்த ஆவிக்குரிய வேதனைகள் எவ்வளவு ஆழமானவை. அப்படியானால் எங்களுடைய ஆத்துமாக்களைக் குறித்து எவ்வித அக்கறையுமின்றி வாழ்ந்த நாங்கள் என்ன எதிர்பார்க்க முடியும்?'' என்று கூறினான்.[30]

4:19 தேவனுடைய சித்தத்தின்படியான பாடுகளாக அவை இருக்க வேண்டுமென்று பேதுரு வலியுறுத்துகிறார். தெய்வீக வழிநடத்துதலின்றி உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டவர்களாக மதத்தில் ஆர்வத்துடன் இருப்பவர்கள் தங்களிடத்தில் துன்பங்களை வருவித்துக் கொள்வார்கள். இரத்த சாட்சிகளாக மரணமடைய வேண்டும் என்னும் மனப்பான்மை உடையவர்கள் கனவீனம் அடைவதற்கு ஏதுவான வழியில் தேவனைப் பரீட்சை பார்ப்பார்கள். ஆனால் பாடுகளின் மெய்யான பாதை கிறிஸ்தவர்களை நித்திய மகிமைக்கு வழிநடத்தும். இதனைக் கருத்திற்கொண்டவர்களாக, அவர்கள் என்ன விலையானாலும் தங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து சரியானதையே செய்ய வேண்டும். மேலும் அவர்கள் **தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தருக்கு** ஒப்புவிக்க வேண்டும்.

இங்கு கர்த்தரை இரட்சகர் அல்லது பிரதான ஆசாரியர் அல்லது மேய்ப்பர் என்று அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக சிருஷ்டி கர்த்தர் என்று பேதுரு குறிப்பிட்டிருப்பது புதுமையாயிருக்கிறது. இரண்டு வகைகளில் கிறிஸ்து நம்முடைய படைப்பாளராக இருக்கிறார் - ஆதி படைப்பின் ஒரு பங்காகவும் புதிய படைப்பின் ஒரு பங்காகவும் நாம் அவருக்குச் சொந்தமானவர்களாக இருக்கிறோம் (எபே. 4:24; கொலோ. 3:10). இருநிலைகளிலும் நாம் அவருடைய அன்பிற்கும் அக்கறைக்கும் இலக்காக இருக்கிறோம். நம்முடைய ஆத்துமாக்களை உண்டுபண்ணினவரும், அவற்றை இரட்சித்தவருமாகிய அவரிடம் நம்மை ஒப்புவிக்க வேண்டியது தகுதியான செயலாகும்.

இ. அறிவுரையும் வாழ்த்துரையும் (5:1–14)

5:1 பேதுருவின் முதல் மடலின் கடைசி அதிகாரம் அறிவுரைகளையும் வாழ்த்துக்களையும் கொண்டிருக்கிறது. முதலாவது **மூப்பர்களுக்கு** அறிவுரை வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட கட்டளையை வழங்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றவர் என்னும் நிலையில் பேதுரு தன்னை **உடன் மூப்பனும் கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி உடனடியாக** வெளிப்படப் போகிற **மகிமைக்குப் பங்காளியுமாக** அறிமுகப்படுத்துகிறார். "எல்லோருக்கும் மேலான அதிகாரமுடைய திருச்சபையின் போப்பாண்டவர்" என்று அவர் தன்னை அறிமுகப்படுத்தவில்லை, அதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்ட நிலை! ஒரு **சாட்சி** - மேய்ப்பர் தன் ஆடுகளுக்காக மரண மடைந்ததைப் பேதுரு கண்டார். அத்தகைய அன்பைக் குறித்த நினைவு அவரும் அந்த ஆடுகளுக்காக அக்கறை செலுத்தக்கூடிய உண்மையுள்ள உடன் மூப்பனாகச் செயல்படச் செய்தது. **பங்காளி** - வெகு விரைவில் மகிமை புலரப் போகிறது. கிறிஸ்து வெளிப்படப் போகிறார், நாமும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படப் போகிறோம் (கொலோ. 3:4). அது காறும், "என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக... என் ஆடுகளை மேய்ப்பாயாக!" என்னும் கட்டளை நிலைத்திருக்கிறது (யோவான் 21:15-17).

5:2 ஆவிக்குரிய தலைமைத்துவத்தைச் சபையில் ஏற்று நடத்தும்படி பரிசுத்த ஆவியான

வர் தகுதிப்படுத்தினவர்களாகிய கிறிஸ்தவக் குணநலன்களைக் கொண்ட முதிர்ச்சியடைந்த மனிதர்களே மூப்பர்கள். பலராகிய மூப்பர்கள் என்னும் கருத்தைப் புதிய ஏற்பாடு தன்னகத்தே கொண்டிருக்கிறது -ஒரு சபையின் மேல் ஒரு மூப்பர் என்றோ பல சபைகளின் மேல் ஒரு மூப்பர் என்றோ அல்ல, மாறாக ஒரு சபையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூப்பர்கள் (பிலி. 1:1). மூப்பர்களின் தகுதிகள் பற்றி அறிய 1 தீமோத்தேயு 3:1-7 மற்றும் தீத்து 1:6-9 ஆகிய வசனங்களைக் காண்க. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட நிலையில் கிடைப்பதற்கு முந்தைய காலத்தில் சபைகளில் அப்போஸ்தலர்களாலும் அவர்களுடைய பிரதிநிதிகளாலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள், ஆனாலும் ஒரு புதிய சபையில் யார் அந்தத் தகுதிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பது வெளிப்படுவதற்கான காலம் கடந்த பின்னரே அவர்கள் அவ்வாறு நியமிக்கப்பட்டார்கள். இன்றைக்கு யாரெல்லாம் மூப்பர்களுக்கான தகுதிகளைப் பெற்றிருக்கிறார்கள், மூப்பர்களுக்கான வேலைகளைச் செய்கிறார்கள் என்பதைச் சபை மக்கள் அறிந்து ஏற்றுக்கொண்டவர்களாக அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து. மந்தையானது தேவனுக்குச் சொந்தமானது. ஆனால் உடன் மூப்பர்களாகப் பணிபுரியும்படி மூப்பர்களுக்குப் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. **கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாய்**[31] மந்தையைக் கண்காணிக்கும் வேலையானது தேர்தலின் மூலமாகவோ, நிய மனத்தின் மூலமாகவோ மனிதர்கள் மீது கட்டாயமாகத் திணிக்கப்படுவதில்லை. பரிசுத்த ஆவியானவர் தாமே அதற்கான ஆற்றலையும் பாரத்தையும் தந்தளுகிறார்; மூப்பர்கள் விருப்பமுள்ள இதயத்தோடு அதற்கான பதிற்செயலைச் செய்ய வேண்டும். அதனையே நாம் 1 தீமோத்தேயு 3:1 -ஆம் வசனத்தில் வாசிக்கிறோம், "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்." தெய்வீக முறையில் தகுதியாக்கப்படுதலோடு மனிதனுடைய விருப்பமும் இணைய வேண்டும்.

அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடு. ஒரு மூப்பராகப் பணிபுரிவதற்குப் பொருளாதாரக் கைம்மாறு நோக்கமாக இருக்கக்கூடாது. ஓர் உள்ளூர் சபை மூப்பருக்கு நிதிஉதவி செய்யக்கூடாது என்பது இதன் பொருளன்று. அவ்வாறு பராமரிக்கப்பட வேண்டிய "முழுநேர மூப்பர்கள்" இருந்ததை 1 தீமோத்தேயு 5:17,18 - ஆகிய வசனங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் மெய்யான கிறிஸ்தவ ஊழியத்தில் கூலிக்காக வேலை செய்கிற மனப்பான்மை பொருத்த மற்றதாக விளங்குகிறது.

5:3 பேதுரு வழங்குகிற அறிவுரையில் மூன்றாவது அம்சம் இதுவே: **சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள்.** மூப்பர்கள் **மாதிரிகளாக** இருக்க வேண்டுமே யொழிய சர்வாதிகாரிகளாக இருக்கக்கூடாது. அவர்கள் மந்தைக்கு முன்பாக நடக்கவேண்டும், பின்புறத்தில் இருந்து மந்தையை ஓட்டுகிறவர்களாக இருக்கக்கூடாது. அவர்கள் மந்தையைத் தங்களுடைய உடைமைப்பொருளாக எண்ணி நடத்தக்கூடாது. அதிகாரம் செலுத்துதல் என்னும் கருத்தை இது கடுமையாய்த் தாக்குகிறது!

2,3 - ஆகிய வசனங்களில் உள்ள அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிவதால் கிறிஸ்தவர்களிடையே காணப்படும் பற்பல தவறுகளைக் களைய முடியும். முதலாவது அறிவுரை தயக்கத்தை நீக்கும். இரண்டாவது அறிவுரை *வணிகமாக்குவதை* முடிவுக்குக் கொண்டுவரும். மூன்றாவது அறிவுரை *அதிகாரவர்க்க முறையை* அடியோடு நீக்கிவிடும்.

5:4 மூப்பர்கள் ஆற்றும் பணியில் சரீரப்பிரகாரமானதும் உணர்ச்சிபூர்வமானதுமான ஆற்றலை மிக அதிகமான அளவில் செலவிட நேரிடும். அவர் இரக்கம் காட்ட வேண்டும், ஆலோசனை கூறவேண்டும், கடிந்துரைக்க வேண்டும், கண்டித்துணர்த்த வேண்டும், கற்பிக்கவும், ஒழுங்குபடுத்தவும், எச்சரிக்கவும் வேண்டும். அவ்வப்போது அது நன்றியறிதல் இல்லாத வேலையாகத் தோற்றமளிக்கும். ஆனால் உண்மையுள்ள மூப்பருக்குச் சிறப்பான பரிசு அளிக்கப்படும் என்று வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது. **பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது** அவர் மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவார். ஒளிவுமறைவு அற்ற வகையில் கூற வேண்டுமானால், திருமறையில் வாக்குறுதியாகச் சொல்லப்பட்டுள்ள கிரீடங்களைக் குறித்து நாம் அதிகமாக அறியோம் -மகிழ்ச்சியின் கிரீடம் (1 தெச. 2:19), நீதியின் கிரீடம் (2 தீமோ. 4:8), ஜீவ கிரீடம் (யாக். 1:12; வெளி. 2:10), மற்றும் மகிமையின் கிரீடம். நாம் எழுத்தின்படியான கிரீடங்களை இரட்சகருடைய பாதத்தில் வைப்போமா என்பதும் நமக்குத் தெரியாது அல்லது கிறிஸ்து ஆட்சி செலுத்துகிறபோது நமக்குக் கொடுக்கப்படும் அதிகாரத்தின் அளவை மட்டுமே அவை

குறிக்கின்றனவோ என்பதும் நமக்குத் தெரிய வில்லை (லூக்கா 19:17-19); அல்லது அவை யாவும் நாம் நித்தியம் முழுவதும் தரித்திருக்கப் போகிற வெவ்வேறு வகையான கிறிஸ்தவக் குணநலன்களின் பண்புக்கூறுகளைக் குறிப்பிடு கின்றனவா என்பதையும் அறியோம். ஆனால் இவ்வுலகில் நாம் சிந்துகிற கண்ணீர், சோதனை கள், பாடுகள் ஆகியவற்றிற்கு அபரிமிதமான பிரதிபலன்களாக அவை விளங்கும் என்பதை நாம் அறிவோம்.

5:5 வயதிலும் விசுவாசத்திலும் **இளைஞராக** இருக்கிறவர்கள் மூப்பர்களுக்குக் **கீழ்ப்படிய** வேண்டும். ஏன்? இந்தக் கண்காணிகள் தேவனு டைய காரியங்களில் பல ஆண்டு அனுபவத்தின் மூலமாக ஞானத்தை பெற்றிருக்கிறார்கள். அவர் களுக்கு தேவனுடைய வார்த்தையில் ஆழமான அனுபவம் இருக்கிறது. அவர்களிடத்தில் தானே தேவன் தமது ஆடுகளைக் கவனிக்கும் பொறுப்பை ஒப்புவித்திருக்கிறார்.

எல்லா விசுவாசிகளும் **தாழ்மையை அணிந் திருக்க வேண்டும்**; அது மிகச்சிறந்த பண்பு. "தாழ்மை என்னும் முன்புறம் அணியும் ஆடையை அணியுங்கள்" என்கிறார் திருவாளர் மோ.'.பட். மிகப் பொருத்தமானதாயிருக்கிறது - முன்புற ஆடையே ஒரு வேலைக்காரனுடைய அடையா ளச் சின்னமாக இருக்கிறது. "ஆவிக்குரிய வளர்ச் சிக்கு இரண்டு சொற்றொடர்களைத் தெரிந் தெடுக்க வேண்டுமென்று சொல்லப்படுமானால், 'எனக்குத் தெரியாது', 'தவறுக்கு வருந்துகிறேன்' என்னும் இரண்டு சொற்றொடர்களையே தெரிந்து கொள்வேன். இவ்விரண்டு சொற்றொடர்களும் மனமார்ந்த தாழ்மைக்கு அடையாளமாய் இருக் கின்றன" என்று இந்தியாவுக்குச் சென்ற திருப் பணி ஊழியர் ஒருவர் கூறினார். அங்கத்தினர் யாவரும் தாழ்மையுடையவர்களாக இருக்கக் கூடிய ஒரு சபையைக் கற்பனை செய்து பாருங் கள்; அங்கு அவர்கள் யாவரும் தங்களைக் காட்டிலும் பிறரை உயர்வாக மதிக்கிறார்கள்; மிகத் தாழ்வான வேலைகளைச் செய்வதில் அவர்கள் ஒருவருக்கொருவர் முந்திக்கொள் கிறார்கள். அத்தகைய சபை கற்பனை செய்து பார்க்கக்கூடியதாக அல்ல, உண்மையாகவே இருக்க வேண்டும்.

தாழ்மையாக இருப்பதற்கு வேறு எந்தக் கார ணமும் இல்லாதிருப்பின், இதுபோதும்: **பெருமை யுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக் கிறார்.** (கிரேக்க மொழி நீதிமொழிகள் 3:34 -ஆம் வசனத்தைப் பேதுரு இங்கு மேற்கோளாக எடுத் தெழுதுகிறார்.) இதைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள் - வல்லமையுள்ள தேவன் நம்முடைய பெருமையை எதிர்த்து நின்று அதைத் தகர்த் தெறிய வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார். இதற்கு மாறாக நொறுங்குண்டதும் நருங்குண்ட துமான இருதயத்தை எதிர்த்துநிற்க வல்லமை யுள்ள தேவனுக்குச் சக்தியில்லை!

5:6 பிறரிடத்தில் மட்டுமின்றி தேவனிடத்திலும் தாழ்மையைக் காட்ட வேண்டும். பேதுருவின் நாட்களில், பரிசுத்தவான்கள் கடுமையான துன் பங்களுக்கு ஊடாகச் சென்றார்கள். இந்தச் சோதனைகள் தேவனால் அனுப்பப்பட்டவை யல்ல, அவரால் அனுமதிக்கப்பட்டவை. கர்த்தரு டைய கரத்திலிருந்து அவற்றைத் தாழ்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே சிறந்த கொள்கை என்கிறார் பேதுரு. அவரே தமது பிள் ளைகளைத் தாங்கி **ஏற்றகாலத்தில் உயர்த்து வார்.**

5:7 கர்த்தர் **விசாரிக்கிறவராக** இருக்கிறார் என்னும் வலிமையான நம்பிக்கையோடு அவரி டம் விசுவாசிகள் தங்களுடைய கவலைகளை யெல்லாம் வைத்து விடக்கூடிய சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறார்கள். மீண்டும் ஒருமுறை பேதுரு கிரேக்க மொழிப் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற் கோள் காட்டுகிறார் (சங். 55:22).

இங்கு இரண்டு வகையான அக்கறை சொல் லப்பட்டுள்ளது என்று J. சிட்லோ பாக்ஸ்டர் குறிப் பிடுகிறார்:

> முதலாவது கவலையோடுகூடிய அக்கறை, இதனை "உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" என்று கூற லாம்; இன்னுமொரு அக்கறை, பாசமுள்ள அக்கறை. இது "அவர் உங்களை விசாரிக்கிற வராக இருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் நம்மைக் குறித்து கவலையோடுகூடிய அக்கறை செலுத்துகிறவர்களாக இருக் கிறோம், ஆனால் அதற்கும் மேலாக நம்மு டைய இரட்சகர் கொண்டுள்ள அக்கறை ஒரு போதும் தோல்வியுறாததாக இருக்கிறது.[32]

கவலைப்படுவது தேவையற்றது. நம்முடைய பாரங்களை நமக்காக அவர் சுமக்க விருப்பத் துடன் இருக்கிறபடியால், நாம் அந்தப் பாரங்களைச் சுமக்கவேண்டிய அவசியமில்லை. கவலை பய

னற்றது, அற்பமானது; இதுவரை அது எந்தப் பிரச்சினையையும் தீர்த்ததில்லை. கவலை பாவமாகும். ஒரு பிரசங்கியார் ஒருமுறை இவ்வாறு கூறினார்: "கவலைப்படுவது பாவமாகும், ஏனெனில் அது தேவனுடைய ஞானத்தை மறுத்துரைக்கிறது; அவர் என்ன செய்கிறார் என்பதை அவர் அறியவில்லை என்று கூறுவதாக அது காணப்படுகிறது. அது தேவனுடைய அன்பை மறுத்துரைக்கிறது; அவர் அக்கறை செலுத்துவதில்லை என்று கூறுவதாக அது இருக்கிறது. மேலும் அது தேவனுடைய வல்லமையை மறுத்துரைக்கிறது; நான் எதற்காக கவலைப்படுகிறேனோ அதிலிருந்து அவரால் என்னை விடுவிக்க முடியவில்லை என்று அது கூறுவதாக இருக்கிறது" இது சிந்திப்பதற்கு ஏற்றது!

5:8 நாம் கவலைப்படக் கூடாதென்றாலும், **தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும் விழிப்புடனும்** இருக்க வேண்டும், **ஏனெனில்** நம்முடைய **எதிராளியாகிய பிசாசானவன்** மிகுந்த சக்தி வாய்ந்தவன். **தெளிந்த புத்தி** என்பது கருத்தூன்றிச் சிந்தித்தல், வாழ்க்கையில் நடைமுறைக்கு ஏற்ற அணுகுமுறையைக் கைக்கொள்ளுதல், சாத்தானின் திட்டங்களைப் புத்தி கூர்மையுடன் எதிர்த்துச் செயல்படுதல் என்று பொருள்படும். பெண்டிகாஸ்ட் என்பார் நன்றாகச் சொல்லியிருக்கிறார்:

> உலகத்தின் இயல்பை அல்லது அதனது நடத்தையைக் குறித்துப் புலனறிவு இல்லாமலும், நம்முடைய எதிரியின் நோக்கங்களையும், தாக்குதல்களையும் குறித்துப் பொருட்படுத்தாமலும் வாழ்கிற மனிதன் கவலையில்லாமலும் பொறுப்பில்லாமலும் வாழக்கூடியவனாக இருக்கிறான். ஆனால் வாழ்க்கையை இயேசு கிறிஸ்து காண்கிறதுபோலக் கண்டு வாழ்கிறவன் தெளிந்த புத்தியின் காரணமாக முற்றிலும் புதிய மனப்பான்மையும், முற்றிலும் புதிய நோக்கமும் கொண்ட பண்புகளை உடையவனாவான்.[33]

மேலும் பகைஞனின் ஒவ்வொரு தாக்குதலையும் எதிர்கொள்ளக் கூடிய ஆயத்தம் என்னும் இடைவிடாத விழிப்புணர்வும் இருக்க வேண்டும். இங்கு **எதிரியானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்** என்றும், யாரையாவது **விழுங்க** வேண்டும் என்று வகைதேடுகிறவன் என்றும் வருணிக்கப்படுகிறான். **பிசாசு** பல்வேறு தோற்றங்களைக் கொண்டிருக்கிறான். சில வேளைகளில், மனிதர்களை ஒழுக்கக் கேட்டிற்குள் விழச்செய்யும்படி கவர்ந்திழுப்பதற்கு ஏவிவிடும் பாம்பைப் போல வருகிறான். சில வேளைகளில் அவன் ஆவிக்குரிய காரியங்களில் மக்களை ஏமாற்றும்படி ஒளியின் தூதனுடைய வேடமணிந்து வருகிறான். இங்கு அவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல, தேவனுடைய மக்களை உபத்திரவங்களின் மூலமாக விடாப்பிடியான உறுதியோடு அச்சுறுத்தி வருகிறான்.

5:9 அவனுடைய சீற்றத்திற்கு நாம் அடிபணிந்து போகக்கூடாது. மாறாக, ஜெபத்தின் மூலமாகவும் தேவனுடைய வார்த்தையின் மூலமாகவும் நாம் அவனை **எதிர்த்து நிற்க** வேண்டும். அவனை எதிர்த்துநிற்க நம்மிடத்தில் நமக்குச் சொந்தமான ஆற்றல் இல்லை, ஆனால் நம் முடைய **விசுவாசத்திலும்**, கர்த்தரைச் சார்ந்திருப்பதிலும் நாம் உறுதியோடு இருக்கும்போது, நம்மால் அவனை **எதிர்த்துநிற்க** முடியும்.

நாம் அனுபவிக்கிற துன்பங்கள் தனித்தன்மை உடையவை என்னும் எண்ணத்தினால் நம்மைச் சாத்தான் சோர்வடையச் செய்கிறான். நாம் கடுமையான உபத்திரவங்களின் ஊடாகச் செல்கிறபோது, நாம் அனுபவிக்கிற அளவிற்கு வேறு எவரும் துன்பத்தை அனுபவிக்கிறதில்லை என்னும் தவறான எண்ணத்தோடு தளர்ந்துபோவது எளிது. **உலகம்** முழுவதிலுமுள்ள நம்முடைய கிறிஸ்தவ **சகோதரர்கள் அப்படிப்பட்ட பாடுகளை** அனுபவித்து வருகிறார்கள் என்று பேதுரு நினைவூட்டுகிறார்.

5:10 நாம் அறியா வண்ணம் தேவன் தமது நோக்கங்களை அற்புதமான முறையில் செயல்படுத்தி வருகிறார் என்பதை அறிவதே உபத்திரவங்களில் பெறுகிற மெய்யான வெற்றியாகும். நாம் அனுபவிக்கிற சோதனைகள் எத்தகையவையாயிருப்பினும், **தேவன் சகல கிருபையும்** நிறைந்தவராயிருக்கிறார் என்பதை முதலாவது நாம் நினைவுகூர வேண்டும். அவர் நம்முடைய தகுதிக்கு ஏற்ப அல்ல, நம்மிடத்தில் அன்புகூர வேண்டும் என்னும் எண்ணத்தோடு நம்மோடு ஈடுபடுகிறார் என்பதை இந்தப் பெயர் நமக்கு நினைவூட்டுகிறது. நம்முடைய சோதனைகள் எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும், நாம் சென்றடைய வேண்டியதாயிருந்த நரகத்திற்குள் இப்பொழுது நாம் இல்லை என்பதால் எப்பொழுதும் நன்றியுடையவர்களாக இருக்க முடியும்.

அவர் நம்மை நித்திய மகிமைக்கு அழைத்திருக்கிறார் என்பது இரண்டாவது ஆற்றல்மிக்க

ஆறுதலாக இருக்கிறது. இவ்வாழ்க்கையில் அனுபவிக்கிற உபத்திரவங்களுக்கு அப்பாற் பட்டு, நாம் நம்முடைய இரட்சகரோடு இருக்கப் போகிற காலத்தையும் அவரைப்போல இருக்கப் போகிற நிலையையும் எண்ணிப்பார்க்கும்படி இது நமக்கு உதவி செய்கிறது. இதைக் குறித்துச் சற்று சிந்தித்துப் பாருங்கள்! பயனற்ற பொருட் களின் குவியலிலிருந்து எடுக்கப்பட்டு நாம் அவரு டைய **நித்திய மகிமைக்காக அழைக்கப்**பட்டி ருக்கிறோம்!

மூன்றாவது ஆறுதல் யாதெனில் பாடுகள் கொஞ்சக் காலத்திற்கே உரியவை. நித்திய மகிமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வாழ்க் கையில் ஏற்படக்கூடிய பாடுகள் கணப்பொழுதே நிகழக் கூடியவை.

கிறிஸ்தவக் குணநலன்களை நமக்குக் கற் பிக்கவும், அதற்கேற்றபடி நம்மை மாற்றி அமைக் கவும் பாடுகளை தேவன் பயன்படுத்துகிறார் என் னும் உண்மை கடைசி ஆறுதலாகும். நாம் ஆளுகை புரிய வேண்டும் என்பதற்கான பயிற் சியை அவர் தருகிறார். அவ்விதப் பயிற்சியில் காணப்படும் நான்கு கூறுகள் பட்டியலிடப்பட் டுள்ளன:

சீர்ப்படுதல் - சோதனைகள் விசுவாசியைத் தகுதிப்படுத்துகிறது; அவன் ஆவிக்குரிய முதிர்ச்சியின் பண்புகளை அடைவதற்குத் தேவையான மூலக்கூறுகளை அது தருகிறது.

ஸ்திரப்படுதல் - பாடுகள் கிறிஸ்தவர்களை அதிக உறுதியுடன் நிலைநிற்பவர்களாக மாற்றுகின்றன. நல்லறிக்கை பண்ணுகிறவர் களாகவும், பாரம் ஏற்படுகின்ற நேரங்களில் அவற்றைச் சகிக்கக்கூடியவர்களாகவும் அவர்களை அவை மாற்றுகின்றன. "... உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்று கர்த்த ராகிய இயேசு பேதுருவிடம் கூறிய போது இதே சொல்லைப் பயன்படுத்தினார் (லூக்கா 22:32).

பலப்படுதல் - விசுவாசிகள் வலுவிழந்து பய னற்றவர்களாகப் போகவேண்டும் என்னும் நோக்கத்துடன் பிசாசு உபத்திரவங்களை அனுப்புகிறான். ஆனால் விளைவோ அதற்கு எதிர் மாறானதாக இருக்கிறது. அவர்கள் பாடு களைச் சகிக்கும்படி அவை அவர்களைப் பலப்படுத்துகின்றன.

நிலைநிறுத்துதல் - மூலமொழியில் இந்தச் சொல் "அடித்தளத்தோடு" தொடர்புடைய தாகக் காணப்படுகிறது. தேவனுடைய குமார னிலும் அவருடைய வார்த்தையிலும் ஒவ் வொரு விசுவாசியும் நிலையான இடத்தில் நாட்டப்பட வேண்டு மென்று தேவன் விரும்பு கிறார்.

திருவாளர் லேசி கூறுகிறார்:

> கிறிஸ்தவ வாழ்க்கையில் உண்டாகக் கூடிய தவிர்க்க முடியாத பாடுகள் எப்பொழுதும் விசு வாசிகளுடைய நடத்தையில் ஒரேவிதமான நன்மை பயக்கும் விளைவுகளையே உண்டு பண்ணுகின்றன. அவை விசுவாசத்தை நேர்த்தியாக்கி, நடத்தையைச் சீர்ப்படுத்தி, உறு திப்படுத்தி, பலப்படுத்தி இறைமக்களை நிலை நிறுத்துகின்றன.[34]

5:11 உபத்திரவங்களையும் பாடுகளையும் தம்முடைய மகிமைக்காகவும் நம்முடைய நன் மைக்காகவும் தேவன் வியத்தகு முறையில் மாற்றுகிறவராக இருக்கிறதைக் கருத்திற் கொண்ட வராக, பேதுரு இப்புகழுரையோடு பொங்கி எழு வது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறதில்லை: "அவ ருக்கு மகிமையும் வல்லமையும் **சதாகாலங்களி லும் உண்டாயிருப்பதாக. ஆமென்**." அப்படிப் பட்ட ஒருவருக்கே **மகிமை** உரியது; அப்படிப்பட்ட ஒருவருடைய கரங்களில் மட்டுமே **வல்லமை** (ஆளுகை)பாதுகாப்பாயிருக்கும்.

5:12 உண்மையுள்ள சகோதரனாகிய சில் வானிடம் (சீலா என்னும் பெயருடைய அதே மனிதனாகத்தான் இருக்க வேண்டும்) இந்த மடலைப் பேதுரு சொல்லி எழுதச் செய்தார். அவர் மூலமாகவே இந்த மடலைக் கொடுத்தனுப்பினார் என்றும் தோன்றுகிறது. தாங்கள் கொண்டிருக்கிற கிறிஸ்தவ விசுவாசமே "மெய்யான விசுவாசம்" என்று சிதறடிக்கப்பட்டிருந்த விசுவாசிகள் உறுதி கொள்ள வேண்டுமென்பதே இம்மடலில் பேதுரு வின் நோக்கமாகும் - அல்லது, அவர் கூறுவது போல அது **தேவனுடைய மெய்யான கிருபை**. கடுமையான உபத்திரவத்தின்போது தாங்கள் தழுவிய கிறிஸ்தவம் சரியானதா என்று அவர்கள் நினைக்கும்படியான சோதனை ஏற்பட்டிருக்கும். அவர்கள் செய்தது சரியென்று பேதுரு அறிவிக் கிறார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் கண்டடைந்தார்கள், அதில் அவர்கள் உறுதி யோடிருக்க வேண்டும்.

5:13 உங்களுடனே கூடத் தெரிந்துகொள் ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும்

(பெண்), என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். "உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறவள்" (தமிழில் **சபை** என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது) என்பதன் பொருள் என்ன என்று உறுதியாகக் கூறவியலாது. பல்வேறு வகையான விளக்கங்களில் முக்கியமானவற்றை இங்கு தருகிறோம்: (1) "சகோதரத்துவம்" (2:17; 5:9) - சபை. கிரேக்க மொழிபெயர்ப்பில் இந்தப் பெயர்ச்சொல் பெண்பாலில் உள்ளது. (2) பேதுருவின் மனைவி. (3) பாபிலோனில் இருந்த புகழ்பெற்ற பெண்மணி. இங்கு எந்த **பாபிலோன்** சொல்லப்பட்டுள்ளது என்பதையும் உறுதியாகச் சொல்லவியலாது அது (1) ஐப்பிராத்து நதியின் கரையில் அமைந்திருந்ததும், யூதர்கள் பலர் குடியிருந்ததுமான புகழ்வாய்ந்த நகரம்; (2) நைல் நதிக் கரையில் அமைந்திருந்த பாபிலோன் என்னும் இராணுவத் தலம் (இதுவாக இருக்க முடியாது); (3) ரோமாபுரி, வெளிப்படுத்தின விசேஷத்தில் பாபிலோன் நகரம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது பொதுவாக ரோமாபுரியைக் குறிப்பதாகவே கருதப்படுகிறது (17:1-9; 18:10,21).

மாற்கு என்னும் பெயர் இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது மூன்றாவது கேள்வியை எழுப்புகிறது. இது சரீரத்தின்படி பேதுருவின் மகனைக் குறிப்பிடுகிறதா அல்லது நற்செய்தி நூலை இயற்றிய யோவான் **மாற்குவைக்** குறிப்பிடுகிறதா? பெரும்பாலும் யோவான் மாற்குவையே இது குறிப்பிடக் கூடும். அவ்வாறிருக்குமானால், யோவான் மாற்குவை கிறிஸ்துவினிடம் வழிநடத்தியதாலா அல்லது ஒரு முதியவருக்கும் ஓர் இளைய கிறிஸ்தவருக்கும் இடையேயுள்ள தொடர்பைக் குறிக்கும்படியாகவா **குமாரன்** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாமே முடிவு செய்ய வேண்டும். பவுல் தீமோத்தேயுவுடனும் தீத்துவுடனும் கொண்டிருந்த ஆவிக்குரிய உறவைக் குறிப்பிடும்படி பயன்படுத்திய குமாரன் என்னும் சொல்லும் இங்கு பேதுரு பயன்படுத்தியுள்ள **குமாரன்**[35] என்னும் சொல்லும் வெவ் வேறானவை. இச்சொல், எல்லா நிகழ்ச்சிகளையும் கண்களால் கண்ட சாட்சியாகிய பேதுருவின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே மாற்கு எழுதிய தெளிவான விளக்கங்களுடன் கூடிய நற்செய்தி நூல் என்னும் பாரம்பரியக் கருத்திற்குப் பொருத்தமானதாக இருக்கிறது.

5:14 மூப்பர் ஒரு கட்டளையையும் ஒரு வாழ்த்துரையையும் கூறி முடிக்கிறார். அந்தக் கட்டளை, **"ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள்"** என்பதாகும். சகோதர **அன்பு** சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிலை பேறான கட்டளையாகும். ஆனாலும் அதை வெளிப்படுத்துகிற விதம் ஒவ்வொரு பயன்பாட்டையும் காலத்தையும் பொருத்து மாறக்கூடும்.

வாழ்த்துரை, "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக, ஆமென்." கிறிஸ்துவின் திருப்பெயரின் நிமித்தம் பேரிடர்களைத் தாங்கி, புயலின் அலைகளால் தாக்குண்ட பரிசுத்தவான்களிடத்தில் பயன்படும்படியான அமைதியின் சொல் இது. இயேசுவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்ட மந்தையானது கொந்தளிப்பான சமுதாயத்தின் நடுவில் பாடுபட்டு வந்தபோது கர்த்தர் தாமே **சமாதானம்** என்று மெல்லிய குரலில் ஒலிக்கிறார்.

மரணத்தின் சாயைகள்
நிழலிடும் வேளைகளில்
நிறைவான அமைதியை
உள்ளத்தில் தந்திடுவார்
மரணத்தை வென்றதன்
வலிமையை அழித்தவர்
குறைவில்லாப் பேருவகை
வெள்ளமெனப் பொழிந்திடுவார்!

அடிக்குறிப்புகள்

1 (1:2) பரிசுத்தமாக்கப்படுதலின் வேறு வகைகளும் உள்ளன, அவை பின்னர் நிகழும். ஒருவர் மறுபடியும் பிறக்கும் போது, அவர் "கிறிஸ்துவுக்குள்" இருப்பதால் அவர் தகுநிலைப் பரிசுத்தமாகுதலை அடைகிறார் (எபி. 10:10,14). அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கைக் காலம் முழுவதும் அவர் நடைமுறைப் பரிசுத்தத்தை அனுபவிக்க வேண்டும். அதாவது, கிறிஸ்துவைப் போலாகுதலின் வளர்ச்சியாக இது விளங்குகிறது (1 பேதுரு 1:15). விண்ணகத்தில் அவர் மீண்டும் பாவம் செய்யப் போவதில்லை என்பதால், அங்கு அவர் நிறைவான பரிசுத்தத்தைப் பெறுவார் (கொலோ. 1:22). எபிரெயர் 2:11 –ஆம் வசனத்தைத் தொடர்ந்து பரிசுத்தமாக்கப்படுதல் என்னும் தலைப்பின் கீழ் உள்ள கட்டுரையைக் காண்க.

2 (1:8) கிரேக்க மொழிப் பெரும்பான்மைப் பிரதியில் "காணாமலிருந்தும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "அறியாமலிருந்தும்" என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. இரண்டும் ஒரே பொருளையே தருகின்றன. அதாவது, இயேசு இப்புவியில் இருந்தபோது அவர்கள் நேரடியாக அவரோடு தொடர்புகொண்டு பழகியதில்லை.

3 (1:8) William Lincoln, *Lectures on the First and Second Epistles of Peter,* p. 21.

4 (1:12) Ibid., p. 23.

5 (1:13) J. H. Jowett, *The Redeemed Family of God,* p. 34.

6 (1:17) Lincoln, *Lectures,* p. 30.

7 (1:20) Ibid., p.33.

8 (1:21) W. T. P. Wolston, *Simon Peter: His Life and Letters,* p. 270.

9 (1:22) நடுநிலைப் பிரதியில் "ஆவியினாலே" என்ற சொல் இடம் பெறவில்லை.

10 (1:23) Footnote in F. W. Grant, "*1 Peter," The Numerical Bible, Hebrews to Revelation,* p. 149.

11 (1:23) நடுநிலைப் பிரதியில் "என்றென்றைக்கும்" என்ற சொல் இடம் பெறவில்லை.

12 (2:3) அலெக்சந்திரியா பிரதியில் (NKJV அடிக்குறிப்பைக் காண்க) "இரட்சிப்படையும்படி வளருவதற்கு" என்று இச்சொற்றொடர் காணப்படுகிறது. ஆயினும், இந்தப் பிரதி இரட்சிப்பின் உறுதியைச் சந்தேகிக்கும்படியான ஏதொரு கருத்தையும் தெரிவிக்கிறதில்லை.

13 (2:6) Biblical Greek *lithon* (stone) *akro* - (top or tip) *goniaion* (of corner) hence cornerstone or capstone.

14 (2:7) நடுநிலைப் பிரதியில் "கீழ்ப்படியாமல் இருக்கிறவர்கள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "விசுவாசிக்காதவர்கள்" என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. நற்செய்தியை விசுவாசிப்பது, அதற்குக் கீழ்ப்படிவது என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டிற்கும் ஒரே பொருள் தான்.

15 (2:12) A literal rendering is *noble* or *lovely* (GK. *kalos,* cf. English *calligraphy*, beautiful writing).

16 (2:12) Charles R. Erdman, *The General Epistles,* p. 66.

17 (2:12) Jowett, *Redeemed Family,* pp. 88,89.

18 (2:13) Leslie T. Lyall, *Red Sky at Night,* p, 81.

19 (2:16) F. B. Meyer, *Tried by Fire,* p. 91.

20 (2:25) The Greek Word is *episkopos*, "*overseer*" or "*bishop*"

21 (3:2) George Muller, in a periodical called *The Word*, edited by Richard Burson, date unknown, pp. 33-35

22 (3:4) Meyer, *Tried by Fire*, p. 117.

23 (3:7) Charles igg, *A Critical and Exegetical Commentary on the Epistles of St. Peter and St. Jude* (ICC), p. 155.

24 (3:8) "இணக்கமுள்ளவர்கள்" (*Philophrones*) என்னும் சொல்லுக்குப் பதிலாகத்

"தாழ்மையுள்ளவர்கள்" (*tapeinophrones*) என்னும் சொல் நடுநிலைப் பிரதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டுமே இந்த வேதபகுதியின் பின்னணிக்குப் பொருத்தமான நற்பண்புகளாக இருக்கின்றன. புதிய ஏற்பாட்டு வசனங்களைத் திறனாய்வு செய்பவரின் கருத்திற்கு ஏற்றாற்போல எது மூலாதாரமானது என்று தெரிந்துகொள்ளப்படுகிறது. நாம் KJ பாரம்பரியத்தை இங்கு பின்பற்றுகிறோம்.

25 (3:15) நடுநிலைப் பிரதியில் "கர்த்தராகிய தேவனை" என்னும் சொற்றொடர் "கிறிஸ்துவைக் கர்த்தராக" என்று இடம் பெற்றிருக்கிறது. புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்துவே பழைய ஏற்பாட்டுச் "சேனைகளின் கர்த்தர்" என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

26 (4:6) Albert Barnes, *Notes on the New Testament: James, Peter, John, and Jude,* p. 191.

27 (4:14) நடுநிலைப் பிரதியில் **14** –ஆவது வசனத்தின் பின்பகுதி இடம்பெறவில்லை. "உங்கள் மேல் தங்கியிருக்கிறார்" மற்றும் "உங்களாலே மகிமைப்படுகிறார்" ஆகிய இரண்டு சொற்றொடர்களும் "*tao*" என்னும் கிரேக்க எழுத்துகளோடு முடிவடைகின்றன. ஆகவே கடைசி வாக்கியம் விடப்பட்டிருப்பது இயற்கையே. இவ்வாறு விடப்படுவது ஒரே மாதிரிச் சொற்களால் முடிவடைவதால் ஏற்படுகிற தவறு என்று அழைக்கப்படுகிறது.

28 (4:16) F. B. Meyer, *Tried by Fire*, p. 27.

29 (4:16) G. Campbell Morgan, *Search lights from the Word*, p. 366.

30 (4:18) Meyer, *Tried by Fire*, pp. 180-181

31 (5:2) நடுநிலைப் பிரதியில் "மனப்பூர்வமாய்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "தேவனுடைய விருப்பத்திற்கிணங்க" என்னும் சொற்றொடர் இடம் பெற்றுள்ளது. பாரம்பரியப் பிரதியைத் தழுவிய KJV மற்றும் NKJV (பெரும்பான்மைப் பிரதியிலும் அதுபோலவே உள்ளது) ஆகிய மொழிபெயர்ப்புகளில் காணப்படும் வாசகம் இந்த வேத பகுதியின் பின்னணிக்குப் பொருத்தமாயிருக்கிறது. "விருப்பத்திற்கிணங்க" என்னும் சொல்லில் ஒரு கட்டாயமான செயல் காணப்படுகிறது, அதற்கு மாறாக "மனப்பூர்வமாய்" என்னும் சொல் சிறந்ததாய் இருக்கிறது.

32 (5:7) சிட்லோ பாக்ஸ்டர் – *Awake My Heart,* p. 294. KJV மொழிபெயர்ப்பில் உள்ளது போல (*cares*), கிரேக்க மொழிப் புதிய ஏற்பாட்டில் ஒரே சொல் பயன்படுத்தப்படவில்லை. இந்தச் சொல் முதன்முதலாக அச்சிடப்பட்ட ஆங்கில புதிய ஏற்பாட்டில் (1526) இடம் பெற்றுள்ளது – அதன் மொழிபெயர்ப்பாளர் திருவாளர் வில்லியம் டின்டேல் **(1484 – 1536)** சிறந்த மொழிபெயர்ப்பாளரும், நியாய விசாரணையில் இரத்த சாட்சியாகக் கொலை செய்யப்பட்டவருமாவார். அவருடைய மொழிபெயர்ப்பு, "*cast all your care to hym: for he careth for you*" என்பதாகும்.

33 (5:8) J. Dwight Pentecost, *Your Adversary the Devil,* p. 94.

34 (5:10) Harry Lacey, *God and the Nations,* p. 92.

35 (5:13) சாதாரண கிரேக்கச் சொல் *huios* என்பதாகும்; பவுல் *teknon* என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார். எழுத்தின்படி அதன் பொருள் "பிறந்த ஒன்று" (*Scots bairn*) அல்லது குழந்தை என்பதாகும்.'

நூல் விவரப் பட்டியல்

(1 and 2 peter)

Barbieri, Louis A. *First and Second Peter*. Chicago: Moody Press, 1975.

Bigg, Charles. *A Critical and Exegetical Commentary on the Epistles of St. Peter and St. Jude* (ICC). Edinburgh: T. & T. Clark, 1901.

Grant, F. W. "I and II Peter," *The Numerical Bible*, Vol. 7. New York: Loizeaux Bros., 1903.

Ironside, H. A. *Notes on James and Peter.* New York: Loizeaux Brothers, 1947.

Jowett, J. H. *The Redeemed Family of God*. London: Hodder & Stoughton, n.d.

Lenski, R. C. H. *The Interpretation of the Epistles of St. peter, St. John & st. Jude*. Columbus: Wartburg Press, 1945.

Lincoln, William. *Lectures on the First and Second Epistles of Peter*. Kilmarnock: John Ritchie Publ., n.d.

Meyer, F. B. *Tried by Fire*. Fort Washington, PA: Christian Literature Crusade, 1983.

Stibbs, Alan M. T*he First Epistle General of Peter.* Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1959.

Thomas, W. H. Griffith. *The Apostle Peter: His Life and Writings.* Grand Rapids: Kregal Publications, 1984.

Westwood, Tom. *The Epistles of Peter*. Glendale, California: The Bible Treasury Hour. Inc., 1953.

Wolston, W. T. P. *Simon Peter: His Life and Letters*. London: James Nisbet & Co., 1913.

அப்போஸ்தலனாகிய

பேதுரு எழுதின பொதுவான இரண்டாம் நிருபம்

முன்னுரை

(பேதுருவின் இரண்டாம் மடல்) கிறிஸ்துவைக் குறித்து உயிரூட்டத்துடன் பேசி, அவருடைய நிறைவுக்குக் காத்திருக்கிறது.

– E. G. ஹோம் ரிகௌசன்

1. வேதநூல் தொகுப்பில் தனிச்சிறப்பு மிக்க இடம்

மேலே எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள் குறிப்பிடத்தக்கது, ஏனெனில் அதை எழுதியவர், இன்றைய நாளில் பலர் கருதுவதுபோல, பேதுரு இம்மடலை எழுதவில்லை என்று மறுத்துரைப் பவர் ஆவார். ஆயினும், "இந்த மடல் பேதுருவின் பண்பையும் உள்ளாற்றலையும் உடையது" என்று அவரும் ஒப்புக்கொள்கிறார்.[1] இவ்விரண்டு அறிக்கைகளும் வஞ்சப்புகழ்ச்சியோடு கூறப்பட்டவையெனினும், 2 பேதுரு மடலின் தனிச்சிறந்த பங்களிப்பை இவை இரத்தினச் சுருக்கமாய் எடுத்தியம்புகின்றன.

விசுவாச மறுதலிப்பு என்னும் இருள் அத்துமீறி ஆக்கிரமிக்கக் கூடியதாகச் செயல்படுகின்ற சூழ் நிலையின் நடுவில், இச்சிறிய மடல் கர்த்தரு டைய வருகையை எதிர்நோக்கியதாக விளங்கு கிறது. தனிப்பட்ட முறையில் இம்மடல் பேதுரு வின் வாழ்க்கையையும் அவருடைய ஆளுமை யையும் நினைவுகூருவதாக அமைந்திருக்கிறது. ஆயினும் இந்தச் சிறிய மடல் தங்களோடு பேசு வதற்கு அனுமதிக்கிற மனிதர்களோடு கிறிஸ்து வைப் பற்றி உயிரூட்டத்துடன் பேசும் என்பதில் ஐயமேதுமில்லை.

2. நூலாசிரியர்

"தானியேல், ஏசாயா ஆகிய பழைய ஏற்பாட்டு நூல்களைப் போலவே பேதுருவின் இரண்டாம் மடலிலும், கண்டிப்பான புராதன நம்பிக்கையுள்ள நிலையில் திருமறைத் திறனாய்வுகளின் தொடர் பில் மனிதர்களைச் சிறுவர்களிடமிருந்து நாம் பிரித்துக் காண்கிறோம்" என்று பழைமைக் கருத்துகளில் மாற்றத்தை விரும்பாத அமெரிக்க நாட்டைச் சேர்ந்த புதிய ஏற்பாட்டு வேத அறிஞர் ஒருவர் அண்மையில் கூறியிருக்கிறார். நவீன காலத்து விரிவுரையாளர்கள் 2 பேதுரு மடல் பேதுருவால் எழுதப்பட்டது அல்ல என்னும் தவறான கருத்தைக் கொண்டிருந்தாலும், அதை மெய்ப்பிக்க முயற்சி செய்கிறதில்லை. மாறாக அது மெய்ப்பிக்கப்பட்ட செய்தி என்றே அவர்கள் ஊகித்தவர்களாக எழுதுகிறார்கள். இந்த நூல் உண்மையானது, பேதுருவால் எழுதப்பட்டது என்று ஒப்புக்கொள்வதால் எழக்கூடிய பிரச்சினை கள் மற்ற புதிய ஏற்பாட்டு நூல்களால் எழுந்த பிரச்சினைகளைக் காட்டிலும் அதிகத் தீவிர மானவை. ஆயினும் அவை முன்மொழியப்பட்டிருப் பவைபோல அவ்வளவு வலிமையானவை அல்ல.

புறச்சான்றுகள்

வழக்கமாகச் சொல்லப்படுவதுபோல, பாலி கார்ப், இக்னேஷியஸ், ஐரேனியஸ் ஆகியோரை இந்த மடலுக்குச் சான்றுகளாக அழைக்க முடி யாது. ஆயினும், தொடக்க காலத் திருச்சபை கற்பித்ததுபோல, யூதாவின் நிருபம் 2 பேதுரு மடலுக்குப் பிறகு எழுதப்பட்டதானால், 2 பேதுரு மடலுக்கான முதல் நூற்றாண்டுச் சான்றினை நாம் யூதா மடலின் மூலமாகப் பெற்றிருக்கிறோம் எனலாம் (யூதா நிருபத்தின் முன்னுரையைக் காண்க). ஜெர்மானிய அறிஞர் வேறு எந்தச் சான் றும் நமக்கில்லை என்று கருதுகிறார். யூதாவுக்கு அடுத்தபடியாக 2 பேதுருவிலிருந்து மேற்கோள் காட்டினவர் ஓரிஜன் என்பவரே ஆவார்; அதைத் தொடர்ந்து ஒலிம்பியாவைச் சேர்ந்த மெதாடியஸ் என்பவரும் (பேரரசன் டையோகிளடியான் என்ப வனுடைய காலத்தில் தியாக மரணம் அடைந்த வர்), செசரியாவைச் சேர்ந்த .ூபிலியன் என்ப வரும் இம்மடலிலிருந்து மேற்கோள் காட்டியிருக் கிறார்கள். கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் 2 பேதுரு மடலை ஏற்றுக்கொண்டார்கள் எனக் கூறும் யூசிபியசே (Eusebius) இம்மடலைக் குறித்து ஐயம் கொண்டிருந்தார்.

முரடோரியன் வேதநூல் தொகுப்பில் 2 பேதுரு இடம்பெறவில்லை, 1 பேதுரு மடலும் அதில் இடம் பெறவில்லை, இருந்தபோதிலும் அந்தத் தொகுப்பு முடிவுறாத தொகுப்பே ஆகும். 2 பேதுரு நூல்

உண்மையானதுதானா என்பது பற்றிய சந்தேகங்கள் இருந்தன என்பதை அறிந்திருந்த போதிலும் ஜெரோம் என்பாரும், சபைத் தந்தைகள் என்று பெயர்பெற்றிருந்த அதேனியஸ் அகஸ்டின் ஆகியோரும் இம்மடலை உண்மையானது என்றே ஏற்றுக்கொண்டார்கள். திருச்சபை முழுவதும் இந்தக் கருத்தைச் சீர்திருத்தக் காலம் வரையிலும் பின்பற்றினார்கள்.

மற்ற நூல்களைப் போலன்றி, 2 பேதுரு மடல் இவ்வாறு மிகக் குறைவான புறச்சான்றுகளை மட்டுமே கொண்டிருப்பதன் காரணம் என்ன? மிகப்பரவலாகப் பிரதிகள் எடுக்கப்படவில்லை, மேலும் தனிப்பட்ட ஆய்வுப்பொருள் இந்நூலில் இடம்பெறவில்லை. இரண்டாவதாகச் சொல்லப்பட்டுள்ள குறிப்பு இம்மடலை ஆதரித்துப் பேசுகிறது: தவறான கருத்துகளைப் பின்பற்றும் மனிதர்கள் எப்பொழுதும் கோட்பாடுகளுக்கு முரண்பாடான செய்திகளைச் சேர்த்து எழுதுவதுண்டு அல்லது விசித்திரமான வகையில் அப்போஸ்தலருடைய உபதேசங்களுடன் சிலவற்றைச் சேர்த்து எழுதியிருக்கிறார்கள். முதல் சில நூற்றாண்டுகளில் 2 பேதுருவைக் குறித்து முன்ஜாக்கிரதையாக இருந்ததற்கான காரணம் பெரும்பாலும் இதுவாக இருக்கக் கூடும்: அந்தக் காலத்தில் பேதுருவின் பெயரில் ஞானமார்க்கத்தை ஆதரிக்கக்கூடிய பல போலியான நூல்கள் தோன்றின; "பேதுருவின் வெளிப்பாடு" என்னும் நூலும் அவற்றில் ஒன்று.

இறுதியாக, 2 பேதுரு மடல் சிலருடைய கேள்விக்கு உட்பட்ட பல நூல்களில் ஒன்றாக இருந்த போதிலும், இது போலியானது என்று எந்தச் சபையும் இதை மறுத்துரைக்கவில்லை.

அகச்சான்றுகள்

பேதுரு இந்த மடலை எழுதவில்லை என்று மறுத்துரைப்பவர்கள் 1 பேதுரு மற்றும் 2 பேதுரு ஆகிய மடல்களுக்கு இடையிலான மொழிநடை வேறுபாட்டை வலியுறுத்திக் கூறுகிறார்கள். பேதுரு சொல்லி இம்மடல்களை எழுதியவர்கள் வெவ்வேறு நபர்கள் என்று ஜெரோம் விளக்க முளிக்கிறார். ஆயினும், இவ்விரண்டு மடல்களுக்கு இடையிலான வேறுபாடு, இவ்விரண்டு மடல்களுக்கும் மற்ற புதிய ஏற்பாட்டு நூல்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடு போல மிகப் பெரியவையல்ல. அப்போஸ்தலர் நடபடிகளில் காணப்படும் பேதுருவின் பிரசங்கங்களிலும் பேதுருவின் வாழ்க்கையில் நடந்த வேறு நிகழ்ச்சிகளிலும் பேதுரு பயன்படுத்திய தனிச்சிறந்த பற்பல சொற்கள் இவ்விரண்டு மடல்களிலும் காணப்படும் சொற்களோடு பொருந்துபவையாக இருக்கின்றன.

பேதுருவின் வாழ்க்கையில் முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகள், அவர் எழுதியதே இந்த நூல் என்னும் பாரம்பரியக் கருத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றன. பேதுரு இந்நூலை எழுதவில்லை என்று கூறுபவர்கள் இத்தகைய மறைமுகக் குறிப்புகள் அதிகமாக இருந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். மற்றவர்களோ போலியான ஆசிரியர் இத்தனை அதிகமான குறிப்புகளைத் திட்டமிட்டிருக்க முடியாது என்று கூறுகிறார்கள்! ஆனால் இது போலியான நூல் என்றால் அவ்வாறு எழுதுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? இது போலியானது என்று கூறுபவர்கள் கற்பனை வளம் மிக்க கதைகளைப் புனைந்து கூறுகிறார்கள். ஆனால் மனநிறைவளிக்கும் வகையில் ஏதொன்றையும் அவர்கள் இதுவரை சொல்லவில்லை.

ஆனால் இந்த மடலை நாம் படிக்கையில், பேதுருவே இம்மடலை எழுதியவர் என்பதற்கான அகச்சான்றுகள் பல உள்ளன என்பதை நாம் அறிவோம்:

1:3 -ஆம் வசனத்தில், விசுவாசிகள் கர்த்தருடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் அழைக்கப்பட்டார்கள் என்று ஆசிரியர் கூறுகிறார். இது நம்மை லூக்கா 5:8 -இல் நடந்த நிகழ்ச்சியை நோக்கி அழைத்துச் செல்கிறது. அங்கு கர்த்தருடைய மகிமையால் ஆட்கொள்ளப்பட்டவராகப் பேதுரு, "ஆண்டவரே, நான் பாவியான மனிதன், நீர் என்னை விட்டுப் போக வேண்டும்!" என்று கதறினார்.

தம்முடைய வாசகர்கள் ஒருபோதும் வீழ்ந்து போகாதபடி, பேதுரு அவர்களுக்கு சில அறிவுரைகளை நல்குகிறார் (1:5-10). இது பேதுரு இடறி விழுந்ததையும் அதன் காரணமாக அவருக்கு ஏற்பட்ட வருத்தத்தையும் நம்முடைய நினைவுக்குக் கொண்டுவருகிறது.

முதல் அதிகாரம் 14 -ஆவது வசனம் மிகவும் குறிப்பிடத்தக்கது. பேதுருவின் மரணத்தைக் குறித்துக் கர்த்தராகிய இயேசு ஏற்கனவே கூறிவிட்டார். இது யோவான் 21:18,19 -இல் பேதுரு முதிர்வயதில் கொல்லப்படுவார் என்று கர்த்தர் வெளிப்படுத்திய நிகழ்ச்சியோடு மிகவும் பொருத்தமாயிருக்கிறது.

முதல் அதிகாரம் 13-15 ஆகிய வசனங்களில் "கூடாரம்" மற்றும் "சென்று போனபின்பு" என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரண்டு சொற்களையும் மறுதோற்ற நிகழ்ச்சியில் லூக்கா பயன்படுத்தியிருக் கிறார் (லூக்கா 9:31-33).

இந்த மடலைப் பேதுரு எழுதினார் என்பதற் கான மனநிறைவளிக்கக் கூடிய சான்றுகளில் ஒன்றை 1:16-18 ஆகிய வசனங்கள் அளிக்கின் றன. இப்பகுதி மறுதோற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. இதன் ஆசிரியர் அந்நிகழ்ச்சி யின் போது அந்தப் பரிசுத்த மலையில் இருந் தார். அவ்வாறாயின், அவர் பேதுரு, யாக்கோபு அல்லது யோவானாகத்தான் இருக்க வேண்டும் (மத். 17:1). இவ்விரண்டாம் மடல் தன்னால் எழுதப்பட்டது என்று பேதுரு மட்டுமே உரிமை கோருகிறார் (1:1). யாக்கோபும் யோவானும் அவ்வாறு கூறவில்லை.

2:14,18 - ஆகிய வசனங்களில் "தந்திரமாய்ப் பிடித்து" (enticing, allure) என்னும் சொல் லைக் காண்கிறோம். இவ்விரண்டு ஆங்கிலச் சொற்களும் deleago என்னும் சொல்லி லிருந்து பிறந்தவை. மீனவர் பயன்படுத்துகிற சொற்களே இவை, எனவே பேதுரு இந்நூலின் ஆசிரியர் என்பது பொருத்தமானது.

3:1 -இல் ஆசிரியர் தனது முதல் கடிதத்தைக் குறிப்பிடுகிறார். பெரும்பாலும் அது 1 பேதுரு நூலாகவே இருக்க வேண்டும். மேலும் 3:15 - இல் ஆசிரியர் பவுலைக் குறித்து மிகத் தனிப் பட்ட வகையில் குறிப்பிடுகிறார். எனவே ஓர் அப்போஸ்தலனால் மட்டுமே இவ்வாறு குறிப்பிடமுடியும்.

பேதுருவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச் சியை 3:17 -ஆம் வசனம் நினைவுக்குக் கொண்டு வருகிறது. இங்கு பயன்படுத்தப்பட் டுள்ள "உறுதி" என்னும் சொல் "ஸ்திரப்படுத்து" என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது. அச்சொல்லை இயேசு நாதர் லூக்கா 22:32 - இல் பயன்படுத்தியிருக்கிறார், "நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து." மேலும் இச்சொல் 1 பேதுரு 5:10, 2 பேதுரு 1:12 ஆகிய இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக, மேய்ப்பர்களுக்கான மடல்களில் சொல்லப்பட்டிருப்பதுபோல, விசுவாச மறு தலிப்புக்கு எதிரான கடுமையான தாக்குதல்கள் 2 பேதுருவில் இடம் பெற்றிருப்பது நவீன காலத் தில் பெருமளவு விரோதத்தை உண்டாக்கி யிருக்கிறது. இதிலிருந்து இந்நூல் உண்மை யாகவே அப்போஸ்தலனின் வாழ்க்கையின் பிரதி பலிப்பாக எழுதப்பட்டது என்பது புலப்படு கிறது.

நாம் இந்த மடலைக் கற்கும்போது, இது பேதுரு வால் எழுதப்பட்டது என்பதற்கான வேறுபல அகச் சான்றுகளையும் நம்மால் தொடர்புபடுத்திக் காண முடியும். ஆனால் இந்த மடலைத் திருப்பி, இதன் மூலமாகக் கர்த்தர் என்ன சொல்ல விரும்பு கிறார் என்பதை அறிவது அதனினும் முக்கிய மானது ஆகும்.

3. எழுதப்பட்ட காலம்

2 பேதுரு எப்பொழுது எழுதப்பட்டது என்பது அதனுடைய உண்மைத்தன்மையை வெகுவாகச் சார்ந்திருக்கிறது. இந்த மடல் போலி என்று கரு துபவர்கள் இது 2 -ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று ஒரு நாளைத் தெரிந்துகொள்கிறார்கள். 2 பேதுரு மடல் வேதநூல் தொகுப்பைச் சேர்ந்தது என்று திருச்சபை முடிவு செய்திருப்பது சரித்திர பூர்வமாகவும் ஆவிக்குரிய அடிப்படையிலும் சரி யானது என்று கருதும் நாம் பேதுருவின் மரணத் திற்குச் (கி. பி. 67 அல்லது 68) சில காலத்திற்கு முந்தி இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும் (கி. பி. 66 அல்லது 67) என்று கருதுகிறோம்.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

அப்போஸ்தலன் நெய்த இந்த மடலில் ஒன்றுக் கொன்று எதிர்த்து நிற்கக் கூடிய இரண்டு முக்கிய மான நூலிழைகள் முனைப்பாய்க் காணப்படுகின் றன: தீர்க்கதரிசன வசனம் (1:19-21), கட்டுப்பாடற்ற சிந்தனைகள் (அதி. 2). கட்டுப்பாடற்ற வகையில் வாழ்வதை அனுமதிக்கும் "அழிவுக்கேதுவாகிய தவறான போதனைகளுடன்" கள்ளப்போதகர்கள் தொடுவானத்தில் எழுந்துவருவதைப் பேதுரு ஏற் கனவே பார்த்துவிட்டார். வரப்போகிற ஆக்கினைத் தீர்ப்பை ஏளனப்படுத்தி இந்த மனிதர் பேசினார்கள் (3:1-7). எதிர்காலத்தில் நடக்கப் போகிறவை என்று பேதுருவின் நாட்களில் கருதப்பட்டவை, யூதா மட லில் (வச. 4) ஏற்கனவே நடந்துவிட்டதாகச் சொல் லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ உலகம் கிறிஸ்துவின் வருகையின்மேல் அன்புபாராட்டாமல் இவ்வுலகில் நிலையாகத் தங்கிவிட்டது (கான்ஸ்டான்டைன் மற்றும் அவனுக்குப் பிறகு தொடர்ந்து வந்தவர் களுக்குக் கீழாக), சபையின் ஒழுக்கம் வீழ்ச்சிய

டைந்து போயிற்று. இன்றைய நாளிலும் அது போலவே காணப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தீர்க்கதரிசன வசனம் பெற்ற எழுச்சி இப்பொழுது பல கூட்டங்களில் மறைந்து கொண்டிருக்கிறது. சில சபைகளில் கட்டுப்பாடற்ற முறையில் வாழும் வாழ்க்கை, கிறிஸ்தவ காலம் முழுவதற்கும் பேதுருவின் உயிரூட்டமுள்ள கடிதம் தேவை என்பதை வெளிப்படுத்துகிறது.

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (1:1-2)

2. உறுதியான கிறிஸ்தவ நற்குணத்தில் வளருவதற்கான அழைப்பு (1:3-21)

3. கள்ளப்போதகர்களின் எண்ணிக்கை அதிகமாவது முன்னுரைக்கப்படுதல் (அதி. 2)

4. ஏளனஞ் செய்வோர் பெருகுவார்கள் என்பதுபற்றி முன்னுரைத்தல் (அதி. 3).

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	கிறிஸ்தவ நற்குணம்		கள்ளப்போதகளைக் குறித்த எச்சரிப்பு			கிறிஸ்துவின் வருகையை முன்னுரைத்தல்	
காலம்	கி. பி. 67-68						
தலைப்பு	பரிசுத்தம்		விசுவாச துரோகம்			நம்பிக்கை	
	மெய்யான தீர்க்கதரிசனம்		கள்ளப் போதகர்கள்			கர்த்தருடைய நாளை அறிவித்தல்	
பகுப்பு	கிறிஸ்துவில் வளருதல்	கிறிஸ்துவில் உறுதியாகுதல்	ஆபத்து	அழிவு	கள்ளப் போதகர்	இறுதி நாட்களில் ஏளனம்	கர்த்தருடைய நாள்
வசனம்	1:1-14	1:15-21	2:1-3	2:4-9	2:10-22	3:1-7	3:8-18
இடம்	ரோம் நகராயிருக்கலாம்						

1. வாழ்த்துரை [1:1-2]

1:1 சீமோன் பேதுரு தன்னை **இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரன்** என்றும் **அப்போஸ்தலன்** என்றும் அறிமுகப்படுத்துகிறார். அவருடைய எளிமை மற்றும் தாழ்மை ஆகியவற்றால் நாம் உடனடியாக ஈர்க்கப்படுகிறோம். அவருடைய சொந்த விருப்பத்தேர்வினால் அடிமையாக விளங்கினார்; தேவனுடைய நியமனத்தால் **அப்போஸ்தலன்** ஆனார். பகட்டான பட்டங்களையோ, பதவிகளைக் குறிக்கும் பெயர்களையோ அவர் தனக்குச் சூட்டிக்கொள்ளவில்லை. உயிர்த்தெழுந்த இரட்சகருக்காக ஊழியம் செய்வதற்கான கடமையை எண்ணிய பேதுரு, அதை மட்டுமே இங்கு அறிவிக்கிறார்.

பேதுருவும் அவருடைய உடன் ஊழியர்களும் எத்தகைய **அருமையான விசுவாசத்தைப்** பெற்றிருந்தார்களோ அதே விசுவாசத்தை, இந்த மடல் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்களும் **பெற்றிருந்தார்கள்** என்ற குறிப்பு மட்டுமே அவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பிலிருந்து, இம்மடலைப் பெற்றவர்கள் புறவின விசுவாசிகள் என்று குறிப்பாய் உணரமுடியும்; இங்கு உரைக்கப்பட்டுள்ள கருத்து என்னவெனில், யூத விசுவாசிகள் எத்தகைய விசுவாசத்தைப் பெற்றார்களோ அதே வகையான விசுவாசத்தைப் புறவின விசுவாசிகளும் பெற்றார்கள் என்பதே. அவர்களுடைய விசுவாசத்தில் ஏதொரு குறைபாடும் இல்லை. தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்பட்ட யாவரும் யூதராயினும் புறவினத்தாராயினும், ஆண்களாயினும் பெண்களாயினும், அடிமைகளாயினும் சுயாதீனராயினும் எவ்வித வேறுபாடுமின்றி அவருடைய முன்னிலையில் ஒரேவிதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கிறிஸ்தவ விசுவாசத்தை அவர்கள் ஏற்றுக் கொண்ட தருணத்தில் அவர்கள் பெற்ற அனைத்தும் ஒன்று சேர்ந்ததுதான் விசுவாசம் என்பதன் பொருளாகும். இந்த **விசுவாசமானது நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால்** பெறப்பட்டது என்று அவர் தொடர்ந்து விவரிக்கிறார். யாரெல்லாம் கர்த்தராகிய **இயேசுவை** விசுவாசிக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் சரிசமமான தகுநிலையைத் தருகிற **விசுவாசத்தைக்** கொடுப்பதே **தேவனுடைய** நீதி என்பது இதன் பொருள் என்கிறார் அவர். கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை பாவிகளுக்கு அவர்கள் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக தேவன் கிருபையைக் காட்டுவதற்குரிய நீதியான காரணத்தைக் கொண்டிருக்கின்றன. பாவக்கடனானது முழுவதுமாகச் செலுத்திக் தீர்க்கப்பட்டுவிட்டது. இப்பொழுது தேவனுடைய குமாரனை விசுவாசிப்பதன் அடிப்படையில் துன்மார்க்கரான பாவியை, அவரால் நீதிமானாக்க முடியும்.

நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் பதவிப் பெயர், கர்த்தராகிய இயேசுவின் முழுநிறைவான தெய்வீகத்தைக் குறிக்கும் பல புதிய ஏற்பாட்டுப் பகுதிகளில் ஒன்றாகும். அவர் தேவன் இல்லையென்றால் இந்தச் சொற்களுக்கு ஏதாரு பொருளும் இல்லை.

1:2 தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் இம்மடலின் வாசகர்களுக்குக் **கிருபையும் சமாதானமும்** பெருக வேண்டும் என்று அப்போஸ்தலன் மிகவுயர்ந்த ஜெபத்தை ஏறெடுக்கிறார். அவர்களுடைய அனுதின வாழ்வில் நிலைநாட்டி வழி நடத்துகிறதும் ஆற்றல் அளிக்கிறதுமான தேவனுடைய **கிருபையினால்** அவர்கள் இந்த **அறிவைப்** பெற வேண்டும் என்று அவர் வேண்டுகிறார். எல்லா அறிவுக்கும் அப்பாற்பட்ட தேவனுடைய **சமாதானத்தால்** அவர்களுடைய இருதயங்கள் காக்கப்படவேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆனால் இது கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கப்படக்கூடாது! இந்த ஆசிர்வாதங்கள், சிறிது சிறிதாக அல்ல, பல மடங்கு அளவில் பெருக வேண்டுமென்றே அவர் வாஞ்சிக்கிறார்.

இந்த ஆசிர்வாதங்களை எவ்விதமாகப் பெருகச் செய்ய முடியும்? தேவனை நாம் சிறப்பான முறையில் அறிவதன் மூலம், நாம் அதிகமாக அவருடைய **கிருபையையும் சமாதானத்தையும்** அனுபவிக்கிறவர்களாக இருப்போம். மகா உன்னதமானவருடைய மறைவிடத்திற்கு நாம் எப்பொழுதாவது செல்வதற்குப் பதிலாக, அங்கேயே குடியிருப்போமென்றால், நாம் சிறப்பானதைச் செய்கிறவர்களாகக் காணப்படுவோம். சுற்றுப்புறத்தில் வசிக்கிறவர்களைவிட, பரிசுத்த ஸ்தலத்தில் வசிக்கிறவர்கள் தேவனுடைய கிருபை மற்றும் சமாதானம் ஆகியவற்றின் இரகசியத்தைக் கண்டடைவார்கள்.

2. உறுதியான கிறிஸ்தவ நற்குணத்தில் வளருவதற்கான அழைப்பு [1:3-21]

1:3 நாம் இவ்வுலக வாழ்க்கையில் வீழ்ந்து போகாமல் இருப்பது எப்படி என்றும், அடுத்த

உலகத்திற்குள் வெற்றிகரமாக உட்புகுவது எப்படி என்றும் இப்பகுதி கூறுவதால், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இது மிக அதிகமான அளவிற்கு ஆர்வத்தை உண்டுபண்ணக் கூடியதாக இருக்க வேண்டும்.

முதலாவதாக, நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்தராக வாழ்வதற்கான முழு முன்னேற்பாட்டையும் தேவன் செய்திருப்பதாக இப்பகுதி நமக்கு உறுதியளிக்கிறது. அந்த முன்னேற்பாடு அவருடைய **வல்லமைக்கு** அடையாளமாயிருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது: **ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளியிருக்கிறது.** அதன் வரிசை முறை - முதலாவது **ஜீவன்**, அடுத்தது **தேவ பக்தி**. பாவத்தினுடைய தண்டனையிலிருந்தும், அதனுடைய அதிகாரத்திலிருந்தும் அழிவிலிருந்தும் தீட்டுப்படுவதிலிருந்தும் நம்மைக் காப்பாற்றுவதற்குரிய தேவ வல்லமையாக நற்செய்தி விளங்குகிறது.

ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவும் என்பதில், கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியம், பரிசுத்த ஆவியானவரின் ஊழியம், நமது நிமித்தம் தேவ தூதர்கள் கூட்டங்கள் ஆற்றுகிற செயல்கள், நாம் மனமாற்றம் அடைகின்ற தருணத்தில் பெறுகின்ற புதிய வாழ்வு, தேவ வார்த்தை கூறும் அறிவுரைகள் அனைத்தும் அடங்கும்.

நம்மை அழைத்தவரை அறிகிற அறிவின் மூலமாகப் பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்கான **வல்லமை** பெறுகிறோம். அவருடைய **திவ்விய வல்லமையானது** எவ்வாறு பரிசுத்தத்திற்கு மூல ஆதாரமாக விளங்குகிறதோ, அதுபோல **அவரை அறிகிற அறிவு** அதற்கு வழிதுறையாக இருக்கிறது. அவரை அறிவது நித்திய ஜீவன் (யோவான் 17:3), அவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைவது பரிசுத்தத்தில் வளர்ச்சியடைவதாகும். அவரை எவ்வளவாக நாம் அறிகிறோமோ, அவ்வளவாக நாம் அவரைப் போலாவோம்.

நாம் பெற்றிருக்கிற அழைப்பு பேதுருவின் மடலில் தனிச்சிறப்பு வாய்ந்த ஆய்வுப்பொருளாக விளங்குகிறது: (1) அந்தகாரத்தினின்று அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 2:9). (2) பாடு அனுபவிப்பதில் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லும்படியாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 2:21). (3) நாம் தீமைக்குப் பதிலாக ஆசீர்வாதத்தைக் கூறுவதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 3:9). (4) அவருடைய நித்திய மகிமைக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 5:10). (5) அவருடைய **மகிமையினாலும் காருணியத்தினாலும்** நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (2 பேதுரு 1:3). அவருடைய ஆளுமையின் வியத்தகு இயல்புகளை அவர் நமக்கு வெளிப்படுத்தி அவர் **நம்மை அழைத்திருக்கிறார்** என்பதே இந்தக் கடைசிக் குறிப்பின் பொருளாகும். தர்சு பட்டணத்து சவுல் தமஸ்குப் பெருஞ்சாலையில் தேவனுடைய மகிமையைக் கண்டபோது அழைக்கப்பட்டார். "நான் அவருடைய முகத்தை நோக்கிப் பார்த்தேன், பின்னர் அவரைப் போல் அல்லாத ஏதொன்றுக்கும் என்றென்றைக்குமாகப் பயனற்றவனாக்கப்பட்டேன்" என்று ஒரு பிற்காலத்துச் சீடர் சான்று பகர்ந்தார். அவருடைய **மகிமையினாலும்** மேதகைமையினாலும் அவர் **அழைக்கப்பட்டார்.**

1:4 பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வதற்காக தேவனுடைய வல்லமை தந்தருளியுள்ள "யாவற்றிலும்" **மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும்** அடங்கும். திருமறையில் 30000 வாக்குறுதிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. "வாழ்க்கைப் பாதையில் மிக நெருக்கமாக தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தெளிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அவற்றில் ஒன்றை மிதிக்காமல் ஓரடி எடுத்து வைப்பதும் இயலாத செயல்" என்று ஒருமுறை திருவாளர் ஜான் பன்யன் கூறினார்.

பேதுரு தனது மடல்களில் கூறியுள்ள ஏழு அருமையான காரியங்களில், "தேவனுடைய **வாக்குத்தத்தங்கள்"** கடைசியாகும். நம்முடைய விசுவாசம் பொன்னைக் காட்டிலும் அதிக விலையேறப்பெற்றது (1 பேதுரு 1:7). ஜீவனுள்ள கல்லாகிய கிறிஸ்து தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவராயிருக்கிறார் (1 பேதுரு 2:4). அவர் மூலைக்கல் என்னும் நிலையிலும் விலையேறப் பெற்றவராயிருக்கிறார் (1 பேதுரு 2:6). விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் விலையேறப் பெற்றவர் (1 பேதுரு 2:7). அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது (1 பேதுரு 3:4). இறுதியாக, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அருமையானவை அல்லது விலையேறப் பெற்றவை (2 பேதுரு 1:4).

பரிசுத்தமான வாழ்க்கைக்குத் தேவையான சில வாக்குறுதிகளைக் குறித்துச் சிந்திக்கலாம்.

(1) பாவத்தின் ஆளுகையிலிருந்து விடுதலை (ரோமர் 6:14). (2) போதுமான கிருபை (2 கொரி. 12:9). (3) அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப் படிவதற்கான பெலன் (பிலி. 4:13). (4) பிசாசின் மேல் வெற்றி (யாக். 4:7). (5) சோதனையிலிருந்து தப்பிக்க வழி (1 கொரி. 10:13). (6) நம்முடைய பாவங்களை அறிக்கையிடும்போது அருளப்படு கின்ற மன்னிப்பு (1 யோவான் 1:9). - அதை மறந்து விடுதலும் கூட (எரே. 31:34). (7) நாம் அழைக் கும்போது அதற்கு விடையளித்தல் (சங். 50:15).

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் **அருமை யானவையும்** மிக **மேன்மையானவையுமாக** இருக்கின்றன என்று பேதுரு கூறுவதில் வியப்பு ஒன்றும் இல்லை. இந்த வாக்குத்தத்தங்கள், **இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக் குத் தப்புவதற்குத்** தேவையான ஆற்றலைத் தரு கின்றன. சோதனையை எதிர்த்து நிற்கத் தேவை யான எல்லாவற்றையும் தேவன் தருவதாக வாக் குரைத்துள்ளார். பேரார்வத்துடன் கூடிய வேட்கை எழுகின்ற போது நாம் வாக்குறுதிகளை உரிமை கோர வேண்டும். அவை உலகத்தின் கேடுகளுக்கு நாம் தப்புவதற்கான ஆற்றலைத் தரும் - உலகத் தின் சிற்றின்பப் பாவம், அதனுடைய குடிவெறி, அதனுடைய இழிதகைமை, அதனுடைய பய னற்ற தன்மை, அதனுடைய நயவஞ்சகம், அதனு டைய சண்டை சச்சரவுகள்.

இதே வாக்குறுதிகளால் நாம் **திவ்வியசுபா வத்துக்குப்** பங்குள்ளவர்களாக மாறுவோம் என் பது ஆக்கபூர்வமான செயல்பாடாகும். இச்செயல் முதன்மையாக நாம் மனந்திரும்புகிற தருணத் தில் நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து, தேவன் வாக்குறுதி செய்தவற்றின் நடைமுறை அனுபவத் தின் மூலமாக வாழ்கிறபோது, நாம் மென்மேலும் அவருடைய சாயலுக்கு ஒப்பானவர்களாக மாற்ற மடைவோம். எடுத்துக்காட்டாக, நாம் அவரைக் குறித்து அதிகமாகச் சிந்திப்போமானால், அவரு டைய சாயலை அதிகமாகப் பெற்று அவரைப் போலாவோம் (2 கொரி. 3:18). நாம் இந்த வாக் குறுதிகளை உண்மையானவையாக விளங்கச் செய்ய திருமறையைப் படிக்க வேண்டும், அதில் கிறிஸ்து வெளிப்பட்டிருக்கிற வண்ணம் அவரைக் கற்றிட வேண்டும், அவரைப் பின்பற்ற வேண்டும். நாம் இவற்றைச் செய்வோமானால், பரிசுத்த ஆவியானவர் தாமே, நம்மை ஒருபடி நிலை மகி மையிலிருந்து அடுத்த படிநிலைக்கு உயர்த்தி அவரைப் போலாக்குவார்.

1:5 மூன்று மற்றும் நான்கு ஆகிய வசனங்கள் திவ்விய வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற் றையும் தேவன் தந்திருக்கிறார் என்பதைக் காட்டு கின்றன. அவர் அவற்றை உடையவராயிருப்பதால், நாமும் அவற்றை நமக்குள்ளாக வளர்க்கக் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். நம் முடைய சொந்த விருப்பமின்றியும், நம்முடைய ஈடுபாடு இன்றியும் நம்மை தேவன் பரிசுத்தமாக்க மாட்டார். நம்முடைய பங்காக விருப்பமும், தீர் மான மும், ஒழுங்கும் இருக்கவேண்டும்.

கிறிஸ்தவ நற்குண வளர்ச்சியில், தனது வாச கர்களிடம் விசுவாசம் ஏற்கனவே இருப்பதாக ஊகித்தவராகவே பேதுரு இதனை எழுதுகிறார். ஏற்கனவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத் தில் இரட்சிப்புக்கேதுவான **விசுவாசத்தை** வைத் துக் கிறிஸ்தவர்களாக மாற்றம் பெற்றவர்களுக்கே அவர் இம்மடலை எழுதியிருக்கிறார். ஆகவே அவர்கள் விசுவாசத்தைப் பெறவேண்டும் என்று சொல்லாமல், அவர்களிடத்தில் ஏற்கனவே விசு வாசம் இருக்கிறது என்னும் அடிப்படையிலேயே பேதுரு எழுதுகிறார்.

அவர்களுடைய தேவை என்னவென்றால், விசுவாசமானது பரிசுத்தத்திற்கான ஏழு மூலக் கூறுகளால் நிரப்பப்படவேண்டும், ஒன்றன்பின் ஒன்றாக அல்ல, மாறாக எல்லா நற்பண்புகளை யும் எல்லா நேரங்களிலும் வெளிப்படுத்திக் காண் பிக்க வேண்டும்.

டாம் ஆல்சன் என்பவருடைய தந்தை, தனது பிள்ளைகளுக்கு இப்பகுதியை இவ்விதமாக வாசித்துக் காண்பித்தாராம்:

> உங்கள் விசுவாசத்தோடு தாவீதின் தைரியத் தையும், தாவீதின் தைரியத்தோடு சாலொமோனின் ஞானத்தையும், சாலொமோனின் ஞானத்தோடு யோபுவின் பொறுமையையும், யோபுவின் பொறுமையோடு தானியேலின் தேவபக்தியை யும், தானியேலின் தேவபக்தியோடு யோனத் தானின் சகோதர சிநேகத்தையும், யோனத் தானின் சகோதர சிநேகத்தோடு யோவானின் அன்பையும் கூட்டிவழங்குங்கள்.[2]

திருவாளர் லென்ஸ்கி விவரிக்கிறார்:

> இவ்வேழு குணநலன்களும் கள்ளத்தீர்க்க தரிசிகளைப் (2:1) பற்றிய குறிப்புகளோடும், விசுவாசிகள் போல நடந்துகொள்ளும் அவர் களுடைய போலித்தன்மையோடும் தொடர்பு படுத்தி எழுதப்பட்டுள்ளன. புகழ்ச்சிக்குப்

> பதிலாக அவமானத்தையும், ஞானத்திற்குப் பதி லாகக் குருட்டுத் தன்மையையும், இச்சையடக் கத்திற்குப் பதிலாக ஒழுக்கக் கேட்டையும், நன் மையில் பொறுமையோடிருப்பதற்குப் பதிலாகத் தீமையில் பொறுமையையும், தேவபக்திக்குப் பதிலாக துன்மார்க்கத்தையும், சகோதர சிநே கத்திற்குப் பதிலாக தேவனுடைய மக்களிடத்தில் வெறுப்பையும், மெய்யான அன்பிற்குப் பதிலாக அன்பே இல்லாத கொடூரமான தன்மையுமே அவர்களிடம் காணப்படுகின்றன.[3]

முதலாவது பண்பு நல்லொழுக்கம் ஆகும் (தமிழில் தைரியம் என்று மொழிபெயர்க்கப்பட் டுள்ளது). இதனுடைய பொருள் பக்தி, நற்குணம் நிறைந்த வாழ்க்கை அல்லது ஒழுக்க மேம்பாடு எனலாம். இவையாவும் பின்னர் சொல்லப்பட் டுள்ள தேவபக்தி என்னும் பண்பில் இடம் பெற் றுள்ளன. மேலும், பகைமையுணர்ச்சி கொண்ட உலகத்தில் ஆவிக்குரிய தைரியத்தோடு நடந்து கொள்ளுதல், சரியானது எதுவோ அதற்காக உறுதியோடு நிற்பது ஆகிய அர்த்தங்களையும் இச்சொல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

இரத்த சாட்சிகளாக மரணமடைந்தவர்களு டைய துணிவைக் குறித்து நாம் எண்ணிப் பார்க் கிறோம். ஆர்ச் பிஷப் க்ரான்மர் தனது விசு வாசத்தை மறுத்துக் கையெழுத்திட வேண்டும் அல்லது கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டு எரிக்கப் படுவார் என்னும் கட்டளை பிறந்தது. முதலில் அவர் கையெழுத்திட மறுத்துரைத்தார், மிகுதி யான மனவழுத்தத்தின் காரணமாக அவருடைய வலதுகரம் பின்னர் கையெழுத்திட்டது. பிறகு தனது தவறை உணர்ந்த க்ராம்னர், கொலையாளிகளி டம் தீயை மூட்டும்படி கூறினார். அவருடைய விருப் பத்திற்கிணங்க, அவருடைய கரங்கள் கட்டப்பட வில்லை. அதன் பிறகு அவர் தனது வலது கரத் தைத் தீயில் வைத்து, "இந்தக் கரம்தான் அதனை எழுதியது, இதுதான் முதலாவது தண்டனைய டைய வேண்டும். இந்தக் கரம்தான் குற்றம் இழைத்தது, தகுதியற்ற கரமே அழிந்து போ!" என்றார்.[4]

தைரியமானது குறிப்பாக சத்தியத்தைக் குறித்த ஞானத்தால் நிறைவுசெய்யப்பட வேண் டும். தேவனுடைய திருவார்த்தையை நாம் கற்க வேண்டும், அதனுடைய புனிதமான கட்டளை களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது.

> நாதரின் இன்ப சத்தமும்
> வேதத்தில் கேட்டு நித்தமும்
> ஆத்தும நன்மை நாடுவேன்,
> நீதியின் பாதை செல்லுவேன்.

திருமறையில் பெற்றிருக்கிற அனுபவ அறி வின் மூலமாக, "கிறிஸ்தவத்தின் விவரங்களில் நடைமுறைச் செயல்திறம்" என்று எர்ட்மேன் கூறும் திறமையில் வளர்ச்சி அடைகிறோம்.

1:6 ஒழுங்கான வாழ்க்கையை வாழும்படியே, தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் அழைக் கிறார். தேவனுடைய ஆவியானவருடைய செயற் பாட்டிற்குக் கீழடங்கிய சித்தத்தில் கட்டுப்படுத்தும் ஆற்றல் என்று இதனை ஒருவர் வரையறுத்துக் கூறுகிறார். ஜெபத்தில் ஒழுங்கு இருக்க வேண் டும், திருமறையைப் படிப்பதில் ஒழுங்கு இருக்க வேண்டும், சரீர வேட்கைகளைக் கட்டுப்படுத்து வதில் ஒழுங்கு இருக்கவேண்டும், தியானமுள்ள வாழ்க்கையில் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அத்தகைய இச்சையடக்கத்தைப் பவுல் கைக் கொண்டு வந்தார். "ஆதலால், நான் நிச்சய மில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிற வனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாத வனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (1 கொரி. 9:26,27).

ஔடுபான் என்பார் ஓர் உயிரின ஆராய்ச்சி யாளர். பறவைகளின் உலகத்தைக் குறித்துக் கற் றுக்கொள்ளும்படி அவர் நீண்ட நேரம் வேதனை களைப் பொறுத்துக்கொள்ளவும் ஆயத்தமா யிருந்தார். அவரைக் குறித்து இராபர்ட் G. லீ என்பார் கூறுகிறார்:

> தன்னுடைய வேலையில் வெற்றிபெறுவதோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அவர் தனது சரீர வசதிகளை ஒன்றுமற்றதாகவே கருதினார். ஒரு பறவையைப் பற்றிய புதியதோர் உண்மையை அவர் கண்டறிவதற்காகவே இருளிலும் பனி யிலும் பலமணிநேரம் ஆடாமல் அசையாமல் பதுங்கியிருந்து, அவ்வுண்மையை அறிந்த போது, அது தனக்குக் கிடைத்த வெற்றி என்றே கருதினார். அதற்காக அவர் தேங்கி நின்ற நீரில் கழுத்தளவு ஆழத்தில் ஆடாமல் அசையாமல் நெடுநேரம் நிற்க வேண்டியதாயிற்று. நச்சுப் பாம்புகளும் முதலைகளும் அவருடைய

முகத்தின் அருகே அங்கும் இங்குமாக நீந்திச் சென்றதால் அவரால் ஒழுங்காக மூச்சும் விடமுடியவில்லை.

"அது எனக்கு இன்பமான அனுபவம் இல்லை, ஆயினும் என்ன? நான் அந்த பறவையின் படத்தைப் பிடித்துவிட்டேன்" என்று அவர் கூறிய போது அவருடைய முகம் பிரகாசித்தது. அந்தப் பறவையின் படத்திற்காக அவர் அந்தச் சூழ் நிலையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.[5]

பிறருடைய எடுத்துக்காட்டுகள், அழிந்து போகிற உலகத்தின் உடனடித் தேவைகள் மற்றும் நம்முடைய சாட்சியைச் சேதப்படுத்துவதால் ஏற்படுகிற தனிப்பட்ட இன்னல்கள் ஆகியவற்றின் காரணமாக, கிறிஸ்து நம்முடைய வாழ்க்கையில் சிறப்பானதைப் பெற்றுக்கொள்ளும்படி நாம் நம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

இச்சையடக்கம் பொறுமையால் நிறைவு செய்யப்பட வேண்டும், அதாவது, உபத்திரவங்களையும் இன்னல்களையும் பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும். பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும் என்னும் அறைகூவலோடு கூடிய வாழ்க்கையே கிறிஸ்தவ வாழ்க்கை என்று நாம் இடைவிடாமல் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். மகிமையின் எழுச்சியோடு தொடங்கினால் மட்டும் போதாது, தொல்லைகள் பெருகுகின்றபோதும் நாம் பொறுமையோடு நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்தவமானது முடிவுறா வகையில் மலையுச்சிக்குச் செல்வது போன்ற மேலான அனுபவங்களால் நிறைந்திருக்கும் என்னும் கருத்து முழுவதும் நிறைவேற இயலாத தேயாகும். நாள்தோறும் செய்ய வேண்டிய வேலைகள், சில அற்பமான கடமைகள், சோர்வுண்டாக்கும் சூழ்நிலைகள், கசப்பான துக்கங்கள் மற்றும் தகர்த்து எறியப்பட்ட திட்டங்கள் யாவும் அடங்கியதே கிறிஸ்தவ வாழ்க்கை. நமக்கு எதிராகவே எல்லாம் நடைபெறுகின்றன என்று தோன்றுகிற போதும், எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு தொடர்ந்து முன்னேறிச் செல்லுகிற கலையே **பொறுமை** எனப்படும்.

அடுத்த பண்பு **தேவபக்தி** ஆகும். நம்முடைய வாழ்க்கை எல்லா நிலைகளிலும் நடைமுறைப் பரிசுத்தத்தின் பாதையில் செல்லுவதாக இருப்பதன் காரணமாக அவ்வாழ்க்கை தேவனைப் போன்று இருக்க வேண்டும். விண்ணகத் திருத்தந்தையின் பிள்ளைகளாக நாம் இருக்கிறோம் என்பதைப் பிறர் காணும்படி நம்முடைய நடத்தை தெய்வீகப் பண்புடன் இருக்க வேண்டும்; தேவ குடும்பத்தின் சாயல் தவறற்ற வகையில் நம்மிடம் காணப்பட வேண்டும். "தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தம் உள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1 தீமோ. 4:8) என்று பவுல் நினைவுறுத்துகிறார்.

1:7 சகோதர சிநேகம் நம்மைக் கிறிஸ்துவின் சீடர்கள் என்று சுட்டிக்காட்டுகிறது "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீடர்களென்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:35).

சகோதரரிடத்தில் கொண்டிருக்கும் அன்பு மனுக்குலத்தின் மேல் அன்பு செலுத்தும்படி வழிநடத்தும். இது முதன்மையாக உணர்ச்சிகளால் உண்டாகிறது அல்ல, மாறாக சித்தத்தினால் ஏற்படுகிற செயலாகவே இருக்கிறது. இது எளிதில் உணர்ச்சி வயப்படுவதால் உண்டாகிற அனுபவம் அல்ல, மாறாக இது கீழ்ப்படிய வேண்டிய கட்டளையாக விளங்குகிறது. புதிய ஏற்பாட்டின் பொருளில் அன்பு தெய்வீகமானது. ஓர் அவிசுவாசி திருமறை கட்டளையிடுவதுபோல அன்புகூர இயலாது, ஏனெனில் அவனிடத்தில் தெய்வீக வாழ்வு இல்லை. பகைவனிடத்தில் அன்புகூர வேண்டுமானால் அதற்குத் தெய்வீக வாழ்வு தேவை. அதுபோலவே நம்மைக் கொலை செய்பவர்களுக்காக மன்றாடுவதற்கும் தெய்வீக வாழ்வு தேவை. கொடுப்பதன் வாயிலாக அன்பு தன்னை வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, "... அவரைத் தந்தருளி தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). "கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே. 5:25/27). நம்முடைய நேரத்தையும், திறமைகளையும், சொத்துகளையும், நம்முடைய வாழ்வையும் பிறருக்காக அளிப்பதன் வாயிலாக நம்முடைய அன்பை நம்மால் வெளிப்படுத்திக்காட்ட முடியும்.

ஈகுவேடார் நாட்டிற்குத் திருப்பணி ஊழியர்களாகச் சென்று அங்கிருந்த ஔகா இந்தியர்களால் கொலைசெய்யப்பட்ட ஐவரில் ஒருவரான எட் மாக்குலி என்பாரின் தந்தை T. E. மாக்குலி. நாங்கள் இருவரும் ஒருநாள் முழங்காலில் நின்றோம், அப்பொழுது அவர், "கர்த்தரே, எங்களுடைய பிள்ளைகளைக் கொன்ற மனிதர்களை இரட்சிக்கப்பட்டவர்களாக நான் கண்டு, அவர்களை அரவணைத்து, அவர்கள் கிறிஸ்து

வினிடத்தில் அன்புபாராட்டுகிற காரணத்தால் நானும் அவர்களிடத்தில் அன்புபாராட்டுகிறேன் என்று சொல்லும் நாள்மட்டும் என்னை உயிரோடி ருக்கச் செய்யும்" என்று விண்ணப்பித்தார். இதுவே கிறிஸ்தவ அன்பு. உங்களுடைய மகனைக் கொலைசெய்த மனிதர்களுக்காக இதுபோல ஜெபம் செய்வீர்களானால் அதுவே கிறிஸ்தவ அன்பு.

இந்த ஏழு நற்பண்புகளும் கிறிஸ்தவ நடத் தையின் முழுச்சுற்றாக விளங்குகின்றன.

1:8 சீடத்துவத்தில் முன்னேற்றம் அல்லது பின்னடைவு காணப்படும், ஒரே நிலையில் இருக்க முடியாது. முன்னேறிச் செல்வதில் ஆற்றலும் பாதுகாப்பும் உள்ளன, பின்னடைவில் ஆபத்தும் தோல்வியும் உள்ளன.

கிறிஸ்தவ நடத்தையில் வளர்ச்சி நிலைத் திராவிடில், அது வீணானதும், கனியற்றதும், பார்வையற்றதும், குறுகிய பார்வையுடையது மான நிலைக்குக் கொண்டுபோய்விடும்.

வீணான தன்மை. தேவனோடு ஐக்கியம் கொண்டவர்களாக வாழ்கிற வாழ்க்கையே ஆற் றல் மிக்கதாயிருக்கும். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் வீணான செயல்களை அகற்றி, கூடுதலான பயனை விளைவிக்கிறது. அவ்வாறு இல்லையெனில் அது நிழலோடு சண்டையிடுவ தாகவும், நூலில்லாமல் தைப்பதாகவும் காணப் படும்.

கனியற்ற தன்மை. கர்த்தராகிய இயசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவு குறிப்பிடத்தக்க அளவு ஒருவருக்கு இருக்கலாம், ஆயினும் அவர் அந்த அறிவில் கனியற்றவராக இருக்க முடியும். நாம் அறிந்தவற்றை நம்முடைய வாழ்க்கையில் கைகொள்ளவில்லை என்றால் நாம் கனியற்றவர் களாக விளங்குவோம், இதனைத் தவிர்க்க முடி யாது. ஒருபுறம் நீர் உள்ளே வந்துகொண்டே இருக்கும், மறுபுறம் நீர் வெளியே செல்லுவ தில்லை, அத்தகைய நிலையில் அது சாவுக்கட லாக இருக்கிறது. மேலும் ஆவிக்குரிய நிலையில் அத்தகைய நிலை உற்பத்தியைக் கொன்று போடுகிறது.

1:9 *கிட்டப்பார்வை.* குருட்டுத் தன்மையைப் பற்றிச் சொல்லும்போது, பழுதான பார்வையில் வெவ்வேறு அளவுகள் உள்ளன என்றே குறிப்பிடு கிறார்கள். இங்கு எதிர்காலத்தைக் குறித்துக் கருத்தற்றவராக, தற்காலத்திற்கென்று இவ்வுலக வாழ்வை மட்டுமே எண்ணியவராக ஒருவர் வாழ்வதையே கிட்டப்பார்வை என்னும் சொல் குறிப் பிடுகிறது. அந்த மனிதர் உலகப் பொருட்களுக்காக வாழ்வதில் முழு ஈடுபாடு கொண்டவராக ஆவிக் குரிய காரியங்களை அறவே புறக்கணித்து வாழ் கிறார்.

குருட்டுத்தன்மை. 5 முதல் 7 வரையிலான வசனங்களில் சொல்லப்பட்டுள்ள ஏழு குணப் பண்புகளையும் கொண்டிராதவர் குருடராயிருக் கிறார். வாழ்க்கையின் மையப்பொருள் என்ன வென்பதை அவர் அறியாதவராயிருக்கிறார். மெய்யான ஆவிக்குரிய மேன்மைகளைப் புரிந்து கொள்வதில் அவர் குறைவுடையவர். பொய்ம்மை நிறைந்த இருண்ட உலகில் அவர் வாழ்கிறார்.

மறக்கும் தன்மை. இறுதியாக, ஏழு நற்பண்பு களிலும் குறைவுடையவர் **தான் முன்செய்த பாவங் களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து** வாழ்கிறார். அவர் பெற்ற மீட்பைக் குறித்த சத்தி யம், அவர்மீது கொண்டிருந்த பிடிப்பை இழந்து விட்டது. அவர் எந்த வழியிலிருந்து மீட்கப்பட் டாரோ அந்த வழியை நோக்கியே மீண்டும் செல்லு கிறார். தேவகுமாரன் மரணமடைவதற்குக் காரண மாயிருந்த பாவங்களோடு அவர் விளையாடிக் கொண்டிருக்கிறார்.

1:10 ஆகவே பேதுரு தமது வாசகர்கள் தங்க ளுடைய **அழைப்பையும் தெரிந்துகொள்ளு தலையும்** உறுதிப்படுத்தவேண்டும் என்று அறி வுறுத்துகிறார். இவை இரட்சிப்பைக் குறித்த தேவதிட்டத்தின் இரண்டு தோற்றங்களாகும். தேவன் தம்முடைய இறையாண்மையில் *நித்தி யத்தில்* தனிப்பட்ட நபர்களைத் தமக்குச் சொந்த மாகத் தெரிந்துகொண்ட செயலே **தெரிந்து கொள்ளுதல்** ஆகும். அந்தத் தெரிந்தெடுப் பானது வெளியரங்கமாகத் தெரியும்படி ஏற்ற காலத்தில் வெளிப்படுத்தப்பட்டதே **அழைப்பு** என்னும் செயலாகும். நம்முடைய **தெரிந்து கொள்ளுதல்** உலகத்தோற்றத்துக்கு முன்னரே நடைபெற்றது; நம்முடைய **அழைப்பு** நாம் மனந் திரும்பிய போது நிகழ்ந்தது. காலவரிசையில் முதலாவது **தெரிந்துகொள்ளுதல்**, அதன்பிறகு அழைப்பு. ஆனால், மனித அனுபவத்தின்படி காண்கையில், அவருடைய அழைப்பையே முதலாவது அறிகிறோம், அதன் பிறகு நாம் நித் தியத்தில் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் என்பதை அறிகிறோம்.

நம்முடைய **அழைப்பையும் தெரிந்துகொள் ளுதலையும்,** அவை ஏற்கனவே இருக்கிற நிலைக்கு அதிகமாக நம்மால் **உறுதிசெய்ய**

முடியாது; தேவனுடைய நித்திய நோக்கங்கள் ஒரு போதும் குறுக்கிட இயலாதவை. ஆனால் நாம் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக வளர்ச்சியடை வதன் மூலமாக நம்மால் அவற்றை மெய்ப்பிக்க முடியும். ஆவியின் கனியை வெளிப்படுத்துவதன் மூலமாக, நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்பதற்குத் தெளிவான சான்றுகளை வழங்க முடியும். பரிசுத்த வாழ்க்கை நம்முடைய இரட்சிப் பின் உண்மைத் தன்மையை மெய்ப்பிக்கிறது.

பரிசுத்தமாக வாழ்கிற வாழ்க்கை இடறி விழாத படி நம்மைப் பாதுகாக்கிறது. நித்திய அழிவுக்குள் விழுந்து விடுவோம் என்பதல்ல கேள்வி; அதிலி ருந்து கிறிஸ்துவின் செயல்பாடு நம்மை மீட்டுக் கொள்கிறது. மாறாக பாவத்திலும், அவமானத்தி லும் அல்லது பயனற்ற நிலையிலும் நாம் வீழ்ந்து போகக்கூடிய நிலையையே இது குறிக்கிறது. தெய்வீகக் காரியங்களில் நாம் வளர்ச்சியடை யத் தவறுவோமென்றால், நம்முடைய வாழ்க்கை சேதமடையக் கூடிய ஆபத்தில் இருக்கிறது என் பது பொருளாகும். மாறாக, நாம் ஆவியில் நடப் போமென்றால், அவருடைய திருப்பணியைச் செய்வதிலிருந்து தகுதியற்றவர்களாகப் போய் விடமாட்டோம். தேவனுக்கென்று முன்னேறி வருகிற கிறிஸ்தவரை அவர் காத்துக்கொள்வார். ஆவிக்குரிய செயலற்ற நிலையிலும் குருட்டுத் தன்மையிலுமே ஆபத்து மறைந்து கிடக்கிறது.

1:11 இடைவிடாத ஆவிக்குரிய வளர்ச்சியில் பாதுகாப்பு இருப்பது மட்டுமின்றி, **நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து வினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும்** வளம் மிக்க வாக்குறுதியும் இருக்கிறது. நாம் அந்த ராஜ்யத்திற்குள் நுழையவிருக்கும் *செய்தியைப்* பேதுரு இங்கு குறிப்பிடவில்லை, மாறாக அந்த நுழைவு *எத்தகையது* என்பதையே குறிப்பிடு கிறார். விண்ணக அரசிற்குள் நுழைவதற்கான ஒரே நிபந்தனை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினிடத்தில் வைக்கும் விசுவாசம் மட்டுமே ஆகும். ஆனால் சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் மிகத் தாராளமான நுழைவு கிடைக்கும். பரிசு களில் வெவ்வேறு தரம் உள்ளது. ஒவ்வொரு வரும் இரட்சகருக்கு ஒப்பான சாயலை எந்த அளவிற்குப் பெற்றிருக்கிறாரோ அதனையே அவர் பெறும் பரிசு சார்ந்திருக்கிறது.

1:12 இந்தப் பொருள் பற்றிய, தற்போதைய மற்றும் நித்திய உட்பொருட்களை எடுத்துரைத்த பேதுரு, கிறிஸ்தவ நடத்தையில் விசுவாசிகள் வளரவேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறித் துத் தொடர்ந்து நினைவூட்டத் தீர்மானிக்கிறார். அதைக் குறித்து அவர்கள் ஏற்கனவே அறிந் திருந்தாலும், அவர்கள் தொடர்ந்து நினைவுபடுத் தப்பட வேண்டியவர்கள் ஆவார்கள். நாமும் அவ் வாறுதான் இருக்கிறோம். நாம் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும் வேற்று சிந்தனை கொண்ட அல்லது மறந்து போகக் கூடிய நேரம் ஏற்படக்கூடிய ஆபத்து எப்பொழுதும் இருக்கிறது. ஆகவே சத்தியமானது இடைவிடாமல் திரும்பத் திரும்பச் சொல்லப்பட வேண்டும்.

1:13 பேதுரு இவ்வுலகில் இருந்தவரை இத னைப் பரிசுத்தவான்களுக்கு அடிக்கடி நினை வூட்டி அவர்களை எழுப்பிவிடுவது அவரது நோக்க மாக இருந்தது மட்டுமின்றி, கடமையாகவும் இருந்தது. அவர் தனது வாழ்வின் கடைசி நாட் களை நெருங்கிக் கொண்டிருந்த போது, அவர் கள் ஆவிக்குரிய நிலையில் மந்தமாகாதபடி தகுதி யுள்ளவர்களாக நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று விரும்பினார்.

1:14 பேதுரு மரணமடைவார் என்பதையும், அவர் எவ்வாறு மரணமடைவார் என்பதையும் கர்த்தர்தாமே அவருக்கு ஏற்கனவே சொல்லிவிட் டார் (யோவான் 21:18,19). அதற்குப் பிறகு பல ஆண்டுகள் கடந்துவிட்டன. வயது முதிர்ந்த நிலையில் இருந்த அப்போஸ்தலன், இயற்கை யாகவே தனது மரணம் நெருங்கிவிட்டது என் பதை அறிந்திருந்தார். இந்த அறிவு, எஞ்சிய வாழ் நாட்களில் தேவனுடைய மக்களின் ஆவிக்குரிய நலனைக் குறித்து அக்கறை செலுத்த வேண்டும் என்று அவர் தீர்மானித்திருந்த முடிவுக்கு ஒரு வகையான ஊக்கத்தைக் கொடுத்தது.

தனது குடியிருப்பைக் களைந்து போடுவது அல்லது, தனது உடலை அல்லது கூடாரத்தைக் கழற்றிவைப்பது என்று அவர் தனது மரணத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஒரு பயணிக்கு அவரது கூடாரம் தற்காலிகக் குடியிருப்பாயிருப்பதுபோல, நாம் பூமியில் நாடோடிகளாக வாழ்கிறபோது நம்முடைய சரீரம் என்னும் அமைப்பு நமது குடி யிருப்பாக இருக்கிறது. மரணத்தின் போது அந்தக் கூடாரம் கலைக்கப்படுகிறது. விசுவாசிகள் வானிற்கு எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தில் அவர்களுடைய சரீரங்கள் மறுரூபமடைந்து மேலே எடுத்துச்செல்லப்படும். மகிமையடைந்த நித்திய நிலையில் அந்தச் சரீரத்தின் தன்மை வீடாகவும் கட்டடமாகவும் வருணிக்கப்பட்டுள் ளது (2 கொரி. 5:1).

தான் மரணமடையப் போகிறதைப் பேதுரு அறிந்திருந்தார் என்னும் உண்மை, கிறிஸ்து தம் முடைய பரிசுத்தவான்களுக்காகத் திடீரென வரப் போகிற நிகழ்ச்சியை மறுத்துரைக்கிறதில்லை. ஆனால் அவ்வாறு சிலர் வாதிடுகிறார்கள். கிறிஸ்து எப்பொழுது வேண்டுமானாலும் வருவார் என்றே மெய்யான சபை எப்பொழுதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. கர்த்தர் மீண்டும் வருகிற போது தான் உயிரோடு இருக்கப்போவதில்லை என்பதைப் பேதுரு ஒரு சிறப்பான வெளிப்பாட்டி னாலே அறிந்திருந்தார்.

1:15 ஆவிக்குரிய முன்னேற்றத்தின் முக்கியத் துவம் இன்னதென்று பரிசுத்தவான்களுக்குத் தனிப்பட்ட முறையில் நினைவுபடுத்த வேண்டும் என்று அப்போஸ்தலன் தீர்மானித்தது மட்டு மின்றி, தனக்குப் பின் நிரந்தரமாக ஒரு நினை வூட்டுதலை எழுத்துவடிவில் விட்டுச் செல்ல வேண்டும் என்றும் எண்ணினார். அவருடைய மடலின் மூலம் விசுவாசிகள் எப்பொழுது வேண்டு மானாலும் இதைக் குறித்து நினைவுபடுத்திக் கொள்ள ஏதுவாகும். இதன் விளைவாக, மனிதர் களுடைய வாழ்க்கைப் பாதைக்குத் தேவையான வெளிச்சத்தைக் கடந்த இருபது நூற்றாண்டுகள் பேதுருவின் மடல்கள் பொழிந்தருளுகின்றன. மேலும் நமது இரட்சகர் வரும்வரை தொடர்ந்து அவை வெளிச்சத்தைத் தரும். மேலும், நற்செய்தி நூலாசிரியர் மாற்குவின் ஆவிக்குரிய வழிகாட்டி யான அப்போஸ்தலன் பேதுரு கண்களால் கண்ட நிகழ்ச்சிகளை நினைவுபடுத்துகிறதாகவே அந்த நற்செய்தி நூல் இருக்கிறது என்று நம்பத்தகுந்த பழங்காலப் பாரம்பரியம் கூறுகிறது.

எழுத்துப் பணியின் முக்கியத்துவம் இங்கு தெளிவாக உரைக்கப்பட்டிருக்கிறது. எழுதப்பட்ட வார்த்தையே நிலைத்திருக்கிறது. ஒரு மனி தனின் எழுத்துப் பணி, அவனுடைய உடல் கல்ல றையில் உறங்கும் போதும் தொடர்ந்து ஊழியம் செய்துகொண்டிருக்கும்.

இங்கு சென்றுபோன பின்பு என்று பேதுரு பயன்படுத்தியுள்ள சொற்றொடரின் மூலமொழிச் சொல்லிலிருந்தே புறப்பாடு என்னும் சொல் பிறந் துள்ளது (exodus). கிறிஸ்துவின் மரணத்தைக் குறிக்கும் வகையில் இதே சொல் லூக்கா 9:31 -இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மரணம் என்பது உளதாம் தன்மையின் முடிவல்ல, மாறாக அது ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லுவதையே குறிக்கிறது.

மரணத்தின் நிழலில் வசிக்கும் மனிதனுக்கு எது முக்கியம் என்பதை இந்த வசனங்கள் காட்டு வதால், இவை நமக்குச் சிறப்பான வகையில் மதிப்புடையவையாக இருக்கின்றன. இவை 8,9,12 மற்றும் 15 ஆகிய வசனங்களில் நான்கு முறை இடம்பெற்றுள்ளன. நித்திய உலகத்தின் எல்லை யோரங்களில் நின்றுகொண்டு பார்க்குமிடத்து, மிகவும் பெரியதும் அடிப்படை உண்மையைச் சார்ந்ததுமான கிறிஸ்தவ விசுவாசம் பெருமளவு மதிப்புடையது என்பது புலப்படும்.

1:16 முதல் அதிகாரத்தின் இறுதி வசனங்கள், கிறிஸ்து மகிமையோடு வருகிற நிகழ்ச்சியின் நிச்சயத்தை விவரிக்கின்றன. முதலாவது பேதுரு அப்போஸ்தலரின் சாட்சியின் நிச்சயத்தைக் குறித்து விவரிக்கிறார், பிறகு தீர்க்கதரிசன வார்த்தையின் நிச்சயத்தை விவரிக்கிறார். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு இரண்டையும் ஒன்றாக இணைப்ப தாகவும், இவ்வாறு இணைந்த சாட்சியைத் தமது வாசகர்கள் பற்றிக்கொள்ள வேண்டுமென்றும் பேதுரு கூறுவதாகவும் இது காணப்படுகிறது. அப் போஸ்தலரின் சாட்சி சத்தியத்தை அடிப்படை யாகக் கொண்டதேயல்லாமல், கட்டுக் கதையைச் சார்ந்ததல்ல என்று பேதுரு இங்கு வலியுறுத்து கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்ல மையையும் வருகையையும் தமது வாசகர்கள் அறிய வேண்டும் என்பதற்காக, அவர்கள் கட்டுக் கதைகளைப் பின்பற்றவில்லை.

கிறிஸ்து மலையின்மேல் மறுரூபமடைந்த நிகழ்ச்சியையே அவர் சான்றாகக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூன்று அப்போஸ்தலருடைய சாட்சியாக இது இருக்கிறது. "வல்லமையில் வருகைபுரிதல்" அல்லது "வல்லமையான வருகை" என்பது வல்ல மையும் வருகையும் என்று இலக்கிய நயத்துடன்[6] இங்கு சொல்லப்பட்டுள்ளது. இப்புவியில் ஆட்சி புரியும்படி கிறிஸ்து வருகைபுரியவிருப்பதன் வெள்ளோட்டமாகவே மறுரூப நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சி குறித்து மத்தேயு எழுதிய பகுதியில் இவ்வுண்மை மிகத்தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. "இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனித குமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு மத்தேயு 16:28 -இல் கூறினார். அடுத்து வரும் வசனங்கள் (17:1-8) மறுரூபக் காட் சியை விவரிக்கின்றன. ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் கர்த்தராகிய இயேசு எத்தகைய

மகிமையோடு இருப்பாரோ, அதே மகிமையுள்ள வராக அவரைப் பேதுருவும், யாக்கோபும், யோவானும் மலையின்மேல் கண்டார்கள். பின் னொரு காலத்தில் மனித குமாரன் எத்தகைய மகிமையுடன் காட்சியளிப்பாரோ, அந்த வித மாகவே அவர்கள் தங்களுடைய மரணத்திற்கு முன்னரே கண்டார்கள். இவ்வாறாக, மத்தேயு 16:28 இல் கர்த்தர் உரைத்த சொற்கள், 17:1-8 - ஆகிய வசனங்களில் நிறைவேறின.

மறுரூபக் காட்சி, கட்டுக்கதைகளை அடிப் படையாகக் கொண்டதல்ல என்று பேதுரு இப் பொழுது வலியுறுத்திக் கூறுகிறார். நவீனகால இறையியல் அறிஞர்கள் திருமறையைத் தாக் கும் பொருட்டு இச்சொல்லையே பயன்படுத்து கிறார்கள். திருமறையில் இடம்பெற்றுள்ள "கட் டுக்கதைகளை" நீக்கவேண்டுமென்றும் அவர் கள் ஆலோசனை கூறுகிறார்கள். புதிய ஏற்பாட் டில் "கட்டுக்கதைகளின் மூலக் கூறுகள்" உள் ளன என்று பல்ட்மேன் கூறினார். திருமறையில் பெரும்பாலும் கட்டுக்கதைகளே இடம் பெற்றுள் ளன, அவற்றைக் கிறிஸ்தவர்கள் உணரவேண் டும் என்று ஜான் A. T. ராபின்சன் என்பவர் கூறு கிறார்:

> திருமறையில் "கட்டுக்கதைகள்" இடம் பெற் றுள்ளன என்னும் உண்மையை அறிந்து ணரக்கூடிய வேதனை தரக்கூடிய ஆனால் தீர்மானமான முடிவை எடுக்கும்படி கடந்த நூற்றாண்டில் முன்னேற்றம் உண்டானது, இது மிக இன்றியமையாத சமய உண்மையாக இருக்கிறது. திருமறை கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்கிற தீவிரமான மனிதர்களைத் தவிர மற்றவர்கள் யாவரும் இக்கருத்தைப் படிப்படியாக ஏற்றுக்கொண்டார்கள். படைப்பைக் குறித்தும், மனிதனுடைய வீழ்ச்சியைக் குறித்தும் ஆதியாகமத்தில் சொல்லப்பட்டுள்ள கதைகள், மனிதனையும் அகில உலகத்தை யும் குறித்து ஆழமான உண்மைகளைக் கூறு கிற கட்டுக்கதைகளே ஆகும், அவை வரலாறு அல்ல, அந்த அளவில் அவை வலுவற்றவை. இந்தக் கதைகள் நிலைநாட்டுவதற்கு அவசிய மானவை. மேலும் அதன் காரணமாகக் கிறிஸ் தவ உண்மைகள் மனித இன இயலுக்கும், அண்டத்தின் அமைப்பு முறை பற்றிய அறி வியலுக்கும் போட்டி அல்ல. இந்த வேறுபாட் டினை அறியாதவர்கள் தாமஸ் ஹக்ஸ்லே மற்றும் அவருடைய நண்பர்களுடைய கரங் களில் விளையாடுபவர்களாக விளங்குவதை நம்மால் காணமுடியும்.[7]

கட்டுக்கதைகள் என்னும் குற்றச்சாட்டை மறுத்துரைக்கும்படி, மறுரூபக் காட்சியைக் குறித்த மூன்று சான்றுகளைப் பேதுரு தருகிறார்: பார் வைக்கு ஒரு சான்று; கேட்பதற்கு ஒரு சான்று; சரீரப் பிரசன்னத்தின் சாட்சி.

காட்சியைப் பொருத்தமட்டில், கர்த்தருடைய **மகத்துவத்தைக் கண்ணாரக்** கண்ட சாட்சி களாக அப்போஸ்தலர் விளங்கினார்கள். "அவ ருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதா வுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என்று யோவான் சான்று பகர்ந்தார்.

1:17 மேலும் *கேட்பதற்கான* சான்றினை அங்கு காணவியலும். "**இவர் என்னுடைய நேச குமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன்**" என்று தேவன் உரைத்த சத்தத்தை அப்போஸ் தலர் கேட்டார்கள். கேட்கும்படியான இந்தக் கூற்று கர்த்தராகிய இயேசுவுக்குக் கனத்தைச் செலுத்தும்படி உன்னதமான மகிமையிலிருந்து உண்டாயிற்று. அதாவது, செக்கினா என்று அழைக்கப்படும் ஒளிபொருந்திய, பிரகாசமான மகிமையின் மேகத்திலிருந்து இது வந்தது, இது தேவனுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்தக் கூடிய அடையாளமாயிருந்தது.

1:18 யாக்கோபு, யோவான் ஆகியோரையும் தன்னையும் குறித்துப் பேசிய பேதுரு, அவர்கள் கர்த்தரோடு **பரிசுத்த பருவதத்தில்** இருந்தபோது தேவனுடைய **சத்தத்தைத்** தனிப்பட்ட வகையில் கேட்டார்கள் என்று வலியுறுத்திக் கூறுகிறார். இங்கே மூன்று சாட்சிகளைக் காண்கிறோம், மத்தேயு 18:16 - இன்படி அது நம்பத்தகுந்ததும், போதுமான சான்றுகள் உடையதுமாகும்.

இறுதியாக, *சரீரத்தோற்றம்* என்னும் சான் றையும் சேர்த்து வழங்குகிறார். "**அவரோடே கூட நாங்கள் பரிசுத்த பருவதத்தில் இருந்தோம்.**" அது வாழ்க்கையில் உண்மையான அனுபவம், அதைக் குறித்து எந்தக் கேள்வியும் எழாது.

எந்த மலையில் மறுதோற்ற நிகழ்ச்சி நடை பெற்றது என்பதை நாம் அறியோம். அது எந்த இடம் என்று அறிந்திருந்தால், அவ்விடத்தைப் புண்ணியத்தலமாக்கி குப்பைக் கூலமாக்கியிருப் பார்கள்.[8] அது **பரிசுத்த பருவதம்** என்று அழைக் கப்பட்டிருப்பதன் காரணம், அது இயற்கை

யாகவே புனித ஸ்தலம் என்பதல்ல; புனிதமான நிகழ்ச்சி நடைபெறுவதற்காக அந்த இடம் பிரித்து வைக்கப்பட்டிருந்த காரணத்தால் அது அவ்வாறு அழைக்கப்பட்டது.

1:19 அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு. கிறிஸ்துவின் வருகை வல்லமையோடும் மிகுதியான மகிமையோடும் நிகழும் என்று பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்தார்கள். அந்தத் தீர்க்கதரிசனங்கள் மறுரூப மலையில் நடந்த நிகழ்ச்சிகளால் உறுதியாக்கப்பட்டன. அப்போஸ்தலர் கண்ட காட்சிகள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களைத் தள்ளிவிடவில்லை, கூடுதலாக நிச்சயப்படுத்தவுமில்லை. மாறாக அது தீர்க்கதரிசனங்களுக்குத் தெளிவான உறுதியைச் சேர்த்து வழங்குகிறது. கிறிஸ்துவின் எதிர்கால அரசின் மகிமையின் கணநேரத் தோற்றம் அப்போஸ்தலருக்கு முன் அனுபவமாகக் கொடுக்கப்பட்டது.

பத்தொன்பதாவது வசனத்தின் எஞ்சிய பகுதியின் F. W. கிராண்ட் மொழிபெயர்ப்பு நமக்கு உதவி புரிகிறது. "... (பொழுது விடிந்து விடிவெள்ளி உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கிற்குக் கொடுப்பது போல) அவ்வசனத்தை உங்கள் இருதயங்களில் கவனித்திருப்பது நல்லது." திருவாளர் கிராண்ட் இடைப்பிறவரலைப் பயன்படுத்தியிருப்பதைக் கவனியுங்கள். அந்த மொழிபெயர்ப்பின்படி, **கவனித்திருக்கும்** செயலை **உங்கள் இருதயங்கள்** என்ற சொல்லோடு நாம் இணைக்க வேண்டும். அதாவது நம்முடைய இருதயங்களில் நாம் கவனித்திருக்க வேண்டும். NKJV இன்னும் பல மொழிபெயர்ப்புகளில், பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் என்னும் சொற்றொடரைக் காண்கிறோம். இதனை நாம் விளக்கிக் கூறுகையில் சிக்கல்கள் எழுகின்றன.

தீர்க்கதரிசன வசனமே **விளக்கு. இருளுள்ள ஸ்தலம்** அல்லது துயரங்கள் நிறைந்த இடம் இவ்வுலகமாகும். தற்போதைய சபையின் காலகட்டம் முடிவுறுவதை பொழுதுவிடிதல் என்னும் சொற்கள் குறிப்பிடுகின்றன (ரோமர் 13:12). **விடிவெள்ளி** உதிப்பது, கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுக்காக வருகைபுரியும் காட்சியை வரைந்து தருகிறது. **தீர்க்கதரிசன வசனங்களை** நாம் எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்திருக்க வேண்டும், அவற்றை நம்முடைய **இருதயங்களில்** வைத்துப் போற்றிப் பாதுகாக்க வேண்டும், ஏனெனில் இந்த இருண்ட உலகத்தின் காலம் முடிவடைந்து, தமக்காகக் காத்திருக்கும் மக்களை விண்ணக வீட்டிற்கு அழைத்துச் செல்லும் படி கர்த்தராகிய கிறிஸ்து மேகங்களில் தோன்றும் வரை அது நமக்கு **விளக்காகப்** பயன்தரும்.

1:20 இந்த அதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்களில், தேவனிடத்திலிருந்தே தீர்க்கதரிசன வசனங்கள் வந்தன, மனிதனிடத்திலிருந்து அவை பிறக்கவில்லை என்று பேதுரு வலியுறுத்துகிறார். அவையாவும் தேவ ஆவியின் ஏவுதலைப் பெற்றவை.

வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது (அல்லது தொடக்கம் பெற்றது). இந்தக் கூற்று பலவிதமான வேறுபட்ட விளக்கங்களை உண்டு பண்ணியிருக்கிறது. அவற்றில் சில பொருத்தமற்றவை. எடுத்துக்காட்டாக, "தனிப்பட்ட மனிதர்கள் வேத வசனங்களைப் படிக்கக்கூடாது; அது திருச்சபையின் உரிமை, திருச்சபை மட்டுமே வேத வசனங்களுக்கு விளக்கம்தர வேண்டும்." இந்த விளக்கம் நகைப்பிற்கு இடமானதல்லவா?

வேறுசில விளக்கங்கள் உண்மையாக இருப்பினும், இந்தப் பகுதிக்கு அவை சரியான விளக்கங்களாகா. எடுத்துக்காட்டாக, "எந்தவொரு வசனத்தையும் அந்த வசனத்தைக் கொண்டே விளக்கிக் கூறக்கூடாது, மாறாக அந்தப் பகுதியின் பின்னணியின் அடிப்படையிலும், மற்ற வேத பகுதிகளின் வெளிச்சத்தின் மூலமாகவுமே விளக்கிக் கூற வேண்டும்."

ஆனால் இங்கே, தீர்க்கதரிசன வசனத்தின் தொடக்கத்தைக் குறித்தே பேதுரு பேசுகிறார். மாறாக எந்தவொரு வசனமும் கொடுக்கப்பட்ட பிறகு மனிதர்கள் அதற்கு எவ்வாறு விளக்கமளிக்கிறார்கள் என்பது பற்றி அவர் இங்கு பேசவில்லை. தீர்க்கதரிசிகள் எழுதும்படி அமர்ந்தபோது, அவர்கள் நிகழ்ச்சிகளுக்குத் தங்களுடைய **சுயதோற்றமான பொருளைத்** தரவில்லை. அல்லது தாங்களே இதுதான் பொருள் என்று முடிவுசெய்யவில்லை. எழுதப்பட்ட வண்ணம் வேதத்தைப் பெற்றிருக்கும் நாம் எவ்வாறு வசனங்களுக்கு விளக்கம் தருகிறோம் என்பது **பொருளையுடையது**' என்னும் சொல்லின் பொருளல்ல. மாறாக, எந்த வகையில் வேத வார்த்தை வந்தது என்பதையே அது முதன்மையாகக் கூறுகிறது. திருவாளர் D. T. யெங் எழுதுகிறார்:

> இவ்வாறாக இந்த வேதபகுதி சரியாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.. திருமறையானது அத னுடைய மூல ஆதாரமான தொடக்கத்தின்படி பார்க்கும்போது மனிதனால் உண்டானதல்ல என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. இது தேவனுடைய பொருளாயிருக்கிறது, மனித னுடையதன்று. இது தாவீதின் கருத்து அல்லது பவுலின் கருத்து அல்லது பேதுருவின் கருத்து என்று சொல்லப்படுவதை நாம் அவ்வப்போது கேட்கிறோம். ஆனாலும், நாம் மிகச் சரியாகச் சொல்லவேண்டுமானால், அந்தப் பரிசுத்த எழுத்துகளில் எந்த மனிதனுடைய கருத்திற்கும் இடமில்லை. அவையாவும் தேவனுடைய பொருள் விளக்கங்களாகவே இருக்கின்றன. திருமறைத் தீர்க்கதரிசனத்தின் எந்தப் பகுதியும் ஒரு தனி மனிதனுடைய பொருள் விளக்கமல்ல: தேவ னுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவி யினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.[10]

NKJV அடிக்குறிப்பில் உள்ள தொடக்கம் என் னும் மொழிபெயர்ப்பு, மிகச்சரியானதாக இருக் கிறது. அதுவே இப்பகுதியின் பின்னணிக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

1:21 இருபதாவது வசனத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ள விளக்கத்தை இந்த வசனம் உறுதி செய்கிறது. **தீர்க்கதரிசனமானது ஒரு காலத்தி லும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை**. "அவர்கள் எழுதியது கட்டுக்கதை யல்ல, அவர்களுடைய சொந்தக் கருத்துகளும் அல்ல; அது மனிதனுடைய கற்பனையோ நுண் ணறிவுத் திறனோ, ஊகமோ அல்ல" என்று ஒருவர் கூறினார்.

உண்மை யாதெனில், **தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.**[11] நம்மால் புரிந்துகொள்ள முடி யாத ஏதோ ஒருவகையில், தேவன்தாமே இவர் கள் எழுதவேண்டிய அதே வார்த்தைகளினிட மாய் இவர்களை நடத்தினார். ஆனாலும் எழுத் தாளர்களுடைய தனித்தன்மையை அவர் அழித் துப்போடவில்லை. தெய்வீக ஏவுதல் பற்றிய திருமறை வசனங்களில் இது முக்கியமான வச னங்களில் ஒன்றாகும். வேதத்தின் அதிகாரப்பூர்வ மான சான்றைப் பலர் மறுத்துரைக்கும் இக்காலத் தில், திருமறையின் ஒவ்வொரு சொல்லும் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது என்பதிலும், அது முழுநிறைவானது என்பதிலும், அது எவ் விதக் குறையும் இல்லாதது என்பதிலும் நாம் உறுதிகொண்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு சொல்லும் தேவ ஆவியின் ஏவுத லால் எழுதப்பட்டது என்று கூறும்போது, திருமறை யிலுள்ள சொற்கள் யாவும் முதன்முதலில் நாற்பது அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் எழுதப்பட்டபோது தேவ உயிரூட்டத்தைப் பெற்று எழுதினார்கள் என்றே கூறுகிறோம். தேவன் ஏதோ பொதுவான குறிப்புகளைத் தந்தார் அல்லது அடிப்படைக் கருத்துகளைக் கொடுத் தார், பின்னர் எழுத்தாளர்கள் தங்களுடைய சொல்லாட்சித் திறமையாலே எழுதும்படி அனு மதித்தார் என்பதல்ல உண்மை. அவர்கள் எழுதிய சொற்களைப் **பரிசுத்த ஆவியான வர்தாமே** தந்தார்.

அது *முழுநிறைவான* வகையில் தேவ ஆவி யின் ஏவுதலைப் பெற்றது என்று கூறுகிறபோது, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் திருமறை முழுவதும் ஒரே விதமாக தேவனால் தரப்பட்டது என்றே கூறுகிறோம். அது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது (2 தீமோ. 3:16 -ஆவது வசனத்தைக் காண்க). அது *குறையற்றது* என்று கூறுகிறபோது, தேவ னுடைய வார்த்தை இவ்வாறு எழுதப்பட்டபோது, அதனுடைய மூல எழுத்தில் முழுவதுமாக எந்தத் தவறும் இல்லாதது என்றே கூறுகிறோம். உப தேசத்தில் மட்டுமின்றி, வரலாற்றிலும், அறிவிய லிலும், காலவரிசையிலும், இன்னபிற கூறுகளி லும் அது முற்றிலுமாகத் தவறற்றது என்பதே அதன் பொருளாகும்.

3. கள்ளப்போதகர்கள் அதிகரித்தல் முன்னுரைக்கப்படுதல் [அதி. 2]

2:1 முதல் அதிகாரத்தின் முடிவில், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், தங்களுடைய சொந்த சித்தத்தினால் அல்ல, பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டவர்களாகப் பேசிய மனிதர்கள் என்று பேதுரு குறிப்பிட்டார். பழைய ஏற்பாட்டுக் காலத் தில் மெய்யான தீர்க்கதரிசிகள் மட்டுமின்றி **கள்ளத் தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள்** என்று இப்பொழுது அவர் குறிப்பிடுகிறார். சபையின் காலக் கட்டத்தில் உண்மையான போதகர்கள் இருப்பார்கள், அதுபோலவே **கள்ளப்போதகர் களும் இருப்பார்கள்**.

இந்தக் கள்ளப்போதகர்கள் சபைக்குள்ளா கத் தங்களுக்கென்று இடத்தைப் பெற்றிருப்பார் கள். அவர்கள் நற்செய்திப் பணியாளர்களாகத்

தங்களைக் காட்டிக்கொள்வார்கள். இதுவே பெருமளவில் ஆபத்தை உண்டாக்குகிறது. அவர்கள் வெளிப்படையாக, தாங்கள் நாத்திகர்கள் என்றோ நம்பிக்கையற்றவர்கள் என்றோ கூறுவார்கள் என்றால் மக்கள் தங்களை அவர்களிடத்திலிருந்து காத்துக்கொள்வார்கள். ஆனால் அவர்கள் ஏமாற்றுவதில் திறமைசாலிகள். அவர்கள் திருமறை நூலை சுமந்து செல்லுவதோடு, பக்திமார்க்கத்தின் வாசகங்களைப் பயன்படுத்துவார்கள். அவர்கள் அந்தச் சொற்களைப் பயன்படுத்தினாலும், அவற்றிற்கு முற்றிலும் வேறுபட்ட பொருளைச் சொல்லுவார்கள். தாராள இறையியல் கொள்கையைப் பின்பற்றும் வேத பள்ளியின் தலைவர் ஒருவர், தாங்கள் கைக்கொள்கிற தந்திரத்தைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

> சபைகள் முன்னர் உறுதியாகப் பின்பற்றி வந்த கருத்துக்களை முறையாகக் கைவிடாமல், அவ்வப்போது நம்பிக்கைகளை மாற்றிக் கொள்கின்றன. மேலும் அவர்களுடைய இறையியல் வல்லுநர்கள், வேறுவகையான விளக்கங்களைக் கூறி முந்தைய கருத்துகளோடு ஒருவகையான தொடர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்வதைத் தங்களுடைய வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

திருவாளர் W. A. கிரிஸ்வெல் கள்ளப்போதகர்களைக் குறித்து விவரிக்கிறார்:

> கனிவும், அடக்கமும், நல்ல தோற்றமும், புலமையும் மிகுந்த மனிதன் தான் கிறிஸ்துவின் நண்பன் என்று சொல்லிக்கொள்கிறான். அவன் மேடையில் நின்று பேசுகிறான், அவன் கற்றறிவு மிக்க நூல்களை எழுதுகிறான், சஞ்சிகைகளில் சமயக் கட்டுரைகளை வெளியிடுகிறான். உள்ளே இருந்தபடி அவன் கிறிஸ்தவத்தைத் தாக்குகிறான். எல்லாவிதமான தூய்மையற்ற கருத்துகளுக்கும் தவறான கொள்கைகளுக்கும் சபையையும் வேதபள்ளியையும் தங்குமிடமாக மாற்றிவிடுகிறான். சது சேயரின் உபதேசங்களால் அவன் உணவைப் புளிப்பாக்கிவிடுகிறான்.[12]

இந்தக் கள்ளப்போதகர்களை எங்கு காணலாம்? பெரும்பாலும் அவர்களைக் கீழ்க்காணும் இடங்களில் நிச்சயமாகக் காணமுடியும்:

தாராள மற்றும்
புதிய விசுவாசச் சீர்திருத்த வாதிகள்
தாராள ரோமக் கத்தோலிக்கர்கள்
அகில உலக ஒருமைப்பாடு
யெகோவா சாட்சிகள்
மோர்மோன் கூட்டத்தினர்
கிறிஸ்தவ அறிவியல்
கிறிஸ்தவ ஒருங்கிணைப்புப் பள்ளி
கிறிஸ்தவ ஆராய்ச்சியாளர்கள்
வானொலி தேவ சபை

நீதியின் ஊழியக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு, ஆத்துமாக்களை அழித்துப் போடும் **வேதப்புரட்டுகளை**, திருமறை கூறும் மெய்யான கோட்பாடுகளோடு சேர்த்துத் **தந்திரமாய் நுழையப்பண்ணுவார்கள்**. தவறான கோட்பாடுகளையும் உண்மையான கோட்பாடுகளையும் சேர்த்துக் கூறுவது வேண்டுமென்றே செய்யப்படுகிற ஏமாற்று வேலையாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டத்தாரிடையே காணப்படுகிற தவறுகள் சிலவற்றைக் காண்போம்:

திருமறையின் ஒவ்வொரு சொல்லும் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது, திருமறை முழுவதும் ஆவியின் ஏவுதல் பெற்றது, தேவனின் மூவொரு தன்மை, கிறிஸ்துவின் தெய்வத் தன்மை, அவர் கன்னியின் வயிற்றில் பிறந்தது, பாவிகளுக்குப் பதிலாளாக அவர் மரணம் அடைந்தது ஆகிய உண்மைகளை அவர்கள் மறுத்துரைக்கிறார்கள். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மதிப்பை மறுத்துரைப்பதில் அவர்களுடைய நிலை குறிப்பிடத்தக்க அளவிற்குக் கடுமையானதாக இருக்கிறது. இயேசுவின் சரீரப் பிரகாரமான உயிர்த்தெழுதல், நித்திய ஆக்கினைத்தீர்ப்பு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகக் கிருபையினால் இரட்சிக்கப்படுதல், திருமறையில் கூறப்பட்டுள்ள அற்புதங்கள் ஆகியவற்றையும் அவர்கள் மறுத்துரைக்கிறார்கள்.

இந்நாட்களில் பரவலாக இருக்கக்கூடிய வேறு கள்ளப் போதகங்கள்:

கெனோசிஸ் கொள்கை - தெய்வத் தன்மையைத் தம்மிடத்திலிருந்து அறவே நீக்கியவராகக் கிறிஸ்து வந்தார் என்னும் தவறான கொள்கை. அதாவது, அவரால் பாவம் செய்ய முடியும், தவறிழைக்க முடியும் என்று பொருள்படுவதாக இது அமைந்திருக்கிறது.

“இறைவன் இறந்துவிட்டார்” என்னும் கற்பனை, பரிணாம வளர்ச்சி, அகில உலக இரட்சிப்பு,

இறந்தபின் ஆத்துமாக்கள் தூய்மைப்படுத்தப் படுதல், இறந்தவர்களுக்காக மன்றாடுதல், இன்னும் பல.

கள்ளப் போதகர்களுடைய உச்சநிலையிலான பாவம், அவர்கள் தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுத்துரைப்பதே ஆகும். இயேசுவைக் குறித்த கனிவான சொற்களை அவர்கள் கூறுவார்கள்; "தெய்வ சுபாவம்" உடையவர், அவருடைய மிகவுயர்ந்த நீதிநெறிகள், ஒப்பற்ற முன்மாதிரி என்றெல்லாம் குறிப்பிட்ட போதிலும், அவரை தேவன் என்றோ அவர் ஒருவரே இரட்சகர் என்றோ அறிக்கை செய்ய மாட்டார்கள்.

நெல்ஸ்.'.பெரே என்பவர், "இயேசு ஒருபோதும் தேவனாக இருந்ததுமில்லை, தேவனாக ஆனதுமில்லை... இயேசுவை தேவன் என்று கூறுவது, மனுவுருவெடுத்தலைச் சிலையாக மாற்றுவதற்கு ஒப்பாகும்" என்று எழுதினார்.[13]

மெதடிஸ்ட் பேராயர் ஜெரால்டு கென்னடி கூறுகிறார்:

> கிறிஸ்துவே தேவன் என்று அறிக்கை செய்வது எனக்கு மகிழ்ச்சி தருகிறதில்லை, மேலும் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதும் அல்ல. கிறிஸ்துவுக்குள் தேவன் இருந்தார் என்று சொல்லுவதையே சிறப்பாகக் கருதுகிறேன். இயேசுவின் தெய்வீகத் தன்மைக்குத் தவிர்க்க முடியாத சான்றுகள் பல புதிய ஏற்பாட்டில் இருந்த போதிலும், அதனை முழுவதும் ஒட்டுமொத்தமாகக் காண்போமெனில், இயேசு தேவன் என்னும் கொள்கைக்கு அது எதிரானதாகவே இருக்கிறது.[14]

இந்த வழியிலும்,வேறு பல வழியிலும் **கள்ளப் போதகர்கள் தங்களைக் கிரயத்துக் கொண்ட ஆண்டவரை** மறுத்துரைக்கிறார்கள். இங்கு பேதுரு குறிப்பிடுகிற கள்ளப் போதகர்கள் ஆண்டவரால் *கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள்* என்று சொல்லப்பட்டிருந்தாலும் *மீட்கப்பட்டவர்கள்* என்று சொல்லப்படவில்லை என்பதை நாம்நினைவுபடுத்துவதற்குச் சற்று நிதானிக்க வேண்டும். கிரயத்துக்குக் கொள்ளுதல் என்பதற்கும் மீட்கப்படுதல் என்பதற்கும் உள்ள வேறுபாட்டைப் புதிய ஏற்பாடு தெளிவுபடுத்துகிறது. எல்லோரும் விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் எல்லோரும் மீட்கப்படவில்லை. கிறிஸ்து சிந்திய இரத்தத்தின் மதிப்பைத் தங்களுக்கு உரியதாக்கிக்கொண்டு, இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு மட்டுமே மீட்பு உரிமைப் பொருளாகும் (1 பேதுரு 1:18,19).

தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று ஒரு நிலத்தை வாங்கிய ஒரு மனிதராகக் கர்த்தராகிய இயேசு மத்தேயு 13:44 -இல் வரைந்து காட்டப் பட்டிருக்கிறார். அதே அதிகாரத்தில் 38 -ஆவது வசனத்தில் அந்த நிலம் உலகம் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அவர் சிலுவையில் அடைந்த மரணத்தினாலே, உலகத்தையும் அதிலுள்ள மக்கள் அனைவரையும் *விலைக்கு வாங்கிவிட்டார்*. ஆனால் அவர் உலகம் முழுவதையும் மீட்கவில்லை. மனுக்குலம் முழுவதையும் மீட்பதற்கு அவருடைய கிரியை போதுமானதாக இருந்த போதிலும், மனம்வருந்தி, விசுவாசித்து அவரை ஏற்றுக் கொள்பவர்களிடம் மட்டுமே அது *செயல்திறம்* உடையதாயிருக்கிறது.

இந்தக் கள்ளப் போதகர்கள் மறுபடியும் பிறக்காதவர்கள் என்பது அவர்கள் அடையப்போகிற முடிவைக்கொண்டே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் மீது **தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்**. அவர்களுடைய முடிவோ அக்கினிக் கடலில் அடையப்போகிற நித்திய தண்டனையாகும்.

2:2 அவர்களைப் பலர் பின்பற்றிச் செல்வார்கள் என்று பேதுரு முன்கூட்டி அறிந்தவராகக் கூறுகிறார். அவர்கள் ஒழுக்கத்தைக் குறித்துத் திருமுறை கூறும் தரத்தைக் கைவிட்டுவிடுவதாலும் சரீரத்தில் ஒழுக்கக்கேட்டுடன் நடந்துகொள்வதை ஊக்குவிப்பதாலும் அவர்களைப் பலர் பின்பற்றுவார்கள். இங்கே இரண்டு எடுத்துக் காட்டுகள் சொல்லப்பட்டுள்ளன.

ஆங்லிகன் சபைப் பேராயர் ஜான் A. T. ராபின்சன் எழுதியிருக்கிறார்:

> ... ஏதொன்றையும் தவறு என்று எப்பொழுதும் குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியாது. எடுத்துக் காட்டாக, ''திருமணத்திற்கு முந்தைய பாலுறவு'' அல்லது ''விவாகரத்து'' ஆகியவை தம்மில் தாமே பாவமானவை அல்ல. அவற்றில் 100 இல் 99 தவறாக இருக்கலாம், அல்லது 100 – உம் தவறாக இருக்கலாம், ஆனால் அவை உள்ளார்ந்த வகையில் தவறற்றவை. உள்ளார்ந்த வகையில் அன்பில்லாத நிலையே பாவம்.[15]

பொறுப்புமிக்க சுதந்தரத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் என்னும் நூலில் இளைஞர்கள் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்நூல் தேசிய சபைகளின் ஒருங்கிணைப்புச் சங்கத்தால் வெளியிடப்பட்டது:

> ஒரு தனி மனிதனின் சொந்தக் கருத்தின்படி பார்க்கிறபோது, திருமணத்திற்கு அப்பாற்பட்டு ஆண் பெண் இருவருடைய உறவு பற்றி சட்டம் என்ன கூறுகிறது என்பதால் அல்ல, அவர்கள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் தங்கள் இருதயங்களில் எத்தகைய உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள் என்பதாலேயே அவ்வுறவு நியாயப்படுத்தப்பட்டு, தூய்மையானதாகக் கருதப்படும். இவ்வாறாக அளவிடும்போது, இருவரும் கைகோத்துச் செல்வதும்கூட உண்மையில் தவறாயிருக்கும், அல்லது அவர்களுக்குள்ளாக நிகழக்கூடிய மிக நெருக்கமான பாலுறவு செயல்களும்கூட சரியானதாகவும் நல்லதாகவும் இருக்கும்.[16]

கள்ளப் போதகர்களால் உண்டாகும் இப்படிப்பட்ட நடத்தையினாலும், போதகத்தினாலும் **சத்தியமார்க்கம்** இழிவுபடுத்தப்படுகிறது. கிறிஸ்தவத்தைக் குறித்து அவிசுவாசிகள் ஆழ்ந்த வெறுப்புணர்ச்சி கொள்கிறார்கள்.

2:3 சிற்றின்பச் செயல்களிலும், நிதிநிலையைக் குறித்த விஷயங்களிலும் கள்ளப் போதகர்கள் பேராசை பிடித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கீழ்த்தரமான ஆதாயத்தைக் கருத்திற்கொண்டு ஊழியம் செய்வதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெரிதான நோக்கம், தங்களைப் பின்பற்றுவோர் பெருங்கூட்டமாக இருக்க வேண்டும், அதன் வாயிலாகப் பெருந்தொகை ஈட்டவேண்டும் என்பதே ஆகும்.

தவறான **வார்த்தைகளைக்** கொண்டு அவர்கள் மக்களை **வசப்படுத்துகிறார்கள்**. "பிசாசானது வேதத்தைத் தன்னுடைய கரத்தில் எடுத்துச் செல்லுகிறபோது இருப்பதுபோல வேறு எந்த நேரத்திலும் அதிகமாகச் சாத்தானாக விளங்குவதில்லை." அதுபோலவே இந்த மனிதர்களும் தங்களுடைய கரங்களில் வேதத்தை எடுத்துச் செல்கிறார்கள், நீதியின் ஊழியர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்கிறார்கள், திருமறைச் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். மிகவும் அறிமுகமான நற்செய்திப் பாடல்களைப் பாடுகிறார்கள். ஆனால் இவை யாவும் கள்ளப்போதகங்கள் மற்றும் ஒழுக்கக் கேடுகள் ஆகியவற்றை மறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஏமாற்று வேலைகளாகும்.

ஐந்தாம் படை மதத்தினருக்கு எதிராக மிகப் பயங்கரமான **ஆக்கினை** காத்திருக்கிறது. **அவர்களுடைய அழிவு உறங்காது**. தண்டனையைச் செலுத்த அது ஆயுதமேந்தி ஆயத்தமாயிருக்கிறது. அவர்களுடைய அழிவு தனது தலையை அசைத்து உறங்குவதற்கு அனுமதிப்பதில்லை; அது தன்னுடைய கண்களை விரிவாய்த் திறந்திருக்கிறது, ஒரு சிறுத்தையைப் போலப் பாய்வதற்கு ஆயத்தமாயிருக்கிறது.

2:4 நான்கு முதல் பத்தாவது வசனம் வரையிலும், விசுவாச மறுதலிப்புக்கு எதிராக தேவன் அளித்த நியாயத்தீர்ப்பைக் குறித்த மூன்று எடுத்துக்காட்டுகளைப் பழைய ஏற்பாட்டிலிருந்து நாம் பெற்றிருக்கிறோம். அவையாவன: தேவ தூதர்கள், பெருவெள்ளத்திற்கு முந்தி வாழ்ந்த மனிதர்கள் மற்றும் சோதோம் கொமோரா பட்டணங்கள்.

பாவஞ்செய்த தூதர்கள் என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் யூதா 6 -ஆவது வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளார்கள் என்றே நாம் கருதுகிறோம். அங்கே அவர்களைக் குறித்து நான் அறிகிறவை: (1) அவர்கள் தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளவில்லை. (2) அவர்கள் தங்களுடைய குடியிருப்பை விட்டுச் சென்றுவிட்டார்கள். நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாதென்றாலும், "தேவ குமாரர்" என்று ஆதியாகமம் 6:2 -இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களும் இவர்கள்தான் என்று நம்புவதற்கு வலிமையான காரணம் உள்ளது: "தேவகுமாரர் மனிதகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்." யோபு 1:6; 2:1 ஆகிய வசனங்களிலும் தேவதூதர்கள் தேவபுத்திரர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதியாகமம் ஆறாவது அதிகாரத்திலிருந்து, தேவகுமாரர் தங்களுக்களிக்கப்பட்ட மேன்மையை விட்டுவிட்டார்கள் என்றும், விண்ணகத்தில் கொடுக்கப்பட்ட குடியிருப்பை விட்டுவிட்டுத் தங்களுக்கு பூமியிலே குடியிருப்பைத் தெரிந்து கொண்டார்கள் என்றும், மனுக்குலத்திலிருந்து தங்களுக்கு மனைவிகளைத் தெரிந்தெடுத்துக் கலப்புத் திருமணம் செய்தார்கள் என்றும் அறிகிறோம். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் "இராட்சதர்" என்று அழைக்கப்பட்டார்கள் (nephi-

lim). அச்சொல்லின் பொருள் "வீழ்ந்துபோனவர்கள்" என்பதாகும் (ஆதி. 6:4).இயற்கைக்கு அப்பாற்பட்ட பாலுறவினால் அவர்கள் ஒன்று சேர்ந்ததைக் கண்ட தேவன் அதிகமாக விசனமடைந்தார் என்று ஆதியாகமம் 6:3 -ஆம் வசனத்தினாலே அறிகிறோம்.

தேவதூதர்கள் பால்வேற்றுமை அற்றவர்கள், ஆகவே அவர்களால் திருமணம் செய்ய முடியாது என்று இந்தக் கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு வேதம் கூறுகிறதில்லை. அது கூறுவதெல்லாம், பரலோகத்தில் அவை திருமணம் செய்துகொள்வதில்லை என்பதுதான் (மாற்கு 12:25). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவதூதர் மனித உருவத்தில் தோன்றினார்கள். எடுத்துக்காட்டாக சோதோமில் லோத்து இரண்டு தேவதூதருக்கு விருந்தோம்பல் புரிந்தான் (ஆதி. 19:1); அவர்கள் அந்த அதிகாரம் 5,10,12 -ஆகிய வசனங்களில் மனிதர்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அவர்களுக்குக் கைகளும் (வச. 10) கால்களும் (வச. 2) இருந்தன; அவர்களால் உணவருந்த முடிந்தது (வச. 3); அவர்களுக்குச் சரீரப் பிரகாரமான வலிமை இருந்தது (வச. 10,16). அந்த தேவதூதர்களுக்குத் தவறான பாலுறவு கொள்ளத்தக்க சரீரங்கள் இருந்தன என்பதை, சோதோம் பட்டணத்து மனிதர்கள் நெறிதவறிய விருப்பங்களைக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதிலிருந்து அறிகிறோம் (வச. 5).

தாம் நிறுவிய முறையிலிருந்து, அந்த **தேவ தூதர்கள்** மிகப்பெரிதான துரோகச் செயலில் ஈடுபட்டார்கள் என்பதைக் கண்ட தேவன் சீற்றமடைந்தார். **நரகத்தில் தள்ளப்படுவதே** அவர்களுடைய முடிவாகும். அதுவரை இருளடைந்த குழிக்குள் கட்டிவைக்கப்பட்டு இறுதியில் அவர்கள் **ஆக்கினைத் தீர்ப்பை** அடைவார்கள்.

2:5 பாவத்தைத் தண்டிக்கும் பொருட்டு தேவன் நேரடியாக ஈடுபட்டதற்கு இரண்டாவது எடுத்துக்காட்டு **ஜலப்பிரளயளத்தில்** மக்கள் அழிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். அவர்களுடைய ஒழுக்கக்கேடு மிகப்பெரிதாயிருந்தது. அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாயிருந்தது (ஆதி. 6:5). தேவனுடைய பார்வையில் பூமி சீர்கெட்டதாகவும், கொடுமையால் நிறைந்ததாகவும் இருந்தது (ஆதி. 6:11-13). பூமியிலே மனிதனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் (ஆதி. 6:6). அவர்களை அழித்துவிட வேண்டும் என்று அவர் முடிவு செய்யும் அளவிற்கு அவர் மனஸ்தாபப்பட்டார் (ஆதி. 6:6). அவர் **பூர்வ உலகத்தைத் தப்பவிடாமல்**, அதன் மீது **ஜலப்பிரளயத்தை** எழுப்பி அக்கிரமம் செய்த மனிதர்களை அழித்துப்போட்டார்.

நோவாவும் அவனுடைய குடும்பத்தினர் மட்டுமே கர்த்தருடைய கண்களில் தயவு பெற்றார்கள். அவர்கள் அடைக்கலத்தை நாடி, பேழையில் அதைக் கண்டடைந்தார்கள். தேவனுடைய கோபாக்கினையும் சீற்றமும் புயலென வந்த போது அவற்றினின்று அவர்கள் பாதுகாப்பைப் பெற்றார்கள்.

நோவா நீதியின் பிரசங்கி என்று விவரிக்கப்பட்டுள்ளான். அவன் பேழையைக் கட்டியபோது, அவனது சுத்தியலின் சத்தம், அவனை ஏளனம் செய்த மக்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பும்படி அல்லது அவர்களுடைய அக்கிரமத்தின் நிமித்தம் தேவனுடைய நீதியான தண்டனையைச் சத்திக்கும்படி எச்சரிப்பின் சத்தமாக ஒலித்தது.

2:6 சோதோம் கொமோரா அழிக்கப்பட்ட நிகழ்ச்சி, பாவம் செய்தவரைத் தப்பவிடாமல் தேவன் அழித்துவிடுவார் என்னும் உண்மைக்கு மூன்றாவது எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. சாவுக்கடலின் தென்புறத்தின் அருகில் ஏதோவொரு பகுதியில் இவ்விரண்டு பட்டணங்களும் இருந்திருக்க வேண்டும். அந்த இடங்களில் சிற்றின்பச் சீர்கேடுகள் நிறைந்து அவை கழிவுநீர் தேக்கத்திற்கு ஒப்பாயிருந்தன. ஓரினச் சேர்க்கை இயல்பான வாழ்க்கை முறை என்று அந்நகரங்களின் மக்கள் ஒப்புக்கொண்டிருந்தார்கள். இந்தப் பாவத்தைக் குறித்து ரோமர் 1:26,27 ஆகிய வசனங்கள் விவரிக்கின்றன.

> அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர் மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.

இத்தகைய வரம்புமீறிய இழிவான செயலைப் பாவம் என்றே தேவன் கணக்கிடுகிறார்; இதனை அவர் நோய் என்று கருதுவதில்லை. வருங்காலத் தலைமுறையினர் அனைவரும் தேவன் எந்த அளவிற்கு ஓரினச் சேர்க்கையை வெறுக்கிறார் என்பதை அறியும்பொருட்டு, சோதோம் கொமோரா

பட்டணங்களின் மீது அக்கினியையும் கந்தகத்தையும் பொழியச் செய்தார், அவை வெறும் சாம்பலாகிவிட்டன (ஆதி. 19:24). அவ்விரு பட்டணங்களும் எங்கிருந்தன என்பதில் ஐயம் எழும் அளவிற்கு அந்த அழிவு முழுமையாய் இருந்தது. இந்தப் பாவத்தைச் சட்டப்படி முறையானதாக்க முயற்சி செய்பவர்களுக்கும் அல்லது இது ஒரு நோய் என்று சொல்லிப் பொறுத்துக்கொள்பவர்களுக்கும் இந்நிகழ்ச்சி எச்சரிப்பாக விளங்குகிறது.

தாராளக் கொள்கைகளைப் பின்பற்றும் சபைக் குருமார்கள் இன்றைய நாட்களில் இத்தகைய சிற்றின்ப நெறிபிறழ்வுகளை ஆதரித்து வெளியரங்கமாகப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஐக்கிய சபை என்னும் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் சமுதாய நடவடிக்கைகள் என்னும் பத்திரிக்கையில், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களை வேத பள்ளிகளிலும், திருப்பணி நியமனங்களிலும், சபை அலுவலக வேலைகளிலும் சேர்த்துக் கொள்வதில் எவ்வித வேறுபாடும் காட்டக் கூடாது என்று எழுதியிருந்தார். சமீப காலத்தில் தொண்ணூறு சமயக் குருமார்கள் சேர்ந்து, வயது வந்தவர்கள் இருவர் சம்மதத்தோடு ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவார்கள் என்றால் அதனை ஒழுக்கக் கேடு என்று கருதவேண்டியதில்லை என்று தீர்மானித்தார்கள். இந்தப் பாவத்தைச் சட்டப்படி முறையானது என்று மாற்றுவதற்கு முயற்சி செய்யும் இயக்கங்களுக்கு ஆதரவளிக்கக் கள்ளப் போதகர்கள் முன்னிலையில் நிற்கிறார்கள்.

விசுவாச மறுதலிப்பைக் குறித்து விவரிக்கும் இந்த மடல், *ஒழுக்கக் கேட்டைக்* குறித்து இந்த அளவிற்கு எடுத்துரைத்திருப்பது ஏதோ தற்செயலாக நடந்ததல்ல. இவ்விரண்டும் அவ்வப்போது இணைந்து செல்லுகின்றன. விசுவாச மறுதலிப்பு பல நேரங்களில் ஒழுக்கக் கேட்டில் வேர்கொண்டிருப்பதைக் காணமுடியும். எடுத்துக் காட்டாக, ஒரு மனிதன் மிகப் பயங்கரமான ஒழுக்கக்கேட்டில் வீழ்ந்து போகக்கூடும். அவன் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக, மேலும் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக சுத்திகரிப்பைக் காண்பதற்குப் பதிலாக, அவனுடைய குற்றத்தை உணர்த்தும் தேவனைக் குறித்த அறிவைத் தள்ளிவிட்டு, நாத்திகத்தில் வாழ முற்படுகிறான். கிறிஸ்தவன் என்று தன்னை அறிமுகம் செய்துகொண்ட ஓர் இளைஞன், பின்னர் மிக அதிக அளவில் ஐயங்களையும் மறுப்புகளையும் கூறத்தொடங்கினான். அவனைத் திரு. A. J. போலக் ஒருமுறை சந்தித்தார். "சமீப காலத்தில் நீ என்ன பாவத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாய் நண்பனே" என்று போலக் அவனிடம் கேட்டார். அவ்விளைஞனோ தன்னுடைய தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டவனாக, மிக விரைவாகத் தனது உரையாடலை முடித்துக்கொண்டு அங்கிருந்து வெட்கத்தோடு சென்றுவிட்டான்.[17]

2:7,8 அக்கிரமக்காரரை அழித்துப்போடுகிற தேவன், **நீதிமானை** விடுவிக்கிறார். இதனை **லோத்துவின்** அனுபவத்தைக் கொண்டு பேதுரு விவரிக்கிறார். நாம் லோத்துவைக் குறித்துப் பழைய ஏற்பாடு கூறும் விவரங்களை மட்டுமே பெற்றிருப்போமென்றால், அவன் மெய்யான விசுவாசி என்று சிந்தித்துப் பார்த்திருக்கவே மாட்டோம். ஆதியாகமத்தைக் காண்கையில், அவன் பெரும்பாலும் சமுதாயத்தில் செல்வாக்கை நாடியவனாகவும், எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்காமல் பாவத்தையும் கேடுபாடான நிலையையும் பொறுத்துக் கொண்டவனாகவும், அதன் மூலமாக உலகத்தில் பெயரையும் புகழையும் பெறவேண்டும் என்று நினைத்தவனாகவுமே விரிக்கப்பட்டிருக்கிறான். ஆனால் தேவ ஆவியின் ஏவுதலைப் பெற்றவராகப் பேதுரு எழுதுகையில், **அக்கிரமக்காரருடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்ட நீதிமானாகிய லோத்து** என்றே கூறுகிறார். அந்த லோத்துவினிடத்தில் இருந்த மெய்யான விசுவாசத்தை தேவன் கண்டார். மேலும் அவன் நீதியின்மேல் அன்புபாராட்டினான், பாவத்தையோ வெறுத்தான் என்றும் அவர் கண்டார்.

பார்வைக்கு மாறுபட்ட நிலையில் இருந்த போதிலும், மெய்யாகவே லோத்து நீதியுள்ள மனிதனாக இருந்தான் என்பதை வலியுறுத்திக் கூறும் பொருட்டு, அவன் சோதோமில் நடந்த வற்றைக் குறித்துக் கேட்டபோதும் கண்டபோதும் தன்னுடைய இருதயத்தில் ஒவ்வொரு நாளும் வாதிக்கப்பட்டான் என்று பேதுரு மீண்டும் உரைக்கிறார். மனிதர்களுடைய இழிவான ஒழுக்கக் கேடு அவனுக்கு ஆழ்ந்த வருத்தத்தை உண்டு பண்ணிற்று.

2:9 கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை இரட்சிக்கவும் அக்கிரமக்காரரைத் தண்டிக்கவும் **அறிந்திருக்கிறார்.** அவருடைய மக்களைச் சோதனையின்று விடுவிக்கவும்,அதே நேரத்தில் **அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும்** அவர் **அறிந்திருக்கிறார்.**

அக்கிரமக்காரர் நரகத்திற்கென்று வைக்கப் பட்டிருக்கிறார்கள் (வச. 9), நரகம் அக்கிரமக் காரர்களுக்கென்று வைக்கப்பட்டிருக்கிறது (வச. 17). இதற்கு எதிர்மாறாக, விசுவாசிகளுக்கென்று ஒரு சுதந்தரம் வைக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் சுதந்தரத்திற்கென்று வைக்கப்பட்டிருக்கிறார்கள் (1 பேதுரு 1:4,5).

2:10 அக்கிரமக்காரர் அடையவிருக்கிற கடைசி விசாரணை வரையிலும் அவர்களைக் கட்டுப்பாடு களுக்குக் கீழாக வைத்திருக்கும் ஆற்றல் தேவ னுக்கு இருக்கிறது என்பது, இந்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய மக்களைப் பொருத்த மட்டில் **விசேஷமான** உண்மையா யிருக்கிறது - சிற்றின்ப **அசுத்தத்தால்** கள்ளப் போதகர்களின் வாழ்க்கை தீட்டுப்பட்டிருக்கிறது. அவர்கள் அரசு அதிகாரத்துக்கு எதிராகக் கலகம் விளைவிக்க ஆலோசனை தருகிறார்கள், மேலும் அதிகாரிகளுக்கு எதிராகத் துணிவுடன் பழித்து ரைத்து அவமானப்படுத்துகிறார்கள்.

கிறிஸ்துவின் ஊழியக்காரராகத் தங்களைக் காண்பித்துக்கொள்ளும் கள்ள சமயத் தலைவர் கள் ஒழுக்க நெறியில் கீழ்த்தரமாக நடந்துகொள் கிறார்கள் என்பதில் எவ்வித இரகசியமும் இல்லை. அவர்கள் சிற்றின்ப ஒழுக்கக் கேடுகளில் தாங் கள் ஈடுபடுகிறது மட்டுமின்றி, வெளியரங்கமாக ஒழுக்கக்கேட்டை ஆதரிக்கவும் செய்கிறார்கள். மேரிலேண்ட் மாநிலத்தில் பால்டிமோர் நகரில் இயங்கிவரும் பெண்கள் பள்ளியின் மதகுரு இவ்வாறு எழுதினார்:

> நம்முடைய சிற்றின்ப நடவடிக்கைகளையும், எண்ணங்களையும் விருப்பங்களையும் குறித் துக் குற்றவுணர்வு கொள்வதை நிறுத்திவிட்டு நாம் சற்று நம்மையே தளர்த்திக்கொள்ள வேண்டும். அந்தச் செயல்கள் ஆண் பெண் களுக்கு இடையிலான உறவாகவோ, ஓரினச் சேர்க்கையாகவோ, சுயஇன்பம் கொள்ளுவதா கவோ இருக்கலாம். எல்லாவற்றையும் சேர்த் துத்தான் நான் குறிப்பிடுகிறேன்... சிற்றின்பம் ஒரு விளையாட்டு... இதைத்தான் நீங்கள் செய்ய வேண்டும், இதை நீங்கள் செய்யக் கூடாது என்று ஏதொரு சட்டமும் இல்லை. சொல்லப்போனால் இந்த விளையாட்டில் ஒரு விதியும் இல்லை.[18]

தாராளக் கொள்கையைக் பின்பற்றும் சமயத் தலைவர்கள் பெரும்பாலும் அரசாங்கங்களைக் கவிழ்த்துபோடுவதற்கு வன்முறையைக் கைக் கொள்ளவேண்டும் என்று தீவிரமான ஆலோ சனை தருவதில் முன்னணியில் நிற்கிறார்கள். நவீன கால ஊழியர்கள், அரசியல் சூழ்ச்சியில் ஈடுபடுகிற அமைப்புகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகச் செயல்படுகிறார்கள். பில தெல்பியா சபையின் மதகுருக்களின் இல்லங் களின் இயக்குநரும் சமுதாயத் தலைவருமாகிய ஒருவர் இவ்வாறு கூறினார்: "எல்லாவிதமான வன்முறையற்ற வழிகளும் பயனற்றுப்போயின என்று வரும்நாட்களில் காணப்படுமானால் நாம் (சபையானது வெடிகுண்டுகளையும் எறிகுண்டு களையும் பயன்படுத்தும் முறை) அவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று நான் நினைக்க வில்லை."

இந்த மனிதர்கள் துணிவுமிக்கவர்களாகவும் தன்னிச்சையோடு செயல்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். சட்டப்படி நிறுவப்பட்ட அதிகாரங் களை இவர்கள் அகம்பாவத்துடன் எதிர்த்துச் செயல்படுவதில் எல்லையே இல்லை. ஆட்சிபுரி வோருக்கு எதிராகப் பழித்துக் கூற எல்லையற்ற படி கீழ்த்தரமான சொற்களை இவர்கள் பயன் படுத்துகிறார்கள். மனித அரசாங்கங்கள் யாவும் தேவனால் நிறுவப்பட்டவை (ரோமர் 13:1). அவர் களுக்கு எதிராகப் பேசுவது தீமையாயிருக்கிறது (அப். 23:5). இந்த உண்மைகள் அவர்களிடம் சிறிதளவும் பயன் தருவதில்லை. அவர்கள் அதி காரிகளோடு (கிரேக்கம்: "மகத்துவங்கள்" அல் லது "மகிமை பொருந்தியவர்கள்") போரிட்டுப் பழிதூற்றுவதன் மூலமாக மனிதர்கள் திகில டைவதைக் கண்டு களிகூருகிறார்கள். மகத்து வங்கள் என்னும் சொல் தேவதூதர்களை அல் லது தேவனால் அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட மனிதர்களைக் குறிக்கக்கூடிய பொதுவான சொல்லாகும். இங்கு பெரும்பாலும் ஆளுகை செய்யும் மனிதர்களைக் குறிப்பதாகவே தோன்று கிறது.

2:11 தங்களை ஊழியக்காரர்கள் என்று சொல்லிக்கொள்கிற இந்த மனிதர்களுடைய துடுக்குத்தனத்திற்கு தேவதூதர்களின் மத்தி யிலும்கூட இணையானவர் இல்லை. தேவதூதர் கள் இவர்களைக் காட்டிலும் அதிக வல்லமை உடையவர்களானாலும், அவர்கள் மகிமை பொருந்தியவர்களைக் கர்த்தருக்கு முன்பாக **தூஷணமாய்க் குற்றப்படுத்தமாட்டார்கள்**. இந்த வசனத்தில் மகத்துவங்கள் என்பது அதி காரமுடைய தேவதூதர்களையே குறிக்கும்.

இந்தப் பகுதியில் தெளிவற்ற வகையில் சொல்லப்பட்டிருக்கிற செய்தி யூதா 9 -ஆவது வசனத்தில் காணப்படுகின்ற அதே செய்திதான் என்று பொதுவாக நம்பப்படுகிறது: "பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசின போது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: 'கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்'." மோசேயின் சரீரத்தைக் குறித்து ஏன் தர்க்கம் உண்டாயிற்று என்பதன் காரணத்தை நாம் உறுதியாகச் சொல்ல முடியாது. இதில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற முக்கியமான குறிப்பு ஒன்று இருக்கிறது: பேய்களின் உலகத்தில் சாத்தான் அதிகாரமுடைய பதவியைப் பெற்றிருக்கிறான். ஆனால் அவனுக்கு மிகாவேலின் மேல் அதிகாரம் இல்லை. இருந்த போதிலும் மிகாவேல் அவனைத் தூஷிக்கவில்லை. பரிசுத்த தேவதூதர் சொல்லுவதற்குத் தயங்குகிற சொற்களை மனிதர்கள் எவ்வளவு துணிவுடன் பேசுகிறார்கள்! இவ்வாறு எதிர்த்துச் செயல்படுபவர்கள் நியாயத்தீர்ப்பின்போது அதற்கேற்றபடி திருப்பிச் செலுத்த வேண்டியதாயிருக்குமே!

2:12 விசுவாசத்தை மறுத்துரைக்கும் சமயத் தலைவர்களாகிய **இவர்களோ** பகுத்தறிவற்ற விலங்குகளைப் போலிருக்கிறார்கள். விலங்குகளிலிருந்து மனிதன் வேறுபடுத்திக் காணப்படும்படி அவனுக்குக் காரண, காரியங்களைப் பகுத்தறியும் அறிவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, தங்களுடைய சரீர இச்சைகளை நிறைவுசெய்வது ஒன்றே தாங்கள் வாழ்வதற்கு மிக முக்கியமான காரணம் என்று அவர்கள் கருதுகிறார்கள். விலங்குகளில் பல கொல்லப்பட்டு இறைச்சியாகப் பயன்படுத்தப்படுவதையே முடிவாகக் கொண்டிருக்கின்றன, அதுபோலவே கள்ளப்போதகர் அழிவை நோக்கிப் பாய்ந்து செல்லுகிறார்கள். தாங்கள் பெற்ற மெய்யான அழைப்பில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை, அதாவது தேவனை மகிமைப்படுத்துவது மற்றும் அவரை மகிழ்ச்சியோடு அனுபவிப்பது ஆகியவற்றில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை.

அவர்கள் **தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள்**. அவர்கள் திருமறையைக் குறைசொல்லுகிறபோது அவர்களுடைய அறியாமை தெரிகிறதுபோல வேறு எப்பொழுதும் தெரிகிறதில்லை. தெய்வீக வாழ்க்கைக் கூறுகள் அவர்களிடத்தில் சிறிதளவும் இல்லாத காரணத்தால், அவர்களால் தேவனுடைய சொற்களையும், வழியையும், கிரியைகளையும் புரிந்துகொள்ள முடியவில்லை (1 கொரி. 2:14). ஆனாலும், அவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் திறம் பெற்றவர்களாகக் காட்டிக்கொள்வார்கள். அவர்களுடைய கள்ளத்தனத்தில் அவர்கள் அறிந்திருக்கிறதைக் காட்டிலும், ஒரு தாழ்மையான விசுவாசி முழங்காலில் அதிகமாக அறிந்திருப்பான்.

மிருகங்கள் எவ்விதமாக அழிக்கப்படுகின்றனவோ அதுபோன்றே அவர்களும் அழிவை அடைவார்கள். அவர்கள் விலங்குகளைப் போல வாழும்படியான வாழ்க்கையைத் தெரிந்து கொண்டதாலே, அவற்றைப் போலவே மரணமும் அடைவார்கள். அவர்களுடைய மரணம் ஒன்றுமில்லாமல் முடிவடைந்துபோவது என்னும் பொருளைத் தருகிறதில்லை, மாறாக அவர்கள் அவமானத்தோடு எவ்வித நம்பிக்கையும் அற்றவர்களாக மரணமடைவார்கள்.

அவர்கள் மரணத்தில் தங்களுடைய அநீதத்தின் காரணமாக துன்பத்தை அனுபவிப்பார்கள். திருவாளர் பிலிப்பு இதனைப் பொழிப்புரையாகத் தருகிறார்: "அவர்களுடைய அக்கிரமம் அவர்களுக்குப் பெருந்தீமையைச் சம்பாதித்து கொடுத்திருக்கிறது. அவர்கள் அதனை முழுவதுமாகச் செலுத்தித் தீர்க்கவேண்டும்"

2:13 இந்த மனிதர்கள் தங்களுடைய பாவ நடவடிக்கைகளைப் பகற்பொழுதில் செய்யுமளவிற்கு வெட்கமற்றவர்களாகவும் நடத்தைகெட்டவர்களாகவும் இருக்கிறார்கள். மனிதர்களில் பலர் **உல்லாசமாய் வாழ்வதை** மறைப்பதற்கு இரவுவரை பொறுத்திருக்கிறார்கள் (யோவான் 3:19). அதன் காரணமாகவே மதுக்கடைகளிலும் விபசார விடுதிகளிலும் மங்கலான விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன (1 தெச. 5:7). சாதாரணமாக இருளுக்குள் பாவம் மறைக்கப்படும், கள்ளப்போதகர்களோ அவ்விதக் கட்டுப்பாட்டைத் தூக்கி எறிந்துவிடுகிறார்கள்.

அவர்கள் கிறிஸ்தவர்களோடு உணவு உண்கையில், **கறைகளும்** கரும்புள்ளிகளுமாக இருக்கிறார்கள், அதாவது அருவருக்கத்தக்கவர்களும், தூய்மையற்ற வகையில குறுக்கிடுகிறவர்களும், மிகுதியாக உண்டு குடித்து அதில் உல்லாசமடைகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களைக் குறித்து யூதா, "இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக் கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே

மேய்த்துக்கொள்ளுகிறார்கள்" என்கிறார் (யூதா 12). திருச்சபையின் தொடக்க காலத்தில் கர்த்தருடைய பந்தியோடு நடத்தப்பட்ட அன்பின் விருந்துகளில் கலந்துகொண்ட கள்ளப்போதகர்கள் அந்த விருந்துகளின் ஆவிக்குரிய முக்கியவத்துவத்தைச் சற்றேனும் கருத்தில் கொள்ளாமலும் மட்டுமீறியபடியும் நடந்து கொண்டார்கள். பிறர் நலம் கருதுவதே அன்பின் செயல், ஆனால் இவர்களோ பிறரைக் குறித்துச் சற்றும் சிந்திக்காமல் தன்னலத்துடன் தங்களையே பேணிக் காத்துக் கொண்டார்கள்.

2:14 இதனினும் இழிநிலை, அவர்கள் **விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களை உடையவர்கள்**. இந்த மனிதர்கள் சமயவுரைகளாகக் கருதப்படும் செய்திகளைப் பிரசங்கிக்கிறார்கள், கர்த்தருடைய பந்தி போன்ற நியமனங்களை நடத்திவைக்கிறார்கள், தங்களுடைய சபைக் கூட்டங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு ஆலோசனை தருகிறார்கள்; ஆயினும் அவர்களுடைய கண்கள் அவர்களோடு தகாத உறவு வைத்திருக்கும் பெண்களையே நாடித் திரிகின்றன. ஊழியன் என்னும் போர்வைக்குள் அவர்கள் தங்களுடைய தகாத உறவிற்கான இச்சைகளை மறைத்துக்கொள்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய இழிநடத்தைக்கு எல்லையே இல்லை.

அவர்கள் உறுதியில்லாத ஆத்துமாக்களை மயக்கிச் சிக்கவைக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் பாவம் பொறுத்துக்கொள்ளப்படும் என்று வேதவசனங்களைத் திரித்துக் கூறுவார்கள். அல்லது நல்லது கெட்டது பெரும்பாலும் நம்முடைய பண்பாட்டைப் பொருத்தே கருத்திற்கொள்ளப்படும் என்று விளக்கமளிப்பார்கள். அல்லது அன்பின் அடிப்படையில் எதைச் செய்தாலும் அதில் தவறில்லை என்று தங்களால் ஏமாற்றப்பட்டவர்களுக்குக் கனிவான சொற்களாலே உறுதியளிப்பார்கள். சமயத் தலைவர்களுக்கு நேர்மையாகத் தோன்றுகிற செயல்கள், நிச்சயமாக சாதாரண உறுப்பினர்களுக்கும் நேர்மையாகத்தான் இருக்கும் என்று உறுதியில்லாத ஆத்துமாக்கள் சிந்திப்பது எளிது.

அவர்களுடைய இருதயங்கள் **பொருளாசையில் பழகினவை**. அவர்கள் ஒழுக்கக்கேட்டைத் தூண்டிவிடுகிறதில் புதுமுகங்கள் அல்லர், அந்தச் செயலைக் கற்றுத் தேர்ந்தவர்கள். பொருளாசை என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது எல்லா வகையான அதிகப்படியான விருப்பங்களையும் குறிக்கும். இந்தப் பகுதியின் பின்னணி முதன்மையாகச் சிற்றின்ப வேட்கையையே சுட்டிக்காட்டுகிறது.

கிறிஸ்தவத்தை இவ்வாறு பெருமளவு நகைப்பிற்கு இடமாக்கக்கூடிய கள்ளப்போதகர்களின் பாவத்தை எண்ணிப்பார்த்தவராக, கிறிஸ்துவின் பெயருக்கு இழுக்கு உண்டாக்குகிற அந்த மனிதர்களை **சாபத்தின் பிள்ளைகள்** என்று வியந்து உரைக்கிறார். அவர் அவர்களைச் சபிக்கவில்லை; தேவனின் சாபத்தை, அதனுடைய கொடூரத்தில் அவர்கள் அனுபவிக்கப்போகிறதை மனதில் கண்டவராக இவ்வாறு கூறுகிறார்.

2:15 பல வழிகளில் இந்தக் கள்ளப்போதகர்கள் பேயோரின் குமாரனாகிய பிலேயாமைப் போல இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வாக்கை உரைப்பவர்கள் என்று தங்களைக் காண்பித்துக்கொள்கிறார்கள் (எண். 22:38). அவர்கள் பாவம் செய்யத் தூண்டிவிடுகிறார்கள் (வெளி. 2:14). எல்லாவற்றிற்கும் மேலாக, பணவளத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு ஊழியத்தைப் பயன்படுத்துகிறார்கள். **பிலேயாம்** மீதியான் தேசத்துத் தீர்க்கதரிசி, இஸ்ரவேலைச் சபிக்க வேண்டும் என்பதற்காக மோவாபின் அரசனாலே கூலிக்கு அமர்த்தப்பட்டவன். இதனைச் செய்வதற்கு அவனைத் தூண்டிவிட்டது பண ஆசையேயாகும்.

2:16 இஸ்ரவேலைச் சபிக்கும்படி அவன் செய்த முயற்சிகளில் ஒருமுறை, அவனும் அவனுடைய கழுதையும், கர்த்தருடைய தூதனான வரைச் சந்தித்தார்கள் (அதாவது, கர்த்தராகிய இயேசு மனுவுரு எடுப்பதற்குமுன் தோன்றிய நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று). தொடர்ந்து செல்ல முடியாதென்று **கழுதை** மீண்டும் மீண்டும் மறுத்தது. பிலேயாம் அதைத் தடியால் அடித்த போது, அது அவனை மனித மொழியில் கடிந்து கொண்டது (எண். 22:15-34). பேசாத மிருகம் மனிதர் பேச்சைப் பேசியது மலைக்கத்தக்க நிகழ்ச்சி (அது தனது எஜமானைக் காட்டிலும் அதிக அறிவுடன் நடந்துகொண்டது). ஆனாலும் அந்த அற்புதம் அவனுடைய மதிகேட்டை நீக்கும்படியான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

திருவாளர் லென்ஸ்கி கூறுகிறார்:

> "தீர்க்கதரிசியாகிய பிலேயாம் அச்சம் உண்டாக்கக் கூடிய ஒரு மனிதனுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறான். அவன் என்ன செய்யக் கூடாது என்று தேவன் கூறினார். அவன் தவறி ழைத்தபோது பேசாத கழுதையைப் பேசும்படி செய்து தேவன் அவனைத் தடை செய்தார்,

> ஆனாலும் இவை யாவும் நடந்த பிறகும்கூட தனக்குப் பிரியமானதில் இரகசியமாகப் பற்றுக் கொண்டவனாய் அதனை அநீதியாகச் சம் பாதித்துவிடலாம் என்று எண்ணி அழிந்து போனான்.[19]

பேசாத மிருகங்கள் மூலமாக தேவன் இப் பொழுது கள்ளப்போதகர்களைக் கடிந்து கொள் கிறதில்லை. ஆனால் அவர்கள் தங்களுடைய மதிகேட்டிலிருந்தும் அறிவற்ற நடத்தையிலிருந் தும் திரும்பி நேர்வழியில் அதாவது, கிறிஸ்து வினிடம் திரும்பும்படி எல்லா வழியிலும் கடிந்து ணர்த்துவார் என்று நம்புவதற்குக் காரணம் உள்ளது. தங்களுடைய மேலான அறிவின் காரண மாகவும் சமய நிறுவனத்தில் வகிக்கும் பதவியின் காரணமாகவும் பெருமைப்படுகிற இந்த மனிதர் கள் திகைப்படைவதற்குத் தாழ்மையான விசு வாசிகளின் எளிமையான சாட்சிகளை தேவன் பயன்படுத்துகிறார். அது ஒருவேளை திருமறை வசனத்தை மேற்கோள் காட்டுவதன் மூலமாக இருக்கலாம் அல்லது ஊடுருவிச் செல்லும் தன்மை கொண்ட ஒரு கேள்வியாக இருக்கலாம். இவ்விதமாக ஆவியினால் நிறையப்பெற்ற ஒரு சாதாரண சபை உறுப்பினரின் மூலமாக நவீன காலத்துப் பிலேயாம் புண்படுத்தப்பட்டு சின மடைந்து வேதனையால் துடிதுடிக்கிறான்.

2:17 கள்ளப்போதகர்களைத் தண்ணீரில் லாத நீரூற்றுகளுக்குப் பேதுரு ஒப்பிடுகிறார். தேவையுள்ள மனிதர்கள் ஆவிக்குரிய தாகத் தைத் தீர்த்துக்கொள்ளும்படியும் புதிய வலிமை யைப் பெறவேண்டுமென்றும் அவர்களிடம் சென்று ஏமாற்றமடைகிறார்கள். அவர்கள் **தண் ணீரில்லாத கிணறுகள்**. மேலும் அவர்கள் **சுழல் காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமா யிருக்கிறார்கள்**. நீண்ட காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலத்திற்கு மழையைப் பொழியப் போவதாக மேகங்கள் வாக்குறுதியைத் தங்களி டம் வைத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் சுழற்காற்று வந்து மேகங்களை அடித்துச் செல்லு கின்றன. நம்பிக்கை நொறுங்கிச் சிதறுகிறது, உலர்ந்துபோன நாவுகள் திருப்தியடைவதில்லை.

இவ்வாறு வஞ்சிக்கிற போலியான சமயத் தலைவர்களுக்குப் பாதாளத்தின் **காரிருள் வைக் கப்பட்டிருக்கிறது.** நற்செய்தியின் ஊழியக்காரர் என்று தங்களைக் காட்டிக்கொள்ளும் இந்த மனி தர்கள் உண்மையில் தருவதற்கு எந்த நற்செய்தி யையும் கொண்டிருப்பதில்லை. மனிதர்கள் அப்பத்தைத் தேடி அவர்களிடம் சென்று கல்லைப் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட ஏமாற்று வேலைக் குக் காரிருளில் நித்தியம்[20] ஆயத்தமாயிருக்கிறது.

2:18 இவர்கள் அகந்தையான வீண் வார்த் தைகளைப் பேசுகிறார்கள். இதனைத் திரு வாளர் நாக்ஸ் இவ்வாறு மொழிபெயர்த்திருக் கிறார்: "எந்த அர்த்தமும் இல்லாத மிக இனிமை யான சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறார் கள்." தாராளக் கொள்கையைப் பின்பற்றுகிற பிரசங்கிகள் மற்றும் கள்ளப்போதகக் குழுவினர் பலர் பயன்படுத்துகிற சொற்கள் இங்கு மிகச் சரியாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் திறமைமிக்க சொற்பொழிவாளர்கள், தங்களு டைய ஆரவாரமான சொல்லாட்சியின் மூலமாகக் கேட்போருடைய வாய்களை அடைத்துவிடுகிறார் கள். அவர்களுடைய புலமைவாய்ந்த சொல் லாட்சி, பகுத்தறியும் ஆற்றல் இல்லாத மக்களைக் கவர்ந்திழுக்கிறது. அவர்களுடைய பிரசங்கங் களில் காணப்படும் குறைவுகளை, இறுமாப்புடன் கூடிய ஆற்றல்மிக்க பேச்சினாலே, ஈடுசெய்கிறார் கள். ஆனால் அவர்கள் தங்கள் உரையை முடிக் கிறபோது, அவர்கள் ஒன்றும் சொல்லாதவர்களா கவே காணப்படுவார்கள். இத்தகைய தரிசுநிலம் போன்ற சமயவுரைக்கு ஓர் எடுத்துக்காட்டினைத் தருகிறோம். இது இக்காலத்தில் மிகவும் புகழ் பெற்ற இறையியல் வல்லுநர் ஆற்றிய உரையிலி ருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி:

> இந்த உறவு சமநிலைத் தத்துவமோ ஏற்றத் தாழ்வானதோ அல்ல, மாறாக இது ஒற்றுமை யின் உறவு. தேவனைக் குறித்த மெய்யான அறிவைப் பற்றி இப்படித்தான் நாம் நினைக்கி றோம். இப்படித்தான் நாம் பேசுகிறோம். ஆனா லும் விசுவாசத்தில் நாம் அறிந்திருக்கிறதும் நினைவுகூருவதும் யாவும் இங்கு ஒற்றுமை என்று சொல்லப்படுவதன் பொருளைத் தரக் கூடிய நாம் அறிந்திருக்கிற ஒற்றுமையல்ல. எனினும் நாம் மீண்டும் அந்த விசுவாசத்தில் அறிந்திருப்பதும் நினைவுகூருவதும் என்ன வெனில் இங்கு ஒற்றுமை என்று பொருள் படுவது நாம் ஒற்றுமை என்று அறிந்திருப் பதைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. அந்தப் பெயரிலேயே அது அழைக்கப்படுகிறது. அதன் காரணமாக நமது எண்ணத்திலும் பேச்சிலும் ஒற்றுமையானது ஒற்றுமைக்கு இணையான ஒற்றுமையாக மாறுகிறது. அது மெய்யான தேவ வெளிப்பாட்டில் அப்போதைக்கு மெய் யென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது (அதற்கு,

அதில், அதிலேயே இணையானது அல்ல). நாம் தவறாகச் சிந்திப்பதும் இல்லை, பேசுவதும் இல்லை, ஆனால் அந்த உறவை விவரிக்கும் போது ஒற்றுமையின் உறவு என்று மிகச்சரியாக விவரிக்கிறோம்.

இந்தக் கள்ளப்போதகர்கள் கடைப்பிடிக்கும் முறை யாதெனில், கட்டுப்பாடற்றபடி, எல்லா வகையான இச்சைகளிலும் வெறியார்வங்களிலும் ஈடுபடலாம் என்று வாக்குறுதி கொடுத்து மக்களைத் **தந்திரமாகப்** பிடிப்பதேயாகும். நம் முடைய சரீரப்பிரகாரமான வேட்கை தேவனால் கொடுக்கப்பட்டது, ஆகவே அதனைத் தடைசெய்யக்கூடாது என்று அவர்கள் கற்பிக்கிறார்கள். அவ்வாறு செய்வதற்கு ஆளுமையில் மிகக்கடுமையான குறுக்கீடுகள் காரணமாக விளங்க வேண்டும்; ஆகவே அவர் திருமணத்திற்கு முன்னரே சிற்றின்ப உறவுகளில் பரிசோதனை செய்துபார்க்க வேண்டும்,திருமணத்திற்குப் பிறகும் ஒழுக்க நெறியில் கண்டிப்பின்மை காணப்படவேண்டும் என்றெல்லாம் கூறுகிறார்கள்.

இவ்வாறு ஏமாற்றப்பட்டவர்கள் வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்கள்[21] இரட்சிக்கப்படாத இந்த மனிதர்கள் ஒருகாலத்தில் பாவ இச்சைகளில் தாராளமாய் ஈடுபட்டவர்கள், ஆனால் அவர்கள் மாற்ற மடைந்த இருதயத்தைப் பெற்றார்கள். அவர்கள் சீர்பொருந்த வேண்டுமென்று தீர்மானித்தார்கள், புதுவாழ்க்கையைத் தொடங்க வேண்டுமென்று எண்ணியவர்களாக, சபைக்கு வரத்தொடங்கினார்கள். திருமறையை விசுவாசிக்கும் சபைக்குச் செல்வதற்குப் பதிலாக, இவ்விதமான கள்ள மேய்ப்பர்களில் ஒருவர் அதிகாரத்தில் இருக்கும் சபைக்குச் சென்றுவிடுகிறார்கள். கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலமாக இரட்சிப்பு கிடைக்கிறது என்னும் நற்செய்திக்குப் பதிலாக, பாவம் பொறுத்துக்கொள்ளப்படும், பாவத்தைத் தாராளமாகச் செய்யலாம் என்று கூறப்படுவதைக் கேட்கிறார்கள். இது அவர்களுக்கு வியப்பைத் தருகிறது; எப்பொழுதும் அவர்கள் பாவத்தைத் தவறு என்றும் சபை அதற்கு எதிரானது என்றும் நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ பாவத்திற்கு சமயத்தில் அனுமதி உண்டென்று அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்!

2:19 விசுவாசத்தை மறுத்துரைக்கும் ஊழியர்கள் சுதந்தரத்தைப் பற்றி மிக அதிகமாகப் பேசுகிறார்கள், அனால் அவர்கள் பேசுவதெல்லாம் தெய்வீக அதிகாரத்திலிருந்து விடுதலை, பாவம் செய்வதற்கான விடுதலை என்பதேயாகும். உண்மையில் இது **சுயாதீனம்** அல்ல, மாறாக **அடிமைத்தனத்தின்** மிக மோசமான நிலையாகும். அவர்கள் **தாங்களே கேட்டுக்கு அடிமைகளாக** இருக்கிறார்கள். கேடான இச்சைகள் மற்றும் நடத்தைகள் ஆகியவற்றின் கட்டுகளாலே அவர்கள் கட்டப்பட்டிருக்கிறார்கள். மேலும் அந்தக் கட்டுகளை அறுத்தெறிய அவர்களுக்கு வலிமையில்லை.

2:20 இருபது முதல் இருபத்தி இரண்டு வரையிலான வசனங்கள் கள்ளப்போதகர்களை மட்டுமின்றி அவர்களால் ஏமாற்றப்பட்டவர்களையும் குறிப்பிடுகின்றன. அந்த மனிதர்கள் தவறுகளை நீக்கித் திருந்தியிருந்தாலும் மறுபடியும் பிறந்தவர்களல்ல. அவர்கள் **கிறிஸ்துவையும்**, கிறிஸ்தவத்தின் அடிப்படை உண்மைகளையும் ஓரளவு மட்டுமே **அறிந்தவர்கள்,** ஆனாலும் அவர்கள் பாவத்தின் வழியைவிட்டுத் திரும்பி ஒழுக்கநெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அத்தகைய வாழ்க்கையைத் தொடங்கினவர்கள்.

அதற்குப்பின் அவர்கள் கட்டுப்பாடான வாழ்க்கையை ஏளனம் செய்பவர்களும், ஒழுக்கநெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் தடைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று பேராடுகிறவர்களுமான கள்ளப்போதகர்களின் ஆதிக்கத்திற்குள் வருகிறார்கள். அவர்கள் எந்தப் பாவங்களிலிருந்து தற்காலிகமாக விடுதலை பெற்றார்களோ அதே பாவங்களை மீண்டும் செய்யத் தொடங்கிவிடுகிறார்கள். உண்மையில் அவர்கள் முன்னிருந்ததைக் காட்டிலும் கேவலமான நிலைக்குச் சென்றுவிடுகிறார்கள். இப்பொழுது சமயத் தடைகள் நீங்கிவிட்ட காரணத்தால், அவர்களைத் தடுத்துநிறுத்துவது ஒன்றுமில்லை. ஆகவே அவர்களுடைய **பின்னிலைமை முன்னிலைமையைக் காட்டிலும் கேடுள்ளதாய்** இருக்கும் என்பது உண்மையாயிருக்கிறது.

2:21 ஒரு மனிதன் பெற்றிருக்கிற சலுகை அதிகமாகும்போது,அவனுடைய பொறுப்பும் அதிகமாயிருக்கும். ஒருவன் கிறிஸ்தவத்தின் தரத்தை அதிகமாக அறிந்திருக்கிறானென்றால், அதற்கு ஏற்றவண்ணம் வாழ்வதற்கு அவன் அதிகமாகக் கடமைப்பட்டிருக்கிறான் என்பதே பொருள். தேவனுடைய பரிசுத்த நிபந்தனைகளை **அறியாதிருப்பது**, அவற்றை **அறிந்தபின்பு** அவற்றை விட்டு உலகத்தின் அசுத்தங்களை நாடிச் செல்வதைக் காட்டிலும் **நலமாயிருக்கும்**.

2:22 **நாய் தான் கக்கின** அருவருப்பானதைத் **தின்னும்படி திரும்புகிறது** (நீதி. 26:11 -ஐப் படிக்கவும்), **கழுவப்பட்ட பன்றியானது சேற்றிலே புரளும்படி** திரும்பிச்செல்கிறது ஆகிய பழமொழிகள் உண்மையாகவே அந்த மனிதர்களைச் சித்திரித்துக்காட்டுகின்றன. **நாயையும் பன்றியையும்** எடுத்துக்காட்டுகளாகப் பேதுரு பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி இவ்விரு மிருகங்களும் அசுத்தமானவை. அந்தப் பழமொழியின்படி பார்க்கிறபோது அந்த மிருகங்களில் எந்த மாற்றமும் ஏற்படுகிறதில்லை என்ற சிந்தனையே எழுகிறது. அவை கக்கினதிலிருந்தும் சேற்றிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்கு முன் அசுத்தமாயிருந்தன. அவற்றை நோக்கி மீண்டும் திரும்பிச் சென்ற பின்னும் அவை அசுத்தமாகவே இருக்கின்றன.

பேதுரு யாரைக் குறிப்பிடுகிறாரோ அவர்களும் அதுபோலவே இருக்கிறார்கள். ஒழுக்க நெறியில் சீர்திருத்தத்தை அவர்கள் பெற்றபோதும் புதிய இயல்பை அவர்கள் பெறவே இல்லை. மத்தேயு 12:43-45 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருப்பது போல அவர்களுடைய இல்லம் வெறுமையாகவும் பெருக்கித் தூய்மைப்படுத்தப்பட்டதாகவும், ஒழுங்காக அடுக்கிவைக்கப்பட்டதாகவும் இருந்தது. ஆனால் அவர்கள் கர்த்தரை அந்த வீட்டில் குடியிருக்கும்படி அழைக்கவில்லை. அங்கிருந்து துரத்தப்பட்ட அசுத்தஆவி வெளியே சென்று மேலும் ஏழு அசுத்த ஆவிகளைக் கண்டு வெறுமையான வீட்டில் குடியிருக்கும்படி அவற்றையும் கூட்டிக் கொண்டு வந்தது. அந்த வீட்டின் முன்னிலையைக் காட்டிலும் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிற்று.

மெய்யான விசுவாசிகள் வீழ்ந்துபோகக் கூடும், கிருபையை இழந்துபோகக் கூடும் என்று போதிப்பதற்கு இந்தப் பகுதியைப் பயன்படுத்தக் கூடாது. இந்த மனிதர்கள் ஒருபோதும் மெய்யான விசுவாசிகளாக மாற்றம் பெறவில்லை. அவர்கள் புதிய இயல்பை ஒருபோதும் பெறவில்லை. அவர்கள் தங்களுடைய முந்தின இயல்பை வெளிப்படுத்திக் காட்டியதன் மூலம் அவர்கள் இன்னமும் அசுத்தமும் பாவமும் நிறைந்த இயல்போடு இருந்ததை மெய்ப்பித்தார்கள். சீர்திருந்துதல் மட்டும் போதாது, மாறாக அது ஆபத்தை விளைவிக்கக் கூடியது, ஏனெனில் அவ்வாறு சீர்திருந்தியவன் தான் பாதுகாப்பிற்குள் இருப்பதாகத் தவறாக எண்ணிக் கொண்டவனாக ஆறுதல் கொள்கிறான். இதுவே நாம் இங்கு கற்பிக்கிற பாடம். மறுபடியும் பிறப்பதன் மூலம் மட்டுமே ஒருவன் புதிய இயல்பைப் பெற முடியும். தேவனிடத்தில் மனந்திரும்பிக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினிடத்தில் விசுவாசம் வைப்பதால் மட்டுமே அவன் மறுபடியும் பிறக்கிறான்.

4. ஏளனஞ் செய்வோர் பெருகுவார்கள் என்பதுபற்றி முன்னுரைத்தல் [அதி. 3].

3:1 இரண்டாம் அதிகாரத்தில் கள்ளப்போதகர் பற்றிய பொருளை விவரித்த பேதுரு, கடைசி நாட்களில் ஏளனஞ் செய்வோர் நிச்சயமாகப் பெருகுவார்கள் என்பது பற்றிப் பேசத்தொடங்குகிறார். முந்தின மடலில் அவர் கூறியிருப்பது போலவே, அவருடைய வாசகர்கள் வேதத்தைப் பற்றிக்கொள்ள வேண்டுமென்று முதலாவதாக உற்சாகப்படுத்துகிறார்.

3:2 அவர்கள் **பரிசுத்த தீர்க்கதரிசிகள்** முன்னுரைத்தவற்றை, அதாவது பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளவற்றை நினைவுகூர வேண்டும்; மேலும் **அப்போஸ்தலரால்** வெளிப்படுத்தப்பட்டுள்ள **கர்த்தருடைய** போதனைகளையும் அவர்கள் நினைவுகூர வேண்டும், இது புதிய ஏற்பாட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. சபையின் தாழ்நிலை உண்டாகிறபோது திருமறை ஒன்றுமட்டுமே மெய்யான பாதுகாப்பாக இருக்கிறது.

3:3 கடைசி நாட்களில் **பரியாசக்காரர்** வந்து, தங்களுடைய சுய இச்சையைப் பின்பற்றுவார்கள் என்பதே தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர் ஆகியோருடைய ஒருங்கிணைந்த சாட்சியாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் இதனை நினைவுகூர வேண்டும். இந்த மனிதர்களுடைய கர்வமும் தெய்வ நிந்தனையுமான மறுப்புப் பேச்சினால் அவர்கள் நிலைகுலைந்துவிடக்கூடாது. மாறாக, இந்த உலகத்தின் முடிவு வெகுவிரைவில் வரப்போகிறது என்பதன் நிச்சயமான அடையாளத்தை அவர்களில் விசுவாசிகள் காண வேண்டும்.

இந்தப் பரியாசக்காரர்கள் **தங்களுடைய** சுய விருப்பங்களையே நடப்பிக்கிறார்கள். தேவனைக் குறித்த அறிவை நிராகரித்த நிலையில், அவர்கள் அச்சமின்றி அவர்களுடைய வேட்கைகளுக்கு இணங்கி அவற்றை அனுபவிக்கிறார்கள். அண்மையில் நடக்கப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்துச் சிறிதளவும் கருத்தில் கொள்ளாமல் அவர்கள் மனம்போன போக்கில் வாழ்வதற்கு அனுமதி உண்டு என்று பரிந்துரைக்கிறார்கள்.

3:4 அவர்கள் பரியாசம் செய்கிற விஷயங்களில் முதலாவது கிறிஸ்துவின் வருகையேயாகும். **"அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத் தத்தம் எங்கே?"** என்பது அவர்களுடைய மனப் பான்மையாக இருக்கிறது. "அந்த வாக்குத்தத் தத்தின் நிறைவேறுதல் எங்கே?" என்பதே அதன் பொருளாகும். ஆனால் **கிறிஸ்துவின்** வருகை என்பதன் பொருள் என்னவென்று அவர்கள் சொல்லுகிறார்கள்?

கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுக்காக வரப் போகிறார், அதாவது விசுவாசிகள் யாவரும் நடு வானிற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என் பதை அவர்கள் குறிப்பிடுகிறார்களா (1 தெச. 4:13-18)? கர்த்தர் திரும்பவும் வரவிருக்கிறார், அந் நிகழ்ச்சியின் முதல் பாகத்தைக் குறித்து இந்தப் பரியாசக்காரர்களுக்கு ஒன்றும் தெரியாது.

கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு வந்து தமது அகில உலக அரசை நிறுவப்போகி றார் என்பதை இது குறிக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்களா (1 தெச. 3:13)? பெரும்பாலும் அவர்கள் கிறிஸ்துவின் வருகை என்று குறிப் பிடும்போது இதையும் சேர்த்துத்தான் நினைக் கிறார்கள் என்றே தோன்றுகிறது.

ஆனால் இந்த பூமியில் நடக்கவிருக்கிற தேவ னுடைய இறுதி நியாயத்தீர்ப்பையே கிறிஸ்துவின் வருகை குறிக்கிறது என்று அவர்கள் நினைக் கிறார்கள் என்பதைத் திருமறையின் ஏனைய பகுதிகள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. இதுவே இவ்வுலகத்தின் முடிவு என்றும் பொதுவாக அறி யப்படுகிறது. வானங்களும் பூமியும் ஆயிர மாண்டு ஆட்சியின் முடிவில் பெருந்தீயினால் அழிக்கப்படும் நிகழ்ச்சியே இது என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் அவர்கள் இவ்வாறுதான் சொல்லுகிறார்கள்: "இந்த உலகத்தின் மேல் கொடிதான நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்று கிறிஸ்தவர்களாகிய நீங்கள் எச்சரித்துப் பய முறுத்துகிறீர்கள். உலக வரலாற்றில் தேவன் குறிக்கிடப்போகிறார் என்று நீங்கள் கூறுகிறீர் கள். அக்கிரமக்காரரைத் தண்டித்து, உலகத்தை அழிக்கப் போகிறார் என்று கூறுகிறீர்கள். இவை யாவும் அறிவற்ற வீண்பேச்சு. நாம் எதற்கும் அச்சமடையத் தேவையில்லை. நம்முடைய விருப் பம்போல் நாம் வாழலாம். உலக வரலாற்றில் தேவன் குறிக்கிட்டதாக எந்த அடையாளமும் இல்லை. அவர் இனிமேல் குறிக்கிடுவார் என்று நாம் ஏன் நம்பவேண்டும்?"

"பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக் கிறதே" என்னும் அக்கறையற்ற வாதத்தின் அடிப்படையில் அவர்கள் முடிவுக்கு வந்துவிட் டார்கள். இயற்கையானது ஒரே மாதிரியான விதிகளையே பின்பற்றுகிறது என்றும், இயற் கைக்கு அப்பாற்பட்ட எந்தக் குறுக்கீடும் நிகழ் வதில்லை என்றும், எல்லா நிகழ்ச்சிகளும் ஏதா வது இயற்கை விதியினாலே விளக்கிக் கூறப்படும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

எல்லா நிகழ்ச்சிகளும் ஒரே விதமான செயல் முறை விதியை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றன என்று அவர்கள் நம்புகிறார்கள். இயற்கையின் செயல்முறை நிகழ்வுகள் எப் பொழுதும் ஒரே விதமாக நடைபெற்று வந்திருக் கின்றன, மேலும் அதனுடைய தீவிரம் தவிர்க்க இயலாதபடி இப்பொழுது இருப்பதுபோலவேதான் இருந்து வருகிறது, இந்தச் செயல்முறை வளர்ச் சிகள் இதுவரை நடந்த எல்லா மாற்றங்களையும் விவரிக்கப் போதுமானவை என்பதே அந்த விதி கூறும் தத்துவங்கள்.

ஒரேவிதமான செயல்முறை வளர்ச்சி என்னும் விதிக்கும், பரிணாம வளர்ச்சி என்னும் கொள் கைக்கும் ஒரு முக்கியமான தொடர்பு இருக்கிறது. உயிரினங்கள் முந்தைய நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்து வரு கின்றன என்னும் கொள்கையானது ஒரே வித மான செயல்முறை வளர்ச்சிக் கோட்பாட்டில் உள்ள அதே கருத்துகளையும் நிபந்தனை களையும் பெரும்பாலும் கொண்டிருக்கிறது. இந்த பூமியானது இசைவியக்க ஆற்றல், பேரியக் கம் ஆகியவற்றால் கடும் மாற்றம் பெற்றுள்ளது என்றால், டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள் கையின் அனுமானங்கள் பாதிக்கப்படும்.

3:5 பரியாசக்காரர் வேண்டுமென்றே ஜலப்பிர ளய நிகழ்ச்சியைக் குறித்த உண்மையை கவ னிக்கிறதில்லை. மனிதனுடைய விவகாரத்தில் தேவன் ஒருமுறை குறுக்கிட்டிருக்கிறார். அவ் வாறு அவர் குறுக்கிட்டதன் முக்கியமான நோக் கம் அக்கிரமத்தைத் தண்டிக்க வேண்டும் என்பதே ஆகும். அது ஒருமுறை நடந்திருந்தால் மீண்டும் நடைபெறக் கூடும்.

இந்த மனிதர்களை வாட்டி வதைக்கக்கூடிய குற்றச்சாட்டு, இவர்கள் மனதார அறியாமல் இருக் கிறார்கள் என்பதே. அறிவு பெருத்தவர்கள் என்று அவர்கள் தங்களைக் குறித்து மேன்மை பாராட் டிக்கொள்கிறார்கள். அவர்கள் காரணகாரியங்

களை ஆராய்ந்து பார்ப்பதில் பாரபட்சமற்றவர்கள் என்றும் சொல்லிக்கொள்கிறார்கள். அறிவியல் ஆராய்ச்சி விதிகளைப் பின்பற்றுவதாகப் பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள். ஆனால், உண்மையில் வரலாற்றில் உறுதிசெய்யப்பட்ட ஜலப்பிரளயம் என்னும் நிகழ்ச்சியைக் கவனிக்கிறதில்லை. அவர்கள் புவியியல் பாடத்தைக் கற்கவேண்டும்!

பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தைகளினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும்... அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். **வானங்களும் பூமியும் தேவனுடைய வார்த்தைகளினாலே** உருவாயின. அவர் பேசினார், அவை உண்டாயின (எபி. 11:3). **ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கும்படி பூமி** உண்டாக்கப்பட்டது என்று பேதுரு கூறுகிறார். இந்த வசனத்தில் நாம் புரிந்து கொள்ள இயலாத ஆழமான உண்மைகள் அடங்கியிருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். ஆதியாகமம் 1:2 -ஆம் வசனத்திலிருந்து பூமியின் மேற்பரப்பானது நீரினால் மூடியிருந்தது என்பதை நாம் அறிகிறோம். அதன் பிறகு 6 -ஆவது வசனத்தில், தேவன் ஆகாய விரிவை உண்டுபண்ணினார் அல்லது பூமியில் இருந்த நீரையும் அதை மூடியிருந்த பனி அல்லது மேகமூட்டத்திலிருந்து பிரித்துப் பரந்தவெளியை உண்டாக்கினார் என்றும் படிக்கிறோம். பூமியைச் சுற்றிலும் நீர் நிறைந்த கனமான மூடுபனி மூடியிருந்தது, ஆகவே அதில் உயிரினங்கள் வாழ முடியாத நிலை இருந்தது என்று ஊகிக்கிறோம். ஆகாயவிரிவானது தெளிவான வானமண்டலத்தை உருவாக்கி நாம் சுவாசிப்பதற்கு ஏற்ற நிலையை உண்டாக்கியிருக்கிறது. ஆதியாகமம் 1:9 -இல் சமுத்திரங்களிலிருந்து பெருநிலப்பகுதிகள் பிரிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டுள்ளது. இதுவே இங்கு "ஜலத்தினின்று தோன்றி பூமி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிறது என்னும் சொற்களால் விவரிக்கப்பட்டிருக்கிறது (சங். 24:2 -ஆம் வசனத்தையும் காண்க).

பேதுரு கூறியிருக்கிற சொற்களில் அறிவியல் என்ன தாக்கத்தை ஏற்படுத்தினாலும், பூமி பெருமளவு நீர்கொண்ட, மேகங்கள் சூழ்ந்த உலகம்; அதனுடைய மேற்பரப்பின் நான்கில் மூன்று பங்கு கடலால் மூடப்பட்டிருக்கிறது; மேலும் பல பகுதிகள் பனியால் மூடப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். நமக்குத் தெரிந்த வரையிலும், பூமி மட்டுமே பெருமளவு நீர் கொண்டதும், அதன் காரணமாக மனிதன் வாழ்வதற்கு ஏதுவான ஒரே கோளுமாகும்.

3:6 தொடக்கமுதல், பூமியானது அழிவதற்கு ஏதுவான ஆதாரங்களைத் தன்னகத்தே சேர்த்து வைத்திருக்கிறது. அதனுடைய அடிநிலப்பரப்பில் நீர் இருந்தது, பெருங்கடல்களிலும் நீர் இருந்தது, அதைச் சுற்றிலும் மேலே நீர்கொண்ட மேகங்கள் இருந்தன. இறுதியாக தேவன் கீழேயிருந்தும் மேலேயிருந்தும் தண்ணீரைத் திறந்துவிட்டார் (ஆதி. 7:11). நிலம் முழுவதும் தண்ணீரில் மூழ்கியது, பேழைக்கு வெளியேயிருந்த உயிரினங்கள் யாவையும் மாண்டுபோயின.

குறைகாணும் மக்கள் இந்த வரலாற்று நிகழ்ச்சியை வேண்டுமென்றே புறக்கணித்து விட்டு விடுகிறார்கள். ஜலப்பிரளயம் நடக்கவில்லை என்று அந்த நிகழ்ச்சியை மறுத்து, அதை வெறுப்புடன் தாக்கக்கூடிய மனப்பான்மை தற்காலத்தில் பெருகிவருகிறது. ஆனால் அதைக் குறித்த செய்திகள் கற்களில் பதிக்கப்பட்டுள்ளன, அந்தச் செய்தி பழங்காலத்திலும் மற்றும் தற்காலத்திலும் மனிதர்களிடத்தில் பாரம்பரியமாகச் சொல்லப்பட்டு வந்துள்ளது, எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய பரிசுத்த வார்த்தையில் எழுதப்பட்டுள்ளது.

3:7 தேவன் பூமியைப் படைத்தபோது, அது அழிக்கப்படுவதற்குத் தேவையான அளவு நீரை அதில் சேர்த்துவைத்திருந்தார். அதுபோலவே **வானத்திலும் பூமியிலும்** அதை அழிப்பதற்குத் தேவையான அளவு அக்கினியைச் சேர்த்து வைத்திருக்கிறார். இந்த அணுசக்தி யுகத்தில், ஆற்றல் சேர்த்துவைக்கப்பட்டிருக்கும் ஒன்றே பருப்பொருள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அணுவின் மையப்பகுதி உடைக்கப்படுகிறபோது மிகப்பெரிய அளவிற்கு அக்கினிமயமான ஆற்றல் வெளிப்படும். ஆகவே உலகத்திலுள்ள எல்லாப் பொருட்களுமே வெடித்துச் சிதறக்கூடிய பெருமளவிலான ஆற்றலைக் கொண்டிருக்கின்றன. தற்பொழுது எல்லாவற்றையும் கர்த்தர் அடக்கி வைத்திருக்கிறார் (கொலோ. 1:17 "எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது"). அவ்வாறு தடை செய்கிற அவருடைய கை நீக்கப்படுமானால், மூலங்கள் யாவும் உருகத்தொடங்கிவிடும். அதற்கிடையில் **வானங்களும், பூமியும், தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் வரைக்கும், அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கின்றன.**

3:8 அவ்வாறாயின் தேவனுடைய நியாயத் தீர்ப்பு நிகழ்வதற்கு இத்தனை காலதாமதம் ஏன்? தேவன் காலங்களைக் கடந்தவர் என்பதை நாம் முதலாவது அறிய வேண்டும். நாம் வாழ்கிறது போல அவர் ஒரு கால எல்லைக்குள் வாழ்கிற தில்லை. இந்தக் கால அளவானது சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள உறவை அடிப்படை யாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதேயொழிய, தேவன் இதன் மூலமாகக் கட்டுப்படுத்தப்படு வதில்லை.

கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போல வும் இருக்கிறது. ஒருநாளை ஆயிரம் ஆண்டு களைப் போல அவரால் விரிவாக்கம் செய்யவோ ஒருமுகப்படுத்தவோ முடியும்.

3:9 அக்கிரமக்காரரின் வரலாற்றை ஆக்கி னைத்தீர்ப்பின் மூலமாக முடிவுக்குக் கொண்டு வருவதாக தேவன் வாக்குறுதி செய்திருக்கிறார். அது **தாமதிக்கிறது** போல் தோன்றினால், தேவன் தமது **வாக்குத்தத்தத்திற்கு** உண்மையற்றவரா யிருக்கிறார் என்பதல்ல அதன் காரணம். அவர் **பொறுமையுள்ளவராயிருக்கிறார்** என்பதே காரணம். எவரேனும் கெட்டுப்போவதென்பது அவ ருக்கு விருப்பமற்றது. **எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்பதே** அவருடைய விருப்பம். மனி தன் இரட்சிப்படைவதற்கு எல்லா வாய்ப்புகளும் தந்தருளுப்பட வேண்டும் என்பதற்காகவே அவர் கிருபையின் காலத்தை விரிவுபடுத்தியிருக் கிறார்.

ஏசாயா 61:2 -இல் கர்த்தருடைய அநுக்கிரக *வருஷத்தையும்*, நீதியைச் சரிக்கட்டும் *நாளை யும்* குறித்துப் படிக்கிறோம். அவர் கிருபையை வெளிப்படுத்த விருப்பங்கொண்டிருக்கிறார் என்றும் அவருடைய ஆக்கினைத் தீர்ப்போ அபூர்வமானது என்றும் இது கூறுவதாகக் காணப் படுகிறது. அவர் தமது பொறுமையை 1000 ஆண்டுகள் நீடிக்கச் செய்ய முடியும், அவருடைய ஆக்கினைகளை ஒரு நாளில் சுருக்க முடியும் என்று இது கூறுவதாகவும் காணப்படுகிறது.

ஜலப்பிரளயத்தை அனுப்ப அவர் 120 ஆண்டு கள் காத்திருந்தார். இப்பொழுதோ அதை அக்கி னியால் அழிக்கப் பல நூற்றாண்டுகள் காத்திருக் கிறார்.

3:10 ஆனால் **கர்த்தருடைய நாள் வரும்.** தேவன் நியாயத்தீர்ப்பைச் செலுத்தும்படி செயல் படுகிற எந்தக் காலத்தையும் அது குறிக்கும். கர்த்தர் அக்கிரமக்காரரைத் தண்டித்து, பகை ஞரை வெற்றிகொண்ட எந்த நேரத்தைக் குறிக்க வும் இச்சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் பயன் படுத்தப்பட்டது (ஏசா. 2:12; 13:6,9; எசே. 13:5; 30:3; யோவேல் 1:15; 2:1,11,31; 3:14; ஆமோஸ் 5:18,20; ஒப. 1:15; செ. 1:7,14; சக. 14:1; மல். 4:5).

புதிய ஏற்பாட்டில் அது வெவ்வேறு காலப் பகுதிகளைக் குறிக்கிறது:

1. அது உபத்திரவ காலத்தைக் குறிக்கிறது. விசுவாசிக்காத இஸ்ரவேலை தேவன் தண் டிக்கப்போகிற ஏழு ஆண்டுக் காலமே அது (1 தெச. 5:2; 2 தெச. 2:2 நடுநிலைப் பிரதி).
2. தேவனை அறியாதவர்கள் மேலும், கர்த்த ராகிய இயேசுவின் நற்செய்திக்குக் கீழ்ப்படி யாதவர்கள் மேலும் அவர் தமது கோபத்தைச் செலுத்தும்படி பூமிக்கு மீண்டும் வருகிற காலத்தை அது குறிக்கும் (2 தெச. 1:7-10).
3. கிறிஸ்து இரும்புக் கோலோடு ஆட்சிபுரிய விருக்கிற ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்தைக் குறிக்கவும் இச்சொற்றொடர் பயன்படுத்தப் பட்டுள்ளது (அப். 2:20).
4. வானங்களும் பூமியும் அக்கினியின் மூலமாக இறுதியில் அழிக்கப்படும் நிகழ்ச்சியையும் அது குறிக்கிறது. இந்த 3 -ஆவது அதிகாரத் தில் இதுவே அதனுடைய பொருளாகும்.

அது **திருடன் வருகிறவிதமாய்** வரும். அதா வது அது எதிர்பாராத விதமாகவும், அழிவை உண்டாக்கும்படியும் வரும். **வானங்கள் மடமட என்று அகன்றுபோகும்.** இது வளிமண்டலத் தையும், விண்மீன்கள் நிறைந்த வானத்தையும் குறிப்பது நிச்சயம், ஆனால் இது மூன்றாவது வானத்தைக் குறிப்பதில்லை. அது தேவனுடைய குடியிருப்பு. அவை பெருஞ்சத்தத்தோடு அகன்று போகும். அவற்றின் மூலக்கூறுகள் பெரும் வெப் பத்தால் **வெந்துருகிக்** கரைந்துபோகும். **பூதங் கள்** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது பருப் பொருட்களின் மூலக்கூறுகளையே சுட்டிக்காட்டு கிறது. எல்லாப் பருப்பொருட்களும் அழிந்து போம், அண்டசராசரத்தின் பேரழிவாக அது காணப்படும்.

பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.[22] இயற்கையாகிய படைப்பின் கிரியைகள் மட்டுமல்லாமல், எல்லா உலக நாகரிக மேம்பாட்டு நிலையும் அழிந்துபோகும். இந்த உலகத்தின் தலைநகரங்கள், கம்பீரமான

கட்டடங்கள், குறிப்பிடத்தக்க சிறப்புவாய்ந்த அறிவியல் கண்டுபிடிப்புகள் யாவும் முழு அழிவுக்கென்று வைக்கப்பட்டுள்ளன.

3:11 இப்பொழுது ஏளனம் செய்வோரை விடுத்து, பரிசுத்தவான்கள் பெற்றிருக்கிற கடமைகளை நிறைவேற்றுவதற்கான அறிவுரைகளைப் பேதுரு வலியுறுத்தத் தொடங்குகிறார். **இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.** பருப்பொருட்களாலான அனைத்தும் மறந்தொழிந்து போவதற்கான முத்திரை பதிக்கப்பட்டதாயிருக்கின்றன. எந்தப் பொருட்களைக் குறித்து மனிதன் மேன்மை பாராட்டுகிறானோ, எந்தப் பொருட்களுக்காக அவன் வாழ்கிறானோ அனைத்தும் அகன்று போகக்கூடிய தன்மை படைத்தவை. இந்த உலகத்தின் வெற்றுப்பகட்டான, அற்பமான பொருட்கள் யாவற்றிலிருந்தும் திரும்பி, பரிசுத்தத்தோடும் தேவபக்தியோடும் வாழவேண்டுமென்று பொதுஅறிவு நமக்குக் கற்பிக்கிறது. தற்காலத்திற்கென்று வாழாமல் நித்தியத்திற்கென்று வாழ்வதும், உலகப்பொருட்களை மேன்மை பாராட்டாமல் ஆவிக்குரியவற்றை வலியுறுத்துவதும், அகன்றுபோவதை விடுத்து நிலையானதைப் பற்றிக்கொள்வதும் ஒழிவுமறைவற்ற படிப்பினையாகும்.

3:12 விசுவாசிகள் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். **தேவனுடைய நாள் வரும்படி** அவர்கள் மிகுந்த விருப்பத்தோடு காத்திருக்க வேண்டும். **"தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு"** என்னும் சொற்களைச் சிலர், நம்முடைய பக்திநிறைந்த வாழ்க்கையின் மூலமாகவும், தளர்வுறாத ஊழியத்தின் மூலமாகவும் கர்த்தருடைய வருகையை நம்மால் விரைவுபடுத்த முடியுமென்று கற்பிப்பதற்குப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், அவ்வாறு கற்பிப்பதில் இரண்டு சிக்கல்கள் உள்ளன. முதலாவதாக, தேவனுடைய நாள் என்பது கர்த்தரின் வருகையைக் குறிப்பதில்லை. இரண்டாவதாக, அது அவ்வாறு இருந்தாலும், கர்த்தருடைய மக்களின் மனப்பூர்வமான முயற்சியின் மூலமாகக் கிறிஸ்துவின் வருகையின் நேரத்தை மாற்றமுடியுமா என்ற கேள்வி எழுவது இயற்கையே.

தேவனுடைய நாள் நித்திய நிலையையே குறிக்கிறது. வானங்களும் பூமியும் அழிக்கப்படும் நிகழ்ச்சியாகிய கர்த்தருடைய நாளின் இறுதி அத்தியாயத்தைத் தொடர்ந்தே தேவனுடைய நாள் வரும். அந்நாள் அவருடைய நிறைவும் முடிவுமான வெற்றியையே சுட்டிக்காட்டுகிறது. இந்தக் காரணத்தின் நிமித்தமே அந்த நாள் நம்முடைய காத்திருப்புக்கும் வாஞ்சைமிக்க விருப்பத்திற்கும் உகந்த நாளாயிருக்கிறது.

தேவனுடைய நாளைக் குறித்துப் பேதுரு பேசுகையில், "அந்த நாளில்" என்று கூறாமல், மாறாக அதன் காரணமாக **வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்** என்றே கூறுகிறார். (தமிழில் "அந்த நாளில்" என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.) கடைசியாக நிகழக்கூடிய பேரழிவு தேவனுடைய நாளில் நிகழ்வதில்லை. மாறாக தேவனுடைய நாள் வருவதற்கு முன் கடைசி ஆக்கினைத் தீர்ப்பு நடைபெறவேண்டும்.

3:13 தேவனுடைய நாளுக்கென்று விசுவாசிகள் காத்திருக்க வேண்டுமென்று 12 -ஆவது வசனத்தில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இங்கு அவர்கள் **நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருப்பதாகச்** சொல்லப்பட்டிருக்கிறது. புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாயிருக்கக்கூடிய நித்திய நிலையையே தேவனுடைய நாள் குறிப்பிடுகிறது என்பதற்கு இந்த வசனம் ஆதரவு அளிக்கிறது.

ஏசாயா 65:17; 66:22 - ஆகிய வசனங்களில் ஆயிரமாண்டு ஆட்சிக்காலமே நித்திய நிலை என்று குறிக்கும்படி புதிய வானங்களும் புதிய பூமியும் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் ஆயிரமாண்டு ஆட்சிக்காலமும் அடங்கியிருக்கும் என்பதை, அங்கு பாவம் இருக்கும் என்பதாலும் (65:20), அப்பொழுது பிள்ளைகள் பிறப்பார்கள் என்பதாலும் (65:23) நாம் அறிந்திருக்கிறோம். பேதுரு நித்திய நிலையைக் குறிக்கும்படி மட்டுமே இந்தச் சொற்களைப் பயன்படுத்துகிறார்; இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அப்பொழுது ஏற்கனவே அழிந்து போயிருக்கும்.

புதிய வானங்களிலும் புதிய பூமியிலும் நீதி வாசமாயிருக்கிறது என்று பேதுரு கூறுகிறார். இக்காலத்தில் நீதியின் மூலமாக கிருபை ஆளுகைபுரிகிறது (ரோமர் 5:21). ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் நீதி ஆட்சிபுரியும் (ஏசாயா 32:1). நித்தியத்தில் நீதி குடியிருக்கும். கிறிஸ்து இப்புவியில் ஆட்சிபுரிகையில் இருப்புக்கோலோடு

ஆட்சிபுரிந்து நீதியை நிலைநிறுத்துவார். ஆனால் நித்தியத்தில் இருப்புக்கோலுக்கு வேலையில்லை. நீதி வீட்டில் இருக்கும். அமைதியைக் கெடுக்க ஏதொரு பாவமும் அங்கிருக்காது அல்லது அந்தக் காட்சியின் அழகும் கேடுறாது.

3:14 புதிய வானங்களையும் புதிய பூமியையும் குறித்த சத்தியம் நாம் "கர்த்தருக்கென்று" பரிசுத்தமாக வாழ்வதற்கான விருப்பத்தை அதிகரிக்க வேண்டும். இந்தச் சத்தியத்தை நாம் பற்றிக்கொள்வது மட்டுமின்றி, அது நம்மைப் பற்றிக் கொண்டதாயிருக்கவும் வேண்டும். நாம் வெகு விரைவாக தேவனுக்குமுன் நிற்க வேண்டுமென்னும் அறிவு, நாம் **கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்** வாழ்வதற்கான விருப்பத்தை நம்மிடத்தில் உண்டாக்க வேண்டும், அதாவது, ஒழுக்க ரீதியாகத் தூய்மையோடு நடந்து கொள்ள வேண்டும். நாம் சண்டை போடுகிறவர்களாக அல்ல, **சமாதானமான** நிலையில் காணப்படும்படி வைராக்கியமுள்ளவர்களாக அது மாற்றவேண்டும்.

3:15 மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள். அவருடைய ஆக்கினைத் தீர்ப்பு தாமதிப்பது மனிதர்கள் இரட்சிக்கப்படுவதற்கான முழு வாய்ப்பையும் தந்தருளுகிறது. மனிதர்களுடைய அக்கிரமம் பல மடங்கு பெருகிவருகிறதைக் காண்கிற நாம், கர்த்தர் எவ்வாறு தமது ஆக்கினைத் தீர்ப்பை இனியும் நிறுத்தி வைக்க முடியும் என்று அவ்வப்போது ஆச்சரியப்படுகிறோம். அவருடைய நீடியபொறுமை வியப்பு மேலிடச் செய்கிறது. ஆனால் அதற்கொரு காரணம் உள்ளது. அவர் துன்மார்க்கனுடைய மரணத்தில் பிரியப்படுகிறதில்லை. அவர்கள் தங்களுடைய பொல்லாத வழிகளைவிட்டு விலகி இரட்சிப்படைய வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாயிருக்கிறது.

நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான். பவுலைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் ஆர்வமிக்க பல குறிப்புகளை வெளிப்படுத்துகின்றன:

1. முதலாவது, பவுல் நமக்குப் பிரியமான சகோதரன் என்று பேதுரு குறிப்பிடுகிறார். அந்தியோகியாவில் பேதுரு உள்ளொன்று வைத்துப் புறமொன்றாகச் செயல்பட்டதால், அவரை வெளிப்படையாகப் பவுல் கடிந்து கொண்ட போதிலும் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார் (கலா. 2:11-21). பேதுரு கடிந்து கொள்ளப்பட்டதைத் தாழ்மையோடு ஏற்றுக் கொண்டார் என்பது நிச்சயம். மனக்கசப்பை உள்ளத்தில் மறைத்துவைக்காமல் நாம் திருத்தப்படுவதற்கு ஆயத்தத்தோடு இருக்க வேண்டும்.
2. பவுல் மடல்களை எழுதும்படி அவருக்கு தெய்வீக ஞானம் அருளப்பட்டது என்று இங்கு பேதுரு ஒப்புக்கொள்கிறார். பவுலுடைய மடல்கள் தேவ ஆவியின் உயிரூட்டத்தால் எழுதப்பட்டவை என்று பேதுரு கருதினார் என்பதற்கான நிச்சயமான அறிவிப்பாக இது விளங்குகிறது.
3. பவுலின் மடல்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பேதுருவின் வாசகர்கள் படித்திருப்பார்கள் என்பது தெளிவாய்த் தெரிகிறது. அந்த மடல்கள் அவர்களுக்கு நேரடியாக எழுதப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவர்களுடைய பகுதியில் அவை சுற்றறிக்கைபோல அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

பவுலின் எந்த மடல் **நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்** என்று கூறுகிறது? "அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ" என்று ரோமர் 2:4 கூறுகிறது.

3:16 பேதுரு தனது இரண்டு மடல்களிலும் சொல்லியிருக்கிற பெரிதான சத்தியங்களைக் குறித்து, பவுல் தன்னுடைய **எல்லா நிருபங்களிலும்** பேசியிருக்கிறார். புதிய பிறப்பு, கிறிஸ்துவின் தெய்வீகம், பாவமற்றவராயிருந்தும் பாடுகள் பட்ட அவருடைய வாழ்க்கை, பதிலாளாக அவர் மரணமடைந்த செயல், அவருடைய உயிர்த்தெழுதல், அவர் மீண்டும் வருகைபுரிதல், கர்த்தருடைய நாள், நித்திய நிலை போன்ற பல சத்தியங்கள்.

திருமறைச் சத்தியங்களில் சில **அறிகிறதற்கு அரிதானவை**. திரியேகம், தேவனுடைய தெரிந்தெடுப்பு, மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சுயசித்தம், பாடுகளின் இரகசியம் போன்றவை அவை. திருமறையில் நம்முடைய அறிவுக்கு அப்பாற்பட்டவை இருக்கின்றன என்னும் உண்மை நமக்குத் தொல்லை அளிக்கக் கூடாது. தேவனுடைய வார்த்தை எல்லையற்றது, எடுக்க எடுக்கக் குறையாதது. தேவன் அறிந்த எல்லாவற்றையும்,

முழுவதுமாக ஒருக்காலும் நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்று தேவனுக்குப் புகழைச் செலுத்த ஆயத்தமுள்ளவர்களாகவே நாம் அதனைப் படிக்க வேண்டும்.

பவுல் எழுதியவை **அறிகிறதற்கு அரிதானவை** என்று பேதுரு எழுதுகையில் அவர் குறையொன்றும் கூறவில்லை. பவுல் எழுதியவற்றின் மொழிநடைஅறிந்துகொள்வதற்குக் கடினமான படி இருப்பதாக இங்கு சொல்லப்படவில்லை. மாறாக அவர் எடுத்துக்கொண்ட பொருள் அவ் வளவு கடினமானது. "பவுல் என்ன பொருளோடு கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்வது கடின மானது என்று பேதுரு குறிப்பிடவில்லை, மாறாக அவர் கற்பித்துள்ள பெரிதான சத்தியங்களைப் புரிந்துகொள்வதே கடினம்" என்று திருவாளர் பார்னஸ் கூறுகிறார்.[23]

அவற்றை விசுவாசத்தோடு அப்படியே ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, கடினமான சத்தியங் களில் சிலவற்றை, **கல்லாதவர்களும் உறுதி யில்லாதவர்களும் தங்களுக்குக் கேடுவரத் தக்கதாகப் புரட்டுகிறார்கள்**. சில கள்ளப் போத கக் குழுவினர், நியாயப்பிரமாணம் வெறுமனே பாவத்தை வெளிப்படுத்துகிற உபாயம் என்பதற் குப் பதிலாக அது இரட்சிப்பிற்கான வழி என்று கூறுவது இதற்கோர் எடுத்துக்காட்டாகும். வேறு சிலர் ஞானஸ்நானம் விண்ணகத்திற்கு வழி என்று கூறுகிறார்கள். பவுலின் நூற்களுக்கும், இன்னும் சில வேத பகுதிகளுக்கும் தவறான பொருள்கொண்டு அவர்கள் இவ்வாறு கூறுகிறார் கள்.

பவுல் எழுதியவற்றை **மற்ற வேதவாக்கியங் களுக்கு** இணையாகப் பேதுரு குறிப்பிடுகிற தைக் கவனியுங்கள். அதாவது, பழைய ஏற்பாடு மற்றும் அந்தச் சமயத்தில் ஏற்கனவே எழுதப்பட்டி ருந்த புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் ஆகியவற் றையே பேதுரு இங்கு குறிப்பிடுகிறார். மேலும் பவுலின் நிருபங்கள் ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்ட பரிசுத்தமான எழுத்துகள் என்று அவர் ஒப்புக்கொள்கிறார்.

3:17 வஞ்சகம் உண்டுபண்ணுகிற ஆபத்தி லிருந்து விசுவாசிகள் தங்களை இடைவிடாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள், அவர்கள் சத்தியத்தைக் களங்கப்படுத்தி அதற்கு இணை யான போலியை உருவாக்குவார்கள் என்னும் அறிவு நம்மை எப்பொழுதும் விழிப்புள்ளவர் களாக இருக்கச் செய்ய வேண்டும். **அக்கிரமக்கார ருடைய வஞ்சகம்** ஆபத்தை முன்னறிந்திராத மனிதர்களை ஆவிக்குரிய தன்மையில் நிலை நிற்கச் செய்யாதபடி அடித்துச் சென்றுவிடும்.

3:18 தெய்வீகக் காரியங்களில் தொடர்ச்சி யான முன்னேற்றம் கள்ளப்போதகர்களால் ஏற் படக்கூடிய ஆபத்திலிருந்து பாதுகாக்கும் என்று பேதுரு மீண்டும் ஒருமுறை கற்பிக்கிறார். இரண்டு வகையான வளர்ச்சி காணப்பட வேண்டும் - **கிருபையிலும் அறிவிலும்**. ஆவியின் கனியின் நடைமுறை வெளிப்பாடே கிருபை. நாம் தலை யில் பெறுகிற அறிவு வளர்ச்சியோ, சோர்வுறாத வண்ணம் செய்கிற உழைப்போ கிருபையின் வளர்ச்சியாகாது; கர்த்தராகிய இயேசுவின் சாய லில் நாம் அடைகிற வளர்ச்சியே கிருபையில் உண்டாகிற வளர்ச்சி. திருமறையின் மூலமாக கர்த்தரோடு நாம் கொண்டிருக்கிற தொடர்பே இங்கு அறிவு எனப்படுகிறது. திருமறையைக் கற் பதில் வளர்ச்சி, மேலும் அவருடைய சொற்களுக் கும், கிரியைகளுக்கும், வழிகளுக்கும் கீழ்ப்படி வதில் வளர்ச்சி ஆகியவையே **அறிவில்** உண்டா கிற வளர்ச்சியாகும்.

ஆனால், பரிசுத்தவான்களுக்குக் கொடுக் கப்படுகிற அறிவுரையோடு பேதுருவினால் தனது மடலை முடிக்க முடியாது. அதனுடைய உச்சக் கட்டம் இரட்சகருக்கு உண்டாகிற **மகிமையாக** இருக்க வேண்டும். ஆகவே நாம் மிக இனிமை யான புகழுரையைக் காண்கிறோம்: **அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமை யுண்டாவதாக. ஆமென்**. நாம் வாழ்கிறதன் முடி வான நோக்கம் இதுதான் - அவரை மகிமைப் படுத்துவது - ஆகவே, இந்த மடலுக்கு இதைக் காட்டிலும் தகுதியான **முடிவுரை** இருக்க முடியாது.

அடிக்குறிப்புகள்

1 (Intro) E. G. Homrighausen, *"The Second Epistle of Peter,"* Exposition, IB, XII, 1957, p. 166.

2 (1:5) இவ்விரிவுரை ஆசிரியரின் நண்பர் டாம் ஆல்சன் என்பவரின் பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது.

3 (1:5) R. C. H. Lenski, *The Interpretation of the Epistle of St. Peter, St. John and St. Jude,* p. 266.

4 (1:5) This famous story is widely recounted. See, for example, *S. M. Houghton, Sketches from Church History,* pp. 114-116.

5 (1:6) Robert G. Lee, *Seven Swords and Other Message*, p. 46.

6 (1:16) ஒரு பொருளைத் தரும்படி இரண்டு சொற்களைப் பயன்படுத்துவது handiadys என்று அழைக்கப்படுகிறது (கிரேக்க மொழியிலிருந்து பிறந்த சொல், "இரண்டிலிருந்து ஒன்று" என்னும் பொருளை உடையது). திருமறையில் இத்தகைய நடை ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது, இதனை அறிவது நல்லது.

7 (1:16) John A. T. Robinson, *Honest to God*, p. 32,33.

8 (1:18) தாபோர் மலையே மறுரூப மலை என்று ரோமக் கத்தோலிக்கரின் பாரம்பரியம் ஏற்படுத்தியிருக்கிறது. அங்கு சில புண்ணியத் தலங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. வரலாற்றுச் சான்றின்படி இந்தப் பாரம்பரியம் ஒப்புக்கொள்ள முடியாதது. ஏனெனில் வேதம் மறுரூப மலை மிக உயர்ந்த மலை என்று கூறுகிறது. மேலும் கர்த்தர் பூமியில் வாழ்ந்த காலத்தில் தாபோர் மலையில் ரோமக் காவற்படை இருந்தது, ஆகவே தனிப்பட்ட வெளிப்பாட்டை நிகழ்த்த அந்த இடம் சரியாக இருந்திருக்காது! கலிலேயாவின் வடக்கு பகுதியில் இருக்கும் உயரமான பனிபடர்ந்த எர்மோன் மலை அந்நிகழ்ச்சி நடைபெற்ற இடமாக இருந்திருக்கும்.

9 (1:20) The Greek word epilusis can be translated *"origin"* (NKJV margin) as well as *"interpretation."*

10 (1:20) Dinsdale T. Young, *The Unveiled Evangel,* pp. 13,14.

11 (1:21) The critical text (NU) reads *"but men spoke from God."*

12 (2:1) Wallie Amos Criswell, *The Evangel,* Largo, FL, November 1949, p. 1.

13 (2:1) Nels Ferre, *The Sun and Umbrella,* pp. 35,

14 (2:1) Gerald Kennedy, *God's Good News,* p. 125.

15 (2:2) Robinson, Honest, p. 118.

16 (2:2) NCC, *Called to Responsbible Freedom,* pp. 11.

17 (2:6) A. J. Pollack, *Why I Believe the Bible is the Word of God,* p. 23.

18 (2:10) Pageant Magazine, October, 1965.

19 (2:16) Lenski, *Interpretations,* pp. 326, 327.

20 (2:17) "என்றென்றைக்குமுள்ள" என்ற சொல் நடுநிலைப் பிரதியில் (NU) இடம்பெற வில்லை. ஆனால் இதற்கு மிக நெருக்கமான யூதா 13 –ஆம் வசனத்தில் அச்சொல் விடப்பட வில்லை.

21 (2:18) நடுநிலைப் பிரதியில் "அரிதாய்த் தப்பித்திருப்பவர்கள்" என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. (NKJV யில் உண்மையில் தப்பின வர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

22 (3:10) "எரிந்து அழிந்துபோம்" *(katakaesetai)* என்னும் சொற்களுக்குப் பதிலாக "வெறுமையாக்கப்படும்" என்னும் பொருளைத் தருகிற "காணப்படும்" என்னும் சொல் NU பிரதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

23 (3:16) Albert Barnes, Notes on the *New Testament*, X:268.

நூல் விவரப் பட்டியல்

பேதுரு முதலாம் நிருபத்திற்குரிய நூல் விவரத் தொகுப்பைக் காண்க.

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின முதலாம் நிருபம்

முன்னுரை

"கிறிஸ்து கடலின்மேல் நடந்ததைப் போலன்று, அவருடைய சாதாரண நடையைப் பின்பற்றும்படியே இங்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்".

– மார்டின் லுத்தர்

1. வேதநூல் தொகுப்பில் தனிச்சிறப்பு மிக்க இடம்

யோவானின் முதல் கடிதம் ஒரு குடும்பத்தின் நிழற்படங்கள் அடங்கிய செருகேடு (Album) போல இருக்கிறது. இறைவனின் குடும்பத்தில் உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களைப் பற்றி இம்மடல் விவரித்துக் கூறுகிறது. பிள்ளைகள் எவ்வாறு பெற்றோரைப் பிரதிபலிக்கிறார்களோ அதுபோலவே தேவனுடைய பிள்ளைகள் அவருடைய சாயலைப் பெற்றிருக்கிறார்கள். இந்த மடலானது அத்தகைய ஒற்றுமைகளை விவரிக்கிறது. ஒரு மனிதன் தேவனுடைய பிள்ளையாக மாறுகிறபோது, அவன் நித்திய வாழ்வாகிய தேவனுடைய வாழ்வைப் பெறுகிறான். இந்த வாழ்வைப் பெற்றிருக்கிற யாவரும், அதனை மிகக் குறிப்பிடத்தக்க வழிகளில் வெளிப்படுத்திக் காட்டுவார்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் தேவனிடத்தில் அன்புபாராட்டுகிறார்கள், அவர்கள் இறைமக்களிடம் அன்புபாராட்டுகிறார்கள், அவர்கள் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள், அவர்கள் தொடர்ந்து பாவம் செய்துகொண்டிருப்பதில்லை. இவையாவும் நித்திய வாழ்வின் சில தரக்குறியீடுகளாக இருக்கின்றன. இத்தகைய குடும்பப் பண்புகள் யாரிடமெல்லாம் இருக்கின்றனவோ, அவர்கள் யாவரும் நித்திய வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறியும் பொருட்டே யோவான் இம்மடலை எழுதியிருக்கிறார் (1 யோவான் 5:13).

யோவான் முதல் நிருபம் பல நிலைகளில் வழக்கத்திற்கு மாறானதாக இருக்கிறது. இது உண்மையாகவே எழுதி அனுப்பப்பட்ட மடலாக இருந்தபோதிலும் இதன் ஆசிரியர் யார், இது யாருக்கு எழுதப்பட்டது என்ற விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் ஒருவரையொருவர் அறிந்திருந்தார்கள் என்பதில் ஐயம் ஏதுமில்லை. இந்த இனிய நூலைப் பற்றிய மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், ஆவிக்குரிய சத்தியங்கள் மிகச்சிறிய எளிய வாக்கியங்களில் அதற்கேற்ற சொல்லாட்சிகளோடு சொல்லப்பட்டிருக்கின்றன என்பதேயாகும். புரிந்து கொள்வதற்குக் கடினமான வாக்கியங்களின் மூலமாகத்தான் ஆழமான சத்தியங்களைக் கூறமுடியும் என்று யார் கூறினார்கள்? "ஆழமான" பிரசங்கங்கள் அல்லது கட்டுரைகள் என்று மதியீனமாகச் சிலர் புகழுகிறவை குழப்பமானவையாகவும் தெளிவற்றவையாகவும் இருக்கின்றன என நாம் அஞ்சுகிறோம்.

யோவான் முதல் மடல் நீண்ட தியானத்திற்கும், ஆழ்ந்து கற்பதற்கும் உகந்தது. மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டிருப்பதாகத் தோன்றும் பகுதிகள் உண்மையில் சிறிய வேறுபாட்டோடு மட்டுமே சொல்லப்பட்டுள்ளன. இவ்வாறான பொருள் வேற்றுமைகளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

2. நூலாசிரியர்

1 யோவான் மடலின் ஆசிரியர் பற்றிய புறச்சான்று மிகவும் முந்தின காலத்தைச் சேர்ந்ததும் வலிமையானதும் ஆகும். நான்காவது நற்செய்தி நூலாசிரியர் யோவான்தான், இம்மடலின் ஆசிரியர் என்று குறிப்பிட்டு இதிலிருந்து மேற்கோள் காட்டியவர்கள்: ஐரேனியஸ், அலெக்சாந்திரியா கிளமண்ட், தெர்தூலியன், ஓரிஜன் மற்றும் அவரது மாணாக்கர் டயோனிசியஸ்.

எபிரெயர் மடலின் ஆசிரியரைப் போன்றே, 1 யோவான் மடலின் ஆசிரியரும் தனது பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனால் எபிரெயர் மடலைப் போலன்றி, 1 யோவான் நூலின் ஆசிரியர் யார் என்பதற்கான அகச்சான்றுகள் மனநிறைவு அளிக்கக் கூடியவை.

முதல் நான்கு வசனங்கள், நூலாசிரியர் கிறிஸ்துவை நன்கு அறிந்திருந்தார் என்றும், அவ

ரோடு அதிகமான நேரத்தைச் செலவிட்டிருந்தார் என்றும் காட்டுகின்றன. இவ்வுண்மை இந்நூலின் ஆசிரியர் ஒரு சிலருக்குள்ளாகவே இருக்க வேண்டும் என்று எண்ணிக்கையைச் சுருக்கிவிடுகிறது, மேலும் பாரம்பரியக் கருத்தின்படி அப்போஸ்தலனாகிய யோவானே இந்நூலின் ஆசிரியர் என்பதற்கும் இது இசைவுடையதாயிருக்கிறது.

இம்மடலில் காணப்படும் அப்போஸ்தலத் தொனி இக்கருத்தை வலுப்படுத்துகிறது; ஆசிரியர் இம்மடலை அதிகாரத்துடனும் வயதுமுதிர்ந்த ஆவிக்குரிய தலைவரின் இளகிய மனதுடனும் ("என் சிறு பிள்ளைகளே"), கொள்கையில் உறுதியுடன்கூடிய குறிப்புடனும் எழுதுகிறார்.

இம்மடலில் பொதிந்துள்ள சிந்தனை, சொல்லாட்சி ("நிலைத்திருத்தல்", "ஒளி", "புதிய", "கற்பனை", "வார்த்தை", இன்னும் பல), சொற்றொடர்கள் ("நித்திய ஜீவன்", "ஜீவனைக் கொடுத்தல்", "மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்படுதல்", "உலக ரட்சகர்", "பாவங்களை நிவர்த்திசெய்கிற", "பிசாசின் கிரியைகள்", இன்னும் பல) யாவும் நான்காவது நற்செய்தி நூலோடும், அவர் எழுதிய மற்ற இரண்டு மடல்களோடும் இசைந்திருக்கின்றன.

அதுபோலவே எபிரெய மொழியின் ஒப்புமை நடை, சிறிய வாக்கிய அமைப்பு ஆகியவை நற்செய்தி நூலிலும் இந்த நிருபத்திலும் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. சுருங்கக் கூறின், நான்காவது நற்செய்தி நூல் அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டது என்று நாம் ஏற்றுக்கொள்வோமானால், இம்மடலின் ஆசிரியரும் அவர்தான் என்று ஒப்புக்கொள்வதற்கு ஏதொரு தடையும் இல்லை.

3. எழுதப்பட்ட காலம்

வேதநூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ள மூன்று மடல்களையும் யோவான், ரோமர்களால் எருசலேம் நகரம் அழிக்கப்படும் முன்னர் அங்கிருந்து எழுதினார் என்று சிலர் கருதுகிறார்கள். முதல்நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நூல் எழுதப்பட்டது என்று பொதுவாகப் பலரால் ஒப்புக்கொள்ளப்படுகிறது (கி. பி. 80-95). வயது முதிர்ந்த அப்போஸ்தலன் யோவான் சபைக்கூட்டத்திற்குச் சுமந்து செல்லப்பட்டார் என்றும், அங்கு "பிள்ளைகளே, ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்று கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும் பாரம்பரியம் கூறுவதோடு இம்மடலில் பயன்படுத்தப்பட்டுள்ள தந்தையின் அன்புத்தொனி இசைந்திருக்கிறது.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

யோவான் இந்த மடலை எழுதியபோது, "ஞானமார்க்கத்தார்" என்று அழைக்கப்பட்ட ஒரு கள்ளக் கூட்டத்தார் தோன்றிவிட்டார்கள் (கிரேக்கம் "gnosis" - அறிவு). இந்த "ஞானமார்க்கத்தார்" தங்களைக் கிறிஸ்தவர்கள் என்றே சொல்லிக் கொண்டார்கள். கூடுதல் அறிவைப் பெற்றவர்கள், அப்போஸ்தலர் கற்பித்ததைக் காட்டிலும் மேன்மையாகக் கற்பிக்கக் கூடியவர்கள் என்றும் அவர்கள் கூறிக்கொண்டார்கள். அவர்கள் கூறிவந்த ஆழமான "சத்தியங்களால்" ஒருவன் அபிஷேகம் பெற்றால் ஒழிய அவன் நிறைவடைய மாட்டான் என்று அவர்கள் கூறினார்கள். அவர்களில் சிலர் பருப்பொருள் பாவம் நிறைந்தது என்றும், அதன் காரணமாக மனிதராகிய இயேசு தேவன் அல்லரென்றும் கூறினார்கள், அவர்கள் இயேசுவுக்கும் "கிறிஸ்துவுக்கும்" வேறுபாடு உண்டென்றும் கூறினார்கள். "கிறிஸ்து" எனப்படுபவர் தெய்வீக வெளிப்பாடு எனவும், அவர் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது அவர்மீது வந்து இறங்கினார் எனவும், அவருடைய மரணத்திற்கு முன் அவரைவிட்டு நீங்கிவிட்டார், ஒரு வேளை, கெத்செமனே தோட்டத்தில் அவரை விட்டு நீங்கியிருக்கக் கூடும் எனவும் கூறினார்கள். அவர்களுடைய கருத்தின்படி இயேசு மரணமடைந்தார், ஆனால் கிறிஸ்து மரணமடையவில்லை. மைக்கேல் க்ரீன் என்பார் கூறியது போல அவர்கள், "பரலோகக் கிறிஸ்து மனித உடம்போடு நிரந்தரமாகத் தொடர்புகொள்ளக் கூடாதபடி பரிசுத்தமானவரும் ஆன்மீகமான வருமாவார்" என்று வலியுறுத்திக் கூறினார்கள். சுருங்கக்கூறின், இயேசு மனுவுரு வெடுத்த தேவனும் மனிதனும் ஆவார் என்பதையும் அவர்கள் மறுத்துரைத்தார்கள். இந்த மனிதர்கள் மெய்யான கிறிஸ்தவர்கள் அல்லர் என்பதை யோவான் உணர்ந்தவராக, அந்த "ஞானமார்க்கத்தார்" மெய்யான தேவ பிள்ளைகளுக்குரிய அச்சடையாளங்களைக் கொண்டிருக்கமாட்டார்கள் என்று சொல்லி அவர்களுக்கு எதிரான எச்சரிப்பைக் கூறினார்.

யோவான் கூறுகிறபடி, ஒருவன் தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டும், இல்லையேல் அவன் தேவனுடைய பிள்ளையாக இருக்கமாட்டான்; இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என்று

ஒன்று இல்லை. ஆகவேதான், இந்த மடலில் ஒன்றுக்கொன்று முரணான எதிர்மறைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன: ஒளியும் இருளும், அன்பும் பகைமையும், சத்தியமும் பொய்யும், மரணமும் ஜீவனும், தேவன் மற்றும் பிசாசு. அதே சமயத்தில் மக்கள் எத்தகைய நடத்தையை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்களோ அதைக் கொண்டு அவர்களைப் பற்றி அப்போஸ்தலன் விவரித்துக் கூறுவதையும் நாம் கவனிக்க வேண்டும். கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்கள் அல்லாதோருக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை, ஒரு பாவச் செயலின் மூலமாகத் தீர்மானிக்காமல், அந்த மனிதனின் நடத்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்க வேண்டும் என்று யோவான் கூறுகிறார். உடைந்துபோன கடிகாரமும் கூட இருபத்து நான்கு மணி நேரத்தில் இரண்டு முறை சரியான நேரத்தைக் காட்டும்! ஆனால் நல்ல கடிகாரம் எப்பொழுதும் சரியான நேரத்தைக் காட்டும். ஆகவே பொதுவாக, ஒரு கிறிஸ்தவனின் அனுதின நடத்தை பரிசுத்தமாகவும் நேர்மையாகவும் இருக்கும். இதன் வாயிலாக அவன் தேவனுடைய பிள்ளை என்று அறியப்படுவான். "அறியுங்கள்" என்னும் சொல்லை யோவான் மிக அதிகமான தடவை பயன்படுத்தியிருக்கிறார். "ஞானமார்க்கத்தார்" சத்தியத்தை அறிந்திருந்ததாகக் கூறினார்கள், ஆனால் யோவான் இங்கு கிறிஸ்தவ விசுவாசத்தின் மெய்யான பண்புக்கூறுகளை வரைந்து தருகிறார், அவற்றை ஒருவன் மிகுந்த நிச்சயத்துடன் அறிந்திருக்க முடியும். தேவன் ஒளியாயிருக்கிறார் (1:5), அன்பாக இருக்கிறார் (4:8,16), சத்தியமாக இருக்கிறார் (5:6), ஜீவனாக இருக்கிறார் (5:20) என்று அவர் விவரிக்கிறார். இவையாவும் தேவன் ஒரு நபர் அல்லர் என்னும் பொருளில் சொல்லப்படவில்லை, மாறாக, தேவனே இந்த நான்கு ஆசிர்வாதங்களுக்கும் ஆதாரமாயிருக்கிறார். மேலும் யோவான், தேவன் நீதிபரர் என்றும் (2:29, 3:7), பரிசுத்தர் என்றும் (3:3), பாவ மற்றவர் என்றும் (3:5) கூறுகிறார்.

யோவான் பயன்படுத்துகிற சொற்கள் எளிமையானவையாக இருந்தபோதிலும், அவர் வெளிப்படுத்துகிற சிந்தனைகள் மிகவும் ஆழமானவை, சில வேளைகளில் புரிந்துகொள்வதற்கும் கடினமானவை. ஆகவே இந்த நூலை நாம் கற்கும் போது கர்த்தருடைய வார்த்தையின் பொருளை அறிந்துகொள்வதற்கும் அவர் வெளிப்படுத்துகிற சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதற்கும் அவர் நமக்கு உதவிபுரிய வேண்டுமென்று நாம் மன்றாடுவோமாக.



பொருட்சுருக்கம்

1. முன்னுரை: கிறிஸ்தவ ஐக்கியம் (1:1-4)

2. ஐக்கியத்தைப் பேணிக் காப்பதற்கான வழிமுறை (1:5-2:2)

3. கிறிஸ்தவ ஐக்கியத்தில் உள்ளவர்களுடைய அச்சடையாளங்கள்:
கீழ்ப்படிதல், அன்பு (2:3-11)

4. ஐக்கியத்தில் காணப்படும் வளர்ச்சிப் படிகள் (2:12-14)

5. ஐக்கியத்திற்கு எதிரான இரண்டு ஆபத்துகள்: உலகமும் கள்ளப்போதகர்களும் (2:15-28)

6. கிறிஸ்தவ ஐக்கியத்தில் உள்ளவர்களிடத்தில் காணப்படும் அச்சடையாளங்கள்
(தொடர்ச்சி): நீதி, அன்பு, அவை கொண்டுவரும் நம்பிக்கை (2:29-3:24)

7. சத்தியம் எது தவறு எது என்று பகுத்தறிவதன் அவசியம் (4:1-6)

8. கிறிஸ்தவ ஐக்கியத்தில் உள்ளவர்களின் அச்சடையாளங்கள் (தொடர்ச்சி) (4:7-5:20)

அ. அன்பு (4:7-21)

ஆ. ஆரோக்கியமான உபதேசம் (5:1)

இ. அது உருவாக்கும் அன்பும் கீழ்ப்படிதலும் (5:1-3)

ஈ. உலகத்தை வெல்லும் விசுவாசம் (5:4,5)

உ. ஆரோக்கியமான உபதேசம் (5:6-12)

ஊ. வார்த்தையின் மூலம் கிடைக்கப்பெறும் உறுதி (5:13)

எ. மன்றாட்டில் நம்பிக்கை (5:14-17)

ஏ. ஆவிக்குரிய உண்மைகள் பற்றிய அறிவு (5:18-20)

9. இறுதி வேண்டுகோள் (5:21)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	ஐக்கியத்தின் ஆதாரம்		ஐக்கியத்தின் அடையாளங்கள்	
காலம்	கி. பி. 80-95			
தலைப்பு	தேவனின் ஒளியில் தரித்திருத்தல்		தேவனின் அன்பில் தரித்திருத்தல்	
பகுப்பு	ஐக்கியத்தின் நிபந்தனைகள்	ஐக்கியத்தின் வளர்ச்சிப் படிகள்	ஐக்கியத்தின் பொருள்	ஐக்கியத்தின் விளைவுகள்
வசனம்	1:1 - 2:14	2:15-28	2:29-4:6	4:7-5:21
இடம்	எபேசு			

விளக்கவுரை

1. முன்னுரை: கிறிஸ்தவ ஐக்கியம் (1:1-4)

1:1 மெய்யான ஐக்கியம் அனைத்திற்கும் அடிப்படைக் கொள்கையாக விளங்குவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமையேயாகும். அவரைக் குறித்துத் தவறான கருத்துகள் கொண்டிருக்கும் மனிதர்களோடு மெய்யான ஐக்கியம் கொள்ள முடியாது. முதல் இரண்டு வசனங்களும் அவருடைய நித்தியத்தையும், அவர் மனுவுருவெடுத்த நிகழ்ச்சியின் உண்மைத் தன்மையையும் கற்பிக்கின்றன. பிதாவாகிய தேவனோடு நித்தியம் முழுவதும் உடனிருந்த ஒருவரே இவ்வுலகத்திற்கு மெய்யான மனிதராய் இறங்கிவந்தார். அப்போஸ்தலர் அவர் பேசியதைக் **கேட்டார்கள்**, தங்கள் கண்களினால் அவரைக் **கண்டார்கள்**, ஆழ்ந்து தியானித்தவர்களாக அவரை **நோக்கிப் பார்த்தார்கள்**, உண்மையாகவே தங்களுடைய **கைகளால்** அவரைத் **தொட்டார்கள்**; இந்த நிகழ்ச்சிகள் யாவும் அவர் மனுவுருவெடுத்ததன் மெய்ம்மையைச் சுட்டிக்காட்டுகின்றன. **ஜீவ வார்த்தை** என்பவர் வெறுமனே காட்சியளித்துப் பின்னர் காணாமற்போகிற மாயத்தோற்றம் அல்ல, மாறாக அவர் மாம்சத்தாலான ஒரு மெய்யான மனிதர்.

1:2 பிதாவினிடத்தில் இருந்தவரும், யோவான் அப்போஸ்தலனால் நித்தியஜீவன் என்று அழைக்கப்பட்டவருமே மாம்சமாகி நம்மோடு குடியிருந்தார், மேலும் அப்போஸ்தலரால் காணப்பட்டார் என்று இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

முதல் இரண்டு வசனங்களின் உட்பொருளின் தாக்கம் என்னவென்பதை பெயர் அறியப்படாத ஒருவர் கீழ்க்கண்ட வரிகளில் விளக்குகிறார்:

> நித்திய ஜீவனைக் குறித்த எனது அறிவு தத்துவ ஞானிகளின் அல்லது இறையியல் வல்லுநர்களின் ஊகங்களின் அடிப்படையில் கட்டப்பட்டதன்று; மாறாக மனுவுருவெடுத்த அவரைக் கேட்டு, கண்டு, நோக்கிப்பார்த்து, கைகளால் தொட்ட மனிதர்களுடைய குற்றமற்ற சான்றினை அடிப்படையாகக் கொண்டது என்பதால் மகிழ்ச்சியடைகிறேன். இது வெறுமனே இனிய கனவு அல்ல, மாறாக உறுதியான உண்மைச் செய்தி, மிகக் கவனமாகக் கவனிக்கப்பட்டு, மிகச்சரியாகக் குறித்துவைக்கப்பட்ட மெய்யான செய்தி.

1:3 அப்போஸ்தலர் இந்த வியத்தகு செய்திகளை இரகசியமாக வைத்திருக்கவில்லை, நாமும் அவ்வாறு வைத்திருக்கக் கூடாது. ஐக்கியத்தின் அடித்தளம் இங்கிருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள், ஆகவே அதனை இலவசமாகவும் முழுமையாகவும் அவர்கள் அறிவித்தார்கள். அப்போஸ்தலருடைய சாட்சியைப் பெற்றுக்கொண்டவர்கள் யாவரும் **பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் ஐக்கியம்** கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் அப்போஸ்தலரோடும் எல்லா விசுவாசிகளோடும் ஐக்கியம் கொண்டிருக்கிறார்கள். குற்றவுணர்வுகொண்ட பாவிகள் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் உள்ள ஐக்கியத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டுள்ளது எவ்வளவு ஆச்சரியமானது! ஆயினும் அதுவே இங்கு சொல்லப்பட்டுள்ள உண்மை.

அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து. இயேசுவும் கிறிஸ்துவும் ஒருவரே, அவர் ஒரே ஆள், அந்த நபரே தேவனுடைய **குமாரன்**. அவருடைய பிறப்பின்போது கொடுக்கப்பட்ட பெயர் **இயேசு**, ஆகவே இந்தப் பெயர் நிறைவான மனிதநிலையைப் பற்றிப் பேசுகிறது. **கிறிஸ்து** என்னும் பெயர் தேவனால் அபிஷேகம் பெற்ற ஒருவர் என்று பொருள்படும். மேசியா என்ற சொல்லும் அதே பொருளைத் தருகிறது. ஆகவே **இயேசு கிறிஸ்து** என்னும் பெயரில் நாம் அவருடைய மனிதநிலையையும் தெய்வ நிலையையும் குறித்த காட்சியைப் பெற்றிருக்கிறோம். இயேசு "மெய்யான தேவனின் மெய்யான தேவன்" (நைசீன் கொள்கைக் குறிப்புகள்), ஆயினும் அவர் உண்மையாகவே மனிதர் ஆவார்.

1:4 ஆனால், ஐக்கியம் என்னும் பொருள் பற்றி யோவான் எழுதுவதன் காரணம் என்ன? நம்முடைய **சந்தோஷம் நிறைவாயிருக்கும்** பொருட்டே அவர் இதனை எழுதுகிறார். இவ்வுலகமானது மனிதனுக்கு மெய்யானதும் நிலைத்திருப்பதுமான **சந்தோஷத்தைக்** கொடுக்கக்கூடிய ஆற்றல் அற்றதாயிருக்கிறது என்பதை யோவான் அறிந்தார். இந்த மகிழ்ச்சியைக் கர்த்தரோடுள்ள சீரான ஐக்கியத்தின் மூலமாகவே பெறமுடியும். ஒரு மனிதன் தேவனோடும் கர்த்தராகிய இயேசுவோடும் ஐக்கியம் கொண்டிருக்கும் போதுதான், இவ்வுலகச் சூழ்நிலைகளால் அலைக்கழிக்கப்படாத ஆழத்தில் நிலைகொண்டிருக்கக்கூடிய **சந்தோஷத்தைக்** கொண்டிருப்பான்.

> "நான்பாடும் பாடலின் ஆதாரம் அவர்தாமே
> வானுலகின் இசையென்றன் செவிகளுக்கு அமுதமே!"

என்று ஒரு பாடகன் கூறினாற்போல இது இருக்கிறது.

2. ஐக்கியத்தைப் பேணிக் காப்பதற்கான வழிமுறை [1:5-2:2]

1:5 இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சில விஷயங்களைப் பொதுவாக அனுபவிக்கிற நிலையையே ஐக்கியம் என்னும் சொல் விவரிக்கிறது. இதனை ஓர் ஒருமைப்பாடு அல்லது கூட்டுறவு எனலாம். தேவனோடு ஐக்கியம் கொள்வதற்கான நிபந்தனைகளைத் தனது வாசகர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று இப்பொழுது யோவான் அறிவுறுத்தத் தொடங்குகிறார். அவ்வாறு அறிவுறுத்துவதற்கு அவர் கர்த்தராகிய இயேசு இப்புவியில் இருந்தபோது கற்பித்தவற்றைப் பயன்படுத்துகிறார். இங்குள்ள அதே சொற்களைக் கர்த்தர் பயன்படுத்தவில்லையெனினும், அவர் கற்பித்தவற்றின் ஒட்டுமொத்த படிப்பினை **தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை** என்பதேயாகும். இச்சொற்களின் மூலமாக, **தேவன்** முழுநிறைவாகப் பரிசுத்தமானவரும், முழுநிறைவான நீதிமானும், முழுநிறைவான தூய்மையானவருமாக இருக்கிறார் என்றே யோவான் குறிப்பிடுகிறார். எந்த வகையான பாவத்தையும் தேவனால் ஒப்புதல் அளிக்கும் எண்ணத்துடன் காண முடியாது. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை, ஆனால் "சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயும் இருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (எபி. 4:13).

1:6 ஒரு மனிதன் தேவனோடு **ஐக்கியம்** கொள்ள வேண்டுமானால், அங்கே பாவம் மறைத்துவைக்கப்பட்டிருக்கக் கூடாது என்னும் நிபந்தனை இப்பொழுது வெளிப்படுத்தப்படுகிறது. வீட்டில் ஓர் அறையில் ஒளியும் இருளும் ஒரே நேரத்தில் இருக்க முடியாது, அது போலவே ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஒரே நேரத்தில் ஒளியும் இருளும் சேர்ந்திருக்க முடியாது. ஒரு மனிதன் **இருளில்** நடந்துகொண்டிருந்தால், அவன் தேவனோடு ஐக்கியம் கொண்டிருக்க முடியாது. **அவரோடு ஐக்கியம்** கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டு, ஒருவன் இருளில் வழக்கமாக நடந்துவந்தால் அவன் ஒருபோதும் இரட்சிக்கப்படவில்லை என்பதே பொருளாகும்.

1:7 இதற்கு மாறாக, ஒருவன் **ஒளியில் நடந்தால்** அவன் கர்த்தராகிய இயேசுவோடும், உடன் கிறிஸ்தவர்களோடும் ஐக்கியம் கொண்டிருப்பான். இந்தப் பகுதியில் யோவான் கூறுவதெல்லாம், ஒரு மனிதன் ஒளியில் இருக்க வேண்டும் இல்லையேல் இருளில் இருக்க வேண்டும். அவன் ஒளியில் இருப்பான் எனில் அவன் தேவனுடைய குடும்பத்தில் உறுப்பினனாக இருக்க முடியும். அவன் இருளில் இருந்தால், தேவனிடத்தில் சிறிதேனும் இருள் இல்லாத காரணத்தால், அவனால் அவரோடு ஐக்கியம் கொண்டிருக்க முடியாது. ஒளியில் இருக்கிறவர்கள், அதாவது கிறிஸ்தவர்கள் **ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தம்** அவர்களுடைய **சகல பாவங்களையும் கழுவி** தொடர்ந்து **சுத்திகரிக்கும்**. கல்வாரியில் சிந்தப்பட்ட தேவகுமாரனுடைய இரத்தத்தின் அடிப்படையில்தான் தேவனுடைய எல்லாப் பாவமன்னிப்பும் உண்டாகிறது. தேவன் பாவங்களை மன்னிப்பதற்கு அடிப்படை நீதியாக அந்த இரத்தம் செயல்படுகிறது. ஆகவே "இரத்தத்தின் ஆற்றல் ஒருபோதும் ஒழிவதில்லை" என்று நாம் பாடுகிறோம். அது நம்மைச் சுத்திகரிக்க, முடிவுறா ஆற்றல் உடையது. விசுவாசிகள் பாவமன்னிப்பைப் பெறுவதற்கு அவற்றை அறிக்கை செய்ய வேண்டும், இதில் ஏதொரு மாற்றமுமில்லை, இதனைக் குறித்து யோவான் 9 -ஆவது வசனத்தில் விவரிக்கிறார்.

1:8 மேலும், தேவனோடு ஐக்கியப்படுவதற்கு, நம்மைக் குறித்த **சத்தியத்தை** நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, நம்மிடத்தில் பாவசுபாவம் இல்லையென்று சொல்லுவோமானால், நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாகவும் உண்மையற்றவர்களாகவும் கருதப்படுவோம். **பாவம்** (வச. 8) மற்றும் ***பாவங்கள்*** (வச. 9) ஆகிய இரண்டு சொற்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை யோவான் குறிப்பிடுவதைக் கவனிக்கவும். **பாவம்** என்னும் சொல் நம்முடைய கேடுற்ற பாவ சுபாவத்தைக் குறிக்கிறது. ***பாவங்கள்*** நாம் செய்த தீய செயல்களைக் குறிக்கிறது. உண்மையில் நாம் இதுவரை செய்த செயல்களைக் காட்டிலும் மிகவும் மோசமானவர்களாக இருக்கிறோம். ஆனால், கர்த்தருக்குத் துதி செலுத்துவோம், கிறிஸ்து நம்முடைய **பாவத்திற்காகவும்** நம்முடைய ***பாவங்களுக்காகவும்*** மரணமடைந்தார்.

மனமாற்றம் என்பதன் பொருள், பாவசுபாவம் நீக்கப்பட்டுவிட்டது என்பதல்ல. மாறாக, உள்ளான பாவத்தை வெற்றிகொண்டு வாழ்வதற்கான ஆற்றலைத் தரும்படி புதிய தெய்வீக சுபாவத்தை ஒருவரிடத்தில் ஊன்றக்கட்டுவது என்பதே அதன் பொருளாகும்.

1:9 ஒவ்வொரு நாளும் நாம் தேவனோடும், நம்முடைய உடன் விசுவாசிகளோடும் ஐக்கியம்

கொண்டவர்களாக நடப்பதற்கு, நாம் நமது பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும்: செய்யக்கூடாதவற்றைச் செய்வது என்னும் பாவங்கள், செய்ய வேண்டியதைச் செய்யாதிருப்பது என்னும் பாவங்கள், இரகசிய பாவங்கள், வெளியரங்கமான பாவங்கள் யாவற்றையும் அறிக்கை செய்ய வேண்டும். தேவனுக்கு முன் அவற்றை இழுத்துக்கொண்டுவர வேண்டும், அவற்றைப் பெயர்சொல்லி அழைக்க வேண்டும், அவற்றிற்கு எதிராக தேவனுடைய பக்கத்தில் சேர்ந்துகொள்ள வேண்டும், மேலும் அவற்றை விட்டொழிக்க வேண்டும். ஆம், மெய்யான பாவ அறிக்கை அவற்றை விட்டுவிடுதலையும் உட்கொண்டதாயிருக்கிறது: "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதி. 28:13).

நாம் அதைச் செய்யும்போது, **நம்முடைய பாவங்களை நமக்கு மன்னிப்பதற்கு** தேவன் **உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்** என்னும் வாக்குறுதியை நம்மால் உரிமைகோர முடியும். அவர் பாவங்களை மன்னிப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார், தமது வாக்குறுதியை அவர் நிலைநிறுத்துவார். கர்த்தராகிய இயேசு சிலுவையில் பதிலாளாக நிறைவேற்றிய செயலின் மூலமாக மன்னிப்பதற்கான அடிப்படையாகிய நீதியை அவர் பெற்றிருக்கிறார். ஆகவே அவர் **மன்னிப்பதற்கு நீதி உடையவராயிருக்கிறார்.** அவர் நம்மை மன்னிப்பதாக வாக்களித்தது மட்டுமின்றி, **எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்க** உண்மையுள்ள வருமாயிருக்கிறார்.

இங்கு யோவான் குறிப்பிடுகிற பாவமன்னிப்பு சட்டபூர்வமான மன்னிப்பு அல்ல, அது பெற்றோர் தருகிற மன்னிப்பே ஆகும். சட்டபூர்வமான மன்னிப்பு என்பது பவாங்களுக்கான தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுகிற மன்னிப்பாகும். இதனை ஒரு பாவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது பெறுகிறான். இது சட்டபூர்வமான அல்லது நீதிமன்ற மன்னிப்பு என்று சொல்லப்படுவதன் காரணம், தேவன் நீதிபதியாகச் செயல்பட்டு இந்த மன்னிப்பை வழங்குகிறார்.

ஆனால் ஒருவன் மனமாற்றம் பெற்ற பிறகு செய்கிற பாவத்தைக் குறித்து என்ன சொல்லுவது? தண்டனையைப் பொருத்தமட்டில், அதற்குரிய விலையை ஏற்கனவே கர்த்தராகிய இயேசு கல்வாரி சிலுவையில் செலுத்தித் தீர்த்துவிட்டார். ஆனால் தேவனுடைய குடும்பத்தின் ஐக்கியத்தைப் பொருத்தமட்டில், பாவம் செய்கிற பரிசுத்தவான் பெற்றோர் தருகிற மன்னிப்பைப் பெற வேண்டும், அதாவது, இயேசு கிறிஸ்துவின் பிதாவினிடத்திலிருந்து மன்னிப்பைப் பெறவேண்டும். அவன் தனது பாவத்தை அறிக்கை செய்வதன் மூலம் அந்த மன்னிப்பைப் பெறுகிறான். நீதிமன்ற மன்னிப்பு ஒரே ஒரு முறைதான் நமக்குத் தேவை; நம்முடைய கடந்தகால, நிகழ்கால, எதிர்காலப் பாவங்கள் அனைத்திற்குமான தண்டனை எல்லாவற்றையும் அது சரிசெய்துவிடுகிறது. ஆனால் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் நமக்குப் பெற்றோர் தருகிற மன்னிப்பு தேவை.

நாம் **நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால்,** தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தின் அடிப்படையின்படி அவர் நம்மை மன்னிக்கிறார் என்று நாம் நம்பவேண்டும். மேலும் அவர் நம்மை மன்னிப்பாரென்றால், நாம் நம்மை மன்னிக்க விரும்ப இருக்க வேண்டும்.

1:10 இறுதியாக, தேவனோடு ஐக்கியப்படும் பொருட்டு, பாவச்செயல்களை நாம் செய்திருக்கிறோம் என்பதை மறுத்துரைக்கக் கூடாது. எல்லோரும் பாவச் செயல்களைச் செய்திருப்பதாக தேவன் தமது திருமறையில் மீண்டும் மீண்டும் சொல்லியிருக்கிறார். இதனை மறுத்துரைப்பது தேவனைப் **பொய்யராக்குவதாகும்.** அவருடைய சொல்லை ஒளிவு மறைவற்ற வகையில் இது மறுத்துரைப்பதாகக் காணப்படும், மேலும் அது கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்ததன் காரணத்தையும், பாடுபட்டு இரத்தம் சிந்தி மரண மடைந்ததற்கான காரணத்தையும் மறுத்துரைப்பதாகக் காணப்படும்.

ஆகவே தேவனோடு நாம் ஐக்கியம்கொள்வதற்கு பாவமே இல்லாத வாழ்க்கை தேவையில்லை, மாறாக நம்முடைய பாவங்கள் அனைத்தும் அவருடைய முன்னிலையில் கொண்டு வரப்படவேண்டும், அறிக்கை செய்து விடுவிடப்பட வேண்டும் என்பதையே எதிர்பார்க்கிறது. நம்முடைய நிலை முழுவதும் நேர்மையானதாக இருக்க வேண்டும், அங்கே மாய்மாலம் எதுவும் இருக்கக் கூடாது அல்லது நாம் யாராக இருக்கிறோம் என்பது மறுத்துரைக்கப்படக்கூடாது என்பதே இதன் பொருளாகும்

2:1 தேவன் தம்முடைய மக்களுக்கு நிர்ணயித்திருக்கிற நிறைவான தரத்தையும், அவர்கள் தவறுகிறபோது அதற்கென அவர் கிருபையுடன்

ஏற்படுத்தியிருக்கிற வழிமுறையையும் யோவான் இங்கு நமக்குத் தருகிறார். **பிள்ளைகளே** என்னும் சொல் தேவனுடைய குடும்பத்தில் இருக்கிற எல்லா அங்கத்தினரையும் குறிக்கிறது. **நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்** என்னும் சொற்களில் தேவன் நிர்ணயித்திருக்கிற நிறைவான தரம் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் நிறைவானவராக இருப்பதால், அவர் தமது மக்களுக்கென்று நிர்ணயித்திருக்கிற தரமும் முழுநிறைவாயிருக்கிறது. "நீங்கள் முடிந்தமட்டும் கொஞ்சமாகப் பாவஞ்செய்யும்படிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" என்று அவர் கூறியிருப்பாரானால், அவர் தேவனாக இருக்க முடியாது. பாவத்தை மிகச் சிறிய அளவிலும்கூட தேவனால் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆகவே அவர் நமக்கு நிறைவானதையே இலக்காக நிர்ணயித்திருக்கிறார். கர்த்தராகிய இயேசுவும், விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் இதனையே செய்தார். "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை, நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்று அவர் கூறினார்.

அதே சமயத்தில், நம்முடைய நிலையைக் கர்த்தர் அறிந்திருக்கிறார். நாம் தூசியைப் போல இருப்பதை நினைவுகூர்ந்தவராக அவர், நாம் வீழ்ச்சியடையக் கூடிய சந்தர்ப்பத்தைக் கருத்திற் கொண்டு அதற்கான ஏற்பாட்டைக் கிருபையாய்ச் செய்திருக்கிறார். இவ்வுண்மை, **"ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்"** என்னும் சொற்களாலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பரிந்து பேசுகிறவர் எனப்படுபவர், வேறொரு மனிதன் தேவையுள்ளவனாக இருக்கையில் அவனுக்கு உதவி செய்யும்பொருட்டு அவன் பக்கம் சேர்ந்து கொள்ள முன்வருபவர் ஆவார். நாம் பாவம் செய்யும்போது கர்த்தராகிய இயேசு இதைத்தான் செய்கிறார். நாம் அவரோடு கொண்டுள்ள ஐக்கியத்தை முன்னிருந்த நிலைக்குச் சீர்படுத்தும்படி அவர் உடனடியாக நம்மிடத்திற்கு வருகிறார். "ஒருவன் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்வானானால்..." என்று இங்கு சொல்லப்படவில்லை. நமக்காகப் பரிந்து பேசுகிறவராகிய கர்த்தர், நாம் பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டுவிடும்படியான நிலைக்குக் கொண்டுவர நாடுகிறார்.

இந்த வசனத்தில் வியப்புமிக்க விஷயம் ஒன்று சொல்லப்பட்டுள்ளது, அதனை நாம் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது. **"ஒருவன் பாவஞ்செய்வானானால் நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவர் இருக்கிறார்"** என்று இந்த வசனம் கூறுகிறது. தேவனிடத்தில் என்று சொல்லப்படவில்லை, பிதாவினிடத்தில் என்றே சொல்லப்பட்டுள்ளது. நாம் பாவம் செய்தபோதிலும் அவர் இன்னமும் நம்முடைய **பிதாவாகவே** இருக்கிறார். ஒரு விசுவாசியினுடைய வாழ்க்கையில் உண்டாகிற பாவம் தேவனோடுள்ள ஐக்கியத்தை முரித்துப்போட்டாலும் உறவை முரித்துப் போடுகிறதில்லை. ஒருவன் மீண்டும் பிறக்கிற போது, அவன் தேவனுடைய பிள்ளையாகிறான். அதுமுதல் தேவன் அவனுடைய **பிதாவாக** இருக்கிறார், அந்த உறவை எதுவும் பாதிப்பதில்லை. ஒரு பிறப்பை ஒன்றுமில்லாமல் பண்ண முடியாது. ஒரு மகன் தன்னுடைய தகப்பனுக்கு அவமானத்தைக் கொண்டுவரலாம். ஆயினும் அவன் பிறப்பின் காரணமாக இன்னமும் அவனுடைய மகனாகவே இருக்கிறான்.

நமக்காகப் **பரிந்துபேசுகிறவர் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து** என்பதைக் கவனியுங்கள். நமக்காக வாதாடுகிறவர் நீதிபரராயிருப்பது நல்லது. ஒரு விசுவாசிக்கு எதிராகப் பிசாசானவன் குற்றச்சாட்டைக் கொண்டுவரும் போது கர்த்தராகிய இயேசு கல்வாரியில் தாம் செய்து முடித்த செயலைச் சுட்டிக்காட்டி, "இதனை என்னுடைய கணக்கில் வை" என்று சொல்ல முடியும்.

2:2 கர்த்தராகிய இயேசு நமக்காகப் பரிந்து பேசுபவராக இருப்பது மட்டுமின்றி, அவர் **நம்முடைய பாவங்களை நிவர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகவும்** இருக்கிறார். அவர் நமக்காக மரணமடைந்ததன் மூலமாக, நம்முடைய பாவங்களின் நிமித்தம் உண்டான குற்றவுணர்வுகளிலிருந்து நமக்கு விடுதலை தருகிறார்; மேலும் தேவனோடு ஐக்கியம் கொள்வதற்கான தடைகள் எல்லாவற்றையும் அகற்றி, தேவையான மன நிறைவை அளித்து அவரோடு முன்னிருந்த நிலைக்கு மீண்டும் சீர்ப்படுத்துகிறார். நீதி உண்டாவதற்குத் தேவையான எல்லாவற்றையும் கிறிஸ்து நிறைவேற்றியிருப்பதால், தேவனால் நம்மிடம் இரக்கத்தைக் காண்பிக்க முடியும். ஒரு வழக்கறிஞர் தன்னுடைய கட்சிக்காரருடைய பாவங்களுக்காக தண்டனை செலுத்தியதாக வரலாறு இல்லை; ஆனாலும் நம்முடைய கர்த்தர் அதைத்தான் செய்தார், அதிலும் மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் அவர் தம்மைத்தாம் பலியாக்கி அதைச் செலுத்தினார்.

நம்முடைய பாவங்களை மட்டும் அவர் நிவர்த்தி செய்கிறவராயிராமல், சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் என்று யோவான் தொடர்ந்து கூறுகிறார். உலகம் முழுவதும் இரட்சிக்கப்படும் என்பது இதன் பொருளன்று. மாறாக, இவ்வுலகம் முழுவதையும் இரட்சிப்பதற்குக் கர்த்தராகிய இயேசுவின் செயல் மதிப்பில் போதுமானதாக இருக்கிறது என்பதே இதன் பொருளாகும். ஆனால் அவரிடத்தில் நம்பிக்கை வைக்கிறவர்கள் மட்டும் இரட்சிப்படைவதற்கு அது ஆற்றல்உடையதாயிருக்கிறது. அவருடைய செயல் எல்லா மனிதர்களுக்கும் போதுமானதாக இருப்பதால், நற்செய்தியை உலகம் முழுவதும் அறிவிக்கலாம். உலக மனிதர்கள் முழுவதும் தாமாகவே இரட்சிக்கப்படுவார்கள் என்றால், அவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லையே.

சிலுவையில் மேல் எழுதப்பட்ட வாசகம் எபிரெய மொழியிலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுடைய மொழி - கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் - அன்றைய நாட்களில் அறியப்பட்ட உலகத்தின் முக்கியமான மொழிகள் - எழுதப்பட்டது ஆவலைத் தூண்டுகிறது. எங்குமுள்ள எல்லா மனிதர்களுக்கும் இயேசு கிறிஸ்து போதுமான இரட்சகராயிருக்கிறார் என்று இவ்வுலகம் முழுவதும் இவ்வாறு நற்செய்தி பிரகடனப்படுத்தப்பட்டது.

3. கிறிஸ்தவ ஐக்கியத்தில் உள்ளவர்களுடைய அச்சடையாளங்கள்: கீழ்ப்படிதல், அன்பு [2:3-11]

2:3 கிறிஸ்தவ ஐக்கியத்தில் உள்ளவர்களுடைய உண்மையான அடையாளங்களைப் பற்றிச் சொல்ல யோவான் ஆயத்தமாயிருக்கிறார். முதலாவது கீழ்ப்படிதல். தேவனுடைய சித்தத்தின்படி செய்வதற்கு இனிதான ஆவலோடிருக்கும் பண்பு நம்முடைய வாழ்க்கையில் காணப்படுவதால், நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவின் உறுதியைப் பெற்றிருக்க முடியும். தேவனைக் குறித்த மேலான அறிவைப் பெற்றிருப்பதாகக் கூறியும், கர்த்தருடைய **கற்பனைகளைக்** கைக்கொள்வதற்கு எவ்வித விருப்பமின்றி இருந்த ஞான மார்க்கத்தாரை இலக்காகக் கொண்டு இந்த வசனங்கள் எழுதப்பட்டன என்பதில் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட அறிவு வெறுமையும் தகுதியற்றதுமாகும் என்று யோவான் கூறுகிறார்.

விசுவாசியின் கீழ்ப்படிதலை மூன்று வகையாகப் பகுத்து விவரிக்கிறார் யோவான் - அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் (வச. 3); அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுதல் (வச. 5); அவர் நடந்தபடியே நடத்தல் (வச. 6). இந்தச் சிந்தனையில் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி காணப்படுகிறது. அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் என்பது, புதிய ஏற்பாட்டில் காணப்படும் கர்த்தராகிய இயேசு கற்பித்த போதனைகளுக்குக் கீழ்ப்படிதல் ஆகும்.அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுதல் என்பது, எழுதப்பட்டவைக்குக் கீழ்ப்படிதல் மட்டுமின்றி அவருடைய மனதிற்கினியது எது என்று நாம் அறிந்திருக்கிறோமோ அதைச் செய்வதுமாகும். தேவன் தமது மக்களுக்கு நிர்ணயித்த தரத்தை முழுமையாக வெளிப்படுத்திக் காட்டுவது அவர் நடந்த வண்ணம் தானும் நடப்பதாகும்; இயேசு வாழ்ந்ததுபோல வாழ்வது என்பதே இதன் பொருள்.

2:4 தேவனுடைய சித்தத்திற்குத் தவறற்ற முறையில் கீழ்ப்படிந்திருப்பதே கிறிஸ்தவ வாழ்க்கை என்று யோவான் இங்கு சொல்லாமல் கிறிஸ்தவன் வழக்கமாக அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புகிறான் என்றே சொல்கிறார். மேலும் அவருடைய பார்வைக்குப் பிரியமானதைச் செய்ய வேண்டுமென்று அவன் விரும்புகிறான். ஒரு மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் யோவான் நோக்கிப் பார்க்கிறார். ஒருவன் தேவனை அறிந்திருப்பதாகச் சொல்லியும் **அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதிருந்தால்,** அவன் **சத்தியத்தைச்** சொல்லவில்லை என்பது தெளிவு.

2:5 இதற்கு மாறாக, அவருடைய வசனத்தை நாம் கைக்கொள்வோமெனில் **தேவ அன்பு** நம்மிடத்தில் **பூரணப்பட்டிருக்கும்**. **தேவ அன்பு** எனப்படுவது நாம் தேவனிடத்தில் கொண்டிருக்கும் அன்பையல்ல, அவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பையே குறிக்கிறது. தேவனுடைய **வசனத்தை** நாம் கைக்கொள்ளும்படி நம்மை ஆக்குவதே தேவ அன்பின் இலக்காக இருக்கிறது என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ள சிந்தனை. அவருக்குக் கீழ்ப்படியும் நிலையை நம்மிடத்தில் உண்டாக்குவதன் மூலமாக அது அதனுடைய இலக்கை அடைகிறது, மேலும் நிறைவு பெறுகிறது.

2:6 ஆகவே எவனொருவன் **அவருக்குள் நிலைத்திருப்பதாகச் சொல்லுகிறானோ** அவன் கர்த்தராகிய இயேசு **நடந்தபடியே தானும்**

நடக்க வேண்டும். நற்செய்தி நூல்களில் அவருடைய வாழ்க்கை விவரிக்கப்பட்டுள்ளது, அதுவே நமக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகிறது. நம்முடைய சொந்த ஆற்றலினாலோ உள்ளுரத்தினாலோ வாழ்கிறதல்ல அந்த வாழ்க்கை. மாறாக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் மட்டுமே அவ்வாறு வாழ முடியும். எவ்விதமான விலக்குமின்றி நம்முடைய வாழ்க்கையை அவரிடத்தில் ஒப்புக்கொடுப்பதும், அவர் தமது வாழ்க்கையை நம்மிடத்திலும் நமது மூலமாகவும் வாழ அனுமதிப்பதும் நம்முடைய பொறுப்பாகும்.

2:7 ஒரு விசுவாசியினிடத்தில் காணப்படுகிற மற்றொரு முக்கியமான மெய்யான அச்சடையாளம் சகோதரரிடத்தில் காண்பிக்கிற அன்பு. தான் எழுதுகிற கற்பனை, **புதிய கற்பனை அல்ல, ஆதிமுதல்** அவர்கள் பெற்றிருந்த **பழைய கற்பனை**தான் என்று யோவான் கூறுகிறார். கர்த்தராகிய இயேசு இப்புவியில் தமது ஊழியத்தைத் தொடங்கினது முதல் ஒருவரிலொருவர் அன்புபாராட்டும்படி தமது சீடர்களுக்குக் கற்பித்தார் என்றும் இதனைக் கூறலாம்.

"ஞானமார்க்கத்தார்" தங்களுடைய போதனைகள் புதியவை என்று எப்பொழுதும் பறைசாற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்தில் இருந்தபோது கற்பித்தவற்றோடு ஒவ்வொன்றையும் ஒப்பிட்டுச் சோதித்துப்பார்க்க வேண்டும் என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகிறார். ஆதிமுதல்[1] சொல்லப்பட்டு வந்துள்ள கற்பனையிலிருந்து வழிவிலகிச் செல்லக்கூடிய ஆபத்து எப்பொழுதும் இருக்கிறது. "தொடக்கத்தை நோக்கித் திரும்பிச் செல்லுங்கள், அப்பொழுது எது உண்மையென்று தெரிந்துகொள்வீர்கள்" என்று யோவான் கூறுகிறார்.

2:8 இருந்தபோதிலும் இந்தக் கற்பனை பழைய கற்பனை அல்ல, இது **புதிய கற்பனை** என்று சொல்லக்கூடிய உட்பொருளும் இதில் இருக்கிறது. ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்று மட்டும் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் இருந்தபோது கற்பிக்காமல், அவர் கூறியதன்படி வாழ்ந்து அதற்கு உயிருள்ள மாதிரியாகவும் வாழ்ந்தார். அவருடைய வாழ்க்கை பிறரிடம் அன்புகாட்டுவதை விளக்கிக் காட்டியது. இவ்வாறாக அந்தக் கற்பனை அவர் இவ்வுலகத்தில் இருந்தபோது அவரிடத்தில் **மெய்யாயிருந்தது.** ஆனால் பழைய கற்பனையில் ஒரு புதிய உட்பொருள் இருப்பதை இப்பொழுது காணலாம். தற்போதைய காலப்பாகுபாட்டில், அது கர்த்தராகிய இயேசுவில் **மெய்யாயிருப்பது** மட்டுமின்றி, விசுவாசிகளினிடத்திலும் மெய்யாயிருக்கிறது. இந்தக் கிறிஸ்தவர்கள் முற்காலத்தில் மெய்யான இறை நம்பிக்கை அற்றவர்களாக பகைமையும் வெறியும் கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் அன்பு பாராட்டுதல் என்னும் உயர்ந்த கற்பனைக்கு மாதிரிகளாக விளங்கி அதனை வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

மனிதர்கள் நற்செய்தியின் ஒளியைப் பெறுகிறபோது, **இருள் நீங்கிப்போகிறது.** பெரும்பாலோர் கிறிஸ்துவினண்டை வராததால் இருள்முழுவதும் மறைந்துபோகவில்லை. ஆனால் மெய்யான ஒளியாகிய கிறிஸ்து எப்பொழுதும் பிரகாசிக்கிறார். பாவிகள் அவரிடமாய்த் திரும்புகிற நேரங்களில் இரட்சிக்கப்படுகிறார்கள், அதுமுதல் உடன் விசுவாசிகளிடம் அன்புகூருகிறார்கள்.

2:9-11 ஒன்பது முதல் பதினோராவது வசனம் வரைக்கும் போலியான அன்பிற்கும் மெய்யான அன்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடு சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் கிறிஸ்தவன் என்று அறிக்கை செய்தும், மெய்யான கிறிஸ்தவர்களிடம் பகைமை பாராட்டினால், அவன் இன்னமும் **இருளிலே** இருக்கிறான் என்பதற்கு அது உறுதியான அடையாளமாயிருக்கிறது. இந்தச் சொற்றொடரானது அவன் பின்மாற்றம் அடைந்தவன் அல்லன் என்பதைக் காட்டுகிறது. அந்த மனிதன் எப்பொழுதும் யாராக இருந்தானோ, அவனாகவே அதாவது அவிசுவாசியாகவே இருக்கிறான். மாறாக, ஒருவன் தன்னுடைய சிறப்பியல்பாகத் தன் **சகோதரனிடத்தில் அன்புகூருகிறவனானால் அவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை.** அந்த மனிதன் தானே இடறிவிழுவதற்குரிய ஆபத்தில் இல்லை என்றோ, பிறர் இடறிவிழுவதற்குக் காரணமாகமாட்டான் என்றோ இந்த வசனம் பொருள்படும். இவ்விரண்டு வகையான விளக்கங்களும் சரியானவையே. உண்மையாகவே ஒரு கிறிஸ்தவன் கர்த்தரோடு தொடர்பு கொண்டவனாக இருந்தால், அவனுடைய பாதையில் ஒளி பிரகாசிக்கும், அவனுடைய அறிக்கைக்கும் நடைமுறைக்கும் ஏதொரு வேற்றுமை காணப்பட்டு அதன் காரணமாக வேறு எவரும் மனம்புண்படமாட்டார்கள். தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்தவர்கள் மேல்

ஞானமார்க்கத்தார் ஆழ்ந்த வெறுப்புக் கொண்டி
ருந்தார்கள். அவர்கள் **இருளில் இருந்தார்கள், இருளில் நடந்தார்கள்** மற்றும் தாங்கள் **போகும் இடம் இன்னதென்று அறியாதிருந்தார்கள்.** ஏனெனில் அவர்களுடைய **கண்களை இருள் குருடாக்கியிருந்தது.**

சகோதர அன்பைக் குறித்து பேசிக்கொண்டி
ருக்கும் அப்போஸ்தலன் அதற்கோர் எடுத்துக்காட்
டைச் சொல்லுவதுபோல, இங்கே சற்று நிறுத்தி, தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கு அன்பான வாழ்த்துதலைத் தெரிவிக்கிறார்.

4. ஐக்கியத்தில் காணப்படும் வளர்ச்சிப் படிகள் (2:12-14)

2:12 முதலாவது அவர் முழுக் குடும்பத்தை
யும் **பிள்ளைகளே**[2] என்று அழைத்துப் பாசத்
தோடு அணைத்துக்கொள்கிறார். இங்கு வயது முதிர்ச்சியைப் பற்றியோ ஆவிக்குரிய வளர்ச்சி
யைப் பற்றியோ ஏதொரு சிந்தனையும் இல்லை. கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் அனைவரோ
டும் யோவான் பேசுகிறார். இவ்வுண்மை இவ்வச
னத்தின் எஞ்சிய பகுதியால் மெய்ப்பிக்கப்படு
கிறது, **அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன.** கிறிஸ்த
வர்கள் அனைவருக்கும் இது பொருந்தும். நம்மு
டைய பாவங்கள் முழுவதுமாக மன்னிக்கப்பட்டி
ருக்கின்றன என்னும் நிலையைத் தற்போதைய உடைமையாக நாம் பெற்றிருக்கிறோம் என்னும் அறிவு வியக்கத்தக்கது. அவருடைய **நாமத்தி
னிமித்தம்** நம்முடைய **பாவங்கள் மன்னிக்கப்
பட்டுள்ளன** என்பதைக் கவனியுங்கள். கிறிஸ்து
வின் நாமத்தினிமித்தம் தேவன் நமது பாவங்
களை மன்னிக்கிறார்.

2:13 **ஆதிமுதல் இருக்கிற** ஒருவரை **அறிந்
திருக்கிறவர்கள்** என்று **பிதாக்கள்** விவரிக்கப்பட்டி
ருக்கிறார்கள், வளர்ச்சியடைந்த விசுவாசிகள் தேவனுடைய குமாரனுடைய இனிய தோழமையை அறிந்தவர்களும், அவரிடத்தில் மனநிறைவு பெற்றவர்களும் ஆவார்கள். ஆவிக்குரிய குடும்
பத்தில் உள்ள வாலிபர்களும் உள்ளுரம் மற்றும் போர்புரிதல் ஆகிய சிறப்பு இயல்புகளைப் பெற்ற
வர்கள். இது பகைவனோடு எதிர்த்து நின்று போரிடுவதற்கான கால கட்டமாகும். **வாலிபரே
பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்தீர்கள்,** ஏனெனில் அவர்கள் வெற்றியின் இரகசியத்தைக் கற்றிருக்கிறார்கள், அதாவது, "நான் அல்ல, கிறிஸ்துவே என்னில் ஜீவிக்கிறார்" என்பதை அவர்கள் கற்றிருக்கிறார்கள். **பிள்ளைகள்** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் விசுவாசத்தில் குழந்தைகள். அவர்களுக்கு அதிகமாகத் தெரி
யாது, ஆனாலும் அவர்கள் **பிதாவை** அறிந்திருக்
கிறார்கள்.

2:14 **பிதாக்களிடத்தில்** யோவான் மீண்டும் பேசியபோது, முதலில் சொன்னதையே மீண்டும் சொல்லுகிறார். அதன் காரணம் என்னவென்றால், ஆவிக்குரிய அனுபவத்தில் அவர்கள் முதிர்ச்சி
யைப் பெற்றிருக்கிறார்கள். மீண்டுமாக **வாலிபர்
கள்** கர்த்தரிலும் அவருடைய வல்லமையிலும் **பலவான்களாக இருக்கிறார்கள்** என்று குறிப்
பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் **தேவ
வசனம் நிலைத்திருப்பதால்** அவர்கள் **பொல்
லாங்கனை ஜெயித்திருக்கிறார்கள்.** திருமறை வசனங்களை மேற்கோள்காட்டியே கர்த்தராகிய இயேசு வனாந்தரத்தில் பிசாசை வெற்றி கொண்
டார். நாம் இடைவிடாமல் திருமறையால் உண
வளிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும், சாத்
தானின் தாக்குதலை எதிர்த்துத் தடைசெய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பனவற்றின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது.

5. ஐக்கியத்திற்கு எதிரான இரண்டு ஆபத்துகள்: உலகமும் கள்ளப்போதகர்களும் (2:15-28)

பதினைந்து முதல் பதினேழு வரையிலான வசனங்களில், உலகத்திற்கும் அதனுடைய அனைத்து தவறான வழிகளுக்கும் எதிரான வலிமை படைத்த எச்சரிப்புகள் கொடுக்கப்பட்
டுள்ளன. பெரும்பாலும் இப்பகுதி இளைஞர்கட்கு எழுதப்பட்டது என்றே தோன்றுகிறது. ஏனெனில் இவ்வுலகம் அவர்களிடமே தனிப்பட்ட முறையில் கவர்ச்சிமிக்க முறையில் நடந்துகொள்கிறது. ஆனாலும் இந்த எச்சரிப்பு கர்த்தருடைய பிள்ளை
கள் அனைவருக்கும் பொருந்தும். இங்கு உலகம் என்று சொல்லப்பட்டிருப்பது நாம் வாழ்கின்ற கோள் அல்ல, நம்மைச் சுற்றிலும் இருக்கும் இயற்கைப் படைப்பும் அல்ல. மாறாக, கிறிஸ்து இன்றி மகிழ்ச்சியுடன் வாழ்வதற்காக மனிதன் தன்னுடைய சொந்த முயற்சியால் கட்டிவைத்
திருக்கிற அமைப்பே ஆகும். அது இந்த உலகத்
தின் நாகரிகம், இந்த உலகத்தின் இசை, கலை, கல்வி ஆகியவை அடங்கிய அமைப்பே ஆகும் - மொத்தத்தில் கர்த்தரிடத்தில் அன்புகூராததும், அவரை வரவேற்காத எந்தவொரு அமைப்பும் ஆகும். "தவறான கொள்கைளால் நிறுவப்பட்

டதும், அற்பமான விருப்பங்கள், போலியான மேன்மைகள் மற்றும் தற்பெருமை ஆகியவற்றைக் குணநலமாகக் கொண்டதுமான மனித சமுதாயமே இந்த உலகம்" என்று ஒருவர் இதனை வரையறுத்துக் கூறுகிறார்.

2:15,16 நாம் **உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூரக்கூடாது** என்று தெளிவான முறையில் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். அதனுடைய எளிமையான காரணம், இவ்வுலகத்தின்மீது பாராட்டப்படுகிற அன்பு **பிதாவினிடத்தில்** பாராட்டப்படுகிற அன்பு ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று இசைவானவையல்ல. இந்த உலகம் தரக்கூடிய எல்லாவற்றையும், **மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை** என்றுதான் விவரித்துக் கூறமுடியும். **மாம்சத்தின் இச்சை** எனப்படுவது, நம்முடைய இழிந்த இயல்பிலிருந்து புறப்படும் சரீரப் பிரகாரமான சிற்றின்ப இச்சை போன்றவற்றைக் குறிக்கும். கண்களின் இச்சை எனப்படுவது நாம் எதைப் பார்க்கிறோமோ அதனால் உண்டாகும் கேடுற்ற விருப்பங்களைக் குறிக்கும். ஜீவனத்தின் பெருமை எனப்படுவது பரிசுத்தமற்ற நோக்கமுடைய தற்பகட்டும் தற்புகழ்ச்சியும் ஆகும். உலகுசார்ந்த இம்மூன்று கூறுகளும் ஏவாள் செய்த பாவத்தில்வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. அந்த மரமானது உண்பதற்கு நன்றாயிருந்தது; அது **மாம்சத்தின் இச்சை.** அந்த மரம் கண்களுக்கு இனிமையாயிருந்தது; அது **கண்களின் இச்சை.** அந்த மரம் ஒருவர் புத்தி தெளிவடைவதற்கு இச்சிக்கப்படத்தக்கதாயிருந்தது. இது **ஜீவனத்தின் பெருமை** என்ன என்பதை விவரிக்கிறது.

பிசாசானது கிறிஸ்துவுக்கு எதிராய் இருப்பது போல, *மாம்சமானது ஆவிக்கு* விரோதமாய் இருக்கிறது. அதுபோலவே உலகமானது பிதாவுக்கு விரோதமாய் இருக்கிறது. இச்சை, செல்வத்தின்மீது பேராசை, அதிகாரம், புகழ் ஆகியவற்றை அடையவேண்டுமென்னும் பேராவல் யாவும் **பிதாவினால் உண்டானவையல்ல, அவை உலகத்தினால் உண்டானவை.** அதாவது, அவை பிதாவினிடத்திலிருந்து தோன்றியவை அல்ல, மாறாக அவற்றின் மூல ஆதாரம் இந்த உலகத்தில்தான் இருக்கிறது. அழிந்து போகிற பொருட்களின்மேல் கொண்டிருக்கிற விருப்பமே உலகப்பற்று ஆகும். மனிதனுடைய இருதயம் ஒருக்காலும் அந்தப் பொருட்களில் மன நிறைவடைவதில்லை.

2:17 உலகமும் அதன் இச்சையும் ஒழிந்து போம். ஒரு வங்கி மூழ்கிப்போகும் நிலையில் இருக்கும்போது, மதிநுட்பமுடைய மனிதர்கள் அங்கு முதலீடு செய்யமாட்டார்கள். அடித்தளம் ஆட்டங்காணும்போது, புத்தியுள்ள கட்டிடக் கலைஞர்கள் தொடர்ந்து கட்டமாட்டார்கள். உலகத்தின்மீது முழுக் கவனத்தையும் செலுத்துவது, டைட்டானிக் கப்பலின் மேல் தளத்தில் இருக்கைகளை சீராக அடுக்கி வைப்பதற்கு ஒப்பாகும். ஆகவே **ஒழிந்துபோகிற உலகத்திற்காகப்** புத்தியுள்ள மனிதர்கள் வாழமாட்டார்கள். ஆனால் **தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். ஒழிந்து போகிற** பொருட்களினால் உண்டாகக்கூடிய சோதனையிலிருந்து மீட்பது **தேவனுடைய சித்தமேயாகும்.** இந்த வசனமே மிகப்பெரிய நற்செய்தியாளராகிய D. L. மூடியின் வாழ்க்கையின் ஆதார வசனமாகும். அவருடைய கல்லறையின்மேல் பொறிக்கப்பட்டுள்ள சொற்கள்: "தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்."

2:18 கிறிஸ்தவ ஐக்கியத்தில் இருப்பவர்களுக்கான மற்றொரு பரீட்சை, கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. கள்ளப்போதகர்களுக்கு எதிரான ஓர் எச்சரிப்போடு இப்பொருள் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருப்பவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விசுவாசத்தில் இளைஞராக இருப்பவர்கள், குறிப்பாக அந்திக் கிறிஸ்துவின் பொய்யுரைகளால் எளிதில் பாதிப்படையக் கூடும். கிறிஸ்துவின் வருகைக்கு முந்தி அந்திக் கிறிஸ்து தோன்றி, தானே கிறிஸ்து என்று காட்டிக்கொள்வான் என்று யோவான் மடலின் வாசகர்கள் போதிக்கப்பட்டிருந்தார்கள். நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முன்னர் அவற்றின் நிழல் தோன்றுவதுபோல, **அந்திக் கிறிஸ்து** தோன்றுவதற்கு முன் **அநேக அந்திக்கிறிஸ்துகள்** தோன்றுவார்கள். கள்ளக் கிறிஸ்துவையும் தவறான நற்செய்தியையும் வழங்கக்கூடிய கள்ளப்போதகர்களே இந்த அந்திக் கிறிஸ்துகள். கிறிஸ்துவை மறுத்துரைக்கும் கள்ளக்கூட்டத்தினர் பலர் இருக்கக்கூடிய நாளில் நாம் வாழ்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது. தற்காலம் அத்கைய பண்புடையதாக இருக்கிறது. இவை யாவும் இரட்சகருடைய வருகை மிகவும் விரைவில் நடை பெறப்போகிறது என்பதற்கான சான்றுகளாக இருக்கின்றன.

2:19 இந்தக் கள்ளப்போதகர்கள் ஒரு காலத்தில் அப்போஸ்தலரோடு தொடர்பு கொண்டிருந்த

வர்களும், தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை செய்தவர்களும் ஆவார்கள். இருந்த போதிலும், அவர்கள் தங்கள் இருதயத்தில் உண்மையாகவே மெய்யான விசுவாசிகளோடு ஒருமைப்பாடு கொண்டிருக்கவில்லை. இதனை அவர்கள் ஐக்கியத்திலிருந்து **பிரிந்துபோன தாலே** வெளிப்படுத்தினார்கள். அவர்கள் **நம்முடையவர்களாக இருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே.** மெய்யான விசுவாசம் நிலைத்திருக்கும் பண்புடையது என்பதை இதன் வாயிலாக நாம் அறிகிறோம். ஒரு மனிதன் உண்மையாகவே மறுபடியும் பிறந்திருந்தால், அவன் கர்த்தருக்கென்று தொடர்ந்துமுன்னேறிச் செல்ல முடியும். நாம் முடிவுவரை நிலைத்திருப்பதாலே இரட்சிக்கப்படுகிறோம் என்பது இதன் பொருளன்று, மாறாக யாரெல்லாம் முடிவுவரை நிலைத்திருக்கிறார்களோ அவர்கள் யாவரும் உண்மையாக இரட்சிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். கள்ளப்போதகர்கள் **எல்லோரும் நம்முடையவர்கள் அல்லரென்று வெளியாகும் படிக்கே பிரிந்துபோனார்கள்.**

2:20 ஆனால் இது, "ஓர் இளம் விசுவாசி எது சத்தியம் என்றும் எது கள்ளப்போதகம் என்றும் எவ்வாறு அறிவான்?" என்னும் கேள்வியை எழுப்புகிறது. நாம் **பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறோம்** என்பதே இதன் பதில். இந்த **அபிஷேகம்** பரிசுத்த ஆவியானவரையே குறிக்கிறது, அவர் **பரிசுத்தரிடத்தில்** இருந்து வந்தவர், அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடத்திலிருந்து வந்தவர், ஒரு மனிதன் இரட்சிப்படையும்போது, உள்ளுறையும் தூய ஆவியானவரைப் பெறுகிறான். அவர் தாமே சத்தியம் எது, பொய் எது என்று பகுத்தறியும்படியான அறிவாற்றலை விசுவாசிக்குத் தந்தருளுகிறார். **நீங்கள் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்**[3] என்று யோவான் தனது இளம் வாசகர்களிடம் கூறுகிறபோது, முழுநிறைவான பொருளில் சொல்லவில்லை. மாறாக, எது சத்தியம் எது பொய் என்பதை அறிந்துகொள்வதற்கான ஆற்றல் கொண்டிருக்கிறார்களேயொழிய அவர்கள் முழுநிறைவான அறிவைப் பெற்று விட்டார்கள் என்பது இதன் பொருளன்று. இவ்வாறாக, ஓர் எளிய இளம் விசுவாசியும்கூட தெய்வீகக் காரியங்களில், இரட்சிக்கப்படாத தத்துவஞானி பெற்றிராத, பகுத்தறியும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார். உலகியல் பற்றுள்ள மனிதன் தனது அறிவுக்கூர்மையால் காண்கிறவற்றைக் காட்டிலும் கிறிஸ்தவன் தன்னுடைய முழங்காலில் அதிகமாகக் காண்கிறான். உடற்கூறுகளை நாம் காண்கையில், ஒரு குழந்தை பிறக்கும்போது, அவன் உடனடியாக மனித இனத்தின்படியான அனைத்து வினைத்திறங்களையும் பெற்றுவிடுகிறான். அவனுக்குக் கண்களும், கைகளும், கால்களும், மூளையும் இருக்கின்றன. இவற்றை அவன் பின்னொரு காலத்தில் பெறுவதில்லை. அவை படிப்படியாக வளர்ந்து முதிர்ச்சியடைந்தாலும், முதலிலேயே முழு மனிதனையும் பிறக்கும் போது காணமுடியும். அதுபோலவே ஒருவன் மறுபடியும் பிறக்கும்போதும் நடை பெறுகிறது. அவன் எப்பொழுதும் பெற்றிருக்கப்போகிற எல்லாக் கூறுகளையும், அந்தத் தருணத்திலேயே பெற்றுவிடுகிறான். இவற்றில் அவன் வளர்ந்து முன்னேறுவதற்கு முடிவுறா வழிகள் பல இருந்த போதிலும், அவன் மறுபடியும் பிறந்த அத்தருணத் திலேயே யாவற்றையும் பெற்றுவிடுகிறான்.

2:21 யோவான் மடலின் வாசகர்கள் **சத்தியத்தை அறியாததால்**, அவர் இவை யாவற்றையும் எழுதவில்லை, மாறாக அவர்கள் **அறிந்த சத்தியத்தில்** நிலைநிறுத்தும்படியும், **சத்தியத்தினால் ஒரு பொய்யும் உண்டாயிராதென்று** அவர்கள் அறியும்படியும் அவர் இவற்றை எழுதினார். தேவனுடைய வார்த்தைக்கு முரண்பாடான கோட்பாடுகளை "ஞானமார்க்கத்தார்" கற்பித்தார்கள், ஆகவே அவை பொய்யாக இருந்தன. இயேசு, கிறிஸ்துவல்லர் என்பது அவர்கள் கூறிவந்த முதன்மையான பொய்யாகும். அதுவே அவர்களுடைய கொள்கைகளுக்கு மூல ஆதாரமாகும். முன்னுரையில் நாம் குறிப்பிட்டதுபோல, இயேசு வெறுமனே ஒரு மனிதர் என்றும், அவர் ஞானஸ்நானம் பெற்றபோது கிறிஸ்து அவரிடத்திற்கு வந்தார் என்றும் அவர்கள் கற்பித்தார்கள். இன்றைய நாட்களிலும் சில கள்ளக் குழுவினரின் மிகப்பெரிய பொய்யாக இது இருக்கிறது. புதிய ஏற்பாட்டு இயேசுவே பழைய ஏற்பாட்டுக் கர்த்தர் (யெகோவா) என்று திருமறை எல்லா இடங்களிலும் வலியுறுத்திக் கூறுகிறது. இயேசுவின் மீது கிறிஸ்து வந்தார் என்று கூறுவது தவறு, மாறாக இயேசுவே கிறிஸ்து என்பதே உண்மை.

2:22 கர்த்தராகிய இயேசுவின் தெய்வீகத்தை மறுத்துரைப்பது, பிதாவையே மறுத்துரைப்பதாகும் என்று குறிப்பிட யோவான் கவனமுள்ளவராக இருக்கிறார். தேவனைச் சிலர் ஆராதிப்பதாகக் கூறுகிறார்கள், ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் தங்களுக்கும் எந்தச்

சம்பந்தமும் தேவையில்லை என்றும் நினைக்கிறார்கள். “பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவன் அந்திக்கிறிஸ்து” என்று அப்போஸ்தலன் கூறுகிறார்.

2:23 யோவான் 8:19,42 -ஆகிய வசனங்களில், இயேசுவின் தெய்வீகத்தை அறியவும், அவரிடத்தில் அன்புகூரவும் தவறியவர்கள் பிதாவை அறியவும் இல்லை, அவரைத் தங்களுடைய பிதாவாகப் பெறவும் இல்லை என்று கூறியிருக்கிறார். அதற்கொப்பாக, **“குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்லன், குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்”** என்று யோவான் கூறுகிறார். இங்கு பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையிலான ஒருமைப்பாட்டைக் குறித்த வியத்தகு உண்மையை நாம் பெற்றிருக்கிறோம். நீங்கள் குமாரனைப் பெற்றிராவிடில், பிதாவையும் உங்களால் பெற்றிருக்க முடியாது. யூனிடேரியன், கிறிஸ்தவ அறிவியல் அறிஞர்கள், இசுலாமியர், நவீனகாலத் தவர், யெகோவா சாட்சிகள் என்னும் பெயருடைய அனைவரும் கேட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாக இது இருக்கிறது.

2:24 இளம் விசுவாசிகள் கள்ளப்போதகர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு, **ஆதிமுதல் கேள்விப்பட்டது** அவர்களிடத்தில் **நிலைத்திருக்க** வேண்டும். கர்த்தராகிய இயேசுவும் அவருடைய எல்லா அப்போஸ்தலரும் கற்பித்த யாவற்றையும் ஆதிமுதல் கேள்விப்பட்டது என்னும் சொற்றொடர் குறிப்பிடுகிறது. நாம் தேவனுடைய திருவசனங்களுக்கு நெருங்கியிருக்கும் நிலையே நமக்கு மிகப்பெரிய பாதுகாப்பாகும். “வேதம் என்ன கூறுகிறது?” என்னும் கேள்வியால் எல்லாவற்றையும் நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். ஒருவர் கற்பிப்பது வேத வசனங்களுக்கு இசைவானதாக இல்லாமலிருக்குமென்றால், அதனை மறுத்துரைக்க வேண்டும். “அது புதியது என்றால் அது உண்மையல்ல, அது உண்மையானால் அது புதியதல்ல” என்று முனைவர் அயன்சைடு கூறினாற்போல இது இருக்கிறது.

2:25 கிறிஸ்தவக் கோட்பாட்டில் நாம் நிலைத்திருக்கும்போது, நம்முடைய விசுவாசத்தின் உண்மைக்கு நாம் சான்றுபகர்கிறவர்களாக இருக்கிறோம். அந்த விசுவாசத்தின் **வாக்குத்தத்தம் நித்திய ஜீவன்** ஆகும். நாம் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொள்கையில், அவருடைய சொந்த ஜீவனையே, அதாவது, **நித்திய ஜீவனையே** பெறுகிறோம். இந்த ஜீவன் புதியதும் கேள்விக்குரியதுமான கோட்பாடுகள் அனைத்தையும் சோதித்தறியும் ஆற்றலை நமக்குத் தருகிறது.

2:26,27 கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கும் வகையில் இளம் விசுவாசிகளுக்கு யோவான் இவ்வாறு எழுதினார். அவருடைய வாசகர்கள் கர்த்தராகிய இயேசுவினிடத்திலிருந்து **அபிஷேகத்தைப்** பெற்றிருக்கிறார்கள் என்பதை நினைவுகூருகிற காரணத்தால் இறுதியில் நடக்கப்போகும் விளைவைக் குறித்து அவர் அச்சம் அடையவில்லை. நாம் முன்னர் குறிப்பிட்டது போல, **அபிஷேகம்** என்பது பரிசுத்த ஆவியான வரைக் குறிக்கும். பரிசுத்த ஆவியானவர் **உங்களில் நிலைத்திருக்கிறார்** என்பதை நாம் இங்கு கற்கிறோம். நாம் ஒருமுறை பரிசுத்த ஆவியைப் பெற்றால் அவர் ஒருபோதும் நம்மிடத்திலிருந்து எடுத்துப்போடப்பட மாட்டார் என்னும் உறுதியான வசனமாக இது இருக்கிறது. நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதால் ஒருவரும் நமக்குப் போதிக்க வேண்டுவதில்லை. சபையில் நமக்குக் கிறிஸ்தவப் போதகர்கள் தேவையில்லை என்பது இதன் பொருளன்று. எபேசியர் 4:13 -ஆம் வசனத்தில் தேவன் அத்தகைய போதகர்களை ஏற்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய சத்தியத்தைப் பொருத்தமட்டில் திருமறையில் சொல்லப்பட்டிருப்பதைத் தவிர கிறிஸ்தவனுக்கு வேறு எந்த உபதேசமும் தேவையில்லை என்பதே இதன் பொருளாகும். “ஞானமார்க்கத்தார்” கூடுதலாகச் சத்தியத்தைப் பெற்றிருப்பதாகக் கூறிக்கொண்டார்கள். ஆனால் கூடுதல் சத்தியம் எதுவும் தேவையில்லை என்று யோவான் இங்கு கூறுகிறார். தேவனுடைய வார்த்தையாகிய திருமறை நம்முடைய கரங்களில் இருக்க, தேவனுடைய ஆவியானவர் நம்முடைய இருதயங்களில் குடிகொண்டிருக்க, தேவனுடைய சத்தியத்தில் அறிவுறுத்தப்பட வேண்டிய தேவையான அனைத்தையும் நாம் பெற்றிருக்கிறோம்.

2:28 தேவனுடைய குடும்பத்திலுள்ள பிரியமான எல்லாப் பிள்ளைகளையும் யோவான் அழைத்து, **அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருக்க வேண்டுமென்று** புத்தி புகட்டுகிறார். இங்கு நாம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது அப்போஸ்தலரைக் குறிக்கிறது. யாருக்கு இந்த மடலை யோவான்

எழுதியிருக்கிறாரோ, அந்தக் கிறிஸ்தவர்கள் கர்த்தருக்காக உண்மையோடு முன்னேறிச் செல்ல வில்லையென்றால், அவர்களைக் கிறிஸ்துவி னண்டை நடத்திய அப்போஸ்தலர் கிறிஸ்துவின் வருகையின்போது **வெட்கப்பட்டுப்** போக வேண்டியதாயிருக்கும். நற்செய்திப் பிரகடன முயற்சிகள் அனைத்திலும், பின் தொடர்ந்து ஆற்ற வேண்டிய ஊழியத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதி, கிறிஸ்துவின் வருகையின் போது வெட்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என்பதையும் தெரி விக்கிறது.

6. கிறிஸ்தவ ஐக்கியத்தில் உள்ளவர் களிடத்தில் காணப்படும் அச்சடையாளங்கள் [தொடர்ச்சி]: நீதி, அன்பு, அவை கொண்டுவரும் நம்பிக்கை [2:29-3:24]

2:29 தேவ குடும்பத்தில் காணப்படும் நாலாவது பண்பு **நீதி**. உடற்கூறு சம்பந்தப்பட்ட விஷயத் தில், ஏதொன்றும் தன்னைப் போன்ற ஒன்றையே பெற்றெடுக்கும். அது போலவே ஆவிக்குரியவற் றிலும் நடைபெறுகிறது. **நீதியைச் செய்கிற வனெவனும்** தேவனால் **பிறந்திருக்கிறான்**. தேவன் நீதிபரராய் இருக்கிற காரணத்தால், அவர் செய்கிற அனைத்தும் நீதியாயிருக்கும் என்பதே நிகழக்கூடியது, ஆகவே அவரில் பிறந்தவன் எவனும் நீதியுள்ளவனாயிருக்கிறான். இதுவே யோவானின் தவிர்க்க இயலாத தருக்கமாகும்.

3:1 தேவனால் பிறப்பது குறித்த சிந்தனையால் ஆட்கொள்ளப்பட்ட யோவான் வியப்படைந்த வராக, நம்மைத் தேவனுடைய குடும்பத்திற்குள் கொண்டுவந்த வியத்தகு **அன்பை** நோக்கிப் பார்க்கும்படி தன்னுடைய வாசகர்களுக்கு அழைப்பு விடுக்கிறார். நம்மை **தேவனுடைய பிள்ளை களாக்காமலேயே** அன்பின் மூலமாக இரட்சித் திருக்க முடியும். ஆனால் தேவனுடைய அன்பு எப் படிப்பட்டது என்பது, அவருடைய குடும்பத்திற் குள் **பிள்ளைகளாக** நாம் கொண்டுவரப்பட்டதன் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. **"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்!"**[4]

இப்பொழுது நம்முடைய அனுதின வாழ்க்கை யின் நடத்தையின் மூலமாக **உலகம் நம்மை** தேவனுடைய பிள்ளைகளென்று **அறியவில்லை**. இவ்வுலகத்தின் மனிதர்கள் நம்மையும் நம்மு டைய நடத்தையையும் சரியாகப் புரிந்துகொள் கிறதில்லை. உண்மையில், இவ்வுலகம் கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து இப்புவியில் இருந்தபோது அவரை அறியவில்லை. "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டா யிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ள வில்லை." கர்த்தராகிய இயேசுவின் அதே பண்பு நலன்களை நாமும் பெற்றிருக்கிற காரணத்தால், உலகம் நம்மைப் புரிந்துகொள்ளும் என்று எதிர் பார்க்க முடியாது.

3:2 அவர்களால் நாம் அறியப்பட்டிருக் கிறோமோ இல்லையோ, எதுவாயினும் நாம் **இப் பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக் கிறோம்**. நாம் எதிர்காலத்தில் அடையப்போகிற மகிமைக்கு இதுவே வாக்குறுதியாக இருக்கிறது, **இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும்** கிறிஸ்து **வெளிப் படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதால், அவருக்கு ஒப்பா யிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.** சரீரப் பிரகாரமாக இயேசுவைப் போலவே நாம் பரலோ கத்தில் இருப்போம் என்பது இதன் பொருளன்று. கர்த்தராகிய இயேசு தம்முடைய சொந்த, குறிப் பிட்ட தோற்றத்தைப் பெற்றிருப்பார், மேலும் அவர் கல்வாரியில் பெற்ற காயங்களின் தழும்புகளை நித்திய காலமெல்லாம்உடையவராயிருப்பார். நம்மில் ஒவ்வொருவரும், அவரவருடைய குறிப் பிட்ட உருவ அமைப்புகளைப் பெற்றிருப்போம், மேலும் அதன் காரணமாக நாம் யாரென்று ஒவ் வொருவரும் அறியப்படுவோம். விண்ணகத்தில் எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்போம் என்று திருமறை போதிப்பதில்லை. ஆயினும் நாம் யாவ ரும் ஒழுக்க ரீதியாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல இருப்போம். தீட்டு, பாவம், நோய், வருத்தம், மரணம் ஆகியவற்றிலிருந்து நாம் முற்றிலும் விடுதலை பெற்றவர்களா யிருப்போம்.

இத்தகைய வியத்தகு மாற்றம் எவ்வாறு ஏற் படும்? கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கும் ஒரு பார்வை இதை ஏற்படுத்திவிடும் என்பதே இதன் விடையாகும். **அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதால்**. இவ்வுலக வாழ் வின்போது, கிறிஸ்துவைப் போல மாற்றமடையும் நிகழ்ச்சி நடைபெறத் தொடங்கிவிடுகிறது. அது தேவனுடைய வார்த்தையில் வைக்கும் விசு வாசத்தின் மூலமாக அவரைக் காண்பதால்

உண்டாகிறது. ஆனால் அத்தொடர் நிகழ்ச்சி அவர் இருக்கிறவண்ணமாக அவரைக் காண்கிறபோது முழுவதும் நிறைவடையும்; அவரைத் **தரிசிப்பதே** அவருக்கு **ஒப்பாவதாகும்**.

3:3 கிறிஸ்துவைக் காண்போம் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்போம் என்றும் **அவர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்கிறான்**. சடிதியில் கிறிஸ்து வருவார் என்னும் நம்பிக்கை ஒவ்வொரு விசுவாசியினுடைய வாழ்க்கையிலும் மனநிறைவு அளிக்கக்கூடிய விளைவை ஏற்படுத்தும் என்று நீண்ட காலமாகக் கிறிஸ்தவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. கிறிஸ்து வரும்போது, தான் செய்ய விரும்பாத எதையும் செய்து கொண்டிருப்பதாகக் காணப்படக்கூடாது என்றே அவன் எண்ணுகிறான். "**அவர்** (கிறிஸ்து) **சுத்த முள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்கிறான்**" என்று இங்கு சொல்லப்பட்டிருப்பதைக் காண்க. "அவர் (கிறிஸ்து) தம்மைச் சுத்திகரித்துக்கொள்வதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்கிறான்" என்று இவ்வசனம் கூறவில்லை. கர்த்தராகிய இயேசு ஒருக்காலும் தம்மைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்ததில்லை. நம்மைப் பொருத்த மட்டில், இது படிப்படியான வளர்ச்சியாகும். ஆனால் அவரில் அந்த நிலை உண்மையாய் விளங்குகிறது.

3:4 நான்காவது வசனத்தில், தன்னைத்தானே ஒருவர் சுத்திகரித்துக்கொள்வதற்கு எதிர்மறை சொல்லப்பட்டுள்ளது: **"பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான், நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்."** இங்கு செய்கிற என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் *Poieo*, தொடர்ந்து செய்வது என்னும் பொருளைத் தரக்கூடிய நிகழ்கால தொடர்வினையெச்சமாகும். நியாயப்பிரமாணம் இல்லையென்றாலும், பாவஞ்செய்ய முடியும். ஆதாம் முதல் மோசே வரை உலகத்தில் பாவம் இருந்தது, ஆனால் அது தேவனுடைய நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தது. ஆகவே, தமிழ் வேதத்தில் காணப்படுவதுபோல, நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1611 KJV) என்னும் மொழிபெயர்ப்பு மிகத் துல்லியமானது அல்ல. மாறாக, வரையறையற்ற செயலே பாவம். தேவனுக்குக் கீழ்ப்படியாதிருத்தல், அவனவன் தன்னுடைய சொந்த வழியில் செல்லுதல், கர்த்தருடைய இறையாண்மை உரிமையை ஏற்க மறுத்தல் ஆகியவையே பாவமாகும். மொத்தத்தில், ஒருவன் தனது சொந்த சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு மேலாக வைத்திருப்பதையே அது குறிக்கிறது. ஜீவனுள்ள தேவன் மனிதனுடைய கீழ்ப்படிதலைத் தமது உரிமையாகக் கொண்டிருக்கிறார், அதனை எதிர்ப்பதே பாவம்.

3:5 ஒரு கிறிஸ்தவன் தொடர்ந்து பாவம் செய்துகொண்டிருக்க முடியாது, ஏனெனில் அது கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்திற்கு வந்ததன் நோக்கத்தை முழுவதும் மறுத்துரைப்பதாகும். **அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டார்.** ஆகவே, தொடர்ந்து பாவம் செய்வது அவர் மனுவுருவெடுத்ததன் காரணத்தை முற்றிலும் மதிக்காமல் நடந்துகொள்வதாகும்.

மேலும், ஒரு கிறிஸ்தவன் தொடர்ந்து பாவம் செய்ய முடியாது, ஏனெனில் அவ்வாறு செய்வது அவன் பெற்றிருக்கிற ஒருவரது திருப்பெயரை மறுத்துரைப்பதாகும். **அவரிடத்தில் பாவமில்லை.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மனிதநிலை பாவமற்றது என்பதைப் பற்றிப் பேசும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் மூன்றில் இதுவும் ஒன்று. "அவர் பாவஞ்செய்யவில்லை" என்று பேதுரு கூறுகிறார். "அவர் பாவம் அறியாதவர்" என்று பவுல் கூறுகிறார். இப்பொழுது யோவான், மிக நெருக்கமான முறையில் கர்த்தரை அறிந்த சீடர், தனது சான்றைக் கூறுகிறார், "அவரிடத்தில் பாவமில்லை".

3:6 அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை. ஒரு மெய்யான விசுவாசிக்கும் ஒருபோதும் மறுபடியும் பிறக்காத ஒருவனுக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை இந்த வசனம் விவரிக்கிறது. மெய்யான விசுவாசி தொடர்ந்து பாவம் செய்துகொண்டிருக்க மாட்டான் என்று திட்டவட்டமாகக் கூறமுடியும். ஏதோ தனியொரு பாவச் செயலைப் பற்றி யோவான் இங்கு குறிப்பிடவில்லை. மாறாக, தொடர்ந்து, வழக்கமாக, அதையே தனது நடத்தையாகக் கொண்டிருக்கிற நிலையையே அவர் இங்கு குறிப்பிடுகிறார். கிறிஸ்தவன் ஒரு பாவச் செயலைச் செய்வதன் மூலமாகத் தனது இரட்சிப்பை இழந்துவிடுவான் என்று இவ்வசனம் சொல்லவில்லை. மாறாக ஒருவன் வழக்கமாக பாவம் செய்து கொண்டிருப்பானானால், அவன் மறுபடியும் பிறக்கவேயில்லை என்பது தீர்மானமான முடிவாக இருக்கிறது.

"எப்பொழுது பாவம் பழக்கமான செயலாக மாறிவிடுகிறது? ஒருவன் ஒரு பாவச் செயலை எத்தனைமுறை செய்தால் அது அவனுடைய தனிப்பண்பாக எண்ணப்படும்?" என்னும் கேள்விகள் எழுவது இயற்கையே. இக்கேள்விகளுக்கு யோவான் பதில் தரவில்லை. மாறாக, ஒவ்வொரு விசுவாசியும் விழிப்புடன் இருக்கவேண்டுமென்று கூறி, மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பைக் கிறிஸ்தவனிடமே விட்டுவிடுகிறார்.

3:7 தாங்கள் பெருமளவு ஞானத்தைப் பெற்றிருப்பதாக ஞானமார்க்கத்தார் காட்டிக்கொண்ட போதிலும் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்து அவர்கள் கவலையற்றபடி நடந்து கொண்டார்கள். ஆகவே யோவான் கூறுகிறார்: **"பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்."** இந்தப் பொருள் குறித்து குழப்பம் எதுவும் இருக்கக் கூடாது - ஒரு மனிதன் தொடர்ந்து பாவம் செய்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையை நடத்த முடியாது. இதற்கு மாறாக, **நீதியாகிய** ஒருவருடைய இயல்பைத் தான் பெற்றிருப்பதன் மூலமாக மட்டுமே ஒரு மனிதனால் நீதியைக் கைக்கொண்டுவாழ முடியும்.

3:8 சில பிள்ளைகள் பெருங் கூட்டத்தில் காணாமற் போகாத அளவிற்குத் தங்களுடைய பெற்றோர்களைப் போலத் தோற்றமளிக்கிறார்கள். இவ்வுண்மை தேவனுடைய பிள்ளைகளுக்கும் பிசாசின் பிள்ளைகளுக்கும் பொருந்தும். **பாவஞ் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்.** இங்கும்கூட "பாவத்தைத் தொடர்ந்து செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்" என்ற சிந்தையே காணப்படுகிறது. ஆதிமுதல் பிசாசானவன் பாவஞ் செய்துகொண்டே இருக்கிறான் (இது அவன் தொடர்ந்து செய்கிற செயலாக, அவனுடைய தனிப்பண்பாக இருக்கிறது), அதாவது, அவன் முதன்முதலாகப் பாவஞ்செய்தது முதல் அவன் தொடர்ந்து பாவஞ்செய்கிறான். அவனுடைய பிள்ளைகள் யாவரும் அகலமான பாதையில் தொடர்ந்து அவனை பின்பற்றிச் செல்லுகிறார்கள். புதிய பிறப்பின் மூலமாக மனிதர்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறார்கள், ஆனால் பிசாசின் பிள்ளைகள் என்ற நிலையில் எந்தவொரு பிறப்பும் சம்பந்தப்படவில்லை என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டும். ஒரு மனிதன் பிசாசின் நடத்தையைப் பின்பற்றுவதால் அவனுடைய பிள்ளையாகிறான். ஆனால் ஒருவனும் பிசாசின் பிள்ளையாகப் பெற்றெடுக்கப்படுவதில்லை.

இதற்கு மாறாக, கர்த்தராகிய இயேசுவின் வருகை, பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும் படிக்கே (செல்லாததாக ஆக்கும்படிக்கே) நடந்தது. ஒரு சொல்லின் மூலமாகக் கர்த்தர் பிசாசை அழித்துப் போட்டிருக்க முடியும், ஆனால் அதற்குப் பதிலாக அவர் இவ்வுலகிற்கு இறங்கிவந்து, பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரணமடைந்தார். இவை யாவும் பிசாசின் கிரியைகளைச் செல்லாதாக ஆக்கும்படிக்கே நடந்தன. பாவத்தை நீக்குவதற்கு இரட்சகருக்கே இவ்வுளவு பெரிய விலை கொடுக்க வேண்டியதாயிருந்தது. அவ்வாறாயின் அவரை இரட்சகராக ஏற்று அவர்மீது நம்பிக்கை வைத்தவர்கள் எப்படிப்பட்ட மனப்பான்மையோடிருக்க வேண்டும்.

3:9 தேவனால் பிறந்த எவனும் தொடர்ந்து பாவஞ்செய்து கொண்டிருக்கமாட்டான் என்று இந்த வசனம் திரும்பவும் எடுத்துரைக்கிறது. வேத மாணாக்கர் சிலர், இந்த வசனம் ஒரு விசுவாசியின் புதிய இயல்பைக் குறிப்பிடுகிறது என்றும், அவனுடைய முந்தின இயல்பினால் பாவஞ்செய்ய முடியும் என்றும் புதிய இயல்பினால் பாவஞ்செய்ய முடியாது என்றும் கருதுகிறார்கள். ஆயினும், மீண்டுமாக இங்கு அப்போஸ்தலன் மறுபடியும் பிறந்த மனிதனையும் மறுபடியும் பிறக்காத மனிதனையும் வேறுபடுத்திக் காட்டுகிறார், மேலும் அவர் வழக்கமான நடத்தையைக் குறித்துமே பேசுகிறார். விசுவாசியான வன் பாவ வழக்கத்தைக் கொண்டிருப்பதில்லை. அவன் முரண்டு பண்ணுகிற நிலையில் பாவத்தைத் தொடர்ந்து செய்ய மாட்டான்.

அதன் காரணம் யாதெனில், **அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது**. இந்த வசனப் பகுதிக்குப் பொருள் கூறுவதில் வேத மாணாக்கரிடையே பெருத்த வேறுபாடு நிலவுகிறது. சிலர் **வித்து** எனப்படுவது புதிய இயல்பு என்றும், வேறு சிலர் பரிசுத்த ஆவி என்றும், இன்னும் வேறு சிலர் தேவனுடைய வார்த்தை என்றும் கருதுகிறார்கள். இவை யாவும் உண்மையே, ஆகவே வெவ்வேறு விளக்கங்களுக்கு வழி உண்டாகிறது. **வித்து** எனப்படுவது ஒருவர் மனந்திரும்பி விசுவாசியாக மாற்றமடைந்தபோது பெற்ற புதிய ஜீவனைக் குறிக்கிறது என்று நாம்

கருதுகிறோம். அவ்வாறெனில், தெய்வீக வாழ்வு விசுவாசிக்குள் **தரித்திருக்கிறது** என்பதே இங்கு கூறப்பட்டுள்ள செய்தி. அவன் நித்தியம் முழுவதும் பாதுகாப்பைப் பெற்றவன். கிறிஸ்தவன் பாவத்தைச் செய்வதற்குக் காரணமாக அமையாமல், அவன் பாவம் செய்யாமலிருப்பதற்கே நித்திய பாதுகாப்புக் காரணமாக இருக்கிறது. **அவன் தேவனால் பிறந்தபடியால் பாவஞ் செய்வதைத்** தனது வழக்கமாகக் கொண்டிருக்க மாட்டான். இந்த தெய்வீக உறவு, தொடர்ந்து பாவம் செய்வதை வாழ்வின் நடைமுறையாகக் கொண்டிருப்பதைத் தடைசெய்கிறது.

3:10 தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் அறிவதற்கான நாலாவது வேறுபாடு இங்கு சொல்லப்பட்டுள்ளது. நீதியைச் செய்யாதவர்கள் **தேவனால் உண்டானவர்கள்** அல்லர். இரண்டிற்கும் இடைப்பட்டவர்கள் எவனும் இல்லை. இதில் பாதி அதில் பாதி என்று ஒருவரும் இல்லை. தங்களுடைய நீதியுள்ள வாழ்க்கையின் மூலமாக தேவனுடைய பிள்ளைகள் யாரென்று அறியப்படுவார்கள்.

3:11 இந்தப் பகுதியில் தேவனுடைய குடும்பத்தில் இருப்பவர்களுக்கான இரண்டாவது பரீட்சையின், அதாவது அன்பைக் குறித்த பரீட்சையின் தொடர்ச்சி கூறப்பட்டுள்ளது. இது 2:7 முதல் 17 வரை தொடர்ச்சியாக விவரிக்கப்பட்டது. ஒரு சகோதரனிடத்தில் அன்பு பாராட்டுவது தெய்வீகக் கடமை என்று கிறிஸ்தவக் காலப்பாகுபாட்டின் தொடக்கத்திலிருந்து கற்பிக்கப்பட்டு வருகிறது. **அன்பு** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது நட்பு அல்லது மனிதர்களுக்கிடையே பாசம் என்பதல்ல, மாறாக அது தெய்வீக **அன்பே** ஆகும். இது கிறிஸ்து நம்மிடத்தில் அன்புகூர்ந்தது போல, பிறரிடத்தில் அன்புகூருவதே ஆகும். உண்மையில், இதனை ஒருவர் தன்னுடைய சொந்த வலிமையால் செய்ய முடியாது. மாறாக, பரிசுத்த ஆவி தந்தருளும் ஆற்றலினாலேயே ஒருவரால் இதைச் செய்ய முடியும்.

3:12 ஒருவன் தன்னுடைய சகோதரனிடத்தில் அன்புகூராதிருந்த முதலாவது நிகழ்ச்சியினிடமாய் யோவான் திரும்பிச் செல்கிறார். **காயீன்** தன்னுடைய சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்ததன் மூலமாக, அவன் **பொல்லாங்கனால் உண்டானவன்** என்பதை வெளிப்படுத்தினான். **"தன் கிரியைகள் பொல்லாதவைகளும் தன்னுடைய சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்தன"** என்னும் சொற்களில் அதனுடைய அடிப்படைக் காரணம் சொல்லப்பட்டுள்ளது.

3:13 பொல்லாப்பு நீதியைப் பகைக்கிறது என்பது மனுக்குலத்தின் அடிப்படைக் கோட்பாடாக இருக்கிறது. மேலும் விசுவாசிகளை **உலகம் பகைப்பதற்கான** காரணத்தையும் இது விவரித்துக் கூறுகிறது. கிறிஸ்தவர் வாழும் நீதியுள்ள வாழ்க்கை அவிசுவாசியின் பொல்லாப்பைத் தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுகிறது. இவ்வாறு தன்னுடைய நடத்தை தெளிவாக வெளிப்படுத்தப்படுவதால், அவிசுவாசி அதனை மாற்றிக்கொள்வதற்குப் பதிலாக, வெறுப்புணர்ச்சி கொண்டு, எது வெளிப்படுத்துகிறதோ அதை அழிக்க முற்படுகிறான். வரையப்பட்ட கோடு எவ்வளவு கோணலாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்திக்காட்டக்கூடிய நேரான வரைகோலை அழிக்க முற்படுகிற மனிதனின் பகுத்தறிவற்ற செயலுக்கு ஒப்பாக இது இருக்கிறது.

3:14 நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம். ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டவுடன் கிறிஸ்தவர்களைக் குறித்த அவனுடைய மனப்பான்மை முற்றிலுமாக மாறிவிடுகிறது என்னும் உண்மை குறிப்பிடத்தக்கது. அவன் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்கிற பலவழிகளில் இதுவும் ஒன்று. தேவனுடைய மெய்யான பிள்ளையினிடத்தில் அன்புகூராதவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று அறிக்கை செய்யலாம், ஆனால் அவன் **மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான்** என்று வேதம் கூறுகிறது. அவன் எப்பொழுதும் ஆவிக்குரிய நிலையில் செத்தவனாயிருந்தான், இன்னும் அவன் அந்நிலையில்தான் இருக்கிறான்.

3:15 உலகத்தின் பார்வையில் பகைமை அவ்வளவு பொல்லாத விஷயமல்ல, ஆனால் தேவனோ அதனைக் கொலை என்று அழைக்கிறார். ஒரு கணப்பொழுது கண்டனப் பிரதிபலிப்பு, கொலை கருவுருவில் தோன்றியிருப்பதைக் காட்டும். அது செயல்வடிவில் நடைபெறாவிட்டாலும் அங்கே அந்த நோக்கம் இருக்கிறது. இவ்வாறாக, **தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனித கொலைபாதகனாயிருக்கிறான். மனித கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திருக்காது** என்று யோவான் கூறுகிறபோது, கொலைகாரன் இரட்சிக்கப்பட

முடியாது என்னும் பொருளில் அவ்வாறு கூற வில்லை. தன்னுடன் இருப்பவர்களைப் பகைக்கிற பண்பைத் தனது குணமாகக் கொண்டிருக்கிற மனிதன் கொலை செய்பவனாக மாறக்கூடும், அவன் இரட்சிக்கப்படவில்லை என்றே அவர் கூறுகிறார்.

3:16 அதன் பிறகு உச்ச அளவிலான எடுத் துக்காட்டை நமது கர்த்தராகிய இயேசு **தம்மு டைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததாலே** வழங்கியிருக்கிறார். இங்கு கிறிஸ்து காயீனி லிருந்து வேறுபட்டவர் என்பது சொல்லப்பட்டுள் ளது. அவர் தமது அன்பை அதனுடைய மிக உயர்ந்த வகையில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஒரு பொருளில், அன்பு காணவியலாதது, ஆனால் அன்பின் வெளிப்பாட்டை நம்மால் காணமுடியும். கல்வாரி சிலுவையில் உண்மையான அன்பு எதுவோ அந்த அன்பைக் காண்கிறோம். **நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்** என்னும் பாடத்தை யோவான் இதிலிருந்து எடுத்துரைக்கிறார். நம்மு டைய வாழ்க்கையானது தொடர்ந்து மற்ற விசு வாசிகளுக்காகச் செலவிடப்படவேண்டும், மேலும் அவர்களுக்காக மரணமடையவும் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பதே அதன் பொருளாகும். பிறருக்காக மரணமடைய வேண்டிய நிலை நம்மில் பலருக்கும் ஒருபோதும் ஏற்படாது, ஆனால் நாம் ஒவ்வொருவரும் நம் முடைய பொருளுடைமைகளைப் பிறருடைய தேவைகளறிந்து பகிர்ந்தளிப்பதால் நம்முடைய சகோதர அன்பை வெளிப்படுத்திக் காட்ட முடியும். இதுவே 17 -ஆவது வசனத்தில் வலியுறுத் தப்பட்டுள்ளது.

3:17 பதினாறாவது வசனத்தில் நாம் நம்மு டைய சகோதரருக்காக அதிகபட்சம் செய்யக்கூடி யது பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது, 17 -ஆவது வசனம் குறைந்தபட்சம் செய்யவேண்டியது சொல்லப்பட்டிருக்கிறது. **ஒருவன் தன் சகோதர னுக்குக் குறைச்சலுண்டென்று கண்டும்,** அந்தத் தேவையை நிறைவு செய்யாமல் இருப் பானென்றால் அவன் கிறிஸ்தவன் அல்லன் என்று யோவான் இங்கு குறிப்பிட்டுச் சொல்லுகிறார். ஒரு வன் தனக்கு நன்மை உண்டாக்காத பொருளை வாங்கி, தனக்குத் தீமையை ஏற்படுத்திக்கொள் ளும்அளவிற்கு, கண்மூடித்தனமாகப் பணத்தைக் கொடுப்பதை நாம் நியாயப்படுத்த முடியாது. ஆயினும் கிறிஸ்தவர்கள் செல்வத்தைக் குவித்து வைப்பது பற்றி தொல்லைதரும் கேள்விகளை இந்த வசனம் எழுப்புகிறது.

3:18 வசனத்தினாலும் நாவினாலுமல்ல, மாறாக, **கிரியையினாலும் உண்மையினாலும்** நாம் **அன்புகூரக்கடவோம்.** வெறுமனே பாசம் நிறைந்த சொற்களோ, உண்மையல்லாத வாய் வார்த்தைகளோ அன்புகூருதலாகாது என்றும் இதனை வேறுசொற்களிலும் கூறலாம். மாறாக, தயைபாராட்டும் உண்மையான செயல்களினா லும், பொய்யினால் அல்ல மெய்யான நிலை யிலும் அன்பு வெளிப்படுத்திக் காட்டப்பட வேண்டும்.

3:19 இவ்வாறு உண்மையான செயல்திறமிக்க சகோதர அன்பை நடைமுறையில் செயல் படுத்துவதால், **நம்மைச் சத்தியத்திற்குரியவர் களென்று** நாம் அறிவோம்; மேலும் நாம் அவரு டைய முன்னிலையில் மன்றாடும் பொருட்டு வருகிறபோது நம்முடைய **இருதயத்தில் நிச்ச யப்படுத்தப்பட்டவர்களாக** விளங்குவோம்.

3:20 நம்முடைய இருதயமே நம்மைக் குற்ற வாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்மு டைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சக லத்தையும் அறிந்திருக்கிறார். தேவனுடைய முன்னிலையில் ஜெபிக்கும்படி வருகிறபோது எப் படிப்பட்ட மனப்பான்மையோடு இருக்கிறோம் என்பதே இங்கு காணப்படும் பொருளாகும். இந்த வசனமானது இரண்டு வழிகளில் அறிந்துகொள் ளப்படலாம்.

முதலாவதாக, **நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரிய வராயிருக்கிறார்;** அவர் இரக்கம் பாராட்டுவதில் பெரியவராயிருக்கிறார் என்னும் பொருளில் இது சொல்லப்பட்டுள்ளது. நாம் முற்றிலும் தகுதியற்ற வர்கள் என்னும் எண்ணம் உணர்ச்சிமேலிடப் பெருகுகிறபோது, நாம் தேவனையும் தேவனு டைய மக்களையும் நேசிக்கிறோம் என்பதை அவர் அறிகிறார். நம்முடைய தோல்விகளுக்கும் பாவங்களுக்கும் நடுவிலும், நாம் அவருடையவர் கள் என்பதை அவர் அறிவார்.

நம்முடைய இருதயமே நம்மைக் குற்ற வாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்மு டைய இருதயத்திலும் பெரியவராயிருக்கிறார் என்பது நியாயந்தீர்க்கும் பொருளில் சொல்லப் பட்டுள்ள உண்மை என்பது மற்றொரு கருத் தாகும். நம்முடைய பாவங்களைக் குறித்து ஒரு சிறிய அளவில் மட்டுமே நாம் அறிந்திருக் கிறோம், ஆனால் தேவன் எல்லாவற்றையும் முழுவதும் பரிபூரணமாக **அறிந்திருக்கிறார்.** நம்

மிடத்தில் குற்றமாகக் காணப்படுவது அனைத் தையும் அவர் அறிவார், ஆனால் நாமோ அவற்றை அரைகுறையாகத்தான் அறிந்திருக் கிறோம். இரண்டு விளக்கங்களும் உண்மையாக இருக்கின்றன. அவை சரியானவையாக இருந்த போதிலும் இரண்டாவது கருத்தையே அதிகமாக ஆதரிக்கிறோம்.

3:21 தேவனுடைய முன்னிலையில் நல்மனச் சாட்சி உடைய ஒருவரது மனப்பான்மை இங்கு சொல்லப்பட்டுள்ளது. இந்த மனிதன் பாவமற்ற வனாக வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்பது இதன் பொருளன்று. மாறாக அவன் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்யவும் விட்டுவிடவும் தீவிரமாயிருக்கிறான். அவ்வாறு செய்வதன் மூலம் அவன் **தேவனுடைய** முன்னிலையில் மன்றாடும்படி செல்லுகிறபோது **தைரியமும்** நம்பிக்கையும் உடையவனாய் இருக்கிறான். இவ் வாறாக, **நம்முடைய இருதயம் நம்மைக் குற்ற வாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருப்போம்.**

3:22 அவருடைய கற்பனைகளை நாம் கைக் கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவை களைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற் றுக்கொள்ளுகிறோம். அவருடைய கற்பனை களைக் கைக்கொள்ளுதல் அவரில் நிலைத் திருப்பதாகும். இரட்சகரோடு மிக அருகில் இன்றி யமையாத நெருங்கிய நட்போடு வாழ்வதே அது. இவ்வாறு நாம் அவருடன் இணைந்திருப்பதால், அவருடைய சித்தம் நம்முடைய சித்தமாக விளங் கும். பரிசுத்த ஆவியின் மூலமாக அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே அவர் நம்மை நிரப்புவார். நாம் அவருடைய சித்தத்தின்படி **வேண் டிடும்போது**, நாம் கேட்கிறவற்றை அவரிடத்திலி ருந்து **பெற்றுக்கொள்ளுகிறோம்.**

3:23 நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமா யிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டு மென்பதே தேவனுடைய கற்பனையாயிருக் கிறது. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள எல்லாக் கட்டளைகளின் ஒட்டு மொத்தச் சுருக்க மாக இது தோன்றுகிறது. இது தேவனுக்கும் உடன் கிறிஸ்தவர்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமையை எடுத்துரைக்கிறது. நம்முடைய முத லாவது கடமை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினிடத்தில் நம்பிக்கை கொள்வதாகும். பின்னர் மெய்யான விசுவாசம் முறையான நடத்தையால் வெளிப்படுத்தப்படுவதால், நாம் பிறரிடத்தில் **அன்பாயிருக்க வேண்டும்.** இரட்சிக்கும் விசு வாசத்தின் சான்றாக இது விளங்குகிறது.

இந்த வசனத்திலும் மற்ற வசனங்களிலும் பிதாவாகிய தேவனையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் குறிப்பிட **"அவர், அவருடைய"** என்னும் பிரதிப்பெயர்ச் சொற்களை இங்கு பயன்படுத்தும் யோவான், அச்சொற்கள் யாரைக் குறிப்பிட்டுச் சொல்லுகின்றன என்பதை வேறு படுத்திக்கூறவில்லை. குமாரன் மெய்யாகவே பிதாவாகிய தேவன் யாரோ அவராகவே இருக் கிறார் என்பதால் இவ்வாறு குறிப்பிட அவர் துணிவு கொண்டிருக்கிறார். ஒரே மூச்சில் அவர்களைக் குறித்து இவ்வாறு பேசுவது இறுமாப்பு அல்ல.

3:24 இந்த வசனத்தின் முந்தின பகுதியோடு, தேவனுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட சோதனையாகிய அன்பு என்னும் பொருளைப் பற்றிய பாகம் முடிவடைகிறது: **அவருடைய கட்ட ளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான்,** அவரும் அவனில் நிலைத் திருக்கிறார். அவருக்குக் கீழ்ப்படிதல் அவரில் நிலைத்திருப்பதாகும். அவரிடத்தில் நிலைத் திருப்பவர்களுக்கு, அவருடைய நிலைத்திருக் கும் பிரசன்னம் வாக்குறுதி பண்ணப்பட்டிருக் கிறது.

அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந் திருக்கிறோம். தேவன் நம்மிடத்தில் நிலைத் திருப்பது பற்றிய உறுதி பரிசுத்த **ஆவியினாலே** நமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கிறது என்னும் அறிக்கையோடு நம்பிக்கை என்னும் ஆய்வு பொருள் தொடங்குகிறது. எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறார்கள். அவரே அவர்களை அனைத்துச் சத்தியத்திற் குள்ளும் வழிநடத்திச் சத்தியம் எது, தவறு எது என்று பகுத்தறியும் ஆற்றலையும் தருகிறார்.

7. சத்தியம் எது தவறு எது என்று பகுத்தறிவதன் அவசியம் (4:1-6)

4:1 பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் குறிப் பிட்ட யோவான், உலகத்தில் இன்றைக்குப் பல **ஆவிகள்** சுற்றித் திரிகின்றன என்று நினைவு படுத்தப்பட்டவராக, தேவனுடைய மக்கள் அவற் றைக் குறித்து எச்சரிப்புடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட வேண்டியதன் அவசி யத்தை உணர்ந்தார். ஆகவே **எல்லா ஆவி**

களையும் விசுவாசிகள் நம்பக் கூடாதென்று அவர் எச்சரிக்கிறார். இங்கு ஆவி என்று குறிப் பிடப்பட்டிருப்பது முதன்மையாக போதகர்களைப் பற்றியதாக இருந்தாலும், அவர்களை மட்டுமே குறிக்கிறது என்று சொல்லமுடியாது. ஒருவன் திருமறையைப் பற்றியும் தேவனையும் இயேசுவை யும் பற்றியும் பேசுகிறவனாக இருந்தால் மட்டும் அவன் மெய்யாகவே தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டுமென்னும் அவசியம் இல்லை. ஆகவே, **உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்க தரிசிகள் தோன்றியிருப்பதால்**, நாம் **எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியவேண்டும்.** இந்த மனிதர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றிருப்பதாக அறிக்கை செய்ப வர்கள், ஆனால் முற்றிலும் வேறொரு சுவி சேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள்.

4:2 இவர்களைப் பற்றிய உண்மை வெளிப்படு வதற்கான மெய்யான பரீட்சைகளை யோவான் இங்கு கொடுத்திருக்கிறார். "நீங்கள் கிறிஸ்து வைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்னும் கேள்வியே ஒரு போதகரிடம் எழுப்பப்பட வேண் டிய மிகப்பெரிய கேள்வி. **மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக் கிறது.** இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனித சரீரத்தில் பிறந்தார் என்னும் வரலாற்றுப்பூர்வ மான அறிக்கை பண்ணுகிற செயலை இது குறிப்பிடுவதில்லை. மாறாக, **மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை**, அதாவது ஜீவனுள்ள ஒருவரை அறிக்கை செய்வதையே இது குறிப் பிடுகிறது. கிறிஸ்து மனுவுருவெடுத்தவராக வந்த வரே இயேசு என்று அறிக்கை செய்வதும் ஒப்புக் கொள்வதுமே இங்கு சொல்லப்பட்டுள்ள செய்தி. ஒருவர் அவரைத் தன்னுடைய வாழ்வின் கர்த்த ராக ஏற்று அவருக்கு முன்பாகப் பணிந்து கொள்வதே அவரை அறிக்கை செய்வதாகும். இப்பொழுது ஒருவர் கர்த்தராகிய இயேசுவை தேவனுடைய மெய்யான கிறிஸ்துவாக அறிவிப்ப தைக் கேட்பீர்களென்றால், அவர் தேவ ஆவியின் மூலமாகப் பேசுகிறார் என்று உங்களால் அறிந்து கொள்ள முடியும். இயேசு கிறிஸ்துவைக் கர்த்தர் என்று ஒப்புக்கொண்டவர்களாக, தங்களுடைய வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டு மென்று தேவ ஆவியானவர் மனிதர்களை அழைக் கிறார். பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் இயேசுவை மகிமைப்படுத்துகிறார்.

4:3 மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல.[5] இந்த வழியில் நீங்கள் கள்ளப் போதகர்களைக் கண்டறிய முடியும். அவர்கள் முந் தின வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள **இயேசுவை அறிக்கைபண்ணுகிறதில்லை.** தீர்க்கதரிசன மாக உரைக்கப்பட்டதும், **இப்பொழுது உலகத் தில் இருக்கிறதுமான அந்திக் கிறிஸ்துவின் ஆவியே அது.** இன்றைய நாட்களில் இயேசு வைப் பற்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய பல செய்தி களைக் கூறப் பலர் முன்வருவார்கள்; ஆனால் அவர்கள் அவர் மனுவுருவெடுத்து வந்த தேவன் என்று ஒப்புக்கொண்டு அறிக்கை செய்யமாட்டார் கள். கிறிஸ்து "தெய்வீகமானவர்" என்று அவர் கள் கூறுவார்கள், ஆனால் அவர் தேவன் என்று சொல்லமாட்டார்கள்.

4:4 இந்தக் கள்ளப்போதகர்களை எளிய விசுவாசிகளால் **ஜெயிக்க** முடியும். ஏனென்றால் அவர்களுக்குள்ளாகப் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார், அவர் தவறு எது என்று அறிவதற் குரிய ஆற்றலைக் கொடுத்து அந்தத் தவறுக்குச் செவிகொடுக்காதபடி மறுத்துரைக்கச் செய் கிறார்.

4:5 கள்ளப்போதகர்கள் **உலகத்திற்குரிய வர்கள்**, ஆகவே அவர்கள் **பேசுகிற** எல்லா வற்றிற்கும் ஆதாரம் **உலகத்திற்குரியவையே** ஆகும். அவர்கள் கற்பிக்கிற அனைத்திற்கும் தூண்டுகோலாக விளங்குவது இந்த உலகமே யாகும். ஆகவே **உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கிறது.** ஆகவே ஒருவர் போதிக் கிறவை யாவும் உண்மையானவையா என்பதை அறிவதற்கு உலகத்தின் பாராட்டு ஒரு பரீட்சை யாகக் கருதப்படக்கூடாது என்பது இங்கு நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது. ஒரு மனிதன் புகழ் பெற்றவனாக மாற விரும்பினால், அவன் செய்ய வேண்டியதெல்லாம் இந்த உலகம் பேசுகிறது போலப் பேசவேண்டும். ஆனால் அவன் தேவனுக்கு உண்மையுள்ளவனாக இருக்க வேண்டுமானால், அவன் இவ்வுலகத்தின் கண்டனத்தைச் சந்திக்க நேரிடும்.

4:6 இந்த வசனத்தில் யோவான் அப்போஸ் தலரின் பிரதிநிதியாகப் பேசுகிறார். "நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்த வர்கள் எங்களுக்குச் செவிகொடுக்கிறார்கள்" என்று அவர் கூறுகிறார். புதிய ஏற்பாட்டில் காணப் படுகிற அப்போஸ்தலருடைய போதனைகள் அனைத்தையும் உண்மையில் தேவனால்

பிறந்தவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதே இதன் பொருளாகும். இதற்கு மாறாக, தேவனைச் சேராதவர்கள் புதிய ஏற்பாட்டுச் சாட்சியை ஏற்க மறுக்கிறார்கள் அல்லது அதனோடு சேர்க்கவோ கலப்படம் செய்யவோ முயற்சி செய்கிறார்கள்.

B. கிறிஸ்தவ ஐக்கியத்தில் உள்ளவர்களின் அச்சடையாளங்கள் (தொடர்ச்சி) (4:7-5:20)

அ. அன்பு (4:7-21)

4:7,8 ஒருவர் தனது சகோதரரிடத்தில் பாராட்ட வேண்டிய **அன்பு** பற்றிய பொருளைக் குறித்து மீண்டும் இங்கு யோவான் பேசத்தொடங்குகிறார். **அன்பாயிருத்தல்** ஒரு கடமை என்று அவர் வலியுறுத்துகிறார், அது தேவனுடைய பண்புகளுக்கு இசைந்திருக்கிறது. எல்லா மனிதர்களுக்கும் பொதுவான அன்பைக் குறித்து யோவான் சிந்திக்கவில்லை. மறுபடியும் பிறந்த மக்களிடத்தில் ஊன்றப்பட்ட தேவபிள்ளைகளுக்குரிய அன் பைப் பற்றியே அவர் சிந்திக்கிறார். அன்பின் தொடக்கத் தைக் காணுமிடத்து அது **தேவனால் உண்டா யிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். அன்பில் லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பா கவே இருக்கிறார்.** தேவன் அன்புகூருகிறார் என்று இந்த வசனம் கூறவில்லை. அது உண்மை தான், ஆனால் **தேவன் அன்பாகவே இருக் கிறார்** என்று யோவான் வலியுறுத்திக் கூறுகிறார். அன்பு அவருடைய இயல்பாக இருக்கிறது. அவரை ஆதாரமாகக் கொண்டிராத அன்பு உண்மையான பொருளில் அன்பில்லை. **தேவன் அன்பாகவே இருக்கிறார்** என்னும் சொற்கள் உலகத்திலும் விண்ணிலும் உள்ள எல்லா மொழிகளிலும் மிக வும் மேன்மை பெற்றவை. அவற்றை G. S. பேரட் என்பார் விவரிக்கிறார்:

> ... மனிதன் இதுவரை பேசிய சொற்களிலேயே மிக மேன்மையான சொற்கள், திருமறை முழு வதிலும் மிக மேன்மையான சொற்கள். ஆழங் காணவியலாத இந்தச் சொற்களின் பொருளை முழுவதுமாக எந்தவொரு மனிதனும், படைக் கப்பட்ட எந்தவொரு அறிஞனும் இதுவரை புரிந்துகொண்டதில்லை, இனி புரிந்துகொள் ளப் போவதுமில்லை. ஆகவே இந்தச் சொற் களில் புதைந்துள்ள எல்லா அர்த்தங்களையும் மிகச் சுருக்கமான முறையில் வரைந்து தரு வதும் அரிதான செயலாகும். ஆனால் தேவனைப் பற்றிய இந்த ஒரு சொற்றொடர், தேவனுடைய செயல்களையும் வழியையும்... அவருடைய படைப்பின் மர்மத்தையும்... அவ ருடைய மீட்பின் மர்மத்தையும்... தேவனாகிய அவருடைய இயல்பையும் அறிவதற்குரிய இன்றியமையாத குறிப்பைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்று நம்மால் மிகுந்த மரியாதையுடன் சொல்ல முடியும்.[6]

4:9,10 தொடர்ந்து வருகிற வசனங்களில், தேவனுடைய அன்பின் வெளிப்பாட்டைப் பற்றிய விளக்கத்தை மூன்று காலங்களில் நாம் பெற்றி ருக்கிறோம். கடந்த காலத்தில், பாவிகளாக இருந்த நமக்கு **ஒரேபேறான குமாரன்** என்னும் ஈவாக அவ்வன்பு வெளிப்படுத்தப்பட்டது (4:9-11). நிகழ்காலத்தில், பரிசுத்தவான்கள் என்னும் நிலை யில் நம்மிடத்தில் வாசம்பண்ணுபவராக அது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (4:12-16). எதிர் காலத்தில், நியாயத்தீர்ப்பின் நாளிலே தைரியம் உண்டாகத் தக்கதாக அவ்வன்பு நம்மிடத்திலே வெளிப்படுத்தப்படும்.

முதலாவதாக, பாவிகள் என்னும் நிலையில் நாம் தேவனுடைய அன்பைப் பெற்றிருக்கிறோம். **தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத் திலே அனுப்பினதால், அதாவது நம்முடைய பாவங்களை நிவர்த்திசெய்கிற கிருபாதார பலி யாக[7] அனுப்பினதால் அன்பு உண்டாயிருக் கிறது.** நாம் இறந்து போயிருந்ததாலே பிழைக்க வேண்டியதாயிருந்தது; நாம் குற்றவுணர்வு உடையவராய் இருந்தோம், அதனால் கிருபாதார பலி தேவையாயிருந்தது. "அவருடைய ஒரே பேறான குமாரன்" என்னும் சொற்றொடர், வேறு எந்த மகனும் பகிர்ந்துகொள்ளமுடியாத தனிச் சிறந்த உறவை அவர் பெற்றிருந்தார் என்னும் கருத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. தேவனுடைய அன்பை இன்னும் அதிகமாகக் குறிப்பிடத்தக்கதாக மாற்றுகிறது, அதாவது, நாம் அவர் மூலமாகப் பிழைக்கும்படி அவர் **தம்மு டைய** தனிச்சிறந்த **குமாரனை** அவ்வன்பின் காரணமாக அனுப்பினார்.

நாம் முதலில் அன்புகூர்ந்ததன் காரணமாக தேவனுடைய அன்பு நம்மிடத்தில் காண்பிக்கப் படவில்லை. உண்மையில், நாம் அவருடைய பகைஞராயிருந்தோம், அவரிடத்தில் வெறுப்புக் கொண்டிருந்தோம். நாம் அவரிடத்தில் அன்பு கூர்ந்ததன் காரணமாக அவர் நம்மிடத்தில் அன்பு கூரவில்லை, மாறாக கசப்புணர்வோடு அவரை எதிர்த்துச் செயல்பட்ட போதிலும் அவர் நம்மிடத் தில் அன்புகூர்ந்தார் என்றும் இதனைக் கூறலாம்.

கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்திற்கு அப்பாற் பட்டது தேவனுடைய அன்பு என்று தாராளக் கொள் கையாளர்கள் சிலர் சிந்திக்க விரும்புகிறார்கள். அவ்விரண்டிற்கும் இடையே சிறிதளவு முரண் பாடும் இல்லையென்று யோவான் அவற்றைத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார். இதனைத் திரு வாளர் டென்னி விளக்கியுரைக்கிறார்:

> இந்த வசனத்தில் முரண்பாடு போலத் தோற்ற மளிக்கும் உண்மை பெருந்தொனியாய் ஒலிப் பதைக் கவனியுங்கள். தேவன் ஒரே சமயத்தில் அன்புகூருகிறவராகவும் கடுஞ்சினம்கொள்கிற வராகவும் இருக்கிறார், அவருடைய அன்பு நாம் அடைய வேண்டிய கடுங்சினத்தைத் தவிர்க்கும்படியாகக் கிருபாதாரபலியைத் தந்தரு ளுகிறது. அன்பிற்கும் கிருபாதார பலிக்கும் இடையே அப்போஸ்தலன் எவ்வித முரண்பாட் டையும் கண்டறியாமல், கிருபாதாரபலியைச் சுட்டிக்காட்டாமல் ஒருவரிடத்தில் காண்பிக்கப் படும் அன்பைக் குறித்த சிந்தனையை அறி விக்க முடியாது.[8]

4:11 அத்தகைய அன்பின் பாடத்தை யோவான் இப்பொழுது நம்மீது சுமத்துகிறார்: **"தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்."** இங்கு "அன்பு கூர்ந்திருந்தால்" என்று சந்தேகத் தொனியோடு கூறாமல் "அன்புகூர்ந்திருக்க" என்று மிகச்சரி யாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்பொழுது தம்முடைய மக்களிடத்தில் தேவன் தம்முடைய அன்பைப் பொழிந்தருளியிருப்பதால், நாமும் அவருடைய ஆசிர்வதிக்கப்பட்ட குடும்பத் தின் அங்கத்தினர்களிடத்தில் **அன்புகூரக் கடனாளிகளாயிருக் கிறோம்.**

4:12,13 தற்காலத்தில் தேவனுடைய அன்பு நம்மிடத்தில் வாசம் பண்ணுவதால் வெளிப்படுத் தப்பட்டிருக்கிறது. **"தேவனை ஒருவரும் ஒரு போதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்"** என்று அப்போஸ்தலன் கூறுகிறார். யோவான் 1:18 -இல் "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்று நாம் வாசிக்கிறோம். அதரிசனமான தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக இவ்வுலகத்திற்கு அறியப் பண்ணப்பட்டார் என்று யோவான் நற்செய்தி நூலில் நாம் காண்கிறோம். இங்கு **தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை** என்னும் சொற்றொடர் யோவான் மடலில் மீண்டும் சொல் லப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இப்பொழுதோ தேவன் இவ்வுலகிற்கு வெளிப்படுத்தப்பட்டிருக் கிறார், கிறிஸ்துவின் மூலமாக அல்ல, ஏனென் றால் அவர் இப்பொழுது விண்ணகத்திற்குத் திரும்பிச் சென்றுவிட்டார், மேலும் தேவனுடைய வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். அவருக்குப் பதிலாக விசுவாசிகளின் மூலமாக தேவன் இப்பொழுது உலகிற்குத் தம்மை வெளிப்படுத்து கிறார். தேவனைக் காணவேண்டும் என்னும் மனிதனின் கேள்விக்கு நாமே தேவனுடைய விடையாக, இப்பொழுது இருக்கிறோம் என்னும் உண்மை எந்த அளவிற்கு திகைப்படையச் செய் கிறது! நாம் ஒருவரிலொருவர் அன்புகூரும் போது, **அவருடைய அன்பு நமக்குள் பூரணப்படும்.** தேவன் நம்மீதுவைத்த அன்பின் இலக்கு நிறை வேறிவிட்டது என்பது இதன் பொருளாகும். நாம் தேவனுடைய ஆசிர்வாதங்களின் முடிவிடமாக இருக்கவேண்டும் என்று ஒருபோதும் திட்டமிடப் படவில்லை, மாறாக நாம் வாய்க்கால் களாகவே செயல்படவேண்டும். தேவனுடைய அன்பு நமக்கு அருளப்பட்டது, ஆனால் அது நம் மூலமாகப் பிறர் மேல் ஊற்றப்பட வேண்டும் என்பதே அல்லாமல் நம்மிடத்தில் பதுக்கிவைக் கப்படவேண்டும் என்ப தற்காக அல்ல. இவ்வித மாக நாம் ஒருவரிலொரு வர் அன்புகூருகிறபோது, **நாம் அவருக்குள் நிலைத்திருக்கிறோம்** என்பதும், அவர் நமக்குள் நிலைத்திருக்கிறார் என்பதும், நாம் அவருடைய ஆவியில் பங்குபெற்றவர்கள் என்பதும் மெய்ப் பிக்கப்படும். நாம் அவரிலும் அவர் நம்மிலும் குடி யிருப்பது பற்றி வியந்துபோற்ற நாம் நேரம் எடுத் துக்கொள்ள வேண்டும்.

4:14 அப்போஸ்தலரோடு நாம் கொண்டிருக் கிற ஐக்கியத்தைப் பற்றிய சான்றினை யோவான் இப்பொழுது பகர்கிறார்: **"பிதாவானவர் குமா ரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்."** தெய்வீக அன்பின் செயல்பாட்டைக் குறித்த மிக மேன்மை யான அறிக்கையாக இது விளங்குகிறது. கிறிஸ்துவின் செயல்பாட்டின் எல்லைக்குட்படாத இலக்கைப் **"பிதாவானவர் குமாரனை அனுப்பினார்"** என்னும் சொற்கள் விவரிக்கின் றன. "அவருடைய திருப்பணியின் செயற்பரப்பு மனுக்குலத்தைப் போன்று கட்டுக்கடங்காததா யிருக்கிறது. பாவத்திற்கு வருந்தாத மனிதனின்

நிலையும் அவனுடைய நம்பிக்கையின்மையும் அதனுடைய உண்மையான ஆற்றலுக்கு ஓர் எல்லையை வகுக்கிறது" என்று திருவாளர் W. E. வைன் எழுதினார்.[9]

4:15 இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிற யாவரும் தங்களிடத்தில் வாசம்பண்ணுகிறவராகத் தேவனைப் பெற்றிருக்கும் நற்பேற்றை அடைந்திருக்கிறார்கள். இங்கும்கூட இந்த அறிக்கையானது வெறுமனே அறிவுப் பூர்வமான ஒப்புதல் அன்று. மாறாக, ஒருவன் தன்னையே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கக் கூடிய செயலின் அறிக்கையாக இது விளங்குகிறது. ஒருவன் **தேவனிலும், தேவன் அவனிலும்** நிலைத்திருப்பதைக் காட்டிலும் மிக நெருக்கமான உறவு வேறு எதுவும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு உறவை நம்மால் கற்பனைசெய்து காணமுடியாது. ஆனால் இதனை இயற்கையின் செயற்களத்தோடு ஒப்பிட்டுக் காணலாம்: நெருப்பில் இடப்பட்ட இரும்புக் கம்பி, நீரில் இடப்பட்ட கடற்பஞ்சு அல்லது காற்றில் விடப்பட்ட பலூன். ஒவ்வொன்றிலும் அந்தப் பொருளுக்குள்ளாக மூலாதாரத் தனிமம் இருக்கிறது, அந்த மூலாதாரத் தனிமத்திற்குள்ளாக அந்தப் பொருளும் இருக்கிறது.

4:16 தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவன் அன்பாகவே இருக்கிறார், அந்த அன்பு ஓர் இலக்கைக் கொண்டிருக்க வேண்டும். தேவனுடைய அன்பின் சிறப்பான இலக்காக, அவருடைய குடும்பத்தில் பிறந்த அனைவரும் இருக்கிறார்கள். நான் தேவனோடு ஐக்கியம் பெற்றிருக்க வேண்டுமானால், அவர் யாரிடத்தில் அன்பு பாராட்டுகிறாரோ அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும்.

4:17 அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது. நம்முடைய அன்பு பூரணப்படுத்தப்படவில்லை, மாறாக தேவனுடைய அன்பு நம்மிடத்தில் பூரணப்படுத்தப்படுகிறது. நாம் கர்த்தருக்கு முன்பாக நிற்கப்போகிற எதிர்காலத்தை நோக்கி யோவான் இப்பொழுது நம்மை நடத்திச் செல்லுகிறார். அது தைரியமும் நம்பிக்கையும் கொண்டதாக இருக்குமா அல்லது அஞ்சிநடுங்குகிறபடி பயத்தைத் தரக்கூடியதாக இருக்குமா? அது தைரியமும் நம்பிக்கையும் உடையதாக இருக்கும் என்பதே இதன் விடையாகும், ஏனெனில் பரிபூரண அன்பானது பாவத்தைக் குறித்த பிரச்சினையை என்றென்றைக்குமாக ஒழித்துக்கட்டிவிட்டது. வரப்போகிற நாளில் நாம் பெற்றிருக்கும் நம்பிக்கைக்கான காரணம் **"அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்"** என்னும் சொற்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசு இப்பொழுது விண்ணகத்தில் இருக்கிறார், நியாயத்தீர்ப்பானது முற்றிலும் அவருக்குப் பின்னாகச் சென்றுவிட்டது. ஒரு முறை அவர் இவ்வுலகிற்கு வந்து, நம்முடைய பாவங்களுக்காக நாம் அடையவேண்டிய தண்டனை யாவற்றையும் அனுபவித்துவிட்டார். ஆனால் அவர் மீட்பின் செயலை நிறைவேற்றிய தன் காரணமாக மீண்டும் பாவப் பிரச்சினையை எடுக்கவேண்டிய தேவையில்லை. **அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.** அதாவது, நம்முடைய பாவங்கள் ஏற்கனவே கல்வாரியில் நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டன, ஆகவே நாம் இவ்வாறு நம்பிக்கையுடன் பாடலாம்:

இறையருளும் புகழொளியும்
என்முன்னே பவனிவர
ஒறுவினையும் சாக்காடும்
என்பின்னே மறைந்தனவே!
அன்றொருநாள் அன்பரின்மேல்
பெருவெள்ளம் புரண்டோட
என்றென்றும் அதன்வலிமை
அடியோடு ஒழிந்ததுவே!

எவ்வாறு நியாயத்தீர்ப்பானது அவரைவிட்டுக் கடந்து சென்றனவோ, அதுபோலவே நாமும் குற்றத்தீர்ப்புக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கிறோம்.

4:18 தேவனுடைய அன்பை அறியும்படியான நிலைக்கு நாம் வந்திருக்கிறபடியால், அழிந்து போவோம் என்னும் **பயம்** நமக்கில்லை. **அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்.** அவருடைய **பரிபூரண அன்பு** நம்முடைய **பயத்தைப் புறம்பே தள்ளும்.** முதலாவதாக, கர்த்தருடைய அன்பு எனக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது, ஏனென்றால் அவர் தம்முடைய குமாரனை எனக்காக மரணமடையும்படி அனுப்பினார். இரண்டாவதாக, கர்த்தர் தற்சமயத்தில் எனக்குள்ளாகக் குடியிருக்கின்ற

காரணத்தால் அவர் என்னிடத்தில் அன்பு கூருகிறார் என்பதை நான் அறிவேன். மூன்றாவ தாக, நான் எவ்வித பயமுமின்றி நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கிறவனாக இருக் கிறேன். உண்மையாகவே, **பயமானது வேத னையுள்ளது,** மேலும் **பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்லன்.** அவரைக் குறித்த பயமுடையவர்களுடைய வாழ்க்கையில் தேவனு டைய அன்பு செயல்படும்படி அனுமதிக்கப்பட வில்லை. அவர்கள் தங்களுடைய பாவங்களுக் காக மனம்வருந்தி அவரிடத்திலிருந்து பாவமன் னிப்பைப் பெறும்படி அவரிடம் ஒருபோதும் வர வில்லை.

4:19 அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்த படியால் நாமும் அவரிடத்தில் அன்புகூரு கிறோம்.[10] அவரிடத்தில் **நாம் அன்புகூருவதற்கு** ஒரே காரணம், **அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்ததேயாகும்.** தன்னுடைய தேவனிடத் திலும் அயலகத்தானிடமும் மனிதன் அன்புகூர வேண்டுமென்று பத்துக்கட்டளைகள் கூறுகின் றன, ஆனால் அந்த நியாப்பிரமாணத்தில் இந்த அன்பைத் தோற்றுவிக்க முடியவில்லை. அவ் வாறு இருக்க தேவனுடைய நீதி எதிர்பார்க்கிற இந்த அன்பை அவரால் எப்படிப் பெற முடியும்? இந்தச் சிக்கலை அவர் தமது குமாரனை நமக் காக மரணமடையும்படி அனுப்பியதால் தீர்க்க முடிந்தது. அதற்குப் பதிற்செயலாக அத்தகைய வியத்தகு அன்பு நம்முடைய இருதயங்களை அவரிடமாய்க் கவர்ந்திழுக்கிறது. "எனக்காக நீர் இரத்தம் சிந்தி மரணமடைந்தீர்; இதுமுதல் நான் உமக்காக வாழ்ந்திடுவேன்" என்று நாம் கூறு வோமாக.

4:20 தேவனிடத்தில் அன்புகூருவதாக வெற்ற றிக்கை செய்துவிட்டு அதே நேரத்தில் தன்னு டைய சகோதரனை வெறுத்தால், அதில் எவ்விதப் பயனுமில்லை என்று யோவான் வலியுறுத்திக் கூறுகிறார். ஒரு சக்கரத்தில் உள்ள கம்பிகள் அதனுடைய மையப்பகுதியின் அருகில் ஒன்றோ டொன்று நெருங்கியிருப்பது போல, அவர்களும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கிறார் கள். இவ்வாறாக, நாம் கர்த்தரை நெருங்கியிருக் கிறபோது, நாம் அதிகமாக நம்முடைய உடன் விசுவாசிகளிடம் அன்புபாராட்டுகிறவர்களாக இருப்போம். உண்மையில், அவரைப் பின்பற்று கிறவர்களிலேயே மிகவும் எளிமையான மனிதர் களிடத்தில் நாம் பாராட்டுகிற அன்பைக் காட்டி லும் ஒரு சிறு துளிகூட அதிகமாக நாம் கர்த்தரிடத் தில் அன்புபாராட்டுவதில்லை. நாம் காண்கிற நம்முடைய சகோதரரிடத்தில் அன்புகூராவிடில், காணாத தேவனிடத்தில் அன்புகூருவது இயலாத செயல் என்று யோவான் வாதாடுகிறார்.

4:21 தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற அவராலே பெற்ற கற்பனையை மீண்டும் கூறி யோவான் இந்தப் பகுதியை முடிவு செய்கிறார்.

ஆ. ஆரோக்கியமான உபதேசம் [5:1]

வாழ்க்கையின் பரீட்சைகளை யோவான் இப்பொழுது கூறிமுடிக்கிறார். இங்கு அவர் மீண் டும் உபதேசத்தைக் குறித்த பரீட்சையைப் பற்றிக் கூறத்தொடங்குகிறார், அல்லது இதனை நாம் விசுவாசத்தின் பரீட்சை என்று சொல்லலாம். முதல் மூன்று வசனங்களில் விசுவாசத்தின் விளைவுகள் சொல்லப்பட்டுள்ளன. அவையா வன: முதலாவது, தெய்வீகப் பிறப்பு, அடுத்தது தேவனிடத்தில் அன்புகூருதல், அதற்கடுத்தது உடன் விசுவாசிகளிடத்தில் அன்புகூருதல், இறுதியாக தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல். முதலாவதாக, நாம் தெய்வீகப் பிறப் பைப் பெற்றிருக்கிறோம்: **இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்.** உண்மை எதுவோ அதற்கு அறிவுபூர்வமாக ஒப்புதல் அளிப்பது மட்டும் விசு வாசம் ஆகாது, மாறாக இயேசுவே கிறிஸ்து என்று ஒருவன் தனது வாழ்க்கையை ஒப்புவிப்பதே விசுவாசமாகும்.

இ. அது உருவாக்கும் அன்பும் கீழ்ப்படிதலும் [5:1-3]

5:1 உண்மையாகவே நாம் **தேவனால் பிறந்த வர்களானால்,** அவரிடத்தில் **அன்புகூருவோம்.** அது மட்டுமின்றி, அவருடைய பிள்ளைகளிடத் திலும் அதுபோலவே அன்புகூருவோம். இவ்வுல கிலுள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தாரை அல்லது ஐக்கியத்தில் உள்ளவர்களை மட்டுமின்றி, எல்லா விசுவாசிகளிடத்திலும் நாம் அன்புகூர வேண்டும் என்று இங்கு அறிவுறுத்தப்பட்டுள்ள தைக் கவனிக்கவும்.

5:2,3 அவருடைய **கற்பனைகளுக்குக்** கீழ்ப் படிவது விசுவாசத்தினால் உண்டாகும் நான்கா வது விளைவாகும். **நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளி டத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்து கொள்ளுகிறோம்.** உண்மையாக இரட்சிக்கப்

பட்டவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறை வேற்றுவதற்கான விருப்பம்கொண்டவர்கள் என் னும் தனிப்பண்பைத் தங்களுடைய குணநல மாகப் பெற்றிருப்பார்கள். நாம் தேவனிடத்தில் கொண்டிருக்கும் அன்பு அவருடைய கற்பனை களுக்கு விருப்பத்தோடு கீழ்ப்படிவதற்கான நிலை யால் வெளிப்படுத்தப்படும். "நீங்கள் என்னிடத் தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று கர்த்தராகிய இயேசு கூறினார்.

அவருடைய கற்பனைகள் பாரமானவை களுமல்ல என்று யோவான் கூறுகிறபோது அவை கடினமானவை அல்ல என்னும் பொருளில் சொல்லவில்லை, மாறாக அவ்வாறு செய்யவே மறுபடியும் பிறந்தவர்கள் விரும்புவார்கள் என்றே கூறுகிறார். ஒரு தாயிடம் அவளுடைய குழந்தை யைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்று கூறு வீர்களானால், அவள் செய்ய விரும்புவதையே நீங்கள் கூறுகிறீர்கள். கர்த்தருடைய கற்பனை களே நாம் செய்வதற்குச் சிறந்தவை, மேலும் அவற்றைச் செய்வதற்கு நம்முடைய புதிய இயல்பு முழுமனதோடு பெருமகிழ்ச்சி கொண் டிருக்கும்.

ஈ. உலகத்தை வெல்லும் விசுவாசம் (5:4,5)

5:4 அடுத்தபடியாக, உலகத்தை வெல்லு வதற்கான இரகசியத்தை நாம் கற்கிறோம். இவ் வுலகத்தின் ஒழுங்கு முறை அரக்கத்தனமான சோதனைகளை உண்டாக்கக்கூடிய திட்டங் களால் நிறைந்திருக்கிறது, எப்பொழுதும் நம்மை தேவனிடத்திலிருந்தும் நித்தியத்திற்குரியவற்றி லிருந்தும் விலக்கி இழுத்துச் செல்ல முயற்சி செய்கிறது, மேலும் தற்காலிகமான மற்றும் சிற் றின்பத்திற்கேதுவான செயல்களில் சிக்கவைக்க முயற்சி செய்கிறது. நேரத்தைச் செலவிடுவதற் கான காரியங்களிலும் உணர்வுகளைத் தூண் டக்கூடிய செயல்களிலும் இவ்வுலக மனிதர்கள் முற்றிலும் மூழ்கிப் போயிருக்கிறார்கள். அழிந்து போகிற பொருட்களால் இழப்புக்கு ஆளானவர் களாக அவர்கள் இருக்கிறார்கள்.

தேவனால் பிறந்த மனிதன் மட்டுமே **உல கத்தை ஜெயிக்கிறான்**. ஏனெனில் அவன் விசு வாசத்தின் மூலமாக இவ்வுலகத்தின் அழிந்து போகிற பொருட்களுக்கு மேலாக உயரச் செல்ல வும், அப்பொருட்களை மெய்யான நித்திய கருத் தோடு நோக்கிப் பார்க்கவும் செய்கிறான். இவ் வாறாக, உண்மையாகவே **உலகத்தை ஜெயிக் கிறவன்** பெரிய அறிவியல் அறிஞனோ, தத்துவ ஞானியோ, உளவியல் வல்லுநனோ அல்லன்; மாறாக, காணப்படுகிறவை அநித்தியமானவை, காணப்படாதவை நித்தியமானவை, என்னும் அறிவுடைய எளிய விசுவாசியே உலகத்தை ஜெயித்தவனாவான். இயேசு நாதரின் முகத்தில் தேவனுடைய மகிமையைக் காணும் காட்சி உலகத்தின் மகிமையை மங்கிப் போகச் செய்து விடும்.

5:5 நாம் ஏற்கனவே பார்த்ததுபோல, இந்தப் பகுதியின் ஆய்வுப்பொருள், விசுவாசம் நித்திய வாழ்விற்கான பரீட்சையாக இருக்கிறது என்பது தான். **இயசுவானவர் தேவனுடைய குமார னென்று விசுவாசிக்கிறவன் உலகத்தை ஜெயிக் கிறவன்** என்று யோவான் இப்பொழுதுதான் கூறி னார். தொடர்ந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் செயல்பாட்டைக் குறித்த விவரங்களை அவர் தரப்போகிறார்.

உ. ஆரோக்கியமான உபதேசம் (5:6–12)

5:6 "இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினா லும் வந்தவர்" என்று அவர் கூறுகிறார். இந்தச் சொற்களின் பொருள் என்னவென்பது பற்றிய விவாதம் பெருமளவில் நடந்துள்ளது. இரட்ச கரின் விலாவிலிருந்து பாய்ந்து சென்றதையே **ஜலமும் இரத்தமும்** என்னும் சொற்கள் குறிக் கின்றன என்று சிலர் கருதுகிறார்கள் (யோவான் 19:34). **ஜலம்** தேவனுடைய ஆவியையும் **இரத் தம்** கல்வாரியில் சிந்திய குருதியையும் குறிப்ப தாக வேறு சிலர் கருதுகிறார்கள். இன்னும் வேறு சிலர், **ஜலமும் இரத்தமும்** இருக்கக்கூடிய இயற் கையான பிறப்பையே இது குறிக்கிறது என்று கூறு கிறார்கள். நான்காவது விளக்கத்தை நாம் கூற விரும்புகிறோம், அந்த விளக்கம் இந்த மடலில் அப்போஸ்தலன் ஞானமார்க்கத்தாரோடு செய் கிற போரில் அவர்களுடைய குறிப்பிட்ட தவறான போதகத்தை எதிர்த்து முறியடிக்கக் கூடியதா யிருக்கிறது.

ஏற்கனவே நாம் கூறியதுபோல, இயேசு ஞானஸ்நானம் எடுத்தபோது கிறிஸ்து அவர்மேல் வந்தார் என்றும், அவர் பாடுகள் அனுபவிப்பதற்கு முன் அதாவது கெத்செமனே தோட்டத்தில் அவரைவிட்டு நீங்கினார் என்றும் ஞானமார்க்கத் தார் நம்பினார்கள். "சிலுவையில் கிறிஸ்து மரண மடையவில்லை, இயேசு என்னும் மனிதரே மரண மடைந்தார்" என்று அவர்கள் கூறியதாகவும் இதை வேறு சொற்களில் கூறலாம். பிறருடைய பாவங்களுக்குப் பரிகாரமாக அவர் மரணமடைந்த

தன் மதிப்பை இக்கருத்து கொள்ளையிட்டுவிடு கிறது என்பதில் எவ்வளவேனும் ஐயமில்லை. **ஜலம்** இயேசுவின் ஞானஸ்நானத்திற்கு அடை யாளமாகவும், **இரத்தம்** அவருடைய பாவப்பரி காரமரணத்திற்கு அடையாளமாகவும் இங்கு யோவானால் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று நாம் கருதுகிறோம். அவருடைய வெளியரங்க மான ஊழியத்தில் இரண்டு எல்லைகளாக இவை விளங்கின. யோர்தான் ஆற்றில் இயேசு ஞானஸ் நானம் பெற்றபோது எப்படி கிறிஸ்துவாக இருந் தாரோ அதுபோலவே அவர் சிலுவையில் மரண மடைந்த போதும் இருந்தார் என்று இங்கு யோவான் கூறுகிறார். **இவரே ஜலத்தினாலும் இரத்தத் தினாலும் வந்தவர் - ஜலத்தினாலே மாத்திர மல்ல** (ஞானமார்க்கத்தார் இதனை உண்மை யென்று ஒப்புக்கொள்கிறார்கள்), **ஜலத்தினா லும் இரத்தத்தினாலும் வந்தவர்.** பாவப்பரி காரத்தைக் குறித்த கோட்பாட்டை ஒழித்துக் கட்டவேண்டுமென்று மனித இருதயம் இடை விடாமல் முயற்சி செய்துகொண்டேயிருக்கிறது என்றே தோன்றுகிறது. கர்த்தராகிய இயேசுவை மனிதர்கள் நிறைவான மனிதராக, மிகச்சிறந்த முன்மாதிரியாக, நமக்கு வியத்தகு நன்னெறி களைத் தந்தவராக மட்டும் ஏற்க விரும்புகிறார் கள். கர்த்தராகிய இயேசு முழு நிறைவான மனி தர் மட்டுமின்றி, அவர் முழு நிறைவான தேவனாக வும் இருக்கிறார், மேலும் அவரே யோர்தான் ஆற்றில் ஞானஸ்நானம் பெற்றவர், பாவிகளுக் காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்தவர் என்று யோவான் இங்கு ஆணித்தரமாகக் கூறுகிறார். "சிலுவையிலிருந்து இறங்கிவாரும், அப்பொழுது உம்மை விசுவாசிப்போம்" என்று கிறிஸ்துவினி டத்தில் மனிதர்கள் கூறுகிறார்கள். அவர்களு டைய சிந்தையிலிருந்து சிலுவையை அகற்றிப் போட முடிந்தால், அவர்களால் மகிழ்ச்சியோடு இருக்க முடியும். ஆனால், "இல்லை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, கல்வாரியில் அவர் நிறை வேற்றிய பரிபூரண மீட்பின் செயலிலிருந்து தனியே பிரித்துப் பெற முடியாது" என்று யோவான் கூறு கிறார்.

ஆவியானவர் சத்தியமாகையால், ஆவி யானவரே சாட்சி கொடுக்கிறவர். கர்த்தராகிய இயேசுவைக் குறித்த சத்தியத்தை தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் தாமே எப்பொழுதும் சாட்சி யாக அறிவிக்கிறவர் என்பது இதன் பொருளாகும், அதனையே யோவான் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து ஜலத்தினால் மாத்திரமல்ல, ஜலத்தினா லும் இரத்தத்தினாலும் வந்தவர் என்பதற்கு அவர் சான்று வழங்குகிறார், ஏனெனில் அதுவே தேவனு டைய சத்தியம்.

5:7,8 KJV மற்றும் NKJV ஆகிய மொழி பெயர்ப்புகளில் காணப்படும் 7,8 ஆகிய வசனங் களின் சில பகுதிகள் ஒரு சில கிரேக்க மொழிப் புதிய ஏற்பாட்டுப் பிரதிகளில் மட்டுமே காணப்படு கின்றன என்பதைப் பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் அறியும்போது, அது அவர்களுக்கு எப்போதும் தொல்லை தருகிறதாயிருக்கிறது.[11] ஆனால் இது, திருமறையானது ஆவியானவரின் உயிரூட்ட முடையது என்னும் உண்மையை எந்த விதத் திலும் பாதிக்கிறதில்லை. அந்தச் சொற்கள் திரு மறையில் இடம் பெற்றிருக்க வேண்டும், ஏனென் றால் திரியேக தேவனின் மூன்று நபர்களின் பெயர்களும் அவற்றில் இடம் பெற்றிருக்கின்றன, ஆகவே இச்சொற்கள் மிகவும் முக்கியமானவை என்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் மூவொரு தேவன் பற்றிய சத்தியம் இந்த ஒரு வச னத்தை மட்டும் சார்ந்தது அன்று. மாறாக அவ் வுண்மை திருமறையில் பல்வேறு இடங்களில் காணப்படுகிறது.

கிறிஸ்துவின் ஆளுமையையும் அவருடைய செயல்பாட்டையும் குறித்து முந்தின வசனங் களில் உரைத்த யோவான் இப்பொழுது அவரிடத் தில் விசுவாசம் வைப்பதற்கான நம்பகத்தன் மையை எடுத்துரைக்கிறார். **சாட்சியிடுகிறவை மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவையே. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கின்றன.** (பூலோகத்திலே என்னும் சொல் இதில் சேர்க்கப் படக்கூடாது). நம்முடைய விசுவாசத்திற்கு அடிப்படையாக தேவனுடைய வார்த்தை மட்டுமே நமக்குப் போதுமானதாக இருக்க வேண்டும், ஆயினும் அந்தச் சத்தியத்திற்குச் சாட்சி பகர மூன்று சாட்சிகளோடு அவர் இறங்கி வருகிறார். முதலாவதாக தேவனுடைய **ஆவி**. இயேசு கிறிஸ்து தேவன், அவர் ஒருவரே உலக ரட்சகர் என்று அவர் சாட்சிகொடுக்கிறார். ஆவியான வரின் சாட்சி தேவனுடைய எழுதப்பட்ட வார்த் தையில் காணப்படுகிறது.

அதற்கு அடுத்தபடியாக **ஜலத்தின்** சாட்சி. கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது நடந்ததை இது குறிப்பிடுவதாக நாம் நம்பு கிறோம். அந்த நிகழ்ச்சியின் போது தேவன் வானங்களைத் திறந்து வெளியரங்கமாக அறி வித்தார்: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்." இவ்விதமாக பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின் ஆளுமை

யைக் குறித்த தமது சொந்தச் சான்றை தூய ஆவியாகிய தேவனிடம் வழங்கினார்.

இறுதியாக, இரத்தத்தின் சாட்சி சொல்லப் பட்டிருக்கிறது. சிலுவையில் கர்த்தராகிய இயேசு தாம் தேவனுடைய குமாரன் என்று தம்மைக் குறித்தே சாட்சி கூறினார். ஒருவரும் அவருடைய ஜீவனை அவரிடத்திலிருந்து எடுக்கவில்லை. அவரே அதைக் கொடுத்தார். அவர் வெறுமனே மனிதராக இருந்திருந்தால் அவ்வாறு அவரால் செய்திருக்க முடியாது. பாவப் பிரச்சினையானது என்றென்றைக்குமாக ஒரேதடவையில் தேவன் மனநிறைவடையும்படியாகத் தீர்க்கப்பட்டு விட்டது என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் **இரத்தம்** சாட்சியிடுகிறது. **இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கின்றன**. கிறிஸ்துவின் ஆளுமை மற்றும் செயல்பாடு ஆகியவற்றின் நிறைவான நிலைமை பற்றி சாட்சி கூறுவதில் அவை மூன்றும் ஒருமைப்பட்டுள்ளன.

5:9 இப்பொழுது யோவான் ஆற்றல்மிக்க வாதத்தை முன்மொழிகிறார்: **"நாம் மனிதருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப் பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது."** நம்முடைய அனுதின வாழ்க்கையில் நம்முடன் வாழ் மனிதர்களுடைய பேச்சை நாம் எப்பொழுதும் ஏற்றுக்கொள்கிறோம். அவ்வாறு நாம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், நம்முடைய தொழில் நின்றுபோய் விடும், சமுதாய வாழ்க்கைக்கு வாய்ப்பு இல்லாமற் போய் விடும். தவறான மனிதர்களுடைய சாட்சியையும், ஏமாற்றுபவர்களுடைய பேச்சையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். நம்முடைய அனுதின வாழ்க்கையில் இவர்களையே ஏற்றுக்கொள்கிற நாம், தவறிழைக்கவோ பொய்கூறவோ முடியாத தேவனுடைய சாட்சியை எவ்வளவு அதிகமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவருடைய சாட்சி முற்றிலும் நம்பத்தகுந்தது.

5:10 ஒருவன் தேவனுடைய குமாரனைப் பற்றிய சாட்சியை ஏற்றுக்கொள்கிறபோது, தேவன் தாமே அந்த மனிதனிடம் ஆவியானவரின் சாட்சியைக் கொடுத்து அந்தச் சத்தியத்தை அவனிடத்தில் முத்திரையிட்டு உறுதிப்படுத்துகிறார். இதற்கு மாறாக ஒரு மனிதன் தேவனை விசுவாசிக்காவிட்டால், **அவன் அவரைப் பொய்யராக்குகிறான்.** ஏனெனில் **தேவனை விசுவாசிக்காதவனோ தேவன் தம்முடைய குமாரனைக் குறித்து கொடுத்த சாட்சியை விசுவாசிக்கிறதில்லை.** கிறிஸ்துவைக் குறித்த சாட்சியை மனிதர்கள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது மறுத்துரைக்கலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய சாட்சியை மறுத்துரைப்பதன் மூலமாக, தேவன் நேர்மையற்றவர் என்று குற்றப்படுத்துபவராகக் காணப்படுவார்கள் என்று அவர்கள் அறிய வேண்டும் என்று யோவான் கூறுகிறார்.

5:11 கிறிஸ்தவத்தின் செய்தியை இப்பொழுது யோவான் சுருக்கமாக எடுத்துரைக்கிறார்: **"தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்."** இவை யாவும் எவ்வளவு பெரிய மகத்துவமான சத்தியங்கள், அதாவது, தேவன்தாமே மனிதர்களுக்கு **நித்திய ஜீவனைத்** தந்தருளியிருக்கிறார், அந்த **ஜீவனின்** ஆதாரம் **அவருடைய குமாரனில் இருக்கிறது** என்பதே.

5:12 இதிலிருந்து கிடைக்கப்பெறுகிற முடிவு தவிர்க்க முடியாதது. **குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்**. இங்கு கற்பிக்கப்படுகிற பாடம் தவறற்றது, கல்வியிலோ, தத்துவத்திலோ, அறிவியலிலோ, நற்கிரியையிலோ, சமயத்திலோ, சபையிலோ நித்திய ஜீவனைக் கண்டடைய முடியாது. ஒருவன் **ஜீவனைப்** பெற வேண்டுமானால், அவன் **தேவனுடைய குமாரனைப்** பெற்றிருக்க வேண்டும். **தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்**. அதாவது மெய்யான வாழ்வு அவனுக்குள் இல்லை. நித்திய வாழ்வை இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து பிரிக்கவே முடியாது.

ஊ. வார்த்தையின் மூலம் கிடைக்கப்பெறும் உறுதி (5:13)

5:13 நாம் இப்பொழுது இந்த மடலின் இறுதிப் பகுதிக்கு வந்திருக்கிறோம். முதலாவதாக, இதற்கு முந்தைய பகுதியை தான் எழுதியதற்கான காரணத்தை மிகத் தெளிவான சொற்களில் யோவான் கூறுகிறார். **தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று அறிய** வேண்டுமென்பதே அதன் நோக்கமாகும். தேவனுடைய பிள்ளைகளுக்குரிய அச்சடையாளங்களை உடையவர்களாயிருந்தால், நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் பிறந்திருக்கிறீர்கள் என்பதை உங்களால் **அறிய** முடியும். இந்த வசனம் மேலும் ஒரு விலையுயர்ந்த சத்தியத்தைக் கற்பிக்கிறது. அதாவது, இரட்சிப்பின் உறுதி தேவனுடைய வார்த்தையின் மூலமாக வருகிறது. தங்களுக்கு **நித்திய ஜீவன்**

உண்டென்று மனிதர்கள் **அறிய** வேண்டுமென்று யோவான் இவை யாவற்றையும் எழுதினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தவர்கள், தாங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்னும் உறுதியைப் பெறும்படி திருமறை வசனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்றும் இதனை வேறு சொற்களில் கூறலாம். இருளில் நம்பிக்கை வைப்பதும், ஊகிப்பதும், உணர்வு கொள்ளுதலும், துழாவித்தேடுதலும் தேவையற்றவை. ஒருவன் தான் இரட்சிக்கப்பட்டவன் என்று கூறுவது அனுமானம் அல்ல. மெய்யாகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை **விசுவாசிக்கிறவர்கள்** தங்களுக்கு **நித்திய ஜீவன் உண்டென்று அறிவார்கள்** என்று முடிந்த அளவிற்கு மிகத் தெளிவான முறையில் யோவான் கூறுகிறார்.

எ. மன்றாட்டில் நம்பிக்கை (5:14-17)

5:14,15 நாம் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறோம் என்று நாம் அறிகிறபோது, நாம் கர்த்தருடைய முன்னிலைக்கு **தைரியத்தோடு** செல்ல முடியும் என்பது சொல்லாமலே விளங்கும். இந்த **தைரியத்தைக்** குறித்து 14,15 ஆகிய வசனங்களில் யோவான் விவரிக்கிறார். தேவனுடைய **சித்தத்தின்படி எதையாகிலும் நாம் கேட்டால்,** அவர் **செவிகொடுத்து**, பதில் தருவார். அவருக்குச் சித்தமானதல்லாததைக் கேட்பதற்கு உண்மையில் நாம் அச்சமடைய வேண்டும். "ஆனால், தேவனுடைய சித்தத்தை என்னால் எப்படி அறிய முடியும்?" என்று ஒருவர் கேள்வி எழுப்பலாம். புனிதமான திருமறை வசனங்களில் தேவனுடைய சித்தம் என்னவென்பதற்கான பதில் பொதுவான முறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே தேவனுடைய சித்தம் என்னவென்பதைச் சிறப்பான முறையில் அறிவதற்கும், அதிக புத்தி சாலித்தனமாக ஜெபிப்பது எவ்வாறு என்று அறிவதற்கும் திருமறையை ஊன்றிப் படிக்க வேண்டும்.

5:16 வேண்டுதல் செய்வதில் விசுவாசியான வன் தைரியத்தோடு இருப்பதற்கான ஓர் எடுத்துக்காட்டு நிகழ்ச்சியைக் கூறும் யோவான், அவ்வாறு தைரியமாய் இருக்க முடியாத நிலைக்கும் ஓர் எடுத்துக்காட்டைத் தருகிறார். **மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார். யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்.** ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய உடன் விசுவாசியொருவன் பாவத்தில் ஈடுபடுவதைக் காண்கிற நிகழ்ச்சியை முதல் பகுதி குறிக்கிறது. அந்த மனிதனிடத்தில் மரணத்தை ஏற்படுத்தும் குணமுடைய பாவமல்ல அது. அந்தச் சூழ்நிலையில், தவறு செய்யும் மனிதன் சீர் பொருந்துவதற்காக விசுவாசி மன்றாட வேண்டும், தேவன்தாமே மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்.

இதற்கு மாறாக, **மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்** என்று அப்போஸ்தலன் கூறுகிறார்.

மரணத்துக்கு ஏதுவான பாவம்

மரணத்துக்கு ஏதுவான பாவம் என்ன என்பது பற்றி மிகத்துல்லியமாகச் சொல்ல முடியாது. ஆகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பல விளக்கங்களைக் கூறி அவற்றில் மிகவும் சரியானது எது என்று நாம் கருதுகிறோம் என்று கூறுவதே பாதுகாப்பானது.

1. ஒரு விசுவாசியினிடத்தில் மீண்டும் மீண்டும் காணப்பட்டு அறிக்கை செய்யப்படாத பாவமே மரணத்துக்கு ஏதுவான பாவம் என்று சிலர் கருதுகிறார்கள். தன்னைத் தானே சோதிக்காமல் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு பெற்றதால் சிலர் மரணமடைந்ததாக 1 கொரிந்தியர் 11:30 -இல் படிக்கிறோம்.

2. வேறு சிலர் கொலை என்னும் பாவமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என எண்ணுகிறார்கள். ஒரு கிறிஸ்தவன் ஒரு கணப்பொழுது சீற்ற மடைந்து மற்றொருவனைக் கொலைசெய்து விடுவானானால், அவன் மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று வேண்டுதல் செய்ய, கிறிஸ்தவர்கள் விடுதலை பெற்றவர்களல்லர், ஏனென்றால், "மனிதனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனிதனாலே சிந்தப்படக்கடவது" என்று தேவன் தம்முடைய சித்தத்தில் ஏற்கனவே கூறியிருக்கிறார்.

3. இன்னும் வேறு சிலர் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற பாவம் பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான தேவ தூஷணம் என்று கருதுகிறார்கள்.

கர்த்தராகிய இயேசு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் செய்த அற்புதங்களை, பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலின் வல்லமையால் செய்யப்பட்டவை என்று கூறியவர்கள் மன்னிக்கப்படாத பாவத்தைச் செய்தார்கள் என்று இயேசு கிறிஸ்து குறிப்பிட்டார். அந்தப் பாவம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படாது என்றும் அவர் கூறினார்.

4. மோசே அல்லது ஆரோன் அல்லது அனனியாவும் சப்பீராளும் செய்த பாவத்தைப் போன்ற ஏதோ குறிப்பிட்ட பாவத்தை இது குறிக்கிறது என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள்.

5. இது விசுவாச மறுதலிப்பு என்னும் பாவத்தைக் குறிக்கிறது என்பது கடைசி விளக்கமாகும். இந்த விளக்கமே அனைத்து விளக்கங்களிலும் சிறந்ததும் பின்னணிக்குப் பொருத்தமாகவும் இருக்கிறது என்று நாம் கருதுகிறோம். கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்த மகத்துவமான சத்தியங்களை அப்படிப்பட்ட ஒருவன் கேட்டு, இயேசுவே கிறிஸ்து என்று அறிவுபூர்வமாக உறுதி பெற்றவன், மேலும் கிறிஸ்தவத்தை அவன் அறிக்கை செய்திருந்த போதிலும், அவன் மெய்யாக இரட்சிக்கப்பட்டவன் அல்லன். மேலும் அவன் கிறிஸ்தவ விசுவாசத்தின் நன்மைகளை ருசி பார்த்த பிறகு, அவற்றை முற்றிலுமாக மறுத்துரைத்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமற்போனவன். எபிரெயர் 6 -இல் இந்தப் பாவமே மரணத்துக்கு ஏதுவான பாவம் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பாவத்தைச் செய்பவர்களுக்குத் தப்புவதற்கான வழி எதுவும் இல்லை, ஏனெனில் இவர்கள் "தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறவர்கள்." ஞானமார்க்கத்தார் பற்றியே இந்த மடல் முழுவதும் யோவான் பேசிவருகிறார். இந்தக் கள்ளப்போதகர்கள் ஒருகாலத்தில் கிறிஸ்தவ ஐக்கியத்தில் இருந்தவர்கள். அவர்கள் விசுவாசிகள் என்று தங்களைக் குறித்து அறிக்கை செய்தவர்கள். அவர்கள் விசுவாசத்தின் சத்தியங்களை அறிந்தவர்கள், ஆனால் அதன் பிறகு கர்த்தராகிய இயேசுவுக்குப் புறமுதுகுகாட்டி, அவருடைய தெய்வீகத்தையும், அவருடைய பாவப்பரிகாரச் செயலின் போதுமான தன்மையையும் மறுத்துரைத்தவர்கள் ஆவார்கள். இத்தகைய மனிதர்கள் சீர்பொருந்த வேண்டும் என்று வேண்டுதல் செய்தவற்குக் கிறிஸ்தவன் விடுதலை பெற்றவனல்லன். ஏனெனில் இவர்கள் மரணத்துக்கேதுவான பாவத்தைச் செய்தவர்கள் என்று தேவன்தாமே திருமறையில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளார்.

5:17 அநீதியெல்லாம் பாவம்தான், என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு. பாவத்தின் தரத்தில் குறிப்பிடத்தக்க வெவ்வேறான அளவுகள் உள்ளன. மரணத்துக்கு ஏதுவான கடுமையான பாவங்களாகச் சில இருப்பதில்லை.

ஏ. ஆவிக்குரிய உண்மைகள் பற்றிய அறிவு (5:18-20)

5:18 பதினெட்டாம் வசனம் முதல் கிறிஸ்தவ விசுவாசத்தின் மாபெரும் தவறாத் தன்மைகளை மீண்டும் வலியுறுத்தியவராக யோவான் தனது மடலைக் கம்பீரமான முறையில் முடிக்கிறார். **தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்**. தெய்வீக இயல்புடைய ஒருவன் தொடர்ந்து பாவத்தைச் செய்து கொண்டிருக்க மாட்டான் என்பது குறித்து நாம் உறுதியுடன் இருக்க முடியும். அதனுடைய காரணம் யாதெனில்: **தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்,**[12] **பொல்லாங்கன் அவனைத் தொடான்**. 3:9 -ஆம் வசனத்தில் உள்ளபடி, இது தனது தெய்வீக இயல்பைத் தொடர்ந்து காத்துவருகிற அல்லது அந்த இயல்பில் விடாமுயற்சியுடன் செயல்பட்டு வருகிற மெய்யான விசுவாசியையே குறிக்கிறது. அத்தகைய மனிதனே பொல்லாங்கனால் தீங்குக்கு உட்படாதவன்.

5:19 தான் மேலான அறிவைப் பெற்றிருப்பதாகக் கூறிக்கொள்ளும் மனிதனுக்குக் கிறிஸ்தவன் தரும் விடை: **நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.** யோவானிடத்தில், ஒளிவு மறைவான சொற்கள் இல்லை. கிறிஸ்துவுக்குள்ளாக அல்லது பொல்லாங்கனுக்குள் கிடக்கிற நிலை - இவ் விரண்டு செயற்களங்களையே அவர் காண்கிறார். எல்லா மனிதர்களும் ஒன்று இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் இழந்து போனவர்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களுடைய தகுநிலையானது இயேசு கிறிஸ்துவோடு அவர்கள் கொண்டிருக்கும் உறவின் அடிப்படையிலானதாகவே இருக்கும். "ஞானமார்க்கத்தாரே" இதனைக் கேளுங்கள்!

5:20 மூன்றாவது மிகப்பெரிய சத்தியம் மனு வுருவெடுத்த நிகழ்ச்சியாகும். **தேவனுடைய குமாரன் வந்தார் என்பதை நாம் அறிவோம்.** இந்தக் கருத்துடன்தான் யோவான் தனது மடலைத் தொடங்கினார், இதே கருத்துடன் அவர் இப்பொழுது தனது மடலை முடிக்கவும் போகி றார். கர்த்தராகிய இயேசுவின் வருகை அவர் **சத்தியமுள்ளவர்** என்று, அதாவது, அவரே மெய் யான தேவன் என்று நமக்கு வெளிப்படுத்தியிருக் கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூல மாக மட்டுமே பிதாவாகிய தேவனை அறியமுடி யும். "பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமா ரனே அவரே வெளிப்படுத்தினார்." **இவரே மெய் யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.** "ஞானமார்க்கத்தார்" மறுத்துரைத்த சத்தியத் தையே, அதாவது, இயேசு கிறிஸ்துவே தேவன், அவரிடத்தில் மட்டுமே நித்திய ஜீவன் உண்டென் பதையுமே யோவான் இங்கு கற்பிக்கிறார்.

9. இறுதி வேண்டுகோள் (5:21)

இறுதியில், யோவானுடைய கடைசி அறிவுரை யைக் காண்கிறோம்: "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக." "இந்தச் சத்தியங்களுக்கு எதி ரான போதனைகள் எல்லாவற்றையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்." அப்போஸ்தலர்களால் நமக்குத் தந்தருளப்பட்டுள்ள தேவனைப் பற்றிய சத்தியங்களைத் தவிர வேறு எந்தக் கருத்திலி ருந்தும் விசுவாசிகள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று யோவான் விரும்பு கிறார். இயேசு கிறிஸ்து தேவன். வேறு எந்தச் சிந்தனையும் சிலை வணக்கமேயாகும். மரத் திலே செதுக்கியெடுக்கப்பட்ட சிலைகளைக் குறித்து யோவான் இங்கு பேசவில்லை. சிலை எனப்படுவது மெய்யான தேவனுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படுகிற ஏதொன்றையும் அல் லது பொய்யான கடவுளையும் குறிக்கும். இங்கு விக்கிரகம் என்று சொல்லப்பட்டிருப்பது, பருப் பொருள் சார்ந்த ஒன்றையல்ல. மாறாக, கள்ளப் போதகத்தையேயாகும்.

இந்த வேண்டுகோள் குறித்து ஆர்ச்பிஷப் அலெக்ஸாண்டர், "நாவன்மை மிக்க அதிர்வு" என்று கூறினார். இதனைக் காட்டிலும் மேலான தொரு வருணனையைத் தரக்கூடிய எந்தச் சொற் களையும் நம்மால் சிந்தித்துப் பார்க்க முடிய வில்லை. ஆகவே நாமும் நம்முடைய விளக்க வுரையை யோவானின் நாவன்மை மிக்க அதிர் வுடன் முடிக்கிறோம்:

"பிள்ளைகளே நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்க ளாக. ஆமென்."

அடிக்குறிப்புகள்

1 (2:7) நடுநிலைப் பிரதியில் (NU) "ஆதி முதல்" என்னும் சொல் இரண்டாவது தடவை பயன்படுத்தப்படவில்லை.

2 (2:12) *Teknia* என்னும் சொல் (பிள்ளை களைப்) பெறுவது என்று பொருள்படும். அதனை மிகச்சிறிய அளவில் சுருக்குவோமானால் "புதி தாய்ப் பிறந்த குழந்தைகள்" என்று காணப்படும். அதற்கு இணையான இனிமையான ஸ்காட் சொல் "*bairnies*" (குழந்தைகள்) என்பதாகும்.

3 (2:20) பெரும்பான்மைப் பிரதியிலும் பாரம்பரியப் பிரதியிலும் இந்தச் சொற்றொடர் "நீங்கள் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்" *(Panta)* என்று காணப்படுகிறது. நடுநிலைப் பிரதியில் "நீங்கள் சகலரும் அறிந்திருக்கிறீர் கள்" *(Pantes)* என்று இச்சொற்றொடர் இடம் பெற்றுள்ளது. கடினமான வாசகம் புரிந்துகொள் வதற்கு எளிமையான சொற்களில், "நீங்கள் சக லத்தையும் அறிந்திருக்கிறீர்கள்" என்று மாற்றி எழுதப்பட்டுள்ளது ஏன் என்பதை அறிவது எளிது.

4 (3:1) நடுநிலைப் பிரதியில் "நாமும் அவ் வாறே இருக்கிறோம்" என்னும் சொற்கள் சேர்க் கப்பட்டுள்ளன.

5 (4:3) "மாம்சத்தில் வந்த" என்னும் சொற் கள் நடுநிலைப் பிரதியில் (NU) விடுபட்டுள்ளன.

6 (4:7,8) G. S. Barrett, *The First Epistle General of St. John,* pp. 170-173

7 (4:9,10) கிருபாதார பலி என்பதன் பொருள், ஒரு பலியின் மூலமாகப் பாவத்திற்கான மனநிறைவு தரக்கூடிய பரிகாரம் செய்வது என்பதாகும். மூல மொழியில், ''கிருபாசனம்'' என்பதற்கான கிரேக்கச் சொல்லோடு தொடர்புடைய சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (தமிழிலும் அது போலவே கிருபாசனம், கிருபாதார பலி என்னும் சொற்கள் இடம் பெற்றுள்ளன). பிரிட்டிஷ் நாட்டு C. H. டாட் என்பவரின் தலைமையின் கீழ் இந்தச் சொல்லுக்கு எதிராக (கோட்பாட்டிற்கும் எதிராக), போர்க்கொடி எழுப்பப்பட்டது, தாராளக் கொள்கையைப் பின்பற்றி எழுதப்பட்ட RSV –யைத் தொடர்ந்து, பல புதிய மொழிபெயர்ப்புகளில் இச்சொல் மாற்றப்பட்டுவிட்டது. இந்தச் சொல் இறையியல் சத்தியத்தை வெளிப்படுத்தும் தரமான, ஆரோக்கியமான சொல்லாக இருப்பதால் நாம் இதனையே (KJV மற்றும் NKJV –யில் இருப்பதுபோல்) தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

8 (4:9,10) James R. Denny, *The Death of Christ*, 2nd. ed., . 276. The first part of the quotation 170-173 is aparently from an earlier edition.

9 (4:14) W. E. Vine, *The Epistles of John*, p. 85.

10 (4:19) நடுநிலைப் பிரதியில் ''அவரிடத்தில்'' என்னும் சொல் இடம்பெறவில்லை.

11 (5:7,8) பிற்காலத்து கிரேக்கமொழி புதிய ஏற்பாட்டில், போப்பின் வற்புறுத்தலின் காரணமாக, ஏராஸ்மஸ் என்பார் இந்தச் சொற்களைச் சேர்த்துவிட்டார் (ரோமக் கத்தோலிக்கருடைய அதிகாரபூர்வமான இலத்தீன் மொழி வேதப் புத்தகத்தில் இந்தச் சொற்கள் இடம் பெற்றுள்ளன). பிற்காலத்திய நான்கு கிரேக்க மொழிப் பிரதிகளில் மட்டுமே இந்தச் சொற்கள் இடம் பெற்றுள்ளன, ஆகவே இவற்றைப் பயன்படுத்துவது அவ்வளவு பாதுகாப்பானதல்ல. மூவொரு தேவன் என்னும் கொள்கையை மறுத்துரைக்கும் கள்ளப் போதகர்கள் வீடுவீடாகச் சென்று இந்த உண்மைகளைச் சுட்டிக்காட்டுவதால், இந்தப் பிரச்சினையைக் குறித்து நாம் அறிந்திருப்பது நல்லது.

12 (5:18) நடுநிலைப் பிரதியில் ''தன்னை'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''அவனை'' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறெனில், ''தேவனால் பிறந்தவன்'' என்னும் சொற்றொடர் கிறிஸ்துவைக் குறிக்கிறது.

நூல் விவரப் பட்டியல்

Barrett, G. S. *The First Epistle General of St. John.* London: The Religious Tract Society, 1910.

Candlish, Robert S. *The First Epistle of John.* Grand Rapids: Zondervan Publishing House, n.d.

Findlay, George. *Fellowship in the Life Eternal.* London: Hodder & Stoughton, n.d.

Ironside, H. A. *Addresses on the Epistle of John.* New York: Loizeaux., n.d.

Kelly, William. *An Exposition of the Epistles of John the Apostle.* London: T. Weston, 1905.

Law, Robert. *The Tests of Life.* Edinburgh: T&T Clark, 1909.

Marshall, I. Howard. *The Epistles of John* (NIC). Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1978.

Mitchell John G. Fellowship: T*hree Letters from John.* Portland, Ore.: Multnomah Press, 1974.

Stott John R. W. *The Epistles of John* (TBC). Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1964.

Vine, W. E. T*he Epistles of John: Light, Love, Life,* Zondervan Publishing House, 1970.

Westcott, Brooke Foss. *The Epistles of St. John.* Cambridge: The MacMilan Company, 1892.

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின இரண்டாம் நிருபம்

முன்னுரை

அப்போஸ்தலனின் மற்றொரு பண்புக்கூறை யோவானின் இரண்டாம் மடல் நமக்குத் தருகிறது: தனிமனித ஆத்துமாக்களின் மேய்ப்பனாக இம்மடல் அவரை நமக்குக் காட்டுகிறது... இம்மடல் ஓர் உள்ளூர் சபைக்கு எழுதப்பட்டதோ ... கிறிஸ்தவப் பெண் மணிக்கு எழுதப்பட்டதோ ... எதுவாயிருந்தாலும், இது குறிப்பிட்ட மனிதர்களுக்காக எழுதப்பட்ட மடலாகும். அவர்களிடத்தில் அப்போஸ்தலன் மிகுதியான ஈடுபாடு கொண்டி ருந்த காரணத்தால், அவர் இம்மடலை எழுதுகிறார்.

A. பிளம்மர்.

1. வேதநூல் தொகுப்பில் தனிச்சிறப்பு மிக்க இடம்

மிகவும் அன்பிற்கினிய தொடக்காலப் பரிசுத்த வான்களில் ஒருவரான அப்போஸ்தலனாகிய யோவான் தனிப்பட்ட நபர்களோடு கொண்டிருந்த தொடர்புக் கடிதங்களில் விலைமதிப்புமிக்க மடல் களாக இதனையும் 3 யோவான் மடலையுமே நாம் பெற்றிருக்கிறோம்.

பிறரிடம், சிறப்பாக விசுவாசிகள் என்று தங்க ளைக் குறித்து அறிக்கை செய்கிற மக்களிடம் எந்த அளவிற்குத் "திறந்துகொடுக்கிறவர்களாக" அல்லது அவர்களிடமிருந்து பிரிந்து தனிமைப் படுத்திக்கொள்ள வேண்டும் என்று கிறிஸ்தவர் கள் சிலவேளைகளில் தடுமாற்றம் அடைகிறார் கள். நடைமுறை பற்றிய இந்தக் கேள்விக்கு இரண்டு மற்றும் மூன்று யோவான் மடல்கள் விடைதருகின்றன. கள்ளப்போதகர்களுக்கு நமது வீட்டின் கதவை (அல்லது வீட்டில் கூடும் சபையின் கதவை) எவ்வாறு அடைத்துக்கொள்ள வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை இரண்டு யோவான் மடலும், பயணம் செய்கிற பிரசங்கிகள், நற்செய்திப் பணியாளர்கள் ஆகியோருக்கு எவ் வாறு வீட்டின் கதவைத் திறந்துகொடுக்க வேண் டும் என்பதன் முக்கியவத்துவத்தை மூன்று யோவான் மடலும் விவரிக்கின்றன.

2. நூலாசிரியர்

1 யோவான் மடலைக் காட்டிலும் 2 யோவான் மடலுக்கான புறச்சான்று வலிமை குன்றியதா யிருப்பதன் காரணம் இதனுடைய அளவு மற்றும் தனிநபருக்கு இது எழுதப்பட்டது என்பதில் எவ் வித ஐயமுமில்லை. ஐரேனியஸ் இதிலிருந்து மேற் கோள் எடுத்துள்ளார். ஆயினும் மற்றவர்களைப் போலவே இது 1 யோவான் மடலின் ஒரு பகுதி என்றே அவர் நினைத்தார் (அதிகாரங்கள், வசனங் கள் ஆகிய பிரிவுகள் சில நூற்றாண்டுகள் கழித்தே தோன்றின). ஓரிஜன் இம்மடலைக் குறித்து ஐயம் கொண்டிருந்தார்; ஆனால் அலெக்ஸாண்ட் ரியாவைச் சேர்ந்த கிளமண்ட் மற்றும் டையேனி சியஸ் ஆகியோர் யோவானே இம்மடலை எழுதி யவர் என்று கூறியிருக்கிறார்கள். சைப்ரியன் பத்தா வது வசனம் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதியது என்று எடுத்தாண்டுள்ளார்.

யோவான் நற்செய்தி நூல், 1 யோவான் மற்றும் 3 யோவான் மடல்கள் ஆகியவற்றின் மொழிநடை மற்றும் சொல்லாட்சி ஆகியவற்றோடு இந்த மடலும் ஒத்திருப்பது இதன் அகச் சான்றாகும். 1 யோவானிலிருந்து 2 மற்றும் 3 யோவான் மடல் கள் வேறுவகையான தொடக்கத்தைக் கொண்டி ருந்தாலும், அவை யாவும் ஒரே நபரால் எழுதப் பட்டவை என்பதையும், ஏறத்தாழ ஒரே சமயத்தில் எழுதப்பட்டவை என்பதையும் ஒருவரும் மறுத் துரைக்கக் கூடாதபடி ஒப்பாயிருக்கின்றன.

அப்போஸ்தலனாகிய யோவானே இம்மடலை எழுதியவர் என்னும் பாரம்பரியக் கருத்தைச் சந்தேகிப்பதற்கு நிர்ப்பந்தமான காரணம் எதுவும் இல்லை. (கூடுதல் விவரங்களுக்கு 1 யோவான் மடலின் முன்னுரையைக் காண்க).

3. எழுதப்பட்ட காலம்

1 யோவான் மடலைப் போலவே, இரண்டு காலங்களைக் கணிக்கலாம். எருசலேம் அழிக் கப்பட்ட காலத்திற்கு வெகுமுன்னர் இது எழுதப்

பட்டிருக்க வேண்டும் (கி. பி. 60), அல்லது பிந்தைய காலமாயிருக்க வேண்டும் (கி. பி. 85-95). முந்தின கருத்தின்படி காண்போமாயின் இது எருசலேம் நகரிலிருந்து எழுதப்பட்டிருக்கும், பிந்தின கருத்தின்படி இது எபேசுப் பட்டணத்திலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டும். வயது முதிர்ந்த அப்போஸ்தலன் தனது இறுதி நாட்களை எபேசுப் பட்டணத்தில்தான் கழித்தார்.

4. நூலின் பின்னணியும் கருத்தும்

திருச்சபையின் தொடக்க காலத்தில் பிரசங்கிகள் பயணம் மேற்கொண்டு மிகப் பரவலாகத் திருப்பணியாற்றிய சூழ்நிலையே இந்நூலின் பின்னணியாகும். சில இடங்களில் இன்னும் இத்தகைய ஊழியம் ஓரளவு நடைபெற்று வருகிறது. இந்த நற்செய்திப் பணியாளர்களும், திருவசனத்தை விளக்கித்தரும் பிரசங்கிகளும் கிறிஸ்தவ இல்லங்களிலும் சபைகளிலும் விருந்தோம்பலையும் சில வேளைகளில் நிதி உதவியையும் பெறுகிறார்கள். ஆனால் கள்ளப் போதகர்களும், போலியான மதப்பிரசங்கிகளும் இந்தச் சூழ் நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு வீடுகளுக்குள் சென்று எளிய முறையில் ஆதாயத்தைத் தேடிக்கொண்டதோடு, ஞான மார்க்கம் போன்ற கள்ளப்போதகங்களையும் பரப்பத் தொடங்கினார்கள் (1 யோவான் மடலுக்கான முன்னுரையைக் காண்க).

முதல் நூற்றாண்டில் ஆதாயத்தொழிலாகச் சமயத்தைப் பயன்படுத்தி வந்த கள்ளப்போதகர்களுக்கு எதிராக எச்சரிப்பைக் கூறவேண்டியது முக்கியமானதாகக் கருதப்பட்டது என்றால், பலவித உபதேசங்களை ஒட்டுவேலை செய்யும் கூட்டத்தினர், கள்ளப்போதகர்கள், தவறுகள் நிறைந்த சமயங்கள் நிறைந்த தற்காலத்தை அப்போஸ்தலனாகிய யோவான் கண்டிருந்தால் என்ன சொல்லியிருப்பார்.

இரண்டு யோவான் மடலின் மையக்கருத்து யாதெனில், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் ஆளுமையைக் குறித்துத் தவறான கருத்தைப் பரப்புகிற மனிதனுக்கு எவ்விதமான ஒத்துழைப்பையும் நாம் வழங்கக் கூடாது என்பதே (வச. 10,11).

பொருட்சுருக்கம்

1. அப்போஸ்தலனின் வாழ்த்துரை: கிருபை, இரக்கம், சமாதானம் (வச. 1-3)
2. அப்போஸ்தலனின் சந்தோஷம் : கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள் (வச. 4)
3. அப்போஸ்தலனின் கட்டளை : அன்பில் நடவுங்கள் (வச. 5,6).
4. அப்போஸ்தலனின் கவலை: அந்திக்கிறிஸ்து வஞ்சித்தல் (வச. 7-11)
5. அப்போஸ்தலனின் நம்பிக்கை: தனது வருகையைக் குறித்துச் சொல்லுதல் (வச. 12,13)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	பிள்ளைகள்			அந்திக் கிறிஸ்து		
காலம்	கி. பி. 85-95					
தலைப்பு	கீழ்ப்படிதல்			ஜாக்கிரதை		
பகுப்பு	சத்தியத்தைக் கைக்கொள்ளுதல்			மாய்மாலத்தை அறிதல்		
	வாழ்த்து	சத்தியத்தில் நடத்தல்	அன்பில் நடத்தல்	கள்ள உபதேசம்	கள்ள உபதேசத்தைத் தவிர்த்தல்	ஆசிர்வாதம்
வசனம்	1-3	4	5-6	7-9	10-11	12-13
இடம்	எபேசு					

விளக்கவுரை

1. அப்போஸ்தலனின் வாழ்த்துரை: கிருபை, இரக்கம், சமாதானம்

வச. 1,2 இரண்டு யோவான் மடலில் அப் போஸ்தலன் தன்னை **மூப்பன்** என்று அறிமுகப் படுத்துகிறார். இது அவருடைய வயதையோ அவர் சபையில் வகித்த பணிநிலையையோ குறிக் கலாம். அவருடைய வயதைக் குறித்துப் பார்க்கையில், கர்த்தராகிய இயேசுவுடன் சென்ற அப்போஸ்தலர்களிலேயே இளையவர் அவர் தான். சபையில் அவருடைய பணிநிலையைக் குறித்துக் காண்கையில் அவர் கண்காணியாக அல்லது பிஷப்பாக இருந்தார் என்பது திண்ணம். எனவே எவ்வாறு விளக்கமளிப்பது என்று நாம் ஒன்றைத் தெரிந்தெடுக்க வேண்டிய அவசிய மில்லை, இரண்டுமே சரியானவை.

தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள் என்ற சொற்றொடருக்கு விளக்கமளிப்பது அவ்வளவு எளிதல்ல. பொதுவாக மூன்று கருத்துகள் நிலவு கின்றன. (1) **தெரிந்து கொள்ளப்பட்ட அம்மாள்** என்னும் சொற்றொடர் சபையைக் குறிக்கிறது என்று சிலர் கருதுகிறார்கள், பிற இடங்களில் சபையானது கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைக்கப்பட்டிருக்கிறது, அல்லது ஓரிடத்தில் இயங்கும் ஒரு சபையை இது குறிக்கலாம். (2) "தெரிந்துகொள்ளப்பட்ட Kyria" வுக்கு இம்மடல் எழுதப்பட்டது என்று சிலர் எண்ணுகிறார்கள். அந் தப் பெண்மணியின் பெயர் கைரியா என்பதாகும். அராமிக் மொழியில் மார்த்தாள் என்ற பெயருக்கு இணையான கிரேக்கப் பெயர் கைரியா என்பதா கும். இரண்டு சொற்களுமே "அம்மாள்"[1] என்னும் பொருளுடையவை. (3) மூன்றாவது கூட்டத்தார், இம்மடலை யோவான் ஒரு பெயர் குறிப்பிடப்படாத கிறிஸ்தவப் பெண்மணிக்கு எழுதியதாகக் கருது கிறார்கள். அந்தப் பெண்ணும் மற்ற விசுவாசி களோடு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட வளாவாள் - உலகத்தோற்றத்துக்கு முன்னமே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவள்.

நாம் மூன்றாவது கருத்தைச் சரியென்று கருதுகிறோம். மேலும் கிறிஸ்துவுக்கு எதிரான போதகர்களைக் குறித்து எச்சரிக்கும் மடல் ஒரு பெண்மணிக்கு எழுதப்பட்டது குறிப்பிடத்தக்கதே யாகும். சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட ஏவாளின் மூலமாகவே பாவம் இவ்வுலகிற்குள் முதலாவது புகுந்தது. "ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறு தலுக்கு உட்பட்டாள்" (1 தீமோ. 2:14). பெரும் பாலும் பெண்களைக் கவர்ந்து இழுக்கக்கூடிய கள்ளப்போதகர்களைக் குறித்தே பவுல் பேசு கிறார்; அவர்கள் "பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு" திரிகிறார்கள். இவர் களுடைய வீடுகளுக்குள்ளாக இந்தக் கள்ளப் போதகர்கள் நுழைந்து, அவர்கள் "எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராத பெண்பிள்ளைகளாயிருப்பதால்" அவர் களை வசப்படுத்திக்கொள்கிறார்கள் (2 தீமோ. 3:6,7). இன்றைய நாட்களிலும்கூட கள்ளப்போத கர்கள், ஆண்கள் வழக்கமாக வேலைக்குச் செல் லும் பகல் வேளைகளில் வீடுகளைச் சந்திக்கிறார் கள். பிள்ளைகள் கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கப்பட வேண்டியது அவசியமானதே.

தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளையும் அவ ளுடைய பிள்ளைகளையும் தான் **சத்தியத்தின் படி நேசிப்பதாக** யோவான் கூறுகிறார். இரட்சிக்கப் பட்ட யாவரும் வியத்தகு ஐக்கியத்திற்குள் வந் திருப்பதை உணருகிறார்கள். அவர்கள் யாவரும் தேவனுடைய சத்தியத்தில் அன்புகூர்ந்ததன் கார ணத்தினாலேயன்றி, ஒருபோதும் அன்புகூர்ந் திருக்கமுடியாத மனிதர்களிடம் அன்புகூர்ந் திருக்கமாட்டார்கள். தேவனுடைய சத்தியமே அவர்கள் அனைவருடைய இருதயங்களையும் ஒன்றிணைத்தது - **சத்தியத்தை அறிந்திருக்கிற யாவருடைய** இருதயங்களையும் ஒன்றிணைத்தது.

சத்தியத்தின் நிமித்தம் என்னும் சொற்றொடர் இரண்டு விளக்கங்களைக் கொண்டிருக்கிறது. எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலும் அன்புகூர வேண்டும் என்னும் நோக்கத்தை இது குறிக்கக் கூடும். அல்லது இது யோவான் இம்மடலை எழுதுவதற்கான காரணத்தைக் குறிக்கக்கூடும். இரண்டுமே சரியான பொருளுடையவை. **நமக் குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியம்**. இங்கு சத்தி யம் எனப்படுவது, (1) கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவைக் குறிக்கக் கூடும். "நானே .. சத்தியமும்... இருக்கிறேன்" என்று அவர் கூறினார். (யோவான் 14:6); (2) பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. "ஆவி யானவர் சத்தியமாய் இருக்கிறார்" (1 யோவான் 5:6; யோவான் 14:16,17 - ஆகிய வசனங்களையும் காண்க); அல்லது (3) திருமறை. "வசனமே சத்தி யம்" (யோவான் 17:17). இயேசு கிறிஸ்துவும் சத் திய ஆவியும் தேவ வசனமும் நம்மைத் தாங்கி வழிநடத்துவது குறித்தும் நம்மோடு என்றென்றும் இருப்பது குறித்தும் வியந்து போற்ற நாம் சற்று நிதானிக்க வேண்டாமா!

வச. 3 "கிருபையும் இரக்கமும் சமாதானமும் உங்களோடு இருப்பதாக"[2] என்பதே யோவான் கூறும் வாழ்த்துரை. **கிருபைக்கு** எதிர்மாறான தைப் பெறத் தகுதிபெற்ற மக்களுக்கு, தகுதிக்கு அப்பாற்பட்ட வகையில் காண்பிக்கப்படுகிறதே கிருபையாகும். குற்றம்புரிந்த இழிவான ஒருவனி டத்தில் காட்டப்படும் பரிவே **இரக்கம்**. தேவனு டைய **கிருபையும் இரக்கமும்** இசைவோடு ஒன்றிணையும் உறவினாலே உண்டாகிற விளைவே **சமாதானம்** ஆகும். இந்த மூன்று ஆசிர்வாதங்களும் **பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்** உண்டாகின்றன. பிதா இவற்றின் மூல ஆதாரமாயிருக்கிறார், குமா ரனோ இவற்றின் வழிதுறையாக இருக்கிறார். இதற்கும் மேலாக அவர்கள் **சத்தியத்தோடும் அன்போடும்** இருக்கிறார்கள். இந்தப் பண்புகள் இரண்டில் ஏதொன்றும் ஒருக்காலும் நீங்கு வதில்லை.

2. அப்போஸ்தலனின் சந்தோஷம்: கீழ்ப்படி தலுள்ள பிள்ளைகள் (வச. 4)

தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளின் **பிள்ளை கள்** சிலர் **சத்தியத்திலே நடந்தார்கள்** என்ப தைக் கேள்விப்பட்டு யோவான் சந்தோஷப்படுகிற தாக இப்பொழுது கூறுகிறார். சத்தியம் எனப்படுவது வெறுமனே மனதால் விசுவாசிப்பது மட்டுமல்ல, ஒவ்வொரு நாள் நடத்தையிலும் அதை வாழ்ந்து காட்டுவதுமாகும். அவ்வாறு சத்தியத்தை மனுவுரு வில் வாழ்ந்து காட்டியவர் கர்த்தராகிய இயேசுவே ஆவார். அதுபோலவே நம்முடைய வாழ்க்கை யும் சத்தியத்திற்குச் சான்றாக விளங்க வேண்டு மென்று அவர் எதிர்பார்க்கிறார்.

3. அப்போஸ்தலனுடைய கட்டளை: அன்பில் நடவுங்கள் (வச. 5,6)

வச. 5 ஐந்தாம் வசனம் முதல் ஒன்பதாம் வசனம் வரை அப்போஸ்தலன் தனது முதல் மட லின் சுருக்கத்தை வரைந்து தருவதாகவே தோன்று கிறது. அங்கே அவர் ஜீவனுக்கான பரீட்சை களைப் பட்டியலிட்டுத் தந்தார். இப்பொழுது இங்கே இந்த வசனங்களில் அவற்றில் குறைந்தது மூன்றை மீண்டும் எழுதுகிறார். **அன்பு** என்னும் பரீட்சை (வச. 5), கீழ்ப்படிதல் என்னும் பரீட்சை (வச. 6), உபதேசம் என்னும் பரீட்சை (வச. 7-9).

வச. 6 முதலாவது, தங்களுடைய உடன் விசு வாசிகளிடத்தில் **அன்புகூர** வேண்டும் என்னும் கற்பனையை அவருடைய வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறார். இங்கு அன்பு என்று சொல்லப்பட்டிருப்பது, முக்கியமாகத் தன்னல மற்ற வகையில் ஒருவர் தன்னையே பிறருடைய நன்மைகளுக்காகக் கொடுப்பது என்பதேயாகும். "இந்த மனிதனிடத்திலிருந்து நான் எதைப்பெற முடியும்?" என்பதல்ல, மாறாக "இந்த மனிதனுக் காக நான் என்ன செய்ய முடியும்?" என்பதே கேள்வி. அடுத்ததாக, **அவருடைய கற்பனை களின்படி நடப்பதே அன்பு**. கர்த்தருக்கும் தேவனுடைய சத்தியத்திற்கும் கீழ்ப்படிந்து நாம் நடக்காவிட்டால், தெய்வீக அர்த்தத்தில் நம்மால் மெய்யாக அன்புகூர முடியாது.

4. அப்போஸ்தலனுடைய கவலை: அந்திக்கிறிஸ்து வஞ்சித்தல் (வச. 7-11)

வச. 7 இது நம்மை உபதேசம் என்னும் பரீட்சை யினிடமாய் கொண்டு வருகிறது. "உண்மையா கவே தேவன் இயேசு கிறிஸ்து என்னும் மனிதராக வந்தாரா?" என்பது மிகப்பெரிய கேள்வி. அதனு டைய விடை உரத்த சத்தத்துடன் கூடிய "ஆம்" என்பதுதான். நாசரேத்தூர் இயேசுவின் மேல் தெய்வீகக் கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இறங்கியிருந்தார் என்று "ஞானமார்க்கத்தார்"[3] நம்பினார்கள். ஆனால் **இயேசு கிறிஸ்து** தேவ னாக இருந்தவர், இருக்கிறவர் எப்பொழுதும் இருப்பவர் என்று யோவான் வலியுறுத்திக் கூறு கிறார்.

வச. 8 ஆகவே, **"உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்"** என்று அவர் தனது வாசகர்களை எச்சரிக்கிறார். (ஆங் கில வேதத்தில் எங்கள் செய்கைகளின் பலனைப் பெறும்படிக்கு என்று இந்த வசனம் கூறுகிறது.) அப்போஸ்தலரும் அவரைப் பின்பற்றிய மனிதர் களுமாகிய நாங்கள் உங்களுக்குள்ளாக செய்த உழைப்பு வீணாகப் போய்விடாதபடி, நாங்கள் பூரண பலனைப் பெறும்படி நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த சத்தியத்தில் உறுதி யோடு நிலைத்திருங்கள் என்று யோவான் கூறுவ தாகவும் இதை வேறு சொற்களில் கூறலாம்.

வச. 9 "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத் திராமல் மீறி நடக்கிற[4] **எவனும் தேவனை உடையவனல்ல"** என்று யோவான் கூறுகிற போது அவர் கள்ளப்போதகர்களைப் பற்றியே பேசுகிறார். அனுமதிக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் செல்லுவதே மீறி நடப்பதாகும். கள்ளக்

கூட்டத்தார் அதைத்தான் செய்கிறார்கள்; தேவன் தம்முடைய வார்த்தையில் வெளிப்படுத்தாத புதிய வெளிச்சத்தைத் தாங்கள் பெற்றதாகக் கூறி, புதிய உபதேசங்களைக் கற்பிக்கிறார்கள். கிறிஸ்தவ வெளிப்பாட்டின் எல்லைகளுக்குள் அவர்கள் நிலைத்திருப்பதில்லை, அல்லது **கிறிஸ்துவின் உபதேசத்திலே** அவர்கள் நிலைத்திருப்பதில்லை. கிறிஸ்து தாமே கற்பித்த உபதேசங்களையே பெரும்பாலும் இது குறிப்பதாகத் தோன்றுகிறது. கிறிஸ்துவைப் பற்றி திருமறை கற்பிக்கிற எல்லா உபதேசங்களையும் இது குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். கள்ளக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் தேவனை அறிந்திருப்பதாகக் கூறுவான், ஆனால் கர்த்தராகிய இயேசுவின் முழுநிறைவான தெய்வீகத்தையும் மனித நிலையையும் அவன் ஏற்றுக்கொள்வதில்லை, அத்தகைய மனிதன் **தேவனை உடையவனல்லன்** என்று இந்த வசனத்தில் அப்போஸ்தலன் வலியுறுத்திக் கூறுகிறார். குமாரனின் மூலமாகவே தேவனை அறிய முடியும். "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6).

வச. 10,11 இதுவே இம்மடலின் முக்கிய பகுதி. நம்முடைய வீடுகளுக்கு வரக்கூடிய கள்ளப் போதகர்களிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்னும் முக்கியமான அறிவுரையை இது வழங்குகிறது. தற்செயலாக வந்த நபர்களைக் குறித்து இங்கு யோவான் கூறவில்லை, மாறாக, கிறிஸ்தவத்திற்கு எதிரான கொள்கைகளைப் பரப்பும் மனிதர்களைக் குறித்தே அவர் எழுதுகிறார். அவர்களை நாம் வீட்டிற்குள் அழைக்கலாமா? அவர்களுக்கு நிதியுதவி செய்யலாமா? அவர்களுடைய இலக்கியங்களை விலை கொடுத்து வாங்கலாமா? அவர்களை நாம் வீட்டிலே ஏற்றுக்கொள்ளக் கூடாது, அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லவும் கூடாது. அவர்கள் கிறிஸ்துவின் பகைஞர். அவர்களுக்கு விருந்தோம்பல் புரிவது, நம்முடைய இரட்சகருக்கு எதிரான மக்களோடு சேர்ந்துகொள்வதற்கு ஒப்பாகும். அப்படிப்பட்டவர்களில் ஒருவனை, அவன் கர்த்தரை மறுத்துரைப்பவன் என்பதை அறியாமல் நாம் சிலவேளை வீட்டிற்குள் அனுமதிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடும். அந்தச் சூழ்நிலைக்கு இந்த வசனங்கள் பொருந்தா. ஆனால் அவன் ஒரு கள்ளப்போதகன் என்று அறியும்போது, அவனுடன் நட்புறவுகொள்வது கிறிஸ்துவுக்கு உண்மையற்றபடி நடந்துகொள்வதற்கு ஒப்பாகும். இந்த வசனங்கள் பொதுவான முறையில், விருந்தினர்கள் அனைவருக்கும் பொருந்தாது. அவிசுவாசிகளைக் கிறிஸ்துவுக்கு வெற்றிகொள்ளும்பொருட்டு, அவ்வப்போது அவர்களை நம்முடைய விருந்தினர்களாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இங்கு, இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் மனிதத் தன்மையையும் மறுத்துரைக்கும் சமய போதகர்களைக் குறித்த கேள்வியே எழுப்பப்பட்டுள்ளது. இதனை C. F. ஹாக் என்பார் விவரிக்கிறார்:

> கிறிஸ்துவுக்கு எதிராகக் குற்றமிழைப்பது ஒரு பெரிய காரியமல்ல என்று தோன்றும்படியோ, குற்றமிழைப்பவன் பிறரிடம் தனது செல்வாக்கைச் செலுத்தும்படி இடங்கொடுக்கத்தக்க வகையிலோ ஏதொன்றையும் நாம் செய்யக் கூடாது.[5]

5. அப்போஸ்தலனுடைய நம்பிக்கை: தனது வருகையைக் குறித்துச் சொல்லுதல் [வச. 12,13]

வச. 12 தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளிடம் அதிகமாகப் பேச யோவான் விருப்பம் கொண்டிருந்தார். கூடிய விரைவில் அவர் சந்திக்கச் செல்வார் என்னும் நம்பிக்கையினால், அப்பொழுது **முகமுகமாகப்** பேசலாம் என்னும் எண்ணத்தோடு தன்னுடைய மடலை இத்துடன் முடித்துக் கொள்கிறார். **காகிதத்தினாலும் மையினாலும்** எழுதுவதைக் காட்டிலும் நேரடியாகச் சந்தித்து உரையாடுவது எந்த அளவிற்கு வியந்து போற்றக் கூடியதாயிருக்கும்! இப்பொழுது விசுவாசக் கண்களால் இரட்சகரைக் காண்பதைக்காட்டிலும் அவரை முகமுகமாய்ச் சந்திப்பது எத்தனை அதிகமாக வியப்பிற்குரியதாகக் காணப்படும்! உண்மையாகவே நம்முடைய **சந்தோஷம்** அப்பொழுது **நிறைவாயிருக்கும்**!

வச. 13 "தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரியின் பிள்ளைகள் உமக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" என்று கூறி யோவான் தனது மடலை முடிவு செய்கிறார். அவர்கள் யார் என்பதை நாம் அறியோம். ஆனால் ஒருநாளில் நாம் அவர்களைச் சந்தித்து, அவர்களுடன் கூடிய ஐக்கியத்தில் களிகூருவோம், மேலும் இம்மடலை எழுதிய அப்போஸ்தலனாகிய யோவானுடனும் ஐக்கியம் கொண்டிருப்போம், எல்லாவற்றிற்கும் மேலாக இரட்சகருடன் நாம் ஐக்கியம் கொண்டிருப்பது மிகச் சிறப்பானதாகக் காணப்படும். ஆமென்.

அடிக்குறிப்புகள்

1 (வச. 1) தெரிந்துகொள்ளப்பட்ட என்பதற்கான கிரேக்கச் சொல்லை *(Eklekte, Electa)* ஒரு பிரதிப்பெயர் சொல்லாக எடுத்துக்கொள்ள முடியாது, அதுபோல ''அம்மாள்'' என்னும் சொல்லை ஒரு பதவிப் பெயராகவும் எடுத்துக் கொள்ள முடியாது: *"Lady Electa"*

2 (வச. 3) நடுநிலைப் பிரதியிலும் (NU) பெரும் பான்மைப் பிரதியிலும் ''நம்மோடு'' என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. நீங்கள்/நாம், உங்களோடு/நம்மோடு, உங்களுடைய/நம்முடைய ஆகிய சொற்களுக்கிடையே, கிரேக்கமொழியில், ஒரேயொரு எழுத்துதான் வேறுபடுகிறது. ஆகவே பிரதிகள் எடுக்கும்போது இந்த வேறுபாடு எழுந்துள்ளது எனலாம். (எ.கா) எட்டாம் வசனத்தில் நடுநிலைப் பிரதியில் நாங்கள் என்றல்ல உங்கள் என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது – தமிழிலும் அவ்வாறே காணப்படுகிறது.

3 (வச. 7) ஞானமார்க்கத்தாரைக் குறித்து அறிய கொலோசெயர் மடலின் முன்னுரையைக் காண்க.

4 (வச. 9) நடுநிலைப் பிரதியில் ''மீறிநடக்கிற'' *(parahainon)* என்னும் சொல்லுக்குப் பதிலாக ''முன்னேறிச் செல்கிற'' *(proagon)* என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (TR மற்றும் பெரும்பான்மைப் பிரதிகளில் ''மீறிநடக்கிற'' என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது).

5 (வச.10,11) C. F. Hogg, *What Saith the Scripture?*, p. 143.

நூல் விவரப் பட்டியல்

1 யோவான் நிருபத்தின் முடிவில் கூறப்பட்டுள்ளதைக் காண்க.

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின மூன்றாம் நிருபம்

முன்னுரை

''அப்போஸ்தலர் காலத்துக் கிறிஸ்தவ வாழ்வின் கடைசிக் கண நேரக்காட்சி மொத்தத்தில் வேத மாணாக்கர் நீடித்து தியானிக்க ஏற்றதாயிருக்கிறது. இங்கு வெளிப்படுத்தப்பட்டிருக் கிற காரியங்களின் தகுநிலை குறைபாடற்றது என்னும் தரத்தை அடையாவிட்டாலும், வளர்ச்சியடைகிற விசுவாசத்தின் சுதந்தரத்திற்கும் உயிர்த்துடிப்பிற்கும் சான்றாக விளங்கு கிறது.''

- B. F. வெஸ்ட்காட்.

1. வேதநூல் தொகுப்பில் தனிச்சிறப்புமிக்க இடம்

புதிய ஏற்பாட்டிலேயே மிகச்சிறிய நூலாகிய 3 யோவான் மடலும்கூட (மூலமொழியில் 2 யோவான் மடலைக் காட்டிலும் ஒரு வரி குறைவாய் இருக் கிறது), "வேத வாக்கியங்களெல்லாம்.. பிர யோஜனமுள்ளவையாயிருக்கின்றன" என்னும் தெய்வீக உண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கு கிறது. 2 யோவான் மடலைப் போலவே இந்த மடலின் முக்கியமான சொற்கள் "அன்பு" மற்றும் "சத்தியம்" என்பவையே. சத்தியத்தை முறை யாகக் கற்பிக்காத மனிதர்களை வரவேற்காமல் அன்பு செலுத்துவதில் கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்று 2 யோவான் கூறுவது போல் அல்லாமல், 3 யோவான் சத்தியத்தில் முன்னே றிச் சென்றவர்களுக்கு உதவிபுரிந்து பரிவுமிக்க வகையில் அன்புபாராட்ட வேண்டும் என்பதைக் கற்பிக்கிறது.

2. நூலாசிரியர்

3 யோவான் மடலுக்கான புறச்சான்று 2 யோவானின் புறச்சான்றுக்கு ஒப்பாகவே இருக் கிறது. 1 யோவான் மடல் பெரிய அளவில் பரவி யிருந்ததுபோல இவை பரவவில்லை என்பதை இந்த மடல்கள் மிகச்சிறியவையாக இருந்த தாலும் தனிப்பட்ட நபர்களுக்கு எழுதப்பட்டவை என்பதாலும் அறிவது எளிது.

ஓரிஜன், யூசிபியஸ் ஆகியோர் இந்த மடலை விவாதத்திற்குரிய நூல்களின் பட்டியலில் *(antile-gomena)* சேர்த்திருந்தார்கள். அலெக்ஸாந்திரியா வைச் சேர்ந்த கிளமண்ட் மற்றும் டையோனி சியஸ் ஆகிய இருவரும் 3 யோவான் மடலை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அதுபோலவே எருச லேமைச் சேர்ந்த சைரில் என்பாரும் இம்மடலை ஏற்றுக்கொண்டிருந்தார். முரடோரியன் வேத நூல் தொகுப்பு இதைக் குறித்துத் தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது.

இம்மடலின் அகச்சான்று இதனை 2 யோவான் மற்றும் 1 யோவான் மடல்களோடு மிக நெருக்க மாக இணைத்திருக்கிறது. இவை மூன்றின் உண்மைத்தன்மையும், ஒன்றையொன்று ஆதரிப் பதால் விளங்கும்.

மற்ற இரண்டு மடல்களின் ஆசிரியராக ஒப்புக் கொள்ளப்பட்ட அப்போஸ்தலனாகிய யோவானே இந்த மடலையும் இயற்றினார் என்னும் பாரம்பரி யக் கருத்தைச் சந்தேகிக்கக்கூடிய ஏதொரு நிர்ப்பந்தமான காரணமும் இல்லை.

3. எழுதப்பட்ட காலம்

1 யோவான், 2 யோவான் மடல்களைப் போலவே இரு வெவ்வேறு காலங்கள் முன்மொழியப்பட் டுள்ளன. எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்னர் யோவான் இந்த மடலை எழுதியிருந்தால் இது எழுதப்பட்ட காலம் கி. பி. 60 எனக் கணிக்கலாம். பொதுவாக, பிற்காலத்தில் யோவான் எபேசுப் பட்டணத்தில் ஊழியம் செய்தபோதே இம்மடலை எழுதினார் என்று பல வேத அறிஞர்கள் கருது கிறார்கள். கி. பி. 85 -90 -இல் இம்மடல் எழுதப்பட்டி ருக்க வேண்டும் என்பதே பரவலாக ஏற்றுக்கொள் ளப்பட்ட கருத்து.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

இச்சிறிய மடலின் வரலாற்றுப் பின்னணி, முதல் நூற்றாண்டின் பின்பாதியில் கிறிஸ்தவ வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பது பற்றி மிகத் தெளிவான காட்சியைத் தருகிறது. மிகச் சுருக்க மான எழுத்துகளின் மூலமாக அப்போஸ்தலன் மூவருடைய சித்திரங்களை வரைந்து தருகிறார்:

விருந்தோம்பல் புரிந்தவரும் ஆவிக்குரியவருமாயிருந்த காயு, பாராட்டிற்குரியவராயிருந்த தேமேத்திரியு, தற்புகழ் நாடியவரும் இனிய இயல்பற்ற வருமாகிய தியோத்திரேப்பு. எந்தவொரு சபை அமைப்பிலும் பிடிவாத குணமுள்ள மனிதனாக இருக்கக்கூடிய ஒருவனுக்கு எடுத்துக்காட்டாக தியோத்திரேப்பு இருந்தார். மறுபுறம், முன்னர் எல்லா மூப்பர்களும் ஒரே அளவு ஆளுகை உடைய வர்களாக இருந்த நிலையிலிருந்து தனியொருவர் மற்ற மூப்பர்களின் மேல் ஆளுகை செலுத்தக் கூடியவராக மாறுகிற போக்கைப் பிரதிபலிக்கிற வராக அவர் காணப்பட்டார் என்றும் சொல்லலாம். இந்தப் பிற்காலத்துப் போக்கு "தனிமனிதன் சபை ஆட்சிமுறையாக" (பிரசித்தி பெற்ற ஒரு கண் காணியோ பிஷப்போ ஆட்சிசெய்வது) இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பிறகுமே மாறிற்று.

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (வச. 1-4)
2. தெய்வபக்தியுள்ள காயு (வச. 5-8)
3. ஆணவப்போக்குள்ள தியோத்திரேப்பு (9-11)
4. பயபக்தியுள்ள தேமேத்திரியு (வச. 12)
5. அப்போஸ்தலனுடைய திட்டமும் வாழ்த்தும் (வச. 13,14)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	காயு			தியோத்திரேப்பு	தேமேத்திரியு	
காலம்	கி. பி. 85-95					
தலைப்பு	விருந்தோம்பல்			தற்பெருமை	நற்சான்று	
பகுப்பு	பணிவு			சுயம்		
	வாழ்த்துரை	காயுவின் இறைபக்தி	காயுவின் நடைமுறை வாழ்க்கை	தியோத்திரேப்புவின் ஆணவம்	தேமேத்திரியுவின் பக்தி	ஆசிர்வாதம்
வசனம்	1-2	3-4	5-8	9-11	12	13-14
இடம்	எபேசு					

விளக்கவுரை

1. வாழ்த்துரை [வச. 1-4]

வச. 1 இரண்டாம் மடலில் குறிப்பிட்டதுபோலவே, யோவான் இந்த மடலிலும் தன்னைக் குறித்து **மூப்பன்** என்றே பேசுகிறார். **சத்தியத்தின்படி** அன்புகூர்ந்த **பிரியமான காயுவுக்கு** யோவான் இந்த மடலை எழுதுகிறார். ரோமர் 16:23 -இல் அல்லது அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:4 -இல் குறிப்பிடப்பட்டுள்ள காயு என்னும் பெயர் கொண்ட மனிதர்களில் ஒருவரை இது குறிக்கிறதா என்பது நமக்குத் தெரியவில்லை. இந்த மனிதனைக் குறித்து ஒரு சில வசனங்களில் எவ்வளவு அதிகமாக நாம் கற்கிறோம் என்பது நமக்கு வியப்பைத் தருகிறது. முதலாவதாக, அவர் மிகவும் **பிரியமான** விசுவாசியாக இருந்தார், அவருடைய முழுவாழ்வும் உடன் கிறிஸ்தவர்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதாயிருந்தது.

வச. 2 ஆனால் அவருடைய உடலில் நல மற்றவராக இருந்தார் என்பது வெளிப்படை. ஏனெனில் அவருடைய ஆவிக்குரிய உத்வேகத்திற்கு ஒப்பாக அவருடைய சரீரப்பிரகாரமான **சுகமும்** இருக்கவேண்டுமென்று யோவான் வேண்டுதல் செய்கிறார். **நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்** என்று யோவான் கூறுகிறபோது, அவர் செல்வத்தையும் பொருளுடைமைகளையும் நினைத்துக்கொண்டிருந்தார் என்று கருதுவது ஐயத்திற்குரியது. மாறாக அவர் சரீரப்பிரகாரமான நன்மையைக் குறித்தே பேசுகிறார் என்பது **சுகமாயிருக்கும்படி** என்னும் சொல்லால் விளங்கும்.

நம்முடைய சரீரப்பிரகாரமான நிலைமை நமது ஆவிக்குரிய நிலைக்கு ஏற்புடையதாயிருக்க வேண்டும் என்று நாம் விரும்ப வேண்டுமா? நம்முடைய ஆவிக்குரிய மேம்பாட்டிற்காகச் செலுத்துகிற அக்கறையைக் காட்டிலும் சரீரப்பிரகாரமான நன்மைக்காக அதிக அக்கறை செலுத்துகிறோம் என்பது வருத்தத்திற்குரிய உண்மையல்லவா? அதன் காரணமாகவே F. B. மேயர் வஞ்சப்புகழ்ச்சியாகக் குறிப்பிடுகிறார்:

> இரண்டாவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ள வாழ்த்துதலை நம்முடைய நண்பர்கள் எல்லோரிடமும் கூறுவது விரும்பத் தகாததாகப் போய்விடும், ஏனெனில் அவர்களுடைய ஆத்துமாக்களின் நிலைக்கு ஒப்பாக அவர்களுடைய சரீரங்களும் மாற வேண்டுமானால், அவர்கள் சடிதியில் நோயுற்றவராகப் போய் விடுவார்கள்.[1]

இரண்டாவது வசனம், "விசுவாசத்தினால் சுகமளிப்பவர்கள்" என்னும் கூட்டத்தார் கற்பிக்கிற கொள்கையைத் துணிவுடன் மறுத்துரைக்கிறது. எல்லா நோய்களும் வாழ்க்கையில் காணப்படுகின்ற பாவத்தின் காரணமாகவே ஏற்படுகின்றன என்றும், ஒருவன் நலம் பெறவில்லையென்றால் அவனுடைய விசுவாசக் குறைவே காரணம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். காயுவின் விஷயத்தில் இது உண்மையல்ல என்பது நிச்சயம். அவருடைய ஆவிக்குரிய நிலைமை நன்றாயிருந்தது, ஆனால் அவருடைய சரீர நிலைமையோ அந்த அளவிற்கு நன்றாயில்லை. ஒருவருடைய உடல் நலத்தை அடிப்படையாகக் கொண்டு அவருடைய ஆவிக்குரிய நிலை இருக்கும் என்று வாதாட முடியாது என்பதையும் இது காட்டுகிறது.

வச. 3 சில **சகோதரர் வந்து** காயு **சத்தியத்தில் நடக்கிறார் என்று அவருடைய நிலையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது அப்போஸ்தலன் மிகவும் சந்தோஷப்பட்டார்.** சத்தியத்தை நம்மிடத்தில் கொண்டிருப்பது நல்லது, ஆனால் நம்முடைய வாழ்க்கையில் அந்தச் **சத்தியத்தை** வெளிப்படுத்துவது சிறந்தது. நாம் சத்தியத்தைப் பற்றிக்கொள்வது போதாது, சத்தியம் நம்மைப் பற்றிக்கொள்ள இடம் கொடுக்க வேண்டும். மனிதர்கள் பிரசங்கத்தைக் கேட்பதைக் காட்டிலும் காணவே விரும்புகிறார்கள். அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் இக்காலத்தில் பரிசுத்த வாழ்க்கையைக் காட்டிலும் தேவனுக்கென்று செய்யக்கூடியது வேறொன்றும் இல்லை.

வச. 4 "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும், அதிகமான சந்தோஷம் எனக்கில்லை" என்று சொல்லுமளவிற்கு இது யோவானுக்கு முக்கியமானதாயிருந்தது. கிறிஸ்தவ வாழ்க்கையிலேயே மிக அதிகமான சந்தோஷம் ஆத்தும ஆதாயம் செய்வதே என்று நம்மில் பலர் நினைக்கிறோம். மனிதர்கள் இருளின் அதிகாரத்தினின்று விடுதலை பெற்று தேவனுடைய குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்படுவது உண்மையாகவே வியந்து போற்றுதற்குரியது. ஆனால் தாங்கள் இரட்சிப்படைந்ததாகக் கூறிவிட்டு முன் வாழ்ந்த வாழ்க்கையை நோக்கித் திரும்பச் செல்லுகிற மனிதர்களைக் காணும்போது உண்

டாகிற இருதயவலியை யாரால் அளக்க முடியும். அது நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப் பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது போலி ருக்கும். இதற்கு மாறாக, ஒருவரது ஆவிக்குரிய பிள்ளைகள் கர்த்தருக்கென்று முன்னேறிச் செல்லவும், கிருபையின்மேல் கிருபையைப் பெற்றார்கள் எனில் அது காண்பதற்கு எத்தனை எழுச்சிமிக்கதாய் விளங்கும். நாம் திருப்பணி ஆற் றும்பொருட்டு மேற்கொள்கிற முயற்சிகளில் தொடர் ஊழியம் எவ்வளவு முக்கியமானது என் பது இதன் வாயிலாக அறியப்படுகிறது.

2. தெய்வபக்தியுள்ள காயு (வச. 5-8)

வச. 5 நற்செய்தியைப் பிரசங்கிக்கும்படி வரு கிற மக்களுக்குத் தனது வீட்டைத் திறந்து கொடுப்பதில் காயு சிறப்பான அகமகிழ்ச்சி கொண்டிருந்தார். அவர் தனக்கு அறிமுகமான வருக்கு மட்டுமின்றி, **அந்நியருக்கும்**[2] கிருபை மிக்க விருந்தோம்பலைச் செய்தார். அவர் இந்த ஊழியத்தில் உண்மையுள்ளவராக இருந்தார் என்று யோவான் குறிப்பிடுகிறார். தேவனுடைய பார்வையில் விருந்தோம்பல் மிகவும் முக்கிய மானதாயிருக்கிறது என்று புதிய ஏற்பாடு கூறு கிறது. நாம் கர்த்தருடைய மக்களுக்கு விருந் தோம்பல் புரிவது, கர்த்தருக்கே செய்ததாகக் கருதப்படும் (மத். 25:40). இதற்கு மாறாக, அவரு டைய ஊழியக்காரருக்கு விருந்தோம்பல் மறுப் பது, கர்த்தருக்கு அதைச் செய்வதை மறுப்பதாகக் கருதப்படும் (மத். 25:45). அந்நியரை உபசரிப் பதன் மூலம் "சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" (எபி. 13:2). விருந்தோம்பல் புரிந்ததன் காரணமாக உணவும் கூட, புனிதப் பொருளாக மாறியதற்குப் பலர் சாட்சிகூறுவார் கள் (லூக்கா 24:29-35), மேலும் இதன் வாயி லாகப் பிள்ளைகள் மனந்திரும்பியிருக்கிறார் கள், குடும்பங்கள் கர்த்தரிடமாய் நெருங்கிவந் திருக்கின்றன.

வச. 6 பரிசுப்பொருட்கள் பெறுவதற்குக் கடின மானவை. காயுவின் தயவு சபையார் எல்லோரும் அறிந்ததே. ஆனால் அதற்கும் மேலாக, தனது வீட்டையும் இருதயத்தையும் பிறருக்குத் திறந்து கொடுத்தவர் என்று அவருடைய பெயர் தேவனு டைய தூய எழுத்துகளில் போற்றிப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனினும் மேலாக, "தீர்க்கதரிசி என்னும் நாமத்தின் நிமித்தம் தீர்க்க தரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக் கேற்ற பலனை அடைவான்" (மத். 10:41) என்றாற் போல காயு கிறிஸ்துவின் நியாயாசனத்தில் வெகு மதியைப் பெறுவார். அவனால் விருந்தோம்பு தலைப் பெற்ற பிரசங்கிகளின் பரிசுகளில் இவரும் பங்கு பெறுவார். பிரசங்கம் ஆற்ற இயலாதவர்கள் நினைவுகூர வேண்டிய நல்லதொரு குறிப்பாக இது விளங்குகிறது; பிரசங்கிகளுக்குக் கர்த்தரு டைய திருப்பெயரில் விருந்தோம்பல் புரிவதன் மூலம் நீங்கள் பிரசங்கிகளின் பரிசுப்பொருளைப் பெறுவீர்கள். நற்செயல்கள் அனைத்திற்கும் தேவன் பிரதிபலன்களைத் தருவார்! அவருடைய தயவு மனிதர்களுடைய தயவுகளுக்கெல்லாம் சிகரம் போலிருக்கும்.

தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை வழிவிட்டனுப்புவது காயு செய்கிற **நலமான** செயலாயிருக்கும் என்று இப்பொழுது யோவான் நினைவுபடுத்துகிறார். அவர்களுடைய பயணத்தில் வழிவிட்டனுப்புவது என்பது வெறுமனே நட்புபாராட்டி அனுப்புவதல்ல. மாறாக தேவையான எல்லாவற்றையும் கொடுத்தனுப்பு வதாகும். பிரசங்கம் செய்பவர்களுக்கும் உப தேசம் பண்ணுகிறவர்களுக்கும் நம்முடைய பொருளுடைமைகளிலிருந்து பகிர்ந்து கொடுப் பது நிச்சயமாகவே மிகவுயர்ந்த செயல் என்று காயுவின் எடுத்துக்காட்டு நிர்ணயிக்கிறது.

வச. 7 இவ்வாறு ஓரிடம் விட்டு மற்றோரிடம் செல்லுகிற நற்செய்திப் பணியாளர்களுக்குக் காயு உதவிபுரிபவராக இருக்க வேண்டும் என்ப தற்கான மிகச் சிறப்பான காரணம் கொடுக்கப்பட் டுள்ளது: **ஏனெனில் அவர்கள் புறஜாதியாரிடத் தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத் தினிமித்தம் புறப்பட்டுப் போனார்கள்.** இந்த மனி தர்கள் தங்களுடைய தேவைகளுக்காகக் கர்த்தர் ஒருவரையே நோக்கிப் பார்த்தார்கள். மனந்திரும் பாத மனிதர்களிடத்திலிருந்து நிதியுதவியை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை. அவ்வாறு ஏற்றுக்கொள்வது, அந்த மனிதர்களைத் தங்க ளுடைய எஜமானர் என்று சொல்வது போல ஆகும். மேலும் அது இரட்சிக்கப்படாதவர்கள் தங் களுடைய கிரியைகளைச் சார்ந்து சுயநீதி அடைவதற்குக் காரணமாகிவிடும். இன்றைய நாட்களில் கிறிஸ்தவ உலகில் பணம் சேர்ப்ப தற்குக் கைக்கொள்ளுகிற முறைகளுக்கு எதி ரான கடிந்துரை எத்தனை கடினமாயிருக்கிறது! இவ்விதமாக ஜீவனுள்ள தேவனிடம் விசுவாசம் வைத்தவர்களாக, வேறு எவரிடமும் சொல்லாமல் அவரிடம் மட்டும் தங்களுடைய தேவைகளைத் தெரிவிக்கும் கர்த்தருடைய ஊழியக்காரர்களைப்

பராமரிக்கும் சிறப்பான கடமை நமக்குண்டு என் பதை இது நமக்கு நினைவூட்டவேண்டும்.

வச. 8 ஆகையால் நாம் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப் பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளி களாயிருக்கிறோம். அவர்களைச் சேர்த்துக் கொள்ள[3] என்னும் சொல் எல்லாவிதங்களிலும் முடிந்த அளவிற்கு அவர்களுக்கு உதவிபுரிவது என்னும் பொருளையே தருகிறது. அவ்வாறு செய்யுங்கால், சத்தியம் பீடுநடை போடுவதற்கு நாம் உதவிபுரிபவர்களாக இருப்போம்.

3. ஆணவப்போக்குள்ள தியோத்திரேப்பு [வச. 9-11]

வச. 9 மேற்கூறிய வண்ணமே யோவான் சபைக்கு எழுதினார் என்பது வெளிப்படை. ஆனால் அவருடைய மடல் தியோத்திரேப்பு என் னும் மனிதனால் தடைபட்டுப் போயிற்று. அவர் தன்னுடைய முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கருதுகிறவராக இருந்தார். அவர் சபையில் வெளிப்படையான ஒரு சர்வாதிகாரியாகவே இருந் தார். அவருடைய பாவங்கள் தனது ஸ்தானத் தைக் குறித்த பெருமை, மிகைப்படுத்தப்பட்ட சுயம், தன்னுடைய உரிமை என்று தான் கருதியவற்றிற் காகத் தீவிரமாகப் போராடுதல் ஆகியவையே. இவை யாவற்றையும் ஓர் உள்ளூர் சபையின் சுய ஆட்சி உரிமை என்று அவர் பிறரை எதிர்த்து நிற் கவும் செய்வார் என்பதில் ஐயமுமில்லை. கிறிஸ் துவே சபையின் சிரசு என்பதைத் தியோத்திரேப்பு மறந்துபோய்விட்டார் - இவ்வுண்மையை அவர் எப்பொழுதாவது அறிந்திருந்தால்தானே! பரிசுத்த ஆவியானவர் சபையில் கிறிஸ்துவின் பிரதிநிதி யாக இருக்கிறார் என்பதை அவர் மறந்துபோய் விட்டார். வெறுமனே ஒரு மனிதன் எல்லா அதி காரங்களையும் செலுத்தவும், தீர்மானங்களை எடுக்கவும், ஒருவரைச் சேர்த்துக்கொள்ளவும் அல்லது நிராகரிக்கவும் உரிமை பெற்றவனல் லன். அப்படிப்பட்ட நடத்தை ரோமக் கத்தோலிக் கச் சமயமுறையாகும், அதனை தேவன் வெறுக் கிறார். நான் சத்தியத்திற்காகப் போராடுகிற மனி தன் என்று தியோத்திரேப்பு காரணம் காட்டுவார் என்பதில் ஐயமில்லை. ஆனால் உண்மையில் அது பெரும் பொய்! தேவனிடத்தில் உண்மையா யிருப்பதாகக் கூறி அப்போஸ்தலனை ஏற்க மறுத் ததன் மூலம் அவர் சபைக்குச் சொல்லமுடியாத அளவிற்குத் தீங்கு விளைவித்துவிட்டார். அவர் தீங்கு விளைவித்தது யோவானுக்கு மட்டுமின்றி, மற்ற சகோதரருக்கும்தான்.

வச. 10 இத்தகைய மெய்யான விசுவாசிகளை அவர் ஏற்க மறுத்தது மட்டுமின்றி, அவர்களை ஏற்றுக்கொண்டவர்களை சபையிலிருந்து வெளி யேற்றவும் செய்தார். அவர் பதவிப் பித்துப் பிடித்த மனிதன், தேவனுடைய மெய்யான ஊழியர் களுக்கு எதிராகப் **பொல்லாத வார்த்தைகளை அலப்பி விரோதமான** செயல்களைச் செய்துவந் தார். அந்தச் சபைக்கு யோவான் அடுத்தமுறை செல்லும்போது அவரை நினைத்துக்கொள்வார்! தேவனுடைய வார்த்தையிலிருந்து குற்றத்தை வெளிப்படையாக எடுத்துரைக்கும்போது, தங்க ளைத் தாங்களே சர்வ அதிகாரமும் உடையவர் கள் என்று கருதுகிறவர்களால் எதிர்த்து நிற்க முடியாது. இரகசியக் கூட்டங்களையும் அச்சம், மிரட்டல் போன்ற ஆட்சியையும் சார்ந்தே அவர் களுடைய அதிகாரம் தொடரக் கூடியதாயிருக்கும்.

வச. 11 அத்தகைய **தீமையான** நடத்தையி னின்று விலகவேண்டும், **நன்மையானதைப் பின்பற்ற** வேண்டும் என்று காயு புத்திபுகட்டப்படு கிறார். நற்கிரியைகள் தேவனோடு கொண்டுள்ள உறவிற்குச் சான்றாக விளங்குகின்றன. அது அவ்வாறிருக்க, தியோத்திரேப்புவின் ஆவிக் குரிய நிலைமை பற்றி அப்போஸ்தலன் கடுமை யான சந்தேகத்தை எழுப்பியதாகத் தோன்று கிறது.

4. பயபக்தியுள்ள தேமேத்திரியு [வச. 12]

பெரும்பாலும் **தேமேத்திரியு** இந்த மடலை எடுத்துச் சென்றவராக இருக்கக் கூடும். அது எதுவாயினும், அவர் **எல்லோராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவர்.** திருவாளர் F. B. ஹோல் கூறுகிறார்:

> அவர் சத்தியத்திற்குச் சாட்சிபகர்ந்தார் என்று சொல்லப்படவில்லை என்பதைக் கவனிக்க வும், மாறாக, சத்தியமே அவருக்குச் சாட்சி பகர் ந்தது. சத்தியம் தேமேத்திரியுவின் தரத்தால் சோதிக்கப்படவில்லை, அவர் சோதிக்கப்படு வதற்குச் சத்தியம் தரமாக இருந்தது, அவ்வாறு சோதிக்கப்பட்டு அவர் சான்று பெற்றார்.[4]

5. அப்போஸ்தலனுடைய திட்டமும் வாழ்த்தும் [வச. 13,14]

யோவான் தனது இரண்டாவது மடலைப் போலவே இந்த மடலையும் முடிவுக்குக் கொண்டு வருகிறார் - முகமுகமாய்ச் சந்திக்கும்வரை உரையாடலை நிறுத்தி வைப்பது. இந்தக் கடிதங் களுக்காக நாம் அவருக்கு நன்றிக்கடன்பட்டிருக்

கிறோம். இம்மடல்களில் அவர் தொடக்க காலக் கிறிஸ்தவ வாழ்க்கையின் உண்மைகளைத் தெளிவாகத் தந்திருப்பதோடு, தேவனுடைய மக்களுக்கு எக்காலத்திற்குமுரிய அறிவுரை களைத் தெரியப்படுத்தியிருக்கிறார். மிக விரை வாக நாம் விண்ணுலகில் முகமுகமாகப் பேச விருக்கிறோம். அதன் பின்னர் தெய்வீக வெளிப் பாட்டில் ஏதோ சில இடங்களில் தெளிவற்றுக் காணப்படும் விஷயங்களை முழுமையாக அறிந்துகொள்வோம்.

அடிக்குறிப்புகள்

1 (வச. 2) F. B. Meyer, *Through the Bible Day by Day,* VII:164,165

2 (வச. 5) நடுநிலைப் பிரதியில் (NU) "முக்கி யமாய் அந்நியருக்கும்" என்று காணப்படுகிறது (கிரேக்கம் *Eouto*, எழுத்தின்படி "இந்த").

3 (வச. 8) நடுநிலைப் பிரதியில் "சேர்த்துக் கொள்ள" *(apolambanein)* என்னும் சொல்லுக் குப் பதிலாக "ஆதரிக்க" *(hupolambanein)* என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. TR மற்றும் பெரும்பான்மைப் பிரதிகளில் சேர்த்துக்கொள்ள என்னும் சொல்லே இடம் பெற்றுள்ளது.

4 (வச. 12) F. B. Hole, further documen-tataion unavailable.

நூல் விவரப் பட்டியல்

1 யோவான் நிருபத்திற்கு எழுதப்பட்டுள்ள குறிப்பைக் காண்க.

யூதா எழுதின பொதுவான நிருபம்

முன்னுரை

''ஒரு சில வரிகள் மட்டுமே கொண்ட இம்மடல் விண்ணகக் கிருபையினாலான வல்லமை மிக்க சொற்களால் நிறைந்தது.''

– ஓரிஜன்

1. வேதநூல் தொகுப்பில் தனிச்சிறப்பு மிக்க இடம்

கிறிஸ்தவ வரலாற்றை லூக்கா, அப்போஸ்தலருடைய நடபடிகளோடு தொடங்குகிறது போலவே, "விசுவாசத்தை மறுதலித்தோரின் நடபடிகள்" என்று பொருத்தமான முறையில் அழைக்கப்படும் புதிய ஏற்பாட்டின் கடைசி நூலுக்கு முந்தின இந்த நூலை எழுதும்படி யூதா தெரிந்துகொள்ளப்பட்டார். இம்மடலில் பொதுவான கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்துத் தனது வாசகர்களிடம் பகிர்ந்துகொள்ளவே யூதா விருப்பமுற்றவராக இருந்தார்; ஆனால் "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராட வேண்டுமென்று" அவர்களுக்கு எழுதும்படியான நெருக்குதலை அவர் அடையுமளவிற்குக் கள்ளப்போதகம் பரவலாகப் பெருகியிருந்தது.

யூதா சொற்களை மறைத்து இம்மடலை எழுதவில்லை! அவர் பழியார்ந்த கள்ளப் போதகர்களின் முகத்திரையைக் கிழித்தெறிய, எல்லாத் தடைகளையும் தகர்த்துப் பீடுநடை போடுகிறார். அதற்கென அவர் பழைய ஏற்பாட்டிலிருந்தும், யூதப் பாரம்பரியத்திலும் எடுத்துக்காட்டுகளைத் தெரிந்தெடுத்து, தனது வாசகர்களை எழுப்பி விடுகிறார்.

கடுமையான மொழியில் இந்த மடல் எழுதப்பட்டிருந்தாலும், இந்த மடலின் அமைப்பு முப்பொருள் கூட்டுகளால் பதிக்கப்பட்ட சிறந்த வேலைப்பாடாக இருக்கிறது (எ.கா., பதினோராவது வசனத்தில் மூன்று தீமைகள்). விசுவாசத்தை மறுதலிப்போரைப் பற்றிய விவரங்கள் மிகத்தெளிவாகவும், மறக்க முடியாதபடியும் உள்ளன.

இந்த மடல் மிக அழகிய வாழ்த்துரையோடு முடிக்கப் பெற்றிருப்பதன் காரணமாகத் திருச்சபையானது என்றென்றும் யூதாவுக்குக் கடன்பட்டதாயிருக்கிறது. அவருடைய மடல் மிகச் சிறியதாயிருப்பினும் விசுவாச மறுதலிப்பு பெருகியுள்ள இக்காலத்திற்கு மிக அவசியமானதாகும்.

2. நூலாசிரியர்

புறச்சான்று

இந்த மடல் அளவில் மிகச்சிறியது, வேத நூல் தொகுப்பில் இடம்பெறாத செய்திகள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன, இம்மடல் அப்போஸ்தலன் ஒருவரால் எழுதப்படவில்லை (வச. 17). ஆயினும் யூதா மடல் 2 பேதுருவைக் காட்டிலும் கூடுதலான புறச்சான்றினால் உறுதிபண்ணப்பட்டிருக்கிறது.

ஹெர்மாஸ், பாலிகார்ப் ஆகியோராலும் அத்தேனே கோரஸ் என்பவராலும் இம்மடலின் பகுதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தெர்தூலியன், ஏனோக்கை யூதா மேற்கோள் காட்டியிருப்பதைக் குறிப்பிடுகிறார். இம்மடலைச் சர்சைக்குரிய நூல்களில் ஒன்றாகவே யூசிபியஸ் கருதுகிறார் (*antilego-mena*). முரடோரியன் வேத நூல் தொகுப்பு இதனை உண்மையானது என்று தனது பட்டியலில் சேர்த்துள்ளது.

அகச்சான்று

யூதா (யூதாஸ், யெஹூதா என்னும் எபிரெயப் பெயர்கள் யாவும் ஒன்றுதான்) என்னும் பெயர் பிரசித்திபெற்ற யூதப் பெயர். புதிய ஏற்பாட்டில் காணப்படும் யூதா என்னும் பெயருடைய எழுவரில் மூவர் "யாக்கோபின் சகோதரனாகிய யூதா" என்று அறியப்பட்டுள்ளார்கள். அவர்கள்:

1. அப்போஸ்தலனாகிய யூதாஸ் (தற்கொலை செய்துகொண்ட ஸ்காரியோத்து அல்ல). பதினேழாவது வசனத்தில் இந்நூலின் ஆசிரியர் அப்போஸ்தலர்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக்கொள்கிறார். மேலும் இந்நூலாசிரியர் தான் ஓர் அப்போஸ்தலன் என்று உரிமை கோரியிருந்தால் அது இவர்தான் இந்நூலை எழுதியவர் என்னும் கருத்தைப் பலப்படுத்தி

யிருக்கும். ஆகவே அப்போஸ்தலனாகிய யூதாஸ் இம்மடலை எழுதவில்லை என்பது உறுதியாகிறது.

2. யூதாஸ் என்னும் பெயருடைய ஒரு தலைவர் பவுல், பர்னபாஸ் மற்றும் சீலா என்பவர் களோடு அந்தியோகியாவுக்கு அனுப்பப்பட்டார் (அப். 15:22). இவர் இம்மடலை எழுதியிருக் கலாம், ஆனால் இவரோடு இந்த மடலை இணைப்பதற்கு ஏதொரு சான்றும் இல்லை.

3. யூதாஸ் (யூதா), நம்முடைய கர்த்தருடைய ஒன்று விட்ட இளைய சகோதரன், யாக்கோ பின் சகோதரனும் ஆவார் (யாக்கோபு மடலின் முன்னுரையைக் காண்க). இயற்கை உண் மைகளை எடுத்துக்காட்டுகளாகப் பயன் படுத்தியிருப்பதிலும், ஊடுருவிப் பாயும் தன்மை யுள்ள வண்ணப்பகட்டு மிக்க மொழிநடை யைப் பயன்படுத்தியிருப்பதிலும் இவர் கர்த்த ராகிய இயேசுவோடும் யாக்கோபோடும் பங்கு கொள்கிறவராக இருக்கிறார். இவரே இம் மடலை எழுதியவர் என்பதற்கு இவை வலிமை மிகுந்த காரணங்களாக இருக்கின்றன. இந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

யூதா தனது சகோதரனாகிய யாக்கோபைப் போலவே, இரட்சகரோடு தனக்கிருந்த சொந்தத் தைத் தனக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்ளு மளவிற்கு தன்னடக்கம் அற்றவர் அல்லர். கர்த்த ராகிய இயேசுவோடு பெற்றிருக்கக்கூடிய ஆவிக் குரிய உறவே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகும். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" (மத். 12:50) என்று கிறிஸ்து சொல்லவில்லையா? இன்னொரு சமயம், தம்மு டன் இரத்த சம்பந்தமான உறவு கொண்டிருப்ப தைக் காட்டிலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுவதே அதிக பாக்கியமானது என்று அவர் கற்பித்தார் (லூக். 11:27,28). யாக்கோபைப் போலவே யூதாவும் "அடிமையின்" இடத்தை எடுத்துக்கொண்டார். இவ்விரு சகோதரரும் தங்களுடைய ஒன்றுவிட்ட சகோதரரின் தெய்வீகத்தை அவருடைய உயிர்த் தெழுதல் வரையிலும் நம்பாமல் இருந்தார்கள், ஆகவே இப்படிப்பட்ட தீவிரத்தை வெளிப்படுத் துவது அவர்களுக்குப் பொருத்தமானதே. யூதா திருமணமானவர், அவர் ஊழியத்தின் பொருட்டுப் பயணம் மேற்கொண்ட நேரங்களில் தன்னுடைய மனைவியையும் அழைத்துச் சென்றார் (1 கொரி. 9:5). யூதாவின் பேரப்பிள்ளைகள் கிறிஸ்தவர்கள் என்னும் காரணத்திற்காகப் பேரரசன் டொமிஷி யன் முன்னிலையில் கி. பி. 90 -இல் கொண்டுவரப் பட்டார்கள். அவர்கள் கடினமாகப் பயிர்த்தொழில் செய்ததன் காரணமாக அவர்களுடைய கரங்கள் இறுகிப்போயிருந்தன. அதனைக் கண்ட பேரரசன் அவர்கள் பழிபாவமற்ற யூதர்கள் என்று சொல்லி விடுதலை செய்தான்.

3. எழுதப்பட்ட காலம்

யூதாவின் மடலைப் பேதுரு பயன்படுத்தினாரா அல்லது 2 பேதுரு மடலை யூதா மாற்றி எழுதி னாரா (அல்லது இருவரும் பொதுவான ஆதாரத் திலிருந்து எடுத்து எழுதினார்களா) என்பது சர்ச் சைக்குரியது. பேதுரு தனது இரண்டாம் மடலில், கள்ளபோதகர்களும் பரியாசக்காரர்களும் இருப் பார் என்று குறிப்பிடுகிறார் (2:1; 3:3). அப்படிப்பட்டவர் கள் பக்கவழியாக நுழைந்திருக்கிறார்கள் என்று யூதா கூறுகிறார் (வச. 4), ஆகவே யூதா மடலே பிற்காலத்தில் எழுதப்பட்டது எனலாம். கி. பி. 67 -க்குப் பின்னர் கி. பி. 80 -க்குள் இம்மடல் எழுதப் பட்டிருக்க வேண்டும். எருசலேம் அழிக்கப்பட்ட நிகழ்ச்சியை (கி. பி. 70) யூதா குறிப்பிடாத கார ணத்தால், அந்நிகழ்ச்சி இனிமேல் நடக்கப் போகிற ஒன்று என்று கருதலாம், இவ்வாறு கணிக் கும்போது இம்மடல் 67 -70 -ல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். அல்லது அந்த நிகழ்ச்சி பல ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி என்பதால் அது குறிப்பிடப்படவில்லை என்று முடிவுசெய்து இம்மடல் கி. பி. 80 -அல்லது கி. பி. 85 -இல் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் தீர்மானிக்கலாம் (அவ்வளவு காலம் யூதா வாழ்ந் திருப்பார் என்றால்). ஒருவேளை அந்த நிகழ்ச்சி அப்பொழுதுதான் நிகழ்ந்து, எபிரெயக் கிறிஸ்தவர் அதைக் குறிப்பிடுவதால் அதிக அதிர்ச்சிக்குள் ளாகக் கூடிய நிலை ஏற்படுமே என்றும் அவர் அச்செய்தியை விட்டுவிட்டிருக்கலாம்.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

விசுவாச மறுதலிப்பைக் குறித்து யூதா கவ லைப்படுகிறார். அவருடைய நாட்களிலேயே சமயத் துரோகிகள் திருச்சபைக்குள் நுழையத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் தேவனுடைய ஊழியர்கள் என்று காட்டிக்கொண்டபோதும், உண்மையில் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராகவே இருந்தார்கள். இத்தகைய துரோகிகளை வெளிப் படுத்திக் காட்டி, அவர்கள் இறுதியில் அடையப் போகிற அழிவை விளக்கிக் கூறவேண்டுமென் பதே இம்மடலின் நோக்கமாகும்.

விசுவாசத்தை மறுதலிப்பவன் மெய்யான விசுவாசி என்று தன்னைக் குறித்து அறிக்கை செய்த போதிலும் உண்மையில் அவன் மறுபடியும் பிறக்காதவன். அவன் ஞானஸ்நானம் பெற்று, உள்ளூர் சபையின் ஐக்கியத்தின் சகல நன்மைகளிலும் முழுவதுமாகப் பங்குபெற்றிருப்பான். ஆனால் அவன் சிறிது காலம் கழித்து, கிறிஸ்தவ விசுவாசத்தை மனமார்ந்து விட்டுவிடுவதோடு, கெடுநோக்குடன் மறுத்துக் கூறுபவனாகவும் மாறிவிடுகிறான். அவன் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், அவர் கல்வாரியில் செய்துமுடித்த மீட்பின் திட்டத்தையும், சரீரப்பிரகாரமாக அவர் உயிர்த்தெழுந்ததையும், பிற அடிப்படைச் சத்தியங்களையும் மறுத்துப் பேசுகிறான்.

ஒரு கிறிஸ்தவன் பின்மாற்றம் அடைந்த நிலையை இது குறிப்பதில்லை; மறாக, விசுவாசத்தை மறுதலிப்பவன் ஒருபோதும் மனந்திரும்பாதவன். தேவன் ஒழுங்குபடுத்தியுள்ள இரட்சிப்பின் ஒரே வழியை வேண்டுமென்றே வெறுத்துத் தள்ளியதைக் குறித்து அவன் மனச்சாட்சியில் வருத்தம் கொள்வதேயில்லை. அவன் தன்னுடைய அவிசுவாசத்தில் கடினப்பட்டவன், தேவனுடைய கிறிஸ்துவைப் பிடிவாதமாக எதிர்த்து நிற்கிறவன்.

விசுவாச மறுதலிப்பு என்பது வெறுமனே இரட்சகரை மறுத்துரைப்பது அல்ல. பேதுரு அவ்வாறு மறுத்துரைத்தார். பேதுரு மெய்யான விசுவாசி, ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டபோது அவர் மனவழுத்தத்தின் காரணமாக வளைந்துபோனார். ஆனால் அவர் உண்மையில் கர்த்தரிடத்தில் அன்பு கொண்டிருந்தார், அவர் தனது விசுவாசத்தின் உண்மைத் தன்மையை மனம்வருந்தி முன்னிருந்த நிலைக்குக் சீர்பொருந்தியதன் மூலம் மெய்ப்பித்துக் காட்டினார்.

யூதா ஸ்காரியோத்து விசுவாசத்தை மறுதலித்தவன். தான் ஒரு சீடன் என்று அவன் அறிக்கை செய்தான். ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் கர்த்தராகிய இயேசுவோடு பயணம் செய்தான். அந்தக் கூட்டத்தின் பொருளாளராகவும் பணிபுரிந்தான். ஆனால் இறுதியில் தனது உண்மையான நிலையை, கர்த்தரை முப்பது வெள்ளிக் காசுகளுக்காகக் காட்டிக்கொடுத்து வெளிப்படுத்தினான்.

விசுவாசிகள் ஜெபம் செய்ய வேண்டியதில்லை என்று சொல்லப்பட்டுள்ள மரணத்திற்கு ஏதுவான பாவம் விசுவாச மறுதலிப்பு ஆகும் (1 யோவான் 5:16). விசுவாசத்தை மறுதலித்தோர் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் (எபி. 6:6). சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு, மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களுக்கு, "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபி. 10:26,27).

தொடக்க காலத் திருச்சபையில் விசுவாச மறுதலிப்பு என்னும் வித்து ஏற்கனவே விதைக்கப்பட்டுவிட்டது. பவுல் தான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் சபைக்குள்ளே வரும் என்றும், அவர்களுக்குள் சிலர் எழுந்து, சீடர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடனவற்றைப் போதிப்பார்கள் என்றும் எபேசு சபை மூப்பர்களை எச்சரித்தார் (அப். 20:29, 30). கிறிஸ்தவ ஐக்கியத்தில் பல அந்திக்கிறிஸ்துகள் இருந்தார்கள் என்றும், அவர்கள் தங்களுடைய உண்மையற்ற தன்மையை அந்த ஐக்கியத்திலிருந்து பிரிந்து சென்றதன் மூலம் அதாவது, அவர்களுடைய விசுவாசத்தை விட்டுவிட்டதன் மூலம் வெளிப்படுத்தினார்கள் என்றும் யோவான் தனது முதல் மடலில் எழுதினார் (1 யோவான் 2:18,19).

கர்த்தருடைய நாளுக்கு முன் மிகப்பெரிய அளவில் விசுவாச மறுதலிப்பு (விசுவாச துரோகம்) நிகழும் என்று 2 தெசலோனிக்கேயர் 2:2-4 ஆகிய வசனங்களின் மூலமாக நாம் கற்கிறோம். நாம் அறிந்திருக்கிறபடி அதனுடைய கால வரிசை கீழ்வருமாறு விளங்கும்:

முதலாவது, கர்த்தர் தாமே திருச்பையைப் பிதாவின் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி வானத்திற்கு இறங்கி வருவார் (யோவான் 14:1-3; 1 தெச. 4:13-18).

அடுத்ததாக, பூமியில் விடப்பட்ட பெயரளவிலான கிறிஸ்தவர்கள் யாவரும் வெளியரங்கமாக விலகிச் சென்று விடுவார்கள்.

அதன்பிறகு, பாவமனிதன் உலக அரங்கில் வெளியரங்கமாக முதன்முறையாகத் தோன்றுவான்.

அதன்பிறகு, கர்த்தருடைய நாள் தொடங்கும் - ஏழு ஆண்டுகள் உபத்திரவ காலம்.

பாவ மனிதன் விசுவாச துரோகத்தின் முதன்மையான மனிதனாக விளங்குவான். அவன் கிறிஸ்துவை எதிர்ப்பது மட்டுமின்றி, தேவனென்று

தன்னையே ஆராதிக்க வேண்டுமென்று கட்டளை யிடுவான்.

கடைசி நாட்களில் விசுவாசத்தை மறுதலிக் கும் கள்ளப்போதகர்கள் எழுந்து வருவார்கள் என்று கூறுகிற பேதுரு அவர்களுடைய பண்பு களை விரிவாய் வரைந்து தருகிறார் (2 பேதுரு 2). சில கூறுகளில் அவர் தரும் விவரங்கள், யூதா தரும் விவரங்களோடு மிக நெருக்கமான முறை யில் இணைந்து காணப்படுகின்றன. கீழ்க்காணும் வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த ஒத்த தன்மை புலனாகும்.

யூதா	2 பேதுரு
வச. 4	2:1-3
வச. 7	2:6
வச. 8	2:10
வச. 9	2:11
வச. 10	2:12
வச. 16	2:18

ஆனால் இவ்விரண்டு பகுதிகளுக்கும் இடை யிலான வேறுபாடு அவற்றின் ஒற்றுமைகளைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கது. நோவாவைப் பற்றி யும், பெருவெள்ளத்தைப் பற்றியும், லோத்தைப் பற்றியும் யூதா குறிப்பிடவே இல்லை. எகிப்து தேசத் திலிருந்து இஸ்ரவேலர் காப்பாற்றப்பட்ட நிகழ்ச்சி, மீகாவேல், காயீன், கோராகு மற்றும் ஏனோக்கின் தீர்க்கதரிசனம் ஆகியவை பற்றி பேதுரு எதுவும் குறிப்பிடவில்லை. யூதா குறிப்பிட்டதுபோல பாவம் செய்த தேவதூதர்களைப் பற்றி அதிக விவரங் களைப் பேதுரு குறிப்பிடவில்லை. தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரைக் கள்ளப் போதகர்கள் மறுதலிப்பார்கள் என்று பேதுரு குறிப் பிடுகிறார். ஆனால் யூதா அவர்களைக் குறித்து, "அவர்கள் நமது தேவனுடைய கிருபையைக் காம விகாரத்துகேதுவாகப் புரட்டி ஒன்றான ஆண்ட வராகிய தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிக்கிறார்கள்" என்று விவரிக்கிறார் (யூதா 4).

ஆகவே, இவ்விரண்டு அதிகாரங்களும் ஒன்று போலப் படியெடுக்கப்பட்ட நகல்கள் என்று சிந்திக் காமல், பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு மடலி லும் தமது நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு அதற்கேற்ற செய்தியைத் தெரிந்தெடுக்கிறார் என்று நாம் உணரவேண்டும். மேலோட்டமாகப் பார்க்கும்போது தோன்றுகிறது போல இவ் விரண்டு அதிகாரங்களும் அதிகமான அளவில் ஒன்றின்மேல் ஒன்று கவிந்திருப்பதில்லை. நான்கு நற்செய்தி நூல்களையும் ஒப்பிட்டுப் படித்தவர் களும், எபேசியர் மற்றும் கொலோசெயர் ஆகிய மடல்களை ஒப்பிட்டுக் கற்றவர்களும் தேவை யற்றபடி தேவ ஆவியானவர் திரும்பத் திரும்பச் சொல்லமாட்டார் என்பதை அறிவார்கள். ஒற்றுமை களிலும் வேற்றுமைகளிலும் அவற்றைக் காண்ப தற்கான கண்களை நாம் பெற்றிருந்தால் அவற் றின் பின்னணியில் ஆவிக்குரிய அர்த்தங்கள் புதைந்து கிடப்பதைக் கண்டறிவோம்.

பொருட்சுருக்கம்

1. வாழ்த்துரை (வச. 1,2)
2. விசுவாச மறுதலிப்பின் முகத்திரை கிழிக்கப்படுதல் (வச. 3 -16)
3. விசுவாச மறுதலிப்புக்கு மத்தியில் விசுவாசத்தின் பங்கு (வச. 17-23)
4. அழகிய ஆசியுரை (வச. 24,25).

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	நோக்கம்	விசுவாச துரோகம்			கள்ளபோதர்களுக்கு எதிரான போதனை	ஆசியுரை
காலம்	கி. பி. 66-80					
தலைப்பு	போராடுதலுக்கான காரணம்				போராடும் முறை	
பகுப்பு	ஆரம்ப உரை	கடந்தகால தண்டனை	தற்கால பொறுப்புகள்	வருங்காலத் தண்டனை	விசுவாசிகளின் கடமை	முடிவு
வசனம்	1-5	6-7	8-13	14-16	17-23	24-25
இடம்	ரோமாபுரி					

விளக்கவுரை

1. வாழ்த்துரை (வச. 1,2)

வச. 1 விசுவாசத்தை மறுதலித்த மனிதர்களின் முகத்திரையைக் கிழித்தெறிய தேவன் நீதிமானாகிய யூதாவைப் பயன்படுத்தினார். அத்தகைய மனிதர்களுக்கு முன்மாதிரியாக இருந்தவன் இன்னொரு யூதாவாகிய யூதாஸ்காரியோத்து என்பவனாவான். நல்ல **யூதாவைக்** குறித்து நிச்சயமாய் அறிந்ததெல்லாம், அவர் **இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரரும், யாக்கோபின் சகோதரரும்** ஆவார் என்பதேயாகும்.

மடலின் முகவரியை எழுதுகையில், மெய்யான அனைத்து விசுவாசிகளுக்கும் பொருந்தக்கூடிய மூன்று சிறப்பு அம்சங்களை யூதா அறிவிக்கிறார். அவையாவன: **அழைக்கப்பட்டவர்கள், பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்,**[1] **இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்கள்**. தேவன் இந்த மனிதர்களைத் தமக்குச் சொந்தமாக்கும் பொருட்டு, நற்செய்தியின் மூலமாக அவர்களை இவ்வுலகினின்று **அழைத்தார்**. அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்களும், தூய மக்களுமாக விளங்கும்படி தேவனாலே பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மாவரசரை அவருடைய அழகில் காணும்படி அழைத்துச் செல்லப்படும் நாள் வரையிலும், எல்லா ஆபத்திலிருந்தும், சேதத்திலிருந்தும், இழிவிலிருந்தும், நித்திய நரக தண்டனையிலிருந்தும் வியத்தகு முறையில் காக்கப்பட்டிருப்பார்கள்.

வச. 2 தனது வாசகர்களுக்கு **இரக்கமும் சமாதானமும்** அன்பும் பெருகவேண்டும் என்று யூதா வாழ்த்துகிறார். மனிதர்களுடைய விசுவாசத்தைச் சூழ்ச்சியினாலே அழித்துப்போட வேண்டுமென்று முயற்சி செய்வோருடைய கடுந்தாக்குதலை எதிர்கொள்ளக்கூடிய கூட்டத்தாருக்கு இந்த வாழ்த்து சிறப்பான முறையில் பொருத்தமுடையதாயிருக்கிறது. போராட்டமும் கடுந்துன்பமும் ஏற்படுகின்ற காலத்தில் அவற்றில் சிக்குண்ட பரிசுத்தவான்களுக்கு அருளப்படுகிற பரிவுமிக்க ஆறுதலும் அக்கறையுமே **இரக்கம்** என்பதன் பொருளாகும். தம்முடைய சொந்த நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு எல்லாச் சூழ்நிலைகளையும் மாற்ற வல்லவராகிய தேவனுடைய திருமறையைச் சார்ந்திருப்பதாலும், எல்லாச் சூழ்நிலைகளுக்கும் மேலாக அவரையே நோக்கிப் பார்ப்பதாலும் ஏற்படுகிற களங்கமில்லாத நிலையும் மனவுறுதியுமே **சமாதானம்** ஆகும். தேவன் தம்முடைய இனிய மக்களாகிய தகுதியற்றவர்களை அரவணைத்துக்கொள்ளும் செயலே **அன்பு** எனப்படும் - மிகச்சிறந்த நேசமே இங்கு அன்பு எனப்படுகிறது, இதனைப் பெற்றவர்கள் பிறரிடம் அதனைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த மூன்று ஆசிர்வாதங்களும் **பெருக** வேண்டுமென்று அவர் வாழ்த்துகிறார். இவை கூட்டல் கணக்கினால் அளவிடப்படுவதில்லை, மாறாகப் பெருக்கல் கணக்கினால் அளவிடப்பட வேண்டியவை!

2. விசுவாச மறுதலிப்பின் முகத்திரை கிழிக்கப்படுதல் (வச. 3-16)

வச. 3 எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவான உடைமைப் பொருளாகிய மகிமைநிறைந்த இரட்சிப்பைக் குறித்து எழுத வேண்டுமென்று யூதா முதலில் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால், தன்னை முற்றிலுமாக ஒப்புவித்த எழுத்தாளர் தான் வழிநடத்தப்படுவதில் ஒரு மாற்றம் நிகழ்கிறதை உணரும்படி பரிசுத்த ஆவியானவர் இவரிடம் தமது செல்வாக்கைச் செலுத்தினார். ஓர் எளிய கோட்பாட்டு விளக்கக் கட்டுரை இனிப் போதாது; வாசகர்களைப் பலப்படுத்தக் கூடிய ஊக்கமான வேண்டுகோளாக அது இருக்க வேண்டும். அவர்கள் **விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடவேண்டுமென்று** தூண்டிவிடப்பட வேண்டும். கிறிஸ்தவத்தின் உண்மைகள் அடங்கிய புனித பொக்கிஷத்திற்கு எதிராகக் கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மேலும், மேன்மையான அடிப்படைக் கொள்கைகளைத் துண்டாக்கிப் போட வேண்டுமென்று முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. தேவனுடைய பரிசுத்த திருமறையானது ஆவியானவரால் உயிரூட்டம் பெற்றது, தவறற்றது, அதிகாரப்பூர்வமானது, போதுமானது என்பனவற்றில் அவருடைய மக்கள் விட்டுக்கொடுக்காத நிலையில் உறுதியோடு இருக்க வேண்டும்.

எனினும் விசுவாசத்திற்காகப் போராடுவதில், விசுவாசியானவன் ஒரு கிறிஸ்தவனாகப் பேசவும் செயல்படவும் வேண்டும். “கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்” (2 தீமோ. 2:24) என்று பவுல் எழுதினாற்போல இது இருக்கிறது. அவன் சச்சரவு செய்யாமல் போராடுகிறவனாயிருக்க வேண்டும், தன்னுடைய சாட்சியைக் கெடுக்காமல் சாட்சி கூறுகிறவனாக விளங்க வேண்டும்.

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக் கப்பட்ட விசுவாசத்திற்காகவே நாம் தைரியமாய்ப் போராட வேண்டும். இதனைக் கவனியுங்கள்! "ஒரு காலத்தில்" என்றல்ல "ஒரு விசை" என்றே சொல்லப்பட்டுள்ளது. கோட்பாடு முழுமை பெற்று அளிக்கப்பட்டுள்ளது. வேத நூல் தொகுப்பு முடி வடைந்துவிட்டது. வேறொன்றையும் இதனுடன் சேர்க்க முடியாது. "ஒன்று புதியதானால் அது உண்மையல்ல, அது உண்மையானால் புதிய தாயிராது." ஓர் ஆசிரியர் தனக்குப் புதிய வெளிப் பாடு கிடைத்திருக்கிறது என்று கூறுவாரெனில், அது திருமறையில் காணப்படும்சத்தியத்திற்கு அப்பாற்பட்டது அல்லது புறம்பானது என்று காணப்படுமாயின், அதனை அறவே மறுத் துரைக்க வேண்டும். விசுவாசமானது தந்தருளப் பட்டுவிட்டது, நாம் வேறொன்றிற்கும் செவிசாய்க்க வேண்டியதில்லை, செவிசாய்க்கவும் கூடாது. கள்ளப்போதகக் கூட்டத்தாரின் தலைவர்கள், வேதத்திற்கு என்ன அதிகாரம் உள்ளதோ அதே அதிகாரம் தங்களுடைய நூல்களுக்கும் உள் ளது என்று கூறுகிற வேளைகளில் இதுவே நாம் தர வேண்டிய பதில்.

வச. 4 வரவிருந்த ஆபத்து எப்படிப்பட்டது என்று இந்த வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள் ளது. கவிழ்த்துப் போடுகிற சூழ்ச்சிக்காரர்களால் கிறிஸ்தவ ஐக்கியம் வரம்பு மீறிய ஊடுருவலுக்கு உள்ளாகியது. **சிலர் பக்க வழியாய்த்** தந்திர மாய் **நுழைந்துவிட்டார்கள்**. இது மறைமுகமாக நடந்த கள்ளமும் சூதும் நிறைந்த ஊடுருவல்.

இந்தத் துரோகிகள் **ஆக்கினைக்குள்ளாவார் களென்று பூர்வத்திலேயே** தீர்மானிக்கப்பட்டு விட்டது. இந்தக் குறிப்பிட்ட மனிதர்களை தேவன் அழிவுக்கென்று தெரிந்துகொண்டார் என்று சொல்லுவதுபோல இது காணப்படுகிறது. ஆனால் அதுவல்ல இதன் பொருள். சிலர் அழிவுக்கென்று தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக வேதம் ஒருபோதும் கற்பிக்கவில்லை. மனிதர்கள் இரட்சிக்கப்படுகிற செயல் தேவனுடைய இறைமைக் கிருபையி னாலே நடைபெறுகிறது. ஆனால் மனிதர்கள் முடிவாக இழந்துபோகிற நிலை அவர்களுடைய சொந்தப் பாவத்தினாலும் கீழ்ப்படியாமையினா லுமே உண்டாவதாகும்.

விசுவாசத் துரோகிகளின் **ஆக்கினை** வெகு காலத்திற்கு முன்னமே தீர்மானிக்கப்பட்டுவிட் டது என்பதே இந்தச் சொற்றொடர் கற்பிக்கும் பாட மாகும். கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து மனிதர் கள் வீழ்ந்து போவதைத் தெரிந்துகொள்வார் களெனில் அவர்களுடைய ஆக்கினை வனாந் தரத்தில் விசுவாசிக்காத இஸ்ரவேலரும், கலகம் செய்த தூதர்களும், சோதோம் பட்டணத்தாரும் அடைந்த தண்டனைக்கு ஒப்பாயிருக்கும். அவர் கள் வீழ்ந்துபோவதற்கென்று முன்குறிக்கப்பட வில்லை. ஆனால் விசுவாசத்தை மறுதலிப்ப தைத் தங்களுடைய சொந்த விருப்பமாகத் தெரிந்துகொண்ட விசுவாச துரோகிகள் அனை வரும் முன்தீர்மானிக்கப்பட்ட தண்டனையை எதிர்கொள்ளுவார்கள்.

பக்தியற்றவர்களாகிய இந்த மனிதர்களு டைய தெளிவாய்த் தெரிகிற இரண்டு தனித் தன்மைகள் இழிநடத்தையும் தவறான உபதேச முமேயாகும். அவர்களுடைய நடத்தை, தேவனு டைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டுவதாயிருக்கும். அவர்கள் கிறிஸ்தவ விடு தலையை ஒழுக்கங்கெட்ட நடத்தைக்கும், திருப் பணி ஆற்றுவதற்கான சுதந்தரத்தைப் பாவம் செய்வதற்கும் மாற்றிப்போடுவார்கள். அவர்கள் தங்களுடைய உபதேசத்தில், **ஒன்றான ஆண்ட வராகிய**[2] **தேவனையும் நம்முடைய கர்த்தரா கிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிக்கிறார் கள்.** ஆளுகை செய்வதற்கான அவருடைய முழு உரிமையையும், அவருடைய தெய்வீகத்தையும், பதிலாளாக அவர் மரணமடைந்ததையும், அவரு டைய உயிர்த்தெழுதலையும் அவர்கள் மறுத்து ரைக்கிறார்கள். உண்மையில், அவர்கள் கர்த்த ராகிய இயேசுவின் ஆளுமை மற்றும் செயல் ஆகியவற்றின் இன்றியமையாக் கோட்பாடுகள் அனைத்தையும் மறுத்துரைக்கிறார்கள். ஆவிக் குரிய காரியங்களில் பரந்தகன்ற சுதந்தரம் உண் டென்பதுபோல அவர்கள் பேசினாலும், உண்மை யில் அவர்கள் இறுமாப்போடும் பிடிவாதத்தோடும் நற்செய்திக்கு எதிர்த்து நிற்கிறார்கள், கிறிஸ்து வின் விலையேறப்பெற்ற செங்குருதியின் மதிப்பை ஒப்புக்கொள்வதில்லை, அவர் ஒருவரே இரட்சிப் படைவதற்கான வழி என்பதையும் அவர்கள் எதிர்க்கிறார்கள்.

இந்த மனிதர்கள் யார்? நற்செய்திப் பணி யாளர்கள் என்று கருதப்படுபவர்கள். கிறிஸ்தவ உலகில் தலைமைப் பதவிகளை வகிப்பவர்கள். அவர்களில் சிலர் பிஷப்புகளாகவும், சபைப் பேரவை அங்கத்தினர்களாகவும், வேத கல்லூரிகளில் பேராசிரியர்களாகவும் பதவி வகிக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாவரும் ஒரு விஷயத்தில் பொதுவான கருத்துடையவர்கள் - திருமறை கூறும் கிறிஸ்துவுக்கு எதிரிகள்; தாராளக் கொள்

கையுடைய[3] அல்லது புதிய - புராதனக் கொள்கை யுடைய[4] கிறிஸ்துவை அவர்கள் கண்டுபிடித் திருக்கிறார்கள். அவர்கள் கண்டுபிடித்த கிறிஸ்து விடம் மகிமையும், கனமும், ஆளுகையும், அதி காரமும் பறிக்கப்பட்டுவிட்டன.

வச. 5 விசுவாச துரோகிகளாகிய இந்த மனிதர் களைக் குறித்து தேவன் எத்தகைய மனப்பான்மை கொண்டிருக்கிறார் என்ற கேள்விக்கே இடமில்லை. பழைய ஏற்பாட்டில் அதனை ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அப்படிப்பட்ட மூன்று எடுத்துக்காட்டுகளை யூதா தனது வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறார் - விசுவாசிக்காத இஸ்ரவேலர், பாவம் செய்த தூதர் கள், சோதோம் கொமோரா பட்டணத்து மனிதர்கள்.

முதல் எடுத்துக்காட்டு வனாந்தரத்தில் இருந்த இஸ்ரவேலர்: கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார் (எண். 13,14; 1 கொரி. 10:5-10 ஆகிய வசனங்களைக் காண்க). அந்த மக்களுக்குக் கானான் தேசத்தைத் தருவ தாக தேவன் வாக்குறுதி கொடுத்திருந்தார். அந்த வாக்குறுதியில் அவர்களுக்குத் தேவையான அனைத்து சாத்தியக்கூறுகளும் இருந்தன. ஆனால் அவர்கள் காதேசில் உளவாளிகள் கொண்டு வந்த தவறான செய்தியை ஏற்றுக்கொண்டவர் களாகக் கர்த்தருக்கு எதிராகக் கலகம் செய்தார் கள். அதன் விளைவாக, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட மனிதர்களில் இருபது வயதுக்கு மேற் பட்டவர்களில், காலேப் யோசுவா தவிர மற்ற அனை வரும் வனாந்தரத்தில் அழிந்து போனார்கள் (எபி. 3:16-19 ஆகிய வசனங்களைக் காண்க).

வச. 6 கலகத்திற்கும் விசுவாச மறுதலிப்புக் கும் இரண்டாவது எடுத்துக்காட்டு பாவஞ்செய்த **தூதர்கள்.** அவர்களுக்கென்று தந்தருளப்பட்டி ருந்த **ஆதிமேன்மையை** அவர்கள் **காத்துக் கொள்ளவில்லை,** அவர்கள் **தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்டார்கள்**, இப்பொழுதோ கடைசியில் நடக்கப்போகிற **மகாநாளின் நியா யத்தீர்ப்புக்கென்று** நித்திய **சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில்** செயல்படாவண்ணம் **அடைத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள்**. அவர் களைக் குறித்து நாம் அறிந்தவை இவ்வளவு தான்.

தூதர்கள் விசுவாச துரோகம் செய்த இரண்டு நிகழ்ச்சிகளைத் திருமறையில் காணவியலும் என்றே தோன்றுகிறது. லூசிபர் விழுந்தபோது நடந்த நிகழ்ச்சி, அந்தச் சமயத்தில் ஒரு கூட்ட தூதர்கள் அவனுடைய கிளர்ச்சியில் அவனுக்கு உடந்தையாகச் செயல்பட்டார்கள். வீழ்ந்துபோன இந்தத் தூதர்கள் தற்பொழுது கட்டப்பட்டிருக்க வில்லை. பிசாசும் அவனுடைய பேய்களும், கர்த்தருக்கும் அவருடைய மக்களுக்கும் எதிராக போர்புரியச் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறார்கள்.

தூதர்களுடைய இரண்டாவது விசுவாச துரோ கமானது யூதா மற்றும் பேதுரு (2 பேதுரு 2:4) ஆகி யோரால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களால் குறிப்பிடப்பட்டிருக்கிற நிகழ்ச்சி எது என்பது குறித்து வேத மாணாக்கரிடத்தில் குறிப்பிடத் தக்க கருத்து வேறுபாடு நிலவுகிறது. நாம் கூறு வது தனிப்பட்ட கருத்து, சொல்லப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் உறுதியாக நாம் வற்புறுத்திக் கூறவில்லை.

ஆதியாகமம் 6:1-7 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சியையே யூதா இங்கு கூறுகிறார் என்று நாம் கருதுகிறோம். தேவ குமாரர் தூதர்கள் என்னும் தங்களுடைய மேன்மையான நிலையை விடுத்து மனித உருவங்களில் பூமிக்கு இறங்கி வந்தார்கள், இறங்கி வந்தவர்கள் மனித குமா ரத்திகளைத் திருமணம் செய்துகொண்டார்கள். இவ்வாறு அவர்கள் திருமணத்தில் இணைக்கப் பட்டது தேவ ஒழுங்கிற்கு முரணானது, அவருக்கு அருவருப்பானது. நான்காவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ள குறிப்பின்படி, இயற்கைக்கு அப்பாற்பட்ட திருமண உறவினால் பிறந்த பிள்ளைகள் பயங்கரமான வலிமையும் அக்கிர மம் நிறைந்தவர்களுமாக இருந்தார்கள். இது உண்மையா அல்லவா என்பதல்ல முக்கியம், மனிதனுடைய அக்கிரமத்தினிமித்தம் தேவன் அந்த நேரத்தில் மிக அதிகமாக மனஸ்தாபப்பட்ட தோடு, ஜலப்பிரளயத்தினாலே பூமியை அழிக்கத் தீர்மானம் செய்தார் என்பது மிகத்தெளிவாகத் தெரிகிறது.

இந்தக் கருத்திற்கு மூன்று எதிர்ப்புகள் உள்ளன: (1) ஆதியாகமத்தில் இந்தப் பகுதி தேவதூதர்கள் என்று குறிப்பிடவில்லை, மாறாக "தேவ குமாரர்" என்றே குறிப்பிடுகிறது (2) தேவதூதர்கள் பால் பாகுபாடு அற்றவர்கள் (3) தேவதூதர்கள் திரு மணம் செய்துகொள்வதில்லை.

தேவதூதர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப் படவில்லை என்பது உண்மைதான். ஆயினும் "தேவகுமாரர்" என்னும் சொற்றொடர் யூதர்களு டைய மொழியில் தேவதூதர்களைக் குறிப்பிடு கிறது என்பதும் உண்மையே (யோபு 1:6; 2:1 ஆகிய வசனங்களைக் காண்க - தமிழில்

தேவகுமாரர் என்பதற்குப் பதிலாக தேவபுத்திரர் என்று அந்தச் சொற்றொடர் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

தேவதூதர்கள் பால் பாகுபாடு அற்றவர்கள் என்று திருமறையின் எந்தப் பகுதியும் கூறவில்லை. சில வேளைகளில் தேவதூதர்கள் மனித உருவத்தில் மனித அவயவங்களோடும் வேட்கைகளோடும் தோன்றியிருக்கிறார்கள் (ஆதி. 18:2,22. இதனுடன் 19:1,3-5 ஆகிய வசனங்களை ஒப்பிடுக).

தேவதூதர்கள் திருமணம் செய்துகொள்வதில்லை என்று திருமறை கூறுகிறதில்லை, மாறாக அவர்கள் பரலோகத்தில் திருமணம் செய்துகொள்வதில்லை என்றும், திருமணத்தில் கொடுக்கப்படுவதுமில்லை என்றுமே சொல்லப்பட்டுள்ளது (மத். 22:30).

ஆறாவது வசனத்தின் பின்னணி எந்த வரலாற்று நிகழ்ச்சியாக இருந்தாலும், இந்த தேவதூதர்கள், தேவன் அவர்களுக்கென்று நியமித்த இடத்தை விட்டுவிட்டு, இப்பொழுது அந்தகாரத்தில் நித்திய சங்கிலிகளினாலே கட்டிவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அவர்கள் இறுதியில் நித்திய நரகதண்டனையை அடையும் நாள்வரை அங்கேயே இருப்பார்கள்.

வச. 7 சோதோம் கொமோரா பட்டணத்தாரும் அவற்றைச் சூழ்ந்த பட்டணத்தாருமே யூதா குறிப்பிடும் மூன்றாவது பழைய ஏற்பாட்டு விசுவாச துரோகத்திற்கு எடுத்துக்காட்டானவர்கள் (ஆதி. 18:16-19:29). அறிமுகச் சொல்லான **அப்படியே** என்னும் சொல் சோதோமியரின் பாவத்தின் தன்மைகளும் தூதரின் பாவத்தின் தன்மைகளும் ஒன்றாயிருந்தன என்பதைக் காட்டுகிறது. அது கீழ்த்தரமான ஒழுக்கக்கேடும், முற்றிலும் இயற்கைக்கு அப்பாற்பட்டதும், தேவனுக்கு அருவருப்பானதும் ஆகும்.

நெறிபிறழ்வு என்னும் குறிப்பிட்ட பாவத்தைக் குறித்து ரோமர் மடலில் பவுல் விவரிக்கிறார்: "அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்" (ரோமர் 1:26,27). சோதோம், கொமோரா, அத்மா, செபோயீம் ஆகிய பட்டணங்களில் வசித்த மனிதர்கள் பெருமளவில் ஓரினச்சேர்க்கையில் சிக்குண்டு கிடந்தார்கள். அந்தப் பாவமானது இங்கு **அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் நிறுவிய இயல்பான முறைக்கு முற்றிலும் முரண்பட்டதாயிருந்தது என்பதே இதன் பொருளாகும்.

நவீன காலத்து விசுவாச துரோகிகள், ஓரினச் சேர்க்கையை வெளியரங்கமாக ஆதரிப்பவர்களில் முன்னணியில் நிற்கிறார்கள். அதனைச் சட்டப்படி செல்லுபடியாக்க வேண்டும், வயது வந்தவர்கள் ஒருவரோடொருவர் இணங்கி அதில் ஈடுபட்டால் தவறொன்றுமில்லை என்று அதற்காகப் போராடுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இது வெறுமனே தற்செயலாக நடந்த நிகழ்வுப் பொருத்தமாக இருக்க முடியுமா?

இத்தகைய ஒழுக்கக்கேட்டில் ஈடுபடுகிறவர்கள் அனைவருக்கும் நித்திய அக்கினியின் ஆக்கினையைப் பெற்ற சோதோம் கொமோரா ஆகிய பட்டணங்கள் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. நித்திய அக்கினி என்னும் சொற்றொடர், அந்தப் பொல்லாத பட்டணங்களை அழித்துப்போட்ட அக்கினி நித்தியமானது என்னும் பொருளைத் தருகிறதில்லை. மாறாக, அழிவை ஏற்படுத்துவதில் பூரண நிலையையும் பரந்த தன்மையையும் கொண்டிருந்து, அது கலகக்காரர்கள்மேல் பொழியப்படவிருக்கிற நித்திய ஆக்கினையைச் சித்திரிக்கிறது.

வச. 8 தற்கால விசுவாச துரோகிகளைக் குறித்த ஆய்வுப்பொருளிடமாய் மீண்டும் யூதா திரும்புகிறார். அவர்களுடைய பாவங்களின் விவரங்களையும் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளையும், இயற்கையில் அவர்களுக்கு ஒப்பாகக் காணப்படும் பொருட்களையும், அவர்களுடைய அழிவையும், அவர்களுடைய அக்கிரமம் நிறைந்த சொற்களையும் செயல்களையும் பற்றிச் சொல்லத் தொடங்குகிறார் யூதா (வச. 8-16).

முதலாவதாக அவர்களுடைய பாவங்களைக் குறித்த விவரம் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் சொப்பனங் காண்பதனாலே தங்களுடைய **மாம்சத்தைத் தீட்டுப்படுத்திக்** கொள்கிறார்கள். அவர்களுடைய சிந்தனை வாழ்க்கை மாசுபடிந்திருக்கிறது. அருவருப்பான கற்பனை உலகில் வாழ்ந்து, அவர்கள் முடிவில் சிற்றின்ப ஒழுக்கக்கேடுகளைச் செய்து அவற்றின் மூலமாகத் தங்களுடைய கனவுகளை நிறைவேற்றுகிறார்கள். இவ்வாறு அவர்கள் சோதோம் மனிதர்களைப் போலவே பாவஞ் செய்கிறார்கள்.

அவர்கள் **கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறார்கள்**. அவர்கள் தேவனுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் எதிராகக் கலகம் செய்கிறார்கள். அவர்களைச் சார்ந்திருப்பது சட்டத்திற்குக் கீழ்ப்படியாததும் அராஜகமுமான நிலைக்கு ஆதரவாகவே அமையும். அரசாங்கங்களைக் கவிழ்த்துப் போடவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் நிறுவனங்களின் அங்கத்தினர் பட்டியலில் அவர்களுடைய பெயர்கள் காணப்படும்.

அவர்கள் தேவதூதர்களாகிய மகத்துவங்களை தூஷிக்கிறார்கள். "தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கின்றன" (ரோமர் 13:1) என்னும் உண்மை அவர்களுக்கு ஒரு பொருட்டன்று. அவர்கள் தெய்வீகக் கட்டளையை ஏளனம் செய்கிறார்கள். "உன் ஜனத்தின் அதிபதியைச் சபியாமலும் இருப்பாயாக" (யாத். 22:28). அவர்கள் அதிகாரங்களுக்கு, அவை தெய்வீக அதிகாரமானாலும், தேவதூதர்களானாலும், மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரமானாலும், அவற்றிற்கு எதிராக அவமரியாதையாகவும் பகைமை உள்ளத்தோடுமே பேசுகிறார்கள்.

வச. 9 இந்த விஷயத்தில், பிரதான தூதனாகிய மிகாவேலும் கூட செய்ய மறுக்கிற செயலைச் செய்ய அவர்கள் துணிவுடன் தங்கள் மனம்போல நடந்துகொள்கிறார்கள். **மோசேயினுடைய சரீரத்தைக் குறித்து** மிகாவேல் **பிசாசுடனே தர்க்கித்துப் பேசியபோது அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தாமல், "கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக"** என்று மட்டுமே கூறினார். இங்கே, திருமறையில் வேறு எங்கும் காணப் படாத நிகழ்ச்சியைக் குறித்து யூதா நம்மிடத்தில் பகிர்ந்துகொள்கிறார். "இந்தச் செய்தியை அவர் எங்கிருந்து பெற்றார்" என்னும் கேள்வி எழுவது இயற்கையே.

பாரம்பரியமாக ஒரு தலைமுறையினர் அடுத்த தலைமுறையினருக்குச் சொல்லி இந்தச் செய்தியை அவர் பெற்றார் என்று சிலர் கூறுகிறார்கள். அது உண்மையோ அல்லவோ தெரியாது.

இந்த மடலை எழுதும்படி யூதாவுக்கு உயிரூட்டம் கொடுத்த பரிசுத்த ஆவியானவர்தாமே இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் இந்தச் செய்தியை அவரிடம் கூறினார் என்னும் விளக்கமே மிகவும் மனநிறைவு தரக்கூடியதாக இருக்கிறது.

மோசேயின் சரீரத்தைக் குறித்த தர்க்கம் மிகாவேலுக்கும் பிசாசுக்கும் ஏன் உண்டாயிற்று என்பதற்கான சரியான காரணத்தை நாம் அறியவில்லை. மோவாபின் பள்ளத்தாக்கில் மோசேயின் உடல் தேவனால் அடக்கம் செய்யப்பட்டது என்பதை நாம் அறிவோம். அந்த இடம் எது வென்று அறிந்து அந்த இடத்தில் ஒரு கோயிலைக் கட்ட சாத்தான் விரும்பியிருக்கக் கூடும். அதன்பிறகு மோசேயின் எலும்புகளை இஸ்ரவேலர் தொழுதுகொண்டு சிலைவணக்கம் செய்பவர்களாக மாறியிருப் பார்கள். தேவதூதர்களில் இஸ்ரவேலின் பிரதி நிதியாகிய மிகாவேல் (தானி. 10:21), இவ்வித மான சிலைவணக்கத்திலிருந்து அந்த மக்கள் காக்கப்படவேண்டுமென்று முயற்சி செய்தவனாக, அடக்கம் செய்யப்பட்ட இடத்தை இரகசியமாக வைத்துக் காத்து வந்திருக்கக் கூடும்.

ஆனால் இதில் முக்கியமான குறிப்பு என்ன வெனில், சாத்தானைப் பரலோகத்திலிருந்து கீழே விழச் செய்யப்போகிற அதே பிரதான தூதனாக இந்த மிகாவேல் இருந்த போதிலும் (வெளி. 12:7-9), பேய்களின் உலகத்தை ஆளுகிற பிசாசைத் தன்னிச்சையாகக் கண்டித்துப் பேச உரிமையெடுத்துக்கொள்ளவில்லை. அவ்வாறு கண்டித்துப் பேசுவதற்கான சகல உரிமைகளையும் அவர் தேவனிடமே விட்டுவிட்டார்.

வச. 10 தங்களுக்குத் தெரியாத விஷயங்களிலும்கூட கள்ளப்போதகர்கள் ஆணவத்தோடும் பிடிவாதத்தோடும் மரியாதையில்லாமல் பேசுகிறார்கள். எந்தவொரு முறையான சமுதாயத்திலும், அதிகாரம் உண்டென்றும், அந்த அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல் உண்டென்றும் அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தான்தோன்றித்தனமாகக் கலகம் செய்வதில் பொங்கியெழுந்து முன்னேறிச் செல்கிறவர்களாகவும், இறுமாப்புடன் நடக்கிறவர்களாகவும் செயல்படுகிறார்கள்.

இயற்கையான உள்ளுணர்வுகளிலும், புலன் சார்ந்த இச்சைகளில் மனநிறைவு அடைவதிலும் அவர்கள் மிகுந்த விவரமானவர்கள். பகுத்தறிவைப் பயன்படுத்தாத விலங்குகளின் முட்டாள் தனமுள்ளவர்களாக, அவர்கள் சிற்றின்பச் சீர்கேடுகளில் ஈடுபடுகிறார்கள். அவ்வாறு செயல்படுவதில் அவர்கள் **தங்களையே கெடுத்து** அழிந்து போகிறார்கள்.

வச. 11 அவர்களுக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. **இவர்களுக்கு ஐயோ**! அவர்களுடைய பிடிவாதமான, மனம் வருந்தாத இருதயத்தின் காரணமாக, கோபாக்கினையின் நாளில் தேவனுடைய நீதியான நியா

யத்தீர்ப்பு வெளிப்படும்போது தங்களுக்கென்று கடுங்கோபத்தைச் சேர்த்துவைக்கிறார்கள் (ரோமர் 2:5).

அவர்களுடைய வாழ்க்கைப் போக்கானது, அதிகரிக்கும் வேகத்திலும் சடுதியில் வீழ்ச்சியடையக் கூடியதென்று விவரிக்கப்பட்டுள்ளது. முதலாவது, அவர்கள் **காயீனுடைய வழியில் நடந்தார்கள்.** மேலும் அவர்கள் **பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடினார்கள்.** கடைசியாக அவர்கள் **கோரா எதிர்த்துப் பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப் போனார்கள்.** தவறு செய்தலும், விசுவாச மறுதலிப்பும் செயலற்றுப் போவதில்லை. குழப்பமான நிலையில் இருப்பவர்களைக் கடினமான உள்ள முடையவராய் மாற்றி, அதன்பிறகு அழிவை நோக்கி அப்படிப்பட்டவர்கள் வழிநடத்துகிறார்கள்.

ஒரு பலியின் இரத்தத்தினால் இரட்சிப்பு உண்டாகிறது என்பதை மறுத்துரைப்பதே காயீனுடைய வழியின் அடிப்படைக் கொள்கையாகும் (ஆதி. 4). மனித முயற்சிகளினால் தேவனை அமைதிப்படுத்த முயலுவதே காயீனுடைய வழியாகும். C. H. மெக்கின்டோஷ் கூறுகிறார்: "சுத்திகரிப்பதற்கான தேவனுடைய பரிகாரத்தை மறுத்துரைத்து, அந்த இடத்தில் முன்னேற்றம் அடையச் செய்வதற்கான மனித முயற்சியை வைப்பது. இதுவே காயீனுடைய வழியாகும்." ஆனால், மனித முயற்சியைச் சார்ந்துகொள்ளுதல், கிருபையையும் கிருபையின் இலக்குகளையும் வெறுக்கும் நிலைக்கு வழிநடத்தும் என்பதில் ஐயமில்லை. அந்த வெறுப்பானது முடிவில் துன்புறுத்துதல், கொலைசெய்தல் ஆகியவற்றை நோக்கி வழிநடத்தும் (1 யோவான் 3:15).

தேவனுடைய ஊழியத்தை, தனக்கென்று செல்வத்தைச் சேர்க்கும் ஆதாயத் தொழிலாகச் செய்ய விரும்புவதே **பிலேயாமின் வஞ்சகமாகும்.** பிலேயாம் தன்னை தேவனுடைய தீர்க்கதரிசி என்று கூறிக்கொண்டான், ஆனால் அவன் பேராசை மிக்கவனாயிருந்தான், மேலும் அவன் தனது தீர்க்கதரிசன வரத்தைப் பணத்திற்காக விலைகூறுகிறவனாயிருந்தான் (எண். 22-24). இசுரவேலரைச் சபிக்க வேண்டும் என்பதற்காக பாலாக் ஐந்து முறை பிலேயாமுக்குப் பணம் கொடுத்தான், அவனும் அதைச் செய்வதற்கு பெருவிருப்பம் கொண்டிருந்தான். ஆனால் அவன் தேவனால் கண்டிப்பான முறையில் தடைசெய்யப்பட்டான். அவன் கூறியவற்றில் பெரும்பாலானவை உண்மையாகவும் இனிமையாகவும் இருந்தன. ஆனால் அவற்றைத் தவிர அவன் கூலிக்காகத் தீர்க்கதரிசனம் கூறுகிறவனாகவே இருந்தான். இசுரவேல் மக்களை அவனால் சபிக்க முடியவில்லை. ஆனாலும் அவர்களை மோவாபின் குமாரத்திகளோடு பாவம் செய்வதற்குக் கவர்ந்து இழுப்பதில் முடிவில் வெற்றி பெற்றான் (எண். 25:1-5).

பிலேயாமைப் போலவே இன்றைய நாளில் கள்ளப்போதகர்கள் கனிவோடும் நம்பத்தகுந்த வகையிலும் பேசுவார்கள். அவர்களால் ஒரே நேரத்தில் ஒன்றுக்கொன்று முரண்பாடான வகையில் வெவ்வேறு நபர்களிடம் பேசமுடியும். அவர்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் சத்தியத்தை மறைத்துப் பேசுகிறார்கள். அதில் முதன்மையான குறிப்பு என்னவென்று காண்கையில் அவர்கள் பேராசை பிடித்தவர்கள், ஆகவே அவர்கள் தேவனுடைய வீட்டை வியாபார வீடாக்க முயற்சி செய்கிறார்கள்.

கிறிஸ்தவ உலகம் இன்றைய நாளில் வரங்களை விலைக்கு விற்கும் பாவத்தினால் புளிப்பாக்கப்பட்டிருக்கிறது. ஆதாயம் பெறவேண்டும் என்னும் எண்ணம் நீக்கப்படுமானால், கிறிஸ்தவ ஊழியங்கள் என்று அழைக்கப்படும் பல ஊழியங்கள் சடுதியில் தடைபட்டுப் போகும். திருவாளர் C. A. கோட்ஸ் இவ்வாறு எச்சரிக்கிறார்:

> தேவனுடைய காரியங்களிலிருந்தும் தனக்கு ஆதாயத்தைத் தேடும் அளவிற்கு மனிதன் இழிவானவனாக இருக்கிறான். இது மனிதனுடைய இழிநிலையின் எல்லையாயிருக்கிறது. இவை எல்லாவற்றின் மேலும் கர்த்தர் நிச்சயமான நியாயத்தீர்ப்பைச் செலுத்துவார். அப்படிப்பட்டவை கிறிஸ்தவ உலகில் நிறைந்திருப்பதை நம்மால் காணமுடியும், அவற்றின் மூலக்கூறுகள் நம்மிடத்தில் புகாவண்ணம் நாம் எச்சரிப்புடன் இருக்க வேண்டும்.[5]

யூதா சாபத்தைக் கூறியிருப்பதன் மூன்றாவது காரணம், அந்தக் கள்ளப்போதகர் **கோரா எதிர்த்துப் பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப் போனார்கள்.** கோராகு, தாத்தான் அபிராம் ஆகியோருடன் சேர்ந்து, மோசே ஆரோன் ஆகியோரின் தலைமையை எதிர்த்துக் கலகம் செய்தது மட்டுமின்றி ஆசாரிய உரிமையைத் தகாத முறையில் பெற வேண்டுமென்றும் விரும்பினார்கள் (எண். 16). இவ்வாறு அவர்கள் கர்த்தரை அலட்

சியம் செய்தார்கள். அவர்களுடைய கீழ்ப்படி யாமையின் காரணமாக, ஒரு பெரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டு, அவர்கள் யாவரும் உயிரோடு பூமிக் குள் விழுங்கப்பட்டார்கள். தம்முடைய பிரதிநிதி களாக தேவன் நியமித்த மனிதர்களுக்கு எதிரா கக் கலகம் செய்தவர்கள் மேல் அவர் கடுஞ் சினத்தைக் காண்பித்தார்.

வச. 12 அடுத்ததாக, விசுவாசத்தை மறுதலிப் போரின் நடத்தையையும் அவர்களுடைய முடி வையும் வரைபடமாகக் காட்டும்படி யூதா இயற்கை உலகினின்று ஐந்து உவமைகளை தெரிந்தெடுத்துக் கூறுகிறார். மோ.ட் என்பார், "இந்த மனிதர்களுடைய நடத்தையை எடுத்துக் காட்டுகளால் விவரிக்கும்படி வானமும் நிலமும் கடலும் முழுவதுமாகத் துருவித் தேடப்பட்டன" என்று கூறுகிறார்.

தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் கர்த்தரு டைய பந்தியோடு இணைந்து நடத்திய **அன்பின் விருந்துகளில்**[6] அவர்கள் **கறைகளாயிருந்தார் கள்**. அவர்கள் தேவனுக்கும் மனிதனுக்கும் பயப்படவில்லை, மேலும் மந்தையைக் கவனிக் காமல் தங்கள் நலம் குறித்தே அக்கறை கொண்டி ருந்தார்கள். அவர்கள் பிறருடைய விசுவாசத்தை மாசுபடுத்தும்படி அவர்களை ஆசைகாட்டிக் கவர்ந்திழுத்தார்கள்.

அவர்கள் **தண்ணீரற்ற மேகங்கள்.** தீய்ந்து கருகிப்போன வயல்நிலங்களுக்கு நீரைப் பொழிந்து புத்துயிர் தரும்படியான வாக்குறுதி யைக் கொண்டிருப்பவை போல அவை காணப் படுகின்றன. ஆனாலும் அவை காற்றுகளால் அடி யுண்டோடுகிற (NKJV அடிக்குறிப்பு)[7] காரணத் தால் ஏமாற்றத்தையும் மாயையிலிருந்து மீண்ட சோர்வு நிலையையுமே உண்டாக்கும்.

அவர்கள் **இலையுதிர்** காலத்து **மரங்களைப்** போல இலைகளும் கனிகளும் உதிர்ந்து போய் காணப்படுகிறார்கள். **இரண்டுதரஞ் செத்து** என்னும் சொற்றொடர் முழுவதும் செத்துப்போன நிலையின் கடுமையைக் குறிக்கும்படி சொல்லப் பட்டுள்ளது. அல்லது அதனுடைய வேரும் கிளை களும் செத்துப்போயின என்னும் பொருளைத் தரக்கூடும். மேலும் அவை வேரோடு பிடுங்கப்பட் டவை. மீண்டும் உயிர்பெறமுடியாதபடி, எதிர் காலத்திற்கான ஆதாரமே இல்லாதபடி பலத்த காற்றினால் அடிமரம் வேரோடு சாய்க்கப்பட்டது போல் காணப்படுகிறது.

வச. 13 அவர்கள் கட்டுப்படுத்த இயலாததும், கொந்தளிக்கிறதும், சீற்றம் கொண்டதுமான **அமளியான கடலலைகள்** போன்றவர்கள். அவர்களுடைய பேரிரைச்சல் மற்றும் அசைவு அவர்களது **அவமானங்களின் நுரையே** தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் அவமானப்பட வேண்டியவற்றில் பெருமை பாராட்டுகிறார்கள். அவர்கள் முக்கியமானது, மதிக்கத்தக்கது எதை யும் நினைவூட்டத்தக்க வகையில் விட்டுச் செல் வதில்லை.

இறுதியாக, அவர்கள் **மார்க்கந்தப்பி அலை கிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர் களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக் கப்பட்டிருக்கிறது.** மார்க்கந்தப்பி அலைகிற நட் சத்திரங்கள் எவையெனில், வழக்கமான பாதை யில் செல்லாத வானமண்டலத்திலுள்ள பொருட் கள் ஆகும். அவை கடற்பயணத்தில் வழிநடத் தும் உபகரணமாகச் செயல்படுவதில் பயனற் றவை. கள்ளப் போதகர்களைக்குறித்துச் சொல் லப்பட்டுள்ள பொருத்தமான விளக்கமாக இது இருக்கிறது! இத்தகைய சமய எரிநட்சத்திரங்கள், வீழ்கிற விண்மீன்கள், வால்நட்சத்திரங்கள் கணப்பொழுது பிரகாசமாக எரிந்து, பின்னர் மேலே சீறிச் சென்று வெடித்துச் சிதறுகிற பட்டாசு போல மீண்டும் இருளுக்குள் சென்றுவிடு கின்றன.

வச. 14,15 ஆதாமிலிருந்து ஏழாம் தலை முறையில் ஏனோக்கு, விசுவாசத்தை மறுதலிப் போர் அடையப்போகிற அழிவைக் குறித்து முன் னுரைத்தார். யூதா நிருபத்தில் மட்டுமே காணப் டுகிற தீர்க்கதரிசனம் இது. ஏனோக்கு என்னும் தள்ளுபடி ஆகம நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், அந்த போலியான நூல் யூதாவின் காலத்தில் இருந்தது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை. திரு வாளர் கெல்லி கூறினார்:

> எருசலேம் நகரம் அழிக்கப்பட்ட பிறகு, இன்ன மும் தேவன் யூதர்களின் பக்கமாய் இருக்கிறார் என்ற கற்பனையில் மிதந்து கொண்டிருந்த ஒரு யூத எழுத்தாளரால் எழுதப்பட்ட நூல் அது (ஏனோக்கு) என்பதற்கான எல்லாவிதமான அடையாளங்களையும் கொண்டிருக்கிறது (ஆகவே யூதா மடல் எழுதப்பட்ட பிறகே அந் நூல் எழுதப்பட்டது என முடிவு செய்யலாம்.)[8]

யூதா எவ்விதமாக இந்தப் பண்டைய காலத் துத் தீர்க்கதரிசனத்தை அறிந்திருந்தார் என்பது நமக்குத் தெரியாது. அதே நேரத்தில், இந்த மட லின் எஞ்சிய பகுதிகளை எழுதும்படி அவரைப் பரி

சுத்த ஆவியானவர் எப்படி வெளிப்படுத்தி வழி நடத்தினாரோ, அதுபோலவே இதனையும் அவரே வெளிப்படுத்தியிருப்பார் என்பது மிக எளிமையான தும், நம்பத்தகுந்ததுமான விளக்கமாயிருக்கிறது.

அந்தத் தீர்க்கதரிசனம், **"ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்"**[9] என்று கூறுகிறது. உபத்திரவ காலத் திற்குப் பிறகு கர்த்தராகிய இயேசு தமது எதிரி களை அழித்து, தமது ஆட்சியை நிறுவும்படி இப் புவிக்கு வருகை புரிகையில் இங்கு முன்னுரைக் கப்பட்ட செய்தியின் முதலாவதும் ஒருபங்கும் நிறைவேறும். அக்கிரமக்காரராயிருந்து இறந்து போனவர்கள் ஆயிரமாண்டு ஆட்சியின் முடிவில் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தில் நியாயந்தீர்க் கப்படும்போது இதன் இறுதி நிறைவேறுதல் நடைபெறும்.

எல்லோருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக் கும்படி கிறிஸ்து வருகிறார். **எல்லோரும்** என்னும் சொல் இங்கு எல்லா அக்கிரமக்காரரைக் குறிக் கிறது என்பதை இந்த வசனத்தின் எஞ்சிய பகுதி தெளிவுபடுத்துகிறது. மெய்யான விசுவாசிகள் இதில் இடம்பெறுகிறதில்லை. யோவான் 5:24 -இல் "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மர ணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக் குச் சொல்லுகிறேன்" என்று சொல்லப்பட்டுள்ள படி விசுவாசிகள் கிறிஸ்துவின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையின்படி, நியாயத்தீர்ப்பிலிருந்து விடுத லையை வாக்காகப் பெற்றிருக்கிறார்கள். தேவ குமாரனுக்கு நியாயந்தீர்க்கும் அதிகாரம் ஒப்புக் கொடுக்கப்பட்டிருப்பதால், **அவர்களில் அவபக்தி யுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித் தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லா வற்றினிமித்தமும் அவர்களைக் கண்டிக்கிற தற்குக்** கர்த்தராகிய இயேசு வருவார். இந்த ஒரு வசனத்தில் **அவபக்தி** என்னும் சொல் நான்கு முறை இடம்பெற்றுள்ளது. அந்த மனிதர்கள் **அவ பக்தியுள்ளவர்கள்**, அவர்களுடைய செயல்கள் **அவபக்தியுள்ளவை,** அந்தச் செயல்களை அவர் கள் செய்கிற விதம் **அவபக்திக்கேதுவானது,** மேலும் அவர்கள் கர்த்தருக்கு எதிராக நிந்தனைப் பேச்சுகளின் மூலமாகத் தங்களுடைய **அவபக் தியை** வெளிப்படுத்துகிறார்கள். அவர்களுடைய **அவபக்திச்** செயல்கள் யாவற்றையும் அவர் **தண்டிப்பார்**. வெறுமனே அவர்கள் ஆழ்ந்த குற்ற வுணர்வைப் பெறும்படி மட்டுமின்றி, அவர்களுடைய குற்றம் மெய்ப்பிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அவர்களுக்கு எதிராகத் தண்டனையைக் கூறுவார்.

வச. 16 அவபக்திக்கேதுவான சொற்களும் செயல்களும் இப்பொழுது அதிக விவரங்களுடன் உரைக்கப்பட்டுள்ளன. அவர்கள் தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு நன்றிபாராட்டுவதற் குப் பதிலாக, அவருடைய இறையருளுக்கு விரோ தமாகப் புகார் செய்யும்படி **முறுமுறுக்கிறார்கள்.** வனாந்தரத்தில் தேவன் இஸ்ரவேலரைத் தண் டித்த செயலின் மூலமாக அவர் இத்தகைய பேரா சையை வெறுக்கிறார் என்பது வெகுவாக மெய்ப் பிக்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் எப்பொழுதும் கர்த்தரிடத்தில் குறை கண்டுபிடிக்கிறவர்கள். அவர் ஏன் சண்டை களையும் பாடுகளையும் அனுமதிக்க வேண்டும்? சமுதாய அநீதியை ஏன் அவர் முடிவுக்குக் கொண்டு வருகிறதில்லை? அவர் சர்வ வல்ல மையுள்ளவர் என்றால், உலகத்தில் இருக்கிற எல்லாக் குழப்பங்களையும் தீர்க்க ஏதாவது ஒன்றை அவர் ஏன் செய்கிறதில்லை? தேவனு டைய மக்கள் கொள்கையளவில் குறுகிய மனப் பான்மையுடன் நடந்துகொள்கிறார்கள் என்றும், மிகுந்த கட்டுப்பாடான வாழ்க்கையை நடத்துகிறார் கள் என்றும் அவர்கள் குறைகூறுகிறார்கள்.

அவர்கள் இச்சையுடன் கூடிய வாழ்க்கையை நடத்துகிறார்கள். மாம்சத்தில் உண்டாகிற எல்லா விதமான இச்சைகளுக்கும் இடங்கொடுப்பதோடு, சிற்றின்பச் செயல்களில் தாராளமாக எல்லாவற் றிற்கும் இடங்கொடுப்பதை அதிகமாக ஆதரித் துப் பேசுகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

அவர்களது திமிரான பேச்சு உண்மையாகவே அவர்கள் கவனத்தை ஈர்க்கிறவர்கள் என்பதை மெய்ப்பிக்கிறது. அரசியல், பொருளாதாரம், சமுதாய நிலை ஆகியவை பற்றிய அவர்களது திடுக்கிடச் செய்யும் தீவிரவாதத்தின் மூலமாகத் தலைப்புச் செய்திகளில் இடம்பெறுகிறார்கள். அடிப்படைக் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு எதி ராக அவர்கள் துணிவுடனும் வெட்கப்படாமலும் தேவன் இறந்து போய்விட்டார் என்பது போன்று அவர்கள் உறுதியுடன் கூறுகிற மறுப்புரைகள், இறையியலில் தாராள மனப்பான்மை கொண்ட மக்களிடம் குறிப்பிடத்தக்க விளம்பரத்தைத் தரு கின்றன.

இறுதியாக, அவர்கள் முகத்துதி செய்யும் கலையில் திறமைமிக்கவர்களாக இருக்கிறார் கள். அதன் மூலமாக அவர்கள் தங்களுக்கென்று தொடருகிற கூட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள், நல்ல வருமானத்தைப் பெறுகிறார்கள்.

இந்தச் சொல்லோவியம் உண்மையானதும் மிகத்துல்லியமானதுமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இவ்வுலகத்தின் ஊடகங்களில் வரும் செய்திகள் பெரும்பாலும் இதனை உறுதிசெய் கின்றன.

3. விசுவாச மறுதலிப்பின் மத்தியில் விசுவாசிகளின் பங்கு (வச. 17-23)

வச. 17 கூலிக்காகப் பணிபுரியும் இத்தகைய மேய்ப்பர்களுக்கு நடுவில் விசுவாசிகள் ஆற்ற வேண்டிய பங்கு என்னவென்பதைக் கூறும்படி யூதா இப்பொழுது விசுவாசத்தை மறுதலிப் போரை விட்டுத் திரும்புகிறார். முதலாவது, வரப் போகிற அழிவைக்குறித்து அவர்கள் முன்னெச் சரிப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அவர் நினைவுபடுத்துகிறார். அடுத்ததாக, அவர்கள் வலுவான ஆவிக்குரிய நிலையில் நிலைத் திருக்க வேண்டுமென்று அவர் அவர்களை உற் சாகப்படுத்துகிறார். இறுதியாக, விசுவாசத்தை மறுதலித்தவர்களால் பாதிக்கப்பட்ட மக்களிடம் திருப்பணி ஆற்றும்போது பகுத்தறிவோடு நடந்து கொள்ளும்படி அவர் ஆலோசனை நல்குகிறார்.

கள்ளப்போதகர்கள் பெருகுவார்கள் என்று அப்போஸ்தலர் முன்னுரைத்தார்கள். பவுலின் ஊழியத்திலும் (அப். 20:29,30; 1 தீமோ. 4:1-5; 2 தீமோ. 3:1-9); பேதுருவின் ஊழியத்திலும் (2 பேதுரு 2:1-22; 3:1-4); யோவானின் ஊழியத் திலும் (1 யோவான் 2:18-19) இதனைக் காண முடியும்.

வச. 18,19 கடைசிக் காலத்திலே தங்களது துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்பதே அவர் கள் கூறிய செய்தியின் சாராம்சம்.

இந்தச் சாட்சியுடன் இப்பொழுது இத்தகைய பரியாசக்காரரைக் குறித்த வெளியரங்கமாகக் காணப்படும் மூன்று தனிப்பண்புகளை யூதா விவர மாகக் கூறுகிறார். அவர்கள் **ஜென்மசுபாவத் தார்.** அதாவது அவர்கள் இயற்கையான மனிதர் களைப் போலச் சிந்திக்கிறவரும் செயல்புரிகிற வருமாய் இருக்கிறார்கள். அவர்கள் **பிரிவினைக் குக்** காரணராய் இருக்கிறார்கள். சீடர்களைத் தங்கள் பக்கமாய் இழுக்கிறவர்களும், மனிதர் கள் விசுவாசத்தை மறுதலிப்பதிலே எந்த அள விற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறார்களோ அதற் கேற்ப அவர்களை வெவ்வேறு தரமாகப் பிரிக்கிற வர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் **ஆவியில்லை.** அவர்கள் உன்னதத்திலிருந்து ஒருபோதும் பிறக்கவில்லை. ஆகவே அவர்கள் தேவனுடைய காரியங்களைப் புரிந்துகொள்வ தற்கு ஆற்றல் அற்றவர்களாயிருக்கிறார்கள்.

வச. 20 விசுவாசிகளுக்கான ஆதாரம் கர்த் தரை நெருங்கியிருப்பதும், அவருடன் முரிவடை யாத ஐக்கியம் கொண்டிருப்பதுமே ஆகும் என்ப தில் ஏதொரு ஐயமுமில்லை. ஆனால் இது எவ் வாறு நடைபெறுகிறது? யூதா நான்கு படிகளைத் தருகிறார்.

முதலாவது, **உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத் திக்கொள்ளுங்கள்** என்பதாகும், அதாவது, கிறிஸ்தவ விசுவாசம் இங்கு குறிப்பிடப்பட்டுள் ளது. நாம் திருமறையைக் கற்று அதற்குக் கீழ்ப் படிவதால் அதன்மேல் கட்டப்பட்டவர்களாக விளங்குவோம். திருமறை வார்த்தையில் நெருங் கிய தொடர்பு இடைவிடாமல் கொண்டிருப்பதால், அது நம்மை நீதியின் பாதையில் செம்மையாக வழிநடத்தி, வழியில் ஏற்படக்கூடிய ஆபத்து களுக்கு நம்மை எச்சரிக்கும். "கோட்பாடுகள் பயனற்றவை என்று மனிதர்கள் இகழ்ந்து பேசு கிறார்கள். ஆனால் அந்தக் கோட்பாடுகளே நன்னடத்தையை உண்டுபண்ணுகின்றன, நன்னடத்தை கோட்பாடுகளை உண்டுபண்ணுவ தில்லை" என்று கூறுகிறார் திருவாளர் H. பிக்கரிங்.

இரண்டாவது படி **பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணுவதாகும்.** ஆவியானவரின் வழிநடத்து தலின்படி ஜெபம்பண்ணுதல் என்பதே இதன் பொருள். அதாவது தேவனுடைய சித்தம் வேதத் தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதற்கு ஏற்ப அல்லது உள்ளார்ந்த வகையில் விசுவாசிகளுக்குத் தனிப்பட்ட முறையில் ஆவியானவரால் வெளிப் படுத்தப்படுவதற்கு ஏற்ப ஜெபம் பண்ண வேண் டும். வெறும் பழக்கத்தால் ஒரேவிதமான சொற் களைத் திரும்பத் திரும்ப மனப்பாடமாய் ஒப்புவிப் பதற்கும் அல்லது எவ்வித ஆவிக்குரிய உண்மை யான ஈடுபாடும் அற்ற வகையில் ஏனோதானோ என்று செய்யும் ஜெபத்திற்கும் இது எதிர்மாறா னது.

வச. 21 மேலும் விசுவாசிகள் **தேவனுடைய அன்பிலே** தங்களைக் **காத்துக்கொள்ள** வேண்டும். இங்கு **தேவனுடைய அன்பைச்** சூரிய

ஒளிக்கு ஒப்பிடலாம். சூரியன் எப்பொழுதும் ஒளி வீசிக் கொண்டே இருக்கும். ஆனால் சூரியனுக்கும் நமக்கும் இடையில் ஏதோவொரு பொருள் வரும்போது நாம் சூரிய ஒளிக்குக் கீழாக இருப்பதில்லை. அதுபோலவே தேவனுடைய அன்பும் செயல்படுகிறது. அது எப்பொழுதும் நம்மை நோக்கி வீசிக்கொண்டே இருக்கிறது. ஆனால் நமக்கும் கர்த்தருக்கும் இடையே பாவம் குறுக்கிடும்போது நாம் அவருடைய அன்பை நடைமுறையில் அனுபவிக்கிறதில்லை. பரிசுத்தமும் தேவபக்தியும் கூடிய வாழ்க்கையின் மூலமாகவே அவருடைய **அன்பில்** நம்மைக் **காத்துக்கொள்ள** முடியும். ஏதாவது பாவம் குறுக்கிடுமென்றால், நாம் அந்தப் பாவத்தை உடனடியாக அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். தேவனுக்கும் நமக்கும் இடையில் எதுவும் குறுக்கிடாதபடி பார்த்துக் கொள்வதே அதன் இரகசியம்.

அண்ணலுக்கும் அடிமைக்கும்
இடையினிலே ஒன்றுமில்லை
மண்ணுலகின் மாயமெல்லாம்
அடியேனை மயக்கிடாதே
இறையருளைத் தடைசெய்ய
இடங்கொடாமல் வாழ்ந்திடுவேன்
மறைபொருளைப் பின்பற்றிச்
செல்வழியைக் காத்திடுவேன்

– கார்லஸ் A. டின்ட்லே

இறுதியாக, நாம் **நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற** வாஞ்சையோடு காத்திருக்க வேண்டும். கர்த்தருடைய இரக்கம் என்பது இங்கு அவர் தம்முடைய மக்களை விண்வீட்டிற்கு அழைத்துச் செல்லச் சடுதியில் வரவிருக்கிறதையே குறிக்கிறது. விசுவாசம் மறுதலிக்கப்படும் காலத்திலும் இருண்ட நாட்களிலும் நாம் நற்பேறு என்னும் நம்பிக்கையின் விளக்கை நம்முடைய இருதயங்களில் எரிந்து பிரகாசிக்கச் செய்ய வேண்டும். அது தேறுதலின் நம்பிக்கையாகவும் சுத்திகரிக்கும் நம்பிக்கையாகவும் விளங்கும் (1 தெச. 4:18; 1 யோவான் 3:3).

வச. 22 விசுவாசத்தை மறுதலிப்பவர்களின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களோடு ஈடுபடும் போது ஓரளவு ஆவிக்குரிய பகுத்தறிவு தேவை. கள்ளப்போதகக் குழுக்களில் சுறுசுறுப்போடு செயலாற்றும் கொள்கைப் பரப்பாளர்கள் மற்றும் அவர்களால் ஏமாற்றப்பட்டவர்கள் ஆகியோருடன் ஈடுபடும்போது அவர்களை இனம்பிரித்து நடந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய தலைவர்கள் மற்றும் கொள்கைப் பரப்பாளர்கள் ஆகியோரிடம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை 2 யோவான் 10,11 -ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது: "ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான்." ஆனால் கள்ளப்போதகர்களால் வஞ்சிக்கப்பட்டவர்களைக் குறித்துப் பேசும்போது யூதாவின் ஆலோசனை **பகுத்தறிய**[10] வேண்டும் என்பதாகும், மேலும் அவர் இரண்டு வெவ்வேறு வகையான நடவடிக்கைகளைக் கூறுகிறார்.

சிலருக்கு இரக்கம் பாராட்ட வேண்டும். அதாவது, அவர்களிடம் நாம் பரிவுடன் அக்கறை செலுத்தி, ஐயங்கள், வாதாடுகிற போக்கு ஆகிய வற்றிலிருந்து அவர்களை விடுவித்து, தெய்வீக சத்தியத்தில் உறுதியோடு நிலைத்திருப்பவர்களாக மாற்ற வேண்டும்.

வச. 23 வேறு சிலர் கடினமான கொள்கைப் பிடிப்பைப் பற்றிக்கொள்ளும் தறுவாயில் இருப்பவர்கள், அவர்கள் கள்ளப்போதகத்தின் அக்கினித்தழலுக்குள் விழ ஆயத்தமாயிருப்பவர்கள். இவர்களுக்கு நாம் கண்டிப்பான, தீர்மானமான எச்சரிப்பையும் அறிவுரைகளையும் எடுத்துரைத்து **மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத்தள்ளி இரட்சிக்கவேண்டும்.** பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஒரு தொழுநோயாளியின் ஆடை தீட்டுப்பட்டதாகக் கருதப்பட்டால், தீயில் எரிக்கப்படவேண்டும் (லேவி. 13:47-52). பாலுறவுப் பாவங்களில் வீழ்ந்துபோன மக்களுடன் இன்றைய நாட்களில் நாம் ஈடுபடுகிறபோது, அவர்களுடைய ஆடை போன்ற பொருட்கள் வெறியைத் தூண்டிவிடக் கூடியவை என்பதை நினைவுகூர வேண்டும். நாம் அவற்றைப் பார்ப்பதால் அல்லது தொடுவதால், சில குறிப்பிட்ட பாவங்களில் மன ஈடுபாடு ஏற்படக்கூடும். ஆகவே அத்தகைய பாவங்களில் தீட்டுப்பட்டவர்களோடு நாம் ஈடுபடும் போது, நம்முடைய சொந்த வாழ்க்கையில் சோதனையைத் தூண்டிவிடுகிற யாவற்றையும் குறித்து நாம் மிகுந்த எச்சரிப்புடன் நடந்து

கொள்ள வேண்டும். பெயர் அறியப்படாத ஓர் எழுத்தாளர் அதனைக் குறித்து இவ்வாறு விவரிக்கிறார்:

> பாவத்தோடு தொடர்புகொண்டு தொற்றுநோயால் பீடிக்கப்பட்ட மனிதனுக்குச் சொந்தமான ஆடைகள் பிறரது ஒழுக்கத்தைக் கெடுக்கும் பண்புடையவை. ஆத்துமாவை அழித்துப் போடும் நோய் தொற்றுவதிலிருந்தும், தீமை பரவுவதிலிருந்தும் நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பாவ வாழ்க்கையோடு தொடர்புடைய எல்லாவற்றையும் புறம்பே தள்ள வேண்டும்.

"பாவிக்காகப் பரிதபித்து ஜெபிக்க வேண்டியது கிறிஸ்தவனுடைய கடமையாக இருந்தபோதிலும், அவன் பாவத்தின் அடையாளமாயிருக்கிற அனைத்தையும் வெறுப்புடன் நோக்கிப்பார்க்க வேண்டும்" என்று திருவாளர் F. B. மேயர் எச்சரிக்கிறார்.[11]

4. இனிய புகழுரை [வச. 24,25]

வச. 24 யூதா தனது மடலை இனிய புகழுரையோடு முடிக்கிறார். **வல்லமையுள்ளவருக்குப்** புகழ்ச்சியையும் தொழுகையையும் ஏறெடுப்பதாக இது அமைந்திருக்கிறது. அவர் இரட்சிப்பதற்கு வல்லவர் (எபி. 7:25), ஸ்திரப்படுத்த வல்லவர் (ரோமர் 16:26), உதவிசெய்ய வல்லவர் (எபி. 2:18), கீழ்ப்படுத்த வல்லவர் (பிலி. 3:21). இங்கு அவர் நம்மைக் **காக்க வல்லவர்**. அவர் நம்மைப் பூரண சமாதானத்துடன் காக்க வல்லவர் (ஏசா. 26:3), நாம் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அந்நாள் வரைக்கும் காக்க வல்லவர் (2 தீமோ. 1:12), நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவர் (எபே. 3:20), மேலும் அவர் நம்மை[12] **வழுவாதபடி காக்க வல்லவர்**. வழுவாதபடி என்று இங்கு கூறப்பட்டுள்ள வாக்குறுதி, யூதா குறிப்பிட்டுள்ள விசுவாச மறுதலிப்பு நிறைந்த காலத்திற்குப் பொருத்தமானதாயிருக்கிறது.

ஆனால் அந்த வாக்குறுதி அங்கு முடிவடைந்து விடுவதில்லை. அவருடைய **மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடு** மாசற்றவர்களாக நம்மை நிறுத்தவும் அவர் வல்லமையுள்ளவர். இது உண்மையாகவே நம்மைத் திகைப்படையச் செய்கிறது! நாம் யாராயிருந்தோம் என்பதை எண்ணிப் பார்க்கையில் - நம்முடைய அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் இறந்துபோயிருந்தோம்; நாம் யாராக இருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்கையில் - வறியவர், வலுக்குன்றியவர், குறைபாடுள்ள வேலையாட்கள்; அதன் பிறகு, இந்த அண்டசராசரத்தின் அரியணை மாளிகையில் **மாசற்றவர்களாக** ஒரு நாளில் நிற்கப்போகிறோம் என்பதை நினைத்துப் பார்க்கிறோம், **மிகுந்த மகிழ்ச்சியோடு** களிகூருவோம் - இது எத்தனை கிருபை!

வச. 25 அவர் நம்முடைய பாதுகாவலரும் நிறைவாக்குகிறவரும் மட்டுமின்றி, **தேவனும் இரட்சகரும்**[13] ஆவார். தம்முடைய பாவமற்ற குமாரனைப் பலி ஆட்டுக்குட்டியாகக் கொடுத்து, அதன் மூலமாக நாம் இரட்சிக்கப்படும்படியான திட்டத்தை அவர் வகுத்தார் என்னும் பொருளில் **தேவன்** நம்முடைய **இரட்சகராகவும்** ஆனார்; இந்த அளவிற்கு அவர் நம்மீது அக்கறை கொண்டிருக்கிறார் என்னும் உண்மை நம்மை வியப்பிற்குள் ஆழ்த்துகிறது. அவர் **ஒருவரே ஞானமுள்ளவர்** - மூல ஆதாரமாய் அனைத்து ஞானமும் தேவனிடத்திலிருந்தே வருகிறது (யாக். 1:5 -ஆம் வசனத்துடன் ஒப்பிடுக). நம்முடைய ஞானமானது, ஒருவரே **ஞானமுள்ளவர்** என்னும் தேவனாகிய ஞான ஊற்றிலிருந்தே பிறக்கிறது.

ஆராதனை என்னும் சொல் தேவனுடைய தகுதிக்கு ஏற்ப புகழ்ச்சியைச் சாற்றுவது என்று பொருள்படும் (முன்னாள் ஆங்கிலச் சொல் "worth-ship"). **கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும்** என்பதே அந்தப் புகழ்ச்சி. **கனம்** - அவர் யார், அவர் நமக்காக என்ன செய்தார் என்பதால் அவருக்கு உரிய மிக மேலான கீர்த்தியையே இது குறிக்கிறது. **மகத்துவம்** - எல்லோருக்கும் மேலான இந்த அண்ட சராசரத்தின் பேரரசர் என்னும் நிலையில் அவருக்கு உரிய புகழும் பெருஞ்சிறப்புமே மகத்துவம் என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. **வல்லமை** - எதிர்ப்பே இல்லாத ஆட்சி. அதுவே அவருடைய இறைமை உரிமை. மேலும் **அதிகாரம்** - அவருடைய கரங்கள் உண்டுபண்ணிய யாவற்றையும் ஆளுகை செய்வதற்காக அவர் பெற்றிருக்கும் தனிப்பட்ட உரிமையும் ஆற்றலுமே அதிகாரம் ஆகும்.

அத்தகைய புகழ்ச்சிக்குக் கடந்த காலத்தில் அவர் தகுதி பெற்றிருந்தார். தற்போதும் அவர் தகுதியோடிருக்கிறார், நித்தியம் முழுவதும் அத்தகைய தகுதியோடு இருப்பார். விசுவாசத்தை

மறுதலிப்பவரும் கள்ளப்போதகரும் அவருடைய **கனத்தைக்** கொள்ளையிடவும், அவருடைய **மகத்துவத்திலிருந்து** அவரை இழிவுபடுத்தவும் அவருடைய **வல்லமைக்கு** எதிராக முறுமுறுக் கவும், அவருடைய **அதிகாரத்தை** எதிர்க்கவும் நாடுகிறார்கள். ஆனால் மெய்யான விசுவாசிகள் யாவரும் **இப்பொழுதும் எப்பொழுதும்** அவரைக் கனப்படுத்துவதிலும், மகிழ்ச்சியுடன் அனுபவிப் பதிலும் மிகப்பெரிய அளவில் மனநிறைவு அடை கிறார்கள். ஆமென்.

அடிக்குறிப்புகள்

1 (வச. 1) ''பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்'' *(hegiasmenois)* என்ற சொல்லுக்குப் பதிலாக ''பிரியமானவர்கள்'' *(egapemenois)* என்னும் சொல் நடுநிலைப் பிரதியில் (NU) பயன்படுத்தப் பட்டுள்ளது. ஒழுக்கக்கேடு இந்த மடலில் மிகக் கடுமையாகக் கண்டனம் பண்ணப்பட்டுள்ளது. அதற்கு எதிர்மாறான ''பரிசுத்தமாக்கப்பட்டவர் கள்'' என்னும் சொல் அந்த ஆய்வுப்பொருளை சிறந்த முறையில் அறிமுகப்படுத்துகிறது.

2 (வச. 4) ''தேவன்'' என்னும் சொல் நடு நிலைப்பிரதியில் (NU) விடுபட்டுள்ளது. ''கர்த்தர்'' என்னும் சொல் இரண்டு முறை இடம்பெற்றிருந்த போதிலும் மூலமொழியில் அவை வெவ்வேறு சொற் கள். ''கர்த்தராகிய இயேசு'' என்னுமிடத்தில் வழக்கமான *"Kurios"* என்னும் சொல் பயன்படுத் தப்பட்டுள்ளது. ''ஆண்டவராகிய தேவன்'' என்னு மிடத்தில் அதற்கு இணையான Despores என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (Despot – எதேச்சாதிகாரி என்னும் சொல் தவ றான உய்த்துணரும் பொருளுடையதாக இருப்ப தால் அவ்வாறு மொழிபெயர்க்கப்படவில்லை – தமிழில் ''ஆண்டவராகிய தேவன்'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளதைக் காண்க.) இரண்டு சொற்களும் ''கர்த்தர்'', ''ஆண்டவர்'' அல்லது ''உரிமையாளர்'' என்னும் பொருளுடையவை.

3 (வச. 4) ''தாராள மனப்பான்மை உடைய வர்'' என்னும் சொல் சுதந்தரமுள்ளவர் என்று பொருள்படும். ஆனால் சமயத்தோடுள்ள தொடர் பில் விசுவாசத்தின் முக்கியமான கொள்கை களை மறுத்துரைப்போரையே அது குறிக்கிறது. திருமறை தேவ ஆவியானவரின் உயிரூட்டத்தைப் பெற்றது, இயேசுவின் கன்னிப்பிறப்பு, கிறிஸ்து வின் தெய்வத்தன்மை, இரத்தத்தால் பாவப் பரிகாரம் போன்றவையே அக்கொள்கைகள். தங்களைத் தாராள மனப்பான்மை உடைய வர் என்று கூறிக்கொள்வோர் எல்லாக் கொள்கை களுக்கும் சமயத்திற்கும் அவை புராதன திரு மறை உபதேசங்களாக இல்லாத வரையிலும், வரவேற்பு தருகிறார்கள்.

4 (வச. 4) புதிய புராதனக் கொள்கையாளர் *(New Orthodox)* உண்மையானபடி புராதனக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள் அல்லர். அவர்கள் திருமறை கற்பிக்கும் சில உபதேசங் களை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் புராதன என்னும் சொல்லைப் பயன்படுத்தி திருமறையைச் சார்ந்திராமல் அவநம்பிக்கையோடு இருப்பதை முகமூடியிட்டு மறைத்துக்கொள்கிறார்கள். எடுத் துக்காட்டாக, திருமறை புதிய புராதனக் கொள்கை யாளருடன் பேசினால் அது அவருக்கு தேவனு டைய வார்த்தையாக ''மாறும்''. ஆனால் மெய் யான புராதனக் கொள்கையைப் பின்பற்றும் விசு வாசிக்குத் திருமறையே தேவ வார்த்தையாக விளங்குகிறது

5 (வச. 11) C. A. Coates, *An Outline of Mark's Gospel and other Ministry,* p. 125.

6 (வச.12) அந்த விருந்தை அவர்கள் ''அகாபே'' என்று அழைத்தார்கள். எழுத்தின்படி ''அன்பு'' என்று அச்சொல் பொருள்படும்.

7 (வச. 12) பழைமைப் பிரதியிலும் (NU) பெரும்பான்மைப் பிரதியிலும் ''அடியுண்டோடு கிற'' என்னும் சொற்றொடர் மிகச் சரியாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. TR, KJV, NKJV ஆகிய மொழிபெயர்ப்புகள் ''வேறுவழியில் திருப்பிவிடப் படுகிறது'' என்னும் சொற்றொடர் பயன்படுத்தப் பட்டுள்ளது; இது அவ்வளவு சரியான சொல் என்று சொல்லுவதற்கில்லை. தமிழில் சரியான மொழி பெயர்ப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.

8 (வச. 14) William Kelly, *"Lectures on the Epistle of Jude, "The Serious Christian*, I:123.

9 (வச. 15) "வருகிறார்" என்னும் சொல் யூத முறைமையின்படி தீர்க்கதரிசன செயல் முடிவுற்றது என்பதைக் குறிக்கும் வினைச் சொல் ஆகும். எதிர்காலத்தில் நடைபெறப் போகிற நிகழ்ச்சி நிச்சயமாய் நிறைவேறும் என்னும் பொருளில் கடந்த கால வினைச்சொல் பயன்டுத்தப்பட்டுள்ளது.

10 (வச. 22) கிரேக்க மொழி வினைச் சொல் "*diakrinomai*" "சந்தேகப்படுதல்" என்றும் "பகுத்தறிதல்" என்றும் பொருள்படும். பிரதிகளில் காணப்படும் வேறுபாடுகள் இந்தச் சொல்லால் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 22, 23 – ஆகிய வசனங்களுக்கான NKJV அடிக் குறிப்புகளைக் காண்க.

11 (வச. 23) J. B. Mayor, *The Epistle of St. Jude and the Second Epistle f St. Peter*, p. 51.

12 (வச. 24) பெரும்பான்மைப் பிரதியில் "நீங்கள்" என்னும் சொல்லிற்குப் பதிலாக "அவர்கள்" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள், முந்தின வசனத்தில் பாவம் செய்கிறவர்களாகக் குறிப்பிடப் பட்டுள்ள மனிதர்கள் இரட்சிப்படையும்படி பெரு முயற்சி செய்கிறார்கள் என்னும் பொருளில் அச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

13 (வச. 25) இடையீடின்றி புதிய ஏற்பாடு NKJV அடிக்குறிப்பைத் தொடர்ச்சியாகப் படிப்போமென்றால், NU பிரதி, பாரம்பரிய மற்றும் பெரும்பான்மைப் பிரதிகளைக் காட்டிலும் சிறிய தாக இருப்பதையே இலக்காகக் கொண்டிருப்பது போலக் காணப்படுகிறது (பல சொற்கள் விடுபட்டுள்ளன). ஆகவே NU பிரதியில் சில சொற்கள் சேர்க்கப்பட்டிருப்பதைக் காண்கையில் அது நமது கவனத்தை ஈர்க்கக் கூடியதாயிருக்கிறது. 25 –ஆம் வசனத்தில் மூன்று சேர்க்கைகள் காணப்படுகின்றன. இவ்வாறாக இந்த வசனம் காணப்படும்:

> "தாம் ஒருவரே நம்முடைய இரட்சகரான தேவனுக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக, கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் எல்லாக் காலங்களுக்கும் முன்னராக இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்"

"ஞானமுள்ளவராகிய" என்னும் சொல் இதில் விடுபட்டுள்ளது. எப்பொழுதும் பிரசித்தி பெற்றதாயிருக்கிற யூதாவின் வாழ்த்துரை இவ் வாறான சேர்க்கைகளுடன் பெரும்பாலும் எகிப்திய சபைகளில் ஒப்புவிக்கப்பட்டனபோலும்.

நூல் விவரப் பட்டியல்

Bigg, Charles. *The Epistles of St. Peter and St. Jude*, Edinburgh: T. & T. Clark Ltd., 1901.

Coder, S. Maxwell. *Jude: The Acts of the Apostates*. Chicago: Moody Press, 1958.

Green, Michael. *The Second Epistle General of Peter and the General Epistle of Jude*. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1968.

Ironside, H. A. *Epistles of John and Jude*. New York: Loizeaux Bros., Inc., 1931.

Kelly, William. *"Lectures on the Epistle of Jude"*, *The Serious Christian*. Vol. I. Charlotte, N.C.: Books for Christians, 1970.

Mayor, J. B. *The Epistle of St. Jude and the Second Epistle of St. Peter*. Grand Rapids: Baker Book House, 1965.

இயேசு கிறிஸ்துவின்

வெளிப்படுத்தின விசேஷம்

முன்னுரை

நாம் இந்தத் தீர்க்கதரிசன வசனங்களைப் படிக்கிறபோதும், இந்த உலகத்தின் மீது வரப்போகிற தீமையினின்று நம்மை இரட்சித்த கிருபையை நினைவுகூருகிறபோதும் நம்முடைய இருதயங்கள் தொழுகையால் நிறைந்திருக்க வேண்டும். இறுதியில் வெற்றியும் மகிமையும் நமக்களிக்கப்பட்ட மற்றுமொரு ஆசிர்வாதத்தின் உறுதி.

– அர்னோ C. கேபலீன்.

1. வேதநூல் தொகுப்பில் தனிச்சிறப்பு மிக்க இடம்

திருமறையின் கடைசி நூலின் தனித் தன்மை, "வெளிப்படுத்தின விசேஷம்" என்னும் அதன் முதற் சொற்றொடரால் தெளிவாய் அறியப்படும். இதன் மூலமொழிச் சொல் *"apokalupsis"* என்பதாகும். முகத்திரையை விலக்குதல் என்னும் பொருள்தரும் இச்சொல்லிலிருந்து பிறந்ததே, *apocalyptic* (இறை வெளிப்பாட்டுத் தன்மை வாய்ந்த) என்னும் எழுதும் முறையைக் குறிக்கும் சொல்லாகும். தானியேல், எசேக்கியேல், சகரியா ஆகிய பழைய ஏற்பாட்டு நூல்களிலும், வெளிப்படுத்தின விசேஷம் என்னும் இந்தப் புதிய ஏற்பாட்டு நூலிலும் இந்த முறை கையாளப்பட்டுள்ளது. அடையாளங்கள், உருவகங்கள், இன்ன பிற இலக்கிய ஏதுக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இனி நடக்கவிருக்கும் நிகழ்வுகளைத் தீர்க்கதரிசனக் காட்சிகளைக் கொண்ட முறையே இது.

அனைத்து நிகழ்வுகளின் இறுதிக் கட்ட நிறைவேறுதலையும், தேவனும் ஆட்டுக்குட்டியான வரும் இறுதியில் பெறப்போகிற வெற்றியையும் எதிர்நோக்கியதாக இந்த நூல் விளங்குவதோடு, முந்தைய அறுபத்தைந்து நூல்களின் முடிவுறா தொங்கல்களை முடிச்சிட்டு நிறைவுசெய்கிறதுமாக இது அமைந்துள்ளது. உண்மையில், திருமறை முழுவதையும் அறிகிற அறிவின் மூலமாகவே இந்நூலைச் சிறப்பான முறையில் புரிந்து கொள்ள முடியும்! பாத்திரங்கள், அடையாளங்கள், நிகழ்வுகள், எண்கள், நிறங்கள் இன்ன பிறவும் ஏறக்குறைய தேவனுடைய வார்த்தையில் ஏற்கனவே எதிர்கொள்ளப்பட்டிருக்கின்றன. சிலர் இந்நூலை மிகப்பெரிய இரயில் நிலையம் என்று பொருத்தமானபடி அழைக்கிறார்கள். ஏனெனில் இங்குதான் எல்லா இரயில் வண்டிகளும் வந்து சேருகின்றன. எந்த வண்டிகள்? மீட்பின் சிவப்பு நூல், இஸ்ரவேல் நாடு, புறவின நாடுகள், திருச்சபை, இறை மக்களின் பகைஞனாகிய சாத்தான், அந்திக் கிறிஸ்து இன்னும் பல கருத்துகள் ஆதியாகமத்திலும் மற்ற நூல்களிலும் தொடங்கிய சிந்தனை இரயில்களாக இருக்கின்றன.

"இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தின விசேஷம்" என்னும் இந்த நூலுக்கு (1:1) நான்காவது நூற்றாண்டு முதல் "திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்" என்னும் தவறான தலைப்பு கொடுக்கப்பட்டு விட்டது. தெய்வீக வெளிப்பாடாகிய இந்நூல் திருமறையின் இன்றியமையாத உச்சநிலை நூலாயிருக்கிறது. ஒவ்வொன்றும் எவ்விதமாக வரப்போகிறது என்பதை இது நமக்குக் கூறுகிறது. இதனை மேலோட்டமாகப் படிக்கும்போதே அவிசுவாசிகளுக்குக் கடுமையான எச்சரிப்பாகவும் தேவனுடைய மக்களுக்கோ அவர்களைப் பேணிப்பாதுகாப்பளித்து உற்சாகமளிக்கும் நூலாகவும் விளங்கும்.

2. நூலாசிரியர்

இதன் ஆசிரியர் யோவான் என்று இந்த நூலே கூறுகிறது (1:1,4,9; 22:8). தன்னுடைய கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் கட்டளையின்படி அவர் இதனை எழுதினார். இங்கு யோவான் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர் அப்போஸ்தலனாகிய யோவான் என்பதற்கான, தொன்மையும் வலிமையும் கொண்ட மிகப்பரவலான புறச்சான்றுகள் உள்ளன. செபதேயுவின் குமாரனாகிய யோவான் பல ஆண்டுகள் எபேசு பட்டணத்தில் ஊழியம் செய்தார் (2 மற்றும் 3 ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு சபைகளும் ஆசியா மைனர் என்னும் நிலப்பகுதியில் இயங்கிவந்தன). டொமீடியன் என்னும் பேரரசனால் அவர் பத்மு என்னும் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். கர்த்தர் அவருக்கு வெளிப்படுத்தின தீர்க்கதரிசனக் காட்சிகளை

அவர் அங்கிருந்துதான் எழுதினார். பிறகு அவர் மீண்டும் எபேசுவுக்குத் திரும்பி வந்தார். அங்கு அவர் வயது முதிர்ந்தவராக மரணமடைந்தார். ஜஸ்டின் மார்டியர், ஐரேனியஸ், தெர்தூலியன், ஹிப்போலிடஸ், அலெக்சாந்திரியா கிளமண்ட், ஓரிஜன் யாவரும் இந்நூல் யோவானால் எழுதப் பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்மை யில் apocryphon of John என்னும் நூல் (கி. பி. 150) எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டது, அந்நூலில் வெளிப்படுத்தின விசேஷம் யாக்கோபின் சகோதரனாகிய யோவானால் எழுதப்பட்டது என் னும் செய்தி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய யோவானால் இந்நூல் எழுதப்படவில்லை என்று முதலாவது மறுத் துரைத்தவர் அலெக்சாந்திரியா டையோனிசியஸ் என்பவரே ஆவார். யோவான் இதனை எழுதினார் என்னும் கருத்தை அவர் விரும்பாததற்குக் காரணம், அவர் ஆயிரமாண்டுக் கொள்கையை எதிர்த்து வந்தவர் என்பதேயாகும். அவர் யோவான் மாற்கு என்பவரை முதலிலும், "மூப்பராகிய யோவான்" என்பவரைப் பின்னரும் இந்நூலின் ஆசிரியர் என்று தெளிவற்ற வகையில் தடு மாற்றத்துடன் குறிப்பிட்டுள்ளார். நவீன காலத் துத் தாராளக் கொள்கையாளர்கள் பலர் அப் போஸ்தலனாகிய யோவான் இந்நூலின் ஆசிரி யர் அல்ல என்று கூறிய போதிலும் டைனோசிய சின் கருத்து வலிமையான சான்றுக்கு ஈடு கொடுக்க இயலாதது. இரண்டு மற்றும் 3 யோவான் மடல்களின் ஆசிரியரைத் தவிர வேறு எவரும் "மூப்பராகிய யோவான்" என்னும் பெயரில் இருந்த தாகத் திருச்சபை வரலாற்றில் ஏதொரு சான்றும் இல்லை. இவ்விருமடல்களும் 1 யோவான் மட லைப்போன்று மொழிநடையைக் கொண்டதாக இருப்பதோடு, யோவான் நற்செய்தி நூலின் எளிமை, சொல்லாட்சி ஆகியவற்றோடு பொருத்த முடையதாகவும் இருக்கின்றன.

புறச்சான்றுகள் இவ்வளவு வலிமையோடு இருந்தபோதிலும், அகச்சான்றுகள் அவ்வளவு தெளிவாக இல்லை. இந்நூலில் பயன்படுத்தப்பட் டுள்ள சொற்கள் கரடுமுரடான "யூத" கிரேக்க நடையைச் சார்ந்தவை (சில சொற்றொடர்கள் இலக்கணப் பிழையுடன் இருப்பதாக இலக்கண நூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்), மேலும் இந் நூலின் சொல்லாட்சி, இதனை நற்செய்தி ஆசிரி யர் எழுதவில்லை என்று கூறுமளவிற்கு பலரை நம்பவைத்திருக்கிறது.

இருந்தபோதிலும் இந்த வேறுபாடுகள் விளக்க மளித்துத் தீர்க்கக் கூடியவை. இவ்விரு நூல் களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் இந்த வேற்றுமைகளுக்கு ஈடு கொடுக்கக் கூடியவையே.

எடுத்துக்காட்டாக, வெளிப்படுத்தின விசேஷம் கி. பி. 50 அல்லது கி. பி. 60 -இல் எழுதப்பட்டிருக் கும் என்றும் (கிளவுதியு அல்லது நீரோவின் ஆட்சிக்காலத்தில்) யோவான் எழுதிய நற்செய்தி நூல் பிற்காலத்தில் கி. பி. 90 -இல் எழுதப்பட்டிருக் கும் என்றும் கருதுகிறார்கள், இந்தக் கால இடை வெளியில் அவருடைய கிரேக்க மொழி அறிவில் தேர்ச்சி பெற்றிருப்பார் என்று அவர்கள் கூறுகிறார் கள். ஆனால் இது தேவையற்ற விளக்கம். யோவான் தனது நற்செய்தி நூலை, தான் சொல்ல வேறொருவர் எழுதும் முறையில் இயற்றி யிருக்கக் கூடும்; ஆனால் வெளிப்படுத்தின விசே ஷத்தை பத்மு தீவில் தன்னந்தனியே இருந்து எழுதினார்.

(திருமறையானது ஆவியானவரின் உயிரூட் டத்தால் எழுதப்பட்டது என்னும் கொள்கையை இது எவ்விதத்திலும் பாதிப்பதில்லை, ஏனெனில் தேவன் தனிமனிதர்களின் நடையையே பயன் படுத்தியிருக்கிறார், திருமறையின் அனைத்து நூல்களுக்கும் பொதுவான மொழிநடை இல்லை).

ஒளி மற்றும் இருள் ஆகியவை பற்றிய பொது வான கருத்து யோவான் நற்செய்தியிலும் வெளிப் படுத்தின விசேஷத்திலும் காணப்படுகிறது. "ஆட்டுக்குட்டியானவர்", "ஜெயங்கொள்ளுதல்", "வார்த்தை", "சத்தியம்", "ஜீவதண்ணீர்" இன்னும் பல சொற்கள் இரண்டு படைப்புகளையும் ஒன்று சேர்க்கின்றன. மேலும், யோவான் 19:37 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 1:7 ஆகிய இரண்டு இடங்களிலும் சகரியா 12:10 -ஆம் வசனம் மேற் கோளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் "முந்தினவர்கள்" என்னும் சொல்லிற்கு கிரேக்க மொழிப் பழைய ஏற்பாட்டில் எழுபதின்மர் பயன் படுத்திய அதே சொல் இவ்விரண்டு இடங்களிலும் பயன்படுத்தப்படாமல் வேறொரு சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது.[1]

நற்செய்தி நூலிலும் வெளிப்படுத்தின விசே ஷத்திலும் மொழி நடை, சொல்லாட்சி ஆகிய வற்றில் காணப்படும் வேறுபாட்டிற்கு மற்றுமொரு காரணம் இவ்விரண்டிலும் கூறப்பட்டுள்ள பொருள் கூறுகள் வெவ்வேறு வகையைச் சேர்ந்தவை. இன்னும், வெளிப்படுத்தின விசேஷத்தில்

பெரிதளவில் காணப்படும் எபிரெய மொழி சார்ந்த சொற்றொடர்கள் யாவும் பழைய ஏற்பாடு முழுவதிலிருந்தும் பரவலான முறையில் வந்தவையாக உள்ளன.

முடிவாக, செபதேயுவின் குமாரனும், யாக்கோபின் சகோதரனுமான யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார் என்னும் பாரம்பரியக் கருத்து உறுதியான வரலாற்று அடித்தளத்தைக் கொண்டது; அதைக் குறித்து எழக்கூடிய பிரச்சினைகள் அனைத்தும், ஆசிரியர் அவர் இல்லையென மறுத்துரைக்காமல் விளக்கமளிக்கக் கூடியவையே.

3. எழுதப்பட்ட காலம்

கி. பி. 50 அல்லது கி. பி. 60 இந்தக் கால இடைவெளியில் அல்லது அடுத்த பத்தாண்டுகளுக்குள் இந்நூல் எழுதப்பட்டிருக்கும் என்று சிலர் கருதுகிறார்கள். நாம் ஏற்கனவே கண்டபடி, வெளிப்படுத்தின விசேஷத்தின் கரடுமுரடான நடைக்கு இது ஓரளவு காரணமாக இருக்கக்கூடும் என்றும் விளக்கமளிக்கப்படுகிறது. மேலும் "666" என்னும் எண் நீரோ[2] மன்னனைக் குறித்த வருவதுரைத்தல் என்றும், அவன் இறந்தோரிலிருந்து உயிருடன் வருவான் என்றும் சிலர் கருதுகிறார்கள். இந்நூல் முற்காலத்தது என்னும் கருத்தை இது வலியுறுத்துகிறது. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை, அது இந்நூலின் மெய்ம்மையைப் பாதிக்கவில்லை. (நீரோ மன்னனுடைய காலத்திற்குப் பின்னரே இந்நூல் எழுதப்பட்டது என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.)

சபையின் தகப்பன்மார்களாக இருந்தவர்கள் டொமிடியன் ஆட்சியின் பிற்காலத்தில்தான் (ஏறத்தாழ கி. பி. 96) அப்போஸ்தலனாகிய யோவான் பத்மு தீவில் இருந்தார் என்றும் அப்பொழுது அவர் வெளிப்பாட்டைப் பெற்றார் என்றும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இக்கருத்தானது முற்காலத்தது, நன்கு அறியப்பட்டது, புராதனக் கொள்கையைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களிடையே பரவலாக நம்பப்படுகிறது, ஆகவே இக்கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு அனைத்தும் ஆதரவளிக்கின்றன.

4. கருப்பொருள்களும் நோக்கமும்

வெளிப்படுத்தின விசேஷமாகிய இந்நூலைப் புரிந்து கொள்வதற்கு ஓர் எளிமையான திறவுகோல், இதனை மூன்று பகுதிகளாகப் பிரித்து உணர்வதேயாகும். கிறிஸ்து ஒரு நீதிபதியைப் போல நிலையங்கி தரித்தவராக, ஏழு சபைகளின் மத்தியில் நின்றுகொண்டிருக்கும் காட்சியை யோவான் கண்டார். இரண்டு, மூன்று அதிகாரங்களில் நாம் வாழ்கின்ற இக்காலத்து சபையைப் பற்றிய செய்திகள் உரைக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய பத்தொன்பது அதிகாரங்களும் சபைக் காலப்பாகுபாடு முடிவுற்ற பிறகு நடக்கவிருக்கிற நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை. இந்நூலை நாம் கீழ்க்கண்டவாறு பிரித்துக் காணலாம்:

1. யோவான் கண்டவை, அதாவது, சபைகளின் நியாயாதிபதியாகக் கிறிஸ்து காட்சியளித்தல் (அதி. 1)

2. இருக்கிறவை: அப்போஸ்தலர்களுடைய மறைவுக்குப் பிறகு, கிறிஸ்து தமது பரிசுத்தவான்களை விண்ணுலகிற்கு எடுத்துக்கொள்ளும் வரையிலான காலத்துத் திருச்சபை வரலாற்றுச் சுருக்கம் (அதி. 2,3).

3. இவற்றிற்குப் பிறகு சம்பவிப்பவை: திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள் முதல், பரிசுத்தவான்கள் நித்திய நிலை அடையும் வரையிலான நிகழ்ச்சிகளின் சுருக்கம் (அதி. 4-22). இந்த மூன்றாவது பகுதியில் கூறப்பட்டுள்ள விவரங்களை நினைவிற்கொள்வதற்கான எளிய முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அ. நான்காவது அதிகாரம் முதல் 19 -ஆவது அதிகாரம் வரை உபத்திரவ கால விவரங்கள் உரைக்கப்பட்டுள்ளன. இதன் கால அளவு ஏழு ஆண்டுகள், இந்தக் காலத்தில் தேவன் அவிசுவாச இஸ்ரவேல் மக்களையும் அவிசுவாச புறவின மக்களையும் நியாயந்தீர்ப்பார். நியாயத்தீர்ப்பின் விவரங்கள் படவுருவில் விவரிக்கப்பட்டுள்ளன:

1) ஏழு முத்திரைகள்,
2) ஏழு எக்காளங்கள்,
3) ஏழு கலசங்கள்.

ஆ. 20 -22 ஆகிய அதிகாரங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை விவரிக்கின்றன. அவருடைய புவியாட்சி, வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு, நித்திய நிலை ஆகியவை இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன.

உபத்திரவ காலத்தில் ஏழாவது முத்திரையில் ஏழு எக்காளங்களும் அடங்கியிருக்கின்றன. மேலும் ஏழாவது எக்காளத்தில் ஏழு கலசங்களின் நியாயத்தீர்ப்புகளும் அடங்கியுள்ளன. எனவே உபத்திரவ காலம் கீழ்க்கண்டவாறு வரைந்து காணப்படக் கூடியது ஆகும்.

முத்திரைகள்

1 2 3 4 5 6 7

எக்காளங்கள்

1 2 3 4 5 6 7

கலசங்கள்

1 2 3 4 5 6 7

இந்நூலில் காணப்படும் இடைப்பிறவரல்கள்

வெளிப்படுத்தின விசேஷத்தின் முக்கியமான சிந்தனைப்போக்கு எவ்வாறு இந்நூல் முழுவதும் ஊடுருவிச் செல்கிறது என்பதை மேற்காணும் வரைபடம் வெளிப்படுத்துகிறது. ஆயினும், இந்த விவரங்கள் தொடர்ந்து சொல்லப்படுகின்ற வேளையில், இடையிடையே உபத்திரவ காலத்து வெவ்வேறு பெரிய ஆட்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றி அறிமுகப்படுத்தும்வகையில் தடைகள் காணப்படுகின்றன. இவை இடைப்பிறவரல்கள் அல்லது இடைச்சேர்க்கைகள் என்று சில எழுத்தாளர்கள் கூறுகிறார்கள். இந்த இடைப்பிறவரல்களில் முதன்மையானவை:

1. முத்திரையிடப்பட்ட 144000 யூதப் பரிசுத்த வான்கள் (7:1-8).

2. அதே காலத்துப் புறவின விசுவாசிகள் (7:9-17).

3. சிறு புத்தகச் சுருளை வைத்திருக்கும் பல முள்ள தூதன் (அதி. 10).

4. இரு சாட்சிகள் (11:3-12).

5. இஸ்ரவேலும் வலுசர்ப்பமும் (அதி. 12).

6. இரு மிருகங்கள் (அதி. 13).

7. சீயோன் மலையில் கிறிஸ்துவுடன் 144000 பேர் (14:1-5).

8. நித்திய சுவிசேஷத்துடன் தூதன் (14:6,7).

9. பாபிலோனின் வீழ்ச்சி பற்றிய தொடக்க அறிவிப்பு (14:8).

10. மிருகத்தை வணங்குகிறவர்களுக்கான எச்சரிப்பு (14:9-12).

11. அறுவடையும், திராட்சை பிழியப்படுதலும் (14:14-20).

12. பாபிலோனின் வீழ்ச்சி (17:1-19:3)

இந்நூலில் காணப்படும் அடையாளங்கள்

வெளிப்படுத்தின விசேஷம் மொழி அடையாளங்களால் நிறைந்திருக்கிறது. எண்கள், நிறங்கள், தாதுப்பொருட்கள், விலையுயர்ந்த கற்கள், மிருகங்கள், நட்சத்திரங்கள், குத்து விளக்குகள் இவை யாவும் மனிதர்களையும், பொருட்களையும் அல்லது சத்தியங்களையும் குறிப்பிட பயன்டுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் சில அடையாளங்கள் இந்நூலிலேயே தெளிவாக விளக்கித் தரப்பட்டுள்ளமை நாம் பெற்ற நற்பேறு எனலாம்.எடுத்துக்காட்டாக, ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்கள் (1:20); பெரிய வலுசர்ப்பம் பிசாசு அல்லது சாத்தான் ஆவான் (12:9). மற்ற அடையாளங்களுக்கான பொருளைக் கண்டறிய, திருமறையின் வேறுபகுதிகளில் குறிப்புகள் காணப்படுகின்றன. நான்கு ஜீவன்கள் (4:6), எசேக்கியேலில் (1:5-14) குறிப்பிடப்பட்டுள்ள நான்கு ஜீவன்களோடு ஒப்பிடத்தக்கவை. எசேக்கியேல் 10:20 -இல் அவை கேருபீன்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. சிறுத்தை, கரடி, சிங்கம் ஆகியவை தானியேல் 7 -ஆவது அதிகாரத்தை நினைவுபடுத்துகின்றன. அங்கு இந்தக் காட்டு விலங்குகள் கிரேக்கம், பெர்சியா மற்றும் பாபிலோன் ஆகிய வல்லரசுகளை முறையே குறிப்பிடுகின்றன. மற்ற அடையாளங்கள் திருமறையில் தெளிவாக விளக்கப்படவில்லை. அவற்றை விளக்கிக் கூற முயற்சி செய்கையில் நாம் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.

நூலின் நோக்கம்

வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிக்கையில், திருமறையின் பிற நூல்களைக் கற்கும் போது எவ்வாறு நடந்துகொள்கிறோமோ அது போலவே, திருச்சபைக்கும் இஸ்ரவேலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை இடைவிடாமல் மனதில் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். திருச்சபையானது ஆவிக்குரிய ஆசிர்வாதங்களால் ஆசிர்வதிக்கப்பட்டு, கிறிஸ்துவின் மணவாட்டியாக அவருடைய மகிமையில் பங்குபெறும்படி அழைக்கப்பட்ட விண்ணக மக்களைக் கொண்டது. இஸ்ரவேலோ தேவனுடைய பண்டைய மக்களைக் கொண்டது. இஸ்ரவேல் நாடு அவர்களுக்குத் தரப்படும் என்றும், உண்மையாகவே மேசியாவின் புவியாட்சிக்குக் கீழாக அவர்கள் வாழ்வார்கள் என்றும் தேவனால் வாக்களிப்பட்ட பூமிக்குரிய மக்களை அது கொண்டிருக்கிறது. மெய்யான சபை முதல் மூன்று அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் ஆட்டுக்குட்டியானவருடைய திருமண விருந்து பற்றிய குறிப்பு 19:6-10 ஆகிய வசனங்களில் சொல்லப்படும் வரை அதனை நாம் காண்கிறதில்லை. உபத்திரவ காலம் (4:1-19:5) முதன்மையாக யூதப் பண்பைக் கொண்டது.

இந்த முன்னுரையை நிறைவு செய்வதற்கு முன்னர், எல்லாக் கிறிஸ்தவர்களும் மேலே சொல்லப்பட்டுள்ள வண்ணமே வெளிப்படுத்தின நூலைப் பகுத்து விளக்கம் அளிப்பதில்லை என் பதைச் சொல்லுவது தகுதியானது. திருச்சபை யின் தொடக்க காலத்தில் இந்நூலில் சொல்லப் பட்டுள்ள அனைத்தும் நிறைவேறி விட்டன என்று சிலர் எண்ணுகிறார்கள். வேறு சிலர், யோவானின் நாள் முதற்கொண்டு இறுதிவரை திருச்சபையின் காலம் எவ்வாறு இருக்கும் என்பது இந்நூலில் தொடர்ச்சியான வரைபடமாக விவரிக்கப்பட்டிருக் கிறது என்று கருதுகிறார்கள்.

விரைவில் மறைந்துபோகிற பொருட்களுக் காக வாழ்கிற தவறைக் குறித்து இந்நூல் இறை மக்கள் அனைவருக்கும் கற்பிக்கிறது. அழிந்து போகிறவர்களிடம் சான்றுபகரும்படியும், கர்த்தரு டைய வருகைக்காகப் பொறுமையோடு காத் திருக்க வேண்டும் என்றும் இது நம்மைத் தூண்டிக்கொண்டே இருக்கிறது. அவிசுவாசி களுக்கோ, அதாவது இரட்சகரை ஏற்க மறுப்போர் அனைவருக்கும் பயங்கரமான அழிவு காத் துக்கொண்டிருக்கிறது என்னும் தெய்வீக எச் சரிப்பாக இந்நூல் விளங்குகிறது.

பொருட்சுருக்கம்

1. யோவான் கண்ட காட்சிகள் (அதி. 1)

அ. நூலின் தலைப்பும் வாழ்த்துரையும் (1:1-8)

ஆ. நீதிபதியின் மேலங்கி அணிந்த கிறிஸ்துவின் காட்சி (1:9-20)

2. இருக்கிறவை: நம்முடைய கர்த்தரிடத்தில் இருந்து வந்த மடல்கள் (அதி. 2,3)

அ. எபேசு சபைக்கு எழுதப்பட்ட மடல் (2:1-7)

ஆ. சிமிர்னா சபைக்கு எழுதப்பட்ட மடல் (2:8-11)

இ. பெர்கமு சபைக்கு எழுதப்பட்ட மடல் (2:12-17)

ஈ. தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட மடல் (2:18-29)

உ. சர்தை சபைக்கு எழுதப்பட்ட மடல் (3:1-6)

ஊ. பிலதெல்பியா சபைக்கு எழுதப்பட்ட மடல் (3:7-13)

எ. லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்ட மடல் (3:14-22)

3. இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை (அதி. 4-22)

அ. தேவ அரியணையைக் குறித்த காட்சி (அதி. 4)

ஆ. ஆட்டுக்குட்டியானவரும் ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்ட சுருளும் (அதி. 5)

இ. ஆறு முத்திரைகள் உடைக்கப்படுதல் (அதி. 6)

ஈ. மகா உபத்திரவ காலத்தில் இரட்சிக்கப்படுகிறவர்கள் (அதி. 7)

உ. ஏழாவது முத்திரையும் ஏழு எக்காளங்களின் தொடக்கமும் (அதி. 8,9)

ஊ. பலமுள்ள தூதனும் சிறு புஸ்தகமும் (அதி. 10)

எ. இரண்டு சாட்சிகள் (11:1-14)

ஏ. ஏழாவது எக்காளம் (11:15-19)

ஐ. உபத்திரவ காலத்து முக்கியமான மனிதர்கள் (அதி. 12-15)

ஒ. ஏழு கலசத் தண்டனைகள் (அதி. 16)

ஓ. மகா பாபிலோனின் வீழ்ச்சி (அதி. 17,18)

ஔ. கிறிஸ்துவின் வருகையும் அவருடைய ஆயிரமாண்டு ஆட்சியும் (19:1-20:9)

க. சாத்தானும் அவிசுவாசிகள் யாவரும் நியாயந்தீர்க்கப்படுதல் (20:10-15)

கா. புதிய வானமும் புதிய பூமியும் (21:1-22:5)

கி. இறுதி எச்சரிக்கை, ஆறுதல்கள், அழைப்புகள், வாழ்த்துரை (22:6-21)

பொருட்சுருக்க அட்டவணை

கருத்து	கண்டவை	காண்பவை	வருபவை				
காலம்	கி. பி. 95-96						
தலைப்பு	கிறிஸ்துவின் இறைமை	ஏழு சபைகள்	கிறிஸ்துவின் அரியணை	உபத்திரவ காலம்	இரண்டாம் வருகை		நித்திய நிலை
பகுப்பு	கிறிஸ்துவின் தரிசனம்	இறைவாக்கு	மகிமையின் காட்சி	வெவ்வேறு நியாயத்தீர்ப்புகள்	ஆயிரமாண்டு ஆட்சி	இறுதி நியாயத்தீர்ப்பு	முடிவற்ற மனமகிழ்ச்சி
வசனம்	அதி. 1	அதி. 2-3	அதி. 4-5	அதி. 6-19	20:1-9	20:10-15	அதி. 21-22
ஆசிரியர்	யோவான் அப்போஸ்தலன்						
இடம்	பத்மு தீவு						

விளக்கவுரை

1. யோவான் கண்ட காட்சிகள் [அதி. 1]

அ. நூலின் தலைப்பும் வாழ்த்துரையும் [1:1-8]

1:1,2 சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவை என்பதே இந்நூலின் ஆய்வுப்பொருள்; அதனையே நூலின் முதல் வசனம் அறிவிக்கிறது. எதிர்காலத்தை வெளிப்படுத்திக் காட்டுவதே இந்நூலின் முதன்மையான செயலாகும். வரும் நாட்களில் நடக்கப் போகிற நிகழ்ச்சிகளைக் குறித்த **வெளிப்படுத்தின விசேஷத்தை** தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்தார். கர்த்தராகிய **இயேசு** அதனைத் தம்முடைய தூதனுக்கு ஒப்புவிக்க, அந்தத் தூதன் அதனை இயேசு கிறிஸ்துவின் **ஊழியக்காரனாகிய யோவானுக்கு** வெளிப்படுத்தினான். அந்தச் செய்தியைக் கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய மெய்யான விசுவாசிகள் யாவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதே இந்நூலை யோவான் எழுதியதன் நோக்கமாகும். யோவான் இந்நூலை இயற்றியதன் வாயிலாக, **தேவன்** அவரோடு பேசிய **வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்து** எதற்குச் சாட்சியாக விளங்கினாரோ அதைக் குறித்தும் சாட்சியாக அறிவித்திருக்கிறார். சுருங்கக் கூறின், விண்ணகத்தில் **தான் கண்ட** காட்சிகள் **யாவற்றையும்** யோவான் சாட்சியாக அறிவித்திருக்கிறார்.

1:3 இந்நூலின் வசனங்களைச் சத்தமிட்டு **வாசிக்கிறவனுக்கும்**, அவ்வாறு சபையில் வாசிக்கும்போது அவற்றைக் **கேட்டுத்** தங்களுடைய இருதயங்களில் ஏற்றுக்கொள்கிற யாவருக்கும் தேவன் சிறப்பான ஆசிர்வாதத்தை வாக்காக உரைத்திருப்பதால், இந்நூல் சபையில் வாசிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாயிருந்தது என்பது நிச்சயம். இந்நூலில் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவதற்கான **காலம் சமீபமாயிருந்தது.**

1:4,5 ரோமப்பேரரசின் ஒரு பகுதியாகிய ஆசியா என்னும் மாகாணத்தில் இயங்கிய **ஏழு சபைகளுக்கு யோவான்** இம்மடலை எழுதுகிறார். ஆசியா மைனர் (தற்பொழுது துருக்கி என்றழைக்கப்படுகிறது) என்னும் நிலப்பகுதியில் ஒரு பகுதியே ஆசியா மாகாணம். முதலாவதாக, இந்தச் சபைகளுக்குக் **கிருபையும் சமாதானமும்** பெருகவேண்டுமென்று யோவான் வாழ்த்துகிறார். தகுதியற்றோருக்கு தேவன் காட்டுகிற தயவும், ஒவ்வொரு நாள் கிறிஸ்தவ வாழ்வுக்குத் தேவையான வலிமையுமே **கிருபை** என்பதன் பொருள். இடர்ப்பாடுகள், துயரங்கள், ஒருவேளை சாவையும்கூட விசுவாசி எதிர்கொள்ள நேரிடும். அத்தகைய தருணங்களில் பெறுகிற மனவமைதி **சமாதானத்தின்** பயனாகும். கிருபையும் சமாதானமும் திரியேக தேவனிடத்திலிருந்து வருவதாகச் சொல்லப்பட்டுள்ளன. **இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமான** தேவனிடத்திலிருந்தே இவை வருகின்றன. இச்சொற்றொடர் தேவனும் பிதாவுமானவரையே குறிக்கிறது. மேலும் யெகோவா என்னும் பெயரின் மெய்யான பொருளையும் இது தருகிறது. அவரே எப்பொழுதும் இருக்கிறவர், அவரே என்றென்றும் மாறாத வருமாயிருக்கிறார். அவருடைய **சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளினிடத்திலிருந்தும்** இவை வருகின்றன. இது பரிசுத்த ஆவியாகிய தேவனின் முழுநிறைவைக் குறிக்கிறது. நிறைவையும் முழுமையையும் குறிக்கிற எண் ஏழு. திருமறையின் கடைசி நூலாகிய வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு என்னும் எண் ஐம்பத்து நான்கு முறை இடம்பெற்றிருப்பது வியப்பிற்குரியதன்று.

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்து வினிடத்திலிருந்தும் இவை வருகின்றன. இச்சொற்றொடர் தேவனுடைய குமாரனைப் பற்றிய விவரங்களைத் தெளிவாகக் கூறுகிறது. இவர் நம்பத்தகுந்த **சாட்சியாக** இருக்கிறார். **மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்** என்னும் நிலையில், இனி சாகாமல் இருக்கும்படி **மரித்தோரிலிருந்து** முதலாவது எழுந்தவராகவும் இவர் இருக்கிறார். நித்திய வாழ்வை மகிழ்ச்சியோடு அனுபவிக்கும்படி மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தவர்களுக்குள் மேன்மையும் முதன்மையுமான இடத்தை இவர் பெற்றிருக்கிறார். மேலும் இவர் இவ்வுலகின் அரசர்களுக்கெல்லாம் அதிபதியாக விளங்குகிறார்.

1:6 தொடக்கத்தில் தான் கூறிய வாழ்த்துரையைத் தொடர்ந்து, யோவான் கர்த்தராகிய இயேவுக்கு ஆராதனையாகப் புகழுரையை எழுதுகிறார். முதலாவதாக, இரட்சகரைக் குறித்து நம்மிடத்தில் அன்புகூர்ந்தவர் (அடிக்குறிப்பு - நம்மிடத்தில் அன்புகூருகிறவர்[3]) , தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினவர் என்று யோவான் கூறுகிறார். வினைச்சொற்களின் காலத்தைக் கவனியுங்கள்: அன்புகூருகிறவர், நிகழ்காலத் தொடர்வினை; **கழுவி,** இறந்தகாலம், வினை முடிவுற்றது. அதன்

வரிசை முறையையும் கவனியுங்கள்: அவர் நம்மிடத்தில் அன்புகூருகிறார், உண்மையாகவே அவர் நம்மைக் கழுவுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னமே **நம்மிடத்தில் அன்புகூர்ந்தார்**. அவர் செலுத்திய விலையைக் கவனியுங்கள்: அவருடைய சொந்த **இரத்தம்.** நம்மைக் குறித்த சுய மதிப்பீடு, செலுத்தப்பட்ட விலை மிக அதிகம் என்று அறிக்கை செய்ய வற்புறுத்துகிறது. இவ்வளவு பெரிதான விலை செலுத்தப்பட்டு, கழுவப்படுவதற்கு நாம் தகுதியற்றவர்கள்.

நம்மைக் கழுவியதோடு அவருடைய அன்பு முடிவடைந்துவிடவில்லை, அவ்வாறு முடிவடைந்திருக்கலாம். **பிதாவாகிய தேவனுக்கு முன்பாக** அவர் நம்மை ராஜாங்கமும் (NKJV அடிக்குறிப்பு) **ஆசாரியர்களும்** ஆக்கினார். பரிசுத்த ஆசாரியர் என்னும் நிலையில் நாம் நம்முடைய ஆவிக்குரிய பலிகளை தேவனுக்குச் செலுத்துகிறோம்: நம்முடைய ஆளுகையையும், நம்முடைய உடைமைகளையும், நம்முடைய ஆராதனையையும் நம்முடைய திருப்பணியையும் அவருக்குச் செலுத்துகிறோம். இராஜரிக **ஆசாரியர்** என்னும் நிலையில், நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வர வழைத்தவருடைய மேன்மைகளை அறிவிக்கிறோம். அத்தகைய அன்பைக் குறித்து நாம் தியானிப்போமென்றால், அவர் மீது நாம் சாற்றக் கூடிய எல்லா **மகிமைக்கும்**, கனத்துக்கும், ஆராதனைக்கும், புகழ்ச்சிக்கும் அவரே தகுதியானவர் என்று மட்டுமே நம்மால் முடிவுசெய்ய இயலும். நம்முடைய வாழ்க்கை, சபை, உலகம் மற்றும் பிரபஞ்சம் ஆகிய எல்லாவற்றின் மேலும் அவரே ஆளுமை **(வல்லமை)** செலுத்தத் தகுதியானவர். ஆமென்.

1:7 இத்தகைய புகழ்ச்சிக்கு உரியவர் **மேகங்களாலான** இரதங்களில் இவ்வுலகிற்கு மீண்டும் வருகிறார். அவருடைய வருகை ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மட்டும் உரியதன்று, ஒருவரும் காணாதவாறு அது மறைமுகமானதுமன்று. ஏனெனில் அவருடைய வருகையைக் **கண்கள் யாவும் காணும்** (மத். 24:29,30 - ஆகிய வசனங்களுடன் ஒப்பிடுக). அவரைச் சிலுவையில் அறைந்த குற்றவுணர்வுகொண்ட மக்கள் அச்சத்தால் திகிலடைவார்கள். உண்மையில் அவர் தம்முடைய பகைஞரை நியாயந்தீர்க்கவும், அரசை நிறுவவும் வருகின்ற காணத்தால், பூமியின் கோத்திரத்தார் யாவரும் துக்கத்திற்குள் மூழ்கிப் போய்விடுவார்கள். விசுவாசிகளோ அவருடைய வருகையைக் குறித்து துக்கமடைய மாட்டார்கள், மாறாக அவர்கள் "அப்படியே ஆகும், ஆமென்" என்பார்கள்.

1:8 இங்கு பேசுபவர் வேறொருவர். தாம் **அல்பாவும் ஓமெகாவும்** (கிரேக்க மொழியின் முதல் மற்றும் இறுதி எழுத்துக்கள்), **ஆதியும் அந்தமுமாக**[4] இருப்பதாகக் கர்த்தராகிய இயேசு தம்மை அறிமுகப்படுத்துகிறார். அவர் காலங்களையும், நித்தியத்தையும் சாண் அளவாய் அளக்கிறார்; மேலும் தகைமையின் சொற்களஞ்சியத்தைச் சொல்லித் தீர்க்கிறார். அவரே படைப்பின் காரணரும் இலக்கும் ஆவார். அவரே இவ்வுலகினைக் குறித்த தெய்வீகத் திட்டத்தைத் தொடங்கியவர், அவரே இதனை முடிப்பவரும் ஆவார். அவரே **இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாவார்.** அவருடைய உளவாம் தன்மையில் அவர் நித்தியமானவர், வல்லமையில் **சர்வ வல்லமையுள்ளவர்**.

ஆ. நீதிபதியின் மேலங்கி அணிந்த கிறிஸ்துவின் காட்சி (1:9–20)

1:9 மீண்டும் பேசத்தொடங்கும் யோவான், **இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும், அவருடைய ராஜ்யத்திற்கும், அவருடைய பொறுமைக்கும்** பங்காளிகளாகிய அனைத்து **விசுவாசிகளின் சகோதரனாகவும் உடன்பங்காளியுமாகத்** தன்னை அறிமுகப்படுத்துகிறார். இங்கு அவர் **உபத்திரவம்,** விடாமுயற்சி **(பொறுமை)** மற்றும் **ராஜ்யம்** ஆகிய வற்றை இணைத்துப் பேசுகிறார். இதுபோன்று பவுலும் பரிசுத்தவான்கள் "விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி" புத்திமதி கூறுகிறபோது, "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று" சொல்லி இவற்றை இணைத்துப் பேசுகிறார் (அப். 14:22).

தேவவசனம் மற்றும் **இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி** ஆகியவற்றில் யோவான் உண்மையோடு இருந்த காரணத்தால், அவரை ஏஜியன் கடலில் **பத்மு** என்னும் **தீவில்** சிறையில் அடைத்திருந்தார்கள். அங்கே அவர் தெய்வீக மகிமையையும் நியாயத்தீர்ப்பையும் பற்றிய தரிசனங்களைப் பெற்றதால், அந்தச் சிறைச் சாலை அவருக்கு விண்ணக வரவேற்பு அறையாக மாறிற்று.

1:10 யோவான் **ஆவிக்குள்ளாக** இருந்தார், அதாவது, எவ்வித இருளுமின்றி அவர் அவரோடு முறையான ஐக்கியம் கொண்டிருந்ததால், தெய்வீக வெளிப்பாட்டைப் பெறுவதற்குரிய நிலையில் அவர் இருந்தார். கேட்பதற்கு ஒரு மனிதன் சொல்லுபவருக்கு மிக நெருக்கமாக அருகில் இருக்க வேண்டும் என்பதை இது நினைவுபடுத்துகிறது. "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது" (சங். 25:14). அந்த நாள் **கர்த்தருடைய நாள்**, அதாவது, வாரத்தின் முதல் நாள். அதுவே கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள், அவர் தமது சீடர்கட்கு அடுத்தடுத்து இருமுறை காட்சியளித்த நாள், பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகிற்கு இறங்கி வந்த பெந்தெகொஸ்தே நாளும் கர்த்தருடைய நாள் தான். கர்த்தருடைய நாளிலே அப்பம்பிட்கும் படி சீடர்கள் கூடிவந்தார்கள். மேலும் வாரத்தின் முதல்நாள்தோறும் காணிக்கை எடுக்கும்படி பவுல் கொரிந்தியருக்கு அறிவுறுத்தினார். தான் எழுதவிருக்கிற நியாயத்தீர்ப்புக் காலத்தையே கர்த்தருடைய நாள் என்று யோவான் குறிப்பிடுவதாகச் சிலர் நினைக்கிறார்கள். ஆனால் மூல மொழியில் இந்தச் சொல் வேறுபொருளையே கொண்டிருக்கிறது.[5]

சடிதியில் யோவான் தனக்குப் பின்புறத்திலிருந்து வருகிற மிகத்தெளிவான சத்தத்தைக் கேட்டார். அந்தச் **சத்தத்தின்** முழக்கமும் ஓசையும் **எக்காளம்** தொனிப்பது போன்று இருந்தது.

1:11,12 யோவான் தான் காணப்போகிற வற்றை **ஒரு புஸ்தகத்தில் எழுதி ஏழு சபைகளுக்கும் அனுப்ப** வேண்டுமென்று இயேசுவே கட்டளை கொடுத்தார். பேசுபவரைக் காணும்படி திரும்பிப் பார்த்த யோவான் ஏழு பொன் குத்துவிளக்குகளைக் கண்டார். ஒவ்வொரு குத்துவிளக்கும் அடிப்பாகத்தையும், ஒரு நேரான தண்டையும், அதன் மேற்பகுதியில் எண்ணெயில் எரிகிற விளக்கையும் கொண்டிருந்தது.

1:13 ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் இருந்தவர் **மனித குமாரனுக்கு ஒப்பானவராய்** இருந்தார். அவருக்கும் ஒவ்வொரு குத்துவிளக்குக்கும் இடையே பிரதிநிதி அலுவலகமோ, குருமார்களின் ஆட்சிமுறையோ, ஏதொரு நிறுவனமோ இல்லை. ஒவ்வொரு சபையும் தன்னாட்சி பெற்றிருந்தது. கர்த்தரை வருணிக்கும் போது திருவாளர் மெக்கன்கி கூறுவதாவது:

> மந்தமானதும் எல்லைக்குட்பட்டதுமான மனதுடையோராகிய நமக்கு, வெளிப்பாட்டுக் கிறிஸ்துவாகிய வரப்போகிறவருடைய மகிமையையும் பெருஞ்சிறப்பையும் மகத்துவத்தையும் ஓரளவேனும் மங்கலான கருத்துப்படி வமாக வெளிப்படுத்த ஆவியானவர் அடையாளங்களைத் தேடி இயற்கை உலகத்தைத் துருவி ஆராய்ந்து பார்க்கிறார்.[6]

அவருடைய வெளிப்புற அங்கி, ஒரு நீதிபதியின் அங்கியைப் போல நீண்டதாக இருக்கிறது. அவருடைய மார்பைச் சுற்றியிருந்த கச்சை அவர் செலுத்தும் நியாயத்தீர்ப்பின் நீதி, உண்மையுள்ள தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தும் அடையாளமாயிருக்கிறது (ஏசா. 11:5 -ஆம் வசனத்தைக் காண்க).

1:14 அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலிருக்கின்றன, அவை அவருடைய நித்தியத்தை நீண்ட ஆயுசுள்ளவராக வரைந்து காட்டுகின்றன (தானி. 7:9). மேலும் அவருடைய நியாயத்தீர்ப்பின் ஞானத்தையும் தூய்மையையும் அவை சித்திரிக்கின்றன. **அவருடைய கண்கள் அக்கினி ஜ்வாலையைப் போலிருக்கின்றன.** அவருடைய முழு நிறைவான அறிவையும், தவறில்லாத நுழைபுலத்தையும், தப்பிக்க இடங்கொடாத நுண்ணாய்வுத் திறனையும் அவை வெளிப்படுத்துகின்றன.

1:15 கர்த்தருடைய **பாதங்கள் உலைக்கலத்தில் காய்ந்த பிரகாசமான** மெருகூட்டிய **வெண்கலம் போலிருந்தன.** வெண்கலம் எல்லா இடங்களிலும் நியாயத்தீர்ப்புக்கு நிழலாகச் சொல்லப்பட்டுள்ளது. அவருடைய நியாயந்தீர்க்கும் அலுவல் இங்கு முதன்மையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்னும் கருத்தை இது ஆதரிக்கிறது. **அவருடைய சத்தம்** கடலலையின் பேரிரைச்சல் போன்றோ, மலையில் பாய்ந்து விழும் அருவி போன்றோ மகத்துவம் நிறைந்ததும் திகிலூட்டுவதுமாய் இருந்தது.

1:16 அவர் **தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்.** அவருடைய உடைமையுரிமை, அதிகாரம், ஆதிக்கம், கனம் ஆகியவற்றை அவை சுட்டிக்காட்டுகின்றன. **அவர் வாயிலிருந்து** தேவனுடைய வார்த்தையாகிய **இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது** (எபி. 4:12). அவருடைய மக்களைக் குறித்து அவர் வழங்குகிற கடுமையான, துல்லியமான தீர்ப்புகளை அது குறிக்கிறது. அதனையே ஏழு சபைகளுக்கான மடல்களில் காண்கிறோம். **அவருடைய முகம்** நண்

பகலில் ஒளிவீசும் **சூரியனைப் போலிருந்தது.** அது கண்களைச் கூசச்செய்யும் தெய்வத் தன்மையின் ஒளிப்பிரகாசத்தையும், வரம்பு கடந்த மகிமையையும் வெளிப்படுத்துகிறது.

மேற்கூறிய எல்லா சிந்தனைகளையும் ஒன்று கூட்டிக் காணும்போது, ஏழு சபைகளையும் நியாயந்தீர்ப்பதற்கான மேலான தகுதிபெற்ற நீதிபதியின் நிறைவான நிலையில் கிறிஸ்துவைக் காண்கிறோம். அதன் பிறகு அவர் தமது எதிரிகளை நியாயந்தீர்ப்பார். ஆனால் "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே (கட்டாயமாக) துவங்க வேண்டிய காலமாயிருக்கிறது" (1 பேதுரு 4:17). இருந்தபோதிலும் ஒவ்வொரு வழக்கின் நியாயத்தீர்ப்பும் வெவ்வேறு வகையைச் சேர்ந்ததாயிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். தூய்மைப்படுத்துவதற்கும் பரிசு வழங்குவதற்கும் சபைகளுக்கான நியாயத்தீர்ப்பு நடைபெறும், உலகமோ தண்டனை பெறும் படி நியாயந்தீர்க்கப்படும்.

1:17 நீதிபதியின் தரிசனம், **செத்தவரைப் போல** யோவானை **அவருடைய பாதத்தில் விழச்செய்தது.** ஆயினும் கர்த்தர் தம்மை, யெகோவாவின் பதவிப்பெயராகிய **முந்தினவரும் பிந்தினவருமாக** வெளிப்படுத்தி யோவானை மீண்டும் உயிர்பெறச் செய்தார் (ஏச. 44:6; 48:12).

1:18 நீதிபதி, முன்னர் **மரித்தவராகவும்,** இப்பொழுதோ **சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவராகவும்,** அதாவது, ஜீவனுள்ளவராக இருந்தார்.அவர் **மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறார்,** இரண்டின் மீதும் அவர் அதிகாரமுடையவர், தனிச்சிறந்த வகையில் இறந்தவரை உயிரோடெழுப்பும் ஆற்றல் மிக்கவர். இங்கு பாதாளம் ஆத்துமாவுக்கும், மரணம் சரீரத்துக்கும் அடையாளமாயுள்ளன. ஒரு மனிதன் மரணமடையும்போது அவனுடைய ஆத்துமா பாதாளத்தில் இருக்கிறது, அது சரீரமற்ற நிலையைக் குறிப்பதற்கான பெயர். சரீரமோ கல்லறைக்குச் செல்லுகிறது. விசுவாசிக்கோ சரீரமற்ற நிலையும் கர்த்தருடைய முன்னிலையில் இருக்கிற நிலையும் ஒன்றுதான். உயிர்த்தெழுதலின் போது, ஆத்துமா மகிமையடைந்த சரீரத்தோடு இணைக்கப்பட்டு, திருத்தந்தையின் வீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

1:19 யோவான் **கண்டவைகளையும்** (அதி. 1); **இருக்கிறவைகளையும்** (அதி. 2,3), **இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும்** (அதி. 4-22) எழுதவேண்டும். இந்நூலின் பொதுவான பொருளடக்கத்தை இது வரைந்து தருகிறது.

1:20 தொடர்ந்து, **ஏழு நட்சத்திரங்கள்** மற்றும் **ஏழு பொன்குத்துவிளக்குகள்** ஆகியவற்றின் மறைந்திருக்கும் பொருளைக் கர்த்தர் யோவானுக்கு விளக்கிக் கூறுகிறார். **நட்சத்திரங்கள்** தேவதூதர்களைக் குறிக்கின்றன எனலாம் அல்லது அவை **ஏழு சபைகளின் தூதர்களாம். குத்துவிளக்குகளோ ஏழு சபைகளைச்** சுட்டிக் காட்டுகின்றன.

தூதர்கள் யார் என்பது பற்றி பல விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. சபைகளை உருவகப்படுத்திக்காட்டும் தேவ தூதர்களாகிய உயிரினங்களைக் குறிப்பதாக சிலர் கருதுகிறார்கள். தேவதூதர்கள் பிரதிநிதிகளாக இருப்பது போல இதுவும் கருதப்படுகிறது (தானி. 10:13, 20,21). அவர்கள் சபைகளின் கண்காணிகளைக் (மேய்ப்பர்கள்) குறிக்கிறார்கள் என்று வேறு சிலர் கருதுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்துக்கு திருமறை வசன ஆதாரம் இல்லை. இன்னும் சிலர் இவர்கள் பத்மு தீவிலிருந்து யோவானின் மடல்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு சபைக்கும் சென்று ஒப்படைத்த மனிதர்கள் என்று கருதுகிறார்கள். கிரேக்க மொழிச் சொல் (angelos) தேவதூதரையும் செய்தியை எடுத்துச் செல்பவரையும் குறிக்கும், ஆனால் இந்நூலில் தேவதூதர் என்னும் பொருள் மிகமுக்கியமாக விளங்குகிறது.

அந்த மடல்கள் **தேவதூதர்களுக்கு** எழுதப்பட்டவையாக இருந்தபோதிலும் அவற்றில் சொல்லப்பட்டுள்ள செய்தி சபையில் உள்ள அனைவரையும் கருத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ளன.

குத்துவிளக்குகள் ஒளியை ஏந்தியிருப்பவை. ஆகவே **சபைகளுக்கு** இவை மிகச்சரியான அடையாளமாயிருக்கின்றன. அவை இந்த உலகத்தின் இருளுக்குள் தேவனுக்கென்று ஒளிவீச வேண்டும்.

2. இருக்கிறவை: நம்முடைய கர்த்தரிடத்தில் இருந்து வந்த மடல்கள் [அதி. 2,3]

ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்குத் தனித்தனியே எழுதப்பட்ட மடல்களை நாம் 2,3 ஆகிய அதிகாரங்களில் பெற்றிருக்கிறோம். இம்மடல்களை மூன்று வகையான உண்மைகளோடு பொருத்திக் காணலாம். முதலாவதாக, யோவான் இந்த நூலை எழுதியபோது, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏழு சபைகளும் என்ன நிலையில் இருந்

தன என்பதை இம்மடல்கள் விவரிக்கின்றன. இரண்டாவதாக, வரலாற்றின் எந்த ஒரு குறிப்பிட்ட கட்டத்திலும் கிறிஸ்தவ உலகின் நிலைப்பாடு எத்தகையதாகக் காணப்படும் என்பதை இம்மடல்கள் விவரிக்கின்றன. பெந்தெகொஸ்தே நிகழ்ச்சிக்குப் பின்னர் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இம்மடல்களில் காணப்படும் அம்சங்களில் ஒரு பங்கானது உண்மையாகவே நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. இந்த வகையில் இம் மடல்கள் ஏழும், மத்தேயு 13 -வது அதிகாரத்திலுள்ள ஏழு உவமைகளோடு குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைக் கொண்டிருக்கின்றன. இறுதியாக, இந்த மடல்கள் கிறிஸ்தவ உலகின் அடுத்தடுத்த காலத்தின் வரலாற்று முற்காட்சியாகத் தோற்றமளிக்கின்றன. திருச்சபையின் நிலைப்பாடு பொதுவாகக் கீழ்நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. முதல் மூன்று மடல்களும் ஒன்றன்பின் ஒன்று தொடர்ச்சியான காலத்தவை என்றும், பிந்தைய நான்கும் சமகாலத்தவை, திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள்வரை அவை நடைமுறையில் இருக்கும் என்றும் பலர் கருதுகிறார்கள்.

மூன்றாவது கருத்தின்படி, திருச்சபை வரலாற்றின் புதிய காலத் தொடக்கம் கீழ்க்கண்டவாறு பகுத்துக் கூறப்படுகிறது.

எபேசு சபை: முதல் நூற்றாண்டுச் சபை, பொதுவாகப் பாராட்டுதற்குரியது. ஆனாலும் அது தனது ஆதி அன்பை விட்டுவிட்டது.

சிமிர்னா சபை: முதல் நூற்றாண்டு முதல் நான்காம் நூற்றாண்டு வரை இருந்த சபை. ரோமப் பேரரசின் கீழ் கடும் இன்னலை அனுபவித்தது.

பெர்கமு சபை: நான்கு மற்றும் ஐந்தாவது நூற்றாண்டுகளில், கிறிஸ்தவம் கான்ஸ்டான்ட்டைன் மன்னனின் ஆதரவோடு அதிகார பூர்வமான சமயமாக மாறிற்று.

தியத்தீரா சபை: ஆறாவது நூற்றாண்டு முதல் பதினைந்தாவது நூற்றாண்டில் சீர்திருத்தத்தின் தாக்கம் உண்டாகும் வரை மேற்கத்திய கிறிஸ்தவ உலகு பெரும்பாலும் ரோமக் கத்தோலிக்க சபையின் ஆதிக்கத்திற்குள் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டது. கிழக்கத்திய நாடுகளில் புராதனக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்த சபை அதிகாரம் செலுத்தியது.

சர்தை சபை: சீர்திருத்தத்திற்குப் பிற்பட்ட பதினாறு மற்றும் பதினேழாவது நூற்றாண்டுகளில் இருந்த சபை. சீர்திருத்தத்தின் ஒளி கூடியவிரைவில் மங்கிப்போயிற்று.

பிலதெல்பியா சபை: பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வல்லமை மிக்க மறுமலர்ச்சி தோன்றியது, மேலும் திருப்பணி இயக்கம் பெரிய அளவில் இயங்கியது.

லவோதிக்கேயா சபை: அனலுமற்ற குளிருமற்ற, அதனோடு விசுவாச மறுதலிப்பும் காணப்படுகின்ற கடைசி நாட்களின் சபை இதில் படவுருவில் காட்சியளிக்கிறது. தாராள மனப்பான்மையும், உலகம் முழுவதும் கிறிஸ்தவ ஒற்றுமை வேண்டும் என்னும் மனப்பான்மையுமுள்ள சபை இதுவே.

இம்மடல்களின் அமைப்பில் ஒற்றுமை காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு மடலும் அந்தந்த சபைக்கான வாழ்த்துதலோடு தொடங்குகிறது. அந்தந்தச் சபைக்குச் சிறப்பான முறையில் பொருத்தமான பாத்திரமாகக் கர்த்தராகிய இயேசு ஒவ்வொரு மடலிலும் அறிமுகப்படுத்தப்படுகிறார்; அந்தந்தச் சபையின் கிரியையைக் கிறிஸ்து அறிந்திருந்தார் என்பதை "(நான்) அறிந்திருக்கிறேன்" என்னும் சொற்களோடு ஒவ்வொரு மடலும் விவரிக்கிறது. லவோதிக்கேயா சபையைத் தவிர மற்ற சபைகள் யாவற்றிற்கும் புகழுரை வழங்கப்பட்டிருக்கிறது. சிமிர்னா மற்றும் பிலதெல்பியா ஆகிய சபைகளைத் தவிர பிற சபைகளின் மேல் குற்றச்சாட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சபைக்கும் கேட்பதற்கு ஒரு சிறப்பான அறிவுரை ஆவியானவரால் கொடுக்கப்பட்டு, ஜெயம்கொள்கிறவனுக்கு ஒரு வாக்குறுதியும் தரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சபையும் ஒரு தனிப்பட்ட பண்பைப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு சபையிலும் முக்கியமான அம்சமாகக் காணப்படும் பண்பை வெளிப்படுத்தும் வண்ணம் திருவாளர் பிலிப்பு கீழ்க்காணும் பெயர்களைச் சூட்டியிருக்கிறார்: எபேசு சபை, அன்பில்லாத சபை; சிமிர்னா சபை, இன்னல்கள் அனுபவித்த சபை; பெர்கமு சபை, அதிக அளவில் சகிப்புத் தன்மை கொண்ட சபை; தியத்தீரா சபை, சமரச இணக்கமுள்ள சபை; சர்தை சபை, உறங்கிக்கொண்டிருக்கும் சபை; பிலதெல்பியா சபை, நல்வாய்ப்புகள் பெற்ற சபை; லவோதிக்கேயா சபை, தன்னிறைவு மனநிலை கொண்ட சபை. அந்தச் சபைகளின் பிரச்சினைகளைத் தெரிவிக்கிறார்: (1) ஆதி அன்பை இழந்துவிடுதல்; (2) பாடுகள்படவேண்டுமே என்னும்

அச்சம்; (3) உபதேசத்திலிருந்து விலகிச் செல்லுதல்; (4) நன்னெறிகளை விட்டு விலகுதல்; (5) ஆவிக்குரிய செத்த நிலை; (6) இறுகப் பற்றிக் கொள்ளாமை; (7) அனலும் குளிரும் அற்ற நிலை.[7]

அ. எபேசு சபைக்கு எழுதப்பட்ட மடல் (2:1-7)

2:1 ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறவராகக் கர்த்தர் தம்மை **எபேசு சபைக்கு** அறிமுகப்படுத்துகிறார். இந்த மடல்களில் கர்த்தரைக் குறித்த பெரும்பாலான வருணனைகள் முதல் அதிகாரத்தில் காணப்படும் விவரங்களுக்கு ஒப்பாயிருக்கின்றன.

2:2 இந்தச் சபையானது அளவற்ற கிரியைகளாலும், கடுமையான பிரயாசத்தாலும், பொறுமை மிக்க சகிப்புத்தன்மையாலும் தனிச்சிறப்பு பெற்றிருந்தது. தனது மத்தியிலிருந்த பொல்லாதவர்களை அது சகித்துக்கொள்ளவில்லை. கள்ள அப்போஸ்தலர் யார் என்பதைப் பகுத்துணரவும் அதற்கேற்ற வகையில் அவர்களை நடத்தவும் கூடிய ஆற்றல் அதற்கு இருந்தது.

2:3,4 கிறிஸ்துவின் திருப்பெயரின் நிமித்தம் அந்தச் சபை தனக்கு ஏற்பட்ட சோதனைகளையும் இன்னல்களையும் பொறுமையோடு **சகித்துக்கொண்டது**. மேலும் அது சோர்வற்ற முறையில் **பிரயாசப்பட்டது**. ஆனால் எபேசு சபையின் அவல நிலை யாதெனில், அது தனது **ஆதி அன்பை விட்டுவிட்டது.** அதனுடைய பாச அனல் அணைந்து போயிற்று. தொடக்க நாட்களில் அது கொண்டிருந்த பிரகாசமான உற்சாகம் மறைந்து போயிற்று. கிறிஸ்தவர்கள் சிறப்பான முந்தின நாட்களைப் பின்னிட்டுத் திரும்பிப் பார்த்தால், அந்த நாட்களில் அவர்களிடமிருந்து கிறிஸ்துவை நோக்கிப் பாய்ந்து சென்ற மணப்பெண்ணின் அன்பைப் போன்ற உளங்கனிந்த நிறைவான தடையற்ற அன்பை நினைத்துப் பார்க்க முடியும். அவர்கள் இன்னமும் ஆரோக்கியமான உபதேசத்தில் நிலைத்திருந்தார்கள், பணிபுரிவதில் சுறுசுறுப்பாயிருந்தார்கள். ஆனால் ஆராதனை செய்வதிலும் திருப்பணி ஆற்றுவதிலும் அவர்களுக்கிருந்த மெய்யான நோக்கம் இல்லாமற்போயிற்று.

2:5 அவர்கள் தங்களுடைய தொடக்கநிலை விசுவாசத்தின் நல்ல நாட்களை **நினைத்து, ஆதியில் கொண்டிருந்த அன்பு** மங்கிப் போய்விட்டதைக் குறித்து மனம்வருந்தி, அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் தொடக்கத்தை வேறுபடுத்திக்காட்டிய ஒப்புவித்தலோடு கூடிய கிரியைகளை மீண்டும் செய்ய வேண்டும். இல்லையேல் எபேசு சபையின் **விளக்குத்தண்டை** அவர் **நீக்கி விடுவார்**, அதாவது, அந்தச் சபை செயல்படுவது முடிவுக்கு வந்துவிடும். அதனுடைய சாட்சி மறைந்துபோகும்.

2:6 அவர்கள் **நிக்கொலாய் மதத்தின் கிரியைகளை** வெறுத்த செயலைக் குறித்து மேலும் ஒரு பாராட்டு கூறப்பட்டுள்ளது. இந்த மனிதர்கள் யார் என்பதைக் குறித்து நாம் முடிவாய்ச் சொல்ல முடியாது. நிக்கொலாஸ் என்ற மதத் தலைவன் ஒருவனைப் பின்பற்றியவர்களை இது குறிக்கிறது என்று சிலர் கருதுகிறார்கள். "பொதுவான சபை உறுப்பினர்களை ஆளுதல்" என்பதே இச்சொல்லின் பொருள் என்று குறிப்பிட்டு, சபைக் குருமார்கள் முறையின் வளர்ச்சியை இது குறிக்கிறது என்று வேறு சிலர் கூறுகிறார்கள்.

2:7 தேவனுடைய வார்த்தையைக் கேட்கக் காதுள்ளவன், **ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக்** கேட்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறான்.

அடுத்ததாக, வெற்றி பெறுகிறவர்களுக்கு ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவனே ஜெயங்கொள்ளுகிறவன் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது (1 யோவான் 5:5), அதாவது மெய்யான விசுவாசியை இது குறிக்கிறது. உலகத்தின் சகலவித சோதனைகளையும் கவர்ச்சிகளையும் ஜெயிப்பதற்கான ஆற்றலை அவனுடைய விசுவாசமே தருகிறது. ஒவ்வொரு மடலிலும் இந்தச் சொல், அந்தந்தச் சபையின் நிலைப்பாட்டிற்கு ஏற்றவகையில், கூடுதல் பொருளைக் கொண்டிருக்கிறது. அவ்வகையில் எபேசு சபைக்கு எழுதப்பட்ட மடலில் ஜெயங்கொள்ளுகிறவன் என்பவன், தன்னுடைய ஆதி அன்பை இழந்து பின்னடைவு ஏற்பட்டவன் மனந்திரும்பி தன்னுடைய விசுவாசத்தின் உண்மையை வெளிப்படுத்துகிறவனாவான். அவ்வாறு வெற்றிபெற்றவர்கள் யாவரும் **தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பார்கள்.** அவர்கள் ஜெயங்கொள்ளுவதால் இரட்சிக்கப்படுகிறார்கள் என்பது இதன் பொருளன்று. அவர்களுடைய மனமாற்ற அனுபவம் மெய்யானது என்பதையே இந்த வெற்றிபெறுதல் மெய்ப்பிக்கிறது. கிருபையினாலே கிறிஸ்துவின்

மேல் விசுவாசத்தை வைப்பதால் மட்டுமே மனிதர் கள் இரட்சிக்கப்பட முடியும். இரட்சிக்கப்பட்டவர் கள் யாவரும் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப் பார்கள், அதாவது, அவர்கள் நித்திய ஜீவனுக் குள்ளாக அதனுடைய நிறைவான நிலையில் பரலோகத்தில் நுழைவார்கள்.

அப்போஸ்தலர் யாவரும் மரணம் அடைந்த பிறகு சபை இருந்த நிலையை விவரிப்பதாக எபேசு சபையின் மடல் பெரும்பாலும் கருதப்படுகிறது.

ஆ. சிமிர்னா சபைக்கு எழுதப்பட்ட மடல் (2:8-11)

2:8 சிமிர்னா என்னும் சொல் *வெள்ளைப் போளம்* அல்லது *கசப்பு* என்று பொருள்படும். இங்கே கிறிஸ்து தம்மை **முந்தினவரும் பிந்தி னவரும், மரித்தோரிலிருந்து பிழைத்தவரு மானவர்** என்று அறிமுகப்படுத்துகிறார். மரணத் தைச் சந்திக்க நேரிடுமோ என்று ஒவ்வொரு நாளும் அச்சுறுத்தப்படுகிறவர்களுக்கு முக்கிய மாக இந்த விவரம் ஆறுதல் தரக்கூடியதாக விளங்குகிறது.

2:9 பாடுகள் அனுபவிக்கிற தம்முடைய பரி சுத்தவான்களின் உபத்திரவங்களை முழுவது மாகத் தாம் அறிந்திருப்பதாகக் கர்த்தர் இங்கு சிறப்பான கனிவுடன் கூறுகிறார். அவர்களுடைய வெளித்தோற்றத்தில் வறுமையால் பீடிக்கப்பட்ட வர்களாகவும், ஆவிக்குரிய நிலையிலோ செல் வந்தர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். "தமது தலையைச் சாய்க்க இடமில்லாதவராக இருந்த வருக்கு மிக நெருக்கமாகவும் அவரைப் போல வும் இருப்பதென்பது சிறப்பான புகழ்ச்சிக்குரியது. நான் இதனைக் கற்றுக்கொண்டேன்: தம்முடைய வறிய ஊழியக்காரருக்கு இயேசு சிறப்பான முறை யில் கூட்டாளியாக இருக்கிறார்" என்று திருவாளர் சார்லஸ் ஸ்டேன்லி கூறினாற்போல இது இருக் கிறது.

சிமிர்னாவில் இருந்த பரிசுத்தவான்கள் யூதர் களால் மிகக் கடுமையான முறையில் தாக்கப்பட் டார்கள். எடுத்துக்காட்டாக, பாலிகார்ப் என்பார் இரத்த சாட்சியாகக் கொலை செய்யப்படுவதற்கு அந்த யூதர்கள் மிகுந்த வாஞ்சையோடு உதவி புரிய முன்வந்தார்கள் என்பதை வரலாற்றாசிரியர் கள் விவரிக்கிறார்கள். அவர்கள் யூதர் என்னும் நிலையில் தேவனுடைய மக்கள் என்று உரிமை கோரினார்கள், ஆனால் அவர்களுடைய தெய்வ நிந்தனையான நடத்தையின் மூலமாகத் தாங் கள் **சாத்தானின் கூட்டத்தார்** என்று வெளிப்படுத் தினார்கள்.

2:10 கிறிஸ்தவர்கள் விரைவில் சந்திக்கப் போகிற **பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப் படக்** கூடாது. அவர்களில் சிலர் கைதுசெய்யப் பட்டு, பத்துநாட்கள் உபத்திரவங்களாலே சோதிக் கப்படுவார்கள். கால அளவு எழுத்தின்படியான **பத்துநாட்களைக்** குறிக்கக் கூடும். கான்ஸ்டான் டைன் அரசனுக்கு முந்தைய பேரரசர்களின் காலத்தில் நடந்த பத்து வெவ்வேறு உபத்திரவங் களை அல்லது டையோகிளடியன் என்னும் அரசனுடைய நாட்களில் பத்து ஆண்டுகள் நடந்த உபத்திரவத்தை இது குறிக்கக் கூடும்.

விசுவாசிகள் **மரணபரியந்தம் உண்மையா யிருக்க** வேண்டுமென்று உற்சாகப்படுத்தப்பட் டார்கள். அவர்கள் கிறிஸ்துவின்மேல்கொண்ட விசுவாசத்தை மறுத்துக் கூறக்கூடாது, மரண மடையவும் விருப்பமாயிருக்க வேண்டும். தியாக மரணமடைபவர்கள் ஜீவ கிரீடத்தைப் பெறுவார் கள் என்று வாக்குரைக்கப்பட்டது.

2:11 மீண்டுமாக, கேட்பதற்கு விருப்பமுள்ள வர்கள் ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். வெற்றி பெறு பவர்களுக்கு **இரண்டாம் மரணத்திலிருந்து** விலக்கு வாக்குறுதி பண்ணப்பட்டுள்ளது. கெட்ட மனச்சாட்சியோடு இப்பூமியில் வாழ்வதைவிட நல்மனச்சாட்சியோடு விண்ணகம் செல்வதைத் தெரிந்துகொள்வதன்மூலம் தனது விசுவாசத்தை மெய்ப்பிக்கிறவனே இங்கு ஜெயங்கொள்ளுகிற வன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். அவன் இரண் டாம் மரணத்தால் பாதிக்கப்படமாட்டான். அந்த அழிவு எல்லா அவிசுவாசிகளுக்கும் உரியது (20:6,14).

இ. பெர்கமு சபைக்கு எழுதப்பட்ட மடல் (2:12-17)

2:12 பெர்கமு (பெர்கமோஸ் அல்லது பெர் கமம்) என்னும் சொல்லின் பொருள் *உயர்ந்த கோபுரம்* அல்லது முற்றிலும் மணமுடிக்கப்பட்ட என்பதாகும். இந்த மடல் கர்த்தரை இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் என்று அறிமுகப்படுத்துகிறது. சபையில் பொல்லாப்புச் செய்வோரை தேவன் நியாயந்தீர்க்கிறதற்குப் பயன்படுத்துவது தேவ வார்தையேயாகும் (எபி. 4:12; வெளி. 2:16 -ஆம் வசனத்தையும் காண்க).

2:13 பேரரசனை ஆராதிக்கக் கூடிய கள்ளக் குழுவுக்கு ஆசியா நாட்டின் தலைநகரம் பெர்கமு என்னும் நகரமாயிருந்தது. ஆகவேதான் இந்த இடம் **சாத்தானுடைய சிங்காசனம்** என்று அழைக் கப்பட்டுள்ளது. பிற சமயத்தாரால் சூழப்பட்டிருந்த

போதிலும், இந்தச் சபையானது கிறிஸ்துவுக்கு உண்மையோடு இருந்தது; கர்த்தராகிய இயேசுவை அறிக்கை செய்ததன் காரணமாக அந்தச் சபையின் அங்கத்தினர்களில் ஒருவராகிய **அந்திப்பாவை** அவர்கள் கொலை செய்த போதிலும் சபை உண்மையுள்ளதாயிருந்தது. பேரரசனைத் தொழுதுகொள்ள மறுத்ததன் காரணமாக மரணமடைந்த ஆசியாவைச் சேர்ந்த முதல் மனிதர் இவர்தான்.

2:14,15 ஆகிலும், தவறான கோட்பாடுகளைப் பின்பற்றிய மனிதர்களை சபையின் ஐக்கியத்தில் தொடர்ந்து இருக்கும்படி அனுமதித்ததன் காரணமாகக் கர்த்தர் சபையைக் கண்டிக்க வேண்டும். **பிலேயாமின் போதகத்தைக்** கைக்கொண்டவர்களும் **நிக்கொலாய் மதத்தினரும்** அங்கிருந்தார்கள். பிலேயாமின் போதகம் **விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளை** உண்பதையும் **வேசித்தனத்தையும்** அனுமதித்தது. கூலிக்காகப் பிரசங்கம் பண்ணுவதையும் அது குறிக்கிறது (எண். 22-25; 31).

நிக்கொலாய் மதம் எதுவென்று வரையறுத்துக் கூறப்படவில்லை. கிருபைக்குக் கீழ் இருப்பவர்கள் சிலைகளை வணங்கலாம், ஒழுக்கக்கேடாக நடந்து கொள்ளலாம் என்று கற்பிப்பவர்களே நிக்கொலாய் மதத்தினர் என்று வேத அறிஞர் பலர் கருதுகிறார்கள்.

முனைவர் C. I. ஸ்கோ.ீபீல்டு இந்த போதகத்தைச் சமயக் குருமார்கள் அமைப்பு முறையோடு இணைத்து, அதனுடைய வளர்ச்சியையே இது குறிக்கிறது என்கிறார்:

> சமயக்குருமார்கள் அல்லது பாதிரியார்கள் ஆகியோர் சாதாரண சபை உறுப்பினர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்னும் ஓர் அமைப்பு முறையையே தேவன் நிறுவியிருக்கிறார் என்று இந்த போதகம் கூறுகிறது. "நிக்கொ"(niko), ஜெயங்கொள்ளுகிறவர் அல்லது வெற்றி பெறுபவர் மற்றும் "லாவோஸ்" (Laos), மக்கள் ஆகிய இரண்டு கிரேக்கச் சொற்கள் இணைக்கப்பட்டே இந்தச் சொல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆசாரியரைக் காட்டிலும் சற்று குறைந்தவர் "சமயக்குருமார்" என்று கருதப்படுகிற ஒரு பிரிவினரைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் ஒன்றும் சொல்லப்படவில்லை. தேவனுடைய பிள்ளைகள் யாவரும் இந்தக் காலப்பாகுபாட்டில் "இராஜரிக ஆசாரியத்துவத்தைப்" பெற்றிருக்கிறார்கள் என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் காலத்துச் சபையில் சில வேலைகள் இருந்தன: மூப்பர்கள் (பிஷப்), உதவிக்காரர்கள்; வரங்கள் இருந்தன: அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர் மற்றும் போதகர் (எபே. 4:13). இவர்கள் மூப்பர்களாக அல்லது மூப்பர்களோ உதவிக்காரர்களோ அல்லாமலும் இருக்கலாம். ஆனால் அப்போஸ்தலருடைய பிந்தைய காலத்தில், சமய முறைமைகளை (ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி) மூப்பர்கள் மட்டுமே நடத்துவதற்கு உரிமை பெற்றவர்கள் என்னும் ஒழுங்கு புதியதாய்த் தோன்றியது; அவர்கள் தேவனுக்கும் மக்களுக்கும் இடையிலான தனி வகுப்பார் என்று தங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த மனிதர்களே நிக்கொலாய் மதத்தினர். எபேசு சபையின் காலத்தில் "கிரியைகள்" என்று சொல்லப்பட்ட விஷயம், இருநூறு ஆண்டுகள் கழித்து பெர்கமு சபையின் காலத்தில் அல்லது கான்ஸ்டான்டைன் காலத்தில் "கோட்பாடாக" (உபதேசம்) மாறிவிட்டது.[8]

2:16 விசுவாசிகள் **மனந்திரும்ப** வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு அவர்கள் செய்வார்களெனில், அவர்கள் நடுவிலிருந்து கள்ளப்போதகர்களை வெளியேற்றத் துணிவுகொள்வார்கள். இல்லையெனில் கர்த்தர் தாமே பொல்லாத மனிர்களோடு எதிர்த்துப் போராடுவார்.

2:17 கீழ்ப்படிதலுள்ள பரிசுத்தவான்கள் **ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்பார்கள்**. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு **மறைவான மன்னாவும் வெண்மையான குறிக்கல்லும்** கொடுக்கப்படும். பெர்கமு சபையிலிருந்த ஜெயங்கொள்ளுகிறவர் ஸ்தல சபையில் தவறான போதகம் கொடுக்கப்படுவதைப் பொறுத்துக்கொள்ள மறுத்த தேவனுடைய பிள்ளை என்பதில் ஐயமில்லை. ஆனால் **மறைவான மன்னாவும் வெண்மையான குறிக்கல்லும்** எவை?

கிறிஸ்துவுக்கு மாதிரியே மன்னா. சிலைகளுக்கு அர்ப்பணிக்கப்படும் உணவிற்கு முற்றிலும் முரண்பட்ட விண்ணக உணவையே இது குறிக்கிறது (வச. 14). "இங்கு பாடுகள் அனுபவித்தவர் என்று மகிமையில் அறியப்படுபவரோடு இனிமையும் இரகசியமுமான தொடர்பு கொண்டிருத்தலே" **மறைவான மன்னா** ஆகும். **வெண்**

மையான குறிக்கல் என்பது பல வழிகளில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. ஒரு சட்ட வழக்கில் குற்ற மற்றவர் என்று தீர்ப்பளிப்பதன் ஓர் அடையாளக் குறியே இது. ஒரு விளையாட்டுப் போட்டியில் கிடைக்கும் வெற்றியின் சின்னமாக இது இருந்தது. ஒரு விருந்தினருக்கு விருந்தோம்பல் புரிபவர் தெரிவிக்கிற வரவேற்பே இது. ஜெயங்கொள்ளுகிறவருக்குக் கர்த்தர் வழங்குகிற பரிசுப்பொருள், மேலும் தனிப்பட்ட வகையில் வெளிப்படுத்துகிற ஒப்புதல் இது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. புதிய நாமம் எனப்படுவது தேவனால் ஒப்புதல் அளிக்கப்படுதலையும் மகிமையின் பதவியையும் குறிப்பதாக ஆல்.்.போர்ட் கூறுகிறார்.

வரலாறு பூர்வமாக, கான்ஸ்டான்டைன் காலத்தைத் தொடர்ந்து உடனடியாகச் செயல்பட்டு வந்த சபையையே பெரும்பாலும் இது குறிக்கக் கூடும். அந்நாட்களில் சபையானது முழுமையாக அரசாங்கத்தோடு திருமணத்தில் இணைக்கப்படுவது போல இணைக்கப்பட்டுவிட்டது. ஆயிரக் கணக்கானோர் பெயரளவில் கிறிஸ்தவரானார்கள், சபையானது புறவினத்தாரின் முறைமைகளைத் தங்களுக்குள்ளாக வரவிட்டுவிட்டது.

ஈ. தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட மடல் (2:18-29)

2:18 தியத்தீரா என்னும் பெயர் *நிரந்தரமான பலி* அல்லது *தொடர்ச்சியான காணிக்கை* என்று பொருள்படும். இந்த மடலில் தேவகுமாரன் **அக்கினிஜ்வாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களும் உள்ளவராகக்** காட்சியளிக்கிறார். **கண்கள்** ஊடுருவிய பார்வையையும் வெண்கலம் போன்ற **பாதங்கள்** அச்சுறுத்துகிற நியாயத்தீர்ப்பையும் குறிக்கின்றன.

2:19 இந்தச் சபையானது பல வழிகளில் தனிச் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. **கிரியைகளிலும், அன்பிலும், ஊழியத்திலும், விசுவாசத்திலும்,** பொறுமையோடு சகிப்பதிலும் இது பின்தங்கி விடவில்லை. உண்மையில், இதனுடைய **கிரியைகள்** குறைந்து போவதற்கு மாறாக அளவில் அதிகரித்துக்கொண்டே இருந்தன.

2:20 ஆனால் தூய்மையற்ற கொள்கைகள் சபையில் பொறுத்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக ஒழுக்கக்கேடும் சிலைவணக்கமும் நடைமுறையில் இருந்தன. தன்னையே **தீர்க்கதரிசி** என்று சொல்லிக்கொண்ட **யேசபேல்**[9] என்னும் பெண், தேவனுடைய ஊழியக்காரர்களைப் பாவத்திற்குள் வழிநடத்த சபை இடங்கொடுத்திருக்கிறது. பழைய ஏற்பாட்டு யேசபேல் எவ்வாறு தேவனுடைய மக்கள் ஒழுக்கக்கேடு மற்றும் சிலை வணக்கம் ஆகிய பாவங்களைச் செய்யும்படி கெடுத்துப்போட்டிருந்தாளோ, அதுபோலவே இந்தப் பெண்ணும் கிறிஸ்தவர்கள் இந்தச் செயல்களைச் செய்தாலும் பாவமில்லை என்று கற்பித்து வந்தாள். ஒருவேளை தியத்தீரா வணிகச் சங்கத்தில் உறுப்பினராகச் சேரும்படி விசுவாசிகளை அவள் உற்சாகப்படுத்தியிருக்கக் கூடும். அந்த வணிகச்சங்கம் வணிகக் கடவுளை கொண்டிருந்தது போலும், மேலும் அவர்கள் **விக்கிரகங்களுக்குப் படைத்துக்** கொண்டாடுகிற விழாக்களில் பங்கேற்றிருப்பார்கள். சபையின் நோக்கங்களை இச்செயல்களின் மூலமாக முன்னேற்றமடையச் செய்யலாம் என்று கூறி, உலகத்தோடு ஒப்புரவு கொள்வதை அவள் நியாயப்படுத்தியிருப்பாள் என்பதில் ஐயமில்லை.

2:21-23 அவள் **மனந்திரும்ப** மறுத்ததன் காரணமாகக் கர்த்தர் அவளுக்கு இச்சையின் படுக்கைக்குப் பதிலாக உபத்திரவங்கள் நிறைந்த நோயின் **கட்டிலைக்** கொடுத்தார். அவளோடு **விபசாரம் செய்தவர்கள்** அவளைத் தள்ளிவிட்டு, அவளுடைய **கிரியைகளை** விட்டுத் தப்பித்துக் கொள்ளவில்லையென்றால், அவர்களும் **மிகுந்த உபத்திரவத்தின்** கட்டிலில் தள்ளப்படுவார்கள். அப்பொழுது கர்த்தர் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் மனிதர்களுடைய செயல்களுக்குத் தக்கதாக அவர் பிரதிபலன்களைத் தருவார் என்பதையும் எல்லாச் சபைகளும் அறியும். பெரும்பாலும் யேசபேல் என்னும் பெயருடைய தீர்க்கதரிசி தியத்தீரா சபையில் இருந்திருப்பாள் என்றே தோன்றுகிறது. ஆனால், உருவச் சிலைகளை வணங்குதல், மன்னிப்புச் சீட்டுகளை விற்பது, விபசாரம் போன்ற பாவங்களை மக்கள் செய்கிறபோது பாதிரிகள் அவற்றை மன்னிப்பது போன்றவற்றைக்கொண்ட தவறான சபை அமைப்பின் வளர்ச்சியையே இது குறிப்பதாக வேத மாணாக்கர் கருதுகிறார்கள்.

2:24,25 யேசபேலின் மர்மமான உபதேசங்களுக்கும் சடங்குகளுக்கும் அல்லது **சாத்தானின் ஆழங்கள்** என்று பெயர்பெற்ற கூட்டத்திற்கு உடன்படாத உண்மையுள்ள மீதியானவர்கள் **(இந்த போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும் .... அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்கள்)** அந்தச் சபையில் இருந்தார்கள். கிறிஸ்துவின் வருகைவரையிலும் சத்தியத்தைப் **பற்றிக்**

கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்தப் பாரமான பொறுப்பும் அவர்கள்மேல் சுமத்தப்படமாட்டாது.

2:26-28 மெய்யான கிறிஸ்தவக் **கிரியைகளை** உறுதியோடு கைக்கொண்டு வந்த உண்மையான விசுவாசியே தியத்தீரா சபையில் வெற்றிகொண்டவர். ஆயிரமாண்டு அரசாட்சியில் கிறிஸ்துவோடு ஆளுகைபுரியும் நிலையே அவருக்கான பரிசுப்பொருள். அந்த விசுவாசிக்கு **நாடுகளின்மேல் அதிகாரம் கொடுக்கப்படும், அவர் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவார்.** எல்லாப் பாவமும் கிளர்ச்சியும், கண்டிப்போடும் உடனடியாகவும் தண்டிக்கப்படும். ஜெயங்கொள்கிறவருக்கு **விடிவெள்ளி நட்சத்திரத்தைத்** தருவதாகக் கர்த்தர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே பிரகாசமுள்ள **விடிவெள்ளி நட்சத்திரம்** (22:16). சூரியன் உதிக்கும் முன்னர் விடிவெள்ளி நட்சத்திரம் தோன்றுவதுபோல, கிறிஸ்து இந்தப் பூமியை அரசாளுவதற்காக நீதியின் சூரியனாகத் தோன்றுவதற்கு முன்னர், அவர் தமது சபையை விண்ணகத்திற்கு எடுத்துச் செல்வதற்காக விடிவெள்ளி நட்சத்திரமாகத் தோன்றுவார் (1 தெச. 4:13-18; மல். 4:2). இவ்வாறாக, ஜெயங்கொள்ளுகிறவருக்கு, சபை எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு வாக்குரைக்கப்பட்டுள்ளது. அந்த விசுவாசி தனது கிரியையாலே இதனை சம்பாதிக்கவில்லை, மாறாக அவருடைய விசுவாசத்தின் உண்மைத் தன்மையை இது மெய்ப்பித்துக் காட்டுகிறது. உண்மையாகவே அவர் மனந்திரும்பியிருப்பதால் அவருக்கு **விடிவெள்ளி நட்சத்திரம்** கொடுக்கப்படும்.

2:29 இந்த மடலிலும் தொடர்ந்து வருகிற மூன்று மடல்களிலும் "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்னும் நூற்பா, வெற்றிபெறுபவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதியைத் தொடர்ந்து வருகிறது. ஆனால் முந்தின மடல்களில் இந்த நூற்பா வாக்குறுதிக்கு முன் சொல்லப்பட்டுள்ளது. இந்தத் தருணத்திலிருந்து ஜெயங்கொள்ளுகிறவர்கள் மட்டுமே **ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்க** செவிமடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உ. சர்தை சபைக்கு எழுதப்பட்ட மடல் (3:1-6)

3:1 சர்தை என்னும் சொல் தப்புகிறவர்கள் அல்லது புதுப்பித்தல் என்று பொருள்படும். தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் என்று கர்த்தர் தம்மை இங்கு வெளிப்படுத்துகிறார். சபைகளையும் அவற்றின் தூதர்களையும் அவர் தூய ஆவியானவரின் வல்லமையால் கட்டுப்படுத்தி நடத்துகிறார். சர்தை உயிரற்ற வெற்றறிக்கை செய்யும் சபையாயிருந்தது. கிறிஸ்தவ சபை என்னும் நன்மதிப்பை அது பெற்றிருந்த போதிலும், பெரும்பாலான நேரங்களில் பெயரளவிலும் உயிரோட்டமற்ற வகையிலும் வழக்கமாகச் செயல்பட்டு வந்தது. ஆவிக்குரிய வாழ்வில் அது வெள்ளமெனப் பெருகவில்லை. வியத்தகு தெய்வீகச் செயல்களால் அது சுடரொளி வீசவில்லை.

3:2,3 கர்த்தருக்கென்று மீதியாயிருந்த கொஞ்சத்தைப் புதிய பேரார்வமும் புதிய முயற்சியும் பெற்று உறுதியடையும்படி கர்த்தர் அழைக்கிறார், ஏனெனில் அந்தக் கொஞ்சமும் சாவின் அறிகுறிகளோடு காணப்பட்டது. அவ்வப்போது மக்கள் தேவனுக்கென்று திட்டங்களைத் தொடங்கினார்கள், ஆனால் அவற்றை நிறைவு செய்யவில்லை. அவர்கள் சத்தியம் என்னும் புனிதப் பெட்டகத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டுமென்றும், அவர்களது உயிரற்ற நிலையிலிருந்து மனந்திரும்பவேண்டுமென்றும் கிறிஸ்து அவர்களை எச்சரித்தார். அவர்கள் விழித்துக் கொள்ளவில்லை என்றால், அவர் எதிர்பாராவண்ணம் நியாயத்தீர்ப்பைச் செலுத்தும்படி வருவார்.

3:4 தங்களுடைய கிறிஸ்தவ சாட்சியை இழந்துபோகாத மீதியானவர்கள் சிலர் **சர்தையிலும்** இருந்தார்கள். தங்களுடைய **வஸ்திரங்களை** உலகப்பற்றினால் தீட்டுப்படுத்தாத விசுவாசிகள் **வெண்வஸ்திரம்** அணிந்தவர்களாகக் கிறிஸ்துவோடு **நடப்பார்கள்**.

3:5 தங்களுடைய நேர்மையான நடக்கையால் மெய்யான விசுவாசிகள் என்னும் முத்திரை பெற்றவர்களே வெற்றிபெற்றவர்கள். **வெண்வஸ்திரம்** அவர்களுடைய வாழ்க்கையின் நீதியைக் குறித்துப் பேசுகிறது. அவர்கள் ஐயத்திற்கிடமற்ற முறையில் மெய்யான கிறிஸ்தவர்களாக இருந்த காரணத்தால், அவர்களுடைய பெயர்கள் ஜீவ புத்தகத்திலிருந்து அழிக்கப்படா.

சரீரப்பிரகாரமாக உயிர் யாருக்கெல்லாம் கொடுக்கப்பட்டுள்ளதோ அவர்கள் அனைவருடைய பெயரும் ஜீவபுத்தகத்தில் இடம்பெற்றிருக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள். இந்தக் கருத்தின்படி, உண்மையாக மறுபடியும் பிறந்தவர்கள் என்பதைத் தங்களுடைய வாழ்க்கையின் மூலமாகக் காட்டியவர்களுடைய பெயர்கள் அந்தப்

புத்தகத்திலிருந்த அழிக்கப்படா, ஆனால் மற்ற வர்களுடைய பெயர்கள் அழிக்கப்படும்.

ஆவிக்குரிய வாழ்வைப் பெற்றவர்களுடைய பெயர்கள் அடங்கியதே இந்தப் புத்தகம் என்று வேறுசிலர் கருதுகிறார்கள். அவர்களுடைய பெயர்கள் அந்தப் புத்தகத்திலிருந்து அகற்றப் படா என்னும் வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, அவர்கள் தங்களுடைய இரட்சிப்பை இழந்து போக மாட்டார்கள். இந்தக் கருத்தின்படி, சிலருடைய பெயர்கள் அழிக்கப்படா என்பதன் காரணமாக மற்றவர்களுடைய பெயர்கள் அழிக் கப்படும் என்பது பொருளல்ல என்பதே இங்கு சொல்லப்படுகிற செய்தி.

திருமறை மாற்றமில்லாதபடி கிருபையினாலே இரட்சிப்பு உண்டாகிறது என்று கற்பிப்பதாலும், மெய்யான விசுவாசி நித்திய பாதுகாப்பைப் பெற்றி ருக்கிறான் என்று தெளிவாகக் கூறுவதாலும் (யோவான் 3:16; 5:24; 10:27-29), இந்த ஐந்தாம் வசனம் தேவனுடைய பிள்ளையானவன் இழந்து போக முடியும் என்று கூறுவதாகக் கருதுவதற்கு ஒரு வாய்ப்புமில்லை.

வெற்றிபெறுபவர்களுடைய பெயர்களைப் **பிதாவுக்கு முன்பாகவும்** அவருடைய விண்ண கத் **தூதர்களுக்கு முன்பாகவும்** அறிக்கை செய் யப்போவதாக நமது கர்த்தர் மேலும் ஒரு வாக் குறுதியைத் தந்திருக்கிறார்.

3:6 மீண்டும் பிறக்கிற அனுபவத்தைப் பெற்றி ராமல், சமய வெற்றறிக்கை செய்கிற மனிதர்கள் மீண்டும் இந்த தெய்வீக எச்சரிப்பைக் கேட்கும் படி அழைக்கப்படுகிறார்கள்.

சீர்திருத்தம் நிகழ்ந்ததற்குப் பிந்தைய காலத்தை, அதாவது சபையானது பெயரளவில், சடங்குகள் நிறைந்த, உலக மற்றும் அரசியல் பற்றோடு செயல்படுகிற அமைப்பாக விளங்கிய காலத்தைச் சர்தை சபை குறிப்பிடுவதாகக் கரு தப்படுகிறது. ஐரோப்பாவிலும் அமெரிக்கக் குடியிருப்புகளிலும் சீர்திருத்த சபைகள் இவ்வாறு விலகிச் சென்றதில் முதலிடத்தைப் பெற்றன.

ஊ. பிலதெல்பியா சபைக்கு எழுதப்பட்ட மடல் (3:7–13)

3:7 பிலதெல்பியா என்னும் சொல் *சகோதரர் மேல் செலுத்தும் அன்பு* என்று பொருள்படும். இந்தச் சபைக்குக் கர்த்தர் **பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக் குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாத படிக்குப் பூட்டுகிறவருமாகக்** காட்சி தருகிறார்.

இதனை, நீதியைச் செலுத்துகிற மற்றும் எதிர்த்துரைக்க முடியாத அதிகாரம் அவருக்கு இருந்தன என்னும் சொற்களாலும் விவரிக்கலாம்:

> யூத ஜெபாலயங்களாலும் புற சமயக் கூட்டத் தாராலும் மூடுவதற்கு அதிகாரமற்ற திறந்த கதவு எனப்படுவது, கேட்பவர்கள் அனைவருக்கும் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதற்கான தேவன் தந்த வாய்ப்பாகும். தாவீதின் திறவுகோல் எனப் படுவது, கதவுகளைத் திறப்பதிலும், வாய்களை மூடுவதிலும் தேவனுடைய முழு நிறைவான இறை யாண்மையைச் சுட்டிக்காட்டும் பழைய ஏற் பாட்டு மறைமுகக் குறிப்பாகும். ஏசாயா 22:22 –ஆம் வசனத்தைக் காண்க.[10]

3:8 பிலதெல்பியாவில் இருந்த சபை கர்த்தரி டத்திலிருந்து புகழுரையை மட்டுமே பெற்றது. விசுவாசிகள் உண்மையோடு இருந்தார்கள். அவர்கள் நற்கிரியைகளைச் செய்வதற்கு பேரார் வம் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சொந்த மானிட பலவீனத்தில், அவர்கள் கர்த்த ரிடத்தில் நம்பிக்கையோடு இருந்தார்கள். இதன் விளைவாக, சத்தியத்தின்படி அவர்கள் தங்களு டைய வாழ்க்கையை நடத்தவும், அந்தச் சத்தி யத்தை அவர்களால் பாதுகாக்கவும் முடிந்தது. அவர்கள் கிறிஸ்துவின் திருப்பெயரை **மறு தலிக்கவில்லை**. ஆகவே, ஒருவராலும் **பூட்ட முடியாத** வாய்ப்பு என்னும் திறந்த கதவை அவர் களுக்கு முன்பாக அவர் **திறந்துவைப்பார்**.

3:9 தாங்கள் யூதர்கள் என்று பறைசாற்றிக் கொண்ட மனிதர்கள் விசுவாசிகளைக் கடுமை யாக எதிர்த்தார்கள், ஆனாலும் அவர்கள் அந்த எளிய விசுவாசிகளுக்கு முன் தாழ்த்தப்படுவார் கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்று உரிமை கொண்டாடியவர்கள், உண்மை யில் **சாத்தானுடைய கூட்டத்தார்** ஆவார்கள். அவர்களால் இழிவுபடுத்தப்பட்ட கிறிஸ்தவர்களே உண்மையில் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்று அவர்கள் ஒப்புதல் அறிக்கை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுவார்கள்.

3:10 பிலதெல்பியா விசுவாசிகள் பிற மனிதர் களுக்கு முன்பாக தேவனுடைய சத்தியத்தின்படி வாழ்ந்து அவற்றைக் கைக்கொண்டதால், **பூமி யில் குடியிருக்கிறவர்களுக்கு வரப்போகிற சோதனைக் காலத்திலிருந்து** கர்த்தர் அவர்

களைக் **காப்பார்**. இது 6 முதல் 19 -ஆம் அதிகாரம் வரையிலும் விவரித்துக் கூறப்பட்டுள்ள உபத்திர வத்திலிருந்து பெறுகிற விலக்கைக் குறித்த வாக்குறுதியாகும். அவர்கள் **சோதனைக் காலத்தில்** காக்கப்படுவார்கள் என்பதைக் கவனி யுங்கள். அதாவது அந்தக் காலம் முழுவதும் காக் கப்படுவார்கள். மேலும் அந்தக் காலத்தின் ஊடாக அல்ல, அந்தக் காலத்திற்குப் புறம்பே (கிரேக்கம், ek) காக்கப்படுவார்கள்.

"பூமியில் குடியிருக்கிறவர்கள்" என்னும் சொற்றொடர் ஒரு குறிப்பிட்ட பொருளைத் தரும் கலைச் சொற்றொடர் ஆகும். இதன் பொருள் இந்தப் பூமியைத் தங்களுடைய வீடாக்கிக் கொண்டவர்கள் என்பதாகும். "இம்மையில் தங் கள் பங்கைப் பெற்றிருக்கிற உலக மக்கள்"(சங். 17:14).

3:11 பரிசுத்தவான்கள் பொறுமையோடு சகித்திருப்பதற்கான தூண்டுகோலாகக் கிறிஸ்து வின் வருகை அவர்களுக்கு முன் வைக்கப்பட்டி ருக்கிறது. வெற்றிவீரருக்கான **கிரீடம்** மிக அரு கில் இருக்கும் வேளையில் ஒருவரும் அதைப் பறித்துச் செல்லாதபடி அவர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

3:12 தேவனுடைய உட்புற பரிசுத்தஸ்தலத் தில் ஜெயங்கொள்ளுகிறவர் **தூணாக** நிறுத்தப் படுவார். இதன் பொருள் எதுவாயினும், வலிமை, கனம், நிலையான பாதுகாப்பு ஆகிய சிந்தனை களை இது கொண்டிருக்கிறது என்பது நிச்சயம். அவர் இந்தப் பாதுகாப்பும் மகிழ்ச்சியும் நிறைந்த இடத்தைவிட்டு ஒருபோதும் செல்லமாட்டார். ஜெயங்கொள்ளுகிறவர்மேல் மூன்று பெயர்கள் எழுதப்பட்டிருக்கும்: **தேவனுடைய நாமம், தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிற புதிய எருசலேமின் நாமம்,** கர்த்தராகிய இயேசுவின் **புதிய நாமம்**. இவ்வாறாக இந்த மூன்றுக்கும் சொந்தமானவர் என்று அவர் அறியப்படுவார்.

3:13 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லி யிருக்கிற இந்தச் செய்தியை **கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்**.

பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்ப தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நற்செய்தி நற்பணியின் எழுச்சி மிகப்பெரிய அளவில் தோன் றியது. பிலதெல்பியா சபை இதற்கோர் அடை யாளமாக அவ்வப்போது எடுத்துக்கொள்ளப்படு கிறது. இந்த எழுச்சியின்போது திருச்சபை, கிறிஸ்துவின் வருகை மற்றும் உலகம் முழுவதும் நற்செய்தியைப் பரப்புதல் ஆகியவை பற்றிய சத்தியம் மீண்டும் உயிர்பெற்றது. திருமறைக் கோட்பாடுகளைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் இந்தக் காலத்தில் புத்துயிர் பெற்ற போதிலும், பிரமாணம் சடங்குகள் பகுத்தறிவுக் கோட்பாடு ஆகியவற் றின் மூலமாகச் சபையைப் புளிப்பாக்க வேண்டும் என்று சாத்தான் தீர்மானமான முடிவுடன் செயல் பட்டான்.

எ. லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்ட மடல் [3:14-22]

3:14 லவோதிக்கேயா என்னும் சொல் *மக்க ளாட்சி* அல்லது *மக்களின் நியாயத்தீர்ப்பு* என்று பொருள்படும். கர்த்தராகிய இயேசு தம் மைக் குறித்து **உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமா யிருக்கிற ஆமென் என்பவர்** என்று கூறுகிறார். **ஆமென்** என்னும் நிலையில் உண்மைத்தன்மை சத்தியம் ஆகியவற்றிற்கு உருவாகவும், தேவ னுடைய வாக்குறுதிகளுக்கு உறுதிதருகிறவராக வும் அவற்றை நிறைவேற்றுபவராகவும் அவர் திகழ்கிறார். அவரே **தேவனுடைய சிருஷ்டி யைத்** தோற்றுவித்தவர், அதாவது ஆவிக்குரி யவை, பருப்பொருள் சார்ந்தவை இரண்டையும் தோற்றுவித்தவர் ஆவார். **"தேவனுடைய சிருஷ் டிக்கு ஆதியுமானவர்"** என்னும் சொற்றொடர், படைக்கப்பட்டவற்றில் முதலாவது நபர் என்னும் பொருளைத் தருகிறதில்லை. அவர் ஒருபோதும் படைக்கப்பட்டவரல்லர். மாறாக, அவர் எல்லாப் படைப்பையும் தொடங்கியவர் என்றே இது பொருள்படும். அவருக்கு ஒரு தொடக்கம் இருந் தது என்று இந்த வசனம் கூறவில்லை. மாறாக அவரே **ஆதியுமானவர்** என்றே சொல்லுகிறது. **தேவனுடைய சிருஷ்டிக்கு** அவரே மூல ஆதார மானவர். அவர் எல்லாப் படைப்புக்கும் முந்தின பேறுமானவர்.

3:15-17 லவோதிக்கேயாவில் இருந்த சபை குளிருமின்றி அனலுமின்றி இருந்தது. அது நோயுறும் நிலையில் நலிந்து **வெதுவெதுப்பா யிருந்தது**. அது அக்கறையின்றியோ பேரார்வத் துடனோ ஏதோ ஒன்றைத் தீவிரமாய்ச் சார்ந்திருந் தால் நலமாயிருந்திருக்கும் என்றே கர்த்தர் எண்ணினார். ஆனால் அது அவ்வாறில்லை. அது தேவனுடைய சபை என்று மனிதர்கள் நம்பி ஏமாந்து போகுமளவிற்கு **வெதுவெதுப்பாயிருந் தது**. மகா உன்னதமானவருக்கு அருவருப்பு உண்டாக்கும் அளவிற்கு அது தெய்வீகக் காரி யங்களில் வெறுப்பூட்டுகிற வெதுவெதுப்பாயிருந் தது. மேலும் அந்தச் சபையானது பெருமை,

அறியாமை, தன்னம்பிக்கை மிகுந்த தன்மை, சுய மனநிறைவு மிகுந்த தன்மை ஆகிய பண்புகளால் அறியப்பட்டிருந்தது.

3:18 நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னைக் கர்த்தரிடத்திலிருந்து வாங்கிக்கொள்ளும்படி அந்த மக்களுக்கு ஆலோசனை தரப்பட்டது. இது பணமுமின்றி விலையுமின்றி இலவசமாக வாங்கப்பட்ட தெய்வீக நீதியைக் குறிப்பதாகத் தோன்றுகிறது (ஏசா. 55:1). ஆனாலும், இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது வைக்கப்பட்டுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் ஈவாக மட்டுமே கிடைக்கப்பெறும். அல்லது இது அக்கினியால் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது புகழ்ச்சி, கனம் மற்றும் மகிமையாக மலரும் விசுவாசத்தைக் குறிக்கக் கூடும் (1 பேதுரு 1:7).

மேலும் அந்த மக்கள் **வெண்வஸ்திரங்களை**, அதாவது, ஒவ்வொரு நாள் வாழ்க்கையிலும் நடைமுறை நீதியை வாங்கும்படி அறிவுறுத்தப் பட்டார்கள். மேலும் அவர்கள் **பார்வையடையும் படிக்கு** அவர்களுடைய **கண்களுக்குக் கலிக்கம் போடவேண்டும்**, அதாவது பரிசுத்த ஆவியானவரின் தெளிவுபடுத்துதலின் மூலமாக மெய்யான ஆவிக்குரிய பார்வையைப் பெறவேண்டும். லவோதிக்கேயா கொடுத்து வாங்கல் தொழில், நெசவு மற்றும் மருந்து உற்பத்தி, முக்கியமாகக் கண்களுக்கான கலிக்கம் ஆகியவற்றில் புகழ் பெற்றதாயிருந்த காரணத்தால் இந்த அறிவுரை மிகப் பொருத்தமானதாகவே இருக்கிறது.

3:19 இந்தச் சபையின்மீது கர்த்தர் வைத்திருந்த அன்பு, அவர் இதனைக் கடிந்துரைத்து சிட்சிக்கிற செயலிலிருந்தே தெரியவருகிறது. அவர் இதன்மேல் அக்கறை செலுத்தவில்லையென்றால், இந்தக் கவலை அவருக்கு இருந்திருக்காது. இந்தச் சபை **ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்ப வேண்டும்** என்று அவர் எதிர்பார்க்கிறார்.

3:20 "சபையின் காலம் முடிவடைகிற தறுவாயில் கிறிஸ்துவின் இடமும் மனப்பான்மையும்" என்று திருவாளர் ஸ்கோ.ீபீல்டு கூறியதுபோல் இம்மடலின் கடைசி வசனங்கள் இருக்கின்றன. அவர் வெற்றறிக்கை செய்கிற சபைக்கு வெளியே இருக்கிறார், அங்கிருந்து அவர் மிகுந்த மரியாதையுடன் கதவைத்தட்டி, விசுவாசத்தை மறுதலிக்கும் சபையை விட்டுவிட்டு அவரோடு ஐக்கியம் கொள்ளும்படி ஒவ்வொருவரையும் தனித்தனியே அழைக்கிறார்.

திருவாளர் ட்ரென்ச் விளக்கிக் கூறுகிறார்:

> ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த இருதய வீட்டின் எஜமானாக இருக்கிறான், அது அவனுடைய கோட்டையாக இருக்கிறது. அதனுடைய கதவுகளை அவன் திறக்க வேண்டும். அவன் அந்தக் கதவுகளைத் திறக்காமலிருக்க வருத்தத்திற்குரிய தனியுரிமையும் சலுகையும் பெற்றிருக்கிறான், இதன் மூலம் அவன் தனது சொந்த நற்பேற்றை எதிர்த்துக் கண்மூடித்தனமாகப் போராடுகிறான், வெறுக்கத்தக்க வெற்றி வீரனாய் இருக்கிறான்.[11]

3:21 ஜெயங்கொள்ளுகிறவர் கிறிஸ்துவின் சிங்காசனத்தின் மகிமையில் பங்கு பெறுகிற வராகவும், ஆயிரமாண்டுப் புவியரசில் அவரோடு ஆளுகை செய்கிறவராகவும் இருப்பார். தாழ்மையிலும், நிராகரிப்பிலும், பாடுகளிலும் அவரைப் பின்பற்றுவோர் மகிமையிலும் அவரைப் பின்பற்றுவார்கள்.

3:22 கடைசி முறையாக, ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கும்படியான அறிவுரை செவிமடுப் போருக்கு வழங்கப்படுகிறது.

வெளிப்படுத்தின விசேஷத்திற்கு என்ன விளக்கத்தை நாம் ஏற்றுக்கொண்டாலும், நாம் வாழ்கிற இந்தக் காலத்துச் சபையை லவோதிக்கேயா சபை படவுருவில் காட்டுகிறது என்பதை மறுத்துக் கூற முடியாது. ஆத்துமாக்கள் நற்செய்தியின்றி மரணமடைந்து கொண்டிருக்கிற அதே வேளையில் எங்கும் சுகபோக வாழ்வு பெருகிக்கொண்டிருக்கிறது. விசுவாசிகள், சிலுவையைச் சுமப்பதற்குப் பதிலாக, கிரீடத்தை அணிந்து கொண்டிருக்கிறார்கள். நாம் கிறிஸ்துவோடு கொண்டிருக்கிற ஈடுபாட்டிற்கும் அதிகமாக விளையாட்டுகளிலும், அரசியலிலும் அல்லது தொலைக்காட்சிகளிலும் உணர்ச்சிபூர்வமாக ஏவுதல் பெற்றவர்களாக ஈடுபடுகிறோம். ஆவிக்குரிய தேவையைப் பற்றிய உணர்வோ, உண்மையான மறுமலர்ச்சியைப் பற்றிய விருப்பமோ இல்லை. நாம் நம்முடைய வாழ்க்கையின் சிறந்த பகுதியைத் தொழில் உலகத்திற்குச் செலவழித்துவிட்டு, எஞ்சிய வாழ்க்கையை இரட்சகரிடத்திற்குத் திருப்புகிறோம். சிறிது காலத்திற்குள் மண்ணுக்குத் திரும்பப் போகிற நம்முடைய சரீரங்களுக்காக எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறோம். நாம் கைவிடுவதற்குப் பதிலாகச் சேமித்து வைக்கிறோம். விண்ணகத்தில் செல்வத்தைச் சேர்த்துவைப்பதற்குப் பதி

லாக பூமியில் சேர்த்து வைக்கிறோம். "தேவனுடைய மக்களுக்கு மிகுதியானது என்று எதுவுமில்லை. என்னை நானே கவனித்துக்கொள்ளவில்லை என்றால் வேறு யார் கவனித்துக்கொள்வார்? நாம் இந்த உலகத்தில் முன்னேறிச் செல்வோம், பின்னர் வேறு வேலையில்லையென்றால் அந்த நாட்களைக் கர்த்தருக்காகச் செலவிடுவோம்" என்பதே பொதுவான மனப்பான்மையாக இருக்கிறது. கிறிஸ்துவின் வருகைக்கு முந்தைய காலத்தில் நம்முடைய மனப்பான்மை இப்படி இருக்கிறது.

3. இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை [அதி. 4-22]

வெளிப்படுத்தின விசேஷத்தின் மூன்றாவது பெரும் பிரிவுக்கு நாம் இப்பொழுது வந்திருக்கிறோம். அப்போஸ்தலருடைய காலம் முதல் திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும் காலம் வரையிலான வரலாற்றை முதல் மூன்று அதிகாரங்களும் விவரிக்கின்றன. இந்த அதிகாரம் முதல் இனிமேல் நிகழவிருப்பவை என்பதே ஆய்வுப் பொருளாகும்.

3 மற்றும் 4 ஆகிய அதிகாரங்களுக்கிடையில் ஒரு குறிப்பிட்ட இடைவேளை இருக்கிறது. இது முதல் இந்த பூமியில் சபை இருப்பதற்கான எந்தக் குறிப்பும் இடம்பெறவில்லை. அவ்வாறெனில் அதற்கு என்ன நடந்தது? மூன்றாவது அதிகாரத்தின் முடிவில் அது கர்த்தரால் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது என்று நாம் கருதுகிறோம்.

பரிசுத்தவான்கள் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, கர்த்தர் இஸ்ரவேல் நாட்டுடன் தமக்குள்ள தொடர்பை மீண்டும் புதுப்பிப்பார். அதன் பிறகு உபத்திரவ காலம் தொடங்கும். யூத மக்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ளாததைக் குறித்துக் கர்த்தர் அவர்களோடு ஏழு ஆண்டுகள் ஈடுபடுவார். அந்த உபத்திரவ காலத்தில் கிறிஸ்துவினிடமாய்த் திரும்புகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் பூமியில் நிறுவப்படும் மகிமை நிறைந்த அரசிற்குள்ளாகப் புகுவார்கள். அவரை ஏற்க மறுப்பவர்கள் அழிக்கப்படுவார்கள்.

உபத்திரவ காலத்தின் தொடக்கத்தில் அதிக எண்ணிக்கையில் யூதர்கள் இசுரவேல் நாட்டிற்குத் திரும்புவார்கள் (எசே. 36:24,25). ரோம உலக அதிகாரம் இஸ்ரவேலர் சுதந்தரமாக ஆராதனை செய்வதற்கான உறுதிமொழியைக் கொடுத்து, அவர்களோடு ஒப்பந்தம் செய்துகொள்ளும் (தானி. 9:27). உண்மையில், முதல் மூன்றரை ஆண்டுகள் உபத்திரவம் கடுமையற்றதாகவே இருக்கும். இந்த ஆண்டுகளைக் குறித்துக் கர்த்தராகிய இயேசு மத்தேயு 24:4-14 ஆகிய வசனங்களில் விவரித்துக் கூறியுள்ளார்.

உபத்திரவ காலத்தின் மத்தியில், எருசலேம் ஆலயத்தில் உருவச் சிலை ஒன்று நிறுவப்பட்டு, மனிதர்கள் யாவரும் அதைத் தொழுதுகொள்ள வேண்டும். இல்லையேல் கொல்லப்படுவார்கள் என்னும் கட்டளை பிறப்பிக்கப்படும் (மத். 24:15). இது மகா உபத்திரவத்தின் தொடக்கத்தின் அறிகுறி, யாக்கோபின் உபத்திரவ காலம். உலக முண்டானது முதல் இதுவரைக்கும் நிகழ்ந்திராததும், இதற்குப் பின்னர் இதுபோன்று நிகழாது என்பதுமான மிகுந்த உபத்திரவமே அது (மத். 24:21).

உபத்திரவத்தின் தொடக்கத்தை நான்காவது அதிகாரம் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. தேவனுடைய மகிமையின் காட்சி, இந்த முதல் காட்சி விண்ணகத்தில் நிகழ்கிறது. எதிர்காலத்தைக் குறித்துத் தமது தீர்க்கதரிசிகள் முன்னுரைப்பதற்கு முன் கர்த்தர் அவ்வப்போது தமது மகிமையைக் காட்சியாக அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் (ஏசா. 6; எசே. 1). திருச்சபையின் எதிர்கால வரலாற்றை எழுதும்படி யோவான் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர், அவர் கிறிஸ்துவின் மகிமையைக் கண்டார். விசுவாசிக்காத இஸ்ரவேல் மற்றும் புறவினத்தார் மேல் நியாயத் தீர்ப்புகள் ஊற்றப்படுவதைக் குறித்து அவர் கற்றுக்கொள்வதற்கு முன்னர், அவருக்கு இப்பொழுது தேவனுடைய தரிசனம் அருளப்படுகிறது.

அ. தேவ அரியணையைக் குறித்த காட்சி [அதி. 4]

4:1 யோவானை விண்ணகத்திற்கு அழைக்கிற சத்தம், கிறிஸ்துவின் சத்தம் (10 முதல் 20 வரையிலான வசனங்களோடு ஒப்பிட்டுக் காண்க). விண்ணகத்திற்குள்ளாக யோவான் நுழைகிற நிகழ்ச்சி, திருச்சபையானது கர்த்தரோடு இருக்கும்படி விண்ணக வீட்டிற்கு இந்தச் சமயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சிக்கு ஒரு சித்திரமாக இருக்கிறது என்று வேத மாணாக்கர் பலர் கருதுகிறார்கள் (1 தெச. 4:13-18; 1 கொரி. 15:51-53). **இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளைக் காண்பிக்கப்** போவதாகக் கர்த்தர் யோவானுக்கு வாக்குறுதி தருகிறார். இந்தச் சொற்கள் 1:19 -ஆம் வசனத்தின் பின்பகுதிக்கு

ஒத்திருக்கிறது; அந்த வசனம் இந்த நூலின் பொருட்சுருக்கமாகப் பயன்படுத்தப்படுவதை இது உறுதிப்படுத்துகிறது.

4:2,3 பரிசுத்த ஆவியானவர் தனிச்சிறந்த வகையில் யோவானைத் தமது ஆதிக்கத்திற் குள்ளாக எடுத்துக்கொள்கிறார். நித்திய தேவன் தமது அரியணையில் மகத்துவத்தோடும் பிர காசத்தோடும் வீற்றிருக்கிறதை யோவான் உடன டியாகக் காண்கிறார்.

"வீற்றிருந்தவர்" என்னும் சொல்லைப் பெரும் பான்மைப் பிரதிக்கு ஏற்றபடி சிலர் விட்டுவிடும் போது **வச்சிரக்கல், பதுமராகம்** ஆகியவை கர்த்தரைக் குறிப்பதற்கு மாறாக, அரியணையை விவரிப்பதாக அமைகின்றன. ஆயினும் இந்த விலைமதிப்புள்ள கற்கள் கர்த்தரை வருணிப்ப தாகவும் இருக்கின்றன. பிரதான ஆசாரியனின் மார்ப்பதக்கத்தில் பதிக்கப்பட்டிருந்த வச்சிரக்கல், யாக்கோபின் முதல் மகனாகிய ரூபனையும் பதும ராகம் அவனுடைய கடைசி மகனாகிய பென்ய மீனையும் குறிப்பதாக விளங்கின. ரூபன் என்னும் பெயரின் பொருள் "இதோ, ஒரு மகன்" என்பதா கும். இவ்விரண்டு கற்களும் மற்ற கற்கள் அனைத் தும் உட்பட தேவனுடைய மக்கள் யாவரையும் படவுருவில் வரைந்து காட்டுவதாகவும், அரிய ணையில் வீற்றிருக்கிற நபரை இஸ்ரவேல் மக்க ளோடு தொடர்புடைய தேவனாகச் சித்திரிப்பதாக வும் திருவாளர் வால் வூர்ட் காண்கிறார்.[12]

வானவில், மரகதம் போன்று பச்சைநிற ஒளி பொருந்திய வளையமாகத் தோற்றமளிக்கிறது; நியாயத்தீர்ப்புகள் வருகிறதாயிருந்தாலும் தேவன் தமது உடன்படிக்கைகளை நிறைவேற்றுவார் என்பதற்கு அது ஓர் அடையாளமாக இருக்கிறது.

4:4 அங்கிருந்த இருபத்து நான்கு மூப்பர்கள் யாரென்று நம்மால் திட்டவட்டமாகக் கூறமுடி யாது. அவர்கள் தேவதூதர்கள் என்றும், பழைய, புதிய ஏற்பாட்டு மீட்கப்பட்ட மக்கள் என்றும், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் மட்டுமே என்றும் பலவிதங்களில் புரிந்துகொள்ளப்படுகிறார்கள். அவர்கள் முடிசூடி அரியணைகளில் அமர்ந்திருக் கிறார்கள் என்னும் உண்மை, அவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு பரிசுகள் பெற்றவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

4:5 இங்கு **சிங்காசனம்** என்று குறிப்பிடப்பட்டி ருப்பது, அச்சமேற்படுத்தும் **மின்னல்கள், இடி முழக்கங்கள், சத்தங்களோடுகூடிய** நியாயத் தீர்ப்பு என்பது தெளிவாய்த் தெரிகிறது. ஏழு **அக்கினி தீபங்கள்** பரிசுத்த ஆவியானவரை முழுமையான நிலையில் மகத்துவத்தோடு பிரதிபலிக்கின்றன. தேவனுடைய ஆவியானவர் ஒருவரே, ஆனால் ஏழு என்னும் எண்ணிக்கை நிறைவையும் முழுமையையும் குறிக்கிறது.

4:6 அரியணையானது, கடுமையான அமைதி யற்ற பூமியின் அலைக்கழிப்பினாலே எவ்விதத் திலும் குழப்பமடையாத இடத்தில் இருக்கிறது என்பதையே பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடல் என்னும் சொற்றொடர் குறிக்கிறது. அல்லது கொந்தளிக்கும் கடல் போன்ற பொல்லாங்கனின் எதிர்ப்பினால் அசைக்கமுடியாத நிலையை அது குறிக்கிறது எனலாம்.

அந்தச் **சிங்காசனத்தில் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்த நான்கு ஜீவன்கள்** இருந்தன. இது தெளிவையும், பரந்த விரிவையும் ஆழத்தையும் கொண்ட பார்வையைக் குறித்துப் பேசுகிறது.

4:7,8 அந்த **நான்கு ஜீவன்களும்** யாரென்பதை அறிவது கடினம். அவை தேவனைத் தொழுது கொண்டன என்பதால் படைக்கப்பட்டவை என்று நிச்சயமாகக் கூறலாம். அவை எசேக்கியேல் 10 - இல் காணப்படும் சேராபீன்கள் மற்றும் ஏசாயா 6 - இல் காணப்படும் கேருபீன்கள் ஆகிய இரண்டு மாக இருக்கலாம். ஏழாவது வசனம் கேருபீனை யும் எட்டாவது வசனம் சேராபீனையும் விவரிக்கின்றன. இந்த தேவதூதர்கள் தேவனு டைய சிங்காசனத்தின் பாதுகாவலர்கள் ஆவார் கள். கேருபீன்கள் எரிகிற நியாயத்தீர்ப்போடும், சேராபீன்கள் எரிகிற சுத்திகரிப்போடும் தொடர் புடையன என்று தோன்றுகிறது.

ஏழாவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ள விவ ரம் நற்செய்தி நூல்களில் கிறிஸ்து அறிமுகப்படுத் தப்பட்டிருப்பதற்கு இணையாகக் காணப்படு கிறது:

சிங்கம் - மத்தேயு - அரசர்;

காளை - மாற்கு - பணிவிடை செய்பவர்;

மனிதன் - லூக்கா - மனிதகுமாரன்;

கழுகு - யோவான் - தேவகுமாரன்.

தேவனுடைய பரிசுத்தத்தையும் நிலை பேறான தன்மையையும் பற்றி அந்த ஜீவன்கள் ஓயாமல் பாடுகின்றன. பல பிரதிகளில் பரிசுத்தர் என்னும் சொல் ஒன்பது முறை இடம்பெற்றுள்ளது. மூவொரு இறைமைக் கோட்பாட்டை இது வலி யுறுத்துகிறது.

4:9,10 சிங்காசனத்தில் வீற்றிருப்பவராகிய நிலைபேறானவரை **அந்த ஜீவன்கள்** தொழுது கொள்ளும் போதெல்லாம், **இருபத்து நான்கு மூப்பர்கள்** வணக்கமாய் விழுந்து நித்திய இறை வனைத் தொழுபவர்களாகத் **தங்களுடைய கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைக்கிறார்கள்.**

4:11 அவர்களுடைய தொழுகை, கர்த்தர் மகிமைக்கும் கனத்திற்கும் வல்லமைக்கும் பாத்திரர் என்பதைப் பிரகடனப்படுத்துகிறது. ஏனெனில் அவரே **சகலத்தையும் படைத்தவர்**, அவருடைய **சித்தத்தினாலே அவை உண்டா யிருக்கின்றன.**

தொடர்ந்து வருபனவற்றிற்கு இந்தக் காட்சி நம்மை ஆயத்தப்படுத்துகிறது. தேவன் தமது மகிமையின் அரியணையில் வீற்றிருந்து அண்ட சராசரத்தை ஆளுகிற சர்வவல்லமையுள்ள அரச ராகக் காணப்படுகிறார்; அங்கே தொழுது கொள்ளுகிற உயிரினங்கள் சூழ்ந்திருக்கின்றன, சடிதியில் இப்பூமியின்மேல் நியாயத்தீர்ப்பைச் செலுத்தவிருக்கிறவராக அவர் காணப்படுகிறார்.

ஆ. ஆட்டுக்குட்டியானவரும் ஏழு முத்திரை களால் முத்திரிக்கப்பட்ட சுருளும் [அதி. 5]

5:1 ஏழு முத்திரைகள் பதிக்கப்பட்டிருந்த ஒரு சுருளை தேவன் தமது கையில் வைத்திருக் கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது அரசை நிறுவுவதற்கு முன் இப்புவியின் மேல் விழப் போகிற நியாயத் தீர்ப்புகளின் விவரங்களை அது கொண்டிருக்கிறது.

5:2,3 ஒரு பலமுள்ள தூதன், அந்தப் புத்தகத் தைத் திறக்கவும் அதன் முத்திரைகளை ஒன்றன் பின் ஒன்றாக உடைக்கவும் பாத்திரவானாகிய ஒருவர் வரும்படியாக ஓர் அழைப்பினை விடுக் கிறான். வானத்திலும், நிலவுலகிலும், பாதாளத் திலும் அந்தப் புத்தகத்தைத் திறக்கவோ படிக் கவோ தகுதியானவர் **ஒருவரும்** இல்லை. தேவ தூதனோ, மனிதனோ, பிசாசோ நியாயத்தீர்ப் பைச் செலுத்துவதற்குரிய ஞானத்தையும் அறிவையும் பெறவில்லை.

5:4 ஒருவரும் அந்தப் புத்தகத்தைத் திறந்து வாசிக்கப் பாத்திரவானாகக் காணப்படாத தால் யோவான் தொடர்ந்து அழுதுகொண்டிருந் தார். அவ்வாறெனில் இந்த உலகத்தின் தவறுகள் யாவும் சரிசெய்யப்படாமல் போகுமா, நீதியின் நியாயம் நிலைநிறுத்தப்படாமற் போகுமா, தீயவர் தண்டிக்கப்படாமல் போவார்களா? இந்த பூமி தூய்மைப்படுத்தப்படுவது இன்றியமை யாதது, அது தடைபடுமானால் இறையரசு நிறுவப் படாது என்பதுதான் அதன் பொருளா?

5:5 யூதா கோத்திரத்துச் சிங்கமும், தாவீதின் வேருமானவர் (படைப்பாளரும், மூலமுதலும்) புத்தகத்தைத் திறக்கவும் முத்திரைகளை உடைத்து நியாயத்தீர்ப்புகளைச் செலுத்தவும் தகுதியானவர் ஆவார் என்னும் நற்செய்தியைக் கூறி **மூப்பர்களில் ஒருவர்** யோவானை ஆறுதல் படுத்தினார். இயேசு தம்முடைய எல்லைக்குட் படா ஞானத்தினாலும், தெய்வீக ஆணையினா லும் (யோவான் 5:22,27), தனிப்பட்ட மேம்பாட்டி னாலும், கல்வாரியில் அவர் நிறைவேற்றிய செய லினாலும் நியாயத்தீர்ப்பளிக்கத் தகுதி பெற்ற வராவார்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் நம்முடைய கர்த்தர் ஆட்டுக்குட்டியானவராகவும் சிங்கமாக வும் அறிமுகப்படுத்தப்படுகிறார். தேவ ஆட்டுக் குட்டியானவர் என்னும் நிலையில் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த பலியாக இருக்கிறார். சிங்கம் என்னும் நிலையில் அவர் நியாயாதி பதியாக, பகைவரைத் தண்டிக்கிறவராக இருக் கிறார். அவருடைய முதல் வருகையின்போது, அவர் ஆட்டுக்குட்டியாக இருந்தார். அவருடைய இரண்டாம் வருகையின்போது, அவர் சிங்கமாக விளங்குவார்.

5:6 யோவான் கண்டபோது, அவரது **சிங்கா சனம் நான்கு ஜீவன்களாலும் மூப்பர்களாலும்** சூழப்பட்டிருப்பதைக் கண்டார். மத்தியிலே ஒரு சிறிய ஆட்டுக்குட்டி அப்பொழுதுதான் அடிக்கப் பட்ட வண்ணமாயிருந்த நிலையில் நின்று கொண்டிருந்தது. அந்த ஆட்டுக்குட்டிக்கு **ஏழு கொம்புகள்** (சர்வ வல்லமை), **ஏழு கண்கள்** (சர்வ ஞானம்) இருந்தன. அவர் **தேவனுடைய ஏழு ஆவிகளைப்** பெற்றிருந்த நிலை, கர்த்த ராகிய இயேசுவுக்குப் பரிசுத்த ஆவி அளவில்லா மல் கொடுக்கப்பட்டிருந்ததை நமக்கு நினைவு படுத்துகிறது (யோவான் 3:34). **பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகள்** என்னும் விவரம் அவர் சர்வ வியாபி என்னும் நிலையை வெளிப்படுத்துகிறது.

5:7,8 தேவனும் பிதாவுமானவருடைய **வலது கரத்திலிருந்து ஆட்டுக்குட்டியானவர்** நியாயத் தீர்ப்பின் சுருளை வாங்கியவுடனே, **ஜீவன்களும் மூப்பர்களும்** அவருக்கு **முன்பாக வணக்கமாய் விழுந்தார்கள்**. ஒவ்வொருவரும் **சுரமண்டலத் தையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்**

களைக் குறிக்கும் **தூபவர்க்கத்தினால் நிறைந்த பொற்கலசங்களையும்** வைத்திருந்தார்கள். பெரும்பாலும் தங்களுடைய இரத்தத்திற்காகப் பழிவாங்கும்படி இரத்தசாட்சிகள் ஏறெடுத்த கதறுதல்களையே இது குறிக்கக்கூடும் (6:10). ஜீவன்களும் மூப்பர்களும் ஜெபங்களைக் கையாண்டபோதிலும், அவர்கள் அவற்றை தேவனிடத்தில் சமர்ப்பித்ததாகவோ அவற்றிற்குப் பதிலுரைத்ததில் பங்குவகித்ததாகவோ எந்தக் குறிப்பும் இல்லை.

5:9,10 அவர்களுடைய புதிய பாட்டில், ஆட்டுக்குட்டியானவர் நியாயத்தீர்ப்புச் செலுத்தப் பாத்திரராயிருக்கிறார் என்று ஆர்ப்பரித்தார்கள். அதனுடைய காரணம் அவர் சிலுவையில் நிறைவேற்றிய மீட்பின் கிரியையேயாகும். மீட்படைந்தோர் கூட்டத்தில் அவர்கள் தங்களையும் சேர்த்துக் கொண்டார்களா என்னும் கேள்வி எழுகிறது **(எங்களை தேவனுக்கென்று மீட்டுக்கொண்டீர்),** அல்லது சில பிரதிகளில் காணப்படுவதுபோல, "சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து மனிதர்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர்" என்று படிக்க வேண்டும்.[13]

மீட்பைத் தொடர்ந்து, விசுவாசிகள் அவரைத் தொழுதுகொள்ளும்படியும், அவருடைய சாட்சிகளாக விளங்கும்படியும், **பூமியில்** அவரோடு ஆயிரமாண்டு ஆட்சியில் பங்குபெறும்படியும் கர்த்தர் அவர்களை **ராஜாக்களும்**[14] **ஆசாரியர்களுமாக** ஆக்கினார்.

5:11 அந்தப் பாடல் குழுவினரோடு அநேக தூதர்கள் சேர்ந்துகொண்டார்கள். ஜீவன்களும் மூப்பர்களும் இணைந்த அந்தப் பாடல் குழு கோடாகோடி எண்ணிக்கை கொண்டதாயிருந்தது, யாவரும் பரிபூரண இணக்கம் உடையவர்களாகப் பாடினார்கள்.

5:12 அவர்களுடைய புகழுரை விசுவாசிகள் நித்தியம் முழுவதும் பாடுகிற பாடலாக விளங்கும், **"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்."**

வல்லமை - என்னுடைய வாழ்க்கை, சபை, உலகம், அண்டசராசரம் யாவற்றின் மேலும் வல்லமை;

ஐசுவரியம் - என்னுடைய வெள்ளி என்னுடைய பொன் யாவும்;

ஞானம் - என்னுடைய மிக நுண்ணிய அறிவாற்றல்;

பெலம் - அவருடைய பணிக்காக என்னுடைய உடற்பலம்;

கனம் - தனிப்பட்ட தூய்மையான விருப்பம் ஒவ்வொன்றும் என்னுடைய எல்லா வழிகளிலும் அவரை பெரிதுபடுத்துவதாக விளங்க வேண்டும்;

மகிமை - என்னுடைய வாழ்வு முழுவதும் அவரை மகிமைப்படுத்தும்படியே ஒப்புவிக்கப்பட வேண்டும்

ஸ்தோத்திரம் - அவருக்குத் துதி செலுத்தும் படியான எனது அனைத்து வலிமையும்.

5:13 இப்பொழுது அந்த இசையானது, இசைக்கருவிகளின் முழுமையான இசைவுடன் கூடிய ஆழ்ந்த பேரொலியாக உச்சக் குரலில் எழுந்தது. அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் இருக்கிற சிருஷ்டிகள் யாவும்... ஸ்தோத்திரத்தையும், கனத்தையும் மகிமையையும் வல்லமையையும் நித்தியமாய் ஏறெடுத்தார்கள்.

பிலிப்பியர் 2:10,11 ஆகிய வசனங்களுக்கு இந்த வசனம் இணையாயிருக்கிறது. இயேசுவின் நாமத்தில் ஒவ்வொரு முழங்காலும் முடங்கும்படியும், அவரே கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படியும் அந்த வசனம் வலியுறுத்துகிறது. எந்தக் காலம் என்று குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. ஆனால் இரட்சிக்கப்பட்டவர்கள் நிலைபேறான வாழ்வுக்கென்றும் இரட்சிக்கப்படாதவர்கள் நித்திய ஆக்கினைக்கென்றும் எழுப்பப்பட்ட பிறகு இது நிகழும் என்பதில் ஐயமேதுமில்லை. விசுவாசிகள் யாவரும் ஏற்கனவே இயேசுவே கர்த்தர் என்று அறிக்கை செய்திருப்பார்கள்; அதன் பிறகு அவிசுவாசிகள் அவரைக் கனப்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படுவார்கள். பிரபஞ்சத்தின் புகழுரை திருத்தந்தையையும் இறைமகனையும் நோக்கி எழுப்பப்படும் என்பது உறுதிபண்ணப்பட்ட உண்மையாகும்.

5:14 இறுதிக் காட்சி! **நான்கு ஜீவன்களும் "ஆமென்"** என்று சொல்ல, **மூப்பர்கள்** யாவரும் அரியணையில் வீற்றிருந்தவராகிய **சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற கர்த்தரை வணக்கமாய் விழுந்து தொழுதுகொண்டார்கள்.**

இ. ஆறு முத்திரைகள் உடைக்கப்படுதல் [அதி. 6]

6:1,2 முதல் முத்திரையை ஆட்டுக்குட்டியான வர் உடைத்தபோது, நான்கு ஜீவன்களில் ஒன்று, "நீ வந்துபார்"[15] என்று முழக்கமிட்டது. அதற்குப் பதிற்செயலாக ஒரு குதிரை வீரன், பெரும்பாலும் அந்திக்கிறிஸ்துவாகவே இருக்க வேண்டும், வில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு, ஜெயிக்கிறவனாக, தொடர்ந்து வெற்றி பெற்றுக்கொண்டே வந்தான். இன்றைய நாட்களில் ஒரு நாடு மற்றொரு நாட் டுடன் நேரடியாகப் போரில் ஈடுபடாமல் பகைமை கொண்டிருக்கும் நிலையை இது குறிக்கிறது. போர் மூளுமோ என்னும் அச்சத்தை வில் குறிக் கிறது. ஆனால் அங்கே அம்பைக் குறித்த ஏதொரு குறிப்பையும் நாம் காண்கிறதில்லை. ஒருவேளை ஏவுகணைகளைக் கொண்டு நடத் தப்படும் போரை இது குறிக்கக்கூடும். ஏனெனில் வில் தொலை தூரச் சண்டையில்தான் பயன்படுத் தப்படும். இந்தக் குதிரை வீரன் உண்மையான படி போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. இரண்டாவது முத்திரை உடைக்கப்படும்வரை பூமியிலிருந்து சமாதானம் நீக்கப்படாது.

6:3,4 இரண்டாவது குதிரை வீரனை வரும்படி **இரண்டாம் ஜீவன்** கட்டளையிட்டது. இந்தக் குதிரை வீரனோ, தீப்பிழம்பு போன்ற **சிவப்பு** நிறக் **குதிரையின்**மேல் **ஒரு பெரிய பட்டயத்தை** ஏந்தினவனாக வந்தான். பட்டயம் ஒருவரோ டொருவர் கைகலந்து சண்டை போடுவதற்குப் பயன்படுத்தும் ஆயுதமாகும். இவ்வாறாக, இரண் டாவது முத்திரை சேனைகளின் மேல் போர் தொடுத்து ஒருவரோடொருவர் சண்டையிடு வதைக் குறித்து எண்ணச் செய்கிறது. இரண் டாவது குதிரைவீரன் சமாதானத்தைப் பூமி யிலிருந்து எடுத்துப்போடுகிறான்.

6:5,6 மூன்றவாது ஜீவனுக்குக் கீழ்ப் படிந்தவனாக, ஒரு குதிரை வீரன் கறுப்புக் குதிரை ஒன்றின் மேல் ஏறி **ஒரு தராசைக்** கையில் பிடித்துக் கொண்டு வந்தான். இது பொதுவாகப் போரைத் தொடர்ந்து காணப்படும் பஞ்சத்தைக் குறிக்கிறது. அப்பொழுது **கோதுமையும் வாற் கோதுமையும்** அதிகமான விலைக்கு விற்கப் படுவதாக **நான்கு ஜீவன்களின்** நடுவிலிருந்து ஒரு சத்தம் அறிவித்தது. அவ்வாறு தானியங்கள் அளந்து கொடுக்கப்படுவதற்குத் தராசு பயன் படுத்தப்பட்டது பஞ்சத்திற்கு அடையாளமாகும். **எண்ணெயையும் திராட்சைரசத்தையும் சேதப் படுத்தாதே** என்னும் சொற்கள் கடினமானவை. இவை வறியவர்களுக்கான உணவு என்று சிலர் கூறுகிறார்கள். ஒருவேளை அவை முக்கியமான உணவுப் பொருட்களாக இருக்குமென்றால், ஜீவனைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அவற்றைப் பாதுகாத்து வைக்கவேண்டும். ஆயினும் இது செல்வந்தர்களுடைய ஆடம்பர வாழ்க்கைக்குத் தேவைான பொருட்களைக் குறிப்பதாகவே தோன்றுகிறது. வரலாறுபூர்வ மாகக் காணுமிடத்து, பஞ்சக் காலத்திலும்கூட செல்வந்தர்கள் வசதிகளைப் பெறுவார்கள்.

6:7,8 அடுத்து **மரணத்தையும் பாதாளத் தையும்** குதிரைவீரர்களாகக் கொண்ட **மங்கின நிறமுள்ள குதிரையை நான்காவது ஜீவன்** அழைத்தது. மரணம் சரீரத்தோடு தொடர்புடை யது, பாதாளம் ஆவியோடும் ஆத்துமாவோடும் தொடர்புடையது. போரினாலும், பஞ்சத்தினாலும், கொள்ளை நோயினாலும், கொடிய விலங்குகளா லும் பூமியின் காற்பங்கு மக்கள் அழிக்கப்பட்டார் கள். நவீன கால உயிர்க்கொல்லி மருந்துகள், அதிசயமான மருந்துகள் ஆகியவற்றின் மூல மாகக் கொள்ளை நோய்களைக் குறித்த அச்சம் இனியில்லை என்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் மனிதனைக் கொன்று போடக்கூடிய பெரிய நோய்கள் முழுவதுமாக அழிக்கப்பட வில்லை, மாறாக செயலற்ற நிலையில்தான் அவை இருக்கின்றன. அவை ஜெட் விமானம் போன்று உலகம் முழுவதும் மிக விரைவாகப் பரவக் கூடி யவை.

6:9 இப்பொழுது நாம் உபத்திரவ காலத்து முதல் இரத்த சாட்சிகளிடம் அறிமுகப்படுத்தப் படுகிறோம் (மத். 24:9). இராஜ்யத்தின் சுவி சேஷத்தை அறிவிக்கும்படி யூத விசுவாசிகள் செல்லும்போது, அவர்களுடைய **சாட்சியினிமித் தம் கொல்லப்படுவார்கள்.** அவர்களுடைய ஆத்துமாக்கள் விண்ணகத்தில் **பலிபீடத்தின்** கீழே இருக்கின்றன.

6:10 அவர்கள் ஆண்டவராகிய இறைவனி டம்[16], தங்களுடைய **இரத்தத்திற்காகப் பழிவாங் கும்படி** கூக்குரலிடுகிறார்கள். **"பூமியின்மேல் குடியிருக்கிறவர்கள்"** என்பவர்கள் நாம் ஏற் கனவே குறிப்பிட்டதுபோல பூமியைத் தங்களு டைய சொந்தவீடாகக் காண்கிற அவிசுவாசிகள் ஆவார்கள்.

6:11 இரத்த சாட்சிகளுக்கு வெள்ளை அங்கி கள் கொடுக்கப்படுகின்றன, அது அவர்களுடைய நீதிக்கு அடையாளமாகும். உபத்திரவகாலத்தில் இவ்வாறு இரத்த சாட்சிகளாக மரணமடை

வோரின் தொகை **நிறைவாகுமளவும்** காத்திருக்கும்படி அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

6:12,13 ஆறாம் முத்திரை உடைக்கப்படுகிற போது இயற்கையில் பெரும் சீற்றம் ஏற்படுகிறது. மிகப்பெரிய பூமியதிர்ச்சி நிலத்தையும் கடலையும் அதிரச் செய்தது, விண்மீன்கள் அடங்கிய வானங்களும் சீர்குலைந்துபோயின. **சூரியன்** இருளாயிற்று, **சந்திரன்** இரத்தம் போல சிவப்பாயிற்று. **அத்திமரம்** வன்மையாய் ஆட்டப்படுகிறபோது அதனுடைய பழுத்த **அத்திகள்** விழுவதுபோல **நட்சத்திரங்கள் பூமியில் விழுந்தன.**

6:14 ஒரு புத்தகச் சுருள் சுருட்டப்படுவதுபோல **வானம் விலகிப்போயிற்று. மலைகள் தீவுகள்** யாவும் பயங்கரமான நிலத்தடிப் பெயர்ச்சிகளின் காரணமாக இடம்பெயர்ந்து போயின.

6:15 சமுதாயத்தின் எல்லாப்படிநிலை மக்களும் அச்சத்தினால் பீடிக்கப்பட்டார்கள். தேவன் தமது கோபாக்கினையை ஊற்றுகிறார் என்பதை உணர்ந்தவர்களாக அவர்கள் **பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளிந்து கொள்கிறார்கள்.**

6:16,17 தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்தையும் எதிர்கொண்டு சகிப்பதைக் காட்டிலும் பர்வதங்களும் கன்மலைகளும் தங்கள்மேல் உருண்டு விழுந்து நசுங்கிப் போனால் நலம் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆட்டுக்குட்டியானவருடைய சீற்றத்திற்கு எதிராக எந்தவொரு கலகக் காரனும் நிற்க முடியாது என்பதை அவர்கள் காலம் கடந்தே புரிந்துகொண்டார்கள்.

ஈ. மகா உபத்திரவ காலத்தில் இரட்சிக்கப்படுகிறவர்கள் [அதி. 7]

ஆறு மற்றும் ஏழு ஆகிய முத்திரைகளுக்கு இடையில் இந்த ஏழாவது அதிகாரம் தோன்றி இரண்டு வகையான விசுவாசக் கூட்டத்தாரை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. ஆறாவது அதிகாரத்தின் முடிவில், "யார் நிலைநிற்கக் கூடும்?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கான விடையை இது தருகிறது. இந்த அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள மனிதர்கள் நிலைநிற்பார்கள், அதாவது அவர்கள் கிறிஸ்துவோடு ஆயிரமாண்டு ஆட்சிக்குள் உட்புகும்படி பாதுகாக்கப்படுவார்கள்.

7:1-4 பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்றுகொண்டு, நான்கு காற்றுகளையும் பிடித்து வைத்திருக்கும் காட்சி இவ்வுலகத்தின்மீது கடும்புயல் வீசப்போகிறது என்பதைக் குறிக்கிறது. ஆயினும், தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும் அந்தத் தூதர்கள் பயங்கரமான அழிவை உண்டாக்காதபடி காலதாமதம் செய்யும்படி கட்டளை பெற்றார்கள். **இசுரவேல்** நாட்டின் பன்னிரண்டு **கோத்திரங்களின்** ஒவ்வொன்றிலிருந்தும் பன்னிரண்டாயிரம் மனிதர்கள் முத்திரையிடப்படுகிறார்கள்.

7:5-8 இந்த 144000 மனிதர்களும் யூத விசுவாசிகள் என்பது தெளிவாய்த் தெரிகிறது. இவர்கள் 20 நூற்றாண்டுகளாகப் பிற சமய வழிபாடுகளைச் செய்துவந்த புறவினக் கூட்டத்தாரைச் சேர்ந்தவர்களல்லர். இந்த யூத விசுவாசிகள் உபத்திரவ காலத்தின் தொடக்கத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள். அவர்களுடைய நெற்றிகளில் போடப்பட்டிருந்த முத்திரை, அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும் அவர்கள் யாவரும் ஏழு ஆண்டுகள் உபத்திரவ காலத்தில் பாதுகாக்கப்படுவார்கள் என்னும் உறுதியையும் அது தருகிறது.

பட்டியலில் எப்பிராயீம், தாண் ஆகிய இரண்டு கோத்திரத்தாரும் இடம்பெறவில்லை. சிலை வணக்கம் செய்வதில் முன்னிலையில் இருந்ததால் அவர்களுடைய பெயர்கள் விடுபட்டன போலும். அந்திக் கிறிஸ்து தாண் கோத்திரத்தில் தோன்றுவான் என்று சிலர் கருதுகிறார்கள் (ஆதி. 49:17). யோசேப்பு மற்றும் லேவி கோத்திரங்கள் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றன. யோசேப்பு தனது குமாரனாகிய எப்பிராயீமின் இடத்தை எடுத்துக்கொண்டான் என்பதில் ஐயமில்லை.

7:9 இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் **சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து** வந்த புறவின மக்கள். அவர்கள் வெற்றியின் சின்னமாகிய **குருத்தோலைகளைக்** கைகளில் பிடித்துக்கொண்டு **வெள்ளை அங்கிகளைத் தரித்தவர்களாகச் சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு** முன்பாகவும் நின்றார்கள். (வெள்ளை அங்கி பரிசுத்தவான்களின் நீதியின் கிரியைகளைக் குறிக்கிறது, 19:8).

7:10 இவர்கள் கர்த்தராகிய இயேசுவின்மீது நம்பிக்கைகொண்டு மகா உபத்திரவ காலத்திலே இரட்சிக்கப்படுகிற புறவினத்தார் ஆவார்கள். இவர்கள் தங்களுடைய பாடலில் தாங்கள் பெற்ற **இரட்சிப்பு தேவனாலும் ஆட்டுக்குட்டியானவராலும்** உண்டாயிற்று என்று புகழ்ந்து ஆர்ப்பரித்தார்கள்.

7:11,12 தூதர்களும், மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் அந்தத் தொழுகையில் சேர்ந்து கொண்டார்கள்; அவ்வாறு அவர்கள் **தேவனைத்** தொழுதுகொண்ட போதிலும் அவர்களுடைய புகழ்ச்சியில் மீட்பைப் பற்றிய பொருள் இடம் பெற வில்லை. "நம்முடைய இரட்சிப்பு நமக்குக் கொண்டுவரும் மகிழ்ச்சியை தேவதூதர்களால் ஒருபோதும் அனுபவிக்க முடியாது" என்று ஒரு கவிஞர் எழுதியிருக்கிறார். ஆனாலும் அவர்கள் மீண்டும் மீண்டும் அவருடைய புகழ்ச்சியை எடுத்துரைத்து, ஏழு விதமான **கனத்திற்கு** அவர் பாத்திரர் என்று அறிவிக்கிறார்கள்.

7:13,14 மூப்பர்களில் ஒருவர் வெண்ணங்கி அணிந்த இந்த மக்கள் யார், இவர்கள் எங்கி ருந்து வந்தார்கள் என்று யோவானைக் கேட்ட போது, யோவான் தனக்குத் தெரியாது என்று கூறியதோடு, அவர்கள் யார் என்று தான் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் விருப்பத்தைக் கூறி னார். அதன் பிறகு, இவர்கள் மிகுந்த உபத்திர வத்திலிருந்து வந்தார்கள்; **இவர்கள் தங்கள் வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்** என்று அந்த மூப்பர் விளக்கமளித்தார். "நாம் முகமுகமாய் விவரிக்க இயலாத இரகசியத்துடன் நின்று, 'உமக்குத் தெரியும்' என்று சொல்லக் கூடு மானால் அது எவ்வளவு ஆறுதல் அளிப்பதா யிருக்கும்" என்கிறார் திருவாளர் F. B. மேயர்.

7:15 அந்த மூப்பர் தொடர்ந்து அவர்கள் அப் பொழுது இருந்த இடத்தையும் ஊழியத்தையும் குறித்து விவரித்தார். புறவின மக்கள் கூட்டம் அப்பொழுது குழுமியிருந்த இடம் விண்ணகமா அல்லது ஆயிரமாண்டு ஆட்சி நிகழும் மண்ணுல கமா என்பது குறித்து வேத மாணாக்கரிடையே கருத்து ஒற்றுமையில்லை. விவரிக்கப்பட்டுள்ள நற்பேறுகள் இரண்டு இடங்களுக்கும் பொருந் தும். இங்கு ஆயிரமாண்டு ஆட்சியே கூறப்பட்டுள் ளது என்று கருதுவோமானால், தேவ சிங்காசனம் அவருடைய ஆலயம் என்று குறிப்பிடப்பட்டுள் ளவை ராஜ்யத்தின் காலத்தில் எருசலேம் நகரில் நிறுவப்படும் ஆலயத்தையே குறிக்கிறது என எடுத்துக்கொள்ள வேண்டும் (எசே. 40-44).

இங்கு விவரிக்கப்பட்டுள்ள ஆசிர்வாதங் களைக் கவனியுங்கள்:

முழு நிறைவான நெருக்கம்: **ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிறார்கள்.**

முழு நிறைவான ஊழியம்: **இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக் கிறார்கள்.**

7:16 முழுநிறைவான மனநிறைவு: **இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடை வதுமில்லை.**

7:17 முழு நிறைவான பாதுகாப்பு: **சிங்காசனத் தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியான வரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவ தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்.**

முழுநிறைவான மகிழ்ச்சி: தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப் பார்.

உ. ஏழாவது முத்திரையும் ஏழு எக்காளங் களின் தொடக்கமும் (அதி. 8,9)

8:1 ஏழாவது அதிகாரத்தில் இடைப்பிறவரலா கிய ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது, அந்தப் பகுதி யில் இரண்டு வகையான உபத்திரவகாலப் பரி சுத்தவான்களைக் கண்டோம். அதனைத் தொடர்ந்து இப்பொழுது கடைசி முத்திரையாகிய ஏழாவது முத்திரையினிடமாய் நாம் வந்திருக் கிறோம். இது அரைமணி நேர அமைதியின் மூலமாக அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தப் பயபக்திக்குரிய மௌனம் இதுவரை காணாத கடுமையான நியாயத்தீர்ப்புகள் வெளிப்படு வதற்கு முன்னர் காணப்படுகிறது.

8:2 ஏழாவது முத்திரை உடைக்கப்பட்டபோது எந்தவொரு ஆக்கினையும் குறிப்பிடப்பட வில்லை. விவரம் ஏழு எக்காள நியாயத்தீர்ப்பு களை நோக்கி நேரடியாகச் செல்லுகிறது. ஏழா வது முத்திரை **ஏழு எக்காளங்களைக்** கொண்டி ருக்கிறது என்பதை நாம் இதிலிருந்து அறி கிறோம்.

8:3,4 இங்கு தூதன் என்று குறிப்பிடப்பட்டிருப் பது கர்த்தராகிய இயேசு என்றே பொதுவாக புரிந்துகொள்ளப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் அவர் கர்த்தருயை தூதனானவர் என்று குறிப் பிடப்பட்டுள்ளார் (ஆதி. 16:13; 31:11,13; நியா. 6:22; ஓசி. 12:3,4). அவர் மூலமாக **சகல பரிசுத்தவான் களுடைய** ஜெபங்களும் மேலே எழுகின்றன (எபே. 2:18). அந்த **ஜெபங்களோடு செலுத்து வற்கு** அவர் மிகுந்த **தூபவர்க்கத்தை** எடுத்துக் கொள்கிறார். தூபவர்க்கம் அவருடைய ஆளுமை மற்றும் அவருடைய செயல் ஆகியவற்றின் நறு மணத்தைக் குறிக்கிறது. அந்த ஜெபங்கள் திருத்

தந்தையாகிய இறைவனைச் சென்று சேரும் போது, அவை குறைவில்லாமலும் முழுநிறை வாகவும் பயன்விளைவிக்கிறவையாக இருக்கின் றன.

இந்தப் பகுதியில், பகைஞரைத் தண்டிக்கும் படி தேவனிடத்தில் முறையிடுகிற ஜெபங்கள் உபத்திரவ காலத்துப் பரிசுத்தவான்களிடத்தி லிருந்து எழுந்தவை. ஆனாலும் இந்த முறைமை எல்லா ஜெபங்களுக்கும் பொருந்தும்.

8:5 அவர்களுடைய ஜெபங்களுக்குப் பதிலாக, பெருந்தொனியோடு சிதறிவெடிக்கும் இடிமுழக்கங்களையும், மின்னல்களையும், பூமி யதிர்ச்சிகளையும் உண்டாக்கக் கூடிய எரிகிற நெருப்பைப் பூமியில் அந்தத் தூதன் எறிந்தான். "பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள் கோபாக் கினையாகப் பூமிக்குத் திரும்பின"[17] என்கிறார் திருவாளர் H. B. ஸ்வெடே. இவ்வாறாக ஏழு எக் காள நியாயத்தீர்ப்புகளும் இயற்கையின் கடுஞ் சீற்றங்களோடு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

8:6 இப்பொழுது நாம் உபத்திரவ காலத்தின் நடுப்பகுதிக்கு வந்திருக்கிறோம். இந்த எக்காள தண்டனைகள், கிறிஸ்து இந்தப் பூமிக்கு இறங்கி வந்து தமது பகைஞரை அழித்து தமது அரசை நிறுவத் தொடங்குகிற காலத்தை நோக்கி அழைத்துச் செல்லுகிறது. முதல் நான்கு தண்ட னைகளும் மனிதனுடைய இயற்கைச் சூழ்நிலை களைப் பாதிக்கக் கூடியவையாகவும், கடைசி மூன்றும் மனிதனையே தாக்கக்கூடியவையாக வும் காணப்படும். இந்தத் தண்டனைகளுக்கும் எகிப்து தேசத்தின்மேல் விழுந்த கொள்ளை நோய்களுக்கும் உள்ள ஒற்றுமையைப் பல விளக்கவுரையாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

8:7 முதலாம் தூதன் **எக்காளம் ஊதியபோது இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் ஊற்றப்பட்டு பூமியும் மரங்களும் பசும்புல்லும் மூன்றில் ஒரு பங்கு** எரிந்துபோயின. இதனை நாம் எழுத்தின்படி எடுத்துக்கொள்வதே சிறந்தது. ஏனெனில் மனிதன் தன்னுடைய உணவின் பெரும் பங்கை இந்த இடங்களிலிருந்துதான் பெறு கிறான், அவற்றில் பயங்கரமான பேரிழப்பு ஏற் படும்.

8:8,9 தீப்பிழம்புடன் கூடிய **மலைபோன்ற** எரிகிற **ஒன்று** கடலுக்குள் எறியப்பட்டது. அது கடலில் **மூன்றில் ஒரு** பங்கை **இரத்தமாக** மாற்றிவிட்டது. அதனால் கடல்வாழ் உயிரினங் களில் மூன்றில் ஒரு பங்கு அழிந்துபோயிற்று, மேலும் **கப்பல்களிலும் மூன்றில் ஒரு பங்கு** சேதமடைகிறது. இதன் காரணமாக உள்நாட்டி லிருந்து உணவுப் பொருட்களின் வருகை குறைந்து போவது மட்டுமின்றி தொலைதூரத் திலுள்ள நாடுகளிலிருந்து வருகிற உணவுப் பொருட்களின் அளவும் குறைந்துபோகும்.

8:10,11 மூன்றாவது எக்காள தொனி, எட்டி என்று அழைக்கப்படும் எரிந்து பிரகாசிக்கிற **நட்சத்திரம்** விழுவதைக் குறிக்கும் அடையாள மாயிருந்து உலக மக்களுக்குத் தேவையான **தண்ணீரின்** மூல ஆதாரத்தில் **மூன்றில் ஒரு பங் கைக் கசப்பாக்கி விடும்**. அந்தக் கசப்பான நீர் நச்சுத்தன்மையோடு இருந்தது என்பதில் ஐய மில்லை, ஏனெனில் மனிதரில் பலர் இறந்து போனார்கள். **எட்டி** என்பது என்னவென்பதை அறிவது கடினம். எக்காளம் தொனிக்கையில் புவி வாழ் மக்களுக்கு இந்த வசனங்கள் தெளிவாகும். தீர்க்கதரிசனங்களைக் குறித்துப் படிக்கையில், அவை உண்மையாகவே நிறைவேறும் வரை அவற்றில் பல விஷயங்கள் தெளிவற்றே இருக் கும் என்பதை நினைவிற்கொள்வது நலம்.

8:12 சூரியன், சந்திரன், நட்சத்திரம் ஆகி யவை தங்களுடைய இயல்பான வெளிச்சத்தில் மூன்றில் இரண்டு பங்கையே தரும் என்னும் அள விற்குச் சேதமடைந்துவிடும் என்று தோன்று கிறது. இந்த நான்காவது பேரிடர் எகிப்தில் ஏற்பட்ட இருளைப் பிரதிபலிக்கிறது.

8:13 பூமியில் குடியிருக்கிற மக்களுக்கு மூன்றத்தனையான **ஐயோ** என்று அறிவிக்கிற **ஒரு கழுகு** (தமிழில் **தூதன்**)[18] **வானத்தின் மத்தி யில் பறந்துவந்தது.** பூமியில் குடியிருக்கிற மக் கள் என்போர் முற்றிலும் உலகீய மனோபாவம் கொண்டவர்கள், பூமியைத் தங்களுடைய வீடாக் கிக் கொண்டவர்கள்; அவர்கள் மெய்யான விசு வாசிகள் அல்லர். இனி எஞ்சிய மூன்று சீற்றங் களும் ஐயோ என்று அறியப்படுகின்றன. ஏனெ னில் அவற்றின் விளைவு மனிதர்கள் மேல் மிகக் கொடியதாயிருக்கும்.

9:1,2 வானத்திலிருந்த விழுந்த நட்சத்திரம் வீழ்ந்துபோன தூதனாக இருக்கக்கூடும் அல்லது ஒருவேளை சாத்தானாகவும் இருக்கலாம். அவனி டம் **பாதாளக் குழியின்** (கிரேக்கம் - abyss) வாயி லின் **திறவுகோல்** இருந்தது. அதுவே பேய்களின் குடியிருப்பு. அவன் அந்த வாசலைத் திறந்த போது பெருஞ்சூளையிலிருந்து வருவதுபோல புகையானது அலை அலையாகப் பீறிட்டு வந்து இயற்கைச் சூழலை இருளாக்கிவிட்டது.

9:3,4 அந்தப் **புகையிலிருந்து தேள்** கொட்டினால் உண்டாகிற கடும் வேதனைக்கொப்பான வேதனை தரக்கூடிய **வெட்டுக்கிளிகள்** பெருங் கூட்டமாய் வந்தன. ஆனால் அவற்றின் **வல்லமை** கட்டுப்படுத்தப்பட்டது. பசுமையான தாவரங்களைச் **சேதப்படுத்த** அவை தடைசெய்யப்பட்டிருந்தன. **தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனிதர்கள்,** அதாவது அவிசுவாசிகள் மட்டுமே அவற்றால் தாக்கப்பட்டார்கள்.

9:5,6 அவை கொட்டுவதால் மரணம் ஏற்படாது, ஆனாலும் அவை தரும் **வேதனை ஐந்து மாதமளவும்** நீடிக்கும். அந்த வேதனை **மனிதன் சாவை** விரும்புமளவிற்குக் கொடுமையானதாயிருக்கும். ஆனால் அவர்களால் சாகமுடியாது. இந்த வெட்டுக்கிளிகள் பெரும்பாலும் பாதாளக் குழிக்குள் இருந்து வெளியே வந்த பேய்களாக இருக்கலாம், அவை விடுவிக்கப்பட்டபோது இரட்சிக்கப்படாத மக்களைப் பிடித்துக் கொண்டன போலும். பேய்களால் பிடிக்கப்பட்ட நிலை மிகக் கடுமையான சரீர வேதனையையும், மனதிற்குத் துயரத்தையும் உண்டாக்கும், மாற்கு 5:1-20 வரையிலான வசனங்களில் காணப்படும் லேகியோனுக்கு ஏற்பட்டது போலிருக்கும்.

9:7 அந்த வெட்டுக்கிளிகளைப் பற்றிய வருணனை வெற்றிபெறுதல் அடிமைப்படுத்துதல் ஆகியவற்றை நினைவுபடுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகள், அவை வெற்றி பெறும் சேனைகள். பொன்மயமான கிரீடங்களை அணிந்திருந்த அந்த வெட்டுக்கிளிகளுக்கு மனிதர்களுடைய வாழ்க்கையில் ஆட்சி செலுத்தும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. மனித முகத்தோடு தோற்றமளித்த அந்த வெட்டுக்கிளிகள் அறிவுத் திறம் பெற்ற உயிரினங்கள்.

9:8-10 பெண்களின் **கூந்தல்** போன்று கூந்தலைப் பெற்றிருந்த அந்த உயிரினம் கவர்ச்சி மிகுந்ததாயும், தவறு செய்வதற்குத் தூண்டக் கூடியதாகவும் இருந்தது. **சிங்கத்தின் பற்கள்** போல பற்களைக் கொண்டிருந்த அந்த உயிரினங்கள் மூர்க்கத்தனமாகவும் கொடுமை செய்யக்கூடியவையாகவும் காணப்பட்டன. அவை **இருப்புக்கவசங்களை** அணிந்திருந்ததால், அவற்றைத் தாக்கவோ அழிக்கவோ முடியவில்லை. அவற்றின் **சிறகுகள்** பேரிரைச்சலை உண்டுபண்ணின, அவை அச்சுறுத்தித் துணிவிழக்கச் செய்தன. **தேள்களின் வால்களைக்** கொண்டிருந்த அவை மனிதர்களுக்கு உடலிலும் மனதிலும் கடும் வேதனையைக் கொடுத்தன. **அவை ஐந்துமாதமளவும் மனிதரைச் சேதப்படுத்தின**, அதாவது மாற்றமில்லாத வேதனை தொடர்ந்தது.

9:11 அவைகளுக்கு ஒரு ராஜா இருந்தான், எபிரெய மொழியில் அவனுடைய பெயர் அபெத்தோன் (அழிவு), கிரேக்க மொழியில் அப்பொல்லியோன் (அழிப்பவன்). இது சாத்தானைக் குறிப்பதாகவே பொதுவாக அறியப்படுகிறது.

9:12 மூன்று ஆபத்துகளில் முதலாவது கடந்து போயிற்று. மிகவும் மோசமானது இனிவரப் போகிறது. சீற்றத்தின் கடுமை கூடிக்கொண்டே போகும்.

9:13-15 கொடுமைக்கு ஆளான தேவனுடைய மக்கள் ஏறெடுத்த மன்றாட்டுகளோடு தொடர்ந்து வருகிற தண்டனைகள் **தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடம்** என்னும் சொற்களால் தொடர்புபடுத்தப்படுகின்றன. **ஐபிராத்து என்னும் பெரிய நதியண்டையில் கட்டப்பட்டிருந்த நான்கு தூதர்களையும்** ஆறாவது எக்காளம் அவிழ்த்துவிட்டது. பெரும்பாலும் இந்த நான்கு தூதர்களும் பேய்களாகவே இருக்கக்கூடும், இவை குறிப்பிட்ட சமயத்தில் விரைந்துசென்று **மனிதரில் மூன்றில் ஒரு பங்கைக் கொல்லும்படி** ஆயத்தமாய் வைக்கப்பட்டிருந்தன.

9:16,17 அக்கினி நிறமும் நீல நிறமும் கந்தக நிறமுமான மார்க்கவசங்களை அணிந்த இருபதுகோடி[19] குதிரைவீரர்கள் அவர்களைத் தொடர்ந்து வந்தார்கள். அந்தக் குதிரைகளின் தலைகள் சிங்கங்களின் தலைகளைப் போல இருந்தன. அவற்றின் வாய்கள் **அக்கினி, புகை, கந்தகம்** ஆகியவற்றைக் கக்கின.

9:18,19 அக்கினி, புகை, கந்தகம் ஆகிய மூன்றும் **மனிதரில் மூன்றிலொருபங்கைக்** கொன்றுபோடும் வாதைகளாம். அந்தக் குதிரைகளின் வாயிலிருந்து புறப்படுபவை மனிதர்களைக் கொன்றுபோடுவது மட்டுமின்றி, **பாம்புகளுக்கு ஒப்பான** அவற்றின் **வால்கள்** காயங்களை ஏற்படுத்தின.

இந்தப் பகுதியில் விடை கிடைக்காத பல கேள்விகள் எழுகின்றன. 14 -ஆவது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு தூதர்கள், 7:1 -இல் சொல்லப்பட்டுள்ள அதே தூதர்கள்தானா? குதிரை வீரர்கள் உண்மையான மனிதர்களா அல்லது பேய்களா, நோய்களா அல்லது அழிவை

உண்டாக்கும் வேறு ஆற்றல்களா? **அக்கினி, புகை, கந்தகம்** என்னும் மூன்று வாதைகளும் எதைச் சித்திரிக்கின்றன?

குதிரைகளே மரணத்தை உண்டாக்கின, குதிரைவீரர்கள் அல்ல என்பதைக் கவனியுங்கள். "பிசாசின் மூலமாகத் தடைசெய்ய முடியாத படி கிழக்கிலிருந்து வருகிற தவறான நம்பிக்கையே" வல்லமை மிக்க குதிரை வீரர்களின் சேனை என்று ஆசிரியர் ஒருவர் கூறுகிறார். ஹாமில்டன் ஸ்மித் என்பார் கூறுகிறார்:

> "அவற்றின் வலிமை அவற்றின் வாய்" என்று குறிப்பிடப்பட்டிருப்பது, தவறான நம்பிக்கையை ஏற்படுத்தும் வண்ணம் அவை மனதை வஞ்சிக்கும் சொல்வன்மை மிக்க பேச்சைப் பேசும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனாலும் தவறான நம்பிக்கையை ஏற்படுத்தும் தந்திரத்தின் பின்னால் சாத்தானின் ஆற்றல் இருக்கிறது என்பதை அவற்றின் வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவை என்னும் கூற்று வெளிப்படுத்துகிறது.[20]

9:20,21 மூன்றில் இருபங்கு **மனிதர்கள் இந்த வாதைகளுக்குத்** தப்பித்துக்கொண்டாலும், அவர்கள் மனந்திரும்பவில்லை. மாறாக அவர்கள் பேய்களுக்கும், உயிரற்ற ஆற்றலற்ற கைகளால் செய்யப்பட்ட சிலைகளுக்கும் முன்பாகப் பணிந்துகொண்டார்கள். அவர்கள் **கொலை பாதகங்களையும், சூனியங்களையும்** (போதை மருந்துகளோடு தொடர்புடையவை[21]), **வேசித்தனங்களையும், களவுகளையும் விட்டு மனந்திரும்பவில்லை**. தண்டனையும் வேதனையும் ஒரு பாவியின் நடத்தையை மாற்றுவதில்லை, புதிய பிறப்பினால் மட்டுமே அதைச் செய்ய முடியும்.

ஊ. பலமுள்ள தூதனும் சிறு புஸ்தகமும் [அதி. 10]

10:1 இப்பொழுது, **பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வருவதை** யோவான் காண்கிறார். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அந்தத் தூதன் கர்த்தராகிய இயேசுவே என்று பலர் நம்பும்படியாக வழிநடத்துகின்றன. அவருடைய **சிரசின்மேல்** தேவனுடைய உடன்படிக்கையின் அடையாளமாகிய **வானவில் இருந்தது. அவருடைய முகம் சூரியனைப் போல இருந்தது;** மறைந்திருந்த மகிமை வெளிப்படுத்தப்பட்டதைக் குறிக்கும் முகபாவம். அவருடைய **கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்** போலிருந்தன. **ஸ்தம்பங்கள்** வலிமையையும் **அக்கினி** நியாயத்தீர்ப்பையும் குறிக்கின்றன.

10:2 அவர் **ஒரு சிறு புஸ்தகத்தை** அல்லது சுருளை வைத்திருந்தார். அது சடுதியில் நிகழப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்த விவரங்களடங்கிய ஏடு என்பதில் ஐயமில்லை. அவர் தமது **வலது பாதத்தைச் சமுத்திரத்தின் மேலும்**, தமது **இடது பாதத்தைப் பூமியின் மேலும்** நிறுத்தியவராக, உலகம் முழுவதன் மேலும் ஆட்சிபுரிவதற்கான தமது உரிமையைப் பறைசாற்றினார்.

10:3-6 அவர் **மகா சத்தமாய் ஆர்ப்பரித்து** அழைத்தபோது **ஏழு இடிகள்** முழங்கின. யோவான் இந்த இடி முழக்கங்களின் செய்தியைப் புரிந்துகொண்டார் என்று தெளிவாகத் தெரிகிறது, ஆனாலும் அவர் அதனை **எழுத வேண்டுமென்று இருந்தபோது**, அந்த தூதன் அவர் எழுதுவதைத் தடை செய்தார். அதன் பிறகு அந்தத் தூதன் படைப்பாளராகிய தேவன் **மேல் ஆணையிட்டு, இனி காலம் செல்லாது** என்றார்.

10:7 ஏழாவது எக்காளம் ஊதப்படுகிறபோது **தேவரகசியம் நிறைவேறும்**. தீமை செய்த அனைவரையும் தண்டித்து, தேவனுடைய குமாரனுடைய ராஜ்யத்தை அறிவிக்கிற செயல்களைப் பற்றிய அவருடைய திட்டமே **தேவரகசியம்** ஆகும்.

10:8,9 அந்தச் **சிறு புஸ்தகத்தை** உண்ணும்படி யோவானுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது, அதாவது, அவர் அதில் குறித்துவைக்கப்பட்டுள்ள நியாயத்தீர்ப்பின் விவரங்களைப் படித்து, அவற்றை தியானிக்க வேண்டும்.

10:10 தூதன் முன்னறிவித்ததுபோல, அந்தச் சுருள் அவருடைய **வாய்க்கு தேனைப்போல மதுரமாயிருந்தது**, அவருடைய **வயிற்றிலோ** அது **கசப்பாயிருந்தது**. தேவ குமாரன் முன்னர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில், அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்னும் தேவனுடைய தீர்மானத்தைப் படிப்பது விசுவாசிக்கு மதுரமாயிருக்கும். சாத்தானின் மேலும் அவனுடைய சேனைகளின் மேலும் தேவன் வெற்றி பெறுகிற செய்தியைப் படிப்பது மதுரமாயிருக்கும். பூமியின் தவறுகள் யாவும் சீராக்கப்படும் காலத்தைக் குறித்துப் படிப்பது மதுரமாயிருக்கும். ஆனால் அந்தத் தீர்க்கதரிசனத்தோடு கசப்பும் தொடர்புடையதாயிருந்தது. தீர்க்கதரிசன வேத வாக்கியங்கள் முன்கொணர்கிற சுய நியாயத்தீர்ப்புக் கசப்பை உண்டாக்கும். விசுவாச மறுதலிப்பாகிய

யூதமார்க்கச் சார்புடைய கொள்கையாளர் மேலும், கிறிஸ்தவ உலகின் மேலும் வரப்போகிற நியாயத்தீர்ப்பை எண்ணிப்பார்ப்பது கசப்பை உண்டுபண்ணும். மேலும் இரட்சகரை ஏற்க மறுத்த அனைவர் மேலும் வரப்போகிற நித்திய அழிவைக் குறித்த ஆழ்ந்த சிந்தனை கசப்பை உண்டுபண்ணும்.

10:11 அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையும் குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டுமென்று யோவானுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. இந்தக் கட்டளையை வெளிப்படுத்தின விசேஷத்தின் எஞ்சிய அதிகாரங்கள் நிறைவேற்றுகின்றன.

எ. இரண்டு சாட்சிகள் (11:1–14)

11:1,2 தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும் அளக்கும்படி இப்பொழுது யோவானுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. மேலும் அவர் எத்தனைபேர் தொழுதுகொள்ளுகிறார்கள் என்பதை எண்ணவேண்டும். அளவிடுதல் இங்கே பாதுகாத்தல் என்னும் கருத்தைக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. புறவினத்தாரின் பிராகாரத்தை அவர் அளக்கக் கூடாது, ஏனெனில் நாற்பத்திரண்டு மாதங்கள் அந்த இடம் புறவினத்தாரால் மிதிபட்டிருக்கும் - உபத்திரவ காலத்தின் பின்பாதி பாகம் (லூக்கா 21:24 -ஆம் வசனத்தைக் காண்க). இங்கு **தேவனுடைய ஆலயம்** என்று குறிப்பிடப்பட்டிருப்பது உபத்திரவ காலத்தின் போது எருசலேம் நகரில் நிற்கும் ஆலயத்தையே குறிக்கிறது. தொழுதுகொள்ளுபவர்கள் எண்ணப்படுகிற செயல், தொழுதுகொள்ளும் மீதியானவர்களை தேவன் தமக்கென்று பாதுகாத்து வைக்கிற செயலைக் குறிக்கிறது. அவர்கள் எந்த வழிவகையில் அவரிடம் வருவார்கள் என்பதைப் **பலிபீடம்** குறிக்கிறது. அதாவது, கல்வாரியில் கிறிஸ்து செய்த செயலின் மூலமாகவே அவர்களால் அவரிடம் நெருங்கிச் சேரமுடியும்.

11:3 உபத்திரவ காலத்தின் பிந்தைய பகுதியில் தேவன் **இரண்டு சாட்சிகளை** எழுப்புவார். அவர்கள் துக்கத்திற்கு அடையாளமான **இரட்டு வஸ்திரங்களை** உடுத்தியிருப்பார்கள். அவர்கள் மனிதர்களுடைய பாவங்களுக்கு எதிராகக் கூக்குரலிடுவார்கள், மேலும் வரவிருக்கும் தேவ சீற்றத்தைக் குறித்து அறிவிப்பார்கள்.

11:4 அவ்விரண்டு சாட்சிகளும் **இரண்டு ஒலிவ மரங்களுக்கும்** இரண்டு **விளக்குத் தண்டுகளுக்கும்** ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள். **ஒலிவ மரங்கள்** என்னும் நிலையில் அவர்கள் ஆவியினால் நிறைந்திருக்கிறார்கள் (எண்ணெய்). **விளக்குத் தண்டுகள்** என்னும் நிலையில் அவர்கள் இருண்ட நாளில் தேவனுடைய சத்தியத்திற்கு சாட்சியை அறிவிக்கிறார்கள் (இதற்கு இணையான பழைய ஏற்பாட்டில் ஒரு பகுதிக்கு சகரியா 4:2-14 ஆகிய வசனங்களைக் காண்க).

11:5 அவ்விரண்டு சாட்சிகளும் அதிசயமான முறையில் மூன்றரை ஆண்டுகள் தீங்குகளிலிருந்து காக்கப்படுகிறார்கள். அவர்களுடைய பகைஞர்களை அவர்களது **வாயிலிருந்து புறப்பட்ட அக்கினி** அழித்துப்போடுகிறது, அவர்களைச் சேதப்படுத்தவேண்டும் என்னும் முயற்சிகள் யாவும் மரணத்தால் முறியடிக்கப்படுகின்றன.

11:6 பூமியில் வறட்சியைக் கொண்டுவருவதற்கும், **தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், பூமியைச் சலவித வாதைகளாலும் வாதிக்கவும்** அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்களை மோசேயுடனும் எலியாவுடனும் பொதுவாகத் தொடர்புடுத்திப் பேசுவதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. தண்ணீர்களை இரத்தமாக மாற்றுவதற்கும் பூமியைச் சகலவித வாதைகளால் வாதிக்கவும் அவர்களுக்கிருந்த அதிகாரம் மோசே எகிப்தில் செய்த செயல்களை நமக்கு நினைவுபடுத்துகிறது (யாத். 7:14-20; 8:1-12:29). அக்கினியின் மேலும் வானிலையின் மேலும் அவர்களுக்கிருந்த அதிகாரம் எலியாவின் ஊழியத்தை நமக்கு நினைவுக்குக் கொண்டுவருகிறது (1 இராஜா. 17:1; 18:41-45; 2 இராஜா. 1:9-12).

மெக்கன்கி என்பார் கூறுகிறார்:

> பாவ மனிதனைத் தொழுதுகொள்ளும்படி தேவாலயத்தில் குழுமியிருக்கும் மக்களை அவர்கள் எச்சரிப்பார்கள். அவனது வெற்றி குறுகிய காலமே நிலைத்திருக்கும்; வரப்போகிற இயேசு அவனை அழிப்பார்; உபத்திரவ காலம் பேராபத்தைக் கொண்டுவரும்; மரணம் வருகிறபோது தங்களுடைய உயிரை தங்களுக்கென்று மேன்மை பாராட்டுவது தேவையற்ற செயல்; சரீரத்தை மட்டும் கொல்லுகிறவருக்கல்ல சரீரத்தையும் ஆத்துமாவையும் நரகத்தில் தள்ளுகிறவருக்கே பயப்படவேண்டும்; சிறிது கால உபத்திரவத்திற்குப் பிறகு அவர்கள் மிகச்

சிறந்த அரசருக்கும் அரசுக்கும் மிக நெருக்க மாக இருப்பார்கள்; அவரோடு பாடுபட்டால் அவரோடுகூட ஆளுகை செய்வார்கள் என்பது உறுதி; இறுதிவரை நிலைத்திருப்பவர்கள் நித் திய சமாதானத்தையும், நீதியையும், மகிமை யையும் பெறுவார்கள் என்னும் உண்மை களை எடுத்துரைத்து அவர்கள் மக்களை எச்சரிப்பார்கள். ஒருவேளை இதற்காக அவர் கள் அந்தப் பெரிதான உபத்திரவ காலத்தின் போது தியாக மரணம் அடைய வேண்டியதா யிருக்கும். அந்தப் புத்தகத்திலிருந்து அவ்விரு வர் கூறும் சாட்சி உண்மையாகவே வல்லமை மிகுந்ததாயிருக்கும்.[22]

11:7 அவர்கள் தங்களுடைய சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்தி லிருந்து வரும் **மிருகம் அவர்களைக் கொன்று போடும்.** 13:8 -இல் சொல்லப்பட்டுள்ள புதுப்பிக் கப்பட்ட ரோமப் பேரரசின் தலையாகிய அதே மிருகமாகத்தான் இதுவும் இருக்கவேண்டும்.

11:8 இறந்தவர்களுடய **உடல்கள்** எருசலேம் நரகத்தின் வீதிகளில் மூன்றரை நாட்கள் கிடக் கும். அந்த நகரம் அதனுடைய பெருமை, இன்பத் தோய்வு, வளமையால் ஏற்பட்ட மெத்தனம், பிறர் தேவையறிந்து உதவி செய்யாமை ஆகியவற் றின் காரணமாக **சோதோம்** என்று அழைக்கப் படும் (எசே. 16:49 -ஆம் வசனத்தைக் காண்க). அதனுடைய சிலை வணக்கம், கொடுமை புரிதல், பாவத்திற்கும் அநீதிக்கும் அடிமைப்பட்டுக் கிடத் தல் ஆகியவற்றின் காரணமாக அது **எகிப்து** என்று அழைக்கப்படும்.

11:9 எல்லா நாட்டு மக்களும் அவர்களுடைய **உடல்களை** மூன்றரை நாட்கள் பார்ப்பார்கள், ஆனால் அவற்றை அடக்கம் செய்ய அனுமதிக்க மாட்டார்கள், எல்லாப் பண்பாட்டிலும் இது பெரும் இகழ்ச்சிக்குரிய நிலையாயிருக்கும்.

11:10 மக்கள் விரும்பாத தீர்க்கதரிசனங் களை அவர்கள் கூறியதன் காரணமாக அவர் களுடைய வாய்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அவர்களது மரணத்தின் காரண மாகப் பெருமளவில் மக்களிடையே மகிழ்ச்சி பெருக்கெடுத்து ஓடுகிறது, இந்த நாட்களில் கிறிஸ்துமஸ் நாளில் செய்கிறதுபோல மக்கள் வெகுமதிகளைப் பரிமாறிக்கொள்ளுகிறார்கள்.

11:11,12 மூன்றரை நாட்களுக்குப் பிறகு... தேவன் அவர்களை இறந்தோரிலிருந்து உயி ருடன் எழுப்புகிறார். அது பொதுமக்களிடையே பெருமளவில் பீதியை உண்டாக்குகிறது, அதற் கிடையே அவர்களுடைய **சத்துருக்கள்** கவனித் துக் கொண்டிருக்கையில் தேவன் அவர்களை **வானத்திற்கு** எடுத்துக்கொள்ளுகிறார்.

11:13,14 அதே சமயத்தில், பெரும் பூமி யதிர்ச்சியால் எருசலேம் நகரமே அதிருகிறது. அந்த நகரத்தில் பத்திலொரு பங்கு இடிந்து விழுகிறது, ஏழாயிரம் பேர் அழிகிறார்கள். உயி ரோடிருந்தவர்கள் தேவனை மகிமைப்படுத்து கிறார்கள், ஆனாலும் அது மெய்யான ஆரா தனையல்ல, ஆனாலும் அவருடைய வல்லமை யைக் குறித்து விருப்பமற்ற முறையில் ஒப்புதலை அறி விக்கிறார்கள். **இரண்டாம் ஆபத்து கடந்து போகிறது.**

9:13 முதல் 11:13 வரையிலுள்ள அனைத்து விவரங்களும் இரண்டாம் ஆபத்தைக் குறிக்கின் றன என்பது இதன் பொருளன்று. இதற்கு மாறாக, பத்தாவது அதிகாரமும் பதினோராவது அதிகாரத் தின் முதல் பதின்மூன்று வசனங்களும் **இரண்டா வது ஆபத்திற்கும்** (ஆறாவது எக்காளம்) **மூன்றாவது ஆபத்திற்கும்** (ஏழாவது எக்காளம்) இடையே வருகின்ற இடைப்பிறவரலாகும்.

ஏ. ஏழாவது எக்காளம் (11:15–19)

11:15 மகா உபத்திரவ காலம் முடிவடைந்து விட்டது, கிறிஸ்துவின் ஆட்சி தொடங்கிவிட்டது என்பதை வெளிப்படுத்துவதாக ஏழாவது எக் காளத்தின் தொனி ஒலிக்கிறது. **அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள்**[23] **நம்முடைய கர்த்த ருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்.**

11:16,17 தேவன் தமது மகா வல்லமையைத் தம்மேற்கொண்டு தமது ஆளுகையைத் தொடங்கியதற்காக **அவருக்கு முன்பாக இரு பத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து ஸ்தோத்திரம்** செலுத்துகிறார்கள்.

11:18 விசுவாசிக்காத நாடுகள் அவர் மீது கோபம்கொண்டு அவர் முடிசூடுவதைத் தடை செய்ய முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர் கள்மேல் அவர் கோபம்கொள்வதற்கும், ஆவிக் குரிய வகையில் வாழாதவர்களை நியாயந்தீர்ப்ப தற்கும், **கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும்**

உரிய காலம் வந்துவிட்டது. மேலும் **தீர்க்கதரிசிகள்** அல்லது பொதுமக்கள், **சிறியவர்கள்** அல்லது **பெரியவர்கள்** யாராயினும் கர்த்தருக்குச் சொந்தமானவர்களாயின் அவர்களுக்கு அவர் **பலன்களை** அளிப்பார்.

11:19 தேவன் தமது மக்களாகிய இசுரவேலரோடு செய்த **உடன்படிக்கையை** மறக்கவில்லை. **தேவனுடைய ஆலயம் பரலோகத்தில் திறக்கப்படும்போது, உடன்படிக்கைப் பெட்டி** காணப்படும்; தேவன் இசுரவேலருக்கு அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறும். **அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சிகளும், பெருங்கல்மழையும் உண்டாயின.**

ஐ. உபத்திரவ காலத்து முக்கியமான மனிதர்கள் [அதி. 12–15]

12:1 ஒரு பெண் சூரியனை அணிந்திருந்தாள், அதாவது, **அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன.** இந்தப் பெண் இஸ்ரவேல் ஆவாள். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் யாவும் வரப்போகிற அரசில் அவளுக்கு வாக்குரைக்கப்பட்ட மகிமையும் ஆட்சியும் ஆகும். யோசேப்பு இறுதியில் அவனுடைய தகப்பன், தாய் மற்றும் சகோதரர்கள் யாவர் மேலும் செலுத்திய ஆளுகையை இது சித்திரிக்கிறது (ஆதி. 37: 9-11).

12:2 அந்தப் பெண் **பிரசவ வேதனையடைந்து, பிள்ளை** பெறுவதற்குக் காத்திருக்கிறாள். இஸ்ரவேல் வரலாற்றில் நிறைவேறிய பெரும்பாலான நிகழ்ச்சிகள் இந்த வசனங்களில் தொலைநோக்காடியில் படம் பிடித்துக்காட்டப்படுகின்றன. அவ்வாறு காட்டும்போது, அந்த நிகழ்ச்சிகளுக் கிடையே இருந்த கால இடைவெளியைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை, அந்த நிகழ்ச்சிகள் காலவரிசையின்படியும் கொடுக்கப்படவில்லை.

12:3 வானத்தில் தோன்றுகிற இரண்டாவது **அடையாளம், ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடைய சிவப்பான வலுசர்ப்பமாகும்.** அதன் ஒவ்வொரு தலையின்மேலும் ஒவ்வொரு கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த **வலுசர்ப்பம்** சாத்தானே ஆகும். ஆனாலும் அதன் வருணனை, புதுப்பிக்கப்பட்ட ரோமப் பேரரசின் பண்புகளுக்கு ஒப்பாயிருக்கிறது. ஒருவேளை சாத்தான் வலுவூட்டிய உலக அதிகாரத்தை இது குறிக்கக் கூடும்.

12:4,5 வலுசர்ப்பம் தனது **வாலை** வேகமாக வீசுகிறபோது **நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை** கீழே விழத்தள்ளுகிறது. இது பெரும் பாலும் வானத்தில் உபத்திரவ காலத்தின் மத்தியில் நடைபெறும் யுத்தத்தைக் குறிக்கக் கூடும். அந்தப் போரின் காரணமாக வீழ்ந்துபோன தூதர்கள் வானத்திலிருந்து பூமிக்குத் தள்ளப்படுகிறார்கள் (வச. 8,9 - ஐக் காண்க).

அந்த **வலுசர்ப்பமானது ஆண்பிள்ளை பிறந்தவுடன்** அவரைக்கொன்று போட ஆயத்தமாயிருக்கிறது. ரோம ஆதிக்கத்திற்குக் கீழிருந்த மகா ஏரோது யூதர்களுக்கு ராஜாவாகப் பிறந்த பிள்ளையை அழித்துப்போடும்படி முயற்சி செய்த நிகழ்ச்சியில் இது நிறைவேறியது. **ஆண்பிள்ளை** இயேசு என்பது தெளிவாய்த் தெரிகிறது. அவர் **சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும்படி** முன் தீர்மானிக்கப்பட்டவர். இங்கு வரலாற்றுக் குறிப்பு பிறப்பிலிருந்து அவர் உன்னதநிலைக்குச் செல்லுதலை நோக்கித் தாவுகிறது.

12:6 ஐந்து மற்றும் ஆறு ஆகிய வசனங்களுக்கு இடையே தற்போதைய திருச்சபையின் காலம் கடந்து விடுகிறது. உபத்திரவ காலத்தின் மத்தியில் இஸ்ரவேல் நாட்டின் ஒரு பங்கு **வனாந்தரத்தில்** இரகசியமான ஓரிடத்திற்கு ஓடிச்செல்லுகிறது (அது பெத்ரா என்னுமிடம் என்று சிலர் கருதுகிறார்கள்). அவர்கள் மூன்றரை ஆண்டுகள் அங்கே ஒளிந்துகொண்டிருக்கிறார்கள்.

12:7 மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் ஒருபுறமும், **வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதர்களும்** மறுபுறமும் கூட **வானத்தில் யுத்தம்** மூளுகிறது. இந்நிகழ்ச்சி உபத்திரவ காலத்தின் மத்தியில் நடக்கிறது. இஸ்ரவேல் நாட்டின் செயல் பாடுகளோடு தொடர்புடைய பிரதான தூதனே மிகாவேல் (தானி. 12:1).

12:8,9 வலுசர்ப்பம் **வானத்தை** நெருங்குவதற்கு எந்த உரிமையும் இல்லாதபடி முழுவதும் தோற்கடிக்கப்படுகிறது. அவனும் அவனுடைய பணிவிடைக்காரரும் பூமியில் விழத்தள்ளப்படுகிறார்கள். ஆயினும் இது அவனுடைய இறுதி முடிவு அல்ல (20:1-3,10 - ஆகிய வசனங்களைக் காண்க). அவனைக் குறித்து யோவான் எழுதுகிற வருணனையைக் காணுங்கள்: **உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்னும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்.**

12:10 வலுசர்ப்பம் தள்ளப்படுகிறது. அதனைத் தொடர்ந்து **வானத்தில்**, தேவனுடைய வெற்றி யும் அவருடைய மக்களின் வெற்றியும் வந்தன என்னும் **பெரும்** ஆர்ப்பரிப்பின் **சத்தம்** உண்டா கிறது. இது ஆயிரமாண்டு ஆட்சியை எதிர் நோக்கியதாய் இருக்கிறது. இதற்கிடையில், **நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சுமத்துகிற வன் தாழத்தள்ளப்படுகிற** நிகழ்ச்சி நடைபெறு கிறது.

12:11 அறிவிப்பு தொடர்கிறது. **ஆட்டுக்குட்டி யின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும்** கொடுமைக்குள்ளான யூத விசுவாசிகள் பொல்லாங்கனை **ஜெயித்தார்கள்**. அவர்கள் பெற்ற வெற்றி கிறிஸ்துவின் மரணத்தி னாலும், அந்த மரணத்தின் விலைக்கு அவர்கள் அளித்த **சாட்சியினாலும்** உண்டாயிற்று. அவருக்கு அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்ததில், தங்களுடைய சாட்சியை தங்களுடைய இரத்தத் தினால் முத்திரையிட்டார்கள்.

12:12,13 வலுசர்ப்பம் அங்கிருந்து சென்ற தால், **பரலோகங்கள் களிகூர** முடியும். ஆனால் அது **பூமிக்கும் கடலுக்கும்** கெட்ட செய்தி! **தனக் குக் கொஞ்சக் காலம்** மட்டுமே உள்ளது என்ப தைப் **பிசாசு அறிந்திருந்ததால்,** தன்னுடைய கோபத்தை எந்த அளவிற்குப் பரவலாக ஊற்ற முடியுமோ அந்த அளவிற்கு ஊற்ற முடிவு செய் தது. மேசியா தோன்றிய நாடாகிய இஸ்ரவேல் மேல் வலுசர்ப்பம் தன்னுடைய வெறுப்பை மிக அதிக அளவில் கொட்டியது.

12:14 விசுவாசிக்கும் மீதியான யூதர்கள் வனாந்தர மறைவிடத்திற்கு ஒடிச்செல்லும்படி, அவர்களுக்குப் **பெருங்கழுகின் இரண்டு சிறகு கள் கொடுக்கப்படுகின்றன.** (இரண்டு **சிறகுகள்** என்பவை மிகப்பெரிய விமானப்படையைக் குறிக்கும் என்று சிலர் கற்பனை செய்கிறார்கள்.) வலுசர்ப்பத்தின் தாக்குதலிலிருந்து மீதியானவர் கள் மூன்றரை ஆண்டுகள் பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்படுவார்கள் (**ஒரு காலமும், காலங் களும், அரைக்காலமும்**).

12:15,16 இஸ்ரவேல் தப்புவிப்பதைத் தோற் கடிக்கும்படி பாம்பு செய்த முயற்சியால் பெரு வெள்ளம் அவர்களைப் பின்தொடர்ந்து செல்லு கிறது; ஆனால் பூமியதிர்ச்சி அந்த வெள்ளத்தை விழுங்கி பிசாசு முறியடிக்கப்படுகிறது.

12:17 இவ்வாறு இழிவுபடுத்தப்படுவதன் காரணமாக மூர்க்கமடைந்த பிசாசு இஸ்ரவேல் நாட்டில் மீதியாயிருந்த யூதர்களைப் பழிவாங்க நினைக்கிறது. அந்த யூதர்கள் **தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, இயேசுவின் சாட்சியைச்** சுமந்து அதன் வாயிலாகத் தங்களு டைய விசுவாசத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகிறவர்கள்.

13:1 பதின்மூன்றாவது அதிகாரம் இரண்டு பெரிய மிருகங்களை நமக்கு அறிமுகப்படுத்து கிறது: ஒன்று **சமுத்திரத்திலிருந்து** எழுந்து வரும், மற்றது பூமியிலிருந்து அதாவது, நிலப் பகுதியிலிருந்து, இஸ்ரவேல் நாட்டிலிருந்து எழுந்துவரும். உபத்திரவ காலத்தில் பெருமள வில் கிரியை நடப்பிக்கிறவர்கள் இவர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தானியேல் 7:3-7 ஆகிய வசனங்களில் காணப்படும் நான்கு மிருகங்களின் அம்சங்களை இவை ஒருங்கே கொண்டிருக்கின்றன. முதல் மிருகம் புதுபலம் பெற்ற ரோமப் பேரரசின் தலைவனாவான், அது பத்து அரசுகள் கொண்ட அமைப்புள்ளதாயிருக் கும். அவன் **சமுத்திரத்திலிருந்து எழுந்துவரு வான்.** புறவின நாடுகளுக்கு எடுத்துக்காட்டாய் அது விளங்கும். அவனுக்குப் **பத்துக்கொம்புகள்** உள்ளன. ரோமப்பேரரசு பத்து நாடுகள் கொண்ட அமைப்பில் புதுப்பிக்கப்படும் என்று தானியேல் முன்னுரைத்தான் (தானி. 7:24). அவனுக்கு **ஏழு தலைகள்** உள்ளன. 17:9,10 ஆகிய வசனங் களில் அவை ஏழு அரசர்கள் என்று சொல்லப்பட் டுள்ளது. பெரும்பாலும் அது வெவ்வேறு வகையான ஆளுகை புரிவோர் ஏழுபேரை அல்லது பேரரசின் ஏழு கட்டங்களை இது குறிக் கிறது எனலாம். அவனுடைய பத்துக்**கொம்புகளி லும் பத்து முடிகள்** உள்ளன. இவை ஆட்சி செலுத்துவதற்கான வலுசர்ப்பமாகிய சாத்தா னால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் குறிக்கக் கூடும். அவனுடைய **தலைகளின்மேல் தூஷண மான நாமம்** இருக்கிறது, அவன் தன்னையே தேவன் என்றும், வெறுமனே மனிதன் அல்ல னென்றும் கூறுகிறான்.

13:2 அந்த மிருகம் **சிறுத்தையைப்** போலிருக் கிறது, அதனுடைய **கால்கள் கரடியின் கால் களைப்** போலிருக்கின்றன, அதனுடைய **வாய் சிங்கத்தின் வாயைப்** போலிருக்கிறது. தானி யேல் 7-இல் **சிறுத்தை** கிரேக்க நாட்டுக்கும், **கரடி** மேதிய பெர்சியாவுக்கும் **சிங்கம்** பாபிலோன் நாட்டுக்கும் அடையாளமாய்ச் சொல்லப்பட்டுள் ளன. புதுப்பிக்கப்பட்ட ரோமப் பேரரசு முந்தின காலத்தில் ஆட்சி புரிந்தவர்கள் இருந்ததுபோல

போரில் வெற்றிபெறுவதில் **சிறுத்தையைப்** போலத் துரிதமாகவும், **கரடியைப்** போல ஆற்றல் மிக்கவர்களாகவும், **சிங்கத்தைப்** போல பெரு விருப்பமும் உடையவர்களாகவும் செயல்பட்டார் கள். சுருங்கக்கூறின், அதற்கு முந்தின உலக வல்லரசு நாடுகளைப் போலவே எல்லாத் தீய பண்புகளையும் அது கொண்டிருக்கும். அந்தப் பேரரசும், அதனுடைய ஆட்சியாளர்களும் இயற் கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலைச் சாத்தானிடத்தி லிருந்து பெறுவார்கள்.

13:3 அந்த மிருகத்தின் ஒரு தலையில் சாவுக் கேதுவான காயம் உண்டாயிருக்கும். "பண்டைய காலத்து ரோமப் பேரரசின் எல்லைக்குள்ளான சிறிய நாடுகள் தனித்தனியாகச் செயல்படுவது நின்று போகவேயில்லை. பேரரசு என்னும் நிலையே முடிவுக்கு வந்துவிட்டது. அவற்றில் ஒரு தலை செத்துப்போகும்படி காயம் ஏற்பட்டது" என்று விளக்குகிறார் திருவாளர் ஸ்கோ.்.பீல்டு.[24] சாவுக்கேதுவான **காயம்** நீங்கிக் குணமடை கிறது. அதாவது அந்தப் பேரரசு ஒரு சர்வாதிகார னைத் தலைவனாகப் பெறும்; அதாவது மிருகத் தைத் தலைவனாகப் பெற்று அந்தப் பேரரசு புத்துயிர் பெறும்.

13:4 அந்த மிருகத்தை மனிதர்கள் வணங்கு வார்கள். அதைக் கண்டு அவர்கள் ஆச்சரியப் படுவது மட்டுமின்றி, அதை உண்மையாகவே தேவன் என்று தொழவும் செய்வார்கள். மேலும் அவர்கள் வலுசர்ப்பத்தையும் தொழுதுகொள் வார்கள்.

13:5,6 அந்த மிருகம் பெருமையான பேச்சைப் பேசி, சொல்லக்கூடாத **தூஷணச்** சொற்களைப் பேசும். நாற்பத்திரண்டு மாதங்கள் தொடர்ந்து போர்புரிவதற்கான அதிகாரம் அதற்குத் தரப்படும் (NKJV அடிக்குறிப்பு). **தேவனுடைய நாமத்திற்கு** எதிராகவும், அவருடைய **வாசஸ்தலத்திற்கு** எதிராகவும், **பரலோக** சேனைக்கு எதிராகவும் மதிப்பற்ற கீழ்த்தரமான சொற்களை அது பேசும்.

13:7 தேவனுடைய மக்களுக்கு எதிராகப் போர்புரிந்து, அவர்களில் பெரும்பாலோரை அவன் தோற்படிப்பான். அவர்கள் அவனிடம் சரணடைவதைக் காட்டிலும் மரணமடைவதைத் தெரிந்துகொள்வார்கள். அவனுடைய ஆட்சி, கிறிஸ்துவின் ஆட்சி நிறுவப்படுவதற்கு முந்தின உலக வல்லரசுகளில் கடைசியாக விளங்கி உலகெங்கும் விரிவடையும்.

13:8 மெய்யான விசுவாசிகள் அல்லாதோர் மிருகத்தை **வணங்க** ஆயத்தமாயிருப்பார்கள். அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்கள், ஆகவே அவர்களது பெயர்கள் **ஆட்டுக்குட்டியின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படவில்லை.** அவர் களது பெயர்கள் மீட்பர்களின் பட்டியலில் இடம் பெறாததால், தவறுசெய்யும்படி அவர்கள் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். சத்தியத்தை நம்பாதவர் கள் இப்பொழுதோ பொய்யை நம்புகிறார்கள்.

13:9 தேவ வார்த்தையின் வெளிச்சம் இருக் கும்போதே அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இங்கு யாவருக்கும் எச்சரிப்பு கொடுக்கப் படுகிறது. ஒளியை நிராகரிப்பதன் விளைவு இருளில் இருப்பதாகும்.

13:10 மெய்யான விசுவாசிகளைக் கொடு மைப்படுத்துபவர்கள் **சிறையில் அடைக்கப்படு வார்கள், பட்டயத்தால் கொலை செய்யப்படு வார்கள்** என்னும் வாக்குறுதி அவர்களுக்குத் தரப்பட்டுள்ளது. பொறுமையோடும் விசுவாசத் தோடும் காத்திருப்பதற்கான ஆற்றலை இது பரி சுத்தவான்களுக்குத் தருகிறது.

13:11 உபத்திரவ காலத்தில் முக்கியமான இன்னொரு மனிதன் இரண்டாவது **மிருகம்** ஆவான். அவன் முதல் மிருகத்தோடு நெருக்க மாக இணைந்து செயல்படுவான். முதல் மிருகத் தையும், ரோமப் பேரரசின் பிரதிபலிப்பாகிய பெரிய உருவச் சிலையையும் வணங்கும்படி இவன் உலகம் முழுவதும் பிரசாரம் செய்வான். இந்த இரண்டாவது **மிருகம் பூமியிலிருந்து** அதாவது நிலப்பகுதியிலிருந்து **எழுந்துவரும்.** இந்த நிலப்பகுதி இஸ்ரவேல் எனில், இந்தத் தலைவன் நிச்சயம் யூதனாயிருப்பான். இவன் தான் கள்ளத்தீர்க்கதரிசி (16:13; 19:20; 20:10 ஆகிய வசனங்களைக் காண்க). இவன் ஆட்டுக் குட்டியைப் போல இரண்டு கொம்புகள் உடைய வன். இவனுடைய தோற்றம் கனிவுடனும் தீங்கற்ற தாகவும் காட்சியளிக்கும். தேவ ஆட்டுக்குட்டி யைப் போல் பாசாங்கு செய்பவன் என்பதை இது வெளிப்படுத்துகிறது. வலுசர்ப்பத்தைப்போல் பேசும் இவன், சாத்தானின் நேரடியான ஏவுதலா லும் வல்லமையாலும் பேசுகிறான் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

13:12-14 இவன் **முந்தின மிருகத்தின் அதி காரம் முழுவதையும் நடப்பிப்பான்.** ரோமப் பேரரசின் சார்பாக இந்த மிருகம் எல்லையற்ற அதிகாரத்தோடு செயல்புரிய அனுமதிக்கப்பட் டிருக்கிறது என்பதே இதன் பொருள். இயற்

கைக்கு அப்பாற்பட்ட வானத்திலிருந்து அக்கினியை விழப்பண்ணும் அளவிற்கு ஆற்றல் இவனுக்கு இருக்கும். மனிதர்கள் ஒரு மனிதனை தேவனாக வணங்கும்படி ஏமாற்றப்பட வேண்டும் என்பதே இவன் அற்புதங்களைச் செய்வதற்கான காரணம்.

13:15 இவன் பாழாக்கும் அருவருப்பாகிய பெரிய **சொரூபத்துக்கு** உயிர்கொடுத்து, உண்மையாகவே அது **பேசும்படி** செய்வான். அதனை **வணங்க** மறுப்பவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

13:16 மக்கள் தங்களுடைய வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது மிருகத்தின் முத்திரையைத் தரித்து ரோமப் பேரரசன்மேல் தங்களுக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று இந்த இரண்டாவது மிருகம் வலியுறுத்துவான்.

13:17 இந்த முத்திரையோடு, மிருகத்திற்கு ஒரு **பெயரும்** மர்மமான **எண்ணும்** இருக்கும். அந்த **முத்திரையையும் பெயரையும்** அல்லது **மிருகத்தின் எண்ணையும்** ஒருவன் தன்மேல் பொறித்துக்கொள்ளவில்லையென்றால், அவனால் **கொள்ளவும் விற்கவும்** முடியாது. கிறிஸ்துவை ஒருவன் மறுத்துரைத்து சிலைவணக்கத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காகப் பொருளாதார ரீதியினாலான கட்டுப்படுத்தும் முயற்சியே இது. இது மிகக் கடுமையான சோதனையாக இருக்கும், ஆனால் மெய்யான விசுவாசிகள் இரட்சகரை மறுப்பதைக் காட்டிலும் மரணத்தையே தெரிந்துகொள்வார்கள்.

13:18 மிருகத்தின் இலக்கம் 666. ஆறு மனிதனின் இலக்கம். இது ஏழு என்னும் எண்ணைவிட ஒன்று குறைவு, அதாவது தேவனுடைய மகிமை அல்லது முழு நிறைவில் மனிதன் குறைவுடைய வனாயிருக்கிறான் என்பதை இது காட்டுகிறது. ஆறு மூன்று தடவை வருவது மூவொரு தீமையாகும்.

பதின்மூன்றாவது அதிகாரத்தோடு தொடர்புடைய மிகப்பெரிய கேள்விகளில் ஒன்று, அந்திக் கிறிஸ்து முதல் மிருகமா அல்லது இரண்டாவது மிருகமா என்பதுதான். முதல் மிருகம் தன்னை தேவனாக வணங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது, இதுவே அந்த மிருகம் என்று வாதாடுவதற்கான அடிப்படைக் காரணம். இரண்டாவது மிருகமே அந்திக்கிறிஸ்து என்று நம்புகிறவர்கள், புறவினத்தான் ஒருவனை மேசியா என்று யூதன் எவனும் ஒப்புக்கொள்ள மாட்டான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். இரண்டாவது மிருகம் யூதனாக இருப்பதால் அவனே கள்ள மேசியா என்று அவர்கள் கூறுகிறார்கள்.

14:1 இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் தங்களுடைய **நெற்றிகளிலே முத்திரையைத்** தரித்தவர்களாகப் பின்தொடர, **ஆட்டுக்குட்டியானவர் சீயோன் மலையின்மேல் நிற்கிறவராகக்** காணப்படுகிறார். இது இனிமேல் நடைபெறப் போகிற நிகழ்ச்சியை எதிர்நோக்கியதாக இருக்கிறது. இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் பன்னிரண்டாயிரம் பேர் அடங்கிய விசுவாசக் கூட்டத்தாரோடு, பூமிக்குத் திரும்பிவரப் போகிற இயேசு எருசலேம் நகரில் நிற்பார். இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் 7 -ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள அதே நபர்கள் தான். அவர்கள் இப்பொழுது கிறிஸ்துவின் அரசுக்குள் நுழையவிருக்கிறார்கள்.

14:2,3 பெருவெள்ள இரைச்சல் போன்ற தொனியும், **பலத்த இடிமுழக்கம்** போன்ற சத்தமும், **சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிறது** போன்ற ஓசையும் வானத்திலிருந்து இசைபோல ஒலிப்பதை யோவான் கேட்கிறார். அந்தப்பாட்டு **இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்** மட்டுமே **கற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும்.**

14:4,5 அவர்கள் **ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள்** என்றும் கற்புள்ளவர்கள் என்றும் வருணிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் சிலைவணக்கமும் ஒழுக்கக் கேடும் மட்டுமீறிய அளவு வழக்கத்தில் இருக்கும் போது இவர்களோ அவற்றால் கறைபடாதபடி தங்களைக் காத்துக்கொண்டவர்களாக, சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் கீழ்ப்படிதலோடும் பயபக்தியோடும் **ஆட்டுக்குட்டியானவரைப்** பின்தொடர்ந்தவர்கள். "இவர்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனானவர் என்று அழைக்கப்படுகிறார்கள், அதாவது, ஆயிரமாண்டு ஆட்சியின் காலத்தில் பூமியை நிரப்பும்படியாக உபத்திரவ அறுவடையின் முதன்மையானவர்கள்" என்று திருவாளர் பென்டிகாஸ்ட் கூறுகிறார்.[25] வெறும் மனிதனைத் தொழுது கொள்ள வேண்டும் என்னும் அந்திக் கிறிஸ்துவின் பொய்யை இவர்கள் ஏற்கவில்லை. கிறிஸ்துவை உறுதியாக அறிக்கை செய்த வகையில் அவர்கள் குற்றஞ்சுமத்தப்படக் கூடாதவர்களாக இருந்தார்கள்.

14:6,7 நித்திய சுவிசேஷத்தை ஏந்தியவனாக நடுவானத்தில் பறக்கிற தூதன் மத்தேயு 24:14 -ஆம் வசனத்திற்கு ஒத்திருக்கிறது: "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்". அந்த நற்செய்தியின் பொருள் 7 -ஆவது வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மிருகத்திற்கல்ல **தேவனுக்கு** மனிதர்கள் **பயப்பட** வேண்டும், உருவச் சிலைகளுக்கல்ல **அவருக்கே மகிமையைச் செலுத்த** வேண்டும், வெறும் மனிதனையல்ல **அவரையே தொழுதுகொள்ள வேண்டும்.** ஒரே ஒரு நற் செய்திதான் உண்டு. கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தால் கிடைக்கும் இரட்சிப்பு என்னும் நற்செய்தி. ஆனால் வெவ்வேறு காலப்பாகுபாட்டில் வெவ்வேறு வகையான வலியுறுத்தல் காணப்படும். மகா உபத்திரவ காலத்தின்போது, மிருகத்தை மனிதர்கள் வணங்குவதிலிருந்து திரும்பி, கிறிஸ்துவின் இவ்வுலக அரசுக்கு ஆயத்தப்பட வேண்டும் என்னும் அறிவிப்பே நற்செய்தியாக விளங்கும்.

14:8 பாபிலோனின் வீழ்ச்சியைக் குறித்து இரண்டாவது தூதன் அறிவிப்பான். இதனையே 17 மற்றும் 18 -ஆவது அதிகாரங்கள் எதிர்நோக்குகின்றன. யூதமார்க்கச் சார்புடைய விசுவாச மறுதலிப்பு மற்றும் கிறிஸ்தவ உலகின் மறுதலிப்பு ஆகியவற்றையே **பாபிலோன்** என்னும் சொல் குறிப்பிடுகிறது. அது ரோமாபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு நிறுவப்படும் பெருமளவிலான உலக வர்த்தகச் சந்தையும் சமய ஒருங்கிணைப்புமாகும். அவளுடைய **வேசித்தனமாகிய உக்கிரமான மதுவை சகல நாட்டினரும் குடித்து** மயங்கிப்போயிருப்பார்கள்.

14:9,10 மூன்றாவது தூதன் அறிக்கை செய்யும் காலம் உபத்திரவ காலத்தின் மையப்பகுதி என்று நாம் காலத்தை நிர்ணயித்துக் கூறலாம். அதுவே மகா உபத்திரவ காலத்தின் தொடக்கமாகும். ஏதாவது ஒரு வகையில் மிருகத்தை வணங்குவதற்கு ஒப்புக்கொள்கிறவர்கள் இப்பொழுதும் நித்தியத்திலும் தேவனுடைய கோபாக்கினைக்கு ஆளாக வேண்டும். அவருடைய **உக்கிரமாகிய** மது மகா உபத்திரவ காலத்தில் பூமியின்மேல் **ஊற்றப்படும்.** ஆனாலும் அது நித்திய நரகத்தின் வேதனையின் முன் அனுபவமாகவே இருக்கும். நித்தியத்திலோ அவிசுவாசிகள் **அக்கினியாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள்**.

14:11 நரகத்தில் நித்தியமான உணர்வுபூர்வமான தண்டனை இருக்கும் என்பதை இந்த வசனம் நமக்கு நினைவுபடுத்துகிறது. பாவிகளாக மரணமடைந்தவர்கள் நரகத்தில் எரிந்து சாம்பலாகி ஒன்றுமில்லாமல் போய்விடுவார்கள் என்று சொல்லப்படவில்லை. அவர்களுடைய **வாதையின் புகை சதாகாலங்களிலும்** எழும், அதிலிருந்து அவர்களுக்கு **இரவும் பகலும்** விடுதலை இல்லை.

14:12 மிருகத்தின் கொடூரமான தாக்குதலைப் பொறுமையோடு சகிப்பதிலும் ஒரு மனிதனையோ சிலையையோ தொழுதுகொள்வதை மறுத்து **தேவனுக்குக்** கீழ்ப்படிவதிலும், **இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை** உறுதியாகப் பற்றிக் கொள்வதிலும் நிலைத்திருக்கும்படி பரிசுத்தவான்கள் அழைக்கப்படுவார்கள். முடிவில் அக்கிரமக்காரர் அழிவை அடைவார்கள், அது விசுவாசமுள்ளவர்கள் உறுதியோடு நிலைத்திருப்பதற்கான உற்சாகத்தைத் தரும் (வச. 9-11).

14:13 இந்தக் காலப் பகுதியில் மரணமடையும் விசுவாசிகள் ஆயிரமாண்டு ஆட்சியின் ஆசீர்வாதங்களை இழந்துபோகமாட்டார்கள். "உயிரோடிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று மனிதன் கூறுகிறான். தேவனோ, **"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"** என்றும் **"அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்" என்கிறார்.** கிறிஸ்துவுக்காகவும் அவருடைய திருப்பெயரில் பிறருக்கும் செய்தவை மிகுதியாகப் பலன்பெறும் - ஒவ்வொரு தயவும், தியாக மனப்பான்மையோடு செய்த ஈவும், ஜெபமும், கண்ணீரும், சாட்சியாகச் கூறிய வார்த்தையுமே கிறிஸ்துவுக்காகச் செய்தவை.

14:14 இந்தப் பகுதியை மத்தேயு 13:39-43 மற்றும் 25:31-46 ஆகிய பகுதிகளோடு நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமென்றால், நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போதுதான் இப்பூமியில் அறுவடை நிகழும் என்று கற்கிறோம். அவர் அறுவடை செய்வதாக இந்த வசனம் கூறுகிறது; மத்தேயு 13:39 -இல் தேவதூதர்கள் அறுவடை செய்வதாகச் சொல்லப்பட்டுள்ளது. இரண்டும் உண்மைதான்; கிறிஸ்து தமது தூதர்களாகிய பிரதிநிதிகளைக்கொண்டு அறுவடை செய்கிறார்.

தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தை அணிந்தவராகவும், தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுடையவராகவும் வெண்மையான மேகத்தில் கிறிஸ்து இறங்கி வருவதை இங்கு காண்கிறோம்.

14:15 பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிற தற்குக் காலம் வந்தது, ஆகவே அவர் தம்முடைய **அரிவாளை நீட்டி அறுத்துவிட**வேண்டும் என்று தேவாலயத்திலிருந்து வந்த **தூதன்** அவரிடம் கூறினான். இதனை ஒரு கட்டளையாக எண்ணிப் பார்க்கக் கூடாது. தேவனுக்குக் கட்டளை கொடுப்ப தற்குத் தூதர்களுக்கு அதிகாரம் இல்லை. மாறாக, இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு வேண்டு கோளாக அல்லது திருத் தந்தையாகிய தேவனி டத்திலிருந்து அனுப்பப்பட்ட செய்தியாக இருக்க வேண்டும்.

14:16 முதலாவது அறுவடையை நாம் இரண்டு விதமாகப் புரிந்துகொள்ளலாம். முதலாவதாக, ஆயிரமாண்டு ஆட்சிக்குள் நுழைவதற்கென்று உபத்திரவகால விசுவாசிகள் ஒன்று திரட்டப்படு வதை இது சித்திரிக்கிறது எனலாம். இந்தக் கருத் தின்படி, மத்தேயு 13 -ஆவது அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நல்ல விதைகளோடு இது பொருந்தியிருக்கிறது, அதாவது அவை ராஜ் யத்தின் புத்திரர். அல்லது இந்த அறுவடை நியா யத்தீர்ப்பின் அறுவடையாக இருக்கலாம். இது உண்மையானால், நியாயத்தீர்ப்பின் குடிமக்கள் புறவினத்தாரே ஆவர், ஏனெனில் அடுத்த அறு வடையில் இஸ்ரவேல் மக்கள் குறிப்பிடப்பட்டி ருப்பதாகத் தோன்றுகிறது (வச. 17-20).

14:17 இப்பொழுது, ஆய்வுபொருள் இஸ்ர வேல் நாட்டின் அவிசுவாச மக்கள் கூட்டத்தின் மேல் விழப்போகிற பயங்கரமான நியாயத் தீர்ப்பை நோக்கித் திரும்புகிறது. அவர்களோ பூமியின் திராட்சைக்கொடி (சங். 80:8, ஏசா. 5:1-7; எரே. 2:21; 6:9 ஆகிய வசனங்களைக் காண்க). **வேறொரு தூதனும் பரலோகத்திலுள்ள தேவா லயத்திலிருந்து புறப்பட்டு வந்தான்.** அவனிடத் தில் அதற்குத் தேவையான **கருக்கான பட்டயம்** கொடுக்கப்பட்டிருந்தது.

14:18 வேறொரு தூதன் அறுவடையைத் தொடங்குவதற்கான கட்டளையைக் கொடுப் பான். இந்தத் தூதனுக்கு அக்கினியின்மேல் அதிகாரமிருக்கும், அது தொடர்ந்து வருகிற தண்டனைக்கு அடையாளமாயிருக்கிறது.

14:19 கனிந்த திராட்சைப் பழங்கள் சேகரிக் கப்பட்டு, **தேவனுடைய கோபாக்கினையென் னும் பெரிய ஆலையில் போடப்பட்டன.** திராட் சைப்பழங்கள் மிதிக்கப்படுவது, பிழிந்தெடுக்கப் படும் நியாயத்தீர்ப்பை படவுருவில் வரைந்து தருவதாயிருக்கிறது.

14:20 பழச்சாறு பிழிதல் எருசலேம் நகரத் திற்கு அப்பால் நடைபெறுகிறது. பெரும்பாலும் அது யோசபாத்தின் பள்ளத்தாக்காகத்தான் இருக்க வேண்டும். அந்தப் படுகொலைச் சம்பவம் மிகப் பெரிதாயிருக்கும், அதனால் உண்டாகும் **இரத்தப்** பெருக்கு 180 கல் தொலைவு ஓடும், அதனுடைய ஆழமோ **குதிரையின் கடிவாளங் கள் மட்டும்** இருக்கும். எருசலேமில் தொடங்கு கிற இரத்த வெள்ளம் ஏதோம் என்னும் தென் தேசம் வரை செல்லும்.

15:1 வானத்திலே வேறொரு அடையாளம் தோன்றியது. அதில் **ஏழு தூதர்** பங்கு கொண் டார்கள். அவர்கள் அவிழ்த்துவிடப்படும் செயல் தேவனுடைய கோபம் முடிவடைகிறது என்பதற் கான அடையாளமாயிருக்கிறது, அவர்கள் **ஏழு வதைகளை** வைத்திருக்கிறார்கள். உபத்திரவ காலத்தின் முடிவுக்கு நாம் வந்துவிட்டோம் என்ப தை இதன் மூலம் அறிகிறோம்.

15:2 பரலோகில் **அக்கினி கலந்த கண்ணா டிக் கடலின் மேல் நிற்கிற** பெருங்கூட்ட மக்களை யோவான் காண்கிறார். அவர்கள் **மிருகத்தையும் சொரூபத்தையும்** தொழுதுகொள்ள மறுத்தவர் கள் என்பதை அவர் உணருகிறார். அதன் காரண மாக அவர்கள் இரத்த சாட்சிகளாக மரணம் அடைந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

15:3,4 ஆனால் அவர்கள் இப்பொழுதோ **மோசேயின் பாட்டையும், ஆட்டுக்குட்டியான வருடைய பாட்டையும்** பாடியவர்களாக விண்ண கத்தில் இருக்கிறார்கள். அந்தப் பாடல்கள் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டு வசனங்களைப் பயன்படுத்திப் புனையப்பட்டவை. பூமியில் அவர் களைக் கொன்ற மனிதர்களுக்கு எதிராக தேவன் செலுத்தவிருந்த நியாயத்தீர்ப்பின் நீதியைக் குறித்த சாட்சியை அவை எடுத்தியம்புகின்றன. **சர்வ வல்லமையுள்ள தேவனை** அவருடைய **கிரியைகளுக்காகவும் வழிகளுக்காகவும்** அவர்கள் புகழ்ந்து போற்றுகிறார்கள். அவரு டைய கிரியைகள் மற்றும் வழிகள் அனைத்தை யும் இது குறித்தாலும் இந்தப் பகுதியின் பின் னணியைக் காணும்போது அவருடைய நியாயத் தீர்ப்பு என்பதே இதன் பொருள் என்பது புலப்படு கிறது. **பரிசுத்தவான்களின் ராஜா** என்னும் சொற் றொடர் *ஜாதிகளின் ராஜா* என்று எழுதப்பட்டி ருக்க வேண்டும் (NKJV அடிக்குறிப்பைக் காண்க.)[26]

எகிப்து நாட்டில் அடிமைகளாக இருந்த தேவ னுடைய மக்கள் விடுதலை பெற்றதைக்

கொண்டாடுவதே **மோசேயின் பாடலாகும்.** சாத்தானிடத்திலிருந்தும் ஆவிக்குரிய வாழ்வின் அனைத்து எதிரிகளிடத்திலிருந்தும் பெறுகிற கடைசி விடுதலையைக் கொண்டாடுவதே **ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டாகும்.** "மீட்பின் வரலாற்றின் இரண்டு எல்லைகளையும் இவை குறிக்கின்றன. அவற்றிற்கிடையே தேவனுடைய மீட்கப்பட்ட மக்களின் முழுவரலாறும் அடங்கியிருக்கிறது" என்று A. T. பியர்சன் என்பார் மிகச் சரியாகச் சுட்டிக்காட்டுகிறார்.[27]

பூமியில் தேவன் செலுத்திய தண்டனைகள் அவர் பரிசுத்தத்தின் தேவன் என்பதைக் காட்டுகின்றன. **எல்லா ஜாதிகளும்** அவருக்குப் **பயப்படவும்** அவரை **மகிமைப்படுத்தவும் ஆராதிக்கவும்** அவை காரணமாயிருக்கும்.

15:5 இவற்றிற்கு பின்பு, **பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய** ஆலயம் திறக்கப்படுவதை யோவான் காண்கிறார். பூமியிலே இருந்த தேவாலயம், மெய்யான பரலோக தேவாலயத்தின் மாதிரி அல்லது ஒத்தபடிவம் என்பது வெளிப்படை (எபி. 9:23). இது மகா பரிசுத்த ஸ்தலத்தையே சிறப்பாகக் குறிக்கிறது.

15:6 சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு ஏழு தூதர்கள் அங்கிருந்து வெளியே வந்தார்கள். தேவன் மகிமைப்படுவதற்கு ஏதுவாக நீதியுள்ள தண்டனையைச் செலுத்தத் தேவையானவை எல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது இதன் பொருளாகும். அந்தத் தூதர்கள் கடைசி ஏழு வாதைகளையும் கட்டவிழ்த்துவிட ஆயத்தமாயிருக்கிறார்கள்.

15:7 நான்கு ஜீவன்களில் ஒன்று ஒவ்வொரு தூதனிடமும் ஒவ்வொரு கலசத்தைக் கொடுக்கிறது. தேவனுடைய எல்லாப் பகைஞரையும், அவர்களில் ஒரு பங்கை மட்டுமல்ல, எல்லோரையும் தாக்கக்கூடிய, மகா உபத்திரவ காலத்தின் கடைசி தண்டனை அந்தக் கலசங்களில் இருக்கிறது.

15:8 ஏழு வாதைகளும் நிறைவேறும் வரை தேவாலயத்திற்குள் ஒருவராலும் நுழைய முடியவில்லை என்பது, தேவனுடைய கோபாக்கினையைக் கால தாமதம் செய்ய ஆசாரியருடைய பரிந்துரை எதனாலும் முடியாது என்று பொருள்படும்.

ஒ. ஏழு கலசத் தண்டனைகள் [அதி. 16]

16:1,2 தேவனுடைய கோபக்கலசங்களைப் பூமியின்மேல் ஊற்றும்படி ஏழு தூதருக்கும் தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தம் கட்டளையிடுகிறது. இயல்பிலும் வரிசை முறையிலும் இவை எக்காள தண்டனைகளுக்கு இணையாக இருக்கின்றன. ஆனால் இவை அவற்றிலும் அதிகக் கடுமையானவை. **மிருகத்தையும் அதனுடைய சொரூபத்தையும் வணங்கியவர்கள் மேல் பொல்லாத கொடிய புண்களை** முதலாவது கலசம் உண்டுபண்ணுகிறது.

16:3 இரண்டாவது வாதை கடலின் நீரை **இரத்தமாக** மாற்றுகிறது. அது **செத்தவனுடைய இரத்தம்** போலிருக்கும்; கடல்வாழ் உயிரினங்கள் அனைத்தும் மாண்டுபோகின்றன.

16:4 மூன்றாவது **கலசம்** நீர்நிலைகளின் ஆதாரம் அனைத்தையும் **இரத்தமாக** மாற்றக் காரணமாயிருக்கிறது.

16:5,6 இந்தத் தருணத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நீதியைத் **தண்ணீர்களின் தூதன்** ஆதரித்துப் பேசுகிறான். மனிதர்கள் தங்களுடைய சொந்தப் பாவச்செயல்களுக்குரிய நீதியான தண்டனைகளையே பெறுகிறார்கள். அவர்கள் பெருமளவில் **இரத்தத்தைச் சிந்தினார்கள்**, இப்பொழுதோ அவர்கள் நீருக்குப் பதிலாக **இரத்தத்தைப் பருகும்படியாயிற்று. இதற்கு அவர்கள் பாத்திரராயிருக்கிறார்கள்.**

16:7 இரத்த சாட்சிகளாக மரணமடைந்த ஆத்துமாக்களையே பலிபீடம் குறிக்கிறது என லாம் (6:9). அவர்களைத் துன்பப்படுத்தியவர்கள் தண்டனை அடைவதற்காக, அவர்கள் பொறுமையோடு நீண்ட காலமாகக் காத்திருந்தார்கள்.

16:8,9 கடுமையான தோல் அழற்சியும், கதிரியக்கத் தாக்குதலும் சூரியனின் ஒளிக்கதிர்களால் ஏற்படுகின்றன. இது நான்காவது வாதையால் உண்டாகிறது. ஆனாலும் அவர்கள் **மனந்திரும்புவதற்கு** இது எந்த வகையிலும் செயலாற்றுகிறதில்லை. மாறாக, அவர்கள் தங்கள் மீது அழற்சி உண்டாகத்தக்க கடுமையான வெப்பத்தை அனுப்பியதற்காக **தேவனைச்** சபிக்கிறார்கள்.

16:10,11 ஐந்தாம் தூதன் தன் வாதையை ஊற்றுகிறபோது **மிருகத்தின் ராஜ்யம் இருளடைகிறது.** ஏற்கனவே உண்டான இன்னல்களிலிருந்து தப்பி ஓடுவதை இது தடைசெய்து அவர்

களுடைய வேதனையைப் பெருக்குகிறது. ஆனாலும் இது அவர்களுடைய இருதயங்களை மென்மையாக்குவதில்லை. அவர்கள் தேவன்மேல் கொண்டிருந்த வெறுப்பில் கூடுதலாகக் காட்டமடைகிறார்கள்.

16:12 ஆறாவது கலசம் ஊற்றப்படும்போது **ஐபிராத்** நதி வற்றிப்போகும். அதன் காரணமாகக் கிழக்கிலிருந்து சேனைகள் இஸ்ரவேல் நாட்டை நோக்கிச் செல்ல ஏதுவாகும்.

16:13,14 தவளை போன்ற மூன்று ஆவிகள் வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி ஆகிய வற்றின் வாயிலிருந்து புறப்பட்டு வருவதை யோவான் காண்கிறார். அவை சாத்தானின் போலியான திரியேகம். அவை பேய்த்தன்மை யுடைய ஆவிகள், உலகத்தின் அரசர்களை ஏமாற்றக்கூடிய அற்புதங்களைச் செய்கின்றன, மேலும் அவை தேவனுடைய மகா நாளில் நடக்கும் உச்சநிலையிலான யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும் கவர்ச்சித் தன்மையுடையவை.

16:15 அந்தப் போரைப்பற்றிய குறிப்பு சொல்லப்பட்ட தருணத்தில், கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி எச்சரிக்கையோடு இருப்பவர்களும், அந்த நாளில் பரவியிருக்கும் சிலைவணக்கத்திலிருந்து தங்களைத் தூய்மையோடு காத்துக் கொண்டவர்களுமான உபத்திரவ கால பரிசுத்தவான்களுக்குச் சிறப்பான ஆசிர்வாதத்தைத் தந்தருளும்படி கர்த்தர் இடைமறிக்கிறார். இரட்சிக்கப்படாதவர்களிடம் அவர் ஒரு திருடனைப் போல வருவார், அவருடைய வருகை அவர்களுக்கு எதிர்பாராத நிகழ்ச்சியாகக் காணப்படும், பெரு நஷ்டத்தை உண்டாக்கும்.

16:16 எபிரெய மொழியில் அர்மகெதோன் என்று அழைக்கப்படும் இடத்தில் உலக நாடுகளின் படைகள் யாவும் ஒன்று கூடும் (NKJV அடிக்குறிப்பு - மெகிதோ)[28]. இது பொதுவாக, மெகிதோ தென் எல்லையாகக் கொண்ட எஸ்ட்ராலன் பள்ளத்தாக்கோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. உலகத்தின் சண்டைச் சேவல்கள் போரிடும் இடம் என்று இதனை நெப்போலியன் குறிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது. அதாவது, போர் நடைபெறுவதற்கு ஏற்ற இடம்.

16:17 ஏழாவது தூதனின் அறிவிப்பாகிய **"ஆயிற்று!"** என்னும் சொல் கலசத்தின் கடைசி வாதை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. உபத்திரவ காலத்தைப் பொருத்தமட்டில் தேவனுடைய கோபாக்கினை முடிவுபெறுகிறது.

16:18 கடைசிக் கலசம் ஊற்றப்படுகிறபோது இயற்கையில் கடுஞ்சீற்றங்கள் ஏற்படும்: வெடித்துச் சிதறல்கள், **இடிமுழக்கங்கள், மின்னல்**, இதுவரை காணாத அளவில் **பூமியதிர்ச்சி,**

16:19 மகா நகரம் பாபிலோன், மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டு தேவனுடைய கோபாக்கினையின் **பாத்திரத்தைக் குடிக்கிறது.** அவளுடைய சிலை வணக்கம், கொடூரம், சமயக்குழப்பம் ஆகியவற்றை அவர் மறந்துபோகவில்லை. அதே நேரத்தில் **புறவினத்தாரின் பட்டணங்கள்** தரைமட்டமாய் விழுகின்றன.

16:20 பூமி சுருளைப் போலச் சுருளுகிறது, அதில் எல்லாத் **தீவுகளும் பர்வதங்களும்** மறைந்துபோகின்றன.

16:21 நூறு பவுண்டு எடையுள்ள கல்மழை உலகத்தின் மீது வெடிகுண்டுகளாகச் சிதறுகிறது, ஆனாலும் மனிதர்கள் மனந்திரும்புவதற்குப் பதிலாக தேவனை நிந்திக்கிறார்கள்.

ஓ. மகா பாபிலோனின் வீழ்ச்சி (அதி. 17,18)

17:1,2 மகாவேசிக்கு நிகழுகிற **ஆக்கினையைக்** காணும்படி **ஏழுதூதரில் ஒருவன்** யோவானை அழைக்கிறான். ரோமாபுரியைத் தலைமையிடமாகக்கொண்டு நிறுவப்பட்ட பெரிதான சமய, வணிக அமைப்பே அது. 17 -ஆவது அதிகாரம் சமய பாபிலோனையும், 18 -ஆவது அதிகாரம் அதனுடைய வணிக அமைப்பையும் குறிக்கின்றன என்று பலர் கருதுகிறார்கள். சமய பாபிலோன் விசுவாசத்தை மறுதலிக்கும் சீர்திருத்தவக் கிறிஸ்தவம் மற்றும் கத்தோலிக்க சமயம் இரண்டையும் உட்கொண்டது. உலகக் கிறிஸ்தவ சபைகளின் ஒருங்கிணைப்பை இது குறிப்பது நிச்சயம். இதனுடைய வருணணையைக் கவனியுங்கள். **திரளான தண்ணீர்கள் மேல் உட்கார்ந்திருக்கிற மகாவேசி** உலகத்தின் பெரும் பான்மை புறவின நாடுகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறாள். **பூமியின் ராஜாக்கள்** அவளோடு **வேசித்தனம்** பண்ணியிருக்கிறார்கள்; அவளுடைய சமரச இணக்க ஏற்பாடுகளினாலும், சதியாலோசனையாலும் அந்நாடுகளின் அரசியல் தலைவர்கள் மயங்கிச் சிக்கிக்கொண்டார்கள். அவளுடைய **வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகள் வெறிகொண்டவர்களாக** மாறிப்போயிருக்கிறார்கள்; அவளுடைய பொல்லாத செல்வாக்குக்கு அடிபணிந்து பெரு மளவிலான நாடுகள் நிலைதடுமாறிப் பயனற்ற நிலைக்கு ஆளாகிப்போயிருக்கின்றன.

17:3 விசுவாசத்தை மறுதலித்த சபை **சிவப்பு நிறமுள்ள மிருகத்தின்மேல்** அமர்ந்திருப்ப தாகக் காணப்படுகிறது. புத்துயிர் பெற்ற ரோமப் பேரரசே இந்த மிருகம் என்பதை ஏற்கனவே நாம் 13 -ஆவது அதிகாரத்தில் கண்டோம். (சில இடங் களில் இந்த மிருகம் அதன் தலைவனைக் குறிக் கும்.) அந்த மிருகமானது **தூஷணமான நாமங் களால் நிறைந்திருக்கிறது,** அதற்கு **ஏழு தலை களும் பத்துக்கொம்புகளும்** இருக்கின்றன.

17:4 கொஞ்சக்காலம் அந்தக் கள்ள சபை, பேரரசின் மீது ஆதிக்கம் செலுத்துவதாகக் காணப்பட்டது. அவள் தன்னுடைய திரளான செல்வத்திற்கு அடையாளமாய் ஆடையணிந்து, தன்னுடைய சிலைவணக்கம் மற்றும் ஒழுக்கக் கேடு ஆகியவற்றால் நிறைந்திருந்த **பொற்பாத் திரத்தை** கரத்தில் ஏந்திக் கவர்ச்சி மிக்க வகையில் அமர்ந்திருந்தாள்.

17:5 இரகசியம், மகா பாபிலோன், வேசி களுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதி யிருக்கிறது. பல நூற்றாண்டுகளாகவும், இன்ன மும் இந்தக் காலத்திலேயும் கிறிஸ்தவ உயிர்த் தியாகிகளின் இரத்தத்தைச் சிந்திய சபை இது தான். அவர்களுடைய இரத்தத்தைக் குடித்து அவள் வெறிகொண்டிருக்கிறாள்.

17:6 மற்ற பலரைப்போலவே, **பரிசுத்தவான் களுடைய இரத்தத்தை அவள் குடித்து வெறி கொண்டிருப்பதைக்** கண்ட யோவான் மிகவும் ஆச்சரியப்பட்டார். சபை வரலாற்றின் எல்லாக் காலத்திலும் வாழ்ந்த பரிசுத்தவான்களையே இது குறிப்பிடுகிறது, ஆனாலும் சிறப்பாக **இயேசுவின் இரத்த சாட்சிகளாக மரணமடைந்த** உபத்திரவ காலத்து விசுவாசிகளையே இது குறிப்பிடுகிறது.

17:7,8 அந்த ஸ்திரீயினுடைய இரகசியத் தையும் மிருகத்தினுடைய இரகசியத்தையும் யோவானுக்கு விளக்கிக் கூற அந்தத் தூதன் முன் வருகிறான். யோவான் கண்ட அந்த **மிருகம் முன்னே இருந்தது,** (முந்தின காலத்தில் இருந்த ரோமப் பேரரசு); இப்பொழுது இல்லை; (சிதறிப் போய் இன்றைய நாளில் வல்லரசாக அது காணப்படுவதில்லை). **அது பாதாளத்திலிருந்து ஏறி வரும்** (அது ஒரு குறிப்பிட்ட பேய் போன்ற கொடூரமான உருவத்தில் மீண்டும் தோன்றும்); அது **நாசமடையப் போகிறது** (அது முற்றிலும் இறுதியாக அழிக்கப்படும்). இவ்வாறு அந்த வல்லரசு மீண்டும் புது வலிமை அளிக்கப்பட்டு கவர்ச்சியூட்டும் வகையில் தோற்றமளிப்பதைக் காணும் விசுவாசமற்ற உலகம் ஆச்சரியப்படும்.

17:9 ஞானத்தோடு கூடிய **மனம்** தேவை என்று கூறுவதாகத் தூதன் கூறுகிறான். **அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக் கிற ஏழு மலைகளாம்.** ஏழு மலைகளின்மேல் கட்டப்பட்டுள்ள ரோமாபுரியை அந்த வேசி தலைமையிடமாகக் கொண்டிருப்பாள் என்பது பாரம்பரிய விளக்கமாகும்.

17:10 இந்த **ஏழு ராஜாக்களும்** ஏழு வகை யான ரோம அரசாங்கங்களைக் குறிக்கிறார்கள் என்று சிலர் விளக்கமளிக்கிறார்கள்; அவர்கள் உண்மையாக ஏழு பேரரசர்கள் என்று வேறுசிலர் கருதுகிறார்கள். இராஜாக்கள் ஏழு வல்லரசு களைக் குறிப்பதாக மற்றவர்கள் கூறுகிறார்கள்: எகிப்து, அசீரியா, பாபிலோன், பெர்சியா, கிரேக் கம், ரோம் மற்றும் புதுப்பிக்கப்படப்போகிற ரோமப் பேரரசு.

17:11 எட்டாவது அரசன் புத்துயிர் பெறும் ரோமப் பேரரசின் தலைவன் என்று எல்லோரும் வேறுபாடு இல்லாதபடி ஒப்புக்கொள்கிறார்கள், அவனே அந்திக்கிறிஸ்து. இந்தத் தீர்க்கதரிசனத் தின் துல்லியமான பொருள், அது நிறைவேறும் வரையில் பூரணமான தெளிவோடு தெரியாது.

17:12 ரோம **மிருகத்திற்குக்** கீழ் ஆளுகை புரியும் வருங்கால ராஜாக்களையே இந்தப் **பத் துக் கொம்புகளும்** குறிப்பிடுகின்றன எனலாம். அவர்கள் **ஒருமணி நேரமளவும்**, அதாவது கொஞ்சக்காலம் மட்டுமே அரசாளுவார்கள் (10 - ஆவது வசனத்தைக் காண்க).

17:13 பத்து அரசர்களும் ஒருமனப்பட்டவர் களாக தங்களுடைய வல்லமையையும் அதி காரத்தையும் கொடுப்பார்கள். பத்து நாடுகளும் (அரசாங்கங்களும்) தங்களுடைய தனிநாடு என் னும் உரிமையை அவனிடம் அர்ப்பணிப்பார்கள்.

17:14 உபத்திரவ காலத்தின் முடிவில் இந்தப் பத்து அரசுகளும் இணைந்த பேரரசு கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்குத் திரும்பி வருகிறபோது அவரோடு போரிடச் செல்லும். ஆனால் அவர்கள் அந்தப் போரில் தோல்வியைத் தழுவுவார்கள். அவர் **ஆட்டுக்குட்டியானவராக** இருந்த போதி லும் அவர் **கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜா வுமாக** இருக்கிறார். அவரைப் பின்பற்றுவோர் **தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்** என்றும் **உண்மை யுள்ளவர்கள்** என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

17:15 முதல் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்ணீர்கள் **ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரரும்** என்று அந்தத் தூதன் தொடர்ந்து விவரிக்கிறான். அந்த வேசி தண்ணீர்கள் மேல் அமர்ந்திருக்கிறாள் என்பது அவர் பெருமளவிலான மக்கள் கூட்டத்தின்மேல் ஆதிக்கம் செலுத்துகிறாள் என்று பொருள்படும்.

17:16 புத்துயிர் பெற்ற ரோமப் பேரரசு சிறிது காலம் வேசிமார்க்கச் சபையின் கட்டுப்பாட்டுக்குள் அல்லது குறைந்தது அதனுடைய செல்வாக்கிற்குள் இருக்கும் என்று தோன்றுகிறது. பிறகு அது பொறுக்கக்கூடாத அந்த நுகத்தை தூக்கியெறிந்து அவளை அழிக்கிறது. வெறுக்கப்பட்ட **வேசி** அந்த மிருகத்தால் நிர்வாணமாக்கப்பட்டு, பட்சிக்கப்பட்டு முற்றிலுமாக எரித்துச் சாம்பலாக்கப்படுவாள்.

17:17 இவையெல்லாவற்றிலும் **தேவன்** பின்நின்று செயல்புரிகிறார். அந்த அரசாங்கங்கள் அனைத்தும் ரோம மிருகத்தின் கீழ் ஒன்று சேர்வதற்கும், பின்னர் வேசிக்கு எதிராக மாறுவதற்கும் அவரே காரணராயிருக்கிறார். அவருடைய இறைமை நோக்கம் நிறைவேறும்படியே இவையாவும் நடைபெறுகின்றன.

17:18 பூமியின் ராஜாக்களை ஆளுகிற **மகா நகரம்** இரகசிய பாபிலோனே ஆகும். ஆனால் நாம் கண்டபடி, அந்தப் பெண் ரோமாபுரியைத் தன் தலைமையிடமாகக் கொண்டிருக்கிறாள்.

18:1 பதினெட்டாவது அதிகாரம், பாபிலோனின் வீழ்ச்சியைக் கொண்டாடும் வகையில், சவ அடக்கப் பாடலை முதன்மையாகக் கொண்டிருக்கிறது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, பரந்த சமய அமைப்பை மட்டும் குறிப்பிடாமல், உலகிலேயே மிகப்பெரிய வணிகச் சந்தையையும் உட்கொண்ட வேசிமார்க்க சபையையே இது குறிப்பிடுகிறது. இது உலக வணிகச் சந்தையைக் கட்டுப்படுத்துகிறது என்பது வெளிப்படை.

மிகுந்த அதிகாரத்தோடு வேறொரு தூதன் செய்தியை அறிவிக்கும்படி வானத்திலிருந்து இறங்கிவருகிறபோது விளக்குகளைப் பொருத்தினாற்போலப் பிரகாசமாகிறது. அவருடைய **மகிமை பூமியைப்** பிரகாசமாக்குகிறது.

18:2 மகா பாபிலோன் விழுந்து கிடக்கிறது. அதனுடைய பாழான இடம் பேய்களுக்கும், சகலவித அசுத்த ஆவிகளுக்கும், அருவருப்பான அசுத்தம் நிறைந்த பறவைகளுக்கும் குடியிருப்பாகக் காணப்படுகிறது.

18:3 அவள் எல்லா நாடுகளோடும் அவற்றின் **வர்த்தகர்களோடும்** நடப்பித்த ஒழுக்கக் கேடான செயல்களே அவளுடைய வீழ்ச்சிக்குக் காரணம். அவள் தனது **வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை** எல்லா நாடுகளும் குடிக்கும்படி செய்தாள்.

18:4 தேவனுடைய மக்கள் அழிவுக்கேதுவான அமைப்பிலிருந்து, அது அழிக்கப்படுவதற்கு முன், **வெளியே வரும்படி வானத்திலிருந்து** வந்த **வேறொரு சத்தம்** எச்சரிக்கிறது. அவளுக்கு உடன்படுதல் என்பது **அவளுக்கு நேரிடும் வாதைகளில்** பங்குகொள்ளுதலாகும்.

18:5,6 அவளுடைய பாவங்கள் வானம் வரைக்கும் குவிந்தது. **அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார்,** மேலும் அவர்களுக்கு எதிராக அவர் தமது கடுஞ் சீற்றத்தை வெளிப்படுத்துகிறார். அவள் தன்னுடைய பொல்லாத செயல்களுக்காக, தேவனுடைய மக்களிடத்திலிருந்தல்ல, அவருடைய பழிவாங்குதலின் கருவியாகிய தூதனிடத்திலிருந்து **இரட்டிப்பான** கூலியைப் பெறவேண்டும்.

18:7 அவளுடைய செல்வச் செருக்கு சுகபோகமான வாழ்க்கைமுறை ஆகியவற்றிற்கு ஏற்ற அளவின்படி அவளுடைய **வாதையும் துக்கமும்** இருக்கும். அவள் எல்லாவற்றிற்கும் மேலாக அமர்ந்திருப்பதாகவும், துக்கம் தனக்கு வருவதில்லை என்றும், தான் **ராஜஸ்திரீயைப்** போல இருப்பதாகவும் நினைக்கிறாள்.

18:8 அவளுடைய ஆக்கினை **சாவும், துக்கமும், பஞ்சமும்** கொண்டதாக **ஒரே நாளில் வரும். வல்லமையுள்ள கர்த்தர் தாமே அக்கினியாலே** அவளைத் தண்டிப்பார்.

18:9,10 இந்தப் **பூமியின் அரசர்கள்** தங்களுடைய முந்தின இல்லக்கிழத்தி நெருப்புக்கு இரையானது குறித்து **அழுது புலம்புவார்கள்**. அவ்வாறு அவர்கள் துக்கப்படுவது சுயலமற்றதல்ல. அவர்கள் சுகத்தையும் வசதியையும் இழந்தது குறித்தே துக்கமடைகிறார்கள். அவர்கள் தொலைதூரத்தில் நின்றவர்களாக, அவளுடைய ஆக்கினையின் தீவிரத்தைக் குறித்தும் அவளுடைய முடிவு சடிதியில் வந்தது குறித்தும் ஆச்சரியப்படுவார்கள்.

18:11-13 தங்களுடைய ஆதாயத்தின் நம்பிக்கை போய்விட்டது என்னும் காரணத்தை முன்னிட்டே **வர்த்தர்கள் அழுது புலம்புவார்கள்**. அவர்களுடைய சரக்குகளை இனி வாங்குபவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

பாபிலோனில் வர்த்தகம் செய்யப்படும் சரக்கு களின் பட்டியல் உலகச் சந்தையை எல்லை யாகக் கொண்டதாகக் காட்சியளிக்கிறது: விலை யுயர்ந்த உலோகங்கள், நகைகள், துணிவகை கள், **கட்டைகள், தந்தம், வெண்கலம்,** வெண் கற்கள், நறுமணப்பொருட்கள், காரச்சுவையுள்ள பொருட்கள், மது வகைகள், எண்ணெய், தானி யங்கள், மந்தைகள், இரதங்கள், மனிதருடைய ஆத்துமாக்களும் சரீரங்களும். விசுவாசத்தை மறுதலிக்கும் சபையும், உலகச் சந்தையும் மனித ருடைய ஆத்துமாக்களை வணிகம் செய்கிற குற்றத்தை இழைக்கின்றன. பாவமன்னிப்பு போன்றவற்றை சபை விற்பனை செய்கிறது, உலக வணிகச் சந்தையில் மனிதர்கள் ஆதாயத் திற்காக சுரண்டப்பட்டு வஞ்சிக்கப்படுகிறார்கள்.

18:14 வீழ்ச்சியடைந்த அமைப்பு எதிர்பார்த்த ஆதாயம் இல்லாமற் போயிற்று, அதனுடைய செல்வமும் செருக்கும் சடிதியில் மறைந்து போயின. அவற்றின் அழிவு நிரந்தரமானது என்று சொல்லி வணிகர்கள் அழுதுபுலம்புவார்கள்.

18:15,16 அரசர்களைப் போலவே, **வர்த்தகர் களும்** அச்சத்தால் திகைத்து நிற்பார்கள்; தங்க ளுடைய ஆதாயம் ஒரு மணி நேரத்திற்குள்ளாக இல்லாமற் போயிற்றென்று அவர்கள் **அழுது துக்கிப்பார்கள்**. அந்த நகரத்தின் முந்தைய சுகபோக நிலையையும் அந்நகரத்தின் மக்கள் எவ்வளவு உயர்வான ஆடைகளை அணிந்திருந் தார்கள், எவ்வளவு விலையுயர்ந்த நகைகளை அணிந்திருந்தார்கள் என்பதையும் வர்த்தகர்கள் எண்ணிப்பார்ப்பார்கள்.

18:17,18 அந்தச் செல்வச் சிறப்பு யாவும் சடிதி யில் **பாழாய்ப்** போயிற்று, உலக வாணிபம் என்று மில்லாத அளவிற்கு மந்த நிலைக்கு வந்துவிடும் என்னும் அச்சம் கௌவிக்கொள்கிறது. கடலில் வாணிபம் செய்கிறவர்களும் தூரத்தில் நின்று, "**இந்த மகா நகரத்திற்கு** எதை ஒப்பிட முடியும்?" என்று கூறி அழுதார்கள்.

18:19 அவர்கள் தங்களுடைய **தலைகளின் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு**, உலகக் கப்பல் தொழில் அந்த நகரத்தினால் வளம் பெற்றிருந்தது. ஆனால் அது **ஒரு நாழிகையிலே** பாழாய்ப்போயிற்று என்று எண்ணி, அந்நகரத்திற் காக அழுது புலம்புவார்கள்.

18:20 இவ்விதமாகக் கடவுள் பற்றற்ற அழுகை பூமியில் சிந்திக்கொண்டிருக்கையில், **பரலோ கத்தில்** பெரு மகிழ்ச்சி காணப்படும். தமது **பரி சுத்தவான்கள் அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசி கள்** யாவருக்காகவும் தேவன் கடைசியில் **நியாயந்தீர்த்தார்**. அவருடைய மக்களை எவ் வாறு பாபிலோன் நடத்தியதோ அதற்காக அவர் அந்நகரத்தை நியாயந்தீர்த்தார்.

18:21 பலமுள்ள தூதனொருவன் பெரிய இயந்திரக்கல் போன்ற கல்லைக் கடலுக்குள் எறிகிறான். அது பாபிலோனின் இறுதி அழிவை சித்திரம் போன்று வரைந்து தருகிறது.

18:22 முந்தைய செயல்கள், இன்னிசையோ, உற்பத்தியோ, ஆலை இயக்கமோ எதுவாயினும் அவற்றின் சத்தம் இனி ஒருபோதும் கேட்காது.

18:23 விளக்கு வெளிச்சம் யாவும் அணைக் கப்பட்டுவிடும், திருமணத்தின் ஆரவார மகிழ்ச்சி இனி காணப்படுவதில்லை. ஏன்? ஏனென்றால் பாபிலோனின் தலைவர்கள் தங்களுடைய **சூனி யத்தால் எல்லா நாடுகளையும்** ஏமாற்றிவிட் டார்கள்.

18:24 தேவனுடைய **பரிசுத்தவான்களுடைய,** அதாவது தங்களுடைய விசுவாசத்திற்காகக் **கொல்லப்பட்ட** மக்களுடைய **இரத்தத்தைக்** குறித்து அவள் குற்றமுடையவள். இப் பொழுதோ அதற்கான தண்டனையை அவர் முழு அளவில் வழங்குகிறார்.

ஒள. கிறிஸ்துவின் வருகையும் அவருடைய ஆயிரமாண்டு ஆட்சியும் (19:1-20:3)

19:1 இவைகளுக்குப் பின்பு, அந்த மகா வேசியைக் கர்த்தர் நீதியாய் தண்டித்தது குறித் துப் **பரலோகத்தில் திரளான கூட்டம்** புகழ்ந்து ஆரவாரிக்கிறதை யோவான் கேட்கிறார். அந்தப் பாடல் கர்த்தரை **நம்முடைய தேவனாகிய கர்த்தர்** என்று உயர்த்தி, அவருக்கே **இரட்சணிய மும் மகிமையும் கனமும் வல்லமையும்** உரி யன என்று போற்றுகிறது.

19:2 அவர் **மகாவேசியை** அழித்த செயல் நியாயமானது என்பதால் அவருடைய நீதி நிலை நிறுத்தப்பட்டது. அவளுடைய **வேசித்தனம்** மற்றும் அவருடைய **ஊழியக்காரரைக்** கொன்று அவர்களுடைய இரத்தத்தைச் சிந்திய செயல் ஆகிய தகாத செயல்களின் நிமித்தம் அவர் அவ ளைத் தண்டித்தது, அவருக்கே உரிய சத்தியம் நீதி ஆகிய இயல்புகளுக்கு ஏற்றதாயிருந்தது.

19:3 அவளுடைய சவத்தின் சிதையிலிருந்து நிரந்தரமாக எழுகிற புகை இரண்டாவது **"அல்லே லூயா!"** அல்லது "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்னும் முழக்கத்தை எழுப்புகிறது.

19:4 இருபத்து நான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் அதற்கு உடன்பட்டவர்களாக "ஆமென்!" என்று சத்தமாய்க் கூறி "அல்லேலூயா!" என்று உளமார்ந்த வகையில் ஆர்ப்பரித்தார்கள்.

19:5 அருவருப்பான பாபிலோனை அழித்துப் போட்டதன் நிமித்தம் கர்த்தரை உயர்த்திப் போற்றுவதில் தேவனுடைய **ஊழியக்காரர்** யாவரும் சேர்ந்துகொள்ளும்படி அவர்களுக்குச் **சிங்காசனத்திலிருந்து வந்த ஒரு சத்தம்** அழைப்பு விடுக்கிறது.

19:6 இப்பொழுது வானத்தில் வேறொரு பாடல் முழங்கத் தொடங்குகிறது. அது "பெரு வெள்ளத்தின் இரைச்சல்" போலவும் "காதுகளுக்குப் பலத்த இடிமுழக்கம்" போலவும் ஒலிக்கிறது. **சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரின்** அரசாட்சியைப் போற்றிக் கொண்டாடும்படி ஒரு பெரும் **"அல்லேலூயா"** என்னும் முழக்கம் ஒலிக்கிறது.

19:7,8 உபத்திரவம் முடிந்துபோன நிகழ்ச்சி. பாபிலோன் நியாயந்தீர்க்கப்பட்டு விட்டது. இப்பொழுது **ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது.** கிறிஸ்துவின் **மனைவியாகிய** திருச்சபை, ஆத்துமாவுக்குக் கிளர்ச்சி ஏற்படுத்தும் நிகழ்ச்சிக்காகத் **தன்னை ஆயத்தம் பண்ணினாள்**. அவள் **பரிசுத்தவான்களின் நீதியைக்** குறிப்பாய்த் தெரிவிக்கும் ஆடையாகிய **சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரத்தைத் தரித்திருக்கிறாள்.**[29]

19:9 ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு வாழ்த்துரை எழுதும்படி ஒரு தூதன் யோவானுக்கு அறிவுரை வழங்குகிறார். திருச்சபை விண்ணக மணமகள்; மீட்கப்பட்டவர்களில் பிறர் யாவரும் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் ஆவார்கள். ஆசிர்வாதமானது **தேவனுடைய சத்திய மான வசனங்களைக்** குறிக்கின்றன என்று வலியுறுத்தி அதனுடைய முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகிறார்.

19:10 யோவான் தூதனுக்கு முன் வணக்கம் செலுத்தும்படி விழுந்தார், ஆனால் அது தடை செய்யப்பட்டது. தேவன் ஒருவருக்கே ஆராதனை செலுத்த வேண்டும். யோவானுக்கும் **இயேசுவின் சாட்சியைக்** காத்துக்கொள்கிறவர்களுக்கும் அந்தத் தூதன் உடன் ஊழியக்காரனாகவே விளங்குகிறான். அந்தத் தூதன், "இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது" என்று மேலும் கூறுகிறான். இயேசுவின் ஆளுமைக்கும் அவருடைய செயல்களுக்கும் சாட்சியாக விளங்குவதே தீர்க்கதரிசனத்தின் மெய்யான நோக்கம் ஆகும். இயேசுவின் இனிமையை வெளியரங்கமாக்கும்படி தீர்க்கதரிசனம் திட்டமிடப்பட்டிருக்கிறது"[30] என்கிறார் திருவாளர் C. C. ரைரி.

தேவனாகிய குமாரனை மனிதர்கள் **தொழுதுகொள்ள வேண்டும்** என்றே தூதன் விரும்புகிறான். அவரைக் குறித்தே அவன் சான்று பகர்ந்து கொண்டிருந்தான்.

19:11 இந்த நூலின் எஞ்சிய பகுதி, இந்தப் பூமிக்குக் கிறிஸ்து மகிமையோடு வருகிறதையும், அவர் தம்முடைய எதிரிகளை மடங்கடித்துத் தமது அரசை நிறுவவிருப்பதையும் எதிர்நோக்கியதாக இருக்கிறது. நாம் அந்த நிகழ்ச்சியினிடமாய் இப்பொழுது வந்திருக்கிறோம். இது சபை எடுத்துக்கொள்ளும் நிகழ்ச்சியல்ல; அந்தச் சமயத்தில் கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுக்காக வானிற்கு வருவார். இங்கு அவர் தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருகிறார்.

நம்முடைய கர்த்தரைக் குறித்த விவரத்தைக் கவனியுங்கள். அவர் **வெள்ளைக் குதிரையின்** மேல் அமர்ந்திருக்கிறார்; அவர் தம்முடைய பகைஞரைத் தோற்கடிக்கும்படி வருகிறார், ஆகவே இது போர்க்குதிரை என்பது நிச்சயம். அவருடைய பெயர் **உண்மையும் சத்தியமும்** ஆகும். அவர் தம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்ற உண்மையுள்ளவர். தம்முடைய நடத்தையில் சத்தியமுள்ளவர். **அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்**. நீதியின் ஆட்சிக்குக் கீழாக வாழ்வதற்கு விருப்பமுள்ள குடிமக்களையுடைய ராஜ்யத்தையே அவரால் ஆளுகை செய்ய முடியும். ஆகவே அவர் முதலாவது அவருக்கு எதிராகக் குற்றம்புரிபவரை அங்கிருந்து அகற்ற வேண்டும்.

19:12 அவருடைய கண்கள் அக்கினி ஜ்வாலையைப் போலிருக்கின்றன. அவருடைய நியாயத்தீர்ப்பு ஊடுருவிச் செல்லக்கூடியது என்பதைக் குறிப்பாய் இது சுட்டிக்காட்டுகிறது. எல்லாக் கிளர்ச்சிகளையும் அவிசுவாசத்தையும் அவரால் கண்டுபிடிக்க முடியும். **அவருடைய சிரசின்மேல் அநேக மகுடங்கள்** இருக்கின்றன. மற்றவர்கள் வெற்றியின் கிரீடத்தை அணியலாம், ஆனால் கர்த்தராகிய இயேசு ஒருவரே ராஜரீக முடி சூடியிருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. **அவருக்கே**

யன்றி வேறொருவருக்கும் தெரியாத எழுதப் பட்ட பெயர் அவருக்கு இருக்கிறது. கிறிஸ்துவின் ஆளுமையோடு தொடர்புடைய மர்மங்கள் பல இருக்கின்றன. படைக்கப்பட்ட ஒருவராலும் அவற்றை ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது.

19:13 இரத்தத்தில் தோய்க்கப்பட்ட ஆடையை அவர் அணிந்திருக்கிறார். அது கல்வாரி சிலு வையில் அவர் சிந்திய இரத்தம் அல்ல; மாறாக தேவனுடைய கோபாக்கினையாகிய திராட்சை ஆலையில் அவர் மிதித்த எதிரிகளின் இரத்தமே அது. **"தேவனுடைய வார்த்தை"** என்னும் பெய ரால் அவர் அழைக்கப்படுகிறார். சிந்தனையை வெளிப்படுத்துவதற்கான வழிதுறையாக வார்த்தை விளங்குகிறது. தேவன் மனிதனுக்குக் கிறிஸ்துவின் மூலமாகத் தம்மை முழுவதுமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

19:14 மெல்லிய ஆடை அணிந்து, வெள்ளைக் குதிரைகளில் ஏறினவர்களாகப் பரலோகத்தின் சேனை அவரைப் பின்தொடர்ந்தது. இந்தச் சேனை பரிசுத்தவான்களைக் கொண்டது என்ப தில் ஐயமில்லை, ஆனால் அவர்கள் போர்புரியத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது. யாருடைய உதவியுமின்றிக் கர்த்தராகிய இயேசு தமது பகைஞரைத் தோற்கடிக்கிறார்.

19:15 அவருடைய வாயிலிருந்து கூரிய பட்ட யம் புறப்படுகிறது. அதனைக் கொண்டு அவர் புறவினத்தாரைத் தாக்குகிறார். **அவர் இருப்புக் கோலால்** அவர்களை **அரசாளும்படி** வருகிறார், **சர்வவல்லமையுள்ள தேவனுடைய கோப மாகிய மதுவுள்ள ஆலையைக்** காலின் கீழே போட்டு **மிதிக்கிறார்.**

19:16 அவருடைய ஆடையின் மேலும் தொடை யின் மேலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா

நம்முடைய கர்த்தராகிய இயேசு ஒப்புயர்வற்ற அரசர். பிறர் யாவரும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

19:17,18 அரசு நிறுவப்படுவதற்கு முன்னர் தேவனுடைய எஞ்சிய பகைஞரை அழிப்பதே **தேவன் கொடுக்கும் மகாவிருந்து** (NKJV அடிக் குறிப்பைக் காண்க). அதில் கலந்துகொள்ளும் படி பிணம் தின்னிக் கழுகுகள் அழைக்கப்படுகின் றன! கர்த்தரால் கொல்லப்படுபவர்களுடைய சட லங்களை அவை தின்னும் - எல்லா வகையான மனிதர்களிலும் **சிறியோர் பெரியோர்** அனைத்து எதிரிகளும் கொல்லப்படுவார்கள்.

19:19,20 கிறிஸ்து ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றா வண்ணம் தடைசெய்ய மிருகம் இறுதி முயற்சி செய்வான் (சங். 2). அப்பொழுது அவன் உலகத்தின் சேனைகளோடு கூட்டுசேர்ந்து கொண்டு கர்த்தருக்கு எதிராகவும் அவருடைய சேனைகளுக்கு எதிராகவும் போர்புரிய வரு கிறான். ஆனால் அது வீணான முயற்சியே யாகும். **மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும்** பிடிக் கப்பட்டு இருவரும் **கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே** உயிரோடே தள்ளப்படுகிறார்கள்.

19:21 கலகக்காரர்களில் எஞ்சியவர்கள் **கர்த்தருடைய பட்டயத்தால் கொல்லப்படுவார் கள்**, அவர்களுடைய சடலங்கள் அழுகி, பிணந் தின்னிக் கழுகுகளுக்குப் பெருமளவு உண வாகும். பட்டயம் தேவனுடைய வார்த்தைக்கு மறைமுகமான குறிப்பாய் இருக்கிறது (எபே. 6:17; 2 தெச. 2:8; எபி. 4:12; வெளி. 1:16; 2:12,16 ஆகிய வசனங்களைக் காண்க).

இது மகா உபத்திரவ காலத்தின் முடிவுக்குக் கொண்டுவருகிறது.

20:1 ஆயிரமாண்டு ஆட்சி தொடங்குவதற்கு முன் சாத்தான் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட வேண்டும். இதை நிறைவேற்றும் பொருட்டு **ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும்** மிகப்பெரிய **சங்கிலியையும்** எடுத்துக்கொண்டு **வானத்திலிருந்து இறங்கி** வருகிறான்.

நம்முடைய கர்த்தர் இவ்வுலகிற்கு வந்த போது, ஒரு அர்த்தத்தில், சாத்தானைக் கட்டிப் போட்டார் (மத். 12:29). ஆகவே இது அடுத்தக் கட்ட கட்டுதல் ஆகும்.

20:2 அந்தத் தூதன் சாத்தானைப் பிடித்து **ஆயிரம் ஆண்டுகள் கட்டி வைத்தான்.** நூலா சிரியர் சோதனைக்காரனுக்கு நான்கு பெயர்கள் உள்ளன என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்: **வலுசர்ப்பம், பாம்பு, பிசாசு** (குற்றஞ்சாட்டுபவன்) **சாத்தான்** (எதிரி).

20:3 ஆயிரமாண்டு ஆட்சியின் போது, அந்தத் தலைமை எதிரி தடங்காணாத பாதாளத்திற் குள்ளே கட்டிவைக்கப்பட்டிருப்பான். அவன் மனி தர்களை வஞ்சிப்பதற்கான வெளியே வராதபடி பாதாளம் **முத்திரையிடப்பட்டிருக்கும்.** கிறிஸ்து வின் அரசாட்சியின் முடிவில், அவன் தன்னுடைய கடைசிக் கிளர்ச்சியைக் கொஞ்சக் காலம் செய் யும்படி அவிழ்த்துவிடப்படுவான் (வச. 7-10).

20:4 மனிதர்கள் ஆட்சிபுரியும் அதிகார முடையவர்களாக அரியணையில் அமர்த்தப்படு கிறதை யோவான் இப்பொழுது காண்கிறார். இவர்கள் திருச்சபையின் காலத்துப் பரிசுத்தவான் கள். இவர்கள் அவருடைய மணவாட்டி என்னும் நிலையில் கிறிஸ்துவோடு அரசாளப் போகிற வர்கள். **மிருகத்தின்** முத்திரையை ஏற்க மறுத்த இரத்த சாட்சிகளாகிய கூட்டத்தாரையும் யோவான் இப்பொழுது காண்கிறார். இவர்கள் உபத்திரவ காலத்தில் தங்களுடைய விசுவாசத்திற்காக மரணமடைந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. இவ்விரு கூட்டத்தாரும் அமைதியும் வளமும் நிறைந்த பொற்காலத்தில் **கிறிஸ்துவோடு** ஆளப்போகிறார்கள்.

20:5 ஐந்தாம் வசனத்தின் முதல் பகுதியை நாம் இடைப்பிறவரலாக எடுத்துக்கொள்ள வேண்டும். மரணமடைந்த மற்றவர்கள் எல்லாக் காலத்து அவிசுவாசிகளையும் குறிக்கும். அவர் கள் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பில் நிற்கும்படி ஆயிரமாண்டு ஆட்சியின் முடிவில் உயிரோடு எழுப்பப்படுவார்கள்.

இதுவே முதலாம் உயிர்த்தெழுதல் என்னும் சொற்றொடர் பின்னோக்கிச் சென்று 4 -ஆவது வசனத்தைக் குறிக்கிறது. **முதலாம் உயிர்த் தெழுதல்** தனியொரு நிகழ்ச்சியன்று. நீதி மான்களின், வெவ்வேறு கட்ட **உயிர்த்தெழுதல்** அனைத்தும் இதில் அடங்கும். இதில் கிறிஸ்து வின் **உயிர்த்தெழுதல்** (1 கொரி. 15:23), திருச் சபை எடுத்துக்கொள்ளப்படும்போது கிறிஸ்து வுக்குச் சொந்தமானவர்கள் **உயிர்த்தெழும்** நிகழ்ச்சி (1 தெச. 4:13-18), வீதிகளில் கிடக்கும் இரண்டு சாட்சிகளின் சடலங்கள் **உயிர்த்தெழு தல்** (வெளி. 11:11), மற்றும் இங்கு சொல்லப்பட் டுள்ள உபத்திரவ காலத்துப் பரிசுத்தவான்களின் **உயிர்த்தெழுதல்** (தானி. 12:2 -ஆம் வசனத் தையும் காண்க) யாவும் அடங்கும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் மெய்யான விசுவாசி கள் அனைவருடைய உயிர்த்தெழுதல் யாவும் அடங்கியதே முதலாம் உயிர்த்தெழுதல் ஆகும், அவர்கள் வெவ்வேறு காலத்தில் உயிர்த் தெழுந்தாலும் யாவும் முதலாம் உயிர்த்தெழு தலைச் சேர்ந்ததே என்றும் இதனைச் சொல்ல லாம். இந்த உயிர்த்தெழுதல் வெவ்றே கட்டத் தில் நடைபெறுகிறது.

20:6 முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு கொள்ளுகிறவர்கள், **இரண்டாம் மரணத்தில்** இடம்பெறமாட்டார்கள் என்பதால் பாக்கியவான் களாக இருக்கிறார்கள். அந்த இரண்டாம் மரணத்தில் அவிசுவாசிகள் யாவரும் அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள் (வச. 14). மெய்யான விசுவாசிகள் யாவரும் **தேவனுக்கும் கிறிஸ்து வுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.**

20:7,8 ஆயிரம் வருஷம் முடிவடையும்போது சாத்தான் தன்னுடைய சிறைக் **காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளை யும்** நோக்கிச் சென்று, கிறிஸ்துவுக்கு எதிராக இருக்கும் தேசங்களை, இங்கு **கோகு, மாகோகு** என்று குறிப்பிடப்பட்டுள்ள தேசங்களை **மோசம் போக்குவான்**. கோகு, மாகோகு என்பவை இதற்கு இணையான பகுதிகளாகிய எசேக்கி யேல் 38,39 -ஆகிய பகுதிகளோடு சேர்த்துக் குழப்பமடையக் கூடாது. அங்கு மாகோகு என்று குறிப்பிடப்பட்டிருப்பது, இஸ்ரவேலுக்கு வடக் கிலிருந்த பெரிய நிலப்பகுதியாகும், கோகு என்னும் பெயர் அந்நாட்டின் அரசன் ஆவான். இங்கு இந்தச் சொற்கள் உலக நாடுகளைப் பொதுவாகக் குறிக்கிறது. எசேக்கியேல் நூலின் பின்னணி ஆயிரமாண்டு ஆட்சிக்கு முந்தைய காலம்; இங்கு அது ஆயிரமாண்டு ஆட்சிக்குப் பிந்தைய காலம்.

20:9 தேவபக்தியற்ற கிளர்ச்சியாளர்களைத் தன் சேனையில் சேர்த்துக் கொண்ட பிறகு, பிசாசு **பிரியமான நகரமாகிய** எருசலேமுக்கு எதிராகப் போர்தொடுக்கச் செல்லுகிறான். ஆனால் **தேவ னிடத்திலிருந்து வானத்து அக்கினி இறங்கி** சேனையை அழித்துப் போடுகிறது.

க. சாத்தானும் அவிசுவாசிகள் யாவரும் நியாயந்தீர்க்கப்படுதல் (20:10–15)

20:10 பிசாசானவன் மிருகத்தோடும் கள்ளத் தீர்க்கதரிசியோடும் சேர்க்கப்படும்படி அவர்கள் இருக்கிற இடமாகிய **அக்கினிக் கடலுக்குள் தள்ளப்படுகிறான்**.

ஆயிரமாண்டு ஆட்சியின் முடிவில் அவி சுவாசிகளின் சேனையொன்று சாத்தானால் கூட்டப்படுகிறது என்னும் செய்தி வியப்பளிக்கக் கூடியதாகத் தோன்றுகிறது. ஆனாலும், கிறிஸ்து அரசாட்சி செலுத்துகையில் பிறக்கிற குழந்தை கள் யாவரும் பாவத்தில்தான் பிறக்கிறார்கள் என்பதையும் அவர்களும் இரட்சிப்படைய வேண் டிய தேவை உண்டு என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும். எல்லோரும் அவரே ஆட்சி புரிய உரிமை பெற்றவர் என்பதை ஒப்புக்கொள்ள மாட்

டார்கள். இத்தகையவர் உலகமெங்கிலும் சிதறி யிருப்பார்கள், அவர்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் எருசலேமைவிட்டு வெகு தொலைவு சென்றிருப்பார்கள்.

ஓராயிரம் ஆண்டுகள் சென்ற பிறகும் மிருக மும் கள்ளத்தீர்க்கதரிசியும் நரகத்தில் தான் இருக்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள். நர கத்தில் யாவரும் எரிந்து சாம்பலாகிவிடுவார்கள் என்னும் கருத்து தவறானது என்பதையும் அவர் கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக் கப்படுவார்கள் என்பதையும் இது மெய்ப்பிக் கிறது.

20:11 அடுத்ததாக, நாம் **பெரிய வெள்ளைச் சிங்காசன** நியாயத்தீர்ப்பிடமாய் அறிமுகப்படுத் தப்படுகிறோம். அது பெரியது, ஏனெனில் அதோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பெரியவை, அது வெண்மையானது, ஏனெனில் அங்கு வழங்கப் படும் தீர்ப்பு முழுநிறைவானதும் தூய்மையானது மாகும். கர்த்தராகிய இயேசு நியாயாதிபதியாக வீற்றிருக்கிறார் (யோவான் 5:22,27). அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின என்னும் சொற்றொடர் இந்நிகழ்ச்சி தற்போதைய படைப்பு முழுவதும் அழிக்கப்பட்ட பிறகு, நித்தியத்தில் நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது (2 பேதுரு 3:10).

20:12 மரித்தோராகிய சிறியோரும் பெரி யோரும் தேவனுக்கு முன்பாக நின்றார்கள். இவர் கள் எல்லாக் காலத்திலும் வாழ்ந்த அவிசுவாசி கள். இரண்டு வரிசை நூல்கள் திறக்கப்பட்டன. கிறிஸ்துவின் விலையுயர்ந்த குருதியால் மீட்கப் பட்ட மனிதர்களுடைய பெயர்கள் **ஜீவபுத்தகத் தில்** இடம்பெற்றிருந்தன. மற்றொரு புத்தகத்தில் இரட்சிக்கப்படாதவர்களின் **கிரியைகளின்** விவ ரங்கள் அடங்கியிருந்தன. அந்த நியாயத்தீர்ப் பில் ஆஜராகுபவர்களில் ஒருவரது பெயரும் **ஜீவ புத்தகத்தில்** இடம் பெற்றிருக்காது. அவருடைய பெயர் அங்கில்லை என்னும் உண்மையே அவ ரைக் குற்றப்படுத்துகிறது, ஆனால் அவருடைய **கிரியைகளின்** விவரம் அவர் பெறவிருக்கிற தண்டனையின் அளவை நிர்ணயிக்கும்.

20:13 சமுத்திரம் அதில் புதைக்கப்பட்டவர் களை ஒப்புவிக்கும். **மரணம்** என்று இங்கு குறிப் பாய்ச் சொல்லப்பட்டுள்ள கல்லறைகள் அங்கு அடக்கம் செய்யப்பட்ட இரட்சிக்கப்படாத மனிதர் களுடைய சரீரங்களை ஒப்புவிக்கும். அவி சுவாசத்தில் மரணமடைந்த அனைவருடைய ஆத்துமாக்களையும் **பாதாளம்** ஒப்புவிக்கும். அவர்களது சரீரங்களும் ஆத்துமாக்களும் ஒன்றி ணைக்கப்பட்டு நியாயாதிபதிக்கு முன்பாக நிறுத் தப்படுவார்கள்.

பரலோகத்தில் அளிக்கப்படும் பரிசுப்பொருட் களின் அளவு வேறுபடுவதுபோல, நரகத்தில் தரப் படும் தண்டனையின் அளவும் வேறுபடும். அது அவரவர் செய்த **கிரியைகளுக்குத்** தக்கதாக இருக்கும்.

20:14 மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்படுகின்றன என்று நாம் படிக் கும்போது, அது ஆவி, ஆத்துமா, சரீரம் யாவும் சேர்ந்த முழு ஆளையும் குறிக்கிறது. இந்த வசனம் **இது இரண்டாம் மரணம்** என்பதை விளக் கிக் கூறுகிறது. NKJV அடிக்குறிப்பு இதனுடன் அக்கினிக் கடலையும் சேர்த்துக் கூறுகிறது.

பாதாளத்திற்கும் நரகத்திற்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. மனந்திரும்பாமல் மரணமடையும் மனிதர்களின், சரீரமற்ற உணர்வுபூர்வமான தண் டனையே பாதாளமாகும். இது பிடித்து வைத் திருக்கும் ஒரு தொட்டி போன்றது, பெரிய வெள் ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்காகக் காத் திருக்கும் இடைநிலையே இது.

விசுவாசிகளாகி மரணம் அடைந்தவர்களுக் குப் பாதாளம் என்பது பரலோகத்தில் சரீரமற்ற ஆசிர்வாதமான நிலையாகும், அந்நிலையில் அவர்கள் சரீர உயிர்த்தெழுதலுக்கும் மகிமை யடைதலுக்கும் காத்திருக்கிறார்கள். இயேசு மரணமடைந்த போது பரதீசுக்குச் சென்றார் (லூக். 23:43), அதனைப் பவுல் மூன்றாவது வானத் திற்கு அதாவது, தேவனுடைய வாசஸ்தலத்திற்கு ஒப்பிடுகிறார் (2 கொரி. 12:2,4). அப்போஸ்தல ருடைய நடபடிகள் நூலில் கர்த்தருடைய சரீர மற்ற நிலை பாதாளம் என்று அழைக்கப்பட்டுள் ளது (அப். 2:27). தேவன் அவருடைய ஆத்து மாவைப் பாதாளத்தில் விடாமல் அதை மகிமை யின் சரீரத்தால் அணிவித்தார்.

நரகம் என்பது இறந்துபோன அக்கிரமக்கார ரின் கடைசி இருப்பிடமாகும். அக்கினிக்கடல், எரிநரகம், இரண்டாம் மரணம் யாவும் ஒன்றுதான்.

20:15 இந்த நியாயத்தீர்ப்பிற்கு ஆதாரமாக விளங்குவது, ஒருவரது பெயர் **ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா** இல்லையா என்பதுதான். உண்மையில் ஒருவரது பெயர் அதில் பொறிக்கப் பட்டிருக்குமானால், அவர் ஏற்கனவே முதலாம் உயிர்த்தெழுதலில் ஒரு பாகமாக விளங்குகிறார்.

ஆகவே இந்த வசனம் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பில் நிற்கிறவர்களுக்கே பொருந்தும்.

கா. புதிய வானமும் புதிய பூமியும் (21:1–22:5)

21:1 21 மற்றும் 22 ஆகிய அதிகாரங்கள் நித்திய நிலையைக் குறித்து மட்டும் பேசுகிறதா அல்லது ஆயிரமாண்டுக் காலத்தையும் நித்திய நிலையைக் குறித்தும் மாறி மாறிப் பேசுகிறதா என்று ஒரு கேள்வி எழுகிறது. ஆயிரமாண்டுக் காலமும் நித்திய நிலையும் பல வகையான ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதால் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகையில் சில நேரங்களில் அவையிரண்டும் ஒன்றாகக் கலந்து விடுவதுபோல் தோன்றுவதில் வியப்பில்லை.

இங்கு நித்திய நிலை **புதிய வானமும் புதிய பூமியும்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையும் ஏசாயா 65:17-25 -இல் சொல்லப்பட்டுள்ள புதிய வானத்தோடும் புதிய பூமியோடும் சேர்த்து நாம் குழப்பமடையக் கூடாது. அங்கு அது ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தைக் கருப்பொருளாகக் கொண்டிருக்கிறது, ஏனெனில் பாவமும் மரணமும் அங்கு இன்னமும் இருக்கின்றன. அவை நித்திய நிலையில் முழுவதுமாக நீக்கப்பட்டிருக்கும்.

21:2 புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வருவதையும், அது தன் கணவனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்படிருப்பதையும் யோவான் காண்கிறார். அது பூமியின்மேல் இறங்கி வந்த தாகச் சொல்லப்படவே இல்லை என்னும் உண்மை, அது புதிய பூமிக்கு மேலாக அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது என்று எண்ணும்படியாகச் சிலரைத் தூண்டிவிடுகிறது. அதன் வாயிற் கதவுகளில் இஸ்ரவேலின் கோத்திரங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதால், இஸ்ரவேலில் மீட்படைந்தவர்கள் சபையின் அங்கமாக இல்லாதிருந்தபோதிலும் அந்நகரத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்பது புலனாகிறது. திருச்சபைக்கும் (மணவாட்டி, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி, வச. 9), இஸ்ரவேலுக்கும் (வச. 12), புறவின நாடுகளுக்கும் (வச. 24) இடையே வேறுபாடு என்றென்றும் நிலைத்திருக்கும்.

21:3 மனிதர்களிடத்திலே தேவன் குடியிருக்கும்படி, **தேவனுடைய வாசஸ்தலம் மனிதர்களிடத்தில் இருக்கிறது** என்னும் அறிவிப்பு **பரலோகத்திலிருந்து உண்டாகிறதை** யோவான் கேட்கிறார். அவருடைய மக்கள் என்னும் நிலையில் அவர்கள் கனவிலும் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு அவருடன் மிக நெருக்கமான ஐக்கியம் கொண்டிருப்பார்கள். **தேவன்தாமே அவர்களோடே இருந்து** நெருக்கத்திலும் பிரியமான உறவிலும் **அவர்களுடைய தேவனாயிருப்பார்**.

21:4,5 "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்" என்னும் சொற்றொடர், பரலோகத்தில் கண்ணீர் இருக்கும் என்னும் பொருளைத் தருகிறதில்லை. அங்கே இருக்காது என்பதைப் பாடல் வடிவில் சொல்லும் முறையே இது! அங்கே **மரணமும் துக்கமும் அலறுதலும்** கூட இருப்பதில்லை. தேவனுடைய மக்களுக்கு இவையாவும் என்றென்றைக்குமாக முடிந்துபோனவை.

சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் **எல்லாவற்றையும் புதிதாக்குவார்**. அவருடைய **வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவை**, அவை நிச்சயமாய் நிறைவேறும்.

21:6 நித்திய நிலையை உள்ளே அழைத்துக் கொண்டு வருகின்ற நிகழ்ச்சி, நாம் வாழ்கிற இந்த பூமியைப் பற்றிய தேவனுடைய நோக்கங்கள் நிறைவுபெற்றுவிட்டன என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. **அல்பாவும் ஓமெகாவும்** கிரேக்க மொழியில் முறையே முதல் எழுத்தாகவும் கடைசி எழுத்தாகவும் இருப்பதுபோல, அவர் **ஆதியும் அந்தமுமாக** இருக்கிறார்; படைப்பாளரும் படைப்புகளின் நோக்கமும் அவரே; தொடங்கியவரும் முடிப்பவரும் அவரே; நித்தியமானவர் அவரே. அவர்தாமே **ஜீவதண்ணீர்** வேண்டுமென்று எவன் **தாகமாயிருக்கிறானோ** அவனுக்கு அதைத் தருகிறவர், (ஜீவதண்ணீர் - இரட்சிப்பு).

21:7 முழு சுதந்தரத்தையும் தகப்பனுக்கும் குமாரனுக்கும் இடையேயுள்ள மிக நெருக்கமான உறவைப்போன்ற புதியதொரு நெருக்கத்தையும் கொடுத்து ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ஆசிர்வாதத்தைத் தருகிறவர் அவரே. நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவனே ஜெயம் கொள்ளுகிறவன் ஆவான் (1 யோவான் 5:5). அவன் விசுவாசத்தால் உலகத்தை ஜெயிக்கிறான் (1 யோவான் 5:4).

21:8 ஆனால் எல்லோரும் வெற்றிபெற்றவர்கள் அல்லர். கிறிஸ்துவை அறிக்கை செய்வதற்குச் சிலர் **பயப்படுகிறார்கள்**; பாவிகளின் இரட்சகரை நம்ப விருப்பமற்றவர்கள் **அவிசுவாசிகள்; பாவிகள்** (NKJV அடிக்குறிப்பு, பெரும்பான்மைப் பிரதியில் இச்சொல் இடம்பெற்றிருக்கிறது), தங்களுடைய பாவங்களில் தொடர்ந்து இருப்ப

வர்கள்; வெறுக்கத்தக்க ஒழுக்கக்கேட்டில் ஈடு படுபவர்கள் **அருவருப்பானவர்கள்** ஆவார்கள்; வன்மமும் காட்டுமிராண்டித்தனமுமுள்ள **கொலை காரர்கள்**; வேசித்தனமும் வேறுவகையான பாலியல் தவறுகளைச் செய்வதும் **விபசாரக் காரருடைய** செயல்கள்; தீய ஆவிகளோடு தொடர்புகொள்பவர்கள் **சூனியக்காரர்கள்**; உரு வங்களைத் தொழுதுகொண்டு தேவனை அவ மானப்படுத்துபவர்கள் **விக்கிரக ஆராதனைக் காரர்கள்**; வலுக்கட்டாயமாக ஏமாற்றுகிறவர்கள் பொய்யர். இவர்கள் யாவரும், அவர்களுடைய இறுதிமுடிவாகிய அக்கினிக்கடலுக்கென்று நிய மிக்கப்பட்டிருக்கிறார்கள்.

21:9 கலசத் தண்டனைகளைச் செலுத்துகிற **ஏழு தூதரில் ஒருவன்** புதிய எருசலேமைக் குறித்த மேலும் பல விவரங்களைத் தருவதாகக் கூறினான். அந்தப் புதிய எருசலேமை அவன் **மனைவியாகிய மணவாட்டி** என்று அழைக் கிறான். அந்த நகரம் **மணவாட்டியின்** குடியிருப்பு என்பதே இதன் பொருளாக இருக்கக்கூடும்.

21:10,11 பெரிதும் உயரமுமான ஒரு பர்வ தத்தின் மேல் கொண்டுபோகப்பட்டவராய் யோவான் **எருசலேமாகிய பரிசுத்த நகரம் பர லோகத்தை விட்டு இறங்கி வருகிறதைக்** கண் டார். அது **தேவனுடைய மகிமையோடும்** விலை யுயர்ந்த கற்களைப்போல ஒளி வீசுகிறதாகவும் இருக்கிறது.

21:12,13 அந்த நகரம் மிகவுயரமான மதிலால் சூழப்பட்டு பன்னிரண்டு வாசல்களைக் கொண்டி ருந்தது. அவற்றிற்கு இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பெயர்களும் சூட்டப்பட்டு பன்னிரண்டு தூதர்களால் சிறப்பு பெற்றிருந்தன. ஒவ்வொரு திசையிலும் மும்மூன்று வாசல்கள் இருந்தன.

பன்னிரண்டு என்னும் சொல் இந்நூலில் இரு பத்தோரு தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது, அது இந்த அதிகாரத்தில் ஏழு தடவை பயன்படுத்தப் பட்டுள்ளது. பொதுவாக இச்சொல் அரசாங்கம் அல்லது நிருவாகம் என்பதைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது.

21:14 மதிலின் **பன்னிரண்டு அஸ்திபாரங் களும், ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பெயரைத்** தாங்கியிருந்தன. கிறிஸ்துவைக் குறித்து அவர்கள் கற்பித்தவற் றின் மூலமாக, அவர்கள் திருச்சபையின் அஸ்தி பாரத்தைப் போட்டார்கள் என்னும் உண்மையை இது வெளிப்படுத்துகிறது (எபே. 2:20).

21:15,16 பொன்னால் செய்யப்பட்ட அளவு கோலைப் பயன்படுத்தி அந்தத் தூதன் நகரத்தை அளந்தபோது, அதனுடைய **நீளம், அகலம், உயரம்** எல்லாம் ஏறத்தாழ (1400 - 1500 மைல் கள்) **பன்னிரண்டாயிரம் ஸ்தாதி** அளவுள்ளதா யிருந்தது. அது கனசதுரமாகவோ கூம்பாகவோ எப்படிப்பட்ட வடிவமுடையதாக இருந்தாலும் புதுப் பிக்கப்பட்ட இஸ்ரவேல் நாட்டின் எல்லைகளைக் காட்டிலும் மிகப் பெரிதாயிருந்தது.

21:17 அந்த மதில் சுவர் நூற்று நாற்பத்து நான்கு முழம் பருமன் உடையதாய் இருந்தது. அது "தூதனுடைய அளவாகிய மனித அளவு" என்னும் சொற்றொடர், 9 மற்றும் 15 -ஆவது வச னங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் தூதன் மனிதன் கணக்கிடுகிற அளவைப் பயன்படுத்தி னான் என்னும் பொருளை இது தருகிறது.

21:18 அதனுடைய **மதில் (வச்சிரக்கல்), நக ரம் (சுத்தப்பொன்)** என்னும் வருணனை கற்பனை செய்துபார்ப்பதற்கு நமக்குக் கடினமா யிருக்கிறது. அதனை மிக மேலானதாகவும் ஒளிபொருந்தியதாகவும் கற்பனை செய்து பார்க் கும்படி இவ்வாறு வருணிக்கப்பட்டிருக்கிறது. அந்த விஷயத்தில், அது வெற்றிபெற்றது என லாம்.

21:19,20 அந்தப் பன்னிரண்டு **அஸ்திபாரங் களும்** பன்னிரண்டு விலையுயர்ந்த கற்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இஸ்ரவேல் பன்னி ரண்டு கோத்திரங்களையும் குறிப்பிட்டுக் காட்டும் படி பிரதான ஆசாரியனுடைய மார்ப்பதக்கத்தில் பன்னிரண்டு கற்களும் பதிக்கப்பட்டாற் போல இதுவும் காணப்படுகிறது. அந்த விலையுயர்ந்த கற்கள் எதைக் குறிக்கின்றன என்று நம்மால் மிகச்சரியாக முடிவு செய்யமுடியவில்லை, அவற் றின் ஆவிக்குரிய அர்த்தத்தையும் தீர்மானிக்க முடியவில்லை.

21:21 பன்னிரண்டு வாசல்களும் பன்னி ரண்டு முத்துக்கள். திருச்சபை விலையுயர்ந்த முத்துக்கு ஒப்பானது, அதை வாங்கும்படி இரட் சகர் தமக்குரிய எல்லாவற்றையும் விற்றார் (மத். 13:45,46).

நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போலச் சுத்தப்பொன்னாயிருக்கிறது, மாசற்ற மகிமையை அது குறிக்கிறது.

21:22,23 அந்த நகரத்தில் சில பொருட்கள் காணப்படவில்லை. **சர்வ வல்லமையுள்ள தேவ னாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவரும்**

அங்கு இருப்பதால் தேவாலயம் தேவையில்லை. அங்கு சூரியனும் சந்திரனும் இல்லை, ஏனெனில் **தேவனுடைய மகிமை** அதனைப் பிரகாசிப்பிக் கிறது, **ஆட்டுக்குட்டியானவரே** அதன் விளக்கா யிருக்கிறார்.

21:24 புறவின நாடுகள் அதனுடைய அழகைக் கண்டு மகிழ்கின்றன. **பூமியின் அரசர்கள்** கர்த்த ருக்குக் காணிக்கை செலுத்தும்படி அங்கு வரு வார்கள்.

21:25 அதன் வாசல்கள் மூடப்படவில்லை, ஏனெனில் பாதுகாப்பு முழுமையானதாயிருக் கிறது, அதற்குச் செல்லத் தடையேதுமில்லை. அங்கு **இரவு இல்லை**. மங்கிப்போகாத பகல்கால நாடாகவே அது இருக்கிறது.

21:26 ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, **உலகத் தாருடைய** செல்வமும், அவர்களுடைய **மகிமை யும் கனமும்** அந்த நகரத்துக்குள் பாய்ந்து செல்லுகின்றன.

21:27 தூய்மையற்றது எதுவும் அதற்குள் நுழைவதில்லை. **ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுத்தகத்தில்** பெயர் **எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்**.

22:1,2 பளிங்குபோன்ற தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட் டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத் திலிருந்து புறப்பட்டு நகரத்தில் வீதியின் மத்தி யில் பாய்ந்து வருகிறது. **நதியின் இருகரைகளி லும் ஜீவ விருட்சம்** அதனுடைய பன்னிரண்டு வகையான கனிகளுடன் வளர்கிறது. அவற்றை உண்பது இனிமேல் தடைசெய்யப்படுவதில்லை. எல்லாப் பருவகாலத்திலும் தேவன் அருளு கிறவை இடைவிடாமல் தரப்படும் என்பதை இது காட்டுகிறது. **அந்த விருட்சத்தின் இலைகள் மக் கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவை.** அவர்கள் எப்பொழுதும் நிரந்தரமாக உடல்நலம் பெற்றிருப்பார்கள் என்பதை இது குறிப்பாய்ச் சுட்டிக்காட்டுகிறது.

22:3-5 இந்த வசனங்களைத் திருவாளர் A. T. பியர்சன் கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தருகிறார்:

> "இனி ஒரு சாபமிராது" - பாவமில்லாத நிறை வான நிலை.
>
> "தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்" - நிறைவான அரசாங்கம்.
>
> "அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள்" - நிறைவான ஊழியம்.
>
> அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்" - நிறைவான ஐக்கியம்.
>
> "அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றி களில் இருக்கும்" - நிறைவான ஒற்றுமை.
>
> "அங்கே இராக்காலமிராது" - நிறைவான ஆசிர்வாதம்.
>
> "அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார் கள்" - நிறைவான மகிமை.[31]

கி. இறுதி எச்சரிக்கை, ஆறுதல்கள், அழைப்பு கள், வாழ்த்துரை [22:6-21]

22:6 தான் வெளிப்படுத்தியவை அனைத்தும் நம்பிக்கைக்கு உரியவை என்று விளக்கித் தந்த தூதன் யோவானிடம் மீண்டும் நினைவுபடுத்து கிறான். கூடிய விரைவில் நடைபெறப்போகிற நிகழ்ச்சிகளைப் பரந்த காட்சியாகப் படவுருவில் **தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு கர்த்தராகிய தேவன் தம்முடைய தூதனை** அனுப்பியிருந்தார்.

22:7 எல்லாவற்றிலும் மேலான காட்சி, உச்ச கட்டம், இரட்சகரின் மகிமைநிறைந்த வருகையே யாகும். அவர் **சீக்கிரமாய்** வரப்போவதாக நமக்கு உறுதியளிக்கிறார். இது *விரைவில்* என்றோ *சட் டென்று* என்றோ பொருள்படும். சட்டென்று என் பதே இரண்டில் அதிகப் பொருத்தமானது. இந்தத் **தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளு கிறவனுக்குச்** சிறப்பான ஆசிர்வாதம் கொடுக்கப் பட்டுள்ளது. அவருடைய வருகையின்மீது நம் பிக்கை கொண்டவர்களாக வாழ்ந்து நாம் இதனை நிறைவேற்றலாம்.

22:8,9 யோவான் **இவற்றைக் கண்டு கேட்ட போது,** தூதனுடைய **பாதத்தில்** விழுந்தார், ஆனால் அவ்வாறு செய்வது அவருக்குத் தடை செய்யப்பட்டது. **தூதன்** படைக்கப்பட்ட உயிரி னத்தைச் சேர்ந்தவன். **தேவன்** ஒருவரே தொழுது கொள்ளப்பட வேண்டியவர்.

22:10 அந்தத் **தீர்க்கதரிசனத்தை** யோவான் **முத்திரைபோட்டு** மூடி வைக்கக்கூடாது, ஏனெ னில் அது நிறைவேறப்போகிற காலம் சமீபமா யிருக்கிறது. **முத்திரை போடுதல்** என்னும் சொற் றொடர் இங்கு அதை வெளியிடுவதைத் தள்ளி வைத்தல் என்று பொருள்படும்.

22:11 நிறைவேறும் காலம் வருகிறபோது, **அநீதி** இழைக்கிறவர்கள் அவர்களுடைய குற் றங்களுக்காக வருந்தாத நிலையில் நிலை நிறுத்தப்படுவார்கள். **அசுத்தமாயிருக்கிறவன்**

கர்த்தர் திரும்பிவருகிறபோது மாறுவதற்கான சந்தர்ப்பம் இன்னொரு தடவை தரப்படுவதில்லை. ஆனால் **நீதியுள்ளவன்** தொடர்ந்து நீதியுள்ள வனாக வாழ்வான், **பரிசுத்தமுள்ளவன்** தொடர்ந்து பரிசுத்தத்தோடு வாழ்வான்.

22:12,13 கர்த்தர் விரைவில் வரப்போவதை மீண்டும் அறிவிக்கிறார். இந்தச் சமயத்தில் **அவ னவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு** அவர் பலன் அளிப்பார் என்னும் உறுதிமொழி யோடு வருவார். மீண்டும் அவர் தம்மை **அல்பா வும் ஓமெகாவுமாக** இருப்பதாகக் குறிப்பிடு கிறார். எல்லாவற்றையும் படைத்த அவரே காலம் என்னும் அரங்கத்தின் திரையை இழுத்து மூடுகிறார்.

22:14 அவருடைய கற்பனைகளின்படி செய் கிறவர்கள் பாக்கியவான்கள் என்றோ **தங்களு டைய வஸ்திரங்களைக் கழுவினவர்கள் பாக் கியவான்கள்** என்றோ (NKJV அடிக்குறிப்பைக் காண்க) இந்த வசனத்தைப் படிக்கலாம். இரு வகையான பிரதிகளும் கிரியையினால் இரட்சிப்பு உண்டாகிறது என்று கற்பிப்பதில்லை, மாறாக, கிரியைகள் இரட்சிப்பின் கனி என்றும் நிரூபணம் என்றுமே கூறுகின்றன. மெய்யான விசுவாசிகள் மட்டுமே ஜீவ விருட்சத்தினிடமாய் மற்றும் நகரத்தினிடமாய் அனுமதிக்கப்படு வார்கள்.

22:15 நாய்களும், சூனியக்காரரும், விபச் சாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிர காராதனைக்காரரும், பொய்யரும் என்றென் றும் பரலோகத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார் கள். இங்கு நாய்கள் எனப்படுபவர் ஆண் வேசி கள் (உபா. 23:18), சுத்தமாக்கப்படாத புறவினத் தவர் (மத். 15:26), அல்லது யூதமார்க்கத்தைச் சார்ந்து வாழவேண்டும் என்பவர்கள் (பிலி. 3:2) ஆகியோரைக் குறிப்பிடக் கூடும்.

22:16 இந்தச் செய்தியோடு தமது **தூதனைச் சபைகளுக்குக் கர்த்தர்** அனுப்பினார். அவர் தம் மைக் குறித்து **தாவீதின் வேரும் சந்ததியும், பிர காசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாக** இருப்பதாகக் கூறினார். அவருடைய தெய்வீகத் தின்படி அவர் தாவீதை உண்டாக்கியவர்; அவரு டைய மனித நிலையின்படி அவர் தாவீதின் சந்த தியில் தோன்றியவர். பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம் சூரிய உதயத்திற்கு முன் வானில் தோன்றுகிறது. கிறிஸ்து முதலாவது தமது சபைக் காகப் பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாக வருவார், அதாவது சபை எடுத்துக்கொள்ளப்படும் போது வானிற்கு அவர் வருவார். பின்னர் அவர் நீதியின் சூரியனாக தமது செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தோடு பூமிக்கு வருவார் (மல். 4:2).

22:17 இந்த வசனத்தை இரண்டு வகையாகப் புரிந்துகொள்ளலாம். முதலாவது, **ஆவியும் மண வாட்டியும் கேட்கிறவனும்** இரட்சிப்படைய வேண்டும் என்னும் தாகமுள்ளவர்களைக் கிறிஸ்துவினிடமாய் வரும்படி அழைக்கிற நற் செய்தி அழைப்பாக இதனை எடுத்துக்கொள்ள லாம். அல்லது **வா** என்னும் சொல் முதல் இரண்டு இடங்களில் கிறிஸ்துவின் வருகையை எதிர் பார்த்து ஏறெடுக்கப்படுகிற மன்றாட்டு எனவும், பின்னிரண்டு அழைப்புகள் இரட்சிக்கப்படாதவர் கள் அவரிடம் வரவேண்டும், **ஜீவ தண்ணீரைப்** (இரட்சிப்பு) பெற்றுக்கொள்ள வேண்டும், இவ்வா றாக அவருடைய வருகைக்காக ஆயத்தப்பட வேண்டும் என்று விடுக்கப்படுகிற அழைப்பு எனவும் புரிந்துகொள்ளலாம்.

22:18,19 வெளிப்படுத்தின விசேஷம் என்னும் **இந்தப் புத்தகத்தில்** எழுதப்பட்டவற்றுடன் மனிதர்கள் எதையாவது சேர்த்தார்களானால், இதில் விவரிக்கப்பட்டுள்ள **வாதைகளை** அவர் கள் சந்திப்பார்கள். இந்த நூலில் எடுத்துக்கொள் ளப்பட்டுள்ள கருப்பொருள் திருமறை முழுவதி லும் பின்னிக்கிடக்கிறது, ஆகவே தேவனுடைய வார்த்தையை முறைகேடாக மாற்றுவது குற்றம் என்று இந்த வசனம் கண்டிக்கிறது. இதற்கு ஒப்பான மற்றொரு குற்றச்சாட்டு, **இந்தத் தீர்க்க தரிசனப் புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாவது எடுத்துப்போடுகிறவர்கள்** மேலும் சுமத்தப்படுகிறது. விளக்கமளிப்பதில் காணப் படும் சிறிய வேறுபாடுகளுக்கு இந்தக் குற்றச் சாட்டு பொருந்தாது, மாறாக, திருமறை ஆவியின் உயிரூட்டம் பெற்றது, அது முழுநிறைவானது என்னும் அடிப்படை உண்மைகளை மறுத்துத் தாக்குவது இந்தக் குற்றச்சாட்டுக்கு ஏதுவானது. அதனுடைய தண்டனை நித்திய அழிவு. **இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்து அவ னுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்** (NKJV அடிக்குறிப்பு - **ஜீவ விருட்சத்திலிருந்து அதனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடு வார்**).[32] நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டவர் களின் ஆசிர்வாதத்தில் அவர்கள் ஒருக்காலும் பங்கு பெறமாட்டார்கள்.

22:20 வெளிப்படுத்தின விசேஷம் ஒரு வாக் குறுதியோடும், ஓர் ஆசிர்வாதத்தோடும் முடி வடைகிறது. கர்த்தராகிய இயேசு **சீக்கிரமாய் வருகிறார்**, இது வாக்குறுதி. நாம் ஏற்கனவே

ஆதியாகமம்	வெளிப்படுத்தின விசேஷம்
வானமும் பூமியும் படைக்கப்படுதல் (ஆதி. 1:1)	வானமும் பூமியும் அழிக்கப்படுதல் (வெளி. 20:11).
	புதிய வானமும் புதிய பூமியும் படைக்கப்படுதல் (வெளி. 21:1).
சாத்தானின் ஆட்சி பூமியில் தொடங்குதல் (ஆதி. 3:1-7)	அக்கினிக் கடலில் சாத்தான் தள்ளப்படுதல் (வெளி. 20:10)
பாவம் உட்புகுதல் (ஆதி. 3:1-7)	பாவம் துரத்தப்படுதல் (வெளி. 21:27).
படைப்பின்மீது சாபம் உரைக்கப்படுதல் (ஆதி. 3:17-19).	சாபம் அகற்றப்படுதல் (வெளி. 22:3).
ஜீவ விருட்சத்தின் மேலுள்ள உரிமை பறிக்கப் படுதல் (ஆதி. 3:24).	ஜீவ விருட்சத்தை அணுகுவதற்கான அனுமதி வழங்கப்படுதல் (வெளி. 22:2,19 அடிக்குறிப்பு).
மனிதன் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளி யேற்றப்படுதல் (ஆதி. 3:24).	மனிதன் மீண்டும் (பரதீசுக்கு) வரவேற்கப் படுதல் (வெளி. 22:1-7).
உலகத்திற்குள் மரணம் நுழைதல் (ஆதி. 2:17; 5:5).	என்றென்றைக்குமாக மரணம் நீக்கப்படுதல் (வெளி. 21:4).
முதல் ஆதாமின் திருமணம் (ஆதி. 4:1).	பிந்தின ஆதாமின் திருமணம் (வெளி. 19:7).
மனிதனுக்கு வேதனை உண்டாகுதல் (ஆதி. 3:16).	வேதனை அகற்றப்படுதல் (வெளி. 21:4).

குறிப்பிட்டது போல இது **விரைவில்** அல்லது **சட்டென்று** நிகழலாம். அவர் விரைவில் திரும்ப வருவார் என்னும் நம்பிக்கை, சட்டென்று வருவார் என்னும் நம்பிக்கையைப் போன்று எதிர்பார்க்கு தலையும், எச்சரிப்போடு வாழ்கிறதையும் ஊக்கப் படுத்தி உற்சாகப்படுத்துகிறதில்லை. இந்த ஆசிர்வாத நம்பிக்கைக்கு மீட்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டிய பதிற்செயல், "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்!" என்பதாகும்.

ஆதியாகமம் தொடக்கத்தைப் பற்றிய நூலாக இருப்பது போல வெளிப்படுத்தின விசேஷம் நிறை வைப் பற்றிய நூலாக இருக்கிறது. முதல் நூலில் அறிமுகப்படுத்தப்பட்ட கருப்பொருள்கள், கடைசி நூலில் நிறைவேறுதல் அடைகின்றன. மேலேயுள்ள அட்டவணையைக் காணவும்.

22:21 வியத்தகு நூலாகிய இந்த நூலின் ஆசிர்வாதத்தினிடமாய் மற்றும் வேத வார்த்தை யின் இறுதி ஆசிர்வாதத்தினிடமாய் நாம் வந்திருக்கிறோம். தெய்வீக தண்டனையின் இடி முழக்கங்கள் நிறைந்த நூலின் அமைதியான முடிவாக இது இருக்கிறது.

"நம்முடைய **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் கிருபை** தேவனுடைய மக்கள் அனைவரோடும் இருக்க வேண்டும்" என்று யோவான் விரும்பு கிறார். ஆர்வத்தைத் தூண்டிவிடுகிற மூன்று வகையான பிரதிகள் உள்ளன, அவையாவன:

1. கிறிஸ்துவின் கிருபை *எல்லாரோடும்* இருக்க வேண்டும் என்று யோவான் விரும்புகிறார் - இது நடுநிலைப் பிரதியில் (NU) காணப்படும் வாசகம் - கூடிய விரைவில் பெரும்பான்மை மக்கள் மீது கோபாக்கினை பொழியப்பட விருக்கிறது என்னும் வெளிப்படுத்தின விசே ஷத்தின் கருப்பொருளுக்கு இது ஏற்றதல்ல.

2. பாரம்பரிய பிரதியின் சொல்லாட்சி அதனினும் சிறந்தது (TR, KJV, NKJV) - கிறிஸ்துவின் கிருபை *உங்கள் அனைவரோடுங்கூட* இருக்க வேண்டும் என்னும் விருப்பம் - வெளிப் படுத்தின விசேஷத்தைப் படிப்பவர்கள், வாசிக்கக் கேட்பவர்களில் பெரும்பாலோர் மெய்யான விசுவாசிகள் ஆவார்கள்.

3. பெரும்பான்மைப் பிரதியிலும், NKJV அடிக் குறிப்பிலும் காணப்படுகிற சொற்கள், இந்த நூலில் பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக் கும் இடையேயுள்ள எதிர்மறையான விஷயங் கள் முதன்மையாக எடுத்துச் சொல்லப்பட் டுள்ளதன் அடிப்படையில், மிகச்சிறந்தவை யாக இருக்கின்றன: **"நம்முடைய கர்த்தரா கிய இயேசு கிறிஸ்துவின் கிருபை எல்லாப் பரிசுத்தவான்களோடும் இருப்பதாக. ஆமென்."**

அடிக்குறிப்புகள்

1 (முன்னுரை) நற்செய்தி நூலிலும் வெளிப் படுத்தின விசேஷத்திலும் பயன்படுத்தப் பட்டுள்ள வினைச்சொல் *ekkenesan* என்ப தாகும். எழுபதின்மர் பழைய ஏற்பாட்டில் சகரியா வின்படி அது *katorchesanto* என்பதாகும்.

2 (முன்னுரை) எபிரெய மொழியிலும் கிரேக்க மொழியிலும் எழுத்துக்களுக்கு எண்ணிக்கை மதிப்பு உண்டு. எடுத்துக்காட்டாக *aleph* மற்றும் *alpha* என்பவையின் மதிப்பு 1, *beth* மற்றும் *beta* என்பவை 2 என்னும் எண்ணைக் குறிக்கும். இவ் விதமாக ஒவ்வொரு பெயரின் எழுத்துகளின் எண் மதிப்பை கூட்டிச் சேர்க்கலாம். இயேசு என்ப தன் கிரேக்கப் பெயர் (*Iesous*), இதன் எண் மதிப்புகளைக் கூட்டிச் சேர்த்தால் 888, இது ஆர்வத்தைத் தூண்டிவிடுவதாக இருக்கிறது. (புதிய தொடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற் றின் எண் 8.) மிருகத்தின் பெயரின் எண்ணிக் கைகளை கூட்டினால் அது உண்மையில் 666 – ஆக இருக்கிறது. ''நீரோ சீசர்'' என்னும் பெய ரின் எழுத்துகளைச் சற்று மாற்றி எழுதினால், அவற்றின் கூட்டல் ''666'' ஆகும். இன்னும் பல பெயர்களின் எண்ணிக்கையைக் கூட்டினால் 666 என்னும் எண் கிடைக்கும். ஆனால் ஒருவரும் கட்டுப்பாடின்றி ஊகஞ்செய்யக் கூடாது.

3 (1:6) வெளிப்படுத்தின விசேஷத்தில் NKJV மொழிபெயர்ப்பில் காணப்படும் பல அடிக் குறிப்புகளில் இது முதலாவது ஆகும். TR, KJV, NKJV ஆகிய பிரதிகளுக்கு முரண்பட்டு, பெரும் பான்மைப் பிரதியும் (M) நடுநிலைப் பிரதியும் (NU) ஒன்றோடு ஒன்று ஒத்துப்போவதாகக் காணப் படும் சொற்றொடர்களே இவை. எராஸ்மஸ் என்பார் முதல் கிரேக்கமொழிப் புதிய ஏற்பாட்டை (1516) வெளியிட்டார், அவருக்கு வெளிப்படுத்தின விசேஷத்தின் ஒரே ஒரு பிரதி மட்டுமே கிடைத் திருந்தது, அதில் தவறுகள் இருந்தன. ஆகவே, சிறு வேறுபாடுகள் பல அடிக்குறிப்புகளாகக் கொடுக் கப்பட்டன. புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்களில் அவருக்குக் கிடைத்த பிரதிகள், அப்பொழுது கண்டுபிடிக்கப்படாத (பின்னர் கண்டுபிடிக்கப் பட்ட) பிரதிகளோடு பெரும்பாலும் ஒத்திருந்தது நற்பேறு எனலாம். இந்த விளக்கவுரையில், முக்கியமான மாற்றங்கள் மட்டுமே குறித்துக் காட்டப்பட்டுள்ளன. நடுநிலை மற்றும் பெரும் பான்மைப் பிரதிகள் ஒன்று சேர்ந்து காணப்படு மாயின் அதுவே மூலப்பிரதி என்று நாம் கருது கிறோம். அவையிரண்டும் ஒன்றோடொன்று மாறு படுமாயின் பெரும்பான்மைப் பிரதியே சிறந்த தென்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

4 (1:8) ''ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்'' என்னும் சொற்றொடர் NU மற்றும் M ஆகிய பிரதி களில் இடம்பெறவில்லை.

5 (1:10) கர்த்தருடைய நாள் இருவகை யாகக் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட் டுள்ளது. "The Day of the Lord" - *he hemera tou kuriou;* "the Lord's Day' - *"he kuriake hemera."* (இவை வெவ்வேறு பொருளுடை யவை – தமிழில் கர்த்தருடைய நாள் என்னும் சொற்றொடரைப் பகுத்துணர வேண்டும்).

6 (1:13) James H. McConkey, *The Book of Revelation: A Series of Outline Studies in the Apocalypse,* p.9.

7 (2:1) John F. Walvoord, *The Revelation of Jesus Christ,* pp. 50-100.

8 (2:14,15) Ella E. Pohle, *Dr. C. I. Scofield's Question* Box, p.89.

9 (2:20) பெரும்பான்மைப் பிரதியில் ''உன்னு டைய மனைவியாகிய (பெண்) யேசபேல்'' என்று இச்சொற்றொடர் காணப்படுகிறது.

10 (3:7) *Daily Notes of the Scripture Union.*

11 (3:20) Richard Chevenix Trench, *Commentary on the Epistles to the Seven Churches in Asia*, p. 225.

12 (4:3) walvoord, *Revelation*, p. 104

13 (5:9,10) நடுநிலைப் பிரதியிலும் (NU), பெரும்பான்மைப் பிரதியிலும் (M) அவர்களை,

அவர்கள் என்னும் சொற்களே இடம்பெற்றுள்ளன, அதாவது மூப்பர்கள் தங்களைக் குறித்துப் பாட வில்லை, மாறாக மற்றவர்களைக் குறித்தே பாடி னார்கள் என்னும் பொருளை அது தருகிறது. ஆகவே மூப்பர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் கள் தூதர்கள் என்னும் உயிரினத்தைச் சார்ந்தவர் கள் என்று இது குறிப்பாய்ச் சுட்டிக்காட்டுகிறது.

14 (5:9,10) நடுநிலைப் பிரதியில் (NU) ராஜாங்கம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள் ளது.

15 (6:1,2) நடுநிலைப் பிரதியிலும் (NU) பெரும்பான்மைப் பிரதியிலும் (M) ''பார்'' என்னும் சொல் இடம்பெறவில்லை.

16 (6:10) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல் *"Despotes"*. (ஆனால் மூல மொழியிலிருந்து பிறந்த ஆங்கிலச் சொல்லில் எதிர்மறைப் பருப்பொருள் இடம் பெறவில்லை.)

17 (8:5) Henry Barclay Swete, *The Apocalypse of St. John,* p. 109.

18 (8:13) ''தூதர்'' மற்றும் ''கழுகு'' என்னும் சொற்கள் கிரேக்க மொழியிலும் ஒரே மாதிரி யாகக் காணப்படுகின்றன *(angelos, aetos)*. ஆகவே பிரதியெடுப்பதில் தவறு ஏற்பட்டுள்ளது. ''கழுகு'' என்பதே சரியானது.

19 (9:16,17) பெரும்பான்மைப் பிரதியில் பத்துக்கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

20 (9:18,19) Hamilton Smith, *The Revelation: An Expository Outline,* p. 57.

21 (9:20,21) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல் *pharmakon*, ''மருந்து, நஞ்சு, போதைப் பருள்'' (English *"pharmacy"*).

22 (11:6) McConkey, *The Book of Revelation,* pp. 68,69

23 (11:15) NU மற்றும் M பிரதிகளில் ''ராஜ்யம்.... ராஜ்மாயிற்று'' என்னும் சொற்றொடர் காணப்படுகிறது.

24 (13:3) *The Scofield Reference Bible,* p. 1342.

25 (14:4,5) J. D. Pentecost, *Things to Come,* p. 300.

26 (15:3,4) ''பரிசுத்தவான்களின்'' என் னும் சொல்லுக்கு அதிக ஆதாரம் இல்லை. NU மற்றும் M ஆகிய பிரதிகள் ''தேசங்கள்'' அல்லது ''ஜாதிகள்'' என்னும் சொல்லையே பயன்படுத்தி யுள்ளன.

27 (15:3,4) Arthur T. Pierson, *Knowing the Scriptures,* p. 248.

28 (16:16) ''அர்மகெதோன்'' என்னும் சொல் "Har" (மலை) மெகிதோ என்னும் எபி ரெயச் சொல்லிலிருந்து தோன்றியது. பெரும் பான்மைப் பிரதியில் ''மெகிதோ'' என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.

29 (19:8) 1611 - மொழிபெயர்ப்பு ''நீதி'' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது. அவ் வப்போது பரிசுத்தவான்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட கிறிஸ்துவின் நீதியை இது குறிப்ப தாக அவ்வப்போது பிரசங்கிகள் பேசுகிறார்கள். அது வலிமையான கோட்பாட்டைச் சார்ந்த விளக்க மாக இருந்தபோதிலும், *dikaiomata* என்னும் கிரேக்கச் சொல் அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்கிறதில்லை. அச்சொல் பன்மையில் இருக் கிறது (ஒருமை *dikaiosune*). மேலும் இது செயப் பாட்டு வினையில் முடிவடைகிறது. இது ஏதோ ஒன்று நிகழ்ந்தது என்னும் பொருளைத் தரு கிறது (இங்கு நீதியுள்ள செயல்களைக் குறிக் கிறது). இரட்சிப்பு இந்தப் பகுதியின் கருத்து அல்ல.

30 (19:10) Charles C. Ryrie, *The Ryrie Study Bible, New King James Version,* p. 1953.

31 (22:3-5) Pierson, *The Ministry of Keswick, First Series,* p. 144.

32 (22:18,19) ''ஜீவ புஸ்தகம்'' என்னும் சொற்றொடருக்கு கிரேக்கப் பிரதியின் ஆதரவு இல்லை. ஏராஸ்மஸ் வைத்திருந்த கிரேக்க புதிய ஏற்பாட்டுப் பிரதியில் கடைசி ஆறு வசனங்கள் காணப்படவில்லை. ஆகவே அவர் இலத்தீன் மொழி வேதத்திலிருந்து அதனை மொழி பெயர்த் தார். இது நல்ல மொழிபெயர்ப்பாக அமைய வில்லை. இது இலக்கிய அமைப்பின் ''முழுமை யாகச் சுற்றி வருதலை'' இழந்துபோயிற்று.

அதாவது, ஆதியாகமம் 3 –ஆவது அதிகாரத்தில் மனிதன் ஜீவவிருட்சத்தை அனுபவிக்க முடியாத படி தடைசெய்யப்பட்டான். அது திருமறையின் கடைசி அதிகாரத்தில் அவருடைய பரிசுத்தவான் களுக்கு முன்னிருந்த நிலையில் மீண்டும் தந்தரு ளப்படுகிறது.

நூல் விவரப் பட்டியல்

Criswell, Wallie Amos. *Exposition of Sermons on Revelation.* Grand Rapids: Zondervan Publishing House, 1962.

Dennett, Edward. *"The Seven Churches," The Serious Christian,* Vol. XI. Charlotte, N.C.: Books for Christians,n.d.

Gaebelein, Arno C. *The Revelation*. New York: Publication Office "Our Hope," 1915.

Grant, F. W. *The Revelation of Christ*. New York: Loizeaux Brothers, n.d.

Ironside, H. A. *Lectures on the Revelation*. New York: Loizeaux Brothers, 1919.

Kelly, William. *Lectures on the Book of Revelation*, New Edition. London: C. Morrish, n.d.

Lenski, R. C. H. *The Interpretation of St. John's Revelation.* Minneapolis: Augsburg Publishing House, 1943.

McConkey, James H. *The Book of Revelation: A Series of Outline Studies in the Apocalypse.* Pittsburgh: Silver Publishing Co., 1921.

Morgan, C. Campbell. *The Letters of Our Lord. Westwood,* N.J.: Fleming H. Revell Co., n.d.

Morris, Leon. *The Revelation of Jesus Christ* (TBC). Grand Rapids: Win. B. Eerd mans Publishing Co., 1969.

Mounce, Robert H. *The Book of Revelation* (NIC). Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1977.

Ryrie, Charles Caldwell. *Revelation*. Chicago: Moody Press, 1968.

Scott, Walter. *Exposition of the Revelation of Jesus Christ.* London: Pickering & InglisLtd.,n.d.

Smith, Hamilton. *The Revelation: An Expository Outline*. Addison, IL: Bible Truth Publishers, n.d.

Stanley, Charles. *The Revelation of Jesus Christ.* New York: Loizeaux Brothers Publishers, n.d.

Swete, Henry Barclay. *The Apocalypse of St. John.* Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, n.d.

Tenney, Merrill C. *Interpreting Revelation*. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1957.

Trench, Richard Chevenix. *Commentary on the Epistles to the Seven Churches in Asia*. Minneapolis: Kiock and Klock Christian Publishers, 1978.

Walvoord, John F. *The Revelation of Jesus Christ.* Chicago: Moody Press, 1966.

புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்கள்

பெயர்	இனம்	சொந்த ஊர்	தொழில்	உறவுமுறை	எழுதிய அதி.	எழுதிய வச.	எழுதிய நூல்கள்
மத்தேயு	யூதர்	கப்பர்நகூம்	வரிவசூலித்தல்	இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்	28	1071	மத்தேயு நற்செய்தி
மாற்கு	யூதர்/ரோமர்	எருசலேம்	அருட்பணி	பேதுருவின் சீடர்	16	678	மாற்கு நற்செய்தி
லூக்கா	கிரேக்கர்	அந்தியோகியா	மருத்துவம்	பவுலின் சீடர்	52	2,158	லூக்கா நற்செய்தி அப்போஸ்தலர் நடபடிகள்
யோவான்	யூதர்	பெத்சாயிதா/ கப்பர்நகூம்	மீன்பிடித்தல்	இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்	50	1,414	யோவான் நற்செய்தி 1, 2, 3 யோவான் நிருபங்கள் வெளிப்படுத்தின விசேஷம்
பவுல்	யூதர்	தர்சு	கூடாரத் தொழில்	இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்	87 (100)*	2,033 (2,336)*	ரோமர், 1, 2 கொரிந்தியர் கலாத்தியர், எபேசியர் பிலிப்பியர், கொலோசெயர் 1, 2 தெசலோனிக்கேயர் 1, 2 தீமோத்தேயு, தீத்து பிலேமோன் (எபிரெயர்)*
யாக்கோபு	யூதர்	நாசரேத்	தச்சு வேலை?	இயேசு கிறிஸ்துவின் ஒன்றுவிட்ட சகோதரன்	5	108	யாக்கோபு நிருபம்
பேதுரு	யூதர்	பெத்சாயிதா	மீன்பிடித்தல்	இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்	8	166	1, 2 பேதுரு
யூதா	யூதர்	நாசரேத்	தச்சு வேலை?	இயேசு கிறிஸ்துவின் ஒன்றுவிட்ட சகோதரன்	1	25	யூதா நிருபம்

* எபிரெயர் நிருபத்தை பவுல் எழுதியதாகக் கருத்தில் கொண்டால்

புதிய ஏற்பாட்டு மடல்களின் ஆய்வுப்பொருட்கள்

பவுல் சபைகளுக்கு எழுதிய மடல்கள்

நூல்	முக்கியமான சொற்றொடர்	ஆய்வுப்பொருள்
ரோமர்	தேவ நீதி	ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து விடுதலை, நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் மகிமைப்படுத்தப்படுதல் ஆகிய நிகழ்வுகளை உண்டுபண்ணும் நற்செய்தியை இந்நூல் விளக்கித் தருகிறது (1–8). யூதருக்கும் புறவினத்தாருக்குமான தேவனுடைய திட்டத்தை வரைந்து தருகிறது (9–11). மேலும் விசுவாசிகளுக்கான நடைமுறை அறிவுரைகளையும் வழங்குகிறது (12–16).
1 கொரிந்தியர்	மாம்சத்துக்குரிய வாழ்க்கையிலிருந்து சீர்ப்படுத்துதல்	பிரிவினை, ஒழுக்கக்கேடு, சட்ட வழக்குகள், கர்த்தருடைய பந்தியைத் தவறாகப் பயன்படுத்துதல் ஆகிய தவறுகளைக் களைந்து சரி செய்கிறது (1–6). திருமணம் சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவு, யாவரும் கூடி ஆராதித்தல், உயிர்த்தெழுதல் ஆகியவை பற்றிய கேள்விகளுக்கு விடைதருகிறது (7–16).
2 கொரிந்தியர்	தனது ஊழியத்தின் மேன்மையைப் பவுல் எடுத்துரைத்தல்	பவுல் தனது அப்போஸ்தலனுக்குரிய குணநலன், அழைப்பு, சான்றுகள் ஆகியவை நேர்மையானவை என்று இந்நூலில் வாதாடுகிறார். பெரும்பாலோர் பவுலை எதிர்த்தது குறித்து மனம் வருந்தினார்கள்; எனினும் சிலர் மனம் வருந்தவில்லை.
கலாத்தியர்	நியாயப்பிரமாணத்தினின்று விடுதலை	விசுவாசிகளும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்னும் கொள்கையில் கலாத்தியா நாட்டுச் சபைகள் சிக்கிக் கொண்டிருந்தன. நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் கிருபை மேலானது என்றும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து வாழுதல் மற்றும் கட்டுப்பாடற்ற வாழ்க்கை ஆகியவற்றைக் காட்டிலும் விடுதலை மனப்பான்மையுடன் வாழுதல் சிறந்தது என்றும் இந்நூல் எடுத்துரைக்கிறது.
எபேசியர்	கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுதல்	கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளின் தகுநிலை குறித்து இந்நூல் மிக உயர்வாகப் பாராட்டுகிறது (1–3). மேலும் இது விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வளமைக்கு ஏற்ப அவர்களது நடத்தையும் விளங்கவேண்டுமென்று அறிவுரை வழங்குகிறது (4–6).
பிலிப்பியர்	கிறிஸ்துவே ஜீவன்	தன்னுடைய சிறையிருப்பில் ஏற்பட்ட சில முன்னேற்றங்களைக் குறித்துப் பவுல் இம்மடலில் பேசுகிறார். மேலும் தனது வாசகர்கள் ஒருமைப்பாடு, தாழ்மை, தேவபக்தி ஆகிய நற்பண்புகளோடு வாழ வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.
கொலோசெயர்	கிறிஸ்துவின் முதற்பேறான தன்மை	படைப்பிலும், மீட்பிலும், ஜீவனோடு கூடிய உறவிலும் கிறிஸ்து முதற்பேறானவர் என்பதை இந்நூல் விளக்கிக் கூறுகிறது. மேலும் கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள் முழுநிறைவானவன், வேறொன்றும் அவனுக்குத் தேவையில்லை என்பதையும் இது விவரிக்கிறது.

நூல்	முக்கியமான சொற்றொடர்	ஆய்வுப்பொருள்
1 தெசலோனிக்கேயர்	கிறிஸ்து மீண்டும் வருகைபுரிவதன் வெளிச்சத்தில் பரிசுத்தமாக வாழுதல்	தெசலோனிக்கேயரின் விசுவாசத்தைப் பாராட்டிப் பேசுகிற பவுல், அவர்களைக் குறித்த அவரது நோக்கங்களையும், அவர்கள்மேல் அவர் கொண்டிருந்த அக்கறையையும் பற்றி நினைவூட்டுகிறார். கர்த்தருடைய வருகையைப் பற்றி கற்பித்து, அவர்கள் தூய்மை யோடு வாழவேண்டுமென்று அறிவுறுத்துகிறார்.
2 தெசலோனிக்கேயர்	கர்த்தருடைய நாளைக் குறித்த அறிவு	கர்த்தருடைய நாளைக் குறித்துத் தெசலோனிக்கேயர் கொண்டி ருந்த தவறான கருத்தைப் பவுல் களைந்து திருத்துகிறார். மேலும் அந்தப் பயங்கரமான நிகழ்வுக்கு முன் நடைபெற வேண்டியவற்றை விளக்கிக்கூறுகிற பவுல், தனது வாசகர்கள் விழிப்போடிருக்க வேண்டுமென்று எச்சரிக்கிறார்.
பவுல் தனி மனிதர்களுக்கு எழுதிய மடல்கள்		
1 தீமோத்தேயு	சபைகளில் தலைமையேற்று நடத்துவோருக் கான கையேடு	கள்ளப்போதகர்களால் ஏற்படும் பிரச்சினைகள், பொதுவான ஜெபக்கூட்டங்கள், பெண்களுடைய பங்கு, மூப்பர்கள், உதவிக் காரர்கள் ஆகியோருக்கான தகுதிகள் பற்றி பவுல் தீமோத்தேயு வுக்கு நல்கும் ஆலோசனைகள்.
2 தீமோத்தேயு	ஊழியத்தில் பொறுமையுடன் நிலைத்திருத்தல்	ஆவிக்குரிய போராட்டத்தில் ஏற்படும் இடர்களின் நடுவே தீமோத்தேயு துணிவுடன் நிலைத்திருப்பதற்கான உற்சாகமூட்டிக் கட்டியெழுப்பத்தக்க அறிவுரைகள் அடங்கிய கையேடு.
தீத்து	சபைகளுக்கான நன்னடத்தைக் கையேடு	இந்நூல் மூப்பர்களுக்கான தகுதிகளைப் பட்டியலிட்டுக் காட்டு கிறது. மேலும் சபைகளிலுள்ள வெவ்வேறு குழுவினருக்குத் தீத்து ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி பவுல் அறிவுறுத்துகிறார்.
பிலேமோன்	அடிமைத்தனத்தி லிருந்து மன்னிப்பு	ஒநேசிமுவை மன்னித்து, இனி அடிமையாகக் கருதாமல் சகோதர னாக நடத்தும்படி பவுல் பிலேமோனிடம் விண்ணப்பித்தல்.
பிற எழுத்தாளர்களின் மடல்கள்		
எபிரெயர்	கிறிஸ்துவின் மேம்பட்ட நிலை	கிறிஸ்துவின் ஆளுமை, அவரது ஆசாரியத்துவம் மற்றும் அவருக்கு முன் நிகழ்ந்த அனைத்தின் மேலும் அவர் கொண்டிருந்த அதிகாரம் ஆகியவற்றின் மேன்மையை மெய்ப்பித்துக் காட்டி, வாசகர்கள் முதிர்ச்சி பெற்று விசுவாசத்தில் உறுதியடைய இந்நூல் உற்சாகப்படுத்துகிறது.
யாக்கோபு	விசுவாசமும் கிரியைகளும்	யாக்கோபு மடலின் வாசகர்களாகிய எபிரெயக் கிறிஸ்தவர்கள் தங்களது விசுவாசத்தைச் சோதித்துப் பார்ப்பதற்கான, மெய்விசு வாசத்தின் பண்புநலன்களைக் குறித்த அட்டவணை.
1 பேதுரு	கிறிஸ்துவுக்காகப் பாடுபடுதல்	கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் காரணமாக துன்பம் அனுப விக்கிறவர்களுக்கு ஆறுதலையும் ஆலோசனையையும் தருகிறது. மேலும் தாங்கள் பாடு அனுபவிக்கிறதை முன்னிட்டு, ஒப்புவிக்கத் தக்க மனப்பான்மையை வளர்த்துக்கொள்வதற்கான உற்சாகத்தை யும் இம்மடல் தருகிறது.

நூல்	முக்கியமான சொற்றொடர்	ஆய்வுப்பொருள்
2 பேதுரு	கள்ளத்தீர்க்க தரிசிகளுக்கு எதிரான தற்காப்பு	கள்ளப்போதகர்களுடைய நம்பிக்கையிலும் நடத்தையிலும் காணப் படும் தவறுகளால், விசுவாசிகளை அவர்கள் கவர்ந்திழுக்கும் உள்ளான எதிர்ப்புகளைச் சமாளிப்பது பற்றிய விவரங்களை இந் நூல் தருகிறது. மேலும் கிறிஸ்துவைப் பற்றிய மெய்யான அறிவில் வளரவேண்டும் என்றும் இந்நூல் வேண்டுகிறது.
1 யோவான்	தேவனுடன் ஐக்கியம்	மீட்கப்பட்ட மக்களுக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள ஐக்கியத் தின் அளவுகளை இந்நூல் ஆய்வுசெய்து தருகிறது. விசுவாசிகள் அவருடைய வெளிச்சத்தில் நடக்க வேண்டும், அன்பை வெளிப் படுத்திக் காட்ட வேண்டும், அவருடைய வாழ்வில் நிலைத்திருக்க வேண்டும் என்றும் இந்நூல் வலியுறுத்துகிறது.
2 யோவான்	கள்ளப்போதகர் களுடனான ஐக்கியத்தைத் தவிர்த்தல்	அப்போஸ்தலருடைய சத்தியத்தில் உறுதியாய் நிலைநிற்க வேண்டுமென்று யோவான் தனது வாசகர்களுக்கு இந்நூலில் பரிந் துரைக்கிறார். மேலும் அவர்கள் அன்பில் நடக்க வேண்டுமென்றும், கள்ளப்போதகர்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.
3 யோவான்	சகோதரர்களுட னான ஐக்கியத்தில் மகிழ்ந்திருத்தல்	தியோத்திரேப்பு பயணம் செய்யும் போதகர்களை ஏற்றுக்கொள்ளா தது மட்டுமின்றி பிறர் அவர்களை ஏற்றுக்கொள்வதைத் தடையும் செய்தான். இதற்கு மாறாக, காயு அவர்களுக்கு ஆதரவளித்து வந்தான்; இதனை யோவான் இங்கு பாராட்டுகிறார்.
யூதா	விசுவாசத்துக் காகப் போராடுதல்	கள்ளப்போதகர்களைக் குறித்த காட்சி அவர்களுடைய குணங் களையும் நடத்தையையும் வெளிப்படுத்தி, அவர்கள் அடையவிருக் கும் ஆக்கினையை முன்னுரைக்கிறது. மேலும் இந்நூலின் வாசகர்கள் சத்தியத்தில் உறுதியாய் நிலைநிற்க வேண்டுமென்றும், விசுவாசத்திற்காகத் துணிவுடன் போராட வேண்டுமென்றும் யூதா அவர்களுக்கு உற்சாகமூட்டுகிறார்.
வெளிப்படுத்தின விசேஷம்	வரப்போகிற கிறிஸ்துவின் வெளிப்பாடு	மகிமையடைந்த கிறிஸ்து சபைக்கு ஏழு செய்திகளைத் தருகிறார் (1–3). கிறிஸ்துவை எதிர்த்துச் செயல்படும் கலகக்கார மனுக்குலம் இதுகாறும் கண்டிராத நியாயத்தீர்ப்பு அடைவதும், அதைத் தொடர்ந்து இரண்டாம் வருகை நிகழ்வதும் விளக்கப்படுகின்றன (4–19). புதிய வானம், புதிய பூமி மற்றும் புதிய எருசலேமின் வியத் தகு உண்மைகளுடன் வெளிப்பாடு நிறைவு பெறுகிறது (20–22).

திருமறையில் இடம்பெற்றுள்ள மனிதர்களும் இடங்களும்

திருமறையில் இடம்பெற்றுள்ள மிகச்சிறப் பான மனிதர்களுடைய பெயர்களும், இடங்களு டைய பெயர்களும் இப்பகுதியில் முறையே எவர் கள் என்றும், எவை என்றும் வேறுபடுத்திக் காட் டப்பட்டுள்ளன. இப்பெயர்கள் தமிழ்மொழி வேதத் தில் உள்ளபடி அகரவரிசைப்படுத்தித் தரப்பட்டுள் ளன. ஒரே பெயருடைய மனிதர்களையும் இடங் களையும் தனிப்படுத்தி, இயற்பெயரை முதலில் குறிப்பிட்டு வரிசைப்படுத்தியுள்ளோம். ஒரு பெய ரில் எழுத்து வேறுபாடு இருக்குமாயின், மாற்று எழுத்துகளுடன்கூடிய பெயர்களையும் அடைப் புக் குறிகளுக்குள் கொடுத்திருக்கிறோம். பெயர் களைத் தொடர்ந்து அவற்றின் பொருள்களும் அடைப்புக் குறிகளுக்குள் தரப்பட்டுள்ளன. ஒரே பெயரையுடைய மனிதர்களை அல்லது இடங் களை 1, 2 ... என்னும் எண் வரிசையில் வேறுபடுத் தித் தந்திருக்கிறோம். ஒவ்வொரு தனிமனிதரை யும் இடத்தையும் குறித்த விவரங்கள் சுருக்க மாகக் கொடுக்கப்பட்டு, திருமறை வசன எண் களும் அடைப்புக் குறிகளுக்குள் கொடுக்கப்பட் டுள்ளன. (எல்லா வசனங்களின் எண்களும் தரப் படவில்லை. திருமறையில் ஒரு பகுதியைப் படிக் கும்போது அந்த வசனம் இப்பகுதியில் தரப்பட வில்லை என்றால், அதனைப் படிப்பவர், அந்தப் பெயருடையவர் யாராக இருக்கக்கூடும் என்ப தைக் கொடுக்கப்பட்ட பெயர்களைக் கொண்டு ஊகித்து அறிய வேண்டும்.)

ஒரு மனிதனைப் பற்றிய குறிப்பு இடம்பெற் றுள்ள பகுதியிலும் அவன் கோகத்தியனா, கீலே யாத்தியனா, ஏரோதியனா என்று அவனுடைய முன் னோர் அல்லது இடத்தின் பெயரைக் கண்டறிந்து நாங்கள் விளக்கித் தரவில்லை. ஒருவேளை, குறிப் பிட்ட பெயர் இனத்தையோ இடத்தையோ குறிக் கக்கூடியதாக இருக்குமானால் அது ஊகித்துத் தரப்பட்டுள்ளது.

பெயர்களின் பொருள் மிகத் துல்லியமானது என்று சொல்ல முடியாது. கொடுக்கப்பட்ட பொருள் பெரும்பாலும் நம்முடைய ஆர்வத்தைத் தூண்டு கிற வகையில் காணப்படுகிறது.

திருமறையில் பல மனிதர்கள் அல்லது இடங் கள் ஒரே பெயரைக் கொண்டிருக்கின்றன. ஒரு நூலில் உள்ள ஒரு பெயர் வேறொரு நூலில் இடம் பெறுகிறபோது அப்பெயர் அதே மனிதனைக் குறிக் கிறதா அல்லது அதே இடத்தைக் குறிக்கிறதா என்று முடிவு செய்ய இயலாத வகையில் இருக் கிறது. இத்தகைய சிக்கல்கள் பல உள்ளன. பழங் காலத்தில் ஒரே மனிதன் பல பெயர்களால் அழைக் கப்பட்டுள்ளான். பல இடப்பெயர்கள் இஸ்ரவேல ரின் காலத்திற்கு முந்தியவை, அவை தெளிவற் றும் நிச்சயமற்றும் இருக்கின்றன. ஒரே இடம் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளன (எ.கா., அரராத் மற்றும் அர்மீனியா). இவ்வாறான பெயர்கள் அந்தப் பெயர் களுக்குள் மிகவும் பழக்கமான பெயர்த் தலைப்பு களில் கொடுக்கப்பட்டு, மற்ற பெயர் விளக்கங் களும் சேர்க்கப்பட்டுள்ளன.

திருமறையின் பிரதி எடுக்கப்பட்ட போது சில தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டாயிருந்திருக் கும். ஏனோக்கு ஆனோக்கு என்றோ, இம்னா சிம்னா என்றோ அழைக்கப்பட மாட்டார்கள் என் பது உறுதி; ஆனாலும் எது மூலத்திற்கு ஒத்தது? இதை அறிவது கடினம். சில பெயர்களுக்கு மட் டுமே இதற்கான குறிப்புகள் உள்ளன.

ஒரே பெயரானது வெவ்வேறு வகையிலும், சுருக்கியும் திருமறையில் காணப்படுகிறது. இவ் வாறான பெயர் வேறுபாடுகள் திருமறை முழு வதும் காணப்படுகின்றன. முற்காலத்தில், படிப்ப வர்களுக்கு இவை எந்தப் பிரச்சினையையும் தர வில்லை. ஆனால் இந்த வேறுபாடுகள் நமக்குக் கூடுதல் இடர்ப்பாட்டைத் தந்து யார் அல்லது எந்த இடம் என்று உறுதி செய்வதற்குத் தடை யாக உள்ளன. ஓர் எபிரெயப் பெயர் ஓரிடத்தையோ ஒரு நபரையோ எதை வேண்டுமானாலும் குறிக்க லாம்.

பல இடங்களில் குடிவழிப் பெயர்கள் சுருக்கித் தரப்பட்டுள்ளன. சில இடங்களில் அப்பெயர் ஒரு மனிதனைக் குறிக்கிறதா அல்லது அவனுடைய மூதாதையைக் குறிக்கிறதா என்பதை முடிவு செய்ய இயலாதபடி இருக்கிறது. குடிவழிப் பெயர்கள் முழுவதுமாகக் கொடுக்கப்பட்ட பகுதிகளையும், சுருக்கித் தரப்பட்ட பகுதிகளையும் இசையச் செய்வது மற்றொரு பிரச்சினை. விரிவான குடிவழிப் பெயர்களைக் கொண்ட பகுதி வேறு மனிதர்களைக் குறிக்கிறதா அல்லது அதுவே சுருக்கமாக அதாவது சில பெயர்கள் விடப்பட்டுத் தரப்பட்டுள்ளதா என்பதை அறிவதும் கடினம். இதனை வேறு வகையாகச் சொல்ல வேண்டுமானால், ஒரே மனிதனுடைய பெயரை இரண்டு பட்டியல்களில் காணமுடியும், அல்லது அப்பெயரில் இரண்டு மனிதர்கள் இரண்டு பட்டியல்களில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்றும் சொல்லலாம்.

சில இடங்களில், வெவ்வேறு எபிரெயப் பெயர்கள் ஒரே மாதிரியாகத் தமிழில் எழுதப்பட்டுள்ளன. அவற்றை நாங்கள் தனித் தனித் தலைப்புகளில் தந்துள்ளோம் (எ.கா., யோவாஸ், சகரியா).

அகசியா (அசரியா) (“யெகோவா தாங்குகிறார் அல்லது பராமரிக்கிறார்”). **1.** இஸ்ரவேலின் எட்டாவது அரசன், பலவீனமான இவன் சிலைவணக்கம் செய்தவன் (1 இராஜா. 22:51– 2 இராஜா. 1:18). **2.** யூதாவின் ஆறாவது அரசன்; இவன் ஒரே ஒரு ஆண்டுதான் ஆட்சிபுரிந்தான் (2 இராஜா. 8:24–29; 9:16 முதல்). இவன் யோவாகாஸ் என்றும் அறியப்பட்டிருந்தான் (2 நாளா. 21:17; 25:23). இவன் 2 நாளாகமம் 22:6 –இல் அசரியா என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறு. எபிரெய மொழி பதினைந்திற்கும் மேற்பட்ட பிரதிகளிலும் தற்கால மொழிபெயர்ப்புகளிலும் அகசியா என்றே குறிப்பிடப்பட்டுள்ளான் (தமிழில் இந்தத் தவறு இல்லை), யோவாகாஸ் என்னும் தலைப்பைக் காண்க.

அகபு (“வெட்டுக்கிளி”), பவுல் எருசலேமுக்குச் சென்றால், அங்கு துன்பத்திற்குள் உட்பட வேண்டுமென்று முன்னுரைத்த தீர்க்கதரிசி, எருசலேமைச் சேர்ந்தவன் (அப். 11:28; 21:10).

அகஸ்து (“புனிதமாக்கப்பட்ட; பரிசுத்தமான”). அப்போஸ்தலர் 25:21,25; 27:1 – ஆகிய இடங்களில் “மரியாதைக்குரிய” என்பதைக் குறிக்கும்படி இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஏனெனில் அகஸ்து இறந்துபோய் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. (தமிழில் இராயன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.)

அகஸ்து ராயன், ஜூலியஸ் சீசர் என்னும் அரசனின் உடன்பிறந்தாரின் மகன் அக்டேவியன் பின்னர் ரோம நாட்டின் பேரரசன் ஆனான். இவனுடைய காலத்தின்போது கிறிஸ்து பிறந்தார் (லூக்கா 2:1).

அகாஸ்வேரு 1. எஸ்தர் திருமணம் செய்த பெர்சியாவின் அரசன். வரலாற்று ஆசிரியர்களால் அர்தசஸ்டா என்று இவன் அறியப்பட்டிருக்கிறான் (எஸ். 1:1; 2:16; 10:3). **2.** மேதிய குலத்து தரியுவின் தகப்பன் (தானி. 9:1). **3.** பெர்சியாவின் அரசன் கேம்பிபஸ் என்பவனின் இன்னொரு பெயர் (எஸ்றா 4:6).

அகித்தோப்பேல் (“மடமையின் சகோதரன்”). அப்சலோம் தாவீதுக்கு எதிராகச் செய்த கிளர்ச்சியில் முன்னின்று அவனுக்குத் துணைபுரிந்தவன். வெற்றி கிடைக்காது என்று தெரிந்தவுடன் இவன் தற்கொலை செய்துகொண்டான் (2 சாமு. 15–17 அதி).

அகிதூப் (“நல்ல சகோதரன்; நன்மை என் சகோதரன்”). **1.** பினெகாசின் மகன் (1 சாமு. 14:3; 22:9,11,12,20). **2.** சாதோக் என்னும் பிரதான ஆசாரியனின் தகப்பன் (2 சாமு. 8:17; 15:27; 1 நாளா. 6:7,8). **3.** அதே குடும்பத்தைச் சேர்ந்த இவன் நெகேமியாவின் காலத்தில் பிரதான ஆசாரியனாக இருந்தான் (1 நாளா. 6:11; 9:11; நெகே. 11:11).

அகிமாஸ் (“ஆற்றல் மிக்க சகோதரன்”). **1.** சவுலின் மனைவி அகினோவாமின் தகப்பன் (1 சாமு. 14:50). **2.** சாலொமோனின் அரசு அதிகாரிகளில் ஒருவன் (1இராஜா. 4:15). **3.** தாவீதுக்கு உண்மையாயிருந்த சாதோக்கின் குமாரன் (2 சாமு. 15:27,36; 17:17,20; 18:19–29).

அகிமெலேக் (“அரசரின் சகோதரன்; என் சகோதரன் அரசன்”). **1.** ஏத்தியனாகிய இவன் தாவீதின் நண்பன் (1 சாமு. 26:6). **2.** அபியத்தாரின் குமாரனும் (3) ஆவது நபராகச் சொல்லப்பட்டவனின் பேரனுமான ஓர் ஆசாரியன் (2 சாமு. 8:17; 1 நாளா. 24:6). இந்தப் பகுதிகளில் முறை மாறி எழுதப்பட்டிருக்கிறது என்று சிலர் கருதுகிறார்கள் (அதாவது, இந்த வசனம் அபியத்தாரின் குமாரன் அகிமெலேக்கைக் குறித்தல்ல, அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தாரைக் குறித்துப் பேசுகிறது என்று அவர்கள் கருதுகிறார்கள்). ஆனால் முதல் நாளாகமம் 24 –ஐப் பொறுத்த வரை இந்தக் கருத்து சரியானது அல்லவென்று தோன்றுகிறது. ஏனெனில் முதல் நாளாகமத்தில் ஆசாரியனுடைய பெயர் அபிமெலேக் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (18:16). எழுபதின்மர் கிரேக்க மொழித் திருமறையிலும் இந்த இடத்தில் அகிமெலேக் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. **3.** நோபு என்னுமிடத்தில், தாவீதுக்கு உதவிபுரிந்ததன் பொருட்டு கொல்லப்பட்ட ஓர் ஆசாரியன் (1 சாமு. 21:1–8; 22:9–20). அபிமெலேக், அகியா ஆகிய தலைப்புகளையும் காண்க.

அகியா (“யெகோவா சகோதரர்; என்னுடைய சகோதரர் யெகோவா”). **1.** பத்துக் கோத்திரம் பிரிந்து செல்லும் என்று முன்னுரைத்த தீர்க்கதரிசி (1 இராஜா. 11:29,30; 14:2,4,5). **2.** பாஷாவின் தகப்பனாகிய இவன் நாதாபுக்கு எதிராகச் சதி செய்தவன் (1 இராஜா. 15:27,33; 21:22). **3.** யெர்மேயேலின் குமாரரில் ஒருவன் (1 நாளா. 2:25). **4.** தாவீதின் பராக்கிரசாலிகளில் ஒருவன் (1 நாளா. 11:36). **5.** சிறைப்பிடிப்பிற்குப் பிறகு தேவனோடு செய்துகொண்ட புதிய உடன்படிக்கையில் முத்திரைபோட்டவர்களில் ஒருவன் (நெகே. 10:26). **6.** தேவாலயப் பொக்கிஷத்தின் மேல் அதிகாரியாக வைக்கப்பட்டவன் (1 நாளா. 26:20). அகிமெலேக் என்னும் தலைப்பையும் காண்க.

அகியூத் (“நன் மதிப்பின் சகோதரன்”). 1. ஆசேர் கோத்திரப் பிரபுக்களில் ஒருவன் (எண். 34:27). 2 பென்யமீன் வழியில் வந்த இவன் ஏகூதின் குடும்பத்தில் ஒருவன் (1 நாளா. 8;7).

அகிரிப்பா. ஏரோது என்னும் தலைப்பைக் காண்க.

அகினோவாம் (“இன்பமான சகோதரன்”). **1.** சவுல் அரசனின் மனைவி (1 சாமு. 14:50). **2.** யெஸ்ரயேல் ஊராளாகிய இவள் தாவீதைத் திருமணம் செய்தாள் (1 சாமு. 25:43; 27:3; 1 நாளா. 3:1).

அக்கெல்தமா (“குயவனின் நிலம்”), இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கென தரப்பட்ட 30 வெள்ளிக்காசுகளைக் கொண்டு எருசலேம் ஆசாரியர் வாங்கிய நிலம் (அப். 1:19). இது “குயவனுடைய நிலம்” என்றும் அழைக்கப்பட்டது.

அக்சீப் (கெசீப்) (“தவறான”). **1.** யூதாவின் தாழ் நிலங்களில் இருந்த ஒரு கானானிய நகரம், யோசுவாவால் பிடிக்கப்பட்டது (ஆதி. 38:5; யோசுவா 15:44). **2.** லீபனோனின் எல்லைப்புறத்தின் அருகில் கலிலேயாவுக்கு வலது திசையில் இருந்த கடற்கரைப் பட்டணம் (யோசுவா 19:29; நியா. 1:31).

அசரியா (“யெகோவா உதவிசெய்தார்”). **1.** உசியா என்னும் தலைப்பைக் காண்க. **2.** சாலொமோனின் அதிகாரிகளின் தலைவன் (1 இராஜா. 4:5). **3.** தாவீதின் பிரதான ஆசாரியனின் வழி வந்தவன் (1 இராஜா. 4:2). **4.** யூதாவின் வழிவந்தவன் (1 நாளா. 2:8). **5.** யெர்மெயேலின் வழி வந்தவன் (1 நாளா. 2:38,39). **6.** அகிமாசின் குமாரரில் ஒருவன் (1 நாளா. 6:9). **7.** (6) – ஆவது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவனின் பேரனும் பிரதான ஆசாரியனும் ஆவான் (1 நாளா. 6:10,11). **8.** யோசியாவின் காலத்தில் பிரதான ஆசாரியனாயிருந்த இல்க்கியாவின் மகன் (1 நாளா. 6:13,14; 9:11; எஸ்றா 7:1). **9.** தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் முன்னோர்களில் ஒருவன் (1 நாளா. 6:36). **10.** ஆசாவிடம் சென்ற தீர்க்கதரிசினி (2 நாளா. 15:1). **11,12.** யோசபாத் என்னும் அரசனின் இரண்டு குமாரர்கள் (2 நாளா. 21:2).

13. அகசியா என்னும் தலைப்பைக் காண்க. **14.** யோவாசை அரியணையில் அமர்த்த உதவிய படைத் தலைவன் (2 நாளா. 23:1). **15.** யோவாசுக்கு உதவி செய்த இன்னொருவன் (2 நாளா. 23:1). **16.** உசியாவை எதிர்த்த பிரதான ஆசாரியன் (2 நாளா. 26:17,20). **17.** எப்பிராயீமின் ஒரு தலைவன் (2 நாளா. 28:12). **18.** கோகாத்தின் வழிவந்த வன், யோவாசின் தகப்பன் (2 நாளா. 29:12). **19.** தேவாலயத்தை தூய்மைப்படுத்த உதவியவன் (2 நாளா. 29:12). **20.** எசேக்கியாவின் காலத்தில் ஆசாரியனாயிருந்த சாதோக்கின் குடும்பத்தில் ஒரு தலைவன் (2 நாளா. 31: 10,13). **21.** சாதோக், எஸ்றா ஆகியோரின் முன்னோர்களில் ஒருவன் (எஸ்றா 7:3). **22.** எருசலேமின் மதிற்சுவரை பழுது பார்த்தவன் (நெகே. 3:23,24). **23.** செருபாபேலோடு எருசலேம் வரை வந்தவன் (நெகே. 7:6). ஒருவேளை இவனுடைய மறுபெயர் செராயாவாக இருக்கக் கூடும் (எஸ்றா 2:2). இல்லையேல் இவனுடைய பெயர் இந்தப் பகுதியில் விடுபட்டிருக்க வேண்டும். **24.** நியாயப்பிரமாணத்தை விளக்கிக் கூறிய ஆசாரியன் (நெகே. 8:7) **25.** எஸ்றா என்னும் தலைப்பில் (1) – ஐக் காண்க. **26.** யூதாவின் இளவரசர்களில் ஒருவன் (நெகே. 12:33). **27.** எரேமியா கள்ளத்தீர்க்கதரிசனம் கூறியதாகக் குற்றஞ்சுமத்தியவன் (எரே. 43:2). **28.** தானியேலுடன் பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போகப்பட்டவர்களில் ஒருவன் (தானி. 1:6,7,11,19; 2:18). ஆபேத் நேகோ என்னும் தலைப்பைக் காண்க.

அசாரியேல் (''தேவன் எனக்கு உதவிபுரிபவர்). **1.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்துகொண்டவன் (1 நாளா. 12:6). **2.** தேவாலயப் பாடல் குழுவில் ஊழியம் செய்தவன் (1 நாளா. 25:18). **3.** தாண் கோத்திரத்தில் ஒரு பிரபு (1 நாளா. 27:22). **4.** அந்நியப் பெண்ணை மனைவியாக்கிக் கொண்டவன் (எஸ்றா 10:41). **5.** இம்மேர் குடும்பத்தில் ஓர் ஆசாரியன் (நெகே. 11:13). **6.** புதிய தேவாலயத்தை பிரதிஷ்டை செய்தபோது எக்காளம் ஊதியவன் (நெகே. 12:36).

அசீரியா (''அசூரின் நாடு''), யூதர் அரேபியர் இனத்தாருடைய நாடு, டைகிரிஸ் ஆற்றங்கரையில் அமைந்திருந்த நாட்டின் தலைநகரம் நினிவே எனப்படும் (ஆதி. 2:14; 2 இராஜா. 15:19,20).

அசுபாள் (''கைவிடப்பட்ட''). **1.** யோசபாத் என்னும் அரசனின் தாய் (1 இராஜா. 22:42; 2 நாளா. 20:31). **2.** காலேபின் மனைவி, எஸ்ரோன் என்பவனின் மகள் (1 நாளா. 2:18,19).

அசூர் (''சமவெளி''), அசீரியாவில் இருந்த ஒரு நகரம்; சில காலம் அதனுடைய தலைநகராயிருந்தது, அல்லது அந்த நாடே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது எனலாம் (எண். 24:22,24).

அசூர் (''சமவெளி''). **1.** சேமின் குமாரரில் ஒருவன் (ஆதி. 10:22; 1 நாளா. 1:17). பெரும்பாலும் அசீரியா நாட்டினரைக் குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ளது. **2.** ஆதியாகமம் 10:11, ஒரு மனிதனைக் குறிப்பிடுமென்றால், இவன் காமின் மகன் அல்லது 1 –இல் குறிப்பிடப்பட்டிருப்பவன். ஆயினும் இந்த வசனத்தைப் பல வேத அறிஞர்கள், ''அந்தத் தேசத்திலிருந்து இவன் (நிம்ரோம்) அசீரியாவுக்குச் (அசூர்) சென்றான் என்றே மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

அடைக்கலப்பட்டணங்கள், சில வகையான குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் பொருட்டு, பிரித்துவைக்கப்பட்ட லேவியர்களின் ஆறு பட்டணங்கள். அவையாவன: கேதேஸ், சீகேம், கீரியாத் அர்பா, பேசேர், ராமோத், கோலான் (உபா. 4:41–43; யோசுவா 20:7–9).

அதரோத் அதார் (''அதாரின் கிரீடம்''), எப்பிராயீமின் தென் எல்லையில் அமைந்திருந்த ஒரு சிற்றூர் (யோசுவா 16:5; 18:13). அதரோத் என்பதும் இதே ஊராகவே இருக்க வேண்டும் (யோசுவா 16:2).

அதிரமித்தியம் (''அதிரமித்திலிருந்து, கிரேசஸ்ஸின் சகோதரன்''), ஆசியாவின் வடபகுதியாகிய மீசியாவின் துறைமுகம் (அப். 27:2; 16;7 – ஆம் வசனத்துடன் ஒப்பிடுக).

அதீனோ (''விலையுயர்ந்த கல் அல்லது அணிகலன்''), தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒரு தலைவன் (2 சாமு. 23:8).

அதுல்லாம் (“புகலிடம்”), சுக்கோத்திற்கு அருகிலிருந்த யூதாவைச் சேர்ந்த பட்டணம். இந்தப் பட்டணத்திற்கு அருகிலிருந்த ஒரு குகையை சவுலுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கையில் தாவீது தலைமையிடமாகக் கொண்டிருந்தான் (யோசுவா 12:7–15; 1 சாமு. 22 அதி; 2 சாமு. 23:13).

அதோனிசேதேக் (“நீதியின் ராஜா”), எருசலேமின் அரசன், யோசுவாவால் தோற்கடிக்கப் பட்டவன் (யோசுவா 10:1–27).

அதோனியா (“யெகோவா என் கர்த்தர்”) **1.** தாவீதின் குமாரர்களில் ஒருவன், அரியணையைப் பிடிக்க வேண்டும் என்று சதிசெய்ததால் இவனை சாலொமோன் கொன்று போட்டான் (2 சாமு. 3:4; 1 இராஜா. 1:5). **2.** நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும்படி அனுப்பப்பட்ட மனிதர்களில் ஒருவன் (2 நாளா. 17:8). **3.** சிறையிருப்பிற்குப் பிறகு தேவனோடு செய்துகொண்ட புதிய உடன்படிக்கையில் முத்திரை போட்டவர்களில் ஒருவன் (நெகே. 10:14–16).

அத்சாள் (“பசுமை மாறா நறுமண மலர்ச்செடி”), எஸ்தரின் எபிரெயப் பெயர் (எஸ். 2:7).

அத்தாயி (“பருவகாலத்திற்குகந்த; தருணத்திற்கேற்ற”). **1.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்து கொண்டவன் (1 நாளா. 12:11). **2.** ரெகொபெயாம் என்னும் அரசனின் குமாரர்களில் ஒருவன் (2 நாளா. 11:20). **3.** பாரேசின் வழிவந்தவன் (1 நாளா. 2:35,36).

அத்தாலியாள் (“யெகோவாவின் துன்புறுத்தலுக்கு ஆளானவள்; யெகோவா வலிமையுள்ளவர்”). **1.** யேசபேலின் மகள், யோராம் அரசனின் மனைவி, பின்னர் யூதாவை ஆறு ஆண்டுகள் அரசாண்டாள் (2 இராஜா. 8:26; 11:1–20; 2 நாளா. 22:2 – 23:21). **2.** யோராமின் குமாரரில் ஒருவன் (1 நாளா. 8:26). **3.** சிறையிருப்பிலிருந்து திரும்பிய பிதாக்களில் ஒருவன் (எஸ்றா 8:7 அதலியா).

அத்தூஸ் (“போட்டியாளர்”). 1. யூதாவின் அரசர்களின் வழியில் தோன்றியவன். ஒருவேளை செக்கனியாவாக இருக்கலாம் (1 நாளா. 3:22). **2.** தாவீதின் வழியில் தோன்றிய இவன் சிறையிருப்பிலிருந்து எஸ்றாவுடன் திரும்பிவந்தான் (எஸ்றா 8:2). **3.** சிறையிருப்பிலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த ஓர் ஆசாரியன் (நெகே. 12:2). **4.** எருசலேம் மதிற்சுவரை மீண்டும் கட்டுவதற்கு உதவிபுரிந்தவன் (நெகே. 3:10). **5.** உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஓர் ஆசாரியன் (நெகே. 10:1,4). (குறிப்பு: **1,2,3,** மற்றும் **5** ஆகிய எண்களில் குறிப்பிடப் பட்டுள்ளவர்கள் ஒரே ஆளாக இருக்கலாம்.)

அத்தேனே (“அத்தேனாவின் நகரம்”), பண்டையகால கிரேக்கில் மிகப்பெரிய நகரம், கிரேக்க நாடாகிய அட்டிகாவின் தலைநகரம், இங்கு பவுல் ஒரு கிறிஸ்தவ சபையை நிறுவினான் (அப். 17:15–18).

அத்மா (“சிவப்புத் தன்மை”), சோதோம் கொமோரா பட்டணங்களோடு அந்தச் சமபூமியில் தேவன் அழித்துப்போட்ட மற்ற பட்டணங்களில் இதுவும் ஒன்று (ஆதி. 19:25–29). சாவுக்கடலின் தென்கோடியில் நீருக்குள் மூழ்கிய பகுதியில் இப் பட்டணம் இருந்திருக்க வேண்டும் (அதி. 14:8).

அத்னாக் (“இன்பம்”) **1.** சிக்லாக்கில் தாவீதோடு சேர்ந்துகொண்ட ஒரு படைத்தலைவன் (1 நாளா. 12:20) **2.** யோசபாத் மன்னனின் தலைமைப் படைத் தலைவன் (2 நாளா. 17:14).

அந்திப்பா, பெர்கமு சபையில் இரத்த சாட்சியாக மரணமடைந்த கிறிஸ்தவன் (வெளி. 2:13).

அந்தியோகியா (“இரதத்தைப் போன்று வேகமானது”). **1.** ஓரன்டஸ் ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்த சிரியா நாட்டைச் சேர்ந்த நகரம், அந்த இடத்தில்தான் இயேசுவைப் பின் பற்றுவோர் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் (அப். 11:19–26) **2.** பிரிகியா நாட்டைச் சேர்ந்ததும், பிசிதியா தேசத்தில் எல்லையில் அமைந்திருந்ததுமான பட்டணம். பவுலும் பர்னபாவும் திருப்பணி ஊழியத்தின்போது இந்நகரத்தில் ஊழியம் செய்தார்கள் (அப். 13:14).

அந்திரேயா (“ஆண்மையுள்ள; வெற்றி வீரன்”), பேதுருவின் சகோதரனும் பன்னிரண்டு சீடர்களில் ஒருவனும் ஆவான் (மத். 4:18; 10:2; யோவான் 1:40,44; 6:8).

அபி அல்பொன் (“வலிமையின் தகப்பன்”), தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (2 சாமு. 23:31). அபியேல் என்றும் இவன் அழைக்கப்பட்டுள்ளான் (1 நாளா. 11:32).

அபிகாயில் (பெருமகிழ்ச்சியின் தகப்பன் அதாவது மகிழ்ச்சிக்குக் காரணம்). **1.** நாபாலின் மனைவியாயிருந்து பின்னர் தாவீதுக்கு மனைவியானவள் (1 சாமு. 25:3; 14–42 அதி). **2.** அப்சலோம் படைத்தளபதியாக்கின அமாசாவின் தாய் (2 சாமு. 17:25; 1 நாளா. 2:16,17).

அபிசாய் (“ஈசாய் என் தகப்பன்; செல்வத்தின் மூல ஆதாரம்”), தாவீதின் சகோதரியாகிய செருயாவின் குமாரர்களில் ஒருவன். இவன் தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (1 சாமு. 26:6–9; 2 சாமு. 2:18; 10:10; 23:18).

அபிமெலேக்கு (“அரசனுக்குத் தகப்பன்”). **1.** ஆதியாகமம் 20,21,26 ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அபிமெலேக்கு என்னும் சொல் ஒரு தனிமனிதனைக் குறிக்காமல் கேராரில் அரசர்களாயிருந்தவர்களின் பட்டப்பெயர் என்று பல வேத அறிஞர்கள் கருதுகிறார்கள். சங்கீதம் 34 – இன் தலைப்பில் அபிமெலேக்கு என்னும் பெயருக்குப் பதிலாக ஆகீஷ் என்னும் பெயரே இடம் பெற வேண்டும். ஆகிஷின் கதை நன்கு தெரிந்த கதை, ஆகவே இதனைத் தவறு என்று கருதுவது சரியல்ல. காத்தின் அரசனாகிய ஆகிஷின் பட்டப் பெயர் அபிமெலேக்காக இருந்திருக்க வேண்டும். **2.** கிதியோனின் குமாரர்களில் ஒருவனாகிய இவன் இஸ்ரவேலின் அரசனாக ஆவதற்கு முயற்சி செய்தான், மூன்று ஆண்டுகள் அரசாண்டான் (நியா. 8:30 – 10:1). **3.** அகிமெலேக்கு என்னும் பெயரில் 2 – ஐப் பார்க்கவும்.

அபியத்தார் (“மிகச் சிறந்த மேலானவரின் தகப்பன் அல்லது எல்லாவற்றையும்விட சிறந்தவரின் தகப்பன்”), நோபு என்னுமிடத்தில் ஆசாரியர்களைச் சவுல் படுகொலை செய்தபோது, அவர்களில் தப்பியவன் இவன் ஒருவன்தான். தாவீது ஆட்சிபுரிந்தபோது இவன் பிரதான ஆசாரியனாயிருந்தான் (1 சாமு. 22:20–23; 1 இராஜா. 2:27; 1 நாளா. 15:11,12). முதல் சாமுவேல் 21 –ஆவது அதிகாரம், தாவீது தேவசமுகத்தப்பங்களை உண்ட போது அகிமெலேக் [1] பிரதான ஆசாரியனாக இருந்ததாகக் கூறுகிறது. எனினும் அபியத்தார் பிரதான ஆசாரியனாக இருந்தபோது இந்நிகழ்ச்சி நடைபெற்றதாக மாற்கு 2:26 –இல் சொல்லப் பட்டுள்ளது. அபியத்தார் தன்னுடைய தகப்பன் பிரதான ஆசாரிய ஊழியத்தைச் செய்தபோது அவனுக்குத் துணையாக இருந்திருப்பான் என்று தோன்றுகிறது. ஆகவே அவ்வாறான பதவிப்பெயர் சூட்டப்பட்டிருக்கும். அல்லது அபியத்தாரின் தகப்பனாகிய அகிமெலேக்கைக் காட்டிலும் வரலாற்றில் அதிகப் புகழ்பெற்றவனாக இவன் இருந்த காரணத்தால், அகிமெலேக்கிற்குப் பதிலாக அபியத்தாரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது போலும். அவ்வாறு இருப்பின், (அதுவே சரியென்று தோன்றுகிறது), அபியத்தார் பிரதான ஆசாரியனாகப் பதவி ஏற்பதற்கு முன்னமே, அவ்வாறு அழைக்கப்பட்டான் என்று முடிவு செய்யவேண்டும்.

அபியா (“யெகோவா என் தகப்பன்”). **1.** சாமுவேலின் குமாரர்களில் ஒருவன், இஸ்ரவேலில் பொல்லாத நியாயாதிபதியாக இருந்தவன் (1 சாமு. 8:2; 1 நாளா. 6:28). **2.** அபியாள், எஸ்ரோனின் மனைவி (1 நாளா. 2:24). **3.** ரெகொபெயாமின் குமாரன், யூதாவின் அரியணையின் வாரிசாக வந்தவன், கிறிஸ்து இவனுடைய குடிவழியில் பிறந்தார் (1 நாளா. 3:10; 2 நாளா. 11:20 – 14:1; மத். 1:7). இவன் அபியாம் என்றும் அழைக்கப்பட்டான் (1 இராஜா. 15:1). **4.** பென்யமீனின் குமாரனாகிய பெகேரின் ஏழாவது மகன் (1 நாளா. 7:8). **5.** ஆரோனின் குடிவழியில் பிறந்தவன், ஆசாரியர்களை தாவீது வகுப்புகளாகப் பிரித்தபோதும் இவன் ஒரு வகுப்பாக நியமிக்கப்பட்டான் (1 நாளா. 24:10; லூக்கா 1:5). **6.** இஸ்ரவேலின் அரசனாகிய முதல் யெரொபெயாமின் மகன் (1 இராஜா. 14:1–8). **7.** நெகேமியாவின் காலத்தில் செய்த உடன்படிக்கைக்கு முத்திரை போட்ட ஆசாரியர்களில் ஒருவன் (நெகே. 10:7). நெகேமியா 12:1,4,17 ஆகிய இடங்களில் குறிப்பிடப்பட்டிருப்பவனும் இவனாகத்தான் இருக்க வேண்டும்.

அபியாசாப் (எபியாசாப்) (“என்னுடைய தகப்பன் சேர்த்திருக்கிறான்”). லேவியனாகிய

இவனுடைய வழிமரபில் தோன்றியவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் வாசல் காக்கிறவர்களாக இருந்தார்கள் (யாத். 6:24; 1 நாளா. 6:23; 9:19).

அபியாம் (''கடலுக்கு அல்லது மேற்குக்குத் தகப்பன்''). அபியா 3 –ஐப் பார்க்கவும்.

அபியாள், அபியா 2 – ஐப் பார்க்கவும்.

அபியூ (''இவன் என்னுடைய தகப்பன்''), ஆரோனின் மகன், தேவனுக்கு அந்நிய அக்கினியைச் செலுத்தியதால் இவனும் இவனது சகோதரனும் கொல்லப்பட்டார்கள் (யாத். 6:23; லேவி. 10:1).

அபிராம் (''மேலான நிலையின் தகப்பன்''). **1.** மோசேக்கு எதிராகச் சதிசெய்து அழிந்து போனவன் (எண். 16:27; சங். 106:17). **2.** ஈயேலின் மூத்த மகன், இவனுடைய தகப்பன் எரிகோவைக் கட்டத் தொடங்கிய போது இறந்தான் (1 இராஜா. 16:34; யோசுவா 6:26 – உடன் ஒப்பிடுக).

அபினதாப் (''பெருந்தன்மை அல்லது விருப்பம் என்பதன் தகப்பன் அல்லது ஆதாரம்''). **1.** யூதாவைச் சேர்ந்த இந்த மனிதனுடைய வீட்டில் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது (1சாமு. 7:1; 2 சாமு. 6:3,4 1 நாளா. 13:7). **2.** தாவீதின் சகோதரர்களில் ஒருவன் (1 சாமு. 16:8; 17:13; 1 நாளா. 2:13). **3.** பெலிஸ்தியரால் கொல்லப்பட்ட இவன் சவுலின் மகன் (1 சாமு. 31:2; 1 நாளா. 8:33; 9:39; 10:2). **4.** சாலொமோன் அரசில் ஒரு பிரபு (1 இராஜா. 4:11).

அபிஷாக் (''என்னுடைய தகப்பன் ஒரு நாடோடி''), வயது முதிர்ந்த தாவீதைப் பராமரிக்கத் தெரிந்துகொள்ளப்பட்ட ஓர் அழகிய பெண் (1 இராஜா. 1:3,15; 2:17,21,22). இந்தப் பெண் சாலொமோனின் உன்னதப்பாட்டின் கதாநாயகியாகவும் இருக்கக் கூடும், அங்கு இவள் ''சூலமித்தி'' என்று அழைக்கப்படுகிறாள்.

அபெத்ஸ் (''மிகவுயர்ந்த'') வட பாலஸ்தீனத்தில் உள்ள ஒரு நகரம், இசக்கார் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்டது. (யோசுவா 19:20).

அப்சலோம் (''சமாதானத்தின் தகப்பன்''), தாவீதின் குமாரர்களில் ஒருவன், இவன் தன்னுடைய தகப்பனது அரியணையைக் கைப்பற்ற முயற்சி செய்தவன் (2 சாமு. 3:3; 13–20).

அப்தோன் (''ஊழியம், அடிமைத்தனம்''). **1.** பதினெட்டு ஆண்டுகள் இஸ்ரவேலின் நியாயாதிபதியாக இருந்தவன் (நியா. 12:13,15). **2.** பென்யமீனின் வழித்தோன்றல், எருசலேமில் குடியிருந்தவன் (1 நாளா. 8:23). **3.** நாளாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யெகியேலின் முதல் மகன் (1 நாளா. 8:30; 9:36). **4.** நியாயப்பிரமாணத்தின் பொருளை அறியும்படி உல்தாளிடம் விசாரிக்கும்படி அனுப்பப்பட்டவன் (2 நாளா. 34:20). 2 இராஜாக்கள் 22:12 –இல் இவன் அக்போர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறான். இவனும் எண் **2** –இல் குறிப்பிடப்பட்டிருப்பவனும் பெரும்பாலும் ஒரே ஆளாகத்தான் இருக்கவேண்டும்.

அப்தோன் (''அடிமைத்தனம்'') ஆசேர் கோத்திரத்திற்குச் சொந்தமான ஒரு பட்டணம். தற்காலத்தில் கிர்பெட் அப்தே என்று அழைக்கப்படும் இடத்தில் இப்பட்டணம் அமைந்திருக்கிறது (யோசு. 21:30; 1 நாளா. 6:74). ஒரு காலத்தில் இது எப்ரோன் என்று அழைக்கப்பட்டது. எப்ரோன் (பட்டணம்) என்னும் தலைப்பில் **2** –ஆம் எண்ணைக் காணவும்.

அப்பியுபுரம் (''அப்பியுவின் சந்தை''), இத்தாலியா நாட்டில், ரோமாபுரியிலிருந்து 64 கி. மீ (40 மைல்) தொலைவிலுள்ள பட்டணம். பவுல் இராயனுக்கு முன் தன் வழக்கைச் சமர்ப்பிக்கும்படி கொண்டுவரப்பட்டபோது அவனைச் சந்திக்க ரோமாபுரிக் கிறிஸ்தவர்கள் இங்கு வந்தார்கள் (அப். 28:15).

அப்பொலோனியா (''அப்பொல்லா என்பவனின் பட்டணம்''), மக்கெதோனியா நாட்டைச் சேர்ந்த ஓர் ஊர், தெசலோனிக்கேயா சென்ற போது வழியில் பவுல் இந்த ஊரைச் சந்தித்தார் (அப். 17:1).

அப்பொல்லோ (''அழிப்பவர்''), ஒரு யூதக் கிறிஸ்தவன், வேதாகமங்களில் வல்லவன், இவன் எபேசுவுக்கு வந்தபோது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இவனுக்குத் திட்டமாய்ப் போதித்தார்கள் (அப். 18:24; 19:1; 1 கொரி. 1:12; 3:4–6; தீத்து 3:13).

அப்னேர் (அபினேர்) (''ஒளியின் தகப்பன்''), அபினேர் என்பதன் சுருக்கம்; சவுல் மற்றும்

இஸ்போசேத் ஆகியோரின் படைத் தலைவன் (1 சாமு. 14:50,51; 26:5,7; 2 சாமு. 2:20).

அமத்சியா (“யெகோவாவுக்கு வலிமை இருக்கிறது”). **1.** யோவாசின் மகனும் யூதா நாட்டு அரியணைக்கு வாரிசு உரிமையுமாக இருந்தவன் (2 இராஜா. 12:21–14:20) **2.** சிமியோன் கோத்திரத்தைச் சேர்ந்தவன் (1 நாளா. 4:34). **3.** மெராரி குடும்பத்தில் வழிவந்த ஒரு லேவியன் (1 நாளா. 6:45). **4.** பெத்தேலில் சிலை வணக்கம் செய்து வந்த ஓர் ஆசாரியன் (ஆமோஸ் 7:10,12,14).

அமனா (“முன்னால்”). லீபனோனில் அமைந்துள்ள மலைத்தொடர், பெரும்பாலும் அமனா (அபனா) ஆற்றின் தென்பகுதியிலுள்ள மலைத் தொடர் (உன். 4:8).

அமாசா (“பாரஞ்சுமப்பவன்; ஈசாயின் மக்கள்”). **1.** தாவீதின் உடன்பிறந்தாரின் மகன், அப்சலோமின் படைத்தலைவன் (2 சாமு. 17:25; 19;13; 20:4–12). **2.** சிறைபிடிக்கப்பட்ட யூதர்களை அடிமைகளாக்குவதை எதிர்த்தவன் (2 நாளா. 28:12).

அமித்தாய் (“உண்மையுள்ள”), யோனா தீர்க்க தரிசியின் தகப்பன் (2 இராஜா. 14:25; யோனா 1:1).

அம்மியேல் (“என்னுடைய மக்கள் பலசாலிகள்; என்னுடைய நெருங்கிய உறவினர் தேவன்”). **1.** வாக்குறுதி பண்ணப்பட்ட நாட்டை ஒற்று பார்த்தவர்களில் ஒருவன் (எண். 13:12). **2.** தாவீதின் நண்பனாகிய மாகீரின் தகப்பன் (2 சாமு. 9:4,5; 17:27). **3.** தாவீதின் காலத்தில் தேவாலயத்தில் வாசல் காக்கிறவனாக இருந்தவன் (1 நாளா. 26:5).

அம்மினதாப் (“என் மக்கள் விருப்பப்படுகிறார்கள் அல்லது பெருந்தன்மையுள்ள”). **1.** ஆரோனின் மாமன் (யாத். 6:23). **2.** யூதாவின் பிரபுக்களில் ஒருவன், கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (எண். 1:7; 2:3; ரூத் 4:19,20; மத். 1:4). **3.** கோகாத்தின் குமாரரில் ஒருவன் (1 நாளா. 6:22). **4.** ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து உடன்படிக்கை பெட்டியை எடுத்துவர உதவியவன் (1 நாளா. 15:10,11).

அம்மோன், பென் அம்மி என்னும் தலைப்பைக் காண்க.

அம்ராம் (“புகழப்பட்ட மக்கள்; சிவப்பு”) **1.** லேவி வம்சத்தில் பிறந்தவன், ஆரோன், மோசே, மிரியாம் ஆகியோரது தகப்பன் அல்லது முன்னோர்களில் ஒருவன் (யாத். 6:18,20; எண். 3:19; 26:58,59). **2.** புறவினப் பெண்ணைத் திருமணம் செய்தவன் (எஸ்றா 10:34).

அம்னோன் (“சிறுவயதுப் பயிற்சி; உண்மையுள்ள தன்மை”). **1.** அகினோவாமிடத்தில் பிறந்த தாவீதின் மூத்த மகன், இவன் அப்சலோமால் கொலை செய்யப்பட்டான் (2 சாமு. 3:2; 13:1–39). **2.** காலேபின் குடும்பத்தானாகிய ஷிமோனின் குமாரரில் ஒருவன் (1 நாளா. 4:20).

அயினோன் (“ஊற்றுகள்”), பெருமளவு தண்ணீர் இருந்த பகுதி என்று சிறப்பு பெற்றிருந்தது, மனந்திரும்பிய மக்களுக்கு யோவான் இங்கு ஞானஸ்நானம் கொடுத்தான். சீகேம் பள்ளத்தாக்கின் தலைப்புறத்தில் இது அமைந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது (யோவான் 3:23).

அரராத் (“உயர்ந்த நிலம்”), மேற்கு ஆசியாவிலுள்ள மலைகளும் குன்றுகளும் நிறைந்த பகுதி (எரே. 51:27), பின்னர் அர்மீனியா என்னும் பெயர் பெற்றது (ஏசா. 37:38; 2 இராஜா. 19:37). நோவாவின் பேழை இந்தப் பகுதியில் ஓரிடத்தில் தங்கியது (ஆதி. 8:4).

அராபா (“வனாந்தரம்”), கலிலேயா மற்றும் சாவுக்கடல் ஆகியவற்றிற்கு இடையிலான தாழ்வுப் பகுதி (யோசுவா 18:18). யோசுவா 11:2 – இல் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளத்தாக்கு இதுவே என்று கருதப்படுகிறது.

அரிமத்தியா (“உயரங்கள்”), யோசேப்பு என்னும் தொழிலதிபர், இயேசுவின் சரீரத்தை அடக்கம் செய்ய அனுமதி பெற்றவன் (மத். 27:57; லூக்கா 23:51).

அரியோபாகஸ் (“மார்ஸ்மேடை”), அத்தேனே பட்டணத்தில் அரணின் மேற்குப்புறத்தில் இருக்கும் ஒரு குன்று, இங்கு கிரேக்க தத்துவ ஞானிகள் கூடியிருந்தபோது பவுல் உரையாற்றினார்.

இது மார்ஸ் மேடை என்றும் அழைக்கப்பட்டது (அப். 17:19–34).

அரிஸ்தர்க்கு (“சிறந்த ஆளுநர்”), பவுலின் மூன்றாவது திருப்பணி பயணத்தின் போது உடனிருந்த உண்மையுள்ள தோழன் (அப். 19:29; 20:4; கொலோ. 4:10).

அரிஸ்தொபூல் (“சிறந்த ஆலோசகர்”), ரோமாபுரியில் வசித்த இந்த மனிதனுடைய வீட்டாரைப் பவுல் வாழ்த்தினான் (ரோமர் 16:10).

அரேத்தா (“இனிமையான; நற்பண்புள்ள”), நான்காம் அரேத்தா பிலோபாட்ரிஸ் என்னும் நாபாத்தியரின் அரசனுடைய சேனைத்தலைவன். பவுலைப் பிடிக்க முயற்சி செய்தான் (2 கொரி. 11:32).

அரேபியா (“பாலைவனம்”), பெரிய தீபகற்பம் கிழக்கே பெர்சியா வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடா, மேற்கே சிவந்த சமுத்திரம், தெற்கே இந்துப்பெருங்கடல் ஆகியவற்றால் சூழப்பட்டது. இப்பகுதி பல நாடோடி இனத்தாருக்குக் குடியிருப்பாக இருந்தது, சில நேரங்களில் “கிழக்கு நாடு” என்று அழைக்கப்படுகிறது (2 நாளா. 21:16; ஏசா. 13:20).

அர்க்கிப்பு (“முதன்மையான மணமகன்”), “உடன் போர்ச்சேவகன்” என்று பவுலால் அழைக்கப்பட்டவன் (கொலோ. 4:17; பிலே. 2).

அர்கெலாயு (“மக்கள் முதல்வர்”), மகா ஏரோதின் மகன், இதுமேயா, யூதேயா, சமாரியா ஆகிய நாடுகளை இவனுடைய தந்தைக்குப் பிறகு அரசாண்டவன் (மத். 2:22).

அர்தசஷ்டா (“கொள்ளையிடுவதில் உறுதி”), **1.** பெர்சியா நாட்டின் அரசன் முதலாம் அர்தசஷ்டா லாங்கிமானஸ். இவனுடைய அரண்மனையில் எஸ்றா, நெகேமியா ஆகியோர் அதிகாரிகளாகப் பணிபுரிந்தார்கள் (எஸ்றா 7:1,7,11,12; நெகே. 2:1; 5:14). **2.** எஸ்றா 4:7 –இல் குறிப்பிடப்பட்டுள்ள அர்தசஷ்டா வேறொரு பெர்சியா அரசனைக் குறிப்பதாகக் கருதுகிறார்கள். ஆனால் எண் **1**–இல் சொல்லப்பட்டவனே இவனாக இருக்கக்கூடும்.

அர்மகெதோன் (“மெகெதோ குன்று”), கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையில் கடைசிப்போர் நடக்குமிடம் (வெளி. 16:16).

அர்மீனியா, அரராத் என்னும் தலைப்பைக் காண்க.

அர்வனா (“யெகோவா உறுதிபடைத்தவர்”). ஓர்னான் என்னும் தலைப்பைக் காண்க.

அர்னோன் (“பீறிட்டுவரும் தண்ணீர்”), சாவுக்கடலுக்குள் கலக்கும் ஆறு (எண். 21:13; யோசுவா 13:16).

அலங்கார வாசல், எருசலேமின் கிழக்கு வாசலில் ஒரு பகுதி, இங்குதான் பேதுருவும் யோவானும் ஒரு முடவனைக் குணமாக்கினார்கள் (அப். 3:2).

அலெக்சந்தர் (“மனிதர்களுடைய உதவியாள்”). **1.** கிறிஸ்துவின் சிலுவையைச் சுமந்த சீமோன் என்பவனுடைய குமாரரில் ஒருவன் (மாற்கு 15:21). **2.** அன்னாவின் நெருங்கிய உறவினனும் எருசலேம் நகரில் புகழ்பெற்றவனாயும் இருந்தவன் (அப். 4:6). **3.** எபேசு பட்டணத்தில் பவுலுக்கு எதிராகக் கலகம் உண்டானபோது பவுலுடன் இருந்தவன் (அப். 19:33). பெரும்பாலும் எண் **1** –இல் சொல்லப்பட்ட அதே மனிதனாக இருக்க வேண்டும். **4.** கிறிஸ்துவை மறுதலித்துப் போனவன் (1 தீமோ. 1:20). **5.** பவுலுக்கு மிகுந்த உபத்திரவம் கொடுத்தவன் (2 தீமோ. 4:14). இவன் பெரும்பாலும் எண் 4 –இல் குறிப்பிடப்பட்டவனாக இருக்க வேண்டும்.

அலெக்சந்திரியா (“மகா அலெக்சந்தரின் பட்டணம்”), எகிப்து நாட்டைச் சேர்ந்த பட்டணம், மத்திய தரைக் கடலின் கரையில் அமைந்திருந்த இந்தப் பட்டணம் அந்நாட்டின் தலைநகரமாகப் பல ஆண்டுகள் இருந்து வந்தது (அப். 27:6; 28:11–13).

அல்பேயு (“தலைவன்; முதன்மையானவன்”). **1.** லேவியின் (மத்தேயு) தகப்பன் (மாற்கு 2:14). **2.** அப்போஸ்தலன் யாக்கோபின் தகப்பன் (மத். 10:3; மாற்கு 3:18; அப். 1:13). இவன் கிலியோப்பாவாக இருக்க வேண்டும் என்று சிலர் கருதுகிறார்கள்.

அல்மோன் திப்லாத்தாயிம் (“அத்திச் சாக்குகள் இரண்டின் மறைவிடம்”), அர்னோன் ஆற்றுக்கும் சித்தீமுக்கும் இடைப்பட்ட இந்த இடத்தில், இஸ்ரவேலர் வனாந்தரத்தில் அலைந்து கொண்டிருந்தபோது, கூடாரமிட்டுத் தங்கினார்கள் (எண். 33:46).

அனனியா (“யெகோவா மூடினார்”), சிறையிருப்பிற்குப் பிறகு பென்யமீன் கோத்திரத்தார் குடியேறிய பட்டணம் (நெகே. 11:32).

அனனியா (“யெகோவா கிருபையுள்ளவர்”). **1.** அப்போஸ்தலரை ஏமாற்ற நினைத்ததால் இறக்க நேரிட்ட ஒரு சீடன் (அப். 5:1,3,5). **2.** தமஸ்கு நகரத்தில் பவுல் கண்பார்வை பெற்றவுடன் அவனுக்கு உதவிசெய்த சீடன் (அப். 9:10–17; 22:12). **3.** எருசலேமில் பவுலை எதிர்த்த பிரதான ஆசாரியன் (அப். 23:2; 24:1).

அனனியா (“யெகோவா கிருபையுள்ளவர்”). **1.** பென்யமீனின் வழித்தோன்றல் (1 நாளா. 8:24). **2.** உசியாவின் கீழ் பணிபுரிந்த ஓர் அதிகாரி (2 நாளா. 26:11). **3.** யோயாக்கீமின் கீழிருந்த ஓர் இளவரசனின் தகப்பன் (எரே. 36:12). **4.** தாவீதின் இசைக்கலைஞர்களின் 16 –ஆவது வகுப்பாரின் தலைவன் (1 நாளா. 25:4,23). **5.** யெரியா என்பவனது பாட்டன் (எரே. 37:13). **6.** எரேமியாவை எதிர்த்த கள்ளத்தீர்க்கதரிசி (எரே. 28). **7.** பாபிலோனில் தானியேலின் ஒரு நண்பன் (தானி. 1:7,11,19). சாத்ராக் என்னும் பெயரையும் பார்க்கவும் **8.** யெருபாபேல் மகன் (1 நாளா. 3:19, 21). **9.** நாடு கடத்தப்பட்ட காலத்தில் அந்நியப் பெண்ணைத் திருமணம் செய்தவன் (எஸ்றா 10:28). **10.** மதிற்சுவரைத் திரும்பக் கட்டுவதற்கு உதவிய ஒரு தைலக்காரனாகிய ஆசாரியன் (நெகே. 3:8). **11.** எருசலேம் வாசலைக் கட்டுவதற்கு உதவியவன் (நெகே. 3:30). ஒருவேளை எண். **10** –இல் குறிப்பிடப்பட்டவனும் இவனும் ஒரே ஆளாக இருக்கலாம். **12.** எருசலேமின் காவல் விசாரணைக்கென்று நியமிக்கப்பட்ட உண்மையுள்ள இஸ்ரவேலன் (நெகே. 7:2). **13.** சிறையிருப்புக்குப் பிறகு தேவனோடு செய்த உடன்படிக்கையை முத்திரை போட்டவர்களில் ஒருவன் (நெகே. 10:23). **14.** எருசலேம் மதில் பிரதிஷ்டையின்போது உடனிருந்த ஓர் ஆசாரியன் (நெகே. 12:12,41). அன்னாள் (“கிருபை”), சாமுவேலின் தாயாகிய ஒரு தீர்க்கதரிசினி (1 சாமு. 1).

அனானி (“கிருபையுள்ள”). **1.** தேவாலயப் பணிகளில் ஈடுபடுவோரில் ஒரு வகுப்பாரின் தலைவனும் இசைக் கலைஞனும் ஆவான் (1 நாளா. 25:4,25). **2.** தீர்க்கதரிசியாகிய யெகூவின் தகப்பன்; இவன் ஆசா என்னும் யூதாவின் அரசனால் சிறையில் அடைக்கப்பட்டான் (1 இராஜா. 16:1,7; 2 நாளா. 16:7–10). **3.** அந்நியப் பெண்ணைத் திருமணம் செய்த ஓர் ஆசாரியன் (எஸ்றா 10:20). **4.** நெகேமியாவின் சகோதரனும் அவனுக்குக் கீழாக எருசலேமின் ஆளுநராகவும் இருந்தவன் (நெகே. 1:2; 7:2). **5.** எருசலேம் மதிற்சுவரைச் சுத்திகரிக்க உதவிபுரிந்த இசைக் கலைஞன் (நெகே. 12:36).

அன்னா (“யெகோவாவின் கிருபை”), கிறிஸ்துவை முதலில் விசாரணை செய்த யூதர்களின் பிரதான ஆசாரியன் (லூக்கா 3:2; யோவான் 18:13,24; அப். 4:6).

அன்னாள் (“கிருபை”), கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்த ஆசேர் கோத்திரத்துத் தீர்க்கதரிசி (லூக்கா 2:36).

அஸபியா (“யெகோவா தோழமை கொண்டிருக்கிறார்”). **1.** லேவியின் வழித்தோன்றல் (1 நாளா. 6:45). **2.** லேவியின் வழியில் தோன்றிய இன்னொருவன் (1 நாளா. 9:14). **3.** எதுத்தூனின் குமாரரில் ஒருவன் (1 நாளா. 25:3). **4.** கோகாத்தின் வழித்தோன்றல் (1 நாளா. 26:30). **5.** லேவியரின் ஒரு பிரபுவாகிய கேமுவேலின் குமாரரில் ஒருவன் (1 நாளா. 27:17). **6.** லேவியர் கோத்திரத்தில் ஒரு கிளையின் தலைவன் (2 நாளா. 35:9). **7.** பாபிலோனிலிருந்து எஸ்றாவுடன் திரும்பிவந்த ஒரு லேவியன் (எஸ்றா 8:19). **8.** கோகாத் குடும்பத்தில் ஒரு தலைவன் (எஸ்றா 8:24). **9.** எருசலேம் மதிலைப் பழுதுபார்த்தவர்களில் ஒருவன் (நெகே. 3:17). **10.** நெகேமியாவுடன் சேர்ந்து உடன்படிக்கையில் முத்திரையிட்டவன் (நெகே.

10:11). **11.** தேவாலயப் பணிகள் சிலவற்றைப் பொறுப்பேற்று நடத்தியவன் (நெகே. 11:15). **12.** தேவாலயத்தில் இருந்த ஒரு விசாரிப்புக்காரன் (நெகே. 11:22). **13.** யெசுவாவின் காலத்தில் இருந்த ஓர் ஆசாரியன் (நெகே. 12:21). **14.** லேவியரில் ஒரு தலைவன் (நெகே. 12:24). (குறிப்பு: எண்கள் **9, 12, 14.** ஆகிய எண்களில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் ஒரே ஆளாக இருக்கக் கூடும்.)

அஸ்கலோன் (“அலைந்து திரிதல்”), கானானியரின் முதன்மையான பட்டணங்களில் ஒன்று, தெர்சிடோ என்னும் தேவதையை வணங்கிவந்த முக்கியமான இடம்; தற்போதைய காசா பட்டணத்திற்கு வடக்கே 19 கி. மீ. (12 மைல்) அமைந்திருந்தது (யோசுவா 13:3; எரே. 47:5).

அஸ்தோத் (“அரண்”) கானானியரின் முதன்மையான ஐந்து பட்டணங்களில் ஒன்று; தாகோன் என்னும் மீன் கடவுளை வணங்கிய பிரதானமான இடம்; தற்கால ஜாஃபாவுக்கும் காசாவுக்கும் இடையே சரிபாதித் தூரத்தில் அமைந்துள்ளது (யோசுவா 11:22; 1 சாமு. 5:1). புதிய ஏற்பாட்டில் இந்த இடம் ஆசோத் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 8:40).

அஸ்போனஸ், நேபுகாத்நேச்சாரால் யூதாவிலிருந்து சிறைபிடித்துக் கொண்டுவரப்பட்ட கைதிகளின்மேல் அதிகாரியாக வைக்கப்பட்ட பிரதானிகளின் தலைவன் (தானி. 1:4).

ஆகாப் (“தகப்பனுடைய சகோதரன்”). **1.** இஸ்ரவேலின் ஏழாவது அரசன். இவன் பொல்லாப்பு நிறைந்தவனாகவும் சிலைவணக்கம் செய்பவனாகவும் இருந்தான். அதே குணங்களைக் கொண்ட யேசபேல் என்னும் பெண்ணைத் திருமணம் செய்தான் (1 இராஜா. 16:28–22:40). **2.** நேபுகாத் நேச்சாரால் கொலை செய்யப்பட்ட கள்ளத் தீர்க்கதரிசி (எரே. 29:21,22).

ஆகாய் (“மகிழ்ச்சி நிரம்பிய”), பாபிலோனியச் சிறையிருப்புக்குப் பின்னர் தீர்க்கதரிசனம் உரைத்த ஒரு தீர்க்கதரிசி (எஸ்றா 5:1; ஆகாய் 1:1,3,12).

ஆகார் (“அலைந்து திரிகிறவள்”), சாராளின் வேலைக்காரியாகிய இவள் ஆபிரகாமுக்கு இஸ்மவேலைப் பெற்றாள் (ஆதி. 16:1–16; 21:14–17).

ஆகான் (ஆகார்) (“தொல்லை”), எரிகோவின் கொள்ளைப்பொருளில் சிலவற்றைத் திருடி, தன் மக்களுக்குத் “தொல்லை” ஏற்படுத்தியவன். அதற்காக இவன் கொல்லப்பட்டான் (யோசுவா 7:1–24). முதல் நாளாகமம் 2:7 –இல் இவன் ஆகார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறான்.

ஆகாஸ் (“அவர் தாங்குகிறார்”) **1.** யூதாவின் பதினோராவது அரசன், கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (2 இராஜா. 15:38 – 16:20; மத். 1:9). **2.** பென்யமீனின் குடிவழியில் பிறந்தவன் (1 நாளா. 8:35,36; 9:41,42).

ஆகீத் (“கொண்டாட்டம்”), தாவீதின் முதல் மனைவி, அதோனியாவின் தாய் (2 சாமு. 3:4; 1 இராஜா. 1:5,11).

ஆகீம் (“சாபம்”) கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (மத். 1:14).

ஆகீஸ் (“பாம்பை மயக்குபவன்”). **1.** காத்தின் ஓர் அரசன், பாதுகாப்பைக் கருதி தாவீது இவனிடத்திற்குச் சென்றான் (1 சாமு. 21:11–15). **2.** இதே பெயரையுடைய காத்தின் மற்றோர் அரசன். ஆனால் இவன் சாலொமோனின் காலத்தில் ஆட்சிபுரிந்தவன் (1 இராஜா. 2:39,40). இருந்த போதிலும் இருவரும் ஒரே ஆள் என்று பலர் கருதுகிறார்கள்.

ஆகோர் (“தொல்லை”), எரிகோவின் தென் புறம் உள்ள ஒரு பள்ளத்தாக்கு, அங்குதான் ஆகான் கல்லெறிந்து கொல்லப்பட்டான் (யோசுவா 7:24); அதுவே யூதாவின் வட எல்லையாயிற்று (யோசுவா 15:7).

ஆக்கில்லா (“கழுகு”), பக்தி நிறைந்த யூதக் கிறிஸ்தவன், பிரிஸ்கில்லாளின் கணவன், பவுலின் நண்பன் (அப். 18:2,18,26; ரோமர் 16:3; 1 கொரி. 16:19).

ஆசகேல் (“தேவன் செயலாற்றுபவர்; தேவன் உருவாக்கினார்”). **1.** தாவீதின் சகோதரியாகிய செருயாவின் குமாரரில் ஒருவன். இவன் அப்னேரால் கொல்லப்பட்டான் (2 சாமு. 2:18–32;

3:27,30). **2.** நியாயப்பிரமாணத்தைக் கற்பிக்கும் படி அனுப்பப்பட்ட லேவியன் (2 நாளா. 17:8). **3.** தசமபாகம் காணிக்கை ஆகியவற்றைக் கண் காணிக்க நியமிக்கப்பட்ட லேவியன் (2 நாளா. 31:13). **4.** யோனத்தானின் தகப்பன், அந்நிய நாட்டு மனைவிகளைக் கணக்கெடுக்கும்படி நியமிக்கப்பட்டவன் (எஸ்றா 10:15).

ஆசகேல் (''தேவன் காண்கிறார்''), பெனா தாத் II– ஐக் கொலைசெய்து சீரியாவின் அரிய ணையைக் கைப்பற்றியவன் (1 இராஜா. 19:15,17; 2 இராஜா. 8:8–29).

ஆசா (''மருத்துவன்; நலமடையச் செய்ப வன்''). **1.** யூதாவின் மூன்றாவது அரசன், கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (1 இராஜா. 15:8–16:29; மத். 1:7,8). **2.** லேவி குடும்பத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 9:16).

ஆசாப் (''சேகரிப்பவன்''). **1.** தாவீது காலத் துத் தலைமைப் பாடகர் மூவரில் ஒருவன் (1 நாளா. 6:39; 15:17,19). சங்கீதங்கள் 50, 73–83 ஆகியவற்றை இயற்றியவன். **2.** எசேக்கியா அரசனிடம் கணக்கனாக இருந்த யோவாக் என்பவனின் தகப்பன் (2 இராஜா. 18:18, 37; 2 நாளா. 29:13). **3.** இந்த லேவியனின் வழிவந்த வர்கள் எருசலேமில் குடியிருந்தார்கள் (1 நாளா. 9:15). **4.** இவனுடைய குடிவழியில் வந்தவர்கள் தாவீதின் காலத்தில் வாசல் காக்கிறவர்களாக இருந்தார்கள் (1 நாளா. 26;1). இந்த வசனத்தில் பெயர் அபியாசாப் என்றே இருக்க வேண்டும். **5.** யூதாவில் அரசனின் காடுகளைக் காவல் காத்த வன் (நெகே. 2:8).

ஆசியா (''கிழக்கத்திய''), ஆசியா மைனர் என்னும் நிலப்பகுதியைக் குறிப்பதற்குத் திரு மறையில் பயன்படுத்தப்பட்ட பெயர் (1 கொரி. 16:19; அப். 2:9). ஆசியா மைனரில் ஒரு பகுதி, ரோம ஆதிக்கத்தின் கீழ் இருந்த மாகாணம் சில இடங்களில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 19:10; வெளி. 1:4).

ஆதாம் (''மண்ணுக்குரியது; உறுதியான''), முதல் மனிதன். இவனுடைய பாவத்தினால் மனுக்குலம் முழுவதும் சாபத்திற்குள்ளாயிற்று (ஆதி. 2–3 அதி.; 1 கொரி. 15:22,45). கிறிஸ்து வின் வம்ச வரலாற்றில் இவனுடைய பெயரும் இடம் பெற்றுள்ளது (லூக்கா 3:38).

ஆதாம் (''சிவப்பு; பூமிக்குரியது''), ரூபன் கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்ட ஓர் இடம், யோர்தான் ஆற்றின் கிழக்குக் கரையில் அமைந் திருந்தது (யோசுவா 3:16).

ஆதிரியா (''ஆதிரியா அல்லது இத்தா லியாவிலிருந்து'') இத்தாலியா நாட்டின் கிழக்கு திசையில் இருக்கக் கூடிய கடல், ஆதியில் இப் பெயர் பெற்றிருந்தது. பிற்காலத்தில் கிரேக்க நாட்டிற்கும் சிலிசியாவுக்கும் இடைப்பட்ட பகுதி யும் சேர்ந்து இப்பெயரைப் பெற்றது (அப். 27:27).

ஆத்சோர் (''வேலியடைக்கப்பட்ட இடம்). **1.** கானான் நாட்டின் தலைநகரம், பின்னர் நப்தலி கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்ட வட பாலஸ் தீன நிலப்பகுதி (யோசுவா 11:1,10,13); பெருமள வில் நிலத்தடியில் தோண்டியெடுக்கப்பட்டு தொல்பொருள் ஆராய்ச்சி செய்யப்பட்ட இடம். **2.** யூதாவின் தெற்கு எல்லையின் கடைக்கோடியில் இருந்த ஓர் இடம் (யோசுவா 15:23); பெரும்பாலும் இவ்விடம் தற்போது எல் – ஜெபரியா என்று அழைக்கப்படும் இடமாயிருக்கக் கூடும். **3.** யூதா வின் தென்பகுதியில் இருந்த இன்னொரு பட்டணம் (யோசுவா 15:25). எஸ்ரோன் என்பது இந்தப் பட்டணம் இருந்த மாவட்டமாகவோ, இந் தப் பட்டணத்தின் வேறொரு பெயராகவோ இருக் கலாம் (வச. 25). **4.** பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர், சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் இந்த இடத்திற்கு வந்தார் கள் (நெகே. 11:33); தற்போது இந்த இடம் கிர்பெட் ஆசூர் என்று அழைக்கப்படுகிறது; இது எருசலே மிலிருந்து 6 கி.மீ (4 மைல்) தொலைவில் இருக் கிறது. **5.** பாலஸ்தீனத்தின் கிழக்கே இருந்த அரேபியா பாலைவனப் பகுதி (எரே. 49:28,30,33).

ஆத்தாத் (''ஒரு முள்''), யோசேப்பும் அவனு டைய சகோதரர்களும், யாக்கோபின் சரீரத்தைக் கானானுக்கு எடுத்துச் செல்ல ஆயத்தம் செய்த போது துக்கங்கொண்டாடிய இடம், இந்தக் களம் எப்ரோனுக்கு அருகில் இருந்தது (ஆதி. 50:11).

அந்த இடத்திற்குக் கொடுக்கப்பட்ட புதிய பெயரில் ஒரு சிலேடை காணப்படுகிறது: ஆத்தாத்தின் களத்தில் அவர்கள் துக்கங்கொண்டாடுகிறதைக் (Hebrew-ebbel) கண்டு எகிப்தியருக்கு இது பெரிய துக்கங்கொண்டாடல் என்று சொல்லி அந்த இடத்தை ஆபேல் (Hebrew-abhel)– புல்வெளி – மிஸ்ராயீம் என்றார்கள்.

ஆபகூக் (“அன்பின் அரவணைப்பு”), யோயாக்கீம் மற்றும் யோசியா ஆகியோரின் நாட்களில் இருந்த ஒரு தீர்க்கதரிசி (ஆப. 1:1; 3:1).

ஆபிரகாம் (ஆபிராம்). யூத நாட்டைத் தோற்றுவித்தவன், கிறிஸ்துவின் மூதாதை. ஆபிராம் (“தகப்பன் புகழப்படுகிறார்”) என்னும் பெயர் ஆபிரகாம் (“பெருங்கூட்டத்தின் தகப்பன்”) என்று மாற்றப்பட்டது. (ஆதி. 11–26; மத். 1:1,2).

ஆபேத் நேகோ (“நேபோவின் வேலைக்காரன்; இஸ்தாரின் வேலைக்காரன்”), அசரியாவுக்குக் கொடுக்கப்பட்ட மறுபெயர். பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்ட தானியேலின் மூன்று நண்பர்களில் ஒருவன். இவன் எரிகிற அக்கினிச் சூளையிலே எறியப்பட்டான் (தானி. 1:7; 2:49; 3:12–30).

ஆபேல் (“ஒரு மூச்சு, ஆவி, மேய்ப்பன்), ஆதாம் ஏவாளுக்குப் பிறந்த இரண்டாவது மகன், இவனுடைய உடன்பிறந்தவனாகிய காயீனால் கொல்லப்பட்டவன் (ஆதி. 4:1–10; எபி. 11:4; 12:24).

ஆபேல் கெராமின், யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கில் அமைந்திருந்த ஓர் இடம்; யெப்தா அம்மோன் புத்திரரைத் தோற்கடித்த போர்க்களம் (நியா. 11:33 – தமிழில் இந்த வசனத்தில் இப் பெயர் இடம்பெறவில்லை).

ஆப்பெக் (“வலிமை”). **1.** சீதோனின் வடக்கிலிருந்த ஒரு நகரம் (யோசுவா 13:4). **2.** ஆசேர் கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்ட நகரம், ஆனாலும் இதை அவர்கள் வெற்றிபெறவில்லை; அக்கோவுக்குச் சற்று தென் கிழக்கு திசையில் இருந்தது (யோசுவா 19:30; நியா. 1:31). **3.** சாரோன் சமவெளியில் யோப்பாவுக்கு வடகிழக்கே இருந்த ஓர் ஊர், இதனுடைய இராஜா யோசுவாவால் கொல்லப்பட்டான் (யோசுவா 12:18). **4.** சூநேமுக்கும் யெஸ்ரெயேலுக்கும் இடையேயிருந்த பட்டணம், இந்த நகரத்தின் படைவீரர்கள் சவுலுக்கும் பெலிஸ்தியருக்கும் இடையே நடந்தபோரில் பங்குகொண்டார்கள் (1 சாமு. 28:4; 29:1,11; 31:1).

ஆமாத் (“சினம்”). **1.** ஓரண்டஸ் ஆற்றின் கரையில் அமைந்திருந்த ஓர் ஊர், இது தமஸ்குவிலிருந்து ஏறத்தாழ 200 கி. மு (125 மைல்) தொலைவில் வடக்கே இருந்தது. சாலொமோனின் படைகளுக்குத் தேவையான ஆயுதங்களை வைக்கும் இடமாக இது இருந்தது (2 நாளா. 8:4). **2.** இஸ்ரவேலின் எல்லையாக இது இருக்க வேண்டும் என்று கருத்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது (எண். 13:21; 34:8).

ஆமான் (“புகழ்பெற்ற மனிதன்”), யூதர்களை அழிக்கச் சதிசெய்தவன். இவன் அகாஸ்வேருவின் பிரதான மந்திரியாக இருந்தான் (எஸ். 3–9அதி).

ஆமோத்ஸ் (“பலமுள்ளவன்”), ஏசாயா தீர்க்கதரிசியின் தகப்பன் (2 இராஜா. 19:2,20; ஏசா. 1:1; 2:1; 13:1).

ஆமோன் (“உழைப்பாளி” அல்லது “நம்பகமானவன்”). **1.** ஆகாபின் காலத்தில் சமாரியா பட்டணத்துத் தலைவனாயிருந்தவன் (1 இராஜா. 22:26; 2 நாளா. 18:25). **2.** யூதாவின் அரசனாகிய மனாசேயின் குமாரனும், அரியணையின் வாரிசு உரிமையுமானவன், கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (2 இராஜா. 21:19–25; எரே. 1:2; செப். 1:1; மத். 1:10).

ஆமோன் கோகு (“கோகின் மக்கள் திரள் கூட்டம்”), தேவனுடைய மக்களோடு கோகும் அவனுடைய படைகளும் இறுதிப் போர் புரிந்து தோற்கடிக்கப்படும் பள்ளத்தாக்கு (எசே. 39:11–15).

ஆமோஸ் (“பாரம் சுமப்பவன்; பாரமானவன்”). **1.** உசியா மற்றும் யெரொபெயாம் ஆகியோருடைய நாட்களில் தீர்க்கதரிசியாக இருந்தவன் (ஆமோஸ் 1:1; 7:10–12,14). **2.** கிறிஸ்துவின் முன்னோர்களில் ஒருவன் (லூக்கா 3:25).

ஆயலோன் (“கலைமான்களின் இடம்”). **1.** எருசலேமுக்கு வடமேற்கே 225 கி.மீ (14 மைல்) தொலைவில் அமைந்திருந்த இடம், லேவியர் களுக்கென ஒதுக்கப்பட்ட பட்டணம் (யோசுவா 19:42; 21:24; 2 நாளா. 28:18). **2.** கலிலேயாக் கடலின் மேற்கே அமைந்திருந்ததும் செபுலோன் கோத்திரத்தாருக்கென்று ஒதுக்கப்பட்டதுமான இடம், இங்குதான் ஏலோன் என்னும் நியாயாதி பதி அடக்கம்பண்ணப்பட்டான் (நியா. 12:12). இப் பொழுது இது எந்த இடம் என்பது தெரிய வில்லை.

ஆயி (ஆயாத்; ஆயா) (“இடிபாடுகளின் குவியல்”). **1.** வலிமைவாய்ந்த கானானியப் பட்டணங்களில் ஒன்று, பெத்தேலுக்குக் கிழக் கில் இருந்தது (யோசுவா 7:2; நெகே. 11:31). எபிரெய மொழியில் இப்பெயரின் பெண்பாற் சொல், "ஆயாத்" என்று இடம் பெற்றுள்ளது. **2.** அம்மோனியரின் பட்டணங்களில் ஒன்று; பெரும்பாலும் எஸ்போனுக்கு அருகில் இருந் திருக்க வேண்டும் (எரே. 49:3).

ஆயின் (“கண்”). **1.** சிமியோன் கோத்திரத் தாருக்கு ஊழியம் செய்யும் லேவியருக்கென்று ஒதுக்கப்பட்ட பட்டணம், யூதாவின் பட்டணமா கிய இது ரிம்மோனுக்கு அருகில் இருந்தது. (யோசுவா 15:32; 19:7; 21:16; 1 நாளா. 4:32). **2.** ரிப்லாவுக்கு மேற்கே, வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட நாட்டின் எல்லையில் அமைந்திருந்த இடம் (எண். 34:11). இப்போது இது இருந்த இடம் தெரியவில்லை.

ஆரான் (“வலிமையுடைய; ஒளியூட்டப்பட்ட வன்”). **1.** ஆபிரகாமின் சகோதரன்; தகப்பன் இறப்பதற்கு முன் இறந்தவன் (ஆதி. 11:26–31). **2.** லேவியின் வழித்தோன்றல் (1 நாளா. 23:9). **3.** காலேபின் மகன் (1 நாளா. 2:46).

ஆராம் (“மலைகள்”), மெசொப்பொத் தாமியா நாட்டைச் சேர்ந்த ஒரு நகரம். இது நினிவேக்கு வடமேற்கே 6 கி. மீ (240 மைல்) தொலைவிலும், தமஸ்குவுக்கு வடகிழக்கே 450 கி. மீ (280 மைல்) தொலைவிலும் இருந்த பட்ட ணம் (ஆதி. 11:31; 12:4,5).

ஆரோன் (“ஒளியூட்டப்பட்டவன், செல்வந் தன், மலையேறி”). மோசேயின் உடன்பிறந் தோன். இஸ்ரவேலின் முதல் பிரதான ஆசாரியன் (யாத். 4:14,30; 7:2,19; 17:9–12; எண். 12;17 அதி).

ஆலூஸ் (“மக்கள் கூட்டம்”), எகிப்திலிருந்து சீயோன் மலையை நோக்கி இஸ்ரவேலர் சென்ற போது தங்கியிருந்த இடம் (எண். 33:14).

ஆனதோத் (“விடை”), பென்யமீன் கோத் திரத்தாரின் ஒரு நகரம், எருசலேம் பட்டணத் திற்கு வடகிழக்கே 4 கி. மீ (2.5 மைல்) தொலை வில் அமைந்திருந்த ஓர் ஊர் (யோசுவா 21:18; எஸ்றா 2:23) எரேமியா தீர்க்கதரிசியின் பிறப் பிடம் (எரே. 1:1; 11:21).

ஆனோக்கு (ஏனோக்கு) (“ஒப்புவிக்கப் பட்ட”). **1.** ஆபிரகாமின் பேரர்களில் ஒருவன் (ஆதி. 25:4). **2.** ரூபனின் மூத்த மகன், ஆனோக் கியர் என்னும் வகுப்பாரின் தொடக்கம் இவன் மூலமாக உண்டாயிற்று (ஆதி. 46:9; 1 நாளா. 5:3). **3.** யாரேதின் மகனாகிய ஏனோக்கு (1 நாளா. 1:3).

ஆஸ்நாத்து (“நெய்ட் என்னும் தேவதைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவள்”) யோசேப்பின் எகிப் திய மனைவி (ஆதி. 41:45,50; 46:20).

இக்கோனியா (“வருகிற”), ஆசியா மைன ரில் ஒரு மாகாணமாக இருந்த லிக்கவோனியா வின் தலைநகரம் (அப். 13:51; 14:1).

இசக்கார் (“பரிசு”). **1.** யாக்கோபின் ஒன்பதா வது மகன், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத் திரங்களின் ஒன்றின் மூதாதை (ஆதி. 30:17,18; 49:14,15). **2.** ஆசரிப்புக் கூடாரத்தில் சுமைசுமப் பவன் (1 நாளா. 26:5).

இதெக்கேல் (“ஒலி”), டைகிரிஸ் ஆற்றின் பண்டைய பெயர் (ஆதி. 2:14; தானி 10:4). ஐபி ராத்து ஆற்றைக் காட்டிலும் இது குறுகலானது, ஆனாலும் கூடுதலான நீர் இதில் பாய்கிறது. பெர்சியா வளைகுடாவிலிருந்து 100 மைல் தொலைவில் இது அல் குவர்னா என்னுமிடத்தில் ஐபிராத்து ஆற்றுடன் கலந்துவிடுகிறது.

இத்தாலியா (“கன்றுகளால் பெருக்க மடைந்த”). ஆல்ப்ஸ் ஒருபுறமும் மத்தியதரைக் கடல் மறுபுறமும் இருக்கும்படி நீண்ட நிலப்பகுதி யாகிய தீவகற்பம், இதன் தென்கோடியில் மேசினா நீர்க்கால் இருக்கிறது (அப். 18:2; 27:1).

இத்தோ (“ஒப்பனை செய்த”). **1.** இஸ்ர வேலின் அரசர்களைக் குறித்து எழுதியவன் (2 நாளா. 9:29; 12:15). **2.** செருபாபேலோடு எருச லேமுக்குத் திரும்பிய ஓர் ஆசாரியன் (நெகே. 12:4). ஒருவேளை **1** –ஆம் எண்ணில் சொல்லப் பட்டவனும் இவனும் ஒரே ஆளாக இருக்கலாம்.

இந்தியா (பொருள் தெரியவில்லை), பெர்சியா பேரரசின் கிழக்கு எல்லையில் சிந்து ஆற்றைச் சுற்றியிருந்த நிலப்பகுதி (எஸ்தர் 1:1; 8:9).

இப்சான் (“புகழ்பெற்ற, ஒளிர்கிற”), பெத்லகே மைச் சேர்ந்தவன், இவன் இஸ்ரவேலை ஏழு ஆண்டுகள் நியாயந்தீர்த்தான் (நியா. 12:8–10).

இம்மோர் (“செம்மறி ஆட்டுக்குட்டி”), பாபி லோனில் இருந்த ஒரு மனிதனாகவோ இட மாகவோ இருக்கலாம் (எஸ்றா 2:59; நெகே. 7:61). இது எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை.

இம்னா (“முரட்டுத்தனமாய் இழுத்தல்”). **1.** ஆசேரின் வழித்தோன்றல் (ஆதி. 46:17; 1 நாளா. 7:35). **2.** ஆசேரின் மகன் (எண். 26:44; 1 நாளா. 7:30). **3.** எசேக்கியாவின் ஆட்சியில் பணிபுரிந்த கோரே என்பவனது தகப்பன் (2 நாளா. 31:14).

இயேசு (“யோசுவா என்பதன் கிரேக்க வடிவம்”). **1.** கொலோசெயருக்குப் பவுலோடு சேர்ந்து வாழ்த்துதல் அனுப்பிய ஒரு கிறிஸ்தவன் (கொலோ. 4:11); இவன் யுஸ்து என்று அழைக் கப்பட்டான். **2.** யோசுவா என்னும் பெயரைக் காண்க.

இயேசு கிறிஸ்து (இயேசு – “யெகோவா இரட்சிக்கிறவர்,” கிறிஸ்து – “அபிஷேகம் பண் ணப்பட்டவர்”). கன்னி மரியாளினிடத்தில் மக னாகப் பிறந்த இவர், தம்முடைய மக்களுக்காக மரணமடைவார் என்று முன்னுரைக்கப்பட்ட ராஜாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை நிறை வேற்றும்படி உலகிற்கு வருகை புரிந்த தேவ குமா ரன். இவருடைய ஊழியத்தைக் குறித்த விவரங் கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு நற்செய்தி நூல்களிலும் காணப்படு கின்றன.

இராயன், உயர்குல ஜூலி குடும்பத்தின் ஒரு பிரிவினரின் பெயர். இக்குடும்பத்தினர் ரோம அரசின் ஆதிக்கத்தைப் பெற்றார்கள்; அதன் பிறகு இது ரோமப் பேரரசரின் பட்டப் பெயரா யிற்று. (காண்க – அகஸ்து இராயன், திபேரியு இராயன், கிளவுதியு இராயன்.)

இல்க்கியா (“யெகோவா என் பாதுகாப்பு அல்லது என்பங்கு”). **1.** நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டபோது எஸ்றாவுடன் நின்றவன் (நெகே. 8:4). **2.** தேவாலய அலுவலர்களுடைய பிள்ளைகளைப் பராமரித்த லேவியன் (1 நாளா. 6:45). **3.** ஆசரிப்புக் கூடாரத்தின் வாசல் காவ லன் (1 நாளா. 26:11). **4.** எசேக்கியா அரசனின் வீட்டு விசாரணைக்காரன் (2 இராஜா. 18:18,26; ஏசா. 22:20; 36:3). **5.** ஆனதோத்தைச் சேர்ந்த ஆசாரியன், எரேமியாவின் தகப்பன் (எரே. 1:1). **6.** பிரதான ஆசாரியன், யோசியாவின் காலத்தில் நியாயப்பிரமாண புத்தகத்தைக் கண்டுபிடித்த வன் (2 இராஜா. 22:4,8; 23:4). **7.** கெமரியாவின் தகப்பன் (எரே. 29:3). **8.** சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த ஆசாரியர்களில் ஒரு தலைவன் (நெகே. 12:7). இவனுடைய சந்ததியாரும் அவ் வாறு தலைவராயிருந்தார்கள் (நெகே. 12:12,21).

இல்லிரிக்கம் (“மகிழ்ச்சி”), ரோம ஆதிக்கத் தில் இருந்த ஒரு மாநிலம், இது ஆதிரியாக் கடலின் கிழக்குக் கரையில் அமைந்திருந்தது. இதன் வட புறம் இத்தாலியாகவும் தென்புறம் மக்கெதோனி யாவும் இருந்தன (ரோமர் 15:19). பின்னர் இது தல்மாத்தியா என்னும் பெயர் பெற்றது.

இன்னோம், யாரென்று அறியப்படாதவன், இவனுடைய குமாரன் அல்லது குமாரர்களின் பெயரில் எருசலேமின் அருகில் பள்ளத்தாக்கு இருந்தது. அங்கு எரேமியாவின் காலத்தில் நரபலி செலுத்தப்பட்டது. இந்தத் தீட்டுப்பட்ட

இடத்திலே பின்னர் குப்பைக்கூழங்கள் எரிந்து சாம்பலாக்கப்பட்டன (யோசுவா 15:8; 18:16; நெகே. 11:30; எரே. 7:31,32).

இன்னோம் (“அவர்களுடைய செல்வம்”), எருசலேமின் தென்மேற்கே உள்ள ஒரு குறுக லான பள்ளத்தாக்கு (யோசுவா 15:8; 18:16; 2 நாளா. 28:3).

இஸ்போசேத் (“அவமான மனிதன்”), சவுல் என்னும் அரசனின் மகனும், அவனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்தவனும் ஆவான். தாவீதின் மூலம் தோற்கடிக்கப்படுவதற்கு முன் இரண்டு ஆண்டு கள் ஆட்சிபுரிந்தான் (2 சாமு.2:8–15 3:8,14,15; 4:5–12). இவன் எஸ்பால் என்றும் அழைக்கப்பட் டான் (1 நாளா. 8:33; 9:39).

இஸ்மவேல் (“தேவன் செவிசாய்க்கிறார்”). **1.** ஆபிரகாம், ஆகார் ஆகியோரின் மகன்; இவனு டைய வழித்தோன்றல்கள் அரேபிய நாடோடி களாக இருக்கிறார்கள் (ஆதி. 16:11–16; 17:18–26; 25:9–17; 28:9; 36:3). **2.** நெத்தனியாவின் மக னாகிய இவன் சூழ்ச்சித் திறமை கொண்டவனா யிருந்து இஸ்ரவேலுக்குத் துரோகம் இழைத்தான் (எரே. 40:8–41:18). **3.** பென்யமீனின் வழித்தோன் றல் (1 நாளா. 8:38). **4.** செபதியாவின் தகப்பன் (2 நாளா. 19:11). **5.** யோய்தா மற்றும் யோவாஸ் ஆகியோரின் காலத்திலிருந்த ஒரு படைத்தலை வன் (2 நாளா. 23:1). **6.** சிறையிருப்புக்காலத்தில் அந்நியப் பெண்ணைத் திருமணம் செய்தவன் (எஸ்றா 10:22).

இஸ்ரவேல். யாக்கோபு என்னும் பெயரைக் காண்க.

இஸ்ரவேல் (“தேவனோடு போராடி மேற் கொண்டவன்”), பாலஸ்தீனத்தின் வடக்கு ராஜ் யம், இஸ்போசேத், யெரொபெயாமையும் பின்பற் றிய பத்துக் கோத்திரத்தார் குடியிருந்த இடங்கள் அடங்கிய எபிரெயரின் நாடு. எரிகோ, கேசேர் ஆகியவை இதன் தென் எல்லையாகும் (2 நாளா. 35:18; ஆதி. 32:32 –ஐக் காண்க).

ஈசாக்கு (“நகைப்பு”), ஆபிரகாம், சாராள் ஆகியோரின் மகன், அவர்களுடைய முதிர்வய தில் பிறந்தவன். இவன் யாக்கோபு, ஈசா ஆகி யோரது தகப்பன், கிறிஸ்துவின் மூதாதை (ஆதி. 21–25; மத். 1:2).

ஈசாய் (“யெகோவா இருக்கிறார்; செல்வ மிக்க”), தாவீதின் தகப்பன், கிறிஸ்துவின் மூதாதை (ரூத் 4:17,22; 1 சாமு. 17:17; மத். 1:5,6).

ஈத்தாய் (“குறித்த காலத்தில் நிகழ்கிற”), தாவீதின் நண்பனும் தளபதியுமானவன் பெலிஸ் தன் (2 சாமு. 15:11–22; 18:2,4,12).

ஈயேல் (“தேவன் வாழ்கிறார்”), எரிகோவைத் திரும்பக் கட்டியவன் (1 இராஜா. 16:34). யோசுவா வின் சாபம் பலிக்கும்படி இவன் தனது இரண்டு ஆண்மக்களையும் பலியிட்டான் (யோசுவா 6:26).

ஈரா (“கவனமுள்ள”) **1.** தாவீதின் நாட்களில் இருந்த ஓர் ஆசாரியன் (2 சாமு. 20:26). **2.** தாவீ தின் முப்பது மனிதர்களில் ஒருவன் (1 நாளா. 11:28; 2 சாமு. 23:38). இவன் தேவாலயக் காவ லாளிகளின் தலைவன் (1 நாளா. 27:9). **3.** தாவீ தின் முப்பது மனிதர்களில் இன்னொருவன் (1 நாளா. 11:40; 2 சாமு. 23:26).

ஈராம் (ஊராம்) (அகிராம் என்பதன் சுருக்கம், “என்னுடைய சகோதரன் புகழப்படுகிறான்”). **1.** தீருவின் ஓர் அரசன், தாவீதுடனும் சாலொ மோனுடனும் நட்பு பாராட்டியவன் (2 சாமு. 5:11; 1 இராஜா. 5 அதி. 9:11; 10:11). **2.** அரசனாகிய ஈராமினிடத்திலிருந்து சாலொமோன் வர வழைத்த கைவினைஞன் (1 இராஜா. 7:13,40,45; 2 நாளா. 4:11,16). **3.** பென்யமீனின் வழித்தோ ன்றல் (1 நாளா. 8:5).

உசியா (“யெகோவா வலிமையுடையவர்; யெகோவா என் வலிமை”). **1.** யூதாவின் பதினோ ராவது அரசன். முறையற்றபடி இவன் தூபவர்க் கத்தைச் செலுத்த முற்பட்டபோது, தேவன் இவனை குஷ்டரோகத்தால் அடித்தார். இவன் அசரியா என்றும் அழைக்கப்பட்டான் (2 இராஜா. 15:1–8; 2 நாளா. 6). இவன் கிறிஸ்துவின் மூதாதை (மத். 1:8,9). **2.** கோகாத் வழியில் தோன் றிய ஒரு லேவியன், சாமுவேலின் மூதாதை (1 நாளா. 6:24). **3.** யோனத்தானின் தகப்பன் (1 நாளா. 27:25). **4.** அந்நியப் பெண்ணைத்

திருமணம் செய்த ஓர் ஆசாரியன் (எஸ்றா 10:21). 5. யூதாவின் வழித்தோன்றல் (நெகே. 11:4).

உப்புக்கடல் (சாவுக்கடல்; கிழக்குக்கடல்), யோர்தான் பள்ளத்தாக்கின் தென் கோடியில் உள்ள நீர்நிலை. இதில் மிகுதியான அளவு தாதுப் பொருள் இருக்கின்ற காரணத்தால் ஏதொரு உயிர்வாழ் நீரினமும் இல்லை (ஆதி. 14:3; எண். 34:12). இதனுடைய தற்போதைய பெயர் சாவுக் கடல் என்பதாகும்.

உப்புப்பட்டணம், என்கேதியின் அருகில் இருந்த யூதாவைச் சேர்ந்த வனாந்தரப் பட்டணம் (யோசுவா 15:62).

உம்ரி (''யெகோவா பங்கீடு செய்கிறார்; மாணவன்''). 1. இஸ்ரவேலின் ஆறாவது அரசன், மூன்றாவது அரச குலத்தை உருவாக்கியவன். இவன் சமாரியாவை நிறுவி அதனை இஸ்ர வேலின் தலைநகராக்கினான் (1 இராஜா. 16:15–28). 2. பென்யமீன் வழித்தோன்றல் பேகாரின் மகன் (1 நாளா. 7:8). 3. பேரேசின் வழித்தோன் றல், எருசலேமில் குடியிருந்தவன் (1 நாளா. 9:4). 4. தாவீதின் காலத்தில் வாழ்ந்த இசக்கார் கோத் திரத் தலைவன் (1 நாளா. 27:18).

உரியா (''யெகோவா என் வெளிச்சம்''). 1. ஏத்தியனாகிய போர் வீரன், தாவீதின் படை யைச் சேர்ந்தவன், இவனுடைய மனைவியாகிய பத்சேபாளைத் திருமணம் செய்யும் பொருட்டு தாவீது இவனை போர் மும்முரத்தில் கொன்று போடும்படி செய்தான் (2 சாமு. 11). 2. ஆகாசின் காலத்தில் இருந்த ஆசாரியன், அரசனின் கட்டளைக்கிணங்க புறச்சமய பலிபீடத்தைக் கட்டி அதை தேவாலயத்தில் நிறுவினான் (2 இராஜா. 16:10–16). 3. தீர்க்கதரிசியாகிய இவன் உரைத்த செய்தி இவனை யோயாக்கீம் கொலை செய்யும்படி கோபமூட்டியது (எரே. 26:20–23). 4. மெரமோத்தின் தகப்பனாகிய இவன் ஓர் ஆசாரியன் (எஸ்றா 8:33; நெகே. 3:4,21). 5. எஸ்றா நியாயப்பிரமாணத்தை வாசிக் கையில் உடன் நின்றவன் (நெகே. 8:4). ஒரு வேளை (4) –இல் குறிப்பிடப்பட்டுள்ளவனும் இவ னும் ஒரே ஆளாக இருக்கலாம். 6. ஒரு சாட்சியாக ஏசாயா ஏற்றுக்கொண்ட ஓர் ஆசாரி யன் (ஏசாயா 8:2).

ஊசா (''வலிமை''). 1. இவன் உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்டபோது தேவனால் அடிபட்டுச் செத்தான் (2 சாமு. 6:2–7; 1 நாளா. 13:6–10). 2. மெராரியின் வழித்தோன்றல் (1 நாளா. 6:29). 3. ஏசூத் என்பவனது வழித்தோன்றல் (1 நாளா. 8:7). 4. பாபிலோனிலிருந்து திரும்பிவந்த நிதனிமியரின் மூதாதைகளில் ஒருவன் (எஸ்றா 2:49; நெகே. 7:51).

ஊசாய் (''விரைவாக''), தாவீதின் நண்பனும் ஆலோசகனும் (2 சாமு. 15:32, 37; 16:16–18; 17:5–15).

ஊசியேல் (''தேவன் என் வலிமை; தேவன் வல்லமையுடையவர்''). 1. ஊசியேல் குடும்பத் தாரின் மூதாதை; கோகாத்தின் மகன் (யாத். 6:18). 2. சிமியோனின் மக்களின் படைத்தலை வன் (1 நாளா. 4:42). 3. பேலா என்பவனது மகன், பென்யமீனின் பேரன் (1 நாளா. 7:7). 4. மதிற்சுவ ரைக் கட்டிய உதவியாள் (நெகே. 3:8). 5. எதுத் தூனின் மகன், லேவியனாகிய இவன் தேவால யத்தைத் தூய்மைப்படுத்த உதவிசெய்தான் (2 நாளா. 29:14). 6. பாடற் குழுவின் தலைவனா கத் தாவீதால் நியமிக்கப்பட்டவன் (1 நாளா. 25:4). இதே அதிகாரத்தில் 18 –ஆவது வசனத் தில் அசாரியேல் என்று குறிப்பிடப்பட்டவனும் இவனும் ஒரே ஆள்.

ஊத்ஸ் (''அறிவுரை, உறுதி''). 1. ஆராமின் முதல் மகன் (ஆதி. 10:23). பெரும்பாலும் இது அர்மீனிய இனத்தை அல்லது மக்களைக் குறிக் கக் கூடும். 2. சேமின் மகன் (1 நாளா. 1:17). எழு பதின்மர் கிரேக்க பழைய ஏற்பாடு, இவனை ஆரா மின் மகன் என்று கூறி (1) –இல் சொல்லப்பட் டவனே இவன் என்று கூறுகிறது. ஒருவேளை இங்கு எபிரெய மொழி வசனங்கள் சுருக்கித் தரப்பட்டு விட்டன போலும். 3. சேயீரின் மகனா கிய திஷானுடைய மகன் (ஆதி. 36:28). 4. நாகோ ருக்கு மில்காளிடம் பிறந்தவன் (ஆதி. 22:21).

ஊத்ஸ் (''அறிவுரை; உறுதி''). 1. யோபு வாழ்ந்த நாடு (யோபு 1:1). இது இரண்டு இடங்களில்

ஒன்றாக இருக்கக்கூடும். ஒன்று தமஸ்குவுக்குத் தெற்கே இருந்த ஹௌரான் என்ற இடமாகவோ, ஏதோமுக்கும் வட அரேபியாவுக்கு இடைப்பட்ட இடமாகவோ இருக்கலாம். **2.** ஏதோமுக்கு அருகில் இருந்த ஒரு நாடு (எரே. 25:20; புலம்பல் 4:21). ஒருவேளை இதுவும் **(1)** –இல் சொல்லப்பட்டுள்ள நாடும் ஒன்றாக இருக்கலாம்.

ஊராம். ஈராம் என்னும் பெயரைக் காண்க.

ஊர், இங்கிருந்து ஆபிரகாம் புறப்பட்டு ஆரானுக்குச் சென்றான் (ஆதி. 11:28,31). இந்த ஊர் என்னும் பட்டணம் பழங்காலத்து ஊர் (ஊரி) என்ற இடத்தைக் குறிக்கிறது, தற்போது ஐபிராத்து ஆற்றங்கரையில், ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள டெல் எல் முக்கயார் என்ற இடம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

ஊர் (“கட்டுப்பாடு அற்ற; மிகச்சிறந்த”). **1.** அமலேக்குடன் செய்த போரின்போது மோசேயின் கரங்களைத் தாங்கிய மனிதர்களில் ஒருவன் (யாத். 17:10,12; 24:14). **2.** காலேபின் மகன் (யாத். 31:2; 35:30; 38:22; 1 நாளா. 2:19,50; 4:1,4). **3.** இஸ்ரவேலால் கொல்லப்பட்ட மீதியானின் அரசன் (எண். 31:8; யோசுவா 13:21). **4.** எப்பிராயீம் மலையில் இருந்த சாலொமோனின் அதிகாரிகளில் ஒருவன் (1 இராஜா. 4:8). **5.** நெகேமியாவின் காலத்தில் இஸ்ரவேலின் பாதிப்பகுதிக்கு பிரபுவாயிருந்தவன் (நெகே. 3:9).

எகிப்து (“டா (Ptah) வின் ஆத்துமாவின் நிலம்), ஆப்பிரிக்காவின் வடகிழக்குப் பகுதியிலிருந்த நாடு, இங்குதான் இஸ்ரவேலர் அடிமைகளாக இருந்தார்கள், அவர்களை மோசே வாக்குத்தத்த நாட்டிற்கு நடத்திச் சென்றான் (ஆதி. 45:9; 47:6).

எகெயால் (ஈகால்) (“யெகோவா மீட்கிறார்”). **1.** கானானை உளவுபார்க்க அனுப்பப்பட்ட பன்னிருவரில் ஒருவன் (எண். 13:7). **2.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (2 சாமு. 23:36). **3.** யூதாவின் அரச வம்சத்தைச் சேர்ந்தவன் (1 நாளா. 3:22).

எக்கோனியா. யோயாக்கீன் என்னும் பெயரைக் காண்க.

எக்லாள் (“கன்று”), தாவீதின் மனைவிகளில் ஒருத்தி (2 சாமு. 3:5; 1 நாளா. 3:3).

எக்லோன், யூதாவின் தாழ்ந்த நிலப்பகுதியிலிருந்த ஓர் ஊர் (யோசுவா 15:39); இது எங்கிருந்தது என்று சரியாகத் தெரியவில்லை.

எசரத்தோன் (“அசுர் ஒரு சகோதரனைக் கொடுத்தான்”), அசீரியாவின் ஆற்றல் மிக்க அரசனாயிருந்த சனெகெரிப் என்பவனின் மகன் (2 இராஜா. 19:37; எஸ்றா 4:2; ஏசாயா 37:38).

எசேக்கியா (“யெகோவா என் வலிமை”). **1.** பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவன் (எஸ்றா 2:16; நெகே. 7:21). இவனோ இவனுடைய பிரதிநிதியோ இஸ்கியா (எசேக்கியா என்பதன் இன்னொரு வடிவம்) என்று அழைக்கப்பட்டுள்ளான் (நெகே. 10:17). **2.** யூதாவின் பன்னிரண்டாவது அரசன்; கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன். இவன் சமயச் சீர்திருத்தத்தை நிறுவி, நாட்டின் பாதுகாப்பையும் வளத்தையும் பெருக்கினான் (2 இராஜா. 18–20; 2 நாளா. 29–32; மத். 1:9.10). **3.** யூதாவின் அரச குடும்பத்தைச் சேர்ந்த நெயாரியாவின் வழித்தோன்றல் (1 நாளா. 3:23).

எசேக்கியேல் (“தேவன் வலுவூட்டுகிறார்”), ஆசாரியக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தீர்க்கதரிசி, பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துக் கொண்டு செல்லப்பட்டவன். மெசொப்பொத்தாமியாவில் நாடுகடத்தப்பட்டவர்களுக்குக் கேபார் ஆற்றண்டையில் தீர்க்கதரிசனம் உரைத்தவன்; இவனே எசேக்கியேல் தீர்க்கதரிசன நூலின் ஆசிரியன் (எசே. 1:3; 24:24).

எதுத்தூன் (“தொழுகையின் பாடற்குழு”). **1.** மூன்று தலைமைப் பாடகர்களில் ஒருவன் (1 நாளா. 9:16: 25:1–6; நெகே. 11:17); இவன் ஏதான் என்றும் அழைக்கப்பட்டான் (1 நாளா. 6:44; 15:17,19). **2.** ஓபேத் ஏதோமின் தகப்பன் (1 நாளா. 16:38). இவனும் எண். **1** –இல் சொல்லப்பட்டுள்ளவனும் ஒரே ஆள் என்று சிலர் கருதுகிறார்கள்.

எத்தியோப்பியா (கூஷ்?) (“எரிந்த முகம்”), நைல் ஆறு உற்பத்தியாகும் இடத்தின் அருகில் அமைந்திருந்த நாடு (சங். 68:31; ஏசாயா 18:1).

தற்காலத்தில் எத்தியோப்பியா என்று அழைக்கப் படும் நாடும் இதுவும் ஒன்றல்ல.

எத்திரோ (“ஒப்புயர்வற்ற”), மோசேயின் மாமன். அதிக நேரம் செலவிட வேண்டியதா யிருந்த நியாயந்தீர்க்கும் அதிகாரத்தைப் பிறருக் குப் பங்கிட்டு அளிக்கும்படி மோசேயிடம் ஆலோ சனை தந்தவன் (யாத். 3:1; 4:18; 18:1–12). இவன் ரெகுவேல் என்று யாத்திராகமம் 2:18; எண்ணா கமம் 10:29 – ஆகிய இடங்களில் குறிப்பிடப்பட் டுள்ளான்.

எந்தோர் (“குடியிருப்பின் நீரூற்று”), மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த ஊர். இங்குதான் சவுல் தன்னுடைய எதிர்காலத்தைக் குறித்து ஒரு மந்திர வாதியிடம் ஆலோசனை கேட்டான் (யோசுவா 17:11). எர்மோன் சிறு மலையின் வடகிழக்குத் தொடரில் தற்போது அமைந்திருக்கும் இந்தூர் என்னும் ஊர் இதே இடமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இது நாசரேத்திலிருந்து தென் கிழக்கே 10 கி. மீ (6 மைல்) தொலைவில் இருக் கிறது.

எபூஸ் (“மேலாளர்”), எருசலேமின் மறுபெயர் (நியா. 19:10,11).

எபெனேசர் (“உதவிசெய்கிற கல்”). **1.** இஸ்ர வேலர் பெலிஸ்தியரால் தோற்கடிக்கப்பட்ட இடம் (1 சாமு. 4:1–22). இது சாரோனுக்கு வடக்கே ஆப்பெக்கிற்கு அருகில் இருந்தது. **2.** பெலிஸ்தர் மேல் பெற்ற வெற்றியைக் கொண்டாடும்படி சாமு வேலால் நிறுத்தப்பட்ட கல்லின்பெயர் (1 சாமு. 7:12). பெரும்பாலும் அந்தக் கல்லிற்கு எண் **1** – இல் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தின் பெயர் சூட்டப் பட்டது எனலாம், ஏனெனில் முதலில் அடைந்த தோல்வி இங்கு வெற்றியாக மாறியது.

எபேசு (“விரும்பத்தக்க”), ஆசியா மைனரில், மிலேத்தாவுக்கும் சிமிர்னாவுக்கும் இடையே அமைந்திருந்த முக்கியமான வர்த்தக மையம் (அப். 19:1).

எப்பாப்பிரா (எப்பாப்பிராதீத்து என்னும் பெய ரின் சுருக்கம் – “இனிய”), பவுலோடு இணைந்து ஊழியம் செய்தவனும், கொலோசே பட்டணத்தில் கிறிஸ்தவத் திருப்பணி புரிந்தவனுமாவான் (கொலோ. 1:7; 4:12; பிலே. 23).

எப்பாப்பிராதீத்து (“இனிய”), பிலிப்புப் பட்ட ணத்தைச் சேர்ந்த கிறிஸ்தவன், கடின உழைப் பின் காரணமாக இவனுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது (பிலி. 2:25; 4:18).

எப்பிராயீம் (“இருமடங்கு கனிதருகிற”), ஆஸ்நாத்திடம் யோசேப்புக்குப் பிறந்த இரண்டா வது மகன். எப்பிராயீம் யோசேப்பின் இரண்டு குமாரரில் இளையவனாக இருந்தபோதிலும், மூத்த மகனுக்குரிய ஆசிர்வாதத்தைப் பெற்றான். இஸ்ர வேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றின் மூதாதை (ஆதி. 41:52; 46:20; 48; 50:23).

எப்பெரோன் (“வலிமை மிக்க”), ஏத்தியனா கிய இவனிடத்திலிருந்து ஒரு குகையோடுகூடிய நிலத்தை ஆபிரகாம் வாங்கினான். அந்த இடத் தில் சாராளுடைய உடலை அடக்கம் செய்தான் (ஆதி. 23:8,10,13,14; 49:30).

எப்ராத் (“செழுமை”), காலேபின் இரண்டா வது மனைவி (1 நாளா. 4:4).

எப்ரோன் (“நட்பு”). **1.** யூதா மலைப்பகுதியில் இருந்த ஒரு பட்டணம். எருசலேமிலிருந்து தெற்கே 32 கி. மு (20 மைல்) தொலைவில் இருந்தது (ஆதி. 13:18; எண். 13:22). **2.** ஆசேர் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பட்டணம், பல இடங்களில் இது அப்தோன் என்று அழைக்கப் பட்டுள்ளது (யோசுவா 21:30).

எரஸ்து (“அன்புக்குரிய”). **1.** பவுல் ஆசியா வில் தங்கியபோது, தீமோத்தேயுவுடன் மக்கெ தோனியாவுக்கு அனுப்பப்பட்ட கிறிஸ்தவன் (அப். 19:22). **2.** ரோமாபுரிக்கு வாழ்த்துக்களை அனுப் பிய கொரிந்துபட்டணத்தைச் சேர்ந்த முக்கிய மான மனிதன் (ரோமர் 16:23). **3.** கொரிந்து பட்ட ணத்திலேயே தங்கியிருந்த ஒருவன் (2 தீமோ. 4:20). ஒருவேளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள எல்லோரும் அல்லது ஏதேனும் இருவர் ஒரே ஆளாக இருக்கலாம்.

எரிகோ (“அவனுடைய இனிமையான வாசனை”), கானான் நாட்டில் இருந்த அரண்

சூழ்ந்த பட்டணம். சாவுக்கடலின் வடமுனையிலி
ருந்து 8 கி. மீ (5 மைல்) தொலைவில், யோர்தான்
ஆற்றிலிருந்து மேற்கே 27 கி. மீ (17 மைல்)
தொலைவில் இருக்கும் நகரம் (எண். 22:1; உபா.
32:49). உலகத்திலேயே தொடர்ந்து மனிதர்கள்
வாழும் மிகப் பழமையான நகரம் இதுதான்.

எருசலேம் (“சமாதானத்தை உரிமையாகப்
பெற்றிருத்தல்”), யூதா என்னும் தெற்கு நாட்டின்
தலைநகரம், மத்திய தரைக்கடலிலிருந்து 48 கி.
மீ (30 மைல்) தொலைவில், யோர்தான் ஆற்றுக்
குக் கிழக்கே 29 கி. மீ (18 மைல்) தொலைவில்
அமைந்துள்ள நகரம் (யோசுவா 10:1; 2 சாமு. 5:5).

எருப்பாசேத் (“சிலையோடு போரிடுகிற
வன்”), யெருபாகாலுக்கு (பாகால்) என்னும்
பெயரை உச்சரிப்பதைத் தவிர்க்க நினைத்தவர்
கள் கிதியோனுக்குக் கொடுத்த பெயர் (2 சாமு.
11:21).

எரேமியா (“யெகோவா உயர்ந்தவர்”). **1.** லிப்னா
ஊரானாகிய இவனுடைய மகளை யோசியா திரு
மணம் செய்தான் (2 இராஜா. 23:31; எரே. 52:1).
2. மனாசே கோத்திரத்தில் ஒரு குடும்பத்தின்
தலைவன் (1 நாளா. 5:24). **3.** சிக்லாகில் தாவீ
தோடு சேர்ந்து கொண்டவன் (1 நாளா. 12:4).
4. சிக்லாகில் தாவீதோடு சேர்ந்துகொண்ட காத்
ஊரைச் சேர்ந்த ஒருவன் (1 நாளா. 12:10). **5.** சிக்
லாகில் தாவீதோடு சேர்ந்துகொண்ட இன்
னொருவன் (1 நாளா. 12:13). **6.** சிறையிருப்புக்குப்
பிறகு தேவனோடு செய்துகொண்ட உடன்படிக்
கையில் முத்திரையிட்ட ஓர் ஆசாரியன் (நெகே.
10:2; 12:1,12). **7.** யோனதாபின் வழித்தோன்றல்
(எரே. 35:3). **8.** யூதாவின் கடைசி ஐந்து அரசர்
களின் காலத்தில் தனது ஊழியத்தைச் செய்த
தீர்க்கதரிசி. இவன் தனது நாட்டின் கொள்கை
களையும் சிலை வணக்க முறையையும் கடிந்து
ரைத்தான் (எரே. 1;20;26;36அதி).

எரோகாம் (“அன்புகூரப்பட்ட”). **1.** சாமு
வேலின் பாட்டனாகிய லேவியன் (1 சாமு. 1:1;
1 நாளா. 6:27). **2.** பென்யமீனின் வழித்தோன்றல்
(1 நாளா. 9:8). **3.** பென்யமீன் கோத்திரத்துக்
குடும் பம் ஒன்றின் தலைவன் (1 நாளா. 8:27). **4.**
சிறையிருப்புக்குப் பிறகு எருசலேமில் வாழ்ந்த
ஒருவனுடைய தகப்பனாகிய ஆசாரியன் (1 நாளா.
9:12; நெகே. 11:12). **5.** இருவருடைய தகப்பனாகிய
இவன் சிக்லாகிலே தாவீதோடு சேர்ந்துகொண்
டான் (1 நாளா. 12:7). **6.** தாண் கோத்திரத்துத்
தலைவனாகிய அசாரியேலின் தகப்பன் (1 நாளா.
27:22). **7.** யோவாசை யூதாவின் அரசனாக்கு
வதற்கு யோய்தாவுக்கு உதவி செய்த ஒருவனது
தகப்பன் (2 நாளா. 23:1).

எர்மோன் (“அழிவுக்கென்று நியமிக்கப்பட்
டது”), லீபனோன் மலைத்தொடரின் எதிர்ப்புறத்
தில் அமைந்திருந்த மிக உயரமான மலை, பாலஸ்
தீனத்தின் வடகிழக்கு எல்லையாகக் குறிக்கப்
பட்டிருந்தது (உபா. 3:8; யோசுவா 11:16; 1 நாளா.
5:23).

எலிகூ (“தேவன்தாமே”). **1.** சிக்லாகில் தாவீ
தோடு சேர்ந்து கொண்டவன் (1 நாளா. 12:20). **2.**
தாவீதின் காலத்தில் ஆசரிப்புக் கூடாரத்தில்
சுமைசுமக்கிறவனாக இருந்தவன் (1 நாளா.
26:7). **3.** யோபுவின் “நண்பர்களில்” மிகவும்
இளையவன் (யோபு 32:2, 4–6).

எலிசபெத்து (“தேவன் ஆணையிடுபவர்;
தேவனின் ஆணை”), சகரியாவின் மனைவி,
யோவான் ஸ்நானகனின் தாய் (லூக்கா 1:5–57).

எலிசா (“தேவன் இரட்சகர்”). **1.** எலியாவின்
சீடனும் அவனுக்கு அடுத்த தீர்க்கதரிசியுமான
வன்; இவன் 55 ஆண்டுகள் தீர்க்கதரிசியாக
இருந்தான் (1 இராஜா. 19:16,17,19; 2 இராஜா. 2–
6அதி; லூக்கா 4:27). **2.** நோவாவின் பேரனாகிய
யாவானின் மூத்த மகன் (ஆதி. 10:4). சீப்புரு
அல்லது சிலிசியாவின் அருகிலுள்ள அலசியா
நாட்டில் குடியிருந்தவர்களையும் இப்பெயர்
குறிக்கக் கூடும், சிலர் இத்தாலி மற்றும்
பெலோப்பேனேசியன் நாடுகளும் இதில் அடங்
கும் என்று கருதுகிறார்கள்.

எலிசூவா – எலிஷாமா காண்க.

எலிப்பாஸ் (“தேவன் நீதிவழங்குபவர்”).
1. யோபுவின் மூன்று “நண்பர்களில்” முதன்மை
யானவன், யோபுவுடன் வாதம் செய்தவன் (யோபு

2:11; 4:1; 15:1). **2.** ஏசாவின் குமாரரில் ஒருவன் (ஆதி. 36:4, 10–12; 1 நாளா. 1:35,36).

எலிப்பேலேத் (எலிப்பெலேத்) (''தேவன் தப்புவிப்பவர்''). **1.** தாவீதின் 13 ஆண்மக்களில் கடைசி (2 சாமு. 5:16; 1 நாளா. 3:8; 14:7). **2.** தாவீதின் இன்னொரு மகன் (1 நாளா. 3:6); இவன் எலிப்பெலேத் என்று 1 நாளா. 14:5 –இல் குறிப் பிடப்பட்டுள்ளான். **3.** தாவீதின் பராக்கிரமசாலி களில் ஒருவன் (2 சாமு. 23:34).

எலிமா (''மாயவித்தைக்காரன்''), பாப்போ பட்டணத்தில் சவுலையும் பர்னபாவையும் எதிர்த் தவன் (அப். 13:8). இவன் பர்யேசு என்றும் அழைக் கப்பட்டான்.

எலிமெலேக்கு (''என் தேவன் அரசர்''), நகோமியின் கணவர், ரூத்தின் கணவனுடைய தகப்பன். இவன் மோவாபில் இறந்து போனான் (ரூத் 1:2,3; 2:1,3; 4:3,9).

எலியா (''யெகோவா என் தேவன்''). **1.** தேவ னுடைய தீர்க்கதரிசிகளில் பெரியவனாக மதிக் கப்பட்டவர்களில் ஒருவன், சிலைவணக்கத்தை மிகவும் துணிவுடன் எதிர்த்தவன். இவன் அக் கினி ரதத்தால் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டான் (1 இராஜா. 17:1–2 இராஜா. 2:11; மத். 17:3). **2.** பென்யமீன் கோத்திரத் தலைவர்களில் ஒருவன் (1 நாளா. 8:27). **3.** நாடு கடத்தப்பட்டி ருந்தபோது புறவினப் பெண்ணை மணந்தவன் (எஸ்றா 10:21).

எலியாக்கீம் (''தேவன் நிறுவுகிறார்''). **1.** எசேக்கியாவின் வீட்டு விசாரணைக்காரனா கிய செப்னாவுக்கு அடுத்து அந்தப் பதவியை வகித்தவன் (2 இராஜா. 18:18, 26; ஏசாயா 22:20). **2.** யோயாக்கீம் என்னும் அரசனின் இயற்பெயர் இதுவே.

எலியேசர் (''தேவன் உதவிபுரிகிறவர்''). **1.** ஆபிரகாமின் தலைமை வேலைக்காரன் (ஆதி. 15:2). **2.** மோசேக்கும் சிப்போராளுக்கும் பிறந்த இரண்டாவது மகன் (யாத். 18:4; 1 நாளா. 23:15, 17). **3.** பென்யமீனின் வழியில் தோன்றியவன் (1 நாளா. 7:8). **4.** உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவர உதவிபுரிந்த ஓர் ஆசாரியன் (1 நாளா. 15:24). **5.** தாவீதின் காலத் தில் வாழ்ந்த ரூபன் கோத்திரத்துப் பிரபுக்களில் ஒருவன் (1 நாளா. 27:16). **6.** யோசபாத்தைக் கடிந்துகொண்ட ஒரு தீர்க்கதரிசி (2 நாளா. 20:37). **7.** எருசலேமுக்குத் திரும்பிச் செல்லும்படி மற்றவர்களைத் தூண்டிய ஒரு தலைவன் (எஸ்றா 8:16).

எலிஷாமா (''தேவன் செவிமடுக்கிறவர்''). **1.** யோசுவாவின் பாட்டன் (எண். 1:10; 2:18; 1 நாளா. 7:26). **2.** தாவீது அரசனின் ஆண்மக் களில் ஒருவன் (2 சாமு. 5:16; 1 நாளா. 3:8). **3.** தாவீதின் இன்னொரு மகன் (1 நாளா. 3:6). இவன் எலிசூவா என்று 1 நாளாகமம் 14:5 –இல் குறிப்பிடப்பட்டுள்ளான். **4.** யூதாவின் வழிவந்த வன் (1 நாளா. 2:41). **5.** இராஜ வம்சத்தில் பிறந்த வனும் கெதலியாவின் பாட்டனும் ஆவான் (எரே. 41:1; 2 இராஜா. 25:25). **6.** யோயாக்கீமின் எழுத் தன் அல்லது காரியதரிசி (எரே. 36:12,20,21). **7.** நியாயப்பிரமாணத்தைக் கற்பிக்கும்படி யோச பாத்தினால் அனுப்பப்பட்டவன் (2 நாளா. 17:8).

எலெயாசார் (''தேவன் உதவிபுரிபவர்''). **1.** ஆரோனின் மூன்றாவது குமாரனும், அவனுக்கு அடுத்த பிரதான ஆசாரியனுமானவன் (யாத். 6:23; எண். 3:32; 20:28). **2.** உடன்படிக்கைப் பெட்டியைக் காக்கும்படி பரிசுத்தப்படுத்தப்பட்ட வன் (1 சாமு. 7:1). **3.** தாவீதின் பராக்கிரசாலி களில் ஒருவன் (2 சாமு. 23:9; 1 நாளா. 11:12). **4.** ஆண் மக்கள் இல்லாதவன், மெராரியின் வழிவந்தவன் (1 நாளா. 23:21,22; 24:28). **5.** எஸ்றா எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது அவனுடன் வந்த ஓர் ஆசாரியன் (எஸ்றா 8:33). **6.** எருசலேம் மதிற்சுவரின் பிரதிஷ்டையை நடத்த உதவி புரிந்தவன் (நெகே. 12:42). ஒருவேளை (5) –இல் குறிப்பிடப்பட்டுள்ளவனும் இவனும் ஒரே ஆளாக இருக்கலாம். **7.** இயேசுவின் மூதாதை யரில் ஒருவன் (மத். 1:15).

எல்க்கானா (எல்க்கோனா) (''தேவன் சொந்த மாய்ப் பெற்றிருக்கிறார்''). **1.** கோராகின் பேரன் (யாத். 6:24; 1 நாளா. 6:23). **2.** சாமுவேலின் தகப் பனும் (1) –இல் குறிப்பிடப்பட்டிருப்பவனின் வழித் தோன்றலுமாவான் (1 சாமு. 1:1–23; 2:11,20). **3.**

லேவியின் வழித்தோன்றல் (1 நாளா. 6:25,36). **4.** லேவியின் வழித்தோன்றல் (1 நாளா. 6:26, 35); ஒருவேளை (**3**) –இல் சொல்லப்பட்டவனாக இருக்கலாம். **5.** பெரகியாவின் மூதாதையரில் லேவி கோத்திரத்தானாகிய ஒருவன் (1 நாளா. 9:16); **6.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்துகொண்டவன் (1 நாளா. 12:6). **7.** உடன்படிக்கைப் பெட்டியின் வாசல் காவல் காக்கிறவன் (1 நாளா. 15:23). ஒருவேளை (**6**) –ல் சொல்லப்பட்டிருப்பவனாக இருக்கலாம். **8.** ஆசாப் மன்னனின் அவையில் ஓர் அதிகாரி (2 நாளா. 28:7).

எல்தாத் (“தேவன் ஒரு நண்பர்”), மோசேயின் தீர்க்கதரிசன வல்லமையைப் பெற்ற இரண்டு மூப்பர்களில் ஒருவன் (எண். 11:26,27).

என்கேதி (“வெள்ளாட்டின் நீரூற்று”), யூதா கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட ஊர், இது சாவுக் கடலின் மேற்குக் கரையில் அமைந்திருந்தது. முதலில் இது ஆசோன் தாமார் என்று அழைக்கப் பட்டு வந்தது (2 நாளா. 20:2; யோசுவா 15:62).

எஸ்தர் (“விண்மீன்; இஸ்தார் என்னும் பெண் தெய்வம்”), அத்சாள் என்பவளுடைய பெர்சியப் பெயர், அகாஸ்வேருவுக்கு மனைவியாகத் தெரிந்து கொள்ளப்பட்டவள். எஸ்தர் என்னும் நூல் இவளுடைய கதையைக் கூறுகிறது (எஸ்தர் 2:7).

எஸ்றா (“உதவி”). **1.** சிறையிருப்பிலிருந்து மீண்டு வந்த ஆசாரிய வகுப்புகளில் ஒன்றின் தலைவன் (நெகே. 12:1). இவனது முழுப்பெயர் அசரியா, நெகேமியா 10:2 –இல் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளான். **2.** காலேபின் மூலமாக யூதாவின் வம்சத்தில் தோன்றியவன் (1 நாளா. 4:17). **3.** பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவின் வழி வந்த ஆசாரியனும், புகழ்வாய்ந்த வேதபாரகனுமானவன் (எஸ்றா 7:1–12; 10:1; நெகே. 8:1–13). அசரியா என்னும் பெயரைக் காண்க.

ஏகூத் (“வலிமையுள்ள”). **1.** மோவாபின் அரசனாகிய எக்லோனின் பிடியிலிருந்து இஸ்ரவேலரை விடுவித்த ஒரு நியாயாதிபதி (நியா. 3:15–30). **2.** பென்யமீனின் பேரனுடைய மகன் (1 நாளா. 7:10; 8:5). பெரும்பாலும் இவன் எண் **1** –இல் குறிப்பிடப்பட்டவனாக இருக்கலாம்.

ஏசா (“அடர்த்தியான முடியுடைய”), ஈசாக்கின் முதல் மகன், இரட்டையர்களாகப் பிறந்தவர்களில் இவனோடு சேர்ந்து பிறந்த மற்றொருவன் யாக்கோபு. ஏதோம் என்னும் இனத்தாரின் மூதாதை (ஆதி. 25:25). இவன் தனக்குச் சொந்தமான முதல் மகன் உரிமையை யாக்கோபுக்கு விற்றுவிட்டான் (ஆதி. 25:26–34; 27:36).

ஏசாயா (“யெகோவாவின் இரட்சிப்பு”), “தீர்க்கதரிசிகளின் இளவரசன்” என்று அழைக்கப்பட்டவன்; இவனுடைய பணி 60 –ஆண்டுகள் தொடர்ந்தது. இவன் கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்தான் (ஏசா. 1:1; 7:14; 9:6; 52:12–53).

ஏதேன் (“இன்பம்”). **1.** மனிதனுக்கு முதல் குடியிருப்பாக தேவன் உண்டுபண்ணின தோட்டம் (ஆதி. 2:15); இது எந்த இடத்தில் இருந்தது என்பது சரியாகத் தெரியவில்லை. டைகிரிஸ் ஆற்றிற்கும் ஐபிராத்து ஆற்றிற்கும் நடுவே அமைந்திருந்தது எனலாம். பெர்சியா வளைகுடாவின் மேற்புறத்தில் இந்த இடம் இருந்திருக்க வேண்டும். **2.** மெசொப்பொத்தாமியாவில் ஒரு பகுதி (2 இராஜா. 19:12; ஏசாயா 37:12).

ஏதோம் (“சிவப்பு”), ஏசாவுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்; ஈசாக்கின் மூத்த மகனாகிய இவன் தன்னுடைய முதல் மகனுக்குரிய உரிமையைச் சிவப்பு நிறக் கூழுக்காக விற்றுப் போட்டதால் இப்பெயர் பெற்றான் (ஆதி. 25:30). ஏசா; ஒபேத் ஏதோம் ஆகிய பெயர்களைக் காண்க.

ஏதோம் (“சிவப்பு”), மோவாபுக்குத் தெற்கே இருக்கும் மலைப்பகுதி. இது சாவுக்கடல் தொடங்கி அகபா வளைகுடா வரை நீண்டிருந்தது. ஏசாவின் வழிவந்தவர்கள், அதாவது ஏதோமியர் குடியிருந்த நாடு (ஆதி. 32:3; யாத். 15:15).

ஏத்தான் (“பண்டைய”). **1.** சாலொமோனின் நாட்களில் இருந்த அறிஞர்களில் ஒருவன் (1 இராஜா. 4:31; சங்கீதம் 89 –இன் தலைப்பு). **2.** யூதா வழித்தோன்றல் (1 நாளா. 2:6,8). இவனும் எண் 1 –இல் சொல்லப்பட்டுள்ளவனும் ஒரே ஆளாக இருக்கலாம். **3.** எதுத்தூன் என்னும்

பெயரைக் காண்க. **4.** லேவி கோத்திரத்தில் தோன்றியவன் (1 நாளா. 6:42).

ஏத்பாகால் (“பாகாலுடைய மனிதன்; பாகாலோடு இருப்பவன்”), சீதோனின் அரசனும், ஆகாபின் மனைவியாகிய யேசபேலின் தகப்பன் (1 இராஜா. 16:31).

ஏபேர் (“தோழன்”). **1.** ஆசேரின் வழித்தோன்றல் (ஆதி. 46:17; 1 நாளா. 7:31,32). **2.** சிசெராவைக் கொலை செய்த யாகேலின் கணவன் (நியா. 4:11,17,21; 5:24). **3.** யூதா கோத்திரத்தின் ஒரு கிளையின் தலைவன் (1 நாளா. 4:18). **4.** பென்யமீனின் வழித்தோன்றல் (1 நாளா. 8:17). **5.** ஆபிரகாமின் முற்பிதாக்களில் சாலாவின் குமாரன் (ஆதி. 10:24; லூக்கா 3:35).

ஏபோத் (“அசரீரி”), மனாசே கோத்திரத்துப் பிரபு ஒருவனின் தகப்பன் (எண். 34:23).

ஏமான் (“உண்மையுள்ள”). **1.** வாய்ப்பாட்டு, கீத வாத்தியம் ஆகியவற்றின் மூலமாக இசைக் குழுவினராகச் செயல்புரிவோரின் தலைவனாகத் தாவீதால் நியமிக்கப்பட்ட பாடகனும் தீர்க்கதரிசியுமானவன் (1 நாளா. 6:33; 15:17; 2 நாளா. 5:12; 35:15). **2.** ஒரு ஞானி, இவனுடன் சாலொமோன் ஒப்பிடப்பட்டுள்ளான் (1 இராஜா. 4:31; 1 நாளா. 2:6). இவன் தியான சங்கீதத்தை இயற்றினான் (சங். 88 – தலைப்பு).

ஏயேல் (யெகியேல்) (“தேவன் பறித்துக் கொள்கிறார்”). **1.** ரூபன் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 5:7). **2.** சவுலின் ஒரு மூதாதை (1 நாளா. 9:35). **3.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (1 நாளா. 11:44). **4.** பாடகனும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாயிற்காப்போனும் ஆவான் (1 நாளா. 15:18,21; 16:5). **5.** ஆசாபின் வழித்தோன்றல் (2 நாளா. 20:14). **6.** உசியாவின் காலத்தில் இருந்த ஒரு வேதபாரகன் அல்லது சம்பிரதி (2 நாளா. 26:11). **7.** எசேக்கியாவின் காலத்தில் வாழ்ந்த ஒரு லேவியன் (2 நாளா. 29:13). **8.** யோசியாவின் காலத்தில் இருந்த ஒரு தலைமை லேவியன் (2 நாளா. 35:9). **9.** எஸ்றாவுடன் எருசலேமுக்குத் திரும்பிவந்தவன் (எஸ்றா 8:13). **10.** சிறையிருப்புக் காலத்தில் அந்நியப் பெண்ணை மணந்தவன் (எஸ்றா 10:43).

ஏரோதியாள் (“வீரச்செயல்புரியும் தன்மையுள்ள”), மகா ஏரோதின் பேத்தி, அந்திப்பாவின் மனைவி, யோவான் ஸ்நானகன் கொலைக்குக் காரணமானவள் (மத். 14:3–9; லூக்கா 3:19).

ஏரோது (“வீரச்செயல்புரியும் தன்மையுள்ள”). **1.** மகா ஏரோது, கிறிஸ்துவின் பிறப்பின்போது யூதாவின் அரசனாக இருந்தவன், சூழ்ச்சி செய்தவன். தனது அரசை நிலைநிறுத்த வேண்டுமென்று கருதி பெத்லகேம் ஊர்க் குழந்தைகளைக் கொன்றவன், அதன் மூலமாக மேசியாவையும் கொலை செய்துவிடலாம் என்று எண்ணியவன் (மத். 2:1–22; லூக்கா 1:5). **2.** ஏரோது அந்திப்பா, முந்தினவனின் மகன், கலிலேயா பெரேயா ஆகிய பகுதிகளின் காற்பங்கு தேசாதிபதியாக இருந்தவன். இவனே யோவான் ஸ்நானகனைக் கொலை செய்தவன் (மத். 14:1–10; லூக்கா 13:31,32; 23:7–12). **3.** ஏரோது பிலிப்பு, மகா ஏரோதின் மகன், இத்துரேயாவுக்கும் திராகொனித்தி நாட்டிற்கும் அதிபதியாக இருந்தவன் (லூக்கா 3:1). **4.** ஏரோது பிலிப்பு, மகா ஏரோதின் இன்னொரு மகன், இவனுடைய மனைவியை ஏரோது அந்திப்பா கவர்ந்து சென்று விட்டான் (மத். 14:3). **5.** ஏரோது அகிரிப்பா I கலிலேயாவின் காற்பங்கு தேசாதிபதி. தனது பாட்டனாகிய மகா ஏரோதின் அரசாட்சியை இறுதியில் பெற்றவன். இவன் கிறிஸ்தவர்களை வன்மையாகத் துன்புறுத்தியவன் (அப். 12: 1–23). **6.** ஏரோது அகிரிப்பா (II), அகிரிப்பா (I) –இன் மகன், பல பகுதிகளுக்கு அரசனாக விளங்கியவன், பவுலின் பிரசங்கத்தைக் கேட்டவன் (அப். 25:13–26; 26:1–32). அர்கெலாயு, பெர்னீக்கேயாள், துருசில்லா ஆகிய பெயர்களையும் காண்க.

ஏலா (“கருவாலி மரம்”). **1.** ஏதோமின் பிரபுக்களில் ஒருவன் (ஆதி. 36:41; 1 நாளா. 1:52). **2.** சாலொமோனுடைய மணியக்காரரில் ஒருவனுடைய தகப்பன் (1 இராஜா. 4:18). **3.** இஸ்ரவேல் அரசன் பாஷாவின் மகனும், தொடர்ந்து அரசாண்டவனும் ஆவான். இவன் சிம்ரியால் கொலை செய்யப்பட்டான் (1 இராஜா. 16:6–14). **4.**

இஸ்ரவேலின் கடைசி அரசனாகிய ஓசெயாவின் தகப்பன் (2 இராஜா. 15:30; 17:1). **5.** எப்புன்னே யின் மகனாகிய காலேபின் மகன் (1 நாளா. 4:15). **6.** பென்யமீனின் வழிவந்தவன் (1 நாளா. 9:8).

ஏல்பெத்தேல் (“பெத்தேலின் தேவன்”), லூஸ் (பெத்தேல்) என்னுமிடத்தில் யாக்கோபு தரிசனம் கண்டபோது, அந்தக் காட்சிக்கு ஏல் பெத்தேல் என்று பெயரிட்டான் (ஆதி. 35:7).

ஏவாள் (“உயிர்; உயிர்கொடுக்கிற”). முதல் பெண்மணி, ஆதாமின் மனைவி (ஆதி. 30:20; 4:1; 2 நாளா. 11:3).

ஏவில் மெரொதாக் (பாபிலோன் நாட்டினன், ஆர்வில் மார்தக் – “மார்தக் என்னும் கடவுளின் மனிதன்”), யோயாக்கீனைச் சிறையிருப்பிலி ருந்து விடுதலை செய்த பாபிலோன் அரசன். அவனுடைய தகப்பனாகிய நேபுகாத்நேச்சாரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவன் (2 இராஜா. 25:27–30; எரே. 52:31).

ஏனோக்கு (“ஆசிரியர்”). **1.** காயீனின் முதல் மகன் (ஆதி. 4:17,18). **2.** யாரேதின் குமாரனும் இயேசுவின் மூதாதையும் ஆவான் (ஆதி. 5:18,19,21; 1 நாளா. 1:3; லூக்கா 3:37; எபி. 11:5).

ஏனோக்கு (“தீட்சை பெற்ற”), காயீனால் கட்டப்பட்ட நகரம் (ஆதி. 4:17).

ஏனோஸ் (“சாவுக்குட்பட்ட”), சேத்தின் குமாரனும் கிறிஸ்துவின் மூதாதையும் ஆவான் (ஆதி. 4:26; 5:6–11; 1 நாளா. 1:1; லூக்கா 3:38).

ஐத்திகு (“நல்வாய்ப்புள்ள”), துரோவா பட்ட ணத்தைச் சேர்ந்த இளைஞன், பவுலின் மூலமாக மீண்டும் உயிர்பெற்றவன் (அப். 20:6–12).

ஐபிராத்து (பொருள் தெரியவில்லை), மேற்கு ஆசியாவில், அர்மீனியா நாட்டில் உற்பத்தியாகி, டைகிரிஸ் ஆறு பெர்சியா வளைகுடாவில் கலக்கும் முன், அதில் சேரும் மிகப்பெரிய ஆறு. மெசொப்பொத்தாமியாவின் மேற்கு எல்லையாக இது அமைந்திருந்தது (ஆதி. 2:14; 15:18).

ஐபூலு (“நல்ல ஆலோசகன்”), பவுலுக்கு உண்மையாயிருந்த ஒரு ரோமக் கிறிஸ்தவன் (2 தீமோ. 4:21).

ஐனிக்கேயாள் (“நன்கு வெற்றிபெறுகிற”), தீமோத்தேயுவின் தாய், தெய்வப் பற்றுள்ளவள் (2 தீமோ. 1:5; அப். 16:1 – உடன் ஒப்பிடுக).

ஒத்னியேல் (“தேவன் வல்லமையுடையவர்”), காலேபின் தம்பியின் மகன், இவன் அந்நிய ஆட்சியிலிருந்து இஸ்ரவேலை விடுவித்தான் (நியா. 1:13; 3:8–11; 1 நாளா. 27:15).

ஒநேசிப்போரு (“ஆதாயத்தைக் கொண்டு வருகிறவன்”), பவுலின் நண்பன், உண்மையுடன் நடந்து அவ்வப்போது பவுலை இளைப்பாறப் பண்ணியவன் (2 தீமோ. 1:16; 4:19).

ஒநேசிமு (“பயனுள்ளவன்”), அடிமையாகிய இவன் பொருட்டு, பவுல் இவனுடைய முதலாளியா கிய பிலேமோனுக்கு ஒரு மடலை எழுதினான் (கொலோ. 4:9; பிலே. 10,15).

ஓபதியா (“யெகோவாவின் வேலைக் காரன்”). **1.** ஆகாபின் அரசில் ஓர் ஆளுநர் அல்லது பிரதம மந்திரி. யேசபேல் இழைத்த கொடுமையிலிருந்து தீர்க்கதரிசிகளைப் பாது காத்தவன் (1 இராஜா. 18:3–16). **2.** தாவீதின் வழித்தோன்றல் (1 நாளா. 3:21). **3.** இசக்கார் கோத்திரத்துத் தலைவன் (1 நாளா. 7:3). **4.** சவுல் அரசனின் வழித்தோன்றல் (1 நாளா. 8:38; 9:44). **5.** செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்தவன் (1 நாளா. 27:19). **6.** காத்தைச் சேர்ந்த இந்தத் தலைவன் சிக்லாகில் தாவீதோடு சேர்ந்து கொண்டான் (1 நாளா. 12:9). **7.** நியாயப்பிர மாணத்தைக் கற்பிக்கும்படி யோசபாத் நியமித்த ஒரு தலைவன் (2 நாளா. 17:7–9). **8.** தேவாலயப் பணியை மேற்பார்வை செய்த லேவியன் (2 நாளா. 34:12). **9.** எருசலேம் திரும்பிய ஒரு குடும்பத்தின் தலைவன் (எஸ்றா 8:9). **10.** நெகேமியாவுடன் சேர்ந்து உடன்படிக்கையில் முத்திரையிட்டவன் (நெகே. 10:5). **11.** தேவாலயத்தின் வாயிற்காப் போன் (நெகே. 12:25). **12.** சிறிய தீர்க்கதரிசி களில் நாலாவது, ஏதோமுக்கு எதிராகத் தீர்க்க தரிசனம் உரைத்தவன் (ஒப. 1).

ஓர்பாள் (“இளமான்; இளமையுடன் கூடிய புதியது”), நகோமியின் மருமகள் (ரூத் 1:4–14).

ஓர்னான் (“சுறுசுறுப்பான”), எபூசியனாகிய இவனிடத்திலிருந்து தாவீது பலிபீடம் கட்டுவதற்காக நிலத்தை வாங்கினான், அங்குதான் பின்னர் சாலொமோன் தேவாலயத்தைக் கட்டினான் (1 நாளா. 21:15–25). இவன் 2 சாமுவேல் 24:16 – ஆம் வசனத்தில் அர்வனா என்று குறிப்பிடப்பட்டுள்ளான்.

ஒலிவமலை (நாசமலை), கெதரோன் பள்ளத்தாக்கினாலே எருசலேமிலிருந்து பிரிக்கப்பட்டதும் அந்நகரத்தின் கிழக்கே இருக்கிறதுமான ஒரு மலைத்தொடர் (2 சாமு. 15:30; மாற்கு 11:1; அப். 1:12). 2 இராஜாக்கள் நூலில் இது நாசமலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது (2 இராஜா. 23:13).

ஓசியா (“உதவி அதாவது யெகோவா என் துணை”), இஸ்ரவேலின் ஒரு தீர்க்கதரிசி; இஸ்ரவேல் சமாரியா ஆகியவற்றின் சிலைவணக்கத்தைக் கண்டித்து உரைத்தவன் (ஓசியா 1:1,2).

ஓசெயா (ஓசியா) (“யெகோவா என் துணை அல்லது யெகோவா என் இரட்சிப்பு”) **1.** தாவீதின் நாட்களில் வாழ்ந்த எப்பிராயீம் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 27:20). **2.** இஸ்ரவேலின் கடைசி அரசன்; அசீரியாவின் அரசன் சர்கோன் என்பவனால் சிறைபிடிக்கப்பட்டான் (2 இராஜா. 15:30; 17:1,4,6; 18:1). **3.** நெகேமியாவுடன் உடன்படிக்கையில் முத்திரையிட்டவன் (நெகே. 10:23). **4.** யோசுவாவின் இயற்பெயர்.

ஓதேத் (“உதவுகிறவன்” அல்லது “சீர்ப்படுத்துகிறவன்”). **1.** தீர்க்கதரிசியாகிய அசரியாவின் தகப்பன் (2 நாளா. 15:1). **2.** சமாரியாவைச் சேர்ந்த தீர்க்கதரிசி, வடபகுதிப் படை யூதாநாட்டு அடிமைகளை விடுதலை செய்யும்படி வேண்டி இணங்கச் செய்தவன் (2 நாளா. 28:9–15).

ஓத்சேம் (“வலிமை”). **1.** தாவீதின் சகோதரன் (1 நாளா. 2:15). **2.** யூதாவைச் சேர்ந்த யெர்மெயேலின் மகன் (1 நாளா. 2:25).

ஓபா (“அன்பிற்குரிய”), மோசேயின் மாமன் அல்லது மைத்துனன் (எண். 10:29; நியா. 4:11). நியாயாதிபதிகள் 4:11 –இல் மாமன் என்னும் சொல் மைத்துனனையும் குறிக்கலாம், ஒரு வேளை இது எத்திரோவின் மறுபெயராக இருக்கலாம். இவன் யாரென்று சரியாகத் தெரியவில்லை. எத்திரோ என்னும் பெயரையும் காண்க.

ஓபேத் (“வேலைக்காரன்”). **1.** போவாஸ், ரூத் ஆகியோரின் மகன்; ஈசாயின் தகப்பன்; கிறிஸ்துவின் மூதாதை (ரூத் 4:17; மத். 1:5; லூக்கா 3:32). **2.** யூதாவின் வழித்தோன்றல் (1 நாளா. 2:37,38). **3.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (1 நாளா. 11:47). **4.** தாவீதின் காலத்து வாயிற் கோப்போனாகிய லேவியன் (1 நாளா. 26:7). **5.** யோவாஸ் என்பவனை யூதாவின் அரசனாக்குவதற்கு உதவிய அசரியாவின் தகப்பன் (2 நாளா. 23:1).

ஓபேத் ஏதோம் (“ஏதோம் என்னும் கடவுளின் வேலைக்காரன்”). **1.** மூன்று மாதம் தன்னுடைய இல்லத்தில் உடன்படிக்கைப் பெட்டியை வைத்திருந்த மனிதன் (2 சாமு. 6:10–12; 1 நாளா. 13:13,14). **2.** வாசற்காப்போனும் தலைமைப் பாடகனுமாகிய ஒரு லேவியன் (1 நாளா. 15:18,21,24; 16:5,38; 26:4,8,15). **3.** தேவாலயப் பொக்கிஷப் பாதுகாவலன் அல்லது அதிகாரி, அல்லது **2.** ஆம் எண்ணில் குறிப்பிடப்பட்ட மனிதனுடைய வழியில் தோன்றிய ஒரு குடும்பத்தின் பெயர் (2 நாளா. 25:24).

ஓப்பீர் (“கனிதரும் நிலப்பகுதி”), சாலொமோன் பொன்னைத் தோண்டியெடுத்த நிலப்பகுதி (1 இராஜா. 9:28; 1 நாளா. 29:4). இது எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை. ஜோஸபஸ் இப்பகுதி இந்தியாவாக இருக்கும் என்று கருதினார். ஆனால் சோமாலி என்னும் ஆப்பிரிக்கா கண்டத்தின் கடல்கரை நாடாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

ஓரேபு (“பாலைவனம்”), சீனாய் தீவகற்பத்திலுள்ள மலைகளின் நீண்ட தொடர். அந்த மலைகளில் சீனாய் மலையே மிக உயரமானது (யாத். 17:6); இப்பொழுது செர்பால் மலைத்தொடர் என்று அழைக்கப்படுகிறது.

ஓனான் (“ஆற்றல் மிக்க”), யூதாவின் இரண்டாவது மகன். கீழ்ப்படியாத காரணத்தால் தேவன் இவனைக் கொன்று போட்டார் (ஆதி. 38:4–10; எண். 26:19).

கதரேன் (“சுவர்கள்”), யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கே அமைந்திருந்த ஓர் ஊர். இது கலிலேயாக் கடலிலிருந்து 11 கி. மீ (7 மைல்) தொலைவில் தெற்கே இருந்தது. தெக்கப்போலிப் பட்டணங்களில் இதுவும் ஒன்று. கெர்கெசேனர் என்னும் பெயரைக் காண்க.

கப்பர்நகூம் (நாகூமின் சிற்றூர்”). கலிலேயாக் கடலின் வடமேற்குக் கரையிலுள்ள ஓர் ஊர், இயேசுவின் ஊழியத்தில் மிக முக்கியமான நகரம் (மத். 4:13; லூக்கா 4:31).

கமாலியேல் (“தேவன் தரும் பரிசு அல்லது திரும்பத் தருவது”). **1.** மனாசே கோத்திரத்துப் பிரபுக்களில் ஒருவன் (எண். 1:10; 2:20). **2.** கனம் பொருந்திய நியாயசாஸ்திரி; அப்போஸ்தலர்களை விடுதலை செய்வதற்கு மற்ற யூதர்களுக்கு அறிவுரை வழங்கி இணங்கச் செய்தவன் (அப். 5:33–40; 22:3).

கர்கேமிஸ் (“கேமோஷின் அரணான பட்டணம்”), ஐபிராத்து நதியின் மேற்கே இருந்த ஊர்; ஏத்தியரின் கிழக்கத்திய தலைநகரம் (2 நாளா. 35:20; ஏசாயா 10:9; எரே. 46:2).

கர்மேல் (“பழத்தோட்டம்”). **1.** 24 கி. மீ (15 மைல்) நீண்ட மலைத்தொடர் பாலஸ்தீனத்தின் மையப்பகுதியின் வழியாக மத்திய தரைக்கடல் வரை ஓடும் மலைத்தொடர் (எரே. 46:18). **2.** யூதா மலைநாட்டில் எப்ரோனிலிருந்து 14 கி.மீ தொலைவில் தென்கிழக்கு திசையில் இருந்த ஓர் ஊர் (யோசுவா 15:55; 1 சாமு. 25:5), தற்கால கெர்மேல்.

கலவுதியா (“முடவன்”), ஒரு ரோமக் கிறிஸ்தவன், தீமோத்தேயுக்கு வாழ்த்துதல் அனுப்பிய வன் (2 தீமோ. 4:21).

கலிலேயா (“வட்டம்”), பாலஸ்தீனத்தில் இருந்த மிகப்பெரிய ரோம மாகாணம்; இயேசு ஊழியம் செய்த இடங்களில் முதன்மையான இடம் (லூக்கா 3:1; 23:6).

கலிலேயாக் கடல், வட பாலஸ்தீனத்தில் உள்ள மிகப் பெரிய ஏரி, யோர்தான் ஆற்றிலிருந்து நீர் இதற்குள் பாயும், இந்தக் கடலில் மீன் பிடிக்கிறவர்களாக இருந்தவர்கள் இயேசுவின் சீடர்களானார்கள் (யோவான் 6:1). கின்னரேத் கடல் என்றும் இது அழைக்கப்பட்டது; திபேரியாக் கடல், கெனேசரேத்துக் கடல் என்னும் பெயர்களையும் இது பெற்றிருந்தது. கின்னரேத் (1) கெனேசரேத் (2) ஆகிய பெயர்களைக் காண்க.

கல்தேயா (“பேய்கள்”), பாபிலோனியப் பேரரசின் தெற்குப் பகுதி (எரே. 50:10; எசே. 11:24).

கல்லியோன் (பொருள் தெரியவில்லை), அகாயா நாட்டிற்கு ரோம அதிபதியாக இருந்தவன், கொரிந்துப் பட்டணத்தில் இவனுக்கு முன் பாகவே பவுல் விசாரிக்கப்பட்டான் (அப். 18:12–17).

கல்வாரி. கொல்கொதா என்னும் தலைப்பைக் காண்க.

காசா (“வலிமை”). **1.** முக்கியமான பாலஸ்தீன நகரங்களில் தென்கோடியில் இருந்த நகரம். தற்காலத்தில் ஜாபா என்று அழைக்கப்படும் இடத்திலிருந்து தெற்கே 72 கி. மீ (44. 5 மைல்) தொலைவிலும், மத்தியதரைக் கடலிலிருந்து 4 கி. மீ (2.4 மைல்) தொலைவிலும் இருந்தது. இந்த இடத்தில்தான் சிம்சோன் துணிகரச் செயல்களைச் செய்தான் (யோசுவா 11:22; நியா. 16:1–3; 2 இராஜா. 18:8; எரே. 25:20). **2.** சீலோவுக்கு அருகிலிருந்த சிறிய சமவெளியில் அமைந்திருந்த இவ்வூர் எப்பிராயீம் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட இடமாகும் (1 நாளா. 7:28).

காதேஸ். காதேஸ் பர்னேயா என்னும் பெயரைக் காண்க; மேரிபா **2.** என்னும் பெயரையும் காண்க.

காதேஸ் பர்னேயா (“பரிசுத்தம்”), பாலஸ்தீனத்தின் தென்புறமுள்ள ஒரு பாலைவனம். இதன் தென் எல்லை பாரான் வனாந்தரமும் வடஎல்லை சீன் வனாந்தரமுமாகும். இது சீனாய் தீவகற்பத்தில் அமைந்திருந்தது (எண். 32:8; 34:4). இது காதேஸ் என்றும் அழைக்கப்பட்டது (எண். 13:26; 20:1). ஆதியாகமம் 14:7 –இல் என்மிஸ்பாத் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காத் (“நல்வளம்”). **1.** யாக்கோபின் ஏழாவது மகன், பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றின்

மூதாதை (ஆதி. 30:11; 49:19). **2.** தாவீதுக்கு அவ்வப்போது ஆலோசனை தந்த தீர்க்கதரிசி (1 சாமு. 22:5; 1 நாளா. 21:9–19).

காத் (“அதிர்ஷ்டம், நல்வளம்”), யோர்தான் ஆற்றின் கிழக்கே, காத் கோத்திரத்தார் தங்கிய நிலப்பகுதி (1 சாமு. 13:7; யோசுவா 13:24).

காத் (“திராட்சைப் பழம் பிழியும் ஆலை”), பாலஸ்தீனத்தின் முக்கியமாக ஐந்து நகரங்களில் ஒன்று. இராட்சதன் கோலியாத்தின் சொந்த ஊர் (1 சாமு. 17:4; 2 இராஜா. 12:17; 2 நாளா. 26:6). இது எந்த இடத்தில் இருந்தது என்று சரியாகத் தெரியவில்லை.

காம், நோவாவின் கடைசி மகன், இவனது பொல்லாத செயலால் இவனுடைய மகன் கானான் சபிக்கப்பட்டான் (ஆதி. 5:32; 9:22–27).

காம். 1. இப்பெயர் பாடல்களில் மட்டும் எகிப்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (சங். 78:51). **2.** பாசான் நாட்டில் அஸ்தரோத் கர்னாயீமுக்கும் மோவாப் நாட்டிற்கும் இடையே இருந்த இடம் (ஆதி. 14:5). அஜ்லூன் மாவட்டத்தில் இர்பித்துக்கு 5 மைல் தொலைவிலுள்ள, தற்போது காம் என்று அழைக்கப்படும் இடமும் இதுவும் ஒன்றாக இருக்கக்கூடும்.

காயீன் (“தேடிப்பெறுதல்; ஈட்டி”), தன்னுடைய சகோதரனாகிய ஆபேலைக் கொன்றவன், ஆதாமின் முதல் மகன் (ஆதி. 4:1–25).

காயு (“பிரபு”). **1.** யோவானின் மூன்றாவது மடல் இவனுக்கு எழுதப்பட்டது (3 யோவான் 1). **2.** மக்கெதோனியாவைச் சேர்ந்தவனும் பவுலின் உடன் ஊழியனுமாவான் (அப். 19:29). **3.** தெர்பையைச் சேர்ந்த இவன் ஆசியா வரை பவுலோடு சென்றவன் (அப். 20:4). **4.** ரோமருக்குப் பவுல் தனது மடலை எழுதியபோது, இவனுடைய வீட்டில்தான் பவுல் விருந்தினனாகத் தங்கியிருந்தான் (ரோமர் 16:23). **5.** கொரிந்துப்பட்டணத்தில் மனந்திரும்பிய இவனுக்குப் பவுல் ஞானஸ்நானம் கொடுத்தான் (1 கொரி. 1:14,15). இவனும் எண். 4 –இல் குறிப்பிடப்பட்டுள்ளவனும் ஒருவன் என்று சிலர் கருதுகிறார்கள்.

காய்பா (“மந்தநிலை”). இயேசுவை விசாரணை செய்தபோது அதில் முக்கிய பங்கு வகித்த பிரதான ஆசாரியன் (மத். 26:3; 57–68; யோவான் 11:49).

கானா (“நாணல்”), கலிலேயாவின் அருகில் இருந்த சிற்றூர், இங்கு இயேசு தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றிய அற்புதத்தைச் செய்தார். நாசரேத்திலிருந்து இது 16 கி. மீ (10 மைல்) தொலைவில் இருக்கிறது (யோவான் 2:1,11; 4:46).

கானான் (“கருஞ்சிவப்பு”) பாலஸ்தீனத்தின் இயற்பெயர், ஆபிரகாமுக்கும் அவனுடைய வழித்தோன்றல்களுக்கும் வாக்குறுதி செய்யப்பட்ட நாடு (ஆதி. 11:31; யாத். 6:4).

கானான் (“தாழ்வான”), நோவாவின் பேரனும், காமின் மகனுமாவான் (ஆதி. 10:6–19; 1 நாளா. 1:8,13). பெரும்பாலும் கானான் நாட்டில் வாழ்ந்து வந்தவர்களை இச்சொல் குறிக்கக் கூடும்.

கானான் (“கருஞ்சிவப்பு”) பாலஸ்தீனத்தின் இயற்பெயர், ஆபிரகாமுக்கும் அவனுடைய வழித்தோன்றல்களுக்கும் வாக்குறுதி செய்யப்பட்ட நாடு (ஆதி. 11:31; யாத். 6:4).

கிதியோன் (“பெரிய போர்வீரன்”), மீதியானியரிடத்திலிருந்து இஸ்ரவேலரை மீட்ட புகழ் வாய்ந்த நியாயாதிபதி (நியா. 6–8 அதி); இவனுக்கு யெருபாபேல் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது.

கிபியா (“குன்று”). **1.** எப்ரோனின் வடமேற்கே ஏறத்தாழ 16 கி. மீ (10 மைல்) தொலைவில் இருந்த யூதேயாவைச் சேர்ந்த ஊர் (யோசுவா 15:57). **2.** எருசலேமுக்கும் ராமாவுக்கும் நடுவே பாதித்தொலைவில் இருந்த ஊர்; சவுலின் சொந்த ஊரும், அவனுடைய அரசாட்சியின் தலைநகருமாகும் (1 சாமு. 10:26; 15:34). யோசுவா 18:28 –இல் இவ்வூர் கீபெயாத் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. **3.** எப்பிராயீம் எல்லைக்குள் இருந்த ஓர் ஊர் அல்லது குன்று (யோசுவா 24:33); பெரும்பாலும் இது திம்னா (1) –க்கு அருகில் இருந்திருக்க வேண்டும். **4.** கீரியாத் யாரீமிலே இருந்த

ஒரு குன்று, அங்குதான் அபினதாபின் வீடு இருந்தது (2 சாமு. 6:3,4).

கிபியோன் (“குன்றின் உயரம்”), ஏத்தியரின் முதன்மையான நகரம், பென்யமீன் கோத்திரத் தாருக்கு ஒதுக்கப்பட்ட இடம். இது எருசலே முக்கு வடமேற்கு திசையில் 9 கி. மீ (5.5 மைல்) தொலைவில் இருந்தது (யோசுவா 11:19; 2 சாமு. 20:1–9). இதனுடைய தற்போதைய பெயர் எல்ஜிப் என்பதாகும்.

கிரேக்கு (பொருள் நிச்சயமற்றது), ஐரோப்பா வில் தென்பகுதியில் அமைந்துள்ள ஒரு நாடு. இது இத்தாலியாவுக்கும் ஆசியா மைனருக்கும் இடையில் உள்ளது. பண்டைய வரலாற்றில் இது மிகவும் வலிமை மிக்க பேரரசராகத் திகழ்ந்தது (தானி. 8:21; சக. 9:13; அப். 20:2).

கிரேத்தா (“இம்மை வாழ்வுக்குரிய”), கிரேக்க நாட்டின் தென் கிழக்கில் உள்ள பெரிய தீவு (தீத்து 1:5).

கிலவுதியுராயன் (“முடவனாகிய அரசன்”), யூதர்களை ரோமாபுரியிலிருந்து வெளியேற்றிய ரோமப் பேரரசன் (அப். 18:2).

கிலவுதியு லீசியா (“முடவனாகிய சிதைவு”), எருசலேம் நகரில் முதன்மைத் தளபதியாக இருந்த ரோம அதிகாரி (அப். 23:26).

கிலெயோப்பா (“புகழ்பெற்ற தகப்பன்”), எம்மாவுக்குச் செல்லும் வழியில் இயேசு சந்தித்த சீடர்களில் ஒருவன் (லூக். 24:18).

கிலேமெந்து (“கனிவான”), பிலிப்பு நகரத் தில் பவுலுடன் ஊழியம் செய்தவன் (பிலி. 4:3).

கில்கால் (“உருண்டோடுகிற”). **1.** யோர்தான் ஆற்றைக் கடந்து கானான் நாட்டிற்குள் புகுந்த இஸ்ரவேலர் பாளயமிறங்கின முதல் இடம், பெரும்பாலும் இது எரிகோவுக்கு அருகில் இருந் திருக்க வேண்டும் (யோசுவா 4:19–24). **2.** பெத்தேலுக்கு வடகிழக்கே 11 கி.மீ (7 மைல்) தொலைவில் இருந்த ஒரு சிற்றூர், இங்கிருந்து தான் எலியாவும் எலிசாவும் தங்களுடைய பய ணத்தைத் தொடங்கினார்கள் (2 இராஜா. 2:1–4; 4:38); தற்போதைய பெயர் ஜில்ஜிலியா.

கிறிஸ்து. இயேசு கிறிஸ்து என்ற தலைப்பைக் காண்க.

கிறிஸ்பு (“சுருளான”), கொரிந்துப் பட்ட ணத்து ஜெபாலயத்தின் தலைவனாயிருந்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன் (அப். 18:7,8; 1 கொரி. 1:15).

கின்னரேத் (கின்னரோத்) (“வில் யாழ் என்னும் இசைக் கருவி”). **1.** கலிலேயாக் கடலின் மறுபெயர் (எண். 34:11; யோசுவா 12:3). **2.** கலி லேயாக் கடலின் வடக்குக் கரையில் இருந்த பட்டணம் (உபா. 3:17). **3.** கிண்ணரேத் என்னும் ஊரைச் சுற்றியிருந்த நிலப்பகுதி (1 இராஜா. 15:20).

கீகோன் (“சிற்றாறு, பீறிட்டெழுகிற”). **1.** ஏதேன் தோட்டத்தில் இருந்த நான்கு ஆறு களில் ஒன்று (ஆதி. 2:13). **2.** எருசலேம் மதிலுக்கு வெளியே விட்டுவிட்டுப் பாய்கிற நீரூற்று, தேவா லயத்தின் தென்புறத்தில் இருந்தது (1 இராஜா. 1:38–45; 2 நாளா. 32:30 தமிழில் கீயோன்).

கீசோன் (“வளைவு; குறுகிப்போன”), தாபோர் மலையில் தொடங்கி மேற்குநோக்கி ஓடி மத்திய பாலஸ்தீனத்தின் எஸ்தரலோன் (யெஸ்ரெயேல்) பள்ளத்தாக்கில் கலக்கும் ஆறு (நியா. 4:7,13; 1 இராஜா. 18:40; சங். 83:9). பாலஸ்தீனத்தில் யோர்தானுக்கு அடுத்தபடியான முக்கியமான ஆறு.

கீதோன் (நாகோன்) (“நீளமான ஈட்டி”), உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்டதால் ஊசா அடிக்கப்பட்டு செத்த இடம் (1 நாளா. 13:9). 2 சாமு வேல் நூலில் இந்த இடம் நாகோன் என்று குறிப் பிடப்பட்டுள்ளது, இது எந்த இடம் என்று சரியா கத் தெரியவில்லை.

கீரியாத் யெயாரீம் (“காடுகள் அடர்ந்த பட்ட ணம்”), யூதாவின் வடமேற்கு எல்லையில் அமைந் திருந்த கிபியோனியரின் பட்டணமாய் முதலில் இருந்தது (யோசுவா 9:17; நியா. 18:12). பாலாவும் (யோசுவா 15:9), கீரியாத் யாரீமும் (எஸ்றா 2:25), பாலை யூதாவும் (2 சாமு. 6:2) இந்த இடமும் ஒரே பட்டணம்தான். தற்போடு டெயிர் எல் ஆசார் என்று அழைக்கப்படும் பட்டணம் இதுவாக

இருக்கக் கூடும். இது எருசலேமிலிருந்து 13.4 கி.மீ (8.3 மைல்) தொலைவில் உள்ளது.

கீலேயாப் (''தகப்பனின் கட்டுப்பாடு''), தாவீதின் குமாரரில் ஒருவன் (2 சாமு. 3:3); தானியேல் என்றும் இவன் அழைக்கப்பட்டிருக்க வேண்டும் (1 நாளா. 3:1).

கீஸ் (''வில்; வல்லமை''). **1.** கிபியோனின் மகன் (1 நாளா. 8:30; 9:36). **2.** தாவீதின் நாட்களில் இருந்த ஒரு லேவியன் (1 நாளா. 23:21; 24:29). **3.** எசேக்கியாவின் காலத்தில் தேவாலயத்தைத் தூய்மைப்படுத்த உதவிய இவன் லேவியின் வழித்தோன்றல் ஆவான் (2 நாளா. 29:12). **4.** மொர்தெகாயின் தகப்பனின் பாட்டன் (எஸ்தர் 2:5). **5.** சவுல் அரசனின் தகப்பன் (1 சாமு. 9:1,3; 14:51; அப். 13:21).

குப்பை மேட்டு வாசல், எருசலேமின் தென் மேற்கில் இருந்த வாசல் (நெகே. 2:13; 12:31).

குலோவேயாள் (''இளம்மொட்டு''), கொரிந்து அல்லது எபேசுப் பட்டணத்தைச் சார்ந்தவள், கொரிந்து சபையிலிருந்த பிரச்சினையை அறிந்தவள் (1 கொரி. 1:11).

கூவேல் (''தேவனுடைய இரட்சிப்பு''), கானானை உளவுபார்த்துவரும்படி காத்திலிருந்து அனுப்பப்பட்டவர்களில் ஒருவன் (எண். 13:15).

கூன் (''உலோகத்தை உருக்கி வார்த்தல்''), பேரொத்தல் என்னும் தலைப்பைக் காண்க.

கெதரோன் (''மங்கலான; கறுப்பாக அல்லது வருத்தமாக ஆக்குதல்''), எருசலேம் அருகில் உள்ள ஒரு பள்ளத்தாக்கு, ஒபேல் மலைக்கும் ஒலிவ மலைக்கும் இடைப்பட்டது (2 சாமு. 15:23; யோவான் 18:1). இப்பொழுது இது வாடி சிட்டி மர்யான் என்று அழைக்கப்படுகிறது.

கெத்செமனே (''எண்ணெய் ஆலை''), எருசலேமின் கிழக்கே, கீதரோன் ஆற்றுக்கு அப்புறமாய், ஒலிவமலை அடிவாரத்தில் அமைந்திருந்த தோட்டம், இங்குதான் கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்பட்டார் (மத். 26:36–56).

கெர்கெசேனர் (''சமயப் பயணிகள்''). கலிலேயாக் கடலின் கிழக்கே அமைந்திருந்த நிலப்பகுதி அல்லது ஊராக இருக்கலாம். இது எந்த இடத்தில் இருந்தது என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால் இது இப்பொழுது கெர்ஸா என்று அழைக்கப்படுவதாகச் சிலர் கருதுகிறார்கள் (மத். 8:28).

கெர்சோன் (கெர்சோம்) (''நாடு கடத்தப் பெறுதல்''), லேவியின் மூத்த மகனும் முக்கியமான ஆசாரியனுமாவான் (ஆதி. 46:11; யாத். 6:16; 1 நாளா. 6:1). இவன் செர்சோம் என்றும் அழைக்கப்பட்டான் (1 நாளா. 6:16,17,20; 15:7).

கெனேசரேத்து (''இளவரசனின் தோட்டம்''). **1.** கலிலேயாக் கடலின் வடமேற்குக் கரையில் அமைந்திருந்த நிலப்பகுதி (மத். 14:34). **2.** கலிலேயாக் கடலின் மறுபெயர் (லூக்கா 5:1).

கேகிலா (''அரண்''), யூதாவின் தாழ் நிலங்களில் இருந்த ஓர் ஊர் (1 சாமு. 23:1,13; யோசுவா 15:44). இது எப்ரோனிலிருந்து 8.5 மைல் தொலைவில் கிர்பெட் கீலா என்னுமிடத்தில் இருந்தது.

கேதேஸ் (''பரிசுத்தம்''). **1.** கானானியருக்குச் சொந்தமான பட்டணம், அதன் வட எல்லையில் அமைந்திருந்தது. யோசுவாவால் தோற்கடிக்கப்பட்டது (யோசுவா 12:22; 19:37). **2.** நப்தலியின் நிலப்பகுதியில் அடைக்கலப்பட்டணமாக அறிவிக்கப்பட்ட லேவியரின் நகரம். சில இடங்களில் இது கேதேஸ் நப்தலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது (யோசுவா 20:7; நியா. 4:6,9). தற்காலத்தில் காடேஸ் என்று அழைக்கப்படும் அதே நகரமாக இருக்கும் என்று தோன்றுகிறது. இது ஹூயூ ஏரியிலிருந்து வடமேற்கே 7.2 கி.மீ (4.5 மைல்) தொலைவில் உள்ளது. **3.** இசக்காரின் நிலப்பகுதியில் உள்ள லேவியரின் பட்டணம் (1 நாளா. 6:72). **4.** ஆத்சோருக்கும் இத்னானுக்கும் அருகில் இருந்த யூதாவின் பட்டணம் (யோசுவா 15:23).

கேபா. பேதுரு என்னும் தலைப்பைக் காண்க.

கேமுவேல் (''தேவன் நிற்கிறார்'' அல்லது ''தேவனுடைய குன்று''). **1.** நாகோரின் மகன், ஆபிரகாமின் அண்ணன் மகன் (ஆதி. 22:21). **2.** எப்பிராயீமின் ஒரு தலைவன் (எண். 34:24). **3.** ஒரு லேவியன் (1 நாளா. 27:17).

கேயாசி (“தரிசனப் பள்ளத்தாக்கு; நலிவுண்டாக்குபவன்”), எலிசாவின் உண்மையற்ற வேலைக்காரன் (2 இராஜா. 4:12–37; 5:20–27; 8:4).

கேரீத் (“மலை இடுக்கிலுள்ள வழி”), யோர்தான் ஆற்றின் கிழக்கே உள்ள சிற்றாறு, அங்கு எலியா தீர்க்கதரிசி பறவைகளால் பராமரிக்கப் பட்டான் (1 இராஜா. 17:3–5).

கேனாஸ் (கேனேஸ்) (“பக்கம்” அல்லது “வேட்டையாடுதல்”). **1.** ஏதோமின் ஒரு பிரபு (ஆதி. 36:42; 1 நாளா. 1:53). **2.** எலிப்பாசின் நான்காவது மகன் (ஆதி. 36:11,15; 1 நாளா. 1:36). ஒருவேளை இவனும் எண். **1** –இல் சொல்லப்பட்டுள்ளவனும் ஒருவனாக இருக்கக் கூடும். **3.** நியாயாதிபதியாகிய ஒத்னியேலின் தகப்பன் (யோசுவா 15:17; நியா. 1:13). **4.** காலேபின் பேரன் (1 நாளா. 4:15).

கொமோரா (“நீரில் அமிழ்த்திய நிலை”), சோதோம் பட்டணத்தோடு அழிக்கப்பட்ட சம வெளிப் பட்டணங்கள் ஐந்தில் ஒன்று (ஆதி. 18:20; 19:24,28). சாவுக்கடலின் தென்கிழக்குக் கோடியில் நீரில் மூழ்கிப்போயிற்று என்று பல அறிஞர்கள் கருதுகிறார்கள்.

கொரிந்து (“அணிகலன்”), கிரேக்க நாட்டின் இரண்டு நிலப்பகுதிகளை இணைக்கும் குறுகிய நிலப்பகுதியில் அமைந்திருந்த பட்டணம், அத்தேனே பட்டணத்திலிருந்து ஏறத்தாழ 64 கி. மீ. (40 மைல்) மேற்கில் அமைந்திருந்தது (அப். 18:1; 1 கொரி. 1:2).

கொர்நேலியு (“ஒரு கொம்பின்”), கிறிஸ்தவத்தைத் தழுவிய ரோம நூற்றுக்கதிபதி (அப். 10:1–31).

கொலோசெ (“தண்டனை”), ஆசியா மைனர் நாட்டில் பிரிகியா மாவட்டத்தில் இருந்த ஒரு பட்டணம் (கொலோ. 1:2).

கொல்கொதா (கல்வாரி) (“கபாலம்”), பண்டைய எருசலேமின் மதிலையொட்டி வெளியே இருக்கும் ஒரு குன்று, இந்த இடத்தில்தான் இயேசு சிலுவையில் அறையப்பட்டார் (மத். 27:33; யோவான் 19:17). இது எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை. பெரும்பாலும் இந்த இடம் பழைய நகரம் என்று அழைக்கப்படும் இடமாக இருக்கக்கூடும், தற்போதுள்ள மதிற்சுவருக்கு உள்ளே இந்த இடம் இருப்பதாகக் கருதப்படுகிறது.

கோகு (“உயரமான; மலை”). **1.** ரூபன் வழித் தோன்றல் (1 நாளா. 5:4). **2.** ரோஷ், மேசேக், தூபால் ஆகிய இனங்களின் இளவரசன் (எசே. 38:2; 39:1,11). வெளிப்படுத்தின விசேஷம் 20:8 –இல் மாகோகு எப்படியோ அதுபோலவே கோகும் ஒரு நாடாக மாற்றம் பெற்றிருக்கிறது. ஆகவே இந்தப் பெயரை ஒரு அடையாளமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

கோசேன் (“நெருங்கி வருதல்”). **1.** நைல் ஆற்றின் கழிமுக நிலப்பகுதி, ஆடுமாடுகள் வளர்க்கக்கூடிய இப்பகுதி இஸ்ரவேலருக்கென்று, அவர்கள் அடிமைப்படுவதற்கு முன்னர் தரப்பட்டது (ஆதி. 46:28). **2.** யூதாவின் எல்லையில் மலைப்பகுதியில் அமைந்திருந்த ஓர் ஊர் (யோசுவா 15:51); பெரும்பாலும் இது தற்போதைய டாகாரியேவாக இருக்கலாம். எப்ரோனுக்குத் தென்மேற்கே 21 கி. மீ (13 மைல்) தொலைவில் இது இருக்கிறது **3.** கோசேன் என்னும் ஊரின் பெயரிலிருந்து இந்த மாகாணம் அதே பெயரைப் பெற்றது போலும் (யோசுவா 10:41; 11:16).

கோமர். **1.** யாப்பேத்தின் மூத்த மகன் (ஆதி. 10:2,3; 1 நாளா. 1:5,6). ஒருவேளை வடக்கே குடியிருந்த மக்களைக் குறிக்கக்கூடும், ஒரு வேளை இந்தப் பகுதி பண்டைய வரலாற்று கிம்மெரிய இனத்தாரையும் சேர்த்துச் சொல்லப்படுகிறது எனலாம். **2.** ஓசியாவின் நடத்தைகெட்ட மனைவி (ஓசியா 1:3; 3:1–4).

கோராகு (“வெறுமை”). **1.** அகோலிபாமாளின் மூலம் ஏசாவுக்குப் பிறந்தவன் (ஆதி. 36:5,14,18; 1 நாளா. 1:35). **2.** எலிப்பாசின் மகன் (ஆதி. 36: 16). **3.** எப்ரோனின் மகன் (1 நாளா. 2:43). **4.** கோகாத்தின் பேரன், இவன் ஒரு புனிதப் பாடல் குழுவினரின் மூதாதை (1 நாளா. 6:22;

சங். 42; 45–46 ஆகியவற்றின் தலைப்பு). மோசே மற்றும் ஆரோன் ஆகியோருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த தலைவர்களில் இவனும் ஒருவன். பூமி அவர்கள் யாவரையும் விழுங்கிப் போட்டது (எண். 16:1–35).

கோரே (“பிரகடனம் செய்கிறவன்; காடை”). 1. எசேக்கியாவின் காலத்தில் காணிக்கைகளின் மேல் அதிகாரியாக நியமிக்கப்பட்டவன் (2 நாளா. 31:14). 2. ஆசாபின் மகன், இவனுடைய வழித்தோன்றல்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் வாயிற் காப்பாளர்களாக இருந்தனர் (1 நாளா. 9:19; 26:1,19).

கோரேசின் (“இரகசியம்”), கலிலேயாக் கடற்கரையிலிருந்த பட்டணம், இங்கு இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்தார் (மத். 11:21; லூக்கா 10:13).

கோரேசு, பெர்சியா வல்லரசை உருவாக்கிய வன். யூதர்கள் தங்களுடைய நாட்டிற்குத் திரும்பிச் செல்ல கட்டளை கொடுத்தவன் (எஸ்றா 1:1–4,7; 3:7; ஏசாயா 44:28; 45:1–4; தானி. 6:28).

கோலான் (“செல்வழி”), யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கே பாசானைச் சேர்ந்த ஊர். இது அடைக்கலப்பட்டணமாக லேவி கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்டது (உபா. 4:42; யோசுவா 21:27). இது பெரும்பாலும், தற்போதைய சாகேம் எல் ஜாவ்லான் என்னும் ஊர் இருக்கும் இடமாக இருக்கலாம். இது கலிலேயாக் கடலுக்குக் கிழக்கே 27 கி. மீ (17 மைல்) தொலைவில் இருக்கிறது.

கோலியாத் (“நாடுகடத்தப்பட்டவன் அல்லது குறிசொல்லுகிறவன்”). 1. தாவீதால் கொல்லப்பட்ட பெலிஸ்திய ராட்சதன் (1 சாமு. 17:4–54). 2. இன்னொரு இராட்சதன், எண்.1 –இல் குறிப்பிடப்பட்டவனுடைய மகனாக இருக்கக் கூடும் (2 சாமு. 21:19).

சகரியா (Zechariah) (“யெகோவா என் நீதி”). 1. ரூபன் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 5:7). 2. தாவீதின் காலத்தில் இருந்த லேவியனாகிய வாயிற்காப்போன் (1 நாளா. 9:21; 26:2,14). 3. தாவீதின் காலத்தில் பாடற் குழுவின் தலைவனாக நியமிக்கப்பட்டவன் (1 நாளா. 15:18,20; 16:5). 4. தாவீதின் காலத்தில் இருந்த ஓர் ஆசாரியன் (1 நாளா. 15:24). 5. கோகாத்தின் மூலமாக லேவியின் வழியில் பிறந்தவன் (1 நாளா. 24:25). 6. மெராரியின் மூலமாக லேவியின் வழியில் பிறந்தவன் (1 நாளா. 26:11). 7. இத்தோவின் தகப்பன் (1 நாளா. 27:21). 8. யோசபாத்தின் பிரபுக்களில் ஒருவன், நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும்படி அனுப்பப்பட்டவன் (2 நாளா. 17:7). 9. மோவாபுக்கு எதிராகச் செல்லும்படி யோசபாத்தை உற்சாகப்படுத்திய லேவியன் (2 நாளா. 20:14). 10. யோசபாத்தின் மகன் (2 நாளா. 21:2). 11. யோய்தாவின் குமாரனாகிய இவன் கல்லெறிந்து கொல்லப்பட்டான் (2 நாளா. 24:20). இவன் மத்தேயு 23:35; லூக்கா 11:50 ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளான். 12. உசியாவின் காலத்து ஆசாரியன் (2 நாளா. 26:5). 13. தேவாலயத்தைத் தூய்மைப்படுத்த உதவிய லேவியன் (2 நாளா. 29:13). 14. லேவியின் வழித்தோன்றல் (2 நாளா. 34:12). 15. யோசியாவின் காலத்தில் இருந்த யூதா கோத்திரத்துப் பிரபு (2 நாளா. 35:8). 16. எஸ்றாவின் காலத்தில் வாழ்ந்த ஒரு தீர்க்கதரிசி (எஸ்றா 5:1 6:14; சக. 1:1,7; 7:1,8). இவனுடைய நூல் இன்னும் இருக்கிறது. 17. இஸ்ரவேலில் ஒரு தலைவன் (எஸ்றா 8:3). 18. சிறையிருப்பிலிருந்து திரும்பியவன் (எஸ்றா 8:11). எஸ்றா 8:16 –இல் குறிப்பிடப்பட்டவன் (17) அல்லது (18) ஆகியவர்களில் ஒருவனாக இருக்கக்கூடும். 19. சிறையிருப்பின்போது அந்நியப் பெண்ணைத் திருமணம் செய்தவன் (எஸ்றா 10:26). 20. எஸ்றாவுடன் இருந்த ஒரு பிரபு (நெகே. 8:4). 21. பேரேசின் வழித்தோன்றல் (நெகே. 11:4). 22. இவனுடைய வழித்தோன்றல்கள் எருசலேமில் குடியிருந்தார்கள் (நெகே. 11:5). 23. ஓர் ஆசாரியன் (நெகே. 11:12). 24. முரசொலிக்கிற ஒரு லேவியன் (நெகே. 12:35,36). 25. பிரதிஷ்டையில் கலந்துகொண்ட ஓர் ஆசாரியன் (நெகே. 12:41). 26. ஏசாயா சாட்சியாக வைத்துக்கொண்டவன் (ஏசாயா 8:2). 27. எசேக்கியாவின் தாயாகிய ஆபி அல்லது அபியாள் என்ப

வளுடைய தகப்பன் (2 இராஜா. 18:2). **28.** இவன் யெரொபெயாம் II –ன் மகனும் அவனைத் தொடர்ந்து அரசனாக இருந்தவனும் ஆவான். இவன் ஆறு மாதங்கள் மட்டுமே அரசாண்டான் (2 இராஜா. 15:8).

சகரியா (Zacharias) (“கர்த்தரின் நினைவாற்றல்”). **1.** யூதர்கள் கல்லெறிந்து கொன்ற தீர்க்கதரிசி (மத். 23:35; லூக்கா 11:50). இவனும் சகரியா என்னும் இன்னொரு தலைப்பில் (**11**) அல்லது (**16**) எண்களில் குறிப்பிடப்பட்டுள்ளவனும் ஒரே ஆள் என்று சிலர் கருதுகிறார்கள். **2.** யோவான் ஸ்நானகனின் தகப்பனாகிய ஆசாரியன் (லூக்கா 1).

சகேயு (“தூய்மை”), வரிவசூலிப்பவன், எரிகோவில் இவனுடைய வீட்டில் இயேசு தங்கினார் (லூக்கா 19:1–10).

சப்பீராள் (“அழகிய; நீலமணிக்கல்”), அனனியாவின் மனைவி, நேர்மையற்றவள், தேவனால் அடிக்கப்பட்டு மரணமடைந்தாள் (அப். 5:1–10).

சப்பேதா (“ஓய்வுநாளில் பிறந்தவன்”). **1.** எஸ்றாவின் உதவியாள் (எஸ்றா 10:15). **2.** மக்களுக்கு நியாயப்பிரமாணத்தை விளக்கிக் கூறியவன் (நெகே. 8:7). **3.** எருசலேமில் இருந்த தலைமை லேவியன் (நெகே. 11:16). மூவரும் ஒரே ஆளாக இருக்கக் கூடும்.

சமவெளிப் பட்டணங்கள், யோர்தான் சமவெளியில் அமைந்திருந்த பட்டணங்கள்: சோதோம், கொமோரா, அத்மா, செபோயிம், சோவார் (ஆதி. 10:19; 13:10).

சமாரியா (“காவல் மலை”). **1.** வட நாடாகிய இஸ்ரவேலின் தலைநகர் (1 இராஜா. 20:1; 2 நாளா. 18:2; எரே. 41:5). இது எருசலேமிலிருந்து 67.6 கி. மீ (42 மைல்) தொலைவில் வடக்கே இருந்தது. **2.** இஸ்ரவேல் நாட்டின் மற்றொரு பெயர் (1 இராஜா. 13:22; 2 இராஜா. 17:24). **3.** கிறிஸ்துவின் காலத்தின்போது இருந்த ஒரு பாலஸ்தீன மாவட்டம் (லூக்கா 17:11–19). இதனுடைய வடக்கே கலிலேயாவும், தெற்கே யூதேயாவும் இருந்தன.

சம்மா (“புகழ்ச்சி; மேன்மையான”). **1.** ஏசாவின் பேரன் (ஆதி. 36:13,17; 1 நாளா. 1:37). **2.** ஈசாயின் மகன் (1 சாமு. 16:9; 17:13). இவன் சிமியா, சீமேயா என்றும் அழைக்கப்பட்டான் (2 சாமு. 13:3; 21:21; 1 நாளா. 20:7; 2:13). **3.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் அல்லது தாவீதின் பராக்கிரமசாலி ஒருவனது தகப்பன் (2 சாமு. 23:11). **4.** தாவீதின் வேறொரு பராக்கிரமசாலி (2 சாமு. 23:33). இவன் 1 நாளாகமம் 11:27 –இல் சம்மோத் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். **5.** தாவீதின் இன்னுமொரு பராக்கிரமசாலி (2 சாமு. 23:25).

சம்முவா (“புகழ்பெற்ற”). **1.** கானான் நாட்டை வேவுபார்க்க அனுப்பப்பட்டவர்களில் ஒருவன் (எண். 13:4). **2.** தாவீதின் மகன் (2 சாமு. 5:14; 1 நாளா. 14:4). 1 நாளாகமம் 3:5 –இல் இவன் சிமேயா என்று குறிப்பிடப்பட்டுள்ளான். **3.** சிறையிருப்புக்குப் பிறகு தேவாலய ஆராதனையை முன்னின்று நடத்தியவன் (நெகே. 11:17). இவன் செமாயா என்றும் அழைக்கப்பட்டான் (1 நாளா. 9:16). **4.** நெகேமியாவின் காலத்தில் ஒரு ஆசாரியக் குடும்பத்தின் தலைவனாயிருந்தவன் (நெகே. 12:18).

சர்கோன் (“அரச பதவியைக் கடவுள் நிறுவினார்”), அசீரியாவின் முக்கியமான அரசன், இவனே சமாரியாவை வெற்றிகரமாக முற்றுகையிட்டு அங்கிருந்து இஸ்ரவேலை நாடு கடத்தியவன். இவனது பெயர் திருமறையில் ஒரே ஒரு தடவை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது (ஏசாயா 20:1).

சர்தை (“மகிழ்ச்சியின் இளவரசன்”), லிதியாவின் தலைநகர், இங்கு ஒரு சபை இயங்கிவந்தது (வெளி. 1:11; 3:1,4). இது சிமிர்னாவிலிருந்து 80.5 கி. மீ (50 மைல்) கிழக்கே, பேக்டோலஸ் ஆற்றின் கிழக்கு கரையில் அமைந்திருந்தது.

சலோமே (“ஆடை; வலிமை”). **1.** சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சியைக் கண்ட ஒரு பெண் (மாற்கு 15:40; 16:1). செபதேயுவின் குமாரர்களின் தாய் அங்கிருந்ததாக மத்தேயு 27:56 கூறுகிறது. இந்தப் பெண்மணியும் சலோமியும் ஒரே

பெண்ணாக இருக்கக்கூடும். யோவான் 19:25 – இல் இயேசுவின் தாயின் சகோதரி சிலுவையின் அருகே இருந்தாகச் சொல்லப்பட்டுள்ளது. சில அறிஞர்கள் அந்தப் பெண்மணியும் சலோமியும் ஒரே பெண் என்று கூறுகிறார்கள், ஆனால் மற்ற வர்கள் அதை ஒப்புக்கொள்வதில்லை. **2.** ஏரோது மன்னனுக்கு முன் நடனமாடிய ஏரோதியாளின் மகள் (மத். 14:6; மாற்கு 6:22).

சல்முன்னா (“பாதுகாப்பிலிருந்து அகற்றப்பட் டவன்”), மீதியானியரின் அரசன், இவனைக் கிதியோன் கொன்று போட்டான் (நியா. 8:5–21).

சல்லூம் (“கைம்மாறு செய்பவன்”). **1.** நப்தலி யின் கடைசி மகன் (1 நாளா. 7:13). இவன் சில் லேம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளான் (ஆதி. 46:24; எண். 26:49). **2.** சிமியோனின் வழித் தோன்றல் (1 நாளா. 4:25). **3.** யூதாவின் வழித் தோன்றல் (1 நாளா. 2:40,41). **4.** இஸ்ரவேலின் அரசாட்சியை கைப்பற்றி ஒரு மாதம் ஆளுகை புரிந்தவன் (2 இராஜா. 15:10–15). **5.** உல்தாள் என்னும் தீர்க்கதரிசினியின் கணவன் (2 இராஜா. 22:14; 2 நாளா. 34:22). **6.** யோவாகாஸ் 2 –ஆம் எண்ணைக் காண்க. **7.** மெசுல்லாம் (7) என்னும் பெயரைக் காண்க. **8.** ஆசரிப்புக் கூடாரத்தின் வாசல் காப்பாளன் (1 நாளா. 9:17–19,31; எஸ்றா 2:42; நெகே. 7:45). **9.** எகிஸ்கியாவின் தகப்பன் (2 நாளா. 28:12). **10,11.** சிறையிருப்பின்போது அந்நியப் பெண்களைத் திருமணம் செய்தவர்கள் (எஸ்றா 10:24,42). **12.** எருசலேம் மதிற்சுவரைப் பழுதுபார்க்க உதவி செய்தவன் (நெகே. 3:12). **13.** எருசலேம் கதவைப் பழுதுபார்க்க உதவிசெய்த வன் (நெகே. 3:15). **14.** எரேமியாவின் பெரிய தகப்பன் (எரே. 32:7). **15.** யோயாக்கீமின் காலத் தில் தேவாலயத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்த வனின் தகப்பன் (எரே. 35:4).

சவுல் (“கேட்கப்பட்டவன்”). **1.** இஸ்ரவேலின் முதல் அரசன்; இறுதியில் தேவன் இவனைக் கைவிட்டார். பலமுறை தாவீதை இவன் கொலை செய்ய முயற்சி செய்தும், கடைசியில் கில்போவா வில் இவன் தன்னையே மாய்த்துக் கொண்டான் (1 சாமு. 9–31அதி). **2.** பவுலின் இயற்பெயர். **3.** ஏதோமின் ஆறாவது அரசன் (ஆதி. 36:37,38; 1 நாளா. 1:48,49).

சனகெரிப் (பாபிலோனைச் சேர்ந்தவன், சின் என்னும் கடவுள் என்னுடைய சகோதரனுக்குப் பதிலானவர் – சின் – அகி – எரிபா.) அசீரிய அர சன், தன்னுடைய சகோதரனைக் கொன்று அர சாட்சியைப் பிடித்தவன். இவன் யூதாவின்மேல் போர் தொடுத்து வெற்றிபெறவில்லை. இவனு டைய படை வியத்தகு முறையில் தோற்கடிக்கப் பட்ட விவரம் 2 இராஜாக்கள் 19 –ஆவது அதி காரத்தில் சொல்லப்பட்டுள்ளது (2 இராஜா. 18:13; ஏசாயா 36:1; 37:17,21,37).

சன்பல்லாத் (“வலிமை மிக்க”), எருசலேம் மதிற்சுவரை யூதர்கள் திரும்பக் கட்டியபோது அதனை எதிர்த்தவர்களில் முதன்மையானவன் (நெகே. 2:10; 4:1,7; 6:1–14).

சாதோக் (“நீதி”). **1.** தாவீதின் காலத்தில் இருந்த பிரதான ஆசாரியன் (2 சாமு. 8:17; 15:24–36; 1 இராஜா. 1:8–45). **2.** எருசாள் என்ப வளது தகப்பன், இவள் உசியாவின் மனைவி, யோதாம் என்பவளது தாய், இவர்கள் இருவரும் யூதாவின் அரசர்கள் (2 இராஜா. 15:33; 2 நாளா. 27:1). **3.** அகிதூப்பின் மகன், சல்லூம் அல்லது மெசுல்லாம் என்பவனது தகப்பன் (1 நாளா. 6:12,13; எஸ்றா 7:2). **4.** பராக்கிரமசாலியாகிய இளைஞன் (1 நாளா. 12:28). **5.6**, இவ்விருவரும் எருசலேம் மதிற்சுவரைப் பழுதுபார்த்தார்கள் (நெகே. 3:4,29). **7.** நெகேமியாவுடன் உடன்படிக் கையை முத்திரையிட்டவன் (நெகே. 10:21). **8.** நெகேமியாவுடனிருந்த வேதபாரகன் (நெகே. 13:13). **9.** கிறிஸ்துவின் மூதாதை (மத். 1:14).

சாத்ராக் (“சின் என்னும் கடவுளின் வேலைக் காரன்”), அனனியாவுக்கு பாபிலோனில் கொடுக் கப்பட்ட பெயர். இவன் சூளையில் எறியப்பட்டு, தப்புவிக்கப்பட்டவன் (தானி. 1:7; 3அதி).

சாப்நாத் பன்னேயா (“உலக ரட்சகர்; இரக சியங்களை வெளிப்படுத்துகிறவன்”) யோசேப் புக்கு பார்வோன் அளித்த பெயர் (ஆதி. 41:45).

சாப்பாத் (“நீதிபதி”). **1.** கானான் தேசத்தை வேவு பார்க்கும்படி அனுப்பப்பட்டவர்களில் ஒருவன் (எண். 13:5). **2.** எலிசா தீர்க்கதரிசியின் தகப்பன் (1 இராஜா. 19:16,19; 2 இராஜா. 3:11; 6:31). **3.** தாவீதின் வழியில் உண்டான ஒரு குடும்பம் (1 நாளா. 3:22). **4.** காத் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 5:12). **5.** பள்ளத்தாக்குகளில் தாவீதின் மந்தையின்மேல் விசாரிப்புக்காரனாக இருந்தவன் (1 நாளா. 27:29).

சாப்பான் (“விவேகமுள்ள; தந்திரமுள்ள”). **1.** யோசியாவின் காலத்தில் இருந்த வேதபாரகன், இவன் நியாயப்பிரமாணத்தை அரசனுக்கு வாசித்தான் (2 இராஜா. 22:3; 2 நாளா. 34:8–21). **2.** யோசியாவின் கீழ் இருந்த தலைமை அதிகாரி ஒருவனது தகப்பன் (2 இராஜா. 22:12; 2 நாளா. 34:20). **3.** எலெயாசாரின் தகப்பன் (எரே. 29:3). **4.** எசேக்கியேல் தரிசனத்தில் கண்ட யசனியா என்பவனது தகப்பன் (எசே. 8:11). வேத அறிஞர்கள் பலர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைவரும் ஒரே ஆள் என்று கருதுகிறார்கள்.

சாமுவேல் (செமுவேல்) (“தேவனிடத்தில் கேட்கப்பட்டவன்; தேவனால் கேட்கப்பட்டவன்”), இவன் தீர்க்கதரிசியும், இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதியும் ஆவான். முதலில் சவுலையும், பின்னர் தாவீதையும் அரசனாக அபிஷேகம் பண்ணினவன் (1 சாமு. 1:20; 3–13அதி; 15–16அதி; 19அதி; 25:1; எபி. 11:32).

சாராள் (சாராய்) (“இளவரசி”), ஆபிரகாமின் மனைவி, ஈசாக்கின் தாய் (ஆதி. 17–18அதி; 20–21அதி; எபி. 11:11; 1 பேதுரு 3:6). இவளுடைய பெயர் சாராய் (“யெகோவா இளவரசர்”) என்பதிலிருந்து சாராள் (“இளவரசி”) என்று மாற்றப்பட்டது; மிகப் பெரிய இனத்திற்குத் தாயாகப் போகிறாள் என்பதை முன்னிட்டு இப்பெயர் இவளுக்குச் சூட்டப்பட்டது (ஆதி. 17:15).

சாரோன் (“அவருடைய பாடல்”). **1.** மத்திய தரைக்கடலின் கரையில் யோப்பா முதல் கர்மேல் மற்றும் பாலஸ்தீனத்தின் மத்திய பகுதி வரையிலுமான நிலப்பகுதி (1 நாளா. 27:29; அப். 9:35). **2.** யோர்தானுக்குக் கிழக்கே காத் கோத்திரத்தார் குடியிருந்த பகுதி (1 நாளா. 5:16).

சாலமி (“அதிர்வுற்ற”), சீப்புரு தீவின் கிழக்குக் கோடியில் அமைந்திருந்த ஒரு பட்டணம் (அப். 13:5). இது தற்போது ஃபாமகுஸ்டா என்று அழைக்கப்படும் இடத்திலிருந்து 4.8 கி. மீ (3 மைல்) தொலைவில் இருந்தது.

சாலிம் (“பாதை”), யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடம் (யோவான் 3:23). அயினோன் என்னும் நீர் நிறைந்த இடத்திற்கு அருகே இருந்தது. இது சீகேமுக்கு வடக்கே இருந்ததாகக் கருதப்படாமலும், இது எந்த இடம் என்று துல்லியமாகத் தெரியவில்லை.

சாலேம் (“முழுநிறைவான சமாதானம்”), மெல்கிசேதேக்கின் ஊர் (ஆதி. 14:18; சங். 76:2). தற்போது சாலிம் என்று அழைக்கப்படும் இடமாக இது இருக்கக்கூடும்; ஆயினும் இது எருசலேம் என்றே பலர் கருதுகிறார்கள்.

சாலொமோன் (“சமாதானம்”), பெத்சேபாள் மூலமாகத் தாவீதுக்குப் பிறந்தவன், ஒன்றுபட்ட வலிமைமிக்க இஸ்ரவேலின் அரசனாக 40 ஆண்டுகள் ஆளுகை செய்தவன். பல வகையான குணநலன்களைக் கொண்டிருந்த இவனுடைய ஞானமும் உலகீய பாவமும், பெரிதளவாயிருந்தன (1 இராஜா. 1:11; 2:11,12). இவன் கிறிஸ்துவின் மூதாதை (மத். 1:6,7).

சாலொமோன் குளங்கள். பெத்லகேமின் அருகில் நீரைச் சேமித்து வைக்க சாலொமோன் வெட்டிய குளங்கள் (பிர. 2:6).

சாலொமோன் மண்டபம். தேவாலயத்தின் கிழக்கில் சாலொமோன் கட்டிய தூண்கள் நிறைந்த மண்டபம் (யோவான் 10:23; அப். 3:11).

சாவுக்கடல். உப்புக்கடல் என்னும் தலைப்பைக் காண்க.

சாறிபாத் (“உருக்குகிற இடம்”), சீதோனுக்கு அருகிலிருந்த ஓர் ஊர். இங்கு எலியா தங்கியிருந்தான் (1 இராஜா. 17:9).

சிசெரா (“தியானம், அணிவகுப்பு”). **1.** யாபீனின் படைத்தலைவன், இவன் யாகேல் என்னும் பெண்ணால் கொலைசெய்யப்பட்டான் (நியா. 4:1–22; 5:26,28). **2.** இவனுடைய வழித்தோன்றல்

கள் எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்கள் (எஸ்றா 2:53; நெகே. 7:55).

சிதேக்கியா (“யெகோவா என் நீதி; யெகோவா வல்லமையுள்ளவர்”). **1.** ராமோத் கீலேயாத்தில் சீரியர்களைத் தாக்கும்படி ஆகாபுக்கு உற்சாகமளித்த கள்ளத் தீர்க்கதரிசி (1 இராஜா. 22:11,24; 2 நாளா. 18:10,23). **2.** ஒரு கள்ளத் தீர்க்கதரிசி (எரே. 29:21–23). **3.** யோயாக்கீம் காலத்தில் இருந்த யூதாவைச் சேர்ந்த பிரபு (எரே. 36:12). **4.** யூதாவின் கடைசி அரசன்; இவனுடைய கிளர்ச்சி யூதாவுக்கு முடிவைக் கொண்டு வந்தது (2 இராஜா. 24:18–25:7; 2 நாளா. 36:11–21). 1 நாளாகமம் 3:16 –இல் இவன் எக்கோனியாவின் மகன் (அல்லது) அடுத்த அரசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். மத்தனியா (**1**) என்னும் பெயரைக் காண்க.

சித்தீம் (கருவேலந் தோப்பு) (“முள்கள்”). **1.** யோர்தான் ஆற்றைக் கடக்கும் முன் இஸ்ரவேலர் கடைசியாக தங்கியிருந்த முகாம். இங்கு மோசே விடைபெற்றுக் கொண்டான், நியாயப் பிரமாணம் முழுவதும் கொடுத்து முடித்த இடம் (எண். 25:1; யோசுவா 2:1). இது யோர்தானுக்குக் கிழக்கே, எரிகோவுக்கு நேர் எதிராக இருந்த இடம், மோவாபைச் சேர்ந்த இடம். **2.** கனியற்ற வறண்ட பள்ளத்தாக்கு (யோவேல் 3:18). இந்தப் பெயர் ஒரு குறிப்பிட்ட பள்ளத்தாக்கைக் குறிப்பிடுவதில்லை; ஆனால் எருசலேமுக்கு வட மேற்கே தொடங்கி கிழக்கே சாவுக்கடல் வரை செல்லும் கெதரோன் இது பள்ளத்தாக்காக இருக்கலாம். இது சாவுக்கடலைச் சுற்றிலுமுள்ள அராபா பகுதியாகவும் இருக்கலாம்.

சினெயார் (“உறங்குகிறவனைக் கவனி”), பின்னர் பாபிலோன் அல்லது கல்தேயா என்று அறியப்பட்ட சமவெளி நிலப்பகுதி, இதன் ஊடாகவே டைகிரிஸ் மற்றும் ஐபிராத்து ஆறுகள் பாய்கின்றன (ஆதி. 10:10; ஏசாயா 11:11).

சிப்போராள் (“சிறு பறவை”), ரெகுவேலின் மகள், மோசேயின் மனைவி (யாத். 2:21; 4:25; 18:2).

சிப்ரோன் (“மகிழ்ச்சி”), வாக்குறுதி பண்ணப்பட்ட நாட்டின் வட எல்லை என்று மோசே குறிப்பிட்ட இடம் (எண். 34:9). இது பெரும்பாலும் ரெஸ்டானுக்கு தென்கிழக்கே உள்ள சாஃபெரானாக இருக்கக் கூடும்.

சிமியோன் (சீமோன்) (“செவிமடுத்தல்”). **1.** லேயாள் மூலமாக யாக்கோபுக்குப் பிறந்த இரண்டாவது மகன் (ஆதி. 29:33; 34:25; 48:5; 49:5). இவனுடைய வழித்தோன்றல்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றானார்கள். **2.** கிறிஸ்து குழந்தையாக இருந்த போது அவரை ஆசிர்வதித்த பக்தி நிறைந்த யூதன் (லூக்கா 2:25–34). **3.** இயேசுவின் மூதாதை (லூக்கா 3:30). **4.** இவன் அந்தியோகியில் இருந்த சீடனும் தீர்க்கதரிசியும் ஆவான் (அப். 13:1); இவனுடைய பட்டப்பெயர் நீகர் (கறுப்பன்). **5.** பேதுருவின் இயற்பெயர். சீமோன் என்பது சிமியோன் என்பதன் மற்றொரு வடிவம்.

சிமிர்னா (“நறுமணப் பிசின்”– வெள்ளைப் போளம்), ஆசியா மைனர் நிலப்பகுதியின் மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த ஓர் ஊர் (வெளி. 2:8–11). இது எபேசுவிலிருந்து 64.4 கி. மீ (40 மைல்) தொலைவில் இருந்தது.

சிமெயா (“தேவன் ஒரு மன்றாட்டைக் கேட்கிறார்”). **1.** மெராரியின் வழித்தோன்றல் (1 நாளா. 6:30). **2.** பெரகியாவின் தகப்பன் (1 நாளா. 6:39). **3.** சம்மா என்னும் பெயரில் (2) –ஆம் எண்ணைக் காண்க. **4.** சம்முவா என்னும் பெயரில் (2) – ஆம் எண்ணைக் காண்க. **5.** சவுல் அரசனின் வழியில் இப்பெயரோடு ஒரு குடும்பம் இருந்தது. இக்குடும்பத்தின் வழித்தோன்றல்கள் எருசலேமில் குடியிருந்தார்கள் (1 நாளா. 8:32; 9:38). இரண்டாவது குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தில் இவன் சிமியாம் என்று அழைக்கப்பட்டுள்ளான்.

சிமேயீ (“யெகோவா புகழ் பெற்றவர்; யெகோவா என்னைக் கேட்கிறார்”). **1.** கெர்சோனின் மகன், கெர்சோனின் பேரன் (யாத். 6:17; எண். 3:18,21; சக. 12:13). **2.** பென்யமீனின் வழித்தோன்றல், தாவீது அப்சலோமுக்குப் பயந்து ஓடியபோது

அவனைச் சபித்தவன் (2 சாமு. 16:5–13; 19:16–23). **3.** தாவீதின் கீழ் உண்மையோடு இருந்த அதிகாரி (1 இராஜா. 1:8). **4.** சாலொமோனின் கீழ் பணிபுரிந்த அதிகாரி (1 இராஜா. 4:18). **5.** எகொனியா அரசனின் பேரன் (1 நாளா. 3:19). **6.** 16 குமாரரையும் 6 குமாரத்திகளையும் பெற்றிருந்த மனிதன் (1 நாளா. 4:26,27). **7.** ரூபனின் வழித்தோன்றல் (1 நாளா. 5:4). **8.** லிப்னியின் மகன் (1 நாளா. 6:29). **9.** யூதாவின் தலைவர்களில் ஒருவனது தகப்பன்(சிமியி) (1 நாளா. 8:21). **10.** ஒரு லேவியன் (1 நாளா. 23:9). **11.** தாவீதின் காலத்தில் தேவாலயப் பாடற்குழுவில் பணிபுரிந்த ஒரு லேவியன் (சிமேயா) (1 நாளா. 25:17). **12.** பல திராட்சைத் தோட்டங்களுக்கு விசாரணைக்காரனாக இருந்தவன் (1 நாளா. 27:27). **13.** தேவாலயத்தைத் தூய்மைப்படுத்த உதவிசெய்தவன் (2 நாளா. 29:14). **14.** எசேக்கியாவின் காலத்தில் தேவாலயக் காணிக்கையின் மேல் அதிகாரியாக இருந்தவன் (2 நாளா. 31:12,13). **15, 16, 17.** சிறையிருப்பின்போது அந்நியப் பெண்களைத் திருமணம் செய்த மூவர் (எஸ்றா 10:23,33,38). **18.** மொர்தெகாயின் பாட்டன் (எஸ்தர் 2:5).

சிம்சோன் (“சிறந்த; வலிமையுடைய”), 20 ஆண்டுகள் இஸ்ரவேலின் நியாயாதிபதியாக இருந்தவன். இவனுடைய மிக அதிகமான வலிமையும் ஒழுக்கக்கேடும் இவன் அதிகமாக அறியப்பட்டிருந்ததன் காரணமாயின (நியா. 13:24; 14–16 அதி).

சிம்ரி (Shimri) (“யெகோவா கவனிக்கிறார்”). **1.** சிமியோன் குடும்பத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 4:37). **2.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனது தகப்பன் (1 நாளா. 11:45). **3.** தாவீதின் காலத்தில் ஆசரிப்புக் கூடாரத்தின் வாயிற்காப்போனாகப் பணிபுரிந்தவன் (1 நாளா. 26:10). **4.** தேவாலயத்தைத் தூய்மைப்படுத்த உதவி செய்தவன் (2 நாளா. 29:13)

சிம்ரி (zimri) (“கொண்டாடிய”). **1.** பினெகாசால் கொல்லப்பட்ட கீழ்ப்படியாத இஸ்ரவேலன் (எண். 25:14). **2.** ஏலாவைக் கொன்ற அவனுடைய ஊழியக்காரன் (1 இராஜா. 16:9–20). **3.** யூதா கோத்திரத்தைச் சேர்ந்த சேராவின் மகன் (1 நாளா. 2:6). **4.** பென்யமீனின் வழித்தோன்றல் (1 நாளா. 8:36; 9:42).

சிலிசியா (“உருளுகிற”), ஆசியா மைனர் நிலப்பகுதியிலிருந்த ஒரு மாவட்டம், இந்த மாவட்டத்தின் முதன்மையான நகரமாகிய தர்சுவில் பவுல் பிறந்தான் (அப். 21:39).

சிவந்த சமுத்திரம், எகிப்தையும் அரேபியாவையும் பிரிக்கும் கடல், இந்தக் கடல் வழியாகவே இஸ்ரவேலர் எகிப்துக்குத் தப்பினார்கள் (யாத். 10:19). இந்தக் கடலை இஸ்ரவேலர் விடுதலையின் கடல் என்றும் மற்றவர்கள் நம்பத்தகாத கடல் என்றும் அழைத்தார்கள்.

சீகார் (“முடிவு”), யாக்கோபின் கிணற்றண்டையில் இருந்த சமாரியாவைச் சேர்ந்த பட்டணம் (யோவான் 4:5).

சீகேம் (“தோள்”). **1.** ஏமோரின் மகன், இவன் தீனாளைத் தீட்டுப்படுத்திவிட்டான்; அதன் காரணமாக இவனும் இவனுடைய வீட்டாரும் அழிக்கப்பட்டனர் (ஆதி. 33:19;34அதி). **2.** மனாசேயின் வழித்தோன்றல் (எண். 26:31; யோசுவா 17:2). **3.** மனாசேயின் வேறொரு வழித்தோன்றல் (தமிழில் சேகேம்) (1 நாளா. 7:19).

சீகேம் (“பங்கு”). மத்திய பாலஸ்தீனத்தில் இருந்த ஒரு பழமையான நகரம் (ஆதி. 12:6; 33:18; யோசுவா 24:32; அப். 7:16), இது எப்பிராயீம் மலைப்பகுதியில் அமைந்திருந்தது. தற்போது இது நப்லுஸ் என்று அழைக்கப்படுகிறது, இது ஏபால் மலைக்கும் கெரிசீம் மலைக்கும் இடையே, எருசலேமிலிருந்து 66 கி. மீ (41 மைல்) தொலைவில் இருக்கிறது.

சீகோர் (“கறுமை”), நைல் நதியின் கிழக்கில் பாயும் துணை நதி (1 நாளா. 13:5; எரே. 2:18). கருத்தளவில் கணக்கிடும்போது, இதுவே இஸ்ரவேலின் தென் எல்லையாக இருக்க வேண்டும்.

சீகோன் (“பெரிய; துணிவுமிக்க"), இஸ்ரவேலரால் தோற்கடிக்கப்பட்ட எமோரியரின் அரசன் (எண். 21:21–31; உபா. 1:3; 2:24–32; யோசுவா 13:15–28).

சீதோன் (“வேட்டையாடுதல்”), கானான் நாட்டிலிருந்த பழம் பட்டணம் (ஆதி. 10:15,19; யோசுவா 11:8; லூக்கா 4:26).

சீமோன் (“செவிமடுத்தல்”). **1.** அப்போஸ்தல னாகிய பேதுருவின் இயற்பெயர் (மத். 4:18; 16:16,17; லூக்கா 4:38; அப். 10:18). **2.** பன்னிரு அப்போஸ்தலரில் வேறொருவன், இவன் கானா னியனாகிய சீமோன் என்றழைக்கப்பட்டான். இவன் இஸ்ரவேல் மீது கொண்டிருந்த பற்றி னாலோ, அவனுடைய விசுவாசத்தினாலோ இவ்வாறு அழைக்கப்பட்டான் போலும் (மத். 10:4; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப். 1:13). **3.** கிறிஸ்து வின் ஒரு சகோதரன் (மத். 13:55; மாற்கு 6:3). **4.** பெத்தானியாவைச் சேர்ந்த ஒரு குஷ்டரோகி, இவனுடைய வீட்டில் கிறிஸ்துவுக்கு நளதைலம் பூசப்பட்டது (மத். 26:6; மாற்கு 14:3). **5.** கிறிஸ்து வின் சிலுவையைச் சுமக்கும்படி கட்டாயப்படுத் தப்பட்ட சிரேனே ஊரைச் சேர்ந்தவன் (மத். 27:32; மாற்கு 15:21). **6.** இப்பெயருடைய பரி சேயனுடைய வீட்டில் கிறிஸ்துவின் கால்களுக் குத் தைலம் பூசப்பட்டது (லூக்கா 7:40,43,44). **7.** யூதாஸ்காரியோத்தின் தகப்பன் (யோவான் 6:71; 12:4; 13:2). **8.** பரிசுத்த ஆவியானவரின் வரங்களை விலைக்கு வாங்க நினைத்த மாய வித்தைக்காரன் (அப். 8:9,13,18,24). **9.** யோப்பா வைச் சேர்ந்த தோல் பதனிடுபவன், இவனுடைய வீட்டில் சீமோன் பேதுரு தங்கினான் (அப். 9:43; 10:6,17,32).

சீயோன் (“மார்கச்சை”). **1.** எர்மோன் மலை யின் மறுபெயர் (உபா. 4:47,48). **2.** (“நினைவுச் சின்னம்; அரண்; நிறுவப்பட்டது” – என்றும் பொருள்படும்), எருசலேம் நகரம் நிற்கும் மலை களில் ஒன்று. இது தேவாலயத்தை அல்லது எருசலேமையும் அதன் மக்களையும் குறிக்கும் அடையாளப் பெயராயிற்று. அவர்களுடைய முடிவு தேவனையே சார்ந்தது (2 சாமு. 5:7; ஏசாயா 8:18; சங். 48:11; யோவேல் 2:23). சீயோன் பரலோகத் திற்கும் அடையாளமாயிருக்கிறது (வெளி. 14:1).

சீரியா (அசீரியா என்பதன் வேறுவடிவம்), பாலஸ்தீனத்திற்குக் கிழக்கிலும், வடக்கிலும் இருந்த நாடு (நியா. 10:6; 1 இராஜா. 10:29; அப். 15:23). மத்திய தரைக் கடலிலிருந்து பெருந் தொலைவுவரை அமைந்திருந்த நாடு, இதன் எல்லை வடக்கில் டாரஸ் மலைகளால் சூழ்ந்திருந் தது.

சீலா (சில்வான்) (“காடு; மரங்கள் நிறைந்த; மூன்றாவது; கேட்கப்பட்டவன்”). பவுலுடன் பயணம் செய்து ஆசியா மைனர், கிரேக்கம் ஆகிய நாடுகளுக்குச் சென்றவன், பிலிப்பி பட்டணத்தில் பவுலுடன் கைது செய்யப்பட்டவன். தொடக்க காலச் சபையில் சிறப்பு பெற்ற உறுப் பினனாக இருந்தவன் (அப். 15:22, 32–34; 2 கொரி. 1:19; 1 தெச. 1:1).

சீலோ (“சமாதானம்”), எப்பிராயீம் எல்லை யில் இருந்த ஓர் ஊர் (யோசுவா 18:1–10; நியா. 21:19). இது சீகேமுக்கும் பெத்தேலுக்கும் இடையே சரிபாதி தூரத்தில் இருந்தது.

சீலோவாம் (“அனுப்பப்பட்டவன்”). **1.** எசேக் கியாவின் மலைக்குகைப் பாதையின் தெற்கு எல்லையில், எருசலேம் நகரில் அமைந்திருந்த புகழ் பெற்ற குளம் (யோவான் 9:7). சீலோவா என்னும் பெயரும் இதற்குண்டு. **2.** சீலோவா முக்கு அருகில் உள்ள முகட்டில் அமைந்திருந்த கோபுரம் (லூக்கா 13:4).

சீனாய் (“புதர்”). **1.** சிவந்த சமுத்திரத்தின் கொம்பு போன்ற வளைவுப் பகுதிக்கும், சூயஸ் வளைகுடாவிற்கும், அகாபா வளைகுடாவுக்கும் இடைப்பட்ட தீபகற்பத்தின் மத்திய பகுதி (யாத். 16:1; அப். 7:30–38). **2.** ஓரேபு என்று அழைக்கப் பட்ட மலை, இங்குதான் இஸ்ரவேலர் பத்துக் கட்டளைகளைப் பெற்றார்கள் (யாத். 19:18). இது சீனாயின் மத்திய பகுதி என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டாலும் எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை. இது யேபேல் மூசா என்று பாரம் பரியமாகச் சொல்லப்படுகிறது. சேர்பால் மலை யாக இருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

சீன் (“புதர்”). **1.** நைல் நதியின் கிழக்கே அமைந்திருந்த நகரம் (எசே. 30:15,16). இது ஒருவேளை பெலுசியமாக இருக்கக்கூடும். இது

சைனி என்று அழைக்கப்படும் இடமாகவும் இருக்கக்கூடும்; தற்போதுள்ள அஸ்வான் என்னும் நைல்நதியின் முதல் அருவியாக இது இருக்கும் என்று தோன்றுகிறது. **2.** சூயஸ் வளைகுடாவுக்கும் சீனாய் பாலைவனத்திற்கும் இடைப்பட்ட பாலைவனப்பகுதி (யாத். 16:1; எண். 33:11,12).

சீன் (Zin) (“பெருக்கம்”), கானானின் தென் எல்லையில் அமைந்திருந்த பாலைவனம். இதுவும் சீன் (Sin) வனாந்தரமும் ஒன்றல்ல. இது பாரான் வனாந்தரத்தில் ஒரு பகுதியாகவோ, காதேஸ் பர்னேயாவைக் கொண்ட வனாந்தரத்தை எல்லையாகக் கொண்டதாகவோ இருக்கலாம் (எண். 20:1; 27:14; யோசுவா 15:1–3).

சுக்கோத் (“கூடாரங்கள்”). **1.** யாக்கோபு வீட்டைக் கட்டிய ஊர் (ஆதி. 33:17; யோசுவா 13:27). பெனியேலுக்கும் சீகேமுக்கும் இடையில் யோர்தானுக்குக் கிழக்கே அமைந்திருந்த ஊர். இப்போது டெய்ர் அல்லா என்று அழைக்கப்படும் இடமாகும். யாப்போக்கு பெருகி தெற்கு நோக்கித் திரும்புகிற இடத்திலிருந்து 1.6 கி. மு (1 மைல்) தொலைவில் உள்ளது. **2.** எகிப்தை விட்டுப் புறப்பட்ட இஸ்ரவேலர் முதலாவது முகாமிட்ட இடம் (யாத். 12:37; 13:20).

சூசன்னா (“லில்லி மலர்”), கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்த பெண்களில் ஒருத்தி. அவரைப் பின்பற்றிச் சென்றவள் (லூக்கா 8:3).

சூசான் (சூசா) (“லில்லிமலர்”), ஏலாம் நாட்டின் தலைநகர், பாபிலோனியர் குடியேறினர், பின்னர் பெர்சியா என்னும் பேரரசின் தலைநகராயிற்று (நெகே. 1:1; தானி. 8:2). இந்த நகரம் சூசா என்றும் அழைக்கப்பட்டது, உலாய் ஆற்றின் கரையில் தற்போதுள்ள சூஷ் என்னும் இடமே இந்த நகரம் இருந்த இடமாகும்.

சூர் (“சுவர்”), இது சீனாய் தீவகற்பத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள பாலைவனமாகும் (ஆதி. 16:7; 25:18). இது எகிப்தின் கிழக்கு எல்லைக்கு வெளியே இருந்தது. பெரும்பாலும் எகிப்திற்கும் பெயர்செபாவுக்கும் இடையிலான வணிகக் கூட்டத்தினர் பயணம் செய்த பாதையாகும்.

செக்கனியா (“யெகோவா பக்கத்து வீட்டுக்காரர்”). **1.** தாவீதின் வீட்டைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் தலைவன் (1 நாளா. 3:21,22). **2,3.** பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து இவ்விருவருடைய வழித்தோன்றல்கள் திரும்பிவந்தார்கள் (எஸ்றா 8:3,5). **4.** சிறையிருப்பின் போது அந்நியப் பெண்ணைத் திருமணம் செய்தவன் (எஸ்றா 10:2). **5.** எருசலேம் மதிற்சுவரைப் பழுதுபார்த்த ஒருவனது தகப்பன் (நெகே. 3:29). **6.** நெகேமியாவை எதிர்த்து செயல்பட்ட ஒருவனுடைய மனைவியின் தகப்பன் (நெகே. 6:18). **7.** சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த ஓர் ஆசாரியன் (நெகே. 12:3). **8.** தாவீதின் காலத்தில் இருந்த ஓர் ஆசாரியன் (1 நாளா. 24:11). **9.** எசேக்கியாவின் நாட்களில் இருந்த ஓர் ஆசாரியன் (2 நாளா. 31:15).

செசரியா (“இராயனின் பட்டணம்”), பாலஸ்தீனத்தில் அமைந்திருந்த ஒரு கடற்கரைப் பட்டணம், ரோமரின் ஆதிக்கத்தில் இருந்த நிலப்பகுதியின் தலைநகரம் (அப். 8:40). மகா ஏரோதினால் கட்டப்பட்ட இந்த நகரம் கர்மேல் மலை அடிவாரத்திலிருந்து 37 கி. மீ (23 மைல்) தொலைவில் இருந்தது. இது செசரியா மாரிடிமா என்றும் அழைக்கப்பட்டது.

செபதேயு (“யெகோவாவின் பரிசு”), கலிலேயாவிலிருந்த மீனவன், சலோமேயின் கணவன், அப்போஸ்தலர்களாகிய யாக்கோபு, யோவான் ஆகியோரின் தகப்பன் (மத். 4:21; 27:56; மாற்கு 1:19,20).

செபுலோன் (“குடியிருப்பு”), யாக்கோபின் பத்தாவது மகன், பன்னிரண்டு கோத்திரத்தாரில் ஒரு கோத்திரம் இவனுடைய பெயரைத் தாங்கியது (ஆதி. 30:20; 49:13; 1 நாளா. 2:1).

செபுலோன் (“குடியிருப்பு”), செபுலோன் கோத்திரத்தாருக்கு அளிக்கப்பட்ட நிலப்பகுதி (யோசுவா 19:27,34). இசக்காருக்கு வடக்கிலும், ஆசேருக்குக் கிழக்கிலும், நப்தலிக்கு தென்மேற்கிலும் இப்பகுதி அமைந்திருந்தது.

செப்பத்தியா (“யெகோவா நியாயாதிபதி”). **1.** அபித்தாள் மூலமாகப் பிறந்த தாவீதின் மகன்

(2 சாமு. 3:4; 1 நாளா. 3:3). **2.** எருசேலமில் குடியிருந்தவன், இவன் மெசுல்லாம் என்பவனது மகன் (1 நாளா. 9:8). **3.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்து கொண்ட மாவீரன் (1 நாளா. 12:5). **4.** சிமியோன் கோத்திரத்துப் பிரபு (1 நாளா. 27:16). **5.** யோசபாத்தின் மகன் (2 நாளா. 21:2). **6.** சிறையிருப்பிலிருந்து திரும்பியவர்களின் மூதாதை (எஸ்றா 2:4; நெகே. 7:9). **7.** சாலொமோனின் ஊழியக்காரன், இவனுடைய வழித்தோன்றல்கள் பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தார்கள் (எஸ்றா 2:57; நெகே. 7:59). **8.** சிறையிருப்பிலிருந்து திரும்பியவர்களின் மூதாதை (எஸ்றா 8:8). இவனும் (6) –ஆம் எண்ணில் குறிப்பிடப்பட்டிருப்பவனும் ஒரே ஆளாக இருக்கக் கூடும். **9.** பேரேசின் வழித்தோன்றல், இவனது வழித்தோன்றல்கள் எருசலேமில் குடியிருந்தார்கள் (நெகே. 11:4). **10.** எசேக்கியாவின் காலத்தில் இருந்தவன், யூதா கோத்திரத்துப் பிரபு (எரே. 38:3).

செப்பனியா (“யெகோவா இருள்; யெகோவா சேமித்து வைத்திருக்கிறார்”). **1.** யோசியாவின் காலத்தில் இருந்த ஒரு தீர்க்கதரிசி (செப். 1:1). **2.** ஒரு லேவியன் அல்லது தீர்க்கதரிசி, சாமுவேலின் மூதாதை (1 நாளா. 6:36). பெரும்பாலும் இவன் ஊரியேலாக இருக்கலாம். **3.** ஆசாரியனாகிய யோசியாவின் மகன் (சக. 6:10,14). **4.** பாபிலோனியா ஆட்சியை எதிர்த்த ஓர் ஆசாரியன் (2 இராஜா. 25:18; எரே. 21:1; 37:3).

செமரியா (சமரியா) (“யெகோவா காக்கிற மனிதன்”). **1.** சிக்லாகில் தாவீதுடன் சேர்ந்து கொண்டவன் (1 நாளா. 12:5). **2.** ரெகொபெயாம் என்னும் அரசனின் மகன் (2 நாளா. 11:19). **3,4.** சிறையிருப்பின்போது அந்நியப் பெண்களைத் திருமணம் செய்தவர்கள் (எஸ்றா 10:32,41).

செமாயா (“யெகோவா புகழ்பெற்றவர்” அல்லது “யெகோவா கேட்கிறார்”). **1.** போர் தொடுப்பதை எதிர்த்து ரெகொபெயாமை எச்சரித்த தீர்க்கதரிசி (1 இராஜா. 12:22; 2 நாளா. 11:2). **2.** தாவீதின் வழித்தோன்றல் (1 நாளா. 3:22). **3.** சிமியோன் வழிவந்த ஒரு குடும்பத்தின் தலைவன் (1 நாளா. 4:37). **4.** யோவேலின் மகன் (1 நாளா. 5:4). **5.** மெராரியின் வழித்தோன்றல் (1 நாளா. 9:14; நெகே. 11:15). **6.** உடன்படிக்கைப் பெட்டியை தேவாலயத்துக்குக் கொண்டுவர உதவியவன் (1 நாளா. 15:8,11). **7.** தாவீதின் நாட்களில் தலைவர்களை நியமிக்க, அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்தவன் (1 நாளா. 24:6). **8.** ஆசரிப்புக் கூடாரத்தின் வாசற் காப்போன் (1 நாளா. 26:4,6,7). **9.** மக்களுக்குப் போதிக்கும்படி யோசபாத்தால் அனுப்பப்பட்டவன் (2 நாளா. 17:8). **10.** தேவாலயத்தைத் தூய்மைப்படுத்த உதவியவன் (2 நாளா. 29:14). **11.** எசேக்கியாவின் நாட்களில் இருந்த ஒரு லேவியன் (2 நாளா. 31:15). **12.** யோசியாவின் நாட்களில் இருந்த ஒரு லேவியன் (2 நாளா. 35:9). **13.** எஸ்றாவுடன் திரும்பிவந்தவன் (எஸ்றா 8:13). **14.** பணிவிடைக்காரரின் பெயர்களை எழுதும்படி இத்தோவிடத்திற்கு அனுப்பப்பட்டவன் (எஸ்றா 8:16). **15,16.** சிறையிருப்பின்போது அந்நியப் பெண்களைத் திருமணம் செய்தவர்கள் (எஸ்றா 10:21,31). **17.** எருசலேம் மதிற்சுவரைப் பழுதுபார்க்க உதவியன் (நெகே. 3:29). **18.** நெகேமியாவைப் பயமுறுத்த முயன்றவன் (நெகே. 6:10). **19.** சிறையிருப்புக்குப் பிறகு தேவனோடு செய்த உடன்படிக்கையை முத்திரையிட்டவன் (நெகே. 10:8). **20.** எருசலேம் மதிற்சுவரைத் தூய்மைப்படுத்த உதவியவன் (நெகே. 12:6). **21.** எருசலேம் மதிற்சுவர் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது அங்கிருந்தவன் (நெகே. 12:42). **22.** உரியா என்னும் தீர்க்கதரிசியின் தகப்பன் (எரே. 26:20). **23.** எரேமியாவைக் கண்டிக்கும்படி ஆசாரியருக்கு ஆலோசனை கொடுத்தவன் (எரே. 29:24,31). **24.** யூதாவின் பிரபுவாக இருந்த ஒருவனது தகப்பன் (எரே. 36:12). **25.** சம்முவா என்னும் பெயரில் (3) –ஆம் எண்ணைக் காண்க. **26.** மதிற்சுவர் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது அதில் பங்கு பெற்ற யூதாவைச் சேர்ந்த பிரபு (நெகே. 12:34). **27.** ஆசாபின் வழியில் தோன்றிய ஒரு லேவியன் (நெகே. 12:35). **28.** செருபாபேலோடு திரும்பிவந்த தலைமை ஆசாரியன் (நெகே. 12:6,7).

செமுவேல் (சாமுவேல்) (“தேவனிடத்தில் கேட்கப்பட்டவன்”). **1.** கானான் நாட்டைப் பங்கிடும்படி நியமிக்கப்பட்டவன் (எண். 34:20). **2.** இசக்கார் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 7:2). **3.** சாமுவேல் என்னும் பெயரைக் காண்க. (தமிழில் எல்லா இடங்களிலும் சாமுவேல் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது).

செராயா (“யெகோவா இளவரசர்; யெகோவா மேலோங்குகிறார்”). **1.** தாவீதின் காலத்து வேதபாரகன் (2 சாமு. 8:17). 2 சாமுவேல் 20:25 –இல் இவன் சேவா என்றும் 1 நாளாகமம் 18:16 –இல் சவிஷா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளான். 1 இராஜாக்கள் 4:3 –இல் இவன் சீசா என்று குறிப்பிடப்பட்டுள்ளான். **2.** எருசலேமில் இருந்த தலைமை ஆசாரியன் (2 இராஜா. 25:18; 1 நாளா. 6:14; எஸ்றா 7:1). **3.** இவனை கெதலியா என்பவன் கல்தேயரைச் சேவிக்கும்படி ஆலோசனை கூறினான் (2 இராஜா. 25:23; எரே. 40:8). **4.** ஒத்னியேலின் சகோதரன் (1 நாளா. 4:13,14). **5.** சிமியோனின் வழித்தோன்றல் (1 நாளா. 4:35). **6.** செருபாபேலுடன் எருசலேமுக்குத் திரும்பி வந்தவன், இவன் ஓர் ஆசாரியன் (எஸ்றா 2:2). **7.** எரேமியாவைப் பிடிக்கும்படி அனுப்பப்பட்ட ஒரு தலைவன் (எரே. 36:26). **8.** பாபிலோனுக்குச் சென்ற யூதாவின் இளவரசன் (எரே. 51:59,61). **9.** இல்க்கியாவின் மகன், இவன் சிறையிருப்பிற்குப் பிறகு எருசலேமில் குடியிருந்தான் (நெகே. 11:11). **10.** பாபிலோனிலிருந்து திரும்பி வந்த ஆசாரியரின் தலைவன் (நெகே. 12:1,12).

செருபாபேல் (“பாபிலோனின் வித்து”). **1.** சிறையிருப்பிலிருந்து திரும்பிய ஒரு மக்கள் கூட்டத்தின் தலைவன் (எஸ்றா 3–5; நெகே. 7:6; 12:1,47). இவன் கிறிஸ்துவின் மூதாதை (மத். 1:12,13). **2.** கிறிஸ்துவின் மூதாதை (லூக்கா 3:27). இவனும் எண் (**1**) –இல் சொல்லப்பட்டவனும் ஒரே ஆளாக இருக்கக்கூடும்.

செர்கியு பவுல். சீப்புரு தீவில் ரோம அதிபதியாய் இருந்தவன், எலிமா என்னும் மாய வித்தைக்காரன் குருடனாக்கப்பட்டதைக் கண்டு மனந்திரும்பியவன் (அப். 13:7).

செலோமீத் (“அமைதியான நிலை”). **1.** தேவ நிந்தனை செய்ததால் வனாந்தரத்தில் கல்லெறிந்து கொல்லப்பட்ட மனிதனுடைய தாய் (லேவி. 24:11). **2.** செருபாபேலின் மகள் (1 நாளா. 3:19). **3.** கெர்சோனின் வழித்தோன்றல் (1 நாளா. 23:9). **4.** லேவி மற்றும் கோகாத் ஆகியோரின் வழித்தோன்றல் (1 நாளா. 23:18). **5.** தாவீதின் நாட்களில் பொக்கிஷங்களின் மேல் அதிகாரியாக நியமிக்கப்பட்டவன் (1 நாளா. 26:25–28). **6.** ரெகொபெயாமின் மகள் (2 நாளா. 11:20). **7.** சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஒரு குடும்பத்தின் மூதாதை (எஸ்றா 8:10). இந்தப் பெயரும் செலோமோத் என்ற பெயரும் வேறு.

சேத் (“இழப்பீடு; செடியின் முளை”), ஆதாம் ஏவாள் ஆகியோரின் மகன், கிறிஸ்துவின் மூதாதை (ஆதி. 4:25,26; 1 நாளா. 1:1; லூக்கா 3:38).

சேபா (“ஆணை”). **1.** தென்மேற்கு அரேபியாவில் இருந்த ஒரு நாடு (1 இராஜா. 10:1–13; 2 நாளா. 9:1–12). இதனுடைய தலைநகரம் மாரிப், இது இப்பொழுது ஏமான் நாட்டின் தலைநகரான சானா என்னும் இடத்திலிருந்து 60 மைல் தொலைவில் இருக்கிறது. **2.** சிமியோன் கோத்திரத்தின் எல்லையில் பெயர்செபாவை அடுத்திருந்த ஓர் ஊர் (யோசுவா 19:2). இது எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை.

சேபா (“ஆணை; உடன்படிக்கை”). **1.** காத் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 5:13). **2.** தாவீதுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, அதன் நிமித்தம் தலை துண்டிக்கப்பட்டவன் (2 சாமு. 20அதி). **3.** ஆபிரகாமின் பேரன் (ஆதி. 25:3; 1 நாளா. 1:32). **4.** சேமின் வழித்தோன்றல் (ஆதி. 10:28; 1 நாளா. 1:22). சிலர் (**5**) ஆம் எண்ணில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களும் (**4**) –இல் சொல்லப்பட்டுள்ளவனும் ஒன்றே என்று கருதுகிறார்கள். சேபா எனப்படுபவர் ஒரு இனத்தார் என்றும் காம் மற்றும் சேம் ஆகியோருடைய வழியில் இந்தப் பெயர் காணப்படுகிறது என்றும், ஆகவே இருவருடைய குடிவழிகளுக்குள்ளாக நெருங்கிய இசைவு இருந்து வந்தது என்றும் அவர்கள்

கருதுகிறார்கள். **5.** காம் கோத்திரத்தில் தோன்றியவன் (ஆதி. 10:7; 1 நாளா. 1:9).

சேம் (“பெயர்”; புகழ்பெற்ற”), நோவாவின் மகன், கிறிஸ்துவின் மூதாதை (ஆதி. 5:32; 6:10; 10:1; லூக்கா 3:36).

சேயார் யாசூப் (“மீதியானவர் ஒருவர் திரும்பி வருகிறார்”), ஏசாயாவின் மகனுக்குக் கொடுக் கப்பட்ட அடையாளப் பெயர் (ஏசாயா 7:3).

சேயீர் (“புயல்”). **1.** அராபா பள்ளத்தாக்கும் மலைப்பகுதியும் சேர்ந்த இடம். இது சாவுக்கட லுக்குத் தெற்கே எலாண்டிக் வளைகுடா வரை செல்கிறது (ஆதி. 14:6; 32:3). ஏதோமிலுள்ள மலைத்தொடர் சேயீர் என்னும் பெயர் பெற்றிருந் தது. அந்த நிலப்பகுதி முழுவதும் இதில் அடங் கும். **2.** கீரியாத் யெயாரீமுக்கு மேற்கே யூதாவின் எல்லையில் இருக்கும் மலையுச்சி இப்பெயர் பெற்றிருந்தது (யோசுவா 15:10).

சேரேத் (“சிற்றாறு”), இந்தச் சிற்றாறு எபி ரெயர் வனாந்தரத்தில் அலைந்து திரிந்ததற்கான முடிவைக் குறிக்கும் அடையாளம் (எண். 21:12; உபா. 2:13,14). இது அர்னோனுக்குத் தெற்கே இருந்தது. வாடி எல்ஹேசா என்பதே இது என்று தோன்றுகிறது.

சேலா (“ஒரு பாறை”). **1.** ஏதோமின் தலை நகர், சாவுக்கடலுக்கும் அகாபா வளைகுடாவுக் கும் இடைப்பட்ட இடத்தில் இவ்வூர் அமைந்திருந் தது (2 இராஜா. 14:7; ஏசாயா 16:1). இது மேடு (petra) என்னும் பெயரையும் பெற்றிருந்தது. **2.** கடல் மட்டத்தை விட 3800 அடி (1160 மீட்டர்) உயரத்தில் இருந்த பாறைப்பகுதி, மேடுகள் நிறைந்த பட்டணமாகும் (நியா. 1:36 – ஆம் வச னத்தோடு ஒப்பிடுக). தற்போது இது உம்மைல் பிசாரா என்று அழைக்கப்படுகிறது.

சேஸ்பாத்சார் (“சாமாஸ் என்னும் கடவுளே, தகப்பனுக்குப் பாதுகாப்பு தாரும்”), யூதா கோத் திரத்துப் பிரபு, இவனுடைய கையில் தேவாலயத் துப் பாத்திரங்களைக் கோரேஸ் மன்னன் கொடுக்கும்படி செய்தான். இவன் செருபாபேல் என்று பலர் கருதுகிறார்கள். வேறு சிலர் இதனை மறுக்கிறார்கள். கோரேசின் ஆட்சிக்காலத்தில் சேஸ்பாத்சார் ஆளுநராக இருந்தான் என்றும், தரியுவின் ஆட்சிக்காலத்தில் செருபாபேல் ஆளு நராக இருந்தான் என்றும் அவர்கள் கூறு கிறார்கள் (எஸ்றா 1:8,11; 5:14,16).

சொரி மணல் (“ஆழமற்ற இடம்”), ஆழமற்ற இரண்டு மணல் திட்டுகள், இவை கர்தேஜ் மற்றும் சிரேனே ஆகிய இடங்களுக்கு இடையே ஆப் பிரிக்கா கடற்கரையை அடுத்த கடல்பகுதிகளா கும் (அப். 27:17). பெரிய மணல் திட்டு சித்ரா வளைகுடா என்றும், சிறிய மணல் திட்டு காபேஸ் வளைகுடா என்றும் இப்பொழுது அழைக்கப் படுகின்றன.

சொஸ்தேனே (“வலிமையுடைய; ஆற்றல் மிக்க”). **1.** கொரிந்துப் பட்டணத்து ஜெபாலயத் தலைவன், கிரேக்கர்களால் அடிக்கப்பட்டான் (அப். 18:17). **2.** கொரிந்து சபைக்கு பவுல் எழுதிய மடலில் இவனுடைய பெயரும் எழுதியவரது பெயரோடு சேர்க்கப்பட்டுள்ளது (1 கொரி. 1:1). இவனும் (1) –ஆம் எண்ணில் குறிப்பிடப்பட்டுள்ள வனும் ஒரே ஆள் என்று கருதப்படுகிறது. மனந் திரும்பிய பிறகு இந்த நிலைக்கு உயர்த்தப்பட்டான்.

சோதோம் (“அவர்களுடைய இரகசியம்”), சமவெளிப் பட்டணங்கள் ஐந்தில் ஒன்று (ஆதி. 10:19; ரோமர் 9:29), இதனுடைய பொல்லாப்பின் காரணமாக அழிக்கப்பட்டது. இது எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை, ஆனால் சாவுக் கடல் இருக்கும் பகுதியாகவே இருக்க வேண்டும்.

தண்ணீர் வாசல் எருசலேமின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த வாசல், இது கீகோன் நீரூற்றுக்கு மேலாக இருந்தது (நெகே. 8:1,3).

தேயு (“பெண்களின் மார்பகத்தைக் குறிக் கும்படியான அராமிய மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது இச்சொல்”) பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவன் (மத். 10:3; மாற்கு 3:18). இவனும் யாக் கோபின் சகோதரனாகிய யூதாஸ் என்பவனும் ஒரே ஆள் (லூக்கா 6:16; யோவான் 14:22; அப். 1:13). இவன் லெபேயு (“இதயம்”) என்றும் பெயர் பெற்றிருந்தான்.

தத்னாய் (“பரிசு”), சமாரியாவிலிருந்த பெர்சியாவின் ஆளுநர், இவன் செருபாபேல் காலத்தவன் (எஸ்றா 5:3; 6:6,13).

தபீத்தாள் (“வனப்புமிக்க மான்”), யோப்பாவைச் சேர்ந்த கிறிஸ்தவப் பெண், இறந்து போன இப்பெண்ணைப் பேதுரு உயிரோடு எழுப்பினார் (அப். 9:36–42). இந்தப் பெயரின் கிரேக்க வடிவம் தொற்காள் என்பதாகும்.

தபேரா (“எரிகிற”), தேவனுக்கு எதிராக இஸ்ரவேலர் முறுமுறுத்து தண்டனை பெற்ற இடம், இது சீனாய் மலையிலிருந்து வடக்கே மூன்று நாள் தொலைவில் இருந்தது (எண். 11:3; உபா. 9:22).

தமஸ்கு (“கோணியில் நிறைந்த இரத்தம்”), சீரியா நாட்டில் முக்கியமான வாணிப நகரம்; எருசலேமிலிருந்து இந்தப் பட்டணத்திற்குச் சென்றபோது பவுல் மனந்திரும்பினான் (ஆதி. 14:15; அப். 9:2).

தரியு (“தன்னைப்பற்றியே அறிவிக்கிறவன்”). **1.** பெல்ஷாத்சார் என்பவனின் அரசைக் கைப்பற்றிய கோரேசு என்னும் பேரரசனுக்குக் கீழாக இருந்த துணை அரசன் (தானி. 5:30 – 6:28); இவன் மேதியனாகிய தரியு என்றும் அறியப்பட்டிருந்தான். **2.** பெர்சியாவின் நான்காவது அரசன் (எஸ்றா 4:5; ஆகாய் 1:1; சக. 1:1); இவன் இஸ்டாபிஸ் என்னும் பெயரால் அறியப்பட்டிருந்தான். **3.** பெர்சியாவையும், பாபிலோனையும் அரசாண்ட தரியு (நோதுஸ்) என்பவன் (நெகே. 12:22).

தர்சு ("சிறகு மாட்டிய") இந்நகரம் சிலிசியாவின் தலைநகரம். பவுல் அப்போஸ்தலனின் பிறப்பிடமும், குடியிருப்பிடமும் ஆகும் (அப். 9:11; 21:29; 22:3). பவுலின் இரண்டாம், மூன்றாம் மிஷனெரிப் பயணத்திலும் இந்நகரை அவர் சந்தித்திருக்கக் கூடும் என ஊகிக்க இடமுண்டு (அப். 15:41; 18:23). சிட்னஸ் (Cydnus) நதியின் செழிப்பான கரையில் இந்நகரம் இருந்தது. இந்நகரம் கல்வி அறிவு நிறைந்த நகரமாகவும், பெயர் பெற்ற வணிகத் தலமாகவும் இருந்தது.

தர்ஷீஸ் (“கடினமான”). **1.** இவன் யாவானின் மகனும், நோவாவின் கொள்ளுப்பேரனும் ஆவான் (ஆதி. 10:4; 1 நாளா. 1:7). கிப்ரால்பருக்கு அருகிலுள்ள ஸ்பெய்ன் நாட்டின் இப்பகுதியில் குடியேறிய மக்களின் பெயராக இது இருக்கக் கூடும். **2.** பெர்சியாவைச் சேர்ந்த ஏழு பிரபுக்களில் ஒருவன் (எஸ்தர் 1:13). **3.** பென்யமீனின் வழித்தோன்றல் (1 நாளா. 7:10).

தர்தான் (பொருள் தெரியவில்லை), அசீரியாவில் உயர்வான பதவியில் இருந்த அதிகாரியின் பதவிப்பெயர், இந்தப் பதவி அரசனுக்கு அடுத்த பதவி என்பதற்கான சான்று இருக்கிறது. வேதத்தில் இரண்டு தர்தான்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள் (2 இராஜா. 18:17, ஏசாயா 20:1).

தல்மனூத்தா (“வாளி”), கலிலேயாக் கடலின் மேற்குக் கரையில் அமைந்திருந்த மீன்பிடிக்கும் பட்டணம் (மாற்கு 8:10).

தல்மாய் (“துணிவுமிக்க; உற்சாகமிக்க”). **1.** காலேபினால் தோற்கடிக்கப்பட்ட மனிதன் அல்லது ஓர் இனம் (எண். 13:22; யோசுவா 15:14; நியா. 1:10). **2.** கேசூரின் அரசன், தாவீதின் மனைவியின் தகப்பன் (2 சாமு. 3:3; 13:37).

தாண் (“நீதிபதி”), தாண் கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் ஊர், பாலஸ்தீனத்தின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்தது (யோசுவா 19:47; நியா. 20:1).

தாதான் (“ஊற்று”), மோசேயையும் ஆரோனையும் கவிழ்க்க முயற்சிசெய்த ரூபன் கோத்திரத்துத் தலைவர்களில் ஒருவன் (எண். 16அதி; 26:9; உபா. 11:6).

தாபேயால் (“தேவன் நல்லவர்”). **1.** இஸ்ரவேல் மற்றும் தமஸ்கு ஆகிய நாட்டின் அரசர்கள் இவனுடைய மகனை யூதாவின் அரசனாக்கத் திட்டமிட்டார்கள் (ஏசாயா 7:6). **2.** எருசலேம் மதிற் சுவரைத் திரும்பக் கட்டியபோது அதைத் தடை செய்ய முயற்சி செய்த பெர்சியா அதிகாரி (எஸ்றா 4:7).

தாபோர் (“தூய்மை”). **1.** யெஸ்ரெயேல் பள்ளத்தாக்கின் வடபகுதியில் உள்ள ஒரு மலை

(நியா. 4:6,12,14; சங். 89:12). இப்பொழுது இது யாபேல் எல் துர் என்று அழைக்கப்படுகிறது. இது நாசரேத்திலிருந்து தென்மேற்கே 8.8 கி.மீ (5.5 மைல்) தொலைவில் உள்ளது. **2.** செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்த நிலப்பகுதியில் இருந்த ஊர், லேவியருக்குக் கொடுக்கப்பட்டது (1 நாளா. 6:77). இது எந்த இடம் என்று சரியாகத் தெரிய வில்லை. ஒருவேளை இது யோசுவா 19:12 –இல் குறிப்பிடப்பட்டுள்ள கிஸ்லோத் தாபோராகவோ கிர்பெட் தபூரலாகவோ இருக்கலாம். இவ்விடம் தாபோருக்கும் நாசரேத்துக்கும் இடையிலுள்ள ஒரு மலையின்மேல் உள்ளது. **3.** பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த கருவாலி மரக்காடு (தமிழில் உள்ளதுபோல சமவெளி அல்ல) (1 சாமு. 10:3).

தாப்பெனேஸ், எகிப்து தேசத்தைச் சேர்ந்த அரசி, பார்வோனின் மனைவி. ஆதாது என்னும் சாலொமோனின் எதிரி ஓடிச்சென்றபோது இவன் அவனுக்கு அடைக்கலம் கொடுத்தான் (1 இராஜா. 11:18–20).

தாமார் (“பனை”). **1.** ஏரின் மனைவி, பேரே சின் தாய், கிறிஸ்துவின் மூதாதை (ஆதி. 38:6,11, 13; ரூத் 4:12; மத். 1:3). **2.** தாவீதின் மகள், அம் னோன் இவளைப் பலாத்காரம் செய்தான் (2 சாமு. 13:1–32). **3.** அப்சலோமின் மகள் (2 சாமு. 14:27).

தாவீது (“அன்பிற்குரியவன்”), மிகப்பெரிய அரசியல் மேதை, தளபதி, இஸ்ரவேலின் அரசன். பிரிந்துபோன இஸ்ரவேல் கோத்திரங்களை ஒன்று கூட்டியவன், தேவாலயம் கட்டுவதற்குப் பல ஆயத்தங்களைச் செய்தவன். இவனது மகன் சாலொமோனே அதனைக் கட்டினான் (1 சாமு. 16– 1 இராஜா. 2:11).

தாவீதின் நகரம். 1. எபூசியரின் நகரமாகிய சீயோன் தாவீதின் மனிதர்களால் பிடிக்கப்பட் டது. தாவீது அதனை அரசாட்சி செலுத்தும் நகரமாக மாற்றினான். அதற்கு எருசலேம் என் னும் புதிய பெயர் சூட்டப்பட்டது (2 சாமு. 5:6–9; 1 நாளா. 11:5,7). **2.** பெத்லகேம் என்னும் தலைப் பைக் காண்க.

தானியேல் (“தேவன் என் நீதிபதி”). **1.** நேபு காத்நேச்சார், கோரேசு ஆகியோருடைய காலத் திலிருந்த ஒரு தீர்க்கதரிசி. இவனுடைய ஞான மும் விசுவாசமும் நேபுகாத்நேச்சார் மற்றும் தரியு ஆகியோருக்குக் கீழாக மிக மேன்மையான நிலையை இவனுக்கு ஏற்படுத்தித் தந்தன (தானி. 1:1–6; 2; 6:1,2). **2.** தாவீதின் குமாரரில் ஒருவன் (1 நாளா. 3:1), கீலேயாப் என்னும் தலைப்பைக் காண்க. **3.** இத்தாமாரின் வழிவந்த ஒரு லேவி யன் (எஸ்றா 8:2; நெகே. 10:6).

திகிலாத் பிலேசர் (பாபிலோனியப் பெயர் – துகுல்தி – அபில் – எஸ்ஸர்ரா – “அஸ்ஸர்ராவின் மகனிடத்தில் என் நம்பிக்கை இருக்கிறது”), இஸ்ரவேலை பெக்கா ஆண்டபோது நப்தலியின் பகுதியின் மேல் போர் தொடுத்தவன், இவன் அசீரியாவின் அரசன். பாலஸ்தீனத்தின் வட பகுதியைத் தோற்கடித்து நப்தலி பகுதியிலிருந்து பெரும்பாலான மக்களை நாடுகடத்தியவன் (2 இராஜா. 15:29; 16:7,10; 1 நாளா. 5:6,26). இவனு டைய இயற்பெயர் பூல் என்பதாகும் (2 இராஜா. 15:19). இவனுக்கு இரண்டு பெயர்கள் இருந்தன என்பதை உணர்ந்தவர்களாக நாம் 1 நாளாகமம் 5:26 –ஆம் வசனத்தை இவ்வாறு மொழி பெயர்க்க வேண்டும், “... தேவன் அசீரியா ராஜா வாகிய பூலின் ஆவியை, அதாவது திகிலாத் பிலேசர் என்னும் அசீரியாவின் ராஜாவின் ஆவியை எழுப்பினதாலே....” (உம் விகுதியை இங்கு பயன்படுத்தக் கூடாது).

திதிமு. தோமா என்னும் தலைப்பைக் காண்க.

திபேரியா (“நல்ல பார்வை”), கலிலேயாக் கடலின் மேற்குக் கரையில் அமைந்திருந்த பட்ட ணம் (யோவான் 6:1; 21:1).

திபேரிராயன் (“திபேர் என்னும் ஆற்றின் மகன்”), ரோமப் பேரரசின் மூன்றாவது பேரரசன் (லூக்கா 3:1).

திப்னி (“புத்திமான்”), உம்ரி இஸ்ரவேலின் அரசனாவதை எதிர்த்துப் போட்டியிட்டவன் (1 இராஜா. 16:21,22).

தியத்தீரா (“உழைப்பாகிய பலி”), பெர்கமு வுக்கும் சர்தைக்கும் இடையேயிருந்த ஒரு பட்ட

ணம் (அப். 16:14; வெளி. 2:18–29). இது ஆசியா மைனர் நிலப்பகுதியில் லீதியா மாகாணத்தில் இருந்தது.

தியொனீசியு (“கிரேக்க மதுக் கடவுள்”), அத்தேனே நகர உச்சநீதிமன்றத்தில் ஓர் உறுப்பினன், பவுலால் மனமாற்றம் பெற்றவன் (அப். 17:34).

திறன்னு (“கொடுங்கோலன்”), பேச்சுத்திறம் மிக்க கிரேக்கன் அல்லது யூத போதகன், எபேசு பட்டணத்திலிருந்த இவனுடைய பள்ளியில் பவுல் கற்பித்து வந்தார் (அப். 19:9).

தீகிக்கு (“நற்பேறு பெற்றவன்”), பவுலின் சீடன், அவருடைய மடலை எடுத்துச் சென்றவன் (அப். 20:4; எபே. 6:21; 2 தீமோ. 4:12).

தீத்து (“இனிமையான”), கிரேக்க நாட்டைச் சேர்ந்த இவன் மனந்திரும்பி, பின்னர் கிரேத்தா தீவுக்கு ஊழியம் செய்யும்படி அனுப்பப்பட்டான் (2 கொரி. 2:13; கலா. 2:1; தீத்து 1:1).

தீமோத்தேயு (“தேவனால் புகழப்பட்டவன்”), பவுலின் மூலமாக மனந்திரும்பிய இளைஞன், அவரது நண்பன், அப்போஸ்தலனோடு நெடுந் தொலைவு பயணம் செய்தவன். இவன் யூதப் பெண்மணியாகிய ஐனிக்கேயாளுக்கும் கிரேக்கத் தகப்பனுக்கும் பிறந்தவன், லீஸ்திராவைச் சேர்ந்தவன் (அப். 16:1; 17:14,15; 1 தீமோ. 1:2,18; 6:20).

தீமோன் (“மதிப்புக்குரிய”), உதவிக்காரர் எழுவரில் ஒருவன் (அப். 6:1–6).

தீரு (“பாறை”), பெனிக்கே கடற்கரையில் இருந்த பட்டணம், வணிக முக்கியத்துவம் வாய்ந்தது (யோசுவா 19:29; 2 சாமு. 5:11; எரே. 25:22). அக்கோ மற்றும் சீதோன் ஆகிய பட்டணங்களின் இடையே சரிபாதி தொலைவில் இருந்தது.

தீனாள் (“நியாயம்”), யாக்கோபுக்கு லேயாளினிடத்தில் பிறந்தவள், சீகேம் என்பவனால் பலாத்காரம் பண்ணப்பட்டாள்; இதன் காரணமாக இரு இனத்தாரிடையே போர் ஏற்பட்டது (ஆதி. 34).

துருசில்லாள் (“பனியால் நனைக்கப்பட்ட”), யூதப் பெண்மணி, ஏரோது அக்கிரிப்பா (ஒன்று) என்பவனின் மகளும், பேலிக்ஸ் என்பவனின் மனைவியுமானவள். இவளும் பேலிக்சும் பவுல் ஆற்றிய ஆற்றல் மிக்க செய்தியைக் கேட்டார்கள் (அப். 24:24,25).

துரோப்பீமு (“வளர்ப்புப் பிள்ளை”), மனமாற்றம் பெற்ற கிறிஸ்தவன், பின்னர் பவுலோடு பயணம் செய்தவன் (அப். 20:4; 21:29; 2 தீமோ. 4:20).

துரோவா (“ஊடுருவிச் சென்றது”), மீசியாவின் கடற்கரையில் அமைந்திருந்த முக்கியமான பட்டணம் (அப். 16:8; 2 தீமோ. 4:13). இது ஆசியா மைனரின் வட பகுதியில் இருந்தது. அலெக்சந்திரியா என்றும் அழைக்கப்பட்டது.

தூரா (“கோட்டை”), நேபுகார்நேச்சார் என்னும் அரசன் பொற்சிலையை நிறுவிய பாபிலோனியச் சமவெளி (தானி. 3:1).

தெக்கப்போலி (“பத்துப்பட்டணங்கள்”), எஸ்தரேலான் மற்றும் யோர்தானின் மேற்புற பள்ளத்தாக்கில் இருந்த பத்துப்பட்டணங்களின் ஒருங்கிணைப்பு, இது ரோம ஆதிக்கத்தில் இருந்த ஒரு மாவட்டம் (மத். 4:25).

தெசலோனிக்கே (“கடலில் வெற்றி”), மக்கெதோனியா கடற்கரையில் தெர்மாயிக் வளைகுடாவின் முனையில் அமைந்திருந்த நகரம் (அப். 17:1,11,13; 27:2). தற்போது இது சலோனிக்கா என்று அழைக்கப்படுகிறது.

தெபோராள் (“தேனீ”) **1.** ரெபேக்காளின் தாதி (ஆதி. 24:59; 35:8). **2.** யாபீன், சிசெரா ஆகியோரிடமிருந்து தனது மக்களைக் காப்பாற்றி மீட்க உதவியவள், இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாகவும் நியாயாதிபதியாகவும் இருந்தவள் (நியா. 4:4 – 14:5).

தெயோப்பிலு (“தேவனால் அன்புகூரப்பட்டவன்”), பெரும்பாலும் ரோம அரசு அதிகாரியாக இருந்திருக்கக்கூடும். தனது நற்செய்தி நூலையும், அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலையும் லூக்கா இவனுக்கே எழுதினான் (லூக்கா 1:1; அப். 1:1).

தெர்தியு (“மூன்றாவது”), ரோமருக்குப் பவுல் எழுதிய மடல் இவனிடம் கூறப்பட்டு எழுதப்பட்

டது (ரோமர் 16:22). இவன் சீலா என்று கருது வோரும் உளர்.

தெர்த்துல்லு (“மூன்றாவது”), பவுலுக்கு எதிரான வழக்கைச் சாதுரியமாக பேலிக்ஸிடம் எடுத்துரைத்து வாதாட யூதர்களால் நியமிக்கப் பட்டவன் (அப். 24:1–8).

தெர்பை (“கூரிய கொடுக்கு”), ஆசியா மைன ரின் தென் கிழக்குப் பகுதியிலிருந்த பட்டணம், லீஸ்திராவில் கல்லால் எறியப்பட்ட பிறகு பவுல் அடைக்கலம் பெற்ற இடம் (அப். 14:6–20).

தெலாயா (“யெகோவா உயர்த்தியிருக்கிறார்; யெகோவா மீட்பர்”). **1.** தாவீதின் ஆசாரியரில் ஒருவன் (1 நாளா. 24:18). **2.** எரேமியாவின் தீர்க்க தரிசனங்கள் அடங்கிய சுருளை எரிக்க வேண் டாம் என்று யோயாக்கீம் அரசனிடம் முறையிட்ட ஒரு பிரபு (எரே. 36:12,25).

தெலீலாள் (“பேராவல்; கவர்ச்சிமிக்கவள்”), சிம்சோனின் வலிமையின் ஆதாரம் என்ன வென்று கண்டுபிடிப்பதற்குப் பெலிஸ்தியரால் கூலி கொடுக்கப்பட்டவள் (நியா. 16 அதி).

தேமேத்திரியு (“தெமேத்திரக்கு உரியவன்”). **1.** யோவானால் புகழப்பட்ட கிறிஸ்தவன் (3 யோவான் 12). **2.** எபேசுப் பட்டணத்தில் பவுலுக்கு எதிரான கிளர்ச்சியைத் தலைமையேற்று நடத்தி யவன் (அப். 19:24–41).

தேராகு (“வளைவு; கால அளவு”), ஆபிர காமின் தகப்பன், கிறிஸ்துவின் மூதாதை (ஆதி. 11:27–32; லூக்கா 3:34).

தேவாலயம். இஸ்ரவேலர் இங்குதான் தேவனை ஆராதித்து, பலிகளைச் செலுத்தினார் கள். மூன்று தேவாலயங்கள் குறிப்பிடப்பட்டுள் ளன சாலொமோன், செருபாபேல், ஏரோது கட்டி யவை.

தொபியா (“யெகோவா நல்லவர்”). **1.** நியா யப்பிரமாணத்தைப் போதிக்கும்படி யோசபாத் தால் அனுப்பப்பட்டவன் (2 நாளா. 17:8). **2.** இவனு டைய வழித்தோன்றல்கள் பூர்வோத்தரத்தை மறந்துபோனார்கள் (எஸ்றா 2:60; நெகே. 7:62). **3.** சன்பல்லாத்தின் ஊழியக்காரனாகிய இவன் நெகேமியாவை எதிர்த்து நின்றான் (நெகே. 2:10–20). **4.** பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பிய ஒரு தலைவன் (சக. 6:10,14).

தொற்காள். தபீத்தாள் என்னும் தலைப்பைக் காண்க.

தோத்தான் (“இரண்டு கிணறுகள்”), யோர் தான் ஆற்றிற்கு மேற்கில், சமாரியாவுக்கு வட கிழக்கில் கில்போவா மலையருகே மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பட்டணம். இங்கு தான் யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டான் (ஆதி. 37:17; 2 இராஜா. 6:13).

தோப்பேத் (“முரசு”), இன்னோம் என்னும் அரசதோட்டத்தில் ஒரு பகுதியாக ஒரு காலத்தில் இருந்தது; பின்னர் எருசலேம் மக்கள் இங்கு தங்களுடைய பிள்ளைகளைப் பலியிட்டார்கள் (ஏசா. 30:33; எரே. 19:6,11–14; 2 இராஜா. 23:10).

தோமா (“இரட்டை”), இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவர். கிறிஸ்து மரித்தோரிலி ருந்து உயிரோடு எழுந்தபோது இவன் நம்பிக்கை யற்றவனாயிருந்தார் (மத். 10:3; மாற்கு 3:18; யோவான் 20:24–29). இவருடைய அராமிக் பெயர் கிரேக்க மொழியில் திதிமு எனப்படும்.

நகோமி (“இனிமை; என் மகிழ்ச்சி”), ரூத்தின் மாமி (ரூத் 1:2 –4:17).

நப்தலி (“மல்யுத்தம் பண்ணுகிற”), யாக்கோ பின் ஆறாவது மகன் (ஆதி. 30:7,8). இவனுடைய வழித்தோன்றல்கள் பன்னிரு கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தார் ஆனார்கள்.

நப்தலி (“போராடுகிற”), நப்தலி கோத்திரத் தாருக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பகுதி. பாலஸ்தீனத் தின் வடபகுதியான மலைப்பிரதேசம் (யோசுவா 19:32–39; மத். 4:13). இதன் கிழக்கு யோர்தான் ஆற்றின் மேற்புறம் மற்றும் கலிலேயாக் கடல், மேற்கு செபுலோன், ஆசேர் ஆகியோரின் நிலப் பகுதிகள் எல்லைகளாயிருந்தன.

நாகமான் (“இனிமை”). **1.** யோர்தான் ஆற் றில் குளித்துத் தனது தொழுநோய் குணமாக்கப் பட்ட சீரிய நாட்டுத் தளபதி (2 இராஜா. 5; லூக்கா 4:27). **2.** பென்யமீனின் பேரன் (எண். 26:38,40).

3. பென்யமீனின் மகன், இவன் மூலமாக ஒரு தனி சந்ததி தோன்றியது (ஆதி. 46:21).

நாகாஸ் (“தேவ வாக்கு; பாம்பு”). **1.** அபிகாயில், செருயா ஆகியோரின் தகப்பன் (2 சாமு. 17:25). **2.** சவுலால் தோற்கடிக்கப்பட்ட அம்மோனியரின் அரசன் (1 சாமு. 11:1,2; 12:12). **3.** அம்மோனியரின் மற்றொரு அரசன் (2 சாமு. 10:2; 17:27; 1 நாளா. 19:1,2).

நாகூம் (“ஆறுதலளிப்பவர்”), பிற்காலத்துத் தீர்க்கதரிசி, நினிவேவுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் உரைத்தவன் (நாகூம் 1:1).

நாகோர் (“துளையிடுபவர்”). **1.** ஆபிரகாமின் பாட்டன், கிறிஸ்துவின் மூதாதை (ஆதி. 11:22–25; லூக்கா 3:34). **2.** ஆபிரகாமின் சகோதரன் (ஆதி. 11:26,27,29; 22:20,23; யோசுவா 24:2).

நாசரேத் (“பரிசுத்தமாக்கப்பட்ட”), யெஸ்ரியேல் சமவெளியின் வடக்கே, கலிலேயாவின் கீழ்ப்பகுதியில் இயேசு வாழ்ந்த ஊர் (மத். 4:13; மாற்கு 1:9). இது திபேரியாக் கடலிலிருந்து தென்மேற்கே 8 கி. மீ (5 மைல்) தொலைவில் அமைந்திருந்தது. மேலும் இது டெல்ஹூம் என்று தற்போது அழைக்கப்படும் கப்பர்நகூமிலிருந்து 141.6 கி.மீ (88 மைல்) வடக்கிலும் இருந்தது.

நாதாப் (“தாராளமான”). **1.** ஆரோனின் முதல் மகன். தேவனுக்கு முன்பாக “அந்நிய அக்கினியைக்” கொண்டு சென்றதால் சாகடிக்கப்பட்டவன் (யாத். 6:23; லேவி. 10:1–3). **2.** யெர்மெயேலின் வழித்தோன்றல் (1 நாளா. 2:28,30). **3.** கிபியோனின் சகோதரன் (1 நாளா. 8:30). **4.** யெரொபெயாமின் மகன்; இவன் இஸ்ரவேலை இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தான் (1 இராஜா. 15:25–31).

நாத்தான் (“அன்பளிப்பு”). **1.** தீர்க்கதரிசியும், தாவீதின் அரசாங்க ஆலோசகனும் ஆவான் (2 சாமு. 7:2–17; 12:1–25). **2.** தாவீதின் மகனும் கிறிஸ்துவின் மூதாதையும் ஆவான் (2 சாமு. 5:14; 1 நாளா. 3:5; லூக்கா 3:31). **3.** ஈகாலின் தகப்பன் (2 சாமு. 23:36). **4.** யெர்மெயேலின் வழித்தோன்றல் (1 நாளா. 2:36). **5.** எஸ்றாவுடன் இருந்தவன் (எஸ்றா 8:16). **6.** அந்நியப் பெண்களைத் திருமணம் செய்தவர்களில் ஒருவன் (எஸ்றா 10:39). **7.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனாகிய யோவேலின் சகோதரன் (1 நாளா. 11:38). **8.** சாலொமோனின் தலைமை அதிகாரி ஒருவனது தகப்பன் (1 இராஜா. 4:5). **9.** இஸ்ரேலின் தலைவர்களில் ஒருவன் (சக. 12:12).

நாத்தான்வேல் (“தேவன் கொடுத்தார்”), தமது சீடனாக விளங்கும்படி கிறிஸ்துவால் அழைக்கப்பட்ட கலிலேயன். இவன் பர்த்தொலொமேயு என்னும் மறுபெயர் உடையவன் என்று கருதப்படுகிறது (யோவான் 1:45–49; 21:2; அப். 1:13). பர்த்தொலொமேயு என்னும் பெயரைக் காண்க.

நாபால் (“முட்டாள்; கெடுநோக்குள்ள”), கர்மேல் ஊரைச் சேர்ந்த செல்வந்தன், தாவீது மற்றும் அவனுடைய மனிதர்கள் யாவருக்கு உணவளிக்க மறுத்தவன் (1 சாமு. 25).

நாபோத் (“குருத்து”), ஒரு திராட்சைத் தோட்டத்தின் உரிமையாளன், அதனைக் கைப்பற்றும் பொருட்டு யெசபேல் என்பவளால் கொல்லப்பட்டவன் (1 இராஜ. 21:1–18).

நாமாள் (“இனிமையான”). **1.** லாமேக்கு, சில்லாள் ஆகியோருடைய மகள் (ஆதி. 4:22). **2.** சாலொமோனின் மனைவி, ரெகொபெயாமின் தாய் (1 இராஜா. 14:21; 2 நாளா. 12:13).

நாயீன் (“அழகு”), கலிலேயாவில் இருந்த ஒரு சிற்றூர், இங்கு ஒரு விதவையின் மகனைக் கிறிஸ்து உயிரோடு எழுப்பினார் (லூக்கா 7:11). தாபோர் மலையிலிருந்து தெற்கே 3.2 கி.மீ (2 மைல்) தொலைவில் கலிலேயாக் கடலுக்குத் தென்மேற்கே அமைந்திருந்தது.

நாயோத் (“குடியிருப்பு”), ராமாவிலுள்ள ஓர் இடம், அங்கு சாமுவேலைச் சுற்றிலும் தீர்க்கதரிசிகள் கூடிவந்தார்கள் (1 சாமு. 19:18–23; 20:1). இது எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை. ராமா எண் 2–ஐக் காணவும்.

நிக்கானோர் (“வெற்றிபெறுபவர்”), ஏழை களுக்கு ஊழியம் செய்யும்படி தெரிந்துகொள்ளப் பட்ட எழுவரில் ஒருவன் (அப். 6:5).

நிக்கொதேமு (“குற்றமில்லாத இரத்தம்”), யூதரின் அதிகாரியும் பரிசேயனுமாகிய இவன் கிறிஸ்து அடக்கம்பண்ணப்படுவதற்கு உதவி புரிந்தவன் (யோவான் 3:1–15; 7:50–52; 19:39–42).

நிக்கொலா (“மக்களை வென்றவன்”), ஏழை களுக்கு ஊழியம் செய்யும்படி தெரிந்துகொள்ளப் பட்ட எழுவரில் ஒருவன் (அப். 6:5).

நிம்பரா, பெத்நிம்ரா என்னும் பெயரைக் காண்க.

நிம்ரோத் (“வீரமுள்ள; பலமுள்ள”), கூஷின் மகன் (ஆதி. 10:8,9; 1 நாளா. 1:10). இவனுடைய அரசில் பாபேல், ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் இருந்தன. இவையாவும் சிநெயார் நாட்டைச் சேர்ந்தவை; இவையில்லாமல் அசீரியா வையும் இவன் ஆண்டான்.

நினிவே (பொருள் தெரியவில்லை), அசீரியா வின் தலைநகர் (நாகூம் 1:1; 3:1; லூக்கா 11:32; செப். 2:13). டைகிரிஸ் ஆற்றின் கிழக்கே உள்ள நிலப்பகுதி. இது இப்பொழுது பாழடைந்துபோய் விட்டது, டெல் குயின்ஜிக், டெல் நெபியூனஸ் என்று அழைக்கப்படுகிறது.

நூன் (“தொடர்ச்சி; மீன்”). 1. எப்பிராயீம் வழித்தோன்றல் (1 நாளா. 7:27); ஒருவேளை இவனும் 2 –ஆவது எண்ணில் குறிப்பிடப்பட் டுள்ளவனும் ஒரே ஆளாக இருக்கலாம். 2. யோசு வாவின் தகப்பன் (யாத். 33:11; 1 இராஜா. 16:34).

நெகேமியா (“யெகோவா என் ஆறுதல்”). 1. எருசலேம் ஆளுநர்; இடிந்துபோன எருசேலம் மதிற்சுவரை திரும்பக் கட்ட உதவியவன் (நெகே. 1:1; 8:9; 12:47). 2. சிறையிருப்பிலிருந்து திரும்பிய தலைவர்களில் ஒருவன் (எஸ்றா 2:2; நெகே. 7:6). 3. எருசலேம் மதிற்சுவரைப் பழுது பார்த்தவன் (நெகே. 3:16).

நெதனயேல் (“தேவன் தருகிறார்”). 1. கானான் நாட்டை வேவு பார்க்கும்படி மோசே அனுப்பியவர் களில் இசக்கார் கோத்திரத்தைச் சேர்ந்தவன் (எண். 1:8; 2:5; 7:18,23; 10:15). 2. ஈசாயின் நாலா வது மகன் (1 நாளா. 2:14). 3. உடன்படிக்கைப் பெட்டி கொண்டுவரப்பட்டபோது எக்காளம் முழங் கியவர்களில் ஒருவன் (1 நாளா. 15:24). 4. ஒரு லேவியன் (1 நாளா. 24:6). 5. ஓபேத் ஏதோமின் மகன், ஆசரிப்புக் கூடாரத்தின் வாயிற்காலவன் (1 நாளா. 26:5). 6. மக்களுக்குக் கற்பிக்கும்படி யோசபாத் நியமித்த ஒரு தலைவன் (2 நாளா. 17:7). 7. யோசியாவின் காலத்தில் வாழ்ந்த ஒரு லேவியன் (2 நாளா. 35:9). 8. அந்நியப் பெண்ணை மணந்த ஓர் ஆசாரியன் (எஸ்றா 10:22). 9. யொயகீமின் நாட்களில் இருந்த ஓர் ஆசாரியன் (நெகே. 12:21). 10. சுத்திகரிப்பின் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இசைக் கலை ஞனாகிய லேவியன் (நெகே. 12:36).

நெப்பேக் (“குருத்து”). 1. கோராகின் உடன் பிறந்தவன் (யாத். 6:21). 2. தாவீதின் மகன் (2 சாமு. 5:15; 1 நாளா. 3:7; 14:6).

நேபுகாத்நேச்சார் (பாபிலோனிய மொழியில் நாபூர் குதிரி உட்சூர் – நாபு என்னும் கடவுள் எனது எல்லைக் கற்களைக் காப்பாற்றட்டும்), பாபிலோனிய வல்லரசின் பேரரசன், இவன் எருச லேமை மூன்று முறை கைப்பற்றினான், யூதா நாட்டாரைச் சிறைப்பிடித்துக் கொண்டுபோனான் (2 இராஜா. 24:1,10,11; 25:1,8,22; தானி. 1–4).

நேபோ (“தீர்க்கதரிசனங்கள்”). 1. இந்த மலையிலிருந்துதான் மோசே வாக்குறுதி பண் ணப்பட்ட நாட்டைக் கண்டான் (உபா. 32:49; 34:1). இது அபாரீம் என்னும் மலைத்தொடரில் யோர்தானுக்குக் கிழக்கே, எரிகோவுக்கு எதிர்ப் புறமாய் இருந்த மலைச்சிகரமாகும். பெரும்பாலும் இது தற்போது யேபேல் என்நேபா என்று அழைக் கப்படும் இடமாக இருக்கக்கூடும். இது யோர் தான் நதியின் கழிமுகத்திலிருந்து 12.9 கி. மீ (8 மைல்) தொலைவில் கிழக்கே இருக்கிறது. வானம் மேகமூட்டமின்றி தெளிவாக இருக்கும் நாளில் இம்மலையுச்சியிலிருந்து பாலஸ்தீனம் முழுவதையும் காணவியலும். 2. ரூபன் கோத் திரத்தைச் சேர்ந்த ஊர். இது மீண்டும் மோவா பியரால் பிடிக்கப்பட்டது (எண். 32:3,38; 33:47). இது தற்போது கிர்பெட் எல்மெக்காயெட் என்று

அழைக்கப்படும் இடமாக இருக்கக் கூடும். இது நேபோ மலைக்குத் தெற்கில் உள்ளது. **3.** யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஊர் (எஸ்றா 2:29; நெகே. 7:33), பெரும்பாலும் இது லித்தாவுக்கு அருகில் உள்ள பேத் நுயூப் என்னும் இடமாக இருக்கக்கூடும்.

நேர் (“வெளிச்சம்”). **1.** சவுலின் சிறிய தகப்பன், அப்னேரின் தகப்பன் (1 சாமு. 14:50). **2.** சவுலின் பாட்டன் (1 நாளா. 8:33; 9:39). இந்த உறவுமுறைகள் அவ்வளவு தெளிவாக இல்லை. அப்னேர் என்பவன் சவுலின் சிறிய தகப்பனாக இருக்கலாம். அவ்வாறெனில் நேர் (1), (2) இருவரும் ஒரே ஆளாக இருக்க வேண்டும். இவன் அபியேல் என்றும் அழைக்கப்பட்டுள்ளான் (1 சாமு. 9:1). ஒருவேளை நேர் (2) அபியேல் என்பவனுக்கு நேர் (1) மற்றும் சவுலின் தகப்பனாகிய கீஸ் என்னும் குமாரர்கள் இருந்திருப்பார்கள்.

நைல் (“கருநீலம்”), எகிப்து நாட்டின் மிகப் பெரிய ஆறு, உலகத்திலுள்ள ஆறுகளில் மிகவும் நீண்டது. இது திருமறையில் வெறுமனே நதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி. 13:1; யாத். 2:3; 7:21). நைல் நதி 6669.3 கி.மீ (4145 மைல்) நீளமுள்ளது.

நோத் (“நாடோடி”), ஆபேலைக் கொன்ற பின் காயீன் ஓடிப்போன நிலப்பகுதி, ஏதேனுக்குக் கிழக்கே இருந்த இப்பகுதி எந்த இடம் என்று தெரியவில்லை (ஆதி. 4:16). சிலர் இது சீன நாடாக இருக்குமென்றே எண்ணுகிறார்கள். ஆனால் அது வெறும் ஊகமேயாகும்.

நோப். மெம்பிஸ் என்னும் பெயரைக் காண்க.

நோவா (“இளைப்பாறுதல்”), லாமேக்கின் மகன், பேழையைக் கட்டும்படி தெரிந்துகொள்ளப் பட்டவன். இவனுடைய குடும்பம் மட்டுமே பெரு வெள்ளத்தில் காப்பாற்றப்பட்டார்கள் (ஆதி. 5: 28–32; 6:8–22; 7–10). கிறிஸ்துவின் மூதாதை (லூக்கா 3:36).

பட்டணங்கள். அடைக்கலப் பட்டணங்கள், சமவெளிப் பட்டணங்கள், உப்புப் பட்டணம், பண்டசாலைப் பட்டணங்கள் காண்க.

பண்டசாலைப் பட்டணங்கள் (கஜானா). பண்டைய காலத்தில் தங்களுடைய பொக்கிஷங் களையும், பத்தில் ஒரு பங்கையும் சேர்த்து வைக் கக் கட்டப்பட்ட பட்டணங்கள் (யாத். 1:11; எஸ்றா 5:17).

பதான் அராம் (பதான்) (“அராமின் சம வெளி”), மெசொப்பொத்தாமியாவின் சமவெளி நிலப்பகுதி; இது லீபனோன் மலையில் தொடங்கி ஐபிராத்து ஆற்றின் அப்புறம் வரை விரிந்த பகுதி; மேலும் இது வடக்கே தாருஸ் மலையிலிருந்து தெற்கே தமஸ்கு வரையிலும் விரிந்த பகுதியாகும் (ஆதி. 25:20; 28:2; 31:18). ஆதியாகமம் 48:7 – இல் இது பதான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்சுவாள் (“செல்வச் செழிப்பின் மகள்”). **1.** பத்சேபாளின் மறுபெயர். **2.** யூதாவின் மனைவி. KJV மொழிபெயர்ப்பில் ஆதியாகமம் 38:2 – மற்றும் 1 நாளாகமம் 2:3 ஆகிய இடங்களில் இவளுடைய பெயர் சூவாவின் மகள் என்று தவ றாகச் சொல்லப்பட்டுள்ளது, பத்சுவாள் என்பது ஒரு பெண்ணின் பெயர்.

பத்சேபாள் (“ஏழாவது மகள், ஆணையின் மகள்”), ஏத்தியனாகிய உரியாவின் அழகிய மனைவி, பின்னர் தாவீதுக்கு மனைவியானாள் (2 சாமு. 11:3; 12:24; 1 இராஜா. 1:11– 2:19). இவள் சாலொமோனின் தாயும், கிறிஸ்துவின் முன்னோர் களில் ஒருத்தியுமாவாள் (மத். 1:6). இவள் 1 நாளா கமம் 3:5 –இல் பத்சுவாள் என்று குறிப்பிடப் பட்டுள்ளாள்.

பத்மு (“சாவுக்குட்பட்ட”), தரிசு நிலமா யிருந்த ஒரு தீவு, யோவான் இந்தத் தீவுக்கு நாடுகடத்தப்பட்டார் (வெளி. 1:9). தற்போது கிரேக்க நாட்டைச் சேர்ந்த தீவுக் கூட்டத்திலுள்ள பதினோ என்றழைக்கப்படும் தீவாகும்.

பம்பிலியா (“எல்லாக் கோத்திரங்களாலும் உருவாக்கப்பட்ட ஒரு நாடு”), ஆசியா மைனர் நிலப்பகுதியில் ஒரு கடல்கரைப் பகுதி; இதனு டைய முக்கியமான நகரம் பெர்கே என்பதாகும் (அப். 13:13; 14:24; 27:5).

பரதீசு (“மகிழ்வுறும் இடம்; பூங்கா”), தேவன் குடியிருக்கும் இடத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள

அடையாளப் பெயர் (2 கொரி. 12:3); நீதிமான் களின் குடியிருப்பு (லூக்கா 23:43; வெளி. 2:7).

பரபாஸ் (''தகப்பனுடைய மகன்''), கிறிஸ்து வுக்குப் பதிலாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று மக்களால் பொந்தியு பிலாத்துவினிடம் கேட்டுக்கொள்ளப்பட்டவன் (மத். 27:17,20,21, 26; மாற்கு15:7).

பர், எபிரெய மொழியில் ''பென்'', (மகன்) என் பதற்கான அராமியச் சொல் ''பர்''என்பதாகும். ''பர்'' அல்லது ''பென்'' என்னும் அடைமொழி அவ்வப்போது பெயர்களுக்கு முன் சேர்க்கப்படு கிறது. இன்னாருடைய மகன் என்னும் பொருளை அது தருகிறது. பேதுரு பர்யோனா (யோனாவின் மகன்) என்று அழைக்கப்பட்டான். ஏனெனில் அவனுடைய தகப்பனின் பெயர் யோனா (மத். 16:17). ஒருவேளை நாத்தான்வேல் பர்தொ லொமேயுவாக (தொலோமேயுவின் மகன்) இருப் பான் என்று கருதப்படுகிறது. ஏனெனில் அவனு டைய தகப்பனின் பெயர் தொலொமேயு என்ப தாகும்.

பர்சபா (''சாபாவின் மகன்''), யோசேப்பு (11); யூதா (12) ஆகிய குறிப்புகளைக் காண்க.

பர்தொலொமேயு (''தொலொமேயுவின் மகன்''), இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தல ரில் ஒருவன் (மத். 10:3; மாற்கு 3:18; அப். 1:13). பெரும்பாலும் இவனும் நாத்தான்வேலும் ஒரே ஆளாகத்தான் இருக்க வேண்டும்.

பர்மெனா (''நிலையான''), உதவிக்காரராகத் தெரிந்துகொள்ளப்பட்ட எழுவரில் ஒருவன் (அப். 6:5).

பர்னபா (''ஆறுதலின் மகன்''), பவுலோடு பல இடங்களுக்குப் பயணம் செய்த யூதக் கிறிஸ்த வன் (அப். 4:36; 9:27; 11:22–30; கலா. 2:1). இவனு டைய முந்தின பெயர் யோசே, ஆனால் இவனுக்கு பர்னபா என்னும் பெயரை அப்போஸ்தலர் சூட்டி னார்கள் (அப். 4:36); இவன் அவர்களுக்கு ஆறுதலாயிருந்தான் என்பது வெளிப்படை.

பல்த்தியேல் (''தேவன் விடுவிக்கிறார்''). **1.** இசக்கார் கோத்திரத்தில் ஒரு பிரபு (எண். 34:26). **2.** தாவீதின் மனைவியைத் திருமணம் செய்தவன் (2 சாமு. 3:15). இவன் முதல் சாமு வேல் 25:44 –ஆம் வசனத்தில் பல்த்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளான்.

பவுல் (இலத்தீன் – பவுலுஸ் – ''சிறிய''). தர்சுப் பட்டணத்தைச் சேர்ந்த சவுல் என்பது இவ ரது ரோமப்பெயர். கமாலியேலின் பாதத்தில் அமர்ந்து யூத நியாயப்பிரமாணத்தைக் கற்ற ஒரு பரிசேயன் (அப். 21:39). இவர் மனமாற்றம் பெற்ற பிறகு புறவினத்தாரின் அப்போஸ்தலனாக ஆக்கப்பட்டார் (அப். 26:12–20). இவர் தனது ரோமப் பெயரை இவரது தாழ்மையின் காரண மாகப் பயன்படுத்தினார் போலும். அப்போஸ்தல ருடைய நடபடிகள் நூல் இவருடைய திருப்பணிப் பயண விவரங்களை எடுத்துரைக்கிறது.

பள்ளத்தாக்கின் வாசல். எருசலேமின் தென் மேற்கு மதிற்சுவரில் இருந்த வாசல், இது இன்னோம் பள்ளத்தாக்கிற்குச் செல்லும் வழி யாகும் (நெகே. 2:13).

பஸ்கூர் (''பிளப்பவன்; வெட்டுபவன்''). **1.** ஓர் ஆசாரிய குடும்பத்தின் தலைவன் (எஸ்றா 2:38; 10:22; நெகே. 7:41). **2.** சிறையிருப்புக்குப் பிறகு உடன்படிக்கையில் முத்திரையிட்ட ஓர் ஆசாரி யன் (நெகே. 10:1,3). **1.** ஆம் எண்ணில் குறிப்பிடப் பட்டிருப்பவனும் இவனும் ஒரே ஆளாக இருக்கக் கூடும். **3.** ''கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக் கர்த்தனாக'' இருந்த ஓர் ஆசாரி யன். இவன் எரேமியாவைக் கொடுமைப்படுத்திய வன் (எரே. 20:1–6). **4.** மல்கியாவின் மகன், இவ னுடைய குடும்பம் எருசலேமுக்குத் திரும்பியது (1 நாளா. 9:12; நெகே. 11:12; எரே. 21:1; 38:1–3).

பஸ்மாத் (''நறுமணம்''). **1.** சாலொமோனின் பெண்மக்களில் ஒருத்தி (1 இராஜா. 4:15). **2.** ஏசாவின் மனைவிகளில் ஒருத்தி (ஆதி. 26:34). ஏசா என்னும் தலைப்பையும் காண்க. **3.** ஏசாவின் இன்னொரு மனைவி, தனது தகப்பனை மன நிறைவு அடையச் செய்வதற்காக ஏசா இவளைத் திருமணம் செய்தான் (ஆதி. 36:3,4,10,13).

பாகால் (''எஜமான்; ஆண்டவன்). **1.** ரூபன் குடிவழியில் தோன்றியவன் (1 நாளா. 5:5).

2. யெகியேலின் பத்து ஆண்மக்களில் நான்காவது (1 நாளா. 8:29,30; 9:36).

பாகால் (“எஜமான்”), சிமியோன் கோத்திரத்து ஊர், பாலாத் பெயேர் என்னும் ஊரும் இதுவும் ஒன்று என்று எண்ணப்படுகிறது (1 நாளா. 4:33).

பாகால்எர்மோன் (“எர்மோனின் எஜமான்”), எர்மோன் மலையின் கிழக்குச் சரிவில் கானானியர் பண்டிகை கொண்டாடிய இடம்; இது மனாசேயின் பாதிக் கோத்திரத்தின் வடமேற்கே எல்லையைக் குறித்தது (நியா. 3:3; 1 நாளா. 5:23).

பாகால்தாத் (“நல்வாய்ப்பின் எஜமான்; காத் என்பவன் எஜமான்”), எர்மோன் மலையின் அடிவாரத்தில் இருந்த ஊர், யோசுவாவின் வெற்றியைக் குறிக்கும் வட எல்லை (யோசுவா 11:17; 12:7).

பாகால் தாமார் (“பனைகளின் எஜமான்”), கிபியாவுக்கும் பெத்தேலுக்கும் அருகேயிருந்த இடம், பென்யமீன் கோத்திரத்துக்கு உட்பட்டது. இங்குதான் கிபியாவின் சேனை இஸ்ரவேலரால் துரத்துண்டது (நியா. 20:33).

பாதாளம் (“மறைத்து வை”), மரணமடைந்தவர்கள் பாடு அனுபவிக்கும் இடம். மரணமடைந்த அனைத்து ஆத்துமாக்களும் இருக்கும் இடம் பாதாளம் (sheol) என்று பழைய ஏற்பாட்டிலும், பாதாளம் (Hades) என்று புதிய ஏற்பாட்டிலும் அழைக்கப்படுகிறது (சங். 16:10; மத். 11:23; அப். 2:27). எருசலேம் நகரத்தின் வெளியே உள்ள Gehenna என்னும் பள்ளத்தாக்கு KJV மொழி பெயர்ப்பில் பாதாளம் என்றே அழைக்கப்பட்டுள்ளது. இழந்துபோன ஆத்துமாக்களின் அவல நிலைக்கு அடையாளமாக அதனை இயேசு பயன்படுத்தியிருக்கிறார். விசுவாசிகளுக்கு அந்த இடம் பரதீசாக விளங்கும் (லூக். 23:43); தேவனற்றவர்களுக்கு அது “Gehenna” – வாக இருக்கும் (லூக்கா 16:22,23 ஆகிய வசனங்களோடு ஒப்பிட்டுக் காண்க).

பாபிலோன் (பொருள் தெரியவில்லை). 1. பாபிலோனியப் பேரரசின் தலைநகர். இதன் தொங்கும் தோட்டத்தினால் புகழ்பெற்றது. கி. மு. 586 –இல் யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டு கொண்டுபோகப்பட்டபோது இந்நகரமே எல்லோருடைய கவனத்திற்கும் இலக்காயிருந்தது (2 இராஜா. 17:24,25; ஏசாயா 39:3,6,7). 2. முதல் பேதுரு 5:13 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 14:8; 18:2,10–21 ஆகிய பகுதிகளில் இது ரோமா புரியைக் குறிப்பதாகப் பல அறிஞர்கள் கருதுகிறார்கள். சிலர் பேதுருவில் (1) குறிப்பிடப்பட்டுள்ளதாகச் சிலர் கருதுகிறார்கள்.

பாப்போ (“கொதிக்கும் பொருள்”), சீப்புரு தீவின் தென்மேற்குக் கோடியில் அமைந்திருந்த ஓர் ஊர். பவுலும் பர்னபாவும் இங்கு சென்றார்கள் (அப். 13:6–13). தற்போது இது பாஃபா என்று அழைக்கப்படுகிறது.

பாராக் (“மின்னல்”), தெபோராள் என்னும் நியாயாபதிக்குப் படைத்தலைவனாக இருந்தவன். சிசெராவைத் தோற்கடிக்க உதவி செய்தவன் (நியா. 4:6 – 5:15).

பாரான் (“அழகு”), சீனாய் மலையிலிருந்து ஏழு நாட்கள் பயணத் தொலைவில் அமைந்துள்ள பாலைவனம் (ஆதி. 21:21; எண். 10:12; 1 சாமு. 25:1). பெயர்செபா மற்றும் சூர் வனாந்தரங்களின் கிழக்கே அமைந்துள்ள இப்பகுதி சீன் வனாந்தரத்தோடு ஒன்றிணைந்து விடுகிறது. இரண்டு பாலைவனங்களுக்கும் இடையில் தெளிவான எல்லைக்கோடு இல்லை. இந்த நிலப்பகுதியின் எல்லையில் ஏதோம் மற்றும் மீதியான் ஆகிய நாடுகள் இருந்தன. இது சில இடங்களில் பாரான் பர்வதம் (ஆப. 3:3) என்றும் எல் பாரான் (ஆதி. 14:6) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாருக் (“ஆசிர்வதிக்கப்பட்டவன்”)1. எரேமியாவின் நண்பன், வேதபாரகன் (எரே. 32:12,13, 16;36அதி). 2. எருசலேம் மதிலை மீண்டும் கட்ட உதவியவன் (நெகே. 3:20; 10:6). 3. பேரேசின் வழிவந்த இவன் சிறையிலிருப்பிலிருந்து திரும்பி வந்தான் (நெகே. 11:5).

பார்வோன் (“அரண்மனையில் குடியிருப்பவன்), எகிப்து நாட்டு அரசர்களின் குடும்பப் பெயர், அரசன் என்னும் சொல்லுக்கு இச்சொல் இணையானதாகும் (ஆதி. 12:15; 37:36; யாத். 2:15; 1 இராஜா. 3:1; ஏசாயா 19:11).

பாலஸ்தீனம் (பாலஸ்தீனா) (“மறைத்து வைக்கப்பட்டது”) யோர்தான் ஆறு, சாவுக்கடல் ஆகியவற்றைக் கிழக்கு எல்லையாகவும் மத்திய தரைக் கடலை மேற்கு எல்லையாகவும் கொண்டு சரியாக வரையறுத்துக் கூறப்படாத நாடு (யாத். 15:14; யோவேல் 3:4; ஆதி. 15:18). இதனுடைய வட எல்லை தோராயமாய் லீபனோன் மலைத்தொடர் எனலாம். இது தெற்கில் சிவந்த சமுத்திரத்தின் அகாபா வளைகுடா வரை நீண்டு ஒரு முக் கோணம் போலக் காட்சியளிக்கிறது.

பாலாக் (“வீணான; வெறுமை”), இஸ்ர வேலைச் சபிக்கும்படி பிலேயாமைக் கூலிக்கு அமர்த்திய மோவாபின் அரசன் (எண். 22–24; யோசுவா 24:9).

பாலாத்சோர் (“சோரின் எஜமான்(வேலி)”), எப்பிராயீம் அருகில் இருந்த இடம், இங்குதான் அப்சலோம் அம்னோனைக் கொன்று போட்டான் (2 சாமு. 13:23). இது பெத்தேலிலிருந்து வட கிழக்கே 7 கி.மீ (4.5 மைல்) தொலைவில் இருந்தது.

பாலாத்பெயோர் (“ஒரு கிணற்றின் தலைவி”), சிமியோன் கோத்திரத்தின் எல்லையிலிருந்த ஓர் ஊர், சில இடங்களில் “தெற்கத்திய ராமாத்” என்று அழைக்கப்படுகிறது (யோசுவா 19:8). இது வும் பாகால் என்னும் ஊரும் ஒன்றாக இருக்கக் கூடும்.

பாலிஸ் (“மகிழ்ச்சியின் எஜமான்”), எருச லேம் கைப்பற்றப்பட்டதன் பின் அம்மோனியரின் அரசனாயிருந்தவன் (எரே. 40:14).

பானா (“வருத்தத்தின் மகன்; பொறுமை”). **1.** சாலொமோன் நியமித்த மணியக்காரரில் ஒரு வன் (1 இராஜா. 4:12). **2.** ஆசேரின் எல்லைகளின் மேல் அதிகாரியிருந்த வேறொரு மணியக்காரன் (1 இராஜா. 4:16). **3.** தேவாலயத்தைக் கட்டிய சாதோக்கின் தகப்பன் (நெகே. 3:4). **4.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனது தகப்பன் (2 சாமு. 23:29; 1 நாளா. 11:30). **5.** இஸ்போசேத்தின் சேனையில் ஒரு படைத்தலைவன் (2 சாமு. 4:2,5,6,9). **6.** யெருபாபேலோடு சிறையிருப்பிலி ருந்து திரும்பி வந்தவர்களில் ஒருவன் (எஸ்றா 2:2; நெகே. 7:6,7; 10:27).

பானி (“வழித்தோன்றல்”). **1.** தாவீதின் பராக்கிரசாலிகளில் ஒருவன் (2 சாமு. 23:36). **2.** மெராரியின் வழித்தோன்றல்களில் ஒருவன் (1 நாளா. 6:46). **3.** பேரேசின் வழிவந்தவர்களில் ஒருவன் (1 நாளா. 9:4). **4.** பாபிலோனிய சிறை யிருப்பிலிருந்து திரும்பி வந்த ஒரு குடும்பத்தின் தகப்பன் (எஸ்றா 2:10; 10:29). நெகேமியா 7:15 – இல் இவன் பின்னூ என்று குறிப்பிடப்பட்டுள் ளான். **5.** இவனுடைய வழிவந்தவர்கள் அந்நியப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்கள் (எஸ்றா 10:34). **6.** 5 –ஆம் வழித்தோன்றலில் வந்த ஒருவன், சிறைபிடிக்கப்பட்டுச் சென்ற நாட் களில் புறவினத்தாளை மனைவியாகக் கொண் டான் (எஸ்றா 10:38). **7.** எருசலேம் மதிலைப் பழுது பார்க்க உதவிய ஒரு லேவியன் (நெகே. 3:17; 8:7). **8.** மக்களுடைய பக்தி வழிபாட்டில் அவர்களுக்கு உதவியாயிருந்த ஒரு லேவியன் (நெகே. 9:4; 10:13). **9.** சிறையிருப்பிற்குப் பிறகு தேவனோடு செய்துகொண்ட புதிய உடன்படிக்கையில் முத் திரைபோட்டவர்களில் ஒருவன் (நெகே. 10:14). **10.** சிறையிருப்புக்குப் பிறகு லேவியரின் கண்காணி யாக இருந்த ஒருவன். இந்த லேவியனின் மகன் ஆவான். (நெகே. 11:22). இவன் (7) அல்லது (8) – இல் குறிப்பிடப்பட்டவனாக இருக்கக் கூடும். **(11), (12), (13)** தேவாலய ஆராதனையில் பங்குபெற்ற மூன்று லேவியர்கள் (நெகே. 9:4,5).

பாஷா (“துணிவு”), இஸ்ரவேலின் மூன்றா வது மன்னன்; யுத்தமும் அக்கிரமமும் இவனு டைய ஆட்சியைச் சித்திரித்துத் தருகின்றன.

பிசிதியா (“நிலக்கீல் பூச்சு”), ஆசியா மைன ரைச் சேர்ந்த ஒரு தீவு, இதனுடைய தலைநகரம் அந்தியோகியா ஆகும் (அப். 13:14).

பியூலா (“திருமணம் செய்யப்பட்டவள்”), வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டிற்கு, பாபிலோ னிய சிறையிருப்பிற்குப் பிறகு, ஏசாயா இட்ட பெயர் (ஏசாயா 62:4).

பிரிகியா (“தரிசு”), ஆசியா மைனர் நிலப் பகுதியில், முக்கியமான உள்நாட்டு மாநிலம் (அப். 2:10; 16:6).

பிரிஸ்கில்லாள் (பிரிஸ்காள்) (“தொன்மை யானது”), ஆக்கில்லா என்பவனது மனைவி,

தனது விசுவாசத்தில் ஆழமான பற்றுதல் கொண்டிருந்தவள் (அப். 18:2,18,26; ரோமர் 16:3).

பிரொகோர் (“பாடற்குழுவின் தலைவன்”), ஏழு உதவிக்காரரில் ஒருவன் (அப். 6:5).

பிலதெல்பியா (“சகோதர அன்பு”), ஆசியா மைனர் நிலப்பகுதியில் இருந்த லீதியா என்னும் பகுதியில் அமைந்திருந்த ஒரு பட்டணம்; ஆசியா நாட்டு ஏழு சபைகளில் ஒன்று இந்த ஊரில் இருந்தது (வெளி. 1:11; 3:7–13). சர்தையிலிருந்து தென்கிழக்கே இது 45.5 கி.மீ (28.3 மைல்) தொலைவில் இருந்தது.

பிலாத்து. பொந்தியு பிலாத்து என்னும் பெயரைக் காண்க.

பிலிப்பு (“குதிரைகளினிடத்தில் அன்பு பாராட்டுகிறவன்”). **1.** பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவர் (மத். 10:3; யோவான் 1:44–48; 6:5–9). **2.** அப்போஸ்தலருடைய நூலில் பலமுறை குறிப்பிடப்பட்டுள்ள சுவிசேஷகன் (அப். 6:5; 8:5–13). **3.** ஏரோது என்னும் பெயரில் **3** மற்றும் **4** ஆகிய எண்களைக் காண்க.

பிலிப்பு செசரியா (“இராயனின் பிலிப்பு பட்டணம்”), எர்மோன் மலையடிவாரத்தில் அமைந்திருந்த ஒரு பட்டணம். இயேசு கிறிஸ்து ஆற்றிய ஊழியத்தின் வடதிசை எல்லை (மத். 16:13–20).

பிலிப்பு பட்டணம் (“பிலிப்புக்கு உரியது”), மக்கெதோனியாவில் மகா பிலிப்புவால் நிறுவப்பட்ட பட்டணம்; அவனுடைய பெயரைப் பெற்றது (அப். 16:12; 20:3–6), நியாப்போலி என்னும் துறைமுகத்திலிருந்து வடமேற்கே 16.1 கி. மீ (10 மைல்) தொலைவில் உள்நாட்டில் இது அமைந்திருந்தது.

பிலேத்து (“நட்பு பாராட்டுகிற”), மனந்திரும்பியவன், ஆனாலும் உயிர்த்தெழுதலைக் குறித்து இவன் கொண்டிருந்த கருத்தின் காரணமாகப் பவுல் இவன்மீது குற்றஞ்சுமத்தினார் (2 தீமோ. 2:17).

பிலேமோன் (“நட்பு”), கொலோசெ பட்டணத்தில் குடியிருந்தவன். மனந்திரும்பிய இந்த மனிதனுக்குப் பவுல், இவனிடத்திலிருந்து ஓடிப்போன ஒநேசிமு என்ற அடிமைக்காக வேண்டுதல் செய்து ஒரு மடலை எழுதினார் (பிலே. 1, 5–7).

பிலேயாம் (“யாத்திரிகன்; மக்களின் கடவுள்; பாகால்"), இஸ்ரவேலைச் சபிக்கும்படி மோவாபின் அரசனால் விலைக்கு அமர்த்தப்பட்டவன். ஆனால் தேவனோ இவனுடைய வாயில் ஆசிர்வாதத்தைக் கூறும்படியான சொற்களை வைத்தார் (எண். 22–24; 31:8).

பில்காள் (“மென்மையான”), ராகேலின் வேலைக்காரி, தாண், நப்தலி ஆகியோரின் தாய் (ஆதி. 29:29; 30:3–5,7).

பில்தாத் (“ஆதாத் ஆண்டவன்; வாதத்தின் மகன்”), யோபுவின் மூன்று “நண்பர்களில்” ஒருவன் (யோபு 2:11; 8:1; 18:1; 25:1; 42:9).

பினெகாஸ் (“பிடிவாதத்தின் வாய்”). **1.** இவன் ஆரோனின் பேரனும், பிரதான ஆசாரியனும் ஆவான் (யாத். 6:25; எண். 25:6–18; 1 நாளா. 6:4; 9:20). **2.** ஏலியின் இளைய மகன்; இவன் ஆசாரியனாயிருந்து அந்த வேலையைத் தவறாகப் பயன்படுத்தினான் (1 சாமு. 1:3; 2:22–24,34). **3.** எலெயாசாரின் தகப்பன் (எஸ்றா 8:33).

பிஸ்கா (“கோட்டை”), வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை இந்த மலைப்பகுதியிலிருந்து தான் மோசே பார்த்தான் (எண். 21:20; உபா. 3:27). அபாரிம் மலைத்தொடரில் இப்பகுதி சாவுக்கடலின் அருகில் வடகிழக்கே இருக்கிறது.

புபிலியு (“பொதுவான; முதலாவது”), மெலித்தா தீவின் ஆளுநர், கப்பற்சேதம் உண்டானபோது பவுலையும் அவனுடன் இருந்தவர்களையும் அன்போடு வரவேற்று விருந்தோம்பல் புரிந்தவன் (அப். 28:1–10).

பூசி (“யெகோவாவால் பயனற்றவனாகக் கருதப்பட்டவன்”), ஆரோனின் வழிவந்தவன். எசேக்கியேலின் தகப்பன் (எசே. 1:3).

பூத். லிபியா என்னும் பெயரைக் காண்க.

பூஸ் (“அவமதிப்பு”). **1.** ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோரின் இரண்டாவது மகன் (ஆதி. 22:21). **2.** காத்தின் வாழிவந்தவன் (1 நாளா. 5:14).

பெசலெயேல் (“தேவன் பாதுகாக்கிறவர்”). **1.** ஆசாரிப்புக் கூடாரத்தின் தலைமைத் தொழிலாளியும் வடிவமைத்தவனும் ஆவான் (யாத். 31:2; 35:30; 36:1,2). **2.** அந்நியப் பெண்ணைத் திருமணம் செய்தவன் (எஸ்றா 10:30).

பெதஸ்தா (“ஊற்றப்படும் அல்லது பெருகி வரும் நீரின் வீடு”), எருசலேமின் ஆட்டுவாசலின் அருகே இருந்த குளம், குணப்படுத்தும் வல்லமை கொண்டது என்று பெயர்பெற்றது (யோவான் 5:2,3).

பெதாயா (“யெகோவா மீட்கிறார்”). **1.** யோவேலின் தகப்பன் (1 நாளா. 27:20). **2.** யோசியா என்னும் அரசனின் பாட்டன் (2 இராஜா. 23:36). **3.** எகொனியாவின் மகன் அல்லது பேரனாக இருக்க வேண்டும் (1 நாளா. 3:18,19). **4.** எருசலேம் மதிற்சுவரைத் திரும்பக் கட்ட உதவியவன் (நெகே. 3:25). **5.** எஸ்றா நியாயப்பிரமாணத்தை வாசித்தபோது அவனுடன் நின்றவன் (நெகே. 8:4; 13:13). **6.** பென்யமீனின் வழித்தோன்றல் (நெகே. 11:7).

பெத்சாயிதா (“மீன் வீடு”), கலிலேயாக் கடலில் மீன்பிடிக்கும் ஓர் ஊர்; பிலிப்பு, அந்திரேயா, சீமோன் ஆகியோர் பிறந்த ஊர் (மத். 11:21; லூக். 9:10; மாற்கு 6:45).

பெத்செயான் (பெத்சான்) (“இளைப்பாறுதலின் வீடு”), கலிலேயா பகுதியின் தென் எல்லையில் இருந்த ஊர்; தெக்கபோலி என்னும் பத்து ஊர்களில் மிகப் பெரியது (யோசுவா 17:11; 1 நாளா. 7:29).

பெத்தாபரா (“ஆற்றைக் கடந்து செல்லும் ஆழமற்ற பகுதியிலுள்ள வீடு”), யோர்தான் ஆற்றின் கிழக்குக் கரையில் அமர்ந்திருந்த இடம், இங்குதான் யோவான் மனந்திரும்பியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (யோவான் 1:28). பெரும்பான்மையான கிரேக்கப் பிரதிகளில் இந்த வசனத்தில் பெத்தானி என்று காணப்படுகிறது. ஆனாலும் இதுவும் பெத்தானி என்ற ஊரும் ஒன்றல்ல.

பெத்தாவேன் (“சிலைகளின் வீடு”), பென்யமீன் கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்ட ஊர், வனாந்தரத்தில் ஆயிக்கு அருகில் இருந்தது (யோசுவா 7:2; 18:12; 1 சாமு. 13:5).

பெத்தானியா (“துன்பத்தின் வீடு; பழுக்காத அத்தியின் இடம்”), ஒலிவ மலைக்குச் செல்லும் வழியில் அமைந்திருந்த ஒரு குடியிருப்பு, எருசலேம் நகரத்திலிருந்து ஏறத்தாழ 2.6 கி.மீ (1.6 மைல்) தொலைவில் இருந்தது (மாற்கு 11:1; லூக்கா 19:29).

பெத்தூவேல் (பெத்தூல்) (“தேவனிடத்தில் தங்குபவர்”), சிமியோனுக்குப் பங்கீடு செய்யப்பட்ட ஊர் (யோசுவா 19:4; 1 நாளா. 4:30). இது பெத்தேல் என்றும் அழைக்கப்பட்டது (1 சாமு. 30:27).

பெத்தேல் (“தேவனுடைய வீடு”). எருசலேமுக்கு வடக்கே 18 கி. மீ (11 மைல்) தொலைவில் இருந்ததும், இஸ்ரவேல் வரலாற்றில் தொடர்ந்து முக்கியத்துவம் வாய்ந்ததுமாக இருந்த ஊர் (ஒப்பிடுக: ஆதி. 13:3; 28:18,19; யோசுவா 16:2; நியா. 21:19). முந்தைய காலத்தில் இது லூஸ் என்றழைக்கப்பட்டது. இதன் பாழடைவின் அருகில் தற்கால பெர்டின் என்னும் நகரம் அமைந்துள்ளது.

பெத்தொரோன் (“குகை வீடு”), எப்பீராயீம் பென்யமீன் ஆகிய கோத்திரங்களின் எல்லைகளுக்கு இடையில் இருந்த இரட்டை ஊர்கள். மேல் பெத்தொரோன் எருசலேமுக்கும் மேற்கு சமவெளிக்கும் இடையே இருந்த கணவாய்க்கு அருகில் இருந்தது, கீழ் பெத்தொரோன் அதிலிருந்து வடமேற்கு திசையில் மேலும் 2 கி. மீ (1.5 மைல்) தொலைவில் இருந்தது (யோசுவா 16:3; 18:13; 2 நாளா. 8:5; 1 இராஜா. 9:17). இந்த ஊர்களின் தற்காலப் பெயர்கள் பெய்ட் உர் எட் தாடா (கீழ்), மற்றும் பெய்ட் உர் எட் தாடா (மேல்) என்பதாகும்.

பெத்நிம்ரா (“சிறுத்தைத் தன்மையின் வீடு”), காத் கோத்திரத்தாரால் யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கே கட்டப்பட்ட அரண்கள் கொண்ட பட்டணம் (எண். 32:36); இது நிம்ரா என்றும் அழைக்கப்பட்டது (எண். 32:3).

பெத்பகே (“பழுக்காத அத்தியின் வீடு”), எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும் சாலையில் பெத்தானியாவுக்கு அருகில் இருந்த குடியிருப்பு, பெரும்பாலும் ஒலிவ மலைச் சரிவில் இது அமைந்திருக்க வேண்டும் (மத். 21:1; மாற்கு 11:1).

பெத்பெயோர் (“பெயோரின் வீடு”), ஓகிற்கு எதிராகப் போர் புரிகையில் இஸ்ரவேலர் பாளய மிறங்கிய பிஸ்காவுக்கு அருகில் இருந்த இடம் (உபா. 3:29; 4:45).

பெத்லகேம் (“அப்பத்தின் வீடு”). **1.** எருசலே மின் தெற்கே ஏறத்தாழ 10 கி. மீ (6 மைல்) தொலைவிலிருந்த ஊர்; இயேசு கிறிஸ்துவின் பிறப்பிடம் (மத். 2:5). இது தொடக்கத்தில் எப் பிராத்தா என்று அழைக்கப்பட்டது (ஆதி. 35:16, 19; ரூத் 4:11; ஒப்பிடுக, மீகா 5:2). பிற்காலத்தில் தான் இதன் பெயர் பெத்லகேம் ஆயிற்று (ரூத் 4:11; ஆதி. 35:16). **2.** செபுலோன் கோத்திரத் தைச் சேர்ந்த ஒரு நகரம், நாசரேத்திலிருந்து ஏறத்தாழ 11 கி. மீ (7 மைல்) தொலைவில் இருந் தது (யோசுவா 19:15).

பெத்ஷிமேஷ் (“சூரியனின் வீடு”). **1.** அஸ்க லோன், அஸ்தோத் ஆகிய இடங்களிலிருந்து எருசலேமுக்குச் செல்லும் சாலையில், எருசலே முக்கு மேற்கே 38 கி. மீ (24 மைல்) அமைந் திருந்த ஊர் (யோசுவா 15:10). **2.** நப்தலி எல்லைக் குள் இருந்த கானானியப் பட்டணம் (யோசுவா 19:38; நியா. 1:33). **3.** இசக்கார் கோத்திரத்தாரின் பட்டணம், பெரும்பாலும் கலிலேயாக் கடலருகே யோர்தான் ஆற்றங்கரையில் இருந்த ஊர் (யோசுவா 19:22). **4.** எகிப்தியரின் நகரமாகிய ஹெலியோபோலிசின் மறுபெயர் (எரே. 43:13).

பெபேயாள் (“ஒளிவீசுகிற”), கெங்கிரேயா அல்லது கொரிந்துப் பட்டணத்து ஊழியக்காரி, பவுலுக்கு உதவி செய்தவள் (ரோமர் 16:1).

பெயர்செபா (“ஆணையின் கிணறு”), யூதாவில் தென்பகுதியில் அமைந்திருந்த ஒரு நகரம். ஆபிரகாம் அபிமெலேக்குடன் உடன் படிக்கை செய்துகொண்ட இடம், எப்ரோனுக்கு தென்மேற்கே ஏறத்தாழ 45 கி. மீ (28 மைல்) தொலைவில் இருந்தது (ஆதி. 21:14, 22–31; யோசுவா 15:28).

பெயர் லகாய் ரோயீ (“என்னைக் காண்கிற ஜீவனுள்ளவரின் கிணறு”) ஆகாரின் கிணறு, காதேசுக்கும் பாரேத்திற்கும் இடையே சூருக்குச் செல்லும் வழியில், பெயர்செபாவிலிருந்து 80 கி. மீ (50 மைல்) தொலைவில் தென்மேற்கே அமைந்திருந்தது (ஆதி. 16:14).

பெர்கமு (“உயரமான மேடு”), மீசியா நாட் டில் இருந்த ஒரு பட்டணம், இது ஆசியா மைனர் நிலப்பகுதியில் வடமேற்கே அமைந்திருந்த ஏழு சபைகளில் ஒன்று இருந்த இடம் (வெளி. 2:12–17).

பெர்கே (“முழுவதும் பூமிக்குரிய”), ரோமருடைய ஆட்சியின் கீழ் ஆசியா மைனர் நிலப்பகுதியிலி ருந்த பம்பிலியாவின் தலைநகரம் (அப். 13:13).

பெர்சியா (“வெட்டுகிறது அல்லது பிரிவினை செய்கிறது”), மேற்கு ஆசியா அனைத்தும், ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா பெருநிலப்பகுதி களில் சில இடங்களும் சேர்ந்த ஒரு பேரரசு (எசே. 38:5; எஸ்றா 1:8). தற்போது ஈரான் என்னும் நாட்டிலுள்ள ஃபார்ஸ் என்னும் பகுதியே பெர்சி யாவின் சரியான நிலப்பகுதியாகும்.

பெர்னிகேயாள் (“வெற்றி பெற்ற”), முதலாம் ஏரோது அக்கிரிப்பாவின் ஒழுக்கங்கெட்ட மகள். இவளும் இவளுடைய உடன்பிறந்தவனான அக்கிரிப்பாவும் பவுலை விசாரிக்கும்படி நியாயா சனத்தில் அமர்ந்தார்கள் (இருவருக்கும் இடை யில் தகாத உறவு இருந்தது), (அப். 25:13, 23; 26:30).

பெலத்தியா (“யெகோவா மீட்கிறார்”). **1.** சிறையிருப்பிற்குப் பிறகு தேவனோடு செய்த புதிய உடன்படிக்கையில் முத்திரையிட்டவன் (நெகே. 10:22). **2.** தாவீதின் வழித்தோன்றல் (1 நாளா. 3:21). **3.** சிமியோன் கோத்திரத்துத் தலைவன் (1 நாளா. 4:42,43). **4.** எசேக்கியேல் கண்ட தரிசனத்தில் தோன்றிய பொல்லாத அரசன் (எசே. 11:1,13).

பெலியாதா (“கர்த்தர் அறிகிறார்”), தாவீதின் ஒரு மகன் (1 நாளா. 14:7). இவன் எலியாதா என்றும் அறியப்பட்டிருந்தான் (2 சாமு. 5:16; 1 நாளா. 3:8).

பெலிஸ்தியா (“நாடோடிகளின் நிலம்”), பாலஸ்தீன நாட்டின் தென்மேற்குக் கடற்கரைப் பகுதி (சங். 60:8; 87:4; 108:9). இந்த நிலப்பகுதி இஸ்ரவேலரின் பரம்பரை எதிரிகளாகிய பெலிஸ்தியரின் நாடு. இது 80 கி. மீ (50 மைல்) நீளமும் 24 கி. மீ (15 மைல்) அகலமும் உடையது.

பெல்தெஷாத்சார் (பெலாட் – உசு – உசர் என்னும் பாபிலோனியப் பெயரின் எபிரெய வடிவம் – “இவனுடைய உயிரைக் காப்பாற்று!”) தானியேலுக்கு பாபிலோனில் கொடுக்கப்பட்ட பெயர் (தானி. 1:7). தானியேல் என்னும் தலைப்பைக் காண்க.

பெல்ஷாத்சார் (பாபிலோனியப் பெயராகிய பெல்–ஷார்–உசர் என்பதன் எபிரெய வடிவம் – “பெல் என்னும் கடவுள் அரசனைப் (தன்மையை) பாதுகாக்கிறார்”), நெபோனிடஸ் என்னும் பாபிலோனிய அரசனின் மகனும், அவனோடு சேர்ந்து ஆட்சி புரிந்தவனுமாவான். இவனுடைய அரசு பெர்சியரால் தூக்கியெறியப்படுவதற்கு முன் விநோதமான கரம் அரண்மனைச் சுவரில் எழுதியதைக் கண்டான் (தானி. 5அதி;7:1; 8:1).

பெனாதாத் (“ஆதாத் என்னும் கடவுளின் மகன்”). **1.** பெனாதாத் I, சீரியாவின் அரசன், இவன் யூதாவின் அரசனாகிய ஆசாவுடன் உடன்படிக்கை செய்து இஸ்ரவேல் மேல் போர் தொடுத்தவன் (1 இராஜா. 15:18,20; 2 நாளா. 16:2,4). **2.** பெனாதாத் II, ஆகாபினால் தோற்கடிக்கப்பட்ட சீரியாவின் மற்றொரு அரசன்; கடைசியில் இவன் சமாரியாவை முற்றுகையிட்டான் (1 இராஜா. 20; 2 இராஜா. 6:24; 8:7,9). **3.** சீரியா அரசு சிதறிப்போன பின் அதனை அரசாண்ட ஆசகேலின் மகன் (2 இராஜா. 13:3,24,25 ஆமோஸ் 1:4). **4.** இது சீரியாவின் அரசர்களின் பட்டப்பெயராக இருக்கக்கூடும் (எரே. 49:27).

பெனாயா (“யெகோவா கட்டினார்”). **1.** தாவீதின் படையில் மூன்றாவது தலைவன், அரசர்களுக்கு ஆலோசனை தந்தவன், தாவீதுக்கும் சாலொமோனுக்கும் உண்மையுள்ளவனாயிருந்தவன் (2 சாமு. 8:18; 20:23; 1 இராஜா. 1:8 – 2:46). **2.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (2 சாமு. 23:30; 1 நாளா. 11:31). **3.** சிமியோனின் கோத்திரத்தில் ஒரு குடும்பத்தின் தலைவன் (1 நாளா. 4:36). **4.** தாவீதின் ஆசாரியரில் ஒருவன் (1 நாளா. 15:18,20,24; 16:5,6). **5.** தாவீதின் ஆலோசகரில் ஒருவனுடைய தகப்பன் (1 நாளா. 27:34).

பெனிக்கே (“பனை மரங்கள் நிறைந்த இடம்”), மத்திய தரைக் கடல் மேற்கிலும், லீபனோன் மலை கிழக்கிலும் இருக்க இடைப்பட்ட குறுகலான நிலப்பகுதி (அப். 21:2; 11:19; 15:3). தெற்கே உள்ளே மலைப்பகுதியும் இதில் அடங்கும்.

பெனியேல் (பெனூவேல்) (“தேவனுடைய முகம்”), யோர்தானின் கிழக்கே எபிரெயர் முகாமிட்ட இடம் (ஆதி. 32:30,31; நியா. 8:8,17). யாக்கோபு தேவனை முகமுகமாகச் சந்தித்த இடம் இதுவே, ஆகவே இவ்விடம் அப்பெயர் பெற்றது.

பெனொனி (“என் வருத்தத்தின் மகன்”), ராகேல் தன் இரண்டாவது மகனைப் பெற்ற போது, மரணமடையும் தறுவாயில், அவள் அவனுக்கு இட்டபெயர்; யாக்கோபு அவனுடைய பெயரை பென்யமீன் என்று மாற்றினான்.

பென்யமீன் (“வலது கரத்தின் மகன்”). **1.** யாக்கோபின் கடைசி மகன், இவனுடைய வழி வந்தவர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றாக விளங்கினார்கள் (ஆதி. 35:18,24; 42:4,36; 43–45). **2.** பென்யமீன் வழியில் தோன்றியவன் (1 நாளா. 7:10). **3.** ஆரீமின் புத்திரரில் ஒருவன் (எஸ்றா 10:32). **4.** எருசலேமின் மதிலைப் பழுதுபார்ப்பதற்கு உதவியவன் (நெகே. 3:23). **5.** எருசேலம் மதிலைப் பிரதிஷ்டை செய்வதற்கு உதவியவன் (நெகே. 12:34).

பென்னம்மி (“என் மக்களின் மகன்”), அம்மோனியரின் மூதாதை (ஆதி. 19:38), லோத்துக்கும் அவனுடைய மகளுக்கும் பிறந்தவன்.

பெஸ்து (“பன்றி போன்ற”), யூதேயாவின் ஆளுநராயிருந்த பேலிக்சைத் தொடர்ந்து அந்தப் பதவி வகித்தவன், பவுலுக்கு எதிராக பேலிக்ஸ் தொடங்கிய விசாரணையைத் தொடர்ந்து நடத்தியவன் (அப். 25; 26 அதி).

பேதான் (“நியாயத்தீர்ப்பின் மகன்”). **1.** இஸ்ரவேலில் ஒரு தலைவன், நாட்டின் ரட்சகன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறான் (1 சாமு. 12:11). எழுபதின்மர் கிரேக்க பழைய ஏற்பாடு, சிரியாக், அராபிக் ஆகிய மொழிகளிலுள்ள பழைய ஏற்பாட்டிலும் இந்தப் பெயர் பாராக் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆயினும் பலர் இப்பெயர் அப்தோன் என்பவனைக் குறிப்பதாகக் கருதுகிறார்கள். **2.** மனாசேவின் வழிவந்தவன் (1 நாளா. 7:17).

பேதுரு (“கல்; பாறை”), கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்ட ஒரு மீனவன். இவர் தொடக்க காலத் திருச்சபையில் இருந்த தலைவர்களில் ஒருவர் (மத். 4:18–20; 16:15–19; அப். 2). சிமியோன் என்னும் இவருடைய இயற்பெயரைக் கிறிஸ்து “பாறை” என்னும் பொருள்தரக்கூடிய பெயராக மாற்றினார் (அராமிக் – கேபா, கிரேக்கம் – பேதுரு).

பேயோர் (“ஒரு கிணறு”). **1.** இஸ்ரவேலர் வனாந்தரத்தில் இருந்தபோது தற்காலிகமாகத் தங்கியிருந்த இடம் (எண். 21:16–18); இதுவும் பெரேலீமும் ஒரே இடமாகத்தான் இருக்க வேண்டும் (ஏசா. 15:8). **2.** யோதான் தன் சகோதரனாகிய அபிமெலேக்குக்கு அஞ்சி ஒளிந்து கொண்ட இடம் (நியா. 9:21); இதுவும் பேரோத் என்னும் இடமும் ஒன்றாக இருக்கக்கூடும்.

பேரொத்தாய் (பேரொத்தா; கூன்) (“கிணற்றின்”), வட பாலஸ்தீனத்தில் ஹாமாத்துக்கும் தமஸ்குவுக்கும் இடையில் இருந்த ஊர், தாவீதால் பிடிக்கப்பட்டது. இது கூன் என்றும் அழைக்கப் பட்டது (2 சாமு. 8:8; 1 நாளா. 18:8; எசே. 47:16).

பேலிக்ஸ் (“மகிழ்ச்சி”), யூதேயாவின் ரோம ஆளுநர், செசரியாவில் பவுலை விசாரணை செய்தபோது அதைத் தலைமையேற்று நடத்திய வன் (அப். 23:23–27; 24:22–27).

பேனிக்ஸ் (“பனை மரங்கள் நிறைந்த இடம்”). **1.** கிரேத்தா தீவின் தென்பகுதியில் அமைந் திருந்த துறைமுகம் (அப். 27:12). **2.** பெனிக்கே என்ற பெயரைக் காண்க.

பொந்தியு பிலாத்து (இலத்தீன் – பொந்தியஸ் பிலாத்தஸ் – “கடற்படை ஏவுகணையை ஏந்திச் செல்பவர்”), ரோம நாட்டைச் சேர்ந்தவன், யூதேயாவுக்கு தேசாதிபதியாக நியமிக்கப்பட்ட வன்; இவனுடைய முன்னிலையில் விசாரணை செய்யும்படி கிறிஸ்து கொண்டுவரப்பட்டபோது, அவரிடத்தில் ஒரு குற்றமும் காணாதவன், யூத ருக்குப் பயந்து அவரை மக்களிடம் ஒப்புக் கொடுத்தான் (மத். 27:2–24; யோவான் 18:28–40).

பொந்து (“கடல்”), ஆசியா மைனர் நிலப் பகுதியில் அமைந்திருந்த வடகிழக்கு மாகாணம் (அப். 2:9; 1 பேதுரு 1:1).

பொர்த்துனாத்து (“நல்வாய்ப்பு”), எபேசுப் பட்டணத்தில் பவுலுக்கு ஆறுதல் கூறி உற்சாகப் படுத்திய கொரிந்துப் பட்டணத்தைச் சேர்ந்த கிறிஸ்தவன் (1 கொரி. 16:17,18).

பொவனெர்கேஸ், செபெதேயுவின் ஆண் மக்களாகிய யாக்கோபு, யோவான் இருவருக்கும் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர். “இடிமுழக்க மக்கள்” என்பது இதன் பொருளாகும் (மாற்கு 3:17).

போகீம் (“அழுகிறவர்கள்”), கில்கால் அருகில் இருந்த இடம், இங்கு இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பினார்கள் (நியா. 2:1–5).

போத்திபார் (“சூரியக் கடவுளுக்குச் சொந்த மான”), பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாக இருந்தவன், யோசேப் பின் எஜமான் ஆனவன் (ஆதி. 37:36; 39:1).

போத்திபிரா (“சூரியக் கடவுளுக்குக் கொடுக்கப்பட்டவன்”), ஓன் பட்டணத்து ஆசாரியன், யோசேப்பின் மனைவியின் தகப்பன் (ஆதி. 41:45,50).

போவாஸ் (“விரைந்துசெல்லும் தன்மையுள்ள; வலிமை”), யூதாவைச் சேர்ந்த பெத்லகேம்

ஊரில் வசித்தவன். ரூத்தின் கணவனானான். கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (ரூத் 2–4; மத். 1:5; லூக்கா 3:32).

மகலாலெயேல் (“தேவன் சுடரொளியாகத் திகழ்கிறார்”). **1.** கேனானின் மகன், கிறிஸ்து வின் மூதாதை (ஆதி. 5:12,13,15; லூக்கா 3:37). **2.** இவனுடைய வழித்தோன்றல்கள் எருசலேமில் குடியிருந்தார்கள் (நெகே. 11:4).

மகேர் – சாலால் – அஷ் – பாஸ் (“கொள்ளைப் பொருள் துரிதப்படுகிறது; இரை வேகமாகிறது”), ஏசாயாவின் மகனுடைய அடையாளப்பெயர் (ஏசா. 8:1–4).

மக்கெதோனியா (பொருள் தெரியவில்லை), கிரேக்க நாட்டின் வடபகுதியில் இருந்த ஒரு நாடு (அப். 16:9; 18:5).

மக்தலா (“கோபுரம்”), கலிலேயாக் கடலின் மேற்கு முனையில் அமைந்திருந்த சிற்றூர் (மத். 15:39). இக்காலத்தில் எல் மெஜ்டெல் என்று இவ் வூர் அழைக்கப்படுகிறது. இது திபேரியாவிலி ருந்து 4.8 கி.மீ (3 மைல்) தொலைவிலுள்ளது.

மக்லோன் (“கடுமையற்ற; நோயுற்ற”), ரூத் தின் முதல் கணவன், மோவாபில் இறந்து போனான் (ரூத் 1:2–5).

மத்தனியா (“யெகோவாவின் அன்பளிப்பு”). **1.** சிதேக்கியா என்னும் அரசனின் இயற்பெயர் (2 இராஜா. 24:17). **2.** ஆசாபின் வழித்தோன்றல், இவனுடைய குடும்பம் இஸ்ரவேலில் குடியிருந் தது (1 நாளா. 9:15; 2 நாளா. 20:14; நெகே. 11:17,22; 13:13). **3.** ஏமான் என்னும் பாடகனின் மகன் (1 நாளா.25:4,16). **4.** தேவாலயத்தைத் தூய்மைப்படுத்த உதவியன் (2 நாளா. 29:13). **5.6.7.8.** சிறையிருப்பின்போது அந்நியப் பெண் களை மணந்தவர்கள் (எஸ்றா 10:26, 27, 30, 37). **9.** வாயில்காப்போரில் ஒருவன் (நெகே. 12:25).

மத்தித்தியா (“யெகோவாவின் அன்பளிப்பு”). **1.** பலகாரம் சுடுகிற வேலையின் விசாரிப்பு ஒப்பு விக்கப்பட்டிருந்த லேவியன் (1 நாளா. 9:31). **2.** பாடகனும் வாயிற் காப்போனுமாகிய லேவியன் (1 நாளா. 15:18,21; 16:5). **3.** யெதுத்தானின் மகள் (1 நாளா. 25:3,21). **4.** சிறையிருப்பின் போது அந் நியப் பெண்ணை மணந்தவன் (எஸ்றா 10:43). **5.** நியாயப்பிரமாண புத்தகத்தை எஸ்றா வாசித்த போது அவனுடன் நின்றவன் (நெகே. 8:4).

மத்தியா (“தேவனுடைய அன்பளிப்பு”), யூதா ஸ்காரியோத்தின் இடத்தை நிரப்பும்படி அப் போஸ்தலனாகத் தெரிந்தெடுக்கப்பட்ட கிறிஸ்த வன் (அப். 1:23,26).

மத்தேயு (“தேவனுடைய அன்பளிப்பு”), பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவன், அழைக்கப் படுவதற்கு முன்னர் வரிவசூலிப்பவனாக இருந்த வன். இவன் லேவி என்றும் அழைக்கப்பட்டான் (மத். 9:9; 10:3; மாற்கு 2:14). இவனுடைய பெய ரைத் தாங்கிய நற்செய்தி நூலை இயற்றியவன்.

மம்ரே (“உறுதி; வலிமை”), ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து கொண்ட ஓர் எமோரியன் (ஆபி. 14:13; 24).

மரியாள் (மிரியம் என்பதன் கிரேக்கம் மேரி என்பதாகும், “வலிமையுடைய”). **1.** இயேசு கிறிஸ்து வின் தாய், இவளுடைய விசுவாசப் பாடல், இவளது ஆழமான விசுவாசத்தை எடுத்தியம்பு கிறது (லூக்கா 1:46–56; மத். 1:16–20; யோவான் 2:1–12). **2.** மார்த்தாளின் சகோதரி, இவள் கர்த்த ருக்கு நளதைலம் பூசி அவருடைய பாராட்டைப் பெற்றாள் (லூக்கா 10:39,42; யோவான் 11:1–45). **3.** கலிலேயாவில் உள்ள மகதலாவைச் சேர்ந்த பெண்; “ஏழு பொல்லாத ஆவிகளை” உடைய வளாயிருந்த இவள் குணமடைந்து, பிறகு மனந் திரும்பினாள் (மத். 27:56,61; 28:1; லூக்கா 8:2; யோவான் 19:25). **4.** யோவான் மாற்கு என்ப வனது தாய் (அப். 12:12). **5.** பவுல் வாழ்த்து அனுப் பிய ரோமாபுரிக் கிறிஸ்தவள் (ரோமர் 16:6). **6.** யோசே (மாற்கு 15:47), யாக்கோபு (லூக்கா 24:10) ஆகியோருடைய தாய், இவள் “மற்ற மரியாள்” என்று மத்தேயு 28:1 –லும், கிலே யோப்பா மரியாள் என்று யோவான் 19:25 –லும் அழைக்கப்பட்டுள்ளாள்; மாற்கு 15:40 –ல் குறிப் பிடப்பட்டுள்ளவளும் இவளே என்று கருதப்படு கிறது.

மல்கிசூவா, சவுல் அரசனின் மூன்றாவது குமாரன் (1 சாமு. 14:49; 31:2; 1 நாளா. 8:33).

மல்கியா (''யெகோவாவின் தூதன்'' அல்லது ''என் தூதன்''), பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கடைசித் தீர்க்கதரிசி; நெகேமியாவின் சமகாலத்தவன் (மல். 1:1).

மல்கியா (மல்கிஜா; மெல்கியா) (''யெகோவா என் ராஜா''). **1.** தாவீதின் காலத்துப் பாடகர் குழுத் தலைவன் (1 நாளா. 6:40). **2.** ஆரோனின் வழித்தோன்றல், இவனுடைய சந்ததியார் சிறையிருப்புக்குப் பிறகு எருசலேமில் குடியிருந்தார்கள் (1 நாளா. 9:12; நெகே. 11:12). **3.** ஓர் ஆசாரியக் குடும்பத்தின் தலைவன் (1 நாளா. 24:9). **4. 5. 6.** இம்மூவரும் சிறையிருப்பின்போது அந்நியப் பெண்களைத் திருமணம் செய்தவர்கள் (எஸ்றா 10:25,31). **7. 8. 9.** எருசலேம் மதிற்சுவரைத்திரும்பக் கட்ட உதவியர்கள் (நெகே. 3:11,14,31). **10.** எஸ்றா நியாயப்பிரமாணத்தைப் படிக்கையில் அருகில் நின்றவன்; இவன் ஒரு பிரபுவாகவோ அல்லது லேவியனாகவோ இருக்கலாம் (நெகே. 8:4). **11.** எருசலேம் மதிற்சுவரைத் தூய்மைப் படுத்த உதவியவன் (நெகே. 10:3; 12:42). **12.** பஸ்கூரின் தகப்பன் (எரே. 21:1; 38:3).

மல்லூக் (''ஆலோசகர்; தீர்ப்பு''). **1.** லேவியின் வழித்தோன்றல் (1 நாளா. 6:44). **2.3.** சிறையிருப்பின்போது அந்நியப் பெண்களை மணந்தவர்கள் (எஸ்றா 10:29,32). **4.** உடன்படிக்கையில் முத்திரையிட்ட ஓர் ஆசாரியன் (நெகே. 10:4). **5.** சிறையிருப்பிற்குப் பிறகு தேவனோடு செய்த புதிய உடன்படிக்கையில் முத்திரையிட்ட ஒரு தலைவன் (நெகே. 10:27). **6.** செருபாபேலோடு திரும்பி வந்த ஓர் ஆசாரியன் (நெகே. 12:2); இவன் 14 –ஆவது வசனத்தில் மெலிகு என்று குறிப்பிடப்பட்டுள்ளான்.

மனாகாத் (''இளைப்பாறும் இடம்; இளைப்பாறுதல்''), பென்யமீன் கோத்திரத்தின் ஒரு பட்டணம் (1 நாளா. 8:6).

மனாசே (''மறக்கச் செய்வதற்கான காரணம்''). **1.** யோசேப்பின் முதல் மகன் (ஆதி. 41:51). இவனுடைய வழித்தோன்றல்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றாக விளங்கியது. அவர்கள் யோர்தானின் இருபுறமும் குடியிருந்தார்கள் (யோசுவா 16:4–9; 17). **2.** எசேக்கியாவுக்கு அடுத்த யூதாவின் அரசன்; சிலை வணக்கத்தில் ஈடுபட்டவன்; கிறிஸ்துவின் மூதாதை (2 இராஜா. 21:1–18; மத். 1:10). **3.** இவனுடைய வழித்தோன்றல்கள் லாயீஸ் என்னுமிடத்தில் சிலைகளை நிறுவினார்கள் (நியா. 18:30). பல வேத அறிஞர்கள் இங்கு மனாசே என்பதற்குப் பதிலாக மோசே என்று படிக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த அந்த மேதகு மனிதனின் வழித்தோன்றல்கள் சிலைவணக்கம் செய்தார்கள் என்பது அவனுக்கு இழுக்கைக் கொண்டுவரும் என்று பிரதியெடுத்தவர் நினைத்திருக்கக் கூடும். எழுபதின்மர் பழைய ஏற்பாடு, லத்தீன் பழைய வேதம் வல்கேட், இன்னும் சில பிரதிகளில் மோசே என்று பெயர் இங்கு இடம் பெற்றுள்ளது. **4,5.** இவ்விருவரும் அந்நியப் பெண்களைத் திருமணம் செய்தவர்கள் (எஸ்றா 10:30,33).

மனோவா (''ஓய்வு''), நியாயாதிபதியாகிய சிம்சோனின் தகப்பன் (நியா. 13:1–23).

மாகா, மாக்கா, மாக்காள் (''அமிழ்வு''). **1.** ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோரின் மகன் (ஆதி. 22:24). **2.** தாவீதின் மனைவி, அப்சலோமின் தாய் (2 சாமு. 3:3; 1 நாளா. 3:2). **3.** மாக்காவின் அரசன் (2 சாமு. 10:6). **4.** காத்தின் அரசனாகிய ஆகீசின் தகப்பன் (1 இராஜா. 2:39). இவன் 1 சாமுவேல் 27:2 –இல் மாயோகு என்று குறிப்பிடப்பட்டுள்ளான். **5.** ஆசா என்னும் யூதாவின் அரசனின் தாய் (1 இராஜா. 15:10,13; 2 நாளா. 15:16). இவள் 2 நாளாகமம் 13:2 –இல் மிகாயாள் என்று அழைக்கப்பட்டுள்ளாள். **6.** காலேபின் மறுமனையாட்டி (1 நாளா. 2:48). **7.** மனாசேயின் மகனாகிய மாகீரின் மனைவி (1 நாளா. 7:15,16). **8.** யெகியேலின் மனைவி (1 நாளா. 8:29; 9:35). **9.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனது தகப்பன் (1 நாளா. 11:43). **10.** சிமியோனியரின் தலைவனாகிய செப்பத்தியாவின் தகப்பன் (1 நாளா. 2716).

மாசா (“சோதனை”), ஓரேப் கண்பார்வை தூரத்திலிருந்த ஓர் இடம், இங்கு இஸ்ரவேலர் தேவனை சோதனை செய்தார்கள் (யாத். 17:7; உபா. 6:16). மேரிபா என்னும் பெயரையும் காண்க.

மாத்தாத் (“அன்பளிப்பு”). **1.** யோசேப்பின் பாட்டன், கிறிஸ்துவின் மூதாதை (லூக்கா 3:24). **2.** கிறிஸ்துவின் இன்னொரு மூதாதை (லூக்கா 3:29).

மாரா (“கசப்பான”), சிவந்த சமுத்திரத்தைக் கடந்த இஸ்ரவேலர், அதற்குப் பிறகு, முதன்முதலில் தங்கின இடம் சூர் வனாந்தரம்; அங்கு கசப்பான நீரூற்று பாய்ந்த இடம் இதுதான் (யாத். 15:23; எண். 33:8). இது “எய்ன் ஹவாரா” என்று பாரம்பரியமாக அநியப்படுகிற இடம், சூயஸ் கடலிலிருந்து ஏறத்தாழ 75.6 கி. மீ (47 மைல்) தொலைவில் உள்ளது.

மார்த்தாள் (“பெண்”), மரியாள் மற்றும் லாசரு ஆகியோருடைய சகோதரி, பெத்தானியாவைச் சேர்ந்தவள் (லூக்கா 10:38, 40, 41; யோவான் 11:1–39).

மாற்கு (“மரியாதைப் பண்பு; பளபளப்பான”), மனந்திரும்பிய கிறிஸ்தவன் திருப்பணி ஊழியத்தில் பவுலுடன் சேர்ந்து பயணம் மேற்கொண்டவன் (அப். 12:12,15; 15:37,39; கொலோ. 4:10). மாற்கு இவனுடைய லத்தீன் பெயர், யோவான் இவனுடைய எபிரெயப் பெயர், இவனுடைய பெயரைத் தாங்கிய நற்செய்தி நூலை இயற்றியவன்.

மிகாயா (“யார் யெகோவாவைப் போல இருக்கிறான்?”). **1.** ரெகொபெயாமின் மனைவி மிகாயாள் (2 நாளா. 13:2). இவள் மாகாள் என்றும் அழைக்கப்பட்டாள் (1 இராஜா. 15:2; 2 நாளா. 11:20). மாக்காள் எண். 5 – ஐப் பார்க்கவும். **2.** மீகா எண். 5 –ஐப் பார்க்கவும். **3.** யூதாவின் தலைவர்களில் ஒருவன் (2 நாளா. 17:7). **4.** சக்கூரின் மகன் (நெகே. 12:35). **5.** மதிற்சுவர் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது, உடன் இருந்தவன் (நெகே. 12:41). **6.** ஆகாபின் வீழ்ச்சியை முன்னறிவித்த தீர்க்கதரிசி (1 இராஜா. 22:8–28; 2 நாளா. 18:7–27).

மிகாவேல் (“யார் தேவனைப் போல இருக்கிறான்?”) **1.** கானான் நாட்டை வேவுபார்க்க அனுப்பப்பட்டவன் (எண். 13:13). **2.** காத்தின் வழித்தோன்றல் (1 நாளா. 5:13). **3.** காத்தின் இன்னொரு வழித்தோன்றல் (1 நாளா. 5:14). **4.** ஆசாபின் மூதாதை (1 நாளா. 6:40). **5.** இசக்கார் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 7:3). **6.** எருசலேமில் குடியிருந்தவன் (1 நாளா. 8:16). **7.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்துகொண்ட ஒரு போர்வீரன் (1 நாளா. 12:20). **8.** ஒம்ரி என்னும் பிரபுவின் தகப்பன் (1 நாளா. 27:18). **9.** யோசபாத்தின் மகன் (2 நாளா. 21:2). **10.** சிறையிருப்பிலிருந்து திரும்பிய ஒருவனது மூதாதை (எஸ்றா 8:8).

மித்திரேதாத் (“மித்திரா என்னும் கடவுள் கொடுத்தது”). **1.** கோரேஸ் என்னும் அரசனின் பொக்கிஷக்காரன். இவன் மூலமாக தேவாலயப் பணிமுட்டுகள் திரும்பப் பெறப்பட்டன (எஸ்றா 1:8). **2.** எருசலேம் மீண்டும் புதுப்பிக்கப்படுவதை எதிர்த்துப் பெர்சியாவின் அரசனுக்கு மடல் எழுதியவன் (எஸ்றா 4:7).

மித்திலேனே (“தூய்மை”), ஆசியா மைனரின் மேற்குக் கடற்கரையை அடுத்த லெஸ்போ தீவின் முக்கியமான பட்டணம் (அப். 20:14).

மிரியாம் (“பருமனான; வலிமைமிக்க”). **1.** மோசே, ஆரோன் ஆகியோருடைய சகோதரி. ஆரோனுடன் சேர்ந்துகொண்டு இவள் மோசேக்கு எதிராக ஆசரோத்தில் கலகம் செய்தாள் (யாத். 2:4–10; எண். 12:1–15; 20:1). **2.** யூதாவின் வழித்தோன்றல் (1 நாளா. 4:17).

மிலேத்து (“இரத்தாம்பரம்”), ஐயோனியாவைச் சேர்ந்த துறைமுகப் பட்டிணம் (அப். 20:16; 2 தீமோ. 4:20). இது எபேசுப் பட்டணத்துக்குத் தெற்கே 57.9 கி. மீ (36 மைல்) தொலைவில் இருந்தது.

மினாசோன் (“நினைவுகூருகிற”), சீப்புரு தீவைச் சேர்ந்தவன், மனந்திரும்பிய இந்த மனிதன் பவுல் செசரியாவிலிருந்து எருசலேம் பயணம் செய்தபோது உடன்சென்றான் (அப். 21:16).

மிஸ்பா (“காவல் மடம்”). **1.** கீலேயாத் மலையில் இருந்த ஒரு கற்குவியல் (ஆதி. 31:50). **2.** வட பாலஸ்தீனத்திலுள்ள எர்மோன் மலையடிவாரத்தில் இருந்த ஏத்தியர் குடியிருப்பு (யோசுவா 11:3). **3.** யூதாவின் தாழ்நிலங்களில் இருந்த பட்டணங்களில் ஒன்று (யோசுவா 15:38). எலியூதெரோ போலிஸ் என்னும் இடத்திற்கு நேராக வடக்கே இருந்த பட்டணமே இது (பெய்ட்ஜிபிரின்). **4.** யோர்தானுக்கு கிழக்கே கீலேயாத்தில் இருந்த பட்டணம் (நியா. 11:34). ராமாத் மிஸ்பா என்னும் ஊரும் இதுவும் ஒன்றாக இருக்கக் கூடும். **5.** எருசலேமுக்கு வடக்கே பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் ஊர் (யோசுவா 18:26; 1 இராஜா. 15:22). இதன் சரியான இடம் எது வென்று தெரியவில்லை. **6.** மோவாபில் ஓர் இடம் (1 சாமு. 22:3); மடாபா என்னும் இடத்திற்கு தென் மேற்கில் உள்ள தற்கால ருஜ்ம் எல் மேஷ்ரெபெ என்னும் இடமும் இதுவும் ஒன்றாக இருக்கக் கூடும்.

மிஸ்ராயீம். காமின் இரண்டாவது மகன் (ஆதி. 10:6,13; 1 நாளா. 1:8,11). பெரும்பாலும் எகிப்திய மக்களை இச்சொல் குறிக்கக்கூடும்.

மீகா (மிகாயா என்பதன் சுருக்கம்). **1.** இவன் தனக்கென்று ஒரு சிறிய கோவிலை உண்டு பண்ணினவன் (நியா. 17:1–5). **2.** ரூபனின் வழித்தோன்றல் (1 நாளா. 5:5). **3.** மேவிபோசேத் என்னும் மறுபெயருள்ள மேரிபால் என்பவனது மகன் (2 சாமு. 4:4; 1 நாளா. 8:34). **4.** லேவியின் மகனாகிய கோகாத்தின் மகன் (1 நாளா. 23:20; 24:24). **5.** அப்தோனின் தகப்பன் (2 நாளா. 34:20). இவன் 2 இராஜாக்கள் 22:12 மிகாயா என்று அழைக்கப்பட்டிருக்கிறான். **6.** ஒரு தீர்க்கதரிசி (எரே. 26:18; மீகா 1:1). **7.** சிக்ரியின் மகன் (1 நாளா. 9:15; நெகே. 11:17). **8.** உடன்படிக்கையில் கையெழுத்திட்டவன் (நெகே. 10:11).

மீகாள் (“யார் தேவனைப் போல இருக்கிறாள்?”), சவுலின் மகள், இவளைத் தாவீது திருமணம் செய்தான் (1 சாமு. 14:49). மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது (2 சாமு 6:23). ஆயினும் 2 சாமுவேல் 21:8 – இல் இவளுக்கு ஐந்து குமாரர்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. இவள் “ஆதரியேலுக்குப் பெற்ற ஐந்து குமாரர்கள்” என்று KJV மொழி பெயர்ப்பு கூறுகிறது. எபிரெயு, கிரேக்கம், சிரியாக் மொழிப் பிரதிகள் “மேரேப் ஆதரியேலுக்குப் பெற்ற ஐந்து குமாரர்கள்” என்று இதனை மொழி பெயர்த்துள்ளன. இது இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருகிறது. (தமிழிலும் இதே விதமாகவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) 1 சாமுவேல் 18:19 – ஆம் வசனத்தைக் காண்க.

மீதியான் (“சச்சரவு”), ஆபிரகாமுக்குக் கேத்தூராளிடத்தில் பிறந்தவன். மீதியானியரின் மூதாதை இவனேயாவான் (ஆதி. 25:2,4; 36:35; 1 நாளா. 1:32).

மீதியான் (“சச்சரவு”), யோர்தானுக்கு அப்புறத்தில் மீதியானின் வழித்தோன்றல்கள் குடியிருந்த நிலப்பகுதி; ஏதோம், சீனாய் தீவகற்பம், அரேபியன் பெட்ரா ஆகிய இடங்களும் இதனுள் அடங்கும் (யாத். 2:15,16; நியா. 6:1; அப். 7:29).

மீஷாவேல் (“யார் தேவன் இருப்பது போல இருக்க முடியும்?”). **1.** நாதாப், அபியூ ஆகியோர் மரணமடைந்த பிறகு அந்தச் சடலங்களைத் தூக்கிச் சென்றவன் (யாத். 6:22; லேவி. 10:4). **2.** நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டபோது எஸ்றாவுடன் நின்றவன் (நெகே. 8:4). **3.** பாபிலோனில் தானியேலின் தோழனாக இருந்தவன் (தானி. 1:6,7,11,19). மேஷாக் என்னும் பெயரைக் காண்க.

மூலைவாசல், எருசலேம் மதிற்சுவரின் வட மேற்கு மூலையில் இருந்த ஒரு வாசல் (2 இராஜா. 14:13).

மூன்று சத்திரம், சிஸ்டர்னா என்று தற்போது அழைக்கப்படும் நகரத்திற்கு அருகிலுள்ள அப்பியுபுரம் நெடுஞ்சாலையில் இருந்த ஓர் இடம் (அப். 28:15).

மெசுல்லாம் (“கூட்டாளி; நண்பன்”). **1.** வேத பாரகனாகிய சாப்பானின் பாட்டன் (2 இராஜா. 22:3). **2.** யோயாக்கீம் என்னும் அரசனின் வழித்தோன்றல் (1 நாளா. 3;19). **3.** காத் குடும்பத்தின் தலைவன் (1 நாளா. 5:13). **4.** பென்யமீனின் வழித்தோன்றல் (1 நாளா. 8:17). **5.** இவனுடைய மகன் எருசலேமில் குடியிருந்தான் (1 நாளா. 9:7).

6. எருசலேமில் குடியிருந்தவன் (1 நாளா. 9:8). **7.** ஆரோனின் வழித்தோன்றல், எஸ்றாவின் மூதாதை (1 நாளா. 9:11; நெகே. 11:11). இவன் சல்லூம் என்றும் அழைக்கப்பட்டான் (எஸ்றா 7:2; 1 நாளா. 6:12,13). **8.** ஓர் ஆசாரியன் (1 நாளா. 9:12). **9.** தேவாலய வேலையை மேற்பார்வை செய்தவன் (2 நாளா. 34:12). **10.** எஸ்றாவுடன் எருசலேமுக்குத் திரும்பிய ஒரு தலைவன் (எஸ்றா 8:16). **11.** சிறையிருப்புக்குப் பிறகு அந்நியப் பெண்களைத் திருமணம் செய்தவர்களைக் கணக்கெடுக்க உதவியவன் (எஸ்றா 10:15). **12.** சிறையிருப்புக் காலத்தில் அந்நியப் பெண்ணைத் திருமணம் செய்தவன் (எஸ்றா 10:29). **13. 14.** எருசலேம் மதிற்சுவரின் ஒரு பகுதியைத் திரும்பக் கட்டியவர்கள் (நெகே. 3:4,6,30; 6:18). **15.** எஸ்றா நியாயப்பிரமாணப் புத்தகத்தைப் படித்தபோது அவனுடன் நின்ற ஓர் இளவரசனோ ஆசாரியனோ ஆவான் (நெகே. 8:4). **16.** சிறையிருப்புக்குப் பிறகு தேவனோடு செய்துகொண்ட புதிய உடன்படிக்கையில் முத்திரை போட்ட ஆசாரியன் (நெகே. 10:7). **17.** சிறையிருப்புக்குப் பிறகு தேவனோடு செய்துகொண்ட புதிய உடன்படிக்கையில் முத்திரையிட்டவன் (நெகே. 10:20). **18.** இவனுடைய வழித்தோன்றல்கள் எருசலேமில் குடியிருந்தார்கள் (நெகே. 11:7). **19.** எருசலேம் மதிற்சுவரைப் பிரதிஷ்டை செய்ய உதவிய ஓர் ஆசாரியன் (நெகே. 12:13,33). **20.** கிநெதோனின் வழித்தோன்றல் (நெகே. 12:16). **21.** சிறையிருப்புக்குப் பிறகு வாயிற்காப்போனாயிருந்த ஒரு லேவியன் (நெகே. 12:25).

மெசொப்பொத்தாமியா (“இரண்டு ஆறுகளுக்கிடையே”), டைகிரிஸ் மற்றும் ஐபிராத்து ஆறுகளுக்கு இடையே இருந்த நிலப்பகுதி (ஆதி. 24:10; உபா. 23:4). இந்த நிலப்பகுதியில் ஆறுகள் உற்பத்தியாகும் மலைப்பகுதியும், ஆற்றின் தாழ்விடமாகிய பாபிலோனும் இடம்பெறவில்லை.

மெத்தூசலா, வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதர்களிலேயே நீண்ட நாட்கள் வாழ்ந்தவன், நோவாவின் பாட்டன், கிறிஸ்துவின் மூதாதை (ஆதி. 5:21–27); லூக்கா 3:37).

மெரெமோத் (“வலிமை; உறுதி”). **1.** ஆலயத்தின் பொன் வெள்ளி ஆகிய பாத்திரங்களை எடை போட்ட ஓர் ஆசாரியன் (எஸ்றா 8:33; நெகே. 3:4,21). **2.** சிறையிருப்பின் போது அந்நியப் பெண்ணை மணந்தவன் (எஸ்றா 10:36). **3.** சிறையிருப்பிற்குப் பிறகு தேவனோடு செய்த புதிய உடன்படிக்கையில் முத்திரை போட்டவன் (நெகே. 10:5; 12:3).

மெலித்தா (“தேவன் வழங்குகிற”), மத்திய தரைக்கடலிலுள்ள ஒரு தீவு (அப். 28:1). சிசிலியிலிருந்து 96.5 கி. மீ (60 மைல்) தொலைவில் உள்ளது.

மெல்கிசேதேக்கு (“நீதியின் அரசன்”), சாலேமின் அரசனும் ஆசாரியனும். இவன் கிறிஸ்துவுக்குத் தீர்க்கதரிசன அடையாளம் அல்லது மாதிரி (ஆதி. 14: 18–20; சங். 110:4; எபி. 5–7).

மெனாகேம் (“ஆறுதல் அளிப்பவர்”), இவன் இஸ்ரவேல் அரசனாகிய சல்லூமைக் கொலை செய்து ஆட்சியைப் பிடித்தான்; பின்னர் கொடுங்கோல் ஆட்சிபுரிந்த இவன் சிலைவணக்கமும் செய்து வந்தான் (2 இராஜா. 15:14–23).

மேசா (“சுதந்தரம்”). **1.** மோவாபின் அரசன், அகசியாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவன் (2 இராஜா. 3:4). **2.** காலேபின் மூத்த மகன் (1 நாளா. 2:42). **3.** பென்யமீனின் வழித்தோன்றால் (1 நாளா. 8:9).

மேசாக் (“இளவரசனின் நிழல்; இவன் யார்?”), மீஷாவேல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டு சென்ற பிறகு, அவனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர். இவன் கடுமையான அக்கினிச் சூளையிலிருந்து காக்கப்பட்டான் (தானி. 1:7; 3:12–30).

மேதாத் (“அன்பு”), பரிசுத்த ஆவி வந்து தங்கின எபிரெய மூப்பர்களில் ஒருவன் (எண். 11:26,27).

மேதியா (“மத்தியிலுள்ள நிலப்பகுதி”), ஆசியாவில் இருந்த ஒரு நாடு, இது காஸ்பியன் கடலுக்குத் தெற்கே, பார்தியா நாட்டிற்கு மேற்கே, ஏலாம் நாட்டிற்கு வடக்கே, யக்ராஸ் மலைகளுக்கு கிழக்கே அமைந்திருந்தது. கி. மு. 400 –

ஆண்டுகளில் வலிமை மிக்க பெர்சிய மேதியப் பேரரசு இப்பகுதியில் ஆட்சிபுரிந்து வந்தது (எஸ்தர் 1:3,13,18; தானி. 8:20).

மேரப் (“பெருகுதல்”), தாவீதின் மனைவி யாக வாக்குறுதி பண்ணப்பட்டவள், ஆனால் ஆதரியேலின் மனைவியானாள் (1 சாமு. 14:49; 18:17,19). இவள் மீகாளின் சகோதரி.

மேரிபா (“சச்சரவு”). **1.** வனாந்தரத்தில் மோசே பாறையை அடித்த இடம் (யாத். 17:7). **2.** சீன் வனாந்தரத்தில் இருந்த காதேஸ் பர்னேயா என்னும் இடமும் இப்பெயர் பெற்றிருந்தது, இங்கு இஸ்ரவேல் மக்கள் மோசேக்கு எதிராகக் கலகம் செய்தார்கள் (எண். 20:13). உபாகமம் 32:50 –இல் இந்த இடம் மேரிபா காதேஸ் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

மேரிபா காதேஸ், மேரிபா என்னும் பெயரில் எண். 2 –ஐக் காண்க.

மேவிபோசேத் (“சிலையை உடைக்கிறவன்”). **1.** சவுலின் மறுமனையாட்டியாகிய ரிஸ்பாளுக்குப் பிறந்தவன் (2 சாமு. 21:8). **2.** சவுலின் பேரன், இவன் தாவீதுக்கு உண்மையுள்ளவனாயிருந் தான். இவன் துரோகி என்று இவனுடைய வேலைக்காரனாகிய சீபா கூறினான் (2 சாமு. 4:4; 9:6–13). இவன் மேரிபால் (“பாகால் பேராடு கிறான்”) என்றும் அழைக்கப்பட்டான் (1 நாளா. 8:34; 9:40).

மொர்தெகாய் (“மார்ஸ் என்னும் கடவுளுக்கு ஒப்புவிக்கப்பட்ட”). **1.** சிறையிருப்பின்போது பெர்சியாவில் மந்திரியாக உயர்ந்தவன். அழிவி லிருந்து யூதர்களைக் காப்பாற்ற உதவியன் (எஸ்தர் 2–10). **2.** பாபிலோனியச் சிறையிருப்பி லிருந்து திரும்பியவர்களில் ஒரு தலைவன்.

மோசே (“நீரிலிருந்து எடுக்கப்பட்டவன்; குழந்தை; பிறந்தவன்”), மேதகு தீர்க்கதரிசியும், இஸ்ரவேலுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத் தவனும் ஆவான். எகிப்திய அடிமைத்தனத்தி லிருந்து தனது மக்களை வழிநடத்தியவன். இவ னுடைய வரலாற்றை யாத்திராகமம் விவரிக் கிறது. திருமறையின் முதல் ஐந்து நூல்களை எழுதியவனும் இவனே.

மோப் (நோப்) (“நன்மையின் குடியிருப்பு”), எகிப்து நாட்டில் மத்திய பகுதியில் நைல் ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்திருந்த ஒரு பழம் பட்ட ணம் (ஓசியா 9:6), இது நோப் என்றும் அழைக் கப்பட்டது (எரே. 2:16).

மோரியா (“கர்த்தரின் கசப்பு”). **1.** எருசலேம் நகரத்திலுள்ள ஒரு மேடு, இங்குதான் சாலொ மோன் தேவாலயத்தைக் கட்டினான் (2 நாளா. 3:1). அர்வனா போரடித்த களம் இந்த மேடாகவே இருக்கக் கூடும். பாரம்பரியமாக இந்தப் பொருளை இது பெற்றிருந்ததால் வரலாற்றுப் பதிவாளர் இதனை மோரியா என்று குறிப்பிட்டார் போலும் (2 சாமு. 24:18; 2 நாளா. 3:1). **2.** ஈசாக்கைப் பலியிடும்படி ஆபிரகாம் ஆயத்தப்படுத்தின இடம் இருந்த மலைப்பகுதி (ஆதி. 22:2). இது எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை. மோரியா வும் மோரேயும் (1) ஒரே இடம் என்று சமாரியர் கருதினார்கள். ஆனால் அது சரியாக இருக்கும் என்று தோன்றவில்லை.

மோரே (“விரிவாக்குகிற”). **1.** கானான் நாட் டிற்கு வந்தவுடன் ஆபிரகாம் முதன் முதலில் தங் கிய இடம் (ஆதி. 12:6). அது சீகேமுக்கு அருகில் இருந்தது. **2.** யெஸ்ரியேல் பள்ளத்தாக்கின் அடிவாரத்தில் உள்ள ஒரு குன்று (நியா. 7:1). இது பெரும்பாலும் தற்போதைய ஜே பேல் டாகி அல்லது சிறிய எர்மோன் என்று அழைக்கப்படும் குன்றாக இருக்கக்கூடும். இது கில்போவா மலையிலி ருந்து 12.9 கி.மீ (8 மைல்) தொலைவில் உள்ளது.

மோவாப் (“என்னுடைய தகப்பனிடத்திலி ருந்து”), லோத்திற்கு அவனுடைய மகள் மூல மாகப் பிறந்த மகன், மோவாபியரின் மூதாதை (ஆதி. 19:34–37).

மோவாப், சாவுக்கடலுக்குக் கிழக்கே உள்ள பீடபூமி, அர்னோன் மற்றும் சேரேத் ஆகிய வறண்ட ஆறுகளுக்கு இடையே உள்ள நிலப் பகுதி, சில சமயங்களில் அர்னோன் ஆற்றுக்கும் வடக்கே இந்த எல்லை விரிவடைந்தது. (உபா. 1:5; எண். 22 –25).

யதுவா (“நன்கு அறிந்த; அறியப்பட்டவன்”). **1.** உடன்படிக்கையை முத்திரை போட்டவன்

(நெகே. 10:21). **2.** பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ள கடைசிப் பிரதான ஆசாரியன் (நெகே. 12:11,22).

யாகாசியேல் (“தேவன் வெளிப்படுத்து கிறார்”). **1.** சிக்லாகில் தாவீதுடன் சேர்ந்து கொண்டவன் (1 நாளா. 12:4). **2.** உடன்படிக்கைப் பெட்டியை எருசலேம் நகரத்துக்குக் கொண்டு வருவதற்கு உதவிய ஓர் ஆசாரியன் (1 நாளா. 16:6). **3.** எப்ரோனின் மகன் (1 நாளா. 23:19; 24:23). **4.** மோவாபுக்கு எதிராகப் போர் புரியும்படி யோசபாத்தின் படையை உற்சாகப்படுத்திய ஒரு லேவியன் (2 நாளா. 20:14). **5.** ஒரு தலைவன், இவனுடைய மகன் பாபிலோனிலிருந்து திரும்பி னான் (எஸ்றா 8:5).

யாகீன் (“நிறுவுகிற; அவர் நிறுவுவார்”). **1.** சிமியோனின் ஒரு மகன் (ஆதி. 46:10; யாத். 6:15; எண். 26:12). 1 நாளாகமம் 4:24 –இல் இவன் யாரீப் என்று அழைக்கப்பட்டுள்ளான். **2.** பாபி லோனிய சிறையிருப்புக்குப் பிறகு எருசலேமில் ஆசாரியனாக இருந்தவன் (1 நாளா. 9:10; நெகே. 11:10). **3.** ஆரோன் குடும்பத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 24:17).

யாகேல் (“காட்டு வெள்ளாடு”), ஏபேரின் மனைவியாகிய இவள் சிசெராவைக் கொன்ற வள் (நியா. 4:17–22; 5:6,24).

யாக்கோபு (Jacob) (“ஏமாற்றுகிற; பின் தொடர்கிற”). **1.** ஈசாக்கின் மகன், ஏசாவும் இவ னும் இரட்டை சகோதரர்கள்; கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன். ஏசாவின் பிறப்புரிமையை விலைக்கு வாங்கி, யூத நாட்டின் தகப்பனானான் (ஆதி. 25–50; மத். 1:2). இவனுடைய பெயரை தேவன் யாக்கோபிலிருந்து இஸ்ரவேலாக மாற்றி னார் (“தேவன் போராடுகிறார்”; ஆதி. 32:28; 35:10). **2.** மரியாளின் கணவனாகிய யோசேப்பின் தகப்பன் ஆவான் (மத். 1:15,16).

யாக்கோபு (James-Jacob என்பதன் கிரேக்க வடிவம்). **1.** இவன் செபதேயுவின் மகனும் யோவா னின் சகோதரனும் ஆவான், பன்னிருவரில் ஒரு வன். ஏரோது முதலாம் அகிரிப்பாவால் கொலை செய்யப்பட்டான் (மத். 4:21; மாற்கு 5:37; லூக்கா 9:54; அப். 12:2). **2.** அல்பேயுவின் மகன், பன்னிரு அப்போஸ்தலரில் இன்னொருவன், இவனே மரியாளின் மகனாகிய “சின்ன யாக்கோபாக” இருக்கக்கூடும். “சின்ன” என்னும் சொல்லின் மூலமாக இவன் மற்ற யாக்கோபைக் காட்டிலும் வயதிலோ உயரத்திலோ சிறியவனாக இருக்க வேண்டும் (மத். 10:3; மாற்கு 15:40; அப். 1:13). **3.** இயேசுவின் சகோதரன் (மத். 13:55). கிறிஸ்து வின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இவன் விசு வாசியானான் (1 கொரி. 15:7); எருசேலம் சபை யில் ஒரு தலைவனாக இருந்தவன் (அப். 12:17; கலா. 1:19; 2:9). **4.** யூதாவின் சகோதரன் என்று குறிப்பிடப்பட்டுள்ள மற்றப்படி அறியப்படாதவன், “யாக்கோபின் மகன் யூதா” என்றே இந்த இடங் களில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று பலர் கருதுகிறார்கள் (லூக். 6:16; அப். 1:13).

யாசோன் (“குணமாக்குதல்”). **1.** தெசலோ னிக்கே பட்டணத்தில் பவுல் இவனுடைய வீட்டில் தான் தங்கியிருந்தான் (அப். 17:5–9). **2.** பவுலின் உறவினனாகிய இவன் யூதக் கிறிஸ்தவன், ரோமாபுரிக்கு வாழ்த்துதலை அனுப்பினான் (ரோமர் 16:21). மேலே குறிப்பிடப்பட்டுள்ள இருவரும் ஒரே ஆளாக இருக்கக் கூடும்.

யாபீன் (“அறிவுக் கூர்மையுள்ள; கண்டு ணர்ந்த”). **1.** யோசுவா தோற்கடித்த ஆத்சோரின் அரசன் (யோசுவா 11:1). **2.** இஸ்ரவேலை அடக்கி யாண்ட ஆத்சோரின் மற்றொரு அரசன், தெபொ ராள் இவனைத் தோற்கடித்தாள் (நியா. 4).

யாபேஸ் (“வறண்ட இடம்”), சகரியாவை வெட்டிக்கொன்று அரியணையைப் பிடித்த சல்லூ மின் தகப்பன் (2 இராஜா. 15:10–14). யாபேஸ் கீலேயாத் என்னும் பெயரையும் காண்க.

யாபேஸ் கீலேயாத் (“வறண்ட”), கீலேயாத் திலிருந்த ஒரு பட்டணம் (நியா. 21:8; 1 சாமு. 11:1). வாடி யாபீஸ் என்று தற்போது அழைக்கப்படும் இடத்தில் இப்பட்டணம் இருந்திருக்க வேண்டும். இது கலிலேயாக் கடலுக்குத் தெற்கே ஏறத்தாழ 32 கி. மு (20 மைல்) தெலைவில் இருக்கிறது.

யாப்பேத் (“விரிவுபடுத்துபவர்; அழகான; பெரிதாக்கப்பட்ட”), நோவாவின் இரண்டாவது

மகன், இந்திய ஐரோப்பிய நாடுகளில் வாழும் இனத்தாரின் மூதாதை என்று கருதப்படுபவன் (ஆதி. 5:32; 6:10; 7:13; 9:18,23,27; 1 நாளா. 1:4,5).

யாவீரு (“ஒளியூட்டப்பட்டவன்”), கப்பர்நகூம் அருகில் இருந்த ஜெபாலயத் தலைவன், இவனது இறந்துபோன மகளை இயேசு உயிருடன் எழுப் பினார் (லூக்கா 8:41).

யாவீர் (“யெகோவா ஒளியூட்டுகிறார்”). **1.** தகப்பன் வழியில் யூதா கோத்திரத்தையும் தாய் வழியில் மனாசே கோத்திரத்தையும் சேர்ந்தவன் (எண். 32:41; உபா. 3:14; 1 இராஜா. 4:13; 1 நாளா. 2:22). **2.** இருபத்திரண்டு ஆண்டுகள் இஸ்ர வேலின் நியாயாதிபதியாக இருந்தவன் (நியா. 10:3–5). **3.** எஸ்தரின் ஒன்றுவிட்ட சகோதரனா கிய மொர்தெகாயின் தகப்பன் (எஸ். 2:5).

யுஸ்து (“நீதிமான்”). **1.** கொரிந்துபட்டணத் தைச் சேர்ந்த விசுவாசியான இவனுடைய வீட்டில் பவுல் தங்கியிருந்தான் (அப். 18:7). **2.** இயேசு என் னும் பெயரில் எண் 2 –ஆவது நபரைக் காண்க. **3.** யோசேப்பு என்னும் பெயரில் எண். 11 – நபரைக் காண்க.

யூதா (Judah; Judas; jude) (“புகழ்ச்சி”). **1.** லேயாளினிடத்தில் யாக்கோபுக்குப் பிறந்தவன், கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன். ரூபன் இழந்துபோன பிறப்புரிமையை இவன் பெற்றான். இவனுடைய வழித்தோன்றல்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றாயினர் (ஆதி. 29:35; 37:26–28; 43:3–10; மத். 1:2,3; லூக்கா 3:33). **2.** தேவாலயத்தைத் திரும்பக் கட்டுவதற்கு உதவிய ஒருவனது மூதாதை (எஸ்றா 3:9). **3.** சிறையிருப்புக் காலத்தில் அந்நியப் பெண்ணை மணந்தவன் (எஸ்றா 10:23). **4.** சிறையிருப்புக்குப் பிறகு எருசலேம் நகரத்தின் அதிகாரத்தில் இரண்டாவது நபர் (நெகே. 11:9). **5.** செருபாபேலோடு எருசலேமுக்கு வந்தவன் (நெகே. 12:34). **6.** யூதாவின் தலை வர்களில் ஒருவன் (நெகே. 12:34). **7.** இவன் ஆசா ரியனும் பாடகனும் ஆவான் (நெகே. 12:36). **8.** பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவன். இவன் கர்த்தரைக் காட்டிக்கொடுத்துவிட்டுப் பின்னர் தானே தூக்கிலிட்டுக் கொண்டான் (மத். 10:4; 26:14,25,47; 27:3; லூக். 6:16; 22:3,47,48). இவன் ஸ்காரியோத்து என்றும் அழைக்கப்பட்டான்; “காரியோத்து ஊரைச் சேர்ந்தவன்” என்பது இதன் பொருளாயிருக்கக் கூடும். இவ்வூர் எப்ரோனிலிருந்து 19 கி. மீ (12 மைல்) தொலை வில் இருந்தது. **9.** இயேசுவின் சகோதரரில் ஒருவன் (மத். 13:55; மாற்கு 6:3). இவனது பெயரில் உள்ள திருமடலை இயற்றியவன் (யூதா 1). **10.** ரோமாபுரிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த ஒரு கலிலேயன் (அப். 5:37). **11.** இவனுடன் பவுல் தமஸ்குவில் தங்கியிருந்தார் (அப். 9:11). **12.** சீலா வுடன் அந்தியோகியாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி (அப். 15:22,27), இவனுடைய மறு பெயர் பர்சபா. **13.** ததேயு என்னும் பெயரைக் காண்க. **14,15.** கிறிஸ்துவின் மூதாதையரில் இருவர் (லூக்கா 3:26,30).

யூதா (Judah), (“கர்த்தருடைய புகழ்ச்சி”), பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றின் பரப் பெல்லை. சாலொமோனின் மறைவுக்குப் பிறகு பென்யமீன் கோத்திரத்தாரின் நிலப்பகுதியோடு யூதாவின் பகுதியும் சேர்ந்து தெற்கு நாடாக மாறிற்று. இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் இடையே எல்லை நிச்சயமற்றபடி இருந்தது. அது இஸ்ர வேலின் பெத்தேலுக்கும் யூதாவின் ராமாவுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். எருசலேம் இதன் தலை நகரமாகும் (2 நாளா. 13:18; 15:8).

யூதேயா (“கர்த்தருடைய புகழ்ச்சி”), பெர்சி யாவின் ஒரு மாகாணமாக முதலில் குறிப்பிடப் பட்டிருந்தது (எஸ்றா 5:8). பின்னர் இது ரோமப் பேரரசின் ஒரு மாகாணமாக மாறிற்று (மத். 2:1). இதன் வட எல்லை மேற்கில் யோப்பா பட்டணம்; அங்கிருந்து கிழக்கோ சாவுக்கடலின் வடபுறம் 16.1 கி.மீ (10 மைல்) தொலைவு வரை. தெற்கு எல்லை காத்சாவிலிருந்து தென்மேற்கே 7 மைல்; அங்கிருந்து பெயர்செபா வழியாகச் சாவுக்கட லின் தென்முனை மட்டுமாகும்.

யெகூ (ஏகூ) (“யெகோவா இவர்”). **1.** இஸ்ர வேலன் அரசனாகிய பாஷாவின் அழிவைக் குறித்து முன்னுரைத்த தீர்க்கதரிசி (1 இராஜா.

16:1–12; 2 நாளா. 19:2). **2.** இஸ்ரவேலின் பத்தாவது அரசன் (1 இராஜா. 19:16,17; 2 இராஜா. 9:10,11). இவனுடைய கேடுற்ற தலைமை நாட்டைப் பலவீனப்படுத்தியது. **3.** எஸ்ரோனின் வழித்தோன்றல் (1 நாளா. 2:38). **4.** சிமியோனின் வழித்தோன்றல் (1 நாளா. 4:35). **5.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்துகொண்டவன் (1 நாளா. 12:3).

யெதாயா (“யெகோவா அறிகிறார்”). **1.** எருசலேமில் ஓர் ஆசாரியன் (1 நாளா.9:10; 24:7; எஸ்றா 2:36; நெகே. 7:39). **2.** செருபாபேலோடு திரும்பிவந்த ஓர் ஆசாரியன் (நெகே. 11:10; 12:6,19). **3.** செருபாபேலோடு திரும்பி வந்த மற்றொரு ஆசாரியன் (நெகே. 12:7,21). **4.** ஆலயத்திற்கு வெகுமதிகளைக் கொண்டுவந்தவர்களில் ஒருவன் (சக. 6:10,14).

யெதிதியா (“யெகோவாவுக்கு அன்புக்குரியவன்”), நாத்தானின் மூலமாக சாலொமோனுக்கு தேவன் கொடுத்த பெயர் (2 சாமு. 12:25).

யெதியாயேல் (“தேவன் அறிகிறார்”). **1.** பென்யமீனின் ஒரு மகன் (1 நாளா. 7:6,10,11). அஸ்பால் என்பவனும் இவனும் ஒரே ஆளாக இருக்கக் கூடும் (1 நாளா. 8:1). **2.** தாவீதின் பராக்கிரம சாலிகளில் ஒருவன் (1 நாளா. 11:45). **3.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்து கொண்டவன் (1 நாளா. 12:20). **4.** மெஷெலேமியாவின் மகனும் கோராகின் சந்ததியில் வந்தவனும் ஆவான் (1 நாளா. 26:2).

யெப்தா (“எதிர்ப்பவன்”), அம்மோனிடத்திலிருந்து தனது மக்களை மீட்ட இஸ்ரவேலின் நியாயாதிபதி (நியா. 11அதி;12:7).

யெருபாகால் (“பாகால் போராடட்டும்; பாகால் தான் பெரியவன் என்று காண்பிக்கட்டும்”), கிதியோனின் தகப்பன் அவனுக்கு அளித்த பெயர் (நியா. 6:32; 7:1; 8:29).

யெரொபெயாம் (“விரிவுபடுத்துபவன்; மக்களுடைய நலன்கருதி இவன் மன்றாடுகிறான்”). **1.** நாடு இரண்டாகப் பகுக்கப்பட்ட பிறகு இஸ்ரவேலின் முதல் அரசனாக ஆட்சிபுரிந்தவன். இவன் 22 ஆண்டுகள் அரசாண்டான் (1 இராஜா. 11:26–40; 12:1–14:20). **2.** இஸ்ரவேலின் பதிமூன்றாவது அரசன். இவனுடைய ஆட்சியில் இஸ்ரவேல் வலிமை பெற்றிருந்தது, ஆனாலும் சிலை வணக்கத்தில் அது மூழ்கிப் போயிருந்தது (2 இராஜா. 14:23–29).

யெஷூரன் (“ஆசிர்வதிக்கப்பட்ட”), இஸ்ரவேலின் ஓர் அடையாளப் பெயர் (உபா. 32:15; ஏசா. 44:2).

யெஸ்ரெயேல் (“தேவன் விதைக்கிறார்”). **1.** ஏதாமின் வழித்தோன்றல் (1 நாளா. 4:3). **2.** ஓசியாவின் ஒரு மகனுக்கு அடையாளமாய்க் கொடுக்கப்பட்ட பெயர்.

யேசபேல் (“உயர்த்தப்படாத; கணவனற்ற, திருத்தப்படாத”). **1.** இஸ்ரவேலின் அரசி; தீய வளும், சிலைவணக்கம் செய்தவளும் ஆவாள் (1 இராஜா. 16:31; 18:4–21:25; 2 இராஜா. 9:7–37). **2.** தியத்தீராவில் இருந்த ஒரு பெண் கள்ளத் தீர்க்கதரிசி (வெளி. 2:20). இது அந்தத் தீர்க்க தரிசியின் இயற்பெயராயிராமல், ஓர் அடையாளமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கக் கூடும்.

யொக்தான், சேமின் வழியில் வந்த ஏபேரின் ஒரு மகன் (ஆதி. 10:25,26; 1 நாளா. 1:19,20,23). பெரும்பாலும், அரேபியா இனத்தை இப்பெயர் குறிக்கக்கூடும், இதிலிருந்து பல அரேபியா இனங்கள் தோன்றின.

யொயகீம் (“யெகோவா நிறுவுகிறார்”), பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யெசுவாவின் மகன் (நெகே. 12:10,12,26). யோயாக்கீம் என்பவனும் இவனும் ஒரே ஆள் என்று எண்ணிக் குழப்பமடையக் கூடாது.

யோகனான் (“யெகோவா கிருபைபொருந்தியவர்”). **1.** எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு கெதலியாவுடன் சேர்ந்துகொண்ட படைத்தலைவன் (2 இராஜா. 25:23; எரே. 40:8,13). **2.** யூதாவின் அரசனாகிய யோசியாவின் மூத்த மகன் (1 நாளா. 3:15). **3.** எலியோனாயின் ஒரு மகன் (1 நாளா. 3:24). **4.** சாலொமோனின் காலத்து ஓர் ஆசாரியனின் தகப்பன் (1 நாளா. 6:9,10). **5.6.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்து கொண்ட

இரண்டு பராக்கிரமசாலிகள் (1 நாளா. 12:4,12). 7. ஆகாசின் காலத்தில் யூதாவிலிருந்து சிறை பிடிக்கப்பட்டவர்களை அடிமைகளாக்குவதை எதிர்த்த ஒருவனது தகப்பன் (2 நாளா. 28:12). 8. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன் (எஸ்றா 8:12). 9. சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு மக்கள் திரும்பி வர வேண்டும் என்று வேண்டிக் கொண்ட ஓர் ஆசாரியன் (எஸ்றா 10:6). 10. அம்மோனியனாகிய தொபியாவின் மகன் (நெகே. 6:18). 11. யொயகீமின் காலத்தில் இருந்த ஓர் ஆசாரியன் (நெகே. 12:22,23).

யோகெபேத் (“யெகோவாவே கனம் அல்லது மகிமை”), லேவியின் வழித்தோன்றலாகிய இவள் மோசேயின் தாய் (யாத். 6:20; எண். 26:59).

யோசபாத் (“யெகோவா நியாயாதிபதி”). 1. தாவீதின் மந்திரி (2 சாமு. 8:16; 20:24; 1 இராஜா. 4:3). 2. சாலொமோனின் அதிகாரிகளில் ஒருவன் (1 இராஜா. 4:17). 3. யோராமுக்கு எதிராகச் சதி செய்த யெகூவின் தகப்பன் (2 இராஜா. 9:2,14). 4. ஓபேத் ஏதோமினிடத்திலிருந்து உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவருவதற்கு உதவிய ஓர் ஆசாரியன் (1 நாளா. 15:24). 5. யூதாவின் அரசன், விசுவாசத்துடன் இருந்தவன், கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (1 இராஜா. 22:41–50; மத். 1:8).

யோசபாத் (“தேவனால் நியாயந்தீர்க்கப்பட்ட”), கடைசி நியாயத்தீர்ப்பு நடைபெறப் போகிற பள்ளத்தாக்கு (யோவேல் 3:2); கெதரோன் பள்ளத்தாக்கும் இதுவும் ஒன்று எனப் பாரம்பரியம் கருதுகிறது.

யோசியா (“யெகோவா ஆதரிக்கிறார்”). 1. யூதாவின் தேவபக்தி நிறைந்த அரசன், இவனுடைய காலத்தில் நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டது (1 இராஜா. 13:2; 2 இராஜா. 22:1–23:30). இவன் கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (மத். 1:10,11). 2. எருசலேமில் வாழ்ந்த இவன் செப்பனியாவின் மகன் (சக. 6:10).

யோசுவா (Joshua, Hoshea) (“யெகோவா என் இரட்சிப்பு”). 1. மோசேயை அடுத்துவந்து தலைவன்; வாக்குறுதி செய்யப்பட்ட நாட்டைக் கைப்பற்ற இஸ்ரவேலை வழிநடத்தியவன் (யாத். 17:9–14; 24:13; உபா. 31:1–23; 34:9). ஓசியா என்னும் இவனது பெயரை (“யெகோவா என் துணை”) யோசுவா என்று மாற்றினான். 2. ஏலியின் காலத்தில் பெத்ஷிமேஸ் ஊரில் வசித்தவன் (1 சாமு. 6:14,18). 3. யோசியாவுக்குக் கீழ் எருசலேமின் ஆளுநராக இருந்தவன் (2 இராஜா. 23:8). 4. தேவாலயம் திரும்பக் கட்டப்பட்டபோது இருந்த பிரதான ஆசாரியன் (ஆகாய் 1:1,12,14; 2:2,4; சக. 31,3,6).

யோசே (Jose) கிறிஸ்துவின் மூதாதை (லூக்கா 3:29).

யோசே (JOSES) (“உதவிபெற்றவன்”). 1. கிறிஸ்துவின் சகோதரரில் ஒருவன் (மத். 13:55; மாற்கு 6:3). 2. கிலெயோப்பா மரியாளின் மகன் (மத். 27:56; மாற்கு 15:40,47).

யோசேப்பு (“பெருகச் செய்கிறவன்”). 1. யாக்கோபு ராகேல் ஆகியோரின் மகன். இவன் அடிமையாக விற்கப்பட்டான், ஆனால் எகிப்தின் முதல் மந்திரியாக உயர்ந்தான் (ஆதி. 37அதி; 39–50அதி). 2. கானானுக்கு அனுப்பப்பட்ட உளவாளிகளில் ஒருவனது தகப்பன் (எண். 13:7). 3. ஆசாபின் மகன் (1 நாளா. 25:2,9). 4. சிறையிருப்புக் காலத்தில் அந்நியப் பெண்ணை மணந்தவன் (எஸ்றா 10:42). 5. செபனியா குடும்பத்தில் ஓர் ஆசாரியன் (நெகே. 12:14). 6. இயேசுவின் தாயாகிய மரியாளின் கணவன் (மத். 1:16–24; 2:13; லூக்கா 1:27; 2:4). 7. அரிமத்தியாவைச் சேர்ந்த யூதக் கிறிஸ்தவன், இவனது கல்லறையில் இயேசு அடக்கம்பண்ணப்பட்டார் (மத். 27:57,59; லூக்கா 23:50–53). 8. கிறிஸ்துவின் மூதாதை (லூக்கா 3:24). 9. கிறிஸ்துவின் வேறொரு மூதாதை (லூக்கா 3:26). 10. கிறிஸ்துவின் இன்னுமொரு மூதாதை (லூக்கா 3:30). 11. யூதா ஸ்காரியோத்தின் இடத்தை நிரப்பும்படி ஆய்வு செய்யப்பட்ட சீடன் (அப். 1:23). இவன் பர்சபா என்றும் யுஸ்து என்றும் அறியப்பட்டிருந்தான்.

யோதாம் (“யெகோவா முழுநிறைவானவர்”). 1. கிதியோனின் மகன், இவன் அபிமெலேக்கு

வுக்குத் தப்பினான் (நியா. 9:5,7,21,57). **2.** யாதா யின் மகன் (1 நாளா. 2:47). **3.** யூதாவின் பன்னி ரண்டாவது அரசன், கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (2 இராஜா. 15:5–38; ஏசாயா 1:1; 7:1; மத். 1:9).

யோபு (“வெறுக்கப்பட்டவன்; துன்பப்படுத்தப் பட்டவன்”). **1.** ஊத்ஸ் நாட்டைச் சேர்ந்த பக்தி மான். கடுமையான சோதனையால் துன்பப்படுத் தப்பட்ட இவனுக்கு அது நன்மையாக முடிந்தது (யோபு 1–3; 42; எசே. 14:14,20). **2.** இசக்காரின் மூன்றாவது மகன் (ஆதி. 46:13); இவன் யாசூப் என்றும் அழைக்கப்பட்டுள்ளான் (எண். 26:24; 1 நாளா. 7:1).

யோப்பா (“அழகு”), பாலஸ்தீன கடற்கரை யிலிருந்த ஓர் ஊர் (2 நாளா. 2:16; அப். 9:36).

யோயாக்கீம் (“யெகோவா நிறுவுகிறார்; யெகோவா நிலைநிறுத்தியிருக்கிறார்”) எலியாக் கீமுக்கு இந்தப் பெயரைப் பார்வோன் நேகோ சூட்டி, யூதாவின் அரசனாக்கினான். தேவன் எலியாக்கீமை அரசனாக நிறுவுவதற்குத் தனக்கு அதிகாரமளித்ததாகப் பார்வோன் நேகோ கூறி னான் என்றும் இந்தப் பெயருக்குப் பொருள் கூறலாம் (2 இராஜா. 23:34 – 24:6). இவனும் யொயகீமும் வெவ்வேறு நபர்கள்.

யோயாக்கீன் (“யெகோவா நிலைநிறுத்து கிறார்”), நேபுகாத்நேச்சார் யூதாவைப் பிடித்த போது இவன் அந்நாட்டின் அரசனாயிருந்தான். இவன் கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (2 இராஜா. 24:8–16; 2 நாளா. 36:9,10; மத். 1:11,12). இவனுடைய பெயர் எகொனியா (“யெகோவா செய்ய வல்லவர்”) என்றும் (1 நாளா. 3:16,17; எரே. 24:1).கோனியா (“யெகோவா உண்டாக்கு கிறார்”) என்றும் மாற்றி மாற்றி எழுதப்பட்டுள்ளது.

யோயாரிப் (“யெகோவா அறிவார்”). **1.** இஸ்ர வேல் நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கு மந்திரி களை இணங்க வைக்கும்படி எஸ்றாவால் அனுப் பப்பட்டவன் (எஸ்றா 8:16). **2.** எருசலேமில் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் மூதாதை (நெகே. 11:5). **3.** சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஓர் ஆசாரி யன் (நெகே. 11:10; 12:6,19; 1 நாளா. 9:10).

யோய்தா (“யெகோவா அறிகிறார்”). **1.** தாவீதின் அதிகாரிகளில் ஒருவனது தகப்பன் (2 சாமு. 8:18; 1 இராஜா. 1:8,26). **2.** முடியாட்சியின் காலத்தில் பல ஆண்டுக்காலம் தேவாலயத்தில் தலைமை ஆசாரியனாக இருந்தவன். இவன் அத்தாலியாள் அரசாண்ட 6 ஆண்டுகளும் யோவாசை மறைத்து வைத்துப் பாதுகாத்தான் (2 இராஜா. 11அதி–12:9). **3.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்துகொண்டவன் (1 நாளா. 12:27). **4.** தாவீ தின் ஆலோசகரில் ஒருவன் (1 நாளா. 27:34). **5.** எருசலேம் வாயிற்கதவைச் செப்பனிட உதவி புரிந்தவன் (நெகே. 3:6). **6.** இந்த ஆசாரியனுக் குப் பதிலாக செப்பனியா ஆசாரியனாக்கப்பட் டான் (எரே. 29:26).

யோராம் (“யெகோவா உயர்ந்தவர்”). **1.** இவன் யோசபாத்தின் மகனும் அவனைத் தொடர்ந்து யூதாவின் அரசனானவனும் ஆவான். இவன் கிறிஸ்துவின் மூதாதையரில் ஒருவன் (2 இராஜா. 8:16–24; மத். 1:8). **2.** இஸ்ரவேலின் ஒன்பதாவது அரசன், யெகூவால் கொல்லப்பட்டான் (2 இராஜா. 1:17; 3:1–6; 9:24). **3.** மக்களுக்குப் போதிக்கும்படி நியமிக்கப்பட்டவன் (2 நாளா. 17:8).

யோர்தான் (பொருள் சரியாகத் தெரிய வில்லை), பாலஸ்தீனத்தில் உள்ள பெரிய ஆறு. லீபனோன் எர்மோன் மலைகளுக்கிடையில் உள்ள பள்ளத்தாக்கில் உற்பத்தியாகிறது. சாவுக் கடலின் வட எல்லையில் கலக்கும் இந்த ஆறு பல வளைவுகள் கொண்ட பாதையில் செல்லுகிறது (ஆதி. 13:10; யோசுவா 2:7).

யோவன்னா (“தேவன் கொடுத்தது”). **1.** கிறிஸ்துவின் ஒரு மூதாதை (லூக்கா 3:27). **2.** ஏரோதின் காரியக்காரனான கூசா என்ப வனது மனைவியான இவள் கிறிஸ்துவுக்கும் அப்போஸ்தலருக்கும் பணிவிடை செய்தவள் (லூக்கா 8:3; 24:10).

யோவாகாஸ் (Jehoahaz) (“யெகோவா தாங்குகிறார்”). **1.** இஸ்ரவேலின் அரசனா யிருந்த யெகூவின் மகனும், அவனைத் தொடர்ந்து ஆட்சிபுரிந்தவனுமாவான். இவனுடைய ஆட்சி கேடுற்றதாயிருந்தது (2 இராஜா. 10:35; 13:1–25).

2. யோசியாவின் மகனும், யூதாவை மூன்று மாதங்கள் அரசாண்டவனுமாவான். இவனை எகிப்தின் பார்வோன் நேகோ அரச பதவியி லிருந்து அகற்றினான் (2 இராஜா. 23:30–34; 2 நாளா. 36:1–4). இவன் அரசனாகப் பதவி ஏற்ப தற்கு முன் சல்லூம் என்று அழைக்கப்பட்டான் (1 நாளா. 3:15; எரே. 22:11). **3.** அகசியா என்னும் பெயரைக் காண்க.

யோவாப் (“யெகோவா என் தந்தை”). **1.** தாவீதின் சகோதரியாகிய செரூயாவின் ஒரு குமாரன். இவன் தாவீதின் படையின் தளபதி யாயிருந்தான் (2 சாமு. 2:13–32; 3:23–31; 18; 1 இராஜா. 2:22,23). **2.** யூதாவின் வழித்தோன்றல் (1 நாளா. 2:54). யூதா நாட்டைச் சேர்ந்த ஒரு பட்டணம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்று சில வேத அறிஞர் கருதுகிறார்கள். (தமிழில் பெத்யோவாப் என்னும் அதரோத் ஊரார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.) **3.** யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவன் (1 நாளா. 4:14). **4.** சிறையிருப்பிலி ருந்து திரும்பி வந்தவர்களின் ஒரு மூதாதை (எஸ்றா 2:6; 8:9; நெகே. 7:11).

யோவான் (யோகன்னான் என்பதன் சுருக்கம், “தேவனுடைய கொடை”). **1.** சகரியா எலிச பெத்து ஆகியோரின் மகன், இவன் மேசியாவுக்கு வழியை ஆயத்தம் பண்ண வந்தவன். இவன் யோவான் ஸ்நானகன் என்றும் அழைக்கப்பட் டான். ஏரோது மன்னனால் இவன் தலை துண்டிக் கப்பட்டான் (மத். 3; 11:7–18; 14:1–10; லூக்கா 1:13–17). **2.** செபதேயுவின் மகன், பன்னிரு அப்போஸ் தலரில் ஒருவன். இவன் வெளிப்படுத்தின விசே ஷம், நான்காவது நற்செய்திநூல், இவனுடைய பெயரைத் தாங்கிய மடல்கள் ஆகியவற்றை எழு தியவன் என்று பாரம்பரியாக ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது (மத். 4:21; 10:2; அப். 1:13; கலா. 2:9; வெளி. 1:1). **3.** பேதுரு விசாரணை செய்யப்பட்ட போது நியாயந்தீர்க்கும்படி அமர்ந்திருந்தவர் களில் ஒருவன், பிரதான ஆசாரியன் அன்னா வின் உறவினன் (அப். 4:6). **4.** மாற்கு என்று நன்கு அறியப்பட்டவனது இயற்பெயர். யோகனான் என்னும் பெயரையும் காண்க.

யோவாஸ் (Jehoash) (“யெகோவா தந் திருக்கிறார்; யெகோவா ஆதரிக்கிறார்”). **1.** யூதா வின் ஒன்பதாவது அரசன். ஆசாரியனாகிய யோய்தாவின் காலம் வரையிலும் யோவாஸ் தேவனைப் பின்பற்றினான். அதன் பிறகு இவன் சிலை வணக்கத்தில் ஈடுபட்டு நாட்டிற்கு கேடு வருவித்தான் (2 இராஜா. 11:21–12:21). இவனு டைய இயற்பெயரான யோவாகாஸ் என்று அல் லாமல் இவன் பெரும்பாலும் சுருக்கமாக யோவாஸ் என்றே அழைக்கப்பட்டுள்ளான். **2.** இஸ்ரவேலின் பன்னிரண்டாவது அரசன்; இவன் பல போர் களில் வெற்றி பெற்றான் (2 இராஜா. 13:9–14:16). இவனும் பல இடங்களில் யோவாஸ் என்று சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளான்.

யோவாஸ் (Joash), (யோவாகாஸ் என்பதன் சுருக்கம்). **1.** யூதா மனிதரில் ஒருவன் (1 நாளா. 4:22). **2.** நியாயாதிபதியாகிய கிதியோனின் தகப்பன் (நியா. 6:11–32). **3.** ஆகாபின் மகன் (1 இராஜா. 22:26; 2 நாளா. 18:25). **4.** சிக்லாகில் தாவீதோடு சேர்ந்து கொண்டவன் (1 நாளா. 12:3). **5.** யோவாகாஸ் என்னும் பெயரில் (1) –ஆம் எண்ணைக் காண்க. **6.** யோவாகாஸ் என்னும் பெயரில் (2) –ஆம் எண்ணைக் காண்க.

யோவாஸ் (JOASH) (“யெகோவா உதவி புரிந்திருக்கிறார்”). **1.** பேகேரின் மகன், பென்ய மீன் வழித் தோன்றல் (1 நாளா. 7:8). **2.** தாவீதின் எண்ணெய்க் கிடங்குகளின் மேல் அதிகாரியாக இருந்தவன் (1 நாளா. 27:28).

யோவேல் (“தேவனே யெகோவா”). **1.** தீர்க்க தரிசியாகிய சாமுவேலின் முதல் மகன் (1 சாமு. 8:2; 1 நாளா. 6:33; 15:17). **2.** சிமியோனின் வழித்தோன்றல் (1 நாளா. 4:35). **3.** செமாயாவின் தகப்பன், ரூபன் வழித்தோன்றல் (1 நாளா. 5:4,8). **4.** காத் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1 நாளா. 5:12). **5.** சாமுவேல் தீர்க்கதரிசியின் ஒரு மூதாதை (1 நாளா. 6:36). **6.** தோலாவின் வழித் தோன்றல் (1 நாளா. 7:3). **7.** தாவீதின் பராக்கிர சாலிகளில் ஒருவன் (1 நாளா. 11:38). **8.** தாவீதின் நாட்களில் இருந்த ஒரு லேவியன் (1 நாளா. 15:7,11; 23:8). **9.** கர்த்தருடைய ஆலயத்தின்

பொக்கிஷத்தின் பாதுகாவலன் (1 நாளா. 6:22). **10.** யோர்தானுக்கு மேற்கே இருந்த மனாசேயின் ஒரு தலைவன் (1 நாளா. 27:20). **11.** தேவால யத்தைத் தூய்மைப்படுத்த உதவிய ஒரு லேவி யன் (2 நாளா. 29:12). **12.** சிறையிருப்புக் காலத் தில் அந்நியப் பெண்ணை மணந்தவள் (எஸ்றா 10:43). **13.** பென்யமீனின் வழித்தோன்றலாகிய இவன் எருசலேமில் விசாரிப்புக்காரனாயிருந் தான் (நெகே. 11:9). **14.** உசியாவின் காலத்தில் இருந்த ஒரு தீர்க்கதரிசி (யோவேல் 1:1; அப். 2:16).

யோனதாப் (“யெகோவா பெருந்தன்மை யுடையவர்”). **1.** ரேகாபின் வழித்தோன்றல்; இவன் தன்னைப் பின்பற்றுகிறவர்கள் மற்றும் வழித்தோன்றல்கள் யாவரும் மது அருந்தக் கூடாது என்றும் வீடுகளில் குடியிருக்கக் கூடாது என்றும் கட்டளையிட்டான் (எரே. 35:6–19; 2 இராஜா. 10:15,23). **2.** தாவீதின் தமையனாகிய சிமியாவின் மகன், இவன் ஒரு தந்திரசாலி (2 சாமு. 13:3,5,32,35).

யோனத்தான் (“யெகோவா கொடுக்கப்பட்டி ருக்கிறார்”). **1.** எப்பிராயீம் எல்லையில் ஒரு சிலைக் கோவிலில் ஆசாரியனாயிருந்தவன் (நியா. 18:30). **2.** பிரதான ஆசாரியனாகிய அபியத்தாரின் மகன் (2 சாமு. 15:27,36; 17:17; 1 இராஜா. 1:42). **3.** தாவீதின் சகோதரனாகிய சீமேயாவின் மகன் (2 சாமு. 21:21; 1 நாளா. 20:7). **4.** தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (2 சாமு. 23:32; 1 நாளா. 11:34). **5.** ஓனாமின் பேரன் (1 நாளா. 2:32,33). **6.** தாவீதின் சிறிய தகப்பன் (1 நாளா. 27:32). **7.** எஸ்றாவுடன் திரும் பியவர்களில் ஒருவனுடைய தகப்பன் (எஸ்றா 8:6). **8.** அந்நியப் பெண்களைத் திருமணம் செய்தவர்களை விசாரிக்கும்படி நியமிக்கப்பட்ட வன் (எஸ்றா 10:15). **9.** பிரதான ஆசாரியனான யெசுவாவின் வழிவந்தவன் (நெகே. 12:11). **10.** ஓர் ஆசாரியன் (நெகே. 12:14). **11.** வேதபாரகனாகிய இவனுடைய வீட்டில் எரேமியா கைதியாக வைக் கப்பட்டிருந்தான் (எரே. 37:15,20; 38:26). **12.** எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு கெதலியா வுடன் சேர்ந்துகொண்டவன் (எரே. 40:8). **13.** இவன் சவுலின் மகனும் தாவீதின் நெருங்கிய நண்பனும் ஆவான் (1 சாமு. 14: 18:1–4; 31:2).

யோனா (“புறா”). **1.** சீமோன் பேதுருவின் தகப்பன் (யோவான் 1:42; 21:15–17). **2.** யெரொ பெயாமின் காலத்தில் நினிவே பட்டணத்தில் பிரசங்கிக்கும்படி அனுப்பப்பட்ட எபிரெயத் தீர்க்க தரிசி. புறவினத்தாரிடம் அனுப்பப்பட்ட முதல் எபிரெயத் தீர்க்கதரிசி இவன்தான் (2 இராஜா. 14:25; யோனா 1:1,3,5,17; 2:10; மத். 12:39–41).

ரப்சாக்கே. அசீரியா நாட்டு பதவிப் பெயர். இப்பதவியின் அதிகாரம் பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ஆரானுக் குக் கிழக்குப் பகுதியில் இருந்த மாநிலத்தின் ஆளுநர் அல்லது படைத்தளபதியாக இருக்க லாம் என்று கருதப்படுகிறது (2 இராஜா. 18:17–37; 19:4–8).

ரப்சாரீஸ். இது ஒரு மனிதனின் பெயர் அல்ல, மறாக பாபிலோன் மற்றும் அசீரியா நாடுகளில் இது ஓர் அரசாங்க பதவியாக இருந்தது. இப் பதவியைப் பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை (எரே. 39:3,13; 1 இராஜா. 18:17).

ரப்பா (“அஞ்சத்தக்க”). **1.** பென்யமீனின் ஐந்தாவது மகன் (1 நாளா. 8:2). 1 நாளாமகம் 9:43 –இல் இவன் ரப்பாயா என்று அழைக்கப்பட்டிருக் கிறான் **2.** சவுல் அரசனின் வழித்தோன்றல் (1 நாளா. 8:37).

ரப்மாக். இது ஒரு மனிதனின் பெயர் அல்ல, ஆனால் ஏதோ ஒரு வகைப் பதவிப் பெயர் ஆகும். இது சமய உயர் பதவியாகவோ அரசாங்க பதவி யாகவோ இருக்கக் கூடும். எதுவென்று சரியா கத் தெரியவில்லை (எரே. 39:3,13). நெர்கல் – சரேசர் இந்தப் பதவிப் பெயரைப் பெற்றிருந்தான்.

ராகாப் (“அகன்ற”), எரிகோவில் வாழ்ந்த வேசி. எபிரெய உளவாளிகளுக்கு உதவி செய்த வள். கிறிஸ்துவின் மூதாதை என்னும் நிலையைப் பெற்றாள் (யோசுவா 2:1–21; 6:17–25; மத். 1:5).

ராகேல், (“பெண்ணாடு”), லாபானின் மகள், யாக்கோபின் மனைவி, யோசேப்பு மற்றும் பென்ய மீன் ஆகியோரின் தாய் (ஆதி. 29–35).

ராமசேஸ் (“சூரிய குமாரன்”), இஸ்ரவேலர் எகிப்திலே தங்கின வளமான மாநிலம் (ஆதி. 47:11; யாத். 12:37). இது கோசேன் நாடாகத்தான் இருக்குமென்று கருதப்படுகிறது.

ராமா (“உயரமான”). **1.** கிபியா, காபா, பெத்தேல் ஆகிய பட்டணங்களின் அருகில் இருந்த பென்யமீன் கோத்திரத்துக்குரிய பட்டணம் (யோசுவா 18:25; நியா. 4:5; ஏசாயா 10:29; மத். 2:17). எர்ராம் என்று தற்போது அழைக்கப்படும் இடமும் இதுவும் ஒன்று என்று கருதப்படுகிறது. இது எருசலேமுக்கு வடக்கே 8 கி. மீ (5 மைல்) தொலைவில் உள்ளது. **2.** சாமுவேல் பிறந்த இடம் (1 சாமு. 1:1). இது ராமதாயீம் சோப்பீம் என்னும் பெயரையும் பெற்றிருந்தது (1 சாமு. 1:1). இது எந்த இடம் என்று சரியாகத் தெரியவில்லை. எனினும் இதுவும் ராமாவும் எண் 1 –உம் ஒன்று என்றே கருதப்படுகிறது. தற்காலத்தில் ரென்டிஸ் என்னும் பெயர் பெற்ற ஊரும் இதுவும் ஒன்றாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது. லித்தாவுக்கு வடகிழக்கே 14.5 கி. மீ (9 மைல்) தொலைவில் உள்ளது இந்த ஓர். ஒருவேளை இது அரிமத்தியா என்னும் ஊராகவும் இருக்கலாம். **3.** ஆசேர் கோத்திரத்தைச் சேர்ந்த எல்லைப்பட்டணம் (யோசுவா 19:29). இதுவும் எண். 4 –இல் உள்ள ராமாவும் ஒன்றாக இல்லையென்றால், தீருவிலிருந்து 20.9 கி.மீ (13 மைல்) தொலைவில் இருந்த ராமா என்னும் வேறொரு ஊர். **4.** நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்த அரணான பட்டணம் (யோசுவா 19:36). தற்போது ராமே என்று அழைக்கப்படும் இடமும் இதுவும் ஒன்று எனத் தோன்றுகிறது. இது அக்கோ என்னும் இடத்திலிருந்து 27.4 கி. மீ (17 மைல்) தொலைவில் உள்ளது.

ராமோத் கீலேயாத் (ராமோத்) (“கீலேயாத்திலுள்ள உயரமான பகுதி”), காத்திலுள்ள முக்கியமான பட்டணம். லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட அடைக்கலப்பட்டணங்களில் இதுவும் ஒன்று (1 இராஜா. 4:13; 22:4). சில இடங்களில் இது ராமோத் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது (உபா. 4:42; யோசுவா 20:8). டெல் ராமித் மற்றும் டெல் எல்ஹீஸ் ஆகிய இடங்களும் இதுவும் ஒன்றெனக் கருதப்படுகிறது.

ராம் (ஆராம்) (“உயர்வாகப் புகழப்பட்ட”). **1.** தாவீது மற்றும் கிறிஸ்துவின் மூதாதை (ரூத். 4:19; மத். 1:3,4; லூக்கா 3:33). **2.** யூதாவைச் சேர்ந்த யெர்மெயேலின் மகன் (1 நாளா. 2:27). **3.** எலிகூ குடும்பத் தலைவன் (யோபு 32:2).

ரிப்லா (“சண்டை”). **1.** ஓரண்டஸ் என்னும் ஆற்றின் கரையில் அமைந்திருந்த ஒரு பட்டணம், இங்குதான் சிதேக்கியாவின் ஆண்மக்கள் கொல்லப்பட்டார்கள் (எரே. 39:5–7; 2 இராஜா. 23:33). இது ஆமாத்துக்குத் தெற்கே 80 கி. மீ (50 மைல்) தொலைவில் இருந்தது. தற்போது கோயெல சிரியா சமவெளியில் உள்ள ரிப்லே என்று அழைக்கப்படும் இடமாக இருக்கக் கூடும். **2.** வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் எல்லையில் அமைந்திருந்த ஊர் (எண். 34:11). இது தற்போது எர்மேல் என்று அழைக்கப்படும் இடமாக இருக்கக் கூடும், இது ஓரண்டஸ் ஆறு உற்பத்தியாகும் இடத்திற்கு வடகிழக்கே அமைந்திருக்கிறது.

ரிம்மோன் **1.** யூதாவின் தென்பகுதியில் இருந்த ஓர் ஊர் (யோசுவா 15:32 1 நாளா. 4:32; சக. 14:10). பெயர்செபாவுக்கு 9 மைல் தொலைவில் தற்போது இருக்கும் கிர்பெட் உம் எர் ராமாமின் என்று அறியப்படும் இடம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. **2.** கிபியாவுக்கு அருகில் இருந்த கன்மலை (நியா. 20:45–47; 21:13). இது பெத்தேலுக்கு கிழக்கே 31/2 மைல் தொலைவில் உள்ள சுண்ணாம்புக்கல் பாறையாக இருக்கக் கூடும். **3.** செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்த எல்லையோர ஊர் (1 நாளா. 6:77). இது யோசுவா 21:35 –இல் இது திம்னா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ரிம்மோன் என்ற பெயரே திம்னா என்று தவறாக எழுதப்பட்டுவிட்டது என்று அறிஞர்கள் பலர் கருதுகிறார்கள். யோசுவா 19:13 –இல் இது ரிம்மோன் மெத்தோவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 13 –ஆவது வசனத்தைப் பலர் இவ்விதமாக மொழிபெயர்த்திருக்கிறார்கள்: “[எல்லையானது] கித்தா ஏபேர் வரைக்கும் சென்று, அங்கிருந்து இத்தா காத்சீனையும் கடந்து கெம்மோனுக்குச் சென்று நேயாவுக்கு வளைந்து (மெத்தோவார்) செல்லுகிறது.”

ரூத் (“நட்பு; உடனிருப்பவள்”), மக்லோனின் மோவாபிய மனைவி. பின்னர் போவாசின் மனைவியானாள். இவள் தாவீதின் முப்பாட்டியும் கிறிஸ்துவின் மூதாதையும் ஆவாள் (ரூத் 1:4,5; 14–16; 4:10; மத். 1:5).

ரூபன் (“இதோ ஒரு மகன்”), யாக்கோபு, லேயாள் ஆகியோருக்குப் பிறந்த முதல் மகன்; இவன் தனது தகப்பனுக்கு எதிராகப் பாவம் செய்து தனது முதல் மகன் பிறப்புரிமையை இழந்து போனான் (ஆதி. 29:32; 35:22; 37:29). இவனுடைய வழித்தோன்றல்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் ஒன்றானார்கள்.

ரூப் (“சிவப்பு”). **1.** சிரேனே ஊரானாகிய சீமோனின் மகன் (மாற்கு 15:21). மாற்கு தன் நற்செய்தி நூலை எழுதிய மனிதர்களுக்கு இவன் நன்கு அறிமுகமானவன் என்று தோன்று கிறது. **2.** இவன் ஒரு ரோமக் கிறிஸ்தவன் (ரோமர் 16:13). இவனும் எண் 1 –இல் குறிப் பிடப்பட்டுள்ளவனும் ஒரே ஆள் என்று சிலர் கருதுகிறார்கள்.

ரெகுவேல், எத்திரோ என்னும் பெயரைக் காண்க.

ரெகுவேல் (“தேவன் இவனுடைய நண்பர்”). **1.** ஏசாவுக்கு பஸ்மாத்துவிடம் பிறந்தவன் (ஆதி. 36:4; 1 நாளா. 1:35,37). **2.** பென்யமீன் வழித் தோன்றல் (1 நாளா. 9:8). **3.** எத்திரோ என்னும் பெயரைக் காண்க.

ரெகொபெயாம் (“மக்களை விடுவிப்பவன்”), சாலொமோன் அரசனின் மகன், இவன் அர சாட்சி செய்தபோது பத்துக் கோத்திரத்தார் இவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். இவனோ யூதா என்னும் தெற்கு நாட்டை நிறுவி னான் (1 இராஜா. 11:43; 12:14). இவன் கிறிஸ்து வின் மூதாதை (மத். 1:7).

ரெகொபோத் (“விண்வெளி”). **1.** கேரார் பள்ளத்தாக்கில் ஈசாக்கு வெட்டிய கிணறு (ஆதி. 26:22). தற்போது இது வாடி ரூகெபேத் என்று அழைக்கப்படும் இடமாக இருக்கக்கூடும். இது பெயர்செபாவிலிருந்து தென்மேற்கே 30.6 கி. மீ (19 மைல்) தொலைவில் இருக்கிறது. **2.** நினிவே பட்டணத்தை அடுத்து இருந்த இடம் (ஆதி. 10:11). **3.** ஏதோமின் வடக்கே இருந்த ஒரு நகரம் (ஆதி. 36:37; 1 நாளா. 1:48). இது இருந்த இடம் எது வென்று தெரியவில்லை.

ரெபேக்காள் (“முகத்துதி”) ஈசாக்கின் மனைவியும் யாக்கோபு, ஏசா ஆகியோரின் தாயும் ஆவாள் (ஆதி. 22:23; 24–28).

ரெப்பாயீம் பள்ளத்தாக்கு (“அரக்கர்களின் பள்ளத்தாக்கு”), தாவீது பெலிஸ்தியரைத் தோற் கடித்த இடம் (ஏசாயா 17:5; 2 சாமு. 5:18). எருச லேம் பெத்லகேம் ஆகிய ஊர்களுக்கு இடையில் இப்பள்ளத்தாக்கு இருக்கிறது. இது எருசலேம் மற்றும் இன்னோம் பள்ளத்தாக்கு ஆகியவற் றிற்கு தென்மேற்கே அமைந்திருக்கிறது. தற் போது ஏல் – பக்கா என்று அழைக்கப்படும் பள்ளத்தாக்காக இருக்கக் கூடும்.

ரேகாப் (“தோழமை”). **1.** பென்யமீனின் வழித்தோன்றல், இவன் இஸ்போசேத்தைக் கொன்று போட்டவன் (2 சாமு. 4:2,5–9). **2.** ரேகாபியர் என்னும் கோத்திரத்தின் ஆதித் தகப்பன் (2 இராஜா. 10:15; எரே. 35). **3.** அம்மாத் தின் வழித்தோன்றல் (1 நாளா. 2:55). **4.** எரு சலேம் மதிற்சுவரைக் கட்டுவதற்கு உதவிசெய் தவன் (நெகே. 3:14).

ரேத்சீன் (“மேலாட்சி”). **1.** சீரியா நாட்டின் கடைசி அரசன், இவன் பெக்காவுடன் சேர்ந்து யூதாவுக்கு எதிராகப் போர்புரிந்தான் (2 இராஜா. 15:37; 16:5–10). **2.** இவனுடைய வழித்தோன்றல் கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தார்கள் (எஸ்றா 2:48; நெகே. 7:50).

ரோதை (“ரோஜா”), மரியாளின் வீட்டில் பணிவிடை செய்தவள் (அப். 12:12–15).

ரோமா (“ரோமுலசின் பட்டணம்”), ரோமப் பேரரசின் தலைநகர் (அப். 23:11). இது இத்தாலி நாட்டின் திபேர் ஆற்றின் கரையில் அமைந்துள் ளது.

லவோதிக்கேயா (“நேர்மையான மக்கள்”), ஆசியா மைனரில் இருந்த பிரிகியா மாகாணத் தில் இருந்த முக்கியமான நகரம் (கொலோ. 2:1; 4:15; வெளி. 1:11). மியாண்டர் ஆற்றின் உபநதி

யான லைகோஸ் ஆற்றின் கரையில் அமைந் திருந்த நகரம்.

லாசரு (எலியேசர் என்னும் பெயரின் சுருக் கம், "தேவன் உதவி செய்தார்"). **1.** மரியாள் மார்த்தாள் ஆகியோரின் சகோதரன், இவன் இறந்துபோன பிறகு இயேசு இவனை உயிரோடு எழுப்பினார் (யோவான் 11:1–12:17). **2.** விசுவாசி யான இந்தப் பிச்சைக்காரன் இறந்த பிறகு ஆபிர காமின் மடிக்குக் கொண்டுபோகப்பட்டான் (லூக்கா 16:19–31).

லாபான் ("வெண்மை; மகிமை நிறைந்த"), ரெபேக்காளின் சகோதரன்; ராகேல், லேயாள் ஆகியோரின் தகப்பன். ராகேலைத் திருமணம் செய்வதற்காக இவனிடத்தில் யாக்கோபு ஏழு ஆண்டுகள் வேலை செய்தான்; ஆனால் திரு மண நிகழ்ச்சியில் ராகேலுக்குப் பதிலாக லேயாளை மாற்றி வைத்து யாக்கோபை இவன் ஏமாற்றினான் (ஆதி. 24–31).

லாமேக்கு ("வலிமை மிக்க இளைஞன்; தோற்கடிப்பவன்"). **1.** நோவாவின் தகப்பன், கிறிஸ்துவின் மூதாதை (ஆதி. 5:25–31; லூக்கா 3:36). **2.** யாபால், யூபால் ஆகியோரின் தகப்பன், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை உடையவன் என்று முதன்முதல் குறிப்பிடப்பட்டவன் (ஆதி. 4:18–26).

லிக்கவோனியா ("பெண் ஓநாய்"), ஆசியா மைனர் நாட்டில் உள் மாகாணம், இங்கிருந்த லீஸ்திரா, தெர்பை ஆகிய ஊர்களுக்குப் பவுல் இரண்டுமுறை சென்றார் (அப். 14:6–11). இதன் வட எல்லையில் கலாத்தியாவும் தென் எல்லை யில் சிசிலியாவும் இருந்தன.

லித்தா ("நிலையான குளம்"), சாரோனின் சமவெளியில் இருந்த ஓர் ஊர் (அப். 9:32).

லீதியாள் ("லீதியாவைச் சேர்ந்தவள்"), தியத்தீரா ஊரைச் சேர்ந்தவள், மனந்திரும்பிய வள் (அப். 16:14,15).

லீபனோன் ("வெண்மை"), வட பாலஸ் தீனத்திலுள்ள இரண்டு மலைத்தொடர்களில் இதுவும் ஒன்று (உபா. 1:7 யோசுவா 1:4). இரண் டாவது மலைத்தொடர் எதிர் லீபனோன் என்று அழைக்கப்படுகிறது. எர்மோன் மலை அதில் மிக உயர்ந்தது. இதனுடைய நீளம் 161 கி. மீ (100 மைல்). இத்தொடர் சீதோனுக்குத் தென் கிழக்கே ஏறத்தா 24.1 கி. மீ (15 மைல்) தொலைவில் தொடங்கி, சிரியாவில் உள்ள திரிபோலியின் வடகிழக்கே 19.3 கி. மீ (12 மைல்) தொலைவு வரை நீண்டிருக்கிறது.

லீபியா ("கடலின் மையப்பகுதி"), ஆப்பிரிக் காப் பெருங்கண்டத்தின் கிரேக்கப் பெயர், எகிப்தின் மேற்கு நிலப்பகுதி (அப். 2:10). இந்தப் பகுதியை எபிரெயர் பூத் என்று அழைத்தார்கள். எபிரெய மொழிப் பழைய ஏற்பாட்டில் எசேக்கி யேல் 30:5; 38:5 ஆகிய இடங்களில் பூத் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் KJV இதனை லீபியா என்றே குறிப்பிடுகிறது (தமிழில் 30 :5 – இல் பூத் என்றும் 38:5 –இல் லீபியா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது).

லீஸ்திரா ("கரையும் பொருள்"), ஆசியா மைனரிலிருந்த லிக்கவோனியாவைச் சேர்ந்த பட்டணம். இங்கு பவுல் கல்லெறியப்பட்டார் (அப். 14:6–21).

லூக்கா ("ஒளி தருகிற"), சுவிசேஷகன், மருத்துவன், மூன்றாவது நற்செய்தி நூலையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலையும் இயற் றியவன் (கொலோ. 4:14; 2 தீமோ. 4:11; பிலே. 24).

லூசிபர் (லத்தீன், "ஒளிவிளக்கை ஏந்திச் செல்பவன்"), பாபிலோனிய அரசனின் பட்டப் பெயர் (ஏசா. 14:12). ஒளிவிளக்கை ஏந்திச் செல்ப வன் என்னும் பொருளைத் தருகிற எபிரெயச் சொல்லே "லூசிபர்" என்று மொழிபெயர்க்கப்பட் டுள்ளது. இந்தப் பட்டம் சாத்தானைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (தமிழில் "விடி வெள்ளி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

லூத் ("லைடஸ் என்னுமிடம்"), எகிப்தின் மேற்கில் வட ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஒரு நாடு மற்றும் இனத்தினர் (எசே. 30:5).

லெபேயு, தபேயு என்னும் பெயரைக் காண்க.

லெமுவேல் ("தேவனை நோக்கி; ஒப்புவிக்கப் பட்ட"), அறியப்படாத ஓர் அரசன். இவன் சாலொ

மோன், எசேக்கியா இருவரில் ஒருவனாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இவனுடைய சொற்கள் நீதிமொழிகள் 31:1–9 ஆகிய வசனங்களில் குறித்து வைக்கப்பட்டுள்ளன.

லேயாள் (“களைப்புற்றவள்”), இவளுடைய தகப்பன் லாபான் யாக்கோபை ஏமாற்றி, அவனுக்கு இவளை மணமுடித்து வைத்தான் (ஆதி. 29–31அதி).

லேவி (“சேர்ந்து கொண்டவன்”). **1.** யாக்கோபின் மூன்றாவது மகன், தீனாளுக்குத் தவறி ழைக்கப்பட்டபோது அதற்காகப் பழி வாங்கியவன் (ஆதி. 34:25–31). தகப்பனோடு எகிப்துக்குச் சென்றவன் (ஆதி. 29:34; யாத். 6:16). இவனுடைய வழித்தோன்றல்கள் இஸ்ரவேலின் ஆசாரியரானார்கள். **2.** கிறிஸ்துவின் மூதாதை (லூக்கா 3:24). **3.** கிறிஸ்துவின் இன்னொரு மூதாதை (லூக்கா 3:29). **4.** மத்தேயுவின் மறுபெயர்.

லோத் (“முகத்திரையிட்ட”), ஆபிரகாமின் அண்ணன் மகன், சோதோமின் அழிவுக்குத் தப்பியவன் (ஆதி. 13:1–14; ஆதி. 19)

லோவிசாள் (“மகிழ்வூட்டுகிற; சிறந்த”), தீமோத்தேயுவின் பாட்டி, பக்தி நிறைந்தவள் (2 தீமோ. 1:5).

வனாந்தரம். கானானுக்குள் செல்லுவதற்கு முன் இஸ்ரவேலர் 40 ஆண்டுகள் அலைந்து திரிந்த நிலப்பகுதி (உபா. 1:2; யோசுவா 5:6). வனாந்தரம் என்னும் சொல்லில் பல பகுதிகள் அடங்கியிருந்தன. இவற்றின் பெயர்கள் தனித் தனியேயும் சொல்லப்பட்டுள்ளன (எ.கா. பாரான், சீன். இன்னும் பல).

வஸ்தி (“அழகிய பெண்; மிகச்சிறந்த”), பெர்சியாவின் அரசி, இவள் பெரிய விருந்திற்கு வர மறுத்ததால் அகாஸ்வேரு இவளைத் தள்ளி விட்டான் (எஸ்தர் 1:10–22).

ஸ்காரியோத்து. யூதா (8) –ஐக் காண்க.

ஸ்தேவான் (“கிரீடம்”). **1.** அகாயா நாட்டில் முதல்முதலாக இரட்சிக்கப்பட்டவர்களில் ஒருவன் (1 கொரி. 1:16; 16:15–17). **2.** ஏழு உதவிக்காரரில் ஒருவன். கிறிஸ்துவுக்குப் பிறகு சபையில் முதன்முதலாக இரத்த சாட்சியாக கொல்லப்பட்டவன் (அப். 6:5–9; 7:59; 8:2).